# REPRINTS

## தமிழாக்கம்

தொகுதி 2


2/6

Bible Students

*REPRINTS of the ORIGINAL WATCHTOWER*
*and Herald of Christ's Presence*

# மறுபதிப்புகள்

2018 டிசம்பர் வரை தமிழாக்கம்



Charles Taze Russell

1852 - 1916

# பொருளடக்கம் [INDEX]

## Reprints தமிழாக்கம் 2018 வரை


| S.No. | Reprints .No. | No. Pages | செய்தியின் தலைப்பு | Page No. |
|---|---|---|---|---|
| **வருடம் 1879 #R 03 முதல் R 62 வரை** | | | | |
| 01. | R 09 [Page -3] | 1 | சிங்காசனத்தில் அமர்த்தி விட்டார் [ Poem] He seats Her on Throne | 1 |
| 02. | R 13 ஜீலை 1879 | 3 | கிறிஸ்துவின் இரத்தம் | 2 |
| 03. | R 56 [Page-3] | 1 | ஓர் அழகுமிகு வஸ்திரம் | 5 |
| 04. | R 57[Page-3] | 4 | யோசேப்பு மற்றும் கிறிஸ்து | 6 |
| **வருடம் 1880 #R 63 முதல் R 173 வரை** | | | | |
| 05. | R 65 [Page-3] | 2 | [ Poem]உலத்தார்க்குப் பரிச்சயமற்ற மறு உலகத்தார்க்குமிகபரிச்சயமானவர். | 10 |
| 06. | R74 [Page-3] | 1 | [ Poem]சிற்பாசாரி | 12 |
| 07. | R 81 | 1 | இயேசுவோடு சிறிது நேரம் பேச வேண்டும் | 13 |
| 08. | R 84 [Page -5] | 2 | போஜன பலி | 14 |
| 09. | R 94 ஏப்ரல் 1880 | 2 | நம்முடைய பஸ்காவாகியகிறிஸ்து | 16 |
| 10. | R 114 [Page-3] | 1 | நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்து போகும் | 18 |
| 11 | R 125 [Page-3] | 1 | என்னுடைய தியாக பலி | 19 |
| 12 | R 144 [Page-3] | 1 | கர்த்தருடைய பர்வதம் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1881#R 175 முதல்R 310 வரை** | | | | |
| 13. | R 208<br>ஏப்ரல் 1881 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 21 |
| 14. | R 222<br>[Page -3] | 1 | வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள் | 24 |
| 15. | R 225<br>மே 1881 | 2 | நம்முடைய பஸ்கா | 25 |
| 16. | R 230<br>[Page -3 &15] | 1 | தேவன் அறிவார், நானறியேனே | 27 |
| 17. | R 239<br>[Page-3] | 1 | அவரது மேலான நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல் | 28 |
| 18. | R 241 | 1 | (தெரி. பத்திகள்) யார் பிரசங்கிக்கவேண்டும்? | 29 |
| 18A | R 295 | 5 | எக்ளீஷியா | 30 |
| **வருடம் 1882#R 311முதல் R 424 வரை** | | | | |
| 19. | R 325மார்ச் 1882 | 1 | பஸ்கா | 35 |
| 20. | R 348<br>[Page 3] | 1 | [Poem] முழு தத்தம் | 36 |
| 21. | R 390<br>[Page -5] | | [Poem] கர்த்தருக்காய் காத்திருப்பாய் | 37 |
| **வருடம் 1883 #R 425முதல் R 568 வரை** | | | | |
| 22. | R 427<br>[Page-3] | 1 | உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. | 38 |
| 23. | R 440<br>[Page-3] | 1 | ஓர் இலவச மீட்பு | 39 |
| 24. | R 465<br>ஏப்ரல் 1883 | 6 | பஸ்கா | 40 |
| 25. | R 485மே 1883 | 3 | பதிலாள் தொடர்புடையகேள்விகள் | 46 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | R 490 [Page-3] | 1 | கவர்ந்திழுக்கப்பட்டு சோதனைக்குட்பட்டவரே. | 49 |
| 27. | R 509 ஜீலை 1883 | 2 | அப்பம் மற்றும் திராட்சரசம் | 50 |
| 28. | R 516 [Page -4] | 1 | [ Poem ] வாழ்க்கை எனும் மலை | 52 |
| 29 | R 525 [Page -3] | 1 | [ Poem ] எப்படி வாழ்திடலாம்? | 53 |
| 30. | R 536 | 3 | (தெ. பத்திகள்) சபை நிர்வாகம் | 54 |
| **வருடம் 1884#R 571முதல் R 706வரை** | | | | |
| 31 | R 573 [Page 2] | 1 | நில் | 57 |
| 32. | R 610 [Page-3] | 1 | வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே சற்றே இளைப்பாறிடுவீரே | 58 |
| 33. | R 611 | 3 | மாம்சம் மற்றும் இரத்தம் | 59 |
| 34. | R 664 R 295 | 5 | எக்ளீஷியா | 62 |
| 35. | R 664 [Page -4&41] | 3 | [ Poem ] உலகத்தோடு நடக்கும் சபை | 67 |
| **வருடம் 1885#R 707முதல் R 814வரை** | | | | |
| 36. | R 721 பிப்ரவரி 1885 | 2 | நம்முடை பஸ்காவாகிய கிறிஸ்து | 70 |
| 37. | R 732 [Page 3] | 5 | சரீரம் முழுவதும் கண்ணானால் | 72 |
| 38. | R 740 ஏப்ரல் 1885 | 4 | பஸ்கா இராப்போஜனம் | 77 |
| 39. | R 741 [Page 3] | 1 | கறிஸ்துவின் சீடன் | 81 |
| 40. | R 748 | 3 | காவல் கோபுரத்தின் ஒருகண்ணோட்டம் | 82 |
| 41. | R 761 [Page 3] | 1 | உடனுக்குடனே வருகிறதே | 85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | R 776<br>[Page 3] | 1 | கர்த்தவே பேசும் | 86 |
| 43. | R 786<br>[Page 3] | 1 | அவளை விட்டு வெளியேறி உள்ளே வந்திடு. பேரழிவு நிகழுமுன்பே புறம்பே வந்துவிடு | 88 |
| **வருடம் 1886 #R 817 முதல் R 898வரை** | | | | |
| 44. | R 833<br>[Page 1] | 1 | எங்கள் அனுசரிப்பு | 89 |
| 45. | R 839<br>மார்ச் 1886 | 7 | கர்த்தருடைய இராப்போஜனம் | 90 |
| 46. | R 843<br>ஏப்ரல் 1886 | 3 | பாதம் கழுவுதல் | 97 |
| **வருடம் 1887 #R 899 முதல் R 996வரை** | | | | |
| 47. | R 899<br>பிப்ரவரி1887 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 100 |
| 48. | R 910 | 1 | [ Poem] முழு தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களின் ஜெபம் | 103 |
| 49. | R 916<br>[Page 3] | 1 | நம் வாக்களிக்கப்பட்ட வானவில் | 104 |
| 50. | R 936<br>மே 1887 | 3 | நம்முடைய வருடாந்தர இராப்போஜனம் | 105 |
| 51. | R 943 | 1 | என் தயார் யார்? என் சகோதரர் யார்? | 108 |
| **வருடம் 1888 #R997 முதல் R1088 வரை** | | | | |
| 52. | R 1004<br>[Page 3] | 1 | [ Poem] தந்தை உன்னையே நேசிக்கின்றாரே | 109 |
| 53 | R 1013<br>மார்ச் 1888<br>[Page 3] | 10 | என்னைநினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள | 110 |
| 54. | R 1013<br>[Page 3] | 1 | (தெ. பத்திகள்) யாரைச் சேவிப்பீர்கள்? | 111 |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | R 1021<br>ஏப்ரல் 1888 | 1 | அவர் வருமளவும் | 121 |
| 56 | R 1034 &<br>R 1539 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 122 |
| 57. | R 1075 | 3 | (தெ.பத்திகள்) தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே - பாகம் - 1 | 123 |
| **வருடம் 1889 #R 1089 முதல் R 1170 வரை** | | | | |
| 58. | R 1100<br>மார்ச் 1889 | 6 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள் | 126 |
| 59. | R 1136 | 1 | (தெ.பத்திகள்) இராஜரீகஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு | 132 |
| 60 | R 1159 | 2 | ஓர் உருவகக் கதை | 133 |
| **வருடம் 1890 #R 1171 முதல் R 1276 வரை** | | | | |
| 61. | R 1188 | 4 | கிறிஸ்துவினால் வரும் நிந்தனை / கிறிஸ்துவைக் குறித்த வெட்கம் | 135 |
| 62. | R 1193<br>[Page 3] | 1 | [ Poem] என்னுடைய ஒரு தாலந்து | 139 |
| 63. | R 1217<br>[Page 3] | 2 | நீங்கள் தான் கிறிஸ்துவினுடையவர்கள் | 140 |
| 64. | R 1268 | 1 | இவையெல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது (இரண்டு பத்திகள்) | 142 |
| **வருடம் 1891 # R 1279 முதல் R 1346 வரை** | | | | |
| 65. | R1289<br>[R2270 &<br>R5191<br>பார்க்கவும்] | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 143 |

| | | | | |
|---|---|---|---|---|
| 66. | R 1318 | 1 | [ Poem ] கர்த்தரின் பட்டயம், கிதியோனின் பட்டயம் | 158 |
| **வருடம் 1892 # R 1347 முதல் R 1481 வரை** | | | | |
| 67. | R 1374 | 1 | [Poem] திராட்சைஆலையில் தனித்தே இருந்தே | 159 |
| 68. | R 1382 மார்ச் 1892 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 160 |
| 69. | R 1415 | 4 | நமது கர்த்தருடைய இடத்திற்கு | 163 |
| 70. | R 1431 [Page -3] | 1 | [ Poem ] வாரி இறைப்பவனே விருத்தியடைவான் | 167 |
| 71 | R 1448 [Page 3] | 2 | துன்பப்படுதலின் மூலமே பூரணமடையலாம். | 168 |
| 72. | R 1459 | 4 | ஊதாரி மகனுடைய திரும்பி வருதல் | 170 |
| 73 | R 1475 | 2 | நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர் | 174 |
| **வருடம் 1893 #R 1485முதல் R 1604 வரை** | | | | |
| 74. | R 1504 மார்ச்1893 & R 2436 பிப்ரவரி 1899 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 176 |
| 75. | R 1521 | 22 | பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் | 179 |
| 76 | R 1539 & R 1034 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 201 |
| 77 | R 1548 | 12 | தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும் | 202 |
| 78 | R 1559 [Page 3] | 1 | கர்த்தருக்குள் இளைப்பாருவீர்களாக | 214 |
| 79 | R 1591 & R5882 [Page 105] | 4 | உயிர்த்தெழுந்தகிறிஸ்து | 215 |

| வருடம் 1894 # R 1605 முதல் R 1747 வரை | | | | |
|---|---|---|---|---|
| 80 | R 1611 | 1 | [ Poem] புதிய தாள் வேண்டும் (புத்தாடை வேண்டும்) | 219 |
| 81. | R 1625 மார்ச் 1894 | 3 | வருடாந்தர நினைவு கூருதல் இராப்போஜனம் | 220 |
| 82. | R 1635 | 2 | பொறாமை மற்றும் விரோதம் | 223 |
| 83. | R 1636 ஏப்ரல் 1894 | 3 | அடையாளங்களினுடைய முக்கியத்துவம் | 225 |
| 84. | R 1639 | 4 | யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார் | 228 |
| 85. | R 1640 | 2 | யோசேப்பு அதிகாரியாக எகிப்தில் | 232 |
| 86. | R 1645 | 4 | யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் | 234 |
| 87. | R 1646 | 3 | யோசேப்பின் இறுதி நாட்கள் | 238 |
| 88. | R 1648 | 4 | இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? | 241 |
| 89. | R 1657 ஜீன் 1894 | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 246 |
| 90. | R 1657 ஜீன் 1894 | 1 | செங்கடலின் பாதை | 248 |
| 91. | R 1681 | 2 | எகிப்துக்குத் தப்பி ஓடுதல் | 249 |
| 92. | R 1695 | 2 | இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல் | 251 |
| 93 | R 1704 [Page 3] | 1 | நான் கூட அவரைத் தெரிந்துகொள்வேன் | 253 |
| 94 | R 1710 | 4 | நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே | 254 |
| 95. | R 1720 | 4 | அறிமுகக் கடிதங்கள் | 258 |
| வருடம் 1895 # R 1749 முதல் R 1907 வரை | | | | |
| 96. | R 1761 | 2 | மறுரூபம் | 262 |
| 97 | R 1786 மார்ச் 1895 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 264 |

| | | | | |
|---|---|---|---|---|
| 98. | R 1793 | 1 | நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | 267 |
| 99 | R 1794 | 3 | நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | 268 |
| 100 | R 1800 ஏப்ரல்1895 | 2 | கர்த்தருடைய இராப்போஜனம் | 271 |
| 101 | R 1801 ஏப்ரல்1895 | 4 | கெத்செமனேயில் வியாகுலம் | 273 |
| 102 | R 1806 மே 1895 | 8 | உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல் | 277 |
| 103 | R 1809 மே 1895 | 1 | பிலாத்துவுக்கு முன்பாக இயேசு | 285 |
| 104 | R 1809 மே 1895 | 2 | பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு | 286 |
| 105 | R 1810 | 1 | [ Poem] பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ? | 288 |
| 106 | R 1815 மே 1895 | 3 | கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் | 289 |
| 107 | R 1832 & R 5284 ஆகஸ்ட்1913 | 11 | தேவசமாதானம் | 292 |
| 108 | R 1836 | 4 | அந்நிய அக்கினியைப் படைத்தல் | 303 |
| 109 | R 1837 | 1 | [ Poem] ஒருநாள்தான் நமக்குண்டு என்றால்? | 307 |
| 110 | R 1847 | 4 | Tract Society -இன் அறிமுகக் கடிதங்கள் | 308 |
| 111 | R 1866 | 9 | பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக | 312 |
| 112 | R 1883 | 2 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 321 |
| 113 | R 1889 | 23 | நல்லொழுக்கமபயும்,கிரமமாயும் | 323 |
| 114 | R 1898 டிசம்பர்1895 | 7 | கர்த்தருடையபாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி | 346 |
| 115 | R 1900 | 2 | வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் [Dawn] குழுக்கள் | 353 |

| | | | | |
|---|---|---|---|---|
| 116 | R 1900<br>[Page -5] | 2 | [ Poem ] விநோதனமான ஜனங்கள் | 355 |
| 117 | R 1902 | 2 | ( தெ. பத்திகள்) உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் | 357 |
| 118 | R 1904<br>[Page -285 & 205] | 1 | [ Poem ] தந்தாய் உந்தன் நாமம் வாழ்க | 359 |
| **வருடம் 1896 # R 1911 முதல் R 2081 வரை** | | | | |
| 119 | R 1915 | 3 | கிறிஸ்துவின் முன்னோடி | 360 |
| 120 | R 1937 | 6 | வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல் அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல் | 363 |
| 121 | R 1942<br>மார்ச் 1896 | 4 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல் | 369 |
| 122 | R 1951 | 3 | இடுக்கமானவாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகள் | 373 |
| 123 | R 1956 | 3 | கைகளை வைத்தல் | 376 |
| 124 | R 1988<br>ஜீன் 1896 | 2 | கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | 379 |
| 125 | R 2018<br>[Page 3] | 1 | இயேசு என்ன செய்திடுவார்? | 381 |
| 126 | R 2068 | 5 | சாலொமோனுடைய பாவம் | 382 |
| 127 | R 2079 | 3 | (தெ. பத்திகள்) பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் - எண்.2 | 387 |
| | | | **வருடம் 1897# R 2083முதல் R 2236 வரை** | |
| 128 | R 2099 | 4 | உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சம் | 390 |
| 129 | R 2115 | 4 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 394 |

| | | | | |
|---|---|---|---|---|
| 130 | R 2156 | 3 | உன் நாளைப் பொல்லாப்புக்குவிலக்கிக் காத்துக்கொள் | 398 |
| 131 | R 2168 [Page 3] | 1 | ராஜரீக ஆசாரியர்களின் மன விருப்பங்கள் | 401 |
| 132 | R 2220 | 4 | பரிசுத்தபவுலினுடைய இருதயம் வெளியானது | 402 |
| **வருடம் 1898 # R 2238 முதல் R 2410 வரை** | | | | |
| 133 | R 2264 | 10 | (தெ. பத்திகள்) ஏதோ புதுமையென்று திகையாமல் | 406 |
| 134 | R 2270 [ Page 54] | 1 | [ Poem ] யேசுவின் பாதம் சேரும் என்ன ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்? | 416 |
| 135 | R 2270 ( R1289 & 5191 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 417 |
| 136 | R 2278 மார்ச் 1898 | 3 | பாதம் கழுவுதல் | 432 |
| 137 | R 2278 [ R 3593] | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 444 |
| 138 | R 2282 ஏப்ரல் 1898 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 447 |
| 139 | R 2291 ஏப்ரல் 1898 | 6 | நினைவுகூருதலின் ஆசரிப்பு | 449 |
| 140 | R 2291 | 3 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 455 |
| 141. | R 2297 [ Page 128] | 1 | [ Poem ] நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார் | 458 |
| 142 | R 2312 மே1898 | 4 | பிலாத்துவின் முன்னிலையில் இயேசு - "அவரைநினைத்துக்கொள்ளுங்கள்" | 459 |
| 143 | R 2315 ஜீன் 1898 | 6 | சிலுவையில் அறையப்பட்டவர் மீதுஒருபார்வை | 463 |
| 144 | R 2379 நவம்பர்1898 | 6 | எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா | 469 |

| | | | | |
|---|---|---|---|---|
| 145 | R 2408 | 6 | ஒவ்வொருமனுஷனையும் பிரகாசிப்பிக்கிறமெய்யானஒளி | 475 |
| **வருடம் 1899 #R 2411 முதல் R 2552** | | | | |
| 146 | R 2417 | 1 | [Poem ]முன்பொருகாலத்தில் | 481 |
| 147 | R2418 | 1 | [Poem] சீசரின் நண்பரா? - கிறிஸ்துவின் நண்பரா? | 482 |
| 148 | R 2424 | 5 | விசுவாசத்திற்கானபலன் அளிக்கப்பட்டது - உன் குமாரன் பிழைத்திருக்கிறான் | 483 |
| 149 | R 2429 பிப்ரவரி1899 | 1 | நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கானதியதி | 488 |
| 150 | R 2433 | 5 | இவைகளைப் பார்க்கிலும் பெரிதானகிரியைகள் | 489 |
| 151 | R 2436 பிப்ரவரி 1899 & R 1504 மார்ச்1893 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 494 |
| 152 | R 2436 [ Page 44] | 1 | [ Poem ] புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள் | 497 |
| 153 | R 2437 | 6 | கூடாரப்பண்டிகையின் போது | 498 |
| 154 | R 2438 | 7 | மெய்யாக வேவிடுதலையாவீர்கள் | 504 |
| 155 | R 2441 | 5 | நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து | 511 |
| 156 | R 2442 | 2 | [தெ. பத்திகள்]தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும் | 516 |
| 157 | R 2447 ஏப்ரல்1899 | 5 | விலையேறப் பெற்ற நள ததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி | 518 |
| 158 | R 2449 R 4163 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 523 |
| 159 | R 2449 ஏப்ரல்1889 | 6 | நான் உங்களுக்குமாதிரியைக் காண்பித்தேன் | 524 |
| 160 | R 2453 ஏப்ரல்1899 | 6 | நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் | 530 |

| | | | | |
|---|---|---|---|---|
| 161 | R 2455<br>ஏப்ரல்1899 | 4 | வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் | 536 |
| 162 | R 2458 | 1 | [ poem] ஒரு குவளைக் குளிர்ந்த நீர் | 540 |
| 163 | R 2464<br>மே1899 | 8 | நான் திராட்சச்செடி - நீங்கள் கொடிகள் | 541 |
| 164 | R 2467<br>மே1899 | 8 | கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் | 549 |
| 165 | R 2469<br>மே1899 | 5 | மாபெரும் பிரதானஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் | 557 |
| 166 | R 2470<br>மே1899 | 7 | பிலாத்துவின் முன் நல்லஅறிக்கை | 562 |
| 167 | R 2473<br>மே1899 | 8 | அவர் அக்கிரமக்காரரில் ஒருவராகஎண்ணப்பட்டார் | 569 |
| **வருடம் 1900# R 2553முதல் R 2747வரை** | | | | |
| 168 | R 2555 | 7 | அந்த வார்த்தை மாம்சமாகி | 577 |
| 169 | R 2558 | 5 | இயேசுவானவர் ஞானத்திலும் விருத்தியடைந்தார் | 584 |
| 170 | R 2562 | 9 | யோவான்ஸ்நானனின் பிரசங்கம் | 589 |
| 171 | R 2565 | 11 | அர்ப்பணிப்பைப் பின் தொடர்ந்தசோதனைகள் | 598 |
| 172 | R 2574 | 6 | மொண்டுகொள்ள பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே | 609 |
| 173 | R 2585 | 13 | நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு | 615 |
| 174 | R 2589 | 7 | இராஜரீகப் பிரமாணம் பொன்னானசட்டம் | 628 |
| 175 | R 2590 | 7 | இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார் | 635 |
| 176 | R 2592<br>மார்ச் 1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 642 |
| 177 | R 2606 | 6 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை | 644 |

| | | | | |
|---|---|---|---|---|
| 178 | R 2620 | 5 | நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமானபோக்கு | 650 |
| 179 | R2622<br>மே1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 655 |
| 180 | R 2623 | 8 | அறிவு,பொறுப்புகளை அதிகரிக்கின்றது | 657 |
| 181 | R 2625 | 5 | இரண்டு விதமான பாவிகள் | 665 |
| 182 | R 2630<br>[ Page 134] | 1 | [ Poem ] சில வருடம் மாத்திரமே | 670 |
| 183 | R 2635 | 4 | அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு | 671 |
| 184 | R 2646<br>[ Page 168 & 259] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 675 |
| 185 | R 2651 | 7 | ஜீவஅப்பம் நானே | 676 |
| 186 | R 2654 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இனக்கமுள்ளவர்களுமாயிருங்கள் | 683 |
| 187 | R 2660 | 5 | இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் | 688 |
| 188 | R 2701 | 5 | ஏற்கமறுக்கப்பட்ட இராஜ விருந்து | 693 |
| 189 | R 2706 | 6 | காணாமல் போனவர்களுக்கானதெய்வீகஅக்கறை | 698 |
| 190 | R 2715 | 7 | அநீதியுள்ளஉக்கிராணக்காரன் | 704 |
| 191 | R 2722 | 11 | கிறிஸ்தவர்களின் அன்றாட ஜீவியம் | 711 |
| 192 | R 2743<br>டிசம்பர்1900 | 7 | நறுமணம் வீசியதைலம் | 722 |
| 193 | R 2745<br>டிசம்பர்1900 | 6 | ஓசன்னாவருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவா | 729 |

| வருடம் 1901# R 2751முதல் R 2928வரை | | | | |
|---|---|---|---|---|
| 194 | R 2757 | 7 | கிறிஸ்துவாகியகாந்தம் - நான் எல்லோரையும்இழுத்துக்கொள்ளுவேன். | 735 |
| 195 | R 2764 | 7 | அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக | 742 |
| 196 | R 2771 பிப்ரவரி 1901 | 9 | கர்த்தருடைய இராப்போஜனம் | 749 |
| 197 | R 2773 பிப்ரவரி 1901 | 7 | கெத்செமனே - விழிப்பும், ஜெபமும் | 758 |
| 198 | R 2778மார்ச் 1901 | 6 | இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார் | 765 |
| 199 | R 2780 மார்ச் 1901 | 6 | நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள் | 771 |
| 200 | R 2785 மார்ச்1901 | 6 | இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை | 777 |
| 201 | R 2787 மார்ச்1901 | 8 | பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது | 783 |
| 202 | R 2793 ஏப்ரல் 1901 | 2 | பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள் | 791 |
| 203 | R 2794 [Page 121] | 8 | மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன் | 793 |
| 204 | R 2870 | 1 | [Poem] நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள் | 800 |
| 205 | R 2880 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 801 |
| 206 | R 2885 | 5 | துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில் | 806 |
| 207 | R 2887 | 6 | ஏனெனில், தேவன் அவனோடே கூட இருந்தார் | 811 |
| 208 | R 2890 [Page 3] | 1 | விலை மதிப்பில்லா முத்து | 817 |
| 209 | R 2893 | 7 | இரக்கமுள்ள யோசேப்பு | 818 |
| 210 | R 2895 | 6 | சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | 825 |

| | | | | |
|---|---|---|---|---|
| 211 | R 2909 | 6 | நான் உன்னோடே இருப்பேன் | 831 |
| 212 | R 2917<br>டிசம்பர் 1901 | 4 | நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார் | 837 |
| 213 | R 2923 | 1 | [ Poem ] எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய் | 841 |
| 214 | R 2924 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 842 |
| **வருடம் 1902# R 2929முதல் R 3124வரை** | | | | |
| 215 | R 2951 | 6 | உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்த சாட்சி | 843 |
| 216 | R 2986<br>[R5875] | 8 | ஜனேயாவும், தொற்காளும் | 849 |
| 217 | R 2989<br>[ 5879] | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 857 |
| 218 | R 2995 | 2 | (தெ.பத்திகள்) யுக மாற்றங்களைக் கவனித்தல் | 863 |
| 219 | R 3000 | 9 | ஆவிக்குரிய கணக்குகளை - வருடந்தோறும் கணக்குப்பார்த்தல் | 865 |
| 220 | R 3004 | 1 | (தெ.பத்திகள்) ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள் | 874 |
| 221 | R 3011 | 4 | (தெ.பத்திகள்) நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல் | 875 |
| 222 | R 3014 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 879 |
| 223 | R 3017<br>[R4374]<br>[R5892] | 6 | எருசலேமில் கூடின ஆலோசனைச் சங்கம் | 880 |
| 224 | R 3033 | 7 | அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து | 886 |
| 225 | R 3077 | 1 | (தெ.பத்திகள்) தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார் | 893 |
| 226 | R 3089 | 5 | நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் | 894 |
| 227 | R 3092 | 4 | அடைக்கலத்திற்காக தப்பி ஓடுதல் | 899 |

| | | | | |
|---|---|---|---|---|
| 228 | R 3102 [Page 3] | 2 | தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன், சோளா, போன்ற குணமுடையோரே | 903 |
| 229 | R 3135 | 10 | நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் | 905 |
| 230 | R 3142 | 3 | உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல | 915 |
| 231 | R 3159 & R 5935 | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 918 |
| 232 | R 3171 | 7 | மூப்பருக்குரிய பொறுப்புகள் | 922 |
| 233 | R 3178 ஏப்ரல்1903 | 3 | நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு | 929 |
| 234 | R 3210 | 2 | (தெ.பத்திகள்) தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை | 932 |
| **வருடம் 1903# R 3125முதல் R 3293வரை** | | | | |
| 235 | R 3225 [Page 221] & R 5656 [Page 88] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 934 |
| 236 | R 3243 | 4 | உங்கள் நீதி | 938 |
| **வருடம் 1904# R 3294முதல் R 3478வரை** | | | | |
| 238 | R 3300 | 8 | போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது | 942 |
| 239 | R 3307 | 6 | மனுஷரைப் பிடிக்கிறவர்கள் | 950 |
| 240 | R 3325 | 7 | விலை அதிகமுள்ள பேரம் | 956 |
| 241 | R 3337 | 7 | கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் | 963 |
| 242 | R 3354 | 7 | எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள் | 970 |
| 243 | R 3363 மே1904 | 6 | கடைசி இராப்போஜனம் | 977 |

| | | | | |
|---|---|---|---|---|
| 244 | R 3369<br>மே1904 | 10 | கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் | 983 |
| 245 | R 3374 | 12 | இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் | 993 |
| 246 | R 3401 | 3 | தேவனுடைய தைரியமுள்ள மற்றும் துணிவற்ற ஊழியக்காரர்கள் | 1005 |
| 247 | R 3431<br>[Page 3] | 1 | அன்பின் பிரமாணம் | 1008 |
| **வருடம் 1905 # R 3479முதல் R 3687வரை** | | | | |
| 248 | R 3484 | 6 | நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது | 1009 |
| 249 | R 3500 | 8 | இரக்கத்தின் வீடு | 1015 |
| 250 | R 3508 | 9 | கூடாரப்பண்டிகை | 1023 |
| 251 | R 3517 | 4 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் | 1032 |
| 252 | R 3521<br>[ Page 77&39] | 1 | [ Poem ] மறைக்கப்பட்ட சிலுவை | 1036 |
| 253 | R 3525 மார்ச் 1905 | 5 | நம்முடைய "பஸ்காவிகன்" நினைவுகூருதல் | 1038 |
| 254 | R 3534<br>ஏப்ரல் 1905 | 11 | மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | 1043 |
| 255 | R 3537<br>ஏப்ரல்1905 | 10 | உன்னதத்திலே ஓசன்னா | 1054 |
| 256 | R 3542<br>ஏப்ரல்1905 | 6 | ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் | 1064 |
| 257 | R 3544<br>ஏப்ரல்1905 | 11 | மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி | 1070 |
| 258 | R 3548<br>மே 1905 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1081 |
| 259 | R 3551<br>மே 1905 | 10 | நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் | 1084 |

| | | | | |
|---|---|---|---|---|
| 260 | R 3553<br>மே 1905 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸதர் | 1094 |
| 261 | R 3556<br>[Page 3] | 1 | இயேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டும் | 1102 |
| 262 | R 3560<br>மே 1905 | 9 | சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு | 1103 |
| 263 | R 3593<br>R2278 | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 1112 |
| 264 | R 3606 | 2 | ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும் | 1124 |
| 265 | R 3613 | 4 | தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை | 1126 |
| 266 | R 3635<br>செப்டம்பர்<br>1905 | 1 | யார் நினைவுகூருவது ஏற்றது? | 1130 |
| 267 | R 3638 | 2 | (தெ.பத்திகள்) நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார் | 1131 |
| 268 | R 3655 | 4 | மகிமையின் மேல் மகிமை | 1133 |
| **வருடம் 1906# R 3693முதல் R 3912வரை** | | | | |
| 269 | R 3700 | 6 | மகிமையான அறிவிப்பு | 1137 |
| 270 | R 3702 | 5 | நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள் | 1143 |
| 271 | R 3706<br>ஜனவரி 1906 | 2 | பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906 | 1148 |
| 272 | R 3718<br>[Page 3] | 3 | மனதிரும்பி வந்த கெட்டக் குமாரன் | 1150 |
| 273 | R 3726 | 8 | வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் | 1153 |
| 274 | R 3728 | 8 | பாவமன்னிப்பு | 1161 |
| 275 | R 3744 | 2 | சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல் | 1169 |
| 276 | R 3745 | 5 | தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும் | 1171 |

| | | | | |
|---|---|---|---|---|
| 277 | R 3746 | 8 | நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து கவனியுங்கள் | 1176 |
| 278 | R 3749<br>ஏப்ரல்1906 | 8 | பஸ்காவைப் பலியிட வேண்டிய | 1184 |
| 279 | R 3751 | 4 | ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் | 1192 |
| 280 | R 3752 | 9 | ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும் | 1196 |
| 281 | R 3754 | 7 | இயேசுவுக்குள் உயிர்தெழுதலின் வல்லமை | 1205 |
| 282 | R 3759<br>Page [118] | 1 | [Poem] மணவாளனின் புறா | 1212 |
| 283 | R 3759<br>ஏப்ரல் 1906 | 6 | உனக்காக வேண்டிக்கொண்டேன் | 1213 |
| 284 | R 3769 | 1 | (தெ.பத்திகள்) மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி | 1219 |
| 285 | R 3779 | 7 | அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் | 1220 |
| 286 | R 3795 | 2 | (தெ.பத்திகள்) பரலோக இராஜ்யத்தில் பெரியவன் | 1227 |
| 287 | R 3800 | 2 | (தெ.பத்திகள்) அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி | 1229 |
| 288 | R 3803 | 8 | எனக்கு பிறன் யார்? | 1231 |
| 289 | R 3820<br>[R5909] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 1239 |
| 290 | R 3826 | 5 | (தெ.பத்திகள்) ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 1243 |
| 291 | R 3831 | 6 | பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட சம்பாஷணைகள் | 1248 |
| 292 | R 3841 | 7 | தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | 1254 |

| | | | | |
|---|---|---|---|---|
| 293 | R 3850 செப்டம்பர் 1906 | 7 | கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர் | 1261 |
| 294 | R 3864 | 11 | லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல் | 1268 |
| 295 | R 3867 | 8 | புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் | 1279 |
| 296 | R 3877 அக்டோபர் 1906 | 7 | அவளால் இயன்றதை அவள் செய்தாள் | 1287 |
| 297 | R 3879 அக்டோபர் 1906 | 7 | என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1294 |
| 298 | R 3885 நவம்பர்1906 | 10 | பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் | 1301 |
| 299 | R 3887 நவம்பர்1906 | 6 | அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் | 1311 |
| 300 | R 3895 நவம்பர்1906 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | 1317 |
| 301 | R 3900 டிசம்பர்1906 | 11 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் | 1325 |
| 302 | R 3906 | 1 | (தெ.பத்திகள்) பயண சகோதரர்களின் ஊழியங்கள் | 1336 |
| **வருடம் 1907# R 3913முதல் R 4108வரை** | | | | |
| 303 | R 3932 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் | 1337 |
| 304 | R 3938 | 1 | (தெ.பத்திகள்) பொருளாசையின் அபாயம் | 1342 |
| 305 | R 3943 | 2 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1343 |
| 306 | R 3971 | 5 | சகோதரர்களால் பகைக்கப்பட்டவர் | 1345 |
| 307 | R 3972 | 7 | துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல் | 1350 |
| 308 | R 3978 | 8 | என்னைக் கணம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் | 1357 |

| | | | | |
|---|---|---|---|---|
| 309 | R 3980 | 7 | இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 1365 |
| 310 | R 4008 | 9 | அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி | 1372 |
| 311 | R 4021 [Page 203] | 1 | [Poem] உங்கள் பிதா உங்களுக்கு இன்னதுதேவை என்றறிவார் | 1381 |
| 312 | R 4022 [ Page 203 & 371 ] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 1382 |
| 313 | R 4030 | 7 | அந்நிய அக்கினியைப் படைத்தவர்கள் | 1383 |
| 314 | R 4033 | 3 | தேவனோடே போர்ப்புரிதல் | 1390 |
| 315 | R 4034 [ Page 229] | 1 | [ Poem ] ராஜாவின் பிரசன்னத்திலுள்ளே | 1393 |
| 316 | R 4057 [ Page 281 & 375] | 1 | [ Poem ] இப்போதே வேண்டாம் எனதன்பு மகனே | 1394 |
| **வருடம் 1908 # R 4109முதல் R 4300வரை** | | | | |
| 317 | R 4112 | 7 | கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல் | 1395 |
| 318 | R 4115 | 9 | கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் | 1402 |
| 319 | R 4121 | 5 | போதித்தல் என்றால் என்ன? (சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்) | 1411 |
| 320 | R 4124 | 9 | மறுஜென்மகாலமும் இராஜ்யமும் | 1416 |
| 321 | R 4127 பிப்ரவரி 1908 | 7 | முதலாம் மாதத்தில் பஸ்கா | 1425 |
| 322 | R 4130 | 8 | தாகத்துக்குத் தா | 1432 |
| 323 | R 4146 மார்ச்1908 | 8 | ஜீவ அப்பம் நானே | 1440 |
| 324 | R 4148 மார்ச்1908 | 8 | நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் | 1448 |
| 325 | R 4153 மார்ச்1908 | 2 | நினைவுகூருதல், ஏப்ரல் 14 | 1456 |
| 326 | R 4157 | 8 | மேய்ப்பன், வாசல், மந்தைகள் | 1458 |

| | | | | |
|---|---|---|---|---|
| 327 | R 4160 | 9 | நான் அவனை எழுப்பப்போகிறேன் | 1466 |
| 328 | R 4163 & R 2449 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 1475 |
| 329 | R 4164 மே 1908 | 9 | வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி | 1476 |
| 330 | R 4167 மே 1908 | 8 | நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார் | 1485 |
| 331 | R 4171 | 12 | ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்? | 1493 |
| 332 | R 4180 | 1 | [ Poem ] வரவேற்பு | 1505 |
| 333 | R 4183 | 5 | (தெ.பத்திகள்) இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா? | 1506 |
| 334 | R 4197 | 3 | (தெ.பத்திகள்) ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல் | 1511 |
| 335 | R 4203 [Page 205] | 2 | [Poem] இவள் தன்னால் இயன்றதை செய்தாள் | 1514 |
| 336 | R 4251 | 4 | சபை என்றால் என்ன? | 1516 |
| 337 | R 4262 [ Page 311] | 1 | [ Poem ] ஓய்வு நாள் தன்னின் இனிமை | 1520 |
| 338 | R 4286 [Page 157] | 5 | சமாதானத்தின் இராஜா பொறுப்பேற்கப்பட்டார் | 1521 |
| 339 | R 4290 [Page 363] | 8 | விரும்பித் தேடுங்கள், பின்னர் நாடி பெற்றுக் கொள்ளுங்கள் | 1526 |
| **வருடம் 1909 # R 4301முதல் R 4538வரை** | | | | |
| 340 | R 4312 | 3 | சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம் | 1534 |
| 341 | R 4317 | 1 | [ Poem ] களிமண் | 1537 |
| 342 | R 4345 | 1 | (தெ.பத்திகள்) உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1538 |

| | | | | |
|---|---|---|---|---|
| 343 | R 4346<br>மார்ச்1909 | 2 | (தெ.பத்திகள்) ஜெபத்திற்கு விடையாக விடுதலை | 1539 |
| 344 | R 4358 | 4 | கிறிஸ்து நமது பஸ்கா | 1541 |
| 345 | R 4359 | 1 | (தெ.பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி | 1545 |
| 346 | R 4363<br>[ Page 393] | 1 | [ Poem ] இன்று பெயர் சபைகளில் போதிக்கப்படும் அநேக போதனைகளில் | 1546 |
| 347 | R 4374<br>[R3017]<br>[R5892] | 6 | எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம் | 1547 |
| 348 | R 4375<br>ஏப்ரல் 1909 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1553 |
| 349 | R 4380 | 3 | (தெ.பத்திகள்) நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை | 1556 |
| 350 | R 4384<br>மே1909 | 3 | பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள் | 1559 |
| 351 | R 4417 | 5 | (தெ.பத்திகள்) தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை | 1562 |
| 352 | R 4458 &<br>R5935 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 1567 |
| 353 | R 4461 | 1 | ( தெ.பத்திகள்) எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம் | 1576 |
| 354 | R 4472 | 1 | ( தெ.பத்திகள்) எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் | 1577 |
| 355 | R 4485 | 1 | [ Poem] தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே | 1578 |
| 356 | R 4501 | 8 | சண்டைக்காரராயிருந்து | 1579 |
| **வருடம் 1910 # R 4539முதல் R 4732வரை** | | | | |
| 357 | R 4556 | 3 | கலிலேயாவின் தீர்க்கதரிசி | 1587 |

| | | | | |
|---|---|---|---|---|
| 358 | R 4558 | 4 | உங்கள் பிதா பூரண சற்குராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் | 1590 |
| 359 | R 4566 | 3 | தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள் | 1594 |
| 360 | R 4577 | 3 | ஏதிரிாளியானவன் மீது வல்லமை / அதிகராம் | 1597 |
| 361 | R 4587 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பகுதி | 1600 |
| 362 | R 4587 | 3 | பாவமும், வியாதியும் தொடர்புடையவகள் | 1601 |
| 363 | R 4588 | 3 | ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம் | 1604 |
| 364 | R 4590<br>ஏப்ரல்1910 | 8 | நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம் | 1607 |
| 365 | R 4593 | 4 | பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது | 1615 |
| 366 | R 4597 | 3 | எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்? | 1619 |
| 367 | R 4602 | 2 | பலிபீடத்திலிருந்து எடுக்கப்படும் அக்கினித்தழலின் முக்கியத்துவம் | 1622 |
| 368 | R 4605<br>மே 1910 | 4 | இரத்தத்தினைச் சதாரணமானதாய் எண்ணுதல் | 1624 |
| 369 | R 4608 | 3 | முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் | 1628 |
| 370 | R 4618 | 3 | ஆண்டவரே என்னை இரட்சியும் பரிசுத்தர் என்று பேதுரு கூப்பிட்டார் | 1631 |
| 371 | R 4634 | 3 | நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள் | 1634 |
| 372 | R 4635 | 3 | கோதுமை மற்றும் களைகள் | 1637 |
| 373 | R 4636 | 3 | இராஜ்யத்தின் காட்சிகள் | 1640 |
| 374 | R 4637 | 4 | இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை | 1643 |

| | | | | |
|---|---|---|---|---|
| 375 | R 4642 | 1 | ( தெ.பத்திகள்) ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை | 1647 |
| 376 | R 4658 | 1 | [Poem] ஊசியின் காதினிலே | 1648 |
| 377 | R 4658 | 4 | ஒட்டகமும், ஊசியின் காதும் | 1652 |
| 378 | R 4668 | 2 | பெரியவன் ஊழியக்காரன் | 1653 |
| 379 | R 4678 | 3 | தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன | 1655 |
| 380 | R 4686 | 3 | ஏசாவுடனான யாக்கோபின் நடத்தை இழிவானதா? | 1658 |
| 381 | R 4686 | 3 | சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள் | 1661 |
| 382 | R 4701 | 3 | அக்கினியைக் கட்டகளையிட உமக்குச் சித்தமா? | 1664 |
| 383 | R 4703 அக்டோபர் 1910 | 3 | என்னை நினைகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1667 |
| 384 | R 4707 நவம்பர் 1910 | 4 | இருளான கெத்செமனே வேளை | 1671 |
| 385 | R 4709 | 1 | ( தெ.பத்திகள்) அவர் அரைக்கட்டிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் | 1675 |
| 386 | R 4710 நவம்பர் 1910 | 5 | தேவனை தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார் | 1676 |
| 387 | R 4711 நவம்பர் 1910 | 4 | சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் | 1681 |
| 388 | R 4712 நவம்பர் 1910 | 4 | ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார் | 1685 |
| 389 | R 4730 | 3 | யோசபாத்தின் ஒரு தவறு | 1689 |
| **வருடம் 1911 # R 4733முதல் R 4942வரை** | | | | |
| 390 | R 4756 பிப்ரவரி 1911 | 3 | 1911 - நினைவுகூருதல் இராப்போஜனம் - 1911 | 1692 |

| | | | | |
|---|---|---|---|---|
| 391 | R 4770 | 1 | (தெ.பத்திகள்) கெட்ட வார்த்தை என்றால் என்ன? | 1695 |
| 392 | R 4771 | 2 | (தெ.பத்திகள்) உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 1696 |
| 393 | R 4794 [Page 104] | 3 | மாம்சத்தில் ஒரு முள் | 1698 |
| 394 | R 4794 [ Page 105] | 4 | திராட்சத் தோட்டத்தின் பாடல் | 1701 |
| 395 | R 4802 | 6 | சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் | 1705 |
| 396 | R 4809 [Page 136] | 6 | சரீரத்தை ஒடுக்குதல் / அடக்குதல் | 1711 |
| 397 | R 4821 | 4 | புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி | 1717 |
| 398 | R 4838 | 4 | உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு | 1721 |
| 399 | R 4851 | 1 | [Poem] சிலுவையில்லையேல் கிரீடமில்லையே | 1725 |
| 400 | R 4892 | 3 | இரவின் கீதங்கள் | 1726 |
| 401 | R 4895 [Page 3] | 1 | கொஞ்சம் நேரமே | 1729 |
| 402 | R 4905 | 4 | (தெ. பத்திகள்) நமது கர்த்தருடைய ஜீவ - உரிமைகள் மீதான கேள்விகள் | 1730 |
| 403 | R 4915 [Page 413] | 2 | [Poem] ஹ! ஆசிக்கிறேன் | 1734 |
| 404 | R 4917 | 6 | அன்பைக் குறித்து சுயபரிசோதனை | 1736 |
| 405 | R 4927 | 3 | மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு | 1742 |
| 406 | R 4929 | 2 | (தெ. பத்திகள்) அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும் | 1745 |
| 407 | R 4939 | 3 | இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள் | 1747 |
| 408 | R 4940 | 3 | மகா பெரிய தீர்க்கத்தரிசி | 1750 |

| | | | | |
|---|---|---|---|---|
| 409 | R4942 | 3 | ஆலயத்தில் அர்ப்பணிப்பு | 1753 |
| **வருடம் 1912 # R 4955முதல் R 5152வரை** | | | | |
| 410 | R 4968 | 1 | (தெ. பத்திகள்) வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான.... | 1756 |
| 411 | R 4971 [Page 54] | 1 | [Poem] சிலவேண்டாமே, சில வேண்டுமே | 1757 |
| 412 | R 4977 | 8 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 1758 |
| 413 | R 4979 | 4 | அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார் | 1766 |
| 414 | R 4984 | 6 | மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான தேவவாக்கிய விதி | 1770 |
| 415 | R 4994 | 4 | சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும் | 1776 |
| 416 | R 5020 | 4 | உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு | 1780 |
| 417 | R 5021 | 5 | ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும் | 1784 |
| 418 | R 5047 | 4 | இராஜ்யம் ஒரு பரிசு | 1789 |
| 419 | R 5050 ஜீன் 1912 | 1 | (தெ. பத்திகள்) புளித்த மா பற்றின உவமை | 1793 |
| 420 | R 5085 | 6 | கிறிஸ்துவினுடைய பலி | 1794 |
| 421 | R 5096 | 4 | தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல | 1800 |
| 422 | R 5103 | 4 | அவர் எல்லாவற்றையும் நன்றாயச் செய்தார் | 1804 |
| 423 | R 5111 | 4 | வானத்திலிருந்து ஓர் அடையாளம் | 1808 |
| 424 | R 5120 | 4 | மாபெரும் கேள்வி | 1812 |
| 425 | R 5122 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 1816 |
| 426 | R 5122 | 2 | (தெ. பத்திகள்)சுவாரசியமான கடிதங்கள் | 1817 |

| | | | | |
|---|---|---|---|---|
| 427 | R 5128 | 3 | மீட்பின் வேலையினுடைய இரண்டு பாகங்கள் | 1819 |
| 428 | R 5128 | 3 | எல்லாம் கூடும் | 1822 |
| 429 | R 5129 | 3 | ஆவியை அவித்துப்போடாதிருங்கள் | 1825 |
| 430 | R 5131 | 1 | அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை | 1828 |
| 431 | R 5134 | 4 | ஏழெழுபது தரம் மன்னித்தல் | 1829 |
| 432 | R 5142 | 3 | பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள் | 1833 |
| 433 | R 5147 [Page 387] | 5 | எதிராளியானவனுடைய சூழ்ச்சித்திறன் | 1836 |
| **வருடம் 1913 # R 5153முதல் R 5372வரை** | | | | |
| 434 | R5158 [ Page 10] | 1 | [ Poem ] நீதிமானின் குணம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது | 1841 |
| 435 | R 5161 | 2 | (தெ. பத்திகள்) சுவாரசியமான சில கடிதங்கள் | 1842 |
| 436 | R 5161 | 1 | (தெ. பத்திகள்) சுவாரசியமான கேள்விகள் | 1844 |
| 437 | R 5185 | 4 | மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை | 1845 |
| 438 | R 5186 & R5809 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 1846 |
| 439 | R 5191 மார்ச் 1913 ( R1289 & R 2270 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 1851 |
| 440 | R 5195 [ Page 75] | 1 | [ Poem ] கெத்செமனே | 1866 |
| 441 | R 5195 [Page 3] | 1 | சம்பிரதாய கடமை ஜெபம் | 1867 |
| 442 | R 5208 [Page 3] | 1 | கெத்செமனே | 1868 |
| 443 | R 5214 | 1 | [Poem] கெத்செமனே | 1869 |

| | | | | |
|---|---|---|---|---|
| 444 | R 5214 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 1870 |
| 445 | R 5216 | 6 | துன்பப்பட்டவர் எனினும் தேற்றுபவர் | 1875 |
| 446 | R 5225 | 6 | விதைத்தலும் அறுத்தலும் | 1881 |
| 447 | R 5231 | 6 | பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு | 1887 |
| 448 | R 5232 | 6 | யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | 1893 |
| 449 | R 5234 | 6 | பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது | 1899 |
| 450 | R 5241 [Page 3] | 1 | எத்தனை காலம் தேவனே? ஏத்தனை காலமோ? | 1905 |
| 451 | R 5255 | 1 | பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக் கூட்டங்கள் | 1906 |
| 452 | R 5272 ஜீலை 1913 | 4 | இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்து போகப்பட்டது | 1907 |
| 453 | R 5284 [Page 227] R 1832 [Page 153] | 11 | தேவசமாதானம் | 1911 |
| 454 | R 5304 | 2 | (தெ.பத்திகள்) உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை | 1922 |
| 455 | R 5315 | 1 | (தெ.பத்திகள்) ஒரு நல்ல மனிதனின் பாவம் | 1924 |
| 456 | R 5321 | 3 | சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி | 1925 |
| 457 | R 5323 [Page 3] | 1 | அவர் நம்மைக் கைவிட மாட்டார், நம்மைத் தவறவிட்டார். | 1928 |
| 458 | R 5326 | 1 | [Poem] இடமிருக்குது, இடமிருக்குது | 1929 |
| 459 | R 5336 | 3 | மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் | 1930 |
| 460 | R 5341 நவம்பர் 1913 | 5 | நமது ஆசீர்வாதத்தின் பாத்திரம் | 1933 |

| | | | | |
|---|---|---|---|---|
| 461 | R 5341 (தெ.ப) | 2 | (தெ.பத்திகள்)இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது | 1938 |
| 462 | R 5342 நவம்பர் 1913 | 3 | நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம் | 1940 |
| 463 | R 5346 | 7 | நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் | 1943 |
| 464 | R 5350 | 2 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 1950 |
| 465 | R 5358 | 3 | கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல் | 1952 |
| 466 | R 5362 | 4 | எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல் | 1955 |
| 467 | R 5368 | 2 | அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள் | 1959 |
| 468 | R 5370 [Page 377] | 3 | அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள் | 1961 |
| 469 | R 5370 [Page 377] R 5371 [Page 378] | 3 | மார்த்தாள் மற்றும் மரியாள் | 1964 |
| **வருடம் 1914 # R 5373முதல் R 5600வரை** | | | | |
| 470 | R 5374 | 4 | காலம் சமீபித்திருக்கறிது | 1967 |
| 471 | R 5375 | 6 | உண்மை ஊழியத்தின் மாபெரும் சிலாக்கியம் | 1971 |
| 472 | R 5377 [Page 10] | 4 | அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி | 1977 |
| 473 | R 5377 [Page 11] | 2 | ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டோர் | 1981 |
| 474 | R 5378 | 3 | யாரெல்லாம் ஜெபிக்கலாம்? எதற்காக ஜெபிக்கலாம்? | 1983 |

| | | | | |
|---|---|---|---|---|
| 475 | R 5379 | 6 | ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் கூடிய ஸ்தோத்திரம் | 1986 |
| 476 | R 5383 | 3 | நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம் | 1992 |
| 477 | R 5384 | 6 | ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை | 1995 |
| 478 | R 5388 | 3 | மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை | 2001 |
| 479 | R 5389 | 4 | பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ! | 2004 |
| 480 | R 5390 | 4 | நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை | 2008 |
| 481 | R 5391 | 1 | லேவியராகமம் 9 மற்றும் 16ம் அதிகாரங்கள் | 2012 |
| 482 | R 5391 | 8 | மேசியா - கிறிஸ்து - அபிஷேகம் பண்ணப்பட்டவர் | 2013 |
| 483 | R 5394 | 4 | தேவபக்தியாய் நடத்தல் துன்பத்தை வருவிக்கும் | 2021 |
| 484 | R 5396 | 4 | உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ | 2025 |
| 485 | R 5399 | 4 | உண்மையுள்ளோர் எச்சரிப்பாய் இருப்பர் | 2029 |
| 486 | R 5403 | 2 | நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவித்தல் | 2033 |
| 487 | R 5404 | 2 | தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை | 2035 |
| 488 | R 5405 | 4 | ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள் | 2037 |
| 489 | R 5408 | 3 | சுவாரஸ்யமான கேள்விகள் | 2041 |
| 490 | R 5409 | 3 | (தெ.பத்திகள்) சில சுவாரசியமான கடிதங்கள் | 2044 |
| 491 | R 5420 மார்ச் 1914 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி | 2047 |
| 492 | R 5421 மார்ச் 1914 | 5 | உங்களால் கூடுமா? | 2050 |

| | | | | |
|---|---|---|---|---|
| 493 | R 5425 | 4 | சீஷத்துவத்திற்கான விலை | 2055 |
| 494 | R 5444 | 6 | ஐசுவாரியவான் நரகத்திற்கும் .... ஏழை பரலோகத்திற்கும் | 2059 |
| 495 | R 5445 | 6 | நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | 2065 |
| 496 | R 5453 | 5 | ஒன்பது பேர் எங்கே? | 2071 |
| 497 | R 5455 | 5 | மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது | 2076 |
| 498 | R 5472 [Page 169] | 4 | ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய...... | 2081 |
| 499 | R 5473 | 5 | திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள் | 2084 |
| 500 | R 5474 | 2 | நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள் | 2089 |
| 501 | R 5501 | 2 | கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம் | 2091 |
| 502 | R 5510 | 5 | கலியாண விருந்து | 2093 |
| 503 | R 5517 | 1 | (தெ.பத்திகள்) நாவை அடக்குவது அவசியமாகும் | 2098 |
| 504 | R 5521 | 4 | பிரதான கற்பனைகள் | 2099 |
| 505 | R 5528 | 6 | தீமைபேசுதல் என்றால் என்ன? | 2103 |
| 506 | R 5532 [Page 269] | 1 | [Poem] சிலுவையில்லாமல் கிரீடமில்லை | 2109 |
| 507 | R 5538 செப்டம்பர் 1914 | 6 | இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம் | 2110 |
| 508 | R 5541 செப்டம்பர் 1914 | 5 | பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள் | 2116 |
| 509 | R 5550 செப்டம்பர் 1914 | 6 | ஏன் கெத்செமனேயில் வியாகுலம்? | 2121 |

| | | | | |
|---|---|---|---|---|
| 510 | R 5552<br>செப்டம்பர்<br>1914 | 5 | உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி | 2127 |
| 511 | R 5560<br>செப்டம்பர்<br>1914 | 4 | இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள் | 2132 |
| 512 | R 5563<br>செப்டம்பர்<br>1914 | 3 | பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் | 2136 |
| 513 | R 5570<br>செப்டம்பர்<br>1914 | 6 | இயேசு, பிலாத்துவினால் விசாரணைப் பண்ணப்பட்டார் | 2139 |
| 514 | R 5572 | 1 | [Poem] நன்றி சொல்கிறோம் | 2145 |
| 515 | R 5572<br>[Page 3] | 1 | நன்றி சொல்கிறோம் | 2145 |
| 516 | R 5572<br>[Page 3] | 1 | இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால் | 2148 |
| 517 | R 5577 | 1 | [ Poem]என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் | 2149 |
| 518 | R 5577<br>நவம்பர்1914 | 5 | தேவனால், வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர் | 2150 |
| 519 | R 5587 | 3 | [ தெ. பத்திகள்]சபையின் ஏற்படுத்துதல் | 2155 |
| 520 | R 5587 | 5 | சபையின் ஏற்படுத்துதல் | 2160 |
| 521 | R 5588 | 5 | அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு | 2163 |
| **வருடம் 1915 # R 5601முதல் R 5819வரை** | | | | |
| 522 | R 5603<br>[Page 3] | 4 | நீதியான கோபமும் அநீதியான கோபமும் | 2168 |
| 523 | R 5604 | 3 | முதலாம் அர்மகெதோன் யுத்தம் | 2172 |
| 524 | R 5605 | 4 | துணிவின் நாயகன் - கிதியோன் | 2175 |

| | | | | |
|---|---|---|---|---|
| 524 | R 5606 | 3 | கிதியோனின் தைரியமுள்ள முந்நூறு வீரர்கள் | 2179 |
| 526 | R 5608 | 4 | சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஜீவன் | 2182 |
| 527 | R 5611 [Page 19] | 5 | கல்லறையிலிருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல | 2186 |
| 528 | R 5612 [Page 21] | 4 | சிம்சோனின் சோக முடிவு | 2191 |
| 529 | R 5613 [Page 23] | 4 | தாவீது ராஜாவஜின் கொள்ளுப்பாட்டி - ரூத் 1 | 2194 |
| 530 | R 5615 [Page 24] | 4 | கர்த்தருடைய சத்தம் | 2198 |
| 531 | R 5621 [Page 35] | 6 | நமது ஆண்டவரின் மனித ஜீவிய உரிமைகளை சாட்டுதலும் பிரயோகித்தலும் | 2201 |
| 532 | R 5621 | 8 | [ தெ. பத்திகள் ] நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ - உரிமைகளின் சாற்றப்டுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் | 2207 |
| 533 | R 5623 | 4 | உங்கள் பிதா அறிந்திருக்கிறார் | 2215 |
| 534 | R 5624 [Page 40] | 4 | மிகவும் உறுதியான ஆதாரம் தேவைப்படுகிறது. | 2219 |
| 535 | R 5626 | 3 | பொல்லாதவர்களின் கையில் தேவனுடைய பெட்டி | 2222 |
| 536 | R 5627 [Page 41] | 4 | பாவ அறிக்கை, மன்னிப்பு, வெற்றி | 2225 |
| 537 | R 5628 [Page 45] | 3 | சபை வனாந்தர நிலைமையிலிருந்து திரும்புதல் | 2229 |
| 538 | R 5630 [Page 51] | 9 | பரிசுத்தவான்களின் தற்கால கடமையும் சலுகையும் | 2231 |
| 539 | R 5633 | 4 | தூதர்களின் ஊழியம் | 2239 |

| | | | | |
|---|---|---|---|---|
| 540 | R 5635 [Page 59] | 4 | தக்க தருணம் | 2243 |
| 541 | R 5636 [Page 57] | 4 | குடியரசுக்கு பதிலாக விரும்பப்பட்ட முடியாட்சி | 2247 |
| 542 | R 5638 [Page 61] | 4 | சவுலின் தோல்விகளின் மூலம் கிடைக்கும் பாடம் | 2251 |
| 543 | R 5640 மார்ச் 1915 | 11 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2255 |
| 544 | R 5640 | 9 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2266 |
| 545 | R 5643 [Page 72] | 3 | தியாக அன்பும் கடமை அன்பும் | 2275 |
| 546 | R 5644 | 2 | [ தெ. பத்திகள்] தேவனிடத்திலான நம்முடைய தனிப்பட்டப் பொறுப்பு | 2277 |
| 547 | R 5645 | 5 | கீழ்ப்படியாத இஸ்ரயேலர்களிடத்தில் தேவனுடைய இரக்கங்கள் | 2279 |
| 548 | R 5647 [Page 76] | 6 | சவுல் கர்த்தரால் புறக்கணித்து | 2283 |
| 549 | R 5650 [Page 83] | 8 | பொறுமையுடன் சகித்தல் கடைசி சோதனை | 2288 |
| 550 | R 5652 | 2 | தன்னடக்கத்தின் முக்கியத்துவம் | 2295 |
| 551 | R 5653 [Page 90] | 5 | யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார் | 2297 |
| 552 | R 5655 [Page 92] | 3 | கவனத்தை ஈர்க்கிற கேள்விகள் | 2301 |
| 553 | R 5656 [Page 88] & R 3225 [Page 221] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 2304 |
| 554 | R 5660 [Page 103] | 3 | உலகம் ஏன் இன்னும் இழந்ததை திரும்ப பெறவில்லை | 2308 |
| 555 | R 5662 [Page 104] | 2 | • நவீன இராட்சதர்கள் மீதான வெற்றிகள் | 2310 |

| | | | | |
|---|---|---|---|---|
| 556 | R 5662 [Page 105] | 4 | கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம் | 2312 |
| 557 | R 5664 | 3 | ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் | 2316 |
| 558 | R 5665 [Page 108] | 3 | குணலட்சணத்தின் விதைப்பின் காலமும் அறுப்பும் | 2319 |
| 559 | R 5666 [Page 109] | 4 | யாருக்கு ஊழியம் செய்வோம் என்பதை இந்த நாளில் தீர்மானியுங்கள் | 2322 |
| 560 | R 5668 [Page 115] | 2 | எல்லா கிருபைகளின் மொத்தம் | 2325 |
| 561 | R 5668 [Page 1180] | 3 | இராஜ்யத்தின் வெண்வஸ்திரம் | 2327 |
| 562 | R 5670 [Page 120] | 5 | இங்கே இலேசான உரபத்திரவம் - பின்வரும் மகிமைகள் | 2330 |
| 563 | R 5672 [Page 122] | 4 | நான் அபிஷேகம் பண்ணினவர்களை தொடாதே | 2334 |
| 564 | R 5673 [Page 123] | 4 | இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம் | 2338 |
| 565 | R 5676 [Page 131] | 3 | யுகங்களின் முடிவு ஒத்த நிலைமைகள் | 2342 |
| 566 | R 5677 [Page 133] | 5 | இவைகளை நாம் செய்ய வேண்டும் | 2345 |
| 567 | R 5678 [Page 135] | 2 | இயேசு அவரது சத்துருக்களை வைதாரா? | 2349 |
| 568 | R 5679 [Page 136] | 5 | தாவீதின் நகரம் - தேவனுடைய நகரம் | 2351 |
| 569 | R 5681 [Page 138] | 3 | நீயே, அந்த மனுஷன்! | 2356 |
| 570 | R 5683 [Page 141] | 2 | ஆவலைத் தூண்டும் கேள்வி | 2359 |

| | | | | |
|---|---|---|---|---|
| 571 | R 5684 [Page 142] | 2 | அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் - பிறகு பின்பற்றுங்கள் | 2361 |
| 572 | R 5685 [Page 147] | 7 | புது சிருஷ்டி தனது மாம்சத்தை ஜெயங்கொள்ளுதல் | 2362 |
| 573 | R 5688 [Page 150] | 2 | ஜீவகிரீடத்தை பெறுவது யார்? | 2367 |
| 574 | R 5688 [Page 151] | 3 | கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வளர்ச்சியடைதல் | 2369 |
| 575 | R 5690 [Page 152] | 4 | மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான் | 2372 |
| 576 | R 5692 [Page 154] | 4 | கேட்கப்படுகிற ஜெபங்கள் | 2376 |
| 577 | R 5693 | 4 | மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் | 2380 |
| 578 | R 5695 [Page 163] | 7 | வருகிற கொந்தளிப்பும் அதன் மகிமையான பலனும் | 2384 |
| 579 | R 5698 | 2 | அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம் | 2391 |
| 580 | R 5698 | 3 | சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2393 |
| 581 | R 5698 | 2 | [ தெ. பத்திகள் ]சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2395 |
| 582 | R 5699 [Page 168] | 2 | எனக்கு பிறன் யார்? | 2397 |
| 583 | R 5699 | 1 | [ Poem]தேவனின் யுத்தம் | 2399 |
| 584 | R 5700 | 2 | நன்றிகெட்ட கலகக்கார அப்சலோம் | 2400 |
| 585 | R 5701 [Page 170] | 2 | · இஸ்ரயேல் ராஜாவாகிய சாலொமோன் | 2402 |
| 586 | R 5701 [Page 171] | 3 | சோதனை என்ற வார்த்தையின் பல்வேறு அம்சங்கள் | 2404 |
| 587 | R 5702 | 3 | பிதாவின் ஞானமான ஆலோசனை | 2407 |

| | | | | |
|---|---|---|---|---|
| 588 | R 5703 | 1 | [ தெ. பத்திகள் ] பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் | 2410 |
| 589 | R 5704 [Page 174] | 2 | சுயதேவை பூர்த்தியாகிய பாவம் | 2411 |
| 590 | R 5704 | 3 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2413 |
| 591 | R 5705 [Page 179] | 5 | ஆவிக்குரிய கானானியர்கள் மீதான நமது வெற்றி | 2416 |
| 592 | R 5707 | 6 | ஜெயம் - அதன் உபயோகமும் தகாத உபயோகமும் | 2421 |
| 593 | R 5710 [Page 185] | 5 | உண்மையான ஜெபத்தின் பிறப்பிடம் | 2427 |
| 594 | R 5711 [Page 190] | 3 | கர்த்தருக்காக நாம் எப்படி காத்திருக்க வேண்டும் | 2431 |
| 595 | R 5713 [Page 188] | 3 | ஆலயத்தை அர்ப்பணம் செய்தல் | 2434 |
| 596 | R 5714 [Page 187] | 2 | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் | 2437 |
| 597 | R 5715 | 4 | காவற்கோபுரத்தின் கருத்துக்கள் | 2439 |
| 598 | R 5716 [ Page 197] | 1 | அட்டவணை | 2443 |
| 599 | R 5716 | 4 | விசுவாசத்தின் தற்கால நன்மைகள் | 2444 |
| 600 | R 5718 | 3 | சோதனைக் காலம் | 2448 |
| 601 | R 5718 | 3 | அவருடைய ஊழியர்களாகிய நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும் | 2450 |
| 602 | R 5719 | 2 | நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே | 2453 |
| 603 | R 5720 [ Page 201] | 2 | சத்தியத்தைக் பிரகடனப்படுத்துவது எப்படி? | 2455 |
| 604 | R 5721 [ Page 203] | 2 | இஸ்ரயேலின் ஏழத்தனையான தண்டனை ஓர் ஆசீர்வாதம் | 2457 |

| | | | | |
|---|---|---|---|---|
| 605 | R 5722<br>[ Page 204] | 3 | சோபாவின் ராணி வந்து சாலொமோனை பார்க்கிறாள் | 2459 |
| 606 | R 5722<br>[ Page 205] | 3 | ஞானமுள்ள ராஜா தவறாக வழிநடத்தப்பட்டான் | 2461 |
| 607 | R 5724<br>[ Page 211] | 9 | பிதா மற்றும் குமாரனின் அன்பே நமக்கு உதாரணம் | 2463 |
| 608 | R 5728<br>[ Page 216] | 9 | கேள்வி கூட்டம் - ஓக்லேண்டு கன்வென்ஷன் | 2471 |
| 609 | R 5732<br>[ Page 220] | 4 | அரசியல்வாதிகளும் தவறான மதமும் | 2480 |
| 610 | R 5733<br>[ Page 222] | 3 | ஆசா ராஜாவின் சீர்திருத்த வேலை | 2483 |
| 611 | R 5735<br>[ Page 227] | 3 | துக்கத்தின் ஆரம்பம் | 2486 |
| 612 | R 5736<br>[ Page 228] | 3 | எனது இருதயம் நல்ல நிலமா? | 2488 |
| 613 | R 5737<br>[ Page 230] | 7 | நமது சுத்திகரிப்பு - உள்ளாகவும் புறம்பாகவும் | 2491 |
| 614 | R 5740 | 3 | கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல் | 2497 |
| 615 | R 5741 | 2 | எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசி | 2500 |
| 616 | R 5742<br>[ Page 237] | 2 | ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் பொறுப்பு | 2502 |
| 617 | R 5744 | 4 | கிருபாசனத்தின் சலுகைகள் | 2504 |
| 618 | R 5746<br>[ Page 245] | 4 | இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 2508 |
| 619 | R 5747<br>[ Page2417] | 5 | நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன் | 2512 |
| 620 | R 5749<br>[ Page 250] | 3 | அநீதியான உலகப்பொருளினால் சிநேகிதரை சம்பாதித்தல் | 2517 |
| 621 | R 5750<br>[ Page 251] | 3 | மீறுதல்களும், பாவங்களும் மற்றும் குணலட்சணத்தில் அவைகளின் விளைவும் | 2519 |

| | | | | |
|---|---|---|---|---|
| 622 | R 5751 [ Page 250] | 3 | எலியா திரும்பவருதலும் வெற்றியும் | 2521 |
| 623 | R 5752 [ Page 254] | 3 | எலியாவின் ஓட்டமும் காட்சியும் | 2524 |
| 624 | R 5754 [ Page 259] | 4 | யுத்தமும் கிறிஸ்தவனின் கடமையும் | 2527 |
| 625 | R 5755 | 5 | தேவனுடைய கட்டளையின் முடிவான திட்டம் | 2531 |
| 626 | R 5757 | 2 | தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு விடுதலை | 2536 |
| 627 | R 5758 [ Page 265] | 2 | மனித வேலைகளும் புது சிருஷ்டியின் வேலைகளும் | 2538 |
| 628 | R 5759 | 3 | பரமேறுவதற்கு முன் எலியாவின் வேலை | 2540 |
| 629 | R 5761 | | கீழ்ப்படிதலும் அரசுரிமையும் | 2543 |
| 630 | R 5761 | 2 | அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள் | 2545 |
| 631 | R 5761 | 1 | [ Poem]கொஞ்சம் நேரம் தான் | 2547 |
| 632 | R 5762 [Page 3] | 1 | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் | 2548 |
| 633 | R 5767 | 3 | இயேசுவின் அற்புதமான பிறப்பு | 2549 |
| 634 | R 5768 | 5 | அப்போஸ்தல உத்தரவு அந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்ததில்லை | 2552 |
| 635 | R 5770 | 2 | ஆகாபின் பாவம் - பொருளாசை, கொலை | 2557 |
| 636 | R 5771 | 3 | எலியாவின் அக்கினிரதம் | 2559 |
| 637 | R 5773 | 2 | எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் ( உண்மையுள்ளவர்) | 2562 |
| 638 | R 5774 | 6 | நீதிமானாக்கப்படுதல் - எண்ணப்படுதலும் உண்மையிலும் | 2564 |
| 639 | R 5776 | 2 | இரண்டு பெரிய வேண்டுதல்கள் | 2570 |

| | | | | |
|---|---|---|---|---|
| 640 | R 5777 | 3 | பூமிக்குரியவைகளுக்கான ஆசைகளை மேற்கொள்ளுதல் | 2572 |
| 641 | R 5789 | 1 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2575 |
| 642 | R 5793 | 5 | சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை | 2576 |
| 643 | R 5809 & R 5186 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 2581 |
| 644 | R 5815 [Page 3] | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 2583 |
| **வருடம் 1916 # R 5821முதல் R 6024வரை** | | | | |
| 645 | R 5829 [ Page 11] | 6 | அவர் பரத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களுக்கு வழிகாட்டினார் | 2584 |
| 646 | R 5830 [ Page 13] | 4 | பெந்தெகொஸ்தே நாளின் ஆவி | 2589 |
| 647 | R 5831 [ Page 14] | 4 | பரிசுத்த பேதுரு போதித்த பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கம் | 2593 |
| 648 | R 5832 [ Page 19] | 13 | கர்த்தாவே ஜெபிக்க எங்களுக்கு கற்பித்தருளும் | 2597 |
| 649 | R 5836 [ Page 24] | 7 | ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுபாவ மாம்சீக இஸ்ரயேலர் சுதந்தரவாளிகள் அல்ல. | 2609 |
| 650 | R 5842 - R 5844 | 8 | உண்மையான மனத்தாழ்மைக்குள் உள்ளடங்கியிருப்பது என்ன | 2615 |
| 651 | R 5846 | 3 | உயர்த்தப்படப்போகின்ற தாழ்மையுள்ளவர்கள் | 2623 |
| | R 5849 | 4 | கிறிஸ்தவ பொதுவுடைமைக் கொள்கை | 2626 |
| 652 | R 5869 மார்ச் 1916 | 10 | நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள் | 2630 |
| 653 | R 5872 [ Page 987] | 8 | மீட்கும் பொருளும், பாவ நிவாரண பலியும் | 2640 |

| | | | | |
|---|---|---|---|---|
| 654 | R 5874<br>[ Page 94] | 2 | காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள் | 2648 |
| 655 | R 5875 &<br>R2986 | 8 | ஐனேயாவும், தொற்காளும் | 2650 |
| 656 | R 5875<br>[ Page 94] | 1 | [ Poem] பஸ்காவின் நிரூபணம் | 2658 |
| 657 | R 5876<br>[ Page 99] | 6 | எப்படி நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்? | 2659 |
| 658 | R 5878<br>[ Page 101] | 5 | புயலின்மத்தியில் சமாதானம் | 2664 |
| 659 | R 5879 &<br>R 2989 | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 2669 |
| 660 | R 5879<br>[ Page 107] | 7 | மீட்கும் பொருளின் விலையும், அதை நடைமுறைப்படுத்தலும் | 2675 |
| 661 | R 5882<br>[ Page 105]<br>[R 1591] | 4 | உயிர்தெழுந்த கிறிஸ்து | 2682 |
| 661 | R 5885<br>[ Page 117] | 4 | கிறிஸ்துவோடு நுகத்தடிக்குப்பட்டோர் | 2686 |
| 662 | R 5886<br>[Page 118] | 2 | சிறு நரிகள் | 2689 |
| 663 | R 5886<br>[ Page 125] | 2 | • சகோதரர்களை முறையாகவோ, முறையற்றோ நியாயந்தீர்த்தல் | 2691 |
| 664 | R 5888 | 2 | (தெ. பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் | 2693 |
| 665 | R 5888 | 2 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2695 |
| 666 | R 5889<br>[ Page 131] | 4 | பெருமைக்கெதிரான கிறிஸ்தவரின் யுத்தம் | 2697 |
| 667 | R 5890<br>[ Page 133] | 3 | இயேசு மரித்து எல்லோருக்காகவும் ஈட்டுத்தொகை செலுத்தினார் | 2701 |

| | | | | |
|---|---|---|---|---|
| 668 | R 5891 [ Page 134] | 6 | லிஸ்தீராவில் இருந்த சப்பாணி | 2703 |
| 669 | R 5892 & R 4374 & R 3017 | 6 | எருசலேமில் கூடின ஆலொசனைச் சங்கம் | 2708 |
| 670 | R 5892 | 3 | விசுவாசம் கிரியைகளினால் மெய்ப்பித்துக் காண்பிக்கப்படும் | 2714 |
| 671 | R 5893 | 3 | சுவிஷேத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது | 2717 |
| 672 | R 5893 | 2 | உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர் | 2719 |
| 673 | R 5896 [ Page 147] | 4 | எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது? | 2720 |
| 674 | R 5897 | 3 | தீமையோடு எதிர்த்து நில்லாமை | 2724 |
| 675 | R 5898 [ Page 150] | 3 | சத்தியத்துக்கு சாட்சிகள் | 2727 |
| 676 | R 5899 [ Page 153] | 4 | நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் | 2729 |
| 677 | R 5900 [ Page 154] | 2 | திருமணம் பற்றிய மேய்ப்பரது சில ஆலொசனைகள் | 2732 |
| 678 | R 5903 | 5 | மக்கெதோனியாவிலிருந்து வேண்டுகோள் | 2734 |
| 679 | R 5905 [ Page 163] | 6 | பரத்துக்குரியவைகளை நேசிக்கும்படி நம் சிந்தையைப் பயிற்றுவித்தல் | 2739 |
| 680 | R 5907 [ Page 166] | 5 | பிலிப்பு பட்டணத்தின் சிறை அதிகாரி | 2745 |
| 681 | R 5907 [ Page 165] | 1 | பூரண அழகு பொருந்திய ராஜா | 2750 |
| 682 | R 5908 | 2 | கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள் | 2751 |
| 683 | R 5909 [R3820] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 2753 |
| 684 | R 5912 | 3 | அவர்கள் பெலத்தின்மேல் பெலனடைந்து | 2757 |

| | | | | |
|---|---|---|---|---|
| 685 | R 5913<br>[ Page 189] | 5 | நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம் | 2760 |
| 686 | R 5916 | 4 | ராஜா பிரசன்னமாயிருத்தலின் அடையாளங்கள் | 2762 |
| 687 | R 5917<br>[ Page 197] | 4 | தேவராஜ்யத்தில் அங்கமாவதைத் தேடுதல் | 2766 |
| 688 | R 5918 | 2 | நல்ல மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி | 2769 |
| 689 | R 5919<br>[ Page 203] | 4 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதல் | 2771 |
| 690 | R 5920 | 3 | பட்டுப்போன அத்திமரத்திலிருந்து கற்கவேண்டியவை | 2774 |
| 691 | R 5921 | 4 | சபையில் அன்பு | 2776 |
| 692 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக | 2780 |
| 693 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2781 |
| 694 | R 5923<br>[ Page 211] | 5 | நாம் மறவாதிருக்க நாடுவோம் | 2782 |
| 695 | R 5926 | 5 | கொடுத்தலினால் அடையும் கிருபை | 2787 |
| 696 | R 5928 | 2 | பரிந்து பேசுபவர் மற்றும் மத்தயஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு | 2794 |
| 697 | R 5929<br>[ Page 221] | 2 | உங்களுக்குள் நிலவும் சமாதானம் | 2794 |
| 698 | R 5929 | 2 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 2795 |
| 699 | R 5931<br>[ Page 227] | 6 | புது சிருஷ்டிக்குரிய வளர்ச்சியை அடைவது எப்படி? | 2797 |
| 700 | R 5931 | 6 | புது சிருஷ்டிகளாக எப்படி நாம் வளர்ச்சியை எட்டுவது? | 2803 |
| 701 | R 5931 | 1 | [ Poem] தேவனின் யுத்தம் | 2809 |

| | | | | |
|---|---|---|---|---|
| 702 | R 5933 | 3 | தத்தம் செய்வதற்கு முன்பு இருந்த சிறதளவு துணிகரமான பாவங்கள் | 2810 |
| 703 | R 5934 | 3 | மாம்சத்துக்கென்று விதைத்தலின் முடிவு, மரணமே | 2813 |
| 704 | R 5935 & R 4458 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 2816 |
| 705 | R 5935 [R 3159] | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 2825 |
| 706 | R 5938 | 5 | மன்னிப்புப்பெற பாத்தை அறிக்கையிடுதல் அத்தியாவசியம் | 2829 |
| 707 | R 5939 | 2 | உண்மையானதும், தவறானதுமான ஊழிய நியமனங்கள் | 2834 |
| 708 | R 5939 | 5 | உண்மையான மற்றும் தவறான - ஏற்படுத்துதல்கள் | 2836 |
| 709 | R 5941 | 3 | பரிசுத்த பவுல் அடைந்த துக்கங்களும் சந்தோஷங்களும் | 2841 |
| 710 | R 5943 | 3 | தெய்வீக புஸ்தகச்சுரளைத் திறந்துபார்க்க பாத்திரவான் யார்? | 2844 |
| 711 | R 5943 | 4 | தெய்வீக சுரள் - அதை காண்பதற்குப் பாத்திரன் யார்? | 2847 |
| 712 | R 5946 | 5 | கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் | 2851 |
| 713 | R 5948 | 5 | உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 2856 |
| 714 | R 5950 | 4 | அறுவடை இன்னும் முடிவடையவில்லை | 2861 |
| 715 | R 5951 | 3 | மிகுதியான உபத்திரவங்கள் மேலான வெகுமதி | 2865 |
| 716 | R 5952 | 4 | தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம் | 2868 |
| 717 | R 5954 | 2 | [ தெ. பத்திகள் ]சுவாரசியமான கடிதங்கள் | 2872 |
| 718 | R 5955 | 12 | ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம் | 2874 |
| 719 | R 5958 | 3 | முதலிடம் தேவனுக்கு - கடைசி இடம் சுயத்துக்கு | 2886 |

| | | | | |
|---|---|---|---|---|
| 720 | R 5959 | 3 | நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? எப்போது? எப்படி? | 2889 |
| 721 | R 5962 | 8 | பாவத்தைப் போக்கும் ஞானஸ்நானம் யூதர்க்கு மட்டுமே | 2892 |
| 722 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கு உரியதான சோதனைகள் | 2900 |
| 723 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை | 2903 |
| 724 | R 5966 [R 4083] | 5 | சுயகட்டுப்பாடே மனவலிமை | 2907 |
| 725 | R 5967 | 3 | கிறிஸ்துவின் நிருபம் | 2911 |
| 726 | R 5970 | 6 | நாம் உபதேசிப்பதும் போதிப்பதும் | 2914 |
| 727 | R 5972 | 5 | மீட்கும் பொருள் பாவநிவாரணபலி | 2920 |
| 728 | R 5973 | 3 | புத்திமதிக்கு சிரமத்தோடு கீழ்ப்படிதல் | 2925 |
| 729 | R 5974 | 3 | உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள் | 2928 |
| 730 | R 5977 | 5 | கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி வளர்ச்சியடைவது? | 2931 |
| 731 | R 5979 | 5 | இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துதல் | 2936 |
| 732 | R 5981 | 12 | சோதனை காலம் | 2941 |
| 733 | R 5981 | 7 | சோதனை நேரம் | 2953 |
| 734 | R 5984 | 12 | [ தெ. பத்திகள்]உலகளாவிய மேய்ப்பரது வேலை | 2960 |
| 735 | R 5989 | 4 | பூமி அதிர்ந்தது - விழுந்தது | 2972 |
| 736 | R 5990 | 4 | நம் போதகரது ஆற்றலுள்ளதும், கருத்தைக் கவர்கின்றதுமான பாடங்களில் ஒன்று | 2976 |
| 737 | R 5992 | 5 | மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் | 2980 |
| 738 | | 1 | 12. யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட எல்லா உயிர்களின் இரத்தமும் | 2985 |
| 739 | | 1 | 13. அங்கே இருந்தீரோ? | 2986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 740 | | 1 | 123. கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே. | 2987 |
| 741 | | 1 | இனிமையான தருணங்கள் | 2988 |
| 742 | | 2 | 138. பெத்தானியாவின் மரியாள் | 2990 |
| 743 | | 2 | அவரின் மென்மையான கைகள் | 2992 |
| 744 | | 1 | மொட்டவிழ்ந்த தேவனின் திட்டம் | 2994 |
| 745 | | 2 | கடைசி இராப்போஜனம் | 2995 |
| 746 | | 8 | CR 122 பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விஷே - கூட்டம் | 2997 |
| 747 | | 1 | தேவனுக்கான பகல்நேரக் காணிக்கை | 3005 |
| 748 | | 33 | [ Q232 : 3 ] தேர்ந்தெடுத்தல் மூப்பர்கள் - சபையில் அதிகாரம் | 3006 |
| 749 | | 1 | இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன் | 3039 |
| 750 | | 1 | என்ன அற்புதம் | 3040 |
| 751 | | 2 | சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல் | 3041 |
| 752 | | 17 | யோசேப்பும், அவரது சகோதரர்களும் | 3043 |
| 753 | | 15 | யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் | 3060 |
| 754 | | 1 | கிறிஸ்துவோடு | 3075 |
| 755 | | 20 | கூட்டங்கள் | 3076 |
| 756 | | 9 | சிறுநரிகளும், செம்மறி ஆடுகளும். | 3096 |
| 757 | | 6 | அந்தகாரமும், விடியல் வேளையும் | 3105 |
| 758 | | 1 | 239. நம் சோதனை எத்தனை இலகுவாக இருக்கும் | 3111 |
| 759 | | 1 | அங்கே இருந்தீரோ? | 3112 |
| 760 | | 1 | உனக்கு முன்பாக | 3113 |

| | | | | |
|---|---|---|---|---|
| 761 | | 1 | நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே | 3114 |
| 762 | | 1 | கவர்ந்திழுக்கபட்டு சோதனைக்குட்பட்டவரே | 3115 |
| 763 | | 1 | கெத்சமனே | 3116 |
| 764 | | 1 | கெத்சமனே | 3117 |
| 765 | | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 3118 |
| 766 | | 1 | பெலன் தாரும் யேசுவே | 3119 |
| 767 | | 1 | இனிமையான தருணங்கள் | 3120 |
| 768 | | 1 | ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவை | 3122 |
| 769 | | 4 | மேய்ப்பரது வேலை | 3124 |
| 770 | | 1 | நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் | 3128 |
| 771 | | 9 | முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் | 3129 |
| 772 | | 1 | நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள் | 3138 |
| 773 | | 1 | நம்பிக்கையின் ஆசீர்வாதம் | 3139 |
| 774 | | 6 | நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா | 3140 |
| 775 | | 1 | [ Poem 504] நறுமணத்தின் பெருவெள்ளம் | 3146 |
| 776 | | 1 | [பாடல்] அது ஒரு பூமியின் மட்கலயம் | 3147 |
| 777 | | 1 | [பாடல்] மனம் தளர்ந்த பயணியரே | 3148 |
| 778 | | 2 | [ Poem – p 215]மறைக்கப்பட்டச் சிலுவை | 3149 |
| 779 | | 1 | [ Poem - 11] கெத்செமனேயும், கல்வாரியும் | 3151 |
| 780 | | 1 | [ Poem – p- 15] பதிலாக | 3152 |
| 781 | | 1 | [ Poem – p- 33] மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி | 3153 |
| 782 | | 1 | [ Poem – p- 91] நமது உயிர்த்தெழுதல் | 3154 |
| 783 | | 1 | உபத்திரவங்களினாலே பூரணப்படுதல் | 3155 |

| | | | | |
|---|---|---|---|---|
| 784 | | 1 | [ Poem – p- 73]நாம் அங்கே இருந்திருப்போமாகில் | 3156 |
| | | 2 | [ Poem – p- 98] பெத்தானியாவின் மரியாள் | 3157 |
| 785 | | 1 | [ Poem – p- 174] நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள் | 3159 |
| 786 | | 1 | [ Poem – p- 129] அவர்கள் மட்டும் அறிந்திருந்தால் | 3160 |
| 787 | | 1 | [ Poem – p- 164] நான் அவரை அங்குக் காண்கிறேன் | 3161 |
| 788 | | 1 | [ Poem – p- 128] போதகரே, சத்தியமாவது என்ன? | 3162 |
| 789 | | 1 | பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருகே | 3163 |
| 790 | | 9 | பொதுவான கேள்விகள் | 3164 |
| 791 | | 1 | புறங்கூறுதல் | 3173 |
| 792 | | 8 | சபை | 3174 |
| 793 | | 7 | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 3182 |
| 794 | | 5 | சகோதரிகள் | 3189 |
| 795 | | 1 | சீர்பொருந்தும் பூமி | 3194 |
| 796 | | 1 | ஸ்திரீயின் ஊழியம் | 3195 |
| 797 | | 1 | என்னிடத்தில் வா | 3196 |
| 798 | | 2 | இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள்# 108] | 3197 |
| 799 | | 1 | [பாடல்] ஓ! என்னைப் போகவிடாத அன்பே | 3199 |
| 800 | | 1 | [பாடல்]இயேசுவின் சிலுவையின் கீழே | 3200 |
| 801 | | 1 | [பாடல்]நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு | 3201 |
| 802 | | 1 | [பாடல்]என் மீட்பர் | 3202 |

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | | 1 | [பாடல் 135]சிலுவையின் அருகில் | 3203 |
| 804 | | 1 | [பாடல் 8]அங்கு நீ இருந்தாயா? | 3204 |
| 805 | | 1 | [பாடல் 48]இயேசு, என் கர்த்தர் | 3205 |
| 806 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூருவாயாக | 3206 |
| 807 | | 1 | [பாடல் 65 A]பெலன் தாரும் இயேசுவே | 3207 |
| 808 | | 2 | [பாடல் 122] கிறிஸ்து நமது பஸ்கா | 3208 |
| 809 | | 1 | [பாடல் 172]உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக | 3209 |
| 810 | | 1 | [பாடல் 335]அது சிலுவையாய் இருப்பினும் | 3210 |
| 811 | | 1 | [பாடல் 359]பழைய கரடுமுரடான சிலுவை | 3211 |
| 812 | | 1 | [பாடல் 173]சிலுவையில், இன்னும் இடமுள்ளது | 3212 |
| 813 | | 1 | [பாடல்1] **Abide, sweet, Spirit** | 3213 |
| 814 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூரும் | 3214 |
| 815 | | 1 | [பாடல் 3] என்னிடத்தில் வாருங்கள் | 3215 |
| 816 | | 1 | [பாடல் 4] கிறிஸ்துவே எனது இலக்கு | 3216 |
| 817 | | 1 | [பாடல் 5] ஐயகோ என் மீட்பர் இரத்தம் சிந்தினாரோ | 3217 |
| 818 | | 1 | [பாடல் 125]திருவிருந்து | 3219 |
| 819 | | 1 | [பாடல் 128] | 3220 |
| 820 | | 1 | மணலுக்கு ஏற்பட்டத் தழும்புகள் | 3221 |
| 821 | | 1 | முழங்காலில் தஞ்சம் | 3222 |
| 822 | | 3 | அது ஒரு துன்பத்தின் காலம் | 3223 |
| 823 | | 1 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 3226 |
| 824 | | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 3227 |

| | | | | |
|---|---|---|---|---|
| 825 | | 1 | வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள் | 3228 |
| 826 | | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்கின்றோம் | 3229 |
| 827 | | 1 | பஸ்கா | 3231 |
| 828 | | 8 | ஏற்படுத்துதல் | 3232 |
| 829 | | 1 | சீயோனின் தேசிய கீதம் | 3240 |

# ஒரு குவளைக் குளிர்ந்த நீர்

## A CUP OF COLD WATER

அறுவடை வயலில் ஓர் நாளில்
ஆண்டவர் இயேசு வந்தாரே,
கோதுமை வயலில்கதிர்முற்றி
காற்றினில் வெண்மையாய் அசைவுற்றதே
காலையில் அனுப்பிய வேலையாட்கள்
அவரவர் இடம்தனில் அறுத்தனரே,
நடுப்பகல் வெயிலின் தாக்கத்திலே
களைப்புடன் அறுவடை செய்தனரே,
ஒவ்வொரு அறுவடையாளருக்கும்
ஒவ்வொரு இடம்தனை ஒதுக்கினாரே,
நாளின் முடிவு வரையினிலே,
வேலைக்காகக் கூலி பொருத்தினாரே,
பொற்கோதுமை மணிஒன்றும் சேகரிக்காமலே
ஒருவர் மட்டும் கவலையுடன் அழுதபடியே நின்றாரே,
எஜமான் எனக்கு வேலை எதுவும்
இதுவரை ஒதுக்கித் தரவில்லையே,
என்னை இங்கே அனுப்பியதே
மிகவும் ஏமாற்றம் அளிக்கின்றதே,
முற்றிய கதிர்கள் உள்ள இந்நிலத்திலே
ஒருகதிர்கூட நான் கொய்யவில்லை,
அவளின் இந்தக்கூக்குரலோ
எஜமான் காதினில் விழுந்ததுவே,
அவரோ அவளின் பெயர்சொல்லி,
அழைத்தார் தமது அருகினிலே,
அன்புக்குழந்தாய் நீ ஏன் தனியானாய்,
சோம்பி இங்கே நிற்கின்றாய் **?**
ஆண்டவரே எனக்கிதுவரையில்
வேலை எதுவும் தரவில்லை,
முற்றிய கதிர்கள் ஏதொன்றும் இதுவரை
நானும் கொய்யவில்லை,
எனக்கொரு வேலை ஒதுக்கித்தாரும்,
நானும் வேலை செய்திடவே.
அங்கே உள்ள மண்கலயம்தனை
மலையடிவாரம் எடுத்துச்சென்று,
குளிர்ந்த சுனைநீர் நிரப்பிவந்தே,
வேலைசெய்தே களைத்திட்ட,
சோதர்க்குக் கொடுத்தே உதவிடுவாய்,
சிறுசெயல் என்றெண்ணி சோர்ந்திடாதே,
நீ செய்யும் இந்த சிறுசெயலும்
என் ஞாபகப் புத்தகம்தனில் இடம் காணும்,
எனக்கே செய்ததாய் எண்ணப்படும்
சின்னச்செயலாய் இருந்தாலும்,
உயர்ந்த உள்ளத்தால் செய்துள்ளாய்
தாகத்தால், வெயிலால் களைப்படைந்தே,
சோர்வுடன் வேலையைச் செய்திட்ட
சோதர்க்குத் தெளிந்த குளிர்நீர்தனையே
பருகிடக் கொடுத்தாய் அதனாலே,
சோர்வு நீங்கிப் புதுத்தெம்புடனே
உத்வேகம்பெற்றே திரும்பினார்வேலைக்கே
களைப்படைந்த பல ஆத்துமாக்கள்
தலை உயர்த்திப் பார்த்தனரே
சிறுகலயம்தன்னில் நீர் குடித்தே,
உற்சாகம் மீண்டும் பெற்றனரே.

-------------------

**--540--**

# நான் திராட்சச்செடி – நீங்கள் கொடிகள்

## யோவான் 15:1-11, 15

நமது கர்த்தருடைய பூமிக்குரிய வாழ்க்கையினுடைய கடைசி இரவின் போது, அனுசரித்திட்ட நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அவர் உரையாடியவைகளில் ஒன்றாக இவ்வசனத்தின் காரியங்களை அப்போஸ்தலர் (யோவான்) பதிவு செய்திருக்கின்றார். அநேகமாக புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை அடையாளப்படுத்தும் "பாத்திரத்தில்" பானம் பண்ணின காரியமானது, இவ்வுரையாடலுக்கு வழிவகுத்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது; யூதாஸ் போன பிற்பாடும், கர்த்தர் பதினொரு பேருடன் கெத்செமனே தோட்டத்திற்குப் போகுவதற்கு முன்னதாகவும், உரையாடப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இல்லையேல், அவர்கள் கெத்செமனேக்குப் போகும் வழியில் காணப்பட்ட திராட்சத்தோட்டங்களைக் கடந்து போனதுகூட, இவ்வுரையாடலுக்கு வழிவகுத்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. அல்லது ஆலயத்தின் பொன்னினால் ஆன நுழைவாயிலிலுள்ள கதவில் பொறிக்கப்பட்டுள்ள பொன்னினாலான மாபெரும் திராட்சச்செடியைப் பார்த்த மாத்திரத்திலும் உரையாடப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆலயத்தில் இந்தப் பொன்னினால் ஆன நுழைவாயில் (அழகான நுழைவாயில்) மிகவும் பெரிதாகக் காணப்பட்டது என்றும், "மனிதனுடைய உயரத்தின் அளவு திராட்சக்குலைகளைக்" கொண்டிருந்தது என்றும் ஜோசபஸ் அவர்களால் கூறப்படுகின்றது. வேறொரு எழுத்தாளர் பின்வருமாறு எழுதுகின்றார்: "இலைகளும், மொக்குகளும் மங்கலான செந்நிற பொன்னினாலும், அதன் குலைகள் மஞ்சள் நிற பொன்னினாலும், அதன் திராட்சப்பழங்கள் விலையேறப்பெற்றக் கற்களினால் செய்யப்பட்டிருந்தது." பௌர்ணமி நிலவானது, நுழைவுவாயிலில் பொறிக்கப்பட்டிருந்த இந்தத் திராட்சச்செடியை அருமையாய்க் காட்டியிருக்கும். "இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூடக் கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்" என்பது முதலாம் அனுமானத்திற்கு ஆதரவாயுள்ளது (யோவான் 18:1). இது அவர்கள் இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அநேகமாக நடு இரவு வரையிலும், மேல் வீட்டறையில் காணப்பட்டார்கள் என்பதைக் காட்டுகின்றது. இதற்குப் பின்னர், நமது கர்த்தர், "எழுந்திருங்கள் இவ்விடம் விட்டுப்போவோம் வாருங்கள்" என்றார் (யோவான் 14:31).

"நான் மெய்யான திராட்சச்செடி" என்ற வார்த்தையானது, போலியான (அ) பொய்யான திராட்சச்செடி ஒன்று இருக்கின்றது என்ற கருத்தை நமது மனதுக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக இது, இதே யோவான் வாயிலாக நமது கர்த்தர் இரண்டு அறுவடைகள் காணப்படும், அதாவது மெய்யான திராட்சச்செடியின் கனி சேர்க்கப்படும், பின்னர், "பூமியின் திராட்சக்" குலைகள் சேர்க்கப்படும் என்ற உண்மையை நமக்கு நினைப்பூட்டுவதாகவும் இருக்கிறது (வெளிப்படுத்தல் 14:18-20). மெய்யான திராட்சச்செடி, உண்மையான சபையைக் குறிக்குமானால், பூமியின் திராட்சச்செடியானது, போலியான உண்மையற்ற பொய்யான சபையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

பரம பிதா திராட்சச்செடியை நட்டவரும், திராட்சச்செடியின் சொந்தக்காரரும், உண்மையான திராட்சச்செடியைப் பராமரிக்கிறவருமாகிய, தோட்டக்காரராக இருக்கின்றார். மேலும், இவருக்கே திராட்சச்செடி தனது கனிகளைக் கொடுக்கின்றது. இங்கு, "திராட்சத்தோட்டக்காரர்" என்று இடம்பெறும் வார்த்தையானது, வெறுமனேபராமரிக்கின்றவர் என்ற அர்த்தத்தைக் கொடுக்காமல், மாறாக திராட்சத்தோட்டத்தின் உரிமையாளர் என்ற அர்த்தத்தையும் கொடுக்கின்றதாக இருக்கின்றது. இதற்கு இசைவாகவே வேதவாக்கியங்கள் அனைத்தும் காணப்படுகின்றது. தேவனே மனிதனுக்கான நம்பிக்கையாகவும், அவனுடைய இரட்சகராகவும், தேவன் மூலம் மாத்திரமே பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலை வருகிறதாகவும் வேதவாக்கியங்கள் முன் வைக்கின்றது. இவையனைத்தையும் கனம் மிக்க ஊழியக்காரனும், பிரதிநிதியுமாகிய தம்முடைய நேசக்குமாரன் மூலம்தான் செய்யப்போகின்றார் என்ற உண்மையையும், இன்னுமாக நியமிக்கப்பட்ட பிரதான ஆசாரியனாகிய தம்முடைய குமாரனின் கீழ் இராஜரிக ஆசாரியக்கூட்டமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட சபையைப் பயன்படுத்தப்போகின்றார் என்ற உண்மையையும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும், வருகின்ற ஊற்றாய் இருப்பவர் தேவன்தான் என்ற உண்மையை அகற்றிவிட முடியாது. (1 கொரிந்தியர் 8:6; யாக்கோபு 1:17)

"என்னில் உள்ள... கொடி" என்பது ஒவ்வொரு பெயர்க் கிறிஸ்தவனையும், கிறிஸ்தவன் என்று அறிக்கைப்பண்ணுகின்ற அனைவரையும், கிறிஸ்தவ மார்க்கத்தின் உண்மைகளைப் பெயரளவில் ஒப்புக்கொண்டு, அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றவர்கள் அனைவரையும் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது. "நீதிமானாக்கப்பட்ட விசுவாசியானவன்" திராட்சச்செடியில் கொடியாவதற்கு ஆயத்தப்படுகிறவனாக மாத்திரம் இருக்கின்றான். ஆனால், அவனுடைய விசுவாசமும், இந்த விசுவாசத்தினாலாகும் நீதிமானாக்கப்படுதலும், அவனைக் கொடியாக்காது. விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்படுதல் எனும் படியை முதலாவதாக எடுத்துக்கொண்டு, பிற்பாடு தங்களை ஜீவபலியாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு, இப்படியாக அர்ப்பணிப்பின் வாயிலாக, "கிறிஸ்துவினுடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே கொடிகள் ஆகுகின்றனர்."

நாம் கிறிஸ்துவுக்குள் அங்கத்துவம் (அதாவது, திராட்சச்செடியின் கொடி) ஆகுவதற்குரிய இந்த வழிமுறையானது, ரோமர் 6:3-5 வரையிலான வசனங்களில் அப்போஸ்தலரால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (நம்முடைய பாப்டிஸ்ட் சகோதரர்கள் தவறுதலாய்ச் செய்வதுபோல) நாமும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, தண்ணீரில் மூழ்கும் ஞானஸ்தானத்தைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அங்கத்துவம் ஆகுவதற்கான நிபந்தனையாக முன்வைக்காமல், மாறாக அப்போஸ்தலர் வலியுறுத்துவது போன்று, நாமும் வலியுறுத்துவது என்னவெனில், "தங்களுடைய சித்தத்தை, கிறிஸ்துவினுடைய சித்தத்திற்குள்ளாக மூழ்கடித்துக்கொள்ளாத எவரும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அங்கத்துவம் அடைவதில்லை." அதாவது, அவரோடு மரிப்பதற்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும். நீதிமானாக்கப்பட்ட மனிதர்களாக, தங்களையே மரணத்திற்குச் சரணடையச் செய்து, பின்னர் அதுமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள்ளும், அவருக்குக் கீழும், அனைத்துக் காரியங்களிலும் தங்களது வழிகாட்டியாக (அ) தலையாக, அவரால் ஆளப்படுகிறவர்களுமாகிய புதிய சிருஷ்டியாய்க் காணப்பட வேண்டும்.

இப்படியாக, இப்பொழுது தெய்வீக ஏற்பாட்டிற்கு ஏற்ப உண்மையான திராட்சச்செடியின் கொடிகள் ஆகியுள்ளவர்கள் மத்தியில் இரண்டு வகுப்பார் காணப்படுகின்றனர்; அதாவது கனிக்கொடுக்கின்ற கொடிகள் மற்றும் "உறிஞ்சிகள்" என்று அழைக்கப்படும் கனிக்கொடுக்காத கொடிகள். ஆனால் இவர்கள் இருவரின் நிலையும், ஒவ்வொரு விதமான வளர்ச்சி என்று சொல்லப்படலாம்; ஒவ்வொரு கொடியும் மிகச் சிறிய முளைகளாகவே ஆரம்பிக்கின்றன; ஒவ்வொரு கொடியும் இலைகளை வளரச்செய்கின்றன; ஒவ்வொரு கொடியும், முக்கிய நடுதண்டாகிய கிறிஸ்து மற்றும் தெய்வீக நோக்கம் மற்றும் வாக்குத்தத்தங்கள் எனும் ஒரே வேரிலிருந்து உயிர்ச்சாறாகிய போஷாக்கைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒரே மாதிரியான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றது. திராட்சச்செடியின் அனைத்துக் கொடிகளும், தங்களுக்காகவே தங்களது பலத்தைச் செலவிடும் தன்மைக் கொண்டிருக்கின்றது; அதாவது கனிகளைக்கொடுப்பதைப் பார்க்கிலும் கொடிகளை உருவாக்கும் தன்மையைக்கொண்டிருக்கின்றது; எனினும் மாறுபட்ட தன்மையும் காணப்படுகின்றது. சரியான கொடிகளில் கனிக்கான மொக்குகள் காணப்படுவதையும், உறிஞ்சிகளிடத்தில் இந்தக் கனிக்கான மொக்குகள் இல்லாமல் இருப்பதையும், திராட்சத்தோட்டத்திற்கான உதவியாளர்கள் ஆரம்பத்திலேயே கண்டுகொள்ளலாம் என்று நமக்குத் தெரிவிக்கின்றனர்.

இப்படியாகவே, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. இவர்களிடம் அவர் அதிகளவிலும், அருமையான தன்மையிலும் கனிகளை உடனடியாக எதிர்பார்ப்பதில்லை. ஆயினும், கனிக்கொடுப்பதற்கு ஏதுவான பிரயாசங்களுக்கான சுவடுகள் (அ) மொக்குகள் இருக்கின்றதா எனப் பார்ப்பார். மேலும் உண்மையான திராட்சச்செடியின், சரியான கொடியாக இருப்பவர்களிடத்தில், இந்தக் கனிகளுக்குரிய மொக்குகள் ஆரம்பத்திலே வெளிப்பட்டுவிடும். கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் ஊழியம் செய்வதின் மூலமாகக் கர்த்தருக்கு மகிமை சேர்க்கும் விதமாக கனிக்கொடுக்கத்தக்கதான விருப்பத்தைக் கொண்டிராதவர்கள் கனிக்கொடுப்பதற்குப்பதிலாக, கிறிஸ்துவுடன் ஒன்றுபடுவதன் காரணமாக உருவாகும் ஆசீர்வாதங்களையும், அறிவையும் பயன்படுத்திக்கொண்டு, மனுஷர் முன்பாக தங்களை உயர்த்திக் கொள்ளுபவர்களாகவும், மாம்சத்தில் வேஷம் போடுகிறவர்களாகவும் இருப்பவர்கள் தொடர்ந்து (கொடிகளாக) தக்க வைப்பதற்குப் பாத்திரமற்றவர்களாகக் கருதப்பட்டு, வெட்டப்பட்டுப் போவார்கள்; அதாவது எல்லா விதத்திலும் கொடிகள் என்று அடையாளங்கண்டுகொள்ளப்படுவது நிறுத்தப்படும் நிலைக்கு ஆளாகுவார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தரால் புறக்கணிக்கப்பட்ட பிற்பாடும் தங்களது பச்சை இலைகள், புத்துணர்வு முதலானவைகளைச் சிலகாலம் வரையிலும் தக்க வைத்துக்கொள்ளலாம். எனினும், கொஞ்சம் காலத்திற்குள்ளாக நேர்மைக்கான அனைத்துச் சுவடுகளையும் இவர்கள் இழந்துவிடுவர். இவர்கள்

உலர்ந்துபோய்விடுவர். இப்படிப்பட்டவர்கள் கொடிகளாக இருப்பது நின்ற பிற்பாடு, இவர்கள் ஒருகாலத்தில் கொடிகளாகக் காணப்பட்டார்கள் என்ற உண்மை எதற்கும் பயன்படாது. காரணம், கொடிகளுடைய மரத்திற்கு/தண்டிற்கு எவ்விதமான முக்கியத்துவமும் இல்லை. அவைகள் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிடும்.

கனிக்கொடுப்பதற்குரிய ஆதாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும் திராட்சச்செடியின் சிறப்பான/நல்ல கொடிகளுக்கும்கூட வெட்டிவிடுதல் அவசியமாய் இருப்பதுபோன்று, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் மிகவும் உண்மையானவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும் காணப்படுகிறவர்களுக்கும்கூடக் கர்த்தருடைய பராமரிப்பும், ஒழுங்குப்படுத்தலும் அவசியப்படுகின்றது. இல்லையேல், இவர்களும் விரைவில் செடித்தண்டை வளர்க்கின்றவர்களாகிவிட்டு, அதிகமான கனிகளைக்கொடுக்கத் தவறுகின்றவர்களாய்க் காணப்பட்டுவிடுவார்கள். தான் விரும்பும் சரியான மற்றும் முதிர்ச்சியடைந்த கனிகளைக்கொடுப்பதற்கு எவ்வளவு இலைகள், முளைகள், கிளைகள் அவசியமெனத் தோட்டக்காரர் அறிந்திருப்பதுபோல, நாமும் அதிகமான கனிகளைக்கொடுப்பதற்கு ஏதுவான மிகுந்த அனுகூலமான பூரணமான சூழல் எது என்பதை நமது பரம பிதாவும் நன்கு அறிந்துள்ளார். பல்வேறு திசைகளில் நம்முடைய இலட்சியங்கள்/குறிக்கோள்கள் முளைவிடுவதை அவர் காண்கின்றார். மேலும் இந்த முளைகள் நம்மை எவ்விடத்திற்கு நடத்திடும் என்பதை நாம் அறியோம், ஆனால் அவர் அறிவார்; நம்முடைய இந்த முளைகளானது அவருடைய வழிநடத்துதலினால் கிள்ளிவிடப்படுகின்றதால், இத்திட்டங்களுக்கெனச் செலவிட நாம் நோக்கம் கொண்டிருந்த பலமும், சக்தியும், நம்மில் ஏற்கெனவே வளர ஆரம்பித்தும், வளர்ந்து கொண்டும் இருக்கும் கனிகளை முதிரப் பண்ணுவதற்கேதுவாக செலவிடப்படுகின்றது.

இந்தக் கிள்ளிவிடுதல்களினிமித்தம், கர்த்தருடைய சித்தத்திற்குள்ளாக தனது சித்தத்தை மூழ்கப்பண்ணியுள்ள தேவனுடைய உண்மையான பிள்ளை சோர்வடைவதுமில்லை, கோபமூட்டப்படுவதுமில்லை. அவன் தன்னுடைய ஞானமற்ற தன்மையைக்குறித்து அறிந்தவனாகவும், மாபெரும் தோட்டக்காரருடைய ஞானத்தின் மீது நம்பிக்கைக்கொண்டவனாகவும் இருக்கின்றான். ஆகவே, ஏதோ ஒரு திசையை நோக்கின அவனுடைய முயற்சிகளைத் தெய்வீக வழிநடத்துதலானது தடைப்பண்ணும்போது, கர்த்தருடைய சித்தமும், கர்த்தருடைய வழியும் சிறப்பானது என்றும், ஆசீர்வாதத்தையே கொண்டுவரும் என்றுமுள்ள நிச்சயத்துடன், தன்னுடைய திட்டங்கள் தடைப்பண்ணப்பட்டதைச் சந்தோஷத்துடன் எடுத்துக்கொள்வான்.

பிதாவின் பிரதிநிதியாக இயேசு, திராட்சச்செடியின் முதல் கொடிகளைக் காத்துக்கொண்டார். அவருடைய கடிந்துகொள்ளுதல்களின் (அ) ஆலோசனைகளின் வாயிலாக அப்போஸ்தலர்களைச் சுத்திகரித்தப்படியால் (அ) கிள்ளிவிட்டப்படியால், தம்முடைய 3-1/2 வருட ஊழியத்தினுடைய நிறைவின்போது, அவரால் "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்ற வார்த்தைகளைக்கூற முடிந்தது (யோவான் 15:3). இன்னுமாக, தம்முடைய ஜெபத்தில் பிதாவிடம், "நீர் எனக்குத் தந்தவர்களை (கொடிகளாக, சீஷர்களாக, அங்கங்களாக) காத்துக் கொண்டுவந்தேன் . . . கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை" என்றும் கூறினார் (யோவான் 17:12). ஆனால் இதற்குப் பின்னர், இந்த ஜெபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, கொடியின் பராமரிப்பு மற்றும் கிள்ளிவிடுதலானது, இதே மாதிரி நமது கர்த்தராகிய இயேசுவினால் செய்யப்படுவதில்லை, மாறாக பரிசுத்த ஆவியின் – பிதா மற்றும் குமாரனுடைய ஆவியின் செயல்படுத்துதலினால் செய்யப்படுகின்றது.

ஆனால், நாம் முதலாவதாக நீதிமானாக்கப்பட்டு, பின்னர்க் கர்த்தருக்கு நம்மை அர்ப்பணிப்பதின் மூலமாக பரிசுத்தமாக்கப்படுவது மாத்திரம் போதாது. நாம் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசித்து, திராட்சச்செடியின் கொடிகளாகுவது மாத்திரம் போதாது. சிறிய முளையாகக் காணப்படுவதும் நல்லதுதான். கொடியாக வளர்ந்து, கொடியானது கொடிச்சுருளைவிடுவதும் நல்லது தான். எனினும் கொடி பெரியதாகவோ (அ) சிறியதாகவோ, எவ்வளவு வயது முதிர்ந்ததாகவோ (அ) இளமையானதாகவோ காணப்பட்டாலும், கனிகளை உண்டுபண்ணும் உயிர்ச்சாறானது, திராட்சச்செடி மற்றும் வாக்குத்தத்தமாகிய அதன் வேருடன் தொடர்ந்து உறவு கொண்டிருப்பதன் மூலமாகக் கிடைக்கப்பெறும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை உறவிலிருந்து பிரிந்து போவோமானால், அனைத்து நம்பிக்கைகளும் உலர்ந்து போய்விடும். நாம் கிறிஸ்துவுக்குள் காணப்பட்டால் மாத்திரமே மற்றும் அவர் மூலம் தேவனுடைய சுதந்தரர்களாய்க் காணப்பட்டால் மாத்திரமே நமக்கு இவ்விஷயத்தில் பங்கு

காணப்படும். மேலும் இப்படியாக மாத்திரமே நம்மால் மாபெரும் தோட்டக்காரர் நாடும் கனிகளையும் கொடுக்க முடியும். கொடியானது, "நான் முதலில் கிறிஸ்து வாயிலாக திராட்சச்செடியுடன் இணைந்து காணப்படுவது எனக்கு அவசியமாயிருந்தது. ஆனால், இப்பொழுது என்னால் தனித்து நிற்க முடியும்" எனக் கூறுவது அறிவீனமாயிருக்கும். யாரெல்லாம் தனித்து நிற்கின்றார்களோ, யாரெல்லாம் திராட்சச்செடியிலிருந்தும், மற்றக் கொடிகளிடமிருந்தும் பிரிந்து காணப்படுகின்றார்களோ, அவர்கள் சீக்கிரமாய் உலர்ந்து போய்விடுவார்கள். மேலும் திராட்சச்செடியில் நிலைத்திருப்பவர்கள், திராட்சச்செடிக்குத் தொடர்ந்து நேர்மையுடன் காணப்பட வேண்டும் மற்றும் அதே திராட்சச்செடியின் மற்ற அனைத்து உண்மையான கொடிகளுடன் ஒன்றுபட்டும் காணப்பட வேண்டும். இங்கு நாம் உண்மையான திராட்சச்செடியில் காணப்படுவதிலும், உண்மையான கொடிகளுடன் ஒன்றுபட்டுக் காணப்படுவதிலுமுள்ள முக்கியத்துவத்தை நாம் காண்கின்றோம்.

திராட்சச்செடி மற்றும் கொடிகள் பற்றின பாடம் தொடர்பான தவறான கருத்து, பல்வேறு சபை பிரிவுகளில் காணப்படும் நம்முடைய நண்பர்களினால் அடிக்கடி கூறப்படுகின்றன. இவர்கள் திராட்சச்செடியின் கொடியானது கிறிஸ்தவர்களின் பல்வேறு 'சபை பிரிவினர்' என்று கூறிக்கொள்கின்றனர். இது, ஒரு பயங்கரமான தவறை ஆழப்பதிய வைத்துவிடுகின்றது. அதாவது, ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் இந்தக்கொடிகளில், உதாரணத்திற்கு ரோமன் கத்தோலிக்கப் பிரிவில் (அ) கிரேக்க கத்தோலிக்கப் பிரிவில் (அ) மெத்தடிஸ்ட் பிரிவில் (அ) லூதரன் பிரிவில் (அ) பிரஸ்பிட்டேரியன் பிரிவில் அங்கத்துவம் பெற்றுக்கொள்வது, அவனுக்குரிய கடமை எனும் பயங்கரமான தவறை ஆழப்பதியவைத்துள்ளது. இதற்கு மாறான சரியான கருத்து என்னவெனில், அதாவது, கர்த்தருக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும், மெய்யான திராட்சச்செடியின் ஒவ்வொரு தனிப்பட்ட கொடியாகிறான் மற்றும் அவனுடைய ஊழியங்கள், 'சபை பிரிவு' எனும் கனிகளைக் கொண்டுவருவதற்காக அல்லாமல் மாறாக, அவனுடைய சொந்த குணலட்சணத்திலும், ஜீவியத்திலும் தேவனுடைய ஆவியின் கனிகளையே கொண்டுவருகிறதற்காகவே காணப்பட வேண்டும்.

கொடிகள் குறித்த தவறான இந்தக் கருத்தைக்குறித்து ஓர் எழுத்தாளர் பின்வருமாறு கூறுகின்றார்: "பெரியதாகவும், வளமை பொருந்தியதாகவும் இருக்கும் கனியற்ற சபைகளைத் தேவன் விரும்புவதில்லை. அவர்கள் உலர்ந்து போகும்படிக்கு விட்டுவிடுகின்றார். கிறிஸ்துவுடன் நெருக்கத்தில் காணப்படும் 'சபைகளே' விரைவாக வளர்வார்கள்." இந்தத் தவறான கருத்திலுள்ள தவறான வாதத்தைப் புரிந்துகொள்வதில் எவருக்கும் கஷ்டம் இல்லை. ஒருவேளை இது சரியான கண்ணோட்டமாக இருக்குமாயின் ஜனங்களின் எண்ணிக்கையில் பெரியதாகவும், ஆஸ்தியிலும், மனுஷர் மத்தியிலுமான கனத்திலும் மிகவும் வளமையுடையதாகவும் இருக்கும் சபை அமைப்புகளே, மிகுந்த சத்தியத்தை உடையவர்களாகவும், கர்த்தரிடத்திலிருந்து பரிசுத்த ஆவியாகிய உயிர்சாற்றை மிக நேரடியாகப் பெற்றுக்கொள்பவர்களாக இருப்பார்கள். இப்படி இருக்கும் பட்சத்தில் உரோம கத்தோலிக்க மார்க்கமானது, பரிசுத்தமானதாகவும், சிறப்பானதாகவும், கர்த்தருக்கு நெருக்கமானதாகவும் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுவதாக இருக்க வேண்டியிருக்கும்; கிரேக்க கத்தோலிக்க மார்க்கம் இரண்டாவது இருப்பதாக உரிமைகோரும்; மெத்தடிஸ்ட் மூன்றாவதாகவும், மற்றவைகளும் இப்படியாக வரிசையில் காணப்படும். இப்படிப்பட்டதான விளக்கத்தில் இருக்கும் தவறைச் சுட்டிக்காண்பிக்க புத்தியுள்ள ஜனங்களுக்குத் தேவைப்படுவதில்லை.

கொடிகளைச் சபை பிரிவுகளுக்குப் பொருத்தும்போது ஏற்படும் முரண்பாடுகளானது, கொடிகளைத் தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும், அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பொருத்தும்போது, முரண்பாடாக இல்லாமல் மற்றும் இந்த உண்மை முற்றிலுமாய்க் காரணக்காரியத்திற்கு உட்பட்டதாகவும், இசைவானதாகவும் காணப்படுகின்றது. மாபெரும் தோட்டக்காரரின் பார்வையில் பிரியமாய் இருக்கும் கனிகளைக்கொடுக்கத்தக்கதாக, விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், கர்த்தருக்கான ஊழியத்திற்குரிய அர்ப்பணிப்பிலும், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவர்கள், தெய்வீக ஏற்பாடுகளின் காரணமாக, அடிக்கடி வேலியடைக்கப்பட்டுள்ள இடுக்கமான வழியில் தாங்கள் இருப்பதையும் மற்றும் பல்வேறு திசைகளை நோக்கின தங்களது பிரயாசங்கள் அத்திசைகளிலிருந்து மாற்றப்படுவதையும் அல்லது தங்களது நோக்கங்கள் தடைப்பண்ணப்படுவதையும் காண்பார்கள். ஆனால், இந்த அனுபவங்கள் அனைத்தும் தங்களால் சரியாக ஏற்றுக்கொள்ளப்படுவதின் விளைவாக தாங்கள் கிருபையிலும் அறிவிலும், தேவனுடைய அன்பிலும், ஆவியின் கனிகளிலும் வளர்வதை உணர்ந்துகொள்கின்றனர். (ரோமர் 8:28)

"ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால்" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது திராட்சச்செடி மற்றும் கொடிகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றது. திராட்சச்செடிக்கும் அதன் கொடிகளுக்கும் இடையே அப்படிப்பட்ட ஓர் ஒற்றுமை காணப்படுவதினால், நாம் ஒரு கொடியை எங்கெல்லாம் தொட்டாலும், நாம் திராட்சச்செடியையே தொடுகின்றவர்களாய் இருப்போம். அது கொடிகள் அடங்கிய ஒரு திராட்சச்செடியாகும்; இப்படியாகவே கிறிஸ்துவின் சரீரம் அநேக அங்கங்களையுடைய ஒரே சரீரமாகக் காணப்படுகின்றது. எங்கெல்லாம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஓர் அங்கம் அல்லது ஒரு கொடி காணப்படுகின்றதோ, அங்குக் கிறிஸ்துவின் சகல பல்வேறு அம்சங்களும் காணப்படுகின்றது – ஆவியில், நோக்கத்தில், புதிய சிருஷ்டிகளெனக் காணப்படுகின்றது. கிறிஸ்துவுக்குள்ளான இந்த ஒற்றுமையே/ஒருமையே வல்லமைக்கான, கனிக்கொடுப்பதற்கான மற்றும் மாபெரும் தோட்டக்காரராகிய பிதாவினால் கொடிகள் அங்கீகரிக்கப்படுவதற்கான இரகசியமாகக் காணப்படுகின்றது.

"என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்ற வார்த்தைகள், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள உண்மையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள ஒவ்வொருவரின் இருதயத்திலும் ஆழமாகப் பதிக்கப்படுவதற்குப் பாத்திரமானதாகும். ஆனால், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதென்பது, மாபெரும் தோட்டக்காரரின் சித்தம் அனைத்திற்கும் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பதையும் மற்றும் அவருடைய ஞானம் சிறந்ததென அனுமதிக்கும் அனைத்துக் கிள்ளிவிடுதல்களுக்கும் மகிழ்ச்சியுடனும், சாந்தத்துடனும், கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கிள்ளிவிடுதல் மற்றும் சிட்சைகளின் அவசியம் தொடர்பாக பெயர்பெற்ற இறையியல் வல்லுநர் டிரெஞ்ச் அவர்கள் பின்வருமாறு அருமையாய்க் கூறியுள்ளதாவது:

"இப்படியாகவே, தேவன் விஷயத்திலும், அவருடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியர்கள் சிலரின் விஷயத்திலும் நிகழ்கின்றது. இவர்களுடைய ஆவியின் கிருபைகள், சராசரியான மனிதர்களுடைய கிருபைகளுக்கு அப்பாற்பட்டு இருந்தும், இன்னமும் இவர்கள் ஏன் பாடுகள்பட வேண்டுமென்றும், ஏன் இவர்களுக்குச் சோதனைகள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றது என்றும் சிலசமயம் மனிதர்கள் வியந்தது உண்டு. ஆனால் மற்றக் கண்களால் பார்க்க முடியாததை இவர்களிடத்தில் தேவன் காண்கின்றார்; அதாவது இன்னமும் அதிகப்படுத்துவதற்கு ஏதுவான ஆவியின் கிருபைகள் இவர்களிடத்தில் இருப்பதைத் தேவன் காண்கின்றார். மேலும் தமக்குச் சொந்தமானவர்கள் தம்மை ஒருநாள் மாத்திரமல்லாமல், நித்திய காலமாய்த் தம்மைத் துதிக்கத்தக்கதாக, தம்முடையவர்கள் பேரில் அவர் கொண்டிருக்கும் தொலைநோக்குள்ள அன்பானது, அவர்களுடைய நன்மைக்கேதுவான எதையும் தடைப்பண்ணிவிடாது. அவர்கள் கனிக்கொடுக்கும் கொடிகள் ஆவர்; மேலும் அவர்கள் இப்படிக் கனிக்கொடுக்கும் கொடியாக இருக்கின்றபடியால், அவர்கள் இன்னும் அதிகமான கனியைக்கொடுக்கத்தக்கதாக அவர்களைக் கிள்ளிவிடுகின்றார்."

சிலசமயம் திராட்சச்செடியானது, அதனால் முதிர்ச்சியான கனிகளைக்கொடுக்க முடிகின்ற அளவையும் மிஞ்சி அதிகமான கனிகளைக்கொடுக்க முற்படும் உண்மையைக்குறித்தும் மற்றும் இதனை கிறிஸ்தவனுடைய அனுபவங்களுடனும், பிரயாசங்களுடனும் பொருத்துவது குறித்தும் H.L. ஹெஸ்டிங்ஸ் அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கின்றார்:

"திராட்சச்செடியைக் குலுக்கி, அதன் அதிகப்படியான கனிகளின் சுமையினின்று அதனை விடுவித்துவிடுவதே சிறந்த வழியாகும். செடியினால் சமாளித்துக்கொள்ளும் நிலையை அடைவதுவரையிலும் மற்றும், செடியானது அதன் சுமையைத் தாங்கிக்கொள்ளும் நிலையை அடைவது வரையிலும் கிள்ளி, பிடுங்கி, கத்தரித்துவிட்டு, கனிகளைக்குறைத்துவிடுங்கள். ஒவ்வொரு கொடியும், முதிர்ச்சியடையக்கூடிய கனிகளைச் சுமந்துகொள்ளட்டும். மாறாக ஒருபோதும் முதிர்ச்சியடையாத கனிகளால் அதிகச் சுமை சுமத்தப்படாதிருப்பதாக."

இந்தக் கருத்து மற்றவர்கள் சார்பாக, கர்த்தருடைய ஊழியத்தில் ஏறெடுக்கப்படும் பிரயாசங்களுடைய கனிகள் தொடர்புடைய விஷயத்தில் மிகவும் சரியாக இருக்கின்றது. காரணம் அநேகர் போதுமான அளவுக்குக் கவனம்/சிரத்தைக்கொள்ளாததினிமித்தமாகத் தங்களது பிரயாசங்களை வீணடிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

நாம் அதிகளவில் தாலந்து பெற்றிராத காரியங்களில் ஏறெடுக்கப்படும் நம்முடைய பிரயாசங்கள், திட்டங்கள், ஏற்பாடுகளில் சிலவற்றைக் குலக்கிப்போடுவதில் விளங்கும் ஞானம் குறித்தும், நம்மால் பூரணமான பலனைக்கொண்டுவருவதற்கு ஏதுவானவைகள் மீது நமது பிரயாசங்களைச் செலுத்துவது குறித்தும், சாட்சி பகரும் விதத்தில் தாலந்துகள் உடைய

அப்போஸ்தலனாகிய பவுல், "ஒன்று செய்கிறேன்" எனக் கூறுகின்றார் (பிலிப்பியர் 3:13). முடிந்தமட்டும் தான் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான நிலையை அடைவதும், இதே நிலையை மற்றவர்கள் அடையத்தக்கதாக தன்னுடைய பலத்தால் முடிந்த மட்டும் மற்றவர்களுக்கு உதவி செய்வதும் அப்போஸ்தலருடைய ஜீவியத்தின் ஒரே வேலையாக இருந்தது. ஆனால், மற்றவர்கள் கனிகொடுக்கத்தக்கதாக ஊழியம் புரிவதென்பது, இந்தப் பாடத்தின் பிரதானமான கருத்தல்ல. கர்த்தருடைய ஆவியின் கனிகளை நம்முடைய சொந்த இருதயத்தில் பெற்றிருப்பதும், ஆவியின் கிருபைகளை நன்கு வளர்த்தப்பட்ட நிலையில் கொண்டிருப்பதும்தான் முதல் விஷயமாக இருக்கின்றது. இது கர்த்தருடைய ஊழியத்தில் சுயத்தைப் பலி செலுத்துதலையும், வேலைகள் புரிதலையும் குறிக்கின்றது. காரணம், இப்படியாக மாத்திரமேதான் நம்முடைய தனிப்பட்ட கனிகளும், கிருபைகளும் முதிர்ச்சியை அடைவது கர்த்தருடைய ஏற்பாடாக இருக்கின்றது.

அதிகமான கனி வளர்வது என்பது, முற்றிலும் நம்மையே சார்ந்ததில்லை என்றும், நாம் அவரில் கனிகொடுக்கின்ற கொடிகளாக நிலைத்திருப்பினும் கனிகளுடைய தரமும், அளவும் நாம் நமது மனங்களுக்கு முன்பாக சரியான இலட்சியங்களைக்கொண்டிருப்பதன் மூலமாகவும், அவைகள் நிஜமாக்குவதற்கு உண்மையாய் நாடப்படுவதன் மூலமாகவும் மேம்படுகின்றது என்றும் நமது கர்த்தர் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார். ஆகவே அவர், "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று கூறுகின்றார் (யோவான் 15:7). கருத்து என்னவெனில், பரம கிருபையின் சிங்காசனத்தில் இருக்கும் பிதாவிடத்தில் கேட்பதும், வாஞ்சிப்பதும்தான், நாம் திராட்சச்செடியின் உயிர்சாறாகிய பரிசுத்த ஆவியை அதிகமதிகமாய்ப் பெற்றுக்கொள்வதற்கும், ஆவியின் கனிகளை வளர்த்துக்கொள்வதற்குமுரிய வழியாய் இருக்கின்றது. இங்குப் பூமிக்குரிய நன்மையான காரியங்கள் நாடப்படுவது (அ) அடையப்படுவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கப்படலாம். இந்தப் பூமிக்குரிய நன்மைகள் தொடர்பானவைகள் முற்றிலுமாகக் கர்த்தருடைய ஞானத்திடத்திலும், ஏற்பாடுகளிடத்திலும் விட்டுவிடப்பட வேண்டும். மேலும் அவருடைய ஜனங்கள் அதாவது, திராட்சச்செடியின் மெய்யான கொடி, பரிசுத்த ஆவிக்காகவே வாஞ்சிக்கவும், நாடவும் வேண்டும். இந்தப் பரிசுத்த ஆவியைத் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கக்கூடும் பூமிக்குரிய பெற்றோர்களைக்காட்டிலும், பிதாவானவர் அதிகமாய்க்கொடுக்க சித்தமுள்ளவராக இருக்கின்றார். (லூக்கா 11:13)

இதற்கிடையில் நமது கர்த்தர், "என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால்" எனும் வார்த்தைகளைக் கூறுவதன் மூலமாக, தம்முடைய மெய்யான கொடிகளுக்கு அல்லது சீஷர்களுக்கு வேதவாக்கியங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். தெய்வீகக் கிருபையை நாம் நாடுவதென்பது சரியானதாகவும், அவசியமானதாகவும் மாத்திரம் இராமல், மாறாக இதற்குச் சரிசமமான நிலையில், மெய்யான திராட்சச்செடிக்குரிய தோட்டக்காரராகிய, நமது பிதாவாகிய தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் என்ன என்பது தொடர்புடைய தெய்வீக வெளிப்படுத்துதல்களை நாம் பயன்படுத்துவதும் சரியானதாகக் காணப்படுகின்றது. ஆகவேதான் அதிகமான கனிகளையும், நல்ல கனிகளையும் கொடுப்பவர்கள் விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டு, அர்ப்பணிப்பின் மூலம் பரிசுத்தம் பண்ணப்பட்டு, அர்ப்பணிப்பின் மூலமாக மெய்யான திராட்சச்செடியின் அங்கத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக மாத்திரம் காணப்படாமல், இன்னும் கனிகொடுப்பவர்களாக இருக்க நாடுபவர்களாக, திராட்சச்செடியில் நிலைத்திருக்க நாடுபவர்களாக, திராட்சச்செடியின் அனைத்து அம்சங்களைப் பெற்றிருக்க நாடுபவர்களாக, தேவையானபொழுதெல்லாம் உதவிக்கான கிருபைக்காக நாடுபவர்களாக, வேர்கள் வழியாய் வரும் உயிர்ச்சாற்றைத் தங்களுக்குப் பயன்படுத்துவதோடல்லாமல், தங்கள் மீது கர்த்தருடைய வார்த்தை மூலம் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சத்தியம் மற்றும் கிருபையின் வெளிச்சத்தைப் பயன்படுத்துபவர்களாகக் காணப்படுவார்கள். இந்த நிபந்தனைகளைப் பின்பற்றுவதன் மூலமே நாம் கனிகொடுப்பவர்களாக இருக்கமுடியும். மேலும், கனிகொடுப்பவர்களாக நாம் இருப்பதன் மூலமாக மாத்திரமே நம்மால் முடிவு பரியந்தமும் கர்த்தருடைய சீஷர்களாக இருக்க முடியும். ஏனெனில், தற்காலத்தில் காணப்படும் சபையானது, உண்மையை, அன்பை, கீழ்ப்படிதலைக்கொண்டிருப்பதாக அறிக்கைப்பண்ணுபவர்களைக் கொண்டிருக்கும் கூட்டத்தாராக அதாவது, தகுதிக்கான தேர்வின் கீழிருக்கும் சபையாக (Probationary Church) மாத்திரம் இருக்கின்றனர் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இவர்களுடைய அறிக்கையின் நேர்மையை நிரூபிக்கத்தக்கதாக, கர்த்தர் பரீட்சைகளைக்கொண்டுவருவார் மற்றும் தங்களது அறிக்கையின் நேர்மையை நிரூபிப்பவர்கள் மாத்திரமே, ஆலயத்தின் வாயிலில் காணப்பட்ட பொன்னினாலான திராட்சச்செடி அடையாளப்படுத்தும் மகிமையடையும் சபையின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

மெய்யான கொடிகளனைத்தும் தம்முடைய அன்பைக்குறித்தும், தம்முடைய அக்கறையைக்குறித்தும், அவர்களுக்கான தம்முடைய பராமரிப்புக்குறித்தும், திராட்சச்செடியில் அங்கத்துவம் அடைவதற்குரிய நிபந்தனைகளுக்கு இசைவாக அவர்கள் தங்களது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற தமது வாஞ்சையைக்குறித்தும் உணர்ந்திட நமது கர்த்தர் விரும்புகின்றார். ஆகவே, தம்முடைய அன்பைக்குறித்துப் பலமான வார்த்தைகளினால் அவர்களுக்கு உறுதிப்படுத்துகின்றார். பிதா தம்மீது கொண்டிருக்கும் அன்பை போன்றே தாமும் அவர்கள் மீது அன்பு கொண்டிருப்பதாகக் கர்த்தர் அவர்களிடம் கூறினார். இந்த அவருடைய வார்த்தைகளிலுள்ள உண்மை தன்மைக்குப் பல்வேறு சாட்சிகளும், இதோடுகூடக் கர்த்தருடைய வார்த்தைகளின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் சான்றுகளாகக் காணப்பட்டாலும், இது முழுமையாய்ப் புரிந்துகொள்வதற்கு மிகவும் அற்புதமான ஒன்றாக உள்ளது. நமது கர்த்தர் இயேசு, பிதாவினால் மிகவும் அன்புகூரப்பட்டார் என்பதும், அவரைத் தமது நேசகுமாரன் என்று கூறப்பட்டதும் எப்படி மற்றும் ஏன் என்று நம்மால் உடனடியாக அறிந்துகொள்ளபடலாம். ஆனால், இதே அன்பானது, நமது ஆண்டவரால் திரும்பி நம்மிடம் செலுத்தப்படுகின்றது என்பதை நாம் அறியும்போது நம்மை மலைக்கச்செய்கின்றது. "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1 யோவான் 3:1). பிதாவின் அன்பை நமது கர்த்தர் இயேசு முழுமையாக வெளிப்படுத்தித் தெரிவித்தார். (யோவான் 14:7)

ஆனால், இந்த ஆழமான அன்பு, "சிறுமந்தையினருக்கு" மாத்திரமே உரியது என்ற வரையறையும் இருக்கின்றது. "தேவன் இவ்வளவாய் உலகத்தை அன்புகூர்ந்தார்" மற்றும் நமது கர்த்தர் இயேசுவும் உலகத்தை அன்புகூர்ந்தார். ஆனால், அனுதாப அன்பின் அடிப்படையிலும், அவர்களுக்கு நன்மை செய்து கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சையிலும்தான் ஆகும். ஆனால் இங்குச் சபை மீது கர்த்தர் கொண்டதாகக்கூறும் அன்பானது முற்றிலும் வேறே அன்பாகும். அவர் சொல்லியிருக்கும் அன்பு, அவருக்கெனத் தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களுக்கு மாத்திரமே காணப்படுகின்றது. உண்மையில் இந்த அர்ப்பணிப்புதான் அவருடைய விசேஷித்த அன்பைப் பெற்றுக்கொள்வதற்குரிய இரகசியமாகும். ஒரே பேறான குமாரனைப் பிதா அன்புகூர்ந்தார். காரணம் அவர், "மரணபரியந்தம் அதாவது, சிலுவையின் மரணபரியந்தம்" கீழ்ப்படிதல், நம்பிக்கை மற்றும் விசுவாசத்தினால் நிறைந்தவராகக் காணப்பட்டார். அதுபோலவே, அதே அன்பானது, நீதிமானாக்கப்பட்டு ஆண்டவரின் ஆவியினால் நிரப்பப்பட்டு, அவருடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கும், தங்களது சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்தொடர விரும்புகிறவர்களாகக் காணப்படுபவர்கள் மீதும் கடந்துவந்துள்ளது. நம்முடைய அருமையான மீட்பரிடத்திற்குக் கடந்துவந்த அதே தேவனுடைய அன்பானது, மேற்கூறப்பட்டவர்களிடத்திலும் கடந்துவருகின்றது மற்றும் அவர்களிடத்தில் மீட்பருடைய அன்பும் கடந்துவருகின்றது. இவர்களுக்கே, "எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்;" "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?. . . . கிறிஸ்துவே மரித்தவர்" என்ற நல்ல செய்தியும் கடந்து வருகின்றது (1 கொரிந்தியர் 3:22-23; ரோமர் 8:33-34).

இந்த விசேஷமான அன்பானது, இந்த வகுப்பாருடைய அர்ப்பணிப்பு மற்றும் கீழ்ப்படிதலின் அடிப்படையில் காணப்படுவதுபோன்று, இந்த அன்பானது, அர்ப்பணிப்பு மற்றும் கீழ்ப்படிதலின் ஆவி தொடர்ந்து காணப்படுவதையும் சார்ந்துள்ளது. ஒருவேளை அவர்களது பக்தி தணிந்துபோய், சுயத்தின் மீதான அன்பினாலும், உலகத்தின் ஆவியினாலும் நிரப்பப்பட்டுவிடுவார்களானால், இதற்கேற்ப அவர்கள் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகின்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய இந்த விசேஷமான அன்பினின்று விலகிப்போய்விடுபவர்களாக இருப்பார்கள். ஆகவேதான், "என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்" (யோவான் 15:9) என நமது கர்த்தர் கூறுகின்றார்: இந்த வார்த்தைகள், கர்த்தருடைய அன்பை நாம் இழந்துவிடுவதற்கும், தள்ளப்பட்டுப் போவதற்கும், தேவனைப் பிரதானமான அன்பினால் அன்புகூருபவர்களுக்கு வைத்துள்ள மகா மேன்மையானவைகளுக்கென நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த தவறிப்போவதற்கும் நமக்கு வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவிக்கின்றது. (2 பேதுரு 1:4-11; 1 கொரிந்தியர் 9:27)

நாம் கொண்டிருக்கும் அன்பானது, கீழ்ப்படிதலில் வெளிப்படும் என்பதை நாம் மனதில்கொள்வது முக்கியமாகும். ஆகவே, கீழ்ப்படியாமை என்பது, கர்த்தருடைய கண்ணோட்டத்தில் அன்பில்லாமல் இருப்பதற்கான சான்றாக இருக்கின்றது. மேலும் இந்தச் சான்று நியாயமான கண்ணோட்டத்தின்படியான கணிப்பு என்று நாம் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். சிலர் கேட்கலாம், ஒருவேளை நாம் அறியாமையின் காரணமாகக் கீழ்ப்படியாமல் இருந்தால், இந்தக் கணிப்பு எவ்வாறு பொருந்தும்? நம்முடைய அறியாமைக்குக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்பதே நமது பதிலாகும்: எப்படியெனில் முதலாவதாக, "தேவனுடைய மனுஷன் (நன்கு தகவல் பெற்றவனாகவும்) தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" அவர் நமக்குச் சத்தியத்தின் வார்த்தைகளைக் கொடுத்துள்ளார் மற்றும் இரண்டாவதாக, அவருடைய பார்வைக்குப் பிரியமானவைகளை நாம் செய்திட நமக்கு உதவி செய்யும் அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கும், பரிசுத்தத்தின் ஆவியை அடைவதற்கும் உதவிகள் அருளப்படுமென நமக்கு அவர் வாக்களித்துமுள்ளார் (2 தீமோத்தேயு 3:16,17; யோவான் 16:13). ஆகவே, கர்த்தருடைய வார்த்தைகள் தொடர்புடைய விஷயத்தில் அஜாக்கிரதையுடன் இருப்பதென்பது, அன்பு இல்லாமைக்கான ஒரு சான்றாக இருக்கின்றது. தாம் பிதாவினுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்ததே, தாம் பிதாவின் நேசக்குமாரனாக, பிதாவின் அன்பில் நிலைத்திருந்து, தொடர்வதற்கான காரணமாக இருக்கின்றது என்றும், ஒருவேளை நாமும் கர்த்தருடைய அன்பில் நிலைத்திருந்து, அவருடைய சிங்காசனத்திலும், மகிமையிலும் பங்கடைவோமானால், நாமும் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலுடன் இருப்பதை எதிர்பார்ப்பார் என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார்.

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:11). நமது கர்த்தருடைய கட்டளைகளும், அறிவுரைகளும், நம்மைப் பயப்படுத்துவதற்கும், நம்முடைய சந்தோஷத்தை எடுத்துப்போடுவதற்கும் நோக்கமுடையவைகள் அல்ல. மாறாக மிகவும் கனிகொடுக்கின்ற கொடிகள் நன்கு அறிந்திருக்கின்றதுபோல, கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதும், இப்படியாக அவரிலும், அவருடைய அன்பிலும் நிலைத்திருப்பதின் வாயிலாக அடையப்பெறும் சிலாக்கியங்களும், மாபெரும் சந்தோஷமாகும் – உலகம் அளிக்கும் அனைத்து அற்பத்தனமான சந்தோஷத்திற்கும் மேலான சந்தோஷமாகும். இது எல்லாப் புத்திக்கும் எட்டாததும், இருதயத்தில் ஆளுகை செய்கிறதுமான சந்தோஷமாகவும், சமாதானமாகவும் இருந்து, தற்போதுள்ள ஜீவியம் பற்றியது மாத்திரமல்லாமல், இனிவரப்போகின்ற ஜீவியம் பற்றியதுமான வாக்குத்தத்தத்தையும், நிச்சயத்தையும் கூடவே கொண்டுவருகின்றதாகவும் இருக்கின்றது.

*****

# கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார்

## யோவான் 18:1-14

***"அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் ஆவார்."* ஏசாயா 53:3**

கடைசி இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, திராட்சச்செடி மற்றும் அதன் கொடிகள் குறித்துத் தம்முடைய சீஷர்களுடன் பேசின பிற்பாடு, நமது கர்த்தர் அருமையான ஓர் ஜெபம் ஏறெடுப்பது குறித்து யோவான் 17-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அநேகமாக, நடுராத்திரி வேளையில், இயேசு பதினொரு பேருடன் எருசலேமின் நுழைவாயிலைக்கடந்து வெளியேபோய், கெதரோன் என்னும் சிறு ஆற்றைக்கடந்து, அதற்கு அப்புறத்திலுள்ள கெத்செமனே தோட்டம் என்று அழைக்கப்படும் ஒலிவமரத் தோட்டத்திற்குப் போனார். ஒருவேளை இது பொதுவான தோட்டமாக அல்லது நமது கர்த்தருடன் நட்புறவில் காணப்படும் யாரோ ஒருவருக்குச் சொந்தமான தோட்டமாகவும் கூட இருக்கலாம். இத்தோட்டமிருந்த இடமென கருதப்படும் இடமானது, இன்றும் பல நூற்றாண்டுகளாக பூங்காவாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இத்தோட்டத்தைக் காணவரும் பார்வையாளர்களை வரவேற்க விரும்பும், துறவிகள் பொறுப்பில், இத்தோட்டம் இப்பொழுதும் காணப்படுகின்றது. தற்போது இந்தத் தோட்டத்தில் ஆறு (அ) எட்டு மிகப் பெரியதும், மிகப் பழமையானதுமான ஒவிவ மரங்கள் காணப்படுகின்றது. இந்த ஒலிவ மரங்களைப் பார்க்கும்போது, குறைந்த பட்சம் ஆயிரம் வருடங்களான மரம் போன்று காட்சியளிக்கும்; ஆனால் அவைகள் இன்னும் அதிகமான வருடங்களைக் கடந்ததாகவே இருக்க வேண்டும்.

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோதும், அவர்களுக்காக ஜெபித்தப்போதும், அவர் திடமனதுடன் காணப்பட்டதாகத் தெரிகின்றது. அதாவது, அவர்களுடைய இருதயங்கள் கலங்காதிருப்பதாக என்று அவர்களுக்கு அவர் புத்திமதிக் கூறிக்கொண்டிருந்தபோது, அவருடைய சொந்த இருதயம் கலக்கம்கொள்ளாமல்தான் காணப்பட்டது. ஆனால், அந்தச் சிறுகூட்டம் கெத்செமனேயை நோக்கி நடந்துக்கொண்டிருக்கையில், நம்முடைய அருமை மீட்பருடைய உணர்வுகளை, மிகுந்த பாரம் அழுத்தினதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது. "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" (மத்தேயு 26:38) என்று அவர் கூறினது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. தற்போது அவர் கெத்செமனேவுக்குச் சென்றுகொண்டிருப்பதென்பது, முற்காலங்களில் அவ்விடத்திற்கு அவர் சென்றதிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்தது. ஆண்டவருடைய துக்கத்தைக் கண்டு, அப்போஸ்தலர்கள் சூழ்நிலையைக் கொஞ்சம் கிரகித்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லையென்றாலும், அடுத்து என்ன சம்பவிக்கப்போகின்றது என்பதைச் சற்றே புரிந்திருந்தார்கள்.

சுவிசேஷகர்கள் பதிவு செய்ததிலிருந்து நாம் அறிந்துக்கொள்வது என்னவெனில், தோட்டத்திற்கு வந்தபோது, நமது கர்த்தர் அப்போஸ்தலர்களில் எட்டு பேரைத் தோட்டத்தின் நுழைவுவாயிலிலேயே நிறுத்திவிட்டு, தமக்கு நெருக்கமானவர்களாகிய பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தம்முடன் கூட உள்ளே கூட்டிக்கொண்டு போனார் மற்றும் அது விசேஷமான சோதனைக்கான வேளையாய் இருந்தபடியினால், அவர்களனைவரும் விழித்திருந்து ஜெபம் பண்ணும்படிக்கு எச்சரித்தார். அவர்களைவிட்டு அவர் அப்புறம் சென்று, பிதாவுடன் மறைவில் உரையாடினார். அவருடைய உணர்வுகளை, அவருக்கு அன்பாய் இருந்தசீஷர்களிடம் கூட அவர் பகிர்ந்துக்கொள்ளவில்லை, கொள்ளவும் முடியாது. அவர் கடந்துப்போகின்ற பரீட்சையை/சோதனையை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியாது. அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. ஆகவே அவருடைய மிகுந்த சோதனையான வேளையில், இயேசு தனிமையிலேயே காணப்பட்டார், "ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை" (ஏசாயா 63:3).

நம்முடைய கர்த்தருக்கு இரத்த வியர்வை வருமளவுக்கு, அவருடைய நரம்பு மண்டலத்தின் மீது தாக்கம்கொள்ளத்தக்கதாகக் காணப்பட்ட அவருடைய சோதனையினுடைய உண்மையான அம்சத்தைப் புரிந்துக்கொள்வதில், பெரும்பாலானவர்களுக்கு, ஏன் கிறிஸ்தவ ஜனங்களுக்குங்கூட சிரமம் இருக்கின்றது. அநேகர் நம்முடைய கர்த்தருடைய (சோதனையின்) பாதையுடன்,

குறிப்பிடத்தக்க தைரியத்துடன் மரணத்திற்குக் கடந்துச் சென்ற இரத்த சாட்சியாய்க் காணப்பட்ட கர்த்தருடைய பின்னடியார்களில் சிலருடைய பாதையை ஒப்பிட்டுப்பார்த்து, இவர்களைக் காட்டிலும் பூரணமாய்க் காணப்பட்ட நமது கர்த்தருக்கு, இன்னும் அதிகமான பாடுகள் படுவதில், கஷ்டம் இருந்திருக்காது என எண்ணுகின்றனர். உண்மையைத் தெரிந்துக்கொள்வதற்கு, அநேக விஷயங்கள் மனதில் கொள்ளப்பட வேண்டும்:

(1) ஜீவனுக்கான உரிமையைப் பூரணமாய்ப் பெற்றிருந்த நமது கர்த்தர், தம்முடைய ஜீவனை மரணத்திற்குக் கையளிப்பதென்பது, இழந்து போகப்பட்டதும், பலவீனமான ஜீவனுமாய் இருப்பதை, அதிக காலம் வைத்திருக்க முடியாதவர்களால், அந்தப் பலவீனமான ஜீவனை மரணத்திற்குக் கையளிப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். (2) பத்தில் ஒன்பது பாகத்திலும் மரித்துவிட்ட நம்முடைய சந்ததிக்கு, ஜீவனுடைய மாபெரும் மதிப்புபற்றின உணர்ந்துக்கொள்ளுதல் மந்தமானதாகவே இருக்கின்றது. அதாவது, நம்முடைய சந்ததியினுடைய அனுபவங்கள் அனைத்தும் மரணத்துடன் தொடர்புடையதாக இருப்பதினால், நம்முடைய சந்ததி, மரணத்தை வித்தியாசமான ஏதோ ஒன்றாகக் கருதுவதில்லை. ஆனால், இப்படியாக நம்முடைய கர்த்தருடைய விஷயத்தில் இருக்கவில்லை. அதாவது, பிதாவுடன் ஆரம்பம் முதல் காணப்பட்டவரும், அனைத்தையும் உண்டுபண்ணினவருமாகிய, "ஜீவனின் அதிபதியினுடைய" விஷயத்தில் இப்படியாக இருக்கவில்லை. அவரைப்பொறுத்தமட்டில் ஜீவன் என்பது, மிகவும் விலையேறப்பெற்ற அருளாக, சிலாக்கியமாக, சந்தோஷமாக இருந்தது. ஆகவே பத்தில் ஒன்பது பாகத்தில் ஏற்கெனவே மரித்துப்போனவர்களாகவும், உணர்வுகள் அனைத்திலும் மழுங்கிப்போனவர்களாகவும் காணப்படும் நம்மைப் பார்க்கிலும், அவருக்கு மரணம் மிகவும் பயங்கரமானதாகக் காணப்பட்டது. அவர் ஒருவேளை மரணம்வரைக்கும் உண்மையுள்ளவராய் இருப்பாரானால், அவருக்கு உயிர்த்தெழுதல் கிடைக்கும் என்ற பிதாவினுடைய வாக்குத்தத்தைப் பெற்றிருந்தார் என்பது உண்மைதான்; மற்றும் அவர் பிதாவின் வாக்குத்தத்தை நம்பினார் என்பதிலும் ஐயமில்லை. அவர் பிதாவினிடத்தில் கொண்டிருந்த விசுவாசத்திற்கு, அவருடைய முழு வாழ்க்கையும் திரளான சாட்சியங்களை அளிக்கின்றது. எனினும் அவருடைய விஷயத்தைப் பொறுத்தமட்டில் நம்மைப்பார்க்கிலும், அவருக்கான விசுவாச சோதனையானது மிகவும் நெருக்கடியானதே. பறிமுதல் பண்ணப்பட்ட ஜீவனில், சிறிதளவையே நாம் ஒப்புக்கொடுக்கப்பெற்றிருக்கின்றோம். இன்னுமாக, கிறிஸ்து மூலமான எதிர்க்காலத்திற்குரிய பிதாவின் வாக்குத்தத்தம் மாத்திரம் நமக்கிராமல், நம்முடைய அருமை மீட்பரின் உயிர்த்தெழுதலில் செயல்பட்ட பிதாவின் வல்லமைக்கான உதாரணமும் கூட நமக்கு இருக்கின்றது. ஆனால், இப்படியான தெய்வீக வல்லமைக்கான சான்றுகள் எதுவும் நமது கர்த்தருக்கு இருக்கவில்லை. தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி அவரே, "பிதாவின் சிருஷ்டிகளில் முதற்பலனானவராகவும்," "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவராகவும்" இருக்க வேண்டியிருந்தது (கொலோசெயர் 1:18; 1 கொரிந்தியர் 15:20).

ஆனால், இவைகளனைத்தும் அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அவரால் கருதப்பட்டு, மதிப்பிடப்பட்டு மற்றும் ஏற்றுக்கொள்ளவும் பட்டுவிட்டது. ஆடுகளுக்காக தாம் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பது அவசியம் என்றும், தாம் அப்படியாக ஒப்புக்கொடுக்கப் போவதாகவும் அவர் ஏற்கெனவே சீஷர்களுக்குத் தெரிவித்துள்ளார் (யோவான் 10:15). ஆகவே, "பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று நமது அருமையான மீட்பர் ஜெபம் பண்ணினதை, அவர் மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்பு இருக்குமானால்... என்ற அர்த்தத்தில் கூறினார் என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. பாவத்திற்கான பலியாக, தாம் உயர்த்தப்படாதது வரையிலும், உலகம் தம்மிடத்திற்கு இழுக்கப்படாது; அதாவது, நம்முடைய பாவங்களுக்காக அவர் மரிப்பதும், அவருடைய மகிமைக்குள் பிரவேசிப்பதும் அவசியம் என்பதை அவர் ஏற்கெனவே அறிந்திருந்தார்; மற்றும் சீஷர்களுக்கும் இதை ஏற்கெனவே அறிவித்திருந்தார். (யோவான் 3:14; 12:32).

தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று அவர் வேண்டிக்கொண்ட பாத்திரமானது, அவர் நியாயப்பிரமாணத்தை மீறினதாகக்கூறி அவரைக் கைதுச்செய்து, பொதுவிசாரணை அவருக்கு நடத்தி, அவரைக் குற்றவாளி என்று தீர்ப்பிட்டு, பிற்பாடு அவரைக் குற்றவாளி/பாதகனெனச் சிலுவையில் அறையப்படுதலின் காரணமாகக் காணப்படும் அவமானத்தையும், நிந்தனையையும் குறிக்கின்றதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய பாவங்களுக்காக, பொதுவான மனுஷர்கள் மரிப்பதுபோன்று, எவ்விதமான விசேஷித்த அவமானமில்லாமல் அவர் மரிப்பதென்பது ஒரு காரியமாகவும், அவர் இப்படி உச்சக்கட்டமான அவமானத்திலும், கனவீனத்திலும், இகழ்ச்சியிலும் மரிக்க வேண்டுமென்பது வேறு காரியமாக இருக்கின்றது. அநேகமாகப் பிதாவினுடைய ஞானத்தின்படி, இந்தக் கடைசி அம்சமானது

இவைகளெல்லாம் நிறைவேறப்போகும் தருணம்வரையிலும், நம்முடைய அருமையான மீட்பருக்கு ஏறக்குறைய மறைத்தே வைக்கப்பட்டிருந்தது. மேலும், மனிதனுக்கான ஈடுபலியைச் செலுத்தும் விஷயத்தில், ஒரு பாவி பாடுபடுவதைப்பார்க்கிலும் அதிகமாய், தாம் பாடுபடுவதற்குரிய எவ்விதமான அவசியமும் இருப்பதாக நம்முடைய கர்த்தருக்குத் தெரியவில்லை. ஆகவே, "இப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று அவருடைய ஜெபம் காணப்பட்டது. அப்போஸ்தலர் கூட இந்த வித்தியாசத்தை உணர்ந்தவராக, "மரணபரியந்தம் தாழ்த்தினார்" என்று கூறிய பின்னர், "அதாவது, சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்று கூறுகின்றார் (பிலிப்பியர் 2:8).

சிலுவையின் மரணமும், அதனோடு கூட உள்ள கனவீனம், நிந்தனை முதலியவைகளும், நம்முடைய முடிந்தமட்டுமுள்ள கணிப்பின்படி, நமக்கான ஈடுபலியின் விலைக்கு அவசியமில்லை என்று காண்கின்றோம். ஏனெனில், "அதை நீ புசிக்கும் நாளிலே, நீ சிலுவையில் அறையப்பட்டு, கனவீனமடைந்து, எல்லோர் முன்பும் கொடியவனாகப் பார்க்கப்பட்டுச் சாவாய்" என்பதாக தண்டனை காணப்படவில்லை. தண்டனை மரணமாக இருக்கின்றபடியினால், நம்முடைய கர்த்தருடைய மரணம் மாத்திரமே, மனிதனுக்கான ஈடுபலித் தொகையெனப் போதுமாய் இருந்திருக்கும் (ஆதியாகமம் 2:17). எனினும், இந்த அதிகப்படியான (அவமானத்தின்) அம்சமானது, பிதாவினால் அவசியமானது என்று கருதப்பட்டப்படியால், "பாத்திரம்" நீங்கவில்லை. "தம்முடைய நேச குமாரனுடைய" இருதயத்தின் உண்மையை அதாவது, குமாரனுக்குத் தம்முடைய சொந்த சுபாவமாகிய தெய்வீகச் சுபாவத்தையும், தம்முடைய இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்தையும் கொடுத்துச் சீக்கிரத்தில் மிகுதியாய் உயர்த்தவும், மாபெரும் ஆசீர்வாதத்தையும் கொடுக்க வேண்டுமென்று, தாம் திட்டம் பண்ணியுள்ளபடியினால், குமாரனுடைய இருதயத்தின் உண்மையைத் தமக்கு மாத்திரமல்லாமல், அறிவுடைய தம்முடைய சிருஷ்டிகள் அனைத்திற்கும் நிரூபிப்பதற்கென இப்படியான உச்சக்கட்டமான கீழ்ப்படிதலை, பரீட்சையாக வைப்பது பிதாவுக்கு அவசியமாய் இருந்தது. மேலும், நம்முடைய அருமை மீட்பருடைய உண்மையானது முழுமையாய் உறுதிப்படுத்தப்பட்டது. "அவர் அவமானத்தை எண்ணாமல்..." என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். அதாவது, பிதாவுக்குப் பிரியமாய் இருப்பதற்கு முன்பாக, பிதாவினுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முன்பாக, கர்த்தருக்கு அவமானங்கள் ஒரு பொருட்டாய் இருக்கவில்லை (எபிரெயர் 12:2). அவமானம் அடைதல் எனும் அம்சத்தை நீக்கிவிடுவதற்கான வாய்ப்புள்ளது என்ற எண்ணம் அவருக்குக் காணப்பட்டதுவரையிலும், கூடுமானால் நீங்கிவிடட்டும் என்று பதற்றத்துடன் இயேசு எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால், இப்படியாக நீக்குவது பிதாவின் சித்தமல்ல என்பதை அவர் உணர்ந்தவுடனே, "என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று அவருடைய இருதயம் காணப்பட்டது. பிதாவின் சித்தம் தொடர்புடைய முடிவானது, உடனடியாகப் பலத்தைக்கொண்டு வந்தது. தேவனுடைய பலத்திலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் அவர் இப்பொழுது எந்த அனுபவத்தையும் சந்திக்கத் தயாரானார்.

இதற்கிடையில், சில நாட்களுக்கு முன்னதாக இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாகப் பிரதான ஆசாரியனுடன் ஒப்பந்தம் போட்டிருந்த யூதாஸ், அதாவது இராப்போஜனம் முடிந்தவுடன் தன்னுடைய கொடிய திட்டத்தை நடத்தும்படிக்கு மேல் வீட்டறையை விட்டுப் புறப்பட்ட யூதாஸ், இயேசுவைக் கைதுச்செய்து, பஸ்காவிற்கு முன்னதாக அவருக்கு மரணத் தண்டனை அளிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் போர்ச்சேவகரின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு வந்தான். இந்தப் போர்ச்சேவகர்கள் அடங்கிய கூட்டத்தில், 600 உரோம போர்ச்சேவகர்கள் இருந்தார்கள் என்று பொதுவாய் நிலவிவரும் கருத்தை நாம் முற்றிலுமாக நிராகரிக்கின்றோம். இங்கு அனுப்பப்பட்ட போர்ச்சேவகர்கள், இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் போர்ச்சேவகர்கள் பொதுவாய் நடந்துக்கொள்வதிலிருந்து, வித்தியாசமாய்ச் செயல்பட்டனர். இதுவுமல்லாமல், இந்தப் போர்ச்சேவகர்கள் உரோமின் பிரதிநிதிகளாகிய பிலாத்துவினால் அல்லது ஏரோதினால் அனுப்பப்படாமல், உரோம படையினுடைய கட்டளையின் கீழ்க் காணப்படாத பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களால்தான் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று அனைத்துச் சுவிசேஷகர்களும் பதிவு செய்துள்ளனர். இயேசுவைக் கைதுச் செய்த இந்தப் போர்ச்சேவகர்கள், யோவான் 7:32-46 வரையிலான வசனங்களில் இடம்பெறும் சேவகர்கள்தான் என நாம் எடுத்துக்கொள்கின்றோம்.

மத ரீதியிலான விஷயங்களில், யூத ஆலோசனை சங்கத்தாருக்கு ஓரளவுக்கு அதிகாரம் இருந்ததாகவும், கைதுச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும், ஆனால் உரோம ஆளுநரின் சம்மதமில்லாமல் யூத ஆலோசனை சங்கத்தாருக்கு, குற்றவாளிகளை மரணத் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்க முடியாது என்பது தெரிகின்றது. அப்போஸ்தலர்கள் அநேக தருணங்களில்

யூதர்களுடைய இந்த (ஆலோசனை சங்கத்தாரின்) அதிகாரிகளால் கைதுச் செய்யப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகின்றோம். அப்போஸ்தலர் 5:17, 18, 22, 25-40 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்.

பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களுடைய அதிகாரிகளின் கீழ்க் காணப்பட்ட இந்தச் சேவகர்களை, மத்தேயுவும், மாற்கும், "திரளான ஜனங்கள்" என்று கூறுகின்றனர். மேலும் இவர்கள், பொதுவான ஜனங்களிடம் பொதுவாய்க் காணப்படும் பட்டயங்களையும், தடிகளையும் பெற்றிருந்தார்கள் என்று இயேசுவினுடைய வார்த்தைகளிலிருந்து தெரிகின்றது. இவர்கள் உரோம சேவகர்களின் ஆயுதமாகிய ஈட்டியைக்கொண்டிருந்தார்கள் எனக் கர்த்தர் கூறவில்லை. இக்கருத்தை, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன்தான் இயேசுவின் மீது முதலாவதாகக் கைப்போட்டதன் விளைவாக, பேதுருவின் பட்டயத்தினால் தாக்கப்பட்டான் என்ற உண்மையானது இன்னும் உறுதிப்படுத்துகின்றது. ஒருவேளை உரோம போர்ச்சேவகர்கள்தான் இவ்விடத்தில் பொறுப்பேற்றிருந்திருப்பார்களானால், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுக்கு அங்குச் செயல்படுவதற்கு அதிகாரம் இருந்திருக்காது என்பதில் ஐயமில்லை.

யூதாசின் வழிகாட்டுதலின் கீழ் இயேசுவைத் தேடி வந்த இந்தக் கூட்டத்தார், இயேசுவும், அப்போஸ்தலர்களும் சுமார் ஒருமணி நேரத்திற்கு முன்னதாகவே வெளியேறி கடந்துப் போய்விட்ட மேல் வீட்டு அறைக்குத்தான் முதலாவதாகச் சென்றிருக்க வேண்டும். இயேசுவும் பதினொரு பேரும் மேற்வீட்டறையை விட்டுக்கடந்துப் போயிருப்பதைக் கண்டபோது, அவர்களைக் கெத்செமனே தோட்டத்தில் கண்டுபிடிக்கலாம் என்பதை யூதாஸ் அறிந்திருந்தான். காரணம், "இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தார்." காட்டிக்கொடுத்த காரியம் தொடர்புடையதாய் மற்றச் சுவிசேஷகர்களால், பதிவு செய்யப்பட்ட காரியங்களை, யோவான் பதிவு செய்யாமல் விட்டுவிட்டார். அநேகமாக அன்பான சீஷனாயிருந்த யோவான், அவ்வுண்மைகளினிமித்தம் மிகவும் வெட்கமடைந்ததால், அவைகளைக்குறிப்பிட அவர் விரும்பவில்லைபோலும். யூதாசின் நம்பிக்கை துரோகம் போன்று, வெகு சில சம்பவங்களே நடந்துள்ளது. துரோகியின் ஸ்தானமானது, மிகுந்த இழிவானவர்கள் மத்தியில்தான் காணப்படுகின்றது என, தவறான மனநிலையில் காணப்படும் மனுக்குலம் கூட உணர்ந்துள்ளது. ஆண்டவருடைய இப்படிப்பட்ட அன்புக்கும், இரக்கத்திற்கும், நன்மைகளுக்கும்/நற்குணங்களுக்கும் எதிரான இப்படியான நம்பிக்கைத் துரோகச் செயல்கள், சர்வ சாதாரணமானதல்ல என்பதில் நாம் மகிழ்கின்றோம். எனினும் கர்த்தருடைய ஜனங்களின் அனுபவத்தில், இதற்கு இணையான அனுபவங்கள் காணப்படுகின்றன. அதாவது, "சகோதரர்களால் வரும் மோசங்கள்" கர்தருடைய ஜனங்களுக்கு உண்டு. இது, யூதாசின் ஆவிக்கு ஒத்ததான எதுவும் நம்முடைய இருதயங்களை அலைக்கழிக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்று நம்மில் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படிப்பட்டதான விஷயங்களில் நம்முடைய கர்த்தர், "தம்முடைய சரீரத்தின் அங்கங்களை" தம்முடன் ஒரே தளத்தில் வைத்தவராக, இந்தச் சிறியவர்களாக தம்முடைய சகோதரர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவர்கள் விஷயத்தில், இடறல் உண்டாக்குகிறவனின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி, அவனைக் கடலின் ஆழத்தில் அமிழ்த்திவிடுவது அவனுக்கு நலமாயிருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கின்றார் (மத்தேயு 18:6).

தலைக்கும், அவருடைய சரீரத்தின் உடன் அங்கங்களுக்கும் செய்யப்படும் ஒவ்வொரு செய்கையினுடைய, பின்பக்கத்திலும் நிச்சயமாக நல்ல (அ) கெட்ட நோக்கம் ஒன்று காணப்படும். வலுவான நோக்கத்தைத் தேடுவது என்பது, நம்பிக்கை துரோகத்திற்கான உறுதியான பழியிலிருந்து விலகுவதற்குரிய காரணங்களைத் தேடுவது ஆகாது. நம்முடைய அனுபவத்தையும், கணிப்பையும் வைத்துப் பார்க்கும்பொழுது, வல்லமை (அ) ஸ்தானங்கள் அடைவதற்கான இச்சையும், பேராசையும்தான், "கள்ள சகோதரர்" செய்யும் நம்பிக்கை துரோகமான செயலுக்கு ஊற்றாக இருக்கின்றது. இப்படிப்பட்ட பரிசுத்தமற்ற இலட்சியங்களை மேன்மைப்படுத்துவதற்குரிய ஆசையானது, இவ்வாசையைக்கொண்டிருக்கும் இருதயத்தைக் கண்டிப்பாய் மாசுப்படுத்திவிடும். ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"ஒரு எண்ணத்தை விதைத்தால், நீ ஒரு கிரியையை அறுப்பாய்;
ஒரு கிரியையை விதைத்தால், நீ ஒரு பழக்க வழக்கத்தை அறுப்பாய்;
ஒரு பழக்க வழக்கத்தை விதைத்தால், நீ ஒரு குணத்தை அறுப்பாய்;
ஒரு குணத்தை விதைத்தால், நீ ஓர் இலக்கையே அடைந்துவிடுவாய்."

யூதாசின் எண்ணங்கள், வெளியரங்கமான பொல்லாத கிரியையின் தோற்றத்தை எடுப்பதற்கு முன்னதாக, யூதாஸ் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் பொல்லாத எண்ணங்களை விதைத்து வந்துள்ளார். யூதாஸ் ஆஸ்தி மற்றும் செல்வாக்கின் மீது பேராசைக்கொண்டிருந்தார். அவர் சீஷர்களுடைய சிறிய கூட்டத்திற்குப் பொருளாளரானார். மேலும், நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட பணத்தில் ஒரு பாகத்தைத் தன்னுடைய சொந்த காரியங்களுக்காக, யூதாஸ் திருடினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. யூதாஸ் எந்தளவுக்குப் பணத்தின் மீது ஆசை வைத்தாரோ, அந்தளவுக்கு அந்த ஆசையை நடைமுறையும் படுத்தினார். அதாவது, தனது ஆண்டவரை முப்பது வெள்ளி காசுகளுக்குக் காட்டிக்கொடுக்க விருப்பங்கொள்ளும் அளவுக்கு, பணத்தின் மீதான யூதாசின் ஆசை பெருகினது. யூதாஸ் வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்தை எதிர்ப்பார்த்ததாகவும், அநேகமாக அந்த இராஜ்யத்தில் இராஜரிக பொருளாளர் எனும் உயர்வான ஸ்தானத்தை அடைய எதிர்ப்பார்த்ததாகவும் தெரிகின்றது.

யூதாஸ், தான் காட்டிக்கொடுத்ததின் விளைவாக உண்டான நிகழ்வுகளினிமித்தம் பயங்கரமான ஏமாற்றத்தை அடைந்திருப்பார் என்பதிலும் நிச்சயமே. நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களின் கையினின்று அற்புதமான வல்லமையினால் தம்மைத் தப்புவித்துக்கொள்வார் என யூதாஸ் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். இதைவிட பரந்த மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டத்தில், யூதாசினுடைய நம்பிக்கைத் துரோகமான செயலை எடுத்துக்கொள்ள நமக்குத் தெரியவில்லை. எனினும், இந்தப் பரந்த மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டம் கூட, யூதாசுனுடைய செய்கையிலுள்ள கரும்புள்ளியில் கொஞ்சத்தையே துடைக்கின்றது. எனினும், பணம் விஷயத்திற்காகத் தன்னுடைய சிறந்த நண்பனை இழிவான விதத்தில் தற்காலிகமாகக்கூட பயன்படுத்த விரும்புகிறவன், பணத்தின் மீதான தன்னுடைய ஆசையுடன், தன்னுடைய அனைத்து உணர்வுகளையும் வேசித்தனம் பண்ணியுள்ளதை வெளிக்காட்டுகிறவனாய் இருக்கின்றான். கனமடைவதற்குரிய ஆசையும் கூட யூதாசுக்குக் காணப்பட்டிருக்கலாம். காரணம், நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த இராஜ்யத்தை கர்த்தர் ஸ்தாபிக்கும்படிக்கு, அவர் (இயேசு) கட்டாயத்திற்குள்ளாகத்தக்கதாக அல்லது அவர் கூறியவை அனைத்தும், மற்றும் வாக்குத்தத்தங்களும் மோசடி என்று வெளிப்படுத்தத்தக்கதாக இந்த ஆபத்தைக் கொண்டுவருவதற்கு யூதாஸ் எண்ணியிருந்திருக்கலாம்.

காரியங்களை விரைவுபடுத்துவதிலும், தேவனுடைய கரு நிலையிலுள்ள இராஜ்யத்தை நிறுவுவதிலும் யூதாஸ் உண்மையில் வெற்றியடைந்தான்; எனினும் அவன் விரும்பினவிதத்திலல்ல, அதுவும் எந்தவிதத்திலும் அவனுக்குக் கனத்தையோ (அ) நன்மையையோ அளிக்கும் விதத்திலல்ல. இப்படியாகவே சத்தியத்தைப் பெற்றுக்கொண்டும், தங்களைச் சீஷர்கள் என்று அறிக்கைப் பண்ணிக் கொண்டும், அதே வேளையில் சத்தியத்தின் மீது அன்பு இல்லாமலும், தற்காலத்திலோ (அ) எதிர்க்காலத்திலோ கனத்திற்காக ஆசைப்படுபவர்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்களாகிய நாம் அனைவரும், இந்த வெட்கக்கேடான பண்பின், எவ்வித அம்சங்களும் நம் எவரிடத்திலும் காணப்பட்டுவிடாதப்படிக்குக் கவனத்துடனும், விழிப்புடனும், ஜெபத்துடனும் இருக்கக்கடவோம். கர்த்தரையும், "சகோதரரையும்" காட்டிக்கொடுக்கும் விஷயத்தில் பல்வேறு இரகசியமான வழிகளும், அநேக வெளியரங்கமான வழிகளும் இருப்பதை நாம் நினைவில் கொள்வோமாக.

இயேசு தம் மீது வரவிருக்கும் அனைத்துக் காரியங்களையும் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனச் சுவிசேஷகர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், அவர் ஜெபம் பண்ணிபோது, "வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான்" என்றும் நமக்குத் தெரிவிக்கப்படுகின்றது. கர்த்தர் பட வேண்டிய பாடுகள் எவை மற்றும் அவைகள் எப்படி எதிர்ப்பார்க்கப்பட வேண்டும் என்பவை தொடர்புடைய விஷயங்களிலுள்ள, பிதாவின் சித்தத்தைப் பற்றிக் கர்த்தருக்குத் தெரிவிப்பதாக தூதனின் இவ்வூழியம் காணப்பட்டிருக்கலாம். மேலும், காரியங்கள் தொடர்பான இந்த அறிவின் காரணமாகவும், பிதா அனைத்தையும் நன்மைக்கு ஏதுவானதாக மாற்றுவார் என்ற நிச்சயத்தின் காரணமாகவும், அவருடைய இருதயம் பலப்பட்டது; மற்றும் இதற்குப் பின்னர் நடந்த காரியங்கள் அனைத்திலும், நம்மால் அவரிடம் கவனிக்க முடிந்த, மாபெரும் அமைதியையும் அவருக்குக்கொடுத்தது.

இயேசுவைக் கைதுச் செய்யும்படிக்கு வந்த "போர்ச்சேவகர்கள்", அவரை மரங்களின் மறைவுகளுக்குள்ளெல்லாம் தேட வேண்டிய நிலை தங்களுக்கு ஏற்படும் என்று எண்ணியிருந்திருக்க வேண்டும். ஆகவே அவர்கள் பந்தங்களோடும், தீவட்டிகளோடும் வந்திருந்தார்கள். நமது கர்த்தர், அவர்களிடமிருந்து தப்பி ஓடுவதற்குப்பதிலாக, அவர்களுக்கு முன்பாக எதிர்ப்பட்டு, அவர்கள் யாரைத் தேடுகின்றார்கள் என்று கேட்டதினிமித்தம், அவர்களுக்கு

மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தப் போர்ச்சேவகர்களில் சிலருக்கும் ஏற்கெனவே கர்த்தரை, அதாவது அவருடைய அற்புதங்கள், பிசாசுகள் மீதான வல்லமைகள் முதலியவைகள் பற்றிய அறிவு இருந்திருக்க வாய்ப்பு உண்டு. மேலும், இதுகூட அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழுவதன் மூலம், தங்களது பெலவீனத்தை வெளிப்படுத்தினதற்கான காரணமாகக்கூட இருக்கலாம். இல்லையேல், தாம் அவர்களை எதிர்க்க விரும்பினால், அவர்களை எதிர்ப்பதற்கான முழு வல்லமையும் தம்மிடத்தில் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழத்தக்கதாக, அவர்கள் மீது உயர் மனதின் சக்தியைக்கூட நமது கர்த்தர் பயன்படுத்தியிருக்கவும் வாய்ப்புள்ளது.

இதே படிப்பினையானது, பேதுரு பட்டயத்தைப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் மீது உபயோகித்தப்போதும், கற்றுக்கொடுக்கப்படுகின்றது என நாம் நம்புகின்றோம். அப்போஸ்தலர்கள் பட்டயங்களை எடுத்துக்கொள்ளும்படிக்கு நமது கர்த்தர் அவர்களிடம் கூறினார் என்றும், இரண்டு பட்டயங்கள் இருக்கின்றது என்று சொன்னபோது, அவை "போதும்" என்று நமது கர்த்தர் கூறினார் என்றும், சுவிசேஷங்களில் ஒருவர் பதிவு செய்துள்ளது நம்முடைய நினைவிற்கு வருகின்றது (லூக்கா 22:36, 38). தமக்காக தம்முடைய சீஷர்கள் சரீரப்பிரகாரமான யுத்தம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய கர்த்தருக்கு இல்லை. இதை அவர் பிற்பாடு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" என்று தெரியப்படுத்துகின்றார் (யோவான் 18:36). தற்காப்பிற்காக எதுவும் இல்லை என்பதினாலோ, அதேசமயம் தம்முடைய சீஷர்கள் கோழைத்தனமாய் இருப்பதினாலோ, நம்முடைய கர்த்தர் கைதுச் செய்யப்படாமல், மாறாக அவருடைய வேளை வந்தது என்பதையும், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்து, அவருடைய மகிமையில் பிரவேசிப்பதற்குரிய வேளை வந்துள்ளது என்பதையும் அறிந்து, அவர் தம்மை முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்ததினாலேயே, அவர் கைதுச் செய்யப்பட்டார் என்பதைக் காட்டுவதற்கு இரண்டு பட்டயங்கள் போதுமானதாய் இருந்தது. லூக்கா 24:46.

அங்கு வந்துள்ள திரளான ஜனக்கூட்டத்தைத் தம்மால் முழுமையாய்ச் சமாளிக்க முடியும் என்பதையும், தாம் விரும்பினால் தம்மைப் பாதுகாக்க, பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரைக்கொண்டு வருவதற்குத் தம்மிடத்தில் வல்லமை உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டும் வண்ணமாக, இந்த ஒரு வல்லமையை வெளிப்படுத்தின பிற்பாடு (மத்தேயு 26:53), நம்முடைய கர்த்தர் தாம் கைதுச் செய்யப்படுவதற்கென முழுமையாய்த் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டு, சீஷர்கள் அவர்கள் வழியே போய்விட அனுமதிக்க வேண்டுமெனும் நிபந்தனையை மாத்திரம் வைப்பதை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட ஒரு தருணத்தில், இப்படிப்பட்ட சோதனையான சூழ்நிலையின் கீழ், தம்மைப்பற்றி முற்றிலுமாக மறந்துவிட்டு, மற்றவர்களுடைய நலனில் மாத்திரம் அக்கறைக்கொண்டிருப்பது எத்துணை அருமையான குணலட்சணமாய் உள்ளது! அவர் எப்பேர்ப்பட்டவராய் இருக்கின்றார்!

"நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது" (யோவான் 18:9). மறுபடியும் ஆண்டவருடைய நடத்தையில் இங்கு அவர் மேல்வீட்டறையை விட்டுப்போவதற்கு முன்பாகத் தம்முடைய ஜெபத்தில் கூறினதின்படியே, தம்முடைய சீஷர்களுக்கான அவருடைய பராமரிப்பிற்கு உதாரணத்தை நாம் காண்கின்றோம். அவர்களில் எவரும் இழந்துப் போகப்படக்கூடாது என்பதில், அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகள் தொடர்பான விஷயமே பிரதானமாக அவருடைய ஜெபத்தின் எண்ணமாக இருப்பினும், இது அவருடைய சீஷர்களாகும் அனைவருடைய சரீரத்திற்கடுத்த நன்மைகள் தொடர்புடைய விஷயத்திலுமுள்ள, நம்முடைய கர்த்தரின் அக்கறையை உறுதிப்படுத்தும் உதாரணமாகவும் இருக்கின்றது. அவர்களுடைய தலையிலிருந்து அவரை அறியாமல், ஒரு மயிர்கூட கீழே விழுவதில்லை; எதுவும் அவர்கள் பாதிக்கத்தக்கதாக அனுமதிக்கப்படுவதில்லை. ஜீவியத்தின் ஒவ்வொரு விஷயமும், சம்பவங்களும், அவர்களுடைய மேலான நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் (மத்தேயு 6:32, 33).

அநேகமாக இயேசுவைக் கட்டுவதற்கு ஆரம்பித்திருக்கும் போதுதான், அவரைப் பாதுகாப்பதற்கெனப் பேதுரு தன்னுடைய பட்டயத்தை உறையிலிருந்து வெளியே எடுத்திருந்திருக்க வேண்டும். ஒருவேளை தம்முடைய சீஷர்களனைவரும் அவரைக் கைவிட்டு ஓடிவிடுவார்கள் என்ற கர்த்தருடைய வார்த்தைகளும், பேதுருவாகிய தான் "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" என்று பண்ணின சத்தியத்தையும் பேதுரு நினைவுகூர்ந்திருப்பார் (மாற்கு

14:29). பெருந்தன்மையுள்ள, பக்தி வைராக்கியமுள்ள பேதுரு! அவருடைய உணர்வின் பெருந்தன்மையுடன்கூடிய வெளிப்படுத்தல்களினிமித்தமும், பேதுரு மேல் நமக்கு அன்பு உருவாகுகின்றது. இங்குள்ள பேதுருவின் செயல்பாடானது, பேதுருவின் துடுக்குத்தனத்தினால் செய்யப்பட்ட தவறுகளில் ஒன்றுதான் என அநேகர் இழிவுப்படுத்தும் வழக்கமுண்டு. அப்போதுவரை அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும், தாங்கள் அழைக்கப்பட்டிருப்பது ஆவிக்குரிய இராஜ்யம் என்பதைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், நாம் பார்த்துள்ளபடி பேதுரு, பட்டயத்தை எடுத்துக்கொள்ளும்படியான கர்த்தருடைய ஆலோசனையின்படிச் செய்தவராகத்தான் இருக்கின்றார்; மற்றும் அப்பட்டயத்தைப் பயன்படுத்தினதில், அவர் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றினவராகவே காணப்படுகின்றார். குற்றப்படுத்துவதற்கென எதையும் நாம் பார்க்க முடியவில்லை. அனைத்தும் பாராட்டும் வண்ணமாகவே காணப்படுகின்றது. இவ்விஷயம் பேதுருவினாலும், அங்கிருந்த மற்றவர்களாலும் உணரப்பட்டதைக் காட்டிலும் மிகப் பெரிய முக்கியத்துவம் உடையதாய் இருந்தது.

இவ்வளவு தூரம் காரியங்கள் அனைத்தும் நடைப்பெறும் வண்ணமாக அனுமதித்தப் பிற்பாடு, நமது கர்த்தர், "உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" என்று கூறி, பேதுருவைக் கட்டுப்படுத்தினார் (யோவான் 18:11). இப்படிக்கூறிக்கொண்டு, கர்த்தர் காயமடைந்த தம்முடைய சத்துருவைத் தொட்டு அவனைச் சொஸ்தப்படுத்தினார். நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களிடத்தில், தம்மை முன்வந்து விரும்பிக் கையளிக்கின்றார் என்பதை சீஷர்கள் கண்டு, புரிந்துக்கொள்ள வேண்டும்; மற்றும் இதுபற்றின உறுதியும் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். ஆகவே, இப்பாடத்தை வலியுறுத்தும் வண்ணமாக அனைத்தும் நடத்தப்பட்டன.

நம்முடைய அருமை மீட்பருடைய ஊழியத்தின் சின்னஞ்சிறு விஷயங்கள் அனைத்திலுங்கூட தாழ்மையெனும் கிருபை எவ்வளவாய்ப் பிரகாசிக்கின்றது. அவர் தம்மைத் தம்முடைய சத்துருக்களிடம் கையளித்த தருணத்திலுங்கூட, தாம் விரும்பிதான் தம்மைக் கையளிப்பதாக தற்பெருமையடித்துக்கொள்ளவுமில்லை, இரத்தசாட்சிக்குரிய பாராட்டையும் நாடவுமில்லை! பிதாவினிடத்திலான தம்முடைய நேர்மைக்கான/உண்மைக்கான சான்றாக இதையெல்லாம் பிதா தம்மிடத்தில் எதிர்ப்பார்க்கின்றார் என்ற எளிய உண்மையையே வெளிப்படுத்தினவராகக் காணப்பட்டார். இயேசு தம்மைத் தேவனுடைய ஊழியக்காரர் என்றும், தாம் படுகின்ற பாடுகள் மூலமாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்கின்ற குமாரன் என்றும் தெரிவித்தார். "பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்றார் கர்த்தர். உண்மையில் இதுதான் அவருடைய வெற்றிக்கான பலமாக இருந்தது. அதாவது, அவருடைய சித்தத்தை அவர் முழுமையாய்ப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தார்; மற்றும் பிதாவினால் நன்மைக்கேதுவாக மாற்றமுடிகின்றதை மாத்திரம் தவிர, மற்றபடி எந்தத் தேவையற்ற பொல்லாப்புகளையும் பிதா தம்மீது வர அனுமதிப்பதில்லை என்ற உண்மையை, அவருடைய விசுவாசம் பற்றிப்பிடித்திருந்தது.

இங்கு இராஜரிக ஆசாரியகூட்டத்தார் அனைவருக்கும் அதாவது, மாபெரும் பிரதான ஆசாரியனுடைய அடிச்சுவடிகளில் நடக்க நாடும் அனைவருக்கும் முக்கியமான படிப்பினை உள்ளது. நான் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க நாடுவது வரையிலும் நமக்கான ஜீவியத்தின் சோதனையான அனுபவங்களனைத்தும், நமக்கெனக் கர்த்தரால் கவனமாய்க் கருத்தில் கொள்ளப்படுகிறது. அதாவது, நமக்குத் தேவையற்றதும், நமக்கு நித்திய கனமகிமையை உண்டாக்காததுமான எந்தக் கசப்பான அனுபவங்களையும், நம்முடைய துக்கம் மற்றும் சோதனையின் பாத்திரத்தில் அவர் ஊற்றுவதில்லை என்பதை நாமும் நினைவில் கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 4:17). இந்த வாக்குத்தத்தங்கள் நிமித்தமாகவும், நமக்கு முன்னோடியும், மகிமையடைந்தவருமாகிய நம்முடைய ஆண்டவரிடத்திலான பிதாவின் உண்மைக்கான சான்றுகளின் நிமித்தமாகவும், சுவிசேஷ யுகத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்குள் அடைக்கலம் புகுந்துள்ள நமக்குப் பலமான ஆறுதலுள்ளது (எபிரெயர் 6:18-20).

வெட்டப்பட்ட காதைச் சொஸ்தப்படுத்தின நமது கர்த்தருடைய கடைசி அற்புதமானது, அவருடைய குணலட்சணத்திற்கும், போதனைக்குமான மிக அருமையான உதாரணமாக விளங்குகின்றது. இது, "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" என்ற அவருடைய வார்த்தைகளுக்கான உதாரணமாயிற்று. இது அவருடைய போதனைகள் வெளிப்படுத்தின தெய்வீக அன்பினால் அவர் நிரம்பியிருப்பதையும், அவரை இழிவான

விதத்தில் நடத்தினவர்களிடத்திலும், அவரைத் துன்பப்படுத்தினவர்களிடத்திலும் அவருக்கு எந்தக் கசப்பும் இல்லை என்பதையும் காட்டுகின்றது.

நமது கர்த்தரைக் கட்டுவதற்கு அவசியமில்லை. ஆனால், இந்தப் போர்ச்சேவகர்களை அனுப்பி வைத்தவர்களுக்கு முன்பாக, இந்தப் போர்ச்சேவகர்கள் தங்களது வீரத்தை வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதினால், இப்படியாக அவரைக் கட்டியிருக்கலாம். இதை நமது கர்த்தர் கண்டித்ததை மாற்கு 14:48-49-ஆம் வசனங்களில் பார்க்கலாம். "இயேசு அவர்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே; ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டியதாயிருக்கிறது என்றார்." அப்பொழுதுதான் பதினொரு பேரும் அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிடுகின்றனர். யூதாஸ் போர்ச்சேவகர்களுடன் கூட ஆசாரியனாகிய அன்னாவினுடைய வீட்டிற்குப் போனான். இந்த அன்னாதான் யூதாசுடன் விலைபேரம் பேசியிருந்தான். மேலும் இத்தருணத்தில்தான், ஒப்பந்தத்தின்படி நிறைவேற்றி முடித்துள்ள யூதாசுக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசுகள் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இவன் ஈனமான/கேடுகெட்ட மனுஷன்! மனுஷகுமாரனைக் குறித்து எழுதப்பட்டதுபோல அவர் மரணத்திற்குள் போனார். ஆனால், அவர் மரிக்க வேண்டியது அவசியம் எனும் காரியமானது, அவரை அவருடைய சத்துருக்களின் கைகளில் கையளித்த கொலைக்கார, பேராசை மற்றும் நம்பிக்கை துரோகத்தினுடைய கொடூரத்தின் வீரியத்தை குறைத்துக் காட்டுவதில்லை. இப்படியாகவே, கிறிஸ்துவினுடைய சரீர அங்கங்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு அவமானங்கள் வருவது அவசியமாயுள்ளது. இன்னுமாக, தலையினுடைய உபத்திரவங்களில், குறைவானதைக் கிறிஸ்துவின் சரீரமானது நிறைவேற்றுவது என்பது, தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகமாக இருக்கின்றது (கொலோசெயர் 1:24). எனினும், இது இப்படியான "காட்டிக்கொடுத்தலை" செய்பவர்களின் செய்கையினுடைய பாவத்தைக் குறைத்திடாது. அதுவும் சத்தியத்தின் அறிவை அனுபவித்திருக்கும் "கள்ள சகோதரருடைய" விஷயத்தில் குறைத்திடாது. கர்த்தருக்கும் சரி, அவரோடு கூட உண்மையாய்ப் பாடு அனுபவிக்கும் அனைவருக்கும் சரி, பரீட்சைகளும், சோதனைகளும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாக இருப்பினும், யூதாசின் போக்கைத் தெரிந்துக்கொண்டு அநீதிச் செய்பவர்கள், தங்களுக்குக் கனமும், ஆசீர்வாதமும் வேண்டும் என்பதற்காக, பொல்லப்புச் செய்யும்படிக்குத் தங்களை விற்றுப்போடுகிறபடியால், தாங்கள் இச்சித்த கனங்களையும், ஆசீர்வாதங்களையும் ஒருபோதும் அடைவதில்லை.

*****

# மாபெரும் பிரதான ஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார்

## யோவான் 18:15-27

*"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை."* **யோவான் 1:11**

அனைத்துச் சீஷர்களும் தப்பி ஓடிவிட்டார்கள் என்று கூறப்பட்டிருப்பினும், பேதுருவும், யோவானும், சிறிது இடைவெளிவிட்டுப் பின் தொடர்ந்தார்கள் என யோவான் சுட்டிக்காட்டுகின்றார். போதகர் மீது அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த அக்கறையானது, அவர்களை தங்களுடைய வீட்டிற்குச் செல்லவிடாமல், போதகருக்கு என்ன சம்பவிக்கின்றது என்று இறுதிவரை அறிந்துக்கொள்ளவும், காணவும் ஏவிற்று. போதகருக்கு எதிராகக் கூறப்படும் அத்தகைய மாபெரும் விநோதமான பேச்சுகளை, காரியங்களை எதிர்த்து அவருக்கு உதவிசெய்ய அவர்கள் பலமற்றவர்களாக இருந்தார்கள். மேலும், உதவி பெற்றுக்கொள்வதற்குப் போதகரே மறுத்துவிட்டதால், அவருக்கு உதவிபுரிய அவர்களுக்குப் பலமும் இல்லாமல் போயிற்று என்றாலும், அவரை இன்னமும் அன்பு செய்வதில் அவர்கள் பலமற்றுப்போகவில்லை. பிரதான ஆசாரியனுடைய அரண்மனையோடு ஏதோ ஒருவிதத்தில் பழக்கப்பட்டிருந்த யோவான், தனக்கு மாத்திரமல்லாமல், பேதுருவுக்கும் சேர்த்து, உள்ளே செல்வதற்கான அனுமதியை உடனடியாகப் பெற்றுக்கொண்டார்.

ஆனால், இந்தத் தயவுகளும், சிலாக்கியங்களும் பேதுருவுக்கு பரீட்சைகளாக மாறி, அவர் கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாக நடத்தவும் செய்துவிட்டது. இன்றும் இப்படியாகவே சில கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கர்த்தருடைய பின்னடியார்கள் தனியாகவோ அல்லது தாங்கள் கொண்டிருக்கும் அதே விலையேறப்பெற்ற விசுவாசத்தில் உள்ளவர்களோடு இருக்கையில், அவர்கள் கர்த்தரை அறிக்கைப் பண்ணுவதிலும், அவருக்கு ஊழியம் புரிவதிலும் மிகவும் தைரியத்துடனும், துணிவுடனும் காணப்படுவார்கள். ஆனால், ஒருவேளை தற்செயலாக அவர்கள் அரண்மனைகளுக்குள்ளாகவோ (அ) பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் பிரதான ஆசாரியர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் காணப்பட நேரிடுகையில், சத்தியம் அறிந்திராத அந்தச் சமுதாயத்தார் மத்தியில் அனுபவித்திருந்த சிலாக்கியங்களிலிருந்து புறம்பாக்கிப் போடப்படுவார்களோ என்று கருதி, போதகரைக் குறித்து வெட்கம் அடைந்தவர்களாக, அவரை அறிக்கைச் செய்ய அச்சம் அடைகின்றனர். பரிதாபத்திற்குரிய பேதுரு பின்வருமாறுக் கூறியிருந்தால் அவருக்கு நலமாயிருக்கும், "ஆம், நான் அவர் சீஷரில் ஒருவன்தான். என்னைப்போன்ற அவருடைய சீஷர்கள் உங்கள் மத்தியில் காணப்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்று நான் புரிந்துக்கொள்ளுகிறதினால், நான் வெளியே போய்விடுகின்றேன்." இப்படி அவர் கூறியிருந்திருப்பாரானால், சகல நீதியான மனுஷர்களுடைய கண்களுக்கு முன்பாகவும், அவருடைய நடத்தை மிகவும் பாராட்டுவதற்கு ஏதுவாகவும், நேர்த்தியானதாகவும் காணப்பட்டிருந்திருக்கும். இன்னுமாக எத்துணை ஆசீர்வாதங்களையும், இது அவருக்குக் கொண்டுவந்திருக்கக்கூடும்!

சரியான முறையைக் கடைபிடிக்கத் தவறின பேதுருவை, அவரது தவறான முறையானது, இன்னும் அதிகம் சோதனைக்குரிய சூழ்நிலைக்கு அவரைப் பிற்பாடு கொண்டு போயிற்று. எப்படியெனில், பேதுரு காதை வெட்டின மனுஷனுடைய உறவினன், அவரை நோக்கி, "நான் உன்னை அவனுடனேகூட தோட்டத்திலே காணவில்லையோ?" (யோவான் 18:26) என்று கேள்வி கேட்டபோது ஏற்பட்டது. சூழ்நிலைகள் பரிதாபத்திற்குரிய பேதுருவுக்கு மிகவும் நெருக்கம் கொடுக்க ஆரம்பித்தது. கேட்கப்பட்ட இக்கேள்வியானது, பிரதான ஆசாரியனின் முற்றத்தில் இருப்பதற்கான கனத்தையும், சிலாக்கியத்தையும், குளிர் காய்வதற்கான நெருப்பையும் விட்டுச்செல்லும் இழப்பைக் காட்டிலும் அதிகமான பாதிப்பை உடைய கேள்வியாகும். இயேசுவைக் காக்கும்படிக்குப் பட்டயத்தைப் பயன்படுத்தினவன் என்ற தனது அடையாளத்தைக் குறித்ததாக இக்கேள்வி அமைந்தது. மேலுமாக, அதே இடத்தில் ஆண்டவரோடு கூடத் தானும் கைதுச் செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்படுவதற்கான சம்பவங்களைக் கொண்டுவருவதற்கு ஏதுவான கேள்வியாகவும், அக்கேள்வி காணப்பட்டது. தவறுதலாக எடுத்து வைக்கப்பட்ட ஓர் அடியானது, இயல்பாகவே இன்னொரு

தவறான அடியை எடுத்து வைக்கவே நடத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே இரண்டாம் முறை கேட்கப்பட்ட கேள்விக்கு, இப்பொழுது இயேசுவின் சார்பாக, தான் உண்மையை அறிக்கைச் செய்துவிட்டால் அது, தான் பொய்யன் என்பதற்கான வெளிப்படையான சாட்சியாக அமைந்து, தன்னைக் கைதுச் செய்துவிடக்கூடிய சூழலாகவும் அமைந்துவிடும். ஆகவே தன்னைக் காக்கும்பொருட்டு, தான் மீண்டும் பொய்ச் சொல்வதோடல்லாமல், மீண்டும் ஆண்டவரை மறுதலிப்பதோடல்லாமல், தன்னைக் குற்றஞ்சாட்ட முற்படுபவர்கள் முன்பாக காரியங்களை மிகவும் உறுதியாய் நிலைப்படுத்தும் வண்ணமாக, தனக்கு இயேசுவைத் தெரியாது என்று கூறவும், சபிக்கவும், சத்தியம் பண்ணவும் முடிவெடுத்தார்.

பாவம் பேதுரு! நமது கர்த்தர் பேதுருவிடம் சாத்தான் அவரை புடமிட விரும்புகின்றான் எனக்கூறின பிரகாரம், பேதுரு இக்கட்டத்தில் மிகவும் கடுமையாகப் புடமிடப்பட்டார். பேதுரு, பெலன் கொண்டு, மனம்வருந்தி, தன்னுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட காரியமானது ஓர் அற்புதம் போன்று தோன்றுகின்றது. பேதுரு இப்படியாக மறுதலிப்பார் என்று கூறினதுடன் கூட, அவருக்காக ஜெபம் பண்ணினதாகவும் அறிவித்திருந்த நமது கர்த்தருடைய ஜெபமானது அதன் பலனைக் கொடுத்தது என நமக்குக் காட்டுகின்றது. ஏனெனில், பேதுரு இப்படியாக மறுதலித்த பிற்பாடு சேவல் கூவினதைக் கேட்டு, "சேவல் கூவுவதற்கு முன்னரே என்னை நீ மூன்று தரம் மறுதலிப்பாய்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளைப் பேதுரு நினைவுகூர்ந்தார். வெளிப்படுத்த முடியாத அளவு உணர்வுகளோடு, பேதுரு இப்பொழுது தன் நிமித்தமாக பிரதான ஆசாரியனின் இடத்தைவிட்டு வேகமாக வெளியேறினார். மனங்கசந்து அழுது, கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி, அவ்விடத்தைவிட்டு வெளியேறினார்.

இதில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. என்னவெனில், பேதுரு எந்த விஷயத்தில் பெலம் உள்ளவராக இருந்தாரோ, அவ்விஷயத்தில்தான் அவர் வீழ்ச்சியும் அடைந்தார். பேதுரு இயல்பாகவே தைரியமுள்ள மனுஷன்தான். தன் தைரியத்தைக் குறித்துப் பெருமையும் அடித்துக் கொண்டார். ஆயினும், தைரியம் இல்லாமையினால் வீழ்ச்சியும் அடைந்தார். "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்ற வார்த்தைகள், எவன் ஒருவன் தன்னை பலமுள்ளவன் என்று எண்ணுகின்றானோ, அவன் உண்மையில் பலவீனனாய் இருக்கின்றான் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதற்கு உதாரணமாக, பேதுருவின் விஷயம் காணப்படுகின்றது (2 கொரிந்தியர் 12:10). நமக்கு ஒரு தந்திரமான சத்துரு இருக்கின்றான் என உணர்ந்து/நினைவில் கொண்டு, நம்மிடம் இன்னின்ன பலமுள்ள தன்மைகள் காணப்படுகின்றன என்பதான நம்முடைய அனுமானங்களிலிருந்து விசேஷமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்ள நாம் அனைவரும் கற்றுக்கொள்வோமாக. எந்த விஷயத்திலும் நம்மிடம் காணப்படும் நம்முடைய பலவீனங்களை, குறைகளை நாம் உணர்ந்துக்கொண்டு, ஒவ்வொரு விஷயத்தையும் விழிப்பாய்க் கவனித்து, நமக்கு உதவி செய்யும், நம்முடைய மாபெரும் இரட்சிப்பின் அதிபதியைச் சார்ந்து நிற்கிறவர்களாகக் காணப்பட வேண்டும்.

யோவான், சம்பவத்தின் சகல அம்சங்களையும் பதிவு செய்யவில்லை. பேதுரு சபித்ததையும், சத்தியம் பண்ணுவதையும் குறிப்பிடுவதை அவர் தவிர்த்துவிட்டார். பேதுருவை பற்றிக் கர்த்தர் கூறின அக்காரியமானது நிறைவேறிவிட்டது என்று கண்டிப்பாகக் காட்ட வேண்டிய அவசியமில்லாத, அச்சம்பவங்களை, சகோதரனாகிய பேதுருவின் மீதான அன்பினிமித்தம் பதிவு செய்யாமல் விட்டுவிட யோவான் ஏவப்பட்டார். பேதுரு சபித்ததையும், சத்தியம் பண்ணினதையும் குறித்த விஷயங்களை மாற்கு, பதிவு செய்கின்றார். மாற்கு எழுதின சுவிசேஷமானது, பேதுருவினால் சொல்லப்பட, அது மாற்கினால் எழுதப்பட்டது என்று எண்ணப்படுகின்றது (மாற்கு 14:66-72).

இயேசு, பிரதான ஆசாரியனால் விசாரணை செய்யப்பட்டார். மேலும், அக்கூட்டத்தார் தீமையையும், கொலை பாதகத்தையும் இருதயத்தில் கொண்டிருந்தாலும், நீதிமுறையை வெளித்தோற்றத்திற்காகிலும் கைக்கொள்ள வேண்டும் எனக் கட்டுண்டவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால், ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்கள் மத்தியில் காணப்பட்ட பிரதான ஆசாரியனும், அவனோடு கைக்கோர்த்துள்ளவர்களும், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க ஏற்கெனவே முடிவு செய்திருந்தார்கள் என்று பல பதிவுகள் நமக்குக் காட்டுகின்றது. காரணம், ஜனங்கள் மத்தியில் இயேசுவுக்குக் காணப்பட்ட செல்வாக்கானது, அவர்களுக்குத் தீங்கை விளைவிக்கக்கூடியதாக இருந்தது. அதாவது, இயேசுவினுடைய போதனைகள், அவர்களைப்

பின்னுக்குத் தள்ளிவிடுகின்றதாகவும், அவர்களின் மாய்மாலம், மதவெறி மற்றும் வஞ்சனைகளை வெட்ட வெளிச்சமாக்குகின்றதாகவும் காணப்பட்டது. பிரதான ஆசாரியனின் கேள்விகளுக்கு நமது கர்த்தர் பதில் கொடுத்துக் கொண்டிருந்தார். அதேசமயம் அவர் எந்தக் குறிப்பிட்ட விரிவான விளக்கங்களும் கொடுக்க மறுத்தும் விட்டார். மேலும், அவர் தாம் போதித்தவைகளை, சுட்டி மாத்திரமே காட்டினார். இவ்விதமாக ஒரு யூதனாக அவருக்கு இருந்த உரிமையின் மீதே, அவர்களது கவனத்தைத் திருப்பினார். கர்த்தருடைய பதில் சரியானதும், நியாயமானதுமாக இருக்கின்றது. அவர் நியாயமான காரணம் இல்லாமல் கைதுச் செய்யப்பட்டார். மேலும், நீதிபதியோ இப்பொழுது ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்கும்படிக்கு அவரிடத்தில் தேடுகின்றான். கைதுச் செய்யப்படுவதற்கு முன்பு, கைதுச் செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏதாகிலும் காட்டப்பட்டிருக்க வேண்டும் என்று மாத்திரமே நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

இயேசுவைத் தன்னுடைய கைகளினால் அறைந்து, பிரதான ஆசாரியனுக்கு இப்படியா தகாத வார்த்தைகளைக் கொண்டு உத்தரவு கொடுப்பது என்று இயேசுவைக் கடிந்துக்கொண்ட சேவகன், இவ்விஷயத்தில் வேண்டுமென்றே அநீதியாக நடந்துக்கொண்டான் என்று நாம் எண்ண வேண்டியதில்லை. மாறாக, பிரதான ஆசாரியனின் ஸ்தானம் மற்றும் நியாயத்தீர்ப்பை, தான் வைராக்கியத்துடன் ஆதரிக்கின்றேன் என்று தன்னைக் காண்பிக்க வேண்டும் என்ற விருப்பமே, அவனிடத்தில் தாக்கம் கொண்டு, விழுந்துபோன மனுஷனாகிய அவனுடைய சரியற்ற மனதின் மீதும் தாக்கம் கொண்டு, பொல்லாப்பு இல்லாதவற்றில், பொல்லாப்பு/தீமை இருப்பது போன்று கற்பனை செய்து கொள்ளும்படி அவனை ஏவிற்று என்றே நாம் எண்ணுக்கின்றோம். இச்சூழ்நிலையானது, மலைப் பிரசங்கத்தின்போது, "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு," என்று நமது கர்த்தர் பேசின வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்வதற்கான வாய்ப்பை நமக்கு அளிக்கின்றது (மத்தேயு 5:39). சொல்லர்த்தமாக நமது கர்த்தர் தம்முடைய மறு கன்னத்தை அடிக்கிறவனிடத்தில் திருப்பிக்காட்டி, இக்கன்னத்திலும் அடி என்று கூறவுமில்லை. தாம், கன்னத்தில் அறையப்பட்டதை அமைதலுடன் ஏற்றுக்கொள்ளவுமில்லை. தாம் பேசினது தவறல்ல என்ற விஷயத்தை திருத்தம் செய்துகொள்வதற்கு ஏற்ற முயற்சியாகிலும் எடுக்கப்படாதது வரையிலும், அவர் தம்முடைய நன்னடத்தையும், சரியான வார்த்தையும், தவறாய்ப் பேசப்படுவதை ஏற்றுக்கொள்ளவுமில்லை/விரும்பிக்கொள்ளவுமில்லை. ஆகவேதான், தம்மை அடித்தவனிடம், தாம் எவ்விதத்தில் தகாததாய்ப் பேசினேன் என்று காட்டும்படிக் கேட்டுக்கொண்டார். மேலும், ஒருவேளை அவனால் தகாததைச் சுட்டிக்காட்ட முடியவில்லையெனில், தன்னால் சுட்டிக்காட்ட முடியாத தகாததற்காக அநீதியுடன் அடித்ததற்கான தன்னுடைய தவறை அவன் ஒப்புக்கொள்ள வேண்டும் என யோசனைக்கூறினார்.

இந்த உதாரணத்தின் வெளிச்சத்தில் மறு கன்னத்தைக் காண்பித்துக்கொடு என்ற கட்டளைக்கான அர்த்தம் என்னவெனில், கர்த்தருடைய ஜனங்கள் தீமையைத் தீமையினால் எதிர்க்கக்கூடாது என்பதும், மாறாக, தீமைக்குப் பதிலாக தீமை செய்வதைக் காட்டிலும், அவர்கள் அதிகமான தீமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். அதேசமயம் அவர்கள் தீமையை, நன்மையினால் எதிர்க்க வேண்டும். போதகர் செய்தது போன்று, தீமை செய்தவர்களுக்கு நட்பு முறையில் அறிவுரை கூற வேண்டும். அதாவது, வாக்குவாதம் வரும் காரியங்களில் தீமை செய்பவர்கள், சரி எது, தவறு எது என்று காணத்தக்கதாக, அன்புடனும், நிதானத்துடனும் முயற்சி செய்ய வேண்டும் என்று கர்த்தருடைய ஜனங்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்.

அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனும், அன்னாவின் மருமகனாகிய காய்பாவிற்கு முன்பாக, யூதர்களால் நமது கர்த்தர் விசாரணை செய்யப்பட்டார். இதே காய்பா தான், ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவராகவும் காணப்பட்டார், "ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான். இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கத்தரிசனமாய்ச் சொன்னான்" (யோவான் 11:50-53).

மாபெரும் சத்தியங்கள் எப்படி, இரண்டு எதிரெதிரான கண்ணோட்டங்களில் பார்க்கப்படக்கூடும் என்பதற்கான உதாரணமாக மேற்கூறப்பட்ட வசனங்கள் விளங்குகின்றது.

காய்பாவின் தீர்க்கத்தரிசனம் மிகவும் உண்மையே. மேலும், இத்தீர்க்கத்தரிசினம் கர்த்தருடைய வார்த்தைகள் அறிவித்த சகல விஷயங்களுக்கும் மிகவும் இசைவாகக் காணப்படுகின்றது. இத்தீர்க்கதரிசனமானது, தேவன் எப்போதும் பயன்படுத்துவதில் பழக்கமுடைய கருவிகளில் (ஆசாரிய ஊழியன் ஸ்தானம்) ஒன்றின் மூலமாகவே அனுப்பப்பட்டது. ஆனால், அந்த ஸ்தானத்தில் காணப்பட்ட மனுஷனோ, தேவனுக்கு இருதய அளவில் இசைவில்லாதவனும், தெய்வீகத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களுக்கு இசைவில்லாதவனும், பொல்லாத செய்கையைத் தூண்டினவனாகவும், அச்செய்கைக்குக் கூட்டாளியாகவும் காணப்பட்டான். இப்படி இருப்பினும் இவைகள் அனைத்தும் தெய்வீக ஏற்பாடு மற்றும் முன்னறிவிற்கு இசைவாகவே நடந்துக் கொண்டிருந்தது.

தெய்வீகச் சத்தியத்தின் ஒவ்வொரு அம்சம் தொடர்புடைய விஷயங்களில் இங்குச் சகல கர்த்தருடைய ஜனங்களுக்கும் ஒரு படிப்பினை காணப்படுகின்றது. நாம் சில குறிப்பிட்ட விஷயங்களை அறிந்திருப்பது மாத்திரம் போதாது, நாம் கர்த்தருக்கு இருதய அளவிலும் இசைவுள்ளவர்களாகவும் காணப்பட வேண்டும். இல்லையெனில், நாம் காய்பா போன்று காணப்படுவோம். அதாவது, கர்த்தருடைய திட்டம் நிறைவேற உதவியாய் இருப்போம். ஆனால், தெய்வீகத் திட்டத்தின் நிறைவேறுதலில் இன்னமும் செயலாற்றுகிறவர்களாய் இருப்பினும், நம்மையும், மற்றவர்களையும் கூடச் சாபத்திற்குள்ளாக்குவதற்கு ஏதுவாக தவறான நிலையில் காணப்படுகிறவர்களாகி விடுவோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருப்பவர்களும், சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்களும், இன்னும் அதிகமதிகமாய் வெளிச்சத்திலும், ஆண்டவரின் அடிச்சுவட்டிலும் நடப்பதற்கு நாடி, யூதாஸ், பேதுரு மற்றும் காய்பாவின் விஷயங்களில் விளங்கும் தீமையின் உதாரணங்கள் என நாம் கண்டவைகளைக் கவனமாக தவிர்த்து விட வேண்டும்.

யூதர்களுக்கு முன்பாக நடத்தப்பட்ட விசாரணை, மூன்று பாகங்களை உடையதாய் இருந்தது, அவை பின்வருமாறு:

(1) (மத) சட்டப்படி பிரதான ஆசாரியனாக இருந்த அன்னாவுக்கு முன்பாக நடத்தப்பட்ட விசாரணையானது, முற்றிலும் அதிகாரப் பூர்வமற்றதாகும். இவன் இயேசுவைக் கட்டுண்டவராக, உரோமர்களின் அதிகாரத்தின்படியான பிரதான ஆசாரியனாகியவனும், ஆலோசனை சங்கத்தின் தலைவனுமாகிய காய்பாவினிடத்திற்கு அனுப்புவித்தான். இந்தக் காய்பாவினுடைய விசாரணை அறையானது அநேகமாக அதே அரண்மனையில், பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்த நடைபாதையின் குறுக்கே காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

(2) காய்பாவிற்கு முன்பு நடந்த தொடக்க விசாரணையானது, வெள்ளிக்கிழமை காலை அன்று இரண்டு அல்லது மூன்று மணிக்குள்ளாக நடந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்கப்படுகின்றது. ஏனெனில், யூதருடைய விசாரணை மன்றம் (அ) ஆலோசனை சங்கத்தாரின் அங்கங்கள், இயேசு கைதுச் செய்யப்பட்ட உடனே, செய்தி அனுப்பப்பட்டு வரவழைக்கப்பட்டனர். விடியும் வேளையில், ஐந்து மணியளவு நடத்தப்படப்போகும் சம்பிரதாயப்படியான கூட்டத்தில், இயேசு குற்றவாளி என நிரூபிக்கப்பட்டவர் என்று கூறத்தக்கதாக எக்குற்றங்களைச் சொல்ல வேண்டும் எனத் தொகுப்பதற்கும், முடிவெடுப்பதற்கும், அவரை விசாரிப்பதற்குமே இந்தத் தொடக்க விசாரணை நடத்தப்பட்டது. யூதர்களின் பிரமாணம்/சட்டப்படி, இரவில் விசாரணை செய்வது தடை செய்யப்பட்டிருந்தது (லூக்கா 22:66-71).

(3) விடியலில் ஆலோசனை சங்கத்தார் முன்பு நடத்தப்பட்ட, சம்பிரதாயப்படியான விசாரணையானது வெறும் ஓர் ஆச்சாரம் (அ) நாடகமேயாகும். இயேசுவைக் கொல்ல வேண்டும் என்ற தீர்மானமானது, அவரைக் கைதுச் செய்வதற்கு வெகுகாலம் முன்னதாகவே அவர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்க, இரண்டு காரணங்களினிமித்தமாக காரியங்கள் துரிதமாக்கப்பட்டது. (a) தங்களால் தொகுக்க மாத்திரமே முடிந்திருந்த பொய்யான குற்றச்சாட்டுகளை எதிர்த்து, இயேசுவுக்காக பொது ஜனங்கள் போராடுவார்கள் என்று பெரிய ஸ்தானங்களில் காணப்பட்ட யூதர்கள் அஞ்சினார்கள். (b) பஸ்கா அண்மையில் இருப்பதினால், அதற்கு முன்னதாக அவர் கொல்லப்பட வேண்டுமென்று விரும்பினார்கள். ஆ! அவர்களுடைய இருதயத்தின் பொல்லாத விருப்பங்களை, அவர்கள் செயல்படுத்த தேவன் அனுமதித்துள்ளார் என்று அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. மேலும், இவ்விதமாக (பஸ்கா) நிழல்களும், தீர்க்கத்தரிசனங்களும் அந்நாளில் நிறைவேறினது.

இதிலும், தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு படிப்பினை உள்ளது. அதென்னவெனில், நாம் நீதியை ஆச்சாரமாக கடைப்பிடிப்பது போதாது. இன்னுமாக தெய்வீகத் திட்டத்தைத் தந்திரமாக வெல்ல முடியாது (அ) அதன் நிறைவேறுதலைத் தடை பண்ணவும் முடியாது என்பதை நாம் முன்கூட்டியே அறிந்து வைத்துக்கொள்வது மாத்திரம் போதாது. பழிவாங்குதலின் நாளிலும், அனைத்தும் வெளியரங்கமாக்கப்படும் நாளிலும்தான், அநேகர் தாங்கள் கனமோ (அ) இலாபமோ இல்லாமல் தேவனுடைய நோக்கங்களுக்காகப் பணி புரிந்துள்ளனர் என்று உணர்ந்துக்கொள்வார்கள். அதாவது, அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, குற்றவாளி எனத் தீர்க்கப்படும் வழிமுறையில் தாங்கள் தேவ நோக்கங்களுக்காக பணி புரிந்துள்ளனர் என்று உணர்ந்துக் கொள்வார்கள். மாபெரும் எதிராளியான சாத்தானுங்கூட தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் எதிராக தன்னால் பண்ணப்பட்ட விஷயங்களானது, தெய்வீக ஞானம் மற்றும் தெய்வீக வல்லமை மற்றும், "மனுஷனுடைய கோபம் தமது மகிமையை விளங்கப்பண்ணும்" படிக்குச் செய்பவர் மூலம் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டது என்று இறுதியில் காண்பான். (சங்கீதம் 76:10). ஆயினும், இதனால் அவனுக்கு எவ்வித பாராட்டோ, ஆசீர்வாதமோ வருவதில்லை.

நீதியின் விஷயத்தை ஆச்சாரமாகக் கடைபிடிப்பதை விட, நாம் அதிகமாய்ச் செய்ய வேண்டும் என்பதே மிக முக்கியமானதாகும். நம்மிடத்தில் நீதியின் ஆவி, அதாவது, நீதியின் மீது அன்பு காணப்பட வேண்டும். அதாவது, தேவனுடைய சித்தம் எது என்று அறிந்து, அதைச் செய்வதற்கான உண்மையான வாஞ்சை காணப்பட வேண்டும். இல்லையேல், யூதர்கள் நீதியுள்ளவரைக் குற்றவாளி எனத் தீர்த்துக் கொலைசெய்து போட்டதுபோன்று, நாமும் நீதியின் ஆச்சாரமான கடைப்பிடிப்புகளினால், அவருடைய "சகோதரரை" குற்றம் தீர்த்து, காயப்படுத்துகிறவர்களாக இருப்போம். தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் அன்பு கொண்டிருப்பது என்பது, கர்த்தருக்கு இருதயம் முழுமையாய் அர்ப்பணம் பண்ணப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. "நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று ஆண்டவர் கூறுவதைக் கேட்க வேண்டும் என விரும்புகிறவர்களுக்கு, அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி அவருடைய சித்தத்திற்கு முழுமையாய்ச் சுயத்தை அர்ப்பணிப்பது, கர்த்தருக்கு முழுமையாய்த் தத்தம் செய்வதே சரியானதும், பாதுகாப்பானதுமான வழியாக இருக்கின்றது (மத்தேயு 25:23).

காலை மூன்று மணி அளவில், நடந்த விசாரணைக்கும், நமது கர்த்தருக்கு எதிரான செல்வாக்கு மிக்க சத்துருக்கள் காலை ஐந்து மணி அளவில் நடந்திட்ட சம்பிரதாய முறையிலான குற்றம் நிரூபிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கும் கூட்டத்திற்கும் இடையிலேயுள்ள நேரத்தில்தான், மூன்று சுவிசேஷகர்களால் பதிவு செய்யப்பட்டபடி, அவர் இரண்டு மணி நேரமளவும் கேலியும், கிண்டலும் செய்யப்பட்டார் (மத்தேயு 26:67, 68; மாற்கு 14:65; லூக்கா 22:63-65). கீழான/தாழ்வான மனமுடையவர்கள் தங்களைக் காட்டிலும் பிரதானமானவர்களை, அவர்களின் இக்கட்டான நேரங்களில் கேலி செய்து மகிழ்ச்சிக் கொள்வார்கள் என்ற உண்மைக்கு உதாரணமாக, "சேவகர்கள் இக்கேலி வேலைகளைச் செய்தார்கள்" என்பது அமைகின்றது. இந்தச் சேவகர்களும், தங்களுடைய எஜமான்களாகக் காணப்படும், பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களின் அதே சிந்தையை/ஆவியை வெளிப்படுத்தினார்கள். ஆனால், இவர்கள் முரட்டுத்தன்மையும், மடமையானவர்களாகவும் (அறிவில்லாமல்) காணப்பட்டப்படியினால் இவர்களுடைய செயல்பாடுகள், முறைகள் கொடூரமாகக் காணப்பட்டது. மாறாக, கிறிஸ்துவின் ஆவியாகிய அன்பின் ஆவியானது, கல்வியறிவு உடையவர்களிடத்திலோ (அ) அறிவில்லாதவர்களிடத்திலோ காணப்படும்போது, அது அன்பின் ஆவியாகவும், சாந்தம், அனுதாபம் மற்றும் இரக்கத்தின் ஆவியாகவே காணப்படுகின்றது. அவர்களுடைய கனிகளினால், அவர்களுடைய ஆவி இன்னது என்று அறியப்படும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9).

*****

# பிலாத்துவின் முன் நல்ல அறிக்கை

## யோவான் 18:28-40; 1 தீமோத்தேயு 6:13

**"நான் இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்." யோவான் 19:4**

யூதேயாவுக்கு உரோம ஆளுநராக இருந்த பிலாத்துவின் கரங்களில், ஜீவன் மற்றும் மரணத்தின் அதிகாரம் இருந்தது. யூத ஆலோசனை சங்கத்தினர், யூதர்களுடைய பிரமாணங்கள் மற்றும் வழக்கத்தின்படி மத வழியில் நாட்டை ஆளுகை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், மரணத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் இருந்தது. தேவதூஷணம் பேசுகிறவர்களை (இந்தக் குற்றத்தையே இயேசு மீது செலுத்தினார்கள்) ஸ்தேவானின் விஷயத்தில் கல்லெறிந்து கொன்றது போல, இயேசுவைக் கொல்வதற்கு ஆலோசனை சங்கத்தாருக்கு அதிகாரம் இருந்தாலும், ஜனங்கள் இது அநீதியான தீர்ப்பு எனக் கோபங்கொள்வார்கள் என்று எண்ணி கல்லெறிதலைச் செயல்படுத்தவில்லை. இயேசு தமது போதகத்தினால் பெரிதளவில் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்று இவர்கள் அறிந்திருந்தபடியால், அவருடைய மரணத்தண்டனையை முடிந்த மட்டும் வெளிப்படையாக எல்லோரும் அறியத்தக்கதாகவும், அவமானப்படுத்தும் விதத்திலும் செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினார்கள். இப்படிச் செய்வதினால் இயேசுவும், அவருடைய சீஷர்களும் பெருத்த ஏமாற்றம் அடைந்து அவமானம் அடைவார்கள்; மேலும் மதம் மற்றும் அரசியலின் நியாயாதிபதிகளால் குற்றவாளி என்று வெளிப்படையாகத் தீர்க்கப்பட்டு, மரணத் தண்டனை அளிக்கப்பட்டவரின் சீஷன் நான் என்று சொல்ல யாரும் விரும்பமாட்டார்கள். இதுவே அவர்களின் நோக்கமாக இருந்தது. இப்படியாக வளர்ந்து வரும் இந்தப் புதிய மதப் போதகத்தை தடைபண்ண எண்ணினார்கள். தடை பண்ணப்படவில்லை எனில், ஜனங்கள் மீதான தங்களுடைய செல்வாக்குப் போய்விடும் என்று எண்ணினார்கள். இவ்விதமாக இந்தப் பொல்லாத செய்கைக்காரர்கள் தங்களையும் அறியாமல், தேவன் முன்னேற்பாடு பண்ணின பல ஒழுங்குகளைச் செய்து முடித்தார்கள் என்றாலும், தங்களுடைய தீய நோக்கத்திற்காகவே இவைகளை முழுமையாய்ச் செய்து முடித்தார்கள்.

நமது கர்த்தர் இயேசு விடியற்காலை ஐந்து முதல் ஆறு மணியளவில், யூதர்களின் ஆலோசனை சங்கத்தாரால் குற்றஞ்சாட்டப்பட்டு, பின்னர் எவ்வளவு வேகமாக முடியுமோ, அந்த அளவிற்கு வேகமாக உரோம போர்ச்சேவகர்கள் இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கத்தக்கதாக, அவரை விரைவாகப் பிலாத்துவின் விசாரணை அறைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். இப்படிச் செய்வதினால் ஜனங்களும் இயேசுவின் விஷயம் தாங்கள் தலையிட முடியாத வண்ணம் கைமீறிப் போய்விட்டது என்று எண்ணுவார்கள் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. பிலாத்து மரணத் தண்டனையை நிறைவேற்றுவதில் தாமதிக்க மாட்டார் என்று யூத அதிகாரிகள் நம்பினார்கள். கொடுமைக்குப் பிலாத்துப் பெயர்ப்பெற்றவராய் இருந்தார். பிலாத்துவைக் குறித்துப் பிலோ என்பவர் இப்படியாக எழுதுகின்றார்: அதாவது "சீரழிக்கும் அவருடைய இயல்பையும், அவருடைய கர்வத்தையும், ஜனங்களை அவமானப்படுத்தும் அவருடைய குணத்தையும், அவருடைய கொடூரங்களையும், விசாரிக்காமல் மற்றும் குற்றந்தீர்க்காமல் ஜனங்களைக் கொலை செய்யும் அவருடைய இயல்பையும், அவருடைய கவலைக்கிடமான தளராத மிருகத்தனத்தையும் வேறு எவரிடமும் பார்க்க முடியாது. அவர் மிகவும் அஞ்சத் தகுந்தவரும், மிகவும் இரக்கமற்றவரும், மிகவும் பிடிவாதமானவருமான மனுஷனாவார்." யூதர்களின் அதிகாரிகள் சில சமயம், பிலாத்துவிடம் இரக்கம் வேண்டினாலும், பயனில்லாமல் போன சம்பவங்கள் உண்டு. ஆகையால் பிலாத்துவிடம் எந்தக் குற்றவாளியைக் கொண்டுவந்தாலும், மரணத்தீர்ப்புக் கொடுக்க அவர் இணங்கிவிடுவார் என்று பிலாத்துவின் இயல்புகளைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டனர்.

குற்றமற்றவரை அழிக்கும்படிக்குத் தாங்கள் கொலை ஆலோசனை செய்கையில், தாங்கள் தீட்டுப்பட்டுப் பஸ்காவைப் புசிக்க தடைவராதபடி பிலாத்துவின் விசாரணை அறைக்குள் பரிசேயர்கள் பிரவேசிக்காத சம்பவத்தை வாசிக்கையில், இவர்களைக் குறித்து நமது கர்த்தர், "நீங்கள் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும்,

அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்று கூறினது நினைவுக்கு வருகின்றது. எவ்வளவு முரண்பாடுள்ளவர்களாகவும், மாயக்காரர்களாகவும் இருந்திருக்கின்றார்கள்! புறஜாதியான பிலாத்துவின் வட்டாரங்களில் சில (பாவத்திற்குரிய அடையாளம்) புளிப்புகள் இருக்கும் என்று பயந்தார்கள், ஆனால் தங்களுக்குள் பிரவேசித்துள்ள உண்மையான பாவத்தின் புளிப்பையும், தங்கள் இருதயங்கள் நன்கு கோபம், கசப்பு, பகை, பொறாமை மற்றும் கலகத்தினால் முழுவதும் நிரம்பியுள்ளதையும் உணராமல் இருந்தார்கள்.

கர்த்தருடைய ஜனங்களுக்கு இதில் எத்துணை பாடங்கள் உள்ளது, ஏனெனில் இந்த இருதய சீர்க்கேடுள்ள சதிகாரர்கள் அவர்களின் நாட்களில் உள்ள வெளிப்புறமான பரிசுத்த ஜனங்கள் ஆவர். இக்காலக்கட்டத்தில் வாழும் நாம், கர்த்தரைச் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை என்றாலும், அவருடைய "சகோதர சகோதரிகளை" அவமானப்படுத்தி, சிலுவையில் அறையும் ஆற்றல் நம்மிடம் உள்ளது; அதாவது, அவருடைய சரீரத்தின் அங்கங்களைச் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்தும் வாய்ப்பு நம்மிடம் உள்ளது. நமது கர்த்தரைச் சிலுவையில் அறைந்திட்ட பரிசேயர் மற்றும் பிரதான ஆசாரியர்களைப் போன்ற வஞ்சிக்கப்பட்ட நிலையில், சிலர் இன்றும் செயல்படுகின்றனர். உண்மைதான் பரிசேயர்கள் தாங்கள் செய்வதை அறியாமல் செய்தார்கள், "நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" என்று பேதுரு குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 3:17). இதைப்போலவே, இன்றும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களை அவமானப்படுத்துகின்றவர்கள், தாங்கள் செய்வதை அறியாமலேயே செய்கின்றனர். இவர்கள் கர்த்தரினால், குற்றவாளி என்று தீர்க்கப்படுவதற்கு ஏதுவாய் இருக்கின்றனர், அதாவது, "இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்...நலமாயிருக்கும்" (லூக்கா 17:2). ஆகவே ஜீவஊற்று புறப்படும் இருதயத்தைக் கவனத்துடன் நாம் ஒவ்வொருவரும் காத்துக் கொள்வோமாக.

பரிசேயரின் இருதயங்கள் சரியான நிலையில் இருந்திருந்தால், நீதி மற்றும் சத்தியத்தின் மீதான அன்பில் நிறைந்திருந்தால், உண்மையுள்ளவைகளையும், ஒழுக்கமுள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும், கற்புள்ளவைகளையும், அன்புள்ளவைகளையும், நற்கீர்த்தியுள்ளவைகளையும், புண்ணியம் உள்ளவைகளையும் உணர்ந்து, ஏற்றுக் கொண்டிருந்தால், தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரைப் புறக்கணித்துச் சிலுவையில் அறையும் தவறைச் செய்திருக்கமாட்டார்கள். இதைப்போல சகோதர சகோதரிகளுக்கான அன்பின் ஆவி யாரிடம் இருக்கின்றதோ, அவர்கள் துன்பம் கொடுக்கும் ஸ்தானத்தை எடுப்பதில்லை; இத்தகையவர்கள் மாத்திரமே சரியான விதத்தில், நிஜமான பஸ்காவைப் புசிக்க முடியும்.

பஸ்கா காலங்களில் யூதர்கள் கைக்கொள்ளும் விநோதமான வழக்கத்தை அறிந்திருந்த உரோம ஆளுநர், விசாரணை அறைக்கு வெளியே தனது ஆசனத்தைக் கொண்டுவந்து அமர்ந்தார். இயேசு விசாரணைக்கு முன்பு நிறுத்தப்பட்டார். பின்புறமாக நின்று அவர் மேலுள்ள குற்றச்சாட்டை யூதர்கள் பிலாத்துவுக்கு அறிவித்தார்கள். சிலுவையில் அறையப்படுவதற்குப் பாத்திரமாக, குற்றவாளியாக இயேசுவை முன் நிறுத்தினாலே போதும், பிலாத்துத் தீர்ப்புக் கொடுத்துவிடுவார் என்று எண்ணினார்கள். குற்றச்சாட்டுகள் சொல்வது கூட அவசியப்படாது என்றே எண்ணினார்கள். ஆதலால்தான், "இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கமாட்டோம்" என்று பதிலளித்தார்கள் (யோவான் 18:30). பிலாத்து, பரிசேயர்களை மதிப்பதில்லை; ஆகையால், "இவன் மேல் என்ன குற்றம் சாட்டுகின்றீர்கள்" என்று பரிசேயர்களிடம் அவர் கேட்ட கேள்வியானது இயேசு, பரிசேயர்களுக்கு எதிராக குற்றம் சாட்ட, இயேசுவுக்குப் வாய்ப்புக் கொடுக்கும்படியாகத்தான் கேட்டார் என்று சிலர் கருதுகின்றனர். பல அனுபவங்கள் பிலாத்துவுக்கு இருந்தபடியால், ஒருவருடைய குணங்களைப் பார்வையிலேயே, தோற்றத்திலேயே கண்டுபிடித்து விடுவார். அவரால் நமது கர்த்தரின் தோற்றத்தில் எவ்விதமான குற்றவாளிக்குரிய அம்சம் இல்லை என்றும், அவருக்கு எதிராக குற்றம் சாட்டுகிறவர்களிடம்தான் குற்றவாளிக்குரிய அம்சம் அதிகம் இருக்கின்றது என்றும் காணமுடிந்தது.

ஆசாரியர்களும், பரிசேயர்களும் எதிர்ப்பார்க்காத வண்ணம் பிலாத்து, இயேசுவை நீங்களே நியாயம் விசாரியுங்கள் என்று திரும்ப ஒப்புக் கொடுத்துவிட்டார். "இது ஏதோ மத ரீதியான பிரச்சனை, இதில் நான் செய்ய ஒன்றுமில்லை; நீங்கள் இவரைக் கூட்டிக்கொண்டுபோய் உங்களுடைய பிரமாணங்கள் மற்றும் வழக்கத்தின்படி அவரைச் சிறையில் அடைக்கவோ அல்லது

அடிக்கவோ அல்லது உங்களுடைய பிரமாணத்தின்படி சரியான தண்டனை வேறு ஏதாகிலும் கொடுங்கள்" என்றவிதத்தில் பிலாத்துச் சொல்லிவிட்டார். ஆனால் நமது கர்த்தரை மரணத்திற்குள்ளாக்கும் வாஞ்சையினால் தங்களுடைய உண்மையான இருதய நிலையை வெளிப்படுத்தும் விதமாக, "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய…அதிகாரமில்லை" என்று கூறினார்கள் (யோவான் 18:31).

முரட்டுத்தனமானவராகவும், கொடூரமானவராகவும், இரக்கமற்றவராகவும் பிலாத்து இருந்தாலும், சூழ்நிலை என்ன என்று அதாவது, குற்றவாளிகள் குற்றமற்றவரைக் கொல்லப் பார்க்கின்றார்கள் என்று புரிந்துக் கொண்டார். தனிமையில் யோசிக்கவும், இயேசு தம்மைப் பாதுகாப்பதற்காக என்ன சொல்ல போகிறார் என்பதைக் கேட்பதற்கும் பிலாத்து யூதர்களிடமிருந்து, இயேசுவைத் தனித்து விசாரணை அறைக்குள் கொண்டு வந்தார். பிலாத்துவுக்குத் தனது ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில், சமாதானத்தைத் தக்க வைக்க வேண்டியது முதல் கடமையாக இருப்பினும், ஜீவன் மற்றும் மரணம் கொடுக்கும் அதிகாரம் அவர் கரத்தில் இருப்பினும், அவர் யூதர்களின் ஆலோசனை சங்கம் வைக்கும் மனுவைப் புறக்கணிக்கும் அளவுக்கு, நமது கர்த்தரின் தோற்றத்தில் ஏதோ ஒரு தாக்கம் பிலாத்துவிற்கு ஏற்பட்டிருக்க வேண்டும். தனது ஆளுகையின் வட்டாரத்தில் சமாதானம் நிலவ வேண்டுமெனில், அவ்விடத்தின் பிரதான மனுஷர்களோடு இணங்கி செயல்பட வேண்டும். அவ்விடத்தின் பிரதான மனுஷர்களோ, சமாதானத்தைக் குலைக்கும்படியாக ஒருவரின் மரணத்தை விரும்புகின்றனர். பிலாத்து எவ்விதத்திலும் கவனமாய்ச் செயல்பட வேண்டிய முக்கியமான ஸ்தானத்தில் காணப்பட்டார். அவர் உரோம அரசாங்கத்தைப் பிரியப்படுத்த வேண்டும், உள்ளூர் சார்ந்த அதிகாரிகளிடம் ஏற்படும் பிரச்சனைகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் இப்பொழுது இந்த உள்ளூர் அதிகாரிகள் தங்களுடைய தீமையான திட்டம் தடைப்பட்டால், பெரிய அளவில் பிரச்சனையை உருவாக்க ஆயத்தமாயிருந்தார்கள். இதே ஜனங்கள் ஆறு வருடங்களுக்குப் பின்பு பிலாத்துவை நீக்கும்படிக்கு, உரோம சக்கரவர்த்திக்கு அநேக குற்றச்சாட்டுகள் அனுப்பினார்கள்.

பிலாத்து இயேசுவுடன் தனித்து இருக்கும்போது, நீ யூதருடைய இராஜாவா? என்று கேள்வி கேட்டார். யூதர்கள் உண்மையில் இம்மாதிரியான குற்றச்சாட்டை இயேசுவுக்கு எதிராக ஏற்படுத்தவில்லை. அவர்கள் கலிலேயனாகிய இயேசுவை, யூதருடைய இராஜா என்று சொல்வதற்கு விருப்பம் கொள்ளவில்லை. மாறாக இயேசுவைத் தீமை செய்கிறவர் என்றும், கலகவாதி என்றும், தேசத்தின் சமாதானத்திற்கு அவர் மரணம் அவசியம் என்றும்தான் குற்றம் சாட்டினார்கள். இயேசு சில நாட்களுக்கு முன்பு கழுதையின் மீது ஏற்றப்பட்டு வந்ததையும், ஜனங்கள் அவரைத் தாவீதின் குமாரன் என்று வாழ்த்தியதையும் குறித்தும் பிலாத்துக் கேள்விபட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. நீராக என்னைக் குறித்து இப்படிச் சொல்லுகின்றீரா அல்லது மற்றவர்கள் கூறி இதைக் கேட்கின்றீரா என்று இயேசு பிலாத்துவிடம் கேட்டார். "இந்த விஷயத்தைக் குறித்த சத்தியம் என்னவென்று அறிந்துக் கொள்ளும் விருப்பத்தில் கேட்கின்றீரோ அல்லது கேள்விப்பட்டதை வெறுமனே விசாரிக்கின்றீரோ?" என்ற விதத்தில் இயேசுவின் கேள்வி இருந்தது. அதற்கு நான் யூதனோ? என்று பிலாத்து, பதில் கேள்வி கேட்டார். அதாவது, "உங்களுடைய யூத நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் குறித்து எனக்கு என்ன தெரியும்? நான் ஓர் உரோம ஆளுநர். நீர் இராஜாவானல் உம்முடைய சொந்த தேசத்தாரும், பிரதிநிதிகளுமே உம்மை என்னிடத்தில் ஏன் ஒப்புக் கொடுத்துள்ளனர். நீர் என்ன செய்தீர்? நீர் இராஜாவானால், என்ன காரியம் உம்முடைய பிரஜைகளை உமக்கு எதிராக திருப்பிற்று? நீர் சாந்தமாகவும், பணிவாகவும், தாழ்மையாகவும் உம்மைத் தற்காத்துக் கொள்ளாமலும் இருக்கின்றீர். உம்மால் உரோம இராஜ்யத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட போவதில்லை. உம்முடைய ஜனங்கள் உமக்கு எதிராக கூக்குரலிடுகின்றார்கள். யூதருடைய இராஜாவே, இந்த விநோதமான சூழ்நிலையை எனக்கு விவரியும்" என்ற விதத்தில் கேள்விக் கேட்டார்.

இயேசு தமது இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்றும், இல்லையேல் தம்முடைய ஊழியர்கள் தமக்காக போராடியிருப்பார்கள் என்றும், தற்போது நடக்கும் விஷயங்கள் சம்பவித்திருக்காது என்றும், தாம் சத்துருக்கள் கையில் விடப்பட்டிருக்க மாட்டார் என்றும், தம்முடைய இராஜ்யம் இன்னும் வரவில்லை என்றும், இயேசு விளக்கினார். இப்படிப்பட்ட மாபெரும் இராஜா இவ்வளவு எளிமையான சூழ்நிலையில் காணப்படுகின்றார் என்ற அனுதாபத்தினாலும், அதிர்ச்சியினாலும், நீர் உம்மை இராஜா என்று கூறுகின்றீரோ என்று பிலாத்துக் கேட்டார். அதற்கு இயேசு நீர் கூறினபடியே நான் இராஜாதான் என்றார். "நீர் கூறுவது சரியே, நான் இராஜாதான்" என்ற விதத்தில் இயேசு பதிலளித்தார். "சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்,

இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; "சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று இயேசு கூறினார்.

இப்படியாகப் பிலாத்துவுக்கு முன்பு இயேசு நல்ல அறிக்கையிட்டார் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 தீமோத்தேயு 6:13). இயேசு தமது இராஜஉரிமையையும், தெய்வீக அதிகாரத்தையும் அறிக்கையிட்டார். நமது கர்த்தர், தாம் ஒரு இராஜா என்று கூறினதைப் பிலாத்து நம்பவில்லை என்றும், இயேசுவை மதவெறி கொண்டவராகப் பார்த்தார் என்றும் நாம் எண்ணி விடக்கூடாது. இயேசுவைக் குறித்துக் கேள்விபட்டவர்களில் சிலர் மாத்திரமே, அவர் தம்மை இராஜா என்று கூறின வார்த்தையின் உண்மையை அறிந்திருந்தனர். பெயர்க்கிறிஸ்தவ மண்டலங்களிலும் கூட, சிலர் மாத்திரமே நமது கர்த்தருக்குரிய இராஜ ஸ்தானத்தை உணர்ந்துள்ளனர்! இயேசுவைப் பாடுள்ள மனுஷனாக அடையாளம் கண்டு கொண்ட அனைவரும் மற்றும் இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று உணர்ந்துக் கொண்ட சிலரும், இயேசு மனுஷனை மாத்திரம் அல்ல, முதல் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட சாம்ராஜ்யத்தையும் மீட்டுக் கொண்டார் என்பதைப் புரிந்துக் கொள்ளவில்லை. நமது கர்த்தரை ஆசாரியராகக் காண்கின்ற அநேகர், அவர் ஒரு இராஜா என்பதைக் காணத் தவறி விடுகின்றனர்; மேலும், ஆயிர வருட அரசாட்சியில், மெல்கிசெதேக்கின் முறைமையின் படியான ஆசாரியராகச் சிங்காசனத்தில், வீற்றிருப்பார் என்பதையும் காண தவறிவிடுகின்றனர். மணவாட்டியாகிய சபை இயேசுவோடு, அவருடைய ஆசாரிய மற்றும் இராஜ பணியிலும்/ஸ்தானத்திலும் பங்கடைவார்கள்.

அவருடைய ஆசாரிய பணி என்பது இரக்கம், மன்னிப்பு மற்றும் கிருபை பாராட்டுவதைக் குறிக்கின்றது. அவருடைய இராஜ பணியும், உலகத்தின் இரட்சிப்புக்கு இன்றியமையாதது. மனுஷர்கள் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டு, அவர்கள் நித்திய ஜீவனைப் பெற தகுதியடையும் பொருட்டு, இருப்புக் கோல் ஆட்சியினால் ஆளப்பட வேண்டும். தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக் கொண்டவருக்கே, இவ்வேலைகள் அனைத்தும் உரியதாகும். நமது கர்த்தருடைய உவமையில் பெரும்பாலானவைகள்,பல்வேறு நிலைகளிலுள்ள இராஜ்யத்தைப் பற்றியதாகும்; அதாவது இராஜ்யம் முதலாவது கருவாக இருந்து, படிப்படியாக வல்லமையிலும் மற்றும் அதிகாரத்திலும் உயர்ந்து, தீமையை அப்புறப்படுத்தி, பின்னர் என்றென்றும் நிலைத்திருக்கும் நீதியானது இந்த இராஜ்யத்தில் கொண்டுவரப்படுவது பற்றியதாகும்.

இந்த இராஜ்யம் சத்தியம், நீதி மற்றும் அன்பின் இராஜ்யமாக விளங்கி, அதன் பிரஜைகளின் நன்மைக்கு ஏதுவாக செயல்படும். சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுப்பதின் மூலம் அந்த இராஜ்யத்திற்கு அஸ்திபாரம் போடுவதே, முதலாம் வருகையின் போது நமது கர்த்தரின் ஊழியமாக இருந்தது; அதாவது தேவன் அன்பும், நீதியும் உள்ளவராக இருக்கின்றார் என்பதும், யாரெல்லாம் சத்தியத்தையும், நீதியையும் விரும்புகின்றார்களோ, அவர்களைத் தம்முடன் மீண்டும் சேர்த்துக் கொள்ள விருப்பம் உள்ளவராக இருக்கின்றார் என்பதுமே அந்தச் சத்தியமாக இருந்தது. நமது கர்த்தர் இந்தச் சத்தியத்திற்கு உண்மையாய் இருந்தபடியால், எதிராளியானவனினால் குருடாக்கப்பட்டவர்களிடமிருந்து அவருக்கு எதிர்ப்பு வந்தது. ஆகவே நான் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க வந்தேன் என்ற அறிக்கையானது, அவரது ஊழியத்தின் சுருக்கமாக இருந்தது. இந்தச் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க அவர் ஜீவனை இழக்க வேண்டியிருந்தது. மேலும் சத்தியத்திற்காக அவர் தமது ஜீவனைக் கொடுத்தது என்பது, மீட்பின் கிரயமாக இருந்தது. இதைப்போல் அனைத்துக் கர்த்தருடைய பின்னடியார்களும் சத்தியத்திற்கு அதாவது தேவனுடைய குணம் மற்றும் திட்டம் தொடர்பான சத்தியத்திற்கு, அதாவது உலகத்தின் மீட்பின் விஷயத்தில் முதலாம் வருகையின்போது நிறைவேறின அந்தத் திட்டத்தின் அம்சங்களைக் குறித்ததான சத்தியத்திற்கும், பாவம் மற்றும் அழிவிலிருந்து உலகம் மீட்கப்படுவதன் மூலம், இரண்டாம் வருகையின் போது நிறைவேறப் போகிற அந்தத் திட்டத்தின் அம்சங்களைக் குறித்ததான சத்தியத்திற்கும் சாட்சிக் கொடுக்க வேண்டும். இப்படியாகச் சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுக்க வேண்டுமெனில், இயேசுவின் அனைத்து உண்மையான பின்னடியார்களும் தங்களுடைய ஜீவனை, கிறிஸ்து இயேசுவின் மூலம் தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதான பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இராஜ்யத்தில் ஜீவாதிபதியோடு உடன் சுதந்தரர்கள் ஆக விரும்பும் ஒவ்வொருவரும், சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுக்க வேண்டும். அதாவது இராஜ்யம் மற்றும் அதன் அஸ்திபாரம் மற்றும் முடிவில் அதன் மகிமையின் அம்சங்களைக் குறித்து, நாம் நல்ல அறிக்கை பண்ண வேண்டும்.

இப்படியான சுருக்கமான பேச்சு, பிலாத்துவுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. மத ரீதியிலான விவாதத்திற்குள் பிரவேசிக்க பிலாத்துவுக்கு விருப்பமில்லை. ஏனெனில், பேச்சு தொடர்ந்தால், தன்னுடைய கடந்த கால வாழ்க்கையின் குற்றங்கள் நினைவிற்கு வந்துவிடும் என்பதாலே, பேச்சு வார்த்தைகளைச் சடுதியாக நிறுத்தி, "சத்தியமாவது என்ன?" என்று கேட்டார்; அதாவது, "யார் உண்மையாய் இருக்கின்றார்கள்? எங்கு உண்மையான நீதி, உண்மையான சத்தியம், உண்மையான நேர்மை காணப்படுகின்றது?" என்ற விதத்தில் கேள்வி கேட்டார். பதிலை எதிர்ப்பார்க்காமலேயே பிலாத்து, இயேசுவை விசாரணை அறையிலேயே விட்டுவிட்டு, ஆலோசனை சங்கத்தாரையும், அவர்களுடைய திரளான ஊழியர்களையும் பார்க்க புறப்பட்டு வெளியேறினார்.

தான் அவரிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை என்ற தனது முடிவைப் பிலாத்து அறிக்கையிட்டார். தங்களுடைய இரை (இயேசு) தங்களைவிட்டுப் போய்விடுமோ என்று பயந்த யூதர்கள், யோசித்துக் குற்றச்சாட்டுகளை உருவாக்கினார்கள். இயேசுவின் மேல் தாங்கள் தேவதூஷணம் என்று சாட்டின குற்றத்தை இப்பொழுது கூறவில்லை. ஏனெனில் இக்குற்றச்சாட்டு, உரோம ஆளுநரின் கண்களுக்கு முன்பாக ஒரு குற்றமாக இருப்பதில்லை. மாறாக மூன்று குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்கள். அதாவது, 1) அப்போது இருக்கும் ஒழுங்குகளுக்கு எதிராக ஜனங்களைக் கலகம் செய்யத் தூண்டினார், 2) அந்நிய அதிகாரிகளுக்கு ஜனங்கள் வரிக் கொடுப்பது சரியல்ல என்று போதித்தார் மற்றும் 3) தன்னை இராஜாவாக அறிவித்தார் என்பவைகளே ஆகும் (லூக்கா 23:2).

பிலாத்து, இயேசு கலிலேயாவைச் சார்ந்தவர் என்று அறிந்த மாத்திரத்தில், இவ்விஷயத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளும் பொருட்டு, கலிலேயா பகுதிக்குப் பொறுப்பேற்றுள்ள ஏரோதிடம் இவ்விஷயத்தை விசாரிக்கும்படி கூறினார். ஏரோது அப்போது எருசலேமுக்கு வந்திருந்தார். இந்த ஏரோதுதான், யோவான் ஸ்நானகனைக் கொன்று போட்டார். (லூக்கா 23:8-ஆம் வசனத்தின்படி) இயேசுவைச் சந்திப்பதில் ஏரோது மிகவும் மகிழ்ச்சியடைந்தார் என்று வாசிக்கின்றோம். ஏரோது, இயேசுவைக் குறித்து அநேக விஷயங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியால், இயேசு தனக்கும் ஏதாகிலும் அற்புதம் செய்து காண்பிப்பார் என்று எண்ணினார். நமது கர்த்தரிடம் ஏரோது அநேக கேள்விகளைக் கேட்டார். ஆனால் எதற்கும் இயேசு பதில் பேசவில்லை. பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் இயேசுவின் மீது அநேக குற்றச்சாட்டுகளைக் குவித்தார்கள். அதற்கு இயேசு எதையும் மறுக்காமல், பதில் கூறாமல் இருந்தபடியால், இன்னும் நிரூபிக்க ஆதாரம் தேவையில்லையென்று தங்களுக்குச் சாதகமாகக் கூறினார்கள்.

நமது கர்த்தர் நடந்துக் கொண்ட விதத்தினாலும், தான் எதிர்ப்பார்த்த சந்தோஷம் கிடைக்காததினால் ஏரோது சினம் அடைந்தார், ஏமாற்றமும் அடைந்தார் என்பதிலும் ஐயமில்லை. பின்னர் ஏரோதும், அவர் சேவகர்களும், மீட்பர் தம்மை இராஜா என்று கூறின விஷயத்தைப் பரியாசம் பண்ணி, களிக்கூர்ந்தார்கள்.

பிலாத்துக் கொடுத்த மரியாதைக்காகவும், யோவான் ஸ்நானனைக் கொன்று போட்டதினிமித்தம் ஏற்பட்ட குற்றமனசாட்சியின் காரணத்திற்காகவும், ஏரோது நமது கர்த்தரைப் பிலாத்துவிடமே அனுப்பிவிட்டார். நமது கர்த்தர், பிலாத்துவின் நியாயவிசாரணை அறைக்குக் கொண்டு வரப்பட்ட தருணமானது, யூதர்களை இறுதியாக சாந்தப்படுத்தும் தருணமாகவும், நாட்டின் சமாதானத்தைத் தக்க வைக்கும் தருணமாகவும், மேலும் தன்னால் குற்றமற்றவர் என்று கண்டுபிடிக்கப்பட்ட ஒருவரை விடுவிக்க வேண்டிய தருணமாகவும் பிலாத்துவுக்கு இருந்தது. மேலும் இயேசுவிடம் எவ்விதமான குற்றத்தை, தான் காணாதிருந்தும் அவரைக் குற்றச்சாட்டுகள் நிமித்தமாக, சவுக்கினால் அடிக்க பிலாத்துக் கட்டளையிட்டார். சவுக்கடியினால் உண்டாகும் காயத்தினாலும், இழிவினாலும் குற்றச்சாட்டுகிறவர்களிடம் காணப்பட்ட கசப்பின் ஆவி திருப்திப்பட்டு இயேசுவை விடுவிக்க சம்மதித்துவிடும் என்று பிலாத்து உறுதியாக எதிர்ப்பார்த்தார். இயேசு உரோம சேவகர்களால் உள் அறையில் சவுக்கினால் அடிக்கப்பட்டு, இராஜ வஸ்திரமும், முள்முடியும் பிலாத்துவின் கட்டளையின் பேரில் தரிபிக்கப்பட்டார். இப்படிச் செய்வது இரக்கமற்ற போர்ச்சேவகர்களுக்குக் குதூகலமாகவும், இயேசுவுக்கு மிகவும் அவமானமாகவும் இருக்கும்; மேலும் இப்படிச் செய்வதினால் குற்றம் சுமத்தி, துன்பப்படுத்துபவர்களுக்குள் அனுதாபம் எழும்பவில்லை என்றாலும், திருப்தியாகிலும் அடைவார்கள் என்றே பிலாத்து எதிர்ப்பார்த்தார்.

இரவு நேரத்தில் அலைக்களிக்கப்பட்ட பெலவீனத்தினாலும், சவுக்கடியினாலும் பெலவீனப்பட்டுப் பரிதாப தோற்றத்தில் காணப்பட்ட இயேசுவை, பிலாத்து வெளியே கொண்டு வந்தார். முள்முடியுடனும், இரத்தம் தோய்ந்த இரத்தாம்பர வஸ்திரத்துடன் இயேசு நின்ற காட்சி அனுதாபத்திற்குரியதாக இருப்பினும், பரிபூரண மனிதனுக்குரிய உயரிய அம்சங்கள் இன்னும் இயேசுவிடம் காணப்பட்டதினாலேயே பல நூற்றாண்டுகளாக எதிரொலிக்கும், **"இதோ இந்த மனுஷன்"** என்ற வார்த்தைகளைப் பிலாத்துக் கூறினார். (யோவான் 19:5). நமது கர்த்தரின் தோற்றத்தினால் பிலாத்துக் கவரப்பட்டார். இப்படியாக ஒரு பிரமாண்டமான மனிதனை அவர் ஒருபோதும் கண்டதில்லை. அவரை யாரும் இராஜாவாக்கிவிடும் தோற்றம் அவருக்கு இருந்தது. இந்த விதமான எண்ணம்/தாக்கம், குற்றம் சாட்டுகிறவர்களிடமும் ஏற்படும் என்று பிலாத்து எதிர்ப்பார்த்தார். ஆனால் பிலாத்து எதிர்ப்பார்த்தது தவறு; கலகம் இன்னும் பெருகினது; சிலுவையில் அவரை அறையும்! சிலுவையில் அவரை அறையும்! என்று சத்தங்கள் அதிகம் எழும்பின. இதற்கிடையில் பிலாத்துவின் மனைவி தனக்கு வந்த சொப்பனத்தினிமித்தம், அந்த நீதிமானை எதுவும் செய்யாதீர்கள் என்ற ஆலோசனையைச் சொல்லி அனுப்பினாள் (மத்தேயு 27:19).

சிலுவையில் அறைவது உங்கள் நியாயப்பிரமாணமாக இருந்தால், நீங்களே அவரைக் கொண்டு போய்ச் சிலுவையில் அறையுங்கள் என்று பிலாத்து உடனடியாக யூதர்களிடம் கூறினார். உரோம ஆளுநர் இதில் தலையிட விரும்பாமல், விலகும் விதமாக இப்படிச் சொன்னதால், பரிசேயர்கள் தடுமாறினார்கள். அவர்கள் உரோம ஆளுநர் மற்றும் போர்ச்சேவகரின் கரங்களினால்தான் இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். ஏனெனில் இயேசுவின் நண்பர்களும், அவரால் சொஸ்தமாக்கப்பட்டு மற்றும் போதிக்கப்பட்டுள்ள திரளான ஜனங்களும் இயேசுவுக்கு உதவத்துணிந்து தங்களை மேற்கொண்டு விடுவார்கள் எனக் கருதினார்கள். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினபடியால், அவர் நியாயப்பிரமாணத்தின்படி சாக வேண்டும் என்று பிலாத்துவிடம் கூறினார்கள். ஆனால் ஒருவர் தன்னைத் தேவனுடைய குமாரன் என்று கூறினால், அதற்கு நியாயப்பிரமாணம் மரணம் கொடுக்க வேண்டும் என்று கூறவில்லை. நமது கர்த்தர் தம்மைப் பிதா என்று கூறியிருந்தால், அது தேவ தூஷணமாய் இருந்திருக்கும்; அவர் மரணத்திற்குப் பாத்திரமாகவும் இருந்திருப்பார். ஆனால் இயேசு தம்மை, தேவனுடைய குமாரன் என்று கூறினதில் எந்தத் தேவதூஷணமும் இல்லை. ஆனால் தங்களுடைய பிரயாசம் நிறைவேற வேண்டும் என்பதினால் நியாயப்பிரமாணத்தைத் திரித்தும் கூறிவிட்டார்கள்.

இதைக் கேட்ட மாத்திரத்தில், பிலாத்து இன்னும் எச்சரிப்பானார். இப்படிப்பட்ட தோற்றத்தை உடைய இயேசு, தேவனுடன் தமக்கு உறவு உள்ளது என்று கூறும்போது, பிலாத்துவைப் பயமடைய செய்தது. நமது கர்த்தரை விடுவிக்கும்படி, பிலாத்து இன்னும் வகை தேடினார். கடைசியில், "இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டு," கூறிப் பிலாத்துவை மிரட்டினார்கள் (யோவான் 19:12). பிலாத்து ஒருவேளை தங்களுடைய திட்டங்களைத் தடைபண்ணி, இயேசுவைச் சிலுவையில் அறையும் தங்களுடைய கோரிக்கையை மறுதலித்தால், சீசருக்கும், அவருடைய சாம்ராஜ்யத்துக்கும் பிலாத்து எதிரி என்று இராயனுக்கு அறிவிப்போம் என்றார்கள். இதற்குப் பிலாத்துவினால் ஒன்றும் சொல்ல முடியாமல், திரளான ஜனங்களுக்கு முன்பாக, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி கையைத் தண்ணீரினால் கழுவினார். மேலும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று யூதர்கள் கூக்குரலிட்டபோது, பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்.

பிலாத்துவை நாம் குற்றஞ்சாட்ட முடியாது. அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் ஊழியனாக இருந்து, தனது கீழ் உள்ள ஜனங்களிடம் சமாதானத்தைக் காத்துக் கொள்ளும்படி தன்னால் முடிந்த நியாயமான விஷயங்களைச் செய்தார். ஒருவேளை முழுமையாக வெளிச்சமூட்டப்பட்டு, முழுமையாக அர்ப்பணித்த நிலையில் உள்ள பரிசுத்தவான், பிலாத்துவின் ஸ்தானத்தில் இருந்தால், இயேசுவை விடுவிக்கும் விஷயத்தில், பிலாத்துச் செய்ததைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்ய எதிர்ப்பார்க்கப்பட்டிருந்திருக்கும். நமது கர்த்தர் பிலாத்துவைக் குற்றஞ்சாட்டவில்லை. யூதர்களே இதற்குப் பொறுப்பானவர்கள். இதற்கான தண்டனை யூதர்கள் மேலும், அவர்களுடைய பிள்ளைகள் மேலும் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இருக்கின்றது. அவர்களின் துக்க பாத்திரம் இன்னும் முழுமையாக நிரம்பி முடியவில்லை. வரவிருக்கிற மகா உபத்திரவக் காலத்தில், "யாக்கோபின் இக்கட்டு காலம்" என்பது மிகவும் முக்கியமானதாகும். அவர்களுடைய இரட்சிப்பும்,

பெரு மூச்சுவிடுகிற சர்வ சிருஷ்டிப்பின் இரட்சிப்பும் அருகாமையில் இருப்பதினால், அவர்கள் சார்பில் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்ற வசனத்தின் கருத்து மற்றும் சம்பவம் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும் (சகரியா 12:10).

*****

# அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்

## யோவான் 19:17-30

***"என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன்."* கலாத்தியர் 2:20**

முற்காலங்களில் சிலுவையில் அறையப்படும் காரியமானது, குற்றவாளிகளிலேயே மிகவும் வெறுக்கத்தக்கவர்களை மரணமடையச் செய்வதற்கான கொடூரமான முறையாகும். இந்தத் தண்டனை முறையின் கடுமையான வீரியத்திற்கான காரணம், கொடூரமான உணர்வுகளைத் தணிப்பதற்காக/திருப்திச் செய்யப்படுவதற்காக அல்லாமல் தீமை செய்கிறவர்களை அச்சமூட்டுவதற்காகவேயாகும். இம்மரண முறையைக்குறித்துப் பரார் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:

"சிலுவையில் அறையப்படுவதினால் உண்டாகும் மரணத்தோடு சகலவிதமான வலிகளும் காணப்படுகின்றது. மேலும், இம்மரணத்தோடுகூடக் கடுமையான தலைசுற்றலும், தாகம், தூக்கமின்மை, உணவின்றி வலுவிழந்துபோதல், தசைகளில் ஏற்படும் சுளுக்கு, அவமானம், சித்திரவதைகள் தொடர்ந்து நீடிக்கும் நிலை, பயம், ஆற்றப்படாத புண்கள், சாவைக்கொண்டு வரும் நிலைகளும் காணப்படும். இன்னுமாக இவைகள் அனைத்தும், அம்மனிதனுடைய சுயநினைவை இழக்கச்செய்யும் அளவுக்கும், சுயநினைவு இழக்கும் கட்டம் வரையிலும் உச்சக்கட்ட வீரியத்தில் காணப்படும். இப்படிப்பட்ட ஒரு மரணத்திற்கே கிறிஸ்துவும் விதிக்கப்பட்டார்."

பொறாமையும், கொலைவெறியும் கொண்டிருந்த பிரதான ஆசாரியர்களும், யூதமார்க்கத்தின் வல்லுநர்களுமாகிய இவர்களின் மாய்மாலத்தையும், முரண்பாடுகளையும் பயமின்றி பகிரங்கப்படுத்தினவரும், பொது ஜனங்கள் மத்தியில் துரிதமாய்த் தாக்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறவருமான மாபெரும் போதகர் (இயேசு) மேற்கூறப்பட்ட இப்படியானதொரு வெளிப்படையான கண்டனம் பெறவேண்டும் என்றே விரும்பினார்கள். தேவதூஷணம் பேசியதற்காக அவரை அவர்கள் கல்லெறிந்து கொல்ல முடியும். ஆனால், அப்படிச் செய்யப்படும்போது, அநேகருடைய கண்களுக்கு அவர் இரத்தசாட்சி மரணம் மரித்தார் என்பதுபோல் தோன்றிவிடும். ஆனால், அவர் ஆலோசனை சங்கத்தாரால் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டு, உலகத்திலேயே வல்லமையில் உயர்ந்த நிலையில் காணப்படும் அரசியல் சக்தியால் அவர் மரணத் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டால், அது இயேசுவுக்கும் அவருடைய போதனைகளுக்கும், அவருடைய பின்னடியார்களுக்கும் என்றென்றும் பெரும் பழியை/அவமதிப்பைச் சுமத்துவதாக இருக்கும் என்று எண்ணினார்கள். ஆகவே, இயேசுவை மரணத்தீர்ப்பிற்கு ஒப்புக்கொடுப்பதற்கெனக் கையெழுத்து இடும்படி பிலாத்துவை இறுதியில் சம்மதிக்க வைத்தபோது, அவர்களுடைய பொல்லாத இருதயங்கள் எத்துணை ஆனந்தம் அடைந்திருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது.

மாற்கினுடைய பதிவின்படி, (மாற்கு 15:25) மரணப் பத்திரமானது காலையில் சுமார் 9 மணியளவில் பிலாத்துவினால் கையெழுத்திடப்பட்டது என நாம் பார்க்கின்றோம் - அதாவது இயேசுவின் மேல் மேற்கொண்ட விசாரணைகளும், இயேசுவை அவருடைய சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பதற்கெனப் பிலாத்து மேற்கொண்ட பல்வேறு பிரயாசங்களும் மூன்று மணி நேரத்தை எடுத்துக்கொண்டது. தங்கள் சிலுவைகளைச் சுமந்து செல்லும் இரண்டு கள்வர்கள் மற்றும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படும் நிலையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பரபாசினிடத்தில் இயேசு தமது சிலுவையைச் சுமந்து வந்ததுமாகிய ஊர்வலம் உடனடியாகப் புறப்பட்டது. குற்றவாளிகள் தாங்கள் சித்திரவதைப்படுவதற்குப் பயன்படப்போகிற ஆயுதங்களைத் தாங்களே சுமந்து செல்லப்படுவது பழங்காலத்தில் நிலவிய வழக்கமாகும். இன்றைய நவீன ஓவியங்களில் பொதுவாகக் காட்டப்படுவதுபோன்று, சிலுவைகள் அவ்வளவு உயரமானவைகளாகவும், மிகவும் பாரமானவைகளாகவும் இருந்ததில்லை. மாறாக, சிலுவையில் அறையப்படுபவர்களின் பாதங்கள், நிலத்திலிருந்து பன்னிரண்டு முதல் பதினெட்டு இஞ்ச் அளவு மேலே காணப்பட்டது என நிரூபணங்கள் உள்ளன. மேலும், இந்தச் சிலுவைகள் சிறிய உயரம் கொண்டவைகளாக இருப்பினும், ஒரு திடகாத்திரமான மனுஷனால் சுமந்து செல்ல முடிகின்ற அளவுக்குப் பாரம் கொண்டவைகளாகவே காணப்பட்டன. ஆனால், நமது கர்த்தர் தமது கெத்செமனே

அனுபவங்களைக் கடந்துவந்த பிறகு, அடிகளும், சவுக்கடிகளும் மற்றும் பிலாத்துவின் ஆணையின்படி கொடுக்கப்பட்ட சவுக்கடிகளும் நிறைந்த இரவு பொழுதைக் கடந்துவந்த பிறகு அவர் பெலவீனமடைந்தவராகவும், உடல் சக்தி இழந்தவராகவும், புண்களினால் வலியுடையவராகவும், நலிந்தவராகவும் காணப்பட்டார். கல்மனமுள்ள சேவகர்கள் அவர் மேல் பரிதாபம் கொண்டு வழியில் வந்த சீரேனே ஊரானாகிய சீமோனைப் பிடித்து இயேசுவின் சிலுவைப் பளுவைச் சுமந்து வரும்படிக்குச் சீமோனைக் கட்டாயப்படுத்தினார்கள் என்று பார்க்கின்றோம்.

இந்தச் சீமோனைக்குறித்து நமக்கு எதுவும் தெரியாது. ஆனால் மாற்கு இவரை, அலெக்சந்தர் மற்றும் ரூப்புக்கும் தகப்பன் என்று குறிப்பிடுவதைப் பார்க்கும்போது, இவருடைய இரண்டு குமாரர்கள் பிற்பாடு இயேசுவின் பின்னடியார்கள் ஆகியுள்ளனர் என்றும், அவர்கள் சீஷர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்கள் என்றும் நமக்குத் தெரியவருகின்றது. ஆனால், பல பேர் ஆசைப்பட்ட மாபெரும் சிலாக்கியம், இந்தச் சீமோன் என்பவருக்குக் கிடைத்துள்ளது. இருதயத்தில் காணப்பட்ட பயமானது பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும், மற்றவர்களையும் மறைந்து ஒளிந்துகொள்ளச் செய்தது என்பதைக்குறித்தும், போதகரின் சோதனையான வேளையில் அவருக்குத் தங்கள் உதவியினை அளிப்பது தடை பண்ணப்பட்டதைக்குறித்தும் அவர்கள் எண்ணி எவ்வளவு வருத்தப்பட்டிருக்க வேண்டும்! யோவான் அவ்வளவு தொலைதூரத்தில் காணப்படவில்லை என்பதை நாம் அறிவோம். மற்றவர்களும் அநேகமாகக் கொஞ்சம் சமீபத்தில்தான் காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எத்தகைய வாய்ப்பை அவர்கள் நழுவ விட்டுவிட்டனர்!

இதேபோன்றதான வாய்ப்புகள் இன்னமும் நம் அனைவருக்கும் காணப்படுகின்றது. அதாவது, கிறிஸ்துவுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகள் அதாவது, கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகள் இன்னமும் உள்ளன. போதகரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கின்ற ஒவ்வொருவருக்கும் சில கெத்செமனே அனுபவங்கள் பெற்றுக்கொள்வது அவசியமாய் இருப்பது போன்று, போதகரின் அனைத்து அனுபவங்களையும் (கொஞ்சமாவது) சுவைத்தேனும் பார்க்க வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமாய் உள்ளது. ஆகவே, "சகோதர சகோதரிகளுக்கு," "சிறியவர்களுக்கு," கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகளைக் கவனிக்க நாம் மறந்துவிட வேண்டாம். ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்கள் மீது விழுந்துகொண்டிருக்கும்/விழ வேண்டிய நிந்தனைகளை நாம் கூட்டிவிடாமல் இருப்பதில் கவனமாய் இருப்போமாக. மேலும், ஆறுதலின் வார்த்தைகளை அவர்களுக்கு அளித்து ஒருவருக்கொருவர் வழியில் வரும் சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் சிலுவைகளைச் சுமப்பதற்கு உதவி செய்வோமாக. இவ்விதமாக, நம் தலையும் கர்த்தருமாய் இருப்பவரிடம் — கல்வாரிக்குப் போகும் வழியில் அவருடைய சிலுவையை அவர் சுமப்பதற்கு நாம் உதவிசெய்வதற்கான வாய்ப்பை நாம் எப்படி பயன்படுத்துவோம் என்பதைச் சிறப்பான விதத்தில் நம்மால் காட்டமுடியும்.

சிலுவையில் அறையப்படும் இடமானது, கொல்கொதாவாகும். மேலும் எபிரெய வார்த்தையான இதன் அர்த்தம் மண்டை ஓடாகும். மேலும் மண்டை ஓட்டின் இலத்தீன் வார்த்தை கல்வாரியாகும். இப்பெயர் இவ்விடத்திற்கு வழங்கப்பட்டதற்கான காரணம், எருசலேமுக்குச் சற்று வெளியே காணப்படும் இந்த மலையின் வடிவமாகவே இருக்க வேண்டும். இம்மலை தொலைதூரத்திலிருந்து பார்க்கப்படும்போது, அப்படியே மண்டை ஓடு போன்றே காட்சியளிக்கின்றது. இந்தக் கல்வாரிக்குப் போகிற வழியில்தான் எருசலேமின் சில இரக்கம் நிறைந்த ஸ்திரீகளால் தங்கள் பொதுவான வழக்கத்தின்படி கசப்பான வெள்ளைப்போளமும், புளிப்பான திராட்சரசமும் கலந்த பானத்தை மரணத் தீர்ப்புக்குக் கடந்து போகும் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்டது. இந்தப் பானமானது, நரம்புகளின் உணர்ச்சியை இழக்க வைக்கும் தன்மையை உண்டுபண்ணுவதினால், தண்டனை நிறைவேற்றப்படும்போது, வலி குறைவாகக் காணப்படும். அந்த இரண்டு கள்வர்களும் அநேகமாக அந்தப் பானத்தைக் குடித்திருக்க வேண்டும். ஆனால், மாற்கு 15:23-ஆம் வசனமானது, குடிக்க கர்த்தர் மறுத்துவிட்டார் என்று தெரிவிக்கின்றது. அதாவது, தம்முடைய இந்த அனுபவங்கள் பிதாவின் சித்தப்படியே அனுமதிக்கப்பட்டுள்ளது என்று கர்த்தர் அறிந்திருந்தபடியினால், அந்த அனுபவங்களை தாம் முழுமையாய் அனுபவிப்பதற்குத் தடையாய் இருக்கும் எதையும் அவர் அனுமதிக்கவில்லை என்று பார்க்கின்றோம்.

அவரது தாயாராகிய மரியாளும், மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் குமாரருடைய தாயும், கிலெயோப்பாவின் மனைவியாகிய சலோமேயும் மற்றும் இயேசுவின் மற்ற பல நண்பர்களும் தைரியம் கொண்டவர்களாக, ரசமும்,

வெள்ளைப்போளமும் கலந்த பானத்தைக் கொண்டுவந்த ஸ்திரீகளுடன் சேர்ந்து ஊர்வலத்தில் அவருக்குப் பின் இப்போது செல்ல ஆரம்பித்தார்கள் (மத்தேயு 27:56; மாற்கு 15:40). "திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" (லூக்கா 23:27-28).

இந்த வார்த்தைகள் யூத தேசம் மீது வரப்போகும் மாபெரும் உபத்திரவத்தின் காலங்களைத் தெரிவிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. "பச்சை மரத்திற்கே இப்படிச் செய்தார்களானால், பட்ட மரத்திற்கு எப்படியாகச் செய்வார்கள்" என்று அவரால் பேசப்பட்ட வார்த்தைகள் குறிப்பிடுவது என்னவெனில், "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று அவர் முன்னமே அறிவித்தது முதல், பிறகு இஸ்ரயேல் தேசத்திற்கு ஐந்து நாட்கள் மாத்திரமே (அவகாசம்) கொடுக்கப்பட்டிருக்க, மேலும் அவர்களுடைய பசுமை தன்மையும், புத்துணர்வும், மத/பக்தியின் சக்தியும் காணப்பட்டிருக்கும்போதே ஒருவேளை அவர்களுடைய அதிகாரிகள் இப்படிப்பட்ட அநீதியையும், நியாயப்பிரமாணச் சட்டத்திற்கு மாறான அநியாயத்தையும் செய்வார்களேயானால், எதிர்க்காலத்தில் அவர்களுடைய மத/பக்தியின் சக்திகள் உலர்ந்துபோய், அவர்களுக்குரிய அழிவின் நாளுக்குரிய மாபெரும் சூளையில் போடப்படுவதற்கு அவர்கள் தேசமாக முழுமையாய் ஆயத்தப்பட்டிருக்கும்போது, என்னவெல்லாம் எதிர்ப்பார்க்கப்படலாம்; அவர்கள் மீது வரவிருக்கும் உபத்திரவ நாளுக்குரிய மாபெரும் அக்கினி சூளையானது, அவர்களுடைய ஆட்சி அமைப்பு முறையை முற்றிலும் விழுங்கிப்போடும் அளவுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் இப்படியாக தீர்க்கத்தரிசனமும் உரைக்கப்பட்டது. மேலும் நமது கர்த்தர் உரைத்த இந்தத் தீர்க்கத்தரிசனம் சொல்லர்த்தமாக நிறைவேறின காரியமானது, ஜோசபஸ் அவர்களால் நமக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது; அதாவது இஸ்ரயேல் தேசம் மீது கடந்துவந்த மாபெரும் உபத்திரவத்தின் காலத்தில் ஸ்திரீகள் மீதும், பிள்ளைகள் மீதும் வந்த கடுமையான பாடுகள் குறித்தும், அந்த உபத்திரவக் காலமானது கிபி 70-இல் எருசலேமின் அழிவுடன் நிறைவடைந்தது என்பவைகள் குறித்துமான விவரங்களை இவர் பதிவு செய்துள்ளார்.

"அவர் அக்கிரமக்காரர்களில் ஒருவராக எண்ணப்பட்டார்" என்ற தீர்க்கத்தரிசனத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, பின்னர் அருமையான இந்த மீட்பர் கொல்லப்படுவதற்கென அன்று முன்னிலை வகித்துக்கொண்டிருந்த யூதர்கள் விடாப்பிடியாய் நாடின விஷயங்களையும் கருத்தில் எடுத்துக்கொண்டு பார்க்கையில், எந்த மனுஷனுடைய சுயாதீனத்திலும் தலையிடாமல், தெய்வீக முன்னறிவானது, தேவனுடைய சித்தம் குறித்த ஆலோசனைக்கு இசைவாக சகல காரியங்களையும் நடப்பித்தது என்பதற்கான புதிதான ஆதாரங்கள் நமக்கு வெளிப்படுகின்றன. மேலும், மனுஷனுடைய கோபமானது, தம்மைத் துதிக்கும்படிக்கும் தமது ஞானத்திற்கும், முன்னறிவிற்கும் சாட்சியாக விளங்கும்படி எப்படி நடத்தினார் என்பதற்கான புதிய ஆதாரங்களும் நமக்குக் கிடைக்கின்றது.

மரணத் தண்டனை அளிக்கப்படும் கைதியுடன், நான்கு சேவகர்கள் அனுப்பப்படுவது வழக்கமாக இருந்தது. முதலில் செல்லும் சேவகன், மரணத் தீர்ப்புக்குள்ளாயிருக்கும் கைதிகளின் குற்றங்கள் எழுதப்பட்டுள்ள வெள்ளை நிற பலகையுடன் காணப்படுவான். மேலும், இப்பலகையானது, சிலுவையில் கைதியின் தலைக்கு மேல் கட்டப்படும். முதல் சேவகனைப் பின் தொடர்ந்த நிலையில் ஆணிகள், சுத்தியல் முதலியவைகளுடன் மூன்று சேவகர்கள் பின் தொடர்ந்தனர். இந்த நான்கு சேவகர்களும், ஒரு நூற்றுக்கு அதிபதி அல்லது தலைவனின் கட்டளையின் கீழ்ச் செயல்படுபவர்கள் ஆவர். இயேசுவின் தலைக்கு மேல் சிலுவையில் காணப்பட்ட பலகையானது, மூன்று பாஷைகளில் இயேசு, யூதர்களுடைய இராஜா என்ற வார்த்தைகளினால் எழுதப்பெற்றிருந்தது. இவ்வார்த்தைகள், அந்நாட்டினுடைய பாஷையாகிய எபிரெய மொழியிலும், கல்வியறிவு உடையவர்களின் மற்றும் பயணிகளின் மொழியாகிய கிரேக்க மொழியிலும், உரோம சாம்ராஜ்யம் மற்றும் சேவகர்களின் மொழியாகிய இலத்தீன் மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. மேலும் இப்பலகையில் எழுதப்பட்டதான வார்த்தைகளைச் சுவிசேஷகர்கள் தெரிவிக்கும் விஷயத்தில் சில வித்தியாசங்கள் காணப்பட்டதற்கான காரணம் வெவ்வேறு பாஷைகளின் வார்த்தைகளில் காணப்படும் சில வித்தியாசங்களேயாகும் என யூகிக்கப்படலாம்.

"நசரேயனாகிய இயேசு யூதர்களின் இராஜா" என்ற வார்த்தைகளை எழுதிட கட்டளையிட்ட பிலாத்துவின் வாக்கியத்திற்குள் இருக்கும் மாபெரும் சத்தியத்தைப் பிலாத்துப் புரிந்துகொள்ளவில்லை. இயேசு ஓர் இராஜா என்ற இந்த வாக்கியத்திற்குள் அடங்கியுள்ள

சத்தியத்தை இன்றும் சொற்பமானவர்களே புரிந்து கொண்டுள்ளனர். இன்னுமாக, புரிந்து கொண்டவர்களிலேயே சிலரே அவர் மேல் விசுவாசம் வைத்துக்கொண்டு உண்மையிலும், சத்தியத்திலும் தங்களுடைய இருதயத்தின் முழங்கால்களை மடக்கி முழங்கால் இட்டுள்ளனர். இன்னுமாக, கர்த்தர் கூறின பிரகாரமாக சகல முழங்கால்களும், முழங்கால் இடுவதற்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமை செலுத்தும் வண்ணமாக சகல நாவுகளும் தம்மைக் கர்த்தர் என்றும், போதகர்/எஜமான், இராஜா என்றும் அறிக்கைப்பண்ணுவதற்குமான காலம் அண்மையில் வரவிருக்கின்றது. "அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்முலமாக்கப்படுவான் என்றான்" (அப்போஸ்தலர் 3:23). அவர் யூதர்களால் உண்மையாகப் புறக்கணிக்கப்பட்டார். எனினும், (சபை) இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தாராகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய முழு எண்ணிக்கை இன்னமும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்த இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தாராகத் தெரிந்தெடுக்கப்படுபவர்கள் ஆபிரகாமின் சந்ததியாராக இருந்து, மேசியாவை இராஜாவாக ஏற்றுக்கொண்டு, தற்கால ஜீவியத்தில் அவருக்கு உண்மையாய் ஊழியம் புரிந்து அவருடைய ஊழியத்திற்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் தங்கள் ஜீவியத்தை ஒப்புக்கொடுத்து, இறுதியில் அவருடைய இராஜ்யத்தில் அவரோடுகூட உடன்சுதந்தரர்களாகக் காணப்படுபவர்கள் ஆவர். இந்தக் கபடற்ற உத்தம இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தாராக தெரிந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கையை நிறைவு செய்ய மாம்சீக இஸ்ரயேலர்களில் போதுமானவர்கள் இராதபடியினால், கடந்த 18 நூற்றாண்டுகளாக புறஜாதி ஜனங்கள் மத்தியில் தெரிந்தெடுப்பதன் மூலம் தேவன் அந்த எண்ணிக்கையை நிறைவாக்குவார். "முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்" (வெளிப்படுத்தல் 7:4-8).

இயேசு தம்மை யூதர்களுடைய இராஜா என அறிவித்தப்படியால், யூத மத சாஸ்திரிகள் அவரை குற்றஞ்சாட்ட விரும்பினாலும், அவ்வார்த்தைகளினிமித்தமே அவர் குற்றம் தீர்க்கப்பட்டார் என்ற விஷயங்கள் பொதுஜனங்கள் பார்க்கத்தக்கதாக பலகையில் எழுதப்பட்டுக் காணப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. மேலும் இவ்விலாசமானது இயேசுவின் இவ்வறிக்கையும், அவ்வறிக்கையின் செல்வாக்கையும் குறித்து, அவர்கள் மிகவும் பயந்ததினாலேயே அவரைக் கொன்றுபோட நாடினார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். குற்றச்சாட்டுடைய பலகையின் எழுத்துக்களை மாற்றி எழுத அவர்கள் கேட்டதற்குப் பிலாத்து மறுத்தக் காரியம் நியாயமானதாகும். ஒருவேளை இயேசு தம்மை இராஜாவென அறிவித்த வார்த்தைகளில் எவ்வித முக்கியத்துவம் இல்லையெனில், அவரைக்குறித்து அவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? ஏன் அவர் சிலுவையில் அறையப்பட்டிருக்க வேண்டும்? ஒருவேளை அவரைச் சிலுவையில் அறையப்படும் அளவுக்கு அவருடைய அறிக்கையில் முக்கியத்துவம் காணப்படுமாயின், அவ்விஷயங்கள் தெளிவாய் வெளிக்காட்டப்பட வேண்டும் என்று பிலாத்து எண்ணினார்.

சிலுவையில் அறையப்பட்டவர்களின் உடைமைகளை, ஒவ்வொரு சிலுவையில் அறையப்படும் தருணத்திலும் பங்குபோடப்படுவது வழக்கமான காரியமாக இருந்தது; மேலும் இது உபத்திரவமான சூழ்நிலைகள் சுற்றிக் காணப்படும்போது, சேவகர்களின் இருதயக் கடினத்தையும், அலட்சியப்போக்கையும் (விருப்பு வெறுப்பு அற்ற நிலையையும்) சுட்டிக்காட்டுகின்றது. பங்கு போடப்பட்ட கூட்டத்தில் தலைப்பாகை, மேலங்கி, இடைக்கச்சை மற்றும் பாதரட்சைகள் காணப்பட்டன. மேலும், இயேசுவின் விஷயத்தில் குறிப்பிடப்படும் வஸ்திரமானது, கழுத்து முதல் பாதம் வரையிலும் உள்ள உள் அங்கியாகும்; மேலும் அது தையல் இல்லாமல் மேல் துவங்கி கீழ் வரையிலும் நெய்யப்பட்டிருப்பதை வைத்து அது சிறந்த தன்மையுள்ள துணியினால் நெய்யப்பட்டது என்பதும் தெரிகின்றது. மேலும் இந்த வஸ்திரத்தின் மீது சீட்டுப் போடப்பட்ட சம்பவமானது, சங்கீதம் 22:18-ஆம் வசனத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது என யோவான் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். மேல் துவங்கி கீழ் வரையிலும் ஒன்றாய் நெய்யப்பட்டுத் தையலில்லாமல் காணப்படும் வஸ்திரமானது, கிறிஸ்துவின் நீதியை அடையாளப்படுத்துகின்றது. மேலும் அந்நீதியானது, பிரித்துப் பிரித்து எடுக்கப்படாமல், முழுமையாகவே சொந்தமாக்கிக் கொள்ளப்பட முடியும். மேலும், அவருடைய நீதியானது முழுமையாகக் காணப்படுகின்றது. அது அழிக்கப்பட முடியாது. மேலும், அதைப் பெற்றுக்கொள்ளும் எவனும் மிகவும் விலையேறப் பெற்ற (நீதியின்) வஸ்திரத்தைப் பெற்றுக் கொள்கின்றான். ஆனால், அதேசமயம் அதைப் பெற்றுக்கொள்ள தவறுகின்றவன் கிறிஸ்துவுக்குள்ளாக தேவனால் கிடைக்கும் நீதிமான் நிலையைப் பெற்றுக்கொள்ள தவறுகின்றான். ஆனால், கர்த்தருடைய ஜனங்களுக்கு இந்த (நீதியின்) வஸ்திரமானது, சீட்டுப்போடுவதன் மூலமாகவோ அல்லது தற்செயலாகவோ அல்லது சந்தர்ப்பவசத்திலோ கிடைப்பதில்லை. வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்ற பிரகாரமாக அது

விசுவாசம் வைப்பதினால்/காட்டுவதினால் பெறப்படுகின்றது. மேலும், விசுவாசித்தவைகளுக்குக் கீழ்ப்படிதல் காட்டுவதன் மூலம் தக்க வைக்கப்படுகின்றது. இன்னுமாக, சீட்டுப் போடப்படுவதினால், சிறுமந்தை வகுப்பாருக்கு மாத்திரமே கிடைக்கப்பெறும் கலியாண வஸ்திரத்திற்கும் கூட இவ்வஸ்திரமானது, அடையாளமாகக் கருதப்படலாம். இந்தச் சிறுமந்தையினரோ, விசுவாசத்தின் மூலமாகவும், விடாமுயற்சியின் காரணமாகவும் கிறிஸ்துவினுடைய தையலில்லாத மற்றும் கறைதிறையற்ற நீதியினால் மூடி மறைக்கப்பட்டு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

நேரம் செல்ல செல்ல அப்போஸ்தலனாகிய யோவானின் தைரியம் பெருகிற்று. மேலும், நமது கர்த்தர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது, யோவான் அவருக்கு அண்மையிலேயே, அதாவது பேசுவது கேட்பதற்குரிய தூரத்திலேயே காணப்படத்தக்கதாக முன்னே வந்து நின்று கொண்டிருந்தார். அநேகமாக, கிலெயோப்பாவின் மனைவியைப் பார்த்தபோது, இவர் தைரியமடைந்திருக்க வேண்டும்; இந்தக் கிலெயோப்பாவின் மனைவி, உறவினள் என்ற அனுமானம் காணப்படுகின்றது. போதகரை அன்புகூர்ந்தவர்களும், அதேசமயம் அவருக்கு ஆறுதல் கொடுக்கவோ அல்லது அவரை விடுவிக்கவோ வலிமையற்றவர்களாகக் காணப்பட்டு, அவருக்கான அனுதாபத்தினால் தங்கள் இருதயங்கள் நிறைய பெற்றிருப்பவர்களும் துக்கத்தினால் ஒன்று கூடினார்கள். "நீர் மேசியாவானால் சிலுவையைவிட்டு தாழ இறங்கிவாரும்" என்று மற்றவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கையில், இவர்களோ, (இயேசுவின் நண்பர்கள்) அழுதுகொண்டு, துக்கத்துடன் காணப்பட்டார்கள். நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட காரியமானது, அவர் தம்மை மேசியாவென அறிவித்த விஷயங்களைப் பொறுத்தமட்டில் அவரை ஏமாற்றுப் பேர்வழி என்றும், அவர் ஒரு வஞ்சகன் என்றும் நிரூபிக்கப்படுவதற்கு சிறந்த ஆதாரமாகக் காணப்படும் என்று அவருடைய சத்துருக்கள் எண்ணினார்கள் என்பதில் ஐயமில்லை.

கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கும் கூட இவர்கள் பிதாவின் தயவைப் பெற்றிராதவர்கள் என்றும், அவர்கள் உண்மையில் ஏமாற்றுக்காரர்கள் என்றும் கருதப்படத்தக்கதான அனுபவங்கள் அவர்களுக்கு வர, சில சமயங்கள் பிதா அனுமதித்திருப்பது உண்மையே. கர்த்தருடைய உண்மையான சீஷர்கள் கர்த்தரோடு இருதய பூர்வமான ஒற்றுமை கொண்டிருந்ததுபோன்று, அந்த இருதய பூர்வமான ஒற்றுமையை வெளிப்புறமான தர்ம சங்கடங்களினாலும், சந்தர்ப்பங்களினாலும் உடைத்துவிட முடியாததுபோன்று, அவர்களிடையிலான அந்த அன்பை எதிர்மாறான கஷ்டமான சந்தர்ப்பங்கள் தணித்துப்போட முடியாதது எப்படியோ, அப்படியே ஒரே ஆவியிலும், இருதய பூர்வமான இசைவுடனும் காணப்படும் அவருடைய அனைத்துச் சகோதர சகோதரிகளுக்கு இடையிலும் காணப்படுகின்றது; இவர்களும்கூட மிகவும் சோதனையான சூழ்நிலைகளிலும், எதிரிடையான சந்தர்ப்பங்களிலும் உண்மையாய்க் காணப்படுவார்கள், ஏனெனில் இவர்களிடமும் ஒரே ஆவியும், சகோதர சகோதரிகள் மீதான அன்பின் ஆவியும் உள்ளது; மேலும் இந்த அன்பின் ஆவியின் மூலம் இவர்களால் ஒருவரையொருவர் ஒரே சரீரத்தின் அங்கங்களாக அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது.

நமது கர்த்தர் தாமே, உபத்திரவங்களுக்குள் காணப்படும்போது, அவர் மற்றவர்களுடைய நலன் கருதி யோசித்துக் கொண்டிருப்பதில் விளங்கும் அவருடைய இரக்கம் கொள்ளும் சுபாவத்தைக் குறித்து எத்துணை ஆழமாய் உணர முடிகின்றது. அவருடைய சொந்த வியாகுலங்கள், அவர் தம் தாய் குறித்துச் சிந்திப்பதற்கும், அவளை அன்பான சீஷனாகிய யோவானின் பராமரிப்பில் விடுவதற்கும், சொல்வதற்கும், அவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் தடைவிதிக்கவில்லை. இவ்விதமாக போதகர்," ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரிக்க வேண்டும்" என்பதற்கு மாதிரியாக இருப்பதை நம்மால் பார்க்க முடிகின்றது; "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோத்தேயு 5:8). "விசுவாசம்" என்ற வார்த்தை மற்றவர்களுக்கு அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு அன்பு காட்டுவது, இரக்கம் கொள்வது, நலனைக் கருதுவது மற்றும் பராமரிப்பது போன்றதான எண்ணங்களையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. யோவான் (மரியாளைப் பராமரிக்க) தெரிந்தெடுக்கப்பட்டதை நாம் கவனிக்க வேண்டும். அவர் தெரிந்தெடுக்கப்படுவதற்கான காரணம், முதலாவதாக, அவருடைய அன்பான சுபாவம், இரண்டாவதாக, கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் அவர் கொண்டிருக்கும் வைராக்கியம் மற்றும் மூன்றாவதாக, தன்னுடைய ஜீவனைப் பணயம் வைத்து யோவான் மரித்துக்கொண்டிருக்கும்

போதகரின் இறுதி தருணங்களில் அவர் அருகே காணப்படத்தக்கதாகத் தைரியமாக முன்னேறி வந்தது என்பவைகள் போன்றதுதான் என்பதில் ஐயமில்லை. இந்த மூன்று விஷயங்களும் கர்த்தர் அங்கீகரிக்கும் விஷயங்கள் என நாம் கவனிக்கக்கடவோம். மேலும், இவைகளைக் கவனித்த பிற்பாடு, அவைகளை நமக்குள் விருத்திச் செய்ய நாடியிருப்போமாக. மேலும், இதன் விளைவாக அன்று காணப்பட்ட அதே போதகரால், ஊழியம் புரிவதற்கான விசேஷித்த வாய்ப்புகளால் நாம் அருளப்படுவோமாக.

நமது கர்த்தருடைய வேதனைகளுடைய நிறைவின்போதுதான் அவர், "நான் தாகமாயிருக்கின்றேன்" என்று கூறினார். மேலும் இது, "என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்" என்ற தீர்க்கத்தரிசனம் நிறைவேறுவதற்கு இடம் உண்டாக்கிற்று (சங்கீதம் 69:21). இது சாதாரணமான காடியல்ல, இது சேவகர்களின் சாதாரணமான விலைகுறைந்த புளித்த திராட்சரசத்தின் பானமேயாகும். ஈசோப்பின் தண்டில் மாட்டப்பட்டிருந்த காடியில் தோய்த்த கடற்காளானானது, நமது கர்த்தருடைய வாய் அருகே கொண்டு செல்லப்பட்ட காரியமானது, அவரது உதடுகளுக்கும், நாவிற்கும் ஈரத்தன்மையைக் கொடுத்தது. மேலும் இரக்கத்தினாலேயே இது செய்யவும் பட்டது என்பது உறுதியே. பல்வேறு பதிவுகள் கூறும் சம்பவங்கள் தொகுக்கப்பட்டு "சிலுவையின் ஏழு வார்த்தைகள்" என அழைக்கப்படுகின்றது.

***சிலுவையில் உரைக்கப்பட்ட முதல் வார்த்தை:*** "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34). இவ்வார்த்தைகள் உண்மையில் கர்த்தருடைய சத்துருக்கள் குறித்து அவர் கொண்டிருக்கும் உணர்வை வெளிப்படுத்தினாலும், பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் இவ்வார்த்தைகள் காணப்படுவதில்லை என்பதை இங்கு நாம் குறிப்பிடுவது சரியானதாகக் காணப்படும்.

***சிலுவையில் உரைக்கப்பட்ட இரண்டாம் வார்த்தை:*** இது நமது கர்த்தர் கள்வனுக்கு அளித்த செய்தியாகும். "இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 23:43).

***சிலுவையில் உரைக்கப்பட்ட மூன்றாம் வார்த்தை:*** "ஸ்திரீயே, இதோ உன் மகன் . . . . . இதோ, உன் தாய்!"

***சிலுவையில் உரைக்கப்பட்ட நான்காம் வார்த்தை:*** "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" (மாற்கு 15:34). இவ்வசனத்தைக் குறித்து ஓர் இறையியல் நிபுணர்: "முழு வேதாகமத்திலேயே இவ்வாக்கியத்தைக் காட்டிலும், வேறு எந்த வாக்கியமும் விவரிக்க கடினமாய் இருப்பதில்லை" என்று தெரிவிக்கின்றார். ஆனால், ஈடுபலி குறித்த சரியான கண்ணோட்டம் இருப்பவருக்கு, இதன் அர்த்தத்தையும், காரணத்தையும் புரிந்துகொள்வது சுலபமாய்க் காணப்படும். இந்தக் கண்ணோட்டத்தின்படி தேவனுடைய இரக்கத்தினால் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு லோகாஸ் மாம்சமாக்கப்பட்டார் என்று நாம் காண்கின்றோம் (எபிரெயர் 2:9). மேலும், நீதியைத் திருப்திபடுத்துவதற்கும், ஆதாமையும் அவர் மூலம் தண்டனையின் கீழ் வந்தவர்களையும் விடுவிப்பதற்கும், தகப்பனாகிய ஆதாமின் மீது வந்த மரணத் தண்டனையை இயேசு அனுபவிக்க வேண்டும். மேலும், ஆதாமுக்கு எதிராக வந்த தண்டனையானது, மரணமாக இருந்தபடியினால், நம்மை மரணத் தண்டனையிலிருந்து விடுவிப்பதற்கும், மரணத்திலிருந்து உயிர்த்தெழும் காரியத்தை உறுதிப்படுத்துவதற்குமெனக் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாடுபட்டார். இன்னுமாக, ஆதாமுக்கு எதிரான தீர்ப்பானது, ஆதாமை எதிராளியாக குற்றம் தீர்த்து, பிதாவுடனான ஐக்கியம் துண்டிக்கப்படுதலையும் உள்ளடக்கி இருந்ததினால் நமது கர்த்தராகிய இயேசுவுக்கும், ஆதாமின் ஸ்தானத்தை எடுத்து, பாவிகள் பிதாவிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கும் அனுபவத்திற்குள் கடந்து செல்வது (கொஞ்சம் நேரமாகிலும் கடந்து செல்வது) அவசியமாய் இருந்தது.

ஆதாமுடைய தண்டனையின் இப்பாகத்தை பிதா மிகுந்த இரக்கத்துடன் நமது மீட்பருடைய பலியுடன் கலந்த ஊழியக்காலம் முழுவதிலும் அவர் மேல் அனுமதிக்காமல், அவருடைய கடைசி நேரங்களில் மாத்திரமே அனுமதித்தார். பிதாவுடன் அவருக்குக் காணப்பட்ட தொடர்பும், ஐக்கியமுமே சகல வேதனையான அனுபவங்களையும், முந்தின நாள் இரவின் அனுபவங்களையும் அப்படி ஒரு

தைரியத்துடன் அவர் கடந்து செல்ல உதவிற்று. ஆனால், இப்பொழுதோ, கிறிஸ்துவைத் திடப்படுத்தும் பிதாவினுடைய கிருபையும், ஐக்கியமும், தொடர்பும் இயேசுவிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. சிறப்பான உணர்வுகளையுடைய நமது மீட்பர், அவருடைய அருமையான நண்பரிடமிருந்து, (பிதாவிடமிருந்து) வரும் ஆறுதலை இழந்ததினிமித்தம் முழுமையும் துயரத்திற்குள்ளானார். ஆகவேதான் என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர் என்ற வியாகுலத்தின் வார்த்தைகளைக் கூறிக் கதறினார். ஆதாமின் மீறுதலினிமித்தம் உண்டான தண்டனையின் இந்தப் பாதகத்தையும் இயேசு அனுபவிக்க வேண்டும் என்ற விஷயம் இந்தக் கடைசி நிமிஷம் வரையிலும் அவரிடமிருந்து மறைக்கப்பட்டிருந்தது.

***சிலுவையில் உரைக்கப்பட்ட ஐந்தாம் வார்த்தை:*** "நான் தாகமாக இருக்கின்றேன்" இதனை நாம் ஏற்கெனவே பார்த்துவிட்டோம்.

***சிலுவையில் உரைக்கப்பட்ட ஆறாம் வார்த்தை:*** "எல்லாம் முடிந்தது" என்ற வார்த்தைகள் நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியம் நிறைவடைந்ததை நமக்குத் தெரிவிக்கின்றது. அவர் மரிப்பதற்காக வந்தார். மரணத்தண்டனையின் தீர்ப்பின் கீழ்க் காணப்படும் ஆதாமின் சந்ததியை மீட்கவும், தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தம்முடைய ஜீவனால் அவர்களை விலைகொடுத்து வாங்கவும் வந்தார். பிதாவின் திட்டத்திற்கு இசைவான இவ்வேலைக்கென அவர் தம்மையே அர்ப்பணம் செய்திருந்தார். மேலும் பிதா தம்மிடத்தில் ஒப்புவித்திருந்த வேலையைத் தாம் செய்து முடித்துவிட்டதாக தமது இறப்பிற்குரிய கடைசி மூச்சு விடும் தருவாயில் அவரால் கூறமுடிந்தது. நமது அருமையான மீட்பர் அவ்வேலையை முடித்துவிட்டார் என்றும், "நீ மேசியாவானால் சிலுவையை விட்டு தாழ இறங்கி வா" மற்றும் "உன்னையே நீ இரட்சித்துக்கொள்" என்ற வார்த்தைகளினால் அவரை இம்சைபடுத்தினவர்கள் மீது அவர் சினம் கொள்ளவில்லை என்றும் நாம் அறிகையில் எவ்வளவாக சந்தோஷம் கொள்ள முடிகின்றது. மாபெரும் பலி செலுத்தப்பட்டுவிட்டது என்பதை நினைக்கையில், (அது அங்கீகரிக்கப்படும் விதத்தில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டது எனப் பிதாவும் பின்னர்த் தெரிவித்தார் என்ற உண்மையின் அடிப்படையிலான கண்ணோட்டத்தின்படி பார்க்கையில்) நம்மால் சந்தோஷம்கொள்ள முடிகின்றது. மேலும், இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் காணப்படுகிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பில்லை என்பதை நாம் உணரும்போதும் மகிழ்ச்சியடைகின்றோம் (ரோமர் 8:1).

தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரின், நம்முடைய கர்த்தரின் பலியின் மூலம், 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டிருப்பினும், இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டிய மற்றும் ஒரு பாகமும் உள்ளது. தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக நமது கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையானது, "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கு" காத்துக்கொண்டிருக்கின்றார் (கொலோசெயர் 1:24). மேலும், கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நம் விஷயத்தை நோட்டமிடுகையில் அவ்வேலையானது, கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது என்று நம்மால் கூறமுடிகின்றது. வெகு சீக்கிரத்தில் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய கடைசி அங்கமானது, தலையோடு சேர்ந்து நீதியினிமித்தம் பாடுபட்டு முடிவது சம்பவிக்கும். அப்பொழுது இந்தச் சுவிசேஷ யுகம் அல்லது பாவநிவாரண நாளுக்குரிய பலி செலுத்தும் முழு வேலையும் நிறைவடைந்து, பின்னர் மகிமையின் ஆசீர்வதித்தலின், ஆளுகை செய்தலின், சீர்தூக்குதலின் ஆயிரம் வருஷ அரசாட்சியின் யுகம் ஆரம்பிக்கும். மாபெரும் ஆசீர்வாதங்கள் மனுக்குலத்தின் மீது கடந்துவரும். அதாவது, கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட விலைக்கிரயமாகிய மாபெரும் ஆசீர்வாதங்கள் மனுக்குலத்தின் மீது கடந்துவரும். "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்ற வார்த்தைகளை எஜமான் கூறும்வரையிலும், போதகரின் அடிச்சுவடுகளில் நடந்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு பின்னடியானும், தனது ஓட்டம் நிறைவடையும் தருணம் வரையிலும், சுயத்தை வெறுத்துச் செல்லும் பாதையில் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் காணப்படுவானாக (மத்தேயு 25:21).

***சிலுவையில் உரைக்கப்பட்ட ஏழாம் வார்த்தை:*** "இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" (லூக்கா 23:46). இங்குப் பேசப்பட்ட வார்த்தைகளான நமது கர்த்தருடைய கடைசி வார்த்தைகள் சங்கீதம் 31:5-ஆம் வசனமேயாகும். வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில்,

அவர் இவ்விதமாகவே தம்மை, சத்தியம் மற்றும் கிருபையின் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார் என்பது ஏற்கெனவே முன்னுரைக்கப்பட்டுள்ளது. நமது கர்த்தர் அநேகம் பாவிகளுக்கான ஈடுபலியாக தம்முடைய மனுஷீக ஜீவனை ஒப்புக்கொடுப்பதை நிறைவேற்றிவிட்டார். அவருடைய விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் பலிக்கான பலனாக அவருக்கு உயர்வான தளத்தில் ஒரு புதிய ஜீவனைப் பிதா அவருக்கு வாக்களித்துள்ளார். இந்தப் புதிய ஜீவன் அல்லது புதிய சிருஷ்டியாகிய ஜீவன், நமது கர்த்தருடைய ஞானஸ்நானத்தின் போது, அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது, அவருக்குள் ஆரம்பித்தது என எண்ணப்படுகின்றது. மேலும், இந்தப் புதிய ஜீவனானது, அவருடைய ஊழியத்தின் நாட்களிலும், மாம்சத்திற்கு அவர் நித்தமும் மரித்துக்கொண்டிருக்கும்போதும், அவருக்குள் தொடர்ந்து காணப்பட்டதாகவும், வளர்ந்து கொண்டுவந்ததாகவும் எண்ணப்பட்டது. வெளிமனுஷன் மரித்துக் கொண்டே இருக்கையில், உள்ளான புதுச் சிருஷ்டியோ, நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுதோ, (இயேசுவின்) வெளிமனுஷன் முழுமையாக மரித்துப் போகிற தருணம் வந்துவிட்டது; அதாவது முற்றிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டு பலி நிறைவடையும் தருணம் வந்துவிட்டது.

எதிர்க்காலத்திற்குரிய ஜீவன் குறித்த நமது கர்த்தருடைய எதிர்ப்பார்ப்பானது, பிதாவின் வாக்குத்தத்தத்திற்கு இசைவாக புதிய ஜீவனுக்கு அல்லது உயிர்த்தெழுப்பப்பட்ட புதிய ஜீவனுக்கு நேராகக் காணப்பட்டது. அவருடைய ஞானஸ்நானம் மற்றும் அர்ப்பணிப்பின்போது, அவருக்குள் ஆரம்பிக்கப்பட்டதென எண்ணப்பட்டதான புதிய மனம் அல்லது சிந்தையானது உயிர்த்தெழுதலில் பூரணமடையும் என்ற தெய்வீக வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தது. அதாவது, புதிய மனது, புதிய சிந்தைக்குப் பொருத்தமான ஆவிக்குரிய சரீரம் உயிர்த்தெழுதலில் கொடுக்கப்பட்டு, பூரணப்படுத்தப்படும் என்று தெய்வீக வாக்குத்தத்தம் காணப்பட்டது. ஆனால், இந்த மாறுதல் உடனடியாக நடக்கக்கூடாது. மூன்று நாளுக்குப் பிற்பாடே அவர் ஆவிக்குரிய சரீரமுடைய புதிய சிருஷ்டியாக உயிர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தெய்வீகச் சட்டம் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது. இயேசு இதனை விசுவாசிக்க வேண்டும். ஒருவரும் இப்படியான வழிமுறையின்படி ஒருபோதும் கடந்து சென்றதில்லை. ஆயினும், நமது அருமையான மீட்பர் முழு நம்பிக்கையுடன் பிதாவை நோக்கிப்பார்த்தார். மேலும், முழு விசுவாசத்துடன் தமது ஜீவியத்தின் அனைத்து விஷயங்களையும், எதிர்காலத்திற்குரிய இந்த ஆசீர்வாதமான நம்பிக்கைகளையும் பிதாவின் அன்பினிடத்திலும், பிதாவின் வல்லமையினிடத்திலும் ஒப்புவித்துவிட்டதாக, அதாவது பிதாவின் திட்டம் மற்றும் வார்த்தைகளுக்கு இசைவாக தமக்கு அளிக்கப்படத்தக்கதாக ஒப்புவித்துவிட்டதாக அறிக்கைப்பண்ணினார். நமது எஜமானின் அடிச்சுவடுகளைப் பின் தொடரும் அவருடைய பின்னடியார்களாகிய நாமும்கூட, தம்முடைய குமாரனை நமக்கான மீட்பராக அன்பளிப்பாக கொடுத்தலில் மாத்திரமல்லாமல், நம்முடைய (வாழ்க்கை) பிரயாணம் முழுவதும் காணப்பட்ட அவருடைய பராமரிப்பிலும், நமக்கு முன்பாகச் சென்று, நம்மைச் சூழ்ந்துக் கொண்டு நமக்குப் பலத்தையும், ஆறுதலையும், நிச்சயத்தையும் அருளின மகா மேன்மையும் அருமையுமான அவருடைய வாக்குத்தத்தங்களை அளித்ததிலும், தம்முடைய அன்பை வெளிப்படுத்தின பிதாவின் பொறுப்பில், நம்முடைய மரிக்கும் தருணத்தில், நம்முடைய அனைத்து நலன்களையும் ஒப்படைத்துவிடுகிறவர்களாகக் காணப்பட வேண்டும்.

*****

R 2555

# "அந்த வார்த்தை மாம்சமாகி"

## லூக்கா 2:1-16

"அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக: ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்." மத்தேயு 1:21

நம்முடைய அருமையான மீட்பரைக் குறித்து, வேத வாக்கியங்களின் வெளிச்சத்தில் ஆழமாக அறியும்போது, அந்த அளவிற்கு நாம் அவரை ஏற்றுக்கொள்வோம், அன்பு செய்வோம் மற்றும் அவருடைய சாயலைப் பெற நாடுவோம். கூர்ந்து மிகவும் கவனிக்கத்தக்கதான அவருடைய வாழ்க்கையைப்போல், வேறு எவருடைய வாழ்க்கையும் இருந்ததில்லை. இப்படியாகக் கூர்ந்து கவனிக்கையில் அருமையான குணலட்சணங்களை அவரிடத்தில் காணமுடியும். ஆனால், இயேசுவின் வாழ்க்கை கூர்ந்து கவனிக்கப்பட்டதுபோல், வேறு எவருடைய வாழ்க்கையாகிலும் கவனிக்கப்பட்டால் பலவீனங்களும், பாவமும், கீழான தன்மைகளுமே காணப்படும்.

நான்கு சுவிசேஷப் பதிவுகளிலேயே, யோவான் மாத்திரம்தான், நமது கர்த்தரின் பரலோக ஜனனத்தைக் குறித்துக் கூறுகின்றார், மேலும், அவர் மாம்சமாக்கப்படுவதற்கு முன்பு அவர் ஆவிக்குரிய ஜீவியாக, பிதாவோடு, அவருடைய மகிமையில் பங்குக் கொண்டவராக, பிதாவாகிய தேவனோடு, தேவனாக இருந்தார் என்று நமக்குக் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், எல்லா சுவிசேஷகர்களும் "அவர் மாம்சமாக்கப்பட்டார்" என்ற கருத்தில் தெளிவாக இருக்கின்றனர். மாறாக, அவர் ஓர் ஆவிக்குரிய ஜீவியாகவே இருந்துவிட்டு, மனுஷர் முன் காட்சியளிக்கத்தக்கதாக, மாம்ச தோற்றம் எடுத்ததாகச் சுவிசேஷகர்கள் கூறவில்லை. மேலும், அவர்கள் ஆவிக்குரிய ஜீவியாக இருந்த லோகோசுக்குள் இருந்த ஜீவன், மனுஷனாகிய இயேசுவின் ஜீவனாயிற்று என்றும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தார் என்றும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராகவும், யூதர்களின் அனைத்துச் சூழ்நிலைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் கீழ்ப்பட்டவராகவும் இருந்தார் என்றும் கூறுகின்றனர். யோசேப்பின் வம்ச வரலாறை மத்தேயு அவர்கள் கொடுக்கின்றார். இயேசு, யோசேப்பின் குமாரன் இல்லை என்பது தெளிவானதாக இருந்தாலும், அவரை அவர் குமாரனாக தத்தெடுத்துக் கொண்டபடியால் அவர் வழியில் வந்தவர் என்று குறிப்பிடப்படலாம். மரியாள் மூலம் வந்த வம்ச வரலாறை லூக்கா அவர்கள் குறிப்பிடுகின்றார்; இப்படியாக, நமது கர்த்தர் மாம்சத்தில் நம்முடைய இனத்தோடு இணைக்கப்பட்டார், மேலும் நாத்தானின் மூலம், தாவீதுடைய இராஜ வம்சத்திற்கும் இணைக்கப்பட்டார்.

நமது கர்த்தர் பிறந்திட்ட காலம், அநேக கோணங்களில் பார்க்கும்போது சாதகமானதாக இருந்தது என்பதையும், இந்த முக்கியமான சம்பவம் நிறைவேறுவதற்கென, உலகத்தின் விஷயங்கள் ஆயத்தம் பண்ணப்பட்டதிலும் தெய்வீக ஞானம் செயல்பட்டது என்பதையும் காணலாம். என்னவெனில், (1) நேபுகாத்நேச்சரின் அரசாட்சியில் உலகத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று ஆரம்பித்த ஆவியானது இதற்கு அனுகூலமாயிருந்தது. அதாவது, மனுக்குலத்தின் பல்வேறு ஜாதிகள் தொடர்புக் கொள்வதற்கும், தங்கள் கருத்துக்களை விரிவாக்குவதற்கும் ஏதுவாயிற்று. (2) இதன் காரணமாக ஜனங்கள் ஒரு தேசத்திலிருந்து இடம் பெயர்ந்து, மற்றத் தேசத்திற்குப் போனது, எல்லாரையும் பரந்த நோக்கமுடையவராக ஆக்கிற்று. (3) சிறைப்பிடிக்கப்பட்டதினால், பாபிலோனுக்குள் சென்ற யூதேயா மற்றும் இஸ்ரயேல், இவ்விதமான புதிய (பாபிலோனுடையச்) சூழ்நிலைகளுக்குப் பழகிப்போனபடியால், கோரேஸ் மன்னன், அவர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பலாம் என்று வாய்ப்பு வழங்கினாலும் சொற்பமானவர்களே அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். பல மில்லியன்களாக இருந்த கோத்திரத்தார்களில், 50,000 பேரே புறப்பட்டுப் போனாார்கள். புறஜாதிகள் மத்தியில் இருந்திட்ட யூதர்கள் தொலைந்துப் போகவும் இல்லை, ஆபிரகாமின் உடன்படிக்கை மீதான தங்கள் அனைத்து நம்பிக்கைகளையும் புறக்கணித்துப் போடவும் இல்லை. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முற்றிலும் உண்மையற்றவர்களாகவும் ஆகிவிடவும் இல்லை. எனினும், இந்த விஷயங்களிலெல்லாம், அவர்கள் கவனக்குறைவாக இருந்தனர்; ஆதாயத்தைதின் மீதே அதிகம் விருப்பம் கொண்டிருந்தனர்; உத்தம இஸ்ரயேலர்களுக்கான ஆவியை வளர்த்துவதில் ஓய்ந்திருந்தனர். எனினும், அவர்கள் குடியிருந்த

தேசத்தார் மீது தங்களுடைய செல்வாக்கைப் பெற்றிருந்தனர். மேலும், ஒரே தேவன் மீதும், உலகத்தின் இரட்சகராக, தேவனுடைய குமாரனாக வரவிருக்கிற மேசியாவின் மீதுமான இஸ்ரயேலர்களின் நம்பிக்கை, மற்றவர்களுக்குச் சாட்சியாகவும் விளங்கிற்று. (4) கிரேக்க சாம்ராஜ்யம் ஜெயங்கொள்ளும் காலம் வந்தபோது, இச்சாம்ராஜ்யம் நாகரிகம் அடைந்த உலகத்திற்கு, உயரிய இலக்கியங்களை அறிமுகப்படுத்தினபடியால் அப்பொழுது கிரேக்க மொழி, நாகரிகம் அடைந்த உலகத்தின் இலக்கிய மொழியாக அமைந்தது. (5) ரோம சாம்ராஜ்யம் உலகத்தைக் கைப்பற்றி, வல்லமையின் உச்சக்கட்டத்தில் இருக்கும்போது, உலகளாவிய சமாதானம் இருந்தது. இது சுவிசேஷத்தை அறிவிப்பதற்குச் சாதகமான காலமாகவும், அதன் (சுவிசேஷத்தின்) பிரதிநிதிகள், தேசம் விட்டுத் தேசம் போவதற்குப் பாதுகாப்பாகவும் இருந்தது. (6) இஸ்ரயேலும் அறிவு ரீதியாக, ஒழுக்க ரீதியாக, மத ரீதியாக நல்ல உயரிய நிலையை அடைந்துவிட்டது; மேலும் வேத வாக்கியங்கள் மேசியாவின் வருகைக்காக அனைத்து மனுஷர்களும் காத்திருந்தார்கள் என்றும் நமக்குக் கூறுகின்றது (லூக்கா 3:15).

இந்த ஏற்றவேளையில்தான், தெய்வீக முன்னேற்பாட்டின்படி, ரோம சக்கரவர்த்தியான அகஸ்துராயர் தனது இராஜ்யபாரத்தில் வரி திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்த ஆணையானது, வரி விதிப்பாகக் காணப்படாமல், வரிக்கான பெயர்ப் பதிவாக இருந்தது. இன்றைய காலங்களில் வரி விதிப்பவர்கள் அனுப்பப்படுவதுபோல் அன்று இராமல், ஒவ்வொரு ஆண் குடிமகனும், தனது குடும்பத்தைப் பற்றியும் தலைமை அலுவலகத்தில், தன்னைப் பற்றியும் பதிவு செய்ய வேண்டும். இதுவே யோசேப்பும், அவருக்கு நிச்சயிக்கப்பட்ட மனைவியாகிய மரியாளும், அதாவது, இயேசுவின் தாயும், தங்களின் சொந்த பட்டணத்திற்குத் திரும்பி வருவதற்குக் காரணமாயிற்று; ஏனெனில், அவர்கள் இருவரும் தாவீதின் பட்டணமாகிய பெத்லகேமைச் சார்ந்தவர்கள் ஆவர். இவ்விதமான முன்னேற்பாடுகளின் வாயிலாக தீர்க்கத்தரிசியினால் முன்னுரைக்கப்பட்டதுபோல, தாவீதின் மாபெரும் வாரிசு பெத்லகேமில் பிறக்கும்படி, மரியாளும், யோசேப்பும் அங்குக் கொண்டு வரப்பட்டார்கள் (மீகா 5:2).

தெய்வீக ஏற்பாட்டில் நமது இரட்சகரின் பிறப்பிற்கும், சுவிசேஷ செய்தி புறப்படுவதற்கும் பண்ணின ஆயத்தங்களை இந்தச் சிறு சம்பவங்கள் மூலம் அறியும்போது, கர்த்தருடைய ஜனங்களின் விசுவாசம் பலப்படுத்தப்படுகின்றது. கடந்த காலத்தின் இந்தச் சிறு சம்பவங்களில் கூடத் தேவன் காட்டின அக்கறையை உணரும்போது, இன்னும் எதிர்க்காலத்தில் நிறைவேற போகிற அவருடைய திட்டத்திற்கான அவருடைய ஏற்பாடுகள், மற்றும் ஞானத்தின் மீதான நம்பிக்கை நமக்கு உறுதி அடைகின்றது. அதாவது, பெத்லகேமில் பிறந்த அவரில் மையம் கொண்டுள்ள மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் எதிர்க்காலத்தில் நிறைவேறப் போகிறதில் உள்ள அவருடைய ஏற்பாடுகள் மற்றும் ஞானத்தின் மீதான நம்பிக்கை உறுதியடைகின்றது. மேலும், தெய்வீகத் திட்டத்தில் உள்ள பெரிய விஷயங்களில், தெய்வீக வழிநடத்துதல்களை, முன்னேற்பாடுகளைக் காண்கையில், அவருடைய ஜனங்களின் தனிப்பட்ட விஷயங்களிலும் அவருடைய வழிநடத்துதல்கள், முன்னேற்பாடுகள் இருக்கும் என்ற விசுவாசம் ஏற்படுகின்றது. நமது இரட்சகரின் பிறப்புத் தொடர்பான சிறு விஷயங்களிலும், தேவன் இவ்வளவு ஒழுங்குகள் செய்துள்ளார் என்றால், அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகளின் அனைத்து விஷயங்களை ஒழுங்குப்படுத்த அவர் விருப்பமும், வல்லமையும் உள்ளவராக இருப்பார் என்பதை அதிகமதிகமாக உணர்ந்து கொள்வோமாக. நாம் பாவிகளாக இருக்கும்போதே, தேவன் நம்மை இவ்வளவாக அன்புகூர்ந்து, நமது மீட்புக்காக இவ்வளவு அக்கறைகொண்டு, காரியங்களைச் செய்வாராகில், இப்பொழுது அவருக்கு அந்நியரும், பரதேசியுமாய் இராமல், அவருடைய புத்திரர்களாய், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாகியுள்ள பரிசுத்தவான்களாகிய நமக்கு, இன்னும் அதிகமாய்ச் செய்வார். மேலும், அவரை அன்பு செய்கிறவர்களுக்கு, அவருடைய நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக சம்பவிக்கும் என்று அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளபடி அவருடைய அன்பிலும், அவருடைய வழிநடத்துதல்களின் மேலும் திடன்கொள்ளுவோமாக (ரோமர் 5:8-10, 8:28).

யோசேப்பையும், மரியாளையும், பெத்லகேமிற்குக் கூட்டிக்கொண்டு வந்த ராயனுடைய அதே ஆணையானது, தாவீதின் அநேகம் குடும்பங்களையும் பெத்லகேமிற்குக் கூட்டிக்கொண்டு வந்தது. ஆகையால்தான் யோசேப்பும், மரியாளும் பெத்லகேமிற்கு வந்தபோது, வழிப்போக்கர் விடுதிகளும், வாடகை அறைகளும், வாடிக்கையாளர்களால் நிறைந்திருந்ததைக் காண்கின்றோம். மேலும், பிரயாணம் செய்பவர்கள் தங்குவதற்கான ஆயத்தம் பண்ணும் (பொருட்களை) விஷயங்களைச் சொந்தமாக வைத்து எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்தது. மேலும், தங்களுடைய சொகுசுக்கு ஏற்ப விடுதிகளின் பிரகாரத்தில் தங்குவதற்கான அறைகளையும் ஏற்படுத்துவார்கள்.

ஆகையால்தான் யோசேப்பும், மரியாளும் வெளியே தங்கினார்கள். குழந்தையாகிய இயேசு பிறந்தபோது, தொழுவமானது, அவருக்கு மிகவும் சௌகரியமான இடமாயிற்று.

பெத்லகேம் ஊர் இன்றளவும் இருக்கின்றது. ஆனாலும், அன்று இருந்தது போன்று இன்று இல்லை; கலாச்சாரமும் இப்பொழுது கொஞ்சம் மாறுப்பட்டுள்ளது. அங்கு இருக்கும் ஒரு குகையானது, குழந்தையாய் பிறந்த இயேசு கிடத்தப்பட்ட இடம் என்று கருதப்படுகின்றது. அங்கு இப்பொழுது ஒரு கத்தோலிக்க திருச்சபை கட்டப்பட்டு, தொடர்ச்சியாக திருப்பலி நடத்தப்பட்டு வருகின்றது. இப்படியாக, விக்கிரக வழிபாடு போன்றதாகி விட்ட விஷயங்களுக்காக அனுதாபப்படுகின்றோம். அவருடைய சரீரத்திற்குரிய பயபக்தி நம்மிடம் இருக்கின்றது என்றாலும், அவர் சரீரம் கடந்து சென்ற அனைத்து அனுபவங்கள் மீது, அதாவது, அர்ப்பணிப்பு முதல் மரணம் வரை அவர் சரீரம் கடந்து சென்ற அனுபவங்கள் மீது ஆழமான கவனம் நமக்கு இருக்கின்றது என்பது  உண்மை என்றாலும்............நமது இரட்சகர் சஞ்சரித்து நடந்த பரிசுத்த பூமியின் மீதோ அல்லது அவர் குழந்தையாகக் கிடத்தப்பட்ட பரிசுத்தமான தொழுவத்தின் மீதோ அல்லது அவருடைய பரிசுத்தமான தாயார் மீதோ நமது கவனம் இருப்பதில்லை. மாறாக உயிர்த்தெழுந்த நமது கர்த்தர் மீதும், பூரணமாக்கப்பட்ட ஆவிக்குரிய புதுச் சிருஷ்டியின் மீதும், மனுக்குலம், தூதர்கள், அதிகாரங்கள் மற்றும் கர்த்தத்துவங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டு எல்லா நாமத்திற்கு மேலாக உயர்த்தப்பட்டு பிதாவுக்கு அடுத்து, அவருடைய வல்லமையின் வலக்கரத்திற்கு உயர்த்தப்பட்டவர் மீதுமே அதிக கவனம் நமக்கு ஏற்படுகின்றது. "ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2 கொரிந்தியர் 5:16). உயிர்த்தெழுப்பப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தரும், இரட்சகருமானவரைப் பற்றின அறிவானது, அவருடைய பூலோக வாழ்க்கையின் விஷயங்களை காட்டிலும் மேற்பட்டதாக நமக்குக் காணப்படுகின்றது. எனினும், அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையும் கூட நம்முடைய கவனத்தை ஈர்க்கின்றதாகவும், நமக்கு நன்மை பயப்பிக்கிறதாகவும் இருக்கின்றது.

பெத்லகேமுக்கு வந்திருந்த ஜனங்கள், தங்களுடைய பட்டணத்தில் வந்திருப்பவர் யார் என்று தெரிந்திருந்தால், அதாவது, அவர் பரலோக வாசல்களில் இருந்து வந்தவர் என்றும், லோகோஸாகிய அவர் மாம்சமாக்கப்பட்டர் என்றும், தம்முடைய ஜனங்களுடைய பாவங்களிலிருந்து, அவர்களை விடுவிக்கும்படி வந்துள்ளார் என்றும் அறிந்திருந்தார்களானால், எவ்வளவு சந்தோஷத்துடன் அவரை, அவர்களுடைய வாடகை விடுதி அறைகளில் வரவேற்று, அவைகளில் வசதியான அறைகளை அவருக்குக் கொடுத்திருப்பார்கள். ஆனால், அவரை அவர்களுக்குத் தெரியவில்லை; ஆகவே அவருக்குப் பணிவிடைச் செய்யும் மாபெரும் இந்த வாய்ப்பை இழந்து போனார்கள். அதுபோலவே ஒவ்வொரு பட்டணங்களிலும், ஊர்களிலும் கர்த்தருடைய ஜனங்களாகிய உண்மையான பரிசுத்தவான்கள் இருக்கின்றார்கள்; இவர்களை வரவேற்று, இவர்களுக்கு மேன்மையானவைகளைக் கொடுக்கக் முடிகின்றவர்களும் அதே பட்டணங்களில்தான் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் இவர்களைப் (பரிசுத்தவான்களை) பரம பிதா மற்றும் இயேசுவின் செய்தியாளர்கள் என்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்ததா? இல்லை, அப்போஸ்தலர் கூறுகிறதுபோல, "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1 யோவான் 3:1). எந்தச் சீஷனும் கர்த்தரைக் காட்டிலும் பெரியவன் அல்ல, ஆகவே, தேவனுடைய ஸ்தானாபதிகளாக அன்பின் ஊழியங்களுக்கு நாம் செல்லும்போது, தேவனுடைய வழிநடத்துதல்கள், முன் ஏற்பாடுகள் நமக்காக செயல்படும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம்; ஆனாலும், ஐசுவரியமாக இல்லாமல் எளிமையான நிலைகளிலேயே இருக்கும் என நாம் எதிர்ப்பார்க்கலாம். இப்படியான சூழ்நிலைகள் நமக்கு வரும்போது, நமது கர்த்தரின் அனுபவங்களில் கொஞ்சம் பெற்றுள்ளோம் என்று உணர்ந்து களிகூர வேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கெனப் பெற்றுக்கொள்ளும் சகல வாய்ப்புகளையும், தெய்வீகக் கிருபைகளாகக் கருதி, அவைகளை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகும்போது, அதாவது, அது எவ்வளவு ஏழ்மையான சூழ்நிலைகளாக அனுமதிக்கப்பட்டாலும், அதற்கு ஆயத்தமாகும்போது, இதற்கு ஏற்ப ஆசீர்வதிக்கப்படுவார்கள். இங்கு யோசேப்போ, மரியாளோ, இயேசுவோ அல்லது பிறப்பின் சூழ்நிலைகளைப் பதிவு செய்திட்ட சுவிசேஷகர்களோ, சீஷர்களோ, தெய்வீக ஏற்பாட்டினால் வழங்கப்பட்ட இந்தச் சூழ்நிலைக் குறித்துக் குற்றச்சாட்டோ, அதிருப்தியின் குறிப்பைக்  குறிப்பிடுவதையோ நம்மால் பார்க்க முடியாதது குறிப்பிடத்தக்கதாகும். எந்த அளவுக்கு ஒருவர் அதிருப்திக் கொண்டிருந்திருப்பாரோ, அந்த அளவிற்கு தெய்வீக ஏற்பாடுகளானது அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாய் இராது.

அன்று பெத்லகேமுக்கு அருகாமையில் உள்ள இடங்களில் ஆயர் வாழ்க்கை முறை இருந்தது; இன்று அவ்விடம் மந்தைகளினால் நிறைந்துள்ளன. அக்காலத்தில் மேய்ப்பர்கள், தங்கள் மந்தைகளைக் கள்வர்களிடமும், காட்டு மிருகங்களிடமும் இருந்து பாதுகாக்கும் வண்ணமாக, இரவு நேரங்களில், மந்தைகளோடு இருப்பது வழக்கமாயிருந்தது. இந்த இடத்தில்தான், இராஜா ஆவதற்கு முன்னதாக தாவீது, ஒரு மேய்ப்பனாக தனது மந்தைகளைப் பாதுகாக்கும் விதத்தில் ஒருமுறை சிங்கத்தையும், மற்றொருமுறை கரடியையும் கொன்று போட்டார். மேய்ப்பவர்கள் படிப்பு அறிவு இல்லாத ஜனங்களாக இருந்தாலும், அவர்கள் சிந்திக்கிற ஜனங்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் மந்தைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் வேளைகளில், ஆலோசனைகள் மற்றும் பேச்சுச் சம்பாஷணைகளின் மூலமாக போதுமான ஞானம்/அறிவைச் சம்பாதித்து வைத்திருந்தார்கள். ஆகவே, மேய்ப்பர்கள் என்பவர்கள், அறிவாற்றல் உள்ளவர்களாகவும், சிந்திக்கிற ஜனங்களாகவும் இருந்தார்கள். வணிகம் மற்றும் இயந்திரங்களின் மேல் மூழ்கியிருப்பவர்களைக் காட்டிலும், இவர்களுடைய மனங்கள் மேலானவைகளைப் பார்க்கின்றது. தேவன் தமது நிழலான இராஜ்யத்தில், இராஜாவாக கனப்படுத்தின மேய்ப்பன் ஒரு மாபெரும் கவிஞன் (தாவீது) ஆவார். இவர் மந்தையை மேய்த்துக் கொண்டிருக்கையில், பெரும்பான்மையான நேரத்தை அமைதியான சிந்தனைக்குக் கொடுத்துள்ளார்; மிகவும் அருமையான இவருடைய சங்கீதங்களில் ஒன்று, பிதாவாகிய தேவன்தாமே, அவருடைய ஜனங்களுக்கு மேய்ப்பன், அதாவது, அவர் பராமரிக்கும் அவருடைய மந்தைக்கு அவர் தாமே மேய்ப்பன் என்றும் கூறுகின்றது (சங்கீதம் 23). இப்படியாக சிந்திக்கிற மனுஷர்களிடத்தில், அதாவது, தாவீதின் சங்கீதம் மற்றும் அவைகள் வெளிக்கொணரும் மேசியாவின் நம்பிக்கை பற்றி நன்கு அறிந்த மனுஷர்களிடம் , கர்த்தர் தமது குமாரன் மாம்சமாக்கப்பட்ட செய்தியை, முதலாவதாக அனுப்பினார்.

தூதர்கள் தோன்றினதையும், அவர்கள் தோன்றின பிரகாசத்தினால் ஏற்பட்ட பயத்தைக் குறித்ததான விவரங்கள் இயல்பானதும், எளிமையானதுமாகும். ஆவிக்குரிய சுபாவத்தில் உள்ள தேவதூதனின் பிரசன்னத்தில் நிற்கின்றோம் என்ற எண்ணம், மனுக்குலத்தில் உள்ள எவருக்கும்/அனைவருக்கும் பயத்தையும், நடுக்கத்தையும் கொண்டு வரும். இந்தப் பயம் நியாயமானதே; ஏனெனில், விழுகையின் மூலம் தங்களுடைய பலவீனங்களை உணர்ந்தவர்கள், தெய்வீக நீதிக்குப் பயப்படுவது நியாயமானதேயாகும். தேவனிடமிருந்து இரக்கம் வேண்டும் என்று அனைவரும் உணர்ந்துள்ளனர். ஆகவேதான், மேய்ப்பர்கள் மத்தியில் பரலோக (தூதர்கள்) வாசிகள் தோன்றினபோது பயந்தார்கள், ஆனால், தேவதூதர் கொண்டு வந்த செய்தியோ, நீதியைக் குறித்தோ அல்லது குற்றச்சாட்டைக் குறித்தோ இராமல், தெய்வீக இரக்கம் குறித்ததாக இருந்தது. "பயப்படாதிருங்கள் இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று ஆறுதலாகக் கூறினார். இந்தக் கிருபையான வார்த்தைகளைக் கேட்டதினிமித்தம் அவர்களிடமிருந்த பயம் நீங்கி, சந்தோஷம் வந்தது என்று கூற முடியுமா? நிச்சயமாக இல்லை. அன்று முதல் இன்று வரை, புரிந்துக்கொள்ளுதலின் செவிகளினால் இந்த உண்மையான சுவிசேஷத்தின் செய்தியைக் கேட்காமல், வெறுமனே காதுகளால் கேட்பவர்களுக்கும் இதே நிலைதான்.

பல காலங்களாக/யுகங்களாக அநேக தேவனுடைய ஜனங்கள் மத்தியில் தொனித்துக் கொண்டிருக்கும் இந்தச் செய்தி எவ்வளவு தவறுதலாகவும், கவலைக்கிடமாகவும் புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், எவ்வளவு சொற்பமான ஜனங்கள் அதை உணர்ந்துள்ளனர்; கேட்டு மகிழ்ச்சியும் அடைந்துள்ளனர். அனைத்துப் பல்வேறு சபைகளும், அதன் ஆயிரக்கணக்கான ஊழியர்களும், பல ஆயிரம் ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும், தேவ தூதர்களின் இச்செய்திக்கு முற்றிலும் எதிராக இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாக இருக்கின்றது. இவர்களுடைய முரண்பாடுகள், இவர்களுடைய உணர்வுகளையும், இவர்களுடைய இருதயங்களையும் பாதிப்பதோடு அல்லாமல், நமது அருமையான இரட்சகரின் ஊழியத்திற்குரிய மாட்சிமையின் பத்துப் பாகத்தில், ஒன்பது பாகத்தையும் திருடிப்போடுவதோடு கூட, நம்முடைய இரக்கம் நிறைந்த பரம பிதா, கிறிஸ்து இயேசு மூலம் அருளின இரட்சிப்பை, தவறாகக் காட்டுவதன் வாயிலாக பிதாவின் நாமத்திற்கும் தூஷணமாகிவிடுகின்றது.

சுவிசேஷம் என்ற பெயரில் குருடாக்கப்பட்ட கிறிஸ்துவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கும் பழியான/குற்றமான செய்தியைக் குறித்து ஒருவேளை சிலர் ஆச்சரியப்படலாம், அதிர்ச்சியும் அடையலாம். "சுவிசேஷம்" என்ற வார்த்தையானது "நற்செய்தி" என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது. நித்திய வேதனை என்னும் மோசமான செய்தியே, தெய்வீகச் செய்தி எனவும், தீர்ப்பு எனவும் மனுக்குலத்தின் பெரும்பாலானவர்களுக்கு, பிரகடனம் செய்தவர்களில்

பெரும்பாலானவர்கள், தாங்கள் மனிதர்களுக்குக் கொண்டு செல்லும் செய்திகளில் தெய்வீகக் குணலட்சணங்களும், (தெய்வீக) அரசாங்கமும் எவ்வளவு தவறாகக் காட்டப்படுகின்றது என்பதைத் தெரியாமல் இருக்கின்றனர் என்று நாம் விசுவாசிக்கின்றோம். அவர்கள் சுவிசேஷத்தை வேண்டுமென்றே தவறாய்க் காட்டாமல், அப்போஸ்தலர் குறிப்பிடுவது போன்று மாபெரும் எதிராளியானவனால் குருடாக்கப்பட்டதினாலேயே செய்கின்றார்கள். இந்தக் குருட்டுத் தன்மையானது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலம் வெளிப்பட தேவனுடைய தயவின் மகிமையான வெளிச்சத்தை உணர்ந்து கொள்ளாதபடிக்குத் தடை செய்தது (2 கொரிந்தியர் 4:4).

நம்முடைய பாடத்தின் பத்தாம் வசனத்தை, அனைத்து உண்மையான கிறிஸ்துவர்களையும் படிக்க வைக்க முடிந்தால், அதன் முக்கியத்துவத்தின் ஆழத்தைப் பார்க்க வைக்க நம்மால் முடிந்தால், அது கிறிஸ்துவ மண்டலத்தின் போதகங்களை உடனடியாகப் புரட்சிக்குள்ளாக்கிவிடும். ஆனால், நமது கர்த்தர் கூறியிருக்கிற வண்ணம், தெய்வீகத் திட்டத்தின் சில ஆழமான விஷயங்கள் இவ்வுலகத்தின் ஞானிகளுக்கும், விவேகிகளுக்கும் மறைக்கப்பட்டுத் தாழ்மையுள்ளவர்களுக்கு, அதாவது, குழந்தைகளுக்கு மாத்திரம் வெளிப்பட்டுள்ளது. புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்ற அனைவரும், தேவனுடைய அன்பின் ஆழத்தையும், அகலத்தையும், நீளத்தையும், உயரத்தையும் ஓரளவுக்கு புரிந்துக்கொள்ள முடிபவர்களும், இவ்விஷயத்தைப் பொறுத்தமட்டில் உலகத்திடம் காணப்படும் அறியாமையும், அவர்களைக் குருடாக்கின மாபெரும் எதிராளியானவனின் எதிர்ப்பும் தொடர்ந்து நீடிப்பதில்லை என்றும், கர்த்தருடைய ஏற்ற வேளையில் மறைந்து விடும் என்பதில் களிகூருவார்கள். அதாவது, கல்வாரியில், உலகத்தின் மீட்பிற்காக மரித்தவர், பழைய சர்ப்பமாகிய பிசாசை, சாத்தானை, ஆயிரம் வருட அரசாட்சியில் ஜாதிகளை மோசம் போக்காதபடிக்கு கட்டி, தமது மகிமையான இராஜ்யத்தை ஆரம்பிக்கும்போது, இவைகள் அனைத்தும் மறைந்து விடும் என்பதில் களிகூருவார்கள். அக்காலத்தில் அனைவரும் தெளிவாகக் காண்பார்கள். இக்காலத்தில் சிலர் மாத்திரமே தெய்வீகக் குணநலன் மற்றும் திட்டம் குறித்துப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றுள்ளனர் என்று அனைவரும் அக்காலத்தில் உணர்ந்து கொள்வார்கள். மேலும், தேவதூதர் மூலம் கொடுத்திட்ட செய்தியின் ஒவ்வொரு வார்த்தையும் மெய் என்று அக்காலத்தில் உணர்ந்துக் கொள்வார்கள். பெத்லகேமில் பிறந்த இரட்சகரின் மூலம் ஏற்படும் பிரம்மாண்டமான விளைவுகள், மாபெரும் பிதாவினால் அனுப்பப்பட்ட செய்தியை உறுதிப்படுத்தியது என்று உணர்ந்துக் கொள்வார்கள். மகா சந்தோஷத்தின் நற்செய்தியானது இறுதியில் ஜனங்களுக்கு உரியதாகும். ஜனங்கள் வெளிச்சமூட்டப்படுவதற்கும், ஆசீர்வதிக்கப்படுவதற்கும் எவ்விதமான தடையும் இல்லாமற்போவதினால், அனைவரும் சத்தியத்தை அறியும் அறிவிற்குள் வருவார்கள்; மேலும், நமது கர்த்தராகிய இயேசுவின் ஈடுபலியின் நிமித்தம் உண்டான மாபெரும் இரட்சிப்பினால் அனைவருக்கும் அருளப்படும் கிருபையையும், இரக்கத்தையும் மற்றும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பையும் அனைவரும் பெற்றுக்கொள்வார்கள்.

தேவதூதன், தான் கொண்டு வந்த மாபெரும் நற்செய்தியை இன்னுமாக விளக்கினார்; அதாவது இரட்சகரும், மேசியாவுமானவர் பிறந்துள்ளபடியால், உரைக்கப்பட்ட அனைத்து நற்செய்திகளும் நிறைவேற போகின்றது என்றார். இஸ்ரயேலால் நீண்ட காலமாய் எதிர்ப்பார்க்கப்பட்டவரும், ஆபிரகாமின் வாக்களிக்கப்பட்ட சந்ததியுமானவருக்குள் இஸ்ரயேல் ஆசீர்வதிக்கப்பட்டு, கனத்திற்கும், மேன்மைக்கும், கூட்டுறவிற்கும் உயர்த்தப்படுவதோடு, அவருக்குள் பூமியன் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும். தேவதூதர் முன்வைத்த செய்தியின் வரிசையானது, தெய்வீக ஏற்பாட்டின்படியே என்பதை கவனிக்கக்கடவோம். ஆகவே இதே வரிசையைத்தான், சபையை அழைக்கும்படி கர்த்தரால் ஸ்தானாதிபதிகளாக பயன்படுத்தப்பட நாடுபவர்கள் பயன்படுத்த வேண்டும். முதலாவதாக சந்தோஷத்திற்குக் காரணமான தெய்வீகக் கிருபை/தயை மற்றும் ஆசீர்வாதம் பற்றியதான அறிவிப்பும் மற்றும் இறுதியில் இவ்வாசீர்வாதமும், சந்தோஷமும் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் உரியதாகும் என்று முன்வைக்கப்படுகின்றது. இரண்டாதாக, இவைகள் அனைத்தும் சம்பவிக்கும் விதம் விசேஷமாக விவரிக்கப்பட்டுள்ளது; அதாவது, ஓர் இரட்சகர், ஒரு விடுவிக்கிறவர் மூலம் சம்பவிக்கும் என்று விவரிக்கப்பட்டுள்ளது. தமது ஜனங்களைப் பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து விடுவித்து, நித்திய ஜீவன் மற்றும் ஆசீர்வாத்திற்குள்ளும் கொண்டு வர வேண்டுமெனில், அவர் முதலாவதாக அவர்கள் அனைவரையும், அவர்களின் பாவங்களிலிருந்து விடுவிக்க வேண்டும். நமது பாவங்களிலிருந்து நமக்கு வரும் இரட்சிப்பானது, ஆதாமின் பாவத்தின் விளைவாக வந்த தண்டனைக்கு, நம்பொருட்டாக கடன் திருப்பிச் செலுத்தப்பட்டதை மாத்திரம் குறிக்காமல், அதைத் தொடர்ந்து மனிதன் நீதியான விஷயங்களினால் போதிக்கப்பட்டு, பாவத்திலிருந்து தூக்கி எடுக்கப்படுவதையும் குறிக்கின்றது. இப்படியாகப் பாவத்திலிருந்து தூக்கிவிடப்படுவதற்கு, ஒவ்வொரு மனுஷனும் தன்னால் முடிந்த மட்டும், விருப்பத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்பது எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஆகவே மனுக்குலத்திற்கு வரும் அனைத்துக் கிருபை தொடர்பான போதனைகளும் இரட்சிப்பின் தத்துவத்தோடு இசைந்திருக்க வேண்டும்; அதாவது இரட்கசகர் மாம்சமாக்கப்பட்டார் என்றும், மாம்சம் நம்முடைய பாவங்களுக்காகப் பலிச் செலுத்தப்பட்டது என்றும், இரட்சகர் மகிமையடைந்தார் என்றும், அவருடைய சபை தெரிந்துக்கொள்ளப்பட்டு பின்னர், ஏற்ற காலத்தில் தெய்வீகத் திட்டத்தின்படி இரட்சகர் தமது சபையோடு நீதியின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும், விழுகையின் மூலமாகவும், அதைத் தொடர்ந்து மனுக்குலத்தை மாபெரும் எதிராளியானவன் குருடாக்கி, தவறாய் நடத்தியதின் மூலமாகவும், அவர்கள் கடந்து சென்ற அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் இழிவுகளிலிருந்து அவர்களைத் தூக்கியெடுப்பதற்கு இரட்சகர் தமது நீதியின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும் உள்ள இரட்சிப்பின் தத்துவத்தோடு கிருபை தொடர்பான அனைத்துப் போதனைகளும் இசைந்திருக்க வேண்டும். நமது கர்த்தருடைய நாமமாகிய இயேசுவின் அர்த்தம் **இரட்சகர்** என்றும், சபையாகத் தெரிந்துக்கொள்ளப்படும் அனைவரும் மணவாளனின் ஆவியைப் பெற்றுக்கொள்ள/பெற்றிருக்க வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். **தம்மையே பலிச்செலுத்தும் அளவிற்கு, பாவத்தை வெறுத்த தன்மையே, அவருடைய ஆவியாக இருந்தது.** நாமும் "பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தஞ்சிந்த (மரிக்க) வேண்டும்" (எபிரெயர் 12:4).

பின்னர் தேவதூதர், மேய்ப்பர்களிடம், இந்த மாபெரும் பூமியின் இராஜா எவ்வளவு எளிமையான சூழ்நிலைகளில் பிறந்துள்ளார் என்பதையும் தெரிவித்தார்; அதாவது, துணிகளில் பொதிந்துக் குழந்தையானது முன்னணையில் கிடத்தப்பட்டிருக்கும் என்றார். இது இயேசுவை அடையாளம் கண்டு கொள்ள மாத்திரமாகச் சொல்லப்படாமல், பிரமாண்டமான மாபெரும் இறுதி பலன்கள், எளிமையான ஆரம்பத்தைத்தான் கொண்டிருந்தது என்பதை எடுத்துக்காட்டி சொல்லப்பட்டது. தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு பாகமும் இப்படியாக இருக்க, நம்முடைய பறைசாற்றுதலும் இப்படியாகவேதான் இருக்க வேண்டும். நாம் எதிர்கால மகிமை, மகத்துவம் மற்றும் பிரமாண்டத்தை மாத்திரம் அறிவிக்காமல், தற்கால தாழ்மையான, அவமானமான சூழ்நிலைகளையும் நாம் எடுத்துக் கூற வேண்டும். நமது இரட்சகர் நமது பாவங்களுக்காக மரிக்கும் பொருட்டு, மனுஷர் மத்தியிலே மனுஷனாக, எளிமையான கோலம் எடுத்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களும்" அவருடைய அடிச்சுவடுகளில், அவரைப் போன்ற அவமானத்தின் சூழ்நிலை மத்தியில் கடந்து செல்ல வேண்டும் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும்; அதாவது, அவரோடுகூட ஆளுகை செய்ய வேண்டுமெனில், அவரோடு கூடப் பாடுபட வேண்டும்; அவரோடுகூட ஜீவிக்க வேண்டுமெனில், அவரோடுகூட மரிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இவ்வாறே தீர்க்கத்தரிசிகளும், கிறிஸ்து (தலை + சரீரம்) மகிமை அடைய வேண்டுவதற்கு முன்பு, அவர் படவேண்டிய பாடுகளைக் குறித்துக் கூறியிருக்கின்றார்கள் (1 பேதுரு 1:11). "சிலுவை இல்லையெனில் கிரீடம் இல்லை" என்பதே கேட்கச் செவியுள்ள யாவருக்கும் உரிய பாடமாகும். ஆகவே, நாம் நம்மையே தாழ்த்தி, அவருடைய பலத்தக் கரத்திற்குள் அடங்கி, அவமானத்தின் ஒவ்வொரு அடிகளிலும் களிகூருவோம்; இதினிமித்தம் ஏற்றக்காலங்களில் நாம் நமது தேவனுடைய குமாரனாகிய நமது கர்த்தரின் மகிமையில் பங்கடையத்தக்காகவும், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கான மாபெரும் வேலையில் கர்த்தரோடு பங்கடையத்தக்காகவும் நம்மை உயர்த்துவார்.

எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தும் நற்செய்தியைத் தேவதூதன், மேய்ப்பர்களுக்கு கூறின பின்பு, தேவதூதன் புறப்பட இருக்கையில், பரம சேனையும் தோன்றி, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்று பாடினது அருமையான காட்சியாகும். இது ஏற்கெனவே கொடுக்கப்பட்ட சுவிசேஷச் செய்தியை மீண்டும் கூறினதாகும். அந்தப் பாடல் குழந்தையாக இப்போது பிறந்திருக்கிறவர், நிறைவேற்றப்போகிற வேலையானது, பிதாவாகிய தேவனுக்கு மேலான கனத்தையும், மகிமையையும் சேர்க்க உதவும் என்று அறிவிக்கிற விதமாக இருந்தது; மேலும் இயேசுவினால் இந்த வேலை நிறைவேற்றப்படும்போது, நன்மையான தெய்வீகச் சித்தம் பூமியில் வரும் என்றும், இதைத் தொடர்ந்து சமாதானம் வரும் என்றும் அறிவிக்கும் விதத்தில் இருந்தது. மேலும் இவைகள் அனைத்தும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாகவும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதமாகவும் அமையும். ஆனால் இவைகளுக்கெல்லாம், முரண்பாடாக, கிறிஸ்துவ மண்டலத்தில் தவறான கூற்றுகள் காணப்படுகின்றது. கிறிஸ்துவ மண்டலத்தின் போதனைகள் நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஈடுபலியையும், அதைப் பிதா ஏற்றுக்கொண்டு, மனுக்குலத்தின் மீதான தீர்ப்பு மாற்றப்பட்டதையும் கருத்தில் கொள்ளாமல், பெரும்பான்மையான மனுக்குலம் நித்திய காலம் வரையிலும் தேவனுக்கு எதிராகத்தான் இருப்பார்கள் என்றும், அவர்கள்

வாதிக்கப்படுவதினால், தேவனுடைய நாமத்தைத் தொடர்ந்துத் தூஷிக்கிறவர்களாகவும் இருப்பார்கள் என்றும், இரட்சகரை அறிந்துக்கொள்வதற்கோ அல்லது அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்வதற்கோ முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு ஒருபோதும் கொடுக்கப்படாது என்றும் போதிக்கின்றார்கள். இப்படியான ஒரு திட்டம் உன்னதத்தில் உள்ள தேவனுக்கு மகிமை சேர்க்கும் என்று நினைப்பது எவ்வளவு விநோதமாக இருக்கின்றது!

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருவரும், சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கும், பாவத்தை விட்டுவிடுவதற்கும், புதிய உடன்படிக்கையின் கீழ் நீதிக்கேதுவான புதிய ஜீவினை ஏற்றுக்கொள்வதற்கும், கிறிஸ்துவின் வாயிலாக தேவனிடமிருந்து, வாய்ப்பு பெற்றுக்கொள்வார்கள் என்றும், யாரெல்லாம் இந்த நீதியின் ஒழுங்குகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்க மறுக்கின்றார்களோ, அத்தகையவர்கள் ஜனத்தில் இராதபடிக்கு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் என்றும் தெளிவாக வேதவாக்கியங்கள் காட்டும் விஷயங்களை ஒருவர் ஏற்றுக்கொள்ள மறுப்பது எவ்வளவு விநோதமான காரியமாகும். பாவத்தில் ஜீவிப்பிதற்கும், தேவனுக்கு எதிராக செயல்பட்டு இருப்பதற்கும் அக்காலத்தில் ஒருவரும் அனுமதிக்கப்படுவதில்லை. அப்பொழுது மனுஷர் மத்தியில் முழுமையான சமாதானம் காணப்படும்.

சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக, தேவன் கொடுக்கும் ஒரே வழி, அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகும். இதற்காகவே நமது அன்பான மீட்பர், "உம்முடைய இராஜ்யம் வருவதாக;உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்துள்ளார். இது முழுமையான சமாதானத்தைக் குறிக்கின்றது. எந்த மனுஷனையும் கட்டாயப்படுத்தாமல், நித்தியஜீவன் மற்றும் சமாதானம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிறிஸ்து மூலம் அளிக்கப்படும் அல்லது இந்தத் தெய்வீகத் தயவை ஏற்றுக்கொள்ள ஒருவன் மறுத்தால் அவன் இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவான் என்றே வேதவாக்கியங்கள் கூறுகின்றது.

தேவனுடைய கிருபையைக் குறித்து, மேய்ப்பர்கள் கேட்டபோது, இரட்சகரைச் சந்தித்து, மரியாதை செலுத்தினதின் மூலம் அக்கிருபையின் மீதான தங்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். அதைப் போலவே தேவனுடைய கிருபையைக் கேட்டு, அதை ஏற்றுக்கொள்ளும் இருதயம் உடையவர்கள், கர்த்தரை நாடி, அவருக்கு பயபக்தியாய் இருந்து, தங்களுக்கு அறிவிக்கப்பட்ட கிருபையின் செய்தியைப் பறைச்சாற்றி, அவருடைய நோக்கங்களுக்காக ஊழியம் செய்வார்கள். நம்மில் ஒவ்வொருவரும் இப்படியாகச் செய்து, கர்த்தருடைய சந்தோஷத்தையும், அவருடைய மாபெரும் சுவிசேஷத்தின் புரிந்துக்கொள்ளுதலையும் அதிகதிகமாய் நம்முடைய இருதயத்தில் பெருக்கிக்கொள்வோமாக.

**ஆமென்!**

---

# “இயேசுவானவர் ஞானத்திலும் விருத்தியடைந்தார்”

## லூக்கா 2:41-52

“இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.” லூக்கா 2:52

நமது கர்த்தராகிய இயேசுவின் மழலை பருவம், குழந்தை பருவம் மற்றும் வாலிப பருவத்தைக் குறித்து அநேக விநோதமான கற்பனைகள் செய்யப்பட்டுள்ளது; மேலும் இக்கற்பனைகளின் மேல் நமக்கு யாதொரு அக்கறையும் இல்லை. வேத மாணாக்கர்களோ வேதாகமத்தின் பதிவுகளை மாத்திரமே சார்ந்திருந்து, உண்மையாய் இராத கட்டுக்கதைகள் மற்றும் கற்பனைகளின் மேல் கவனம் செலுத்தாமல் இருக்க வேண்டும். நமது இரட்சகரின் முழுமையான வாழ்க்கை குறித்து, நாம் தெரிந்திருப்பது அவசியம் என்று தேவன் கண்டிருந்தாரானால், அவர் சந்தேகமின்றி, பதிவுகள் செய்யப்பட ஏற்பாடு பண்ணி இருந்திருப்பார். ஆனால், நமது கர்த்தரின் ஆரம்பகட்ட வாழ்க்கையில் கவனிக்கத்தகுந்த அல்லது புகழத்தக்க பாத்திரமாக எதுவும் இல்லை என்று நாம் கருதிவிடக்கூடாது; மாறாக ஆரம்பக்கட்ட வாழ்க்கையின் பதிவுகள் புறக்கணிக்கப்படுவதன் மூலம், யோர்தானில், பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தைத் தொடரும் 3 ½ வருட இயேசுவின் வெளிப்படையான ஊழியக்காலமே, விசேஷமானதாகக் காட்டப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், மனுஷனாகிய இயேசுவின் வார்த்தைகள் மற்றும் கிரியைகள் நமக்கு முக்கியமானதாகவோ மற்றும் பாடங்கள் கற்பிக்கிறதாகவோ இராமல், பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் அபிஷேகிக்கப்பட்ட இயேசுவின், அதாவது, கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளும், செய்கைகளுமே நமக்கு முக்கியமானதாகவும், படிப்பினையாகவும் அமைகின்றது. எனினும், இயேசுவின் குழந்தை பருவம் மற்றும் வாலிபப் பருவம் குறித்து, வேதவாக்கியங்களில் பதிவு பண்ணப்பட்டுள்ள சிறு வரிகளின் எல்லைக்குள்ளாகவே நம்மை நிறுத்தி, சில விலையேறப்பெற்ற மற்றும் உதவிகரமான பாடங்களை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

நமது கர்த்தருடைய முதல் பன்னிரண்டு வருடங்கள் குறித்து நமக்கு எதுவும் தெரியவில்லை. தெய்வீக வழிநடத்துதலின்படி அவருடைய தாயும், வளர்ப்புத் தகப்பனும், ஏரோதின் கைக்கு இயேசுவைத் தப்புவிக்க, எகிப்துக்குப் போனது மாத்திரம் நமக்குத் தெரியும். ஏரோதின் மரணம் வரையிலும், அவர்கள் எகிப்திலேயே சில மாதங்கள் தங்கியிருந்து பின்னர், கலிலேயாவில் உள்ள நாசரேத்துக்குத் திரும்பினார்கள். யூதர்களின் பாரம்பரியத்திற்கு ஏற்ப, தாவீதின் குடும்பத்தில், ஓர் இராஜா தோன்றுவதைக் குறித்தே ஏரோது பயந்தார். மேலும் ஏரோது, தாவீதின் சந்ததியாகவோ, யூதர்களின் சந்ததியாகவோ இராமல், யாக்கோபின் சகோதரனாகிய ஏசாவின் சந்ததியாக இருந்தபடியால், ஏரோது, தான் இராஜாவின் ஸ்தானத்திலிருந்து புதிய இராஜாவினால் தள்ளப்படுவேனோ என்று பயந்தார். கிழக்கிலிருந்து சாஸ்திரிகள், புதிதாய்ப் பிறந்த யூதருடைய இராஜா எங்கே? என்று கேட்டு வந்தபோது, ஏரோது, அவர்கள் குழந்தையைக் கண்டுபிடித்தவுடன் தனக்கும் வந்து அறிவிக்க வேண்டும் என்று கூறினார். ஏரோது, தானும் வந்து புதிய இராஜாவைக் கண்டு வணங்க விரும்புவதாக நடித்தார். ஆனால், சாஸ்திரிகள் தெய்வீக வழிநடத்துதலினால், ஏரோதின் வேண்டுகோளை நிராகரித்தார்கள். ஏரோது, பெத்லகேமில்தான் பிறப்புச் சம்பவிக்கும் என்ற சில விஷயங்களைச் சேகரித்து, இரண்டு வயதுக்கு உட்பட்ட அனைத்து ஆண் பிள்ளைகளையும் கொன்றுபோடக் கட்டளையிட்டார். இதன் விளைவாக புதிய இராஜாவும் கொல்லப்படுவார் என்று கருதினார். இந்தக் கட்டளையின்படி அநேக குழந்தைகள் கொல்லப்பட்டார்கள் என்று நாம் கருத முடியாது; காரணம், பெத்லகேமின் ஜனத்தொகை மிகவும் குறைவாக இருந்தபடியால் இக்குறிப்பிட்ட வயதுள்ள ஆண் குழந்தைகளும் சொற்பமான எண்ணிக்கையிலேயே காணப்பட்டார்கள்.

நம்முடைய ஆதார வசனம், இயேசு மற்றக் குழந்தைகளைப் போன்று, சரீரத்திலும், மனதிலும் படிப்படியாகவே வளர்ந்தார் என்பதை நமக்குக் கூறுகின்றது. இயேசு சிறுவனாக இருக்கும்போது ஞானியாக, போதகராக, சுகமளிக்கிறவராக இருந்தார் என்று நாம் கற்பனை செய்து கொள்ளக்கூடாது. எனினும் மற்றப் பூரணமற்ற சிறுவர்களைக் காட்டிலும், பூரணச் சிறுவனாகிய இயேசு பல்வேறு விஷயங்களில், வளர்ந்த நிலையில் காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

மரியாளும், யோசேப்பும், தேவபக்தி உள்ள ஜனங்கள் என்பதை நமது பாடத்தின் ஆதார வசனப்பகுதியின் முதல் வசனம் எடுத்துக்காட்டுகின்றது; அதாவது “அவருடைய தாய் தகப்பன்மார்

வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள்" என்பதாகும் (வசனம்-41). பஸ்காவை இவ்விதமாக அனுசரிக்கும் - நியாயப்பிரமாணமானது, மிகவும் பக்தியுள்ள யூதர்களாலேயே தவறாமல் கடைபிடிக்கப்பட்டது. சிலர் கூறுவதுபோன்று மரியாள் பாவம் இல்லாதவள் என்றும், அற்புதவிதமாய்க் கருவுற்றாள் என்றும் நாம் எண்ணக் கூடாது. மாம்சத்தில் இயேசுவின் தாயாக, மரியாள் தெரிந்துக்கொள்ளப்பட்டு, எல்லா ஸ்திரீகளுக்கும் மேலாக கர்த்தர், மரியாளைக் கனப்படுத்தின விஷயமே, மரியாளின் உயர்ந்த குணலட்சணங்களையும், இருதயத்தில் கொண்டிருந்த பரிசுத்தத்திற்கும் ஆதாரமாகின்றது. உயர்ந்த குணலட்சணங்கள் இல்லாத எவரையும் கர்த்தர் விசேஷமாகக் கனப்படுத்தி, ஆசீர்வதித்து, பயன்படுத்துவார் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது.

யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும், யூதர்களுடைய கலாச்சாரத்தின்படி, பன்னிரண்டு வயதை அடையும் ஒவ்வொரு சிறுவனும், "நியாயப்பிரமாணத்தின் குமாரன்" என்று கருதப்படுகின்றான். மேலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவன் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியவானகவும் இருக்கின்றான். நம்முடைய பாடத்தின் சம்பவத்தில், இயேசு பன்னிரண்டு வயதை அடைந்தவராகக் காணப்படுகின்றார். இளமைப் பருவத்தில் மத விஷயங்களில் கவனம் செலுத்துவதற்கு, குழந்தை பருவத்திலேயே பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று இங்கு அனைத்துத் தேவபக்தியுள்ள பெற்றோர்களுக்கும் படிப்பினை உள்ளது. ஆரம்பக்கட்ட படிப்புகளில் தேர்ச்சிப் பெற்றுப் பன்னிரண்டு வயதை அடையும் பிள்ளைகள், உயர்க்கல்வி கற்க ஆயத்தமாயிருக்கின்றார்கள்; ஆனால், மேலான ஆவிக்குரிய மதரீதியான பாடங்களைக் கற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லை என்று சில பெற்றோர்கள் கருதுகின்றனர்; இது மிகவும் தவறாகும். இந்த வயதில் குழந்தைகள் உயர்க்கல்விக்கு ஆயத்தமாக இருப்பதற்கான காரணம், அவர்கள் ஆரம்பக்கட்ட கல்வியின் விஷயத்தில் நன்கு போதிக்கப்பட்டிருப்பதினாலேயே ஆகும்; மேலும், குழந்தைகள் மத விஷயங்களில் உயர்தரமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள இவ்வயதில் ஆயத்தமாக இல்லையெனில், இதற்குக் காரணம் அவர்கள் ஆரம்பக்கட்ட ஆவிக்குரிய மத விஷயங்களினால் போதிக்கப்படாததேயாகும்; அதாவது குழந்தைகளுக்குத் தேவனால் நியமிக்கப்பட்ட போதகர்களாகிய பெற்றோர்கள் ஆரம்பக்கட்ட பயிற்சிக் கொடுக்கத் தவறினதேயாகும். எந்தக் கிறிஸ்துவ பெற்றோரும் ஒழுக்க ரீதியிலும், மத ரீதியிலும் தங்களுடைய பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் பொறுப்பை நிராகரிக்கக்கூடாது.

பஸ்கா பண்டிகை, ஏழு நாட்கள் நீடித்ததாய் இருப்பினும், தூர தேசங்களிலிருந்து பயணப்பட்டு வந்தவர்கள், பிரதானமான அனுசரிப்புகள் நிறைவேறும் இரண்டு நாட்கள் மாத்திரமே தங்கியிருப்பது வழக்கம். மரியாளும், யோசேப்பும் பண்டிகையின் மூன்றாம் நாள் தங்களுடன் இருந்தவர்களோடு திரும்பும் பிரயாணத்தை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். பிரயாணத்தில் ஸ்திரீகள், வரிசையில் முன்பாகச் செல்வதும், அவர்களுக்கு பிறகு ஆண்கள் செல்வதும், பிள்ளைகள் தாய் அல்லது தகப்பனோடு பிரயாணிப்பதும் வழக்கமாக இருந்தது. ஒருநாள் பிரயாணம் மேற்கொண்டார்கள், மற்றொரு நாள், எருசலேமுக்கு திரும்பி வர பிரயாணம் மேற்கொள்ளப்பட்டது; மூன்றாம் நாள், பட்டணம் முழுவதும் இயேசுவைத் தேடுவதில் செலவிடப்பட்டுள்ளது. இறுதியில் அவர்கள் இயேசுவைத் தேவாலயத்தில், நியாயப்பிரமாண வல்லுநர்கள் மத்தியில் கண்டுபிடித்தார்கள். அக்காலங்களில் புத்தகங்களைப் படிப்பதைக் காட்டிலும், வாய்மூலம் கொடுக்கப்பட்ட போதனைகளிலிருந்து, அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், நியாயப்பிரமாணத்தில் வல்லுநர்களாய் இருந்தவர்கள் கேட்க மனதாய் இருக்கும் யாவருக்கும், அதிலும் விசேஷமாக பஸ்கா வாரங்களில் போதித்துக் கூற ஆயத்தமாய் இருந்தார்கள். அநேக வாலிப புருஷர்கள் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆசிரியர்கள் பாதி வளைவு/வட்ட நீண்ட இருக்கைகளில் (bench) இருப்பது வழக்கமாக இருந்தது; மேலும் இவர்களுக்கு முன்பு முதிர்ந்த மாணாக்கர்களுக்குத் தாழ்வான இருக்கைகள் கொடுக்கப்பட்டிருந்தது; மேலும் இளைய மாணாக்கர்கள் தரையில், அதாவது, அவர்களின் பாதத்தருகே உட்கார்ந்திருந்தார்கள். பவுல் வாலிபனாக இருக்கும்போது கமாலியேலின் பாதத்தருகே உட்கார்ந்து, கற்றுக்கொண்டதை நாம் வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 22:3). கமாலியேல், பவுலின் நாட்களில் வாழ்ந்த பிரதானமான நியாயசாஸ்திரி ஆவார்.

சிறுவனாக இருந்த இயேசு, துணிவுடன், அவருடைய நாட்களில் வாழ்ந்த கல்விமான்கள் முன்பு சென்று, அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள் என்றோ, தகுதியற்ற போதகர்கள் என்றோ, தம்மைப் பிரகடனப்படுத்தவோ, இன்றைய பிஞ்சிலே முதிர்ந்த, சரிவர பயிற்றுவிக்கப்படாத வாலிபர்கள் போன்று செய்ய முற்பட்டார் என்றோ நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. மாறாக, சிறுவனாக இருந்த இயேசுவிடம் சீரான மனநிலை இருந்தது என்றும், தாம் இந்த உலகத்தில் சொற்ப காலமே வாழ்ந்துள்ளார் என்றும், மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்க்கையில் சொற்பமான/சிறிதளவே ஜீவியத்தில் அனுபவங்கள் பெற்றுள்ளார் என்றும், தமக்கு எல்லாம் தெரியாது என்றும், தாம்

அறிந்துக்கொள்வதற்கு அநேக கேள்விகள் இருக்கின்றது என்றும் உணர்ந்து, "மோசேயின் ஆசனத்தில்" வீற்றிருக்கும் போதகர்களிடமிருந்து திருப்திகரமான பதில்களைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையில், வாஞ்சையுடன், கேள்வி கேட்டார் என்றே நாம் எண்ணவேண்டும்.

எப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டார் என்பது குறிப்பிடப்படவில்லை, எனினும் காலத்தையும், சூழ்நிலையையும் பார்க்கையில் மத ரீதியிலான விஷயங்களையே அவர் கேட்டிருக்க வேண்டும். யூத சந்ததியில் வந்த தம்மைப் பற்றின மாபெரும் கேள்விகள் இயேசுவின் மனதில் உதிக்க ஆரம்பித்துவிட்டது. இந்த யூத சந்ததியாகிய, ஆபிரகாமின் சந்ததியோடுதான், தேவன் சில மாபெரும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அருளியுள்ளார்; அதாவது, மேசியாவின் கீழ் இவர்கள் பிரதானமான ஜாதியாராக உயர்த்தப்பட்டு, இவர்கள் பூமியின் குடிகளை ஆசீர்வதித்து, இவர்கள் மூலம் மனுக்குலம் முழுவதும், தேவனைப் பற்றின அறிவிற்குள் வந்து, அவருக்குச் சேவை செய்யும் நிலைக்குக் கொண்டுவரப்படுவார்கள் என்பது பற்றிய வாக்குத்தத்தங்கள் இவர்களுக்கு அருளப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் நம்பிக்கை குறித்ததான கேள்விகளினால் இயேசு நிரம்பிக் காணப்பட்டார். மேலும் வேதவாக்கியங்கள், நிறைவேறும் விஷயங்களில் அவருக்குச் சில முக்கிய பங்கு இருக்கின்றது என்று, இயேசு தமது தாயின் மூலம் அறிந்திருப்பார் என்பதில் நமக்கு ஐயமில்லை. நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கத்தரிசனங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தப்பட்ட விஷயங்களில், பரமபிதா தமக்கு நியமித்துள்ள பங்கைக் குறித்து அறிந்துக்கொள்ள, இயேசு விரும்பித் தேடினார்.

தெய்வீக விஷயங்களைக் குறித்து அறிந்துக்கொள்ள, இயேசுவுக்கு அவருடைய வீட்டிலேயே வேதாகமம் இல்லை என்றாலும், இயேசுவுக்குத் தம்முடைய சிறிய ஊராகிய நாசரேத்தில் உள்ள ஒரு சிறிய ஜெப ஆலயத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. ஓய்வுநாள்தோறும் அவர் நியாயப்பிரமாணங்களையும், சங்கீதங்களையும், தீர்க்கத்தரிசனங்களையும் வாசிக்கக் கேட்டார். இவ்விதமான விஷயங்களினால் நிரம்பப் பெற்றிருந்த வாஞ்சையுள்ள மனதைக்கொண்ட சிறுவனாகிய இயேசு, எருசலேம் மாநகருக்கு முதல்முறையாக வந்தபோது, அவரைத் தேவாலயமும், அதன் பிரகாரத்தில் நிறைவேற்றப்பட்ட பலிகளும் கவர்ந்தது. இங்குத்தான் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனம் பற்றின மாபெரும் கேள்விகள், அக்காலத்தில் வாழ்ந்த திறமிக்க போதகர்களால் விவாதிக்கப்பட்டது. இயேசு, வேதஆராய்ச்சியில் ஆழமான விருப்பமும், உற்சாகமும் காட்டினபடியால், அவர் பூமிக்குரிய காரியங்களை மறந்துவிட்டார். பரலோக பிதாவுக்கு அடுத்த விஷயமாகிய தெய்வீகத் திட்டத்தைக் குறித்து ஆராய்வதில் மிகவும் ஆவல் கொண்டிருந்தார். அதாவது, தாம் முக்கியப் பங்கு வகிக்கப்போகும் தெய்வீகத் திட்டத்தைக் குறித்து, ஆராய்வதில் மிகவும் ஆவல் கொண்டிருந்தார்.

இயேசுவின் வயதில் காணப்பட்ட மற்றச் சிறுவர்களைக் காட்டிலும், அவருடைய கேள்விகள் மிகவும் ஆழமானதாகவும், நியாயமானதாகவும் இருந்தது. அவர் தன்னடக்கத்தோடு கேள்விகள் கேட்டதில், நியாயப்பிரமாண வல்லுநர்கள் ஆழமாகக் கவரப்பட்டிருப்பது இயல்பேயாகும். இந்தப் பண்டிகைகளில், விருந்தோம்பல், தூரத்தேசத்திலிருந்து வந்தவர்களுக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்டது. இயேசுவும், புதிதாய்க் கிடைத்த நண்பர்களினால் நன்கு உபசரிக்க/கவனிக்கப்பட்டிருப்பார்.

மரியாளும், யோசேப்பும், இயேசுவைக் கண்டுபிடிக்கும்போது, இயேசு, போதகர்கள் பேசும் காரியங்களைக் கேட்கிறவராகவும், அவர்களிடம் கேள்வி கேட்கிறவராகவும் இருந்தார் என்று பதிவுகள் தெரிவிக்கின்றது. இங்கு மூப்பர்களிடமும், போதகர்களிடமும் வாலிபர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான விலையேறப்பெற்ற படிப்பினைகள் காணப்படுகின்றது. இயேசு போதகர்களால் போதிக்கப்பட்டபோது, போதகர்களும் இயேசுவினால் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஒருவேளை, அவர்கள் உண்மையில் மாபெரும் மனுஷர்களாக இருப்பார்களானால், யாரிடமும், குழந்தையிடமும் கூடப் போதகம் பெற்றுக்கொள்ளத்தக்கதாகத் தாழ்மையான மனம் கொண்டிருப்பார்கள். அந்த வேதப்பகுதியில் இயேசுவிடம் கூடச் சில கேள்விகள் அவர்கள் கேட்டார்கள் என்று வாசிக்கிறோம். மேலும், "அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்" (லுக்கா 2:47) என்றும் வாசிக்கின்றோம். கேள்வி கேட்கும் விஷயத்தில் இரு சாராரிடமும் பணிவும், மரியாதையும் காணப்பட்டது. இயேசு பணிவுடனும், மரியாதையுடனும் போதகர்களிடம் கேள்வி கேட்டபோது, அவருடைய மனதின் ஆழமும், தெளிவான புரிந்துக்கொள்ளுதலும், நியாயமான விவாதமும் வெளிப்படுத்தப்பட்டபடியால், அவர்களை இயேசுவிடம் மறுகேள்விகள் கேட்கத் தூண்டியது.

இவ்விதமான கேள்வி அணுகுமுறையையே, சத்தியத்தில் உள்ள அருமையான நண்பர்களுக்கு ஏற்றதும், ஞானமுமான ஒன்று என நாம் பரிந்துரைக்கின்றோம். கர்த்தருடைய சில அன்பான ஜனங்கள், மற்றவர்களிடம், அதிலும் விசேஷமாகக் கல்வியறிவு உள்ளவர்களிடம் தெய்வீகத் திட்டத்தைப் பேசும் விஷயத்தில் அதிக அளவு தன்னம்பிக்கையும், அதிக உறுதியும் கொண்டு, தங்களுடைய செல்வாக்கைப் பெரிதளவில் நாசமாக்கிப் போட்ட சம்பவங்களை நாம் பார்த்திருக்கின்றோம். சாந்தகுணம் என்பது பொக்கிஷம் போன்றதாகும்; மேலும், அது சத்தியத்திற்கு உதவியாகவும், தாங்கி நிற்கிறதாயும் காணப்படுகின்றது. எல்லா பலத்துடனும் சத்தியம் முன்நிறுத்தப்படட்டும், ஆனாலும், தாழ்மை மற்றும் சாந்தத்துடனும் நிறுத்தப்படட்டும்; சத்தியத்தை முன்வைப்பதற்குக் கேள்வி முறை மிகவும் ஆற்றல் மிக்கதாகும்.

யோசேப்பும், மரியாளும், தங்களுடைய சிறு குமாரன், அந்நாட்களில் வாழ்ந்த மாபெரும் போதகர்களின் மத்தியில் நின்று அவர்களின் கவனத்தைப் பெற்றுக்கொண்டவராகக் காணப்பட்டதைக் குறித்து ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். தங்களைக் கவலைக்குள்ளாக்கி, அவரைத் தேட வைத்ததற்காக, இயேசுவைக் குறித்து அவரது பெற்றோர்கள் விசனத்தை வெளிப்படுத்தியதாக எவ்வித பதிவுகளும் இல்லை. தனியே இருக்கையில் மரியாள் மாத்திரம், இயேசு கூட்டத்தோடு வராததற்கு, அவரைக் கடிந்து கொள்கின்றாள். எனினும், இதை அவள் மிகவும் அன்பாகவும், தன்னடக்கத்துடனும் செய்கின்றாள். இது, இயேசுவின் கீழ்ப்படிதலைக் குறித்து (மறைமுகமாக) நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

"மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே" என்று மரியாள் கூறின வார்த்தைகளை எடுத்துக் கொண்டு, சிலர், யோசேப்புதான் இயேசுவின் தகப்பன் என்று மரியாள் அறிக்கை பண்ணுகின்றாள் என்று கூறுகின்றனர்/கேள்வி கேட்கின்றனர். இதற்கான நம்முடைய பதில், இல்லை என்பதேயாகும். சில நியாயமான யூகங்கள், என்னவெனில், யோசேப்பு மரியாளை ஏற்றுக்கொண்டபோது, அவளுடைய குமாரனாகிய இயேசுவையும் ஏற்றுக்கொண்டதால் யோசேப்பு, இயேசுவின் வளர்ப்புத் தகப்பன் ஆகிவிட்டார்; ஆகவே, இவ்விதமான சூழ்நிலைகளில் இயேசு, யோசேப்பைப் பெற்றோரில் ஒருவராகக் கருதி, அவரைத் "தகப்பன்" என்று அழைக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டார். மேலும், இயேசுவின் அற்புதவிதமான கர்ப்பம் தரித்தல், குறித்து அவருடைய குடும்பத்தில் மிக நெருக்கமானவர்களுக்குத் தவிர, வேறு எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை, மேலும் பன்னிரண்டு வயதையுடைய இயேசுவிடம் இவ்விஷயங்கள் கலந்து உரையாடுவதற்கு அதிக வாய்ப்பும் இல்லை, ஏற்றதாகவும் இருந்திருக்காது.

சிறுவனாக இருந்த இயேசுவின் மனம், தம்முடைய பரமபிதாவின் மேலும், அவருடைய திட்டத்தின் மேலும் தமக்கு உள்ள பொறுப்புகளை, கடமைகளைக் குறித்து ஆராய்ந்துக் கொண்டிருக்கையில், தம்முடைய பதிமூன்றாம் வருடத்தில், தாம் "நியாயப்பிமாணத்தின் குமாரனாக" ஆகியுள்ளபடியால், இந்த வருடத்தில் தம்முடைய பணிகள் ஆரம்பிக்குமோ, இல்லையோ என்று சிந்தித்திருக்கலாம். இதன் அடிப்படையிலேயே, போதர்களிடமும் இயேசுவினால் கேட்கப்பட்ட கேள்விகள் அமைந்திருக்க வேண்டும். மேலும், ஆசாரிய ஊழியத்தின் நிழல்கள், தாம் முப்பதாவது வயதை அடையும் வரையிலும் பணிகளை ஆரம்பிக்க முடியாதது என்பதைச் சுட்டிக்காட்டியதையும் இயேசு உணர்ந்து முடிவிற்கு வந்திருப்பார். மரியாளின் கடிந்து கொள்ளுதலுக்கு, இயேசுவின் பதில், "நான் என் பிதாவுக்கு அடுத்த விஷயங்களில் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்று இருந்தது; அதாவது, "நான் நியாயப்பிரமாணத்தின் குமாரனுக்குரிய வயதை அடைந்துள்ளதால், என் பரமபிதா மற்றும் அவருடைய வார்த்தைகள் மற்றும் திட்டங்கள் மீது எனக்குச் சில கடமைகள் இருக்கின்றது என்று நீங்கள் அறியீர்களா?" என்ற விதத்தில் பதில் கூறினார். பின்னர், உடனே போதகர்களுடன் விவாதித்த விஷயங்களை நினைவுகூர்ந்ததுபோல, பேச்சை நிறுத்தி, பெற்றோர்களின் விருப்பங்களுக்கு இணங்கி, அவர்களோடு நாசரேத்துக்குப் பிரயாணம் புறப்பட்டது போன்று காணப்படுகிறது. இயேசு, "அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" என்ற வார்த்தைகள், அவருடைய முப்பதாம் வயது வரை சாதாரணமாகவே அவர் ஜீவியம் பண்ணினதை எடுத்துக் காட்டுகின்றது. மரியாளும், யோசேப்பும் இயேசுவானவர் இயல்புக்கு மிகவும் அப்பாற்பட்டவர் என்று தெளிவாக உணர்ந்திருந்தாலும், அவர்களால் சூழ்நிலைகளை முழுமையாகப் புரிந்துக்கொள்ளவும் முடியவில்லை; இயேசுவின் வார்த்தைகளினுடைய முக்கியத்துவத்தை முழுமையாகக் கிரகித்துக்கொள்ள முடியவும் இல்லை என்றாலும், மரியாள் இயேசுவைக் குறித்த விஷயங்களை, சாட்சிகளைத் தன்னுடைய இருதயத்திலே பொக்கிஷமாக வைத்துக் கொண்டாள். மரியாளின் உதடுகளிலிருந்துதான், நம்முடைய பாடத்தின் விஷயங்களை லூக்கா அவர்கள் பெற்றிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இயேசுவின் இளம் பிராயத்திலேயே, யோசேப்பு இறந்துவிட்டார் எனவும், அவருக்குப் பின்னர், குடும்பத்தைத் தாங்குவதற்கு என்று இயேசு தச்சன் வேலையை எடுத்துக் கொண்டார் என்றும் பாரம்பரியம் கூறுகின்றது. "இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லாவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்" (மாற்கு 6:3). இவ்வசனத்தில் யோசேப்பு குறிப்பிடப்படவில்லை. நமது கர்த்தரின் ஊழியம் தொடர்பான விஷயங்களில், அவருடைய தாயாரும், அவருடைய சகோதர சகோதரிகளும் அநேகம் முறை குறிப்பிடப்பட்டாலும், யோசேப்பு குறிப்பிடப்படவே இல்லை. சுமார் 18-வருடங்களாக, அதாவது இந்தச் சம்பவம் நடந்தது முதல், அவருடைய ஞானஸ்நானம் வரையிலுமான இடைப்பட்டக் காலத்தில், இயேசுவின் வாழ்க்கையானது, ஜீவியத்தின் சாதாரணமான/பொதுவான கடமைகளை நிறைவேற்றுவதிலேயே கழிந்தது. இது நமது கர்த்தர் பொறுமையை வளர்த்ததைக் குறித்த படிப்பினையை நமக்குக் கொடுக்கின்றது. நமது கர்த்தர் பிதாவின் நேரம் வரும் வரையிலும், தமது ஊழியத்தை ஆரம்பிக்கும் வரையிலும் பொறுமையோடு காத்திருந்தார். இதற்கிடையில் தம்மால் முடிந்தமட்டும் பிதாவின் சித்தத்தையும், திட்டத்தையும் அதிகமதிகமாக அறிந்துக்கொள்வதற்குக் கற்றுக்கொண்டிருந்தார். மேலும், பரிசுத்தஆவியின் ஞானஸ்நானத்திற்காகப் பொறுமையோடு காத்திருந்தார்; அதாவது, சூழ்நிலைகளை முழுமையாகப் புரிந்துக்கொள்வதற்கும் மற்றும் தமக்கும், தெய்வீகத் திட்டத்திற்கும் இடையே உள்ள உறவைப் புரிந்துக்கொள்வதற்கும், உதவக்கூடியப் பரிசுத்தஆவிக்காக பொறுமையோடு காத்திருந்தார். அவருடைய பின்னடியார்களுக்கு இங்கு எத்துணை பாடம் காணப்படுகின்றது. "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" (யாக்கோபு 1:14). "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபிரெயர் 10:36). நாமும் தெய்வீகத் திட்டத்தைத் துரிதப்படுத்த முயற்சிக்கக் கூடாது என்றும், மாறாக அதன் நிறைவேறுதலுக்காக பொறுமையோடு காத்திருக்க வேண்டும் என்றும், கர்த்தருடைய நியமிக்கப்பட்டுள்ள வேளை வந்துள்ளது எனவும், இவ்வேலைக்காக நம்மை அழைத்துள்ளார் எனவும் நாம் உறுதியடையாமல், எந்த வேலையையும் கர்த்தருக்காக நாம் செய்ய/ஆரம்பிக்கக் கூடாது என்றுமுள்ள பாடங்கள் நமக்கு உள்ளது. மேலும் நாம் நமது கர்த்தர் போன்று, நேரம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நம்முடைய கைக்கு நேரிடுவதை செய்ய வேண்டும்; அதாவது கர்த்தர் நம்மை அழைத்த வேலையை முழுப் பெலத்தோடு செய்ய வேண்டும். தேவனுடைய ஞானத்திற்கு இசைவாக, நம்முடைய பணிவான வேலைகள் காணப்படும்போதுதான், அவைகள் கனமுள்ளதாகக் காணப்படும்.

முப்பது வயதிற்கு கீழ் உள்ளவர்கள் ஊழியம் புரியக்கூடாது என்ற எல்லையை இடும், நியாயப்பிரமாணத்தின் கீழ் நாம் பிறக்காததைக் குறித்துச் சந்தோஷமடைகின்றோம். தெய்வீக விஷயங்களைப் புரிந்துக்கொள்ளும் வயதிலேயே, கர்த்தருடைய ஊழியத்திற்கென்று, நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும் சிலாக்கியத்தை, கிருபையின் உடன்படிக்கை நமக்கு அருளுகின்றது. பூரண புருஷனுக்குரிய சரீர மற்றும் மன வளர்ச்சி வரும் வரையிலும் காத்திருப்பதற்குப் பதிலாக, நாம் உடனடியாக இராஜரிக ஆசாரிய கூட்டமாக நமது வேலையை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். மேலும் நாம் ஊழியம் புரியும், அதே சமயத்தில், வளருவதற்கும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது" என்ற வசனங்களின் விஷயங்களை மறக்காமல் இருப்போமாக (2 பேதுரு 1:5-8). "சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்" (1 கொரிந்தியர் 14:20).

**ஆமென்!**

---

# "யோவான்ஸ்நானனின் பிரசங்கம"

## லூக்கா 3:1-17

### "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்"

அநேக வேதாகம விளக்கவுரையாளர்கள், யேவான் ஸ்நானனின் ஊழியம் கி.பி. 26-இல் ஆரம்பமானது என்று கூறுகின்றனர்; மேலும் இதற்கான ஆதாரமும் அவர்களிடத்தில் இல்லை. ஆதலால், இப்படியான யோவானின் ஊழியத்தின் ஆரம்ப வருடத்தைக் குறித்துக் கணிப்பது முற்றிலும் நியாயமற்றக் காரியம் என்பதை எல்லோரும் மனதில் கொள்ளக்கடவோம். நமது கர்த்தர், அவருடைய உறவினராகிய யோவான் ஸ்நானனைக் காட்டிலும், ஆறு மாதத்திற்கு இளையவர் என்று வேதவாக்கியங்களிலிருந்து தெளிவாகப் புரிந்துக்கொண்டாலும், திபேரியுராயன் இராஜ்யபாரம் பண்ணின 15-ஆம் வருஷத்திலே, யோவான் ஸ்நானன் தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார் என்ற வேதாகம பதிவுகள் போன்று, வேறு எந்த வேதவாக்கியங்களும் நமது கர்த்தருடைய மற்றும் யோவான் ஸ்நானனின் வரலாற்றைப் பொதுவான வரலாற்றோடு இணைப்பதில்லை என்ற விஷயம் மறக்கப்படக்கூடாது. இயேசு தமது ஊழியத்தை கி.பி. 29-ஆம் வருடத்தில் ஆரம்பித்தார் என்பதற்குப் பதிலாக, கி.பி. 27-ஆம் வருடத்தில் ஆரம்பித்தார் என்று கூறுபவர்கள், யோவன் ஸ்நானனின் ஊழியம், கி.பி. 26-ஆம் வருடத்தில் ஆரம்பமானது என்று கூறுகின்றனர், மேலும் தங்களுடைய இந்தக் கூற்றை, லூக்கா 3:1-ஆம் வசனத்திற்கு இசைவாகக் கொண்டுவர வேண்டுமானால், இவர்கள் வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, திபேரியுராயனின் இராஜ்யபாரத்தின் வருடம், 15-ஆம் வருடமாக இராமல், மாறாக 13-ஆம் வருடம் எனக் குறைத்துக் கூற வேண்டிய கட்டாயத்திற்குள் ஆகிவிடுகின்றனர். இந்தப் பாடத்தைக் குறித்ததான விவாதத்திற்கு இரண்டாம் தொகுதியில் பக்கம் 47 (தமிழில்) பார்க்கும்படிப் பரிந்துரைக்கின்றோம்.

யோவானைக் குறித்துப் பார்க்கையில், அவர் பிறப்பின் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார் என்று எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கென்று, கிறிஸ்தவர்கள் ஜெநிப்பிக்கப்பட்டது போன்று, இவரும் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார் என்று நாம் தவறாய்ப் புரிந்துக்கொள்ளக்கூடாது; காரணம் யோவான், பரிசுத்தஆவியினால் ஜெநிப்பித்தல் நடைபெறும் சுவிசேஷ யுகத்தில் வாழாமல், யூத யுகத்தில் வாழ்ந்தவராய்க் காணப்பட்டார். ஆகையால்தான் நமது கர்த்தர், இவரைக் குறித்துக் கூறுகையில், யோவானை விடப் பெரிய தீர்க்கத்தரிசி எழும்பவில்லை என்றாலும், தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாய் இருப்பவன் யோவானைக் காட்டிலும் பெரியவனாய் இருப்பான்; அதாவது, புத்திரர் வீட்டாரில் சிறியவனாய் இருப்பவன், பணிவிடைக்காரர் வீட்டாரில் உள்ள பெரியவனைக் காட்டிலும் உயர்வான தளத்தில் காணப்படுவான் என்று கூறினார் (மத்தேயு 11:11; எபிரெயர் 3:5, 6). "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று அப்போஸ்தலர் விவரிக்கின்றார் (யோவான் 7:39).

மேற்கூறப்பட்டவைகளுக்கு இசைவாக, யூத யுகம் முழுவதும் காணப்பட்ட மற்றத் தீர்க்கத்தரிசிகள் பரிசுத்த ஆவியின் கீழ்க் காணப்பட்டதுபோல, யோவானும் தன்னுடைய பிறப்பு முதல் பரிசுத்த ஆவியினால், பரிசுத்த வல்லமையினால் அல்லது தேவனிடத்திலிருந்து வந்த தாக்கத்தினால் நிரப்பப்பட்டவராக இருந்தார் என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். யோவான், இயேசுவைப் போன்று பரிசுத்தமாகப் பிறக்காவிட்டாலும், அவர் பரிசுத்த ஆற்றலின் கீழ்ப் பிறந்ததால், இவர் செய்ய வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டுள்ள ஊழியத்திற்குத் தேவையாக இயல்பான பண்புகள் அவரிடத்தில் வளர்வதற்கு ஏதுவாயிற்று . ஆனால் அதற்கென்று ஒரு மனுஷனுடைய தனிப்பட்ட சித்தங்களில்/விருப்பங்களில் தெய்வீகக் குறுக்கிடுதல் காணப்படும் என்று நாம் எண்ணிவிடக்கூடாது; காரணம், பவுலும், தான் விசேஷமான வேலைக்கென்று, விசேஷமான ஊழியக்காரனாக தன்னுடைய பிறப்பு முதல் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டதாக நமக்குக் கூறுகின்றார் (கலாத்தியர் 1:15). எனினும், பவுல் தன்னுடைய சொந்த சித்தத்தின்படி நடக்கும் சுயாதீனத்தில், கர்த்தர் குறுக்கிடவில்லை. அவர் குருடாக்கப்பட்டு, சபையைத் துன்பப்படுத்தும் நிலைக்கும் கூட அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும், தமஸ்குவுக்குப் போகிற வழியில், கர்த்தர் அவரைக் கடிந்துகொண்டாலும், இச்சம்பவம், கர்த்தர், பவுலின் சித்தத்தில் குறுக்கிட்டதாக இராமல்,

அவருடைய குருட்டுதன்மையை, அறியாமையை மாத்திரம் மாற்றிவிடுவதாகவும், தன்னுடைய உண்மையான சித்ததை/விருப்பத்தை பவுல் செயல்படுத்துவற்கு அனுமதிப்பதாகவே இருந்தது. இதைப் போலவேதான் ஒவ்வொரு காலக்கட்டத்தில் காணப்பட்ட கர்த்தருடைய ஜனங்களும், ஆரம்ப குழந்தை பருவம் முதல், அவர்களுடைய சித்தங்கள் குறுக்கிடப்படாமல் தெய்வீக நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விசேஷமான கருவிகள் ஆகுவதற்கே தெய்வீகப் பராமரிப்பின் கீழ் விசேஷமாக வைக்கப்பட்டும், வழிநடத்தப்பட்டும் அவர்களின் அனுபவங்கள் வனையப்பட்டும் காணப்படுகின்றனர்.

"அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு இஸ்ரயேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" என்ற பதிவுகளைத் தவிர, குழந்தை பருவம் முதல் வாலிப பருவம் வரையிலான யோவானின் வாழ்க்கையைக் குறித்து நமக்கு எவ்வத பதிவுகளும் இல்லை (லூக்கா 1:80). யோவான், மணற்பாங்கான பாலைவனத்தில் காணப்படாமல், வனாந்தர பகுதிகளில் அதாவது, விவசாயத்திற்கென்று பண்படுத்தப்படாத பகுதிகளில் காணப்பட்டார். அநேகமாக, அவருடைய பிறப்பின்போது, அவருடைய பெற்றோர்கள் காணப்பட்ட "மலைநாட்டில்" அவர் காணப்பட்டிருக்க வேண்டும். யோவான் தனது ஊழியத்திற்குப் பயிற்சி எடுக்கும் வண்ணமாக, கர்த்தருடைய ஏற்பாடு, யோவானுடைய பெற்றோர்களின் வாழ்க்கையில் சில ஒழுங்குகளைச் செய்து; சில சூழ்நிலைகளின் நிமித்தமாக அவர்கள் இப்படியான வனாந்தர பகுதியில் வீடு குடியிருக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலைகளில் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் நிலை குறைவாகக் காணப்பட்டாலும், யோவானுக்கு நியமிக்கப்பட்டுள்ள பணிக்கு அவர் தகுதியாவதற்கான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வனத்தில் தங்குவது யோவானுக்கு ஏற்றதாக இருந்தது. "தேவனை அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்பது கிறிஸ்துவுக்குள் காணப்படும் ஒவ்வொருவருக்கும் பொருந்தும்.

விசேஷமான வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து, அனைத்துக் கிறிஸ்தவர்களும் பரம பிதாவின் வழிநடத்துதலின்மேல் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இவர்கள் தங்களுக்குத் தெய்வீக ஏற்பாடுகள் கொடுக்கும் விஷயங்களில் திருப்தியாய் இருக்க வேண்டும் என்பதையும் நினைவுகூர வேண்டும். மேலும், தங்களுடைய கைக்குக் கிட்டியதையெல்லாம் செய்து முடித்த பின்னர், அமைதியற்றவர்களாகவோ, எரிச்சலை உடையவர்களாகவோ, திருப்தி இல்லாதவர்களாகவோ, தேவனுக்கும், அவருடைய முன்னேற்பாடுகள்/பராமரிப்பிற்கும் எதிராக முறுமுறுக்கிறவர்களாகவோ இராமல், மனநிறைவோடு காணப்பட வேண்டும். "கர்த்தரை நம்பி நன்மை செய்" (சங்கீதம் 37:3). கர்த்தர் நம்மை சில விசேஷமான பணிகளுக்காகத் தனிப்பட்ட விதத்தில் ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கலாம், மேலும், அந்த அனுமதிக்கப்பட்ட அனுபவங்கள் மாத்திரமே, நம்மை அந்தப் பணிக்காக ஆயத்தம் பண்ணவும் முடியும். மகிமையான ஆயிரம் வருட அரசாட்சியில் நம்முடைய அருமையான மீட்பரோடு, உடன் சுதந்திரர்கள் ஆகுவதற்கென்று "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை" தேவனே ஆயத்தம் பண்ணுகின்றார் என்று வேதவாக்கியங்களிலிருந்து நாம் அறிந்திருக்கின்றோம். மேலும் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு" ஏதுவாக நம்முடைய பரிபூரணமற்ற தன்மைகளின் நிமித்தம், நமக்கு அதிகமான வனைதல்கள், செதுக்குதல்கள் மற்றும் மெருகூட்டுதல்கள் தேவைப்படுகின்றது (கொலோசெயர் 1:12). மேலும், நம்முடைய சொந்த பூரணமற்றத் தன்மைகளையே நம்மால் அறிய முடியாதபோது, நமக்கு உதவியாய் இருக்கும் அனுபவங்களையும் கூட நம்மால் அறிந்துக்கொள்ள முடியாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சிலசமயம், நம்மை மற்றவர்கள் பார்க்கிற விதத்தில், நம்மை நாம் பார்ப்பது கூடக் கடினமாக இருக்கும்போது, தெய்வீகக் கண்ணோட்டம் நம்மைப் பார்க்கும் விதத்தில் நாம் நம்மைப் பார்ப்பது, மிகவும் கடினமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தேவன் மீதான விசுவாசம் இங்கு வர வேண்டும். "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவான் 5:4).

யோவான், தன்னை இஸ்ரயேலுக்கு "காண்பிக்கும்" காலமானது, அவர் தமது 30-வது வயதை அடைந்தபோது வந்தது. அப்போது யோவானுக்குத் தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று; இதன் விளைவாக அவருடைய ஊழியம் ஆரம்பமானது. இவ்விஷயத்தை, சுவிசேஷ யுகத்தில் வாழும் நமக்குப் பொருத்துவது போன்று, யோவானின் விஷயத்தில் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. தீர்க்கத்தரிசிக்கு வருவதுபோன்று தேவனுடைய வார்த்தை யோவானுக்கு வந்தது. "யோவானைக் காட்டிலும் பெரிய தீர்க்கத்தரிசி எழும்பினதில்லை" என நமது கர்த்தர் அவரைத் தீர்க்கத்தரிசியெனக் குறிப்பிடுகின்றார். அனைத்துத் தீர்க்கத்தரிசிகளின் விஷயத்திலும் நடந்ததுபோல, யோவானின்

ஊழியம் ஆரம்பிப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்று தேவன், யோவானுக்குத் தெளிவாகவும், உறுதியாகவும் உணர்த்தினார். இந்தத் தன்னுடைய ஊழியத்திற்கு இசைவாக யோவான், யோர்தான் நதிக்கு அருகே உள்ள அடர்த்தியான இடங்களில் தங்கி, மனந்திரும்புதலைப் பிரசங்கித்து வந்தார்; அதாவது ஜனங்கள் மனந்திரும்ப வேண்டும் என்று பிரசங்கித்தார்; மேலும் மனந்திரும்புதலை அறிக்கை பண்ணினவர்களுக்கு, யோர்தானில் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். இதன் காரணமாகவே, யோவான் ஞானஸ்நானத்திற்குப் போதுமான ஆழம் உடைய தண்ணீர்களுக்காகத் தேடினார். உதாரணத்திற்கு, "சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்" (யோவான் 3:23).

ஜனங்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று யோவான் பிரசங்கித்ததாக, பதிவுகளிலிருந்து நாம் தவறாக யூகித்து விடக்கூடாது. இப்படியாக அர்த்தம் கொள்வது என்பது வேதவாக்கியங்களின் ஒட்டுமொத்த சாட்சிக்கும் எதிர்மாறாகக் காணப்படும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பதே வேதவாக்கியங்களின் சாட்சியாக இருக்கின்றது.

ஆனால், பொதுவாக இவ்விஷயங்கள் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது. மாறாக, பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ஆயத்தம் பண்ணுதலை அல்லது மனம் வருந்துதலை அடையாளப்படுத்தும் ஞானஸ்நானத்தைக் குறித்தே யோவான் பிரசங்கித்தார் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். பாவங்கள் நீக்கப்படுவதற்கான காலம் இன்னும் வரவில்லை. மேலும், மனந்திரும்புதலின் மூலமும், ஞானஸ்நானத்தின் மூலமும், பாவங்கள் மன்னிக்கப்படும் என்று அறிவிப்பதற்கு யோவானுக்கு அதிகாரமும் இல்லை, அதிகாரம் கொடுக்கப்படவும் இல்லை. யோவானால் இப்படிப்பட்ட விஷயங்களைக் கூற முடிந்திருந்தால், நமது கர்த்தர் இயேசு உலகத்தில் வந்து, இஸ்ரயேலர்களுக்காகவும், பூமியின் குடிகளுக்காகவும் தம்மை ஈடுபலியாக கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று நிரூபணம் ஆகியிருக்கும். மனந்திரும்புதலும், தண்ணீரில் மூழ்குவதும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, ஒருவேளை போதுமானதாய் இருந்தால், இஸ்ரயேலர்களுக்குத் தேவன் நீண்ட காலமாக வாக்களித்துள்ள மாபெரும் இரட்சகர் அவசியமேயில்லை. மாறாக, ஜனங்கள் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு விருப்பம் கொள்வதற்கும், தேவனுடன் முழுமையாக ஒப்புரவாகிக்கொள்ள விருப்பம் கொள்வதற்கும், மேலும் இவைகள் அனைத்தையும் நிறைவேற்றும் இரட்சகரை எதிர்ப்பார்ப்பதற்கும் ஏதுவாக, ஜனங்களை மனந்திரும்ப ஆயத்தம் பண்ணும் ஆரம்பக்கட்ட வேலையே யோவானின் பணியாகவும், பிரசங்கமாகவும் இருந்தது என்று நாம் எடுத்துக் கொண்டால், எல்லாம் இசைவாய்க் காணப்படும்.

பாவத்தை மன்னிக்கும் இவ்வேலையானது, யோவானுடைய நாட்களுக்குப் பின்னாக உள்ள எதிர்க்காலத்திற்குரியதாகவும், கிறிஸ்துவினால் நிறைவேற்றப்படக் கூடியதாகவும் உள்ளது. இவ்வேலை, ஆயிரம் வருடத்திற்குரிய வேலையாக இருக்கின்றது. இந்த ஆயிரம் வருட காலத்தில் பாவம் மன்னிக்கப்படுகின்றது; மேலும், பாவம் அகற்றப்படுகின்றது; மேலும் புதிய உடன்படிக்கையின் கீழ், கிறிஸ்துவுக்குள்ளான தேவக் கிருபையை ஏற்கிற யாவரும் முழுமையாக ஒப்புரவாக்கப்படுவார்கள் (அப்போஸ்தலர் 3:19-21). அக்காலத்தில், அதாவது சாதகமான சூழ்நிலைகள் காணப்படும்போது, "மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்" என்ற வேதவாக்கியம் நிறைவேறும்; அக்காலத்திற்கு முன்பு இது நிறைவேறுவதில்லை (லூக்கா 3:5).

யோவான் ஸ்நானனுடைய வேலை இஸ்ரயேலர்களுக்கு உட்பட்டதாக இருந்ததே ஒழிய, புறஜாதியாருக்கு உரியதாய் இல்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இஸ்ரயேலர்களுக்கு யோவான், மாம்சத்தில் வரும் மேசியாவிற்குரிய முன்னோடியாக அல்லது எலியாவாக இருந்து, அந்தத் தேசத்தார் இயேசுவை இராஜாவாக ஏற்றுக்கொள்வதன் மூலம் தேவனுடைய இராஜ்யத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக, அவர்களின் அறுவடை காலத்தில் அவர்களைத் தூண்டிவிடுபவராகக் காணப்பட்டார். ஆனால், யோவான் தன்னுடைய தேசத்தாருக்குப் புரிந்த ஊழியத்தில், அதிகம் வெற்றிக் காணவில்லை; மிகச் சொற்பமானவர்களே பலன் அடைந்தார்கள். யோவானின் சாட்சியை நம்பி, அச்சாட்சியை நல்லதும், உண்மையும், மனம்திரும்புதலும் கொண்டுள்ள தங்களுடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்ட அந்தச் சொற்ப ஜனங்களால் மாத்திரமே, இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கும், அவர் மூலம் தேவன் அளிக்கும் பாவமன்னிப்பை உணரவும், ஏற்றுக்கொள்ளவும் முடிந்தது. யோவானுடைய போதகத்தைப் புறக்கணித்த மீதமுள்ள தேசத்தார், மனந்திரும்பாத இருதய நிலையில் காணப்பட்டப்படியால்,

அவர்கள் இயேசுவிற்காக ஆயத்தமாக இல்லை, மேலும் அவருடைய இரத்தத்தின் மூலம் வந்த பாவ மன்னிப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததால், ஒரு தேசமாக அவர்கள் புறக்கணிக்கப்பட்டு, முற்றிலுமாகத் தள்ளப்பட்டுவிட்டனர்.

மாம்சத்தில் வந்த இயேசுவை, மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு, எலியாவைப் போன்று யோவான் அறிமுகப்படுத்தி, இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கும், அவரால் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஆயத்தமாயிருக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைச் சேர்த்துக் கொண்டது போன்று, தெய்வீகத் திட்டத்தில் யோவானைக் காட்டிலும் மாபெரும் நிஜமான எலியா இருக்கின்றார் எனவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவைக் காட்டிலும் (மாம்சம்), மாபெரும் (ஆவிக்குரிய) கிறிஸ்து இருக்கின்றார் என்று நாம் பார்க்கின்றோம். மாபெரும் கிறிஸ்து, ஆவிக்குரியவர் ஆவார். அதாவது, "வானத்திலிருந்து வந்த கர்த்தர்" ஆவார் - "கர்த்தரே ஆவியானவர்." மேலும், இந்த மகிமையடைந்த ஆவியின் ஜீவியாக இருக்கும் கர்த்தர், தமது சரீரமாகிய சபைக்குத் தலையாக இருக்கின்றார். மேலும் இந்தச் சரீரத்தின் அங்கங்கள், முதலாம் உயிர்த்தெழுதலில், அவரைப்போல் ஆக்கப்பட்டு, அவருடைய மகிமையிலும், அவரிலும் பங்கடைவார்கள். மேலும் அவரும், இவர்களும் மகாபெரும் மேசியாவாகக் காணப்பட்டு, மாபெரும் வல்லமையையும், ஆளுகையையும் எடுத்துக் கொண்டு, மனுஷர் மத்தியில் தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, பரலோகத்தில் எப்படிப் பிதாவின் சித்தம் நிறைவேற்றப்படுகின்றதோ, அப்படியே பூமியிலும் நிறைவேற்றப்பட செய்வார்கள் (மத்தேயு 6:10). மனுக்குலத்திற்கு, (தலை மற்றும் சரீரம் உள்ளடங்கிய) ஆவிக்குரிய கிறிஸ்து, மாபெரும் கிறிஸ்து அதிகாரத்தில் வருவதே, இரண்டாம் வருகையாக இருக்கும்; அதாவது, தவிக்கும் சிருஷ்டிகளை விடுவிப்பதற்கான, தேவபுத்திரர்களின் வெளிப்படுதல் ஆகும் (ரோமர் 8:17-19). நமது கர்த்தர், மாம்சத்தில் வந்த முதலாம் வருகை மிக முக்கியமானதுதான். பாவத்திற்காகப் (முதலாம் வருகையில் வந்து) பலிச் செலுத்தப்படவில்லை என்றால், தலையாகிய இயேசு மகிமையான இராஜ்யத்தின் வல்லமையோடு இரண்டாம் வருகையில் வருவதும் மற்றும், அவரோடுகூட அவருடைய சரீரமும் மகிமையடைந்த அங்கங்களாக இருப்பதும் முடியாது என்றாலும், முதலாம் வருகையைக் காட்டிலும் (சரீரமாகிய சபையோடு) தலையாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்பது மிக உன்னதமான தளத்திலேயே காணப்படுகின்றது.

இவ்விரண்டு சம்பவங்களுக்கும் இடையே உள்ள தொடர்பைப் புரிந்துக்கொண்ட பின்னர், மற்றொரு அம்சத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அதாவது, முதலாம் வருகையின் ஆசீர்வாதங்கள், பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்டது போன்று, இரண்டாம் வருகையின் ஆசீர்வாதங்களும் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கே (கிறிஸ்துவ மண்டலம்) கொடுக்கப்பட்டது. மாம்சீக இஸ்ரயேலர்களை ஆயத்தம் பண்ணும் விதமாக அவர்களுக்கு ஒரு முன்னோடி அனுப்பப்பட்டதுபோன்று, அனைத்து பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை இரண்டாம் வருகைக்கு ஆயத்தம் பண்ணும் விதமாக, இரண்டாம் வருகைக்கு முன்னதாக ஒரு மாபெரும் முன்னோடியானவர் வர வேண்டும். ஆவிக்குரிய கிறிஸ்துவின் முன்னோடியாக இருக்கும் இந்த மாபெரும் எலியா, அநேக அங்கங்களை உள்ளடக்கியவர் என்று ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம். இந்த எலியா வகுப்பினருக்கு, மாம்சத்தில் இருந்த இயேசு தாமே தலையாகக் காணப்பட்டார். ஆனால், இந்த உண்மையான பின்னடியார்கள், அவரோடு மகிமையடையும்போது, மகிமையடைந்த கிறிஸ்துவின் அங்கங்களாகக் காணப்படுவார்கள். இவர்கள் மகிமையடைந்த கிறிஸ்துவின் அங்கங்கள் ஆகுவதற்கு முன்பும், தங்களுடைய பூமிக்குரிய ஜீவியத்திலும் எலியா வகுப்பாரில் அங்கங்களாக இருந்திருக்கின்றார்கள். நீதியின் கோட்பாடுகளையும், உண்மையான பரிசுத்தத்தின் கோட்பாடுகளையும் முன்வைத்து, நடத்தை மற்றும் வார்த்தையின் மூலம் சகல மனுஷரையும் மனந்திரும்புதலுக்கு நேராக நடத்துவதற்கு ஏதுவான புத்திமதிகளைக் கொடுத்து, அனைவரையும் இரண்டாம் வருகைக்கு ஆயத்தம் பண்ணுவது, அதாவது மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கும், பாவங்கள் நிஜமாய் அகற்றப்படுவதற்கும், ஒவ்வொரு வளைந்த பாதைகள் நேராக்கப்படுவதற்கும், குணலட்சணங்களின் பள்ளத்தாக்கைச் சமப்படுத்துவதற்கும், பெருமையின் மலைகள், தாழ்மை எனும் சமவெளிகள் ஆக்கப்படுவதற்கும் அதாவது, மாம்சமான யாவரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக்குவதுமே இந்த எலியா வகுப்பாரின் ஊழியமாகும்.

நிழலான எலியாவாகிய யோவான் ஸ்நானனின், சாட்சி தோல்வியைத் தழுவினதைப் போன்று, இந்த மாபெரும் நிஜமான எலியாவின் சாட்சியும் தோல்வியைத் தழுவும் என வேதவாக்கியங்கள் தெளிவாகக் குறிப்பிடும் விஷயங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மாம்சத்தில் காணப்படும் சபையானது, கர்த்தர் பூமியின் மீதான இராஜ்யத்தில் வருவதற்கென, அவருக்குச் செம்மையான பாதைகளை ஏற்படுத்துவதில் வெற்றிக் கொள்ளவில்லை. மிகச்

சொற்பமானவர்களே செவிசாய்த்துள்ளனர்; மீதமுள்ள பெரும்பான்மையான ஜனங்களிடத்திலும், இராஜ்யத்திற்குக் காத்திருக்கின்றோம் என்று அறிக்கைப் பண்ணுகிற (கிறிஸ்துவ) ஜனங்களிடத்திலும், இச்செய்தி தோல்வியையே சந்தித்தது. இரட்சகருக்காகவும், முதலாம் வருகையின் மூலம் அவர் அவர்களைச் சந்திக்கும் காலத்தை அறியாமலும், ஆயத்தமாய் இராமலும் காணப்பட்ட மாம்சீக இஸ்ரயேலர்கள் மீது வந்தது போன்று, இந்த யுகத்தின் முடிவில், அல்லது அறுவடையின் காலக்கட்டத்தின்போது கிறிஸ்துவ மண்டலத்தின் மீது உபத்திரவங்கள், நாசங்கள், அழுத்தங்கள் வந்திட்டாலும், இறுதியில் தேவனுடைய அனைத்து நல்நோக்கங்களும் நிறைவேறித் தீரும். இந்த ஆயத்தமில்லாத நிலைகள் ஒன்றும், மேசியாவின் வேலையைத் தடைப்பண்ணுவதில்லை. முதலாம் வருகையின்போது, அவர் உண்மையுள்ள அனைத்து இஸ்ரயேலர்களையும் சேர்த்து, புதிய யுகத்திற்குள்ளாக நடத்தினார். அதைப்போலவே, இப்பொழுதும் அவர் தெரிந்துக்கொள்ளப்பட்ட "சிறுமந்தையினரை" தம்மிடத்தில் சேர்த்துக் கொண்டு, தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். இந்த இராஜ்யம் முழுமையாக எல்லாவற்றையும் ஆளும். இந்த இராஜ்யமானது, ஒவ்வொரு வளைந்த நெளிந்த பாதைகளைச் செம்மையாக்கி, நீதி மற்றும் பரிசுத்தத்தின் பாதையைச் சமப்படுத்தி, இந்தப் பாதையை, சாத்தானின் வஞ்சனை மற்றும் தப்பறைகள் எனும் தடுக்கலின் கற்கள் அற்ற "பெரும்பாதையான" வழியாக ஆக்குகின்றது (ஏசாயா 35:8, 9). சத்தியத்தின் அறிவிற்குள்ளாகக் கொண்டு வரப்பட்ட முழு மனுக்குலமும், திரும்பக்கொடுத்தலின் காலங்களில் இந்த மகிமையான கீழ்ப்படிதலின் பெரும்பாதையில் பிரவேசித்து, தகப்பனாகிய ஆதாமின் மீறுதலினால் அவரும், அவருடைய சந்ததியும் இழந்துபோனதும், கிறிஸ்து தம் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததிக்காகவும் மீட்டுக் கொண்டதுமானவைகளைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். மாம்சமான யாவரும், நமது தேவனின் இரட்சிப்பைக் காண்பார்கள்; ஏனெனில், உண்மையான ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததியாராகிய கிறிஸ்து மற்றும் அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் மூலம், தேவன் பூமியின் குடிகளுக்கு அளித்த ஆசீர்வாதம் இதுவே ஆகும் (கலாத்தியர் 3:16, 29).

யோவானிடம், விநோதமான தோற்றமும், மிக எளிமையான பேச்சுகளும் காணப்பட்டாலும், ஆரம்பத்தில், அவருடைய ஊழியம் மிகப் பிரபலமாகக் காணப்பட்டது. அவரிடம் திரளான ஜனக்கூட்டம் வந்தது. அப்படி வந்தவர்கள் மத்தியில், சிலர் சரியான நிலையில் இல்லாததால், அவர்கள் மனந்திரும்பினதற்கான அடையாளம் வெளிக்காட்டாத வரையிலும் அவர்களை ஏற்றுக்கொள்ள, யோவான் மனதாய் இருக்கவில்லை. இத்தகையவர்களை அவர் "விரியன் பாம்புக்குட்டிகளே" அன்று அழைக்கின்றார்; இது மிகவும் கடினமான வார்த்தையாகும். இன்றைய காலத்துக் கர்த்தருடைய ஜனங்கள், இவ்விதமான வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக, அந்தக் காலக்கட்டத்தில் இவ்விதமான கடினமான கடிந்துக் கொள்ளுதலைக் கொடுக்கும்படி, தீர்க்கத்தரிசியான யோவான், தெய்வீக விதத்தில் வழிநடத்தப்பட்டார் என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். சுவிசேஷ யுகத்தில் கர்த்தருடைய ஜனங்கள் சாந்தத்துடனும், பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும் பேச வேண்டும் என்று போதிக்கப்பட்டிருக்கின்றார்கள்; "எதிர்ப்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்" (2 தீமோத்தேயு 2:25, 26). "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" (2 தீமோத்தேயு 4:2). முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகள் இவ்வாறு பேச அனுமதிக்கப்பட்டது போன்று, கர்த்தருடைய ஜனங்கள் இப்படியாகப் பேசுவதற்கு விசேஷமான வழிநடத்தல் இல்லாதது வரையிலும், சாந்தத்துடனேயே பேச வேண்டும். முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகள் இவ்வாறு பேசுவதற்கு அனுமதிப் பெற்றது போன்று, தற்காலத்தில் எவருக்கும் அனுமதிக் கொடுக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம்.

"வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?" என்று யோவான் தனக்குச் செவிசாய்ப்பவர்களுக்குக் கூறினதை, நாம் நித்தியத்திற்குரிய சித்திரவதை பற்றின உபதேசத்தை அவர் போதித்தார் என்றோ அல்லது அதை ஜனங்கள் விசுவாசித்திருந்தார்கள் என்றோ புரிந்துக்கொள்ளக்கூடாது. அவருடைய வார்த்தைகள் இதைப் பற்றினது என்றும் நாம் எண்ணக்கூடாது. வேதவாக்கியங்களில் ஒன்றும் இவ்விதமாகப் போதிப்பதில்லை. இன்னும் கொஞ்ச காலத்தில் வெளிப்படப்போகும் மேசியாவை, இஸ்ரயேல் ஜனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், உண்மையான மனந்திரும்புதலுடனும்,

ஞானஸ்நானத்தினாலும் அவருக்கு ஆயத்தமாகவில்லையெனில், அவர்கள்மேல் வரவிருக்கிற உபத்திரவத்தைக் குறித்தே, யோவான் "வருங்கோபம்" என்று தீர்க்கத்தரிசனமாக உரைத்தார். நமது கர்த்தரும், அப்போஸ்தலனாகிய பவுலும் கூறினதுபோல, இஸ்ரயேல் ஜனங்கள், மேசியாவைப் புறக்கணித்த காரணத்தினால் அந்தத் தேசத்தார் மீது "கோபம்" வந்தது (லூக்கா 21:23; ரோமர் 9:22; 1 தெசலோனிக்கேயர் 2:16). அக்கோபம் அவர்கள் மேல் கொழுந்து விட்டு எரிந்து; கி.பி. 69 முதல் கி.பி. 70-இல் தேசமே குலைந்துப் போயிற்று, மேலும் அவர்கள் அக்கோபத்தின் கீழே காணப்படுவதால், அவர்கள் மீண்டுமாகத் தங்களை ஒரு தேசமாக ஸ்தாபிக்க முடியவில்லை.

யோவான் பிரசங்கிக்கும் போது, அவருக்கு ஒரு கஷ்டம் இருந்தது; அதென்னவெனில், யோவானுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், தாங்கள்தான், தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட மகிமையடைதலுக்கு உரியவர்களும், தேவனால் விசேஷமாகத் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுமானவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர். மேலும், உலகத்தில் வேறெந்த சிறந்த ஜனங்களும் இல்லாததால், சிறந்தவர்களாகிய தங்களைவிட்டு, வேறு எவரையும் தேவன் தெரிந்தெடுக்க மாட்டார் என்ற அனுமானமும் காணப்பட்டது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு அவர் சிலரைத் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்றும், தாங்கள் நியாயப்பிரமாணத்திற்கு வெளிப்புறமாக அதிகம் கீழ்ப்படிபவர்களாக மாத்திரம் இராமல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் மாம்ச சந்ததியாயும் இருக்கின்றோம் என்றும் இவர்கள் எண்ணினார்கள். இதைப் போலவே பரிசுத்தத்திற்கடுத்த உபதேசத்திற்கும், கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணித்தலுக்கடுத்த போதனைக்கும் எதிரான கோட்பாடுகளே இன்றைய கிறிஸ்துவமண்டலம் முழுவதும் காணப்படுகின்றது. இஸ்ரயேல் ஜனங்களிடம் காணப்பட்ட அதே தவறுதான், கிறிஸ்துவமண்டலத்திடமும் காணப்படுகின்றது. கிறிஸ்துவ ஜனங்களின் மனதில் ஒரு தவறான கோட்பாடு ஏற்பட்டு, அது கர்த்தரின் தயவைப் பெற பரிசுத்தம் அவசியப்படாது என்று அவர்களைச் சிந்திக்க நடத்தினது. இவர்களுடைய கோட்பாடின் விஷயமாவது:- "உலகத்தில் உள்ள ஆயிரத்து 600 மில்லியன் ஜனத்தொகையில், - 300 மில்லியன் ஜனங்கள் மாத்திரமே கிறிஸ்துவர்கள் என்று அறிக்கை பண்ணியுள்ளனர்; இந்த 300 மில்லியன் ஜனங்களில் கிரேக்க, ரோம கத்தோலிக்கர்களும், குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர். தேவன், நிச்சயமாக சிலரை ஏற்று/எடுத்துக்கொள்ள விரும்புவார். ஒருவேளை அவர் எல்லா வகை கிறிஸ்துவர்களை எடுத்துக்கொண்டாலும், அவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படும். ஒருவேளை பிசாசிடம் இருப்பவர்களைக் காட்டிலும் அதிகம் எண்ணிக்கை வேண்டும் என்பது மாத்திரம் தேவனுடைய நோக்கமாக இருக்குமாயின், தங்களைக் கிறிஸ்துவர்கள் என்று அறிக்கை பண்ணியும், கொஞ்சம் மாத்திரமே நல்லவர்களாக இருப்பவர்களையும் கூட அவர் புறக்கணியாமல், ஏற்றுக்கொள்வார். இப்படியாகக் கர்த்தருக்கு முன்பு பரிசுத்தம் கொண்டிருப்பதும், வார்த்தையிலும், எண்ணத்திலும்,கிரியையிலும் பரிசுத்தம் கொண்டிருப்பதும் தெய்வீகத் தயவைப் பெற அவசியப்படாது என்று அனுமானித்து, இவர்கள் எல்லையை/வரம்பை மீறுகின்றனர்". "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்"என்றும், "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்கக் கூடாது" என்றதுமான வாக்கியங்கள், இத்தகையவர்களுக்கு மிதமிஞ்சினதாய்த் தோன்றுகின்றது; மேலும் இவ்வசனங்கள் புறக்கணிக்கப்படவும்படுகின்றது, இல்லையேல், "பரிசுத்தம்" என்ற வார்த்தையின் அர்த்தம் இவர்களைப் பொறுத்தமட்டில், வெளிப்படையாக அல்லது கொடூரமான தீங்குச் செய்யாமையைக் குறிக்கின்றதாகும்.

ஆகவே, நிஜமான எலியா, பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு ஊழியம் புரியும்போது சந்தித்த அதே பிரச்சனைகளையே, யூதர்களின் நிஜமான எலியாவும் சந்தித்தார் என்று நாம் பார்க்கின்றோம். ஆனால், யோவானின் பதிலைக் கவனித்துப் பாருங்கள்; அவர் நிபந்தனைகளை மிகவும் கண்டிப்புடன் கூறினார்; அதாவது, தேவன் உங்களை ஏற்றுக்கொள்ளும் கட்டாயத்தில் இருக்கின்றார், இல்லையேல் அவர் உரைத்த வார்த்தைகள் விருதாவாய்ப் போய்விடும் என்று எண்ணி, நீங்களே உங்களை ஏமாற்றிக்கொள்ளாதீர்கள்; மேலும், உங்களைக் காட்டிலும் பரிசுத்தமான ஆபிரகாமின் பிள்ளைகளை, தேவனால் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் காரணத்தினால், அவர் உங்களைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். தேவன் வல்லமையிலும், ஆதாரத்திலும் எல்லையில்லாமல் விளங்குபவர் ஆவர். ஒருவேளை தேவைப்படுமாயின், இந்தக் கல்லுகளிலிருந்தும் கூட, அதாவது, ஆபிரகாமின் சந்ததியாகும் வாய்ப்புக்குத் தூரமாயும், ஆபிரகாமின் சந்ததியின் பாதங்களுக்கு கற்கள் போன்றும் இருப்பவர்கள் மத்தியிலிருந்து, ஆபிரகாமுக்கு பிள்ளைகளை எழுப்ப தேவனால் கூடும் என்று யோவான் ஸ்நானன் கூறினார். மேலும், இதே பதிலைத்தான் நாமும் இன்று,

“கிறிஸ்துவ மண்டலத்தாருக்கு” அளிக்கின்றோம்; அதாவது, இவ்வுலகத்தின் அதிபதியினால் இன்னமும் குருடாக்கப்பட்டவர்களும், தேவனையும், அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும், அவர்களின் உண்மையான குணலட்சணங்களையும் அறியாதவர்களுமாய்க் காணப்படுகின்ற தங்களைக் கிறிஸ்துவர்கள் என்று அறிக்கை பண்ணுகிறவர்களான மாய்மாலமான கிறிஸ்தவர்களை, தேவன் முழுமையாகப் புறக்கணிக்கின்றார்; காரணம், அவர்களுடைய இருதயத்தில் பரிசுத்தமும் இல்லை, கர்த்தருக்கென்று தங்களை முழுமையாக அர்ப்பணிக்கவும் இல்லை என்பதினாலேயே ஆகும் என்று நாமும் பதிலளிக்கின்றோம். நமக்கு எக்காளம் போன்ற சத்தம் இருக்குமாயின், நாம் மில்லியன் கணக்காகக் காணப்படும் பெயரளவிலான கிறிஸ்துவ மண்டலத்தாருக்கு, அவர்களது உண்மையான நிலைமையை எடுத்துக் கூறியிருப்போம்; அவர்களும் கேட்பதற்கென்று தங்கள் செவிகளை, விருத்தசேதனம் பண்ணி, மனந்திரும்பி, மகா உபத்திரவக் காலத்திற்குள் பிரவேசிக்கக் கட்டாயப்படுத்தப்படாமலேயே, வரவிருக்கின்ற மகிமையான விஷயங்களுக்கு ஆயத்தப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு நாம் பின்வருமாறு நிச்சயமளித்திருக்க முடிந்திருக்கும்; அதாவது தேவன், தாம் நிர்ணயித்துள்ள தெரிந்துக் கொண்டவர்களைக் கண்டுபிடிப்பார் என்றும், அந்த முழுமையான எண்ணிக்கை நிறைவடைய இப்பொழுது அண்மையில் உள்ளது என்றும், இந்தத் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய “சிறுமந்தையிடமே” இராஜ்யத்தைக் கொடுப்பது, பிதாவுக்குப் பிரியமாய் இருக்கின்றது என்றும், இவர்கள் தங்கள் மகிமையடைந்துள்ள கர்த்தராகிய தலையோடு சேர்ந்து மகிமை அடையும்போது, பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கென, ஸ்தாபிக்கப்பட்ட இராஜ்யம் வெளிப்படும் என்றும் நாம் நிச்சயமளித்திருக்க முடிந்திருக்கும். ஆனால், ஒரு ஜாதியாரும் பார்த்திராத மகா உபத்திரவக் காலத்தின் மூலமே அவர்களுக்கு இராஜ்யம் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய நிலையில் அவர்கள் காணப்படுவதினால், நாம் அவர்களுக்காக, ஆழ்ந்த அனுதாபம் கொள்கின்றோம் (தானியேல் 12:1, மத்தேயு 24:21).

யோவான் ஸ்நானன் இப்படியாக பேசிக் கொண்டிருக்கையில், தான் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த யூதர்களுக்கு, அவர்கள் தேசம் மீது நியாயத்தீர்ப்பு வர சமீபித்துள்ளது என்று கூறினார். கோடாரியானது, மரத்தினுடைய வேர்களின் மீது வைக்கப்பட்டுள்ளது. உத்தம இஸ்ரயேலன் அல்லாத எவனும்/ஒவ்வொரு இஸ்ரயேலனும் வெட்டப்பட்டு, அந்த யுகத்திற்கு வரப்போகிற உபத்திரவமாகிய அக்கினியில் போடப்படுவான். தேசமே அழிவுக்குள்ளாகப் போய்விடும். யூத ஜனங்கள் மத்தியில் நமது கர்த்தரின் 3½ வருட ஊழியமும், இறுதியில் அவர், அவர்களைப் புறக்கணிக்கும் விஷயங்களும், கனிகொடாத அத்திமரத்தின் உவமையில் வெளிப்படுகின்றது; மேலும், இது யோவான் ஸ்நானகன் மேலே கூறியுள்ள விஷயங்களுக்கு இசைவாய்க் காணப்படுகின்றது. “அப்பொழுது அவர் ஓர் உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்: அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்” (லூக்கா 13:6-9).

யோவான், சரியான விதத்தில் பயத்தை ஏற்படுத்தினார். மீறுபவர்கள் முன், சத்தியத்தை முன்வைப்பதற்குச் சரியான விதமும், தேவன் மீதான சரியான பயத்தை ஏற்படுத்துவதற்கும், அவர்களுக்குரிய தண்டனையை முன்வைக்கும் விதமும் உள்ளது. ஆனால், இந்தப் பயம், பயமுறுத்தும் நித்தியத்திற்குரிய சித்திரவதையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இந்தத் தவறான உபதேசங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இன்று அனைத்து இறையியல் போதனைகளிலும் காணப்பட்டு, சிலரைப் பைத்தியமாகவும், சிலரை நாத்திகராகவும் மாற்றியுள்ளது, அநேக பரிசுத்தவான்கள் நமது தேவனுடைய திட்டத்தையும், உண்மையான குணலட்சங்களையும் உணர்ந்து கொள்ள முடியாத நிலைக்குப் போகவும் செய்துள்ளது. வரவிருக்கிற கோபத்தைக் குறித்து முன்வைக்கும்போது, நமது தேவனுடைய குணலட்சணங்களைத் தவறாய்க் காட்டாத வண்ணம் முன்வைப்போமாக. தேவனுடைய பரிசுத்தமான நாமத்தைத் தூஷிப்பவர்களை, அவர் தவறு செய்தவர்களாகவே பார்க்கின்றார்.

யோவானின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள், தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்க ஆரம்பித்தபோது, அவர்கள் நீதி, இரக்கம், அன்பு, தாராளம் முதலியவற்றைக் காட்ட வேண்டும் என்றும், வன்செயல், பயமுறுத்திப் பிடுங்கும் விஷயங்களைத் தவிர்த்து, தங்களிடத்தில் உள்ளவைகளில் திருப்திக்கொள்ளவேண்டும் என்றும் போதித்தார். இது அருமையான ஆலோசனையாகும் ; மேலும், இவைகளைப் பின்பற்றினவர்கள், கர்த்தராகிய இயேசுவையும், அவருடைய இரத்தத்தின் மூலம் வரும் பாவமன்னிப்பு மற்றும் இதன்மூலம் பிதாவுடன் ஒப்புரவாகுதல் குறித்ததான நற்செய்தியையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதான, சரியான இருதயம் மற்றும் மனநிலையில் காணப்பட்டிருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதுபோல இந்த யுகத்தின் முடிவில், "கிறிஸ்துவ மண்டலத்தின்" மீது வரப்போகும் கோபத்தைக் குறித்து நம்மிடம் எவராகிலும் கேட்டால், நாம் என்ன செய்ய வேண்டும்? நீதியை, உண்மையை, அன்பை, இரக்கத்தை நடப்பித்து, கர்த்தரிடத்தில் நம்பிக்கைகொண்டு, அவருடைய வழிகளில் நடக்க நாடுங்கள் என்பதே அவர்களுக்குரிய நமது பதிலாகும் அல்லது "தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள், நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள் அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்" என்று அவர்களுக்குக் கூறுவோம் (செப்பனியா 2:3). மேலும் இப்படியாக நீதியானவைகளை நாடுபவர்கள் நமது இராஜாவையும், அவருடைய இராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்ள/வரவேற்க ஆயத்தமாய் இருப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம். மேலும், இந்த அறுவடையின் காலத்தில் சிலர் தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்தாமல், கிரீடத்திற்கு அபாத்திரமாய்ப் போகிறவர்களாக இருப்பார்கள். கர்த்தரோ, தமது தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக இப்படி அபாத்திரமாய்ப் போனவர்களின் இடத்தில், அவர்களுக்குப் பதிலாக, மேற்கூறிய நீதியைத் தேடுபவர்களில் சிலரைத் தெரிந்துக்கொள்ளப் பிரியப்படுவார்.

யோவான், சத்தியத்தை முன்வைத்த விதம் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தபடியால், இவர்தான் வரவிருக்கிற மேசியாவாக இருப்பாரோ, இல்லையோ என்று ஜனங்கள் சிந்திக்கத் தொடங்கினர். ஆனால் யோவானோ, தான் மேசியாவுக்கு மிகவும் கீழானவர் என்றும், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கும் சிறு வேலைக்குரிய கனத்தைப் பெறுவதற்குக் கூட, தான் பாத்திரவான் அல்ல என்று கூறி, அவர்களின் சிந்தனையை மாற்றிப்போட்டார். மேசியாவின் அம்சத்தைச் சிறிதளவில் அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தின பின்பு, மேசியாவின் வேலை குறித்தும், தன்னுடைய வேலையைக் காட்டிலும், மேசியாவின் வேலை பெரியது என்றும், அவரை ஏற்றுக்கொள்பவர்கள், பெரிதான ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வார்கள் என்றும் கூறினார். "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத்தேயு 3:11).

அவர்கள் அவருடைய யுகத்திற்குரிய அறுவடை காலத்திற்கு வந்துள்ளனர் என்றும், இப்பொழுது ஒரு பிரித்தெடுத்தலை அதாவது, உண்மையான கோதுமை, பதரிலிருந்து பிரித்தெடுக்கப்படுதலை எதிர்ப்பார்க்கலாம் என்றும், அவர்களுக்கு யோவான் விளக்கினார். கோதுமையைப் பதரிலிருந்து பிரிக்கத்தக்கதாக, தூற்றுக்கூடையினால் புடைத்து எடுப்பதற்கு, இஸ்ரயேலுடனான நமது கர்த்தரின் வேலையை, யோவான் அடையாளப்படுத்திக் காட்டினார். எவ்வளவு அழுத்தம் மிக்கதாக அந்த உதாரணம் காணப்பட்டது! எவ்வளவு அருமையான உண்மை! நமது கர்த்தர் அந்த ஜனங்களிடமிருந்து, அனைத்து உண்மையான கோதுமையையும் சேகரித்துக் கொண்டார் என்பது உண்மையே. எந்த ஒரு கோதுமை மணியும் தொலைந்துப் போகவில்லை என்பதில் நாம் நிச்சயம் கொள்ளலாம். அனைத்துக் கோதுமை மணியும் அவருடைய களஞ்சியமாகிய பாதுகாப்பான இடத்தில், அதாவது, இன்னுமொரு மேலான யுகத்திற்குள் சேர்க்கப்பட்டுவிட்டது. இவர்களே, சுவிசேஷ யுக சபையின் முதல் அங்கங்கள் ஆவர். இந்தக் கோதுமை வகுப்பார் மீதே, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி வந்து, அது முதல், உண்மை சபையோடு பரிசுத்த ஆவிக் காணப்பட்டது. கோதுமை புடைக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்டு, களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்னர், காலம் வந்தபோது அணைக்க முடியாத அக்கினியால், பதர் சுட்டெரிக்கப்பட்டது. ஒன்றினாலும் தடுக்க முடியாத உபத்திரவக் காலமாக அவர்களுக்கு அது இருந்தது. இஸ்ரயேல் தேசத்தின் அழிவைத் தடுக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அவைகள் அனைத்துமே தோல்வியையே தழுவினது என்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். ரோம சக்கரவர்த்தி, அந்தத் தேசத்தைப் பாதுகாக்கவும், அங்கு

ஒழுங்குகளை ஏற்படுத்தவும் விரும்பி, ரோம படைகள் அவர்களை அழிப்பதற்கு அல்லாமல், அவர்கள் மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்த அங்குச் சென்ற போதும் கூட, தோல்வியே வந்தது. கர்த்தர் தாம் கொழுத்தி விட்ட அக்கினியானது எந்த வல்லமையினாலும் அணைக்கப்படாமலும் இருக்க வேண்டும் என்றும், அக்கினியானது அதன் முழு வேலையையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் கட்டளையிட்டபடியால், அது அப்படியே செய்திற்று.

இப்படியாகவே, இந்தச் சுவிசேஷ யுகம் முடிவடையும் போது வரும் மகா உபத்திரவத்தின் அக்கினியும் காணப்படும். இந்த அக்கினிக்குள், கிறிஸ்துவ மண்டலத்தாரின் "களை" வகுப்பாரும் போடப்படுவார்கள். மகா உபத்திரவமாகிய இந்தக் கோபத்தின் நாளில் அநேகர் மரித்துப் போனாலும், அனைத்து ஜீவன்களின் அழிவாக அது காணப்படுவதில்லை. எனினும், அது குழப்பம் என்ற அக்கினியின் மூலம், பூமிக்குரிய அரசாங்கத்தையும், சபை அமைப்புகளையும் முழுமையாக அழித்துப்போடும். தற்கால அமைப்பின் முழு அழிவைக் கொண்டு வரும் இந்த அக்கினியை எதுவும் அணைத்துப் போட்டுவிட முடியாது. ஆனால் இந்த அக்கினியானது, தற்கால அமைப்புகளின் வஞ்சனைகளையும் மற்றும் தப்பறைகளையும் முழுமையாகப் பட்சித்துப் போட்ட பின்னர், இது தேவன் தமது வரவிருக்கிற இராஜ்யத்தின் மூலம் வரும் மாபெரும் ஆசீர்வாதங்களுக்குரிய ஆயத்தங்களைச் செய்து காணப்படுவதினால், தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த அக்கினியும், அதைத் தொடரும் ஆசீர்வாதங்களும் விசேஷமாகச் செப்பனியா 3:8, 9-ஆம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்."

**ஆமென்!**

---

# “அர்ப்பணிப்பைப் பின்தொடர்ந்த சோதனைகள்”

## மத்தேயு 3:13-4:11.

“இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்.”

யோவான் பிரசங்கித்தும், ஞானஸ்நானமும் கொடுத்தும் கொண்டிருக்கையில், ஆறு மாதங்களுக்குப் பின்னர், அதாவது, கி.பி. 29-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத அளவில், கலிலேயாவில் வசித்துக் கொண்டிருந்த இயேசு, அவருடைய 30-வது பிறந்தநாள் சமீபித்து வருகையில், யோவானைக் கண்டுபிடிக்கவும், அவரிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும், விரைவாகத் தமது பொதுப்படையான ஊழியத்தை ஆரம்பிக்கவும் வேண்டி புறப்பட்டார். அவர் தமது ஜனங்களுக்கு ஆசாரியனாகவும், இராஜாவாகவும் இருக்கப் போகிறார். அதாவது, மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்தின்படி இருக்கப் போகின்றார். மேலும், நியாயப்பிரமாணத்தின்படி ஒருவர் ஆசாரியர் ஆகுவதற்கு 30-வயதையாகிலும் அடைந்திருக்க வேண்டும். ஆகவேதான் இந்த வயதை அடையும் வரை, இயேசு தமது ஊழியத்தை ஆரம்பிக்க முடியாமல் இருந்தார். ஆனால், அந்தச் சமயம் வந்தபோதோ, அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கான சுயாதீனம் அவருக்கு இருந்தது.

இயேசு, தமது உறவினனான யோவான் ஸ்நானனோடு நன்கு பழக்கம் கொண்டிருந்திருக்க வேண்டும்; இவரும், இயேசுவின் நேர்த்தியான ஜீவியத்தையும், குறைவற்ற குணலட்சணங்களையும் அறிந்திருப்பார். ஆகையால்தான், இயேசு தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வரும்போது ஆச்சரியம் அடைகின்றார். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு யோவான் எதிர்பார்த்த ஜனங்கள் பாவமுள்ள வகுப்பாரே ஆவர். “நான் உம்மிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டி இருக்க, நீர் என்னிடத்தில் வரலாமோ?” என்ற அர்த்தத்தில் யோவான் இயேசுவைத் தடை பண்ணினார். இயேசுவிடம் பாவம் இல்லாதக் காரணத்தினால், இவ்விதமான ஞானஸ்நானம் இயேசு எடுப்பது சரியல்ல என்று யோவான் எண்ணினார். ஏனெனில், யோவானின் ஞானஸ்நானம், கிறிஸ்தவனின் ஞானஸ்நானமாக இராமல், மனந்திரும்புதலின் ஞானஸ்நானமாக மாத்திரம் இருந்தது (அப்போஸ்தலர் 19:4, 5-ஆம் வசனங்களைப் பார்க்கவும்).

நமது கர்த்தர், தாம் ஒரு புதிய ஞானஸ்நானத்தை அறிமுகப்படுத்தப் போகிறார் என்றோ, அது பாவிகளுக்குரியதாய் இராமல், பரிசுத்தமானவர்களுக்கு உரியது என்றோ, இந்தப் புதிய ஞானஸ்நானம் எவ்விதத்திலும், பாவம் சுத்திகரிப்படுவதைக் குறிக்காமல், மற்றவர்களுடைய பாவங்களுக்கான பலியின் மரணத்தையே அடையாளப்படுத்துகின்றது என்றோ, யோவானுக்கு எடுத்துக்கூற முற்படவில்லை. அது கிறிஸ்துவ ஞானஸ்நானத்தைக் குறித்து விளக்குவதற்குரிய ஏற்றக் காலமல்ல. ஒருவேளை விளக்கியிருந்தாலும், அது யோவானையும், சுற்றி நின்று கேட்டவர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தி, எவ்வித பயனும் அளித்திருந்திருக்காது; காரணம் புதிய ஞானஸ்நானமானது பெந்தெகொஸ்தே நாள் முதல் ஆரம்பிக்கவிருக்கும் புதிய யுகத்திற்குரியதாகும். இன்று பெரும்பான்மையான கிறிஸ்துவ ஜனங்கள், நமது கர்த்தரால், முதலாவது அடையாளமாகப் பண்ணப்பட்ட கிறிஸ்துவ ஞானஸ்நானமாகிய புதிய ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள தவறி, இன்றளவும் பாவமன்னிப்புக்கென்று, யோவானுடைய ஞானஸ்நானத்தை அனுசரித்துவரும் விஷயத்தின் மீது இங்கு, நமது விசேஷமான கவனத்தைத் திருப்புவது நல்லது என நாம் எண்ணுகின்றோம்.

நமது கர்த்தராகிய இயேசு பரிசுத்தரும், பாவமில்லாதவரும், மாசற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமானபடியால், கழுவப்படுவதற்கு அவரிடத்தில் எந்தப் பாவமும் இல்லை என்றும், இதன் காரணமாக மனந்திரும்புதலுக்கு ஏதுவான யோவானின் ஞானஸ்நானம், இயேசுவுக்கு பொருத்தமற்றது/அர்த்தமற்றது என்றுமுள்ள வேதவாக்கியங்களின் அடிப்படையிலான கருத்தை, சீஷர்களாகிய நமது நண்பர்கள் மறுப்பதில்லை. ஆகவே பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானத்தை, நமது கர்த்தர் இயேசு எடுத்துக்கொள்வது என்பது பொருத்தமானதாய் இருக்காது; பாவமன்னிப்புக்குத்தான் ஞானஸ்நானம் என்று யோவான் புரிந்துவைத்திருந்தார். ஆனால்

அவருக்குள் பாவம் இல்லாதபடியால், அவர் எடுத்துக்கொண்ட ஞானஸ்நானம், புதிய வகை/ஒழுங்கின்படியான ஞானஸ்நானம் ஆகும். இவ்விதமான ஞானஸ்நானம், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு, அவருடைய பின்னடியார்களால் பின்பற்றப்பட்டது (அப்போஸ்தலர் 19:4, 5). கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளுக்கு மாத்திரமே உரியது. மாறாக, அவிசுவாசிகளுக்கும், பாவிகளுக்கும் உரியதல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும். கிறிஸ்துவின் மேல் கொள்ளும் விசுவாசமே, நீதிமானாக்குவதற்குரிய வல்லமையாக இருக்கின்றது. அவருடைய இரத்தத்தின் மேலான நமது விசுவாசத்தின் காரணமாக நாம் நீதிமானாக்கப்படுகின்றோம். நாம் நீதிமானாக்கப்பட்ட பிறகே, நாம் கிறிஸ்தவனுக்குரிய ஞானஸ்நானத்திற்குத் தகுதியடைகின்றோமே ஒழிய நீதிமானாக்கப்படுவதற்கு முன்பு அல்ல; மேலும் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கும்போது, நம்மிடத்தில் கழுவுவதற்கு எந்தப் பாவமும் இருப்பதில்லை. ஏனெனில், "விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான்" (அப்போஸ்தலர் 13:39). ஞானஸ்நானம் என்பது கர்த்தருக்கு எதைக் குறிக்கின்றதாய் இருந்ததோ, அப்படியாகவே ஒரு கிறிஸ்துவ விசுவாசிக்கும் காணப்படுகின்றது; அதாவது, பரம பிதாவின் சித்தத்திற்கு, தனது சித்தத்தை, தனது ஜீவனை/வாழ்க்கையை, தனக்குள்ள யாவற்றையும் முழுமையாக ஒப்புக்கொடுப்பது ஆகும்; அதாவது அர்ப்பணிப்பதாகும். இப்படியாகக் கிறிஸ்துவன் ஒப்புக்கொடுக்கும்போது, அவன் உலகத்திற்கும், பூமிக்குரிய நம்பிக்கை மற்றும் இலட்சியங்களுக்கும் மரித்துப் போனவனாகக் காணப்படுகின்றான், மேலும், புதிய ஜீவியத்தில் நடப்பதற்கும், பின் போகப்போக உண்மையான ஜீவனை அடைவதற்கும், அவன் கர்த்தரோடு, மீட்பரோடு, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கெனத் தேவனுக்குள் ஜீவனுடையவனாகிறான். இவைகள் அனைத்தும் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது.

பாவமில்லாத நமது கர்த்தர், இன்னொருவரால் நீதிமானாக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆகையால், புருஷனுக்குரிய வயதை அடைந்தபோது, பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கெனத் தம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுத்தார். அவருடைய அர்ப்பணிப்பின் போதே, அவருடைய பூமிக்குரிய ஜீவன், முழு உலகத்திற்கான பாவத்திற்காகப் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது; இதை அவர் தண்ணீரில் மூழ்கின விஷயம் அடையாளப்படுத்துகின்றது. அவருடைய மீதமுள்ள 3 ½ வருடத்தின் ஜீவியம் ஏற்கெனவே, பலிப்பீடத்தின் மேல் வைத்தாகிவிட்டது. அவர் தம்முடைய பலிப் பட்சிக்கப்பட மாத்திரமே 3 ½ வருடம் காத்திருந்து, இறுதியில் "எல்லாம் முடிந்தது" என்று கூக்குரலிட்டார். இதுபோலவே தம்முடைய உண்மையுள்ள, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை அனைவரையும் தம்முடன் உடன்பலிச் செலுத்துகிறவர்களாகவும், இறுதியில் இராஜ்யத்தில் உடன்சுதந்திரர்களாக இராஜரிக ஆசாரிய கூட்டமாவதற்கென அழைத்துள்ளார். இயேசுவின் ஞானஸ்நானமானது, பாவங்களுக்கான அவருடைய பலியின் மரணத்தை அடையாளப்படுத்தினது போன்று, கிறிஸ்தவனின் ஞானஸ்நானமும், (அவர்கள் முதலாவது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தின் புண்ணியத்தினால் எல்லாவற்றிலிருந்து விடுதலையாகி) அவன் கர்த்தரோடு அவருடைய பலியில் பங்குக்கொள்வதை அடையாளப்படுத்துகின்றது. நமது கர்த்தருடைய விஷயத்தில், அவருடைய அர்ப்பணிப்பைத் தொடர்ந்து உடனடியாக ஓர் அடையாளம் வெளிப்படுகின்றது, இதுபோலவே, அவருடைய பின்னடியார்களின் அர்ப்பணிப்பைத் தொடர்ந்து, உடனடியாக அடையாளத்தின் அர்த்தத்தை எவ்வளவு வேகமாக உணர்கின்றார்களோ, அவ்வளவு வேகமாக அடையாளம் வெளிப்பட வேண்டும். இந்த அடையாளத்தின் அர்த்தமானது, பல நூற்றாண்டுகளாக மறைக்கப்பட்டுள்ளது/தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நமது கர்த்தரின் அர்ப்பணிப்பு, மற்றும் அர்ப்பணிப்பின் அடையாளமாகிய ஞானஸ்நானம் நிறைவேறியவுடன், அவருடைய பலித் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்பதற்கான நிரூபணம் வெளிப்பட்டது. அதாவது, அவருக்கு வானங்கள் திறக்கப்பட்டன. கர்த்தருக்கு, பிதாவுடன் உறவு இருக்கின்றது என்பதை உறுதிபடுத்துகிறதாகவும், அவர் மனுஷனாக இருக்கும்போதுள்ள அனுபவங்களையும், லோகோஸாக இருக்கும்போதுள்ள அனுபவங்களையும் ஒன்றுபடுத்துகிறதுமான, பரலோக தரிசனம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர், இவரே என் நேசகுமாரன் என்ற சத்தம் கேட்டது. மேலும், தெய்வீக ஆசீர்வாதமானது, புறாவைப் போல இயேசுவின் மேல் இறங்கி வருவதை யோவானும், இயேசுவும் கண்டார்கள் (யோவான் 1:34). சுற்றி இருந்த ஜனங்கள் வானங்கள் திறக்கப்பட்டதையோ, குரலைக் கேட்டதாகவோ, புறாவைக் கண்டதாகவோ, நமக்கு எதுவும் கூறப்படவில்லை, மாறாக இயேசுவும், யோவானும் மாத்திரமே இவைகளையெல்லாம், கண்டும், கேட்டும் இருந்தார்கள் என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விஷயங்களுக்குச் சாட்சியாக இருப்பதற்கே, இவைகளைப் பார்க்கும் சிலாக்கியம் யோவானுக்கு அளிக்கப்பட்டது.

புறா என்பது, யூதர்கள் மத்தியில் ஓர் அருமையான அடையாளமாகும், அது சமாதானம் மற்றும் இரட்சிப்புக்குரிய ஒரு சின்னமாகும். நோவா அனுப்பின புறாவும், அதன் வாயில் இருந்த ஒலிவ கிளையும், சகல நாகரிகமான ஜனங்கள் மத்தியிலும் அடையாளமாக திகழ்கின்றது. தெய்வீக ஆசீர்வாதத்திற்கான வெளிப்படையான அடையாளம், புறாவாக இருந்தது என்றாலும், பரிசுத்த ஆவிதான் அந்தப் புறா என்றோ, அல்லது, பரிசுத்த ஆவியின் உருவம் புறா என்றோ நாம் அனுமானிப்பது தவறாகும். பரிசுத்த ஆவி என்பது வேதவாக்கியங்களின்படி தெய்வீக வல்லமையாக இருக்கின்றது. புறா என்பது சாந்தமும், அமைதியுமான ஆவிக்கு மிகப் பொருத்தமான அடையாளமாக இருக்கின்றது, மேலும் இத்தகைய ஆவி என்பது கர்த்தருக்குரிய பரிசுத்தத்தின் ஆவியை உடைய அனைவரிடமும் காணப்படக் கூடிய அலங்காரத்தில் ஒன்றாகும். நமது கர்த்தர் அனுபவித்த இம்மாதிரியான அனுபவங்கள், அவருடைய பின்னடியார்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் எதிர்ப்பார்க்கவும் கூடாது. அதாவது, வானம் திறப்பதையும், சத்தம் கேட்பதையும், புறாவையும் எதிர்ப்பார்க்கக் கூடாது. பெந்தெகொஸ்தே நாளன்று சபைக்காக வந்த பரிசுத்த ஆவி இந்த யுகம் முழுவதும் உள்ள முழுச் சபைக்கும் உரியதாகும். பெந்தெகொஸ்தே நாளன்று, அது வெளிப்படையாக வந்தது. இப்படிப்பட்ட வெளிப்படையான வெளிப்படுத்தல்கள், ஆரம்பத்தில் அவசியமாய் இருந்தது, காரணம் பரிசுத்த ஆவியின் விஷயத்தில், நாம் நமது சொந்த கற்பனைகளையோ அல்லது மற்ற மனுஷர்களுடைய கற்பனைகளையோ பின்பற்றவில்லை என்ற நிச்சயத்தைப் பெற்றுக்கொள்வதற்கேயாகும். முதலில் அடையாமாக வெளிப்படுத்தின விஷயங்களை, இப்பொழுது நாம் நிஜமாக பெற்றிருக்கின்றோம். மனந்திரும்புதலுக்கு ஏதுவான நம்பிக்கைக் கொண்ட அனைவரும் தங்கள் பாவங்களிலிருந்து நீதிமானாக்கப்பட்டிருக்கிறார்கள், பின்னர், அவர்கள் தங்களைக் கர்த்தருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திற்குள் ஒப்புக்கொடுக்கும்போது, ஆவிக்குரிய விஷயங்களைப் புரிந்துக்கொள்வதற்கு ஏதுவாக, பரலோக விஷயங்களைக் காண்பதற்கு ஏதுவாக தங்களின் மனங்கள் திறக்கப்படும் விதத்தில், வானங்கள் இவர்களுக்குத் திறக்கப்படுகின்றது; "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (ரோமர் 6:31; கொரிந்தியர் 2:10). மேலும், அவர்கள் விசுவாசத்தின் மூலம் பிதாவின் குரலைக் கேட்கின்றனர்; அதாவது, அவர்கள் கிறிஸ்துவின் மூலம் தம்மிடத்தில் வந்ததினாலும், இவ்விதமாக தங்களுடைய ஜீவியத்தைத் தமக்கென்று அர்ப்பணித்ததினாலும், அவர்கள் தமது நேசகுமாரனுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நேசகுமாரர்களாக இப்பொழுது காணப்படுகின்றார்கள் என்று பிதா கூறுவதை, விசுவாசத்தினால் கேட்கின்றனர். மேலும் அவர்கள் தங்கள் இருதயங்களில் சமாதானமும், சாந்தமும், பரிசுத்தமும் பெற்றிருப்பதின் வாயிலாகப் பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கின்றார்கள். அவர்கள் அதிகமதிகமாக ஆவியில் நிரப்பப்படும்பொழுது, இந்த ஆவியின் ஆசீர்வாதங்கள் அதிகமதிகமாய் அவர்களுக்கு நிஜமாகுகின்றது.

ஆவிக்குரிய ஞானஸ்நானத்தின் காரணமாக, பிரகாசிக்கப்பட்ட இயேசுவினிடத்தில் உள்ள ஆவியானது, அவரை யோவானிடமிருந்தும், ஜனக்கூட்டத்தாரிடமிருந்தும் விலகி, அமைதியான சூழ்நிலைக்குப் போகும்படி வழிநடத்தினபடியால், இயேசு வனாந்திர பகுதியைத் தெரிந்துக்கொண்டார். மாற்கு தனது சுவிசேஷத்தில், இயேசு தமது ஆவியில் வனாந்தரத்தற்குப் போகும்படித் தூண்டப்பட்டார் என்று எழுதியுள்ளார். அந்த நேரத்தில், நமது கர்த்தருடைய மனதில் மிகப் பெரிய அழுத்தம் காணப்பட்டது என்று நாம் எண்ணுகின்றோம். நம்முடைய முந்தைய பாடங்களில், இயேசு, மிகச் சிறிய பிராயத்திலேயே பிதாவின் வேலை குறித்தும், அதைத் தாம் எவ்வாறு செய்ய வேண்டும் என்பது குறித்தும் எருசலேமில் போய் ஆராய்ச்சிப் பண்ணினார் என்று நாம் பார்த்துள்ளோம். மேலும், தாம் 30 வயதை அடையாத வரையிலும், பிதாவின் வேலையைச் செய்ய முடியாது என்று நியாயபிரமாணத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதன் விளைவாக, அவர் பின்வாங்கி தமது பெற்றோர்களுடன் தங்கி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்றும் நாம் பார்த்தோம். சுமார் 18-ஆண்டுகளாக, இயேசு காத்திருந்த தருணம் வந்தது. இயேசு, தமது ஊழியம் எவ்விதத்திலும் கால தாமதமாகிவிடக் கூடாது என்ற எண்ணத்தில், கூடுமான அளவு சீக்கிரமாகத் தம்மை அர்ப்பணிக்கும் பொருட்டு, துரிதமானார். இயேசு, பதற்றத்துடன் தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்குப் பதிலாக, தற்போது கிடைத்துள்ள பரிசுத்த ஆவியின் வெளிச்சம் காரணமாக, தாம் கடந்து செல்ல வேண்டிய பாதையைத் திட்டவட்டமாக அறிந்துக்கொள்ள வேண்டும் என்றும், தமது ஊழியத்தை ஆரம்பிக்கும்போதே தவறு இழைக்கக் கூடாது என்றும், பிதாவின் சித்தத்திற்கு இசைவாக ஊழியம் செய்யத்தக்கதாக, பிதாவின் சித்தம் எது என அறிந்துக்கொள்ள வேண்டும் என்றும் உணர்ந்தார். இத்தகைய நோக்கங்களானது, அவர் சிந்திப்பதற்கும், ஜெபம் பண்ணுவதற்கும், தாம் இதுவரையிலும் கற்றறிந்தும் கூட, சரிவர புரிந்துக்கொள்ளாமல் இருந்த பல்வேறு வேதவாக்கியங்கள் இப்பொழுது தாம் பெற்றுள்ள பரிசுத்த ஆவியினால் அவைகள் வெளிச்சமாகிற

காரணத்தினால், அவைகளை மீண்டும் சிந்தனை செய்வதற்கு ஏதுவாக, அவரைத் தனிமையில் இருப்பதற்கு ஏவிற்று.

சகல கர்த்தருடைய ஜனங்களும் கூட, தங்களைத் தெய்வீக ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த பிற்பாடு, அவர்கள் தனித்து வந்து பிதாவோடு சம்பாஷிக்கவும், எவ்விதத்தில் தங்களுடைய ஜீவியங்களை அங்கீகரிக்கத்தக்க விதத்தில் அவருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதைக் குறித்து, அவருடைய வார்த்தைகளைக் கற்று அறிந்துக் கொள்வதற்காகவும், அவர்களுடைய புதிய மனம், புதிய ஆவி ஏவவேண்டும். இப்படியாகச் செய்யப்படுமாயின் எத்தனை ஜீவியங்கள் இன்று காணப்படும் நிலையைவிட முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்பட்டிருக்கும்! எத்தனை தவறுகள் தடுக்கப்பட்டிருக்கும்! இவைகளைக் குறித்து நமது கர்த்தர் உவமைகள், ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளார், அதாவது, யார் ஒருவன் தனது சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்ற முற்படுகின்றானோ, அவன் முதலாவதாக உட்கார்ந்து, செல்லும் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும்; அதாவது, பிதாவின் சித்தம் என்ன என்றும், பிதாவின் சித்தம் செய்வதன் விளைவு என்ன என்றும் கற்றுக்கொள்வதாகும். ஒருவேளை, தேவனுடைய ஏதேனும் ஓர் அருமையான பிள்ளை தனது அர்ப்பணிப்பின் ஆரம்பக்கட்டத்திலேயே, சரியான பாதை எது என்று அறிந்துக்கொள்ளும் முயற்சியைப் புறக்கணித்தால், அத்தகையவருக்கு நமது அருமையான போதகரின் மாதிரியையே முன்வைக்கின்றோம். சகல விஷயங்களிலும் இருப்பது போன்று, இவ்விஷயத்திலும் ஞானமாய் இருந்த நமது போதகரிடம், தெளிந்த புத்தியுள்ள ஆவி இருந்ததோடு அல்லாமல், தெளிந்த மனமும் இருந்தபடியால் அந்த ஆவி தெளிந்த மனதில், பூரணமாய்ச் செயல்பட்டது. தெய்வீகச் சித்தமானது என்ன என்று அறிந்துக்கொள்ளும் விஷயத்தில், நாம் நமது போதகர் போன்று தனித்திருக்கவில்லை. நமக்குச் சகோதர சகோதரிகள் இருக்கின்றார்கள், அவருக்கோ யாருமில்லை, அவரே முதலில் ஓடிய முன்னோடியாக இருக்கின்றார். இத்தகைய சகோதர சகோதரிகளிடமிருந்தும் நாம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம். விசேஷமாக நம்முடைய மூத்த சகோதரராகிய இயேசுவின் முன்மாதிரி மற்றும் அவருடைய வார்த்தைகளின் உதவியும் கூட நமக்கு உள்ளது. மேலும், பிதாவின் ஊழியம் செய்வதற்கென்றுதான் நாம் அர்ப்பணித்துள்ளோம் என்பதையும், பிதாவின் திட்டம் மற்றும் அதிலுள்ள நம்முடைய பங்கு என்ன என்று புரிந்துக்கொள்ளத்தக்கதாக, சகோதர சகோதரிகள் மாத்திரமே உண்மையாய் நமக்கு உதவி செய்ய முடியும் என்பதையும் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. சில வேளைகளில் சகோதரர்கள் தங்களுடைய திட்டங்களை நமக்கு முன்வைத்து அவைகளுக்கு நேராக நம்முடைய அர்ப்பணிப்புக் காணப்படத்தக்கதாக, இடறலாகவும் காணப்படுவார்கள் என்பதையும் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

நமது கர்த்தருக்கான சோதனைகள் இக்கட்டத்திலிருந்து ஆரம்பமாகுகின்றது. "அவர் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருந்தார்" (எபிரெயர் 4:15). சிறுவனாய் இருந்த இயேசு அல்லது வாலிபனாக இருந்த இயேசு சோதிக்கப்படாமல், "நம்மைப்போல்" இருந்த போதே அவர் சோதிக்கப்பட்டார். நமது கர்த்தருடைய அர்ப்பணிப்பைத் தொடர்ந்த அவருடைய சோதனைகள், உலகத்தின் மேல் வரும் சோதனைகள் போன்று இராமல், சபைக்கு வரும் சோதனை போன்று இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நம்முடைய அர்ப்பணிப்பின் காலமுதல், நாம் கிறிஸ்துவுக்குள்ளான புதுச் சிருஷ்டிகளாகக் கருதப்படுவதுபோன்று, நமது கர்த்தரும், யோர்தானில் தம்மை அர்ப்பணித்தது முதல் புதுச் சிருஷ்டியாகவே கருதப்பட்டார். இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்கள் சோதிக்கப்படுவதும், பரீட்சிக்கப்படுவதும் போன்று, அர்ப்பணிக்கப்பட்ட இயேசுவும், சோதிக்கவும், பரீட்சிக்கவும் பட்டார். இதற்கான கூடுதல் நிரூபணங்களை, நமது கர்த்தருடைய சோதனையின் முறையைக் கவனிக்கையிலும், அவருடைய சோதனைகளை, அவருடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களின் சோதனையோடு ஒப்பிடுகையிலும் நாம் பார்க்கலாம். அநேகர், ஏன் தாங்கள் கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணித்ததற்கு முன்பு சோதனை வராமல், அர்ப்பணித்தப் பின்னரே வருகின்றது என யோசிக்கலாம்; ஏனெனில், இவர்கள் தங்களுடைய அர்ப்பணிப்புக்குப் பிற்பாடு, எதிராளியானவன் தங்களைவிட்டு ஓடிப் போவான் என்றும், தங்களுக்குக் கொஞ்சம் அல்லது ஒரு சோதனையுமிராது என்றும் எண்ணி, தெய்வீக ஏற்பாடுகளை முற்றிலும் தவறாய்ப் புரிந்துக்கொள்கின்றார்கள். அர்ப்பணித்தவர்களுக்கு வரும் சோதனைகள் அல்லது குணலட்சணத்திற்குரிய பரீட்சைகள், அர்ப்பணிக்காதவர்களுக்குத் தகுந்தவைகள் அல்ல. தற்போதைய காலம் உலகத்திற்குரிய நியாயத்தீர்ப்பின் நாளாய் இராமல், சபைக்குரிய பரீட்சை காலமாகவே இருக்கின்றது.

நமது கர்த்தருக்கான சோதனைகள், முழு நாற்பது நாள் அளவும் காணப்பட்டது போன்று தோன்றாலம்; ஆனால், கூறப்பட்டுள்ள மூன்று சோதனைகளும் விசேஷமாக, அவருடைய சோதனை

காலத்தின் இறுதியிலேயே வந்தது. நாம் கொஞ்சம் கற்பனை செய்து பார்க்கலாம்... நமது கர்த்தர் தனிமையான வனாந்தரத்தில், தம்மைக் குறிக்கும் பல்வேறு தீர்க்கத்தரிசனங்களைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்திருப்பார். எப்படி ஒரு கலைஞன் முதலாவதாகக் கட்டிடத்தின் எல்லைக் கோடுகளை வரைந்து, பின்னர் உள்அமைப்பைப் படிப்படியாக வரைவாரோ அப்படியே, இயேசுவும் தம்மைக் குறிக்கும் பல்வேறு தீர்க்கத்தரிசனங்களை இணைத்துக் கொண்டிருந்திருப்பார். வேதவாக்கியங்களிலிருந்து, நமது கர்த்தருக்கு முன்பாகக் காணப்பட்ட எல்லை கோடுகளின் வரைப்படம் இராஜ்யமாக இருந்தது. இவர் இராஜாவாகவும், ஆபிரகாமின் சந்ததியாகவும் இருக்க வேண்டும். மேலும், இவருடைய கிருபையான ஆளுகையின் கீழும், ஞானமான போதனைகளின் கீழும், பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். இந்தக் குறிப்புகள் அவருடைய மனதிற்கு முன்பாக ஏற்கெனவே தெளிவாகக் காணப்பட்டது. ஆனால் மற்ற அம்சங்கள் அதனதன் ஸ்தானத்தில் சரியாகப் பொருத்தப்பட வேண்டும். ஜனங்களின் பாவங்களுக்காக ஆசாரியன் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற காரியத்தை அடையாளப்படுத்தும் நியாயப்பிரமாணத்தின் நிழல்களை அவர் எப்படி நிறைவேற்ற வேண்டும்? நித்தியத்திற்கான ஆசாரிய கூட்டத்தின் நிழல் எப்படி நிறைவேற்றப்பட வேண்டும்? நிழலில் ஆபிரகாம், பிதாவுக்கு அடையாளமாகவும்; ஈசாக், தமக்கு அடையாளமாகவும் இருக்கும் பட்சத்தில், ரெபேக்காள் அடையாளப்படுத்தும் இஸ்ரயேல் வகுப்பார் எப்படி வருவார்கள்? (மாம்சீக) இஸ்ரயேலர்கள் தம்மை ஏற்றுக்கொண்டு, ரெபேக்காள் வகுப்பார் ஆவார்கள் எனில், பலிச்செலுத்துப்படுவதன் அவசியம் தான் என்ன? எப்படிப் பலிச் செலுத்த வேண்டும்? என்ற கேள்விகள் இயேசுவின் மனதில் தோன்றினது. இன்னுமாக இஸ்ரயேல் கடற்கரை மணலைப்போன்று இருப்பினும் சொற்பமானவர்களே அங்கீகரிக்கப்படும் நிலைக்கு வருவார்கள் எனச் சில தீர்க்கத்தரிசனங்கள், உரைக்கும்போது, மகிமையான இராஜரிக ஆசாரியக்கூட்டம் நிறைவடையத்தக்கதாக, தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின் முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கை எப்படிக் கண்டுபிடிக்கப்படும் என்ற விஷயங்களும், அவருடைய மனதை அழுத்தி இருக்க வேண்டும். மேலும், எவ்விதத்தில் பூமியின் குடிகள் மேல் ஆசீர்வாதம் வரும் என்றும், ஒருவேளை தாம் பிரதான ஆசாரியனாகவும், தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்கள் இராஜரிக ஆசாரியர்களாகவும் இருப்பார்களேயானால், அனைவரும் நீதியின் நிமித்தம் பாடுபட்டு, பலியாக மரிக்க வேண்டுமோ? என்ற கேள்விகளும், அவருடைய மனதை அழுத்தி இருக்க வேண்டும்.

இப்படியாக ஒவ்வொன்றையும் சிந்தித்து, அங்கும் இங்குமாக ஜெபத்துடனும், பொருத்திப் பார்ப்பதற்கு அநேகமாக முழு 40 - நாட்களும் தேவைப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் அனுமானிக்கலாம். மேலும், இவைகளின் மத்தியில் சோதனைகளும் கலந்திருக்க வேண்டும்; உதாரணமாக, மகிமைக்கு முன்பாக கிறிஸ்து பாடுபட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் தீர்க்கத்தரிசனங்கள் மற்றும் நிழல்களில் உள்ள விஷயங்களின் அவசியம் என்ன? என்ற கேள்விகள் சோதனைகளாக அமைந்திருக்கலாம். வேதவாக்கியங்களை நேர்மையற்ற விதத்தில் புரட்டி, தம்மைத்தாம் வஞ்சித்து, தெய்வீக எல்லைக்கோட்டிற்கு முழுமையாய் இசைவு இராத வழியைத் தெரிந்துக்கொள்வதற்கான சோதனைகளும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இம்மாதிரியான ஆலோசனைகள் ஒன்றன் பின்பு ஒன்றாக அவருக்கு முன்பாகத் தோன்றினாலும், அவைகளை நமது கர்த்தர் உடனடியாகப் புறம்பாக்கினார் என்று நாம் நம்புகின்றோம். நமது கர்த்தர், தாம் பிதாவின் சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்றும், நிர்ணயிக்கப்பட்ட விதத்திலேயே, தாம் அனுப்பப்பட்ட வேலையை நிறைவேற்ற வேண்டும் என்றும் முழுத் தீர்மானம் கொண்டு காணப்பட்டார்.

அவருடைய ஆராய்ச்சி மிக ஆழமாகவும், அதேசமயம் பிதாவோடும், அவருடைய பிரமாணங்களோடும் ஐக்கியம் கொள்ளவேண்டும் என்ற அவருடைய விருப்பம் உண்மையுமாகவும் இருந்தபடியால், இதற்காகவே அவர் 40 நாளையும் செலவிட்டார். நமது கர்த்தர் மிகவும் ஆழமாக இவைகளில் மூழ்கினபடியால், உணவைக்கூட அவர் யோசிக்கவில்லை. பிற்பாடே அவருக்குப் பசி உண்டாயிற்று.

இந்த வேத ஆராய்ச்சி மற்றும் ஜெபத்தின் இறுதிக்கட்டத்தில்தான் நமது கர்த்தர், உபவாசத்தினால் பலமிழந்தபோது, எதிராளியானவன், மூன்று சோதனைகளினால், அவரைத் தாக்கினான்.

“பிசாசு” என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதற்கான மூல வார்த்தை **(Diabolos)** டையபோலஸ் ஆகும். பிரதான வஞ்சகன், வேத வாக்கியங்களில் பிசாசுகள் என்று பன்மையில் சொல்லப்படும், விழுந்துபோன தூதர்களிடமிருந்து பிரிக்கப்பட்டே பேசப்பட்டிருக்கும். இங்கும்,

பிசாசுகளின் அதிபதியானவனே பேசப்படுகின்றான்; இவனையும், இவனுடைய வல்லமையைக் குறித்தும் நமது கர்த்தர் கூறியுள்ளார். சாத்தான், மனித உருவத்தில், நமது கர்த்தருக்கு முன்பு தோன்றியிருப்பான் என்று நாம் அனுமானித்துக் கொள்ள கட்டாயம் ஏதும் இல்லை. அவன் தனிப்பட்ட விதமாக தோன்றியும் இருந்திருக்கலாம், இல்லாமலும் இருந்திருக்கலாம். ஒருவேளை அவன் தன்னைத் தனிப்பட்ட விதத்தில் வெளிப்படுத்தி இருப்பானானால், அவன் தன்னை ஒளியின் தூதனாகிய, சிறந்த தோற்றத்தில் வெளிப்படுத்தி இருக்க வேண்டும். நமது கர்த்தர் மனிதனாக வருவதற்கு முன்பு, பிதாவுடைய பிரதிநிதியாக/கருவியாக இருந்து, லூசிபரைச் சிருஷ்டித்தார் என்பதையும் நம்மால் நினைவுகூர முடிகின்றது. மேலும் சாத்தான், உன்னத தளத்தில் இருந்த தூதன் என்றும், மனுக்குலத்தின் கீழ்ப்படிதல், அன்பு மற்றும் அனுதாபத்தைத் திருடினதின் மூலம், அதிகாரத்தைப் பறிக்க முயன்று, பூமியின் மீது அதிகாரம் பெற்றுக் கொள்ள இவர் முயன்றதே இவருடைய பாவம் என்றும், இச்செயல்பாடுகளின் காரணமாக இவர், தெய்வீகக் கண்டனத்தைப் பெற்றுக் கொண்டார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். மேலும் நமது கர்த்தர் தம்மை அர்ப்பணம் செய்ததையும், விழுந்துபோன மனுஷ ஜாதியை மீட்கும் வேலையைப் பிதா இவரிடம் கொடுத்துள்ளார் என்பதையும் ஓரளவு சாத்தான் அறிந்திருந்தபடியால், சாத்தான் இயேசுவிடம் சென்று அவரைச் சந்திப்பது பொருத்தமாய் இருக்கும் என்று நாம் அனுமானித்துக் கொள்ளலாம். இவர் (சாத்தான்) தன்னை, இயேசுவின் நண்பர் போன்றும், கர்த்தர் மேலும், கர்த்தருடைய வேலையின் மேலும் தனக்கு மிகுந்த அக்கறை இருப்பது போன்றும், மனுக்குலத்தின் மீது வந்த பாவத்திற்குரிய தண்டனை குறித்தும், சீர்க்கேடு குறித்தும், தான் கண்டு வேதனைபட்டது போன்றும், அதிர்ச்சியடைந்தது போன்றும் வெளிப்படுத்தி இருக்கலாம் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். மேலும், பாவப்பட்ட மனுக்குலமானது அதன் பிரசவ வேதனைகளில் இருந்தும், தவிப்பிலிருந்தும், மரிக்கும் சூழ்நிலைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்கு ஏறெடுக்கப்படும் பிரயாசங்களில், நான் உண்மையில் மகிழ்ச்சிக் கொள்வேன் என்பது போன்றும், சாத்தான் தன்னை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். தான் உலகத்தில் நிலவும் சூழ்நிலைகளை முழுக்க அறிந்தவர் ஆனபடியாலும், மீட்பின் வேலை வெற்றியடைவதில் தான் விருப்பம் கொண்டுள்ளவர் ஆனபடியாலும், மனுக்குலத்தினுடைய பலவீனங்களை மற்றும் எண்ணங்களை முழுமையாய் தான் அறிந்தவர் ஆனபடியாலும், நமது கர்த்தர் இயேசு நிறைவேற்ற விரும்புகிறதும், கவனம் செலுத்துகிறதுமான திட்டத்திற்கான, ஆலோசனகளை அளிப்பதற்கு, தான் தகுதியான நிலையில் இருக்கும் நண்பன் போன்று சாத்தான் வெளிப்படுத்தினார்.

## “தனிப்பட்ட இலாபத்திற்காக, ஆவிக்குரிய கிருபைகளைப் பயன்படுத்துவதற்கு ஏதுவான சோதனை”

நமது இரட்சகர் மேற்கொண்டுள்ள மாபெரும், உன்னதமான வேலையை, அவர் செய்ய வேண்டுமெனில், அவர் தமது சரீர ஆரோக்கியத்தைச் சரிவர பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும், சாப்பிடாத காரணத்தினாலேயே அவர் பெலவீனப்பட்டிருக்கின்றார், ஆகையால் சாப்பிட வேண்டும் என்றும், நமது இரட்சகர் மீது உள்ள தன்னுடைய தனிப்பட்ட அக்கறையைச் சாத்தான் முதலாவதாக வெளிப்படுத்தினான். இயேசுவினுடைய தற்போதைய வல்லமை, அதாவது சமீபத்தில் பெற்றுக்கொண்ட தெய்வீக வல்லமையைக் குறித்துச் சாத்தான் அவருக்கு நினைப்பூட்டி, இயேசு இப்பொழுது தமது தேவைகளைச் சந்தித்துக்கொள்ள ஆற்றல் உள்ளவராகவும், கற்களை அப்பமாக மாற்றுவதற்கு, ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும் என்று நினைப்பூட்டினான். ஆகவே இயேசு தம் மீது இறங்கி வந்துள்ள புதிய வல்லமையைத் தமக்குத் தாமே பரிசோதித்துக் கொள்ளும்படி ஆலோசனை வழங்கினான். இதைக் காட்டிலும் தந்திரமான சோதனை வேறு இருக்குமோ? இப்படிச் செய்வதன் விளைவாக, அவருடைய பசி தணிந்து, சரீரம் பலமடைவதோடு அல்லாமல், சாத்தானும் மனம் திரும்பியுள்ளவர் போல் தோன்றும். சாத்தான் ஒரு காலத்தில் செய்து வந்த தீயக் கிரியையை மாற்றி போடுவதற்கென, இயேசுவோடு கூடச் சேர்ந்து வேலை புரிய, அவன் விருப்பமுள்ளவனாக இருக்கின்றான் என்பது போன்று இயேசுவுக்குத் தோன்றும். இது ஒரு கடுமையான சோதனையாகும்.

இதைப் போன்ற சோதனைகள், அர்ப்பணம் பண்ணியுள்ள சகல ஜனங்களுக்கும் வரும். ஆனாலும் இயேசுவுக்கு வந்தது போன்று, அப்படியே வராமல், அவருக்கு வந்த பிரகாரமே/வந்த முறை போன்றே வரும். அதாவது பிதாவுடன் கிடைத்துள்ள புதிய உறவையும், அதன் காரணமாக வரும் வல்லமைகளையும், நமது பூமிக்குரிய முன்னேற்றத்திற்கு, சௌகரியத்திற்குக் கொஞ்சம் பயன்படுத்துவதற்கு ஏதுவான ஆலோசனைகள் வாயிலாக இச்சோதனைகள் வரலாம். அதாவது இந்தப் புதிய உறவு மற்றும் அதன் காரணமாக வரும் வல்லமைகளை, நாம் தேவனால் தயவும்,

கனமும் பெற்றுள்ளோம் என மனுஷருக்கு முன்பாக பிரகாசிக்கத்தக்கதாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவான ஆலோசனைகள் வாயிலாக, சோதனைகள் வரலாம். மேலும் இவைகளைப் பயன்படுத்தி, பணம் ஈட்டுவதற்கு நாடத் தூண்டும் ஆலோசனைகள் வரலாம். நண்பன் போன்று காட்டிக் கொண்ட சாத்தானையும், அவரது உலக பிரகாரமான ஆலோசனைகளையும் நமது கர்த்தர் எப்படி எதிர்த்தார் என்று நாம் அனைவரும் ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். இயேசு தமது ஆவிக்குரிய வல்லமையை, தமது பூலோக தேவைகளைச் சந்திப்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று கொடுக்கப்பட்ட ஆலோசனைகளை அப்படியே புறக்கணித்து விட்டார். (அப்போஸ்தலர் 8:18-24) ஆவிக்குரிய வரங்கள், சீமோனிடம் பணத்திற்காக விற்கப்படாதது போன்று, ஆவிக்குரிய வரங்களானது, பூமிக்குரிய சௌகரியங்களை அடைய பயன்படுத்தப்பட முடியாது. ஆனால் இயேசு இவைகளையெல்லாம் விரிவாய்ப் பேசாமலும், தம் பட்சத்தில் கொடுக்கப்பட்ட வல்லமையை, பூமிக்குரிய மதிப்பற்ற விஷயங்களுக்கு பயன்படுத்த எண்ண முடியாத அளவிற்குத், தாம் மிகவும் பரிசுத்தமுள்ளவராய் இருக்கின்றார் என்று பெருமை பாராட்டாமலும் இருந்து, வேதவாக்கியங்களின் வார்த்தைகளைப் பயன்படுத்தி, எதிராளியானவனுக்கு எளிமையாய் பதில் அளித்தார்; அதாவது மனுஷனுடைய ஜீவன் என்பது, அவன் சாப்பிடும் உணவின் மீது முழுமையாய்ச் சாராமல், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் விஷயத்தின் மீதே சார்ந்திருந்தது என்று பதிலளித்தார். இப்படியாகவே, கர்த்தருடைய ஒவ்வொரு பின்னடியார்களும், தங்களுக்குள் ஆவிக்குரிய விஷயங்களைத் தியாகம் செய்து, பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் சொகுசுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எழும்பும் ஒவ்வொரு கேள்விகளுக்கும், பதில் கூற வேண்டும். அநேக கர்த்தருடைய, சகோதர, சகோதரிகளுக்கு, எதிராளியானவன் சோதனையை முன்வைக்கும் விதமானது, "ஒருவேளை நீ சத்தியத்தை ஆழமாய்ப் பின்பற்றினாய் என்றால், சத்தியத்திற்கு அடுத்த வேலைகளில் நீ வைராக்கியத்துடன் செயல்படத்தக்கதாகச் சத்தியத்தின், பரிசுத்த ஆவியை அனுமதிப்பாயானால், சீக்கிரம் உணவு இல்லாத நிலைக்கு வந்து விடுவாய். ஏனெனில் உன் மத்தியில் காணப்படும் உலக ஜனங்கள் இப்படிப்பட்ட (சத்தியத்தின்) விஷயங்களை அங்கீகரிப்பதில்லை. உன்னை வேலையிலிருந்து விட்டுவிடுவார்கள், அல்லது கடை வியாபாரத்திலிருந்து உன்னை அகற்றி/வெளியேற்றிவிடுவார்கள் அல்லது நீ அவர்களுடைய போதகராய் இருக்கக் கூடாது என்று பதவி நீக்கம் செய்துவிடுவார்கள். அல்லது உன்னுடன் ஐக்கியம் கொள்வதை நிறுத்திவிடுவார்கள். மேலும் இப்படியாக நிகழும் பட்சத்தில், இந்தத் தற்கால ஜீவியத்திற்குரிய விஷயங்களுக்கு, நீ திண்டாட வேண்டியதுதான் என்பதேயாகும்." நிழலில் ஏசா, ஒரு பானை கூழுக்காக, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விற்றுப்போட்டது போன்று செய்யாமல், தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை மதிக்கிற யாவரையும், காத்துக்கொள்வதற்கு தேவன் வல்லவராக இருக்கின்றார் என்பதே சரியான பதிலாகும். அதாவது தற்காலத்தில் சில சொகுசுகளை இழக்க நேரிட்டாலும், தேவனுடைய வார்த்தைகளின்படி ஜீவிப்பவர்கள், இறுதியில் மிக மேன்மையான நித்தியத்திற்குரிய ஜீவனை, மேன்மையான மகா மகிமையோடு பெற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் என்பதே சரியான பதிலாகும்.

நமது கர்த்தருடைய இப்படிப்பட்ட உறுதியான பதில், சோதனைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்தது. மேலும் இந்த விதத்தில் மீண்டும் சோதனையைத் தொடர்வதில், எதிராளியானவன் சோர்வடைந்துப் போனான். நம்முடைய விஷங்களிலும் இப்படியாகவே காணப்படும். ஒருவேளை நாமும் சோதனையை எதிர்க்கும் விஷயத்தில், உறுதியுடன் காணப்படுவோமேயானால், அந்தச் சோதனை நேரத்தில் மாத்திரமல்லாமல், பின்வரும் சோதனைகளிலும் நம்முடைய குணலட்சணங்கள் பலம் பெருகுகின்றது. மேலும் நமது உறுதியைக் கவனிக்கும் நமது எதிராளியானவனும், உறுதியான குணலட்சணங்களும், தீர்க்கமான தீர்மானங்களும் உள்ள நபர்களுக்கு இத்தகைய ஆலோசனையை வழங்குவது பிரயோஜனமற்றது என அறிவான். ஆனால் ஒருவேளை நமக்குள் எழும்பும் சாத்தானின் ஆலோசனைகளுக்கு, கேள்விகளுக்கு மீண்டும் மீண்டுமாக எதிர்த்து விவாதம் செய்யப்படுமாயின், பேசப்படுமாயின், சாத்தானும் கூடுதலான வாக்குவாதங்களையும், நியாயங்களையும் முன்வைப்பான்; இப்படியாகப் போகும் பட்சத்தில் நாம் விவாதத்தில் சாத்தானால் மேற்கொள்ளப்படும் அபாயமும் ஏற்படுகின்றது. ஏனெனில் பிசாசு ஒரு தந்திரமான எதிராளி என்றும், அவனுடைய தந்திரங்கள் நாம் அறியாதது அல்லவே என்றும் அப்போஸ்தலரால் குறிப்பிடப்படுகின்றது. கர்த்தருடைய ஆவிக்கும், வார்த்தைக்கும், உடனடியாகவும், உறுதியாகவும் கீழ்ப்படிவதே, எல்லா சகோதர சகோதரிகளுக்கும் உரிய பாதுகாப்பான வழியாகும்.

## “அங்கீகரிக்கப்படாத முயற்சிகளின் மூலம் தேவனைச் சோதித்துப் பார்த்தல்”

எதிராளியானவன் தன்னுடைய முதலாம் முயற்சியில் தோல்வியடைந்தவுடன், தன்னைக் குறித்து இயேசு என்ன எண்ணிக்கொள்வார் என்று கூடக் கருதாமல், உடனடியாகப் பேச்சை மாற்றிவிட்டான். எதிராளியானவன் கர்த்தருக்கு முன்பு வைத்த இரண்டாம் சோதனையும், அவருடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களுக்கும் பொருந்தும். இச்சோதனை கொலை செய்தல், திருடுதல் போன்ற துணிகரமானவைகளைச் செய்யத் தூண்டுகிறதாய் இராமல், தேவன் திட்டமிட்டப்படிச் செய்யாமல், வேறு வழியில் கர்த்தர் வேலையைச் செய்வதற்கான சோதனையாக இருந்தது. அதாவது அங்கீகரிக்கப்படாத வழியில், நற்பலன்களைக் கொண்டு வருவதற்கெனத் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீக வல்லமைகளைத் தவறாய் இயேசு பயன்படுத்துவதற்கு ஏதுவான சோதனையாக இருந்தது.

சாத்தான், நமது கர்த்தர் இயேசுவை, எருசலேமில் உள்ள ஆலயத்தின் உப்பரிகையில் கொண்டுச் சென்றான். கர்த்தரை அவர் சரீர பிரகாரமாக கூட்டிச் செல்லாமல், மன ரீதியாகக் கூட்டிச் சென்றான். நாம் எப்படிச் சரீர ரீதியாக இல்லாமல், மனரீதியாக பல்வேறு இடங்களுக்குச் சென்று அங்குக் குறிப்பிட்ட விஷயங்களைச் செய்கின்றோமோ, அதைப் போன்ற அனுபவமே இயேசுவுக்கு உண்டாயிற்று. இப்படியாக அவருக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது..... “நீர் மிக விரைவாக இஸ்ரயேல் ஜனங்களின் மத்தியில் முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வதற்கென, நான் (சாத்தான்) உமக்கு ஒரு நல்ல ஆலோசனை வழங்க முடியும். நீரும் அதில் பிரியப்படுவீர். ஏனெனில், நான் சொல்லும் வழிமுறை, வேதவாக்கியங்களில் உள்ள ஒரு வழியாகும். மேசியா தம்முடைய வருகையின் போது, இப்படியாகச் செய்வார் என்று தீர்க்கத்தரிசனத்தின் மூலம் முன்னறிவிக்கப்பட்டுள்ளதை நான் கண்டுபிடித்துள்ளேன். மேலும் இப்படியாகச் செய்யும் பட்சத்தில், இதை ஜனங்கள் தீர்க்கத்தரிசியான தாவீதின் வார்த்தைகள் நிறைவேறியுள்ளன என்று உடனடியாக அடையாளம் கண்டுக்கொண்டு, உம்முடைய நோக்கத்தை உடனடியாக ஏற்றுக்கொள்வார்கள். நீரும் ஜனங்களின் தலைவனாகவும் ஆகிவிட முடியும். பின்னர் உம்முடைய வேலையும் பிரம்மாண்டமாய் நடக்கும். மேலும் நான் ஏற்கெனவே சொன்னது போன்று, இந்த வேலை முன்னேற்றம் அடைகையில் நான் களிகூருவேன். ஏனெனில் 4000 வருடங்களாக நான் பார்த்துக் கொண்டிருக்கும் சீர்க்கேட்டின் நிமித்தம் என் இருதயம் பாரம் அடைந்துள்ளது. என்னுடைய ஆலோசனை என்னவெனில், நீர் இன்னோம் பள்ளத்தாக்கை நோக்கியும், பல ஆயிரம் பக்தியுள்ள யூதர்கள் கூடியுள்ள ஆலயத்தின் பிரகாரத்தையும் நோக்கியுள்ள ஆலயத்தின் உப்பரிகையிலுள்ள தெற்குப் பாகத்திற்கு போய் 600 அடி உயரத்தில் இருக்கும் அப்பகுதியிலிருந்து தாழக் குதித்து, சேதம் எதுவும் அடையாமல் எழும்பும். உன்னதமானவருடைய வல்லமை உம்மேல் இருக்கின்றது என்றும், நீர் மெசியா என்பதை விவரிக்க நீர் ஏறெடுக்கும் வேறு எந்தப் பிரயாசத்தைக் காட்டிலும், இப்படிச் செய்வது, உடனடியாகப் பலனைக் கொடுக்கும். நான் கூறும் இவ்விஷயங்கள் வேதவாக்கியங்களில் இடம் பெறுகின்றது.” “நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்” (மத்தேயு 4:6).

இப்படியான சோதனைகளையே, சாத்தான், இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களுக்கும் முன்வைப்பான். எப்படியெனில், “உலகத்திற்கு முன்பும், பெயர்க் கிறிஸ்துவ சபைகளுக்கு முன்பும் ஒரு மாபெரும் நடிப்பைக் காட்டி, கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து எளிமையாகப் பிரசங்கிப்பதைப் பார்க்கிலும் வேறு எதாவது விதத்தில், அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்பு. உடனடியாக, மாபெரும் வெற்றியை அடைவதற்குச் சுபாவத்தின்படியான மனுஷனை ஈர்க்கத்தக்கதாக சில மாபெரும் வேலைகளைச் செய்யத்தக்கதாக, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், வல்லமைகளையும் பயன்படுத்து. ஆவிக்குரிய வகுப்பாருக்கு, ஆவிக்குரிய விஷயங்களை முன்வைப்பதில், நீ எளிமையான, அமைதியான, கவனத்தை ஈர்க்காத வேலையைச் செய்வதற்குப் பதிலாக வேறு வேலையைச் செய். இப்படியான எளிமையான வேலைகளை ஆவிக்குரிய வகுப்பாருக்கு நீ செய்யும்போது, பெரும்பான்மையான ஜனங்கள் உன்னை அங்கீகரியாமல், உன்னை ஒதுக்கி விடுவார்கள், மேலும் உன்னை விநோதமானவனாகவும் கருதுவார்கள், மேலும் நீ அநேகருடைய அனுதாபத்தை இழப்பதோடு அல்லாமல், கிறிஸ்துவ

மண்டலத்தில் முக்கியமானவர்களுடைய எதிர்ப்பைக் கூட நீ விசேஷமாக பெற்றுக்கொள்ள நேரிடும்" என்று சாத்தான் கூறினான்.

மீண்டும், நமது கர்த்தர் தீர்க்கமாக, "உன்னுடைய தேவனாகிய கர்த்தரை நீ பரீட்சைப் பாராதிருப்பாயாக என்று எழுதியிருக்கிறது" என்றார். நாம் விசுவாசித்து நடப்பதற்குப் பதிலாக, தரிசித்து நடக்கும்படி சாத்தான் நம்மைச் சோதிப்பான். நாம் தொடர்ந்து தேவனைச் சோதித்துப் பார்க்கும்படியாகவும், அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவருடைய தயவு மற்றும் பாதுகாப்புக் குறித்த விஷயங்களில், பார்வைக்கு தெரியும் விதத்தில் தேவன் விவரித்துக் காட்ட வேண்டும் என்று நாடும்படியாகவும் சாத்தான் நம்மைச் சோதிப்பான். சொல்லர்த்தமான இயேசுவின் பாதங்களையோ, சொல்லர்த்தமான கற்களையோ, சொல்லர்த்தமான தேவதூதர்களையோ குறிக்காத வேத வாக்கியத்தைச் சாத்தான் இங்குத் தவறான அர்த்தத்தின் விதத்தில் முன்வைப்பதை நாம் பார்க்கின்றோம். அவ்வசனத்தில் இடம்பெறும் பாதங்கள், இன்றைய காலத்தில் உள்ள கிறிஸ்துவின் பாத அங்கங்களுக்கு அடையாளமாகவும், கற்கள் இடறுதலுக்கு ஏதுவான உபதேசங்களுக்கும், தேவதூதர்கள், தற்கால அறுவடையின் காலத்தில், பாத அங்கங்களை அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப வேதவாக்கியங்களின் ஆலோசனைகளை, புத்திமதிகளைக் கொடுத்துத் தாங்குவதற்கென நியமிக்கப்பட்டுள்ள தெய்வீகச் சத்தியத்தின் ஊழியக்காரர்களுக்கும் அடையாளமாய் இருக்கின்றது (சங்கீதம் 91:11, 12).

## "சமாதான உடன்படிக்கையின் விளைவாக விரும்பின நற்பலன்களை அடைவதற்கு ஏதுவான சோதனை"

நம்முடைய கர்த்தருடைய மாபெரும் வேலையில் சாத்தான், தான் சேர்ந்து பணி புரிய விரும்புவதாக காட்டினதே, அவன் முன்வைத்த மூன்றாம் சோதனையாகும். அவன் அவரை மனதில், உயர்ந்த மலைசிகரத்திற்குக் கொண்டு சென்றான்; உலகத்தின் சகல இராஜ்யங்களையும், அதன் மகிமைகளையும் காணத்தக்கதான சொல்லர்த்தமான உயர்ந்த மலை எருசலேமிலும், உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை. சாத்தான் நமது கர்த்தரை மிக உன்னதமான அடையாள மலையின் (இராஜ்யம்) மேல், மனரீதியாகக் கொண்டு நிறுத்தினான். உலகம் முழுவதுமான அவனுடைய வல்லமையையும், சகல ஜாதிகள் மற்றும் தேசங்கள் மீது பரந்த அளவில் காணப்படும் அவனுடைய ஆதிக்கத்தையும், சாத்தான் இயேசுவக்குச் சித்தரித்துக் காட்டினான். சாத்தானை, "இவ்வுலகத்திற்கு அதிபதி" என்று நமது கர்த்தரே கூறியுள்ளார். இப்படியாகச் உலகத்தின் மீதான தனது வல்லமையையும், செல்வாக்கையும், இயேசுவின் மனதில் சாத்தான் கொண்டு வந்ததற்கான நோக்கம், நமது மீட்பருக்குச் சாத்தானின் நட்பும், உதவியும் எவ்வளவு முக்கியமானது என்றும், இயேசுவின் வேலையினுடைய வெற்றிக்குச் சாத்தான் மிக முக்கியமானவன் என்றும் புரிய வைப்பதற்கே ஆகும். மேலும், சாத்தான் தன்னை இந்தச் சூழ்நிலைகளில் நண்பன் போன்று காட்டி, இயேசுவின் பிரயாசங்களை வரவேற்பது போன்றும், அவரோடு சேர்ந்து பணிபுரிய ஆயத்தமாய் இருப்பது போன்றும் கூறுவது எவ்வளவு நலமான காரியமென, இயேசு புரிய வேண்டும் என்பதற்கேயாகும்.

மேசியா, விசேஷமாக இஸ்ரயேலின் இராஜாவாக இருந்து, இஸ்ரயேலை ஆசீர்வதிப்பார் என்று சாத்தான் நமது கர்த்தருக்குச் சுட்டிக்காட்டினான். ஆனால் இஸ்ரயேலைக் காட்டிலும் மிகப் பெரிய இராஜ்யத்திற்கு, இயேசுவை இராஜாவாகப் பரிந்துரைப்பதே சாத்தானுடைய விவாதத்தின் மையக்கருத்தாகும்.

பூமியின் சகல தேசங்களையும் உள்ளடக்கின இராஜ்யத்தையே சாத்தான், கர்த்தருக்குப் பரிந்துரைத்தான். மேலும் இயேசு முழு உலகத்தின் மீது ஆதிக்கம் கொள்ளலாம், தேவனால் நியமிக்கப்பட்ட ஆசீர்வாதமான திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம், ஆனால் இவைகள் அனைத்திற்கும் ஒரே ஒரு நிபந்தனை என்னவெனில், எந்த இரரஜ்யமோ, ஆளுகையோ, அதிகாரமோ ஸ்தாபிக்கப்பட்டாலும், அவைகள் அனைத்தும் சாத்தானை அங்கீகரிக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தான். சாத்தான் தன்னுடைய ஆதி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாதகமான வாய்ப்பு இது எனக் கருதினான். செத்துக் கொண்டும், சீர்கேடு அடைந்துக் கொண்டும் இருக்கின்ற சந்ததியின் மீதான ஆளுகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது, சாத்தானின் ஆதி நோக்கமாக இராமல், நன்கு வெளிச்சமூட்டப்பட்ட, அருமையான ஜனங்களின் மீதே தான்

ஆண்டவனாக அல்லது ஆளுகை செய்பவனாகவே இருக்க வேண்டும் என்பதே சாத்தானின் ஆதி நோக்கமாக இருந்தது. ஆகவே தேவன் திட்டமிட்டுள்ள சகல கிருபையான வேலைகள் நிறைவேற்றப்படுவதில் சாத்தான் விருப்பம் உள்ளவனாக இருந்தான். மேலும் மனுக்குலம் தொடர்பான விஷயத்தில் அவன், பிரதானமானவனாக அடையாளம் கண்டு கொள்ளப்படும் பட்சத்தில், சாத்தான் தன்னையே சீர்த்திருத்திக் கொள்ளவும், சீர்த்திருத்தத்தின் தலைவனாகவும் இருக்க விரும்பினான். இப்படியாகத்தான், நமது கர்த்தர் அவனை ஆராதிக்க, பணிய வேண்டும் என்று, அதாவது தனது செல்வாக்கையும், வேலையில் தனது ஒத்துழைப்பையும் கர்த்தர் அங்கீகரிக்க வேண்டும் என்று விரும்பினான். மாறாக தன்னைத் தேவன் போல் நினைத்து, தன் முன் இயேசு முழங்காலிட்டு வணங்க வேண்டும் என்று சாத்தான் எதிர்ப்பார்க்கவில்லை என்று நாம் அனுமானிக்கின்றோம்.

சாத்தானுடைய இருதயத்தில் எவ்வித உண்மையான சீர்த்திருத்தம் இல்லை என்றும், அவன் விழுந்து போக ஆரம்பிக்கும் போது, அவனிடத்தில் காணப்பட்ட அதே சுயத்தை நாடுதல் மற்றும் பேராசைகளே இன்னமும் காணப்படுகின்றது என்றும் நமது கர்த்தர் முழுமையாக உணர்ந்து கொண்டு, பிதாவுக்கு முன் நேர்மையற்ற உணர்வுகளைக் கொண்ட ஒருவரிடம், மேற்கொண்டு இவைகளைக் குறித்துக் கர்த்தர் விவாதிக்க விரும்பாத விஷயம், சாத்தானின் கடைசி சோதனைக்கு அவர் கொடுத்தப் பதில் காட்டுகின்றது. ஆகவேதான், "எனக்கு பின்னிட்டு போ" அதாவது "என்னை விட்டு விடு சாத்தானே என்றார். நீ என்னுடைய வேலையில், என்னோடு ஒத்துழைக்க மாட்டாய்; தெய்வீகச் சித்தத்திற்கு முழு இசைவாகவே என்னுடைய வேலை உள்ளது; நீ முன்வைக்கும் விஷயங்களானது, உலகை கைப்பற்றும் விஷயமாகவும், தனிப்பட்ட என்னுடைய பாடுகள் இல்லாமல், நீதி மற்றும் ஆசீர்வாதத்தின் ஆளுகையையும் துரிதமாக ஸ்தாபித்தாலாகவும் இருப்பதினால், இப்படியாக தெய்வீகச் சித்தத்திற்கு முரண்பாடாக உள்ள காரியங்களுக்கு என்னால் கூட்டுச் சேரமுடியாது; என்னால் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது; உன்னதமான பிதாவையே என்னால் பூமிக்கும், வானத்திற்குமுரிய ஆண்டவராக அங்கீகரிக்க/அடையாளம் கண்டு கொள்ள முடியும்; ஆகவே பிதா உன்னை, ஆளுகையின் ஸ்தானத்திற்கு நியமித்தால் ஒழிய, மற்றபடி உன்னை, என்னால் அங்கீகரிக்க முடியாது; நீ உன்னுடைய தற்போதைய பேராசையின் ஆவிகளை விடாதது வரையிலும், உன்னைத் தேவன் ஆளுகை செய்ய நியமிக்க மாட்டார் என்தை நான் அறிவேன்; "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று எழுதியிருக்கிற வார்த்தையின் பிரகாரமாகவே நான் செயல்படுவேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

இடுக்கமான வழியாக இயேசுவைப் பின்தொடருகிறவர்களுக்கு, நம்முடைய கர்த்தருடைய இந்த மூன்றாம் சோதனை ஓர் உதாரணமாகும் என்பதை நாம் புரிந்துக் கொள்கின்றோம். சாத்தான், தன்னுடைய பல்வேறு பிரதிநிதிகளின் வாயிலாகப் பரிசுத்தவான்களோடு தொடர்ந்து பேசுகின்ற காரியமாவது, "நீங்கள் நாடும் விஷயத்தைக் கர்த்தருடைய வழியில் செய்வதைப் பார்க்கிலும் மிக வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கக் கூடிய வேறு வழி இங்கு இருக்கின்றது; கொஞ்சம் வளைந்து கொடுங்கள்; உலகத்தின் ஆவியோடு கொஞ்சம் ஒத்துப் போங்கள்; தேவனுடைய வார்த்தைகளுக்கும், கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் மாதிரிக்கும் மிகவும் இசைவாகச் செல்ல வேண்டாம்; உங்களுடைய செல்வாக்கைச் செலுத்த வேண்டுமெனில், நீங்கள் உலகத்தார் போன்று அதிகம் இருக்க வேண்டும், ஆகவே கொஞ்சம் அரசியலுடன் கலந்துக்கொள்ளுங்கள், கொஞ்சம் சமுதாயத்துடன் கலந்து கொள்ளுங்கள்; கொஞ்சம் ஆரவாரமாகவும், குற்றங்குறைவுகளுடனும் காணப்படுங்கள்; இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக தற்கால சத்தியத்தின் எந்த வெளிச்சத்தையும், மரக்காலின் கீழ் வையுங்கள்; இப்படியெல்லாம் இருந்தால் மாத்திரமே நீங்கள் செல்வாக்குப் பெற்றிருக்க முடியும். மேலும் மனுஷர் மத்தியில், நீங்கள் விரும்பியவைகளைச் சாதிக்கவும் முடியும்." ஆனால் நாம் கர்த்தருக்கும், அவருடைய திட்டத்திற்கும் உண்மையாய் இருந்து, நம்மால் முடிந்தவைகளைச் செய்ய வேண்டும் என்றும், நமது அருமையான கர்த்தர் கூறுகின்றார். மேலும் பிதாவுடைய திட்டம் சிறப்பான திட்டமாக மாத்திரம் இராமல், அவருடைய மாபெரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய ஒரே திட்டம் என்றும் நாம் உணர்ந்து அமைதலாய் இருக்க வேண்டும். மேலும் அவருடைய திட்டத்தில் நாம் உடன் வேலையாட்களாக இருப்போமானால், அவரையே நம்முடைய ஒரே ஆண்டவராக, அங்கீகரித்து கொண்டவர்களாகக் காணப்பட்டு, அவருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரே நோக்கம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

பிதா தமக்கு நியமித்துள்ள வழியாகிய, சுயத்தை வெறுக்கும் வழி, இடுக்கமான வழி தவிர வேறு எந்த வழியையும் நமது கர்த்தர் ஏற்றுக்கொள்வதற்கு முற்றும் மறுத்த விஷயமே மாபெரும் வெற்றியாகும். கர்த்தர் பிதாவின் ஆவிக்கும், அவருடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் முற்றிலும் உண்மையுள்ளவராக இருப்பதினாலும், இயேசுவினிடத்தில், எதிராளியானவனுக்குச் சாதகமான ஒன்றையும் காண முடியாத காரணத்தினாலும் எதிராளியானவன், அவரை விட்டுப் போனான். இப்படியாக பரீட்சை முடிந்தபோது, பரிசுத்த தேவதூதர்கள் வந்து, நமது கர்த்தருக்குப் பணிவிடை செய்தார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். அதாவது கர்த்தர், தெய்வீக வல்லமையைத் தம்முடைய தேவைகளுக்குப் பயன்படுத்த மறுத்ததின் நிமித்தம் தேவதூதர்கள் அவருக்கு தேவையான புத்துணர்ச்சியின் விஷயங்களைக் கொடுத்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவைகள் நமது கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயங்களிலும் நடக்கின்றது. சோதனையை ஜெயங்கொள்ளும் போது, கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதமும், ஆவியின் ஐக்கியமும், இருதயத்தில் புத்துணர்வும், மற்றும் அடுத்தப் பரீட்சைக்கு நம்மைப் பலப்படுத்துவதற்கு ஏதுவான, தெய்வீகத் தயவினை உணர்ந்து கொள்ளுதலும் வருகின்றது.

இங்குள்ள மற்றுமொரு பாடம் என்னவெனில், சோதனை என்பது பாவமில்லை. நாமும் நம்முடைய கர்த்தரின் மாதிரியை, உண்மையான இருதயம் மற்றும் நோக்கத்துடன் பின்பற்றி, பிதாவின் சித்தத்தை மாத்திரம் நாடுகிறவர்களாக இருப்போமாகில், நாமும் நமது கர்த்தர் போன்று, "பாவமில்லாமல் சோதிக்கப்படுவோம்." சோதனைக்குள் நாம் விழும்போதே பாவம் ஏற்படுகின்றது. காரியம் தவறு என்று தெரிந்தும் ஏற்படும் தயக்கம், சோதனையின் வீரியத்தை அதிகப்படுத்தும் என்பதை நாம் மறந்து விட வேண்டாம். தவறான பாதைகள் மற்றும் வழிகளுக்குள் நாம் செல்லத்தக்கதாக, சாத்தான் பிரயாசம் எடுக்கும் சோதனைக்காரனாக இருக்கின்றான், ஆனால் தேவனோ, "எந்த மனுஷனையும் சோதிப்பதில்லை" (யாக்கோபு 1:13). தேவன், எதிராளியைக் கொண்டும், அவனுடைய பிரதிநிதிகளைக் கொண்டும் தமது ஜனங்களைச் சோதிக்கும்படி அனுமதித்தாலும், தமது ஜனங்கள் கண்ணியில் சிக்க வேண்டும் என்பது அவருடைய நோக்கம் அல்ல, மாறாக தீமையை எதிர்ப்பதின் நிமித்தம் இத்தகைய பரீட்சைகளும், சோதனைகளும் அவர்களைப் பலப்படுத்தி, குணலட்சணங்களைப் பலப்படுத்துவதற்கேயாகும். நாம் திராணிக்கு மேலாக சோதிக்கப்பட மாட்டோம் என்றும், நம்முடைய சோதனைகளில் கூட நாம் தப்பித்துக் கொள்வதற்கான போக்கும் கொடுக்கப்படும் என்றும் வேதவாக்கியங்களில் இடம்பெறும் வாக்குத்தத்தங்களை, நாம் பலப்படுவதற்கு ஏதுவாக நினைவுகூரக் கடவோம்.

இந்த வாக்குத்தத்தங்களின் விஷயங்களை நாம் சுதந்தரித்துக் கொள்வதற்கு, நமக்கு விசுவாசம் மாத்திரமே அவசியப்படுகின்றது. மேலும் நாம் எந்த அளவுக்கு இத்தகைய விஷயங்களில் நமது விசுவாசத்தைக் காட்டுகின்றோமோ, அவ்வளவாக, கர்த்தரிடத்திலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் நாம் பலம் அடைவோம். இவ்விதமாக தெய்வீகக் கிருபையினாலும், ஆண்டவருடைய உதவியினாலும் நாம் ஜெயங்கொண்டவர்கள் ஆக முடியும், அதாவது நம்மை அன்புகூர்ந்து, அவருடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் நம்மை வாங்கினவருடைய உதவியினால் நாம் ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் ஆக முடியும். 2 கொரிந்தியர் 12:9; 1 கொரிந்தியர் 10:13; எபேசியர் 6:10; ரோமர் 8:37-39 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.

**ஆமென்!**

R 2574

# "மொண்டுகொள்ள பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே"

## யோவான் 4:5-26

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்." (வசனம் 24).

யூதேயாவுக்கும், கலிலேயாவுக்கும் இடையில் பரந்து விரிந்து காணப்படும் தேசமே சமாரியா ஆகும். அதன் குடிகள் சமாரியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களோடு, யூதர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தாலும், மத விஷயத்திலோ, சமுதாய விஷயத்திலோ எவ்விதமான தொடர்பும் வைத்திருப்பதில்லை. மேலும் யூதர்கள், புறஜாதியார்களைத் தெய்வீகத் தயவினின்று விலக்கப்பட்டவர்கள் என்றும், இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள் என்றும், தேவனற்றவர்களென்றும், நம்பிக்கையில்லாதவர்கள் என்றும் கருதினதுபோலவே, சமாரியர்களையும் கருதினார்கள் (எபேசியர் 2:12). இந்தச் சமாரியர்களின் மூதாதையர்கள், புறஜாதியாராக இருந்தனர். மேலும், நேபுகாத்நேச்சாரினால் இஸ்ரயேலர்கள் பாபிலோனுக்குக் கொண்டுவரப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, இந்தச் சமாரியர்களின் மூதாதையர்களாகிய புறஜாதியார் சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டனர் (2 இராஜாக்கள் 17:24-41). இந்தப் புறஜாதிகள், யூதர்களோடு சம்பந்தங்கொண்டு யூதர் கொள்கைகளைத் துறந்த/மீறின சில யூதர்களோடு கலப்புத் திருமணம் செய்துகொண்டபடியால், கொஞ்சம் யூதர் நம்பிக்கை மற்றும் ஆராதனை முறைமைகளைப் பற்றின அறிவையும், தங்கள் மார்க்கத்திலுள்ள தவறான சில அறிவையும் கலந்து பெற்றிருந்தார்கள். இவர்களைக் குறித்துதான் அப்போஸ்தலர், "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார் அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" என்று குறிப்பிடுகின்றார் (அப்போஸ். 17:27). ஆனாலும், தேவன் தம்மை உலகத்தாருக்கு வெளிப்படுத்துவதற்கான காலம் இன்னும் வரவில்லை, அல்லது வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் புறஜாதியாரை ஏற்றுக்கொள்வதற்கான காலம் இன்னும் வரவில்லை. அதுவரையிலும் சகல தெய்வீகக் கிருபைகளும் ஆபிரகாமின் சந்ததியாராகிய இஸ்ரயேலர்களிடத்தில் அதாவது, விருத்தசேதனம் மூலம் தங்களின் உடன்படிக்கையின் உறவைக் காத்துக்கொண்டு வந்த இஸ்ரயேலர்களிடத்தில் மையம் கொண்டிருந்தது. ஆகவே, யூதர்கள் சமாரியர்களை ஏற்றுக்கொள்ளாத காரியமும், அவர்களோடு மத ரீதியான விஷயங்களில் தொடர்பு வைத்துக்கொள்ளாத காரியமும், அவர்களோடு கலப்புத் திருமணம் செய்யாமலும், பழகாமலும் இருக்கும் காரியமும் சரியே. இப்படிச் செய்தது மதவெறித்தனத்தின் காரியமாக இராமல், தெய்வீக ஒழுங்குமுறைகளும், தெய்வீகத் தடைச்சட்டங்களுக்கடுத்த காரியமேயாகும் (உபாகமம் 7:1-6).

நமது கர்த்தர், இராஜ்யமானது சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கும்படி தம்முடைய சீஷர்களை அனுப்புவித்தபோது, யூதர்கள் கையாளும் இந்தமுறையைத் தாமும் அங்கீகரிக்கிறார் என்று தெள்ளத்தெளிவாக அவர்களுக்குக் கட்டளையிட்டார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். "இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப்போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத்தேயு 10:5-6). சமாரியா பட்டணம் தொடர்பான இச்சம்பவத்தில் அப்போஸ்தலர் யாக்கோபும், யோவானும் (சினங்கொண்டு) பேசின வார்த்தைகளும் நம்முடைய நினைவுக்கு வருகின்றது. சமாரியாவின் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கி, அற்புதத்தை இயேசு நிகழ்த்தாததால், சமாரியர்கள் கோபங்கொண்டு, அவரை ஏற்றுக்கொள்ளாமலும், அவர் பிரயாணிக்கையில் தங்கள் பட்டணம் வழியாகக் கடந்து செல்வதற்கு அனுமதியாமலும் இருந்ததையும் நாம் நினைவுகூருகின்றோம் (லூக்கா 9:51-56).

இப்படியாக நமது கர்த்தர், யூதேயாவிலிருந்து, கலிலேயாவுக்குச் சமாரியா வழியாகப் பிரயாணம் பண்ணின அநேக தருணங்களில், ஒரு சமயம் தமது சீஷர்கள் போஜனம் வாங்குவதற்காக ஊருக்குள் சென்றிருக்க, பிரசங்கம் பண்ணினதினிமித்தமாகவும்,

வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதினால் தமது ஆற்றலை இழந்ததினிமித்தமாகவும், பிரயாணத்தினிமித்தமாகவும் களைப்படைந்தவராக, யாக்கோபின் கிணற்றண்டையில் இளைப்பாறிக்கொண்டிருந்தார்.

அப்பகுதியில் யாக்கோபின் கிணறு மகா கீர்த்தியுடையதாக இருந்தது. காரணம், அதன் தண்ணீர்கள் அவ்வளவு தூய்மையாக இருந்தது. அத்தேசம் சுண்ணாம்புடைய தேசமாக இருந்தபடியால், இவ்விடத்திலுள்ள பெரும்பான்மையான தண்ணீர்கள் உப்புத் தன்மையுடையதாகக் காணப்பட்டது; ஆனால் யாக்கோபின் கிணறானது நூறு அடிக்கு மேல் ஆழமுடையதாகவும், 8 அடி விட்டம் கொண்டதாகவும் (ஆழத்தில்) கன்மலையைப் பிளந்ததாகவும் இருந்தபடியால், சுவையான தண்ணீரை அதிகளவில் பெற்றிருந்தது. இந்தத் தேசத்தில், இப்பகுதியில், வருடத்தின் சில பருவ காலங்களில் விசேஷமாக தண்ணீர் பற்றாக்குறைக் காணப்பட்டபடியால் நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கின்ற சமாரியா ஸ்தீரியானவள், என்றென்றும் வற்றிப்போகாததும், நல்ல தண்ணீரைக் கொடுக்கிறதுமான இக்கிணற்றண்டைக்குவர நீண்ட தூரம் பிரயாணித்து வர வேண்டியிருந்தது என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த ஸ்திரீ கிணற்றண்டைக்கு வந்த போது, இயேசு கிணற்றண்டையில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்; அவள் அவரை யூதன் என்றும், இயேசு அவளைச் சமாரியா ஸ்திரீ என்றும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் வெறுமனே முகத்தோற்றத்தை வைத்து அடையாளம் கண்டுகொள்ளாமல், ஆடையின் முறைமையை வைத்தும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்டனர். யூதர்கள் தங்களுடைய வஸ்திர ஓரங்களின் தொங்கல்களை வெள்ளை நிறத்திலும், சமாரியர்கள் நீல நிறத்திலும் பெற்றிருந்தார்கள்.

ஒரு யூதன், ஒரு சமாரியனிடம், வேண்டுகோள் விடுப்பதும், உபசரிக்கக் கேட்பதும் வழக்கத்திற்கு மாறான காரியமாகும். ஸ்திரீ மொண்டு கொண்டிருக்கும் தண்ணீரைக் குடிப்பதற்காக, இயேசு கேட்டபோது, "நீர் ஒரு யூதனாக இருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடம் இத்தகைய வேண்டுகோளை எப்படிக் கேட்டீர்" என்று ஆச்சரியம் அடைந்து இயேசுவிடம் துணிவுடன் கேள்வி கேட்டாள். அவளுடைய கேள்வியில் தைரியம் வெளிப்பட்டது. இத்தைரியமானது அவள் தன்னை கற்பற்ற ஸ்திரீ என்று ஒப்புக்கொண்ட காரியத்திலும் வெளிப்படுகின்றது. இந்த ஸ்திரீயுடன் இவ்விதமாகச் சம்பாஷணைக்கொள்ளுமளவுக்கு, நமது கர்த்தர் தம்மைத் தாழ்த்தினதே குறிப்பிடத்தக்க மிக முக்கியமான காரியமாகும். இப்படிப்பினைத் தொடர்புடையதாகவே அப்போஸ்தலர்களின் வார்த்தைகளான, "தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்" என்பது காணப்படுகின்றது (ரோமர் 12:16). அநேக கிறிஸ்தவ ஜனங்கள் இப்படிப்பட்ட ஸ்திரீகளுடன் பேசுவதைத் தவிர்ப்பதும், வெறுத்து ஒதுக்கி வைப்பதற்குமான காரணம், அவர்கள் தங்கள் மத போதகத்தின் ஆவியினால், அவர்களையும் அறியாமலேயே, தவறான போதனைகளை மனதில் பதிய பெற்றிருக்கிறவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்றே நாம் எண்ணுகின்றோம். அவர்களின் மத போதனையானது, இப்படிப்பட்ட ஸ்திரீயானவள் தேவனால் மிகவும் வெறுக்கப்படுகிறபடியால், அவள் மரணத்தின் பிடிக்குள் செல்லும்போது, அவள் நித்திய காலத்திற்கும் வாதிக்கப்படத்தக்கதாக தேவனால், பிசாசின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவாள் என்பதேயாகும். கர்த்தராலே இழிவாகப் பார்க்கப்படும் ஒருவர், மனுக்குலத்தினாலும் ஒதுக்கி வைத்து வெறுக்கப்பட வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் தங்களையும் அறியாமலேயே எண்ணிக்கொள்கின்றார்கள். பாவிகளிடத்திலான தேவனுடைய மனப்பான்மை பற்றியும், யாவரும் கெட்டுப்போவதில் அவருக்கு இருக்கும் விருப்பமின்மை பற்றியும் மற்றும் தம்முடைய சகல இரக்கங்களையும் நிராகரிக்கும் துணிவுள்ள பொல்லாதவர்களைச் சித்திரவதைக்குட்படுத்தாமல், மாறாக அத்தகையவர்களுக்கு ஜீவனைக் கொடுக்காமல் முற்றிலும் மரணத்தில் மறைந்து போடுவதாகிய அவருடைய ஏற்பாடு பற்றியுமான தெய்வீக வார்த்தைக் குறித்த அறிவின் தெளிவு கிறிஸ்தவர்களுக்குத் தேவை. (2 பேதுரு 3:9; அப்போஸ்தலர் 3:23). தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் தொடர்பான தெளிவான/உண்மையான கண்ணோட்டங்கள், தேவனுடைய ஜனங்கள் தங்கள் வழிமுறைகளைச் சரிச்செய்துகொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

அத்தருணத்தில் இயேசுவோடுகூட யூதர் கூட்டத்தார் காணப்பட்டிருப்பார்களானால், இழிவான சமாரியருக்குப் பதிலாக, தமது சக்தியை யூதர்களுக்கே செலவழித்திருந்திருப்பார் என்று நாம் அனுமானிக்கின்றோம். ஆனால் அச்சமயத்தில் போஷிக்கப்படத்தக்கதாக, "பிள்ளைகள்" இல்லாதபடியினால், இயேசு ஆசீர்வாதம் மற்றும் அறிவின் துணிக்கைகளை, "பிள்ளைகளாயிராமல்", "நாய்க்குட்டிகளாய்" இருக்கும் புறஜாதிகளுக்கு ஒப்பான சமாரியர்களுக்கு மேஜையிலிருந்து விழப்பண்ணினார் (மத்தேயு 15:27). நம்முடைய கர்த்தரின் இச்செயல்பாடானது, அவருடைய பின்னடியார்களுக்கு ஒரு படிப்பினையாகவும், "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக,

யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு முன்னுதாரணமாகவும் இருக்கின்றது (கலாத்தியர் 6:10). இன்னுமாக, பிதாவுக்கடுத்தக் காரியங்களில் ஈடுபடுவதும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதுமே தமது போஜனமாகவும், பானமாகவும் இருக்கின்றது என்பதற்கான உதாரணமாக இந்நிகழ்வு அமைகின்றது. இயேசு களைப்படைந்திருந்தபோதிலும், தாம் இன்னும் சம்பாஷணையில் ஈடுபடுவது, தம்முடைய இளைப்பாறுதலையும், புத்துணர்வு அடைதலையும் தடுத்துவிடும் என்று அவர் அறிந்திருந்தபோதிலும், மற்றவருக்கு அதாவது சமுதாயத்தினால் புறக்கணிக்கப்பட்ட ஒருவருக்கு உதவும்படிக்குத் தம்முடைய சொந்த சௌகரியங்களைத் தியாகம் செய்ய ஆயத்தமாயிருந்தார். ஆகவேதான் "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை வாஞ்சையுள்ள செவிகளுக்குப் பிரசங்கம்பண்ணு" என்று கர்த்தருடைய சகல ஜனங்களுக்கும் அப்போஸ்தலர் புத்திச் சொல்லுகின்றார் (2 தீமோத்தேயு 4:2).

நமது கர்த்தர் தம்மை அந்த ஸ்திரீக்கு அறிமுகப்படுத்தின விதத்தில், ஞானம் வெளிப்படுகின்றது. அவள் செய்வதற்குக் கடினமில்லாத விண்ணப்பத்தை அவர் கேட்டார். அதே சமயம் அவளுக்கு நன்றிகள் செலுத்தும் நிலைக்குள், தம்மைக் கீழ்ப்படுத்தவும் செய்தார். இது சகலரையும் அணுகுவதற்கான முறைகளில் "தலைச் சிறந்தமுறை" என நம்முடைய அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது; அதாவது நம்மைத் தாழ்த்தி, மற்றவர்களின் பெருந்தன்மையின் மீதான நமது நம்பிக்கையை வெளிப்படுத்துவது, ஏதோ விதத்தில் அவர்களின் தயவுக்கு நாம் திரும்பச் செய்வதற்கு, விருப்பம் கொண்டிருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கும்.

நமது கர்த்தர் கேட்ட உதவிக்கு ஸ்திரீயிடம் வெளிப்பட்ட கடினத்தன்மையை அவர் பொருட்படுத்தாமல், யாக்கோபின் ஆழமான கிணற்றில் காணப்படும் நல்ல தண்ணீரை ஓர் உதாரணமாக எடுத்துக்கொண்டு, தேவனுடைய கிருபையைக் குறித்ததான ஒரு பாடத்தைப் போதிக்க முற்பட்டு, ஸ்திரீயினிடம் ஒருவேளை அவள் அனுபவிக்கும் சிலாக்கியத்தைக் குறித்து அவள் உணர்ந்துகொண்டாளானால், என்னென்றும் பாய்ந்துகொண்டிருக்கிறதும், தேங்கி நிற்காததும், புத்துணர்வுடையதுமான "ஜீவத்தண்ணீரை" தம்மிடத்தில் அவள் கேட்டுக்கொண்டிருப்பாள் என்று கூறினார். நமது கர்த்தருடைய வார்த்தைகளில் சில ஆழமான அர்த்தம் காணப்படுகின்றதை அவள் உணர்ந்துகொண்டாள். கர்த்தர் யாக்கோபின் கிணறைக் குறிப்பிட்டிருக்க முடியாது, காரணம் அதினின்று மொண்டு எடுப்பதற்கு அவரிடம் எவ்விதமான கயிறும், தோலினாலான பாத்திரமும் (Leather bucket) இல்லை. ஆதலால் அவள், "எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்" என்றும், இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே" என்றும் வினவினாள். நமது கர்த்தர் ஆவிக்குரிய காரியங்களை வெளிப்படுத்துவதில் இன்னும் ஒருபடி முன்சென்றவராக, தாம் கொடுக்கப்போகும் தண்ணீரானது வேறுபட்ட வகை என்றும், அது தற்போதுள்ள தண்ணீர்த்தாகத்தைத் தணிப்பதோடல்லாமல், அது தொடர்ந்து உள்ளுக்குள் ஊறுகிற நீரூற்றாய் இருந்து என்றென்றும் திருப்திக் கொடுக்கின்றதாயும் இருக்கும் என்றும் அவளுக்கு உறுதியளித்தார்.

தண்ணீர், ஜீவத்தண்ணீர், தூய்மையான தண்ணீர் என்பது அனைவருக்கும் தெளிவான, அருமையான அடையாளமாகும். மேலும், தாகம் என்பது வேறொரு அடையாமாகும். தாகம் என்பது விருப்பம், வாஞ்சை, ஏக்கம் பேராவலாகும். சரீரப் பிரகாரமான தாகம் என்பது சரீரப் பிரகாரமானப் பசியைக்காட்டிலும் மிக வேதனை அளிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. பசியின் வீரியமானது, சரிரம் பெலவீனமடைய, அடைய குறைவடையக்கூடியதாய் இருக்கின்றது. ஆனால், தாகம் என்பதோ கடைசி மூச்சுவரையிலும் தொடரக்கூடியதாகவும், கடுமையாகவும் காணப்படக்கூடிய ஒன்றாகும். தண்ணீர் என்பது இந்த இயல்பான தேவையைத் திருப்திச் செய்யக்கூடியதாய் இருக்கின்றது; இதைப் போலவே ஆத்துமாவின் தாகத்தையும், ஜீவத்தண்ணீர் மாத்திரமே தணித்துத் திருப்திச் செய்யக்கூடியதாக இருக்கின்றது.

ஒவ்வொரு இலட்சியமும், விருப்பமும் ஒரு தாகமாகும். ஒரு மனிதனுடைய மகத்துவமும், அவனுடைய தனித்துவமும் மூன்று காரியங்களின் அடிப்படையில் அளவிடப்பட முடியும். அவைகள் பின்வருமாறு, (1) அவனுடைய தாகங்களின்/விருப்பங்களின் எண்ணிக்கைகள்; (2) அவனுடைய தாகங்களின் அம்சங்கள்; (3) அந்தத் தாகங்களின் வீரியம் என்பவைகளே ஆகும். தகுதியான மற்றும் தகுதியற்ற தாகங்கள் பற்றியும், இவைகளில் எவைத் திருப்திப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும், இப்படி மிக ஞானத்துடன் செயல்படுவது எப்படி என்பது பற்றியும், உண்மையான

கல்வியானது, ஓர் ஆசிரியராக மனுஷனுக்குப் பாடம் புகட்டுகின்றது. எவ்விதமான விருப்பங்களும் இல்லாதவனுக்குத் திருப்திச் செய்வதற்கு எதுவும் இருப்பதில்லை. மேலும், உண்மையைச் சொல்லப்போனால் அத்தகையவன் ஜடமாவான். நமக்கென்று விருப்பங்கள் இருக்கக்கூடாது என்றோ, அதிகமாக இருக்கக்கூடாது என்றோ, வாழ்க்கையின் பாடங்கள் நமக்குக் கற்பித்துத்தராமல் மாறாக, இந்த விருப்பங்கள் பாவமான விருப்பங்களிலிருந்து நீதியான விருப்பங்களாகவும், பாவமான பேராவல்களிலிருந்து பரிசுத்தமான பேராவல்களாகவும் மாற்றப்பட/மறுரூபமடைய வேண்டும் என்றே நமக்குக் கற்பித்துத்தருகின்றது. இவ்விதமாக, கர்த்தருடைய பின்னடியார்கள் நீதியின்மேல் பசிதாகம் உள்ளவர்களாகவும், அவர்களின் விருப்பங்களை இழப்பதினால் திருப்தியடைகிறவர்களாய் இராமல், மாறாக சகல தகுதியான ஏக்கங்களைத் திரளாகவும், தொடர்ச்சியாகவும் திருப்திச் செய்வதற்கு ஏதுவான கர்த்தருடைய முன்னேற்பாடுகளை உணர்ந்து ஏற்றுக்கொள்வதன் மூலம் திருப்தியடைகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தகுதியற்ற ஏக்கங்கள் எதிர்க்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, வேருடன் அழிக்கப்படவும் வேண்டும். ஆனால், தகுதியான ஏக்கங்களோ வளர்க்கப்பட்டு, விருத்திச் செய்யப்பட்டு, ஆதரவு அளிக்கப்பட்டு, என்றென்றும் அனுபவிக்கப்படவும் வேண்டும்.

திருப்திப்படுத்தும் இந்த ஜீவத்தண்ணீரானது மீட்பரிடமிருந்து அல்லாமல், வேறு எவரிடமுமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட முடியாது; மேலும், இதனை பெற்றுக்கொண்ட யாவரும் இதனை நன்கு அறிந்திருக்கிறப்படியால், இதற்கு அவர்களால் நன்றி சொல்லி தீரமுடியாது. காரணம், இதனால் இவர்கள் புத்திக்கு எட்டாத தேவ சமாதானத்தைத் தங்கள் இருதயங்களில் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். மனுஷர் மத்தியில் கனம்பெற்றுக்கொள்வதற்கு இவர்கள் தாகங்கொள்ளாமல், பரம பிதாவிடத்திலும், மீட்பரிடத்திலும் ஐக்கியமும், கனமும் பெற்றுக்கொள்ளவே தாகங்கொண்டிருக்கின்றனர். பூமிக்குரிய ஆஸ்திக்காகத் தாகங்கொள்ளாமல், இவர்களின் மறுரூபமாக்கப்பட்ட/மாற்றப்பட்ட விருப்பங்களானது, பரலோகப் பொக்கிஷங்களுக்காக இப்பொழுது தாகங்கொண்டுள்ளது. சிற்றின்பங்களுக்காகத் தாகங்கொள்வதற்குப் பதிலாக, இவர்களின் பிரதானமான சந்தோஷங்களும், விருப்பங்களும் ஆவிக்குரிய விருப்பங்களாக/இன்பங்களாக இருக்கத்தக்கதாக, இவர்களின் விருப்பங்கள் மறுரூபமாக்கப்பட்டுள்ளது/மாற்றப்பட்டுள்ளது. மேலும், இந்த அனைத்துத் தாகங்களும் சத்திய வார்த்தைகளினால் உண்டாகும் புத்துணர்வினாலும், சத்தியத்தின் பரிசுத்த ஆவியினாலும் அதிகமாயும், தொடர்ச்சியாகவும் திருப்திச் செய்யப்படுகின்றது. நமது மீட்பரால் நமக்கு அளிக்கப்படும் ஜீவத்தண்ணீரானது நம் ஒவ்வொருவரிடத்திலும் என்றென்றுமுள்ள ஜீவ ஊற்றாகக் காணப்படும்.

அந்தச் சமாரியா ஸ்திரீயானவள், நமது கர்த்தரின் வார்த்தைகளுடைய அர்த்தத்தைப் புரிந்துக்கொள்ளவில்லை. ஒருவேளை நாமும் அதே சூழ்நிலைகளில் காணப்பட்டால், நம்மால் கூடப் புரிந்திருக்க முடியாது. ஏனெனில், நமது கர்த்தர் கொடுப்பேன் என்று கூறின ஜீவத்தண்ணீருடைய கிணறானது ஆழமாக இருந்தபடியினாலும், சமாரியா ஸ்திரீயும் சரி மற்றும் நம்மிடத்திலும் சரி அதனிடத்தினின்று மொண்டு எடுப்பதற்கு எதுவுமில்லாமல் இருந்தபடியினாலுமேயாகும். எனினும் நாம் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டுள்ள புதிய கால யுகத்தில் காணப்படுகிறபடியால், அப்போஸ்தலர் குறிப்பிடுகிறதுபோல திரளானவற்றினால் அருளப்பட்டிருக்கின்றோம்; "எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரிந்தியர் 2:9, 10).

உண்மையான ஜீவத்தண்ணீருக்கான, ஸ்திரீயினுடைய விண்ணப்பத்திற்கு நமது கர்த்தர் பதில் கொடுக்காததற்கான காரணங்கள் . . . (1) சத்தியத்தின் பரிசுத்த ஆவியானது அருளப்படுவதற்கான சமயம் அப்பொழுது வரவில்லை. மேலும் கல்வாரியில் மாபெரும் பலிச் செலுத்தப்பட்டப் பின்பும் பெந்தெகோஸ்தே நாள்வரையிலும் பரிசுத்த ஆவியானது அருளப்படவில்லை; (2) அவள் சமாரியா ஸ்திரீயாக இருந்ததும் ஒரு காரணமாகும். இத்தகையவர்கள் நியமிக்கப்பட்ட வேளை வரையிலும் தெய்வீகத் தயவையும், பரிசுத்த ஆவியையும் பெற்றுக்கொள்ள முடியாது. சகல புறஜாதிகளுக்கும் வாய்ப்பின் கதவுத் திறக்கப்படுவது வரையிலும் அதாவது, பெந்தெகோஸ்தே நாள் தொடங்கி . . . 3½ வருடங்களுக்குப் பின்புவரையிலும் இவர்களுக்கான நியமிக்கப்பட்ட வேளை வருவதில்லை. எனினும் அந்தச் சமாரிய ஸ்திரீயிடம் காணப்பட்ட ஆவலும், விசுவாசமும் மற்றும் அவளுடைய பட்டணத்து ஜனங்களிடம் காணப்பட்ட

விசுவாசமும், கர்த்தருக்குப் பிரியமான, இருதயத்தின் உண்மைநிலை அவர்களிடம் காணப்பட்டதையும் சுட்டிக்காட்டுகின்றது. ஆக, இதன் காரணமாகவே கர்த்தர் சில ஆறுதலளிக்கும் சத்தியத்தின் துணிக்கைகளையும் அவர்களுக்கு விழும்படிக்குச் செய்தார்; மேலும், சகல புறஜாதிகளுக்கும் சுவிசேஷமானது பிற்காலங்களில் முழுமையாகத் திறக்கப்படும்போது, அச்சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இத்துணிக்கைகள் அவர்களை ஆயத்தப்படுத்தியிருக்கும்; (3) அந்த ஸ்திரீ ஜீவத்தண்ணீரை ஏற்றுக்கொள்வதற்கு/பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற இருதய நிலையில் இன்னும் காணப்படாமல் இருந்ததுகூட ஒரு காரணமாகும். இந்தக் கடைசி மூன்றாவது காரணமாகிய தடையை அவளால் மிக உடனடியாகப் புரிந்துக்கொள்ள முடியும் என்பதால், முதல் இரண்டு காரணங்களை ஸ்திரீக்கு விவரிக்க அவசியம் ஏற்படவில்லை. ஆகவே, அவள் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாள் என்ற விஷயத்தின் மீது அவளுடைய கவனத்தைக் கர்த்தர் திருப்பினார். தனக்கு முன்பின் அறிமுகமாகாதவராகிய அவர் (இயேசு) தன்னிடம் விசாரிக்காமலேயே, தன்னுடைய பாவ வாழ்க்கையைக் குறித்து அறிந்திருந்தபடியால் அவர் தீர்க்கத்தரிசன வரம் பெற்றவர் என்று ஸ்திரீ புரிந்துக்கொண்டாள்.

நமது கர்த்தர், தாம் கொடுக்கப்போகும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமற்ற ஸ்திரீயிடம் மற்றும் ஒருவேளை அப்போது அவள் ஆயத்தமாய் இருந்தாலும், அவரால் அவளுக்கு (புறஜாதி) கொடுக்க முடியாத ஆசிர்வாதங்களைக் குறித்து அந்த ஸ்திரீயிடம் கலந்து ஆலோசிப்பதற்கான காரணம் என்ன என்று கேள்வி கேட்கப்படலாம். இதற்கான விடை பின்வருமாறு . . . (1) அச்சமயத்தில் கர்த்தர் தமக்குக் கிடைத்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தினார்; (2) அவளுடைய வாழ்க்கை பாவநிலையில் காணப்பட்டாலும், அந்த ஸ்திரீயின் குணலட்சணங்களில் நேர்மையின் சுவடுகளைக் கர்த்தர் கண்டுணர்ந்த காரணமாக இருக்கலாம். அவளுடைய நேர்மை தன்மையை நாம், பதிவு செய்யப்பட்ட வசனப்பகுதிகளில் அடையாளம் கண்டுக்கொள்ளலாம்; (3) இந்தச் சம்பாஷணையின் விளைவாக உண்டாகும் செல்வாக்கானது நீதிக்கு ஏதுவாகவும், ஜீவத்தண்ணீருக்கான உண்மையான தாகத்திற்கு நேராகவும் வழிநடத்தும் என்று கர்த்தர் எதிர்ப்பார்த்திருக்கக்கூடும். மேலும், தம்முடைய இந்தச் சம்பாஷணையானது, ஆறு வருடங்களுக்குப் பிற்பாடு (யூதர்களுக்கு மாத்திரம் விதிவிலக்காயிராமல்) சுவிசேஷம் பொதுவாகப் பிரசங்கிக்கப்படும் காலத்தில், இந்தச் சமாரியர்களில் சிலரை, சில உண்மைகளை உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு கொண்டுவரும் என்று கர்த்தர் எதிர்ப்பார்த்திருந்திருக்கக்கூடும்; **அதென்னவெனில்**, ஜீவத்தண்ணீருடைய கிணறானது ஆழமாய் இருக்கின்றது என்றும், அதனின்று மொண்டு எடுப்பதற்கு தங்களிடத்தில் எதுவுமில்லை என்றும், இன்னுமாக, ஒருவேளை இந்தத் திருப்திப்படுத்தும் ஜீவத்தண்ணீரில் ஒரு பாகத்தைத் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், விருப்பமுள்ள யாவருக்கும் ஜீவத்தண்ணீரைக் அருளும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக தமது ஜீவனைக் கொடுத்தவராகிய கர்த்தரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றுமுள்ள உண்மையை உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு வருவதற்கென, இந்தச் சமாரியர்களில் சிலருக்கு உதவும் என்று கர்த்தர் எதிர்ப்பார்த்திருந்திருக்கக்கூடும். ஒருவேளை அந்த எளிய சமாரியா ஸ்திரீயானவள், சுவிசேஷத்தில் தாக்கமடையவும், ஜீவத்தண்ணீரைப் பருகுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நிலையை அடையவுமில்லை என்றாலும் அவள், தற்போது வாய்ப்பு பெற்றிராத மற்ற அனைவரோடும் சேர்ந்து எதிர்க்காலத்தில் வாய்ப்பு அருளப்படுவாள் என்று தெய்வீக வார்த்தைகள் நமக்கு உறுதியளிக்கின்றது.

ஜீவத் தண்ணீரானது தற்போது தனித்தனி நபர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது; இப்பொழுது ஜீவத் தண்ணீரானது "தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவராலும்" அதாவது, "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களால்" மாத்திரமே அனுபவிக்கப்படுகின்றதாய்க் காணப்படுகின்றது; எனினும் இந்த ஜீவத்தண்ணீரனாது, கர்த்தருடைய ஜனங்களுக்குள் கிணறாக இருக்கும் நிலையிலிருந்து, மாறும் காலம் சமீபித்துள்ளது என்றும், ஆயிரம் வருஷம் அரசாட்சியில் அது ஜீவத்தண்ணீரின் நதியாக, திரளாயும், முழுமையாயும், பளிங்குக் கல்லுக்கு ஒப்பாக தெளிவாகவும், தேவன் மற்றும் ஆட்டுக்குட்டி மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாகிய உடன்சுதந்தரர்களின் சிங்காசத்தினின்று, பூமியின் குடிகளுக்கெல்லாம் பாயும் என்றதுமான உண்மையை, அவருடைய வார்த்தைகள் நமக்கு அருளியிருப்பதினால் நாம் கர்த்தரைத் துதிக்கின்றோம். அப்பொழுது ஜாதிகளைச் சீர்ப்பொருத்துவதற்கும், சொஸ்தப்படுத்துவதற்குமான இலைகளையுடைய ஜீவவிருட்சங்கள் மாத்திரமிராமல், ஆவியும் (மகிமையடைந்த) மணவாட்டியும் வா என்பார்கள், கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் என்பார்கள்" (வெளிப்படுத்தல் 22:17).

சமாரியா ஸ்திரீயானவள் தனது குணநலன்களைக் குறித்தும், ஜீவியத்தைக் குறித்தும் இன்னும் விவாதிக்கப்படுவதைத் தவிர்க்க விரும்பினவளாக, சாதுரியமாக மத ரீதியிலான கேள்விக்குத் திரும்பினாள். அதாவது, தேவனை ஆராதிப்பதிலும், ஆராதிக்கும் ஸ்தலம் குறித்ததுமான யூதர் கண்ணோட்டம் சரியா? (அ) சமாரியர் கண்ணோட்டம் சரியா? என்று வினவினாள். இவ்விதமான மனித சுபாவமே இன்றும் காணப்படுகின்றது. இன்றைய புருஷர்களும், ஸ்திரீகளுங்கூடத் தங்கள் உள்ளங்களை ஆராய்வதற்கும், தங்களுடைய சொந்த ஜீவியங்களில் உள்ள முரண்பாடான காரியங்களைக் கவனித்து, அவைகளைச் சீர்த்திருத்தம் பண்ண விருப்பங்கொள்வதற்கும் பதிலாக, மதப்பிரிவுகளிலுள்ள வித்தியாசங்களையும், மதகோட்பாடுகளில் உள்ள பிரச்சனைகளையும் குறித்தே விவாதித்துக் கலந்து பேச விரும்புகின்றனர். அவளைக் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட வைக்கத்தக்கதாக தாம் உடனடியாக கேட்ட அந்த ஒழுக்கரீதியான கேள்வியை, நமது கர்த்தர் இன்னும் அதிகமாக வலியுறுத்தி விமர்சிக்கவில்லை; மேலும், அவரின் இச்செயல்பாடானது அவருடைய பின்னடியார்களுக்கு ஒரு படிப்பினையாக உள்ளது. மற்றவர்களின் தவறுகளின் காரணமாக அவர்களைப் பரிகாசம்பண்ணி, சினப்படுத்தி, இழிவாக/அவமரியாதையுடன் திட்டிக்கொண்டிருப்பதைக்காட்டிலும், அவர்களின் தவறுகளைக் குறித்த கவனத்திற்குள் அவர்களைக் கொண்டுவருவதே போதுமானதாகும்.

தேவனைத் தொழுதுகொள்ளும் சரியான ஒழுங்குமுறைக் குறித்துச் சுருக்கமான வார்த்தைகளில் நமது கர்த்தர் கூறிவிட்டார். சமாரியர்கள் தாங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகின்றார்கள் என்றும், யூதர்களோ தெய்வீக முறைமையின்படியே பின்பற்றுகின்றனர் என்றும், சமாரியா ஸ்திரீயிடம் மிகத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். மேலும், மாபெரும் யுக மாற்றம் சமீபித்துள்ளது என்றும், அந்தக் காலத்தில் இடம் மற்றும் முறைமைகள் குறித்த சகல வேற்றுமைகள் மாறிவிடும் என்றும், இந்தச் சுவிசேஷ யுகமாகிய புதிய காலப்பகுதியில் தேவனுடைய கிருபையைக் காண்பதற்குக் கண்களும், கேட்பதற்குக் காதுகளுமுள்ள சகலரும் ஆவியிலும் (உண்மையான இருதயத்திலும்) சத்தியத்திலும், தெய்வீக ஒழுங்குக்கு இசைவிலும், வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கின்ற கிறிஸ்துவின் மூலம் எவ்விடத்திலிருந்தும் தேவனை ஆராதிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்கள் என்றும் கூறினார். ஜீவத்தண்ணீரை அளிப்பவரும், அதன்மேல் அதிகாரியான மேசியாவாகிய கிறிஸ்துவின் மூலம் மாத்திரமே பிதாவை அணுகமுடியும்.

**ஆமென்!**

---

R 2585

# "நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு"
## (சங்கீதம் 37:37-KJV)

"சான்றோரைப் பார்! நேர்மையானவரைக் கவனி!" (திருவிவிலியம் )
மத்தேயு 4:25-5:12

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." (மத்தேயு 5:8)

தேவன் அளிக்கப்போகின்ற மிக ஆசீர்வாதமான நிலைகளை நாம் அடைவதற்கு என்ன குணநலன்கள் அவசியமாய் உள்ளன? இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கும், நீதியினால் நிரம்பிக்காணப்படுவதற்கும், தெய்வீக இரக்கம் மற்றும் முடிவில்லா ஆறுதலைப் பெற்றுக்கொள்வதற்கும், தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படுவதற்கும், தேவனுடைய முகத்தைப்பார்க்க அனுமதிக்கப்படுவதற்கும், பரலோகத்தில் மாபெரும் பலனை அடைவதற்கும் நாம் எப்படிக் காணப்பட வேண்டும்? இதைக்காட்டிலும் வேறெந்தக் கேள்வி, வேறெந்தத் தலைப்பு, வேறெந்தப் பாடம் நமக்கு மிகவும் சுவாரசியமாகவும் அல்லது மிகவும் நன்மைக்கேதுவான ஆராய்ச்சியாகவும் இருக்கக்கூடும்? இதை மாபெரும் போதகரானவர் தம்முடைய முதலாம் வருகையின்போது கொடுத்திட்ட முக்கியமான போதனைகளில் ஒரு தலைப்பாகக்/பாடமாகக் கொடுத்துள்ளார். மேலும், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள தம்முடைய உண்மையான சீஷர்களுக்கு எச்சரிப்பாக இருக்கும்படிக்குத் தம்முடைய வாதங்களின் சாராம்சத்தைப் பதிவு செய்து வைக்கும்படியாகவும் பண்ணினார்.

கர்த்தருடைய பின்னடியார்களாகிய நாம் பின்பற்ற வேண்டிய அவருடைய குணலட்சணம் ஒன்றாக இருப்பினும், அந்த ஒரு குணலட்சணத்தை அடைவது என்பது, தேவன் அளிக்கப் போகின்ற அனைத்து ஆசீர்வாதங்களை அடைவதாக இருக்கும். எனினும், இவ்விஷயத்தை நம்முடைய மனங்களுக்குத் தெளிவுபடுத்தும் வண்ணமாக, கர்த்தர் இந்த ஒரு குணலட்சணத்தைப் பல்வேறு பாகங்களாகப் பிரித்து, அந்த ஒவ்வொரு தனிப்பட்ட பாகத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றார். அதாவது, எப்படி ஒரு நிழற்படம் எடுப்பவர் (photographer) ஒரு பொருளின் அனைத்து விஷயங்களும் தெளிவாகத் தெரியத்தக்கதாக முன்புறக் கண்ணோட்டத்திலும், இடது புறக் கண்ணோட்டத்திலும், வலது புறக் கண்ணோட்டத்திலும், பின்புறக் கண்ணோட்டத்திலும் (Front, Right, Left, Back View) படங்கள் எடுத்துக்கொள்வதுபோன்று, கர்த்தர் நமக்குக்காட்டி, நம் மனங்களுக்குத் தெளிவுப்படுத்துகின்றார்.

### "முதலாம் அவசியம்"

நமது கர்த்தர் முன்வைக்கும் முதலாவது குணலட்சணமானது, சில கோணங்களில் மிகவும் முக்கியமானது என்று எண்ணுவதற்கு நியாயமான காரணங்கள் உண்டு என்று நாம் கருதுகின்றோம். முதலாம் குணலட்சணம் **தாழ்மையாகும்.** "ஆவியில் எளிமையுள்ளவர்கள் (தாழ்மையான மனமுள்ளவர்கள்) பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது." வசனம் இப்படியாக இருப்பதினால், தாழ்மைதான் அவசியமான ஒரே குணலட்சணம் என்றும், தாழ்மை கொண்டவர்கள் எவரும் இராஜ்யத்தை அடைந்துவிடுவார்கள் என்றுமுள்ள அர்த்தத்தைக் கொடுக்காது. மாறாக, இராஜ்யத்தை அடைவதற்குத் தாழ்மையானது முதலாம் முக்கியத்துவமுள்ள முன்தேவை/முன்நிபந்தனையாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தாழ்மையுள்ளவர்கள் அனைவராலும் இராஜ்யத்தை அடையமுடியாது, அதேசமயம் தாழ்மை இல்லாத எவராலுங்கூட இராஜ்யத்தை அடையமுடியாது. மேலும், "பரலோக ராஜ்யம் அவர்களுடையது" என்பதின் அர்த்தமானது, பெருமை, அகம்பாவம், செருக்கு என்பவைகளைத் தங்களின் குணலட்சணங்களுடைய அஸ்திபாரமாகக் கொண்டிருப்பவர்களாகிய வேறு மனநிலையைக் கொண்டவர்களுக்கு, இராஜ்யத்தை அடைவதற்கான வாய்ப்புகள் முற்றிலும் தடைச் செய்யப்பட்டிருப்பினும், மேற்கூறப்படுள்ள தாழ்மையுள்ள வகுப்பார், இராஜ்யத்திற்கான கனங்கள் மற்றும் ஆசீர்வாங்களைப் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதேயாகும்.

"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" என்ற வார்த்தைகளைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் தெளிவாய்ப் புரிந்துக்கொள்வார்களாக! இந்தக் கருத்தானது, தேவனுடைய நேச குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாறும்படிக்கு நாடிக்கொண்டிருக்கின்ற, கர்த்தருடைய சிறியவர்களில் ஒவ்வொருவரையும் எவ்வளவாய் எச்சரிப்புடன் இருக்கச்செய்ய வேண்டும். இந்தத் தாழ்மையின் ஆவியைத் தங்களுடைய இருதயங்களில் வளர்த்திக்கொள்ளும்படியாக இவர்கள் பேணுவதிலும், கவனிப்பதிலும் எத்துணை வைராக்கியத்துடன் காணப்பட வேண்டும். மேலும், இத்தாழ்மையானது மற்றவர்களுக்கு அதிகமதிகமாய்த் தெரியத்தக்கதாக இவர்களுடைய அன்றாட ஜீவியத்திலும் காணப்பட வேண்டும். இன்னுமாக, இத்தாழ்மை விசேஷமாகச் சகோதரர்களுக்கு எத்துணை ஆசீர்வாதமாகவும் நன்மைக்கேதுவான எத்துணை செல்வாக்காகவும் காணப்பட வேண்டும்.

வேரிலிருந்து பல கிளைகளையுடைய மரமானது வளர்வதுபோன்று, முதலாவது அவசியமாய் இருக்கும் இக்குணலட்சணம் வளரும்போது, கர்த்தர் "பாக்கியம்" அதாவது தெய்வீக அங்கீகரிப்புடையது என்று அறிவித்துள்ள ஆவியின் மற்றக் குணலட்சணங்களும் வளர்கின்றது. இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, சகல மனித போதனைகளிடமிருந்தும், நமது கர்த்தருடைய போதனைகள் எவ்வளவு வேறுபட்டதாகக் காணப்படுகின்றது! பூமிக்குரிய ஞானமானது பின்வரும் காரியங்களைக் கூறுகின்றது:- அதாவது, "நிமிர்ந்து நில்லுங்கள், உங்களைப்பற்றி உயர்வாக எண்ணுங்கள், எளிமையுடன் இருப்பதற்குப்பதிலாகக் கொஞ்சம் கர்வம் கொண்டவர்களாக இருங்கள். இப்படிக் கொஞ்சம் கர்வத்துடன் இருப்பது அநேக விதத்தில் மிகுந்த செல்வாக்கை உடையதாக இருக்கும். உங்களைக்காட்டிலும் வேறு எவராலும் உங்களைக்குறித்து உயர்வாகவும் எண்ணமுடியாது, பாராட்டவும் முடியாது. ஆகவே, உங்களைக்குறித்து உயர்வாக எண்ணிக்கொள்ளுங்கள், நிமிர்ந்து நடங்கள், உங்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பதை வெளிப்படுத்தும் பார்வையை உடையவராய் இருங்கள்."

இப்படியான உலகப்பிரகாரமான ஆலோசனையில், உலக ஞானம் காணப்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை. தற்காலம் தொடர்பான பூமிக்குரிய விஷயங்களில் ஜெயம்/ வெற்றிக்கொள்வதற்கு ஏதுவான இந்தப் பூமிக்குரிய ஆலோசனைகளில் கொஞ்சம் உண்மை இருக்கின்றது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், தேவனுடைய வழிகள் என்பது மனுஷனுடைய வழிகள் அல்ல; வானம் பூமியிலிருந்து எவ்வளவு உயரமாகக் காணப்படுகின்றதோ, அவ்வளவாய்த் தேவனுடைய வழிகளும், மனுஷனுடைய வழிகளிடமிருந்து உயர்வானதாகக் காணப்படுகின்றது. மேலும், தன்னைத்தான் தாழ்த்துகின்றவன், ஏற்றகாலத்தில் உயர்த்தப்படுவான் என்றும், தன்னைத்தான் உயர்த்துகின்றவன், ஏற்றகாலத்தில் தாழ்த்தப்படுவான் என்றும் தேவன் நமக்கு உறுதியளிக்கின்றார் (மத்தேயு 23:12). தேவன் இன்று தெய்வீக வல்லமையின் வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டுள்ள நமது அருமையான மீட்பரை, தாழ்மை மற்றும் கீழ்ப்படிதலுக்கான மாதிரியாக வேத வாக்கியங்களில் சுட்டிக்காட்டுகின்றார். பின்னர் தன்னைத்தான் உயர்த்த முயற்சித்து, இப்பொழுது தள்ளப்பட்டு, முற்றிலுமாக இறுதியில் அழிக்கப்படப்போகின்ற மாபெரும் எதிராளியானவனின் போக்கின்மேல் நமது கவனத்தைத் திருப்புகின்றார் (பிலிப்பியர் 2:9; எபிரெயர் 2:14).

ஆவியில் எளிமையுள்ளவனுக்கும் மற்றும் பணப்பையில் எளிமை/தரித்திரனாய் இருப்பவனுக்கும் (அ) அறிவிலும், சாதனைகளிலும் தரித்திரனாய் இருப்பவனுக்கும் இடையேயுள்ள துல்லியமான வித்தியாசம் கவனிக்கப்பட வேண்டும். பூமிக்குரிய காரியங்களில் தரித்திரராய் இருந்தும், ஆவியில் செருக்குக்கொண்டவர்களாய்க் காணப்படும் ஜனங்களை நாம் அனைவருமே பார்த்திருக்கின்றோம். நம்முடைய பொருளாதாரமும் (அ) அறிவும், சூழ்நிலைகளும் என்னவாகக் காணப்பட்டாலும் சரி, தாழ்மையான ஆவியே தெய்வீகப் பார்வையில் அங்கீகரிக்கப்படுகின்ற காரியமாக இருக்கும் என்பதே கவனிக்கத்தகுந்த கருத்தாகும். பரத்திலிருந்துவரும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இத்தகைய தாழ்மையின் ஆவி அவசியமாகும். அதாவது, தங்கள் சொந்த குறைபாடுகள் குறித்தும், ஞானமில்லாமைக்குறித்தும் தாழ்மையுடன் உணர்ந்துக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல், தேவன் தற்காலத்தில் தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரம் அருள விரும்பும் ஞானத்தை இருதயப்பூர்வமாகவும், இலவசமாகவும் பெற்றுக்கொள்ள முடியாது. இன்னுமாக, இந்த மனத்தாழ்மையானது, தெளிந்த புத்தியுள்ள ஆவிக்கு அவசியமான ஆதாரமாக/அஸ்திபாரமாகக்கூட இருக்கின்றது. ஏனெனில், தாழ்மையான மனப்பான்மை உடையவரைத் தவிர வேறு எவரால் நியாயமாகவும், பாரபட்சமின்றியும், சரியாக சிந்திக்க முடியும்? ஆகவே, தாழ்மையானது கிறிஸ்துவின் மனம் அல்லது

குணலட்சணத்தின் முதல்நிலை மூலக்கூறாக இருக்கின்றது என நாம் அனைவரும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

## "அனுதாபத்திற்குரிய பலனாகிய ஆறுதல்கள்"

கர்த்தரால் கூறப்பட்டுள்ள இரண்டாம் மலைப்பிரசங்கத்தின் வார்த்தைகள் அல்லது பாக்கியமான நிலை, முதல் வார்த்தைக்கு மிகவும் தொடர்புடையதேயாகும். "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்." துயரப்படுவது என்பது ஒரு குணலட்சணம் அல்ல, மாறாக அது கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படத்தக்கதான ஒரு மனப்பான்மையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆறுதல் அல்லது சந்தோஷங்கள் இல்லாத துயரப்படுதலின் ஆவியே ஒரு கிறிஸ்தவனுடைய ஆவி என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மேலும், நம்முடைய பரம பிதாவும், பரிசுத்த தேவதூதர்களும் எப்போதும் துக்கப்பட்டுக்கொண்டிருப்பவர்களாக இருப்பார்கள் என்றும் நம்மால் அனுமானிக்கவும் முடியாது. ஒருவேளை, துயரப்படுதல் ஒரு குணலட்சணமாக இருக்குமாயின், நிச்சயமாகப் பிதாவும், தூதர்களும் துயரப்பட்டுக்கொண்டே இருப்பார்கள். மாறாக, கருத்து என்னவெனில், இப்பொழுது துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பதேயாகும். அதாவது, தற்கால பூமிக்குரிய சூழ்நிலைகளானது, முழுமையான திருப்தியையும், மகிழ்ச்சியையும் கொடுப்பதில்லை என்று உணர்கின்றவர்களைக் குறிக்கின்றது. அதாவது, முழு மனிதகுடும்பமும் இன்று கடந்துசென்று கொண்டிருக்கும் பிரச்சனைகள், பாவம், வியாதி, வலி, மரணம் மற்றும் கூக்குரலை அறிந்தவர்களைக் குறிக்கின்றது. தற்கால சூழ்நிலைகளின் கீழ் அனுதாப இருதயம் கொண்டவர்களும், தற்கால சூழ்நிலைகள் திருப்திகரமற்றவைகள் என்று உணர்கிறவர்களும் பாக்கியவான்கள். ஏனெனில், தேவனுடைய ஏற்பாட்டின் கீழ் அனைத்தும் சிறப்பான விதத்தில் நிறுவப்படுவதற்கான காலம் வந்து கொண்டிருக்கின்றது. மேலும், தற்கால சூழ்நிலைகள் குறித்ததான இவர்களுடைய அதிருப்தியானது, தெய்வீகத் திட்டம் ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கும் மேலான ஏற்பாடுகள் மீது இவர்களை ஈர்க்கின்றது. தேவனுடைய இராஜ்யம் வந்து, பரலோகத்தில் அவருடைய சித்தம் செய்யப்படுவது போன்று பூமியிலும் செயல்படுத்தப்படும் போதும் துக்கம், துயரம், வேதனை மற்றும் கண்ணீருக்கான காரணிகள் அனைத்தும் மாற்றப்படும். மேலும், அக்காலமானது (இராஜ்யம்) (இன்று துயரப்படுகின்ற) இந்த வகுப்பாருக்கு ஆறுதலின் காலமாகவும், திருப்தியின் காலமாகவும் இருக்கும்.

கர்த்தருடைய ஜனங்களுக்கு தற்காலத்திலுங்கூட ஆறுதல் கிடைப்பது உண்மையே. அதாவது, தெய்வீக வார்த்தையின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் மீது இவர்கள் கட்டியெழுப்பும் விசுவாசத்தின் மூலமாக இவர்கள் இக்காலத்திலேயே ஆறுதல் அடைகின்றனர். இந்த வகுப்பார் தற்காலத்தில் காணப்படும் தவறுகள், அநியாயம், பெரும்துயரங்களை உணர்ந்துக்கொள்வார்கள் என்ற இக்காரியமானது, இவர்களுக்குள் பல தெய்வீக வாக்குத்தத்தங்கள் கவர்ந்து இழுக்கப்படும் இருதய நிலையை உருவாக்குகின்றது. ஆனால் மற்றவர்களோ, அதாவது சிருஷ்டிகளின்மேல் அதிகம் அனுதாபம் இல்லாத இருதயத்தை உடையவர்ளோ, நமக்கு முன்பாக சுவிசேஷத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைகளை முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுவார்கள். ஆகவே, அனுதாபம் கொள்பவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளினால் கவர்ந்து இழுக்கப்படுகின்றபடியால், இவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து ஆறுதலை அடைகின்றார்கள். இந்த வார்த்தைகள் இவர்களுடைய இருதயங்களுக்குச் சமாதானத்தைப் பேசுகின்றது. மேலும், இவ்வார்த்தைகள் தற்கால சூழ்நிலைகளின் கீழ்க் குறைவான அனுதாபம் உள்ளவர்களாக இருப்பவர்கள் அறிந்திராத, உள்ளான சந்தோஷத்தையும் இவர்களுக்குக் கொடுக்கின்றது. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்களே!

குணலட்சணங்களிலுள்ள முதலாவது குணலட்சணமாகிய மனத்தாழ்மையை நாம் விதைத்து, அதனை நாம் அதிகமதிகமாய் வளர்த்த முடியும்போது, நம்மால் இரண்டாம் குணலட்சணமாகிய அனுதாபத்தின் ஆவியையும் நம்மால் வளர்த்தமுடியும். இந்த அனுதாபத்தின் ஆவியை வளர்த்துவதற்கு நாம் அடிக்கடி மற்றவர்களுடைய நலன்களை,சோதனைகளை, நம்முடைய பிரச்சனைகள்போன்று எண்ணி உதவிகரத்தை நீட்டவேண்டும். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10).

## ‘‘சாந்தகுணமுள்ளவர்கள் எப்படிச் சுதந்தரித்துக்கொள்வார்கள்’’

கர்த்தர் குறிப்பிடும் மூன்றாம் குணலட்சணம் சாந்தகுணமாகும். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். மூன்றாம் குணலட்சணம் என்பது சாந்தகுணம் அல்லது கனிவு/நிதானம் ஆகும். **வெப்ஸ்டர் அகராதியானது**, சாந்தகுணத்தை, ‘‘தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் மற்றும் ஒழுக்க ரீதியிலும், மத ரீதியிலும் காட்டப்படும் பொறுமை மற்றும் நிதானம்/கனிவு என்று விளக்குகின்றது. இந்தப் பொறுமை, நிதானம் மற்றும் தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் என்பவைகளுக்கும், சுயவிருப்பங்களை நிறைவேற்றுவதற்கென அடிக்கடி காட்டப்படும் சாதாரணமான நிதானம்/கனிவு, பொறுமை என்பவைகளுக்கும் இடையே நிறைய வித்தியாசம் உள்ளது என்பதைப் புரிந்துக்கொள்ள முடிகின்றது. குணலட்சணங்களுடைய வரிசையில் முதலாவதாக இடம்பெறும் தாழ்மையான மனதைப் பெற்றிராதவர்களுக்கு, தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பது என்பது கூடாத காரியமாகும். பெருமையும், சுயசித்தமும் கொண்டிருப்பவர்களிடம், சுயம் மேலோங்கி, அவர்களுடைய கணிப்பைத் தவறாய் வழிநடத்தி, அவர்களுடைய மனசாட்சியையும் தவறாய் வழிநடத்தி, அவர்களைத் தெய்வீக ஏற்பாடுகளின்மேல் முழுமையான நம்பிக்கை வைக்கமுடியாதபடிச் செய்து, அவர்கள் தங்கள் (ஊசாவைப் போன்று) கரங்களை நீட்டி (உடன்படிக்கைப்) பெட்டி விழுந்துவிடாதபடிக்கு, பெட்டியைத் தாங்கள் பிடித்து நிலைகுலையாமல் செய்ய வேண்டும் என்று எண்ணச் செய்கின்றது.

துயரப்படுபவர்கள் மாத்திரமே அதாவது, அதிகமான அனுதாபங்கள் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே அதாவது, தேவனுடைய ஜனங்களை தேவனுடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களின் வாயிலாக, ஆறுதல்படுத்தும் பரிசுத்த ஆவியினால் ஆறுதல்படுத்தப்பட்டவர்கள் மாத்திரமே, பொறுமையுடன் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கும் குணலட்சணத்தை வளர்த்துக்கொள்ள முடியும். நம்முடைய காலக்கட்டத்திலுள்ள தீமைபற்றியும், அவைகள் தற்காலத்தில் ஒரு ஞானமுள்ள நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் உணர்ந்துள்ள நிலையில் தேவனுடைய ஜனங்கள், தவிக்கும் சர்வ சிருஷ்டிகளின்மேல் அனுதாபங்கொள்வதோடு கூட, இந்த அனுதாபமும் மற்றும் இந்த அனுதாபத்தினால் கிடைத்துள்ள பலனாகிய ஆறுதலும், இவர்களைத் தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் காணப்படவும், தங்களைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பதற்கும் உதவுகின்றது. தேவனை அன்புகூருகின்றவர்வர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதை இவர்கள் நினைவுகூர்ந்து, தெய்வீக வழிநடத்துதல்கள் தங்களுக்கு எந்த விதத்தில் காணப்பட்டாலும், அதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கின்றனர். இன்னுமாக, இந்த வழிநடத்தல்களில் கிடைக்கும் படிப்பினைகளானது, எதிர்க்கால நித்தியத்திற்குரிய சந்தோஷங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களாகக் காணப்படுவதற்கும் இவர்கள் ஆயத்தமாயிருக்கின்றனர்.

இந்த மூன்றாம் குணலட்சணமாகிய, தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் தன்மையானது அதாவது, நம்மிடம் பழகி வருபவர்களால் (வெளிப்படையாக) அறியப்படும் இந்த மூன்றாம் குணலட்சணமானது, உள்ளுக்குள், இருதயத்திற்குள் உடன் இருப்பவர்களால் வெளிப்படையாகப் பார்க்கமுடியாத இரண்டாம் குணலட்சத்தின் வெளிப்படுத்தலாக இருக்கின்றது என்று கூடச் சொல்லலாம். கிறிஸ்துவுக்குள் காணப்படுபவர்களுக்கு, அவர்களுடைய அனைத்து விஷயங்களும், தெய்வீக மேற்பார்வையின் கீழிருக்கின்றது என்பதை நாம் உணர்கையில், நம்முடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் அனுதாபம் எனும் குணலட்சணமானது, நம்முடைய பொறுமையுடன்கூடிய கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் தன்மையில் வெளிப்படுகின்றது. மேலும், நம்முடைய சூழல்கள் மற்றும் ஜீவியத்தின் காரியங்கள் தொடர்பான விஷயங்களிலுள்ள தேவனுடைய வழிநடத்துதல் நிமித்தமான இந்தப் பொறுமையானது, மற்றவர்களுடைய பெலவீனம் மற்றும் குறைவுகள் மற்றும் அறியாமையின் விஷயங்களில் அவர்கள்மீது பொறுமையுடன் இருக்க வழிநடத்துகின்றது. மேலும், நமக்கு வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு உதவியாகவும் இருக்க வழிநடத்துகின்றது.

இந்தச் ‘‘சாந்தகுணமுள்ளவர்கள்’’ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். தெய்வீகச் சித்தத்திற்கென்று பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பவர்கள், தற்காலத்தில் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்ற அர்த்தத்தில் கர்த்தர் கூறவில்லை. பொறுமையற்றவர்களும், கர்வம் கொண்டவர்களும், வெறியர்களும், சுயநலமுள்ளவர்களும்தான் இப்பொழுது வல்லமை, செல்வாக்கு மற்றும் ஆஸ்தியிலுள்ள பிரதானமானவைகளைக் கைப்பற்றுகின்றார்களே ஒழிய, இவர்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்து

இருப்பவர்களுக்கு, பூமியைச் சுதந்தரிப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றே தெரிகின்றது. மற்றவைகள் போன்று இந்தக் குணலட்சணத்திற்குரிய பலன் எதிர்க்காலத்திலேயே உள்ளது. அதாவது, இக்குணலட்சணம் உடையவர்கள் தெய்வீக வழிநடத்துதலைப் பின்தொடர்ந்து, இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகவும், தேவனுடைய சுதந்ததிரர்களாகவும் (இராஜ்யத்தில்) காணப்படுவார்கள். மேலும், அப்பொழுது அவர்களுக்குரிய மகா சுதந்தரத்தில் பூமியும் ஒரு பாகமாகக் காணப்படும். மேலும், இவர்கள் ஆயிரம் வருஷத்தின் இறுதியில், ஆயிரம் வருஷத்தின் பரீட்சைகளை வெற்றிகரமாகக் கடந்து, நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களாகக் காணப்படும் உலகத்தின் மனுக்குலத்திற்குப் பூமியைக்கொடுப்பார்கள்.

தேவனுடைய ஜனங்கள் இப்பொழுதே ஆறுதல்படுத்தப்படுகின்றார்கள் என்ற விஷயம் இருப்பதுபோன்று, தேவனுடைய ஜனங்கள் இப்பொழுதே விசுவாசத்தின் மூலமாக பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்ற விஷயமும் இருக்கின்றது. "இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும் ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" (1 கொரிந்தியர் 3:21-23). சரியான மனத்தாழ்மையிலும், தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் நிலையிலும் காணப்படுபவர்கள், உலகத்தாரைக்காட்டிலும் தற்காலத்தின் காரியங்களிலிருந்து அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். ஏனெனில், ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்குரிய மனநிலையில் இவர்களுடைய இருதயங்கள் காணப்படுகின்றது. சுயநலமான பேராசைகளினால் நிறைந்து காணப்படும் உலகமானது, ஒருபோதும் திருப்பதியடைவதில்லை, ஒருபோதும் மனநிறைவும் கொள்வதில்லை. தேவனுடைய பிள்ளையோ தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படுத்தி , தங்களை ஒப்புக்கொடுத்து எப்போதும் திருப்தியாய் இருப்பார்கள்.

## "நீதியினால் திருப்தியடைவார்கள்"

நான்காம் குணலட்சணம் என்பது நீதியின் மீது பசி மற்றும் தாகம் கொண்டிருப்பதாகும். முந்தைய (மூன்று) குணலட்சணங்களைப் போதுமானளவுக்குக் கொண்டிராத எவராலும் இவ்விதமான பசியையும், தாகத்தையும் கொண்டிருக்கமுடியாது. ஒருவேளை கிறிஸ்தவனிடம் மனத்தாழ்மை இல்லையெனில், அவனால் அவனுடைய தாழ்வான நிலைக்கு மேலாகப்பார்க்க முடியாமலும், தெய்வீகப் பூரணத்தின் உயரத்தையும், மகத்துவத்தையும் புரிந்துக்கொள்ள முடியாமலும், நீதி தொடர்பான விஷயங்களில், தான் எட்டியுள்ள நிலையிலேயே திருப்தியடைந்தவனாக இருந்துவிடுவான். அவன் ஓரளவாகிலும் அறிந்திராத காரியத்தின்மேல் அவனால் பசி மற்றும் தாகங்கொள்ள முடியாது. மேலும், தற்காலத்தின் தவறுகள் மற்றும் அநியாயங்களைப் புரிந்துக்கொள்வதற்கு உதவக்கூடிய அனுதாபத்தின் ஆவியைக் கிறிஸ்தவன் ஒருவன் பெற்றிராதவரையிலும் அவனால், வேத வாக்கியங்கள் சுட்டிக்காண்பிக்கும் மேசியாவின் ஆயிரம் வருஷம் அரசாட்சியில் மாத்திரம் நிறுவப்படும் மேம்பட்ட சூழ்நிலைகள்/காரியங்கள் மீது ஏக்கம் கொள்ளமுடியாது. ஆகவே, ஒருவேளை நம்முடைய இருதயங்கள் நீதிக்காகவும், நியாயத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் பசி மற்றும் தாகம் கொள்கின்றது என்றால், எல்லா விதத்திலுமுள்ள அசத்தியத்தையும், அனைத்து அநீதியையும், அநியாயத்தையும் வெறுக்கின்றது என்றால், அதிலும் முக்கியமாக, வரிசையில் மூன்றாவதாகவரும் பொறுமையுடன் தெய்வீகச் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தல் எனும் குணலட்சணத்தினால் இந்த வெறுப்பு வரையறுக்கப்பட்டு, தாக்கம் ஏற்படுத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்றால், இது ஆசீர்வாதமான அறிகுறியாகும். இந்த மூன்றாம் குணலட்சணம் செலுத்தும் கட்டுப்பாடுதான் அப்போஸ்தலரால் பிலிப்பியர் 4:5-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுகின்றது. "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்." இந்த மூன்றாம் குணலட்சணம் உள்ளே புகுவதின் காரணமாகத்தான், நாம் எந்த விதத்திலும் குழப்பவாதிகளாகவோ (அ) மதவெறிக்கொண்டவர்களாகவோ ஆகாதபடிக்கு நீதியின் மீதான நம்முடைய பசி மற்றும் தாகமும், (சத்தியம் மற்றும் அதை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான) நம்முடைய வைராக்கியமும் கட்டுப்படுத்தித் தடைப்பண்ணப்படுகின்றது. நீதியின் மீதான இந்தப் பசி மற்றும் தாகம் எனும் தன்மையானது ஆவியின் மற்றத் குணலட்சணங்களால் கட்டுப்படுத்தப்படாதக் காரணமாகத்தான், அநேக உலகப்பிரகாரமான மனிதர்களை வரம்பு மீறின சீர்த்திருத்தவாதிகளாக மாற்றியுள்ளது; தேவனுடைய பிள்ளைகளோ மற்றவர்களைக்காட்டிலும் நீதியின் மீதான இதே பசி தாகத்தை

அதிகளவில் கொண்டிருந்து, தெளிந்தபுத்தியுள்ள ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் காணப்படுவதினாலும், கர்த்தருடைய வார்த்தைகளினால் (இவர்கள்) போதிக்கப்பட்டிருப்பதினாலும், இவர்கள் அவருடைய வாக்குத்தத்தங்களில் இளைப்பாறி, அவ்வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காகக் காத்திருந்து பொறுமையுடன் தங்களைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்துக் காணப்பட்டு, தேவனுடைய ஏற்றவேளையில், நீதி ஜெயங்கொள்ளும் என்ற நிச்சயத்துடன் காணப்படுகின்றார்கள்.

நீதியின்மேல் பசிதாகம் என்னும் பாக்கியமான குணலட்சணத்தை உடையவர்களும், அதனை விருத்திச் செய்பவர்களும் திருப்தியடைவார்கள். போகப்போக பின்னர் தேவனுடைய இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும்போது, இந்த இராஜ்யத்தின் விளைவாக சகல பொல்லாப்பும், சகல பாவங்களும், சகல (அக்கிரமங்கள்) அநியாயங்களும் அடக்கப்பட்டு, தேவனுடைய பரிசுத்தமான சித்தம், "பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலும் செய்யப்படும்" போது அதிகமாய்த் திருப்தியடைவார்கள். நீதியின் மீதான நம்முடைய பசி மற்றும் தாகம் அழிக்கப்படுவதில்லை. மாறாக, நமது கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரம் திருப்திப்படுத்தப்படும். சத்தியம் மற்றும் நீதியின் மீதான விருப்பம் இன்னமும் தொடர்ந்து காணப்படும். ஆனால், சத்தியம் மற்றும் நீதி நடைமுறையில் காணப்படும்போது திருப்தி நிலவும்.

மற்றக் குணலட்சணங்கள் போன்று இந்தக் குணலட்சணத்தின் (நீதியின்மேல் பசிதாகத்தின்) விஷயத்திலும், விசுவாசத்தின் வாயிலாக ஓரளவுக்கு திருப்தி (இப்பொழுதே) காணப்படுகின்றது. இந்தத் திருப்தியடைதல் ஒரு முன்சுவைப்போன்று காணப்படும். ஆவியின் மற்றக் குணலட்சணங்களோடுகூட, நீதியின் மீதான பசி, தாகத்தையும் கொண்டிருப்பவர்கள், கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தங்களில் தற்காலத்திலும் கூட விசுவாசத்தின் மூலம் ஆறுதலையும், தேறுதலையும் கண்டடைகின்றார்கள். மேலும், கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தங்கள், "விசுவாச வீட்டாருக்கு ஏற்ற கால சத்தியமாக" இருந்து, விசுவாச வீட்டாரைப் பெலப்படுத்துகின்றதாகவும், ஆறுதல்படுத்துகின்றதாகவும், தாங்குகின்றதாகவும் இருந்து, இவர்கள் தாங்கள் எதிர்ப்பார்த்தது (அ) வேண்டிக்கொண்டதைக்காட்டிலும், தெய்வீக ஏற்பாட்டின்படியான நித்தியக்காலத்திற்கும் நிலைக்கும் நீதியானது, மிக அதிகமாய்க் காணப்படும் என்று உணர்ந்துகொள்ளும் மாத்திரத்தில் இந்த வாக்குத்தத்தங்கள் இவர்களுடைய பசியையும், தாகத்தையும் பகுதியாகிலும் திருப்திப்படுத்துகின்றன.

## "இரக்கத்தை எப்படிப் பெற்றுக்கொள்வது"

ஐந்தாம் பாக்கியமான காரியம், இரக்கம் கொள்ளுதல் ஆகும். நீதியைக்குறித்து புரிந்துக்கொள்வதினாலும், புதுப்பிக்கப்பட்ட இருதயங்களுக்குள் இந்த நீதியின்மேல் பசி, தாகம் ஏற்படுவதினாலும், வெளியே வெளிப்படுகின்ற காரியமே இரக்கமாகும். இந்த இரக்கத்தை சக மனிதர்களால் காணமுடியும். முந்தின அடிகளையெல்லாம் நாம் எடுத்துவைத்த பிற்பாடு, தற்காலத்தின் அநியாயங்களைக்குறித்தும், நம்முடைய பூரணமற்ற நிலமைகளைக் குறித்தும் (அநீதிகள்) மற்றும் மற்ற மனுஷர்களுடைய பூரணமற்ற தன்மைகளைக்குறித்தும் உணர்ந்துக்கொள்ள கற்றுக்கொண்ட பிற்பாடு, தேவன் மாத்திரமே காரியங்கள் அனைத்தையும் முழுமையாகச் சரிப்படுத்தக்கூடியவர் என்று நாம் கற்றுக்கொண்ட பிற்பாடு, எல்லா தவறுகளையும் சரிப்பண்ணுவதற்கும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்கிறவர்கள் அனைவரையும் தமது தயவிற்குள் கொண்டுவருவதற்கும் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், அதை அவர் ஏற்றவேளையில் வெளிப்படுத்துவார் என்றும் கற்றுக்கொண்ட பிற்பாடுதான், மற்றவர்கள் மீது நமக்கு இரக்க உணர்வு ஏற்படுகின்றது. அதாவது, இதுவரையிலும் உணர்ந்துக்கொள்ளாத அளவுக்கு இரக்கத்தின், அன்பின் உணர்வைப்பெற்றிருப்போம். இக்குணலட்சணங்களின் ஆசீர்வாதங்களை அறியாத நிலையிலும், இக்குணலட்சணங்களை வளர்த்துக்கொள்ளாத நிலையிலும் காணப்படுகின்ற உலகத்தாரால், கர்த்தரின் ஜனங்கள் செய்யும் அளவுக்கு, மற்றவர்கள் மீது ஆழ்ந்த அனுதாபமோ (அ) இரக்க உணர்வையோ கொண்டிருக்க முடியாது.

நாம் என்னதான் அறிவில் அல்லது கிருபைகளில் அநேக காரியங்களை அடைந்திருந்தாலும், ஒருவேளை இந்தக் குணலட்சணம் நம்மிடத்தில் இல்லையெனில், நாம் ஒருபோதும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்றும், ஒருவேளை நாம் நம்முடைய அயலார் மீது இரக்கம் கொள்ளவில்லையெனில், நம்முடைய பரம பிதாவும், நம்மேல் இரக்கம் கொள்ளமாட்டார் என்றும் தெரிவிப்பதின் மூலம், இரக்கம் எனும் இக்குணலட்சணம் மிகவும் முக்கியமானது என்று கர்த்தர்

வலியுறுத்துகின்றார். மேலும், மன்னிப்பு மற்றும் பரந்த மனப்பான்மைக்கான வெளித்தோற்றமான வெளிப்பாடாக மாத்திரம், நாம் இரக்கத்தைக் கருதிக்கொள்ளாதபடிக்கு, நமது கர்த்தர் மத்தேயு 18:35-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் குறிப்பிட்டுள்ளார். "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." இரக்கம் உண்மையான இரக்கமாக இருக்கவேண்டுமே ஒழிய, போலித்தனமான இரக்கமாக இருக்கக்கூடாது. நாம் காட்டக்கூடிய இரக்கமானது, மற்றவர்கள் விஷயத்தில் அவர்களுடைய பெலவீனங்களையும், குறைவுகளையும், நம்முடைய பார்வையிலிருந்து திரையிட வேண்டும்/மறைக்க வேண்டும்; இல்லையேல், நம்முடைய நீதியின் மீதான பசி தாகத்தினால் நமக்கு வெளிப்பட்டுள்ள நம்முடைய சொந்த பெலவீனங்களுக்காக, நாம் மன்னிப்பையும், பாவ நிவிர்த்தியையும் அடையலாம் என நாம் எதிர்ப்பார்க்க முடியாது. இரக்கமுள்ளவர்கள் மாத்திரமே இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள். ஒருவேளை, நாம் தேவனுடைய கரங்களிலிருந்து இரக்கம் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் எல்லாம் முடிந்துவிடும்.

நாம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், நாம் இரட்சிக்கப்படுவதற்கும் அவசியமாய் இருப்பதினால் மாத்திரம், இரக்கம் காட்டுவதும், பரந்த மனப்பான்மையுடன் காணப்படுவதும், மன்னிப்பதும் ஆசீர்வாதமானவைகளாகக் காணப்படாமல் மாறாக, மற்றவர்களுடைய பெலவீனங்கள் மற்றும் தவறுதல்கள் மீது அனுதாபங்கொள்ளும் இருதயத்தின் இந்த இரக்கமான நிலையானது, மாம்சம் மற்றும் பிசாசின் சில குறிப்பிட்ட கிரியைகளை நம்முடைய இருதயங்களிலிருந்து வெளியேற்றுவதற்கும் உதவி செய்கின்றது. அதாவது, கர்த்தருடைய ஜனங்கள் விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக்கப்பட்டு, நீண்ட காலம் ஆன பிற்பாடும் மற்றும் கர்த்தருக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணித்து, "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பதற்கும்" நாடின பிற்பாடும், இவர்களிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் மாம்சம் மற்றும் சாத்தானின் சில குறிப்பிட்ட கிரியைகளை நம்முடைய இருதயங்களிலிருந்து வெளியேற்றுவதற்கும் உதவி செய்கின்றது.

கர்த்தரைப் பின்பற்றுவோம் என்று நாம் முழுமையாய் ஒப்புக்கொடுத்த பிற்பாடும், நாம் வெளியேற்ற வேண்டிய மாம்சத்தின் கிரியைகளான கோபம், வன்மம், பகை, சண்டைச்சச்சரவு, பொறாமை ஆகியவைகளை அப்போஸ்தலர் குறிப்பிகின்றார். சுயநலத்தின் இந்த அனைத்துப் பண்புகளும், இரக்கம் எனும் பண்பினால் எதிர்க்கப்பட்டு, இவைகள் நம்முடைய இருதயங்களில் ஆழமாய்க் காணப்பட்ட பகுதிகளிலிருந்து அதிகமாக வெளியேற்றப்படுகின்றது. பாக்கியமான குணலட்சணமாகிய இந்த இரக்கம், அன்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். ஏனெனில், நாம் எந்தளவுக்குத் தேவனுடைய அன்பின் ஆவியைப் பெற்றுக்கொள்கின்றோமோ, அந்தளவுக்கு நாமும் மற்றவர்களிடத்தில் இரக்கத்தை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருப்போம். கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கு அளிக்கப்பட்ட இரக்கத்தின் வாயிலாக, தேவன் நம்மீதான அவருடைய அன்பை வெளிப்படுத்தினார். அன்பு, இரக்கம் மற்றும் மற்றவர் நலன் கருதுவது என்பதான குணலட்சணங்கள், பொறாமையை வெளியேற்றுவதற்கும் மிகவும் உதவியாக இருக்கின்றது. நாம் உண்மையாய் அன்பு செய்பவர்கள் மீது, நம்மால் எப்படிப் பொறாமை கொள்ளமுடியும்? நம்முடைய சத்துருக்களை நாம் நேசித்து, அவர்கள் மீது இரக்கமும், பரிவும் கொண்டிருந்து, அவர்களை இருதயப்பூர்வமாக மன்னித்துவிட்டோமென்றால், அவர்களுக்கு எதிராக நம்மால் எப்படி வன்மம் கொண்டிருக்க முடியும்? நம் சத்துருக்கள் மீது நாம் இரக்கம் கொண்டு, அவர்களிடத்தில் நமக்கு மன்னிப்பின் ஆவிதான் காணப்படுகின்றது என்றால், அவர்கள்மேல் நமக்கு எப்படிப் பகை/வெறுப்புக் காணப்படும்? தெய்வீகப் பிரமாணங்களுக்கு எதிரான நம்முடைய மீறுதல்களுக்கு, நாம் மன்னிப்பை எதிர்ப்பார்க்கின்றதின் காரணமாக, நமக்கு எதிராய்ச் செய்யப்பட்ட பாவங்களை உடனடியாக மன்னிப்பதற்கான இரக்கமுள்ள மன்னித்துவிடும் ஆவி நமக்குள் காணப்படும் பட்சத்தில், சண்டை இடுகிறவர்களாய் நம்மால் எப்படி இருக்க முடியும்?

"ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" (யாக்கோபு 2:13). தெய்வீக இரக்கமானது, தெய்வீக நீதியை திருப்திப்படுத்தி, இப்படியாக நீதியின் தீர்ப்பினின்று நம்முடைய இனமாகிய மனுக்குலம் காப்பாற்றப்படுவதற்கான வழியை ஆயத்தப்படுத்திற்று. ஆகவே, தெய்வீக ஆவியின் பங்காளிகளாகவும், அதனை ஓரளவிற்கு தங்களுக்குள் வளர்த்துக்கொண்டவர்களாகவும் இருப்பவர்கள் நீதி குறித்ததான தங்களுடைய கருத்தைவிட, இரக்கமானது தங்களுக்குள் மேலோங்கும்படி அனுமதித்துவிடுவார்கள்; ஏனெனில் தெய்வீக இரக்கமானது, தெய்வீக நீதியை திருப்திச் செய்துவிட்டபடியால், இவர்களுக்கு சக மனிதர்கள் விஷயத்தில் திருப்திபடுத்துவதற்கென்று வேறெந்த நீதியின் பிரமாணமும் இருப்பதில்லை.

தேவனுடைய ஜனங்களிடம் காணப்படும் நீதியானது குருட்டுத் தன்மையுடையதாக இல்லாவிட்டாலும், இவர்களால் மற்றவர்களுடைய தவறுகளை மிகத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடிந்தாலும், மேலும், இவர்கள் தங்களுடைய சொந்த வார்த்தைகள், சிந்தைகள் மற்றும் கிரியைகள் தொடர்பான அனைத்திலும், நீதியை ஆளுவதற்கு அனுமதிக்க நாடினாலும், இவர்களுக்கு எதிராக பாவம் செய்கிறவர்களின் விஷயத்தில், இவர்கள் தங்களுடைய இருதயங்களில் இரக்கத்தை, நீதியின்மேல் ஜெயங்கொண்டு மேலோங்கிக் காணப்படச்செய்ய வேண்டும். மேலும், இவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தினவர்களுக்கு எதிராக, இவர்கள் கோபம் கொண்டிருக்கவுங்கூடாது, அல்லது, தாங்களே அவர்களைப் பழிவாங்க முற்பட்டு, அவர்கள் மீது நீதியைச் செலுத்தவுங்கூடாது. மாறாக, இவர்கள் சொல்ல வேண்டியது என்னவெனில், "தேவனே நீதியுள்ளவர், சுதந்தரித்துள்ள பெலவீனங்கள் நிமித்தமாக பூரணமான நீதிக்கு எதிரான மீறுதல் பண்ணினவனாகக் காணப்படும் நான், என்னைப்போல் சுதந்தரித்துக்கொண்டும், வித்தியாசமான பெலவீனங்களை உடையவர்களுமாய்க் காணப்படும் என்னுடைய சக மனிதன்மேல் நான் பரிவு கொண்டவனாக இருக்க வேண்டும்; மேலும் தெய்வீகக் கட்டளையின்படி நான் பாக்கியமான குணலட்சணங்களாகிய இரக்கம், பரிவு, மன்னிப்பு ஆகியவைகளைச் செயல்படுத்துகின்றவனாகவும் நான் காணப்பட வேண்டும்." இப்படியாக செய்கின்றவர்கள் உலகம், மாம்சம் மற்றும் பிசாசினுடைய பொல்லாத கிரியைகளையும், உணர்வுகளையும் தங்களிடத்திலிருந்து வெளியேற்றுவதோடல்லாமல், அன்பு, நிதானம் மற்றும் தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தலின் ஆவியினால் அதிகமதிகமாய் நிரப்பப்பட்டு, இவ்விதமாய்த் தற்காலத்திலேயே, இரக்கமுள்ளவர்களாய் இருப்பதின் நிமித்தம் பாக்கியவான்களாய்க் காணப்படுவார்கள்.

## "பரிசுத்தம் இல்லாமல் தேவனைத் தரிசிப்பது கூடாதகாரியம்"

பாக்கியம் அடைவதற்கான ஆறாம் படிநிலை இருதயத்தில் சுத்தமாயிருப்பதாகும். அதாவது, நோக்கத்தில் சுத்தம், விருப்பத்தில் சுத்தம், பிரயாசத்தில் சுத்தம், சித்தத்தில் சுத்தமாகும். அதாவது, உண்மையாய் இருப்பது, ஒளிவுமறைவின்றி இருப்பது, நேர்மையாய் இருப்பது என்றவிதத்தில் சுத்தமாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நேர்மையான இருதயம் கொண்டவர்கள் அதாவது, முற்றிலும் சரியான நோக்கம் கொண்டவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள். உலக ஜனங்களிலும் கூட சிலர் நேர்மையான இருதயம் கொண்டிருப்பதாகவும், நேர்மையான நோக்கம், விருப்பம் கொண்டிருப்பதாகவும் தங்களைக்குறித்துக் கூறிக்கொள்வது உண்மையாகவே இருந்தாலும் கூட, இவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான தெய்வீக ஏற்பாட்டிற்குள் வராததுவரையிலும், இவர்கள் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவினுடைய பின்னடியார்களாக அர்ப்பணம் பண்ணுவதுவரையிலும், பாக்கியமாய் இருப்பதற்கான படிகளை இவர்கள் அடியெடுத்து வைக்காததுவரையிலும், இவர்களை "இருதயத்தில் சுத்தமுள்ள" வகுப்பாரின் அங்கங்களாக நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

"இருதயத்தில் சுத்தம்" என்ற வார்த்தைகளை அநேகர் தவறாய்ப் புரிந்துள்ளனர். அதாவது, இருதயத்தில் சுத்தம் என்பது வெளியில் மாத்திரமல்லாமல், உள்ளேயும் முற்றிலுமாகப் பூரணமாய் இருத்தலைக்குறிக்கின்றது என்றும், வார்த்தைகள் மற்றும் கிரியைகளில் மாத்திரமல்லாமல், எண்ணங்களிலும் கூட முற்றிலுமாக பூரணமாய் இருத்தலைக்குறிக்கின்றது என்றும் எண்ணிவிடுகின்றனர். இப்படியான கண்ணோட்டமானது, "நான் கிரியையிலும் சரி, வார்த்தையிலும் சரி, எண்ணத்திலும் சரி பூரணமாய் இல்லை; பின்னே எப்படி இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள என்ற நிலையின் கீழ் நானும் ஒருவன் என்று என்னைக் குறித்துச் சொல்ல முடியும்?" என்று தங்களைக்குறித்து நேர்மையாய்ச் சொல்லக்கூடியவர்களைச் சோர்வடைய செய்துள்ளது. இந்தக் கண்ணோட்டம் ஒரு தவறான புரிந்துக்கொள்ளுதல் என்று நாம் கூறுகின்றோம். நம்முடைய மாம்சத்தில் எவ்விதமான பூரணமும் இல்லை, என்பதைச் சொல்லப்போனால் நம்மை விட கர்த்தர் நன்கு அறிந்துள்ளார். மேலும், விழுகையின் காரணமாக, ஆதாமின் பிள்ளைகள் அனைவரின் பற்களும் பாவம் என்னும் புளிப்பினால் கூசிப்போயின என்ற காரணத்தினால், ரோமர் 7:16-18-ஆம் வரையிலான வசனத்தின் காரியங்களைச் செய்கின்றோம் என்றும் கர்த்தர் அறிந்துள்ளார், "இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே.ஆதலால் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை" (எரேமியா 31:29, 30).

யூத ஜனங்களுக்கு, நியாயப்பிரமாணத்தையும், அதனோடுகூட ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தையும் அளித்ததின் மூலம், அவர்களுக்கு யூத யுகத்தில் ஒரு மாபெரும் படிப்பினையைத் தேவன் அருளினார். ஆனாலும், தேவன் இஸ்ரயேலர்களுக்கு நியாயப்பிரமாணத்தை அருளினபோதிலும் கூட, "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்பதை தேவன் முன்கூட்டியே அறிந்தவராகவே இருந்தார் என்று அப்போஸ்தலர்கள் நமக்கு உறுதியளிக்கின்றனர். "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." மாறாக, நியாயப்பிரமாணம் மிகத் தெளிவாக புரிந்துக்கொள்ளப்படும்போது, பாவம், பூரணமற்றநிலை தொடர்பான அறிவு மிகத் தெளிவாக புரிந்துக்கொள்ளப்படும். துணிகரமான பாவங்களையல்ல, ஆதி பாவத்தையும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள பெலவீனங்களையும், பூரணமின்மையையும் மன்னிப்பதே கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய ஏற்பாடாகும். துணிகரமில்லாமல், வேண்டுமென்றே இல்லாமல் காணப்படும் மீறுதல்கள் தொடர்பான விஷயங்களில் அவருடைய இரக்கம் கடந்துவருகின்றது. மனிதனுடைய பூரணமற்ற தன்மையை நமது கர்த்தர் இயேசு கருத்தில் கொண்டுள்ள காரியமானது, "இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என்ற அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அதாவது, நமக்கு இரக்கம் அவசியம் என்பதை அவர் குறிப்பிடும்போது, அவர் மனிதனுடைய பூரணமற்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டுள்ளது வெளிப்படுகின்றது. நாம் இரக்கம் பெற்றுக்கொள்வோம் என்பதை நமக்கு உறுதிப்படுத்தின பிற்பாடு, ஆறாம் மலைப்பிரசங்கத்தின் கருத்தானது, நாம் எண்ணங்களிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் முழுமையான பூரணத்துடன் காணப்பட வேண்டும் என்பதாக இடம்பெறுவதில்லை. ஏனெனில், ஒருவேளை நாம் பூரண நிலையை அடைந்திருப்போமானால் (அ) அடையக்கூடுமானால், கிறிஸ்துவின் பலியின் மூலம் நமக்கு இரக்கமும், பாவங்களுக்கான மன்னிப்பும் தேவன் அளிப்பதற்கு அவசியமே ஏற்பட்டிருக்காது.

"இருதயத்தில் சுத்தம்" என்பது நடக்கையிலோ, வார்த்தையிலோ, எண்ணத்திலோ பூரணத்தைக்குறிப்பிடாமல் மாறாக, இவைகள் தொடர்பான அனைத்திலும் பூரணமான நோக்கம் இருக்க வேண்டும் என்பதையே குறிக்கின்றது. எண்ணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் நாம் பூரணம் அடைவதே நம்முடைய விருப்பமாகவும், பிரயாசமாகவும் காணப்பட வேண்டும். நம்முடைய இருதயங்களும், நம்முடைய சித்தங்களும் இசைவுடன் காணப்பட வேண்டிய தெய்வீக நியமமானது, **"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்"** என்பதேயாகும் (மத்தேயு 5:48). இந்த முழுமையான பூரணத்திற்குக் கீழான, எந்த ஒரு நியமத்தையும் தேவன் நியமிக்கவில்லை. தேவன் கிறிஸ்துவின் மூலமாக கிருபையை, இரக்கத்தை மற்றும் சமாதானத்தை நமக்கு ஏற்படுத்தியுள்ளார். ஒருவேளை, நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கின்றவர்களாய் இருப்போமானால், இந்த இருதயத்தின் சுத்தம் என்பது இடுக்கமான வழியிலுள்ள முக்கியமான படிகளில் ஒன்றாய் இருக்கின்றது.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மாத்திரமே, தேவனைத் தரிசிப்பார்கள் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றுள்ளார்கள். இவர்கள் இருதயத்தில் சுத்தம் விஷயத்திலும், நோக்கத்தில் சுத்தம் விஷயத்திலும், தேவனிடத்திலும், மனுஷரிடத்திலுமாக தங்களுடைய பிரயாசத்தில் நேர்மையுடன் காணப்படும் விஷயத்திலும் தற்கால ஜீவியத்திலேயே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பான சாயலை அடைந்து, தங்களுடைய ஓட்டத்தின் இறுதிவரையிலும் உண்மையுடன் காணப்பட்டு, இறுதியில் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின்படி, இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பூமிக்குரிய நிலையிலிருந்து, பரலோக ஆவிக்குரிய நிலைக்கு மாற்றப்படுவார்கள். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்;" "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்;" "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்;" "மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (1 யோவான் 3:2; எபிரெயர் 1:3; எபேசியர் 5:27; கொலோசெயர் 2:10).

முந்தினவைகள் போன்று, இக்குணலட்ணத்திற்குரிய ஆசீர்வாதத்தின் ஒருபங்கு, ஒரு முன்சுவைப்பு, தற்காலத்திலேயே கடந்துவருகின்றது. கிறிஸ்துவினுடைய அன்பை அறிந்துக்கொள்வதற்கும், அதன் நீளம், அகலம், உயரம், ஆழம் புரிந்துக்கொள்வதற்கும் ஏதுவாக அதாவது, அனைத்துப் பரிசுத்தவான்களோடுங்கூட புரிந்துக்கொள்வதற்கு ஏதுவாக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுகின்ற காரியம் ஒன்றுள்ளது (எபேசியர் 3:18). அனைவருக்கும் புரிந்துக்கொள்ளுதலின் (மன) கண்கள் திறப்பதில்லை. பிதாவாகிய தேவனுடைய குணலட்சணங்கள் எல்லாம் இசைவுடன் காணப்படுவதின் மகிமைகளைப் பார்ப்பதற்கான சிலாக்கியம் அனைவருக்கும் உரியதல்ல. அதாவது, தெய்வீக நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமை, உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே தேவன் திட்டமிட்டபடியே அவருடைய அனைத்துச் சிருஷ்டிகளுக்கான ஆசீர்வாதத்திற்காக ஒத்திசைந்து செயல்படுவதின் மகிமைகளைப் பார்ப்பதற்கான சிலாக்கியம் அனைவருக்கும் உரியதல்ல.

ஆனால், மேற்கூறின இந்த ஆசீர்வாதத்தை அதாவது, இந்தத் தெளிவான பார்வையை/புரிந்துக்கொள்ளுதலை யாரால் அனுபவிக்க முடியும்? யார் புரிந்துக்கொண்டு அந்த மகிமையான பூரணத்திற்கு ஒப்பாக அதிகமதிகமாக வளர்வதற்கு உதவப்படுவார்கள்? "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்" மாத்திரமே! உண்மையும், நேர்மையுமுள்ள இருயமுடையவர்கள் மாத்திரமே! ஆகும். இருமனமுள்ளவர்கள், இரண்டு சித்தம் கொண்டவர்கள், வேதவாக்கியங்களின்படி இரட்டைப்பார்வை, இரட்டைகண்கள் உடையவர்களாய் இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆவிக்குரிய காரியங்களை ஓரக்கண்ணினால் பார்த்து, காரியங்களை இரட்டைப்பார்வை உடையவர்கள் போன்று பார்க்கின்றனர்; மேலும், தெளிவில்லாமலும் காண்கின்றனர். தேவனுடைய ஜனங்களில் அநேகர் கிறிஸ்துவுக்குள் அனைத்துக் காரியங்களிலும் வளரத்தவறி, அனைத்தையும் இரட்டையாகவும், குழப்பத்துடனும் பார்க்கின்றனர். இவர்கள் கொஞ்சம் ஆவிக்குரியவைகளயைும், கொஞ்சம் பூமிக்குரியவைகளையும் பார்க்கின்றனர். இவர்கள் தெய்வீகக் குணலட்சணத்தை மங்கலாகவும், தெளிவில்லாமலும் பார்க்கின்றனர். மேலும், இவர்கள் தெய்வீகக் குணலட்சணத்தை மங்கலாகப்பார்ப்பதற்கு ஏற்ப, அக்குணலட்சணத்திற்கு ஒப்பாக மாறுவதற்கு ஆற்றல் அற்றவர்களாய் இருக்கின்றனர். கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ள அனைவரும், ஓர் ஆண்டவரை உடையவர்களாகவும், அவருடைய மகிமை மற்றும் அவருக்கான ஊழியம் தொடர்பான விஷயத்தில் தெளிவான பார்வையுடைவர்களாகவும் இருப்பதற்கு அதாவது, சுத்தமான, நேர்மையான, உண்மையுள்ள இருதயம் கொண்டவர்களாக இருப்பதற்கு அதிகமதிகமாக நாடுவோமாக.

## "தேவனுடைய புத்திரர்கள் அனைவரும் சமாதானம் பண்ணுகிறவர்கள் ஆவர்"

ஏழாவது மலைப்பிரசங்கமானது, ஆறாவதினுடைய வெளிதோற்றமான வெளிப்படுத்தல் ஆகும். மற்றவர்களுடைய கண்களுக்கு புலப்படாத தேவனிடத்திலான இருதயத்தின் சுத்தமானது, (பாக்கியம் அடைதல் மற்றும் வளர்ச்சியிலுள்ள) ஏழாம் குணலட்சணத்தில் வெளிப்படுகின்றது. அதாவது, மற்றவர்கள் மத்தியில் சமாதானத்தை உண்டுபண்ணுவதற்கான நம்முடைய சமாதானத்திற்கேதுவான விருப்பங்களில் மற்றும் பிரயாசங்களில் வெளிப்படுகின்றது. தேவனுடைய விஷயங்களில் சுத்தமான இருதயத்தை ஏற்கெனவே அடைந்து, மற்றும் தாழ்மை, அனுதாபம், பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல், நீதியின் மீதான பசி தாகம், மற்றவர்கள் மீது அன்பு (அ) இரக்கங்கொள்ளுதல், உண்மையான/தூய்மையான இருதயமுமாகிய குணலட்சணங்களை அடையாதவரையிலும், தெய்வீக நியமத்தின்படி ஒருவரால் சமாதானம் பண்ணுகிறவராக இருக்க முடியாது. யாரொருவர் இந்தக் குணலட்சணங்களையெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவு வளர்த்தியுள்ளார்களோ, அவர்கள் தங்களுக்குள் சமாதானத்தைப் பெற்றவர்களாயிருந்து, மற்றவர்களிடத்தில் சமாதானம் பண்ணுகின்றவர்களாய் இருப்பார்கள்.

கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் சொற்பமானவர்களே, இந்தச் சமாதானம் பண்ணும் குணலட்சணத்தைக் குறிப்பிடத்தக்க விதத்தில் வளர்த்துக்கொண்டு, தங்களுடைய ஜீவியத்தில் எடுத்துக்காட்டியும் உள்ளனர். பெரும்பான்மையானவர்கள், அதிலும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களிலும்கூட, அநேகர் எதிர்மாறான போக்கைத் தெரிந்துக்கொண்டுள்ள காரியமானது, இவர்களுடைய இருதயங்கள் சுத்தமுள்ளதாகவும், இவர்களுக்குள் அனுதாபங்கள் நிறைந்திருந்தாலுங்கூட, இவர்கள் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் இன்னும் கற்றுக்கொள்வதற்கு அதிகமுள்ளது என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. ஏனெனில், இவர்கள் சமாதானத்தைத்

தூண்டுகிறவர்களாக இருப்பதற்குப்பதிலாக இவர்கள் விரோதத்தைத் தூண்டுகிறவர்களாக இருக்கின்றனர். இதை இவர்கள் தீய நோக்கத்தினால் செய்யவில்லை; மாறாக, இது இவர்களுடைய பழக்கவழக்கத்தினாலும், அன்பின் தெய்வீகப் போக்கிற்கும், உலகத்தில் காணப்படும் சயநலத்தின் எதிர்மறையான போக்கிற்கும் இடையேயுள்ள மாபெரும் வித்தியாசத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள தவறுவதினாலும், அறியாமையினாலும் செய்யப்படுகின்றது. விரோதம், பார்வையினால் அல்லது கைகளினால் தூண்டப்பட்டாலுங்கூட, அது பிரதானமாக நாவினால் தூண்டப்படுகின்றது. இதுபோலவே, சமாதானத்தைத் தூண்டுவதுங்கூட பார்வையினால் ஏற்பட்டாலுங்கூட, இது பிரதானமாக நாவினாலேயே செய்யப்படுகின்றது. விரோதத்தைத் தொடர்ச்சியாக தூண்டும் நாவுகளையுடைய எத்தனையோ கிறிஸ்தவர்களை நாம் பார்த்திருக்கின்றோம்! இவர்கள் எதிராளியானவனுடைய பிடியிலிருந்து அநேகவிஷயங்களில் தப்பிச்சென்ற பிற்பாடுங்கூட, அவன் இவ்விதத்தில் இவர்களைப்பிடித்து தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பான். ஏனெனில், இவ்விதத்தில் தாங்கள் சாத்தானுடைய ஊழியக்காரர்களாக வேலைச்செய்கின்றனர் என்பதை இவர்கள் கண்டுபிடிப்பதில்லை. அதாவது, தாங்கள் விரோதம், பகை, வைராக்கியம், வன்மம் ஆகியவைகளைத் தூண்டிவிடும் கலகக்காரர்களாய் இருக்கின்றார்கள் எனவும், அநேகரைத் தீட்டுப்படுத்துவதற்கு ஏதுவான கசப்பின் வேர்களை நடுகிறவர்களாய் இருக்கின்றார்கள் எனவும் இவர்கள் கண்டுபிடிப்பதில்லை.

"ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு" என்றும், " கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" என்றும் உள்ள புத்திமதிகளின் நீளத்தையும், ஆழத்தையும், அகலத்தையும் கிறிஸ்தவர்கள் என்றுதான் கற்றுக்கொள்ளப் போகின்றார்களோ? (தீத்து 3:2; எபேசியர் 4:29). தீமையான ஒரு காரியத்தைப் பேசுவதின் மூலம் (ஒருவேளை அக்காரியம் உண்மையென அவர்கள் எவ்வளவுதான் உறுதிகொண்டிருந்தாலும்) தாங்கள் ஒரு பெரிய தீமையைச் செய்கின்றார்கள் என்று தேவனுடைய உண்மையான பிள்ளைகளில் சிலர் கற்றுக்கொள்வதற்கு எத்தனை காலம்தான் எடுத்துக்கொள்வார்கள்? மற்றவர்களுடைய பக்திவிருத்திக்கே அல்லாமல், எப்போதும் மற்றவர்களுடைய தப்பிதங்கள் குறித்தே (உண்மையான காரியங்களையே) பேசிக்கொண்டிருப்பது அவசியமில்லை என்பதை தேவனுடைய உண்மையான சிலர் கற்றுக்கொள்வதற்கு எத்தனை காலம்தான் எடுத்துக்கொள்வார்கள்? மற்றவர்களுடைய காரியங்கள் குறித்த வீண்பேச்சுகள், குறை கண்டுபிடிக்கும் பேச்சுகள் மற்றும் சந்தேக பேச்சுகள் தவிர்க்கப்பட வேண்டியுள்ளது; இவர்களிடத்தில் அன்பும், கிறிஸ்துவுக்கு ஒத்தசாயலும், சமாதானம் பண்ணுகிறதற்கான பண்புகளும் குறைவுப்பட்டிருப்பதையும், இவர்கள் பரலோக இராஜ்யத்தில் இடம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக தங்கள் அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக இந்தக் குறைவுகளை, உண்மையுடன் எதிர்த்து நிவர்த்தி செய்யப்பட வேண்டியதையும், இவர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக இவர்களுக்கு எத்தனை பாடங்கள்தான், வரிக்கு வரியாகக்கொடுக்கப்பட வேண்டும்?

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை, ஓ! அனைவரும் மனப்பாடமாய் படித்து, தங்களுடைய ஜீவியத்தில் வெளிக்காட்டுவதற்குத் தொடர்ந்து நாடுவார்களாக (பிலிப்பியர் 4:8). யாரெல்லாம் உண்மையானவைகளையும், நல்லவைகளையும், அருமையானவைகளையும் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றார்களோ, அத்தகையவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும்போது, இவைகளைக்குறித்தே பேசிக்கொள்வார்கள். ஆகையால், கர்த்தர் அங்கீகரிக்கத்தக்கதாகவும், கேட்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகுவதற்கு ஏதுவாகவும், நம்முடைய இருதயத்தின் நிறைவினால் நமது வாய் தொடர்ந்து நன்மையான காரியங்களைப் பேசத்தக்கதாக, நம்முடைய இருதயங்கள் நன்மையான காரியங்களினால் நிரப்பப்பட்டிருப்பது எவ்வளவு அவசியமாய் உள்ளது (லூக்கா 6:45).

இப்படிப்பட்டவர்களுக்கு மிகவும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம் உள்ளது; அதாவது, "அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்பதாகும். இவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கின்றனர். மேலும், தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக தடயங்களைத் தங்களுடைய இருதயத்தில் பெற்றிருக்கின்றனர். இவர்கள் சத்தியத்தினால்

பரிசுத்தமாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இறுதியில், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைய" தகுதியானவர்கள். இப்படிப்பட்டவர்களை மாத்திரமே தேவன் தமது புத்திரர்களாகவும், தமது மாபெரும் குமாரனும், நம்முடைய கர்த்தருமானவருடன் இராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களாகவும் ஏற்றுக்கொள்வார். இக்காரியமானது, நம்முடைய விஷயத்திலும், மற்றவருக்கும் நமக்குமான விஷயத்திலும், தேவனுடைய பிள்ளைகளாக நாமும், எல்லாரும் எவ்வளவாக வளர்ந்துள்ளோம் என்பதற்கான பரீட்சையாகக் கூடக் காணப்படுகின்றது. அதாவது, நம்முடைய சமாதானத்திற்கு ஏதுவான பண்புகளுக்கும், சமாதானத்திற்கு ஏதுவான ஓர் ஜீவிய போக்கை/வாழ்க்கையை எடுப்பதற்குரிய நம்முடைய ஜாக்கிரதை தன்மைக்கும் பரீட்சையாகக் கூடக் காணப்படுகின்றது.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் இயல்பாகவே சண்டையிடுகின்ற ஆவியை உடையவர்களாகவும், சமாதானத்திற்குச் சாதகமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனுக்கு எதிராக போராடுவதற்கும், "விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடுவதற்கும்" இந்தப் போராடும்/சண்டையிடும் தன்மை கொஞ்சம் அவசியமாகத்தான் உள்ளது. ஆகவே, இயல்பாகவே போராடுகின்ற/சண்டையிடுகின்ற மனப்பான்மை உடையவர்கள், ஏதாவது ஒருவிஷயத்தில் மற்றவரை எதிர்த்துக்கொண்டே இருப்பார்கள். எனினும், இதனிமித்தம் இவர்கள் சோர்வடைய வேண்டாம். ஏனெனில், இந்தப் போராடும்/சண்டையிடும் மனப்பான்மை சரியான திசையில் வழிநடத்தப்பட்டால், அம்மனப்பான்மையானது மிக உபயோகமான வேலையாளாகவும், போர் வீரனாகவும் காணப்படும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும், இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய சொந்த பூரணமற்ற தன்மைகளையும், அனைவருடைய பூரணமற்ற தன்மைகளையும் உணர்ந்தவர்களாக, இவர்கள் இந்தப் போராடும் மனப்பான்மையை இரக்கத்தினால் வரையறுத்து, மற்றவர்களின் விஷயத்தில் செயல்படுத்துகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும். சத்தியத்திற்காகவும், சத்தியத்தின் அனைத்து ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்காகவும், மற்றும் தப்பறைகளுக்கு எதிராகவும் போராடும்படிக்கு இந்தப் போராடும் மனப்பான்மையானது அன்பு மற்றும் இரக்கத்தின் வரையறையை கொண்டு போராடுவதற்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். தப்பறைகளுக்கு எதிராகப் போராடலாம் ஆனால், தப்பறையில் குருடாக்கப்பட்ட மற்றும் அறியாமையினால் காணப்படும் ஊழியர்களுக்கு எதிராக போராடுதல்கள் காணப்படக்கூடாது. சொந்த சுபாவத்தினுடைய பூரணமற்ற தன்மைகள் மற்றும் பெலவீனங்களுக்கு எதிராக போராடுவதில் நம்முடைய இந்தப் போராடும் மனப்பான்மையை நாம் ஈடுபடுத்தலாம். மேலும், இவ்விதமாய் இம்மனப்பான்மையானது இத்தகைய நல்ல பணியில் சுறுசுறுப்பாய்க் காணப்படும் பட்சத்தில், மற்றவர்களைக் காயப்படுத்துவதற்கு இம்மனப்பான்மைக்கு நேரம் இராது. மேலும், நம்முடைய சுயத்தை கைப்பற்றி கீழ்ப்படுத்துவதிலுள்ள கஷ்டங்களை (நம்முடைய இந்த) மனப்பான்மையானது உணரும்போது, மற்றவர்களுடைய பெலவீனங்கள் குறித்து அதிகம் அனுதாபங்கொள்ளும்.

## "பரலோகத்தில் மகா பலனை அடைதல்"

துன்பப்படுத்துதலின் வாயிலாக வரும் ஆசீர்வாதம் எட்டாவது மலைப்பிரசங்கத்தினுடைய கருத்தாகும். கர்த்தருடைய ஜனங்கள் முந்தின பாக்கியமான காரியங்களையெல்லாம் அடையாதது வரையிலும், அப்போஸ்தலர் பவுல் கூறினது போன்று, "உபத்திரவத்தில் மேன்மை பாராட்டும்" நிலையை அடையமுடியாது. ஆனால், நமது கர்த்தரோ பல்வேறு விதமான துன்பப்படுதல்களுக்கு இடையேயுள்ள வித்தியாசத்தைக் கவனத்துடன் வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றார். அதாவது, பாக்கியமான துன்பப்படுதலிலிருந்து, மற்ற வேறுவிதமான துன்பப்படுதல்களைக் கவனமாக வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றார். அதாவது, மற்றவர்கள் மீது குறை கண்டுபிடிப்பதின் மூலமாகவும், தீயக்குணலட்சணங்கள் மூலமாகவும், எல்லாரையும், எல்லாவற்றையும் எதிர்த்துச் சண்டையிடுதல் மூலமாகவும் நாம் துன்பங்களை வருவித்துக்கொள்ளக்கூடாது. அதேசமயம், மதவெறி காரணமாகவும் நாம் துன்பங்களை வருவித்துக்கொள்ளக்கூடாது. மாறாக நாம், "தெளிந்த புத்தியுள்ள ஆவியை" விருத்திச்செய்து, கர்த்தருடைய தெளிந்தபுத்தி எப்படியாக இருந்தது என வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டியுள்ள காரியங்களைப் படிப்படியாகக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக, நாம் கற்றுக்கொண்டு நடந்த பிற்பாடுங்கூட நாம் "மதவெறி" கொண்டுள்ளதாக உலகம் நம்மை தவறாய்க் குற்றஞ்சாட்டும். ஏனெனில், தேவனுடைய ஞானமானது, மனுஷனால் முட்டாள்தனம் என்று கருதப்படுகின்றது. ஆனால், மனுஷனுடைய ஞானமோ தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி முட்டாள்தனமாகவே கருதப்படுகின்றது.

எப்போதாவது ஒருவிதமான நடத்தை (அ) கிரியை, மதவெறி போன்றும், நியாயமற்றது போன்றும் நமக்குத் தோன்றுமாயின், அந்த நடத்தையில்/கிரியையில் வெளிப்படும் ஆவியானது, நம்முடைய கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதனையிலும், மாதிரியிலும் காணப்படுகின்றது என்று நாம் உறுதி அடைவது வரையிலும், நாம் அக்கிரியை நடப்பிக்க தயக்கம்கொள்ள வேண்டும். பின்னர், நமக்கு உறுதி கிடைக்கும் பட்சத்தில் உலகம் நம்முடைய அக்கிரியைக்குறித்து என்னதான் எண்ணினாலும் (அ) பேசினாலும், அதைப் பொருட்படுத்தாமல், அக்கிரியையை நாம் பாதுகாப்பாய்த் தொடரலாம். உதாரணத்திற்கு, தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி, ஒரு மனுஷன் தனது மரணத்திற்குப்பிற்பாடு, தன் பிள்ளைகள் ஜீவிப்பதற்கென, மில்லியன் கணக்காக பணத்தைக் குவித்துச் சேர்க்க, இரவும் பகலும் வேலை புரிவது என்பது பைத்தியமான காரியமாகும். ஆனால், மனுஷனுடைய கண்ணோட்டத்தின்படி, மேற்கூறியபடி வேலை புரிவது நியாயமான நடத்தையாகும். இன்னுமாக, தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி, அப்போஸ்தலர்கள் சத்தியத்திற்கான ஊழியத்திற்கெனத் தங்களுடைய ஜீவியத்தையே செலவிடுவதும், மேன்மையான உயிர்த்தெழுதலையும், நித்திய மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெற்றுக்கொள்வதற்கெனத் தங்களுடைய பூமிக்குரிய நலனை, பெயரை, அந்தஸ்தை, கீர்த்தியைத் தியாகம் செய்வதும் ஞானமான காரியமாகும். ஆனால், இப்படியாகச் செய்வது என்பது, உலகத்திற்குரிய கண்ணோட்டத்தின்படி முட்டாள்தனமாகவும், மதவெறியாகவும் காணப்படும்.

கர்த்தரையும், அப்போஸ்தலர்களுடைய போதனைகளையும், மாதிரிகளையும் பின்பற்றுவதின் காரணமாக நமக்குத் துன்பங்கள் வந்தால், அவரோடு நாம் பண்ணியுள்ள அர்ப்பணிப்பின் உடன்படிக்கைக்கு நாம் காட்டும் உண்மையினிமித்தம் நமக்கு எதிராக பலவிதமான தீமைகளும், தவறாய்க் கூறப்படுவதினிமித்தம் நமக்குத் துன்பங்களும் வந்தால் நாம் களிக்கூர வேண்டும். ஏனெனில், இதுபோலவே தீர்க்கதரிசிகளும், நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், ஆதிமுதல் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்ட அனைவரும் துன்பப்படுத்தப்பட்டார்கள். இப்படியான ஒரு நல்ல கூட்டத்தாரோடு நம்முடைய அனுபவங்கள் காணப்படும் காரியமானது, கர்த்தர் தம்முடைய சம்பத்தைக் கூட்டிச்சேர்க்கும் நாளில், இந்த நல்ல கூட்டத்தாரோடு நாமும், அவர்களைப்போன்று (மகிமையில்) காணப்படுவோம் என்பதற்கான சாட்சியாக விளங்குகின்றது.

இப்படியான அனுபவங்கள் உடையவர்கள் அனைவரும் களிக்கூரக்கடவர்கள். மேலும், இப்படியான அனுபவங்கள் நமக்கு அதிகமாய்க் கிடைக்கும் பட்சத்தில், பரலோகத்திலுள்ள பலன் மிகுதியாய் இருக்கும் என்று கர்த்தருடைய வார்த்தைகள் தெரிவிக்குமானால், அப்பொழுது நாம் இப்படியான அனுபவங்களில் அதிகமாய்க் களிக்கூர வேண்டும். மேலும், ஒருவேளை நமக்கு இப்படியான அனுபவங்கள் இல்லையெனில், சுயத்தைப் பலிச் செலுத்துவதற்கான இடுக்குமான வழியில் நடப்பதில் நாம் உண்மையற்றவர்களாகக் காணப்படுகின்றோமா என நம்மை ஆராய்ந்து பார்ப்பதற்குரிய எச்சரிப்பாக விளங்கும் அல்லது நம்முடைய கைக்கு வருவதை நாம் முழுப் பலத்தோடு செய்கிறவர்களாயிராமல், நம்முடைய பலியைச் செலுத்தாமல், வைத்துக்கொள்கின்றோமா என நம்மை ஆராய்ந்து பார்ப்பதற்குரிய எச்சரிப்பாக விளங்கும். இப்படியான நிலையில் காணப்படுவதை ஆராய்ந்து கண்டறிந்த நிலையில் இருப்பவர்கள் சோர்ந்துபோக வேண்டாம். மாறாக, அன்பு மற்றும் பக்திவைராக்கியம் எனும் புதிய கயிறுகளினால் தங்கள் பலிகளைப் பலிப்பீடத்தின் கொம்புகளில் கட்டி, அப்பலியைத் தேவன் ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபம்பண்ணி, மேலும் தேவனுக்காகவும், தேவனுடைய நோக்கத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் வேலைகள் புரிவதற்கும், பாடுகள் படுவதற்குமான வாய்ப்புகளைத் தர வேண்டும் எனவும் ஜெபம் பண்ணுவார்களாக (சங்கீதம் 118:27).

இந்த அனைத்துக் குணலட்சணங்களின் ஒட்டுமொத்த கூட்டுருவம், அன்பு ஆகும். மேலும், இந்த அனைத்துக் குணலட்சணங்களையும் உடையவர்கள் அன்புடையவர்களாய்/ அருமையானவர்களாய் இருப்பார்கள். மேலும், போகப்போக இவர்கள் முற்றிலும் அன்புள்ளவருடைய சாயலுக்கு ஒப்பாகவும் மாறி, அவரோடுகூட, முற்றிலும் அன்புடையவர்களாகக் காணப்படுவார்கள். இந்தப் பாக்கியமான குணலட்சணங்களை அடைந்து இராஜ்யத்தில் காணப்படுவதே நமக்கான அழைப்பாகும்.

**ஆமென்!**

---

**R 2589**

# "இராஜரிகப் பிரமாணம் - பொன்னான சட்டம்"

## மத்தேயு 7:1-14

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."

இந்தப் பாடத்தில், கர்த்தருடைய மாபெரும் மலைப்பிரசங்கத்திலுள்ள இன்னொரு விஷயத்தை நாம் பார்க்கப் போகின்றோம். இந்தப் பிரசங்கம் பாவிகளுக்காக இராமல், கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணியுள்ள ஜனங்களுக்காகப் பண்ணப்பட்ட பிரசங்கமாகும். நம்முடைய கர்த்தருடைய இந்தப் பிரசங்கத்தைத் திரளான ஜனக்கூட்டத்தார் கூடிநின்று கேட்டாலும், அதிலும் அவர்கள் அனைவரும் நிழலாக அர்ப்பணம் பண்ணப்பட்ட தேசத்தாராகிய இஸ்ரயேலர்களாக இருந்தாலுங்கூட, நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை விசேஷமாக தாம் தெரிந்துக்கொண்ட 12-சீஷர்களிடத்திலேயே கூறினார். இந்த 12- சீஷர்களும் சீக்கிரத்தில் தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய யுகத்தின் கீழ், வெளிப்படுத்தின விசேஷத்தில் புதிய எருசலேம் எனும் அடையாள வார்த்தை அடையாளப்படுத்தும் பரலோக இராஜ்யத்திற்கான 12-அஸ்திபாரங்களாக இருக்கத்தக்கதாக குறிப்பாகவும், முழுயைமாகவும் போதிக்கப்பட்டுள்ளார்கள். (வெளிப்படுத்தல் 21:14).

இந்த இராஜரிக பிரமாணத்தின் பல்வேறு அம்சங்களை அன்றும், இன்றும் ஏற்றுக்கொள்கின்ற அனைவருக்கும்,அது ஆரோக்கியமான ஆலோசனையாக விளங்குவது என்பது உண்மையே. ஆனால், சத்தியத்தினுடைய இந்தப் பரிசுத்தமான முத்துக்களைப் புரிந்துக்கொள்ளத்தக்கதாக வெகு சிலரது கண்கள் திறக்கப்படுவதினாலும், செவிகள் திறக்கப்படுவதினாலும், அதனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்ததும் உண்மையே. இவைகளை ஏற்றுக்கொள்பவர்களுக்கே, இவைகள் பேசப்பட்டதும் உண்மையே ஆகும். சீக்கிரத்தில் நிறைவேறப் போகின்ற நல்ல நம்பிக்கைகளுக்காகவும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட போகிறதற்காகவும், குருடாயுள்ள கண்கள் யாவும் திறக்கப்படப் போகிறதற்காகவும், செவிடான அனைத்துக் காதுகளும் திறக்கப்படப்போகிறதற்காகவும், தேவனுடைய ஏற்றவேளையில் அன்பு எனும் பொன்னான சட்டத்தின் கட்டளைகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனைவரும் அந்தக் கட்டளைக்குச் செவிசாய்க்கப் போகிறார்களா அல்லது புறக்கணிக்கப் போகிறார்களா என்று அறிவதற்கு அனைவர் மத்தியிலும் அக்கட்டளை/சட்டம் அமுல்படுத்தப்படப் போகிறதற்காகவும் தேவனுக்கு நன்றி.

நமது கர்த்தருடைய மாதிரியையும், உத்தரவையும் நாம் பின்பற்றி, "பழையதும், புதியதுமான" ஏற்றகால சத்தியத்தை விசுவாச வீட்டாருக்கு அதாவது, இராஜ்யத்தினுடைய பிள்ளைகளுக்கு முன்பாக வைப்பதற்கு நாம் முயற்சி எடுக்கின்றோம். ஆனால், அதை "நாய்களுக்கு" முன்பாக வைக்கப்போவதில்லை. அதாவது, தெய்வீகத் தயவிற்கு வெளியே காணப்படுபவர்களும், தேவனுடைய கிருபையை இன்னமும் பெற்றுக்கொள்ளாதவர்களும், அவருடைய குடும்பத்திற்குள் குமாரர்களாக தத்தெடுக்கப்படாதவர்களுமாகிய "நாய்களுக்கு" முன்பாக வைக்கப்போவதில்லை. கேட்கும் செவிகளை உடையவர்களுக்கும், புரிந்துக்கொண்டு ஏற்றுக்கொள்ளும் இருதயம் உடையவர்களுக்கும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக புதிய சிருஷ்டிகளாக இருப்பவர்களுக்கும் புதிய வாழ்க்கை வாழ நாடுபவர்களுக்கும் இந்த விலையேறப்பெற்ற சத்தியங்கள் மகா மதிப்பும், மகா விலையுமுள்ள முத்துக்களாக இருக்கின்றது. பன்றி போன்றவர்களிடமும், முரடர்களிடமும் நாம் இச்சத்தியத்தை முன்வைத்தால், அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது மாத்திரம் காரணமாக இராமல், இன்னுமாக அவர்கள் ஏமாற்றமடைந்த உணர்வையடைந்து, நமக்குப் பாதிப்பு உண்டாக்குவதற்கு ஏதுவாக, நம்முடைய நல்ல நோக்கங்களின்மேல் எரிச்சல் அடைவார்கள் என்ற காரணத்தினாலும் நாம் சத்தியத்தை அவர்கள் முன்வைக்கவில்லை. இதைக் குறித்து நமது கர்த்தர், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள். உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள். போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்"என்று பேசுகின்றார் (மத்தேயு 7:6). மேலும், அவருடைய வார்த்தைகள் "பரியாசக்காரனைக் கண்டிக்கிறவன் இலச்சையடைகிறான். துன்மார்க்கனைக் கண்டிக்கிறவன் தன்னைக் கறைப்படுத்திக் கொள்ளுகிறான். பரியாசக்காரனைக் கடிந்து கொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான். ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்" என்ற வசனங்களுக்கு முழு இசைவாகவே உள்ளது (நீதிமொழிகள் 9:7-8).

ஆகையால் விசுவாச வீட்டாருக்கே, கர்த்தர் "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்ற வார்த்தைகளைப் பேசினார் (மத்தேயு 7:1). இந்த ஆலோசனையைக் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் மாணாக்கர்களாக இல்லாதவர்களுக்கு வழங்குவது பயனற்றதாகும். ஆனால், அனைத்து உண்மையான சீஷர்களும் (மாணாக்கர்களும்) இந்த ஆலோசனைக்கு உண்மையாய்ச் செவிசாய்க்க வேண்டும். மேலும், இவ்வாலோசனையில் மிக முக்கியமான பாடமுள்ளது என்பதைப் புரிந்துக்கொள்ள வேண்டும். மேலும், இந்தப்பாடத்தைக் கற்றுக்கொள்ளவில்லையெனில், நாம் மாபெரும் பரீட்சைக்கு ஆயத்தமற்றவர்களாகக் காணப்படுவோம் என்றும், தேர்ச்சிப் பெறுவதற்கு ஆயத்தமற்றவர்களாகவும், இராஜ்யத்திற்கு ஆயத்தமற்றவர்களாகவும் காணப்படுவோம் என்றும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். தேர்ச்சிப் பெறுவதற்கு ஆயத்தமற்றவர்களாகக் காணப்படுவதற்கான காரணம் என்னவெனில், தங்களுடைய பரீட்சையில் இப்படிப்பினையானது ஒரு பரீட்சையாகக் காணப்படுவதை புரிந்துக்கொள்ளாமல் இருப்பதேயாகும். ஒருவேளை இவர்கள் குற்றம் கண்டுபிடிப்பவர்களாகவும், சந்தேகிப்பவர்களாகவும், மற்றவர்களை அன்பற்றவிதத்திலும், கடுமையானவிதத்திலும் நியாயந்தீர்ப்பவர்களாகவும் இருப்பார்களானால், இது இவர்கள் முழுமையான அன்பும், கனிவுமுள்ள கிறிஸ்துவின் ஆவியாகிய அன்பின் ஆவியை வளர்த்துக் கொள்ளாததற்கான தெளிவான அடையாளமாகும். மேலும், இப்படியாகக் காணப்படுபவர்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்கள் என்று நியாயந்தீர்க்கப்படுவார்கள் அல்லது குற்றம் தீர்க்கப்படுவார்கள். ஏனெனில், நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கிறபடியே, நாமும் நியாயந்தீர்க்கப்படுவோம். ஏனெனில், இதைக்காட்டிலும் நம்முடைய உண்மையான ஆவிக்குரிய நிலைமையை அதாவது அன்பு நம்மிடத்தில் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை விவரித்துக் காட்டுவதற்குச் சிறந்தவழி வேறெதுவும் இல்லை.

எந்தளவுக்கு மற்றவர்களிடத்தில் நாம் இரக்கமும், தயாளத்தையும் பாராட்டுகின்றோமோ, அவ்வளவாகவே தெய்வீக இரக்கம் நம்மிடத்தில் பாராட்டப்படும். மாபெரும் ஆண்டவரின் உதடுகளிலிருந்து புறப்பட்டு வெளியே வந்த இந்தப் பாடத்தை, கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் தங்களுடைய இருதயங்களில் நன்கு பதிய வைக்கப்பெற்றிருப்பார்களானால், இந்தப் பாடமானது மற்றவர்களைப்பற்றியதான இவர்களுடைய எண்ணங்களிலும், மற்றவர்கள் விஷயத்தில் நடப்பிக்கும் இவர்களுடைய கிரியைகளிலும் எத்துணை அருமையான செல்வாக்கு உடையதாய் இருக்கும்; இன்னுமாக இவர்கள் எவ்வளவு தயாளம் கொண்டவர்களாகவும், எவ்வளவு மன்னிக்கின்றவர்களாகவும், மற்றவர்களுடைய பெலவீனங்களுக்காக எவ்வளவு இரக்கப்படுகின்றவர்களாகவும் இருப்பார்கள்; இன்னுமாக, இவர்களுடைய இருதயத்தில் அன்பின் ஆவி எவ்வளவாய் வளர்ந்து பெருகி, இவர்களுடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் வெளிப்படுகின்றதாய்க் காணப்படும்.

## "அவர்களுடைய கண்களில் உள்ள உத்திரங்கள்"

தங்களைப்போன்று இடுக்கமான வழியில் நடப்பதற்கு நாடிக்கொண்டிருக்கும் "சகோதரர்களிடத்தில்" எப்போதும் குற்றங்கண்டுபிடிப்பவர்களும், கர்த்தருக்கு ஒத்த சாயலை அடையும்படிக்கு நாடிக்கொண்டிருக்கும் "சகோதரர்களுடைய" உண்மையான பிரயாசங்களை ஒருபோதும் பார்க்க முடியாதவர்களும், எப்போதும் சகோதரர்களைக் குத்திக்கொண்டே இருப்பவர்களும்தான் தவறுகளிலேயே பெரிய தவறுகளைக்கொண்டிருப்பவர்களாகவும், அன்பில்லாதவர்களாகவும் காணப்படுவார்கள் என்ற கருத்தைக் கர்த்தர் தெரியப்படுத்துகின்றார். இந்த வகுப்பரைக் கடிந்துகொள்ளும் விஷயத்தில், நமது கர்த்தர் பயன்படுத்தும் மிகைப்படுத்தின வார்த்தைகள் ஏளனத்தை வெளிப்படுத்துகின்றது. ஏனெனில், "உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல், உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்களில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்?" என்று சொல்லர்த்தமான வார்த்தைகளிலேயே பேசுகின்றார் (மத்தேயு 7:3; திருவிவிலியம்). அனைத்துச் சகோதரர்களுக்கும் ஏதோ ஒருவிதத்தில் மாம்சத்தின் பெலவீனங்கள் காணப்படவே செய்கின்றன. ஏனெனில், அனைவரும் புதிய சுபாவமாகிய பொக்கிஷத்தை ஆதி பாவத்தினால் கெடுக்கப்பட்ட பூரணமற்ற மண்பாண்டங்களிலேயே பெற்றிருக்கின்றனர். "நீதிமானாக ஒருவனாகிலும் இல்லை," முழுமையான பூரணத்துடன் எவரும் இல்லை. எனினும் இருதயத்தில் அன்பினால் முழுமையாய் நிரப்பப்பட்ட நிலையில் காணப்படும் சகோதர சகோதரிகள், அவர்களுடைய விசுவாசத்தின் அல்லது ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ளும் கண்களில் துரும்பைக் கொண்டிருந்தாலும், அல்லது

அவர்களுடைய ஜீவியத்தின் அனைத்துக் கிரியைகளையும் பாதித்து, பூரணமற்ற நிலையில் அவர்களுடைய கிரியை காணப்படத்தக்கதாக அவர்களுடைய கரங்களில் சிறு கண்ணாடித்துண்டு குத்தியிருந்தாலும், மேலும், அவர்கள் விருப்பம் கொண்டாலுங்கூட, அவர்களால் பூரணமாய் நடக்க முடியாதளவுக்கு, அவர்களுடைய பாதங்களில் சிறு கண்ணாடி துண்டுகள் குத்தியிருந்தாலும், அவர்களிடத்தில் ஒருவேளை விசுவாசத்தின் ஆவியும், அன்பின் ஆவியும், அனுதாபத்தின் ஆவியும், கிறிஸ்துவின் ஆவியும் காணப்படும் பட்சத்தில், அவர்கள் அன்பின், இரக்கத்தின் ஆவி இல்லாதவர்களைக்காட்டிலும் அதிகமாய்த் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படுவார்கள். இப்படியான அன்பின் ஆவியும், இரக்கத்தின் ஆவியும் இல்லாதவர்கள் கர்த்தருடைய ஆவியை மிகச் சிறிய அளவிலும், "சகோதரரைக் குற்றம் சாட்டும்" மாபெரியவனாய் இருக்கும் எதிராளியானவனின் ஆவியை மிக அதிகமான அளவிலும் கொண்டிருக்கும் காரணத்தினால், மற்றவர்களை நியாயந்தீர்க்கும் தவறான வழியைத் தெரிந்துக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அன்பற்ற, குற்றம் கண்டுபிடிக்கின்ற, சகோதரரைக் குற்றம் சாட்டும் வகுப்பாரை, கர்த்தர் மாய்மாலக்காரர்கள் என்று அழைக்கின்றார். ஏன்? ஏனெனில், இவர்கள் மற்றவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கையில், தாங்கள் அவர்களைப் போல் பாவத்தின் பிணியினால் நோய்வாய்ப் படவில்லை எனும் எண்ணத்தை மற்றவர்களுக்கு அளிக்க விரும்பவது தெளிவாகின்றது. இன்னுமாக, தாங்கள் பரிசுத்தமாய்க் காணப்படுபவர்கள் என்ற எண்ணத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கவும் இவர்கள் விரும்புகின்றார்கள். இது பொய் என்றும், தங்களிடத்தில் அநேக குறைவுகளும், பெலீவனங்களும் இருக்கின்றது என்றும் இவர்கள் தங்கள் இருதயத்தில் அறிந்திருக்கும் நிலையிலும், தாங்கள் பரிசுத்தமாய்க் காணப்படுபவர்கள் என்ற எண்ணத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்புகின்றனர். இப்படியாக, இவர்கள் காணப்படுவதினால் இவர்களது போக்கானது மாய்மாலமாகவும், ஏமாற்றுத்தனமாகவும், தவறானதாகவும், தேவனுக்குப் பிரியமற்றதாகவும் காணப்படுகின்றது. பாவத்தின் மீதான வெறுப்பின் காரணமாகவும், தவறு செய்பவர்கள் மீதான அன்பின் காரணமாகவுந்தான், தாங்கள் குற்றம் கண்டுபிடிப்பதாக இவர்கள் கூறுவது, நமது கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காண்பிப்பதுபோன்று ஏமாற்றுத்தனமும், வஞ்சனையுமாகக் காணப்படுகின்றது. இவர்கள் தங்களுடைய சொந்த பாவங்கள் மற்றும் பெலவீனங்களுக்கு எதிராக யுத்தம் பண்ணுவதற்கும், பகைப்பதற்கும், குற்றஞ்சாட்டுவதற்கும், அதாவது, தங்களிடத்திலிருந்து மாய்மாலம் மற்றும் போலித் தற்பெருமை எனும் மரக்கட்டைகளை வெளியேற்றுவதற்குரிய அநேக வேலைகளை இவர்களுக்குள் பெற்றிருக்கின்றார்கள். இப்படியாக, இவர்கள் செய்வார்களானால், இவைகளால் வரும் அனுபவங்கள், இவர்களை மற்றவருக்கு உதவி செய்யும் விஷயத்தில் இரக்கத்துடனும், அன்புடனும், இனிமையுடனும் இருப்பதற்கு ஏதுவாக இவர்களை உருவாக்கியிருக்கும்.

நமது கர்த்தர் இங்கு முன்வைத்துள்ள விஷயத்தை அனைத்துச் "சகோதரர்களும்" கவனமாய்ப் பார்க்க வேண்டும். மேலும், தங்களிடத்தில் இருதயத்தில் ஏதேனும் தீயப் பண்புகள் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை நன்கு கவனிக்க வேண்டும். அதாவது, குற்றம் கண்டுபிடித்துத் திட்டுதல், கடுமையாகக் குற்றத்தை விமர்சித்தல் மற்றும் தீவிரமாய்க் குற்றத்தைப் பலர் அறிய தாக்கிப் பேசுதல் போன்றதான தவறான/தீய பண்புகள் நம்மிடத்தில் இருக்கின்றனவா எனக் கவனிக்க வேண்டும் . . . மேற்கூறப்பட்டவைகள் அனைத்தும் ஒரு தவறின் பல்வேறு நிலைகளாகும். ஒருவேளை எவரேனும் தங்களுடைய ஆவிக்குரிய கண்களில் போலி தற்பெருமை மற்றும் அன்பின்மை எனும் மரக்கட்டையின் ஏதேனும் தடயத்தைக் காண்பார்களானால், அவர்கள் உடனடியாக மாபெரும் (இயேசு)வைத்தியனிடம் சென்று, அவர்கள் "சகோதரருக்கு" மென்மையான மற்றும் இரக்கமுள்ள உதவியாளர்களாக உடனடியாக ஆகுவதற்கும், ஆயிரம் வருஷம் யுகத்தின் மாபெரும் வேலைக்காக மருத்துவர்களாகவும், அறுவை சிகிச்சையாளர்களாகவும் அவர்கள் ஆயத்தமாகிக்கொள்வதற்கும், மரக்கட்டையை முழுமையாக நீக்கிப் போட்டுக்கொள்ள வேண்டும். மனுக்குலத்தின் குருடாக்கப்பட்டுள்ள கண்களை இரக்கத்துடனும், அன்புடனும் திறந்து வைப்பதும், பாவத்தின் அனைத்துப் புண்களைச் சொஸ்தப்படுத்துவதும்தான் ஆயிர வருஷ யுகத்தின் மாபெரும் வேலையாகும்.

## "திராட்சக் கொத்துக்களை, முட்செடிகளில் கட்டி வைப்பது"

நம்மைப்போன்று நமது ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் பிரயாசம் எடுப்பவராகிய நமது "சகோதரரை" நாம் நியாயந்தீர்க்கக் கூடாது. எனினும், பொதுவான மனுக்குலத்தின் விஷயத்திலும் நாம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நியாயந்தீர்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். "அவர்களுடைய கனிகளினாலே," அதாவது "முட்செடிகளிலிருந்து திராட்சப்

பழங்களையும், முட்பூண்டுகளிலிருந்து அத்திப்பழங்களையும் நம்மால் வேறுபடுத்தி அறிந்துக்கொள்ள முடியும் என்று வேறொரு இடத்தில் கர்த்தர் தெரிவிக்கின்றார். இதே பிரசங்கத்தில் சகோதரர்களுக்கும், "நாய்களுக்கும்" மற்றும் சகோதரர்களுக்கும், "பன்றிகளுக்கும்" இடையேயுள்ள வித்தியாசம் என்னவென்பதை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும் அல்லது நியாயந்தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். "பன்றிகள்" சுயநலமுள்ளவர்கள், சிற்றின்பம் நாட்டம் கொண்டவர்கள், பூமிக்குரிய காரியங்கள் மீது நாட்டம்கொண்டவர்கள், தேவனுடைய ஆவியினால் ஒருபோதும் ஜெநிப்பிக்கப்படாதவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்டவர்களை, இவர்களுடைய வெளிப்புற சாட்சிகளினாலே நாம் அறிந்துக்கொள்ளலாம். ஏனெனில், "கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிராத எவனும், அவருடையவன் அல்ல." மேலும், ஒருவேளை ஒருவன் கிறிஸ்துவினுடையவன் அல்லாதவனானால், ஒருவன் திரட்சச் செடியின் கொடி அல்லாதவனானால், அப்படிப்பட்டவனிடத்தில் திராட்சப் பழங்களின் கொத்தைக் கட்டுவதற்கென நமது நேரத்தை, வீணாக நாம் செலவழிக்கக்கூடாது. சுயநலத்திலும், ஜெநிப்பிக்கப்படாத/புதுப்பிக்கப்படாத நிலையிலுமுள்ள உலகத்தாரிடம், உண்மையான பரிசுத்த ஆவியைப் போலித்தனமாக விளங்கச்செய்வதற்கு உதவி நாம் புரிவதின்மூலம் மற்றவர்களையோ அல்லது நம்மையோ வஞ்சிப்பதற்கு நாமே முயலுகின்றவர்களாய்க் காணப்படக்கூடாது. பூமிக்குரியவைகளை மாத்திரம் புரிந்துக்கொள்ள முடிகின்ற வகுப்பார், இறைச்சிகடையிலிருந்து வரும் இறைச்சிக்கும், ஆசாரியர்களால் மாத்திரமே புசிக்கப்படும் பலிக்குரிய இறைச்சிக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்துக்கொள்ள முடியாததுபோன்று, இவ்வகுப்பார் பரிசுத்தமான, பரலோகத்திற்குரியவைகளை உணரார்கள். பணத்தையும், இந்த ஜீவியத்திற்குரியவைகளையும் மாத்திரம் கருத்தில் கொள்ளும் பேராசை பிடித்தவர்களாகிய பன்றி போன்றவர்கள், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள சகோதரர்களின் பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றதாய்க் காணப்படும் சத்தியம் எனும் முத்துக்களை, உணர்ந்து ஏற்றுக்கொள்வார்கள் என நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது.

ஆனால், கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணம் பண்ணிக்கொள்ளாத ஜனங்களின் கவனத்திற்கு நாம் பரிசுத்தமானவைகளை ஒருபோதும் கொண்டு வரக்கூடாது என்பது கருத்தாக இராமல் மாறாக, நீதி மற்றும் சத்தியத்தின் அடிப்படையான கொள்கைகளை மாத்திரமே முன்வைக்கையிலே, ஒருவரிடம் சத்தியத்திற்குச் செவிசாய்க்கும் செவிகள் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பது தெரிந்துவிடும். ஒருவேளை கேட்கும் செவி இருப்பதை நாம் கண்டால், நாம் ஊழியம் புரிவதில் கடும் முயற்சி ஏறெடுக்கலாம். ஆனால், ஒருவேளை அடைத்திருக்கும் செவியைக் காண்போமேயானால், அத்தகையவர்களிடம் இந்தச் சுவிசேஷ யுகத்தின் அழைப்பு, பரிசுத்தவான்கள் ஆகுதவற்கான அழைப்பு, தெய்வீகச் சுபாவம் மற்றும் இராஜ்யத்தில் உடன் சுதந்திரர் ஆகுவதற்கான அழைப்புத் தொடர்பான முயற்சிகள் எடுப்பது பலனளிக்காது என்று அறிந்தவர்களாக நாம் நமது நேரத்தை விரயமாக்குவதை விட்டுவிடலாம் என்பதே கருத்தாகும். கடினமான இருதயங்களை உடைப்பதற்கும், குருடான கண்களைத் திறப்பதற்கும், செவிடான செவிகளைத் திறப்பதற்கும் தேவனுடைய ஏற்றவேளையாகிய ஆயிர வருஷ யுகமானது சீக்கிரத்தில் வரும்.

"நாய்கள்," "பன்றிகளிடத்தில்" சில விஷயங்களில் ஏறெடுக்கப்பட்ட பிரயாசங்கள் அதாவது, முட்செடிகளிலும், முட்பூண்டுகளிலும், கிறிஸ்துவின் ஆவியினுடைய கனிகளைப்போன்ற போலியான பல்வேறு கனிகளைக்கட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் மற்றும் இப்படிப்பட்டவர்களுக்கு, விசுவாச வீட்டாருக்குரிய அப்பத்தை/போஜனத்தை சுவையாய் இருக்கச் செய்வது, உண்மையில் கர்த்தருடைய நோக்கத்திற்குப் பாதிப்பையே உண்டுபண்ணியுள்ளது. "நாய்" வகுப்பாரைப் போஷிப்பிப்பதற்கு ஏறெடுக்கப்படும் பிரயாசத்தில், "சகோதரர்கள்" கவனிக்கப்படத் தவறிப் புறக்கணிக்கப்பட்டுவிடுகின்றனர். "பன்றிகளுக்கு" முத்துகள் மீதும் விருப்பத்தைத் தூண்டுவதற்கான பிரயாசத்தில் மணவாளனுக்காக, மணவாட்டி ஆயத்தம் செய்யப்படும் விஷயமும், மணவாட்டியைச் சத்தியத்தின் முத்துக்களைக்கொண்டு அலங்கரிக்கும் விஷயமும் புறக்கணிக்கப்பட்டுப் போய்விடுகின்றது. முட்புதரில், திராட்சச் செடியின் இயற்கையான கனிகள் கட்டி வைக்கப்படும்போது, முட்புதருக்கும் மற்றும் நல்ல கனிகளைக்கொடுக்கும் உண்மையான திராட்சச் செடியின் உண்மையான மதிப்பிற்கும்,சுபாவத்திற்கும் இடையேயுள்ள மாபெரும் வித்தியாசமும் அதிகமாக மறைக்கப்பட்டுவிடுகின்றன. எழுதப்பட்டிருக்கும் காரியங்களைவிட நம்மை நாம் ஞானவான்கள் எனக் காட்டாதிருப்போமாக. இந்த யுகத்திற்கெனத் தேவனால் நியமிக்கப்பட்டுள்ள தற்காலத்திற்குரிய வேலையில் நாம் ஈடுபட்டு, மனுக்குலத்தின் உலகத்திற்கான பொதுவான வேலைகளைத் தேவனுடைய நியமிக்கப்பட்ட காலத்திற்கு விட்டுவிடுவோமாக.

## "அன்பற்ற, போலித் தற்பெருமையை எப்படி மேற்கொள்ளலாம்"

இப்பொழுது "சகோதரர்கள்" கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களுக்கு நாம் வரலாம். ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும் விஷயத்தைச் சரி பண்ண வேண்டும் என்பதை விசேஷமாக மனதில் கொண்டவராக நமது கர்த்தர், இந்தத் தவறான பண்பை எப்படி அகற்றிப்போடுவது என்பதற்கான போதனைகளை அளிக்கின்றார். மற்றவர்களை நாம் நியாயத்தீர்ப்பு செய்வதிலிருந்து நம்மைத் தடைப்பண்ணுவதற்கும், நம்முடைய சொந்த குறைவுகளை நாம் சரிச் செய்துகொள்ள நமக்கு உதவுவதற்கும் நமக்குத் தேவையான அன்பையும், அனுதாபத்தையும் நாம் கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும். நாம் உண்மையாய்க் கேட்போமானால், இதற்கான அவருடைய கிருபையையும், உதவியையும் நாம் பெற்றுக்கொள்வோம். நாம் அவரிடத்தில் கேட்கையில், நாம் குறைவுபட்டுள்ள அன்பின் பரிசுத்த ஆவியானது நம்முடைய இருதயங்களை நிரப்பும்படி நாடுவது நமக்குரிய கடமையாகும். ஒருவேளை இதை நாம் நாடினால் நாம் அதைக்கண்டடைவோம். தொடர்ச்சியான பிரயாசங்கள் மூலமாகவும், இடைவிடாத ஜெபத்தின் மூலமாகவும், கிருபை மற்றும் ஆசீர்வாதத்தினுடைய கர்த்தரின் களஞ்சியத்தை நாம் தட்டிக்கொண்டிருக்க வேண்டும். இதன் விளைவாக, அது நமக்கு நிச்சயமாகத் திறக்கப்படும். தட்டுதல், கேட்டல், நாடுதல் ஆகியவைகள் கர்த்தருடைய பார்வையில் பிரியமாய்க் காணப்படும். மேலும் இது அவரிடத்திலான நமது விசுவாசத்தைக் குறிக்கின்றது; மற்றும் நம்மிடத்தில் காணப்படும் உண்மையையும், கர்த்தருடைய சித்தத்திற்கு முழுமையாய் இசைவுடன் காணப்பட வேண்டும் என்ற நமது விருப்பத்தையும் குறிக்கின்றது. மேலும், நம்முடைய இருதயத்தின் இந்த நல்ல விருப்பங்கள் நிறைவேற்றப்படும், ஏனெனில், பூமிக்குரிய உணவைக் கேட்கும் குழந்தைக்குப் பூமிக்குரிய பெற்றோர் கொடுப்பது போன்று, தேவனும் தம்முடைய பிள்ளைகளுக்குத் தேவையான எல்லா நேரங்களிலும், அவர்களுக்குச் செவிச்சாய்த்துக் கிருபையை அருளுவார். நாம் நல்லவைகளுக்காக விருப்பம் கொள்ளும்போது, அவர் நம்மை ஏமாற்றுவதுமில்லை; தீமையானவைகளையும் நமக்குக் கொடுப்பதுமில்லை. மாறாக, நாம் கேட்டதை அல்லது எண்ண முடிவதைவிட மிக அதிகமாய்த், திரளானதாய், மேன்மையானதாய் நமக்குக் கொடுத்தருளுவார். ஏனெனில், பூரணமற்ற மனுஷ தந்தையினால் செய்ய முடிகின்றதைப்பார்க்கிலும் நமது பரம பிதா மிகச் சிறப்பானதைச்செய்ய வல்லவராய்க் காணப்படுகின்றார்.

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்" (லூக்கா 11:13). இங்குக் கேட்கிறவர்களுக்கும், தேடுகின்றவர்களுக்கும், தட்டுகின்றவர்களுக்கும், தேவன் கொடுக்கப் பிரியப்படும் நல்ல விஷயம், அவருடைய பரிசுத்த ஆவியே என்று கூறப்பட்டுள்ளது. இதுவே நாம் வெளியேற்ற வேண்டிய மாம்சத்தின் பரிசுத்தமற்ற, அன்பற்ற, சுயநலமுள்ள, நியாயந்தீர்க்கும், குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியை அணைத்துப் போடுவதற்கு அவசியமானதாகும். விஷத்திற்கு எதிரான மருந்து, நாம் பரிசுத்த ஆவியினாலும், அன்பின் ஆவியினாலும் நிரப்பப்படுவதேயாகும். ஏனெனில், அன்பு தனது அயலானுக்குத் தீங்கு விளைவிக்காது. "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது." மற்றவர்களுடைய தவறுகளைப்பார்ப்பதற்கும், சொந்த தவறுகளைப்பார்ப்பதில் குருடாய் இருப்பதற்கும் "அன்பு இறுமாப்பாய் இராது." குற்றம் கண்டுபிடித்து, சகோதரரைக் குற்றம் சாட்டுகின்றவராய் இருப்பதற்கு அன்பு தன்னைப் புகழுவதில்லை. தேவனுடைய ஆவியாகிய அன்பும், அனுதாபமும் உதவி செய்கின்றதாயும் காணப்படுகின்றது. (1 கொரிந்தியர் 13:4; ரோமர் 13:10)

## "தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து"
## எபிரெயர் 13:21

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12). இவ்வசனத்தில் இடம்பெறும் "ஆதலால்" என்ற வார்த்தையானது இவ்வசனத்திற்கும், இப்பாடத்தில் நாம் முன்பு பார்த்துள்ள விஷயங்களுக்கும் இடையே தொடர்பு இருப்பதைக்காட்டுகின்றது. இவ்வசனத்தின் காரியங்களானது, நாம் எப்போதெல்லாம் மற்றும் எவ்வளவாய் மற்றவர்களுடைய நோக்கங்களைத் தவறாய் நியாயம் தீர்த்துக்கொண்டு, அவர்களிடத்தில் (கைகளிலும், பாதங்களிலும்) காணப்படும் சிறு கண்ணாடித் துண்டுகளை மாற்றிப்போடுவதற்கு மிகவும் கவனமாக, அறுவை சிகிட்சைச் செய்வதற்கு முயற்சிகள் எடுப்பதற்கு அநாவசியமாகத் தலையிடுகின்றோம் என்பதை அறிந்துக்கொள்வதற்குப் பரீட்சையாக

அல்லது கோட்பாடாக அல்லது அளவுகோலாகக் காணப்படுகின்றது. ஆகவே இவ்வசனமே, "பொன்னான சட்டமாகும்/கோட்பாடாகும்." அதாவது, தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய ஜீவியத்தின் அனைத்து விஷயத்திலும் மற்றும் விசேஷமாக அவர்கள் "சகோதரர்களுடன்" கொண்டிருக்கும் உறவிலும், அவர்கள் "சகோதரர்களைக்" கையாளும் விஷயத்திலும் பயன்படுத்த வேண்டிய சட்டமாகும்/கோட்பாடாகும். மற்றவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கவோ அல்லது குற்றத்தைத் தேடுவதற்கோ நாம் உந்தப்படும்போதும், மற்றவரைக் குற்றம் சாட்டுவதற்கோ அல்லது மற்றவருடைய குறைகளை விமர்சிக்க நாம் உந்தப்படும்போதும் அல்லது அவரை வெறுப்பதற்கு உந்தப்படும்போதும் இப்படி எண்ணுவது அல்லது செய்வது ஏற்புடையதா அல்லது ஏற்புடையதாக இல்லையா என்பதை நாம் அறியும் பொருட்டு, "ஒருவேளை நான் அந்தச் சகோதரனுடைய இடத்திலும், அந்தச் சகோதரன் என்னுடைய இடத்திலும் இருந்தால், என்னைக்குறித்து அந்தச் சகோதரன் இப்படியாக எண்ணுவதையோ, பேசுவதையோ நான் விரும்புவேனோ?" என்ற கேள்வியை நம்மிடத்திலேயே நாம் கேட்டுப்பார்க்க வேண்டும்.

இந்தப் பிரமாணத்தை/சட்டத்தை/கொள்கையைப் பின்பற்றினால், இப்பிரமாணம் ஒரு வழிகாட்டியாகக்காணப்படும். கர்த்தருடைய ஜனங்கள் இப்பிரமாணத்தை நினைவில் கொண்டிருந்தும், இதற்குக் கீழ்ப்படிய இருதயத்தில் விருப்பம் கொண்டிருந்த போதிலும், புறங்கூறும் விஷயத்திலும், தீமைப்பேசும் விஷயத்திலும், வதந்திகள் பரப்பும் விஷயத்திலும், தாங்கள் இந்தப் பொன்னான பிரமாணத்தை மீறும் விஷயத்தில், தங்களைக் குற்ற பழியினின்று விலகிக்கொள்வதற்கான காரணத்தைக்காட்ட வாய்ப்புத் தேடுகின்றனர். இந்தக் கர்த்தருடைய பிரமாணத்தைக்கையாளும் விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். அதாவது, தேவனுடைய வார்த்தைகளை ஏமாற்றுத்தனமாகக் கையாளாதபடிக்கு அதாவது, இந்தப் பிரமாணத்தினுடைய உண்மையான முக்கியத்துவம் தொடர்பான விஷயத்தில், நம்மையே நாம் குருடாக்கி, ஏமாற்றிக்கொள்ளாதபடிக்கு அதாவது, இவ்விதமாய் நம்மையே நாம் ஏமாற்றி, நம்முடைய மனசாட்சியை நாம் சிறைப்படுத்தி, பலவீனப்படுத்தாதபடிக்கு, அதாவது, பரிசுத்த ஆவி வேண்டும் என்பதான நம்முடைய ஜெபங்களை நாமே தடைபண்ணிப் போடாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். ஏனெனில், வழி திறந்திருக்கும் பட்சத்திலேயே பரிசுத்த ஆவியானது நம்முடைய இருதயங்களுக்குள் பாய்ந்து வரமுடியும்; இந்தப் பொன்னான பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொள்ளும்போது மாத்திரமே, வழி திறந்து காணப்பட முடியும். இந்தப் பொன்னான பிரமாணமும், இந்த அனைத்துப் படிப்பினைகளும் புதியவைகள் போன்று தோன்றுவதற்கான காரணம், இவைகள் முன்பு இல்லாத அளவுக்கு மாபெரும் போதகரினால், தெளிவான மற்றும் துல்லியமான வெளிச்சத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளதினாலேயாகும். இன்னுமாக, இவைகள் மோசேயினுடைய நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள் வாயிலான தேவனுடைய போதனைகள் ஆகியவைகளின் சாரமாக உள்ளது.

## "வழி இடுக்கமானது/நெருக்கமானது"

நம்முடைய கிரியைகளின் விஷயத்தில் மாத்திரமல்லாமல், நம்முடைய வார்த்தைகள் மற்றும் நம்முடைய எண்ணங்கள் (வார்த்தைகளையும், கிரியைகளையும் உதிக்கப்பண்ணும் எண்ணங்கள்) விஷயத்திலும் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டிய ஜீவியமானது மிகவும் "நெருக்கமான பாதை" என்று அதாவது, கஷ்டமான பாதை என்று நமது கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றபோதிலும், இந்தப் பாதை இப்பொழுது நம்முன் வைக்கப்பட்டுள்ள சுவிசேஷ யுக அழைப்புக்கு வாக்களித்துள்ள சந்தோஷமுள்ள இராஜ்யம் மற்றும் ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்குரிய ஒரே வழியாகவும் உள்ளது. சுலபமான பாதை, சுயநலமான பாதை, உலகப்பிரகாரமான பாதை இராஜ்யத்திற்கு வழிநடத்தாமல், மரணத்திற்கு . . . இரண்டாம் மரணத்திற்கு . . . முழுமையான அழிவுக்கு நேராகவே வழிநடத்தும். அநேகர், இப்பொழுது விசாலமான வழியில் போய்க்கொண்டிருக்கின்றனர். வெகுசிலரே இராஜ்யத்திற்கும், அதன் மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கும் வழிநடத்தும் இடுக்கமான மற்றும் நெருக்கமான பாதையைக் கண்டுபிடித்து அதில் பிரவேசிக்கின்றனர். தற்காலத்தில் இடுக்கமான வழி மாத்திரமே திறந்திருந்தாலும், விசாலமான மற்றும் உலகப்பிரகாரமான வழியானது நடத்திச் செல்லக்கூடிய அழிவினின்று தப்புவதற்குத் தற்காலத்தில் மாத்திரமே வாய்ப்புக் காணப்படுகின்றது என நாம் எண்ணிவிடக்கூடாது. தெரிந்துக்கொள்ளப்பட்ட சிறுமந்தையினர் அதாவது, கிறிஸ்துவின் சரீரமாகிய, மணவாட்டியாகிய, சபைவகுப்பார் அதாவது, இடுக்கமான வழியைநாடி, அதில் நடப்பவர்களுமாகிய வகுப்பார், மனுக்குலத்தின் மத்தியிலிருந்து மகிமையடைந்துவிட்ட பிற்பாடு, ஆயிர வருஷ யுகத்தில், மனுக்குலத்தின் உலகத்திற்காக, பெரும்பாதையான பரிசுத்தமான வழி திறக்கப்படுவதற்கான காலம் வரும். பெரும்பாதையான வழி, கீழ்நோக்கிச் செல்லும் பாதையாக இராமல், மேல் நேக்கிச் செல்லும் பாதையாக இருப்பதினால், அப்பாதையில் நடப்பதற்கும், முடிவில்

முழுமையான சீர்ப்பொருந்துதலை அடைவதற்கும் பிரயாசம் எடுக்கப்பட வேண்டும். எனினும், இப்பொழுது தேவனுடைய ஜனங்களாகிய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன்பு, திறந்து வைக்கப்பட்டுள்ள கடுமையான, நெருக்கமான பாதையினின்று, இந்தப் பெரும்பாதையான வழி முற்றிலும் வேறுபட்டதாகும். இந்தப் பெரும்பாதையான வழியானது, தற்போதுள்ள இடுக்கமான வழிக்குரிய பலிச் செலுத்தும் பாதையாயிராமல், நீதியின் பாதையாகக் காணப்படும். தற்கால இடுக்கமான வழியானது, இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரைத் தெரிந்தெடுக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கென, இவர்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

ஆயிர வருஷத்திற்குரிய பெரும்பாதையான வழியில் எந்தச் சிங்கங்களும் இருப்பதில்லை. நன்மை செய்வதிலிருந்து தடைபண்ணப்படுவதற்கோ (அ) அழிப்பதற்கோ (அ) தாக்கப்படுவதற்கோ அப்பொழுது எதுவும் இருப்பதில்லை. நீதியின்படி நடக்க நாடுபவர்களையும் வஞ்சிப்பதற்கோ (அ) விழுங்கிப்போடுவதற்கோ எதுவும் அப்பொழுது காணப்படுவதில்லை. ஆனால், இவைகள் நம்மை இப்பொழுது சூழ்ந்து நிற்கின்றன. ஏனெனில், இவ்வுலகத்தின் பிரபுவாகிய சாத்தான் இன்னமும் கட்டப்படவில்லை (ஏசாயா 35:8-9; வெளிப்படுத்தல் 20:2). "இடுக்கமான வழி" மூலமாய் இப்பொழுது பிரவேசிக்கின்ற அனைவரும், நல்லதொரு போராட்டத்தைப் போராட வேண்டும்; மற்றும், விசுவாசத்திற்காக உண்மையுடன் போராட வேண்டும் மற்றும் பிசாசை எதிர்க்க வேண்டும் ....... இவர்கள் தங்களுடைய பரம அழைப்பிற்கான பரிசை அடையவேண்டுமெனில் இவைகளைச் செய்தாக வேண்டும். நாம் சுதந்தரித்துள்ள மாம்சத்தின் பெலவீனங்களுடன் மாத்திரம் நாம் போராட வேண்டியதாயிராமல், வானமண்டலத்தின் பொல்லாத ஆவிகளுடன் நாம் போராட வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். (எபேசியர் 6:12). ஆனால், கர்த்தர் அதிகமான கிருபையை நமக்கு அளிப்பதினால், நம்மில் அன்புகூர்ந்து, நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவர் மூலமாய் நாம் ஜெயங்கொண்டவர்களாக ஆகுவோம் (1 தீமோத்தேயு 6:12; யூதா 1:3; யாக்கோபு 4:7; ரோமர் 8:37).

**ஆமென்!**

---

R 2590

# "இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார்"

## மாற்கு 2:13-22

நமது கர்த்தர் பிரசங்கித்தும், நோய்களையும் சொஸ்தப்படுத்தியும் கொண்டிருந்த கப்பர்நகூம் பட்டணமானது, கலிலேயா கடலுக்கு அருகாமையில் காணப்பட்டது. இப்பட்டணமானது, வாணிபத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது, விசேஷமாக மீன் தொழிலுக்குப் பேர்ப் பெற்றதாய்க் காணப்பட்டது. மேலும் இப்பட்டணத்தில் காணப்பட்ட இந்தக் கடற்கரையும் பேர்ப் பெற்றதாய் இருந்தது. நமது கர்த்தர் இக்கடற்கரையின் வழியாகத்தான் நடந்து போவதும், தாம் பேசுவதைக் கேட்கும்படிக்குக் குவிந்துக் காணப்படும் ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்படி இக்கடற்கரையில் இங்கும், அங்குமாய் உட்காருவதும் வழக்கமாய்க் காணப்பட்டது. இப்படியாக அவர் பிரயாணித்துக் கொண்டிருக்கும் போதுதான், கர்த்தர் லேவி என்று அழைக்கப்படும் மத்தேயுவைக் கடந்து போனார்; இந்த மத்தேயு, ரோம அரசாங்கத்திற்குரிய சுங்கவரி துறையில் பிரதிநிதியாக இருந்தார், அதாவது வருவாய்த்துறை அதிகாரியாக மத்தேயு பணியாற்றிக் கொண்டிருந்தார்; இவரை நோக்கி, கர்த்தர், "எனக்குப் பின்சென்று வா" என்று அழைக்க, இவரும் சீஷன் ஆகுவதற்கான அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தார்.

இச்சம்பவம் தொடர்பான பதிவுகள் சுருக்கமாக இருப்பதினால், சிலர் இந்த லேவி (மத்தேயு) இச்சம்பவத்திற்கு முன்பு வரையிலும் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டதே இல்லை என்றும், நமது கர்த்தர், மத்தேயுவைக் கடந்து போனபோது, அவர், மத்தேயுவின் மேல் ஏதோ ஒருவிதமான மந்திரத்தைப் பயன்படுத்தினார் என்றும், இதன் காரணமாகவே மத்தேயு, புத்தித் திடீரென மழுங்கி போனது போன்று, திடீரென தனது தொழிலை விட்டு விட்டுப் போய்விட்டார் என்றும் தவறான கருத்துகள் கொண்டுள்ளனர். கர்த்தரைப் பற்றியும், அவருடைய சீஷர்கள் பற்றியும், இப்பகுதியில் இருந்தவர்கள் வருடக் கணக்காக நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; அநேகமாக மத்தேயு நமது கர்த்தரை அறிந்துக் கொண்டிருந்தது மாத்திரமல்லாமல், அவர்தான் மேசியா என்று விசுவாசமும் வைத்திருக்க வேண்டும். ஆனால் இத்தருணத்தின் போதுதான், இயேசு இவரைத் தம்முடைய சீஷர்களில் ஒருவராக ஆகும்படிக்கு அழைத்தார். நமது கர்த்தருடைய பிரசங்கங்களை மீண்டும், மீண்டுமாக கேட்டவர்களில் அநேகர் அவருடைய நண்பர்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அனைவரும் இந்தப் பன்னிரெண்டு நபர்களைப் போன்று அவருடைய விசேஷித்த பின்னடியார்களாகவும், கூட்டாளிகளாகவும், சுவிசேஷத்தின் ஊழியத்தில் துணையாளர்களாகவும்/பங்காளிகளாகவும் அழைக்கப்படவில்லை.

மத்தேயு, வரிப்பணம் வைத்திருந்த மேஜைகளைத் திறந்த நிலையிலும், மற்றும் ஆண்டவரைப் பின்பற்றுவதற்காக, ரோம அரசாங்கத்துடன் தனக்கு இருக்கும் பணக் கணக்குகளைச் சரியாக ஒப்படைக்காத நிலையிலும், உடனே எல்லாவற்றையும் அப்படியே விட்டு விட்டுப் போய்விட்டார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக மத்தேயு தன்னிடத்திலுள்ள அனைத்துக் கணக்குகளை ஒப்படைப்பதற்கும், அப்போஸ்தலனாகும்படிக்குத் தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு இணங்கி செயலில் இறங்குவதற்கும் சில நாட்கள், அநேகமாக சில வாரங்கள் கூட எடுக்கப்பட்டிருக்கலாம் என்றே நாம் அனுமானிக்கின்றோம். பல வருடங்களுக்குரிய வரலாறுகளும், பல பிரசங்கங்களும், சம்பாஷணைகளும், பல சம்பவங்களும், மிகச் சுருக்கமாக சுவிசேஷ பதிவுகளில் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கர்த்தரால், சீமோன் என்ற பெயர், பேதுருவாக மாற்றப்பட்டது போன்று, லேவி என்ற பெயரும், மத்தேயுவாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்; மத்தேயு எனும் பெயருடைய அர்த்தம், "தேவனுடைய அன்பளிப்பு"/ஈவு (Gift of God) ஆகும். மத்தேயு ஓர் ஆயக்காரனாய் இருந்தார், அதவாது வரிகளை வாங்கும் நபர் ஆவார். "ஆயக்காரன்" என்ற வார்த்தையும், இப்பணியும், யூதர்களால் மிகவும் வெறுக்கப்பட்ட விஷயமாகும். யூதர்கள் விருப்பமின்றி, ரோமர்களின் வரி செலுத்துவதற்கான விதிமுறைகளுக்கு இணங்கி, வரி செலுத்தினார்கள். ஆயக்காரர்கள் தேசப்பற்று இல்லாதவர்கள் என்று கருதப்பட்டார்கள்; மேலும் இவர்கள் அந்நிய (ரோம) அரசாங்கம் அளிக்கும் பணியை ஏற்றுக்கொண்டு, அநீதியான விதத்தில் வரி வசூலிப்பதற்கு உதவும்படி இவர்கள் தங்கள் நாடு மற்றும் ஜனங்கள் பற்றின அறிவை ரோமர்களுக்கு ஆதாயமாய்ப் பயன்படுத்தினதால் இவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கே உண்மையற்றுப் போனவர்கள் என்றும் கருதப்பட்டார்கள். வரி

வசூலிக்கும் பணியானது, நேர்மையற்று இருப்பதற்கும், இலஞ்சம் வாங்குவதற்கும், கொள்ளையடிப்பதற்கும் அநேக வாய்ப்புகளை அருளக்கூடியது என்று நம்மால் எளிதில் உணர முடிகின்றது. ஆனால் அதற்கென்று லேவியும் நேர்மையற்ற ஆயக்காரர்களில் ஒருவன் என்று நாம் ஒரு கணம் கூட எண்ணிவிடக் கூடாது, ஏனெனில் லேவி, நேர்மையற்ற ஆயக்காரர்களில் ஒருவராக இருப்பாரானால், அவர் அப்போஸ்தலன் ஆகும்படிக்கும் அழைக்கப்பட்டிருந்திருக்க மாட்டார்; இன்னுமாக ஒருவேளை அழைக்கப்பட்டாலும், அழைப்புக்குச் செவிசாய்த்திருக்க மாட்டார், காரணம், "இயேசுவை அனுப்பின பிதா, ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் இயேசுவினிடத்தில் வரமாட்டான்" என்று எழுதியிருப்பதை நாம் மறந்து விடக்கூடாது (யோவான் 6:44).

## "அர்ப்பணிக்கப்பட்ட இல்லம் கனப்படுத்தப்பட்டது"

மத்தேயு செல்வாக்குடைய மனுஷனாய் இருந்தார்; அவர் கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு தன்னையும், தனக்குள்ள யாவற்றையும் அர்ப்பணித்ததின் மூலம் அவ்வழைப்புக்குச் செவிச்சாய்த்து, மற்றவர்களை, இரட்சகரிடம் இழுக்கத்தக்கதாக, தனது செல்வாக்கைப் பயன்படுத்த முடிவெடுத்தார். மற்றவர்களை ஆதாயப்படுத்தத்தக்கதாக, தான் எவ்வாறு இரட்சகரிடத்தில் ஈடுபாடு அடைந்தார் என்பதைப் பறைசாற்ற முடிவெடுத்தார். இந்நோக்கத்தை முன்னிட்டு, மத்தேயு தனது வீட்டில், கர்த்தருக்கும், அவருடைய சீஷர்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்பண்ணினார்; மேலும் இவ்விருந்தில் தன்னுடைய நண்பர்கள் மற்றும் தொழில் ரீதியிலான கூட்டாளிகள் பலருக்கு மத்தேயு அழைப்புக் கொடுத்திருந்தார். இந்த அவருடைய நண்பர்கள், நம்முடைய பாடத்தில் "அநேக ஆயக்காரர் மற்றும் பாவிகள்" என்று அழைக்கப்படுகின்றனர் (மாற்கு 2:15).

பரிசேயர்களும், வேதபாரகர்களும், ஆயக்காரர்களைச் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவர்களாக கருதுவதற்கான காரணம், அவர்கள் பொல்லாதவர்கள் என்பதினால் அல்லாமல், மாறாக ஆயக்காரருடைய தொழில் அவமதிப்புடையதாய் இருந்தது என்பதினாலேயே ஆகும் என்பதை நாம் பார்த்தோம்; மேலும் ஆயக்காரர்கள் இவ்விதம் சமுதயாத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்களாகவும், மிகவும் பக்தியுள்ள ஜனங்களிடமிருந்து துண்டிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றபடியால், இவர்கள் "பாவிகள்" என்று அழைக்கப்படுகின்ற பக்தியற்ற ஜனங்களிடமே தங்களுடைய பெரும்பான்மையான சம்பாஷணைகளையும், உறவுகளையும் வைத்துக் கொள்ளும்படிக்குரிய நிர்ப்பந்தமான நிலையில் காணப்படுகின்றனர். "பாவிகள்" என்ற வார்த்தையை முன்னிட்டு, இப்படி அழைக்கப்படுபவர்கள் பொல்லாங்குச் செய்கைக்காரர்கள் என்றும், பயங்கரமானவர்கள் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது; மாறாக பரிசேயர்கள் சொல்லிக்கொள்ளும் விதமாக பரிசுத்தம் உடையவர்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணாதவர்களும், பரிசுத்தமாய் இருப்பதற்கு முயற்சிக்காதவர்களுமே இந்தப் "பாவிகள்" ஆவர்; அதாவது தெய்வீக நியாயப்பிரமாணத்தை அப்படியே கைக்கொள்ளுகின்றோம் என்று தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணாதவர்களே, இந்த "பாவிகள்" ஆவர்; அதாவது இந்தப் "பாவிகள்" என்பவர்கள், பாத்திரத்தின் வெளிப்புறத்தை முற்றிலும் சுத்தமாக வைத்திருக்கின்றோம் என்று அறிக்கைப் பண்ணாதவர்கள் ஆவார்கள் என்ற போதிலும் அநேக தருணங்களில், பூரணமான பரிசுத்தத்துடன் இருக்கின்றோம் என்று அறிக்கையிடுகின்ற பரிசேயருடைய இருதயங்களைக் காட்டிலும் இந்தப் பாவிகள் எனப்படுபவர்களின் உள்புறம் சுத்தமானதாகவே அல்லது அதிகம் சுத்தமானதாகவே காணப்படுகின்றது. இதைக்குறித்து நமது கர்த்தரே பல தருணங்களில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே நமது கர்த்தர், ஆயக்காரர்கள் மற்றும் பாவிகளுடைய நண்பர்கள் என்று நாம் வசனங்களில் வாசிக்கும்போது, கர்த்தர் ரவுடிகளுடன் அல்லது அவருடைய நாட்களில் காணப்பட்ட ஒழுக்க விஷயத்தில் குஷ்டரோகிகளாக இருப்பவர்களுடன் தோழமை வைத்து இருந்தார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக அக்காலக் கட்டத்தில் யூதர்களில் ஒரு வகுப்பார், பரிசுத்தமான ஜனங்கள் (பரிசேயர்) என்று அழைக்கப்படுவதும், மற்றொரு வகுப்பார் தங்களை முழுமையாய்ப் பரிசுத்தமுள்ளவர்கள் என்று அறிக்கைப் பண்ணாததினால் பாவிகள் என்று அழைக்கப்படுவதும் வழக்கத்தில் இருந்தது என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

மத்தேயு தனது நண்பர்களையும், தனது கூட்டாளிகளையும் கர்த்தரிடமும், அவருடைய போதனைகளிடமும் அறிமுகப்படுத்துவதற்கென எடுத்துக்கொண்ட பிரயாசம், பாராட்டப்பட வேண்டியதாகும். இன்னுமாக இக்கிரியைகள், கர்த்தருடைய மந்தைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும், என்ன என்ன செய்ய வேண்டும் என்பதற்கான நல்ல மாதிரியாகவும் அமைகின்றது. ஒவ்வொருவனும் தன்னுடைய செல்வாக்கு எவ்விடத்தில் அதிகமாய்க் காணப்படுகின்றதோ, அவ்விடத்தில் அதைச் செலுத்துவதற்கு நாட வேண்டும்; அதாவது நமக்கு அறிமுகமானவர்கள் மத்தியிலும், நாம் அறிமுகமாய்க் காணப்படுபவர்கள் மத்தியிலும், நம்முடைய கடந்த கால

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள தீவிரமான மாற்றத்தை எளிதில் உணரவும், புரிந்துக்கொள்ளக் கூடியவர்கள் மத்தியிலும் நாம் நமது செல்வாக்கைப் பயன்படுத்த நாட வேண்டும். இங்குக் காணப்படும் மற்றுமொரு பாடம் என்னவெனில், சத்தியத்தைப் பிரகடனப்படுத்துவதற்காக, விருந்தோம்பல் பண்பைக் கருவியாகப் பயன்படுத்துவதாகும்; அதாவது யார் தங்களைக் கர்த்தருக்கென்று அர்ப்பணித்துள்ளார்களோ, அவர்களுடைய இல்லங்களும் கூட அர்ப்பணிக்கப்பட்ட இல்லங்களாகக் காணப்பட வேண்டும், மேலும் அது ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது முதன்மை நோக்கமாகவும் இருக்க வேண்டும். இன்னுமாக நம்முடைய நண்பர்களும் கூடக் கர்த்தரால் போதிக்கப்படத்தக்கதாகவும், அவர்களைக் கர்த்தரிடத்தில் இழுக்கத்தக்கதாகவும், நம் அர்ப்பணிக்கப்பட்ட இல்லங்களின் மூலம் உண்டாகும் செல்வாக்குக் காணப்பட வேண்டும். ஆனால் பெரும்பாலும் இல்லங்கள் அர்ப்பணிக்கப்படுகின்ற விஷயங்கள், கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட தவறப்படுகின்றது; மேலும் இல்லத்திற்குள் எதிர்ப்புகள் அளிக்கும் நபர்களின் செல்வாக்குள் மேலோங்க அனுமதிக்கப்படுவதின் காரணமாக, அந்த அர்ப்பணிக்கப்பட்ட நபர்களின் இல்லங்களில் கர்த்தரும் சரி, கர்த்தருடைய ஜனங்களும் சரி வரவேற்கப்படாமலும், கர்த்தருடைய நோக்கங்களுக்காக இவர்களுடைய இல்லங்கள் பயன்படுத்தப்படாமலும் இருக்கின்றன. இப்படிப்பட்ட இல்லமும், இல்லத்தாரும் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தை இழந்து வருகின்றனர்; மேலும் இப்படிப்பட்ட நிலையில் காணப்படும் இல்லத்தின் தலைவர், தான் ஜெயங்கொள்ளுகிறேனா அல்லது இல்லையா என்று நிதானித்துக்கொள்ள வேண்டும்; அல்லது தான் எதிர்ப்பின் செல்வாக்குகளினால் மேற்கொள்ளப்படுகின்றேனோ என்று நிதானித்துக்கொள்ள வேண்டும். "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு" மாத்திரமே பரிசு வாக்களிக்கப்பட்டுள்ளது.

கர்த்தர் தைரியமுள்ள ஜனங்களையே விரும்புகின்றார், அதாவது தம் மீது முழுமையான விசுவாசமும், தம் மீதும், தம்முடைவர்கள் மீதும் அன்பும் கொண்டு, மேலும் இதன் காரணமாக நீதியான விஷயங்களின் பொருட்டு எதிர்ப்பாய் உள்ள செல்வாக்குகளை ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருப்பவர்களையே கர்த்தர் விரும்புகின்றார். ஒருவேளை மத்தேயு, கர்த்தரிடம் பின்வரும் காரியங்களைக் கூறியிருப்பாரானால், நாம் மத்தேயு குறித்து என்னவெல்லாம் எண்ணியிருப்போம்: "ஆண்டவரே என்னுடைய வீட்டில் ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணி, அவ்விருந்தில் என்னுடைய நண்பர்களில் சிலரை வரவேற்று, உம்மை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களும் சத்தியத்தின் தாக்கம் அடைவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க விரும்புகின்றேன்; ஆனால் இவைகளைச் செய்வதற்கு என்னுடைய சொந்த வீட்டிலேயே எனக்கு (இப்பொழுது) உரிமை இல்லை; நான் இப்படி விருந்து பண்ணினால், என்னுடைய மனைவி ஒரு நிமிடம் கூடப் பொறுத்துக்கொள்ள மாட்டாள்; ஏற்கெனவே மிகுந்த பணவருமானம் தரும் என்னுடைய தொழிலை நான் விடப்போகிறதினால் என்னுடைய பிள்ளைகள் மிகவும் கோபமடைந்தவர்களாகவும், முன்பிருந்த அந்தஸ்தில் அல்லது தாராளமாய்ச் செலவுகள் செய்யும் நிலையில் அவர்கள் என்னுடைய இந்த முடிவின் காரணமாக இனி இருக்க முடியாது என அச்சம் அடைந்தவர்களாகவும் இருக்க, உம்மைக் கனப்படுத்தும் வண்ணமாக நான் இல்லத்தில் விருந்து ஆயத்தம் பண்ணப்போகின்றேன் என்று நான் சொல்லிவிட்டாலே, அவர்கள் மிகுந்த இடஞ்சல்களை ஏற்படுத்திவிடுவார்கள்; இன்னுமாக என் பிள்ளைகள் மிகவும் ஒழுக்கமற்றவர்களாயும், பெற்றோருக்குரிய மரியாதையை எனக்கு தராதவர்களாயும் இருப்பதினால், நான் விருந்து ஆயத்தம் பண்ணினால் தொந்தரவு பண்ணுகிறவர்களாகவும் இருப்பார்கள்."

இப்படி மத்தேயு கூறியிருந்திருப்பாரானால், இவர் அப்போஸ்தலன் ஆகுவதற்கோ, அல்லது அப்போஸ்தலர் பவுல் ஏற்படுத்தின நிபந்தனைகளுக்கு ஏற்ப சபையில் மூப்பர் (அ) உதவியாளன் ஸ்தானத்திற்குக் கூட மிகவும் பாத்திரமற்ற நபர் என்றே நாம் கருதியிருப்போம் (1 தீமோத்தேயு 3:4-5). மேலும் இவர் சபையில் எந்த ஒரு பொறுப்புள்ள ஸ்தானத்திற்கும் தகுதியற்றவர் என்றே நாம் எண்ணியிருப்போம்; இன்னுமாக இவர் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அவசியமான பண்புகளில் மிகவும் குறைவுடன் காணப்படுகின்றார் என்றும், இவர் தனது பண்புகளைச் சீர்த்திருத்திக்கொள்ளவில்லை என்றால் இவர் பரிசை இழந்து போவதற்கான மிகுந்த அபாயத்தில் இருக்கின்றார் என்றும் நாம் எண்ணியிருந்திருப்போம். ஆனால் மத்தேயுவின் விஷயம் முற்றிலும் மாறுபட்டதாகவும், அவர் தைரியமுள்ள பாத்திரமாகவும் காணப்படுகின்றார். ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு ஏதுவான பண்புகள் இவரிடத்தில் இல்லையெனில், இவரிடம், "எனக்கு பின் சென்று வா" என்று நமது கர்த்தர் கூறுவார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நமது கர்த்தர் இயேசு இரக்கமுள்ளவராகவும், மென்மையானவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தாலும் கூட அவர் ஒருபோதும் குணலட்சணங்களில் குறைப்பாடு உடையவராகவோ அல்லது கோழையாகவோ (தைரியமற்றவராகவோ) இருந்ததில்லை.

இன்னுமாக, மத்தேயுவின் மனைவியும், குடும்பத்தினரும் விருந்து ஆயத்தம் பண்ணுவதற்கு மறுப்புத் தெரிவித்திருப்பார்களானால், இவரது மனைவியையும், குடும்பத்தாரையும் குறித்து நாம் என்ன எண்ணியிருந்திருப்போம்? பரிசுத்தவான்கள் ஆகுவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு இல்லை என்றும், மனைவியானவள் புருஷனுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற மனைவிக்குரிய முதல் அம்சத்தையே இவரது மனைவி கற்றுக்கொள்ளவில்லை என்றும் அவள் உதவியாக இருப்பதற்குப் பதிலாக மத்தேயுவுக்கு தடையாக இருந்தாள் என்றும் புரிந்துக்கொண்டிருப்போம். நல்லபடி இவர்களெல்லாரும் இருந்திருப்பார்களானால் கர்த்தர் அவ்வில்லத்திற்குள் வந்தபோது, அவரோடு கூட ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் கடந்து வந்திருக்கும் என நாம் நம்புகின்றோம்.

## "விருந்தில் ஆவிக்குரிய உணவு"

இவ்விருந்து குறித்த பல்வேறு பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, விருந்தில் பங்குக்கொண்டவர்களைத் தவிர, இன்னும் அநேக திரளான ஜனங்களும் மத்தேயுவின் வீட்டில் கூடி வந்தது தெரிகின்றது. இன்னும் இச்சம்பவம் தொடர்பான விஷயங்களை வைத்துப் பார்க்கும்போது, இவ்விருந்தானது, பரிசேயர்கள் வழக்கமாக உபவாசம் பண்ணிக்கொண்டு வந்த நாட்களில், ஒருநாளில் நிகழ்ந்தது என்றும் தோன்றுகின்றது. இந்த விஷயங்கள் இரண்டு கேள்விகளுக்கு நேராக வழிநடத்திற்று. அவை பின்வருமாறு:

(1) பரிசுத்தம் இல்லாத இப்படிப்பட்ட ஜனங்களுடன் ஏன் உங்கள் போதகர் பழகுகின்றார்? என்பதே முதல் கேள்வியாகும். நமது கர்த்தரும் அவருடைய அப்போஸ்தலர்களும், தேவனுக்கு முழுமையாய், அர்ப்பணிப்புள்ள ஓர் ஜீவியத்தை ஜீவிக்கின்றார்கள் என்று பரிசேயர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். நமது கர்த்தர், ஆயக்காரர்களுடனும், பாவிகளுடன் கூட இருந்து புசிக்கும் காரியமானது, அவர்களையும் சரிசமமாகக் கருதுவதற்கு ஒப்பாக இருக்கும் என்பதினால், நமது கர்த்தர் அவர்களுடன் சேர்ந்துப் புசிக்கக்கூடாது என்பதே பிரச்சனையாய் இருந்தது தவிர அவர்களுக்குக் கர்த்தர் போதிப்பதில் பரிசேயர்கள் எந்த விதமான எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இவர்களுடைய இக்கேள்விக்குப் பதில் கூறும் வண்ணமாகவே நமது கர்த்தர், "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை" என்று கூறினார் (லூக்கா 5:31 திருவிவிலியம்); அதாவது வைத்தியன் தான் சுகமளிக்க வேண்டும் என்று நாடுகிறவர்களிடத்திற்குச் செல்லவும், அவர்களோடு கலந்துப் பழகுவதற்கும், அதிலும் அவர்களைச் சுகப்படுத்துவதற்கு எவ்விதங்களில் எல்லாம் பழகுவது அனுகூலமாய் இருக்குமோ, அவ்விதங்களில் எல்லாம் பழகவும் உரிமை கொண்டிருக்கின்றார் என்ற அர்த்தத்தில் கூறினார். கர்த்தருடைய இவ்வார்த்தைகளானது, பரிசேயர்கள் நோயுற்றவர்கள் அல்ல என்பதினால், அவர்களுக்குக் கர்த்தருடைய ஊழியம் அவசியம் இல்லை என்ற அர்த்தத்தில் காணப்படவில்லை என்றாலும், அவர்கள் பாவ நோயுற்றிருந்தாலும், அவர் அளிக்கும் நல்ல மருந்தாகிய உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளும்படியான மனநிலையில், அவர்கள் காணப்படவில்லை என்ற உண்மையை அடக்கியுள்ளதாகவுமே காணப்படுகின்றது. இதே கருத்துதான், "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்ற வார்த்தைகளில் நமது கர்த்தர் கூறியுள்ளார் (லூக்கா 5:32). யார் ஒருவன் தன்னை நீதிமான் என்று எண்ணிக்கொள்கின்றானோ, அவனுக்கு மனம் திரும்புவதற்கான அழைப்பு அப்பாற்பட்டதாய்க் காணப்படும். ஒருவன் தான் நீதிமான் அல்ல என்றும், தான் பூரணன் அல்ல என்றுமுள்ள, முதல் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்; ஆகவேதான் தங்களை நீதிமான்கள் அல்ல என்று ஒப்புக்கொண்டவர்களிடத்திலும் மற்றும் மற்றவர்களைக் காட்டிலும் சத்தியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நல்ல நிலம் போன்ற இருதயம் உடையவர்களிடத்திலுமே நமது கர்த்தர் பிரதானமாய்ச் சென்றார். இதே கருத்தை நமது கர்த்தர், பரிசேயன் மற்றும் ஆயக்காரனுடைய ஜெபம் தொடர்பான தம்முடைய உவமையில் தெரிவித்துள்ளார்; அதாவது ஆயக்காரன் தான் பூரணமற்றவன் என்று ஒப்புக்கொண்டு, இரக்கத்திற்காக வேண்டினபடியால், தேவனுடைய பார்வையில், பரிசேயனைக் காட்டிலும், ஆயக்காரனே தயவு பெறுவதற்கு ஏற்ற நிலையில் காணப்படுகின்றான் என்று கர்த்தர் நமக்கு உறுதி அளிக்கின்றார்.

"பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்" (மத்தேயு 9:13). இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் ஓசியா 6:6-ஆம் வசனத்திலிருந்துதான் கோடிட்டுக் காட்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை. பலிகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் தொடர்பான விஷயங்களிலும் மற்றும் புதினா, சோம்பு, சீரகம் முதலியவைகளில் பத்தில் ஒரு பங்குச் செலுத்தும்

விஷயங்களிலும், பரிசேயர்கள் கவனமாய் அனுசரித்தக் காரியங்களானது, தங்கள் பரிசுத்தத்திற்கான சான்றுகள் எனப் பெருமைப் பாராட்டும் விஷயத்தைத் தேவன், இரக்கத்தை அங்கீகரிப்பது போன்று, அங்கீகரிப்பதில்லை எனும் காரியத்தையே மேற்கூறிய வசனத்திலிருந்து பரிசேயர்கள் கற்க வேண்டியிருந்தது. பரிசேயர்கள் தங்களோடு கூடக் காணப்படும் உடன் யூதர்கள் மீது இரக்கம் கொண்டிருந்திருக்க வேண்டும், அதாவது பாவத்திலிருந்து அவர்களைத் தூக்கி, கர்த்தருக்கு அருகாமையிலும், நீதியின் செல்வாக்கினுடைய அருகாமையிலும் கொண்டு வருவதில் மகிழ்ச்சிக் கொள்ளத்தக்கதான இரக்கத்தின் உணர்வைப் பரிசேயர்கள் பெற்றிருந்திருக்க வேண்டும். தேவனுடைய பார்வையில் மிகவும் பிரியமானதும், தேவனுடைய இரக்கத்தைத் தாங்கள் பெற்றுக்கொள்வதற்குத் தங்களை ஆயத்தப்படுத்துகிறதுமான இரக்கத்தின் சிந்தையை இந்தப் பரிசேயர்கள் பெற்றுக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, மற்றவர்களை இழிவாய் வெறுப்பதற்கும், தங்களைக் குறித்தே பெருமையாய்ப் பேசுவதற்கும் ஏதுவான அன்பற்ற உணர்வுகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர்; அதாவது தெய்வீக இரக்கத்தினால் ஆசீர்வதிக்கப்படுவதற்கென ஆயத்தமற்றதாய்க் காணப்படும் இருதய நிலையில், அதாவது கர்த்தர் மிகவும் கண்டிக்கும் சுய திருப்தியுள்ள மனதையும், இருதயத்தையும் உடைய நிலையில் பரிசேயர்கள் காணப்பட்டார்கள்.

## "உபவாசமும், விருந்தும் - நிழலும், நிஜமும்"

(2) இரண்டாவது கேள்வி:- "வாரத்திற்கு இருமுறை உபவாசத்தை" பரிசேயர்களாகிய நாங்கள் அனுசரிக்கையில் மற்றும் யோவான் ஸ்நானனுடைய போதனைகளைப் பின்பற்றுகிறவர்களும் உபவாசம் பண்ணுகையில், உங்கள் ஆண்டவரும், அவரோடு கூட உள்ள அனைவரும் விருந்துண்டு மகிழ்வது ஏன்?

இப்படி நீங்கள் நடந்துகொள்ளும் காரியமானது நீங்களும், உங்களுடைய ஆண்டவரும், நாங்கள் பக்தியாய் இருப்பது போன்று இல்லை என்பதைக் காண்பிக்கின்றது அல்லவா? (லூக்கா 18:12).

இக்கேள்விக்கான நமது கர்த்தருடைய பதிலை நாம் புரிந்துக்கொள்வதற்கு நன்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

(a) தம்முடைய பின்னடியார்கள் இத்தகைய ஆச்சரியமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது, அவர்கள் கவலையுடனும், துக்கம் கொண்டாடிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது என்றார்; அதாவது மணவாளன் தாமே அவர்களோடு கூடக் காணப்பட்டு, அவர்களுடைய இருதயங்களை மகிழ்ச்சியூட்டிக் கொண்டிருக்கும் போதும், அவர்களுக்குப் புத்துணர்வு கொடுத்து, அவர்களைப் பலப்படுத்திக் கொண்டிருக்கும் போதும், அவர்களிடத்தில் வந்து கொண்டிருக்கிறதுமான தெய்வீகத் தயவை அவர்கள் புரிந்துக்கொள்வதற்காக அவர்களுக்குக் கேட்கும் செவிகளைக் கொடுத்து அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறந்து கொண்டிருக்கும் போதும் அவர்கள் கவலையுடனும், துக்கம் கொண்டாடிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது என்றார். இப்படிப்பட்ட காலம், உபவாசம் பண்ணுவதற்கும், துக்கம் கொண்டாடுவதற்குமான காலமாயிராது. ஆனால் மணவாளன் தூரதேசத்திற்குப் போன பிற்பாடு, மிகுந்த வேதனையும்/கவலையும், திகைப்பும், குழப்பமும் ஏற்படும்போது, உபவாசம் இருப்பது சரியாக இருக்கும். சுவிசேஷ யுகம் முழுவதிலும் கர்த்தருடைய ஜனங்கள் இருளின் வேளைகளிலும், எதிர்ப்புகள் நிறைந்த வேளைகளிலும், உபவாசம் மூலம் தங்கள் மாம்சத்தைத் தாழ்த்தி, கர்த்தரிடத்தில் மிகவும் நெருங்க நாடுவது அவசியமாய் இருந்ததை உணர்ந்துள்ளார்கள் எனும் காரியம் உண்மையாகவே இருந்துள்ளது.

ஆனால் உபவாசம் என்பது சுயத்தை வெறுக்கும் தன்மைக்கு அடையாளமாயும் காணப்படுகின்றது. ஆண்டவர், ஜனங்கள் மத்தியில் காணப்பட்டது வரையிலும், அதாவது திரளான ஜனக்கூட்டங்கள் மத்தியில் அவர் கனத்துக்குரியவராய் இருந்தது வரையிலும், அவருடைய பின்னடியார்களில் ஒருவராக இருப்பதற்குக் கொஞ்சமே சுயத்தை வெறுக்க அவர்களுக்கு வேண்டியிருந்தது; அநேக கோணங்களில் பார்க்கும் போது, அத்தருணத்தில் இயேசுவைப் பின்பற்றுகிறதற்கு அழைக்கப்பட்ட காரியமானது சீஷர்களுக்குக் கனத்துக்குரியதாய் இருந்தது; அவருடைய பின்னடியார் ஆகுவதற்கெனச் சில பூமிக்குரிய நன்மைகளைத் தியாகம் செய்வது கனத்துக்குரியதாய் இருந்தது; மேலும், பூமிக்குரிய நன்மைகளைத் தியாகம் செய்யும் இவ்வகையான சுயத்தை வெறுத்தல் அல்லது உபவாசங்கள், உண்மையில் சந்தோஷத்தின் விருந்தாகவே சீஷர்களுக்கு இருந்தது; ஆனால் பிற்பாடு சோதனைகள் வந்த போதோ, ஆண்டவர் அவருடைய

சத்துருக்களின் உபத்திரவங்களுக்குள் காணப்பட்ட போதோ, அவருடைய நோக்கங்கள் பிரபலமற்றதாய் ஆன போதோ, திரளான ஜனக்கூட்டங்கள் அவர் மரிக்க வேண்டும் என்று கூக்குரலிட்ட போதோ, அப்போதுதான் அவரை அறிக்கைப்பண்ணுவதற்கும், அவரைப் பின்பற்றுவதற்கும் சுயத்தை வெறுத்தலாகிய நிஜமான உபவாசத்தின் தேவை ஏற்பட்டது; இது சுவிசேஷ யுகம் முழுவதும் பொருந்தும்; சுயத்தை வெறுத்தல் இல்லாமல், உபவாசம் இல்லாமல், மாம்சத்தின் விருப்பங்கள் மற்றும் ஆசைகளை மறுக்காமல் ஒருவராலும், ஆட்டுக்குட்டியானவருடைய பின்னடியார்கள் ஆக முடியாது; மாம்சத்தில் சிலவற்றைத் **தியாகம் செய்கிறவர்களாகவும்**, இன்னும் மற்றவைகளைப் புதிய சிருஷ்டியின் நலன் கருதியும், அதன் ஆவிக்குரிய வளர்ச்சியை முன்னிட்டும் **தள்ளிவைத்து, சாகடிக்கிறவர்களாகவும்** கர்த்தருடைய பின்னடியார்கள் காணப்பட வேண்டும்.

கர்த்தருடைய இரண்டாம் வந்திருத்தலாகிய இப்பொழுது, அந்த விருந்து ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது என்று நாம் கூறுகின்றோம், அதாவது ஆவிக்குரிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, மிக அதிகமாகவும், மிகப் பெரியதாகவும் ஆசீர்வாதங்கள் இப்பொழுது இருக்கிறபடியாலும், மேலும் ஆவிக்குரிய உணவும் அதிகமாயும், சுவையுள்ளதாயும் இருக்கிறபடியால், கர்த்தருடைய விருந்து சாலைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் புசிக்கும்படிக்கு அவர் அமர்த்தியுள்ளவர்களுக்கும் மற்றும் பழையதும், புதியதும், புத்துணர்வு அளிக்கக்கூடியதுமானவைகளை அவர் அளித்துள்ளவர்களுக்கும், உபவாசத்தின் நாட்கள் முடிந்து, விருந்தும், "கர்த்தருடைய சந்தோஷங்களும்" ஆரம்பித்து விட்டது என்று நமக்குத் தோன்றுகின்றது. ஆனால் அதற்கென்று மாம்சத்தில் சோதனைகளும், கஷ்டங்களும், பரீட்சைகளும் இல்லாமல் இல்லை, மாறாக புதிய சிருஷ்டியாகிய அவருடைய ஜனங்கள் ஏற்றகால சத்தியங்களினால் மிகவும் புத்துணர்வும், மகிழ்ச்சியும், உற்சாகமும் அடைந்துள்ளப்படியால், அவர்கள் அடைந்துள்ள ஆவிக்குரிய புத்துணர்வுகளுக்கு முன்பு, இப்பொழுது இந்தச் சோதனைகளும், பரீட்சைகளும், கஷ்டங்களும் லேசானவைகள் என்று எண்ண முடிகின்றது: இந்த ஆவிக்குரிய புத்துணர்வுகள் சீக்கிரத்தில் அனுபவிக்கப் போகின்ற மாபெரும் கலியாண விருந்திற்குரிய மாதிரி அனுபவங்களே ஆகும்.

(b) நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் இருக்கும் காரியமானது, துக்கத்திற்கு மருந்தாக இருப்பதாகிய மற்றொரு உண்மையைக் குறித்தும் பரிசேயர்கள் புரிந்துக்கொள்ளவில்லை; அதாவது நமது கர்த்தருடைய வேலை, யோவான் ஸ்நானனுடைய வேலையைப் போன்றதல்ல; அதாவது யூத அமைப்பையும், ஒழுங்கையும் சீர்த்திருத்தம் பண்ணும் வேலை அல்ல என்று பரிசேயர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. சீர்த்திருத்தலாகிய இப்பணியை யோவானால் செய்ய முடியும் அளவுக்கு, அதைச் செய்யும்படிக்கு யோவான் நியமிக்கப்பட்டிருந்தார்; ஆனால் அவர் தோற்றுப் போயும் விட்டார், சிரைச்சேதமும் பண்ணப்பட்டு விட்டார்; ஆனால் இயேசு செய்த பணியோ முற்றிலும் வேறுபட்ட பணியாகும்; இயேசு தமது உபதேசங்களின் மூலம் யூத மார்க்கத்தைச் சீர்த்திருத்தம் பண்ணுவதற்கும், ஓட்டுப் போட்டுச் சீராக்கவும் முயற்சிக்கவில்லை; மாறாக முற்றிலும் ஒரு புதிய அமைப்பை நிறுவிகொண்டிருந்தார், ஒரு சபையைச் சேர்த்துக் கொண்டிருந்தார், அதாவது ஒரு யூத சபையையோ அல்லது சீர்த்திருத்தப்பட்ட யூத சபையையோ உண்டுபண்ணாமல், ஒரு கிறிஸ்தவ சபையையே நிறுவிக்கொண்டிருந்தார். இதன் காரணமாகவே பரிசேயர்களுடைய வழிமுறைகளில் உள்ள நல்லவைகளையும், தகாதவைகளையும் குறித்து அவர்களோடு கலந்து ஆலோசித்து, அவ்வழிமுறைகளைச் சரிச் செய்துகொள்வதற்குக் கர்த்தர் முயற்சிக்கவில்லை. ஏற்கெனவே பழையதாய்ப் போன பழைய வஸ்திரத்தை விலக்கி வைக்கப்படுவற்கு ஏதுவாக, அதைக் கர்த்தர் அப்படியே விட்டுவிட்டார். நியாயப்பிரமாணம் கோரும் சாத்தியமற்ற நீதியை அல்ல, மாறாக பாவங்களுக்கான கர்த்தருடைய பலியினால் உண்டாகும் புண்ணியத்தின் அடிப்படையிலும், விசுவாசத்தின் மூலமும் தரிப்பிக்கப்படும் நீதியாகிய புதிய வஸ்திரத்தைக் கர்த்தர் அருளுவார்.

ஒருவேளை இயேசு, கிறிஸ்தவ மார்க்கத்தையும், யூத மார்க்கத்தையும் சேர்க்க முற்பட்டிருப்பாரானால், அக்காரியமானது இரு மார்க்கத்திற்கும் மிகுந்த பாதகமான நாசத்தை ஏற்படுத்தியிருக்கும், ஏனெனில் இரண்டு மார்க்கங்களும் முற்றிலும் எதிர்மாறானவைகள் ஆகும்; யூத மார்க்கமானது முழுமையான நீதியின் செயல்பாடுகளை எதிர்ப்பார்க்கின்றது, ஆனால் இது பாவிகளுக்குச் சாத்தியமற்ற ஒன்றாக உள்ளது. கிறிஸ்தவ மார்க்கமானது, ஒருவன் தன்னைத்தான் நீதிமானாக்கிக்கொள்வது சாத்தியமற்ற காரியம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதை எதிர்ப்பார்க்கின்றது, மேலும் மன்னிப்பு மற்றும் இரக்கம் பெற்றுக்கொள்வதற்கான ஒரே நிபந்தனையாக விசுவாசத்தை எதிர்ப்பார்க்கின்றது.

(c) இதே காரியமானது அக்காலத்தின் வழக்கத்தின்படி பயன்படுத்தப்பட்ட துருத்தியின் விஷயத்திலும் விவரித்துக் காட்டப்படுகின்றது. இக்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற குப்பிகள் (bottle) மற்றும் பீப்பாய்கள் (barrel) அன்று பயன்படுத்தப்படாமல், மிருகங்களின் தோலினால் உண்டுபண்ணப்பட்ட துருத்திகள் பயன்படுத்தப்பட்டது. இன்றும் கூட உலகத்தில் பல்வேறு பகுதிகளில் இப்படியான தோல் துருத்திகளே பயன்படுத்தப்பட்டு, குப்பிகள் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட துருத்திகளில் புதிய திராட்சரசங்கள் ஊற்றப்படுகின்றன; மேலும் ரசம் புளித்துப் பொங்குவதன் காரணமாக தோல் கிட்டத்தட்ட வெடித்துச் சிதறும் அளவுக்கு விரிந்துவிடுகின்றன; மேலும் ஒருமுறை பயன்படுத்தப்பட்ட துருத்திகள் மீண்டும் புதிய ரசம் ஊற்றுவதற்கென ஒருபோதும் பயன்படுத்த முடியாது, காரணம் துருத்தியின் சுருங்கி விரியும் தன்மை (elasticity) போய்விடுகிறபடியால், மீண்டும் அதில் புதிய ரசம் ஊற்றினால் அது புளிக்கும் போது, அது வெடித்து விடுகின்றது. யூத மார்க்கத்திற்குரிய நாட்கள் முடிவிற்கு வந்து விட்டது; அதன் நோக்கம் நிறைவேறிவிட்டது; பரிசேயர்கள் மற்றும் இயேசு பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் எதிர்ப்பார்த்த வண்ணம், தெய்வீக நோக்கமானது, யூதமார்க்கத்தைச் சீர்த்திருத்தம் பண்வதற்கு நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதான காரியங்களையே நமது கர்த்தர் இங்குப் போதிக்கின்றார். யூத மார்க்கம் ஒய்ந்துபோக வேண்டியிருந்தது; மேலும் யூதமார்க்கத்திற்குள் புதிய உபதேசங்களை, அதாவது சுவிசேஷம் எனும் புதிய ரசத்தைப் ஊற்றுவது என்பது, இந்தப் புதிய உபதேசங்களின் ஆவியானது யூத தேசத்தை/ஜாதியாரைக் கலக்கி நாசமடைய செய்வதற்கு வழிநடத்துகிறதாய் இருப்பதோடல்லாமல் அந்த ஜாதியாரின் நாசத்தின் மத்தியில், இப்புதிய உபதேசங்களும் மறைந்து, மாய்ந்து போய்விடும். ஆகவேதான் ஒரு புதிய இஸ்ரயேல், அதாவது பரிசுத்த ஜாதி, விசேஷித்த ஜனங்கள் எழுப்பப்பட வேண்டும் என்பதும், இவர்கள் அப்போது வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தையும், புதிய கிருபையையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் தெய்வீகத் திட்டமாய்க் காணப்பட்டது.

சுவிசேஷ யுகத்தின் முடிவு பகுதியாகிய இப்போதுங்கூட, ஆண்டவர் இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கும் புதிய ரசத்தை, கிறிஸ்தவ மத பிரிவுகள் எனும் பழைய துருத்திக்குள் ஊற்றுவது கூடாத காரியமாகவே உள்ளது. இந்தக் கிறிஸ்தவ பிரிவினர்களும் கூட ஏற்றக்கால சத்தியங்கள் எனத் தங்களுக்கு முன் வைக்கப்படும் சத்தியங்களை ஏற்றுக்கொள்வது என்பது, தங்கள் அமைப்புகளுக்குள் மிகுந்த நாசத்தைக்கொண்டு வந்துவிடும் என்று உணர்ந்து கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். தேவன் யூத யுக முடிவில் இந்த முழு அமைப்பிலிருந்து கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களை வெளியே வரும்படி அழைக்கின்றார்; அதாவது சமீபத்தில் உள்ள புதிய யுகத்திற்கான ரசத்தை (உபதேசத்தை) தம்முடைய கரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும்படிக்கு இவர்களை வெளியே அழைக்கின்றார். பழைய அமைப்புகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் அவர்களுக்கென்று நியமிக்கப்பட்ட நோக்கத்தைப் பாதிச் சரியாகவும், பாதித் தவறாகவும் நிறைவேற்றி முடித்துவிட்டனர். தெய்வீகத் திட்டம் தொடர்புடைய இவர்களுடைய (பழைய அமைப்புகள்/யூத அமைப்பு) பணிகள் முடிவடைந்துவிட்டன. "விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே" (வெளிப்படுத்தல் 18:23). ஆனால் இந்த அழைப்பை இவர்கள் கேட்பதற்கு, இவர்களைப் பாபிலோன் அனுமதிப்பதில்லை. தற்கால சத்தியத்தின் தொனி, அவளுடைய சுவர்களுக்கு அப்பாலேயே/வெளியே தொனித்துக் கொண்டிருக்கின்றது. சத்தியத்தைக் கேட்பதற்கான செவியை உடையவர்கள் எவர்களோ, மேலும் தற்கால சத்தியத்தினால் நிரப்பப்படுவதற்கு விருப்பம் உடையவர்கள் எவர்களோ, அவர்கள் ஆசீர்வாதத்தினால் நிரப்பப்படுவதற்கு முன்பும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைச் சுமந்துச் செல்லும் பாத்திரமாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பும், முதலாவது சபைப்பிரிவுகளாகிய அமைப்புகளிலிருந்து வெளியே வந்தாக வேண்டும், "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்." "விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே" (வெளிப்படுத்தல் 18:4, 23).

**ஆமென்!**

---

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது அருமை மீட்பருடைய மரணத்தினை அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கின்றதான நமது வழக்கத்தின்படி, இவ்வருடமும் முன்பில்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையாரால் ஆசரிக்கப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

"பஸ்கா பண்டிகையானது" ஆரம்பிப்பதற்கு முந்தின நாளில் நமது கர்த்தர் பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜமெனச் சிலுவையில் அறையப்பட்டார் (1 கொரிந்தியர் 5:7); மற்றும் "அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே" தம்முடைய மாம்சத்தை அடையாளப்படுத்தும் அப்பத்தையும், தமது இரத்தத்தை அடையாளப்படுத்தும் "திராட்சப்பழரசத்தையும்" (fruit of the vine) எடுத்து, இவைகளைக் கொண்டு ஒரு புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தினார்; இந்தப் புதிய நினைவுகூருதலை ஆசரிப்பதன் வாயிலாக — ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் விசுவாசத்தினால் "இரத்தம் தெளிக்கப்படுவதன்" வாயிலாகவும், விசுவாசத்தினால் அவரது மாம்சமானது "மெய்யானப் போஜனமென" புசிக்கப்படுவதன் வாயிலாகவும், அவர்களுக்கு உண்டான மாபெரும் நிஜமான கடந்துபோகுதலை ஆசரிக்கின்றவர்களாய் இருப்பார்கள். (யோவான் 6:55)

நம்முடைய ஆசரிப்பிற்கும், யூதர்களுடைய ஆசரிப்பிற்கும் சம்பந்தமில்லை; அவர்கள் "பண்டிகை வாரத்தினையே" ஆசரிக்கின்றனர்; நாமோ அவர்களது பண்டிகைக்கு முந்தின நாளில், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்றதாக தேவ ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தினை நாம் ஆசரிக்கின்றோம். நாம் ஆசரிக்கின்றதான நாளானது, முழுச் சுவிசேஷ யுகத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; இதில் தலையாகிய கிறிஸ்து இயேசுவின் சரீரமானது — முழுச்சபையானது அவரோடுகூட மனமுவந்து பலிச் செய்கிறவர்களாகப் பாடுபட வேண்டும். பண்டிகை வாரமானது, சீக்கிரத்தில் ஆயிரவருட யுகத்தில் வரவிருக்கின்ற மகிமையையும், சந்தோஷத்தையும் நமக்கு அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இந்த நினைவுகூருதல் குறித்ததான நமது கர்த்தருடைய வார்த்தைகளானது: "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதேயாகும். மேலும் அப்போஸ்தலனும்கூட "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று கூறுகின்றார்; (1 கொரிந்தியர் 11:26) அதாவது அவர் தம்முடைய இராஜ்யத்தில் வல்லமையுடன் வந்து, உங்களை தம்மண்டை சேர்த்துக்கொள்ளுவது வரையிலுமாகும். அநேக கிறிஸ்தவர்கள், இந்த நினைவுகூருதலை பல்வேறு வேளைகளில், அதாவது வாரந்தோறுமாக, மாதந்தோறுமாக, காலாண்டுதோறுமாக, இன்னும் பல வேளைகளில் ஆசரிப்பதற்கான சுயாதீனம் காணப்படுவதாக அனுமானித்துள்ளனர்; ஆனால் ஆதித் திருச்சபையினருக்கு இசைவாகப் பார்க்கையில், நாம் மற்ற நிகழ்வுகளையெல்லாம் ஆசரிப்பதுபோலவே, இதையும், அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பதையே நமது கர்த்தர் தெரிவிக்கின்றார் என்று நாம் புரிந்துகொள்கின்றோம்; அதாவது "நீங்கள் 4-ஆம் ஜூலை அன்று ஆசரிக்கும்போதெல்லாம், இந்தத் தேசத்தினுடைய சுதந்திரத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று நாம் சொல்வதுபோலாகும்.

கடைசி இராப்போஜனத்தில் நமது கர்த்தருடைய மரணத்தினை, ஞாயிறுதோறும் நண்பகலில் ஆசரிப்பவர்கள், வாரந்தோறும் கர்த்தருடைய நாளன்று, ஆதித் திருச்சபையாரால் ஆசரிக்கப்பட்ட "அன்பின் விருந்துகளை" (அ) "அப்பம் பிட்குதலை," நினைவுகூருதல் இராப்போஜனம் என்று தவறாய்ப் புரிந்திருக்கின்றனர்; இந்த "அப்பம் பிட்குதலானது" கர்த்தருடைய நாள்தோறும், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாகவும், அப்பம் பிட்குதல் மூலம் அவர்களது புரிந்துகொள்ளுதலின்கண்களை அவர் திறந்ததற்குமான நினைவுகூருதலாகவும் ஆதித் திருச்சபையாரால் ஆசரிக்கப்பட்டு வந்தது. சரியாய்ப் புரிந்துகொள்ளப்பட்டால் சந்தோஷகரமான வாரந்தோறுமுள்ள இந்த விருந்துகளில் எதுவும், நமது போதகருடைய துயரம் மற்றும் மரணத்திற்குமான வருடாந்தர நினைவுகூருதலுக்கு, ஒத்திருப்பதில்லை மற்றும் இந்த விருந்துகளில் "பாத்திரமும்" குறிப்பிடப்படுவதில்லை.

நமக்கான நமது மீட்பருடைய மரணத்திற்கும், அவரது பலியினுடைய புண்ணியத்தின் வாயிலாக மரணத்திலிருந்து, ஜீவனிடத்திற்கான நமது கடந்துபோகுதலுக்கும், "அவரோடுகூட மரிப்பதற்கும்" - அவரது "பாத்திரத்தில்" பானம் பண்ணுவதற்குமான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலான, நினைவுகூருதல் இராப்போஜனத்தினை அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், அலிகெனியிலுள்ள (Alegheny, Pa) பைபிள் ஹவுஸ் சேப்பலில் (Bible House Chapel) ஆசரிப்பார்கள். எங்களோடு கூடிடுவதற்குச் சௌகரியமுள்ள, சத்தியத்திலுள்ள நண்பர்களை

அன்புடன் வரவேற்கின்றோம்; ஆனாலும் எங்கெல்லாம் உள்ளூர் கூடுகைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது எங்கெல்லாம் இப்படிக் கூடிடுவதற்கு வாய்ப்புள்ளதோ, அவைகள் தவிர்க்கப்பட வேண்டாம் என்று நாம் புத்திமதிக் கூறுகின்றோம். இது கர்த்தருடைய ஜனங்களுடைய இருதயங்களானது நெருக்கமாய்க் கூடிடுவதற்கான ஏற்றக்காலப்பகுதியாகக் காணப்படுகின்றது; இன்னுமாக இந்த ஒரு காலங்களானது, கர்த்தருடைய பின்னடியார்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்கின்ற யாவருக்கும் சோதனைக் காலங்களாகக் காணப்படுகின்றது; முற்காலத்து பேதுருவைப் போன்றவர்கள் வருடத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் விசேஷமாய்ப் புடைத்தெடுக்கப்படுகின்றனர்.

வருடத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் ஆதி சீஷர்களுக்கு நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டதான புத்திமதியானது, இன்னமும் விசேஷித்த விதத்தில் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது; அது "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்!" என்பதேயாகும். இதை உணர்ந்தவர்களாகப் பழைய அமைப்புகளாகிய உரோமன் கத்தோலிக்க மற்றும் எப்பிஸ்கோப்பல் சபையார் இன்னமும் நினைவுகூருதலுக்கு முன்பு உபவாச (அ) லெந்து காலங்களைப் பெற்றிருக்கின்றனர்; இப்படியான உபவாசக் காலங்களுக்குள் சம்பிரதாயமாக இல்லாமல், சரியான ஆவியுடன் பிரவேசித்தல் என்பது, சரீர ரீதியிலும், ஆவிக்குரிய ரீதியிலும் அநேகருக்கு மிக உதவிகரமான வழக்கமாய் இருந்துள்ளது என்று நாம் நம்புகின்றோம்.

கர்த்தருடைய ஜனங்களால் ஆரம்பத்தில் ஆசரிக்கப்பட்டு வந்ததான நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப்பதிலாக கணக்கீடு முறைமையின் சிறுமாற்றங்கள் காரணமாக "புனித வெள்ளி" என்ற ஒன்று கொண்டுவரப்பட்டது. கர்த்தருடைய இராப்போஜனத்தை மிகவும் அடிக்கடி புராட்டஸ்டண்டினர்கள் ஆசரிப்பதானது, உண்மையிலும், கொள்கையிலும் நமது கர்த்தருக்கு அருவருப்பானதாய்க் காணப்படுகின்றதான, போப்மார்க்கத்தினுடைய "பூசைபலி" எனும் ஆசரிப்பினுடைய அடிப்டையிலேயே ஆகும்; இந்தப் பூசைபலியானது, கல்வாரியில் நடைப்பெற்றதான பலி முழுக்கப் போதுமானதாய் இருக்கின்றது என்பதை மறுக்கின்றதாய் இருக்கின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள், பாவத்திற்கான மாபெரும் பலியினுடைய நினைவுகூருதலாக இதைச் செய்வார்கள் என்றும், இதை வெளித்தோற்றமான நினைவுகூருதலாக மாத்திரமல்லாமல், அதேவேளையில் விசுவாசத்தினால், தங்கள் இருதயங்களில் கர்த்தரைப் புசிக்கிறவர்களாகவும், "பாத்திரத்தில்" பங்கெடுக்கையில், அவரிடத்தில் மரணம்வரையிலான தங்கள் அர்ப்பணிப்பை மீண்டுமாக உறுதிப்படுத்துபவர்களாகவும் இருப்பார்கள் என்றும் நாம் நம்புகின்றோம். மேலும் விவரங்களுக்கு R5191-ஐ பார்க்கவும்.

இதைச் செய்யும்படிக்கு அவரது அருமையான நாமத்தில் கூடிடுகின்றதான இரண்டு (அ) மூன்று பேர்கள் எங்கெல்லாம் கூடுகின்றார்களோ — இப்படியான ஒவ்வொரு சிறுகூட்டத்தாருடைய நியமிக்கப்பட்ட காரியதரிசியிடமிருந்து உடனடியாக அறிக்கைகளை, அஞ்சல் அட்டைகள் வாயிலாகப் பெற்றுக்கொள்வதில் நாம் மகிழ்ச்சியாயிருப்போம். தொழில் காரியங்களினால் அந்த விலையேறப்பெற்ற தருணத்தினுடைய இருதய "ஐக்கியமானது" குலைக்கப்படாதபடிக்கு, ஒழுங்குகளை முன்கூட்டியே செய்துவிடுங்கள். ஜெபத்திலும், ஐக்கியத்திலும் மாத்திரமாக நாம் அனைவரும் ஒன்றாய்க் காணப்படுவது மாத்திரமல்லாமல், விடியலின் துதி பாடல்களிலுள்ள 1, 23 மற்றும் 122-ஆம் துதிப் பாடல்களையும், முடிந்த அளவுக்குப் பழகிக்கொள்வோமாக.

*****

R 2606

# "செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை"
## மத்தேயு 25:31-46.

"அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்."—மத்தேயு 25:46.

வேதவாக்கியங்களானது, நித்தியமான சித்திரவதை எனும் தேவதூஷணமான உபதேசத்தை எங்கும் போதிக்கவில்லை என்றாலும், உவமையில் வரும் "வெள்ளாடு" வகுப்பாரை அடையாளப்படுத்தும் பொல்லாங்கான வகுப்பாருக்கான நித்தியமான தண்டனை குறித்து வேதவாக்கியங்களானது அழுத்தம் கொடுத்துப் போதிக்கவே செய்கின்றன. இந்த உவமையையும், இறுதியில் வழங்கப்படும் தண்டனை தீர்ப்பையும் ஆராய்ந்துப்பார்க்கலாம்.

"ஒழுக்கம் என்பதே பரலோகத்தின் முதல் பிரமாணம்" என்று கூறப்படும் காரியம் உண்மையே; எனினும், சிலர் மாத்திரமே இது எந்தளவுக்கு உண்மையாய் இருக்கின்றது என்பதை உண்மையாய் உணர்ந்திருக்கின்றனர். யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினைப் பார்க்கையில் விளங்கும் ஒழுங்கினை வேறெங்கும் பார்க்க முடியாது.

தேவன் தம்முடைய ஒவ்வொரு வேலையின் பாகத்திற்கும் திட்டவட்டமான காலங்களையும், வேளைகளையும் கொண்டிருக்கின்றார்; மேலும், இந்த ஒவ்வொரு காலங்களுடைய முடிவிலும் வேலை நிறைவடைவதும், பின்வரும் யுகத்தில் புதிய வேலையை ஆரம்பிப்பதற்கான ஆயத்தமாக, பயனற்றவைகளை அகற்றுவதும் நடைபெற்றது. இவ்வாறாக யூத யுகத்தினுடைய முடிவில் ஒழுங்குக் கடைப்பிடிக்கப்பட்டது; அதாவது ஓர் அறுவடையும், பதரிலிருந்து கோதுமை வகுப்பார் முற்றிலுமாகப் பிரிக்கப்படுவதும், பதர் வகுப்பார் தேவனுடைய கிருபையினின்று முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுவதும் நடைபெற்றது. யூத யுகத்தில் பாத்திரமானவர்களெனத் தீர்க்கப்பட்டுள்ள சிலரை வைத்து, ஒரு புதிய யுகமாகிய, சுவிசேஷ யுகம் ஆரம்பமானது. இப்பொழுது, நாம் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அறுவடையாகிய நிறைவடைதலின் காலப்பகுதியில் காணப்படுகின்றோம்; அதாவது, இந்த யுகத்தின் போது வளர்ந்திட்ட "கோதுமைகளையும்," "களைகளையும்" பிரிக்கும் காலத்தின் மத்தியில் நாம் காணப்படுகின்றோம். நமது கர்த்தர் இயேசுவைத் தலையாகக்கொண்டிருந்த, இந்தக் கோதுமை வகுப்பாரை வைத்து, ஒரு புதிய யுகம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது; இந்தப் புதிய யுகத்தில் இந்தக் "கோதுமைகள்," ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும் ஆளுகை செய்வார்கள்; ஆனால், களை வகுப்பாரோ இந்தக் கிருபைக்குப் பாத்திரமற்றவர்களென நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

யூத யுகத்திலும், நிறைவடையப் போகிற சுவிசேஷ யுகத்திலும் கைக்கொள்ளப்படும் இதே ஒழுங்கானது, இந்தச் சுவிசேஷ யுகத்தைப் பின்தொடரும் யுகத்திலும் கைக்கொள்ளப்படும் என்று நமது கர்த்தர், நாம் ஆராய்வதற்கு எடுத்துக்கொண்ட இந்த உவமையின் மூலமாக நமக்குத் தெரிவிக்கின்றார்.

யூத யுகத்தினுடைய அறுவடையானது, பதிரிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுக்கப்படுவதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது; இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அறுவடையானது, களைகளிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுக்கப்படுவதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது; ஆயிர வருட யுகத்தின் அறுவடையானது, வெள்ளாடுகளிலிருந்து, செம்மறியாடுகள் பிரித்தெடுக்கப்படுவதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் பற்றின உவமையானது, ஆயிர வருட யுகம் தொடர்புடையதாய் இருக்கின்றது என்பது, "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரிப்பார்" என்ற வசனங்களுடைய வார்த்தைகள் மூலம் தெளிவாய்ச் சுட்டிக்காட்டப்படுகின்றதாய் இருக்கின்றது (மத்தேயு 25:31, 32). தற்கால யுகத்தில் பரீட்சையில் காணப்படுகின்றவர்களுடைய (சபை) ஒவ்வொரு கிரியையும், நியமிக்கப்பட்ட காலத்தில்

நீதிபதியினுடைய இறுதித் தீர்ப்பைத் தீர்மானிக்கத்தக்கதாக, அவர்களுடைய குணலட்சணங்களின் விஷயத்தில் பங்கு வகிக்கின்றதுபோலவே, இனிவரும் யுகத்திலுள்ள மனுக்குலத்தின் விஷயத்திலும் காணப்படும். தற்கால யுகத்தில், யுகம் முடிவதற்கு முன்னதாகவே சபையிலுள்ள தனிப்பட்ட அங்கத்தினர் அநேகரின் பரீட்சைகள் முடிவுபெற்று, அவர்கள் விஷயத்தில் தீர்மானமும் எடுக்கப்பட்டுக் காணப்படுவது போலவே (2 தீமோத்தேயு 4:7, 8), ஆயிர வருட அரசாட்சியிலும், யுகம் முடிவதற்கு முன்னதாகவே சில தனிப்பட்டவர்களுடைய விஷயத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில் காணப்படும் (ஏசாயா 65:20). எனினும் ஒவ்வொரு யுகத்திலும், யுகத்தினுடைய முடிவு காலப்பகுதியில் ஒரு பொதுப்படையான பிரித்தெடுத்தலும் நடைபெறும்.

மகா உபத்திரவக் காலத்திற்குப் பின்பு, ஆயிர வருட யுகத்தின் விடியலில், உயிரோடிருப்பவர்களாகிய ஜாதியார்கள் கிறிஸ்துவுக்கு முன்பாகக் கூட்டிச்சேர்க்கபடுவார்கள்; மற்றும், மரித்தவர்களுக்கான நியமிக்கப்பட்ட நேரத்திலும், வரிசையிலும், மரித்த ஜனங்கள் அனைவரும் கிறிஸ்துவினுடைய நியாயசனத்திற்கு முன்பாக, உடனடியான தீர்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இல்லாமல், மாறாக மிகவும் சாதகமான சூழ்நிலையின் கீழ் நியாயமான, பாரபட்சமற்ற தனிப்பட்ட பரீட்சைகளை/ஒத்திகைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அழைக்கப்படுவார்கள்; இந்தப் பரீட்சையின்/ஒத்திகையின் விளைவாக நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்கள் (அ) பாத்திரவான்கள் இல்லை எனும் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் (எசேக்கியேல் 18:2-4, 19, 20).

இந்த உவமையின் சம்பவமானது, மகா உபத்திரவக் காலம் முடிந்து, ஜாதிகள் கீழ்ப்படுத்தப்பட்டு, சாத்தான் கட்டப்பட்டு, கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் அதிகாரம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடே நடைபெறுகின்றதாய் இருக்கின்றது (வெளிப்படுத்தல் 20:1,2). இச்சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்னதாக (ஜெயங்கொள்ளுகிற சபையாகிய) கிறிஸ்துவின் மணவாட்டி, அவருடைய ஆவிக்குரிய வல்லமையாகிய சிங்காசனத்தில், அவரோடு கூட உட்கார்ந்திருப்பார்கள், மற்றும் கோபாக்கினையின் மகா நாளினுடைய நியாயத்தீர்ப்புகளை வழங்குவதிலும் பங்குக்கொள்ளுகிறவர்களுமாய் இருப்பார்கள். அப்போது மனுஷகுமாரனும், அவருடைய மகிமையடைந்த சபையும் வெளிப்படுத்தப்பட்டு, மனுஷர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களினால் பார்க்கப்படுவார்கள்; மற்றும் இவர்கள், "தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" (மத்தேயு 13:43).

இதுவே யோவான் பார்த்த புதிய எருசலேமாகும் . . . "(அரசாங்கத்திற்கு அடையாளமாக) பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்" (வெளிப்படுத்தல் 21:2). மகா உபத்திரவத்தின்போது, இந்தப் இறங்கி வந்துகொண்டிருக்கும், ஆனால் (உபத்திரவக் காலம்) அது முடிவு பெறுவதற்கு முன்பாக, புதிய எருசலேம் பூமியையே வந்து தொட்டிருக்கும். புதிய எருசலேம் (தேவனுடைய வல்லமையினாலே அல்லாமல், மற்றபடி) கைகளினால் பெயர்க்கப்பட முடியாத மலையிலிருந்து பெயர்க்கப்பட்டு வரும் கல்லாக இருந்து, பெரிய பர்வதமாகி, முழுப் பூமியையும் நிரப்புகின்றதாய் இருக்கும்; மற்றும் இது வரும்போது, இருளின் அதிபதியினுடைய பொல்லாத இராஜ்யங்களைச் சுக்குநூறாக உடைத்துப்போட்டு வருகின்றதாய் இருக்கும் (தானியேல் 2:34, 35).

இதுவே, "தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்படும் மகிமையான நகரமாகும் (அரசாங்கமாகும்). மேலும் ஆயிர வருட அரசாட்சியினுடைய விடியலில், ஜாதிகள் இந்நகரத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள் (வெளிப்படுத்தல் 21:24). "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்" (வெளிப்படுத்தல் 21:27). "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; . . . இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளிப்படுத்தல் 22:17). இப்படியாக உலகத்திற்கான மாபெரும் நியாயத்தீர்ப்பின் நாளாகிய, (ஆயிர வருடங்களான) தகுதிக்காண் பருவக்காலம் ஆரம்பிக்கும்.

இப்படியாக ஜாதியார் குணமாக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்படும் அந்தக் கிருபையான காலத்திலும் கூட, அதாவது சாத்தான் கட்டப்பட்டு, தீமைகள் அடக்கி வைக்கப்பட்டு, மனுக்குலமானது மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்திலும் கூட, அதாவது கர்த்தரைப்பற்றின அறிவினால் பூமி நிரம்பிக் காணப்பட்டிருக்கும்போது கூட, இரண்டு வகுப்பார்கள் காணப்படுவார்கள்; இந்த இரண்டு வகுப்பாரை, நமது கர்த்தர்

வெள்ளாடு மற்றும் செம்மறியாடு என ஒப்பிட்டுக் கூறுகின்றார். இந்த இரண்டு வகுப்பாரை, கர்த்தர் பிரிப்பார் என்று கர்த்தர் நமக்குத் தெரிவித்துள்ளார். ஆயிர வருடத்தின்போது சாந்தமுடையவர்களாகவும், போதிக்கப்படத் தக்கவர்களாகவும், வழிநடத்தப்படுவதற்கு விருப்பமுள்ளவர்களாகவும் காணப்படும் செம்மறியாடு வகுப்பார், நியாயாதிபதியின் அங்கீகரிப்பிற்கும், தயவிற்கும் அடையாளமான அவருடைய வலது கரத்தினிடத்திற்குக் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். ஆனால், இப்படியாகச் செம்மறியாடுகள் நல்ல ஆயனால் ஏற்பாடு பண்ணப்பட்ட சத்தியம் எனும் பசுமையான புற்களில் மேயும்போது, குப்பைகளை மேய்பவர்களாகவும், சுயசித்தம் உடையவர்களாகவும், இணங்காதவர்களாகவும், மனுஷர் மத்தியில் அங்கீகரிப்பையும் மற்றும் முதன்மை வகுத்தலையும் நாடுபவர்களாகவும், பாறைகள்மேல் ஏறிச்செல்லுகிறவர்களாகவும் இருக்கும் வெள்ளாடு வகுப்பார், நியாயாதிபதியினுடைய தயவிற்கு எதிரான, இடது கரத்தில் கூட்டிச் சேர்க்கப்படுபவர்களாய்க் காணப்படுவார்கள்; அதாவது அவரது தயவற்றவர்களாகவும், அவருடைய கண்டனத்திற்குரியவர்களாகவும் இந்த வெள்ளாடு வகுப்பார் காணப்படுவார்கள்.

இப்படியாக வெள்ளாடுகளையும், செம்மறியாடுகளையும் பிரிக்கும் வேலையானது நிறைவடைவதற்கு, ஆயிர வருட யுகமும் தேவைப்படுகிறதாய் இருக்கும். அந்த யுகத்தில் ஒவ்வொருவரும், தேவன் மற்றும் அவரது சித்தம் பற்றின அறிவில் படிப்படியாக வரும்போது, அந்தப் பொன்னான யுகத்தினுடைய வாய்ப்புகளை ஒவ்வொருவரும் நன்றாய்ப் பயன்படுத்துவதற்கு (அ) தவறாய்ப் பயன்படுத்துவதற்கு ஏற்ப, அவருடைய தயவின் வலது கரத்தில் (அ) அவருடைய தயவின்மையின்/வெறுப்பின் இடது கரத்தில் தங்கள் ஸ்தானத்தைக் கொள்பவர்களாய்க் காணப்படுவார்கள். யுகம் முடியும்போது, உவமையில் சொல்லப்பட்டதுபோன்று, மனுக்குலத்தின் உலகத்திலுள்ள அனைவரும், இந்த இரண்டு வகுப்பிலும் இணைந்துக் கொண்டவர்களாக/சேர்ந்துக் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள்.

அந்த யுகத்தின் முடிவு என்பது, உலகத்திற்கான நியாயத்தீர்ப்பினுடைய (அ) பரீட்சையினுடைய முடிவாக இருக்கும். இந்தச், "செம்மறியாடு" வகுப்பாருக்கான பலன் அவர்களுக்கு வழங்கப்படும்; ஏனெனில், இவர்கள் பரீட்சையின் மற்றும் நெறிப்படுத்துதலின் காலத்தில், தேவனுடைய நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாக அப்போஸ்தலர் பவுலினால் விவரிக்கப்பட்டுள்ள அன்பு எனும் அருமையான குணலட்சணத்தை வளர்த்து, வெளிப்படுத்தினவர்களாய் இருந்தனர். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோமர் 13:10). இந்த அன்பை இவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய அவசியமான நேரங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்; மேலும் இவர்கள் ஒருவருக்கொருவர் செய்வதை, கர்த்தர் தமக்கே செய்ததாக எண்ணுவார்; ஏனெனில், இவர்கள் மனித சுபாவத்திலும், அவர் தெய்வீகச் சுபாவத்திலும் காணப்பட்டாலுங்கூட, இவர்களனைவரையும் தேவனுடைய பிள்ளைகளாகவும், தம்முடைய சகோதரர்களாகவும் எண்ணுகின்றார்.

"வெள்ளாடு" வகுப்பார் கண்டிக்கப்படுவதற்கான காரணம், இந்த அன்பின் ஆவியில் இவர்கள் குறைவுபட்டிருப்பதினாலாகும். செம்மறியாடுகளைப்போலவே சாதகமான சூழ்நிலைகளில் காணப்பட்ட இந்த வெள்ளாடு வகுப்பார், கர்த்தருடைய நெறிப்படுத்துதலுக்கான வனைந்தெடுக்கும் செல்வாக்கைத் துணிகரமாய் எதிர்க்கின்றவர்களாயிருந்து, தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகின்றவர்களாய்க் காணப்படுவார்கள். தேவனுடைய தயவுகள், இவர்களை உண்மையான மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்துவதில்லை; மாறாக, இவர்கள் பார்வோனைப் போன்று அவருடைய தயவைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு, தீமையைச் செய்கிறவர்களாய்க் காணப்படுவார்கள். தேவனுடையதும், இராஜ்யத்தினுடையதுமான பிரமாணமாகிய அன்பு எனும் அம்சத்தை வளர்த்திக்கொள்ளாத வெள்ளாடு வகுப்பார், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரர்களாய்க் கருதப்பட்டு, அழிக்கப்படுவார்கள். தேவனுக்கொத்த சாயலாகிய அன்பை வளர்த்துக்கொண்டவர்களாகவும், அந்த அன்பைத் தங்களுடைய குணலட்சணங்களில் வெளிப்படுத்துபவர்களாகவும் காணப்படும் "செம்மறியாடு" வகுப்பார், யுகா யுகங்களில், கீழ்த்தளத்தில் பூமியை ஆளுபவர்களாக ஆக்கப்படுவார்கள்.

ஆயிர வருட யுகத்தினுடைய முடிவின்போது, இறுதியாக மனிதர்களுடைய காரியங்களை ஒழுங்குப்படுத்தும் வண்ணமாக, கிறிஸ்து, "செம்மறியாடு" வகுப்பாரை நோக்கி, "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று குறிப்பிடுகின்றார் (மத்தேயு 25:34) .

இங்குக் குறிப்பிடப்படும், ஆயிர வருட யுகத்தின் கடைசியில் வரும் "செம்மறியாடுகள்," சுவிசேஷ யுகத்தினுடைய, சுவிசேஷச் சபையினுடைய செம்மறியாடுகளாய் இராமல், மாறாக நமது கர்த்தரினால் யோவான் 10:16-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "வேறே ஆடுகளாய்" இருக்கின்றது என்பது தெளிவாய்த் தெரிகின்றது. உலகம் உண்டானது முதல், தெய்வீகத் திட்டத்தில் (ஆயிர வருட யுகததின் முடிவில் வரும் இந்த) செம்மறியாடுகளுக்கான இராஜ்யம் என்பது, சுவிசேஷ யுக சபைக்கென ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யமல்ல. ஆயிர வருட யுகத்தினுடைய ஆரம்பப் பகுதியிலேயே சபை, தன்னுடைய இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வாள்; ஆனால் இங்குக் (மத்தேயு 25:34) குறிப்பிடப்படும் இராஜ்யமானது, ஆயிர வருட யுகத்தினுடைய இந்தச் செம்மறியாடுகளுக்கு உரியதாகும். இவர்களுக்கான இராஜ்யம் என்பது, ஆதாமினால் ஆதியில் பெற்றிருக்கப்பட்டதும், பாவத்தினால் இழந்துப் போகப்பட்டதும், மனிதன் பூரணத்திற்கு நேராகக்கொண்டு வரப்படும்போதும், ஏற்றுக்கொள்வதற்கும், அனுபவிப்பதற்கும், பாத்திரமாகும்போதும் மீண்டுமாக திரும்பக்கொடுக்கப் பெற்றதுமான, பூமியின் மீதான ஆளுகையாய் இருக்கின்றது. இந்த ஓர் ஆளுகை என்பது ஓர் இனத்தார், இன்னொரு இனத்தார் மீது பண்ணும் ஆளுகையாய் இராமல், மாறாக ஒரு கூட்டு ஆளுகையாயிருக்கும்; இந்த ஆளுகையில் ஒவ்வொரு மனிதனும் இராஜாவாக இருப்பான்; மற்றும் அனைவரும் அனைத்துப் பூமிக்குரிய நன்மைகளையும் அனுபவிக்கும் விஷயத்திலும், உரிமை கொண்டாடும் விஷயத்திலும், சரிசமமான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பெற்றிருப்பார்கள். அவர்கள் இராஜரிக உரிமையுடைய ஜனங்களாய் இருப்பார்கள்; பூரணமான நீதியை அடிப்படையாகக் கொண்டுள்ள மாபெரும், பிரம்மாண்டமான குடியரசாகக் காணப்படும்; அங்கு அனைத்து மனுஷர்களுக்குமான உரிமைக்கு முக்கியத்தும் கொடுக்கப்படும்; ஏனெனில், பொன்னான சட்டமானது ஒவ்வொருவரின் இருதங்களிலும் பொறிக்கப்பட்டிருக்கும்; மற்றும் ஒவ்வொரு மனுஷனும் தன்னைத்தான் நேசிப்பதுபோன்று, தன்னுடைய அயலானையும் அன்புகூருகின்றவனாய் இருப்பான். அனைவரின் ஆளுகையும், ஐசுவரியமான மற்றும் திரளான ஆசீர்வாதங்களைக்கொண்டிருக்கும் ஒட்டுமொத்த பூமியின் மீதே காணப்படும் (ஆதியாகமம் 1:28; சங்கீதம் 8:5-8). ஆயிர வருட யுகத்தின் முடிவில் பூரணமாக்கப்பட்ட, தகுதியாக்கப்பட்ட, மீட்கப்பட்ட சந்ததியாருக்கு வழங்கப்படும் உலகத்திற்கான இராஜ்யமானது, மற்றவர்களுக்கு வழங்கப்படும் இராஜ்யத்திலிருந்து, தெளிவாய் வேறுபடுத்தி காண்பிக்கப்படத்தக்கதாக, **"உலகம் உண்டானது முதல் ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யம்"** என்று கூறப்பட்டுள்ளது; பூமியானது பூரண மனிதனுக்கான நித்தியமான வீடாகவும், இராஜ்யமாகவும் இருக்கின்றது. ஆனால் கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட்டதும், அவருடைய சபையாகிய மணவாட்டி உடன் சுதந்தரத்துவம் அடையப் போகிறதுமான இராஜ்யமானது, ஓர் ஆவிக்குரிய இராஜ்யமாகும்; அது "தேவதூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், வல்லமைகளுக்கும் மேலானதாகும்," மற்றும் அந்த இராஜ்யத்திற்கு முடிவு இருப்பதில்லை; முடிவு பெறக்கூடிய கிறிஸ்துவினுடைய ஆயிர வருட அரசாட்சி என்பது, கிறிஸ்துவினுடைய வல்லமை மற்றும் ஆளுகைக்கான ஆரம்பமாக மாத்திரமே இருக்கின்றது (1 கொரிந்தியர் 15:25-28). முடிவில்லாத பரலோக, ஆவிக்குரிய இராஜ்யமானது, உலகம் உண்டாவதற்கு முன்னதாகவே ஆயத்தம் பண்ணப்பட்டதாக இருக்கின்றது; இதன் ஆரம்பமானது, "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாய் இருக்கிற" கிறிஸ்து இயேசுவில் காணப்படுகின்றது. இந்த இராஜ்யமானது முதற்பேறான கிறிஸ்து இயேசுவுக்காக நோக்கம் கொண்டு ஆயத்தம் பண்ணப்பட்டது; ஆனால் சபையாகிய அவருடைய மணவாட்டியும், உடன் சுதந்தரமுமானவளும், அவருக்குள்/கிறிஸ்துவுக்குள்ளாக உலக தோற்றத்திற்கு முன்னதாகவே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றாள் (எபேசியர் 1:4).

பூமியின் ஆளுகை (அ) இராஜ்யமானது, உலகம் உண்டானது முதல் மனுக்குலத்திற்காக ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யமாக இருக்கின்றது. மனிதன் ஆறாயிரம் ஆண்டுகளாக தீமையினுடைய ஆளுகையின் கீழ்ப் பாடுபடுவதும், துயரம் மற்றும் மரணத்தினுடைய விளைவுகளைக் கற்றுக்கொள்வதும், இதன் வாயிலாக தேவனுடைய அன்பின் பிரமாணத்தினுடைய நீதி, ஞானம் மற்றும் காருணியத்தை வேறுபடுத்திக் கண்டுகொள்வதும் நலமானதாகும். பின்னர் கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் மனிதனைச் சீரழிவிலிருந்தும், மரணத்திலிருந்தும் திரும்பக்கொண்டுவந்து, "உலகம் உண்டானது முதல் அவனுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை அவன் சுதந்தரித்துக் கொள்ளத்தக்கதாக," அவனைத் தகுதிப்படுத்துவதற்கு, ஏழாவது ஆயிர வருடக்காலம் அவசியப்படுகின்றது.

அனைவரும் இராஜாக்களாய் இருக்கப்போகின்ற அந்த (பூமிக்குரிய) இராஜ்யமானது, பிரம்மாண்டமான, உலகளாவிய குடியரசாகக் காணப்படும்; இப்பொழுது பாவத்தின் காரணமாகச் சாத்தியமற்றுக் காணப்படும் சமநிலையும், ஆசீர்வாதமான செல்வாக்கும், அப்போது ஒவ்வொரு

குடிமகனுடைய பரிபூரணத்தினால் காணப்படும். ஆயிர வருட காலத்திலுள்ள கிறிஸ்துவினுடைய இராஜ்யமோ, முற்றிலும் வேறுபட்டதாக, ஆசாரியர்களினால் செலுத்தப்படும் ஆட்சியாகக் காணப்படும்; இந்த ஆட்சியானது உலகத்தினுடைய சம்மதத்தையோ (அ) உடன்பாட்டையோ பொருட்படுத்தாமல், உலகத்தை (அதன் பூரணமற்ற நிலை காணப்படும்போதும், அனைத்தும் திருப்பக் கொடுக்கப்படும் காலங்களின் போதும்) ஆளுகை செய்யும் ஆட்சியாகக் காணப்படும்.

சுவிசேஷச் சபையினுடைய சகோதர சகோதரிகள் மாத்திரமே, கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாய் இருப்பதில்லை. அக்காலத்தில் பூரண நிலைக்குத் திரும்பி வருபவர்கள் அனைவரும் தேவனுடைய புத்திரர்களாக, அதாவது ஆதாம் தேவனுடைய குமாரனாக இருந்ததுபோன்று, மனித குமாரர்களாக அடையாளம் கண்டுக்கொள்ளப்படுவார்கள் (லூக்கா 3:38). தேவனுடைய குமாரர்கள் மனித தளத்திலோ, தேவ தூதர் தளத்திலோ (அ) தெய்வீகத் தளத்திலோ, எத்தளத்தில் காணப்பட்டாலும், அவர்கள் அனைவரும் சகோதரர்களேயாவார்கள். இங்கு நமது கர்த்தருடைய மனித சகோதரர் மீதான, அவருடைய அன்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சீக்கிரத்தில் தேவனுடைய தெய்வீகக் குமாரர்களாகவும், கிறிஸ்துவினுடைய சகோதரர்களாகவும் இருக்கப் போகிறவர்களுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்பு, இப்பொழுது உலகத்தாருக்கு இருப்பது போன்று, இனிவரும் யுகத்தில் இதே உலகத்தார்தான் மனித சகோதரர்களாகிய தங்களுக்குள், ஒருவருக்கொருவர் ஊழியம் புரிவதற்கான திரளான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள்.

மரித்த ஜாதிகள், மீண்டுமாக உயிருடன் கொண்டு வரப்படும்போது, உணவும், வஸ்திரமும், உறைவிடமும் அவர்களுக்கு அவசியமாய் இருக்கும். ஜனங்கள் தற்கால ஜீவியத்தில் எவ்வளவு திரளானவைகளைக் கொண்டிருந்தாலும், மரணமானது அனைவரையும் சரிசமமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அனைவரையும் என்பது சிறுபிள்ளையாயினும் சரி, முதிர்ச்சியடைந்த மனுஷனாயினும் சரி, கோடிஸ்வரனாயினும் சரி, ஏழையாயினும் சரி, கல்வியறிவுடையவனாயினும் சரி, கல்வி அறிவு இல்லாதவனாயினும் சரி, நாகரிகமானவனாயும், நாகரிகமற்றவனாயினும் சரி, எல்லாரையும் சரிசமமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அனைவரும் இரக்கம் காட்டுவதற்கான திரளான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள்; மற்றும் இப்படியாக அனைவரும், தேவனுடன் ஒத்துழைக்கும் துணை வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தைப் பெற்றுக் கொள்பவர்களாக இருப்பார்கள். இங்கு லாசருவின் சம்பவத்தின் உதாரணம், நமக்கு நினைவிற்கு வருகின்றது; இயேசு லாசருவை மரணத்திலிருந்து விழித்தெழுப்பப் பண்ணினார்; பின்னர் அவனைக் கட்டி வைத்திருந்த சீலைகளை அவிழ்ப்பதற்கும், அவனுக்கு வேறு வஸ்திரம் கொடுப்பதற்கும், அவனுக்குப் போஜனம் கொடுப்பதற்கும், கல்லறையைச் சுற்றிக் காணப்பட்ட அவனோடு கூடச் சந்தோஷமடைந்த நண்பர்கள், இந்த உதவிகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

இன்னுமாக இவர்கள், "வியாதியுள்ளவர்களாகவும், காவலிலடைக்கப்பட்டவர்களாகவும்" அதாவது படுக்கையில் (அ) பார்வையின் கீழ் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லறைக் குழி என்பதுதான், மில்லியன் கணக்கான மனுக்குலம் உணர்வற்ற நிலையில், காவல் வைக்கப்பட்டுள்ள மாபெரும் சிறைச்சாலையாக இருக்கின்றது; ஆனால் இவர்கள் கல்லறையிலிருந்து விடுவிக்கப்படும் போது, பூரணத்திற்குத் திரும்புதல் என்பது உடனடியாக நடக்கும் காரியமல்ல. இவர்கள் இன்னமும் பூரணமடையாதபடியால், இவர்கள் வியாதியுற்றவர்கள் என்று அழைக்கப்படுவது சரியே; இவர்கள் மரணத்தில் இல்லை, ஆனாலும் ஜீவனிலும் பூரணமடையவும் இல்லை; இப்படியாக இரண்டிற்கும் இடையே காணப்படும் நிலைமை என்பது, வியாதிப்பட்டிருக்கும் நிலை என்று கூறப்படுவது பொருத்தமானதேயாகும். இவர்கள் மனதளவிலும், சரீரத்திலும், ஒழுக்கத்திலும் பூரணமடைவது வரையிலும், இவர்கள் படுக்கையில் (அ) பார்வையின் கீழ்த் தொடர்ந்து காணப்படுபவர்களாய் இருப்பார்கள். அப்போது ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கும், அனுதாபங்கொள்வதற்கும், அறிவுரைக் கூறுவதற்கும், உற்சாகமூட்டுவதற்கும், திரளான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்பவர்களாக இருப்பார்கள்; மேலும் இப்படியாக உதவி புரிவதற்குத் தவறுவது என்பது, கர்த்தருடைய அன்பின் ஆவி குறைவுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

மனுக்குலம் முழுவதும் ஒட்டுமொத்தமாக மரணத்திலிருந்து எழுப்பப்படாமல், மாறாக ஆயிர வருடக் காலப்பகுதியில் படிப்படியாக எழுப்பப்படுவதினால், ஒவ்வொரு கூட்டத்தார் எழுந்து வரும்போது, இவர்களுக்கு முன்பு எழுந்து வந்த கூட்டத்தார் அடங்கிய உதவியாளர்களின் சேனை (உதவி புரிவதற்கென) காணப்படும். (கிறிஸ்துவின் சகோதரராகிய) மனுஷர்கள் ஒருவருக்கொருவர் அப்போது காண்பிக்கும் அன்பையும், இரக்கத்தையும், இராஜா தமக்கே செய்ததாகக் கருதிக்கொள்வார். எந்த மாபெரும் சாகசங்களும், அப்போது நீதிமான்களுக்கு அளிக்கப்படும்

கனங்களுக்காகவும், தயவுகளுக்காகவும் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை; இவர்கள் தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்கு இசைவாக வந்து, அந்த அன்பை தங்களுடைய கிரியைகளினால் நிரூபித்துக் காட்டுகிறவர்களாய் இருக்க மாத்திரமே வேண்டும். "அன்பு நியாயப்பிரமாணததினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது;" "தேவன் அன்பாகவே இருக்கின்றார்;" ஆகையால் மனிதன், மீண்டுமாகத் தேவனுடைய சாயலில் கொண்டு வரப்படும்போது, மனிதன் அன்பின் ஜீவனுள்ள உருவமாக இருப்பான்.

"உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" எனும்போது, தெய்வீக நியாயப்பிரமாணம் மற்றும் அதன் உயர்வான கொள்கைகளைச் சார்ந்திராத ஒரு தனிப்பட்ட விதமான ஆளுகையைக் குறிக்கிறதாக இல்லை; பூமியின் மீதான ஆளுகையை மனிதனுக்குத் தேவன் ஆதியில் கொடுத்திருந்திருந்தார்; ஆனால் மனிதன் இந்த மாபெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக தேவன் அவனை (இராஜ்யத்தில்) ஆயத்தம் பண்ணின பிற்பாடு, அந்த ஆளுகையை அவனுக்குத் திரும்பக்கொடுக்கத்தக்கதாக திட்டமிட்டிருந்த போதிலும், தம்முடைய உயர்வான பிரமாணங்களுடன் இசைவாகவே அல்லாமல் மற்றபடி, மனிதன் பூமியை ஆளுகைச் செய்வதற்குத் தேவன் நோக்கம் கொண்டுள்ளார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. "பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலும் செய்யப்படுவதாக" என்பதே அரசாங்கம் பண்ணுவதற்கான கொள்கையாக, என்றென்றும் காணப்பட வேண்டும். அப்போது மனுஷன், பரலோகத்தினுடைய பிரமாணத்திற்கு இசைவாக, தன்னுடைய பூமியை ஆளுகை செய்வான்; அதாவது "வலது பாரிசத்தில் நித்திய பேரின்பம்" கொண்டிருப்பவரும், ஜீவனைக் கொடுப்பவருமானவரின் சித்தத்தைச் செய்வதில் தொடர்ந்து மகிழ்ச்சிக்கொள்பவனாக இருப்பான். "உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு" (சங்கீதம் 16:11). ஓ! முழுமையான ஆசீர்வாதங்களை அள்ளி வழங்கும் அன்பான திட்டங்களை உடையவருக்குக் கனமும், மகிமையும் செலுத்துங்கள் என யார்தான் சொல்லாமல் இருப்பார்கள்?

இடது பக்கத்தில் நிற்பவர்களுக்கு, "சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டுப் போங்கள்" என்று கூறப்பட்ட வார்த்தைகளை நாம் இப்பொழுது ஆராயலாம்; இவர்கள் தெய்வீக அன்பினுடைய வனைந்தெடுக்கும் மற்றும் வடிவமைக்கும், ஆதிக்கங்களுக்கு இணங்காதவர்களாய்க் காணப்பட்டு, ஜீவனுக்கு தகுதியற்றப் பாத்திரங்களாகத் தீர்ப்பு வழங்கப்படுகின்றனர். சகோதரர்கள் பசியாய், தாகமாய் இருந்தபோது, வஸ்திரமில்லாமல் இருந்தபோது, வியாதிப்பட்டிருந்த போது, காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, அவர்களுடைய இந்தத் தேவைகளுக்கு, இடது பக்கத்தில் காணப்பட்டவர்கள் உதவிகள் புரிந்திடவில்லை; இவ்வாறாக இவர்கள் பரலோக இராஜ்யத்திற்குத் தாங்கள் இசைவாய் இல்லை என்று, தங்களை நிரூபித்து காண்பிக்கின்றவர்களாய் இருப்பார்கள்; ஏனெனில், "தீட்டுள்ளது ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை" (வெளிப்படுத்தல் 21:27). இந்த வகுப்பாருக்கான தீர்ப்பு என்பது . . . "சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே (இது அழிவிற்கான அடையாள வார்த்தை) போங்கள்" ஆகும். "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்" என்றும் நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 2:14).

"அந்தப்படி, இவர்கள் (வெள்ளாடுகள்) நித்திய (கிரேக்க வார்த்தை aionios - இதன் அர்த்தம் நித்திய காலமாகும்) ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ (செம்மறியாடுகள்) நித்திய (கிரேக்க வார்த்தை aionios - இதன் அர்த்தம் நித்திய காலமாகும்) ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்" (வசனம் 46). பலனைப் போன்று, தண்டனையும் நித்தியக் காலத்திற்கு உரியதாகும், அதாவது இரண்டுமே நித்திய காலத்திற்கும் உரியதாகும்.

**ஆமென்!**

---

# "நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமான போக்கு"

## லூக்கா 7:18-28

"எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்." - மாற்கு 7:37

இயேசு அநேகமான அற்புதங்களைச் செய்தவராகவும், அநேகரை சீஷராக உருவாக்கினவராகவும், அதிகளவிலான எதிர்ப்புகளைச் சந்திக்காத நிலையிலும் காணப்பட்டிருக்க, அவருடைய உறவினனாகிய யோவான் ஸ்நானனுடைய விஷயத்தில் சூழ்நிலைகள் முற்றிலும் வித்தியாசமாக/எதிர்மாறாக காணப்பட்டது. எனினும், இந்த எதிர்மாறான சூழ்நிலைகள் அனைத்தும், "அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்று யோவான்தாமே கூறின தீர்க்கத்தரிசனத்திற்கு இசைவாகவே நடந்தது (யோவான் 3:30). இயேசு வெற்றிகரமாக ஊழியம் புரிந்துக்கொண்டிருந்த இடத்திலிருந்து, சுமார் 120 மைல் தொலைவிலுள்ள சிறைச்சாலையில் யோவான் காணப்பட்டார். அக்காலவழக்கத்தின்படி, இருளான சிறைச்சாலை அறைக்குள் யோவான் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில், நமது கர்த்தர் தம்முடைய வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருப்பதும், யோவானின் சார்பாக எவ்விதமான கண்டன சத்தத்தை எழுப்பாமலிருப்பதும், மற்றும் யோவானுடைய விடுதலைக்காகக் கர்த்தர் தம்முடைய வல்லமையுள்ள சக்தியைச் செயல்படுத்தாமலிருப்பதும், யோவானுக்கு மிகவும் விநோதமாக இருந்தது. அதிலும் விசேஷமாக, மேசியாவின் பணி தொடர்பான யோவானுடைய எதிர்ப்பார்ப்பின் கண்ணோட்டத்தில், இயேசுவின் செயல்பாடுகள் அவருக்கு மிகவும் விநோதமாகக் காணப்பட்டது. மேசியா பூமியின் மாபெரும் அதிபதியாகவும், இராஜாவாகவும் இருப்பார் என்றிருந்த யூதர்களுடைய எதிர்ப்பார்ப்புப் போலவே யோவான் ஸ்நானனுடைய எதிர்ப்பார்ப்பும் இருந்தது.

யோவானுடைய மனதில் எத்தகைய சந்தேகங்கள் மற்றும் பயங்கள் எழும்பியிருக்குமென நம்மால் உணரமுடிகின்றது. அவர் பின்வருமாறு கூறியிருக்க வேண்டும், "அனைத்துமே ஏமாற்றுத்தனம்; இயேசுவும், நானும் எங்களையே ஏமாற்றியுள்ளோம்." யோவான் கடந்த காலங்களிலுள்ள தேவனுடைய வழிநடத்தல்கள் மீதுள்ள விசுவாசத்தையும், தற்காலம் மற்றும் எதிர்க்காலத்திற்குரியவைகள் மீதான நம்பிக்கையையும், விருப்பத்தையும்கூட இழந்திருக்க வேண்டும். யோவானுக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டாலும், அவருடைய விசுவாசம், கர்த்தரை ஊன்றி பிடிப்பதை விடவில்லை. இதன் காரணமாகவே விசாரிக்கும்படி யோவான், இயேசுவிடம் தன்னுடைய சீஷர்களை அனுப்பி வைக்கின்றார். இன்னுமாக, இவருடைய விசுவாசத்தின் உறுதி, இவருடைய விசாரிப்பின் தன்மையில் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. "அனைத்தும் வஞ்சனையா, நாம் இருவருமே வஞ்சிக்கப்பட்டுவிட்டோமா?" என்று யோவான் கேட்கவில்லை. மாறாக, இவருடைய கேள்வியானது, ஞானமானதாகவும், இதுவரையிலும் தேவன்தான் வழிநடத்தியுள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறதாகவும் இருந்தது. இன்னுமாக, தான் இயேசுவின் முன்னோடியாக இருந்ததுபோல, இயேசு பெரியவராக இருந்தும், இயேசுவைக் காட்டிலும், பெரியவராகவும், இனிமேல் வரப்போகிறவருமாய் இருக்கும் வேறொருவருக்கு இயேசு முன்னோடியா அல்லது இல்லையா என்பதே தீர்க்கத்தரிசியான யோவானின் மனதில் இருந்த சந்தேகமாகும். உண்மையைச் சொல்லப்போனால், மாம்சத்திலிருக்கும் இயேசு சகல பரிசுத்தமான தீர்க்கத்தரிசிகள் வாயிலாக உரைக்கப்பட்ட அனைத்தையும், மாபெரும் அற்புதமான காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றும் இரண்டாம் வருகையில் வரப்போகின்ற மாபெரும் மகிமையடைந்த கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறவராகவும் முன்னோடியாகவும் இருக்கின்றார் (அப்போஸ்தலர் 3:21-23).

யோவான் ஸ்நானனுக்கு நமது கர்த்தர் நேரடியான பதிலைக் கொடுக்கவில்லை என்பதை நாம் கவனிக்கலாம். அதாவது, வேறொருவர் வரமாட்டார் என்றும், தாம் செய்வதைக்காட்டிலும் இன்னும் பெரிய காரியங்களுண்டு என்றும் கர்த்தர் கூறவில்லை. மாறாக, தீர்க்கத்தரிசிகள் மூலம் முன்னுரைக்கப்பட்ட வேலைகளையே தாம் செய்துகொண்டிருப்பதாகவும், அக்காலக்கட்டத்தில் அவைகள் செய்யப்படுவதற்குத் தகுந்தவைகள் என்பதாகவும் யோவானுக்கு தெளிவாகப் புரியவைத்தார். யோவானுடைய சீஷர்கள், இயேசுவுடன் கூட காணப்பட்டபோது, அவர்களுடைய பார்வைக்கு முன்னதாக அநேக அற்புதங்கள் செய்யப்பட்டன. மேலும், தம்முடைய கரங்களினால் செய்யப்பட்ட வேலைகளைக்குறித்துச் சாட்சியளிக்கும்படிக்கு யோவானுடைய சீஷர்களை, இயேசு யோவானிடத்திற்கு அனுப்பி வைத்தார். இன்னுமாக, இயேசு மற்றும் அவருடைய வேலைகள் மற்றும்

அவருடைய வார்த்தைகள் விஷயத்தில் இடறலடைவதற்கு அநேக வாய்ப்புகள் இருக்கின்றது என்பதையும், ஏசாயா 8:14-ஆம் வசனத்தில் தீர்க்கத்தரிசி அறிவித்திருக்கின்ற பிரகாரம், அநேகர் இடறலடைவார்கள் என்பதையும், யோவானிடத்தில் கூறும்படி, யோவானுடைய சீஷர்களை இயேசு திருப்பி அனுப்பிவைத்தார். இன்னுமாக பூமியைவிட, வானம் உயரமாயிருப்பது போல் மனித புரிந்துக்கொள்ளுதலுக்கு மிகவும் அப்பாற்பட்டதாகக் காணப்படும் தெய்வீக திட்டத்தின் ஆழம், அகலம், நீளம் மற்றும் உயரத்தைச் சரிவர புரிந்துக்கொள்ளாததின் காரணமாக, கர்த்தருடைய வேலைகள் மற்றும் அதன் நிறைவேறுதல் தொடர்பான எதிர்ப்பார்ப்புகளில் பல ஏமாற்றங்களடைந்த நிலையிலும், கர்த்தரிடத்திலான தங்களுடைய விசுவாசத்தில் தொடர்ந்து காணப்பட்டு, இடறல் அடையாதவர்கள் மீது, விசேஷமான ஆசீர்வாதம் தங்கும் என்பதையும் யோவானிடத்தில் கூறவும், யோவானுடைய சீஷர்களை இயேசு அனுப்பிவைத்தார். உதாரணத்திற்கு, பூமிக்குரிய இராஜ்யத்தின் பாகம் ஸ்தாபிக்கப்படப்போவதற்கு முன்னதாக, முதலாவது மேசியாவுடன் அவருடைய மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்காளிகளாக இருக்கத்தக்கதாக, ஆவிக்குரிய இராஜ்யத்தின் வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்றுமுள்ள இராஜ்யம் தொடர்பான யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பிற்கு மேலானதாய்க் காணப்படும் காரியத்தை, அறிந்த மாத்திரத்தில் யூதர்கள் என்ன சிந்தித்திருப்பார்கள்.

யோவானுக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பாடத்தை, **கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியர்கள்** அனைவரும் நினைவுகூர வேண்டும். அதாவது, இவர்கள் எதிர்ப்பார்த்தவைகளுக்கு நேர் எதிர்மாறாக காரியங்கள் சிலசமயம் நடைபெறும்போதும், சத்தியத்திலும், கடமையிலும் உண்மையாய் இருந்ததற்கான பிரதிபலனாகக் காயங்களையும், ஒடுக்குதல்களையும், அவதூறுகளையும் அடையும்போதும், தேவன் தங்களை மறந்துவிட்டார் என்றோ, தாங்கள் அதுவரையிலும் கர்த்தருக்குப் புரிந்து வந்த ஊழியத்தில், தாங்கள் தவறாய் வழிநடத்தப்பட்டுள்ளார்கள் என்றோ, தேவன் தமது திட்டத்தை மாற்றிவிட்டார் என்றோ, தங்கள் விஷயத்தில் தேவன் அக்கறையற்று இருக்கின்றார் என்றோ எண்ணக்கூடாது என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். முதலாவதாக, இந்தச் சாதகமற்ற சூழ்நிலைகள், சிட்சைகளாகத் தங்களுக்கு வந்திருக்கின்றதா அல்லது தங்கள் பங்கில் எதேனும் தவறுகள் செய்துள்ளதன் விளைவுகளா அல்லது கர்த்தருக்குச் சித்தமான வழியில் வேலை செய்ய தாங்கள் தவறி போனதால் உண்டான விளைவுகளா அல்லது இல்லையா என்பதை சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், ஒருவேளை தங்களுடைய நடத்தையானது, தெய்வீகச் சித்தம் மற்றும் வார்த்தைகளுக்கு இசைவாக இருப்பதை உணர்வார்களானால், இவர்கள் உடனடியாக கர்த்தர் மீதான விசுவாசத்தில் அமைதலடைந்து, தங்களைக்காட்டிலும், தேவன் தம்முடைய வேலைகளை ஒழுங்குபடுத்த/கையாள வல்லவர் என்ற முடிவிற்குள் வர வேண்டும். பின்னர், தேவனுடைய வேலையில் ஒரு குறிப்பிட்ட காலளவு தாங்கள் பயன்படுத்தப்பட்டதற்காக இவர்கள் நன்றியுள்ளவர்களாய் இருப்பதோடு கூட, ஒருவேளை மற்றவருடைய நன்மைக்காக அல்லது ஒருவேளை அனுபவம் எனும் பள்ளியில் தங்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், விசுவாசம் மற்றும் பொறுமை பற்றின படிப்பினைகளை தாங்கள் கற்றுக்கொள்வதற்குமெனத் தேவன் தங்களைச் சிறிது காலம் தள்ளி வைப்பது, அவருடைய சித்தமாய் இருக்குமாயின், இதிலும் இவர்கள் ரம்மியமாயிருக்க வேண்டும்.

ஆயினும், இப்படியாக கர்த்தரில் இளைப்படைவதும், கர்த்தருக்குள் ஜீவனை மையங்கொள்ளச் செய்வதும், ஓரளவுக்கு வளர்ச்சியடைந்தவர்களால் மாத்திரமே, அதாவது கர்த்தருடைய வழியில், ஓரளவு தூரம் ஓடினவர்களால் மாத்திரமே மற்றும் கர்த்தருடைய வழிநடத்துதலின் கீழ், ஏற்கெனவே அவருடைய பள்ளியின் அநேக படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டிருப்பவர்களால் மாத்திரமே செய்ய முடிகின்ற விஷயமாகும். இப்படி இளைப்பாறுதலுடன் காணப்படுவதே, கர்த்தருக்கு முற்றிலும் பிரியமான ஒரே காரியமாகவும், அனைத்துக் கர்த்தருடைய உண்மையான பின்னடியார்களும், அடைவதற்கு நாட வேண்டிய நிலையாகவும் உள்ளது. குழப்பத்தில் காணப்படும் தேவனுடைய ஊழியக்காரர்கள் அனைவரும் யோவான் ஸ்நானன் மேற்கொண்ட போக்கைப் பின்பற்றுவதே சரியான நடத்தையாகும். அதாவது, குழப்பத்தில் இருக்கும்போது கர்த்தரிடத்திற்குச் செல்ல வேண்டும், அதுவும் சந்தேகத்துடன் அல்லாமல் விசாரிக்கும்படியாகவும், அவருடைய வார்த்தையின் மூலம் இளைப்பாறுதல் அடைவதற்குச் செல்ல வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை நம்முடைய சொந்த செவிகளினால் கேட்க முடியாது. ஆயினும், அதனை யோவான் தன்னுடைய சீஷர்களின் சாட்சி மூலம் பெற்றுக்கொண்டது போன்று, நாம் நம்முடைய அனைத்து நியாயமான கேள்விகளுக்கும் தேவன் முன்கூட்டியே பதிலளித்துள்ளவைகளை எழுதியுள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகளுடைய சாட்சிகள் சத்தியத்திற்கான நம்முடைய ஊழியங்கள் மூலமாகவும், கர்த்தருடையதான நம்முடைய தற்கால பிரயாசங்கள் மூலம் பதிலைப் பெற்றுக்கொள்ளலாம்.

அநாவசியமாக தலையிட்ட காரணத்தினால் யோவான் சிறையில் அடைக்கப்பட்டாரா? அதாவது, ஏரோதின் விஷயத்தில் தேவையில்லாமல் தலையிட்ட காரணத்தினால், யோவான் சிறையில் அடைக்கப்பட்டாரா? அல்லது தன்னுடைய கடமையை உண்மையாய்ச் செய்ததினிமித்தம் சிறையில் அடைக்கப்பட்டாரா? இராஜாவை யோவான் கடிந்துக் கொண்டதும், ஏரோது தன்னுடைய சகோதரனாகிய பிலிப்பின் மனைவியைத் தனது மனைவியாக எடுத்துக்கொண்டது சட்ட விரோதமானது என யோவான் கூறினதும் சரியா (அ) தவறா? என்ற கேள்விகள் எழலாம். ஏரோது தவறு செய்துள்ளார் என்பதும் உண்மைதான். யோவானும், ஏரோது புரிந்த குற்றத்தையே சரியாக சுட்டிக் காண்பித்துள்ளார். ஏரோது விபச்சாரம் பண்ணியுள்ளதும் சரிதான் ஆனால், ஏரோதைக் கடிந்துக்கொள்வது யோவானுடைய வேலையா? என்பதுதான் கேள்வி. யோவான் இராஜாவினுடைய விஷயங்களில் தலையிட்டுக் கொண்டு, இவ்விதமாக தனக்கே பிரச்சனை வருவித்துக்கொள்வது, யோவானுக்கு அவசியமா? என்பதே கேள்வியாகும். ஒருவேளை இவ்விஷயத்தில் ஏரோதைக் கடிந்துக்கொள்வது யோவானுடைய கடமையாக இருக்குமாயின், இப்படியாகவே ஏரோதைக் கடிந்துக்கொள்வது இயேசுவுக்கும் கடமையாக இல்லையோ? மற்றும் யோவான் சிறையில் அடைக்கப்பட்ட விஷயத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பதும், பொல்லாத இராஜாவினால் செய்யப்பட்ட அநீதிக்காக ஒரு மாபெரும் அமளியை எழுப்புவதும் இயேசுவின் கடமையாக இல்லையா? இன்னுமாக ஒருவேளை ஏரோதின் விஷயத்தில் யோவான் செய்தது சரி என்றால், இதே விஷயத்தை நமது கர்த்தர் இயேசு செய்யாமல் இருந்தது தவறா? அல்லது ஏரோதைக் கடிந்துக்கொள்ளும் விஷயத்தில் இயேசு, யோவானைப் பின்பற்றாமல் இருந்தது சரி என்றால், கடிந்து கொண்டதின் நிமித்தம் யோவான் தவறு செய்துள்ளாரா?

நம்முடைய பதில் என்னவெனில், இவ்விஷயம் தொடர்புடைய நமது கர்த்தருடைய நடக்கையானது, நிச்சயமாக தவறற்றதாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில், "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பேதுரு 2:22). இயேசு தவறு செய்யவில்லை என்பது, வேறுவிதமான வழியைப் பின்பற்றின யோவானிடத்தில் பாவமும், வஞ்சனையும் இருக்கின்றது என்பதாகாது. யோவானும், அவருடைய ஊழியமும், பல்வேறு விதங்களில் நமது கர்த்தர் மற்றும் அவருடைய ஊழியத்தினின்று வேறுபட்டதாய்க் காணப்பட்டதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, யோவான் அணிந்திருந்த ஒட்டகமயிர் உடை மற்றும் வார்க்கச்சையிலிருந்து, நம்முடைய கர்த்தர் அணிந்திருந்த தையல் இல்லாத உடை மிகவும் வேறுபட்டிருந்தது. இன்னுமாக, யோவான் சாதாரணமான உணவுகளைப் "போஜனபானம் பண்ணாதவராகவும்," மிகவும் இச்சை அடக்கம் உள்ளவராக, இந்தச் சொகுசுகள் விஷயத்தில் தொடர்ந்து உபவாசம் (அ) சுயத்தை வெறுத்தலை மேற்கொண்டவராகக் காணப்பட்டார்; ஆனால், நமது கர்த்தர் "போஜனபானம் பண்ணுகிறவராகவும்," தம்மைக் கனப்படுத்தும் பொருட்டு ஏற்பாடு பண்ணப்பட்ட விருந்துகளிலும், பந்திகளிலும், திருமண விழாக்களிலும் பங்குக்கொண்டவராகக் காணப்பட்டார். பாடம் என்னவெனில், இந்த இரண்டு பிரம்மாண்டமான கதாபாத்திரங்களும், தங்களுக்குரிய ஊழியத்தை, தெய்வீக ஏற்பாட்டிற்கு ஏற்ப நிறைவேற்றினவர்களாகக் காணப்பட்டார்கள்; ஆனால், இவர்கள் இருவரும் வெவ்வேறான ஊழியத்தைப் பெற்றிருந்தனர். சீர்த்திருத்தவாதியாகவும், கடிந்துரைப்பவராகவும் இருப்பதுமே யோவானுடைய பிரதானமான ஊழியமாகும். மேலும், இவர் தீர்க்கத்தரிசியாக இருந்தபடியால், இவர் ஏறெடுத்த பாதையிலுள்ள பல்வேறு அம்சங்கள் தொடர்பான விஷயங்களில் தேவ ஆவியினால்/உலகத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்தப்பட்டிருப்பார் என்பதையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். மாறாக, நமது கர்த்தருடைய ஊழியம் வேறுபட்டதாகும். யோவானுடைய ஊழியத்தினால் நீதியினிடத்திற்கும், கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கும், செய்வதற்குமான வைராக்கியத்திற்கும் வந்தவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதே நமது கர்த்தருடைய ஊழியமாக இருந்தது.

கிறிஸ்துவின் "சரீரம்" ஆகுவதற்கும், அவரைப் பின்பற்றுவதற்கும் அழைக்கப்பட்டுள்ள நாம், நமக்கான சரியான போக்குத் தொடர்பான விஷயத்தில் ஒரு படிப்பினையை இங்குக் கற்றுக்கொள்ளலாம். நாம் யோவானைப்போல வனாந்தரத்தில் ஜீவிப்பதற்கும், விநோதமாக உடை அணிந்துக்கொள்வதற்கும், எல்லாவற்றையும் மற்றும் எல்லாரையும் குற்றப்படுத்துவதற்கும், கண்டித்துப் பேசுவதற்கும் அனுப்பப்படவில்லை. கர்த்தருடைய அன்பான ஜனங்களில் சிலர் இத்தகைய ஊழியங்களுக்காக அனுப்பப்படுதல் விசேஷமானவைகள் என்றும், மிகவும் அபூர்வமானவைகள் என்றும் கவனிக்கத் தவறி, சிலசமயம் தவறுதலான மாதிரியைப் பின்பற்றி, கர்த்தருடைய நோக்கங்களின் மீது தேவையற்ற பழிகளை/இழிவுகளைக் கொண்டு வருபவர்களாக இருந்துவிடுகின்றனர். நாம் தேவனுடைய அருமையான குமாரனாகிய, நமது கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாகவே இருக்க வேண்டுமேயொழிய, யோவான் ஸ்நானனைப்

பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டியதில்லை. மற்றவர்களுடைய விஷயங்களில் தலையிட்டு, நாம் பிரச்சனைகளைத் தூண்டிவிடுபவர்களாக இருக்கக்கூடாது. இந்த உலகத்தின், சகல விஷயங்களைச் சரிச்செய்து கொள்வதற்கோ, அதிபதிகளை, இராஜாக்களை, சக்கரவர்த்திகளை கடிந்துக்கொள்வதற்கோ நாம் நாடக்கூடாது. மாறாக, தேவன் அனுமதிப்பதற்குத் தகுந்தவைகள் எனக் காண்பவைகள் எவைகளோ, அவைகள் நாமும் சகிப்பதற்கு ஏற்றவைகள் என்பதை நினைவுகூர அப்போஸ்தலரால் புத்தமதிக் கூறப்படுகின்றோம்/புகட்டப்படுகின்றோம்.

நம்மால் பாராட்டு அளிக்கமுடியாத அல்லது ஆதரவு அளிக்க முடியாத அநேக காரியங்கள் காணப்பட்டாலும் கூட, அவைகளை நாம் கடிந்துக்கொள்வதைத் தவிர்ப்பதற்கு நம்மால் முடியும். அதிலும் விசேஷமாக முழுமையான புரிந்துக்கொள்ளுதலுக்கும், கர்த்தருடைய வார்த்தையின்படியான கிரியைக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லாதவைகளைக் கடிந்துகொள்வதை நம்மால் தவிர்க்க முடியும். நம்முடைய ஸ்தானத்தைக் குறித்து, "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (ரோமர் 12:18). மேலும், இதே கருத்தை, "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்ற வார்த்தைகள் மூலம் கர்த்தரும் வலியுறுத்துகின்றார் (மத்தேயு 5:9).

இந்த விஷயத்தில், கர்த்தருடைய ஜனங்களில் மிகவும் பரிசுத்தமுள்ளவர்களுள் சிலர் கூட, தங்களுடைய சொந்த குடும்பங்களின் காரியங்களில் தவறு செய்து, தேவையில்லாமல் தவறான அபிப்பிராயங்கொண்டு, எதிர்ப்பைத் தெரிவித்துவிடுகின்றனர். மற்றும், பரிசுத்தத்திற்கும் சிலுவை சுமத்துலுக்குமுரிய அளவுகோலுக்குக் கீழானதும், அதேசமயம் தன்மையில் கூடப் பொல்லாங்காய் (அ) ஒழுக்கக்கேடாய் இல்லாதவைகளுமான காரியங்களில் தொடர்ந்து குற்றம் கண்டுபிடிப்பதின் மூலம், தங்கள் இல்லத்தில் மகிழ்ச்சி இல்லாமலும் ஆக்கிவிடுகின்றனர். பெற்றோர்களும், பாதுகாப்பவர்களும், ஒழுக்கக்கேட்டிற்கு நேரான அனைத்து விருப்பங்களுக்கும் எதிராக தங்கள் குடும்பத்தின் அங்கங்களை நிச்சயமாகப் பாதுகாக்க வேண்டும். ஆனால், தாங்கள் அன்புகூருகிறவர்கள் பெயர்க் கிறிஸ்தவர்களாகவும், உலகபிரகாரமான ஆவியைக் கொண்டிருப்பவர்களாகவும் இருப்பதினால் மாத்திரம் அவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பது, ஞானமற்ற விஷயமாகும். தேவனுடைய ஜனங்கள் பரிசுத்த ஆவியில் சந்தோஷத்துடனும், சமாதானத்துடனும் ஜீவக்கும் ஜீவியமே, இவர்களால் கொடுக்க இயன்ற உலகபற்றிற்கு எதிரான மிகச் சிறந்த கடிந்துக்கொள்ளுதலும், இவர்கள் அறிவிக்கின்ற மகிமையான சுவிசேஷத்திற்குச் சிறந்த சிபாரிசும் ஆகும். இவர்களுடைய ஜீவியமே, வாசிக்கத்தக்கதான நிரூபமாகவும் மற்றும் இருளைக் கடிந்துக்கொள்ளும் வெளிச்சமும் ஆகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அர்ப்பணம் பண்ணாதவர்களிடத்தில், சுயத்தை வெறுக்கும் அம்சங்களை நாம் எதிர்ப்பார்க்கவும் கூடாது, திணிக்கவும் முயற்சிக்கக் கூடாது. அர்ப்பணம் பண்ணாதவர்கள் முழுமையான அர்ப்பணிப்பை, "புத்தியுள்ள ஆராதனை" என உணர்ந்து, தங்களுடைய சரீரங்களைத் தேவனுக்கான ஜீவபலிகளாக ஒப்புக்கொடுப்பது வரையிலும் நாம் காத்திருக்க வேண்டும். அநேகமான செல்வாக்குகள் இன்று, பரிசுத்தம் மற்றும் பயபக்தியின் விஷயங்களினுடைய மதிப்பை/நியமத்தைக் குறைத்துப் போடத்தக்கதாகத் தொடர்ந்து கிரியை செய்து வருகின்றது எனப் போதகர்கள் உணர்ந்தவர்களாக, எப்போதும் உன்னதமான வேதவாக்கியத்தின் நியமத்தைக் கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணியுள்ள மந்தைக்கு முன்வைப்பதற்கு நாட வேண்டும்.

## "தீர்க்கத்தரிசியிலும் பெரியவரான யோவான்"

யோவானுடைய சீஷர்கள், இயேசுவினிடத்தில் கொண்டுவந்த கேள்வியைச் சுற்றி கூடியிருந்த ஜனங்கள் கண்டிப்பாகக் கேட்டிருக்க வேண்டும்; மற்றும், சத்தமாகப் பேசிக்கொள்ளவில்லை என்றாலும், சந்தேகத்திற்கிடமின்றி தங்கள் மத்தியில் ஒருவரோடொருவர் பின்வரும் கேள்விகளைக் கேட்டிருக்க வேண்டும். . . . "இயேசுதான் மேசியா என்ற விசுவாசம் யோவானுக்குப் போய்விட்டதா? ஒருவேளை யோவான் தீர்க்கத்தரிசியாய் இருந்திருப்பாரானால், அவர் இயேசுவினிடத்தில் ஆள் அனுப்பிக் கேட்காமலேயே, இவ்விஷயத்தை தேவன் அவருக்கு வெளிப்படுத்தியிருப்பாரே. யோவான் அற்புதம் எதுவும் செய்யாததினால், அவர் தீர்க்கத்தரிசியாயிராமல், சீர்த்திருத்தவாதியாக மாத்திரமே இருப்பாரோ? ஒருவேளை யோவானே தன்னை இப்படி நியமித்துக் கொண்டாரோ?" நமது கர்த்தர் இந்தக் கேள்விகளைப் புரிந்துக்கொண்டவராக, யோவானுடைய சீஷர்கள் போன பிற்பாடு, லூக்கா 7:24-26 வரையிலான வசனத்தின் வார்த்தைகளைப் பேசினார். யோவானுடைய உறுதி தொடர்பான இயேசுவின்

வார்த்தைகள் முகஸ்துதி வார்த்தைகளாயிராமல், உண்மையுள்ள அந்த முன்னோடி குறித்த உண்மையான புகழ்ச்சியாக இருந்தது. "யோவானிடத்தில் என்ன எதிர்ப்பார்த்தீர்கள் . . . காற்றினால் அசையும் நாணலைப் போன்று, கற்பனைகள் மற்றும் உபதேசம் எனும் ஒவ்வொரு காற்றுகளினாலும், எளிதில் தள்ளாடும் நிலைக்கு ஆளாகுமளவுக்குப் பெலவீனமான மற்றும் வளைந்துக் கொடுக்கும் சுபாவத்தை யோவான் கொண்டிருப்பார் என்று எண்ணிக் கொண்டீர்களோ? இப்படியாக, யோவானைக்குறித்து எண்ணிக்கொள்பவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொள்கின்றவர்களாக இருக்கின்றனர். மாறாக, யோவான் ஒரு தீர்க்கத்தரிசி ஆவார்; ஆம், அவர் தீர்க்கத்தரிசியிலும் பெரியவர் ஆவார்; இப்பொழுது நான் பிரசங்கித்து வருகின்றதான இராஜ்யத்திற்குத் தொடர்புடைய, ஆயத்தம் பண்ணும் வேலையைச் செய்யும் தேவனுடைய விசேஷமான ஸ்தானாதிபதியாகவும், தேவனுடைய தூதனாகவும் யோவான் இருக்கின்றார். மல்கியா 3:1-ஆம் வசனத்தைக் கர்த்தர் குறிப்பிட்டார். உண்மை என்னவெனில், யோவானைக் காட்டிலும் பெரிய தீர்க்கத்தரிசி தோன்றினதில்லை என்று நான் உங்களுக்கு கூறுகின்றேன்; எனினும் இராஜ்யத்தில் சிறியவனாய் இருப்பவன், யோவானை விட பெரியவனாக இருப்பான், ஏனெனில் யோவான் இராஜ்ய வகுப்பாரைச் சார்ந்தவர் அல்ல, மாறாக முந்தின யுகமாகிய, பணிவிடைக்காரர் வீட்டைச் சார்ந்தவர் ஆவார். "நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்" என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்படுகின்றது (லூக்கா 16:16; யோவான் 12:1).

கர்த்தர் ஸ்தாபிக்கும் புதிய அமைப்பு முறைக்கும், மோசேயினால் முன்னால் நிறுவப்பட்டதும், இப்பொழுது முடிவிற்கு வருகிறதும், புதியதிற்கு இடம்விட்டுக் கொடுக்கிறதுமான பழைய அமைப்பு முறைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் நமது கர்த்தருடைய வார்த்தைகளில் தெளிவாக விளங்குகின்றது. இராஜ்யத்தின் உடன்சுதந்தரர்களாக, இராஜ்ய வகுப்பாரில் அங்கங்கள் ஆகுவதற்கான நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்குச் சொற்பமான யூதர்களே கர்த்தருடைய நிபந்தனைகளின் கீழ் இராஜ்யத்தின் சிலாக்கியங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்ததின் காரணமாக, இந்தச் சுவிசேஷ யுகத்தின் அழைப்பானது புறஜாதிகளாகிய நம்மிடத்திற்குக் கடந்து வந்தது என அப்போஸ்தலர் காட்டுகின்றார். "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (ரோமர் 11:1-33; கலாத்தியர் 3:16, 29).

புதிய யுகத்திற்குரியவர்களாகிய நாம் இராஜ்யத்திற்கான சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளை உயர்வாகக் கருதி, "நம்முடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதி செய்துகொள்ள" நாடுகின்றவர்களாய் இருக்க வேண்டும் (2 பேதுரு 1:4-11). "பணிவிடைக்காரரின் வீட்டில்" அங்கங்கள் ஆகுவதற்கான பூமிக்குரிய அழைப்பிற்கு அழைக்கப்பட்டவர்களே (யோவான் ஸ்நானன் செய்தது போன்று) தங்களை வைராக்கியத்துடன் கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபடுத்தி, புத்தியுள்ள ஆராதனையைச் செலுத்தி, உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டார்களானால், மிகவும் மேலான தயவு பெற்றுள்ள நாம் எவ்வளவு அதிகமான வைராக்கியம் கொண்டவர்களாகவும், ஆற்றலைப் பிரயோகிக்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடத்தையும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்! இந்தப் "பரம அழைப்பு," "மேலான அழைப்பு" அதாவது, இராஜ்யத்தில் கர்த்தருடன் உடன் சுதந்தரர்கள் ஆகுவதற்கான இந்த அழைப்பு, மிகவும் விசேஷமானது என்றும், மிகவும் குறுகிய எண்ணிக்கைக்கான அழைப்பு என்றும், அது சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும் என்றும், அது மீண்டும் கொடுக்கப்படாத அழைப்பு என்றும் நாம் நினைவில் கொள்வோமாக. "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துக்கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1).

**ஆமென்!**

---

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கிறிஸ்தவ நம்பிக்கைகள் அனைத்திற்குமான அஸ்திபாரமாகிய மாபெரும் நிகழ்வினை ஆசரிப்பதில், அதாவது நமது பஸ்காவாகிய கிறிஸ்துவினுடைய மரணத்தினை ஆசரிப்பதில், கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு வருடமும் ஆர்வம் காட்டிக்கொண்டுவருவது அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு வருடமும் இவ்விஷயமானது அதிக தெளிவுடன் அதிகமானவர்களால் கிரகிக்கப்பட்டுவருகின்றது மற்றும் இதற்கேற்ப அத்தருணத்திற்கு ஏற்புடையதான பயபக்தியும், பரிசுத்தத்துடன்கூடிய சந்தோஷமும் தீவிரமாகுகின்றது மற்றும் பொங்கிவழிகின்றதான ஆசீர்வாதமும்கூடத் தெளிவாய்த் தெரிகின்றதாய் இருக்கின்றது.

எவ்வளவு பேர் கலந்துகொண்டார்கள் மற்றும் கர்த்தருடைய ஆவியும், ஆசீர்வாதமும் எவ்வளவு காணப்பட்டது என்பது பற்றித் தகவல் கொடுக்கும்படிக்கான நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஏப்ரல் 12-ஆம் தேதி மாலையன்று ஆசரித்திட்டதான கர்த்தருடைய ஜனங்களின் சிறு, சிறு கூட்டத்தாரில் அநேகர் தகவல் கொடுத்துள்ளனர். தகவல்களை வைத்துப்பார்க்கையில், இந்த வருடம் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையானது, கடந்த வருடத்தைக்காட்டிலும் அதிகரித்துள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். அநேகரிடமிருந்து இன்னும் நமக்குத் தகவல் கிடைக்கவில்லை என்றாலும், எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகின்றது. கடிதங்களை வைத்துப்பார்க்கையில், அவ்வாசரிப்பின் காரியமானது ஆழமாய்ப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது என்றும், அது நமது கர்த்தராகிய இயேசுவினுடைய மாபெரும் பலியை மாத்திரமல்லாமல், அவருடைய பலியில், அவரோடுகூட ஒன்றுப்பட்டிருப்பதற்கான அவருடைய ஜனங்களின் அர்ப்பணிப்பையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று ஆழமாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அலிகெனியிலுள்ள (Allegheny) சபையாருக்கு அது மிகுந்த ஆசீர்வாதமான தருணமாய்க் காணப்பட்டது; சுமார் 290-பேர் கலந்துகொண்டார்கள். நாங்கள் முதலாவதாக யூதர்களுக்கு நிறுவப்பட்டதான பஸ்காவின் பொதுவான அர்த்தத்தையும், நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டிக்கும், நம்முடைய பஸ்காவாகிய தேவாட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுக்கும் இடையிலுள்ள தொடர்பையும் பார்த்தோம் மற்றும் அந்த இரவில் கடந்துபோகப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின் முதற்பேறானவர்களிடத்தில், இந்தச் சுவிசேஷ யுகத்தில், தேவனால் கடந்துபோகப்படுபவர்களாகிய முதற்பேறான சபைக்கு நிழலைக் கண்டோம். பின்னர் இந்த முதற்பேறானவர்கள், ஒட்டுமொத்த இஸ்ரயேலர்களுக்குத் தலைவர்களாகவும், அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கிறவர்களாகவுமானார்கள் என்பதை நாங்கள் பார்த்தோம்; மேலும் இந்த விடுதலைக்கான நிஜமானது, தேவனை அன்புகூருகிறவர்களுக்கும், உலகம், பாவம் மற்றும் பார்வோன் அடையாளப்படுத்துகின்ற சாத்தானின் அடிமைத்தனத்தினின்று, விடுதலையாகி, தேவனுக்கு ஊழியம் புரிய விரும்புகின்றவர்களுமான அனைவரின் இறுதி விடுதலையாகக் காணப்படுகின்றது என்றும் நாங்கள் பார்த்தோம்; மேலும் இந்த விடுதலையானது, ஆயிரவருட யுகத்தின்போது, முதற்பேறான சபை ஆயிரவருட இராஜ்யத்தில், கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது சம்பவிக்கிறதாய் இருக்கும் என்று நாங்கள் பார்த்தோம்.

அடுத்து நிஜத்தினைப்பற்றின அறிந்துகொள்ளுதல் இல்லாமல், எப்படி யூதர்கள் நிழலை 16 நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆசரித்துவந்தார்கள் என்றும்; ஏற்றக்காலத்தில் நிஜமான ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து நிழலான ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்ட அந்த ஒரு மாதத்தினுடைய அதே நாளில் அடிக்கப்பட்டார் என்றும், நிழலான ஆட்டுக்குட்டியையும், நிழலான கடந்துபோகுதலையும் ஆசரிக்கத்தக்கதாக யூதர்களைப்போன்று இயேசுவும், அவரது சீஷர்களும் ஒன்றுகூடின அதே நாளில்தானேநமது கர்த்தர், நிழலை அல்ல, மாறாக நிஜமான தம்மைச் சுட்டிக்காட்டுகின்றதான ஒரு புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தினார் என்றும் நாங்கள் பார்த்தோம். இயேசு தம்முடைய மாம்சத்தையும், தம்முடைய இரத்தத்தையும் அடையாளப்படுத்திடுவதற்கெனத் தெரிந்துகொண்டுள்ள அந்த அடையாளச் சின்னங்களின் பொருத்தத்தையும் நாங்கள் பார்த்தோம்; புளிப்பில்லாத அப்பமானது மிகவும் அருமையாக நமது அருமை மீட்பருடைய தூய்மையையும், பாவமற்ற தன்மையையும் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் திராட்சப்பழரசமுள்ள பாத்திரமானது அவரது பாடுகளைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது என்று பார்த்தோம்; இந்தப் பாடுகளானது கவலையோடு இல்லாமல், மாறாக நம் நிமித்தமாகச் சந்தோஷமாய், மகிழ்ச்சியாய், மனமுவந்து சகிக்கப்பட்டவையாகும் மற்றும் நாமும் அவைகளில் களிகூர்ந்தோம்.

அப்பத்தை அடையாளமாய்ப் பயன்படுத்துகையில், நம்முடைய இருதயங்களில் எப்படி அவரைப் புசிக்க வேண்டும் என்றும், அவரது பலியின் மூலமாக மாத்திரமே நமக்கு ஜீவன் உண்டு என்பதாகவும், அவர் மரணத்தில் நமக்குப் பதிலாளானதால் மாத்திரமே, நமது தந்தையாகிய ஆதாமினுடைய மீறுதல் காரணமாக, நம்மீது காணப்பட்டதான ஆக்கினைத்தீர்ப்பினின்று, நமது சந்ததி விடுவிக்கப்பட முடியும் என்பதாகவும் உள்ள உண்மைகளை மனதிற்குமுன் கொண்டுவரும் விதத்தில், நம்மால் அவரது மாம்சத்தைப் புசிக்கக்கூடும் என்றும் நாங்கள் பார்த்திட்டோம். புது

உடன்படிக்கையினை முத்திரிக்கின்றதான நமது கர்த்தருடைய மரணத்திற்கு அடையாளமான திராட்சப்பழரசத்தை நாங்கள் பார்த்திட்டோம்; இந்த இரத்தத்தின் கீழ்த் தேவன் கிறிஸ்துவின் வாயிலாக நம்முடைய அபூரணங்களிடத்தில் இரக்கமாய்க் காணப்படக்கூடும், மற்றும் சில சமயங்களில் மாம்சத்தின் பெலவீனங்களானது விரும்பிட்ட பலனைக் கொணருவதற்குத் தடையாய்க் காணப்பட்டாலும்கூட, நம்முடைய நோக்கங்களை அவர் ஏற்றுக்கொள்கின்றார்.

பின்னர் வேறே கோணத்திலிருந்து இக்காரியத்தினை நாங்கள் பார்த்திட்டோம், அதாவது 1 கொரிந்தியர் 10:16, 17-ஆம் வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான இரண்டாம் கோணத்தை நாங்கள் பார்த்திட்டோம்; இந்த இரண்டாம் கோணத்தின்படி முழுச் சபையும் ஒரே அப்பமாய் இருக்கின்றார்கள் மற்றும் அந்த ஒரே அப்பத்தில், கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தில் அங்கமாகியுள்ளவர்கள் அனைவரும், தலையானவருக்கான ஊழியத்திலும், ஒருவருக்கொருவர் புரிந்திடும் ஊழியத்திலும் பிட்கப்படுவது என்பது, அவர்களுக்கான கடமையாகவும், சிலாக்கியமாகவும் காணப்படுகின்றது; மற்றும் இப்படியாக நாம் கிறிஸ்துவினுடைய பாடுகளில், ஐக்கியத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும் மற்றும் இறுதியில் அவரது மகிமையில் கிறிஸ்துவோடு பங்காளிகளாகவும் முடியும். நாம் கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (பாடுகளில்) பங்குகொள்ளுதலாய் இருக்கின்றது என்றும், நம்முடைய ஜீவியங்களை, அவருடையதுடன் ஒருங்கிணைத்துக்கொள்வதாய் இருக்கின்றது என்றும், கிறிஸ்துவினுடைய பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்காக நம்மை அவருடன் இணைத்துக் கொள்வதாய் இருக்கின்றது என்றும் நாங்கள் பார்த்தோம். அந்த அருமையான அடையாளத்தினுடைய மிக ஆழமான அர்த்தத்திற்குள் பிரவேசித்திட நாங்கள் முயற்சித்தோம் மற்றும் அதை எங்களுடைய இருதயங்களில் தேவனுடைய வல்லமையாகப் பெற்றுக் கொள்ளவும் மற்றும் இதன் மூலம் நமது அருமை இரட்சகர்பற்றின ஆழமான புரிந்துகொள்ளுதலுக்கும், அவரது சீஷர்களென அவரது அடிச்சுவடுகளில் நடக்கத்தக்கதாக ஆழமான பக்தியினைப் பெற்றிருத்தலுக்கும் நேராக வழிநடத்தப்படவும் நாங்கள் நாடினோம்.

வானத்திலிருந்து இறங்கிவந்திட்டதான ஜீவ அப்பத்திற்காக — இயேசுவுக்காக — மனித குடும்பத்தினுடைய ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதான அங்கத்தினனாய் இராமல், அவரது மகா பலியின் மூலமாக நாம் பெற்றிருக்கின்றதான ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் நம்முடைய இரட்சகராய் இருப்பதற்கும், நம்முடைய அப்பமாய் இருப்பதற்கும், நமக்கு ஜீவன் அளிப்பவராய் இருப்பதற்கும் பொருத்தமானவராக விசேஷமாய் அருளப்பட்டவருக்காக — தேவனுக்கு ஸ்தோத்திரத்துடன்கூடிய ஜெபத்தினை ஏறெடுத்தப் பிற்பாடு, நாங்கள் அப்பத்தில் பங்கெடுத்தோம். பின்னர் எங்கள் கடந்தகால பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டிருந்தாலும்கூட, எங்களுக்கென்று எங்களிடத்தில் எந்த நீதியும் இல்லை என்றும், கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின்கீழ் இல்லாமல், எங்களுக்குத் தேவன் முன்னிலையில் எந்தத் தகுதியும் இல்லை, அல்லது அவரிடத்தில் எந்தத் தொடர்பும் பெற்றிருக்க முடியாது என்றும் ஒப்புக்கொண்டவர்களாக, பாத்திரத்திற்காக ஸ்தோத்திரித்தோம்.தேவனுடைய கிருபையினால் நாம் இயேசுவோடுகூட ஐக்கியங்கொள்ளத்தக்கதாக அழைக்கப்பட்டதற்காகவும் நாங்கள் ஸ்தோத்திரித்தோம் மற்றும் கர்த்தருடைய கிருபையினால், நாங்கள் உண்மையாய் எங்களுடைய ஓட்டத்தில் ஓடிடுவோம் என்றும், இறுதியில் எங்கள் போதகரோடுகூட, அவரது மகிமையில் உடன்சுதந்தரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரோடுகூட இராஜ்யத்தின் சந்தோஷங்களில் பங்கெடுப்பவர்களாகுவோம் என்றுமுள்ள எங்களது நம்பிக்கைகளை ஆண்டவரிடத்தில் கூறினோம்.

இப்படியாக அந்த எளிமையான, ஆனால் மனதில் ஆழமாய்த் தாக்கம் ஏற்படுத்துகின்ற நினைவுகூருதலானது நிறைவு பெற்றது; மற்றும் அவ்வேளையினுடைய பயபக்தியானது நம்மில் நிலவத்தக்கதாகவும், நம்முடைய பரஸ்பர ஆறுதலுக்காகவும், சந்தோஷத்திற்காகவும், நம்முடைய மனங்களை நிரப்பிக்கொண்டிருக்கின்றதான அந்த விலையேறப்பெற்றவைகளிலிருந்து, நம்முடைய மனங்களைத் திசைத் திருப்புவதற்கு ஏதுவான எந்தச் சம்பாஷணைகளுக்குள்ளும் கடந்துபோகாமல், மாறாக பின்னர் தொடர்ந்து சீஷர்கள்மீது வந்திட்டதான கடுமையான சோதனைகளையும், அருமை போதகருடைய சோதனைகளையும் நினைவுகூரவும், அவரது உண்மையை அதிகமாய் உணர்ந்துகொள்வதற்கும், வருஷத்தினுடைய அந்தக் காலப்பகுதியில் மிகவும் வீரியத்துடன் காணப்படும் எதிராளியானவனுடைய தந்திரங்களுக்கு எதிராக அதிக ஜாக்கிரதையுடன் காணப்படுவதற்கும் நாடவும் வேண்டி, அந்த மாலையில் நாம் கலைந்து சென்றிடுவதற்கு வேண்டுகோள் வைக்கப்பட்டது. முதலாம் துதிப்பாடலைப் பாடிவிட்டு, நாங்கள் கலைந்துபோனோம்.

*****

R 2623

# "அறிவு, பொறுப்புகளை அதிகரிக்கின்றது"

## மத்தேயு 11:20-30

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

நமது கர்த்தர் தமது ஊழியத்தின் பலனைக்குறித்து, விசேஷமாக தாம் அதிகமான காலம் தங்கியிருந்த கப்பர்நகூமில் தமது ஊழியத்தின் பலனைக் குறித்துக் கொஞ்சம் ஏமாற்றம் அடைந்ததுபோன்று தோன்றுகின்றது. இயேசு, மேசியா என்பதற்கான அநேக சாட்சிகளையும், அநேக பலத்தச் செய்கைகளையும் பார்க்கும் வாய்ப்புக் கப்பர்நகூம், கோராசின் மற்றும் பெத்சாயிதா ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றும், இராஜ்யம் முதலியவைகள் அவர்களுக்கு முன்வைக்கப்பட்டது என்றும், கொடுக்கப்பட்டதற்கு ஏற்ப அவர்கள் பொறுப்பாளிகளாக இருக்கின்றார்கள் என்றுமுள்ள எச்சரிக்கையுடன் நம்முடைய இப்பாடம் ஆரம்பமாகின்றது. கப்பர்நகூம் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டு, உயர உயர்த்தப்பட்டிருந்தபடியால் அல்லது அடையாள வார்த்தைகளில் சிலாக்கியங்களிலும், வாய்ப்புகளிலும் வானபரியந்தம் உயர்த்தப்பட்டிருந்தபடியால், (ஆனால் மனந்திரும்பாத காரணத்தினால்) பின்விளைவு என்பது மிகுந்த கீழான நிலையை அடைதலாகவும், இறுதியில், "பாதாளப் பரியந்தம் தாழ்த்தப்படும்" வண்ணமாக அழிவை அடைதலாகவும் இருந்தது. "பாதாளப் பரியந்தம் தாழ்த்தப்படுதல்" என்பது, யூதர்கள் மீது வந்த உபத்திரவத்தில் இந்தத் தேசத்தார் அழிக்கப்பட்டதின் மூலம் நிறைவேறினது. இவர்கள் மேசியாவையும், அவர் ஸ்தாபிக்கப் போவதாக முன்வைத்த இராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்ள தவறினதால், அழிக்கப்பட்டார்கள்.

நமது கர்த்தர் புறக்கணிக்கப்பட்டது, அவருக்கு ஏமாற்றமாக இருப்பினும், தம்மை அனைத்து ஜனங்களும் ஏற்றுக்கொண்டு வரவேற்பார்கள் என அவர் எதிர்ப்பார்த்திருக்கமாட்டார். தாம் இஸ்ரயேலர்களால் புறக்கணிக்கப்படுவார் என்றும், இராஜ்யத்திற்கான அழைப்பு அவர்களிடமிருந்து கடந்து போய்விடும் என்றும் கர்த்தர் தீர்க்கதரிசனங்களிலிருந்து எடுத்துச் சீஷர்களுக்கு கூறியிருந்தபடியால், இவ்விஷயங்களையெல்லாம் அவர் அறிந்திருக்கவே செய்தார். இஸ்ரயேலர்கள் அவரைப் புறக்கணித்தபடியால், இராஜ்யத்தின் கனத்திற்குரிய மகிமையான அழைப்பு, புறஜாதிகள் மத்தியிலிருந்த விசுவாசிகளிடத்திற்குக் கடந்துபோனது. இவ்விதமாகவே, இக்காலத்தில் இருக்கும் நாம் தயவு பெற்றிருக்கின்றோம்.

கோராசின், பெத்சாயிதா மற்றும் தீரு, சீதோன் ஆகிய தேசங்களுக்கிடையே ஆண்டவர் வேறுபடுத்திக் காட்டும் விஷயம் அர்த்தம் உடையதாகும். தீருவும், சீதோனும் செழிப்பான புறஜாதி பட்டணங்களாகும்; மற்றும், இவைகள் பொல்லாங்கினாலும், ஒழுக்கக்கேட்டினாலும் நிரம்பியுள்ளபடியினால், இவ்விரு பட்டணங்களுடைய பெயர்களும்கூட பரிசுத்தமற்ற, தூய்மையற்ற, கட்டுப்பாடற்ற என்பதான ஒரே அர்த்தம் கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. ஆகவே, ஒருவேளை நமது கர்த்தருடைய பலத்தச் செய்கைகள் இந்தப் பரிசுத்தமற்ற பட்டணங்களில் செய்யப்பட்டிருந்தால், இவர்கள் என்றோ இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து, பாவத்திற்காக ஆழமாக வருந்தி, மனந்திரும்பியிருப்பார்கள் என்று நமது கர்த்தர் கூறுவது என்பது, புறஜாதிகளைக் காட்டிலும், மிக மோசமான இருதயநிலையில் பெத்சாயிதா மற்றும் கோராசின் ஜனங்கள் காணப்படுகின்றார்கள், அதாவது தேவன் ஆசீர்வதிப்பதற்குக் கூடாத மோசமான இருதய நிலையில் காணப்படுகின்றார்கள் என்பதைத் தெரிவிக்கின்றது.

இதிலிருந்து நாம், பெரும்பாலான ஜனங்கள் கொண்டிருக்கும் கண்ணோட்டத்திலிருந்து, தேவன் வித்தியாசமான கண்ணோட்டத்தில் இப்படியான காரியங்களைப் பார்க்கின்றார் என்று அறிந்துக்கொள்கின்றோம். இந்தப் பட்டணம் ஒழுக்கமுள்ள (அ) ஒழுக்கமற்ற பட்டணமா? என்றும், இந்த ஜனங்கள் நல்நடத்தை உள்ளவர்களா (அ) இல்லையா? என்றும் வெறுமனே தேவன் கேட்பதில்லை. இந்த ஜனங்களுடைய (அ) அந்த ஜனங்களுடைய, இந்த நபருடைய (அ) அந்த நபருடைய மனநிலை என்ன? அவனுடைய நோக்கம் என்ன? அவன் எதை நாடுகின்றவனாகக் காணப்படுகின்றான்? ஒருவேளை தெய்வீகச் சித்தம் தொடர்பான, தெளிவான வெளிச்சம் அருளப்பட்டால், இவன் எப்படிச் செயல்படுவான்? என்ற கேள்விகளின் அடிப்படையிலேயே கர்த்தர் ஆராய்கின்றவராகக் காணப்படுகின்றார். ஒருவேளை நாம் நம்மையே சீர்த்தூக்கிப் பார்த்து, நாம்

ஒழுக்கக்கேடு இல்லாதவர்களாகவும், கீழ்த்தரமாக இல்லாதவர்களாகவும், சிற்றின்ப நாட்டம் இல்லாதவர்களாகவும், முரட்டுத்தனம் இல்லாதவர்களாகவும் இருக்கின்றோம் என்று காண்போமானால், மற்ற அநேகரைக்காட்டிலும் மிகவும் நாகரிகமானவர்களாகவும் காண்போமானால், இவைகளெல்லாம் நல்லதுதான்; மற்றும், நாம் இப்படிக் காணப்படுவது என்பது சிலாக்கியங்கள், இரக்கங்கள், தயவு பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதே. ஆனால், அதேசமயம் இவைகள் இருந்தும் கூட, கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கும் நிலையில், நாம் இன்னமும் மிகக் குறைவுபட்ட நிலையிலும் காணப்படலாம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்; இன்னுமாக ஒருவேளை தேவன் நமக்குச் சில குறிப்பிட்ட சிலாக்கியங்கள், வாய்ப்புகள் மற்றும் ஆசீர்வாதங்களைக் கொடுக்கையில், அவைகளை நாம் புறக்கணிப்போமாகில், நம்முடைய இச்செயல்பாடானது, ஒழுக்கம் கெட்டவர்களைக் காட்டிலும், அவருடைய பார்வையில் கேடானதாகக் காணப்படலாம் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இருப்பதிலேயே அதிகமான தயவைப் பெற்ற கப்பர்நகூமை, நமது கர்த்தர் சோதோமோடு ஒப்பிடுகின்றார். இந்தச் சோதோமினுடைய பொல்லாப்பு மிகவும் பெரியதாய் இருந்தபடியால், அது கர்த்தரிடமிருந்து கடுமையான அழிவைப் பெற்றுக்கொண்டது. சோதோமின் ஜனங்களைப் பார்க்கிலும், கப்பர்நகூமின் ஜனங்கள் கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி மிகவும் பொல்லாங்கானவர்கள் என்றும், தெய்வீகத் தயவிற்கு அபாத்திரர்கள் என்றும், தண்டனைப் பெறுவதற்கு அதிக பாத்திரவான்கள் என்றும் தெளிவாகக் கூறப்பட்டது. இது கடுமையான கண்டனமாயினும், இது நீதியானதென்று நம்மால் காணமுடிகின்றது. ஏனெனில், தேவனை அறியாத நிலையில், பாவத்தின் வழியில் நடந்து கொண்டிருந்த பாவப்பட்ட சோதோம் ஜனங்கள், விழுகையின் சுபாவத்தினுடைய போக்கிற்கு ஏற்ப படிப்படியாகக் கீழ்த்தரமாகப் போய்க்கொண்டிருந்தனர்; ஆனால், யூதர்களாகிய கப்பர்நகூமின் ஜனங்கள் சகலவிதத்திலும் அதிக அனுகூலமுடையவர்களாகக் காணப்பட்டார்கள்; மேலும், இவர்கள் கர்த்தரைப் பற்றின அறிவினால், ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். இப்பொழுதோ, தேவன் இவர்களிடத்தில் மேசியாவை அனுப்பிவைத்தார். இன்னுமாக, இவர்கள் மேசியாவின் அற்புதங்களை அடிக்கடி கண்டும் வந்தார்கள். இன்னுமாக, அவர் இவர்கள் மத்தியில் அதிக காலம் வாசம் பண்ணினபடியினால், அவருடைய அருமையான குணலட்சணம் மற்றும் போதனைகளுக்கு இவர்கள் நன்கு அறிமுகமாகியும் இருந்தனர்.

இந்த இரக்கங்கள் மற்றும் சிலாக்கியங்களின் விஷயத்தில் இவர்கள் மேசியாவைப் புறக்கணித்து, தங்களுக்கு வந்த வாய்ப்புகளைப் பற்றிப் பிடித்துக்கொள்ள தவறின விஷயமானது, சத்தியம் மற்றும் நீதியைப் புரிந்துக்கொள்வதில், இவர்கள் சோதோம் ஜனங்களைக்காட்டிலும் கீழ்த்தரமானவர்களாகக் காணப்பட்டனர். ஏனெனில், சோதோம் ஜனங்களுக்கு இதே இரக்கங்களும், சிலாக்கியங்களும் அருளப்பட்டிருப்பின், சோதோம் ஜனங்கள், கப்பர்நகூம் ஜனங்கள் போன்று நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்று நமது கர்த்தர் கூறுகின்றார்.

நமது கர்த்தர் கப்பர்நகூமின் ஜனங்களுக்கு அருளின நல்ல வாய்ப்புகளை ஏன் சோதோம் ஜனங்களுக்கு அவர் அருளவில்லை? என்றும், கோராசின் மற்றும் பெத்சாயிதா ஜனங்களுக்கு அவர் அருளின வாய்ப்பை, அக்காலத்திலே ஜீவித்துக் கொண்டிருந்த தீரு மற்றும் சீதோன் ஜனங்களுக்கு அவர் ஏன் அருளவில்லை? என்றுமுள்ள கேள்விகள் இயல்பாகவே தோன்றலாம். இந்த ஜனங்களில் எவருக்கும் நித்திய ஜீவனுக்கான எவ்விதமான பரீட்சையும் அருளப்படவில்லை என்பதே நமது பதிலாகும். சோதோம் ஜனங்களுக்கு இவ்விதமான எந்தப் பரீட்சையும் இருக்கவில்லை. தீரு, சீதோன் ஜனங்களுக்கும் இவ்விதமான எந்தப் பரீட்சையும் இருக்கவில்லை. பாலஸ்தீனியாவிலுள்ள ஜனங்களுக்கும் கூட நித்திய ஜீவனுக்கான எவ்விதமான பரீட்சையும் காணப்படவில்லை. யூதர்கள் தங்கள் கர்த்தருக்காகவும், நீதிக்காகவும், அன்பு கொண்டிருப்பது தொடர்பாகவும், அவருடைய ஜனங்களாக இருப்பதற்கும், அவருடைய இராஜ்யத்திற்கு ஆதரவு கொடுப்பதற்கும் ஆயத்தமாய் இருப்பது தொடர்பாகவுமே, யூதர்கள் பரீட்சைப் பெற்றிருந்தனர். மேலும் பரீட்சையின் முடிவானது, இவர்கள் கர்த்தருடைய இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகப் போதுமானளவுக்கு நீதியின்பால் அன்பு கொண்டிருக்கவில்லை என்பதாகவும், இராஜ்யத்தின் நண்பர்களாகவும், ஊழியக்காரர்களாகத்தக்கதாக நீதியின்மேல் போதுமானளவுக்கு அன்பு கொண்டிருக்கவில்லை என்பதாகவும் விளங்கினது; பின்னர் இதன் விளைவாக இந்த இவர்களுடைய பட்டணமும், இவர்களுடைய தேசமும், ஜனங்களாகிய இவர்களும் கர்த்தரால் ஸ்தாபிக்கப்படப் போகும் இராஜ்யத்தோடுத் தொடர்புடைய பிரதிநிதிகளாக இருப்பதிலிருந்து, கர்த்தரால் புறக்கணிக்கப்பட்டனர்.

நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய எவ்விதமான தனிப்பட்ட விதமான பரீட்சையும் இந்த ஜனங்களில் எவருக்கும் வரவில்லை என்பது, அப்போதிருந்த பின்வரும் பல காரியங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றது: (1) முழு உலகமும் ஆதாமின் மீறுதலின் மூலம் கண்டனத்திற்குக் கீழாகவே காணப்படுகின்றது; (2) ஈடுபலி அதுவரை கொடுக்கப்படாததால், அது கொடுக்கப்படாதது வரையிலும் எவரும் குற்ற கண்டனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஜீவனுக்கான தனிப்பட்ட புதிய பரீட்சையைப் பெற்றுக்கொள்ள முடியாது; (3) லூக்கா 11:24-ஆம் வசனத்தின் வார்த்தைகள் மூலம் எதிர்க்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பின் நாள் உள்ளது என்று, அதாவது யார் நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்கள் மற்றும் யார் அபாத்திரர்கள் எனக் காண்பதற்கு, பரீட்சிக்கிற ஒருநாள் உள்ளது என்று தெரிகின்றது (அப்போஸ்தலர் 17:31). அந்த நியாயத்தீர்ப்பின் நாளாகிய ஆயிரம் வருஷம் யுகத்தில், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை அனைவரும் பெற்றுக்கொள்வார்கள். ஆதாமின் சந்ததி முழுவதற்கும் இந்த வாய்ப்பை அருளுவதே நம்முடைய மீட்பருடைய மரணத்திற்கான நோக்கமாகும். இதற்கிடையில் கப்பர்நகூம், கோராசின் மற்றும் பெத்சாயிதா ஜனங்கள் கர்த்தரைப் புறக்கணித்தபடியால், அவரும் அவர்களைப் புறக்கணித்தார். ஆயிரவருஷ அரசாட்சியின்போது கர்த்தரோடு உடன்சுதந்திரர்களாய் இருக்கும்படிக்குக் கர்த்தர் அழைத்துக்கொண்டிருக்கும் விசேஷமான வகுப்பாருக்கு கப்பர்நகூம், பெத்தசாயிதா, கோராசின் மத்தியிலும் சிலரைக் கர்த்தர் கண்டுப்பிடித்தார், மற்றும் மீதமான மற்றவர்களையும் தேர்ந்தெடுத்துக்கொண்டு வருகின்றார். கர்த்தர் மற்றும் இந்த விசேஷமான வகுப்பாருடைய நீதியின் ஆளுகையின் கீழ், அனைவருக்கும் முழுமையான மற்றும் நியாயமான நியாயத்தீர்ப்பு (அ) நித்திய ஜீவனுக்கான பரீட்சை அருளப்படும். இப்பொழுது அநேக சிலாக்கியங்களைப் பெற்றுக்கொண்டு, தாங்கள் கண்டவைகளுக்கும், அறிந்துக்கொண்டவைகளுக்கும் எதிராக தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டவர்களைக் காட்டிலும், எதிர்க்காலப் பரீட்சையில் தீரு, சீதோன் மற்றும் சோதோமின் ஜனங்கள், அதிகமான கவனம் செலுத்தப்பட்டு, அதிகமான சலுகைகளுடன் கையாளப்படுவார்கள் என்ற விதத்தில் கர்த்தர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குக் கர்த்தர் புரியவைத்தார். "நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 11:22, 24).

பொல்லாப்பிற்கும், சிற்றின்ப பற்றிற்கும், கெட்ட பெயரெடுத்துக் கொண்ட சோதோமின் ஜனங்களுக்கு, மனுக்குலத்தை நியாயந்தீர்க்கும் வேலையைக் கர்த்தர் ஆரம்பிக்கையில், (தேவனுடைய தயவைப் பெற்றுக்கொண்டும், அந்தத் தயவை ஏற்றுக்கொள்ளாமல், அந்தத் தயவை இகழ்ந்த) கப்பர்நகூமின் ஜனங்களைக் காட்டிலும் கர்த்தருடைய கரங்களிலிருந்து அதிக தயவு கிடைக்கும் என்றும், அதிக இலகுவாயிருக்கும் என்றுமுள்ள இந்த வார்த்தைகளினுடைய கடிந்துக்கொள்ளுதல் எவ்வளவு காயப்படுத்துகின்றதாய் இருக்கின்றது! ஆனால், அதற்கென்று ஆயிரம் வருஷம் யுகத்தின் போதினிலான ஜீவனுக்கான பரீட்சையின்போது, கப்பர்நகூமின் ஜனங்கள் அன்பற்றவிதத்தில் கையாளப்படுவார்கள் என்று எவரேனும் அர்த்தம் எடுத்துக்கொண்டால், அது மிகுந்த தவறான அர்த்தமாகிவிடும். ஏனெனில், கர்த்தருடைய வார்த்தைகள் தெளிவாக உலகமானது, "நீதியோடு நியாயம் தீர்க்கப்படும்" என்றே தெரிவிக்கின்றது. கோபத்தோடும், வன்மத்தோடும், பாதிப்புக்குள்ளாக்க வேண்டும் என்ற விருப்பத்தோடும் அல்லாமல், மாறாக நன்மையான சகலவற்றையும் உலகத்தார்க்குச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்துடனே, உலகத்தார் நியாயந்தீர்க்கப்படுவார்கள். ஆகவே, கப்பர்நகூமின் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாளில் "இலகுவாகவே," அதாவது வெகு இலகுவாகவே காணப்படும். கர்த்தரைப் பற்றின தெளிவான மற்றும் முழுமையான அறிவிற்குள் கப்பர்நகூமின் ஜனங்கள் வருவது, அவர்களுக்கு பிரம்மாண்டமான மற்றும் ஆசீர்வாதமான வாய்ப்பாகவே காணப்படும். ஆனால், இவர்களைக் காட்டிலும் சோதோம், கொமோராவின் ஜனங்களுக்கு, இன்னும் அதிகம் இலகுவாயிக்கும். ஏனெனில், இவர்களுடைய பாவங்கள் சில விதத்தில் பெரியவைகளாய் இருந்தாலும் கூட, தேவனுடைய பார்வையில் குறைவாகவே வெறுக்கத்தக்க நிலையில் காணப்படுகின்றது; இவர்களுடைய பாவங்கள் அதிகம் அறியாமையினால் செய்தவைகளாகக் காணப்படுகின்றது மற்றும், குணலட்சணங்களுக்கு எதிராக குறைவாகவே காணப்படுகின்றது.

ஆகவே தீரு, சீதோன் மற்றும் சோதோம் போன்ற பட்டணத்தின் ஜனங்கள் தேவனை எவ்வளவேனும், ஒருபோதும் அறிந்திராததாலும், அவருடைய பிரமாணங்களை ஒருபோதும் அறிந்திராததாலும், மற்றவர்களைக் காட்டிலும், அதாவது தேவனை அதிகமாய் அறிந்திருந்த

கப்பர்நகூம், கோராசின் போன்றவர்களைக் காட்டிலும் ஆயிரவருஷ யுகத்தின் அராசாட்சியின்போது, அக்காலத்திற்குரிய செல்வாக்கிற்கும், நிபந்தனைகளுக்கும் அதிசீக்கிரமாக இணங்கி வரக்கூடிய இருதய நிலைமையில் காணப்படுவார்கள். அதாவது, தேவனை அதிகமாய் அறிந்தும், தற்கால ஜீவியத்திலேயே கிடைத்திட்ட வாய்ப்புகளைத் தவறவிட்டு, குணலட்சணங்களை வளர்த்துக்கொள்வதற்குப் பதிலாக, குணலட்சணங்களைத் தகர்த்துப் போட்டவர்களாகிய கப்பர்நகூம், கோராசின், பெத்சாயிதா போன்றவர்களைக் காட்டிலும் உடனடியாக இணங்கி வரக்கூடிய இருதய நிலையில் காணப்படுவார்கள் என்று நாம் அனுமானிக்கின்றோம்.

இவைகளெல்லாம் உதாரணங்களே. ஏனெனில், யோவான் 5:28, 29-ஆம் வசனத்தின் காரியங்களை நாம் அறிவோம். "அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."

நமது கர்த்தர் இப்பாடத்தில் தெரிவித்தவைகளுக்கு இசைவாக, தற்கால ஜீவியத்தில் தேவனைப் பற்றின அறிவு இல்லாமலும், வாய்ப்புகள் எதுவும் இல்லாமலும் காணப்படுபவர்களுக்கு இதனால், நியாயத்தீர்ப்பின் காலத்தில் எவ்விதத்திலும் அனுகூலமில்லாமல் இருப்பதில்லை என்பதைக் காண்கின்றோம். இன்னுமாக இவர்கள், தற்கால ஜீவியத்திலேயே வெளிச்சத்தோடு தொடர்புக்குள் வந்தும், அதனை ஏற்க மறுத்துவிட்ட சிலரைக் காட்டிலும், இராஜ்யம் மற்றும் அதன் பிரமாணங்களுடைய நல்ல செல்வாக்கிற்கு மிகவும் தாக்கம் அடைந்தவர்களாகக் காணப்படுவார்கள். எதிர்க்கால நியாயத்தீர்ப்பு (அ) பரீட்சைத் தொடர்பான எத்துணை ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் இது! ஆதாமின் வீழ்ச்சியின் காரணமாகத் தேவனால் வழங்கப்பட்டதும், மனுக்குலத்திற்குத் தனிப்பட்ட பரீட்சை எதுவும் கொடுக்காமலேயே, முழுச் சந்ததி மீதும் தேவனால், அனுமதிக்கப்பட்டதுமான, இந்த முதலாம் தீர்ப்பினின்று அனைவருக்கும் ஒரு மீட்பை அருளி, இச்சந்ததியின் ஒவ்வொரு அங்கமும், இயேசுவின் கரங்களினின்று, ஏற்றவேளையில், தனிப்பட்ட விதத்தில் (ஜீவனுக்கான) பரீட்சையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளக் காரியமானது, தவிக்கும் சர்வ சிருஷ்டிக்கும் எத்தகைய அருமையான விஷயமாய் உள்ளது. அருளப்படப் போகும் அந்தத் தனிப்பட்ட பரீட்சையின் கீழ், சூழ்நிலைகள் அப்பொழுது எத்துணை சாதகமாய்க் காணப்படும்! சாத்தான் கட்டப்படப் போகிறான் மற்றும் கர்த்தரை அறியும் அறிவினாலும், அவருடைய நல் ஈவுகளினாலும், விழுந்துபோன அவருடைய சிருஷ்டிகளின் சார்பிலான அவருடைய கிருபையான ஏற்பாடுகளினாலும் பூமி நிறைந்துக் காணப்படப் போகின்றது. இந்தத் தம்முடைய விழுந்துபோன சிருஷ்டிகள் கெட்டுப்போய்விட வேண்டும் என்று தேவன் விரும்பாமல் மாறாக, அவர்கள் ஒருவேளை விரும்பினால், கிறிஸ்து மூலம் நித்தியஜீவனை அடையவே விரும்புகின்றார்.

இன்னுமாக, ஆதாமினுடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுக்கப்படும் ஆசீர்வாதமான வாய்ப்புகள் மற்றும் வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்புத் தொடர்பான காரியங்கள் பெரும்பாலானவர்களிடமிருந்து மறைத்து வைக்கப்பட்டுள்ளது. அதிலும் விசேஷமாக ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என நமது கர்த்தர் மத்தேயு 11:25-ஆம் வசனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஞானிகளும், கல்விமான்களும், இந்தக் கிருபையான திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, பாவப்பட்ட சோதோமியர்களுக்கு வாய்ப்பு ஒருபோதும் கொடுக்கப்படாமலேயே நித்தியமான சித்திரவதைக்குள் கடந்து சென்றுவிட்டனர் என்றும், (ஒருவேளை சோதோமியருக்கு, கப்பர்நகூமின் ஜனங்களுக்குக் கிடைத்தது போன்று வாய்ப்புக் கிடைத்திருக்குமாயின்) இவர்கள் மனம் திரும்பியிருப்பார்கள் என நமது கர்த்தர் கூறியிருந்த போதிலும், சோதோமியர்களுக்கு எதிர்க்காலத்திலும் வாய்ப்புக் கிடையாது என்று ஜனங்களுக்குப் போதிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். இதுவுமல்லாமல் தீரு மற்றும் சீதோன் ஜனங்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைத் தற்காலத்தில் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாய் இருந்தும் கூட, ஒருவேளை இவர்களும் பாலஸ்தீனியாவில் உள்ளவர்களைப் போன்று, நல்வாய்ப்புப் பெற்றிருப்பார்களானால், மனந்திரும்பி இருப்பார்கள் எனக் கர்த்தர் கூறி இருந்தாலுங்கூட, இவர்களும் நித்தியமான சித்திரவதைக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றே, ஜனங்களிடம் இந்த ஞானிகளும், கல்விமான்களும் கூறுகின்றனர். இறுதியாக, பாலஸ்தீனியாவிலுள்ள யூதஜனங்களும் நமது கர்த்தரைப் புறக்கணித்துவிட்டபடியால், இவர்கள் இராஜ்யத்தை இழப்பதோடல்லாமல், நிச்சயமாய் நித்தியமான சித்திரவதையை அனுபவித்தாக வேண்டும் என ஞானிகளும், கல்விமான்களும் நம்மிடம் கூறுகின்றனர். இந்த ஞானிகள் மற்றும் கல்விமான்கள் சத்தியத்தைப் பார்க்கத் தவறிவிட்டனர். இவர்கள் சத்தியத்திற்குக் குருடர்களாக இருக்கின்றனர். இந்த

ஞானிகளும், கல்விமான்களும் யூதர்களைப் போன்று, இவர்களுடைய மதபோதகர்களுடைய பாரம்பரியத்தினால் குருடாக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் இவர்கள் குழம்பத்தக்கதாக, நியாயத்தீர்ப்பு நாள் தொடர்பான கர்த்தருடைய வார்த்தைகளுக்கு வியாக்கியானம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அந்நாளை பரீட்சைக்கான நாள் என்றுள்ள அர்த்தத்தில் விவரிப்பதற்குப் பதிலாக, தண்டனைக்குரிய நாள் என்ற அர்த்தத்தில் விவரிக்கின்றனர். இவர்களோ நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை உரைத்தது முதல், சுமார் 2000 ஆண்டுகள் சோதோம் ஜனங்கள் ஏற்கெனவே நரகத்தில் இருக்கின்றார்கள் என்றும், கடுமையான சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றுமுள்ள தங்களுடைய அறிக்கையைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். இப்பொழுது சோதோம் ஜனங்கள் சித்திரவதை அனுபவிக்கின்றார்கள் என இவர்கள் விவரிப்பதைக் காட்டிலும் அதிகமாக, நியாயத்தீர்ப்பின் நாளுக்குப் பின்னர் சோதோம் ஜனங்கள் அனுபவிப்பார்கள் என இவர்கள் எண்ணுகின்றார்களோ? "நியாயத்தீர்ப்பின் நாள்" என்ற வார்த்தைகளை இவர்கள் எப்படிதான் புரிந்துவைத்துள்ளனர்? இவர்கள் எவ்விதத்திலும் இவ்வார்த்தைகளுக்கான அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துக்கொள்ளவில்லை என்பது உறுதியே. இவர்கள் நமது கர்த்தர் எதிர்க்காலத்தையே குறிப்பிட்டார் என்று காண்கின்றனர். ஆயினும், இவர்கள் அனைத்தையும் குழப்பிக் கொண்டதால், இவர்களால் தேவனுடைய குணலட்சணத்திற்கு இசைவாக, இக்காரியத்திற்கு நியாயமான விளக்கத்தைக் கொடுக்கமுடியவில்லை. அதேசமயம், தேவனைக் கனவீனப்படுத்தும் இவர்களுடைய ஈனமான கூற்றுகளுக்கு இசைவாகவும், இக்காரியத்திற்கு நியாயமான விளக்கத்தைக் கொடுக்க முடியவில்லை. **வேதாகம பாடங்கள் (STUDIES IN SCRIPTURES) , தொகுதி - 1, (ஆங்கிலத்தில்) பக்கம் -137 பார்க்கவும்.**

இந்த உலகத்தினுடைய வழக்கத்திற்கு ஏற்ப ஞானிகள் அல்லாதவர்களும், பிரபுக்கள் அல்லாதவர்களும், பாலகராய் இருக்கும் சிலருக்கும் இக்காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது எத்துணை ஆறுதலாய் உள்ளது. அதாவது, தாழ்மையான மனங்கொண்டவர்களுக்கும், கர்த்தருக்குப் போதிக்க ஆசைக் கொள்வதற்குப் பதிலாக, கர்த்தரால் போதிக்கப்படுவதற்கு ஆயத்தமாய் இருப்பவர்களுக்கும் இக்காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற கர்த்தருடைய வார்த்தைகள் எத்துணை ஆறுதலாய் உள்ளது. இந்த மாபெரும் ஆசீர்வாதமானது, அன்பானவர்களே நமக்குரியதாகும். மேலும், நாம் தொடர்ந்து தேவனால் போதிக்கப்படுவதற்கும், "தேவனால் அருளப்பட்டவைகளை அறியும்படிக்கும்," நாம் எளிமையையும், குழந்தைத் தன்மையையும் தக்கவைத்துக்கொள்வதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். நாம் சத்தியத்தில் களிகூர்ந்து, அதைப் பயன்படுத்துவோமாக; மற்றும், அதன் வெளிச்சத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கடவோம். கல்விமான்கள் மற்றும் இறையியல் பட்டதாரிகள் முதலான பெரும்பாலனாவர்களிடமிருந்து தெய்வீகத் திட்டம் மறைக்கப்பட்டுள்ள உண்மையின் விளக்கமானது, "இவர்கள் தங்களுடைய தந்திரத்திலே பிடிக்கப்படுவதற்கு" அனுமதிப்பதும், தாழ்மையான மனம் உடையவர்களுக்குத் தம்முடைய திட்டங்களை வெளிப்படுத்துவதும் பிதாவுக்குப் பிரியமாய் இருந்ததேயாகும். "இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும்" (1 கொரிந்தியர் 3:19). குமாரனுடைய முதலாம் வருகையின்போது, குமாரனிடத்திற்குப் பிதாவானவர், வேதபாரகர்களையும், பிரபலமானவர்களையும், நியாயசாஸ்திரிகளையும் ஈர்க்காமல் மாறாக, சொற்பமான கபடற்ற மற்றும் தாழ்மையுள்ள, குறிப்பிட்ட "உத்தம இஸ்ரயேலர்களையே" ஈர்த்தார். இதே வகுப்பாரே யுகம் முழுவதிலும் ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளனர்.

ஆண்டவர் தம்முடைய விசேஷமான போதனைகள், தம்முடைய சாட்சியை ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான இருதய நிலையைக் கொண்டிராத ஆயத்தமற்றவர்களுக்கும், விருப்பமற்றவர்களுக்கும் கொடுக்கப்படுவதைவிட, பிதா தம்மிடத்தில் தந்தவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்பதை அறிந்திருந்தார். இந்தத் தம்முடைய உண்மையுள்ள சீஷர்களுக்கும், இந்தச் சீஷர்கள் வகுப்பாரிலுள்ள அனைவருக்கும் ஆண்டவர், தம்முடைய போதனைகள் அனைத்தையும், தாம் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டது என அறிவித்தார்; தாம் சுயமாய் எதையும் பேசவில்லை என்றும் கூறினார்; இன்னுமாக, தம்மைப் பிதா தவிர, வேறு எவரும் உண்மையாக, முழுமையாக, நெருக்கமாக அறிந்திருக்கவில்லை என்றும் கூறினார். இன்னுமாக, குமாரனாகிய தம்மைத் தவிர, வேறு எந்த மனிதனும் பிதாவை அறியான் என்றும், குமாரனாகிய தமக்குத்தான் பிதா, தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் கூறினார். இவைகளைக் குறித்து ஒரு சராசரி வாசகன் முதன்முறையாகப் படிக்கும்போது, கொஞ்சமாகவே புரிந்துக்கொள்கின்றான்.

ஆனால், வருடங்களாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவன் கிருபையிலும், கர்த்தரைப் பற்றின அறிவிலும் வளருகையில் நன்கு புரிந்துக்கொள்ளுவான். கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்ப காலத்தில், ஒருவன் இயேசுவையும், பிதாவையும் குறித்துக் கொஞ்சம் அறிவு கொண்டிருந்திருந்தாலும், பிதாவையும், குமாரனையும் நெருக்கமான விதத்தில் அறிந்துக்கொள்வது என்பது அதாவது, அவர்களோடு நன்கு பழகின நிலையில், அவர்களை அறிந்துக்கொள்வது என்பது அதாவது, நெருக்கமான நண்பனுடைய மனதையும், இருதயத்தையும் ஒருவர் அறிவதுபோல பிதாவையும், குமாரனையும் அறிந்துக்கொள்வது என்பது, முற்றிலும் வேறுபட்ட காரியமாக இருக்கின்றது என்பதை உணர்ந்துக்கொள்கின்றான். இப்படியான நெருக்கத்தைப் பெற்றுக்கொண்டிருப்பது என்பது சிலாக்கியமாகும். இந்த நெருக்கம் அனைவருக்கும் இருப்பதில்லை; இதற்காக தேடி நாடவேண்டும், (கதவு) தட்டப்பட வேண்டும்; மேலும், இப்படித் தேடி நாடி, தட்டுதல் என்பது நெருக்கமான ஐக்கியம் மற்றும் உறவுகொள்வதற்கான உண்மையான வாஞ்சையைக் குறிக்கின்றது. இப்படியாக, கிருபையில் வளருதல் என்பது, இராஜ்யத்தில் கர்த்தரோடு உடன் சுதந்திரர்களாகுவதற்கு நாடும் கர்த்தருடைய உண்மையான அனைத்துப் பின்னடியார்களால் உண்மையாய் நாடப்பட வேண்டும்; இது இல்லையெனில், இவர்கள் முன்னேற முடியாது. நாம் எந்தளவுக்குப் பிதாவையும், குமாரனையும் அறிந்துக்கொள்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் அவர்களில் அன்புகூருகின்றவர்களாகவும், அவர்களுடைய பார்வைக்குப் பிரியமானவைகளைச் செய்வதற்கு அதிகமதிகமாக நாடுகின்றவர்களாகவும் காணப்படுவோம்.

## “வருத்தப்பட்டு, பாரஞ்சுமக்கிறவர்களே, வாருங்கள்”

தாம் பேசுவதை, அங்கு நின்று கேட்டுக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் சிலர் சரியான நிலைமையில் காணப்பட்டும், இன்னமும் தம்முடைய சீஷர்களாகவில்லை என்பதை மறைமுகமாகச் சொல்லும் விதத்தில், “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” எனத் தாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்குத் தனித்தனியே பொருந்தும் வண்ணம் இயேசு கூறினார். பெரும்பான்மையான ஜனங்கள் விஷயத்தில் இருந்த சிக்கல், அவர்கள் வருத்தப்படுகின்றவர்களாகவும் இல்லை, பாரஞ்சுமக்கிறவர்களாகவும் இல்லை. மாறாக, நன்கு சுயதிருப்தியுடன் காணப்படுபவர்களாக இருப்பதினாலேயேயாகும். இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் பேசுகையில், அவர் சரீரப்பிரகாரமான வருத்தத்தை அல்லது சரீர பிரகாரமான பாரத்தையோ, மனதில் கொண்டவராகப் பேசினார் என்று நாம் எண்ணுவதில்லை. மாறாக, இருதயத்தின் பாரம் மற்றும் பாவத்தைப் பற்றின வருத்தம் பற்றியே ஆகும். உண்மையுள்ள இஸ்ரயேலர்கள் தங்களுக்கே உண்மையாக இருந்திருப்பார்களானால், அவர்கள் இப்படியான இருதய பாரத்தையும், பாவம் பற்றின வருத்தத்தையும் நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள்.

இஸ்ரயேலர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்டார்கள் என்றும், நியாயப்பிரமாணமானது இம்மியும் பிசகாத நிலையை எதிர்ப்பார்க்கின்றது என்றும், பெலவீனங்களுக்கும், பூரணமின்மைகளுக்கும், தப்பறைகளுக்கும் நியாயப்பிரமாணமானது எவ்விதமான சலுகையும் காட்டுவதில்லை என்றும், சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் பாரத்தைச் சுமக்க முயற்சிக்கையில், தாங்கள் எப்பொழுதும் குற்றவாளிகளாகக் கண்டிக்கப்படுவதை யூதர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். நியாயப்பிரமாணத்தைப் பின்பற்ற முடியாததற்கான காரணம், நியாயப்பிரமாணம் அநீதியானதாக இருந்ததினாலோ அல்லது நியாயப்பிரமாணம் பூரண மனிதனால் கைக்கொள்ளப்பட முடியாது என்பதினாலோ இல்லை மாறாக, அனைவரும் பூரணமற்றவர்களாகவும், விழுந்துபோனவர்களாகவும் காணப்படுவதினாலேயே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாமல் போயிற்று. ஆகவே, அக்காலத்தில் வாழ்ந்த யூதர்கள் மத்தியில் பெரும்பான்மையானவர்கள், தாங்கள் பரிசுத்தமாய் இருப்பதாகவும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதாகவும், பாவம் செய்யவில்லை எனவும் அறிக்கைப்பண்ணி வந்தாலும், சிலர் தங்களுக்குள்ளும், மற்றவர்களிடத்திலும் தாங்கள் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்ளவில்லை எனவும், கைக்கொள்ள முடியவுமில்லை எனவும் நேர்மையாய் ஒப்புக்கொண்டவர்களாகவும் இருந்து, தங்களுடைய பயனற்ற பிரயாசங்களினிமித்தம் வருத்தமும், பாரமும் கொண்டிருந்தார்கள் என நாம் புரிந்துக்கொள்கின்றோம். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கெனச் சுமை தாங்குபவர் அவசியம் என்பதை உணர்ந்துக்கொண்டிருந்தனர். மேலும், இவர்கள் தங்களுடைய ஆத்துமநோயை உணர்ந்தவர்களாகவும், ஒரு நல்ல வைத்தியனுடைய அவசியத்தையும் உணர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். மேலும், இவர்களையே இயேசு தம்மிடத்தில் வந்து இளைப்பாறுதலையும், விடுதலையையும் பெற்றுக்கொள்ளும்படி அழைத்தார்.

இப்படியாக, இளைப்பாறுதலுக்கெனக் கிறிஸ்துவினிடத்தில் வருவது என்பது கிறிஸ்தவ ஜீவியத்திற்கு நேரான முதல் படியாகும். அது நீதிமானாக்கப்படுதலாகும். நமது பாவங்களுக்கான பலியாக அவரை ஏற்றுக்கொள்ளுதலாகும். மேலும், அவரை இவ்விதமாக ஏற்றுக்கொள்வது முதல், அவரை விசுவாசிப்பதின் மூலம் நமக்கு அப்போஸ்தலர் கூறியுள்ளது போன்று சந்தோஷமும், சமாதானமும் கிடைக்கின்றது. (ரோமர் 5:1; 15:13). ஆனால், இவ்வாறாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டப் பின்னர், நாம் செய்யவேண்டியவைகள் இன்னும் சில உள்ளன. அதாவது, நாமே விரும்பி நம்மேல் ஏற்றிக்/ஏற்றுக்கொள்ள வேண்டிய வேறொரு பாரமும், வேறொரு நுகமும் இருக்கின்றது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நுகம் என்பது அடிமைத்தனத்திற்கான அடையாளமாகும். ஆகவே, நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை எனும் நுகத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாகிய விசுவாசிக்கின்ற யூதர்கள் அல்லது சாத்தானுடைய நுகத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாகிய விசுவாசிக்கின்ற புறஜாதிகள், கர்த்தருடைய வேலைக்காரர்களாகி, அவருடைய நுகத்தை எடுத்துக்கொண்டு, அவருடைய சித்தம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நமது கர்த்தர் குறிப்பிடுகின்றார். நுகம் இரண்டு நபர்களுக்கும் பொதுவாக ஏற்பாடு பண்ணப்படுகின்றது. மேலும், நமது கர்த்தர், "தமது நுகம்" என்றும் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து கர்த்தர் இயேசுவும் கூட ஒரு வேலைக்காரர் என நாம் புரிந்துக்கொள்கின்றோம். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வந்துள்ள அவர், வேலைக்காரரின் நுகத்தைத் தரித்துக்கொண்டு/தம் மீது ஏற்றுக்கொண்டு, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, அவரோடு கூட நாம் உண்மையுள்ள சக நுகம் சுமப்பாளியாக இருப்பதற்கும், பாவம் மற்றும் மரணத்தினின்று உலகத்தை விடுவிக்கும் மாபெரும் வேலையில் கிறிஸ்துவாகிய அவரோடு உடன் வேலையாட்களாக இருப்பதற்கும், நம்மை வரவேற்கின்றார்/அழைக்கின்றார்.

இந்த நுகத்தை தரித்துக்கொள்வதற்குரிய ஆற்றலுக்கான இரகசியம், மற்றும் கிறிஸ்துவோடு அவருடைய வேலையில் கூட்டாளியாக முடிவதற்கான இரகசியம், இப்படியெல்லாம் செய்வதின் விளைவாகிய மாபெரும் ஆசீர்வாதத்தை நம்முடைய சொந்த இருதயத்தில் பெற்றுக்கொள்வதற்கும், நமது ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் பெற்றுக்கொள்வதற்குமுள்ள இரகசியம், கர்த்தர் விவரிக்கிற பிரகாரம், அவர் இருப்பது போல நாமும் சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவர்களாக இருப்பதற்குக் கற்றுக்கொள்வதேயாகும். பெருமையுள்ளவர்களாலும், அகம்பாவம் உள்ளவர்களாலும், சுயசித்தம் கொண்டவர்களாலும், பேராசை கொண்டவர்களாலும், உலக ஞானிகளினாலும், இயேசுவோடு ஒரே நுகத்தில் வேலை புரிவது, கூடாத காரியமாகும் அல்லது நாம் சரியாய் நாடித் தேடிக்கொண்டிருக்கும் ஆத்துமாவிற்கான உண்மையான இளைப்பாறுதலையும் கண்டடைய முடியாது. ஆனால், ஒருவேளை நாம் சாந்தமுள்ளவர்களாகவும், போதிக்கப்படத்தக்கவர்களாகவும், மனத்தாழ்மையுள்ளர்வகளாகவும், காத்தருடைய சித்தத்தை அறிந்துக்கொள்ளவும், என்ன சம்பவித்தாலும் அச்சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமானவர்களாகவும் காணப்படுவோமாகில், அப்பொழுது நிச்சயமாக நமது ஆத்துமாவிற்கான இளைப்பாறுதலைக் கண்டடைவோம்; அதாவது, எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்முடைய இருதயங்களை ஆளும்.

மத்தேயு 11:28, 29-ஆம் வசனங்களில் இடம்பெறும் இரண்டு இளைப்பாறுதல்களுக்கும் இடையே வித்தியாசம் உள்ளதை நாம் கவனிக்கின்றோம். விசுவாசத்தின் மூலம் கர்த்தரிடத்தில் வருபவர்களுக்குக் கொடுக்கப்படும் இளைப்பாறுதலே முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள இளைப்பாறுதலாகும். இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆத்துமாவிற்கான இளைப்பாறுதலையோ ஒருவன் இயேசுவுடன் நுகத்தை சுமப்பவன் ஆகும்போது கண்டடைகின்றான். இவைகள் இரண்டு ஆசீர்வாதங்களாகும்; முதலாம் ஆசீர்வாதமானது நீதிமானாக்கப்படுதலாகும் அதாவது, நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டதினாலும், இனிமேல் நமது பரம பிதாவுக்கு நாம் அஞ்ஞானிகளாய், அந்நியர்களாயிராமல் மாறாக, கிறிஸ்துவின் இரத்தத்தினால், பிதாவுக்குச் சமீபமாக்கப்பட்டு இருக்கிறோம் என உணர்ந்துக்கொள்ளுவதினாலும் ஏற்படும் சந்தோஷமாகும். இரண்டாவது ஆசீர்வாதமோ, படிப்படியாக இருதயத்தில் வளர்ந்து வரும் சந்தோஷமாகவும், வளர்ந்து நிலைத்திருக்கும் பரிசுத்தஆவியின் சமாதானமும், சந்தோஷமாகவும் காணப்படுகின்றது. ஆனால், இந்த இரண்டாம் ஆசீர்வாதமானது மிகவும் சொற்பமானவர்களாலேயே அடையப்படுகின்றது. பெயர்க்கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் இதைக் குறித்தும் எதுவும் தெரியாமலேயே காணப்படுகின்றனர். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதே இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய, அழைப்பிற்குரிய முக்கியமான நோக்கமாகும். மேலும், கர்த்தரிடத்தில் வருவதற்கும், அவருடைய

நுகத்தைச் சுமப்பதற்கும், அவரைக் குறித்துக் கற்றுக்கொள்வதற்கும், இவ்வாறாகத் தேவனுடைய நேசகுமாரனுடைய சாயலைப் போலாகுவதற்கும் தவறுகின்றவர்கள், இந்தச் சுவிசேஷ யுக அழைப்பிற்கும், அதன் விசேஷமான நோக்கத்திற்கும் தவறிவிடுகின்றவர்களாக இருப்பார்கள்; மற்றும், இராஜ்யத்தின் வேலையில் பங்குவகிக்கப் போவதுமில்லை. விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்படும் ஆசீர்வாதமானது, நாம் நுகத்தை எடுப்பதற்கும், பிதாவின் வேலையில் கர்த்தரோடு உடன்வேலையாட்களாக ஆகுவதற்கும், நம்மை ஆயத்தப்படுத்துவதற்கும் மற்றும் தகுதிப்படுத்துவதற்குமேயாகும்.

தம்மோடு கூட நுகத்தின் கீழ், நாம் வரும்படிக்கு நம்மை இயேசு வரவேற்கும் இந்த நுகமானது உலகத்தின் பார்வைக்கு மிகவும் அச்சம் தரக்கூடிய விஷயமாகக் காணப்படுகின்றது. ஜீவனை, நேரத்தை, மற்றும் எல்லாவற்றையும் தேவனுக்கான ஊழியத்திற்கென ஒப்புக்கொடுப்பது என்பது/அர்ப்பணம் பண்ணுவது என்பது மிகவும் பயங்கரமான பாரமாகவும், மிகவும் நியாயமில்லாத நுகமாகவும் உலகத்தாருக்குத் தோன்றுகின்றது. ஆனால், இயேசுவினிடத்தில் வந்தவர்களுடைய மற்றும் நீதிமானாக்கப்படுதல் வாயிலாக சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளவர்களுடைய கண்ணோட்டத்தில், இந்த நுகம் பற்றின விஷயம் முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். இவர்களுக்கோ இந்த நுகமானது, "புத்தியுள்ள ஆராதனையாக" தோன்றும். நமது ஜீவியங்களையும், நமக்கான எல்லாவற்றையும் கர்த்தர் கிருபையாக மீட்டுக்கொண்டபடியினால், அவர் மீட்டுள்ள அந்த ஜீவியத்தின் அனைத்தையும், அவருடைய மகிமைக்காகவும், துதிக்காகவும் பயன்படுத்த வேண்டும். நாம் நுகத்தை நம்மீது ஏற்றுக்கொண்ட/நம்மீது இணைத்துக்கொண்ட பிற்பாடு, அது **மெதுவானது** எனக் காண்கின்றோம். மற்றும், இந்த நுகத்தினிமித்தம் நமக்கு வரும் எந்தச் சுமையும், எந்தக் கடமையும், எந்தப் பரீட்சையும், எந்தக் கஷ்டமும், எவ்விதமான மனவேதனையும், உண்மையில் இலகுவாகவே காணப்படும்.

ஏன்? ஏனெனில், இந்த நுகத்தைத் தரித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, சகலமும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்ற தெய்வீக வார்த்தையினுடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. சுமை அதிகமாயிருப்பின் ஆசீர்வாதமும், நற்பலனும் கூட அதிகமாக இருக்கும். தற்காலத்திலுள்ள அனுபவங்கள் மிகவும் கடுமையாக இருக்குமாயின், இவர்களுக்கான மகிமை மிகவும் பிரகாசமாகவும், இவர்களுக்கான குணலட்சணம் மிகப் பிரகாசமாகவும் இருக்கும் மற்றும் பரலோக இராஜ்யத்திற்கென இவர்கள் பொருத்தமானவர்களாகவும், மெருகூட்டப்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பது அதிக நிச்சயத்துடனும் இருக்கும். இந்தக் கண்ணோட்டத்தின்படி அனைத்துச் சுமையும் இலகுவாயிருக்கும். ஏனெனில், நமது நுகத்தைப் பற்றி நாம் உணர்ந்துள்ளோம். ஆகையால், அது மிக மெதுவானதாகவும், மிகவும் நியாயமானதாகவும் காணப்படும். **இது இலகுவாயிருப்பதற்கு இன்னொரு காரணம், இந்த நுகத்தில், கர்த்தர் இயேசு நம்மோடு கூட இருப்பதாகும். அவர் மாபெரும் சுமைத்தாங்கி.** மேலும், நம்மால் சகிக்க முடியாத ஜீவியத்தின் சுமைகளால் நாம் அதிகமதிகமாய் அழுத்தப்படுவதற்கும், சோதிக்கப்படுவதற்கும் அவர் அனுமதிக்க ஒட்டார். அவரது நுகத்தைத் தங்கள் மேல் ஏற்றுக்கொள்கின்றவர்கள் அனைவருடைய, நலனுக்கடுத்த காரியங்களைப் பார்த்துக்கொள்கின்றார். அவர்களுடைய சுமைகள், அவருடைய சுமைகளாக இருக்கின்றது, அவர்களுடைய பரீட்சைகள், அவருடைய பரீட்சைகளாக இருக்கின்றது, அவர்களுடைய நலம், அவருடைய நலமாக இருக்கின்றது. ஆம், இவர்கள் அவரை அன்புகூருவதினால், இவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கின்றது.

கர்த்தர் இந்த வழியில் எந்த அடிமைகளையும் அவராகவே எடுத்துக்கொள்வதில்லை என்றும், அவர் யார் மீதும் இந்த நுகத்தைக் கட்டுவதில்லை/இணைப்பதில்லை என்றும், நாம் வருவதற்கும், இந்த அவருடைய நுகத்தை நம்மீது நாம் கட்டிக்கொள்வதற்கும்/இணைத்துக் கொள்வதற்கும் அவர் அழைக்க மாத்திரமே செய்கின்றார், அதாவது அவருக்கும், அவருடைய ஊழியத்திற்குமென நாம், நம்மையே முழுமையாய் அர்ப்பணம் பண்ணத்தக்கதாக அழைக்க மாத்திரமே செய்கின்றார் என்றும் நினைவில் வைத்துக்கொள்வோமாக.

**ஆமென்!**

R 2625

# "இரண்டு விதமான பாவிகள்"

## லூக்கா 7:36-50

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" (வசனம் 50)

சீமோன் என்னும் பெயரானது, யூதர்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படும் பெயராகும். ஆகவே, இரண்டு சீமோன்கள் காணப்பட்டார்கள் என்பதிலும், அவர்கள் இருவரின் வீட்டிலும், இயேசு உபசரிக்கப்பட்டார் என்பதிலும் கவனத்தை ஈர்க்கத்தக்கதாக எதுவுமில்லை. எனினும், அந்த இரண்டு உபசரிப்புகளிலும் அநேக அம்சங்கள் ஒற்றுமையாய்க் காணப்படுவது கொஞ்சம் விநோதமாகவே இருக்கின்றது. அதாவது, இரண்டு சம்பவங்களின் போதும், நமது கர்த்தருடைய பாதங்கள் அபிஷேகிக்கப்படுகின்றது (மத்தேயு 26:6-13 வரையிலான வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்). இந்த இரண்டு சம்பவங்களுக்குமிடையே சுமார் ஒன்றரை வருடம் இடைவெளி இருக்கும் என அனுமானிக்கப்படுகின்றது. மத்தேயுவால் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவமானது நமது கர்த்தருடைய மரணத்திற்குச் சற்று முன்பு நடந்ததாகும்.

இந்தப் பாடத்தில் நாம் பரிசேயனாகிய சீமோனைப் பார்க்கின்றோம். இவர் நமது கர்த்தருடைய குணலட்சணங்களினாலும், போதனைகளினாலும் கவரப்பட்டவராக, பெரும்பாலான ஜனங்களைக் காட்டிலும் கர்த்தரிடத்தில் ஈர்ப்புக் கொண்டவராக இருந்தார் என்பது நிச்சயமே. இயேசுவைப் போஜனம் பண்ண அழைப்பதும், இவ்வாறாக அவரைக் கனப்படுத்துவதும் நலமானது எனச் சீமோன் எண்ணினார்; மற்றும் இப்படியாகப் பிரபலமான நசரேயனுடன் தனக்குத் தொடர்பு இருக்கின்றது என்பதின் மூலம், தனக்கும் கொஞ்சம் பிரபலம் கிடைக்கும் என்றும் சீமோன் எண்ணியிருக்கக்கூடும்.

நமது கர்த்தர் அழைப்பை ஏற்றுக்கொண்டு, போஜனம் பண்ண வந்தபோது, சீமோன் அவரை அன்புடனும், மரியாதையுடனும் நடத்தினார். ஆனாலும், அவரை உபசரிப்பதில் உச்சக்கட்டமான/அதிகப்படியான மரியாதை எதையும் செய்யும்படி சீமோன் நடந்து கொள்ளவில்லை. இயேசு விசேஷமான வரவேற்பு உபசரிப்புகளுக்குப் பழக்கப்பட்டவர் அல்ல எனவும், மாறாக இயேசு பொதுவாக மீன்பிடிக்கின்றவர்கள் மற்றும் பொது ஜனங்களின் நண்பராக காணப்படுகின்றார் எனவும் இயேசுவைக் குறித்துச் சீமோன் அநேகமாக எண்ணியிருந்திருக்கக்கூடும். ஆகவே, கனம் வாய்ந்த விருந்தினர்கள் வரும்போது, அவர்களுக்குச் செய்வது போன்று, இயேசு வந்தபோது, சீமோன் அவரை முத்தம் செய்யவில்லை. ஏனெனில், அப்படி இயேசுவை முத்தம் செய்வது, ஒரு சாதாரண நபரை மிக அதிகமாய்க் கனப்படுத்துவது போன்று, அவரை முழுமையாய் ஏற்றுக்கொள்வதற்கு இன்னமும் ஆயத்தமில்லலாமல் காணப்பட்ட பரிசேயனாகிய சீமோனுக்குத் தோன்றினது. இன்னுமாக, அக்காலத்தில் சிறப்பாக உபசரிப்பவர்களின் பழக்கத்தின்படி, இயேசு வந்தபோது, அவருடைய பாதரட்சைகளைக் கழற்றுவதற்கும், அவருடைய பாதங்களைக் கழுவுவதற்குமென, சீமோன் தன்னுடைய வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடவில்லை. சீமோன் பின்வருமாறு தனக்குள்ளே சொல்லியிருக்கக்கூடும், "இந்த மனுஷனும் அவருடைய சீஷர்களும் இப்படியான உபசரிப்புகளுக்குப் பழக்கப்பட்டவர்களல்ல மற்றும் என்னுடைய வேலைக்காரர்களும் கூட, தங்களுக்கு இந்தச் சீஷர்கள் சமமானவர்களல்ல என்றும் போதகர்தான் கொஞ்சமாகிலும் சரிசமமான மரியாதையில் காணப்படுகின்றார் என்றும் உணர்ந்துக்கொள்வார்கள்." ஆகவே, மிகுந்த மரியாதையான, வரவேற்ப்பு உபசரிப்பைக் கர்த்தருக்குக் கொடுக்கவில்லை. ஆயினும், பரிசேயன் கர்த்தரை உள்ளன்போடு, தனது மேஜைக்கு வரவேற்றான். இப்படியாக, உள்ளன்போடு கர்த்தரைத் தனது மேஜைக்கு அழைத்த காரியமானது, தான் கர்த்தரைக் கனப்படுத்துகின்றதாக இருக்கின்றது எனச் சீமோன் எண்ணியிருந்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய ஒரு விருந்தாளியை உபசரிக்கும் சிலாக்கியத்தில் தனக்குத்தான் கனம் உள்ளது என்பதைப் போதுமானளவுக்கு சீமோன் உணராதவராகக் காணப்பட்டார். உயிர்த்தெழுதலின் காலங்களில் (ஆயிரம் வருஷம் யுகத்தின்போது) சீமோனுடைய விருந்தாளியாக வந்திருந்தவர், "தேவனுடைய ஒரே பேறான குமாரனும், கிருபையும், சத்தியமும் நிறைந்தவருமானவர்" எனச் சீமோன் அறிகையில், அவர் நடந்துகொண்ட விதத்தைக்குறித்து அவருக்கு (சீமோனுக்கு) எப்படி இருக்கும்?

"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் தேவதூதரையும் (தேவனுடைய செய்தியாளர்களையும்) உபசரித்ததுண்டு" என்று அப்போஸ்தலர் நமக்கு வலியுறுத்துகின்றார். இப்படிப்பட்டதான காரியங்களில், கர்த்தருடைய ஜனங்கள் தாராளமுள்ளவர்களாக இருக்க

வேண்டும் எனக் கர்த்தர் விரும்புகின்றார் (ஆனால் வீண்பெருமைக்காக, வீண் செலவாளிகளாக இருக்கக்கூடாது); ஆகவேதான், "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு. அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு" என்று எழுதப்பட்டுள்ளது (நீதி. 11:24). விழுகையினிமித்தம் நாம் சுதந்தரித்துள்ள இழிவான நம்முடைய சுயநலத்தைக்குறித்தும், படிப்படியாகக் கர்த்தருடைய வார்த்தைகளினுடைய போதனையின் மூலம் சுயநலத்தை மேற்கொண்டு, அதிகம் தாராளமுள்ளவர்களாகுவது, அதாவது பரலோகத்திலுள்ள நமது பிதாவைப் போன்று தாராளமுள்ளவர்களாகுவது குறித்தும் இப்பாடத்தில், ஒரு பகுதியாக நாம் பார்க்கப்போகின்றோம்.

கர்த்தரை உண்மையில் அடையாளப்படுத்துகிறவர்களாகிய "சகோதரரிடத்தில்" நாம் விசேஷித்த விதமாகத் தாராளமுள்ளவர்களாகவும், விருந்தோம்பல் பண்ணி உபசரிக்கின்றவர்களாகவும் இருப்போமாக. இவர்களை, "தேவனுடைய ஸ்தானாதிபதிகளாக" மாத்திரமல்லாமல், "கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களாகவும்" கருதி, உபசரித்து, இவர்களிடத்தில் தாராளமுள்ளவர்களாகக் காணப்படுவோமாக.

"ஊரில் உள்ள ஸ்திரீ" எனக் குறிப்பிடப்படும் இவள் சாமான்ய ஸ்திரீயாகவும், அவ்வூரார் அல்லாத இயேசுவுக்கும், சீஷர்களுக்கும் இவளைக்குறித்துத் தெரியவில்லை என்றாலும், இவள் அவ்வூரின் ஜனங்களுக்கு நன்கு அறிமுகமானவளே. இந்த ஸ்திரீயினுடைய கடந்த கால ஜீவியம் எப்படிப்பட்டதாக இருப்பினும், இவளுடைய இருதயமானது பாவத்தைக்குறித்த ஆழமான மனவருந்துதலுக்குள் கடந்து சென்றுள்ளது; மற்றும் நல்ல ஓர் ஜீவியத்தை ஜீவிக்கவும் இவளுக்குள் விருப்பம் ஏற்பட்டுள்ளது. மாபெரும் போதகராகிய இயேசுவைக்குறித்தும், விழுந்துபோனவர்களை உற்சாகப்படுத்துவதற்கும், விழுந்துபோனவர்கள் மீண்டும் எழும்புவதற்கென உதவுவதற்கும், விழுந்துபோனவர்களுடன் பேசுவதற்கும் இயேசு பரிசேயர்கள் போன்று அலட்சியப்படுத்தாமல், வெறுத்து ஒதுக்காமல் காணப்படுகின்றார் என்பது குறித்தும் இவள் கேள்விப்பட்டாள். மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ஜெபத்துடன் கர்த்தரிடம் செல்ல வேண்டும் என்றும், ஒரு புதிய ஜீவியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும், பிற்பாடு ஓர் உறுதியான ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் என்றும் எண்ணினாள். எப்படி இதைச் செய்ய வேண்டும் என்பது அவளுக்குத் தெரியவில்லை; தன்னைக் குறித்து அவரிடம் என்ன சொல்லவேண்டும் என்பதும் அவளுக்கு தெரியவில்லை; தன்னுடைய கரங்களில் சிறு காணிக்கையை மாத்திரம் எடுத்துச்செல்லலாம் என எண்ணினாள் மற்றும் அக்காலத்தின் வழக்கப்படி, அவர் படுத்த நிலையில் ஒரு பக்கமாக சாய்ந்து பந்தியிருக்கையில், அவருடைய பாதத்தைத் தன்னால் சுலபமாக அணுகமுடியும் என்பதினால், தான் கொண்டுவரும் தைலத்தினால் அவருடைய பாதங்களை அபிஷேகம் பண்ணலாம் என எண்ணினாள். அவள் எதுவும் பேசவில்லை. ஆனால், அவளுடைய இருதயம் வார்த்தைகளினால் நிரம்பியிருந்தது, ஆண்டவரின் பாதங்கள் அருகே வந்தாள், அவளுடைய கண்ணீர் அவர் பாதங்கள் மீது விழுந்தன. பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், ஒப்புரவாகுவதற்குமான அவளது இருதயத்தின் உண்மையான ஏக்கங்களை அவள் தனது வார்த்தைகளினால் வெளிப்படுத்துவதைக் காட்டிலும், அவள் தனது கண்ணீர் மூலம் ஆண்டவருக்கு விளக்கினாள்.

நாம் பாவ மன்னிப்பிற்காக உள்ளம் நொந்து அவருடைய பாதத்தண்டையில் வருகையில், கர்த்தருடைய ஏற்பாடுகள் எவ்வளவு இரக்கத்துடனும், நமது தேவைகள் மீது எவ்வளவு கரிசனையுடனும் காணப்படுகின்றது. அதாவது, வேறொருவர் மூலம் நாம் அவரை அணுக வேண்டியதில்லை, அதேசமயம் சில குறிப்பிட்ட வார்த்தைகள் மூலம் நமது விண்ணப்பத்தை முறைப்படுத்திக் கூற வேண்டியதுமில்லை. அவரால் நம்முடைய இருதயங்களை வாசித்து அறியமுடியம், அவர் நமது கண்ணீர்களை ஏற்றுக்கொள்கின்றார். இன்னுமாக, அவருடைய சரீரத்தின் அங்கங்களுக்கு நாம் ஊழியம் புரிவதற்கும், நம்மைத் திருத்தம் செய்துகொள்வதற்கும் நாம் ஏறெடுக்கும் எளிமையான பிரயாசங்களைக்கூட அவர் ஏற்றுக்கொள்கின்றார். மன்னிக்கப்பட்டது குறித்த செய்தியை அவர் நமக்குத் தாமதமாகக் கூடக் கொடுக்கலாம், அதுவும் விசுவாசம் மற்றும் பாவத்திற்கான வருத்தத்தின் வேர்கள் நம்முடைய இருதயங்களில் ஆழமாக ஊடுருவதற்கேயாகும்.

இயேசு கொஞ்சம் நேரம் அவளுக்குச் செவிசாய்க்காமல் இருந்தார், மற்றும் அவளுக்குள், தான் செய்கிற காரியத்திற்கான நோக்கமும், ஜெபங்களும் அவரால் சரியாகப் புரிந்துக்கொள்ள முடிகின்றதா அல்லது இல்லையா என்ற கேள்விகள் எழும்பியிருந்திருக்க வேண்டும். ஆனால், அவளுடைய இருதயத்தில் நிறைந்திருந்த கண்ணீர், இன்னும் அதிகமாக அவள் கண்களிலிருந்து சொரிந்தது மற்றும் அவருடைய பாதங்களை அவள் மென்மையாகத் துடைத்து, அவர் பாதங்களைத்

தைலத்தினால் அபிஷேகித்தாள். இதற்கிடையில் பரிசேயன் தனக்குள்ளாக, பின்வருமாறு கூறிக்கொண்டான் . . . "இன்று நான் இயேசுவை போஜனம் பண்ணும்படி அழைத்தது நல்லதாகிவிட்டது. மேலும், இந்த ஸ்திரீயும் இங்கு வந்ததும் நல்லதுதான்; இச்சூழ்நிலையானது இயேசுவைச் சுற்றியிருப்பவர்களுடைய இருதயத்தை இயேசுவால் வாசித்தறிய முடிவதற்கான வல்லமை தொடர்பான நிரூபணத்தை வெளிப்படுத்த ஏதுவாயிற்று. ஒருவேளை இயேசு தீர்க்கத்தரிசியாக இருப்பாரானால், ஒருவேளை தேவனுடைய வல்லமை விசேஷித்தவிதத்தில் இவரிடத்தில் இருக்குமாயின், ஒருவேளை இவர் தேவனால் வெளிச்சமூட்டப்பட்டவராக இருப்பாரானால், இவருக்கு இந்த ஸ்திரீயின் குணநலம் தெரிந்திருக்கும். ஆனால், ஒருவேளை இவளது குணம் பற்றி இயேசுவுக்குத் தெரியாமல், தம்முடைய பாதங்களை அபிஷேகிக்கும்படி இவளை அனுமதித்துக் கொண்டிருப்பாரானால், இது இவர் தீர்க்கத்தரிசி இல்லை என்பதை நிரூபித்துவிடும் என்பதேயாகும்."

ஆனால், இயேசுவோ என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை முழுமையாக அறிந்தும், தமது பாதம் அருகே காணப்படும் பாவப்பட்ட அந்த ஸ்திரீயினுடைய இருதயம் பற்றியும், தம்மை உபசரித்த சுயத்தில் திருப்திகொள்ளும் பரிசேயனுடைய இருதயம் பற்றியும் தெளிவாக அறிந்தவராக, இருவருக்கும் நன்மை செய்வதற்கான ஒரு வழியைத் திட்டம் பண்ணினார். அதாவது, அனைவருக்கும் முன்பாக ஒரு மாபெரும் சத்தியத்தை முன்வைப்பதற்கான ஒரு வழியைத் திட்டம் பண்ணினார். ஆகவே, அவர் சீமோனுக்கு ஓர் உவமையைச் சொன்னார், அதாவது, ஒரு மனுஷனுக்கு இரண்டு கடனாளிகள் இருந்தார்கள் என்றும், ஒருவன் அதிக தொகைக்குக் கடனாளியாக இருந்தான் என்றும், மற்றொருவன் சிறு தொகைக்குக் கடனாளியாக இருந்தான் என்றும், அவர்கள் இருவராலும் கடனைக் கொடுத்துத் தீர்க்க நிர்வாகமில்லாதபோது அந்த மனுஷன், அவர்கள் இருவரின் கடனையும் மனப்பூர்வமாகவும், உடனடியாகவும் மன்னித்து விட்டார் என்றுமுள்ள உவமையைச் சொன்னார். பின்னர், இப்படியாக மன்னித்து விடப்பட்டவர்களில், எவன் கடன் கொடுத்த மனுஷனுடைய தயவை அதிகம் பெற்றவனாய் இருப்பான் என்ற கேள்வியைக் கேட்டதின் மூலம் இந்தச் சிறு உவமையினுடைய பாடத்தைக் கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். உவமையின் சாரத்தை அதுவரையிலும் கிரகித்துக்கொள்ளாத நிலையில் காணப்பட்ட சீமோனோ, உடனடியாக எவனுக்கு அதிகமாய் மன்னிக்கப்பட்டதோ, அவனே அம்மனுஷனுடைய தயவை அதிகமாய்ப் பெற்றவனாய் இருப்பான் என்று பதில் கூறினார். மேலும், சீமோனுடைய பதில் சரியானது எனவும் கர்த்தர் ஒத்துக்கொண்டார். பின்னர், சீமோன் கர்த்தரைப் போஜனம் பண்ணும்படி அழைத்ததின் மூலம் சீமோன் அன்பாயிருந்தாலும், மற்றும் சீமோனுடைய உபசரிப்புகளைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டாலும் கூட, இந்த ஸ்திரீயினுடைய அதிகப்படியான உபசரிப்பும், அவள் வெளிப்படுத்தின அதிகமான மரியாதையும் காட்டுவது என்னவெனில், சீமோனும், ஸ்திரீயும் கர்த்தரை அன்பு செய்தபோதிலும், ஸ்திரீயே அதிகமாய் அன்பு செய்தாள் என்ற விஷயத்தைச் சீமோனுக்குக் கர்த்தர் சுட்டிக்காண்பித்தார். அதாவது, பாவத்தைக் குறித்த அதிகமான உணர்ந்துக்கொள்ளுதலும், பாவத்தினின்று விடுபட வேண்டும் என்ற அதிகமான விருப்பமும், அதிகமான அன்பை உருவாக்குகின்றது என்பதே வெளிப்படுத்தப்பட்ட கருத்தாகும்.

ஒரு கோணத்தில் பார்க்கும்போது, நாம் அனைவரும் பாவிகளே, தேவ மகிமையற்றவர்களே, மற்றும் பாவ மன்னிப்பு அடைவதற்கான வாய்ப்பும் இல்லாமலும் இருந்தவர்களே; எனினும், பரிசேயன் யூதருடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்டதினால், பரிசேயன் ஏற்கெனவே நிழலான நீதிமானாக்கப்பட்ட ஸ்தானத்தில் காணப்படுவதினாலும் மற்றும், இந்த ஸ்தானத்தை/நிலையைக் கடுமையாக நியாயப்பிரமாணத்தின்படி வாழ முற்படுவதின் மூலம் தக்கவைத்துக்கொள்ள நாடுவதினால், அந்த ஸ்திரீக்கு முற்றிலும் வேறான நிலையில் காணப்பட்டார். இன்னொரு பக்கத்தில், அந்த ஸ்திரீ அதே உடன்படிக்கையின் கீழ் இருந்தாலும், நியாயப்பிரமாணத்தை வெளிப்படையாக மீறினதினிமித்தம், ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ள ஜீவியத்தை ஜீவிப்பதினால், அவள் தேசத்தின் நிழலான நீதிமானாக்கப்படுதல் காரியத்தின் மீதான பற்றை இழந்துவிட்டபடியால், இவள் மிகுந்த பாவியாகக் காணப்படுகின்றாள். சீமோன் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சித்தாலும், தன்னால் அதனை பூரணமாய்க் கைக்கொள்ள முடியவில்லை என்பதையும், அவ்வப்போது பல்வேறு விதங்களில் மீறியுள்ளதையும் சீமோன் நன்கு அறிந்திருந்தான். எனினும், ஸ்திரீயைப்போன்று சீமோன் துணிகரமாக நியாயப்பிரமாணத்தை மீறவில்லை. ஆகவே, இப்படியான கண்ணோட்டத்தில் பார்க்கையில் மிகுந்த பாவத்திற்கும், குறைவான பாவத்திற்குமிடையே மிகுந்த வித்தியாசம் உள்ளது. எனினும், இருவருக்குமே இரட்சகர் தேவையே. நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, தனக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க முடியாது என்ற உண்மையை ஒருவேளை பரிசேயன் உணர்ந்திருப்பானானால், அந்த ஸ்திரீ போன்று தனக்கும், இரட்சகர் தேவை என உணர்ந்திருப்பான். பரிசேயன் நித்திய

ஜீவனை அடைய வேண்டுமெனில், அவன் தனது பாவத்தை ஒத்துக்கொள்ள வேண்டும், மற்றும் தன்னுடைய அழைப்பிற்கு இணங்கி, தன்னுடைய விருந்தாளியாக இருப்பதற்குரிய கனத்தை தனக்குத் தந்த இரட்சகரின் ஈவாக பாவ மன்னிப்பையும், பாவம் மற்றும் அதன் தண்டனையாகிய மரணத்தினின்றுமுள்ள இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பின்னர் இயேசு ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்று அவளிடத்தில் கூறினார். இந்த வார்த்தைகள் அவளுக்கு எப்படியாக இருந்திக்கும். அவளுடைய ஜெபம் கேட்கப்பட்டது; அதாவது, அவளுடைய இருதயத்திற்குள் எழும்பினதும், அவளது கண்ணீர்கள் மூலமும், பரிமளத்தைலம் மூலமும் வெளிப்பட்டதுமான அவளுடைய ஜெபம் கேட்கப்பட்டது; அவள் மன்னிக்கப்பட்டாள்; மற்றும் அவளுடைய கடந்த காலத்தின் பாவங்கள் அனைத்தும் என்றென்றும் அகற்றப்பட்டது பற்றி எத்துணை நன்றி உணர்வை அவள் அடைந்திருப்பாள்! எனினும் சீமோன் கர்த்தரிடத்திற்கு வந்து, "ஆண்டவரே நானும் பாவிதான்; இன்னுமாக இந்த ஸ்திரீயைக் காட்டிலும் நான் உம்மைக் குறைவாக அன்புகூர்ந்தவனாக இருப்பினும், எனக்கு மன்னிப்பு தேவை; நான் உம்முடைய பின்னடியார்களில் ஒருவனாகக் கருதப்படத்தக்கதாக, என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி நான் உம்மிடம் வேண்டிக்கொள்கின்றேன்" என்று சொல்லும் நிலையில் நாம் அறிந்திருக்கின்றவரை வரவில்லை. பெயரளவிலான சபையார் மத்தியில் சீமோன், கடவுள் பற்றுள்ளவர் என்ற ஸ்தானத்தை வகிக்கும் காரியமும், இவர் தன்னைப் பரிசுத்தமுள்ளவர் என அறிக்கை பண்ணியுள்ள காரியமும், இவர் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கும், பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் தடையாக நின்றது. இது இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது. கவனமற்ற ஓர் ஜீவியத்தை ஜீவித்து, தங்களுடைய கவலைக்கிடமான நிலைமையைக்குறித்த உணர்விற்கு விழித்து, பாவத்தைக்குறித்த மிகுந்த வேதனையுடனும், உண்மையுடனும் கர்த்தரிடத்தில் வந்து, மிகுந்த விசுவாசத்தை வைத்து, அவர் மேல் மிகுதியான அன்பைக் கொண்டிருக்கும் சிலரைக் காட்டிலும், நல்ல ஒழுக்கமுள்ள ஜீவியத்தை ஜீவிக்கின்றவர்களும், நீதியின் பாதைகளில் நடப்பதற்கு நாடுகின்றவர்களுமாகிய ஜனங்களோ கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமான மன்னிப்பை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லாமலே காணப்படுகின்றனர்.

சீமோன் இப்படியாக மன்னிப்புக் கேட்பதற்கும், இயேசுவின் பின்னடியார்கள் ஆகுவதற்கும் தவறினபடியால், அவர் நரகத்திற்குத் தள்ளப்பட்டார் என்ற எந்தக் குறிப்பும் இல்லை. மாறாக, (மனிதருடைய தவறான பாரம்பரியத்தினாலும், தவறான அபிப்பிராயத்தினாலும், குருடான நிலையில் காணப்பட்ட) அவருடைய ஜனங்கள் கடந்துபோன வழியையே, பின்தொடர்ந்து போனவராகச் சீமோன் காணப்பட்டார். இஸ்ரயேலர்கள் இயேசுவைப் புறக்கணித்ததினிமித்தம், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உடன் சுதந்திரராகும் சிலாக்கியத்தை இழந்து போனார்கள்; மற்றும் அவர்கள் தேசமாக ஆயிரம் வருஷம் யுகத்தின் ஆரம்பம் வரையிலும் தேவனுடைய தயவினின்று புறக்கணிக்கப்பட்டுப் போனார்கள். பின்னர், அப்போஸ்தலர் தெரிவிக்கின்ற பிரகாரம் அவர்களுடைய குருட்டுத்தன்மை மாற்றிப்போடப்படும். இன்னுமாக, சத்தியம் பற்றின அதிகம் தெளிவான அறிவினால் அவர்கள் அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவார்கள். "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சகரியா 12:10). அப்பொழுது இஸ்ரயேலர்கள் தைலம் வைத்திருந்த ஸ்திரீ அழுதது போன்று கண்ணீர் சிந்தும்போது/அழும்போது, தேவன் மகிமையடைந்த கிறிஸ்து மூலம் அவர்கள் மீது இரக்கங்கொண்டு, அவர்களுக்கான பாவங்களை மன்னிப்பார் (ரோமர் 11:25-32). அப்போது நித்திய ஜீவனுக்கான அவர்களுடைய பரிட்சை ஆரம்பிக்கும்.

அந்த ஸ்திரீயினுடைய பாவங்கள் அவளுக்கு மன்னிக்கப்பட்டது என்று நமது கர்த்தர் கூறின வார்த்தைகளினிமித்தம், பந்தியில் போஜனம் பண்ணுவதற்குக் கூடவே இருந்த மற்ற விருந்தாளிகள் அதிர்ச்சியடைந்தனர். இவ்வார்த்தைகளைப் பேசினவராகிய இயேசு, மேசியா என்றும், தேவனுடைய குமாரன் என்றும் அறியாமல், இத்தகைய வார்த்தைகளுக்கான அவருடைய அதிகாரத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பினார்கள். இப்படியான வார்த்தைகள் பயன்படுத்துவது என்பது, தாம் மேசியா என்ற உண்மையினிடத்திற்கும், எதிர்க்காலத்திலும் பாவங்களை மன்னிப்பதற்கான அதிகாரம் தம்முடைய கரங்களில் இருக்கின்றது என்ற உண்மையினிடத்திற்கும் கவனத்தை ஈர்ப்பதற்கென அவர் கையாளும் பகடற்ற முறைகளில் ஒன்றாகும்.

பின்னர் ஸ்திரீயை நோக்கி, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" என்றார். அவள் மன்னிப்புப் பெற்றுக்கொள்வதற்கான காரணம் அவளுடைய கண்ணீர்களால் இல்லை என அவள் அறிந்துக்கொள்ள விரும்பினார். அவள் பயன்படுத்தின தைலத்தின் மதிப்பானது, அவளை மன்னிப்பதற்கு, அவரை ஏவவில்லை என்பதை அவள் அறிய வேண்டும் என விரும்பினார். மாறாக, அவளுடைய விசுவாசமே அவருடைய பார்வையில் பிரியமாய்க் காணப்பட்டது என்றும், அவளது விசுவாசத்தின் காரணமாகவே அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றும் அவள் அறிய வேண்டும் என விரும்பினார். அவள், தனது சொந்த பாவ நிலைமையை உணர்ந்துக்கொண்டதோடு கூட, தன்னுடைய பாவங்களை மன்னிப்பதற்கும், தன்னைச் சீர்ப்பொருந்த பண்ணுவதற்கும் இந்த மாபெரும் போதகரிடம் வல்லமை இருக்கின்றதையும் உணர்ந்துக் கொண்டாள். அவள் விசுவாசித்தாள், அதன்படி நடந்தும் கொண்டாள். மேலும், அவள் அடைந்துள்ள பலனானது, இந்த விசுவாசத்தைச் செயல்படுத்தின காரணத்தினாலேயே என அவள் உணர்ந்துக்கொள்ள நமது கர்த்தர் விரும்பினார். இப்படியே கர்த்தருடைய சகல தயவுகள் தொடர்பான அனைத்து விஷயங்களிலும், அவருடைய ஜனங்கள் ஒவ்வொருவரின் விஷயத்திலும் காணப்படும். நாமும் பாவத்திற்காக மனம் நொந்து, கண்ணீரோடு கர்த்தரிடத்தில் வரும்போது, நமது கண்ணீர்கள் எதையும் வெல்வதில்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஒருவேளை நாம் அவருக்கு அன்பளிப்புகளைக் கொடுப்போமாகில், அந்த அன்பளிப்புகள் எதையும் வெல்வதில்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் நமது விசுவாசத்தைக் கர்த்தரிடத்தில் கொண்டு வரும்போது அதாவது, பாவங்களை மன்னிப்பதற்கும், சகல அநீதிகளிலிருந்து நம்மைச் சுத்தகரிப்பதற்கான வல்லமை உடையவர் இயேசு என நாம் விசுவாசித்தாலொழிய கண்ணீர்களும், அன்பளிப்புகளும் நமக்கு உபயோகமாகுவதில்லை. இப்படியான விசுவாசம் கிறிஸ்தவனுடைய பாதையின் ஆரம்பத்தில் மாத்திரமல்லாமல், பாதையின் பிரயாணம் முழுவதும் அவசியமாய் இருக்கின்றது. நாம் விசுவாசத்தில் தொடரவில்லை என்றால் நம்மால் (ஓட்டத்தில்) முன்னேற முடியாது. கர்த்தருடைய சீஷர்களாக இருக்கும் அனைவரையும், அவர்களது கிறிஸ்தவப் பாதை மற்றும் அனுபவங்களுடைய ஆரம்பம் முதல் முடிவுவரைக் கர்த்தர் கையாளும் முறையானது, "உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது" என்பதேயாகும்.

கர்த்தர் மீதான விசுவாசத்தில் காணப்படுவதே, நம்முடைய பாடத்தின் மையாமாகும். அவர் நம்மைக் கவனிக்காதது போல தோன்றும்போதும், விசுவாசம் வைக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய காரியங்களும், பூமிக்குரிய காரியங்களும் செழித்து ஓங்கிக் காணப்படும்போதும் அவரிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். ஜீவியத்தில் சகல காரியங்களும் நமக்கு எதிராக காணப்படும்போதும், செழிப்பாய் இருந்த காலங்களில் நம்மிடம் காணப்பட்ட அதே விசுவாசம் காணப்பட வேண்டும். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கின்ற ஜெயமாக இருக்கின்றது. மேலும், இந்த விசுவாசமானது அனைத்துச் சூழ்நிலைகளிலும் அவருடைய தயவு மற்றும் உண்மையின் மீதான முழுமையான நம்பிக்கையினால் கர்த்தரை ஏறெடுத்துப் பார்க்கும், மற்றும் அவருடைய ஜனங்களுக்குச் சகல காரியங்களும் நன்மைக்கு ஏதுவாக நடைபெறும் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தையும் உணர்ந்துக்கொள்கின்றது (1 யோவான் 5:5; ரோமர் 8:29).

**ஆமென்!**

# சில வருடம் மாத்திரமே

கொஞ்சம் காலம்தான்   நாமின்னும் கற்றுக்கொள்ள,
கொஞ்சம் தூரம்தான், பந்தய தூரம் ஓடி முடிக்க,
தைரியத்தைசேருத்துக்கொண்டுபுதிதாய் மாறு மயங்கும் இதயமே,
கொஞ்சம் மாதம்தான், முழுமூச்சுடன் வேலையைச் செய்திடுவாய்,
வயலில் இன்னமும் பசி கொண்ட ஆத்துமாக்கள் உணவூட்டப்பட வேண்டும்,
களைப்படைந்தே பாரம் சுமந்த சகோதரனே,பின்பேதத்தளிக்க வேண்டுமன்றோ,
தேவையான நேரம்தன்னில் சோர்வை நீக்கி சக்தியைக்காண்பாய்,
கொஞ்சம் நாட் கள்தான், அன்பால் நிரப்ப,
நண்பனோ, எதிரியோ,தேவனின் படைப்புகள் அனைத்தையும் அன்பு செய்வாய்,
மனிதனின் தவறுகள் அனைத்தையும் மூடிடும் அன்பைக் காட்டிடு,
பூமியின் துன்பம் அனைத்திறகுமான தைலம் கொணர்ந்திடு,
ஒருசில மணிகள், நாமறியோமே,நல்ல போராட்டம் போராடிய ஒருசிலர்க்கே
மகிமையின் கிரீடம் காத்துநிற்குதே,
தேவனின் ஒளிக்குள் இளைப்பாறுதல் கிடைத்துவிடும்,
இன்னும் சில நாட்கள்தான், நாம் வெலுத்தும் ஜீவபலி, பொறுமையாய் நின்று நம் வேலை முடிய,
அவரது ஒளி வீசும் வட்டத்துக்குள் நாம்  மகிழ்வோம்,
நமது முடிவிலா வீட்டினுள் இருந்தே அவரைப் புகழுவோம்.

# "அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு"

"பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்." - **மத்தேயு 10:20**

எவ்விதமான இடையூறும் இல்லாமல், நமது கர்த்தர் பட்டணந்தோறுமுள்ள ஜெப ஆலயங்களில் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஏதுவாக, யூதர்கள் மத்தியில் நிலவியிருந்த சுதந்திரம் மாபெரும் பாராட்டிற்கு ஏதுவானதாகும். ஒருவேளை இன்றைய நாட்களில் உள்ள ஏதேனும் ஆலயங்களில், ஏதேனும் சபை பிரிவுகளில் கர்த்தர் போதிக்க முற்பட்டிருந்திருப்பாரானால், அவருக்கு அது மறுக்கப்பட்டிருக்கும் என நாம் நிச்சயமாக எண்ணுகின்றோம்; வேதவாக்கியங்கள் அறிவிக்கும் விஷயங்களைக் கடைப்பிடிப்பதில் இயேசு எவ்வளவுதான் உண்மையுள்ளவராக இருந்தாலும் சரி, மற்றும் அவருடைய போதனைகள் மிகவும் விளக்கமாகவும்/தெளிவாகவும் இருந்தாலும் சரி, இவைகள் இன்று பொறுப்பில் உள்ளவர்களுக்கு, அதாவது இராஜ்யம் தொடர்பான தங்களுடைய சொந்த கோட்பாட்டை உடையவர்களுக்கு, அதிலும் ஆராய்ச்சி பண்ணினால் நிலைநிற்க முடியாத கோட்பாட்டை உடையவர்களுக்கு, அதாவது தங்களுடைய பெலவீனம் வெளிப்படுவதை விரும்பாதவர்களுக்கு மிகவும் திருப்திகரமற்றவைகளாகவே காணப்படும். மத விஷயங்கள் தொடர்பான காரியங்களில் யூதர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் இப்படியான சுதந்திரமற்ற தன்மையானது, அவர்களுக்கே ஊறு விளைவிக்கின்றதாகக் காணப்படும். அதாவது, தற்கால அறுவடை செய்தியின் சந்தோஷமான சத்தத்தைக் கேட்கும் விஷயத்தில் கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த இடர்பாட்டைக் கொண்டு வருகின்றதாய் இருந்துவிடும்.

நமது கர்த்தர் அநேகரைச் சொஸ்தப்படுத்தினபோதிலும், இன்னும் பெருந்திரளான வியாதியஸ்தர்கள் சொஸ்தமடைவோம் என்ற நம்பிக்கையில், பல்வேறு திசைகளிலிருந்து வந்து அவரிடம் குவிந்தனர்; மேலும், இஸ்ரயேலின் இந்த மந்தைகளுக்காக அவர் மனதுருகினார் என்பதாக நாம் வாசிக்கையில், அவருடைய இரக்கம், அவருடைய பரிவு, அவருடைய அன்பு குறித்து ஆழமாய் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது; மேலும், பிதா கொடுத்த மகிமையை விட்டு, பரிசுத்தமான தேவதூதர்களையும் பிரிந்து, மனித நிலையை எடுக்கும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்தினவர், பெலவீனமானவர்களுக்காகவும், பாவிகளுக்காகவும், சீரழிந்துப் போனவர்களாகவும், வலி உடையவர்களாகவும் இருப்பவர்கள் மேல், மனதுருக்கம் கொள்வது குறித்து, நாம் ஆச்சரியம் அடையவில்லை; மாறாக, அவர் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியாகவே இருந்துள்ளார் என்பதாக நாம் எண்ணுகின்றோம். இப்படியான மனதுருக்கம் இல்லையெனில், அவரால் எப்படி நமது மீட்பராக இருக்க முடியும்? மற்றும் நம் பொருட்டு எப்படி அவர் பரலோக மகிமையைத் துறந்து வந்திருக்கக்கூடும்! அவர் இன்னமும் அப்படியாகவே இருக்கின்றார் என நாம் எண்ணுகையில், இது எத்துணை புதிய நம்பிக்கையை நமக்குக் கொடுக்கின்றதாக இருக்கின்றது? நமது பெலவீனங்களும், பூரணமின்மைகளும் ஒருபுறம் இருப்பினும், முழுஉலகமாகிய தவித்துக் கொண்டிருக்கும் சிருஷ்டியின் பெலவீனங்களும், பூரணமின்மைகளும் இன்னொருபுறம் இருப்பினும், அதேசமயம் இயேசு மனதுருக்கம் கொண்டவராகவே இருக்கின்றார் என்பது எத்துணை புதிய நம்பிக்கையை நமக்குக் கொடுக்கின்றதாக இருக்கின்றது. அதுவும் தம்முடைய ஜனங்கள் மீது மாத்திரமல்லாமல், ஏற்றக்காலத்தில் பூமியின் குடிகள் அனைத்தின் மேலும் மனதுருக்கம் கொண்டிருந்து, பாவத்தினால் மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், சரீர ரீதியாகவும் ஏற்பட்டுள்ள அழிவுகளினின்று குணமடைவதற்கான முழுவாய்ப்பும் அனைவருக்கும் அருளுவார். கர்த்தர், பிதா நியமித்துள்ள வேளைக்காக மாத்திரமே காத்துக்கொண்டிருக்கின்றார் என்பது எத்துணை புதிய நம்பிக்கையை நமக்குக் கொடுக்கின்றதாக இருக்கின்றது; பின்னர் வேளை வரும்போது, தம்முடைய உண்மையுள்ளவர்களோடு, அதாவது தம்முடைய இராஜ்ய வகுப்பாரோடு, ஆபிரகாமின் சந்ததியாகக் காணப்பட்டுத் திரும்பக்கொடுத்தலின் காலங்களில் தேவனோடு ஒப்புரவாகிக் கொள்வதற்கான முழு வாய்ப்புடனும், இதன் விளைவாக நித்திய ஜீவனை அடைவதற்கும் ஏதுவாக, பூமியன் சகல குடிகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

நாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற இப்பாடத்தின் காலத்தில், அவருடைய வேலை பரந்த அளவில் செயல்படவில்லை; இன்றுங்கூட அப்படியாகச் செயல்படவில்லை. இயேசுவின் நாட்களில் ஒப்புரவாகுதல் தொடர்பான அவருடைய செய்தியும், அவருடைய உதவியும் சுபாவத்தின்படியான மாம்சீக இஸ்ரயேல் வீட்டாராகிய தொலைந்துப்போன ஆட்டிற்கு மாத்திரமே கொடுக்கப்பட்டிருந்ததே

ஒழிய, சமாரியர்களுக்கோ அல்லது புறஜாதிகளுக்கோ கொடுக்கப்படவில்லை. அதற்குப் பின் ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதமானது சமாரியர்கள் அல்லது புறஜாதியார்கள் மத்தியில் கேட்பதற்குச் செவியுடையவர்களாய் இருந்தவர்களுக்கு அருளப்பட்டது. அதாவது, இவர்களுக்கு இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஒப்புரவாகுவதற்கான சிலாக்கியம் கிடைத்தது; ஆனால், சிறியவர் முதல் பெரியவர் வரை கர்த்தரை அறிந்துக்கொள்வதற்கென, செவிடான காதுகளைத் திறப்பதற்கான மாபெரும் காலம் இனிவரும் ஆயிரவருஷம் யுகத்திலேயே ஆகும்.

உதவி வேண்டிய நிலையிலும், உதவியை விரும்பியும் காணப்படுபவர்கள் இருப்பது வரையிலும், கர்த்தருடைய குணலட்சணத்தில் ஒரு பாகமாக இந்த மனதுருக்கம் செயலாக்கத்தில்/அமலில் காணப்படும்; மேலும், இந்த மனதுருக்கமானது, உதவியை வாஞ்சிக்கிறவர்கள் அனைவரும் உதவியைப் பெற்றுத்தீரும் ஆயிரவருஷம் யுகத்தின் முடிவு வரையிலும் செயல்படும்; அவருடைய உதவியை வேண்டுமென்றே புறக்கணித்து விட்டவர்கள் மாத்திரமே ஆசீர்வதிக்கப்படாதவர்களாகக் காணப்படுவார்கள். ஆயிரவருஷம் யுகத்திற்குப் பிற்பாடு அவருடைய மனதுருக்கம் காண்பிக்கப்படுவது நிறுத்தப்படும். ஏனெனில், அதற்குப் பிற்பாடு மனதுருக்கம் அவர் கொள்வதற்கு அவசியம் இராது. ஏனெனில், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் மூலம், பூரணமாய் இருப்பவர்கள் தேவனிடத்தில் ஒப்புரவாகிவிடுவதால், அவர் மனதுருக்கம் கொள்வதற்கு அவசியம் இராது.

ஜனங்கள் மீது நமது கர்த்தர் கொண்டிருந்த மனதுருக்கத்தினிமித்தம், வியாதிகள் முதலியவைகளைச் சொஸ்தப்படுத்தும் வல்லமை தரிப்பிக்கப்பட்டவர்களாக, அவர் தமது பிரதிநிதிகளை அனுப்ப வேண்டியிருந்தது. மேலும், தம்முடைய எண்ணத்தைத் தமது சீஷர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாகவே, அவர்களிடம் அறுவடை மிகுதி என்றும், வேலையாட்கள் கொஞ்சம் என்றும், இவ்விஷயத்திற்காக அவர்கள் ஜெபம் ஏறெடுக்க வேண்டும் என்றும் கூறினார். அவர்களுடைய ஜெபம் கண்டிப்பாக பின்வருமாறு காணப்பட வேண்டும், அதாவது "அறுவடையின் ஆண்டவரே, அறுவடையில் என்னை அறுக்கிறவனாக அனுப்பும்" என்பதேயாகும். இயேசு தாமே அறுவடையின் ஆண்டவராக இருக்கின்றார்; முழுக் காரியமும் கர்த்தருடைய கரங்களில்தான் இருந்தது; மேலும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், அறுவடை வேலையின் அதிகரிப்பைக் குறித்த அவருடைய எண்ணத்தையும், சிந்தையையும் உடனடியாகக் கிரகித்துக் கொண்டார்கள்; ஆகவே, அவர்களை இருவர் இருவராக அனுப்பி வைத்தார்; எனினும் அவருடைய சொந்த ஊழியத்தை அவரே எல்லைக்குட்படுத்தியிருந்தது போல, மாம்ச இஸ்ரயேலர்களுக்காக மாத்திரமே அவர்களது வேலையையும் எல்லைக்குட்படுத்தினார். ஏனெனில், தேவனுடைய அனைத்து உடன்படிக்கைகளும், வாக்குத்தத்தங்களும் மாம்சீக இஸ்ரயேலர்களுக்கே உட்பட்டதாயிருந்தது; மற்றும் பிதாவினால் நியமிக்கப்பட்ட ஏற்றவேளை வரையிலும் அதாவது, தீர்க்கத்தரிசியாகிய தானியேல் மூலம் விசேஷமாகக் குறிப்பிடப்பட்ட இஸ்ரயேலுக்கான கிருபையின் எழுபது வாரங்களுடைய முடிவில் அதாவது, நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டு, மூன்றரை வருடத்திற்குப் பின்வரையிலும், மற்ற ஜனங்களுக்கு வாய்ப்புத் திறக்கப்படுவதில்லை/ வெளிப்படுத்தப்படுவதில்லை.

"அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (மத்தேயு 10:1). இந்த வல்லமை/அதிகாரம் பரிசுத்தஆவியினுடைய வல்லமை/அதிகாரமேயாகும்; இது இவர்கள் பிற்பாடு பெந்தெகொஸ்தே நாளில், பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அதே ஆவியாக இருந்ததெனினும், வேறுபட்டதாகவும் இருந்தது. இவர்களுக்கு அருளப்பட்ட வல்லமையானது, பரிசுத்த ஆவி அல்லது தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தின விதத்தில் வித்தியாசப்பட்டாலும், எப்போதும் இது ஒரே வல்லமைதான் என்ற விதத்தில் அது அதே வல்லமைதான். இவர்களுக்கு அருளப்பட்ட வல்லமையானது, நமது கர்த்தராகிய இயேசுவின் ஆவியாகவும், அவருக்கு அளவில்லாமல் அருளப்பட்டதுமான வல்லமையாக (அ) ஆவியாக இருக்கின்றபடியால், அது பரிசுத்தமானதுதான்; இப்படியாக அவரிடத்திலிருந்த ஆவியைத்தான், அப்போஸ்தலர்கள் தமது பிரதிநிதிகளாக இருந்து, தம்முடைய நாமத்தில் ஒரு வேலையைச் செய்யத்தக்கதாக, அப்போஸ்தலர்களுக்கு அந்நேரம் அருளினார்.

வியாதிகள் சொஸ்தமாக்கப்பட்டபோது, சொஸ்தம் உண்டாகத்தக்கதாக நமது கர்த்தர் இயேசுவிடமிருந்து உயிர் ஆற்றல் கடந்துப் போனது என்றும், இவ்விதமாக ஒவ்வொரு சொஸ்தமடைதலும், அவரிடமிருந்து அவருடைய சொந்த உயிர் ஆற்றலையும், அவருடைய சொந்த ஜீவனுக்கான சக்திகளையும் எடுத்துக்கொள்வதாக இருக்கின்றது என்றும் நாம்

அனுமானிக்கின்றபடியினால், இச்சம்பவத்திலும் கூட வியாதியஸ்தர்களைச் சொஸ்தப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட வல்லமை, இயேசுவின் வல்லமை என்றும், சீஷர்கள் தங்களுடைய சொந்த உயிர் ஆற்றலைக் கொடுக்காமல், அவர் அவர்களுக்கு, கொடுத்ததும், "இலவசமாய்ப் பெற்றுக் கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" என்று அவர் கூறி பயன்படுத்தும்படிக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்ததுமாகிய அவருடைய வல்லமையையே (உயிர் ஆற்றலையே) என்றும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். (சீஷர்கள்) தங்களுக்கு இழப்பாய் இராததும், ஆனால் இயேசுவுக்கு தினந்தோறும், ஒவ்வொரு மணி நேரமும் இழப்பாய் இருக்கின்றதுமாகியவைகளையே (வியாதிகள் சொஸ்தப்படுத்தும்போது) கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம், தினந்தோறும் நமது கர்த்தர் இவ்விதமாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்ற இக்கருத்தை நாம் புரியும் போதுதான், மூன்றரை வருடங்களாகிய சுருக்கமான காலப்பகுதியில், அவருடைய பரிபூரணமான ஜீவன் எப்படி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை நம்மால் நன்கு புரிந்துக்கொள்ள முடியும்.

வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதும், பிசாசுகளைத் துரத்துவதும், அப்போஸ்தலர்களின் ஊழியங்களில் ஒரு பாகமேயாகும். இவைகளோடுக் கூட அவர்கள் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியிருந்தது. அதாவது, தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது என்ற நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டியிருந்தது; மற்றும் அற்புதங்களினால் உண்டாகும் செல்வாக்கானது, இச்சுவிசேஷத்தின் மீது கவனத்தை ஈர்க்கின்றதாகவும், இராஜ்யத்திற்காக ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்காகவும், அதற்கு எதிர்ப்பார்த்திருக்கப் பண்ணுகின்றதாகவும் காணப்பட வேண்டும். ஆனால், பதிவுகளைப் பொறுத்தமட்டில், ஜனங்கள் அற்புதங்களுக்காகவும், சொஸ்தமாக்கப்படுவதற்காகவும் வாஞ்சித்தார்கள் என்றும், இராஜ்யம் தொடர்பான விஷயத்தில் அக்கறையற்றவர்களாகவும் காணப்பட்டார்கள் என்றும் நாம் பார்க்கின்றோம். இயேசுவிடமும், அவருடைய சீஷர்களிடமுமிருந்து சொஸ்தமடைதலை ஜனங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினார்கள். ஆனால், தேவனுடைய இராஜ்யம் எப்படி மற்றும் எப்பொழுது வரும் என்பது தொடர்பான தகவல் அறிய விரும்புகையில், வழக்கம்போல, ஜனங்கள் தங்களுடைய குருடான வழிகாட்டிகளையே தேடிச்சென்றனர்.

இஸ்ரயேல் முழுவதும் நடந்திட்ட இந்த ஊழியத்தினுடைய செல்வாக்கு/தாக்கம் முற்றிலும் வீணாகவில்லை என்றும், கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதற்குப் பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி சீஷர்கள் மீது இறங்கின பிற்பாடு, இவர்கள் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பல்வேறு கோணங்களில் பிரசங்கித்து, கிறிஸ்துவுடன் இணையும்படி உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரையும் வரவேற்று, இவ்வாறாக அவருடன், இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாகும்படி வரவேற்றார்கள் என்றும் நாம் எண்ணுகின்றோம். கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணம் பண்ணுவதன் மூலம் சபையாகிய, கருநிலையிலுள்ள இராஜ்யத்திற்குள் அநேகர் பிரவேசித்தார்கள்; இந்த அநேகருக்குள், சந்தேகத்திற்கிடமின்றி ஏற்கெனவே அற்புதங்களைக் கண்டும், கேட்டவர்களும் இருந்திருக்கக்கூடும். மேலும் இவைகளை, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் சில நாட்களுக்குள்ளாகவே பல்லாயிரம் பேர், கிறிஸ்தவர்களானார்கள் என்ற விஷயம் உறுதிப்படுத்துகின்றது.

யூத யுகத்தின் முடிவிலுள்ள அறுவடையானது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் அறுவடைக்கு நிழலாக இருக்கின்றது. அப்பொழுதுபோல இப்பொழுதும் இயேசு, அறுவடையின் கர்த்தராகவும், அவருடைய சீஷர்கள், கூட்டிச் சேர்க்கின்ற வேலையில் அவருடைய பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனர். அப்பொழுதுபோல இப்பொழுதும், சீஷர்களை நோக்கி, அறுவடை மிகுதி என்றும், வேலையாட்கள் குறைவு என்றும், மேலும் இவ்விஷயத்தில் நம்மிடம் ஒருவேளை அவருடைய ஆவி இருக்குமாயின், அவருடைய வேலைக்கு நம்மை அனுப்பும்படி நாம் அவரிடத்தில் வேண்டினால், நம்மை அவர் அனுப்பப் பிரியம் கொள்வார் என்றும் கூறுகின்றார். அநேகர் இன்று இப்படியாக தினந்தோறும் ஜெபித்து, அறுவடை வேலையில் தங்கள் கைக்கு அகப்படுவதைச் செய்வதற்குத் தினந்தோறும் நாடுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களை அவர்களுடைய ஊழியத்தில் வழிநடத்துவதற்கும், இவர்களுடைய சொந்த நன்மைக்காகவும், மற்றவர்களுடைய நன்மைக்காகவும் இவர்களுடைய பலன்களை/விளைவுகளை ஆசீர்வதிப்பதற்கும் கர்த்தர் கிருபையுள்ளவராக இருக்கின்றார். அன்று இப்படியாக சீஷர்கள் அனைவரும் ஜெபம் பண்ணி, அறுவடை வேலையில் சில பாகங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டதுபோல, இன்றும் கூட உண்மையுள்ள சீஷர்களனைவரும் இப்படியாக ஜெபம் பண்ணிக்கொண்டு, ஊழியத்தை/வேலையை எதிர்ப்பார்த்து, ஊழியத்திற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துகின்றவர்களாகக் காணப்பட வேண்டும்.

அன்றும், இன்றுமுள்ள அறுவடை வேலையின் முறைகள் சற்று வித்தியாசமாக இருப்பினும், கிட்டத்தட்ட ஒன்றுதான். தற்காலத்து அறுவடை என்பது, மாம்சீக இஸ்ரயேலர்கள் விஷயம் அல்ல மற்றும் அறுவடையில் அறுக்கிறவர்களின் கைகளில் கொண்டு வரப்படும் ஆசீர்வாதங்கள், பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் அல்ல, அதாவது, சரீரப் பிரகாரமான நோய்களின் சுகப்படுத்துதல்கள் அல்ல. மாறாக இவைகளைப் பார்க்கிலும், மேலான ஆசீர்வாதங்கள் ஆகும். அதாவது, மாம்ச கண்களைத் திறப்பதைப் பார்க்கிலும், புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுவது என்பது மேலான ஆசீர்வாதமாகும்; மாம்ச காதுகள் திறக்கப்படுவதைப் பார்க்கிலும், கர்த்தருடைய மாபெரும் திட்டம் தொடர்பான காரியங்களில் செவிட்டுத் தன்மை அகற்றப்படுவது மிக விலையேறப் பெற்ற உதவியாகும். அன்றைய காலத்தைப் பார்க்கிலும், இன்று இராஜ்யம் அளிக்கப்படும் காரியம் மிகவும் உறுதியாக உள்ளது, மற்றும் அன்றைக்கு விட இன்றைக்கு மிகத் தெளிவாகவும் விவரிக்கக்கூடும். ஏனெனில், இராஜ்யம் வெகு சமீபமாய் இருக்கின்றது, வெகு அண்மையில்/வாசலருகில் காணப்படுகின்றது; மேலும், தற்கால அமைப்புகள் மாற்றிப் போடுவதற்கு ஏதுவாக, அசைக்கப்படுவதையும் உலகத்தாரால் பார்க்க முடிகின்றது; மற்றும் அசைக்கப்பட முடியாத உண்மையுள்ளவைகள் கர்த்தருடைய நீதியின் ஆளுகையின் கீழ் நிலைவரப்படுத்தப்படும்.

இன்று இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான விளைந்த கோதுமையைத் தேடும், அறுவடை வேலையாட்கள் ஒவ்வொருவரும், யூத அறுவடையின்போது காணப்பட்ட வேலையாட்களுக்குச் சொல்லப்பட்டுள்ள "பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" என்ற வார்த்தைகளை நினைவில் கொள்ள வேண்டும் (மத்தேயு 10:20). அற்புதகரமாகப் பேசும் வல்லமைகள் நமக்கு அருளப்படும் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. மாறாக, சத்தியம் மற்றும் அதன் ஆவியினால் நாம் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்; அப்பொழுது நாம் பேசுவது நம்முடைய சொந்த ஞானத்திற்குரியதாக இராது; நாம் அறிவிப்பது நமது சொந்த திட்டமாகவும் இராது. மாறாக, பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தையும், நமது தேவனாகிய கர்த்தருடைய திட்டத்தையுமே பேசுகின்றவர்களாக உண்மையில் காணப்படுவோம்.

**ஆமென்!**

---

# உன்னுடனே பேசுகின்ற நானே அவர்

தாகம் தீர்க்கவேண்டியே சமாரிய தத்தை ஒருத்தி தண்ணீர் மொள்ளவே
கிணற்றண்டை குடத்துடன் வந்தாளே,
கிணற்றின் சுவற்றினில் முன்பின் அறியாமாற்றான் ஒருவர் அமர்ந்தே இருக்கக்கண்டாளே,
ஸ்திரீயே, தாகத்திற்குத்தா என்றவர்கேட்க,கிணற்றின்நீரினை தாகம் தீர்க்கத் தந்தாளே:
மாற்றாக அவரோ,விலைமதிப்பில்லா ஜீவத்தண்ணீரைஇலவசமாகவே கொடுத்தாரே,
தன் வாழ்க்கை வரலாற்றையே வெளிப்படுத்தியதைக்கண்டே மாதோ மிகவும் வியந்தாளே,
மேசியா மட்டுமே இத்தனை ஆழமாய் கண்டுணர்வார் என்றவள் மாது ___ பெண்)
உள்ளத்தில் விசுவாசம் கொண்டாள். அவள் விசுவாசம் கண்டே அவர் மிகப்பாராட்டி,
உன்னுடனேபேசுகின்ற நானே அவர் என்றார்.
நாங்கள்கூட எஜமானே,வெறுமையாகவே நீர் வீழ்ச்சியிடம் வந்தே குடித்தோம், குடித்தோம்,
வீணாகவே குடித்து வந்தோம்,எம்மை திருப்தியாக்கும் நீரும் நீர்தானே, (நீங்கள்தானே)
எங்களுக்கான தண்ணீரும் உம்மிடம்தானே காத்திருக்குதே, அதனைத்தாரும், நாங்கள்
குடிப்போம், மீண்டும் தாகம்கொள்ளவேமாட்டோம்,உம்மில் விசுவாசம் கொள்ள துணிவற்று
நிர்பந்த நிலையிலே உள்ளோம் என்பதை எங்கள் கட்டுக்கடங்கா அலைபாயும் இதயமோ
தன் உள்ளேஉள்ளதை வெளிப்படுத்திக்காட்டுதே,உன்னுடனேபேசுகின்ற நானே அவர்
என்ற இரக்கமிகு வார்த்தைகளை எம் செவிகள் மீண்டும்கேட்கவே ஏங்குகிறோமே,
கண்களைத்திறந்துவைத்த கருணையாளர் கவனிப்புக்குப்பின்வெறுப்பும் சீற்றமும்
உந்தித்தள்ள,ஜெப ஆலயத்திலிருந்தே சபித்துப்புறம் தள்ளினதால் சுற்றித்திரிந்து,
தனக்குமிகப்பரிச்சயமான பெருவழிப்பாதை தனைமீண்டும் கண்டுபிடித்தே,
திறமையுடன்தனக்கு ஆதுரவு அளிப்பவரைத்தேடியே வந்தார்.
அவர் தேடுவது மேசியாவாகக்கூட இருக்கலாம்,
ஆஹா, சுடரொளிவீசும் முகத்துடன் ஒருவர்அவரருகினில் வந்தே,
உன்னுடனேபேசுகின்ற நானே அவர் என்றாரே,
எனவேதான் எம் ஆண்டவரே, ஒளி மங்கிய எம் கண்கள் திறக்கப்பட்டாலே,
எம் நண்பர்கள் உம் குணமாக்கும் வல்லமையை இழிவாய் பழித்துச்சொன்னாலே,
எம் அருகினில் நீர் இருப்பீர், ஆற்றித்தேற்றும் வார்த்தையோடே,எம் துக்கமிகு நேரங்களை
உம் மகிழ்ச்சிமிகு வார்த்தைகளால் இனிமையானதாய் மாற்றிடுவீர்,
வாழ்க்கையின் திறமையான சூழ்ச்சிமிகு நேரங்கள் எம்மைத்தடுமாறச்செய்தே,உள்ளே
வைத்துப்பூட்டிவிடும் போதினிலே,விசுவாசத்தின் தவறிழைக்காத சாவியினால்
அப்பூட்டினைத்திறக்கச்செய்யும்,உன்னுடனேபேசுகின்ற நானே அவர் என்ற உம்இரக்கமிகு
வார்த்தைகளை எம் செவிகள் கேட்கச்செய்யும்,
இறுமாப்பும் செறுக்கும்கொண்ட மாந்தரோ, இன்னுமோர் அடையாளம் வேண்டி நிற்பார்,
வீணாகவே, உச்சி வானிலும், அடிவானிலும் தேடியேபார்ப்பார், மேலாடையை
இறுக்கிக்கட்டியே வேகவேகமாய் நடந்து செல்லும் அவரோடே பயணிக்க நேர்கையிலே,
அவர் மாசகற்றுவதிலே திறமையைக் கையாண்டு, பகுத்தறிந்து,அவரை நடத்த வேண்டுமே,
ஆனால்தேவனின் வழியினில் தாழ்மையாய் நடப்பவர், கண்களை மூடிக்கொள்ளாதவர்
இரட்சகரைக் கண்டாரே, அவர் சோதனையின்நேரமோ பிரகாசமாகுமே, இந்த அச்சாரமிகு
வார்த்தைகளோடே, உன்னுடனேபேசுகின்ற நானே அவர் என்றே கூறிடுவீரே.

-R.B. ஹென்னிங்ஸ்

R 2651

# "ஜீவ அப்பம் நானே"

## யோவான் 6:22-40

ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு போஷித்த அற்புதத்தில் பந்தி அமர்ந்து புசித்த திரளான ஜனக்கூட்டத்தாரில் சிலர், அந்த அற்புதத்தினிமித்தமாக ஆழமான தாக்கம் அடைந்தவர்களாக, இயேசுவிடம் மிகுந்த மதிப்புக் கொள்ளத்தக்கதாகவும் ஏவப்பட்டனர். மேலும், இவர்களில் அநேகர் (மிகவும் அதிகமானவர்கள் என்று எண்ண முடியாது) இத்தகைய ஆச்சரியமான வல்லமைகளையுடைய மாபெரும் போதகரின் சீஷர்களாகத் தாங்கள் ஆகுவதன் மூலம், தங்களது தேவைகள் சந்திக்கப்படும் என்றெண்ணி அவரைப் பின்தொடர முடிவு செய்தனர். (வியாதியும், வேதனையுமான) இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படும் ஜனங்கள் இப்படியாக அவரைப் பின்தொடர முடிவுபண்ணுவதற்கு, அவருடைய வல்லமை ஒரு தூண்டுதலாகக் காணப்பட்டது. கப்பர்நகூமில் அவரை ஜனங்கள் கண்டு, அவருடைய சீஷராக வேண்டும் என்ற தங்களது விருப்பத்தை அவரிடம் தெரிவித்து, இந்த விருப்பம் எப்படியாக தங்களை அவரிடத்தில் வழிநடத்தி வந்தது என்று கூறினபோதோ, அவர்களின் இந்த விருப்பம் சுயநலத்தின் அடிப்படையிலே உள்ளது என்றும், தாம் பிரியப்படும் சத்தியத்தின் அடிப்படையிலான விருப்பத்தின் வகையல்ல என்றும் அவர்களிடம் ஆண்டவர் கூறிவிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இந்த ஜனங்களுக்கு மாத்திரமல்லாமல், இவர்கள் வாயிலாகத் தம்முடைய சீஷர்களுக்கும், நாடப்பட வேண்டிய சரியான காரியம் தொடர்பான மிகவும் விலையேறப்பெற்ற பாடம் ஒன்றை நமது காத்தர் கூறினார்; அதாவது, ஜீவியத்தினுடைய பிரதான இலட்சியமும், நோக்கமும், விருப்பமும், அழிந்துப்போகக்கூடிய உணவாகவும், பூமிக்குரிய உணவாகவும், கண நேரத்தில் மறைந்துப் போகக்கூடிய பூமிக்குரிய சொகுசுகள், பூமிக்குரிய இன்பங்களாக இராமல் மாறாக, தற்கால மரிக்கின்ற நிலையையும் தாண்டி, நித்தியஜீவனை அடைவதே அனைவருடைய பிரதானமான இலட்சியமாக இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். கொஞ்சக் காலம் நம்முடைய மாம்சீக சரீரங்களைத் தக்கவைப்பதற்குப் பூமிக்குரிய உணவுகளை அளிப்பது மாத்திரம் தேவன், தம்முடைய சிருஷ்டிகளுக்குப் பண்ணியிருக்கும் ஏற்பாடாக மாத்திரம் காணப்படாமல் மாறாக, இதிலும் அதிக முக்கியமாக ஆவிக்குரிய உணவில்/போஷாக்கில் நாம் ஒருவேளை பங்குக்கொள்ளும் பட்சத்தில், நாம் நித்தியஜீவனை அடையத்தக்கதாகவும் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்று கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

தாம் நிகழ்த்தியுள்ள இந்த அற்புதமும், அதன் ஆசீர்வாதமும், தேவனுடைய குமாரனாகிய தம்மால் மாத்திரமே கொடுக்கக்கூடிய மிகவும் விலையேறப்பெற்ற ஜீவ அப்பத்தின் அதாவது, ஒரு மாபெரும் அன்பளிப்பின்/ஈவின் உதாரணம் மாத்திரமே என அன்றிருந்த அவர்களுக்கும் சரி, நமக்கும் சரி மற்றும் அனைவருக்கும் கர்த்தர் புரிய வைத்தார். பூமிக்குரிய உணவைத் தம்மால் வழங்க முடிந்ததுபோல, நித்தியஜீவனுக்குரிய அப்பத்தையும் தம்மால் வழங்க முடியும் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தினதின் மூலம், அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்றும், பரம பிதா தம்மை முத்திரையிட்டு, குறித்துள்ளார் என்றும், தமக்கு அருளப்பட்ட வல்லமைகளில் குமாரத்துவத்திற்கான ஆதாரத்தையும், நிரூபணத்தையும் தமக்குப் பிதா அருளியுள்ளார் என்றும் தம்மைக்குறித்துக் கர்த்தர் அறிக்கைப் பண்ணினார். முத்திரை பரிசுத்த ஆவியாக, தேவனுடைய பரிசுத்தமான வல்லமையாக இருந்தது; மேலும், இந்தப் பரிசுத்த ஆவியானது நமது கர்த்தராகிய இயேசுவின் மேல் செயல்பட்டதின் காரணமாகவே, அவரால் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றவும் முடிந்தது, மற்றும் வாற்கோதுமை அப்பத் துண்டுகளையும், இரண்டு சிறு மீன்களையும், திரளான மக்கள் கூட்டத்தைப் போஷிக்குமளவுக்குப் பெருக்கவும் முடிந்தது. இந்த வல்லமைகள் கர்த்தருக்குள், தேவனுடைய பரிசுத்த ஆவி இருக்கின்றது என மனிதர்களுக்குச் சாட்சிகளாக (அ) வெளியரங்கமான வெளிப்படுத்தல்களாக இருக்கின்றது; இன்னுமாக, கர்த்தருக்குத் தேவனோடு கூட, அவருடைய கனமிக்க பிரதிநிதியாக/குமாரனாக இருக்கும் உறவிற்கு முத்திரையாகவும் இருக்கின்றது. இந்தச் சாட்சியங்களுடைய பெலத்தினால், இந்தச் சாட்சிகளைப் பார்த்திட்ட சரியான இருதய நிலையிலுள்ள சாட்சியாளர்கள் நமது கர்த்தருடைய வாக்கை, பிதாவிடமிருந்து வந்த செய்தியெனச் செவிசாய்த்திட ஆயத்தப்பட்டிருக்க வேண்டும்.

கர்த்தர் கொடுத்திட்ட சொற்பொழிவிற்குப் பலனில்லாமலில்லை; நித்தியஜீவனைக் கொடுக்கும் அப்பமே நாடப்பட வேண்டிய முக்கியமான உணவு என்ற கருத்தினுடைய தாக்கத்தை,

கேட்டுக் கொண்டிருந்தவர்கள் உணர்ந்தார்கள்; மேலும், அவர்கள் யூதர்களாக இருக்கின்றபடியால், தேவன் தங்கள் தேசத்துடன் கிரியைகளின் ஓர் உடன்படிக்கையை, நித்தியஜீவனுக்கான வாக்குத்தத்தத்துடன் அதாவது, மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் பண்ணியுள்ளார் என்ற எண்ணமும்கூட அவர்களுடைய மனங்களுக்கு முன்பாக இருந்தது. ஆகவேதான் நித்தியஜீவனை அடையத்தக்கதாக, தேவனைப் பிரியப்படுத்தும் எந்தக் கிரியையைத் தாங்கள் நடப்பிக்க வேண்டும்? என்றும் இக்காரியங்கள் தொடர்பான விஷயத்தில் தங்களுக்கு உதவி புரியும் எச்செய்தியையும் தங்களுக்குக் கொடுக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டார்கள்.

கர்த்தரை விசுவாசிப்பதே கிரியையாகும். அதாவது, தேவனால் மிகவும் அங்கீகரிக்கப்படும் கிரியையாகும்; அதாவது, தேவன் அவர்களை ஏற்றுக்கொள்வதற்குரிய ஒரே கிரியை என்று நமது கர்த்தர் கொடுத்திட்ட பதில் முதலில் நமக்குக் கொஞ்சம் விநோதமாய்த் தோன்றும். இதன் அர்த்தத்தைப் பின்னர் பார்க்கலாம். அவரைக் கேட்டுக்கொண்டு நின்றவர்கள் அவர் கூறினதின் அர்த்தத்தை அப்படியே புரிந்துக்கொண்டார்கள்; அதாவது, தெய்வீக வாக்குத்தத்தங்களின்படி, தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், பூமியின் சகல குடிகளை ஆசீர்வதிக்க ஆரம்பிப்பதற்கென, உலகத்தில் வரும் மேசியாவாக, தேவனுடைய குமாரனாக இயேசுவைத் தாங்கள் அங்கீகரிப்பதே, தேவனுடைய பார்வையில் மிகவும் பிரியமான காரியமாக இருக்கும் என்ற அர்த்தத்தில் இயேசு கூறினதை, அவர்கள் அப்படியே புரிந்துக்கொண்டனர். ஆனால், அவர்கள் அவருடைய மேசியாத்துவத்திற்கான ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள்; அதாவது, அவருடைய அன்பின் ஆவியிலும், இரக்கத்திலும், பெருந்தன்மையிலும், தூய்மையிலும், உண்மையிலும் அவருடைய உபதேசங்களிலும், வெளிப்படும் கர்த்தர் இயேசுவின் மீதான தேவனுடைய அடையாளத்தை/முத்திரையைத் தாங்கள் ஏற்கெனவே கண்டிருப்பதை உணர்ந்துக்கொள்வதற்குப் பதிலாக, அவருடைய மேசியாத்துவத்திற்கான ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள். இன்னுமாக அவரிடத்தில் தெய்வீக வல்லமை இருப்பதற்கான ஆதாரங்களையும், வெளிப்படுத்திய வெளிப்படுத்தல்களையும், (உதாரணத்திற்கு முந்தின நாள் நடந்த அற்புதத்தில் விளங்கின ஆதாரங்களையும்) தாங்கள் கண்டிருப்பதை உணர்ந்துக்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் அவருடைய மேசியாத்துவத்திற்கான ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள். இதற்குக் காரணம், வேதவாக்கியங்கள் எங்கும் தெரிவிப்பதுபோல, அவர்கள் கடின இருதயமுடையவர்களாய் இருந்தார்கள் (மாற்கு 3:5; யோவான் 12:40); அதாவது, அவர்கள் விசுவாசமற்ற தன்மையிலும், எளிதில் தாக்கம் அடைந்திடாமலும் இருப்பவர்கள் ஆவர்; அதாவது சந்தேகம் கொள்பவர்கள்; ஆகவேதான் இயேசுவின் மீது காணப்பட்ட தேவனுடைய முத்திரைக்கான இந்த அடையாளங்கள் (அ) சாட்சிகள் அவர்களுக்குப் போதுமானதாய் இருக்கவில்லை.

ஒருவேளை அடையாளங்களுக்கு மேல் அடையாளங்கள் கொடுக்கப்பட்டாலுங்கூட, "இதே அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயமானது," ஒன்றல்ல, பத்து அடையாளங்கள் கொடுக்கப்பட்டாலும், அவ்வடையாளங்களைப் புறக்கணிக்கவே செய்யும் என்பதை நம்மால் உணர முடிகின்றது. இப்படியாகவே, பார்வோனின் விஷயமும் காணப்பட்டது; பார்வோன் பிந்தின அடையாளங்களைக்காட்டிலும் மோசேயால் கொடுக்கப்பட்ட முதல் அடையாளத்தினாலேயே உண்மையில் அதிகமாய்த் தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டார்; இந்த ஒவ்வொரு அடையாளங்களும் சரியற்ற ஆவியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதினால், முடிவுவரை பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது. இப்படியாகவே, கர்த்தருடைய வாக்குத்தத்தம் தொடர்புடைய காரியத்தில், இன்று சிலருடைய விஷயமும் காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்கள், "நான் கொண்டுள்ள இந்தத் தவறான அபிப்பிராயத்திற்கு எதிர்மாறாக அப்போஸ்தலர் கூறியுள்ளாரா? என்று கேட்கின்றனர்; ஒருவேளை ஆம் என்று நிரூபிக்கப்பட்டால், வேறே அப்போஸ்தலர்கள் இது தொடர்பாகப் பேசியுள்ளார்களா என்றறிய வகைத் தேடுகின்றனர்; அடுத்ததாக, கர்த்தர் இதைக்குறித்துப் பேசியிருக்கின்றாரா என்றும், அடுத்ததாக, தீர்க்கத்தரிசிகள் யாரேனும் பேசியுள்ளார்களா என்றறிய வகைத் தேடுகின்றனர்; இவர்கள் நம்பிக்கை வைப்பதற்காகத் தேடாமல், நம்பாமலிருக்க வேண்டும் என்பதற்காகச் சாக்குப்போக்கைத் தேடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் பொதுவாக, சகல சாட்சியங்களும் கொடுக்கப்பட்டாலுங்கூட, சாட்சியங்களின் திரட்சியினால் நம்பப் போவதும்/நம்புவதும் இல்லை. மாறாக, வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று உண்மையில் நம்புகின்றவர்கள், அதன் அதிகாரப்பூர்வமான சகல சாட்சிகளையும் நம்புவார்கள். அது கர்த்தரால் (அ) அப்போஸ்தலரால் (அ) தீர்க்கத்தரிசியினால் கொடுக்கப்பட்டிருந்தாலும் சரி, ஒருமுறையோ (அ) பலமுறையோ கூறப்பட்டிருந்தாலும் சரி நம்புவார்கள்.

நமது கர்த்தர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றவர்களின் மனதில் கிரியை செய்திட்ட சந்தேகம்/அவநம்பிக்கையானது அவர்களுடைய வார்த்தைகளில் வெளிப்பட்டது. பின்வரும் அர்த்தத்தில் அவர்கள் பேசினார்கள்; அதாவது, "நீர் தேவனுடைய குமாரன் என்பதைக் குறிக்குமளவுக்கு, உம்முடைய அற்புதம் மிகப் பிரமாண்டமானதாகவோ (அ) மிகவும் ஆச்சரியமானதாகவோ இருந்ததாக எங்களால் ஒத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், இதைப் போன்றதான வல்லமையை, மோசேயும் செயல்படுத்தினார் என்பதை நாங்கள் நினைவில் கொண்டிருக்கின்றோம்; மோசே நம்முடைய பிதாக்களுக்கு அதாவது, முழு இஸ்ரயேல் தேசத்துக்கும், வனாந்திரத்தில் நீண்ட காலம் உணவு வழங்கினார். அதுவும் அப்பமும் மீனும் கொஞ்சமும் இல்லாமலேயே, மன்னாவை வழங்கினார்."

மன்னா, மோசேயினால் உண்டாக்கப்படவில்லை என்றும், மன்னாவை அனுப்பி வைக்கும் விஷயத்தில் மோசேக்கு எந்தப் பங்கும் இல்லை என்றும், மன்னா, பரலோகப் பிதாவினுடைய நேரடி ஏற்பாடு/வழங்குதல் என்றும் நமது கர்த்தர் பதில் கொடுத்தார். இவ்விஷயத்தில், மோசே முகவராகக் கூட (agent) இல்லை. மேலும், வனாந்தரத்தில் கொடுக்கப்பட்ட மன்னாவானது, நித்தியஜீவனுக்குரிய மெய்யான அப்பத்திற்கு, அதாவது மெய்யான மன்னாவிற்கு, அதாவது தமக்கும், தம்மால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்திற்கும், தம்முடைய கரங்களினின்று ஜனங்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ள வேண்டுமென அவரால் விரும்பப்பட்ட மெய்யான மன்னாவிற்கும் நிழலாக இருக்கின்றது என நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

கர்த்தர் இயேசு தம்மைத்தான் குறிப்பிடுகின்றார் என்பதை அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை; ஆனால் தங்களது பிதாக்களுக்கு வனாந்தரத்தில், பரலோகத்திலிருந்து தேவன் மன்னாவைக் கொடுத்துப் பேணினதுபோல, இப்பொழுது இந்த மாபெரும் போதகராகிய இயேசு, உயர்வான ஒருவகை மன்னாவைக் குறித்துத் தங்களுக்குக் கூறிக் கொண்டிருக்கின்றார் என்றும், இந்த உயர்வான மன்னாவகைகளைப் புசிப்பதன் வாயிலாக நித்தியஜீவன் கிடைக்கும் எனக் கூறிக்கொண்டிருக்கின்றார் என்றுமுள்ள மாம்சபிரகாரமான சிந்தை அவர்களுக்கு ஏற்பட்டது; ஆகவே அவர்கள், "ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்!" என்று கேட்டார்கள். அப்போது நமது கர்த்தர், "ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்று உவமை பாணியில் கூறினார் (யோவான் 6:35).

"என்னிடத்தில் வருகிறவன்" என்ற வார்த்தைகளிலிருந்து, கர்த்தர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குக் கலிலேயா கடலைத் தாண்டி, அவரிடம் வந்து சேர்ந்தவிதம் தொடர்புடைய அர்த்தத்தில் கர்த்தர் பேசவில்லை என்பது தெரிகின்றது. நீதியின் மீதான பசிதாகத்தோடும், நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாஞ்சையோடும், மற்றும் நித்தியஜீவனை அடையத்தக்கதாக ஜீவஅப்பத்தின் மீதான வாஞ்சையோடும் கர்த்தரிடத்தில் வருவதே "என்னிடத்தில் வருகிறவன்" என்ற வார்த்தைக்கான அர்த்தமாகப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். இப்படியாக, கர்த்தரிடத்தில் வரும் அனைவரும் அதாவது, இப்படியான சரியான இருதய நிலையில் வரும் அனைவரும் அவரிடத்தில் திருப்தியடைவார்கள். இதைப்போலவே, "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்ற வார்த்தைகள், இயேசு என்ற ஒருவர் ஜீவித்துள்ளார் என்று மாத்திரம் விசுவாசிப்பதைப் பார்க்கிலும் அதிகமான விசுவாசம் வைப்பதை அர்த்தப்படுத்துவதாய்ப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், "பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" என்று எழுதப்பட்டுள்ளது; ஆகவே, கர்த்தரை அறிவுப்பூர்வமாக மாத்திரமல்லாமல், "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்" என்று எழுதியிருக்கிறபடி, இருதயப்பூர்வமாகவும் ஏற்றுக்கொள்வதுதான் "விசுவாசமாயிருக்கிறவன்" என்பதற்கான அர்த்தமாகப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். கர்த்தரைத் தேவனுடைய குமாரன் என்றும், இவருக்குள்ளாகவே தெய்வீக வார்த்தைகளின் மகா மேன்மையும் அருமையுமான சகல வாக்குத்தத்தங்களும் நிறைவேற்றப்படும் என்றும் உணர்ந்து, கர்த்தரை இருதயத்திலிருந்து விசுவாசிக்கின்றவன், இந்த விசுவாசத்தைத் தக்கவைத்துக்கொள்வது வரையிலும் அத்தகைய ஒரு புத்துணர்வையும், அத்தகைய ஒரு தாகத்தணிப்பையும், அத்தகைய ஒரு திருப்தியையும் அடைவான் (ரோமர் 10:10). இப்படிப்பட்டவர்கள், கிறிஸ்துவுக்குள்ளான தெய்வீக முன்னேற்பாடுகள் மிகத் திரளாய் இருப்பதினால், இன்னும் வேண்டும் என்று கேட்பதற்கில்லாமல், "வேறு எதைக் காட்டிலும் இதுவே என்னுடைய ஏக்கங்களைத் திருப்திப்படுத்துகின்றது" என்று ஆச்சரியத்தில் கூறுவார்கள்.

இப்பொழுது 29-ஆம் வசனத்தில் இடம்பெறும் கர்த்தருடைய வார்த்தைகளை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது; "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற (தேவனுக்குப் பிரியமாய் இருக்கும்) கிரியையாயிருக்கிறது." விசுவாசத்தோடு தொடர்புடைய ஒரு கிரியை இருக்கின்றது; நமது கைகளால் செய்யப்படும் கிரியையாயிராமல் மாறாக, நம்முடைய தலைகளினாலும், நமது இருதயங்களினாலும் செய்யப்படுகின்ற கிரியையாய் இருக்கின்றது; மேலும், இந்தக் கிரியை கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கத்தக்கதாய் இருப்பதுபோல, நமது கைகளினால் செய்யப்படும் எந்த ஒரு கிரியையும் அங்கீகரிக்கப்படாது. நம்முடைய விழுந்துபோன நிலையிலும், பூரணமற்ற நிலையிலும், பூரணமான எதையும் நம்மால் செய்வது கூடாத காரியம் என்றும், தேவனும், அவருடைய சகல கிரியைகளும் பூரணமாய் இருப்பதினால் பூரணமற்ற மற்றும் எவ்விதமான பாவத்தன்மையுள்ள எதையும் அவரால் சம்மதிக்க முடியாது என்றும் நாம் உணரும்போது, விசுவாசத்தைத்தவிர நாம் அவருக்கு அளிக்கும் மிகச் சிறப்பான கிரியைகளும், அவரால் அங்கீகரிக்கப்பட முடியாது என்பதை நம்மால் உடனடியாக உணர்ந்துக்கொள்ள முடியும்.

ஆனால், நமக்காக ஒரு மாபெரும் கிரியையை/வேலையைத் தேவன் செய்வதாகத் தெரிவித்துள்ளார்; மேலும், மீட்பரை நமக்குத் தேவன் வழங்கியதின் மூலம், அந்த மாபெரும் கிரியையை/வேலையைத் தேவன் செய்துள்ளார்; இந்த மீட்பர் மூலமாகவே, நம்முடைய சந்ததிக்கான ஈடுபலிச் செலுத்தப்பட்டது; இப்பொழுது தேவனால் நீதியுள்ளவராகவும் இருக்க முடியும், அதேசமயம் இயேசுவில் விசுவாசம் வைக்கிறவர்களை அவர் நீதிமானாக்குகிறவராகவும் இருக்கமுடியும். ஆகவே, நாம் குற்றத்தீர்ப்பின் கீழ்க் காணப்படுவதுவரையிலும், நாம் செய்யும் எந்தக் கிரியையும் தேவன் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தாலும், அவருடைய சொந்த ஏற்பாட்டின்படி, கிறிஸ்துவின் மீதான நமது விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, அந்த விசுவாசத்தினால் நம்மை நீதிமானாக்கவும் செய்கின்றார்; நம்மால் செய்ய முடிகின்ற இந்த முதலாவது கிரியையைத்தான் தேவன் கேட்கின்றார். இந்த முதலாவது கிரியை வரிசையில் முதலாவதாகவும், அடிப்படையாகவும் கொண்டு, பின்தொடரும் (மற்ற) கிரியை தவிர, மற்றபடி வேறெந்தக் கிரியையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. கர்த்தருடைய பார்வையில், விசுவாசத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தை, அனைவரும் புரிந்துக்கொள்வது நலம்! "விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்." மேலும், நாம் அதிகமாக விசுவாசத்தைக் காட்டும்பொழுது, நாம் தேவனை அதிகமாகப் பிரியப்படுத்துகின்றவர்களாய் இருப்போம்; எதையும் எளிதில் நம்புகிற கண்மூடித்தனமான விசுவாசம் அல்ல, தேவன் கூறாத ஏதோ ஒன்றின் மீதான விசுவாசம் அல்ல, நம்முடைய சொந்த கற்பனை (அ) மற்ற மனிதர்களுடைய கற்பனையின் மீதான விசுவாசம் அல்ல, மாறாக தேவன் சொல்லியுள்ளவைகளின் மீதான விசுவாசமும், அதன் மீதான உறுதியான, நிலையான நம்பிக்கையுமாகும்; இதுவே தேவன் அங்கீகரிக்கும் விசுவாசமாகும். மேலும், இந்த விசுவாசத்தைக் காட்டுகிற யாவருக்கும், இந்த விசுவாசமே, நீதிமானாக்கப்படுதலுக்கான அஸ்திபாரமாக ஆகின்றது. "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5:1).

இங்குக் கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய, பரம அழைப்பிற்குரிய அடுத்த படிகளை விவாதிக்கவில்லை. ஆகையால், நாமும் இப்பொழுது விவாதிக்கவில்லை. தேவனை அணுகுவதற்கு நமக்கு அவசியமாயுள்ள முதல் படியை மாத்திரம் அதாவது, நீதிமானாக்கப்படுதலை மாத்திரம் கர்த்தர் கையாளுகின்றார். நீதிமானாக்கப்படுதலுக்கு அவசியமானது, கிறிஸ்துவை ஜீவ அப்பமாக ஏற்றுக்கொள்வதாகும்; இந்த நீதிமானாக்கப்படுதலுக்கு முன்னதாக, தகப்பனாகிய ஆதாமின் மீறுதல் மூலமாக நமது சந்ததி மேல் மரணம் கடந்து வந்துள்ளதால், நம்மில் ஜீவன் இல்லை என்பதையும், தகப்பனாகிய ஆதாம் மீதும், அவர் காரணமாகச் சந்ததி மீதுமுள்ள தண்டனையைச் சந்திக்கத்தக்கதாகக் கர்த்தராகிய இயேசு மாம்சமாக்கப்பட்டார் என்பதையும், மற்றும் இப்பொழுது கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய இந்த இலவசமான கிருபையை ஏற்றுக்கொள்பவர்களும், கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்பவர்களும், உலகத்தின் ஜீவனுக்கான தமது ஜீவனை ஈடுபலியாக வழங்கின அபிஷேகம் பண்ணப்பட்டவரில், தேவன் ஏற்பாடு பண்ணியுள்ள மாபெரும் நன்மைகள் மற்றும் ஆசீர்வாதங்களில் பங்குக் கொள்பவர்களும், புசிக்கின்றார்கள் என்பதையும் உணர்ந்துக்கொள்ள வேண்டும். யாரொருவன் இந்த உண்மையை மனதளவில் ஏற்றுக்கொண்டு, தனது இருதயத்திலே அதனை புசிக்கின்றானோ, அவனே மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்கிறவனாகச் சித்தரிக்கப்படுகின்றான். அதாவது, அவருக்குள் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் திரும்பக்கொடுத்தலின்

ஆசீர்வாதங்கள் (அல்லது இந்த யுகத்தில், நீதிமானாக்கப்படுதல்) ஆகியவற்றில் பங்கடைவதாகச் சித்தரிக்கப்படுகின்றான்.

நமது கர்த்தர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றவர்கள், அவரை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் காண்பித்த தாமதமும், இஸ்ரயேல் ஜனங்கள் மத்தியில் காணப்பட்ட தாமதமும், தாம் மேசியா அல்ல என்பதற்கான நிரூபணமாக இராமல் மாறாக, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கான நிலைமையில் அவர்கள் இல்லை என்பதற்கான நிரூபணமாகவே உள்ளது என்று தம்மைக் கேட்டுக்கொண்டு நின்றவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். இன்னுமாக, தாம் முழு இஸ்ரயேல் ஜனங்களையும் கவர்வது, தேவனுடைய நோக்கமாயிராமல் மாறாக, பிதா தமக்குக் "கொடுத்தவர்களை" அதாவது, பிதாவைப் பிரியப்படுத்துகின்றவர்களாய்க் காணப்படுபவர்களை, அதாவது, பிதா வழங்கியுள்ள இந்த வாய்க்கால் வழியாக இன்னும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாய் இருப்பவர்களை மாத்திரம் தம்முடைய வாயினின்று புறப்பட்டு வரும் கிருபையான வார்த்தைகள் வாயிலாகவும், அற்புதங்கள் வாயிலாகவும், அல்லது கர்த்தருக்குள் விளங்கும் வல்லமைக்கான சாட்சிகள் வாயிலாகவும் தம்மண்டைக்கு இழுத்துக் கொள்வதே தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது என்று கர்த்தர் சுட்டிக்காட்டினார். எனினும், அனைவரும் தம்மண்டைக்கு இப்படியாக ஈர்க்கப்படுவார்கள் என்பது எதிர்ப்பார்க்கப்படவில்லை; எனினும், பிதா ஈர்த்துக்கொள்ளும் அனைவரையும், ஏற்றுக்கொள்வதில் தாம் மிகுந்த சந்தோஷத்துடன் காணப்படுவார்; காரணம், கர்த்தர் தம்முடைய சொந்த வேலைக்காகப் பூமியில் காணப்படாமல் மாறாக, பிதாவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே வந்துள்ளார் என்றும், அந்த நோக்கங்களுக்காக தாம் முழு இசைவுடன் காணப்படுகின்றார் என்றும் அவர்களுக்குக் கர்த்தர் உறுதியளித்தார்.

பின்வரும் இரண்டு வசனங்களிலும், நமது கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களிலுள்ள இரண்டு வகுப்பாரை வித்தியாசப்படுத்திக் காண்பிக்கின்றார். வசனம் 39-இல் இந்தச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரைக் குறிப்பிடுகின்றார், மற்றும் 40-ஆம் வசனத்தில் இந்தத் தற்கால யுகத்தைப் பின்தொடரும், ஆயிர வருட யுகத்தில் மனுக்குலம் மீது வரும் பொதுவான ஆசீர்வாதங்களையும் மற்றும் நமது கர்த்தரால் தம்முடைய சொந்த ஜீவன் எனும் அதிக விலையைக் கொடுத்து வாங்கப்பெற்ற நித்தியஜீவனென்னும் இந்த மாபெரும் அன்பளிப்பினால் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக, ஒவ்வொரு சிருஷ்டிக்கும் ஆயிர வருட யுகத்தில் வழங்கப்படும் வாய்ப்புகளையும் குறித்துக் குறிப்பிடுகின்றார்.

தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, அடிக்கடித் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் இயேசுவுக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்டவர்களாகப் பேசப்பட்டுள்ளனர். ஆனால், முழு மனுக்குலமும் அவருடையதாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். காரணம், மனுக்குலத்தை தமது விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்ததினால் இயேசு வாங்கியுள்ளார். இந்த யுகத்தில் ஒரு விசேஷமான வகுப்பாரைக் குமாரனிடத்திற்குப் பிதா இழுத்துக் கொள்கின்றார். மேலும், இந்த ஒரு வகுப்பாரை, கர்த்தருடைய ஆயிர வருட இராஜ்யத்தில், கர்த்தரோடு உடன் சுதந்தரர்களாகவும், துணையாளிகளாகவும் காணப்படுவதற்கெனக் கர்த்தருக்குப் பிதா கொடுத்துள்ளார்; இவர்கள் சிலசமயம், அவருடைய "சகோதரர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர், ஏனெனில் இயேசு, "அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர்" என்று கூறப்பட்டுள்ளது (ரோமர் 8:29); இன்னுமாக, இவ்வகுப்பார் இயேசுவினுடைய மணவாட்டி என்றும், உடன் சுதந்தரர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்; ஆனால், இரட்சிக்கப்படும் மனுக்குலமானது கிறிஸ்துவின் பிள்ளைகள் என்றும், இவர்களுக்குக் கர்த்தர் இயேசு, "நித்திய பிதா" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (வெளிப்படுத்தல் 21:9; 22:17; ரோமர் 8:17; ஏசாயா 9:6).

கர்த்தர் இயேசுவுக்குக் "கொடுக்கப்பட்ட" அனைவரும் இரட்சிக்கப்படுவதும், அவர்களை (கடைசிநாளில்) எழுப்புவதும், இவ்வகுப்பாரில் ஒருவரும் இழந்துபோகாமல் இருப்பதும், பிதாவின் சித்தமாக இருக்கின்றது என நமது கர்த்தர் கூறினார். அப்படியானால், இரட்சிப்பு நிச்சயமாயுள்ள இவர்கள் யார்? இது தொடர்பாக அப்போஸ்தலனாகிய பவுல் கொடுத்திட்ட புத்திமதியின் வார்த்தைகளே இக்கேள்விக்கான நமது பதிலாகும்; பிதா முன்குறித்த மற்றும் தெரிந்தெடுத்துக் கொண்ட வகுப்பாரைக்குறித்து அப்போஸ்தலர் பவுல் பின்வருமாறு நமக்குத் தெரிவிக்கின்றார்:- இவர்கள் விசுவாசிப்பதின் மூலமாக இப்பொழுது கர்த்தர் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் ஆவர், மேலும், இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய, "பரம அழைப்பினுடைய" அழைப்பைக் கேட்டு, அதினிமித்தம் மிகுந்த தாக்கம் அடைந்தபடியால், சுவிசேஷத்தில் தங்களுக்கு முன்பாக

வைக்கப்பட்டுள்ள ஓட்டப்பந்தயத்தில், சகல பாரங்களையும் தள்ளி வைத்துவிட்டு, பொறுமையுடன் ஓடுகின்றார்கள்; மேலும், இப்படியாக இவர்கள் செயல்படும்போது, தெய்வீக வழிநடத்துதல் மற்றும் வழிக்காட்டுதலின் கீழ் இவர்கள், "தேவனுடைய நேச குமாரனுடைய சாயலை அடையத்தக்கதாக இவர்களது குணலட்சணங்கள் தொடர்பான விஷயங்களில் இவர்கள் வார்க்கப்பட்டு, வடிவமைக்கப்படுகின்றனர்" (ரோமர் 8:29).

பரம பிதா, இந்த வகுப்பார் தொடர்பான தம்முடைய முன்குறித்தலுக்கு எல்லைகளையும், நிபந்தனைகளையும் முடிவு செய்துள்ளார்; (அவர்தான் செய்தியை அனுப்பியிருந்தாலுங்கூட) நற்செய்தியை யார்யார் கேட்பார்கள் என்பது தொடர்பாகவும், எல்லைகளையும், நிபந்தனைகளையும் பிதா ஏற்படுத்தவில்லை; (தற்காலத்தில் பிதா ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை மாத்திரம் இழுத்துக் கொண்டிருப்பதினாலும் மேலும், அவர்தான் இழுத்துக் கொண்டிருந்தாலுங்கூட) கிறிஸ்துவுக்குள்ளான அவருடைய கிருபையான நற்செய்தியினிடத்திற்கு யார்யார் இழுக்கப்படுவார்கள் என்பது தொடர்பாக எல்லைகளையும், நிபந்தனைகளையும், பிதா ஏற்படுத்தவில்லை; (பிதா இந்த அழைப்பில் அக்கறை கொண்டவராக, இந்த அழைப்பை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரின் காரியங்களை மேற்பார்வையிட்டு, அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக சகலமும் செயல்படத்தக்கதாக பண்ணினாலுங்கூட) இயேசுவின் அடிச்சுவட்டில் சுயத்தைப் பலிச் செலுத்தும் ஓட்டத்தை ஓடத்தக்கதாக, இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரையும் வரவேற்கும்படிப் போய்க்கொண்டிருக்கும் அழைப்புத் தொடர்புடையதாக எல்லைகளையும், நிபந்தனைகளையும் பிதா ஏற்படுத்தவில்லை, மாறாக, கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரின் எண்ணிக்கைத் தொடர்பான விஷயத்திலும் மற்றும் இவ்வகுப்பாரில் அடங்குபவர்கள் அனைவரின் குணலட்சணம் தொடர்பான விஷயத்திலுந்தான் பரம பிதா முன்குறித்துள்ளார்; அதாவது, இந்தச் சுவிசேஷ யுகத்தில், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான பாடங்களை முற்றும் முழுமையாகக் கற்றுக்கொண்டு, நம்முடைய மீட்பராக மாத்திரமல்லாமல், நம்முடைய மாதிரியாகவும் இருக்கும்படிக்கு பிதா அனுப்பி வைத்துள்ள இயேசுவினிடத்தில் மிகவும் மகிமையுள்ளதாக வெளிப்பட்ட மாதிரிக்கு ஒத்த குணலட்சணத்தை வளர்த்திக்கொள்பவர்கள்தான், இவ்வகுப்பாரில் அடங்குவார்கள் என்று பரம பிதா முன்குறித்துள்ளார்.

இப்படியாக, தெய்வீக முன்னேற்பாட்டின் வழிநடத்துதல்களுக்குக் கீழ்ப்படிந்து, இருதயத்திலும், சித்தத்திலும், நோக்கத்திலும் (மாம்சத்தின் பூரணத்திலல்ல) கர்த்தர் இயேசுவுக்கு ஒத்த சாயலை அடைகின்றவர்கள் அனைவரும், இந்த மாபெரும் இரட்சிப்பில் இரட்சிக்கப்படுவதும், இயேசுவோடு "முதலாம் உயிர்த்தெழுதலிலும்" அது வழிநடத்தும் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்காளிகள் ஆகுவதும்தான் பிதாவின் சித்தமாக இருக்கின்றது. இவர்களில் ஒருவரும் இழந்துப் போகப்படுவதில்லை; இவர்களில் ஒவ்வொருவரும், நியமிக்கப்பட்ட காலத்தில் "கடைசி நாட்களில்" அதாவது, ஆயிரம் வருஷம் நாளின்போது, அந்த மகிமையான ஸ்தானத்திற்கு எழுப்பப்படுவார்கள். "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் (சீயோன்) சகாயம் பண்ணுவார்" (சங்கீதம் 46:5).

குமாரனுக்கு இராஜ்யத்தில் துணையாளர்களாகவும், உடன் சுதந்தரர்களாகவும் இருக்கும்படிக்கு, பிதாவினால் குமாரனுக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்டவர்களை அதாவது, இந்த யுகத்தில் தம்முடைய வழிநடத்துதல்கள் மூலம் இழுத்துக் கொண்டவர்களைப் பற்றி 40-ஆம் வசனத்தில் பேசப்படவில்லை; நமது கர்த்தர் இயேசுவினால் ஈடுபலி கொடுக்கப் பெற்றவர்களாகிய மீதமுள்ள மனுக்குலத்தைப் பற்றியே இவ்வசனத்தில் பேசப்படுகின்றது; மேலும், பிதாவினுடைய திட்டத்தின்படி, ஆயிரவருஷம் யுகத்தின்போது நமது கர்த்தர் இயேசு இவர்களைத் தம்மண்டைக்கு இழுத்துக்கொள்ளுவார். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" (யோவான் 12:32). ஆனால், பிதாவின் இழுத்துக்கொள்ளுதல் வலுக்கட்டாயமாக இராததுப்போல, குமாரனுடைய இழுத்துக்கொள்ளுதலும் வலுக்கட்டாயமாக இராது. பிதாவின் இழுத்துக்கொள்ளுதலை, இன்று பெரும்பாலானவர்கள் எதிர்ப்பதற்குக் காரணம் குருட்டுத்தனம், அறியாமை முதலியவை ஆகும். ஏனெனில், இவ்வுலகத்தின் அதிபதியானவன் இன்று ஆளுகை செய்து, வஞ்சித்துக் கொண்டிருக்கின்றான்; ஆனால், நம்முடைய அருமை மீட்பருடைய ஆயிரம் வருஷம் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போதும், இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தான் "கட்டப்படும்" போதும் (வெளிப்படுத்தல் 20:2) மற்றும் கர்த்தரை அறிகின்ற அறிவானது பூமி முழுவதையும் நிரப்பும் போதும், மீட்பராலும், அவருடைய சரீரமாகிய மகிமையில் அவரோடு இணைந்துள்ள சபையாலும் மனுக்குலத்தின் மீது செயல்படுத்தப்படும் இழுத்துக்கொள்ளுதலுக்கான செல்வாக்கானது, அதிகமான பலன்களைக் கொடுக்கும் என்றும்,

இதன் காரணமாக அநேகர் இந்தச் செல்வாக்கிற்கு/தாக்கத்திற்கு இணங்கி, உண்மையாகவும், இருதயப்பூர்வமாகவும் கர்த்தரிடத்தில் வந்து, கர்த்தருக்குள் தேவன் அளித்துள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், பாவத்தை வேண்டுமென்று விரும்புகிறவர்களும், இராஜ்யத்தின் நிபந்தனைகளையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் மறுக்கிறவர்களும் தவிர மற்றபடி அனைவரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் நாம் நியாயமாக அனுமானிக்கின்றோம்.

40-ஆம் வசனத்தில், இந்த வகுப்பார் அனைவரும் குமாரனைக் காண்பது பிதாவின் சித்தமாக இருக்கின்றது என நமது கர்த்தர் தெரிவித்துள்ளார் (அதாவது தீர்க்கதரிசிகள் மூலம் கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரம், ஆயிரவருஷம் யுகத்தில் இவர்களின் குருடான கண்கள் திறக்கப்படும்; சகரியா 12:10). மனுக்குலத்தால் இப்பொழுது உணரமுடியாததை, அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும்போது உணர்வார்கள். அதாவது, கர்த்தரையும், அவருக்குக் கீழ்ப்படிகின்ற அனைவருக்கும் அவர் அளிக்கும், நித்தியஜீவனுக்கான உடன்படிக்கையையும் உணர்ந்துக்கொள்வாகள். இவர்களின் புரிந்துக்கொள்ளும் கண்களை இப்பொழுது குருடாக்கி வைத்துள்ள இந்த உலகத்தின் தேவனானவன், ஆயிரம் வருஷம் கட்டப்பட்டு, கர்த்தர் மற்றும் அவருடைய சரீரமாகிய மகிமையடைந்த சபை எனும் மாபெரும் நீதியின் சூரியன் மூலம் உலகத்திற்குப் பிரகாசிக்கப்படும், தேவனைப்பற்றின அறிவாகிய வெளிச்சம், சாத்தானுடைய நச்சுத்தனமான செல்வாக்கை இல்லாமலாக்கிப் போடாதது வரையிலும், மனுக்குலத்தால் இப்படியாகக் கர்த்தரைக் காண முடியாது.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், நித்தியஜீவனை அடைவது தேவனுடைய சித்தமாக இருக்கின்றது; மேலும், இவர்கள் பரலோகத்திற்குரிய பூரணத்திற்கல்லாமல், பூமிக்குரிய பூரணத்திற்குக் கர்த்தர் இயேசுவினால் எழுப்பப்படுவார்கள்; மேலும், இவர்களின் எழுப்பப்படுதலும் "கடைசி நாளில்தான்" காணப்படும், ஆயினும் இவர்களுடைய உயிர்த்தெழுதலானது "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின்" "முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய" கடைசி நாளின் ஆரம்பப்பகுதியில் நடப்பதில்லை. இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொண்டவர்களாகிய, கிறிஸ்துவின் சபை, கண்ணிமைக்கும் நொடியில், அவருக்கு ஒப்பாகப் பூரணப்படுத்தப்படுவார்கள்; பிற்பாடு அந்த யுகம் முழுவதும் பாவம், சீர்க்கேடு, சீரழிவிலிருந்து மனுக்குலகத்தின் உலகம் எழுப்பப்படும் வேலையானது, படிப்படியாக நடக்கும். இவ்வேலையானது, விருப்பமும், கீழ்ப்படிதலுமுள்ள அனைவரும் பரலோகத்திலிருந்து வந்த அப்பத்தைத் திருப்தியாகப் புசித்து, பாவம் மற்றும் மரணத்திலிருந்து, நித்தியஜீவனுக்கு முழுமையாய் எழுப்பப்படுவதுவரையிலும், அதாவது ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவுவரையிலும் தொடரும்; அதாவது, பாவத்திற்கு முன்பு ஆதாம் காணப்பட்ட தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும், ஆனால் அதேசமயம் அவர்களது ஆயிரம் வருஷம் அனுபவங்களினால் நீதியில் பூரணப்படுத்தப்பட்ட மற்றும் பரீட்சிக்கப்பட்ட குணத்தில் எழுப்பப்படுவதுவரையிலும், இவ்வேலை தொடரும்.

**ஆமென்!**

---

# சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்

*"நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 3:8; 5:5, 6)*

அப்போஸ்தலர் இங்குச் சபையின் மூப்பர்களிடம், தேவனுடைய மந்தையைப் பராமரிக்கும் விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்தும்படிக்குப் புத்திக்கூறி, இப்படிப்பட்ட ஊழியம் புரிவதற்கு எது நெருக்கி ஏவும் செல்வாக்காகக் காணப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். அவருடைய அனுதாபம் அவர்கள் மேல் காணப்படுகின்றது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளத்தக்கதாக தானும் ஒரு மூப்பன் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றார்; பின்னர்ச்செல்வாக்குள்ள எந்த ஸ்தானத்திலும் காணப்படும் விழுந்துபோன மனுக்குலத்தின் சகல அங்கத்தினருக்கும் இயல்பாகக் காணப்படும் ஒரு தன்மைக்கு எதிராக - அதாவது தங்களுடைய ஸ்தானத்தைக் குறித்துத் தவறாய்ப் புரிந்துகொள்வதும் மற்றும் மந்தைக்குத் தங்களை வேலைக்காரர்கள் என்று எண்ணுவதற்குப் பதிலாக, தங்களைத் தேவனுடைய சுதந்தரத்தின் மீது இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக எண்ணிக்கொள்வதுமாகியவைகளுக்கு எதிராக அவர்களை எச்சரிக்கின்றார்.

சகல கிறிஸ்தவ பிரிவுகளிலும், சபையின் ஊழியக்காரர்களை மந்தையிலிருந்து வேறுபட்ட வகுப்பாராக, அதாவது தேவனிடமிருந்து அதிகாரம் பெற்றுக்கொண்ட ஒரு வகுப்பாராக மற்றும் சரீரத்தின் சகல அங்கங்களும் உட்படுத்தப்பட்ட அதே கட்டுப்பாடுகளுக்கு, உட்படாத வகுப்பாராகக் கருதும் நீண்டகாலமாக நிலவி வரும் வழக்கத்தினால், நம்முடைய நாட்களில் இவ்விதத்திற்கு நேரான மனப்பான்மையே அதிக அளவில் காணப்படுகின்றது. ஆனால் இது எவ்வளவு பெரிய தவறு! ஊழியக்காரன் ஆளுகிறவன் அல்ல என்றும், ஊழியக்காரனுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் அப்போஸ்தலர் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். உண்மை சபையைப் பொறுத்தமட்டில், சபையின் தலையாகிய கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய வாய்க்கருவிகளாக இருக்கும்படிக்கு அவரால் விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய அப்போஸ்தலர்களின் வார்த்தைகளுக்கும்தான் அதிகாரம் உள்ளது.

இவர்கள் ஒரு விஷயமாக பேசுகையில், கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள அனைவரும் செவிகொடுப்பதற்குக் கவனித்திருக்க வேண்டும். இவர்கள் ஒரு விஷயத்தில் அமைதலாய் இருக்கும் போது, ஒருவருக்கும் பேசுவதற்கு அதிகாரம் இல்லை. போதிப்பதற்கான (எக்காரியம் தொடர்பான நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய அறிவுரையைச் சுட்டிக்காட்டுவதற்கான) விசேஷித்த திறமையின் காரணமாக, மந்தையைப் போஷிப்பதற்காகவும், மந்தைக்கு ஊழியம் புரிவதற்காகவும் உரிய ஸ்தானத்திற்கு மூப்பர் தெரிந்தெடுக்க வேண்டியிருப்பினும் மற்றும் இப்படியாக மூப்பர், இந்த விதத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய அனைவரின் கவனத்தையும், வேதவாக்கியங்களின் தெய்வீக அதிகாரத்திற்குத் திருப்புவதன் மூலம் விசேஷித்த விதமாய் உதவிகரமாய் இருப்பினும், கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்த ஓர் அங்கத்திற்கும் இதே சிலாக்கியம் உள்ளது - அதாவது அதிகாரம் செலுத்துவதாக இராமல், மாறாக வேதவாக்கியங்களுடைய அதிகாரத்திடம் சகல சகோதரருடைய கவனத்தைத் திருப்பும் இதே சிலாக்கியம் உள்ளது. மூப்பர்கள் சபையில் எவ்விதத்திலும் அதிகாரி ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, "மந்தைக்கு மாதிரிகளாக" இருக்கும்படிக்கு மூப்பர்களுக்கு அப்போஸ்தலர் புத்திமதியைக் கூறுகின்றார். சாந்தத்திற்கும், பொறுமைக்கும், சகோதர சிநேகத்திற்கும், இணக்கத்திற்கும் மூப்பர்கள் மாதிரியாக இருக்க வேண்டும் இதினிமித்தம் சகோதரர்கள் அதிகமாக இந்த மூப்பர்களைப் பார்த்துப் படிக்கும்போது, மந்தையின் மத்தியில் கர்த்தருடைய ஆவி அதிகமாகக் காணப்படும் மற்றும் ஆவியின் கனிகளும், கிருபைகளும்கூட வெளிப்படும். மாறாக ஒரு சிறு கூட்டமான கர்த்தருடைய ஜனங்களுக்கான மூப்பர் (அ) வழிநடத்துபவர்தனது உரிமைகளை வலியுறுத்துபவராகவோ/பிடிவாதமானவராகவோ, கர்வமிக்கவராகவோ, நடத்தையிலும், தொனியிலும் அல்லது பார்வையிலும் அதிகார தோரணை உள்ளவராகவோ இருப்பாரானால் இதன் விளைவாக இப்படிப்பட்ட மூப்பருடைய செல்வாக்கின் கீழ்க் காணப்படுபவர்கள் மத்தியில்

யார் பெரியவன் என்பதற்கான போராட்டங்களும், போட்டிமனப்பான்மைகளும், பேராசைகளும், சண்டைகளுமே ஏற்படும்.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில், மூப்பர் ஸ்தானத்தில் காணப்படும் ஒருவர், ஜனங்களின் எண்ணிக்கை எவ்வளவு கொஞ்சமாக இருப்பினும், அவர் - கர்த்தருக்கும், மந்தைக்கும், பொறுப்புகளையும் மற்றும் தனக்கு நெருக்கங்களையும் உள்ளடக்கின ஸ்தானத்தில் காணப்படுகின்றார். சபையில் மூப்பர்கள் (அ) வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முடிந்தமட்டும் இந்த ஊழியத்திற்கான சிலாக்கியத்தின் மூலம் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திக்கொள்ளாதவர்களைத் தேர்ந்தெடுப்பதில், அதாவது தாழ்மையிலும், கர்த்தருடைய ஆவியின் சகல கிருபைகளிலும் மந்தைக்கு உண்மையில் மாதிரிகளாக இருக்கக்கூடியவர்களை இந்த ஸ்தானத்திற்கெனத் தேர்ந்தெடுப்பதில் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய ஒவ்வொரு கூட்டத்தாரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். சபையில் ஊழியம் புரிவதற்கான இந்த ஸ்தானத்தை வகிப்பவர்களுக்குரிய விசேஷமான சோதனை குறித்துதான், "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் என்பதாகத் தெரிகின்றது (யாக்கோபு 3:1).

"மூப்பர்" என்ற வார்த்தை, "வயதில் முதிர்ந்தவர்" என்ற அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாக இருப்பினும், கர்த்தருடைய சகோதரர் மத்தியில், மாம்சீக வயது கணக்கு மாத்திரம் கருத்தில் எடுத்துகொள்ளப்படக் கூடாது; கர்த்தருடைய குடும்பத்தில், சில சமயம் நாம் நரை முடியுள்ள "குழந்தை" போன்றவர்களைக் காண்கின்றோம். அதேசமயம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டது முதல் கடந்துபோன வருடங்களின் கணக்குப்படியும் ஒருவரை மூப்பர் என நாம் எடுத்துக்கொள்ள முடியாது, ஏனெனில் சிலர் வேகமாக வளர்ந்து, விரைவாக (ஆவியில்) முதிர்ச்சியடைந்து விடுகின்றனர்; சத்தியத்தை ஏற்றுக்கொண்ட சிலரோ இவ்வுலகத்தின் கவலைகள் மற்றும் ஐசுவரியத்தின் மயக்கமாகிய, "முட்களை," சத்திய வார்த்தையை நெருக்கிப் போடும்படிக்கு அனுமதித்துவிடுகின்றனர், இதினிமித்தம் இப்படிப்பட்டவர்கள் "குழந்தைகள்" நிலையிலிருந்து ஒருபோதும் தாண்டுவதேயில்லை, அதாவது ஆவியின் முதிர்ந்த கனிகளை ஒருபோதும் கொடுப்பதில்லை.

அதேசமயம் ஒருவர் தெய்வீகத் திட்டம் தொடர்பான அறிவைப்பெற்றிருக்கும் அளவிற்கு ஏற்ப, அவரை மூப்பர் என்றும் நாம் எண்ணிக்கொள்ள முடியாது, ஏனெனில் சிலர் அதிகமான அறிவைப் பெற்றுக்கொண்டிருந்தும், கர்த்தருடைய கணிப்பின் கண்ணோட்டத்தில் "சத்தமிடுகிற வெண்கலம்" போன்று காணப்படவும் வாய்ப்புண்டு என அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கின்றார். ஆகவே மூப்பர் ஒருவர், "போதகசமர்த்தனாக" இருப்பதற்கென ஓரளவிற்கு தெய்வீகத் திட்டம் குறித்த அறிவை அடைந்திருக்க வேண்டியதாய் இருப்பினும், அவர் மூப்பர் ஊழியத்திற்கான தகுதியை உடையவர் என்பதற்கான உண்மையான சான்று, அவருடைய அறிவின் அடிப்படையில் மாத்திரம் கணிக்கப்படாமல், இன்னும் ஆவியின் கிருபையில் உள்ள அவருடைய வளர்ச்சியின் அடிப்படையிலும் காணப்பட வேண்டும். தெய்வீகத் திட்டம் குறித்த தெளிவான அறிவு பெற்றவர்களாகவும், போதகசமர்த்தம் உள்ளவர்களாகவும், இன்னுமாக கிருபையில் வளர்ந்துள்ளார்கள் என்பதற்கான துல்லியமான சாட்சியை வெளிப்படுத்துகிறவர்களாகவும், அன்றாட ஜீவியத்தில் கர்த்தருடைய ஆவியின் கனிகளை, போதுமான அளவு முதிர்ச்சியுடன் கொடுப்பவர்களாகவும் இருப்பவர்கள், மூப்பர்களுக்கான தகுதியுடையவர்களாகக் கருதப்படலாம் மற்றும் இப்படிப்பட்டவர்களை, இவர்களுடைய மாம்சீக வயது என்னவாக இருந்தாலும் கூட, சகோதர சகோதரிகளால் மூப்பர் ஊழியத்திற்குத் தெரிந்துகொள்ளலாம்.

மாம்சத்தின்படி பேதுருவும், அப்போஸ்தலர்களில் அநேகரும் நம்முடைய கர்த்தரைக் காட்டிலும் வயதில் மூத்தவராக இருந்தாலும்கூடத் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைவருக்கும் ஆவியின்படி நமது கர்த்தரே மூத்த சகோதரனாக இருக்கின்றார். மாம்சத்தில் தீமோத்தேயுவும், தீத்துவும் இளைஞர்களாக, அதாவது வயதில் சிறியவர்களாக இருந்தார்கள், ஆகவே இவர்களில் ஒருவருக்கு, "உன் இளமையைக்குறித்து அசட்டைப் பண்ணாதபடிக்கு ஜாக்கிரதையாயிரு" என்று அப்போஸ்தலர் எழுதுவது அவசியமாய் இருந்தது. எனினும் இந்த இளைஞர்களை அப்போஸ்தலர் சபையின் மூப்பர்களாக அங்கீகரிக்கின்றார். இவர்கள் கொண்டிருந்த ஆவிக்குரிய வளர்ச்சியின் காரணமாகவும், தெய்வீகத் திட்டம் குறித்துக்கொண்டிருந்த அறிவின் காரணமாகவும், போதக சமர்த்தர்களாக இருந்த காரணமாகவும், தேவனுடைய மந்தையைப் போஷிப்பதற்கும், அதன் மேல் கண்காணிகளாகவும் இருப்பதற்குத் தகுதியுடையவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் இவர்கள் மந்தையின் மீது ஆளுகை செய்கிறவர்களாகவும், அதிகாரிகளாகவும், ஆண்டவன்மார்களாகவும் இருக்கவில்லை மற்றும் இவர்களுக்கு எவ்விதமான அதிகாரமும்

அளிக்கப்படவுமில்லை, மாறாக மாபெரும் மேய்ப்பன் மற்றும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரெண்டு உதவியாளர்களின் சத்தத்திடம் மந்தையின் கவனத்தைத் திருப்புவதும் மற்றும் அவர்களைத் தெய்வீகச் சத்தியத்தின் பசுமையான புல்களிடமும், அமர்ந்த தண்ணீர்களிடமும் வழிநடத்துவதுமாகிய சிலாக்கியத்தை மாத்திரமே பெற்றிருந்தார்கள்.

மந்தையில் இப்படியாக மிகுந்த வளர்ச்சியும், அதிகமான தகுதியும் கொண்டிருப்பவர்களுக்குத் தன்னடக்கம் மற்றும் தாழ்மை குறித்து விசேஷமாகக் கட்டளையிட்ட பிற்பாடு, கர்த்தருடைய மந்தையிலுள்ள ஒவ்வொருவரும் அதிகாரி (அ) ஆளுகிறவன் (அ) எஜமான் என்றவிதத்தில் வழிநடத்துனனாக வேண்டுமென நாடுவதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் கீழ்ப்படிய நாட வேண்டுமென அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார், அதாவது மந்தையில் உள்ளவர்களிலே மிகவும் எளியவராய் இருப்பவருடைய கருத்துக்களை மகிழ்ச்சியுடன் கேட்பதற்கும் மற்றும் தனது கணிப்பும், மனசாட்சியும் அனுமதிக்கும் பட்சத்தில் சொந்த விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிட விருப்பம் கொள்வதற்கும் என அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார். இப்படியாக இந்த ஆவியின் கீழ்ச் செயல்படும் சபையானது, சண்டைகள் இல்லாது காணப்படும், ஏனெனில் ஒவ்வொருவரும் கர்த்தருடைய காரணத்தின் நலன் தொடர்பான விஷயத்தில் மிகவும் அக்கறைகொண்டவர்களாகக் காணப்படுவார்கள் மற்றும் மற்றவர்களுடைய விருப்பங்களுக்குப் பணிந்துபோக மிகவும் விரும்புவார்கள், மேலும் எந்த ஒரு காரியத்திலும் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தை எடுத்துக்கொள்வதிலும் திருப்திக்கொள்ளாமல், மாறாக அனைவருமே, முடிந்தமட்டும் கிட்டத்தட்ட ஏகமனதாய் ஒப்புதல் அளிக்கத்தக்கதான மாற்றம் செய்யப்பட்ட முடிவை அடையவே நாடுபவர்களாய் இருப்பார்கள்.

மூப்பர்களின் சார்பிலும், மற்ற அனைவரின் சார்பிலும் இப்படியான சரியான நடத்தை காணப்படுவதற்கு அவசியமான பண்பு தாழ்மையென அப்போஸ்தலர் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். "மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்" என்ற அவரது புத்திமதி எவ்வளவு அருமையாய் உள்ளது. "மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள்" (1 பேதுரு 5:5; திருவிவிலியம்); அதாவது அனைத்துக் குணலட்சணத்தின் அலங்கரிப்பின் மீது, அதாவது அனைத்து மற்றக் குணலட்சணங்களை மூடினவிதத்தில், பெருமைக்கு எதிரான பண்பாகிய இந்த மனத்தாழ்மையின் வஸ்திரம் காணப்பட வேண்டும் என்பதே வசனத்தின் கருத்தாகும்.

அப்போஸ்தலன் தன்னுடைய வாதத்தை உறுதிபடுத்தும்படியாக, நமது கர்த்தர் தம்முடைய மந்தையையும், மற்றவர்கள் அனைவரையும் கையாளுவதற்குப் பயன்படுத்தும் கொள்கையைக் குறித்து நமக்கு நினைப்பூட்டுகின்றார், அதாவது கர்த்தர் பெருமையை அங்கீகரிப்பதில்லை என்றும், பெருமையினால் இயக்கப்படுபவர்கள் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பதிலாக, ஐக்கியத்திற்குள்ளாகக் காணப்படுவதற்குப் பதிலாக, வழிநடத்தப்படுவதற்குப் பதிலாக, ஆசீர்வதிக்கப்படுவதற்குப் பதிலாக, கர்த்தரினால் எதிர்க்கப்பட்டு, அவரிடமிருந்து தள்ளிவிடப்படுவார்கள் என்றும் உள்ள நமது கர்த்தருடைய கொள்கையை நினைப்பூட்டுகின்றார். இப்படியாகக் கர்த்தரினால் எதிர்க்கப்படுவதினால், இவர்கள் பெருமை மற்றும் புகழார்வத்தின் ஆவியினுடைய செல்வாக்கின் கீழ்க்காணப்படும் காரணமாக இவர்களுடைய மனப்போக்கு, சத்தியத்திற்கும், எவ்விதமான ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளுக்கு நேராகக் காணப்படாமல், மாறாக இவைகளிடமிருந்து வெகுத்தொலைவிலேயே காணப்படுகின்றது. "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கின்றார்." ஆகவே அன்பான சகோதரர்களே வாருங்கள், கர்த்தர் மிகவும் விரும்பும் மற்றும் அங்கீகரிக்கும் மற்றும் பலன் கொடுப்பதாக வாக்களித்துள்ள இந்தத் தாழ்மையை விருத்திச் செய்வோமாக என அப்போஸ்தலர் கூறுகின்றார், "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6).

பொதுவாய் இருக்கும் மனுக்குலத்தையும் மற்றும் அதன் காரியங்களையும் கையில் எடுத்து குழப்பங்களைச் சரிபடுத்தத்தக்கதாக, கர்த்தருடைய வல்லமையுள்ள கரம் இதுவரையிலும் நீட்டப்படவில்லை; மாறாக கர்த்தருடைய வல்லமையுள்ள கரம் இன்று அவருடைய மந்தையாகிய, அவருடைய சபையின் மீது நீட்டப்பட்டுள்ளது. நாம், "அவருடைய ஆடுகளாய்" இருக்கும்படிக்கு அவர் நம்மை அழைத்தார் மற்றும் நாமும் அவருடைய அழைப்புக்கு இணங்கி, அவருடைய பராமரிப்பின் கீழ், வழிக்காட்டுவதற்கு, வழிநடத்துவதற்கு உரிய அவருடைய வல்லமையுள்ள கரங்களின் கீழ் - நாம் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைபவர்களாகவும்," "நாம் தேவனுடைய சுதந்தரராகவும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரராகவும், கிறிஸ்துவுடன் பாடுபட்டு, அவருடனேகூட மகிமை அடைகின்றவர்களாகவும் இறுதியில் ஆகுவதற்கும்" ஏதுவாக நம்மை ஒப்புக்கொடுத்துள்ளோம் (ரோமர் 8:17; கொலோசெயர் 1:12).

இப்படியாக நாம் தேவனுடைய இந்த வல்லமையுள்ள கரங்களின் கீழ் இருக்கும்போது, அதுவும் நம்முடைய சொந்த விருப்பத்திற்கு ஏற்றாற் போலவே தேவனுடைய இந்த வல்லமையுள்ள கரங்களின் கீழ் இருக்கும்போது, நாம் எப்படிச் செயல்பட வேண்டும்? நாம் நம்மை அவருடைய சித்தத்திற்கென்று ஒப்புக்கொடுத்துவிட்டு, "அவருடைய தயவுள்ள சித்தத்தின்படி, நம்மில் விருப்பத்தையும், செய்கையையும் உண்டுபண்ணத்தக்கதாகவும்", இறுதியில் நாம் உயர்த்தப்படும்படியாகவும் அவரை அனுமதிப்போமா அல்லது கர்த்தருடைய வல்லமையையும், அறிவுரை கூறும் அவருடைய வார்த்தைகளையும் எதிர்த்து நின்று, தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரிடத்தில் நமக்கு முன் வைக்கப்பட்ட சாந்தத்தையும், தாழ்மையையும் எதிர்த்து நின்று, உலகத்திலோ (அ) சபையிலோ நம்மை நாமே குறிப்பிடத்தக்கவராக உயர்த்த நாடுவோமா? இல்லை, தெய்வீக ஒழுங்கிற்கு எதிராக கிரியை புரிய முயற்சிப்பது என்பது அறிவீனமான காரியமாக இருக்கும் என்பதை நினைவில்கொள்வோமாக. நாம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெற்றி அடைந்துள்ளது போன்று தோன்றலாம் மற்றும் இப்படியாக எதிர்த்து நிற்பதன் காரணமாக, தவறான ஆவியினிமித்தம் நாமும், மற்றவர்களும் தேவனிடமிருந்து பிரிந்து செல்பவர்களாகவே இருப்போம்; மேலும் தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே தேவன் அளிப்பதாக வாக்களித்துள்ள இப்போதுள்ள ஆவியில் ஐக்கியம் தொடர்பான விஷயத்திலும், பிற்பாடு மகிமையில் ஐக்கியம் தொடர்பான விஷயத்திலும் உள்ள தேவதயவுகளை முடிவில், முற்றிலும் இழந்துவிடுகிறவர்களாகக் காணப்படுவோம். தகுதியான தூண்டுதல்கள் அனைத்துமே நமக்குக் கூறுவதாவது: உங்களைத் தாழ்த்துங்கள்; சிறு பிள்ளைகள்போலாகுங்கள்; சுயத்தை மறந்து, சுயநலமான ஆசைகள் அற்றவர்களாக அதிகமாய் மாறுங்கள்; கர்த்தருக்கு ஊழியம் புரிவதற்கும், அவருடைய மந்தைக்கு ஊழியம் புரிவதற்கும், அவருடைய நோக்கத்திற்காக, சத்தியத்திற்காக ஊழியம் புரிவதற்கும் உரிய வாஞ்சையினால் மாத்திரமே இயக்கப்படுகின்றவர்களாய் இருங்கள்; சுயத்தை முற்றிலுமாக மறந்துவிடுங்கள் என்பதேயாகும்.

அநேகமாக இதன் காரணமாக, தற்கால ஜீவியத்தில் ஊழியம் புரிவதற்கான நமது வாய்ப்புகளையும், பொறுப்புகளையும் கர்த்தர் அதிகமாக்கலாம் மற்றும் ஒருவேளை அவர் அதிகமாக்காமலும் இருக்கலாம், இது ஒரு பொருட்டல்ல. தற்கால ஜீவியத்திற்கானவைகளுக்காக நாம் நாடுகின்றவர்களாக, தேடுகின்றவர்களாக இல்லை, மாறாக கர்த்தரை அன்புகூருகிறவர்களுக்கு - அதாவது அவருடைய வார்த்தைக்குச் செவிசாய்த்து, அவருடைய பார்வைக்குப் பிரியமாய் இருக்கும் குணலட்சணங்களை வளர்க்க நாடி, தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான சாயலை அடைய அதிகமாய் நாடும் அளவுக்கு அவரை மிகவும் அன்புகூருகின்றவர்களுக்கு அவர் வாக்களித்துள்ள மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கே நாம் நாடி, தேடுகின்றவர்களாக இருக்கின்றோம்.

"உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்கள் அனைவரும் முழுமையாய்க் கவலைக் கொண்டவர்கள் ஆவார்கள். அவர்கள் கர்த்தருடைய வேலையில் அக்கறை கொண்டுள்ளனர்; இதைக்குறித்த கவலை அவர்களுக்கு இருக்கின்றது. அவர்களால் சீயோனின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவலையற்றவர்களாக இருக்கமுடியாது. அவர்களுடைய இருதயங்களும், கவலைகளும், நேசங்களும், மதப்பிரிவினர் வட்டாரத்துக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும், பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகிய ஆவிக்குரிய சீயோனின் உண்மையான ஜனங்கள் மீதே வைக்கப்பட வேண்டும். ஆகவே சபையிலுள்ள ஒவ்வொரு மூப்பரும், "கிறிஸ்துவின் மந்தையைப் போஷிக்கும்" வேலைக்கென, தான் நியமிக்கப்பட்டுள்ள மந்தை தொடர்பான விஷயத்தில், இத்தகைய கவலையைப் பெற்றிருக்க வேண்டும்... மந்தையைப் பிரித்துவிடக்கூடாது, மந்தையைப் பயமுறுத்தக் கூடாது, மந்தையை அடிக்கக்கூடாது, மந்தையின் மீது இறுமாப்பாய் ஆளுகை செலுத்தக்கூடாது, மாறாக மந்தையைப் போஷிக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களிடம் (மற்றும் அனைத்து மூப்பர்களிடமும் அல்லது சபையில் வளர்ச்சி அடைந்துள்ளவர்களிடம்) காணப்பட வேண்டிய இந்தக் கவலை சரியானதாக இருப்பினும், இது ஆபத்தாகக்கூட மாறிவிடலாம். மூப்பர்கள் தனித்தனியாக அல்லது சேர்ந்து, பரிசுத்த ஆவிக்குள்ளான தங்களது சொந்த சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இழந்துபோகுமளவுக்கு மந்தையைக் குறித்து மிகவும் நடுநடுங்கி கவலையுடன் காணப்படுகின்றனர்; மேலும் இதனால் மந்தையின் நலனுக்கு அவசியமென இவர்கள் தங்களுடைய மிஞ்சின வைராக்கியத்துடனான கணிப்பின்படி காரியங்களைக் கருதி, பல்வேறு சரியற்ற நடவடிக்கை எடுக்கவும் வழிநடத்தப்படுகின்றனர். கடந்த காலங்களில் அநேகர் இத்தகைய கவலையின் தாக்கத்தினால், இந்த (அ) அந்த (அ) மற்றக் காரியங்களில் மந்தையின்

சுயாதீனம் பாதகமாக இருக்கும் என்ற அச்சத்தில், மந்தையின் சுயாதீனத்தை எடுத்துப் போட்டுவிடும் பல்வேறு வழிகளுக்குள் நடத்தப்பட்டுள்ளனர். இப்படியான கவலையின் ஆவியும், மிதமிஞ்சின கவலையின் ஆவியும் கடந்த காலங்களில் வேதவாக்கியங்களுக்கு எதிராகவும், கிறிஸ்து தம்முடைய ஜனங்களை விடுவித்த சுயாதீனத்திற்கு எதிராகவும் கர்த்தருடைய மந்தை மீது விதிக்கப்பட்ட பல்வேறு விசுவாசபிரமாணங்களிலும், கட்டுப்பாடுகளிலும் மற்றும் கட்டளைகளிலும் தெளிவாய்த் தெரிகின்றன. கவலைப்படுவதற்கான நோக்கங்கள் சில விதங்களில் சந்தேகத்திற்கு இடமின்றி நல்லதுதான்; சில மூப்பர்களிடம், சில வளர்ச்சியடைந்துள்ள ஆடுகளிடம் உள்ள பிரச்சனை என்னவெனில், இவர்கள் மந்தையின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவலை/அக்கறை கொள்ளும்போது, இவர்கள் தாங்கள் மந்தையின் ஊழியர்கள் மாத்திரமே என்பதையும், மந்தையின் எவ்விஷயத்திலும் எவ்விதமான சட்டங்களை அல்லது கட்டுப்பாடுகளை ஏற்படுத்திட அதிகாரம் இல்லாதவர்கள் என்பதையும் மறந்துவிடுகின்றனர். கர்த்தர் இன்னமும் தமது மந்தைக்கு நல்ல மேய்ப்பராக இருக்கின்றார் என்பதையும், மந்தையின் மீதான தமது பராமரிப்பையும், தமது அதிகாரத்தையும் அவர் யாருக்கும் கொடுக்கவில்லை என்பதையும், மந்தையை இறுமாப்பாய் ஆளுவதற்கு அல்லது மந்தைக்குத் தேவையான அனைத்துச் சட்டங்களையும், ஒழுங்குகளையும் அவரே ஏற்படுத்தியுள்ளபடியால், மந்தைக்கு (இவர்கள்) எவ்விதமான சட்டங்களை ஏற்படுத்துவதற்கு அவர் அனுமதி வழங்கவில்லை என்பதையும், தாம் மந்தைக்கு அளித்திட்ட சுயாதீனத்தில் தமது மந்தை முழுமையாகக் காணப்பட வேண்டும் என விரும்புகின்றார் என்பதையும் இவர்கள் மறந்துவிட்டனர்.

சீயோனின் நலன் கருதின இத்தகைய அங்கீகரிக்கப்படாத மிதமிஞ்சின கவலைகள் அனைத்திற்குமான மருந்தாக, அப்போஸ்தலர், "(மந்தையின் மேய்ப்பனாகிய) அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் (அனைவரின்) கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" என்று கூறுகின்றார். ஒவ்வொரு ஆடும் மேய்ப்பனின் வல்லமையுள்ள கரம் (வல்லமை) இன்னமும், தம்முடைய ஜனங்கள் மத்தியிலேயே காணப்படுகின்றது என்பதையும், அவருடைய பராமரிப்பு இருப்பதினால் நாம் நம்மையே கவலையினால் அதிக பாரபளுவுக்குள் ஆக்கிக்கொள்ள தேவையில்லை மற்றும் நாம் கற்பனை பண்ணிக்கொள்ளும் புதிய நெருக்கடிகளைச் சந்திக்கத்தக்கதாக அவருடைய திட்டங்களிலும், ஏற்பாடுகளிலும் நாம் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என எண்ணவேண்டியதில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இப்படியாக மிதமிஞ்சின கவலைகள், பயத்தை ஏற்படுத்துகின்றது மற்றும் பயமானது, மேய்ப்பனிடத்திலான விசுவாசக் குறைச்சலையும், நம்பிக்கைக் குறைவையும் சுட்டிக்காட்டுகின்றது மற்றும் இந்தப் பயம், கர்த்தருடைய ஜனங்களைத் தவறான பாதையில் வழிநடத்துவதற்கு மாபெரும் எதிராளியானவனால் பயன்படுத்தப்படும் அவனுடைய மிகுந்த பலமிக்க ஆயுதங்களில் ஒன்றாகும்.

ஆகவே நாம் அனைவரும் (வளர்ச்சியடைந்துள்ள அனைவரும் அல்லது மூப்பர் அனைவரும்) மந்தைக்காகக் கவலைக்கொள்வோமாக. ஆம், ஆழமான கவலைக்கொள்வோமாக. ஆனால், இந்தக் கவலையின் பளுவைக் கர்த்தர் மேல் வைத்துவிடுவோமாக மற்றும் இப்பொழுது தம்முடைய வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ள "யுகங்களைக் குறித்த திட்டம்" என்னும் மிகுந்த பிரமாண்டமான மற்றும் மகிமையான திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டுவருகிறவர், அனைத்துச் சந்தர்ப்பங்களுக்கும், அனைத்துச் சூழ்நிலைகளுக்கும், அனைத்துக் காரியங்களுக்கும் முழு ஏற்பாடுகள் பண்ணியுள்ளார் என நமது விசுவாசம் அவரை நம்பக்கடவது மற்றும் அவருடைய வார்த்தைகளுக்கு இசைவாக நாம் அவருடன் ஒத்துழைப்பதற்கு ஆயத்தமாகக் காணப்படுவோமாக. நாம் அனுப்பப்படாத இடத்திற்கு நாம் ஓடவும் கூடாது, நமது கர்த்தருடைய ஸ்தானத்தை எவ்விதத்திலும் நாம் எடுக்கக்கூடாது, கர்த்தருடைய வேலையைச் செய்ய நாம் முயற்சிக்கவும் கூடாது. தாழ்மையான மனம் கொண்டவர்கள் மாத்திரமே தற்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ, நமது கர்த்தருடைய கரங்களிலிருந்து ஏதேனும் நித்திய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும், ஏனெனில் பெருமையுள்ளவர்களுக்குக் கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார் மற்றும் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கின்றார் என்று பார்க்கின்றோம்.

---

# “இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள்”
## மத்தேயு 18:1-14

“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.” - மத்தேயு 19:14

நமது இந்தப் பாடத்திற்காகத் தெரிந்தெடுத்துள்ள ஆதார வசனமானது மிகவும் பொருத்தமற்றதாகவும், தவறான கருத்தைக் கொடுக்கிறதுபோன்றும் தோன்றும். இது குழந்தைகள் பற்றியும், இவர்களுக்காகக் கர்த்தர் கொண்டுள்ள அனுதாபம் மற்றும் அன்பு பற்றியும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. உண்மையில் மிகப்பெரிய நிலையில் காணப்படும் எந்த ஒரு மனுஷனோ (அ) ஸ்திரீயோ தங்களுடைய குழந்தைப்பருவத்தை அன்புடன்கூடிய அனுதாபத்துடனும், அக்கறையுடனும் பார்க்கமாட்டார்கள் என்று நாம் எண்ணமுடியாது; அந்தப் பருவம் பிரதிபலிக்கிற வாழ்க்கையின் வெற்றுத்தாள் போன்ற பக்கங்களைப் பார்க்கும்போது, இனிவரும் வாழ்க்கையில் எதிர்க்கொள்ளப்போகிற கஷ்டங்கள் குறித்தும், சோதனைகள் குறித்தும், ஏமாற்றங்கள் குறித்துமான உணர்வுகளுக்கு விழித்தெழுவார்கள்; மேலும் வாழ்க்கையின் அனுபவங்கள், போராட்டங்கள் மூலம் அடையப்போகும் வெற்றிகள் மற்றும் குணலட்சணங்கள் குறித்துமான நம்பிக்கையினாலும், ஆர்வத்தினாலும் விழித்தெழுவார்கள். இயேசு குழந்தைகளை நேசித்தார் என்பதிலும், வஞ்சனையற்றதும், தூய்மையானதுமாய்க் காணப்படும் அனைத்தையும் அவர் நேசித்தார் என்பதிலும் எந்தச் சந்தேகமும் இல்லை; மேலும், நம்முடைய ஆதார வசனமானது இக்கருத்தை மெய்யாக்கவும் செய்கின்றது.

தேவனுடைய இராஜ்யமானது, அறிவும், அனுபவங்களும் (அ) குணலட்சணத்தின் வளர்ச்சியில்லாமல் மரித்துப்போன குழந்தைகளைக் கொஞ்சமாகவோ (அ) முழுமையாகவோ உள்ளடக்கினதல்ல. இப்படியான குழந்தைகளைத் தேவனுடைய இராஜ்யத்தில் உள்ளடக்குவது தேவனுடைய நோக்கமாக இருந்திருக்குமாயின், 1,44,000 பேர் அடங்கிய “சிறுமந்தையினரை” நிறைவு பண்ணுவதற்குக் கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருந்திருக்காது; அதோடு கூட ஒருவர் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கென, நல்லதொரு போராட்டம் போராடப்பட வேண்டுமென்றும், ஜெயம் அடையவேண்டுமென்றும், “சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்வதின்” மூலமாக ஆவியின் கனிகளை அடைய வேண்டுமென்றும், மாம்சத்தின் உபத்திரவங்கள் ஊடே, விரும்பி, மகிழ்ச்சியுடன் அனைத்திலும் கடந்துச் செல்ல வேண்டுமென்றும் கூறவும் பட்டிருக்காது. இந்தச் சுவிசேஷ யுக அழைப்பில் குழந்தைகளுக்குப் பங்கில்லை; எனினும் சபை நிறைவடைந்து, அது தேவனுடைய இராஜ்யமாக மகிமையடைந்த பின் உடனடியாகத் தொடரும், உலகத்திற்கான மாபெரும் ஆசீர்வாதத்தில், குழந்தைகள் நிச்சயமாகப் பங்கடைவார்கள்.

இப்பாடம் தொடர்பான விஷயத்தில் இவ்வசனம், கொஞ்சம் தவறான எண்ணத்தைக் கொடுக்கின்றதாக இருக்கும். காரணம், இவ்வசனத்தின் பின்பகுதியில் இடம்பெறும் சிறுபிள்ளைகள் உருவகமான விதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதே ஒழிய சொல்லர்த்தமாக அல்ல; கர்த்தர் தாழ்மையும், நம்பத்தக்கவர்களாய்க் காணப்படும் தம்முடைய சீஷர்களையே தேவனுடைய சிறுபிள்ளைகளாக, அதாவது பூமிக்குரிய பெற்றோர்கள் தங்களது சிறு பிள்ளைகள் மீது இரக்கங்கொண்டு, பேணுவது போன்று தேவன் இரக்கங்கொண்டு பேணும் தேவனுடைய பிள்ளைகளாக இங்குக் குறிப்பிடுகின்றார். இப்படியாக, இவ்வசனத்தில் மாத்திரமாகக் குறிப்பிடப்படாமல், புதிதாயுள்ள கிறிஸ்தவனும், கொஞ்சமே வளர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவனும் குழந்தைகளுக்கும், பிள்ளைகளுக்கும் வேதவாக்கியங்களில் ஒப்பிடப்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். “சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்;” “நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்” (1 கொரி. 14:20; 1 பேதுரு 2:3).

மறுரூபமான மலையிலிருந்து இறங்கி, கப்பர்நகூமுக்குப் பிரயாணம் பண்ணின பிற்பாடே இப்பாடத்தில் இடம்பெறும் சொற்பொழிவு நிகழ்ந்ததாகத் தோன்றுகின்றது. மாற்கு மற்றும் லூக்கா அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப்பார்க்கையில், போகிற வழியில்

அப்போஸ்தலர்கள் மத்தியில், யார் பெரியவர் என்றும், கர்த்தர் வாக்களித்ததும், தாங்கள் பங்கடைவார்களென அப்போஸ்தலர்களால் நம்பிக்கை வைக்கப்பட்டதுமான இராஜ்யத்தில் யார் பெரியவராக (அ) மிகவும் கனத்திற்குரியவராக இருப்பார் என்றும் விவாதம் எழும்பியதை நம்மால் கிரகிக்க முடிகின்றது. அப்போஸ்தலர்கள் மத்தியிலேயே கர்த்தரோடுக் கூட மலையில் காணப்படுவதற்கு மூன்று பேர் மாத்திரம் விசேஷமாகத் தயவு பெற்றிருந்த காரியமே, அநேகமாக இந்த விவாதத்தைத் தூண்டியிருக்க வேண்டும். இவர்கள் மத்தியில் நடந்திட்ட இந்த விவாதம், இயேசுவின் காதுகளில் விழக்கூடாது என்று அடக்கமான தொனியில் அநேகமாகப் பேசினாலும், அனைவரிடமிருந்து பல்வேறு வாக்குவாதம் எழும்பினபோது, தொனி மிகுதியாயிற்று. கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு வழியில் தமக்குப் பின்னாக வந்து கொண்டிருக்கும்போது, எதைக்குறித்து விவாதித்தார்களென அப்போஸ்தலர்களிடம் இயேசு கேட்டார். லூக்காவின் பதிவைப் பார்க்கையில், அப்போஸ்தலர்கள் பதில் கொடுக்காமல் இருந்தார்கள் என்றும், அவருடைய கேள்விக்கு விடையளிக்கவும், தங்களது சண்டையைச் சொல்லவும் விரும்பவுமில்லை என்றும் பார்க்கின்றோம்; அவர்கள் வெட்கப்பட்டார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும், கர்த்தரிடமிருந்து விஷயத்தை மறைக்க முடியாது என்று அவர்கள் உணர்ந்ததினாலும், அதேசமயம் இவ்விஷயத்தில் கர்த்தருடைய முடிவைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களில் சிலர் விரும்பியதினாலும், தங்களுக்காக இப்பிரச்சனையை முடித்துத் தரும்படிக்கு அவரிடம் கேட்டுக்கொண்டார்கள்.

இவ்விஷயம் தொடர்பாக, அவசியமாயிருந்த படிப்பினையைத் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்குக் கொடுக்கும்படியாக இதுபோன்றதான ஒரு வாய்ப்பை, நமது கர்த்தர் விரும்பியவராக இருந்தார். மேலும், தம்முடைய வழக்கத்தின்படி அதை விவரித்தும் கொடுத்தார். ஒரு சிறுபிள்ளையை அழைத்து, அதை நடுவில் உட்காரச்செய்து, இப்படியாக, குழந்தைப்போல் ஆகுகின்றவர்கள் மாத்திரமே, இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்ற பிரமிக்கச் செய்யும் விஷயத்தைக் கூறினார். சீஷர்கள் சுபாவத்தின்படியான மனுஷர்களாகவும், பெரும்பான்மையாகக் கல்லாதவர்களாகவும் காணப்பட்டபடியால், இவர்கள் குழந்தை போன்ற எளிமை தன்மைக்குத் தொலைவாகக் காணப்பட்டு, மனதளவில் கௌரவமானவர்களாகக் காணப்படுவதற்கு நாடினவர்களாக இருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை; இப்படியாக கௌரவமான மனதைக் கொண்டிருப்பது என்பது, தேவனுடைய இராஜ்யத்தில் சீக்கிரத்தில் இராஜரிக கனத்தை அடைவதற்கு எதிர்ப்பார்த்துக் காணப்படுபவர்களுக்குத் தகுதியானது, எனச் சுபாவப்படியான மனுஷனுக்குத் தோன்றும். கௌரவம், ஞானம், மதிநுட்பமுடையவர்களுக்குப் பதிலாக, எளிமையும், சாந்தத்தையும், குழந்தை போன்ற தன்மையும், போதிக்கப்படத்தக்க தன்மையும் உடையவர்களையே கர்த்தர் நாடுகின்றார் என்பதை அப்போஸ்தலர்கள் அறிந்தபோது, இது எத்துணை அதிர்ச்சியை அவர்களுக்குக் கொடுத்திருக்கும்.

எனினும் அப்போஸ்தலர்கள் விருத்திச் செய்துக்கொண்டிருந்த ஆவியை/சிந்தையைக் கண்டிக்கும் வண்ணமாக மாத்திரமே, நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படாமல் இவ்விஷயத்தில் மாற்றம் வேண்டும் எனும் அறிவுரையைக் கொடுக்கும் படிப்பினையாகவுங்கூட இருந்தது. அதாவது, அவருடைய இராஜ்யத்தில் பங்கடைய விரும்புகின்றவர்களின் சார்பில், இத்தகைய மாற்றம் வேண்டுமானால் செய்வோம் என்றில்லாமல், மாறாக செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது. மத்தேயு 18:3-ஆம் வசனத்தின் KJV மொழிப்பெயர்ப்பாகிய, "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளை" என்பதற்குப்பதிலாக Revised மொழியாக்கத்தின்படி, "நீங்கள் மாறி/மறுபக்கமாகத் திரும்பி, பிள்ளைகளை" என்று நாம் வாசிக்கும்போது, தம்முடைய பின்னடியார்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென நமது கர்த்தர் விரும்பின உண்மையான கருத்தை நாம் அடைய முடியும்; "மனந்திரும்பி (Convert)" எனும் வார்த்தை சரிவரப் பயன்படுத்தப்படாததால், அநேகர் இதன் சரியான அர்த்தத்தைப் புரிந்துக்கொள்ள தவறுகின்றனர். சீஷர்கள் இவ்விஷயத்தின் மீது தங்களது கவனத்தைத் திருப்பி, படித்து, மறுதிசையில் படிப்பினைகளைச் செயல்படுத்த வேண்டும். அதாவது, சாந்தம், தாழ்மை, குழந்தை தன்மைப்பற்றின படிப்பினைகளைச் செயல்படுத்த வேண்டும்; சாந்தத்திலும், இருதயத்தின் எளிமையிலும் யார் அதிகமாக வளர்ச்சியடைகின்றார்களோ, அவர்களே இராஜ்யத்தில் பெரியவராய் இருப்பார்கள் என்ற நமது கர்த்தருடைய அறிக்கையானது, எளிமைக்காகவும், சாந்தத்திற்காகவும் நாடுபவர்களுக்கு மாத்திரமே இராஜ்யத்தில் ஒரு பங்கு அருளப்படும் என்பதையும், சுயத்திற்காக நாடுபவர்களுக்கும், தற்பெருமையடித்துக் கொள்பவர்களுக்கும் இராஜ்யத்தில் எவ்வித பங்கும் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

இப்படியாக தம்முடைய சீஷர்கள் மத்தியில் தாழ்மை மனதை உடையவர்களுக்கும், கவனத்தை ஈர்க்கும் தன்மை இல்லாதவர்களுக்கும், தாம் இராஜ்யத்தின் உன்னதமான கனங்களையும், மதிப்புகளையும் அருளுவதாக இயேசு விவரித்தப் பிற்பாடு, தம்முடைய

பின்னடியார்களாகிய இப்படிப்பட்ட "சிறியவர்கள்" தொடர்பான ஒரு பொதுவான பாடத்தைக் குறித்துப் பேச, தொடர்ந்து முற்பட்டார்; அதாவது தம்முடைய நாமத்தில் இத்தகைய எளிமையான சீஷர்களை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், தம்மையே ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுவார்கள் என்று கூறினார்; இன்னுமாக இந்தச் சிறியவர்களில் அல்லது தாழ்மையுள்ளவர்களில் ஒருவரை இடறச் செய்கிறவர் அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்றவர் இப்படியாக மிகவும் கடுமையான குற்றத்தைப் புரிவதால், ஜீவனை இழந்துப்போவது நலமாயிருக்கும் எனவும், ஏந்திரக்கல் கழுத்தில் கட்டப்பட்டு, கடலுக்குள் தள்ளப்பட்டு இப்படியாக தங்களது ஜீவனை இரட்சித்துக்கொள்வதற்கான சகல நம்பிக்கைகளையும் இழந்து, அழிக்கப்படுவது நலமாயிருக்கும் எனவும், இப்படியாகக் காத்தருடைய "சிறியவர்களில்" சீஷர்களிலேயே தாழ்மையாய் இருப்பவர்களில், குழந்தை போன்றும், சாந்தத்துடனும், கர்த்தருடைய வழியைப் பின்பற்றுகிறவர்களில் ஒருவருக்கு, ஒருவன் பாதிப்பை ஏற்படுத்துவதைப் பார்க்கிலும், அவன் மீது இந்த மாபெரும் பேராபத்து வருவது நலமாயிருக்கும் எனவும் இயேசு கூறினார்.

இப்படியாகத் தாழ்மைக்குக் கர்த்தர் எவ்வளவு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றாரென நாம் காணும்போது, இது உண்மையான சீஷர்கள் அனைவரையும், இந்தப் பண்பை அன்றாடம் விருத்திச் செய்திட உற்சாகப்படுத்திட வேண்டும். அதாவது, இவர்கள் அதிகமாக மாபெரும் இராஜாவின் பார்வையில் நேர்மையுள்ளவர்களாகவும், கபடற்றவர்களாகவும், உண்மையில் தாழ்மையுள்ளவர்களாகவும் வளரத்தக்கதாகவும், வரவிருக்கும் இராஜ்யத்திற்குரிய உன்னதமான உயர்த்தப்படுதல்களுக்கு அதிகமதிகமாகத் தகுதியடைத்தக்கதாகவும், இப்பண்பை அன்றாடம் விருத்திச் செய்திட, உற்சாகப்படுத்திட வேண்டும். இந்தச் சாந்தமில்லாமல் எவரும் இந்த இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்பதைக் காண்கையில், கர்த்தருடைய ஜனங்கள் தாழ்மையாய் இருக்கும்படிக்கு, வேதவாக்கியங்கள் எங்கும் புத்திமதிக் கூறுவதைக் குறித்தும் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேதுரு 5:6). இப்படியாக, வேதவாக்கியங்களின் புத்திமதிகள் அனைத்தும் காணப்பட்டாலுங்கூட, கர்த்தருடைய ஜனங்கள் ஆகுகிறவர்களுக்கு, அவருடைய வழியில் ஓடுவதற்கென ஈடுபட்டுள்ளவர்களுக்கு, அவர்களுடைய மாம்ச சுபாவத்தின் தவறான திசையை நோக்கும் தன்மை காரணமாக, மற்றக் காரியங்களைக் காட்டிலும், இத்தாழ்மை தொடர்பான விஷயத்திலேயே அதிகமான சிரமத்தையும், அதிகமாகப் போராட வேண்டிய நிலைமையையும் கொண்டிருக்கின்றனர். தங்களைத் தாங்களே சிறியவர்கள் என்று எண்ணுகின்ற சிலர் தங்களைக்குறித்துச் சகோதரர்கள் மிக உயர்வாக மதிக்க வேண்டுமென மிகவும் ஆவலோடு காணப்படுகின்றனர். கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அனைவரும், அதிலும் விசேஷமாக வழி நடத்துகின்றவர்களாய் இருப்பவர்களும், சபையை வழி நடத்துவதற்கும், சபைக்கு உதவியாக இருப்பதற்குமென இயல்பாகவே சில பண்புகளைப் பெற்றிருப்பவர்களும், இந்தப் பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு, மற்றும் இதிலிருந்து எப்படித் தாங்கள் கர்த்தருடைய தயவை அதிகமாகப் பெற்றுக்கொள்வதற்கும், அவருடைய இந்த நியமத்திற்கு ஏற்றாற்போல் காணப்படுவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும்.

கர்த்தருக்கு உண்மையாய்ச் சொந்தமானவர்களின் பாதையில் இப்படியாக அநேக இடறலின் கற்கள் காணப்படும் என்றும், அதுவும் அவர்கள் "சிறியவர்களாக," தாழ்மையுள்ளவர்களாக இருப்பதற்கு ஏற்ப காணப்படும் என்றும் கர்த்தர் மிகவும் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இந்த இடர்பாடுகள், இந்தப் பரீட்சைகள், இந்த இடறல்கள் வருவது அவசியம் என்றும் கர்த்தர் தெரிவித்துள்ளார். தெரிந்துகொள்ளப்பட்ட சபை முழுவதும் முற்றிலுமாகப் பரீட்சிக்கப்படுவதும், குணலட்சணத்தில் வளர்ச்சியடைவதும், இப்படியாகப் பலவான்களாகவும், தேவனுடைய நேசக்குமாரனுக்கு ஒத்தச் சாயலுமாகி, சத்தியத்திற்காகப் பாடுபடுவதற்கான விருப்பம் கொள்ளத்தக்கவர்களாகுவதும், பரலோகத்தில் இருக்கும் பிதாவைத் தாங்கள் பிரியப்படுத்தத்தக்கதாகப் பூமிக்குரிய காரியங்களை மகிழ்ச்சியுடனும், சந்தோஷத்துடனும் இழந்துவிடுவதும், இப்படியாகத் தாழ்மையையும், கீழ்ப்படிதலையும் வளர்த்திக் கொண்டு, இயேசுவின் அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கென மாத்திரம் பிதா வாக்களித்துள்ள, உயர்த்தப்படுதலுக்கு இவர்கள் போகப்போக ஆயத்தப்படுவதும் தெய்வீகச் சித்தமாக இருப்பதினால், இந்த இடறல்கள், இந்தப் பரீட்சைகள் அவசியமாய் உள்ளது.

பாதையில் இடறலின் கற்கள் அவசியமாய் இருந்தாலும், இப்படியாக இடறலின் கற்கள் வாயிலாகத்தான் சபையாகிய, கிறிஸ்துவின் சரீரம் பரீட்சிக்கப்படுவதாக இருந்தாலும், இதிநிமித்தம் பரிசுத்தவான்களுடைய பாதங்களுக்கு முன்பாக இந்த இடறலின் கற்களை வைப்பதற்கென, எதிராளியானவனின் வேலையாட்களாக (agents) தங்களை எதிராளியானவனுடைய செல்வாக்கிற்கு

இரவல் கொடுத்துவிட்டவர்களை, (சபைக்கு அவசியமாய் இருந்த) இடறலின் கற்களைத் தூக்கிப்போட்டத்தற்கான (குற்ற) பொறுப்பிலிருந்து நீங்கலாகுவதில்லை. இவர்களுக்கான தண்டனையின் விதம் என்பதைத் துல்லியமாகக் குறிப்பிடாத விதத்தில், இத்தகைய பொல்லாப்புச் செய்கைக்காரர்கள், "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்று கூறினவரிடமிருந்து பலன் பெற்றுக்கொள்வார்கள் என்று நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படுகின்றது.

ஆண்டவர் தம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியை நிறைவேற்றுவதிலிருந்து, அவரை மனம் மாற்ற பேதுரு முற்பட்டதின் வாயிலாக, பேதுரு தன்னையும் அறியாமல் இடறலின் கல்லாக இருந்ததுபோல, இன்றும் அநேகர் கர்த்தருடைய சிறியவர்களுக்கு முன்பாக, அவருடைய உண்மையுள்ள சிறுமந்தைக்கு முன்பாக இடறலின் கற்களைப் போட்டுக் கொண்டிருக்கின்றனர். கர்த்தருடைய "சிறியவர்களுக்கு" முன்பாக இடறலின் கற்களை வைப்பவர்கள், இன்றும் "சிறியவர்களை" முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்தும் பாதையாகிய இடுக்கமான வழியிலிருந்து, வழிவிலகச் செய்வதற்கே நாடுகின்றனர். அதாவது இடுக்கமான வழியைக் காட்டிலும், சுலபமும் மற்றும் தாழ்த்த வேண்டிய அவசியம் இல்லாத ஒரு வழியானது, இவ்வுலகப் போக்கிற்கு மிகவும் ஞானமுள்ளதாகவும், மிகவும் நாகரிகமானதாகவும், மிகவும் தந்திரமானதாகவும் இருக்கின்றது என்றும், அது இடுக்கமான வழியைப்போன்று நல்லதாக அல்லது இடுக்கமான வழியைக்காட்டிலும் பிரம்மாண்டமானதாக இருக்கின்றது என்றும் அவர்களை வற்புறுத்த நாடுகின்றனர். இப்படியான பரீட்சைகள் அவசியமே. மேலும், இரட்சகரின் அடிச்சுவடுகளில் அதிகமாக நடக்காதவர்கள் அனைவரும், வெளியாக்கப்படவும் அவசியமாய் இருக்கின்றது. காரணம், தேவன் சிறுமந்தையினரை மாத்திரமே அதாவது, அவருடைய நேசக்குமாரனுடைய சாயலை உடையவர்களை மாத்திரமே தேடுகின்றார். மந்தையிலுள்ள எவரையும் திசைத் திருப்புகின்றவர்கள் மீது, அதாவது, எந்த விதத்திலாகிலும் கர்த்தருடைய ஜனங்களின் பாதையில் இடறலின் கற்களாக இருக்கின்றவர்கள், இடறுவதற்கான காரணிகளாக இருக்கின்றவர்கள் மீது, மாபெரும் பொறுப்புள்ளது.

இப்படியாகப் பார்க்கும்போது, இடறல்கள் (அ) பரீட்சைகள் மற்றும் சோதனைகள் அனைவருக்கும் வர வேண்டியதேயாகும். இன்னுமாக இந்தப் பரீட்சைகள் என்பது, நமது பாதங்கள் போன்று நமக்கு உதவியாகக் காணப்படுபவைகளை அல்லது நமது வலது கண் (அ) வலது கரம் போன்று நமக்கு அருமையான இலட்சியங்களை (அ) பழக்கங்களை (அ) சிலாக்கியங்களை (அ) இன்பங்களைப் பலிச் செலுத்துவதாக இருக்கின்றது. இன்னுமாக நாம் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமெனில் மேற்கூறியவைகள் ஜெயங்கொள்ளப்பட வேண்டும் என்று நமது கர்த்தர் வலியுறுத்துகின்றார். இதுவே இன்னொரு விதத்தில், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 14:22). இயேசுவை விசுவாசித்தாலேயே இராஜ்யம் அருளப்படும் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பவர்கள், வேதவாக்கியங்கள் கூறாத தவறான கருத்தைக் கொண்டவர்களாய் இருக்கின்றனர். தேவன் அங்கீகரிக்கத்தக்கதாக, சுயத்தைப் பலிச் செலுத்தும் ஏதேனும் காரியங்களை நாம் செய்வதற்கு முன்னதாக, நாம் நீதிமானாக்கப்படுவதற்கு, விசுவாசம் அவசியமாய் உள்ளது; ஆனால், ஒருவர் விசுவாசம் வைப்பதில் மாத்திரம் நிறுத்திவிட்டு, கிரியைகள் இல்லாமல், சுயத்தைப் பலிச் செலுத்துதல் இல்லாமல் காணப்பட்டால், இவர் இராஜ்யம் தொடர்புடைய அனைத்து நம்பிக்கைகளையும், சிலாக்கியங்களையும் இழந்துவிடுபவர் ஆகிறார். இராஜ்யத்தை அடைவதற்கு நாம் "போராட வேண்டியுள்ளது." "நல்லதொரு போராட்டம் போராட வேண்டியுள்ளது." "நல்லப் போர்ச்சேவகனாய்த் தீங்கு அனுபவிக்க வேண்டியுள்ளது." பாவ இன்பங்களை மாத்திரமல்லாமல், கர்த்தருடைய ஊழியங்களுக்கான நம்முடைய முழு ஈடுபாட்டையும், அவரோடு மரிப்பதாகப் பண்ணியுள்ள நம்முடைய உடன்படிக்கையையும் நாம் நிறைவேற்றுவதை குறிக்கிடும் அனைத்தையும் தறித்துப்போட விருப்பத்துடன் காணப்பட வேண்டியுள்ளது; "தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் நம்மில் உண்டாக்கும் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் மற்றும் தேவையான பொழுதெல்லாம் காணப்படும் தெய்வீகக் கிருபை ஆகியவற்றின் உதவியால் பயத்தோடும், நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இராஜ்யத்தில் கை (அ) கண் (அ) பாதம் இல்லாமல் காணப்படுவார்கள் என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது; மாறாக, இடறலாய் இருக்கும் கண் என்பது, நம்முடைய சுபாவ ஆசைகளுக்கு அழகானதாகவும், கவர்ச்சியானதாகவும், பூமிக்குரிய காரியங்களினிடத்தில் நம்மை ஈர்க்கின்ற விதமாகவும் நம்மைச் சூழ்ந்து வளைத்துக்கொள்ளும் விஷயங்களைக் குறிக்கின்றது;

இடறலாய் இருக்கும் கரம் என்பது, உன்னதமான நம்முடைய ஆவிக்குரிய நலன்களுக்கு எதிராக செய்யும் காரியங்களைக் குறிக்கின்றது; இடறலாய் இருக்கும் கால் என்பது, சுயத்தைத் திருப்திப்படுத்தும் பாவத்தின் விலக்கப்பட்டப் பாதைகளில் செல்வதைக் குறிக்கின்றது; ஆகவே, இவைகளைத் தறித்துப்போடுவது என்பது, நாம் அனைத்துப் பூமிக்குரியவைகளை அனுபவித்துக் கொண்டு, நமது அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்குத் தவறிப்போவதைப் பார்க்கிலும், குறிப்பிட்ட பூமிக்குரிய சிலாக்கியங்களையும், இன்பங்களையும் அனுபவிக்காமல் இருந்து, நித்தியத்திற்குரிய ஜீவனுக்கும், இராஜ்யத்தின் பங்கிற்குள்ளும் பிரவேசிப்பது நலமாயிருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

"நித்திய அக்கினி" மற்றும் "நரகத்தின் அக்கினி" என இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள் அடையாளமான வார்த்தைகளேயாகும்; மேலும், இது துணிகரமான பாவிகளுடைய பாவத்தின் சம்பளமாகிய அழிவையே குறிக்கின்றது; அதாவது, "அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெசலோனிக்கேயர் 1:10). இவ்விடத்திலும் சரி, மற்ற வேதவாக்கியங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்டுள்ள அக்கினி என்பது சித்திரவதையைக் குறிக்காமல், அழிவையே குறிக்கின்றது என்பதை, **"நரகம் குறித்து வேதவாக்கியங்கள் கூறுவது என்ன?"** என்ற துண்டு பிரசுரத்தில் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்னுமாக, "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." அதாவது, தேவனுடைய இந்தத் தாழ்மையானவர்களை அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள் என்ற எச்சரிப்பை நமது கர்த்தர் கொடுக்கின்றார். உலகத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் இவர்கள் எளிமையானவர்கள் போலும், முக்கியத்துவம் அற்றவர்கள் போலும் தோன்றலாம். ஆனால், இவர்கள் தேவனுடைய தோழர்கள்; ஆம், இவர்கள் தேவனுடைய பிள்ளைகள்; இவர்களைத் தேவன் பராமரிக்கின்றார்; ஆகவே, இவர்களுக்குப் பாதகம் பண்ணுகின்றவர்கள், பரலோகத்திலுள்ள இவர்களுடைய பிதாவைப் பரியாசம் பண்ணி, எதிர்க்கின்றவர்களாய் இருப்பார்கள். இன்னுமாகத் தம்முடைய சிறியவர்களுக்கும், தம்முடைய உண்மையுள்ள மற்றும் தாழ்மையுள்ள சிறுமந்தையினர் ஒவ்வொருவருக்கும், பிதாவின் சந்நிதியில் எப்பொழுதும் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது என்றும் நமது கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பாதுகாக்கும் தேவதூதர் காணப்படுகின்றார்; மேலும், இவர்களுடைய நலனுக்கடுத்த காரியங்களை மாபெரும் இராஜாவின் கவனத்தில் கொண்டுவரும் விஷயத்தில், எவ்விதமான தாமதமும் காணப்படாது என்று நாம் புரிந்துக்கொள்கின்றோம். கிறிஸ்துவின் சரீர அங்கத்திலுள்ள தாழ்மையானவர்கள், மோசமாக நடத்துவதற்கும் (அ) எவ்விதத்திலாகிலும் அலட்சியம் செய்தவதற்கும், இழிவாகக் கருதுவதற்கும் முற்படுகிறவர்களுக்கு, எத்தகைய ஒரு கருத்து இங்கு முன்வைக்கப்படுகின்றது! இந்தத் தாழ்மையுள்ளவர்கள் தெய்வீகப் பராமரிப்பிற்கும், கவனிப்பிற்கும் விசேஷமாக உரியவர்கள் என்றும், இவர்கள் கர்த்தருக்குச் சொந்தமானவர்களானபடியால் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் இவர்களுக்கும் நடக்கும் என்றுமுள்ள காரியம், இந்தத் தாழ்மையுள்ளவர்களுக்கும் எத்துணை படிப்பினையாக உள்ளது!

கடைசி நான்கு வசனங்கள் இப்பாடத்திற்குச் சம்பந்தப்பட்டவை அல்ல. மேலும், இது வேறொரு பாடத்தில் இடம்பெறுவதினால், இவ்வசனங்களுக்கு இப்பாடத்தில் விளக்கம் கொடுப்பதை நாம் தவிர்த்துவிடுகின்றோம்.

**ஆமென்!**

---

# "ஏற்க மறுக்கப்பட்ட இராஜ விருந்து"
## லூக்கா 14:15-24

"எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள்" (வசனம் 17)

இயேசு பரிசேயனுடைய வீட்டில் பந்தி அமர்ந்துக் கொண்டிருக்கையில், பந்தியில் பேசிக்கொண்டிருந்தார். கைம்மாறு திரும்பிச் செய்ய முடியாதவர்களாகிய ஏழைகளின் நலனுக்காக விருந்து செய்யப்படவேண்டும் என்றும், கைம்மாறு பெற முடியாததினால், நிச்சயமாய் எதிர்க்காலத்தில், இராஜ்யத்தில் கைம்மாறுக்கும் மேலான திவ்விய ஆசீர்வாதம் அளிக்கப்படும் என்றுமுள்ள கருத்தைத் தெரிவித்ததின் மூலமாக, நமது கர்த்தர் ஜீவியத்தின் காரியங்கள் மாத்திரம் அல்லாமல், எதிர்க்காலத்தைப் பற்றியுமான காரியங்களை, தம்மைச் சுற்றியிருந்தவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதிநிமித்தம் கூட்டத்தில் இருந்த ஒருவன் லூக்கா 14:15-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறினான், அதாவது "ஆ, ஆம்! நாம் எதிர்ப்பார்க்கும் அந்த இராஜ்யம், ஓர் ஆசீர்வாதமான காலமாய் இருக்கும். தேவன் அளிப்பதாக வாக்களித்துள்ள மாபெரும் விருந்தில் உள்ள திரளான காரியங்களில் பங்கடைவது, எத்துணை ஆசீர்வாதமாய் இருக்கும்!" என்ற விதத்தில் கூறினான். இவ்வார்த்தைகளைக் கூறினவன், இராஜ்யம் தொடர்புடைய ஏசாயாவின் தீர்க்கதரிசன வசனத்தை நன்கு அறிந்தவனாய் இருந்திருக்கவேண்டும்; இந்தத் தீர்க்கத்தரிசனத்தில் உலகத்திற்கான தேவனுடைய இரக்கங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள், விருந்து எனும் அடையாள மொழியில் விவரிக்கப்பட்டுள்ளது; "சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்" (ஏசாயா 25:6).

இப்படியாக பந்தியில் காணப்பட்டவர்களுடைய மனங்களானது பூமிக்குரிய காரியங்களிலிருந்தும், பொதுவான காரியங்களிலிருந்தும், வம்பளப்பிலிருந்தும், தேவனுடைய கிருபையான வாக்குத்தத்தங்களிடத்திற்கு வழிநடத்திச் செல்லப்பட்டது. இதுவே அநேகமாக நமது கர்த்தர் பரிசேயனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டதற்கான காரணமாகக் கூட இருக்கலாம்; அதாவது இப்படியாக இத்திசையை நோக்கிப் படிப்படியாக சம்பாஷணையைத் திருப்புவதற்காக இருந்திருக்கலாம். இந்த இராஜ்யமும், அதின் ஆசீர்வாதங்களும், அதில் பங்கடைவதற்கான அழைப்பையும் பற்றி ஏதோ சிலவற்றைப் போதிப்பதற்கான வாய்ப்பு இப்பொழுது நமது கர்த்தருக்குக் கிடைத்தது; அதைப் பயன்படுத்திக்கொண்டார். ஒருவேளை அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தங்கள் மனதில் ஏசாயாவின் தீர்க்கதத்ரிசனத்தையும், ஆபிரகாமுக்கான தேவனுடைய வாக்குத்தத்தையும் கொண்டுவந்திருப்பார்களானால், கர்த்தருடைய இராஜ்யம் அல்லது மலை, இஸ்ரயேல் வீட்டார் என்றும், இந்த இஸ்ரயேல் வீட்டார் மேசியாவின் கீழ், மகிமையான மற்றும் உயர்த்தப்பட்ட நிலையில் காணப்படுவார்கள் என்றும், இந்த இராஜ்யத்திலும், இந்த இராஜ்யத்தின் மூலமாகவுந்தான் சகல ஜாதிகளுக்குமான திவ்விய ஆசீர்வாதங்களாகிய விருந்து பரிமாறப்படும் என்றும் அவர்கள் புரிந்திருப்பார்கள். இப்பொழுது மாபெரும் ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் உடைய சுவிசேஷ அழைப்பின் மீது, ஓர் உவமையைக் கூறுவதன் மூலம் கவனத்தைத் திருப்பினார்; இன்னுமாக அங்கு இருக்கும் அனைவரும் அந்த இராஜ்யம் ஆசீர்வாதமான ஒன்று என்றும், அங்குப் பரிமாறப்படும் விருந்து மிகவும் வாஞ்சிக்கப்படத்தக்கதான ஒன்று என்றும், பொதுவாக ஒப்புக்கொண்டாலும் அந்த இராஜ்யத்திற்கான அழைப்பு விடுக்கப்படும்போது, பெரும்பாலானவாகளுடைய இருதயங்களானது பூமிக்குரிய காரியங்களுடன் இசைந்து இருப்பதினால், இந்த அழைப்பைப் பொருட்படுத்துவதில்லை என்ற உண்மையைத் தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர முயன்றார்.

உவமையில் ஒரு மாபெரும் விருந்து ஏற்பாடுப் பண்ணப்பட்டது; அந்த விருந்தை ஏற்பாடு பண்ணின மனுஷனுடைய நண்பர்கள் ஏராளமானவர்கள் முன்கூட்டியே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தனர்; அதாவது விருந்து ஆயத்தமாகிவிட்டது என்று அறிவிக்கப்படும்போது, விருந்தாளிகள் ஆயத்தமாய்க் காணப்படத்தக்கதாக, விருந்தாளிகளுக்கு முன்கூட்டியே அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த உவமையில், தேவனே, விருந்தை எற்பாடு பண்ணின மனுஷனாய் இருந்தார்; மேலும் யூத தேசத்தாரே, அம்மனுஷனுடைய நண்பர்களாய் இருந்தார்கள்; இந்த யூத தேசத்தாருக்கே, தேவன் அதிகமான அனுகூலங்களைக் கொடுத்திருந்தார்; இவர்களுக்கே தேவனுடைய வார்த்தைகள்/தீர்க்கத்தரிசனங்கள் கொடுக்கப்பட்டது, அதாவது மனிதனுடைய

இரட்சிப்பிற்கான தெய்வீகத் திட்டம் பற்றின அறிவு அதிகமாய்க் கொடுக்கப்பட்டிருந்தது; இன்னுமாக இவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரென உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், இவர்களுக்கு இந்த மாபெரும் விருந்திற்கான அழைப்பும், சிலாக்கியமும், வாய்ப்பும் கிடைக்கும் என்று வாக்களிக்கவும் பட்டது. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துக் கொண்டேன், ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்" என்று (ஆமோஸ் 3:2), கர்த்தர் தீர்க்கத்தரிசி மூலம் இவர்களிடம் பேசினார். இஸ்ரயேலர் மாத்திரமே இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டனர்; ஆனால் கர்த்தருடைய நாள் வரையிலும், விருந்து ஆயத்தமாகவில்லை, ஆகவேதான் பங்கெடுங்கள் என்பதற்கான அழைப்பு இன்னமும் விடுக்கப்டவில்லை. இறுதியில் காலம் வந்தது. பாவநிவாரண பலியின் காளை அடையாளப்படுத்தும் கிறிஸ்து, தம்மை ஏற்கெனவே கொடுத்துவிட்டார். நமது கர்த்தர் யோவான் முன்னால், தம்மை மரணம் வரையிலுமான முழு அர்ப்பணிப்புப் பண்ணினபோது, அதாவது பலி ஒப்புக்கொடுத்த நேரத்திலேயே, பலி நிறைவேறிவிட்டதாகக் கருதப்பட்டது. பாவங்களுக்கான இந்தப் பலியின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், தேவனால் உடனடியாக ஆபிரகாமின் மூலம் தேவன் நீண்ட காலத்திற்கு முன்னதாக வாக்களித்துள்ள ஆசீர்வாதங்கள் மற்றும் தெய்வீகக் கிருபையின் வெளிப்படுத்தல் எனும் மாபெரும் விருந்திற்கு, முன்னமே வாக்களித்துள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்க ஆரம்பிக்க முடியும்.

ஆகவேதான் இயேசு வந்து, தம்முடைய சீஷர்களை அழைத்து, "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கின்றது" என்றும், தேவன் நீண்டகாலமாய் வாக்களித்துள்ள இந்தத் தேசத்திற்கான கொழுத்தவைகளிலான மாபெரும் விருந்து ஆயத்தமாய் இருக்கின்றது என்றும், யாரெல்லாம் விரும்புகின்றார்களோ அவர்களெல்லாரும் வந்து, பெற்றுக்கொள்ளுங்கள் என்றுமுள்ள செய்திகளுடன் அவர்களை அனுப்பி வைத்தார். இயேசு மற்றும், பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், பின்னர் எழுபது சீஷர்கள் மூலம், யூதேயா முழுவதும் கொண்டு செல்லப்பட்ட செய்தியானது, கிருபை பெற்ற (இஸ்ரயேல்) ஜனங்கள் பொறுமையற்றுக் காத்திருந்தும், பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாக எதிர்ப்பார்த்து, ஜெபம் பண்ணினதுமான மாபெரும் விருந்தாகிய, இராஜ்யத்தின் மாபெரும் சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளை வந்து, அனுபவிப்பதற்கான அழைப்பாகக் காணப்பட்டது.

ஆனால் இராஜ்யத்தின் அழைப்பு உண்மையாக விடுக்கப்பட்டபோதோ, மாபெரும் விருந்தின் ஆசீர்வாதங்களில் பங்குக்கொள்வதற்கான அழைப்பு அவர்களுக்கு உண்மையாக விடுக்கப்பட்ட போதோ, மற்றவர்கள் எதிர்ப்பார்த்ததற்கு நேர்மாறாக, அவர்கள் இராஜ்யத்தையும், எதிர்க்கால காரிங்களையும் விரும்பவில்லை என்பது வெளியானது என்று உவமை காட்டுகின்றது. மாறாக இராஜ்யத்திற்கான அழைப்பானது, அவர்களால் ஒரே மாதிரியான விதத்தில் மறுக்கப்பட்டதுமான காரியமானது, மறுப்புத்தெரிவித்தவர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டது போன்று தோன்றுகின்றது. தங்களால் வாஞ்சிக்கப்பட்ட காரியம் என்று கூறப்பட்டதுமான தேவன் வாக்களித்துள்ள காரியங்களில், தங்களால் ஈடுபடமுடியாது என்பதற்கு அவர்கள் கூறின காரணங்கள் என்பது அவர்கள் நிறைவேற்ற வேண்டிய வேறே கடமைகளின் பாரங்களாக இருந்தது; இந்தப் பாரங்களோ, அவர்கள் இராஜ்யத்திற்கான தெய்வீக அழைப்பிற்குச் செவிக்கொடுக்க அவர்களுக்கு எந்த நேரத்தையும் கொடுக்கவில்லை. ஒருவனுக்கு தன்னுடைய வயலை பார்க்க வேண்டிய பாரம் இருந்தது; இப்படியாக அவன் வயலில் வேலை செய்வதாலேயே, அவனுடைய தொழில் நன்றாக இருக்கும் என எண்ணினான்; இன்னொருவனோ, எந்த வேலையும் இல்லாதவர்களால் ஆவிக்குரிய விருந்திற்குக் கவனம் செலுத்த முடியும், ஆனால் தன்னுடைய நேரமானது, தன்னுடைய ஆஸ்திகளை, எருதுகளை, ஆடுகளை, தொழிலைக் கவனிப்பதற்கே போதுமானதாக இருக்கின்றது என்று எண்ணினான். இன்னொருவன் தன்னுடைய கடமைகளுக்கும், குடும்ப உறவுகளுக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் தன்னுடைய கவனம் முழுவதும் தேவைப்படுகிறதினால், தன்னால் இராஜ்யத்தின் சிலாக்கியங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எண்ணினான்.

இப்படியாக இருந்த மாம்சீக இஸ்ரயேலர்களின் இதே மனநிலையே, இன்று ஆவிக்குரிய இராஜ்யம் அறிவிக்கப்படும்போதும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் மனநிலையாகவும் காணப்படுகின்றது. அநேகர் ஜீவியத்தின் உண்மையான மற்றும் நடைமுறைக் காரியங்களுக்கே தங்களுடைய கவனம் தேவையாக இருக்கின்றது என்று எண்ணுகின்றனர். இவர்கள் இந்த உலகத்தின் காரியங்களைத் தொடர்ந்துச் செய்துகொண்டிருக்கவும், உலகத்தோடேயே காணப்படுவதற்கும் விரும்புகின்றனர். மேலும் பூமிக்குரிய காரியங்களிலும், உறவு காரியங்களிலும் காணப்படுகின்றதான, இப்படிப்பட்டதான விருப்பங்களானது, இவர்களுக்கு மகிமையான ஆயிர வருட இராஜ்யத்தில், கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகப் பங்கடைவதற்கு, அதாவது நமக்கு வந்துள்ள பரம அழைப்பாகிய மாபெரும் விருந்தில் பங்கடைவதற்கான தெய்வீக அழைப்பிற்குப் பதில் கொடுக்க இடறலாக இருக்கின்றது எனக் காண்கின்றனர். ஒரு விதத்தில் பார்க்கப்படும்போது, இவை அனைத்தும் சரிதான், ஏனெனில் இதநிமித்தம் கர்த்தர் பங்குக்கொள்ள வேண்டும் என

விரும்பாத ஒரு வகுப்பார், இராஜ்யத்தின் இந்த அழைப்பிற்கு விலகிச் செல்வர்; ஒருவேளை இப்படிப்பட்டவர்கள் உள்ளே வந்துவிட்டாலும், பிற்பாடு வெளியேற்றப்படுவது அவசியமாகவே இருக்கும். தேவன் அநேகருக்கு அழைப்பு விடுத்திருந்தாலும், யார் மற்றச் சிலாக்கியங்களைக் காட்டிலும் இராஜ்யத்தின் சிலாக்கியத்தை உயர்வாக மதிப்பிடுவார்களோ, அதாவது யார் இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாக எதையும் மற்றும் எல்லாவற்றையும் பலிச்செலுத்த விரும்புகிறார்களோ, அப்படிப்பட்டவர்களையே இந்த விருந்திற்கு தேவன் நாடித்தேடுகின்றார்.

உவமையில் கூறப்பட்டுள்ளதான இந்த முதலாம் அழைப்பானது, நமது கர்த்தருடைய ஊழிய வருடங்களின் முதலாம் பாகத்தைக் குறிக்கின்றது. நமது கர்த்தருடைய ஊழிய வருடங்களின் முதலாம் பாகங்களானது, விசேஷமாக அந்தத் தேசத்தில் முன்னிலை வகுத்தவர்களாகவும், நமது கர்த்தரால் சொல்லப்பட்டது போல, மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து இருந்தவர்களாகவும், ஒட்டுமொத்த தேசத்திற்கு அடையாளமானவர்களாகவும் காணப்பட்ட பரிசேயர்களை, வேதபாரகர்களை மற்றும் நியாயசாஸ்திரிகளை ஆர்வப்படுத்துவதற்கு நேராகக் காணப்பட்டது; மேலும் இவர்கள் அழைப்பை மறுத்தது என்பது, அழைப்பை ஒட்டுமொத்த தேசமும் மறுத்ததாக இருந்தது. தம்முடைய மேசியாத்துவத்திற்கான சாட்சியங்களை, ஆசாரிய வகுப்பாருக்கு முன்பாக கொண்டு வருவதில் நமது கர்த்தர் மிகவும் கவனமாய் இருந்தார்; ஆகவேதான், அவர் பத்துக் குஷ்டரோகிகளைச் சொஸ்தப்படுத்தின சம்பவத்தில், அவர்கள் காரியத்தை வேறு எந்த மனுஷரிடத்திலும் அறிவியாமல், அவர்களை ஆசாரியர்களிடத்தில் போய், காண்பிக்கும்படி கட்டளையிட்டார் என்று பார்க்கின்றோம். இவ்வாறாக மற்றவர்களைக் காட்டிலும் குறிப்பாக ஆசாரிய வகுப்பாரே, நமது கர்த்தருடைய அற்புதமான கிரியைகளைக் குறித்து நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே குறிப்பாக ஆசாரிய வகுப்பாரே, மற்றவர்களைக் காட்டிலும் விருந்திற்கான அழைப்பைப் பெற்றிருந்தனர். எனினும் இஸ்ரயேலின் பிரதான பிரதிநிதிகள் அழைப்பிற்கு ஆயத்தமற்று இருந்த காரியமானது எவ்விதத்திலும் (எதற்கும்) தடையாக இருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை; பின்னர் நமது கர்த்தர், தம்முடைய சீஷர்கள் வாயிலாக அழைப்பை, இன்னொரு வகுப்பாருக்குக் கொடுத்தார்.

அதன் தலைவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த தேசத்திற்கான பரீட்சை, கல்வாரியில் அல்லது கல்வாரியின் சம்பவம் நடைப்பெறுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்னதாக, நமது கர்த்தர் கழுதையின் மேல் ஏறிச்சென்று, எருசலேம் பட்டணத்திற்காக, "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டு அழுததோடு நிறைவடைந்தது (லூக்கா 13:34, 35). அதாவது "ஒரு தேசமாக, ஒரு ஜாதியாராக, நீ மாபெரும் விருந்திற்கான தெய்வீக அழைப்பை மறுத்துவிட்டாய்; மேலும் நீயும் ஒரு ஜாதியாய் அதை ருசி பார்க்க முடியாது" என்ற விதத்தில் கர்த்தர் கூறினார். எனினும் தீர்க்கத்தரிசிகள் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக நோக்கம் மற்றும் வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக, அந்தத் தேசம் இராஜ்யத்தின் சிலாக்கியங்களுக்கு அபாத்திரமாய்க் காணப்படுகின்றது என்று நிரூபித்துக் காண்பித்த பிற்பாடும், தேவனுடைய இரக்கமானது அந்தத் தேசத்தின் பல்வேறு தனிநபர்களிடம் கடந்துச் சென்றது. அப்போஸ்தலர்கள் ஆள் சேர்க்க அனுப்பப்பட்டார்கள், ஒட்டுமொத்த தேசத்தைச் சேர்க்க அல்ல, மாறாக இந்த விருந்தில் பங்குக்கொள்ளத்தக்கதாக, தாழ்மையான மனங்களைக் கொண்டிருந்த தனிப்பட்ட நபர்களைச் சேர்க்க அனுப்பப்பட்டார்கள்; மேலும் ஒட்டுமொத்த இஸ்ரயேல் தேசத்திற்காக அல்லாமல், தனிப்பட்ட நபர்களுக்கான இந்த அழைப்பிற்கு, யாரெல்லாம் தங்களுடைய பாத்திரமற்ற தன்மையை உணர்ந்துக் கொண்டவர்களாக இருந்தார்களோ, அதாவது தாங்கள் பூரணமானவர்கள் அல்ல என்று ஒப்பக்கொண்டவர்களாகவும், பூரணத்தை வாஞ்சித்தவர்களாகவும், இராஜ்யத்தின் சிலாக்கியங்களில் பங்குக்கொள்வதற்கான அழைப்பில் களிக்கூர்ந்தவர்களாகவும், இதற்காக அனைத்தையும் விட்டுவந்தவர்களாகவும் இருந்த குருடர்களால், சப்பாணிகளால் செவிச்சாய்க்கப்பட்டது. இவர்கள் மத்தியில் அநேகர் ஞானிகளாக இல்லை, அநேகர் பிரபுக்களாக இல்லை, அநேகர் கல்விமான்களாக இல்லை, மாறாக பிரதானமாய்த் தரித்திரர்களாய் இருந்தனர்; தரித்திரர்கள் மத்தியில் அநேகர் தாழ்மையானவர்கள் இல்லை என்றாலும், தரித்திரர்கள் மத்தியிலேயே அதிகமானோர் அங்கீகரிக்கத்தக்கதான குணலட்சணங்களில் காணப்படுகின்றனர். ஐசுவரியவான்கள் மத்தியில் அதிக தாழ்மை எப்போதும் அரிதான ஒன்றாகவே இருக்கின்றது.

இந்த இரண்டாம் அழைப்பானது கொடுக்கப்பட்ட பட்டணத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் இருந்த ஏழைகளை, சப்பாணிகளை, குருடர்களை மற்றும் ஊரார்களை நம்முடைய நாட்களில் கூட்டிச்

சேர்ப்பது கடினமான காரியமாக இருப்பினும், நம்முடைய கர்த்தருடைய நாட்களில் வறுமையில் உள்ளவர்கள் அடங்கிய திரளானகூட்டத்தைச் சிறு கட்டளையிலேயே கூட்டிச் சேர்த்துவிடுவது சுலபமான காரியமாகும்.

இந்த இரண்டு அழைப்புகளும் பட்டணத்திற்கே, அதாவது இஸ்ரயேலுக்கே, தேவனுடைய பெயரளவிலான இராஜ்யத்திற்கே கொடுக்கப்பட்டது கவனிக்கப்பட வேண்டும். எனினும் இராஜ்யத்தின் வகுப்பாருக்குத் தேவனால் முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையை நிறைவு பண்ணுவதற்குப் போதுமானவர்களை, இந்த இரண்டு அழைப்புகளும் கண்டுபிடிக்க தவறிவிட்டது. அனைத்து இஸ்ரயேலர்களையும் வர பண்ணுவதற்கு அவரால் தூண்ட முடியும், ஆனால் அவரோ சரியான இருதய நிலையில் இல்லாதவர்களைத் துரத்தும் விதத்திலேயே, வேண்டுமென்றே விருந்திற்கான அழைப்பை விடுத்தார், அதாவது உத்தம இஸ்ரயேலர்களைக் கவரும் விதத்தில் அழைப்பை விடுத்தார்; அதாவது தங்களுடைய சொந்த தகுதியற்ற நிலையை உணர்ந்து, ஒப்புக்கொண்டவர்களாகவும், விருந்தில் பிரவேசிப்பதற்கு மகிழ்ச்சியடைகிறவர்களாகவும், தங்களுடைய சொந்த பூரணமின்மையாகிய அழுக்கான கந்தைகளை மூடுவதற்கென, விருந்தாளிகளுக்கு அளிக்கப்படும் வஸ்திரங்களைப் (கிறிஸ்துவின் நீதியை) பெற்றுக்கொள்ள மகிழ்ச்சியடைகிறவர்களாகவும் இருக்கும் உத்தம இஸ்ரயேலர்களைக் கவரும் விதத்திலேயே அழைப்பை விடுத்தார். ஆனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கான எண்ணிக்கையை நிறைவு செய்யத்தக்கதாக, இப்பொழுது இஸ்ரயேலில் போதுமானவர்கள் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை; செய்தியானது பட்டணத்திற்கு வெளியே, அதாவது யூதமார்க்கத்திற்கு வெளியே புறஜாதிகளிடத்தில் அனுப்ப வேண்டியிருந்தது. ஆகவே மூன்றாம் செய்தி அனுப்பப்பட்டது, "அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா" (லூக்கா 14:23). இவ்வசனத்தில் ஆங்கிலத்தில் இடம்பெறும் "compel" என்ற வார்த்தையானது, இவ்விடத்தில் தவறான கருத்தைக் கொடுக்கின்றதாக இருக்கும்; பரிந்துரை/தூண்டு, இணங்க வைத்தல் என்பதாகவே இவ்வார்த்தை இடம்பெற வேண்டும்.

ஆகவேதான் சுவிசேஷ யுகம் முழுவதிலும், சுவிசேஷ கிருபைகளுக்கு உள்ளாக, ஆயத்தமாய் இருந்த அநேக யூதர்கள் கொண்டுவரப்பட்ட பின்னர், செய்தியானது "தேவனுடைய நாமத்திற்கு என்று புறஜாதிகள் மத்தியிலிருந்து ஓர் ஜனம் எடுத்துக்கொள்ளப்படுவதற்காகவும்," இஸ்ரயேலின் மீதியானவர்களுடன் மாபெரும் விருந்தில் பங்கடையத்தக்கதாகவும், புறஜாதிகளிடத்திற்கு அனுப்பப்பட்டது; "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்" (அப்போஸ்தலர் 13:46, 47). யூதர்கள் தாங்கள் இந்த மாபெரும் ஆசீர்வாதத்திற்கு (அ) ஈவிற்கு அபாத்திரர்களாக இருப்பதை நிரூபித்துக்காட்டினார்கள்; நித்திய காலத்திற்குமான மகிமையான வாக்குத்தத்தங்களைக் காட்டிலும், இவர்கள் அழிந்துப் போகக்கூடிய காரியங்கள் மீதே மிகுந்த விருப்பம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

இந்த உண்மையை அப்போஸ்தலர், "அல்லாமலும் இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்கள்மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள்" என்று கூறுவதன் மூலம் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றார் (ரோமர் 9:27). இன்னுமாக இராஜ்யத்தில் பங்காளிகளாக இருக்கத்தக்கதாகப் புறஜாதிகளுக்குச் சென்ற அழைப்பானது, ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட அதே அழைப்பாக மாத்திரமே இருக்கின்றது என்றும், இவ்வளவு மாபெரும் இரட்சிப்பையும், சிலாக்கியத்தையும் புறக்கணித்துப்போனவர்களுடைய இடத்தில் நாம் வரத்தக்கதாகவே, அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்றும் அப்போஸ்தலர் நமக்குக் காட்டுகின்றார். இதை அவர், ஒலிவ மரத்தின் மூலம் விவரிக்கின்றார்; "சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால்........." (ரோமர் 11:17).

இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களும், சிலாக்கியங்களுமான மாபெரும் விருந்திற்கான இந்த மூன்றாம் அழைப்பானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் போய்க்கொண்டிருக்கின்றது; மேலும் நாம் புரிந்திருக்கிறவைகளை வைத்துப் பார்க்கையில், இந்த அழைப்புச் சீக்கிரத்தில் நிறைவடையப்

போவதாகத் தெரிகின்றது; கிட்டத்தட்ட பந்தியின் அநேக இடங்களில், விருந்தாளிகள் காணப்படுகின்றனர்; வெகுசில இடமே காலியாக இருக்கின்றது; இந்தக் காலியான இடங்களும் சீக்கிரத்தில் நிரம்பிவிடும்போது, மாபெரும் விருந்து ஆரம்பித்துவிடும், மேலும் நாம் நம்முடைய கர்த்தருடைய சந்தோஷங்களில் பிரவேசித்து, நாம் மாத்திரம் புசிப்பதற்குரிய சிலாக்கியம் பெற்றிராமல், அதன் ஆசீர்வாதங்களைப் பூமியின் குடிகள் அனைத்திற்கும் எடுத்துச்செல்லும் சிலாக்கியம் உடையவர்களாகவும் இருப்போம்.

முதலாம் அழைப்பின் கீழாக வந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு, யூதர்களுக்குத் இடையூறாக/தடையாக இருந்திட்ட அதே காரியங்களே, மூன்றாம் அழைப்பைக் கேட்ட புறஜாதியார்களில் அநேகருக்கு அதிக அளவில் தடையாகக் காணப்படுகின்றது. முழுமையான தொழிலாளியாக, ஐசுவரியவானாக, செல்வாக்கு மிக்கவனாகவே இருந்துக் கொண்டு, அதே வேளையில் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, இந்த விருந்திற்கான அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில், கர்த்தருக்கு நம்முடைய இருதயங்கள், தாலந்துகள், ஆற்றல்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்துவிடுவது கூடாத காரியமாகும். இந்த விருந்திற்கான அழைப்பை ஏற்றுக்கொள்ளுதல் என்பது, மற்ற எல்லாவற்றையும் விட இதில் ஆழமான ஆர்வம் இருப்பதினிமித்தம், மற்ற எல்லா விஷயங்களும், அது வீடாகவோ, நிலமாகவோ, தகப்பனாகவோ, தாயாகவோ, மனைவியாகவோ, பிள்ளையாகவோ இருந்தாலும், அவை அனைத்தும் இராஜ்யத்திற்கு அடுத்த காரியங்களுக்கும் மற்றும் அழைப்புத் தொடர்புடைய நிபந்தனைகளின் விஷயத்திலான நம்முடைய கடமைகளுக்கும், அடுத்தப்படியாக, இரண்டாவதாகவே காணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இஸ்ரயேலர்களின் விஷயத்தில் எப்படிக் காணப்பட்டதோ, அப்படியே புறஜாதியார்களின் விஷயத்திலும் காணப்பட்டது, அதாவது இராஜ்யத்திற்கான அழைப்பானது, இந்த உலகத்தின் ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் பெற்றிருந்தவர்களால் மறுக்கப்பட்டது; அதாவது மனுஷர் மத்தியிலான கனத்திலோ (அ) சமுதாய அந்தஸ்திலோ (அ) தாலந்துகளிலோ (அ) பணத்திலோ (அ) நற்பெயரிலோ ஐசுவரியவான்களாய் இருந்தவர்கள், இவைகளையெல்லாம் விட்டுவிட்டு, இடுக்கமான வழியில் இயேசுவைப் பின்தொடர்வது கஷ்டம் என எண்ணினார்கள்; யூத யுகத்தின் முடிவில் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தரித்திரர்களாகவும், எளிமையானவர்களாகவும் இராமல் இருந்ததுபோலவே புறஜாதியாரின் விஷயத்திலும் உண்மையாய் இருந்தது; இன்றும் இது உண்மையாக இருக்கின்றது "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." "என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துக்கொள்ளவில்லையா?" (1 கொரிந்தியர் 1:26; யாக்கோபு 2:5).

ஆனால் அதற்கென்று எவ்வகையான ஐசுவரியவான்களுக்கும் அழைப்புத் தடைப்பண்ணப்படுவதில்லை, மாறாக அவர்களுக்கும் மாபெரும் சிலாக்கியங்களும், வாய்ப்புகளும் கொடுக்கப்படுகின்றது; ஏனெனில் இவர்களிடம் மிக அதிகமான தாலந்துகள் காணப்படுகின்றது; ஒருவேளை இவர்கள் விருப்பம் கொண்டால், இவர்களும் பலிச்செலுத்தி, அழைப்பையும், விருந்தையும் குறித்ததான தங்களுடைய மதிப்பீட்டை வெளிப்படுத்தி, தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். நமது கர்த்தருடன் இராஜ்யத்தில் உடன்சுதந்திரத்துவம் எனும் மாபெரும் விருந்தில் பங்கடைவதற்கான அழைப்பிற்குப் பதில் கொடுக்கும் வண்ணமாக, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடத்தக்கதாக, நாமும் அப்போஸ்தலனாகிய பவுலைப் போன்று பாரமான யாவற்றையும், ஒவ்வொரு இடையூறையும், ஒவ்வொரு நெருக்கங்களையும், நமக்கு அருமையாய் இருக்கும் பூமிக்குரியவை அனைத்தையும் தள்ளிவிட்டுவிடுவோமாக (எபிரெயர் 12:1, 2; ரோமர் 8:16-18; 12:1, 2).

**ஆமென்!**

---

# "காணாமல் போனவர்களுக்கான தெய்வீக அக்கறை"

## லூக்கா 15:1-10

"அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" - (வசனம் 10).

மனுக்குலம் தொடர்புடைய விஷயத்தில் பயன்படுத்தப்படும் "காணாமல் போனது" என்ற வார்த்தைக்கு, நவநாகரிக இறையியலால் வழங்கப்படும் பொதுவான அர்த்தத்திலிருந்து, முற்றும் ஒரு வேறுபட்ட அர்த்தத்தை வேதாகமம் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நவநாகரிக இறையியலோ, "காணாமற்போனது" எனும் வார்த்தையை, எந்த வாய்ப்புமற்ற, தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்களுடன் தொடர்புபடுத்திப் பயன்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக பாரம்பரிய நம்பிக்கையானது, இவ்வார்த்தையை வாய்ப்பற்றவர்களுக்கும், முடிவற்ற நித்திய சித்திரவதைக்குப் பாத்திரமானவர்களுக்கும் தொடர்புடையதாய்ப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் வேதவாக்கியங்களுடைய கண்ணோட்டத்தின்படி பார்க்கப்படுகையில் "காணாமற்போன"எனும் வார்த்தையானது, முற்றிலும் மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு எதிர்மாறான நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை, இப்பாடத்தில் நாம் பார்க்கலாம்.

வார்த்தையிலும், நடத்தையிலும் பரிசுத்தராயிருந்த நம்முடைய கர்த்தர், அவருடைய நாட்களில் பரிசுத்தமாய்க் காணப்பட்ட ஜனங்களை இயல்பாகவே தம்மிடத்தில் ஈர்க்கின்றவராய்க் காணப்பட்டார்; இந்தப் பரிசுத்தமான ஜனங்கள் பரிசேயர்களாய் இருந்தார்கள்; மேலும் இவர்கள் மத்தியில் காணப்பட்ட அநேகருடைய பரிசுத்தமானது, மாய்மாலமான விதத்திலேயே இருந்தது; அதாவது இவர்கள் இருதயத்தில் பரிசுத்தத்தையும், தூய்மையையும் பெற்றிருப்பதற்குப் பதிலாக, வெளிப்புறமாக பரிசுத்தமாய்க் காட்சியளிப்பதிலேயே விருப்பம் உள்ளவர்களாய் இருந்தனர். கடந்த பாடத்தில், நமது கர்த்தர் எப்படி முன்னிலையான பரிசேயர்களுடன் கூட, விருந்தாளியாக சென்று, எப்படி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டார் என்று பார்த்தோம். ஆனால் தங்களையே யூதர்கள் மத்தியில் பரிசுத்தமான வகுப்பார் என்று எண்ணிக்கொள்வதற்குப் பழகிப்போன பரிசேயர்கள் படிப்படியாக, ஜனங்கள் மத்தியில் கீழ்மட்டத்தில் காணப்பட்டவர்களிடமிருந்து, தங்களையே பிரித்துக் கொண்டவர்களானார்கள்; ஆகவே நமது கர்த்தருடைய நாட்களில், இந்த இரண்டு வகுப்பாரும் கலந்துக் கொள்வதில்லை/பழகுவதில்லை; பரிசேயர்கள் மற்றவர்களைச் சகோதரர் என்றும், தெய்வீக வாக்குத்தத்தங்களில் உடன்சுதந்திரர்கள் என்றும் ஒத்துக்கொள்ள மறுப்பவர்களாய் இருந்தார்கள். ஆகையால் யூதர்களின் கீழ்மட்ட ஜனங்கள், இயேசுவினுடைய போதனைகளிடத்திற்கு ஆர்வம் கொண்டுள்ளனர் என்றும், இயேசு இவர்களிடமிருந்து தம்மை விலக்கிக்கொள்ளவில்லை என்றும், இவர்களுடன் கலந்துப் பழகுபவராகவும் இருந்து, மற்றவர்களுக்குப் போதிப்பது போன்று இயேசு இவர்களுக்கும் போதிக்கின்றார் என்றும் பரிசேயர்கள் கண்டபோது, அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஒருவேளை இயேசு தம்மை ஒரு பரிசேயன் போல் காண்பிக்கவும், தங்களுடைய ஆச்சாரங்களுக்கு இசையவும் விரும்பினாரானால், இயேசுவைத் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்வதற்கு, இந்தப் பரிசேயர்கள் மகிழ்ச்சியாய் இருந்திருப்பார்கள். இந்தப் பரிசேயர்களுடைய தவறான கருத்தைச் சரிச் செய்வதற்கே, இயேசு ஐந்து உவமைகளைக் கொடுத்தார்; அவைகளில் இரண்டைத்தான் நாம் இப்பாடத்தில் பார்க்கவிருக்கின்றோம்.

உவமையில் உண்மையான மேய்ப்பன், தன்னுடைய ஆடுகளை நேசித்தவனாகவும், அவைகளுக்காகப் பராமரிக்கின்றவனாகவும் இருந்து, தன்னுடைய 99 ஆடுகளையும் (பாலைவனத்தில் அல்லாமல்) காட்டில் உடன் மேய்ப்பர்களுடைய நல்ல பராமரிப்பின் கீழ் விட்டுவிட்டு, காணாமற்போன ஓர் ஆட்டைக் கண்டுபிடிக்கும் மட்டும் தேடிச் செல்லுகிற காரியமானது, தெய்வீகப் பராமரிப்புப் பற்றின விளக்கமாக இருக்கின்றது. இதற்கும் மேலாக, வேறு எந்தப் பாடமும் ஆண்டவருடைய இந்த வார்த்தைகள் மூலமாய்த் தெரிவிக்கப்படவில்லை என்று நாம் எண்ணுகின்றோம்; ஆனால் ஒருவேளை இந்த உவமையானது, இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்தினுடைய அம்சங்களை விவரிக்கின்றதற்கும், கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று நாம் எண்ணுவோமானால், காணாமற்போன அந்த ஓர் ஆடு ஆதாமையும், மனித குடும்பத்தையும் குறிக்கின்றதாகவும், மற்றும் காணாமற்போகாத 99 ஆடுகளும் பாவத்தில் திரியாமலும்,

தேவனிடமிருந்து தொலைதூரத்திற்குப் போகாமலும், அவருடைய மேற்பார்வை மற்றும் பராமரிப்பின் கீழ் எப்போதும் காணப்பட்டவர்களாகவும் இருக்கும் தேவதூதர்களையும், மற்ற ஆவியின் ஜீவிகளையும் குறிக்க வேண்டும் என்றே நாம் அனுமானிக்க வேண்டியுள்ளது. இக்கண்ணோட்டத்தின்படி, காணாமற்போன ஆட்டைத் தேடும்படிக்கு, மேய்ப்பன் செல்வது என்பது, மனுக்குலத்தின் நன்மைக்காக, உலக தோற்றத்திற்கு முன்பாக பிதாவுடன் இருந்த தம்முடைய மகிமையை இயேசு துறந்து, மனித நிலைமைக்கு வருவதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இதற்கும் மேலாக வேறு ஏதாகிலும் காரியத்திற்கு, இவ்வுமையைப் பொருத்திப் பார்ப்பது என்பது பொருந்தாதாகவே இருக்கும்; உதாரணத்திற்குக் காணாமற்போன ஆடு என்பது, மனுக்குலத்தில் மிகவும் சீரழிந்துப் போனவர்களைக் குறிக்கின்றது என்றும், 99 ஆடுகளும் பரிசுத்தமான ஒரு வகுப்பாரைக் குறிக்கின்றது என்றும் அனுமானிப்பது, இரண்டு விதங்களில் பொருந்தாதக் காரியமாக இருக்கும்; அவை (1) நீதிமான் ஒருவராகிலும் இல்லை என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன, மேலும் தீர்க்கத்தரிசி குறிப்பிட்டுள்ளது போன்று, "நாமெல்லாரும் ஆடுகளைப் போல் வழிதப்பித் திரிகின்றவர்களாய் இருக்கின்றோம் (ரோமர் 3:10; ஏசாயா 53:6). (2) 99 ஆடுகள், பெரும்பகுதியினராக இருப்பவர்களைக் குறிக்கும் என்று கூறுவதும் பொருந்தாது, காரணம் சிறுபான்மையானவர்களே, அதாவது பூமியின் 600,000000 ஜனத்தொகையில், 100000 பேரில் ஒருவரும், 10,000 பேரில் ஒருவரும்தான் இன்று மாபெரும் மேய்ப்பனாகிய தேவனுடன் ஓரளவுக்கு ஐக்கியத்தில் இருக்கின்றனர் என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

ஓர் ஆடு ஆதாமுக்குள் விழுந்துபோனதும், நீதியின் பாதையினின்று தொலைதூரத்திற்கு அலைந்துத் திரிந்ததுமான ஒட்டுமொத்த மனுக்குலத்தை அடையாளப்படுத்துகின்றது என்றும், இயேசு, மாபெரும் மேய்ப்பனாகிய பிதாவினுடைய நல்ல மேய்ப்பனாக இருக்கின்றார் என்றுமுள்ள கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், காணாமற்போன ஆட்டைத் தேடிச்செல்வதற்கான வேலை, நமது கர்த்தருடைய முதலாம் வருகையின் போதே ஆரம்பமாகியுள்ளது என்று காண்கின்றோம். ஆட்டை மீட்கும் விஷயத்திலான நமது இரட்சகருடைய விலை கொடுக்கப்பட்டதாகிய ஆரம்பத்தை நாம் பார்க்கின்றோம், ஆனால் ஆடு மீட்கப்பட்டதை நம்மால் இன்னமும் பார்க்க முடியவில்லை, ஏனெனில் எந்த விதத்திலும் மனுக்குலமானது, தேவனுடன் இசைவிற்குள் கொண்டு வரப்படவில்லை. ஆனால் இயேசுவின் தலைமையின் கீழ் நல்ல மேய்ப்பனுடைய அங்கத்தினர்களாக, அதாவது கிறிஸ்துவினுடைய சரீரமாக இருப்பதற்கு, தேவன் மனுக்குலத்திலிருந்து சபையை இந்தச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுத்துக் கொண்டிருப்பதை நம்மால் காண முடிகின்றது; இன்னுமாக மனுக்குலமாகிய காணாமற்போன ஆட்டை, ஆயிர வருட யுகத்தின்போது, தேடுவதற்குரிய இந்த வேலையில் ஈடுபடுவதற்கு ஆயத்தப்படுத்தப்படும் விஷயத்தில், சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கமும் ஏதேனும் விலை கொடுக்க (இழக்க) வேண்டியுள்ளதை நாம் பார்க்கின்றோம்.

ஆடானது எந்த இடத்தில் காணப்படுகின்றது என்ற விதத்தில் ஆடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; ஒருவிதத்தில் சொல்லப்போனால் அது காணாமற்போகவில்லை. ஆனால் தேவனிடமிருந்து விலகி, பாவத்திற்குள்ளும், சீரழிவிற்குள்ளும் மனுக்குலம் கடந்து போய் உள்ள விதத்திலேயே, அது காணாமற்போனதாகக் கூறப்பட்டுள்ளது; மனுக்குலமானது, திரும்பக்கொடுத்தலின்/சீர்ப்பொருத்துதலின் வாயிலாக, சீரழிவிலிருந்தும், பாவம் எனும் உளையான சேற்றிலிருந்தும், அக்கிரமமும், மரணமுமாகிய படுகுழியிலிருந்தும், மீட்கப்பட அல்லது திரும்பிக்கொண்டு வரப்படவேண்டும். உவமையில் கூறப்பட்டுள்ளபடியாக, ஆடு, பூரணமான நிலைமைக்குக் கொண்டு வரப்படத்தக்கதாக ஆயிரம் வருடம் காலப்பகுதித் தேவைப்படுகின்றது; ஆனால் இதற்கிடையில் மனிதனுடைய இரட்சிப்பிற்கான இந்த மாபெரும் திட்டத்தினுடைய ஒவ்வொரு படியும், பிதாவின் தொழுவத்தைவிட்டு ஒருபோதும் வழிவிலகாத பரம சேனைகளால் ஆர்வமாய்க் கண்ணோக்கப்பட்டு வருகின்றது என்று நமது கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். கர்த்தருடைய விளக்கத்தில் அடையாள வார்த்தை கொஞ்சம் மாற்றம் அடைகின்றது, அதாவது மனுக்குலமானது ஓர் ஆட்டினால் அடையாளப்படுத்தப்படாமல், மாறாக அநேகம் ஆடுகளால் அடையாளப்படுத்தப்படுகின்றது (ஆதியில் ஆதாம் ஒருவராக இருந்தார். இப்பொழுது அநேகம் மனிதக்குடும்பங்கள் காணப்படுகின்றன); இன்னுமாக ஒரு பாவி, மனந்திரும்பி, மீண்டுமாகத் தொழுவத்தினிடத்திற்கு, அதாவது தேவனுடனான ஐக்கியத்திற்குத் திரும்புகையில், தேவதூதர்கள் மத்தியில் சந்தோஷம் காணப்படும் என்றும் இயேசு அறிவித்தார்.

தேவனுடனான இசைவிற்குள் வரும் இவர்கள், பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருக்குள்ளான கிருபையினால் அனைத்திலிருந்தும் இலவசமாக நீதிமானாக்கப்படுகின்றனர். "சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:25). மேலும் இவர்கள் நல்ல மேய்ப்பனோடுக் கூட, அவருடைய சரீரத்தின் அங்கத்தினராக வேலை புரியும் உடன் வேலையாட்களாகுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.

ஆதியில் காணாமற்போன ஓர் ஆடாகிய ஆதாமின் விஷயத்திலும், அவருடைய அநேக சந்ததியாரின் விஷயத்திலும் இழந்துவிட்ட நிலைமை அவர்களால் வாஞ்சிக்கப்படவில்லை, இல்லையேல் ஆதாமும் சரி, மற்றவர்களும் சரி, மீண்டுமாய் வெளியேறின தொழுவத்தினிடத்திற்கே சென்றிருப்பார்கள்; மாறாக பாவத்தினுடைய சீர்க்கேட்டின் நிமித்தமாக, அவர்கள் மிகவும் சீர்க்கேடானவர்களாகவும், இயலாதவர்களாகவும் ஆகிவிட்டதினால், அவர்களால் தங்களுடைய சொந்த பெலத்தினாலேயே வந்த வழியில் திரும்பிப்போக முடியாமல் போயிற்று. அவர்களுக்கு ஓர் இரட்சகர் தேவையாய் இருந்தது; அதாவது அவர்களை இந்தக் கீழான நிலையிலிருந்து இரட்சிக்கக் கூடியவரும், பாவத்தினுடைய தீர்ப்புகள் அனைத்திலிருந்தும் தங்களை விடுவிக்கக்கூடியவரும், தங்களை மீண்டுமாகத் தேவனுடைய தொழுவத்தில் முழுமையாய்க் கொண்டு வந்து சேர்க்கிறவருமான ஓர் இரட்சகர் தேவைப்பட்டார். இப்படிப்பட்டதான ஒருவராகிய நமது கர்த்தர் இயேசுவை, நம்முடைய பரம பிதாவானவர் அருளினார் "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபிரெயர் 7:25).

தங்களை மீட்கும் விஷயத்தில், கர்த்தருடைய அன்பானது அருளும் சகல ஆசீர்வாதங்களையும், வாய்ப்புகளையும், அவருடைய கரத்திலிருந்து பெற்றுக்கொண்ட பிற்பாடும் கூட, சிலர் துணிகரமாய்ச் சுயசித்தத்தில் காணப்பட்டு, நல்ல மேய்ப்பனுடைய உதவியை உதைத்துத் தள்ளுகிற வகுப்பாராகக் காணப்படுவார்கள் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்க் காட்டுகின்றன. இவர்களைக் குறித்து, "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்து பின்பு மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்கள்" என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன; மேலும் இப்படிப்பட்டவர்கள், மாபெரும் பலியை அசட்டைப் பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள் என்றும், இவர்களைப் புதுப்பிப்பது என்பது கூடாத காரியம் என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். இப்படிப்பட்டவர்களின் போக்கைக் குறித்து, "மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். இப்படியாக துணிகரமாயும், தொடர்ந்தும் பாவம் செய்துகொண்டிருப்பவர்கள், நல்ல மேய்ப்பனை எட்டும் தொலைவிற்கு அப்பால் தங்களை நிறுத்துபவர்களாய் இருந்து, இரண்டாம் மரணம் மரித்து, தெய்வீகத் திட்டத்தில் ஏதேனும் ஒரு பங்கு அடைவதிலிருந்து நின்றுபோவார்கள் (எபிரெயர் 6:4-6; 1 யோவான் 5:16). "வெள்ளாடு வகுப்பாருக்காக," நல்ல மேய்ப்பன் தம்முடைய ஜீவனைக் கொடுத்து, வனாந்தரத்தில் தேடித் திரியவில்லை; "நரிகளுக்காகவும்" அவர் தேடித்திரியவில்லை, மாறாக, பாவத்தினால் ஏற்பட்ட சீரழிவு இருப்பினும், கொஞ்சமாகிலும் "செம்மறியாட்டினுடைய" சுபாவத்தைக் கொண்டிருப்பவர்களை மாத்திரமே அவர் தேடித் திரிகின்றார். ஆதாம், "செம்மறியாடாக," அதாவது வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றது போன்று, "தேவனுடைய குமாரனாக" இருந்தார் (லூக்கா 3:38); இவருடைய மீறுதல் துணிகரமாக இருப்பினும், சில விதங்களில் பார்க்கப்படும்போது, இவருடைய மீறுதல், தொழுவத்திலிருந்து, சுயசித்தத்தின் வழியில் செம்மறியாட்டினுடைய வழித் திரிதலாகவே இருந்தது என்று எடுத்துக்கொள்ளப்படலாம்; மாறாக செம்மறியாட்டினுடைய சுபாவத்தினின்று, வெள்ளாட்டின் (அ) நரியின் சுபாவத்திற்கு மாற்றம் எதுவும் நடைபெறவில்லை; ஆதாம் பிசாசினுடைய பிள்ளையாக இருக்க விரும்பிச்செல்லவில்லை.

ஒருவேளை ஆதாம் தன்னுடைய இருதயத்தில் தேவனுக்கும், நீதிக்கும் எதிராக அறிவுப்பூர்வமாகவும், துணிகரமாகவும், தேவனுக்குச் சத்துருவாகியிருப்பாரானால், சர்வ ஞானமுள்ள மேய்ப்பனாகிய பிதாவானவர், ஆதாமின் பின் தம்முடைய குமாரனை அனுப்பியிருப்பார் என்று நம்மால் எண்ணிக்கொள்ள முடியாது. உண்மைதான், ஆதாமின் பிள்ளைகளில் அநேகர் இன்று, வெள்ளாட்டினுடைய சுபாவத்தில் சிலவற்றை அடைந்துள்ளனர்; "துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாய் இருந்த உங்களை" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவது உண்மைதான் (கொலோசெயர் 1:21). இன்னுமாக இந்த ஒரு நிலைமைக்குள் இவர்கள் அநேகமாய்த் துணிகரமாய்க் காணப்படவில்லை, மாறாக, சாத்தான் ஒளியை இருள் என்றும், இருளை ஒளி என்றும் வஞ்சித்துள்ளதினாலேயே ஆகும். இவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள்

ஏமாற்றப்பட்டுள்ளது; "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4). இவர்களில் அநேகர், எதிராளியானவனுடன் கூட்டுச் சேர்ந்துள்ளபடியால், அநேக விதங்களில் வெள்ளாட்டினுடைய சுபாவங்கள் கொண்டவர்களாக ஆகிப்போனாலும், இன்னமும் செம்மறியாட்டினுடைய சுபாவத்தில் கொஞ்சம் பெற்றிருக்கவே செய்கின்றனர்; இவர்கள் சரியான வெளிச்சத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டால், தங்களை முழுமையாகத் தெய்வீகக் கிருபையினிடத்திற்கும், தொழுவத்தினிடத்திற்கும் கொண்டுவரும்/சீர்ப்பொருந்தப் பண்ணும் நல்ல மேய்ப்பனைப் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைவார்கள்.

இவ்விஷயங்கள் உண்மையானது என்றும், சரியானது என்றும், உவமையினுடைய பல்வேறு அம்சங்களுக்கு இசைவான ஒரே காரியமாக இருக்கின்றது என்றும் உள்ள இக்கண்ணோட்டத்தின்படிப் பார்க்கப்படுகையில், இரண்டாம் மரணத்திற்குக் கடந்துப் போகிறவர்களைக் குறித்து, தேவன் கருத்தில் எடுத்துக்கொள்வது இல்லை எனவும், இவர்கள் செம்மறியாட்டினுடைய சுபாவத்தை இழக்கும் தருணம் முதல், தேவன் மற்றும் அவருடைய திட்டத்தைப் பொறுத்தமட்டில், எந்தவிதமான ஜீவனை அடையக்கூடாதவர்களாய் இருக்கின்றார்கள் எனவும் நாம் உணர்ந்துக்கொள்கின்றோம். திரும்பக்கொடுத்தலின் காலங்களில் நமது கர்த்தரால் மீட்கப்படுகிறதும், ஆயிர வருட யுகத்தினுடைய முடிவின்போது, தேவனுடைய மந்தைக்குள்ளாகக் கொண்டு வரப்படுகிறதுமான அந்த ஓர் ஆடானது, மனித குடும்பமாகும், அதாவது தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டவர்களும், அந்தச் சாயலையும், ரூபத்தையும் முழுமையாய் இழந்துப்போகாதவர்களும், ஆயிரவருட யுகத்தின் போது, அவருடைய சாயலிலும், ரூபத்திலும் சீர்ப்பொருந்தப் பண்ணப்படுகிறவர்களுமான மனுக்குலமே ஆகும். ஆதாம் மற்றும் ஏவாளாகிய ஓர் ஆட்டினால் அடையாளப்படுத்தப்படும் காணாமற்போன ஓர் ஆடானது, மீட்கப்படும்போது, பல மில்லியன் கணக்கான மீட்கப்பட்டு, சீர்ப்பொருந்தப் பண்ணப்பட்ட மனுக்குலத்தாராக, அநேகம் பேராக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

## "காணாமல்போன வெள்ளிக்காசு"

பத்து வெள்ளிக்காசு தொங்கவிடப்பட்ட ஆபரணத்தை, அதாவது திருமணத்திற்கான அடையாளமாகப் பெற்றுக்கொண்டிருந்த ஸ்திரீ பற்றின உவமையில், அவள் காணாமல் போன ஒரு வெள்ளிக்காசைக் கவனமாய்த் தேடுவது என்பது, முன்பு நாம் பார்த்திட்ட உவமையின் அதே கருத்தைக் கொடுக்கிறதாகவே உள்ளது. காணாமற்போன வெள்ளிக்காசைத் தேடுவதில் செலவிடப்பட்ட ஸ்திரீயினுடைய பிரயாசமானது, காணாமற்போன மனுக்குலத்தின் சார்பிலாகத் தெய்வீகப் பிரயாசத்திற்கான விளக்கமாக நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கும்கூட ஆதாமினுடைய இழப்புப் பற்றியேயல்லாமல், மற்றபடி இரண்டாம் மரணத்தில் தொலைந்துப் போகிறவர்களைக் குறித்து, "காணாமற்போன" என்ற வார்த்தையை வேதவாக்கியங்கள் பயன்படுத்துவதில்லை என்று நாம் பார்க்கின்றோம். இரண்டாம் மரணத்தின் வகுப்பார், காணாமற்போனவர்கள் என்று சொல்லப்படுவதில்லை; அவர்கள் ஜீவன் இல்லாமல் நின்றுவிடுபவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் தெய்வீக மதிப்பின்படி ஒரு பொருட்டாக கருதப்படுவதில்லை, மற்றும் குறிப்பிடப்படுவதற்குப் பாத்திரவான்களும் இல்லை. தேவன் அங்கீகரிப்பதும், சீர்ப்பொருந்த பண்ணுவதாகக் கூறும், ஆதியில் . . . காணாமற்போனவைகள் போன்று இந்த இரண்டாம் மரணத்தின் வகுப்பார் இருப்பதில்லை.

பத்து வெள்ளிக்காசுகள் விலைறேப்பெற்றவைகளாக, மதிப்புடையவைகளாக மாத்திரம் இல்லாமல், குறிப்பிட்ட உருவங்கள் சில அந்த வெள்ளிக்காசுகளில் பொறிக்கப்படுவது வழக்கமாய் இருந்தது. இப்படியாகவே தேவனுடைய குமாரர்களாகிய தேவதூதர்களின் விஷயத்திலும், பிரதான தூதர்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது; வேறு எத்தனை வகையான ஆவியின் ஜீவிகள், தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. இவைகளில் ஒன்றாகிய மனுஷன் காணாமற்போனான். காணாமற்போனதே தேடப்பட்டு, இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

முற்காலத்தின் வீடுகளானது, வாசல் வழியாய் வரும் வெளிச்சத்தினால் வெளிச்சம் பெற்றுக்கொள்கின்றது. மேலும் தரைப் பகுதியானது குப்பைகளில், தூசிகள் நிறைந்ததாய்க் காணப்படுவது என்பது, பாவம் மற்றும் சீரழிவுக்குள் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும்

காணப்பட்ட ஆதாமினால் அடையாளப்படுத்தப்படும் மனுக்குலமானது காணாமற்போனதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது காணாமற்போன வெள்ளிக்காசானது, காணாமற்போன ஆட்டிற்கு அடையாளமாக இருக்கின்றது. இந்த உவமையானது, திரும்பக்கொடுத்தலின் வழிமுறைகளைப் பற்றிக் குறிக்காமல், மாறாக, ஆரம்பத்தில் காணாமற்போன காரியமும், இறுதியில் காணாமற்போன அதே காரியம் கண்டுபிடிக்கப்படுகிற காரியமும், இதற்காக ஏறெடுக்கப்படும் பிரயாசமும் மாத்திரமே குறிப்பிடப்படுகின்றது. விளக்கைக் கொழுத்துவதும், ஜாக்கிரதையாய்ப் பெருக்குவதும், கிறிஸ்து மூலமாய், ஆயிர வருட யுகத்தினுடைய முடிவில் நிறைவேற்றப்படும் தேவனுடைய வேலையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆயிர வருட யுகத்தின் முடிவில், பரம பிதாவினிடத்திற்குத் திரும்பும், சீர்ப்பொருத்தப்பட்ட இனமானது, ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட போது காணப்பட்ட தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் பூரணமாய்க் காணப்படுவார்கள், மற்றும் தாங்கள் பெற்றிருக்கும் சாயலுக்குரியவரான தேவன் பற்றின முழுமையான உணர்ந்துக்கொள்ளுதலையும், அதிகமான அறிவையும் கூடப் பெற்றிருப்பார்கள். இவ்வுமையில் மனித குடும்பத்தினருடைய எண்ணிக்கைப் பெருகுவது குறித்தோ, அல்லது (நீதியைக் காட்டிலும், பாவத்தின் மீதான விருப்பத்தின் காரணமாக) துணிகரமாய்ப் பாவம் செய்யும் ஆதாமின் சந்ததியில் உள்ள சிலர், ஜனங்கள் மத்தியிலிருந்து அறுப்புண்டுப் போவதைக் குறித்தோ பேசப்படுவதில்லை. (அப்போஸ்தலர் 3:23). இந்த இரண்டாம் மரண வகுப்பார்களுக்கு, பிதாவின் முன்னிலையில் எவ்விதமான தகுதியும் இல்லை; காணாமற்போனவர்களையும், தம்முடைய உண்மையுள்ள பிரதிநிதியாகிய கிறிஸ்துவினால் தேடப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டு, தம்முடைய தொழுவத்தில் கொண்டு வரப்படுபவர்களையும் பற்றி மாத்திரமே பிதாவானவர் கவனத்தில் கொள்கின்றார் என்பது உண்மையே.

ஆயிர வருட யுகத்தினுடைய முடிவின்போதும், பரலோகத்திலும், பூமியிலும், சிங்காசனத்தில் வீற்றிருப்பவரையும், ஆட்டுக்குட்டியானவரையும் துதிக்கும் சத்தம் கேட்கப்படும் போதும், பரலோகத்திலும், பூமியிலும் மிகுந்த சந்தோஷத்திற்கான காலம் வரும்; ஆனால் முழுமையாய்ச் சந்தோஷம் கொள்ளும் காலத்திற்கு முன்பாகவும் கூட, மாபெரும் வேலையினுடைய நிறைவேறுதலுக்கான ஒவ்வொரு சாட்சியங்களிலும், பரலோக சேனை முழுவதும் மகிழ்ச்சிக் கொள்ளும்; அதாவது ஒரு பாவியினுடைய மனந்திரும்புதலில், அதாவது பாவத்திலிருந்து, தேவனுடன் இசைவிற்குள் முழுமையாய்த் திரும்புதலில் மகிழ்ச்சிக் கொள்ளும் என்று நமது கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். ஒருவேளை தேவனுக்கும், பரலோக ஜீவிகளுக்கும் இசைவாய் இருக்கும் பரலோகத்தில் உள்ள தேவதூதர்கள் மகிழ்ச்சிக் கொள்வார்களானால், பூமியில் உள்ள தேவனுடைய ஜனங்கள், சகல சிருஷ்டிகளும் பாவம் மற்றும் சாத்தானுடைய கண்ணி மற்றும் குருட்டுத்தன்மையிலிருந்து விடுபடும் போதும் மகிழ்ச்சிக் கொள்வார்கள்.

இந்த ஒரு படிப்பினையையே நமது கர்த்தர், பரிசேயர்களின் மனதில் பதியவைக்க நாடினார்; அதாவது பரிசேயர்கள் தங்களையே, கீழ்மட்ட ஜனங்களிடமிருந்து விலக்கிக் கொண்டு, இயேசுவின் வார்த்தைகளைக் கீழ்மட்ட ஜனங்கள் மகிழ்ச்சியாய்க் கேட்டுக் கொண்டிருப்பதின் காரணமாக சினம் கொள்வதற்குப் பதிலாக, பரியேசர்கள் தேவனுடனும், பரலோக தேவதூதர்களுடனும் இசைவாய்க் காணப்படுவார்களனால், அவர்கள் மனம்திரும்புதலையும், சீர்ப்பொருந்துதலையும் ஜனங்கள் மத்தியில் காணும்போது சந்தோஷமடைந்திருக்க வேண்டும்; இன்னுமாக "கர்த்தரைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க" நாடுபவர்களை, தேவனுடனான உறவிற்குள் கொண்டு வருவதில், மகிழ்ச்சியாய் உதவி செய்பவர்களாக இருந்திருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 17:27).

இதுவே கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும், இன்றும் காணப்பட வேண்டிய மனப்பான்மையாக இருக்கின்றது. இப்படியாக ஒருவேளை அவர்களுடைய இருதயத்தின் உணர்வுகள் காணப்படவில்லையெனில், இது அவர்களிடம் கர்த்தருடைய ஆவி இல்லாததற்கான சாட்சியாகும். இப்படியாக மற்றவர்கள் பாவத்திலிருந்து வெளிவரும் விஷயத்தில், அன்புடன் கூடிய அக்கறையைக் கொண்டிருப்பதும், தேவனுடனான ஐக்கியத்தில் மற்றவர்களைக் கொண்டுவருவதற்கான உதவி புரியும் மனநிலையைக் கொண்டிருப்பதும், தேவனுக்கு இசைவான இருதய நிலைமையை நாம் பெற்றிருப்பதற்கான சாட்சியாக மாத்திரம் இராமல், இது நமக்கே உதவியாகவும், நாம் மேய்ப்பனுடைய பராமரிப்பின் கீழ், தொழுவத்திற்குப் பத்திரமாய் வந்து சேரத்தக்கதாக, நம்முடைய பாதங்களுக்கே நாம் செவ்வையான பாதைகளை உருவாக்கிட உதவுவதாகவும் இருக்கும்.

ஆகவே நல்ல மேய்ப்பனினால், ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டு, கர்த்தருடைய அன்பான பராமரிப்பு மற்றும் தேவனிடத்தில் திரும்புவதற்கான உதவியை ஏற்றுக்கொண்டுள்ள கர்த்தருடைய அன்பான ஜனங்கள் அனைவரும், மற்றவர்களுக்காய் அனுதாபம் கொள்ளும் ஆவியையும், உதவி புரியும் ஆவியையும், நல்ல மேய்ப்பன் ஈடுபட்டுள்ள வேலையில் ஒத்துழைக்கும் ஆவியையும் அதிகமதிகமாய் வளர்த்தி, விருத்திச் செய்வார்களாக; கர்த்தருடைய ஜனங்கள் ஒட்டுமொத்த மனுக்குலத்தைத் தேடிச்செல்லாமல், மாறாக இப்பொழுது விசேஷமாகக் கர்த்தரால் இந்த யுகத்தில் தம்முடைய வேலை மற்றும் வெற்றியின் முதற்பலனானவர்களாக தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு உதவி அளிப்பார்களாக; ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதற்கும், ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டி எழுப்புவதற்கும், ஒருவரையொருவர் பக்திவிருத்திப் பண்ணுவதற்கும் நாடுவார்களாக; கலியாண வஸ்திரத்தை அணிவதற்கு ஒருவருக்கொருவர் உதவுவதற்கும், இராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களென ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை அடையத்தக்கதாக ஒருவருக்கொருவர் உதவுவதற்கும் நாடுவார்களாக.

**ஆமென்!**

---

R 2715

# "அநீதியுள்ள உக்கிராணக்காரன்"

## லூக்கா 16:1-13

"தேவனுக்கும் உலகபொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" (வசனம் 13).

பரிசேயனுடைய வீட்டில் இயேசு விருந்துக்கு அழைக்கப்பட்டபோது அவர் பேசின முந்தின உவமைகள் எல்லாம் விசேஷமாகப் பரிசேயர்களுக்குப் பேசப்பட்டாலும், இந்த உவமையும், இதனை பின்தொடரும் ஐசுவரியவான் மற்றும் தரித்திரன் (டைவிஸ் மற்றும் லாசரு) பற்றின உவமையும், பரிசேயர்களுக்கு என்று மாத்திரம் பேசப்படாமல், லூக்கா 16:1-ஆம் வசனத்தின்படி பந்தி அமர்ந்திருந்த பரிசேயர்களுக்கும், சீஷர்களுக்கும் பேசப்பட்டது. முதல் மூன்று உவமைகளும் பரிசேயர்களுக்கு மாத்திரமே பேசப்பட்டு, சீஷர்களுக்காகப் பேசப்படாமல் இருந்ததற்கான காரணம், தாங்கள், நல்ல மேய்ப்பனினால் கண்டுபிடிக்கப்படுவதில் மகிழ்ச்சிக் கொள்ளும் "காணாமற்போனவர்கள்" மத்தியில் காணப்படுவதாக சீஷர்கள் உணர்ந்திருந்ததினால், பாவப்பட்ட வகுப்பாருக்கு எதிராக எவ்விதமான தவறான அபிப்பிராயமும் சீஷர்கள் கொண்டிராததினால், சீஷர்களுக்கு இப்படியான அறிவுரைகள் தேவைப்படவில்லை என்பதேயாகும்.

இந்த உவமையில் இடம்பெறும் உக்கிராணக்காரன் முந்தின உவமையில் இடம்பெற்ற மூத்தகுமாரனுக்கு இணையாகவும், பின்வரும் உவமையில் இடம்பெறும் ஐசுவரியவானுக்கும் இணையாகவும் காணப்படுகின்றான். அதிலும் விசேஷமாக இந்த உக்கிராணக்காரன், பரிசேயர்களுக்கும், வேதபாரகர்களுக்கும் அடையாளமாய் இருக்கின்றான்; இவர்கள் மோசேயையும், மோசேயை மத்தியஸ்தராக பெற்றிருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையும், மோசே உக்கிராணக்காரராய் இருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதத்தையும் அடையாளப்படுத்தும் "மோசேயினுடைய ஆசனத்தில்" உட்கார்ந்திருக்கின்றனர் என்று நமது கர்த்தர் வேறொரு தருணத்தில் கூறினார்; இப்பொழுதும், இந்த மோசேயினுடைய ஆசனத்தில், மோசேயினுடைய பிரதிநிதிகளாக, இந்த உக்கிராணக்காரர்கள் காணப்படுகின்றனர். எவைகள் மீது இந்த உக்கிராணத்துவம் காணப்படுகின்றது? இக்கேள்வியை அப்போஸ்தலனாகிய பவுலும் கேள்விகேட்டு, பதில் கூறுகின்றார் . . . "யூதனுடைய மேன்மை என்ன? . . . அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே" என்கிறார். தேவனைப் பற்றின அறிவும், நிழலான நீதிமானாக்கப்படுதலும், அவருடன் நிழலான ஒப்புரவாகுதலும், பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களும் இவர்களுக்கே ஒப்புவிக்கப்பட்டது" (ரோமர் 3:1, 2).

மோசேக்குள்ளும், அவருக்கு பின் அவர் ஆசனத்தில் வந்தவர்களுக்குள்ளும் அடையாளப்படுத்தப்படும் யூதர்கள், தங்களுடைய உக்கிராணத்துவத்தில் தவறிப்போனார்கள்; இவர்களுடைய பராமரிப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்ட, தேவனுடைய கிருபைகளைத் திருப்திகரமான விதத்தில் பயன்படுத்துவதில் தவறிப்போனவர்களாகிவிட்டனர். இப்படியாக இவர்கள் தவறிப்போனதற்கு, இவர்கள் முற்றிலுமாக குற்றம் சாட்டப்படமுடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் பவுல் சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, இவர்களும் விழுகையின் காரணமாக பெலவீனர்களாகவும், இப்படிப்பட்டதான மாபெரும் பொறுப்பை நிர்வகிக்க திராணியற்றவர்களாகவும் காணப்பட்டனர்; இவர்களிடம் உக்கிராணத்துவம் கொடுக்கப்பட்ட போதே இவர்கள் தவறிப்போவார்கள் என்று தேவன் அறிந்திருந்தார்; இவர்கள் நியாயப்பிரமாணத்தை முழுமையாய்க் கைக்கொள்ளுவதில் தவறிப்போவார்கள் என்று தேவன் அறிந்தருந்தார். ஏற்றவேளையில் இவர்களை உக்கிராணத்துவத்திலிருந்து நீக்கிவிட்டு, மேசியாவிற்குக் கொடுக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டிருந்தார்.

இந்தப் பதவிமாற்றம் செய்வதற்கான நேரம் இப்பொழுது வந்துவிட்டது; ஒரு புதிய யுகம் ஆரம்பிக்கவிருப்பதை தெரிவித்து, இஸ்ரயேலின் பிரதிநிதிகள், தங்களுடைய உக்கிராணத்துவம் பற்றின கணக்கினை ஒப்புவிப்பதற்கு, தேவன் இவர்களுக்கு அழைப்பு விடுத்தார். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் எப்படி ஞானமாய்ச் செயல்பட வேண்டும் என்பது பற்றியே, நமது கர்த்தர் இந்த உவமையின் மூலமாக இவர்களுக்குச் சுட்டிக் காண்பிக்க விரும்பினார். இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் ஒரு பூமிக்குரிய உக்கிராணக்காரன் என்ன செய்வான் என்பதைக் கர்த்தர் இவர்களுக்குக் காண்பித்துக் கொடுத்தார்; மற்றும் இப்படியாகச் செயல்படுவதில் ஞானம் விளங்கும் என்பதை, "அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை

மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்" என்று கூறி தெரிவித்தார் (வசனம் 8). அதாவது "தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் பற்றின ஒளியின் விஷயத்தில் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் கிருபைப் பெற்றுள்ள நீங்கள், உங்கள் பூமிக்குரிய விஷயங்களில் நீங்கள் உக்கிராணக்காரனாய் இருக்கும்போது ஞானமாய்ச் செயல்படுவதைப் போன்று ஞானமாய் நடந்துக்கொள்ளவில்லை" என்ற விதத்தில் கர்த்தர் கூறினார்.

முற்காலத்து உக்கிராண சிலாக்கியங்களுக்கான வாய்ப்பின் எல்லைகள் பற்றின தெளிவான புரிந்துக்கொள்ளுதல், அநேகமான ஜனங்களுக்கு இல்லை. இப்படிப்பட்டதான ஒரு பணி, இன்று நாகரிகமடைந்த ஜனங்கள் மத்தியில் இல்லை. உக்கிராணத்துவ பணி என்பது, நம்பிக்கைக்குரிய பணியாகும். எஜமானால் தன்னுடைய பொருட்களைக் கொண்டு செய்ய முடிகிற அனைத்தையும் மற்றும் எதையும் செய்வதற்கான சுதந்திரத்தையும், முழு அதிகாரத்தையும் உக்கிராணக்காரன் பெற்றவனாய் இருக்கிறான். அவன் தன்னுடைய பொறுப்பின் கீழ்க் காணப்படும் பொருட்களை அன்பளிப்பாக வழங்கலாம் அல்லது கடன்களை ரத்துச் செய்யலாம் அல்லது வேறு எந்த விதத்திலும் அப்பொருட்களைப் பயன்படுத்தலாம், மற்றும் இப்படியாகச் செய்வதிநிமித்தம் அவன் நியாயப்பிரமாணத்திற்கு முன்பாக குற்றவாளியாகுவதில்லை, காரணம் உக்கிராணத்துவத்தினுடைய பணியின் தன்மையானது, அவன் தன்னுடைய எஜமானுக்கு முற்றும் முழுமையாய்ப் பிரதிநிதி போல் செயல்படுவதாகும். உக்கிராணக்காரன் உண்மையற்றவனாய் இருந்தால், எஜமான் அவனைப் பணி நீக்கம் செய்யலாம்; இப்படியாகப் பணி நீக்கம் செய்வது மாத்திரமே, அவனுக்கு அளிக்கப்படும் ஒரே தண்டனையாக இருக்கும்; காரணம் அவனை உக்கிராணக்காரனாக்கினபோது, உக்கிராணக்காரன் தன்னுடைய கணிப்பின்படி நடப்பதற்கு, எஜமான் முழுமையான அதிகாரம் கொடுத்தவனாய் இருந்தார்.

அநீதியுள்ள உக்கிராணக்காரன் பற்றின உவமையில் உக்கிராணக்காரன், தன்னுடைய எஜமானுடைய காரியங்களை, தான் அநீதியான விதத்திலும், திருப்திகரமற்ற விதத்திலும், பூரணமற்ற விதத்திலும் பயன்படுத்தினதில் அநீதியுள்ளவனாய் இருக்க, சூழ்நிலையை உணர்ந்துக் கொண்ட மாத்திரத்தில், தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கோ அல்லது தான் சரியாக அனைத்தையும் செய்துள்ளதாக சாதிப்பதற்கோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் தன்னுடைய கணக்கை ஒப்புவிப்பதற்கு முன்னதாக, தன்னுடைய எஜமானிடம் கடன்பட்டவர்கள் சிலருக்கு அவர்களுடைய கடன்களின் சில பாகங்களை மன்னித்து விடுவதன் மூலமாக, இரக்கத்துடன் நடந்துக் கொண்டவனாகக் காணப்பட்டான் (இது ஓர் ஞானமான செய்கையாகும்; உதாரணத்திற்குக் கடனாளிகளால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், கடனாளிகளை, திவால் சட்டமானது கடனிலிருந்து விடுவிக்கின்றது; இதைப் போலவே கடனாளி கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் இருப்பதைக் காணும் கடன் கொடுத்தவர்கள், முழுக்கடன் தொகையில், 60%, 50%, 40% தொகையை மாத்திரம் தங்களுடைய நன்மைக்காகப் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொள்கின்றனர். யூதர்களுடைய யூபிலி வருடமும், கடனாளிகளை அனைத்துக் கடன்களிலிருந்து விடுவிக்கின்றதாய் இருக்கின்ற காரியங்கூட, இன்றைய திவால் சட்டத்தில் உள்ள ஞானமான வியாபார நுட்பத்திற்கு இசைவாசவே உள்ளது). உக்கிராணக்காரன் கடைசியில் செய்யும் இக்காரியத்தினிமித்தமாக, அவன் உவமையில் அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்று கூறப்படாமல், மாறாக முற்காலங்களில், அவன் தன்னுடைய எஜமான் எதிர்ப்பார்த்த விதத்தில் உக்கிராணத்துவம் செய்யாததினாலேயே, அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்று உவமையில் கூறப்பட்டுள்ளான்.

யூத ஜனங்களுக்கு, அதிலும் விசேஷமாக மோசேயினுடைய ஆசனத்தில் வீற்றிருந்து, காரியங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்து, நியாயப்பிரமாணத்திற்கான சரியான விளக்கம் எது என்றும், எது இல்லை என்றும் தீர்மானிக்கின்றவர்களுக்கு, இப்பொழுது உவமையைப் பொருத்தும் விதத்தில், ஒருவேளை இவர்கள் பூமிக்குரிய உக்கிராணக்காரர்கள் போன்று ஞானமுள்ளவர்கள் என்றால், இப்படியாகவே தங்களுடைய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நமது கர்த்தர் சுட்டிக்காண்பித்தார். இவ்வாறு இவர்கள் எப்படிச் செய்யக்கூடும்? ஒருவேளை இவர்கள் தாங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ், தேவன் எதிர்ப்பார்த்தவைகளை நிறைவேற்றவில்லை என்ற உண்மையை உணர்ந்துக் கொண்டு விட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம்; ஒருவேளை யுக மாற்றத்திற்கான காலமும் வந்துவிட்டது என்றும், இவர்கள் தங்கள் கணக்கை ஒப்புவிக்க வேண்டும் எனத் தேவன் கேட்கின்றார் என்றும், புதிய உக்கிராணக்காரன் காரியங்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வார் எனத் தேவன் அறிவிக்கின்றார் என்றும், உணர்ந்துக்கொண்டார்கள் என வைத்துக்கொள்வோம்; இம்மாதிரியான ஒரு சூழ்நிலையின் கீழ், மோசேயின் ஆசனத்தில் இருக்கும் இவர்கள் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும்? இந்த

உவமையினுடைய படிப்பினைக்கு இசைவாக, இவர்கள் அவர்களுக்குள்ளாக பின்வருமாறு கூறியிருந்திருக்க வேண்டும் என்று நாம் பதிலளிக்கின்றோம், அதாவது .......... நாம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை முழுமையாய்க் கைக்கொள்ளவில்லை என்பதை நாமே அறிவோம்; உண்மைத்தான் அப்படி முழுமையாய்ச் செய்வது என்பது, நம்முடைய திராணிக்கு அப்பாற்பட்ட காரியமே. யுக மாற்றம் சீக்கிரம் சம்பவிக்கவிருப்பதையும் நம்மால் உணரமுடிகின்றது; மற்றும் நாம் கணக்கு ஒப்புவிக்க அழைக்கப்படுகின்றோம் என்பதையும் நம்மால் உணர முடிகின்றது; தேவனுடைய நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கும் விஷயத்தைச் செய்வது மற்றும் பிரமாணத்தின் கீழாக இருந்து நித்திய ஜீவனை அடைவது மற்றும் தேவன் நமக்குக் கொடுத்திட்ட நன்மைகள் அநேகவற்றைப் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் நாம் தவறியே உள்ளோம் என்று மாத்திரமே, தேவனுக்கு முன்பாக நம்மால் ஒத்துக்கொள்ள முடியும். நாம் சில விஷயங்களில், நமக்குக் கொடுக்கப்பட்ட நன்மைகளைச் சரியாய்ப் பயன்படுத்தியுள்ளோம்; ஆனால் நமக்காகவோ அல்லது வேறு யாருக்காகவோ (உலகத்தில் எதையாகிலும் சாதிக்கும் விஷயத்திலோ அல்லது) நித்திய ஜீவனைச் சம்பாதிப்பதிலோ முழுமையாய்த் தோல்வியடைந்தே உள்ளோம். எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை என்பதை நம்மால் மறுக்கமுடியாது. நம்முடைய உக்கிராணத்துவம் தோல்வி அடைந்துள்ளது என்பதும், நாம் பதவி நீக்கம் பண்ணப்படப் போகின்றோம் என்பதும், சீக்கிரத்தில் நடைப்பெறப் போவதினால், நாம் இந்தப் பாவிகளிடம் (ஊதாரி மகன் வகுப்பாரிடம்) அன்புடனும், இரக்கத்துடனும், தயாளத்துடனும் நடந்துக்கொள்வதே விவேகமான விஷயமாய் நமக்கு இருக்கும்; அவர்கள் நம்மை விட மிகவும் பாவிகளாக இருக்கின்றனர் என்று தாக்கிப் பேசுவதற்குப் பதிலாக, அவர்களிடம் வெளிப்படையாகப் பேசலாம், அதாவது "எங்களால் இந்தப் பூரணமான தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை என்பதையும், உங்களாலும் முடியவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம்; ஆனால் முற்றும் சோர்வடைந்து தளர்ந்துப் போவதற்குப் பதிலாக, உங்களால் முடிந்தமட்டும் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடியுங்கள்; உங்களால் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடியாது என்றும், உங்களால் முடிந்த மட்டும், உங்களுடைய சந்தர்ப்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப, 50% அல்லது 80% நியாயப்பிரமாணத்தை நீங்கள் கைக்கொள்வதையே நாங்கள் எதிர்ப்பார்க்கின்றோம் என்றும் ஒத்துக்கொள்ளுவதின் மூலமாக, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதிலான உங்களுடைய கடனில் ஒரு பகுதியை ரத்து நாங்கள் செய்வோம் எனப் பேசலாம்" என்பதேயாகும்.

பரிசேயர்களும், வேதபாரகர்களும் இப்படியாகச் செய்திருப்பார்களானால், இவர்கள் தங்களுக்கும், ஜனங்களுக்கும் இடையே இருந்த பிளவைச் சரிச் செய்திருப்பார்கள்; மற்றும் இவர்கள் தங்களாலும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை என்று ஒத்துக்கொள்வதில் விளங்கும் நேர்மையானது, இவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக இருந்திருக்கும், அதாவது புதிய யுகம் தொடர்புடைய விஷயத்தில் நன்மைக்கு ஏதுவாக இருந்திருக்கும். இப்படியாக இவர்கள் வெளிப்படையாய் ஒத்துக்கொள்வதும், மற்றவர்களுக்காய் அனுதாபம் கொள்வதும், மற்றவர்களுடைய பாரம் சுமப்பதில் உதவியளிப்பதுமான விஷயங்களைச் செய்திருப்பார்களானால், இவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமான இருதய நிலைமையை அடைந்திருப்பார்கள். இன்னுமாக இவர்களால் பாவிகள் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட கீழ்மட்ட வகுப்பாரும், இவர்களிடத்தில் அன்பாயிருந்திருப்பார்கள்; மற்றும் இவைகளின் காரணமாக, இவர்களது ஆட்சியைக் கவிழ்த்துப் போடத்தக்கதாக இவர்கள் மீது வரவிருக்கும் உபத்திரவக்காலத்தில், ஜனங்களுடைய அனுதாபத்தையாகிலும் கொஞ்சம் இவர்கள் தக்கவைக்கப் பெற்றிருந்திருப்பார்கள்.

ஆனால் இப்படியாகப் பரிசேயர்களும், வேதபாரகர்களும் செயல்பட்டார்களா? இல்லவே இல்லை. மாறாக இவர்கள் தங்களுடைய காப்பு நாடாக்களை இன்னும் அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கிக் கொண்டு, தங்கள் இருதயம் மற்றும் ஜீவியத்தில் பரிபூரணம் இருக்கின்றது என அதிகமாய் அறிவித்துக் கொண்டும், தங்களைத் தாங்களேயும், மற்றவர்களையும் வஞ்சித்துக் கொள்கின்றவர்களாய் இருந்தார்கள். தாங்கள் என்றென்றும் தேவனுடைய கிருபைகளுக்கு உக்கிராணக்காரர்களாய் இருக்கப் போவதாகப் பெருமையடித்துக் கொண்டிருந்தார்கள். பூரணமான நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை என்று ஒத்துக்கொள்ளுகிற ஜனங்களுடைய தோள்களிலிருந்து, நியாயப்பிரமாணத்தினுடைய தீர்ப்புகளையும், பாரங்களையும் இறக்கி வைப்பதற்குப் பதிலாக, இந்தப் பரிசேயர்களும், வேதபாரகர்களும், தங்களுடைய சுண்டு விரலினால் கூட உயர்த்துவதற்கு உதவிப் புரியாத கடினமான பாரங்களை, ஜனங்கள் மேல் சுமத்துகிறவர்களாய் இருந்தார்கள்; "பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய

ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்" (மத்தேயு 23:1-4).

இப்படியாகச் செய்வதின் மூலமாக, இவர்கள் இன்னும் இன்னுமாக மாய்மாலக்காரர்களாகவும், கடின இருதயத்தார்களாகவுமாகி, வெளியில் அழகாய் அலங்கரிக்கப்பட்டதும், ஆனால் உள்ளே சகல அசுசிகளையும், நேர்மையின்மையையும், மாய்மாலத்தையும் கொண்டிருக்கும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளென இருந்தார்கள்; இவர்கள் தாங்கள் நியாயப்பிரமாணத்தை மீறுவதாக அறிந்திருந்த போதிலும், வெளியில் தங்களைப் பூரணர்கள் என்று கூறி பெருமையடித்துக் கொண்டிருந்தனர். இது பரிசேயர்களுக்கு மாத்திரம் சொல்லப்படாமல், சீஷர்களுக்கும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது என்பது, இந்த உவமை எவ்வாறு பொருந்துகின்றது என்றும், எவ்வளவு ஞானமற்ற விதத்தில் இந்த உக்கிராணக்காரன் செயல்பட்டுள்ளான் என்றும் சீஷர்கள் கவனிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பந்தியில் இருக்கும் போதுகூட, அந்தப் பொருளாசைக்காரரான பரிசேயர்கள் ஓரளவுக்கு உவமையினுடைய போக்கை உணர்ந்தவர்களாக, பரியாசம் பண்ணினார்கள். ஆனால் நமது கர்த்தர் பாடத்தை இவர்களுக்கு வலியுறுத்தும் வண்ணமாக, லூக்கா 16:15-ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளைக் கூறினார்; அதாவது "நீங்களே அந்த அநீதியுள்ள உக்கிராணக்காரர்; சீக்கிரத்தில் உங்களுடைய தள்ளப்படுதல் வெளியரங்காமாகும்" என்ற விதத்தில் இயேசு பேசினார்; "(நீங்கள் பிரதிநிதியாக இருக்கும்) நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் (தேவனால் அங்கீகரிக்கப்பட்டு) வழங்கி வந்தது; அதுமுதல் தேவனுடைய இராஜ்யம் (புதிய யுகம்) சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது. யாவரும் பலவந்தமாய் அதில் (பிரவேசிக்க வேண்டும்) பிரவேசிக்கிறார்கள்" (லூக்கா 16:16). "மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை" (மத்தேயு 23:13). உங்களுடைய அமைப்பானது மனைவி, கணவனுக்குக் கட்டுப்பட்டு இருப்பது போன்று மோசேயுவுக்கும், நியாயப்பிரமாணத்திற்கும், (அதாவது நியாயப்பிரமாணம் காணப்படுவது வரைக்கும்) கட்டுப்பட்டு இருப்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் அடையாளப்படுத்தும் நியாயப்பிரமாணம் மரித்துப்போவது என்பது, இஸ்ரயேல் விடுதலையாகுவதற்கும், புதிய உடன்படிக்கையின் மூலம், மேசியாவுடன் இணைவதற்கு (திருமணம் பண்ணிக்கொள்வதற்கும்) ஆயத்தப்படுவதற்கும், அவசியமாய் இருக்கின்றது என்ற விதத்தில் இயேசு கூறினார் (ரோமர் 7:1-4; லூக்கா 16:17, 18).

இந்த உவமையானது இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவு பகுதிக்கு விசேஷமாய் பொருந்துவதாகக் கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை; ஆனாலும் மாம்சீக இஸ்ரயேலர்களும், அவர்களின் அறுவடைகாலமும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும், இந்த யுகத்திற்கும், தற்போதைய அறுவடை காலத்திற்குமான உருவகமாக இருக்கின்றது என்று மற்ற வேதவாக்கியங்கள் மூலமாய் நாம் அறிந்துக்கொள்கின்றோம்; ஆகையால், நமது கர்த்தருடைய நாட்களில் உள்ள அநீதியுள்ள உக்கிராணக்காரனுடைய நிலைமைக்கும், இந்தத் தற்போதைய காலத்தில் அப்படியாக இருக்கும் ஒரு வகுப்பாருக்கும் இடையே உள்ள சில இணைகளைப் பார்ப்பதில் தவறில்லை. மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வகுப்பார் போன்று, இன்று யார் காணப்படுகின்றார்கள் என நாம் பார்க்கையில், சுவிசேஷ யுக சபை தொடர்புடையவர்களாக, கிறிஸ்துவினுடைய ஆசனத்தில் ஒரு வகுப்பார் உட்கார்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டுபிடிக்கின்றோம். இந்த ஒரு வகுப்பாருக்குள், மூப்பர்கள், ஊழியக்காரர்கள், கண்காணிகள், ஓய்வுநாள் பள்ளி ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், தலைமைக் குரு முதலானவர்கள் காணப்படுகின்றனர். இவர்களும் தங்கள் மீது ஒரு யுக மாற்றம் வரவிருக்கின்றது என்றும், முற்காலங்களிலுள்ள தங்களுடைய பாரம்பரியங்கள் மற்றும் விசுவாசப் பிரமாணங்கள் பற்றிக் கேள்வி எழுப்பப்படுகின்றது என்றும், தாங்கள் கணக்கு ஒப்புவிக்க அழைக்கப்படுகின்றார்கள் என்றும், உணர்ந்துக்கொள்கின்றனர். கணக்கு முகஸ்துதிக்கென ஒப்புவிக்க முடியாது என்றும், ஒருவேளை தேவனுக்குத் தெரிந்திருக்கும் முழு உண்மையும் ஜனங்களுக்குத் தெரிந்துவிட்டால், தாங்கள் அநேக விதத்தில் தங்களுடைய உக்கிராணத்துவத்தில் உண்மையற்றவர்களாகவும், கடமையில் தவறிப்போனவர்களாகவும் இருந்த காரியம் கண்டுபிடிக்கப்படும் என்றும் உணர்கின்றனர். இவர்கள் ஆபத்தைக் கண்டு அஞ்சுகின்றனர்;

இவர்கள் ஜனங்களுடைய முறுமுறுத்தல்களையும், விசுவாசப்பிரமாணங்கள் பற்றின கேள்விகளையும், அமைதிப்படுத்திட முனைந்து கொண்டிருக்கின்றனர். கர்த்தர் அவருடைய நாட்களில் வாழ்ந்திட்ட உக்கிராணக்காரர்களைக் குறித்துப் பேசிட்டக் காரியங்கள்,அதாவது "நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார் மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" என்பது இன்றுள்ள இவர்களுக்கும் பொருந்துகின்றது (15-ஆம் வசனம்).

கர்த்தருடைய ஜனங்கள் திரளானவர்கள் தொடர்புடைய விஷயத்தில் உக்கிராணக்காரர்களாய் இருக்கும் பெயர்ச்சபைகளின் இந்தப் பிரதிநிதிகள், பரிசேயர்கள் போலவே, அவர்களுடைய ரூபத்திலேயே, உண்மையை ஒத்துக்கொள்வதற்குப் பதிலாக, துணிவு கொண்டுள்ளனர். உதாரணத்திற்கு விசுவாச பிரமாணங்கள் பற்றிக் கேள்வி எழுப்பபடும் விஷயத்தில், வெஸ்ட் மினிஸ்டர் விசுவாச அறிக்கையை (westminister confession of faith) திருத்தும் நோக்கத்தில் மறுஆய்வு பண்ணும்படிக்கு விண்ணப்பம் வைக்க முயன்றவர்களே, இப்படிச் செய்வது அனைத்தையும் வெளியரங்கமாக்கிவிடும் என்றும், தாங்கள் முற்காலத்தில் தப்பறையில் காணப்பட்டுள்ளதையும், தெய்வீக வார்த்தைக்கான தங்களுடைய விளக்கத்தில் தாங்கள் குறைவுள்ளவர்களாக இருந்ததையும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் எண்ணினார்கள்; மற்றும் இது ஜனங்கள் மத்தியிலான தங்களுடைய கனத்தைக் குறைத்துவிடும் என்று உணர்ந்தார்கள்; ஆகவே மறுஆய்வு பண்ணவேண்டும் என்று வேண்டிக்கொண்டவர்களே, இப்பொழுது இந்த விசுவாச அறிக்கை சிறப்பாய் இருக்கின்றது என்றும், இதில் தங்களுக்கு முழுமையான திருப்தி இருக்கின்றது என்றும், இதில் எந்த மாற்றமும் செய்ய அவசியமில்லை என்றும் ஆதரவு தெரிவிக்கின்றனர். இவர்கள் மனுஷர் மத்தியில் உயர்வாய் மதிக்கப்படுவதற்கு விரும்புகின்றபடியால், இவர்கள் தாங்கள் யாரிடம் இந்த உக்கிராணத்துவத்தைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதையும், யார் அதைத் தங்களிடமிருந்து எடுத்தக்கொள்ளப் போகிறார் என்பதையும் முற்றிலுமாக மறந்துப்போய்விட்டனர்.

சுவிசேஷ யுகத்தினுடைய இந்த உக்கிராணக்கார வகுப்பாருக்கான, சரியான செயல்பாடு என்னவாக இருக்கும்? யூத உக்கிராணக்காரர்களுக்கு என்ன நமது கர்த்தர் பரிந்துரைத்தாரோ, அதையே இவர்களும் செய்வது சரியான காரியமாக இருக்கும் என்றே நாம் பதிலளிக்கின்றோம்; அதாவது இவர்கள் விசுவாசப் பிரமாணங்களில் உள்ள தப்பறைகளையும், தெய்வீக வார்த்தைகளுக்கு விளக்கம் கொடுக்கும் விஷயத்திலுள்ள தங்களுடைய குறைவுகளையும், தேவனுடைய வார்த்தைகளைச் சரியாய்ப் பயன்படுத்துவதிலும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைச் சரியாய்ப் பொருத்திப் பார்ப்பதிலும், கடந்த காலத்தில் தாங்கள் தவறிய விஷயங்களையும் ஜனங்களிடம் ஒத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் இப்படியாக தங்களுடைய சொந்த தப்பறைகளையும், குறைவுகளையும் ஒத்துக்கொள்வதோடு கூட, இவர்கள் காரியங்களைத் திருத்தம் செய்து, ஜனங்களால் இயன்றதைச் செய்யும் நிலைக்கு, அவர்களைக் கொண்டு வரவேண்டும். உதாரணத்திற்கு, இவர்கள் பின்வருமாறு ஜனங்களிடம் கூற வேண்டும், "நீங்கள் தேவனுக்கு எவ்வளவு கடன்பட்டுள்ளீர்கள் என்றும், உங்கள் மீது என்ன தண்டனை வருகின்றது என்றும், நாங்கள் உங்களிடம் கூறினோம்? உங்களிடம், நித்திய காலத்திற்குமாகிய சித்திரவதை எனும் தண்டனையை நாம் கூறியிருந்திருந்தோம் என்றால், அது தவறு என்று இப்பொழுது எண்ணிக் கொண்டு, உட்கார்ந்து "நீதியான பலனே/விளைவே கிடைக்கும்" என்று எழுதுங்கள். ஒருவேளை யூதர்களுக்கான நியாயப்பிரமாணத்தில் இடம்பெறும் பத்துக் கற்பனைகளுக்கு ஏற்பவே, நீங்கள் தேவனுக்குக் கடமைப்பட்டிருப்பதாகவும், இவைகளையும் நீங்கள் முற்றும் முழுமையாகப் பூரணமாய்க் கடைபிடிக்கவில்லையெனில், உங்களுக்கு நித்திய ஜீவனுக்கான வாய்ப்பு இல்லை என்று நாங்கள் தெரிவித்தோமா? உங்கள் விசுவாசத்தினுடைய இந்த அம்சத்தைத் திருத்தம் செய்துகொண்டு, இதற்குப் பதிலாக, புதிய உடன்படிக்கையின் கீழ், தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்துள்ளவர்களுடைய மிகுந்த பூரணமற்ற கிரியைகளை தேவன் ஏற்றுக்கொள்கின்றார் என்று எழுதுங்கள்; அதுவும் இந்தப் பூரணமற்ற கிரியைகளே, தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களால் செலுத்த முடிந்த சிறந்த விஷயங்களாகவும், தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக் கொண்டவரும், அன்பு செய்தவருமானவருடைய நாமத்திலும், அவருடைய புண்ணியத்திலும் ஏறெடுக்கப்பட்டதாகவும் இருக்கும்போது, தேவன் அதை ஏற்றுக்கொள்கின்றார் என்றும் எழுதுங்கள்" என்பதேயாகும்.

ஒருவேளை இக்காலத்திலுள்ள உக்கிராணக்காரர்கள் இப்படியாகச் செயல்பட்டிருப்பார்களானால், இவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி எதிர்க்காலத்தில் மதிக்கப்பட்டிருந்திருப்பார்கள்; ஆனால் இவர்கள் இப்படியாகச் செயல்படாமல் இருப்பதினால், இவர்கள் மாய்மாலக்காரர்கள் என்றும், மகா உபத்திரவக் காலத்திற்குள்ளாகவும், அவநம்பிக்கை

எனும் குழிக்குள்ளாகவும் இவர்களை நம்பியிருந்த மந்தைகளை இவர்கள் தவறாய் வழிநடத்தும், குருடான வழிகாட்டிகள் என்றும், இழிவுபடுத்தும் காலம் நிச்சயமாய் வந்து கொண்டிருக்கின்றது.

இந்த உவமையானது 8-ஆம் வசனத்துடன் நிறைவடைகின்றதாக கருதப்படுகின்றது; இதற்குப் பின்னர் இடம்பெறும் அறிவுரைகள் வேறே காரியம் பற்றிப் பேசுகிறதாகவும், விசேஷமாகக் கர்த்தருடைய போதனைகளை ஏற்றுக்கொண்டுள்ள, அவருடைய சீஷர்களுக்குப் பேசப்பட்டதாகவும் இருக்கின்றது.

## "தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது"

பின்னர் இடம்பெறும் வசனங்கள், இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்வது கூடாத காரியமாக இருக்கின்றது என்பது பற்றியதாகும். உலகப்பொருள் என்பது, பூமிக்குரிய ஐசுவரியங்களையும், ஆஸ்தியையும் மாத்திரம் குறிக்காமல், மனுஷர் மத்தியிலான கனம் முதலியவற்றையும் குறிக்கின்றதாகவும் இருக்ககின்றது; இதுவே பரிசேயர்கள் சரியான நடவடிக்கையை எடுப்பதற்கும், தங்களுடைய தவறை ஒத்துக்கொள்வதற்கும், இரக்கத்தை நாடவும், இரக்கத்தை அடைவதற்கும் அவர்களுக்கு இடையூறாக இருந்தது. உலகப்பொருட்கள் என்பது, கர்த்தருடைய சீஷர்களாகுவதற்கு விரும்பும் அனைவருக்கும் மாபெரும் இடையூறான ஒன்றாகவே இருக்கின்றது. உலகப்பொருள் என்பது, அது சுயமாகவோ (அ) ஆஸ்தியாகவோ (அ) கீர்த்தியாகவோ (அ) அந்தஸ்தாகவோ (அ) மனுஷர் மத்தியிலான கனமாகவோ (அ) இவையனைத்துமாகவோ (அ) இவைகளில் ஒன்றாகவோ இருக்கலாம். இதை வணங்குகிற ஒருவன், ஒரே நேரத்தில் உலகப்பொருளையும் வணங்க முடியாது, அதேசமயம் தேவனை உண்மையாய் வணங்குகிறவனாகவும், கிறிஸ்துவினுடைய உண்மையான பின்னடியானாகவும் இருக்கவும் முடியாது; ஏனெனில் தேவனும், உலகப்பொருளும், நம்முடைய இருதயங்களுக்கு முன்னதாக எதிரெதிரானதாக இருக்கின்றது. நாம் நமது அன்பையும், கவனத்தையும் கூறுபோட்டு, ஒரு பாதியைத் தேவனுக்கும், அவருடைய ஊழியத்திற்கும், மற்றும் மற்றப் பாகத்தை உலகப்பொருளுக்கும் கொடுக்க முயற்சித்தால், அது தேவனுக்கும் திருப்திகரமாய் இராது, உலகப்பொருளுக்கும் திருப்திகரமாய் இராது, நமக்கும் திருப்திகரமாய் இராது.

ஆகையால் நாம் சுயத்திற்காகவும், பூமிக்குரியவைகளுக்காகவும் வாழப்போகிறோமா அல்லது எல்லாவற்றையும் துறந்து, இவைகளைத் தேவனுக்கான நன்மைக்கேதுவான விஷயங்களுக்கும், பரத்திற்கடுத்த நலனுக்கான விஷயங்களுக்கும் பலிச்செலுத்தப் போகிறோமா என்று நாம் தீர்மானிக்க வேண்டும். உலகப்பொருளை/செல்வத்தை வணங்குகிறவர்களுக்குத் தற்கால ஜீவியம் தொடர்புடைய விஷயத்தில், பூமிக்குரிய செழிப்புச் சார்ந்த சில நன்மைகள் காணப்படலாம், ஆனால் உலகப்பொருளினால்/செல்வத்தினால் நித்திய ஜீவனைக் கொடுக்க முடியாது. நித்திய ஜீவன் என்பது, தேவனுடைய அன்பளிப்பாகும்; மேலும் தேவனுடைய அன்பளிப்பை/ஈவைப் பெற்றுக்கொள்ளப் போகிறவர்கள், தேவனுடைய நண்பர்களாய், தேவனுடைய பிள்ளைகளாய்க் காணப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்கள் உலகப்பொருட்களைத் துறப்பதன் மூலமாகவும், பூமிக்குரிய பெயரையும், கீர்த்தியையும், நன்மைகளையும், சந்தோஷமாய்ப் பலிச் செலுத்துவதன் மூலமாகவும் தேவன் மீதான தங்களுடைய அன்பையும், பயபக்தியையும் வெளிப்படுத்துகிறவர்களாய் இருந்து, இப்படியாக வரவிருக்கிற ஜீவியத்தில் அவர் அளிப்பதாக வாக்களித்துள்ள மகா மேன்மையும், அருமையுமான காரியங்களையும், அவருடைய கிருபையின் ஐசுவரியத்தையும், அவருடைய அன்பையும், கிருபைகளையும் பற்றியதான தங்களுடைய மேலான உணர்ந்துக்கொள்ளுதலை/மதிப்பிடுதலை வெளிப்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கின்றார்.

இவர்கள் "சிநேகிதர்களைச் சம்பாதிக்க வேண்டும்." வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இவர்கள் அநீதியுள்ள உலகப்பொருட்ளைப் பலிச்செலுத்துவதன் மூலம், பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்க வேண்டியவர்களாய் இருக்கவேண்டும்; அதாவது அநீதியான இந்தத் தற்காலத்தின் தீமை நிறைந்த உலகத்தினுடைய, பல்வேறு நலன்களைப் பலிச்செலுத்துவதன் மூலமாக, பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்க வேண்டியவகளாய் இருக்கவேண்டும்.

சிலர் பலிச்செலுத்தத்தக்கதாக மிகவும் குறைவான உலகப்பொருட்களையே/ செல்வங்களையே பெற்றிருப்பார்கள்; ஆனால் கொஞ்சத்தில் உண்மையாய் இருப்பவன், ஒருவேளை

அவன் திரளானவற்றைப் பெற்றிருந்தால் எப்படி உண்மையுள்ளவனாய் இருப்பான் என்பதற்குச் சாட்சிக் கொடுக்கிறவனாய் இருப்பான் என்று கூறுவதன் மூலம், கர்த்தர் நம் அனைவரையும் உற்சாகப்படுத்துகின்றார். இன்னுமாக நம்மால் ஏறெடுக்க முடிந்த சிறிய பலிகளை, நாம் பெரிய பலிகளை ஏறெடுத்தது போன்று கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார். கொஞ்சம் நாணயங்களாகவோ அல்லது மில்லியன் கணக்கான பணமாகவோ, சிறிய செல்வாக்காகவோ அல்லது பெரிய செல்வாக்காகவோ, எதுவாயினும் கர்த்தருடைய ஊழியமும், தற்போதைய வாய்ப்புகளை நாம் பயன்படுத்துவது தொடர்புடையதுமான சிறந்த சாட்சி . . . "அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்பதேயாகும். அளவைத் தேவன் பார்ப்பதில்லை, மாறாக குணலட்ணத்தை, இருதயத்தின் நிலைமையையே தேவன் நாடுகின்றார். யார் சரியான இருதய நிலைமையைப் பெற்றிருந்து, தன்னால் முடிந்த மட்டும், தன்னிடத்திலுள்ள யாவற்றினாலும் கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதாக ஜீவியத்தின் சிறு காரியங்களில் கூட ஜாக்கிரதையாய் இருக்கின்றானோ, அவனுக்கே உண்மையான ஐசுவரியங்களாகிய பரலோக ஐசுவரியங்கள் கொடுக்கப்படும். அவன் பரம இராஜ்யத்தின் மகிமைகளுக்குள் பிரவேசிப்பவனாய் மாத்திரம் இல்லாமல், தற்கால ஜீவியத்திலுங்கூட அந்த ஐசுவரியத்தின் முதற்பலன்களைத் தன்னுடைய சொந்த இருதயத்திலும், தன்னுடைய சொந்த அனுபவத்திலும் கூடக் பெற்றுக்கொள்ளுகிறவனாயும் இருப்பான்; ஏனெனில் மகிமையின் சுதந்திரவாளிகளாகவும், தேவனுடன் சரியான உறவின் நிலையிலும் காணப்பட்டு, ஓட்டத்தில் உண்மையாய் ஓடுகிறவன், ஓட்டத்தினுடைய முடிவில் பரிசைப் பெற்றுக் கொள்கிறவனாய் மாத்திரம் இராமல், ஓட்டத்தின் முடிவிற்கு முன்னதாகவுங்கூட உலகத்தால் கொடுக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான ஆசீர்வாதங்களாகிய கர்த்தருடைய சந்தோஷத்தையும், எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தையும் பெற்றிருப்பான் என்ற உண்மை மறுக்கப்பட முடியாததேயாகும். இதனால் இவர்கள் யாத்திரிகர்களாக இருக்கும்போதும், தற்கால திருப்திகரமற்ற கூடார நிலையில் அதன் பெலவீனங்களினால் தவித்துக்கொண்டிருக்கும்போதும் இவர்களால் பாட இயலும்.

ஒருவேளை நாம் நமக்குச் சொந்தமாய் இராததும், நமக்கு உக்கிராணத்துவத்தில் மாத்திரம் கொடுக்கப்பட்டதுமான பொருட்கள், வாய்ப்புகள், தாலந்துகளாகிய சிறிய காரியங்களில், அதாவது கர்த்தருடைய உக்கிராணக்காரர்களென நம்முடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டதாக மாத்திரமே காணப்படும் சிறிய காரியங்களில் உண்மையாய் இராவிட்டால், ஒருவேளை கர்த்தருடைய மகிமைக்காக மாத்திரமே இவைகளைப் பயன்படுத்துவதில் நாம் உண்மையாய் இராவிட்டால், எதிர்க்காலத்திலோ அல்லது தற்கால ஜீவியத்திலோ, என்றென்றுமாய் அவர் கிருபையின் ஐசுவரியங்களை நமக்குச் சொந்தமானதாய் வைத்துக்கொள்ள கொடுப்பார் என்று எப்படி நாம் எதிர்ப்பார்க்கக்கூடும்.

எந்த ஒரு மனுஷனாலும், இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்வதும், திருப்திபடுத்துவதும், இரண்டிற்கும் நீதியானதைச் செய்வதும் கூடாத காரியம் என்பதும், தேவனுக்கும், நீதிக்கும், ஊழியஞ்செய்து அதேவேளையில் எதிராளியானவனுக்கும், இந்த யுகத்தை ஆளுகை செய்யும் இவ்வுலகத்தின் அதிபதியானவனுக்கு இசைவாக இருப்பவர்களுக்கும் பிரியமாகவும், ஏற்பவும் நடந்துக்கொள்வது கூடாத காரியம் என்பதும்தான் சீஷர்களுக்கான பாடமாகும். பரலோகத்தில் பொக்கிஷங்கள் சேர்த்தவர்களும், தேவனிடத்தில் ஐசுவரியவான்களாய் இருப்பவர்களுமாகிய, கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணயுள்ள அனைவரும், அர்ப்பணம் பண்ணிக்கொள்ளாதவர்கள் மத்தியில் கனமற்றவர்களாக இருக்க விரும்பிட வேண்டும்; இந்த அர்ப்பணம் பண்ணாதவர்கள் எந்த வேலை செய்கிறவர்களாக இருப்பினும், அவர்கள் உண்மையில் உலகப்பொருட்களுக்கும், சுயநலத்திற்கும், தற்கால ஜீவியத்திற்கும் ஊழியம் பண்ணுகிறவர்களாய் இருந்து, பரலோக இராஜ்யத்தை அடைவதற்கடுத்த காரியங்களில் இவைகளைப் பலிச்செலுத்தாதவர்களாய் இருப்பவர்கள் ஆவர்கள்.

**ஆமென்!**

---

# கிறிஸ்தவர்களின் அன்றாட ஜீவியம்

## PROPER CHRISTIAN DAILY LIVING

தீத்து (2:1-15)

"நாம் தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி"

(தீத்து 2:1 2)

கிரேத்தா தீவிலே உள்ள விசுவாசிகளுக்குக் கண்காணியாக ஊழியம் செய்து கொண்டிருக்கும் தீத்துவுக்கு அப்போஸ்தலர் பவுல் நமது பாடத்தின் இந்த வார்த்தைகளை அறிவுறுத்தி (செய்ய வேண்டியவற்றைப் பற்றி குறிப்பு) எழுதியுள்ளார். இந்த அறிவுரைகள் தத்தம் செய்து கொண்டவர்களுக்கேயல்லாமல் மற்றவர்களுக்கு அல்ல அதுவும் குறிப்பாக கிரேத்தாவில் உள்ள சபையின் 6 வகுப்பினர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. (1) மூத்த புருஷர்கள் அதாவது வெறும் வயதில் மட்டும் முதிர்ந்தவர்கள் என்றில்லாமல் இவர்கள் வளர்ச்சியும் அடைந்தவர்கள். மேலும் இத்தகையவர்கள் வயதிலும் முதிர்ந்திருப்பவர்கள் என்பதிலும் சந்தேகமில்லை. (2) முதிர்வயதுள்ள ஸ்தீரிகள் - வளர்ச்சியும் முதிர்ச்சியும் உடையவர்கள் (3) பாலிய ஸ்தீரிகள் (4) பாலிய புருஷர்கள் (5) கிறிஸ்துவுக்குள்ளாக சுதந்திர மனுஷர்களாக இருந்தும் மாம்சத்தின்படி அடிமைகளான வேலைக்காரர்கள் (6) தீத்து தானே (7) சபையின் உள்ள எல்லா வகுப்பினருக்கும் பொருந்தும் புத்திமதிகளோடு பாடம் முடிவடைகின்றது.

தீத்து போதகராய் இருந்தபடியால் சபையில் உள்ள ஒவ்வொரு வகுப்பி-னரைக் குறித்தும் அவருடைய மனதில் சில குறிக்கோள் (அ) நியமம் வைத்திருக்க வேண்டும். மேலும் அந்த குறிக்கோள்களை அடைய வேண்டுமானால் ஞானமுள்ள வேலைக்காரனாக முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காக ஆரோக்கியமான உபதேசங்களுக்கு முழு இசைவுடன் காணப்படும் அறிவுரைகளை சுட்டிக்காட்டுவதன் முலம் அப்போஸ்தலர் அதை அவனுடைய (தீத்து) கவனத்திற்கு கொண்டு வருகிறார்.

கிரேத்தாவின் ஜனங்கள் இழிவுடனும் நல்லொழுக்கம்/நல்ல குணங்களில் குறைவுப்பட்டவர்கள் என்று சிலரால் கூறப்பட்டதால் அந்த விஷயமே அப்போஸ்தலர்களுக்கு உலகத்தை விட்டு கர்த்தரிடம் அவருடைய சபையாகத் தங்களைச் சேர்த்துக்கொண்டவர்களுக்கு இத்தகைய புத்திமதியைக் கொடுக்க அவசியமாயிற்று. இந்தப் புத்திமதியிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் இன்று மிகுந்த அறிவு பெற்றுள்ள சூழ்நிலைகளிலுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு பயன்படத்தக்க/ பொருந்தும் விதத்தில் உள்ளதை நாம் பார்க்கலாம்.

<u>வளர்ச்சியடைந்த மூத்த புருஷர்கள்:</u> மனத்தெளிவில்லாதவர்களாகவோ, சிறுமைத்தனமாகவோ ( அற்ப காரியங்களில் ஈடுபடுதல்) மற்றும் எரிச்சலூட்டுகிறவர்களாய் இராமல் ஜாக்கிரதையுள்ளவர்களாகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும் (மிதவாதி (அ) நிதானமாக) இருக்க வேண்டும். இயல்பான வாழ்க்கையின் அனுபவ காலங்கள் மாத்திரம் அல்ல கிறிஸ்துவ ஜீவியத்தின் அனுபவக் காலங்கள்/வருடங்கள் கூட அவர்களை முதிர்ச்சியுள்ளவர்களாகவும் இருக்கும் நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இந்த மூன்று பண்புகளும் பெரும்பாலும் அவர்களின் மரித்து போகும் சரீரங்களுக்குத் தொடர்புடையதாய் காணப்பட்டு அவர்களின் புதிய மனதினால் பயிற்சிக்கப்பட்டும் ஆதிக்கம் ( கட்டுப்படுத்தும் ஆற்றல்) செலுத்தப்பட்டும் வருகிறது. இதனோடு கூட அவர்களின் புதிய சுபாவத்தை விவரிக்கும் 3 கிருபைகளான விசுவாசம், அன்பு, பொறுமையில் ஆரோக்கியமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும் (கிரேக்கில்) விசுவாசம், அன்பு, பொறுமைக்கு முக்கியத்துவம் கொடுத்து (அழுத்தி சொல்வதன்) கூறுவதின் காரணம் - பல்வேறு/அநேக விசுவாசங்கள். பல்வேறு அன்பு மற்றும் பல்வேறு விதமான பொறுமை இருப்பதால் ஆகும். எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" என்று எழுதியிருக்கிறபடி அவருடைய வார்த்தையின் மூலம் அவருடைய ஜனங்களுக்கு அவர்

அறிவுறுத்துகிறதான தேவனை சார்ந்த விசுவாசம், அன்பு மற்றும் பொறுமையை மனதில் பதிய வைக்கும்படியே அப்போஸ்தலர் இவ்வாறு கூறுகின்றார்.

ஆரோக்கியமான விசுவாசம் என்று, ஆரோக்கியமான அன்பிற்கு முன்பாக அப்போஸ்தலர் குறிப்பிட்டது ஏதோ தற்செயலாய் நடந்தது அல்ல. அன்பு என்பது சத்திய ஆவியின்கனிகளில் (அ) கிருபைகளில் ஒன்றாகும். ஒருவர் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதபோது சத்திய ஆவியையும் பெற்றுக்கொள்ள முடியாது ஆகையால் ஆரோக்கியமான விசுவாசத்தைப் பெற்றிருப்பதின் மூலம் சத்தியத்தின் முக்கியத்துவம் விளங்குகின்றது.

ஒரு மனுஷன் எதை நம்புகிறான் என்பது முக்கியமல்ல. அவன் அதை எப்படிச் செயலாற்றுகிறான் என்பதே முக்கியம் என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம் ஆனால் இந்தக் கூற்றுக்கு நாங்கள் ஆரோக்கியமான விசுவாசம் முக்கியம் என்றும் ஒழுக்கமான நடத்தையைச் செயல்முறைபடுத்துவதற்கு மாத்திரமல்லாமல் அதை உயர்ந்த எண்ணங்களால் ஊட்டவும் அவசியமாய் உள்ளது . எந்தஅளவுக்கு நாம் சத்தியத்தை பெற்றுள்ளோமோ அந்த அளவுக்கு நாம் பரிசுத்தமாக்கப்படும் வல்லமையைப் பெற்றிருப்போம் .மேலும் நாம் பெற்றுள்ளசத்தியத்தை இழிவுபடுத்தும் (அ) பயனற்றதாக்கும் செயல்கள். நம்மிடத்தில் எந்த அளவுக்கு காணப்படு-மோ அந்த அளவுக்கு நாம் பரிசுத்தமாக்கப்படும் வல்லமையில் பற்றாக்குறையுடன் (குறைபாடு) காணப்படுவோம். எனவே பரிசுத்தத்தில் குறைவுப்பட்டிருப்போம். நம்பொருட்டு நம்முடைய அருமையான மீட்பர் பிதாவிடத்தில் ஏறெடுத்த ஜெபமான "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்" என்பதை எப்பொழுதும் நினைவுக்கூர்ந்து இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

அன்பை பொறுமைக்கு முன்பாக அப்போஸ்தலர் குறிப்பிட்டதும் தற்செயலான காரியமல்ல. உலகப்பிரகாரமான குறிக்கோள்கள் மற்றும் ஆசைகளின் பொருட்டு பொறுமை உருவாக்கப்படலாம் . ஆனால் இத்தகைய பொறுமை என்பது இருதயப் பூர்வமானது அல்ல. மாறாக வெளித்தோற்றமாக வெறும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகும் (அ) வலிந்து பொறுமை காண்பித்தல் ஆகும். கட்டாய நிலை மாறும்போது இந்த வகை பொறுமை வில்லை போல் பின்னோக்கி பொறுமையற்ற நிலைக்கேச் சென்றுவிடும். இறுதிவரை நிலைக்கக் கூடியதாகவும் முழுமையான குணலட்சணமாக பொறுமை இருக்க சுயநலத்தின் மூலவிசை அன்பின் மூலவிசையினால் மாற்றப்படவேண்டும். அதாவது இருதயத்தின் மாற்றத்தின் விளைவாக பொறுமை உருவாகும்.

எவ்வளவு சிறப்பாக குணலட்சணங்கள் இவ்வாறு விளக்கமாக வருணணைச் செய்யப்பட்டுள்ளது. முதிர்ச்சி அடைந்த சகோதரர்களே தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும். நிதானத்துடன் செயல்படுகிறவர்களாகவும் பெருந்தன்மையுள்ளவர்களாகவும் தேவனுடைய வார்த்தை மீது ஆரோக்கியம் உள்ள விசுவாசத்தினால் தங்கள் புதிய மனதை நிரப்பிக் காணப்படவும் இருதயம் முழுவதும் அன்பினால் நிரப்பப்பட்டு இரக்கம் .சாந்தம் தயவு . போன்றவற்றை உள்ளடக்கி சுருக்கமாகச் சொல்லப்படும் பொறுமை என்ற வார்த்தைக் குறிப்பிடும் பல்வேறு நல்லபண்புகளை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும் என்று கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் பெரும்பாலும் இவர்களிடமே காணப்பட வேண்டும் என்று நாம் அதிகமாய் எண்ணம் கொள்கிறோம். சுத்தியத்தில் வளர்ச்சி அடைந்து எல்லா இடத்திலும காணப்படும் சகோதரர்களும் ஜீவிக்கிற தலையாகவும் கிறிஸ்து-வாகவும் வளர்ந்த தேவனுடைய பக்குவமடைந்த மனுஷனுடைய சாயலை (இயேசு) கவனிக்கவும். அந்தச் சாயலுக்கு ஒத்திருக்கவும் நாங்கள் புத்திச் சொல்கின்றோம். இந்தச் சாயலை நாம் நம் மனதிற்கு முன்பாக நன்றாக நிறுத்தி நம்முடைய கிறிஸ்துவ ஜீவியத்தில் அதை நம்முடைய குறிக்கோளாக நாம் எல்லோரும் வைப்போமாக என்று புத்தி சொல்லுகிறோம்.

<u>(பக்குவம்) முதிர்ச்சியும் வளர்ச்சியும் அடைந்த முதிர்வயதான ஸ்திரீகளுக்கும்:</u> அப்போஸ்தலர் ஒரு முன்மாதிரியை முன் வைக்கின்றார். பயபக்தியுடன் கூடிய நடத்தையில் இவர்கள் இருக்கவேண்டும். இவர்கள் கர்த்தருக்கென்று முழுமையாய் தத்தம் செய்திருக்க வேண்டும். அவருடைய சித்தம் என்ன என்று அறியவும் அதை நிறைவேற்றவும் முழு விருப்பமுடையவர்களாகவும் இவர்கள் இருக்க வேண்டும். மேலும் அவர்கள் தத்தம் செய்து **-712--**

கொண்டது இவர்களுடைய வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும். அதை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதில் சிலவற்றைப் பற்றி அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் ”அவதூறு” பண்ணுகிறவர்களாய் இவர்கள் இருக்கக்கூடாது. அதாவது அவதூறு கூறுகிறவர்களாகவும் .அவதூறாய் குற்றம்சாட்டப்படுகிறவர்களாகவும் இருக்கக்கூடாது. இதற்கு மாறாக மற்றவர் விஷயங்களில் தேவையில்லாமல் நுழையாமல் சொந்த விஷயங்களைப் பார்ப்பதில் மற்றவர்களுக்கு மாதிரியாக இவர்கள் இருக்கும்படி அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் . . . மதுபானத்திற்கு அடிமையாய் இராமலும் தங்கள் செல்வாக்கைச் செலுத்த முடிகிற யாவருக்கும் தங்களின் முன்மாதிரியை மற்றும் நீதியின் போதனைகள் மூலம் நற்காரியங்களைப் போதிக்கிறவர்களாய் இவர்கள் இருக்கவேண்டும். பொதுவாக இவர்களுடையச் செல்வாக்குப் பாலிய ஸ்திரீகளிடமே காணப்படுகிறது. மேலும் இந்தச் செல்வாக்கை தேவ பக்தியுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகள்போல செலுத்த வேண்டும். மேலும் ஸ்திரீகள் போல செலுத்த வேண்டும். மேலும் கர்த்தருடைய வார்த்தை மற்றும் சத்தியத்தின் ஆவியின் வழிநடத்தலைக் கொண்டு செலுத்த வேண்டும்.

<u>பாலிய ஸ்திரீகள்:</u> மூத்த பரிசுத்தமான சகோதரிகளின் மாதிரியை காண வேண்டும். இந்த மூத்த சகோதரிகளின் செல்வாக்கு அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாத தன்மைக்கும் வீட்டில் கணவன் மனைவிக்கிடையே சண்டையை உருவாக்கும் திசையிலும் நடத்தாது "உங்கள் உரிமைக்காக நில்லுங்கள்" என்றோ "உங்கள் கணவனை வெளிப்படையாகவே திட்டுங்கள் என்றோ அறிவுரைகள் இவர்களிடமிருந்து வருவது அரிதே. இதற்கு மாறாக இவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாகவே இருப்பார்கள். தெய்வீக வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து தங்கள் வீட்டை சந்தோஷமாக வைக்கத்தக்கதான ஆலோசனைகளை இவர்கள் பாலிய ஸ்திரீகளுக்கு அளித்து உதவுவார்கள்விழுகையின் நிமித்தமாக எல்லா மனுஷரிடமும் இயல்பாகவே இருக்கும் சுயநலத்தின் ஆவியை இந்தப்பாலிய ஸ்தீரி-களிடம் இன்னும் வளருவதற்கு/விருத்திச் செய்வதற்கு இவர்கள் உதவாமல் இவர்கள் வார்த்தை மற்றும் தங்களுடைய முன்மாதிரி மூலம் பாலிய ஸ்திரீகள் "தங்கள் புருஷன் மற்றும் பிள்ளைகளை அன்பு கூரத்தக்கதாக வேறுபட்ட ஆவியான அன்பின் ஆவியை விருத்திச் செய்யவே உதவுவர்.

ஒவ்வொரு வீட்டிலும் அன்பு முதல் பிரமாணம் என்று மனதில் ஆழமாக பதிய வைக்கப்படும்போது கிறிஸ்துவ கிருபைகளில் பிரதானமானது வளர்க்கப்பட்டும் நடை முறைப்படுத்தப்பட்டும் வரும். மேலும் இதுவே (மற்றதலிருந்து) கிறிஸ்துவ வீடுகளை வேறுபடுத்திக்காட்டும். அநேகமாக மற்ற வழிமுறைகளைக்காட்டிலும் இதன் மூலமே ஒரு கிறிஸ்தவ தாய் இரட்சிப்பின் மகிமையான சுவிசேஷத்தை பிரசிங்கிக்கவும் முடியும். சாவுக்குரிய இந்த நிலைமையிலும் கூட பாவம் மற்றும் சுயநலத்திலிருந்து விடுவிக்கும் வல்லமை அதற்கு (சுவிசேஷம்) உள்ளது என்பதை தன்னுடைய சொந்த ஜீவியத்திலும் வீட்டிலும் விளக்கி காட்டமுடியும். அவள் போதிக்க தக்கதான மேடை போன்றும் உள்ளது என்பதை சரியாக மதிப்பிட வழிவகுக்கின்றது.

அவள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படியவும் கற்றுக்கொள்ள வேண்டும் (அ) Diaglott மொழிப்பெயர்ப்புப்படி பணிதல் (Submission) கற்றுக்கொள்ள வேண்டும் அதாவது வீட்டில் புருஷனுக்கு உள்ள இடத்தை வன்முறையினால் பிடுங்க முயற்சிக்கக் கூடாது. வாழ்க்கையின் விவகாரங்களைக் குறித்து தொடர்ச்சியான சண்டைச் சச்சரவு வைத்திருக்கக்கூடாது. இதன் மூலம் புருஷனானவனுக்கு அன்றாட அப்பத்தைப் பெற்றுக்கொள்வதில் ஒரு போராட்டமும் அதை புசிப்பதற்கான மற்றொரு போராட்டமும் இருக்கும். அப்போஸ்தலர் "கீழ்ப்படிதல்" மற்றும் பணிதல் என்று சொல்லும்போது அவர் கண்மூடித்தனமான குருட்டுத்தனமான) கீழ்ப்படிதல் (அ) ஊமைத்தனமான பணிதல் என்ற பொருளிலோ (அர்த்தத்திலோ) மனைவியானவள் எந்த நியாயமான உரிமைகளை அனுபவக்கக் கூடாது என்று அர்த்தம்படும் விதத்திலோ கூறாமல் இந்த உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிக்கும்போது அவைகளை உரிமையோடு அனுபவிக்கலாம் என்றும் இதன் மூலம் மனித மற்றும் தெய்வீக பிரமாணத்தின்படி வீட்டின் பிரதான பொறுப்பாளியாய் இருக்கும் புருஷனுக்கு அவள் பாரமாய் இராமல் வாழ்க்கையை ஆசீர்வாதமாய் இருக்கும்படி அவள் செய்ய வேண்டும் என்ற அர்த்தத்திலேயே குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்துவ மனைவிக்கு கர்த்தருடைய வார்த்தையில் குறிப்பிடப்படும் வீட்டின் விவகாரங்கள் குறித்தும் குடும்பத்தின் எல்லா நன்மைகள் குறித்ததான கர்த்தருடைய சித்தம் பற்றின கருத்து இருக்க வேண்டும். மேலும் எந்தக் கருத்துக்களையும் அன்புடனும் தன்னடக்கத்துடனும் (இனிமையாக) சிநேகத் தன்மையுடனும் எவ்வகையிலாவது அழுத்தத்துடனும் அவன் வெளிப்படுத்த வேண்டும். ஆனால் விசயங்களின் கர்த்தருடைய சித்தத்தின் அடிப்படையலான அவளுடைய கருத்தை வெளிப்படுத்தின பின்பு அவள் புருஷனுடைய முடிவிற்குக் கீழ்ப்படிந்து இருக்கவேண்டும் (மனசாட்சி தவிர மற்ற எல்லாவற்றிலும்) என்று சொல்வதின் காரணம் என்னவென்றால் தெய்வீக ஒழுங்கின்படி கிறிஸ்து எப்படிச் சபையின் தலைவராக இருக்கிறாரோ அப்படியே புருஷனும் ஸ்திரீக்கு தலையாய் இருக்கிறான். மேலும் அவனே குடும்ப விஷயங்களில் முடிவாக தீர்மானிக்கிறான்.

இந்த ஆவிக்குரிய முறையின்படி செயல்பட்டும் இதுதனக்குபாதிப்பு உண்டாக்குகிற/எதிரான சூழ்நிலையைக் கொண்டு வந்ததை அந்தக் கிறிஸ்துவமனைவிக் கண்டால் (அ) குடும்பத்தின் பொதுவான நன்மைக்குப் பாதகமாய் அமைய போவதைக் கண்டால் அவள் சிநேகத்துடன் / அன்புடன் மறுப்புத் தெரிவித்து வரும் என்று முன்கூட்டியே அறிந்திருந்த பின்விளைவுகளை புருஷனுக்குச் சுட்டிக்காட்டலாம். ஆனால் சொன்னதையே திரும்ப திரும்பச் சொல்ல மாற்றம் செய்ய வற்புறுத்தக் கூடாது. மேலும் புருஷன் கிறிஸ்துவன் அல்லாத பட்சத்தில் குடும்பத்தை நடத்துவதின் பொறுப்பு முழுவதும் அவனுடைய கைகளில் தான் உள்ளது எனச் சுட்டிக்காட்டி தான் மாத்திரமாவது தெய்வீக வழிகாட்டுதலின்படி நடப்பதாலும் கர்த்தரை அன்புக்கூர்ந்து அந்த அன்பை கீழ்ப்படிதல் மூலம் நிரூபிக்கும்போது கர்த்தரின் வாக்குத்தத்தத்தின்படி அவரை அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும் என்பதற்கு இசைவாக முடிவில் ஆவிக்குரிய ஆசீர்வாதம் வரும் என்ற எண்ணத்தின் மூலம் தன்னை ஆறுதல்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அந்த விஷயத்தை அவள் ஜெபத்தின் மூலம் கர்த்தரிடம் எடுத்துச்சென்று வாய்விட்டு சொல்ல வேண்டும்.

எந்தக் காரணத்திற்காக நாம் அன்புக் கூர்ந்து நம்முடைய ஜீவனைக்கூட அதற்கென்று தத்தம் செய்துள்ளோமோ அதற்கு மிகவும் குறைந்த அளவிளான எதிர்ப்பு வருவது மேலே சொல்லப்பட்ட இந்த நடைமுறையில் தான் என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகின்றார்.

<u>பாலிய புருஷர்களுக்கென்று</u>: சொல்லும்போது அவர்கள் மூர்க்கத்தனமாயும் முன்யோசனை இல்லாதவர்களாகவும் (கவனமற்று) இறுமாப்பு உள்ளவர்களாயும் இராமல் சுயக்கட்டுப்பாட்டுடனும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும் இருக்கும்படி அப்போஸ்தலர் புத்திச் சொல்கின்றார். தீத்துவும் பாலிய புருஷனாய் இருப்பதால் அவர் அந்த சபையில் உள்ள எல்லா பாலிய புருஷர்களுக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று புத்திச் சொல்கின்றார். மேலும் இவ்வாறாக தீத்துவுக்கு சொல்லும்போது அப்போஸ்தலர் தற்செயலாகவே சபையில் உள்ள மற்ற எல்லா பாலிய புருஷர்களும் தீத்துவுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பண்புகள் மற்றும் எச்சரிப்புகளைக் கவனமாய் கவனிக்கவும் அவைகளை பயிற்சிக்கவும் புத்திச் சொல்வதாக அமைகின்றது.

<u>தீத்துவுக்கு சொல்லும்போது:</u> அவர் நற்கிரியைகளுக்கு மாதிரியாகவும் ஆரோக்கியமான உபதேசம் உள்ளவனாகவும் இருக்க வேண்டும் எனவும் சொந்த வீண் கற்பனைகள் (அ) மற்றவர்வருடைய கற்பனைகளால் தான் போதிக்கிற உபதேசங்களை மாசுப்படுத்தாமலும் இருக்க அப்போஸ்தலர் பரிந்துரைக்கின்றார். சிறு பிள்ளைத்தனம்/விளையாட்டுத்தனம் மற்றும் கருத்தின்மை (கவலையின்மைக்கு) எதிரான கருமைத்தன்மை (seriousness-வினையின் முக்கியத்துவம்) பற்றி தீத்துவக்கு அப்போஸ்தலர் பரிந்துரைக்கும் போது அது தற்செயலாக மற்ற எல்லா பாலிய புருஸர்களுமக்கும் பொருந்தி விடுகின்றது கிறிஸ்துவர்களாய் இருக்கும் பட்சத்தில் உலகத்திடம் இல்லாத ஒன்று நம் மனதை நிரப்ப உள்ளது. மேலும் இவர்களின் (கிறிஸ்துவர்கள்) நம்பிக்கை மற்றும் விருப்பங்களின் மேன்மை மற்றும் சிறப்பு தெய்வீக வார்த்தைகளின் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தின் அடிப்படையில் இருப்பதால் இது இவர்களின் வாழ்வு மற்றும் பொதுவான நடத்தையை முக்கியத்துவம் உடையதாய் ஆக்குகின்றது. அதாவது கப்பலில் ஏற்றப்பட்ட நல்லசரக்குப் போன்று காணப்பட்டு அவர்களை சோர்வடையாமல் பாதுகாத்து விரும்பிய

**--714--**

துறைமுகத்தை அடைய வேண்டுமெனில் அவர்கள் கடக்க வேண்டிய வாழ்க்கையின் இடர்பாடுகள் மற்றும் புயல்களை தாண்டி செல்ல இவர்களை தயார்படுத்துகின்றது.

குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தை பேசுதல் என்பது தீத்துவும் கர்த்தருடைய எல்லா ஜனங்களும் அறிவிலும் விஷேசமாக பாலிய புருஷர்களும் நாடி முயற்சிக்க வேண்டிய வேறொரு பண்பாகும். ஆரோக்கியமான வசனம் பேசுதல் என்று வொல்லும்போது அது வெறும் இலக்கணம் பிழைகள் அற்று தெளிவாக உச்சரித்தல் என்று பொருளை தராமல் அவர்களின் உரையாடல் மற்றும் உரையாடல் மூலம்அவர்கள் செலுத்தும் . . . செல்வாக்கு என்பது உண்மையிலே உதவியுள்ளதாகவும் மனம் இருதயம் மற்றும் குணலட்சணங்களைப் பெலப்படுத்துகிற விதத்திலும் இருக்க வேண்டும் என்ற பொருளைத் தருகின்றது அந்தோ "எத்தனை கிறிஸ்துவ பாலிய புருஷர்களின் உரையாடல் ஆரோக்கியம் உள்ளதாயும் . . . தங்களுக்கும், தங்களோடு கூட்டாய் இருப்பவர்களுக்கும் உதவுகிறதாய் உள்ளது. கிறிஸ்துவுக்குள்ளாய் இருக்கும் பாலிய புருஷர்கள் தங்களுடைய பொதுவான உரையாடல்களிலும் தங்களின் பொதுவான நடத்தைகளின் மூலமும் எப்போதும் கிறிஸ்துவை பிரசங்கிக்கிறவர்களாகவும் சத்தியம், நீதி, தயவு, அன்பு, நற்குணம் என்ற அவருடைய குறிப்பிடத்தக்க உயரியக் குணலட்சணங்களை வரியாக உலகத்திற்கு முன்பாக பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கத்தக்க தேவனுடைய நேச குமாரனுடைய நகல்களாக ( பிரதி-copy-மாதிரி ) இருக்கவேண்டும். ஆரோக்கியமான வசனங்களைப் பேசும்போது நண்பர்களாலோ (அ) எதிரிகளாலோ அந்நிய தெய்வங்களை வணங்குகிறர்களாலோ (அ) கிறிஸ்தவர்களாலோ பரிசுத்தவானாலோ (அ) பாவியாலோ குற்றம் சாட்ட முடியாது மேலும் இந்த நடைமுறை என்பது நாம் எப்பொழுதும் எழும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படும். சத்துருக்களுக்கு நிலையான கடிந்துகொள்ளுதல் போன்று இருக்கும் என்றும் ஐயத்திற்கு இடமின்றி இத்தகைய உயரிய பண்புகள் முன்பு இந்த சத்துருக்கள் கடைசியில் வெட்கப்படுவார்கள் (யாக்கோபு 3:13).

<u>வேலைக்காரர்களுக்கும்:</u> அப்போஸ்தலர் ஒரு செய்தியை அனுப்பியுள்ளார். தெய்வீகத் திட்டத்தை பற்றிப் புரிந்துக்கொள்வதில் அப்போஸ்தலரைக்காட்டிலும் குறைந்த ஞானமுள்ள தேவனுடைய அன்பான பிள்ளைகள் கொடுக்கக்கூடிய செய்தியை விட இது மிகவும் வேறுபட்டச் செய்தியாகும். சுவிசேஷத்தில் உள்ள கொள்கைகள் மற்றும் அதை எவ்வாறு இக்காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை தவறாய் புரிந்துகொண்டதாலேயே இன்று அநேக தேவனுடைய ஜனங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாய் இராமல் சமாதானத்தைக் கெடுக்கிறவர்களாகக் காணப்படுகின்றனர். வேலைக்காரர்களை "வேலை நிறுத்தம் செய்யுங்கள்" உரிமைக்காக நில்லுங்கள்" என்றும் தங்களின் நீதியை (நியாயம்) கேட்கும் விஷயத்தில் தங்களின் உரிமை "மதிக்கப்படாமல்" பார்த்துக் கொள்ளத்தக்கவும் இவர்கள் (தேவனுடைய ஜனங்கள்) புத்திச் சொல்கின்றனர். ஆனால் இதற்கு மாறாக தேவனுடைய திட்டத்தைப் புரிந்துகொண்டிருந்த அப்போஸ்தலர் நாம் இன்னும் இப்பொல்லாத பிரபஞ்சத்தில் இருக்கிறோம் என்றும் சாத்தானே இப்பிரபஞ்சத்தின் பிரபுவாய் இருக்கிறான் என்றும் இக்காலத்தின் அவனுடைய இராஜ்யம் என்பது அன்பு மற்றும் நீதியின் அடிப்படையில் இல்லாமல் சுயநலத்தின் அடிப்படையில் தான் உள்ளது என்று அறிந்திருந்தபடியால் இக்காலத்தில் முழுமையான நீதியையும் மனித உரிமைகளையும் (அ) இக்காலத்தில் முக்கியமாய் மற்ற எதையும் எதிர்பார்க்கக் கூடாது என்று அறிந்திருந்தார். கலாத்தியர் 1:4; யோவான் 14:30).

சாத்தானின் அரசாட்சியின் கீழ் தவறுகள் திருத்தப்படும் என்றும் நீதி வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கக்கூடாது என்றும் இப்போஸ்தலர் தம்முடைய எல்லா போதனைகளிலும் விசுவாசிகளுக்கு கர்த்தர் நீதியுள்ள இராஜாவாக வந்து பூமிக்குரிய ஆளுகையை தன் கையில் எடுத்து நம்முடைய ஜெபத்தின் விண்ணப்பமான "உம்முடைய இராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செயல்படுவது போலவே பூமியிலும் செயல்படுவதாக" என்பது நிறைவடையும் காலம் வருவதையே சுட்டிக்காட்டுகினறார்.பின்பு நீதியை எதிர்பார்க்கலாம் காரணம் என்னவென்றால் நீதி பரலோகத்தில் நிறைவேற்றப்படுகின்றது. அப்பொழுது பரலோகத்தில் எல்லா உரிமைகளும் மதிக்கப்படுவது போல எல்லா உரிமைகளும் (பூமியிலும்) மதிக்கப்படும். ஆனால் இத்தகைய மகிமையான நிலை வருவதற்கு முன்பு இப்பிரபஞ்சத்தின் அதிபதியான சாத்தான் இனி ஒரு போதும் தேசங்களை வஞ்சிக்காதபடிக்கு கட்டப்பட்டு அவனுடைய அநீதி மற்றும் சுயநலத்தின் ஆளுகை தள்ளப்பட்டு நியாயத்தை நூலும் நீதியை தூக்கு நூலுமாக வைப்பவருடைய

பிரமாணங்களர்ல அது பிடுங்கப்பட்டு இம்மானுவேலுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். (வெளிப்படுத்தல் 20:1-3; தானியேல் 2:44; ஏசாயா 28: 17).

வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களுக்கு பிரியமாய் நடக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் புத்திச் சொன்னது இதற்கு (மேலே சொல்லப்பட்டதற்கு) இசைவாய் உள்ளது.எஜமானுடைய பொருள்களைப் பராமரிக்கும் விஷயத்திலும் வளமை குறித்த விஷயத்திலும் வேலைக்காரர்கள் அலட்சியமாகவோ/அக்கறையற்றோ (கவனமின்றி) நம்ப முடியாதவர்களாய் இருக்கக்கூடாது. எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்று உண்மையாய் செய்வது போல செய்யுங்கள் என்று அப்போஸ்தலர் வேலைக்காரர்களும் எஜமானுடைய காரியங்களில் தங்களுடையது போல அக்கறைச் செலுத்தவேண்டும் (1 கொரிந்தியர் 10:31).

ஒருவேளை அந்த ஊழியக்காரனின் சூழல்கள் அவனை கர்த்தருக்கென்றும் அவருடைய சத்தியத்திற்கென்றும் வேலை செய்வதற்கு மூட்டுக்கட்டையாக இருக்கும் பட்சத்தில் அவன் "கர்த்தருக்கென்று செய்யப்படுவது" போல உலகபிரகாரமான எஜமானுக்கு செய்யப்பட்டால் அதுவும் கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகவும் அவருடைய சத்தியம் மற்றும் அதன் ஆவி அவனுள் குடியிருப்பதன் காரணமாயும் செய்தால் அவன் செய்ததைக் கர்த்தர் தம்முடைய காரியங்களில் அவன் நேரடியாய் ஈடுபட்டு ஏதோ வேலை செய்துள்ளதைப் போல் ஏற்றுக்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

வேலைக்காரர்கள் எஜமான்களுக்கு பிரியமுண்டாக நடந்து கொள்வது மாத்திரமல்ல.சின்ன மற்றும் பெரிய விஷயங்களான எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறு இருப்பதன் மூலம் கிறிஸ்துவ வேலைக்காரர்கள் எங்கு இருந்தாலும் இவர்கள் எஜமானின் பார்வைக்கு மாத்திரம் உண்மையுள்ளவர்களாய் இருக்கும் "பார்வை ஊழியர்களிடமிருந்து" வேறுபட்டவர்களாகவும் விளங்குவர். இத்தகைய கிறிஸ்துவ வேலைக்காரர்கள் இவர்களின் மதக்கொள்கைளை மதிக்காதவர்களால் கூட உயர்வாக மதிக்கப்படுவர். மேலும் இதுவே இவர்கள் ஏற்படுத்தும் கனமான போதனையாகும் .இவர்கள் ஒருவேளை எஜமானுக்கு கீழ்ப்படிந்து இருக்கும்போதே மறுப்புக்கூறுகிறவர்களாகவும் முறையிடுகிறவர்களாகவும் (குறைக்கூறுகிறவர்களாகவும்) இருக்கலாம். ஆதலால்தான் அப்போஸ்தலர் "எதிர்த்துப்பேசாமல்" இருங்கள் என்று குறிப்பிடுகின்றார். எஜமானின் முறைகள் வழிகள் மற்றும் வேலைகள் குறித்து மறுத்துக்கூறுங்கள்(அ) சண்டையிடுங்கள்என்று குறிப்படப்படவில்லை. மற்ற வேலைக்காரர்கள் போல தான் தனக்கும் பங்கு என்பதற்கோ இல்லது வேறு எந்தக் காரியங்களுக்கும் முறையிடுங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. பிரச்சினையை தூண்டி விடுவது மற்றும் தவறாய் பாதகமாய் செய்யவேண்டும் என்று மற்றவர்கள் விரும்புவற்றை பெற்றுக்கொள்வது ஆகிய இவைகளைக் காட்டிலும் மற்றவர்கள் முறையிடுவதை குறுக்கிடாமல் விட்டு விட்டு தாங்கள் அமைதியை காத்துக்கொள்வது சிறந்ததாகும்.

திருடாமலுமிருந்து அதாவது எஜமானுடைய விருப்பத்திற்கு மாறாக அவருடைய பொருள்களை இரகசியமாக தங்களுக்கென்று சொந்தமாக்கிக் கொள்ளுதல் ஆகும். எஜமான் தன்னுடைய ஊழஜயக்காரனை நேர்மையில்லாத மற்றும் நீதி தவறுகிற சில வேலைகனைச் செய்ய உட்படுத்தும்போது இந்தக் காரணத்தை முன்னிட்டு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவும் மறுப்புக் கூறவும் செய்யலாம் என்று நாம் நினைவில் வைப்பது சரியானதே எல்லா விஷயத்திலுமே அவனுடைய மனசாட்சிக்கு உரிய யாவும் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால் எஜமானின் மனவாட்விக்குரிய எஜமானின் விஷயங்களிலும் அவனுக்கு சம்மந்தமில்லாத விஷயங்களிலும் அவன் (வேலைக்காரன்) தலையிடக்கூடாது வேலைக்காரனானவன் சிறு சிறு விஷயங்களிலும் கூட விதிகளைக் கடைப்பிடிப்பதில் நேர்மை/ நாணயம் காட்டுவதன் மூலம் . . . எஜமானின் விஷயங்களில் சகலவிதத்திலும் நல்லுண்மை அதாவது உண்மைக் காட்டுவதன் மூலம் எஜமானுக்குப் போதிக்கவும் எஜமான் மீது அவனுடைய செல்வாக்கையும் செலுத்த முடியும்.

அறிவின் காரணமாக அறிவுத்திறன் கொண்டவர்கள் அடக்கு முறை வரும் போது அடங்காத நிலைக்குக் கொண்டுவருகின்றார்கள். மேலும் கிறிஸ்துவ அறிவு என்பது உயர்தரமான அறிவு என்பதால் அது மற்றவைகளைக் காட்டிலும் அமைதியற்ற ( மன உளவு) நிலையிலிருந்து

பேணிக் காக்குகின்றது .மனித ரீதியிலும் இராஜாவுக்கும் குடியானவனுக்கும் (உழவன்) எவ்வளவு பெரிய அளவிலான வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவர்கள் நன்னெறிச்சார்ந்த /நீதி விஷயங்களிலும் தெய்வீக நீதியின் கண்ணோட்டத்திலும் சமநிலையிலேயே உள்ளார்கள் என்ற கருத்தை இந்தக் கிறிஸ்துவ அறிவு மனதில் ஆழமாய் பதிய வைக்கின்றது. இந்தச் சிந்தை /கருத்தை தாழ்மையான மனது ஏற்றுக்கொள்ளும்போது உலகத்தின் அதிகாரம் உடையவர்களிடம் ஏற்படும் ( பயபக்தி) மதிப்பு அழிந்து போய்விடும். மேலும் ஏழைகளுக்கு தாங்கள் பணக்காரர்களோடும். அதிகம் கற்றவர்களோடும் பூமியில் மிகவும் வல்லமையுடையவர்களாய் இருந்தவர்களோடும் பூமியின் மகா இராஜாவிற்கு முன்பாக ஒரே வாழ்வாதாரம் பெறப்போகிறோம் என்ற கருத்து அவர்களை தூக்கி விடுகிற (மேம்படுத்துகிற / வலுவூட்டும்) கருத்தாக உள்ளது. அதாவது ஏழைகளோ பணக்காரனோ மனிதன் மனிதனாக இருக்க வேண்டும் என்பதேயாகும். மேலும் இது மனிதர்களுக்கு மனிதஉரிமைகள் உண்டு என்றும் அது விலங்குகளின் உரிமைகளைக் காட்டிலும் மேலானது என்றும் மனம் மற்றும் மனசாட்சிக் குறித்ததான சுதந்திரங்கள் மற்றும் நடத்தைகள் பற்றியதான சில சுதந்திரங்களையும் அவை உள்ளடக்கியுள்ளது என்றும் அவர்கள் உணரும்படிச் செய்கின்றது.

இந்த ஒரு ஒளியை/அறிவைத்தான் கிறிஸ்துவம் உலகத்திற்குள்ளாய கொண்டு வந்தது. மேலும் இது மகா பெரும் குழப்பம் மற்றும் புரட்சியை உண்டு பண்ணி இப்பொழுது உள்ள எல்லா அமைப்புகளையும் தூக்கி எறிந்து ஆட்சியில்லா நிலைக்குக் கொண்டுவரும் கிறிஸ்துவ வேலைக்காரன் என்பவன் அறிவூட்ட மனித நிலையைக்காட்டிலும் மேலாக இருக்க வேண்டும். காரணம் அவன் தேவனுக்கு தன்னை தத்தம் செய்தவனாகவும் தேவனுடைய சித்தத்திற்கென்று தன்னுடைய உரிமைகளைத் துறந்தவனாகவும் பரலோக இராஜ்யத்திற்கு தான் பாத்திரனாகவும் தயார்படுத்தப்படவும் தேவனால் போதிக்கப்பட்டிருக்கும்படிக்கும் தன்னை கர்த்தருடைய கரங்களிலே ஒப்படைத்தவனாகவும். அவனுடைய நம்பிக்கை மற்றும் அவனுடைய நலன்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் அவர் விருப்பமும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்ற விஷயத்திலும் அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் நலத்திற்கு ஏதுவல்லாத எந்க் காரியமும் அவனுக்கு வர அவர் அனுமதிக்கமாட்டார் என்ற விஷயத்திலும் அவர் மேல் முழு விசுவாசம் அவன் கொண்டிருப்பதாலேயே ஆகும்.

தத்தம் செய்துகொண்ட உண்மை கிறிஸ்துவ வேலைக்காரன் (தங்களுடைய போதகரை போல இருந்தால் எல்லா கிறிஸ்துவர்களும் வேலைக்காரர்களாக இருக்கவேண்டும் (பிலிப்பியர் 2:7). தெய்வகீ திட்டத்தின்படி அவன் இக்காலத்தில் தன்னுடைய உரிமைகளை எதிர்ப்பார்க்க முடியாது என்றும் அவைகளுக்காக நாடி முயற்சிக்கக் கூடாது என்றும் உணருகிறான் மாறாக அவன் தேவனுடைய சித்தத்திற்கு என்றும் வாய்ப்புகள் உள்ளவரை கர்த்தருடைய சித்தம் செய்வதற்கும் கர்த்தருடைய ஞானம் மற்றும் வழி நடத்தலின்படி தன்னிடம் கர்த்தருடைய சித்தம் நிறைவேறும்படியாகவும் அவைகளை தியாகம் செய்கின்றான். பலி செலுத்துகின்றான் துன்புறுத்தப்பட்டு அநீதியாய் நடத்தப்படும் பட்சத்தில் அவன் விடுலைக்காக கர்த்தரையே நோக்கிப்பார்ப்பான். மேலும் விடுதலை எவ்விதத்தின் மூலமாகவும் வந்தாலும் அது தெய்வீக ஏற்பாடு என்று ஏற்றுக்கொள்கிறான். மேலும் அவனை விடுவிக்கும் விஷயத்திலும் எதையெல்லாம் தேவன் சரியாகவும் நியாயமாகவும் அழிக்கவில்லையே அதை அவருடைய மேலான வழிநடத்தல் என்று ஏற்றுக்கொள்கிறான். மேலும் கர்த்தருக்கு அவருடைய கவனிப்பு/ பராமரிப்புக்காக நன்றி செலுத்தி இந்த சோதனைகளால் மனதில் பதிய வைக்கும் நீடிய பொறுமை அனுபவங்கள் மற்றும் பொறுமையின் பாடங்களைக் கற்றுக்கொள்ள நாடுகின்றான். மேலும் இந்தச் சோதனைகள் யார் மூலமாக வந்தாலும் அவைகள் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அவராலேயே ஒழுங்குப்படுத்தப்பட்டது என்றும் அவைகள் அவனுடைய ஆவிக்குரிய நலம் மற்றும் வளர்ச்சியின் நோக்கத்திற்காகவே அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் இத்தருணங்களில் உணர்ந்துக்கொள்கிறான்.

ஏதோதோ வாழ்க்கைத் தொழிலைக் கொண்டுள்ள இத்தகைய கிறிஸ்துவ வேலைக்காரர்கள் மற்றும் கிறிஸ்துவர்களுக்கு மாத்திரமே மனநிறைவு/திருப்தி என்பது என்ன என்று உண்மையிலேயே தெரியும். மற்றவர்களோ உரிமைகளை அடைய வேண்டுமென்றும் தவறுகளை திருத்த வேண்டுமென்றும் நாடி முயற்சிக்கின்றனர். மேலும் இதன் மூலம் அவர்கள் தங்கள் இருதயங்களில்

**--717--**

சுயநலத்தின் ஆவியையே அதிகதிகமாய் விருத்திசெய்து/ வளர்த்து படிப்படியாக தங்களுக்கு கடும் துன்பத்தையும் மனவேதனையையும் மனநிறைவற்ற தன்மையையும் வருத்திக் கொள்கின்றனர்.

*தேவனுடைய கரம் என்னை நடத்துகிறபடியால் நான் எதிலும் மனநிறைவுக் கொள்வேன்*

என்று கிறிஸ்துவனால் மாத்திரமே சொல்ல முடியும். மேலும் ஜீவனுள்ள விசுவாசத்தை மேற்கொள்வதன் மூலமாகவே அவனால் இந்த நிலைக்கு வர முடியும். மேலும் கர்த்தருக்கென்று தன்னையே தத்தம் செய்து கொண்ட பின்னர் தான் இத்தகைய ஜீவனுள்ள விசுவாசத்தை வாழ்வில் விஷயங்களில் பயிற்சி செய்ய முடியும் . மேலும் தெய்வீக திட்டம் மற்றும் குண லட்சணங்கள் பற்றின அறிவிற்குள் கொஞ்சம் வந்த பின்னர் தான் அவனால் தன்னை இவ்விதமாக தத்தம் செய்யமுடியும். இத்தகைய வேலைக்காரர்கள் தான் நம்முடைய இரட்சகர் பற்றிய தான தேவனுடைய உபதேசத்தை அழகூட்டுகின்றனர் என்று உறுதி அளிக்கின்றார். அது சண்டை சச்சரவின் உபதேசமாயிரமால் மனுஷரிடத்தில் நல்லெண்ணம் மற்றும் சமாதானத்தின் உபதேசமாய் உள்ளதென்றும் தனிப்பட்ட உரிமைகள் மற்றும் அதை அடைவதற்கான சுயநலத்துடன் கூடிய சண்டைச் சச்சரவின் உபதேசமாய் இராமல் பரிசுத்த ஆவிக்குள்ளான சமாதானம் சந்தோஷம் மற்றும் அன்பின் உபதேசமாக அவர்கள் வெளிக்காட்டுவார்கள்.

<u>ஏன் கிறிஸ்துவர்கள் உலகத்திடம் இருந்து பிரிந்து வாழ வேண்டும்?</u>

சபையின் வெவ்வேறு வகுப்பினர்களுக்குரிய சரியான ஒழுங்குமுறைப் பற்றி அப்போஸ்தலர் விவரமாக எடுத்துச் சொல்லிய பின்பு மேலே கூறப்பட்ட ஆலோசனைகளுக்கான காரணத்தை அப்போஸ்தலர் "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாக" என்று கூறுகின்றார்.

எப்பொழுது இவ்வாறு தேவ கிருபை பிரன்னமாகியது? நம்முடைய மீட்பர் மரித்து.உயிர்த்தெழுந்தப்பின்னர் சுவிஷேசம் பிரசிங்கக்கப்படும் வரையிலும் இவ்வாறு இல்லையென்று நாங்கள் இக்கேள்விகளுக்கு பதில் அளிக்கிறோம் நாலாயிரம் வருடங்களாக தேவனுடைய கிருபையானது பிரசன்னமாகவும் இல்லை. வாழ்க்கையிலும் வெளிப்படவில்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கை என்பது யூதர்களுக்கு மாத்திரமே உரியது. மேலும் அது கிருபையினால் உண்டாகாமல் மாறாக பிரமாணமாகவும் நீதியாகவும் காணப்பட்டது. தேவ கிருபையானது பிற்காலங்களில் வரும் என்றும் அதை தொடர்ந்து பூமியின் குடிகள் எல்லார் மேலும் ஆசீர்வாதம் வரும் என்றும் உறுதியாக தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. எல்லா மனுஷருக்கென்று அது இது வரை பிரசன்னமாகவில்லை. எப்படி சாபம் அழிக்கப்பட்டதோ அவ்வாறே தேவனுடைய கிருபையும் ஒவ்வொரு மனுஷர் மீதும் செலுத்தப்படவேண்டும் என்ற நோக்கம் இருப்பதால் அது எல்லா மனுஷருக்கும் அளிக்கப்படும்.

இந்த காலக்கட்டத்தில் மனித இனத்தில் பெரும்பாலானவர்கள் "தேவனுடைய கிருபையை" காண்பதில்லை காரணம் அது அவர்களுக்கு பிரசன்னமாகவில்லை. மனித குடும்பத்தில் இந்த நான்கு பங்கு ஜனங்கள் இன்று புற சமயத்தாரின் இருளுக்குள் இருப்பதால் இந்த கிருபை இவர்களுக்கு முற்றிலும் மறைக்கப்பட்டுள்ளது. இந்த தெய்வீக கிருபையில் சிலவற்றைக் கண்டுள்ள மீதி ஒரு பங்கு ஜனங்களில் பெரும்பாலானோர்கள் அதை தெளிவின்றியும் மிகவும் மங்கலாவும் பார்த்துள்ளபடியால் அதனுடைய அழகை ( அதன் விலையை) மதிப்பிட்டு உணர முடியாதவர்களாய் காணப்படுகின்றனர். நம்முடைய கண்கள் அவைகளை கண்டிருந்தால் அவைகள் பாக்கியமுள்ளவைகளாய் இருக்கும். அப்போஸ்தலர்களின் நாட்களிலும் நம்முடைய நாட்களிலும் இன்று வரையிலும் இந்த தேவனுடைய கிருபையானது "எல்லா மனுஷருக்கும் "பிரசன்னமாகியுள்ளது என்று சொல்லும்போது இது யூதர்களுக்கு என்று மாத்திரம் இனி இருப்பதில்லை அப்போஸ்தலர் குறிப்படுவது போல் இடையே நின்ற தடுப்புசுவர் உடைக்கப்பட்டபடியால் இந்த தெய்வீக கிருபையானது இன்று யூதருக்கும் புறஜாதியாருக்கும் ஒரே மாதிரி திறக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேவக் கிருபை எதில் காணப்படுகின்றது? ஒப்புரவாகுதல் என்பது மனிதனுடைய நீதியினிமித்தம் உண்டாகாமல் அது தேவனுடைய கிருபையையே (ஆதாரமாக) அஸ்திபாரமாக (அடிப்படையாக) கொண்டுள்ளது என்றே அறிவிக்கப்படுட்டும் வெளிப்படுத்தப்பட்டும் இருக்கிறது. தேவன் தாமே தன்னுடைய சட்டம் (எதிர்பார்த்த) கேட்ட பாவத்திற்கான மாபெரும் பலியை அளித்தார் என்றும் நம் சார்பாக இயேசு தண்டனையை ஏற்றுக்கொண்டார் என்றும் இதன் விளைவாக நாம் இப்பொழுது தேவனோடு ஒப்புரவாகியுள்ளோம் என்றும் முன்பு மரணத்திற்குத் தீர்ப்பளிக்கப்பட்ட நம்மை அவருடைய சட்டத்தை மீறாமலே நியாயமாய் இப்பொழுது ஏற்றுக்கொள்ள முடியும் என்று தேவன் தம்முடைய வார்த்தைகள் மூலம் நமக்கு கூறுகின்றார். இவ்வாறு நாம் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது அவருடைய அனுக்கிரகத்தை திரும்ப பெறுதலைக் குறிக்கின்றது. மேலும் இந்தத் திரும்பப்பெறுதலை நாம் சரியாகப் பெற்றுக் கொண்டால் இது அவருடைய வழிநடத்தலின் கீழ் நாம் இரட்சிப்பு பெறவும், பாவம் மற்றும் மரணத்திலிருந்து முழுவிடுதலை அப்பரிபூரணம் முழு ஜீவனுக்கும் பரிபூரணத்திற்கும் தேவனுடைய பத்திரர்களுக்குரிய விடுதலைக்கான நிலைகளுக்கு நம்மை கொண்டு வரும்.

இது சுவிசேஷ யுகத்தில் உலகத்திலிருந்து தெரிந்து கொள்ளப்படும் சபையின் மீது செயல்முறைப்படுத்துகின்றது. மேலும் ஆயிரவருட அரசாட்சியில் தெரிந்து எடுக்கப்பட்ட சபையைக் கொண்டு தேவன் உலகத்தை ஆசிர்வதிக்கும்போது இந்த தேவக்கிருபையானது பொதுவாக மனுக்குலத்தின் மீது செயல்முறைப்படுததப்படும். இக்காலக்கட்டத்தில் தேவனுடைய கிருபையின் வெளிப்படுத்தலானது அழியாமை ஜீவன் மற்றும் தெய்வீக சுபாவத்தைப் பெற்றுக்கொள்ளக் கொடுக்கப்பட்ட பரம அழைப்பிற்கு தொடர்புடையதாய் உள்ளது. ஆயிர வருட அரசாட்சியில் அவருடைய கிருபை என்பது உள்ளா மனுக்குலத்திற்கும் அளிக்கப்படும் . திரும்பக்கொடுத்தலின் ஆசிர்வாதங்கள் மற்றும் இந்த கிருபையின் நிபந்தனைகளுக்கு இசைவுடன் கூடிவரும் யாவருக்கும் அளிக்கப்படும் பூமிக்குரிய நித்திய ஜீவனுக்கும் தொடர்புடையதாய் வெளிப்படும்.

தேவனுடைய கிருபைக்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன?

அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியது போல இது நடத்தை மற்றும் குணலட்சணத்திலும் அத்தகைய புரட்சியை/மாறுபாட்டை உண்டாக்குமாறு இது ஏன் நடத்த வேண்டும்? ஏன் என்றால் இரட்சிப்பிற்குள்ளாய் நம்மை அழைத்த இந்த தேவ கிருபையானது ஏதோ ஒன்றை போதிக்கின்றது என அப்போஸதலர் கூறுகின்றார். தேவனுடைய கிருபையோடும் மீண்டும் ஒப்புரவாகிக்கொள்ள வழி, சுயத்தை வெறுப்பதே என்று அது போதிக்கின்றது. அதாவது அவபக்திக்கு ஏதுவான எல்லாவற்றையும் தெய்வீக குணலட்சணம் உருவாகுவதற்கு எதிரான எல்லாவற்றையும் தெய்வீக சித்தத்திற்கு எதிரான எல்லாவற்றையும் வெறுக்க வேண்டும். உலகப்பிரகாரமான செல்வாக்கு மற்றும் உலகத்தின் செல்வத்திற்கான ஆசைகள் (விருப்பம்) குறிக்கோள்களையும் வெறுக்க வேண்டும் என்றும் இவைகளைக் குறிவைத்து நாடி முயற்சிப்பதைக்காட்டிலும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணின இரட்சிப்பின் மீது விருப்பம் கொண்டவர்களாகிய நாம் இவைகளுக்கு மாறாக "தெளிந்த புத்தியும் நீதியும், தேவபக்தியும், உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ண வேண்டும. நம்முடைய போதகரிடத்திலும் அதே போல் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருகிறவர்களிடத்திலும் எந்த ஒரு அக்கறையையும் கொண்டிராத இப்பிரபஞ்சத்தின் அதிபதியின் ஆளுகையின் கீழ் உலக பிரகாரமான கனம் மற்றும் அனுகூலங்களையும் நாம் எதிர்பார்க்கக்கூடாது.

சுயத்தை வெறுத்து நாம் இந்த உலகத்தில் (யுகத்தில்) ஜீவித்தால் நாம் வரவிருக்கிற உலகத்தில் (யுகத்தில்) தேவனுடைய கிருபையைஅடைவோம். எந்த எதிர்பார்ப்பை (அ) நாம் விரும்பும் மற்றும் அக்கறை மற்றும் இருதயத்திறகு ஆறுதலான எந்த நம்பிக்கையை நம் மனங்களுக்கு முன்பாக வைத்திருக்க வேண்டும்? ஆ" அப்போஸ்தலர் இதை குறித்து நமக்குக் கூறுகின்றார். நம்முடைய குறிக்கோள்கள் அனைத்தும் திரும்ப வேண்டியதும், நம்முடைய எல்லா நம்பிக்கைகளும், நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டியதும், எல்லா உலக பிரகாரமான யோசனைகளைக் காட்டிலும் விலையேறப்பெற்றதும் முக்கியமானதுமான செல்வங்களை நம்முடைய இருதயம் தேடக்கூடியதுமான அந்தச் சிறப்பான யோசனையை நமக்கு முன்பாக காட்டுகின்றார். அவர் இந்த நம்பிக்கையை இவ்வாறாக எடுத்துரைக்கின்றார்.

"நாம் நம்பிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி." (தீத்து 2:13)

இது தான் நம்முடைய எதிர்பார்ப்புகளின் மையம் ஆகும். தேவனுடைய இராஜ்யம் வெளிப்படும் முன்பு நாம் ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க் முடியாது. தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செயல்படுவது போல பூலோகத்திலும் செயல்படுத்துவதற்கு முன்பு இந்த இராஜ்யம் வரவேண்டும் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.அன்பின் கொள்கையின்அடிப்படையிலான நீதி மற்றும் சத்தியத்தின் புதிய அமைப்புகள் ஸ்தாபிக்கப்படும் முன்னர் இந்த இராஸ்யம் சாத்தானைக் காட்டவும் சுயநலத்தின் அடிப்படையிலான அவனுடைய அமைப்புகளை பிடுங்கி எறிய வேண்டும் எனவும் நாம் அறிந்திருக்க வேண்டும். யாரெல்லாம் தேவனுடைய கிருபையினால் ஆசிர்வதிக்கப்பட்டும் சத்திய வார்த்தையாலும் அதனுடைய ஆவியினாலும் தங்களுடைய மனக்கண்களைத் திறக்கப்பெற்றிருக்கிறார்களோ அவர்களெல்லாம் இரட்சிப்பின் இந்த ஆசிர்வாதங்கள் நமது கர்த்தரும் நம்முடைய இரட்சகரான இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் (1பேதுரு 1:13) எனக் கண்டுக்கொள்வார்கள். மேலும் மற்றும் சுயநலத்திற்கு எதிரான நல்ல போராட்டத்தைப் போராடுவதும். நீதிக்காக போராடவும் விசுவாச வீட்டாருக்கு உதவியாகவும் இருப்பதே இந்த வாழ்க்கையில் நம்முடைய பிரதானமான நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் உலகபிரகாரமான உரிமைகளுக்குப் போராடுதல் மற்றும் உலகபிரகாரமான கனம் மற்றும் ஐஸ்வரியங்களுக்காக நாடி முயற்சித்தல் போன்ற சண்டை சச்சரவுகளில் நம்மை தவிர முழு உலகமே ஆழ்ந்த கவனம் கொண்டிருக்கிற இவைகளுக்காக நாம் போராட கூடாது என்றும் கண்டுகொள்கிறான். ஒருவேளை கர்த்தருடைய பரிசுத்தவானிடம் தாலந்துகள் (அ) செல்வாக்கு (செலவம்) காணப்பட்டால் இவைகள் அவர்களுடைய செல்வங்கள் அல்ல. மாறாக அவைகள் அவர்களின் வேலையாட்கள் மாத்திரமே. மேலும் அவைகளுக்கு அவர்கள் சொந்தக்காரர்கள் அல்ல மாறாக அவைகளை தங்களுக்கு தெரிந்த அளவிற்கு போதகரின் ஊழியத்திற்கு முடிந்தமட்டும் பயன்படுத்தவும் அவருடைய பிரசன்னமாகுதல் மற்றும் இராஜ்யத்திற்கு தங்களையும் மற்றவர்களையும் தயாராக்கும் நீதியான விஷயங்களில் அக்கறை காட்டும் விதமாக இவைகளை செலுத்தவும் சலுகை/சிறப்புரிமைப் பெற்றுள்ள உக்கிராணக்காரர்களாய் இருக்கின்றனர்.

நமது கர்த்தராகிய இயேசுவை "நம்முடைய மகா தேவனும் இரட்சகரும் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். மேலும் இந்தக் கருத்து வேதத்தின் போதனைகளுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றது. நம்முடைய கர்த்தராகிய இயேசு வல்லமையுள்ளவராய் இருக்கிறார். வல்லமையுள்ளவர்களிலேயே மாபெரும் வல்லமை உள்ளவர். ஆதலால் தான் "பிதாவைக் கணம்பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கணம்பண்ணும்படிக்கு" என்று கர்த்தர் தாமே அறிக்கைச் செய்கின்றார். (யோவான்1:1; 5:22)

கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்தும் நாம் அவருடைய தெரிந்தெடுக்கப்பட்ட சபையாய் அவரோடு சேர்க்கப்படுதல் பற்றியதான இந்த ஆசிர்வாதமான/ பாக்கியமான நம்பிக்கையை நாம் ஏன் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று இன்னொரு கருத்தில் குறிப்படுகின்றார். நாம் பங்கடையப் போகும் இந்த நித்தியத்திற்கான ஜீவன் மற்றும் மகிமையை குறித்து நாம் வெறுமனே/சாதராரணமாக எண்ணி விடக்கூடாது. மகிமையில் வரும் நாம் மணவாட்டி அங்கங்களாக நித்தியக் காலமாய் சேர்ந்து வாழ எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த மணவாளன் தன்னையே நமக்காக தந்துள்ளார் என்றும் நம்முடைய மீட்புக்காக தம்முடைய சொந்த ஜீவனையே பலி செலுத்தினார் என்று நாம் எண்ண வேண்டும் பாவத்தின் தண்டனையான மரணத்திலிருந்து மாத்திரம் நம்மை மீட்கவில்லை இவர் நோக்கம் கொண்டதும். அளித்ததுமான மீட்பு என்பது அக்கிரமம் பாவம் ஆகிய இவைகளில் இருந்து உண்டாகும் மீட்பைக்காட்டிலும் மேலான மீட்பு எனவும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். பாவத்திலிருந்து தூய்மையாக்காமல் மற்றும் சத்திய வார்த்தைகள் நமக்கு அளிக்கும். சுத்திகரிப்பு மற்றும் அறிவுறுத்தல்கள் அப்போஸ்தலர் முன்பு வைப்பது போல இவைகளைக் கொண்டு தமக்குரி சொந்த ஜனங்களையும் சுத்திகரிக்கவுமே என்பதுதான் நோக்கம் என்று நாம் நினைவில் கொள்ள வேண்டும். சொந்த ஜனங்கள் என்பவர்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட ஜனங்களும் நல்லவைகளும் உயர்தரமானவைகளும், பரிசுத்தமானவைகளும், நீதியானவைகளுமானவைகள் போன்றவற்றின் **720--**

மீது விசேஷ அன்பு கொண்டவர்களும் மரித்துப்போகும் தங்களின் சரீரத்தின் குறைபாடுகளை வெறுக்கிறவர்களும் கிருபைகளை அதிகதிமாக தங்கள் இருதயங்களில் வளர்த்தி தங்களுடைய சரீரங்களை கீழ்ப்படுத்துகிறவர்களும் ஆகும். இன்னும் இந்தச் சொந்த ஜனங்கள் நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியம் உள்ளவர்கள் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். அதாவது சரீர பூர்வமாகவோ, மனரீதியாகவோ, பகுத்தறிவு சார்ந்த விஷயங்களிலோ சமயம் வாய்க்கும் போதெல்லாம் எல்லா மனுஷருக்கும் குறிப்பாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்ய விருப்பம் கொண்டு நாடி முயற்சிப்பார்கள்.

முடிவில் தீத்து இவைகளின் அடிப்படையில் சபைக்கு கூறிய புத்திச் சொல்லலாம் என்றும், தேவைப்பட்டால் அவர்களைக் கடிந்துக்கொள்ளலாம் என்றும் (அன்பிலும், தயவிலும் செய்யலாம். எனினும் தெய்வீக அறிவுறுத்தல்களின் அர்த்தங்களைக் குறித்து சந்தேகப்படாமல் முழு அதிகாரத்துடன் செய்யலாம்) அப்போஸ்தலர் புத்திக் கூறுகின்றார். அவர் (தீத்து) "ஒருவனும் தன்னை அசட்டைப் பண்ண இடம் கொடுக்காதிருக்க வேண்டும்" என்று சொல்வதின் அர்த்தம் அவர் (தீத்து) கர்த்தருடைய ஜனங்களின் மீது இந்த நீதியின் கொள்கைகளை கையாளும் போது அவைகளை ஒளிவுமறைவின்றி உறுதியுடனும், அதிகாரத்துடனும் பயன்படுத்த வேண்டும் என்பதே அவர் இவைகளை அதிகாரத்துடன் பேச வேண்டுமேயொழிய, நிச்சயமில்லாததாகவும், கேள்விக்கு இடமளிக்கும் விதத்திலும் பேசக்கூடாது. ஒவ்வொருவரும் அதாவது எல்லாரும் நமக்கும் மற்றவருக்கும் நிச்சயமற்ற சத்தங்கள் ஏதுமில்லாமல் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த இரட்சிப்பின் கொள்கைகளைப் பேசுவோம், இதன்மூலம் இதைக் கேட்கிறவர்களுக்கு கிருபையைப்பெற உதவியாளர்களாக இருந்து பரலோகத்திலுருக்கும் பிதாவிற்கும், நம்முடைய இரட்சகரும் மீட்பருமானவருக்கும் மகிமை செலுத்துவோம்.

---

# நறுமணம் வீசிய தைலம்

## மத்தேயு 26:6-16

*"அவளால் முடிந்ததைச் செய்தாள்."*

முந்தின பாடங்களானது எருசலேமுக்கு, எரிகோ வழியாக நமது கர்த்தர் பிரயாணம் பண்ணுகையில் நடந்திட்ட நிகழ்வுகளை நமக்குக் காண்பித்ததாய் இருக்கின்றது — அதாவது வழியருகே காணப்பட்ட குருடான மனுஷன் சொஸ்தப்படுத்தப்படுகின்றான்; சகேயுவுடனான உரையாடல் நடைபெறுகின்றது மற்றும் பிரபுவானவன் பற்றின உவமை கொடுக்கப்படுகின்றது; அவர்கள் எருசலேமுக்கு அண்மையில் காணப்பட்டனர் மற்றும் சீஷர்களும், ஜனங்களில் அநேகரும், தேவனுடைய இராஜ்யமானது உடனடியாக வெளிப்படும், அதாவது பூமிக்குரிய பிரமாண்டத்துடன் ஸ்தாபிக்கப்படும் என்று எதிர்பார்த்துக் காணப்பட்டனர். எரிகோவிலிருந்து, எருசலேம் இருபது மைல் தூரமாக இருந்தது. (மரித்தோரிலிருந்து ஆண்டவர் எழுப்பிய) லாசரு மற்றும் அவருடைய இரண்டு சகோதரிகளாகிய மார்த்தாள், மரியாள் வசித்த பெத்தானியா, எருசலேமுக்கு அருகாமையில் இருந்தது. அவர் மாம்சத்தில் தம்முடைய கடைசி ஓய்வுநாளை அவர்களின் வீட்டில் அனுசரிப்பதற்கு முடிவு செய்தார். யூத பிரமாணத்தின்படி ஓய்வுநாளை அவர்கள் அனுசரித்து, அந்த நாள் சந்தோஷத்துடன் முடிவடைந்தது என்று நாம் எண்ணுகின்றோம். ஆயினும், அந்நாளில் நடந்த பல சம்பவங்கள் மீது கவனம் செலுத்தப்படாமல், மாலை நேரத்தில், சூரியன் அஸ்தமித்தப்போது, ஓய்வுநாள் முடிவடையும் நேரத்தில், வாரத்தின் முதலாம் நாள் ஆரம்பிக்கும் வேளையில் அங்கு நடத்தப்பட்ட இராவிருந்தின் மீதே விசேஷித்த கவனம் செலுத்தப்பட்ட விதத்தில் பதிவுகள் காணப்படுகின்றது.

அந்த விருந்து குஷ்டரோகியாகிய சீமோனின் வீட்டில் நடத்தப்பட்டது. ஆயினும் இந்தச் சம்பவத்தில் சீமோனைக்குறித்து எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை அவர் மரித்திருக்கலாம். இந்தச் சீமோன் என்பவர், லாசரு, மார்த்தாள், மரியாளுடைய தந்தையாகவோ அல்லது விதவையான மார்த்தாளின் கணவராகவோ இருந்திருக்கக்கூடும் என்றும், மரியாளும், லாசருவும் மார்த்தாளுக்கு இளையவர்கள் என்றும் கருதப்படுகிறது. ஆயினும் இவைகள் பாரம்பரிய அனுமானமாக இருப்பதினால், வசனங்களில் இதைப்பற்றி ஏதும் சொல்லப்படவில்லை. முன்பு ஒரு தருணத்தில் நம்முடைய ஆண்டவர் அவர்கள் வீட்டிற்கு வந்தபோது, மரியாள் அவர் பாதத்தருகே அமர்ந்து அவருடைய வாயின் வார்த்தைகளைக் கவனித்துக்கொண்டு, வீட்டு வேலைகளைக் கவனியாமல் விட்டதைக்குறித்து, ஆவிக்குரிய விஷயத்தில் கொஞ்சம் குறைவான ஈடுபாட்டையும் மற்றும் நடைமுறை விஷயத்தில் நல்ல காரியசக்தி உள்ளவளாகவும் இருந்த அவளது சகோதரியாகிய மார்த்தாள் குற்றம் சாட்டினபோதே மரியாள், "தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்தெடுத்துக் கொண்டாள்" என்று கூறினார்; அதாவது பணிவிடைகள் அங்கீகரிக்கப்படக்கூடியவைகளாகவும், பாராட்டப்படக்கூடியவைகளாகவும் இருப்பினும், பக்தியும் ஐக்கியமுமே மிகவும் அங்கீகரிக்கப்படக்கூடியவைகள் என்ற விதத்தில் கர்த்தர் கூறினார் என்பதை நாம் நினைவில்கொள்ளலாம்.

நம்முடைய ஆண்டவருடைய பூமிக்குரிய ஜீவியத்தை நிறைவுசெய்யும் உபத்திரவங்கள் சம்பவிப்பதற்கு முன்பாக, இந்த இரண்டு சகோதரிகளும் எல்லா விதங்களிலும் அவருக்கு இந்த விருந்தில் ஊழியம் செய்வதற்கு நாம் பொறாமைக் கொள்வதற்கு ஏதுவான சிலாக்கியத்தினைப் பெற்றிருந்தார்கள். முன்புபோல் இப்பொழுதும்கூட இந்த இரண்டு சகோதரிகளின் பணிகள், வெவ்வேறாக இருந்தன; எனினும் இம்முறை முன்னேற்பாடுகளுடனும், ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடனும் இவர்கள் பணிகளைச் செய்திருக்கக்கூடும். பந்தியில் அமர்ந்தவர்களுக்கு, மார்த்தாள் மற்றவர்களோடுகூட உணவுகளைப் பரிமாறியிருக்க வேண்டும். அதேநேரத்தில், மரியாள் குறிப்பான விசேஷித்த வேலைக்காக ஆயத்தமாயிருந்திருக்க வேண்டும். அவள் ஏதோ ஒரு விதத்தில் விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலமாகிய வெள்ளைக்கல் பரணியைப் பெற்றிருந்தாள். ஒருவேளை அவள் பரணியை விலைகொடுத்து வாங்கி அதிகநேரம் செலவழித்துத் தைலத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டும் அல்லது தைலத்தை வாங்குவதற்கும்கூட அதிகளவு பணம் செலவழித்திருக்க வேண்டும். ஆண்டவரின் வருகையை அவள் முன்னறிந்தவளாக அந்த விருந்தின்போது, உலகத்தின் மிகச்சிறப்பான சக்ரவர்த்திகள், இராஜாக்கள் மற்றும் முக்கியஸ்தர்கள்

நடத்தபடுவதுபோல, ஆண்டவரையும் அபிஷேகிக்க வேண்டும் என்று முழுமையாக அந்த இராவிருந்தில் ஏற்பாடு பண்ணியிருந்தாள். இராஜாக்கள், சக்ரவர்த்திகள், முதலானவர்களே இவ்விதமாய்த் தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்படுவார்கள்; இத்தகைய விலையுயர்ந்த காரியத்திற்குச் செலவிடுவது, மற்றவர்களுக்கு மிகவும் அரிதாய் இருந்தது. ஏனெனில், நறுமணதைலம் தயாரிப்பதற்கான வசதிகள் நமக்கு இன்று காணப்படுவதுபோல் அக்காலத்தில் இருக்கவில்லை; ஒருவேளை வீட்டிலேயே நறுமணதைலம் தயாரிக்கப்பட்டாலும், அதற்காகச் செலவிடப்பட்ட நேரம் மிகுதியாக இருந்தபடியினால் அதை மிகவும் விலையேறப்பெற்றதாகக் கருதி மிகுந்த ஐசுவரியவான்களுக்கு மாத்திரமே விற்பது வழக்கமாய் இருந்தது.

விருந்து துவங்கியது, இயேசு தம்முடைய சீஷர்களோடும், மற்ற விருந்தினர்களோடுங்கூட மேஜையில் அமர்ந்திருந்தார். கிழக்கத்தியரின் வழக்கத்தின்படி நீண்ட, குறுகின மேஜையைச் சுற்றி விருந்தினர்கள் தங்களுடைய கால்களை நீட்டினபடியே, படுக்கை அல்லது திவான் மேல் சாய்ந்தவண்ணம் அமர்ந்திருப்பார்கள். ஒரு முழங்கையின் மீது சரீரத்தின் மேற்பாதியைச் சாய்த்துக்கொள்வதும், மற்றக் கரத்தைக்கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வதும் வழக்கமாய் இருந்தது. நம்முடைய வழக்கத்தின்படி பயன்படுத்தப்படும் நாற்காலிகளில் உட்காருவது அக்காலத்தில் அவர்களுடைய வழக்கமாய் இருக்கவில்லை.

மார்த்தாளும், அவளுடைய தோழிகளும் உணவு பரிமாறிக் கொண்டிருக்கையில், மரியாள் முன் வந்து, தான் வைத்திருந்த வெள்ளைக்கல் பரணியை உடைத்து, நம்முடைய ஆண்டவரின் தலையில் அந்த விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றினாள். அதைத் தொடர்ந்து, மீதமுள்ள தைலத்தை அவருடைய பாதங்களில் ஊற்றி, தன்னுடைய தலைமயிரினால் துடைத்தாள் என்று யோவான் பதிவு செய்துள்ளார். நமது கர்த்தருக்கான மரியாளினுடைய அன்பானது மிகவும் ஆழமானதாகவும், மிகவும் பலமானதாகவும் காணப்பட்டப்படியால், ஏதேனும் சாதாரணமான செயல்களைச் செய்வதில் அவ்வன்பிற்குத் திருப்தி இருந்திருக்காது. பூமியின் இராஜாக்கள் இப்படிப்பட்ட தைலத்தினால் அபிஷேகிக்கப்படுகையில், அவளுடைய சிநேகிதரும், அவளுடைய ஆண்டவரும், மேசியாவுமாக இருந்தவரை சிறந்த தைலத்தினால் அபிஷேகிப்பது அவளுக்கு மிகப் பொருத்தமாய்த் தோன்றியது. அவர் மீது அவள் கொண்டிருந்த அன்பு மிகுதியாய் இருந்தபடியினால், அவ்வன்பானது சிக்கனம் என்ற விஷயத்தை அறியாமல் இருந்தது. அதாவது அவளுடைய பிரியமானவருக்கு, தான் அளிக்கும் எக்காரியமும் மிகச் சிறப்பானதாய்க் காணப்படாது என்று எண்ணினாள். தன் இருதயத்தில் அவள் கொண்டிருந்த உச்சிதமான அன்பை, இப்படிப்பட்ட விலையுயர்ந்ததும், மிக நேர்த்தியானதுமான நறுமணதைலத்தைக் கொண்டு அபிஷேகித்து வெளிப்படுத்தினாள். அந்த வீடு முழுவதும் வீசின நறுமணதைக்காட்டிலும், அதிக நறுமணமாய்க் காணப்பட்ட நறுமணத்தை – அதாவது மரியாளை இப்படிச் செய்ய தூண்டின, அவளது இருதயத்தினுடைய அன்பின் நறுமணத்தை–இக்காரியங்களை முழுமையாக நம்முடைய ஆண்டவர் புரிந்துகொண்டார்.

ஆனால் சீஷர்கள் சுயநலமாக இருந்தபடியினாலும், மரியாளுடைய உண்மையான உணர்வைப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தபடியினாலும் அவளிடத்தில் குற்றம் கண்டுபிடித்தார்கள். இக்குற்றம் கண்டுபிடித்தலுக்கு வழிநடத்தும் தலைவனாகவும், வாயாகவும்/கருவியாகவும், மற்றும் குற்றம் கண்டுபிடித்தலின் ஆவியை மற்றச் சீஷர்களுக்குள் தூண்டிவிட்டவனுமாய் இருந்தவன், சீஷர்களின் கூட்டத்திற்குப் பொருளாளராக இருந்த யூதாஸ் ஆவான் என்று பதிவுகள் தெரிவிக்கின்றன. அந்த விலையேறப்பெற்ற தைலத்தின் விலைக்கிரயம் தன்னுடைய பணப்பையில் வந்து சேரவில்லை என்றும், அப்படி ஒருவேளை வந்தால் அதில் கொஞ்சத்தையாகிலும் எடுத்துத் தன்னுடைய தனிப்பட்ட தேவைகளுக்கென்று செலவு செய்ய முடியாமல் போயிற்றே என்றும் உள்ள விஷயங்களே அவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது. ஏனெனில், "அவன் திருடனானபடியினால் பணப்பையை சுமந்தவனாக இருந்தான்..." என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. யூதாஸ் எதிர்ப்புத் தெரிவித்த விஷயத்தை வைத்துப் பார்க்கும்போது மரியாள்தான் இத்தைலத்தைத் தயாரித்தாள் என்பது தெரியவருகிறது; ஏனெனில் அதை அதிக பணம் கொடுத்து வாங்கினதற்காக யூதாஸ் குற்றம்சாட்டவில்லை; மாறாக அதை 300 பணத்திற்கு விற்றிருக்கலாம் என்றுதான் குற்றம்சாட்டுகின்றான். இந்தத் தைலம் 300 உரோம தினாரி, அதாவது 48 டாலர்கள் மதிப்பு உள்ளது மற்றும் இன்றைய பண மதிப்பின்படி இதற்கு அதிக தொகைக் காணப்படும். அக்காலத்தில் ஒரு தினாரி ஒரு நாளின் கூலியாக இருந்ததை நாம் அறிந்திருக்கிறோம்; இப்படியாக 300 தினாரி என்பது ஒரு வருடத்தின் வேலைக்கான கூலியாக இருந்திருக்க வேண்டும். ஆகவே, இந்தத் தைலம் கணிசமான தொகை மதிப்புள்ளதாக இருந்திருக்க வேண்டும். இப்படி மரியாள் தைலத்தை இயேசுவின்மீது ஊற்றினது, வரம்பு மீறின செயல்பாடு என்பது உண்மைதான். ஆனால் இது அவளுடைய வரம்பு மீறின அன்பை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. மேலும் இது

தேவனும், தூதர்களும் கனப்படுத்த விரும்பும் கர்த்தருக்காகச் செலவிடப்பட்டது. மேலும் கர்த்தருடைய உண்மையான மதிப்பை அத்தருணத்தில் அவரோடுகூட இருந்த அனைவரைக் காட்டிலும், அதிகமாய் மரியாளே உணர்ந்திருந்தாள்.

அன்பு நிறைந்த மரியாள்! அவள் மற்றவர்களும் புரிந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் தனது அன்பின் வெளிப்படுத்தலாகிய இந்த விலையேறப்பெற்ற தைலத்தைத் தயாரித்துக்கொண்டிருக்கும்போது, எத்தகைய உணர்வுகள் அவளுடைய இருதயத்தில் நிரம்பியிருந்திருக்கும் என்பதை நம்மால் ஓரளவுக்குக் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. ஆனால் இப்பொழுதோ, எல்லாம் எதிர்மாறாகக் காணப்பட்டது; தன்னுடைய நண்பர்களும், விருந்தாளிகளுமாய் இருந்த கர்த்தரின் நெருங்கிய தோழர்களுடைய கோபத்தை அவள் எதிர்கொள்ள வேண்டியதாய் இருந்தது; கர்த்தரும்கூடச் சீஷர்களைப்போன்றே தனது செயல்பாடுகளைக் கருதி அதைப் புறக்கணித்து, தான் அளித்த நறுமணதைலத்தைக் குறித்துக் கண்டனம் தெரிவித்துவிடுவாரோ என்ற அச்சங்கள் அவளுடைய இருதயத்தை மூழ்கடித்தது. நம்முடைய கர்த்தர் அவளுடைய கிரியைகள் நேர்த்தியானது என்று கூறி, அவளுடைய உணர்வுகளுக்குச் சீஷர்களால் இரக்கம் காட்ட முடியவில்லை என்று அவர்களைக் கடிந்துகொண்டு, தம்முடைய சரீரத்தின்மேல் அவள் நறுமணதைலம் ஊற்றின காரியமானது, தம்முடைய அடக்கத்திற்கான ஆயத்தம் என்று அவர்களிடத்தில் கூறுவதை அவள் கேட்டபோது, அவளுடைய இருதயத்திலிருந்து எத்தகைய பெருஞ்சுமைகள் இறக்கிவைக்கப்பட்டிருக்க வேண்டும். இயேசுவுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் இடையில் நடந்த இந்தச் சம்பாஷணையின்போது, மரியாள் அநேகமாக அந்தத் தைலத்தைத் தலையில் மட்டுமல்ல, அவருடைய பாதத்திலும் ஊற்றி, அவருடைய பாதங்களை தன்னுடைய தலைமயிரினால் துடைத்திருக்க வேண்டும். மேலும், அவள் தனது தலைமயிரை அவருடைய பாதங்களைத் துடைப்பதற்குப் பயன்படுத்தின காரியமானது, தனக்கு அலங்காரமாய் இருப்பவைகளிலேயே மிக விலையேறப்பெற்ற விஷயத்தை கர்த்தருக்கு பணிவிடை செய்ய பயன்படுத்தியதில் அவள் மகிழ்ச்சி கொண்டதற்கான சான்றாக உள்ளது.

மரியாள் ஆண்டவரின் சரீரத்தை அடக்கம் செய்யக்கூடிய சிந்தனையில் அவரை அபிஷேகித்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், அவர் பேசின வார்த்தைகளை மிக ஆச்சரியத்தோடு மரியாளும், மற்றவர்களும் கேட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும். பண்டைய காலத்தில் மரித்துப்போன பிரேதத்தை அடக்கம் செய்வதற்கு இப்படிப்பட்ட வாசனை திரவியங்களை ஊற்றி ஆயத்தம் செய்வது வழக்கமாயிருந்தது. இவைகளுக்குத் தாராளமாக பணத்தைச் செலவழிப்பார்கள் — இக்காலத்தில் நாமுங்கூட மிக அழகான சவப்பெட்டிகளையும், விலையுயர்ந்த பூக்களையும், மலர் வளையங்களையும் அன்பின் வெளிப்பாடாக வைப்பதுண்டு. இரட்சகர் உயிரோடு இருக்கும்போதே மரியாள் அவர் மீது விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றின காரியமானது, நாம் அன்புசெய்கிறவர்களிடத்தில் நாம் கையாளவேண்டிய மாதிரியை நமக்குக் காட்டுகின்றது. நம்முடைய நண்பர்கள் மரிக்கும் வரையிலும் நாம் காத்திருந்து அவர்களுடைய உணர்வற்ற மற்றும் எதையும் புரிந்துகொள்ள முடியாத சடலங்களுக்கு நமது கவனத்தைச் செலுத்துவதைக்காட்டிலும், அவர்கள் உயிரோடு இருக்கும்போதே நாம் நம்முடைய தைலமுள்ள பரணியைத் திறந்து, அவர்களுடைய தலையின் மீதும், சோர்ந்துபோன அவர்களுடைய பாதங்கள் மீதும் ஊற்றுவது நலமாய் இருக்கும். நம்முடைய வெள்ளைக்கல் பரணிகள் நம்முடைய இருதயங்களாக இருக்கின்றது. அவைகள் நல் வாழ்த்துதல்கள், இரக்கம், எல்லோரிடத்திலும் அன்பு, அதிலும் விசேஷமாக தலையாகிய கிறிஸ்துவாகிய நமது கர்த்தர் இயேசுவிடத்திலும், அவருடைய சரீரமாகிய சபையின் அங்கங்களிடத்திலும் அன்பு எனும் ஐசுவரியமும், இனிமையும் உள்ள நறுமணதைலங்களினால் நிரம்பியிருக்க வேண்டும்; அதிலும் விசேஷமாக இப்பொழுது நம்மோடுகூட இருக்கும் பாத அங்கங்கள் மீதான அன்பிலும் நிரம்பியிருக்க வேண்டும்; இந்த பாத அங்கங்கள் மீது இனிமையான வாசனையுள்ள அன்பையும், ஈடுபாட்டையும் நாம் அவருடையவர்களாய் இருப்பதினால், கர்த்தருடைய நாமத்தில் காட்டுவதற்கான சிலாக்கியம் இப்பொழுது நமக்குரியதாய் இருக்கிறது.

"எத்தனைதரம், கவனமற்றவராய் இருந்துள்ளோமே, இருந்துள்ளோமே;
காத்திருந்திருக்கிறோமே ஜீவியத்தின் இனிமையான நிகழ்வுகள் ஓய்ந்திடும்வரை!
உடைத்திடுகின்றோமே நம்முடைய தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியை,
மணம் வீச கடைசி தருணத்தின்போதே!

ஓ! ஜீவனோடுள்ள மற்றும் நம்மைப்போன்று பாடுள்ள
நமது நண்பனுக்குச் செலுத்திடுவோமே கவனத்தினை!
அன்பின் பார்வைக்காய், கண்களைப் பார்க்கின்ற நண்பனுக்கு,

பாராட்டின் வார்த்தைக்காய் ஏங்குகின்ற நண்பனுக்குச் செலுத்திடுவோமே கவனத்தினை!"

தேவனிடத்தில் அர்ப்பணித்த ஒவ்வொரு உண்மையான பிள்ளைகளும் வெள்ளைக்கல் பரணி போன்ற தங்களுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவி, அன்பின் ஆவி, விசேஷித்த நறுமணம் வீசும் தைலம், கர்த்தருக்கும் மனுஷருக்கும் மிகவும் விலையேறப்பெற்றதுமான நறுமணங்களைப் பெற்றிருக்க வேண்டும். இருதயத்திற்குள் இவ்விஷயங்கள் உடனுக்குடன் சேகரிக்கப்பட முடியாததினால் இவைகள் விலையேறப்பெற்றவைகளாகும். ஆகவே, "தேவனுடைய பரிபூரணத்தினால் முழுமையாக நிரப்பப்படுவதற்கு" நீடியபொறுமை தேவைப்படுகிறது. சொல்லர்த்தமான பரணியின் முத்திரையை உடைப்பதற்கு முன்பல்ல, முத்திரை உடைத்த பின்னர் உள்ளிருந்த தைலம் வெளியே ஊற்றின பிற்பாடே அதற்குரிய நறுமணம் வெளிப்பட்டது. இக்காரியம்போன்றே, நம்முடைய இருதயத்தின் விஷயமும் காணப்படுகின்றது; ஆனால் நம்முடைய இருதயங்களிலிருந்து இத்தைலங்கள் தொடர்ச்சியாகப் பொழிந்துக்கொண்டிருந்தாலும், இருதயத்திற்குள் அதின் அளவு பெருகிக்கொண்டே இருக்கின்றது என்னும் விஷயத்தில் நம்முடைய இருதயங்கள், மரியாளுடைய சொல்லர்த்தமான பரணியைப் போல் இருப்பதில்லை (சொல்லர்த்தமான பரணிகளின் முத்திரைகள் உடைக்கப்பட்டு, தைலம் வெளியே கொட்டும்போது, பரணிக்குள் இருக்கும் தைலத்தின் அளவு குறைகிறது; ஆனால் நம்முடைய இருதயத்தின் விஷயத்தில் இப்படியாக இருப்பதில்லை).

தைலமானது, கர்த்தர்மேல் அதாவது அவருடைய தலையின்மீதும், பின்னர் அவருடைய சரீரத்தின் தாழ்மையான மற்றும் எளிமையான பாதத்தின்மீதும் மரியாளினால் ஊற்றப்பட்டது போன்றே, நம்முடைய இருதயங்களும் அதற்குள் காணப்படும் பரிசுத்தமான அன்பும் காணப்படவேண்டும். மற்றவர்களால் இக்கிரியைகளைப் புரிந்துகொள்ளாத பட்சத்திலும், நாம் நம்முடைய அன்பையும், ஈடுபாட்டையும் பாவிகள் அல்லது தரித்திரர் நிலையிலுள்ள புறஜாதி உலகத்தார் மீது காட்ட வேண்டும் என்று மற்றவர்கள் எண்ணினாலுங்கூட, நம்முடைய பணி மரியாள் செய்தது போன்றதாகவே காணப்படவேண்டும். ஏனெனில் ஆயிரம் வருஷ ஆட்சியில் இந்த உலகம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அதிகமான வாய்ப்புகள் கொடுக்கப்படும் என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அப்பொழுது ஆண்டவரோடுகூட அவருடைய சீஷர்களும் இந்த மனுமக்களை ஆசீர்வதிப்பதற்கு ஒருமித்துச் செயல்படுவார்கள். ஒருவேளை நாம் நம்முடைய இருதயத்தின் பொக்கிஷங்களைக் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்மேல் ஊற்றுவதற்குச் சிலர் அறியாமையில் தடை செய்தால், அவைகளால் நாம் சோர்ந்து போகாமல், ஆண்டவரின் உற்சாக மூட்டும் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, அவர் நம்மை அங்கீகரித்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்தவர்களாய், சரீரமாகிய சபை முழுமையாக மரிப்பதற்கு முன்னதாக அவர்களுக்கு அளிக்க வேண்டிய ஆறுதலை அளிக்கக்கடவோம். ஆகவே பரிதாபத்திற்குரிய உலக ஜனங்களைக் காட்டிலும், கிறிஸ்துவுடைய பாடுகளுக்குப் பங்காளிகளாக இந்தப் பூமிக்குரிய ஓட்டத்தைப் பரதேசிகளாய் ஓடி முடிக்கக்கூடிய சபை வகுப்பாருக்கு முதலில் ஆறுதல் அளித்து, புத்துணர்வு ஊட்டுவதே ஏற்றதாயிருக்கிறது. கிறிஸ்துவின் பாடுகள் நிறைவடைந்த பிற்பாடு கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஆறுதல் அளிப்பதற்கும், உற்சாகம் அளிப்பதற்குமான வாய்ப்புகள் இருக்காது. ஆகவே கிறிஸ்துவினுடைய பாடுகள் நிறைவடையும் வரையிலும் இக்காரியங்களை நாம் செய்துக்கொண்டு வரவேண்டும்; இவர்களைக் குறித்துதான் நமது கர்த்தர் இவர்களுக்குச் செய்யப்படுவது எதுவோ அது தமக்கே செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்று கூறினார். (மத்தேயு 25:40)

ஆகவே, மார்த்தாள் போன்றவர்கள் தங்களுக்குரிய வழியிலும், மரியாள் போன்றவர்கள் தங்களுடைய மிகுந்த விலையேறப்பெற்ற நளததைலங்கள் மூலமும், தங்கள் இருவரின் ஊழியங்களில் ஒன்றும் மறக்கப்படுவதில்லை என்ற நிச்சயத்துடன் ஊழியம் செய்வார்களாக. ஏனெனில், இவர்கள் இருவரையும் பாராட்டும் விதமாகவும், மற்றவர்கள் இவர்களைக்குறித்து, எப்படி எண்ணியிருந்தாலும் சரி, இவர்கள் இருவருடைய அன்பைக் கர்த்தர் உணர்ந்தும், ஏற்றுக்கொண்டும் இருந்தார் என்பதற்கான சாட்சிகளாகவும், இவர்கள் இருவரை நினைவுகூரும் வண்ணமாகவும் இவர்கள் இருவரும் பேசப்பட்டார்கள், 18 நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டும் வருகின்றார்கள்.

## சுயநலமான இருதயங்களில் இருந்து வரும் எதிர்ப்புகள்

மரியாளின் பக்திக்குரிய வெளிப்பாட்டை எதிர்த்தும், தரித்திரரின் சார்பாக மிகக் கனிவோடு பேசின அந்த மனுஷன் யார் என்றால், திருடனும், கொலைபாதகனுமாகிய யூதாஸ்காரியோத் ஆவான். இப்படிப்பட்டக் கோட்பாடு, சுவிசேஷ யுகம் முழுவதிலும் நல்ல கோட்பாடு என்று கருதப்பட்டும் வருகிறது. அதாவது, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அர்ப்பணிக்கப்பட்ட அங்கங்களை அபிஷேகிப்பதிலும், ஆசீர்வதிப்பதிலும் விலையேறப்பெற்ற நேரம் செலவிடப்படுவதைக் குறித்து

எதிர்ப்புத் தெரிவித்தும், சமுதாயச் சேவைகளுக்கு சார்பாக மிகுந்த கூக்குரல் எழுப்பிக்கொண்டிருப்பவர்கள், எப்போதும் இருதயத்தில் விசேஷமாக புறஜாதி ஜனங்களுக்குரிய நலனுக்கடுத்த விஷயத்தில் அக்கறைக்கொண்டவர்கள் அல்ல, மாறாக சுயநல நோக்கம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். மனசாட்சியுடைய கர்த்தருடைய அருமையான ஜனங்கள் இப்படிப்பட்ட மாய்மாலக்காரர்களால் அடிக்கடி தவறாய் வழிநடத்தப்படுகிறார்கள்; கர்த்தருக்குப் பிரியமான காரியத்தைச் செய்த மரியாளுக்கு எதிராக மற்ற அப்போஸ்தலர்கள் நியாயமான கோபம் கொள்ளத்தக்கதாக யூதாஸ்கூட ஒரு சமயத்தில் அப்போஸ்தலர்களை, தனது போலி பேச்சினால் தவறாய் வழிநடத்திவிட்டான். மேலும் மரியாள் செய்தது கர்த்தருக்குப் பிரியமாக காணப்பட்டதன் காரணமாகவே இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகின்றதோ, அங்கு இவள் செய்ததும் நினைவுகூரப்படும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

இந்நாளிலும் கூட 350-க்கும் மேலான மொழிகளில் இச்சுவிசேஷமானது உலகத்திலுள்ள ஒவ்வொரு முக்கியமான தேசங்களுக்கும் பிரசங்கிக்கப்பட்டுள்ளது. நமது கர்த்தர் மரியாள் நினைவு கூரப்படவேண்டும் என்று மாத்திரம் விருப்பம் கொள்ளாமல், விசேஷமாக அவளுடைய கிரியைகள் நினைவுகூரப்பட வேண்டும் என்றும் விரும்பினார். நற்செய்தியை அறிந்துக்கொள்ளக்கூடிய அனைவரும் இப்படியாக தமக்கும், தம்முடைய சரீரத்திற்கும் காண்பிக்கப்பட்ட இவ்விதமான அன்பை, தாம் அங்கீகரிக்கின்றார் என்றும், நம்முடைய அன்பு எவ்வளவு விலையுயர்ந்ததாய் இருக்கின்றதோ, அவ்வளவாய் அவர் அதை அங்கீகரிக்கவும் செய்கின்றார் என்றும் அறிந்துக்கொள்ள வேண்டுமென விரும்புகின்றார். இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது கர்த்தருடைய பார்வையில் பிரியமாய் இருக்கும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள மற்ற அங்கங்கள் மீது தன்னுடைய இருதயத்திலிருந்தும், ஜீவியத்திலிருந்தும் நறுமணதைலங்களைப் பொழிவதற்குத் தொடர்ந்து நாட வேண்டும். மேலும், இப்படிச் செய்வதன் மூலம் அவன் கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதோடல்லாமல் தனக்கு ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வான் என்று உணர்ந்துக்கொள்ளக்கடவன். ஏனெனில், எந்த வெள்ளைக்கல் பரணியும் அதன்மேல் தைலம் படாமல் மற்றவர் மீது தைலத்தை ஊற்ற முடியாது; இப்படியாகவே நம்முடைய இருதய விஷயங்களிலும் காணப்படுகின்றது. அதாவது, நம்முடைய இருதயங்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகிய மற்றவர்கள் மீது கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் கொண்டிருக்கும் அன்பு மற்றும் அர்ப்பணிப்பு எனும் நறுமணதைலங்களை ஊற்றுகையில் இக்காரியமானது தற்காலத்திலேயே கர்த்தருடைய அங்கீகரிப்பையும், ஆசீர்வாதத்தையும் மற்றும் எதிர்காலத்திலும் நமக்கு ஆசீர்வாதங்களை நிச்சயமாய்க் கொண்டுவரும்.

கிறிஸ்துவின் சரீர அங்கங்களை அடக்கம் செய்வதற்காக அவருடைய சத்தியம் மற்றும் கிருபை என்னும் தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்குத் தற்காலத்தில் ஏறெடுக்கப்படும் சில முயற்சிகள் உடன் சீஷர்களால் கண்டிக்கப்படலாம். உதாரணத்திற்கு, உதவி பணிகளுக்கென ஒரு வருடத்திற்குச் செலவிடப்படும் நேரம், ஆற்றல், மற்றும் அதிகப்படியான பணங்கள் கர்த்தருடைய அருமையான பிள்ளைகளில் அநேகரால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, யூதாஸ் கூட்டத்தாரால் கசப்பான விதத்தில் கண்டனம் செலுத்தப்படும். ஆயினும், ஆண்டவரின் அங்கீகரிப்பை உணர்ந்துகொண்டு, நம்முடைய பாத்திரம் மகிழ்ச்சியினால் நிரம்பி வழிவதற்கு நாம் அனுமதிக்கின்றோம். (சகோதரர் ரசல் கூறுகின்றார்). நம்முடைய உடன் சீஷர்களோ, நாங்கள் ஏற்றக் கால சத்தியத்தை விசுவாச வீட்டாருக்கு மாத்திரமே கொடுத்துக்கொண்டிருக்காமல், பாவிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று நம்மிடத்தில் கூறுவதுண்டு; தற்கால சத்தியம் என்னும் இனிமையான தைலத்தைக் கொண்டு பரிசுத்தவான்களை அபிஷேகம் பண்ணுவதற்கு நாம் நாடிக்கொண்டிருக்காமல், மாறாக நாம் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் மத்தியில் செல்லவேண்டும் என்றும், குடிசையில் வாழும் ஜனங்கள் மத்தியில் சேவையில் ஈடுபடவேண்டும் அல்லது வெளிநாடுகளில் சென்று ஊழியம் புரிய வேண்டும் என்றும் நம்மிடம் கூறுவதுண்டு. யூதாஸ் வகுப்பாருக்குரிய உண்மையான பிரச்சனை என்னவெனில், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சத்தியம் பரிமாற்றப்படுமாயின், தங்கள் பணப்பெட்டிகளுக்குள்ளே சேர்த்துவைக்கலாம் என்று இவ்வகுப்பார் எண்ணின பணங்கள், சத்தியம் பரிமாற்றப்படுவதின் வேலைகளில் செலவழிந்துபோய்விடுமே என்ற அச்சமாகவே இருந்தது. இன்னுமாக, கிறிஸ்தவ பிரிவு சபைகளிலுள்ள எண்ணிக்கையும், செல்வாக்கும் குறைந்துவிடும் என்றும் இவர்கள் அஞ்சுகின்றனர். ஆனால், இவர்களுடைய பயங்கள் பெரும்பாலும் கற்பனையாகவே இருந்தது. ஏனெனில், சத்தியம் என்னும் நறுமணதைலமானது, கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் மீது மாத்திரமே ஊற்றப்படக்கூடிய விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்படிப்பட்ட சரீர அங்கங்களிடத்திலேயே சத்தியம் சென்றுசேரத்தக்கதாகவும், மற்றவர்களிடத்தில் இச்சத்தியமானது, எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாத விதத்தில் கர்த்தர் வழிநடத்துவார் என்றே நம்முடைய விசுவாசம் காணப்படுகின்றது. அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் வெகுசிலராக இருப்பதினால்,

அவர்களுடைய அபிஷேகம் பண்ணப்படுதலும், பாபிலோனிடமிருந்து அவர்களுடைய பிரிக்கப்பட்ட ஜீவியமும், அவர்களுடைய அடக்கமும், அவர்கள் சொற்பமாய் இருக்கும் காரணத்தினால், கவனிக்கப்படுவதில்லை என்றாலும், இவ்வமைப்புகளிலிருந்து உப்பாகவும், ஒளியாகவும் அவர்கள் எடுக்கப்படும் காரியமானது, இவ்வமைப்புகளுக்கு பயங்கரமான பாதிப்பையும், வரவிருக்கிற மகா உபத்திரவக் காலத்தில் இவ்வமைப்பு வீழ்ச்சியடைந்து போவதற்கு ஏதுவாகவும் இருக்கிறது. (மத்தேயு 5:13, 14)

ஆகவே மரியாள் மற்றும் யூதாசின் எதிரடையான நடத்தையில் மாதிரியாக்கப்படும் அன்பு மற்றும் சுயநலத்திற்கு இடையில் உள்ள மிகப்பெரிய வேறுபாட்டை நாம் தெளிவாக அறிந்துகொள்ள மறக்க வேண்டாம். மரியாள் எரிகிற அன்பினால் நிரப்பப்பட்டிருந்தபடியால், அவளுடைய கர்த்தரைக் கனப்படுத்துவதற்கும், ஆறுதல் படுத்துவதற்கும், பிரியப்படுத்துவதற்கும் அதிக காரியங்களைப் பலி செலுத்துவதற்கு விருப்பம் கொண்டிருந்தாள். மாறாக, யூதாஸ் பலி செலுத்துவதற்கு விருப்பம் கொள்ளாமலும், அடிமைக்குரிய விலையாகிய 30 சேக்கல் வெள்ளிக்காக தனது கர்ததரை அவருடைய சத்துருக்களிடம் விற்றுப் போடுவதற்கும் விருப்பமுள்ளவனாய் இருந்தான். இதுமாத்திரமல்ல, மரியாளிடம் வெளிப்பட்ட அன்பு சாதகமான தாக்கத்தை யூதாசிடம் ஏற்படுத்தவில்லை. எதிர்மாறான தாக்கத்தையே ஏற்படுத்திற்று. மரியாளுடைய அன்பும், அதை நமது கர்த்தர் அங்கீகரித்த விஷயமும் யூதாசுக்குள் எதிர்ப்பின் ஆவியைத் தூண்டிவிட்டதுபோல் தோன்றுகின்றது. ஏனெனில், நமது கர்த்தரைக் காட்டிக்கொடுக்கும்படிக்குப் பிரதான ஆசாரியனுடன் பேரம் பேசி ஆலோசிப்பதற்குப் புறப்பட்டுச் சென்றான் என்று பார்க்கின்றோம்.

தான் செய்யக்கூடிய வேலைக்கான பணத்தை, யூதாஸ் முன்னதாகவே வாங்கினான் என்று அதன் கிரேக்க வார்த்தையும், Revised Version – என்ற மொழியாக்கமும் தெரிவிக்கின்றது. அவன் அவர்களோடு ஒப்பந்தத்தைப் பண்ணிக்கொண்டான். பொல்லாப்பான வேலைக்காக தன்னை விற்றுப்போட்டான். அதாவது, தனக்கு நன்மை செய்தவராகிய கர்த்தருக்கு எதிராக பொல்லாப்புச் செய்ய தன்னை விற்றுப்போட்டான். கர்த்தருடைய வல்லமை என்ன என்று அவன் முழுமையாக அறிந்திருந்தான். மேலும், அவன் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும் ஏதுவாக, அவரிடத்திலிருந்து அதிகமான வல்லமையையும் பெற்றுக்கொண்டவனாய் இருந்தான். எவ்வளவு விநோதமான காரியம்! ஆயினும் அவன் செய்த குற்றத்திற்கு ஞானமாக காரணம் சொல்லுவதற்கு வழியைத் திட்டம் பண்ணி வைத்திருந்தான் என்பதிலும் ஐயமில்லை. சந்தேகத்திற்கு இடமின்றி, இந்நாளிலும் நம்முடைய ஆண்டவரை மறைமுகமாக பல பூமிக்குரிய நன்மைகளுக்காகவும், செல்வாக்குகளுக்காகவும் அல்லது பணத்திற்காகவும் விற்க துணிகிறவர்கள் நியாயமான காரணத்தைக் கூறுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் மரியாளைப் போல எந்தளவுக்கு நம்முடைய இருதயங்கள் உண்மையையும், அர்ப்பணிப்பையும் கொண்டிருக்குமோ, அவ்வளவாய் யூதாசின் நடத்தையானது நமக்கு வெறுப்பாயும், நம்மால் செய்ய இயலாததாயும் இருக்கும்.ஆயினும் இந்தக் குணலட்சணங்களுடைய உச்சக்கட்டமானது சடுதியாய் நிறைவு அடைந்துவிடவில்லை. துவக்கத்திலிருந்து மரியாளுக்குள் இருந்த அன்பு படிப்படியாக வளர்ச்சியடைந்துக்கொண்டிருந்தது; போதகரின் பாதப்படியிலிருந்து அவர் அளிக்கும் ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக்கொள்வதற்கு அவள் கையாண்ட வழக்கத்தின் மூலம் அவளது அன்பு அதிகம் பலம் அடைந்தது; இது தொடர்பாகத்தான் மரியாள் நல்ல பங்கைத் தெரிந்துக்கொண்டாள் என்று கர்த்தர் கூறினார், எனினும் மார்த்தாள் அங்கீகரிக்கப்படாமலும் விடப்படவில்லை. மேலும் ஆண்டவருடைய வல்லமை பல வழிகளில் செயல்படுவதை கண்டபோது, அதிலும் விசேஷமாக அவளது சகோதரன் கல்லறையிலிருந்து உயிரோடு வெளியே கொண்டுவரப்பட்டபோது, மரியாள் விசுவாசத்திலும், அன்பிலும் மேலும் வளர்ச்சியடைந்தாள். அவளுடைய முழு இருதயமும் இந்த அன்பினாலும், மற்றும் கர்த்தரைப்பற்றின புரிந்துகொள்ளுதலினாலும் நிரம்புவது வரையிலும் மற்றும் அதை விலையேறப்பெற்ற விதத்தில் அவருடைய தலையின் மீதும், பாதத்தின் மீதும் வெளிக்காட்டும் அளவுக்கு அவைகள் வளரும்வரையிலும், அவைகளை விருத்திசெய்துக்கொண்டே இருந்தாள். இதற்கு எதிரிடையாக, யூதாஸ் நீண்டகாலமாகச் சுயநலத்தின் ஆவியானது தன் இருதயத்திற்குள் அதிகமதிகமாய் ஊடுருவி வருவதற்கு அனுமதித்துக்கொண்டிருந்தான். மேலும் பணத்தினால் என்ன சாதிக்கலாம் என்ற எண்ணங்களுக்கு இடம் கொடுத்துப் பணத்தைச் சேகரித்து வைப்பதற்கான எண்ணங்களுக்கும் இடம் கொடுத்துவிட்டான். இது அவனது ஆத்துமாவை சங்கிலியிட்டப்படியால், நித்தமும் அவன் காணக்கூடிய ஆண்டவரின் குணநலன்களை உணர்வதைத் தடைசெய்தது; ஆகவே பணத்தைத் தவிர வேறு எதையுமே அவனால் எண்ணமுடியவில்லை. மேலும் படிப்படியாக இந்தச் சுயநலத்தின் கட்டுகள் அவனுடைய இருதயத்தைச் சுற்றிக் கடினமாய் இறுக்கிக் கொண்டிருந்தது. பின்னர் அவனுடைய இருதயத்திற்குள் இருந்த அன்பு, பக்தி, தோழமை தொடர்பான யாவற்றையும் வெளியே கசக்கிப் பிழிந்து வெளியேற்றிவிட்டது. மேலும், இவ்விதமாக அவன் சுயநலத்திற்கும், துரோகத்திற்கும், கீழ்த்தரத்திற்கும், நன்றியற்ற தன்மைக்கும்

பிரதிநிதியானான். மேலும், அவனுடைய நாமம் இப்பண்புகளின் அர்த்தத்தைக் கொண்ட நாமமாகவும் விளங்கிவிட்டது. ஆகவே இங்குள்ள நமக்கான பாடம் என்னவெனில்: நீதி, நன்மை, அன்பு, மற்றும் பரிசுத்தம் தொடர்பான யாவற்றையும் பற்றின புரிந்துக்கொள்ளுதலையும், அன்பையும் நாம் விருத்திச்செய்ய வேண்டும்; இன்னுமாக சுயநலம், கீழ்த்தரம், இகழ்ச்சி, கனவீனம் தொடர்புடைய யாவற்றையும் விசேஷமாக நம்முடைய இருதயங்களிலிருந்தும், ஜீவியங்களிலிருந்தும், முடிந்தமட்டும் எதிர்த்துப்போராடி, அழித்துப்போட்டுவிடவேண்டும்.

*****

# ஓசன்னா! வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்

## மத்தேயு 21:1-17

**"கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்."**

மார்த்தாள் மற்றும் மரியாளுடைய வீட்டில் நடைப்பெற்ற விருந்திற்குப் பிற்பாடு, அடுத்தநாள் காலையில், அதாவது வாரத்தினுடைய முதல் நாளில் (ஞாயிற்றுக்கிழமையில்) நமது கர்த்தர், எருசலேமிற்குள் இராஜாவெனப் பிரவேசிப்பதற்கான ஆயத்தங்களை நேரமே ஆரம்பித்தார். "தம்முடைய சொந்த" ஜனங்கள் தம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை அறிந்திருந்தபோதிலும், இன்னுமாக அவர் தாம் அதிகாரிகளினால் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்று தம்முடைய சீஷர்களிடம் ஏற்கெனவே பகிர்ந்திருந்தபோதிலும் மற்றும் முந்தின இரவில் மரியாளுடைய தைலம் ஊற்றும் காரியமானது, தம்மை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டிருந்தபோதிலும், அவர் தம்மை யூதர்களுடைய இராஜாவென முறையாக முன்வைப்பதும் மற்றும் இப்படியாகத் தேவனுடைய தயவானது, "முதலாவது யூதருக்கே" உரியது எனும் தேவ வாக்குத்தத்தத்தை அந்த ஜனங்களுக்கு நிறைவேற்றுவதும் தெய்வீகத் திட்டத்தில் அவசியமான பாகமாய் இருந்தது.

அவரை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று, அவரை இராஜாவாக்கிட வேண்டும் என்று ஜனங்களில் சிலரிடம் காணப்பட்ட மனப்பான்மையை, முந்தின தருணங்களின் போதெல்லாம், அவர்களின் நடுவிலிருந்து கடந்துபோய்விடுவதன் மூலம் நமது கர்த்தர் எதிர்த்தவராய் இருந்தார் (யோவான் 6:15); ஆனால் இப்பொழுதோ நேரம், அதாவது ஏற்றவேளை வந்துள்ளபடியால், முந்தின தருணங்களிலெல்லாம் ஆரவார அணிவகுப்பை அவர் தடைப்பண்ணினது போலல்லாமல், இப்பொழுது தமது ஆரவார அணிவகுப்பை நிதானித்து திட்டமிட்டவராய்க் காணப்பட்டார். கழுதையும், அதன் குட்டியும் எங்கு மற்றும் எப்படிக் காணப்படும் என்று தெளிவாய்க் குறிப்பிட்டதின் வாயிலாக இயற்கைக்கு அப்பாற்பட்ட தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினவராக, கழுதையையும், அதன் குட்டியையும் கொண்டுவரும்படிக்கு, சீஷர்களில் சிலரை அவர் அனுப்பி வைத்தார். குதிரைக்குப் பதிலாக கழுதை பயன்படுத்தும் வழக்கம் இருந்தது; இஸ்ரயேலின் இராஜாக்கள் அனைவரும், தங்களது முடிசூட்டு விழாவின்போது கழுதையின்மேல் ஏறிச்செல்வது வழக்கமாயிருந்ததெனப் பாரம்பரியமானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

கழுதை வந்தடைந்தபோது, சீஷர்களும், ஜனக்கூட்டத்தார் அனைவரும் உற்சாகம் அடைந்தார்கள்; எரிகோவிலிருந்து வந்தவர்களும், பரிசுத்த நகரம் செல்வதற்கும், பஸ்கா கொண்டாடுவதற்கென்றும் மேற்கொள்ளப்பட்ட பிரயாணத்தின்போது, நமது கர்த்தருடைய வல்லமையையும், போதனைகளையும் நேரில் கண்டறிந்தவர்களுமான அநேக ஜனங்கள், ஓய்வுநாளன்று அவர் பெத்தானியாவில் தங்கினதுபோலவே, பெத்தானியாவில் தங்கினார்கள் என்பதாகத் தெரிகின்றது. இவர்களும், சீஷர்களுமாக சேர்ந்து ஒரு சிறு குழுவினராகி, இயேசுவை இராஜாவென வாழ்த்த ஆரம்பித்தார்கள் மற்றும் அவருக்கும் மரியாதை செலுத்தும்விதமாக, அந்நாட்களில் புகழ்மிக்கவர்களுக்குச் செய்யும் வழக்கத்தின்படி, அவர் ஏறிச்சென்ற கழுதையானது, தங்கள் வஸ்திரங்கள்மேல் மிதித்துச் செல்லத்தக்கதாக, தங்களது மேல்வஸ்திரங்களை வழியிலே பரப்பினார்கள்; இன்னுமாகப் பேரீச்சைமரக்கிளைகளையும், மலர்களையும், புல்லையும் பறித்து வந்து, வழியிலே பரப்பினார்கள்.

இயேசு இப்படியாகக் கனமிக்க ஸ்தானத்துடன், முன்பாக சவாரிப்பண்ணிக் கொண்டிருக்கையில், இந்தக் கூட்டத்தார் எருசலேமுக்குப் போகும் சாலையில், பின்தொடர்ந்து வந்தனர். பட்டணத்திலிருந்து/நகரத்திலிருந்து வந்த மற்றொரு கூட்டத்தாரோ, மாபெரும் தீர்க்கத்தரிசியும், போதகருமானவர் பெத்தானியாவில் இருக்கின்றார் என்று கேள்விப்பட்டவர்களாக, அவரையும், லாசருவையும் காணத்தக்கதாகப் புறப்பட்டுவந்தார்கள் மற்றும் இந்தக் கூட்டத்தார் கர்த்தரையும், அவருக்குப் பின்பாக வந்தனம் கூறி வந்தவர்களையும் கண்டபோது, இவர்களும் திசையைத் திருப்பிக்கொண்டு, கூட்டத்தை முன்னின்று நடத்துவோர் போலாகி, மற்றவர்களைப்போல, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று வந்தனமிட்டனர்; "தாவீதின்

குமாரனுக்கு ஓசன்னா" என்பது இராஜ வம்சாவழியான/சந்ததிவழியான இராஜா" என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஏரோது இராஜாவுக்கு எதிராகவும், இவருக்கு அதிகாரம் வழங்கிட்டதான உரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராகவும் துரோகம் புரிந்துள்ளனர் எனும் குற்றச்சாட்டினைத் தாங்களே தங்கள் மீது கொண்டுவராதபடிக்கு, "இராஜா" எனும் வார்த்தையைப் பயன்படுத்துவதை அநேகமாக ஜனங்கள் தவிர்த்திருக்க வேண்டும்.

அது பார்க்கின்றவர்களின் பார்வைக்கேற்ப மகா இராஜாவின் நகரத்திற்குள்ளான பிரம்மாண்டமான (அ) கேலிக்கிடமான ஒரு வெற்றி விஜயமாய்க் காணப்பட்டது. மேசியாவின் மீதான ஆவலினாலும், இஸ்ரயேலுக்காக நீண்ட காலம் வாஞ்சிக்கப்பட்டதான ஆசீர்வாதங்கள் விரைவில் நிறைவேறப்போகின்றது என்ற நம்பிக்கையினாலும் முழுக்க நிரம்பப் பெற்றவர்களாகிய சீஷர்கள் மற்றும் ஜனக்கூட்டத்தாரின் கண்ணோட்டத்தின்படி, அதாவது மரித்தவர்களை உயிர்த்தெழுப்புவதற்கும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதற்கும் வல்லமை கொண்டிருப்பவராகிய இந்த மாபெரும் தீர்க்கத்தரிசியினால், அவரது ஏற்றவேளையிலும், வழியிலும் தம்மையும், அவர்களையும், அனைத்துச் சத்துருக்களும் ஜெயிக்க முடியாமல் போவதற்குச் செய்ய முடியும் என்றும், தீர்க்கத்தரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டதான மகிமையான காரியங்கள் அனைத்தையும் இவரால் நிறைவேற்ற முடியும் என்றுமுள்ள விசுவாசத்தினால் முழுக்க நிரம்பப்பெற்றவர்களாகிய சீஷர்கள் மற்றும் ஜனக்கூட்டத்தாரின் கண்ணோட்டத்தின்படி . . . அது ஒரு பிரம்மாண்டமான தருணமாகவும், உண்மையான வெற்றி விஜயமாகவும் காணப்பட்டது. இயேசு தம்முடைய மரணம் குறித்துத் திரும்பத் திரும்ப முந்தின தருணங்களின்போதெல்லாம் அவர்களிடம் கூறியிருந்தாலும் மற்றும் பேதுரு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் பேசினதற்காக இயேசு அவரைக் கண்டித்துப் பேசியிருந்தபோதிலும், அவரது சீஷர்களாலும், மற்றவர்களாலும், அவரது வார்த்தைகளினுடைய உண்மையான அர்த்தத்தினை புரிந்துகொள்ள முடியவில்லை மற்றும் பிற்காலங்களில் தங்களுக்குப் புரியபோகின்றதான, "மறைப்பொருள்களாகவே" அவர்களால் கருதப்பட்டது. இது அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, அவர்களால் பேசப்பட்ட வார்த்தைகளிலிருந்து உறுதியாகுகின்றது; "அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்" என்ற அவர்களது வார்த்தையிலிருந்து உறுதியாகுகின்றது. (லூக்கா 24:21)

ஏரோது, பிலாத்து, பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்களின் கண்ணோட்டத்தின்படி, இந்த ஆரவார அணிவகுப்பானது மதவெறிக் கொண்ட ஒரு தலைவனுடைய மற்றும் அவரால் ஏமாற்றப்பட்ட அறிவில்லாதவர்கள் மற்றும் மதவெறி கொண்டவர்களுடைய அணிவகுப்பாய் இருந்தது. இப்படியாகவே அவர்கள் பார்த்தார்கள் என்பது உறுதியே. இந்த இழிவான நசரேயனும், அவரது கூட்டத்தாரும், தாங்கள் நிர்வகித்துவருகின்றதான நிர்வாகத்திற்கு எதிராக ஒரு சேனையை உருவாக்கி மற்றும் அதற்குரியவைகளைப் பார்த்துக் கொள்வார்கள் என்று இராஜாவாகிய ஏரோதும், பிலாத்துவும் கொஞ்சமும் பயப்படவில்லை என்பதும் உறுதியே. இந்த மத வைராக்கியமானது/வெறியானது ஏதோ விதத்தில் பரவி, தங்கள் மீது அரசியல் வல்லமைகளுடைய கோபத்தையும், ஒடுக்குதலையும் கொண்டுவரும் என்றும், இதைப் பயன்படுத்தி இந்த அரசியல் வல்லமைகளானது, யூதர்களுக்கான சுயாதீனங்களில் இன்னும் குறுக்கிடும் என்றும் மாத்திரமே மதத்தலைவர்கள் பயந்தவர்களாய்க் காணப்பட்டனர். வேதவாக்கியங்களில் இடம்பெறுகின்றதான கிருபையுள்ள வாக்குத்தத்தங்களினுடைய நிறைவேறுதலுக்காகவே, தேவனால் இயேசு மேசியாவாக அனுப்பப்பட்டவரென, பிரதான அதிகாரிகளில் எவரும் இயேசுவில் விசுவாசம் வைக்கவில்லை என்பதில் உறுதியே. இதைக்குறித்து அப்போஸ்தலர்கள், "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்"; "அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" என்று கூறியுள்ளனர். (அப்போஸ்தலர் 3:17; 1 கொரிந்தியர் 2:8)

அந்த ஊர்வலமானது, இன்னுமொரு கோணத்தில் நமது கர்த்தரினாலும், இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாகிய, கண்களுக்குப் புலப்படாத தூதர் சேனையினாலும்கூடப் பார்க்கப்பட்டது. இவர்களுங்கூட ஜனக்கூட்டத்தாரின் உணர்வுகளில்/ஆர்வத்தில் பங்கெடுத்துக்கொண்டார்கள், ஆனாலும் முற்றிலும் வேறுபட்ட ஒரு கண்ணோட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்களானார்கள்; அதாவது இந்த வெற்றி விஜயமானது தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பாகம் மாத்திரந்தான் என்றும், கர்த்தர் தம்மைப் பலியாக்கிடுவது நிறைவடைந்தும், இப்படியாக "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தைப்" பெற்றுக்கொள்வதன் வாயிலாகக் கர்த்தர் சார்பில் அடையப்படுகின்றதான மாபெரும் வெற்றிக்கான ஒரு முற்செயல் மாத்திரம்தான் என்றும், பாவத்தைக் கீழாக்கிப் போடுவதற்கும், அனைத்தையும் தேவனுக்குக் கீழ்ப்படுத்துவதற்கும், பிதாவுடனும், அவரது

சாம்ராஜ்யத்தின் பிரமாணங்களுடன் முழுமையான இசைவுக்குள் வர விரும்புகின்ற யாவரையும் பாவம், வியாதி மற்றும் மரணம் எனும் பயங்கரமான குழியினின்று தூக்கிவிடுவதற்கும் என்று மிகுதியான வல்லமை மற்றும் அதிகாரத்துடன் தூரதேசத்திலிருந்து (பரலோகத்திலிருந்து), தம்முடைய இராஜ்யத்துக்கு அவர் வெற்றிவாகையுடன் திரும்பி வருதலுக்கான முன்னடையாளம் என்றும் உணர்ந்துகொண்டவர்களாய்க் காணப்பட்டனர். இதுவே தேவனுடைய கிருபையினால் நாம் புரிந்துகொள்வதற்குச் சிலாக்கியம் பெற்றதான, அந்த வெற்றி விஜயத்தை/அணிவகுப்புக் குறித்த மிகுந்த மகிமையான கண்ணோட்டமாகும் மற்றும் நாமும் "நம்முடைய கண்கள் காண்கிறதினாலும், நம்முடைய காதுகள் கேட்கிறதினாலும் பாக்கியவான்களாய் இருக்கின்றோம்" என்றதான நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கூறுவோமாக.

ஜனக்கூட்டத்தார் நடுவில் ஆரம்பத்தில் காணப்பட்ட சில பரிசேயர்கள், நமது கர்த்தர் கூறினவைகளையோ (அ) செய்தவைகளையோ மறுத்துப் பேச முடியாமல் காணப்பட்டாலும், ஜனக்கூட்டத்தாரும், சீஷர்களும் அவரை இராஜாவென வாழ்த்துவதற்கும், ஓசன்னாக்கள்! (இரட்சிப்பு, ஸ்தோத்திரித்தல், துதி!) கெம்பீரிப்பதற்கும் அவர் அனுமதிக்கக்கூடாது என்று முறையிட்டதாக லூக்காவின் பதிவு நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்நிகழ்வு தொடர்புடையதான தீர்க்கதரிசனத்தை இயேசு அறிந்தவராக, சீஷர்களைக் கடிந்துகொள்வதற்கும் மற்றும் அவர்களது ஆரவாரங்களைத் தடுப்பதற்கும் மறுத்தது மாத்திரமல்லாமல், தேவன் தாமே தீர்க்கதரிசி வாயிலாக, "எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி" என்று கூறியிருக்கின்றார் என்றும், ஆகையால் கெம்பீரித்தல்கள் காணப்பட வேண்டும் என்றும், இப்படியாகக் கெம்பீரிப்பதற்கென ஜனங்கள் உற்சாகமடையவில்லை என்றாலும், தீர்க்கதரிசனம் நிறைவேறாமல் போய்விடாதபடிக்கு, இந்தக் கல்லுகள்கூடக் கெம்பீரித்திருக்கும் என்றும் பரிசேயர்களுக்குத் தெரிவித்தார் (சகரியா 9:9).

கர்த்தர் கழுதையின் மீது ஏறிப் புறப்பட்ட இடமான பெத்பகேயுவிலிருந்து, எருசலேமுக்குக் கொஞ்சம் தொலை தூரந்தான் காணப்பட்டாலும், எருசலேம் பட்டணமானது ஒலிவ மலையினால், பார்வையிலிருந்து மறைந்து காணப்பட்டது மற்றும் கர்த்தர் ஒலிவ மலையினுடைய உச்சிக்கு வந்தபோதோ, எருசலேம் பட்டணமானது திடீரெனப் பார்வைக்குத் தெரிந்தபோது, அவர் ஊர்வலத்தை நிறுத்தி, பட்டணத்தைக்குறித்துக் கண்ணீர்விட்டழுது, "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும்" என்று கூறினார். (லூக்கா 19:41-44) இந்த வார்த்தைகளை வைத்துப் பார்க்கும்போது, நமது கர்த்தர் தம்மோடுகூட அங்குக் காணப்பட்டதான ஜனக்கூட்டத்தார், பட்டணத்திற்கும், தேசத்திற்கும் பிரதிநிதித்துவம் படுத்துபவர்களாய் இருக்கின்றார்கள் என்பதாகக் கருதவில்லை என்பது உறுதியே; ஏனெனில் இவர்கள் தம்மோடுகூட அங்குக் காணப்பட்டு, "யேகோவாவின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்!" என்ற வார்த்தைகளைக் கெம்பீரித்துக் கொண்டிருந்தாலும், நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, ஜனங்களின் பிரதிநிதிகளாகிய இஸ்ரயேலின் தலைவர்களும் மற்றும் பிரதானமானவர்களும் அவரது இரண்டாம் வருகையின்போது அவரை இராஜாதி இராஜன் என்றும், கர்த்தாதி கர்த்தன் என்றும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்வதற்கான காலம் வரவுள்ளது என்பதையும், ஆனாலும் இதற்கிடையில் தங்களது சந்திப்பின் காலத்தை அடையாளங்கண்டுகொள்ள தவறின காரியமானது, அவர்களுக்கு மாபெரும் சிலாக்கியத்தின் இழப்பாகக் காணப்படும் மற்றும் இன்னுமாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தரினால் அவர்களது வீடு பாழாக்கிவிடப்படுவதாகவும், கைவிடப்படுவதாகவும் காணப்படும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அவரை ஏற்றுக்கொண்ட (அ) ஏற்றுக்கொள்ளப் போகின்றதான இஸ்ரயேலில் காணப்பட்டதான உண்மையுள்ளவர்களாகிய மீதியானவர்கள்போக, தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய எண்ணிக்கையை நிறைவடைவதற்குப் போதுமானவர்களைக் கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகத்தில் புறஜாதிகள் மத்தியிலிருந்து சேர்த்துக்கொள்வார். மத்தேயு 23:39-ஆம் வசனத்தைப் பார்க்கவும்.

இந்த வெற்றி ஆரவாரத்துடன்கூடிய அணிவகுப்பானது, பரிசுத்த நகரத்தை, தலை நகரத்தை, மகா இராஜாவின் நகரத்தை நோக்கியே நோக்கம் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. நமது கர்த்தர் ஏரோதினுடைய அரண்மனைக்குச் சென்று, அது தமக்குரியதென அவர் அதிகாரத்துடன் கேட்டுக்கொள்ளவில்லை; அவர் பிலாத்துவின் அரண்மனைக்குச் சென்று தம்மை

அங்கீகரிக்கும்படிக்கு அதிகாரத்துடன் கேட்டுக்கொள்ளவில்லை; மாறாக யேகோவாவின் பிரதிநிதியென, மேசியாவென, இஸ்ரயேல் மற்றும் உலகத்தினுடைய இரட்சகராகும்படிக்குத் தேவனால் அனுப்பப்பட்டவரென பிதாவின் வீட்டிற்கு (அ) அரண்மனைக்கு, அதாவது ஆலயத்திற்குச் சரியாய்ச் சென்றார்.

ஆலயத்தில் நடைப்பெற்ற காட்சியானது, குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆலயம் நாகரிகமடைந்த உலகத்தினுடைய அனைத்துப் பாகங்களிலுமுள்ள யாத்திரிகர்களால் நிரம்பிக் காணப்பட்டது; வருடத்தினுடைய அந்தக் காலக்கட்டத்தின்போது கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கும் மற்றும் நியாயப்பிரமாணத்தின்படி பஸ்காவை அனுசரிப்பதற்கும் என்று பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் நாகரிகமடைந்த உலகத்தினுடைய அனைத்துப் பாகங்களிலிருந்து வருவதுண்டு. அநேகமாக இவர்களில் அநேகர் "செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ளவரான" நாசரேத்தூர் இயேசுவைக்குறித்துக் கொஞ்சம் கேள்விப்பட்டிருந்தவர்களாய்க் காணப்பட்டனர். இவர்களில் அநேகர் இயேசுவினால் குணப்படுத்தப்பட்டவர்களாக (அ) இந்த விதமாய் ஆசீர்வதிக்கப்பட்டதான (குணப்படுத்தப்பட்டதான) நண்பர்களைப் பெற்றிருந்தவர்களாய்க் காணப்பட்டனர்; மேலும் இயேசுவோடுக்கூட வந்து, "உன்னதத்திலிருக்கிறவருக்கு ஓசன்னா" என்றெல்லாம் கெம்பீரித்து வருகிறதான ஜனக்கூட்டத்தார் எத்தகையதொரு சலசலப்பை உண்டுபண்ணியிருப்பார்கள் என்று நம்மால் நன்கு கற்பனைச் செய்துபார்க்க முடிகின்றது. மத சம்பந்தமான விஷயங்களிலும், இன்னும் விசேஷமாக ஆலயத்திலும், ஜனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்ததான பரிசேயர்களும், வேதபாரகர்களும் மற்றும் பிரதான ஆசாரியர்களும், இயேசுவுக்கு எதிராகக் கோபமடைந்தபோதிலும், அச்சந்தர்ப்பத்தில் அவருக்குப் பாதிப்பு உண்டுபண்ண வல்லமையற்றவர்களாகத் தங்களைக்குறித்து உணர்ந்துகொண்டார்கள்; ஏனெனில் இயேசு எந்த விதத்திலும் அங்கு நியாயப்பிரமாணத்திற்கு எதிராகச் செய்யவில்லை மற்றும் இது அனைவருக்குமே தெரியவும் செய்தது. தம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டவைகளை மாத்திரம் தாம் செய்வதாகக் காண்பிக்கும் பொருட்டு நமது கர்த்தர், ஆவிக்குரிய இராஜாவுக்கு ஏற்புடையதுபோன்று தமது அதிகாரத்திற்கு உட்பட்டதைச் செயல்படுத்த ஆரம்பித்தார்; அதாவது பரிசுத்த ஆலயத்தையும் அதன் எல்லைகளையும் பரிசுத்த குலைச்சலாக்கிப் போட்டவர்களைக் கண்டனம் பண்ணி, காணிக்கைச் செலுத்துவதற்கெனப் புறாக்களை விற்பனைக்காக வைத்திருந்தவர்களையும், காசுக்காரர்களையும் வெளியே துரத்துவதன் மூலம் செயல்பட்டார்; இந்தக் காசுக்காரர்கள் என்பவர்கள், தொலைத்தூரத்திலிருந்து தொழுதுகொள்ளுவதற்கெனப் பிரயாணம்பண்ணி வந்துள்ளவர்களுக்கான தேவைகள் சார்ந்த விஷயத்தில், இலாபங்களை ஈட்டிக்கொள்பவர்களாகக் காணப்பட்டனர்; தொலைத்தூரத்திலிருந்து தொழுதுகொள்வதற்கென வந்தவர்களின் பணங்களானது, யூத பணமாக இராததினால், அவைகள் ஆலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத காரணத்தினால், அவர்கள் பணத்தைத் தங்களுக்கு நஷ்டமான விதத்திலும், காசுக்காரர்களுக்கு இலாபமான விதத்திலும், மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அத்தேசத்தினுடைய (அ) ஆலயத்தினுடைய சரியான/நியாயமான சட்டங்களில் நமது கர்த்தர் குறுக்கிடுகின்றார் என்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது; அவர் எல்லா விதத்திலும் சட்டத்திற்கு ஒத்துப்போனவராகவே காணப்பட்டார். ஆனால் நியாயப்பிரமாணத்தினுடைய கட்டளையின்படி ஆலயத்தினுடைய பரிசுத்தத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அவசியப்படுவதற்கேற்றதான பலத்தைப் பயன்படுத்துவதற்கு அனைத்து யூதர்களுக்கும் உரியதான முழு அதிகாரத்தையே, இயேசுவும் உடையவராயிருந்தார்.

குருடர்களும், சப்பாணியுமானவர்கள் ஆலயத்தில் நமது கர்த்தரிடத்தில் வந்து, தங்கள் குறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் மற்றும் பின்னர் அவர் ஜனங்களுக்குப் போதித்தார்; இப்படியாக அவர் தொடர்ந்து பல நாட்கள் சொஸ்தமாக்கியும், போதித்தும் காணப்பட்டு, இரவு வேளைகளில் பெத்தானியாவுக்குப் போயும், அடுத்த நாள் காலையில் ஆலயத்திற்கு வந்தவராகவும் காணப்பட்டார்; ஆனால் அவர் தம்மை இராஜாவெனத் திரும்பவும் சுட்டிக்காண்பிக்கவில்லை (நிரூபணம் அளிக்கவில்லை); ஏனெனில் ஒருமுறை சுட்டிக்காண்பித்தது (நிரூபணம் அளித்தது) என்பது நோக்கத்தினை நிறைவேற்றிடுவதற்குப் போதுமானதாய் இருந்தது. அந்த ஒரு நிரூபணமானது, அந்தப் பட்டணத்தின் மற்றும் தேசத்தின் அதிகாரிகள் அவரை இராஜாவென முறையாக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அருளினதாய் இருந்தது; ஆனாலோ இவர்களது எதிரிடையான ஆவியானது, ஆலயத்தினுடைய முற்றங்களில் பிள்ளைகள் "ஓசன்னா!" என்று கெம்பீரிப்பதை இவர்கள் கண்டு, அதைக் கர்த்தர் தடைப்பண்ணும்படிக்கு, வேண்டிக்கொள்வதற்கென வந்தபோது வெளிப்பட்டது; இவர்களுக்குப் பிரதியுத்தரமாக நமது கர்த்தர் வேதவாக்கியங்களை மேற்கோளிட்டு, இவ்விஷயம் தெய்வீகத் திட்டத்திற்கு இசைவானதாகக்

காணப்படுகின்றது என்றார்; "குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்" என்று குறிப்பிட்டார். இதை உலக ஞானிகள் உணர்ந்துகொள்ளவில்லை மற்றும் தன்னலத்தின் காரணமாகக் குருடாக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர்; ஆனால் சிறு பிள்ளைகளோ, அதிலும் விசேஷமாக எளிமையான இருதயத்தினாலும், சாந்தத்தினாலும் சிறு குழந்தைகள் போலானவர்களோ, கர்த்தருடைய துதிகளைக் கெம்பீரிப்பதற்குக் கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட கருவிகளானார்கள்.

நீசான் மாதம் 10-ஆம் தேதி அவர் வெற்றி பிரவேசம் பண்ணி தம்மை முன்வைத்ததற்கும், பஸ்கா ஆட்டுக்குட்டியெனப் பதினான்காம் தேதி அவர் சிலுவையில் அறையப்படுவதற்கும் இடைப்பட்ட நாட்களிலேயே, அதாவது ஆலயத்தில் காணப்பட்டதான அந்த நாட்களிலேயே அநேகமான அவரது உவமைகளும், விசேஷித்த உபதேசங்களும் வழங்கப்பட்டன (யாத்திராகமம் 12:3, 6 வாசிக்கவும்). இந்த உவமைகள் முதலானவைகளெல்லாம் மத்தேயு சுவிசேஷத்தில் 23 முதல் 25 வரையிலான அதிகாரங்களிலும், மாற்கு சுவிசேஷத்தில் 11 முதல் 13 வரையிலான அதிகாரங்களிலும், யோவான் சுவிசேஷத்தில் 12 முதல் 16 வரையிலான அதிகாரங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மற்ற விஷயங்களைக் குறிப்பிட்டதோடுகூட மாம்சீக இஸ்ரயேலர்களிடமிருந்து தேவனுடைய தயவானது எடுக்கப்பட்டதையும் குறித்து இயேசு அப்போது குறிப்பிடும் வண்ணமாக:

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கத்தரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 23:37-39)

தற்காலத்திலுள்ள நாம் இந்த நிகழ்வுகளிலிருந்து சிறந்த பாடங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவைகளினுடைய நிழலான அம்சங்களும் மறக்கப்படக்கூடாது என்றும் நாம் தெரிவிக்கின்றோம்; நமது கர்த்தருடைய ஊழியத்தின் இறுதிக்காலங்களில் நடைபெற்றதும் மற்றும் மாம்சீக இஸ்ரயேல் வீட்டாரின் புறக்கணிக்கப்படுதலும், நீக்கப்படுதலும் தொடர்புடையதுமான நிகழ்வுகளானது, சுவிசேஷ யுகத்தினுடைய முடிவின்போது, அதாவது தற்காலத்தில், இன்றைய பெயரளவிலான இஸ்ரயேலர்களாகிய பாபிலோனுடைய புறக்கணிப்பிற்கும், நீக்கிவைக்கப்படுவதற்கும் நிழலாகவும், சித்தரிப்பாகவும் காணப்படுகின்றது என்பதை நாம் அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும். மில்லேனியல் டாண் வெளியீட்டினுடைய இரண்டாம் தொகுதியினுடைய 235-ஆம் பக்கத்தில், கர்த்தர் தம்மை முறைப்படி மாம்சீக இஸ்ரயேல் முன்பாக முன்வைத்ததற்கும், அவருடைய புறக்கணிப்பிற்கும் ஒத்த ஒரு வருடம் 1878-ஆம் வருடமென நாம் ஏற்கெனவே காண்பித்துள்ளோம். முதலாவது (அ) மாம்சீக வீட்டார் புறக்கணிக்கப்பட்டது போலவே, அவ்வருடத்தில் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர் புறக்கணிக்கப்பட்டனர்; எனினும் இரண்டு தருணங்களிலும் உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரும் அவரை ஏற்றுக்கொண்டுள்ளனர் மற்றும் இதற்குரிய ஆசீர்வாதங்களையும், அவரது கரத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள்.

அந்த வருடம் (1878) முதற்கொண்டு, நமது கர்த்தர் தம்முடைய ஆவிக்குரிய ஆலயமாகிய, உண்மை சபையில் காணப்பட்டு, கேட்கிறதற்குச் செவியுடையவர்கள் அனைவருக்கும் விசேஷமான விதத்தில் போதிக்கிறவராகவும், குருடானவர்களின் கண்களைத் திறந்தும், ஆவிக்குரிய ஊனமுடையவர்கள் அவரது வழியில் நடக்கத்தக்கதாக, அவர்களுக்கு உதவிபுரிந்தும் காணப்படுகின்றார் என்று நாம் புரிந்துகொண்டுள்ளோம். அதுமுதற்கொண்டு உண்மையாய்த் தொழுதுகொள்பவர்களை உள்ளடக்கியுள்ளதான ஆலய வகுப்பார் சார்ந்த அனைவரும், தெய்வீக வார்த்தைகளிலுள்ள ஆச்சரியமான காரியங்களைக் குறித்துக் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; இன்னுமாக அந்த ஒரு காலக்கட்டத்தில்தான், உண்மையாய்த் தொழுதுகொள்ளாதவர்களும், சத்தியத்தை வியாபாரம் பண்ணுகிறவர்களுமாகிய காசுக்காரர்கள் மற்றும் புறா விற்பவர்கள் முதலானவர்களை, ஆலயத்திலிருந்து கர்த்தர் வெளியே துரத்தினார். இன்னுமாக அந்த ஒரு காலக்கட்டத்தில்தான், இன்றைய நாட்களின் பரிசேயர்களுக்கும், வேதபாரகர்களுக்கும் கோபம் ஏற்படுகின்ற விதத்தில் பாலகர்களின் வாயிலிருந்தும், குழந்தைகளுடைய வாயிலிருந்தும் சத்தியம் பறைச்சாற்றப்படுகின்றது.

அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான, ஏற்கெனவே சத்தியம் எனும் நறுமண தைலத்தினால் அபிஷேகிக்கப்பட்டதான கிறிஸ்துவினுடைய சரீரத்தின் கடைசி அங்கத்தினர்கள் தங்கள் பலியை நிறைவேற்றி முடித்தவுடன், முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவடைந்து, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் அவருடன்கூட மகிமை அடைந்திருப்பார்கள்; கிறிஸ்துவினுடைய பாடுகள் நிறைவடைந்தவுடன், மகிமையானது விரைவாய்த் தொடருகின்றதாயிருக்கும். ஆனால் இதற்கிடையில், அதாவது மகிமை வெளிப்படுவதற்கு முன்னதாக, ஒரு மகா உபத்திரவக்காலம் வரும்; அது உலகத்தின் மீதான அக்கினியின் (உபத்திரவத்தின்) மற்றும் புகையின் (குழப்பத்தின்) காலமாய் இருக்கும்; அது – மாம்சீக இஸ்ரயேல் மீதும், அவளிடமிருந்து தப்பித்துக்கொள்ளாதவர்கள் மீதும் பட்சிக்கும் விதமான பழிவாங்குதல் கடந்துவந்ததுபோல – விசேஷமாகப் புறக்கணிக்கப்பட்ட பாபிலோன் மீதும், மகா உபத்திரவம் வருவதற்கு முன்னதாக, அவளிடமிருந்து தப்பித்துக்கொள்ளாதவர்கள் மீதும் (அந்த மகா உபத்திரவமான காலம் வருகையில்) அது அக்கினியின் மற்றும் புகையின் காலமாய் இருக்கும். (லூக்கா 3:16, 17; மத்தேயு 13:38-43)

*****

R 2757

# "கிறிஸ்துவாகிய காந்தம் - நான் எல்லோரையும் இழுத்துக்கொள்ளுவேன்"

## யோவான் 12:20-33.

"இயேசுவைக் காண விரும்புகிறோம்."—வசனம் 21.

நமது கர்த்தர் கழுதையின் மீது ஏறி, எருசலேமுக்கு வந்த பிற்பாடு, ஆலயத்தில் தினந்தோறும் போதித்தவராய் இருந்தார்; அதாவது அவர் கைதுச் செய்து, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதான அந்தச் சில நாட்களில், இரவில் பெத்தானியாவிற்குச் சென்றவராகவும், ஒவ்வொரு நாள் காலையிலும் ஆலயத்திற்குத் திரும்பி வருபவராகவும் காணப்பட்டார். அப்போதுதான், சில கிரேக்கர்கள் இயேசுவைச் சந்தித்துப் பேச முற்பட்டு, அந்திரேயா மற்றும் பிலிப்பு மூலமாய்த் தங்களுடைய இந்த விருப்பத்தைத் தெரியப்படுத்தினார்கள்; அந்திரேயா மற்றும் பிலிப்பு என்பவர்கள், கிரேக்க மொழி அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்ட (பெத்சாயிதா எனும்) பட்டணத்திலிருந்து வந்தவர்களாகவும், கிரேக்க பெயர்களைக் கொண்டிருந்தவர்களாகவும் இருந்தபடியினால், அநேகமாய்க் கிரேக்க மொழி பேசுபவர்களாய் இருந்திருக்க வேண்டும். ஆகவே இவர்கள் இருவரும் வந்திருந்த, கிரேக்கர்களின் வாயாகக் காணப்பட்டு, இவர்களுடைய விருப்பத்தைக் கர்த்தருக்குத் தெரிவித்தவர்களாய் இருந்தனர். இப்படியான வேண்டுகோள் விடுக்கப்பட்டதற்கான காரணம், பிறப்பால் யூதர்களாய் இருப்பவர்கள் மாத்திரமே பிரவேசிக்க முடிந்த, ஆலயத்தின் குறிப்பிட்ட பாகங்களில் நமது கர்த்தர் காணப்பட்டார்; மேலும் இந்தக் கிரேக்கர்களாகிய யூதமார்க்கத்தமைந்தவர்கள், புறஜாதியார்களுக்கான பிரகாரப் பகுதியை அல்லாமல், மற்றபடி, பரிசுத்த ஸ்தலத்தை அணுகுவதற்கு அனுமதிக்கப்படாமல் காணப்பட்டனர். ஆகையால் தாங்கள் இயேசுவைச் சந்தித்துப் பேசத்தக்கதாக, இயேசு வெளியே வர வேண்டும் என்ற விதத்தில், இந்தக் கிரேக்கர்கள் வேண்டிக்கொண்டவர்களாய் இருந்தார்கள்.

இவர்கள் கர்த்தரைச் சந்தித்ததற்கான நோக்கம் என்ன என்பது பற்றி நமக்குச் சொல்லப்படவில்லை; இச்சம்பவத்தின் போது, நமது கர்த்தர் பேசினதாகப் பதிவு பண்ணப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகள், கிரேக்கர்களிடம் பேசப்பட்டதாகவும் நாம் எடுத்துக்கொள்வதில்லை, மாறாக சில விஷயங்கள் பதிவுகளில் பதிவு செய்யப்பட்டவில்லை என்றே நாம் எண்ணுகின்றோம். சந்தித்துப் பேச வேண்டும் என்ற விண்ணப்பத்திற்குக் கர்த்தர் இணங்கினார் என்பதில் ஐயமில்லை, ஆயினும் இவர்களுடைய சம்பாஷணையானது சபைக்கு அவசியமாய் இராதபடியினால், அவைகள் பதிவு செய்யப்படவில்லை. முற்காலத்து சபை வரலாற்று ஆசிரியரான **இசுபியஸ் (Eusebius)** அவர்கள் குறிப்பிட்டுள்ள காரியங்களை இங்குக் குறிப்பிடுவது தவறாய் இராது என்று நாம் எண்ணுகின்றோம்; இவர் குறிப்பிட்டிருப்பதாவது . . . சீரியாவின் எடிசாவின் (Edessa) இராஜா, இயேசு தன்னோடு வந்து வசிக்கவும், இயேசுவுக்கு இராஜரிக வரவேற்புக் கொடுக்கப்படும் என வாக்களித்தும், ஒரு தூதுவரை இயேசுவிடம் அனுப்பி வைத்தார் என்பதுமாகும். இந்தப் பதிவு உண்மையாய் இருந்தாலும், நமக்கு ஆச்சரியம் ஏற்படுவதில்லை, மாறாக இப்படியான தனிப்பட்ட முறையிலான கோரிக்கைகளை கர்த்தர் மறுத்துவிடுவார் என்பதை நாம் அறிவோம், ஏனெனில் சீஷர்களை அனுப்பிவைக்கையில், இயேசு தெளிவாக "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார்" (மத்தேயு 15:24).

தேவன் பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆசீர்வாதங்கள் வைத்துள்ளார், ஆயினும் அதை வழங்குவதற்கான காலம் இன்னும் வரவில்லை மற்றும் அதை நிறைவேற்றுவதற்கு இது வழியும் அல்ல. அனைத்தும் தெய்வீக ஒழுங்கில், தெய்வீகத் திட்டத்திற்கு ஏற்ப செய்யப்பட வேண்டும்; உலகத்தின் மீது பொதுவான ஆசீர்வாதங்கள் வருவதற்கு முன்னதாக, தெய்வீகத் திட்டத்தின்படி, ஆபிரகாமின் சந்ததியினுடைய தேர்ந்தெடுப்பு நடைப்பெற வேண்டும்; மற்றும் தெய்வீக ஏற்பாட்டின்படி ஆபிரகாமினுடைய இந்தச் சந்ததியில் அங்கத்தினர் ஆகுவதற்கான அழைப்பு, முதலாவது யூதர்களுக்கே கொடுக்கப்பட வேண்டியுள்ளது. (கலாத்தியர் 3:16, 29).

கிரேக்கர்களுடனான உரையாடல் முடிவடைந்த பிற்பாடு, இறுதியில் ஒருவழியாக உலகமானது தங்களுடைய ஆண்டவரை, அவருக்கே உரிய உண்மையான வெளிச்சத்தில் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக விழித்தெழுந்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதினாலும்,

இன்னும் சீக்கிரத்திலேயே, உலகம் அவரை மேசியாவென உயர்வான ஸ்தானத்திற்கு உயர்த்தும் என்ற எதிர்ப்பார்ப்பினாலும் அடைந்த பரவசத்தினால், அப்போஸ்தலர்களுடைய இருதயங்கள் வேகமாய் அடித்துக் கொண்டிருக்கும் போதும், அப்போஸ்தலர்கள் தாங்களும் இராஜ்யத்தில் அவருடன்கூட உடன் சுதந்தரர்களாக ஆகப்போகிறார்கள் என்ற நம்பிக்கையில் உயர பறந்து கொண்டிருக்கும் போதும், இயேசு இந்தப் பாடத்தில் பார்க்கப்படும் வசனங்களைக் கூறியுள்ளார். இது சீக்கிரத்தில் தாம் படப்போகின்ற பாடுகளே, எதிர்க்கால மகிமைக்கான அஸ்திபாரமாக இருக்கப்போகின்றது என்பதை அவர்களுக்கு கர்த்தர் வெளிப்படுத்துவதற்கான நல்லதொரு வாய்ப்பாய் இருந்தது. தம்முடைய மரணம் தொடர்பாக அவர்களிடம் தம்மால் ஏற்கெனவே சொல்லப்பட்டக் காரியங்களை அவர்கள் உணர்ந்துக்கொள்ளும்போது, அந்தத் தம்முடைய உண்மையுள்ளவர்களாகிய சிலருக்கு அது எத்தகைய கசப்பான ஏமாற்றமாகவும், இருதயத்திற்கு வேதனையளிக்கின்றதாகவும் இருக்குமெனக் கர்த்தர் நன்கு அறிந்திருந்தார். அவர்களுக்குப் பிற்காலத்தில் உதவிகரமாக இருக்கிறதும், வேறுவழியில் இல்லாமல், விசுவாச கண்களினால் மாத்திரமே பாடுகளின் ஊடாக, முன் தீர்மானித்து வைக்கப்பட்ட மகிமையை, அவர்களைக் காணச்செய்கிறதுமான சில யோசனைகளைக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார்.

இதை மனதில் கொண்டவராகத்தான் நமது கர்த்தர் "மனுஷகுமாரன் மகிமைப்படும் படியான வேளை வந்தது" என்று கூறியிருந்திருக்க வேண்டுமென நாம் நம்புகின்றோம் (யோவான் 12:23). இயேசு தம்முடைய பூமிக்குரிய உயர்த்தப்படுதலைத்தான் பேசுவதாக, சீஷர்கள் முதலாவதாக எடுத்துக்கொண்டார்கள்; ஆனால் தம்முடைய மகிமைப்படுதல் சமீபமாய் இருப்பினும், அதற்கு முன்பு மரணம் வரையிலும் தாம் பாடுப்பட வேண்டும் என்ற உண்மையினிடத்திற்கு அவர்களது கவனத்தை இயேசு உடனடியாகக் கொண்டு வந்தார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தபோது, அவர் அழியாமையிலும், வல்லமையிலும், மகிமையான ஆவிக்குரிய சரீரத்தில் எழுப்பப்பட்டபோது, "உயிர்ப்பிக்கிற ஆவியான" போதுதான் அவருடைய மகிமைப்படுதல் ஆரம்பமானது (1 கொரிந்தியர் 15:42-45). இந்த மகிமைப்படுதலானது, தம்முடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டதுமான உலகத்தின் மீது, நியமிக்கப்பட்ட காலத்தில் அவர் இராஜாவாய் இருப்பதற்கான மகா வல்லமையையும், ஆளுகையையும் எடுப்பது வரையிலும், தெய்வீக வல்லமையினுடைய வலது பாரிசத்தில் காத்திருக்கத்தக்கதாகவும், நம்பொருட்டாகவும், அவர் பிதாவின் முன் சென்ற போது, இன்னும் அதிகமாகுகின்றது.

## "வேளை வந்தது!"

வேதாகமத்தில் ஒருநாள் என்பது 24 மணி நேரத்தைக் குறிக்காதது போன்று, "வேளை வந்தது" எனும் வார்த்தைகளானது 60 நிமிடங்களைக் குறிப்பதாக நாம் புரிந்துக்கொள்ள வேண்டாம், மாறாக ஒரு குறுகிய காலப்பகுதி என்று எடுத்துக்கொள்ளப்படலாம்; உதாரணத்திற்கு "நோவாவின் நாட்கள்," "மோசேயின் நாட்கள்," "இயேசுவின் நாட்கள்" முதலானவைகள் ஆகும். ஆகவே இயேசுவின் நாட்கள் என்பதுடன் தொடர்புடைய சம்பவங்கள், அந்த வேளையில் அல்லது கொஞ்சக் காலத்தில் சம்பவிப்பவைகளாக இருந்தன.

இவ்வாறாக தாம் மகிமைப்பட ஆரம்பிக்கப் போவது என்பது மிகவும் தொலைவில் இல்லை என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தின பிற்பாடு, தம்முடைய மரணத்தின் அவசியத்தை மனதில் பதிய வைக்க நமது கர்த்தர் முற்பட்டார்; இதைப் பதிய வைக்கும் வண்ணமாக . . . "மெய்யாகவே, மெய்யாகவே" என்று கர்த்தர் கூறினார்; அதாவது "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால், தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுப்பதைப் போலவே, தெய்வீக ஏற்பாட்டின்படி, என்னுடைய மரணத்தின் மூலமாகவே, என் மகிமைப்படுதல் வர வேண்டுமென்று மெய்யாகவே, மெய்யாகவே, உறுதியாய் உங்களுக்குக் கூறுகின்றேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார். ஒருவேளை மரிக்க வேண்டாம் என்று கர்த்தர் முடிவெடுத்திருந்தால், அவர் தனித்து (உயிரோடே) இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருப்பாரே ஒழிய, நம் பொருட்டாக மரிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்திருக்க மாட்டார். கர்த்தர் ஒருவேளை இப்படியாகச் செய்திருப்பாரானால், நாம் இன்னமும் மீட்கப்படாதவர்களாகவே காணப்படுவோம், மற்றும் அவராலும் பலனைக் கொடுத்திருந்திருக்க முடியாது. ஆனால் அவர் தம்முடைய ஜீவனை அர்ப்பணம் பண்ணியிருந்தார்; அவர் பிதாவின் சித்தத்திற்கு உடன்பட்டவராக, ஆதாம் மற்றும் அவருடைய சந்ததிக்காகத் தம்மைப் பலிச் செலுத்திட விரும்பி ஈடுபட்டவராகக் காணப்பட்டார்; ஆகையால்தான், இப்பொழுது அவர் தம்முடைய ஜீவனை விரும்பினால், அதை தாம் இழக்கக்கூடும் என்றும், அவர் தம்மைக் காத்துக்கொள்ளத்தக்கதாக நாடுவதற்குப் பதிலாக, மரணம் வரையிலான

கீழ்ப்படிதலுக்கான பலனாக பிதா தமக்கு வாக்களித்துள்ள எதிர்க்கால ஜீவனுக்கு முன்பாக, தற்கால ஜீவியத்தை தாம் வெறுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இப்படியாக நாம் புரிந்துக்கொள்ளும்போது, 25-ஆம் வசனம் என்பது நமது கர்த்தருக்கு மாத்திரமே பொருந்தக்கூடிய ஒன்றே ஒழிய, அவருடைய பின்னடியார்களுக்கு அல்ல; ஏனெனில் சீஷர்கள் இழந்துப் போகத்தக்கதாக எந்த ஜீவனையும் பெற்றிருக்கவில்லை. அவர்களும் சரி, முழு உலகமும் சரி மரித்துப்போய் இருந்தது மற்றும் தகப்பனாகிய ஆதாமின் மீறுதலினால், மரணத் தீர்ப்பின் கீழ்க்காணப்பட்டது. நமது கர்த்தர் மாத்திரமே ஜீவன் கொண்டிருந்தார், மற்றும் அதை நித்திய ஜீவ காலமாய்க் காத்துக்கொள்ளத்தக்கதாக அதைக் கொடுத்து விட்டு, மற்றொன்றை மாற்றிக்கொள்வதற்கு அல்லது அதை ஒப்புக்கொடுப்பதற்கான உரிமையைக் கர்த்தர் மாத்திரமே கொண்டிருந்தார். இப்படிப்பட்டதான சிலாக்கியங்கள், இயேசு தம்முடைய ஜீவனை அநேகருக்கான ஈடுபலியாகக் கொடுப்பது வரையிலும், அவருடைய சீஷர்களுக்குக் கடந்து வருவதில்லை. ஈடுபலி செலுத்தப்பட்ட பிற்பாடும், அது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற்பாடும், (தங்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளாகிய) மீட்கப்பட்டவர்கள், கர்த்தருடைய பலிபீடத்தில் அர்ப்பணிப்பதற்கும், மற்றும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலமாக பரலோக ஜீவனுக்காக மாற்றிக்கொடுப்பதற்கும் உரிய, ஜீவனுக்கான உரிமைக்கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

ஆகையால்தான் 26-ஆம் வசனத்தை கர்த்தர் அவருடைய பின்னடியார்களுக்குக் கூறுகின்றார்; அதாவது அவருக்கு ஊழியஞ்செய்ய விரும்புகின்றவர்களும், அவரோடு காணப்பட விரும்புகின்றவர்களும், அவர் முன்னோடியாய் ஏற்கெனவே கடந்துச் சென்றுக்கொண்டிருக்கும் இந்த அனுபவத்தில் அவரை, அவர்கள் பின் தொடரும்படியாகக் கூறுகின்றார்; அதாவது அர்ப்பணம்பண்ணி, வாக்களிக்கப்பட்டுள்ள பரம மகிமை மற்றும் ஆவியின் ஜீவனோடு, தற்கால ஜீவியத்தை ஒப்பிட்டு, தற்கால ஜீவியத்தை வெறுத்திட வேண்டும்.

இரட்சிக்கப்படுபவர்களில் பல வகுப்பார் காணப்படுகின்றனர், அதாவது ஜெயங்கொள்பவர்கள், திரள்கூட்டத்தினர் மற்றும் சீர்ப்பொருத்தப்படும் மனுக்குலத்தார் எனும் வகுப்பார்கள் காணப்படுகின்றனர் என்பதை கிறிஸ்தவ ஜனங்கள் புரிந்துக்கொள்ள தவறின காரியமானது, அவர்களுக்கு மிகவும் அனுகூலமற்றதாய்க் காணப்படுகின்றது. வாக்களிக்கப்பட்ட எதிர்க்கால ஜீவியத்திற்கு முன்பாக, தற்கால ஜீவியத்தை வெறுத்து, பூமிக்குரிய விஷயங்களில் சுயத்தை வெறுத்து, பலிச் செலுத்துவதன் மூலமாக, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாடுபவர்களில் குறுகிய மனமுடைய சிலர், இப்படியாய் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவர்கள் மாத்திரமே கர்த்தருடன் காணப்பட முடியும் என்றும், பிதாவினால் கனப்படுத்தப்பட முடியும் (வேறு எவரும் கர்த்தருடன் காணப்பட முடியாது) என்றுமுள்ள எண்ணத்தினால், தங்களுக்கான சந்தோஷத்தையும், ஆறுதலையும், சமாதானத்தையும் இழந்துப்போயிருக்கின்றனர், ஏனெனில் இப்படியாக அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவர்கள் சிறு மந்தையினராக (சொற்பமானவர்களாக) இருப்பார்கள் என்று இவர்கள் உணர்ந்துள்ளனர். தெய்வீகத் திட்டத்தைப் பற்றின அறியாமையின் காரணமாக, சிறுமந்தையினரைத் தவிர, மற்றவர்கள் அனைவருக்கும் நித்திய காலமான சித்திரவதைக் கொடுப்பதே தேவனுடைய திட்டமாக இருக்கின்றது என்று இவர்கள் நம்புவதினால், இவர்கள் தேவனை எப்படிப்பட்டவர் என்று புரிந்திருக்கின்றார்களோ, அவ்வாறாகவே இவர்களும் இருக்க முற்பட்டு, இருதயம் கடினப்பட்டுப் போகின்றார்கள். இன்னொரு பக்கத்திலோ, சில பரந்த மனமுடையவர்கள், இயேசுவோடு காணப்படுவதற்கும், தெய்வீக மகிமையை அடைவதற்குமான பாதை மிகவும் இடுக்கமான பாதை என்பதை நம்புவதற்கு மறுத்து, தங்களுடைய நண்பர்களையும், தங்களுடைய குடும்பங்களையும், தங்களுடைய அயலார்களையும் மற்றும் கூடுமானமட்டும் அதிக எண்ணிக்கையிலான புறமதத்தாரையும் உள்ளே கொண்டு வரத்தக்கதாக, இடுக்கமான பாதையை அதிகமதிகமாக அகலமாக்க முயற்சிக்கின்றனர்; இவ்வாறாக இவர்கள் தங்களையும் அறியாமல், படிப்படியாக, சீஷத்துவத்திற்கான கோட்பாடுகளை மற்றவர்களுக்கு மாத்திரமல்லாமல், தங்களுக்கும் குறைத்துக் காட்டுகின்றவர்களாய் இருக்கின்றனர்; இவர்கள் வெளியரங்கமான சடங்காச்சாரங்களிலும், அனுசரிப்புகளிலும், வெற்றுரைகளிலும், நன்னடத்தைகளிலும் அதிகமதிகமாய்த் திருப்திகொள்பவர்களாய் ஆகிப்போய்விடுவார்கள்; மற்றுமாக கர்த்தரோடு காணப்படவும், பிதாவினால் கனப்படுத்தப்படவும், சிலுவையை எடுத்துக்கொண்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடர வேண்டும் என நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாய்த் தாங்கள் முன்பு கொண்டிருந்த கருத்துச் சரியானதல்ல என்றும் எண்ணும் நிலைக்கு வந்திடுவார்கள்.

தெய்வீக வார்த்தைகள் மற்றும் திட்டத்தின் மீது இப்பொழுது பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதான இந்த அறுவடை காலத்தின் வெளிச்சமானது, கர்த்தருடன் அவருடைய மகிமையில் உடன் சுதந்தரத்தை அடைவதற்காகத் தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்கான அழைப்பின் மேன்மையை மாத்திரம் நமக்குத் தெளிவுப்படுத்தாது; இன்னுமாக எதிர்க்காலத்தில் அந்த மகிமையில் பங்கடையப் போகும் அனைவரும், தற்கால ஜீவியத்தில் அவரோடு கூடப் பாடுபட வேண்டும் என்பதையும், பாவத்திற்கும், சுயத்திற்கும், உலகத்தாருக்கும் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்பதையும், கிறிஸ்து இயேசுவுக்கான புதிய ஜீவனுக்குள்ளாக எழுப்பப்பட்டவர்களாக இப்போது கருதப்பட்டு, பிற்பாடு உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் பட்சத்தில், நிஜமாய், முதலாம் உயிர்த்தெழுதலில் எழுப்பப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதையும், நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றது. இப்பொழுது அழைக்கப்பட்டவர்களும், குமாரனுடன் உடன் பலிச்செலுத்துபவர்களாக, குமாரனுடன் அவரது மகிமையில் உடன் சுதந்தரர்களாக இருக்கும்படிக்கு, பிதா நோக்கம் கொண்டு இப்பொழுது தெரிந்துக்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பவர்களும், மனித குடும்பத்தில் ஒரு சிறிய கூட்டத்தினர் என்றும், இந்தப் பரம அழைப்பினைப் பெற்றுக்கொள்ளாத மற்றவர்கள், மகிமையடைந்த இயேசு மற்றும் அவருடைய மகிமையடைந்த சபையாகிய மணவாட்டியின் கீழ், ஆயிர வருட இராஜ்யத்தில், ஏற்றவேளையில் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும், இந்த அறுவடை வெளிச்சமானது நமக்குத் தெளிவுப்படுத்துகின்றது.

இந்த வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டு, இதை உணர்ந்துகொள்பவர்கள், மற்றவர்களுக்கு வரும் சோர்விலிருந்து தப்புவிக்கப்படுவார்கள். தாங்கள் இப்படியான ஓர் உயர் ஸ்தானத்திற்கென்று அழைக்கப்பட்டிருக்கின்றதான பாதை, மிகவும் இடுக்கமான பாதையாக இருக்கின்றது என்பதிலும், கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்களை மாத்திரமே இப்பாதைக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்பதிலும், தேவனைப் பிரியப்படுத்துவதற்கும், அவருக்கு ஊழியஞ்செய்ய விரும்புபவர்கள் மாத்திரமே இப்பாதைக்குள் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்பதிலும், இறுதியில் இக்காலத்திற்குரிய அனுபவங்கள் ஊடாக உண்மையுள்ளவர்களாய்க் கடந்து சென்று, இருதயத்திலும், குணலட்சணத்திலும், தேவனுக்குப் பிரியமான குமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலைக் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே மகிமையில் அனுமதிக்கப்படுகின்றனர் என்பதிலும் விளங்கும் நியாயத்தை இவர்களால் காணமுடிகின்றது. (ரோமர் 8:29)

"என் ஆத்துமா கலங்குகிறது" . . . என்னுடைய உணர்வுகள் கலங்குகிறது; நான் அமைதியற்று இருக்கிறேன். நான் என்ன சொல்லுவேன். பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; விடுவியும் என்று கேட்பதற்குப் பதிலாக, நான் இதற்காகவே, விரும்பிச் சகித்துக்கொள்ளத்தக்கதாகவே இந்த வேளைக்குள் வந்திருக்கிறேன் என்று நினைவுகூரவே செய்கின்றேன்; பிதாவினுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து என்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பேன் என்பதாக நான் பண்ணின ஒப்பந்தத்தை வீணாக்கிப் போடாத விதத்தில், ஏதோ ஒருவகையான விடுவித்தலை என்னால் பிதாவிடம் கேட்க முடியும். நான் குற்றவாளியாக, அதாவது என்னுடைய பரம பிதாவுக்கு எதிராக தேவதூஷணம் கூறின மோசமான குற்றவாளியாக நான் அவமானப்படுத்தப்பட்டு, தீர்ப்பளிக்கப்படும் அனுபவங்களிலிருந்து என்னைத் தப்புவிக்கத்தக்கதாக, என் மீது வேறு ஏதோ ஒரு பெரும் துன்பத்தை விழப்பண்ணி, அதன் மூலம் என் மரணம் சம்பவிக்கத்தக்கதாக, என்னால் பிதாவிடம் கேட்க முடியும். மேலும் பிதாவுக்கு எல்லா விஷயங்களிலும் உண்மையையே காண்பித்து வந்த எனக்கு, இத்தகைய சலுகைகளைப் பிதா காண்பிப்பது எனக்கு நியாயமற்றதாகவும் தெரியவில்லை. எனினும் நான் இந்தச் சலுகைகளைக் கூடக் கேட்பதில்லை. மாறாக நான் என்னுடைய சித்தத்தை முற்றிலுமாகப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, என்னுடைய உடன்படிக்கையினுடைய ஆவி மற்றும் எழுத்துகளின் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் விடுபடாத அளவுக்கு அனைத்தையும் செய்வேன். பிதாவின் சித்தம் அனைத்தும் நிறைவேறுவதாக; அதுவே ஞானமுள்ளதும் சிறந்ததுமாய் இருக்கின்றது; ஒருவேளை ஞானமற்றதாகவும், சிறப்பற்றதாகவும் இருக்குமானால், அது பிதாவினுடைய திட்டமாக இருக்காது. பிதாவுக்கு என்னுடைய முழுமையான அர்ப்பணிப்பையும், அவருடைய சித்தத்திற்கான என்னுடைய முற்றும் முழுமையான கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துவதற்காக, நிரூபிப்பதற்காகவே நான் இந்த வேளைக்குள் வந்திருக்கின்றேன். பிதாவே நீர் தொடரும்! நான் எதை இழக்க வேண்டியிருப்பினும், பிதாவே உம்முடைய வழியில், உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்! என்ற விதத்தில் இயேசு கூறினார்.

பின்பு ஒரு சத்தம் உண்டானது; தேவனுடைய சத்தத்தின் விஷயத்தில் எப்போதும் காணப்படுவது போன்று, சிலர் அதைப் புரிந்துக்கொண்டார்கள், ஆனால் மற்றவர்களோ தவறாய்ப் புரிந்துக்கொண்டனர். உலகத்தார் எந்தச் செய்தியையும் கேட்பதில்லை; விசுவாசிகள்

அரைக்குறையாய்ச் செய்தியைக் கேட்கின்றனர், ஆனால் பிதாவுக்குப் பூரணமான இசைவுடன் காணப்படும் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்கள் மாத்திரமே, செய்தியை முழுமையாய்க் கேட்கவும் செய்கின்றனர் மற்றும் புரிந்துக்கொள்ளவும் செய்கின்றனர். பிதாவிடம் இருந்து வந்த இந்தச் செய்தியினால், நமது கர்த்தர் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை; எனினும் இச்செய்தியானது தமக்கென்று விசேஷமாய் அனுப்பப்படாமல், மாறாக கர்த்தருடைய போதனைகளுக்குத் தேவனும் உறுதியளிக்கின்றார் என்பதைச் சீஷர்கள் கவனித்து, நன்மையடைவதற்கே அளிக்கப்பட்டதாக, கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். இப்படியாகக் காதுகளுக்குக் கேட்குமளவில், தேவன் இன்று, தம்முடைய ஜனங்களிடம் பேசுவதில்லை. எனினும் தேவன் தம்முடைய வார்த்தைகள் மூலமாகவும், தம்முடைய வழிநடத்துதல்கள் மூலமாகவும், அதே அழுத்தத்துடன்தான், இப்பொழுதும் நம்மிடம் பேசுபவராக இருக்கின்றார். அன்றுபோல், இன்றும், சிலரே மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய்க் கேட்டு உணர்ந்து/ஏற்றுக்கொள்ளுபவர்களாகக் காணப்படுகின்றனர். தேவனுடைய வார்த்தைகளைத் தங்கள் கைகளில் பெற்றிருக்கும் சிலர், அதை வெறுமனே இன்னுமொரு புத்தகமாக மாத்திரமே காண்கின்றனர் மற்றும் தேவனுடைய ஜனங்களுடைய காரியங்களிலான அவருடைய வழிநடத்துதல்களையும் உணர்ந்துகொள்ள தவறிவிடுகின்றனர். இன்னும் சிலர் கர்த்தருடைய வார்த்தைகளில் ஒரு செய்தி இருக்கின்றது, அதுவும் நல்ல செய்தியாக இருக்கின்றது என்று கண்டு, வேதாகமத்திற்குப் பயபக்திக் காண்பிக்கின்றனர், மற்றும் அவருடைய வழிநடத்துதலில் தெய்வீகப் பராமரிப்பையும், கிறிஸ்துவின் சரீரம் தொடர்புடைய ஏற்பாடுகளையும் கொஞ்சம் காண்கின்றனர். ஆனால் 18 நூற்றாண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட தலை போன்று, இன்று ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட குமாரர்களாகிய கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் மாத்திரமே, பிதாவின் வார்த்தைகளைக் கேட்டு, தெளிவுடனும், புரிந்துக்கொள்ளுதலுடனும் காணப்படுகின்றனர். இவர்கள் தெய்வீக வழிநடத்துதல்களைக் கண்டு, அதில் களிகூரவும் உதவப்படுகின்றனர் மற்றும் இவர்களால் "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்" என்ற காரியங்களை உணர்ந்துக்கொள்ளவும் உதவப்படுகின்றனர் மற்றும் இவர்கள் அந்த அழைப்பிற்கு இணங்கி, தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நாடுகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர் (ரோமர் 8:24).

## "இவ்வுலகத்தின் அதிபதியானவன்"

"இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" (யோவான் 12:31) என்று இயேசு கூறினபோது, அவர் முன்பு, "வேளை வந்துள்ளது" என்று எந்த அர்த்தத்தில் குறிப்பிட்டாரோ, அப்படியாகவே, "இப்பொழுது" என்ற வார்த்தையையும் இங்குப் பயன்படுத்தியுள்ளார். 31-ஆம் வசனம் நிறைவேறுவதற்கு இன்னும், இப்பொழுது கொஞ்சக்காலம் காணப்படுகின்றது. இவ்வுலகத்திற்கான நியாயத்தீர்ப்பானது, தராசில் காணப்படுகிறதாகவும், சீக்கிரத்தில் தீர்மானிக்கப்படப் போகிறதாகவும் இருந்தது. முதலாவது பரீட்சை ஏதேனில் நடைப்பெற்றது; தகப்பனாகிய ஆதாமே பரீட்சையில் காணப்பட்டார்; மேலும் அவருடைய அரைக்குள் காணப்பட்ட முழு மனுக்குலமும் ஒரு விதத்தில் பரீட்சையில் காணப்பட்டு, ஆதாமோடு கூடத் தராசில் காணப்பட்டனர். அந்தப் பரீட்சையானது, ஆதாமுக்கும், அவருடைய சந்ததியாருக்கும் அழிவாக முடிவடைந்தது என்பதை நாம் அறிவோம். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (ரோமர் 5:12). உலகத்திற்கான அந்த (பரீட்சை மற்றும் தீர்ப்பு) நியாயத்தீர்ப்பானது மரணத்திற்கு ஏதுவானதாய் அமைந்தது, மற்றும் ஆதாம் மூலமாய் வந்த மரணமானது, நமது கர்த்தர் இவ்வார்த்தைகளைப் பேசும் வரைக்கும், 4161 வருடங்கள் ஆளுகை செய்ததாக இருக்கின்றது. ஆனால் இப்போதோ தெய்வீக ஏற்பாட்டின் கீழ், தேவனுடைய கிருபையின் கீழ், தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதாகவும் மற்றும் ஆதாமுக்கும், அவர் சந்ததியாருக்கும் ஜீவனை ஈடுபலியாக ஒப்புக்கொடுக்க விருப்பம் கொண்டுள்ள ஒருவர் ஈடுபலியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இவர் இப்பொழுது பரீட்சையில் காணப்படுகின்றார், மற்றும் முழு உலகத்தின் வாழ்க்கை முடிவு/விதியானது தராசில் காணப்படுகிறதாகவும், இவருடைய வெற்றியைச் சார்ந்துள்ளதாகவும் காணப்படுகின்றது. ஆகவேதான் நமது கர்த்தர், இப்போது, உலகத்தின் krisis அல்லது பரீட்சையானது, அதன் உச்சக்கட்டத்தில் காணப்பட்டது என்றும், பிதாவின் சித்தத்திற்குத் தாம் உண்மையாய் இருப்பதற்கும், அந்தச் சித்தத்திற்குக் கீழ்ப்படியும் வண்ணமாக தற்கால ஜீவியத்தை வெறுப்பதற்குமான தம்முடைய தீர்மானமே, உலகத்திற்குச் சாதகமான பரீட்சையைத் தீர்மானிக்கக் கூடியதாய் இருக்கின்றது என்று கூறினார்; ஏனெனில் ஆதாமின் மூலமாய்

உலகத்திற்கு மரணத்திற்கு ஏதுவான தீர்ப்பு வந்ததுபோல, கிறிஸ்துவின் மூலமாய் உலகத்திற்கு, ஜீவனுக்கு ஏதுவான நீதிமானாக்கப்படுதல் உண்டாகிறது என்று அப்போஸ்தலர் தெரிவித்துள்ளார்; தெய்வீகப் பிரமாணத்தைப் பொறுத்தமட்டில், இயேசு முழு உலகத்திற்கான முழுமையான தண்டனையை ஏற்றுக்கொண்டார்; ஆகையால் மனுக்குலத்தின் உலகத்தை விழிக்கப்பண்ணுவதன் மூலமாக, மனுக்குலத்தைக் கல்லறையினின்று மீட்பதற்கு மாத்திரமல்லாமல், கிருபையினை ஏற்றுக்கொள்பவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேர்களையும் ஆயிர வருட யுகத்தின் போதும், அதின் முடிவிலும், பாவம் மற்றும் மரணத்திலிருந்து பூரணத்திற்கும், தேவனுடனான இசைவிற்கும் கொண்டு வருவதன் மூலமாக, முற்றும் முழுமையாய் மீட்பதற்குமான உரிமையையும், வாய்ப்பையும் உடையவராக இயேசு காணப்படுவார். (ரோமர் 5:18, 19).

"இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளும், மேற்கூறிய காரியங்களுக்கு இசைவாக இருக்கின்றது. "எனக்குப் போய்க்கொண்டிருக்கும் பரீட்சையானது, மரணத்துக்கு ஏதுவான மனுக்குலத்தின் மீதான தெய்வீகத் தீர்ப்பை இரத்துச்செய்துவிடுவது மாத்திரமல்லாமல், அது இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுடைய கரங்களிலுள்ள, தற்கால தீமையின் ஆளுகையையும் கவிழ்த்துப் போடுகிறதாகவும் காணப்படும். அவன் புறம்பே தள்ளப்படுவான்; அவன் என்னுடைய ஆயிர வருட இராஜ்யத்தின் காலத்தில் விலங்கிடப்படுவான் அவன் பிற்பாடு அழிக்கப்படுவான்" என்ற விதத்தில் கர்த்தருடைய வார்த்தைகள் காணப்பட்டது. நமது கர்த்தருடைய வெற்றியின் மீது, உலகத்தின் நியாயத்தீர்ப்பும், பாவத்தின் வழியாய் உலகை தற்போது கைப்பற்றி வைத்துள்ளதை அப்புறப்படுத்துவதையும் சார்ந்து இருப்பதினால், இவைகள் அனைத்தும் நிறைவேறித் தீருவதற்குப் பல நூற்றாண்டுகள் தாண்ட வேண்டியிருப்பினும், இவைகளுக்கான காலம் அந்த வேளையிலிருந்து ஆரம்பிப்பதாகக் கர்த்தர் குறிப்பிடுவது சரியானதாகவே உள்ளது; அதாவது சாத்தானைக் கட்டுதல் மற்றும் ஆயிர வருட இராஜ்யத்தின் (கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபை எனும்) கருவிகளால், மனுக்குலத்தை ஆதாமின் தீர்ப்பிலிருந்து விடுவித்துத் தேவனுடைய குமாரர்களுக்குரிய மகிமையான சுதந்தரத்திற்குள், எந்த ஜீவனுக்கான தளத்திலும் நடத்துதல் ஆகியவைகள் அனைத்தும் நிறைவேறித் தீருவதற்குப் பல நூற்றாண்டுகள் கடந்துச் செல்ல வேண்டியிருப்பினும், அவைகளின் ஆரம்பத்தை, அந்த வேளையிலிருந்தெனக் கர்த்தர் குறிப்பிடுகின்றார். அனைத்து மனுஷர்களும் இந்தப் பரம இரக்கங்களையும், சிலாக்கியங்களையும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது; ஆனால் அனைவருக்கும் இதற்கான முழுமையான வாய்ப்புகள் கிடைக்கும்; ஆகவே இரண்டாம் மரணத்தில் மரிப்பவர்கள், தங்களுடைய சொந்த பாவங்களுக்காக மரிப்பார்களே ஒழிய, சுதந்தரித்துக்கொண்ட பெலவீனங்களுக்காக மரிப்பதில்லை. "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்" (எரேமியா 31:29, 30). (1 யோவான் 5:16).

## "கிறிஸ்து எல்லா மனுஷர்களை இழுக்கும்போது"

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" (யோவான் 12:32). இவ்வார்த்தைகளில், இயேசு தாம் இன்ன விதமாய் மரிக்கப்போவதைப் பற்றிக் குறிப்பிடுவதாக, சுவிசேஷத்தைப் பதிவு பண்ணினவர் கூறினாலும், இவ்வார்த்தைகளுக்கு இன்னும் அதிகமான அர்த்தங்கள் உள்ளன. "ஒருவேளை என்னுடைய உடன்படிக்கைக்கு ஏற்ப, நான் உண்மையாய் ஜீவனைக் கொடுத்தால் மற்றும் பிதா வாக்களித்துள்ள உயர்வான உயர்த்துதலை நான் பரம பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டால், அந்த உயர்த்தப்படுதலானது, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்கான வல்லமையையும் கொண்டு வருகிறதாய் இருக்கும். முதலாவதாகப் பிதாவின் சித்தம் மற்றும் முன்னேற்பாட்டின்படி, பிதா தாமே என்னிடத்தில் சபையை (அ) மணவாட்டியை இழுத்துக்கொள்வார்; இவர்களை நான் இழுத்துக்கொள்ளமாட்டேன், மாறாக பிதாவே இதைச் செய்வார்" என்ற விதத்தில் இயேசு கூறினார். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் (தற்காலத்தில்,இடுக்கமான வழியில்) என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன் (உயர்த்துவேன்);" "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்" (யோவான் 6:44; சங்கீதம் 46:5).

"இவர்கள் என்னுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும், முதலாம் உயிர்த்தெழுதலில் என்னோடு கூடப் பங்காளிகளாகவும் இவ்வாறாக உயர்த்தப்பட்ட பிற்பாடு, நான் என்னுடைய இழுத்துக்கொள்ளும் வேலையை ஆரம்பிப்பேன்; இது பிதா விசேஷித்த ஒரு வகுப்பாரான, இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரை இழுத்துக்கொண்டது போன்று இருப்பதில்லை. என்னுடைய இழுத்துக்கொள்ளுதலானது, ஒரு பொதுவான இழுத்துக்கொள்ளுதலாகும். நான் அனைத்து மனுஷர்களையும் இழுத்துக்கொள்வேன். ஆதாமின் மீறுதலினால், அனைவரும் இழந்திட்ட மனித பூரணத்தின் மகிமையான நிலையினிடத்திற்கும், இழந்ததைத் திரும்பப் பெறுவதற்கான உரிமையினிடத்திற்கும் படிப்படியாக, ஜனங்கள் கொண்டு வரப்படுவதற்கு ஏதுவாக, பிதாவின் பிரதிநிதியாகிய என்னிடத்தில் வருவதும், என்னிடத்திலிருந்து கடந்த காலத்தின் பாவங்களுக்கான முழுமையான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதும், நீதியின் அப்படிப்பட்டதான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதும், அப்படிப்பட்டதான சிட்சைகளைப் பெற்றுக்கொள்வதும், அப்படிப்பட்டதான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதும், அப்படிப்பட்டதான நியாயமான தீர்ப்புகளைப் பெற்றுக்கொள்வதும், உலகளாவிய வாய்ப்பாக இருக்கும். மனிதன் இழந்ததைத் திரும்பக்கொடுத்தலுக்கான இந்த உரிமை என்பது, என்னுடைய பூமிக்குரிய வாழ்க்கையை அருமையானது என்று நான் கருதாமல், அதை நான் மனுஷரை மீட்பதற்காகவும், இந்த உன்னதமான பரலோக நிலைமையை அடையத்தக்கதாகவும், நான் வெறுத்ததன் மூலமாகச் சம்பாதித்துக்கொண்ட உரிமையாக இருக்கின்றது. மேலும் தெய்வீக ஏற்பாட்டின்படி என்னோடு கூட இருப்பவர்களும், பிதாவினால் கனப்படுத்தப்படுபவர்களும், மற்றும் என்னால் என்னுடைய மணவாட்டி என்றும், சகோதர சகோதரி என்றும், உடன் சுதந்தரர்கள் என்றும் அழைக்கப்படக்கூடிய ஊழியர்களும், நானும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கின்றவர்களாய் இருப்போம்." (வெளிப்படுத்தல் 22:17; ரோமர் 8:17; கலாத்தியர் 3:16, 29).

**ஆமென்!**

---

# "அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக"

## மத்தேயு 25:14-30.

"ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும், தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்."—ரோமர் 14:12.

எரிகோவிலிருந்து, எருசலேமுக்குப் போகிற வழியில்தான், நமது கர்த்தர், பத்து ஊழியக்காரர்களுக்கு ஒன்றாகக்கொடுக்கப்பட்ட பத்து இராத்தல் பற்றின உவமையைக் கொடுத்திட்டார். (லூக்கா 19:11, 12). நாம் இப்போது பார்க்கின்ற தாலந்துகள் பற்றின உவமையானது இராத்தல் உவமை போலவே காணப்பட்டாலும், அது அநேக விஷயங்களில் வேறுபட்டதாகவே இருக்கின்றது. இந்த உவமையானது, நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதான சில நாட்களில், தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்திட்ட அவருடைய போதனைகளின் ஒரு பாகமாக இருக்கின்றது; அநேகமாக சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு வந்த செவ்வாய்க் கிழமையன்று எருசலேமிலிருந்து, பெத்தானியாவுக்கு மாலையில் பிரயாணம் பண்ணும்போது, இந்த உவமை கொடுக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். இந்த உவமையானது, தேவனுடைய ஊழியம் தொடர்புடைய விஷயத்தில், தேவனுடைய ஜனங்களுக்கு இருக்கும் பல்வேறு திறமைகள் குறித்தும், எவ்வாறு ஒவ்வொருவரும் தங்களது திறமைகளுக்குக் கணக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள் என்பது குறித்தும், அனைவரிடமும் ஒரே பலன் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை என்பது குறித்தும், ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் அந்தத் திறமையையும், வாய்ப்பையும் பயன்படுத்துவதில், உண்மையே எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்பது குறித்தும் நமக்கு விவரிக்கின்றது.

மத்தேயு 25:14-ஆம் வசனத்தில் இடம்பெறும், "பரலோக இராஜ்யம்" எனும் வார்த்தையானது, பழைய மூலப்பிரதிகளில் காணப்படுவதில்லை; இவ்வார்த்தை இங்கு இடம்பெறவில்லை என்பதற்காக, இங்குக் கருநிலையிலான பரலோக இராஜ்யமே (சபை) விவரிக்கப்பட்டு, தாலந்துகளைப் பெற்றுக்கொண்டுள்ள இந்த ஊழியக்காரர்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது எனும் கருத்தை மறுக்க முடியாது; ஏனெனில் இந்த உவமையானது, இராஜ்யத்தை விவரிக்கும் பத்துக் கன்னிகைகள் பற்றின உவமையை உடனடியாகப் பின்தொடர்ந்துவரும் உவமையாக இருக்கின்றது என்பது நினைவில்கொள்ளப்பட வேண்டும். ஆகையால் தாலந்துகள் பற்றின உவமையானது, இராஜ்ய வகுப்பாரைப்பற்றின கருத்தைத் தொடர்வதாக மாத்திரமே காணப்படுகின்றது.

(பத்து) அநேகம் எண்ணிக்கையிலான ஊழியக்காரர்கள் உவமையில் குறிப்பிடப்பட்டாலும், மூன்று பேர் மாத்திரமே உதாரணங்களாகக் காண்பிக்கப்படுகின்றனர்; ஆகவே மீதமானவர்களும் இந்த மூன்று பேருக்குள் அடங்குகின்றார்கள் என்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எந்த வகுப்பார் உயர்ந்திருப்பார்கள் என்பதைக் காட்டுவதற்கோ, போதிப்பதற்கோ இவ்வுவமை முயற்சிப்பதில்லை. இந்த விதத்தில் இது இராத்தல் பற்றின உவமை போன்று காணப்படுகின்றது. இந்த உவமையும் மற்ற உவமை போன்று, நமது கர்த்தர் தற்கால ஜீவியிலிருந்து, தூரதேசமாகிய பரலோகத்திற்குப் புறப்பட்டுப் போகும் விஷயத்தில், அப்போஸ்தலர்களுடைய மனங்களை ஆயத்தப்படுத்துவதற்கே கொடுக்கப்பட்டது; அதாவது, தாம் கல்வாரியில் நிறைவேற்றப் போகின்ற பாவங்களுக்கான மனுக்குலம் சார்பிலான பலியை, பிதாவின் சந்நிதியில் வைப்பதற்கென, பிதாவின் சந்நிதியில் பிரசன்னமாகுவதற்கும், பின்னர் முடிசூட்டப்படுவதற்கும், தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக கனப்படுத்தப்படுவதற்கும், உயர்வாய் உயர்த்தப்படுவதற்கும், தெய்வீகத் தயவின் வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்படுவதற்கும், மற்றுமாக தேவன் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படத்தக்கதாக, தமது இராஜ்யத்தை முழுமையாய்க் கையில் எடுத்து, வானங்களின் கீழ் அனைத்தையும் தெய்வீக அரசாங்கத்திற்கு முழு இசைவுடன் கொண்டு வருதவதற்கான நியமிக்கப்பட்ட வேளை வரும் வரையிலும், தாம் தேவனுடைய வலது பாரிசத்திலேயே காத்திருப்பதற்குமென, நமது கர்த்தர் தற்கால வாழ்க்கையை விட்டு, தூர தேசமாகிய பரலோகத்தினிடத்திற்குச் செல்லும் விஷயத்தில் அப்போஸ்தலர்களுடைய மனதைத் தயார்படுத்தும் வண்ணமாகவே, இவ்வுவமை கொடுக்கப்பட்டுள்ளது.

தூர தேசம்" எனும் வார்த்தையானது, ஆண்டவர் பூமியிலிருந்து போவதற்கும், பின்னர் தம்முடைய ஆயிர வருட இராஜய்த்தை ஸ்தாபிக்க திரும்பி வருவதற்கும் இடையே நீண்ட காலப்பகுதி இருப்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இதற்கிடையில் அப்போஸ்தலர்கள், தாங்கள் அவருடைய சொத்துகள் ஒப்படைக்கப்பெற்ற அவருடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றார்கள் என்றும், அவருக்கடுத்த காரியங்கள் மற்றும் நன்மைகளைப் பாதுகாப்பதில் தாங்கள் உண்மையாய்

இருந்து, இந்த அவருடைய காரியங்களை, நன்மைகளை அவர்களுடைய பல்வேறு திறமைகளைக் கொண்டு வளர்ச்சியுற செய்ய வேண்டுமென அவர் தங்களிடம் எதிர்ப்பார்ப்பார் என்றும் புரிந்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள். ஆனால் இந்த உவமையானது, பதினெட்டு நூற்றாண்டுகளுக்குரிய காலப்பகுதியை உள்ளடக்குவதினாலும், ஆண்டவர் திரும்பிவரும்போது வாழ்ந்துக்கொண்டிருக்கும் சில ஊழியர்களையும் உள்ளடக்குவதினாலும், இவ்வுமையானது அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமல்லாமல், நமது கர்த்தர் ஜெபம் பண்ணினதுபோன்று, அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலமாக கர்த்தரை விசுவாசிக்கின்றவர்கள் அனைவருக்காகவும் கூடக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகுகின்றது. இவ்வுவமையானது உலகத்திற்கானதல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும்; நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, எடுக்கப்படும் தீர்மானங்கள் எந்த விதத்திலும் உலகத்தைப்பற்றின தீர்மானங்களாய் இராமல், சபையைப்பற்றின தீர்மானங்களாய் மாத்திரமே இருக்கின்றது என்பதையும் நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். உவமையானது பொதுவான "விசுவாச விட்டாரை" உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது; மாறாக, கர்த்தரால் குறிப்பிட்ட பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட அவருடைய விசேஷித்த அர்ப்பணம் பண்ணபட்ட ஊழியக்காரர்களையே உள்ளடக்குகின்றது என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்; அதாவது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களை மாத்திரமே உள்ளடக்குகின்றது, என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி பொழியப்பட்ட பிற்பாடு, ஆதி திருச்சபையில், ஒவ்வொரு அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசியும் வரங்கள் (அ) தாலந்துகள் பெற்றுக்கொண்டனர். சிலர் அநேகம் பெற்றுக்கொண்டனர். "(ஒரு தாலந்தாகிலும்) ஆவியினுடைய அநுக்கிரகம் (அர்ப்பணிக்கப்பட்ட சபையிலுள்ள) அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கின்றது" (1 கொரிந்தியர் 12:7). ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்டிருக்கும் தாலந்துகள் (அ) ஆவியின் வரங்களுக்குத்தக்கதாகப் பொறுப்பை உடையவர்களாய் இருக்கின்றனர்; அப்போஸ்தலனாகிய பவுல், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான தாலந்துகளை/வரங்களைப் பெற்றிருந்து, அதிகம் வாய்ப்புகளை உடையவராய் இருந்தபடியினால், அதிகம் பொறுப்புடையவராகக் காணப்பட்டார்; மேலும் ஆண்டவருடைய பார்வையில் பவுல் மிகவும் அங்கீகரிக்கப்படத்தக்க விதத்தில் தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்றினார் என்று நாம் எண்ணுகின்றோம் (1 கொரிந்தியர் 14:18). ஆனால் இந்த வரங்கள் கொஞ்சம் காலத்திற்குள்ளாக, அப்போஸ்தலர்களின் மரணத்திற்குப் பிற்பாடு ஓய்ந்துவிட்டது; ஏனெனில், ஆவியின் வரங்களானது அப்போஸ்தலர்கள் விசுவாசிகள்மேல் கைகள் வைத்த போதுதான், விசுவாசிகளுக்கு இந்த வரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டது என்றும், இந்த வரங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட வண்ணமாகத் தேவனிடத்திலிருந்து ஒவ்வொரு நபருக்கும் வரவில்லை என்றும், அப்போஸ்தலர்களாலேயே அல்லாமல், வேறெவராலும் இந்த வரங்களை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியாது என்றும் நம்மால் தெளிவாய்க் காணமுடிகின்றது. (அப்போஸ்தலர் 8:12-20).

ஆதி சபையை ஸ்தாபிக்கும் நோக்கத்திற்காகவே இந்த வரங்கள் கொடுக்கப்பட்டது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம்; மற்றும், சபை ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு வரங்களின் அவசியம் முடிந்தது, ஆகையால் வரங்கள் இந்த விதத்தில்/வடிவத்தில் ஓய்ந்துவிட்டது; மற்றும் இவ்விதத்தில் ஓய்ந்தது முதல், வரங்களானது இன்றுவரை கர்த்தருடைய ஜனங்களுக்கு வேறே விதத்தில்/வடிவத்தில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது; அதாவது ஓய்ந்தது முதல், ஒவ்வொருவனும் பிறப்பின் மூலமாகவும், கல்வி அறிவின் மூலமாகவும், பயிற்சியின் மூலமாகவும், பெற்றிருக்கும் இயல்பான தாலந்துகளானது, அவன் தன்னைக் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணி, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது, பரிசுத்த ஆவியினுடையதாய்க் கருதப்படுகின்றது; ஆகையால் இந்தத் தாலந்துகள் (அ) திறமைகள் அவனுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது; மேலும், அதைப் பயன்படுத்தும் விஷயத்தில் மற்றும் பலன் கொடுப்பதில் அவன் பொறுப்பாளியாக வைக்கப்படுகின்றான். ஒருவேளை அவன் உலகத்தானாகவே இருந்திருந்தால், அவனுக்கு வேறே பொறுப்புகள் காணப்பட்டிருந்திருக்கும்; ஆனால் இப்படிப்பட்டதான உலகத்தாரைக் குறித்து இந்த உவமையில் சொல்லப்படாமல், மாறாக அர்ப்பணம் பண்ணியுள்ள ஊழியக்காரர்கள், தங்கள் ஆண்டவருடைய ஆவிக்குரிய ஆஸ்திகளைப் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில், கொண்டிருக்கும் பொறுப்பு மாத்திரமே இவ்வுமையில் குறிப்பிடப்படுகின்றதாய் இருக்கின்றது.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் ஐந்து தாலந்து உடையவர்கள், சொற்பமானவர்களாகவே காணப்படுவார்கள் என்பது நமக்கு உறுதியே. பெரும்பான்மையான பரிசுத்தவான்கள் ஒரு தாலந்தும், இரண்டு தாலந்தும் உடையவர்களாகத்தான் காணப்படுவார்கள். உலகத்திலுங்கூட ஐந்து

தாலந்துகள் உடையவர்கள் அநேகரில்லை; மேலும், இப்படியாக ஐந்து தாலந்துகள் கொண்டுள்ளவர்களை உலகமும், மாம்சமும், பிசாசும் அதிகமாய் அதற்கே ஊழியஞ்செய்யத்தக்கதாக வைத்துள்ளப்படியால், இப்படிப்பட்டவர்களில் மிகச் சொற்பமானவர்களே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஆகும்படிக்கும், தங்களுடைய ஐந்து தாலந்துகளை முற்றும், முழுமையாகக் கர்த்தருடைய வேலைக்கு என அர்ப்பணம் பண்ணும்படிக்கும் முன் வருபவர்களாக இருக்கின்றனர். "அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை."

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மத்தியில், ஐந்து தாலந்துடையவர்களாய் இருக்கின்றவர்கள், தங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுக்கொண்டு, "நான் போதுமானளவுக்குச் செய்துள்ளேன்; நிச்சயமாய் ஒரு தாலந்துடைய சகோதரன் "A" அவர்களைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்துள்ளேன்; இரண்டு தாலந்துகளையுடைய சகோதரன் "B" அவர்கள் அளவுக்கும் நான் செய்துள்ளேன்" என்று சொல்லக்கூடாது என்பதை இந்த உவமை நமக்குக் காட்டித்தருகின்றதாய் இருக்கின்றது. மாறாக ஒவ்வொரு சீஷனும், ஆண்டவர் தன்னிடம் கொடுத்துள்ள இயல்பான திறமைகளின் தாலந்துகளையும், வாய்ப்புகளையும் உண்மையாய் அறிந்திட நாடவேண்டும்; மற்றும் இந்தத் தாலந்துகளையும், வாய்ப்புகளையும் கொண்டு, கர்த்தருக்கு அதிகமான கனிகளையும், அதிகமான துதிகளையும், அதிகமான ஊழியங்களையும், அதிகமான கனத்தையும் விளைவிக்கத்தக்கதாக முற்றும் முழுமையாகவும், முடிந்தமட்டும் ஓயாமல் பயன்படுத்தவும் நாட வேண்டும் என்று உவமை நமக்குக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. ஐந்து தாலந்துகளை உயைடவர்கள், காரியங்களைச் சோம்பலான கண்ணோட்டத்தில் பார்க்காதபடிக்கு, இச்சோம்பலைத் தடைபண்ணும் வண்ணமாக, இவ்வுமையானது ஐந்து தாலந்துடைய ஊழியர்களுக்கு ஒரு கட்டுப்பாட்டை வைக்கிறது. இவ்வுமையானது, பெரிய வாய்ப்புகளையும், பெரிய இயல்பான தாலந்துகளையும் கொண்டவர்களிடத்தில், கர்த்தர் பெரிய காரிங்களை எதிர்ப்பார்ப்பது போன்று, சிறிய தாலந்துகளையும், வாய்ப்புகளையும் உடையவர்களிடத்தில் கர்த்தர் பெரிய காரியங்களை எதிர்ப்பார்ப்பதில்லை என்று காண்பிப்பதன் மூலமாக, கொஞ்சம் தாலந்து உடையவர்களுக்கு இவ்வுவமை உற்சாகமளிக்கின்றதாயும் இருக்கின்றது. சிறிய தாலந்துகளையும், வாய்ப்புகளையும் உடையவர்கள், தங்களுடைய கைக்கு அகப்படுவது எதுவோ, அதைத் தங்கள் முழுப்பலத்துடன் செய்யவேண்டும் என்றும், இந்தப் புத்தியுள்ள ஆராதனையே கர்த்தர் எதிர்ப்பார்க்கிறதும், பலன் கொடுப்பதாகக் கூறியதுமாகிய காரியமாக இருக்கின்றது என உணரவும் வேண்டும் என்றும் இவ்வுவமையானது கற்றுக்கொடுக்கின்றது. ஒரே ஒரு தாலந்தையும், வாய்ப்பையும் கொண்டிருந்த ஊழியக்காரன், தன்னுடைய தாலந்திற்கு ஏற்ப (அதாவது மற்றவர்கள் தங்களுக்குரிய தாலந்திற்கு ஏற்ற பொறுப்பைக் கொண்டிருப்பது போன்று) பொறுப்புடையவனாய் இருக்கின்றதை உணர்ந்திருக்க வேண்டும்; மேலும், அவன் உண்மையுள்ளவனாய்க் காணப்பட்டிருப்பானானால், அவன் சரிசமமான ஆண்டவருடைய அங்கீகரிப்பையும் பெற்றிருப்பான்; மேலும், அவன் உண்மையுள்ளவனாய் இருந்திருந்தானானால் அவனுடைய ஒரு தாலந்து, இரண்டு தாலந்தாக அதிகரித்திருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

உவமையில் ஒரு தாலந்தைப் பெற்ற மனுஷனே நிலத்தைத் தோண்டி, அதைப் புதைத்துப் போட்டவனாக கர்த்தர் கூறிய காரியத்தை வைத்து, அதிகம் தாலந்துகள் உடையவர்களைப் பார்க்கிலும் குறைவான/ஒரு தாலந்துடையவர்களே, இப்படியாகத் தாலந்துகளைப் புறக்கணிப்பவர்களாகவும், அவைகளைத் தவறாய்ப் பயன்படுத்துபவர்களாகவும் அதிகம் இருப்பார்கள் என்ற விதத்தில் நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. நாம் பார்த்தது வரையில், ஒரே ஒரு தாலந்துடையவர்கள் புதைப்பதுபோல, இரண்டு தாலந்தும், ஐந்து தாலந்தும் உடையவர்களாகிய அநேக பேர்க்கூட, நிலத்தைத் தோண்டி, தங்கள் தாலந்துகளைப் புதைத்துப் போட்டவர்களாக இருக்கின்றனர்; மேலும் இப்படியாகச் செய்ததற்காக, ஒரு தாலந்துடைய மனுஷனைக் காட்டிலும், அதிகம் தாலந்துடைய மனுஷன் அதிகமாய் குற்றம் சாட்டப்படுவதற்குரியவனாய் இருக்கின்றான். பின்னர் ஏன் ஒரு தாலந்தையுடைய மனுஷன், தாலந்துகளைப் புதைத்துப் போடுவதற்காக உவமையில் தெரிந்துக்கொள்ளப்பட்டவனாய் இருக்கின்றான்? குறைவான தாலந்துகளை உடையவர்களின் பொறுப்பைக் காண்பிப்பதற்கே உவமையில் ஒரு தாலந்துடைய மனுஷன், தாலந்துகளைப் புதைத்துப் போட்டவனாகக் காண்பிக்கப்படுகின்றான்; அதாவது, கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணின ஜனங்களில் சிறியவர் கூட, தன் தாலந்துகளை அறிந்து, தன்னிடத்திலுள்ள தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டுமெனக் கர்த்தர் எதிர்ப்பார்க்கின்றார் என்றும், தமக்கும், சகோதர, சகோதரிகளுக்கும், சத்தியத்திற்கும் ஊழியம் புரிவதற்குச் சிறிய திறமைகள் கொண்டிருந்து அதைப் பயன்படுத்தாமல் புறக்கணிப்பவர்களைக்கூடக் கர்த்தர் குற்றமற்றவர்களாய் விட்டுவிடுவதில்லை என்றும் காண்பிப்பதற்கே ஒரு தாலந்துடைய மனுஷன், தாலந்துகளைப் புதைத்துப் போட்டவனாக உவமையில் காண்பிக்கப்படுகின்றான். அதிகமான தாலந்துடையவர்களின் பொறுப்பானது அதிகமாய் இருப்பதுபோல, அவர்களின் விஷயத்தில் இழப்புகள் என்பதும் அதிகமாய் இருக்கும்; மற்றும் இப்படியாகத் தண்டனையும் அதிக கடுமையானதாகக் காணப்படும்.

"வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்" (மத்தேயு 25:19). இந்த வார்த்தைகள் மூலமாக நமது கர்த்தர், தம்முடைய சீஷர்கள் வெகு சில நாட்களுக்குள், சில மாதங்களுக்குள் (அ) சில வருடங்களுக்குள் தாம் திரும்பி வந்து, கணக்குக் கேட்பார் என்று எதிர்பார்க்கக்கூடாது என்ற உண்மையைத் தெளிவாய்த் தெரிவித்துள்ளார்; ஆனால் சீஷர்கள் அந்தக் குறிப்பிட்டக் காலத்தைக் குறித்து, அவரிடம் கேட்ட போதோ, காலங்களையும், வேளைகளையும் அறிவது சீஷர்களுக்கடுத்த காரியமாய் இராமல், அது பிதாவுக்கு அடுத்த காரியமாய் இருக்கின்றது என்று கூறி, சீஷர்களுக்குப் பதில் கொடுக்க கர்த்தர் மறுத்துவிட்டார். ஆகவே பதினெட்டு நூற்றாண்டுகள் காலமாக, கர்த்தருடைய ஜனங்கள் இக்காரியத்தில், தெளிவான தகவல் இல்லாத நிலைமையிலேயே விடப்பட்டுள்ளனர். எனினும் இவ்விஷயம், இப்போதைய காலத்தில், காலங்களையும், வேளைகளையும் பற்றிக் கொஞ்சம் அறிந்துக்கொள்வது என்பது தேவனுடைய ஜனங்களின் சிலாக்கியமாய் இருக்கின்றது என்ற கருத்தை எதிர்ப்பதில்லை; ஏனெனில், தேவனுடைய ஜனங்களுக்குத் தேவன் காரியங்களைத் தெரியப்படுத்த விரும்புவதற்கான ஏற்றவேளையாக இப்போதைய காலப்பகுதிக் காணப்படுகின்றது. "ஞானவான்களோ உணர்ந்துக்கொள்ளுவார்கள்" (தானியேல் 12:10; 1 தெசலோனிக்கேயர் 5:4; யோவான் 16:13).

அநேகரால் விசுவாசிக்கப்பட்டு வருவது போன்று, சீஷர்கள் மரித்துப்போய், பின்னர் தங்களுடைய கர்த்தரினிடத்திற்குச் சென்று, கணக்குக் கேட்கப்பட்டு, பலன் அளிக்கப்படுவார்கள் என்பதான எந்தக் குறிப்பும் உவமையில் காணப்படவில்லை. வேதவாக்கியங்களானது, "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை" என்றும், இயேசுவைத் தவிர, "பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்றும் தெரிவிப்பதோடல்லாமல், நமது கர்த்தர் தம்முடைய ஜனங்களைத் தம்மிடத்திற்கு ஏற்றுக்கொள்ளவும், பின்னர் பலனளிக்கவும் தக்கதாக இரண்டாம் முறை வருவார் என்றும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. ஐந்து தாலந்துகளைக் கொண்டவர்களில் ஒருவரான அப்போஸ்தலனாகிய பவுலும், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது (காத்திருக்கின்றது), நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்ற வார்த்தைகளையே கூறுகின்றார். (2 தீமோத்தேயு 4:7, 8; யோவான் 3:13; 14:3; அப்போஸ்தலர் 2:34).

நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி, நாம் இப்பொழுது, "மனுஷகுமாரனுடைய நாட்களில்" வாழ்ந்து கொண்டு வருகின்றோம், மற்றும் அவருடைய இந்த வந்திருத்தலின் நாளில், அவர் தம்முடைய ஊழியக்காரர்களிடம், இப்பொழுது கணக்குக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். நித்திரையில் காணப்படுகின்ற ஊழியக்காரர்களிடம் இந்தக் கணக்குக் கேட்குதல் ஆரம்பமாக வேண்டியிருக்கின்றது என்றும், கணக்குக் கேட்கப்படும் விஷயத்திலும், பலனளிக்கப்படும் விஷயத்தில், இவர்களை, "கர்த்தருடைய வருகையின் போது, உயிரோடிருக்கும் நாம்" தடைப்பண்ணவோ, முந்திகொள்ளவோ கூடாது என்றும், வேதவாக்கியங்களின்படி (தரிசித்ததினால் அல்லாமல், விசுவாசத்தினால்) நாம் புரிந்து இருக்கின்றோம். (1 தெசலோனிக்கேயர் 4:15-17). நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி 1878-ஆம் வருடமானது நமது கர்த்தர் தம்முடைய இராஜரிக அதிகாரத்தை எடுத்துக்கொண்ட வருடமாகவும், மகா பாபிலோனின் மீதான அவருடைய நியாயத்தீர்ப்பானது, "அவள் விழுந்தாள்" என்று சொல்லப்பட்டதன் மூலமாகவும், தேவனுடைய ஜனங்களனைவரும் அவளைவிட்டு வெளியே வரும்படியாக அழைக்கப்பட்டதன் மூலமாகவும், வெளிப்பட்டதின் வருடமாகவும் இருக்கின்றது. இன்னுமாக இந்த வருடமே, கடந்த காலத்து உண்மையுள்ள ஜெயங்கொண்டவர்கள், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கான வருடமாகவும், அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கின்ற வருடமாகவும், "நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்ற அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்குமான வருடமாகவும் இருக்கின்றது. இதற்கு இசைவான நம்முடைய புரிந்துக்கொள்ளுதல் என்னவெனில், இந்த வகுப்பாரில் அனைவரும், இப்பொழுது உண்மைள்ளவர்களுக்கென்று வாக்களிக்கப்பட்டுள்ள மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். ஊழியக்காரர்களுக்கான இந்த நியாயத்தீர்ப்பு என்பது, உலகத்திற்கான நியாயத்தீர்ப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்; உலகத்திற்கான நியாயத்தீர்ப்பு என்பது, அனைத்து விதத்திலும் வேறுபட்டதாகவும், ஆயிர வருட யுகத்தின்போது நடக்கிறதாக இருந்து, வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டின் உவமையினால் அடையாளப்படுததப்படுகின்றதாய் இருக்கின்றது; இந்த வெள்ளாடு, செம்மறியாடு உவமையில், இப்போது, தற்காலத்தில் பரீட்சையில் காணப்படுபவர்களாகிய உண்மையுள்ள ஊழியக்காரர்கள், அதாவது தாலந்து உவமையில் கணக்குக்கேட்பது தொடர்பாகவும் பலனளிக்கப்படுவது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ள இந்த உண்மையுள்ள ஊழியக்காரர்கள், அப்போது, கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரமாகவே, அவரோடு கூட அவருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்திருப்பார்கள். (வெளிப்படுத்தல் 3:21).

மற்ற வேதவாக்கியங்கள் தெரிவிப்பது போன்று, "கர்த்தருடைய பிரசன்னத்தின் காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம்" மகிமையடைந்தவர்களை முந்திக்கொள்ள முடியாவிட்டாலும், நாம் மகிமையடையும் வகுப்பாரிலிருந்து தவிர்க்கப்படுவதில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்களிடம் கணக்குக் கேட்கும் விஷயமும், பலன் வழங்கப்படும் விஷயமும், மரணத்தில் நித்திரைப் பண்ணிக்கொண்டிருக்கும் ஊழியர்களைப் பொறுத்தமட்டில் 1878-ஆம் வருடத்தில் ஆரம்பமாகி, உயிரோடு இருப்பவர்கள் தொடர்புடைய விஷயத்தில் தொடர்ந்து, நீடித்துக்கொண்டிருக்கின்றது; கர்த்தருடைய பிரசன்னத்தின் காலத்தில் ஜீவித்துக்கொண்டிருப்பவர்கள் தங்களுடைய அர்ப்பணிப்பின் ஒப்பந்தத்தின்படி, அனைத்தையும் முடிப்பதற்கும், முதிர்ச்சியடைந்த கோதுமை மணிகளாக ஆகுவதற்கும், தங்கள் கணக்குகளை ஒப்புவிக்கத்தக்கதாகவும் போதுமான காலம் வழங்கப்படுகின்றனர். இப்பொழுது அதாவது, அவருடைய பிரசன்னத்தின் காலங்களில் தங்களது ஓட்டத்தை நிறைவுசெய்பவர்கள், உடனடியாக தங்கள் கணக்கை ஒப்புவிக்கலாம்; மற்றும், மரண நித்திரையில் காணப்பட வேண்டிய அவசியமில்லை; மற்றும், இராஜாவின் வருகைக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை; மாறாக, மரிக்கும் தருணத்திலேயே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு, உடனடியாக முதாலம் உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதமாகிய மகிமை, கனம் மற்றும் அழியாமையை, முழுமையாய் அனுபவிப்பவர்களாய் இருப்பார்கள்.

உவமையின் இந்தக் கண்ணோட்டத்தின்படி, இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றார்கள் என்பதை உணரும்போது, அர்ப்பணிக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவரும் (பகற்காலமாய் இருக்கும்பொழுதே, இரவு . . . வருவதற்கு முன்னதாக) தன்னை முற்றும் முழுமையாய் ஆராய்ந்துகொள்வானாக; அதாவது கர்த்தருக்கு ஊழியம் புரியத்தக்கதாக எந்தளவுக்குத் தன்னிடம் தாலந்துகளும், திறமைகளும், சிலாக்கியங்களும், வாய்ப்புகளும் காணப்படுகின்றது என்றும், எந்தளவுக்கு தான் அதைப் பயன்படுத்துகின்றான் என்றும் உறுதிப்பண்ணிக்கொள்ளத்தக்கதாகவும், தான் தனது தாலந்துகளைப் பயன்படுத்துவதில் காண்பிக்கும் உண்மையின் மீது, தான் அடையப்போகும் பலன் சார்ந்துள்ளது என்பதை நினைவில் கொள்ளத்தக்கதாகவும் தன்னை முற்றும் முழுமையாய் ஆராய்ந்துகொள்வானாக. ஐந்து தாலந்துகள் கொண்டிருப்பவர்களில் சிலர், கர்த்தருடைய ஊழியத்திற்கென, ஐந்தில் மூன்றை உண்மையாய்ப் பயன்படுத்துபவர்களாய் இருந்து, மற்ற இரண்டையும் ஜீவியத்தின் கவலைகளிலும், தொழில்களிலும், அதாவது பூமியில், பூமிக்குரிய காரியங்களில் புதைத்துப் போடுபவர்களாய்க் காணப்படலாம். இன்னுமாக, இரண்டு தாலந்துடையவர்களில் சிலர், ஒரு தாலந்தைக் கர்த்தருக்கான ஊழியத்தில் பயன்படுத்தி, மற்றொன்றைப் புதைத்துப் போடுகின்றவர்களாய்க் காணப்படலாம்; இப்படியாக கர்த்தர் உதாரணம் கொடுக்காத காரணத்தினால், இப்படியாகச் சிலர் நடக்க வாய்ப்பு உண்டோ என்று கேள்வி எழும்பலாம். சிலர் இரண்டு தாலந்துகளைப் பரம காரியங்களுக்குப் பயன்படுத்தலாமென்றும், மீதி மூன்றைப் பூமிக்குரிய காரியங்களுக்குப் பயன்படுத்தலாமென்றும் திட்டமிடுகிறவர்களாகக் காணப்படலாம்; சிலர் ஒன்றைப் பூமிக்குரிய காரியத்திற்கும், மற்றொன்றைப் பரம காரியத்திற்கும் பயன்படுத்தலாமென்றும் திட்டமிடுகிறவர்களாகக் காணப்படலாம்; இதன் விளைவாக ஒன்றில் அவன் பூமிக்குரிய காரியங்களில் முழுமையாக மூழ்கிப்போய், பூமியில் தன்னுடைய அனைத்துத் தாலந்துகளையும் புதைத்து விடுகிறவனாய் இருப்பான், இல்லையேல் அவனது இருதயம் கர்த்தருடைய ஆவியில் முழுமையாய் நிரம்பப்பெற்று, கர்த்தருடைய நோக்கங்களுக்காக, தன்னுடைய தாலந்துகளனைத்தையும் பயன்படுத்துவதற்கு வாஞ்சிப்பவனாய் இருப்பான். இக்காரியம் தொடர்பாகவே, நமது கர்த்தர் வேறொரு இடத்தில், "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" என்றும் "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது" என்றும் கூறியுள்ளார் (லூக்கா 16:15) . இதற்கு அனுபவமும், கவனித்துப் பார்த்து உணர்ந்த விஷயமும் இசைவாகவே காணப்படுகின்றது; ஆகவேதான், சிலர் ஆவிக்குரிய காரியங்களில் ஒன்றில் குளிரானவர்களாக (அ) அனலானவர்களாகக் காணப்படுவதை நம்மால் பார்க்க முடிகின்றது; ஒன்றில் பரலோக இராஜ்யமே முதன்மையானதாகவும், அனைத்தையும் விட மேன்மையானதாகவும், நம்முடைய சிறந்த நேரத்தையும், ஆற்றலையும், செல்வாக்கையும் எதிர்ப்பார்க்கிறதாகவும், எடுத்துக்கொள்கிறதாகவும் காணப்படும்; இல்லையேல், பரலோக இராஜ்யமானது புறக்கணிக்கப்பட்டு, மறந்து போகப்பட்டும், நாம் நேரமும், செல்வாக்கும், பணத்தைச் சம்பாதிப்பதற்கோ அல்லது சுயநலமான காரியத்திற்கோ பயன்படுத்தப்பட்டும், மனமும் சரீரமும் பூமிக்குரிய தொழில்களில் ஈடுபட்டும் காணப்படும்.

கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணியுள்ள ஜனங்கள் ஒவ்வொருவருக்குமான பாடம் . . . நாம் தேவனுடைய இராஜ்யத்தையே முதலாவதாக (பிரதானமானதாக) நாட வேண்டும் என்பதேயாகும். இதுவே நம்முடைய பிரதானமான அக்கறையாகக் காணப்பட்டு, நம்முடைய நேரத்தையும், கவனத்தையும், எண்ணங்களையும், ஆற்றலையும், செல்வாக்கையும், தற்கால ஜீவியத்திற்கு அவசியமானவைகள் தவிர மற்றபடி நம்மிடத்திலுள்ள வளமைகளையும்,

நம்மிடத்திலிருந்து கவர்ந்து போடுகிறதாயும் இருக்கவேண்டும்; மேலும் தற்கால ஜீவியத்திற்கு நமக்கு அவசியமானவைகளைக்கூட, நாம் பரலோக காரியங்களுக்கடுத்த நன்மைகளுக்கெனப் பலிச் செலுத்த விரும்பும் அளவுக்குத்தக்கதாக, நமது அன்பும், வைராக்கியமும் வெளிப்படுகிறதாகவும் இருக்கும்.

உவமையில் உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கென வழங்கப்படும் பலனானது, ஒவ்வொருவரின் விஷயத்திலும் ஒன்றாகவே காணப்படுகின்றது; அதாவது, கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்தலாகும்; இதன் அர்த்தமாவது, ஒவ்வொருவருக்குமான சந்தோஷத்தினுடைய பாத்திரம் நிரம்பி இருப்பதைக் குறிப்பதாக இருக்கும். இதிலுங்கூட, நம் அனைவருக்கும் மாபெரும் உற்சாகம் அளிக்கப்படுகின்றது; மேலும் இது ஒன்றோ, இரண்டோ வாய்ப்புகளுக்கான தாலந்துகளை உடையவர்களாகிய, பெரும்பான்மையான கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விசேஷமாய் அவசியமான ஒன்றாகும். ஐந்து (அ) பத்துத் தாலந்துகளை உடையவர்கள் போன்று, குறைவான தாலந்து உடையவர்களுக்கும், கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்கான சரிசமமான நல்ல வாய்ப்பு உள்ளது; "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" எனும் பலனானது, அநேகம் தாலந்து உள்ளவர்களுக்கும், குறைவான தாலந்து உள்ளவர்களுக்கும், முற்றும் முழுமையாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

இந்த ஊழியக்காரர்களுக்கு வழங்கப்படும் பலனானது, உவமையில் விவரிக்கப்பட்டுள்ளவைகளுக்கு இசைவாகவே காணப்படுகின்றது; ஆயிர வருட யுகத்தின்போது, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய, உண்மையுள்ள ஊழியக்காரர்கள், உலகத்தை ஆளுபவர்களாகவும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாகவும், ஆளுகையில் அவருடைய சிங்காசனத்தில் உட்காருகிறவர்களுமாய் இருப்பார்கள். ஏனெனில், "கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்; அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்" என்பதாகவே பலன் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை இந்த உவமையானது, உலகத்தின் நியாயத்தீர்ப்பை அடையாளப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்குமானால், உவமையின் இந்த முடிவானது பொருத்தமற்றதாகக் காணப்பட்டிருக்கும்; ஏனெனில், உலகத்தின் நியாயத்தீர்ப்பானது முடிவுபெறும்போது, இப்படியான விதத்தில் ஆளுகைத்துவத்திற்கான அவசியம் காணப்படாது; "ஏனெனில், கிறிஸ்து, அனைத்து அதிகாரங்களையும் பரிகரித்துப் போடும் வரைக்கும், அவர் (ஆயிர வருடத்தின் போது) ஆளுகை செய்து, தேவனுடைய இராஜ்யத்தைத் தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்புக்கொடுப்பார்" என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார் (1 கொரிந்தியர் 15:24, 25). இப்பொழுது மனுஷர்கள் மத்தியில் காணப்படுகின்ற அநீதியின் ஆளுகையைக் கவிழ்த்துப் போடுவதற்கும், மனுக்குலத்தைத் தற்போதைய பாவம் மற்றும் மரணத்தின் நிலைமையினின்று தூக்கிவிடுவதற்கும், சாத்தானுடைய வல்லமையினின்று, தேவனுடைய குமாரர்களுடைய சுயாதீனத்திற்குள் விடுவிக்கப்பட விருப்பம் உள்ளவர்களை விடுவிப்பதற்குமென, ஆயிர வருட யுகத்தின்போது நீதியின் ஆளுகை, மத்தியஸ்தரின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். மேலும், இந்த வேலைகள் அனைத்தும் நிறைவேற்றி முடியும்போது, இப்படியாக ஆளுகை செய்வதும் முடிவிற்கு வரும்; ஆகவே இந்த உவமையானது, ஆயிர வருட யுகத்திற்கு முன்னதான நமது கர்த்தருடைய வருகைக்கும், அவருடைய உண்மையுள்ளவர்களாகிய, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் உயர்த்தப்படுதலுக்கும் பலத்த ஆதாரமாய்க் காணப்படுகின்றது.

தனது தாலந்தை நிலத்தில் புதைத்துப்போட்டு, அதைப் பயன்படுத்த தவறிவிடுகின்ற ஊழியக்காரன், எஜமான் மிகவும் கடுமையானவர் என்றும், கொடுமையானவர் என்றும் அவர்மேல் பழிச் சுமத்திக்கொண்டு, தன்னுடைய செயலை நியாயப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றவனாய்க் காணப்படுகின்றான். இப்படியாகவே கர்த்தருக்கு அர்ப்பணிப்பின் வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு, அவைகளை நிறைவேற்றுவதில் தவறிப்போய்விடுபவர்களாக நடந்துக்கொள்பவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் தங்களைக் குற்றஞ்சாட்டுவதற்குப் பதிலாக, கர்த்தரைக் குற்றஞ்சாட்டுபவர்களாய்க் காணப்படுகின்றனர்; மேலும் இப்படியாக நடந்துக் கொள்வதென்பது, இவர்கள் உண்மையில் அன்பின் விஷயத்தில் குறைவுபட்டிருப்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் கர்த்தரைப் போதுமானளவுக்கு முழுமையாய் அன்புகூருவதில்லை; மேலும், இந்த உண்மையை இவர்களது செயல்பாடானது வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை இவர்கள் கர்த்தரை அன்புகூர்ந்தார்களானால், இவர்கள் தங்களால் முடிந்த மட்டும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சிக்கொள்பவர்களாய் இருப்பார்கள்; மற்றும் இப்படிப்பட்டவர்களே பலன்களினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

தங்களுடைய உடன்படிக்கைக்கு ஏற்ப, ஊழியக்காரர்களாய்ச் செயல்படுவதற்குத் தவறிவிடுபவர்களுக்கு, இந்த உடன்படிக்கையின் கீழ்க்கொடுக்கப்பட்ட தாலந்துகளைப் பயன்படுத்த தவறிவிடுபவர்களுக்கு உரிய தண்டனையானது, மிகப்பெரிய இழப்பாகக் காண்பிக்கப்பட்டுள்ளது;

ஆனால் இந்த இழப்பு என்பது, ஜெயங்கொள்பவர்கள் தவிர மற்றபடி அனைவருக்கும் பாவத்தின் சம்பளமாக நித்திய காலமாய்ச் சித்திரவதைக் கொடுக்கப்படும் எனும் கூற்றினால் குருடாக்கப்பட்ட மனங்களை உடையவர்களின் அனுமானத்தின்படியான இழப்பாகக் காணப்படுவதில்லை.

குருடாக்கப்பட்டவர்கள், இந்த உண்மையற்ற ஊழியக்காரன் சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு, எரிகிற நெருப்பில் சித்திரவதைப்படுத்தப்படுவான் என்று கூறுகின்றனர்; இப்படியான கூற்றுகளைக்கொண்டு வந்தவர்கள், மிகவும் குருடர்களாய்க் காணப்படுவதினால், இப்படியாகவே கர்த்தருடைய உவமைக்கு அர்த்தம் எடுத்துக்கொள்கின்றனர். நெருப்பு இருக்கும் வெளிச்சமுடையதான இடத்தைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக இயேசுவோ, அந்த ஊழியக்காரனைப் புறம்பான இருளில் தள்ளப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். பிசாசுகள் எனும், சித்திரவதைப்படுத்துபவர்களைக் குறித்து நமது கர்த்தர் எதுவும் குறிப்பிடவில்லை.

நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நியாயமான மற்றும் பொருத்தமான விளக்கத்தை நாம் வழங்குகின்றோம். அர்ப்பணம், ஊழியம் மற்றும் பலிச்செலுத்துதலுக்கான தற்கால சிலாக்கியங்களைப் பயன்படுத்த தவறுகின்ற ஊழியக்காரனிடமிருந்து, அந்த வாய்ப்பு எடுக்கப்பட்டுவிடும். அது இவனுக்கு இனிமேல் கிடைக்காது; ஜெயங்கொள்பவர்களுக்கான பலனில், இவனுக்கு எந்தப் பங்கும் கொடுக்கப்படாது; இவன் இந்த மாபெரும் இழப்பை அனுபவிப்பவனாக இருப்பான். இவன், "புறம்பான இருளுக்குள்" தள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளான் என்பது, இவன் ஏற்கெனவே தெய்வீகக் கிருபையின் வெளிச்சத்தில், தெய்வீகக் காரியங்களின் ஆசீர்வாதத்தில், சிலாக்கியத்தில், அறிவில் காணப்பட்டிருந்திருக்கிறான் என்பதையும், இந்தப் பிரகாசிப்பித்தலை இவன் இழந்துவிடுவான் என்பதையும், ஆவிக்குரிய காரியங்கள் தொடர்புடைய இவனுடைய புரிந்துக்கொள்ளுதல் அந்தகாரப்பட்டுப் போகும் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது, "புறம்பான இருள்" காரணம், இது மனுக்குலத்தின் உலகத்தின் மீது காணப்படும் பொதுவான இருளாகும். கர்த்தரைபற்றியும், இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கிறதுமான அவருடைய திட்டத்தைப் பற்றியுமான அறிவின் தெளிவான வெளிச்சத்திற்குள், கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே வரும்படிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஒளி தற்காலிகமாக வீசப்படப் பெற்றிருக்கும் மற்றவர்களோ, ஒளியின் பிம்பத்தை மாத்திரமே காண்கின்றவர்களாய் இருக்கின்றனர். உண்மையற்ற ஊழியக்காரன் அனைத்துக் கிருபைகளினின்று முழுமையாய்த் தள்ளிவிடப்படுபவனாக இருப்பான்; ஒளியின் பிம்பம்/பிரதிபலிப்புக்கூட இவன் பார்வையினின்று மறைக்கப்பட்டிருக்கும்; இவன் சீக்கிரத்தில் தெய்வீகத் திட்டம், வேலை, முதலானவைகளில் தானும் உலகத்திற்கு இருக்கும் இருளிலேயே காணப்படுவதை உணருவான். மேலும் இந்த யுகத்தை முடிக்கிறதான மகா உபத்திரவக் காலத்தில், உலகத்தோடு பங்கடைகின்றவனாக இவன் காணப்படுவான்; இந்த மகா உபத்திரவக் காலமானது உவமையில் அழுகையும், பற்கடிப்பும் என அருமையாய்ப் பொருந்துகிற விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**ஆமென்!**

---

# கர்த்தருடைய இராப்போஜனம்

## மத்தேயு 26:17-30

**"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." லூக்கா 22:19**

கர்த்தருடைய இராப்போஜனத்தினுடைய அர்த்தம் மற்றும் அது ஆசரிக்கப்படுவதற்கான சரியான வேளை தொடர்புடைய விஷயத்தில் கிறிஸ்தவ மண்டலம் எங்கும் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. இது யூதருடைய பஸ்காவுக்கான நிஜமாக நிறுவப்பட்டது என்ற உண்மையினைப் பெரும்பாலான கிறிஸ்தவ மாணாக்கர்கள் அடையாளம் கண்டுகொண்டுள்ளனர். பழமை மிக்க சபைகளாகிய உரோமன் மற்றும் கிரேக்க கத்தோலிக்கச் சபைகள், எபிஸ்கோப்பல் சபைகள் முதலான சபைகளில், நமது கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டு நிறைவு நாளில், ஆண்டுதோறும், நினைவுகூருதலாக ஆசரிப்பதற்கான பிரயாசம் எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வாசரிப்பானது, யூதருடைய கணக்கிடுதலின்படி, யூதருடைய முதல் மாதமாகிய நீசான் மாதத்தில், அதாவது யூதர்கள் நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்த நாளாகிய 14-ஆம் தேதியன்று ஆசரிக்கப்பட்டு வந்தது. பின்னரோ நமது கர்த்தருடைய மரணத்தைக் குறிப்பிட்டக்காலப்பகுதியில் வரும் வெள்ளி அன்றும், அவரது உயிர்த்தெழுதலை ஞாயிறு அன்றும், அதாவது புனித வெள்ளி என்றும், ஈஸ்டர் ஞாயிறு என்றும் ஆசரிப்பதற்கு வசதியாகக் கணக்கிடும் முறைமையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. கிறிஸ்வ மண்டலத்தில் பின்வந்த பிரிவினர்கள் மத்தியில், இவ்வழக்கமானது நடைமுறையில் இல்லாமல்போயிற்று மற்றும் அநேகமாக இதற்குக் காரணம், முடிந்தமட்டும் புராட்டஸ்டண்ட் வழக்கங்களுக்கும், ஆசரிப்புக்களுக்கும், கத்தோலிக்க வழக்கங்களுக்கும், ஆசரிப்புக்களுக்கும் இடையே அதிகமான வேறுபாட்டினைக் காண்பிப்பதற்கேயாகும். இதன்விளைவாகப் பெரும்பான்மையான புராட்டஸ்டண்டினர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை, யூதருடைய பஸ்காவுடன் தொடர்புப்படுத்திப்பார்க்கவும், வருடந்தோறும் நீசான் மாதம் 14-ஆம் தேதியில் ஆசரிக்கப்படுகின்றதான யூதருடைய ஆட்டுக்குட்டியின் மரணமானது, இந்நிழலுக்கு நிஜமாகவும், இந்நிழலினுடைய நிறைவேறுதலாகவும் காணப்படுகின்றதான நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்திற்கு நிழலாகக் காணப்படுகின்றது என்ற உண்மையினை உணர்ந்துகொள்வதற்கும் தவறிப்போகின்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இப்படியாய்க் கவனிக்கத் தவறிப்போன விஷயத்தில் இவர்கள் முற்றிலும் பொறுப்பிலிருந்து விலகமுடியாது; ஏனெனில் பழமைமிக்க சபைகளானது நமது கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் கொண்டாடினபோதிலும், இவர்கள் நினைவுகூருதலுக்கு ஒத்திருக்கின்ற, ஆனால் வேதவாக்கியங்களினால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நிழலுக்குப் பொருந்தாததுமான மற்றச் சடங்குகளை அறிமுகப்படுத்தினார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, சாதாரணமான கத்தோலிக்கன் ஒருவனுடைய மற்றும் புராட்டஸ்டண்டினன் ஒருவனுடைய மனதிற்கு, கத்தோலிக்க பூசைபலியானது, நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாக மாத்திரமே தோன்றுகின்றது; ஆனால் இது, அதனுடைய உண்மையான அர்த்தம் இல்லை. திருப்பலியானது, இறையியல் கண்ணோட்டத்தின்படி சரியாய்ப் புரிந்துகொள்ளப்பட்டால் அது ஒரு புதிய பலியே ஒழிய, கல்வாரியில் இடம் பெற்றதான ஒரே பலியினுடைய நினைவுகூருதலல்ல. இதைக் கர்த்தருடைய இராப்போஜனத்தின் அடிக்கடியான ஆசரிப்பு என்று தவறாய்ப் புரிந்துகொண்ட புராட்டஸ்டண்டினர்கள், ஆரம்பக்காலங்களிலிருந்தே, நினைவுகூருதல் இராப்போஜனமானது, வசதிக்கேற்ற காலங்களிலெல்லாம் ஆசரிக்கப்பட்டுவருகின்றதென நம்புகிறவர்களாகிவிட்டனர். எனினும் இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் புராட்டஸ்டண்டினர்கள் மத்தியில் பல்வேறு வகையான கருத்துக்கள் நிலவுகின்றதை நாம் காண்கின்றோம்; ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புவதற்கேற்ப, நலமானது என்று எண்ணுகிறதற்கேற்ப, சிலர் வாரந்தோறுமாகவும், சிலர் மாதந்தோறுமாகவும், சிலர் காலாண்டுதோறுமாகவும் ஆசரித்து வருகின்றனர்.

இம்மாதிரியான ஒழுங்கீனங்களானது, கர்த்தரினாலோ (அ) அப்போஸ்தலர்களினாலோ ஏற்படுத்தப்படவில்லை என்றும், நமது கர்த்தர் இதை இதற்கே உரிய ஒரு குறிப்பிட்ட நேரத்தில், வருடத்தின் ஒரு குறிப்பிட்ட நாளில் நிறுவினார் என்றும், "இதை . . . போதெல்லாம்" என்ற வார்த்தைகளானது அப்பத்தையும், பாத்திரத்தையும் மாத்திரம் சுட்டிக்காட்டாமல், இந்நிகழ்வு ஆசரிக்கப்படுகின்றதான வேளையையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் நம்புகின்றோம். திருப்பலிப்பற்றின உரோமன் கத்தோலிக்க உபதேசத்தைக்குறித்து விவரமாய்

விளக்குவதற்கு நாம் இங்கு முற்படப்போவதில்லை, மாறாக திருப்பலியானது எந்த விதத்திலும், கிறிஸ்துவினுடைய உண்மையான பலிக்கான நினைவுகூருதல் ஆசரிப்பு இல்லையென்று நாம் உரோமன் (அ) கிரேக்க கத்தோலிக்கர்களுக்கு மிலேனியல் டாண் தொகுதி-III-இல், 98-104 வரையிலான பக்கங்களில் குறிப்பிட்டதை மாத்திரமே நம்முடைய வாசகர்களுக்கு இங்கு மேற்கோளிடுகின்றோம். கடந்தக் காலப் பாவங்களுக்குக் கிறிஸ்துவினுடைய முதல்பலியானது போதுமானதாய் இருக்கின்றதேயொழிய, அதற்குப் பின்னுள்ள பாவங்களுக்குப் போதுமானதல்ல என்றும், ஒவ்வொரு தருணங்களிலும் கிறிஸ்துவைப் புதிதாய் உண்டாக்குவதற்கும், ஏதேனும் குறிப்பிட்ட பாவத்திற்கென (அ) பாவங்களுக்கெனக் கிறிஸ்துவைப் புதிதாய்ப் பலிச்செலுத்திடுவதற்கும், முறையாய் ஏற்படுத்தப்பட்டதான கண்காணிகளுக்கும், குருக்களுக்கும் தேவன் அதிகாரம் கொடுத்திருக்கின்றார் என்றும் இவ்வுபதேசத்தினால் வலியுறுத்தப்படுகின்றது; High Mass/பாடல் பூசை என்பது ஒரு நபருடைய குறிப்பிட்ட பாவங்களுக்கானது; Low Mass/ சாதாரணமான பூசை என்பது சபையாருடைய பொதுவான பாவங்களுக்கானது ஆகும்.

குருவினுடைய ஆசீர்வாதமானது சாதாரணமான மெல்லிய அப்பத்தையும், திராட்சரசத்தையும், கிறிஸ்துவினுடைய நிஜமான சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றிவிடுகின்றது என்றும், இப்படியாகக் கிறிஸ்து பல்லாயிரமான குருமார்களால், ஒவ்வொரு வருடமும் பல்லாயிரம் முறை மீண்டும் மீண்டுமாக உண்டாக்கப்பட்டு, பல்லாயிரம் பாவங்களுக்காக மீண்டும் மீண்டுமாகப் பலிச்செலுத்தப்படுகின்றார் என்றும், கத்தோலிக்க மார்க்கமானது வலியுறுத்திக் கூறுகின்றதாய் இருக்கின்றது. இவைகளனைத்துமே முற்றிலுமாகக் கிறிஸ்தவத்திற்கு எதிரானது என்று நாம் மறுப்புத் தெரிவிக்கின்றோம் மற்றும் பெரும்பான்மையான பாரம்பரியமான புராட்டஸ்டண்டினர்கள் (Orthodox Protestants) தங்கள் மனப்பூர்வமான ஒப்புதலை, நம்முடைய இந்த மறுப்பிற்குக் கொடுப்பார்கள். எனினும் புதிய புராட்டஸ்டண்ட் பிரிவினர்களை உருவாக்கினவர்கள் இக்காரியத்தைக் கவனிக்க தவறிவிட்டனர் என்பது, அவர்கள் பழமையான சபைகளில் திருப்பலி அடிக்கடி ஏறெடுக்கப்படும் காரியத்தை, தாங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை அடிக்கடி, நினைவுகூரும்படியாக ஆசரிப்பதற்குக் காரணமாகப் பயன்படுத்துகையில் தெளிவாகுகின்றது. எனினும் (திருப்பலியில் இடம்பெறுவது போன்று) மிகவும் அடிக்கடி ஆசரிக்கும் காரியமானது ஞானமற்றதாகவும், நன்மைப் பயக்காததாகவும் இருக்குமெனப் பெரும்பான்மையான புராட்டஸ்டண்டினர் அறிந்தவர்களாகக் காணப்படுகின்றனர்; ஆகையால் பெரும்பான்மையானவர்கள் வருடத்திற்கு மூன்று (அ) நான்குமுறை மாத்திரம் அதுவும் இப்படியாகச் செய்வதன் மூலம் அவ்வாசரிப்பில் பங்கெடுக்கும் அனைவருக்கும், அது மிகுந்த தாக்கத்திற்குரியதாகவும், பயபக்திக்குரியதாகவும் காணப்படும் என்ற நம்பிக்கையில் ஆசரிக்கப்படுகின்றது. ஆனால் நம்முடைய கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பதாகிய ஆதிமுறைமையே இன்னும் அதிக பயபக்திக்குரியதாக இருக்குமென நாம் எண்ணுகின்றோம்; இது தவிர ஆதிமுறைமைக்கே, வேறெந்த முறைமைகளுக்கும் இல்லாத வேதவாக்கியங்களின் ஒப்புதல் காணப்படுகின்றது என்றும் நாம் வலியுறுத்துகின்றோம்.

## வேதவாக்கியங்களின் அடிப்படையிலான வேறு தவறான கருத்துகள்

நமது கர்த்தருடைய மரணத்தை, ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் — ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும் ஆசரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டவர்களாகிய நமது "பிளைமவுத் சகோதரரும்" (Plymouth Brethren), "டிசைப்பில்" (Disciple) நண்பர்களும், பெரிய தவறுக்குள் விழுந்துள்ளதாக நமக்குத் தோன்றுகின்றது. இப்படியாக ஆசரிப்பதிலுள்ள பொருத்தமின்மையானது பல்வேறு வழிகளில் வெளிப்படுகின்றதாயிருக்கின்றது; முதலாவதாக இவர்கள் முற்றிலும் வேறுபட்டதும், சந்தோஷத்திற்குரிய ஈஸ்டர் தருணமுமாகிய நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலை நினைவுகூரும் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையன்று கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருகின்றனர். நாளினுடைய முக்கியத்துவத்தினைப் பார்க்கத் தவறிப்போன இவர்கள், நாளினுடைய வேளை/நேரம் தொடர்புடைய விஷயத்தைப் பார்க்கத் தவறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆதியில் நிறுவப்பட்டதான நினைவுகூருதலானது இரவில் பங்கெடுக்கப்பட்டது, ஆனால் காலையிலோ (அ) பிற்பகலிலோ அதை நினைவுகூரும் வழக்கம் இப்பொழுது இவர்களிடத்தில் நிலவுகின்றது.

இந்தக் கிறிஸ்தவ நண்பர்கள், வாரந்தோறும் ஆசரிக்கும் இந்தத் தங்கள் வழக்கத்தினை, காரணம் ஏதுமின்றி ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது; ஆனால் இவர்கள் முன்வைக்கும் காரணங்களை நாம் பார்க்கையில், அவைகள் போதுமானவைகளாக இல்லையென்று காண்கின்றோம். இவர்கள் வலியுறுத்துவது என்னவெனில்: சீஷர்கள் வாரத்தினுடைய முதல்நாளில் அப்பம் பிட்பதற்கெனக் கூடுவதாக இடம்பெறும் வசனப்பகுதிகள் — உதாரணத்திற்கு அப்போஸ்தலர் 2:42,46; 20:7 என்பவைகள் நினைவுகூருதலின் இராப்போஜனத்தைப் பற்றியே குறிப்பிடுகின்றன

என்பதாகும். ஆனால் இதற்குமாறாக வாரத்தினுடைய இந்த முதல்நாள் கூடுகைகளானது, அன்பின் விருந்துகள் என்றும், இது எந்த விதத்திலும் நமது கர்த்தருடைய நினைவுகூருதலின் இராப்போஜனத்தைக் குறிப்பதாகவோ (அ) இதன் இடத்தை எடுத்துக்கொள்வதாகவோ இருப்பதில்லையென்றும் நாம் எண்ணுகின்றோம். இந்தப் பல்வேறு பதிவுகளில், நமது கர்த்தருடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதும், அவரது சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதான புளிப்பில்லாத அப்பம்போன்று முக்கியத்துவம்வாய்ந்த அடையாளச் சின்னமாகக் காணப்படுகின்றதுமான "பாத்திரத்தைக்" குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்பதும் கவனிக்கப்படலாம். சபைக்கு — தனது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் உண்டான அவளது சந்தோஷத்திற்குரிய நாளில், அன்பின் விருந்துகள் நிகழ்வது ஏற்புடையதாகும் மற்றும் இப்படிச் செய்வதற்கு முதல் ஞாயிறன்று நிகழ்ந்தவைகளே அவளை ஏவிற்று என்பதில் ஐயமில்லை; முதல் ஞாயிறன்று, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் நாளில், அவரை எம்மாவு எனும் கிராமத்தில், அப்பம்பிட்குதல் மூலமாக அவ்விரண்டு சீஷர்களும் அடையாளம் கண்டுகொண்டார்கள்; அன்று சாயங்காலத்தில் பதினொரு பேரும் பந்தியிருக்க உட்காருகையில், அவர் "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறினார் மற்றும் அவர்களுடைய இருதயங்களானது அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரியச்செய்தார் (லூக்கா 24:30, 31; யோவான் 20:19). நமது கர்த்தருடைய இராப்போஜனமோ, அவரது மரணத்திற்கும், அவருடைய பாடுகளில் நாம் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென ஐக்கியம் கொள்வதற்கான நம்முடைய உடன்படிக்கைக்கும் நினைப்பூட்டுதலாக இருக்கத்தக்கதாக நிறுவப்பட்டது.

## கர்த்தருடைய இராப்போஜனத்தின் முதலாம் ஆசரிப்பு

நம்முடைய இந்தப் பாடமானது, முதலாம் நிறுவுதலை நமக்குச் சுட்டிக்காண்பித்து, அது பஸ்கா ஆரம்பிப்பதற்கு முந்தினநாளில், அதாவது நீசான் மாதம் 14-ஆம் தேதியில் ஆசரிக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பஸ்கா தொடர்புடையதான நியாயப்பிரமாணமானது, மிகவும் துல்லியமான விவரங்களைக் கொடுத்ததாய் இருந்தது. ஆட்டுக்குட்டியானது நீசான் மாதம் 10-ஆம் தேதி வீட்டிற்குள்ளாகக் கொண்டுபோகப்பட வேண்டும் மற்றும் 14-ஆம் தேதி அடிக்கப்பட்டு, 15-ஆம் தேதியினுடைய விடியலுக்கு முன்னதான, இரவிலே புசிக்கப்பட வேண்டும். நிஜத்தில் இயேசு தம்மை 10-ஆம் தேதியன்று அந்த ஜாதியினிடத்திற்கு முன்வைத்தார். ஆனால் அவரது உண்மையுள்ளவர்களாகிய சிலரைத் தவிர, மற்றப்படி அவர்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தார்கள் மற்றும் 14-ஆம் தேதியன்று அவர் சிலுவையில் அறையப்பட்டார். அவர் சிலுவையில் அறையப்பட்டதான அதே யூத நாளில்தான், நம்முடைய இந்தப் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான பஸ்காவை அவர் புசித்தார் மற்றும் பிற்பாடு அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார். (யூதர்களுடைய நாளானது சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பித்து, அடுத்த சாயங்காலம்வரை நீடிக்கின்றது). பதிவுகளை வைத்துப்பார்க்கும்போது நமது கர்த்தரும், அவரது சீஷர்களும், யூதர்கள் பொதுவாய்ப் புசித்ததான நாளுக்கு முந்தினநாளில் பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஏனெனில் யோவானுடைய சுவிசேஷத்தில், நமது கர்த்தர் பஸ்காவைப் புசித்த பிற்பாடு பிலாத்துவிற்கு முன்னிலையில், அவரது அரண்மனையில் காணப்படுகையில், அவரைக் குற்றப்படுத்தினவர்களாகிய பரிசேயர்கள் பஸ்காவை இன்னும் புசிக்கவில்லை என்றும், அவர் சிலுவையில் அறையப்பட்டப் பின்னர் சாயங்காலம் வரையிலும் அவர்கள் புசிப்பதில்லையென்றும் நாம் வாசிக்கின்றோம் (யோவான் 18:28; 19:14).

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களிடத்தில், "நான் பாடுபடுவதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்று கூறினதாக ஒரு சுவிசேஷகர் பதிவு செய்கின்றார். இது அவர் ஒரு யூதனாக முழுமையாகவும், நியாயப்பிரமாணத்தின்படியாகவும் அனுசரிப்பதற்குக் கடமைப்பட்டிருந்த, யூத சடங்கினுடைய அவரது கடைசியான ஆசரிப்பாய்க் காணப்பட்டது. நமது கர்த்தரும், சீஷர்களும் 14-ஆம் தேதியினுடைய எந்தக் குறிப்பிட்ட மணிவேளையில் பஸ்காவில் பங்கெடுத்தார்கள் என்பதை நாம் திட்டவட்டமாய் அறிய முடியாது; எனினும் பஸ்காவைப் புசித்தப்பிற்பாடு, அநேகமாக நடுஇரவுக்குச் சமீபமாக, நமது கர்த்தர் தம்முடைய சொந்த மரணத்திற்கான புதிய நினைவுகூருதலை, கர்த்தருடைய இராப்போஜனத்தை நிறுவியிருக்க வேண்டும்; நியாயப்பிரமாணத்தினுடைய பஸ்கா இராப்போஜனத்திற்குப்பதிலாக இதை நிறுவினார் மற்றும் இதைக்குறித்துத் தம்முடைய பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிட்டார்: "ஆகையால் நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம், என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." "இதை" என்பது நிஜமான ஆட்டுக்குட்டியை, "உலகத்தின் பாவத்தைச் சுமந்துத் தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; மற்றும் "இதைச் செய்வது" என்பது — அப்பத்தைப் பிட்பதும், திராட்சப்பழ ரசத்தைப்

பானம்பண்ணுதலும் — நமது கர்த்தருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; இது நிழலில் இடம்பெற்ற மரணத்தைத் தெரிவிப்பதில்லை, ஏனெனில் நிஜமானது இப்பொழுது வந்துவிட்டது மற்றும் இதே நாளில், இன்னும் சில மணி நேரங்களுக்குப் பிற்பாடு, அவர் கொல்லப்படப் போகின்றார், சிலுவையில் அறையப்படப் போகின்றார். இப்படியாக நமது கர்த்தர் புதிய நிறுவுதலுக்காக, தம்முடைய சபைக்காக ஆழமான மற்றும் விரிவான அஸ்திபாரமிட்டார் மற்றும் இதை யூத நிழலிலிருந்து பிரித்துக் காண்பிக்கும் வண்ணமாக, விசுவாசிகளுக்குத் தம்மை நிஜம் எனவும், இதில் அடங்கும் மேலான அர்த்தத்தையும் சுட்டிக்காண்பித்தார்; உண்மையான இஸ்ரயேலர்கள் அனைவரும், பார்வோனிடமிருந்தில்லாமல், பார்வோனின் நிஜமாகிய சாத்தானிடமிருந்து விடுதலையடைவதே, தேவனுடைய ஜனங்களில் முதற்பேறானவர்கள் அனைவரும் மரணத்தினின்று, திரளான ஜீவனுக்கு, அதாவது நித்தியமான ஜீவனுக்குள் விடுவிக்கப்படுவதே — மேலான அர்த்தமாய்க் காணப்படுகின்றது.

நிழலைத் தெளிவாய்ப் பார்க்கின்றவர்களால், நிஜம் கடந்து வருவதுவரையிலும், நிழலினால் கடந்து போகமுடியாது என்றும், பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலுக்கான நிஜமானது, அதன் ஆண்டுநிறைவு நாளில், அதாவது நீசான் மாதம் 14-ஆம் தேதியில் நிகழவேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள முடியும். ஆகையால்தான் "அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை" என்பதாக வேதவாக்கியங்களில் இடம்பெறுகின்றது (யோவான் 7:30; 8:20). தேவன் இக்காரியங்களை எல்லாம் முன்கூட்டியே அறிந்திருந்தார் மற்றும் இது சம்பந்தமான அனைத்தையும் அவர் முன்னேற்பாடு பண்ணியிருந்தார் மற்றும் நிழலானது இவைகளை மிகத் தெளிவாய்க் குறிப்பிடுகின்றது. நாம் இனி நிழலை ஆசரிப்பதில்லை; நிழலினுடைய இடத்தில், தேவ ஆட்டுக்குட்டியினுடைய நிஜமான பலி இடம்பெற்றது என்று நம்பி, கிறிஸ்தவர்களென நாம், நிஜத்தினுடைய நினைவுகூருதலாக "இதைச்" செய்கின்றோம்; ஏனெனில் அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "நம்முடைய பஸ்காவாகிய (ஆட்டுக்குட்டியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரிந்தியர் 5:7, 8).

நிழலான சுடப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய பஸ்கா இராப்போஜனத்தைக் கர்த்தரும், அப்போஸ்தலர்களும் புசித்துக்கொண்டிருக்கையில், நமது கர்த்தர் அவர்களை நோக்கி, "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்றார். இதை நமது கர்த்தர் கூறினபோது அவர் "ஆவியில் கலங்கினதாக," உணர்வினை வெளிப்படுத்தினதாக யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார். தம்முடைய மரணம் தொடர்புடையதான உண்மைகளையும், விவரங்களையும் அவர் முன்னமே அறிந்திருந்தபடியால் அவர் காட்டிக்கொடுக்கப்படுகிற காரியமானது, அவரது இந்த மன உணர்விற்குக் காரணமாய் இருந்திருக்காது என்பதில் நமக்கு நிச்சயமே. அவரது துக்கத்திற்கானக் காரணமானது, தம்மால் மிகவும் பரிவோடு காக்கப்பட்டவர்களிலும், பராமரிக்கப்பட்டவர்களிலும் ஒருவன் இப்பொழுது நன்றியற்றவனாகவும், பரிசுத்தமற்றவனாகவும் போவதுகுறித்த சிந்தனையேயாகும் என நாம் நியாயமாய் அனுமானிக்கின்றோம்; அவரது துக்கம் யூதாசுக்காகவே என்பது உறுதியே. அவர் இப்படிக் கூறினதினிமித்தமாக, சீஷர்கள் "ஆண்டவரே, நானோ?" என்ற கேள்விகளைக் கேட்டனர்; கிரேக்க வார்த்தையினுடைய அர்த்தத்தின்படி பார்க்கையில், கேள்வியின் அர்த்தம் என்னவெனில், "ஆண்டவரே, நீர் என்னையா குற்றஞ்சாட்டுகின்றீர்? இது நான் இல்லை, அல்லவா?" என்பதாகும். சீஷர்கள் அனைவரும்கூடத் துக்கமடைந்தார்கள். அநேகமாக இந்த வேளையிலுள்ள இந்த அனுபவத்திலும்கூட அவர்கள் கடந்துபோக வேண்டியிருந்தது; ஏனெனில் இவைகளெல்லாம் அவர்களுக்கு முன்பாகக் காணப்படுகின்ற சோதனையான காலங்களுக்கென அவர்களை ஆயத்தப்படுத்தத்தக்கதாக, அவர்களுக்கு அவசியமாய்க் காணப்பட்டது என்பது நிச்சயமே.

மற்றவர்களோடுகூட இதே கேள்வியை யூதாசும் கேட்டார்; ஏனெனில் இப்படியாகக் கேட்கவில்லையெனில், அது தனது குற்றத்தைத் தானே ஒப்புக்கொள்வதைக் குறிப்பதாகிவிடும். தாம் துணிக்கையைத் தோய்த்து யாருக்குக் கொடுப்பாரோ, அவனே என்பது நமது கர்த்தருடைய பதிலாகக் காணப்பட்டது மற்றும் அவர் துணிக்கையைத் தோய்த்து, யூதாசுக்குக் கொடுத்தார் மற்றும் யூதாசும் வாங்கின பின் வெளியே போனார் (யோவான் 13:25-30). இந்த நிகழ்வுகள் அனைத்தும், யூதாசினுடைய இருதயத்தைக் கரையப்பண்ணி, எல்லாம் முடிந்துபோவதற்கு முன்னதாக, அவர் தனது போக்கை மாற்றிக்கொள்ள வழிநடத்தப்படுவதற்குப்பதிலாக — வாதைகளை நிறுத்துவதன் மூலம் பார்வோனுக்குப் பாராட்டப்பட்டதான தெய்வீக இரக்கமானது, பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினதுபோல — யூதாசுக்குள்ளும் வெறுப்பின்/தீய நினைவின் ஆவி உண்டானது. எதிராளியானவனுடைய யோசனைகளை எதிர்ப்பதற்குப்பதிலாக, அவன் முழுமையாய்ச் சாத்தானின் ஆவியினால் நிரம்பி, "சாத்தான் அவனுக்குள் முற்றும், முழுமையாய்ப் புகுந்து" தீமைச் செய்வதற்கான கருவியாகச் சாத்தான் அவனது இருதயத்தை ஆட்கொள்ளும்வரை, அதிகமதிகமாய் அவ்வாலோசனைகளை அசைப்போட்டுக் கொண்டிருந்தான்; மற்றும் கர்த்தர் மற்றும் சீஷர்கள்

மத்தியில் தன்னைப் பொருந்தாதவனாக யூதாஸ் உணர்ந்தபடியால், அவன் வெளியே போனான் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் அநேகமாக நமது கர்த்தர் சீஷர்களின் பாதங்களைக் கழுவினபோதும் மற்றும் பின்னர் அப்பம் மற்றும் திராட்சப்பழரசத்தை, தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாக நிறுவினபோதும், யூதாஸ் சீஷர்களோடு காணப்படாதது தெரிகின்றது. அவன் இல்லாமல் இருந்தது நல்லதே; இதுபோலவே கிறிஸ்துவினுடைய உண்மையான, நேர்மையான, அர்ப்பணிப்புமிக்க சீஷர்கள் மாத்திரமே, அவரது மரணத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பதற்குக் கூடிடுவது கூடுமட்டும் பெரிதும் விரும்பப்படுவதாக. எனினும் நாம் இருதயத்தைக் கணிப்பதற்கு இயலாதவர்களாய் இருக்கின்றோம் என்பதை நினைவில்கொண்டு, நினைவுகூருதலின் பந்திக்கு வருகிறதற்கு, மீட்படைவதற்கென்று கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினை விசுவாசிப்பவர்களும், கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பைப் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணுகிறவர்களுமான அனைவரும் வரவேற்கப்பட வேண்டும். உடன் சீஷர்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களை ஆராயும் விஷயத்தினைத் தேவனிடத்திலேயே விட்டுவிடுவோமாக.

## அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய அடிப்படையான அர்த்தம்

நினைவுகூருதலாகப் புளிப்பில்லாத அப்பத்தினை சீஷர்களுக்கு முன்வைக்கையில் இயேசு, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். அவரது வார்த்தைகளினுடைய அர்த்தமாவது, "இது என் சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது" என்பதாகும். அப்பமானது உண்மையில் அவரது சரீரமாக இருக்கவில்லை; ஏனெனில் அவரது சரீரம் எந்த விதத்திலும், இதுவரையிலும் பிட்கப்படவில்லை. பலி இன்னமும் நிறைவேறி முடியாததினால், அவர்களாலும், எந்த விதத்திலும், அவரில் நிஜத்தில் (அ) உண்மையில் பங்கெடுக்க முடியாது. எனினும் புளிப்பில்லாத அப்பமானது, நமது கர்த்தருடைய பாவமற்ற மாம்சத்தைக் குறிக்கின்றதென நாம் அடையாளம் கண்டுகொள்ளும் போதும் அடையாளம் முழுமையாய் உள்ளது; புளிப்பானது, நியாயப்பிரமாணத்தின்கீழ் பாவத்திற்கான அடையாளமாகவும், பஸ்கா காலங்களில் புறம்பாக்கிப்போடுவதற்கு விசேஷமாய்க் கட்டளையிடப்பட்டுள்ளதாயும் காணப்படுகின்றது. வேறொரு தருணத்தின்போது, இயேசு கொடுத்திட்ட பாடமானது, இந்த அடையாள சின்னத்தினை நமக்கு விளக்குகின்றதாய் இருக்கின்றது. அவர் "வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்; ஜீவ அப்பம் நானே என்றார்." (யோவான் 6:33, 35)

இந்த ஜீவ அப்பத்தை நாம் எவ்வாறு புசிக்க வேண்டும் (அ) சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அப்பம் எதைக் குறிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வது நமக்கு அவசியமாய் இருக்கின்றது. இக்காரியம் தொடர்பான நமது கர்த்தருடைய விளக்கத்தின்படி, அது அவர் நமக்காகப் பலிச்செலுத்தின அவரது மாம்சத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் நமது மனித சுபாவத்தில் வரத்தக்கதாக, தாம் மனிதனாகுவதற்கு முன்னதாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவியின் நிலையினையும், அதன் மகிமையினையும் துறந்து வந்திருந்தாலும், அவர் மனிதனாகுவதற்கு முன்பாகக் காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவி நிலையானது பலிச்செலுத்தப்படவில்லை. நமது கர்த்தராகிய இயேசு பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், குற்றமற்றவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும், அதாவது தகப்பனாகிய ஆதாமினால் கறைப்படுத்தப்படாதவராகவும், மற்றும் இதனால் பாவமற்றவராகவும் காணப்பட்டக் காரியமே, அவரை ஆதாம் மற்றும் இவர் சந்ததிக்கான மீட்பராக்கிற்று மற்றும் "ஏற்றக்காலங்களில் விளங்கிவந்ததான, அனைவருக்குமான மீட்கும் பொருளாக" அவர் தம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்கும் அனுமதித்தது.

பாவிகளுக்காக நமது கர்த்தராகிய இயேசுவின் தூய, கறையற்ற மனுஷீகச் சுபாவமே கொடுக்கப்பட்டது என்று நாம் காண்கையில், நாம் எதைச் சொந்தமாக்கிடுவதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம் என்று நாம் காண்கின்றோம். அவர் எதை நமக்காக ஒப்புக்கொடுத்தாரோ, அதையே நாம் "புசிக்க" வேண்டும், சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்; அவரது பரிபூரண மனுஷீக சுபாவமானது, மனுக்குலம் முழுவதையும் மரணத்தண்டனையிலிருந்து மீட்பதற்காகவும், அவர்கள் இணங்குகையில் அவர்களை மனித பூரணத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திருப்புவதற்காகவும் கொடுக்கப்பட்டது. நம்முடைய கடந்தகால பாவங்கள் யாவற்றையும் இரத்துச் செய்ததாக ஒருவேளை தேவன் கருதினாலும், மனித பூரணத்தினை அடைந்திடுவதற்கான உரிமையை நாம் உடையவர்களாக இருக்கின்றோமெனத் தேவன் ஒருவேளை கண்டுகொண்டாலும், இது நம்மைப் பூரணமும் படுத்தாது, நித்திய ஜீவனுக்கான உரிமையையும் தராது என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆதாமின் சந்ததியிலுள்ள எவரேனும் இயேசுவின் பலியில் நன்மையடைய வேண்டுமானால், அவர் இரண்டாம் வருகை வந்து, முழு உலகத்திற்கான மத்தியஸ்தராக, தீர்க்கத்தரிசியாக, ஆசாரியராக, இராஜாவாக இருந்து, அக்காலத்தில் அருளப்படுகின்றதான அருமையான சிலாக்கியங்களைப் பயன்படுத்துகின்றதான அனைவரையும் பரிபூரணத்திற்கும், தேவனுடன் இசைவான நிலைக்கும் திருப்புவதற்கு உதவுவது அவசியமாய் இருக்கின்றது.

இதே ஆசீர்வாதத்தை இந்த யுகத்தின் சுவிசேஷ சபையானது, தங்கள் மீட்பரிலான விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றனர்; அதாவது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்கின்றனர்; நாம் ஒருபோதும் பெற்றிராததும், ஒருபோதும் இழந்துபோகாததும், கிறிஸ்து மீட்டுக்கொள்ளாததுமான, ஆவிக்குரிய சுபாவத்திற்கு நீதிமானாக்கப்படவில்லை; மாறாக தந்தையாகிய ஆதாம் பெற்றிருந்ததும், அவரால் இழந்துபோகப்பட்டதும், கிறிஸ்து தம்முடைய பாவமற்ற சொந்த மாம்சத்தை, நமக்கான மீட்கும்பொருள் பலியாகக் கொடுத்து, அவர் மீட்டுக்கொண்டதுமான மனுஷீக சுபாவத்திற்கு நீதிமானாக்கப்பட்டுள்ளோம். அப்பத்தில் பங்கெடுத்தல் என்பது கர்த்தர் மனுஷீக உரிமைகளையும் சிலாக்கியங்களையும் பலிசெலுத்தினதன் காரணமாக அடையப்பெற்றதான, மனுஷீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் அனைத்திற்குமான - நீதிமானாக்கப்படுதலை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளுதலை, நமதாக்கிக்கொள்ளுதலை நமக்கு முதலாவது குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இதுபோலவே திராட்சப்பழ ரசமானது நமக்காகக் கொடுக்கப்பட்டதான நமது கர்த்தரின் ஜீவன் — அவரது மனுஷீக ஜீவன், அவரது ஆத்துமா நம் பொருட்டாக மரணத்திற்குள் ஊற்றப்பட்டதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இதை நாம் நமதாக்கிக்கொள்ளுதல் என்பதும், நமது கர்த்தருடைய பலியானது பெற்றுத்தந்ததான திரும்பக்கொடுத்தலுக்கான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் நாம் ஏற்றுக்கொள்வதை முதன்மையாகக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

## அப்பம் மற்றும் பாத்திரத்தினுடைய இரண்டாவது மற்றும் ஆழமான அர்த்தம்

நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி ஆயிரவருட யுகத்தின்போது உலகமானது கிரியையினாலும், கீழ்ப்படிதலினாலும் நீதிமானாக்கப்படுவதற்கு முன்னதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது சபையை விசுவாசத்தினால் நீதிமான்களாக்குவதிலுள்ள தேவனுடைய நோக்கமானது, இப்பொழுது காண்கிறவர்களும், கேட்கிறவர்களும், மனிதனுக்காக அன்பானது ஏறெடுத்துள்ளதான மாபெரும் பலியை இப்பொழுது உணர்ந்துகொள்பவர்களுமான இந்த வகுப்பார், தங்கள் சரீரங்களை ஜீவப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கும், மற்றும் இவ்விதமாய்க் கர்த்தர் இயேசுவோடுகூட, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரது பலியில் பங்கடைவதற்கும் அனுமதிக்கப்படுவதற்கேயாகும். நினைவுகூருதலுக்கான இந்த ஆழமான மற்றும் கூடுதலான அர்த்தத்தினை அவர் வெளிப்படையாய்க் குறிப்பிடவில்லை. இது "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று அவர் குறிப்பிட்டவைகளில் ஒன்றாயிருக்கும் என்பதில் ஐயமில்லை (யோவான் 16:12, 13).

சத்தியத்தின் ஆவியானது அப்போஸ்தலனாகிய பவுல் வாயிலாகப் பேசி, நினைவுகூருதலின் இந்த இரண்டாம் மற்றும் மிக உயர்வான அர்த்தத்தினைத் தெளிவாய் விவரிக்கின்றது; ஏனெனில் அர்ப்பணித்துள்ள சபைக்கு அவர் எழுதுகையில் அவர், "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்); அதாவது கிறிஸ்து தம்முடைய உண்மைக்கான பலனாகப் பெற்றுக்கொண்டதான மகிமையில், நாமும் அவரோடுகூடப் பங்காளிகளாகக் கருதப்படத்தக்கதாக, உடன் பலிச்செலுத்துபவர்களெனக் கிறிஸ்துவோடுகூட உள்ள மரணம் வரையிலுமான நம்முடைய பங்குகொள்ளுதலாய் இருக்கிறதல்லவா?—"ஏனெனில் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாய் இருக்கிறோம்" என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 10:16, 17).

இந்த அடையாளமான கட்டளையினுடைய இரண்டு கண்ணோட்டங்களும் மிகவும் முக்கியமானவைகளாகும். நமது கர்த்தருடைய பலியின் மூலமான நமது நீதிமானாக்கப்படுதலை, நாம் முதலாவதாகப் பார்ப்பது அவசியமாயிருக்கின்றது. முழுக்கிறிஸ்து, தெய்வீக கண்ணோட்டத்தின்படி இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, அநேக அங்கத்தினர்களையுடைய ஒரு சரீரமாக இருக்கின்றது என்றும், இந்தச் சபை முழுவதும் பிட்கப்பட வேண்டுமென்றும், அதன்

அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் இயேசுவின் சாயலாக வேண்டும் மற்றும் அவரது பலியின் அடிச்சுவடுகளில் நடக்க வேண்டுமென்றும் நாம் உணர்ந்துகொள்வதும் ஏற்றக் காரியமாயிருக்கின்றது (1 கொரிந்தியர் 12:12-14). இதை நாம் நம்முடைய ஜீவியங்களைச் சகோதர சகோதரிகளுக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் செய்கின்றோம்; அதாவது கிறிஸ்து தம்முடைய ஜீவியத்தை அனைவருக்காகவும் ஒப்புக்கொடுத்ததுபோல், நாமும் செய்வதின் மூலம் செய்கின்றோம்.

நமது கர்த்தர் தம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுக்காதது போன்று, நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பதில்லை. அவர் தம்முடைய உண்மையான பூரண மாம்சத்தைப் பலிச்செலுத்தினதுபோன்று, நாமும் உண்மையாய்ப் பூரணமாய் இராததும், ஆனால் பூரணமானதாகக் கருதப்படுகிறதுமான நீதிமானாக்கப்பட்ட நம்மைப் பலிச்செலுத்திட வேண்டும். இதுபோலவே பாத்திரமும் பாடுகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அநேகம் திராட்சப்பழங்களின் சாறாக இருப்பினும் அது ஒரு பாத்திரமாக இருப்பதுபோலவே, அநேகம் மணிகளினின்று உண்டானதாயினும் அது ஒரு அப்பமேயாகும். கோதுமை மணிகளானது மனிதனுக்கான அப்பமாக வேண்டுமானால், அவைகளால் அதன் ஜீவனையோ, மணியாக அதன் தனித்தன்மையையோ தக்கவைத்துக்கொள்ள முடியாது. திராட்சப்பழங்களானது, உலகத்திற்கு ஜீவனளிக்கும் ஆவியாக வேண்டுமானால், அது திராட்சப்பழங்கள் எனும் அதன் அடையாளத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது. இப்படியாகக் கர்த்தருடைய ஜனங்கள் ஒரே அப்பத்திலும், ஒரே பாத்திரத்திலும் பங்கெடுப்பவர்களாய் இருக்கின்றார்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களுடைய வார்த்தையினுடைய அருமையை நாம் பார்க்கின்றோம்.

பாத்திரமானது, fruit of the vine/ திராட்சப்பழரசமானது (திராட்சரசமாக/wine ஒருவேளை இருந்திருந்தாலும்கூட எங்குமே பாத்திரமானது wine/திராட்சரசம் என்று குறிப்பிடப்படவில்லை), இரத்தத்தை அதாவது ஜீவனைக் குறிப்பதாக நமது கர்த்தர் குறிப்பாய்த் தெரிவித்துள்ளார்; அது தக்கவைக்கப்பட்ட ஜீவனை அல்ல, மாறாக சிந்தப்பட்ட, விட்டுக்கொடுக்கப்பட்ட, ஒப்புக்கொடுக்கப்பட்ட, பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கின்றது என்று தெரிவித்துள்ளார். இந்த ஜீவனானது, பாவ மன்னிப்புண்டாகும்படிக்கு என்றும், அவருடையவர்கள் அனைவரும் அதைப் பருக வேண்டும் மற்றும் அவரது பலியினை ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் அவர் நம்மிடம் கூறுகின்றார். விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டுள்ள அனைவரும், ஜீவனை இந்த ஆதாரத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவிற்குப் புறம்பே அழியாமையைப் பெற முடியுமென யார் ஒருவராலும் கூறப்படுவது ஏற்றதாயிருக்காது. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் விளைவாக ஜீவன் கிடைக்குமெனக் கூறுவதும் ஏற்றதாயிருக்காது. ஏதோ ஒரு மாபெரும் போதகர் மீதான விசுவாசமும், அவருடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவதும் நித்திய ஜீவனைக் கொண்டுவருமென்று கூறுவதும் ஏற்றதாயிருக்காது. முழு உலகத்திற்கான மீட்கும்பொருளாக ஒருமுறை சிந்தப்பட்டதான இரத்தத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமே அல்லாமல், மற்றப்படி வேறெந்த வழியிலும் நித்திய ஜீவனை அடைய முடியாது. "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை". இதுபோல அவரது பாத்திரத்தில் பானம் பண்ணிடுவதற்கும், ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், அவரது மரணத்திற்குள்ளான ஸ்தானத்தில் அவரோடுகூட அடக்கம் பண்ணப்படுவதற்கும் மற்றும் இப்படியாக மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் நேரான அவரது உயிர்த்தெழுதலில் அவரோடுகூடக் காணப்படுவதற்குமான கர்த்தருடைய அழைப்பினை ஏற்றுக்கொள்வதின் மூலமாக மாத்திரமே ஒழிய மற்றப்படி புதிய சுபாவத்தினை அடைவதற்கு வேறு வழியில்லை (உரோமர் 6:3-5; 8:17).

## இராஜ்யத்தில் கொண்டாடுதல்

(நினைவுகூருதலுக்கான இராப்போஜனம் நிறுவப்பட்ட தருணத்தின்போது) நமது அருமை கர்த்தர் எப்போதும்போல், அவரது போதனைகள் அனைத்தினுடைய முக்கிய அம்சமாகிய இராஜ்யம்குறித்துச் சிலவற்றைப் பேசவேண்டும் என்றிருந்தார். உண்மையுள்ளவர்களாகக் காணப்படும் பட்சத்தில், இராஜ்யத்தில் ஒரு பங்கினை அடைவார்களென அவர் வாக்களித்தவர்களிடம், தாம் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வதற்கெனப் புறப்பட்டுப்போக வேண்டும் என்றும், தாம் திரும்பிவந்து, அந்த இராஜ்யத்தில் அவர்கள் பங்கடையத்தக்கதாக, தம்மோடுகூட அவர்களை ஏற்றுக்கொள்ளவார் என்றுமாக தாம் கூறியிருந்தவைகளை, அவர்களுக்கு நினைப்பூட்டினார். இன்னுமாக தம்மால் நிறுவப்படுகின்றதான இந்த நினைவுகூருதலானது, இராஜ்யத்தில் அதன் நிறைவேறுதலைக் காணும் என்று இப்பொழுது கூறுகின்றார்.

என்ன அர்த்தத்தில் இவ்வாக்கியத்தினைக் கர்த்தர் கூறினார் என்பதைத் துல்லியமாய்த் தீர்மானிப்பது சிரமமானக் காரியமாக இருப்பினும், அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றதான

பாடுகள் மற்றும் சோதனைகளின் விளைவாக, இராஜ்யத்தில் பெருமகிழ்ச்சிக் காணப்படும் என்று அர்த்தப்படும் வகையில் அவர் பேசியுள்ளார் என்று புரிந்துகொள்வது முரண்பாடாய்க் காணப்படாது. "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்." பிதாவினுடைய சித்தத்திற்கான உண்மையானக் கீழ்ப்படிதலின் காரணமாகச் சகிக்கப்பட்ட சோதனைகளையும், கஷ்டங்களையும் அவர் திரும்பி நோக்கிப்பார்த்து, இவைகளின் பிரமாண்டமான பலனை, அதாவது மனுக்குலம் அனைத்தின்மீது கடந்துவரும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அவர் காண்கையில், இவைகளில் களிகூருவார். முதலாவது நீதிமானாக்கப்பட்டதிலும், பின்னர் அர்ப்பணிப்பிலும், அவரோடுகூடப் பாடுபடுவதிலும் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணினவர்களாகிய அவரது சீஷர்கள் அனைவரும் இந்தப் பெருமகிழ்ச்சியில் பங்கடைவார்கள். இவர்கள், அவரோடுகூட ஆளுகைச் செய்வதற்கான, அவரது வாக்குத்தத்தத்தினைப் பெற்றிருக்கின்றனர், மற்றும் ஆளுகை ஆரம்பித்து, இராஜ்யத்தின் வேலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில், இவர்களும், கர்த்தரும் தங்கள் பூமிக்குரிய ஓட்டம் நிறைவடைவது வரையிலும் நாளுக்குநாள் தேவன் தங்களை வழிநடத்தின வழியினை, அது "இடுக்கமான வழியாக," சுயத்தைப் பலிச் செலுத்தும் வழியாக, சுயத்தை வெறுக்கும் வழியாக இருப்பினும், அவ்வழியினைத் திரும்பி நோக்கிப்பார்த்து, துதிப்பார்கள்.

தாம் கைது செய்யப்படுவதற்கும், மரிப்பதற்குமான வேளை அருகாமையில் இருப்பதை அறிந்திருந்த நமது அருமை ஆண்டவரின் விசுவாசமானது, அந்தத் துயரமான வேளைகளினுடைய பரீட்சைகளில் நிலைநின்றது. அப்பத்திற்கும், பாத்திரத்திற்கும் அவர் பிதாவுக்கு ஸ்தோத்திரம் ஏறெடுத்ததானக் காரியமானது, அப்பம் பிட்கப்படுதலும், திராட்சப்பழம் நசுக்கப்படுதலும் குறிக்கின்றதான பாடுகள் யாவற்றிலும், சந்தோஷத்தோடே உடன்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஏற்கெனவே அவர் பிதாவின் ஏற்பாட்டில் திருப்தியடைந்தவராய் இருந்தார். இந்த ஒரு மனநிலைக்கு இசைவாகவே, அவர்கள் புறப்படுகையில், பாட்டுப்பாடினார்கள் — சந்தேகத்திற்கிடமின்றி பூமியில் அவரது ஓட்டம் கிட்டத்தட்ட முடிவடைந்ததற்காகவும், இதுவரையிலும் தமக்குத் தேவையான கிருபை போதுமானதாய் இருந்ததற்காகவும் துதி மற்றும் ஸ்தோத்திரப்பாட்டு ஏறெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

## இந்த வருஷத்து நினைவுகூருதலின் இராப்போஜனம்

நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளானது, யூத கணக்கீட்டின்படி, ஏப்ரல் 3-ஆம் தேதி, புதன்கிழமை வருகின்றதாய் இருக்கின்றது. அவரது நினைவுகூருதலை ஆசரிப்பதற்கான ஏற்றநேரம், "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே", அதாவது ஏப்ரல் 2-ஆம் தேதி, செவ்வாய்க்கிழமையன்று இரவாய் இருக்கும்; அதுவும் சரியாய் 6 மணிக்கு அல்லாமல், கொஞ்சம் நேரம் தேவையான ஆயத்தங்களைச் செய்வதற்காகவும், அடையாளத்தினுடைய அர்த்தத்தினைக் கொஞ்சம் ஆராய்வதற்கும், முழுக்காரியத்தையும் மறுபடியும் எண்ணிப்பார்ப்பதற்குமெனச் செலவிட்டப் பின்னர், ஆசரிக்கப்பட வேண்டும்.

வழக்கத்தின்படியே அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், நாம் ஆக்கினைத் தீர்ப்பினின்று மீட்கப்படுவதற்கு ஏதுவாய்க் காணப்பட்டதான மாபெரும் நிகழ்வினை ஆசரிப்பதற்கென்றும், நாம் மகிமைக்கும் கனத்திற்கும், அழியாமைக்கும் நேரான அவரது உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைய வேண்டுமெனில், அவரோடுகூட மரிப்பதற்கான நம்முடைய அர்ப்பணிப்பை ஆசரிப்பதற்கு என்றும், இந்த ஆண்டுநிறைவு நாளில் ஒன்றுகூடிடுவார்கள்.

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றதான அருமையான நண்பர்கள் (இதைப் புரிந்துகொண்டுள்ளவர்களுக்கு மிகுந்த அர்த்தமுள்ளதாய்க் காணப்படுகின்றதான) இந்தப் பாக்கியமான நினைவுகூருதலை அலட்சியப்படுத்திட வேண்டாம் என்று நாம் பரிந்துரைக்கின்றோம். சிறு கூட்டத்தாராய் இருப்பவர்கள், பெரிய கூட்டத்தாருடன் இணைந்து ஆசரிக்கத்தக்கதாகச் செல்லுங்கள் என்று நாம் அறிவுரைக் கூறுவதில்லை, மாறாக ஒவ்வொரு சிறு கூட்டத்தாரும் தங்கள் வழக்கத்தின்படி ஒன்றுகூடிட அறிவுறுத்துகின்றோம்; ஏனெனில் இப்படியாகச் செய்வதே ஆதித் திருச்சபையின் வழிமுறையாக இருந்தது. சந்தோஷமான இருதயத்தோடு, நாம் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்; அதுவும் நமக்கான நமது கர்த்தருடைய பலித் தொடர்புடையது மாத்திரமல்லாமல், அவரோடுகூட மரிப்பதற்கான நமது உடன்படிக்கைத் தொடர்புடையதுமான அதற்கே உரிய பயபக்தியுடன் ஆசரிக்கக்கடவோம். ஒவ்வொரு சபை கூட்டத்தாரிலுமுள்ள வழிநடத்துபவர்கள் (முடிந்தால் சில எபிரேய குடும்பத்திடமிருந்து) புளிப்பில்லாத அப்பத்தையும், ஒன்றில் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றை (unfermented grape juice) அல்லது உலர்ந்த திராட்சரசத்தை (raisin juice) அல்லது திராட்சப்பழரசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தங்கள் பண்ணிடவேண்டும். (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராகவே நம்முடைய பரிந்துரை காணப்படுகின்றது; ஏனெனில் இது மாம்சத்தில் பெலவீனமாய்க் காணப்படும்

சிலருக்குச் சோதனையாக அமையலாம்; எனினும் திராட்சரசமே (wine) பயன்படுத்தப்படும்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்று யார் மனசாட்சியில் நம்புகின்றார்களோ, அவர்களுக்கு ஏற்பாடுகள் பண்ணப்படலாம். சிலருடைய மனசாட்சியைத் திருப்திப்படுத்துவதற்கெனச் சிறிதளவு புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தை (fermented wine), புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றுடன் (unfermented grape juice) அல்லது உலர்ந்த திராட்சரசத்துடன் (raisin juice) சேர்ப்பது தவறாகாது.

இந்தச் சிறு கூடுகைகளானது ஆரவாரமில்லாமல் காணப்படுவதற்குப் பரிந்துரைக்கின்றோம். ஒழுக்கமாயும், கிரமமாயும், அமைதியாயும், நாம் ஆசரிக்கப்போகின்றதான மாபெரும் செய்கை தொடர்புடையதான விலையேறப்பெற்ற நினைவுகளினால் நிரம்பினவர்களாக, ஒன்றுகூடுவோமாக. ஆசரிப்புகளிலும், சடங்குகளிலும், நம்முடைய கவனம் அதிகமாய்க் காணப்படாதிருப்பதாக. மற்ற விஷயங்களில் செய்வதுபோல, இதிலும் நமது கர்த்தரைப் பிரியப்படுத்துபவைகளைச் செய்திடுவதற்கு நாடுவோமாக; மற்றும் இப்படியாகச் செய்யப்படும் பட்சத்தில் பங்கெடுக்கும் யாவருக்கும், இவ்வனுசரிப்பு நன்மை பயக்கின்றதாயிருக்கும் என்பதில் நமக்கு நிச்சயமே.

விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தை அறிக்கைப் பண்ணுகிறவர்களும், நமது இரட்சகரின் ஊழியத்திற்கான அர்ப்பணிப்பும் பண்ணியுள்ளவர்களுமான எவருமே இந்த அடையாளங்களில் பங்கெடுப்பதற்குத் தடைப்பண்ணப்படக்கூடாது என்று இதற்கு முன்பும் நாம் கருத்துத் தெரிவித்திருக்கின்றோம். உண்மையான இருதயமற்றோர், இந்த ஐக்கியத்தின் சிலாக்கியத்தினை ஏற்றுக்கொள்வதில்லை. எனினும் "கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக்குறித்து சிலர் கொண்டிருக்கும் தவறான கண்ணோட்டங்களின் காரணமாகப் பயப்படுபவதினால், அப்படியானவர்களுக்கு விளக்கம்கொடுத்து தெளிவுப்படுத்த வேண்டியுமுள்ளது (1 கொரிந்தியர் 11:29). இந்த மாபெரும் செய்கையை, நினைவுகூருதலை ஆசரிப்பதான சிலாக்கியத்தினை கைவிடமாட்டார்கள் என்று நாம் நம்புகின்றதான இந்தப் பயப்படுகிறவர்களுக்காக, அப்போஸ்தலனால் இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பாரைக்குறித்து நாம் இங்கு விவரிக்கின்றோம்; பலியினுடைய உண்மையான முக்கியத்துவத்தினை உணர்ந்துகொள்ள தவறுகின்றவர்களும், இந்த ஆசரிப்பை வெறுமனே சடங்காச்சாரமாகக் கண்டுகொள்பவர்களும்தான் அப்போஸ்தலனால் அவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாரில் இடம்பெறுவார்கள் என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது. இவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகின்றார்கள்; ஏனெனில் இவர்கள் காரியத்தை ஆராய்ந்துப்பார்த்தார்களானால், இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றதான "சிறுமந்தையினரை" கர்த்தர் எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்கின்றார் என்பதைத் தெளிவாகப் பார்க்கமுடியும். இதைச் செய்ய இவர்கள் தவறுவது என்பது ஆக்கினைத்தீர்ப்பையும், கண்டனத்தையும் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது; இவர்கள் கர்த்தரையும், அவரது பலி முதலானவைகள் எதையும் அறிந்திராத உலகத்திலுள்ள மற்றவர்களைக்காட்டிலும் அதிகப் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றனர்.

இந்த மகத்துவமிக்க நினைவுகூருதலை நாம் ஆசரிக்கையில், நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்காகவும், நமது மீட்பரோடுகூட உடன் பலிச் செலுத்துபவர்களென நாம் அனுபவிக்கும் மகத்துவமான சிலாக்கியங்களுக்காகவும், கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான சிலாக்கியத்திற்காகவும் நன்றியினைக் காணிக்கையாக்கிடுவதற்கு நாம் மறவாதிருப்போமாக. இந்த ஒரு தருணத்தில் துக்கித்தல்களும், ஆழ்ந்த சிந்தித்தல்களும், தியானித்தல்களும், இருதயத்தை முழுக்க ஆராய்வதும் காணப்பட்டாலும், கர்த்தர்போலவே நாமும் விசுவாசத்தினால் ஜெயங்கொண்டு, இருளிலிருந்து நம்மை தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவந்தவரும், இப்பொழுது நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றதான மாபெரும் நிகழ்வில் பங்குபெற நமக்குச் சிலாக்கியம் அருளினவருமானவரின் புண்ணியங்களை அறிவித்து முன்னேறுவோமாக.

*****

# கெத்செமனே — விழிப்பும், ஜெபமும்

## மத்தேயு 26:36-46.

***"என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது."***
***லூக்கா 22:42***

"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" எனும் வார்த்தைகளை வாசிக்கையில், கர்த்தர் இயேசுதான், பரம பிதா என்று கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் நிலவிக்கொண்டுவரும் கருத்தில் தவறு இருக்கின்றது என்பதை யாரும் உணராமல் இருக்க முடியாது (எபிரெயர் 5:7); இன்னுமாக இயேசுதான் பிதா என்றால், பிதாவுக்கு நேராக அவருடைய ஜெபம் நடிப்பாக இருந்திருக்கும்; மாறாக இயேசு தம்மைக்குறித்துக் கூறியிருந்தது போன்று அவர் பிதாவாய் இராமல், தேவனால் அனுப்பப்பட்ட குமாரனாக, தேவனுடைய ஒரே பேறானவராக, சிருஷ்டிகள் அனைத்திற்கும் முதற்பேறானவராக, தேவனுடைய சிருஷ்டிகளுக்கு ஆதியானவராக இருந்தார் (யோவான் 10:29; 1:14; கொலோசெயர்1:15; வெளிப்படுத்தல் 3:14). இதைத் தவிர நம்முடைய கர்த்தருடைய, அப்போஸ்தலர்களுடைய பேச்சிற்கும், அவருடைய போக்கிற்கும் வேறே நியாயமான அர்த்தங்கள் இல்லை.இது குறித்த சத்தியத்தை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு 5-ஆம் தொகுதியைப் பரிந்துரைக்கின்றோம்.

நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும், அவருடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவிவிட்டு, மேல் வீட்டறையை விட்டுப் புறப்பட்டுப் போனார்கள். இவர்கள் கெத்செமனே என்று அழைக்கப்படும் தோட்டம் இருந்த ஒலிவ மலைக்குப் போனார்கள். கெத்செமனே எனும் பெயருக்கான அர்த்தம், எண்ணெய் செக்கு ஆகும்; இங்கு ஒலிவ பழங்கள் அரைக்கப்பட்டு, வெளிச்சத்திற்காகவும், உணவிற்காகவும் பயன்படும் எண்ணெய் எடுக்கப்படுவதினால் இப்பெயர் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. சுவிசேஷகர்களில் ஒருவர், அதைக் கெத்செமனே தோட்டம் என்று குறிப்பிடுகின்றார்; இங்கு இடம்பெறும் தோட்டம் (garden) எனும் வார்த்தையானது, பழங்காலங்களில் பழத்தோட்டம் (orchard) எனும் வார்த்தைக்கான அர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது; அது பூந்தோட்டம் அல்ல. அது ஒலிவ மலையின் அருகில் சுமார் 150 அடிகள் உள்ள சிறிய வேலியிட்டு அடைக்கப்பட்டிருந்த இடமாகக் காணப்பட்டது. மேலும் இங்குதான் நமது கர்த்தருடைய வியாகுலம் கலந்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது என்ற பிரபலமும் காணப்படுகின்றது. இங்கு மிகவும் பலவருடமுள்ள மற்றும் மிகவும் முடிச்சுகள் உள்ள எட்டு ஒலிவ மரங்கள் காணப்படுகின்றது; இதுதான் அதே துல்லியமான இடமாக இருப்பினும் (அ) இல்லாவிட்டாலும், இதுவே குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்களுக்குப் போதுமான அளவுக்கு இசைவாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இவ்விடத்திற்குப் போவதற்கு அநேகமாக இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் என்னவெனில்: துரோகியான யூதாசும், அவனால் கூட்டிக்கொண்டுவரப்படும் கூட்டத்தாராலும், தாம் கைது செய்யப்படுவார் என்பதை உணர்த்த நமது கர்த்தர், மிகவும் அன்பாக மாடி அறையைப் பயன்படுத்தும்படிக்கு அனுமதித்த நண்பனுக்குப் பிரச்சனையைக் கொண்டுவர அநேகமாக விரும்பவில்லை என்பதாகும். இரண்டாவது காரணம் என்னவெனில், அவர் நடு இராத்திரியின் அமைதியான வேளையை விரும்பி, மலைப் பகுதிக்குச் சென்று, தேவனுடன் தனிமையில் இருக்க விரும்பினார் மற்றும் தம்முடைய ஆத்துமாவை ஜெபத்தில் ஊற்றி, நடக்கவிருக்கும் சம்பவங்களுக்குப் போதுமான பலத்தைப் பெற்றுக்கொள்ள அவர் விரும்பினார் என்பதாகும். இந்த இரண்டாம் கருத்துக்கு இசைவாகவே, நமது கர்த்தர் தோட்டத்தின் வாசலை அடைந்தவுடன், சீஷர்களில் எட்டுப்பேரைக் காவல் காக்கும்படிக்கு வெளியே நிறுத்திவிட்டு, மற்றத் தருணங்களில் கர்த்தரால் விசேஷமாய்க் கனப்படுத்தப்பட்ட அதே மூன்று சீஷர்களை, அதாவது பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தம்மோடுகூடக் கூட்டிக்கொண்டு உள்ளே சென்றார். தைரியமுள்ள பேதுரு, உணர்ச்சிமிக்க யாக்கோபும், யோவானுமாகிய இடிமுழக்க மக்கள் அவருடன் கூட்டிக்கொண்டு செல்லப்பட்டனர்; இந்த மூவரும் அவருடைய சீஷர்களிலேயே மிகுந்த

தைரியமுள்ளவர்களும், மிகுந்த வைராக்கியமுள்ளவர்களும், மிகுந்த உண்மையுள்ளவர்களுமாய்க் காணப்பட்டனர். இவர்களைக் கர்த்தர் இந்தக் கவலைக்கிடமான வேளையில் தம் அருகாமையில் காணப்பட வேண்டும் என்று விரும்பினார். எனினும் இந்தத் தருணத்திலும்கூட, கர்த்தர் தம்முடைய ஜெபத்தில் இன்னும் தனித்துக் காணப்பட விரும்பினார்; காரணம் இந்த அவருடைய உண்மையான நண்பர்களுங்கூடச் சூழ்நிலையை உணர்ந்துகொள்ள முடியாமல் காணப்படுவார்கள்; "ஜனங்களில் ஒருவனாகிலும் அவருடன்கூட இருக்கவில்லை." ஆகவே இந்த மூவரையும் விட்டு, கல்லெறியும் தூரத்திற்கு அப்பால் போய், பதிவுகளின்படி முகம் குப்புற விழுந்து பிதாவுடன் சம்பாஷித்தார்.

இத்தருணத்திலுள்ள நமது கர்த்தருடைய அனுபவங்களைப்பற்றின பல்வேறு பதிவுகளை வைத்து, எல்லாவற்றையும் தொகுத்துப்பார்க்கும்பொழுது, அவர் ஒருபோதும் அனுபவித்திராத மன வேதனையானது, மிகுந்த வேதனையுடன் அவர்மேல் கடந்துவந்திருந்ததை நம்மால் பார்க்க முடிகின்றது. மேலும் அவர்மேல் வந்த பாரத்தின் சுமை அதிகரித்துக்கொண்டே இருந்தது; அதாவது, "மரணத்துக்கு ஏதுவான துக்கமாய் இருந்தது," அதாவது அவருடைய ஜீவியத்தையே நசுக்கிப்போடும் அளவுக்கு உள்ள துக்கமாய் இருந்தது என மத்தேயுவின் பதிவின்படி பார்க்கின்றோம். மாற்கு 14:33-ஆம் வசனத்தின்படி ஏதோ எதிர்ப்பாராத விதத்தில் அவர்மேல் துக்கம் வந்ததுபோலவும், ஏதோ அவர் திகைத்துவிட்டது போலவும், "அவர் திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும்" செய்தார் என்று பார்க்கின்றோம். வைத்தியனாகிய லூக்கா அவர்களின்படி, அவர், "மிகவும் வியாகுலப்பட்டார்" (லூக்கா 22:44) என்று பார்க்கின்றோம்; இங்கு இடம்பெறும் வியாகுலத்திற்கான (agony) கிரேக்க வார்த்தையின் பொருளானது, ஆற்றலிலும், வீரியத்திலும் பெருகிக்கொண்டிருக்கும் ஒரு போராட்டம் என்பதாக இருக்கின்றது; ஆகவே, "அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது"* என்று பார்க்கின்றோம்; இந்த இரத்த வியர்வை என்பது, இன்றைய வைத்தியர்களினால் மிகவும் அபூர்வமான ஒன்றாகக் கருதப்பட்டாலும், இரத்த வியர்வை என்பது அவர்களால் அறியப்பட்டுள்ள ஒன்றாகத்தான் இருக்கின்றது. இரத்த வியர்வை என்பது, மரணத்துக்கு ஏதுவான துக்கமாகிய உச்சக்கட்ட நெருக்கடியையே சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. [*Vatican மூலப்பிரதிகளில் நமது கர்த்தருயை இரத்த வியர்வைக்குறித்த பதிவு இடம்பெறவில்லை என்றும், Sinaitic மூலப்பிரதிகளில் இது இடம்பெற்றாலும், இது பின்னாளில் வல்லுனர் ஒருவரால் அகற்றப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் டிஸ்கென்டார்ப் அவர்கள் தெரிவிக்கின்றார். ஆகையால் இவ்வசனப்பகுதியானது சந்தேகத்திற்குரியதாக (அ) கேள்விக்கு இடம் கொடுப்பதாகக் காணப்படுகின்றது.]

நமது மீட்பருடைய இந்தத் துயரம், கண்ணீர்கள், ஜெபங்கள் என்பது அவருடைய பெலவீனத்தை உறுதிப்படுத்துகின்றது என நாத்திகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இவர்கள் விவாதிப்பது என்னவெனில், பல்வேறு மதங்களைச் சார்ந்த பலர் இரத்தச் சாட்சி மரணத்தைத் தைரியத்துடனும், விருப்பு, வெறுப்பு அற்று, உறுதியுடனும், சிலசமயம் புன்னகையுடனும் சந்தித்திருக்க, இவர்கள் எல்லாரையும் காட்டிலும் உயர்வாய் இருப்பதற்குப்பதிலாக, இயேசுவின் இந்நடக்கைகள் மூலம் அவர் கோழையானவராகவும், கீழானவராகவும் காணப்படுகின்றார் என்பதேயாகும். ஆனால் இவர்கள் கிரகித்துக்கொள்ளாத ஒரு தத்துவம், இச்சம்பவத்துடன் தொடர்புடையதாய்க் காணப்படுகின்றது. விழுந்துபோன, சீர்க்கெட்டுப்போன, கீழான மனுக்குலத்திற்கு உணர்ச்சியற்ற நிலைமை காணப்படுவதினால் இவர்கள் வலியையும், மரணத்தையும் அலட்சியமாகவே கருதுகின்றனர்; இதினிமித்தம் இவர்கள் பெரிதும் துன்பம் அடையாமலேயே மரணத்திற்குள் தாங்களும் கடந்து செல்கின்றனர் அல்லது இரக்கம் இல்லாமல், கருணையின்றி மற்றவர்களுக்கு மரணத்தைத் தண்டனையாகவும் வழங்குகின்றனர். இப்படிப்பட்ட கடினமானவர்கள், விருப்பு வெறுப்பு இல்லாத கல் மனதையுடையவர்கள் போல் இயேசு இல்லை என்பதினாலும், அவர் மென்மையான, அன்பான, பரிவான உணர்வுகளையும், உணரும் திறன்களையும் கொண்டிருந்தார் என்பதினாலும், மற்ற/வேறெந்த மனுஷனைக்காட்டிலும் மிகவும் பரிவுடனும், மிகவும் மென்மையாகவும், மிகவும் தூய்மையுடனும், மிகவும் கூர்மையான உணர்வுடனும் இயேசுவினால் அனுதாபம்/இரக்கம்கொள்ள முடியும் என்பதினாலும், நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். நம்பொருட்டு, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும் விஷயத்தில் அவர் தம்மைத்தாம் எந்த ஒரு நிலைக்குள்ளாக வைத்திருந்தார் என்பதை அவர் நன்கு உணர்ந்திருக்க வேண்டும்; ஏனெனில் ஒரு சிருஷ்டி பூரணமாய் இருந்ததாயின், அதன் உணர்வுகள் மிகுந்த உணர்வுத்திறன் கொண்டதாயும், உயர் ஆற்றல் மிக்கதாயும் காணப்படும்; சந்தோஷத்தையும் அதிகமாய் உணர்ந்துகொள்ளும், துக்கத்தையும் அதிகமாய் உணர்ந்துகொள்ளும் திறன் கொண்டிருக்கும். நமது கர்த்தர் முழுமையாய்ப் பூரணமானவராக இருந்தபடியினால், மற்றவர்களைக்காட்டிலும், கர்த்தரே வலியின் தாக்கத்திற்கு அதிகமாய் உள்ளாகுகின்றவராய் இருப்பார்.

இதுவுமல்லாமல், அவரிடம் பரிபூரணமானதும், எவ்விதமான தண்டனையினாலும் இழக்கப்பெறாததுமான ஜீவன் இருந்தது மற்றும் அதனைவிட்டு தாம் பிரியப்போகின்றார் என்பதை அறிந்தும், உணர்ந்தும் இருந்தார்; மனித குடும்பத்திலுள்ள மற்றவர்களோ ஜீவன் பறிமுதல் பண்ணப்பட்ட நிலைமையில் அல்லது ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்ட நிலைமையில் வாழ்கின்றவர்களாய்க் காணப்படுகின்றபடியால், ஏதோ ஒருவிதத்தில் ஜீவனை விட்டுப்பிரிய வேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக இருந்தனர். ஆகவே, கர்த்தருடைய பின்னடியார்களில் எவரேனும் தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பதைக்காட்டிலும், நமது கர்த்தர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பது என்பது முற்றிலும் வேறுபட்டக் காரியமாக இருக்கும். பரிபூரண ஜீவன் என்பது, நூறு பாகங்களை உடையது என்று வைத்துக்கொள்ளுங்கள், நமது கர்த்தர் நூறு பாகங்களையும் ஒப்புக்கொடுக்க வேண்டியவராக இருக்கின்றார்; ஆனால் மீறுதல்கள், பாவங்கள் மற்றும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதின் காரணமாக 99 பாகங்களிலும் மரித்துப் போய்விட்ட நமக்கு, மரணத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு ஒரே ஒரு பாகமே இருக்கும். மரணம் சில நிமிடங்களில் நடக்கக்கூடிய ஒன்று என்ற அறிவின் காரணமாக, ஜீவனை இழப்பதை நாம் அலட்சியமாகக் கருதுவது என்பது, அவர் ஜீவனை இழப்பதைக் கருதுவதிலிருந்து, முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்; அதாவது,"உலகம் தோன்றுவதற்கு முன்னதாக" பிதாவுடன் கூடக் காணப்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலும், தாம் இப்பொழுது ஒப்புக்கொடுக்கப்போகும் ஜீவனானது பாவத்தின் காரணமாகப் பறிமுதல் செய்யப்படாமல், மாறாக தாம் விரும்பி பலி செலுத்துவதினாலேயே என்ற அவருடைய உணர்ந்துகொள்ளுதலின் அடிப்படையிலும், நமது கர்த்தர் கொண்டிருந்த தெளிவான அறிவில், அவர் ஜீவனை இழப்பதைக் கருதுவதிலிருந்து, முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்.

ஜீவனை இழப்பது என்பது, நமது கர்த்தருடைய துக்கத்திற்கான முக்கிய காரணி என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. இதை அப்போஸ்தலர் எபிரெயர் 5:7-ஆம் வசனத்தின் வார்த்தைகளில் தெளிவாகத் தெரிவிக்கின்றார். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்." பிதாவின் சித்தத்தைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அவருக்கு ஒவ்வொரு நாளும் சுயத்தைப் பலி செலுத்தும் விஷயத்தில் கடந்து சென்றது . . . இன்னும் ஒருசில மணி நேரங்களில் அனைத்தும் முடிந்துவிடும்; இந்த ஒரு எண்ணமானது, வேறொரு எண்ணத்தையும் கூடக் கூட்டிக்கொண்டு வந்தது, . . . தாம் பிதாவின் சித்தத்தைப் பூரணமாய்ச் செய்துள்ளாரா? மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் என்று தமக்கு வாக்களிக்கப்பட்ட பலனை/பரிசைத் தம்மால் உரிமைக்கோர முடியுமா? தம்மால் பெற்றுக்கொள்ள முடியுமா? என்பதேயாகும்.

பூரணத்தின் அளவுகோலுக்கு ஏற்ப வரும் விஷயத்தில், அவர் ஏதேனும் தவறிப்போனால், அவருடைய மரணம் என்பது, முற்றிலுமான அழிவாக இருக்கும்; மனுஷர்கள் அனைவரும் தாங்கள் அழிந்துபோவதைக் குறித்துத் திகிலடைந்தாலும், எவராலும் அழிவின் அர்த்தத்தினுடைய முழு ஆழத்தையும், அழுத்தத்தையும் அவரைப்போல் அதாவது, பரிபூரணமான ஜீவனை உடையவராக மாத்திரமல்லாமல், பிதாவுடன் தமக்கிருந்த முந்தின மகிமைப்பற்றின நினைவுகளைப் பெற்றிருந்த அவரைப்போல் அறிந்துகொள்ள முடியாது.

அவரைப் பொறுத்தமட்டில், அழிவைப் பற்றின சிந்தனையே, அவருக்குத் துக்கத்தையும், ஆத்துமாவில் அச்சத்தையும் கொண்டுவந்தது. இதே சிந்தனையானது முன்பு அவருக்கு இப்படியாக அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. இதுவே இப்பொழுது அவரை மரணத்துக்கு ஏதுவான அதிர்ச்சிக் கலந்த துக்கம் கொள்ளுமளவுக்கு அவர்மேல் பாரமாய் அழுத்தினது. தாம் தீமை செய்தவராக, நியாயப்பிரமாணத்தின்படி பாடுபடப்போவதைக் கர்த்தர் உணர்ந்தார்; தம்மைக் குற்றஞ்சாட்டுவதற்கு அநேகர் தீர்மானத்தில் இருக்க, பரலோக நீதிபதியும் தம்மைக் குற்றவாளி இல்லையென்று தீர்ப்பாரா? தாம் முற்றிலும் குற்றமற்றவராக இருக்கின்றாரா? என்ற கேள்வி அவருக்குள் இயல்பாகவே எழும்பினது.

கொஞ்சம் நேரம் ஜெபம் பண்ணின பிற்பாடு, அவர் தம்முடைய மூன்று சீஷர்களிடத்தில் வந்தார். மற்றவர்களைக் காட்டிலும், இம்மூவரிடமே அவருடைய மாபெரும் நம்பிக்கை காணப்பட்டது; இவர்கள் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானக் கூட்டாளிகளாக இருந்தனர்; ஆனால் இவர்களை நித்திரைப் பண்ணுகிறவர்களாக இயேசு கண்டார். துயரத்தின் காரணமாகவே இவர்கள் தூங்கிப்போய்விட்டனர் என லூக்கா அவர்கள் விவரிக்கின்றார். அந்த இரவும், அதன் பாடங்களும் மனதில் ஆழமாய்ப் பதிந்ததாய் இருந்தது; அவர்களால் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாத நினைவுகூருதலின் போஜன காரியங்களானது, ஆண்டவருடைய மரணத்தைக்குறிக்கின்றது என

ஆண்டவர் தெரிவித்ததினாலும், இன்னுமாய் அவர்களில் ஒருவன் ஆண்டவரைக் காட்டிக்கொடுப்பான் என்றும் அவர் கூறினபடியினாலும், அவர்கள் மீது மிகுந்த துக்கமான பாரத்தை கொண்டுவந்ததாய் இருந்தது. துக்கத்தின் காரணமாக, மந்த தன்மையுடன் கூடிய தூக்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. "நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று அவர்களை மென்மையாய் நமது கர்த்தர் கடிந்து கொண்டார். "எனக்காக மாத்திரம் நீங்கள் விழித்திராமல், உங்களுக்காகவும் நீங்கள் விழித்திருக்க வேண்டும். நம் அனைவர் மீதும் கடுமையான சோதனை காலம் வரவிருக்கின்றது; இந்தப் பொல்லாத காலக்கட்டத்தில் விழுந்துபோகாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற விதத்தில் கர்த்தர் கூறினார்.

பின்னர், மீண்டும் கர்த்தர் ஜெபம் பண்ணும்படிக்குக் கடந்துபோனார். மூன்று முறையும், அவர் ஒரே வார்த்தைகளைக் கூறி – ஒரே உணர்வுகளை வெளிப்படுத்தி ஜெபம் பண்ணினதாக நமக்குக் கூறப்பட்டுள்ளது; அதாவது அவருடைய இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த காரியத்திற்காக ஜெபம் பண்ணினார். பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு நாடி, இப்பொழுது தமது ஓட்டத்தை முடிக்கப்போகின்ற அவர், தாம் அங்கீகரிக்கத்தக்க விதத்தில் செய்துள்ளார் என்று நம்பிக்கைக்கொள்ளலாமா? மரணத்திலிருந்து, உயிர்த்தெழுதல் மூலமாய்த் தம்மைத் தேவன் இரட்சிப்பார் என விசுவாசத்தின் முழு நிச்சயத்தை தம்மால் பெற்றுக்கொள்ளக்கூடுமோ? கர்த்தருடைய விண்ணப்பத்திற்குப் பதிலளிக்கும் வண்ணமாக, அவரை ஆறுதல் படுத்தும்படிக்கும், அவருக்கு நிச்சயம் கொடுக்கும்படிக்கும், அவரைப் பலப்படுத்தும்படிக்கும், தேவதூதன் அனுப்பி வைக்கப்பட்டார். என்ன செய்தி தேவதூதன் கொண்டுவந்தார் என்பது பற்றி நமக்குக் கூறப்படவில்லை, எனினும் அது சமாதானம் கொடுக்கும் செய்தியாகவும், கர்த்தருடைய நடத்தைப் பிதா அங்கீகரிக்கத்தக்கதாய் இருந்தது என்பதற்கும், அவர் மரணத்திலிருந்து, உயிர்த்தெழுதல் மூலம் மீண்டும் ஜீவனுள்ளவராய் கொண்டுவரப்படுவார் என்பதற்கும் உறுதியளிக்கும் செய்தியாகவும் இருந்திருக்கும் என நாம் எண்ணுகின்றோம். இவை நமது கர்த்தருக்கு முன்பாக இருக்கும் சோதனைக்கு அவசியமான பலத்தையும், தைரியத்தையும் அவருக்கு அளிப்பதற்குப் போதுமானதாய் இருந்தது; மேலும் அதுமுதல் அனைவர் மத்தியிலும் கர்த்தர் அமைதியுடன் காணப்பட்டார். யூதாசும், அவனோடு வந்த சேனைகளும், கர்த்தரிடம் வந்தபோது, எல்லோர் மத்தியிலும் கர்த்தரே மிகவும் அமைதலுடன், சாந்தத்துடன் காணப்பட்டார்; பிரதான ஆசாரியனாகிய காய்பாவிற்கு முன்பாக இயேசு காணப்பட்ட போதும், இப்படியாகவே காணப்பட்டார்; பிலாத்துவுக்கு முன்னதாகவும் இப்படியே காணப்பட்டார்; சிலுவையில் அறையப்பட்டபோதும் இப்படியாகவே காணப்பட்டார்; தாம் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார் என்பது பற்றியும், மகிமை, கனம் மற்றும் அழியாமை குறித்த கிருபையான வாக்குத்தத்தங்கள் அனைத்தும் தமக்கு உரியது என்பது பற்றியும் உள்ள செய்தியில், கர்த்தர் சமாதானம் அடைந்தார்; இப்பொழுது அவரால் எந்த சோதனைக்குள்ளாகவும் கடந்து செல்ல முடிந்தது.

(அவருடைய சகோதரர்களாகிய) நம்மைப்போன்று அவர் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டதாக வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயம் கொடுக்கின்றது; கெத்செமனேயில் உள்ள இந்த அவருடைய அனுபவத்தில், கர்த்தருடைய ஜனங்களுக்கு வரப்போகின்ற மிகக் கடுமையான சோதனைகளில் ஒன்று சித்தரிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். பலியின் "இடுக்கமான வழியில்" உள்ள சோதனைகளும், சிரமங்களும், அனைத்தும் எவ்விதத்திலும் பலனளிக்காது என்று நம்மை எண்ண வைத்து, நாம் முயற்சியைக் கைவிட்டுவிடத்தக்கதாக நம்மைச் சோர்வுபடுத்தும்படிக்கு, சிலசமயங்களில் எதிராளியானவன் முயல்வான். இப்படிப்பட்ட எண்ணங்கள், தாங்கள் அர்ப்பணிப்பின்போது செலுத்தின வாக்குறுதிகளை நிறைவேற்றத்தக்கதாக நேர்மையுடனும், உண்மையுடனும் நாடுபவர்களுக்கு வருகையில், இது அவர்கள் மேற்கொள்ள வேண்டிய கடுமையான சோதனைகளில் ஒன்றாய் இருக்கும்; பரம காரியங்களுக்காக இந்த உலகத்தையும், அதன் ஆசைகளையும், எதிர்பார்ப்புகளையும், இலட்சியங்களையும், விருப்பங்களையும் கைவிட்டுவிட்டவர்களுக்கு, ஏதேனும் விஷயம் அவர்களுடைய பரம நம்பிக்கைகளை மூடிப்போட்டுவிடும் பட்சத்தில், இவர்கள் ஒருவேளை மகிமையான வாக்குத்தத்தங்களைக் காணாமல், ஏற்றுக்கொள்ளாமலிருந்தால், காணப்படும் இருளைக் காட்டிலும், அடர்த்தியான இருள் சூழ்நிலைமையில் இவர்கள் காணப்படுவார்கள். இப்படியான தருணங்களில் இவர்கள் என்ன செய்ய வேண்டும்? நாம் கர்த்தருடைய மாதிரியைப் பின்பற்றி, அனைத்தும் சரியாக இருக்கின்றதா இல்லையா என்பதை அறிந்துகொள்ளும்படிக்கு, பிதாவின் முகத்தை நாட வேண்டும். உலகமானது நம்மை வெறுத்து, நமக்கு எதிராய்ப் பொய்யாய் அநேக தீமைகளைப் பேசும்போது, அவருடைய அங்கீகரிப்பு இன்னமும் இருக்கின்றது என்பதற்கான ஏதேனும் உறுதிபாடுகளை அடைவதற்கு ஆவலாய் நாம் காணப்பட வேண்டும்; அனைத்தும் சரியாக நடக்கும் என்றும்,

ஜீவனுக்கான மேலான உயிர்த்தெழுதலில் ஒரு பங்கை கர்த்தர் நமக்குக் கொடுப்பார் என்றும் ஏதேனும் புதிய உறுதிபாடுகள் கிடைக்க ஆவலாய் நாம் காணப்பட வேண்டும்.

நமது கர்த்தருடைய அனுபவங்களுக்கும், நம்முடைய அனுபவங்களுக்கும் நாம் இவ்விதமாய்த் தொடர்புபடுத்திப் பார்த்திட்டாலும், மிகப் பெரிய வித்தியாசம் நமக்கும், கர்த்தருக்கும் இடையே காணப்படுகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது; நாம் மரித்துக்கொண்டிருப்பவர்கள் என்றும், நம்மில் 99 பாகங்கள் ஏற்கெனவே மரித்துவிட்டது என்றும், இதனால் மரணத்தின் (அ) நித்திய ஜீவனுக்கான அர்த்தத்தை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியாது என்றும் நாம் மறந்துவிடக்கூடாது; இவைகள் எல்லாவற்றையும் விட நமக்கு நமது கர்த்தருடைய மாதிரி காணப்படுகின்றது மற்றும் இன்னுமாக நம்முடைய சரீரங்களிலும், ஆவிகளிலும் அவரை மகிமைப்படுத்துவதற்கான நம்முடைய பிரயாசங்கள் எவ்வளவு பூரணமற்ற பலனைக் கொடுத்திட்டாலும், இருதயத்தில், நோக்கத்தில், சித்தத்தில் நமது உண்மையைக் கர்த்தருக்கு நாம் நிரூபிக்கும் பட்சத்தில், நம்முடைய சொந்த பரிபூரணத்தினால் அல்லாமல், அவருடைய பரிபூரணத்தினால் முதலாம் உயிர்த்தெழுதலில் நாம் பங்கடைவோம் என்ற நிச்சயமும் நமக்கு இருக்கின்றது.

"பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால், நீங்கட்டும்" என்று நமது கர்த்தர் ஜெபம் பண்ணினதாக சுவிசேஷகர்கள் பதிவு செய்துள்ளனர். ஒருவேளை அவர் ஜெபம் பண்ணினதானது, "ஒருவேளை என்னுடைய மரணம் அவசியப்படாமலேயே மனுக்குலத்திற்கான உம்முடைய இரட்சிப்பின் திட்டத்தை ஏதேனும் விதத்தில் நிறைவேற்றிட முடியும் என்று உம்முடைய அளவில்லாத அன்பும், இரக்கமும் ஒருவேளை காணும் பட்சத்தில் பிதாவே, அப்படியாகவே நடப்பதாக" என்று அர்த்தப்படுமாயின் — இயேசு, ஆதாம் மற்றும் அவருடைய பாவங்களுக்குச் சரிநிகர் சமானபலி செலுத்தப்படுவதன் மூலம் மனுக்குலத்தைச் சீர்ப்பொருந்தும் பிதாவின் திட்டத்தை முழுமையாய்க் கிரகித்துக்கொள்ளவில்லை என்பதாகிவிடும்; ஏனெனில் ஈடுபலி தேவை என்பதைக் கர்த்தர் ஒருவேளை அறிந்திருந்தாரானால், ஈடுபலியைக் காட்டிலும் குறைவான வேறு எதுவாலும் பலன்களைக்கொடுக்க முடியும் என நம்முடைய கர்த்தர் எண்ண வாய்ப்பில்லை. ஆகவே, அவரைப் பாரமாய் அழுத்திக்கொண்டிருந்தது என்னவெனில், ஒருவேளை அவர் தேவதூஷணம் புரிந்தவராகக் கைது செய்யப்பட்டால், அவரை அவருடைய சத்துருக்கள் இரகசியமாய் அழித்துப்போடுவதற்குத் திட்டம் பண்ணாமல், அவரை உரோமர்களிடம் கையளிப்பார்கள் என்பதாகும்; இப்படியாக அவருடைய சத்துருக்கள் அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு வல்லமையையும், செல்வாக்கையும் செலுத்திடுவார்கள் என்பதையும் கர்த்தர் உணர்ந்திருந்தார் மற்றும் சிலுவையில் அறையும் முறையே உரோமர்கள் மரணத் தண்டனையை அளிக்கும் முறை என்றும் கர்த்தர் அறிந்திருந்தார்; மற்றும், "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று வேதவாக்கியங்கள் கூறுவதையும் கர்த்தர் அறிந்திருந்தார் (கலாத்தியர் 3:13).

"நான் தேவனால் கைவிடப்பட்டவராகவும், தேவனால் சபிக்கப்பட்டவராகவும், என்னுடைய தேசத்தின் ஜனங்களினால் கருதப்படப் போகிறேன். என்னுடைய எல்லா உணர்வுகளும், இப்பொழுதும், எப்பொழுதும் பிதாவுக்கு உண்மையாகவே இருக்க, நான் தேவதூஷணம் புரிந்தவராகக், குற்றவாளியாக மரிக்கவிருக்கிறேன்" என்பதே கர்த்தருடைய எண்ணங்களின் மையமாக இருந்தது. இது நமது கர்த்தருடைய கவலையின் விசேஷித்த அம்சமாகும்; இதுவே துக்கத்தின் "பாத்திரமாய்" இருந்தது; இதைத்தான் நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று விரும்பினார். தம்முடைய மரணம் அவசியமான ஒன்றும், தவிர்க்கப்பட முடியாத ஒன்று என்றும் கர்த்தர் அறிந்திருந்தார்; தம்முடைய மரணம் அவசியம் என்று பலமுறை தம்முடைய சீஷர்களுக்கு அறிவித்துமிருந்தார்; ஆனால் சிலுவை பரியந்தமான அவருடைய அவமானத்துடன் கூடிய மரணமே, அவரைத் தயங்க பண்ணினது; காரணம் இப்படியாக அவர் அவமான மரணம் மரிப்பது என்பது வெட்கமாகவும், ஜனங்களுக்கும், தாம் அன்புகூர்ந்தவர்களுக்கும், தாம் நன்மை செய்யும்படிக்கு நாடினவர்களுக்கும், தம்மைத் தவறாய்க் காட்டுவதோடு கூட, தாம் தேவனால் சபிக்கப்பட்டவர் என்ற எண்ணத்தைக் கொடுக்கின்றதாகவும் இருக்கும்; தேவனால் சபிக்கப்பட்டவர் என்றால், தமக்கு உயிர்த்தெழுதல் குறித்த மகிமையான வாக்குத்தத்தம் பற்றின காரியத்திற்கு எவ்விதமான நம்பிக்கையும் இல்லை என்பதாக இருக்கும். ஆனால் அவர் உண்மையில் தேவனால் குற்றம் சாட்டப்படுவதில்லை என்றும், கொஞ்சம் நேரம் சபிக்கப்பட்ட ஆதாமின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, ஆதாமின் சந்ததியாகிய நமக்கு, "அவர் சாபமாக்கப்படுவார்" என்றும் தேவதூதனினால் நிச்சயமளிக்கப்பட்டபோது, அவரால் சிலுவையையும், அதன் அவமானங்களையும் பொறுமையாய்ச் சகிக்க முடிந்தது.

# நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு, விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

நம்முடைய கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய விஷயத்தில், சோதனையின் இருளான வேளையில் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவதற்குரிய முக்கியத்துவம் சித்தரிக்கப்பட்டுள்ளதை நாம் பார்த்தோம். நமது கர்த்தர் சீஷர்களுக்குச் சொன்னவைகளை தாமும் கைக்கொண்டார்; அவர் விழித்திருந்து ஜெபம் பண்ணினார், ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார், அவர் பெலப்படுத்தப்பட்டார் மற்றும் ஜெயங்கொண்டவராக வந்தார். அப்போஸ்தலர்கள் விழித்திருக்கவில்லை, அவர்கள் ஜெபம் பண்ணவில்லை, சூழ்நிலைக்கான அவசியங்களை உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டார்கள், இவைகள் காரணமாக அவர்கள் சிதறடிக்கப்பட்டுப் போனதையும், தடுமாறி/திகைத்துப் போனதையும், நாம் பார்க்கின்றோம்; இவர்களில் ஒருவர், இவர்கள் அனைவரிலும் மிகவும் பலமானவர், "அனைவரும் உம்மை கைவிட்டுப்போனாலும் நான் உம்மை விட்டுப்போவதில்லை" என்று சற்று முன்பு தற்பெருமையடித்துக் கொண்டவர், தன்னுடைய சூழ்நிலைகளினால் மிகவும் மேற்கொள்ளப்பட்டுவிட்டார்; ஜெபத்தினாலும், விழித்திருப்பதினாலும் அடையப்பெற்றிருக்கும் பலம், பேதுருவுக்கு இல்லாமல் இருந்தபடியினால், அவர் கர்த்தரை நிந்தித்து மறுதலித்துவிடும் அளவுக்கு மிகவும் பெலவீனமாய்க் காணப்பட்டார்.

எப்போதெல்லாம் பரிசுத்தமுள்ள மற்றும் அர்ப்பணிப்புள்ள ஜீவியத்தை ஜீவிக்க முற்பட்டு, ஆனால் விழித்திருந்து, ஜெபம் பண்ணும்படியான கர்த்தருடைய கட்டளையைக் கர்த்தருடைய ஜனங்கள் புறக்கணிப்பதை நாம் காண்கையில், இவர்கள் ஞானமற்று நடக்கின்றார்கள் என்பதை நாம் அறிவோம்; மேலும், இவர்கள் எவ்வளவுதான் கன்னிகைகளாகவும், தூய்மையானவர்களாகவும் இருப்பினும், இவர்கள் புத்தியில்லாதவர்கள் ஆவார்கள்; தன்னந்தனியாக இவர்களால் சுயத்தையும், பாவத்தையும், எதிராளியானவனையும் ஜெயங்கொண்டுவிட முடியாது. ஆண்டவருக்கே பலப்படுத்தப்படுதல் அவசியப்படுமாயின், நிச்சயமாய் அது நமக்கும் அவசியம்; அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் தம்முடைய வேண்டுகோளுக்கான பதிலைப் பெற்றுக்கொண்டாரானால், இது தேவனுடைய நாமத்திற்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் எதையும், மற்றும் எல்லாவற்றையும் நாம் நல்ல போர்ச்சேவகர்களாக சகிக்கத்தக்கதாக நம்மைப் பெலப்படுத்தக்கூடிய விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை அளிப்பதற்கு, பிதா பிரியப்படுகின்ற வழியை/வழிமுறையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. கர்த்தரை உண்மையோடு, ஜெபத்தில் நாடுபவர்கள், நிச்சயமாய்க் கர்த்தர் இயேசு பெற்றுக்கொண்டதுபோல, ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்; ஆறுதல் படுத்துவதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும் என்று அன்று அனுப்பப்பட்ட அதேவிதமான பரலோகத்தின் தூதுவர் அனுப்பி வைக்கப்பட மாட்டார் எனினும், வேறுவிதமான பரலோகத்தின் தூதுவர் நமக்காக நிச்சயமாய் அனுப்பி வைக்கப்படுவார். அத்தூதுவர்/அது நம்முடைய சோதனைகளை, நமக்கான பிரச்சனைகள் என்று கண்டு, நம்மீது அனுதாபங்கொள்ளும், சக சகோதரர்களாக இருக்கலாம்; இல்லையேல் அது ஒருவேளை அப்போஸ்தலர்கள் ஏவப்பட்டு கொடுத்த கிருபையான வார்த்தைகளின் மூலம் தேவன் நம்மிடம் பேசுகின்றவராய் இருக்கலாம். நமது கர்த்தரின் விஷயத்தில், அப்போஸ்தலர்கள் அவருக்காக அனுதாபங்கொள்ளாமல் (அ) அவருக்கு உதவிடாமல் இருந்துவிட்டனர். எப்படியிருப்பினும், பெலமானது கடந்துவரும்; அது மனுஷர் (அ) தேவதூதரின் வாக்காக இல்லாமல், மாறாக நாம் அவருக்குப் பிரியமாயும், அவரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்கின்றோம் என்றும், தேவனை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துள்ள மகா மேன்மையும், அருமையுமானவைகளை நாம் உரிமைகோரலாம் மற்றும் எதிர்பார்க்கலாம் என்றுமுள்ள தேவனுடைய வாக்காகவே இருக்கும்.

சொல்லப்போனால், உலகம் அனைத்தையும் சோதிக்கத்தக்கதாக உலகத்தின் மீது வரப்போகின்ற சோதனை வேளையில்தான் நாம் இப்பொழுது காணப்படுகின்றோம். இது "சோதனை காலம்" அல்லது இந்த யுகத்தின் முடிவு பகுதியிலுள்ள சோதனைகள் என்று வேதவாக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. இது கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் அனைவருக்கும், அதாவது அவருக்குத் தங்களை முழுமையாய் அர்ப்பணித்துள்ளவர்கள் அனைவருக்கும் கெத்செமனே வேளையாய் இருக்கின்றது. இது நமது கர்த்தரைப் போன்று நாம் தேவனுடையவர்கள் என்றும், அவர் நம்முடையவர் என்றும், இவ்வேளையில் நம்மை அவரது பலமானது, சுமந்து செல்லும் என்று நம்பிக்கைக்கொள்ளலாம் என்றுமுள்ள முழு நிச்சயத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, பிதாவின் முகத்தை நாம் நாடுவதற்கான வேளையாகும். இது,

"பூமிக்குரிய எந்த மேகமும் எழும்பி,
உம்முடைய அடியானின் கண்களிலிருந்து
உம்மை மறைக்காமல் இருப்பதாக"

என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வேளையாகும். இந்த ஒரு வேளையில், "சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை அலட்சியப்படுத்துகின்றவர்கள் சோதனைக்குட்பட்டு, விழுந்துபோவார்கள். இந்த வீழ்ச்சி/விழுகை என்பது, கடுமையாய் இருக்கும்; என்னதான் அவர்கள் பேதுரு போன்று பிற்பாடு குணப்பட்டாலும், அது கண்ணீருடன்தான் குணப்படுகின்றதாய் இருக்கும்.

சிலர் விழித்திருக்காமல் ஜெபம் பண்ணும் தவறைச் செய்கின்றனர்; இன்னும் சிலர் ஜெபம் பண்ணாமல் விழித்திருக்கின்றார்கள்; ஆனால் கர்த்தர் சொல்லியுள்ளது போன்று, இரண்டையும் சேர்த்துச் செய்வதுதான் பாதுகாப்பான மற்றும் சரியான ஒரே வழிமுறையாக இருக்கும். நாம் விழித்திருக்க வேண்டும் மற்றும் உலகம், மாம்சம் மற்றும் பிசாசின் அத்துமீறுதலுக்கு எதிராக காவல் காக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் கொடுக்கும் உற்சாக மூட்டுதல் அனைத்தையும், அவருடைய பிரசன்னத்தை மற்றும் யுகத்தின் மாபெரும் மாறுதல்களைப் பற்றின அடையாளங்களையும், கர்த்தருடைய வார்த்தைகளின் நிறைவேறுதல்களுக்கான சாட்சியங்களையும் நாம் கவனிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், உண்மையிலும், அன்பிலும் நம்மைப் பலப்படுத்துகின்ற அனைத்திற்காகவும் நாம் கவனித்திருக்க வேண்டும்; மற்றும் இப்படியாக கவனித்திருக்கும் அதே வேளையில், நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணவும் வேண்டும். நாம் கர்த்தருடைய ஜனங்களுடன் சேர்ந்து ஜெபம் பண்ண வேண்டும்; நாம் நம்முடைய இல்லங்களில், குடும்பத்தினராகச் சேர்ந்து ஜெபம் பண்ண வேண்டும்; நாம் தனிமையில் இரகசியமாக ஜெபம் பண்ண வேண்டும். நாம் பேசும் மற்றும் செய்யும் அனைத்திலும் நமக்கு ஜெப சிந்தை காணப்பட வேண்டும். அதாவது, பிதா அங்கீகரிக்கத்தக்கதான விதத்தில் நாம் நம்முடைய கையில் வருகின்ற காரியங்களை நம்மால் முடிந்தமட்டும் செய்வதற்கும், நம்முடைய திராணிக்கு மிஞ்சினதாய் இருக்கும் சோதனைகளிலிருந்து அவரால் நாம் பாதுகாக்கப்படுவதற்கும், இறுதியில் பொல்லாங்கனிடமிருந்து விடுவிக்கப்பட்டு நம்முடைய கர்த்தருடைய இராஜ்யத்தில் நாம் இடம்பெற்றுக்கொள்வதற்கும் என்றும், நம்முடைய ஜீவியத்தின் விஷயங்கள் அனைத்திலும் வழிநடத்தல் பெற்றுக்கொள்வதற்கென, நம்முடைய இருதயங்கள் தொடர்ந்து கர்த்தரிடத்தில் போய்க்கொண்டே இருக்க வேண்டும். அன்பான சகோதர சகோதரிகளே, ஒவ்வொரு இல்லங்களிலும் வாட்ச் டவர் வெளியீடு சுமந்துவரும் நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளான: "சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்பதை நாம் அதிகமதிகமாக நினைவில் கொள்வோமாக மற்றும் செயல்படுத்திடுவோமாக!

*****

# இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார்

## யோவான் 18:1-14

*"பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ என்றார்."*

சுவிசேஷ பதிவுகளின் எளிமையே, அதன் மற்றக் காரியங்கள் அனைத்தையும்விட, மனித கணிப்பை மிகவும் பலமாய்க் கவர்கின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலர்களுடைய பெலவீனங்கள், தவறுகள், இடறல்கள் குறித்து உண்மையாய் விவரம் கொடுக்கப்பட்டிருக்கின்றதும், அதுவும் தவறுகளுக்குச் சாக்குப்போக்குகள் சொல்வதற்கு (அ) தவறுகளுக்குக் காரணம் காட்டுவதற்கு அல்லது தவறுகளைப் பூசி மெழுகுவதற்கு எவ்விதமான முயற்சிகள் எடுக்கப்படாததுமாகிய இச்செயல்களின் நேர்மையையும், நோக்கத்திலுள்ள உண்மையையும் வேறே புத்தகங்களில் பார்ப்பது அரிதான ஒன்றாகும். நம்முடைய இந்தப் பாடத்திலுங்கூட யூதாசினுடைய வெட்கக்கேடான நம்பிக்கைத் துரோகம் பற்றியும் கர்த்தருடைய இருளான வேளையில், அவரைத் தனியே விட்டுவிட்டு, தனிப்பட்ட பாதுகாப்பை நாடின மீதமுள்ள பதினொரு பேரின் பெலவீனம் பற்றியும், பின்னர் இந்தப் பதினொரு பேரிலும் ஒருவர் அவரை மறுதலிப்பது பற்றியும் உள்ள பதிவுகள், மற்றப் புத்தகங்களைக் காட்டிலும் கவனத்தை மிகவும் ஈர்க்கின்றதாக இருக்கின்றது. சுவிசேஷ புத்தகங்களின் எழுத்தாளர்கள் ஒருவேளை தங்களது நடத்தைகளுக்கு விளக்கங்களையும், காரணங்களையும் கொடுத்திருந்தாலும்கூட, அது பழியாய்க் கருதப்பட்டிருந்திருக்காது; ஆனாலும் பதிவுகளானது, அவைகள் கொடுக்கப்பட்டிருக்கிற விதத்தில் பலமானதாகவே காணப்படுகின்றது மற்றும் அவர்களுக்காக அவர்களது குறைகளுக்கான விளக்கத்தினைக் கொடுப்பதற்கு நாம் முற்படுகின்றோம்; ஆனால் ஒருவேளை அவர்களே இந்தக் காரணங்களைக் கொடுக்க முற்பட்டிருந்திருப்பார்களானால், அதை ஏற்றுக்கொள்வதில் நாமும் ஒருவேளை ஆர்வமற்றிருந்திருப்போம்.

அப்போஸ்தலர்களில் இருவர் பட்டயங்கள் வைத்திருந்தார்கள் என்றும், கர்த்தருடைய அனுமதியின் பேரில் வைத்திருந்தார்கள் என்றும் நாம் பார்க்கின்றோம்; பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரர்களினால் கர்த்தர் மேற்கொள்ளப்படாமல், அவர் தாம் கைது செய்யப்படத்தக்கதாக, தம்மையே கையளித்துள்ளார் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே, பட்டயங்களை வைத்துக்கொள்ளுமாறு கர்த்தரினால் கட்டளையிடப்பட்டிருந்திருக்கலாம். பட்டயங்கள் கொண்டுவர கர்த்தர் சொல்லியிருக்கிறார் என்றால் அது ஜோடிப்புக்காக அல்லாமல், பயன்படுத்துவதற்கே என அப்போஸ்தலர் பேதுரு நியாயமாக எண்ணிக்கொண்டு, கர்த்தர் மேல் கைப்போடுவதற்கு முதலாவதாக வந்தவர்களிடமிருந்து, கர்த்தரைப் பாதுகாக்கத்தக்கதாகப் பாராட்டத்தக்கதான தைரியத்தில், பேதுரு தம்முடைய பட்டயத்தை உறையிலிருந்து உருவிக்கொண்டார். தலையை நோக்கம் கொண்டே பட்டயத்தை வீசினார். ஆனால் அநேகமாக காதுக்கு மாத்திரம் பாதிப்பு ஏற்படத்தக்கதாகப் பட்டயத்தின் வீச்சுத் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் அவர்கள் பட்டயத்தைப் பயன்படுத்தக்கூடாது எனப் போதகர் மறுப்புத் தெரிவித்து, தம்மை அவர்கள் பாதுகாக்க முற்படுவதை மறுத்து, வெட்டப்பட்ட சேவகனைச் சொஸ்தப்படுத்தினபோது, பேதுருவுக்கும், மற்றவர்களுக்கும் எத்தகைய ஒரு திகைப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்! இப்படியான சூழ்நிலைகளால் சூழப்பட்டிருக்கும் நிலையில், உண்மையுள்ள பதினொரு அப்போஸ்தலர்கள் கீழுள்ள இரண்டில் ஒன்றைச் செய்திருப்பார்கள் என நம்மால் பார்க்க முடிகின்றது: அதாவது ஒன்றில் போதகருடன் கூடவே காணப்பட்டு, அவரைப்போலவே கைது செய்யப்படுவதற்கென ஒப்புக்கொடுக்க வேண்டும்; இல்லையேல் ஓடி, தங்களுடைய தனிப்பட்ட உரிமையையும், பாதுகாப்பையும் தேட வேண்டும்; ஆனால் இயேசு இந்தப் பாதுகாப்பைத் தமக்கெனத் தேடிக்கொள்ள விரும்பவில்லை.

இந்தப் பதினொரு பலமுள்ள புருஷர்கள், வாழ்க்கையின் முக்கியமான ஒரு கட்டத்தில் காணப்படுகையில் அவர்களிடம் இரண்டு பட்டயங்கள்தான் இருந்தபோதிலும், நமது கர்த்தரைக் கைது செய்யும்படிக்கு வந்திருந்த கூட்டத்தாருக்கு, அவர்களால் போதுமான அளவுக்குச் சேதத்தை ஏற்படுத்தியிருந்திருக்கக்கூடும் என்பதை நம்மால் உடனடியாக கற்பனை செய்துகொள்ள முடிகின்றது; எனினும் யுத்தக்களத்தின் பரபரப்புகளும், நடவடிக்கைகளும் தைரியத்தைத்

தூண்டுகிறதாயிருக்க, உபயோகமில்லாமல் நிற்பதற்குரிய கட்டாயத்திற்குள் ஆக்கப்படும்போது, ஆயுதங்களுடன் காணப்படும் சத்துருவின் முன்னிலையில், தற்காப்பிற்கெனக் கரம் கூட உயர்த்துவதற்கு அனுமதிக்கப்படாத பட்சத்தில், இது எவருக்கும் சோர்வை ஏற்படுத்தக்கூடியதாகவே இருக்கும். இப்படியான ஒரு சூழ்நிலையில் காணப்படும்போது, ஓடித் தப்பிவிடுவதே இயல்பானதாய்க் காணப்படும்; இன்னுமாக, இச்சந்தர்ப்பத்தில் போதகருடைய கருத்தும், "இவர்களைப் போகவிடுங்கள்" என்பதாகக் காணப்பட்டது. ஆகவே, சூழ்நிலையை முழுமையாய்க் கவனிக்கும்போது, அப்போஸ்தலர்கள் கோழைத்தனமாக நடந்துகொள்ளவில்லை என்றே கூற வேண்டும்; இன்னுமாக அப்போஸ்தலர்களுடைய சூழ்நிலையைப் போன்ற சூழ்நிலை ஏற்படுகையில், அப்போஸ்தலர்கள் ஓடிவிட்டது போன்று ஓடிவிடுவதற்குப்பதிலாக, வேறு விதமாய் நடந்துகொள்வதற்குக் கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் சொற்பமானவர்களுக்கே தெரியும் எனச் சொல்லலாம்.

நமது கர்த்தரைக் கைது செய்யும்படிக்கு, யூதாசினால் வழிகாட்டப்பட்டு வந்த திரளான மனுஷர்கள் உரோம சேவகர்களாய் இராமல், மாறாக பட்டயங்கள், தடிகள் முதலிய ஆயுதங்களுடன் காணப்பட்ட பிரதான ஆசாரியனுடைய வீட்டின் வேலைக்காரர்களும், சேவகர்களும் மாத்திரமே ஆவர். அடுத்த நாளில் ஆசாரியர்களும், பிரதான அதிகாரிகளும், தூண்டிவிடப்பட்ட வேலைக்காரர்களும், ஜனங்களும், இயேசுவைத் தீர்ப்பு மன்றத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து, இயேசுவுக்கு மரணத் தண்டனையை நிறைவேற்றும்படிக்குக் கேட்பது வரையிலும் பிலாத்துவும், அவருடைய உரோம இராணுவ அதிகாரமும் இயேசுவைக் கவனத்தில் கொள்ளவே இல்லை.

பன்னிரண்டு பேரில் யார் இயேசு என்று அடையாளம் காட்டிக்கொடுத்த யூதாசின் காட்டிக்கொடுத்தலாகிய இழிவான காரியத்தையும், காட்டிக்கொடுக்கப் பயன்படுத்தின முத்தத்தையும், "சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்? முத்தத்தினாலேயா மனுஷ குமாரனைக் காட்டிக்கொடுக்கின்றாய் என்ற நமது கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலின் வார்த்தைகளையும் பற்றிப் பரிசுத்தவானாகிய யோவானின் பதிவுகள் தெரிவிப்பதில்லை. அவர்கள் தேடினவரை இன்னவிதமாய்த்தான் அடையாளம் காட்டிக்கொடுப்பதாக யூதாஸ் பண்ணியிருந்த முன்னேற்பாட்டின்படி, யூதாஸ் இயேசுவிடம் வாழ்த்துதல் சொல்லத்தக்கதாக சேவகர்கள் கூட்டத்திற்கு முன்பு கொஞ்சம் தொலைவில் வந்திருக்க வேண்டும்.

யூதாசினுடைய நடத்தையைக் குறித்து வாசிக்கின்ற எந்த உயர் மனமுள்ள நபராலும், ஒரு நீதியான கோபத்தின் உணர்வை அடையாமல் காணப்பட முடியாது; இன்னுமாக யூதாஸ் இயேசுதான் மேசியா என்று உறுதியாய் இருந்தாரோ, இல்லையோ, ஆனால் மனுஷர்கள் மத்தியிலேயே உயர்குணமுள்ளவராக அடையாளம் கண்டிருந்த இயேசுவை, முப்பது வெள்ளி காசுகளுக்காக யூதாஸ் காட்டிக்கொடுப்பது என்பது இழிவான குணம் என்ற உணர்வையும், எவராலும் அடையாமல் காணப்பட முடியாது. இந்த அளவுக்கு அக்கிரமத்தின் ஆழத்திற்கு, யூதாஸ் திடீரென வரவில்லை என்று கூறுவது தவறல்ல; மாறாக போதகருடன் தொடர்புகொண்டிருந்த மூன்று வருடங்களாக, யூதாசின் இந்த எதிர்மாறான பண்பானது அவரை முற்றிலும் கட்டுப்படுத்தத்தக்கதாக யூதாசுக்குள் வளர்ந்துகொண்டு வந்தது. யூதாஸ் அப்போஸ்தலனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இவர் நல்ல மனுஷனாகவே இருந்தார்; இவருடைய பெயரின், துதி என்ற அர்த்தமானது, இவருடைய பெற்றோர்களும் தேவபக்தியுள்ள மனதைக்கொண்டிருந்ததையும், இவர் தேவனுக்குத் துதி சேர்க்கத்தக்கதாக, தேவனுடைய செய்தியாளராக இருக்க வேண்டும் என்று விரும்பினதையும், யூதாசைக்குறித்துத் தீர்க்கத்தரிசனம் உரைத்ததையும் சுட்டிக்காண்பிக்கின்றது. இவர் எத்தகைய ஒரு சிலாக்கியத்தையும், வாய்ப்பையும் (இப்படித் தேவனுக்குத் துதி சேர்க்கும்) இவ்விஷயத்தில் அடைந்திருந்தார்!

பணத்தின் மீதான ஓர் ஆசையை/அன்பை இவர் தனக்குள் குடிகொள்ளச் செய்ததே இவருடைய வீழ்ச்சிக்கான ஆரம்பமாய் இருந்தது எனச் சுவிசேஷ பதிவுகளில் உள்ள சிறுசிறு குறிப்புகளிலிருந்து நாம் நியாயமாக அனுமானித்துக்கொள்ளலாம். இந்தத் தவறான ஆவியைக் கடிந்துகொள்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் பதிலாக, இந்த ஆவிக்கு எதிரான வகையில் அன்பையும், இரக்கத்தையும், பரந்த மனப்பான்மையையும் நாடுவதற்குப்பதிலாக இவர் தன்னுடைய ஜீவியத்தையும், இருதயத்தையும் ஆளத்தக்கதாக சுயநலத்தை அனுமதித்துவிட்டார். இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுக்குமான சிறிய கூட்டத்திற்குப் பொருளாளராக இருக்கும் பொறுப்பை யூதாஸ் தெரிந்துகொண்டார் என்று நாம் எண்ணுகின்றோம்; ஒருவேளை யூதாஸ் தன்னுடைய சொந்த நிலையைக்குறித்துப் போதுமான அளவுக்கு உணர்வுடையவராய் இருந்திருப்பாரானால், இவர் தனக்கு ஏற்கெனவே பணத்தின் மீது மோகம் இருக்கும் காரணத்தினால் பணங்களை, தான்

கையாளுவது என்பது, தனக்குச் சோதனையாக இருக்கும் என்று உணர்ந்தவராக, இப்படியான ஒரு பொறுப்பை ஏற்க மறுத்திருந்திருப்பார். ஆனால் இதற்கு மாறாக, யூதாஸ் அப்பொறுப்பை நாடினார், அதை அடைந்தார், பணப்பையையும், அதில் போடப்பட்ட பணத்தையும் சுமந்தவராகக் காணப்பட்டார்; மற்றும் இவர் திருடன் என்று அப்போஸ்தலன் யோவான் நமக்குத் தெரிவிக்கின்றார் (யோவான் 12:6). நம்முடைய விழுந்துபோன சுபாவத்திற்குரிய மற்ற ஒழுங்கற்ற தன்மைகள் போலவே, இந்தப் பணத்தின் மீதான ஆசையும் கூட உற்சாகப்படுத்தப்படும்போதும், விருத்திப் பண்ணப்படும் போதும், இறுதியில் எல்லைகள் இல்லாமல் போகும் அளவுக்கு அதிகமதிகமாகப் பலமடைகின்றது; மற்றும் யூதாஸ் தன்னுடைய அன்பான போதகரை, மேசியாவை முப்பது வெள்ளிக் காசுகளுக்காக விற்றுப்போடுவதற்கு ஆயத்தமானார்.

இப்படிப்பட்ட ஒரு குணத்தை வெறுத்து, இழிவாய்க் கருதி, அருவருப்பாகக் கருதி, இதற்கு எதிர்மாறாக நம்மால் முடிந்த மட்டும் நம்முடைய குணலட்சணங்களைக்கொண்டிருக்க நாடுகின்ற அதே வேளையில், யூதாசைப்போன்று கர்த்தரை அன்புகூருகின்றேன் என்று கூறியும், அவரை விற்றுப்போட்டு, காட்டிக்கொடுக்கின்ற இதே மாதிரியான குற்றத்தைப் (குறைந்த அளவில்) புரிகின்றவர்கள் அநேகர் கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் காணப்படுவார்கள் என்ற உண்மையையும் நாம் பார்க்கத் தவறிவிடக்கூடாது. இந்தத் தவறு சொல்லர்த்தமான விதத்தில் இன்று செய்யப்பட முடியாது என்பது உண்மைதான்; எனினும் இதன் ஆவியை அவ்வப்போது பார்க்கலாம் என்பதை வேதனையுடன் நாம் தெரிவிக்கின்றோம்; யூதாஸ் காணப்பட்டது போன்று, இயேசுவை உண்மையாய் விசுவாசிக்கின்ற சிலர், அவருடைய பின்னடியார்களெனத் தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ள சிலர், அவருடைய சத்தியத்தின் ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்தியுள்ள சிலர், ஒரு பானைக் கூழுக்காக, அதாவது இந்தத் தற்கால ஜீவியத்திற்கான நன்மைகளுக்காக, சம்பளத்திற்காக, சமுதாயத்தின் அந்தஸ்திற்காக, மனுஷர் மத்தியிலான கனத்திற்காக, பிரபலம் அடைவதற்காக, பட்டப்பெயர்களைப் பெற்றுக்கொள்வதற்காக, கர்த்தரை விற்றுப் போடுவதற்கு விரும்புகின்றனர்; யூதாசைப் போன்று தங்களுடைய உதடுகளைக்கூட விற்றுப்போடுவதற்கு விரும்புகின்றனர்; ஆகவே கர்த்தரைக் கனப்படுத்துகின்றோம் என்றும், கர்த்தருக்காக ஊழியம் புரிகின்றோம் என்றும் அறிக்கைப் பண்ணிக்கொண்டிருந்தும், தேவனுடைய குணலட்சணத்தையும், அவருடைய திட்டத்தையும், அவருடைய வார்த்தைகளையும் தவறாய்க் காட்டுகின்றவர்களுடன் சேர்ந்துகொள்ள விரும்புகின்றனர். கர்த்தரைக் கொலை செய்ய நாடுபவர்களுடன் சேர்ந்து களிகூர விரும்புகின்றனர். ஆ! இராப்போஜனத்தின்போது, "ஆண்டவரே நானோ?" என்று எழுப்பப்பட்டக் கேள்வியை ஒவ்வொருவரும் தனக்குத்தானே கேட்டுக்கொள்வது எவ்வளவு நலமாயிருக்கும்; இன்னுமாக எவனும் தன்னைத்தான் மன்னித்துக்கொள்ளும் விஷயத்தில் மிகவும் துரிதமாய் இல்லாமல் இருப்பானாக; ஆனால் ஒவ்வொருவனும் தான் எந்தவிதத்திலாகிலும், சத்தியத்தையும், ஜீவியத்தையும் எதற்காகவும் விற்றுப்போட்டுவிடாதப்படிக்கு, தன்னுடைய சொந்த இருதயத்தையும், ஜீவியத்தையும், நடத்தையையும் உண்மையாய் ஆராய்ந்து தேடிப்பார்ப்பானாக.

## நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகள் அல்ல

பேதுரு தன்னுடைய பட்டயத்தை உறையிலே போடும்படிக்குக் கூறப்பட்டதன் மூலம் நமது கர்த்தர் ஒரு படிப்பினையை ஆழப் பதிய வைக்கின்றார்; இப்படிப்பினையானது நல் எண்ணத்தினால் தூண்டப்பட்டுள்ள அவருடைய பின்னடியார்கள் அநேகரால் அதுமுதல் கற்றுக்கொள்ளப்படுவதற்கு முற்றிலுமாய்த் தவறப்பட்டு வருகின்றது. மாறாக இருண்ட யுகங்கள் முழுவதிலும் பட்டயங்களும், இராணுவ வல்லமைகளும் கிறிஸ்துவின் பின்னடியார்கள் எனத் தங்களைக்குறித்து அறிக்கை பண்ணிக்கொள்பவர்களின் சார்பில் உதவிக்கு அழைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டது; சிலசமயம் அவிசுவாசிகளுக்கு எதிராகவும், மற்றும் பெரும்பாலும் சக கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது. பட்டயமானது, பெயரளவிலான சபையில் இரத்த அச்சடையாளங்களை விட்டுள்ளது மற்றும் இவ்விஷயமானது, நமது அருமையான மீட்பர் தம்முடைய பின்னடியார்களுக்குப் பரிந்துரைத்த வழியிலிருந்து எவ்வளவு வேறுபட்டிருக்கின்றது எனக் காணும் உலகத்திலுள்ள சிலர் அவமதிப்பாய்க் கருதுவதற்குக் காரணமுமாய் இருக்கின்றது. இந்த ஒரு படிப்பினையானது இன்று அனைத்துச் சபை பிரிவுகளிலும் போர் மனப்பான்மையானது நிலவுகின்றபடியால், பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்திற்கே மிகவும் அவசியமாயுள்ளது. கிறிஸ்தவ ஊழியர்களின், மற்றும் இன்னும் சிலரின் மரணத்திற்காக, புற மதத்தாராகிய சீன மக்களைப் பழிக்குப்பழி வாங்கிக்கொண்டிருப்பவர்களாக கிறிஸ்தவ தேசங்கள் என அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் தேசங்களிலுள்ள போர்வீரர்கள்தான் காணப்படுகின்றனர். புறமதத்தாராகிய ஜனங்களுக்கு முன்னதாக இத்தகைய பாவகரமான/கெட்ட மாதிரியை வைக்கின்றதான கிறிஸ்தவ தேசங்கள்

என்று அழைக்கப்படுகின்றதான தேசங்களின் இதே பிரதிநிதிகள்தான், தங்களது பொல்லாத நடத்தையின் வாயிலாக, இரக்கமும், தன்னடக்கமும், சுயக்கட்டுபாடுமுள்ளவர்களென உலகளாவ ஒப்புக்கொள்ளப்படுகின்றதான புறமத நாடாகிய ஜப்பான் வீரர்களைக்காட்டிலும் மோசமானவர்களாகக் காட்டப்படுகின்றனர்.

இந்தப் போர்வீரர்கள் செய்த தவறுகள், கிறிஸ்துவின் காரணத்திற்காக எனச் சொல்வது சரியாக இருக்காது. இவர்கள் கிறிஸ்தவ தேசத்தார் என்பதை நாம் மறுக்கின்றோம், மேலும் இவர்கள் கிறிஸ்தவ போர்வீரர்கள் என்பதையும் நாம் மறுக்கின்றோம். இந்தப் போர்வீரர்கள், "இவ்வுலகத்தின் பிள்ளைகள்" என்றும், இவர்கள் "இவ்வுலகத்தின் இராஜ்யங்களினுடைய" பிரதிநிதிகளாக "இவ்வுலகத்தின் அதிபதியின் கீழ்" போராடுகின்றனர் என்றுமே நாம் கூறுகின்றோம். சீன மக்களைப் பழி வாங்க வேண்டுமெனக் கிறிஸ்தவ ஊழியர்கள், அமெரிக்கா அரசாங்கத்திடம் விண்ணப்பம் பண்ணியுள்ளதை நாம் காண்கின்றோம். இன்னுமாகச் செய்தித்தாள்களில் வெளிவந்துள்ள செய்தியை வைத்துப் பார்க்கையில், இரக்கத்திற்கான பெரும்பான்மையான வேண்டுகோள்கள் உலக ஜனங்களிடமிருந்து வந்துள்ளதையும், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும்படியான பெரும்பான்மையான வேண்டுகோள்கள், "உன் பட்டயத்தை உறையிலே போடு என்று பேதுருவிடம் கூறின இயேசுவின் பிரதிநிதிகளாய் இருக்கும் பெயரளவிலான ஊழியர்களிடமிருந்தே வந்துள்ளது.

இங்கு நாம் தெரிவிக்க முற்படுவது என்னவெனில், "இஸ்ரயேல் வம்சத்தார் அனைவரும் இஸ்ரயேலரல்லவே" என முற்காலத்தில் அப்போஸ்தலர் தெரிவித்ததுப்போல, கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள அனைவரும் கிறிஸ்தவர்கள் அல்ல என்பதேயாகும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் இன்னமும் உண்மையாகவே இருக்கின்றது என நாம் எண்ண வேண்டும் (ரோமர் 8:9). மேலும் எந்தளவுக்கு ஒருவரிடம் அன்பின் ஆவியும், சாந்தமும், நற்பண்புகளும் குறைவுப்பட்டிருக்கின்றதோ, இந்தக் குறைவானது அந்நபர் தன்னை என்னவாக அறிக்கைப் பண்ணியிருந்தாலும், அந்நபர் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரன் அல்ல என்பதற்கும், உண்மையான சுவிசேஷத்திற்கு ஊழியக்காரன் அல்ல என்பதற்கும் சான்றாக இருக்கின்றது; இன்னுமாகச் சத்தியத்திற்கு மாறான ஏதோ சில தவறான சுவிசேஷத்திற்கும், ஏதோ சில மனுஷீக சமயப்பிரிவுக்கும் ஊழியக்காரன் மாத்திரம்தான் என்பதற்கும் சான்றாக இருக்கின்றது.

தேவ பக்தியுள்ளவர்கள் எனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்கள் மத்தியில், அதாவது சிறப்பானவைகளை நாம் நியாயமாய் எதிர்பார்க்கின்றவர்கள் மத்தியில் இரக்கமின்மை, கசப்பு, பகைமை/பழிக்குப்பழி வாங்குதல், எரிச்சலின் ஆவி பரவலாய்ப் பரவி காணப்படுவதை நாம் பார்க்கின்றோம். இந்தக் கசப்பான மற்றும் எரிச்சலின் ஆவிக்கான ஓர் எடுத்துக்காட்டினை, அறிவு பெருத்த நம்முடைய இந்த நாட்டில், அதாவது பெரும்பான்மையானவர்களின் கரங்களில் சட்டம் காணப்பட்டு, தப்பிப்பதற்கான வழியில்லாத இந்த நாட்டில் பெரிய அளவில் நிலவும் லின்ஞ் சட்டம்/சட்டவிரோதமான நீதிமன்ற முறைமையில் நாம் பார்க்கலாம். இந்தச் சட்டவிரோதமான நீதிமன்ற முறைமையின்படியான கொலைகளானது, நல்நோக்கம் உள்ளவர்களாகவும், சாந்தமானவர்களாகவும் காணப்படுகின்ற அநேக ஜனங்களுடைய இருதயங்களில், எரிச்சலான, மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான தன்மைகள் ஆழமாய்க் காணப்படுகின்றது என்றும், இந்தத் தன்மைகளானது, பரிசுத்த ஆவியினுடைய வல்லமையினாலான மனங்களின் புதிதாக்குதலினால் மாற்றம்/மறுரூபம் அடையவில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது எதிர்க்காலத்தில் எதற்குள்ளாகவோ நடத்திவிடும் என்பதைச் சொல்வது சிரமமானதாயினும், இது ஒழுங்கின்மையினுடைய ஆவியின் ஒரு பாகமேயாகும். மற்றும் இது கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் பரவிடும் என்றும், பின்னர் முன்னுரைக்கப்பட்டபடி மகா உபத்திரவக்காலம் வரும் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு உறுதிப்படுத்துகின்றன; இந்த மகா உபத்திரவக்காலத்தின்போது, மனுக்குலத்தினுடைய கோபத்திற்கு முன்பாக அனைத்துச் சட்டமும், ஒழுங்கும் ஒன்றுமில்லாமலாகிவிடும்.

எண்ணங்கள் மற்றும் உணர்வுகளின் இந்த எல்லை மீறின தன்மைகளானது, சில சமயங்களில் வார்த்தைகளில் மாத்திரம் வெளிப்படுகின்றது; அதாவது பத்திரிக்கையினுடைய பகுதிகளில், கண்டனத்திற்குரிய விதத்தில் வெளிப்படுகின்றது. கட்டுப்படுத்தப்படாத எண்ணங்கள் மற்றும் அதன் வெளிப்படுத்தல்களுக்கான உதாரணமாய், நியூயார்க் சன்ஸ் பத்திரிக்கையில் இடம் பெற்ற கடுமையான மற்றும் நியாயம் கற்பிக்கமுடியாத விதத்தினாலான ஒரு மெத்தடிஸ்ட் கண்காணியின் வார்த்தைகளைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்; பின்வருமாறு:

"பிராயன் அவர்கள், தேர்ந்தெடுக்கப்படலாமா? இல்லை; ஆயிரம் முறை இல்லை, இல்லை என்றே நான் சொல்வேன்! அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், நான் கல் படகில், ஈய பாயுடனும், இரும்புத் துடுப்புடனும், தேவனுடைய கோபத்தைப் புயலெனவும், நரகத்தை வாயிலெனவும் கொண்டிருந்து கடலில் வருவேன்."

இந்தக் கண்காணிக்கு ஆதரவாக, இந்த வார்த்தைகளே, தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்; இந்த நோய்க்கு எதிராக எந்த மருந்தும் போதுமானதாக இருக்கிறதில்லை. இம்மாதிரியான வார்த்தைகளைப் பயன்படுத்திடுவதற்குக் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் எந்த ஓர் ஊழியக்காரனும், எவ்விதமான சூழ்நிலைகளினாலும், சந்தர்ப்பங்களினாலும் வழிநடத்தப்படக்கூடாது; மேலும் இதுவே சகல சிருஷ்டிகளைச் சித்திரவதைப் பண்ணிடுவதற்கும், கொல்வதற்குமான நம்முடைய காலங்களிலுள்ள சட்ட விரோதமான நீதிமன்ற கொலை முறைமைக்கான தற்கால பாணியாகும் என்பதை மாத்திரமே நாம் இப்பொழுது சுட்டிக்காண்பிக்கின்றோம்; மேலும் அனைத்து விஷயங்களிலும், ஒழுங்கற்றுப்போவதற்கும், சட்டம் அற்றுப் போவதற்கும், கட்டுப்பாடற்றுப் போவதற்கும் கிறிஸ்தவ மண்டலத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும் மற்றும் வேகமாய் வழிநடத்திக்கொண்டிருக்கும் பயங்கர சீற்றமான எண்ணங்களைச் சுட்டிக்காண்பிப்பதற்கும், நாம் குறிப்பிடுகின்றோம். "உன் பட்டயத்தை உறையிலே போடு" என்றும், "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்றும், "உங்களை நிந்திக்கிறவர்களுக்கும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் நன்மை செய்யுங்கள்" என்றும் உள்ள ஆண்டவருடைய கட்டளையை, கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் அனைவரும் அதிகமதிகமாய் நினைவுகூருவார்களாக.

## பிதா ஊற்றும் பாத்திரம்

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமே, இந்த முழுப் பாடத்தினுடைய சாராம்சமாகும். நமது போதகர் அனைத்து விஷயங்களில் ஜெயங்கொண்டவராக வெளிவரத்தக்கதாக, அவருக்கு உதவிப்பண்ணினதும், பரம பிதாவினிடத்திலான அவருடைய கீழ்ப்படிதலுக்குக் காரணமுமான கொள்கைகளை இந்த ஆதார வசனமானது மிகவும் அருமையாகவும், மிகவும் சுருக்கமாகவும், மிகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்துகின்றது; மேலும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும், அவருடைய உண்மையான சீஷர்களாய் இருப்பதற்கும் நாடுகின்ற அனைவரும் இவ்வசனத்திலுள்ள கருத்தைச் சிந்தித்துப் பார்ப்பது நலமாயிருக்கும். "பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ". இதிலுள்ள கருத்துத் தெளிவாய் வெளிப்படுகின்றது. தமக்குக் காணப்படும் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் தம்மால் ஏற்படுத்தப்படவில்லை என்றும், தம்முடைய சத்துருக்களினால் தமக்கு ஏற்படுத்தப்படவில்லை என்றும் கர்த்தர் உணர்ந்திருந்தார். தம்முடைய விஷயங்கள் அனைத்திலும் தெய்வீக மேற்பார்வை இருக்கின்றது என்பதை உணர்ந்திருந்தார்; மேலும் பிதா அனுமதிக்காத எதுவும் தம் மீது வருவதில்லை என்பதையும் அறிந்திருந்தார்; காரணம் பிதா இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், தமக்கெனப் பிதா இந்தப் பாத்திரத்தில் ஊற்றியிருக்கின்றார் என்றும், இதநிமித்தம் அதைப் பானம் பண்ணுவது தம்முடைய கடமை என்றும் அறிந்திருந்தார்.

அச்சுறுத்தும் சோதனைகள் மற்றும் சிரமங்களில் கர்த்தருடைய ஜனங்கள் ஒருபோதும் தப்பித்துக்கொள்வதற்குரிய போக்கைப் பார்க்கக்கூடாது என்பதை நாம் சொல்ல வரவில்லை, காரணம் நாம் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுவதில்லை என்றும், சோதனையில் தம்முடைய திராணிக்கு மிஞ்சினதாய் இருக்கும் அம்சங்களுக்கு நமக்குத் தப்பித்துக்கொள்வதற்கான போக்கும் அருளப்படும் என்றும் உள்ள கர்த்தருடைய வாக்குத்தத்தம் நமக்குக் காணப்படுகின்றது. ஆகவே, தீமைக்கு நாம் நம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் விஷயமானது, உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது என நாம் உணரும்போது, உதவி வந்தாக வேண்டும் இல்லையேல் நாம் முற்றிலுமாய் விழுந்துபோய்விடுவோம் எனும் நிலைமை வரும் நேரம்தான், நாம் தப்பித்துக்கொள்ளத்தக்கதாக கர்த்தர் நமக்கு எந்த வழியைத் திறக்கின்றார் என நாம் பார்க்க வேண்டிய நேரமாகும். ஆனாலும் தப்பித்துக்கொள்ளும் வழியானது, நம்முடைய சொந்த வழியாய் இராமல், மாறாக கர்த்தர் ஏற்பாடு பண்ணினதாக இருக்கத்தக்கதாகவும் நாம் நிச்சயத்துடன் காணப்பட வேண்டும். ஏனெனில், ஓர் இடத்திலுள்ள கடமையிலிருந்தும், பரீட்சையிலிருந்தும், சோதனையிலிருந்தும் ஓடிப்போய்விடுவது என்பது, வேறு ஏதோ திசையிலுள்ள வேறொரு சோதனைக்குள்ளாகவும்,பரீட்சைக்குள்ளாகவும், ஒருவேளை கடுமையான சோதனைக்குள்ளாகவும் விழுந்துவிடுவதாக மாத்திரமே காணப்படும். சரீரத்தினுடைய தலைக்கு மாத்திரமல்லாமல், அங்கங்கள் அனைத்திற்கும் பிதா ஊற்றியுள்ளதின் பாகம்தான் இந்தப் பரீட்சைகள், துன்பங்கள்,

சிரமங்கள், அவதூறுகள் என்பதை நாம் முன்கூட்டியே அறிந்திட வேண்டும். ஆகவே நாம் நல்ல போர்ச்சேவகர்களெனத் துன்பம் சகிப்பதற்கு ஆயத்தப்பட வேண்டும்; நம்முடைய உடன்படிக்கையை மீறாத விதத்திலும், நீதியின் எந்தப் பிரமாணத்தை மீறாத விதத்திலும், தப்பித்துக்கொள்வதற்கு நியாயமானதாக, சரியானதாக சூழ்நிலை ஒன்றைக் கண்டாலே ஒழிய மற்றப்படி கர்த்தர் நம்மீது வரத்தக்கதாக அனுமதிக்கும் எதையும் தைரியமாய்க் கர்த்தருடைய ஏற்பாடு என ஏற்றுக்கொள்ள வேண்டும்; மாறாக ஓடிப்போய்விடக்கூடாது.

பிதா ஊற்றியுள்ள பாத்திரத்தில் பானம் பண்ணுவதை விரும்புவதைக்காட்டிலும், கர்த்தருடைய பின்னடியார்கள் கற்றுக்கொள்வதற்கு அவசியமான படிப்பினை வேறு எதுவும் இல்லை; அதாவது, நாம் பிதாவினுடையவர்கள் ஆனபடியினாலும், அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீரத்தினுடைய அங்கங்களாய் இருக்கின்றபடியினாலும், நம்முடைய காரியங்கள் அனைத்தையும் பிதா வழிநடத்துகின்றார், மற்றும் வழிக்காட்டுகின்றார் என்பதை அடையாளம் கண்டுகொள்ளுதல் ஆகும். இவ்விஷயத்தில் பார்க்கும்போது, தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள், உலகத்தாரிடமிருந்து முற்றிலும் வேறான ஸ்தானத்தில் காணப்படுகின்றனர்; உலகத்தாரை, பிதா தம்முடைய புத்திரர்களெனக் கையாளுவதில்லை; உலகத்தார் மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான பரீட்சையில் இல்லை; மேலும் உலகத்தாருக்குப் பிதா இப்பொழுது பரீட்சைகள், சோதனைகள் முதலான பாத்திரங்களை ஊற்றிக்கொண்டிருக்கவில்லை. "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?"-அவரது பாடுகளில் பங்கடைதலாயிருக்கிறதல்லவா? (1 கொரிந்தியர் 10:16); "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:12); "ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்." (ரோமர் 6:8).

*****

# நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள்

## மத்தேயு 26:57-68

*"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து." மத்தேயு 16:16*

நமது கர்த்தர் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்பட்டபோது, காய்பா என்பவன் பிரதான ஆசாரியனின் ஸ்தானத்தில் காணப்பட்டான். இந்தக் காய்பா என்பவன்தான், "ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்" என்று முன்கூட்டியே அறிவித்தவனாகவும் இருந்தான். மேலும் இவ்விஷயமானது, தேவன் எப்படிச் சில சமயம் பொல்லாத மனுஷர்களின் எண்ணங்கள் மற்றும் நோக்கங்களைப் பயன்படுத்தி ஆழமான தீர்க்கத்தரிசன சத்தியங்களை வெளிப்படுத்துகின்றார் என்பதற்கு உதாரணமாகவும் அமைகின்றது (யோவான் 11:50; 18:14). யூதர்களுக்கு மாத்திரமல்லாமல், ஒட்டுமொத்த உலகத்தாருக்கும் இது நன்மையாக இருக்கப்போவது என்பது உண்மையே. அதாவது, ஆதாம் மற்றும் அவருடைய சந்ததியாரும் தெய்வீகத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படவும் மற்றும் தெய்வீகத் தயவினிடத்திற்கும், நித்திய ஜீவனிடத்திற்கும் திரும்பிடுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இறுதியில் கொடுக்கப்படத்தக்கதாகவும், அவர்களுக்கு ஈடுபலி கொடுக்கப்படுவது நன்மையானதேயாகும்.

ஆனால், காய்பாவைப் பொறுத்தமட்டில் அவன் மனித ரீதியிலான நன்மையை மாத்திரம் அநேகமாக எண்ணியிருந்திருக்க வேண்டும். நாசரேத்து ஊரைச் சேர்ந்த இயேசுவின் மீதான ஜனங்களின் பிரியம் வளர்ந்துகொண்டுவருவதைக் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். உபதேசத்திலும் சரி, வாதம் பண்ணுவதிலும் சரி, இயேசுவுக்கு முன்பு, மிகவும் கற்றுத்தேர்ந்த பரிசேயர்களும், வேதபாரகர்களும் கூட நிகராக நிற்கமுடியவில்லை என்றும் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். இன்னுமாக, இயேசுவின் போதனைகள் காய்பாவினுடையதற்கும், யூதா மார்க்கத்தின் பொதுவான பாரம்பரிய நம்பிக்கைகளுக்கும் மிகவும் எதிராகக் காணப்பட்டபடியால், இயேசுவின் போதனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது மதரீதியான புரட்சிக்கு நேராக வழி வகுத்துவிடும் என்றும் காய்பா உணர்ந்துகொண்டவனாகக் காணப்பட்டான். இப்படியாக, புரட்சி நடக்கும் பட்சத்தில் உரோமர்களுக்கு முன்பு தங்கள் தேசத்திற்குக் காணப்படும் மரியாதை போய்விடும் என்றும், ஒப்பந்தத்தின்படி தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ள சகல உரிமைகளும், சிலாக்கியங்களும்கூட ரத்து செய்துவிடப்படும் என்றும் காய்பா உணர்ந்துகொண்டான். காய்பாவைப் பொறுத்தமட்டில் அவனுடைய மனதில் இயேசுவுக்கான தீர்ப்பை அவன் ஏற்கெனவே நிர்ணயித்துக்கொண்டான். மேலும், அதைச் செயல்படுத்த, அதாவது இயேசுவைக் கொலை செய்து போடுவதற்கான வாய்ப்பை மாத்திரம் வகைதேடிக் கொண்டிருந்தவனாகக் காணப்பட்டான். காய்பா வெளிவேஷமாகவும், பெயரளவில் பயபக்தியுள்ள மனுஷனாக/மதவாதியாகவும் இருந்தபடியினாலும், நீதிக்குப் பிரதிநிதியாகவும் காணப்பட்டப்படியினாலும் அவன் இயேசுவின் மரணத்தை/கொலையை நீதியின் செயல்பாடு எனும் தோற்றத்தில், பொது ஜனங்களின் நன்மைக்கு அவசியம் எனக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் காணப்பட்டான்.

இயேசுவுக்கு எதிரான கூட்டத்தாருக்கு காய்பாவே கலகத் தலைவனாக இருந்திருக்க வேண்டும். காய்பாவும், அவனுடைய கூட்டத்தாருமே யூதாசிடம் பேரம் பேசினார்கள். இன்னுமாக, ஜனங்களால் சூழப்படாமல் தனிமையில் இயேசு இரவில் காணப்படுகையில், அவரைக் கைது செய்யத்தக்கதாக, யூதாசுடன் காய்பாவின் உடன் ஆசாரியர்களும், அவனுடைய அலுவலர்களும், அவனுடைய சேவகர்களுமே அனுப்பி வைக்கப்பட்டார்கள். இன்னுமாக, காய்பாவின் கட்டளைப்படியே நமது கர்த்தர் அவனுடைய மாமனாகிய அன்னாவிடம் முதலாவதாகக் கூட்டிச்செல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். காய்பாவின் மாமனாகிய அன்னா என்பவன், யூதர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கையுடைய மனுஷனாக இருந்தான். இந்த அன்னா என்பவன், காய்பா பிரதான ஆசாரியனாகுவதற்கு முன்பு பிரதான ஆசாரியனாகக் காணப்பட்டான். மேலும், உரோமர்களால் அன்னாவுக்குப் பதிலாக காய்பா பிரதான ஆசாரியனாகப்

பலவந்தமாக நியமிக்கப்பட்டிருப்பினும், யூதர் முறைபடி அன்னாவின் பணிக்கான காலம் இன்னும் முடிவுப்பெறவில்லை. இயேசு, அன்னாவிடம் அனுப்பட்டதற்கான காரணம், இயேசு கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படுவதற்கான மேலிடத்திலான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கேயாகும்; மேலும் அன்னாவின் ஒப்பந்தம் வழி வரும் செல்வாக்கைப் பெற்றுக்கொள்வதற்கேயாகும்.

கைது செய்த குழுவானது அன்னாவிடம் வந்தபோது, அன்னா, இயேசுவிடம் அவருடைய போதனைகள், முதலியவைகள் குறித்துக் கேள்வி கேட்டானே ஒழிய, அதிகாரம் இல்லாதபடியினால் அவ்வழக்குக் குறித்து விசாரணை செய்வதற்கு முற்படவில்லை. அன்னாவினுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க இயேசு மறுத்துவிட்டு, தாம் பேசினதைக் கேட்டவர்களிடம் கேட்கும்படிக்கு அன்னாவுக்கு அறிவுறுத்தினதில், இயேசு நீதிமன்றத்திற்குரிய அமைப்பின் முறையையே பின்பற்றினவராக மாத்திரம் காணப்பட்டு, கைதியை விசாரணை செய்யும் விஷயம் தொடர்பான பிரமாணத்தை அலட்சியம் பண்ணாத நடவடிக்கையை அன்னா கையாளுவதற்கு மெல்ல நினைப்பூட்டினார்/யோசனை அளித்தார். அன்னா இயேசுவினிடத்தில் குற்றம் கண்டுப்பிடிக்காமல் (அ) அவரை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்காமல், இயேசுவைக் கட்டுண்டவராகக் காய்பாவினிடத்தில் அனுப்பி, இயேசுவைக் கைது செய்ததற்கான தனது ஒப்புதலை, செய்கையில் வெளிப்படுத்தினார். அதாவது, அவருடைய செய்கை பின்வரும் வார்த்தைகளை அறிவிப்பதுபோன்று இருந்தது; அதாவது, "இந்த மனுஷன் கைது செய்யப்பட வேண்டும் என்றும், இக்கைதி ஆபத்தானவன், அதாவது நம்முடைய கோட்பாடுகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராக ஆபத்து விளைவிப்பவன் என்றும் நீ (காய்பா) கருதி, மேற்கொண்ட உன்னுடைய நடவடிக்கையை நான் அங்கீகரிக்கின்றேன்" என்பதாகும்.

முதன்மை வகிக்கும் அநேக யூதர்கள் மற்றும் விசேஷமாக ஆசாரியர்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் காய்பா ஏற்கெனவே பெற்றுக்கொண்டிருந்தான். மேலும், இந்த ஆசாரியர்களும் காய்பாவின் "குழுவின்" அங்கங்களாகவும் காணப்பட்டார்கள். கைதியாகிய இயேசு, அன்னாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில்தான், ஆலோசனை சங்கத்தாரின் அங்கத்தார்களிடம், அவர்களின் சமாதானத்தைக் கலைத்துப்போட்டவர் கைது செய்யப்பட்டுவிட்டார் என்றும், அவரை விசாரணை செய்யும்படிக்கு வர வேண்டும் என்றும் அறிவிப்புக் கொடுக்கப்படத்தக்கதாக பல்வேறு திசைகளிலும் தூதுவர்கள் வேகமாக அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் அனுமானிக்கின்றோம். இயேசு காய்பாவிற்கு முன்பு கொண்டுவரப்படும்போது, சுமார் அதிகாலை இரண்டு மணியளவு காணப்பட்டிருந்திருக்க வேண்டும். சூரியன் மறைந்து போவதற்கும், சூரியன் உதிப்பதற்கும் இடையில் காணப்படும் காலப்பகுதியில் கைதி விசாரணை செய்யப்படுவதை யூதர்களுடைய பிரமாணமானது தடை செய்கின்றது. மேலும், இப்படியாகப் பிரமாணத்திற்கு எதிராக இவ்வேளைகளில் வழங்கப்படும் தீர்ப்பு, சட்டப்படி செல்லாததாகவும், சட்டத்திற்கு விரோதமானதாகவும் கருதப்படும். பிரதான ஆசாரியனோ, தான் ஏற்கெனவே தீர்மானித்திருந்த தீர்ப்பின்படி, கைதியை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும் காரியத்தை முடிந்த அளவுக்கு வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்றும், சூரியன் உதிப்பதற்குள் தனது இவ்வழக்கைத் தனக்குச் சாதகமாக கைக்குள் வைத்திருக்க வேண்டும் என்றும் ஆவலுடன் காணப்பட்டான். எப்படி இருப்பினும், இந்த விசாரணைகள் வெறும் நாடகம்தான். ஆயினும் சூரியன் உதிக்கும்போது, கூடும் ஆலோசனை சங்கத்தார் முன்பு, என்ன நிரூபணங்கள் வைக்க வேண்டும் என்று அறிய வேண்டியிருந்ததினால், காய்பா சட்டத்திற்கு விரோதமாகவும், உடனடியாகவும் இயேசுவை விசாரணை செய்ய ஆரம்பித்து, சாட்சிகளை அழைத்தான்.

இயேசு தம்முடைய மேசியாத்துவத்தைக் குறித்துத் தெரிவித்ததாக தன்னிச்சையாக சொல்லப்பட்டது என்பதில் ஐயமில்லை; சுவிசேஷ பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, பொது ஜனங்கள் மத்தியிலும், தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மத்தியிலும்கூட, அவர் தம்மை வெளிப்படையாக மேசியா என்று அறிவிக்கவுமில்லை மற்றும் தம்முடைய வார்த்தைகளை மிகவும் காத்து அடக்கிக் கொண்டவராகவும் இருந்தார். பேதுருவோ முதலாவதாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமரனாகிய கிறிஸ்து (மேசியா)" என்று அறிக்கைப் பண்ணினார். இதற்கு இயேசு, பேதுரு உண்மையைச் சொன்னார் என்றும், இப்படிச் சொல்லுவதற்கு பேதுரு பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டுள்ளார் என்றும் ஒப்புக்கொள்ள மாத்திரமே செய்தார். ஆகவே, மேசியா தொடர்பான விஷயத்தில் காய்பா சாட்சியாளர்களைத் தேடினபோது, திருப்திகரமான சாட்சி அளிக்கக்கூடிய எவரையும் அவனால் கண்டுபிடிக்க இயலாமல் போயிற்று.

முக்கியமான சாட்சி ஒன்றைத் தன்னால் கூற முடியும் என்று எண்ணி முன் வந்த ஒரு சாட்சியாளர், ஆலயம் தொடர்பான நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் தவறாய்த் திரித்து, சில காரியங்களைக் கூறினார். ஆனால், இந்தச் சாட்சியை உறுதி செய்துகொள்வதற்கு இரண்டாம் சாட்சியாளரை அவர்கள் தேடினபோது, முதலாம் சாட்சியாளர் சொன்ன அதே காரியங்களைச் சாட்சியளிக்க நபர் இல்லாமல் போயிற்று. இப்படிப்பட்ட விசாரணைகளில் குறைந்த பட்சம் இரண்டு சாட்சியாளர்களாகிலும் இருக்க வேண்டும் என்பது யூதர்களின் பிரமாணமாக இருந்தது.

சாட்சியாளர்களைப் பெற்றுக்கொள்ளாததில், தன்னுடைய முயற்சிகள் தோல்வியடைய, கடுங்கோபம் அடைந்த காய்பா, வேறுவிதமான திட்டத்தை அதாவது, சட்டவிரோதமான திட்டத்தைக் கையாள தீர்மானித்தான். அதாவது, தனது கைதியாகிய இயேசு குற்றம் சாட்டப்படுவதற்கு ஏதுவான சில வார்த்தைகளைப் பேசத்தக்கதாக, கைதியை எரிச்சலூட்ட முற்படுவதே அவனுடைய திட்டமாகக் காணப்பட்டது. ஆகவே, காய்பா அநீதியான காரியத்தைக் கண்டு, கடுங்கோபம் மூண்டு, ஆவேசத்துடன் தான் இருப்பதுபோன்றும், மிகவும் கெடுதலான சாட்சியை தான் கேட்டு ஆவேசம் அடைந்தது போன்றும் தோன்றும்விதத்தில் எழுந்து நின்று, கைதியான இயேசுவை நோக்கி, அவருக்கு எதிராக கூறப்பட்ட சாட்சியை அவர் கேட்டாரோ என்று வினவி, தம்மைத் தற்காத்துக் கொள்ளும்படிக்கு அவர் ஏதேனும் ஒருவேளை சொல்ல விரும்புகின்றாரோ என்று கேட்டான். நமது கர்த்தர் எவ்வித பதிலும் கூறவில்லை. தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலும் அவர் அங்கு நிற்கவுமில்லை. மேலும் தம்மை பாதுகாத்துக்கொள்ள நினைத்திருந்தாலும்கூட, அங்கு அவர் எதிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள அவசியமுமில்லை; ஆலயம் தொடர்பான விஷயம் குறித்துக் கர்த்தர் பேசின விஷயங்களில் எவ்வித குற்றமுமில்லை; ஒருவேளை ஆலயம் தொடர்பாக அவர் பேசின விஷயங்களுக்குப் பன்னிரண்டு சாட்சியாளர்கள் சாட்சியளித்தாலும் கூட அதில் எவ்விதமான குற்றமும் கண்டுபிடிக்க முடியாது. காய்பா தோற்றுப்போனான், ஆனாலும் அவன் திறமைமிக்க மனுஷனாகக் காணப்பட்டபடியினால், அவன் உடனடியாகத் தன்னுடைய தந்திரங்களை மாற்றிவிட்டு, இயேசு தம்மை மேசியா என்று கூறும் விஷயம் உண்மையா என்பதை அறிந்துகொள்ள விரும்பினதுபோன்று, "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்று கூறி, இயேசுவை ஆணையின் கீழ்க் கொண்டுவந்தான் (மத்தேயு 26:63).

இக்கேள்விக்கான பதிலானது, தம்மைத் தேவதூஷணம் சொன்னதாக பழிச் சுமத்துவதற்குப் பயன்படுத்தப்படும் என்று நமது கர்த்தர் அறிந்திருந்தார்; கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் கூற வேண்டும் என்ற கட்டாயம் அவருக்கு இல்லை; எனினும், அவர் மரணத்தைத் தவிர்த்துவிடுவதற்கும் நாடவில்லை. அவர் தாம் பருகும்படிக்குப் பிதா தமக்குக் கொடுத்துள்ள பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும் என்று ஏற்கெனவே தீர்மானத்துடன் காணப்பட்டார். ஆகவே அவருடைய பதில் மத்தேயு சுவிசேஷத்தின் படி, "நீர் சொன்னப்படிதான்"; அதாவது நீர் உண்மையைத்தான் சொல்லுகின்றீர் என்றும், மாற்கு சுவிசேஷத்தில், "நான் அவர் தான்", அதாவது நான் தேவனுடைய குமாரனாகிய மேசியா (மத்தேயு 26:64; மாற்கு 14:62) என்றுமுள்ள விதத்தில் காணப்படுகின்றது. இன்னுமாக இன்று, தாம் இங்கு இழிவாகக் கருதப்படுவதையும், எள்ளி நகையாடப்பட்டு விசாரணை செய்யப்படுவதைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள், ஏற்றக்காலங்களில் தாம் தேவனால் கனப்படுத்தப்பட்டு, உன்னதமானவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து, மாபெரும் நியாயாதிபதியாக, மேசியாவாக வானத்தின் மேகங்களின்மேல் வெளிப்படுவதை அடையாளங்கண்டுகொள்வார்கள் என்றும் கூறினார்.

காய்பா அவரைத் தேவதூஷணம் சொன்னதாகக் குற்றம் சுமத்தி, தீர்ப்பளிக்க வேண்டும் என்று தனக்குள் ஏற்கெனவே முடிவு பண்ணியிருந்த திட்டத்திற்கு, இயேசுவின் இவ்வார்த்தைகள் மிகவும் ஆதரவு தெரிவிக்கும் விதமாக இருந்தது. இதையே, காய்பாவும் எதிர்ப்பார்த்தான். ஆகவே, நீதியான கோபம் கொண்டது போன்றும், அவமதிப்பு நடந்தது போன்றும் காய்பா தன்னுடைய "சிம்லா" அல்லது மேல் அங்கியைக் கிழித்துக்கொண்டு தேவதூஷணம்! என்று கத்தினான். நாம் தேவதூஷணம் பேசினதைக் கேட்டோமே! என்று கத்தினான். பின்னர், இந்தக் கொலைப்பாதகத்திற்கு ஏற்கெனவே ஆதரவு அளித்த ஆலோசனை சங்கத்தின் அங்கத்தாரை நோக்கி, அவர்கள் இந்த நிரூபணத்தில் திருப்தி அடைந்துள்ளார்களா என்று கேட்டான். அவர்களும் ஏற்கெனவே அவர்களுக்குள் தீர்மானித்து வைத்திருந்தபடி, இவ்வழக்குத் தேவதூஷணம் பற்றினது என்றும், மிகவும் தெளிவாக உள்ளது என்றும், இயேசு மரணத்திற்குப் பாத்திரவான் என்றும் ஒப்புக்கொண்டார்கள்.

டாக்டர் சி.எச்.பிலாம்டிர் அவர்கள் இப்படியாகக் கூறுகின்றார் : "சாக்கிரடிஸ் அல்லது சக்யா மௌனி போன்று, நமது கர்த்தரையும் வேறு வழியின்றி ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒரு மாபெரும் போதகராக மாத்திரமே காண்கின்றவர்களுடைய கண்ணோட்டங்களுக்கு எதிராய்த் தீர்மானம் அளிப்பதற்கு, மேற்கூறப்பட்ட வேத வார்த்தைகள்தான் முழுச் சுவிசேஷ பதிவுகளிலேயே ஆற்றல்மிக்கதாய் இருக்கின்றது. இயேசுவின் வாழ்கையிலேயே ஆபத்தான சூழ்நிலை வந்தபோது, அதாவது உண்மையை அறிவிப்பது தவிர்க்கப்பட்டால், தமது ஜீவன் தப்புவிக்கப்படலாம் என்ற சூழ்நிலை வந்தபோது அவருடைய வார்த்தைகளானது, கர்த்தரை ஒழுக்கத்தைப் போதிக்கும் ஒரு மாபெரும் போதகராக மாத்திரமே பார்க்கிறவர்களின் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டுள்ள தமது உரிமைகளை வலியுறுத்துகின்றதாகவும், இயேசு யார் என்று நம்பிக்கொண்டிருக்கும் மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்களின் சகல நம்பிக்கைகளுக்கும் இசைவாகவும் இருக்கின்றது." மிகவும் பக்தியுள்ள கிறிஸ்தவர்கள்தான், நமது கர்த்தருடைய வார்த்தைகளின் உருவத்தைத் திரித்துக் கொள்ளாமல் அப்படியே விசுவாசிக்கின்றவர்களாய் இருக்கின்றார்கள். அதாவது, உலகம் உண்டாகுவதற்கு முன்பு இயேசு பிதாவோடு இருந்தார் என்றும், பிதா அவரை உலகத்திற்கான மீட்பராக உலகத்திற்கு அனுப்பினார் என்றும், "அவர் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" என்றும், அவர் மற்ற மனுஷர்களிடமிருந்து வேறுபட்டவராக இருந்தார் என்றும், "அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" இருந்தார் என்றும், மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் ஜீவன் மாசற்றதும், பிதாவிடத்திலிருந்து அவர் வந்தார் என்றும் விசுவாசிக்கின்றவர்களே மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் ஆவார்கள். இயேசு, "நான்தான் பிதா, யேகோவா" என்று ஒருபோதும் தமக்கென்று உரிமை கொண்டாடிக்கொள்ளாத வார்த்தைகளை, சில குறைந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் அவருக்காக உரிமை கொண்டாடி கூறிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், எல்லா யுகங்களில் உள்ள மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்களோ, இயேசுவுக்காக இப்படி உரிமை கொண்டாடி அறிவிப்பதைத் தவிர்த்துள்ளனர்.

"என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கின்றார்" என்றும், "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றும் உள்ள நமது கர்த்தர் இயேசுவின் வார்த்தைகளை மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றார்கள். பிதாவும், குமாரனும் ஒன்றாயிருக்கின்றார்கள் என்பது அவர்கள் ஒரு நபராகவே இருக்கின்றார்கள் என்பதைக் குறிக்காமல், ஒரே இருதயம், மனம், நோக்கம் உடையர்களாய் இருக்கின்றார்கள் என்பதையே குறிக்கின்றது என இவர்கள் உணர்ந்து/அறிந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்த ஒன்றாய் இருத்தலானது, இயேசு தம்முடைய ஜனங்களுக்காக ஜெபம் பண்ணுகையிலும் வெளிப்படுகின்றது; "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" (யோவான்17:11). இன்னுமாக மிகுந்த பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் மனுஷனாகிய கிறிஸ்து இயேசு, பரம பிதாவின் பிரதிநிதி என்றும், குமாரனைக் (பிதாவின் தற்சொரூபமாய் இருப்பவரை) காண்கிறவன் பிதாவைக் காண்கிறான் என்றும், இதுவே காணமுடியாத தேவனை மனுக்குலம் பார்ப்பதற்கான ஒரே வழி என்றும், மனுஷர் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமானவரை, அவருடைய ஒரே பேறான குமாரன் மாத்திரம் அருமையாக மனுஷர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்றும் ஒப்புக்கொள்கிறவர்களாய் இருக்கின்றார்கள் (யோவான் 1:18).

புத்தியுள்ளவர்களும், சிந்திக்கிற ஆற்றலுள்ள, பக்தியுள்ள கிறிஸ்தவர்களோ, நமது கர்த்தர் இயேசு வேறு இடங்களில் பேசின வார்த்தைகளுக்கும், இங்குப் பேசின வார்த்தைகளுக்கும் முரண்பாட்டைக் காணாமல், இசைவையே பார்க்க முடியும். கர்த்தர் இயேசு தம்மைப் பரம பிதா என்று கூறினதாக, யூதர்கள் ஒரு கணம்கூட எண்ணிக்கொள்ளவில்லை. இது கேட்கப்பட்ட கேள்வி அல்ல. மேலும், யூதர்கள் மேசியாதான் பிதா என்று எண்ணாமல், மேசியா பிதாவின் பிரதிநிதியாக, தேவனுடைய குமாரனாகத்தான் இருப்பார் என்றே அவர்களும் கருதினார்கள். "இதோ, நான் என் தூதனை (ஊழியன்) அனுப்புகிறேன்" என்றே நாம் வாசிக்கின்றோம் (மல்கியா 3:1). இயேசு தேவதூஷணம் பேசினதாகக் கூறப்பட்டதற்கான காரணம், அவர் தம்மைப் பிதா என்று கூறினார் என்று கருதப்பட்டதால் இல்லை, மாறாக அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினதினாலேயே ஆகும். இதே குற்றச்சாட்டு முன்பொரு தருணத்திலும் அவர் மேல் சுமத்தப்பட்டது (யோவான் 10:29-36). அங்கு அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொள்கின்றார் என்பதே குற்றம் என அவரைக் குற்றம் சாட்டினார்கள்/கூறினார்கள். இயேசு, தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறுவதின் மூலம் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கி,

அதாவது பிதாவினுடைய சுபாவம் போன்ற சுபாவம் கொண்டவர் என்று கூறுகின்றார் என்றே அவர்களது குற்றச்சாட்டுக் காணப்பட்டது. அத்தருணத்தில் அவர்களுடைய சொல் புரட்டுதலுக்குப் பதில் கொடுக்கும் வண்ணமாக, சங்கீதத்தில் உள்ள வாக்கியங்களைக் கோடிட்டுக் காட்டினார்; அதாவது சுவிசேஷ யுகத்தின் சபையாகிய சகல கர்த்தருடைய ஜனங்களும், தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படும் காரியம் சங்கீதம் 82:6-ஆம் வசனத்தில் இடம்பெறுவதை அவர்களுக்குச் சுட்டிக் காட்டினார். மேலுமாக, விசுவாசத்தின் வாயிலாக, நீதிமானாக்கப்படுவதின் மூலமாக பிதாவிடத்தில் உறவிற்குள்ளாக வருகிறவர்களுக்கும் கூட, "தேவனுடைய குமாரர்கள்" என்ற பெயர் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்குமாயின், பிதாவுடன் முழு இசைவுடன் என்றென்றும் காணப்படும் தேவனுடைய குமாரனாகிய தாமும் அப்பெயரை உரிமையுடன் சூட்டிக்கொண்டார் என்றும் அவர்களுக்குச் சுட்டிக் காண்பித்தார்.

ஆலோசனை சங்கத்தாரின் இந்தக் கூட்டம் முடிந்த பிற்பாடு, அவர்கள் சூரியன் உதிக்கும் அளவு காக்க வேண்டியிருந்தது. விடியும்போது, ஆச்சாரமாக கூட்டம் நடத்தப்பட்டு, தேவ தூஷணம் என்னும் குற்றம் மீண்டுமாக உறுதி செய்யப்படும். இப்படிச் செய்வதின் மூலம் எல்லாம் சட்டப்பூர்வமாக நடந்தது போன்று காட்சியளிக்கப்படும் (மத்தேயு 27:1). இதற்கிடையில் நமது கர்த்தர் சுமார் மூன்று மணி நேரமளவும் கட்டப்பட்ட நிலையில் பிரதான ஆசாரியனுடைய அரண்மனையின் முற்றத்தில் நின்று கொண்டிருந்தார். இச்சமயத்தில்தான், கைதியான இயேசுவைத் திட்டி, ஏசி, பழிதூற்றி, புண்படுத்தி பிரதான ஆசாரியனின் சேவகர்கள், பெரிய ஸ்தானத்தில் இருந்து செயலாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கான தங்களது ஆதரவை வெளிப்படுத்தினார்கள். சிலர் அவர் மேல் துப்பினார்கள். சிலர் தங்கள் கைகளினாலும், கம்புகளினாலும் அவரை அடித்தார்கள். இப்படியாக, தங்கள் கீழ்த்தரத்தையும், குறுகிய மனப்பான்மையையும் வெளிப்படுத்தினார்கள். அவருடைய கண்களைக் கட்டி, அவரை அடித்து, அவரை யார் அடித்தார் என்று சொல்வதன் மூலம் அவர் தீர்க்கதரிசியா, இல்லையா என்று கேட்ட காரியமானது அவர்களுக்கு மிகவும் ரம்மியமான துன்புறுத்தும் முறையாகவும் சற்று நேரம் காணப்பட்டது. இப்பதிவுகள் நமக்குக் காட்டுவதை நாம் பார்க்கையில், இவைகள் அனைத்தையும் நமது கர்த்தர் முறுமுறுக்காமல் சகித்துக்கொண்டார். இவைகள் அனைத்தையும் இயேசு, தமது பிதா தமக்காக ஆயத்தம் பண்ணின பாத்திரத்தின் ஒரு பாகமாக ஏற்றுக்கொண்டார். இதைத்தான் அப்போஸ்தலர்,"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே"என்று குறிப்பிடுகின்றார் (எபிரெயர் 12:3, 4). பிதா நமக்கென்று ஆயத்தம் பண்ணின பாத்திரத்தை நாம் ஒருவேளை ஏற்க மறுப்போமானால், அப்பாத்திரமானது அநேகமாக மிகுந்த கசப்பான காடியுடன் பின்னர் நம்மிடத்தில் மீண்டும் வரலாம். ஒருவேளை அதை நாம் முற்றிலும் தவிர்த்துவிட்டால், நமது கர்த்தரோடு கனம், மகிமை மற்றும் அழியாமையில் நாம் பங்குக்கொள்ளத்தக்கதாக நம்மை ஆயத்தம் பண்ணும் நோக்கத்திற்காக இப்போது அனுமதிக்கப்படும் சோதனையான அனுபவங்களை நாம் தவிர்த்துவிட்டால், நாம் இவைகளில் கர்த்தரோடு கூடப் பங்கடைய முடியாது.

ஊழியக்காரன், கர்த்தருக்கு மேலானவன் அல்ல. மேலும், போதகரையே அவர்கள் அடித்து, துப்பி, குத்தினார்கள் என்றால், போதகரின் ஊழியர்களும் இதேவிதமான அனுபவங்களுக்குள் கடந்து போகும்போது, ஆச்சரியம் கொள்ளவோ அல்லது முறுமுறுக்கவோ கூடாது. மேலும், இப்படிப்பட்டவைகள் அவர்களுக்குச் சம்பவிக்கையில் அவர்களும் கர்த்தரைப்போன்று, அவைகளை, பிதா ஆயத்தம் பண்ணின பாத்திரமாகக் கருதி, முறுமுறுக்காமல் சகிக்க வேண்டும். இன்னுமாக, கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தனைகளில் சிலவற்றை அனுபவிப்பதற்கு, தாங்களும் பாத்திரவான்களாகக் கருதப்பட்டதை எண்ணி நன்றி செலுத்த வேண்டும். கொலொசேயர்1:24; 2 தீமோத்தேயு 1:8; 2:3; யாக்கோபு 5:11.

"உங்களுக்கு வரும் துன்பங்கள் நீங்கள் தீமை செய்பவராகவோ, பிறர் காரியங்களில் தலையிடுபவராகவோ இருப்பதால் வந்தவையாய் இருக்கக்கூடாது" (திருவிவிலியம்) என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார் (1 பேதுரு 4:15). ஒருவேளை நம்முடைய சொந்த தவறுகளினிமித்தம் நம்மீது பாடுகள் வருமாயின், நாம் அதில் தேவனை மகிமைப்படுத்த முடியாது, மாறாக வெட்கப்படவே வேண்டும். ஆனால், ஒருவன் கிறிஸ்தவன் போன்று சத்தியத்தினிமித்தமாகவும், நீதியினிமித்தமாகவும் பாடுபடுவானாகில், அவன் வெட்கப்பட

வேண்டியதில்லை. இன்றைய காலங்கள் அறிவுடைய நாட்களாக இருக்கிறபடியினாலும், இயேசு நன்கு பிரபலமானவராய் இருக்கிறபடியினாலும் இப்பொழுது பாடுகள் வராது என்று சிலரால் வலியுறுத்தப்படுகின்றது."அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுவது இன்றும் உண்மையாகதான் உள்ளது. இன்று இயேசுவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் அநேகருக்கு இயேசுவை யார் என்றும், பிதாவை யார் என்றும் தெரியாமல் இருக்கின்றார்கள். மேலும், இவர்களிடத்தில் அவருடைய ஆவியும் இல்லை. இவர்கள் அன்றைய நாட்களில் மோசேயின் பெயரில் சுகம் கொண்டு, நியாயசாஸ்திரிகளாக மோசேயின் ஆசனத்தில் இருந்தும், மோசே மற்றும் தேவனுடைய பிரமாணங்களை அறியாமல், புரிந்துகொள்ளாமல் காணப்பட்டவர்களுக்கு ஒப்பாவார்கள் (1 பேதுரு 4:15, 16; 2 தீமோத்தேயு 3:12).

*****

# இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை

## லூக்கா 23:13-26

வெளிவேஷமான நியாயவிசாரணையும், போலித்தனமான நீதியைச் செயல்படுத்திய பிற்பாடு, பரிசேயர்களும், வேதபாரகர்களும், பிரதான ஆசாரியர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும், ஊழியர்களும், கூச்சலிட்டுக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்தாரும் அதிகாலைப்பொழுதில் இயேசுவைப் பிலாத்துவினிடத்திற்கு இழுத்துச் சென்றார்கள் (யோவான் 18:28). ஆனால் அங்குச் சென்ற அவர்கள், முற்றத்திலேயே நின்றுவிட்டார்கள். அநேகமாக இயேசு, விசாரணை அறைக்குள் தனிமையில் அரண்மனையின் காவலாளரால் அழைத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். யூதர்கள் உள்ளே பிரவேசிப்பதைத் தவிர்த்தனர். ஏனெனில், ஒருவேளை அவர்கள் பிரவேசித்தால், அது அவர்களைச் சம்பிரதாய முறைப்படி தீட்டுப்படுத்தி, அன்றைய நாள் இரவில், அன்று ஆரம்பிக்கவிருக்கும் பஸ்கா பண்டிகையை அநுசரிப்பதையும் தடுத்துவிடும் என்பதினாலேயாகும். இது எத்தகைய ஆச்சரியமான கலவையைக் கொண்டுள்ளது. அதாவது அசுத்தம் மற்றும் சுத்தத்தின் கலவையை நமக்குக் காட்டுகின்றது! குறைவான முக்கியத்துவமுடைய காரியங்களிலுள்ள ஒரு சிறு எழுத்திற்கும், ஓர் எழுத்தின் உறுப்பிற்கும் அவர்கள் எவ்வளவு சரியாகச் செயல்படுகின்றனர். ஆனால், தெய்வீக நியாயப்பிரமாணத்தினுடைய உண்மையான சாரமாகிய அன்பு மற்றும் இருதயத்தில் தூய்மை தொடர்பான அனைத்துக் காரியங்களுக்கும் முற்றிலுமாகப் புரிந்துகொள்வதில் எவ்வளவாய்த் தவறிவிட்டனர்! ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாமோ, இம்மாதிரியாக நீதியின் மீது அன்பு இல்லாமலும், முழுமையாகப் பரிசுத்தமில்லாமலும், கெட்ட இருதயம் உடைய நிலையிலும், வெளித்தோற்றமாக மதரீதியான சடங்காச்சாரங்களை அநுசரிப்பதும், வெளித்தோற்றமாகச் சடங்காச்சாரமான விஷயங்களில் ஜாக்கிரதையும், உண்மையும் காட்டுவதுமான விஷயங்கள் நமக்குள் வளராதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவோம். உண்மையைச் சொல்லப்போனால், யூதர்கள் மத்தியில் காணப்பட்ட இந்தப் பிரதான ஆசாரியர்கள் தங்கள் மதத்திற்கடுத்த வெளித்தோற்றமான அநுசரிப்புகளில் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருப்பினும், இவர்கள் தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது, இருதயத்தில் கொலைப்பாதகம் கொண்டவர்களாக இருந்தனர். நாம் இவர்களைப்போன்று இல்லாமல் இருப்போமாக.

யூதர்கள், தங்கள் இனத்தான் ஒருவனை உரோம தேசாதிபதி முன்பு குற்றம் சாட்டுவது அரிதான காரியமாகும். உரோமர்களிடமிருந்து தங்கள் தப்பிதங்களை மறைத்துக்கொள்வதும், தாங்கள் குற்றமற்றவர்கள் என்ற தீர்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது முடிந்தளவுக்கு இரக்கம் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப்பதுமே இவர்களுடைய வழக்கமாய் இருந்தது. பிலாத்து தங்கள் கோரிக்கைக்கு உடனடியாக ஒப்புக்கொண்டு, இயேசுவைச் சிலுவையில் அறைந்துவிடுவார் என்றே இஸ்ரயேல் தேசத்தின் இந்தப் பிரதானமான மனுஷர்கள் துணிவுடன்/நம்பிக்கையுடன் எண்ணினார்கள். ஆனால், பிலாத்து (தன் முன் கொண்டுவரப்பட்ட) இவ்வழக்குத் தொடர்பான விவரங்கள் குறித்து விசாரித்தபோது அல்லது ஒரு யூதனை அவனுடைய இனத்தாரின், குறிப்பாக அவன் இனத்தின் தலைவர்களின் கோபத்தினின்று விசேஷமாகப் பாதுகாக்கும்பொருட்டு நியாயம் வழங்க விரும்பினவராக விசாரித்தபோது, அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். "ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்குப் பிரதியுத்திரமாக: இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்" (யோவான் 18:29-31). இவ்வசனப்பகுதியில், பிலாத்துவின் கேள்வியும், யூதர்களின் பதிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரோம அரசாங்கமானது, மரணத் தண்டனை அளிப்பதற்கான அதிகாரத்தை யூதர்களின் ஆலோசனை சங்கத்தாரிடமிருந்து எடுத்துவிட்டது. மேலும், இயேசுவுக்கு மரணத்தண்டனை அளிக்கப்பட வேண்டுமேயொழிய, வேறு குறைவான தண்டனை அளிக்கப்படக்கூடாது என்பதே அவர்களுடைய மனங்களில் காணப்பட்டது.

நியாயத்தை விசாரிக்காமல், பிலாத்து தங்கள் குற்றச்சாட்டிற்கு உடனடியாகச் சம்மதம் அளித்துவிடுவான் என்ற அவர்களுடைய எதிர்பார்ப்புத் தோல்வியடைந்தது. ஆகவே, இப்பொழுது வேறுவிதத்தில் அவர்கள் தங்கள் கோரிக்கையை வைக்க வேண்டும். அதாவது, ஒரு குற்றச்சாட்டை அவர்கள் உருவாக்க வேண்டும். மேலும், அக்குற்றச்சாட்டானது, உரோம தேசாதிபதியிடம் முறையிடக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியதே குற்றம் என்பதின் அடிப்படையில் காணப்பட்ட அவர்களுடைய குற்றச்சாட்டானது, பிலாத்துவின் கணிப்பில் ஒன்றிற்கும் உதவாததாய்க் காணப்படும் என்று அவர்கள் நன்கு அறிந்திருந்ததினால், இயேசுவை அநீதியான விதத்தில் தேவதூஷணம் பேசியவர் என்று குற்றஞ்சாட்டினதற்குப் பிற்பாடு பிலாத்துவின் முன்பு மூன்று புதிய குற்றச்சாட்டுக்களை வைத்தார்கள். அவை பின்வருமாறு, (1) இயேசு, சமாதானத்தைக் குலைத்துப்போட்ட கலகவாதி, (2) இயேசு, உரோமர்களின் வரி வாங்கும் விஷயத்தில் குறுக்கிட்டவர், (3) இயேசு, தம்மை இராஜா என அறிவித்ததினால் இராயனுக்கு எதிரானவர் என்பவைகளேயாகும்.

அவ்வழக்கின் உண்மை நிலையைப் பிலாத்து உடனடியாகக் கிரகித்துக்கொண்டார். அதாவது, "பிரதான ஆசாரியர்கள் பொறாமையின் காரணமாக இயேசுவை ஒப்புக்கொடுத்து" (மத்தேயு 27:17), அவரைக் குற்றஞ்சாட்டினார்களே ஒழிய, இராயன் மற்றும் இராயனுடைய அரசாங்கத்தின் மீதான எந்தவிதமான புதிதாய் உதித்த அன்பினால் இவைகளைச் செய்யவில்லை என்று கிரகித்துக்கொண்டார். குற்றஞ்சாட்டும் திரளான கூட்டத்தாரை முற்றத்திலேயே விட்டுவிட்டு பிலாத்து, இயேசு நின்றுகொண்டிருந்த விசாரணை அறைக்குள் சென்று, "நீர் யூதருடைய இராஜாவோ?" என்று கேள்வி கேட்டார் (யோவான் 18:33). கிறிஸ்தவனாகவோ அல்லது யூதனாகவோ காணப்படாமல், புறஜாதி மனுஷனாகக் காணப்பட்ட பிலாத்துவுக்குக் காரியங்கள் முழுவதும் மிகவும் கேலிக்கூத்தாக இருந்திருக்க வேண்டும். மேலும், பிலாத்துவின் கணிப்பைப் பொறுத்தமட்டில் உலகமெங்கும் காணப்படும் பல்வேறு தேசங்களின் கற்பனைகளுடன்கூடிய நம்பிக்கைகளுடன் மேசியாவைக் குறித்த யூதர்களின் சகல நம்பிக்கைகளும் நகைப்பிற்குரியதாயும்/அர்த்தமற்றதாயும் காணப்பட்டது. பிலாத்து தனக்கு முன்பு நிற்பவர் குறிப்பிடத்தக்கவர்/உயர்வானவர் என்று உணர்ந்துகொண்டார். இன்னுமாக, இயேசுவின் பதில் அதிக தடுமாற்றத்தை உண்டுபண்ணினது. ஏனெனில், இயேசு தம்முடைய இராஜ்யம் தற்காலத்திற்கு உரியதாகவும், தற்கால ஒழுங்குகளை உடையதாகவும் இராமல் எதிர்க்காலத்திற்கு உரியதாகவும், இந்தச் சத்தியம் குறித்த சாட்சி கொடுக்கவே தாம் வந்துள்ளதாகவும் பிலாத்துவிடம் கூறினார். பிலாத்து தன்னால் புரிந்துகொள்ள முடியாத பிரச்சனைகளுக்குள் தான் ஆழமாகக் கடந்துசெல்வதை உணர்ந்தவராக சடுதியாக, "சத்தியமானது என்ன?" என்ற கேள்வி கேட்டு சம்பாஷணையை நிறுத்தினார். பதிலை எதிர்பார்க்காததுபோன்று அல்லது பதிலுக்காகக் காத்திராததுபோன்று, "சத்தியமாவது என்ன?" என்று கூறினார். அதாவது, "ஆம், ஆம் நாம் சத்தியம், நீதி, நேர்மை என்பதான வார்த்தைகள் பேசப்படுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால், இவைகளை எங்குப் பார்க்க முடிகின்றது? இவைகளின் அர்த்தம் தான் என்ன? எது சரி? (எது சரியல்ல?) என்று யாரால்தான் தீர்மானிக்க முடிகின்றது? நீர் நேர்மையாக இருக்கின்றீரா? அல்லது உரோமின் பிரதிநிதியாக அதிகாரத்தில் இருக்கும் நானாவது நேர்மையாக இருக்கின்றேனா? அல்லது உம்முடைய மரணத்தைக் கோரிக்கொண்டிருக்கும் அந்த யூதர்களாவது நேர்மையாக இருக்கின்றார்களா? எது உண்மை? இது நாம் இன்னும் தொடர்ந்து விவாதிப்பதற்கு மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்தும் கேள்வியாக இருக்கின்றது" எனச் சொல்வதுபோன்று இக்கேள்வியைக் கேட்டார்.

பிலாத்து தான் விசாரணைப் பண்ணின, சாந்தமும், தாழ்மையுமுள்ள அம்மனிதனிடமிருந்து உரோம சாம்ராஜ்யத்திற்கு எவ்விதமான ஆபத்தும் வராது என்று தன் மனதில் தெளிவாகப் புரிந்துகொண்டார். மேலும், இயேசு நிச்சயமாக ஆட்சிக்கு எதிராக குழப்பம் பண்ணுகிறவரல்ல என்றும், எவ்விதத்திலும் புரட்சியாளர் இல்லையென்றும் பிலாத்து அறிந்துகொண்டார். இன்னுமாக, இயேசு உலகத்திற்கு எவ்விதமான பாதிப்புகளையும் உண்டாக்குபவரல்ல என்றும், தாம் பரலோகத்திலிருந்து வந்தவர் என்பது பற்றியும் அவருடைய இராஜ உரிமை பற்றியதுமான இயேசுவினுடைய போதனைகள் ஒருவேளை ஆதாரமற்றவைகளாகக் காணப்பட்டாலும், இவருடைய இப்போதனைகள் எல்லாம் சமநிலையில் காணப்படாத மனதின் நிலையினால் உண்டானவைகளாய் இருந்தாலும், இயேசு எவ்விதத்திலும் உரோமிற்கு தொல்லை கொடுப்பவர் அல்ல என்றும், பிலாத்து உணர்ந்து கொண்டார். ஆகவே,"இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்ற வார்த்தைகளைக் கூறினார் (லூக்கா 23:4). பிலாத்துவின் தீர்மானமே அவருடைய நாட்கள் முதல் இன்றுவரையிலும் உலகத்தில் பல்வேறு மதவேறுபாடுகளுடன் காணப்படும் கனமுடைய மற்றும் நியாயமான மனதையுடைய சகல நபர்களுடைய தீர்மானமாகவும் காணப்படுகின்றது. கண்டுபிடிக்கப்பட்டுள்ள குற்றங்கள் அனைத்தும், கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கிக்கொண்டு திரியும் பெயரளவிலான அவருடைய பின்னடியார்களுக்கு எதிராகவே

காணப்படுகின்றது. அதாவது, கர்த்தருடைய பின்னடியார்கள் எனத் தங்களை அறிவித்தும், அவரைப் பின்பற்றாமலும், அவருடைய போதனைகளுக்கு எதிராக பல வழிகளுக்குள் கடந்து போனவர்களுக்கு எதிராகவே காணப்படுகின்றது. இத்தகையவர்கள் கர்த்தருடைய புனிதமான நாமத்திற்குக் கனவீனத்தையே கொண்டுவந்துள்ளனர். ஆனால், பிலாத்துவுடன் சேர்ந்து இன்றைய உலகமும், இயேசுவைக் குறித்து, "இந்த மனுஷனிடத்தில் யாதொரு குற்றத்தையும் நாங்கள் காணவில்லை" என்று அறிவிக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், கர்த்தருடைய ஆசீர்வாதமான வாக்கியங்களில் பலவற்றை மேற்கோள் காட்டிட உலகம் விரும்புகின்றது. இன்னுமாக, கர்த்தர் கூறின நீதியின் கோட்பாடுகள் அருமையானவைகள் என அறிவித்துள்ள அநேகர், அவருடைய கோட்பாடுகளின்படி வழிநடத்தப்பட விருப்பமற்றவர்களாய் இருந்தாலும், அவர் கூறின நீதியின் கோட்பாடுகளின் அடிப்படையில் ஓர் அரசாங்கம் கட்டியெழுப்பப்பட விருப்பமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிலாத்துவின் தீர்மானத்தினால் யூத மத தலைவர்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்தனர். ஆகவே, குற்றச்சாட்டுகளைக் குறித்து விவாதிக்க ஆரம்பித்து, இயேசுவின் போதனைகள் ஜனங்கள் மத்தியில் புரட்சியை ஏற்படுத்தும் விதத்தில் காணப்பட்டது என்றும், அவருடைய போதனைகள் கலிலேயாவில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், இப்பொழுதோ இயேசு எருசலேமுக்கும் கூட வந்துவிட்டார் என்றும், உள்ள காரியங்களை நிரூபிக்க முயற்சி செய்தனர். உண்மைதான், மத சம்பந்தமான காரியங்களில் கர்த்தருடைய போதனைகள் புரட்சிகரமானவைகள்தான். ஆனால், இயேசு அரசியல் ரீதியிலான கலவரத்தை வளர்த்தக்கூடியவர் எனப் பிலாத்து புரிந்துகொள்ள வேண்டும் என அவர்கள் முன்வைத்த அரசியல் புரட்சி தொடர்பான குற்றச்சாட்டானது தவறாகும். மேலும், இது கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களும் கவனிக்க வேண்டிய நல்ல கருத்தாகும். அதாவது நாமும், நமது கர்த்தரைப் போன்று உண்மையாய்த் தொழுதுக்கொள்ளுதல், கர்த்தருக்கு இருதய பூர்வமான கீழ்ப்படிதல் முதலிய விஷயங்கள் தொடர்பாக, தேவனுடைய ஜனங்கள் (கிறிஸ்தவர்கள்) மத்தியில் புரட்சியை ஏற்படுத்தும் பொறுப்பைப் பெற்றிருக்கின்றோம். ஆனால், நமக்கும் நமது கர்த்தர் போன்று அரசியல் புரட்சிகள் தொடர்பான விஷயங்களுடன் எவ்விதமான தொடர்பும் இல்லை. இப்படிப்பட்ட காரியங்கள் (அதாவது, அரசியல் புரட்சிகள்) கர்த்தருக்குரிய நாளிலும், வழியிலும் வருமென நாம் அறிவோம். ஆனால், அவர் எப்படி மாம்சத்திற்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் காணப்பட்டாரோ, அதுபோலவே, நாமும் அவ்வாயுதங்கள் கொண்டு யுத்தம் பண்ணுகிறதில்லை. மேலும், அவர் செய்ததுபோன்று நாமும் தேவன் தமக்குரிய வேளையிலும், விதத்திலும் ஸ்தாபிக்கப்போகின்ற இராஜ்யத்திற்காகக் காத்திருக்க வேண்டும். அதாவது, "புறஜாதிகளின் காலங்கள்" நிறைவடைவதற்கு நாம் காத்திருக்கின்றோம். நிறைவடையும்போது, தேவன் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி மற்றும் ஏற்பாடுபண்ணியிருந்தபடி இவ்வுலகத்தின் இராஜ்யங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு இடம் விட்டுக்கொடுக்கும். மேலும், தேவனுடைய இராஜ்யமானது, இவ்வுலகத்தின் இராஜ்யங்களை ஒதுக்கித் தள்ளிவிடும். மேலும், இந்த இராஜ்யத்தில்தான் நாம் கர்த்தருடைய கிருபையினால் பங்கடைவோம் என நாம் விசுவாசிக்கின்றோம்.

கலிலேயா என்ற வார்த்தையைக் கேட்டபோது, இயேசுவுக்கு அநீதி செய்யாமலும், அல்லது யூதர்களுடைய அதிகாரிகளின் பகையைத் தேவையின்றி எழுப்பிவிடாமலும் இருப்பதற்கு ஏதுவாக தனது சிக்கலிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான யோசனை பிலாத்துவின் மனதில் தோன்றியது. ஆகவே, இவ்வழக்கை அப்போது எருசலேமுக்கு வந்திருந்த ஏரோதிடம் ஒப்படைத்துவிடுவதன் மூலம் பிரச்சனை ஓய்ந்துவிடும் என்று அவர் எண்ணினார். இந்த ஏரோதுதான் யோவான்ஸ்நானனை சிரைச்சேதம் பண்ணினவர் ஆவார். மேலும், இயேசுவின் பிறப்பின்போது, குழந்தைகளைக் கொன்றுபோட்ட ஏரோதின் குமாரனாகவும் இந்த ஏரோது காணப்பட்டார். மேலும், இந்த ஏரோது இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, இயேசு அநேகமாக மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த யோவான்ஸ்நானனாக இருக்கக்கூடும் என்று யூகம் பண்ணினவராகவும் காணப்பட்டார். "ஏரோது இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு" (லூக்கா 23:8). ஏரோது, இயேசுவிடம் அநேகம் கேள்விகள் கேட்டபோதும், எவ்விதமான பதிலையும் பெற்றுக்கொள்ளவில்லை. நமது கர்த்தர் அங்குத் தம்மைப் பாதுகாப்பதற்காகவோ, தம்முடைய வாதத்தை முன்வைப்பதற்கோ நம்முடைய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளவோ முயலாமல், முற்றிலும் மாறாகவே காணப்பட்டார். அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அவரிடத்தில் நிலவின அமைதியானது ஞானமுள்ளதும், மகா மேன்மையுள்ளதுமான ஒருமுறையாகும். கைத்திறனால் வித்தைக்காட்டுபவர் போல் இயேசு செய்து தம்மை மகிழ்ச்சியடையப் பண்ணுவார், அதாவது தனக்கு வேடிக்கைக் காட்டுவார் என ஏரோது எதிர்ப்பார்த்தார். ஆனால், இராஜாவாகிய தனது கேள்விகளும், ஆர்வமும் (இயேசுவினால்) புறக்கணிக்கப்பட்டபோது, அவருக்கு ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கும்

என்பதில் ஐயமில்லை. எனினும், ஏரோதும் அவருடைய அரசவையாரும் கொஞ்சம் வேடிக்கைக் காணத்தக்கதாக இயேசுவின் இராஜரிகம் சம்பந்தமான கொள்கைகளை ஏளனம் செய்வதற்கும், அவரைக் கிண்டலாக வணங்குவதற்கும், அவரை அவமானப்படுத்துவதற்குமான வாய்ப்பு ஏரோதின் போர்ச்சேவகர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஏரோது, இயேசுவை நியாயம் விசாரிக்கும்படிக்கு அவரைப் பிலாத்துவிடமே திருப்பி அனுப்பினார்.

நியாயம் வழங்க வேண்டுமெனக் கூக்குரலிட்டுக் கொண்டும், இயேசுவின் மரணத்திற்கு உரோம சட்டப்படி அதிகாரம் வழங்க வேண்டும் என்றும், கூக்குரலிட்டுக்கொண்டிருக்கும் கீழ்த்தர மக்கள் கும்பலும், யூதர்களின் பிரதானமானவர்களும், மீண்டுமாகப் பிலாத்துவின் அரண்மனை முற்றத்திற்கு வந்து நிரம்பினார்கள். பிலாத்துவோ வெளியே வந்து இயேசுவினிடத்தில் எந்தக் குற்றத்தையும் தன்னால் காணமுடியவில்லை என்று அறிவித்தார். இன்னுமாக, இயேசுவுக்கு எதிரான கூக்குரல் மற்றும் கலகத்தினிமித்தமாக இயேசுவை வாரினால் அடிக்கும்படிக்கு ஒப்புக்கொடுக்கின்றார் என்றும், இப்படியாக, தான் இவ்வழக்கை முடிவிற்குக் கொண்டுவருகின்றார் என்றும் பிலாத்து அறிவித்தார். இயேசுவை வாரினால் அடிப்பது என்பது, பிலாத்துவின் சார்பில் இரக்கம் பாராட்டுவதாக இருந்தது. மேலும், இப்படி இயேசுவை அடிப்பதன் மூலம் குற்றம் சுமத்துபவர்களின் இரத்தப்பழி வாங்கும் கூச்சலை திருப்திச் செய்துவிடலாம் எனப் பிலாத்து எதிர்பார்த்தார். ஆனால், இம்முயற்சியானது, பயனற்றதாகிவிட்டது. மேலும், இம்முயற்சியானது நமது கர்த்தருடைய பாடுகளைக் கூட்டுவதாக மாத்திரமே காணப்பட்டது. "அவரை சிலுவையில் அறையும்!" என்று மக்கள் கூட்டம் அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டார்கள். பிலாத்துத் தப்பித்துக்கொள்வதற்கென அடுத்து கையாண்டவிதமானது, வருடந்தோறும் இக்காலக்கட்டத்தில் கைதிகளில் ஒருவனை அவர்களுக்காக விடுவிப்பது வழக்கமாய் இருந்தபடியால், இம்முறையில் இயேசுவை விடுவித்து, அவர்களை இரண்டு விதத்தில் திருப்தி செய்யப்போவதாக பிலாத்து அறிவித்தார். இரண்டுவிதம் என்னவெனில், (1) முதலாவதாக இயேசுவைக் குற்றவாளியென்று ஒப்புக்கொள்ள கருதுவதாகும். (2) இரண்டாவதாக குற்றவாளியாகிய அவரை, வருடந்தோறும் கடைப்பிடிக்கும் வழக்கத்தின்படி விடுதலை செய்துவிடுவதாகும். ஆனால், பக்தியுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணிக்கொண்ட அவர்களுடைய இருதயத்தில் கொலைபாதகமே இருந்தது. அவர்களுடைய இருதயங்களில் காணப்பட்ட சுயநலத்தினிமித்தம் அவர்கள் இரக்கத்திற்கும், நீதிக்கும் குருடர்களாய் இருந்தார்கள். காரணம், இயேசுவும் அவருடைய போதனைகளும் ஜனங்கள் மத்தியில் அவர்களுடைய மதிப்பையும், அவர்களுடைய போதனைகளின் மதிப்பையும் குறைத்துப்போட்டதின் அடிப்படையிலேயே இயேசுவுக்கு எதிரான பகைமை அவர்களிடத்தில் உண்டாயிற்று.

இதுவரையிலும் செய்யப்பட்ட ஒவ்வொரு பாவத்திற்கும், ஒவ்வொரு குற்றத்திற்கும் அஸ்திபாரமாக சுயநலம் காணப்படுகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும். சுதந்தரித்துக்கொண்டதன் காரணமாக நம்மிடத்தில் காணப்பட்டு, இரகசியமாக வளர்கின்ற இப்பாவத்திற்கு எதிராக விசேஷமாக கர்த்தருடைய ஜனங்களென நாம், நம்மைப் பாதுகாத்துக்கொள்வோமாக. இந்தப் பாவமானது, அழிக்கப்பட வேண்டும். வேருடன் ஒழிக்கப்பட வேண்டும். மேலும், நம்முடைய இருதயங்களையும், ஜீவியங்களையும் ஆளும் சக்தியாக இப்பாவத்திற்குப் பதிலாக, அன்பு நிலைநாட்டப்பட வேண்டும்; அதாவது தீங்கு நினையாத, மேன்மை பாராட்டாத, மற்றவர்களின் நலனையும் தியாகம் செய்து ஆதாயம் தேடிக்கொள்ளாத அன்பை நிலை நாட்ட வேண்டும். மேலும், இந்தப் பரிசேயர்களும், வேதபாரகர்களும், ஆசாரியர்களும் வேண்டுமென்றே அறிந்துகொண்டே துணிகரத்துடன் தேவனுடைய குமாரனைச் சிலுவையில் அறைந்தார்கள் என நாம் எண்ணியும் விடக்கூடாது. அவர்களுக்கு அவ்வளவு தைரியம் கிடையாது! மாறாக, அப்போஸ்தலர் கூறுகிற பிரகாரம் அறியாமையினாலே செய்தார்கள் எனப் பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 3:17; 1 கொரிந்தியர் 2:8). மேலும், இதனை நாம் மன்னிக்க முடியாத அறியாமை அல்லது கொஞ்சம் மன்னிக்க முடிகின்ற அறியாமை என்று சொல்லலாம். ஏனெனில், இந்த அறியாமை தவறான அபிப்பிராயம் காரணமாக உண்டானதாகும்; தவறான அபிப்பிராயம் கொள்ளும் இத்தன்மையானது, சுயநலத்தின் விளைவுகளாக/கனிகளாகக் காணப்படுகின்றது.

முயற்சிகளும், காரியங்களும் பயனற்றதாய்ப் போகின்றன என உணர்ந்த ஆசாரியர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு எல்லாவிதமான அழுத்தத்தைப் பிலாத்துவின் மேல் போட வேண்டியிருந்தது. ஆகவேதான் பிலாத்து, ஒருவேளை இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்கவில்லையெனில், பிலாத்து உரோம அதிகாரத்திற்கு எதிராய் உள்ள துரோகிக்கு நண்பனாக உள்ளார் என்றும், பிலாத்துச் சக்கரவர்த்திக்குச் சத்துருவாகிவிட்டார் என்றும், உரோமிலுள்ள இராயனிடத்திற்குச் சென்று பிலாத்துவைக் குறித்துப் புகார் செய்வோமெனத் தெரிவித்தார்கள். இது மிகவும் அபாயகரமான வாதமாகும். இதனை பிலாத்து உணர்ந்து

கொண்டார். இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டானது, யூதர்களின் பிரதானமான அதிகாரிகளால் கையெழுத்திட்டு உரோமுக்கு அனுப்பப்படுமாயின், அக்குற்ற பத்திரத்திற்கு நிச்சயமாக மதிப்பு/கவனம் கொடுக்கப்படும் என்றும், உரோமின் அதிகாரிகள் ஏன் யூதர்களின் பிரதான அதிகாரிகளை எதிர்த்தும், புரட்சியைக் கிளப்ப அனுமதித்தும், ஓர் ஏழையான, சாதாரணமான மனுஷனின் ஜீவன் பாதுகாக்கப்பட வேண்டும்? என யோசிப்பார்கள் என்றும் பிலாத்து உணர்ந்து கொண்டார். ஆகவே, யூதர்கள் போக்கிலேயே விட்டுக்கொடுத்து விடுவதுதான் நியாயமான மற்றும் சரியான ஒரே வழியாக இருக்குமெனப் பிலாத்துத் தீர்மானித்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச்சொல்லி, அவர்கள் (யூதர்கள்) தன்னைக் கட்டாயப்படுத்திச் செய்விக்கக்கூறும் இந்த மரணத் தீர்ப்புக்கான கட்டளையில் தனக்கு ஒப்புதல் இல்லை என்பதை அடையாளமாகக் காட்டும் விதத்தில் அவர்களுடைய பார்வைக்கு முன்பாக பிலாத்து தனது கரங்களைக் கழுவினார். "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்" (மத்தேயு 27:24-25).

பிலாத்து ஒரு யூதனாகவோ அல்லது கிறஸ்தவனாகவோ இராமல், புறஜாதி மனுஷனாக இருக்கிறபடியினால், மற்றவர்களைப்போன்று இவரை நாம் குற்றம் சாட்டமுடியாது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஆயினும், பிலாத்து நீதியை விரும்பி அதனை வழங்க முயற்சித்து நாடின மனுஷனாவான் என நாம் பாராட்டவே வேண்டும். மேலும், எவ்விதமான அரசியல் செல்வாக்குகள் இல்லாத நபரை உடனடியாக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, (மத) அதிகாரிகளின் புகழ்ச்சியையும், தயவையும் பெற்றுக்கொள்வது சுலபமாக இருந்தபோதிலும், பிலாத்து எதிரிடையான அலைபோன்ற செல்வாக்குகளை எதிர்ப்பதற்கான சகல முயற்சிகளையும் எடுத்த பிற்பாடே, அநீதிக்கு இயேசுவைப் பிலாத்து ஒப்புக்கொடுத்த மனுஷனேயாவான் என்று நாம் அவரைக் கண்டிப்பாகப் பாராட்ட வேண்டும். அப்போஸ்தலர்கள், பிலாத்துவையோ அல்லது அரசியல் அதிகாரிகளையோ குறிப்பிடாமல், யூதர்களையும் அவர்களுடைய தலைவர்களையுமே இச்சம்பவங்களுக்கான பொறுப்பாளிகள் என்று தெரிவிப்பதை நாம் கவனிக்க வேண்டும் (அப்போஸ்தலர் 2:23). மேலும், "எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் இவனுடைய இரத்தப்பழி வரட்டும்" என்று யூதர்கள் வேண்டிக்கொண்ட ஜெபம் (தேவனால்) கேட்கப்பட்ட காரியமானது, கடந்த 18 நூற்றாண்டுகளாக வரலாற்றில் நடந்த சம்பவங்களை நாம் பார்க்கையில், தேவனும் இச்சம்பவங்களுக்கு யூதர்களையே பொறுப்பாளிகளாகக் கருதினார் என்பது உறுதியாகின்றது. இந்தக் குற்றம் செய்த நபர்களுக்கு எதிரான தெய்வீகக் கோபத்தின் நிமித்தமாக, இவர்கள் நித்திய நித்திய காலமாக பிசாசுகளால் சித்திரவதை படுத்தப்படுவார்கள் என்று தேவனுடைய வார்த்தைகள் எங்குமே குறிப்பிடாததற்குத் தேவனுக்கு நன்றி. மாறாக, அப்போஸ்தலர் தெரிவிக்கின்ற பிரகாரமாக இந்தத் தேசம் மற்றும் ஜனங்கள் மீது வந்த உச்சக்கட்ட உபத்திரவங்கள்/பிரச்சனைகளே இவர்கள் மீது விளங்கின தேவனுடைய கோபமாய்க் காணப்படுகின்றது (1 தெசலோனிக்கேயர் 2:16). சீக்கிரத்தில் இந்தக் கோபம் மாற்றப்படப் போகின்றது. மேலும்,"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள் எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள்" என்ற வசனங்களின் காரியங்கள் ஆரம்பிக்கும் காலமும் வந்துவிட்டது (ஏசாயா 40:1-2).

இயேசு இப்பொழுது சிலுவையில் அறைவதற்கு ஆயத்தம் பண்ணும்படிக்குப் பிலாத்துவின் சேவகர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர்களோ இரக்கமற்ற விதத்திலும், கொடூரமாகவும் நடந்துகொண்டு போதகரின் துன்பமான சூழ்நிலைகளில் புகுந்து விளையாடினார்கள். அவருக்கு இராஜ வஸ்திரம் தரிப்பித்து, முள்ளினால் உண்டுபண்ணின கிரீடத்தைச் சிரசில் வைத்து, அவர் உண்மையில் யார் என்றோ? அவர் எப்படிப் பரிசுத்தமான சீயோன் மலையில் இராஜாவாக வீற்றிருக்கப்போகின்றார் என்றோ, எப்படி அவருடைய செங்கோலுக்கு முன்பாக சகல முழங்கால்களும் மண்டியிடும் என்றோ, எப்படி எல்லா நாவும் அவரை அறிக்கைப் பண்ணும் என்றோ கொஞ்சம் கூட யோசிக்காமல்/நினைத்துப்பார்க்காமல் அவர் தம்மை இராஜா என்று கூறின காரியத்தினிமித்தம் அவரை இகழ்ந்தார்கள். இப்படியெல்லாம் இயேசுவுக்குச் செய்தவர்கள் ஒருநாளில் விழிக்கும்போது — அதாவது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதைக் காணும்போது — மேசியா தமது சத்துருக்களுக்கும் கூட இரக்கம் காட்டுகின்றார் என்றும், தங்களுக்கும் பூமியின் குடிகள் அனைவருக்கும், தேவனையும், அவரது நீதி எதிர்பார்க்கும் காரியங்கள் குறித்த அறிவிற்குள் வருவதற்கும், ஒருவேளை கீழ்ப்படிதல் காட்டினால், நித்தியஜீவன் பெற்றுக்கொள்வதற்குமான வாய்ப்பையும் அருளும் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்கான வழியை அவருடைய மரணமானது திறந்துவிட்டது என்றும், உணரும்போதும் — ஆச்சரியம் அடைவார்கள்!

இதற்கிடையில்தான் பிலாத்துவின் மனைவி இயேசுவைக் குறித்து, தான் கண்ட சொப்பனம் பற்றியும், அவரை மரணத் தீர்ப்புக்கு ஒப்புக்கொடுப்பதில் தலையிட வேண்டாம் என்ற புத்திமதியையும் கூற ஆள் அனுப்பினாள். ஆகவே, பிலாத்து மீண்டும் கடைசி முயற்சி எடுக்கும் விதத்தில் இராஜவென ஏளனம் செய்யப்பட்டு, இரத்தாம்பர சிவப்பு வஸ்திரம் தரிப்பித்து, முள்கிரீடம் சூட்டப்பட்டுள்ள இயேசுவை வெளியே கொண்டுவந்து, "இதோ, இந்த மனுஷன்!" என்று கூறி ஜனங்களுக்கு முன்பாக நிறுத்தினார். அதாவது, பிலாத்து பின்வரும் காரியங்களைச் சொல்வதுபோன்று அவரின் இந்த வார்த்தைகளும், செயல்பாடுகளும் காணப்பட்டது. அது என்னவெனில்: "உங்கள் இனத்தில் மாத்திரமல்ல, ஒட்டு மொத்த மனித இனத்திலேயே சிறந்தவராகவும், உயர்ந்த பண்புடையவராகவும் காணப்படும் இந்தக் குற்றமற்ற மனிதனைக் கொன்றுபோடும்படியாகவோ, யூதர்களாகிய நீங்கள் நாடுகின்றீர்கள்? கடைசியாக, ஒருமுறை இம்மனிதனை நீங்கள் ஏறெடுத்துப் பார்க்கையில், உங்கள் இருதயமும், மனமும் உருகாதோ? உங்கள் மதத்தின் விஷயங்களையும் சொல்லப்போனால், அனைத்து மதங்களின் விஷயங்களையும் அறியாத உரோமானியனாகிய நானே இம்மனுஷன் மேல் பரிதாபமும், இரக்கமும், நியாயம் வழங்க வேண்டுமென எண்ணுகின்றபோது, பூமியிலேயே மிகுந்த மத நம்பிக்கைகொண்ட ஜனங்கள் என்று கூறிக்கொள்ளும் நீங்கள் இவ்வளவு இரக்கமற்ற நிலையில் இருக்க கூடுமோ? இதோ இந்த மனுஷன்! இம்மனுஷன் சிலுவையில் அறையப்பட வேண்டுமென இன்னமும் நீங்கள் வற்புறுத்துவீர்களோ?" உடனே, ஆசாரியர்கள் இயேசு உரோம பேரரசுக்கு சத்துருவாக இருப்பதினிமித்தம் மாத்திரம் சாக வேண்டுமென தாங்கள் கூறாமல், இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று போதித்து யூதர்களால் தேவதூஷணம் பேசினவர் என்று குற்றம் சாட்டப்பட்டபடியாலும், இப்படிப்பட்டவரை அழிக்க வேண்டுமெனத் தேவன் நியாயப்பிரமாணத்தில் கட்டளையிட்டுள்ளபடியாலும், இயேசு சாகவேண்டுமெனக் கூக்குரலிட்டார்கள்.

இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியிருக்கின்ற விஷயத்தைப் பிலாத்துக் கேட்டமாத்திரத்தில் மிகவும் பயந்து இயேசுவோடு மீண்டும் ஒரு உரையாடல் செய்வதற்கு முயன்றார். ஆனால் இயேசுவின் பதிலோ, "பரத்திலிருந்து உமக்கு அதிகாரம் கொடுக்கப்படாதது வரையிலும் உமக்கு என்மீது அதிகாரம் இல்லை" என்பதாய் இருந்தது. பிலாத்துவினால் இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. தாம் மரிக்க வேண்டும் என்பது தெய்வீக ஏற்பாடு என இயேசு தாமே அறிவித்து ஒப்புக்கொண்டார். பிலாத்து மரணத்தீர்ப்புக்குக் கையெழுத்திட்டார் (யோவான் 9:4-11).

நமது கர்த்தர் தமக்குச் சம்பவிக்கும் யாவும் பிதாவின் அனுமதியினாலானது என்று கூறின வார்த்தைகளிலிருந்து நமக்கு ஒரு படிப்பினை உள்ளது. அவருடைய சரீர அங்கங்களாகிய நாமும், தெய்வீகக் கண்காணிப்பின் கீழ்க் காணப்படுகிறதினால் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கையில் நம்முடைய ஜீவியத்தின் சகல விஷயங்களும் நன்மைக்கு ஏதுவாகவே நடத்தப்படும் என்ற நிச்சயம் நமக்கு அருளப்பட்டுள்ளது. இதுவே, இவ்வாழ்க்கையில் பல்வேறு சோதனைக்கிடமான சந்தர்ப்பங்களில் நம்முடைய நம்பிக்கைக்கான அடித்தளமாக இருக்கின்றது. இதுவே, சகல புத்திக்கும் எட்டாத சமாதானத்தை நம்முடைய இருதயங்களை ஆளும்படிக்கு அருளுகின்றது. மேலும் இதுவே நாம் நம்முடைய சுயத்தைத் தாழ்த்தித் தேவனுடைய சித்தத்திற்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுக்கவும் உதவுகின்றது. மேலும் இதுவே உபத்திரவங்களானது தெய்வீக வழிநடத்துதலின் கீழ்ச் சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்படுமாயின், அவைகள் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை நமக்குள் உண்டாக்கும் என்ற அறிவினிமித்தம் உபத்திரவங்களில் நாம் சந்தோஷங்கொள்ளவும் உதவுகின்றது (2 கொரிந்தியர் 4:17).

*****

# பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது

## லூக்கா 23:35-53

***"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி, நமது பாவங்களுக்காக மரித்தார்."***
**1 கொரிந்தியர் 15:3**

"அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள்" (மாற்கு 15:20). அன்றைய நாளில் மரணத்தீர்ப்பு வழங்கப்பட்ட இரண்டு குற்றவாளிகளுடன், இயேசு அப்பொழுது நூற்றுக்கு அதிபதி ஒருவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டார்; இந்த மூன்று கைதிகளில், ஒவ்வொருவரும் நான்கு உரோமச் சேவகர்களின் கீழ்க் காணப்பட்டனர் மற்றும் இவர்கள் ஒரு நூற்றுக்கு அதிபதியினுடைய கீழ்க் காணப்பட்டனர்; மொத்தம் பதினாறு நபர்களாகக் காணப்பட்டனர். அப்பொழுது காலை ஒன்பது மணியாக இருந்தது; முந்தின இரவு முதல் உணவோ, இளைப்பாறுதலோ இல்லாமல், தம்முடைய சத்துருக்களினால், குட்டப்பட்டு, அடிக்கப்பட்டு, சித்திரவதைப்படுத்தப்பட்டுக் காணப்பட்ட நமது கர்த்தர், அன்றைய வழக்கத்தின்படி, அவர் சுமந்து செல்ல வேண்டிய சிலுவையின் கடினமான பாரத்தினால் வலுவிழந்து காணப்பட்டார் எனப் பாரம்பரியம் தெரிவிக்கின்றது. இதற்கு இசைவாகவே, இயேசுவுக்காகச் சிலுவைச் சுமக்கும்படிக்கு, சிரேனே ஊரானாகிய சீமோன், போர்ச்சேவகர்களால் பலவந்தம் பண்ணப்பட்டார் என்று சுவிசேஷத்தின் பதிவுகள் காணப்படுகின்றன. எனினும் "சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டு வரும்படி" எனும் லூக்கா அவர்களின் பதிவை வைத்து, சீமோன் இயேசுவுக்குப் பின்னாகச் சென்றார் என்றும், இயேசு சிலுவையைச் சுமப்பதற்கு உதவி மாத்திரமே அளித்தார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

எப்படியிருப்பினும் எஜமானுக்கு ஊழியம் புரியும் விஷயத்தில், மிகவும் பொறாமைப்படுவதற்கு ஏதுவான ஒரு வாய்ப்பையே சீமோன் பெற்றிருந்தார்; அதாவது எஜமானுடைய பாரப் பளுவைப் பங்கிடுவதில் மாத்திரமல்லாமல், அவருடைய அவமானத்திலும் பங்கடைவதில் மகிழ்ச்சியாய்க் காணப்படும். இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களில் சிலரால் வாஞ்சையாய்ப் பற்றிப் பிடிக்கப்படும் ஒரு வாய்ப்பை சீமோன் பெற்றிருந்தார். ஆனால் விநோதமாய்ச் சொல்ல வேண்டுமெனில், அந்த வாய்ப்பு இப்பொழுது நம்மிடத்தில் உள்ளது மற்றும் கர்த்தருடைய சீஷர்களாய் இருப்பவர்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றிச் செல்வதற்குரிய சிலாக்கியத்தில் காணப்படுகின்றனர்; ஏனெனில் சிலுவையின் அவமானம் இன்னும் முடிவடையவில்லை. சிலுவையானது இன்று நாகரிகமான பாணியாகிவிட்டது என்பதும், சிலுவைப்பற்றின சிந்தனைகள் இல்லாமலும், அதன் அர்த்தம்பற்றின சிந்தனை இல்லாமலும், சிலுவையின் அவமானத்தையோ, நிந்தனையையோ, பாரத்தையோ சுமப்பதற்கான எவ்விதமான விருப்பம் இல்லாமலும், சிலுவை அணிகலனாக அணியப்பட்டு வருகின்றது என்பதும் உண்மைதான். ஆனால் போதகருடைய ஆவியை உடையவர்கள் இன்னமும் காணப்படுகின்றனர் மற்றும் இவர்களிடத்திலேயே அப்போஸ்தலர் இவ்வார்த்தைகளைக் கூறுகின்றார்: "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;" "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (ரோமர் 8:17; 2 தீமோத்தேயு 2:12; 1 யோவான் 3:16; கொலோசெயர் 1:24).

மனிதனாகிய கிறிஸ்து இயேசு பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், மாசில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும், பூரணராகவும் காணப்பட்டாலும், அவர் சரீர பலத்திலோ, உயரத்திலோ இராட்சதனாக இருக்கவில்லை. இதிலிருந்து பரிபூரண மனிதன் சரீர ரீதியில் இராட்சதன் போலவோ அல்லது காட்டுமிராண்டித்தனமான பலமுடையவனாகவோ இல்லை என்பது தெரிகின்றது; ஏனெனில் பரிபூரண மனிதன் எப்படிக் காணப்பட்டாரோ, அப்படியாகவே பரிபூரண மனிதனுக்கு ஈடுபலியாகும்படிக்கு, நமது கர்த்தராகிய இயேசுவும் காணப்பட வேண்டும். அநேக மனிதர்களிடத்தில் நாம் காணும் முரட்டுத்தனமான மற்றும் காட்டுமிராண்டித்தனமான/மிருகத்தனமான பலமானது, மற்றவர்களிடத்தில் காணப்படும் பலவீனம் மற்றும் வலுவின்மையைப்போன்ற சீர்கேடேயாகும்; சொல்லப்போனால் சீர்கேடு இன்னொரு

விதத்தில் இப்படியாக (மிருகத்தனமாக) வெளிப்பட்டுள்ளது. மிகுந்த மிருகத்தனமான பலத்துடனும், முரட்டுத்தனமான இயல்புடனும் உள்ள நபருக்கு அபூர்வமாகவே, இந்தப் பலத்தின் அளவுக்குத்தக்கதான திறமிக்க மூளையின் ஆற்றலும், சீரான மனநிலையும் காணப்படுகின்றது. சீர்த்திருத்தலின் வேலை நிறைவடையும்போது, மனிதன் முரட்டுத்தனமான மற்றும் இராட்சத பலமுள்ள நிலைக்குக் கொண்டுவரப்படுவான் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது; மாறாக சரீர ரீதியிலும், மன ரீதியிலும் சீரான மற்றும் நேர்த்தியான நிலைக்குக்கொண்டுவரப்படுவான். இன்னுமாக நமது கர்த்தருடைய மூன்றரை வருட ஊழியக்காலமானது பொது ஜனங்கள் மத்தியில் அவர் பண்ணின பிரசங்கம் தொடர்புடைய விஷயத்திலும், தம்முடைய சொந்த சத்துவத்தைக் கொடுத்து அவர் செய்திட்ட அற்புதங்கள் தொடர்புடைய விஷயத்திலும், அவரது உயிராற்றலை/சத்துவத்தைத் தொடர்ந்து செலவழித்ததாய் இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. "அவரிடத்திலிருந்து வல்லமை (சத்துவம்) புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்" (லூக்கா 6:19).

கல்வாரியை நோக்கின பிரயாணம், ஒரு சோகம் நிறைந்த காட்சியாகும். சிலர் அழுதுகொண்டே ஊர்வலத்தில் பின்தொடர்ந்தனர்; இப்படியாக அனுதாபமும், இரக்கமும் கொண்டிருந்த ஸ்திரீகளிடத்திலேயே இயேசு திரும்பி, "நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று கூறினார் (லூக்கா 23:28). இரட்சகருடைய எண்ணங்களானது, அவரைப்பற்றியே முழுமையாய் மையம் கொண்டிருக்கவில்லை; மாறாக இன்னும் சீக்கிரத்தில் எவ்வாறு இந்த அநீதியானது ஜனங்கள் மீது பின்விளைவைச் செயல்படுத்தப் போகின்றது என்பதையே இயேசு சிந்தித்தவராய்க் காணப்பட்டார்; இந்த ஜனங்களின் பிரதிநிதிகள் தேவனுக்கும், மனிதர்களுக்கும் முன்பாக, "இவருடைய இரத்தப்பழி, எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும்" வரக்கடவது என்று கூறினவர்களாய் இருந்தனர். தானியேல் மற்றும் எரேமியாவின் தீர்க்கதரிசினங்களில் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ள, எருசலேமின் மீது வரவிருக்கும் உபத்திரவத்தின் விவரங்களை நமது கர்த்தர் மனதில் கொண்டிருந்தார் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை (தானியேல் 9:24-27; எரேமியா 6). எருசலேம் முற்றுகையிடப்பட்ட சம்பவத்தையும், எவ்வாறு ஸ்திரீகளும், பிள்ளைகளும் அக்காலக்கட்டத்தில் விசேஷமாய்த் துன்பப்பட்டார்கள் என்பதையும் நினைவுகூரும்போது, எவ்வளவு சொல்லர்த்தமாகவே நமது கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறியுள்ளது என்பதை நாம் எண்ணுகின்றோம். ஒருவர் இப்படிப்பட்ட சோதனையான/கடுமையான சூழ்நிலைகளில் காணப்படும்போது அவர் தம்மைப்பற்றிக் குறைவாகவும், மற்றவர்களைப்பற்றி அதிகமாகவும் எண்ணுவது என்பது, பெருந்தன்மையுடைய மனதிற்கான அடையாளமாகும்.

கல்வாரியில் வந்து சேர்ந்த பின், சிலுவையில் அறையப்படுதல் நடைப்பெற்றது. வழக்கமாக சிலுவைத் தரையில் கிடத்தப்பெற்ற நிலையில், குற்றவாளி ஆணியினால் சிலுவையில் அறையப்படுகின்றார் மற்றும் நான்கு கட்டுறுதியான போர்ச்சேவகர்கள் சிலுவையைத் தூக்கி, அதனைக் குழிக்குள் பொருத்தி, நிற்கப்பண்ணுகின்றனர். சிலுவையானது செங்குத்தான நிலைக்குக் கொண்டுவரப்படும்போது, ஏற்படும் குலுக்குதலினால் காயத்தின் வலி அதிகரிக்கின்றது மற்றும் தொங்கிக்கொண்டிருக்கும் சரீரத்தினுடைய பாரப் பளுவினால், வலி கடுமையாய் அதிகரிக்கின்றது. சிலுவையில் அறையப்படுதல் என்பது, மிகவும் கொடூரமாய் மரிக்க வைக்கும் முறைமையாகும்; உரோமர்கள்கூட இந்த முறைமையைக் குற்றவாளிகள் மீதே, அதாவது சட்டத்தை மீறுபவர்கள், கலகவாதிகள் மற்றும் கொள்ளையர்களாகிய குற்றவாளிகள் மீதே செயல்படுத்துவர். இப்படியாகத் தீர்க்கத்தரிசியினுடைய வார்த்தைகளுக்கு இசைவாக இயேசு, "அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" என்று பார்க்கின்றோம் (ஏசாயா 53:12).

நமது கர்த்தருடைய சிலுவையில், அவரது தலைக்கு மேலாக அவரது குற்றம், அதாவது அவர் குற்றவாளியெனத் தீர்ப்பு கூறப்பட்டு, மரணத் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்படுவதற்கான காரணம் மூன்று மொழிகளில், "நசரேயனாகிய இயேசு, யூதருடைய இராஜா" என்று எழுதப்பட்டிருந்தது. இது அதிகாரத்திற்கும், வல்லமைக்கும் பிரதிநிதியாய்க் காணப்பட்ட உரோமர்களின் மொழியாகிய இலத்தீன் மொழியிலும், பண்பாட்டிற்கும், கல்விக்குமான மொழியாக திகழ்ந்த கிரேக்க மொழியிலும், தேவனுக்குப் பயப்படுவதாகக் கூறிக்கொள்ளும் ஜனங்களின் எபிரெய மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. இதை வாசித்தவர்களுக்கு, இது அவமானம் மற்றும் இகழ்ச்சிக்குரிய பட்டமாகவும், தேவதூஷணத்திற்கான அடையாளமாகவும் காணப்பட்டது;

பட்டணத்துக்குப் போக்கும், வரத்துமாய் இருந்த திரளான ஜனக்கூட்டத்தினர், இந்த அவருடைய வாசகத்தினிமித்தம் பரியாசம் பண்ணினவர்களாகவும், இப்படிப்பட்ட உயர் கனங்களையும், மதிப்புகளையும் தமக்கென உரிமைப்பாராட்டிக்கொண்டு தவறு செய்ய முற்பட்ட விஷயத்தில், இயேசுவின் மோசடி மிகவும் தோல்வியடைந்ததினிமித்தமும் பரியாசம் பண்ணினவர்களாகவும் காணப்பட்டனர். தங்களுடைய கைதி மரித்துப்போவதைக் காணத்தக்கதாக பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளுங்கூட அங்கு வந்திருந்தனர்; தங்களது நடவடிக்கையிலுள்ள அநீதி தொடர்புடைய விஷயத்தில் அவர்களுக்கு இருந்த கொஞ்சமான மனசாட்சி குத்துதலுங்கூட, இயேசுவை மரிக்கப்பண்ணுவதில் அவர்கள் அடைந்திட்ட வெற்றியிலும், இயேசு தம்முடைய ஆபத்துக் காலத்தில் தம்மை இரட்சிக்க வல்லமையற்றவர் போன்று காணப்பட்டதிலும், அவர்களுடைய தீர்ப்பு நிலைநாட்டப்பட்டதினால் அடக்கப்பட்டுவிட்டது போன்று தோன்றுகின்றது. பொறுப்பேற்றிருந்த போர்ச்சேவகர்களுங்கூட (இயேசு மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட) இக்காரியத்தில் மற்றொரு மோசடி வெளிப்பட்டுள்ளதாகவும், இராயனுடைய அதிகாரத்திற்கு எதிராக தன்னையே உரிமைப் பாராட்டிக்கொண்ட ஒருவர் அவமானமாய் மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்டதாகவும் கருதினார்கள்.

இயேசுவின் தாயாரும், அவளுடைய சகோதரியும், சீஷனாகிய யோவானும், அவருடைய தாயாரும், மகதலேனா மரியாளும், கிலெயோப்பாவின் மனைவியாகிய மரியாளும் அங்குக் காணப்பட்டதாக, பதிவுகள் தெரிவிக்கின்றன (யோவான் 19:25; மத்தேயு 27:56). இவர்கள் அனைவரும் துக்கத்தில் காணப்பட்டார்கள்; இவர்களில் அநேகர் அழுதுகொண்டிருந்தனர். நமது கர்த்தரால் உரிமைப் பாராட்டிக்கொள்ளப்பட்டக் காரியங்கள் வஞ்சனைகள் என்று அதிகாரிகளும், ஜனங்களும் உறுதிப்படுத்தினவைகளை இவர்களால் மறுத்துக்கூற முடியவில்லை; அத்தகைய வல்லமையைக்கொண்டிருந்த அவர் மற்றும் தாங்கள் அத்தகைய ஒரு நம்பிக்கையை வைத்திட்ட அவர் எப்படி இங்ஙனம், தம்முடைய சத்துருக்களின் கரங்களில், ஒன்றும் செய்ய இயலாதவராகக் காணப்பட முடியும் என்பதை இவர்களால் புரிந்துகொள்ளவும் முடியவில்லை. கலிலேயாவின் காற்றும், அலைகளும் அவருக்கு எவ்வாறு கீழ்ப்படிந்தன என்பதையும், அவரது கட்டளையின் வார்த்தைகளை எதிர்த்திட முடியாத அசுத்த ஆவிகள் எவ்வாறு பிசாசு பிடிக்கப்பட்டவர்களிடமிருந்து வெளியேற்றப்பட்டன என்பதையும் இவர்கள் நினைவுகூர்ந்தபோது, தற்போது அவர் இயலாதவராகக் காணப்படுவதை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. கர்த்தரைத் தூஷிக்கிறவர்களுக்கு, அத்தருணத்தின்போது இவர்களால் எந்தப் பதிலையும் கொடுக்க முடியாவிட்டாலும், இவர்கள் கர்த்தரை அன்புகூர்ந்தார்கள்; ஏனெனில் அவருடைய வல்லமையும், அவருக்கான பட்டங்கள் என்னவாக இருப்பினும், பரம பிதாவுடனான தம்முடைய உறவை அவர் கொஞ்சம் மிகைப்படுத்தியே கூறியிருந்தாலும் சரி அல்லது இல்லாவிட்டாலும் சரி, "இந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" மற்றும் மனுஷர் மத்தியில் தூய்மையின் விஷயத்திலும், ஆத்துமத்தின் உயர்தன்மையின் விஷயத்திலும், இயேசுவுக்கு ஒப்பாக எந்த மனுஷனையும் இவர்கள் அறிந்திருக்கவில்லை. அவரை அன்புகூர்ந்து, அவரில் விசுவாசம் வைத்து, தாங்கள் சந்திக்கின்ற இந்த முரண்பாடான சூழ்நிலைக்குறித்த ஏதேனும் விளக்கங்களுக்காக காத்திருப்பதைக்காட்டிலும், இவர்களால் வேறு எதையும் செய்ய முடியவில்லை. அன்று முதல், இன்றுவரையிலான கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்திலும் இப்படியாகவே சில சமயங்களில் காணப்படுகின்றது. அவ்வப்போது புரிந்துகொள்ள முடியாத விதத்தில், கர்த்தருடைய வார்த்தைகள் தொடர்புடையதாய்ச் சில விஷயங்கள் நடைபெறுகின்றது மற்றும் தம்முடைய ஜனங்கள் பாடு அனுபவிக்கும்படிக்குச் சிலவற்றை கர்த்தர் அனுமதிக்கின்றார் மற்றும் அவர்களது எதிராளியானவர்கள் செயல்படுவதற்குச் சில அதிகாரங்களையும் அனுமதிக்கின்றார் மற்றும் இம்மாதிரியான தருணங்களில் அவருடைய பின்னடியார்கள் அமைதி மாத்திரமே காக்க வேண்டிய கட்டாயத்திற்குள் காணப்படுகின்றனர்; ஆனால் நெருக்கமான ஐக்கியத்தின் காரணமாகவும், இருதயத்தினுடைய உறவு காரணமாகவும், கர்த்தரை அறிந்திருப்பவர்களும், தேவனுடைய ஆழமான காரியங்களினால் போஷிக்கப்பட்டவர்களும், அவருடைய ஆவியை பானம் பண்ணினவர்களும், பிரச்சனைகளை/சிரமங்களை விவரிக்க முடியாவிட்டாலும், கர்த்தரில் விசுவாசமும், நம்பிக்கையும் முழுமையாய்க் கொள்ளவும், அவருடைய அனைத்துக் கிரியைகளும், வார்த்தைகளும், வழிநடத்துதல்களும் ஏற்றகாலத்தில் நியாயமென நிரூபிக்கப்படுவதற்குக் காத்திருக்கவும் முடியும்.

நமது கர்த்தரை மற்றவர்கள் நிந்தித்தும், அவருடைய மேசியாத்துவத்தை வெளிப்படுத்தவும், சிலுவையிலிருந்து இறங்கி வருவதற்கு வசைப்பாடியும் கொண்டிருந்தபோது, கள்வர்களில் ஒருவன் இழிவான தாக்குதல் பேச்சில் இணைந்துகொண்டான்; மரிக்க வேண்டிய நேரம் நெருங்குவதை உணர்ந்தவனாகவும், தனது சொந்த குற்றத்தை ஒத்துக்கொண்டவனாகவும் காணப்பட்ட மற்றொரு

கள்ளனோ, தன்னிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தன்மைகளையும், குணலட்சணங்களையும் உடைய நபராக இயேசு காணப்படுவதை அடையாளங்கண்டுகொண்டது தெரிகின்றது. பதிவுகளைப் பொறுத்தமட்டில், இந்தக் கள்வன் மாத்திரமே, அவதூறுகளுக்கு எதிரான கண்டனத்தைத் தெரிவிப்பதற்கும், தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கென எதுவும் கூறாமலும் மற்றும் இப்படியாக நன்மை செய்யும் விஷயத்தில் பொறுமையுடன் கூடிய சகித்தலுக்கு அருமையான மாதிரியை முன்வைத்திட்ட சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவர் சார்பாக பேசுவதற்கும் தனது குரலை எழுப்பினவனாகக் காணப்படுகின்றான். ஒருவேளை அவர்கள் அறைக்கூவலிட்டதற்கு ஏற்ப, இயேசு தம்முடைய வல்லமையை நிரூபித்திருப்பாரானால் அவர், அவரை இகழ்ந்து, அவரைச் சிலுவையில் அறைந்தவர்களுடைய நம்பிக்கைகளைச் சிதைத்துப்போடுபவராக இருப்பது மாத்திரமல்லாமல், ஒட்டுமொத்த மனுக்குலத்தின் நம்பிக்கைகளையும் சிதைத்துப் போட்டவராகவும் இருந்திருப்பார். ஓ! அவர் மரணம் வரையிலும், அதாவது சிலுவையின் மரணப்பரியந்தம் காண்பித்த உண்மையினிமித்தம் நாம் எவ்வளவாய்க் களிக்கூருகின்றோம்! அவர் தம்முடைய வல்லமையைச் செயல்படுத்தாமலும், தம்மை விடுவிப்பதற்கென, "பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை" அழைக்காமலுமிருந்து, மாறாக ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்கான ஈடுபலியென, தம்முடைய சொந்த ஜீவனை ஒப்புக்கொடுத்து, தம்மைப் பலிச் செலுத்தினபடியாலும் நாம் எவ்வளவாய் அவரைத் துதிக்க வேண்டும்!

இயேசு நீதியினிமித்தமாக பாடு அனுபவித்து, பொறுமையுடன் சகிப்பதைக் கண்டதால் மாத்திரமேயல்லாமல், மற்றப்படி மனவருந்தின கள்ளனுக்கு இயேசுவைப் பற்றி எதுவும் தெரியாது; "தேவனற்றவர்களாகவும், நம்பிக்கையில்லாதவர்களுமாகிய" சிலருக்கு, உபத்திரவத்தின் மத்தியில் பொறுமையுடன் காணப்படும் கர்த்தருடைய பின்னடியார்களுடைய நடக்கையானது பலமான மற்றும் சிறந்த பாடமாக சில சமயங்களில் காணப்படுவது போன்றே, இந்த ஜீவனுள்ள நிரூபமானவர் (இயேசு) இந்த மனம் வருந்தின கள்வனிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினார். கர்த்தருடனான இந்தச் சொற்ப நேரப் பழக்கத்தினால், இந்தக் கள்வன் ஒரு பரிசுத்தவானாகிவிட்டான் என்று குறிப்பிடுவதற்கு எந்த நிரூபணமும் காணப்படவில்லை; இந்தக் கள்வன் ஜெயங்கொண்டவனாகவும், இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரவாளியாகவும் காணப்படத்தக்கதான குணலட்சணத்தை அவ்வேளையில் கொண்டிருந்தான் அல்லது வளர்த்துக்கொள்ள முடிந்தது என்று சொல்வதற்கும் எந்த நிரூபணமும் இல்லை. இம்மாதிரியான கருத்துக்களுக்கு எதிர்மாறாகவே அனைத்தும் காணப்பட்டன. கள்வன் தான் ஒரு குற்றவாளி என்றும், நியாயப்பிரமாணத்திற்கு/சட்டத்திற்கு ஏற்ப மரணத்திற்குப் பாத்திரவான் என்றும், இயேசு குற்றமற்றவர் என்றும், எதிர்கால இராஜ்யம் தொடர்புடையதாய் இந்த அருமையான மனிதனாகிய இயேசு உரிமைப் பாராட்டிக்கொண்ட விஷயங்கள் கொஞ்சமேனும் நிகழ்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் உணர்ந்துமாத்திரம் கொண்டான். இயேசுவின் சார்பில் ஒரு வார்த்தையாகிலும் கூறிவிட்டு, பின்னர் ஒருவேளை இயேசு கூறியிருந்த பிரகாரமாகவே இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு வரும்போது, தான் அவர் சார்பில் பேசினதைத் தயவாய் நினைவுகூர்ந்து, அவரது இராஜ்யம் வருகையில் தனக்கு இரக்கம் பாராட்டும்படிக்கு, இயேசுவிடம் கள்வன் வேண்டிக்கொள்ள வேண்டுமென்றிருந்தான்.

## பரதீஸ் வாக்களிக்கப்பட்டது

"இயேசு அவனை நோக்கி; இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே (என்பது அப்படியே ஆகக்கடவது, அப்படியே ஆகக்கடவது) உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"* (லூக்கா 23:43). [*ஆங்கிலத்தில் today என்ற வார்த்தைக்குப் பின்பே காற் புள்ளி இடம்பெற வேண்டுமே ஒழிய, முன்பு அல்ல; இப்படியாக இடம்பெறும்போதே நமக்கு, முன்பிருக்கும் உண்மைகளுக்கு இசைவாகப் பார்க்கப்பட முடியும், மற்றும் மற்ற வேதவாக்கியங்களுக்கும் இசைவாகப் பார்க்கப்பட முடியும். ஆரம்பத்தில் வேதவாக்கியங்களில் நிறுத்தல் குறியிடுதலானது (Punctuation) கிடையாது. நிறுத்தல் குறியீடு சமீபக்காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது]. கள்வன் கேட்டுக்கொண்டது, அப்படியே ஆகக்கடவது ஒழிய மற்றப்படியல்ல. பாவம் உலகத்தில் பிரவேசித்தபோது, தண்டனையின் ஒரு பாகமாக, இழந்துபோகப்பட்டதும், கல்வாரியில் அப்பொழுது இயேசுவால் நிறைவேற்றப்பட்ட பலியினால் மீட்கப்பட்டதுமான பரதீஸ், இயேசுவின் இராஜ்யம் வரும்போது, அந்த இராஜ்யத்தின் விளைவாக திரும்ப அடையப்படும். அவர் தம்முடைய இரண்டாம் வருகையின் போது, இராஜ்யத்தில் வருகையில், கள்வன் கேட்டுக்கொண்டதுபோல, இராஜ்யத்தில் கள்வனை நினைவுகூருவார் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி நமது அருமை மீட்பருடைய சோதனையான வேளையில், ஆறுதலான வார்த்தைகளைப் பேசினதற்காக திரளான பலன்களைக் கள்வன் அடையப்பெறுவான். ஆனால் இந்தப் பலனானது சிங்காசனத்திலோ, இராஜ்யத்திலோ,

கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகக் காணப்படும் ஸ்தானமாக நிச்சயமாய் இருக்கப்போவதில்லை; ஏனெனில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியிலான இந்த ஸ்தானம் என்பது, தேவனுடைய அருமையான குமாரனுக்கொத்த சாயலை அடைபவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்படுகின்றது (ரோமர் 8:29). இதைத் தவிர பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத எவரும் இந்த ஸ்தானத்தை அடையவும் முடியாது மற்றும் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானது, பணிவிடை வீட்டாரிலிருந்து, புத்திரர் வீட்டாருக்குள் கொண்டுவரப்படுவதற்கெனக் காத்திருந்தவர்கள்மேல் வருவதற்கு முன்பு வரையிலும், புதிய சுபாவத்திற்குள்ளாக ஜெநிப்பிக்கும் வல்லமையாகப் பரிசுத்த ஆவியானது அருளப்படவில்லை (யோவான் 1:12; 7:39).

கள்வன் நன்கு குணலட்சணத்தில் வளர்ச்சியடைந்து, இராஜ்யத்தில் ஏதேனும் பங்கடைவதற்கு முன்னதாகவே, சீக்கிரத்தில் மரித்துப்போய்விட்டான்; அதாவது யோவான் ஸ்நானன் சீக்கிரமாய் மரித்துப்போனதுபோல மரித்துப்போய்விட்டான். இந்த யோவான் ஸ்நானனைக்குறித்து நமது கர்த்தர், யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி இல்லையென்றாலும், "பரலோக இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் (இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட சபையாக, உடன்சுதந்தரர்களாக இருப்பவர்கள்) அவனிலும் பெரியவனாயிருக்கிறான் என்று" கூறினார் (மத்தேயு 11:11). இராஜ்யம் வரும்போதும் மற்றும் பரதீஸ் திரும்பக்கொடுக்கப்படும்போதும், மனம் வருந்தின கள்வன் மாத்திரமல்லாமல், மனம் வருந்தாத கள்வனும், அந்த உரோம போர்ச்சேவகர்களும், அந்த இரத்த வெறிக்கொண்டிருந்த வேதபாரகர்களும், பரிசேயர்களும், ஆசாரியர்களுங்கூட, பரதீசில் காணப்படுவார்கள். இவர்கள் தங்களுடைய சொந்த தகுதியினால் அங்குக் காணப்படாமல், மாறாக இவர்களது தண்டனையை ஏற்றுக்கொண்டு, இவர்கள் ஆயிரவருட பரதீசில் தேவனைப் பற்றின அறிவிற்குள் வருவதற்கும் மற்றும் இவர்கள் விரும்பும் பட்சத்தில் கீழ்ப்படிதல் வாயிலாக நித்தியமான ஜீவனை அடைவதற்குமான முழு வாய்ப்பையும் இவர்களுக்கு உறுதியளித்தக் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம் காரணமாகவே இவர்கள் பரதீசில் காணப்படுவார்கள்.

"இன்றைக்கு என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்ற வார்த்தைகள் எத்துணை அழுத்தம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது; "என்னுடைய சார்பிலிருந்து இயலாமை வெளிப்படுவது போன்று தோன்றினாலும் மற்றும் என்னுடைய சத்துருக்கள் வெற்றியடைந்துவிட்டதுபோன்று தோன்றினாலும், . . . உன்னுடைய விண்ணப்பத்திற்குப் பதிலளிக்கப்படும் என்றும், நான் என்னுடைய இராஜ்யத்தில் வரும்போது, பரதீஸ் திரும்ப அடையப்பெறும் மற்றும் தெய்வீகத் திட்டத்தில் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை அருளிட நான் அங்கு இராஜாவாகவும், ஆசாரியனாகவும் இருக்கையில், நீ ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக அங்குக் காணப்படுவாய் என்றும், நான் இன்றைக்கு உன்னிடம் கூறுகின்றேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார். ஏதேன் தோட்டமே, இழந்துபோகப்பட்ட பரதீசாகும் மற்றும் இது ஏற்றவேளையில், இதையும் (ஏதேனையும்) மனுக்குலத்தையும் தம்முடைய பலியினால் விலைக்கு வாங்கினவரால் பெரிய அளவிலும் மற்றும் பிரமாண்டமான அளவிலும் திரும்பக்கொடுக்கப்படும் (எபேசியர் 1:14; வெளிப்படுத்தல் 2:7).

சிலுவையில் அறைந்தவுடனே, இயேசுவைப் பொறுப்பேற்றிருந்த நான்கு போர்ச்சேவகர்களும் தங்களுக்குள் அவரது வஸ்திரங்களைப் பங்குபோட்டுக்கொண்டார்கள்; ஆனால் இயேசுவினால் அணியப்பட்டிருந்த உயர்தரமான மற்றும் விலையுயர்ந்த நெய்யப்பட்ட அங்கியானது, போர்ச்சேவகர்கள் அனைவராலும் விரும்பப்பட்டதினால், அதற்காகச் சீட்டுப்போட்டனர். அந்த அங்கியானது, கிறிஸ்துவினுடைய நீதிக்கு, அதாவது கிறிஸ்துவோடுகூடப் பாடுபட்டு, இராஜ்யத்தில் அவருடன்கூட உடன்சுதந்தரத்துவத்தை அடைவதற்குரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும், மிகுந்த கிருபைப் பெற்றவர்களுக்கு, இந்தச் சுவிசேஷ யுகத்தில் அருளப்படும் மிகவும் விலையேறப்பெற்ற கலியாண வஸ்திரத்திற்கு அருமையான அடையாளமாய் இருக்கின்றது. கிறிஸ்துவினால் தரிப்பிக்கப்படும் நீதியாகிய இந்த வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சிலாக்கியம்/பாக்கியம் அல்லது சீட்டு, நாகரிகமான தேசங்களிலுள்ள நம் பேரில் பிரதானமாய் விழுந்துள்ளது; நமக்கே கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையான திட்டம் குறித்த அறிவின் வெளிச்சம் அருளப்பட்டுள்ளது. அந்த அங்கியானது, அடையாளப்படுத்தும் கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய சிலாக்கியம் (அ) சீட்டு நம்முடையதாய் இருக்கின்றபடியால் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். இதை உணர்ந்துகொள்பவர்கள், தாங்கள் உணர்ந்துகொண்டுள்ளதை, தங்களது அன்றாட ஜீவியத்தின் சகல காரியங்களிலும்

வெளிப்படுத்துகிறவர்களாகவும், உலகத்திலிருந்து தங்களது வஸ்திரத்தைக் கறைப்படாமல் காத்துக்கொள்வதற்கு நாடுபவர்களாகவும், வஸ்திரம் கறைதிறை அற்றதாகவும், கர்த்தருடைய குணலட்சணத்தினுடைய சகல கிருபைகளினால் சித்திர தையலிடுவதற்கு நாடுபவர்களாகவும் காணப்படுவார்கள்; இப்படியாக தாங்கள் பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நாடுபவர்களாகவும் காணப்படுவார்கள் (சங்கீதம் 45:14; யாக்கோபு 1:27).

சிலுவையில் அறையப்பட்ட பின் மதியம் துவங்கி, நமது கர்த்தர் மரித்தப் பிற்பாடு, மூன்று மணிவரையிலும் நீடித்திருந்த இருளானது, மிகவும் குறிப்பிடத்தக்கதான ஒன்றாகும் மற்றும் இது ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினது. புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, "பேதுருவின் சுவிசேஷம் என்று அழைக்கப்படும் சுவிசேஷமானது, இந்த இருளைக் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "அநேகர் இரவு வேளை என்றெண்ணி, விளக்குகளோடு போய்வந்தார்கள்" மற்றும் இயேசு சிலுவையிலிருந்து எடுக்கப்படும்போது, பூமியதிர்ச்சி ஏற்பட்ட வேளை வரையிலும் இருள் நீடித்திருந்தது; "பின்னர் சூரியன் பிரகாசம் காணப்பட்டபோது, அது ஒன்பதாம் மணிவேளை என்று அறியப்பட்டது" என்பதாகும்.

நமது கர்த்தருடைய மரணம் சம்பவித்தத் தருணத்தில் பூமியதிர்ச்சி ஏற்பட்ட அதேவேளையில், ஆலயத்தின் திரைச்சீலையும் கிழிந்தது. திரைச்சீலை என்று சொல்லும்போது, அது கிழிவது என்பது ஒரு சாதாரணமான/அற்ப காரியம் எனத் தோன்றலாம்; ஆனால் இது ஓர் அற்ப காரியமல்ல, ஏனெனில் இந்தத் திரைச்சீலையானது மிகவும் பெரியதாகவும், மிகவும் கனமான திரையாகவும் இருந்தபடியால், இது கிழிவது ஒரு சாதரணமான காரியமல்ல, மாறாக இது கிழிக்கப்படுவதற்கு இயற்கைக்கு அப்பாற்பட்டப் பலத்தினாலேயே கூடும். இந்தத் திரைச்சீலையானது, அறுபது அடி நீளமும், முப்பது அடி அகலமும், ஐந்து அங்குலம் பருமன் கொண்டது என்றும், எழுபத்திரண்டு சதுர துண்டுகள் இணைக்கப்பெற்ற ஒன்று என்றும் எடர்சேம் அவர்கள் விவரிக்கின்றார். இந்தத் திரைச்சீலையானது அடையாளமான அர்த்தம் கொண்டவை என்று (ஆசரிப்புக்கூடாரத்தின் நிழல்களில்) பார்த்திருக்கின்றோம்; இது நமது கர்த்தருடைய பலி நிறைவேற்றப்பட்டதின் வாயிலாக, அவருடைய மாம்சம் பலியாக்கப்பட்டதன் காரணமாக, திரைக்கு அப்பால், அவர் நமக்கு ஜீவனுக்கான புதிய மார்க்கத்தைத் திறந்து வைத்ததை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகவே தேவனாகிய கர்த்தர், திரையைக் கிழிப்பதன் வாயிலாக, இயேசுவின் மரணமானது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு, அதாவது பரலோகத்திற்கு வருவதற்கான வழியைச் சாத்தியமாக்கிற்று என்பதை வெளிப்படுத்தினவராக இருந்தார்; இன்னுமாக திரைச்சீலையானது மேல் துவங்கி, கீழ்வரை கிழிந்தது என்ற காரியமானது, இது தேவனால் நடைப்பெற்றது என்றும், அதன் ஆரம்பம் துவங்கி, முடிவுவரை மனித திட்டமிடுதலும், பிரயாசமும் அதில் இல்லையென்றும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

## பிதாவே உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்

நமது கர்த்தர் தம்முடைய ஆவியை, தமது ஜீவனைப் பிதாவின் கையில் ஒப்புவிக்கும் வண்ணமாகக் கூறின வார்த்தைகளானது, ஸ்தேவானின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது (அப்போஸ்தலர் 7:59). நம் அனைவரையும் போல், ஸ்தேவானுக்கும் ஒப்புவிக்கிறதற்குக் கொஞ்சமே இருந்தது; ஆதாமிடமிருந்து வரும் ஜீவனுக்கான ஆவி, அதாவது ஆதாம் வழியான ஜீவன் ஏற்கெனவே பறிமுதல் பண்ணியாகிவிட்டது மற்றும் தேவனிடம் ஸ்தேவானால் ஒப்புவிக்கமுடிந்த ஜீவன் என்பது, ஜீவனளிப்பவராகிய இயேசுவின் மூலமாய், விசுவாசத்தினால் அடையப்பெற்ற, "கருதப்பட்ட ஜீவனேயாகும்." நமது கர்த்தருடைய விஷயத்திலோ, காரியங்கள் வித்தியாசமாய்க் காணப்பட்டது. பாவத்தினால் ஒருபோதும் பறிமுதல் செய்யப்படாத, ஜீவனுக்கான உரிமைகளை இயேசு கொண்டிருந்தார் மற்றும் அதையே இயேசு ஆதாமுக்கும், அவரிடமிருந்து பறிமுதல் பண்ணப்பட்ட ஜீவனின் ஆவிக்குமான ஈடுபலி விலைக்கிரயமாக, பிதாவிடம் ஒப்புவித்தார்; எனினும் பிதாவினுடைய சொந்த வல்லமையினால், தாம் மரணத்திலிருந்து எழுப்பப்படுவார் என்பதான பிதாவின் வாக்குத்தத்தத்தில் நமது கர்த்தர் உறுதியாய் விசுவாசம் கொண்டிருந்தார்; இன்னுமாக ஜீவனுக்குள் எழுப்புவதாக வாக்களித்துள்ள தேவன், அதைச் செய்வதற்கும், தம்மை மரணத்தின் நிலையிலிருந்து, திவ்விய சுபாவத்திற்கும், அதன் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் கொண்டுவருவதற்கும் மிகுதியாய் விருப்பமும், வல்லமையும் உடையவராய் இருக்கின்றார் என்றும் இயேசு தேவனில் விசுவாசம் கொண்டிருந்தார். இப்படியாக நமது கர்த்தர் தமது ஆவியை விட்டார்; அதாவது ஜீவனுக்கான ஆவியை விட்டார்; அதாவது

மரித்தார் மற்றும் பிதா தம்முடைய சொந்த வல்லமையினால், மூன்றாம் நாளில் தம்மை மரணத்திலிருந்து எழுப்புவது வரையிலும், மரணத்திலேயே காணப்பட்டார்.

இறுதி காட்சிகள் நமது கர்த்தருடைய நண்பர்களுக்கு மாத்திரமல்லாமல், அவருடைய சத்துருக்களுக்குங்கூட மிகவும் வியப்பான எண்ணங்களைத் தூண்டினவைகளாக இருந்தது என்பது நிச்சயமே மற்றும் நிசப்தமும், கவலையின் உணர்வுகளும் நிலவின. இருள் வரவர அவருடைய சத்துருக்களின் வசைமொழிகள் நின்றன; இறுதியில் அநேகர், அங்கு நிகழ்ந்தவைகள் குறிப்பிடத்தக்கவைகள் என்று ஒத்துக்கொள்ளும் நிலையில் காணப்பட்டனர் மற்றும், "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" என்று கூறி போதகர் உரிமைப் பாராட்டியிருந்த விஷயங்களை ஓரளவுக்கு உறுதி செய்துகொண்டார்கள் (மாற்கு 15:39).

நமது கர்த்தருடைய மரணத் தருவாயில் வெளிப்பட்ட மகத்துவமான தன்மைகளானது, அவருடைய நண்பர்களில் சிலருக்கு மிகுந்த தைரியத்தை அளித்ததாகத் தெரியவருகின்றது; இப்படிப்பட்ட நண்பர்களில் இருவர் யோசேப்பும், நிக்கொதேமுவும் ஆவார்கள்; இவர்கள் இயேசுவை தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக்கின ஆலோசனை சங்கத்தின் அங்கத்தினர்கள் ஆவார்கள். இவர்கள் ஒன்றில் தண்டனை தீர்ப்பு வழங்கும்போது இல்லாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது தண்டனை தீர்ப்பிற்கு எதிராக தங்களது வாக்குகளைத் தெரிவித்தவர்களாக இருந்திருக்க வேண்டும். இவர்கள், "யூதருக்குப் பயந்ததினால்," இயேசுவிடத்திலான தங்களது ஈடுபாட்டை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், தங்களது புகழ் குறைந்துவிடுமோவென ஒருகாலத்தில் மிகவும் ஜாக்கிரதையாய்க் காணப்பட்டனர்; ஆனால் இப்பொழுதோ கர்த்தர் தங்களது நண்பரென ஒத்துக்கொள்வதற்கும் அவரது அடக்கச் செயல்களை ஒழுங்குப்படுத்துவதற்கும் தைரியமடைந்தனர் (யோவான் 19:39). இந்த ஆஸ்தியும், செல்வாக்கும் மிகுந்த மனுஷர்கள், தாமதமாய் இயேசுவைக்குறித்து ஒப்புக்கொள்ளும் காரியமானது, வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் ஒப்புக்கொள்வது தொடர்புடைய விஷயத்தில் ஆஸ்தியும், செல்வாக்கும் மிகுந்த மனிதர்களுக்குத் தடையாக இருக்கும் விசேஷித்த சிரமங்களை நமக்கு நினைப்பூட்டுகின்றது. இன்று அநேக ஐசுவரியவான்களும், செல்வாக்குமிக்க அநேகரும் (churchianity) சபைகள் மயமான மார்க்கத்தின் பிரபலம் காரணமாக, சபைகளின் ஊழியங்களில் முன்னிலை ஸ்தானம் வகிக்கின்றவர்களாய்க் காணப்படுவது உண்மையே; ஆனால் உண்மையான சபையாகிய, "கிறிஸ்துவின் சரீரத்தை," சபைகள் மயமான மார்க்கத்துடன் (churchianity) குழப்பிப்பார்க்கக்கூடாது; இந்த உண்மை சபையானது, கர்த்தர் போன்று, உலகத்தின் கண்ணோட்டத்தில் செல்வாக்கு, அதிகாரம் (அ) ஐசுவரியம் அற்றதாகக் காணப்படுகின்றது. இந்தப் பாவநிவாரண நாள் எனும் மாபெரும் நாடகம் நிறைவடையும்போது, கிறிஸ்துவின் கடைசி அங்கத்தினன் அவனது பலியை நிறைவேற்றி முடிக்கும்போது, ஐசுவரியவான்களிலும், செல்வாக்குமிக்கவர்களிலும் அநேகர் இந்தத் தாழ்மையுள்ளவர்களைக் கனப்படுத்துவதற்கும், இவர்களின் கல்லறைகளை அலங்கரிப்பதற்கும் முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை. பலி செலுத்துவதற்கான காலத்தில் இந்த ஐசுவரியவான்கள் தைரியமாய் முன்வந்து, தங்களது சொந்த பலிகளை, பலபீடத்தின் கொம்புகளில் கட்டி வைத்திருந்திருப்பார்களானால், இது அவர்கள் தங்களது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்ளும் விஷயத்தில் இன்னும் அதிகம் நன்மைக்கு ஏதுவானதாய் இருந்திருக்கும் (சங்கீதம் 118:27).

## ஒப்புரவாகுதல்

கிறிஸ்தவ சமயம் எனும் பெயரிலும், வேதவாக்கியங்களை வைத்துக்கொண்டும், தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான ஒப்புரவாகுதல் தொடர்புடைய விஷயத்தில் பல்வேறு கோட்பாடுகள் வந்துள்ளது. கல்வாரியில், தம்முடைய மரணத்தில், நமது கர்த்தரால் நிறைவேற்றப்பட்ட வேலையானது, நித்தியமான ஜீவன் மற்றும் பரம பிதாவுடன் ஒப்புரவாகுதல் தொடர்புடைய விஷயத்திலுள்ள சகல மனிதனுக்கான நம்பிக்கைகளுக்கு அஸ்திபாரமாகக் காணப்படுகின்றது என்று சிலர் ஒப்புக்கொள்கின்றனர்; ஆனால் மற்றவர்களோ, இதை மறுதலித்து, மனிதனுக்கும், தேவனுக்கும் இடையிலான உறவானது, ஒருபோதும் துண்டிக்கப்படவில்லை என்றும், மீண்டும் ஒப்புரவாகிக்கொள்வதற்கென எந்த ஈடுபலியும் தேவையில்லை என்றும், எந்த விழுகையும் நடைபெறவில்லை என்றும், ஆகவே முன்னிருந்த நிலைக்குக்கொண்டுவரப்படுவதற்கு அவசியம் எதுவுமில்லை என்றும், இப்படியான எந்தத் திரும்பப்பெறுதலும், நமது கர்த்தர் இயேசுவின் மரணத்தினால் அடையப்பெறவில்லை என்றுமுள்ள காரியங்களை முன்வைக்கும் கோட்பாடுகளைக்கொண்டு வருகின்றனர். நமது கர்த்தரின் மரணத்தினுடைய, மீட்பு எனும் பலனை

மறுதலிக்கும் இந்தக் கோட்பாடுகளானது, கர்த்தர் மனுக்குலத்திற்கு ஒரு மாபெரும் போதகராக மாத்திரமே பணியாற்றினாரே ஒழிய, எந்த விதத்திலும் மீட்பராக இருந்ததில்லை என்று கூறி, அவருக்கான கனத்தை எடுத்துப்போடுகின்றதாய் இருக்கின்றது. ஈடுபலியைப் புறக்கணிக்கும் இந்தத் தவறான கோட்பாடுகளானது அதிகரித்தும், உறுதியடைந்து கொண்டும், மற்றும் திவ்விய வார்த்தைகளிலும், யுகங்களுக்கடுத்த திட்டங்களிலும் நன்கு வேரூன்றாதவர்களையும், உறுதியடையாதவர்களையும் நாளுக்கு நாள் அதிகம் ஈர்த்துக்கொண்டும் வருகின்றது. ஆகவே யோர்தானில் கர்த்தரால் பண்ணப்பட்ட அர்ப்பணிப்பில் ஆரம்பித்து, கல்வாரியில் அவரது சுவாசம் நின்றதுடன் நிறைவடைந்த, நமது கர்த்தருடைய பலியெனும் மாபெரும் காரியத்தின்/நடவடிக்கையின் மீதே, இரட்சிப்பிற்கான முழுத் திட்டமும் மையங்கொண்டுள்ளது எனும் வேதவாக்கியங்களின் படியான உண்மையின் மீது விசேஷித்த கவனத்தைக்கொண்டுவருவது தகுந்த காரியமாகும். இதனை விசுவாசித்து, ஏற்றுக்கொள்பவன் அந்தப் பலியின் புண்ணியத்தில் தனக்கான பங்கை அடைவதற்குரியவனாகிறான். இதனை மறுதலிக்கிறவன், தேவனிடத்தில் ஒப்புரவாகுவதற்கும், நித்திய ஜீவனை அடைவதற்குமுரிய ஒரே நாமத்தையும், ஒரே விசுவாசத்தையும் மறுதலிக்கிறவனுமாயிருக்கிறான்.

ஒரு கோட்பாட்டினால் மனிதன் இரட்சிக்கப்படுவான் என்று நாம் கூறவரவில்லை, மாறாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் தேவனுடன் இசைவுக்குள் வருகின்றவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாக, தேவனிடம் வர வேண்டும் என்பதினால், தெளிவான கோட்பாடுகளின் மீதான தெளிவான விசுவாசத்தை அல்லாமல், வேறு விசுவாசத்தைத் தேவனால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், நீதிமானாக்கப்படுதலுக்கும், ஒப்புரவாகுதலுக்குமான அடித்தளமாக இருக்கும் கிறிஸ்துவின் மரணத்தைப் புறக்கணிக்கும் எந்தக் கோட்பாடுகளும் வேதவாக்கியங்களால் அங்கீகரிக்கப்படாதவைகள் என்றும், இப்படியான கோட்பாடுகளினால் எவ்விதமான பயனுமில்லை என்றுமே நாம் கூறுகின்றோம். ஆகையால் வேறு ஏதாகிலும் ஒரு விசுவாசத்தின் அடிப்படையிலும், வேறொரு கோட்பாட்டின் அடிப்படையிலும், தேவனிடம் உறவு கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்பவர்கள் அனைவரும் தங்களை ஏமாற்றிக்கொண்டிருப்பவர்களாக இருக்கின்றனர்; இப்படிப்பட்டவர்கள் பிதாவுடனோ, குமாரனுடனோ ஒப்புரவாகாதவர்களாகவும், தங்களது பாவங்களிலிருந்து நீதிமானாக்கப்படாதவர்களாகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாகாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆகவே பாவ நிவாரணத்தின்/ஒப்புரவாகுதலின் கோட்பாடுகளைப்பற்றின தெளிவான புரிந்துகொள்ளுதல் உடையவர்கள் மாத்திரமே நீதிமானாக்கப்படுகின்றனர் என்று நாம் சொல்ல வரவில்லை; மாறாக இன்று நிலவும் தெளிவான புரிந்துகொள்ளுதல் இல்லாமலேயே, இருண்ட யுகங்களுடைய காலபகுதியில் தேவனுடைய அருமையான ஜனங்களில் அநேகர் வாழ்ந்து, மரித்துள்ளனர் என்று நாம் நம்புகின்றோம். கோட்பாட்டைக் காணத்தவறினாலும், தேவனுடைய உண்மையான ஜனங்கள் அனைவரும், கிறிஸ்துவின் மரணமே, பிதாவுடனான நம்முடைய ஒப்புரவாகுதலை ஏற்படுத்திற்று என்றும், கிறிஸ்துவின் மரணத்திலேயே, நித்திய ஜீவன் அடைவதற்குரிய சகல நம்பிக்கைகளும் மையங்கொண்டுள்ளது என்றுமுள்ள உண்மையை அடையாளம் கண்டுகொண்டுள்ளனர்.தொகுதி.5,பார்க்கவும்.

தேவ ஆவியினால் ஏவப்படாதவைகளாகவும், அனுமானமானவைகளாகவும் இருப்பவைகளைக் காட்டிலும், ஏவப்பட்டுப் பேசப்படும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை விரும்புபவர்களுக்கு, நமது ஆதார வசனமே, ஈடுபலிக்கு எதிரான சகல கோட்பாடுகளுக்கு எதிராக போதுமானதாய்ப் பதிலளிக்கக்கூடியதாய் இருக்கின்றது. ஈடுபலிக்கு எதிரான கோட்பாடுகளில் ஒன்றான கிறிஸ்தவ விஞ்ஞானம் (Christian science) என்பது, “பாவம் என்ற ஒன்று இல்லை” என்பதினால், தண்டனை என்ற ஒன்றும் இல்லை என்றும், “மரணம் என்ற ஒன்று இல்லை” என்பதினால், கிறிஸ்துவும் மரிக்கவில்லை என்கிறது. ஆனால் பாவம் வந்தது என்றும், அதினால் தண்டனை வந்தது என்றும், மரணமும் வந்தது என்றும், கிறிஸ்துவின் மரணமானது, நாம் பாவத்திலிருந்து மீட்கப்படுவதற்காக நடைபெற்றது என்றும் அப்போஸ்தலர் வேதவாக்கியங்களுக்கும், காரியகாரணத்திற்கும் இசைவாய் உறுதியளிக்கின்றார். “பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தில்” உறுதியுடன் நிலைநிற்போமாக (யூதா 3).

*****

# பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள்

பல வருடங்களுக்கு முன்னதாகவே, பஸ்கா காலம் நமது அருமையான கர்த்தருக்குக் கெத்செமனே மற்றும் கல்வாரியின் வருத்தங்களையும், பரீட்சைகளையும் கொண்டுவந்தது என்பதையும், இதே காலமானது யூதாசுக்கும், பேதுருவுக்கும், கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களுக்கும் பரீட்சைகளின் மற்றும் புடமிடுதலின் காலமாகவும் இருந்தது என்பவைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தோம். மேலுமாக நமது எதிராளியான சாத்தானானவன் கர்த்தருடைய ஜனங்களைப் பரீட்சித்து, நிரூபிக்கும்படிக்கு விசேஷமான அதிகாரம் கொடுக்கப்பட்ட காலமாகவும் இது விளங்குகின்றது. "சோதனைக் காலமானது" பூமியில் குடியிருக்கும் யாவரையும் சோதிக்கும்படியாக இருக்க, இந்தப் பஸ்கா காலத்தின் பரீட்சைகள் விசேஷமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ள தேவனுடைய வீட்டார் மீது வரக்கூடியவைகள் என்று நாம் கருதுகின்றோம்.

கடிதங்கள் வாயிலாக அநேகருடைய பாடுகள் மற்றும் கண்ணீர்ளை அறிந்துகொண்டோம்; சிலருக்குத் தங்கள் சொந்த பெலவீனங்களினால் பாடுகள் உள்ளன, சிலருக்கு மற்றவருடைய பெலவீனங்களினால் பாடுகள் உள்ளன, இன்னும் சிலருக்கு ஜெயங்கொள்ள முடியாத அல்லது கர்த்தரிடத்தில் முழுவதும் ஒப்புவிக்கப்படாத பூலோக பாரங்களினால் பாடுகள் உள்ளன. இத்தகையவர்கள்மீது அனுதாபங்கொண்டு, எங்களால் முடிந்தமட்டும் ஆலோசனைக் கொடுக்கும் அதேவேளையில், "இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள், இனிக் களிகூருவீர்கள்" என்ற நம்முடைய போதகரின் வார்த்தைகளை நினைவுகூருகின்றோம். மேலும் சோதனையிலிருந்தும், அதை உணரமுடியாத நிலையில் காணப்படுபவர்களுக்கு எங்கள் இருதயங்களில் ஆழமான விசேஷமான கவலைக்கொள்கின்றோம், அதாவது இலட்சியங்கள் அல்லது வியாபாரங்கள் அல்லது இவ்வுலகத்திற்கு அடுத்தக் கவலைகள் மற்றும் ஐசுவரியத்தின் மயக்கத்தினால் ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய விஷயங்களில் மூழ்கடிக்கப்பட்டவர்களுக்காக ஆழமான கவலைக்கொள்கின்றோம்; இப்படிப்பட்டவர்களிடம் சத்தியத்தின்மீதான அன்பு ஒவ்வொரு வருடமும் அனலாகுவதற்குப்பதிலாக, குளிராகிவிடுகின்றது; இவர்கள் முன்பு கண்டதுபோல் காண்பதுமில்லை, உணர்ந்துகொள்வதிலும் குறைவு ஏற்படுகின்றது. இவர்கள் அப்போஸ்தலர்கள்போல் — விழித்திருந்து, ஜெபிப்பதற்குப்பதிலாக, தூங்கிக் கொண்டிருந்து, சோதனை வேளைக்குத் தயாரற்று இருக்கின்றனர் என்றும், கெத்செமனேயில் நமது இரட்சகர் அழுது, போராடினதுபோல, சிலர் அழுது, போராடுகின்றனர் மற்றும் அத்தகையவர்கள் அவரைப்போன்று சோதனைக்காலத்தில் பலப்பட்டிருப்பார்கள் என்றும் நாம் நம்மிடமே சொல்கின்றோம்.

இம்மாதிரியான விசுவாசத்தின் பரீட்சைகளையும், பாடுகளையும் அனுமதிக்காதீர் என்று கர்த்தரிடத்தில் நாம் ஜெபம்பண்ணவும்கூடாது; ஏனெனில் "தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள்," பரீட்சிக்கப்பட்ட ஜனங்களாக இருக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டதற்கான முக்கிய காரணம், இவர்கள் நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ள இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரர்களாய், ஆயிரவருட அரசாட்சியில் உலகத்தை நியாயந்தீர்த்து, ஆசீர்வதிக்கவேயாகும். "உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினி" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். தற்கால கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திலிருந்து, அவருடைய மகிமையான இராஜ்யத்தில் பங்கடைவதற்கு, முன்னேறுவதற்கு — அவர்கள் பரீட்சையில் ஜெயம்பெறுவதற்கு இச்சோதனைகள் அவசியம், கண்டிப்பாக வேண்டும்.

இந்தச் சிந்தனையை நமக்குமுன் தொடர்ச்சியாக, எப்போதும் நாம் கொண்டிருக்க முடிந்தால், கர்த்தருக்குப் பிரியமானவைகளை நாம் விரும்புவதற்கும்,அதைச் செய்வதற்கும் எவ்வளவாய் நம்மை ஊக்குவிக்கும், மேலுமாக நம்முடைய நித்திய கனம், மகிமைக்காக இவைகளையெல்லாம் கர்த்தர் நமக்கு அனுமதிக்கின்றார் என்று நாம் உணர்ந்து, நம்முடைய அன்பான போதகர் அனுமதிப்பதற்கு நல்லது என்று கண்டு அனுமதிக்கும் எதையும் உண்மையாகவும், உற்சாகத்துடனும் சகிப்பதற்கு நம்மை ஊக்குவிக்கும். இந்தக் கண்ணோட்டத்தின்படி—

"நம்முடைய சோதனைகள் எத்துணை இலேசானதாய்த் தோன்றுமே!
நம்முடைய பிரயாணத்தின் பாதை எத்துணை சொற்ப தூரமாய்த் தோன்றுமே!
கனவாய் உள்ள பூலோக ஜீவிதமும்,
நாளின் விடியல்தனிலே மறைந்துபோய்விடுமே!

ஆ, சமாதானம்கொள் என் நெஞ்சமே!
அமைதிக்கொள் என் நாவே!

அமைதலாகு கலக்கமுற்ற என் மனமே!
கடந்துபோகும் ஒவ்வொரு மணிநேரமும்,
உன்னை நித்திய இளைப்பாறுதலுக்காய் அதிகமாய் ஆயத்தமாக்குதே."

அன்பான சகோதர சகோதரிகளே நமக்காகவும் மற்றும் ஒருவர்மீது ஒருவர் மிகவும் அக்கறைகொள்வோமாக. மேலும், "அவருடைய இளைப்பாறுதலில், பிரவேசிப்பதற்கு ஏதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" என்று அப்போஸ்தலர் கூறுகிறபடி, சுவிசேஷத்தின் மூலம் நமக்குமுன் வைக்கப்பட்ட, அந்தப் பரிசை, எல்லாவற்றிற்கும் மேலாகக் கருதுவோமாக. எல்லாக் கர்த்தருடைய ஜனங்களை நாம் இப்படியாக அன்புகூர்ந்து, அவர்களுடைய நலனை நம்முடைய பிரதானமான நோக்கமாகக் கருதுவோமாக; இதுவே நமக்கு ஆவிக்குரிய ஆரோக்கியமாக இருக்கும். கர்த்தருடைய மணவாட்டிகள் காரியத்திலுள்ள அவரது நிபந்தனைகள் விஷயம் — புடைத்தெடுத்தல்களானது, நாம் அருமையானதாகக் கருதி நாம் ஐக்கியங்கொண்டுள்ள சிலரை நம்மைவிட்டு எடுத்துப்போடும் விஷயம் — தொடர்புடைய கர்த்தருடைய அன்பு மற்றும் ஞானம் மீதான நமது நம்பிக்கைக்கு — சகோதர சகோதரிகளின்மீதுள்ள நம்முடைய அன்புகூட இடையூறாக இருந்திடுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது.

*****

# மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன்

## HE THAT LIVETH AND WAS DEAD

**லூக்கா 24:1-12**

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

**2 கொரிந்தியர் 15:20**

நம்முடைய பாடமாகிய நமது கர்த்தரின் உயிர்த்தெழுதலைக் குறித்தான உபதேசத்தின் விஷயத்தில் ஏற்படும் மாபெரும் குழப்பத்தைப் பார்க்கிலும், வேறு எந்தக் கிறிஸ்துவ உபதேசங்களுக்கும் அதிகம் குழப்பம் இருப்பதில்லை என்றாலும் ஒட்டுமொத்தமான கிறிஸ்தவ மண்டலமும் நம்முடைய இரட்சிப்புக்கு, நமது கர்த்தரின் உயிர்த்தெழுதல் மிகவும் இன்றியமையாதது என்று அறிவிப்பதினால் 1கொரிந்தியர் 15:13-18 வரையிலான வசனங்களின் மூலம் அப்போஸ்தலர் பவுல் தெரிவித்த விஷயங்களுக்கு இசைவாய் இருப்பதைக் காணலாம். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பாடம், அதாவது உபதேசம் இவ்வளவு தெளிவற்று காணப்படுவது எவ்வளவு வினோதமாய் உள்ளது! இதனுடைய முக்கியத்தை உணர்ந்தும், சிந்திக்கிற மனமுள்ளவர்கள் இதை அஜாக்கிரதையாக எடுத்துக் கொள்வதும், முட்டாள்தனமான கூற்றுக்களை ஏற்றுக் கொள்ள மனதாயிருப்பதும் எவ்வளவு விநோதமாய் உள்ளது!

உதாரணத்திற்கு சரீரம் மாத்திரமே மரிக்கின்றது, ஆத்துமா மரிப்பதில்லை என்றும் சரீரம் மரித்த மாத்திரத்தில் ஆத்துமா உயரிய / மேன்மையான ஜீவ நிலைக்குச் சென்று விடுகின்றது என்ற கூற்றுப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்பொழுது நாம் இந்தக் கூற்றை, நம்முடைய கர்த்தரின் மரணத்திற்க்கும், உயிர்தெழுதலுக்கும் பொருந்திப் பார்த்தால், அர்த்தமற்றதாகக் காணப்படுகின்றது, மேலும் இந்தக் கூற்றின் மீது கட்டப்பட்ட பல்வேறு மற்ற கூற்றுகளும் அர்த்தமற்றதாகி விடுகின்றது. அதாவது

1. ஒரு வேளை நம்முடைய கர்த்தரின் சரீரம் மாத்திரம் மரித்து போய் ஒரு வேளை சரீரத்திலிருந்து வெளியே வந்த நமது கர்த்தர் முன்பு இருந்தது போலவே ஜீவனுடையவராக இருந்தாரானால். அதாவது அவர் உயிர்த்தெழவில்லையெனில் நாம் கெட்டிருப்போம் மற்றும் அவர் மேலும் அவருடைய வேலைகள் மேலும் உள்ள நம்பிக்கையும் கெட்டுப்போகும் என்ற விஷயம் எப்படி உறுதிப்படும்?
2. பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்கள் நமது கர்த்தர் இயேசுதான் பரம பிதா என்றும், அவர் குமாரன் என்ற பெயரில் நம்மை வெறுமனே காட்டிக் கொண்டு வந்தார் என்றும், அவர் குமாரானாயிருந்தாலும் அவர் உண்மையில் பிதாவாகவே இருந்தார் என்றும், அதாவது அவர் இருவராகவும் இருந்தார் என்றும் நம்புகின்றனர்.

இவ்விதமான கருத்துகளைக் கொண்டவர்கள் கர்த்தர் ஒரு போதும் மரிக்கவில்லை என்றும், இல்லையெனில் அண்டச்சராசரமானது ஒரு குறிப்பிட்டக்காலம் எஜமான் இல்லாமல் இருக்கும் நிலை நேர்ந்திருக்கும் என்றும் எண்ணுவதற்கு தள்ளப்பட்டு விடுகின்றனர். மேலும் இதன் விளைவாக கிறிஸ்து இயேசுவின் அணைத்து வேலைகளும் ஒரு நாடகமாகவும், போலித்தனமாகவும் ஆகிவிடுகின்றது. மேலும் இயேசு எப்போதும் பரம பிதாவாகவே இருந்தார் என்றும், நாம் உடைகள் மாற்றிக்கொள்வது போன்று, அவர் ஒரு சரீரத்தை (மாம்சீக) தரித்துக் கொண்டிருந்தார் என்றும், அவர் தம்முடைய மாம்ச சரீரத்தை தம்மிடமே ஜெபிக்கும்படி நடிக்கச் செய்தார் என்றும், பிதாவாகிய தம்மிடமே பலத்த கண்ணீரோடும், பலத்த சத்தத்தோடும் விண்ணப்பம் பண்ண தம்முடைய சரீரத்தை நடிக்க செய்தார் என்றும் ஆகிவிடுகின்றது. மேலும் அந்த மாம்ச சரீரத்தை சிலுவையில் அறையப்படும்படிக்கு விட்டு அந்த சரீரம் "என் தேவனே என் தேவனே ஏன் எண்ணைக் கைவிட்டீர்" என்று கூக்குரலிட்டு அழும்படி நடிக்கச் செய்தார் என்றும் ஆகிவிடுகின்றது. பின்னர் அவர் அந்தச் சரீரத்தை அடக்கம் பண்ணும்படிக்கு அனுமதித்து சிலகாலம் (மரணத்தில்) உணர்வற்று இருந்தது போல நடித்தார் என்று ஆகிவிடுகின்றது. அவர் பாடுபடுவது போன்று வெளியே தோன்றினாலும், இவைகளில் ஒன்றையும்

அவர் உண்மையில் அனுபவிக்கவில்லை என்றும் ஆகிவிடுகின்றது முன்பு போல சர்வ வல்லமையுள்ளவராகவும், சர்வ ஞானியாகவும் இருந்த அவர் உடம்பையும், எலும்புகளையும் உருவாக்கிக் கொண்டு பரலோகத்திற்கு சென்றுவிட்டார் என்றும் ஆகிவிடுகின்றது. மேலும் அவர் மாம்ச சரீரத்தில் பரலோகத்திற்கு செல்வது என்பது அவர் மனுக்குலத்திற்கு அவர் பண்ணின வஞ்சணையை நாடகத்தை, போலிதனத்தை இன்னும் உறுதிபடுத்தவதாக ஆகிவிடுகின்றது.

கிறிஸ்துவ ஜனங்களிடம் பரவலாகக் காணப்படும் இந்த அனைத்து கூற்றுகளும் தெளிவற்றதாகவும், நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளில் உள்ள போதனைகளும் முற்றும் எதிர் மாறானாதாகவும், நியாயமான அறிவிற்கும் எதிராகவும் உள்ளது. இந்த அனைத்துக் கூற்றுகளும் இரண்டு அஸ்திபார தவறுகளின் மேல் கட்டப்பட்டுள்ளது, அதென்னவெனில், பிதாவும், குமாரனும் அந்த விதத்தில் ஒன்றாயிருக்கின்றார்கள் என்று காணத்தவறுவதே முதலாவதாகும். பிதாவும், குமாரனும் ஒரு நபராக இல்லாமல், ஆவியிலும், சித்தத்திலும்,சிந்தையிலும் இசைவாய் ஒன்றாயிருக்கின்றார்கள். முடிவில் மகிமையடைந்த சபையும் இவ்விதமாக பிதாவுடனும், குமாரனுடனும் ஒன்றாயிருப்பார்கள். இதை குறித்து நம்முடைய கர்த்தரின் சொந்த உதடுகளே வசனித்துள்ளது, யோவான் 17:21 - ஆம் வசனம் வாசிக்கவும் மரித்தவர்கள் மரிக்கவில்லை என்றும் மரணத்திற்கு முன்பு இருந்ததை காட்டிலும் அதிகம் ஜீவனுடையவர்களாக இருக்கின்றார்கள் என்ற கூற்றே இரண்டாவதாகும். மரித்தவர்கள் மரிக்கவில்லை என்றும் மரித்தவர்கள் எவரும் இல்லை என்ற நிலை இருக்க மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசுவது முட்டாள்தனமானது என்று யாரால் தான் மறுக்க முடியாது?

ஆவிக்குரிய கண்ணோட்டம் பார்க்கும் போது முழு பாடமும் தெளிவாகவும்,எளிமையானதாகவும் மாறிவிடும். இயேசு தேவனுடைய கனம் பொருந்தின குமாரன் ஆவார், அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன் ஆவார்,அவர் தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருந்தார். அவர், பிதாவோடு மகிமையில் இருந்த போது , மனுஷருடைய மீட்பர் ஆகும் சிலாக்கியம் இவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் தம்முன் வைக்கப்பட்ட சந்தோஷத்தின் பொருட்டு அந்தப் பணியை ஏற்றுக் கொண்டு மகிமையான பரலோக நிலையயைத் துறந்து, மாம்சமாகி சிலுவையின் பாடுகளைச் சகித்து, நிந்தனைகளை ஏற்றுக் கொண்டு, முடிவில் தனது உயிர்த்தெழுதலின் மூலம் திவ்விய சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டு உடன் சுதந்திரரானார். மனித சுபாவத்தை எடுப்பது அவசியமாயிருந்தது, ஏனெனில் மனிதனே பாவம் செய்தான், மேலும் ஒரு மனிதனால் பாவம் வந்தது போல ஒரு மனிதனால் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.(1கொரிந்தியர்15:21). உண்மையான பாவியாகிய ஆதாமையும், அவருடைய தண்டனையைப் பகிர்ந்து கொண்ட அவருடைய பிள்ளைகளையும் மீட்பதற்கு ஒரு பரிபூரண ஜீவனின் பலியினால் மாத்திரமே முடியும். இதுவே நமது கர்த்தர் மனிதனாக வந்ததற்கும், மரித்ததற்கான காரணமாகவும் இருக்கின்றது. எபிரெயர்2:14 - ஆம் வசனத்தை வாசிக்கவும்.

அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி(ஏசாயா 53:12)

அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன் பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.

நமது கர்த்தர் தாமே மரிக்காமல், அவருடைய மாம்ச சரீரம் மாத்திரமே மரித்தது என்று சாதிப்பவர்களுக்கு,வேதவாக்கியங்களான,'' அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்'' மற்றும் ''அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தது'' என்பவைகளுக்கு முற்றிலும் பதில் கூற முடியாமல் போயிற்று. கீழ்படியாமையின் காரணத்தினால் ஆதாமின் ஆத்துமா, மரண தீர்ப்பிற்குள் ஆயிற்று ஆதாமின் சரீரம் மாத்திரம் பாவம் செய்யவில்லை. வேத வாக்கியங்கள்

கூறுகிறது போல, "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்". ஆதாமின் சரீரம் மாத்திரம் மீட்கப்படுவதல்ல, ஆதாமின் ஆத்துமா மீட்கப்படுவது அவசியம். ஆத்துமா மீட்கப்பட்டால், தேவன் தமது விருப்பத்தின்படி அதற்குப் புதிய சரீரத்தைக் கொடுத்தருளுவார். மண்ணிற்கு, பூமியின் தூசுக்குத் திரும்பின அதே சரீரத்தைத் திரும்ப கொடுப்பது என்பது தேவனுடைய சித்தமல்ல. மாறாக இந்த அழிந்து போகும் சரீரங்களுக்கு என்னவாகும் என்பது காரியமல்ல, ஏனெனில் அவைகள் மீட்கப்படுவதுமில்லை, திரும்பி கொடுக்கப்படுவதுமில்லை. ஆத்துமாவே மீட்கப்படவேண்டியிருந்தது ஆத்துமாமே மீட்கப்பட்டது. ஆதாமின்ஆத்துமாவிற்கு நமது கர்த்தர் இயேசுவின் ஆத்துமாவே மீட்கும் பொருளாகக் கொடுக்கப்பட்டது இதன் விளைவாக/பலனாக ஆதாமிற்கும், அவர் சந்ததியாருக்கும் உயிர்த்தெழுதல் நிச்சயிக்கப்பட்டுள்ளது உறுதியாகுகின்றது.

உயிர்த்தெழுதலின் இந்த மைய அம்சத்தை, கிறிஸ்துவ ஜனங்கள் கவணிக்கத் தவறிவிடுகின்றனர். மிக முக்கியமான ஆத்துமாவின் மீட்பை, உயிர்த்தெழுதலை பவுல் இந்த விஷயங்களை மிகவும் தெளிவாக கவனித்தபடியினால் இவைகளைக் குறித்து மிகவும் உறுதியாக 1கொரிந்தியர் 15- ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.பவுல் கிறிஸ்துவின் ஆத்துமா மரித்ததையும், மரணத்தில் அவருடைய ஜீவன் நின்றதையும், அவருடைய சரீரம் மாத்திரம் மரித்து போகாமல், அவர் தாமே மூன்று நாள் மரித்திருந்தார் என்றும் உணர்ந்து கொண்டார். "மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன்" என்பது நம்முடைய கர்த்தரின் வார்த்தையாக இருக்கின்றது. நமது கர்த்தர் இப்படியாக கூறவில்லை, அதாவது, நான் என்றென்றும் ஜீவிக்கின்றேன். நான் ஒரு போதும் மரிக்கவில்லை என்னுடைய சரீரம் மாத்திரம் சில மணி நேரங்கள் மரித்திருந்தது. இயேசு கிறிஸ்துவின் ஆத்துமா மரித்திருந்தபடியால், அவர் உயிரோடு எழுப்பப்படாதவரையிலும், அவர் இரட்சகர் என்றோ, ஜீவன் கொடுக்கின்றவர் என்றோ நம்பிக்கை கொள்ள முடியாது என்று அப்போஸ்தலர் கூறினார். மேலும் அவர் உயிரோடு எழுப்பப்படாத வரையிலும், சபை அவருடைய இராஜங்கத்தில் அவருடன் உடன் சுதந்திரர்கள் ஆகும் நிலைக்கு உயர்த்தப்படுவார்கள் என்றோ, நீதியின் ஆயிர வருட அரசாட்சியில் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் என்றோ நம்பிக்கை கொள்ள முடியாது.

அப்போஸ்தலனாகிய பேதுருவும் இந்த விஷயத்தை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார், அதாவது கிறிஸ்துவின் ஆத்துமா மரித்தது என்றும் அவருடைய ஆத்துமா கேடிஸ்க்கு(Hades) குழிக்கு, மரித்த நிலைக்குச் சென்றது என்றும் குறிப்பிடுகின்றார். தீர்க்கதரிசியான தாவீதின் வார்த்தைகளை அப்போஸ்தலர் பேதுரு எவ்வாறு பெந்தெகொஸ்தே நாளன்று குறிப்பிடுகின்றார் என்பதை கவனிக்கவும். (அப்போஸ்தலர் 2:27 வாசிக்கவும் ) **"என் ஆத்துமாவைப் பாதாளத்தில்விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்"**(எபிரேயம்:Sheol, கிரேக்கம்:Hades) தீர்க்கதரிசி இங்கு தமது ஆத்துமாவைக் குறித்து பேசாமல்,கிறிஸ்துவின் ஆத்துமா Hades-யில் விடப்படாமல் மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டது என்று நமது பேதுரு கூறுகின்றார்.(அப்போஸ்தலர் 2:27, 30-33) யாரெல்லாம் நமது கர்த்தரின் ஆத்துமா மரண நிலைக்குச் சென்றது என்று காண்கிறார்களோ,அவர்கள் எல்லோரும் அப்போஸ்தலர்கள் தங்கள் நிரூபங்களில் உயிர்த்தெழுதலுக்கு எவ்வளவு அழுத்தம் கொடுத்து எழுதியுள்ளார் என்பதை காண்பார்கள்.கிறிஸ்து உயிர்த்தெழுந்து விட்டரானால், அது தெய்வீக கிருபைக்கான ஆதராமாகும், மேலும் இந்தத் தெய்வீக கிருபையானது,அவருடைய பூரணத்திற்கும் அவர் செய்து முடித்த பணி, பிதா ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இருக்கின்றது என்பதற்கு ஆதராமாகும். இவைகள் உண்மையாய் இருக்கும் பட்சத்தில் அவர் பிதாவுடைய அதிகாரத்தின் வலது பக்கத்தில் உயர்த்தப்பட்டிருப்பார். இப்படியானால் சபைக்கும் உலகத்திற்கும் கிறிஸ்துவை மையமாக கொண்டு தேவனால் கொடுக்கப்பட்ட மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் ஏற்றக் காலத்தில் நிறைவடையும் என்பதை முழுமையாக விசுவாசிக்கலாம்.

இவ்விஷயங்களில் தெளிவில்லாத ஒருவரின் கருத்து/குறிப்பு - பின்வருமாறு இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது அவர் தேவனுடைய குமாரன் எண்ணப்படுவதற்கான மிக சிறந்த

ஆதரமாகும். அவரால் மரணத்தை ஜெயம் கொண்டு பரலோகத்திற்குத் திரும்பி வர முடியவில்லையெனில் அவரால் தான் முதலாவது பரலோகத்திலிருந்து வந்தேன் என்பதை நிருபித்துக்காட்ட முடியாது?

நமது கர்த்தர் இயேசு தாமே நம்மை மரணத்திலிருந்து எழுப்புவார் அல்லது எழுப்பினார் என்று எந்த வேத வாக்கியங்களும் தெரிவிக்கவில்லை. ஒரு வேளை அவருடைய சரீரம் மாத்திரம் மரித்திருந்தால், ஒரு வேளை அவர் லாசருவின் சரீரத்தை உயிர்பித்ததை போல, தம்முடைய சரீரத்தையும் உயிர்ப்பிப்பது மிகவும் எளிமையாக இருந்திருக்கும். ஆனால் வேத வாக்கியங்கள், அவருடைய ஆத்துமா மரித்தது என்றும்,அவர் முழுமையாக மரித்துவிட்டார் என்றும்,தன்னை உயிர்ப்பிக்க அவரிடத்தில் எவ்வித வல்லமையும் இல்லை என்றும் காட்டுகின்றது. இதற்கு இசைவாக அநேக வேத வாக்கியங்கள் உள்ளன.

அவையாவன : காலத்தியர் 1:1; அப்போஸ்தலர் 2:24, 32; 3:15; 4:10, 10:40; 13:30,34 ; 17:31; ரோமர் 4:24, 8:11;2கொரிந்தியர் 6:14, 15:15;2 கொரிந்தியர் 4:14; எபேசியர் 1:20,1கொலேசியர்2:12;1தெசலோனிக்கியர் 1:10 எபிரெயர்13:20;1 பேதுரு 1:21.

நம்முடைய கர்த்தருடைய உருவக வார்த்தைகளான இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள்,மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்பதை சொல்லர்த்தமாக எடுத்தக் கொள்ளக் கூடாது. அவர் தம்முடைய சரீரமாகிய ஆலயத்தையே அங்கு குறிப்பிடுகின்றார். நாமே அந்த ஆலயமாக இருக்கின்றோம் (யோவான் 2:21, 1 கொரிந்தியர்3:16) இவ்வார்த்தைகளைப் பேசின போது இயேசு ஐந்தாம் (ஆயிரம்) நாளின் இறுதியில் வாழ்ந்து கொண்டிருந்தார், மேலும் ஏழாம் (ஆயிரம்) நாளின் அதிகாலையில் தம்முடைய சரீரமாகிய சபையை மரணத்தின் வல்லமையின்று விடுவித்து தம்முடைய உயிர்த்தெழுதலில் பங்கடையச் செய்வார் பிலிப்பியர் 3:10; வெளிப்படுத்தல் 20:4-5.

யோவான்10:18-ஆம் வசனத்தின் இடம்பெறும் நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளையும் நாம் தவறாய் புரிந்து கொள்ளக் கூடாது; அதாவது மரணத்தின் இடைப்பட்டக் காலத்தில் எதையும் செய்யும் அதிகாரம் அவருக்கு இருந்திருக்கும் என்று புரிந்து கொள்ளக் கூடாது. மாறாக நமது கர்த்தர் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கவும், அதை மீண்டுமாக திரும்ப பெற்றுக்கொள்ளவும் பிதா அவருக்கு அதிகாரம் கொடுத்திருந்தார் என்று நாம் புரிந்து கொள்ளவேண்டும். இதுபரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசின அப்போஸ்தலர்களின் அநேக எளிமையான வார்த்தைகளுக்கு இசைவாய் உள்ளது. இப்படியாக புரிந்துகொள்ளும் போது முழு விஷயமும் தெளிவடைந்துவிடும். இப்படியாக புரிந்து கொள்ளும் போது உயிர்த்தெழுந்தலின் உபதேசமானது முக்கியத்துவத்தில் ஈடுபலி உபதேசத்தின் அடுத்த நிலையை/ஸ்தானத்தைப் பிடிக்கின்றது.இது ஈடுபலியின் உபதேசத்தில் ஒரு பாகமாக விளங்குகின்றது ஏனெனில் நமது கர்த்தர் மரித்து போய் மரணத்திலிருந்து உயிர்த்தெழவில்லையெனில் அவர் விடுவிப்பேன் என்று வாக்களித்துள்ளவர்களுக்கும் உயிர்த்தெழுதலின் மூலமும் நியாயதீர்ப்பின் மூலமும் மரணத்தின் பிடியில்/வல்லமையின் கீழ் இருப்பவர்களை விடுவிப்பதற்கான அதிகாரத்தைக் கொடுப்பேன் என்று பிதா வாக்களித்துள்ளவர்களுக்கும் எவ்வித நம்பிக்கையும் இல்லாமல் போய்விடும். (யோவான்5:28-30).

அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது-(அப்போஸ்தலர் 2:24)

தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது.

இயேசு தெய்வீக பிரமாணத்தை பூரணமாய்கைக்கொண்டபடியினால் அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது. ஆகவே தெய்வீக ஒழுங்கு மற்றும்வாக்குத்ததின்படி இரண்டு விஷயங்களை அவர் நிறைவேற்றினார்.

1. மனுக்குலத்திற்கான மீட்கும்பொருளை கொடுத்தார்.

2. தெய்வீக சுபாவம் மற்றும் மகிமைக்கு உயர்த்தப்படுவதற்கு தமது தகுதியையும் உண்மையும் சான்றாக வழங்கினார் (யோவான்-5:23).

ஆதாமின் மீறுதலின் நிமித்தம் அவர் மேலும் அவருடைய சந்ததி மேலும் செயல்பட்டுக் கொண்டிருந்தஅதே நீதியானது இப்பொழுது இயேசுவின் சார்பாக அவர் முழு விருப்பத்துடன் சுயமாக மனிதனின்மீட்கும்பொருளாக கடந்து சென்ற மரணத்திலிருந்து அவரை விடுவிக்கச் செயல்பட்டது. நாம் காரியங்களை தெய்வீக கண்ணோட்டம் மற்றும் ஒழுங்கின்படி பார்க்கும் போது பிதாவின் மாறாத குணலட்சணங்களைக் காண்கையில் நாம் களிக்கூற முடியும். மேலும் நமது கர்த்தரின் உயிர்த்தெழுதல் என்பது அப்போஸ்தலார்கள் கூறினது போல அவரை மையமாக கொண்டுள்ளதும் மரணம் வரையிலும் அதாவது சிலுவையின் மரண பரியந்தம் வரையிலுமான அவருடைய உண்மையின் மேல் சார்ந்துள்ளதுமான தெய்வீக திட்டத்தின்ஒவ்வொரு அம்சமும் நிறைவேற்றப்படும் என்பதற்கு உறுதியாய் இருக்கின்றது; (அப்போஸ்தலர்17:31). இப்பொழுது அவரே ஆபிரகாமின் நிஜமான வித்து என்றும், தேவனல் அங்கீகரிக்கப்பட்டவர் என்றும், இவரின் மூலம் பூமியின் குடிகள் அனைத்தும்ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்பதையும் அறிவோம். மேலும் இந்தச் சுவிசேஷ யுகத்தின சபையானது மணவாட்டியாக, அதாவது ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, அதாவது ரெபெக்காள் நிழலான ஈசாக்கின் மனைவியாக அழைக்கப்பட்டது போல அழைக்கப்பட்டிருக்கிறார். மேலும் இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாகவும் தேவன் ஆபிரகாமுக்குப் பண்ணிண வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்கு உடன் வேலையாட்களாகவும் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள் கலாத்தியர்3:29-ஆம் வசனம் வாசிக்கவும் .

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.

இந்தக் கண்ணோட்டத்திலுருந்து நமது கர்த்தரின் உயிர்த்தெழுதலைக் காண்கையில் இதன் மேல் நம்முடைய அனைத்து நம்பிக்கையும் சார்ந்துள்ளது என்று உணர்கையில் மற்ற கூற்றுகள் மூலம் இதைனை அணுகுவதைக் காட்டிலும் மிகவும் ஆழமான விருப்பத்துடன் அணுகுவோம். இயேசுவின் சீஷர்களும், பின்னடியார்களும், யூதர்களும் என்றும் புறஜாதி தத்துவங்கள் அதுவரையிலும் ஜனங்களுக்குள் புகுந்து கொள்ளாதபடியாய் அவர்கள் மரித்தவர்கள் மரிக்கவில்லை என்ற தவறான கருத்துகளுக்கு வழிநடத்தப்படவில்லை என்பதையும் நினைவுகூர வேண்டும் யூதர்கள் மரித்தவர்கள் மரித்துவிட்டார்கள் என்று விசுவாசித்து உயிர்த்தெழுதலின் மீது தங்கள் நம்பிக்கையை வைத்தவர்களாக இருக்கின்றார்கள் ஆகவே தான் மார்த்தாள் மற்றும் மரியாளின் சகோதரன் மரித்த விஷயத்தில், இயேசு அவர்களை ஆறுதல்படுத்தும் விதமாக "உன்னுடைய சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்று (யோவான் 11:23) கூறினார். இயேசுவுக்கு அவர்கள் கூறின பதிலும் இசைவாக உள்ளது. அதாவது "உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளில் அவனும் உயிர்த்தெழுந்திருப்பான்" அதாவது இந்த யுகத்தின் முடிவில், உயிர்த்தெழுதலின் மகாபெரும் ஆயிர வருட அரசாட்சியில் நடைபெறும் என்பதாகும் உயிர்த்தெழுதலின் வல்லமையை தள்ளிவைத்து, லாசருவை மீண்டுமாக ஜீவனுக்குக் கொண்டு வந்தார்,இவ்விதமாக கல்லறைகளில் இருக்கும் அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலத்தில் முழு ஆற்றலுடன் பயன்படுத்தப்பட போகும் உயிர்த்தெழுதலின் வல்லமையை விளக்கிக் காட்டினார்.

இதே விதமான கண்ணோட்டத்தில் தான் அப்போஸ்தலர்களும், மற்றவர்களும் இருந்தார்கள். அவர்கள் இயேசுவை மேசியா என்று நம்பினார்களோ, இல்லையோ, ஆனால் ஏற்றக் காலங்களில் தெய்வீக ஏற்பாட்டின் கீழ் ஆபிரகாமுக்குப் பண்ணின வாக்குத்தததின்படி இயேசுவும், மரித்த மற்ற அனைவரும் மீண்டும் ஜீவனுக்கு வருவார்கள், உயிர்த்தெழுவார்கள் என்று நம்பினார்கள். இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்றும் இனி மரித்தவராக மரண நிலையில் இல்லை என்றும் கல்லறையிலிருந்த தேவ தூதர்களிடமிருந்து அறிந்த போது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிருக்க வேண்டும்.

**--797--**

இயேசுவின் சரீரத்திற்கு தைலம் பூசி, தங்களுடைய அன்பான பணிவிடையை செய்யும்படிக்கு ஸ்தீரீகள் வாரத்தின் முதல் நாளில், அதிகாலையில் "அதிக இருட்டோடே" புறப்பட்டு போனார்கள். வாரத்தின் ஆறாம் நாளில் வெள்ளிக்கிழைம அன்று அடக்கம் பண்ணப்பட்டார். இதனால் இயேசுவின் சரீரத்தை முழுவதுமாக தைலம் பூசி வைப்பதற்கு அன்று கூடாமற் போயிற்று, ஏனெனில் யூதர்களாகிய அவர்கள் 7-ஆம் நாளை (சனி) ஒய்வுநாளாக அனுசரிப்பது, நியாயப்பிரமாணத்தின் படி கடமையாய் இருந்தது. அவர்கள் அந்த நாளில் எவ்வித வேலையும் செய்யக்கூடாது. ஆனால் சூரியனின் அஸ்தமானத்தோடு, ஏழாம் நாள் முடிவடைவதால்,அவர்கள் கந்தவர்க்கங்களை ஆயத்தம் பண்ணிக் கொண்டு, கல்லறையை நோக்கிப் புறப்பட்டுப்போனார்கள். மரித்தவர்கள் அனைவருக்கும் இவ்விதமாக தைலம் பூசுவது வழக்கம் அல்ல, லாசரு மரித்த போது அவன் சரீரத்திற்கு இவ்வாறாக தைலம் பூசப்படவில்லை (யோவான்11:30) அவரை அடக்க பண்ணின நாளில் பகுதி அளவே அவருடைய சரீரத்திற்கு எண்ணெய் பூசப்பட்டதால், ஒய்வுநாள் முடிந்தவுடன் தங்களுடைய பணியை முடிப்பதற்கு அந்த ஸ்தீரிகள் கல்லறையை நோக்கி துரிதமாகப் போனார்கள், இவர்கள் தங்களுடைய இந்தப் பணி தேவைப்படாது என்றோ, கர்த்தரின் உயிர்த்தெழுதலைக் குறித்தோ கணம் நேரம் கூடச் சிந்தித்துப் பார்க்கவில்லை. இந்த உயிர்த்தெழுதலின் விஷயத்தைச் சொல்லவும், இயேசுவை காண்பதற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்கும், தேவ துாதர்கள் தோன்றி, இயேசு முன் கூட்டியே தமது சிலுவை மரணத்தைக் குறித்தும், மூன்றாம் நாளில் சம்பவிக்க இருக்கும் தமது உயிர்த்தெழுதலைக் குறித்தும் பேசின வார்த்தைகளை அவர்களுக்கு நினைப்பூட்டினார்.

நமது கர்த்தரின் உயிர்த்தெழுதல் குறித்து நான்கு சுவிசேஷர்களும் ஒரே மாதிரியாக சொல்லவில்லை என்று சிலர் கூறலாம், ஆனால் கர்த்தருடைய வார்த்தைகள், மற்றும் கிரியைகள் குறித்து பதிவு செய்த விஷயங்களில், அப்போஸ்தலர்கள் மத்தியில் எவ்விதமான இரகசியமாய் ஏமாற்றும் உடன்படிக்கையை பார்க்கமுடியாது. அவர்கள் அனைவரும் வார்த்தைக்கு வார்த்தை ஒன்று போல் ஒரு வேளை எழுதியிருந்து நாம் அவர்களுடைய சாட்சியை விசுவாசிப்பதை காட்டிலும், வித்தியாசங்கள் இருக்கும் நிலையிலும் அதிகமாய் அவர்களுடைய சாட்சியை கருத வேண்டும். அவர்கள் தங்கள் தங்கள் கோணத்திலிருந்து கொடுத்திருப்பதினால் வார்த்தைகள் சம்பவங்கள் வரிசைகள் வித்தியாசப்பட்டிருக்கலாமே எடுத்துக் கொள்வதை விட்டுவிட்டு நம்மால் முடிந்த மட்டும் எந்த சம்பவங்கள் எப்பொழுது நடந்தது என்ற வரிசைப்படுத்தி பார்த்து புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாம் நாளில் என்று சொல்லும் போது மூன்று பகல் மற்றும் இரவுகள் என்று நாம் கருதலாம், ஆனால் யூதர்களின் வழக்கம்படி 24 மணி நேரத்தின் பகுதியையே குறிப்பிடுவதால் இவைகளை புரிந்திருந்த படியால் இவைகளை குறித்த விளக்கமாக பேசவில்லை. மேலும் அவர்கள் மத்தியில் இவைகள் குறித்து எதேனும் தர்க்கங்கள் இருந்திருக்குமாயின் இதை விளக்கியிருந்திருப்பார், ஆனால் தர்க்கங்கள் இல்லாதபடியாய், தெளிவாய் இருந்தபடியால் கூறவில்லை. சிலர் இவைகளை புரிந்து கொள்ளதவறி நமது கர்த்தர் வியாழன் மதியம் சிலுவையில் மரித்தார் என்று நிரூபிப்பதற்கு புத்தகங்கள் எழுதியுள்ளனர். ஆனாலும் மூன்று முழு பகல்களையும், இரவுகளையும் கணக்கு எடுக்க முடியாததினால் அவர்கள் நமது கர்த்தர் புதன் அன்று மதியம் சிலுவையில் அறைப்பட்டார் என்று எண்ணுவதற்கு தள்ளப்படுகின்றனர்.

மூன்று நாளுக்குப் பதிலாக நான்கு நாட்கள் ஆகிவிடுகின்றது. நமது கர்த்தர் வெள்ளி அன்று மரித்தப்படியால் நான் அவருடைய சரீரத்திற்கு முழுமையாக தைலம் பூசுவதற்கு அன்று போதுமான காலம் இல்லாமற்போயிற்று, ஒய்வுநாள் ஸ்திரீகளுக்கு தடையாக இருந்தபடியால் வாரத்தின் முதல் நாள் வந்த போது வேலையை முடிப்பதற்கு ஸ்திரீகள் துரிதமாய் போனார்கள். ஒரு வேளை வியாழன் அன்று மரிந்திருந்தால் அவரின் சரீரத்திற்கு தைலம் பூசி முழுமையாய் முடிப்பதற்கு வெள்ளி முழு நாளும் அவர்களுக்குக் கிடைத்திருக்குமே!

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

1கொரிந்தியர் 15:20

நம்முடைய பாடத்தின் ஆதார வசனம் நமது கர்த்தர் அவருடைய உயிர்த்தெழுதலில், நித்தரையடைந்தவர்களில் முதற்பலனானார் என்பதைக் காட்டுகின்றது. பூமியின் குடிகள் அனைத்தும்

என் சந்ததிக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்று தேவன் ஆபிரகாமுக்கு உடன்படிக்கைப் பண்ணின பிற்பாடு இஸ்ரயேலர்கள் தங்களுடைய மரித்தவர்களை, மரித்தவர்களாக கருதாமல், நித்திரையில் இருக்கிறார்கள் என்றும், உயிர்த்தெழுதலுக்காக இருக்கின்றார்கள் என்றும், உயிர்த்தெழுதலுக்காக இருக்கின்றார்கள் என்றும் பேசுவது வழக்கமாயிருந்தது. உயிர்த்தெழுதல் என்று நேரடியாக ஆபிரகாமிடம் சொல்லப்படவில்லை என்றாலும், அதுதான் என்பதை உணர்ந்து கொண்டார்கள்.ஏனெனில் மீட்கும் பொருள் கொடுக்கப்பட்டால் எவ்வாறு பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படமுடியும்? உயிர்த்தெழுதல் அனுசரிக்கப்படாமல் எவ்வாறு மனுக்குலமிடமிருந்து மரண சாபம் எடுத்துக்போடப்பட முடியும்? தேவன் மரித்தோரை உயிர்த்தெழுப்புவதற்காக நோக்கம் கொண்டுள்ளது ஏன் என்று நமது கர்த்தர் மாற்கு 12:26,27- ஆம் வசனங்களில் கூறியுள்ளார்.இஸ்ரயேலர்கள் மரித்தவர்களை நித்திரையில் இருக்கின்றவர்கள் என்று அழைத்தனர், அவர்கள் மேசியாவிற்கும் அவர் செய்ய போகிற வேலைக்கும், உயிர்த்தெழுதலுக்கும் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே நான் மரித்தவர்களுக்கு நித்திரையில் இருக்கின்றார்கள் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டது. எபிரெயர் 11:35-ஆம் வசனம் வாசிக்கவும்.

லாசருவின் விஷயத்தில் நமது கர்த்தர் "நித்திரை" என்றவார்த்தையைமரண நிலைக்கு பயன்படுத்துவதைப் பார்க்கலாம்.

**யோவான் 11:11** இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்.

உண்மையில் முழு மனுக்குலமும் நித்திரைக்குள் சென்றிருக்கின்றனர், மரணம் என்று அழைக்கப்படுவதற்கு பதிலாக நித்திரை என்ற வார்த்தையே பயன்படுத்தப்படுகின்றது ஏனெனில் தெய்வீக திட்டத்தில் ஆயிர வருட அராட்சியின் விடியலில், இப்பொழுது தங்களின் நியாயத்தீர்ப்பின் அல்லது பரீட்சையில் திருப்திக்கரமாக வெற்றியையும் "ஜெயம் கொண்டவர்களாகிய" சிறுமந்தையினர், இராஜ்யத்தின் ஜீவனோடு, உடன் சுதந்திரர்களாக வருவார்கள். எதிராளியானவனால் குருடாக்கப்பட்ட திரளான மனுக்குலமானது படிப்படியாக வெளிச்ச மூட்டப்படுவார்கள். சாத்தான் கட்டப்பட்டு வஞ்சிக்க எவரும் இல்லாத போது, மனுக்குலம், தேவனோடு இசைவாய் கூடி வருவதற்கான வாய்ப்புகளையும், அவருடைய இராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு இசைவான குணலட்சணம்களை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்வார்கள். இப்படியாக செய்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள்.

நம்முடைய கர்த்தரே நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவராக இருக்கின்றார்.அவருக்கு முன்பு எவரும் இல்லை. ஆகவே லாசரு, யவீருவின் மகள், விதவையின் மகனுடைய உயிர்த்தெழுதல், முழுமையான உயிர்த்தெழுதல், முதற்பலனாய் இருந்திருக்க முடியாது. அவர் உயிர்த்தெழுந்தார் என்பது, அவர் முழுமையாக மரண நிலையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு, பூரண ஜீவனுக்குள் வந்தார் என்பதை காட்டுகின்றது, ஆனால் மற்றவர்களுடைய விஷயம் இப்படியாக இருக்கவில்லை. அவர்கள் எழுப்பட்டார், ஆனால் பின்னர் மீதியான மனுக்குலம் போன்று மரணநிலையில் விடப்பட்டார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய, சபையும் இந்த அவருடைய உயிர்த்தெழுதலில், அவரோடு கூட பங்கு கொள்வார்கள் அதாவது அவர்களும் முழுமையாக மரண நிலையிலிருந்து தூக்கப்பட்டு இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவர்களாகிய உடன் சுதந்திரர்களுக்கு தேவன் அளிக்கும் மகிமை கனம் மற்றும் அழியாமையைப் பெற்றுக் கொள்வார்கள்,**யாக்கோபு1:18-**ஆம் வசனம் வாசிக்கவும்.

அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்.

கொடுக்கப்பட்டவைகளை பயன்படுத்தாதவர்கள் அங்கீகரிக்கப்படமாட்டார்கள் தேவனுடைய மற்ற கனிகள் ஆயிர வருட அரசாட்சியில் உருவாகுவார்கள்.

ஆமென்!!!

# நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள்
# THE WATERED LILIES

நந்தவனத்தில் ஓர்நாள் எஜமான்
லீலி புஷ்பங்கள் நடுவினில் உலாவினாரே,
லீலிச்செடிகள் அனைத்தையுமே,
அவர்தம் கரத்தினால் நட்டுப்பயிரிட்டாரே,
அதன்மீது அலாதி கவனம்வைத்து அதனைப்
பேணியே வளர்த்து காத்துவந்தாரே,
அதன் வெண்ணிற மலர்களின் மீதே
மிகவும் ஆவல்கொண்டிருந்தாரே,
கண்ணும் கருத்தும் தோட்டத்தின்மீதே,
செடிகளுக்கிடையில் இருந்ததுவே,
மலர்களை ஆர்வமாய் தொட்டுத்தொட்டே
வருடிக்கொடுத்தே வளர்த்தாரே,
அச்செடிகள் யாவும் வாடி வதங்கி,
காய்ந்தே விழுந்திட்டபோதினிலே, எஜமான்
அந்தச்செடிகள் யாவையும் தூக்கிநிறுத்தி,
உனக்கு நீர் பாய்ச்சுதலே, இன்றெனக்கு ஓர்
முக்கிய வேலை என்றாரே,
இன்று என் லீலி புஷ்பங்களுக்கே நீர்பாய்ச்சிட வேண்டுமே, எப்படி
நான் நீரினைக் கொணர்வேன் ?
என்றே எண்ணிச் சுற்றிலும் பார்க்கையில்,
காலியாகவே, மெல்லிய சிறியதோர் மட்பாண்டம்
பாதை அருகினில் கிடந்ததுவே,
அதனால் ஏதும் பயனில்லை
என்றெண்ணியே அதனைத்தூக்கி வீசினரே,
அது மிகவும்சிறியதாகவே வெற்றுக்குடமாய் இருந்ததுவே,
அப்படித்தான் வெற்றுக்குடமாய்
அக்குடமும் இருக்கவே விரும்பியதே.

**அது ஒரு பூமியின் மட்கலயம்**
மிகவும் சிறியதாய் வெற்றுக்குடமாய்,
எஜமானுக்கருகினிலிருந்ததுவே,
காலியாகத்தான் அது இருக்க விரும்புதே,
எஜமான் அதனை நீர் வீழ்ச்சிக்கு எடுத்துச்சென்றே, விளிம்புவரை
நீர் பிடித்தாரே,
சிறுசேவை ஒன்றை செய்திட்டோம் என்றே
கலயம் மகிழ்ச்சி கொண்டதுவே,
அவர் கையினால் நீரினை எடுத்துவந்தே,
தாகம்கொண்ட செடிகளுக்கே ஊற்றித்
தாகம் தீர்த்துவைத்தாரே, நீர் வீழ்ச்சிக்கோர் சேதி சொல்லவே,
கலயம் தன்னைப் பணித்தாரே,
கலயம் அவற்றின் காதினிலே,
மெதுவாய் செய்தி கூறியதே
அவர் என்னைத் தரையினில் வைக்கையிலே,
அவர் போகிற பாதையில் கிடப்பேனே,
எஜமானுக்கருகினில் இருப்பேனே,
வெறுமையாகவே கிடப்பேனே,
என்றாவது ஓர்நாள் என்னைத்தான்,
மீண்டும் கையினில் எடுத்துத்தான்,
பூத்துக்குலுங்கும் செடிகளுக்கே,
தண்ணீர் வார்ப்பார் என்னாலே,
பயன்படுத்துவார் என்னைத்தான்.
அதுவரையில் நான்தான் பொறுத்திருப்பேனே.

**--800--**

--------------------

# "முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார்"

## ஆதியாகமம் 37:12-36

"அந்தக் கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள். தேவனோ அவனுடனேகூட இருந்தார்."—அப்போஸ்தலர் 7:9, 10

யாக்கோபினுடைய மிகுந்த பிரியத்திற்குரிய மனைவியாகிய ராகேல் மரித்துப்போய்விட்டாள், அவளுடைய முதல் பிறப்பாகிய யோசேப்பே, மற்றப் பத்து ஒன்றுவிட்ட உடன் பிறந்த சகோதரர்களைக்காட்டிலும் யாக்கோபினுடைய பிரியத்திற்குரியவராகக் காணப்பட்டார். பதிவை வைத்துப் பார்க்கும்போது, இந்த அன்பானது, யோசேப்பினுடைய தாயினிமித்தமாக மாத்திரமல்லாமல், யோசேப்புக்கொண்டிருந்த பரிவும், உயரிய குணலட்சணங்களும் விசேஷமாய் அவரது தகப்பனாருடைய கவனத்தை ஈர்த்தது மற்றும் தகப்பனுடைய பாசத்தையும் வென்றது என்றும் நாம் எடுத்துக்கொள்வது நியாயமானதே. யோசேப்பு யாக்கோபினுடைய முதிர்வயதின் குமாரனாக இருந்தபடியினால், யாக்கோபு யோசேப்பிற்கு அநேக விதங்களில் தயவு பாராட்டிட விருப்பமுள்ளவராகக் காணப்பட்டார் மற்றும் குமாரர்கள் அனைவரின் மத்தியிலும் யோசேப்பிற்கு விலையுயர்ந்த வஸ்திரத்தை/அங்கியைப் பெரிதும் முயன்று வாங்கிக்கொடுத்தார்; இந்த வஸ்திரமானது அக்காலக்கட்டத்தில் சிறந்த ஒன்றாயிருந்தது மற்றும் இதைப்போன்ற வஸ்திரமானது **பென்னி-காசனின் எகிப்திலுள்ள கல்லறையில்**, சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது; அது **"பல்வேறு நிறங்களிலுள்ள சிறுசிறு துண்டுபகுதிகள் ஒன்றாய் இணைத்துத் தைக்கப்பட்டுள்ள, பல வருணங்களும், சித்திரங்களும் உடைய நீண்டதும், அதிகமான சித்திர தையல்கள் உள்ளதுமான வஸ்திரங்களாய் இருந்தன.**" எகிப்தினுடைய இராஜாவினால் அன்பளிப்பாக அனுப்பப்பட்ட இத்தகைய அங்கி ஒன்றைக் குறித்து **ஹெரோட்டஸ்** அவர்கள் பின்வருமாறு விவரிக்கின்றார், "**பல்வேறு விலங்குகளின் உருவங்கள் துணியில் பொன்னினால் சித்திரத்தையலிடப்பட்டிருந்தது.**"

தன்னுடைய இந்தப் பாரபட்சமானது, எந்த அளவுக்குத் தன்னுடைய மற்றக் குமாரர்களிடத்தில், யோசேப்பிற்கு எதிராகப் பொறாமை மற்றும் பகைமையின் எண்ணத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது என்பதை அநேகமாக யாக்கோபு உணர்ந்துகொள்ளவில்லை; இன்னுமாகக் குணலட்சணங்கள் வளருதல் தொடர்புடைய விஷயத்தில், இம்மாதிரியான (பாரபட்சம் காணப்பட்ட) சூழ்நிலைகளின் கீழ், யோசேப்பு வீட்டிலேயே தங்கியிருந்த காரியமானது, யோசேப்பிற்கு நன்மையாக இருந்திருக்குமோ என்று நமக்குக் கேள்வி எழும்பலாம்; ஏனெனில் மிகுதியான பாரபட்சத்தினாலும், செல்லமான வளர்ப்பினாலும் பேரப்பிள்ளைகள், பாட்டி, தாத்தாவினால் கெடுக்கப்படுவதற்கும், பாரபட்சம் காட்டப்படும் பிள்ளையினிடத்தில், பெருமையின் சிந்தை வளர்த்திடுவதற்கும் மற்றும் இந்தச் சிந்தை பிள்ளையை ஜீவியம் முழுவதும் பாதிப்பிற்குள்ளாக்குவதற்கும் வாய்ப்புள்ளது என்பதினால், யோசேப்பும் இப்படியாகச் சீரழிக்கப்பட்டிருப்பாரோ என்று நமக்குக் கேள்வி எழும்பலாம்.

யோசேப்பினுடைய தகப்பன் காட்டின பாரபட்சத்தின் நிமித்தமான, யோசேப்பினுடைய சகோதரர்களின் பொறாமையானது, யோசேப்பின் இரண்டு சொப்பனங்களினால் இன்னமும் அதிகமானது; இந்த இரண்டு சொப்பனங்களையும் யோசேப்பு கபடற்ற நிலைமையிலும், எளிமையுடனுந்தான் தன்னுடைய சகோதரர்களிடம் தெரிவித்திருக்க வேண்டும். ஒரு சொப்பனத்தில் யோசேப்பு வயலில் யாக்கோபின் குமாரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாக மொத்தம் பன்னிரண்டு அரிக்கட்டுகள் காணப்பட்டதாகவும் மற்றும் பதினொன்று அரிக்கட்டுகள், தன்னுடைய அரிக்கட்டிற்கு முன்னதாக வணங்கி நின்றதாகவும் கண்டார். மற்றொரு சொப்பனத்திலோ, யோசேப்பு சூரியன், சந்திரன் மற்றும் பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்கி நின்றதாகக் கண்டார். யோசேப்பைக்காட்டிலும் மூத்தவர்களாகிய அவரது சகோதரர்கள், தங்களைக் காட்டிலும் யோசேப்பு உயர்வடைவது பற்றின எண்ணங்களினால் ஆத்திர மூட்டப்பட்டவர்களாக இருந்தனர்; இன்னுமாக யோசேப்பு அவருடைய பெற்றோர்களைக் காட்டிலும் பெரியவராகவும், அவருடைய சகோதரர்களைக் காட்டிலும் பெரியவராகவும் இருக்கப்போகின்றார் என்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வண்ணமாக அந்தச் சொப்பனம் காணப்பட்டப்படியால்; யோசேப்பினுடைய தகப்பன்கூட அந்தச் சொப்பனத்திற்கு அர்த்தம் இருக்கும் என்ற எண்ணத்தை ஏற்க மறுத்தார். அநேகமான சொப்பனங்கள் கற்பனைகளாகவும், பேராசைகளாகவும் காணப்பட்டாலுங்கூட, யோசேப்பினுடைய இந்தச் சொப்பனங்களானது, அவருடைய கற்பனைகளும், பேராசைகளுந்தான் என்று நாம்

எண்ணக்கூடாது; மாறாக இந்தச் சொப்பனங்களானது, தீர்க்கத்தரிசனமானவைகள் என்றே நாம் புரிந்துகொள்ள வேண்டும்; அதாவது யோசேப்பினுடைய வாழ்க்கைத் தொடர்புடைய விநோதமான சூழ்நிலைகள் அனைத்திலும் கர்த்தருடைய கரம் காணப்பட்டிருந்தது என இறுதியில் யாக்கோபும், யோசேப்பும், அவருடைய சகோதரர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக தேவன் எதிர்க்காலத்தைக் குறித்து முன்னறிவித்தவராக இருந்தார் எனும் விதத்திலும், இன்னுமாக தேவன் அனைத்தையும் முன்னறிந்தவராக, அனைத்தையும் இறுதியில் நிகழ்ந்ததுபோல நடைபெறச் செய்திட்டார் எனும் விதத்திலும் இந்தச் சொப்பனங்களானது, தீர்க்கத்தரிசனமானவைகள் என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமது கர்த்தர் மற்றும் அவரது அனுபவங்கள் பற்றியதான தீர்க்கத்தரிசனமான அறிவிப்புகள் போன்றே, யோசேப்புப் பற்றின இந்த முன்னறிவிப்பானது, பாடங்கள் புரிந்துகொள்ளும் காலங்களில், அப்பாடங்களை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மிகவும் நம்பத்தகுந்ததாகவும் ஆக்குகின்றன. யாக்கோபும், அவருடைய குடும்பமும், எகிப்தின் பிரபுவாகிய யோசேப்பிற்கு முன்பாகச் சென்று, இராஜாவுக்கு மரியாதைச் செலுத்துவதுபோன்று, யோசேப்பிற்கு மரியாதைச் செலுத்தினபோது, அந்தச் சொப்பனங்கள் நிறைவேறினது.

பொறாமையை, அப்போஸ்தலன் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளில் ஒன்று என வகைப்படுத்தினது சரியே (கலாத்தியர் 5:19-21). இந்த விதையானது, இது வேர்க்கொள்ளும் எந்த இருதயத்திலும் வேகமாக தழைத்தோங்குகின்றது மற்றும் இது எத்தகைய கசப்பான பலனைக்கொடுக்கும் என்று யாரால் சொல்லக்கூடும்? அந்தச் சகோதரர்களுடைய இருதயத்தில் பொறாமை அத்து மீறி வளர்ந்திருந்தபடியால் யோசேப்பு தன்னுடைய தகப்பனிடமிருந்துள்ள செய்தி ஒன்றுடன், தோத்தானிலுள்ள வயல்வெளியில், அவர்களிடத்திற்கு வந்தபோது, அவர்களது பொறாமை எல்லை கடந்துசென்று, அவர்கள் யோசேப்பைக் கொலைச் செய்வதற்குத் திட்டமிட்டனர். பின்னர் அவர்களில் ஒருவரான ரூபனுடைய ஆலோசனையின் பேரில், யோசேப்பினுடைய ஜீவன் தப்புவிக்கப்பட்டது; யோசேப்பு பட்டினியில் கிடந்து மரித்துப்போகத்தக்கதாக, வறண்ட கிணற்றிற்குள்ளாகப் போடப்பட்டார். ரூபன் யோசேப்பை விடுவிக்க வேண்டுமென முன்கூட்டியே திட்டமிட்டிருந்தார். பின்னர் யோசேப்பின் சகோதரனாகிய யூதாவினுடைய ஆலோசனையின் பேரில், யோசேப்பினுடைய ஜீவனானது குழியினின்று தப்புவிக்கப்பட்டது மற்றும் எகிப்திய சந்தையில் அடிமையாகக் கொண்டுபோகப்படத்தக்கதாக, சில வியாபாரிகளாகிய பயணிகளிடத்தில் யோசேப்பு விற்கப்பட்டார்; பிற்பாடு இந்த எகிப்தில்தான் யோசேப்பு, போத்திபாரின் வீட்டில் ஊழியக்காரனாகப் பணி அமர்த்தப்பட்டார். இந்தச் சகோதரர்களுடைய இருதயங்கள் எவ்வளவு கடினமாய்க் காணப்பட்டிருக்க வேண்டும் மற்றும் தன்னுடைய தகப்பனுடைய செல்லப் பிள்ளையாகக் காணப்பட்ட யோசேப்பினுடைய இருதயமானது எவ்வளவு கடும்வலி அடைந்திருக்க வேண்டும் மற்றும் எவ்வளவு திகைத்துப்போயிருந்திருக்க வேண்டும்! யோசேப்பினுடைய கண்ணீர்களைக் குறித்தோ, அவர் கெஞ்சினது குறித்தோ, இவைகளுக்கு எல்லாம் அவரது சகோதரர்கள் மறுத்தது குறித்தோ நமக்குப் பதிவுகள் எதுவும் தெரிவிப்பதில்லை, ஆனால் இவைகள் குறித்து ஆதியாகமம் 42:21-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஏனெனில் (யோசேப்பின் விஷயத்தில்) குற்றம் புரிந்திருந்த சகோதரர்கள், பிரச்சனையில் காணப்பட்டப்போது, "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள்" (ஆதியாகமம் 42:21).

யாரொருவர் தன்னுடைய இருதயத்தில் பொறாமை, பகைமை (அ) வன்மமானது ஓரளவில் இருப்பதைக் காண்கின்றாரோ அவர் சத்துருவுக்கு, தான் புகலிடம் கொடுத்திருக்கின்றார் என்றும், இந்த ஆவியானது, சில சந்தர்ப்பங்களில் உடனடியாகக் கொலைப்பாதகத்தின் ஆவியாக மாறும் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். ஆகையால் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகப் புதிய சிருஷ்டியாகியுள்ள அனைவரும் தீமையின், பகைமையின், பொறாமையின், வாதின் (சண்டையின்) ஆவியை அழித்திடுவதற்கும், கொன்றுபோடுவதற்கும், புதைத்துப்போடுவதற்கும், களைந்துவிடுவதற்கும் மற்றும் கர்த்தருடைய ஆவியின் மறுரூபப்படுத்தும் தாக்கத்தின் மூலமாக, அதிகமதிகமாய், நாளுக்கு நாள், அன்பின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியைத் தரித்துக்கொள்வதற்கும் அப்போஸ்தலன் பரிந்துரைக்கின்றார். யோசேப்பினுடைய சகோதரர்களின் அனுபவங்களில் நம்மால் ஒரு பாடத்தைப் பார்க்க முடிகின்றது: அதென்னவெனில் (இச்சம்பவத்தில் நடந்த அளவுக்கு) பொறாமையானது நம்மை இவ்வளவாய் நடத்திச் செல்லவில்லை என்றாலும், இச்சம்பவமானது பொறாமையினுடைய போக்கிற்கான உதாரணமாக/விளக்கமாகக் காணப்படுகின்றது மற்றும் பொறாமையை நாம் வெறுக்க வேண்டும் மற்றும் வெறுப்பதற்கேற்ப, அதை நம்முடைய இருதயங்களிலிருந்தும் ஒழித்துக்கட்டவும் வேண்டும் என்பதாகும்.

இப்பாடத்தினுடைய பிரதான பாடம், தெய்வீகச் செயல்பாடு பற்றியது ஆகும். இது இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு, "தேவனை அன்புகூருபவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடந்தேறும்" எனும் கர்த்தருடைய வார்த்தைகளை நினைப்பூட்டுகின்றது. இது சூழ்நிலைகள் அனைத்தும் நமக்கு எதிராகக் காணப்பட்டாலுங்கூட, நாம் தெய்வீக வல்லமை, ஞானம் மற்றும் அன்பின் மீது எவ்வளவு முழுமையாகச் சார்ந்திருக்கலாம் என்பதை நமக்குக் கற்றுத்தருகின்றது மற்றும் தேவன் நம் பட்சத்தில் இருந்தால், எப்படி நம்முடைய சத்துருக்களின் வல்லமைகள் அனைத்தும், நமக்கு உண்மையாகப் பாதிப்பை/தீங்கை ஏற்படுத்தும் விஷயத்தில் ஒன்றுஞ்செய்ய இயலாதவைகள் என்றும் நமக்குக் கற்றுத் தருகின்றது (ரோமர் 8:31). கொலைப்பாதகத்தின் ஆவியானது, ஒன்பது சகோதரர்களிடத்தில் இருந்தது என்பது தெளிவாகத் தெரிகின்றது மற்றும் கர்த்தர் காரியங்களை வழிநடத்தவில்லை என்றால், அவர்களில் சிலர் உடனடியாகவே யோசேப்பைக்கொன்று போட்டிருப்பார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் இந்த ஒரு வழி மாத்திரமே யோசேப்பை எகிப்திற்குக் கொண்டுவருவதற்கும், எகிப்தியர்களுக்கு அவர்களின் பஞ்சத்தின்போது (ஆகாரம் வழங்கும்) ஜீவன் கொடுப்பவராகவும், இஸ்ரயேலர்களுக்குங்கூட ஜீவன் கொடுப்பவராகவும் யோசேப்புக் காணப்படத்தக்கதாக, யோசேப்பை அரியணைக்குக் கொண்டுபோவதற்கும், மற்றும் இப்படியாக எகிப்தில் முழு இஸ்ரயேல் ஜனங்களும் அடிமைத்தனத்திற்குள் போய்க் கற்பிக்கப்படுவதற்கும், எகிப்தியர்கள் அறிந்திருக்கும் கலைகளைக் கற்றுக்கொள்வதற்கும் வேண்டி, கொண்டுவரப்படுவதற்கும் மற்றும் இறுதியில் தேவன் அவர்களை விடுவித்ததுபோன்று விடுதலைப்பண்ணுவதற்கும், தேவனிடம் இருந்ததென நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது (ஆதியாகமம் 41:40). சர்வவல்லமையுள்ள தேவன், சர்வ ஞானமுள்ளவராகவும், சர்வ ஆற்றலுள்ளவராகவும் இருக்கின்றார் என்றும், தமது நோக்கத்தை நிறைவேற்றிடுவதற்கு அவரால் பல வழிகளைத் தெரிந்துகொண்டிருக்க முடியும் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இப்பாடமானது, தேவன் தம்முடைய ஞானத்தின் மூலமாகப் பொல்லாத மனிதர்களுடைய சதிகளை ஜெயிக்க முடிபவராக மாத்திரமல்லாமல், அவர்களின் தீமையான கிரியைகளை, தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றுவதிலும், தம்முடைய திட்டங்களை நடந்தேற்றுவதிலும், தாம் வழிநடத்துபவர்களை ஆசீர்வதிப்பதிலும் பயன்படுத்துவதற்கும் முடிபவராகக் காணப்படுகின்றார் என்பதற்கான உதாரணமாய்க் காணப்படுகின்றது. இப்பாடத்திலிருந்து தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள், அதாவது உத்தம ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவரும், விசுவாசத்திற்கான மாபெரும் உந்துதலை அடைவார்களாக மற்றும் முன்பில்லாத அளவுக்குக் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் அதிக பலமாயும், முழுமையாயும் சார்ந்திருப்பார்களாக. பூமிக்கடுத்த மற்றும் ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்த நம்முடைய நலன்களில், கர்த்தர் பொறுப்பேற்றுள்ளார் என்பதை நாம் விசுவாசத்தின் மூலமாக உணர்ந்துகொள்ள முடிகையில், இதினிமித்தம் எத்துணை சமாதானமும், எத்துணை சந்தோஷமும், எத்துணை ஆறுதலும் கடந்துவருகின்றது!

கொலைப் பண்ணுவதற்குத் திட்டம் போடுபவர்களும், பொறாமையினாலும், வன்மத்தினாலும், பகைமையினாலும் முழுக்க நிரம்பியிருப்பவர்களும், தங்கள் தீய வழிகளை, வஞ்சகத்தினாலும், மோசடியினாலும், பொய்யினாலும்/ஏமாற்றுத்தனத்தினாலும் ஆதரிப்பதற்குத் தயக்கம் காண்பிக்கமாட்டார்கள். இப்படியாகவே யோசேப்பினுடைய பத்துச் சகோதரர்களின் விஷயத்திலும் காணப்பட்டது. அவர்கள் யோசேப்பினுடைய பலவருண அங்கியை எடுத்துக்கொண்டு, அதை இரத்தத்தில் தோய்த்து, தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்திற்கு, வேறு ஆள் மூலம் அனுப்பி வைத்தார்கள். யாக்கோபும் அவர்கள்மேல் சந்தேகங்கொள்ளாமல், தன்னுடைய பிரியமுள்ள குமாரன் காட்டு மிருகத்தினால் கொடூரமாகப் பட்சிக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தை உடனடியாக ஒப்புக்கொண்டு, வருடக்கணக்காக யோசேப்பினுடைய இழப்பினிமித்தமாக துக்கம் கொண்டாடினார்; யாக்கோபினுடைய மற்றக் குமாரர்கள், அவரை ஆறுதல்படுத்த முற்பட்டும், முடியாமற்போயிற்று மற்றும் அவர்களும் தங்களுடைய கிரியையினிமித்தம் கடுந்துயரம் ஓரளவுக்கு அடைந்திருப்பார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. தீமையின் இந்த அனுபவமானது அநேகமாக இறுதியில் யாக்கோபிற்கும், அவருடைய குமாரர்களுக்கும் நன்மைக்கேதுவானதாகவே இருந்திருக்கும், இதைப் பின் இடம்பெறும் சம்பவப் பதிவானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இங்கும் நமக்கு ஒரு படிப்பினை உள்ளது, அதாவது தீமையான தாக்கங்களுக்கு தங்களை ஒப்புக்கொடுப்பவர்கள், பிற்பாடு அதனின்று விலையேறப்பெற்ற படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் அவர்கள் நீதியினிடத்திற்குத் திரும்புவார்கள் என்று நாம் நம்பிக்கைக்கொள்ளலாம் எனும் படிப்பினைகள் இங்குள்ளது. இதுவே வரவிருக்கின்ற ஆயிர வருட யுகத்தில், உலகத்தார் தொடர்புடைய விஷயத்தில் நம்முடைய நம்பிக்கையாய் இருக்கின்றது; அதாவது உலகத்தார் செய்த தவறுகளுக்குத் தண்டனைகள் சிலவற்றைப் பெற்றுக்கொண்ட

பிற்பாடும் மற்றும் அக்காலத்தினுடைய நியாயத்தீர்ப்புகளின் கீழ் மிகவும் சிறந்த வழியைக் கற்றுக்கொண்ட பிற்பாடும், போகப்போக, பாவம், பகைமை, பொறாமை மற்றும் வாது சம்பந்தப்பட்ட தற்கால அனுபவங்கள், உலகத்தாருக்கு விலையேறப் பெற்றதாகத் தோன்றும் என்பது நம்முடைய நம்பிக்கையாய் இருக்கின்றது.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் பகைக்கப்பட்டப்போது, அதுவும் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டப்போது மற்றும் அவருடைய தகப்பனால், சகோதரர்களிடம் அனுப்பி வைக்கப்பட்டபோதே உருவகமாகக் கொல்லப்பட்டது போலவே, தம்முடைய சகோதரர்களாகிய யூதர்களிடத்தில், அவர்களுடைய நலனுக்காக, பிதாவின் பிரதிநிதியென வந்த இயேசுவும் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் மற்றும் உண்மையில் கொல்லப்பட்டார். எனினும் தெய்வீகச் செயல்பாட்டினால், இந்தப் பகைமையே, அவரைப் பூமியின் சிங்காசனத்திடத்திற்கும், வல்லமையின்/அதிகாரத்தின் ஸ்தானத்தினிடத்திற்கும் இறுதியில் கொண்டுவந்து, அனைத்து உணவின், அதாவது, "ஜீவ அப்பத்தின்" மீதும் அவருக்கு அதிகாரம் கொடுத்து மற்றும் இவ்வாறாக எகிப்தியர்களால் அடையாளப்படுத்தப்படுகின்ற மனுக்குலத்தின் உலகத்தாருக்கு மாத்திரமல்லாமல், அவருடைய சகோதரர்களாகிய யூதர்களுக்கும், அக்காலத்தில் முன்வைக்கப்படும் பொதுவான நிபந்தனைகளின் பேரில் ஜீவ அப்பத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் மறைமுகமாக அவரை ஜீவனளிப்பவராக ஆக்கிற்று.

"அவர் இருந்த பிரகாரமாகவே," அவருடைய சரீரத்தின் அங்கங்களாகவும், இப்பொழுது அவரது மாம்சீகப் பிரதிநிதிகளாகவும் காணப்படும், "நாமும் இவ்வுலகத்தில் இருக்கின்றோம்" மற்றும் நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டோமானால், நாம் இறுதியில் சிங்காசனத்தில் அவருடன் உடன் சுதந்தரர்களாகவும், மரித்துக்கொண்டிருக்கும் உலகத்தாருக்கு அவரோடுகூட ஜீவனை வழங்குபவர்களாகவும் இருப்போம் (1 யோவான் 4:17).

ஆகையால் நாம் உலகத்தால் பகைக்கப்படுவதைக் காணும்போது, நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை, ஏனெனில் ஆண்டவர் கூறியுள்ளது போன்று, "அவர் நிமித்தம் பலவித தீமையான மொழிகள் நம்பேரில் பொய்யாய்ச் சொல்லப்படும்." "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" என்ற அவருடைய வார்த்தைகளையும் நாம் நினைவில் கொள்வோமாக (யோவான் 15:18, 19).

நம்முடைய ஆண்டவர் முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டது போன்று, நம் விஷயத்திலும் காணப்படுவதாக; அதாவது நமக்கு எதிராக பொழியப்படும் பொறாமையும், கொலைப்பாதகமும், பகைமையும், வன்மமும், கூடுமானவரை முழுக்க நம்மால் (நம்முடைய செயல்பாடுகளினால்) உண்டானதாகக் காணப்படக்கூடாது; அதாவது கூடுமானவரை நம்முடைய ஜீவியங்கள் தூய்மையானதாகக் காணப்பட வேண்டும்; அதாவது கூடுமானவரை நம்முடைய எண்ணங்களும், வார்த்தைகளும், கிரியைகளும், நம்முடைய கர்த்தருடைய புண்ணியங்களை அறிவிக்கின்றதாகவும் மற்றும் சகல மனுஷரிடத்திலும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாரிடத்திலான நம்முடைய அன்பைத் தெரிவிக்கின்றதாகவும் காணப்பட வேண்டும். போகப்போக, சபை மகிமைப்பட்டிருக்கும்போது, புதிய யுகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, இப்பொழுது எதிராளியானவனால் குருடாக்கப்பட்டுள்ள காரணத்தினாலும், அவனால் தவறாய் வழிநடத்தப்பட்டுள்ள காரணத்தினாலும் நம்மைப் பகைக்கின்றவர்கள், கர்த்தருடைய அபிஷேகிக்கப்பட்டவர்களாகிய நம்முன் வணங்குவார்கள் மற்றும் அவர்களைத் தூக்கிவிடுவதற்கும், அவர்களை ஆசீர்வதிப்பதற்கும், அவர்களை உற்சாகமூட்டுவதற்கும், அவர்களை மன்னிப்பதற்கும் மற்றும் அவர்கள் தேவனுடைய சாயலுக்கும், ரூபத்திற்கும் திரும்பக்கொண்டுவரப்படத்தக்கதாக நாம் அவர்களுக்கு உதவுவதற்குமுரிய மாபெரும் விருப்பமுள்ளவர்களாகக் காணப்படுவோம்.

நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும், "தேவனோ அவனுடனேகூட இருந்தார்" எனும் முக்கியமான வார்த்தைகளைக் கவனிப்போமாக. ஜீவியத்தின் வெற்றியானது, பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கப்படுகின்றது. மாவீரன் அலெக்சாண்டர், சீசர், பிரபலமிக்க இராஜாக்கள், சக்கரவர்த்திகள் மற்றும் தளபதிகள் அல்லது இராஜ்யங்களுக்குப் பணங்களைக் குவித்தவர்களாகிய குரோசியஸ், கார்நெசியி முதலானவர்களே வெற்றிகரமான ஜீவியங்கள்

வாழ்ந்துள்ளதாக, சிலர் கருதுகின்றனர். ஆனால் இவர்கள் எவர்களுடைய தகுதிகளையும், அறக்கொடைகளையும் நாம் அலட்சியப்படுத்தாமல், மகத்துவம் குறித்து வித்தியாசமான புரிந்துகொள்ளுதலை உடையவர்களைக் குறித்தே, அதாவது வேதத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மகத்துவத்தின் தெய்வீகக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களாகிய ஆபிரகாம், யோசேப்பு, மோசே, யோபு, தாவீது, பரிசுத்த தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் இவர்கள் அனைவருக்கும் மேலாக நமது கர்த்தர் இயேசுவையும் குறித்தே நாம் எழுதுகின்றோம். இவர்கள் ஒவ்வொருவருடைய வெற்றிக்கான இரகசியம், "தேவனோ அவனோடேகூட இருந்தார்" என்பதேயாகும்.

இதே கொள்கையானது, தெய்வீக ஊழியம் தொடர்புடைய அனைத்துக் காரியங்களிலும், இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது; "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" எனும் கொள்கை இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது. யூத யுகத்தின்போது, தேவனுடைய தயவோ, பூமிக்குரிய செழிப்பில் வெளிப்படுத்தப்பட்டது; ஆனால் இந்த யுகத்தில் அப்படியாகக் காணப்படுவதில்லை; அதாவது ஆவிக்குரிய செழிப்பினால் மாத்திரமே தேவனுடைய தயவானது சுட்டிக்காட்டப்படுகின்றதும், ஐசுவரியவான்களும், பிரபுக்களும் அழைக்கப்படாமல், பிரதானமாக இவ்வுலகத்தில் தரித்திரர்களாகவும், விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், இராஜ்யத்தின் சுதந்தரர்களாகவும் காணப்படுகின்றவர்கள் அழைக்கப்படுகின்றதுமான இந்த யுகத்தில் அப்படியாகக் காணப்படுவதில்லை. தேவன் நம் பட்சத்தில் இருந்தால் மற்றும் நம்முடன் இருந்தால், நமக்கு எதிராய் நிற்பவர்கள் யார்? அவர்களுடைய எதிர்ப்பானது என்னவாக இருந்துவிடும்? அவர்கள் (எதிர்ப்பவர்கள்) நமக்குத் துயரத்தையோ (அ) அசௌகரியங்களையோ ஏற்படுத்தலாம், ஆனால் நமக்குப் பாதிப்போ அல்லது நம்முடைய மேலான நன்மைகளுக்குப் பாதகமோ ஏற்படுத்திட முடியாது; ஏனெனில் சர்வ வல்லமையுள்ளவரோ, "தம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்று நமக்கு வாக்களித்துள்ளார் (ரோமர் 8:28).

தேவன் யாருடைய பட்சத்தில் காணப்படுகின்றாரோ மற்றும் தேவன் யாருடன் கூடக் காணப்படுகின்றாரோ மற்றும் யாரை ஆசீர்வதிக்கத்தக்கதாக தேவன் இப்படி ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் தலையிடுகின்றாரோ, அப்படிப்பட்டதான அந்த வகுப்பாருடைய பண்புகள் என்னவாக இருக்க வேண்டும்?

ஆ! அவர்கள் அவருடைய சொந்த ஜனங்கள் ஆவார்கள்; அவர்கள் நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களும், நீதிக்காக பக்திவைராக்கியமுள்ளவர்களும், தேவனுக்காகவும், அவரது தயவுகளுக்காகவும், பக்திவைராக்கியமுள்ளவர்களும், அவரது ஊழியத்திற்கும் மற்றும் அவரது அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதில் பக்திவைராக்கியமுள்ளவர்களும், உண்மையுள்ளவர்களும், நம்பத்தகுந்தவர்களும், சாந்தமுள்ளவர்களும் ஆவார்கள். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:2); நாம் நமது அருமை மீட்பருடைய அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின் தொடருவோமானால், மாம்சத்திற்கேற்ப நடவாமல், ஆவிக்கேற்றப்படி நடப்போமானால், தேவனுடைய தயவும் நமக்குத் தொடர்ந்து காணப்படும் என்ற வாக்குத்தத்தங்களை நாம் பெற்றிருக்கின்றோம். ஆகையால் நாம் கனத்துக்குரிய பாத்திரங்களாயிருந்து, எஜமானுக்கு உபயோகமாகத்தக்கதாக நாம் நம்மைப் பொறாமையினின்று, வன்மத்தினின்று, சுயநலம் மற்றும் தற்பெருமையினின்று சுத்திகரித்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்வோமாக.

---

R 2885

# "துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில்"

## ஆதியாகமம் 39:20-40:15

"தேவனோ யோசேப்போடுகூட இருந்து, அவருக்கு இரக்கம் பாராட்டினார்."

யாக்கோபினுடைய பிரியமான மனைவியாகிய ராகேலுக்குப் பிறந்த பிள்ளையாகிய அன்புக்குரிய யோசேப்பே, ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்கான விசேஷித்த சுதந்தரவாளியாக யாக்கோபினால் பார்க்கப்பட்டார் என்பதில் ஐயமில்லை. தன்னையும் மற்றும் தனக்கு எவ்வாறு தெய்வீகத் தயவானது கடந்துவந்து, தன்னை அந்த வாக்குத்தத்தத்திற்கான சுதந்தரவாளியாக்கிற்று என்பதையும் யாக்கோபு நினைவில் கொண்டிருந்தார். யாக்கோபு இந்த நம்பிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும் தனது குமாரர்கள் அனைவரிடமும், விசேஷமாக தனது அன்புக்குரிய யோசேப்பிடமும் ஏறக்குறைய பகிர்ந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. யோசேப்பின் சகோதரர்களை மிகவும் கோபப்படுத்தின யோசேப்பினுடைய சொப்பனங்களானது, யோசேப்பிற்கும், அவரது தகப்பனுக்கும், யோசேப்பு ஒப்புயர்வற்ற நிலையில் காணப்படப்போவதைத் தேவன் சுட்டிக்காட்டுவதாக இருந்தது. ஆகையால் யோசேப்பு படுகுழிக்குள் காணப்படும்போதும் மற்றும் அவரது பலத்த கூக்குரல்களும், கண்ணீர்களும் அவரது சகோதரர்களாலும், கர்த்தரினாலும் கேட்கப்படாமல் இருந்தபோதும், அது அவருக்கு மாபெரும் ஏமாற்றமாகவும், மிகுந்த மன வருத்தமாகவும் காணப்பட்டிருக்க வேண்டும். தான் அடிமையாகும்படிக்கு, இஸ்மயேலர்களிடத்தில் விற்கப்பட்டதை யோசேப்பு கண்டபோது, அது அவருக்கு மிகுந்த கசப்பான ஏமாற்றமாகவும், மனவருத்தமாகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்தச் சூழ்நிலைகள் எவ்வளவுதான் ஏமாற்றம் கொடுக்கின்றதாகக் காணப்பட்டாலுங்கூட, அவைகள் நன்மைக்கு ஏதுவான அனுபவங்களாகக் காணப்பட்டதை நாம் பார்க்கின்றோம்; அதாவது அவைகள் சரியாய் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், அவைகள் யோசேப்பிற்குள் சரியான/தகுதியான குணலட்சணங்களை, அதாவது பொறுமையை, கீழ்ப்படிதலை, விசுவாசத்தை வளர்த்துவதற்கு ஏதுவானதாகக் காணப்பட்டது.

அதே ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய ஆவிக்குரிய அம்சங்களுக்கான சுதந்தரவாளிகளாகும்படிக்கு, நமது கர்த்தராகிய கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரவாளிகளாகும்படிக்கு நம்பிக்கைக்கொண்டிருக்கும் அனைவருக்கும், யோசேப்பின் அனுபவங்களிலிருந்து, நல்லப் படிப்பினைகள் உள்ளது (கலாத்தியர் 3:29). வாக்குத்தத்தம் உறுதியே மற்றும் அதைச் சுதந்தரித்துக்கொள்ளும் சிலாக்கியம் நமக்குரியதாகும்; ஆனால் அந்த வேலைக்காகவும், அதன் பொறுப்புகளுக்காகவும் நாம் ஆயத்தமாகுவதற்கு, நாம் தாழ்மை, பொறுமை, விசுவாசம், சகிப்புத்தன்மை ஆகியவை பற்றின படிப்பினைகளைக் கற்றுக்கொள்வது அவசியமாகும். "ஆபிரகாமின் இந்தச் சந்ததியினுடைய" தலையாகிய நமது கர்த்தர், பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களையும், சோதனைகளையும் மற்றும் பரீட்சைகளையும் சகித்து, "பூரணமானவராகவும், பரிசுத்தராகவும், மாசில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும்" இருந்தபோதிலும், மரணம் வரையிலும் பிதாவின் சித்தத்திற்கான கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டவரானார். "அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகும்படிக்கு" அழைக்கப்பட்டவர்களாகிய நாம், பின்வரும் மகிமைக்குத் தகுதியடைவதற்கும், ஆயத்தப்படுவதற்கும் என்று கடுமையான பரீட்சைகள் மற்றும் சோதனைகளுக்குள் கடந்து செல்வது மிகவும் அவசியமாய் உள்ளது.

எகிப்திற்கு வந்தபோதும், கர்த்தருடைய ஆசீர்வாதமானது யோசேப்பின் மீது குறிப்பிடத்தக்க விதத்தில் இருந்தது, அதாவது யோசேப்பு ஐசுவரியமுள்ள எஜமானிடத்திற்கு அடிமையாக விற்கப்பட்ட விதத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதமானது யோசேப்பின் மீது காணப்பட்டது. யோசேப்பினுடைய கடந்த கால வாழ்க்கை பற்றிக் குறைவான விவரங்களே இருக்கின்றது; ஆனால் பதினேழு வயதையுடையவராக யோசேப்பு போத்திபாரின் வீட்டில் பிரவேசித்தபோது, அவர் சிறந்த/கவனத்தை ஈர்க்கின்ற வாலிபனாகக் காணப்பட்டதாகத் தெரிகின்றது. யோசேப்பினுடைய மனஉறுதியும், நிதானமும், கடமையின் விஷயத்திலான உண்மையும், அறிவுக்கூர்மையும், யோசேப்பினுடைய பிறப்பை ஆவலாய் விரும்பினவரும், யோசேப்பின் பிறப்பை வேண்டுதலுக்கான பதிலாகப் பெற்றுக்கொண்டவருமான யாக்கோபிடமிருந்து யோசேப்பு சுதந்தரித்துக்கொண்ட நல்ல பண்புகளாகும். யோசேப்பு, தன்னுடைய தகப்பனுடைய விசுவாசத்தையும், பரந்த மனப்பான்மையையும், காரியங்களைச் செயல்படுத்துவதற்குரிய திறமையையும் கொஞ்சம் சுதந்தரித்தவராக இருந்தார் மற்றும் இதன் காரணமாக யோசேப்பு போத்திபாரின் வீட்டில் மாபெரும்

பொறுப்புடைய ஸ்தானத்திற்கு, அதாவது தனது எஜமானுடைய காரியங்கள் அனைத்தின்மீதும் பொறுப்பைப் பெறும் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார். வாலிபனாகிய யோசேப்பின் மனமானது அடிக்கடி தனது தகப்பனிடத்திற்கும், சகோதரர்களிடத்திற்கும், தன்னுடைய சொப்பனங்களினிடத்திற்கும் மற்றும் ஆபிரகாமின் உடன்படிக்கையினிடத்திற்கும் திரும்பிக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு ஐயமில்லை. யோசேப்பு அந்த வாக்குத்தத்தங்களில் நம்பிக்கைக்கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை மற்றும் அந்த வாக்குத்தத்தங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்றும், தன்னுடைய காரியங்களில் தெய்வீக வழிநடத்துதல்கள் எப்படியாகக் காணப்படும் என்றும் யோசேப்பு யோசனைப் பண்ணிக்கொண்டிருந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. அவருடைய வாழ்க்கை திடீரெனக் கானானுடைய வயல்வெளிகளிலிருந்து, அக்காலத்தில் மாபெரும் பட்டணங்களில் ஒன்றாகவும், அந்நாட்களின் புகழ் பெற்ற தேசத்தின் தலைநகரமாகவும் விளங்கின பட்டணங்களுடைய பாவங்கள், களியாட்டுகள், சுகபோகங்கள் மற்றும் விறுவிறுப்பான சூழ்நிலைகளுக்குள் மாற்றப்பட்டபோது, தேவன் மீதான அவரது விசுவாசமும், வாக்குத்தத்தங்கள் மீதான அவரது நம்பிக்கையும், அவரைச் சூழ்ந்த தீமையான தாக்கங்களிலிருந்து, அவர் தன்னை விலக்கிக்கொள்ள உதவினது.

இப்படியாகவே அனைவருடைய வாழ்க்கையின் விஷயத்திலும் காணப்படுகின்றது; தற்கால தீமையின் உலகத்தினுடைய பலவிதமான காற்றுகளின் மத்தியில் ஜீவியத்தைக் காத்துக்கொள்வதற்கும், ஜீவியம் சீராய் இருப்பதற்கும் ஒரு கொள்கை, ஒரு நம்பிக்கை, ஒரு நல் குறிக்கோள் அவசியமாய் இருக்கின்றது. தேவபக்தியுள்ள பெற்றோர்களினால் பயிற்றுவிக்கப்பட்டுள்ள, அதிலும் விசேஷமாக நம்முன் வைக்கப்பட்டுள்ள சுவிசேஷத்தின் நம்பிக்கைகள் தொடர்புடைய விஷயத்தில் பயிற்றுவிக்கப்பட்டுள்ள வாலிபனோ (அ) வாலிப பெண்ணோ, மற்ற வாலிபர்களைக் காட்டிலும் அனைத்து விதங்களிலும் அனுகூலம் உடையவர்களாய் இருப்பார்கள்; இந்த மற்ற வாலிபர்களோ எவ்வித விசேஷித்த நோக்கமும், இலக்கும் ஜீவியத்தில் பெற்றிராதவர்களாகவும், வாழ்க்கையைச் சமநிலையில் கொண்டிருப்பதற்கான பாரமாகிய தெய்வீக வாக்குத்தத்தங்களைப் பெற்றிராதவர்களாகவும், பொதுவாக அறிவீனமான காரியங்களுக்கு நேராகவும், அடிக்கடி பாவத்திற்கு நேராகவும், அனைவரும் இச்சிக்கும் திருப்திகளை நாடுவதற்கு நேராகவும், மாறிமாறி வீசும் காலம் எனும் காற்றினால் இங்கும் அங்குமாக அலைக்கழிக்கப்படுகின்றார்கள். தங்கள் பிள்ளைகளிடத்திலான கடமையில் கவனமற்றுக் காணப்படுகின்ற பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் தவறுகளை உடனடியாகச் சரி செய்ய முடியாது மற்றும் உண்மையான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், திருப்தியையும், ஜீவியத்தின் புயல்களின் மத்தியில் தேவையான சமநிலையையும் கொண்டுவருகின்ற காரியங்கள் மீது பிள்ளைகளின் மனதை பதிய வைத்திடுவதற்கு உதவிட உடனடியாகவும் முடியாது.

அனுபவ பாடங்கள் அனைத்தையும், தான் கற்றுவிட்டதாகவும் மற்றும் இனிமேல் தன்னுடைய பாதை செழிப்பின் பாதையாக இருக்கும் என்பதாகவும் ஒருவேளை யோசேப்பு எண்ணியிருந்திருப்பாரானால், அது தவறாய் இருந்திருக்கும். பிரதானியாகிய போத்திபாரின் வீட்டுக் காரியங்கள் மீதும், தொழில் காரியங்கள் மீதும் பிரதான மேற்பார்வையாளராக இருக்கும் ஸ்தானத்தைக் காட்டிலும் உயர்வான ஒரு ஸ்தானத்தைத் தெய்வீக விவேகமானது, யோசேப்பிற்குத் திட்டமிட்டிருந்தது; யோசேப்பிற்கான ஸ்தானம் உயர்வானதாக இருக்கப்போகிறதென்றால், அவர் இன்னும் கடுமையான ஒரு பள்ளிக்கூடத்தில், ஏற்றகாலத்தில் இனிமேல் அவர் மிகுதியாய் உயர்த்தப்படும் நிலைமைக்கென்று ஆயத்தப்படத்தக்கதாக, இன்னும் படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. யோசேப்பு தன்னுடைய எஜமானுடைய நம்பிக்கையையும், தனது எஜமாட்டியினுடைய தயவையும் அனுபவித்துக் கொண்டிருக்கையில், திடீரென அவர்மேல் பெருந்துன்பம் வந்தது; அதுவும் அவர் எந்தத் தவறும் செய்யாமலும், அவர் தன்னுடைய எஜமானுக்கு உண்மையாய் இருந்ததின் காரணத்தினாலும் அவர்மேல் வந்தது. யோசேப்பு போத்திபாருடைய குரோதம் கொண்ட மனைவியினால் தவறாய்க் குற்றம் சாட்டப்பட்டார். அவர் காவலில் வைக்கப்பட்டார்; ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் காணப்படும் சிறைச்சாலைகளிலிருந்து, எகிப்தின் காவல்கள் முற்றிலும் வேறுபட்டதாய் அப்பொழுதும், இப்பொழுதும் இருக்கின்றது. எகிப்தின் காவல்கள்/சிறைகள் இருட்டாகவும், வெறுக்கத்தக்கதாகவும், பயங்கரமான இடங்களாகவும் இருந்தன; அங்குக் கைதிகள் பெரும்பாலும் கொடூரமாய் நடத்தப்பட்டனர் மற்றும் இரும்புச் சங்கிலிகளினால் கட்டப்பட்டனர். யோசேப்பும் ஆரம்பத்தில் இப்படியாகத்தான் நடத்தப்பட்டார் என்பது சங்கீதம் 105:18-ஆம் வசனத்தின் வார்த்தைகள் மூலம் உறுதியாகுகின்றது; "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது." இது யோசேப்பிற்குக் கடுமையான சோதனையாக இருந்திருக்க வேண்டும்; மேலும் அவர் தெய்வீகத் தயவு மற்றும் எதிர்காலத்தில் உயர்த்தப்படுதல் குறித்த

நம்பிக்கைகளைக்கொண்டிருந்ததின் காரணமாக, இந்த அனுபவங்கள் யோசேப்பிற்கு இரட்டிப்பான கசப்புடைய அனுபவங்களாக இருந்திருக்க வேண்டும்.

இப்படியாகவே ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்குரிய ஆவிக்குரிய சுதந்தரவாளிகளின் விஷயத்திலும் காணப்படும்; நம்மால் முடிந்த மட்டும் கடமைகளை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போது, அதுவும் கர்த்தருடைய ஆசீர்வாதமும், தயவும் நம்மீதும், நம் காரியங்கள் மீதும் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் பெற்றிருக்கும் சில தருணங்களில், திடீரெனப் பிரச்சனை எழும்புகின்றது, துன்பம் வருகின்றது மற்றும் இருளின் வல்லமைகள் மேற்கொள்கின்றது மற்றும் கொஞ்சம் நேரம் நம்முடைய சக மனிதர்களுடைய கணிப்பில் குற்றவாளிகள் போலும், தெய்வீகப் பராமரிப்பில்லாமல்/தேவனால் கைவிடப்பட்டது போலும் காணப்படுவோம். இம்மாதிரியான சூழ்நிலைகளில் நமக்கு இருக்கும் ஒரே ஆறுதல், நாம் "எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராக" இருப்பதேயாகும்; அதாவது தவறுதலாய்ப் பாடு அனுபவிக்கிறோம் என்பதாகும். இம்மாதிரியான அனுபவங்களானது, சந்தேகத்திற்கிடமின்றி நமக்கு அவசியமானவைகளாகும்; "தனிமையில் நான் வெளிச்சத்தில் நடப்பதைப் பார்க்கிலும், நான் இருளில் தேவனோடு நடந்திடுவேனே" என்று நாம் பாடினாலுங்கூட, நாம் கர்த்தருடைய கரத்தைப் பிடித்துக்கொள்ளும் அப்படியானதொரு விசுவாசத்தையும், அப்படியானதொரு நம்பிக்கையையும், இருளான வேளைகளில் தெய்வீக வழிநடத்துதல்கள் மீதான நம்பிக்கையையும் வளர்த்தக்கூடிய சோதனையான அனுபவங்களுக்குள் நாம் அனுமதிக்கப்படாதது வரையிலும், இப்படியான பாடல்கள் பயனில்லாத பெருமையடித்துக்கொள்ளுதல்களாகவே இருக்கும். நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்பதற்கும், கர்த்தரைக் காண முடியாத வேளைகளில் அவரை நம்புவதற்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

யோசேப்பினுடைய விசுவாசமானது, பரீட்சையில் நிலைநின்றது மற்றும் அவரது உயர்வான குணலட்சணங்களானது, அந்தத் துன்பமான சூழ்நிலைகளின் மத்தியிலும் பிரகாசித்தது; மேலும் இது கர்த்தர் யோசேப்போடே இருக்கின்றார் என்பதற்கும், அவர் தலைச்சிறந்த மாதிரியானவராகவும், ஞானமிக்க வாலிப புருஷனாகவும் இருக்கின்றார் என்பதற்குமான அடையாளமாக, சிறைச் சாலையின் தலைவனுக்குத் தோன்றியது; அப்போது யோசேப்பிற்கு இருபத்தேழு வயதாயிருந்தது. சிறைச்சாலையின் தலைவனோ, தன்னுடைய வேலையில், தனக்கு உதவியாய் இருப்பதற்கு (யோசேப்பைப்போன்ற) ஓர் உண்மையுள்ள ஊழியக்காரனைப் பெற்றிடுவதற்கு ஆவலாய் இருந்தார். திறமிக்க ஆண்களுக்கும், பெண்களுக்கும் உலகத்தில் எப்போதும் வாய்ப்புகள் உண்டு; மிகவும் திறமிக்கவர்களாய் இருப்பவர்கள், கர்த்தருடைய ஆவியை உடையவர்களாகவும், "சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறதான" பரத்திலிருந்து வருகிற ஞானத்தினை உடையவர்களாகவும் இருக்கின்றனர் (யாக்கோபு 3:17). சுயநலமான நோக்கங்களினாலேயே சிறையின் தலைவன் யோசேப்பிடம் தயவாய் இருந்தார் என்பதிலும், கைதிகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பினை யோசேப்பிடம் ஒப்புவித்தார் என்பதிலும் ஐயமில்லை. மேலும் யோசேப்பினுடைய திறமைகள் மாத்திரமே, அவரை உயர்வான ஸ்தானத்திற்கு உயர்த்திடவில்லை; தெய்வீக வழிநடத்தல்களே காரியங்களை இப்படியாக நிகழ்த்தியது. தேவன் விசேஷித்த தயவு பாராட்டுகிறவர்களிடத்திலும், அவர் விசேஷமாய்ப் பயன்படுத்துபவர்களிடத்திலும், குணலட்சணங்கள் காணப்பட வேண்டும் என்பதை நாம் கவனித்திட வேண்டும். மெருகிடப்படாத வைரத்தைக் காட்டிலும், சாதாரணமான கூழாங்கல்லானது நன்றாய்க் காணப்படும்; எனினும், சாதாரணமான கூழாங்கல்லிடம் இல்லாத உறுதியும், தூய்மையும் மெருகிடாத வைரத்திடம் காணப்படுவதினாலேயே, அது வெட்டப்பட்டு, மெருகிடப்பட்டு, மிக விலையுயர்ந்த கல்லாகப் பதிக்கப்படுகின்றது. நம்முடைய ஆசீர்வாதங்கள் அனைத்தும் தேவனிடமிருந்து, கிறிஸ்து மூலம் வந்ததாக இருப்பினும், நம்முடைய "அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளும்" விஷயத்தில் நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் சில உண்டு என்பதையும், நாம் தேவனுக்காகவும், நீதிக்காகவும் அன்பும், பக்தியும், வைராக்கியமும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும், இந்தக் குணங்கள் மாத்திரமல்லாமல், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கிற தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும், நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது வைரம் வெட்டப்படுகின்ற மெருகிடப்படும் அனுபவத்தை நாம் அனுபவிக்கத்தக்கதாக, தெய்வீக விவேகமானது நமக்கு அனுமதித்திடும் விசுவாசம் மற்றும் பொறுமையின் பல்வேறு சோதனைகளை ஏற்றுக்கொள்வதற்கும், அச்சோதனைகளிலிருந்து நன்மை அடைவதற்குமுரிய விதத்தில் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கிற தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஓர் அடிமையாகவும், ஒரு கைதியாகவும் யோசேப்பு பெற்றிருந்த அனுபவங்களானது, துன்பத்தில் இருப்பவர்கள் மீது அனுதாபங்கொள்ளும் தன்மையை மாத்திரம் ஏற்படுத்தவில்லை; இராஜாவாகிய பார்வோன் முன் நிற்பதற்கும், பார்வோனுடைய முக்கிய ஊழியக்காரனாகுவதற்கும் யோசேப்பை ஆயத்தப்படுத்துகின்ற, விஷயத்தில் அறிவுரையாயிருக்கின்ற ஞானம் மற்றும் அனுபவப் பாடங்களையுங்கூட யோசேப்பு கற்றுக்கொண்டிருந்தார். சிறைச் சாலையில் யோசேப்பு சம்பாதித்திட்ட அனுபவங்களில் சில இப்பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் கைதிகள் அனைவரும் குற்றவாளிகளாக இருப்பதில்லை; சில சமயம் இராஜாவுக்கு ஏற்பட்ட கோபத்தின் காரணமாகவும், சிலர் கைதியாகக் காணப்படுவதுண்டு. பார்வோனின் வீட்டாரில் உயர் ஸ்தானம் வகித்த இரண்டு பேர், ஏதோ காரணங்களினால் இராஜாவுக்குக் கோபமூட்டினதின் காரணமாக, யோசேப்போடுகூட அதே சிறையில் தள்ளப்பட்டனர்; (இராஜாவுக்கான பானபாத்திரக்காரன் என்பவன் நம்பிக்கையிலும், கனத்திலும் உயர் ஊழியர்களாய் இருப்பவர்களில் ஒருவன் ஆவான்; சுயம்பாகி என்பவன் இராஜாவினுடைய சமையல் அறையின் நிர்வாகியும், வீட்டின் பொதுவான விசாரணைக்காரனுமாவான்); மேலும் இத்தருணத்தில் யோசேப்பு கைதிகளின் பிரதான பொறுப்பாளியாக இருந்தபடியால், யோசேப்பு, இராஜ்யத்தினுடைய காரியங்களை நன்கு அறிந்திருக்கும் இந்த மனிதர்களை அடிக்கடி சந்தித்தும், நெருக்கமாய்ப் பழகியும் இருந்திருப்பார். மேலும் யோசேப்பிடமும் அவர்கள் பேச்சுத் தொடர்பு வைத்திருக்க வேண்டும். ஏனெனில், யோசேப்பு அவர்கள் பேசுகின்ற காரியங்களுக்குக் கவனம் செலுத்துபவராக இருந்திருக்க வேண்டும். தங்கள் முகத்தில் வெளிப்பட்ட கவலை எனும் சிறு காரியத்தைக் கூடக் கவனித்து, அதைக் குறித்துத் யோசேப்பு விசாரித்தபடியால், அப்போதிருந்த கைதிகளிலேயே யோசேப்பு வித்தியாசமான கைதி என்று அவர்கள் எண்ணியிருந்திருக்க வேண்டும். இப்படியாகவே எதிர்கால மகிமைக்கென்று தாங்கள் ஆயத்தப்படுவதற்கும், மெருகிடுவதற்கும் அவசியமான சோதனைகள் மற்றும் பிரச்சனைகளுக்குள், ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்கான ஆவிக்குரிய சுதந்தரவாளிகள் அனைவரும் கடந்து செல்லுகையில், இரக்கமாயிருப்பதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத்தேயு 5:7). இவர்களது சொந்த அனுபவங்களானது, பிரச்சனையில் காணப்படும் அனைவரிடத்திலும், உருக்கமான இருதயத்தைக் கொண்டிருக்கத்தக்கதாக, இவர்களை மென்மைப்படுத்துகின்றது. கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் "இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்தவர்களாய்க்" காணப்பட வேண்டும்.

யோசேப்பினுடைய அனுதாபங்காட்டும் தன்மையானது, இரு கைதிகள் துக்கமாய் இருப்பதற்கான காரணத்தை வெளிக்கொண்டு வந்தது. இரு கைதிகளில் ஒவ்வொருவரும் முந்தின இரவில் சொப்பனங்கண்டு, அவரவர் தங்களது சொப்பனமானது, வரப்போகும் தீமையைக் குறித்து எச்சரிக்கின்றதாய் இருக்கின்றது என்று எண்ணி, கலங்கிபோய்க் காணப்பட்டார்கள். சொப்பனங்களைப் புரிந்துகொள்ளும் சில ஆற்றல்களினால், யோசேப்பு கர்த்தரினால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தபடியால், உடனடியாகச் சொப்பனத்திற்கான விளக்கத்தைக் கொடுத்தார்; அதாவது கைதிகள் இருவரில் ஒருவர் சீக்கிரத்தில் விடுதலை செய்யப்படுவார் என்றும் மற்றவர் தண்டிக்கப்படுவார் என்றும் விளக்கம் கொடுத்தார். தண்டிக்கப்படப் போகின்றவர் மீது அனுதாபம் காண்பித்து, விடுவிக்கப்படப் போகின்றவரை வாழ்த்தி, விடுவிக்கப்படப் போகின்றவனிடத்தில், அவனுக்கான சந்தோஷத்தின் நாட்களில் தன்னையும், தன்னுடைய இரக்கத்தையும் நினைத்துக்கொள்ளவும், கூடுமானால் இராஜாவிடம் இரக்கம் பெற்றுக்கொண்டு, தனக்கு விடுதலைப் பெற்றுத் தரவும் யோசேப்பு வேண்டிக்கொண்டார்.

யோசேப்பினுடைய இரண்டு சொப்பனங்களும், பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியினுடைய இரண்டு சொப்பனங்களும், பின்னாட்களில் பார்வோனுக்கு வந்த இரண்டு சொப்பனங்களுமாகிய, அனைத்தும் தெய்வீக ஏவுதலினாலே உண்டானது என்பதிலும், சில விளைவுகளைக் கொண்டுவரத்தக்கதாக, சில தாக்கங்களை உண்டுபண்ணுவதற்கான நோக்கத்திற்காகவே இச்சொப்பனங்கள் கொடுக்கப்பட்டன என்பதிலும் உறுதியே. இவர்கள் அனைவருக்கும் வந்த சொப்பனங்களானது, கர்த்தரிடமிருந்து வந்தது என்று நாம் ஏற்றுக்கொள்கிறதினால், அனைத்துச் சொப்பனங்களும் கர்த்தரிடமிருந்து வருகின்றது அல்லது அனைத்துச் சொப்பனங்களுக்கு விசேஷித்த தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் உண்டு என்று நாம் ஏற்றுக்கொள்வதாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது. மாறாக பெரும்பாலான சொப்பனங்களானது மனக் கற்பனைகளாக இருக்கின்றது, அதாவது வயிற்றுக் குழப்பத்தின் காரணமாகவும், மூளை பாதி உறங்கியும், பாதி விழித்தும் இருக்கும் காரணமாகவும், மனதில் ஏற்படுகின்ற பொருளற்ற, அர்த்தமற்ற உருவத் தோற்றங்களாக இருக்கின்றது; இச்சொப்பனங்களானது விசேஷித்த

பொருளையுடையதாய் இராமல் மாறாக நாம் உணவு உட்கொள்ளும் விஷயத்தில் காட்ட வேண்டிய அக்கறைக் குறித்த எச்சரிக்கையாகவே இருக்கின்றது. மூன்றாம் வகையான ஒரு சொப்பனங்கூட உண்டு; இவ்வகையானது கர்த்தரினாலோ, அஜீரணத்தினாலோ ஏற்படாமல், மாறாக சொப்பனங்காணும் நபர்களைத் தவறாய் வழிநடத்துவதற்கான நோக்கத்திற்காக, பொல்லாத ஆவியினால் கொடுக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. நம்முடைய சொப்பனங்களானது, தீய ஆவிகளின் ஏவுதலால் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு, நாம் பொல்லாங்கனின் பிள்ளைகளாய் இல்லை என்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்; மேலும் பாவத்தைத் துறந்து சுவிசேஷத்தில் நமக்கு முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்குள் தஞ்சம் புகுந்துள்ள நாம், நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமான மீட்பின் காரணமாக தேவனுடைய குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தேவனுடனான உறவிற்குள் வந்து, பொல்லாங்கனுடைய வல்லமையிடமிருந்தும், நம்முடைய காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலான அவனது மாய்மாலங்களிலிருந்தும் பாதுகாப்புப் பெற்றுக்கொண்டவர்களாகவும், நாம் தேவனை அன்புகூருகின்றபடியாலும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டுள்ளபடியாலும், "அனைத்தும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும்" என்ற கிருபையான வாக்குத்தத்தத்தின் கீழ் வந்தவர்களாகவும் இருக்கின்றோமா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இங்குச் சொப்பனம் கண்டுள்ள சுயம்பாகியும், பானபாத்திரக்காரனும் மற்றும் பார்வோனும் தேவனுடைய மனிதர்கள் அல்ல என்று நாம் கவனிக்க வேண்டும், ஆனாலும் இந்தச் சொப்பனங்கள் தேவனாலேயே உண்டானது மற்றும் இந்தச் சொப்பனங்களானது, சொப்பனம் கண்டவர்களின் நன்மைக்காக அல்லாமல், மாறாக யோசேப்பின் நன்மைக்காகவே விசேஷமாக அருளப்பட்டது.

முன்புள்ள காலங்களைக் காட்டிலும் இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குச் சொப்பனங்களுக்கான அவசியம் தேவையே இல்லை. நமக்கு அவசியமான ஒவ்வொரு காரியங்களையும் பற்றின தேவனுடைய சாட்சியாகிய தேவனுடைய வார்த்தையை நாம் பெற்றிருக்கின்றோம். இந்தத் தேவனுடைய வார்த்தைகளானது/செய்திகளானது பூரணமாய்க் காணப்படுவதினாலே, இதைக் குறித்து "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகின்றார் (2 தீமோத்தேயு 3:16, 17). இதற்கென்று சொப்பனங்கள் வரும் பட்சத்தில், அதுவும் அந்தச் சொப்பனம் தேவ வார்த்தைகளுடைய பரீட்சைகளில் நிலைநிற்குமாயின், அச்சொப்பனம் கர்த்தரிடமிருந்து வந்தது என்று அடையாளம் கண்டு கொள்வதற்கு நாம் தடைப்பண்ணப்படுவதில்லை; அதாவது அச்சொப்பனமானது வேதவாக்கியங்களில் தேவன் வெளிப்படுத்தியுள்ளவைகளுக்கு முரண்பாடாக இல்லாத பட்சத்தில், அது கர்த்தரிடமிருந்து வந்ததென அடையாளம் கண்டுகொள்வதற்குத் தடையில்லை. ஒருவேளை சொப்பனமானது, வேதவாக்கியங்களுக்கு முரண்பாடாய்க் காணப்படும் பட்சத்தில், நாம் சொப்பனத்தை நிராகரித்துவிட வேண்டும். ஒருவேளை சொப்பனமானது, வேதவாக்கியங்களுக்கு இசைவாகக் காணப்படும் பட்சத்தில், அந்த இசைவினிமித்தம் நாம் அதை ஏற்றுக்கொண்டு, அச்சொப்பனம் இசைவாயிருக்கும் வேதவாக்கியங்களிடத்தில் குறிப்பாய் நமது கவனம் ஈர்க்கப்பட மாத்திரமே அச்சொப்பனத்தை நாம் அனுமதித்திட வேண்டும். சொப்பனத்தின் மூலமாகவோ அல்லது தரிசித்தலோ, சொப்பனமோ இல்லாமல் முழுக்க விசுவாசத்தினால் நடப்பதின் மூலமாகவோ, எப்படியாக இருப்பினும் தேவனுடைய உண்மையான பிள்ளையாகிய, ஆபிரகாமுக்குரிய ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களின் சுதந்தரவாளியானவன், யோசேப்பைக் குறித்து நம்முடைய ஆதார வசனமானது, "தேவனோ அவனோடுகூட இருந்து, அவனுக்கு இரக்கம் பாராட்டினார்" என்று தெரிவிப்பதைக் காட்டிலும் அதிகமாய் எதிர்பார்த்திட வேண்டும், கண்டடைய வேண்டும், உணர்ந்திட வேண்டும். தேவனும் நம்மோடுகூட இருந்து நம்மிடம் இரக்கத்தைக் காட்டுவாரானால், அதுவும் இதை அவர் எப்படிச் செய்தாலும் சரி, நாம் நன்றியுள்ள இருதயங்களுடன் அவரது தயவை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இருளிலிருந்து தமது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தவரும், இறுதியில் நம்மை மரணம் எனும் சிறைச்சாலையினின்று, நித்தியமான இராஜ்யத்தின் மகிமைகளிடத்திற்கும், அவரது குமாரனுடன் உடன் சுதந்தரத்துவத்திற்கும் கொண்டு வருபவருமானவரின் புண்ணியங்களை நாம் அறிவிக்க வேண்டும்.

---

**R 2887**

# "ஏனெனில், தேவன் அவனோடேகூட இருந்தார்"

## ஆதியாகமம் 41:38-49

"என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்."
—1 சாமுயேல் 2:30

உலகத்தில் உண்மையான மேன்மையை அடைந்தவர்களுடைய வெற்றிக்கான இரகசியமாக தெய்வீகத் தயவானது காணப்பட்டதுபோன்று, யோசேப்பின் வெற்றிக்கான இரகசியமாகவும் தெய்வீகத் தயவே காணப்பட்டது. முந்தின யுகங்களில், உண்மையான வெற்றி என்பது பூமிக்குரிய வளமை, ஐசுவரியங்கள் மற்றும் வல்லமையுடன் தொடர்புடையதாக ஏறக்குறைய அடையாளம் கண்டுகொள்ளப்பட்டதாய் இருந்தது; ஆனால் இந்தச் சுவிசேஷ யுகத்திலோ, அதாவது ஆவிக்குரிய யுகத்திலோ, உண்மையான வெற்றியும், தெய்வீகத் தயவும், ஆவிக்குரிய வளமையுடனும், ஆவிக்குரிய வளர்ச்சிகளுடனும், பயனுள்ளவர்களாய் இருக்கும் நிலையுடனும் தொடர்புடையதாய்க் காணப்படுகின்றது மற்றும் இதற்கான உதாரணத்தை நமது கர்த்தர் இயேசுவிலும், அப்போஸ்தலர்களிலும் மற்றும் இவர்கள் நாட்கள் துவங்கி இன்று வரையிலுமுள்ள பிரபலமற்ற சிலுவையின் ஊழியக்காரர்களிலும் நாம் காணலாம். செயல் முறைகளின் பாணி வித்தியாசமாக இருப்பினும், கொள்கை ஒன்றே. குணலட்சணத்தைக் கட்டி எழுப்புவதற்குரிய பிரதான படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கான பள்ளிக்கூடமென இன்னமும் துன்பம் காணப்படுகின்றது; இந்தத் துன்பமெனும் பள்ளிக்கூடத்தில்தான், ஜீவியத்திற்கான சரியான கொள்கைகள் உருவாகுகின்றன மற்றும் இறுதியில் உறுதியான குணலட்சணம் உருவாகுகின்றது. இப்பாடத்தில் நாம் பார்க்கவிருக்கும் யோசேப்பு அடையும் மாபெரும் ஆசீர்வாதமும், முன்னேற்றமும் பற்றின சம்பவமானது, ஒரு தேசத்தின்/ஜாதியின் காரியங்களை நெறிப்படுத்துவது மாத்திரமல்லாமல், "தம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களும்" மற்றும் அந்த அழைப்பிற்கான நிபந்தனைகளுக்கு மற்றும் கோரிக்கைகளுக்கு ஏற்ப வாழ்ந்திடுவதற்கு நாடுபவர்களுமாகிய அனைவரின் தனிப்பட்ட காரியங்களையும்கூடத் தேவன் நெறிப்படுத்துகின்றார் என்ற உண்மையை விளக்குகின்றதாய் இருக்கின்றது.

யோசேப்பிடம் சில குணலட்சணங்கள் காணப்பட்டதின் காரணமாகவே, இவருடைய குடும்பம் எகிப்திற்கு வருவதற்கும், இன்னும் பல காரியங்களுக்குமான வழியை ஆயத்தப்படுத்துவதற்காக, அநேகமாக கர்த்தர் இவரைத் தெரிந்தெடுத்திருக்க வேண்டும். ஒருவேளை யோசேப்பு தான் கடந்து சென்ற படிப்பினைகள் மற்றும் அனுபவங்களைப் புறக்கணித்தவராக இருந்திருப்பாரானால், கர்த்தரும் தம்முடைய கையாளுதல்களை மாற்றியிருந்திருப்பார் என்பதில் நமக்கு நிச்சயமே. கர்த்தருடைய அனுக்கிரகங்களும், ஆசீர்வாதங்களும் தகுதியான பாத்திரங்கள் மீதே அருளப்படுகின்றதாயிருக்கப் பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, யோசேப்பும் ஒவ்வொரு சோதனையிலும் கீழ்ப்படிதலுள்ளவராகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் காணப்பட்டதை நம்மால் காணமுடிகின்றது. யோசேப்பினுடைய குணலட்சணத்தின் பலத்திற்கும், கடமை மற்றும் கொள்கையின் விஷயத்திலான அவரது நேர்மைக்குமான அஸ்திபாரமாக, அவர் கர்த்தரிடத்தில் கொண்டிருந்த விசுவாசம் காணப்பட்டது என்பதில் எவ்விதமான ஐயமில்லை. தனக்குச் சொப்பனங்கள் வாயிலாக முன்னறிவிக்கப்பட்ட, தன் விஷயத்திலான கர்த்தருடைய வழிநடத்துதல்களைக் குறித்து யோசேப்பு சந்தேகப்பட்டிருப்பாரானால், தன்னிடம் சொப்பனங்களின் அர்த்தங்களைப் பற்றி விசாரித்திட்ட இராஜ வட்டாரத்துக் கைதிகள் இருவரிடமும், அவர்கள் சொப்பனங்களில் நம்பிக்கை வைக்கக்கூடாது என்றும், தான் (ஒரு காலத்தில்) அதிகாரமும், செல்வாக்கும் அடையப்போவதாகச் சொப்பனம் கண்டிருக்க, (இப்பொழுதோ) அவைகளுக்குப் பதிலாக தான் கீழ் நிலையையும், அடிமைத்தனத்தையும் மற்றும் சிறையில் கைதியாக்கப்பட்ட நிலையையும் அடைந்துள்ளதை எடுத்துக்கூறி, தான் அடைந்துள்ள கசப்பான ஏமாற்றத்தைக்கூறி, சொப்பனங்கள் நம்பத் தகுந்தவைகளல்ல என்றும் கூறியிருந்திருப்பார். ஆனால் யோசேப்பு இன்னமும் தன்னுடைய சொப்பனங்களில் நம்பிக்கைக் கொண்டிருந்தார் மற்றும் ஏதோ ஒரு விதத்தில் விடுதலையை எதிர்பார்த்தவராகவும் மற்றும் கர்த்தர் தன்னுடைய காரியங்களை நன்மைக்கு ஏதுவாய் மாற்றுவார் என்று நம்பினவராகவும் இருந்தார்.

நமது பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள இராஜா மீதான இத்தகைய நம்பிக்கையும், விசுவாசமும், ஆபிரகாமுக்கான வாக்குத்தத்தத்தினுடைய ஆவிக்குரிய சுதந்தரவாளிகளாகிய

நம்மில் காணப்படுவது, இன்னும் அதிகம் பொருத்தமானதாய் இருக்கும், ஏனெனில் மாம்சீக ஆசீர்வாதங்களுக்கு மாத்திரமே சுதந்தரவாளிகளாகக் காணப்பட்ட யோசேப்பு மற்றும் நம்முடைய முற்பிதாக்களைக் காட்டிலும், நாம் அனைத்து விதங்களிலும் அதிகம் அனுகூலம் உடையவர்களாய் இருக்கின்றோம். கிறிஸ்துவுக்கு முன்பு வாழ்ந்தவர்கள், எவ்வளவுதான் உயர்வான நிலைகளில் காணப்பட்டவர்களாய் இருப்பினும், அவர்கள் அதிகபட்சமாக, "பணிவிடை வீட்டாரின் அங்கத்தினர்களாகவே" காணப்பட்டனர்; ஆனால் இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள நாமோ, குமாரர்களென, அதாவது நமது கர்த்தர் இயேசுவைத் தலையாகப் பெற்றிருக்கும் "புத்திரர் வீட்டாரின்" அங்கத்தினர்களெனத் தேவனால் இலவசமாய் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றோம். புத்திரர்களானவர்கள் பரிசுத்த ஆவியின் வாயிலாக, தெய்வீகத் திட்டம் பற்றின ஆழமான மற்றும் தெளிவான அறிவை மாத்திரம் அருளப்பெற்றிராமல், அனைத்து விதங்களிலும் பணிவிடை வீட்டார் மற்றும் பொதுவான உலக ஜனங்களைக் காட்டிலும் அதிகம் அனுகூலமும் உடையவர்களாக இருக்கின்றனர். எனினும் யோசேப்பு மற்றும் எகிப்தினுடைய நிழலான சிங்காசனம் தொடர்புடைய விஷயத்தில் காணப்பட்டது போலவே, நம் விஷயத்திலும் நாம் தேவனால் தயவு பெற்றுக்கொள்வதும், இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்களாகுவதற்கு அழைக்கப்படுவதும் மாத்திரம் போதுமானதாய் இராமல், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடையத்தக்கதாக" அவருடைய அறிவுரைகள் மற்றும் பயிற்சிகளின் கீழ் நாம் எளிதில் இணங்குபவர்களாகவும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பவர்களாகவும் இருப்பதும் அவசியமானதாகும். விசேஷமாய் நம்முடைய விசுவாசமானது பலமுடையதாய்க் காணப்படுவதும், இருளிலிருந்து, அவரது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகக் காணப்படத்தக்கதாக, நம்முடைய விசுவாசமானது பலமடைவது வரையிலும் பரீட்சிக்கப்படுவதும் அவசியமாய் உள்ளது.

தான் இறுதியில் விடுவிக்கப்படுவார் என்பதிலும், தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்பதிலும், யோசேப்பு கொண்டிருந்த நம்பிக்கையானது, தன்னுடைய சொந்த விடுதலையை வாய்க்கப்பண்ணுவதற்குரிய அனைத்துக் காரியங்களையும் அவர் சரியான விதத்தில் செய்யும் விஷயத்தில் அவரைத் தடைப்பண்ணிடவில்லை. சிறைப்படுத்தப்பட்டிருந்த பானபாத்திரக்காரனை அன்போடு நடத்தி, அவரது சொப்பனத்தை அவருக்கு விளக்கி, அவர் அடையப்போவதாகச் சொப்பனத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்ட நற்பேற்றினிமித்தம், அவரோடுகூடக் களிக்கூர்ந்த பிற்பாடு, அவர் மீண்டுமாக இராஜாவின் தயவைப் பெற்றுக்கொள்ளும்போது, அவருக்கு ஆறுதலாய் இருந்த யோசேப்பாகிய தான், இன்னமும் சிறையிலேயே காணப்படுகின்றதை தயவாய் நினைவுகூர்ந்து, கூடுமானால் தனக்காக இராஜாவிடம் மன்னிப்புப் பெற்றுத்தரும்படிக்கு யோசேப்பு எவ்வாறு பரிந்து மன்றாடிக் கேட்டுக் கொண்டார் என்பதை நாம் கவனிக்கின்றோம். யோசேப்பு இப்படியாக தன்னுடைய விடுதலைக்காக, நியாயமான நடவடிக்கைகள்/முயற்சிகள் எடுத்தது சரியானதே மற்றும் இன்னும் அவர் தொடர்ந்து சிறையிலேயே இரண்டு வருடங்களாகக் காணப்பட்ட காரியமானது, அவரது விசுவாசத்திற்கும், கர்த்தர் மீதான அவரது நம்பிக்கைக்கும் பரீட்சைகளாகக் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை; ஏனெனில் பானபாத்திரக்காரன் தனக்கு நல்ல காலம் திரும்பி வந்தபோது, யோசேப்பை முற்றிலும் மறந்துபோனதாகத் தெரிகின்றது. எனினும் இவைகள் அனைத்திலும், நம்மால் இப்பொழுது பார்க்க முடிகின்றதுபோல, கர்த்தர் யோசேப்பைப் பராமரித்துக்கொண்டே இருந்தார். நீதியினிமித்தம் துன்பப்படுவதற்கும், கர்த்தரிடத்திலான விசுவாசத்திற்கும், பொறுமையுடன் சகித்தலுக்குமான படிப்பினைகளை யோசேப்பு கற்றுக்கொண்டிருந்தார். ஒருவேளை யோசேப்பு, இராஜ கட்டளையினால் விடுவிக்கப்பெற்று, விடுதலைப் பண்ணப்பட்டாரானால், அவர் பாலஸ்தீனியாவில் தன்னுடைய தகப்பனையும் தன்னுடைய சகோதரர்களையும் தேடும்படிக்குத் திரும்பிப்போயிருந்திருப்பார்; அல்லது எகிப்தில் ஏதோ ஒரு தொழிலில் மூழ்கிப்போயிருந்திருப்பார்; ஆனால் அவசியமானப் பாடங்களைக் கற்கத்தக்கதாக, யோசேப்பு முப்பது வயது வரையிலும் தெய்வீக வழிநடத்துதலினால், சிறையில் பாதுகாப்பாய்க் காக்கப்பட்டார்; மேலும் (யோசேப்புக்கு முப்பது வயது வரும்போது) இத்தருணத்தில்தான் இராஜாவாகிய பார்வோன் அவரது மனதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தின இரண்டு குறிப்பிடத்தக்கதான சொப்பனங்களைக் கண்டார்; மேலும் இந்தச் சொப்பனங்களைக் குறித்துப் பார்வோன், எகிப்தின் ஞானிகளுடன் கலந்து ஆலோசித்தபோது, அவர்களிடமிருந்து அவரால் திருப்திகரமான பதிலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அப்போதுதான் பானபாத்திரக்காரன், சிறையில் தான் காணப்படுகையில் கண்ட சொப்பனத்தையும், அதற்கு எப்படி ஓர் அருமையான வாலிபன் மிகவும் துல்லியமாக விளக்கம் கொடுத்தான் என்பதையும், அந்த வாலிபன் பாராட்டின இரக்கத்தை, தான் எத்தனை சீக்கிரமாய் மறந்து போயுள்ளார் என்பதையும் நினைவுகூர்ந்தார். இப்பொழுது இராஜாவுக்கும், சிறையில் கைதியாக இருக்கும், தன்னுடைய நண்பனுக்கும் உதவி புரிவதற்குரிய வாய்ப்புப் பானபாத்திரக்காரனுக்கு வந்தது; ஆகவே யோசேப்பை மிகவும் பாராட்டி,

பானபாத்திரக்காரன் பார்வோனிடத்தில் தெரிவித்தார். மற்றவர்களுக்கு நாம் பாராட்டும் இரக்கமானது, உடனடியாக மறக்கப்பட்டுப்போனதுபோல் காணப்பட்டாலுங்கூட, அதற்குரிய ஆசீர்வாதமானது, பிற்காலங்களில் நம் தலைகள் மீதே கடந்து வருகின்றதாய் இருக்கும் மற்றும் கர்த்தரினால் அது ஆசீர்வாதத்திற்கான கால்வாயாகப் பயன்படுத்தப்படும் என்ற உண்மையானது இச்சம்பவத்தில் விளக்கப்படுவதை நாம் பார்க்கின்றோம்.

பார்வோன் கைதியை அழைத்து அனுப்பினார் மற்றும் தனது சொப்பனங்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கத்தினிமித்தம் முழுவதும் திருப்தியடைந்தபடியாலும் பானபாத்திரக்காரனுடைய சாட்சியும் கூடக் காணப்பட்டதினாலும், விளக்கங்கள் உண்மையாக இருக்குமோ என்று பார்வோனினால் சந்தேகப்பட முடியவில்லை மற்றும் சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் திறன் யோசேப்பிடம் இருந்ததற்கான காரணம், தேவன் யோசேப்போடு காணப்படுவதாலேயாகும் என்றும், தேவன் யோசேப்பைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார் என்றும், இப்படியான சொப்பனங்களைக் கொடுத்தவரும், சொப்பனங்களுக்கான அர்த்தத்தை இந்த வாலிபனுக்குக் கொடுத்தவருமான தேவன், வரும் என்று அறிவித்துள்ள பஞ்சத்தின் கடினத்தை விலக்கிடுவதற்கென எடுக்க வேண்டிய முன் எச்சரிப்புகள் தொடர்புடைய விஷயத்தில் தேவன் தம்முடைய ஊழியக்காரனைப் பயன்படுத்துவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் சித்தமாய் இருப்பார் என்றும் பார்வோன் முடிவுக்கு வந்தார். பார்வோன் தன் விருப்பப்படி ஆளுகைச் செய்யும் வல்லமையுடையவராகக் காணப்பட்டார் மற்றும் தன்னுடைய இராஜ்யத்தில் எவரை வேண்டுமானாலும் அதிகாரத்திற்கு உயர்த்துவதற்குரிய சுயாதீனம் உடையவராய் இருந்தார்; மேலும் சர்வ வல்லமையுள்ள தேவனால் நம்பப்பட்டவரும் மற்றும் அவரால் நண்பனாக்கப்பட்டவருமான யோசேப்பைக் காட்டிலும், அதாவது தேவனால் இரகசியங்கள் தெரிவிக்கப்பட்டவரும் மற்றும் தெரிவிப்பதற்குக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டவருமான யோசேப்பைக் காட்டிலும், வேறெவர் மேலும் நம்பிக்கை வைத்திட முடியாது என்று பார்வோன் ஞானமாய் முடிவெடுத்தார். இங்கும் கர்த்தருடைய ஜனங்களுக்கும் மற்றும் அனைவருக்கும் ஒரு படிப்பினை உள்ளது, அதென்னவெனில் கர்த்தருடைய ஜனங்கள் பரிபூரணமானவர்கள் இல்லை என்றாலும், நெருக்கடியான (emergency) வேளைகளில், மற்றவர்கள் மீது நம்பிக்கையை வைப்பதைக் காட்டிலும், யார்யார் மீது கர்த்தர் நம்பிக்கை வைத்திருக்கின்றாரோ, அப்படிப்பட்டவர்கள் மீது நம்பிக்கை வைப்பது பாதுகாப்பானதாய் இருக்கும் என்பதேயாகும்.

யோசேப்பு உடனடியாக எகிப்தின் பிரதம மந்திரி ஆக்கப்பட்டார். யோசேப்பு பார்வோனின் பிரதிநிதியாகக் காணப்பட்டார் மற்றும் இவர் ரஷ்யாவின் சர்வாதிகாரி மற்றும் துருக்கி நாட்டின் சுல்தான் (அ) பிரதிநிதி தவிர, மற்றபடியுள்ள ஐரோப்பிய நாட்டின் பிரதம மந்திரி அல்லது சக்கரவர்த்தியைக் காட்டிலும் மாபெரும் அதிகாரம் உடையவராய்க் காணப்பட்டார். சிறையிலிருந்து, சிங்காசனத்திற்கு அடுத்த நிலைக்கு உயர்த்தப்படுவதற்குரிய சாத்தியக்கூறு குறித்துச் சிலர் சந்தேகிக்கிறவர்களாகக் காணப்படுகின்றனர்; இதற்குக் காரணம் இவர்கள் கிழக்குத் திசை நாடுகளின் பழக்க வழக்கத்தை அறியாமல் காணப்படுவதே ஆகும். துருக்கி நாட்டின் சுல்தானைக் குறித்து ஒரு கதைச் சொல்லப்படுவதுண்டு. இந்தச் சுல்தானுக்கு ஒருநாள் கடுமையான பல்வலி ஏற்பட, அதுவும் இவருடைய வழக்கமான பல் மருத்துவர் ஊரில் இல்லாதபோது, ஏதேனும் ஒரு பல் மருத்துவரைக் கண்டுபிடித்து, வரவழைத்து வரும்படிக்கு, இவருடைய வேலைக்காரர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். வேலைக்காரர்கள் மிகவும் தரித்திர நிலையில் காணப்பட்ட ஒரு பல் மருத்துவரைக் கண்டுபிடித்து, அவர் சுல்தானின் முன் கொண்டுவரப்படத்தக்கதாக, அவருக்குத் தகுதியான வஸ்திரங்களை அணிவித்து அழைத்து வந்தார்கள்; பல் மருத்துவர் தனது வேலையை முடித்த பிற்பாடு, அவருக்கு சுல்தான் பட்டப் பெயரையும், பாஷாவுக்குரிய (துருக்கியில் உயர்ந்த பதவியிலுள்ள அதிகாரிக்குரிய) ஊதியத்தையும், ஒரு பட்டணத்தையும், நாட்டில் குடியிருப்பதற்கான இடத்தையும், செல்வங்கள் முதலியவைகளையும் கொடுத்தார். இதைக் காட்டிலும் மிதமிஞ்சிய நிலையிலொன்றும் யோசேப்பினுடைய அனுபவம் காணப்படவில்லை. பதிவுகள் தெரிவிக்கவில்லை என்றாலுங்கூட யோசேப்புக்குத் தெய்வீகக் கிருபை இருக்கின்றது என்பதற்கான சாட்சியங்களைத் தவிர, அவர் போத்திபாரின் வேலைக்காரனாக முன்பு இருந்தபோது கொண்டிருந்த நற்பண்புகள் குறித்தும், சிறையில் யோசேப்பு நம்பிக்கைக்குரிய விசாரணைக்காரனாக இருந்தது குறித்தும் பார்வோனுக்கு விவரங்கள் சில தெரிவிக்கப்பட்டதினிமித்தமும், யோசேப்பு நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் பாத்திரமான ஒரு மரியாதைக்குரிய மனுஷன் என்று பார்வோனுடைய மனமானது, திருப்தியடைந்தது என்பதில் ஐயமில்லை. இப்படியாகவே நம்முடைய காரியங்கள் அனைத்திலும்கூட, நிலைமை மாறுவதற்குரிய காலம் ஒன்று உண்டு; நாம் தவறாய்ப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தால் மற்றும் தவறாய்த் திரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தால், "உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப் பண்ணுவார்" என்று கர்த்தர் சொல்லியிருந்த

பிரகாரமாகவே, இறுதியில் உண்மை வெளிக்கொண்டு வரப்படும் (சங்கீதம் 37:6). நாம் கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் மற்றும் நாம் அவருக்கு உண்மையாய்க் காணப்படும் பட்சத்தில், சகலமும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று வாக்களித்துள்ளவரின் வல்லமையையும், அன்பையும், ஞானத்தையும் குறித்துக் கேள்வி எழுப்பாமல், இப்படியான (தவறாய் நாம் புரிந்துகொள்ளப்படும்) அனுபவங்களை அவர், நமக்கு நியமித்ததான ஏற்பாடுகளெனப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டிட வேண்டும்.

பார்வோனுடைய மோதிரம் என்பது முத்திரை மோதிரமாகும். முற்காலங்களில் இராஜ கட்டளைகளானது, நம் காலத்தில் செய்யப்படுவது போன்று கையெழுத்திட்டு, முத்திரையிடப்படாமல், மாறாக முத்திரை மாத்திரமே இடப்படுகின்றது; இராஜா தனிப்பட்ட அடையாள சின்னமுடைய முத்திரையை வைத்திருப்பார் மற்றும் இந்த முத்திரையிடப்பட்ட கட்டளையானது எங்கெல்லாம் அனுப்பப்படுகின்றதோ, அங்கெல்லாம் அது இராஜாவிடமிருந்து வந்தது என அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றது; இதனை போலியாய்ச் செய்வது என்பது பெருங்குற்றமாகவும், மரணத்தண்டனைக்கு ஏதுவானதாகவும் இருந்தது. இப்படியான முத்திரையே யோசேப்புக்குக் கொடுக்கப்பட்டது மற்றும் இந்த முத்திரையினுடைய அதிகாரத்தின் மூலமாக, ஏழு வருட பரிபூரண விளைவின் காலத்தில் விளையும் அதிகப்படியான விளைச்சல்களைச் சேகரிப்பதும், அதைச் சேர்த்து வைப்பதற்கெனக் களஞ்சியங்களைக் கட்டுவதும் தொடர்புடைய விஷயத்தில் யோசேப்பினால் கட்டளைகள் பிறப்பிக்க முடியும்.

பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்த்தப்பட்ட யோசேப்பிற்கான கனமும், தனிச் சிறப்புகளும் நமது கர்த்தர் இயேசுவினுடைய மகிமையான உயர்த்தப்படுதலைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது (இந்த மகிமையான உயர்த்தப்படுதலில், அவரது சரீரமாகிய சபை சீக்கிரத்தில் பங்கடையப்போகிறார்கள்). நமது கர்த்தர் சோதனைக்குட்படுத்தப்பட்டார்; அவர் உண்மையுள்ளவராக இருந்தும், அவர் மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலைக்குள் கடந்து போனார்; மூன்றாம் நாளிலே அவர் விடுவிக்கப்பட்டு, அண்டசராசரத்தினுடைய சிங்காசனத்தில், தேவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் வல்லமைக்கும், மகா மகிமைக்கும் உயர்த்தப்பட்டார். தெய்வீக முத்திரை மோதிரமானது அவருக்குக் கொடுக்கப்பட்டு, "பிதாவை கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்றும், "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது" என்றும், அவருடைய கட்டளையின் பேரிலேயே அனைத்தும் செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது (யோவான் 5:23; மத்தேயு 28:18). கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளப்பட்ட சரீரத்தினுடைய உண்மையுள்ள அங்கத்தினர்களாகிய சபை, அதாவது ஜெயங்கொள்பவர்களுங்கூடப் பல்வேறு விதங்களில் பரீட்சிக்கப்பட வேண்டும் மற்றும் நீதியினிமித்தமாக தற்காலத்தில் பாடுபட வேண்டும், தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட வேண்டும் மற்றும் தவறாய்த் திரித்துக் காண்பிக்கப்பட வேண்டும். இவர்களும் மரணம் எனும் சிறைச்சாலைக்குள் கடந்து செல்ல வேண்டும் மற்றும் மூன்று மகா நாட்களின் (ஆயிர வருடமாகிய நாட்களின்) பல பாகங்களில் அங்குக் காணப்பட வேண்டும்; ஐந்தாவது ஆயிர வருடத்தின் பகுதிக் கால அளவிலும், ஆறாவது ஆயிர வருடம் முழுவதிலும் மற்றும் ஏழாவது ஆயிர வருடக் காலத்தின் ஆரம்பப் பகுதி வரையிலும் (அல்லது இவர்கள் தங்கள் கர்த்தரும், தலையுமான கிறிஸ்துவோடுகூட இராஜ்யத்தின் மகிமையான காரியங்களில் உடன் சுதந்திரர்களாகும்படிக்கு இவர்களது உயிர்த்தெழுதலுக்குரிய ஏற்றக் காலமாகிய மூன்றாம் ஆயிர வருடமாகிய நாள் வருவது வரையிலும்) இவர்கள் மரணம் எனும் சிறைச்சாலையில் காணப்பட வேண்டும். இவைகள் அனைத்தும் யோசேப்பு சிறைச்சாலையில் செலவழித்ததும், பின்னர் உயர்த்தப்பட்டதுமான காரியங்கள் நிகழ்ந்த மூன்று வருடங்களின் பாகங்களில் அருமையாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

யோசேப்பிற்கு வழங்கப்பட்ட புதிய எகிப்திய பெயரின் அர்த்தத்தை, **கேனான் கூக்கீ** அவர்கள், **"ஜீவ அப்பம்"** என்று வழங்குகின்றார். பரிபூரண விளைச்சலுள்ள ஏழு வருடங்களின் கோதுமையானது, ஏழு வருட பஞ்ச காலத்தின்போது ஜனங்கள் அனைவரின் தேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படுவதற்குப் போதுமானதாய்க் காணப்படத்தக்கதாக, கோதுமையை மாபெரும் அளவில் சேகரிப்பதாகிய யோசேப்பினால் நிறைவேற்றப்பட்டதான மாபெரும் வேலையைக் கண்ணோக்கிப் பார்க்கையில், இப்புதுப்பெயர் அவருக்குப் பொருத்தமானதாகவே இருக்கின்றது. இப்படியாக நாம் பார்க்கையில், நாம் மீண்டுமாக, "ஜீவ அப்பம்" என்று தம்மைக் குறித்துக் கூறிட்ட கிறிஸ்துவைப்பற்றி நினைப்பூட்டப்படுகின்றோம். கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட்ட வேலையின் காரணமாகவே எகிப்தியர்களால் அடையாளப்படுத்தப்படும் மனுக்குலத்திற்கு ஜீவ அப்பம் அருளப்பட்டது மற்றும்

யோசேப்பினுடைய சகோதரர்கள் மற்றும் யாக்கோபு அடையாளப்படுத்தும் கிறிஸ்துவின் சகோதரர்களுக்கும், கிறிஸ்து மூலம் ஜீவ அப்பம் வருகின்றதாய் இருக்கின்றது என்பதையும் நாம் நினைப்பூட்டப்படுகின்றோம். யோசேப்பு மற்றும் அவரது வேலையின் மூலமாக அல்லாமல், மற்றபடி சகல ஜனங்களும் ஜீவன் அடைய முடியாதது போலவும் மற்றும் யோசேப்பு பார்வோனின் பிரதிநிதியாக இருந்து, தன்னுடைய வேலையைச் செய்தது போலவும், நிஜத்திலுங்கூட நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலும் மற்றும் அவர் மூலமாயும் அல்லாமல் மற்றபடி உலகத்தில் எவராலும் ஜீவன் அடைய முடியாது மற்றும் இந்த வேலையானது அண்டசராசரத்தின் மேலான இராஜாவாகிய நமது பரம பிதாவின் நாமத்தில், பிதாவின் பிரதிநிதியான கிறிஸ்துவினால் நிறைவேற்றப்படும்.

நியாயமான விளக்கங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும், குற்றம் கண்டுபிடிப்பதற்கும் சிலர் எப்போதும் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர்; மேலும் இப்படிப்பட்டவர்கள் பரிபூரணமான விளைச்சல் காணப்படும் வருஷங்களுடைய அறுவடையில், யோசேப்பு ஐந்தில் ஒரு பாகம் வாங்கிக்கொண்டதைக் குறித்தும், அதைப் பின்னாட்களில் பார்வோனுடைய அதிகாரத்தையும், பார்வோன் தன் எல்லைக்குட்பட்ட ஜனங்கள் அனைவரின் மீதான தனது கட்டுப்பாட்டையும் பெலப்படுத்துவதற்குப் பயன்படுத்தினது குறித்தும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். விளைச்சலில் ஐந்தில் ஒரு பாகம் கேட்கப்படுவது என்பது நியாயமற்ற வரி என்று கருதப்பட முடியாது என்றும், இன்றும்கூட எகிப்தில் இதுவே வாடகையாக வசூலிக்கப்படுவது வழக்கமாக இருக்கின்றது என்றும், இதைக் காட்டிலும் அதிகமாகக்கூட நம்முடைய நாடுகளிலும், நாகரிகமான மற்ற நாடுகளிலும் அடிக்கடி வசூலிக்கப்படுகின்றது என்றும் நாம் பதில் கூறுகின்றோம். ஆனால் ஜனங்களிடமிருந்து வரியாக ஐந்தில் ஒரு பாகம் வசூலிக்கப்படுகின்றதா என்பதை நாம் அறியோம். அதிகமான விளைச்சல் காணப்படும் காலத்தில் கோதுமையின் விலை மிகக்குறைவாகக் காணப்படுகையில், கோதுமை சேகரிப்பதற்குரிய செலவுகளுக்குப் பார்வோனின் பணப்பையிலிருந்தும், வங்கியிலிருந்தும் பணம் செலவழிக்கப்பட்டதா என்பதையும் நாம் அறியோம். இதற்கான பதிவுகள் இல்லையென்றாலும், பின் குறிப்பிட்டுள்ளபடி பார்வோனின் பணப்பையிலிருந்து செலவழிக்கப்படுவதற்கான வாய்ப்புண்டு என்று நாம் எண்ணுகின்றோம்; மேலும் வசூலிக்கப்பட்ட ஐந்தில் ஒரு பாகமானது, அரியணையின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது என்றும், இப்படிச் செய்வது என்பது சகல ஜனநாயகக் கருத்துக்களுக்கும் முரணானது என்றுமுள்ள விஷயத்தைப் பொறுத்தமட்டில், குடியரசு/ஜனநாயக அரசாங்கமே விழுந்துபோன மனுக்குலத்திற்கு அனைத்து விதங்களிலும் சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டதாக உள்ளது என்பதைத் தவிர, வேறெதையும் நாம் சொல்வதற்கில்லை. சமுதாய ரீதியிலும், அரசியல் ரீதியிலும், ஒழுக்க ரீதியிலுமான தற்போதைய ஒழுக்கக்கேடுகளுக்கான தீர்வாக, தேவன் ஜனநாயக வடிவில் ஆயிர வருட அரசாட்சியை அறிமுகப்படுத்துவதற்குச் சித்தமாய்க் காணப்படவில்லை; மாறாக முடியரசு வடிவிலேயே ஆயிர வருட அரசாட்சியை அறிமுகப்படுத்திட சித்தமாய் இருக்கின்றார்; அது முற்றும் முழுமையாக முடி மன்னருக்குரிய ஆட்சியாக இருக்கும், அதில் உலகத்தை மீட்டுக்கொண்டவரான அவரது குமாரன் உலகத்தை ஆசீர்வதிப்பதற்கென எதேச்சதிகாரம் (தன் விருப்பம்போல் ஒருவர் ஆளுகைப் புரியும் அதிகாரத்தை) செலுத்தி அரசாள்பவராகக் காணப்படுவார்; குமாரன் தீமையை வெல்வதற்கும், மனுக்குலம் முழுவதையும் நீதியின் கொள்கைகளைப் பற்றின முழுமையான புரிந்துகொள்ளுதலுக்குள் கொண்டுவருவதற்கும் மற்றும் நிழலில் எகிப்தின் ஜனங்கள் பார்வோனின் நிரந்தரமான ஊழியர்களானதுபோல, மனுக்குலமும் மாபெரும் மேலான இராஜாவின் பிரஜைகளென என்றென்றும் காணப்படத்தக்கதாக, அவர்கள் விரும்புவதற்கேற்ப, அவர்களைத் தேவனுக்கு முழு இசைவாய்க் கொண்டுவருவதற்கும் எதேச்சதிகாரம் செலுத்தி அரசாள்பவராகக் காணப்படுவார்.

(பட்சமாய் இருத்தல் என்ற அர்த்தமுடைய) ஆஸ்நாத்தை யோசேப்பிற்கு மனைவியாகப் பார்வோன் கொடுத்து, எகிப்தை ஆசீர்வதிக்கும் வேலையில், யோசேப்போடு துணைவியாகவும், உடன் வேலையாளாகவும் இருந்து, கனத்திலும், மேன்மையிலும் யோசேப்போடு ஆஸ்நாத் பங்காளியானது போல, பிதாவாகிய தேவனும் உயர்த்தப்பட்ட தம்முடைய குமாரனுக்கு, நமது கர்த்தருக்கு ஒரு மணவாட்டியை அருள நோக்கம் கொண்டிருக்கின்றார் மற்றும் இந்த மணவாட்டியும் விரும்பப்பட்டவளாக இருப்பாள். இவள் நிச்சயம் பண்ணப்படுவதற்கும், திருமணத்திற்காக ஆயத்தம் பண்ணப்படுவதற்கும் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் தேவையாய் இருந்தது மற்றும் இப்பொழுதோ இவள் அவர் அங்கீகரிக்கும் குணலட்சணங்களினால் சித்திரத் தையலிட்ட இவளது கர்த்தரின் மகிமையான வஸ்திரத்தைத் தரித்து, அழகுப்படுத்தப்பட்டவளென, மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக இராஜாவின் அருகே கொண்டுவரப்படுவதற்குரிய காலம் சமீபமாய் உள்ளது (சங்கீதம் 45:13, 14).

யோசேப்பிற்கு வந்த வளமையினிமித்தம், அவர் தலைக்கனம் அடையவில்லை; இந்த வளமையைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் பாத்திரமானவராய்க் காணப்பட்டதை நிரூபித்தவராய் இருந்தார்; வளமையை ஞானமாய் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை அறியத்தக்கதாக, யோசேப்பு தன்னுடைய முந்தைய அனுபவங்களினால் பயனடைந்தவராய் இருந்தார். யோசேப்பு தன்னுடைய வேலையில் சோம்பலாய்க் காணப்படாமல், மாறாக வேலையிலே அனலாயிருந்தார்; தனக்கு முன்பு கர்த்தர் வழியைத் திறந்து வைத்துள்ளதைக் கண்ட யோசேப்பு, தன்னுடைய வேலையை நிறைவேற்றிடுவதற்கு உடனடியாக முயற்சிகளை எடுத்ததாக நாம் பார்க்கின்றோம். எவ்விடம் களஞ்சியங்களைக் கட்டுவதற்கானச் சரியான இடமாக இருக்கும் எனத் தீர்மானிப்பதற்கு, எகிப்து எங்கும் போய்ப் பார்ப்பதே அவரது முதல் கட்ட நடவடிக்கையாக இருந்தது; கர்த்தருடைய ஆசீர்வாதமும் அவரோடு தொடர்ந்து காணப்பட்டு, அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையில், அவரைத் தழைத்தோங்கச் செய்தது. இப்படியாகவே நம் விஷயத்திலும்கூடக் காணப்பட வேண்டும்; கர்த்தருக்கான ஊழியம் விஷயத்தில் எவ்விதமான பகுதிகளிலும், கர்த்தர் வாய்ப்பாகிய கதவை நமக்காக திறந்திடும்போது, நாம் அவருக்கான வைராக்கியத்துடனும், நம்மை அழைத்ததற்கான காரணம் குறித்த வைராக்கியத்துடனும், நாம் உடனடியாகப் பிரவேசித்திட வேண்டும். இப்படியாக நாம் காணப்படுவது என்பது, கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்வதற்குரிய ஒரு நிபந்தனையாகும். ஒருவேளை நாம் சோம்பலாகவோ, வாய்ப்புகளைக் கவனிப்பதில் கவனமற்றவர்களாகவோ காணப்படுவோமானால், வாய்ப்புகளானது நம்மிடமிருந்து மாற்றப்பட்டு, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதில் ஐயமில்லை, ஏனெனில் கர்த்தர் தம்முடைய நோக்கத்திற்காக ஊழியம்புரியும்படிக்கு, இன்னொருவரை எழுப்புவதற்கு வல்லமையுள்ளவராக இருக்கின்றார் (அதாவது நம்மைக் கொண்டு ஊழியம் செய்யும்படிக்கு, நம்முடைய சுயமாய்ச் சிந்தித்துச் செயல்படும் நிலையை குறுக்கிடாமல், அவர் இன்னொருவரை எழுப்புவதற்கு வல்லமையுள்ளவராக இருக்கின்றார்). தேவனோடுகூட உடன் வேலையாட்களாக இருக்கும் விஷயத்திலும், அதிலும் விசேஷமாக நமது கர்த்தரும், ஆண்டவருமான இயேசு செய்துவருகிறதும் அவரது மணவாட்டிகளென, உடன் சுதந்தரர்களென அழைக்கப்பட்டுள்ள நாம் பங்குகொள்ளும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கிறதுமான இந்த மாபெரும் வேலை தொடர்புடைய விஷயத்திலும் நாம் எப்படிப்பட்ட ஒரு சிலாக்கியத்தினை அனுபவிக்கின்றோம் என்பதை அதிகமதிகமாய் உணர்ந்து கொள்வோமாக.

தேவனைக் கனப்படுத்துபவர்களை, தேவனும் தமக்குரிய விதத்தில் கனப்படுத்துவார் மற்றும் அவரது விதம்/வழி, சிறந்த வழியென இறுதியில் எப்போதும் கண்டுகொள்ளப்படும். நாம் வாயினால் மாத்திரம் கர்த்தருக்குக் கனத்தைச் செலுத்தாமல், விசேஷமாக ஜீவியத்தின் காரியங்களில், அதாவது குடும்ப/வீட்டுக் கடமைகளில், தொழில் ரீதியான கடமைகளில், சத்தியத்திற்கான ஊழியங்கள் தொடர்புடைய ஜீவியத்தின் காரியங்களில், அவரது புண்ணியங்களை அறிவிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும்; அனைத்துக் காரியங்களிலும், அவருக்குச் சொந்தமான நம்முடைய சரீரங்களிலும், ஆவியிலும் நாம் தேவனை மகிமைப்படுத்துகின்றவர்களாய் இருக்க வேண்டும். மேலும் இப்படியாகச் செய்பவர்கள் கர்த்தரினால் ஆசீர்வதிக்கப்பட்டு, அவரால் பயன்படுத்தப்படுவார்கள். இங்கு அனுமதிக்கப்படும் சிறிய ஊழியங்கள் உண்மையில் கனம் வாய்ந்தவைகளே; தற்காலத்தின் இந்தச் சிறிய ஊழியங்களுக்கு உண்மையாய் இருப்பவர்கள் இறுதியில் இராஜ்யத்தின் மாபெரும், பிரமாண்டமான ஊழியங்களை ஆசீர்வாதங்களாகவும், பலன்களாகவும் பெற்றுக்கொள்வார்கள்.

---

R2890/310/268.

# விலை மதிப்பில்லா முத்து.

**விலை மதிப்பில்லா முத்தொன்றை நான் தேடினேன், தேடினேன்,**

The pearl of greatest price I sought.

**ஆழ்கடல் எங்கும் நீந்திப்போய்த்தேடினேன்.மூழ்கி மூழ்கித்தேடினேன்,**
**ஐயகோ, நான் எவ்வளவு தேடியும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லையே.**
Alas! I sought, but found it not.

The fruits of pleasure passed untasted,
And still with eager zeal I hasted,
**அதனால் இன்னமும் வைராக்கியத்துடனே, துரிதமாகவே நான் தேடினேனே,**
**அந்த சொத்தின் கவர்ச்சியால்**
The charms of fortune to entice
**எப்படியேனும் அதைச் சொந்தமாக்கிக்கொள்ள நான் விரும்பினேன்,**
**ஏதாவது ஒரு பரிசாகவோ,** With some new gift or sacrifice.
**அல்லது பலியினால்கூட**
**அதைப் பெற்றுக் கொள்ளவே ஏங்கினேன்,**
Until, one sad, discouraged day,
**சுந்தோஷமில்லாத, அமைதலில்லாத நாள்வரையிலும் நான் தேடி அலைந்தேன்,**
A spirit, meek and quiet, lay
Upon my brow a hand restraining,

**ஆனால் ஒரு ஆவி, அமைதலிலும், தாழ்மையிலும்**
**என் நெற்றியின் மீது வந்து கைஅமர்த்தியதே.**
**என் உதடுகள் முறுமுறுப்பதைத் தள்ளியே வைத்ததுவே,**
**என் தலையின் மீதே ஓர்கரம் வந்து அமர்ந்து என்னை ஆசுவாசப்படுத்தியதே,**
**பரிபூரண ஓய்வால் நான் ஓய்வுகொண்டே**
**சந்தோஷமாகவே அனுபவித்திடும் வேளையிலே,**
And while I joyed in perfect rest,
I held the gem, of all the best.

**எனக்கு அந்த முத்து, விலையேறப்பெற்ற முத்து, நான் கஷ்டப்பட்டுத்தேடிய முத்து,**
**எல்லாவற்றிலும் மிக உயர்ந்த முத்து கிடைக்கப் பெற்றதே.**

The pearl of greatest price I sought.
Alas! I sought, but found it not.
The hours of work and sleep were wasted,
It smoothed away my lips complaining,
Upon my brow a hand restraining;

R 2893

# “இரக்கமுள்ள யோசேப்பு”

## ஆதியாகமம் 45:1-15

“நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.”
—ரோமர் 12:21

மனிதர்களுடைய காரியங்களிலுள்ள தெய்வீகப் பராமரிப்புப் பற்றின விஷயமே இப்பாடத்தினுடைய சாராம்சமாகும். யோசேப்பு எகிப்தினுடைய பார்வோனுக்கு அடுத்த நிலையில் ஒன்பது வருடங்கள் காணப்பட்ட பிற்பாடு, அவருக்கு முப்பத்தொன்பது வயதாய் இருந்தது. பரிபூரண விளைவுள்ள ஏழு வருடங்கள் கடந்துபோய்விட்டன; எகிப்தின் தானியக் களஞ்சியங்களானது, திரளான தானியங்களினால் நிரம்பியிருந்தது மற்றும் உரைக்கப்பட்டப்படி வந்திட்ட ஏழு வருட பஞ்ச காலத்தில், இரண்டு வருடங்களும் கடந்துபோய்விட்டன. யோசேப்பு தன்னுடைய தகப்பனோடும், சகோதரர்களோடும் தொடர்புகொள்வதற்கு எவ்விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாததுபோன்று தோன்றுகின்றது; இதற்குக் காரணம், அந்நாட்களில் தொடர்புகொள்வதற்கான வழிமுறைகள் மிகவும் சிறிய அளவிலேயே இருந்ததினால் இருக்கலாம்; இன்னுமாக தொடர்பு கொள்ள முற்படாததற்குக் காரணம், யோசேப்பு சில வருடங்களாக தெய்வீகப் பராமரிப்பானது, தனது காரியங்களை வழி நடத்திக்கொண்டுவருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்டு வந்தார் என்றே நாம் மிகக் குறிப்பாய் எண்ணுகின்றோம். யோசேப்பு தன்னுடைய இளம் வயதில் தனக்கு வந்திட்டச் சொப்பனங்களை நினைவில் வைத்திருந்தார் மற்றும் அவைகள் இப்பொழுது நிறைவேறி வருவதையும் அவரால் காணமுடிந்தது. ஆகவே தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டிருக்கும் அக்காரியத்தை, யோசேப்பு தெய்வீக மேற்பார்வையின் கீழாகவே விட்டுவிட்டார். யோசேப்பு பஞ்சத்தைக் குறித்தும், அது எவ்வாறு பாலஸ்தீனியாவையும் பாதிக்கும் என்பது குறித்தும், எவ்வாறாக தனது தகப்பனையும், சகோதரர்களையும், அவர்கள் குடும்பங்களையும், மந்தைகளையும் பாதிக்கும் என்பது குறித்தும் சிந்தித்திருந்திருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை. சுற்றுப்புறங்களிலுள்ள மற்ற ஜனங்கள் தானியம் வாங்குவதற்கென எகிப்துக்கு வருவதுபோல, எபிரெயர்களும் எகிப்துக்கு வருவார்கள் என்று யோசேப்பு எதிர்பார்த்திருந்திருப்பார் என்பதிலும் சந்தேகமில்லை; எபிரெயர்கள் பஞ்சகாலத்தினுடைய, இரண்டாம் வருஷத்தின் முடிவில் எகிப்துக்கு வரவேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள்.

பிரதான அதிகாரியினுடைய அனுமதியில்லாமல், அந்நிய நாட்டினர்களுக்குத் தானியங்கள் விற்பனை செய்வதைத் தடைப்பண்ணுகிற கட்டளைகள் ஏதேனும் இருந்திருக்க வேண்டுமென்று நாம் அனுமானிக்கின்றோம்; ஆகையால்தான் யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பிடம் விவரங்கள் சொல்லத்தக்கதாக, யோசேப்பின் முன்னிலையில் கொண்டு வரப்படுவதற்கான கட்டாயத்துக்குள்ளானார்கள். யோசேப்பு தனது சகோதரர்களைப் பரீட்சிக்கத்தக்கதாக, அவர்களை வேவுகாரர்கள், அதாவது அயல்நாட்டின் இரகசியமான தூதர்கள் என்று கூறி, முதலாவதாக சிறையில் அடைக்கும் சம்பவமானது, தடைப்பண்ணும் கட்டளைப் பற்றின நம்முடைய மேற்கூறிய அனுமானத்திற்கு ஆதரவளிக்கின்றது; அதாவது தானியம் விஷயத்தில் எகிப்தின் செல்வச் செழிப்பை அறிந்துகொண்டு, எகிப்தின் மீது தாக்குதல் பண்ணத் திட்டம்போடும் அயல் நாட்டாரின் வேவுக்காரர்களென யோசேப்பு, தன் சகோதரர்களைக்கூறிச் சிறையில் அடைத்தார். இது யோசேப்பு தனது சகோதரர்களுடைய வீட்டுச் சூழ்நிலைகள் குறித்தும், தனது தகப்பனைக் குறித்தும், எகிப்திற்கு வந்திருந்த தன்னுடைய சகோதரர்கள் மத்தியில் காணப்படாத தன்னுடைய தம்பியாகிய பென்யமீனைக் குறித்தும் திட்டவட்டமாய் விசாரிப்பதற்கு வாய்ப்பை அளித்தது. பஞ்சம் தொடரும் என்பதினால், அவர்கள் மீண்டுமாக எகிப்துக்கு வரவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகக் காணப்படுவார்கள் என்பதை யோசேப்பு நன்கு அறிந்தவராக, சிமியோனை எகிப்திலே பிணைக் கைதியாக வைத்து, அவர்கள் மீண்டும் வருகையில், பென்யமீனை அழைத்து வருவதன் முலம், அவர்கள் சொல்லிய வார்த்தைகளின் உண்மையை நிரூபிப்பதற்கான வாய்ப்பையும் அவர்களுக்கு இறுதியாக அருளினார். இந்த அனுபவங்களானது, அந்தப் பத்துச் சகோதரர்களுக்கும் விலையேறப்பெற்ற படிப்பினையாக இருந்தது மற்றும் இந்த அனுபவங்களானது, யோசேப்பின் விஷயத்தில் அவர்கள் கடந்த காலத்தில் செய்த தவற்றை, அவர்களுடைய மனங்களுக்கு நினைப்பூட்டினது, ஏனெனில் தங்களுக்கான இந்தப் பிரச்சனையை, தங்களுக்கான தண்டனையென அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். “நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரையொருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது ரூபன் அவர்களை

பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான். யோசேப்பு துபாசியைக்கொண்டு அவர்களிடத்தில் பேசினபடியால், தாங்கள் சொன்னது அவனுக்குத் தெரியும் என்று அறியாதிருந்தார்கள்" (ஆதியாகமம் 42:21-23).

யோசேப்பு கடின இருதயமுடையவரல்ல, மாறாக தன்னுடைய சகோதரர்களை நடத்தும் விஷயத்தில் ஞானமாய் நடந்துகொண்டார். எந்த ஒரு காரியத்தையுங்கூட அவர் பழிவாங்கும் நோக்கத்தில் செய்யவில்லை. யோசேப்பு, தேவனுடைய கண்ணோட்டத்தையே கொண்டிருந்தார்; அதாவது தீமை செய்பவர்கள், பாவத்தினுடைய பாவ தன்மையினை மனதில் முற்றிலுமாக உணர்ந்துகொள்ளத்தக்கதாக, தீமை செய்பவர்கள் மீது கொஞ்சம் தண்டனை வருவது சரியானதே என்ற தேவனுடைய கண்ணோட்டத்தையே, யோசேப்பும் கொண்டிருந்தார். இவ்வாறாகவே பிள்ளைகளுடைய பெற்றோர்களும், பாதுகாவலர்களும், பிள்ளைகள் தவறு செய்தமைக்கான, நியாயமான, மிதமான தண்டனையை அவர்களுக்குக் கொடுக்கும் விஷயத்தில், பெற்றோர்கள் தங்களது அன்பும், அனுதாபமும் இடையூறாக இருந்திட அனுமதிக்கக்கூடாது. மாறாக யோசேப்பின் விஷயத்தில் காணப்பட்டதுபோலவே, தண்டனைக் கொடுக்கும் விஷயமானது, அனுதாபத்தினாலும், அன்பினாலும்தான் இயக்கப்பட வேண்டும்; அதாவது சரியான வாய்ப்பையும், அதிகளவிலான ஆசீர்வாதத்தையும் திட்டமிடுகிறதாகவே காணப்பட வேண்டும்.

அவர்களது தானியங்கள் தீர்ந்துபோய், தானியம் தேவை என்ற நிலை வந்தபோது, இரண்டாம் முறையாக தானியம் வாங்கத்தக்கதாக, பென்யமீனை தன்னுடைய சகோதரர்களோடுகூட, எகிப்துக்குப்போக அனுமதிப்பதற்கு இறுதியில் யாக்கோபு ஒத்துக்கொண்டார்; அதுவும் பென்யமீன் இல்லாமல் தான் வீடு திரும்புவதில்லை என்று யூதா வாக்களித்த பிற்பாடே, பென்யமீனை அனுப்புவதற்கு யாக்கோபு சம்மதித்தார். யோசேப்பின் சகோதரர்கள், யோசேப்பினுடைய வீட்டிற்கு இரண்டாம் முறையாக வந்ததும், தாங்கள் முந்தின தருணத்தில் சொல்லியிருந்த பென்யமீனோடு வந்ததும், அவர்கள் மிகவும் கிருபையாய் உபசரிக்கப்படுவதற்கும், சிமியோன் விடுவிக்கப்படுவதற்கும் போதுமானதாய் இருந்தது. சகோதரர்கள் பதினொரு பேரும் எதிர்பார்த்திராத விதத்தில், அதிபதியாகிய யோசேப்புடன் விருந்துண்ண வரவேற்கப்பட்டார்கள். சகோதரர்கள் அவரவர் வயதின்படியே பந்தியைச் சுற்றி, ஏதோ ஒருவிதமான ஏற்பாட்டினால் அமர்த்தப்பட்டிருப்பதைக் கண்டு, யோசேப்பின் சகோதரர்கள் ஆச்சரியமடைந்தனர்; இன்னுமாக அதிபதியானவருடைய விசேஷித்த அக்கறைக்கான ஆதாரமாக, பென்யமீனாகிய தங்களது இளைய சகோதரனுக்கு, ஐந்து மடங்கு போஜனத்தில் பங்குகள் கொடுக்கப்பட்டதினிமித்தமும் ஆச்சரியமடைந்தார்கள். தங்களுக்குக் கிடைத்திட்ட இந்த அதிர்ஷடத்தைக் குறித்து அவர்கள் மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை; அவர்கள் தங்கள் வீட்டை நோக்கிப் பிரயாணிக்க ஆயத்தமாகுகையில், பின்வருமாறு தங்களுக்குள்ளாக எண்ணியிருந்திருக்க வேண்டும் என்பதிலும் ஐயமில்லை; அதென்னவெனில், "**நாம் முந்தினமுறை எகிப்துக்கு வந்திருந்தபோது, நமக்கு வந்தப் பிரச்சனைகளை நமக்கான தண்டனைகள் என்றும், அதைத் தேவனே அருளினார் என்றும் எண்ணினோம்; ஆனால் நாம் ஒற்றர்களாக எண்ணப்பட்ட சம்பவம் தற்செயலாய் நடந்த ஒன்றுதான். பாருங்கள் நாம் இப்பொழுது செழித்தோங்குகின்றோம்.**"

ஆனால் அவர்கள் கொஞ்சந்தூரம் போவதற்குள்ளாகவே, அவர்களை அதிபதியின் ஊழியர்கள் தொடர்ந்து பிடித்தார்கள்; அந்த ஊழியர்கள் திருட்டு நடந்துள்ளது என்றும், அதிபதியினுடைய விலையேறப்பெற்ற வெள்ளிப் பாத்திரம், அதாவது எகிப்தியர்களால், "புனிதமான பாத்திரம்" என்று அழைக்கப்படும் வெள்ளிப்பாத்திரம் காணவில்லை என்றும் அவர்களுக்கு அறிவித்தார்கள். யோசேப்பின் சகோதரர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் என்றும், தாங்கள் அப்படியான காரியங்களைச் செய்யும் மனிதர்களல்ல என்றும், தாங்கள் முற்றிலுமாகப் பரிசோதனைப் பண்ணப்படலாம் என்றும் கூறினார்கள். ஒவ்வொருவரின் சாக்குகளும் ஒன்றன்பின் ஒன்றாகப் பரிசோதிக்கப்பட்டு, இறுதியில் பாத்திரமானது பென்யமீனுடைய சாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது; கொஞ்சம் முன்பு மகிழ்ந்திருந்த யோசேப்பின் சகோதரர்கள், இப்பொழுது தாங்கள் சமீபத்தில் அனுபவித்த உபசரிப்புகளைக் கொடுத்திட்ட எகிப்தின் அதிபதியினிடத்திற்கு, கைதிகளாக திரும்பக்கொண்டுவரப்பட்டார்கள். அநேகமாக அவர்கள் மீண்டுமாக யோசேப்பினுடைய காரியத்தை நினைவுகூர்ந்து, "**நாம் கடந்துபோய்விட்டது என்று எண்ணின பொல்லாப்பு, நம்மை இன்னமும் தொடர்ந்துக்கொண்டிருக்கின்றது**" எனத் தங்களுக்குள்ளாகச் சொல்லயிருந்திருக்க வேண்டும். இது நேர்மையினுடைய முக்கியத்துவத்தையும், நீதியின் உருளைச் சக்கரங்கள் சில சமயம் மெதுவாக

அரைத்திட்டாலும் அது நிச்சயமாகவும், நன்கும் அரைக்கும் என்ற கருத்தையும் அவர்களது மனதில் பதிய வைத்திட உதவும் நல்ல படிப்பினையாகக் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை.

பென்யமீன் தன் சகோதரர்களோடு சேர்ந்து, தான் பாத்திரத்தைத் திருடவில்லை என்று மறுத்தார்; மற்றச் சகோதரர்கள் பென்யமீன் கூறினதை நம்பினார்களோ, இல்லையோ, பென்யமீன் மீது விசேஷமாய்ப் பழிச்சுமத்தப்படாதபடிக்குப் பெருந்தன்மையுடன் பழியை அனைவரும் பகிர்ந்துகொண்டார்கள். சகோதரர்கள் அனைவரின் சார்பிலும் யூதா பின்வருமாறு பேசினார்: "என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தைத் தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும், நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள்". தங்களுடைய அக்கிரமத்தின் விவரத்தைப்பற்றி அவர்கள் யோசேப்புக்கு விவரித்துக் கூறவில்லை என்றாலும், தங்களது அக்கிரமம் என்ன என்பது பற்றி அவர்கள் தங்கள் மனதில் நன்கு அறிந்திருந்தனர். தன்னிடத்தில் தனது சகோதரர்கள் காண்பித்திருந்த அதே பொல்லாப்பான மற்றும் பொறாமையான பண்புகளை, அவர்கள் இன்னமும் எவ்வளவு கொண்டிருக்கின்றனர் என்பதை யோசேப்பு அறிய விரும்பி, மற்றவர்கள் அனைவரும் போய்விடலாம் என்றும், பென்யமீனை மாத்திரம் தான் அடிமையாக வைத்துக்கொள்ளப் போகின்றார் என்றும் அறிவித்தார். யோசேப்பினுடைய தந்திரம் பலித்தது மற்றும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் அவருடைய சகோதரர்கள் பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளனர் என்றும், குணலட்சணங்களை வளர்த்தியுள்ளனர் என்றும், இதனால் அவர்கள் இப்பொழுது தங்களுடைய தகப்பனுக்காகவும், அவர்களில் ஒருவர் மற்றொருவருக்காகவும் அனுதாபம் கொண்டுள்ளனர் என்றுமுள்ள உண்மையும் வெளியானது. யோசேப்பின் விஷயத்தில் அவர்கள் கொண்டிருந்த தவறான நடக்கையானது தொடரப்படாமல், மாறாக அதைக் குறித்து அவர்கள் மனவருத்தமே அடைந்திருந்தனர். யூதா சூழ்நிலைகள் அனைத்தையும், யோசேப்புக்கு, துபாசியின் வாயிலாக (மொழிபெயர்ப்பாளனின்) விவரித்தார்; பென்யமீன் மீது யாக்கோபு கொண்டுள்ள அன்பையும், யோசேப்பு மரித்துவிட்டதாக எண்ணி யாக்கோபு அடைந்த துக்கத்தையும், யாக்கோபு தனது குடும்பத்தின் மீது கொண்டுள்ள அக்கறையையும் யூதா மிகவும் தீவிரமாய்க் காண்பித்தப்படியினால், யோசேப்பினால் தனது உணர்வுகளை அடக்கக்கூடாமற்போயிற்று. தன்னுடைய சகோதரர்களுக்குத் தன்னை வெளிப்படுத்த வேண்டிய நேரம் வந்துள்ளது என்பதை யோசேப்பு உணர்ந்துகொண்டு, இப்படியான சந்தர்ப்பத்தில் தனது சகோதரர்கள் அதிகம் தர்மசங்கடத்திற்கு ஆளாகாதபடிக்கு, அனைத்து எகிப்தியர்களையும் அறையிலிருந்து வெளியேறும்படிக்குக் கட்டளையிட்டார்; பின்னர்த் தான்தான் அவர்களது சகோதரனாகிய யோசேப்பு என்று சுருக்கமாகவும், அனுதாபத்துடனும்/அன்புடனும் அவர்களுக்கு விளக்கினார்.

தாங்கள் ஒருவேளை, யோசேப்பு காணப்படும் அதிகாரமுள்ள ஸ்தானத்தில் இருந்திருந்தால், தங்களுக்கு எதிராக தீமை செய்திருக்கும் ஒருவரை, தாங்கள் எவ்வாறு பழிவாங்க நாடியிருப்பார்கள் என்பதை யோசேப்பின் சகோதரர்கள் எண்ணிப்பார்த்தப்போது, அவர்கள் கலக்கமடைந்தனர். ஆனால் யோசேப்போ, அவர்களுக்கு எதிராக தான் எவ்விதமான இரக்கமற்ற உணர்வுகளைக் கொண்டிருக்கவில்லை என்றும், அவர்களிடத்தில் தான் இரக்கமாய் இருக்கின்றார் என்றும், மன்னித்துவிட்டார் என்றும் அவர்களைச் சீக்கிரமாய் நம்பவைத்தார். இம்மாதிரியான சூழ்நிலைகளில், யோசேப்பினால் வெளிப்படுத்தப்பட்டதான ஆவி, சுபாவப்படியான மாம்சீக மனுஷனினால் மாத்திரமல்லாமல், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய்ப் புதுச் சிருஷ்டிகளாய் இருப்பவர்களாலும்" பின்பற்ற தகுந்த ஒன்றாகும். இம்மாதிரியான காரியங்களில் பரந்த மனப்பான்மையுள்ளவர்களாகவும், அன்பானவர்களாகவும், மன்னிக்கிறவர்களாகவும் கர்த்தருடைய ஜனங்கள் இருப்பதற்குப்பதிலாக, குறுகிய மனப்பான்மையுடையவர்களாக இருப்பதை அடிக்கடி காண்கின்றோம். எபிரெய மொழியிலேயே தன்னுடைய சகோதரர்களிடத்தில் இப்பொழுது பேசிக்கொண்டிருந்த யோசேப்பு தன்னுடைய வார்த்தைகளினால் மாத்திரமல்லாமல், முன்பு நடந்த சம்பவங்கள் பற்றின தனது அறிவின்படி, தான்தான் அவர்களுடைய சகோதரன் என்று அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக, "நான் யோசேப்பு" என்றும், "எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்" என்றும் திரும்பத்திரும்ப எடுத்துக்கூறினார். யோசேப்பு இவைகளை மிகவும் இரக்கத்துடன் பேசினபடியாலும், அவருடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் கோபமும், வன்மமும் முற்றிலுமாக இல்லாதிருந்ததினாலும், அவர்கள் நம்பிக்கைக்கொண்டு, யோசேப்பு கிட்டவரும்படிக்கு அழைத்ததற்கு இணங்க, யோசேப்பிற்கு அருகே வந்தார்கள்.

அநேக கிறிஸ்தவர்கள் ஒருவேளை யோசேப்பினுடைய ஸ்தானத்தில் காணப்பட்டு இருந்திருப்பார்களானால், தங்களது சகோதரர்களைத் தவறாய்க் கணித்துவிடுவதன் மூலமும்,

தங்கள் சகோதரர்களிடம், அவர்களின் தவறைத் திரும்பவும் கூறிப் பிரசங்கம் பண்ணிவிடுவதன் மூலமும், மேலும் தங்களது வல்லமையின் கீழ் அச்சகோதரர்கள் காணப்படுவதினால் எப்படியெல்லாம் தங்களால் அவர்களைத் துன்பப்படுத்த முடியும் என்றும், மற்றும் இப்படியாக முடியும் என்றாலும், தாங்கள் அவர்களை இப்படியாகத் துன்பப்படுத்துவதில்லை என்றும் கூறிவிடுவதன் மூலமும், இந்த மாபெரும் பாடத்தினுடைய முழுத் தாக்கத்தையும், தங்களது சகோதரர்களிடத்தில் கெடுத்துப்போட்டு விடுவார்கள். ஆனால் இப்படியாக நடந்து, தாக்கத்தைக் கெடுத்துப்போட முடியாதளவுக்கு, யோசேப்பு மிகவும் ஞானமுள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும் காணப்பட்டார். இப்படியாக நடந்துகொள்ளாமல் மாறாக, "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்" என்றே யோசேப்பு கூறினார். சுபாவத்தின்படியான ஒரு மனுஷன் (யோசேப்பு), இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய ஆவியை, இவ்வளவுக்குப் பெற்றிருப்பது என்பது ஆச்சரியமே; யோசேப்பு சுபாவத்தின்படியான மாம்ச மனுஷன்தான் என்பதையும் நாம் அறிவோம்; பெந்தெகொஸ்தே நாள்வரை, நம் சந்ததியிலுள்ள எவர்மேலும், பரிசுத்த ஆவி பொழியப்படவில்லை. இது முற்பிதாக்களுடைய குணலட்சணத்தைப் பற்றிய ஒரு குறிப்பையும் அளிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது ஆதியில் மனிதன் கொஞ்சம் குரங்கிற்கு மேற்பட்டவனாகவும், கரடுமுரடான மற்றும் காட்டுமிராண்டித்தனமான இயல்புகளை உடையவனாகவும் இருந்தான் என்ற பரிணாமக் கொள்கைக்கு எதிரான ஒரு குறிப்பையும் அளிக்கின்றதாய் இருக்கின்றது.

"ஜீவரட்சணை செய்யும்படிக்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" என்ற சொற்ப வார்த்தைகளின் மூலம் யோசேப்பு, ஒரு மாபெரும் பிரசங்கத்தைத் தன்னுடைய சகோதரர்களுக்குப் பண்ணினார்; அதாவது, "நீங்கள் செய்திட்ட தவறான காரியத்தை, தேவன் இவ்விதமாய் நன்மைக்கு ஏதுவாக மாற்றிப்போட்டு, அதிலிருந்து ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தார். இப்படியாகக் காரியங்களை, தான் புரிந்துகொள்வதற்கு, அவர்கள்தான் காரணம் என்று யோசேப்பு தெரிவித்தார். அவர்களது செய்கைகளைக் கர்த்தர் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டார் என்பதினால், அவர்களது செய்கை/நடக்கை சரியானது (அ) ஏற்றது ஆகாது; கர்த்தர் அவர்களது செய்கைகளை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டக் காரியமானது, யோசேப்பு மீதும், யாக்கோபின் வீட்டார் மீதுமான தெய்வீக வல்லமையே, தெய்வீக ஞானமே, தெய்வீகப் பராமரிப்பே அனைத்துக் காரியங்களையும், அதாவது தீமையான விஷயங்களையும், தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டுள்ளது என்பதை மாத்திரம் நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. சகோதரர்களுடைய இந்த அனுபவங்கள் வாயிலாகவும், யோசேப்பின் சிறிய பிரசங்கத்தின் வாயிலாகவும், யோசேப்பின் சகோதரர்களுக்குக் கிடைத்திட்டதான படிப்பினையானது, அச்சகோதரர்களுக்கு எத்துணை மாபெரும் படிப்பினையாகவும், மனதிலிருந்து மாறவே செய்யாததாகவும் எவ்வளவாய்க் காணப்பட்டது என்பதை நம்மால் சொல்ல இயலாது; ஆனால் நமக்கு எதிராய் வேண்டுமென்றே பாவம் செய்தவர்களிடத்தில் இரக்கம் காட்டுதல் தொடர்புடைய விஷயத்தில், தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் இங்கு மாபெரும் படிப்பினை உள்ளது; இன்னுமாக நம்முடைய ஜீவியத்தின் காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலுள்ள தெய்வீகப் பராமரிப்பைக் கவனித்தல் மற்றும் கண்டுபிடித்தல் பற்றின மாபெரும் படிப்பினையும் இங்குள்ளது. நாம் தெய்வீகப் பராமரிப்புகளைக் கவனிக்கிறவர்களாக மாத்திரம் இராமல், "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்" என்று சொல்லப்பட்டிருக்கிறதுபோன்று, தெய்வீகப் பராமரிப்பின் மீது நம்பிக்கையும் வைக்க வேண்டும் (நீதிமொழிகள் 3:6).

யோசேப்பு தன்னுடைய அனுபவங்களினால், தனக்குள் அதிகளவிலான சுயமேட்டிமையை வளர்த்துவதற்கு அனுமதித்திருக்க முடியும். தான் அதிர்ஷ்டம் உள்ளவன் அல்லது தான் இயல்பாகவே அறிவுமிக்கவன், எளிதில் கவருபவன், சாதுர்யவான் என்றும், இத்தன்மைகளே தனது வெற்றிக்கான காரணம் என்றும், இதுவே தன்னுடைய தகப்பன் தன்னை விசேஷமாய் நேசித்ததற்கான காரணம் என்றும், இக்காரணங்களினாலேயே, தான் அடிமையாக விற்கப்பட்டபோது, தான் செல்வமிக்க நல்ல எஜமானால் வாங்கப்பட்டார் என்றும், தன்னுடைய இந்தத் திறமைகளினால்/சிறப்பு அம்சங்களினால்தான், போத்திபாருடைய இல்லத்தில் உயர்நிலைக்கு உயர்த்தப்பட்டார் என்றும், இந்தத் தன்னுடைய சிறப்பு இயல்புகளினாலேயே, தான் சிறைச்சாலையிலுங்கூட உயர்வு பெற்றார் என்றும், தன்னுடைய கூரிய அறிவாற்றலினால், தன்னால் சொப்பனங்களுக்கு வியாக்கியானம் கொடுக்க முடிந்தது என்றும், தான் அனைத்து விஷயங்களிலுமே மற்றவர்களைக் காட்டிலும் மிஞ்சிக் காணப்பட்டார் என்றும், மற்றவர்களும் இவைகளை அறிந்திருந்தார்கள் என்றும், இவ்வாறாக இயல்பாகவே தான்தான் உயர் ஸ்தானத்தை அடைந்தார் என்றும், சிலர் எண்ணிக்கொள்வதுபோன்று, யோசேப்பாலும் தனக்குள் சிந்தித்திருக்க முடியும். ஒருவேளை யோசேப்பு மேற்கூறியபடி தற்பெருமையும், கர்வமும்

கொண்டிருந்திருப்பாரானால், அது அவருடைய வீழ்ச்சிக்கு நேராகவே வழி நடத்தியிருக்கும் என்பதும், தேவன் தொடர்ந்து யோசேப்பை ஆசீர்வதித்து, முன்னேற்றமடைய மற்றும் வளம்பெறச் செய்திருக்க மாட்டார், என்பதும் நமக்கு நிச்சயமே. இன்னுமாக ஒருவேளை மேற்கூறியபடி யோசேப்பு, பெருமை மற்றும் தற்பெருமையின் ஆவியை வளர்த்தி இருப்பாரானால், அவருடைய சகோதரரிடத்திலான நடக்கையானது, பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவே இருந்திருக்கும் என்பதிலும் நமக்கு நிச்சயமே. அவர் மேற்கூறிய பெருமையின் ஆவியை ஒருவேளை கொண்டிருந்திருப்பாரானால், தனது சகோதரர்களிடம் தனது அதிகாரத்தை விளங்கப்பண்ணுவதற்கெனத் தன்னைக் குறித்து அவர்களிடத்தில் பெருமையடித்துக்கொண்டு, அவர்களை மோசமாய் நடத்தி, தன்னை ஓர் அற்ப மனுஷனாகக் காண்பித்திருப்பார்; அதாவது யோசேப்பினுடைய சரியான நடத்தையானது அவரை ஒரு மாபெரும் மனிதனாகக் காண்பித்தது, ஆனால் அவர் ஒருவேளை பெருமையடித்துக்கொண்டிருப்பாரானால் அவர் தன்னை வெகு அற்பத்தனமான மனிதனாக வெளிப்படுத்தியிருப்பார். யோசேப்பு ஒரு மாபெரும் மனிதனாவார் மற்றும் அவரது மகத்துவமானது, எகிப்து இராஜ்யத்தினுடைய பொருளாதாரத்தின் விஷயத்திலுள்ள அவரது நிர்வாகத்தில் மாத்திரம் வெளிப்படாமல் விசேஷமாக அவர் தேவனைச் சார்ந்திருந்த விஷயத்திலும், தன்னுடைய கொள்ளுத் தாத்தாவாகிய ஆபிரகாம், தாத்தாவாகிய ஈசாக்கு மற்றும் தனது தகப்பனாகிய யாக்கோபு மூலமான தெய்வீக வாக்குத்தத்தமும், ஆசீர்வாதமும் ஏதோ ஒரு விதத்தில் தன்மீதும் காணப்படுகின்றது என்பதையும், இந்தத் தெய்வீகத் தயவினாலேயே, காரியங்கள் இவ்வாறாக நடைப்பெற்று வருகின்றது என்பதையும் பற்றி அவர் உணர்ந்துகொண்ட விஷயத்திலுந்தான் யோசேப்பினுடைய மகத்துவம் வெளிப்படுகின்றது.

இந்தச் சம்பவத்திலிருந்து, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி விலையேறப்பெற்றப் படிப்பினைகளை எடுத்துக்கொள்ளலாம். பூமிக்குரியதாகவும், உலகப் பிரகாரமானதாகவும் காணப்பட்ட தனக்கான அனைத்து ஆசீர்வாதங்களையும், கர்த்தரே கொடுக்கின்றார் என்று யோசேப்பு ஒப்புக்கொள்வது ஏற்றக் காரியமாக இருக்குமானால், ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியார், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பிதாவின் கரத்திலிருந்து பெற்றுக்கொண்டார்களென ஒப்புக்கொள்வதும், கிடைத்த ஒவ்வொரு இரக்கத்திலும், ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகளிலும், கர்த்தருடைய பராமரிப்பின் கரமே காணப்படுகின்றது என அடையாளம் கண்டுகொள்வதும் எவ்வளவு அதிகமாய் ஏற்றக் காரியமாகக் காணப்படும். இந்த ஆவிக்குரிய சந்ததியினர், "அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்று ஒப்புக்கொள்வதற்கும், இதை உணர்ந்துகொள்வதற்கும் எப்போதும் விழிப்பாய்க் காணப்படுவார்கள். தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகளில் சிலர், பெருமிதம் கொள்வதையும், கர்த்தரிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டதான, தேவனுடைய தயவும், சத்திய அறிவும், அவர்களுடைய சொந்த முயற்சியினால் அடையப்பெற்றது எனப் பேசுவதையும், அதாவது தெய்வீகத் திட்டத்தைக் கண்டுபிடித்ததில், தங்களுக்கும் கொஞ்சம் கனம் சேரும் என்பது போன்று பேசுவதையும், நாம் சிலசமயம் காணும்போது, வருத்தமடைகின்றோம்.

இன்னுமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், யோசேப்பைக் காட்டிலும், மிகவும் இரக்கமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். யோசேப்பினால், தன்னுடைய சகோதரர்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும், வந்த துன்புறுத்தல்களைத் தெய்வீகச் செயல்பாட்டின் நிகழ்வுகளாகப் பார்க்க முடிந்ததானால், அதாவது வரவிருக்கின்ற ஆசீர்வாதங்கள் மற்றும் உயர்த்தப்படுதலுக்கு, தன்னை ஆயத்தப்படுத்துவதற்காக, அந்தத் துன்புறுத்துதல்களைக் கர்த்தர் பயன்படுத்துகின்றார் என யோசேப்பினால் பார்க்க முடிந்ததானால், ஆவிக்குரிய இஸ்ரயேலனும் தனக்கான ஏமாற்றங்கள் என்பது, தேவனால் நியமிக்கப்பட்டவைகள் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமல்லவா? (his disappointments as God's appointments) இன்னுமாக ஆவிக்குரிய இஸ்ரயேலன், தெளிவான விசுவாசக் கண்களுடன், தனது ஆவிக்குரிய முன்னேற்றங்களின் அநேகக் காரியங்களானது, உலகம் மற்றும் கள்ளச் சகோதரர்களிடமிருந்ததான துன்புறுத்துதல்களின் விளைவாகவே வந்துள்ளது என்பதைப் பார்க்க முடிகின்றவனாய்க் காணப்பட வேண்டுமல்லவா? இன்னுமாக யோசேப்பைப் போன்று, ஆவிக்குரிய இஸ்ரயேலனும், தேவன் தன்னை ஆவிக்குரியவற்றில் உயர்த்துவதற்கும், தன்னைப் புதுச் சிருஷ்டியென, தேவனுடைய சுதந்தரரென, தனது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுடன் உடன் சுதந்தரவாளியெனப் பூரணப்படுத்துவதற்கும் அவர் பயன்படுத்த சித்தம் கொண்டுள்ள பல்வேறு கருவிகளாகிய இந்த உலகம் மற்றும் கள்ளச் சகோதரர்களை மிகுதியான அகமகிழ்வுடன் கண்ணோக்க வேண்டுமல்லவா? இப்படியாக ஆவிக்குரிய இஸ்ரயேலன் நிச்சமாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றங்கள் என்பது கர்த்தரால் உண்டானதேயொழிய, நம்மால் அல்ல என்பதை நாம் கண்டுகொள்ளாதபடிக்கு, நமக்குத் தடையாய் இருக்கும் காரியங்கள், தாழ்மையின்மையும், தெய்வீகப் பராமரிப்பின் மீதான நம்பிக்கையின்மையுமாகும்; இன்னுமாக

நம்மைத் துன்புறுத்துகிறவர்களிடத்திலும், நம்மை இழிவாய் நடத்தினவர்களிடத்திலும், நாம் பொறுமையாயும், இரக்கமாயும் அனுதாபமாயும், அன்பாயும் இருப்பதற்கு, நமக்குத் தடையாய் இருக்கும் காரியங்கள், கர்த்தருடைய ஆவி இன்மையும், இரக்கத்தினுடைய ஆவி இன்மையும் மற்றும் நம்மை ஆவிக்குரியவற்றில் கட்டியெழுப்புவதற்கெனத் தேவனால் பயன்படுத்தப்படும் கருவிகள் சகோதரர்களாகவோ அல்லது உலகத்தாராகவோ இருப்பினும், அவர்கள் மீது அனுதாபங்கொள்ள வேண்டும் என்பதைச் சரிவரப் பார்க்கத் தவறிப்போனதுமாகும்.

பின்னர் யோசேப்பு தேவனுடைய பராமரிப்பையும், பரிபூரணமான விளைவுள்ள ஏழு வருஷத்தையும், ஏழு வருடகால பஞ்சத்தையும் குறித்து விவரித்தார்; மேலும் தேவன் எவ்வாறு அனைத்துக் காரியங்களையும் மேற்பார்வையிட்டு நடத்துகின்றார் என்றும், இக்காரியங்கள் மூலம், தேவன் ஆபிரகாமின் சந்ததியை ஆதரித்தார் என்றும் விவரித்து, "ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பினார்" என்று கூறினார். நமக்கு ஆசீர்வாதங்கள் கடந்துவந்த, பொல்லாப்பான கருவிகளுக்கு, நாம் கீர்த்தியைச் செலுத்திடக் கூடாது; ஒருவேளை அப்படிக் கீர்த்திச் செலுத்துவோமானால், நாம் தீமையை நன்மை என்று சொல்லுகிறவர்கள் ஆகிவிடுவோம்; மாறாக நாம் கீர்த்தியை/கனத்தைத் தேவனுக்கே செலுத்துகிறவர்களாய்க் காணப்பட வேண்டும், ஏனெனில் தீமையான நோக்கத்துடன் செய்யப்பட்ட காரியத்தையும், தீமையையே கொண்டிருந்த காரியத்தையும், பூலோக தளத்திற்கு மேலான தெய்வீக ஞானமானது, நம்முடைய நன்மைக்கு ஏதுவாக மாற்றிப்போடும் ஆற்றல் கொண்டிருந்ததினாலேயே ஆகும். நாம் தேவனுடைய காருண்யத்தைப்பற்றின பாடங்களைக் கற்று வரவர, அவருடைய ஞானம், வல்லமை மற்றும் அன்பு பற்றியும் நாம் கற்று வரவர, நம்முடைய நன்மைக்கு ஏதுவாய் நடந்துகொண்டு வருகின்றது என நம்மால் பார்க்க முடிந்த காரியங்களில் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக்கொள்ள முடிகின்ற நிலையை நாம் அடைவது வரையிலும் மாத்திரமல்லாமல், முற்றிலும் இருள் நிறைந்ததாகவும், எந்த நன்மையும் வரமுடியாது என்பது போல் தோன்றும் காரியங்களிலுங்கூட, கர்த்தரிடத்தில் நம்பிக்கைக்கொள்ள முடிகின்ற நிலையை நாம் அடைவது வரையிலும், நமது விசுவாசமானது பலம் மேல் பலமடைந்து வருகின்றதாய் இருக்கும்; இவ்வாறாக நாம் அவரது தடையங்களைக் காணமுடியாதபோதிலும், அவர்மேல் நம்பிக்கைக் கொள்கின்றவர்களாய் இருப்போம். இதுவே விசுவாசமாகும்; விசுவாசம் தேவனுடைய ஈவாகும்; கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தங்களானது, சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்பட்டு, அதற்கு ஏற்றாற்போல் செயல்படும்போது, விசுவாசமானது வளர்த்தப்பட்டு, போதுமான வளர்ச்சியை அடைகின்றது.

கர்த்தருடைய வேளை வரட்டும் என்று பொறுமையுடன் காத்திருந்த யோசேப்பு, இருபது வருடங்களாக தனது தகப்பனுடைய முகத்தைப் பார்க்காமல் இருந்திருக்க, இப்பொழுது தனது சகோதரர்களுடைய அரிக்கட்டுகளானது, தன்னுடைய அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்பதான தன்னுடைய முதலாம் சொப்பனத்தின் நிறைவேறுதலைக் கண்டபடியால், தன்னுடைய இரண்டாம் சொப்பனம் நிறைவேறக்கூடிய தருணமாகிய தன்னுடைய தகப்பனை மீண்டுமாகப் பார்ப்பதற்குரிய கர்த்தருடைய வேளை வந்துள்ளது என்பதையும் உணர்ந்துகொண்டார். இதற்கு முன்புவரையிலும் பொறுமையுடன் காணப்பட்ட யோசேப்பு, இப்பொழுது துரிதப்பட்டார், ஏனெனில் வேளை வந்துவிட்டது; ஆகவே யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை நோக்கி, "நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாக வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம்" (ஆதியாகமம் 45:9) என்றார். பெருமையின் காரணமாக, யோசேப்பு தனது ஸ்தானத்தின் மகிமைகளை/கனங்களைத் தனது சகோதரர்களுடைய மனதில் பதிய வைத்திட முற்படாமல் மாறாக, யாக்கோபினுடைய எச்சரிப்பான தன்மையானது, அவர் கோசேன் நாட்டினுடைய நன்மைகளை அடையும் விஷயத்தில், அவருக்குத் தடையாக இருந்துவிடாதபடிக்கு, தனது சகோதரர்கள் தங்கள் தகப்பனாகிய யாக்கோபிற்கு முழு நிச்சயத்தைக் கொடுக்கத்தக்கதாக யோசேப்பு தனது அதிகாரத்தையும், அவர்களைப் பராமரிப்பதற்கான தனது வல்லமையையும் குறித்து, தனது சகோதரர்களுக்கு நிச்சயமளிக்கவே இவற்றைக் கூறினார். யோசேப்பினுடைய சகோதரர்களும், தகப்பனும், யோசேப்பினுடைய அரியணையிலும், அதிகாரத்திலும் பங்கடையும்படிக்கு அழைக்கப்படாமல், மாறாக யோசேப்பினுடைய அதிகாரத்தின் மூலமாய்க் கடந்துவரும் ஆசீர்வாதங்கள் அனைத்திலும் பங்கடைவதற்கே அழைக்கப்பட்டனர். இப்படியே ஆயிரவருட யுகத்தின்போதும், யோசேப்பினால் அடையாளப்படுத்தப்படும் தலையும், சரீரமாகிய கிறிஸ்து வல்லமை மற்றும் மகிமையின் சிங்காசனத்தில் காணப்படும்போது, அதாவது பரம பிதாவின் சிங்காசனத்தில் காணப்படும்போது, பூமியிலே தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, உண்மையான பரலோக அப்பத்திற்காக, நித்திய ஜீவனுக்காகப் பசி கொண்டிருப்பவர்கள் வந்து, அதைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அழைக்கப்படுவார்கள். பூமிக்குரிய வகுப்பாரில் எவரும், இராஜ்யத்தின் கனங்களில் பங்கடையும்படிக்கு அழைக்கப்படுவதில்லை, காரணம் இராஜ்ய வகுப்பார் அப்போது நிறைவடைந்திருப்பார்கள். ஆனால் பூமிக்குரிய வகுப்பார்

இராஜாதி இராஜாக்கள் மற்றும் கர்த்தாதி கர்த்தர்களின் கீழ், மனதிலும், ஒழுக்கத்திலும், சரீரத்திலும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களையும், பலத்தையும் மற்றும் ஆரோக்கியத்தையும் பெற்றுக்கொள்ளும்படிக்கு அழைக்கப்படுவார்கள்.

யோசேப்பும், அவரது சகோதரர்களும் விடைப்பெற்றுக்கொண்ட சம்பவம் தாக்கம் நிறைந்ததாய் இருந்தது; இப்பொழுது தங்களுக்கு (எகிப்தில் முதல் முறை வந்தபோது) நடந்திட்ட முந்தின சம்பவத்தின் அனுபவங்கள் மற்றும் பென்யமீனுடைய சாக்கில் காணப்பட்ட வெள்ளிப் பாத்திரத்தின் அர்த்தத்தையும் அவர்கள் புரிந்துகொண்டார்கள்; இந்த அனைத்துச் சம்பவங்களும், யோசேப்பு தங்கள் மீது கொண்டிருந்த அன்பையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்துவதற்கு வழி நடத்தியது என்று அவர்கள் கண்டுகொண்டார்கள்; யோசேப்பு பென்யமீன் மீதான தனது விசேஷித்த அன்பை வெளிப்படுத்தும் வண்ணமாக, பென்யமீனை முதலாவது முத்தஞ்செய்து, சந்தோஷத்தினால் அழுதார் மற்றும் இப்படியே மற்றச் சகோதரர்களுக்குச் செய்து, அவர்களை வழியனுப்பி வைத்தார். பாசத்திற்கு, அன்பிற்கு வல்லமை/சக்தி உள்ளது; அதனால் அன்புடன்கூடிய பாசம் வெளிப்படுத்தப்பட வேண்டும், இல்லையேல் அதன் ஆற்றல் உணரப்பட முடியாது. அநேக பெற்றோர்களிடத்திலும், கணவன்மார்களிடத்திலும், மனைவிமார்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் காணப்படும் பிரச்சனை என்னவெனில், அவர்கள் தாங்கள் கொண்டிருக்கும் பாசத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதேயாகும். பெருமை (அ) பயம் (அ) வேறெதாகிலும் காரியமானது, அவர்கள் ஒருவரோடொருவர் மனம்விட்டு வெளிப்படையாகப் பேசமுடியாத வண்ணம் தடையாகக் காணப்படுகின்றது. இங்குள்ள யோசேப்பினுடைய மாதிரியானது, பின்பற்றத் தகுந்த ஒன்றாகும். அவருக்குத்தான் தீமைச் செய்யப்பட்டது; அவர்தான் இப்பொழுது அதிகாரத்திலும் காணப்படுகின்றார்; கௌரவமும் யோசேப்புக்குத்தான் இருந்திருக்க வேண்டும். எனவேதான் சகோதரர்களை முத்தஞ்செய்வதற்கும், தன்னைத் தாழ்த்துவதற்கும், யோசேப்புதான் அதிகம் தன்னைத் தாழ்த்தியிருக்க வேண்டும். யோசேப்பின் சகோதரர்கள் இதை உணர்ந்துகொண்டார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. இப்படியாக மிக உயரிய ஸ்தானத்தில் காணப்படும் தங்களது சகோதரன் இப்படியான ஒரு பாசத்தை வெளிப்படுத்தின காரியமானது, அவர்களது இருதயத்தைத் தொட்டிருக்கும் என்பதிலும், அது அவர்களுடைய வாழ்நாட்கள் முழுவதும், அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாய்க் காணப்பட்டிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. இப்படியாகவே நமது நண்பர்கள் மற்றும் உறவினர்களின் விஷயத்திலும், நமது அன்பையும், இரக்கமான உணர்வுகளையும் வெளிப்படுத்தும்போது, இதனால் அவர்களும் அன்பைப் பரிமாறிக்கொள்வதோடு மாத்திரமல்லாமல், இதனால் அவர்களுக்கும் நன்மை உண்டாகுகின்றது; நமது பாசத்தை நாம் அடக்கிக்கொள்வோமானால், அன்பில் உணர்வுகளற்ற நிலைமையே காணப்படும் மற்றும் அன்பில் இப்படியான உணர்வற்ற நிலைமை என்பது மற்றவர்களைப் பாதிப்பதோடல்லாமல், நம்மையும் பாதிக்கின்றதாய் இருக்கும், அதாவது ஜீவியத்தினுடைய மகிழ்ச்சியின் ஊற்றுகள் அனைத்தையும் அழித்துப்போடுகின்றதாய் இருக்கும்.

"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" என்ற வசனத்தை நினைவில் கொள்வோமாக (ரோமர் 12:21). இந்த ஆலோசனைக்கு யோசேப்பு மாதிரியாக விளங்குகின்றார். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுடைய பொல்லாப்பான நடக்கை தன்னை மேற்கொள்வதற்கும், தன்னைப் பொல்லாதவனாகவும், கசப்புடையவனாகவும் மாற்றுவதற்கும் அனுமதியாமல் இருந்தது மாத்திரமல்லாமல், இன்னுமாக தன்னுடைய அன்பினாலும், தன்னுடைய இரக்கத்தினாலும், தனது பரிவினாலும், தனது பெருந்தன்மையினாலும், அவர்களது தீமையான தன்மைகளையும், சுபாவங்களையும் மேற்கொண்டார் மற்றும் அதினால் ஏற்பட்டதான தாக்கம், அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நன்மைக்கு ஏதுவாகவே அமைந்தது. இப்படியான ஒரு நடக்கையைக்கொண்டிருப்பது, யோசேப்பைக் காட்டிலும், அதிகமாக நமக்கே கடமையாய் உள்ளது. யோசேப்பு இதை எவ்விதமான புறத்தூண்டுதலும் இல்லாமல், இயல்பாகவே செய்தார்; நமக்கு நமது கர்த்தர் மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களுடைய மாதிரியும், கட்டளைகளும்/ போதனைகளும் மற்றும் பரிசுத்தத்தின் ஆவியினுடைய ஜெநிப்பித்தலும் காணப்படுகின்றது. "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" (2 பேதுரு 3:11).

---

**R 2895**

# "சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு"

## ஆதியாகமம் 50:15-26

"நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்."—சங்கீதம் 90:12.

எகிப்திலுள்ள யோசேப்பினுடைய மகத்துவம் பற்றின தகவல்களுடன், யாக்கோபின் குமாரர்கள் திரும்பி வந்தபோது, யாக்கோபுக்கு நூற்றி முப்பது வயதாயிருந்தது. தன்னுடைய குமாரன் இன்னும் உயிரோடிருக்கின்றார் என்றும், மகத்தான ஸ்தானத்தில் காணப்படுகின்றார் என்றும், கேள்விப்பட்டதில் அவருக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை, அவருடைய முதிர்வயதிற்குரிய இயல்பான பெலவீனங்களினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகையால் யாக்கோபினுடைய குமாரர்கள், எவ்வாறு தாங்கள் யோசேப்பை அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போட்டார்கள் என்றும், எப்படி யாக்கோபை ஏமாற்றத்தக்கதாக, இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்னதாக யோசேப்பினுடைய மேலங்கியில் இரத்தத்தைப் பூசினார்கள் என்றும் விவரம் அறிந்தப்போதுங்கூட, யாக்கோபினால் காரியங்களை நம்பமுடியவில்லை. யாக்கோபின் குமாரர்கள் கொடுத்திட்ட தகவல்களுக்கு அத்தாட்சியாக, யோசேப்பு தந்தைக்கென அனுப்பி வைத்திட்ட இராஜரிகமான அன்பளிப்புகளும், மற்றும் யாக்கோபையும், குடும்பத்தாரையும் சௌகரியமாகப் பிரயாணத்தில் சுமந்துவரத்தக்கதாக அனுப்பப்பட்டு, வந்திருந்த எகிப்திய வண்டிகளும் காணப்பட்டன. இந்த வண்டிகள் என்பது, அந்நாட்களில் காணப்பட்ட வாகனங்களாய் இருந்தது. யாக்கோபு இணங்க வைக்கப்பட்டார் மற்றும் பிரயாணத்தை மேற்கொண்டார்; அப்போதுதான் அநேகமாக யாக்கோபு தன் மனதில் சில கேள்விகளைக்கொண்டிருந்து, தேவனுக்குப் பலிச்செலுத்தினார்; அதாவது வாக்களிக்கப்பட்ட தேசத்தை இப்படியாக விட்டுச்செல்வது ஞானமான காரியமாக இருக்குமா என்றும் இப்படி, தான் விட்டுச்செல்லும் காரியமானது, தன்னுடைய சிறு பிராயம் முதற்கொண்டு, தன்னுடைய ஜீவியத்தில் மையம் கொண்டுள்ளதும், வழிநடத்தியுள்ளதுமான ஆசீர்வாதங்களை, தான் உதறித்தள்ளிவிட்டதாக அல்லது தனது விசுவாசத்தை, தான் கைவிட்டுவிட்டதாக, தேவனால் கருதப்படுமோ என்றுமுள்ள கேள்விகளை மனதில் கொண்டவராக, யாக்கோபு பலிச்செலுத்தினார்.

யாக்கோபினுடைய கேள்விக்கும், பலிக்கும் (அநேகமாகச் சொப்பனத்தின் வாயிலாக) தேவன் பதிலளித்து, யாக்கோபு எகிப்துக்குப் போகும் காரியம் சரியானது என்றும், இறுதியில் யாக்கோபின் சந்ததியார் மீண்டும் "வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு" திரும்ப வருவார்கள் என்றும் யாக்கோபுக்கு வாக்களித்தார். இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் காணப்பட வேண்டும்; ஆவிக்குரிய இஸ்ரயேலன் பண்ணியுள்ள உடன்படிக்கையாகிய ஆபிரகாமின் உடன்படிக்கையும், அதிலுள்ள அவனது பங்கும், அவனது ஜீவியத்தின், அவனது இலட்சியங்களின், அவனது எதிர்பார்ப்புகளின், அவனது நம்பிக்கைகளின் மையமாகக் காணப்பட வேண்டும். உலக ஐசுவரியங்கள் மற்றும் உலக தயவுகளின் விஷயத்தில், எதிராளியானவனின் வஞ்சனை காணப்படுகின்றதா என ஆவிக்குரிய இஸ்ரயேலன் விழிப்புடன் காணப்பட வேண்டும். இவ்விதமான அபாயமானது உலகப்பிரகாரமான வளமையின் காற்று நம் திசையில் அதிகம் வீசும்போது அதிகமாய்க் காணப்படுகின்றது. இந்த அபாயமானது நாம் கஷ்டமான (அ) உபத்திரவமான நிலைமைகளுக்குள் கடந்துபோகையில், குறைவாகவே உள்ளது. இப்படியான (வளமையின் காற்று நம் பக்கத்தில் வீசும்) தருணங்களிளெல்லாம், நாம் கர்த்தரிடத்தில் அடிக்கடிச் செல்ல வேண்டுமென்றும், அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளத்தக்கதாக முற்றும் முழுமையாக நாட வேண்டுமென்றும், நம்முடைய பூமிக்குரிய காரியங்கள் அனைத்திற்கும் மேலாக, நமது உடன்படிக்கையையும், அதன் முக்கியத்துவத்தையும் மனதில் கொண்டுவர வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக. மேலும் கர்த்தருக்கு உண்மையான பலியை ஏறெடுப்போமாக, அதாவது நமது ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கு ஆதாரமாய்க் காணப்படும் நமது அருமை மீட்பருடைய பலியின் புண்ணியங்களை முன்வைத்து, நமது இருதயங்களுடைய முழுமையான அர்ப்பணிப்பைத் திரும்பவும் கூறி, நமது உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்வோமாக. இதுவே இந்த யாத்திரையில் நமக்கான ஒரே பாதுகாப்பான வழியாகும்.

யாக்கோபும், யோசேப்பின் சகோதரரும், பார்வோனுக்கு முன்பாகக்கொண்டு செல்லப்படுவதையும், பிற்பாடு அவர்கள் கோசேன் நாட்டில் குடியேறினதையும் நாம் விரிவாகப் பார்க்கப்போவதில்லை. இங்கு அவர்கள் குடியிருக்கையில் பதினேழு வருடங்களுக்குப் பிற்பாடு, யாக்கோபு மரிக்கின்றார் (ஆதியாகமம் 47:28) மற்றும் யாக்கோபு, பார்வோனின் பிரதிநிதியானவருடைய சொந்தக்காரராய் இருக்கின்றபடியால், யாக்கோபு எகிப்திய வட்டாரத்திற்குப் பொதுவான வழக்க முறையின் அனுசரிப்புகள் அனைத்துடன், அடக்கம் பண்ணப்பட்டார். இப்போதுதான் நமது பாடம் ஆரம்பமாகப் போகின்றது. யோசேப்பின் சகோதரர்கள், யோசேப்பு தங்களைப்போன்ற சுபாவம் கொண்டிருப்பார் என்று எண்ணினார்கள்; அவர்களால் யோசேப்பு தங்களை முற்றிலும் மன்னித்துவிட்டார் என்பதையும், யோசேப்பு மிகவும் தயவுள்ளவராய் இருக்கின்றார் என்பதையும் நம்ப முடியவில்லை; மேலும் யோசேப்பு தங்களிடத்தில் பாராட்டும் இரக்கத்தை அவர்கள் ஒத்துக்கொண்டாலும், அவர்கள் பின்வருமாறு தங்களுக்குள்ளாகக் கூறிக்கொண்டார்கள், **"இந்த அனுகூலங்கள் அனைத்தும் நம்பொருட்டாக இல்லாமல், நமது தகப்பனாகிய யாக்கோபின் பொருட்டாக மாத்திரமே செய்யப்பட்டன; இப்பொழுது நமது தந்தை இறந்துவிட்டார்; இனிமேல் யோசேப்பு நம்மை வித்தியாசமாய்க் கையாளுவார்."** இப்படியான உணர்வுகளினால் தூண்டப்பட்டவர்களாக, அவர்கள் யோசேப்பினிடத்தில் இரக்கத்தைக் கேட்பதற்கும், தாங்கள் யோசேப்பினுடைய அடிமைகளாக இருக்க விருப்பம் கொண்டுள்ளதை அறிவிக்கிறதற்கும், முதலாவது ஒரு தூதுவனை யோசேப்பினிடத்திற்கு அனுப்பிவைத்தார்கள், பின்னர் அவர்களும் நேரடியாக யோசேப்பினிடத்திற்குச் சென்றார்கள்.

இக்காரியமானது, போதுமான விசுவாசமில்லாமல் கர்த்தரிடத்தில் வரும் அநேகருடைய நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படிப்பட்டவர்கள் தங்களிடத்திலான கர்த்தருடைய இரக்கத்தைக் குறித்து உணர்ந்திருந்தாலும், பயமும் கொண்டிருக்கின்றனர். உண்மையென்னவெனில், இவர்கள் அவரைப்பற்றி அறிந்துகொள்ளவில்லை; கர்த்தரும் தங்களைப்போன்று கோபத்தினால், பகைமையினால் இயக்கப்படுபவர் என்று இவர்கள் எண்ணிக்கொள்கின்றனர். நமது குற்றங்களையும், தெய்வீகத் தயவைப் பெறுவதற்கான நமது அபாத்திர நிலைமையையும் ஒப்புக்கொள்வதும், இன்னுமாக நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்றுள்ள கர்த்தருடைய வார்த்தைகளில், விசுவாசத்தின் முழு நிச்சயத்தைக் கொண்டிருக்குமளவுக்கு, நாம் கர்த்தருடன் நெருங்கிப் பழகிக் காணப்படும் நிலைமையை அடைவதும் என்பது கிருபையில் வளர்ந்திருப்பதற்கான சாட்சியே ஆகும். இப்படியாகக் கிருபையில் வளர்வதைக் குறித்து, "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" என்று கர்த்தர் குறிப்பிடுகின்றார் (யோவான் 17:3). ஆனால் இத்தகைய அறிவு என்பது உடனடியாக வளரக்கூடியதல்ல, மாறாக இது கிருபையில் வளர்வதின் விளைவாக வரக்கூடியதொன்றாகும்; ஏனெனில் நாம் அறிவில் வளரும்போது, கிருபையில் வளருவோம் மற்றும் நாம் கிருபையில் வளரும்போது, அறிவிலும் வளருவோம்; நாம் இரண்டு பாதங்களை வைத்து நடப்பதுபோன்று, கிருபையும், அறிவும் இரண்டுமே ஒன்றையொன்று தொடர்ந்து காணப்படுகின்றது. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள், கிருபையிலும், அறிவிலும் வளராதப்படியினால், அப்போஸ்தலர் குறிப்பிடும், "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை," அதாவது கர்த்தரிலும், அவருடைய தயவிலும், அவருடைய ஞானத்திலும், அவருடைய அன்பிலும், மற்றும் தங்கள் ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களின் மேலுமுள்ள அவரது ஞானமான பராமரிப்பிலும் முழு நிச்சயத்தை அடைய தவறிவிடுகின்றனர். இப்படியான வளர்ச்சி குறைவுப்படுகின்றபடியால், இவர்கள் கர்த்தருக்குப் பலிகள் ஏறெடுப்பதற்கும், அவரிடத்தில் தங்கள் வழிகளையெல்லாம் ஒப்புக்கொடுப்பதற்கும் தவறிவிடுகின்றனர்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்குக் கொடுத்திட்ட பதிலானது மிகவும் பெருந்தன்மையுடையதாகவும்/சிறப்பானதாகவும், இன்னுமாக அவருடைய நடத்தையானது வெறுமனே வெளித்தோற்றமான அறிக்கையாக இல்லாமல், மாறாக உறுதியான குணலட்சணத்தின் விளைவே என்பதற்கான நற்சான்றாகவும் காணப்பட்டது. யோசேப்பு தனக்குள்ளாகப் பின்வருமாறு சொல்லிக்கொள்ளவில்லை அதாவது, **"என்னுடைய சகோதரர்கள் என்னைத் தவறாய்ப் புரிந்துள்ளனர். நான் அவர்களை மனப்பூர்வமாய் மன்னித்தாலும், இந்த அவர்களது பயத்தை, நான் அவர்களுக்கு மேலாக அதிகமான அதிகாரம் கொள்ளத்தக்கதாகப் பயன்படுத்திக்கொண்டு, நான் அவர்களை நோக்கி, நான் உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்யமாட்டேன்; நீங்கள் எனக்கு முற்றிலும் கீழ்ப்படிதலோடு காணப்படுவதுவரையிலும், எனக்கு வருடந்தோறும் சன்மானங்கள் கொடுத்து (அ) உங்கள் பலனில் பத்தில் ஒரு பகுதி எனக்குக் கொடுத்து (அ) வருடந்தோறும் நீங்கள் என்முன்**

**பணிவதற்கும், உங்கள் தவறுகளை மீண்டும் மீண்டுமாக ஒப்புக்கொண்டு, என்னுடைய தயாளத்தை அறிக்கையிடுவதற்கும் வந்துகொண்டு இருப்பதுவரையிலும், நான் உங்களை மிகுந்த இரக்கத்துடன் நடத்துவேன் என்று சொல்லப்போகிறேன்."** இல்லை; இப்படிச் செய்ய முடியாதளவுக்கு மிகச் சிறந்த குணலட்சணங்களை உடையவராகவும், சுயநலமேயற்றவராகவும் காணப்பட்டார். மாறாக யோசேப்போ, "பயப்படாதிருங்கள் நான் தேவனா?" என்றார். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களிடத்தில் சரியான விதத்தில் நடந்துகொள்வதற்கான இரகசியம், அவர் கொண்டிருந்த சரியான கண்ணோட்டமேயாகும்; யோசேப்பு தன்னுடைய சகோதரர்களைக் கையாளும் விஷயத்திலும், அனைத்து விஷயங்களிலும், தன்னைத் தேவனுடைய ஊழியக்காரனாக/அடிமையாக மாத்திரமே கருதிக்கொண்டிருந்தார். தேவனுடைய வழிநடத்துதலே அனைத்துக் காரியங்களிலும் காணப்பட்டிருந்ததை யோசேப்பு கண்டார்; இப்படியல்லாமல் வேறு எவ்விதத்தில் யோசேப்பினால் எண்ணிக்கொள்ள முடியும். தெய்வீக ஏவுதலினால் தனக்கு வந்திட்ட சொப்பனங்களின் நிறைவேறுதலை, யோசேப்பு கண்டார்; தான் அடிமை நிலையிலிருந்து, எகிப்தின் அரியணைக்கு உயர்த்தப்படுவதற்கான வழிநடத்துதலினுடைய பல்வேறு படிகளில், தெய்வீகப் பராமரிப்பினுடைய அற்புதகரமான வழிநடத்துதலை யோசேப்பு கவனித்தார்; இன்னுமாக ஒருவேளை இப்பொழுது தான் தன்னுடைய சகோதரர்களுக்குப் பொல்லாப்புச் செய்தாலோ அல்லது அவர்களுக்கு எதிராக இரக்கமற்ற விதத்தில் சிந்தனைச் செய்தாலோ, இது தேவன் ஆசீர்வதிப்பதற்கெனப் பயன்படுத்தின கருவிகளுக்கு (தனது சகோதரர்களுக்கு) எதிராக களங்கம் விளைவிப்பதாகக் காணப்படும் என்று யோசேப்பு எண்ணினார். இதை யோசேப்பு செய்தாரானால் அவரால் தெய்வீக வல்லமைக்கு உண்மையாய் இருக்க முடியாது மற்றும் தெய்வீக வல்லமைக்குக் கனம் கொடுப்பவராகவும் காணப்பட முடியாது; யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை ஆறுதல்படுத்தி, உற்சாகமூட்டினார்; அவர்கள் பொல்லாப்பான நோக்கம் கொண்டிருந்து, தனக்குப் பொல்லாப்புச் செய்திருந்தபோதிலும், நடைபெற்றது உண்மையில் ஒரு நல்ல காரியமே என்றும், ஆனால் நடந்திட்ட இந்த நற்காரியத்திற்கு அவர்களுக்கு எந்தக் கீர்த்தியும் சேராமல் அவப்பெயரே உள்ளது மற்றும் தேவனுக்கே அனைத்துக் கனமும் சேரும் என்றும் யோசேப்பு விளக்கினார். இதன் அடிப்படையிலேயே அவர்களை, தான் கையாளுகின்றதாகவும், தான் கொஞ்சமும் பகைமைக்கொண்டிருக்கவில்லை என்பதாகவும், அவர்கள் செய்த காரியத்தின் வாயிலாக வந்த தெய்வீக ஆசீர்வாதத்தை முழுமையாய், தான் உணர்ந்துள்ளதாகவும், யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்குப் புரிய வைத்தார்.

இந்தப் படிப்பினையை, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவரும் கற்றுக்கொண்டார்களானால், அது எத்துணை மாபெரும் ஆசீர்வாதமாகக் காணப்படும், அதாவது எந்த ஒரு காரியத்தினுடைய விளைவும் நன்மையானதாகக் காணப்படும் என்று நாம் ஏற்றுக்கொள்வோமானால் மற்றும் அந்த விளைவுகளுக்கு நேராக நாம் தெய்வீகப் பராமரிப்பினால் வழிநடத்தப்படுகின்றோம் என்று உணர்ந்துகொள்வோமானால், தெய்வீகப் பராமரிப்பினால் பயன்படுத்தப்பட்ட கருவிப் போன்றவர்களிடத்தில் நாம் மிகவும் தயாளத்துடனும், மிகுந்த இரக்கத்துடனும் நடந்துகொள்வோம், அதுவும் அந்தக் கருவியானவர்கள் வேண்டுமென்றே கருவியாகாதவர்களாய் இருந்தாலும் அல்லது யோசேப்பின் சகோதரர்கள் போன்று திட்டமிட்டுப் பொல்லாப்புச் செய்கின்றவர்களாய் இருந்தாலும், நாம் அவர்களிடத்தில் மிகுந்த தயாளமும், மிகுந்த இரக்கமும் உள்ளவர்களாய் நடந்துகொள்வோம். இப்படியாக ஜீவியத்தின் காரியங்களையும், தங்கள் அனுதின ஜீவியத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சக்திகளையுங்குறித்து, மேற்கூறப்பட்டுள்ள கண்ணோட்டத்தின்படி பார்க்க முடிகின்றவர்களால், அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, "கர்த்தருக்குள் எப்பொழுதும் வெற்றி சிறக்கப்பண்ண" முடியும்; மேலும் இத்தகையவர்களிடத்தில், சாத்தானுக்கும், அவனுடைய ஊழியர்களுக்கும் எதிரான எந்தக் கசப்போ (அ) தூஷணங்களோ காணப்படுவதில்லை (2 கொரிந்தியர் 2:14; யூதா 9).

இதன் அர்த்தமாவது இத்தகையவர்கள் தீமையான நடக்கைகளை நல்லவை என்று கருதுவார்கள் என்பதாக இல்லை; இன்னுமாக இத்தகையவர்கள் தீமையான நடக்கைகளை ஆதரிப்பதாகவோ அல்லது ஆதரிக்க வேண்டுமென்றோ, தீமையான நடக்கைகளைத் தூண்டும் தீமையான நோக்கங்களையும் ஆதரிப்பதாகவோ (அ) ஆதரிக்க வேண்டுமென்றோ, தீமையான நோக்கங்களுக்கும், தீமையான நடத்தைகளுக்கும் இசைவாகக் காணப்படும் தீமையான நபர்களையும் ஆதரிப்பதாகவோ (அ) ஆதரிக்க வேண்டுமென்றோ அர்த்தப்படுவதுமில்லை. மாறாக இதன் அர்த்தமாவது இத்தகையவர்களுடைய மனங்களானது, தங்களுடைய வாழ்க்கையிலுள்ள தெய்வீக மேற்பார்வைப்பற்றின எண்ணங்களினாலும், எவ்வாறு தாங்கள் எப்பொழுதும் சர்வ வல்லமையுள்ளவருடைய நிழலின் பாதுகாப்பான பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றார்கள் என்பது பற்றின எண்ணங்களினாலும், அனைத்துக் காரியங்களும் வெளிப்புறத்தில் எப்படியாகக் காணப்பட்டாலும், அனைத்தும் தங்களுடைய நன்மைக்கு ஏதுவாகவே நடக்கின்றது என்பது பற்றின

எண்ணங்களினாலும் மிகவும் நிறைந்திருக்கும் என்பதேயாகும்; இன்னுமாக சர்வ வல்லமையுள்ளவரின் ஆற்றலினால் நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்பட்ட தீமையான நோக்கங்களையும், நடத்தைகளையும் உடையவர்கள் மீது, அதாவது தங்களுக்குத் தீமைச் செய்ய முயன்றவர்கள் மீதும், தீமையைப் பகீரங்கமாய் நடப்பித்தவர்கள் மீதும் இருதயத்திலோ (அ) வார்த்தைகளிலோ எவ்விதமான கசப்பும் கொண்டிருக்க மாட்டோம் என்றுள்ள எண்ணங்களினால், இத்தகையவர்களின் மனங்கள் நிறைந்திருக்கும் என்பதேயாகும். எந்தளவுக்கு கர்த்தருடைய ஜனங்கள் காரியங்களைப் பரந்த கண்ணோட்டத்தில் பார்ப்பதற்குரிய இந்த உயர்வான நிலையை அடைவார்களோ, அவ்வளவாய் இவர்கள் தங்களை எதிர்ப்பவர்களிடத்தில் கோபம், வன்மம், பகைமை, கொள்வதிலிருந்து விடுதலையாவதோடு மாத்திரமல்லாமல், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமானது," இவர்களது இருதயங்களை ஆளுகை செய்து மற்றும், ஜீவியத்தின் சகல புயல்கள் மற்றும் சூழ்நிலைகள் மத்தியிலும் இவர்களைப் பாதுகாப்பாய்க் காத்துக்கொள்ளும், ஏனெனில் இவர்களது நம்பிக்கையானது திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்ம நங்கூரமாய் இருக்கின்றது. இவர்கள், "கர்த்தர் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்தியுள்ளார்கள்;" ஆகையால் இவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாய்க் காணப்பட முடியும்.

யோசேப்பினுடைய இந்த நடக்கையானது, தேவனுடைய பார்வையில் சரியான ஒன்றாகவும், சரியான மனநிலையில் காணப்படும் அனைவரின் பார்வையில் சிறந்த ஒன்றாகவும், யோசேப்பினுடைய சகோதரர்கள் தொடர்புடைய விஷயத்திலும், அவர்களுக்கான ஆறுதலின் விஷயத்திலும், அவர்களுக்கான சமாதானத்தின் விஷயத்திலும், அவர்கள் யோசேப்பினிடத்தில் அன்பு காட்டத்தக்கதாகவும், ஆசீர்வாதமான ஒன்றாகவும் காணப்பட்டதோடல்லாமல், யோசேப்பும் சமாதானம், சந்தோஷம், ஆசீர்வாதம் அடைவதற்கு ஏதுவான சரியான மற்றும் சிறந்த நடக்கையாகவும் காணப்பட்டது. யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுடைய பயங்களை அகற்றி, அவர்களை ஆறுதல்படுத்தி, அவர்களிடம் அன்பாய்ப் பேசி, தகப்பனாகிய யாக்கோபு உயிரோடிருந்தபோது, கொடுக்கப்பட்ட அதே பராமரிப்புக் கொடுக்கப்படும் என்று அவர்களுக்கும், அவருடைய குடும்பங்களுக்கும் வாக்களித்துக்கொடுத்தபோது, யோசேப்பு தன்னுடைய சொந்த இருதயத்திற்கும் மிகுந்த ஆசீர்வாதத்தையும், ஆறுதலையும் அடையப்பெற்றவராய்க் காணப்பட்டார். இதைப்பற்றி அனைவருக்கும் தெரியாது; ஒரு மனிதனால் செயல்படுத்த முடிகின்ற மிக உயரிய குணலட்சணமும், அதேசமயம் அதிகளவிலான ஆசீர்வாதங்களை அதனோடுகூடக்கொண்டு வருகின்றதுமான குணலட்சணமும் என்னவென்றால், தேவனுக்கொத்த குணலட்சணமாகிய இரக்கத்தையும், பரிவையும், பரந்த மனப்பான்மையையும் செயல்படுத்துவதேயாகும். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியில் இப்படியான குணலட்சணங்களைச் செயல்படுத்தாதவர்கள், ஆவிக்குரிய வளர்ச்சியில் அதிகம் வளர்ச்சியடையாதவர்களாகவே காணப்படுகின்றனர் மற்றும் இப்படியான குணலட்சணங்களைச் செயல்படுத்தியுள்ளவர்கள், "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்றும், "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்: என்றுமுள்ள கர்த்தருடைய வார்த்தைகளின் உண்மையை உணர்ந்துகொண்டவர்களாகக் காணப்படுவார்கள்.

அடுத்துவரும் வசனப்பகுதிகளானது, யாக்கோபின் மரணம் துவங்கி, யோசேப்பின் மரணம் வரையிலான, ஐம்பத்தி நான்கு வருடங்களின் காரியங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. மேலும் இவ்வசனப்பகுதிகளானது, யோசேப்பினுடைய உறுதியான குணலட்சணத்திற்கும் மற்றும் அவரது அனுபவங்கள் வாயிலாக, அவரைப் பாதுகாப்பாய்ச் சுமந்துவந்த கொள்கைக்கு அவர் கொண்டிருந்த உண்மைக்கும் அஸ்திபாரமாகக் காணப்படுவது, தேவன் மீதும், ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மீதும் அவர் கொண்டிருந்த விசுவாசமே என்ற சான்றுகளைத் தவிர, மற்றபடி சுருக்கமான தகவல்களையே கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இதை நாம் கடந்த காலங்களிலும், இன்றும் பார்க்க முடிகின்றது; கர்த்தருடைய உண்மையான ஜனங்களாய் இருந்தவர்கள், சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையினாலேயே ஏவப்பட்டு, இயக்கப்பட்டவர்களாய்க் காணப்படுகின்றனர். இந்த நம்பிக்கையைக் குறித்துதான் அப்போஸ்தலர், "நிலையும், உறுதியுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" என்று குறிப்பிடுகின்றார்; இந்த நம்பிக்கையானது ஜீவியத்தின் புயல்களிலும், துன்பங்களிலும் உறுதியாயும், நிலையாயும் நிற்கச் செய்கின்றது மற்றும் நமது ஜீவியங்களானது, பாவம், வஞ்சனை, சந்தேகம், சுயநலம் முதலிய பாறைகளில் மோதி, நொறுங்கிப்போய்விடாதபடிக்குத் தடுக்கின்றது (எபிரெயர் 6:19).

தெய்வீக வாக்குத்தத்தங்கள் மீது யோசேப்புக் கொண்டிருந்த மதிப்பே, அவர் போத்திபாரின் விசாரணைக்காரனாக இருந்தபோதும், சிறையில் இருந்தபோதும், மீண்டுமாக பார்வோனின் பிரதிநிதியாக, அரியணையில் இருந்தபோதும், உண்மையாய் இருக்க வைத்தது என்பதை யார்தான்

ஒப்புக்கொள்ளாமல் இருப்பார்கள்? எந்தளவுக்குப் பரம வாக்குத்தத்தங்களானது, நமது மனங்களுக்கு முன்பாகக் காணப்படுகின்றதோ, அவ்வளவாய்ப் பூமிக்குரிய மற்றும் சுயநலமான இலட்சியங்களானது குன்றிப்போய், நம்மீது வைத்துள்ள ஆதிக்கத்தை இழக்கின்றது. தேவன் ஆபிரகாமுக்குப் பண்ணிய வாக்குத்தத்தத்தின் மீதும், கானான் தேசத்தின் மீதும் மையம் கொண்டுள்ள யோசேப்பினுடைய விசுவாசக் கண்களானது, ஆற்றல்மிக்க தாக்கத்தைக் கொண்டிருந்தது, ஏனெனில் தேவனுக்கு நண்பனாகவும், தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கான சுதந்தரவாளியாகவும் வேண்டுமெனில், தேவன் அங்கீகரிக்கத்தக்கதான தூய்மையை இருதயத்திலும், ஜீவியத்திலும் கொண்டிருக்க வேண்டுமென்று யோசேப்பு உணர்ந்திருந்தார். இந்த வாக்குத்தத்தங்கள் தனது தகப்பனாகிய யாக்கோபினிடத்திலும், தாத்தாவாகிய ஈசாக்கினிடத்திலும், கொள்ளுதாத்தாவாகிய ஆபிரகாமினிடத்திலும் கொண்டிருந்த தாக்கத்தை/ஆதிக்கத்தை யோசேப்பு கண்டிருந்தார். மேலும் அதே வாக்குத்தத்தமானது யோசேப்பினிடத்திலும் ஆதிக்கம் கொண்டிருந்ததை நம்மால் காணமுடிகின்றது. ஐசுவரியங்கள், உயர் பதவிகள் மற்றும் அதிகாரத்தைச் சுயநலமாய் அடையத்தக்கதாக, நீதி மற்றும் சத்தியத்தின் கொள்கைகளைப் தியாகம் செய்திட விரும்புமளவுக்கு, இன்றைய காலங்களில், இந்த ஐசுவரியங்களினாலும், பதவிகளினாலும், அதிகாரங்களினாலும் மயக்கப்பட்டவர்கள், தங்கள் ஜீவியத்தின் மீது ஆதிக்கம் செலுத்தத்தக்கதான ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தம் மற்றும் சத்தியத்தின் ஆற்றலற்றுத் தாங்கள் காணப்படுகின்றார்கள் என்பதை நிரூபிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். ஒருவேளை ஆபிரகாமுக்கான வாக்குத்தத்தமானது, யோசேப்பினுடைய மனதில் அவ்வளவுக்குத் தாக்கம் கொண்டதாய் இருக்கவில்லையெனில், யோசேப்பு எகிப்தினுடைய அரியணையை அடைய திட்டம் தீட்டியிருப்பார் அல்லது தனது சகோதரர்கள் மீது அதிகாரம் கொண்டு, எஜமானாய் இருப்பதற்கான திட்டம் தீட்டியிருப்பார், மாறாக வாக்குத்தத்தத்திற்குப் பின்பாக தேவனே செயல்படுகின்றார் என்பதை உணர்ந்திருந்த யோசேப்பு, அதற்காகக் காத்திருந்தார்; அதை அவர் எண்ணிப்பார்க்க முடியாத மாபெரும் மற்றும் அருமையான ஆசீர்வாதமெனக் கருதி, அதற்காகக் காத்திருந்தார். எகிப்திலிருந்து கானான் தேசத்திற்குப் போய்விடலாம் என்றும் யோசேப்பு எண்ணிக்கொள்ளவில்லை; ஏனெனில் தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி, அவருடைய சந்ததியார் எகிப்திலே காணப்படுவார்கள் என்றும், அங்குத் துன்பப்படுவார்கள் என்றும், நானூறு ஆண்டுகள் காலம் எகிப்திலே குடியிருப்பார்கள் என்றும் கூறியிருந்ததை, யோசேப்பு நன்கு அறிந்திருந்தார்.

ஆகவே தேவன் மீதான மற்றும் ஆபிரகாமின் அந்த வாக்குத்தத்தத்தின் மீதான யோசேப்பினுடைய நம்பிக்கை என்பது, மரணத்திலிருந்துள்ள உயிர்த்தெழுதல் மூலமான நம்பிக்கையாகவே இருந்தது; இது அவருக்கு விலையேறப் பெற்ற படிப்பினைகளைக் கற்றுக்கொடுத்திருந்தாலும், உயிர்த்தெழுதல் பற்றியும், தேவனுடைய வல்லமைப் பற்றியுமான யோசேப்பினுடைய பூரணமற்ற புரிந்துகொள்ளுதலின் காரணமாகவே, தேவனுடைய தயவு இஸ்ரயேலர்கள் மீது கடந்துவந்து, இஸ்ரயேல் விடுதலையடையும்போது, இஸ்ரயேலர்கள் தன்னுடைய எலும்புகளை எகிப்திலிருந்து, கானானுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று குறிப்பாய் யோசேப்பு கட்டளையிடுகின்றார். ஆவிக்குரிய இஸ்ரயேலனும் தற்காலத்தின் லௌகீக/உலகப்பிரகாரமான தாக்கங்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமாயின், கர்த்தருக்கு உண்மையுள்ளவனாய்க் காக்கப்பட வேண்டுமாயின், குணலட்சணம் தொடர்புடைய உயர்வான கொள்கைகளுக்கு உண்மையுள்ளவனாய்க் காக்கப்பட வேண்டுமாயின், அவன் மரணத்திலிருந்துள்ள உயிர்த்தெழுதலின் வாயிலாக, எதிர்காலத்தில் நிறைவேறக்கூடிய தெய்வீக வாக்குத்தத்தங்களில் தனது மனதை மையம் கொண்டிருக்கச் செய்ய வேண்டும். எதிர்க்கால இராஜ்யத்தின் மீதும், எதிர்க்கால கனம் மீதும், எதிர்க்கால மகிமையின் மீதும், எதிர்க்கால ஐசுவரியங்கள் மீதுமான இந்த விசுவாசம் என்பது, இந்தத் தற்காலத்தினுடைய கனம் மற்றும் மகிமை மற்றும் ஐசுவரியங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்துப்போடுகின்றதாய் இருந்து, உண்மையான அனைத்து விசுவாசிகளையும் கனம், மகிமை, ஐசுவரியம் தொடர்புடைய விஷயங்களில், உலகத்திலிருந்து பிரித்துவிடுகின்றது; மேலும் இவ்வாறாக அவர்கள் இந்தத் தற்காலத்தின் காரியங்களை நியாயமான மற்றும் உணர்ச்சிவசப்படாத கண்ணோட்டத்திலிருந்து சிந்தித்துக்கொள்ளத்தக்கதாக ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்; இன்னுமாக அவர்கள் மிகவும் ஆற்றலுள்ள சுயநலத்தினுடைய உடனடி தாக்கங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றனர்; எனினும் வாக்குத்தத்தத்தில் தங்களுக்கு விசுவாசம் இருந்தபோதிலும், இன்னமும் சரீரத்தைக் கீழ்ப்படுத்தி வைப்பதின் அவசியத்தையும், சுயநலத்திற்கு நேரான சரீரத்தின் இயல்பான தன்மைகளை அழிப்பதின் அவசியத்தையும், அவர்கள் காண்கின்றனர்.

நம்முடைய ஆதார வசனம், இப்பாடத்திற்குப் பொருத்தமானதாய்க் காணப்படுகின்றது மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலன் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியமாகவும்

காணப்படுகின்றது. தற்கால ஜீவியம் தொடர்புடைய விஷயத்தில், நம்முடைய நாட்கள் எண்ணப்பட்டவைகளாகவே காணப்படுகின்றன. தற்கால சூழ்நிலைமைகளின் கீழ் நாம் நித்திய ஜீவனை எதிர்ப்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம்; இந்த அறிவு தொடர்புடைய விஷயத்தில், உலகமானது வெகுத் தொலைவில் காணப்படுகின்றது மற்றும் கிறிஸ்தவர்கள் சாதாரணமான நிலையில் காணப்படுகின்றார்கள்; கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருவன் தனக்குள்ளாகக் கூறிக்கொள்வதாவது, **"வாழ்க்கை என்பது குறுகிய காலம் உடையதாகும் மற்றும் நான் இந்த வாழ்க்கையைப் பற்றிப்பிடித்து, என்னால் முடிந்தமட்டும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்"** என்பதேயாகும். மற்றவனோ பரத்திலிருந்து வருகின்ற மேலான ஞானத்தை உடையவனாக, தனது சொந்த குறைவுகளையும், இயலாமைகளையும் உணர்ந்துகொண்டு, கல்லறைக்கும் அப்பாலுள்ள உயிர்த்தெழுதலின் ஜீவன், அதாவது நித்திய ஜீவன் தொடர்புடைய கர்த்தருடைய செய்திக்குச் செவிசாய்த்து, தற்போதுள்ள ஜீவியம் குறித்தும், எதிர்க்காலத்தில் வரவிருக்கும் ஜீவியம் குறித்துமுள்ள ஞானத்திற்குமான விண்ணப்பத்துடன் கர்த்தரிடத்திற்குச் செல்கின்றான்.

அவனுடைய விண்ணப்பத்திற்கு இணங்க, அவன் நித்தியமான ஜீவனைப்பற்றி அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளுவதற்கும், சிருஷ்டிகருக்குப் பிரியமானதாகவும், நித்தியமான ஜீவனாகிய பலனை அடைவதற்குக் காரணமாகவுமுள்ள குணலட்சணங்களைக் கட்டியெழுப்புவதற்கென நேரத்தையும், பெலத்தையும் செலவிடுவதற்கும், வாழ்க்கையின் அனுபவங்கள் வாயிலாக தேவனால் கற்றுக்கொடுக்கப்படுகின்றான். கிறிஸ்தவன் தன்னுடைய நாட்களை உணர்ச்சிவசப்படாத நிலையில்/மனக்கலக்கமுறாமல் எண்ணிக்கொள்கின்றானே ஒழிய, கவலையுடனோ (அ) துக்கத்துடனோ தன்னுடைய நாட்களை எண்ணிக்கொள்வதில்லை. "இருளிலிருந்து, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நம்மை அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதற்கும்," இந்த இடுக்கமான வழியின் பிரயாணத்தில், நம்மோடுள்ள மற்றவர்களுக்கு உதவியளிப்பதற்கும், தேவனுடைய பார்வையில் மிகவும், பிரியமாய்க் காணப்படும் குணலட்சணங்களைத் தனக்குள் அதிகமாய் வளர்த்துக்கொள்வதற்கும், தேவனுடைய பிரியமான குமாரனுக்கு ஒத்தச் சாயலை அதிகமதிகமாய், தான் அடைவதற்குமான அநேகம் ஆசீர்வாதங்களாகவே, அநேகம் சிலாக்கியங்களாகவே, அநேகம் வாய்ப்புகளாகவே இருக்கின்றது எனக் கிறிஸ்தவன் தன்னுடைய நாட்களை எண்ணிக் கொள்கின்றான்/ கணிக்கின்றான். இப்படியாக விரைவாகக் கடந்து போய்க்கொண்டிருக்கும் நாட்களை எண்ணிக்கொள்கின்றவனாகவும், அந்த நாட்களை தான் எவ்விதத்தில் தெய்வீக அறிவுரைகளுக்கு இசைவாகப் பயன்படுத்துகின்றான் என்பதைக் கூர்ந்து கவனிப்பவனாகவும் காணப்படும்போது, இறுதியில் இராஜ்யத்திற்காகவும், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையும் போதுள்ள அனைத்து மகிமைகளின் முழுமையான நிறைவேறுதலுக்காகவும் ஏங்கும் இருதய நிலைக்கு வருவான். மேலும் இக்கண்ணோட்டத்தின்படி, அவன் மகிழ்ச்சிகரமாய்க் கடந்துபோகும் நாட்களை எண்ணுகிறவனாய் இருந்து, தனது தற்கால பிரயாணத்தினுடைய வருடங்கள் முடிவடைகையில் மகிழ்ச்சியடைவான். காரணம் கர்த்தரிடத்திலும், அவருடைய திட்டத்தின் மகிமையான அம்சங்களிலுமுள்ள, அவனது நம்பிக்கையானது, தினந்தோறும் பலமடைந்து வருகின்றது மற்றும் தெளிவடைந்து வருகின்றது மற்றும் பிரகாசமடைந்து வருகின்றது.

---

[R2909]

# “நான் உன்னோடே இருப்பேன்”

**[யாத்திராகமம் 3:1-12]**

எகிப்தியரின் சகலவித கல்விகளிலும், தேர்ச்சி அடைந்திருந்த 40 வயதுள்ள மோசே, தேவனுடைய ஜனங்களோடு துன்பம் சகிப்பதற்கு முடிவெடுத்திருந்தார். மோசே, இராஜாவின் குடும்பத்தோடு தனக்கிருந்த உறவை உதறிவிட்டார். அதாவது, மோசே, "தான் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்தார்.” இஸ்ரயேல் ஜனங்களின் பிதாக்களோடு, தேவன் பண்ணியுள்ள வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கும்படி, தேவனுடைய ஜனங்களோடு, துன்பம் சகித்தலை தெரிந்துகொண்டார். எகிப்தியர்களோடு, மோசே இருக்கும்வரையிலும், இஸ்ரயேலர்களை அடிமைப்படுத்தி, துன்பப்படுத்தி, வேலை வாங்குவதினால் வரும் ஐசுவரியத்தில் மோசே, எகிப்தியர்களோடுகூட பங்கு பெற்றிருந்தார். ஆனால், இந்த தவறான செய்கையின் மூலம் வரும் ஆதாயங்கள் மற்றும் அநீதி, அநித்தியமான பாவங்களினால் உண்டாகும் சந்தோஷங்களில், மோசேயினால் தொடர்ந்து பங்குகொள்ள/அநுபவிக்க முடியவில்லை. மோசேயின் இந்த தன்மைகளும், நீதியின் பேரிலான அன்பும் உண்மையானவைகள். இது அவர் இயல்பாகவே உயர்ந்த, நீதியான மனம் கொண்டவர் ஆவர் என்பதை காட்டுகின்றது. தற்காலத்தில் சுவிசேஷ புத்தகத்தின் ஆலோசனையின் கீழும், பரிசுத்த ஆவியின் வெளிச்சமூட்டும் தாக்கத்தின் கீழும் இருக்கும் எத்தனை கர்த்தருடைய ஜனங்கள், மோசேயின் நடவடிக்கையிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. எத்தனை பேர், அநீதியான மற்றும் அநித்தியமான பாவங்களினால் உண்டாகும் சந்தோஷங்களை அநுபவிக்க விரும்புகின்றார்கள், அதாவது, ஏழ்மையானவர்களை அநீதியாக நடத்திவரும் ஐசுவரியங்களை, தொடர்ந்து பெற்றுக்கொள்ள எத்தனை பேர் விரும்புகின்றனர். இப்படியான அநீதியான சம்பாத்தியங்களுக்கு, நாங்கள் நேரடி காரணம் இல்லையென்று தங்களைத்தாங்களே சமாதானப்படுத்துகின்றவர்கள் எத்தனை பேர்? மோசேயின் நடவடிக்கை எத்துணை உயர்ந்ததாகவும், கர்த்தர் அங்கீகரிக்கத்தக்கதாகவும் இருந்தது. நீதியை அறிந்து, அதை விரும்புகிற யாவரும், இவ்விஷயங்களில் உறுதியான முடிவுகள் எடுக்க வேண்டும் (எபிரெயர் 11:24-26).

"எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும், கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையையே அதிக பாக்கியம் என்று” மோசே கருதியதினாலேயே, மோசே இங்கனம் முடிவெடுத்தார் என்று எழுதப்பட்டுள்ளது. இஸ்ரயேலர்கள், தங்களுடைய பிதாவாகிய ஆபிரகாமிடத்தில், சர்வ வல்லமையுள்ளவர் செய்து கொண்ட மாபெரும் வாக்குத்தத்தத்துக்கு சுதந்தரவாளிகள் என்று தங்களைக் குறித்து கருதினதை எகிப்தியர்கள் அறிந்திருந்தபடியால், மேசியாவின் நிமித்தமாக நிந்தனைகள் இஸ்ரயேலர் மீது குவிக்கப்பட்டிருந்தது. உலகத்தை ஆளும், ஆசீர்வதிக்கும் மாபெரும் விடுவிக்கிறவருமான மேசியா இஸ்ரயேலர் தேசத்தாரிடமிருந்து தோன்றுவார் என இஸ்ரயேலர் நம்பியிருந்ததை, எகிப்தியர்கள் அறிந்திருந்தார்கள். இவ்விதமான வரம்புமீறின நம்பிக்கையினிமித்தம் இஸ்ரயேலர்கள், தங்களை ஒடுக்குகிறவர்களால் அடிக்கடி வசைக்கூறப்பட்டார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் மோசே இவ்வாக்குத்தத்தங்களை நம்பி மேலும் இழிவாக பார்க்கப்பட்ட ஜனங்களோடு தன்னை ஐக்கியப்படுத்த விரும்பி, எகிப்தின் இராஜ முற்றங்களைவிட்டு வெளியேறினார். இதற்கான காரணத்தை, அப்போஸ்தலர், "அவர், இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்தார்” என்று குறிப்பிடுகின்றார். மோசே ஆபிரகாமின்

வாக்குத்தத்தத்திலும் மற்றும் மேலான உயிர்த்தெழுதலின் வாயிலாக இஸ்ரயேலர் மூலம் வரும் ஆசீர்வாதத்திலும் உள்ள தன்னுடைய பங்கை தக்கவைத்துக் கொள்வதற்கென்று தன்னுடைய சொந்த ஜனங்களோடு சேர விரும்பினார். (எபிரெயர் 11:35, 39, 40)

மோசே இயல்பாக சாந்தகுணமுள்ளவராகக் காணப்பட்டாலும், அவர் கல்வியறிவும், தாலந்துகளும் கொண்டவராக இருந்தார். மேலும், இது குறித்து இஸ்ரயேலரும் அறிந்திருந்தபடியால், மேலும் அவர்கள் இந்த காலகட்டத்தில் எகிப்திலிருந்து விடுதலையை எதிர்பார்த்திருக்கையில் இவர்கள் தன்னை ஓர் ஆலோசகனாக, ஒரு பிரதிநிதியாக மற்றும் தகுதியான நியாயப்பிரமாணிகனாக ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியாயிருப்பார்கள் என்று மோசே எண்ணிக் கொள்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்தது. தன் சகோதரருக்காக கொண்டிருந்த வைராக்கியத்தினிமித்தமாகவும், அவர்கள் மீது செலுத்தப்படும் அநீதியின் காரணமாக கொண்ட வெறுப்பினிமித்தமாகவும் எகிப்திய ஒரு விசாரணைக்காரனை கொன்றுபோட்டு, ஒடுக்கப்பட்ட எபிரெயனை விடுவித்தார். இப்படி செய்வதின் மூலம், மோசே தனது ஜனங்களை விழித்தெழப்பண்ணி, அவர்கள் அவரை தங்களுடைய தலைவனாக ஏற்றுக்கொள்ள செய்து, அது முதல் எகிப்திலிருந்து விடுதலைப் பெறுவதற்கான விஷயங்கள் ஆரம்பிக்கலாம் என்று எண்ணிக் கொண்டார். ஆனால் அடுத்தநாள், மோசே தன் சகோதரர் மேல் கொண்டிருந்த எண்ணத்தை, தன் சகோதரர்கள் தன் மேல் கொண்டிருக்கவில்லை என்று அறிந்தபோது, இது அவருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஏனெனில், மோசே, இரண்டு இஸ்ரயேலர்களுக்கு இடையிலான பிரச்சனையை சமாதானப்படுத்த முற்பட்டபோது, தவறு செய்தவன், சமாதானம் பண்ணவந்த மோசேயின் முயற்சியை அவமதித்து, மோசேயை நியாயப்பிரமாணிகனாக ஏற்றுக்கொள்ள மறுப்பதையும், மோசேயின் செயல்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுப்பதையும் வெளிப்படுத்தினான். தவறு செய்த இஸ்ரயேலனோ, "எங்கள் மேல் உன்னை அதிகாரியாகவும், நியாயதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்?" "உன்னுடைய அதிகாரம் எங்கே?" "உனக்கு எங்கள் மேல் எந்த அதிகாரமும் இல்லை" என்றும், "நேற்று எகிப்தியனைக் கொன்றது போல் என்னையும் கொல்லப்போகின்றாயோ?" என்றும் கேட்டான். மோசே முற்றிலும் மனமுடைந்தவராக, பாரான் வனாந்தரத்திற்கு ஓடிப்போனார். மோசே, தன்னுடைய ஜனங்களுக்காக, எகிப்தின் மகிமையையும், சிங்காசனத்தையும் தான் தியாகம் பண்ணினதைக் குறித்த விஷயங்களை ஜனங்கள் அங்கீகரிப்பார்கள் என்று எண்ணினார். அவர் தன்னுடையவர்களிடத்தில் வந்தபோது, தன்னுடையவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. மோசே, மாபெரும் தியாகம் செய்துள்ளார். ஆனால், எவ்வித நோக்கத்திற்கும் இல்லை.

முற்றிலும் ஏமாற்றப்பட்டவராகவும், நாகரீகமான வகுப்பாராகிய எகிப்தியரிடமிருந்து துண்டிக்கப்பட்டவராகவும், தான் உதவி செய்ய விரும்பிய தன் சகோதரர்களிடமிருந்து துண்டிக்கப்பட்டவராகவும் மோசே, ஒதுங்கி வனாந்தரத்தில் தனது வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டார். இயல்பாகவே நற்பண்புகள் கொண்டவரும், பயிற்சிகள் பெற்றவருமான மோசே, எத்திரோவின் மந்தைகளை மேய்ப்பர்கள் போன்று கவனித்துக் கொண்டிருந்த அவருடைய ஏழு குமாரத்திகளை பாதுகாக்கும் சம்பவம் ஏற்பட்டது. பின்னர் அவர்களில் ஒருவரை திருமணம் செய்து கொண்டு, தனது மாமனாரின் மந்தைகளுக்கு மேய்ப்பனாக வாழ்ந்து கொண்டு வந்தார். 40 ஆண்டுகள் இவ்விதம் தனியாக வாழ்ந்தார். ஒரு கலாச்சாரத்திலிருந்தும், மனுஷர் மத்தியிலுமுள்ள கனத்திலிருந்து, வனாந்தரத்தின் தனிமைக்குள், மோசேயின் வாழ்க்கை மாபெரும் மாற்றத்திற்குள் கடந்து சென்றது. இக்காலக் கட்டம் வரையிலும், மோசேக்கு தெய்வீக தயவு குறித்ததான நேரடியான வெளிப்படுத்தல்கள் இருக்கவில்லை. ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டதின் வாயிலாக தனது ஜனங்களுக்கு சொந்தமான வாக்குத்தத்தம் குறித்ததான நம்பிக்கை பற்றின அறிவு மாத்திரமே மோசேயிடம் காணப்பட்டது. தனது ஜனங்களுக்கு தான் தலைவராகும்படி தனது 40-ம் வயதில் தான் எடுத்த பிரயாசம் தவறு என்று மோசே எண்ணியிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

என்றாலும், தெய்வீக வாக்குத்தத்தங்கள் மீது அவருக்கு இருந்த விசுவாசம் தளர்ந்து போகவில்லை என்றும், அவர் தேவனுடைய பட்சத்தில் நிற்கவும், எகிப்தின் சமுதாயத்தினின்று விலக்கி வைக்கப்படுவதையே விரும்பினார் என்று நாம் எண்ணுகின்றோம். எனினும், மோசேயின் அனைத்து விஷயங்களிலுமே, தேவனுடைய மேற்பார்வை காணப்பட்டது. மேலும், அவருடைய நேர்மைக்கான பரீட்சைகள் விலையேறப் பெற்ற அனுபவங்களாக இருந்து, கர்த்தருடைய ஏற்றவேளையில் அவருக்கென்று நியமிக்கப்பட்டுள்ள கர்த்தருடைய மாபெரும் வேலைக்கு அவரை ஆயத்தம் பண்ணிற்று. இது அவருக்கு இன்னொரு விதமான விலையேறப்பெற்ற பாடத்தைக் கொடுத்தது. மோசே வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் வாழ்ந்தபோது, அவருக்கு அங்குள்ள ஒவ்வொரு சாலையும், ஒவ்வொரு மலையும், ஒவ்வொரு ஆறு குறித்தும் நன்கு பரிட்சையம் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இந்த அனுபவங்கள் அவர் பின்னாட்களில், கர்த்தருடைய வழிநடத்துதலின் படி, இஸ்ரயேலரின் தலைவராக இருந்து அதே வனாந்தரத்தின் வழியாக, கானானுக்கு செல்கையில், அவருக்கு மிகுந்த அநுகூலமாயிருந்தது. அந்த 40 வருட காலப்பகுதியில் மோசே, தெய்வீக சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் காட்டுவது குறித்தும், தாழ்மையைக் குறித்தும், பொறுமையைக் குறித்தும் விலையேறப் பெற்ற பாடங்களைப் பெற்றுக் கொண்டார். மோசே, எத்திரோவின் குமாரத்தியை திருமணம் செய்து கொண்டு, இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த விஷயத்திலும்கூட, தேவன் தமது ஜனங்களின் நன்மைக்கு ஏதுவான காரியங்களை செய்துள்ளார். ஏனெனில், சிப்போராள், கருப்பின ஜாதியை சேர்ந்தவரானபடியால், அவர் பெற்ற குமாரர்களும் பழுப்பு நிறமுடையவர்களாக இருந்திருப்பார்கள். மேலும், ஒருவேளை மோசே, இஸ்ரயேல் குலத்து ஸ்திரீயை திருமணம் செய்து பிறந்த பிள்ளைகளுக்கு, இஸ்ரயேலர் மத்தியில் கிடைக்கும் மரியாதையைக் காட்டிலும், சிப்போராளின் பழுப்பு நிற குமாரர்களுக்கு கனம் குறைவாகவே காணப்படும். ஒருவேளை மோசே, இஸ்ரயேல் குலத்து ஸ்திரீயை திருமணம் செய்து, பிள்ளைகள் பிறந்திருப்பார்களானால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையின் காரணமாக, மோசேயின் மரணத்திற்கு பின்பும், மோசேயின் வம்ச வழியினருக்கே ஆளுகை கொடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் நிலவியிருக்கக்கூடும். இப்படி செய்வது நிச்சயமாக, தெய்வீக நோக்கமாக இருக்காது.

கர்த்தருடைய ஜனங்களாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் மோசேயின் அனுபவங்கள் அடிக்கடி வருகின்றது. சில சமயங்களில் நம்முடைய சுயபலிகளும் நமக்கான திட்டங்களும் நம்முடைய பிரயாசங்களும் புறக்கணிக்கப்படுகின்றது. மேலும் அவைகளுக்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கப்படுவதில்லை. மேலும் கர்த்தருக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகள் என நாம் ஆசலோடு செய்துவந்த /எண்ணிவந்த வாய்ப்புகளும், செயல்களும் நம்மிடமிருந்து தள்ளி வைக்கப்படுகின்றது. நம்முடைய இந்த ஏமாற்றங்கள் வாயிலாக ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதற்கு கர்த்தருடைய கரம் வல்லமையுள்ளது என நாம் உணர்ந்து கொள்ளும்வரை, இந்த ஏமாற்றங்கள் எவ்வளவாய் நம்மை மனமுடைய செய்தது. இவ்விதமான சோதனையான சூழ்நிலைகளை அல்லாமல் வேறு எவ்விதத்தில் நாம் படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள முடியும்? எதிர்காலத்தில் நாம் கர்த்தருடைய ஜனங்களுக்கும் மற்றும் அவருடைய பணிகளுக்கும் பயன்படத்தக்கதாக நம்மை ஆயத்தம் பண்ணும்விதமாக, கர்த்தர் இப்படிப்பினைகளை ஏற்பாடு பண்ணியுள்ளார். ஆகவே நாம் தேவனிடத்தில் அதிகம் விசுவாசமும், அதிகம் நம்பிக்கையும், அதிகம் தைரியமும் அடைவோமாக. மேலும் நாம் எங்கெல்லாம் அவருடைய நடத்துதலை வெளியரங்கமாகக் காணமுடியவில்லையோ, அப்போதெல்லாம் அவருடைய தீர்மானத்தில் அழைக்கப்பட்டவர்களுக்கும், அவரை அன்புகூருகிறவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்று அறிந்து அவரை விசுவாசிக்க வேண்டும்.

மோசே 80-ம் வயதை அடைந்தபோது, இஸ்ரயேலை விடுவிக்கும்படி, கர்த்தர் அவரை அனுப்பினார். மோசேயின் வாழ்க்கை, இருசம அளவு காலங்களாகப் பிரிக்கப்பட்ட விஷயம் தற்செயலாய் நடந்த காரியம் அல்ல. அதாவது, 40 ஆண்டுகள் எகிப்தில் பயிற்சி அளிக்கப்பட்டு,

பின்னர் புறக்கணிக்கப்பட்டார். பின்னர் 40 ஆண்டுகள் மோசே எகிப்தில் இல்லை, பின்னர் தேவனுடைய ஜனங்களை வெற்றிகரமாக விடுவித்தார். இவ்விஷயத்தில் மோசே நிழலாக இருக்கின்றார். யாக்கோபின் மரணமுதல் ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரயேல் தேசம் நிஜமான மோசே தன்னுடையவர்களிடத்தில் வந்து, தன்னுடையவர்களால் புறக்கணிக்கப்பட்ட காலம் வரையிலும் 1845 வருடங்கள் சென்றது, இது, முதல் 40 வருடங்களின் நிஜமாக இருக்கின்றது. பின்னர் நிஜமான மோசே பூமியில் இல்லாத காலமுதல், அவருடைய இரண்டாம் வருகையில் வந்து, பின்னர் அதை தொடரும் சாத்தானின் அடிமைத்தனம், பாவம் மற்றும் மரணத்திலிருந்ததான தேவனுடைய ஜனங்களின் விடுதலை சம்பவிக்கும் காலம் இரண்டாம் 40 வருடங்களின் நிஜமாக இருக்கின்றது. நிஜத்திலும் இரண்டு காலப்பகுதிகளுமே சமஅளவில் காணப்படுகின்றது.

40 வருட காலப்பகுதியில் தான் மோசேக்குள் எத்தனை மாற்றங்கள்! ஆரம்பத்தில் மோசே இஸ்ரயேலர்களை வழிநடத்த ஆயத்தமும், ஆவலும் கொண்டவராகக் காணப்பட்டார். மேலும் இந்த ஜனங்களுக்கு, தான் ஒரு தலைவனாக, நியாயப்பிரமாணிகனாக இருப்பதற்கு தகுதியானவன் என்று தன்மீது தன்னடக்கத்துடனான நம்பிக்கைக் கொண்டிருந்தார். மேலும் தேவன் தாமே தன்னை ஜனங்களுக்குரிய தகுதியான தலைவனாக ஆக்குவதற்கு, தன்னை கல்விகள் கற்க செய்து, ஆயத்தம் பண்ணினார் என்று விசுவாசத்தினால் மோசே உணர்ந்திருந்தார் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்பொழுது, கர்த்தருடைய வேளை வந்தபோதோ, மோசேயின் தைரியம் எல்லாம் போய்விட்டது, அவருடைய தன்நம்பிக்கை எல்லாம் தொய்ந்து போய்விட்டது, மேலும் தான் தகுதியற்றவன் என்று கர்த்தரிடம் கூறினார். இப்பொழுது கர்த்தர், மோசேயை பலப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இஸ்ரயேலின் விடுதலை மனுஷனாலும் அல்ல, மனுஷன் மூலமாயும் அல்ல, அது கர்த்தராலேயே ஆகும் என்றும், மனிதர்கள் கர்த்தருடைய பிரதிநிதிகள் மாத்திரமே என்றும் மோசே ஆழமாக உணர்ந்திருந்தார். எத்துணை விலையேறப் பெற்ற பாடங்களை மோசே கற்றுக் கொண்டார். மேலும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும், அதிலும் விசேஷமாக, கர்த்தருடைய வேலைக்குப் பயன்படுகிற எவரும் இத்தகையப் பாடங்களைக் கற்றுக் கொள்வது மிக அவசியமாக இருக்கின்றது. நாம், இது நமது வேலையாய் இராமல், தேவனுடைய வேலையாய் இருக்கிறது என்றும், நம்முடைய வல்லமையோ, திறமையோ, ஞானமோ, மகத்துவமோ, கல்வியோ இராமல், தெய்வீக வல்லமையே நமக்குள்ளும், நம் மூலமாயும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது எனவும், தேவனுடைய வல்லமை, அரண்களை நிர்மூலமாக்க வல்லமையுள்ளதாகவும், பெலவீனமானதை உயர்த்த, வல்லமையுள்ளதாகவும் இருக்கின்றது எனவும், அவர் வாக்களித்த இரட்சிப்பைக் கொண்டுவரவும் வல்லமையுள்ளது எனவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க அனுப்பப்படுகின்ற நாம் அனைவரும், இப்பாடங்களை எவ்வளவுக்கு ஆழமாக கற்றுக் கொள்கிறோமோ, அவ்வளவாய் நமக்கு நன்மையானதாக இருக்கும்.

எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும் உள்ள கர்த்தருடைய ஜனங்கள், கர்த்தருடைய வேலையில் எந்த பாகத்தையாகிலும் சரியாக செய்ய முயற்சித்து, அவருடைய வார்த்தையின் மூலம் வெளியாகும் அவருடைய அழைப்புக்கு செவிசாய்க்கும் அனைவருக்கும், "நான் உன்னோடே இருப்பேன்" என்ற நம்முடைய ஆதார வசனம் உற்சாகமூட்டுகின்றதாக இருக்கின்றது. தேவன் நமக்காகவும், நம் பட்சத்திலேயும் காணப்பட்டார் என்றால் நமக்கு எதிராய் நிற்பவன் யார்? மோசேக்கு காணப்பட்டதுபோலவே, நமக்கும் பல்வேறு கஷ்டங்கள், சோதனைகள், ஏமாற்றங்கள் மற்றும் மனவேதனைகள் வரும், காரணம் புதிய சுபாவமாகிய பொக்கிஷத்தை நாம் மண்பாண்டங்களில் பெற்றிருக்கின்றோம். மேலும் இந்த மண்பாண்டத்தின் பெலவீனங்கள், பூரணமற்ற தன்மைகள் மற்றும் குறைவுகள் நமக்கு குறைவுகளையும் ஏமாற்றங்களையும் கொண்டுவருகின்றது. இம்மாதிரியான சூழ்நிலைகளில் நாம் யாரை சேவிக்கின்றோமோ, யாருடைய ஸ்தானாபதிகளாக இருக்கின்றோமோ, யாருடைய பிரதிநிதிகளாக இருக்கின்றோமோ, அவரை

நோக்கி, நம்முடைய புரிந்து கொள்ளுதலின் கண்களை திருப்பி, "நான் உன்னோடே இருப்பேன்" என்ற அவருடைய வாக்குத்தத்தத்தை நினைவுகூரக்கடவோம்.

"நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம்." மோசே தான் கனமான சூழ்நிலையில் இருந்து ஜனங்களிடம் சென்றபோது, ஜனங்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள தவறினதை எண்ணினார் என்பதில் ஐயமில்லை. தன்னுடைய முன்னிலமையோடு, பின்னிலமையை ஒப்பிட்டு மோசே பார்த்திருக்க வேண்டும். இப்பொழுது மோசே ஒரு மேய்ப்பனாகவும், ஒருகாலத்தில் எகிப்தில் அவரை அறிந்தவர்களால் இப்பொழுது மறந்து போகப்பட்டவராகவும், எவ்வித செல்வாக்கும், கீர்த்தியும் அற்றவராகவும், அரச சபையில் எவ்வித புகழ்ச்சியும், தயவும் அற்றவராகவும் காணப்பட்டப்படியால், மோசே தனக்குள்ளாகவே, "முற்காலத்தில் நான் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தமுடியாவிட்டால், இப்பொழுது செய்யமுடியும் என என்னால் எப்படி எதிர்பார்க்க முடியும்?" என்று கூறியிருப்பார் என்பதில் ஐயமில்லை. "நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம்." தேவன் தன்னை அனுப்புகிறார் என்றார். அது ஏற்றவேளை வந்துவிட்டதைக் குறிக்கின்றது என்றும், தேவனுடைய அனைத்து நன்மையான திட்டங்கள் நிறைவேறும் என்றும் மோசே அறிந்து கொள்ள வேண்டும். மேலும் கர்த்தர் இல்லாமல், தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்றும், கர்த்தர் இருந்தால் மாத்திரமே தன்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்பதையும் மோசே அறிந்து கொள்ள வேண்டும். இதுபோலவே கர்த்தருடைய வேலைக்குப் பயன்படுகிறவர்களும், பயன்படப்போகிறவர்களுமாகிய கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்ற வார்த்தைகளிலுள்ள பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். (யோவான் 15:5) பின்னர் மோசேயும், இஸ்ரயேலர்களும் எகிப்தைவிட்டு வெளியே வந்து, கர்த்தருடைய தூதன் முட்புதரில் வெளிப்பட்ட அதே மலைக்கு வந்து ஆராதனை செலுத்துவார்கள் என்ற நிச்சயமான வாக்குத்தத்தத்தை தேவன் மோசேக்குக் கொடுத்தார்.

பல்வேறு அடையாளங்களின் வாயிலாக தேவன் தன்னுடைய ஊழியக்காரனின் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தினார். எரிகிற முட்செடியே தெய்வீக வல்லமையின் ஒரு விவரிப்பாகும். மற்றொரு விவரிப்பு, கோல், சர்ப்பமாக மாறுவதாகும். சர்ப்பம் தீமையின் அடையாளமாக இருக்கின்றது. சர்ப்பம் மீண்டுமாக தடியாக மாற்றப்பட்ட அடையாளம், தேவனுடைய வல்லமையானது விசுவாசத்தின் செயல்பாடு காரணமான தீமையானவைகளை, நன்மையானவைகளாக மாற்றப்போவதைக் குறிக்கின்றது. மீண்டுமாக கையை நெஞ்சு பகுதிகளில் போட்டு வெளியே எடுக்கும்போது, கை குஷ்டரோகம் கொண்டதாகக் காணப்பட்டது, பின்னர் மீண்டும் உள்ளே போட்டு வெளியே எடுத்தப்போது, கை சொஸ்தமாக்கப்பட்டிருந்தது. தற்காலத்தில், ஊழியத்திற்கான கிறிஸ்துவின் சரீர அங்கங்கள், அவருடைய ஸ்தானாபதிகள் அனுப்பப்படும்போது, கர்த்தர் மோசேயின் கண்களுக்கு புலப்படும் விதத்தில், தெய்வீக வல்லமையின் வெளிப்படுதல்களைக் கொடுப்பதில்லை என்றாலும் ஆவிக்குரிய மேலான தளத்தைப் பற்றின சில சாட்சிகள் முதலாவது கொடுக்கப்படாமல், எவரும் ஊழியத்திற்கு அனுப்பப்படுவதில்லை என்பதில் நாம் உறுதிக் கொள்ளலாம். அவர்கள் கர்த்தரை, மாபெரும் வெளிச்சமாகக் காணவேண்டும். மேலும் அனைத்து தீமை மற்றும் பாவம் தொடர்பான விஷயங்களில் அவருடைய நீதி, பட்சிக்கிற அக்கினியாக இருக்கிறது என்றும், அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் கிறிஸ்துவின் மூலம் தேவன் நம்முடைய பூரணமற்ற தன்மைகள் மேல் இரக்கம் கொண்டு, அவருடைய வெளிச்சத்தை நாம் காணும்படி அருள் செய்து, அதனால் பட்சிக்கப்படாமல், அதை அநுபவிக்க நமக்கு அருள் செய்துள்ளார் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அநுபவங்கள் என்னும் பள்ளிக்கூடத்தில், நாம் நம்முடைய முன்மாதிரியும், மாபெரும் போதகருமான இயேசுவின் கீழ், இப்படிப்பட்டதான பாடங்களைக் கற்றுக்கொண்ட பின்னர் தான், நாம் பல்வேறுவிதங்களில் உள்ள கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆயத்தமாக இருப்போம். மேலும்

அவரும், அவைகளை நமக்கு சுட்டிக் காட்டவும், நம்மை அனுப்பவும், நம்மை பயன்படுத்தவும் விரும்புவார். கர்த்தருக்காகவும், அவருடைய ஜனங்களின் நன்மைக்காக நாம் ஏறெடுக்கும் பிரயாசங்கள் கர்த்தருடைய ஏற்ற வேளையிலும் மற்றும் அவர் நம்மை அனுப்புகிற வேளையிலும்தான் செழித்தோங்க முடியும் என்ற பாடத்தை முழுமையாக புரிந்து கொள்வோமாக. ஆனால் ஒருவேளை நம்முடைய அறியாமையில் நாம் பிரயாசங்கள் எடுத்திட்டாலும், பரலோக பலன்கருதி அப்பிரயாசங்களை நாம் சாந்தத்துடனும், தாழ்மையுடனும் செய்திருந்தாலும், அப்பிரயாசங்களை நிச்சயமாக கர்த்தர் தமதாக்கிக் கொண்டு, அவைகளை நம்முடைய நன்மைக்காகவும், எதிர்கால வேலைக்குரிய நம்முடைய வளர்ச்சிக்காகவும், மோசேயின் விஷயத்தில் நடந்ததுபோன்று ஆசீர்வதிப்பார். ஆமென்!

---

# நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார்

### யாத்திராகமம் 12:1-17

வாதைகள் ஒவ்வொன்றும் மோசேயின் மூலமான பார்வோனின் வேண்டுதல்களுக்கு இணங்க தெய்வீக இரக்கங்களினால் ஓய்ந்துபோனாலும், பார்வோனின் இருதயமோ கடினப்பட்டு கொண்டிருந்தது. தேவன் முன்னதாகவே அறிந்து அறிவித்திருந்த வண்ணமாக தேவனுடைய தயவு பார்வோனை மனந்திரும்புதலுக்கு ஏதுவாக நடத்தாமல் அவனை இன்னும் கடினப்படுத்தவே செய்தது. கடைசி பத்தாவது வாதை இந்தக் கடினமான மனிதனை (பார்வோன்) உருக்குலைய வைத்து, இஸ்ரயேலை விடுவிக்கும் கட்டாயத்திற்குள் அவனை நடத்தும் என்று தேவன் மோசேயினிடத்தில் கூறியிருந்தார். இந்த (கடைசி) வாதை வருவதற்கு முன்பு பார்வோன் இஸ்ரயேலர்களை விடுவிப்பதற்கு விரும்புகின்றானோ? என்று மோசே அவனிடம் கேட்டார். மேலும் எதிர்மறையான பதில் வந்தபோது இதன் விளைவாக அச்சம் மிகு ஆபத்து எகிப்தியர்கள்மீது வருமென்று பார்வோனை எச்சரிக்கவும் செய்தார். பின்னர் உடனடியாக மோசே கோசேன் நகரத்தைவிட்டுத் திரும்பி ஜனங்களை யாத்திரைக்கு ஆயத்தம் பண்ணும்படி புறப்பட்டார். இஸ்ரயேலர்கள் போகவேண்டும் என்றதாலும், தங்களின் ஆட்சியாளர்கள் பிடிவாதத்தில் இருப்பதின் நிமித்தம் வருத்தம் கொண்டதாலும், இஸ்ரயேலர்களுக்குத் தாராளமாக பொன், வெள்ளி ஆபரணங்களையும், விலையுயர்ந்த பொருட்கள் பலவற்றையும் எகிப்தியர்கள் கொடுத்தார்கள். தேவன் இஸ்ரயேலர்களோடு இருக்கிறார் என்றும், எகிப்தியர்களுக்கு எதிராக இருக்கின்றார் என்றும் பார்வோனால் உணரமுடியாமல் இருந்தபோதிலும், எகிப்திய ஜனங்கள் இதை ஏதோ விதத்தில் உணர்ந்திருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பயணத்திற்கான ஆயத்தத்திற்கு எத்தனை நாட்கள் எடுத்தது என்று நமக்குத் தெரியவில்லை, ஆனால் அந்த நாட்களானது பார்வோனுக்கும் மற்றும் மோசேயினாலும், ஆரோனாலும் முன்வைக்கப்பட்டதான கடைசி அச்சுறுத்தல் குறித்து அறிந்திருந்திருந்த அனைவருக்கும் எதிர்ப்பார்ப்பின் காலமாகவே இருந்திருக்குமென்று நாம் எண்ணுகின்றோம். ஆனால் பயணத்திற்கு ஆயத்தம்பண்ணுவதற்கு அநேக நாட்கள் தேவைப்பட்டிருந்திருக்கும் என்பதில் நமக்கு உறுதியே; ஏனெனில் ஜனங்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் பழுதற்ற ஒரு வயது ஆண் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்ற அறிவிப்புகளிலிருந்து மேற்கூறிய உறுதி நமக்குக் கிடைக்கின்றது; இந்த ஆட்டுக்குட்டியானது பஸ்கா என்று அழைக்கப்படுகின்றதான மத ஆசரிப்பிற்கு அடிப்படையாகப்போகின்றது மற்றும் பஸ்காவானது அதுமுதல் அந்த ஜாதியாரால் ஆசரிக்கப்பட்டு வருகின்றது. ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்து, அதை மற்றவைகளிடமிருந்து பிரித்து, ஆபிப் (பின்னர் நீசான் என்று அழைக்கப்பட்ட) மாதம் 10-ஆம் தேதிவரை பாதுகாத்து, அந்த மாதத்தின் 14-ஆம் தேதியிலே சாயங்காலங்களுக்கு நடுவில் (ஒரு நாளினுடைய மாலை 6 மணியிலிருந்து, அடுத்தநாள் மாலை 6 மணிவரை —வழக்கமான யூத நாள்) அடிக்கப்பட வேண்டும். அந்த ஆட்டுக்குட்டியின் மாம்சம் அன்றைய நாளின் மாலையில் புசிப்பதற்காக சுடப்பட வேண்டும். அதன் இரத்தம் வீட்டுவாசலின் நிலைக்கால்களிலும் மற்றும் மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுவதற்கென எடுத்து வைக்கப்பட வேண்டும். அந்த நாளின் இரவில்குடும்பம் குடும்பமாக ஒன்றுக்கூடி கசப்பான கீரைகளோடு, சுடப்பட்ட மாமிசமானது, பிரயாணத்திற்கான எதிர்ப்பார்ப்புடன், எகிப்தை விட்டு 15-ஆம் தேதி காலையில் நேரமே புறப்படுவதற்கெனப் பாதரட்சைகளையும், கைகளில் தடிகள் முதலியவற்றையும் எடுத்துக் கொண்டு புசிக்கப்பட்டது.

யாத்திராகமம் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்ட இச்சம்பவம் எபிரெயர்களுக்கு மிகவும் சுவாரசியமானதாகும், விலையேறப்பெற்ற ஒன்றாகவும் காணப்பட்டது மற்றும் அது தொடர்பான பிரமாணமானது அந்த ஜாதியாரின் வரலாற்றில் மிக முக்கியமான சம்பவமாகக் காணப்படுகின்றது. ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ இது அதிலும் மேன்மையான முக்கியத்துவம் கொண்டுள்ளதாகும். நிஜமான இஸ்ரயேலனான கிறிஸ்தவனைப் பொறுத்தவரையில் இந்த முழுச் சம்பவமும் —நிஜமான இரவின் முடிவிலும் மற்றும் நிஜமான பஸ்கா நாளின் துவக்கத்திலும், நிஜமான மோசேயின் கரங்களின்மூலம், நிஜமான இஸ்ரயேலர்களுக்குக் கிடைக்கப்பெறும், நிஜமான விடுதலையைக்குறிக்கின்றது. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டார்" என்ற நம்முடைய ஆதார வசனமானது, கர்த்தராகிய இயேசுவே நிஜமான ஆட்டுக்குட்டி என்று

அடையாளப்படுத்துகின்றது மற்றும் அவர் செலுத்திட்ட பலியை நாம் இப்பொழுது எதிர்ப்பார்த்திருக்கின்றதும் மற்றும் சமீபித்திருக்கின்றதுமான விடுதலையுடன் தொடர்புபடுத்துகின்றது (1 கொரிந்தியர் 5:7). இந்தக் கருத்துக்கள் அனைத்துப் பிரிவுகளிலுமுள்ள கிறிஸ்தவர்களால் உணரப்பட்டுள்ளது. மேலும் நம்முடைய கர்த்தரின் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்தின் நிஜத்திற்கான நினைவுகூருதல் என்று விசேஷமாக கத்தோலிக்க திருச்சபைகளாலும், புராட்டஸ்டண்டின் பழைய பிரிவுகளில் உள்ளவர்களாலும் உணரப்பட்டுள்ளது. எபிரெயர்கள் பஸ்காவை வருடந்தோறும் அனுசரிப்பதுபோன்று, இந்தச் சபைகளும் வருடந்தோறும் "புனித வெள்ளி" என்ற பெயரிலும், கர்த்தரின் இராப்போஜனம் என்ற பெயரில் அடையாளமான இராப்போஜனத்தையும், "தேவனுடைய ஆட்டுக்குட்டியின்" மரணத்திற்கும் மற்றும் "முதற்பேறானவர்களின் சபைக்குக்" பாராட்டப்பட்ட தெய்வீக இரக்கத்திற்குமான நினைவுகூருதலாக அனுசரிக்கின்றனர்.

நாம் சற்று நேரம், பஸ்காவின் அம்சம் சிலவற்றையும் மற்றும் நிஜமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கான, அவைகளின் அர்த்தங்களையும் பார்க்கலாம். ஆட்டுக்குட்டியை அந்த மாதத்தின் 10-ஆம் தேதியில் எடுத்துக்கொண்ட விஷயம், நமது கர்த்தராகிய இயேசு, தமது முதலாம் வருகையின்போது, தமது ஊழியத்தின் முடிவில் இஸ்ரயேலர்களுக்கு அதே நீசான் மாதம் 10-ஆம் தேதியில் கழுதைக்குட்டியின்மீது ஏறிச்சென்று, தம்மை இராஜாவாக முன்வைத்ததைக் குறிக்கின்றது. இச்சமயத்தில்தான் இஸ்ரயேல் ஜாதியார் அவரை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்; ஆனால் அவர்களோ, "அவரைவிட்டு தங்களுடைய முகங்களை மறைத்துக் கொண்டார்கள்." அவர்கள் ஓர் ஜாதியாரென விரும்பின ரூபத்தை அவர்களால் அவரிடத்தில் பார்க்கமுடியவில்லை. நீசான் மாதம் 14-ஆம் தேதியன்று மலையில் நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களோடு பஸ்காவைப் புசித்தார். அன்றைய இரவிலேயே அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார். நீசான் மாதத்தின் 14-ஆம் நாளின் காலையில் அவர் குற்றவாளியாக தீர்க்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்டார். பின்னர் அதே நாளில் அடக்கம்பண்ணப்பட்டார். இவைகள் அனைத்தும் நீசான் மாதம் 14-ஆம் தேதியில் சாயங்காலங்களுக்கு நடுவில் நடந்தது; அதாவது நாளின் ஆரம்பமாகிய மாலை 6 மணி முதல், நாளானது முடிவுறும் அடுத்த மாலை 6 மணிவரையிலான காலப்பகுதிகளுக்குள் நடந்தது. அடுத்த நாளில், 15-ஆம் தேதியில், மாலையில் யூதர்களின் பஸ்கா பண்டிகை அனுசரிக்கப்பட்டது. நம்மிடத்திலான தேவனுடைய கிருபையில் சந்தோஷம் கொள்வதன் மூலமும், தொடர்ந்து புசிப்பதின் மூலமும், நாம் அந்தப் பண்டிகையை நிஜமாக அனுசரிக்கிறோம். ஆனால் கர்த்தருடைய இராப்போஜனமானது, நீசான் மாதம் 14-ஆம் தேதிக்கு உரியதாகவும், தேவனுடைய ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதின் நினைவுகூருதலாயும் உள்ளது. பஸ்கா புசிக்கப்பட்ட இரவானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகின்றது; அதாவது பாவமும், தீமையும் மேலோங்கி காணப்படுகின்றதும் மற்றும் "தங்களுக்காக பலியிடப்பட்ட பஸ்காவாகிய கிறிஸ்துவின்" புண்ணியங்களைப் புசித்தும், அவருடைய மாம்சமே மெய்யான அப்பம் என்று உணர்ந்தும் கர்த்தருடைய ஜனங்கள் காணப்படுகின்றதான இருளான நேரமாகிய இந்தச் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகின்றது.

ஆட்டுக்குட்டியின் மாம்சத்தோடு யூதர்கள் — பாவத்திலிருந்து விலகியிருக்கும் நிலையை அடையாளப்படுத்துகின்றதான — புளிப்பில்லாத, தூய்மையான, கலப்பிடமில்லாத அப்பத்தையும் புசித்தார்கள். இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் பரம பிதாவினிடத்திலிருந்து நமக்குவரும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அடையாளப்படுத்துகின்றது. "இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே." (யோவான் 6:50) எபிரெயர்கள் தங்களுக்குரிய அப்பத்தையும், ஆட்டுக்குட்டியையும் புசித்ததுபோல, நிஜமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் கிறிஸ்துவின் கிருபைகளிலும், புண்ணியங்களிலும் இலவசமாய்ப் பங்கெடுப்பதோடல்லாமல், கசப்பான கஷ்டங்கள், சோதனைகள், தவறாக கருதப்படுதல் மற்றும் பாடுகளை அடையாளப்படுத்தும் "கசப்பான கீரைகளையும்" கூடப் பெற்றுக்கொள்கின்றனர். எபிரெயர்கள் காலையிலுள்ள தங்களுடைய பிரயாணத்திற்கு ஆயத்தமாய் இருந்த நிலையில் புசித்ததுப்போல, உண்மையான இஸ்ரயேலர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தில் இந்த ஆவிக்குரிய கிருபைகளில் பங்குகொண்டு, தற்போது எகிப்தில் இருப்பதைப்போல் தோன்றினாலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கே ஏங்கியவர்களாய் இருக்கின்றனர். மேலும் இவர்களின் வாழ்க்கைமுறை இவர்கள் இந்தத் தேசத்தில், உலகில், பரம தேசத்தையே நாடித் தேடும் பரதேசிகளும், அந்நியர்களுமாய் இருக்கின்றனர் என்று சுட்டிக் காட்டுகின்றது. ஆனால் பஸ்கா புசிக்கப்பட்ட அன்றைய இரவில் விடுதலை வராமல், இரவைத் தொடர்ந்த காலையிலே வந்தது. இதுபோலவே, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் விடுதலையும், இவ்வுலகத்தின் அதிபதியின் ஆளுகையில் பாவம் மற்றும் உபத்திரவத்தின் இரவில் வருவதில்லை. "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று நாம் ஜெபிக்கும், எதிர்பார்க்கும், காத்திருக்கும் ஆயிரவருட அரசாட்சியின்

காலையிலேயே விடுதலை வருகின்றது. "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்." (சங்கீதம் 46:5)

பஸ்கா என்பது இஸ்ரயேல் ஜனங்கள் காலையில் செங்கடலைக் கடந்து செல்வதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறிக்கும் என்று சிலர் எண்ணுவது தவறாகும். இப்படியாக எதுவுமில்லை. பஸ்கா ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்ட மற்றும் அதன் இரத்தம் நிலைக்கால்களில் பூசப்பட்ட இரவில் இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் காரணமாக அல்லது தப்புவிக்கப்பட்டதினிமித்தமாக, கடந்துபோகுதல்/பஸ்கா என்ற பெயர்ச் சூட்டப்பட்டது. சங்காரத்தூதன் எகிப்து முழுவதும் சென்று, எகிப்தின் அனைத்து முதற்பேறானவர்களையும் சங்கரித்தார். மேலும் இரத்தம் மேற்சட்டங்களில் மற்றும் நிலைக்கால்களில் பூசப்பட்ட நிபந்தனையின் பேரில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இந்தத் தெய்வீகக் கட்டளையை மதியாமல் கர்த்தர் மோசே மூலமாய் அறிவித்தப் பிரகாரமாய் இஸ்ரயேலர்களில் யாராகிலும் தங்களின் வீட்டு நிலைக்கால்களிலும், கதவுகளிலும் இரத்தம் பூசாமல் இருந்தால், எகிப்தியர்களுக்கு சம்பவிக்கிறவண்ணமாகவே இவர்களுக்கும் சம்பவிக்கும். யார் கர்த்தருடைய ஜனங்கள் என்றும், யார் அவருடையவர்கள் இல்லை என்றும் இரத்தம் வேறுபடுத்திக் காட்டியது.

ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு இது எதைக்குறிக்கும்? நம்முடைய பஸ்கா ஆட்டுகுட்டியென நமது கர்த்தர் இயேசுவின் பலியினுடைய மீட்பின் புண்ணியத்தின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதே, இரத்தம் தெளிக்கப்படுவதின் அர்த்தம் என்று நாம் பதில் கூறுகின்றோம். இந்த விஷயங்களைக் குறித்ததான கர்த்தருடைய வார்த்தைகளைக் காணும் யாவரும் இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்று உணர முடியும். மேலும் இப்படியாக நம்முடைய இரட்சகரின் மரணத்தினுடைய முக்கியத்துவத்தை உணரும் ஒருவர், அதை அறிக்கையிடுவார் என்று எதிர்ப்பார்க்கப்படலாம், அதாவது நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்படுவது அடையாளப்படுத்துகின்ற அறிக்கையிடுதலானது எதிர்ப்பார்க்கப்படலாம். கதவுகளில் இரத்தம் காணப்படுவது என்பது, கதவுக்குள் இருக்கும் அனைவரும் இரத்தம்மீது நம்பிக்கைக் கொண்டிருப்பதால், அதன் புண்ணியத்தின்கீழ் இருப்பதைக்குறிக்கின்றது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் மீட்பைப்பற்றின உபதேசமானது, நூற்றாண்டுகள் காலமாக அரைகுறையான தெளிவோடு காணப்பட்டிருந்தபோதிலும், இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களுக்கும், போதகர்கள் என்று தங்களையே அழைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும், விமர்சகர்களுக்கும் இது கேள்விக்குறியாக இருப்பது ஆச்சரியமே/குறிப்பிடத்தக்கது. இத்தகையவர்கள் கர்த்தருடைய பார்வையில் இஸ்ரயேலர்களாய் இராமல் எகிப்தியர்களாகவே இருக்கின்றனர். இஸ்ரயேலர்கள் என்றும், தம்முடைய ஜனங்கள் என்றும் அவர் அடையாளம் காணும் யாவரும், அவரையும், அவருடைய வார்த்தைகளையும் மற்றும் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து இயேசு விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினதுமூலம், அவர் நமக்கு நிறைவேற்றின வேலையையும் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

பதிலாள் உபதேசமானது இந்த நிழலில் மிகுந்த அழுத்தத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரத்தமானது இரத்தநாளங்களில் இருக்கும்போது ஜீவனைக் குறிக்கின்றது. ஆகவே அது சிந்தப்படுவது மரணத்தைக்குறிக்கும். மரணத்தீர்ப்பானது நம்முடைய மனுஷ சந்ததிக்கு எதிராக இருந்தபடியால் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிக்கவேண்டியது அவசியமாய் இருந்தது. ஆகவே இந்த யுகத்தில் அவர் அங்கீகரிக்கும் ஒவ்வொருவரும் பாவ நிவாரணபலியின்மீது விசுவாசமும், அதை அறிக்கை செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் கடமைபடுத்தியுள்ளார். இரத்தம் தெளிக்கப்பட்ட வீட்டில் உள்ளவர்களின் விசுவாசத்திற்கான ஓர் ஆதாரமாய், ஓர் அடையாளமாய், ஒரு சாட்சியாய், ஒரு சான்றாக இரத்தம் உள்ளது. இது தேவனுக்கான அடையாளமாக இராமல், மனிதனுக்கானதாய் உள்ளது. தேவன் தப்புவிக்கச் செய்வார், ஆனால் தப்புவிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு இஸ்ரயேலனும் தன்னுடைய பங்கைச் செய்துள்ளானோ என்று பார்த்துக்கொள்வது அவனுடைய காரியமாய் இருக்கின்றது.

அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் மரண ஆபத்து உள்ளது என்று தவறாய்க் கருதப்படக்கூடாது. முதற்பேறானவர்களுக்கே ஆபத்து இருந்தது. இதுவே நிழலின் மிக முக்கியமான அம்சமாகும். கர்த்தரையும், நீதியையும் நேசிக்கும் அனைவருக்கும், அதாவது முதற்பேறானவர்களுக்கும், மற்ற அனைவருக்கும் காலையில் விடுதலை வருகின்றதாய் இருந்தாலும், ஆயிரவருட அரசாட்சியின் காலைக்கு முன்பான இரவில் விசேஷமான சோதனை வரும்; இந்த விசேஷமான சோதனை முதற்பேறானவர்களை மாத்திரம் பாதிக்கும். யார் இந்த முதற்பேறானவர்கள்? பரலோகத்தில் பெயர் எழுதப்பட்ட "முதற்பேறானவர்களின் சபையே," "சிறுமந்தையே," புதிய சுபாவத்திற்குள்ளும் மற்றும் நமது கர்த்தரோடுக்கூட வரவிருக்கின்ற

இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்திற்குள்ளும் ஜெநிபிக்கப்பட்டவர்களே — இந்த முதற்பேறானவர்கள். பார்வோன் மற்றும் அவனுடைய வல்லமை மற்றும் அடிமைத்தனத்திலிருந்தும் இஸ்ரயேலர்களாகிய மற்ற அனைவரும் விடுவிக்கப்படுவது, மற்ற அனைவரும் சாத்தானின் வல்லமையிலிருந்தும், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்படுவதை அடையாளப்படுத்துகின்றது. ஆனால் இந்த இரவில் ஆபத்தில் இருப்பவர்களும், சுவிசேஷ யுகத்தில் தப்புவிக்கப்படுகிறவர்களும் அல்லது கடந்துபோகப்படுகின்றவர்களும் சிறுமந்தையாகிய முதற்பேறானவர்களின் சபையே ஆகும். இதுவே நிழல் தெளிவாய் முன்வைக்கும் காரியமாகும். பஸ்காவிற்குப்பின்/கடந்துபோகுதலுக்குப் பின்னரே புதிய ஒழுங்குகளின் கீழ் இந்தப் பஸ்காவில் தப்புவிக்கப்பட்டவர்கள், லேவியர்களாக தலைமை வகிக்கிறவர்கள் ஆனார்கள் என்பது நினைவில்கொள்ளப்படலாம். மேலும் இவர்களிடத்திலிருந்தே ஆசாரியர்களான சிறுமந்தை வந்தனர். ஆகையால்தான் முதற்பேறான சபையை, "நீங்களே இராஜரிக ஆசாரிய கூட்டத்தார்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். (1 பேதுரு 2:5, 9)

இந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டியின் நிஜம், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டார் என்று அறிந்து கொண்டோம். மாம்சீக இஸ்ரயேலர்களால் அநுசரிக்கப்பட்ட நிழலின் இடத்தில் வேறொரு நினைவுகூருதலை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கு, நம்முடைய கர்த்தர் நிறுவியுள்ளார். அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில், அவர் ஒரு யூதனாக பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்த அதே இரவில், பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தப் பின்னர், அதை நிறுவினார். உலகத்தின் பாவத்தைப் போக்குகிற நிஜமான தேவனுடைய ஆட்டுக்குட்டியாக அவர் தம்மையே அடையாளப்படுத்தும் அப்பத்தையும், திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு தம்முடைய உண்மையான சீஷர்கள் அனைவரும் யூதர்கள்போன்று நிழலான பஸ்காவை ஆசரியாமல், இதுமுதல் நிஜமான பஸ்காவை அனுசரிக்கும்படியாகக் கட்டளையிட்டார். "இதைப் பானம்பண்ணும் (பஸ்கா அனுசரிக்கும்போது) போதெல்லாம், (நிழலாய் நடந்த விடுதலையை இனிமேல் நினைவுகூராமல்) என்னுடைய நினைவாகச் செய்யுங்கள் என்றார்." இது வருடாவருடமும் மற்றும் இன்னமும் நினைவுகூரப்படுகின்றது.

இப்பாடம் குறித்த விஷயத்தில் சில தேவனுடைய ஜனங்கள் குழப்பமடைந்துள்ளதாலும், நினைவுகூருதல் இராப்போஜனமானது, யூதருடைய பஸ்காவிற்கான நிஜத்தின் நினைவுகூருதல் என்ற உண்மையினைக் கவனிக்கத்தவறினதாலும், கர்த்தருடைய உத்தரவு இல்லாமலேயே, தாங்களாகவே இராப்போஜனத்தின் ஆசரிப்பிற்கான வேளைகளையும், காலங்களையும் நிர்ணயிப்பதற்குத் தங்களுக்குச் சுயாதீனம் இருப்பதாக எண்ணிக்கொள்கின்றனர். இவர்கள் இப்படியாகச் செய்திடும் விஷயத்தில், பழியிலிருந்து விலகுவதற்குக் காரணங்கள் இருக்கின்றது; ஏனெனில் மாபெரும் எதிராளியானவனால் அமைப்பு நிறுவப்பட்டது முதற்கொண்டு, 18 நூற்றாண்டுகளாக, அநேகம் உபதேசங்களும், தவறான ஆசரிப்புகளும் இயேசுவின் பின்னடியார்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்பட்டது; இப்படியாக அறிமுகப்படுத்தப்பட்ட உபதேசங்களில் ஒன்று பூசைபலி உபதேசமாகும்; இது கிறிஸ்துவின் பலியைத் திரும்பத்திரும்ப ஏறெடுப்பதற்கான நோக்கம் உடையதாகும் மற்றும் பாதிரியார் கிறிஸ்துவின் மாம்சத்தை உருவாக்கி, யாருக்காகப் பூசைபலி ஏறெடுக்கபடுகின்றதோ, அவரின் பாவங்களுக்காகக் கிறிஸ்துவைப் பூசைபலியில் மீண்டுமாகப் பலிசெலுத்துகின்றார் என்பதாகக் கூறப்படுகின்றது. போப்மார்க்கத்தினின்று வெளியே வந்தவர்களாகிய புராட்டஸ்டண்டினர்கள், பூசைபலியைப் புறக்கணித்தனர் என்றபோதிலும், பூசைபலியானது அடிக்கடிப் பண்ணப்பட்டதினால், கர்த்தருடைய இராப்போஜனமும் காலம் மற்றும் வேளைத் தொடர்புடைய விஷயத்தில் எவ்வித வரையறை இல்லாமல் ஆசரிக்கப்பட வேண்டுமென்று கற்பனைபண்ணி, ஆசரித்துவருகின்றனர். கடைசி இராப்போஜனத்திற்கென்று இன்னும் பஸ்காவின் தேதியினைக் கடைப்பிடிப்பவர்களாகிய பழமைமிக்க சபைகளுங்கூட, யூதர்களுடைய வழக்கத்திற்கு மாறான புதிய வழக்கத்தினைத் தேர்ந்தெடுத்துக்கொண்டனர் – அதாவது இவர்களது புதிய வழக்கத்தின்படி நினைவுகூருதலுக்கான நாளானது எப்போதும் உண்மையான/சரியான தேதிக்கு அருகாமையிலுள்ள வெள்ளிக்கிழமையன்று காணப்படுகின்றது மற்றும் இதனால் பின்வரும் ஞாயிறானது ஈஸ்டராகக் காணப்படும்; இது வாரத்தினுடைய முதல் நாளில் இடம்பெற்ற நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூரும் நாளாய்க் காணப்படுகின்றது.

நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் பயன்படுத்தப்பட்டதும், அன்றும், இன்றும் கர்த்தருடைய ஜனங்கள் சிலரால் பயன்படுத்தப்பட்டதுமான யூத காலக்கணக்கீட்டு முறைமையின்படி, பஸ்காவின் வருடாந்தர ஆசரிப்பிற்கான அடுத்த வருஷத்தின் ஆண்டு நிறைவு நாளின் தேதி 1902-இல், ஏப்ரல் 20-ஆம் தேதி, சூரிய அஸ்தமனத்திற்குப் பிற்பாடு காணப்படும்.

*****

R 2923

# எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய்

எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய்.
என்னுடைய வாழ்க்கைதனை உமக்கெனவே ஒப்புவித்தேன்,
எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய்.
உமது புகழ்இடைவிடாது பாடிடவே,என்னுடைய ஒவ்வொரு நொடிப்பொழுதும்நாட்களையும் செலவழிக்க, எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய்.
உமதன்பு செயல்நோக்கி எம் கரத்தை நீட்டிடவே எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய்.
எனது பாதம் அழகானதாய் வேகமுடன் உமக்கெனவே செயலாற்ற எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய்.
உம்மிடமிருந்துவரும் வார்த்தைகளைநிறைத்துக்கொண்டு உமக்கெனவே உச்சரிக்க எனது இதழ் அசைக்கவேண்டும், எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய்.
எனது வாய் எப்போதும் உமது துதி பாடவேண்டும், ஒட்டுண்ணி அளவுகூடஇம்மிகூட எனதாக இருக்கவேண்டாம், எடுத்துக்கொள்ளும் எம் பொன் வெள்ளி, பயன்படுத்தும் எமை முழுதும்.
என்னுடைய சிந்தனைகள், உள்மனதின் ஆற்றல்கள், அனைத்தையுமே எடுத்துக்கொள்ளும் எம் இறவைா,பயன்படுத்தும் நீர் உமக்காய்.
எனது மனத்திறன் முழுவதும் எடுத்துக்கொள்ளும் வைத்துக்கொள்ளும்,இனிமுதலாய் எனதல்ல,பயன்படுத்தும் உமக்கெனவே,
என் இதயம் எனதில்லை, உமது ராஜ அரியணையே,எடுத்துக்கொள்ளும்,எம் இறைவா, அமர்ந்துகொள்ளும்,ஆட்சிசெய்யும்.
எனதன்பை உமதுபாதம் ஊற்றிவிட்டேன், எடுத்துக்கொள்ளும், உமது பொக்கிஷச்சாலையிலேசேர்த்துக்கொள்ளும்,
என்னை முழுதும் எடுத்துக்கொள்ளும்,என் எல்லாமும் உமக்கெனவே இருத்திக்கொள்ளும் என் இறைவா.

**தே**வனுடைய ஆவியின் பரிசுத்த அபிஷேகித்தலுடைய தாக்கத்தின் கீழ் வந்திருப்பதற்கான சான்று பகருகின்றவர்களை மாத்திரமே வழிநடத்துபவர்கள் முதலானவர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு கர்த்தருடைய ஆடுகள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். வழிநடத்துபவராக விரும்புபவர் எவ்வளவுதான் திறமைகள் கொண்டிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல; அவர் அதிகமாய்த் திறமைகள் கொண்டிருக்கும்போது, அவரது வழிநடத்துதலிலிருந்தும் மிகுந்த ஆபத்து வருகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்கள் மாத்திரமே, எவ்விதத்திலும் தலையானவருடைய வாய்க்கருவிகளெனவும், பிரதிநிதிகளெனவும் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். நமது கர்த்தராகிய இயேசுவின் மீதான தேவனாகிய கர்த்தரின் ஆவியானது, சுவிசேஷத்தினைப் பிரசங்கிப்பதற்கு அவரை அபிஷேகித்தது அல்லது தகுதிப்படுத்தினதுபோல, அவரிடம் பெற்றுக்கொள்ளப்பட்டதான அதே அபிஷேகம்தான் கர்த்தரினால் அங்கீகரிக்கப்படுகிற விதத்திலும், அவரது மந்தைக்குப் பிரயோஜனமாய் இருக்கும் விதத்திலும், சாட்சிபகரும் அல்லது பிரசங்கிக்கும் இவ்வூழியத்திற்காக ஒருவரைத் தகுதிப்படுத்துகின்றதாய் இருக்கும் (ஏசாயா 61:1). கர்த்தருக்கு முழு அர்ப்பணம் பண்ணியுள்ள, தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படிதலுள்ள மனநிலையில் காணப்படாத யாவரும், ஒருவகையில் எதிர்ப்பவர்களாகவே இருப்பார்கள்; மற்றும் அவர்கள் எந்தளவுக்கு எதிர்ப்பவர்களாய் இருப்பார்களோ, அவ்வளவுக்கு அவர்கள் தவறானவர்களாக அல்லது பொல்லாதவர்களாகக் காணப்படுவார்கள். "சிட்சையை நீ பகைத்து (கர்த்தருடைய ஏற்பாடுகளுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்த மறுத்து), என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக (அலட்சியமாய்) எறிந்துபோடுகிறாய்" (சங்கீதம் 50:17).

---

# உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்தசாட்சி

**அப்போஸ்தலர் 6:7-15**

*"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்."*

**ஸ்**தேவான் இரண்டாம் கிறிஸ்தவ இரத்தச்சாட்சி என்று ஒப்புக்கொள்ளப்படலாம் - ஏனெனில் நிச்சயமாகவே நமது கர்த்தர் இயேசுவே முதலாவதாவார். இந்தப் பாத்திரமிக்கச் சிலுவையின் போர்வீரனுடைய சரித்திரத்தை அறிந்து கொள்வதற்காக, நம்முடைய பாடத்திற்கு ஆதாரமாய்த் தெரிந்துகொண்டுள்ள அதிகாரத்தினுடைய முதலாம் வசனம் துவங்கி நாம் பார்த்திட வேண்டும். சபையில் எழும்பின ஒரு நெருக்கடியின் காரணமாக, ஆவிக்குரியதல்லாத பல்வேறு காரியங்களைப் பார்த்துக்கொள்வதற்கு ஏழு உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் இந்த ஏழு பேரில் ஒருவராக ஸ்தேவான் காணப்பட்டார் மற்றும் இந்த ஏழு பேரும் அப்போஸ்தலர்களினால் இல்லை, மாறாக சபையாரால் பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற மனுஷர்களென அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தச் சம்பவமானது, ஆதிசபையினுடைய அமைப்பின் தளர்வான அம்சத்தினை நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அது - கர்த்தராகிய மீட்பரே சபையின் தலையானவராய் இருக்கின்றார் என்றும், இன்னுமாக அவரைத் தங்கள் இரட்சகரும், கர்த்தரும் என்று அங்கீகரித்து, அவருக்கு அர்ப்பணம்பண்ணி, அவரது ஆவியினைப் பெற்றுக்கொண்டு, அவரது நியமித்தலின்படியும், பரிசுத்த ஆவியினுடைய ஏற்படுத்தலின்படியும் விசேஷித்த விதமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதான அவரது அப்போஸ்தலர்கள், சபைக்கான அங்கீகரிக்கப்பட்ட போதகர்களாக இருக்கிறார்கள் என்று அடையாளம் கண்டுகொள்பவர்கள் மாத்திரமே அங்கத்தினர்களாக இருப்பார்களே ஒழிய, வேறு எவரும் இல்லை என்றும் உள்ளவைகள் தவிர - வேறு எந்த இருப்புக்கோல் சட்டங்களையும், பிரமாணங்களையும் பெற்றிருக்கவில்லை. இதுதவிர ஒவ்வொரு தருணத்திலும் எழும்பின தேவைகளுக்கு, வழிநடத்துதல் கிடைத்தது; சபையினுடைய ஏற்பாடுகள் அனைத்தின் விஷயத்திலும் மற்றும் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலம் கர்த்தரை யுகம் முழுவதும் விசுவாசிக்கிறவர்களுடைய பிரயோஜனத்திற்காகவும், அப்போஸ்தலருடைய போதித்தலின் விஷயத்திலும் பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதல் இருந்தது என்று நாம் நம்பிக்கையுடன் எண்ணிடலாம்.

வேறொரு பாடத்தில் பொதுவுடைமைக் கொள்கையானது சபையில், ஆரம்பத்தில் ஓரளவுக்கு நிறுவப்பட்டது என்று பார்த்தோம்; ஆனால் இப்பாடத்தினுடைய சம்பவமானது, அக்கொள்கையானது வரையறைக்குட்பட்டிருந்தது என்றும், ஆஸ்திகள் முழுவதுமாக பங்கிடப்படவில்லை என்றும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. வாழ்வதற்குப் பிழைப்பு இல்லாமல் தங்கள் மத்தியில் காணப்படும் ஏழைகளின் காரியங்களைச் சந்திக்க வேண்டும் என்பது ஆதிசபையினுடைய நோக்கமாக இருந்தது என்பது உறுதியே. இப்படிச் சந்திக்கப்பட்டவர்களில் முக்கியமாய் வருமானம் இல்லாமல் காணப்பட்ட விதவைகளும் அடங்கினார்கள்; இத்தகையவர்கள் அக்காலங்களில் உதவியற்றவர்களாகவும், தருமங்களைச் சார்ந்திருப்பவர்களாகவும் காணப்பட்டனர்; ஏனெனில் ஸ்திரீகளுக்குப் பிழைப்பிற்காக வேலை செய்வதற்குரிய வாய்ப்புகள் வெகுகுறைவாகவே காணப்பட்டது.

எபிரெய ஸ்தரீகளைப்பார்க்கிலும், கிரேக்க ஸ்திரீகள் புறக்கணிக்கப்பட்டார்கள் அல்லது அவர்கள் விஷயத்தில் வேண்டுமென்றே ஏதோ பாரபட்சம் பார்க்கப்பட்டது என்று நாம் எண்ணிவிடக் கூடாது. வேண்டுமென்று செய்யப்படவில்லை என்பது தெளிவாய்த் தெரிகின்றது மற்றும் அப்போஸ்தலர்களாகிய அவ்வூரார், அந்நிய ஊர் விதவைகளின் தேவைகளைக் காட்டிலும் சொந்த ஊர் விதவைகளின் தேவைகளை மிகவும் கூர்மையாய் உணர்ந்திருந்தபடியாலே இவ்விஷயம் எழும்பியிருக்கக்கூடும். இந்த ஸ்திரீகள் பாலஸ்தீனியாவில் பிறந்திருந்தாலும் அல்லது கிரேக்க நாட்டில் பிறந்திருந்தாலும், அவர்கள் யாவரும் யூத ஸ்திரீகளாகவே இருந்தனர். அக்காலக்கட்டம் வரையிலும் சுவிசேஷமானது மற்றவர்களுக்கு - புறஜாதிகளுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. முறையிடுதல் வந்ததற்கு ஏதோ சில நியாயமான காரணங்கள் இருந்தது என்பதில் ஐயமில்லை. எப்படி இருப்பினும் பிரச்சனையைச்

சரிப்பண்ணுவதற்கென உடனடியாக நடவடிக்கை எடுத்ததில், தங்கள் நோக்கத்தின் நேர்மையினை அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தினார்கள். இதில் கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் பின்வரும் படிப்பினை உள்ளது, அதென்னவெனில்: 'ஆவிக்குரியதல்லாத காரியங்களின் அடிப்படையில் பிரச்சனைகள் எழும்பி "கசப்பின் வேரினை" முளைக்கப்பண்ண ஏதுவாயிருக்கிறது என்றால் அல்லது சபையில் பிரிவினை உண்டாக்குவதற்கு ஏதுவாயிருக்கிறது என்றால், முழுச்சபையாருடைய தோள்களின்மேல் பொறுப்பினை வைத்துவிடுவதும் - அக்காரியத்திற்கு அதிகம் கவனம் செலுத்த முடிகிறவர்களும், அனைவருக்கும் நியாயமாய்ச் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கின்றவர்களுமான சிலரைச் சபையாரிலிருந்து தேர்ந்தெடுப்பதற்குச் சபையாரிடம் கேட்டுக்கொள்வதும் முறையான நடவடிக்கையாக இருக்கும்.' மற்றச் சம்பவங்களிலும், இச்சம்பவத்திலும் கர்த்தரானவர் - ஒட்டு மொத்தச் சபையும் தம்முடைய மேற்பார்வை, தம்முடைய பராமரிப்பின் கீழ்க் காணப்படுகின்றனர் என்றும், இதன் காரணமாகச் சபையின் பொதுவான காரியங்களானது ஒரு தனி மனிதனாலோ, குருமார் வகுப்பினராலோ நடத்தப்படாமல், சபையாரால் நடத்தப்பட வேண்டும் என்றும் தெளிவாய்ச் சுட்டிக்காண்பித்துள்ளார்.

பணம் திரட்டுவதும், உணவு விநியோகிப்பதுமான பந்தி விசாரித்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் சிலர் கிரேக்க சகோதரருக்குப் பிரதிநிதிகளாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை; கிரேக்க சகோதரருக்குப் பிரதிநிதியானவர்கள், கிரேக்க வழக்கங்களின் அம்சங்களை அறிந்தவர்களாய் இருப்பதினால், இவர்கள் கிரேக்க விதவைகளுடைய நலனுக்கடுத்தவைகளை நன்கு பார்த்துக்கொள்ள முடிகிறவர்களாய் இருப்பார்கள். இங்குதான் உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவராகிய ஸ்தேவான் நமக்கு அறிமுகமாகுகின்றார். "Deacon" என்ற வார்த்தையானது, பணியாளர், வேலைக்காரர், உதவிக்காரர் எனும் அர்த்தத்தினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. சபைக்கான "மூப்பர்கள்" என்பவர்கள் மிகவும் குறிப்பாக அவர்களது கிறிஸ்தவ குணலட்சணம் மற்றும் போதிப்பதற்கான திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், ஆனால் உதவிக்காரர்கள் என்பவர்கள் கிறிஸ்தவ குணலட்சணம் மற்றும் ஆவிக்குரியதல்லாத பணிக்கடுத்த திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இருத்தரப்பினரின் விஷயத்திலும் கிறிஸ்தவ குணலட்சணமும், ஆவியில் பரிசுத்தமும், ஞானமும் கருத்தில் எடுத்துக்கொள்வதற்குரிய அடிப்படையான விஷயங்களாய் இருக்கின்றன. இப்படியாகவே இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் விஷயத்திலும் காணப்பட வேண்டும் - அதாவது எந்த ஓர் ஊழியத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், சபையாரில் சிறந்தவர்களாகவும், ஞானமிக்கவர்களாகவும் முதலாவது அடையாளங்கண்டுகொள்ளப்பட்டிருக்க வேண்டும் - விலையேறப்பெற்ற பரிசுத்தமான, சாந்தமான மற்றும் அமைதலின் ஆவி உடையவர்களா என்று கவனமாய்க் கவனிக்கப்பட வேண்டும் - அடுத்துத் திறமைகளானது கவனிக்கப்பட வேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களைத் தம்முடைய ஊழியத்தில் படிப்படியாக அபிவிருத்திப்பண்ணுவதற்குக் கையாளும் அவரது வழிமுறைகளுக்கான விளக்கத்தினை ஸ்தேவானின் விஷயத்தில் நாம் காணலாம், அவை: (1) ஸ்தேவான் சத்திய அறிவை அடையும் சிலாக்கியமடைந்தவராய் இருந்தார்; இதனை அவர் ஏற்றுக்கொண்டு உண்மையாய் இருந்து, கர்த்தருக்காக வைராக்கியம் கொண்டிருந்து, நீண்ட காலமாய் இப்பண்புகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார் மற்றும் பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலில், இவர் உதவிக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (2) இதில், பந்திவிசாரிக்கும் பணியில் உண்மையாய் இருந்திட்டக் காரியமானது, இன்னும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாய் அவரை ஆயத்தமாக்கிற்று மற்றும் (3) சத்தியத்திற்கான தனது ஊழியத்தினை உறுதிப்படுத்துவதற்கென அவர் அடையாளங்களை நடப்பிக்கிறதையும் மற்றும் சுகமளிக்கும் வரங்களைச் செயல்படுத்துவதையும் நாம் பார்க்கின்றோம்; இது சபையில் ஸ்தேவான் மூப்பருக்கானதொரு நிலையினை உண்மையில் அடைந்துவிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் அனைவரும் மூப்பர்களாய் இருக்க, எருசலேமில் தங்கியிருந்த அப்போஸ்தலர்கள் அநேகமாக அவசியமில்லாமல் மூப்பர்களுக்கான தேர்ந்தெடுத்தலைப் பண்ணினார்கள். (1 பேதுரு 5:1). ஸ்தேவான் சத்தியத்தின் ஆவியினால் மிகவும் நிறைந்திருந்தவராகவும், அதன் ஊழியங்களுக்கடுத்த விஷயங்களில் அர்ப்பணிப்புமிக்கவராகவும் காணப்பட்டப்படியால், (4) அவர் பலியின் மரணத்தில் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடரும் சகோதரரில் முதல் நபராய் இருப்பதற்குரிய கனமடைந்தவரானார். இங்கு ஊழியத்திலும், அதன் கனங்களிலும் அபிவிருத்தி அடைந்தது என்பது கர்த்தருடைய ஜனங்கள் யாவரையும், அதே ஆண்டவருக்கு ஊழியஞ்செய்வதற்கும்

மற்றும் அவரைப் பிரியப்படுத்துவதற்கும் அதிகமாய்ப் பிரயாசம் எடுப்பதற்கு ஊக்குவித்து, உற்சாகப்படுத்திடும். அர்ப்பணம்பண்ணின ஸ்தேவானை இப்படியாக ஏற்றுக்கொண்டு, தம்முடைய ஊழியத்தில் அவரைப் படிப்படியாக அபிவிருத்திப்பண்ணின ஆண்டவர், அதேபோன்று அர்ப்பணம்பண்ணி, பரலோக வைராக்கியத்தினால் எரிந்துகொண்டிருப்பவர்களை எடுத்து, பயன்படுத்திடுவதற்கு இன்றும் விருப்பமுள்ளவராகவும், ஆயத்தமுள்ளவராகவும் காணப்படுகின்றார். இத்தகையவர்கள் ஏற்றகாலத்தில் தம்மோடுகூட மகிமைப்படத்தக்கதாக, தம்மோடுகூடப் பாடுபடுவதற்கு விரும்பும் பட்சத்தில், இவர்களைச் சபையில் எரிகிற மற்றும் பிரகாசிக்கிற விளக்குகளாக்கிடுவதற்கு விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் (உரோமர் 8:17).

இன்றுவரையுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு விசுவாசம் மற்றும் வல்லமை எந்த விஷயங்களின் அடிப்படையில் கடந்து வந்ததோ, அதே விஷயங்களின் அடிப்படையில் ஸ்தேவானுக்கும் அவரது விசுவாசமும், வல்லமையும் மற்றும் ஊழியத்திற்கான வாய்ப்புகளும் கடந்துவந்ததாய் இருந்தன - அதாவது கர்த்தருக்கும், அவருடைய ஜனங்களுக்கும் மற்றும் சத்தியத்திற்குமான முழு இருதயத்துடன்கூடிய அர்ப்பணிப்பின் அடிப்படையிலேயே கடந்துவந்தது. "தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." ஒருவேளை ஸ்தேவான் சுயநாட்டம் உடையவராகவும், மனுஷர்கள் அல்லது சகோதரர்கள் மத்தியில் கனத்திற்கு ஆசைக்கொண்டவராகவும் இருந்திருப்பாரானால், அதைக்குறித்து நாம் கொஞ்சமேனும் தெரிவிக்கப்பட்டிருந்திருப்போம் என்பதில் நமக்கு நிச்சயமே; இல்லாவிட்டால் இவர் பாராட்டு எதிர்ப்பார்த்திருந்திருப்பாரானால், இவரும் அனனியா போன்று, தீயச் செய்கைக்கு உதாரணமாகியிருந்திருப்பார். இது சபையினால் எந்த ஓர் ஊழியத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு சகோதரனையும் சூழும் அபாயமாய் இருக்கின்றது. ஆகையால்தான், "உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று அப்போஸ்தலன் எச்சரிக்கின்றார். ஆகவேதான் சபையானது தாழ்மையுள்ளவர்களை மாத்திரமே அதன் ஊழியக்காரர்களாய்த் தேர்ந்தெடுப்பது அவசியமாயிருக்கிறது. எதிராளியானவனுடைய கண்ணிக்குள் விழாதபடிக்கும், மற்றவர்களுக்குப் பிரசங்கித்த பிற்பாடு, தாங்கள் ஆகாதவர்களாய்ப் போகாதபடிக்கும் இந்த ஊழியக்காரர்கள் கவனமாய் இருப்பதும் அவசியமாயிருக்கிறது (யாக்கோபு 3:1; 1 தீமோத்தேயு 3:6-7; 1 கொரிந்தியர் 9:27).

பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், ஸ்தேவான் தன்னுடைய நாட்களில் காணப்பட்ட சிலருடன் வாதத்திற்குள்ளானார் மற்றும் அவர்களால் அவருக்கு இணையாகக் காணப்படமுடியவில்லை. "அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று" (அப்போஸ்தலர் 6:10) என்று நாம் வாசிக்கின்றோம். நாவன்மை உடையவர்களிலேயே ஸ்தேவானே பெரியவர் என்றோ, அவர் வாதம்பண்ணிக்கொண்டிருந்தவர்களில் திறமையுடையவர்கள் எவரும் இருக்கவில்லை என்றோ நாம் எண்ணிவிடக்கூடாது. இவருடைய விஷயத்தில், "தன்னுடைய நிலைப்பாட்டினை நீதியான விதத்தில் கொண்டிருப்பவன் மூன்று மடங்கு பலசாலியாவான்" எனும் பழமொழி நன்கு பொருந்துகின்றதாய் இருக்கின்றது. ஸ்தேவான் சத்தியத்தினை உடையவராகவும், வாதத்தினுடைய சரியான கோணத்தினைக் கொண்டவராகவும் இருந்ததினாலும் மற்றும் தேவன் அவரோடுகூட இருந்ததினாலும், அவரது எதிராளிகள் எவரும் அவருக்கு நிகரானவர்களாக இருக்கவில்லை.

அதே தேவன் இன்னமும் தம்முடைய ஜனங்களுடன் காணப்படுகின்றார் மற்றும் "உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" (லூக்கா 21:15) எனும் கர்த்தருடைய வார்த்தையானது இன்னமும் உண்மையாக இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள தாழ்மையுள்ளவர்களுக்கு, அவர்களது எதிராளியானவர்கள் யாவரும் நிகரற்று இருக்கையில் - இதே கொள்கையானது விளங்குவதை நாம் பார்க்க முடிகின்றதல்லவா? சத்தியமானது ஜெயம்கொண்டது என்று எப்போதும் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றாலும், ஸ்தேவானின் சத்துருக்களினால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றாலும், அது வல்லமையுள்ளதானபடியால், அது ஜெயங்கொள்கின்றதாய் இருக்கின்றது.

சத்தியத்தினைப் பொதுவிடங்களில் விவாதம்பண்ணுவதை நாங்கள் ஆதரிக்கிறதில்லை. விவாதங்கள் அதிகம் நன்மைப் பயக்கிறதில்லை என்று நாங்கள் நம்புகின்றோம்; ஏனெனில் சத்தியத்தினை எதிர்ப்பவர்கள் - தங்கள் விவாதங்களை நியாயமற்ற விதத்திலும், வஞ்சனையான விதத்திலும் செய்ய வல்லவர்கள் - சத்தியத்திற்காக நாடிடுவதற்குப் பதிலாக, வெற்றியடைவதற்கென நாடுவதில் வல்லவர்கள். எனினும் ஸ்தேவானுடைய இந்தச் சந்தர்ப்பத்தினைப்போன்று, இன்றும் காணப்படும் சந்தர்ப்பங்களில் சத்தியத்தினை

எதிர்ப்பவர்கள், வெறியர்களாய்/சண்டைக்காரர்களாய் இருக்கின்றனர்; மேலும் இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் சத்தியத்தினை உடையவர்கள் அதனை குறித்து வெட்கப்படாமல் மற்றும் பயங்கொள்ளாமல், அத்தருணத்திற்குத் தேவையான வார்த்தைகள் மற்றும் ஞானத்திற்கான கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம்கொள்ள வேண்டும். ஸ்தேவான் பண்ணின விவாதம் குறித்து நமக்கு விவரங்கள் கொடுக்கப்படவில்லை; ஆனால் பிற்பாடு ஸ்தேவானால் கொடுக்கப்பட்டதான செய்தியிலிருந்து நன்கு விளங்கும் அவரது குணலட்சணம் குறித்து நாம் அறிந்திருக்கும் விஷயத்திலிருந்து, அவர் இரக்கமான, பரந்த மனப்பான்மையான, நியாயமான விதத்தில் எதிர்ப்பவர்களிடத்தில் பேசினார் என்றும், ஆத்திரமடையவோ, சீற்றமடையவோ, தவறான விவாதங்கள் செய்ய முற்படவோ இல்லை என்றும் சொல்ல வேண்டியது அவசியமாயிருக்கின்றது. அவர் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்திலும் கருக்கானதான சத்தியத்தினைப் பெற்றிருந்தார் மற்றும் அப்போஸ்தலருடைய கட்டளைக்கேற்ப, அவர் சத்தியத்தினை அன்போடு பேசினார் என்பதில் நமக்கு உறுதியே (எபேசியர் 4:15).

ஸ்தேவானோடு விவாதம்பண்ணினவர்கள் நிச்சயமாகவே கிரேக்க யூதர்களாய் இருந்தனர் மற்றும் ஸ்தேவானும்கூட அநேகமாக இவ்வகுப்பாரைச் சேர்ந்தவரேயாவார். பிற்காலங்களில் அப்போஸ்தலனாகிய பவுலாக மாறின, தர்சுவின் சவுலும், ஸ்தேவானோடுகூட விவாதம்பண்ணினவர்கள் மத்தியில் காணப்பட்டார்; ஏனெனில் அவரைக் கொன்றவர்கள் மத்தியில், கலகத்தலைவன் போன்று தான் காணப்பட்டதாக பவுல் அடிகளார் தாமே நமக்குக் கூறுகின்றார் (அப்போஸ்தலர் 22:20). கமாலியேலினால் கற்பிக்கப்பட்டவரும், தர்க்கவாதங்களில் திறமிக்கவரும், நியாயசாஸ்திரியுமான வாலிபனாயிருந்த சவுல், ஸ்தேவானின் விவாதத்திலிருந்து எந்தளவுக்குப் படிப்பினைகள் சிலவற்றினைப் பெற்றிருந்திருப்பார் மற்றும் கருத்துகள் சிலவற்றினைக் கிரகித்திருந்திருப்பார் என்று நாம் யோசிக்கின்றோம்; எனினும் அவரது வாழ்க்கைப் போக்கினை மாற்றிடும் அளவுக்குப் போதுமானதாய் இல்லை.

ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில், தன் ஜனங்களின் அதிகாரிகளுக்கு, இயேசு மற்றும் அவரது உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்டிருக்கும் சுவிசேஷத்தின் பிரசங்கத்தினைப் பிரசங்கிக்கத்தக்கதாக ஸ்தேவானுக்கு வாய்ப்பு வந்தது. விவாதத்தில் அவரைத் தோற்கடிக்க முடியாத அவரது பகைஞர்கள், அவரை அழித்துப்போடுவதற்குத் தீர்மானமாய் இருந்தார்கள்; மூடநம்பிக்கையினால் வஞ்சிக்கப்பட்ட மத வெறியர்கள் போன்று, இவர்களும் தங்களது உயர்கொள்கையினால் ஏவப்பட்டவர்களாக, அவரைச் சட்டப்பூர்வமாய் அழித்திட - அதாவது சட்டத்தின்படி செய்வதுபோன்ற தோற்றத்தில் அழித்திட விரும்பிட்டார்கள். அந்தோ பரிதாபம்! இப்போதும், அப்போதும் சிறந்த மனமுள்ள அநேகம் ஜனங்கள், ஒரு தவற்றினைச் சட்டத்தின்படியான தோற்றத்தில் செய்தால், அந்தத் தவறானது சரியானதாகிவிடும், நன்மையானதாகிவிடும் என்று எண்ணுமளவுக்குத் தங்களையே வஞ்சித்தவர்களாய் இருக்கின்றனர்! கர்த்தருடைய ஜனங்கள் நியாயப்பிரமாணத்தின் ஆவியினை, நியாயத்தின் ஆவியினை, நீதியின் ஆவியினை உடையவர்களாய் இருப்பது அவசியம்; இவை இல்லாத பட்சத்தில் வைராக்கியம், மூடநம்பிக்கை அல்லது தப்பறையினுடைய அழுத்தத்தின் கீழ் சமச்சீரான மனங்களுடைய சிறந்தவர்கள்கூடத் தவறாய் வழிநடத்தப்பட்டுவிடுவர்.

நியாயசாஸ்திரிகளும், ஆலோசனை சங்கத்தின் அங்கத்தினர்களும் (தர்சுவின் சவுலும் இதில் அங்கத்தினனாய் இருந்திருக்கக்கூடும்) குற்றச்சாட்டுகளை நேரடியாய்ச் சொல்லும் வகுப்பினராய் இருக்கவோ, சிறந்த ஒரு மனுஷனை அழிப்பதில் தாங்கள் விருப்பம் கொண்டிருப்பதுபோன்று தோற்றமளிக்கவோ விரும்பவில்லை. ஆகையால் அவர்கள் தங்களது சிதைந்துபோன பகுத்துணர்தலைக்கொண்டும், மனச்சாட்சியைக்கொண்டும் மரணத் தீர்ப்பினை அளிக்கத்தக்கதாக வாய்ப்பளிக்கும் வகையான சாட்சியினைச் சொல்வதற்கு மற்றவர்களை ஏற்பாடுபண்ணினார்கள். விநோதமாகவே இரண்டாம் இரத்த சாட்சியும், முதலாம் இரத்த சாட்சியினைப் போலவே தேவனுக்கும், ஆலயத்திற்கும் எதிராக தூஷணம் புரிந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார் மற்றும் தனக்கு முன்மாதிரியான ஆண்டவரின் விஷயத்தில் இருந்ததுபோலவே, ஸ்தேவானுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கும் எவ்வித அடிப்படையும் இல்லாமல் இருந்தது. குற்றச்சாட்டுகள் திரித்துக்கூறப்பட்டன என்பது உண்மைதான், எனினும் அதில் கொஞ்சம் உண்மையும் இருந்தது. இப்படியாகக் கர்த்தரையும், ஸ்தேவானையும் குற்றவாளி என்று தீர்த்திட்டவர்களுக்கு எவ்வளவாய் இவ்விஷயத்திற்கெனச் சலுகைப் பாராட்டப்படலாம் என்பதைப் பகுத்துணர்தல் என்பது அநேகமாக நமக்குச் சிரமமான காரியமாகும். பகுத்துணர அவசியமுமில்லை, ஏனெனில் இத்தகைய காரியங்களில் பகுத்துணர்தல்/நியாயந்தீர்த்தல் என்பது நம்முடைய கரங்களில் வைக்கப்படவில்லை. தவறான

அபிப்பிராயம் கொண்டுள்ள மனமானது, எந்தளவுக்குச் சத்தியத்தினைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும், வெளிச்சம் இருளாகவும், சத்தியம் தப்பறையாகவும் காணப்படத்தக்கதாகக் பகுத்துணர்தலை குருடாக்குவதில் எதிராளியானவன் எந்தளவுக்கு விஜயம் கொண்டுள்ளான் என்றும் கர்த்தர் மாத்திரமே அறிவார்.

தனக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஸ்தேவான் கேட்டு, விவகாரத்தின் போக்கினைக் கவனித்தபோது, தனக்கு எதிராக சாட்டப்பட்டுள்ளதான குற்றச்சாட்டுகளுக்கும், தனது ஆண்டவருக்குச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் இடையிலான ஒற்றுமையினை மனதில் கவனித்தார் என்பதில் ஐயமில்லை. மனதின் சந்தோஷத்தினால் மிகவும் வியக்கத்தக்க விதத்தில் அவரது முகம், ஒளிவீசினபோது அவர் மனதில் இத்தகைய சில எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தது என்பதினாலேயே, ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த யாவரும் "அவர்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவர் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதில் நமக்கு நிச்சயமே. ஆனால் தேவதூதன் முகம்கூட அத்தகைய இருதயங்களை இத்தருணத்திலும், ஆண்டவருடைய தீர்ப்பின்போதான தருணத்திலும், உட்கார்ந்திருந்த அதே நபர்கள் சிலருடைய இருதயங்களை அசைத்திடவில்லை. ஸ்தேவானுடைய சாட்சி பகருதலானது, அவர் பேசினவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் விஷயத்தில் பலனளிக்கவில்லை போன்று தோற்றமளிக்கின்றது; இப்படியாகவே நமது ஆண்டவருடைய விசாரணை மற்றும் சாட்சியின் விஷயத்திலும் காணப்பட்டது. எனினும் ஆண்டவருடைய சாட்சியானது பெந்தெகொஸ்தே நாளிலும், அதற்குப் பிற்பாடும் பலன்கொடுத்ததாய் இருந்தது; ஆகவே ஸ்தேவானுடைய சாட்சியும் பின்நாட்களில் பலன்கொடுத்ததாய் இருந்தது. சுடர்விட்ட அந்தத் தேவதூதன் முகமானது - தமஸ்குவிற்குப் போகிற வழியில் கர்த்தரால் குறுக்கிடுவது வரையிலும், தர்சு பட்டணத்துச் சவுலினால் சிலகாலம் எதிர்த்துப் போராடி வரப்பட்ட "முட்களுள்" ஒன்றாய் இருந்தது என்பதினை யாரால் மறுத்திட முடியும்?

இந்த இரத்தசாட்சியின் விஷயத்தில் காணப்பட்ட அனுபவங்களானது சவுலுக்கு மாத்திரமல்லாமல், மற்றவர்களுக்கும்கூட விலையேறப்பெற்றதாய் அமைந்தது என்று யாரால் மறுத்திட முடியும்? சம்பவங்களானது நன்மையினை அதிகமாகவோ அல்லது கொஞ்சமாகவோ கொணர்ந்ததாகத் தோற்றமளித்தாலும், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், அனைத்துச் சூழ்நிலைகளிலும் உண்மையாய் இருப்பது என்பதே, என்ன நடந்தாலும் நம்முடைய கடமையாய் இருப்பது போல, ஸ்தேவானுக்கும் கடமையாகவும் இருந்தது. கர்த்தருடைய வேலையானது, அவரது கரங்களில் இருக்கின்றது என்றும், அவருக்கும், சத்தியத்திற்கும், நமக்கு அருளப்பட்டிருக்கும் வாய்ப்புகளுக்கும் உண்மையாய் இருப்பதே நம்முடைய காரியமாய் இருக்கின்றது என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இதழாசிரியரானவர் தானும், பயண ஊழியர்கள் யாவரும், எங்குமுள்ள சபை மூப்பர்கள் யாவரும் மற்றும் பொதுவிடங்களிலோ அல்லது தனிமையில் சந்தித்தோ, இயேசுவின் நாமத்தில் பேசுகிறவர்களாகிய சகோதரர் யாவரும், பிரகாசித்த ஸ்தேவானின் முகத்தினைத் தங்கள் ஞாபகங்களில் பதியப்பெற்றிருக்க விரும்புகின்றார். இப்படிச் செய்வோமானால் நமது கர்த்தருடைய பிரதிநிதிகளென நாம் தனிமையில் அல்லது பொதுவிடங்களில் மனுஷர் முன் நிற்கும் ஒவ்வொரு தருணத்திலும், நாம் அவரது ஆசீர்வாதத்தினையும், அவரது ஊழியக்காரர்களாய் இருப்பதற்குரிய நமக்கான சிலாக்கியத்தினையும் உணரமுடிந்தவர்களாகி, அதினால் நம் இருதயங்கள் நிரம்பி, நம்முடைய முகங்கள் - ஊழியம் புரிவதற்குரிய சிலாக்கியத்திற்கான நன்றியில், மகிழ்ச்சியில் பிரகாசித்திடும்; அப்போதுதான் நாமும் உயர்வான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வோம் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி சத்தியத்திற்காய் ஆயத்தமான இருதயமுடையோர் யாவருக்கும் மற்றும் இன்னுமாகச் சத்தியத்திற்காக இன்னமும் ஆயத்தமடையாமல், தர்சு பட்டணத்துச் சவுல்போன்று, சத்தியத்திற்காக ஆயத்தமாகும் வண்ணமாகக் கர்த்தருடைய வழிநடத்துதல் மற்றும் பயிற்சியின் கீழ்க் காணப்படுபவர்களுக்கும் - பெரிய அளவிலான ஆசீர்வாதத்தினை நாம் கொண்டுவருபவர்களாய் இருப்போம்.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனம், இவ்விஷயத்திற்கு மிகவும் பொருத்தமானதாய்க் காணப்படுகின்றது. கர்த்தருடைய ஜனங்கள் விசேஷமாகச் சத்தியம் தொடர்பான தங்களது உண்மை பற்றின விஷயத்தில் சோதனைக்குள் காணப்படுகையில், ஆண்டவருடைய இந்த வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும். மனிதர்கள் நம்முடைய சரீரங்களைக் கொன்றுபோடலாம் அல்லது நம்மைக் குறித்துத் தீமையாய்ப் பேசிடலாம் அல்லது நிந்தித்திடலாம்; எனினும் நம் புதுச்சிருஷ்டிகளுக்கு அவர்களால் தீங்குச் செய்யவோ அல்லது எதிர்க்கால ஜீவியம் குறித்த நம்முடைய நம்பிக்கைகளை அழித்துப்போடுவதோ அவர்களால்

கூடாத காரியமாய் இருக்கின்றது. கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்கு வாக்களித்துள்ளதான அந்த ஜீவனோ - உயிர்த்தெழுதலின் ஜீவனோ - மனுஷனுடைய வல்லமைக்கு அப்பாற்பட்டது. அது நித்தியகாலமான, விலைமதிக்கமுடியாத ஜீவனாகும். தற்கால ஜீவன் மற்றும் அழிந்துபோகும் சரீர நிலைமை தொடர்புடைய விஷயத்தில் இழப்புகளைப் பொருட்படுத்தாமல், அந்த ஜீவனை அடைவோமானால், நாம் மகா விலை பேசி, மாபெரும் பரிசினை அடைந்தவர்களாய் இருப்போம். அதனை உண்மையாய் உணர்ந்துகொள்பவர்கள் யாவரும், அதனை "விலையுயர்ந்த ஒரு முத்தாக" காண்கின்றனர்; இதற்காக ஆண்டவர் போன்று அனைத்தையும் ஒப்புக்கொடுக்க விரும்புகின்றனர் - அதனை தாங்கள் அடையத்தக்கதாக, தாங்கள் பெற்றிருக்கும் அனைத்தையும் விற்பதற்கு விரும்புகின்றனர்.

தேவன் ஆத்துமாவினைக் கொல்ல வல்லவராய் இருக்கின்றார் - ஜீவனை முற்றிலுமாய் அழித்துப்போட வல்லவராய் இருக்கின்றார் மற்றும் முழுமையான வெளிச்சம் மற்றும் அறிவிற்கு எதிரான துணிகரமான பாவம் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும், இப்படியாக அழித்துப்போடுவார் என்று அவர் எச்சரித்தும் இருக்கின்றார். இது ஆறுதலடையவும் மற்றும் அச்சமடையவும் வேண்டிய விஷயமாகும். இது திரளான ஜனங்கள் நித்தியகாலமும் வேதனையடைவார்கள் என்ற தவறான மனித போதனைக்கு எதிராய், ஆறுதலளிக்கின்றதாய் இருக்கின்றது; இது தெய்வீகக் கிருபையினை ருசிப்பார்த்தும், அவருக்குக் கீழ்ப்படிபவர்களுக்குரிய தேவனுடைய கிருபையான ஏற்பாடுகளைக் கற்றறிந்த பிற்பாடும், நம்மில் எவரேனும் பின்வாங்கிப்போய், நம்முடைய அனைத்தையும் - ஜீவனை இழந்துபோகாதபடிக்கு நம்மைப் பயமடையச் செய்கின்றது!

ஜீவியத்தில் சரியான ஓட்டம் மேற்கொள்ள வேண்டுமெனில், நமக்குவரும் ஜீவியத்தின் பிரச்சனைகள் மற்றும் சோதனைகளை எதிர்க்கொள்ள முடியவேண்டுமெனில், உபத்திரவத்தில் களிகூரும் ஆவியில் மற்றும் கர்த்தர் வழிகாட்டியுள்ள பிரகாரம் இத்தகைய அனுபவங்கள் அனைத்தையும் சந்தோஷமாய் எண்ணி சோதனைகளையும், பிரச்சனைகளையும் சரியான ஆவியில் எதிர்க்கொள்ள வேண்டுமெனில் - கண்ணியைக் கொண்டுவரும் மனுஷனுக்கான சகல பயத்தையும் அகற்றிடுவது அவசியமாகும். யேகோவா தேவனுக்குப் பயப்பட வேண்டும் என்றும், அழிந்துபோகிற சக மனிதர்களுக்குப் பயப்பட வேண்டாம் என்றும் நமது கர்த்தருடைய கட்டளைக் காணப்படுகின்றது. நீதிமான் சிங்கத்தைப்போன்று தைரியமுள்ளவனாகவும், புறாவைப் போன்று கனிவாயும் மற்றும் ஆட்டுக்குட்டியினைப் போன்று சாந்தமாகவும் காணப்படுவார். இந்த விநோதமான கலவை ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் காணப்பட வேண்டும்; மற்றவர்களிடத்தில் இப்படிக் காணப்படுமா என்பது சந்தேகத்திற்குரியதேயாகும்.

---

**R 5875, 2986**

# ஐனேயாவும், தொற்காளும்
# Aeneas and Dorcas
## (Visiting with Peter, the primitive saints)

திறவுவசனம்: ‘‘இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்’’

“அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம்பெற்று பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்துபெருகின” – அப் 9:31–43.

சீஷர்களுக்கு நேரிட்ட உபத்திரவம் அவர்களை எருசலேமிலிருந்து யூதா தேசமெங்கும் சிதறடித்தது. இவ்வாறு சிதறடிக்கப்பட்டவர்களுக்குள் பிரதானமானவர்களாயிருந்த அநேகருள் பவுலும் ஒருவர். பவுல் மனம் மாறினபின் நடந்த சம்பவங்கள் படிப்படியாக குறைந்தநிலையில், அதிர்ச்சி மற்றும் நோய்வாய்ப்பட்ட நிலையிலிருந்து மீண்டு, தேற்றப்பட்டபிறகு, ஒருசிலகாலம் ஓய்வுக்குப்பின், நம் ஆதார வசனங்களின் முதல் வசனத்தில் கூறப்பட்டவாறு(9:31) நடந்தது. சீஷர்களுக்கு நேரிட்ட இவ்வுபத்திரவத்துக்கு பவுல் மனம் மாறியதும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும். ஆனால் இச்சம்பவத்துடன் சேர்ந்து இச்சமயத்தில், யூதர்களுக்கும் அவர்களது ரோம ஆட்சியாளர்களுக்குமிடையே போராட்டம் எழுந்தது.

கிபி 38ம் வருடம் பேரரசனாகிய காலிகுலா சீசர் தற்போதுதான் பதவியேற்றிருந்த நிலையில், ஒரு கட்டளையை பிரகடனப்படுத்தினான். அதன்படி, அவனது பேரரசுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில், அவனது சிலை நிறுவப்பட்டு, தொழுதுகொள்ளப்பட வேண்டும். எருசலேமிலும் மற்ற பகுதிகளிலும் இந்த சிலைகளை வைக்கும் நோக்கத்தையும், ஆலயத்திலும்கூட ஸ்தாபிக்கும் இக்கட்டளையை யூதர்கள் அறிந்தபொழுது, கடும் சீற்றமும் வேதனையும் அடைந்தனர். அவர்கள் இளைஞரும் முதியோருமாக மாபெரும் ஜனத்திரளாகக் கூடி உள்ளூர் ஆளுநரை இவ்விஷயத்தில் அவர்களுக்காக நியாயம் செய்யும்படிக்கு மன்றாடிக்கேட்டு, இவர்களது தெய்வீக நிலையிலுள்ள பரிசுத்த தேவாலயமும், பரிசுத்த நகரமும், பரிசுத்த நிலமும் மாசுபடுவதற்கு அனுமதிக்கக்ககூடாது என்று கேட்டுக்கொண்டனர். இந்த கண்டனக் கூட்டங்கள் ஒன்றில் நடந்தவற்றைக் குறித்து வரலாற்று ஆசிரியர் கூறுகிறார்:ஆறு பாகங்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பரந்த மக்கள்கூட்டம் – 1. முதிர்வயதுள்ள ஸ்திரீகள் 2. விடுதிக் காப்பாளர்கள் மற்றும் வேலைக்காரப்பெண்கள் 3. இளம்பெண்கள் 4. முதிர் வயதுள்ள ஆண்கள் 5. வாலிபர்கள் 6.சிறுவர்கள் என
ரோம நிர்வாக அதிகாரியின் அரண்மனை முன்பாக ஒன்றுகூடி, அவன் மாடி முகப்பின் முன்பாக தோன்றினபோது, புறக்கணிக்கப்பட்ட நிலையில் பூமியில் புரண்டு அழுது புலம்பினர். தாங்கள் மரிக்கவும் தயாராக இருப்பதாகவும், ஆனால் ஒருபோதும் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும் அறிவித்தனர். பேரரசனுடைய பிரகடனத்தை மாற்றுவதற்கு ஆளுனர் எடுத்த ஒவ்வொரு முயற்சியும் பலிக்காமல், இறுதியில் ஆலயத்தை தொடாமல் வெளியேற கட்டளைமட்டுமே ஏற்படுத்தமுடிந்தது. ஆனால் ஆலயத்தின் வெளிப்புற நுழைவாயில்களில் பேரரசனுக்கு அநேக பலிபீடங்கள் எழுப்பப்பட்டன. மேலும் அலெக்சாந்திரியாவிலுள்ள அனைத்து யூத வழிபாட்டு ஸ்தலங்களும் சீசருடைய ஆலயங்களாக மாற்றப்பட்டதாக செய்திகள் வந்தடைந்தன. இந்தக் காரியங்கள் கிபி 41 ஜனவரி மாதம்வரை நீடித்தது, ஜனவரி 24ம்தேதி காலிகுலா சீசர் கொலைசெய்யப்பட்டான்.

இப்படிப்பட்ட வெளிப்புறமான உபத்திரவமும், குறுக்கீடும் தங்களது சொந்த சம்பிரதாயங்களிலும் சுயாதீனங்களிலும் தலையிட்டதால், யூதர்கள் கிறிஸ்தவர்கள்மேல் போரிடுவதைத் தவிர்த்து, ஓய்வாயிருந்தனர். இப்படியாக ஒரு குறிப்பிட்டகாலம் ஓய்வு கொணரப்பட்டது. உபத்திரவப்படுத்துபவர்கள் ஒருபோதும் தங்களுக்கு உபத்திரவம் வருவதை விரும்புவதில்லை. கிறிஸ்துவின் சிந்தையை பெற்றிருப்பவர்கள் பிறரை ஒருபோதும் உபத்திரவப்படுத்தமாட்டார்கள். இது தீமை என்று தீர்மானித்தவைகளுக்கு ஒத்துழையாமலும், உதவி செய்யாமலும் இருப்பது இவர்களது கடமை என்று உணர்ந்திருக்கிறார்கள். அவசியம் ஏற்படும்போது தவறை வெளிப்படையாக எதிர்க்கவும், அதன் பொருத்தமற்ற தன்மையையும் எடுத்துக் காண்பிப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் அப்போஸ்தலர்கள் பலமுறை தங்கள் நிருபங்கள் வாயிலாக

செய்ததுபோலவே இவர்களும், தவறான போதனைகள் மற்றும் தவறான செய்கைகள் செய்வோரை வெளிக்கொணருவார்கள். ஆனால் மற்றவர்களை உபத்திரவப்படுத்துவதில் கர்த்தருடைய பிள்ளைகள் பங்கேற்கமாட்டார்கள். நாம் அன்பின்ஆவியில் , கிறிஸ்துவின் சிந்தையில் மறைக்கப்பட்டிருக்கிறோம். நமக்கு பிறர் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அதையே பிறருக்கும் செய்யும்படி அந்த ஆவி நம்மை வழிநடத்தும். இதுவே நமது ராஜரீகப் பிரமாணம், ''பரிபூரண சுயாதீனப்பிரமாணம்.

சபைகள் குணாதிசயங்களில் மேம்பட்டன என்று பதிவுகள் கூறுகின்றன. குணங்களில் மேம்பாடு என்ற வார்த்தை ஒரு கட்டிடம் கட்டப்படுவதற்கு ஒப்பாக கூறப்பட்டுள்ளது. ஆகவே இதிலிருந்து நாம் அறியவேண்டிய சிந்தனையானது, இந்த சமாதானம் நிறைந்த காலகட்டமானது, பலஸ்தீனாவிலுள்ள கர்த்தரின் பிள்ளைகள் எண்ணிக்கையிலும் ஆவியின் கிருபைகளிலும் –ஆகிய இரண்டுவழிகளிலும் மேம்பாடு அடைந்தனர். குழந்தைப் பிராயத்திலிருந்த சபை எண்ணிக்கையிலும், கிருபையின் வளர்ச்சியிலும் வளர்ந்துவந்தது. கிருபையில் வளர்ந்ததை வசனம் வெளிப்படுத்துகிறது : "கர்த்தருக்கு பயப்படுதலிலும் பரிசுத்தஆவியின் தேற்றுதலிலும்" விசுவாசிகள் நடந்தார்கள்.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று வேதவசனம் வெளிப்படுத்துகிறது(சங்111:10). இது சுயநலத்தின் காரணமாக வரும் பயமல்ல. மாறாக தேவபக்தியினால் வரும் பயம். கர்த்தர் நன்மைக்கு பதிலாக தீமையே உருவானவர் என்ற பயமல்ல, அவர் நித்திய தண்டனை கொடுப்பார் அல்லது தம் எதிரிகளிடத்தில் அநீதியாக நடந்துகொள்வார் என்ற பயமல்ல, மாறாக தேவபக்தியினால் வரும் பயம். அவரது மேன்மையையும், அவரது நன்மையையும் அறிந்துணர்ந்து, அங்கீகரித்து, வியந்துபாராட்டுவதே கர்த்தருக்கு பயப்படுதலாகிய தேவ பக்தியாகும். அவருக்கு பிரியமில்லாததை செய்ய பயப்படுவதும், அல்லது அவரது அன்பு மற்றும் தயவிலிருந்து பிரிப்பதாகிய எதையும் செய்ய பயப்படுவதுமே ஆகும். இப்படிப்பட்ட நியாயமான பயம், ஞானத்தின் ஆரம்பமாகஇருந்து, அந்த ஞானத்தை காத்துக்கொண்டால் ஒருபோதும் அழியாதிருக்கும். தூசியிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட நாம், மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். கர்த்தருடைய கிருபை, வல்லமை மற்றும் சத்தியத்தினால் புதுப்பிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டிருக்கிறோம். நமது சொந்த சிறுபிள்ளைத்தனத்தால், குறைபாட்டினால், நம் பார்வையை இழந்துவிடாமல், கர்த்தரது இரக்கம் மற்றும் தயவையே நாம் முழுமையாக சார்ந்திருக்கவேண்டும். இதிலிருந்து தன் பார்வையை இழப்பவன், நிச்சயமாக விழுகைக்குள்ளாவான். ''பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்'' என்று அப்போஸ்தலர் கூறியிருப்பது, இவ்விடத்தில் தேவபக்தியினால் வரும் பயத்தை குறிப்பிடாமல், பெரும் அச்சத்தினால் உண்டாகும் பயத்தையே புறம்பே தள்ளும் என அவர் குறிப்பிடுகிறதை நாம் உணரவேண்டும். பூரணஅன்பு பெரும் அச்சம் மற்றும் அடிமைத்தனத்தின் பயத்தை புறம்பே தள்ளும். அதோடுகூட, இது கர்த்தருக்கேற்ற நம் பயபக்தியை ஊக்கப்படுத்தி, அபிவிருத்தியடையச்செய்யும். ஆகவேதான், அப்போஸ்தலர் மீண்டுமாக வெளிப்படுத்துகிறார், தேர்ச்சியடைந்த கிறிஸ்தவர் தேவஅன்பின் மூலம் தன்னிடமிருந்த அடிமைத்தனத்தின் ஆவியை இழந்து, தேவன் அடையாளங் காண்பித்தபடி, அவரைப் பிரியப்படுத்த பேராவல்கொண்டு, அதை முடிவில் அடைவான்.

''ஆனபடியினாலே அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்''– எபிரேயர் 4:1, 1யோவா4:18.

குழந்தைப்பிராயத்து சபை தேவனுக்குப் பயப்படுகிற பயமாகிய ஒரே கிருபையில் மட்டும் வளர்ச்சியடைந்ததோடு நில்லாமல், பரிசுத்தஆவியின் தேற்றுதலும்(Pneuma – Spirit) அதற்கு கூட்டிக்கொடுக்கப்பட்டது. பரிசுத்தஆவி என்பது தேவசிந்தை அல்லது தேவனது மனமாகும். குழந்தை பிராயத்து சபையானது இதில் அபிவிருத்தியடைந்து, தங்கள் இருதயங்களில் விளையச்செய்தது, அதில் நடந்தது–அதாவது அதன்படி ஜீவித்தது. தேற்றுதல் என்ற வார்த்தை ஒருவரோடொருவர் ஒற்றுமைப்படுத்துதல், உறுதியாக இணைத்தல் அல்லது திடப்படுத்துதல் என்று பொருள்தருகிறது. இவ்வார்த்தையின் மூலம் வெளியாகும் கருத்து என்னவெனில், சபையானது எண்ணிக்கையில் பெருகினதோடு மட்டுமல்லாமல், தேவனுடைய பரிசுத்த திருச்சபையாக அல்லது ஆலயமாக கட்டப்பட்டு மேம்பாடு அடைந்தது. ஆனால் பல்வேறு ஜீவக்கற்கள் பரிசுத்தஆவியினால் ஸ்திரமாக --850-- திருந்து, ஒருவருக்கொருவர் கட்டப்பட்டனர். மழலை சபையின்

மகிமையடைந்த நிலைமையை இது எழுத்துருவத்தில் வலியுறுத்தி விவரிக்கிறது. இன்றையநாளில் எப்புறமும் இருக்கிற கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகள், எதற்காக போராடவேண்டுமென இது தெளிவாக்குவதுடன், அப்பொழுதிருந்ததுபோலவே உண்மை கிறிஸ்துவின் சபை மெய்யாகவே இப்பொழுதும் இருக்கவேண்டும்.

ஒருவரையொருவர் கட்டி எழுப்புவதைக்குறித்த கருத்து, தனிப்பட்ட நபருக்குப் பொருத்திப் பார்க்கும்பொழுது, அவரது சொந்த விசுவாச அமைப்பை முக்கியப்படுத்துகிறது. அந்த விசுவாசஅமைப்பு பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் போன்ற தெய்வீக சத்தியங்களும், குணாதிசயங்களுமாம் என அப்போஸ்தலர் நமக்கு தெரிவிக்கிறார். இவைகளிலிருந்து மரம் புல் வைக்கோலாகிய தவறு, பாவம் மற்றும் போலிநடிப்பு ஆகியவை புறம்பாக்கப்படும். இதே கருத்தை சற்று வித்தியாசமான வழியில் சபை ஜனங்கள் கூடி வருதலுக்கு பொருத்திக் காண்பிக்கலாம். ஒவ்வொரு சிறுசபையும் ஒரு தற்காலிகமான ஆலயமாக அல்லது தேவனது வாசஸ்தலமாக, அவரது பரிசுத்தஆவி வாசம்பண்ணும் இடமாக கருதப்படுகிறது. இன்னும் விஸ்தாரமாகக் கூறுவோமேயானால், முழு சபையும் தேவனுடைய ஆலயமாக எல்லாக் காரியங்களிலும் கருதப்படுகிறது. இதில் அவர் பிரதிநிதியைப்போல் தங்கியிருக்கிறார். இதன்மூலமாகவே கேட்கும் காதுகளை உடையவர்களிடத்தில் பேசுகிறார். இதன் அடிப்படையில், வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்ட 7சபைகளும் முழு உலகிற்குமான கர்த்தரின் ஒரே சபையையே குறிப்பிடுகிறது. 7சபைகள் 7 வேறுபட்ட காலப்பகுதிகளையும் அதன் வரலாறுகளையும் எடுத்துரைக்கிறது. ஆனால் இவைகளில் எதுவும் ஆலயம் போன்ற வார்த்தையை முறையாக உபயோகிக்கவில்லை. இன்னும் அதிகமாக, இன்னும் துல்லியமான கருத்து, தெய்வீக ஆலயமாகிய சபையைக் குறித்து வெளிப்படவேண்டியுள்ளது என்பதை சிந்தையில் நிறுத்தவேண்டும்.

மகிமையடைந்த சபையைப்பற்றிய இன்னும் துல்லியமான கருத்து, அது கட்டுமானப்பணியின் கீழ் இருக்கவில்லை. சுவிசேஷ யுகத்தின்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கட்டப்பட்டுவருகிற அவரது பரிசுத்தவான்களை அவரிடத்தில் கூட்டிசேர்க்கும் வேலை துரிதமாக நடந்துவருகிறது. கர்த்தருடைய பின்னடியார் ஒவ்வொருவரும் ஒரு ஜீவனுள்ள கல்லாக இருந்து, தற்போது அக்கல் செதுக்கப்பட்டு பொருத்தப்பட்டு பளபளப்பாக்கப்பட்டு, மகிமையடைந்த ஆலயத்தில் வைக்கும்படிக்கு தயார்ப்படுத்தப்படுகிறது. இதன் கட்டுமானப்பணி இந்த யுகமுடிவு வரை நீடிக்கும். சாலமோனின் ஆலயத்தில் நிழலாக காண்பிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு பகுதியும் பூரணமாக்கப்பட்டு ஒன்றுசேர்க்கப்படும்.

சுத்தியல் ஓசை கேட்காமல் கல் சிறிதளவுகூட செதுக்கப்படும் அவசியமின்றி அல்லது பரிபூரணமாக்கப்பட்டவைகளில் ஒருசிறிதளவுகூட மாற்றம் செய்யாமல், அனைத்தும் ஒன்றுசேர்க்கப்பட்டு மகிமைநிறைந்த தேவஆலயமாக உண்டாக்கப்படும். அது கர்த்தரது நிறைவான, பரிபூரணமான பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டு, ஆயிரமாண்டு ஆட்சியின்போது, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கவும் அறிவுறுத்தவும், மையமாக ஏற்படுத்தப்படும். “பரலோகத்திலிருந்து புதிய எருசலேம் தேவனிடமிருந்து கீழே இறங்கிவருகிறது”1பேதுரு2::4–7, வெளி21:27,10, 1ராஜா6:7.

### லித்தாவில் குடியிருந்த பரிசுத்தவான்கள் :

அப்போஸ்தலர்கள் எருசலேமை தங்களது ஊழியத்தின் தலைமையகமாக ஏற்படுத்தியிருந்தபோதிலும், யூதேயா முழுவதிலும் சுற்றித்திரிந்து, முன்பு நடந்த உபத்திரவத்தினால் சிதறுண்டிருந்த தேவனுடைய பிள்ளைகளை சந்தித்து, ஒன்றிணைத்து, சிறு சபைகளாக ஒவ்வொரு பகுதியிலும் உருவாக்கினர். இந்தப் பிரயாணங்களில் பேதுரு, சாரோன் சமவெளியின் பிரதான பட்டணமாகிய லித்தாவுக்கு வந்தார். இந்த பட்டணமானது, எருசலேமுக்கும் யோப்பா பட்டணத்துக்குப் போகும் வழியில் 10 மைல் தொலைவில் அமைந்திருந்தது.

பேதுருவின் இந்த விசேஷப் பிரயாணம் நாம் முன்பே கூறினதுபோல பரிசுத்தவான்களை சந்திக்கும் நோக்கத்துடன் அமைந்திருந்தது. பரிசுத்தவான் என்ற வார்த்தையை நாம் நேசிக்கிறோம். இது தூய்மையான, பிரித்தெடுக்கப்பட்ட, கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகளை குறிக்கிறது. இன்றைக்கு இந்த வார்த்தையை உபயோகித்தால் அதிக எதிர்ப்புகள் ஏற்படுகிறது. இதற்கு இரண்டு இயல்பான காரணங்கள் இருப்பதாக நாம் நம்புகிறோம். முதற்காரணம், கிறிஸ்தவத்தை பிழைப்புத்தொழிலாக கொண்டவர்களில் பெரும்பான்மையானோர், தாங்கள் பரிசுத்தவான்களல்ல, பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமல்லர் என்று அறிவர். கர்த்தரோடு

நெருக்கமாக ஜீவிக்காமல், உலகிலிருந்தும், மாம்சம், சாத்தானிடமிருந்தும் விலகி, பிரித்தெடுக்கப்பட்ட ஜீவியம் ஜீவிக்காதிருக்கின்றனர். இப்படிப்பட்ட மனிதர்கள், பரிசுத்தவான்கள் என்ற வார்த்தையை விரும்பாததற்கு பலமான காரணங்களை பெற்றுள்ளனர். இது, அவர்களது நண்பர்கள் மற்றும் கிறிஸ்தவப் பணியில் உடன்பங்கேற்பவர்களிடமிருந்து புறம்பாக்கும் என்று புரிந்திருக்கின்றனர். பரிசுத்தவான்கள் என்ற வார்த்தையை எதிர்ப்பதற்கு மற்றுமொரு காரணம் என்னவெனில், இருண்ட யுகங்களில், ரோம மற்றும் கிரேக்க கத்தோலிக்க சபைகளில், சபை ஒழுங்குமுறைப்படி பக்திமுறைமைக்கென்று ஒருசில நபர்களை பரிசுத்தவான்கள் என்று அழைக்கும் வழக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்தது. இதனால் விசேஷமான தீமை எதுவும் நினைவுகூறப்படவில்லை. ஆனால் மேன்மை மிக்கவர்களாகவும், வணக்கத்திற்குரியவர்களாகவும் உயர்த்திக்கொண்ட ஒரேகாரியம் மட்டுமே உணரப்பட்டது. இவ்வாறாக பரிசுத்தவான்கள் என்ற வார்த்தை ஜீவிக்கும் கிறிஸ்தவர்களிடையேயிருந்து பிரித்தெடுக்கப்பட்டுவிட்டது. மெய்யாகவே சில கிறிஸ்தவர்கள் மட்டுமே பரிசுத்துவத்துக்கு பிரதிநிதிகளாக தேவனை நோக்கி உணர்வூக்கத்துடன் இருந்ததால் ஒரு வேளை இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். பரிசுத்தவான் என்ற பதத்தை சிலர் வெறுக்க இன்னுமொரு காரணம் என்னவெனில், பாசாங்கு செய்பவர் என்று சிலரால் பேசப்பட்டதால், தாங்கள் மிகைப்படுத்தப்படுவதாக எண்ணினர். ஏனெனில் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற வசனத்தினை சரியாக பொருத்திப்பார்க்காமல், எல்லா கிறிஸ்தவர்களும் துயரப்படும் பாவிகளே என்று சிந்திக்கவும் ஜெபிக்கவும் பழக்கப்படுத்திக்கொண்டனர். ஏனெனில் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பதால் நியாயப்பிரமாணத்தின் நீதி, சிலரில் நிறைவேறுகிறது என்ற உண்மையை கவனிக்கத் தவறினர். கிறிஸ்துவின் தகுதி அவர்களது மனப்பூர்வமாக செய்த எல்லா மீறுதல்களையும் மூடுகிறது– –ரோமர் 8:4.

கர்த்தருடைய ஜனங்கள் அப்போஸ்தலர்களால் உபயோகிக்கப்பட்ட எல்லா நாமங்களையும் பழக்க வழக்கங்களையும் நினைவுகூர்ந்து, அதை பொருத்திப்பார்க்கவும், அதில் பிரியப்படவும் வேண்டும். பரிசுத்தவான் என்ற பதமும் தன்னில்தானே அங்கீகாரத்தை நமக்குத் தருகிறது. ஏறத்தாழ புதிய ஏற்பாட்டின் எல்லா நிருபங்களும் பரிசுத்தவான்களுக்கே எழுதப்பட்டன. மேலும் இந்த வார்த்தையை முறையாக தங்களுக்கு பொருத்திப்பாராமல் இருந்தால், இந்நிருபங்களில் இடம்பெற்றுள்ள மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை முறையாக தங்களுக்கு பொருத்திப் பார்க்கமுடியாது. ஏனெனில் வாக்குத்தத்தங்கள் அனைத்தும் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கென்றே எழுதப்பட்டவை(ரோமர் 1:7, 1கொரிந் 1:2, 2கொரிந் 1:9, எபேசி 1:1). பரிசுத்தவான் என்ற வார்த்தை நம் கர்த்தரின் விஷயத்தில் இருந்ததுபோல உண்மையான பரிபூரணத்தைக் குறிக்காமல், அவருக்குள் பரிசுத்தர்களாக கருதப்படுகிறார்கள். பரிசுத்தவான்களாயிருந்த அப்போஸ்தலர்களும் தேவனுடைய பரிசுத்தவான் வகுப்பாராக தங்களைக்குறித்து அவர்கள் வெளிப்படுத்தினபோது,

"நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே .."– அப் 14:15. சுபாவத்தின்படி மற்றவர்களைப்போல் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தபோதிலும், பரிசுத்தவான்கள் என்ற பதம் சபையில் முறையாக பொருந்தக்கூடியதாக உள்ளது. இவ்வாறு கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்த நம்மை சாபத்தீர்ப்பிலிருந்து காப்பாற்றி, கழுவி, சுத்திகரித்து, நம் பாவங்கள் மன்னிக்கப்படுதலினாலும், நம் பலவீனங்களும் கறைகளும் மூடப்படுவதாலும் தேவனோடு இசைவாக்கப்பட்டோம். தேவனது இந்த ஆசீர்வாதங்களுக்கு தொடர்புடையவர்கள், அவற்றில் பிரியப்படுபவர்கள், தங்களையே முழுமையாக தத்தம் செய்து ஜீவிக்க, கிறிஸ்துஇயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகினர், பரிபூரண ஜீவியத்தையல்ல(இது கூடாத காரியம்). மாறாக, நம்மால் முடிந்தவரைக்கும் பரிபூரணத்தை அடைய முயற்சிப்போம். பிதாவானவர் கிறிஸ்துஇயேசுவின் புண்ணியத்தின் மூலமாக பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான பலி செலுத்தும்படி கர்த்தருடைய கிருபை நம்மை தொடர்ச்சியாக உருவாக்குகிறது. ஆகவே, பரிசுத்தவான்கள் என்ற இந்த வார்த்தையை கேட்டு வெட்கப்படாதிருப்போம். பரிசுத்தவான் நிலைமை, பரிசுத்தம், உலகிலிருந்து பிரிந்திருக்கும் நிலை போன்ற வார்த்தைகள் நம் சிந்தைக்கு அளிக்கப்படும்போது, அந்த சிந்தனையை தொடர்ச்சியாக காத்துக்கொள்ளவேண்டும். இந்த சிந்தனை நமக்கு உதவிகரமாக இருந்து, உலகிலிருந்து பிரிந்து வேறான ஜீவியம் ஜீவிக்க நம்மை இயக்குவிக்கும். நம் போதகர்

அறிவுறுத்துவதுபோல்,

"நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" - யோவான் 17:16.

## இயேசுகிறிஸ்து உங்களை குணமாக்குகிறார்:–

நமது திறவுவசனம் பேதுரு ஐனேயாவைப்பார்த்து கூறின வார்த்தைகளேயாகும். திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த இவரை லித்தா ஊரில் அப்போஸ்தலர் கண்டு குணப்படுத்தினார். ஐனேயா பரிசுத்தவான்களில் ஒருவர் என்று வசனம் கூறவில்லை. ஆனால் சில பரிசுத்தவான்களுக்கு நண்பராக இவர் இருந்தார் என்று யூகிக்கலாம். இதன் காரணமாக அப்போஸ்தலரது கவனம் இவரிடம் திரும்பினது. இவர் படுத்த படுக்கையாக உதவியின்றி, எட்டுவருடங்களாக இருந்தவரை குணப்படுத்தியது ஒரு அற்புதமான சாட்சியமாயிற்று. அதன் நற்கீர்த்தி சுற்றிலுமுள்ள பகுதிகளுக்கு பரவினதால், அநேகரை கர்த்தரிடத்திற்கும் திருச்சபைக்கும் திருப்பினது. இவ்வாறாக கர்த்தர் திருச்சபையை ஸ்தாபித்து, சரியான இருதய நோக்கம் உடையவர்களை அற்புதங்களின்மூலம் அதனிடத்திற்கு கவர்ந்தது. இன்றைய நாளில் கர்த்தர் வேறு காரணிகளை உபயோகிக்கிறார். முன்னரே சுட்டிக்காண்பித்தபடி, அந்த அற்புதங்கள் அதிக காலம் நிலைத்திருக்க முடியாதுபோயிற்று. குணமளிக்கும் வரமும் நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தலின் மூலமாக மட்டுமே குணமளித்தல் அருளப்பட்டது. 12 அப்போஸ்தலர்கள் வாரிசுகளை பெற்றிருக்கவில்லை. பரலோக எருசலேம் பன்னிரெண்டு அஸ்திவாரங்களையே பெற்றிருந்தது, கூடுதலாக இல்லை. அவைகளில் 12 அப்போஸ்தலர்களின் நாமங்கள் எழுதப்பட்டிருந்தன, மற்றவர்களது பெயர்கள் இடம்பெறவில்லை.

## இந்த ஸ்திரீ நற்கிரியைகளை மிகுதியாய்ச் செய்தாள்

சீஷர்களில் ஒருவளாகிய ஸ்திரீ, அதாவது, பரிசுத்தவான்களில் ஒருவள் யோப்பா பட்டணத்தில் கடற்கரை ஓரத்தில் வசித்துவந்தாள். அவள் கற்பிப்பதிலும் மற்றும் எல்லா வகைகளிலும் ஊழியம்செய்துவந்தாள். அவளதுபெயர் அவளது தோற்றத்தை வெளிப்படுத்தும்வகையில், அவள் மிகுந்த அழகுள்ளவள். சீரிய மொழியில் அவளதுபெயர் தபீத்தா, கிரேக்க மொழியில் அழகுவாய்ந்த என்று பொருள்தருகிறது. இந்த ஸ்திரீ அழகிலும் கிருபையிலும் முற்றிலும் வேறுபட்டுவிளங்கினாள். இந்த குணாதிசயங்களை இயற்கையாகவே அவள் பெற்றிருந்தபோதிலும் மற்ற எல்லோரைக்காட்டிலும் தனித்தன்மையுடையவளாய் காணப்பட்டாள். சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியும், முழு அன்பும் உதவும் குணமுமே கர்த்தரிடத்தில் அனலாயிருந்து சுடர்விடுகின்ற வெளிச்சமாய், சுற்றிலுமுள்ளவர்களுக்கு சாட்சிகரமாக விளங்கினாள். அவள் வேதாகமத்தை வாசித்ததில்லை, ஏனெனில் அக்காலத்தில் அந்த ஜனங்களது மொழியில் வேதாகமம் இல்லாதிருந்தது, அவள் சத்தியபிரசுரம் விநியோகிக்கவில்லை. அக்காலகட்டத்தில் அச்சகமும் இல்லை. ஆனாலும் அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள். அவள் உதவிதேவைப்பட்ட சகோதரருக்கும், கர்த்தருக்கும் ஊழியம் செய்துவந்தாள் கர்த்தரது சகோதரர்கள் அனைவருக்கும் உதவிதேவைப்பட்டது. அவள் தான் பெற்றிருந்த தாலந்துக்கேற்ப வாய்ப்புக்களை சிறப்பாகச்செய்தாள். தரித்திரருக்கு குறிப்பாக விதவைகளுக்கு உதவிசெய்தாள். அக்காலகட்டத்தில் இந்த விதவை வகுப்பார், அதிலும் குறிப்பாக ஏழைகளாயிருந்தால், மிகவும் வேதனையான நிலைமையில், உதவிக்காக காத்திருந்தனர். தொற்காள் ஏழைகளுக்கு ஆடைகளைக்கொடுத்து உதவும் வழக்கத்தைக் கொண்டிருந்தாள். உற்சாகமூட்டும் வார்த்தைகளாலும், உதவிசெய்தும், சத்திய ஊழியம் செய்தும் வந்தாள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், அவளது மரணம் துயரத்தை வருவித்திருக்கும் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. விசேஷமாக, அவளது தர்மக்காரியங்களால் நன்மையடைந்தவர்கள் மற்றும், கிறிஸ்துவின் சாயலைக்கொண்ட அவளது ஆவியின் கருணையில் ஈர்க்கப்பட்ட ஏராளமான நண்பர்கள் நிச்சயமாக துக்கம் அடைந்திருப்பர்.

தொற்காள் அடைந்த அநேக வாய்ப்புக்கள் இன்றைய நாளில் நாகரீகமடைந்த நிலைமையில் அப்படி உதவிசெய்யும் வாய்ப்புக்கள் நமக்கு தருவதில்லை என்பது உண்மையே. ஏழை விதவைகளுக்கும் மற்ற ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும் தேவையான பணிசெய்தல் போன்ற அநேக வாய்ப்புகள் இன்றைய நாகரீக உலகத்தில் இல்லை. தொற்காள் பெற்றிருந்ததுபோல கர்த்தருடைய ஆவியைப்பெற்றிருக்கிற அனைவரும், அவள் பெருந்தன்மையோடு தன் கிரியைகளால் வெளிப்படுத்தினதுபோல, ஏதாவதொரு வழியில் விசுவாச வீட்டாருக்கு ஊழியம்செய்ய தங்களுடைய ஜீவனை கையளிக்க வாய்ப்புகளை தேடும்பொழுது நிச்சயமாக கண்டடைவார்கள். அப்போஸ்தலர் இதைக்குறித்தே கூறுகிறார்

"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" – 1யோவான் 3:16

தொற்காள் ஒரு இரத்த சாட்சியாக இருக்கக்கூடும் என ஒருவர் தன் ஆலோசனையை முன்வைத்தார். ஏனெனில் பிறருக்கு ஊழியம் செய்ததன் காரணமாக அவளது மரணம் நிகழ்ந்திருக்கும் என்கிறார். அவளைப் போன்றவர்களுக்கு ஒரு கிறிஸ்தவ கவிஞர் கூறுகிறார் :–

புத்தகச் சுருளில் இவர்களது நாமங்கள் இடம்பெறவில்லை
இரத்தசாட்சிகளாக தங்களது ஜீவனையே கையளித்தவர்கள்
இயேசுவின் கண்களில் இவர்கள் இரத்த சாட்சிகளுக்கு சற்றும் குறைந்தவர்களல்லர்,
அவரது பிரிய சகோதரர்களின் நிமித்தமாக ;
நோயால் வெறுப்புற்று சிறிதுசிறிதாக
அழிவுக்குள்ளாகிறவர்களை
படுக்கையில் கவனிப்பதும்
சிறைப் பட்டிருப்போரை சந்திப்பதும்
பாரச்சுமையால் போராடுவதும்.. ..
அவர்களது களைப்புற்ற ஜீவியம்
மெதுவாக மூழ்கும்வரை
சகோதரரே! இவர்களும் இரத்த சாட்சிகளே.

ஆம்! கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அனைவரும் இரத்தசாட்சிகளே.அவரது வசனத்தின் மூலமாகவும், அவரது ஏற்பாடுகளின் மூலமாகவும், அவர் நடத்துகிற வழியை இவர்கள் புரிந்துகொண்டு அதற்கு நெருக்கமாக இயன்றவரை நடந்து, கர்த்தருடைய ஊழியத்துக்காகவும், சகோதரர்க்காகவும், சத்தியத்துக்காகவும் தங்களுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதே இவர்களது பிரதிஷ்டை. நமது உடன்படிக்கையானது சுயம் அழிந்துவிடாமல் பாதுகாப்பதல்ல. மாறாக, சுயத்தை பலியிடுவதேயாகும். ஆம். நாம் நித்தியஜீவனையும் மகிமையான ஆவிக்குரிய ஜீவிகளாவோம் என்ற நம்பிக்கையையும் நாம் எதிர்நோக்கியிருக்கிறோம்.

ஆனால் பரிபூரணத்தையும் புதிதான ஜீவனையும் அடைவோம் என்ற நம்பிக்கையை அளிக்கும் வேதாகமத்தின் நிபந்தனைகளும் விதிமுறைகளும் எதிர்பார்ப்பது, மீதமுள்ள தற்கால பூமிக்குரிய ஜீவியத்தை நாம் பலிசெலுத்தவேண்டும் என்பதேயாகும். இதோடு தொடர்புடைய இன்னுமொரு கருத்து என்னவெனில், ஐயத்துக்கிடமின்றி நமது பிரதானமான ஊழியத்தின் ஆவிக்குரிய உணவு, ஆவிக்குரிய தண்ணீர், ஆவிக்குரிய ஆடையை விசுவாசவீட்டாருக்கு தருவதேயாகும். அதோடுகூட நமக்கு கிடைக்கும் சமயத்திற்கும் திறனுக்கும் தக்கதாக, நாம் எல்லா மனுஷருக்கும் நன்மை செய்யவேண்டும் என்று அப்போஸ்தலர் கட்டளையிடுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் இரங்கும் தன்மையில் தயாளகுணம் உள்ளவர்களென்று தங்கள் அயலார்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும். பணமோ அல்லது கருணை வார்த்தையாவது தருபவர் என்ற உணர்வை அடையாளமாகப் பெற்றிருக்கவேண்டும். இது அதிக ஆசீர்வாதத்தையும் அதிகதிகமாக தேவசாயலையும் அடைய வழிவகுக்கும். வாங்குவதைக்காட்டிலும் கொடுப்பதே நன்மையானது என்று நினைவில்கொள்ளவேண்டும். இந்த உலக ஆஸ்திகளில் குறைவுபட்டு தயாளகுணத்தோடு பரிசுத்தவான்களின் தேவைக்கும், மற்றவர்களது தேவைக்கும் சபையின் தற்காலிகத்தேவைக்கும் கொடுக்க இவர்கள் ஒன்றும் பெற்றிருக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் சத்தியஆவியைத் தேற்றுவதாகிய பணியைச்செய்து, எப்படிப்பட்ட தேவையுடையோராக இருப்பவர்களுக்கு இரங்கி உதவிசெய்வது அதிக விலையேறப்பெற்றது, அதிக மதிப்புமிக்கது, அதிக பயனளிப்பதும், அதிகமாக நம்பிக்கையில் மகிழ்ச்சி ஊட்டுவதுமாகும். கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் இப்படிப்பட்ட தொற்காளின் குணஇயல்பை விளையச்செய்யவேண்டும். இவ்வாறாக, கர்த்தர் முன்பாகவும், உலகத்தாரின் கண்களுக்கு முன்பாகவும் இவர்கள் அதிகதிகமான அழகு நிறைந்தவர்களாயும், கிருபையுள்ளோராயும் இருப்பர்.

இன்று யோப்பா பட்டணத்தைவிட்டு எருசலேமைநோக்கி பிரயாணம்செல்லும் ஒரு பயணியிடம், வழிகாட்டுபவர், யோப்பா பட்டணத்தின் புறநகர்ப் பகுதியின் ஒருபுறத்திலுள்ள பெரிதான பொதுவழிச்சாலையை சுட்டிக்காண்பித்து, இது ஒருகாலத்தில் மிக அழகானதும் விலையுயர்ந்ததுமான நினைவுச்சின்னமாக தொற்காளுக்கு விளங்கினதை கூறுவார். இது ஒரு நீர் ஊற்று. களைப்புற்றிருந்த அநேகர் இதில் புத்துணர்ச்சி பெற்றிருக்கின்றனர். நற்கிரியைகளும் கிறிஸ்துவின் சாயலும் கொண்ட தொற்காளின் கதை, நீரூற்றிலிருந்து வரும் தண்ணீரைப்போல, தேவனுடைய பிள்ளைகளை ஊக்கப்படுத்தி, உற்சாகமளித்து, புத்துணர்ச்சியூட்டி, இவ்வாறு கரடுமுரடான இடங்களைக் கடந்து வந்திருக்கிறது. இருந்தபோதிலும், அவள் வாழ்ந்த நாட்களில்

அவளைக்குறித்து தீயன பேசினர். அவளது தயவு பெற்றவர்களில் சிலரும் அவளைக்குறித்து, அவர்களில் அவள் மகிமையடையும்படிக்கு, மனிதர்களால் காணவும் அறியவும் பொருட்டாக அவள் தானதர்மம் செய்தாள், மாறாக அவர்களது அன்பைப் பெறுவதற்காக ஊழியம்செய்யவில்லை என்றனர். நமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்துக்கு தக்கவாறு எல்லா மனுஷருக்கும் நன்மை செய்ய தேடும்போது, நமது அனுபவமும் இப்படிப்பட்டதாய் இருக்கலாம். ஆனால் உங்களைக்குறித்து தீயனபேசினாலும் நன்மை பேசினாலும் அது உங்களை தடைசெய்யக்கூடாது என்பதே உண்மை. நாம் கர்த்தரை பிரியப்படுத்தவே பார்த்து நம் இருதயத்தில் அவரது ஆவியை வளரச்செய்யவும், மற்றவர்களுக்கு முன்பாக விளங்கப் பண்ணவும்வேண்டும். இவ்வாறாக நம்மிடமுள்ள வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்யவேண்டும். பொறாமைகொண்ட களை வகுப்பாராலோ, நம்பிக்கையற்ற உலகத்தாராலோ எது பேசப்பட்டாலும், இதுவே நமது ஒரே முறையான வழிமுறையாக இருக்கிறது. நமது தகப்பன் மற்றும் நமது மணவாளனின் அங்கீகாரத்தையே நாம் பிரதானமாக தேடவேண்டும். அதன்பேரிலேயே மனநிறைவடையவேண்டும்.

தொற்காள் திடீரென நோய்வாய்ப்பட்டு மரித்த அச்சமயத்தில், யோப்பாவிலுள்ள மற்ற பரிசுத்தவான்கள், பேதுரு லித்தாவில் இருப்பதையும், அங்கு குணமளித்ததையும் அறிந்து, . சிலரை அவரிடம் உடனடியாக அனுப்பினர். தொற்காளை மீண்டும் ஜீவனுக்கு கொண்டுவரும் அற்புதத்தை அவர் செய்வார் என்ற எதிர்பார்ப்புடன் அனுப்பாமல், மாறாக, அவர்கள் தங்கள் சிறு கூட்டத்தாரில் உயர்வாக மதித்த ஒருவரை இழந்ததையும், அந்த நேரத்தில் பேதுரு அங்குவந்தால் தங்களுக்கு ஆறுதல் அளிப்பார் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே அனுப்பினர். அங்கே தந்திசெய்தியோ, தொலைபேசியோ, அஞ்சல் அனுப்பும் வசதியோ அக்காலத்தில் இல்லை. சகோதரர்களில் சிலரே செய்தியாளர்களாக பேதுருவிடம் விரைந்து, அவர் தாமதிக்காமல் பிரசன்னமாகும்படி விண்ணப்பித்தனர். எருசலேம் பட்டணத்தில் பிணம் அன்றைக்கே புதைக்கப்படவேண்டும். ஆனால் சிறிய பட்டணங்கள் மற்றும் கிராமங்களில் அதிகபட்சமாக மூன்று நாட்கள்வரை புதைக்கப்படாமல் வைத்திருக்கலாம். தொற்காள் அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்பாக, பேதுரு தாமதியாமல் சீக்கிரம் வந்துசேரும்படி கேட்டுக்கொண்டனர்.

பேதுரு பிரேதம் இருந்த அறைக்குள் நுழைந்தவுடன், உருக்கமான காட்சி அவருக்கு முன்பாக நடந்தது. ஏழை விதவைகளும் மற்றவர்களும் தங்களது சிநேகிதியை இழந்த துக்கத்தில் கதறிஅழுது, தொற்காள் தங்களுக்காக உண்டாக்கின ஆடைகளை அவரிடத்தில் காண்பித்தனர். நிச்சயமாக அவளது ஜீவியம் பயனுள்ளதாக இருந்தது என்பதற்கு அதுவே புகழுரையாகவும் இருந்தது. இந்த அடக்கமுள்ள ஸ்திரீ விட்டுச்சென்றதுபோல், எந்த கோடீஸ்வரரும் நீடித்த நாட்களுக்கு நிலைத்துநிற்கும் நினைவுச்சின்னங்களை ஒருபோதும் விட்டுச்சென்றதில்லை, அல்லது அது அவரது குணாதிசயத்தின் மகிமையை அதிகபட்சமாக வெளிப்படுத்தினதும் இல்லை. நம்மில் உள்ள அடக்கமுள்ளவர்களும் தரித்திரரும்கூட இந்த மாதிரிகையை ஓரளவாவது பின்பற்ற முயற்சித்து, நாம் மரிக்கும்பொழுது அவர்களை இழந்ததற்காக உண்மையாகவும், நேர்மையாகவும் அழுது புலம்புபவர்களுக்கு ஒன்றையும் விட்டுச்செல்லாதிருந்தால் அது ஒரு துக்ககரமான முடிவாகும். அவர்களது ஜீவியம் ஒன்று சுயநலம் அல்லது தவறாக புரிந்துகொள்ளுதல் என்பதையே சாட்சியமாக்கும். நமது பூமிக்குரிய பிரயாணம் முடிவடையும் வேளைக்காக காத்திருக்கிற நாம், சிலராவது மகிழ்ச்சியடையும்படியாக நமது செயல்கள் வெளிப்பட்டு, நமது ஜீவியம் நாளுக்கு நாள் அதில் பெருகும்படி காணப்படவேண்டும். இதனால் நாம் தேய்மானம் அடைவதை ஒரு சிலராவது இழப்பாக எண்ணுவார்களாக.

தொற்காளை மரணப்பிடியிலிருந்து மீட்டது பேதுருவின் மிகவும் கவனிக்கத்தக்க ஒரு அற்புதமாயிருந்தது. சபையை ஸ்தாபிப்பதற்கான விசேஷ நோக்கத்துக்காக நிகழ்த்தப்பட்ட இது, மற்ற அற்புதங்களைப்போலவே அக்காலகட்டத்தில் விநோதமாய் தோன்றினது. கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் இச்சுவிசேஷயுகத்தில், மரணத்தின் பிடியிலிருந்து மீட்கப்படுவதோ, நோயின் படுக்கைகளிலிருந்து விடுவிப்பதோ அல்லது அப்போஸ்தலர் இங்கே பிரயோகித்த வல்லமைபோல் எல்லோரும் வல்லமை பெறவேண்டும் என்பதோ கர்த்தருடைய நோக்கம் என நாம் கருதக்கூடாது. பேரழிவு, நோய், மரணம் போன்ற தீமையின் ஊழியம் இங்கே நடைபெறுகிறது, இப்படிப்பட்டவைகள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சில சமயங்களில் பல்வேறு பாடங்களை மனதில் பதியவைக்கவும், ஆவியின் பல்வேறு கனிகளாகிய சாந்தம், பொறுமை, தயாளகுணம் இவற்றில் மெய்யாகவே மதிப்புமிக்கவையாய் இருக்கின்றன. கர்த்தருக்கென்று நம்மை முழுமையாக அர்ப்பணித்தபிறகு, நாம் பிரதிஷ்டைசெய்த அனைத்தையும் நாம் பெற்ற அறிவின்படி ஞானமாக உபயோகித்து, தெய்வீக ஞானம் நமக்கு எதை

பகிர்ந்தளித்தாலும் அதை ஏற்றுக்கொள்வோம். நம் கர்த்தரின் வார்த்தைகளை இங்கு நினைவில் நிறுத்துவோமாக–

“பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ” – யோவான் 18:11.

------------------------------

# பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும்

## தேவன் பட்சபாதமுள்ளவரல்ல

## GOD IS NO RESPECTER OF PERSONS

ஆதார வசனங்கள் : அப்போஸ்தலர் 10:34–44

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்ற அப்போஸ்தலரின் அறிக்கையை அநேகர் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். இவ்வார்த்தைகளை அப்போஸ்தலர் பயன்படுத்தினதற்கு மிகவும் வேறுபட்ட வழியில் அவர்கள் பொருத்திப் பார்க்கின்றனர். தேவன் குணாதிசயங்களுக்கு மதிப்பளிக்கிறவர் என்று அப்போஸ்தலர் உணர்ந்திருக்கிறார். ஆனால் வெளிப்புறமான தோற்றங்களுக்கோ, நிலைமைகளுக்கோ, தோல் நிறம் பார்த்தோ, எந்த நாட்டைச்சேர்ந்தவன் என்றோ பொருட்படுத்துவதில்லை. இதுவே அப்போஸ்தலர் கூறவந்த கருத்து என்பது அவரது அடுத்த சொற்றொடரில் நிரூபணமாகிறது;

“எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ, அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்” (அப் 10:35). நெருக்கமான உறவு மற்றும் நன்கு அறிமுகமாயிருத்தல் ஆகிய நிபந்தனைகள் மூலம் யாராயிருந்தாலும், ஒவ்வொருவரும் கர்த்தரிடத்திற்கு வரமுடியும் என்பது ஒரு தவறான எண்ணம், இது பொதுப்படையான கருத்துக்கு அப்பாற்பட்டது. இப்படிப்பட்ட தவறான அபிப்பிராயத்தின் விளைவாக, அநேகர் பரலோக கிருபையின் சிம்மாசனத்தை எவ்வித அங்கீகாரமுமின்றி, எவ்வித அழைப்புமின்றி, எவ்வித உரிமையுமின்றி அணுகுகிறார்கள். ஏனெனில் கர்த்தரிடத்தில் அவர்கள் பயப்படுவதில்லை, இவர்கள் நீதியின் ஊழியக்காரர்கள் அல்லர், அவரால் அங்கீகரிக்கப்படாதவர்கள், புத்தியின்மையும், கிறிஸ்தவர்களது தவறான ஆலோசனையுமே இப்படிப்பட்ட தவறான நிலைமை பெயர்கிறிஸ்தவ மண்டலத்தில் நிலவுவதற்கு காரணமாகும். வேதாகமத்தின் கட்டளைத் தொகுப்பையும், முன் மாதிரிகையையும் நாம் கற்று கவனமாக பின்பற்றுவோமாக. தேவன் குணாதிசயத்தை பொருட்படுத்துபவரல்ல என்று தவறான அபிப்பிராயத்தை நாம் கொடுக்காதிருப்போமாக. இதற்கு மாறாக, தேவபக்தி மிக இன்றியமையாதது என்று பேதுரு சுட்டிக் காண்பித்தபடியும், நீதியாக வாழ முயற்சிப்பது மிக முக்கியமானதும் வாழ்க்கையை மறு சீரமைப்பதுமாகும், பாவத்தை விட்டுவிலகி நீதியை செய்வதாகும். அதோடு மட்டுமல்ல, நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியத்தை விசுவாசிக்கும் இந்த நியமிக்கப்பட்ட வழியின் மூலமாகவே தேவனால் எவரும் அங்கீகரிக்கப்படுவர்.

நூற்றுக்கதிபதியாகிய கொர்னேலியு தேவனை ஏற்றுக்கொண்டதே இந்தப் பாடத்தின் மையப்பொருளாகும். இவர் இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பாகவே தேவனிடத்திற்கும், தேவநீதிக்கும் மாறினவர். ஆதாயத்தை எதிர்பாராமல் மிகுந்த தர்மங்கள் செய்தவர், நீதியை நேசிப்பதும், அவரது கண்ணியமான வாழ்க்கையும் அவரை சந்தித்தவர்களால் கண்டுணரப்பட்டவைகள். இருந்தபோதிலும் அந்த வார்த்தையின் முறையான உணர்வின்படி, அவர் தேவனால் ஏற்றக்கொள்ளப்படுமுன், ஒரு சில காரியங்கள் அவசியமாயிருந்தது. தெய்வீக அங்கீகாரம்பெற, தேவபக்தியும் ஒழுக்கமும் மட்டுமே போதுமானது என்று கற்பனை செய்திருப்பவர்களுக்கு ஒரு பாடம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. கொர்னேலியு தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு சில காலத்துக்கு முன்பே இந்த பண்புகளை பெருமளவில் பெற்றிருந்தார். கர்த்தரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் நெருங்க ஆவலாயிருக்கிற அனைவருக்கும் கொர்னேலியுவுடன் தொடர்பு கொண்டமுறை ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

நாம் பார்த்தபிரகாரம் கொர்னேலியு தேவ பக்தியுள்ளவராயிருந்தபோதிலும் அவர் ஒரு யூதனல்ல. விசேஷ தேவதயவுக்குப் புறம்பே இருப்பதை அவர் புரிந்திருந்தார். இருந்தபோதிலும் தேவனைநோக்கி தொடர்ந்து ஜெபித்துவந்தார். அவர் என்னஜெபித்தார் என்று நமக்கு கூறப்படவில்லை. ஆனால் வேதத்திலுள்ள பதிவுகளுக்கு இசைவாக நாம் பார்க்கும்பொழுது, தெய்வீக குணாதிசயம் மற்றும் தெய்வீகத்திட்டத்தைக் குறித்த வெளிச்சம் பெறுவதற்காகவும், தெய்வீக தயவு மற்றும் அங்கீகாரத்தை புரிந்துகொள்வதற்கும், அவரோடு நெருங்கின உறவுகொள்ளவுமே ஜெபித்தார் என்று யூகிக்க முடிகிறது. இயேசுவைப்பற்றி அவர் ஒருவேளை கேள்விப்பட்டிருப்பினும், இக்காரியங்களில் அவர் குழப்பமடைந்திருந்தார். ஒருவேளை இதனிமித்தமாக இவரை ஊக்கமாக ஜெபிக்க தூண்டியிருக்கக்கூடும். கர்த்தர் ஒரு அற்புதமான வகையில் பதிலளிக்க விரும்பி, தம் தூதனை அவரிடத்திற்கு அனுப்பி, அவரது ஜெபமும் அவரது தர்மங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவரது சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறதை தெளிவுபடுத்தினார்(வசனம் 4). ஜெபத்தைக்காட்டிலும் இன்னும் கூடுதலாக நற்கிரியைகள் அவசியமாயிருந்ததை தூதன் அறிவுறுத்தினார், ஆனால் கூடுதலான விஷயங்களை அந்த தூதன் கூறுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படவில்லை. கர்த்தரை உண்மையான நிலைப்பாட்டின்படி அறிய கொர்னேலியுவுக்கு அவசியமேற்பட்டது. தம் மீட்பராகிய அவரிடத்தில் கொர்னேலியு விசுவாசத்தை பயிற்சி செய்ய வேண்டும். அவரது தேவபக்தி நினைப்பூட்டுதலாக தேவசந்நிதியை எட்டுமுன், தேவனுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணிக்க முடியுமா என்று நிதானிக்கவும், அல்லது தெய்வீக தயவின் கீழும், உறவுக்குள்ளும் அவரை கொண்டுவரவேண்டும்.

கர்த்தரால் தேவதூதர்களை கருவிகளாகக் கொண்டு சுவிசேஷத்தை வெளிப்படுத்தமுடியும் என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆனால் இங்கு இவ்வாறு அவர்களைக்கொண்டு நிறைவேற்றுவது தேவநோக்கமாயிராமல், தம்மோடு பிரதிஷ்டை

செய்த மனித புத்திரர்களை அவரது தூதர்களாக உபயோகித்து, "மாபெரும் மகிழ்ச்சியை அளிக்கும் நற்செய்திகளை" எல்லா ஜனங்களுக்கும் அறிவிப்பதே அவருக்குப் பிரியமாயிற்று. தேவன் இவ்வாறு நமக்கு செய்தது எப்பேர்ப்பட்ட மாபெரும் கனத்துக்குரியதாக ஆதாமின் சந்ததியாரைப்போல சுபாவத்தில் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்த நம்மிடத்தில் தேவன் எப்பேர்ப்பட்ட மாபெரும் கனத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் நாமோ கிறிஸ்துவுக்குள் தெய்வீக தயவைப்பெற்று, "பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடுகூட", அழைக்கப்பட்ட மற்றவர்களுக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களையும், தயவையும் கொடுக்கும் வாய்க்கால்களாக ஏற்படுத்தினார். அவரால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகளாகிய நமக்கு, இந்த தெய்வீக வழிமுறையானது கனத்துக்குரியதாக இருப்பதோடுகூட, இது ஒரு ஆசீர்வாதமாகவும் உள்ளது. பிறருக்கு சத்திய வசனங்களுக்கடுத்த உண்மையான ஊழியம் செய்பவர்கள் எல்லாருக்கும் மாபெரும் ஆசீர்வாதம் வரவிருக்கிறது என்பதை கிறிஸ்தவன் தன் அனுபவத்தில் அறிந்திரான்.

அப்போஸ்தலர் பேதுருவினிடத்தில் அனுப்பும்படி கொர்னேலியு அறிவுறுத்தப்பட்டார். ஒரு சில முக்கியமான வார்த்தைகளை அவரிடத்தில் பேசும்படி முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டார். இவைகள் மூலமாகவே தெய்வீக தயவுக்குள்பிரவேசித்தார். கொர்னேலியுவின்தயார் நிலையிலிருந்த மனது அவரது உடனடியான கீழ்ப்படிதலின் மூலம் காண்பிக்கப்பட்டது. அவர் ஜெபித்ததோடு மட்டுமல்ல, தாம் ஜெபித்த ஜெபத்திற்கான பதிலுக்கு தேவனோடு இசைவாக செயல்படுவதற்கு ஆயத்தமாயுமிருந்தார். அனுப்பப்பட்ட மூன்று நபர்கள்(இருவர் வீட்டு வேலைக்காரர்கள், மற்றவர் ஒரு படைவீரர் –அனைவருமே தேவபக்தியும், தேவபயமும், தேவனைக்குறித்த ஆர்வமும் உள்ளவர்கள்). தான் அடைந்த வெளிச்சத்தையும் விசுவாசத்தையும் மரக்காலின்கீழ் மறைத்து வையாமல், தன்னால் இயன்றளவு தேவனை கனப்படுத்தவும், அவருக்குப் பிரியமானதைச் செய்யவும் போராடுபவர் என்று சாட்சியளித்தார். இவரது வெளிச்சமும் விசுவாசமும் அவரது இல்லத்திலும், வேலையாட்களின் மத்தியிலும், அவரது கட்டுப்பாட்டிலுள்ள படைவீரர்களிடையேயும் பிரகாசித்தது. இஸ்ரயேலருக்கான விசேஷதயவு முடிந்தபிறகு, இப்படிப்பட்ட மனிதனையே தேவன் ஏற்றுக்கொள்ள பிரியமாயிருக்கிறார். அவரது தேசம், நிறம் எதுவாயிருப்பினும், இப்பேர்ப்பட்ட அனைவரையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார். மற்றவர்களைக்காட்டிலும் தயவளித்து, சத்தியத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கிறார். இங்கு கர்த்தருடைய ஜனங்களில் சிலருக்கு அவசியமான பாடம் உண்டு. அவர்கள் தாங்கள் பெற்றிருக்கிற சத்திய வெளிச்சத்தை அவர்கள் சந்திப்போர் அனைவருக்குள்ளும் வெளிச்சம் கொடுப்பவர்களாக இருக்கவேண்டும். இதன்காரணமாக, தேவபக்தியின் ஆவி ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு வேலைக்காரரையும் ஊடுருவும்.

கொர்னேலியு கர்த்தரிடத்தில் முழு விசுவாசத்தோடு இருந்தது நிரூபணமாகிறது. பேதுரு வருவதற்காக அவர் காத்திருக்கவில்லை. அவர் வருவார் என்று அறிந்திருந்து, தேவதூதன் மூலமாக கர்த்தரது வாக்குத்தத்தத்தின்மேல் நம்பிக்கையாய் இருந்தார். அவர் தம் நண்பர்கள், உறவினர்கள், வீட்டார் அனைவரையும் ஒன்றுகூடச்செய்து, அவர்கள்மேல் தனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தினார். அவர்கள் அவரைப்போலவே இரங்கும் சுபாவமுடையோராகவும், ஜீவ மார்க்கத்தை அறிந்துகொள்ளவும், தேவனோடு சீர்பொருந்தவும், இணக்கமாகவும், நீதியின் கொள்கைகளுக்கு இசைவாகவும் பேரார்வம் கொண்டிருந்தனர். இதற்கிடையில்,யூதர்களுக்கு மட்டுமே பல நூற்றாண்டுகளாக இருந்த உரிமைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் தற்போது மாற்றப்பட்டு, முதன்முதலாக புறஜாதியார் ஆலயத்துக்கு கொண்டுவரப்படுதலை யூதர்கள் ஏற்றுக்கொள்ள, தங்களை ஆயத்தம்பண்ண வேண்டிய அவசியம் பேதுருவுக்கு ஏற்பட்டது. ஒரு காட்சி கொடுக்கப்பட்டதன் மூலம் இது நிறைவேற்றப்பட்டது. பேதுரு யோப்பாவிலுள்ள ஆறு சகோதரர்களுடன் அடுத்தநாள் நூற்றுக்கதிபதியின் வீட்டிற்கு எவ்வித ஐயப்பாடும் இன்றி வந்துசேர்ந்தார். ஏனெனில் கர்த்தர் தாமே இந்த விஷயத்தில் அவரை வழிநடத்தினார். இந்தப் பணிக்காக எல்லா சீஷர்களிலுமிருந்து பேதுருவே சிறந்தவராக தெரிவு செய்யப்பட்டார். ஏனெனில் கர்த்தரது வழிகாட்டுதலை சீக்கிரமாயும் மனப்பூர்வமாயும் பின்பற்றும் கட்டுக்கடங்கா வைராக்கியத்தை பெற்றிருந்ததாலேயே. இரண்டாவதாக, அப்போஸ்தலர்களிலேயே வயதில் மூத்தவராகவும், அநேக விஷயங்களில் மிகுந்த செல்வாக்கு மிக்கவராயும் இருந்ததாலேயே ஆகும். அவரது வாழ்க்கை கனம் பொருந்தியதாக மற்றவர்களால் மதிக்கப்பட்டது. ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களில், யூதரோடு புறஜாதியார் உடன் சுதந்திரர்களாவதைக் குறித்து பல நூற்றாண்டுகளாக எதிரான கருத்துக்களும் தப்பெண்ணமும் கொண்டிருந்ததை புரிந்துகொள்வது நமக்கு கடினமாயுள்ளது. தேவதயவு அவர்களது தேசத்துக்கென நிரந்தரமாக தீர்மானிக்கப் பட்டாயிற்று என்றும், ஆகவே அத்தேசத்தாரைவிட்டு வெளியே, மற்றவர்களுக்கு செல்ல வாய்ப்பே இல்லை என்றும், ஆதலால் மற்றவர்கள் தங்களைப்போல சரிசமானமாக தேவனால் ஏற்கப்படுவதுமில்லை என்றும் எண்ணினர். இந்தக் கருத்துக்கள் முதலாவதாக, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டவை. "உன் வித்துக்குள் .." என்றும் இரண்டாவதாக, இஸ்ரயேலர் புறஜாதியாரோடு கலந்துகொள்ள அனுமதிக்கப்படாததும், அவர்களோடு திருமணம் செய்யக்கூடாது என்பதுமான தேவகட்டளையை அடிப்படையாகக்கொண்டது. மூன்றாவதாக, இவையெல்லாவற்றிற்கும் மேலாக, யூதரது ஆட்சியாளர்கள் இதைத்தாண்டி ஒருபோதும் செல்லாமல், இந்த வேறுபாடுகளையே மிகைப்படுத்திக் காண்பித்தனர்.

ஆனால் ஒரு புதிய யுகம் ஆரம்பித்துவிட்டது. இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்டிருந்த 70 வார தயவு முடிந்துவிட்டது. மேலும் நாம் ஏற்கனவே கண்டதுபோல், சமாரியர்களுக்கும் எத்தியோப்பிய மந்திரிக்கும் கர்த்தர் தம் தயவை யூதரோடுகூட மற்றவர்களுக்கும் விசாலமாக்கத் துவங்கினார். இந்த புதிய முறைமைகள் அப்போஸ்தலர்களுக்கு ஆச்சரியத்தை வருவித்தாலும், புறஜாதியாருக்கு தயவை விசாலமாக்கியதை கிரகிப்பது அவர்களுக்கு எளிதாய் இருந்தது. அவர்கள் கர்த்தரது புதிய வழிமுறைக்கு உறுதியான வழி அமைத்தனர்.பேதுரு அப்போஸ்தலர் கொர்னேலியுவின் வீட்டுக்குள் பிரவேசித்து, தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரனைக் கண்டு, அவரை அங்கீரித்து, அவருக்கென்று கொண்டுவந்த தேவசெய்தியை அளித்தார். பேதுருவை தொழுதுகொள்ளும்படி அவரது பாதத்தில் விழுந்தார். பெரும்பான்மையான ரோமர்களிடமிருந்து, குறிப்பாக ரோம படைவீரர்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து கொர்னேலியு எவ்வளவு வேறுபட்டவராயிருக்கிறார். அந்த யூதனை தாழ்ந்தவனாக எண்ணிப் பார்ப்பதற்கு பதிலாக, உலகிலேயே மிகப்பெரிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக தன்னை உயர்த்திக்கொள்வதற்கு மாறாக, அந்நேரத்தில் தாழ்மையான ஆவியால் கொர்னேலியு நிறைந்திருந்தார். கர்த்தருடைய பிரதிநிதியாக அவரை சந்திக்கும்படி வந்த பேதுருவும், கர்த்தர்மேல் உள்ள பயபக்தியும் மரியாதையும் இருதயத்தில் நிறைந்தவராய், கொர்னேலியு காண்பித்த அதே தாழ்மையின் மனநிலையை வெளிப்படுத்தினர் என்பதே உண்மை.

கொர்னேலியு மனத்தாழ்மையோடும், உயர்பண்போடும் நடந்துகொண்டாரேயானால், அப்போஸ்தலர் பேதுருவும் அதே அளவு உயர்பண்பையும் தேவனிடத்தில் உண்மையையும் காண்பித்தார். ஒருமுறை நூற்றுக்கதிபதியை தூக்கியெடுத்து, "எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான்" என்றான்(26ம் வசனம்).அதிகாரப்பூர்வமில்லாத பெரும் மரியாதையைப் பெற்றுக்கொள்ள மறுத்த பேதுருவின் உயர்ந்த பண்பு நம் இருதயங்களில் அவருக்கு புகழ்ச்சியை பறைசாற்றுகிறது. இவ்வாறு ஒரு மாபெரும் பரீட்சையில் மேலான கனத்தையும், அதிகாரத்தையும் வெறுத்து, தான் ஒரு முறிவுபட்ட நிலைமையிலுள்ளதையும், காலியான பாத்திரம் என்றும், கர்த்தருடைய ஆவி இப்பாத்திரத்தில் நிரப்பப்பட்டதாலேயே இது மதிப்புள்ளதாகிறது என்ற தன் உண்மை நிலையை உணர்ந்தவராக, தம்மை இரட்சித்துக்கொண்டார். கர்த்தர் தன்னை இரக்கம் மற்றும் சத்தியத்தின் பாத்திரமாக உபயோகிக்க பிரியமாயிருந்தார் என்று பகுத்துப்பார்த்து புரிந்துகொண்டார். பெயர்சபைகளில் அநேகர், தங்கள் உடன்அங்கங்கள் தங்களுக்கு மரியாதை, வணக்கம் செலுத்தும்பொழுது, தள்ளிக்கழித்துவிடாமல் ஏற்றுக்கொள்கின்றனர். போப்பு மற்றும் பிஷப்புகள் போன்ற பெரும்மதிப்பு வாய்ந்த பட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு, மரியாதையை ஏற்க ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் இப்படிப்பட்டவர்கள் அப்போஸ்தலர் பேதுரு இவ்விஷயத்தில் காண்பித்த முன்மாதிரிகையால் கடிந்துகொள்ளப்படுகின்றனர். இன்றைய நாளிலும் சகோதரர்களில் யாராவது மனிதரிடமிருந்து அதிக மேன்மையையும், புகழ்ச்சியையும் பெறுவாரானால், ஒருவேளை அபாயத்திற்குள்ளாக நேரிடும். நாம் வாழும் தற்காலம் நேரெதிரான வழியில் சென்றுகொண்டிருக்கிறபடியால் இவ்வாறு அபாயம் நேரிடக்கூடும். எங்கு தேவஉறவிலிருந்து துண்டிக்கும் ஆவி காணப்பட்டாலும், அந்த மேட்டிமையின் ஆவியைவிட்டு விலகவும், புகழ்ச்சியை மறுக்கவும் வேண்டியது அந்தந்த சகோதரரது கடமையாகும். மேலும் தான் கர்த்தருடைய உடன் ஊழியக்காரனாக எண்ணி, அவர் எவ்வகையில் தன்னை உபயோகிக்க விரும்பினாலும், நன்மையான எந்த வரமும், பரிபூரணமான எந்த ஈவும் அவரிடமிருந்தே வருவதை சுட்டிக்காட்டவேண்டும்.

## இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகள்:–

பேதுரு கொர்னேலியுவின் வீட்டிற்குள் பிரவேசித்தவுடன்,அங்கு தேவனுக்குப் பயந்தவர்களும் வாஞ்சையுள்ளவர்களுமாகிய புறஜாதியாரின் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு, அவரிடம், "இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள்?" என்று கேட்டார்(அப் 10:29). அதற்கு கொர்னேலியு, தம் கடந்தகால அனுபவங்களில் சிலவற்றை எடுத்துரைத்து, தேவனோடு தான் ஐக்கியங்கொள்ள விரும்புவதையும், அவருக்குப் பிரியமாக நடக்க முயற்சிப்பதையும், தாம் கண்ட தரிசனத்தையும், தற்போது அந்த தரிசனத்திற்கு செவிசாய்க்கும்பொருட்டே பேதுருவின் வருகை தற்போது நேரிட்டதையும், தற்போது தேவனால் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே கூடியிருக்கிறோம் என்றார்.

"நீயும் உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவதற்–கேதுவான வார்த்தைகளை.. " சொல்லுவான்(அப்11:14). அவன் செய்த, தானதருமங்களால் அவன் இரட்சிப்படையவில்லை. அவனது ஜெபங்களோ, பேதுரு பிரசங்கித்த செய்தியோ இரட்சிப்பளிக்கவில்லை, மாறாக, பேதுருவின் செய்தி, கொர்னேலியு மற்றும் அவரது வீட்டாரிடம் காரியங்களை விவரித்து, விசுவாசத்தினால் கிறிஸ்துஇயேசுவுக்குள் கிடைக்கும் மீட்பைப்பெற்று இவ்வாறு இரட்சிப்படையலாம் என்றார். தேவனிடமிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டு, சாபத்திற்குட்பட்டு, பாவிகளான நிலைமையிலிருந்து மீண்டு, இரட்சிக்கப்பட்டார்கள். இவ்வாறு இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அளிக்கப்படவிருக்கும் முழுமையான மீட்பை முன்கூட்டியே ருசிபார்த்தனர்.

அப்போஸ்தலரின் பிரசங்கத்தை உன்னிப்பாய் நோக்கும்போது, அவர் கொடுத்த ஜீவனளிக்கும் செய்தியிலிருந்து, கொர்னேலியுவும் அவரோடு உடனிருந்தவர்களும் அடைந்த இரட்சிப்புக்கேதுவான விசுவாசத்தை நம்மால் தெளிவாக கண்டுணரமுடியும். பேதுரு சுவிசேஷசெய்தியை முன்னர் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கித்த அதே செய்தியை, மீண்டும் நிகழ்த்தினார். அந்த செய்தி, பாவநிவாரணத்துக்காக தம்மையே சிலுவையில்

பலியாக்கின நல்லவரும் கீழ்ப்படிதலை காண்பித்தவருமாகிய இயேசுவைப் பற்றினதாகும். தேவனது மாபெரும் வல்லமையால் இயேசுவின் உயிர்த்தெழுதல் நடந்ததுபோல, அவர்மூலமாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும் நம்பிக்கையே அந்த செய்தியாகும். பாவிகளுக்கென்று கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் மூலம் நீதியை நிறைவேற்றின கர்த்தர், அவர்களால் முடிந்த அளவு விசுவாசம், தேவபக்தி, நீதியினிமித்தம் கீழ்ப்படிதல் போன்ற நிபந்தனையின்பேரில் பாவிகளை ஏற்றுக்கொள்ள தற்போது பிரியமாயிருக்கிறார். பேதுருவின் பிரசங்கம் மிகப் பழமையான கதை, இதில் அநேகர் களைப்படைந்து, வெறுக்கத்தக்க நிலையை அடைந்தனர். ஆனால் சரியான நோக்கின்படி, ஒவ்வொரு ஆத்துமாவும், தேவனுடைய குமாரனின் மரணத்தின்மூலம் பிதாவின் நற்செய்தியாகிய பாவமன்னிப்பைப்பெற்று ஒப்புரவாகவேண்டும். இதே செய்தியையே தேவன் இன்றைக்கும் தம் உண்மையான தூதர்கள்மூலம் எல்லோருக்கும் தொடர்ந்து அனுப்பிவருகிறார், இதைத்தவிர வேறு சுவிசேஷம் இல்லை, அவ்வாறு வேறொரு செய்தியை தருபவர்கள் அவர்களது ஊழியத்தில் நிலைநிற்கவில்லை. இவர்கள் தேவனுடைய தூதுவர்களல்ல, அவரது ஆவியைப்பெற்ற வாயாகவோ, செய்தியாளர்களாகவோ இருக்கமுடியாது.

அப்போஸ்தலர் பவுல் நமக்கு கூறுகிறார்; பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்கு பிரியமாயிற்று (1கொரி1:21). அதாவது, மீட்பின் திட்டத்தைக் குறித்த சத்தியத்தைப் பிரசங்கிக்க, இந்த வழிமுறையை பின்பற்றுவது தேவனுக்கு பிரியமாயிருந்தது. இவ்வாறு இந்த சாட்சியத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களை நீதிமான்களாக்குவதும் அவருக்கு பிரியமாயிற்று. இன்றைய நாளின் சாட்சியங்கள், ஜனங்களுக்கு கடிதங்கள், செய்திப்பிரசுரங்கள் அல்லது புத்தகங்கள் அல்லது வாய்பிரசங்கம் வழியாக சென்றடைகின்றன. எவ்வகையில் சென்று சேர்கிறது என்பது ஒரு காரியமல்ல, மாறாக உண்மைசெய்தி கொடுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்பதே காரியமாகும். ஆனால் இந்த செய்தி தேவதூதர்கள் மூலமாகவோ, பரிசுத்தஆவியின் வல்லமையினாலோ, மனித பிரதிநிதிகளுக்கு அப்பாற்பட்டு அல்லாமல், மனிதர்களைக் கொண்டே மாறுபாடின்றி செல்கிறது. தேவனுடைய இந்த வழிமுறைகளின் பாடங்களை நம் மனதில் நாம் நிறுத்தி, வாழ்வின் நடவடிக்கைகளில் அவற்றை பொருத்தமாக கடைப்பிடிக்கவேண்டும். கர்த்தர் நம் நண்பர்களையோ, குழந்தைகளையோ, அயலாரையோ இயங்கவைப்பார், அல்லது அறிவுறுத்துவார் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது, அதற்குமாறாக, தமது ராஜரீக ஆசாரியர்களுக்கே இந்த கனத்தை அருளுகிறார் என்பதை நினைவுகூறவேண்டும். ஆகவே இதன்பொருட்டு நாம் ஊழியத்தில் அசதியாயிராமல், ஆவியில் உற்சாகமுள்ளவர்களாய் கர்த்தருக்கு ஊழியம்செய்யவேண்டும். எந்த வகைப்பட்ட ஊழியம் நமக்கு முன்பாக எதிர்ப்படுகிறதோ, அதை செய்து முடிக்கவேண்டும்.

பேதுரு செய்தியை கூறிமுடித்தபிறகு, கொர்னேலியுவிடம் விளக்கிக்கூற ஆரம்பித்தார். இயேசுவே, “உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும்” அவர் சீஷர்களாகிய எங்களுக்கு கட்டளையிட்டார் என்றார். உலகத்தாருக்கு “வரவிருக்கிற நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை சுவிசேஷ செய்தியின் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கிறது. இதனை சுவிசேஷம் பிரசங்கிக்கும்போது புறக்கணிக்கக்கூடாது.

வருங்காலத்தில் நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை எல்லோருக்கும் வராதிருக்குமானால், கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் உலக ஜனங்கள் என்ன அனுகூலத்தை படிப்படியாக அடையமுடியும்? ஆதாமுக்குள் எல்லோரும் ஒரேதடவை நியாயந்தீர்க்கப்பட்டார்கள். அவரது சாபம் எல்லோருக்கும் சென்றடைந்தது. ஆதாமின் மீறுதலுக்காகவும், அதன் பலவீனங்களுக்காகவும் உலகத்துக்கு இனி கூடுதலான நியாயத்தீர்ப்பு தேவையில்லை. அந்த மீறுதலுக்காக தண்டனை நிறைவேற்றப்பட்டாயிற்று, அதோடு கூடுதலாக தண்டனை கொடுக்க வேறு எதுவுமில்லை. யேகோவா தேவனே நீதிபதியாக இருந்தார். அதற்கு கொடுக்கப்பட்ட தண்டனை மரணமேயாகும்.மேலும் தற்போது கிறிஸ்து உலகத்தின் நியாயாதிபதியாக இருக்கிறார் என்பதே அந்த மகிழ்ச்சியின் செய்தியில் உள்ளடங்கியுள்ள உண்மையாகும். இது ஆதாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் ஜீவனுக்கான புதிய பரீட்சையின் ஒரு ஒப்பந்தமாக ஏற்பட்டுள்ளதை இது முக்கியப்படுத்துகிறது. ஆதி மரணத்தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவதை இது உறுதிப்படுத்துகிறது. ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையிலிருந்து மீட்கப்படுவதையும், தனித்தனியே பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, மீட்கப்பட்டவர்களாக தீர்மானிக்கப்பட்டவர்களும், இனிமேல் பரீட்சைக்கு உட்படுத்தப்படுபவர்களில் மீட்கப்படப் போகிறவர்களும் நித்தியஜீவன் பெறத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுவர். ஆம், இதுவே உலகத்தாருக்கான மகிழ்ச்சியின் நற்செய்தியாக இருக்கிறது. முழு உலகின் மனுக்குலமும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் வாங்கப்பட்ட பின்பு, ஆதாமுக்கு ஆதியில் அளிக்கப்பட்டிருந்த பரீட்சைபோல, புதிய பரீட்சை இருக்காது என்று மாபெரும் விரோதியாகிய சாத்தான் பெரும்பாலான ஜனங்களை, ஏன், கிறிஸ்தவர்களைக்கூட தவறாக சிந்திக்கவைத்து வஞ்சித்தான்.

இயேசு நியாயாதிபதியாக ஆகும்வரை இந்தப் பரீட்சை துவங்கியிருக்கமுடியாது என்பதற்கு எல்லாருமே சாட்சிகளாயிருக்கின்றனர். ஆதலால்4000 வருடங்களாக மரித்திருந்தவர்கள் அவரால் நியாயந்தீர்க்கப்பட்டிருக்க முடியாது. ஒருவனும் நித்தியஜீவன் பெறுவதற்கான பரீட்சையில் நின்றிருக்கமுடியாது. பொதுவாக உலகம் நம் மீட்பர் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டதுமுதல் பரீட்சைக்கு உட்படுத்தப்படவில்லை. இன்றைய நாளிலும் பரீட்சையின் கீழ்

வரவில்லை என்ற உண்மையை அனைவரும் விழிப்போடு கவனித்திருக்கவேண்டும். இதற்கு மாறாக, உலகின் பெரும்பாலான ஜனங்கள், அந்த நியாயாதிபதியை அறிந்திருக்கவுமில்லை, நியாயப்பிரமாணத்தை புரிந்துகொள்ளவுமில்லை, நித்தியஜீவன் பெறுவதற்கு அவசியமான தகுதிகளையும், நிபந்தனைகளையும் கொண்ட எந்த கருத்தையும் உருவாக்கவும் இல்லை. பேதுருவின் கூற்று இதை துல்லியமாக அங்கீகரித்திருப்பது கவனிக்கத்தக்கது. மேலும் பவுல் அப்போஸ்தலனின் வார்த்தைகளும் இதை ஆமோதிக்கிறது.

தேவன் "ஒரு நாளை நியமித்திருக்கிறார். அதில் அவர் தாம் நியமித்த ஒரு மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" (அப்17:31). அப்போஸ்தலர் சுட்டிக் காண்பிக்கின்ற அந்த நியமிக்கப்பட்ட நாள், அவர் வாழ்ந்த காலத்திலிருந்து பார்க்கும்போது நீண்ட நாட்களுக்கு பின்பு நிகழவிருப்பதும், நாம் வாழும் நாட்களிலிருந்து இன்னும் சிலகாலங் கழித்து நிகழவிருப்பதுமாகிறது. மற்ற வேத வசனங்களில் நாம் காண்கிறபடி, அந்த நாள் ஆயிரவருடங்களைக் கொண்ட ஒரு நாளாக இருக்கிறது.

"கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்" (2பேது3:8). நம் கர்த்தர் உயிர்த்தெழுந்ததிலிருந்து நடைபெற்றுவருகிற ஒரே பரீட்சையாகிய நியாயத்தீர்ப்பு சபையாருக்கு மட்டுமே, இது ஜீவனா அல்லது மரணமா என தீர்மானிக்கும் பரீட்சையாக இவர்களுக்கு இருக்கும். ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய சபையானது, மீதமிருக்கிற மனுக்குலத்தைக்காட்டிலும் அந்தப் ஒவ்வொரு வழியிலும் அதிக அனுகூலம் பெற்றிருக்கிறது. எதற்காகவெனில், சுவிசேஷயுகத்தின்போது, இது தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டிருந்து, ஜெயங் கொள்ளுகிறவர்கள் உலகத்தின் ஜனங்களை நியாயந்தீர்க்கும் பணியை செய்வதற்காக இயேசுவோடுகூட உடன்சுதந்திரராகப் போகிறதாலும் ஆகும். "பரிசுத்தவான்கள் உலகை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா ?"

யூதருக்கு மட்டுமல்ல, கேட்க செவியுள்ள எவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பணியை என்னநோக்கத்தில் கர்த்தர் கொடுத்தார் என்று பேதுரு, கொர்னேலியுவுக்கு பிரசங்கிக்கும்போது, சிந்தையில் தெளிவாக உணர்ந்துகொண்டார். புறஜாதியாரிடத்தில் கேட்கும் செவி இருக்கும் என பேதுரு எதிர்பார்க்கவில்லை. ஆனால் தேவன் தேசங்களையோ,சிறப்புப்பண்புகளையோ பொருட்படுத்தாதவர் என்பதை தற்போது உணர்ந்து கொண்டார். இந்த செய்தி எல்லோருக்கும் உரியது என்று உணர்ந்ததால், அவரது சொற்பொழிவை மிகச்சிறப்பாகசெய்தார்.மேசியாவாகிய இயேசுவைத் தொடர்ந்து விவரிக்கையில், அவரது ஊழியத்தையும் அவரது பின்னடியார்களுடைய ஊழியத்தையும் குறித்த சாட்சியங்களை கூறியதோடு மட்டுமல்லாமல், இக்காரியங்கள் அனைத்தும் தேவனால் முன் அறியப்பட்டிருந்ததையும், அவரால் திட்டமிடப்பட்டதையும் இஸ்ரயேலின் தீர்க்கதரிசிகள் வாயிலாக முன்னுரைக்கப்பட்டதையும், இயேசு கொடுத்த ஈடுபலியின் புண்ணியத்தாலும், அவரது நாமத்தின் மூலமாகவும் மட்டுமே என்றும் எடுத்துரைத்தார். அதோடுகூட, இயேசுவின்மேல் விசுவாசம் வைப்பவர்களிடத்தில் தேவன் ஒப்புரவாக்குதலைத் தருவதற்கு பிரியமாயிருந்து, அவர்களுடைய பாவங்கள் மற்றும் அவமானங்களை போக்க மனதாயிருந்து, தம் குடும்பத்தில் அவர்களை சேர்த்துக்கொள்கிறார் என்றும் பேதுரு விளக்கினார்.

கொர்னேலியுவும் அவரோடு இருந்த தேவபக்திமிக்க அவரது வீட்டாரும், நண்பர்களும் தெய்வீக கிருபையளிக்கும் அந்த செய்திக்காகவே காத்துக் கொண்டிருந்தனர். பேதுருவின் உதடுகளிலிருந்து வார்த்தைகள் வெளிப்படுகையில், அவைகள் விரைவாயும் மகிழ்ச்சியோடும் கேட்பவரது இருதயங்களை ஆக்கிரமித்தது. பேதுரு எவ்வாறு முழுமையாகவும், அதன் மதிப்பை உணர்ந்தும் இருந்தாரோ, அவ்வாறே அவர்களும் அந்நேரத்தில் இயேசுவை ஏற்று உணர்ந்துகொண்டனர். இவ்வாறாக தேவனுக்கு முன்பாக அவர்களது இருதயம் சரியான நிலைமையில் இருந்தது. இப்போதும் சகோதரரே, அவருக்குள்ளான உங்களது விசுவாசத்தையும் அவரோடுகூட மரிப்பதற்கு ஒப்பான முழு பிரதிஷ்டை எடுக்க அடையாளமாயிருக்கிற, தண்ணீர் ஸ்நானம் பண்ணுவது சரியான வழிமுறையாக இருக்கும் என்று பேதுரு அவர்களோடு பேசுவது பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் பேதுருவோ அப்படிப்பட்ட தீர்மானம் எடுக்கத் தயாரில்லை என்று நாம் நிச்சயிக்கலாம். இயேசுவுக்குள்ளான இரட்சிப்பின் அற்புதமான ஏற்பாட்டை புறஜாதியார் அறிந்து கொள்ள வேண்டும் என்ற தேவசித்தத்தை உணர்ந்த பேதுரு மிகவும் வியப்படைந்தார். அவ்வாறு அறிவதே ஒரு ஆசீர்வாதமாயிருக்கும். ஆனால் யூதருக்குக் கொடுக்கப்பட்ட அதே நடைமுறைக்குரிய நிபந்தனைப்படியே புறஜாதியாரும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவதை அவர் எதிர்நோக்க ஆயத்தமாயிருக்கவில்லை. யூதருக்கு கொடுக்கப்பட்ட அதே தெய்வீக தயவின் துல்லியமான வெளிப்பாடுகள் புறஜாதியாராகிய இவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள்மேல் பரிசுத்தஆவி அருளப்பட்டதுபோலவே, கொர்னேலியுவுக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் கைகளை வைக்காமலேயே அளிக்கப்பட்டது. இது, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், பரிசுத்தஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ளும்படி கைகளை வைக்கவும் எண்ணியிருந்த பேதுருவுக்கு பாடமாக, அது சம்பந்தமான போதுமான அறிவைப் பெறாததை அவருக்கு, நன்மைக்கேதுவாக உணர்த்தினது.

பேதுருவின் தாழ்மையும், நேரிய இருதயமும் அதிகஅளவு இருந்ததாலும், கற்கும் ஆவலில் தயாராயிருந்ததினிமித்தமாகவும், பாடத்தை சீக்கிரம் கற்றுக்கொண்டார். அவர் கர்த்தரிடத்தில் முழுமையான பிரதிஷ்டை செய்திருந்தபடியால், தெய்வீக சித்தமே ஒவ்வொரு காரியத்திலும் செய்யப்படவேண்டும் என்றும் விரும்பினார். பேதுருவும் யோப்பா பட்டணத்திலிருந்து அவருடன் வந்தவர்களும் விருத்தசேதனமுடையவர்களாக இருந்ததால், புறஜாதியார்மேல் தேவதயவு பொழியப்பட்டதைக் கண்டு வியப்படைந்தனர். என்றாலும் அவர்கள் பொறாமை

கொள்ளவில்லை. கர்த்தர் தம்மோடு ஐக்கியமாகும்படி அவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொண்டதை சுட்டிக்காண்பித்ததால், சுத்திகரிக்கப்பட்டிருந்த அவர்களை சகோதரர்களாக மகிழ்ச்சிடன் வரவேற்றனர். இவ்வாறு பரிசுத்தஆவி பொழியப்பட்டதன் பலனாக ஒரு மாபெரும் சாட்சியக்கூட்டத்தை ஏற்பாடுசெய்தனர். அவர்கள் தாங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதைக் குறித்து சந்தோஷமடைந்து, தேவனை மகிமைப்படுத்தி துதித்தனர் என்று பதிவுகள் கூறுகின்றன. பிறகு உருவகமான ஞானஸ்நானத்தையும், அதை நேர்மையோடு அனுசரிக்கவேண்டியது பற்றியும் பேதுரு அவர்களது கவனத்திற்கு கொண்டுவந்தார்.

பாடத்தைக் குறித்த அவரது வாதம் நமக்கு கொடுக்கப்படவில்லை. கர்த்தரிடத்தில் செய்துகொண்ட அவர்களது பிரதிஷ்டையை இவ்வாறு வெளியரங்கமாக அடையாளங் காண்பிப்பது, அவர்களது விசுவாசத்தை பலப்படுத்தும் என்று ஒருவேளை அவர் விவரித்திருக்கலாம். கர்த்தருக்கென்று ஜீவிக்கவும், மரிக்கவும் அவர்களது சொந்த தீர்மானத்தை ஸ்திரப்படுத்தியிருக்கலாம். ஒருவேளை தண்ணீர் முழுக்குதல் கிறிஸ்துவோடு மரிப்பதையும், அவரோடு அடக்கம் பண்ணப்படுவதையும் முக்கியப்படுத்துவது எவ்வளவு அழகாயிருக்கிறது என்று அவர்களுக்குக் காண்பித்திருக்கலாம். மேலும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, உயிர்த்தெழுதலில் பரிபூரண சரீரங்களைப்பெற்று புதிதான ஜீவனடைய, தற்காலத்தில் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ள இது ஒரு அடையாளமாயுள்ளது. அல்லது கர்த்தருடைய பின்னடியார்கள் எல்லோரும் அவ்வாறே தண்ணீர் முழுக்கை பெறவேண்டும் என்று கட்டளையிட்டு, இது கர்த்தரது செயல்களின் சொந்தவழிமுறை என அவர்களுக்கு விவரித்துக்கூறுவதில் அவர் நிறைவடைந்திருக்கலாம்.

கர்த்தர்மேல் விசுவாசம் வைத்த இந்த அன்பு சகோதரர்கள், தங்களது பிரதிஷ்டை மற்றும் நற்கிரியைகள் மூலம் நற்சாட்சி கொடுத்திருந்தும், கர்த்தரையும் அவரது மகிமையின் திட்டத்தையும் முன்கூட்டியே அறிந்திருந்தபோதிலும், இப்பொழுது தேவனால் அவர்கள் அங்கீரிக்கப்பட்டிருந்து, இவர்களை அங்கீரித்ததன் அடையாளம் வெளியரங்கமாயுமிருக்கிறது. இப்படியிருக்க, பிறப்பில் புறஜாதியார் என்பதை பொருட்படுத்தாமல், தேவன் தம் உண்மையுள்ளவர்களுக்காக நியமித்திருக்கிற ஆசீர்வாதங்களையும், ஏற்பாடுகளையும்பெற ஏன் அனுமதிக்கக்கூடாது ? என்று அங்கே கூடியிருந்த, விசேஷமாக யோப்பாவிலிருந்து அவருடன் வந்திருந்த சகோதரர்களிடத்திலும் அபிப்பிராயத்தை பேதுரு கேட்டார். கர்த்தரது நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் அளிக்க கட்டளையிட்டபோது (வழிநடத்தினபோது), அங்கே கூடியிருந்தோர் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. அவர்களிடத்தில் போதிக்க அனுப்பப்பட்டவாறே, தெளிவான எக்காள சத்தத்தை பிரசங்கித்தார். அவ்விதமாகவே கவனித்துக்கேட்கும் காதுகளையும், அவரது செய்திகளை கேட்க மனதாயிருக்கிற எல்லோருக்கும் அப்போஸ்தலர் பேதுரு வழியாக, இந்தப்பாடத்தின் மூலம், கர்த்தர் தம் பிள்ளைகள் அனைவரையும் வழிநடத்துகிறார். மேலும், ஒருவரிடத்திலும் அதிகாரம் செலுத்தும் உரிமை நமக்கு அருளப்படவில்லை. நாம் அப்போஸ்தலர்களல்ல. நாம் அப்போஸ்தலர்களின் கட்டளைகளையும், எல்லா அப்போஸ்தலர்களுடைய முன்மாதிரிகையையும், நம் கர்த்தருடைய முன்மாதிரிகையையும்

மட்டுமே சுட்டிக்காட்டும் உரிமை பெற்றிருக்கிறோம். மற்ற காரியங்களை கேட்கும் காதுகளை பெற்றவர்களிடத்திலேயே, அவர்கள் ஒவ்வொருவரது மனச்சாட்சிக்கே விட்டுவிட வேண்டும். மெய்யாகவே சித்தத்தை கிறிஸ்துவின் சித்தத்துக்குள்ளாக உண்மையாக மரிக்கச்செய்வது நிறைவேற்றப்பட்டிருக்கும்போது, ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ முழு ஐக்கியத்தில் இருப்பதை நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

-------------------

# யுக மாற்றங்களைக் கவனித்தல்
## அப்போஸ்தலர் 11:4-15

### *பேதுருவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்*

கொர்நேலியுவைக் கிறிஸ்தவனாக அங்கீகரித்ததற்கும், அவருக்கும், அவரது வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததற்கும் பேதுரு குற்றஞ்சாட்டப்படாமல், மாறாக பேதுரு அவர்களது இல்லங்களுக்குச் சென்று, அவர்களோடுகூட அப்பம் புசித்துள்ளார் - அதாவது யூத வழக்கத்திற்கு முற்றிலும் முரணான நடக்கை - அதாவது யூதர்களுக்குச் சமமாகப் புறஜாதியாரை அவர் அங்கீகரித்தக் காரியம் குற்றஞ்சாட்டப்பட்டது; இப்படி நடந்துகொள்வதற்கு முரணாகவே பழங்காலம் முதல் அவர்களது வழக்கமாகக் காணப்பட்டது. அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய வாதத்தில் அவர்களது குற்றச்சாட்டுகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, தான் ஏதோ புறஜாதியாரைக் கிறிஸ்தவ சகோதரத்துவத்திற்குள்ளாக ஏற்றுக்கொண்டதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டது போன்று, தன்னைக் குற்றப் பழியினின்று விலக்கிக்கொள்ள முற்பட்டார். எனினும் பேதுருவின் நடவடிக்கை மிகச் சரியானதாகும் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி, அவர் அப்படியாகவும் வழிநடத்தப்பட்டிருந்தார். இதில் கர்த்தருடைய ஜனங்களுக்கான படிப்பினை என்னவெனில்: மனிதனுடைய பாரம்பரியங்கள் மற்றும் நுணுக்கமான ஆசரிப்புகள், வழக்கங்கள் முதலானவைகள் குறித்து எதிர்த்து வாதாடுவதற்குப் பதிலாக, அடிப்படை கொள்கைகளையும், திவ்விய பிரமாணங்களையும் கலந்துரையாடிடுவது எப்போதும் நலமாயிருக்கும் என்பதேயாகும். பேதுரு மூல அடிப்படை அம்சங்களை அவர்கள் அனைவரின் மனதிற்கு முன்பாக நேரடியாய்க் கொண்டு நிறுத்தினபோது, சமுக வழக்கங்கள் தொடர்பான கேள்விகள் அனைத்தும் முடிவிற்கு வந்தன; ஆனால் ஒருவேளை அவர் சமுக வழக்கங்களினுடைய ஏற்புடைமையைக்குறித்து விவாதித்திருந்திருப்பாரானால், பெரிதான கேள்வியானது, தீர்வில்லாமலேயே இருந்திருக்கும்.

பேதுருவின் எளிமையான, தாழ்மையான ஒளிவுமறைவில்லாத விளக்கமானது, அவ்விஷயம் தொடர்பான உண்மைகளை ஒப்புவித்தலாகவே காணப்பட்டது. தன்னை நம்பச்செய்த சான்றுகளானது, தனக்குப் போலவே அவர்களையும் நம்பச்செய்திடும் என்று அவர் கருதினார் மற்றும் இப்படிக் கருதினதில் அவர் சரியாகக் கருதினவராகவே காணப்பட்டார். அவர் ஒருவேளை கௌரவம் கொண்டவராக இது தன்னுடைய காரியமே ஒழிய, அவர்கள் காரியமல்ல என்றும், தான் ஓர் அப்போஸ்தலன் மற்றும் அப்போஸ்தலர்களிலேயே மூத்தவர் மற்றும் கர்த்தரினால் விசேஷமாய் வழி நடத்தப்பட்டவர் என்றும் மற்றும் தான் இராஜ்யத்தின் திறவுகோல்களைப் பெற்றுக்கொண்டு, பயன்படுத்திடுவார் என்று முன்கூட்டியே கர்த்தரும் தெரிவித்துள்ளார் என்றும், திறவுகோல்களில் முதலாவதை, பெந்தெகொஸ்தே நாளின் போதான திவ்விய கிருபையை அறிவித்ததில் பயன்படுத்தியுள்ளார் என்றும், இப்பொழுது மற்றத் திறவுக்கோலைப் புறஜாதியாருக்கான கிருபையின் கதவைத் திறப்பதற்குத் தான் பயன்படுத்தியுள்ளார் என்றும் சொல்லியிருந்திருக்க முடியும். இப்படியாய் நடந்துகொள்வது என்பது, இதில் அநேகம் உண்மைகள் காணப்பட்டாலுங்கூட, அது ஞானமற்ற போக்காகவே காணப்பட்டிருந்திருக்கும்; அவர் எடுத்துக்கொண்ட தாழ்மையான, அன்பான, சகோதரத்துவத்திற்குரிய நடவடிக்கையானது, அவரது இருதய நிலைமையை, அவரது தாழ்மையை, சகோதரருக்கான அவரது அன்பினை, எவரும் தனது நடவடிக்கையினால் இடறிப்போகாத வண்ணம் காரியங்களை மிகவும் தெளிவுப்படுத்துவதற்கான, மிகவும் எளிமைப்படுத்துவதற்கான, மிகவும் விளங்கப்பண்ணுவதற்கான அவரது விருப்பத்தினைக்குறித்து நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை அவர் இறுமாப்பாய் நடந்திருப்பாரானால், சபையில் பெரிய பிளவு ஏற்பட்டிருக்கும்; ஆனால் இப்படியாக நடக்கவில்லை; கர்த்தர் பொறுப்பேற்றிருந்தார் மற்றும் பேதுரு ஒருவேளை சரியான இருதய நிலையில் காணப்படவில்லையெனில், அவர் பயன்படுத்தப்பட்டிருந்திருக்க மாட்டார் மற்றும் ஏதோ ஓர் எளிமையான சகோதரன் இவ்வூழியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பார். இதில் நம் அனைவருக்கும் - விசேஷமாகக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கியுள்ள பல்வேறு கூடுகைகளில் காணப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிநடத்துபவர்களுக்கும் நல்ல படிப்பினைக் காணப்படுகின்றது. தாழ்மையும், சகோதர சிநேகமும், அன்பும் படிப்பினையாகக்

காணப்படுகின்றது. இறுமாப்பு மற்றும் நடத்தையிலோ, தொனியிலோ ஆணவம் என்பவை எந்தக் கர்த்தருடைய ஜனங்களுக்கும், விசேஷமாக அவருக்கு ஊழியம் செய்ய நாடுபவர்களுக்கும் தகுதியற்ற ஒன்றாகவே காணப்படும்; இறுமாப்பின் ஆவியைப் பெற்றிருக்கும் வழிநடத்துபவர்கள், அவர்கள் அதைப் பெற்றிருக்கும் அளவிற்கேற்ப அவ்வூழியத்திற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட வேண்டும். தாழ்மையான நடத்தையையும், இத்தருணத்தின் போதான பேதுருவின் ஆவியையும் வெளிப்படுத்துபவர்கள், இதைப் பெற்றிருப்பதற்கேற்ப அனைவராலும் உயர்வாய் எண்ணப்பட வேண்டும்.

---

# “ஆவிக்குரிய கணக்குகளை - வருடந்தோறும் கணக்குப்பார்த்தல்”

*“என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும், உம்முடைய யோசனைகளும் அநேகமாய் இருக்கிறது; ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது. நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானால், அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்” - சங்கீதம் 40:5.*

தொழிலதிபர்கள் தங்களுடைய வரவு மற்றும் செலவுகள் பற்றயதான துல்லியமான கணக்குகளை தெரிந்துகொள்வதற்கு பல ஆயிரங்கள் செலவிட வேண்டியுள்ளது. தொழிலில் எக்காரியங்கள் இலாபம் ஈட்டியுள்ளது என்றும், எக்காரியங்கள் நஷ்டம் கொடுத்துள்ளது என்றும் தொழிலதிபர்களுக்கு அறிய உதவும் “வரவு செலவு கணக்கு முறைக்கு” ஒவ்வொரு வருடமும் மில்லியன் கணக்கான டாலர்கள் செலவிடப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இலாபமான காரியங்கள் இன்னும் பெருகப்பண்ணப்படுகின்றது. மேலும், நஷ்டத்திற்குரிய காரியங்களும் சரிபண்ணப்படுகின்றது. இது மிகவும் ஞானமிக்க முறையாகும் :

பூமிக்குரிய ஆஸ்திகளையும் அதற்குரிய கனங்களையும் நாடிக்கொண்டிருப்பவர்களின் காரியங்களே இவ்விதங்களில் காணப்படுமாயின், ஆவிக்குரிய காரியங்கள் தொடர்பான விஷயங்களில் எவ்வளவு அதிகமான கவனத்துடன் கணக்குப் பார்க்கும் விஷயம் காணப்பட வேண்டும்! சில வருடங்களே நீடிக்கும் ஆஸ்திகளுக்காக அதாவது, மரிக்கும்போது, கண்டிப்பாக விட்டுப்பிரிய வேண்டிய ஆஸ்திகளுக்காக மாத்திரம் கர்த்தருடைய ஜனங்கள் நாடிதேடுபவர்களாய் இருப்பதில்லை. அவர்கள் அழிந்துபோகாததும், திருடர்களால் திருட முடியாததுமாகிய ஐசுவரியங்களையே நாடி தேடுபவர்களாக இருக்கின்றார்கள். இந்த பரலோக ஐசுவரியங்களைத் தவிர அவர்கள் பரலோக கனங்களையும், மகிமைகளையும் இராஜாதி இராஜாவோடு, கர்த்தாதி கர்த்தரோடும் ஆயிரம் வருஷம் இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்தையும் மற்றும் பூமியின் சகல குடிகளுக்கும் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதம் தொடர்பான மகிமையான வாய்ப்புகளையும் நாடுபவர்களாய் இருக்கின்றார்கள்.

உலகத்தைப் பொறுத்தவரையில் பொது கணக்குப்பார்த்து தீர்க்கும் நாள் பழைய கடந்த வருடத்தின் இறுதியிலும், புதிய வருடத்தின் ஆரம்பத்திலும் நிகழ்கின்றது. ஆனால், சபையைப் பொறுத்தவரையிலும்கூட இப்படியாக கணக்குப்பார்க்கும் தருணமானது, அவர்களுக்கு, அவர்களது பஸ்கா ஆடாக, அவர்களது கர்த்தர் மரித்ததை அவர்கள் வருடந்தோறும் நினைவுக்கூரும் காலங்களில் அமைவது பொறுத்தமானதாகும். அதாவது, அவருடைய பலியில் நாம் பங்குக்கொண்டு அவருடைய உயிர்த்தெழுதலின்போது, நாமும் அவரோடுகூட புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படிக்கு எழுந்திருக்கும் காலப்பகுதியாகும்.

கடந்தவருடத்தில் நம்முடைய ஆவிக்குரிய கணக்கு எப்படி காணப்படுகின்றது என்பதை நாம் பார்க்கலாம். அதாவது, நாம் கடந்த வருடம் ஒன்றாய் கூடி நமது மீட்பருடைய பலியையும், அவரோடுகூட நாமும் பங்குக்கொள்வதற்கு அடையாளமாய் அப்பத்தைப் பிட்டது முதல்கொண்டு நம்முடைய ஆவிக்குரிய கணக்குகள் எப்படி காணப்படுகின்றது என்பதை நாம் பார்க்கலாம். கடந்துபோன வருடத்தின் அனுபவங்கள் நம்மை கர்த்தரிடத்திற்கு நெருங்கச் செய்துள்ளதா அல்லது ஏதாவது விதத்தில் நம்மை அவருடைய அன்பு மற்றும் ஐக்கியத்திலிருந்தும் அவருடைய சரீரத்திலுள்ள உடன் அங்கங்களுடனான ஐக்கியத்திலிருந்தும் நம்மை பிரித்து வைத்துள்ளதா என்றும் நாம் பார்க்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் நாம் நம்முடைய இருதயத்தினுடைய நோக்கங்களில் மாத்திரமல்லாமல், நம்முடைய ஜீவியத்தின் நடக்கைகளிலும் பூரண நிலைக்கு அருகாமையிலும், கர்த்தருக்கு அருகாமையிலும் காணப்பட வேண்டும். நாம் முன்னேறிக்கொண்டிருக்கிறவர்களாகவே இருக்க வேண்டும். ஆவியின் சகல கிருபைகளிலும், கர்த்தர் மற்றும் அவருடைய வியக்கத்தகு திட்டம் குறித்ததான புரிந்துகொள்ளுதலிலும், நமது அறிவிலும் நாம் வளர்ந்துகொண்டிருக்க வேண்டும்.

இப்பாடத்தை வாசிக்கின்ற ஒவ்வொருவரும் தங்களுடைய மனசாட்சியின்படி தங்கள் ஜீவியத்தை தராசு தட்டில் வைத்துப்பார்த்து, கடந்த வருடத்தைக் காட்டிலும் இப்பொழுதுள்ள தனது ஜீவியத்தின் நிலையை (நன்றாக உள்ளது அல்லது நன்றாக இல்லை என்று) தராசு தட்டின் மூலம் அறிந்துகொண்டு தேவனுடைய கிருபையினால், தான் இருக்கின்ற நிலைக்கும் மற்றும் தான் நின்று கொண்டிருக்கும் கட்டத்திற்கும் அதாவது, மாம்சத்தின்படி நாடாமல், ஆவிக்கேற்றப்படி நாடிக்கொண்டிருக்கின்ற இருதயத்தை உடையவனான, இன்னமும் அவருக்கு உரியவனாய் இருந்துகொண்டிருப்பதினால் நன்றி செலுத்துகின்றவனாய் இருப்பான் என்று நாம் நம்புகின்றோம். ஒருவேளை சில விதங்களில் ஒருவன் கொஞ்சம் பின்னுக்கு சறுக்கிப் போயிருப்பானானால் அவன் சறுக்கிப் பின்னாக வந்து நிற்கும் நிலையைக் காட்டிலும் மோசமான நிலைக்குப் போகாததற்கும் தான் முற்றிலுமாக அவருடைய கரத்திலிருந்து போகாததற்கும், அவருடைய வார்த்தைகளில் காணப்படும் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களில் தனக்கு உள்ள பங்கை கைவிட்டுப்போகாததற்கும், இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு நன்றி சொல்லக்கடவர்கள். கணக்குகளை மறுபடியும் பார்வையிட்டு கணக்கிட்டுக்கொள்ளும் இந்த நாளானது, அவர்கள் கர்த்தர் பக்கம் இருப்பதற்கு உதவியாகவும், இன்னும் வரப்போகும் வருடத்தில் நல்ல ஒரு கணக்கை ஒப்புவிக்க உதவியாகவும் இருக்கின்றபடியினால், இதற்காக அவர்கள் தேவனுக்கு நன்றி செலுத்தக்கடவர்கள். இப்பொழுது நாம் நமது பாடத்தின் ஆதார வசனத்திற்குத் திரும்பி தீர்க்கதரிசி கூறிய காரியங்களை நாமும் இருதய பூர்வமாக சொல்ல முடியுமா என்று பார்க்கலாம். தீர்க்கதரிசி இவ்வசனத்தின் காரியத்தை இரண்டு பாகங்களாகப் பிரிக்கின்றார்:-

(1) ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள தேவனுடைய கிருபையின் வியத்தகு காரியங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தல் மற்றும்,

(2) இதுவரையிலும் நிறைவேறாததும், ஆனால், அவருடைய வாக்குத்தத்தங்களின் மூலம் நாம் நம்முடைய விசுவாச கரங்களினால் கிரகித்துள்ள நமக்கான அவருடைய யோசனைகள், அவருடைய திட்டங்கள் மற்றும் அவருடைய நோக்கங்களுக்காக நன்றி செலுத்துதல்.

நமக்கு தேவன் ஏற்கெனவே பண்ணியுள்ள காரியங்களைப் பின்நோக்கி நாம் பார்க்கும்போதும், அவைகளில் சிலவற்றை தீர்க்கதரிசி சங்கீதம் 40:2-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். "அழிவின் குழியிலிருந்து என்னை அவர் வெளிக்கொணர்ந்தார். சேறு நிறைந்த பள்ளத்தினின்று தூக்கியெடுத்தார், கற்பாறையின் மேல் நான் காலூன்றி நிற்கச் செய்தார். என் காலடிகளை உறுதிபடுத்தினார்" (திருவிவிலியம்). இவ்விஷயத்தை நமக்கு நம்மால் மனப்பூர்வமாய் பொருத்திப்பார்க்க முடியுமானால், அது எத்தகைய நன்றிகளைச் செலுத்தக்கூடியதாய் இருக்கும். தேவனற்றவர்களாகவும் எவ்விதமான உண்மையான நம்பிக்கைகள் இல்லாமலும், வெறும் பயனற்ற எண்ணங்களை மாத்திரம் கொண்டுள்ள முழு உலகத்தோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பாவம் மற்றும் மரணத்தீர்ப்பாகிய பயங்கரமான குழியினின்று நம்மை கர்த்தர் எவ்வாறு விடுவித்தார் என்றும், அவர் எவ்வளவாக நம்மீது இரக்கம் கொண்டு நம்மை விடுவித்தார் என்றும் நாம் சற்றுத் திரும்பி பார்க்கும்போது அவர் எப்படி நம்முடைய விசுவாசத்தின் பாதங்களை கிறிஸ்து மற்றும் அவருடைய மீட்பின் வேலையாகிய கற்பாறை அஸ்திபாரத்தின் மேல் காலூன்றி நிற்கப்பண்ணினார் என்பதையும் நாம் சற்று திரும்பி பார்க்கும்போது, நம்மால் அவருக்கு நன்றிகளை தெரிவித்தும், அவருடைய இரக்கங்களை அனைவருக்கும் பிரஸ்தாபப்படுத்தவும் முடிகின்றது. இன்னும் நாம் பின்னால் திரும்பிப் பார்க்கும்போது, நம்முடைய தேவனும், நமது இரட்சகரும் நமக்கு முக்கியமானவர்கள் என்று நாம் முடிவெடுத்த அந்த நல்ல சந்தோஷமான நாள் நம்முடைய நினைவுகளுக்கு வருகின்றது. அதாவது, நம்முடைய (ஆவிக்குரிய) பயணம் ஆரம்பித்ததும், நம்முடைய ஓட்டத்தின் ஊசலாட்டங்கள் நின்றுபோன அந்த சந்தோஷமான நாள் நம்முடைய நினைவுகளுக்கு வருகின்றது. அந்த நாளில்தான் நம்முடைய ஓட்டத்திற்கான உறுதியான ஒரு நோக்கம் கிடைத்தது. இன்னுமாக, மனிதனுடைய கண்ணோட்டங்கள் மற்றும் தத்துவங்கள் எனும் பல்வேறு புயல்களினால் நாம் இங்கும் அங்கும் மோதியடிக்கப்படும்போது நாம் துக்கம் அடைந்து போய்விடாதபடிக்கு, சரியான ஒரு பாரக்கல் அன்று நமக்குக் கிடைத்தது. (பாரக்கல் - கப்பல் சமநிலையில் இருப்பதற்காகப் போடப்படும் பாரம்) என்பதும், நம் நினைவுகளுக்கு வருகின்றது. இவைகள் அனைத்தையும் நமக்கு ஏற்கனவே தேவன் செய்து முடித்ததற்காக தேவனை நாம் துதிப்போமாக! அடுத்ததாக, தீர்க்கதரிசியானவர், "நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்; அநேகர் அதைக் கண்டு, பயந்து கர்த்தரை நம்புவார்கள்" என்று பாடுகின்றார் (சங்கீதம் 40:3). சந்தேகங்கள் குறித்தோ அல்லது பயங்கள் குறித்தோ அல்லது பாவிகளுடைய கடுந்துயரம்

குறித்ததாகவே இந்த புதியபாடல் இராமல், மாறாக தேவனுடைய நீதி, இரக்கம் மற்றும் அன்பைக்குறித்ததான புதுப்பாட்டாக உள்ளது. மேலும், இப்புது பாட்டின் அனைத்து/ஒவ்வொரு ஓசைகளும் இசைவாகவும், துல்லியமாகவும் காணப்படுகின்றது. தேவனுக்கு நன்றி! இந்த புதுப்பாட்டானது, நமக்குள் புதிய ஜீவனைக்கொண்டு வந்துள்ளது. இன்னுமாக, ஜீவியத்தில் புதிய சந்தோஷங்களையும் கொண்டுவந்துள்ளது. இன்னுமாக, நமக்குள்ளும் மற்றவருக்குள்ளும் புதிய நம்பிக்கைகளையும், புதிய குறிக்கோள்களையும் கொண்டுவந்துள்ளது. கர்த்தர் கரத்திலிருந்து நாம் ஏற்கெனவே பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக அதாவது, அவர் நமக்கு ஏற்கெனவே நிறவேற்றியுள்ள காரியங்களுக்காக நம்மால் கர்த்தருக்கு ஒருபோதும் நன்றி சொல்லி தீர்க்க முடியாது.

இன்னுமாக, கர்த்தருடைய தயவினால் நாம் ஏற்கெனவே அனுபவித்துக்கொண்டிருக்கும் காரியங்கள் தேவனை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துள்ள ஆசீர்வாதங்களின் முன் சுவை மாதிரிகளே என்றும், நமக்கு உறுதி பண்ணப்பட்டுள்ளது "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;" (1 கொரிந்தியர் 2:9). ஆனாலும், இவைகளை தேவன் அன்புடன் வெளிப்படுத்தினபோது, இவைகளை நாம் கண்ணாடி வழியாய் காண்கின்றதுபோல, மங்கலாய்க் கண்டாலும் இவைகள் உண்மையுள்ளவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள மகிமை, கனம் மற்றும் அழியாமை என்று விசுவாசத்தின் மூலம் கிரகித்துக் கொண்டவர்களாய் இருக்கின்றோம். நாம் பெற்றிருப்பவைகள் நிஜமானவைகளாய் இராமல், வாக்குத்தத்தங்களாகவும், நம்பிக்கைகளாகவுமே இருக்கின்றது. தற்காலத்தில் நாம் அனுபவித்துக் கொண்டிருப்பவைகள் ஆரம்பங்களாக மாத்திரமே இருப்பதினால், தேவனுடைய கிருபைகள் எண்ணமுடியாதவைகள் என்றும், கணக்கிடமுடியாதவைகள் என்றும் தீர்க்கதரிசி சொன்னதை நாமும் ஒப்புக்கொள்கின்றோம். நாம் அவருக்கு மிகுந்த கடனாளிகளாகவும், ஒருபோதும் அவருக்குரிய நன்றி கடனிலிருந்து விடுபட முடியாதவர்களாகவும் இருக்கின்றோம். நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கின்றபடியால் இவைகளையெல்லாம் நமக்கு அளிப்பதில் பிதா சந்தோஷம் கொள்கின்றார். மேலும், பிரதிபலனை நாம் அவருக்கு நன்றியுணர்வுடன் காணப்படும் விதத்தில் நாம் செயல்பட வேண்டும் என்றும், நாம் உண்மையில் அவருடைய பிள்ளைகளாகவும், அவருடைய ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று தான் நம்மிடம் அவர் கேட்கின்றார்.

இப்பொழுது நாம் நமது தற்கால சொத்துக்களைக் கணக்கிடுவதிலும், கடந்த வருடத்திலிருந்த நம்முடைய ஜீவியத்தை தராசில் மதிப்பிடுவதற்கும் கவனம் செலுத்துவோமாக. தராசில் பொதுவாக உள்ள காரியங்களைப் பார்த்துவிட்டு, நாம் திருப்தியடைந்தவர்களாய் இருக்கக்கூடாது. கடந்த வருடத்தில் நாம் அநுபவித்த இரக்கங்கள் மற்றும் சிலாக்கியங்களையும் மற்றும் அவைகளை நாம் பயன்படுத்தினது குறித்தும், அவைகளினால் நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களையும் நம்முடைய நினைவுகளுக்குக் கொண்டுவந்து, அவைகளை நாம் கூர்ந்து, ஆழ்ந்து, ஆராய்ந்துப்பார்க்க வேண்டும். நம்முடைய அன்றாட நடவடிக்கையில் எவ்விஷயங்கள் நமக்கு மிகவும் உதவியாக இருந்தது என்றும், எவ்விஷயங்கள் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியைக் குன்றச்செய்தது என்றும், எவ்விஷயங்கள் கர்த்தருடனான நம்முடைய ஐக்கியத்திற்குத் தடையாக இருந்தது என்றும், எவைகள் நாம் பொறுமையுடன் ஓடுவதற்கு நமக்கு தடையாக இருந்தது என்றும், அல்லது எவைகள் சுவிசேஷத்தில் நமக்கு முன்வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் நமக்கு நல்ல பலன்களைக் கொடுத்தது என்றும் நாம் கவனமாய் அடையாளம் கண்டுக்கொள்ள/கண்டுபிடிக்க வேண்டும். இந்த விஷயங்கள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாகக் காணப்படும். ஏனெனில், எவருக்கும் ஒரே சூழ்நிலைகளும், மனப்போக்கும் இருப்பதில்லை. ஒவ்வொருவனும் கணக்கிடும்போது, தான் ஜெபத்தின் வாயிலாக கர்த்தருடன் கொண்டிருந்த ஐக்கியம் மற்றும் உறவின் காரணமாக ஏற்பட்ட நன்மைகளையும் (தராசில்) எடைபோட்டு பார்த்துக்கொண்டு, வரும் வருடத்தில் தனது ஆவிக்குரிய நலனுக்காக இந்த அம்சத்தை (ஜெபம்) பெருக்கிக்கொள்ள வேண்டுமோ அல்லது இல்லையோ என்றும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவனும் தான் கர்த்தரோடு சம்பாஷணைப் பண்ணுவதற்கு எவ்வளவு நேரம் செலவிடுகின்றான் என்பதை மாத்திரம் கணக்கிட்டுப்பார்க்காமல், கர்த்தருடைய வார்த்தைகளைக்

கேட்பதற்கும், வேதவாக்கியங்களை ஆராய்வதிலும், தெய்வீக மனதை அறிந்துகொள்வதிலும் தனிப்பட்ட விதத்தில் தனக்கும், சபைக்கும், உலகத்திற்கும் சம்பந்தமுடைய தெய்வீக திட்டத்தை அறிந்துகொள்வதிலும் தான் எவ்வளவு நேரம் செலவிடுகின்றான் என்பதையும் கணக்கிட்டுப்பார்க்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கும் விஷயத்தில் ஒவ்வொருவனும் தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் என்றும், ஒருவரையொருவர் ஆசீர்வதிப்பதற்கும் சபையை பக்திவிருத்தியடையச் செய்வதற்கும், சபையை மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்புவதற்கும் இந்த அவயவங்களை தேவன் ஏற்படுத்தியுள்ளார் என்றும் அப்போஸ்தலர் கூறியுள்ளவைகளை நினைவில் கொண்டு சகோதர சகோதரிகள் மூலம் அதாவது, கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தின் அங்கங்கள் மூலம் கர்த்தர், வேத ஆராய்ச்சி பண்ணுவதற்கான உதவியையும் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 12). ஆகவே, அப்போஸ்தலர்கள் முதலாவதாக ஏற்படுத்தப்பட்டார் என்றும், அவர்களுடைய போதனைகள் மேலானது என்றும், மற்ற அனைவருடைய போதனைகளும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுடைய சாட்சிகளுக்கு இசைவாகப் பார்க்கப்பட வேண்டும் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்படியாக, கணக்கிட்டுப்பார்க்கும்போது, ஒருவன் தான் எதிர்பார்த்ததைக்காட்டிலும் அவ்வளவுக்கு நல்ல முன்னேற்றத்தைப் பார்க்க முடியவில்லையெனில் அல்லது ஒருவேளை இடுக்கமான வழியில் மற்றவர்களைக் காட்டிலும் குறைவான முன்னேற்றமே அடைந்ததாக பார்த்தான் எனில், அவன் அன்பிலும், கிருபையிலும், அறிவிலும் வளர்வதற்கு அவனுக்கு அருளப்பட்ட உதவிகரங்களாகிய தேவனுடைய வார்த்தைகளையும், சகோதர சகோதரிகளையும் எவ்வளவு அவன் பயன்படுத்த தவறின காரணத்தினால் அவன் இந்தளவுக்கு முன்னேற்றமடைய தவறிபோயுள்ளான் என்று கணக்கிட்டுப் பார்க்கக்கடவன். ஒருவேளை அவன் எதிர்பார்த்த அளவுக்கு அவனுடைய முன்னேற்றம் மிகவும் அதிகமாய் காணப்படவில்லையெனில், வேறொரு விஷயத்தைக்கூட அவன் ஆராய்ந்துபார்க்க வேண்டும். அதென்னவெனில், அவன் சத்தியத்திற்கு ஊழியம் புரியும் விஷயத்தில் அவனால் முடிந்தமட்டும் ஈடுபட்டுள்ளானா அல்லது இல்லையா என்றும் பார்க்கக்கடவன். உங்களுடைய முழு ஜீவியத்தையும் நீங்கள் கர்த்தருக்காக அர்ப்பணித்துள்ளீர்கள் என்றும், அவருடைய வழிநடத்துதலின்படியாக நீங்கள் உங்கள் ஜீவனை அவருடைய சகோதர சகோதரிகளாகிய சபையின் நலன்கருதி கையளித்துள்ளவர்களாகவும், தியாகம் பண்ணினவர்களாகவும், ஒப்புக்கொடுத்தவர்களாகவும் இருக்கின்றீர்கள் என்பதை கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். கடந்துபோன வருடத்தில் உங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கும் இவ்விஷயத்தில் அதாவது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு உங்களால் முடிந்தமட்டும் ஊழியம் புரியும் விஷயத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்துள்ளீர்களா அல்லது இல்லையா என்பதை எண்ணிப்பாருங்கள், கணக்கிட்டுப்பாருங்கள். தண்ணீர் பாய்ச்சுகிறவனுக்கு தண்ணீர் பாய்ச்சப்படும் என்பதும், பிறருக்கு சத்தியத்தைப் பறிமாறுகின்றவனுக்கு சத்தியமும், கிருபையும் உள்ள கர்த்தருடைய பந்தியில் பங்கடைவான் என்பதும், கர்த்தர் ஏற்படுத்தியுள்ள ஏற்பாடுகளில் ஒருபாகம் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

## "சரியான கணக்கிடுதல் மற்றும் மதிப்பிடுதலுக்கான உதாரணங்கள்"

கணக்கிட்டுப்பார்க்கும் விஷயத்தில் அப்போஸ்தலர்களிடமிருந்து நாம் சில குறிப்புகளையும், கருத்துக்களையும் எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் எப்படி கணக்குப்பார்த்தார்கள் என்று நாம் பார்க்கலாம். எவைகளையெல்லாம் அவர்கள் இலாபம் என்றும், எவைகளையெல்லாம் நஷ்டம் என்றும் எண்ணினார்கள் என்பதை நாம் பார்க்கலாம். அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளுக்குக் கொஞ்சம் செவிகொடுங்கள். "என்னுடைய (பூமிக்குரிய) பிராணனை நான் (விலையேறப் பெற்றதாக) அருமையாக எண்ணேன்" (KJV). "என்னைப் பொறுத்தவரையில் எனது உயிரை நான் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை" (திருவிவிலியம்) (அப்போஸ்தலர் 20:24) "உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராக கிறிஸ்து இயேசுவை பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு (பூமிக்குரிய) மற்ற எல்லாவற்றையும் இழப்பாக கருதுகிறேன்" (திருவிவிலியம்; பிலிப்பியர் 3:8). பவுலினுடைய கணிப்பில் எதிர்கால மகிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தற்காலத்தில் சில இழப்புகள் நேரிடுவது பொருத்தமானதாய் மாத்திரம் இராமல், பரிசை அடைவதற்கு கிறிஸ்துவைப்பற்றின அறிவை பெற்றுக்கொள்வது மாத்திரமே பாத்திரமானதாய் காணப்பட்டது. (கிறிஸ்துவைப்பற்றின இந்த அறிவானது, அவர் மூலம் நமக்கு வெளியான தேவனுடைய கிருபை பற்றின அறிவையும், மாபெரும் பரிசை பெறுவதற்கென

ஓட்டத்தில் ஓடுவதற்கான வாய்ப்புகள் தொடர்பான அறிவையும் உள்ளடக்குகின்றது). இந்த அறிவையும் (மற்றும் இதன் வாய்ப்புகளையும்) பெற்றுக்கொள்வதற்காக தான் அடைந்த நஷ்டங்கள் மாபெரும் விலையாக விளங்கும் என்று பவுல் கருதினார். எவ்வளவு பூமிக்குரிய விஷயங்களை இழந்திட்டாலும் சரி, இவ்விழப்பின் காரணமாக நாம் கிறிஸ்துவைப் பற்றின அறிவை, - அவருடைய குணலட்சணம் பற்றின அறிவையும், அதைக்குறித்து ஆழமான புரிந்துகொள்ளுதலையும், அவரை மையமாகக்கொண்டுள்ள திட்டம் பற்றின அறிவை நல்லதொரு சொத்தாக நாம் ஒருவேளை பெற்றிருப்போமெனில் நாம் தேவனுக்கு நன்றி செலுத்தக்கடவோம். ஒருவேளை இந்த அறிவை நாம் பெற்றிருப்போமானால், ஒருவேளை அவர் நமக்கு விலையேறப் பெற்றவராய் காணப்படுவாரானால் அதனால்தான் நாம் இன்று ஐசுவரியவான்களாய் இருக்கின்றோம். தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக! இதே அப்போஸ்தலனாகிய பவுல் இன்னுமாக, "அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன், கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக கருதுகிறேன். கிறிஸ்துவோடு (அவருடைய சரீரத்தின் அங்கமாக) இணைந்திருப்பதற்காகத்தான் நான் இவ்வாறு கருதுகிறேன்" என்றும் கூறியுள்ளார் (திருவிவிலியம்; பிலிப்பியர் 3:8-9) (KJV; பிலிப்பியர் 3:8, 9, 11).

கணக்கிடுதலைப்பற்றின இன்னும் ஒரு கருத்தை அப்போஸ்தனாகிய யாக்கோபும் தெரிவித்துள்ளார். "என் சகோதரரே நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்பொழுது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக்கோபு 1:2, 3). ஒவ்வொருவரும் தங்கள் கடந்தவருடத்தை திரும்பி பார்க்கும்பொழுது, நம்முடைய பாதையில் அநேக கண்ணிகளும், சோதனைகளும் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவைகளில் சிலவற்றை நாம் உடனடியாக ஜெயங்கொண்டிருந்திருப்போம். இன்னும் சிலவற்றை நாம் மிகுந்த போராட்டம் போராடி ஜெயங்கொண்டிருந்திருப்போம். இன்னும் சில விஷயங்களில் நாம் ஒருவேளை பகுதியளவே ஜெயம் அடைந்தவர்களாகவும் காணப்படலாம். அதாவது, நம்முடைய சத்துருவுக்கு கொஞ்சம் தோல்வியும் கொஞ்சம் ஜெயமும் கொடுத்தவர்களாகக் காணப்படலாம்.

இந்த சோதனைகள் நமக்கு என்ன கொண்டுவந்தது? இவைகளின் பயன் நமக்கு என்னவாக இருந்தது? இச்சோதனைகளின் ஒரு பயனானது அப்போஸ்தலர் யாக்கோபு குறிப்பிட்ட வண்ணமாக, பொறுமையை குறித்த படிப்பினைகளாக உள்ளது. இச்சோதனைகள் நாம் இன்னமும் பள்ளியில் கற்றுக்கொண்டிருக்கும் நிலையிலும், பரீட்சிக்கப்படும் நிலையிலும்தான் காணப்படுகின்றோம் என்பதை நமக்குக் காட்டித்தருகின்றன. நாம் அவருடைய புண்ணியத்தினால் அவருடைய இராஜ்யத்தில் பங்கடைவதற்கு நாம் பாத்திரவான்கள் என்றும், கர்த்தருக்கு நாம் உண்மையாய் இருக்கின்றோம் என்றும் நிரூபித்துக்காட்டுவதற்கே இச்சோதனைகளாகும். பரீட்சைகள், சோதனைகள் அனைத்தும் முடிவடைய வேண்டும் என்றும், ஜெயங்கொள்ளுபவர்களில் ஒருவராக நாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அனைவரும் அடிக்கடி விரும்புகின்றோம் என்பதில் ஐயமில்லை. ஆனால், பொறுமையும், விசுவாசமும், நம்பிக்கையும் நம்முடைய இருதயத்திற்குள் புடமிட்டு சுத்தம் பண்ணும் ஒரு வேலையைச் செய்ய வேண்டியுள்ளது. இன்னுமாக, கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும், பக்குவம் அடைந்தவர்களாகவும் மாற்றப்பட வேண்டியுள்ளது. இந்த நல்ல வேலை தொடரட்டும். நமக்கு நன்மையாக இருக்கத்தக்கதாக ஏதோ விதங்களில் ஒருவேளை நம்முடைய சோதனைகள், பரீட்சைகள் நமக்குப் படிப்பினைகளை கொண்டுவந்திருக்குமாயின் நாம் களிக்கூரக்கடவோம். அதாவது, குணலட்சணங்களில் நாம் பலப்படுவதற்கு ஏதுவாகவும், சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் நாம் அதிகம் உறுதிக்கொள்வதற்கு ஏதுவாகவும் நம்முடைய பெலவீனங்கள் குறித்து அதிகமாய் விழிப்புகொள்வதற்கும், அவைகள்குறித்து எச்சரிப்பாய் அதிகமாய், கவனமாய் இருப்பதற்கு ஏதுவாகவும், நம்முடைய சோதனைகள் நமக்கு படிப்பினைகளைக்கொண்டு வந்திருந்திருந்தால் நாம் களிக்கூரக்கடவோம். பகுதியளவு ஜெயங்கொண்ட விஷயங்களிலும்கூட நாம் எந்தளவுக்கு எதிராளியானவனுடைய நெருக்கங்கள் மற்றும் நம்முடைய பலவீனங்களுக்கு எதிராக எதிர்த்துப்போராடியுள்ளோமோ அவ்வளவுக்கு நமக்கு அநுகூலமாகவே இருக்கும். சில விஷயங்களில் நாம் முழுமையாக தோல்வியடைந்தாலும்கூட, நம்முடைய குணலட்சணங்களில் உறுதியும் இதே விஷயத்தில் மீண்டும் தோல்வியுறக்கூடாது என்ற நமது தீர்மானம் மெருகூட்டப்படுவதற்கு அதிக வைராக்கியமும் இத்தோல்வியின் விளைவாக ஏற்படுகின்றது. இன்னுமாக, ஜெபத்தில் கர்த்தருக்கு முன்பாக இருதயத்தில் தாழ்மையையும் ஏற்படுத்துகின்றது. இத்தாழ்மையே நமக்குக் கிருபையின் சிங்காசனத்தை நினைப்பூட்டுகின்றது. மேலும்,

இத்தாழ்மையின் காரணமாகவே ஒவ்வொரு சோதனையின் வேளையிலும் அவசியமான உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு நம்மை கிருபையின் சிங்காசனத்திடத்திற்கு ஓடச்செய்கின்றது.

"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகின்றேன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் தனது கணக்கை தராசில் எடையிட்டுப் பார்த்துவிட்டு தொகுக்கின்றார் (ரோமர் 8:18). நாமும் கடந்துபோன வருடத்திற்கான நமது கணக்குகளை கணக்கிடுகையில், நம்முடைய பாடுகளை அவைகள் கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தாலும் சரி, கிறிஸ்துவுக்காகவும், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் நாம் பாடுபட்ட பாடுகள் எதுவாயினும், அவைகளை அப்போஸ்தலர் பவுல் போன்றே கணக்கிட்டு எண்ணிக்கொள்வோமாக. இந்த அனைத்து விஷயங்களில் வரப்போகின்ற வருடத்தில் நாம் இன்னும் அதிகமாக உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கு முயற்சிகள் எடுத்து களிக்கூரக்கடவோம். கிறிஸ்துவின் நாமத்திற்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும், அவருடைய சகோதர சகோதரிகளுக்காகவும் இன்னும் அதிகமாய் வரும் வருடத்திலும் பாடுகள் படுவதை நமக்கான பெரும் சிலாக்கியமாக எண்ணுவோமாக.

கடந்த வருடங்கள் பற்றின கணக்கில் நமக்கு இலாபமாக இருந்தவைகளையும், தோல்விகளாக இருந்தவைகளையும் நாம் கணக்கிட்டுக்கொண்டு பார்க்கும்பொழுது, நம்முடைய குறைவுகளில் ஒன்றாக, நம்மை பரிசுத்தம் பண்ணின இரத்தத்தை சாதாரணமாக எண்ணும் விஷயம் என அப்போஸ்தலர் குறிப்பிடும் காரியம் நம்மிடம் இல்லாமல் இருப்பதற்காக நாம் நன்றியுடையவர்களாய் இருப்போமாக. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய முக்கியத்துவத்தை நாம் இன்னும் உணர்ந்துகொண்ட நிலையில் காணப்படுவதற்காக தேவனுக்கு நன்றி. நாம் நம்முடைய சொந்த புண்ணியத்தினால் அல்லது தகுதியினால் ஏற்றுக்கொள்ளப்படாமல் நம்மை அன்புகூர்ந்து, தமது சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை விலைகொடுத்து வாங்கினவருக்குள்ளாகவே நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம் என்ற உண்மையை நாம் இன்னமும் புரிந்துகொண்ட நிலையில் காணப்படுவதினால், தேவனுக்கு நன்றி. ஓ! இவ்விஷயத்தில், நம் ஜீவியத்தை கொஞ்சம் திரும்பிப்பார்க்கும்பொழுது வழியில் தடுமாற்றங்கள் அல்லது சறுக்கல்கள் காணப்பட்டாலும் கூட இவ்விஷயம் தொடர்பான நம்முடைய அனுபவத்திற்காக நாம் எவ்வளவு நன்றி செலுத்த வேண்டும்! இன்னும் அவருடைய கிருபையினால் நாம் இன்னின்னபடியாகக் காணப்படுகின்றோம் என்பதினாலும், நமக்கான மாதிரியாகிய இயேசுவை பார்த்த வண்ணம் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட வைராக்கியம் மற்றும் பொறுமையுடன் ஓடுவதற்கும், நிலைத்து நிற்பதற்குமான வாய்ப்புகள் இன்னமும் இருக்கின்றது என்பதினாலும் நாம் எவ்வளவாக கர்த்தருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

## "நம் விஷயத்தில் கர்த்தர் எப்படி கணக்குப்பார்க்கின்றார்"

கணக்குப்பார்க்கும் விஷயத்தில் கர்த்தர் தாம் எப்படி கணக்குப்பார்க்கின்றார் தொடர்பாக அவர் கூறும் வார்த்தைகளிலிருந்து நாம் திடம்கொள்வோமாக. "என்னைப் பெலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கின்றேன் (1 தீமோத்தேயு 1:12). "எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகின்றேன். ஏனெனில், நான் நம்பிக்கைக்குரியவன் என்று கருதி அவர் என்னை தம் திருத்தொண்டில் அமர்த்தினார்" (திருவிவிலியம்). ஆ! ஆம், நம்முடைய ஒவ்வொரு வார்த்தைகளையும், நம்முடைய ஒவ்வொரு கிரியைகளையும் கர்த்தர் அறிந்திருந்தபோதிலும், கொஞ்சம் வித்தியாசமான விதத்தில் அதாவது, நம்முடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளைக் காட்டிலும் மேலானதாய் இருக்கும். ஏதோவிதத்தில் நம்முடைய கணக்கைப் பார்க்க அவர் பிரியப்படுவதை நாம் அறிய வரும்போது எத்துணை மனசாந்தியை நமக்குக் கொடுக்கின்றது. நம்முடைய இருதயத்தின் உணர்வுகளை அப்படியே முழுமையாக நம்முடைய வார்த்தைகள் எப்பொழுதும் வெளிப்படுத்துவதில்லை. நம்முடைய நடத்தைகளும், பூரண கோட்பாடுகளுக்குரிய அளவை எட்டுவதில்லை. நாம் வார்த்தைகளைப் பேசின பிற்பாடும், நம்மால் முடிந்தமட்டும் உள்ள கிரியைகளை நாம் செய்த பிற்பாடும், இவைகள் தேவனுக்கு மகிமை சேர்க்கும் விஷயத்தில் குறைவுபட்டுள்ளது என்றும், நாம் முயற்சித்த அளவைக்காட்டிலும் நாம் விரும்பின அளவைக்காட்டிலும் நாம் எண்ணியவைகளைக்

காட்டிலும் குறைவாகவே உள்ளது என்றும், நாம் உணர்ந்திருக்கின்றோம். நம்முடைய குறைபாடுகள் நிறைந்த வேலைகளும்கூட கிறிஸ்துவின் மூலம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதை நாம் அறிய வரும்போது நமக்கு எவ்வளவு ஆறுதலாய் உள்ளது. அதாவது, கர்த்தர் நம்முடைய நோக்கங்களின் அடிப்படையிலும், நம்முடைய சித்தங்களின் அடிப்படையிலும் நம் விஷயங்களைக் கணக்கிடுகின்றார் என்பதை நாம் அறியவரும்போது நமக்கு எவ்வளவு ஆறுதலாய் உள்ளது. அவருடைய நாமத்திற்கு துதி உண்டாவதாக! நம்முடைய குறைபாடுகள் நமது மீட்பருடைய பூரணத்தினாலும், பலியினாலும் மறைக்கப்படுவதும் மற்றும் நம்முடைய இருதயத்தின் நோக்கங்கள், மற்றும் விருப்பங்களின் அடிப்படையில் நமது வேலைகள்/கிரியைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுமாகிய கர்த்தருடைய கிருபையான ஏற்பாடுகள் இல்லையெனில் அவர் அங்கீகரிக்கத்தக்கதான பூரணத்தில் எந்த ஒரு நிலையையும் நாம் அடைவதற்கு நமக்கு எவ்வித வாய்ப்பும் இருந்திருக்காது.

அப்போஸ்தலர் பவுல் தன்னை கர்த்தர் தனது கிரியைகளின்படி அல்லாமல், தனது நோக்கங்களின் அடிப்படையில் கணக்கிட்டுக் கொண்டதால், ஊழியத்தில்/ஊழியம் செய்வதில் பங்கடையத்தக்கதாக தான் பாத்திரவானாக கருதப்பட்டதினிமித்தம் களிக்கூர்ந்தார். நாமும் அவரைப்போன்றே களிக்கூரக்கடவோம். மேலும், இராஜரீக ஆசாரியக்கூட்டத்தாரில் உள்ள அனைவரும் தேவனுடைய சபையிலுள்ள உண்மையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள அனைவரும் தேவனுக்கும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் ஊழியர்கள் பணிவிடைக்காரர்கள் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. கர்த்தர் நம் அனைவரையும் ஊழியத்தில் நியமித்துள்ளார். கர்த்தருடைய நாமத்தை கனப்படுத்தி அவருடைய நீதியை அறிவிப்பதின் மூலம் கர்த்தருக்கு அன்பிலும், பாசத்திலும் பணி செய்யும் ஓர் ஊழியம் உள்ளது. சகோதர சகோதரிகளுடைய புரிந்துகொள்ளுதலின் கண்களை திறக்கச்செய்து கர்த்தருடைய குணலட்சணங்களுடைய நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் அவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவுவதன் மூலம் சகோதர சகோதரிகளுக்குப் பணி செய்யும் ஓர் ஊழியமும் உள்ளது. நம்மில் ஒவ்வொருவருக்கும் மேற்கூறப்பட்டுள்ள இந்த ஊழியங்களில் பங்கு உள்ளது. மேலும், இது ஒரு மாபெரும் சிலாக்கியமாகும். இவ்வூழியம் புறக்கணிக்கப்படுமாயின், இவைகள் புறக்கணிக்கப்படும் அளவிற்கு ஏற்ப நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றத்திலும், குணலட்சணங்களிலும் இழப்புகள் காணப்படும். நாம் இந்த சிலாக்கியத்தை விலையேறப்பெற்ற சொத்தாகக் கருதி, வரவிருக்கிற புதிய வருடத்தில் முன்பிருந்ததைக் காட்டிலும் நமது இராஜாவுக்குரிய ஊழியத்தில் மகா கடின முயற்சியுடன் பயன்படுத்தக்கடவோம்.

"நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த இராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு, தேவன்…" என்று தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள சபைக்கு அப்போஸ்தலர் எழுதுகின்றார் (2 தெசலோனிக்கேயர் 1:5). ஆ! ஆம், இதுவும் கர்த்தருடைய கணக்கிடுதலில் ஒன்றாகும். நாம் தேவனுடைய இராஜ்யத்திற்குப் பாத்திரவான்கள் அல்ல. எந்த மனுஷனும் பாத்திரவானல்ல. ஆனால், கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்களை பாத்திரவான்களாகக் கருதப்படும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார். இதை அவர் தமது சொந்த பலியின் புண்ணியத்தின் மூலம் செய்வார். மேலும், இதன் வாயிலாக நீதியின் பூரணமான கிரியைகளுக்கு பதிலாக நம்முடைய சித்தங்களும், நம்முடைய நோக்கங்களும் ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது. இப்படி தாராளமாக நாம் கருதப்படுவதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக! இது நம்மை உற்சாகப்படுத்தட்டும். மேலும், இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்கள் என்று நமது கர்த்தரால் கணக்கிடுபவர்கள் இராஜ்யத்திற்காக பாடுகள் அநுபவிக்கின்றவர்களாக இருப்பார் என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும் நாம் நினைவில் கொள்வோமாக. ஆகவே, தெய்வீக வார்த்தைக்கும், திட்டத்திற்கும் இசைவான, நியாயமான, விவேகமானவிதத்தில் இராஜ்யத்தினிமித்தம் பாடுபடுவதற்கு நாம் நாடக்கடவோம்.

நாம் முட்டாள்தனமான காரியங்களைச் செய்துகொண்டு, முட்டாள்தனமானவிதத்தில் பாடுபடுவதற்கு நாடக்கூடாது. இப்படியாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான எந்த மாதிரியையும் நாம் கர்த்தருடைய விஷயத்திலும், அப்போஸ்தலர்களுடைய விஷயத்திலும் பார்க்கமுடியாது. நாம் இரத்தசாட்சியாக மரிப்பதின் மூலம் அல்லது சரீர துன்புறுத்தலின் வாயிலாக பாடுபட வேண்டும் என்ற அவசியமும்கூட இல்லை. அநேகமான நமது உணர்வுகள் புண்படுத்தப்படும் விதத்தில் நம்முடைய பாடுகள் காணப்படலாம். "அக்கிரமக்காரர்கள்…தங்கள்

நாவை பட்டயத்தைப்போல் கூர்மையாக்கி மறைவுகளில் உத்தமன் மேல் எய்யும்பொருட்டு கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றும்" போது, உணர்வுகள் புண்படுகின்றது (சங்கீதம் 64:2-3). "நிந்தைகளாலும், உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள்" (எபிரெயர் 10:33-35). "சிலவேளைகளில் நீங்கள் இகழ்ச்சிக்கும், வேதனைகளுக்கும் ஆளாகி வேடிக்கைப் பொருளானீர்கள். வேறுசில வேளைகளில் இந்நிலைக்கு ஆளானோரின் துன்பங்களில் பங்குப்பெற்றீர்கள்" (திருவிவிலியம்) என்று அப்போஸ்தலர் கூறும் பாடுகளைக்காட்டிலும் நம்முடைய பாடுகள் இன்னும் குறைவாகக்கூட காணப்படலாம். பாடுபடுவதற்குரிய சிலாக்கியமாகிய இந்த நல்ல ஆஸ்தியை எபிரெயர் 10:35-ம் வசனத்திலுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்த வண்ணமாக நாம் கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், சகோதர சகோதரிகளோடு கொஞ்சம் பாடுகள் படுவதற்கான சிலாக்கியம் நமக்கு அருளப்பட்டிருக்கிறபடியால், களிக்கூர்ந்து வரும்வருடத்தில் அதை பயன்படுத்துவோம் என்று தீர்மானம் எடுப்போமாக. தேவன் அருளியுள்ள வாக்குத்தத்தங்களின்படி நாம் அவர் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று விரும்புகின்றார். மேலும், இப்படியாக வைக்கப்படும் விசுவாசத்திற்கு பலனையும் அருளுவார்.

"நம்முடைய தேவன் உங்களை தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்" என்று அப்போஸ்தலரின் வார்த்தைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து ஆவிக்குரிய கணக்குப்பார்க்க வேண்டும் என்ற இந்த புத்திமதி குறித்ததான பாடத்தை நாம் நிறைவு செய்கின்றோம் (2 தெசலோனிக்கேயர் 1:11). கர்த்தருக்குள் எங்களுக்கு அன்பாய் இருப்பவர்களே இதுவே உங்களுக்கான எங்களுடைய ஜெபமாய் இருக்கின்றது. இந்த சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய குமாரனோடு இராஜ்யத்தில் உடன்சுதந்தரராகும்படிக்கான மகா பரம அழைப்பிற்கு நம்மை பாத்திரவான்களாக கர்த்தர் கருதுவதைவிட வேறு எந்த காரியத்தை நம்மால் விண்ணப்பிக்கக்கூடும்? எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அவர் நம்மை பாத்திரவான்களாகக் கருதுவார் என்பது தொடர்பான அவருடைய உறுதியும் நமக்கு உள்ளது. அவர் வைக்கும் நிபந்தனைகள் உண்மையில் மிகவும் நியாயமானதாகத்தான் உள்ளது. இன்னுமாக, இந்த நிபந்தனைகளை சந்திக்கும்படிக்கு நாம் செலுத்தும் பலிகள், நாம் கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும் சரியான வைராக்கியத்தினால் நிரப்பப்பட்டவர்களாக காணப்படுவதுவரையிலும், உண்மையில் நமக்கு நஷ்டமும், தூசியுமாகவே தோன்றும்/இருக்கும். இன்னுமாக, நாம் பெற்றுக்கொள்வதற்கு அதாவது, கிறிஸ்துவுக்குள்ளான கிருபையான நிபந்தனைகளுக்கேற்பப் பெற்றுக்கொள்வதற்கு நம்மை பாத்திரவான்கள் என்று நிரூபிப்பதற்கும் நமது பரம பிதா அழைத்துக்கொடுக்கும் இந்த நல்ல காரியங்களை அவர் அதிருப்தியுடன் கொடுக்காமல் அதை கொடுப்பதற்கு மிகவும் பிரியப்படுகின்றார் என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும் கவனியுங்கள். ஒரு காலத்தில் தேவனுடைய வார்த்தைகளை தவறாய் புரிந்துகொண்டிருந்த நாம் நமது பரம பிதாவானவர் இரக்கமற்றவரானப்படியினால், அதிக ஆசீர்வாதங்களைக் கொடுக்க விரும்பவில்லை என்றும், அந்த கொஞ்சம் ஆசீர்வாதங்களையும்கூட அவர் சொற்ப பேருக்கு மாத்திரம் கொடுக்கின்றார் என்றும், அந்த கொஞ்சம் ஆசீர்வாதத்தைக்கூட கொடுப்பதில் அவருக்கு விருப்பமில்லை என்றும், இக்கொஞ்சம் ஆசீர்வாதங்களையும் கூட அவர் இயேசுவின் வலுக்கட்டாயத்தினால்தான் வழங்கினார் என்றும், மீதமான, பெரும்பான்மையான ஜனங்கள் நித்தியகாலமும் துன்பத்தில் இருக்கத்தக்க இவர்களை பிசாசுகளிடத்தில் ஒப்புவித்துவிட வேண்டும் என்று தீர்மானத்துடன் காணப்பட்டார் என்றும், உள்ள கற்பனைகளில் காணப்பட்டிருந்தோம். நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, அதன் மூலம் இப்பொழுது நம்முடைய பிதாவை அறிந்துகொள்ளவும், அவருடைய வியக்கத்தகு திட்டத்தை ஓரளவுக்குப் புரிந்துகொள்ளவும் முடிந்தபடியால் தேவனுக்கு நன்றி!

நாம் பெற்றுக்கொள்ளும்படிக்கு அழைக்கப்பட்ட இந்த கிருபையான காரியங்கள்/பங்குகள், "அவருடைய தயவுள்ள சித்தமாய்" இருக்கின்றது என்பதை நம் இருதயத்தில் பதியவைப்போமாக. நாம் பாவிகளாகவும், அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் இருந்த போதே, தேவன் நம்மை அன்புகூர்ந்தார் என்றால் இப்பொழுது நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலம் நாம் பிதாவுடன் உறவிற்குள் வந்திருக்கும் போதும், நாம் மாம்சத்தின்படி நடக்க நாடாமல், ஆவியின்படி நடக்க நாடும் போதும் பிதாவினுடைய நேசக்குமாரனும், நமது கர்த்தருமாய் இருப்பவருடைய

சாயலை அடைய நாடும் போதும், அவருடைய பரிசுத்த ஆவியினால் நாம் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கும் போதும், பிதா நம்மை எவ்வளவாய் அன்புகூருவார் என்பதை நினைவுகூர்ந்து நல்ல ஒரு தைரியத்துடன் இந்த புதிய வருடத்திற்குள் நாம் பிரவேசிப்போமாக. "இவையனைத்தும் நம்முடையவைகள், ஏனெனில், நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள், கிறிஸ்து கடவுளுக்குரியவர்" என்று நாம் விசுவாசத்துடன் கூறமுடியும் (1 கொரிந்தியர் 3:22-23). ஆமென்!

---

# ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள்

நம்முடைய பாடத்தில் தீர்க்கத்தரிசிகள் மற்றும் போதகர்களுக்கு இடையில் வித்தியாசம் காட்டப்படுவதை நாம் பார்க்கின்றோம். "தீர்க்கத்தரிசி" என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதற்கான கிரேக்க வார்த்தை "முன்னறிவிப்பவர்" என்னும் அர்த்தத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது வரவிருக்கும் நிகழ்வுகளை முன்கூட்டியே சொல்பவரை அல்லது முன்னறிவிப்பவரை அல்லது தீர்க்கத்தரிசனமாய் உரைப்பவரைக் குறிப்பதாகப் புரிந்துகொள்ளப்படலாம்; ஆனால் புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தைப் பொதுவாய்ப் பயன்படுத்தப்படுகையில் அது கர்த்தருடைய செய்தி கூறுவதை, அதாவது பிரகடனப்படுத்துவதை, பொதுவிடங்களில் போதிப்பதை அல்லது ஜனங்களுக்கு முன்பாக நின்று அறிவிப்பதைச் சுட்டிக்காட்டுவதாய்த் தெரிகின்றது. தீர்க்கத்தரிசிகள் மற்றும் போதகர்களுக்கு இடையிலான வித்தியாசம் என்னவெனில் - தீர்க்கத்தரிசி என்பவர் பொதுவிடங்களில், முறையான தூது கொடுக்கும் விதத்தில் சத்தியத்தைப் போதிப்பதற்கானத் தாலந்துகளையும், திறமைகளையும் இயல்பாகவே கொண்டிருக்கும் நபராவார்; ஆனால் போதகர்கள் என்பவர்கள் உபதேசிப்பதற்கெனத் தாலந்தையுடையவர்கள், ஆனால் வெளியிடங்களில் உபதேசிப்பவர் அல்ல அல்லது பிரசங்கம்/சொற்பொழிவு ஆற்றும் விதத்தில் உபதேசிப்பவர் அல்ல. இதே வித்தியாசமானது கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது; வெகுசிலரே பொதுவில் பேசிடுவதற்கு - கூட்டத்தாருக்கு உண்மையாய் உதவிகரமாய் இருக்கும் விதத்தில், முறையான விதத்தில் தூது கொடுப்பதற்கான தகுதிகளை உடையவர்களாய் இருக்கின்றனர். பொதுவில் தூதுகொடுப்பதற்கான திறமையில்லாத வேறு சிலர், பொதுவின் தன்மையில் இராத வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் முதலானவைகளில் சத்தியத்தினை முன்வைத்திடுவதற்கான தாலந்துகளையுடையவர்களாய் இருக்கின்றனர்.

கர்த்தரே தாம் நலமானது என்று காண்கிறதற்கு ஏற்ப தாலந்துகளை அருளுவார் மற்றும் ஒவ்வொரு தனிநபரும் மற்றும் ஒட்டுமொத்தச் சபையும் தாங்கள் பெற்றிருப்பதாகக் கண்டுகொள்ளும் தாலந்துகளைப் பயன்படுத்திடுவது அவர்களுக்கான காரியமாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சிறுசிறு கூட்டத்தார் தாங்கள் வெளியிடங்களில் பிரசங்கிக்கும் ஊழியத்தை நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கிறவர்களாகவும் மற்றும் அதை நடத்தியே ஆக வேண்டும், அதாவது அருமையாகவோ அல்லது மோசமாகவோ, எப்படியாக இருப்பினும், அதை நடத்தியாக வேண்டும் என்று முயற்சிக்கிறவர்களாகவும் இருக்கக் கூடாது. மாறாக இது விஷயத்தில் கர்த்தருடைய மனதை அறிந்துகொள்வதற்கும், கர்த்தருடைய வழிநடத்துதல்களானது தங்களுக்குச் சாத்தியமாக்கிடும், மற்றும் தங்களுக்குத் தகுதியானதாக்கிடும் அத்தகைய கூட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நாடிட வேண்டும். ஒருவேளை ஒரு சபையார் மத்தியில் ஒன்று அல்லது இரண்டு அல்லது அதிகமான சகோதரர்கள் போதிக்கும் திறமையுடையவர்களாக இருப்பார்களானால் - சபைக்கான ஆராதனைகளை நடத்திடவும், வேதாகம வகுப்பில் சகோதரர்களிடமிருந்து கேள்விகளையும், பதில்களையும் வரவழைக்க முடிகிறவர்களையும், வேதாகம ஆராய்ச்சியில் மற்றவர்களோடுகூடத் தன்னுடைய கருத்துக்களையும் கொடுக்கிறவர்களாகவும் இருப்பார்களானால், இத்தகைய சகோதரர்களைச் சபையானது பயன்படுத்திட நாடவேண்டும். மேலும் ஒருவேளை பொதுவில், சொற்பொழிவு விதத்திலான பிரசங்கங்களைக் கொடுப்பதற்கான தாலந்தையுடையவர்கள் ஒருவரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களோ காணப்படுவார்களானால், அத்தகையவர்கள் விரும்புவார்களானால் அவர்களையும் ஊழியத்தில் ஈடுபடுத்திடுங்கள். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொருவனுடைய ஆவிக்குரிய மற்றும் சுபாவத்தின்படியான திறமைகள் மற்றும் வளர்ச்சிக்கேற்ப சபையானது அதன் பல்வேறு அங்கத்தினர்கள் அனைவரையும் வளர்த்துவதும், பயன்படுத்துவதும், பயிற்றுவிப்பதும் சபையினுடைய நோக்கமாகக் காணப்பட வேண்டும்.

---

# நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல்

### அப்போஸ்தலர் 14:8-19

*"நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி." (2 தீமோத்தேயு 2:3)*

பிசீதியா நாட்டிலுள்ள, அந்தியோகியாவை விட்டுப் புறப்பட்டு, பவுலும், பர்னபாவும் 100 மைல் தொலைவிலுள்ள இக்கோனியா பட்டணத்திற்குப் போனார்கள். அங்கும்கூட அவர்கள் வசனத்தை உண்மையாய்ப் பிரசங்கம் பண்ணினார்கள் மற்றும் அங்கும்கூட எதிர்ப்புகள் எழும்பி, துன்புறுத்தல்கள் அச்சுறுத்தின; "இவர்களை அவமானப்படுத்தவும் கல்லெறியவும் வேண்டுமென்று, புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளிபண்ணுகையில், இவர்கள் அதை அறிந்து, லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப்போய்விட்டனர்;" (அப்போஸ்தலர் 14:5-6) தைரியத்துடனும், திடமனதுடனும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதைப் பயமானது தடைப்பண்ணுவதற்கு, இவர்கள் தங்களில் அனுமதித்திடவில்லை; அவர்கள் அச்சுறுத்தல்களைக் குறித்தும் பயப்படவில்லை; ஆனால் துன்புறுத்தலானது உறுதியடைந்தபோது, அவர்கள் தாமதிக்காமல், ஓடிப்போய்விட்டனர். அவர்கள் ஏன் காத்திருந்து, அற்புதகரமான ஏதோ ஒரு விடுதலையைக் கர்த்தர் தங்களுக்குத் தருவார் என்று எதிர்ப்பார்த்திருக்கவில்லை? தேவனுடைய வல்லமையா அல்லது சாத்தானுடைய வல்லமையா, எது பலமுள்ளது என்று பார்ப்பதற்கு, தங்களை எதிர்ப்பவர்களுக்கு அவர்கள் ஏன் அறைகூவல் விடவில்லை? தெய்வீகச் சித்தம் குறித்து அவர்கள் நன்கு போதிக்கப்பட்டிருந்ததே காரணம் என்று நாம் பதிலளிக்கின்றோம். அவர்கள் கர்த்தருடைய அறிவுரைகளைப் பின்பற்றிக் கொண்டிருந்தனர். "துன்புறுத்துதல்களைக் கண்டு பயப்படுங்கள்; உங்கள் நற்செய்தியை நிறுத்தி வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் உங்கள் வெளிச்சத்தை மரக்காலால் மூடிவையுங்கள்" என்று அவர்களிடத்தில் அவர் கூறவில்லை; இதற்கு நேர்மாறாகவே அவர் கூறியிருந்தார். "எந்த அபாயமும் இல்லாதபோது, பயந்து ஓடிப்போய்விடுங்கள்" என்றும் அவர் கூறவில்லை; மாறாக அவரோ: "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால், மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" என்றே கூறியுள்ளார்.

லீஸ்திராவை வந்தடைந்து, ஏதோ தங்கள் முன் எந்த எதிர்ப்புகளுமே இல்லாததுபோன்று தைரியத்துடன், சுவிசேஷத்தின் பிரசங்கமானது மீண்டுமாகத் துவங்கப்பட்டது. கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவன் சப்பாணியாகக் காணப்பட்டான்; அநேகமாக யூதனாகவோ அல்லது யூத மார்க்கத்தமைந்தவனாகவோ காணப்பட்டிருக்க வேண்டிய இவன், அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கான மிகுந்த ஆர்வத்தினை வெளிப்படுத்தினவனாக இருந்தான். இதைப் பவுலடிகளார் உணர்ந்தவராகவும், அந்த மனுஷன் விசுவாசத்தைப் பெற்றிருப்பதைக் கண்டவராகவும், தனது பிரசங்கத்தைச் சற்று நிறுத்தி, ஒருபோதும் நிமிர்ந்துநிற்க முடியாதவனாகிய அந்த மனுஷனை நோக்கி: "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்" என்று உரத்த சத்தத்தில் சொன்னார். அவசியமான விசுவாசத்தினை அவன் பெற்றிருந்தவனாய்க் காணப்பட்டு, அப்போஸ்தலனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான்; மற்றும் இப்படியாக நிச்சயமாய் அங்குக் கூடியிருந்தவர்கள் யாவரும் ஆச்சரியம் அடையத்தக்கதான அற்புதம் நிகழ்ந்தது. இதன் தாக்கம் ஜனங்கள்மீது ஆற்றல்மிக்கதாய்க் காணப்பட்டது மற்றும் அவர்கள் அவர்களது பேச்சு வழக்கில் "தேவர்கள் நம்மைச் சந்திக்க இறங்கி வந்திருக்கிறார்கள்!" என்று சத்தமிட்டுச் சொன்னார்கள்.

லீஸ்திரா பட்டணமானது புராணக்கதை நிகழ்வு ஒன்று நடந்திட்ட பட்டணமாக திகழ்ந்தது; புராணக்கதை தேவர்களில் இருவராகிய மெர்க்குரி மற்றும் யூப்பித்தர் ஒருமுறை மனித ரூபத்தில் தங்கள் பட்டணத்திற்கு வந்தார்கள் என்றும், அவர்கள் வந்தபோது எங்குமே அவர்களுக்குத் தங்க இடமளிக்கப்படவில்லை என்றும், ஏழை ஒருவன் அவனால் முடிந்த மட்டும் அவர்களைத் தனது ஏழ்மையான குடிசையில் உபசரித்தான் என்றும், அவனுடைய குடிசையை, அழகான கோயிலாக மாற்றிடுவதன் மூலம் அவர்கள் அவனுக்கு கைமாறு செய்தனர் என்றும், பட்டணத்திலுள்ள மற்றவர்களை வெள்ளத்தினால் தண்டித்தார்கள் என்றும் இப்பட்டணத்திற்கான பாரம்பரிய நம்பிக்கைக் காணப்படுகின்றது. இந்தப் பாரம்பரிய

நம்பிக்கைகளானது மிகவும் பழமையானவைகளாகும்; எனினும் பட்டணத்தினுடைய வாயிலில், அதன் பாதுகாக்கும் கடவுளெனக் காணப்படும் யூப்பித்தரின் விக்கிரகத்தினால், இந்நம்பிக்கைத் தொடர்ந்து நீடித்துக்கொண்டிருந்தது. எப்படி மூடநம்பிக்கையையும், அறியாமையையும் பெற்றிருந்த ஜனங்கள் - பாரம்பரியத்திடமிருந்து பெற்றுக்கொண்டதான யூபித்தர் மற்றும் மெர்க்குரியின் வருகையினுடைய இன்னொரு வருகைதான் பவுல் மற்றும் பர்னபாவின் இந்த வருகை என்று முடிவு செய்ய முடிந்தது என்பது எளிமையாய்ப் புரிந்துகொள்ளப்படலாம். அவர்கள் பவுலை மெர்க்குரி என்று அழைத்தார்கள், காரணம் அவர்களது பாரம்பரியத்தின்படி, மெர்க்குரி பிரசங்கியாய்க் காணப்பட்டார் மற்றும் பர்னபாவை யூபித்தர் என்று அழைத்தார்கள்; பர்னபா மற்றும் பவுலின் உருவில், தங்கள் மத்தியில் மனுஷர்களாகத் தேவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தாங்கள் எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு மரியாதைச் செலுத்தும் விதமாக - அவர்களது பட்டணத்து வாசலண்டையிலுள்ள யூபித்தரின் சிலைக்கு எருதைப் பலிச்செலுத்திட யூபித்தருடைய பூஜாசாரி ஏற்பாடு பண்ணினான்.

பட்டணத்திலுண்டான பரபரப்பைக் குறித்தும், செலுத்தப்படவிருக்கின்ற பலிக் குறித்தும் கேள்விப்படுவதற்கு முன்பு வரையிலும், அநேகமாக அந்த ஊழியக்காரர்கள் மிகவும் ஆர்வமாய்க் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்குப் பிரசங்கித்தும் மற்றும் அமைதியாய் விளக்கிக்கொண்டும் இருந்திருக்க வேண்டும். ஜனங்களுடைய மூடநம்பிக்கையை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, தங்களை ஏதோ மாபெரியவர்கள் போன்று காண்பித்துக்கொள்வதற்கு ஒரு கணம்கூடச் சிந்திக்கவில்லை; இல்லையேல் தேவன்தான் யூபித்தர் என்றும், இயேசுதான் மெர்க்குரி என்றும், தாங்கள் அவர்களது பிரதிநிதி என்றும் கூறி, அந்நிகழ்வை சத்தியத்திற்கு ஊழியம் புரிவதற்கேதுவானதாக மாற்றிக்கொள்வதற்கும் அவர்கள் முற்படவில்லை. மாறாக ஜனங்கள் இப்படியாகச் செய்யாதபடிக்கு அவர்கள் மிகவும் கருத்தாயும், தாழ்மையாயும் வேண்டிக்கொண்டார்கள் மற்றும் தாங்கள் அந்த ஜனங்களைப் போலவே "பாடுள்ள மனுஷர்களாக," பூரணமற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்றும், அந்த ஜனங்கள் யூகித்தவைகளுக்கு நேர்மாறானவைகளாகவே தங்களது பணி காணப்படுகின்றது என்றும், யூபித்தரும், மெர்க்குரியும், அந்த ஜனங்களின் புராண கதைகளும் வெறும் கற்பனைகளினாலும், அறியாமையினாலும், மூடநம்பிக்கையினாலும் மாத்திரம் உண்டானவைகளேயாகும் என்றும் அந்த ஜனங்களுக்கு விளக்கினார்கள். ஜனங்கள் முழுப்பரவசத்தில் பலிகளை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் ஜனங்களுக்குள்ளாக ஓடினார்கள் மற்றும் சிரமப்பட்டு, தாங்கள் ஒன்றுமில்லாதவர்கள் என்று வலியுறுத்தி எதிர்த்துப் போராடி, தங்களை மரியாதைப்பண்ணும் விதத்தில், ஜனங்கள் பலிச் செலுத்துவதைத் தடைப்பண்ணினார்கள். அவர்கள் உயர்ப்பண்புள்ள மனிதர்களாகக் காணப்பட்டனர் மற்றும் இந்த ஊழியத்திற்கு அவர்களை அனுப்பிடுவதற்கான தெய்வீகத் தேர்ந்தெடுத்தலிலுள்ள ஞானத்திற்கு, அவர்கள் கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் கொண்டிருந்த உண்மையானது சான்று பகருகின்றது.

இந்தச் சம்பவத்திலிருந்து, கர்த்தருடைய ஸ்தானாபதிகளாகவும், பிரதிநிதிகளாகவும், சத்தியத்தைப் போதிப்பவர்களாகவும் எவ்விதத்திலாகிலும் காணப்படுகின்றதான கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் உதவிகரமான படிப்பினையைப் பெற்றுக்கொள்ளலாம். சத்தியமானது விசேஷமாக நம்முடைய நாளில் விளங்கும் வெளிச்சத்தில் மிகவும் அற்புதகரமாகவும், மிகவும் ஒளிமிக்கதாகவும் காணப்படுகின்றபடியால், அது இயல்பாகவே அதன் பிரதிநிதிகளினிடத்தில் அதன் ஒளியினைக் கொஞ்சம் பிரகாசிக்கப்பண்ணுகின்றதாய் இருக்கின்றது என்பதினால், மனுஷர்கள் ஆச்சரியமடைந்து, முற்காலத்தார் கூறினதுபோன்று, "இம்மனுஷனுக்கு இந்த ஞானம் எப்படி வந்தது? என்று கூறுவதற்கு ஏதுவாய் இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் இது கர்த்தருடைய ஸ்தானாபதிகள் ஏற்றுக்கொள்வதற்குப் பாத்திரமற்ற, தகுதிக்கு மிஞ்சின மதிப்புக் கொடுக்கப்படுவதற்கும், தகுதிக்கு மிஞ்சின கனம் சாற்றப்படுவதற்கும், அளவுக்கு மீறின மரியாதைக் கொடுக்கப்படுவதற்கும், வழிநடத்திடலாம் மற்றும் லீஸ்திரா ஜனங்கள் பவுல் மற்றும் பர்னபா மீது சாற்றவிருந்த கனங்களை ஏற்க மறுத்திட்டதுபோன்று, இவற்றைக் கர்த்தருடைய ஸ்தானாபதிகள் உடனடியாகவும், முற்றும் முழுவதுமாகவும் மறுத்துத் தள்ளிவிட வேண்டும். உலகத்தின் கண்ணோட்டத்தில், இப்படியாகச் செய்வது என்பது ஞானமற்ற நடக்கையாகக் காணப்படும்; தகுதிக்கு மிஞ்சினப் புகழையும் மற்றும் முகஸ்துதிப் பேச்சையும், கனத்தையும் ஏற்றுக்கொள்பவர்கள், எதிராளியானவனால் அப்பாதையில் ஓரளவுக்கு செழித்தோங்கப் பண்ணப்படுவார்கள் மற்றும் உலகத்தின் ஆவியானது உலகப்பிரகாரமான கதாநாயகர்களை, யூபித்தர்களை, எலியாக்கள் முதலானோர்களைத் தொழுது கொண்டிட விரும்பும் என்றும் உணர்ந்துகொள்வார்கள். ஆகையால் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கான ஒரே ஞானமுள்ள நடத்தையானது, நம்முடைய பாடத்தில் இடம்பெறும் இந்த ஊழியக்காரர்களால்

பின்பற்றப்பட்டதுபோல, முழுமையாக ஏற்க மறுப்பதேயாகும்; தாங்களும் மற்றவர்களைப்போன்று பாடுள்ள மனிதர்கள் என்று தெரிவிப்பதாகும்; தங்களை மறைத்துக்கொள்வதற்கும் மற்றும் தாங்கள் முற்றிலுமாகப் பொருட்படுத்தப்படாமல் போவதற்கும் என்று தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தினை உயர்த்திப்பிடித்துக் கொள்வதாகும். இது இப்பொழுது கர்த்தர் கூட்டிச்சேர்த்துக்கொண்டிருக்கின்றதான உண்மையான தேவ பிள்ளைகளைக் கண்டுபிடித்தல் மற்றும் அவர்களது வளர்ச்சி தொடர்புடையதான காரியத்திற்கு மாத்திரம் நன்மை பயக்கின்றதாய் இராமல், இது கர்த்தருடைய ஸ்தானாபதிகளுக்கும்கூட நன்மை பயக்கின்றதாய் இருக்கும்; ஏனெனில் இப்படியான விதத்தில் இவர்கள் கர்த்தருடைய கிருபையிலும், அவருக்கு ஒத்த சாயலிலும் - இதன் பிரதான அம்சமாகிய தாழ்மையிலும் வளருகின்றவர்களாய் இருப்பார்கள். இப்படியாக இவர்கள் அவருடைய அன்பில் நன்கு தரித்திருந்து, இறுதியில் தற்கால சூழ்நிலைகளின் கீழ் உண்மையுடனும், தாழ்மையுடனும் காணப்படுகின்றதான தேவனுடைய பிள்ளைகள் யாவருக்கும், அவரால் வாக்களிக்கப்பட்டுள்ளதான இன்னும் மேலான உயர்த்தப்படுதலை அடைகின்றவர்களாய் இருப்பார்கள்.

லீஸ்திராவின் ஜனங்களிடம், அவர்களது எண்ணங்களானது, வீணானவைகள் என்று எடுத்துக் கூறுகையில், இது கேட்டுக்கொண்டிருப்பவர்களது தயவினை தனக்குப் பெற்றுத் தராது என்று அப்போஸ்தலன் நன்கு அறிந்திருந்தார்; காரணம் நம்முடைய அறிவீனங்கள் குறித்துச் சொல்லப்படுவதை மனுஷீக சுபாவமானது ஏற்றுக்கொள்கிறதில்லை. அவர்களது தயவினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் அவர் - அவர்கள் மிகவும் ஞானமாய் நடந்துகொண்டார்கள் மற்றும் அவர்கள் மிகவும் சரியாய் நடந்துள்ளார்கள் என்றெல்லாம் கூற வேண்டியிருந்திருக்கும் - அதாவது பொய்க்கூற வேண்டியிருந்திருக்கும். நேர்மையுடன் காணப்படுவதற்கும், சத்தியத்திற்கு ஊழியம் செய்திடுவதற்குமான அவரது பிரயாசத்தில், அவர் அவர்களது அதிருப்திக்கும், கோபத்திற்கும் ஆளானார்; மேலும் இதை முன்கூட்டியே அவர் அறிந்திருந்தார் மற்றும் என்ன விளைவு உண்டாகுமென எதிர்ப்பார்க்கலாம் என்றும் அறிந்திருந்தார். எனினும் தேவனுடைய வாய்க்கருவியென/பிரதிநிதியென, தனக்கும் மற்றும் தன்னுடைய வேலைக்குமான பலன் என்னவாக இருப்பினும், முழுச்செய்தியையும் சொல்லுவதை அவர் தவிர்த்துவிடவில்லை. இங்குக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் நல்ல படிப்பினைகள் காணப்படுகின்றது. நமக்கொத்த விலையேறப்பெற்ற விசுவாசத்திலும் மற்றும் கீழ்ப்படிதலிலும் காணப்படுபவர்கள் மத்தியில், சத்தியத்திற்கு உண்மையாய்க் காணப்படுவதற்கும் மற்றும் சிலுவையின் போர் வீரர்களாய் இருப்பதற்கும் ஒப்பிட்டுப்பார்க்கையில் குறைவான தைரியமே தேவையாயிருக்கும்; ஆனால் மனுஷரிடத்திலிருந்து வரும் தகாத கனத்தினை நாம் ஏற்க மறுக்கையில், இந்த மறுத்தலானது, அவர்களது கனத்தையும், தோழமையையும் நாம் இழக்கச் செய்திடுவது மாத்திரமல்லாமல், நம்மை அவர்களது பார்வையில் இழிவானவர்களாக்கிவிடும் என்றும், அவர்களை நம்முடைய சத்துருக்களாக்கிவிடும் என்றும் நாம் முன்கூட்டியே அறிந்திருக்கும் நிலையில், தகாத அவர்களது கனத்தினை ஏற்க மறுப்பதற்கு அதிகளவிலான தைரியம் அவசியமாயிருக்கும். சிலுவையின் உண்மையான போர்ச்சேவகர்களுக்கு இன்னமும் அதே சோதனை காணப்படுகின்றது மற்றும் இன்னமும் தீங்கனுபவித்தல் - அதாவது கர்த்தருடைய ஊழியத்தில் தீங்கனுபவிக்கும் அனுபவம் - அதாவது இவைகளை அனுபவித்து, கர்த்தருக்குள் சந்தோஷமாய் ஜெயங்கொள்ளும் அனுபவம் அவசியப்படுகின்றது. கிறிஸ்துவில் குழந்தைகளாக இருப்பவர்கள், பெலவீனர்கள், சோதனைக்குள்ளாகாதவர்கள், சோதனைக்குள்ளும், அனுபவங்களுக்குள்ளும், குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்குள்ளும் கடந்துசெல்லாதவர்கள் - உறுதியடையாதவர்களாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இம்மாதிரியான அனுபவங்களில் நிலைநிற்க முடியாதவர்களாய் இருப்பார்கள். ஆகையால்தான் சபையில் ஓர் ஊழியத்திற்கு முறையாய் உயர்த்தப்படும் விஷயமும்கூட நூதன சீஷனுக்குக் கொடுக்கப்படக்கூடாது என்று அப்போஸ்தலன் ஆலோசனை கூறுகின்றார்; ஒருவேளை கொடுக்கப்பட்டால் நூதன சீஷன் இறுமாப்படைந்து, தனக்கும், மற்றவர்களுக்கும் பாதகம் ஏற்படுத்துகின்றவனாய் இருப்பான் (1 தீமோத்தேயு 3:6). எப்படிச் சகோதரர்களிடமிருந்து அல்லது மற்றவர்களிடமிருந்து வருகின்ற தகுதியான கனங்களைச் சரியாய் ஏற்றுக்கொள்வது மற்றும் மதித்திடுவது அல்லது தகுதியற்ற கனங்களையும், மரியாதைகளையும் ஏற்க மறுத்துவிடுவது என்பதை அறிந்துகொள்வதற்குக் காலமும், அனுபவமும் அவசியமாய் இருக்கின்றது.

லீஸ்திரா ஜனங்கள் பலிச் செலுத்திட வந்திட்ட இந்த நிகழ்வினைத் தொடர்ந்து, ஒருவேளை இப்படிச் சோதனையான அனுபவம் தொடரவில்லையெனில், யாருக்குத் தெரியும், ஒருவேளை அப்போஸ்தலன் - சுபாவத்தின்படியான எந்த மனுஷனும் தன்மீது கனங்கள்

குவிக்கப்படும்போது அதை மனமாற துறக்கையில் தன்னில் மனநிறைவு கொள்வது போன்று - மனநிறைவு கொண்டிட வாய்ப்பிருந்திருக்கலாம். அவர் தனது குணலட்சணத்தினுடைய பெலத்தில் மேன்மைப்பாராட்டிட வாய்ப்பிருந்திருக்கும்; ஆனால் அவரது அனுபவங்களோ அவரை வேறுமாதிரி வழிநடத்தினதாய் இருந்தது; மற்றும் இதைக் குறித்து அவர் பிற்பாடு, "உபத்திரவங்களிலே மேன்மைப் பாராட்டுகிறோம்" என்று எழுதினார். இங்குக் கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் அனைவரும் நற்படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம்; தங்களுடைய அனைத்துக் காரியங்களிலும் - சாதகமாய்த் தோன்றும் காரியங்களில் மாத்திரமல்லாமல், சாதகமற்றதாயும், துன்பங்கள் விளைவிக்கிறதாயும் காணப்படும் காரியங்களிலும்கூட உள்ள கர்த்தருடைய வழிநடத்துதலை விசுவாசித்திடுவதற்குக் கற்றுக்கொள்ளலாம். பவுலடிகளார் தம்முடைய ஊழியத்திற்கெனத் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாய் இருக்கின்றார் என்று அவரைக் குறித்துக் கர்த்தர் கூறுகையில், "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்றார். இப்பாடத்திலிருந்து நாம் உணர்ந்துகொள்வது என்னவெனில்; கர்த்தருடைய ஊழியக்காரர்கள் (தவறு செய்ததற்காக இல்லாமல்; கோபம், பகைமை, துர்க்குணம், சண்டை, புறங்கூறுதல் காரணமாக இல்லாமல்; அவர் நிமித்தமாக) அவருடைய நாமத்தினிமித்தமாகப் பாடுபடுவதற்கு அனுமதிக்கப்படும்போது அது - நிழலில் ஆபேலுடைய பலியானது நெருப்பினால் அங்கீகரிக்கப்பட்டதுபோன்று - அவர்களது பலி அங்கீகரிக்கப்பட்டது என்ற கர்த்தருடைய தயவிற்கான உறுதி/சான்று அளித்தலாக இருக்கும்.

---

பெயர்க்கிறிஸ்தவ அமைப்புகளில், சபையார் மத்தியிலுள்ள ஒரே அங்கத்தினனைக் கொண்டு பிரசங்கம் அனைத்தையும், போதித்தல்கள் அனைத்தையும் செய்திடும் வழக்கமானது, மிகுதியான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள ஒன்றாய் இருக்கின்றது; இது சபை இரண்டு வகுப்பினராய் - குருமார் வகுப்பார் மற்றும் சாதாரணமானவர்கள் வகுப்பாரென்று பிரிவுப்படுவதற்கு ஏதுவாயிற்று; இன்னுமாக இது இந்தத் தற்கால ஜீவியத்தின் காரியங்கள் மீது கவனம் செலுத்த முடியாத அளவுக்கும், மனுஷர் முன்பாக யோக்கியமானவைகளைச் செய்யமுடியாத அளவுக்கும் சொற்ப எண்ணிக்கையில் காணப்படும் குருமார் வகுப்பார் மீது அதிகப்படியான வேலையினைக் குவித்துவிட்டதாய் இருக்கின்றது; மற்றும் பெரும்பான்மையான கர்த்தருடைய ஜனங்களிடமிருந்து, அவர்களது பொறுப்பினையும், ஊழியத்தில் அவர்களுடைய பங்கினையும் எடுத்துப்போடுவதினால் - அவர்களை ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதத்தினை இழக்கவும் செய்து மற்றும் சத்தியத்தின் ஊழியக்காரர்களென அவர்கள் வளர்ச்சியடைவதையும், கிருபையில் வளர்வதையும் தடைப்பண்ணுகின்றதாய் இருக்கின்றது.

சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்குரிய தாலந்துடையவர்களால், அது பிரசங்கிக்கப்படுவதை நாம் எதிர்த்திடவில்லை; மாறாக கர்த்தர் தம்முடைய ஜனங்களின் கூட்டங்கள் அனைத்துமே பிரசங்கிக்கும் வகையாக இருப்பதற்கு ஒருபோதும் நோக்கம் கொள்ளவில்லை என்பது நம்முடைய எண்ணமாக இருக்கின்றது. இப்படியாக ஆதி திருச்சபையில் இருக்கவில்லையென்று அப்போஸ்தலன் 1 கொரிந்தியர் 12; 1 தெசலோனிக்கேயர் 5:11-ஆம் வேதவாக்கிய பகுதிகளில் விவரிக்கின்றார். எந்தவொரு சிறு கூட்டத்தார் மத்தியிலும் காணப்படும் தாலந்துகள் எதுவாயினும், அது வளர்க்கப்படுவதற்குப் பிரயாசம் எடுக்கப்பட வேண்டும் - அதாவது வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளதான தெய்வீகத் திட்டம் தொடர்புடையதாகக் கருத்துகள் சொல்ல, விளக்கம் சொல்ல தூண்டிடுவதற்கும், இவைகளை வெளிக்கொணர்வதற்கும் பிரயாசங்கள் எடுக்கப்பட வேண்டும். பிரசங்கிக்கத் தாலந்துடையவர்கள், தன்னடக்கத்துடன் பிரசங்கிப்பார்களாக; இவர்கள் மற்றவர்களுக்குச் சத்தியத்திற்கான ஊழியத்திலுள்ள பல்வேறு பங்குகளில் உதவியும் செய்வார்களாக. ஒவ்வொருவரும் கிருபையில் வளர்வதற்கும் மற்றும் மற்றவர்களுக்கு உதவிடுவதற்கும் நாடுகையில் - அநேகமாக அருகாமையிலுள்ள ஊர்களிலோ அல்லது அதே பட்டணத்திலுள்ள ஏதோ ஒரு பகுதியிலோ - வாய்ப்புகளுக்கான கதவினை இன்னுமாகவும், அகலமாகவும் - கர்த்தர் திறந்தருளுவார். அறுவடையோ மிகுதி மற்றும் வேலையாட்களோ குறைவாய்க் காணப்படுகின்றனர் மற்றும் கர்த்தருக்கும், அவரது நோக்கங்களுக்கும் உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்கள் யாவரும், ஒருவருக்கொருவர் ஊழியம் புரிந்திடுவதற்கு மாத்திரமல்லாமல், மற்றவர்கள் ஊழியம் புரியத்தக்கதாக, அவர்களுக்கு உதவி புரிந்திடுவதற்கும் ஒருவருக்கொருவர் எப்போதும் பிரயாசம் எடுப்பவர்களாகக் காணப்பட வேண்டும்.

**R 5892 (R4374 & R3017)**

# எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம்
# THE COUNCIL AT JERUSALEM

(இந்தக் கட்டுரை, Settling Doctrinal differences மற்றும் Attaining Christian Liberty என்ற கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டு, மறு பதிப்பாக வெளியிடப்படுகிறது).

**திறவுவசனம் :** "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்" – அப்போஸ்தலர் **15:11**



**ஆதார வசனங்கள் :** அப்போஸ்தலர் **15:1–35**

ஆதிகாலசபையில் சமாதானமும், முன்னேற்றமும் அறிவிலும் சகோதர எண்ணிக்கையிலும் வளர்ச்சியடைவது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அதிகரித்தது, அதைத்தொடர்ந்து வேற்றுமைகளும், தர்க்கங்களும் உள்ள காலகட்டம் அந்தியோகியாவில் காணப்பட்டது. பவுலும் பர்னபாவும் தங்கள் ஊழியப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு திரும்பி, தங்களது பிரயாண அறிக்கையை அந்தியோகியா சபைக்கு சமர்ப்பித்தனர். இந்த சபையே அவர்களது பிரயாணத்துக்கான செலவுகளை சந்தித்தது. சபையும் அவர்களது மிஷினரி ஊழியர்களும் சேர்ந்து புறஜாதியாருக்காக செய்த பரஸ்பர ஊழியத்திற்காக சந்தோஷப்பட்டனர். உண்மையாகவே எப்புறமும் இதற்கான காரணவிளக்கம் செழுமையைத் தந்தது. பின்பு சபையின் தலைமையகமாகிய எருசலேமிலிருந்து சில சகோதரர்கள் வந்தனர். இவர்கள் பிறப்பில் எபிரேயர்களாயிருந்து, புறஜாதி கிறிஸ்தவர்கள் விருத்தசேதனத்தை புறக்கணிக்கிறார்கள் என்று கண்டுணர்ந்து, அந்த விஷயத்தில் பெரும்கிளர்ச்சியை எழுப்பினர். கிறிஸ்துவைஅல்லாமல் விருத்தசேதனம் மட்டுமே இரட்சிப்பை அளிக்காது என்ற புறஜாதியாரின் கருத்துக்கு எதிராக, இந்த எபிரேயர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பு விருத்தசேதனமின்றி செயல்படாது என கருத்துதெரிவித்தனர். இதனால் அநேக சகோதரர்களது மனம் கவலைக்குள்ளானது. சபையில் பிளவுஏற்படும் சூழலும் ஒருகாலகட்டத்தில் நிலவியது. ஆனால் சிறப்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அன்பு சகோதரர்களாகிய பவுலும் பர்னபாவும் விசாரணைக்குழுவாக, அங்குள்ள அப்போஸ்தலர்களோடும் மூப்பர்களோடும் கலந்தாலோசிக்க எருசலேமுக்கு அனுப்பப்பட்டனர். நாம் பார்க்கவிருக்கும் இப்பாடத்தில் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்ட காரியங்களும் அதன் முடிவுகளும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதிகால கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியும் பலமுமுள்ள ஆவியை உடையவர்களாயிருந்தனர் என்று நாம் அவர்கள் வெளிப்படுத்தின ஞானத்தைக் குறித்து தற்செயல்நிகழ்வாக கருத்து தெரிவிக்கிறோம். பவுல் மற்றும் பர்னபாவின்மேல் அவர்கள் உண்மையாகவே மிகுந்த பற்றுறுதி கொண்டிருந்து, ஏற்கனவே அவர்களது ஊழியத்தின்மூலம் மாபெரும் ஆசீர்வாதங்களை கர்த்தரிடமிருந்து பெற்றிருப்பதை உணர்ந்திருந்தார்கள். ஆனால் விருத்தசேதனமின்றி தெய்வீக தயவுபெறுவதற்கான சில முறையான பாடங்களை அவர்களால் பெறமுடியும் என்ற எதிர்பார்ப்பு இராதிருந்தது.என்பது முரண்பட்ட கருத்தாயிராமல் உண்மையாயிருந்தது. ஆகவே இந்த பாடத்தைப் பொருத்தமட்டில் கர்த்தரது சித்தம் அப்போஸ்தலர்கள் மூலமாக நேர்மறையான கருத்தை அறிவுறுத்தியிருக்கிறது என்பதை ஞானமாய் வெளிப்படுத்தினார்கள். இந்த அப்போஸ்தலர்களைக் குறித்து கர்த்தர் ; "நீங்கள் பூமியில் எதைக் கட்டுவீர்களோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீங்கள் இப்பூமியில் எதை கட்டவிழ்க்கிறீர்களோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும் என்றார்". அதன்பிறகு, இந்த அப்போஸ்தலர்கள், விருத்தசேதனம் யூதர்மேல் சுமத்தப்பட்டதுபோலவே புறஜாதியார்மேலும் சுமத்தப்பட்ட கடமையா ? அல்லது ஆபிரகாமின் முழு குடும்பத்திற்கும் இஸ்ரயேலர்மேலிருந்த அந்த கடமையிலிருந்து புறஜாதியார் விலக்கப்பட்டிருக்கிறார்களா என்று முறையாக அறிந்துகொள்ளவும், ஆலோசனை சொல்லும் ஆற்றலுடையோராயும் விளங்கினர்.

**எருசலேம் ஆலோசனைக் கூட்டம் :–**

அப்போஸ்தலர்கள் இக்காரியத்தில் பணிவோடு ஆலோசனைக்கூட்டத்தின் முன்வைத்த கருத்துக்கள் உற்று கவனிக்கத்தக்கது. இப்பாடத்தின்பேரிலான அவர்களது இறுதித்தீர்மானம் தெய்வீக வழிநடத்துதலின்படியும், வேதாகமத்தில்(பழையஏற்பாட்டில்) எழுதப்பட்ட வார்த்தைகளின்படியும் இருந்தது. பலஆண்டுகள் படிப்படியாக சத்தியம் அவர்களுக்கு எளிதில் விளங்கக்கூடியஅளவு அதிகரித்தது. யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட விசேஷித்த தயவு ஒவ்வொரு தேசத்து ஜனங்களுக்கும் பொது தயவு தர எவ்வாறு இடமளித்ததோ, அவ்வாறே கர்த்தரை எப்புறத்திலிருந்தும் நம்பும் எல்லா மனிதர்களும், அவரது வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொண்டு, அதற்கு இசைவாக தங்களது ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பவர்கள், இனிமுதல் எபிரேயர்க்கு சமமாக பாக்கியங்களையும் அனுகூலங்களையும் அடைவார்கள். அந்த தேசத்தோடு உள்ள தேவனது உடன்படிக்கையின் உறவை அவர்கள் அறிந்திருப்பர் என்றாலும், தெய்வீக நிகழ்ச்சிநிரலின் இன்னுமொரு படி முன்னோக்கி நகர்ந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு சிலகாலம் பிடிக்கும். அதுபோலவே சிறுமந்தை மட்டுமே

தற்போதைய பரம அழைப்பிற்குட்பட்டு அழைக்கப்பட்டிருந்து, செவிசாய்த்து, பலிசெலுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த யுகமுடிவில் அநேகர் உணர்ந்துகொள்வர். யுகமாறுதல் சமீபமாயிருக்கிறது என்பதையும், தெரிந்தெடுக்கப் பட்டோருக்கான பணியை இந்த யுகத்தில் நிறைவேற்றிமுடிக்க தேவன் நோக்கமாயிருக்கிறார் என்பதையும் பூமியின் எல்லாக் குடிகளும் ஆதாயமடையும்படிக்கு, தெரிந்தெடுக்கப்படாதோருக்காக புதிய யுகத்தில் புதிய பணியைத் துவங்கவும் தீர்மானித்திருக்கிறார் என்பதையும் கிரகித்துக்கொள்ள இவர்களுக்கு கடினமாயிருக்கும்.

ஆலோசனைச் சங்கத்தின் முடிவுகள் சில வார்த்தைகளில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தேவனைப் பொருத்தமட்டில் பிறப்பில் எபிரேயராயிருந்த விசுவாசிகளை அவர் அங்கீகரித்ததுபோலவே, பிறப்பில் புறஜாதியாராயிருந்தும் விசுவாசத்தினால் அவரது பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களை அங்கீகரிக்கிறார்.

''விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்''–அப் 15:9. இதைக்காட்டிலும் அதிகமாக என்னவிளக்கம் கேட்கமுடியும்? நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நுகத்திற்குட்படாமலேயே புறஜாதியார் தேவதயவுகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். தேவன் அப்படிப்பட்ட நிபந்தனைகளை ஏற்படுத்தாதபட்சத்தில், ஏன் நாம் அவர்கள்மேல் நுகத்தை சுமத்தவேண்டும்? என்று அவர்கள் ஞானமாய் கேட்டனர். மெய்யாகவே நியாயப்பிரமாண உடன்படிக்கை ஒரு நுகமாகவே இருப்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த நுகம் அதிக பாரமாயிருந்து, அவர்களாலும் அவர்களது பிதாக்களாலும் சுமக்கக்கூடாதிருந்தது. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நுகத்திலிருந்து கிறிஸ்து அவர்களை விடுவித்திருந்தார். கர்த்தர் ஒருபோதும் அவர்கள்மேல் கொடுத்திராத அந்த நுகத்தை, சகோதரர்கள்மேல் ஏன் இவர்கள் சுமத்துகிறார்கள்?

இதற்கும் அப்பாற்பட்டு நோக்கும்போது, நியாயப்பிரமாணத்துக்கு விலக்கப்பட்டு, ஒருபோதும் நுகத்தினடியில் வராத புறஜாதியார், சில வகைகளில் தகுதியடைந்திருப்பதால், இருவரில் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்துள்ளனர்; ஆகவே '' கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள்(புறஜாதியார்) இரட்சிக்கப்படுவது எப்படியோ, அப்படியே நாமும் (எபிரேயர்) இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே'' என்றார்.

**இக்காரியத்தின் முடிவு :–**

இக்கேள்விக்கு அப்போஸ்தலர்கள் எடுத்த தீர்மானம் 22 முதல் 29 வசனங்களில் நாம் காண்கிறோம். அவர்கள் எழுதிவைத்ததோடு மட்டுமல்ல, அதை, நம்பத்தகுந்த இரு சகோதரர்களாகிய யூதாஸ்–பர்னபாஸ் மற்றும்சீலாவிடம் கொடுத்தனுப்பி, அவர்கள் அத்தீர்மானங்களை பவுல் மற்றும் பர்னபாவிடம் சேர்க்கும்படி எழுத்துவடிவிலும் மற்றும் வாய்மொழி சாட்சியமாகவும் பெறும்படி ஏற்பாடுசெய்தனர். தொல்லைதரும் இந்த போதனைகள் எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களது அதிகாரம்பெற்றவைகளல்ல என்பதே அத்தீர்மானமாய் இருந்தது. அந்த கடிதத்தில் எழுதப்பட்டதன் ஒட்டுமொத்தக் கருத்தை தொகுத்து பிரமாணமாக அல்ல, அத்தியாவசியமான காரியங்களாக கொடுத்திருந்தனர். அவை :–

1. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளுக்கு விலகியிருத்தல்
2. இரத்தத்துக்கு விலகியிருத்தல்
3. நெருக்குண்டு செத்ததற்கும் விலகியிருத்தல்
4. வேசித்தனத்துக்கு விலகியிருத்தல்

இக்காரியங்களுக்கு விலகியிருத்தல் மட்டுமே அவர்களை கிறிஸ்தவர்களாக்கும் என்று அறிவுறுத்தப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசமும், அவருக்காக தங்களை தத்தம்செய்வதும், பெருமுயற்சியெடுத்து அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதுமே அவர்களை கிறிஸ்தவர்களாக உருவாக்கும் என்று இதில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டவைகளிலிருந்து விலகியிருத்தலைக் குறித்து அவர்கள் பிரகடனப்படுத்தியதாவது;

''இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும்'' பரிந்துரைக்கப்பட்ட இவைகளை கடைப்பிடிப்பது ஆதாயமளிக்கும். உண்மையாகவே, அப்போஸ்தலர் பவுல் மிகவும் வலியுறுத்தி, ''அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறு தலாயிருக்கிறது'' என்று சுட்டிக்காட்டினார். ஏனெனில் தேவனிடத்திலான அன்பு பரிசுத்தத்தை நம் ஜீவியத்தில் கடைப்பிடிக்கும்படி கட்டுப்படுத்தும், நம் அயலானிடத்திலான அன்பு பூமிக்குரிய நீதிநியாயத்தைக் கடைப்பிடிக்கச்செய்யும். வேறுபட்ட பண்புகள் அறிவு மற்றும் மனஉணர்ச்சிகள்கொண்ட யூதர் மற்றும் புறஜாதியாரால் உருவாகிய ''சரீரத்தின்'' ஐக்கியத்தைப் பாதுகாக்க, இங்கு பரிந்துரைக்கப்பட்ட விஷயங்கள் அவசியமானவை.

இறைச்சிக்கடைகளில் விற்பவைகளை வாங்குவது தீங்கு விளைவிக்குமா, விளைவிக்காதா என்று விவாதிக்காமலும், அவைகள் கொல்லப்படும்போது நடத்தப்படும் அந்நிய சடங்கு முறைமைகளை பகுத்தறியாமலும், இவைகளிலிருந்து விலகியிருக்கவேண்டும் என்பதே கொடுக்கப்பட்ட ஆலோசனையாயிருந்தது. பரந்த நிலைப்பாட்டில் பார்க்கும்போது, விக்கிரகம் என்பது மரம், இரும்பு, கல் இவைகளால் உண்டாக்கப்பட்டாலும், இவைகள் உணவை எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தவோ, ஆதாயமளிக்கவோ முடியாது என்றாலும், அப்படிப்பட்ட இறைச்சியை புசிப்பது, புறஜாதியாரின் விக்கிரக ஆராதனையில் கலந்துகொள்வதற்கு ஒப்பாக கருதப்படும். இந்தவிஷயத்தில் புறஜாதியார் பலவீனமான சகோதரர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தங்களது சுயாதீனத்தை பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்கமுடியும். யூதரும் புறஜாதியாரும் மிக ஆழமாக தத்துவரீதியாக காரியங்களை அலசி ஆராயாமல், அவர்களது உணர்வுகள் காயப்படாதபடி நடந்துகொள்ளவேண்டும்.

இதுபோன்ற கருத்து, இரத்தத்தை புசிப்பதை தடைசெய்வதிலும் இணைந்துள்ளது. யூதருக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் இது தடைசெய்யப்பட்டிருந்தது, அவர்களுக்கு இது வாழ்வின் சின்னமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது, இதனைப் புசிப்போரது ஜீவன் எடுக்கப்படுவதற்கு, தானே பொறுப்பாளி ஆகிவிடுகிறார். அதோடுகூட, நியாயப்பிரமாணத்தில் நிழலாக கடைப்பிடிக்கப்பட்ட சடங்குகளில், தடைசெய்யப்பட்டிருந்த இரத்தம் பாவநிவாரணபலியைக் குறிப்பதன் அடையாளமாக உபயோகிக்கப்பட்டது, இதில் பாவத்துக்கான ஒப்புரவாக்குதல் இரத்தத்தின்மூலம் ஏற்பட்டதை இது குறிப்பிடுகிறது. இந்த நிழலான பாடங்களுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்து. யூதர்கள் இரத்தத்தை உபயோகிக்ககூடாது என விலக்கப்பட்டிருந்தனர். மேலும் இக்காரியத்தோடு தொடர்புடைய மற்ற தூய்மையான காரணங்களும் இருக்கக்கூடும், அவைகளை --881-- இதுவரை அறியமுடியவில்லை. புறஜாதியார் நியாயப்பிரமாண

உடன்படிக்கைக்குள் ஒருபோதும் வராததால், இந்த தடைகள் ஒருபோதும் அவர்களுக்கு வந்ததில்லை. ஆனால் இந்தப்பாடத்தைப் பொறுத்தவரையில் யூதர்களது கருத்துக்கள் ஆழமாய் ஆணிவேராய் பதிந்திருந்தபடியால், சபையின் சமாதானத்துக்காக புறஜாதியார் இந்த முறைமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாயிற்று. நெருக்குண்டு செத்தவை என்பதன்பொருள், கண்ணியில் சிக்குண்ட மிருகங்களைஎடுத்து, அதன் இரத்தம் சிந்தப்படாமல் அல்லது வழிந்தோடாமல் மரணத்துக்குள்ளாக்குவது. யூதரது பிரமாணத்தின்படி அப்படிப்பட்ட எல்லா இறைச்சிகளும் புசிக்கப்படக்கூடாது. இந்தத் தடையானது ஆவிக்குரிய இஸ்ரயேலின் இரண்டுகிளைகள் இணக்கமாயிருப்பதற்கு அவசியமாயிருந்தது. அந்த இரண்டுகிளைகள் யூத மார்க்கத்திலிருந்து வந்தவர்களும், புறஜாதியாரிலிருந்து வந்தவர்களுமாவர். அவர்கள் சண்டையிடவும் சபையில் பிரிவினைகளை உண்டாக்கவும் விரும்பாதிருந்தால் இவ்விஷயங்களை பொருத்தமட்டில் புறஜாதி சகோதரர்கள் நிச்சயமாக கட்டுப்படுத்தப்படுவர் அல்லது அவர்களது சுயாதீனத்தை பலியிட நேரிடும்.

நான்காவது காரியம் விலகியிருத்தலைக் குறித்தது – "வேசித்தனம்" ஆகும். ஏன் ஒழுக்கரீதியான கட்டளை இவ்வாறு மற்றவைகளிலிருந்து பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது என்பதும், மற்ற சடங்காச்சார தேவைகளோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது என்பதும் புரிந்துகொள்ள கடினமாயுள்ளது. இன்னும் சரியாய் சொல்வோமானால், ஏன் அவபக்தி, போதை, விக்கிரக ஆராதனை, விபச்சாரம், பொய்சாட்சி, கொலை போன்றவை இதோடு சேர்க்கப்படவில்லை ? என்று நாம் வினவுகிறோம். புறஜாதியார் எல்லா குற்றங்களையும் செய்ய சுதந்திரம் பெற்றுள்ளார்களா என்று இம்மாநாட்டில் நிபந்தனை விதிக்கப்படவில்லை என்று நாம் புரிந்துகொள்ளவேண்டுமா ? மேலும் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட இறைச்சியை அல்லது நெருக்குண்டு செத்ததற்கும்,இரத்தம் புசிக்கவும் வேசித்தனம் பண்ணாதிருக்கவும் மட்டும் ஆலோசனை தரப்பட்டதா ? நிச்சயமாக அப்படியல்ல. நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகள் அனைத்தும் புதுசிருஷ்டியின் ஒரே பிரமாணத்திற்குள் அடங்கியுள்ளது. உன் தேவனாகிய கர்த்தரை நேசி, உன் அயலானையும் நேசி என்பதே அக்கட்டளை.

விக்கிரகஆராதனை, அவபக்தி, கொலை, களவு, பொய்சாட்சி, விபச்சாரம் போன்றவைகளை அன்பு மூடவல்லது. ஆனால் அன்பின் பிரமாணம் ஆலோசனைசங்கத்தால் கணக்கிடப்பட்ட பட்டியலை முற்றிலுமாக மூடமுடியாது. பூமியின்மேல் எவைகளை கட்டுவார்களே அது தேவனால் அங்கீகரிக்கப்படும் என்ற அப்போஸ்தலர்கள் பெற்ற அதிகாரத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இவைகள் அத்தியாவசிய மானவைகளும், முறையானவை களுமாயிருந்தன. அவர்களும் அவ்வாறே தெய்வீக சித்தத்துக்கு முரண்படாது வழிநடத்தப்பட்டு, பூமியின்மேல் அவசியமற்றவைகளை கட்டாதபடிக்கு நிருபங்களில் வெளிப்படையாக எழுதிவைத்தனர். இந்தக் காரியங்களை எல்லா ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் தெய்வீக சித்தமாக கடைப்பிடிக்கும்படி இவ்வாறு அன்பின் பிரமாணத்தோடு கூட்டி சேர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லா இறைச்சிக் கடைகளிலும் யூதரது நடைமுறைக்கு இணக்கமாகவே பின்பற்றப்பட்டு, அவர்களது ரபிமார்களால் பரிசோதிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்றபிறகே உண்ணுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. ஆயினும் அநேக யூதர்கள் இதை உணரத் தவறுகின்றனர்.

இந்த ஞானமான நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு, நல்ல முடிவுகளை கொணர்ந்திருக்கிறது, அங்கங்களிடையே இணக்கம் நிலவுகிறது, ஒருமைப்பாட்டின் ஆவியும் ஐக்கியமும் ஏற்பட்டிருக்கின்றன. கர்த்தர் சபையாரது காரியங்களை இவ்வாறு மேற்பார்வையிட்டு, அவளது வழியை நியமிக்கப்பட்ட நீர்ச்சுனைகளாகிய அப்போஸ்தலர்கள்மூலம் வழிநடத்திவருகிறார் என்பதை உணர்வதே இதில் மறைந்துள்ள இரகசியமாகும். அதுபோலவே இன்றையநாளிலும், கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் நேர்மையான இருதயம்நிலவி, உட்பிளவு, பிரிவினைகள் ஆகியவை அறியப்படாதிருக்கவேண்டும். அப்போஸ்தலர்கள் மூலமாக கர்த்தர் கூறும் வார்த்தைகளால் அவரது வழிகாட்டுதலும் அறிவுரையும் கண்டறியப்படவேண்டும். அதோடுகூட, அப்போஸ்தலர்கள் மரித்தபின்பு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாக கூறப்பட்ட தம் வார்த்தைகளைக்கொண்டு, சரியான பாதையை காண்பிக்கும் கருவிகளாக உபயோகிப்பதில் பிரியப்படுகிறார். சுத்த இருதயமும், நேர்மையான மனசாட்சியும் பணிவுள்ள ஆவியுமே அத்தியாவசிய மானதாகும்.

**கிறிஸ்தவ சுயாதீனத்தை அடைதல் :–**

ஒரு சில காரியங்களைச்செய்ய அதிகாரமளிக்கும் சுயாதீனத்திலிருந்தும், சட்டதிட்டமற்ற நிலையினால் உண்டாகும் சுயாதீனத்திலிருந்தும், அராஜகத்தால் ஏற்படும் சுயாதீனத்திலிருந்தும், கிறிஸ்தவ சுயாதீனம் துல்லியமாக வேறுபடுத்திக் காண்பிக்கப்படவேண்டும். இவ்வுண்மையை எடுத்துக்காட்டுடன் விளக்குவதாக இப்பாடம் அமைந்துள்ளது. மோசேயின் முறைமைக்குள்ளாக இருந்துவந்த யூதர்களுக்கு உபவாசமிருத்தல், சுத்திகரித்தல், பண்டிகைகள், புதிய சந்திரன்கள், ஓய்வுநாட்கள் மற்றும் பரிசுத்தநாட்களை அனுசரிப்பது கட்டாயமாயிருந்தது. ஆனால் நியமிக்கப்பட்ட இந்த முறைமைகளை அனுசரிப்பதிலிருந்து கிறிஸ்தவனுக்குரிய சுயாதீனம் பெரும்பாலும் விடுதலை பெற்றுத்தந்துவிட்டது. இந்த முறைமைகளில் பெரும்பாலானவை தேவவீட்டின் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட அடையாளமாகவும், கற்பிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதே, மாறாக தேவவீட்டின் புத்திரர்களுக்கு இவை பொருந்தாது.

புறஜாதியாருக்கோ தேவன் ஒருபோதும் பிரமாணங்களை கொடுத்திருக்கவில்லை. ஆகவே அவர்கள் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு கீழ்ப்பட்டோ, அதன் நிபந்தனைகளுக்குட்பட்டோ, அதன் தேவைகளைச் சார்ந்தோ இருக்கவில்லை. மாறாக, அவர்கள் குறிப்பிட்ட சில மூடநம்பிக்கைகள் மற்றும் தவறான உணவுப் பழக்க வழக்கங்களுக்கும், சடங்கு சம்பிரதாயங்களுக்கும் ஆட்பட்டிருந்தனர். கிறிஸ்தவ சுயாதீனம் என்பது தவறான எல்லா சடங்கு சம்பிரதாயங்களையும், மூடப் பழக்கவழக்கங்களையும் ரத்துசெய்வதோடுகூட, ஒரு பிரமாணத்தை கட்டாயப்படுத்தி சுமத்துகிறது – மோசேயின் பிரமாணத்தையோ அதன் ஏற்பாடுகளையோ, சடங்குகளையோ அல்ல, மாறாக, பூரண சுயாதீனப்பிரமாணத்தை, "கிறிஸ்துஇயேசுவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தையே ஆகும்(யாக்**1:25**; ரோமர் **8:2**). எதிரெதிரான திசைகளிலிருந்து வந்திருந்த யூதரும் புறஜாதியாரும் கிறிஸ்துவின் சபை மற்றும் அதன் பூரண சுயாதீனப்பிரமாணத்தின் நிபந்தனைகளையும், ஒழுக்கமுடைமைகளில் தவறாத நிலைப்பாட்டையும் கண்டு, குழப்பமடைந்து திகைப்படைந்தது நம்மை ஆச்சரியப்படுத்தவில்லை.

**--882--**

பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு 20 வருடங்கள் கழித்து, நம் பாடத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைச்சங்கம் எருசலேமில் கூட்டப்பட்டது. கிறிஸ்துவின் பிரமாணத்தைக் குறித்த பாடத்திற்கு ஒருதீர்வை எட்டும் நோக்கத்திற்காகவே இது நடைபெற்றது. புறஜாதியாரிலிருந்து மனம் மாறியவர்கள்மேலும், யூதரிலிருந்து மனம் மாறியவர்கள்மேலும் இது ஆளுகைசெய்வது – யூதர்களைப் பொறுத்தமட்டில் மோசேயின் முறைமைப்படியான எதிர்பார்ப்புகள் எந்தளவு ஒழிக்கப்பட்டது என்றும், புறஜாதியாரிலிருந்து மனம்மாறியவர்கள்மேல் கிறிஸ்துவின் பிரமாணம் எந்தளவு கட்டுப்பாட்டை விதித்திருந்தது என்றும், இந்த இரண்டு வகுப்பாரும் முன்பு மோசேயின் பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதினிமித்தம் சமுதாயரீதியாக, மதரீதியாக பிரிந்திருந்தாலும், தற்போது யாருடைய மனசாட்சிக்கும் ஊறுவிளைவிக்காதபடி முழு சகோதர ஐக்கியத்திலும் உறவிலும் ஒன்றிணையவும், தேவையற்ற கட்டுப்பாடுகளால் யாருடைய சுயாதீனமும் பாதிக்கப்படாதபடி நடப்பதைக்குறித்தும் ஆலோசிக்கப் பட்டது.

புறஜாதிதேசங்களில் பிறந்த யூதருக்கும் புறஜாதியாருக்குள்ளும் கிறிஸ்தவத்தின் மையமாக அந்தியோகியா சபை அமைந்திருந்தது. புறஜாதியாரால் சூழப்பட்டிருந்த அந்தியோகியாசபை, அதன் அங்கங்கள் அனைவரும் கிறிஸ்தவ சுயாதீனத்தின் பெருந்தன்மையான ஆவியை விளைவிப்பதில் கவனமாயிருந்தனர். அந்த சபையிலிருந்த சில அங்கங்கள், எருசலேமிலிருந்து வந்திருந்த சில சகோதரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டதால், கிறிஸ்தவ சுயாதீனத்தின் காரியத்தில் எல்லை மீறுவதாக சபையார் பயப்பட்டனர். இதன்படி, விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புறஜாதியார், மோசேயின் பிரமாணத்தையும், யூதமார்க்கத்தையும் ஏற்றுக்கொள்ளவும், இந்த நிபந்தனையின்கீழ் முழுவதுமாக வந்து, யூதராக பிறந்திருப்பினும் விருத்தசேதனம் செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். எருசலேமிலிருந்து சமீபத்தில் வந்திருந்த சில சகோதரர்கள் இந்த காரியத்தினால் உண்டான பயத்திற்கு அதிக முக்கியத்துவமளித்ததன் விளைவாக, அந்தியோகியா சபையில் கருத்துவேறுபாடு உண்டானது. இது எந்தளவு சென்றது என்று கிரேக்க வார்த்தை குறிப்பிடுகிறதெனில், ஏறத்தாழ ஒரு உட்பிளவு அல்லது சபை உடைந்து போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆனாலும் சரியான ஆவியும் பரவலாக இருந்தது தெளிவாயிற்று. ஏனெனில், வெறுப்பளிக்கும் கேள்வியினால் அதிருப்திக் குழுக்களாக பிரிந்துபோவதற்கு பதிலாக, ஒவ்வொரு பிரிவும் மற்றவரது மனசாட்சியின் உறுதியை மதித்துநடந்தனர். எருசலேமிலுள்ள சபைக்கு இச்செய்தியைக் கொண்டுசென்று, அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்களிடம் ஆலோசனையும் புத்திமதியும் பெறவும், அவர்கள்தரும் பொருத்தமான ஆலோசனையை பின்பற்றவும் தயாராயினர். தேவன் அப்போஸ்தலர்களை நியமித்திருந்தார் என்றும், இவைகள் அத்தியாவசிய மானவைகளும், முறையானவை களுமாயிருந்தன.ஆதலால் அவர்கள் தரும் இறுதி ஆலோசனை சரியாகவே இருக்கும் என்றும் அந்தியோகியா சபை சகோதரர்கள் தேவனிடத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்தனர். அதேசமயத்தில், எருசலேமிலுள்ள சகோதரர்கள் யூதத்துவத்தின் ஆதிக்கத்தில் சூழப்பட்டிருப்பதை அறிந்து, மோசேயின் சடங்கு சம்பிரதாயத்தில் குறுகிய பார்வை உடையோராக இருந்தார்கள். அவர்கள் தங்கள் இரண்டு பிரதானமான பிரதிநிதிகளாகிய அப்.பவுல் மற்றும் பர்னபாவை அனுப்பினர். அவர்கள் எருசலேம் ஆலோசனை சங்கத்தின்முன்பாக, பெரும்பாலான சபைகளின் சரியான கருத்துக்களை சமர்ப்பித்தனர். இவ்வாறாக, முழு பாடங்களும், முழுவதுமாகவும், உண்மையாகவும் ஆய்வுசெய்யப்பட்டு, கூடுமானவரை துல்லியமாக கர்த்தருடைய சிந்தை கண்டறியப்பட்டது.

சகோதரர்களது அறிவு வரம்புக்குமீறி எந்த வழிமுறையையும் தீர்மானிக்காதபடி, இது ஒரு முறையானதும் அழகுவாய்ந்ததுமான ஆவியாக இருந்தது. இது தேவபார்வையிலும், தெளிந்தசிந்தையுடைய மனிதரது நிதானிப்பிலும் பாராட்டத்தக்கதாக இருந்தது. பொதுவாகவே அறிவுவரம்புக்கு மீறின வழிமுறைகளை பின்பற்றுவோர், கர்த்தர்மேல் போதுமானஅளவு விசுவாசமில்லாதவர்கள். அவர் சபைக்கு நிஜமான தலையாய் இருக்கிறார் என்றும், அவரது சித்தத்தை அறியத் தேடுகிறவர்களது நடவடிக்கைகளில் அவரது பராமரிப்பு இருந்து அவர்களை வழிநடத்தும். சாந்தகுணமுள்ள மோசே வனாந்திரத்தில் இரண்டாம்விசை கன்மலையை தவறாக அடித்து கூறினதுபோலவே, இவர்கள் கட்டுக்கடங்காதவழியில் சுயநிச்சயத்தின்படி செய்பவர்கள். "உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர்புறப்படப் பண்ணுவோமோ?" – எண் 20:10.

உண்மையினிமித்தமோ வெளிப்படையாக பேசுவது மற்றும் செய்வதினிமித்தமோ, பகுத்தறிவுள்ள நடக்கையின்மூலமோ அடையக்கூடிய எல்லா வெளிச்சத்தையும் அடைவதால், சத்தியம் எதையும் இழப்பதில்லை. பவுல் மற்றும் பர்னபாவினிடத்தில் அந்தியோகியா சபை மாபெரும் நம்பிக்கை வைத்திருந்தனர். இந்த இரு மனிதர்களும் உண்மையாகவே கர்த்தரது விசேஷித்த ஊழியக்காரர்களாயும், நாவுகளுமாயிருந்ததற்கு எல்லா சாட்சியங்களையும் கொடுத்ததாக சபையார் சாட்சியமளித்தனர். இருதரப்பிலிருந்து கேட்கப்பட்ட கேள்வியின்மீது இருதரப்பினரும்கூடி அவரவர் கருத்தைக்கேட்டும், கர்த்தருடைய சித்தம் என்னவென்று முழு உடன்பாடுள்ள தீர்மானத்திற்கு வரமுடியவில்லை என்பது விநோதமாய்த் தோன்றுகிறது. பொதுவாக சபைக்கு கர்த்தரின் சித்தமே நிச்சயத்தை ஏற்படுத்தும். அன்றைக்கு கடைப்பிடிக்கப்பட்ட இந்த உன்னத நோக்கத்தை இன்றையநாளிலும் கடைப்பிடிக்கவேண்டுமென்று நாம் பரிந்துரைக்கிறோம். ஆயினும் இன்றைக்கு, ஜீவனுள்ள அப்போஸ்தலர்களிடம் கேள்விகளைக்கேட்டு ஆலோசனை பெறமுடியாது, நம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களது எழுத்துவடிவிலான போதனைகள் வழியாக தகவல் குறிப்பு பெறவேண்டும். தேவவசனத்தின்மேல் சிறந்த அறிவைப் பெற்றுள்ளோர் மற்றும் தெய்வீகத்திட்டத்தைக் குறித்த நுண்ணறிவு பெற்ற சகேதரர்களிடையே உதவிகேட்கத் தேடவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளின் மத்தியில் உண்மை சுயாதீனத்தின் தரம், மிகைப்படுத்தி மதிப்பிடக்கூடாது. இது அவர்களது நிஜ வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிடுகிறது. ஏனெனில், அப்போஸ்தலர்கள் மரித்து நித்திரைக்குள்ளான உடனே வெளிப்பட்ட இருண்டயுகங்களில், இந்த ஐக்கியத்தைக்குறித்த தவறான கருத்தின் காரணமாக உண்மை சுயாதீனத்தின் ஆவி நசுக்கப்பட்டுவிட்டது. அவர்களது அறியாமை, மூடநம்பிக்கை, குருட்டுத்தனம், உபத்திரவம் இவைகளே இருண்டயுகத்தின் விளைவுகளாக வெளிப்பட்டன. 16ம் நூற்றாண்டில் துவங்கின மறுசீரமைப்பு இயக்கம், நம் ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுயாதீனத்தின்ஆவியை மறுபடியும் உயிர்ப்பிப்பதாக இருந்தது. கிறிஸ்துவின் போதனைகள் தந்த அஸ்திபாரத்தின் எல்லைக்குள் நின்ற சுயாதீனத்தைப் பற்றியும் சிந்திக்கச்செய்தது. மனநிலையும் சூழ்நிலையும் அனுமதிக்குமானால், மதக்கொள்கைகளுக்கு எதிரானவர்

என்ற முத்திரையைக் கொடுக்காமல் அல்லது சகோதரர்களால் வார்த்தையாலோ செயல்களாலோ துன்புறுத்தப்படாமல், நமது சுயாதீனம் இன்னும் அதிக அளவிலா அல்லது ஓரளவா என்று விசுவாசத்தின் மூலம் சிந்திக்க வழிவகுத்தது.

இன்றைக்கு பெயர்கிறிஸ்தவ மண்டலங்களில், அதிகப்படியான சுயாதீனமும், மிகக்குறைந்த அளவிலான சுயாதீனமும் சேர்ந்த, விநோதமான கலவை படிப்படியாக நடைபெற்றுவருகிறதை ஆச்சரியமாகக் காண்கிறோம். கிறிஸ்துவின் போதனைகளைக்குறித்தும், அப்போஸ்தலர்களது போதனைகளைக்குறித்தும் சில கருத்துவேறுபாடுகள் வெளிப்படும் என்பதால், கூடி விவாதிப்பதற்கு மிகக்குறைந்த சுயாதீனம் பெற்றுள்ளவர்கள் தடைசெய்யப்படுகிறார்கள். இருதயத்தின் ஐக்கியமும், சிந்தையின் ஐக்கியமுமின்றி, வெளித்தோற்றமான ஐக்கியத்தைப்பெறும் முயற்சியே இதுவாகும். இது, தவறை விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டிருப்பவர்களுக்கும், அந்த தவறுகள் வெளிப்படுத்தப்படாததால், அந்த சத்தியத்துக்கு கட்டுப்பட்டு அதைப் பற்றிக்கொண்டிருப்போருக்கும் இடையே காயத்தை வருவிக்கும். மேலும் கிறிஸ்து தம் பிள்ளைகளை விடுதலையாக்கி பெற்றுத்தந்த சுயாதீனங்களை முறையாக பயிற்சிசெய்யத் தேவையான கிருபை மற்றும் அறிவைத் தடைசெய்கிறது. இந்த விஷயங்களில் பொதுவாக அவர்கள் கடைப்பிடித்துவருபவை என்னவெனில், சத்தியத்தை மூடிமறைப்பதோடு, தவறுகளையும் மூடிமறைப்பது தயவளிப்பதுபோல் எண்ணுகின்றனர். ஐக்கியம்போல் தோற்றத்தை ஏற்படுத்துவது, நிஜமான ஐக்கியம் ஏற்படுத்தும் நோக்கத்துக்காகவே என்றும், கிறிஸ்துவின் சரீரமாகிய உண்மை அங்கங்களது வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கிறது என்றும், தவறான யூகத்தின் அடிப்படையில் இவ்வாறு செய்கிறார்கள். இப்படிப்பட்ட போலிஐக்கியம் உருவாகி, விளைவுகளை ஏற்படுத்தி, பெயர்கிறிஸ்தவ சபைகள் வளர்ச்சிபெற்றாலும், சிறிதுகாலம் மட்டுமே நிலைத்திருந்து, மகா உபத்திரவக்காலத்தின்போது அழிக்கப்பட்டுவிடும்.

மற்றொருவகையில், அதிகப்படியான சுயாதீனம் இருப்பதையும் நம்மால் காணமுடிகிறது. இவர்கள் யாரெனில், பரிணாமவாதக்கொள்கைக்காரர்களும், பகுத்தறிவு சிந்தனையாளர்களுமே. இவர்களுக்கு போதனைகள் இறையியல் கல்லூரிகளிலும், அன்றாட கருத்து பரிமாற்றம் செய்பவர்களிடமும், பிரசங்கமேடைகளிலும் கொடுக்கப்படுகிறது. இந்த போலிபோதனைகளுக்கு முரண்பாடாக பேசவோ, செயல்படவோ முயற்சித்தால், தடைசெய்யப்பட்டு சபையின் ஐக்கியத்தை அழிப்பவர்களாகவும், கலகத்தைத் தூண்டுபவர்களாகவும் எண்ணப்படுவர். இவ்வாறாக, அதிகப்படியான சுயாதீனமும், அதிகப்படியான அடிமைத்தனமும் ஒன்றிணைந்து, இன்றைக்கு பெயர்சபை அமைப்புகளில் கிரியை செய்துவருகிறது.சத்தியத்தை ஒதுக்கவும், அப்புறப் படுத்தவும், அதை நேசிப்பவர்களையும் , கிறிஸ்து விடுதலையாக்கின சுயாதீனத்தின்படி நிற்க விரும்புவோரை வெளியேற்றவுமே இவ்வாறு நடக்கிறது. தவறை ஸ்தாபித்து, தகுதியுள்ளதாக்கி, அபிவிருத்திசெய்து, மேன்மைப் படுத்துவது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. இத்தவறுகளை அதிவிரைவாகப் பரப்புவதை மறுத்தாலும், தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தது. கிறிஸ்து விடுதலையாக்கின சுயாதீனத்தினை ருசிபார்த்த கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும், அந்த சுயாதீனத்தில் நிலைத்துநின்று, அதைத்தடுக்க விரைவில் ஒருமுயற்சி எடுக்கும்போது கூடியவிரைவில் இல்லையென்றாலும், எல்லா மனித அமைப்புக்களின் அடிமைத்தனங்களையும் முழுமையாக அகற்றுவோமாக. இவ்வாறாக அவர்கள் நம் கர்த்தரும், நம் மீட்பரும், நம் போதகரும், நம் ராஜாவுமாயிருப்பவரோடு ஸ்திரமாகவும், உண்மையாகவும் நிலைத்திருப்பார்களாக.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை புசிப்பதில் விலகியிருத்தலைக் குறித்த இந்த வழிமுறையிலிருந்து, கொரிந்து சபைக்கு எழுதின அப்போஸ்தலரது பிந்தைய போதனைகள் முரண்படுகிறதா ?(1கொரிந்தியர் 8ம் அதி.). இல்லை என்று நாம் பதிலளிக்கிறோம்.விக்கிரகங்களுக்கு முன்னதாகவே படைக்கப்பட்ட இறைச்சியை புசிப்பதை அப்போஸ்தலர் பரிந்துரைக்கவில்லை. அதற்கு மாறாக, அவ்வாறு உண்ணும் பழக்கமுடைய ஒரு சிலருக்கு பதிலளிக்கிறார். அவர்களது விவாதத்தின் காரணகாரியத்தை அவர் ஏற்றுக்கொள்கிறார், அதாவது, விக்கிரகம் என்பது, மரம் இரும்பு மற்றும் கல்லால் உண்டானது, இவை முன்பாக படைக்கப்படும் இறைச்சி எவ்விதத்திலும் பாதிப்படைவதில்லை, நன்மையடைவதுமில்லை.ஆனால் ஒருசிலர் பகுத்தறிவில் பலவீனமாயுள்ளபடியால், அவர்களால் இவ்விஷயத்தை புரிந்துகொள்ளமுடியாமல், தங்கள் மனசாட்சியில் தங்களை கறைப்படுத்திக்கொண்டு பாவத்திற்குட்படுவர். இது அதிகமாகப்பெருகி, அதனிமித்தமாக அழிவுக்குள்ளாகிவிடாதபடி, அவர்களை காக்கவே அந்த இறைச்சியை புசிக்கக்கூடாது என்று தடைசெய்கிறோம் என்று காண்பித்தார். மனசாட்சியின் சத்தத்துக்கு கீழ்ப்படியவேண்டும். அதன் நிலைப்பாடுகள் எந்தளவு மூடப்பழக்க வழக்கமாக, தவறு நிறைந்ததாக இருந்தாலும் அது ஒருபொருட்டல்ல.– அது மீறுதலுக்குட்பட்டால் நமக்கு ஆபத்து. நமது மனசாட்சி சற்று தேர்ச்சியடையட்டும், அதன் அறியாமை ஒருபோதும் மீறுதலுக்குட்படாதிருப்பதாக. மனசாட்சியை மீறுகிற ஒவ்வொரு காரியமும் குணாதிசயத்தில் அழிவுக்கு அதிகமாக வழிவகுக்கும். எல்லோரும் அவரவரது சொந்த மனசாட்சியையும், அதோடுகூட தாங்கள் தொடர்புகொள்கிற மற்றவர்களோடும், விசேஷமாக குழந்தைகளோடும் காத்துக்கொள்ள நினைவில்கொள்ளவேண்டும்.

ஒருமித்திருப்போம் நாம் தவறை வெறுப்பதில்
ஒருமித்திருப்போம் நம் அன்பில் –
எல்லாம் இனிமையும் உண்மையுமாக;
ஒருமித்து மகிழ்ந்திருப்போம் –
அது பாடலாய் கட்டுக்கடங்காது செல்லட்டும்
ஒருமித்து துயரப்படுவோம் –
அது ஜெபத்தில் சுக்கு நூறாகட்டும்
ஒருமித்த வல்லமையை வெளிப்படுத்துவோம் –
அது உம் பிள்ளைகளை விடுவிக்கட்டும்
இப்படி சத்தியத்தைப் பின்பற்றுதல் –
உம்மைப் பின்பற்றுதலாகும்

**--884--**

## இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன்– பிலிப் 3:13

ஏமாற்றங்கள் கடுமையாய் உணர்ந்தபோதிலும்,
உந்தன் புருவங்கள் மீதே காணும்போதும்;
நம்பிக்கை அழிந்துபோய்விட்டதாலே
உம் இருதயம் துன்பத்தால் நொறுங்கிடச் செய்திட்டாலும்;
நீர் அன்பு செய்த உம் நண்பர்கள் உம்மை விட்டே விலகிப்போயினும்,
எதிரிகள் கொடுமையாய் ஈட்டியை எறிந்து
இரக்கமின்றி இகழ்ந்து வில்லை வளைத்தாலும்
உம் இருதயத்தையே ஊடுருவக் குத்த எண்ணினாலும்;

விழிப்புடன் உறுதியாய் உண்மையாய் இருந்திடு,
ஒரு அமைதியான மனிதனாய் பொறுத்திரு;
ஜாக்கிரதையாய் தேவசித்தத்தை அறிந்திடு..
அவர் திட்டத்துக்கு ஒப்புவித்திரு;
செவிகொடாதே மனித ஆலோசனைக்கு,
அன்பாய் அவை அளிக்கப்பட்டபோதும்.
கிட்டப்பார்த்தால் அவை பொருத்தமாயிருக்கும்,
வழிவிலக்கும் தூரமாய் பரலோகப் பாதையினின்று.

தயாராயிரு கிறிஸ்துவைப் பின்பற்ற,
எங்கெல்லாம் அவர் நடத்தினாலும்;
சத்தம் அந்நியனுடையதா கேட்காதே,
சத்தம் அவருடையதா செவிகொடு.
நற்கீர்த்தியிலும் துர்க்கீர்த்தியிலும்
துளியும் அச்சமின்றி பின்பற்று;
உன் பாதம் சுயவழியை தேடாதிருக்கட்டும்,
உன் கர்த்தர் சென்றவழியோ அங்கே உண்டு.

மனிதர் சந்தேகத்தோடு பார்த்தால் என்ன
ஏளனமாய் நகைத்தாலென்ன வெறுத்து ஒதுக்கினாலென்ன ?
நீ ஒருபோதும் உணராய் திடீர்வேதனை,
உன் கர்த்தர் தாங்கியிருக்கிறார்;
சோதனைகள் தற்காலிக வாழ்வில்
ஒப்பிடத்தக்கவையல்ல – அடைவோம்
மகிமை நாம் அவரோடு பங்குபெறுவோம்,
அவரது பாடுகளை நாம் பகிர்ந்துகொண்டோம்.

– Herald Magazine

--------------

**--885--**

# அன்பில் – பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து

*"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, . . . நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து..." (யூதா 21-23)*

ஆதி பாவத்தின் காரணமான விழுகையினால் நம் அனைவரின் மனங்களும் சீரற்று இருக்க, அதுவும் அனைவரும் ஒரே விஷயத்தில், ஒரே மாதிரி வீழ்ச்சிக்குள்ளாகவில்லை என்றாலும் - நாமும் சரி, கிறிஸ்துவுக்குள்ளான மற்றச் சகோதர சகோதரிகளும் சரி, தேவனுடைய வார்த்தைகளில் முன்வைக்கப்பட்டுள்ளதான சில குறிப்பிட்ட கொள்கைகளைப் பொருத்திச் செயல்படுத்துவதில் ஏறக்குறைய குழப்பத்தில் காணப்படுவதைப் பார்ப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. உதாரணத்திற்கு அன்பானது தெய்வீகப் பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது என்றும், சகோதர சகோதரிகளிடத்திலான அன்பு என்பது நாம் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டு இருக்கிறோம் என்ற சாட்சியங்களில் ஒன்று என்றும், காண்கிற சகோதரனிடத்தில் நாம் அன்புகூரவில்லையெனில், இது நாம் காணாத நம்முடைய பரம பிதாவை நாம் உண்மையில் அன்புகூரவில்லை என்பதற்கான நிச்சயமான நிரூபணமாகும் என்றும் நாம் போதிக்கப்பட்டுள்ளோம் (உரோமர் 13:10; 1 யோவான் 3:14; 4:20). தெய்வீக நீதி நெறிகள் முன்வைக்கும் இவைகளை அடைந்திடுவதற்கான பிரயாசங்களில் சிலர் எதிரான நிலையில் தவறிழைத்திடுவதற்கான அபாயத்தில் - அதாவது சகோதரனுடைய நலனுக்காகச் சகோதர சிநேகமானது காண்பிக்கப்படக்கூடாது என்றுள்ள சில தருணங்களில், சகோதர சிநேகத்தை வெளிப்படுத்திவிடும் அபாயத்தில் காணப்படுகின்றனர். பரமபிதா செயல்படுத்துகின்ற மற்றும் வெளிப்படுத்துகின்றதான பல்வேறு வகை அல்லது அளவிலான அன்பை நாம் கவனிக்கலாம்.

முதலாவது - உலகத்திற்கான அன்பாகும். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை - நமக்காக மரிக்க - தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). இரண்டாவது கொஞ்சம் உயர்வான மற்றும் விசேஷித்த விதத்திலும், "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" - அதாவது இயேசு கிறிஸ்துவைத் தங்களது மீட்பராக ஏற்றுக்கொண்டுள்ளவர்களும், அவருடைய நாமத்தினாலும், பலத்தினாலும், புண்ணியத்தினாலும் அவருக்கு அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களும், மாம்சத்திற்கேற்றப்படியாக இல்லாமல், ஆவிக்கேற்றப்படியாக நடக்க இப்பொழுது நாடிக்கொண்டிருப்பவர்களுமான - உங்களைச் சிநேகிக்கிறார் (யோவான் 16:27) என்பதாகும். ஆனால் தேவனுடைய இந்த விசேஷித்த அன்பானது கொஞ்சமாகவோ அல்லது முடிவில் முழுமையாகவோ இழந்துபோகப்படலாம் என்பது, "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளினால், தெளிவாய் முன்வைக்கப்பட்டுள்ளது (யூதா 21). தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசிப்பார்த்தப் பிற்பாடு மற்றும் பரிசுத்த ஆவி முதலானவைகளில் பங்காளிகளான பிற்பாடு, யாரேனும் ஆவிக்கேற்றப்படி நடவாமல், மாம்சத்திற்கேற்றப்படி நடப்பார்களானால், இதற்கேற்ப அப்படியானவர்கள் தேவனுடைய அன்பை இழக்கின்றவர்களாய் இருப்பார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே மற்றும் ஒருவேளை அந்நபர் தொடர்ந்து இப்படியாகவே காணப்படுவாரானால், இதன் விளைவாக இறுதியில் அந்நபர் "அவருடையவர்களில்" ஒருவராக இருப்பதில்லை. இப்படியானவனை - அதாவது தன்னுடைய அறிவின் காரணமாகவும், பிரயாசங்களின் காரணமாகவும் மற்றும் கீழ்ப்படியாத போக்கின் காரணமாகவும் துன்மார்க்கனாகியுள்ள இப்படியானவனை அன்புகூருவதற்குப் பதிலாக, கர்த்தர் தாம் "பாவியின்மேல் சினங்கொள்ளுகிறார்" என்றும், "துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்" என்றும் தெரிவித்துள்ளார் (சங்கீதம் 7:11; 145:20; எபிரெயர் 6:4-6; 10:26-29).

பரலோகத்திலுள்ள நம்முடைய பிதாவைப்போன்று காணப்படுவதற்கும், அவர் தம்முடைய அருமை குமாரனாகிய நமது கர்த்தரில் முன்வைத்துள்ளதான சாயலுக்கு ஒப்பாகக் காணப்படுவதற்கும், உன்னதமானவருடைய குமாரர்களென நாடுகின்ற நாம் தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாகவும் மற்றும் தேவனுடைய நேரத்திலும், ஒழுங்கிலும் உலகத்தாரைச் சீர்தூக்கிவிடுவதற்கான எதையும் மற்றும் செய்ய முடிகின்ற யாவற்றையும் செய்வதற்குப்

பிரியங்கொள்ளும் - பரந்த அனுதாபத்துடன்கூடிய கருணையையும், இரக்கத்துடன்கூடிய அன்பையும் பொதுவான உலகத்திற்கென்று கொண்டிருக்க வேண்டும். நம்முடைய பிதாவைப் போன்றும், நம்முடைய மூத்த சகோதரன் போன்றும், நாம் சகோதர சகோதரிகளைச் "சுத்த இருதயத்தோடே ஊக்கமாய்" - உண்மையாய் அன்புகூர வேண்டும். சகோதரருக்கான இந்த அன்பு என்பது, உலகத்திற்கான அன்பு போன்றதல்ல; அது கருணை அன்பல்ல, வெறும் இரக்கமல்ல; அது மேலானதாகும்; அது சகோதர சிநேகமாகும். தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் புதுச் சிருஷ்டிகளாகிய சகோதரர்களாய் இருக்கின்றனர்; இந்தச் சகோதர சகோதரிகள் அனைவரும் கர்த்தர் இயேசுவுடனும், தாங்கள் பங்கடைவதற்கு எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கின்றதான பரலோக இராஜ்யத்துடனும் ஒன்றுபட்டுள்ளதான நம்பிக்கைகளை, எதிர்ப்பார்ப்புகளை, நலன்களை மற்றும் வாக்குத்தத்தங்களைப் பெற்றிருக்கின்றனர். இந்தச் சகோதர சகோதரிகள் அனைவரும் ஒருவருக்கொருவரும் மற்றும் கர்த்தருடனும் உடன் சுதந்தரர்களாகவும், சக - சுதந்தரர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் கூட்டாளிகளாக இருக்கின்றனர்; இவர்களது அக்கறையானது, பரஸ்பரமாயும், ஒருங்கிணைந்தும் காணப்படுகின்றது.

இதனோடுகூட இவர்கள் விசேஷித்த பரஸ்பர உருக்கமான இரக்கம் பெற்றிருக்கின்றனர்; ஏனெனில் புதுச்சிருஷ்டிகளாக இவர்கள் திவ்விய கிருபைகளிலும், வாக்குத்தத்தங்களிலும் ஐசுவரியமாய்க் காணப்பட்டாலும், இவர்கள் அனைவரும் மாம்சத்தின் கடுமையான பெலவீனங்களை - குறைப்பாடுகளைப் பெற்றிருக்கின்றனர்; கர்த்தர் இவர்களை மாம்சத்தின்படி நியாயந்தீர்க்காமல், ஆவியின்படி, நோக்கத்தின்படி, இருதயத்தின் வாஞ்சைப்படி நியாயந்தீர்த்திட்டாலும், இவர்கள் ஒவ்வொருவரும் மற்றும் அனைவரும், இந்தப் பூமிக்குரிய கூடாரத்தினுடைய அபூரணங்கள் மற்றும் பெலவீனங்கள் காரணமாக எழும்பும் பிரச்சனைகளைப் பெற்றிருக்கின்றனர்; மற்றும் இதன் காரணமாக இவர்கள் "தவிக்கின்றனர்" மற்றும் மற்றவர்கள் தவிக்கையில் ஒருவருக்கொருவர் அனுதாபம் கொள்கின்றனர். அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர - முழுச்சபையின் - மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்." இப்படியாக தேவனுடைய புத்திரர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர அனுதாபமும், அன்பும், அக்கறையும், ஒருவரிலொருவர் கவனமும், ஒருவருக்கொருவர் உதவும் தன்மையும் பெற்றிருக்கின்றனர், அதுவும் இது உலகத்தால் புரிந்துகொள்ள முடிகின்ற (அ) உலகத்திடம் காண்பிக்கப்படுகின்ற எந்த உணர்வுகளுக்கும் முற்றிலும் அப்பாற்பட்டதாகவும், மேலானதாகவும் மற்றும் புறம்பானதாகவும் காணப்படுகின்றது; ஏனெனில் உலகத்தாருக்கு பழைய சுபாவத்திற்கும், புதிய சுபாவத்திற்கும் இடையிலான எந்தப் போராட்டமும் இல்லை; பலியினாலான எந்த உடன்படிக்கையும் பண்ணவில்லை; பிரியமானவரில் எந்த ஏற்றுக்கொள்ளப்படுதலும் இல்லை; இருதயத்திலும், நோக்கத்திலும், எதிர்ப்பார்ப்பிலும் மற்றும் ஆவியிலும் எந்த ஐக்கியமும் இல்லை. ஓ! ஆம்! ஊக்கமாய் அன்புகூருவதற்கான புத்திமதியானது, நமக்கே விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

இப்பொழுது நாம் இன்னொரு கருத்திற்கு வருகின்றோம். சகோதரருக்கான நம்முடைய அன்பு என்பது அனைவரிடத்திலும் துல்லியமாய் ஒரே அளவிலும், துல்லியமாய் ஒரே தீவிரத்திலும் காணப்பட முடியாது; அதைக் கட்டுப்படுத்துகின்ற ஏதோ ஒன்றுள்ளது. அது என்ன? அது - நாம் தேவனையும், அவரது குணலட்சணங்களில் வெளிப்படுகின்ற நீதியின் மகிமையான கொள்கைகளையும் அன்புகூருகின்றோம் மற்றும் இதே நிலைப்பாட்டில் நமது கர்த்தராகிய இயேசு நற்பண்பிற்கும், உண்மைக்கும், நீதிக்கும், அன்பிற்கும், காருண்யத்திற்கும், தயாளம் யாவற்றிற்கும் மாதரியாக இருக்கின்றாரென்று நாம் அவரை அன்புகூருகின்றோம் மற்றும் சகோதர சகோதரிகளுக்கான நமது அன்பு என்பது சகோதர சகோதரிகள் நமது கர்த்தருக்கொத்த சாயலில் காணப்படுவதாக நாம் காணும் அளவுக்குத்தக்கதாக இருப்பது அவசியம் என்பதேயாகும். நாம் மாம்சத்தில் ஒத்த சாயலைக் குறிப்பிடவில்லை; மாறாக கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படியான சாயலை - அதாவது ஆவியில் ஒத்த, இருதயத்தில் ஒத்த, உள்நோக்கத்தில் ஒத்த, நோக்கத்தில் ஒத்த, நீதி, சத்தியம் முதலானவைகளுக்கான அன்புடன்கூடிய வைராக்கியத்தில் ஒத்த சாயலைக் குறிப்பிடுகின்றோம். ஆகையால் நாம் தேவனுடைய அன்பிலும், கிறிஸ்துவின் அன்பிலும், இவர்கள் வெளிப்படுத்துகின்ற கொள்கைகளின் மீதான அன்பிலும் வளருகையில், நாம் அனைத்து மனுஷரிடத்திலான மற்றும் சகோதரரிடத்திலான அன்பிலும் வளருவோம்; ஆனால் குறிப்பாய்க் கர்த்தருக்கொத்த சாயலில் அதிகமாய் வளர்ந்து கொண்டிருப்பவர்கள் மீதான நமது அன்பு வளருகின்றது. இது

பாரபட்சமல்ல; இது - மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோமோ, அதற்கு எதிர்மாறாய் நாம் மற்றவர்களுக்குச் செய்வதைக் குறிப்பதாயிராது. இது கர்த்தராகிய இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவதாகும்; ஏனெனில் அவரது அப்போஸ்தலர்கள் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாய் இருப்பினும், அவர்கள் மத்தியில் மூன்று பேர் விசேஷித்த அன்புக்குரியவர்களாய் இருந்தார்கள் என்று நாம் பார்க்கின்றோம்; மற்றும் அந்த மூன்று பேரிலும்கூட ஒருவர் விசேஷமாய், "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" என்று குறிப்பிடப்படுகின்றார். இவர் விசேஷமாய் அன்புகூரப்பட்டார், காரணம் இவர் விசேஷமாய் அன்புகூரப்படத்தக்கவராய் இருந்தார்; மற்றும் இப்படியாகவே நம் விஷயத்திலும், சகோதர சகோதரிகள் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாம் சகோதர சகோதரிகள் யாவரையும் மனமுவந்தும், ஊக்கமாயும்/ஆழமாயும் அன்புகூர வேண்டும்; ஆனால் கண்டிப்பாய் வெவ்வேறு அளவிலான ஊக்கத்தில்/ஆழத்தில் அன்புகூர வேண்டும் மற்றும் நமது அந்த ஊக்கமானது நம்மால் அன்பு செலுத்தப்படுபவர், நமது கர்த்தருக்கொத்த இருதய ஒத்திருத்தலில் வளருவதை, நாம் காண்பதற்கேற்றபடி பெருக்கிட வேண்டும்.

இப்படியாக இருக்குமானால், சத்திய அறிவிற்குள்ளாகக் கடந்துவந்த பிற்பாடு, அதன் நற்பண்புகளை ருசிப்பார்த்து, உணர்ந்துகொண்ட பிற்பாடு, பாவத்திற்குள்ளாக விழுந்துபோகிறவர்களைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? - ஆவியின்படி நடப்பதை நிறுத்தி, மாம்சத்தின்படி நடக்க ஆரம்பிப்பவர்களைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இப்படியானவர்களுக்கான நம்முடைய அன்பானது முன்பு இருந்ததுபோலவே கொழுந்துவிட்டெரியக் கூடுமோ? முடியாது; இப்படியாக இருக்கக்கூடாது. அப்போஸ்தலன் நம்முடைய ஆதார வசனத்தில் சொல்லியுள்ளது போன்று, நாம் பகுத்தறிதல் கொண்டிருத்தல் வேண்டும். இப்படியாகச் செய்யும்போது, நாம் நம்முடைய பரலோக தந்தையினுடைய மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாய் இருப்போம்; ஏனெனில் ஆவிக்கேற்றபடி நடக்கும்போது மாத்திரமே நாம் நம்மைத் தேவனுடைய அன்பில் காத்துக்கொள்ள முடியும் என்று சற்று முன்புதான் கவனித்தோம். இம்மாதிரியான நடக்கையைப் பின்பற்றும்போது மாத்திரம்தான் ஒருவன் தன்னைச் சகோதர சிநேகத்தில் தக்கவைத்துக்கொள்ள முடியும். இந்நடக்கையில் ஏதேனும் திசைத்திரும்புதல் என்பது அதற்கேற்ப சகோதர சிநேகத்தில் மற்றும் ஐக்கியத்தில் இழப்பைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

இந்தப் பகுத்தறிதலானது/வேற்றுமைகாணுதலானது சபையின் தூய்மைக்கும், வளர்ச்சிக்கும் உண்மையில் அவசியமாகும். ஆவிக்கேற்றப்படி நடக்கிற சகோதரர்களையும் மற்றும் ஒழுங்கற்று (அ) மாம்சத்திற்கேற்றப்படி நடக்கிற சகோதரர்களையும் நாம் பகுத்தறியவில்லையெனில், நாம் ஆவிக்கேற்றப்படி நடக்கிறவர்களுக்கு கர்த்தர் நோக்கம் கொண்டுள்ளதான ஆசீர்வாதத்தையும், மதிப்பையும் எடுத்து விடுகிறவர்களாய் இருப்போம் மற்றும் மதிப்பைக் கொடுப்பதற்குக் கர்த்தர் நோக்கம் கொண்டிராதவர்களுக்கு - கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எதிராகவும், மாம்சத்திற்கு ஏற்றப்படியும் நடக்கிறவர்களுக்கு மதிப்பைக் கொடுப்பவர்களாய் இருப்போம். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்கள் என்று நாம் காண்கிறவர்களிடத்தில் ஐக்கியம் கொண்டிருப்பது, அதுவும் ஊக்கமாய் ஐக்கியம் கொண்டிருப்பது நம்முடைய கடமையாக இருப்பது போன்று, ஐக்கியங்கொள்வதற்கு அபாத்திரமாய்க் காணப்படுபவர்களிடமிருந்து ஐக்கியத்தைத் தவிர்ப்பதும் நம்முடைய கடமையாக இருக்கின்றது. தவறு செய்பவர்களை ஊக்குவித்திடும் தவறானப் போக்கினை நாம் எடுத்திடுவதற்கு, அன்பே நம்மை இயக்குகின்றது என்று நாம் எண்ணக்கூடாது; அது அன்பல்ல; மாறாக அது அறியாமையே ஆகும்; கர்த்தரைக் குறித்து அவருடைய வார்த்தையிலிருந்தும், அவருடைய மாதிரியிலிருந்தும் கற்றுக்கொள்வதே, அறியாமைக்கான மருந்தாகும்.

சகோதரர் விஷயத்திலான நம்முடைய கடமை குறித்தும் மற்றும் பல்வேறு சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும் அப்போஸ்தலன் பவுல் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரும் வண்ணமாகப் பின்வருமாறு கூறுகின்றார்: அதாவது உண்மையுள்ள சகோதரர்கள் அவர்களது கிரியைகளின் நிமித்தம் மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளப்பட வேண்டும்; ஒழுங்கில்லாத மற்றச் சகோதரர்கள் புத்தி சொல்லப்பட வேண்டும்; சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் திறனில் திடனற்றவர்கள் (குறைவுள்ளவர்கள்) பெலப்படுத்தப்பட வேண்டும், பலவீனர்கள் உதவப்பட வேண்டும், தாங்கப்பட வேண்டும்; மற்றும் எல்லோரிடமும் நீடிய சாந்தத்துடன் காணப்பட வேண்டும் என்பவையாகும் (1 தெசலோனிக்கேயர் 5:12-14).

ஒழுங்கற்ற சகோதரர்கள்பால் கொண்டிருக்கப்பட வேண்டிய சரியான மனோநிலை குறித்தே நாம் இப்பொழுது இங்கு விசேஷமாய்க் குறிப்பிடுகின்றோம் - கிரியைகளின் நிமித்தம் மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளப்படுகின்றவர்கள் போன்று இப்படியானவர்கள் நடத்தப்படக்கூடாது; இல்லையேல் இப்படியானவர்கள் ஒழுங்கற்று இருப்பதற்கு மேலும் ஊக்கப்படுத்தப்பட்டுவிடுவார்கள். இப்படியானவர்கள் - அன்புடனும், உண்மையுடனும் மற்றும் பொறுமையுடனும் புத்திமதி கூறப்பட வேண்டும், எச்சரிக்கப்பட வேண்டுமே ஒழிய, இவர்கள் ஏதோ இயேசுவின் அடிச்சுவடுகளிலும் மற்றும் அவரது வார்த்தைகளினுடைய கட்டளைக்கு இசைவாயும் சீராய் நடந்துகொண்டிருப்பது போன்று, முன்பிருந்த அதே அன்புடனும், மதிப்புடனும் கையாளப்படக் கூடாது. நம்முடைய அன்பு மற்றும் மதிப்பிற்கான அறிகுறிகளும், சான்றுகளும் உண்மையாய் இருக்க வேண்டும் மற்றும் அது - சத்தியத்தின் ஆவிக்கேற்றபடி நடப்பதாகிய சரியான இருதயத்தின் விருப்பங்களுக்கான ஆதாரங்களைச் சகோதரர்களிடத்தில் நாம் காணும் அளவுக்குத்தக்கதாகக் காணப்பட வேண்டும். நிராகரிப்பை வெளிப்படுத்தும் அளவுக்கு முக்கியமானது என்று நம்முடைய கணிப்பில் காணப்படும் தருணங்களின் போது, எப்படி நம்முடைய நிராகரிப்புக் காண்பிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டுகின்றார்.

ஒவ்வொரு வார்த்தையிலும் மற்றும் ஒவ்வொரு கிரியையிலும் சகோதர சகோதரிகள் குற்றம் கண்டுபிடிக்கத்தக்கதாக ஒருவரையொருவர் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும் எனும் அர்த்தத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை என்பதில் நிச்சயமே; மாறாக அற்ப காரியங்களானது, மாம்சத்தின் பெலவீனம் மாத்திரமே என்றும், இருதயத்தினுடைய, நோக்கத்தினுடைய விளைவானது அல்ல என்றும் எண்ணி, முற்றிலுமாய் விட்டுவிடுமளவுக்குச் சகோதர சகோதரிகள் ஒருவரிலொருவர் முழுக்க அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். நிராகரிப்பும், எச்சரிப்பும் வெளிப்படுத்துவதற்குப் பாத்திரமான காரியங்களானது, கர்த்தருக்கு வெறுப்பாய் இருக்குமென்றும், சகோதரர் மீது (அ) விசுவாச வீட்டார் மீது பாதகமான தாக்கம் கொண்டுள்ளது என்றுமுள்ள விஷயத்தில் ஐயமில்லை என்று சொல்லுமளவுக்கு மிகவும் வெளிப்படையாக, பகிரங்கமாகக் காணப்படுகின்ற காரியங்களாய் இருத்தல் வேண்டும். உதாரணத்திற்கு ஒரு சகோதரன் மதுபானம் அருந்தியிருப்பதாகக் காணப்படுதல்; மிகவும் வெட்கக்கேடான (அ) மோசமான வார்த்தைகளைப் பேசக்கேட்டல்; ஒருவன் பாவத்தில் வாழ்கின்றான் என்று பொதுப்படையாகவே தெரிதல் இவைகளையே அப்போஸ்தலன் மனதில் கொண்டிருந்தார் என்று நாம் நம்புகின்றோம். ஆனால் இருதயம் மற்றும் தனிப்பட்ட காரியங்கள் - நேரம் (அ) பணம் முதலானவைகள் பயன்படுத்தப்படுதல் தொடர்புடைய விஷயத்தில் ஒருவரையொருவர் நியாயந்தீர்ப்பதற்கு மற்றும் குற்றம் கண்டுபிடிப்பதற்குரிய - ஆவியை வளர்த்திடுவதற்கு அப்போஸ்தலன் எந்த நோக்கமும் கொண்டிருக்கவில்லை என்பதில் உறுதியே. இம்மாதிரியான விஷயங்கள் நம்முடைய தனிப்பட்ட உக்கிராணத்துவத்திற்கு உட்பட்டதாகும் மற்றும் கர்த்தர் ஒவ்வொருவருக்கும் அருளியுள்ளதான மனசாட்சி மற்றும் நடத்தைக்கடுத்த சரியான சுயாதீனத்தின் விஷயத்தில் தலையிடுவதற்கு யாரும் பிரயாசம் எடுத்துவிடக்கூடாது. நம்முடைய இருதயங்களினின்றும், ஜீவியங்களினின்றும் கழித்துப்போடப்பட வேண்டியதான பழைய புளித்த மாவாகிய கசப்பின் வேர்களுக்கும், தவறான புரிந்துகொள்ளுதலுக்கும், ஐக்கியமற்ற நிலைமை முதலானவைகளுக்கும் பெரும்பாலும் வழிநடத்துகின்றதான - ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும் காரியத்திற்கு எதிரான தனது கண்டனத்தின் விஷயத்தில் அப்போஸ்தலன் மிகவும் கண்டிப்புடன் காணப்படுகின்றார் (உரோமர் 14:10, 13).

"எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால்," இத்தகையவனுடைய நடத்தை முதலானவைகள் தொடர்புடையதான அப்போஸ்தலனுடைய வேதவாக்கிய அறிவுரையானது, "அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள்" என்பதாகும். எனினும் மிதமிஞ்சி ஒரு நிலைப்பாட்டினின்று மறுநிலைப்பாட்டிற்குச் செல்லுதல், அதாவது ஒன்றில் மிதமிஞ்சிய இரக்கம் காட்டுதல் அல்லது மிதமிஞ்சிய கடுமையுடன் இருத்தல் எனும் விழுந்துபோன மனிதனுடைய போக்கினை அறிந்தவராக அப்போஸ்தலன், "ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" என்று கூறுகின்றார் (2 தெசலோனிக்கேயர் 3:13-15). சகோதரனாக எண்ணி அவனுக்குப் புத்திசொல்லுங்கள் என்பது, கடுமையாகவும் மற்றும் கொடுமையாகவும் தாக்கிப்பேசுவதைக் குறிப்பதில்லை; தயவின், சாந்தத்தின், பொறுமையின் ஆவியில் மற்றும் சகோதரனிடத்தில் தவறு நிச்சயமாய்க் காணப்படுகின்றது என்றும், அது நம் சார்பிலான தீமையான அனுமானமல்ல என்றும் நம்மால் நிச்சயிக்க முடிகின்ற அந்தத் தவறை அச்சகோதரன் கண்டிடுவதற்கு உதவிடவேண்டும் எனும் உண்மையான வாஞ்சையில் புத்திசொல்லுதலைக் குறிப்பதாகும்.

உயர்வாய் மதிக்கப்படவேண்டிய சகோதரர்களையும் மற்றும் எச்சரிக்கப்படவேண்டிய சகோதரர்களையும் வேறுபடுத்திடும் இக்காரியமானது, நடக்கையின் அடிப்படையில் மாத்திரமல்லாமல், உபதேசம் அடிப்படையிலும் காணப்பட வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய யோவான் நமக்குக் காட்டுகின்றார். எனினும் முக்கியத்துவமற்ற கேள்விகளின் விஷயத்தில் சில வேறுபட்ட கருத்துக்கள் மாத்திரம் காணப்படுவதற்காக, நாம் ஒரு சகோதரனை ஐக்கியத்தினின்று ஒதுக்கிவைக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் பேசவில்லை என்பதில் நமக்கு நிச்சயமே. அப்போஸ்தலனின் வார்த்தைகள் கிறிஸ்துவைப் பற்றின உபதேசத்தின் அடிப்படைகளுக்கு - உதாரணத்திற்கு தேவனில் விசுவாசம், நம்முடைய மீட்பரென இயேசுவில் விசுவாசம்; திவ்விய வார்த்தைகளினுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் என்பவைகளுக்கு - மாத்திரமே நிச்சயமாய் பொருந்தும் என்பதில் நமக்கு நிச்சயமே. இந்த அடிப்படைகளானது, கிறிஸ்தவ நடக்கைகள், சத்தியத்தின் ஆவிக்கேற்றபடி நடத்தல் என்பவைகளோடுகூடச் "சகோதரனுக்கான" அடையாளங்களாய் இருக்கின்றது; மிகவும் தெளிவாகவும் மற்றும் திட்டவட்டமாகவும் வேதவாக்கியங்களில் முன்வைக்கப்படாத தேவனுடைய திட்டம் தொடர்புடையதான சில அம்சங்களின் விஷயங்களில், நம்மிடமிருந்து வேறுபடுகின்றதான வேறு கண்ணோட்டங்களைச் சகோதரன் கொண்டிருந்தாலும் பரவாயில்லை. ஆனால் கிறிஸ்துவைப் பற்றின மூலக்கொள்கைகளினின்று, உபதேச ரீதியாக வழி தவறியுள்ளனர் என்று நாம் அடையாளம் கண்டுகொள்பவர்களின் விஷயத்தில், மிகவும் தீவிரமான/கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது ஏற்றது என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்; ஆனாலும் அது துன்புறுத்துதல்களாகவோ, விரோதித்தல்களாகவோ; கசப்பான மற்றும் எரிச்சலுடன்கூடிய வாக்குவாதமாகவோ; பகிரங்கமாகவோ (அ) இரகசியமாகவோ பகைப்பதாகவோ இராமல்; மாறாக அத்தகையவனினால் முன்வைக்கப்படுகின்ற மற்றும் போதிக்கப்படுகின்ற தவறான உபதேசங்களுடன் நம்முடைய ஐக்கியமற்ற நிலையைச் சரியாய் வெளிப்படுத்துவதாகும்; நம்முடைய செல்வாக்கானது எந்த விதத்திலாகிலும் (அ) எந்த அளவிலாகிலும் சுவிசேஷத்தின் அடிப்படைகள் விஷயத்திலான அவனது மறுதலிப்புகளை ஆதரித்திடுவதற்குப் பயன்படுத்தப்படாதபடிக்கு பாதுகாத்தலாகும். இந்தத் தீவிரமான/கண்டிப்பான நடவடிக்கையானது அப்போஸ்தலனால் பின்வரும் வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது... "ஒருவன் உங்களிடத்தில் வந்து (நம்முடைய இனத்தை மீட்பதற்காகக் கிறிஸ்து மாம்சத்தில், உலகத்திற்கு வந்தார் முதலானவைகளை அறிக்கைப்பண்ணும்) இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்; அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2 யோவான் 10, 11)

நம்முடைய ஆதார வசனம் சுட்டிக்காட்டுவதுபோன்று, நாம் பகுத்தறிவை, பகுத்துணர்வைப் பயன்படுத்திட வேண்டும் - "அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டுங்கள்." துணிகரமாயோ, அறிந்தோ, சொந்த விருப்பத்துடனோ இல்லாமல், மாறாக சிலர் எதிராளியானவனால் பாவத்திலோ அல்லது தவறான உபதேசத்திலோ சிக்கவைக்கப்பட்டவர்களாய் மாத்திரம் காணப்படுவதை நம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது. இம்மாதிரியானவர்களுடன் நாம் இன்னமும் இசைந்திடாத மனப்பான்மையைத் தக்கவைத்துக்கொண்டாலும், இவர்களது தவறு தற்காலிகமான தவறுதான் என்று நமது நம்பிக்கை காணப்படுவதை வெளிப்படுத்திடலாம்; இவர்களை உபதேசம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அல்லது இவர்களது ஒழுக்கக்கேடான நடத்தை சம்பந்தப்பட்ட விஷயத்தில், இத்தகையவர்களைக் கர்த்தருடனும் மற்றும் அவருடன் ஐக்கியம் கொண்டுள்ள சகோதரர் அனைவருடனும் ஐக்கியம் கொள்ளும் நிலைக்குச் சீர்ப்பொருத்திட நாடலாம். மற்ற "சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்திட வேண்டும்." இவர்களிடத்தில் மிகவும் தெளிவாய்/ஒளிவு மறைவில்லாமல் பேசிடுவதற்கு நாம் கடமைப்பட்டிருப்போம்; இத்தகையவர்களிடத்தில் இவர்களது ஒழுக்கக்கேடான நடத்தையின் நிமித்தமான புண்களை, இவர்களது கண்களுக்கு முன் கிழித்து, வெளிப்படுத்த - இவர்கள் ஈடுபட்டுள்ளதான தப்பறையின் கடுமையை (அ) பாவத்தின் கடுமையை வெளிப்படுத்த நாம் கடமைப்பட்டிருப்போம்; அதுவும் கடினமான வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லையெனில், இவர்களது தூக்கமயக்கத்தினின்று இவர்களை விழிக்கப்பண்ண முடியாது என்று நாம் உணர்கிற பட்சத்தில் அப்படியாகவே பயன்படுத்தப்படவும் வேண்டும். இவர்களைப் பாவத்திலிருந்து இழுத்துவிடும்போது, இவர்களை நாம் "அக்கினியிலிருந்து - இரண்டாம் மரணத்திலிருந்து - இழுத்துவிடுகின்றோம்."

அப்போஸ்தலனாகிய யாக்கோபும் இதே வகுப்பாரைக் குறித்து, "உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஓர் ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சிக்கிறான்" என்று பேசுகையில், பாவியாகிய ஒரு சகோதரனை, அதாவது சத்தியத்தில் விலகி மோசம் போன சகோதரனைக் குறித்து விவரிக்கின்றார் (யாக்கோபு 5:19, 20).

இறுதியாக நாம் தெரிவிப்பது என்னவெனில், ஒழுங்கில்லாதவர்களின் விஷயத்திலான சகோதரர்களின் நடவடிக்கையானது, தண்டனைவிதமாக இருத்தல் கூடாது; ஏனெனில் தண்டிப்பது என்பது நமக்கடுத்தக் காரியமல்ல. "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." நம்முடைய எச்சரிப்பு/புத்திமதி அல்லது கண்டித்தல் அல்லது ஐக்கியத்தினைத் தவிர்த்தல் என்பவைகள் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, அப்படிப்பட்டவனைச் சீர்ப்பொருந்தப்பண்ண வேண்டும் எனும் கண்ணோட்டத்தில், திருத்தும்விதமாக மாத்திரமே காணப்பட வேண்டும். "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு - அதே விதத்தில் இல்லையென்றாலும், வேறு ஏதேனும் விதத்தில், நீ பெலவீனமாய்க் காணப்படும் விஷயத்தில் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" (கலாத்தியர் 6:1).

மனந்திரும்பியுள்ளதற்கும், சீர்த்திருந்தியுள்ளதற்கும் எவை போதுமான சான்றாயிருக்கும் எனும் விஷயத்தில் தீர்மானிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் மாபெரும் ஞானமும், கிருபையும் அவசியமாகுகின்றது. எவனுடைய இருதயத்தில் சகோதர சிநேகம் ஐசுவரியமாய்க் காணப்படுகின்றதோ, எவனுடைய இருதயம் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கின்றதோ, எவனுடைய இருதயம் தன் சொந்த அபூரணத்தையும் மற்றும் பிரியமானவர் மற்றும் புதியதான உடன்படிக்கை மூலமாக மாத்திரமுள்ள தன்னுடைய ஏற்றுக்கொள்ளப்படுதலையும் உணர்ந்துகொண்டுள்ளதோ - அவனுடைய இருதயமே ஒழுங்கில்லாத சகோதரனிடமிருந்து வெளிப்படும் மனவருத்தம் மற்றும் மனந்திரும்புதலுக்கான முதல் ஆதாரத்தைக் கண்டு களிகூரும். ஒருவேளை முழுக்க அன்பினால் நிரம்பியிருந்தால், நமது இருதயமானது மிகவும் துரிதமாய் (மனவருத்தம் வெளிப்படுத்தின) ஒழுங்கில்லாச் சகோதரனிடத்திற்குச் செல்லும்; நாம் நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வது அவசியமாகும்; அதிலும் விசேஷமாக இரண்டு (அ) மூன்று முறை அதே தவறு செய்திருக்கும் (அ) மிகவும் வருத்தத்திற்குரிய தவறு செய்திருக்கும் (ஒழுங்கில்லா) சகோதரன் விஷயத்தில், நாம் நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வது அவசியமாகும். மனந்திரும்புதலுக்கு இசைவான கிரியைகளை எதிர்ப்பார்ப்பதும், செய்த தவறுக்குச் சீர்ப்பொருந்தியுள்ளதாகச் சில வெளிப்படுத்தல்கள் வெளிப்பட அல்லது இருதயமானது தேவனுக்கும், சத்தியத்திற்கும் மற்றும் நீதிக்கும் அதன் நேர்மை நிலைக்கும் திரும்பியுள்ளது என்பதற்குச் சாட்சியாக, நடத்தையில் அத்தகையதொரு பகிரங்கமான மற்றும் தீவிரமான மாற்றத்திற்கான வெளிப்படுத்தல்கள் வெளிப்பட காத்திருப்பதும் நமது கடமையாகும்.

தவறிழைத்த சகோதரனும், உண்மையாய் மனந்திரும்பியுள்ளவனும் இத்தகைய சாட்சியங்களைக் கொடுத்திட/வெளிப்படுத்திட விருப்பமில்லாமல் இருக்கமாட்டான்; சீர்ப்பொருந்தியுள்ளதற்கான தனது அறிக்கையானது இப்படியாக உறுதிப்படுத்தப்படுவது நியாயமல்ல என்றும் எண்ணமாட்டான். இப்படிப்பட்டச் சகோதரன் தனது மனநிலையின் காரணமாகவும் மற்றும் (தேவ) காரணங்களுக்கு/நோக்கங்கள் மீது தான் கொண்டுவந்திட்டதான அவமானம் காரணமாகவும் மிகவும் தாழ்மையடைந்தவனாகி, அவன் ஒன்றில் சிலகாலம் சகோதரர் மத்தியில், தவறை நினைத்து வருந்துவதினிமித்தம் வராமல் இருக்க வேண்டுமென்றோ அல்லது தான் சார்ந்துள்ள சபையாருக்குச் சம்மதமானால், பின் இருக்கையில் அமர வேண்டுமென்றோ - சகோதரர் மத்தியில் மிகவும் தாழ்மையான ஸ்தானம்/இடம் வகிக்க வேண்டுமென்றோ எண்ணுவான் என்று நாம் எதிர்ப்பார்த்திடலாம். ஒருவேளை தவறு செய்து மனந்திரும்பியுள்ளவர் சபையார் மத்தியில் வழிநடத்தும் ஸ்தானம் வகிப்பாரெனில், அவர் சபையில் அதிகாரப்பூர்வமான அல்லது வழிநடத்தும் எந்த ஸ்தானத்திற்கும் போதுமான காலம் - அவரது சீர்ப்பொருந்துதலின் உண்மைக்கான மிகுதியான சாட்சியங்கள் கொடுக்கப்படுவது வரையிலும் - மீண்டுமாகக் கொண்டுவரப்படக்கூடாது என்பதை 'அவர் சார்பிலான தாழ்மையும்,' 'சகோதரர் சார்பிலான பகுத்தறிவும்' சுட்டிக்காட்டுகின்றதாயிருக்கும்.

நாம் இப்பாடத்தைத் துவங்கினபோது கூறினதுபோலவே, நிறைவு செய்யும்போதும் . . . தீமையான செய்கைகள் அல்லது தீமையான உபதேசங்களே ஒழிய தீமையான

அனுமானங்களோ, அறிவோ, வதந்திகளோ ஆவிக்குரிய ஐக்கியத்தினை விலக்கிக்கொள்ளுதலுக்கான அடிப்படையல்ல என்ற உண்மைகளை வலியுறுத்துகின்றோம். கர்த்தருடைய கற்பனையைக் (மத்தேயு 18:15) கைக்கொள்வது அவசியமாகும். சகோதரனில் உள்ள தவறைக் காண்கையில் நம்முடைய கண்களை நாம் மூடிக்கொள்ளக்கூடாது என்றாலும், எந்தத் தவறும் வெளிப்படையாய்த் தெரியாத பட்சத்தில், தவறு கண்டுபிடிக்கத்தக்கதாகத் தேடிடும் காரியத்தினைச் செய்திடுவதற்கு அன்பானது மறுத்திடும். மேலும் தவறானது தெளிவாய்க் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அது "சகோதரர் மத்தியில் கலந்துரையாடப்படக்/விவாதிக்கப்படக் கூடாது; மாறாக கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளது போன்று, காரியங்களைக் கண்டுபிடித்தவரால் தவறு செய்துள்ளவரிடம் நேரடியாய் எடுத்துச்செல்லப்பட வேண்டும்; மற்றும் தவறு செய்துள்ளவர் செவிகொடுக்க மறுக்கும்போதுதான் - தவறைச் சரிச்செய்ய மறுக்கும்போதுதான் மற்றவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். ஓ! இந்தக் கற்பனை முழுமையாய்க் கைக்கொள்ளப்பட்டால் எத்தனை பிரச்சனைகள் இல்லாமல் போகும்! எத்தனை தவறுகள் மற்றும் இருதய வலிகள் தவிர்க்கப்படும்!

# தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார்

**உபாகமம் 34:1-12**

### *யோசுவா புதிய தலைவனானார்*

யோசுவாவுக்கு அப்பொழுது 80-வயதாயிருந்தது மற்றும் இவர் மோசேக்குப் பின்வருபவராக, இஸ்ரயேலர்களால் முறுமுறுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இஸ்ரயேலர்கள் சந்தேகத்திற்கிடமின்றி தங்களது வனாந்தரப் பயிற்சியின்போது சில விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுக்கொண்டனர். மோசே சீனாய் மலைக்குச் சென்று, அங்கு நியாயப்பிரமாணங்களைப் பெற்றுக்கொண்ட போது, யோசுவா காணப்பட்டார் என்ற ஞாபகம் நமக்கு இருக்கின்றது; உண்மையில் வனாந்தரப் பிரயாணம் முழுவதிலும், மற்றவர்கள் அனைவருக்கும் மேலாக, மோசேயால் இவர்மேலேயே முழுமையாய் நம்பிக்கை வைக்க முடிந்தது. இவரும் காலேபுமாகிய இரண்டு வேவுக்காரர்கள் மாத்திரமே சாதகமான தகவல் அறிக்கையினைக் கொண்டுவந்து, கர்த்தருடைய உதவியினால், இஸ்ரயேல் முன்னேறிச் சென்று, நிச்சயமாய் நாட்டைச் சொந்தமாக்கிக்கொள்ளலாம் என்று தெரிவித்தனர். தலைவர் மாற்றப்பட்டதில் இஸ்ரயேல் இன்னொரு மாபெரும் பாடத்தைக் கற்றுக்கொண்டனர்; அதாவது அவர்களது நம்பிக்கையும், விசுவாசமும் மனுஷனிடத்தில் காணப்படக்கூடாது; மற்றும் அவர்கள் கர்த்தரைத் தங்களது தலைவராக அங்கீகரித்துக் காணப்படுவது வரையிலும், அவர்கள் பாதுகாப்பும், நம்பிக்கையும் கொள்ளலாம்; ஏனெனில் மற்றவர்கள் கடந்து போய்விட்டாலும்கூட, கர்த்தர் எப்போதும் உண்மையுள்ளவராகக் காணப்படுவார் மற்றும் தம்மால் நலமானவர்கள் என்று கண்டுகொள்ளப்படும் தலைவர்களை எப்போது வேண்டுமானாலும் எழுப்ப வல்லவராய் இருக்கின்றார் என்பதாகும்.

இதில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் ஒரு பாடம் உள்ளது. வழிநடத்துபவர்கள் மீது நாம் நம்பிக்கையை வைக்காமல், கர்த்தரில் நம்பிக்கை வைக்க வேண்டும். இது நாம் வழிநடத்துபவர்களை நம்பவே கூடாது என்றும், வழிநடத்துபவர்களை அங்கீகரித்திடக் கூடாது என்றும் அர்த்தப்படுகிறதில்லை; ஏனெனில் நிழலான மற்றும் நிஜமான தம்முடைய ஜனங்களுடனான கர்த்தருடைய கையாளுதலின் சரித்திரமானது, மேலான கிருபையிலிருந்து கிருபைக்கும், அறிவிலிருந்து மேலான அறிவிற்கும் தம்முடைய ஜனங்களை வழிநடத்துவதிலும், போதிப்பதிலும், அவர் தம்முடைய பிரதிநிதிகளென மனித கருவிகளைப் பயன்படுத்துவதற்குச் சித்தம் கொண்டிருந்திருக்கின்றார் என்று நமக்குக் காண்பித்துத் தருகின்றதாய் இருக்கின்றது. தம்முடைய வேலை நிர்வகிப்பதற்குக் கர்த்தர் முழுத்திறமையுடையவராக இருக்கின்றார் என்பதும், மனித கருவிகள் வாயிலாக அவரது வழிநடத்துதல்களுக்காக நாம் ஏறெடுத்துப் பார்த்திட்டாலும், நம்முடைய நம்பிக்கையானது, அவர்களிலோ, அவர்களது ஞானத்திலோ, அவர்களது பெலத்திலோ காணப்படாமல், மாறாக அவர்களை வழிநடத்துகிறதும், அவர்கள் வாயிலாக நம்மை வழிநடத்துகிறதுமான கர்த்தருடைய ஞானத்திலும், பெலத்திலுமே காணப்பட வேண்டும் என்பதும் கற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாடங்களாய் இருக்கின்றன.

---

# நீங்கள் உறுதிப்பட்டிருந்தும்

*"இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்."*
*(2 பேதுரு 1:12)*

இங்கு எவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது? நிச்சயமாகவே சகல ஜாக்கிரதையுள்ளவர்களாய், விசுவாசத்தோடே நற்பண்பினையும்/தைரியத்தையும் (மனோதிடத்தையும்), தைரியத்தோடே/ நற்பண்போடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் (சுயக்கட்டுப்பாட்டையும்), இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குவதற்கான அவசியமே ஆகும். ஏனெனில் இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை; இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பூரணமாய் அளிக்கப்படும் (வசனங்கள் 5-11).

சத்தியத்தில் உறுதிப்பட்டிருத்தல் என்பது குறிப்பது என்னவெனில், நாம் சத்தியத்தினைக் கவனமாய் ஆராய்வதையும், அதை "வேதாகமத்தைக் கொண்டும், சாட்சியாகமத்தைக் கொண்டும்" நாம் முழுவதுமாக உறுதிப்படுத்திக்கொள்வதையும் [ஏசாயா 8:20] மற்றும் இதன் விளைவாக அதன் உண்மைத்தன்மைக் குறித்து நாம் நம்பிக்கை அடைவதையும், இப்படியாய் நமது விசுவாசமானது உறுதியாயும், அசைவுறாததாயும் ஆகுகின்றது என்பதாகும்; அதாவது நாம் யாரை நம்புகின்றோம் என்பதை நாம் அறிவோம்; கர்த்தர் நல்லவர் என்பதை நாம் ருசித்திருக்கின்றோம், கண்டிருக்கின்றோம்; அவருடனான ஐக்கியத்தின் இன்பங்களை அனுபவித்திருக்கின்றோம்; யுகங்களுக்கடுத்த அருமையான தெய்வீகத் திட்டத்தில் வெளிப்படுகின்றதான கிருபையின் பரிபூரணத்தைக் குறித்த சந்தோஷமான உணர்ந்துகொள்ளுதலுக்கு வழிநடத்தப்படுவதற்கு ஏதுவான அளவுக்குத்தக்கதாய், அவருடைய தேவபக்தியின், விசுவாசத்தின், சாந்தத்தின் ஆவியில் பங்கெடுத்துள்ளோம்; மேலும் அந்தத் திட்டத்தினுடைய பல்வேறு அம்சங்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டதோடல்லாமல், இன்னுமாக நியமிக்கப்பட்ட காலங்களில், அதன் மகிமையான பலனானது முழுமையாய் அடையப்பெறுவதற்கு ஏதுவான அதன் பல்வேறு நடவடிக்கைகள் யாவற்றின் அவசியத்தையும் மற்றும் நியாயத்தையும்கூடப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். இதுதான் தற்கால சத்தியத்தில் உறுதிப்பட்டிருத்தலாகும். இது உண்மையில் மிகப் பாக்கியமான நிலைமையாகக் காணப்பட்டு அதனோடுகூட, உலகத்தால் கொடுக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான அத்தகையதொரு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது.

ஆனால் நாம் இப்படியாகத் தற்கால சத்தியத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும், நாம் அழைக்கப்பட்டுள்ளதான உயர் ஸ்தானத்திற்கான நம்முடைய தெரிந்துகொள்ளுதலானது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை நாம் மனதில் கொண்டிருப்பது அவசியமாய் இருக்கின்றது. நம்முடைய பரம அழைப்பிற்கான பந்தையப்பொருளுக்குரிய பந்தயமானது இன்னமும் நம்முன் இருக்கின்றது மற்றும் நாம் இன்னமும் அநேகம் தந்திரமுள்ள மற்றும் வல்லமையுள்ள சத்துருக்களினால் சூழப்பட்டிருக்கும் சத்துருவின் நாட்டில்தான் காணப்படுகின்றோம்; ஆகையால் நாம் வெற்றியடைய வேண்டுமெனில், "நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், - தப்பறையின் மற்றும் மூடநம்பிக்கையின் மற்றும் உடன்பிறந்த பாவங்களின் - அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் (தேவனுடைய சத்தியமானது) தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது என்பதை நினைவில்கொண்டும் மற்றும் "மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்பதை நினைவில்கொண்டும், நாம் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தினைப் போராடிட வேண்டும்" (2 கொரிந்தியர் 10:4; எபேசியர் 6:12).

நமக்கு முன்பாய்க் காணப்படும் போர் குறித்தும், நமக்கான சோதனைகளுடைய தந்திரம் குறித்தும், மாம்சத்தினுடைய பெலவீனம் குறித்துமான - இந்த உண்மைகளின் கண்ணோட்டத்தில்தான் - உண்மையுள்ள அப்போஸ்தலனாகிய பேதுரு - கிறிஸ்தவ

கிருபைகளை உருவாக்கி வளர்த்திடுவதில் சகல ஜாக்கிரதைக்கொண்டிருக்கவும், நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்கேதுவாய் நாம் பலப்படுத்தப்படத்தக்கதாக, நாம் கற்றுக்கொண்டுள்ளதான விலையேறப்பெற்றச் சத்தியங்களைத் தொடர்ச்சியாய் நினைவுக்குக் கொண்டுவரவும் வலியுறுத்துகின்றார். விசுவாசம் என்பது நல்லதுதான்; ஆனால் நற்கிரியைகள் இல்லாத விசுவாசமானது செத்ததாய் இருக்கும்; மற்றும் சத்தியத்தினை அநீதியுடன் வைத்திருப்பது என்பது, அதைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கும்போதுள்ள நிலைமையைக் காட்டிலும் மோசமானதாய் இருக்கும். சத்தியமானது, நம் இருதயங்கள் மற்றும் ஜீவியங்கள் மீது அதன் பரிசுத்தமாக்கும் தாக்கத்தினைக் கொண்டிருக்கவே, சத்தியமானது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் அது நம்மிடத்தில் அதன் போக்கில் செயல்பட்டு, மகிமைப்படுவதாக. அதன் விலையேறப்பெற்ற கனிகள் நாளுக்குநாள் அதிகமதிகமாய்த் தோன்றிடுவதாக. உங்கள் விசுவாசத்தோடே நற்பண்பினை (திருவிவிலியம்)/கூட்டி வழங்குங்கள் - அதாவது முதல்தரமான குணலட்சணத்தினை, அதாவது உலகத்தினின்றும், அதன் ஆவியினின்றும் பிரிந்திருப்பவர்களென உங்களை அடையாளம் காட்டும் அத்தகையதொரு குணலட்சணத்தின் முதல்தரத்தினைக் கூட்டிவழங்குங்கள். இப்படியானவர்கள் அனைவரிடத்திலும் உலகமானது, எவ்வளவுதான் நம்முடைய விசுவாசத்தினை எதிர்த்திட்டாலும், அவர்கள் அங்கீகரிக்கக்கூடிய அந்த நற்பண்புகளை இத்தகையவர்களிடத்தில் காண்பார்கள். மிகச்சிறந்த நேர்மையினை, உண்மையினை, தொழில் ரீதியான விஷயங்கள் யாவற்றிலும் நாணயத்தினைக் கொண்டிருங்கள்; சமுக உறவுகள் யாவற்றிலும் உத்தமமாய் இருங்கள்; அயலானுக்கு ஊறுவிளைவிக்காதபடிக்குச் சுத்தக் கைகளையும் மற்றும் தூய்மையான இருதயத்தையும் மற்றும் கடிவாளமிடப்பட்ட நாவையும் கொண்டிருங்கள். இவைகள் அனைத்தும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களிடத்தில் எதிர்ப்பார்த்திடுவதற்கு உலகத்திற்கு உரிமை இருக்கின்றது; மற்றும் இவை அனைத்தும் நமது விசுவாசத்துடன் கூட்டிவழங்கப்பட வேண்டியதான நற்பண்புள்ள குணலட்சணத்தினுடைய இன்றியமையாத அம்சங்களாய்க் காணப்படுகின்றன. சுத்தமான கைகளானது நேர்மையற்ற எதிலும் கையிடுவதில்லை; அவைகள் தொழில் விஷயத்தில் அநீதியான திட்டங்கள் எவற்றுடனும் எத்தொடர்பும் கொண்டிருப்பதில்லை. தூய்மையான இருதயமானது பொல்லாங்கானவைகளைத் திட்டமிடாது அல்லது தீய எண்ணங்களைக் குடிக்கொண்டிருக்காது அல்லது தீங்கு செய்ய திட்டமிடாது. கடிவாளமிடப்பட்டதான நாவானது, புறங்கூறிடாது, மாறாக அதனால் நன்றாயும், ஞானமாயும் பேசிட முடியாதபோது அமைதிக் காத்திடும். ஆனால் அயலாருக்கு இப்படியாக ஊறுவிளைவிக்கின்ற எதையும் செய்திட வெறுமனே மறுக்கும் இந்த எதிர்மறையான அம்சங்களையும் தாண்டி வேறுகாரியங்களைச் செய்திட, நற்பண்புகளினுடைய தூண்டுதல்களானது ஏவிடும்; அவை சில விஷயங்களைச் செய்யாமல் இருப்பதற்கு மாத்திரமல்லாமல், சிலவற்றைச் செய்திடுவதற்கும் தூண்டுகின்றதாய் இருக்கின்றது - அதாவது மற்றவர்களில் துயரங்களைத் தணித்திடுவதற்கும், துயரப்படுவார் மீது அனுதாபங்கொள்வதற்கும், வேதனையில் காணப்படுவோரை ஆறுதல்படுத்துவதற்கும் மற்றும் மற்றவர்களைத் தூக்கிவிடுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் - வாய்ப்பிற்கேற்ப யாவருக்கும் உதவிடுவதற்கும் நாடுகின்ற பரந்தமனப்பான்மையுடன் கூடிய அன்பில் நன்மைசெய்வதற்கும் தூண்டுகின்றதாய் இருக்கின்றது.

இத்தகைய நேர்மையான நற்பண்புகளுடன் அறிவைக் கூட்டிக்கொள்ளும்படிக்கு, நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளது; அதாவது தேவனுடைய குணலட்சணத்தினை நாம் மிகவும் முழுமையாய்ப் பின்பற்றத்தக்கதாக, அவரது குணலட்சணம் பற்றின அறிவையும், அவரது போதனைகளுக்கு மிகவும் இணங்கி காணப்படத்தக்கதாக, அவரது சத்தியம் பற்றின அறிவையும் கூட்டிக்கொள்ளும்படிக்கு நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளது; ஞானத்தோடு இச்சையடக்கத்தை - அனைத்திலும் சுயக்கட்டுப்பாட்டை, தன்னடக்கத்தை/சாந்தத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டும். "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக." நாம் அவசரபுத்தியுடையவர்களாகவும், முன்கோபியாகவும் அல்லது மூர்க்கத்தனமானவர்களாகவும், முன்யோசனையற்றவர்களாகவும் காணப்படக்கூடாது. மாறாக நாம் சீரான நிலையில் காணப்படுவதற்கும், ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படுவதற்கும் மற்றும் கருத்தூன்றி கவனம் செலுத்துவதற்கும் நாடிட வேண்டும்; அதாவது கர்த்தருக்குப் பிரியமானவைகளைச் செய்திடுவது குறித்தும், அவரது பிரதிநிதிகளென அவரிடத்திலான நம்முடைய பொறுப்புக்குறித்தும், சகமனிதர்களிடத்திலான நம்முடைய செல்வாக்கானது எப்போதும் நன்மைக்கு ஏதுவாய் இருக்க மற்றும் ஒருபோதும் தீமைக்கு ஏதுவாய் இல்லாமல் இருக்க நாம் பார்த்துக்கொள்வது குறித்தும் நாம் எப்போதும் கவனமாய் இருப்பதைச் சுட்டிக்காட்டும் விழிப்பானது நம்முடைய ஒட்டுமொத்த நடத்தையில் காணப்பட வேண்டும்.

"இச்சையடக்கத்தோடே பொறுமையையும் கூட்டிக்கொள்ளுங்கள்." "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" (யாக்கோபு 1:4). ஆம் இந்த ஆவியின் கிருபையானது (பொறுமையானது), மற்ற ஒவ்வொரு கிருபைக்கான வழிகளிலுள்ள தடையினை அகற்றுகின்றதாய் இருக்கின்றது; காரணம் ஆவியின் கிருபைகள் அனைத்தும் பொறுமை மற்றும் தொடர்ச்சியான சுயக்கட்டுப்பாடு எனும் வழிமுறையின் கீழ் அடையப்பட வேண்டும். பொறுமை எனும் இக்கிருபையானது செயல்படுத்தப்படாமல், எந்த ஒரு வளர்ச்சியின் படிநிலையையும் அடையப்பெற முடியாது மற்றும் கிருபைகளில் உள்ள வேறு எந்தக் கிருபையைக் காட்டிலும் இந்த ஒரு கிருபையே கிறிஸ்தவக் குணலட்சணத்தினை அழகுப்படுத்துகின்றது அல்லது உலகத்தாருடைய மனசாட்சியின் ஒப்புதலைப் பெற்றுத்தருகின்றது அல்லது இக்கிருபைக்குத் தூண்டுதலாய் இருந்த சத்தியத்தின் காரணியாகிய சகல கிருபையுடைய தேவனை மகிமைப்படுத்துகின்றது. இது நீடிய பொறுமையுடன், சாந்தத்துடன், மனித பூரணமின்மை மற்றும் பெலவீனத்தின் பேரலைகளைச் சமாளித்து முன்னேறிடுவதற்கு ஊக்கமாய் நாடுகின்றது மற்றும் தெய்வீகச் சாயலை மீண்டும் அடைந்திடுவதற்குக் கடுமையாய்ப் பிரயாசம் எடுக்கின்றது. இது கோபங்கொள்ள தாமதிக்கின்றது/நீடிய சாந்தமாய் இருக்கின்றது மற்றும் மிகுந்த கிருபையுள்ளதாய் இருக்கின்றது; இது சத்தியம் மற்றும் நீதியின் பாதைகளை உணர்ந்துகொள்வதில் துரிதமாய் இருக்கின்றது மற்றும் அவைகளில் நடக்கவும் துரிதமாயுள்ளது; இது நம் சொந்த பூரணமின்மைகளைக்குறித்து நம்மை விழிப்பாய் இருக்கச் செய்து, மற்றவர்களுடைய பூரணமின்மைகள் மற்றும் குறைவுகள் குறித்து அனுதாபங்கொள்ளச் செய்கின்றது.

"பொறுமையோடே தேவபக்தியையும்" - அதாவது திவ்விய வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான திவ்விய குணலட்சணம் குறித்துக் கவனமாய்க் கற்று, பின்பற்றுதலை - கூட்டிக் கொள்ளுங்கள்.

"தேவபக்தியோடே சகோதர சிநேகத்தை" - திவ்விய குணலட்சணத்தினுடைய கொள்கைகளை நம்முடைய சகமனிதர்களிடத்தில் செயல்படுத்துவதை மற்றும் வெளிப்படுத்துவதை - கூட்டிக் கொள்ளுங்கள்.

"சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டிக்கொள்ளுங்கள்." சிநேகமானது - யார் மீது சிநேகம் பாராட்டப்படுகின்றதோ, அவர்பால் கொஞ்சமே அன்பு இருக்கும் தருணங்களின்போது - சிநேகமானது பாராட்டப்படுகின்றது; ஆனால் அனுதாபத்துடன்கூடிய அக்கறையானது எழவில்லை எனில், இத்தகைய சிநேக செயல்பாடுகளில் நாம் தொடர்ந்து நீடிக்கமுடியாது மற்றும் போகப்போக அந்த அக்கறையானது தொடர்ந்து செயல்பாட்டில் காணப்படுகையில், அது அன்பாகுகின்றது. நேசிக்கப்படும் அந்நபர் குணலட்சணத்தில் விரும்பத்தகாதவராக இருப்பினும், விழுந்துபோன மற்றும் சீரழிந்து போனவர்களுக்கான அனுதாப அன்பானது தொடர்ந்து வளருகின்றது; தவறிழைக்கும் குமாரனுக்காகப் பெற்றோர் கொண்டிருக்கும் அன்பிற்கு ஒத்ததாகவும் மற்றும் பரிவாயும், அக்கறையாயும் ஆகும்வரை வளர்கின்றது.

உண்மையில் பேதுரு மிகவும் விரும்பத்தக்க குணலட்சணத்தை விவரிக்கின்றார் மற்றும் இதை அடைவது என்பது ஜீவக்காலம் முழுவதுமான வேலையாக இருக்கும் என்று யார்தான் இதைப் படிக்கையில் உணராமல் இருப்பார்கள். அது ஒருநாளிலோ அல்லது ஒரு வருடத்திலோ அடையப்பெற முடியாது; மாறாக அதை அடைவதற்கு முழு ஜீவியமுமே கொடுக்கப்பட வேண்டும்; மற்றும் நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தால் நாளுக்குநாள், கிறிஸ்தவ குணலட்சணத்தினுடைய வளர்ச்சியிலும் மற்றும் கிருபையிலும் ஓரளவிற்கு இருக்கும் வளர்ச்சியினை நாம் உணர்கின்றவர்களாய் இருப்போம். சத்தியத்தை நாம் அறிந்திருந்து மற்றும் அதை அநீதியான நிலையில் வைத்திருப்பதில் மனநிறைவு கொள்வது என்பது தகுதியானதல்ல. சத்தியமானது அதன் முறையான மற்றும் அது நோக்கம் கொண்டுள்ளதான விளைவினைக் குணலட்சணத்தின்மீது கொணரத்தக்கதாக நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை சத்தியமானது இப்படியாக உண்மையும், நன்மையுமான இருதயத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமாயின், நாம் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை என்றும், ஏற்றகாலங்களில் நமது கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்றும் அப்போஸ்தலன் நமக்கு நிச்சயமளிக்கின்றார்.

கர்த்தருடைய கட்டளைகள் மற்றும் உபதேசங்களை நம்முடைய மனங்களில் எப்போதும் கொண்டிருப்பதின் அவசியத்தினையும் மற்றும் நாம் சத்தியத்தில் ஏற்கெனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் ஊக்குவிக்கும் ஆவிக்குள் ஆழமாய் மூழ்கிடுவதன் அவசியத்தினையும் நாம் பார்த்துள்ளோம். விசுவாசத்தில் உறுதிப்பட்டிருப்பது என்பது ஒரு காரியமாகவும், ஆனால் கிறிஸ்தவ குணலட்சணத்திலும், ஆவியின் கிருபைகள் அனைத்திலும் உறுதிப்படுவது என்பது முற்றிலுமாய் இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது.

## ஒரு நடைமுறை யோசனை

நம்முடைய சொந்த இருதயங்களிலும், அருமையான விசுவாச வீட்டார் யாவருடைய இருதயங்களிலும் ஆவியின் கிருபை விஷயத்திலுள்ள ஆழமான வேலையின் அவசியத்தினை நாம் உணர்கையில், நம் யாவரின் சார்பிலும் இக்குறிப்பிட்ட காரியத்தின் திசையிலான அதிக விசேஷித்த பிரயாசங்களானது, அநேகமாக மிகுந்த பிரயோஜனத்திற்கேதுவாய் இருக்குமென எங்களுக்குத் தோன்றுகின்றது. வரவிருக்கின்றதென நாம் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டிருக்கின்றதான இரவின் இருண்ட அந்தகாரத்தின் காலப்பகுதியில், விசுவாசம் மற்றும் பொறுமை செயல்படுத்த வேண்டிய எப்படிப்பட்டதான நிலைக்குள் நாம் கடந்துபோக வேண்டியிருக்கும் என்பதை நாம் அறியோம்; ஆயினும் "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்" மற்றும் நாம் கிருபையை உண்மையாய்ப் பற்றிக்கொண்டு, பொறுமையோடே அதிலே தொடருவோமானால், அந்தந்த நாளுக்கு கிருபையானது போதுமானதாய் இருக்கும் என்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கின்றோம். ஒவ்வொரு நாளும் அதன் பரீட்சைகளைக் கொண்டுவருகையில், நாம் பரீட்சைகளினால் முறையாய்ப் பயிற்றுவிக்கப்படுகையில், ஒவ்வொரு நாளும் அதன் ஜெயத்தினைக் கண்டடைந்து - இப்படியாக நம்மைக் குணலட்சணத்திலும், விசுவாசத்திலும் மிக உறுதியாய் ஸ்திரப்படுத்தி, பெலப்படுத்துகின்றது.

கிறிஸ்தவ குணலட்சணத்தை விசேஷமாய் அபிவிருத்திச் செய்திடும் கண்ணோட்டத்தில், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதும், அலிகெனி மற்றும் வேறு இடங்களிலுமுள்ள சபையாரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதுமான நம்முடைய யோசனை என்னவெனில்: எங்கெல்லாம் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் சிலரால் ஒன்று கூடிட வாய்ப்புள்ளதோ, இந்த விசேஷித்த நோக்கத்திற்காக ஓர் இடை வாரக்கூடுகையினை ஒழுங்குப்படுத்திடலாம். இத்தகைய கூடுகையானது, தொழுதுகொள்வதற்கும், ஜெபிப்பதற்கும் மற்றும் துதிப்பதற்கும் மற்றும் சகோதரருக்குப் புத்திமதி கூறிடுவதற்கும், சேர்ந்து உரையாடுவதற்கும் மற்றும் கலந்துபேசுவதற்கும் என்று ஒதுக்கப்பட வேண்டும் மற்றும் வேதாகம ஆராய்ச்சிக்காகவோ அல்லது எதிர்த்து வாதாடுவதற்கோ என்று ஒதுக்கப்பட வேண்டாம். உபதேச ரீதியான காரியங்கள் பற்றின ஆராய்ச்சிகள் யாவும், இத்தகைய கூட்டங்களில் தவிர்க்கப்பட வேண்டும் மற்றும் வாக்குவாதத்தினை எழப்பண்ணுகின்றதான அத்தகைய பாடங்களானது தவிர்க்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய காரியங்களானது வேறொரு கூட்டத்திற்கென, அதாவது அனைவரும் ஒன்றுகூடி வரும் கர்த்தருடைய நாளில், ஒரு பொருத்தமான வேளையில் ஏற்பாடு பண்ணப்பட்டும், வேறொரு கூட்டத்திற்கென ஒதுக்கப்பட வேண்டும்; இப்படிக் கூறுவதன் நோக்கம், உபதேசத்தைப் புறக்கணிக்கவோ அல்லது வேத ஆராய்ச்சி வேண்டாம் என்றோ இல்லை; மாறாக இந்த அவசியத்தினை (கர்த்தருடைய நாளில் ஒழுங்குப்பண்ணும்) ஒரு கூட்டத்தில் சந்திக்கையில் மற்ற (இடைவார) கூட்டமானது, எவ்விதமான குழப்பமும் இல்லாமல், சரிசமமான மற்ற அவசியத்தினைச் சந்திக்கின்றதாய் இருக்கும்.

அலிகெனி மற்றும் பிட்ஸ்பர்கில், இங்குள்ள எங்களது ஏற்பாடு பின்வருமாறு: எங்கள் சபையார் ஆங்காங்கே மிகவும் சிதறிக் காணப்படுவதினால், கலந்துகொள்ள விரும்பும் யாவருக்கும் இடம் போதுமானதாய்க் காணப்பட வேண்டும் எனும் அவசியத்தின் காரணமாக, அவர்களை அநேகம் சுற்றுவட்டார கூட்டங்களாகப் பிரித்திருக்கின்றோம்; மற்றும் ஒவ்வொரு கூட்டத்திற்குமென, திறமை விஷயத்தில் பகுத்தறிந்து, ஒரு வழிநடத்துபவர் நியமிக்கப்படுகின்றார். இவர்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டிருக்கிற - உபதேசத்தில் தெளிந்தவர்களாகிய, உண்மையுள்ளவர்களாகிய மற்றும் பக்தியுள்ளவர்களாகிய சகோதரராய் இருத்தல் வேண்டும். இந்தக் கூட்டங்களானது, ஒவ்வொரு சிறு கூட்டத்தார் மத்தியிலுள்ள ஏதோ ஓர் அங்கத்தினனுடைய இல்லத்தில், புதன்கிழமை சாயங்காலம் நடத்தப்படுகின்றது. கூட்டமானது, கீர்த்தனையோடும், ஜெபத்தோடும் துவங்கி, ஞாயிற்றுக்கிழமை மதியத்தினுடைய வசனப்பகுதியானது வழிநடத்துபவரால் வாசிக்கப்படுகின்றது; அடுத்ததாக ஒவ்வொருவராய் இடுக்கமான வழியிலுள்ள தனது வளர்ச்சி குறித்துக் கூறும்படிக்கு; எப்படிக் கிருபையில் வளர்ந்துகொண்டிருப்பதை மற்றும் எப்படி உலகம், மாம்சம் மற்றும் பிசாசினை ஜெயம்கொள்ள முயன்றுகொண்டிருப்பதைக் குறித்த - அவனது அல்லது அவளது தனிப்பட்ட அனுபவத்தினை - கூறும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இங்கு அவர்கள் தாழ்மையோடு தங்கள் ஜெயங்களைக்குறித்துக் கூறிடலாம் அல்லது தங்கள் சோதனைகள் குறித்துப் பேசிடலாம் அல்லது கடினமான சந்தர்ப்பங்களில், கிறிஸ்தவ ஆலோசனையையும், அனுதாபத்தையும் கேட்டுக் கொள்ளலாம்; பெரிய எண்ணிக்கையிலுள்ள கூடுகைகளில் பேசிடுவதற்கு வாய்ப்புள்ளதை (அ) தகுதியாய் இருப்பதைக் காட்டிலும் இத்தகைய சிறிய எண்ணிக்கையிலுள்ள கூடுகைகளில் மிகவும் மனந்திறந்து இங்குப் பேசிடுவார்கள். இங்கு அவர்கள் ஒருவர் இன்னொருவருடைய விண்ணப்பங்களைக் கேள்விப்படுகின்றார்கள் மற்றும் ஓர்

இருதயத்திலிருந்து, இன்னொரு இருதயத்திற்குக் கிறிஸ்தவ அன்பும், அனுதாபமும் மிகத் தாராளமாய்ப் பொழிகின்றது.

இந்தக் கூடுகைகளில் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியதான நோக்கம் என்னவெனில் . . . கர்த்தருடனான மற்றும் அவரது ஊழியத்திலுள்ள புதிதான, இப்போதுள்ள, வாரந்தோறும் மற்றும் தினந்தோறுமுள்ள அனுபவங்கள் பகிரப்பட வேண்டும், மாறாக மிகவும் கடந்த காலத்திலுள்ள பழைய/மலர்ச்சியிழந்த அனுபவங்களை மாத்திரம் பகிரப்படுதல் அல்ல என்பதாகும். ஒரு தெளிவான கடந்த கால அனுபவம் பகிரப்படுதல் என்பது நல்லதுதான்; ஆனாலும் தெளிவான தற்கால அனுபவமானது பகிரப்படுதல் என்பது சிறந்ததாய், மிகவும் அதிகம் முக்கியமானதாய் இருக்கும். உபதேசம் எனும் வார்த்தைப் பொருந்துகின்றதான நம்பிக்கை, விசுவாசம், கீழ்ப்படிதல், தேவபக்தி, ஜெபம் முதலான வேதவாக்கியங்களின் போதனைகள் தவிர, மற்றப்படியுள்ள உபதேசங்களானது, இந்தக் கூடுகைகளில் தவிர்க்கப்படுகின்றது. சத்தியத்தினை அறிந்துகொள்வதில் திருப்திக்கொண்ட நிலையில், ஆனாலும் அதன்படி தினந்தோறும் மற்றும் ஒவ்வொரு மணிநேரமும் ஜீவித்திடுவதற்கு விசேஷித்தப் பிரயாசங்கள் ஏதும் எடுக்காத நிலையில் அநேகர் காணப்படுவதை நாம் காண்கின்றோம். இருதயத்தின் நேர்மையும், மீட்பரினால் நிறைவேற்றப்பட்டுள்ளதான வேலையின் மீதான விசுவாசமும், அவரது ஊழியத்திற்கென அர்ப்பணிப்பதும் "பரிசுத்த ஸ்தலத்திற்குள்" பிரவேசிப்பதற்கு அவசியமாய் இருக்கின்றபடியால் - அதாவது தெய்வீகத் திட்டத்தினுடைய ஆழமான அம்சங்களைப் புரிந்துகொள்ள முடிகின்ற மற்றும் முழுமையாய் உணர்ந்துகொள்ள முடிகின்றதான "பரிசுத்த ஸ்தலத்திற்குள்" பிரவேசிப்பதற்கு அவசியமாய் இருக்கின்றபடியால் - இந்தப் பண்புகளானது, தொடர்ந்து காணப்பட வேண்டும், நீடித்திருக்க வேண்டும்; இல்லையேல் ஒளியானது, இருளாகிடும் - ஒளியினின்று புறம்பான இருளுக்குள் நீங்கள் தள்ளப்பட்டுப் போவீர்கள்; இந்தப் புறம்பான இருளில்தான், ஆவியுலகக் கோட்பாடு, கிறிஸ்தவ விஞ்ஞானம், பிரம்ம ஞானம் மற்றும் மனித இனம் முழுமைக்கும் மீட்பு கிடைக்கும் என்ற கிறிஸ்தவ சபை பிரிவினரின் கோட்பாடு (Universalism) எனும் சுடர்விட்டு மின்னுகிற தப்பறையின் பின், உலகமும் பெயர்ச்சபையும் போய்க்கொண்டிருக்கின்றது.

இத்தகைய கூட்டத்திற்கென நியமிக்கப்பட்டுள்ளதான வழிநடத்துபவர், தான் நியமிக்கப்பட்டுள்ளதான ஒவ்வொரு சிறு கூட்டத்தாருடைய விசேஷித்த தேவைக்கென, தனது ஆலோசனையும், சீர்ப்படுத்துதலும் அல்லது உற்சாகமூட்டுதலும் போதுமானதாய்க் காணப்படத்தக்கதாக, அவன் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அவனது கடமை உணர்வும், ஒவ்வொருவரிடத்திலான தனிப்பட்ட அக்கறையும், அனைவருக்கும் நம்பிக்கையைக் கொடுக்கிறதாய் இருக்க வேண்டும். இத்தகைய இடைவாரக் கூட்டங்களானது, தெய்வீக ஜீவனில் உயர் தேர்ச்சி அடைவதற்கான படிக்கல்லாய்க் காணப்படுகின்றது என்றும், அனைவரும் பெரிதும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் மற்றும் நன்மை அடைவார்கள் என்றும், முழுச்சரீரமும், ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய காரியங்களில் மிகவும் பலனுக்கேதுவாய் ஊழியம்புரிந்திட உதவப்படுவார்கள் என்றும் நாங்கள் நம்புகின்றோம். ஒவ்வொரு மாதத்தினுடைய மத்திய புதன் மாலையன்று, ஜெப அம்சத்திற்கு அதிக கவனம் கொடுக்கப்படுகின்றது மற்றும் கிருபையின் சிங்காசனத்தை நோக்கி ஒருவர்பின் ஒருவராக இரண்டு அல்லது மூன்றுபேர் ஜெபித்திடுவதற்கான வாய்ப்பானது, யாவருக்கும் அருளப்படுகின்றது. காலாண்டில் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையன்று நடைபெறும் இதே அம்சமுடைய பொதுக்கூட்டத்தில் இந்தப் பல்வேறு சிறு கூட்டத்தாருடைய ஆவிக்குரிய வளர்ச்சியினைக்குறித்து, வழிநடத்தினவர்களிடமிருந்தும், கலந்துகொண்ட பல்வேறு நபர்களிடமிருந்தும் கேட்டறிந்து கொள்கின்றோம் மற்றும் காலாண்டுதோறும், வழிநடத்துபவர்கள் மற்றக் கூட்டத்தார்களுக்கு இடமாற்றம் பண்ணப்படுகின்றனர்.

இந்த யோசனைகளோடுகூட, கர்த்தருடைய ஆசீர்வாதம் கடந்துவருவதாக மற்றும் பலனானது, கிறிஸ்தவ அன்பினுடைய கட்டினைப் பலப்படுத்துதலாகவும் மற்றும் எங்கும் பரஸ்பர பரிவாகவும், ஐக்கியமுமாகவும் காணப்படுவதாக.

---

[R3092]

# அடைக்கலத்திற்காக தப்பி ஓடுதல்

**யோசுவா : 20:1-9**

**"தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்"**

**சங். 46:1**

இஸ்ரயேலருக்கான அடைக்கலப் பட்டணம் என்ற தெய்வீக ஒழுங்குமுறை உண்மையிலேயே மிகுந்த ஞானம் நிறைந்த முறையாகும். முழு இஸ்ரேயல் ஜனங்களின் வசதிக்காக ஆறு அடைக்கலப்பட்டணங்கள் பாலஸ்தீனத்தில் பரவலாக (அங்குமிங்குமாக) நியமிக்கப்பட்டிருந்தது. இந்த தெய்வீக நியமனம் மற்றும் அதன் உள்நோக்கம் மோசேயின் மூலம் ஜனங்களுக்கு முழுவதுமாக தெரியப்படுத்தப்பட்டது ( எண். 35:9-34, உபா 4:41-43, 19:1-9 ). இப்பொழுது இஸ்ரேயலர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்து அதை தங்களுக்கு சொந்தமாக்கி விட்டனர். மேலும், இந்த தெய்வீக சட்டத்தை செயல்படுத்தும் காலமும் வந்துவிட்டது. அடைக்கலப்பட்டணங்கள் என்று தெரிந்து கொள்ளப்பட்ட ஆறு பட்டணங்களும், லேவியரின் பட்டணங்களாய் இருந்தது. மேலும், இது கோத்திர பாரபட்சம் (ஒருதலையான விருப்பு வெறுப்பு) என்றதிலிருந்து விடுவிக்கப்பட்டதை உறுதி செய்கிறது. லேவி கோத்திரம் மற்ற கோத்திரங்களிலிருந்து வேறுபட்டு நின்றது. மேலும் இந்த கோத்திரம் எல்லோர் மீதும் அக்கறை காட்டியது. தேசத்தின் மத பிரதிநிதிகளாக இருக்கிறபடியினால் நீதியினின்று அடைக்கலம் வேண்டி வந்தவர்கள், லேவியர்களின் பாதுகாப்பில் இருப்பது பொருத்தமானதே. முற்காலங்களில், எல்லா நடுகளிலுமே ஒருவனின் ஜீவனைக் கொல்வது என்பது கொலையாளியை மரண தண்டனைக்குத் தீர்ப்பளிக்கும் மிகவும் ஆபத்தான குற்றமாகும், எல்லா நாடுகளிலும் அதுவும் குறிப்பாக கிழக்குப் பகுதி நாடுகளில் ஒருவர் கொல்லப்படுவாராயின் கொலை செய்யப்பட்டவரின் நெருங்கிய உறவினர் கொலையாளியைக் கொல்வது என்பது கடமை செயலாகும். சிலர் உயிருக்கு நஷ்டஈடாக பணத்தை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், யூதர்களைப் பொருத்தமட்டில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பிரமாணமான "கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்", "ஜீவனுக்கு ஜீவன்" என்ற விஷயத்தில் மிகவும் கடுமையுடன் இருந்தது. மனுஷனுடைய ஜீவன், புனிதமாக எண்ணப்பட வேண்டும் என்றும், கொலை செய்யும் ஒருவனுக்கு இரக்கம் காட்டப்படக்கூடாது முழுமனித குடும்பமும் அங்கீகரித்துள்ள இந்த பொதுவான பிரமாணத்தில் உள்ள ஞானத்தை நாம் பார்க்கிறோம். ஜீவன் என்பது ஆதியில் தேவனிடம் இருந்து வந்த ஈவு. பாவத்தினால் அது இழந்துவிட நேரிட்ட போதிலும் அது மிஞ்சி பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்கும் செல்கின்றது. அந்த மிஞ்சியுள்ள ஜீவனும் ஆதியில் கொடுக்கப்பட்ட தெய்வீக ஈவு போன்றே மதிக்கப்பட வேண்டும். அதை குறைவாகக் கையாள யாருக்கும் உரிமையில்லை.

அடைக்கலப் பட்டணங்கள் என்பது நீதியை, இரக்கத்தைக் கொண்டு தணிக்க முன்கூட்டியே ஒரு முயற்சியாகும். வேண்டுமென்றே கொலை செய்தவர்களை பாதுகாக்கும் நோக்கத்திற்கல்லாமல், நோக்கம் எதுவும் இல்லாமல், தவறுதலாக அல்லது தய்செயலாக மற்றவர்களின் ஜீவனை எடுத்தவர்களைப் பாதுகாக்கவே அடைக்கலப் பட்டணங்கள் நிறுவப்பட்டன. வேண்டுமென்றே கொலை செய்தவனும் கூட "மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" என்ற கட்ளையின்படி மரணத்திற்கு பாத்திரவானாயிப்பான் . இந்த கட்டளை எரிச்சலினால் கொன்றேன் (அ) சீற்றத்தால் கொன்றேன் (அ) தற்காப்பிற்காக கொன்றேன் (அ) தற்செயலாய் கொன்றேன் என்று ஒருவர் காரணம் கூறுவதைப் பொருட்படுத்துவதில்லை. ஒருவன் தான் பழிவாங்கும் எண்ணத்தோடு வேண்டுமென்ற நோக்கத்துடன் கொலை செய்யவில்லை என்று நம்பினால் உடனே அவன் அந்த அடைக்கலப் பட்டணங்கள் ஒன்றில் ஓடிவிட வேண்டும் என்றே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேலும், அவனுடைய ஜீவனை உரிமைக் கோரும் சட்டத்திலிருந்து இங்கு (அடைக்கலப் பட்டணத்தில்) பாதுகாக்கப்படுகின்றனர். அதாவது அவனது குற்றம் மன்னிக்கப்படவில்லை எனினும் இவ்விடத்தில் இரக்கம் காட்டப்படுகின்றனர். இன்னும் இந்த குற்றவாளிகள் பாதுகாப்பு தேடி விரைந்து ஓட முழு சந்தர்ப்பம் அளிக்கும் விதத்தில் அடைக்கலப் பட்டணத்திற்கு செல்லும் பாதைகள் நேர்த்தியாக கட்டப்பெற்று அடைக்கப்பட்டிருக்க வேண்டும். ஓடும்போது இடறி விழச் செய்யும் கற்கள் இல்லாமல் இருக்க

வேண்டும். ஆறுகள், நீரோடைகள் போகும் பாதைகள் இருக்குமாயின், பாலங்கள் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். மேலும், "அடைக்கலம்" என்று எழுதப்பட்ட பலகைகள் அடைக்கலப் பட்டணங்களின் வழியைச் சுட்டிக் காட்டும் விதத்தில் இடையிடையே நாட்டப்பட்டு இருக்க வேண்டும். பழி வாங்குபவன் குற்றவாளியைத் தொடர்ந்து சென்று பிடிக்க நேரிட்டால், குற்றவாளி அடைக்கலப் பட்டணத்திற்குள் செல்லவும் அங்கு சென்று முறையாக விசாரிக்கப்படவும், தன் சார்பாக என்ன பேசப்படப் போகின்றது எனக் கேட்கவும் அனுமதிக்க பழிவாங்குபவனை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற விஷேசமான நோக்கத்தோடு இரண்டு பரிசேயர்கள் அடைக்கலம் தேடிச் செல்பவருடன் செல்வது யூத வழக்கமாகும். பழிக்குப் பழி வாங்குதலில் நீதியின் அடையாளமாய் இது உள்ளது. எனினும் இரக்கத்தைக் குறித்து மனதில் ஆழமாய் பதிய வைக்கும் காரியமாகவும் இது உள்ளது. அடைக்கலப் பட்டணம் நோக்கி பழி வாங்குகிறவனிடமிருந்து தப்பி ஓட முயற்சிக்கிற ஒவ்வொருவரையும் பார்க்கும் போது எல்லா ஜனங்களும் தாங்களும் ஏதோ சமயங்களில் இவ்வாறு குற்றம் செய்து அடைக்கலம் மற்றும் இரக்கம் நாடி இப்படி ஓட வேண்டிய சூழல் நேரிடும் என்று உணரும்போது இந்த தப்பி ஓடுகிறவர்கள் மீது அனுதாபமே கொள்கின்றனர்.

அடைக்கலப் பட்டணம் வந்தப் பிறகும் குற்றவாளி சுதந்திரமாய் இருப்பதில்லை. மாறாக இஸ்ரேயலின் சபையாகிய பட்டணத்தின் மூப்பர்கள் முன் விசாரணைக்கு நிற்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர். விசாரணை நடைபெறும் வரை அவன் (குற்றவாளி) பட்டணத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாதுகாக்கப்படுகின்றனர். கொலைக்கான அவனுடைய காரணங்கள் கவனமாக விசாரிக்கப்படுகிறது. இந்த விசாரணைகளைக் குறித்து போராசிரியர் பிச்சர் குறிப்படுகிறதாவது: "கொலையாளியின் முன்னால் நடத்தைகள் பற்றியும், இக்கொலையாளிக்கும் கொலை செய்யப்பட்டவருக்கும் இடையே உள்ள உறவு பற்றியும், பதிவிருந்து கொலை செய்தானா? ( உபா. 19:11) கொல்ல வகைத் தேடினானா (அ) இல்லையா? ( யாத். 21:13, எண். 35: 20, 22 ) ஒளிப்பிடத்திலே இருந்து கொன்றானா?( உபா. 27:24) என்ற விஷயங்களில் அதிக முக்கியத்துவம் காட்டப்பட்டது. விரோதமான சதி மோசமா? (யாத். 21:14) துணிகரமா? (யாத். 21:14) இரண்டு மனிதர்களுக்குமிடையே பகைமையா? ( எண். 35: 21, 22) கொலையாளிக்கு பகைமை இருந்ததா?(எண். 35:21, 23 உபா.19:4, 6 ,11, யோசு 20:5)

அநேக விவரங்களை தனித்தனியாக குறிப்பிடுவதிலிருந்து இந்த விசாரணை என்பது கவனமாய் செய்யப்படுகிற காரியம் எனக் காட்டுகிறது. நீதியை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அடைக்கலப் பட்டணங்கள் செயல்படவில்லை. அவைகள் (அடைக்கலப் பட்டணங்கள்) நீதிக்கு சேவை செய்யவும், இங்கு இரக்கத்திற்கு பாத்திரவான்களாய் இருப்பவர்களுக்கு இரக்கமும் அளிக்கப்படுகின்றது.

ஒரு மனுஷன் நிதானித்து யோசித்து கொலை செய்துள்ளான், வேண்டுமென்றே நோக்கத்துடன் முன்பே திட்டமிட்டு கொலைச் செய்துள்ளான் என்று கண்டுபிடிக்கப்பட்டால், அடைக்கலப் பட்டணம் அவனை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றவில்லை, எந்தவித பழி வாங்குதல் இல்லை என்று தீர்க்கப்பட்டால் அவன் தன் வாழ்நாள் முழுவதும் (அ) பிரதான ஆசாரியன் மரிக்கும் வரையிலும் அடைக்கலப் பட்டணத்திற்கு அல்லது சுவரிலிருந்து 1000 முழம் வரையிலுள்ள புறநகர் சார்ந்த பகுதிகளில் தங்க வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளான் (எண்ணாகமம் 35:26-28) கவனக்குறைவு, சீற்றம் ,உணர்ச்சிகள் போன்றவற்றிற்கு இது பாரமான தண்டனையாகும். குடும்பத்திலிருந்து பிரிந்து வாழ்தல் மற்றும் சுதந்தரங்கள் நெருக்கப்படுதல் என்ற தண்டனை கட்டுப்பாட்டிற்குள் இருப்பவர்கள் மாத்திரம், நன்மையாய் அமையாமல் எல்லா ஜனங்கள் மீது நன்மையான ஆதிக்கத்தை செலுத்துகின்றது. கவன குறைவுள்ள மனுஷன் குற்றம் சாட்டப்படத்தக்கவனாகக் கருதப்படுகின்றான். மேலும், அவனுடைய கவனக் குறைவு மற்றவருக்கு ஆபத்தான காயம், கெடுதல் உண்டாக்கினால் அந்தளவுக்கு அவனுக்கு அசௌரியம் கொடுக்க வேண்டும் என்பதே சரி. அதாவது அவனுக்கு ஏதாகிலும் இழப்பு நேரிட வேண்டும்.

பிரதான ஆசாரியன் என்பவர் தேசத்திலே மிகவும் முக்கியமான நபராக இருப்பதால், அவருடைய மரணம் என்பது எல்லா கோத்திரத்திலும் குறிப்பிடத்தக்க சம்பவமாய் உள்ளது. மேலும் அவர் மரிக்கும் நாளில் எல்லா அடைக்கலப் பட்டணங்களில் இருந்து எல்லா அகதிகளும் பழிவாங்குபவர்களின் ஆபத்திலிருந்து விடுதலையாகி தங்கள் வீடுகளுக்குச் செல்ல விடுதலை அடைகின்றனர். பிரதான ஆசாரியன் மரணம் அடைவதோடு பழி வாங்குபவர்களின் பழி வாங்கும் சந்தர்ப்பத்தின் காலமும் முடிந்து விடுகிறது. காலம் முடிந்த பின்னும் பழி வாங்கினால் கொலைக்காரனாகிய இவன் அடைக்கலப் பட்டணம் நோக்கி ஓட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இந்தத் தனித்தன்மையான (நிகரற்ற /ஒப்பற்ற)

ஒழுங்குமுறை என்பது இக்கால ஒழுங்குமுறைகளான சிறைச்சாலை, குற்றவாளியைத் திருத்தும் நோக்கத்தில் செயல்படும் காரியங்கள் போன்றவைகளுக்கு எதிர்மாறாக உள்ளது. ஏனெனில், சில விஷயங்களில் இது அனுகூலமாய் உள்ளது. குற்றவாளியே சிறைச்சாலையில் குறிப்பிட்ட காலம் வரையிலும், தன்னுடைய பாதுகாப்பு கருதி தங்க விரும்புகின்றான் (பக்கம் 312), கைதிகள் பெரும்பாலும் பருமனான இரும்பு அரணாக செய்யப்பட்ட சிறைகளிலிருந்து தப்பிக்க முயற்சிக்கின்றனர். ஆனால் இத்தகைய சிறைகளைக்கட்ட அடைக்கலப்பட்டணத்தில் அவசியப்படவில்லை. விசாரணைக்கு முன்பே குற்றவாளியை அவனுடைய குற்றத்தை ஊகித்து அவனைப் பிடிப்பதற்கான முயற்சியை ஜனங்கள் மத்தியில் தூண்டாமல், அடைக்கலப் பட்டணமானது குற்றவாளியின் குற்றமின்மையை யூகிக்கவும், இத்தகையவர்களை பாதுகாத்து மற்றும் இரக்கத்திற்கு நேராக நடத்தத்தக்கதாக ஜனங்கள் மத்தியில் அனுதாபம் என்னும் மாறான உணர்ச்சியைத் தூண்டுகின்றது.

நமது பொன்னான ஆய்வுபொருள் அடைக்கலப் பட்டணத்தின் நிஜத்தின் முக்கியத்துவமான "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்" என்ற பகுதிக்கு நம்மை திருப்புகின்றது. நம்மைப் பற்றின விஷயங்களை நாம் அறிந்த மாத்திரத்தில் பிறப்பிக்கப்பட்ட மரண தீர்ப்பானது நம் ஒவ்வொருவர் மீதும் உள்ளது என நாம் உணர்கிறோம். "நாம் அனைவரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்களாய் இருப்பதாலும்," "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதாலும் நீதி நம்மை மரணத்திற்கு கொண்டு செல்ல தொடர்ந்து வருவதற்கு முழு அதிகாரமும் உள்ளது. எனவும் நாம் உணருகின்றோம். இப்படியாக, "ஒரே மனுஷனாலே (கீழ்ப்படியாமையினால்) பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும் எல்லா'... (ரோமர் 5:12) என அப்போஸ்தலர் பவுல் இந்தக் காரியத்தை சுட்டிக் காட்டுகின்றார். அந்த தருணத்திலிருந்தே நாம் பாவிகள் என்று உணர்கின்றோம். ஆகையால், தெய்வ சந்நிதியில் நம்மால் நிற்க இயலாது நீதியாகிய பழிவாங்குபவர் நம்மைத் தொடர்கின்றார் எனவும், அடைக்கலத்திற்கான இடத்தை நாம் கண்டுபிடியாமல் இருந்தால், நீதியானது நம்மை மேற்கொண்டு அழித்து விடும் நேரம் எப்பொழுது என்று நமக்கு தெரியாது என்பதை உணர்கின்றோம். நாம் தப்பி ஓடும் போது கிறிஸ்து ஒருவரே அடைக்கலம். அவரிடம் ஓடுங்கள் என்று தேவன் நமக்கு போதிக்கும் வழி காட்டும் கம்பங்களை (கை காட்டி மரம்) பார்க்கலாம்.

தேவன் தாமே நமக்கு அளித்துள்ள இந்த அடைக்கலத்தின் விடுதலையின் இரட்சிப்பின் பரிசுத்தமாக்கும் எல்லைக்குள் நாம் இப்போது நிலைகொண்டிருக்கிறோம். தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றச் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்" என்று எழுதியிருக்கிறது. நிழலிலிருந்தது போலவே நமக்கும் உள்ளது, அதாவது வேண்டுமென்ற நோக்கத்துடன் தெய்வீகப் பிரமாணங்களை மீறுபவர்களுக்கு அடைக்கலத்தில் இடமில்லை. மாறாக விழுகையின் நிமித்தமாக வந்த அறியாமை மற்றும் நம்முடைய பெலவீனங்களை மறைப்பதற்காகவே அடைக்கலம் கொடுக்கப்படுகின்றது. (R3093 பக்கம் 313) நிழலில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டது போலவே நம் நோக்கம் , செயல் நோக்கம் , போன்றவைகள் முழுமையாக நம் விஷயங்களிலும் விசாரணை செய்யப்படும் என்று நாம் உறுதியடையலாம்.

அதிர்ஷ்டவசமாக கிறிஸ்துவுக்குள்ளான இந்த அடைக்கலம் என்பது, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புது சிருஷ்டிகளுக்கே விசேஷமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இவர்கள் கர்த்தரைப் பற்றின அறிவுக்குள் வருவதற்கு முன்புள்ள பாவ நடத்தைகள் என்பது வேண்டுமென்றே செய்தது அல்லது நோக்கத்துடன் செய்தது என்று கருதப்படாமல் அறியாமையிலேயே செய்யப்பட்டது என்றே கருதப்படுகின்றது. தெய்வீகப் பிரமாணங்களைப் பற்றின அறிவைத் தொடர்ந்து நாம் வேண்டுமென்றே செய்கின்ற பாவத்திற்கான நம்முடைய பொறுப்பு தொடர்கிறது. இரண்டாம் மரணத்திற்கு பாத்திரமாக வேண்டுமென்றே செய்கிற பாவத்திற்கு நாம் விடுவிக்கப்பட்டிருந்தாலும், நாம் "அவருக்குள் நிலைத்திருப்பது அவசியமாயிருக்கிறது." அதாவது கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை நாம் அகற்றக் கூடாது. ஒரு வேளை நாம் அடைக்கலப் பட்டணத்தை விட்டு வெளியே வந்தால், அதாவது நம்முடைய பாவத்தை எல்லாம் கழுவும் விலையேறப் பெற்ற இரத்தத்தின் மீது உள்ள விசுவாசத்தை நாம் கை விட்டால், இரக்கமில்லாமல் நீதியினிடம் அகப்படும் வாய்ப்புகள் உருவாகும். தெய்வீக நீதியானது பழிவாங்குகிறவனாக குறிப்பிடப்படுகின்றது. தெய்வீக இரக்கமானது அடைக்கலப் பட்டணமாக குறப்பிடப்படுகின்றது. அடைக்கலப் பட்டணத்திலிருந்து வெளியே செல்பவன் நீதியின் கரத்திலே விழுகின்றான். அதாவது, குற்றவாளிகளான நமக்கு பிதாவாகிய தேவன் அவருடைய நேசர் மூலமாய்

அளித்த இரக்கம் மற்றும் மன்னிப்பை புறக்கணித்து கிறிஸ்துவிடமிருந்து செல்வது என்பது ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுவது என்பது பயங்கரமாகும் என்று அப்போஸ்தலர் விளக்குகின்றார்.

எத்தனைக் காலம் நாம் கிறிஸ்துவின் இரக்கத்திற்குள் நிலைத்திருக்க வேண்டும்? அவருடைய நீதியின் வஸ்திரத்திற்கு வெளியே நமக்கு எத்தனைக் காலம் சுதந்தரம் இல்லை? அவர் அளித்துள்ள இந்த அடைக்கலத்திற்கு வெளியே நமக்கு எத்தனைக் காலம் பாதுகாப்பு இல்லை? பிரதான ஆசாரியன் மரிக்கும் வரையிலும். நாம் இவ்வாறு நிலைத்திருக்க வேண்டும் என்பதே மேலே உள்ள கேள்விக்கான நம் பதிலாகும். இது ஏற்கனவே நிறைவேறி விட்டது, அதாவது நிஜமான பிரதான ஆசாரியனாகிய தலையாகிய நமது கர்த்தரும், போதகருமானவர் ஏற்கனவே பிதாவாகிய தேவன் தமக்குக் கொடுத்த வேலையை முடித்து விட்டார். மேலும், பிரதான ஆசாரியனின் சரீர அங்கங்களான அவருடைய சபை மாம்சத்தில் இருந்து கொண்டு கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவாக்கிக் கொண்டிருக்கின்றனர். விரைவிலே முழு பிரதான ஆசாரியன் அவனுடைய எல்லா அங்கத்தினரும் மரித்து விடுவர். பிறகு புதிய யுகம் ஆரம்பித்து விடும்.

அதன்பின் நாம் ஒருபோதும் நம்முடைய சொந்த குறைப்பாடுகளை பொறுப்பேற்க கடமைப்பட்டவர்கள் அல்ல. நீதியின் முன் நாம் மூடப்பட வேண்டிய அவசியம் ஏற்படவேண்டியதில்லை. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து அதுமுதல் பரிபூரணம் அடைந்து நமது கர்த்தரும், போதகரும் போல் ஆக்கப்படுவதால் நாம் குற்றமற்றவர்களாகவும், கறை, திரை அற்றவர்களாகவும் பிதாவாகிய தேவன் முன் நிறுத்தப்படுவோம். தெய்வீக நீதியானது நம்மை பழி வாங்க முடியாத நிலையிலும் நாம் நிறுத்தப்படுவோம்.

முழு ஒழுங்குமே தேவனுடையது. நீதி என்பது பாவத்திற்காக பழி வாங்குவதாகும். ஆனால் கிறிஸ்துவோ அடைக்கலமாக இருக்கின்றார். ஆகையால் கர்த்தர் இயேசுவை ஏற்றுக் கொண்டு நமக்காக அவர் செய்த வேலைகள், அதாவது அவருடைய பலியினால் வந்த இரட்சிப்பு மற்றும் எல்லா ஆசீர்வாதங்களும் பிதாவிடமிருந்து அவர் மூலமாய் வருகின்றது என்ற உண்மையை உணர்ந்து நாம் அதிகமாய் பாராட்டும் போதும் பிதாவை கனப்படுத்துவதுப் போல், குமாரனையும் கனப்படுத்தும்போதும், இந்த ஆசீர்வாதங்கள் பிதாவிடமிருந்து குமாரன் மூலமாய் வருகின்றது என நினைவுக்கூறுவது தகுதியானதேயாகும். "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அனுகூலமானத் துணையுமானவர்"

## தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன்,சோனா,போன்ற குணமுடையோரே

தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன்,சோனா,போன்ற குணமுடையோரே,
துங்கம் பிரகாசமாகவே, மஞ்சளாயிருக்குமே,கடினமாயும், குளிர்ச்சியாயும் இருக்குமே,
மாசு நீக்கியே சுத்தம் செய்யப்பட்டதே, சித்திரமாய் ஆபரணமாய் செதுக்கப்பட்டதே,
சுத்தியலால் அடிக்கப்பட்டே உருட்டப்பட்டதே,
கிடைப்பதற்கு அரிதானதும், அணிந்துகொள்ள, பற்றிக்கொள்ள எளிதானதே,
பதுக்கப்படுவதும், மாற்றிக்கொள்வதும், வாங்குவதும்,விற்பதுவும்ஆனதே,
திருடப்படவும், கடனாக வாங்கவும், அடைமானம்வைக்கவும் ,
உதாசீனமாய் செலவழிக்கவும் ஆனது,
இளையோர்களாலே ஒதுக்கப்படுவது, முதியோர்களாலே விரும்பப்படுவது,
எல்லோருக்குமான விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டதே, பலரின்பாவம் மறைக்கப்பட்டதே.
தங்கம் தங்கம் தங்கமே,
தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன், பொன்,சோனா.

தங்கம்தங்கம் தங்கமே,
சொர்ணம் சொர்ணம் சொர்ணமே,
பங்காரு பங்காரு பங்காருவே,
சோனா சோனா சோனாதான்,
பத்தரை மாற்றுத் தங்கமேதான்,
பிரகாசமாகவே, மஞ்களாய் இருக்குமே,
கடினமாகவும் குளிர்ச்சியாயும் இருக்குமே,
மாசறுப்பொன்னே,மாசறுப் பசும்பொன்னே,குற்றம் நீக்கியேசுத்தம் செய்யப்பட்டதே,
சுத்தியலால் அடிக்கப்பட்டேஉருட்டப்பட்டேஆபரணமாய் செதுக்கப்பட்டதே,
கிடைப்பதற்கு அரிதானதே,அணிந்துகொள்ளவும் பற்றிக்கொள்ளவும் எளிதானதே,
பதுக்கப்படவும், மாற்றிக்கொள்ளவும், வாங்கவும், விற்கவும் ஆனதே,
திருடப்படவும், கடனாய்வாங்கவும், அடைமானமாய் வைக்கவும்,
உதாசீனமாய்செலவுசெய்யவும் ஆனதே,
ஒருவருக்கு இவ்வளவுதான்என ஒதுக்கப்படுவதே,
இளையோர்களாலே ஒதுக்கப்படுவதே, முதியோர்களாலே விரும்பப்படுவதே,
சோல்லி முடியாபல பாவிகளின் , பாவத்திற்காகவே விலையாகக்கொடுக்கப்பட்டதே,

தங்கம்தங்கம் தங்கமே

சொர்ணம் சொர்ணம் சொர்ணமே,

பங்காரு பங்காரு பங்காருவே,

சோனா சோனா சோனாதான்,

பத்தரை மாற்றுத் தங்கமேதான்.

# நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்

**1 தெசலோனிக்கேயர் 5:14-28**

கர்த்தருடைய ஜனங்கள் கிருபையில் வளர்வதற்கும், உண்மையுள்ளவர்களாய் இருப்பதின் வாயிலாக இறுதியில் தங்கள் மீட்பர் மூலமாக ஜெயங்கொண்டவர்களாகுவதற்குமென அவர்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டிய சரியான மனநிலைமையைப் பற்றியதாகவே நம்முடைய இந்தப் பாடம் காணப்படுகின்றது. ஆதார வசனத்தின் வார்த்தைகளானது தெசலோனிக்கேயா பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கென்று கூறப்பட்டிருந்தாலும், இது எழுதப்பட்ட காலம் துவங்கி, தற்காலம் வரையிலுமுள்ள கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் இந்தத் தலைச்சிறந்த வார்த்தைகளானது, பலத்திற்கும், உற்சாகத்திற்கும் மற்றும் நெறிமுறைப்படுத்துதலுக்குமான ஆதாரமாய்க் காணப்பட்டு வருகின்றது. தெய்வீக ஆலோசனைகளையுடைய இந்த வார்த்தைகளைத் தேவனுடைய பிள்ளைகள் எவரும் புறக்கணித்துவிடக் கூடாது; மேலும் எந்தளவுக்கு நாம் ஒவ்வொருவரும் இவைகளுக்குச் செவிகொடுக்கின்றவர்களாய் இருக்கின்றோமோ, அவ்வளவாய் நாம் நிச்சயமாய்க் கிறிஸ்துவைப்போல் அதிகமாய் ஆகுவோம் மற்றும் இவ்வாறாக நாம் அதிகமாய்க் கர்த்தருக்குப் பிரியமாய்க் காணப்படுவோம் மற்றும் இறுதியில் ஆயிர வருட அரசாட்சியிலும், அதன் மகிமைகளிலும், மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிக்கும் அதன் வேலையிலும், அவருடன் உடன் சுதந்தரர்களாகுவதற்குரிய நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிச் செய்கிறவர்களாகவும் இருப்போம். அப்போஸ்தலனின் இந்தக் கட்டளைகளை நாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பார்க்கலாம்.

மூப்பர்கள் என்பவர்கள் ஏதோ ஒரு தனிப்பட்ட வகுப்பினராகவும், சகோதர சகோதரிகளை தங்களது பராமரிப்பின் கீழ்க் கொண்டிருப்பவர்கள்போல் கையாளுபவர்களாகவும், அதிகாரம் செலுத்துபவர்களாகவும் இருப்பதுபோல், இங்கு மூப்பர்களுக்கென்று மாத்திரம் அப்போஸ்தலனால் புத்திமதி கூறப்படவில்லை; அப்போஸ்தலன் "சகோதரர்களுக்கு" இவைகளைக் கூறுகின்றார், அதாவது முழுச்சபைக்கும், சகோதிரிகளையும் உள்ளடக்கிக் கூறுகின்றார். ஆனால் அதற்கென்று இவ்வாலோசனைகளானது, விசேஷமாக மூப்பர்களுக்குப் பொருந்தாது என்று அர்த்தமாகாது, ஏனெனில் மூப்பர்கள் என்பவர்கள் சகோதரர் மத்தியிலிருந்து கிறிஸ்தவ உபதேசத்திலும், அதை நடைமுறைப்படுத்துகின்ற விஷயத்திலும் மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்கள் என்று தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும், கர்த்தருடைய மந்தைக்கான நலனுக்கடுத்த விஷயங்களை விசேஷமாய்க் கவனித்துக்கொள்வதற்காகச் சபையின் பிரதிநிதிகளாகவும், தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகளானது, தேவனுடைய வழிநடத்துதலின் கீழ், அவருடைய மந்தைகளை மேய்க்கத்தக்கதாக, அவரது சபையின் மீது மேற்பார்வை பண்ணும் பொறுப்பைப் பெற்றுள்ள மூப்பர்களுக்கு விசேஷித்த அழுத்தத்துடன் கடந்து வருகின்றதாக இருப்பினும், இவ்வார்த்தைகளானது மந்தையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும், அவனவன் ஆற்றல் மற்றும் திறமைக்கு ஏற்ப பொருந்துகின்றதாயுள்ளது (அப்போஸ்தலர் 20:28). ஆகவே இங்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளை நிறைவேற்றிடுவதற்கு அனைத்துச் சகோதர சகோதரிகளும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றாலும், இந்தக் கட்டளைகள் தொடர்புடைய விஷயத்தில் ஒவ்வொரு சபையிலுள்ள மூப்பர்களும், விசேஷித்தப் பொறுப்பினை உணர்ந்துகொண்டவர்களாகக் காணப்பட வேண்டும்; அதாவது சபையின் பிரதிநிதிகளென, சபைக்கான கொள்கைகளைச் சுமப்பவர்களெனத் தாங்கள் காணப்படும் ஸ்தானத்தினால் உண்டான பொறுப்பினை உணர்ந்துகொண்டவர்களாகக் காணப்பட வேண்டும்.

இங்கு ஒழுங்கில்லாதவர்கள் என்பவர்கள், திடனற்றவர்களிடமிருந்தும், பலவீனமானவர்களிடமிருந்தும் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளனர். தெய்வீக ஏற்பாடுகள் என்பது முழுக்க ஒழுங்கு உடையதாகவும், முழுக்கச் சுயாதீனம் உடையதாகவும் காணப்படுகின்றது; மேலும் இதனை சரியாகப் புரிந்துகொள்ளும்போது, ஒழுங்கின் மூலமாக, சுயாதீனமானது சிறந்த விதத்தில் பாதுகாக்கப்பட முடியும் மற்றும் தனிப்பட்ட சுயாதீனம் குறித்த நியாயமான அடையாளங்கண்டு கொள்ளுதலின் காரணமாக ஒழுங்கானது சிறந்த விதத்தில்

தக்கவைத்துக்கொள்ளப்பட முடியும். ஆனால் பூமிக்குரிய சட்டங்களை இயற்றுபவர்களாலும், கண்டிப்பான ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பவர்களாலும் மாத்திரமல்லாமல், கிறிஸ்துவினுடைய சபையிலுங்கூட அடிக்கடி செய்யப்படும் தவறு, மிதமிஞ்சி செயல்படுவதேயாகும், அதாவது ஒழுங்கின் விஷயத்திலோ (அ) சுயாதீனத்தின் விஷயத்திலோ மிதமிஞ்சி செயல்படுவதேயாகும். சுயாதீனம் என்கிறபோது, சட்டத்திட்டங்களுக்கு உட்படாத நிலையில் காணப்படுவதை, ஒழுங்கீனமாய், தாறுமாறாக நடப்பதைக் குறிக்கின்றது எனச் சிலர் தவறாய்ப் புரிந்துகொள்கின்றனர். இன்னும் சிலர் நல்ல நோக்கங்களைக் கொண்டவர்களாக, மந்தையினுடைய தனிப்பட்ட சுயாதீனங்களைக் குறுக்கிப் போடுமளவுக்கு ஒழுங்குகளையும், கட்டளைக்குக் கீழ்ப்படிதலையும் செயல்படுத்துவதற்கு முற்பட்டுவிடுகின்றனர். இவ்விஷயத்தில், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் பிணக்குகளைத் தவிர்ப்பதற்கும், அன்பு மற்றும் சமாதானத்தினுடைய கட்டுகளினால், ஆவியில் ஒருமைப்பாட்டினைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் அதிகமான கிருபை அவசியமாய் இருக்கின்றது.

கர்த்தருடைய ஜனங்கள் கூடிடும் விஷயத்தில், ஒழுங்குகளை, விதிகளை, பிரமாணங்களைப் புறக்கணித்துப் போடுமளவுக்கு, தனிப்பட்ட சுயாதீனம் குறித்த தவறான கருத்துக்களை உடையவர்களாக நாம் இருக்கக்கூடாது; ஒழுங்கில்லாதவர்களும் மற்றும் தங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொள்பவர்களும் மற்றும் சபை வேண்டிக்கொள்ளாதப் போதிலும் எதிலும் தலையிடுபவர்களுமானவர்கள் - கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டும், புத்தி சொல்லப்பட வேண்டும் மற்றும் இவர்களது நடத்தை கர்த்தருடைய ஆவிக்கும், அவருடைய பிரதிநிதிகளாகிய அப்போஸ்தலர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் அனைத்திற்கும் எதிராக இருக்கின்றது என்று சுட்டிக்காண்பிக்கப்பட வேண்டும். மேலும் இவர்களது நடத்தையானது சபைக்கு ஆசீர்வாதமாகவும், சமாதானத்திற்கு, சந்தோஷத்திற்கு மற்றும் வளர்ச்சிக்கு ஏதுவானதாகவும் இருப்பதற்குப் பதிலாக, சபைக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கின்றது என்றும், இவர்களுக்கும் பாதிப்பாக இருக்கின்றது, அதாவது இவர்களது இத்தகைய நடத்தைகளானது, இவர்களுக்குள் ஏற்கெனவே அதிகமாகவே காணப்படும் சுயமதிப்பை (அ) சண்டைப்போடும் தன்மையை இன்னும் வளர்த்துவதற்கு ஏதுவாகி, இப்படியாகத் தேவனுக்குரிய காரணங்களுக்கு மாத்திரமாக பாதிப்பாய் இராமல், இன்னும் இராஜ்யத்தில் பங்கடைவதற்கு அவசியமான குணலட்சணத்தின் சாயலை இவர்கள் அடைவதற்குத் தடையாகக் காணப்படும் என்றும் இவர்களுக்குப் புத்திமதி கூறப்பட வேண்டும்.

இப்படியாகச் சிலருக்குப் புத்திகூறப்பட்டு, கட்டுப்பாட்டில் வைக்கப்படவேண்டியதாயிருக்க, திடனற்றவர்களும், பலவீனமானவர்களுமான சிலருக்கு உதவிசெய்தலும், தாங்குதலும், உற்சாகமூட்டுதலும் அவசியமாய் இருக்கின்றது; இயல்பாகவே மந்தமானவர்களாகவும், தன்னம்பிக்கை இல்லாதவர்களாகவும், தன்னைப் பற்றி மதிப்பாய் எண்ணுதலிலும், போராடும் தன்மையிலும் குறைவுப்பட்டவர்களாகவும் இருப்பவர்கள் - இவர்கள் உற்சாகமடைவதற்கும், விசுவாச வீட்டார் முழுமையாய் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஏதுவாய் இவர்கள் உண்மையில் பெற்றிருக்கும் தாலந்துகளை வெளியே கொண்டுவருவதற்குக் கொஞ்சம் முன்னுக்கு வரத் தூண்டப்பட வேண்டும்.

"எல்லாரிடத்திலும் நீடிய (பொறுமையாயிருங்கள்) சாந்தமாயிருங்கள்" என்கிற வார்த்தைகளானது, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் நன்கு சீரான நிலைமையில் காணப்படுபவர்கள், மேற்கூறப்பட்டுள்ள (ஒழுங்கில்லாதவர்கள், திடனற்றவர்கள், பலவீனர்கள்) வகுப்பார்களிடத்தில் பொறுமையுடன் கூடிய சாந்தத்துடன் காணப்பட்டு, அவர்களை அனுதாபத்தோடு பார்த்திட வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; மேற்கூறப்பட்டுள்ள பலவீனர்களிடத்திலும், திடனற்றவர்களிடத்திலும் மாத்திரமல்லாமல், அனைவரிடத்திலும் மற்றும் அதிகமான துணிவும், சுய உந்துதலும் உடையவர்களிடத்திலுங்கூடப் பொறுமையுடன்கூடிய சாந்தத்துடன் காணப்பட்டு, அனுதாபத்துடன் பார்த்திட வேண்டும். "பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்று வேத வாக்கியங்கள் திரும்பத்திரும்ப நமக்குப் புத்திமதி கூறுகின்றது மற்றும் இந்தத் தேவைப் பற்றின உண்மையை வளர்ந்துவருகிற கர்த்தருடைய பிள்ளைகள் நாளுக்குநாள் உணர்ந்துகொண்டு வருகின்றனர் மற்றும் பொறுமையானது, பிரதானமான கிறிஸ்தவ குணலட்சணங்களில் ஒன்றாக இருக்கின்றது என்பதையும் உணர்ந்துகொள்கின்றனர். (1) அறிவில் வளர்தல் என்பது, பொறுமை எனும் இப்பண்பில் நாம் வளர்வதற்கு உதவியாய் இருக்கின்றது, ஏனெனில் பரம பிதா நம்மிடத்தில் பொறுமையாய் இருப்பதைக் குறித்து நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளும்போது, இதே கொள்கையை மற்றவர்களிடத்தில் செயல்படுத்துவதற்கு நமக்கு இந்த உணர்ந்துகொள்ளுதலானது உதவியாய் இருக்கின்றது. (2) நம்முடைய இனத்தின் மீது வந்துள்ள

மாபெரும் துன்பத்தை, அதாவது நம்முடைய விழுந்துபோன நிலைமையை நாம் உணர்ந்துகொள்ளும் நிலைமைக்கு வரும்போது மற்றும் எவ்வாறு விழுகையானது சிலரை சில விதங்களில் அதிகமாய்ப் பாதித்துள்ளது என்றும், மற்றவர்களை வேறு விதங்களில் அதிகமாய்ப் பாதித்துள்ளது என்றும், அதாவது சிலரைப் பிரதானமாய் மன ரீதியிலும், சிலரைப் பிரதானமாய்ச் சரீர ரீதியிலும், சிலரைப் பிரதானமாய் ஒழுக்க ரீதியிலும் பாதித்துள்ளது என்று நாம் உணர்ந்துகொள்ளும் நிலைமைக்கு வரும்போது, இதினிமித்தம் நம்முடைய சகமனிதர்களிடத்திலான நம்முடைய அனுதாபம் பெருகுகின்றது மற்றும் அவர்களைக் கையாளும் விஷயத்தில் இப்படியாக நம்முடைய பொறுமையை அதிகரிக்கின்றது. இது விசுவாச வீட்டார் தொடர்புடைய விஷயத்தில் குறிப்பாய் உண்மையாகக் காணப்படுகின்றது; தேவன் கிருபையாய் அழைத்துள்ள விசுவாச வீட்டார் மத்தியிலுள்ள சிலர் அதிகம் குறைவுடையவர்களாகக் காணப்படுவதை நம்மால் பார்க்க முடிகின்றது; சில விஷயங்களில் அவர்கள் நம்மைக்காட்டிலும் குறைவுகள் உடையவர்களாகக்கூடக் காணப்படலாம், ஆனால் நாமோ வேறு சில விஷயங்களில் அவர்களைக் காட்டிலும் மிகவும் பூரணமற்றவர்களாய்க் காணப்படுகின்றவர்களாய் இருப்போம். நமது பரம பிதா ஒருவரில் கிருபை கூர்ந்து, அழைத்துள்ளார் என்ற கருத்தானது, அழைப்புத் தொடர்புடைய விஷயத்தில் கர்த்தரோடுகூட நாம் ஒத்துழைப்பதிலும், நம்மால் முடிந்தமட்டும், இடுக்கமான வழியில் நம்மோடுகூடக் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடந்திடுவதற்கு நாடுபவர்களுக்கு உதவியாய் இருப்பதிலும், நம்மை மிகவும் கவனமாய் இருப்பதற்கு ஏவுகின்றதாய் இருக்கின்றது. ஆகவே சகோதர சகோதரிகளிடத்தில் நாம் விசேஷித்தப் பொறுமைகொண்டிருக்க வேண்டும் (உரோமர் 14:15; 1 கொரிந்தியர் 8:11).

"ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்." முற்காலங்களில் நமது கர்த்தருடைய பின்னடியார்களுக்கு எவ்வளவு தீமை செய்யப்பட்டது என்பதை நாம் நினைத்துப் பார்க்கும் போதே, மேற்கூறிய புத்திமதி, விசேஷித்த ஆற்றல்மிக்கதாய்க் காணப்படும். தெசலோனிக்கேயா பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கு நிருபங்களை எழுதின பவுலும், அப்பட்டணத்துப் பரிசுத்தவான்களும், கர்த்தருடைய வார்த்தைகளை, சுவிசேஷத்தை, ஜீவ வார்த்தைகளைப் பறைசாற்றுவதில் காண்பித்த உண்மையின் நிமித்தம் அநேகம் பாடுகள் பட்டவர்களாய் இருந்தனர். கர்த்தருடைய பின்னடியார்கள் தங்கள் சத்துருக்களுக்குப் பதிலுக்குப்பதில் தீமை செய்வதன் மூலமாக, அல்லது வேறு ஏதாகிலும் விதத்திலோ தங்கள் சத்துருக்களைப் பழிவாங்குவதற்கு முற்படக்கூடாது என்பதே மேற்கூறப்பட்டுள்ள புத்திமதிக்கான அர்த்தமாகும். நாம் அடைந்திட்ட தீமைக்கு, நன்மையையே நாம் பதிலாகச் செய்திட நாடிட வேண்டும் என்று கர்த்தருடைய அறிவுரை காணப்படுகின்றது; இந்தப் புத்திமதி நம்முடைய வார்த்தைகளையும், நம்முடைய நடத்தைகளையுங்கூட உள்ளடக்குகின்றது; நாம் பதிலுக்குப் பதில் வார்த்தைகளையோ, பழிச்சொற்களுக்குப் பழிச்சொற்களையோ, குற்றப்படுத்துதல்களுக்குக் குற்றப்படுத்துதல்களையோ, அவதூறுகளுக்கு அவதூறுகளையோ, அடிக்கு அடியையோ சரிக்கட்டுதல் கூடாது. இந்தப் புத்திமதியானது நம்முடைய சிந்தனைகளையுங்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது, ஏனெனில் நாம் கோபத்திற்குக் கோபத்தையோ, குரோதத்திற்கு குரோதத்தையோ, பொறாமைக்குப் பொறாமையையோகூடச் சரிக்கட்டக் கூடாது. இரண்டு தீமைகள் சேர்ந்து, ஒருபோதும் ஒரு நன்மையை உண்டுபண்ணிட முடியாது; இரண்டு தவறுகள் ஒருபோதும் ஒரு சரியான காரியத்தை உண்டுபண்ணிட முடியாது. குருடாக்கப்பட்டுள்ள நம்முடைய சத்துருக்களுக்காக அனுதாபங்கொள்வது என்பது, எண்ணத்திலும், வார்த்தையிலும் மற்றும் கிரியையிலும் அவர்களிடத்திலான நமது பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் வளர்த்திடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது (1 பேதுரு 2:21-23).

பழிச்சொற்களுக்கு, பழிச்சொற்களையோ அல்லது தீமைக்குத் தீமையையோ கர்த்தருடைய ஜனங்கள் சரிக்கட்ட முற்படாமல், "நன்மை செய்ய நாடிட வேண்டும்;" அதாவது கர்த்தர் அங்கீகரிக்கும் காரியங்களை, நன்மையான காரியங்களைச் செய்ய நாடிட வேண்டும். இது இராஜரிக ஆசாரியக் கூட்டத்தின் ஒவ்வொரு அங்கத்தினனும் தன்னால் முடிந்தமட்டும் நீதியானவைகளைச் செய்ய நாடுவதை, அதாவது நல்ல மற்றும் உயர்வான உணர்வுகள் அனைத்தையும் கொண்டிருக்க நாடி, கர்த்தரில் உதாரணமாய் விளங்கும் பரிபூரணத்தின், நீதியின் உயர்வான கொள்கைகளுக்கு ஏற்ப முடிந்தமட்டும் வாழ நாடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நன்மை செய்வதற்குரிய இந்த நாடுதலானது, இதே நாடுதலையுடைய சகோதர சகோதரிகள் மத்தியில் மாத்திரம் செயல்படுத்தப்படாமல்/தக்கவைக்கப்படாமல், இன்னுமாக

மற்றவர்களாகிய உலகத்தாருடனான நம்முடைய கையாளுதலின் விஷயத்திலும் செயல்படுத்தப்பட வேண்டும். உலகத்திலுள்ள சிலர், நாம் கூறும் காரியங்களைக்காட்டிலும், நாம் தீமையைத் தவிர்ப்பதையும் மற்றும் நீதியை, நன்மையைச் செய்ய நாம் தொடர்ந்து நாடுவதையும் காணுவதன் மூலமாக சுவிசேஷத்தை அதிகமாய்க் கற்றுக்கொள்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர்; மேலும் இப்படிப்பட்டவர்கள் நமக்குள் இருக்கும் புதிதான ஜீவனைக் கண்டுபிடிக்கும்போது, நமக்கு இத்தகைய மாற்றத்தினைக் கொண்டுவந்திட்ட சுவிசேஷத்தின் செய்தியினைக் கேட்பதற்குரியச் செவியினைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்குப் படிப்படியாக வருவதற்கு வாய்ப்புண்டு.

அப்போஸ்தலனுடைய இந்த ஆலோசனையை உலகத்தின் ஆவியானது அங்கீகரிப்பதில்லை, மாறாக நம்மை எப்படி மற்றவர்கள் நடத்துகின்றார்களோ, அப்படியே நாமும் மற்றவர்களை நடத்திட வேண்டும் என்றும், நமக்குச் செய்யப்படுகின்ற நன்மைக்கு ஏற்ப நன்மைசெய், இன்னுமாக நமக்குச் செய்யப்படுகின்ற தீமைக்கு ஏற்ப தீமை செய் என்றும் வலியுறுத்துகின்றது. உலகத்தின் ஆவியை உடையவர்கள் சிலசமயம் கர்த்தருடைய பின்னடியார்களைக் கோழைகள் என்று பழிச்சுமத்துகின்றனர். தைரியம் என்பது மனுஷீகத்தினுடைய தலைச்சிறந்த பண்புகளில் ஒன்றாகும்; மேலும் தங்களைக் கோழைகள் அல்லது தைரியமற்றவர்கள் என்று மற்றவர்கள் கருதுவது என்பது சிலருக்கு மிகவும் சோதனையான விஷயமாகக் காணப்படுகின்றது; மேலும் வார்த்தையிலும், கிரியையிலும் உணர்ச்சிவசப்படாமல், கட்டுப்பாட்டுடன் காணப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ள காரியமானது, இத்தகையவர்களுக்கு இன்னும் சோதனையான காரியமாக இருக்கின்றது. கர்த்தருடைய ஆலோசனையானது, கோழைத்தனத்திற்கு (அ) தைரியமின்மைக்கு ஏதுவானது என்று சொல்லப்படுவது உண்மையல்ல. இக்காரியம் குறித்து இன்னொரு ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"கிறிஸ்துவினாலும், அவரது அப்போஸ்தலர்களாலும் ஸ்தாபிக்கப்பட்ட (கிறிஸ்தவ) சமுதாயத்தில் வெட்ட வெளிச்சமாய்க் காணப்படும் ஓர் அம்சமானது, மரணம் மற்றும் சித்திரவதையின் தருணத்தில், ஆண்களால் மாத்திரமல்லாமல், பலம் குறைந்த பெண்களாலும், சிறுபிள்ளைகளாலும் வெளிப்படுத்தப்பட்ட அசாதாரணமான வீரமாகும். இந்த வீரமானது தத்துவ ஞானத்தின் உதவியினால் மனவலிமையை அடைய நாடிக்கொண்டிருக்கும் புறஜாதி நீதிபதிகளை வியப்பிற்குள்ளாக்கியுள்ளது. போர்புரிவதற்குப் படையெடுத்து வருபவர்களைக்காட்டிலும், சுவிசேஷத்தைக் கொண்டுவரும் ஊழியக்காரர்களையே பயமுறுத்துவதற்குக் கடினம், என்று கண்டுபிடித்த பயங்கரமான காட்டுமிராண்டிகள்கூட வியப்படைந்து, அவர்களது சாந்தத்தை, கோழைத்தனம் என்று தவறாய்ப் புரிந்துகொண்டனர். மூர்க்கத்தனமாய் எதிர்ப்பதைப்பார்க்கிலும், அமைதியாய்ச் சகித்தல் என்பதே மிகவும் வீரமான காரியமாகும்; மேலும் தன்மீது வரும் அவமதிப்பு மற்றும் கெடுதல்களைச் சாந்தமாய்ச் சகித்துக்கொள்ள வேண்டும் என்பதான கிறிஸ்தவ பிரமாணமானது, உச்சக்கட்டமான தைரியத்தையும், உண்மையான வீரத்தையும் வளர்த்துவதற்கு உதவுவதாக இருக்கின்றது. இந்தப் பிரமாணத்திற்கு ஏற்ப வாழ்வதைக் காட்டிலும், வேறு எதுவும், சரித்திரம் முழுவதிலும் மிகவும் தைரியமான காரியமாகவும், மிகவும் வீரமான காரியமாகவும் இருக்காது."

"எப்போதும் சந்தோஷமாயிருங்கள்" என்ற இதே புத்திமதியை அப்போஸ்தலன், பிலிப்பு பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கும் கொடுத்திட்டார். கிறிஸ்தவனுடைய சந்தோஷம் என்பது உணர்ச்சிகளின் கோளாறினால் ஏற்படாமல், மாறாக நிலைவரமான கொள்கைகளின் அடிப்படையிலும், ஜீவியத்தின் சகல புயல்காற்றுகள், சோதனைகள் மற்றும் அதிர்ச்சிகளின் மத்தியில் உறுதியாய் நிற்கின்ற தெய்வீக வார்த்தைகளுடைய ஆறுதலளிக்கும் நிச்சயங்கள் மற்றும் வாக்குத்தத்தங்களின் அடிப்படையிலும் ஏற்படுகின்ற சந்தோஷமாகும்.

"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்." கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கொஞ்சம் வளர்ச்சியடைந்தவர்களாகக் காணப்படும் மாணவர்கள் மாத்திரமே, மேற்கூறப்பட்டுள்ள இந்தப் புத்திமதியைத் தெளிவாய்ப் புரிந்துகொள்வதற்கு ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் சித்தங்களையும், தற்கால ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களையும் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிட்டவர்களாகவும், பரத்திற்குரிய காரியங்களுக்காகப் பூமிக்குரிய காரியங்களை விட்டுக் கொடுப்பவர்களாகவும் காணப்படுவதினால், மற்றவர்களைப் போன்று இவர்கள் இடைவிடாமல் பூமிக்குரிய நன்மையான காரியங்களுக்காக ஜெபம்பண்ணுவதில்லை. இவர்கள் பரத்திற்குரியவைகளை நாடுவதினால், இவர்களுடைய ஜெபமும் ஆவிக்குரிய காரியங்கள் தொடர்புடையதாகவே இருக்கின்றது; அதாவது பரம வஸ்திரம், பரம உணவு, பரம தயவு

தொடர்புடையதாகவே இருக்கின்றது. தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்குச் சிறந்ததெனக் கிருபை நிறைந்த கர்த்தர் கருதி, அனுமதிக்கும் அனுபவங்களில், எப்போதும் தாங்கள் சந்தோஷமாய்க் காணப்படுவதற்குத் தங்களுக்குத் தெய்வீகக் கிருபையினுடைய அத்தகைய ஓர் உதவி வேண்டும் என்றும், அத்தகைய ஒரு தெய்வீக வழிநடத்துதல் வேண்டும் என்றும்தான் இவர்களது ஜெபங்கள் விசேஷமாய்க் காணப்படுகின்றது. ஏற்கெனவே பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காகவும், இனிமேல் வரப்போகின்றதும், விசுவாசத்தின் கரங்களினால் இவர்கள் கைப்பற்றிக்கொண்டதுமான ஆசீர்வாதங்களுக்காகவும் ஏறெடுக்கப்படுகின்ற ஸ்தோத்திரங்களினால், இவர்களது ஜெபங்கள் அதிகமதிகமாய் நிரம்புகின்றது.

இவர்கள் இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறவர்களாய் இருக்கின்றார்கள் என்பது, இவர்கள் கர்த்தருடன் ஐக்கியம்கொண்டுள்ள நிலையிலும், அவருடைய சித்தம் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணிக்கப்பட்டுள்ள நிலையிலுமுள்ள இருதயத்தின் நிலையைக்கொண்டிருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது ஒவ்வொரு நாளினுடைய ஆரம்பத்தில் இவர்கள் அவரது ஆசீர்வாதத்தை மன்றாடிக் கேட்பவர்களாயும், நாளின் இறுதியில் தங்கள் நன்றியை/ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றவர்களாயும் மாத்திரம் காணப்படாமல், மாறாக ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும், தாங்கள் தங்களுடைய அனைத்தையும் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியுள்ளதை நினைவில் கொண்டிருக்க நாடி, ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும், விசுவாசத்தின் மூலம் அவரை ஏறெடுத்துப் பார்க்கின்றவர்களாயும், விசுவாசத்தின் மூலம் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் தேவனுடைய பராமரிப்பிற்குத் தொடர்பு இருப்பதை உணர்கின்றவர்களாகவும், அதற்கு நன்றி செலுத்துபவர்களாயும் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படிச் செய்வதே நம்மைக்குறித்த தேவனுடைய சித்தமாயிருக்கிறது; இப்படியாக நாம் தொடர்ந்து அவரது சித்தத்திற்காகவும், அவரது ஆசீர்வாதத்திற்காகவும் அக்கறை காட்டும் மனநிலையில் ஜீவிப்பது அவரது சித்தமாய் இருக்கின்றது; இப்படியாக நாம் காணப்படுவதற்கு அவர் சித்தங்கொண்டிருப்பதற்கான காரணம், இப்படியாகக் காணப்படும் நிலைமையே, இடுக்கமான வழியில் நம்முடைய முன்னேறுதலுக்கான மிகுந்த அனுகூலமான/சாதகமான நிலைமையாகவும், நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நமக்குச் சிறப்பாய் உதவக்கூடிய நிலைமையாகவும் இருக்கின்றது என்பதினாலேயே ஆகும்.

கர்த்தரிடத்திலான சபையின் சரியான மனநிலையானது, எப்பொழுதும் சந்தோஷமாயிருத்தலாகவும், இடைவிடாமல் ஜெபம்பண்ணுதலாகவும், ஸ்தோத்திரஞ்செலுத்துதலாகவும், அவரது வழிநடத்துதல்களை ஏற்றுக்கொள்ளுதலாகவும் காணப்பட வேண்டும் என்று சுருக்கமாகக் கூறிவிட்டப் பிற்பாடு, அடுத்ததாக அப்போஸ்தலன் சபையார், கர்த்தருடைய வார்த்தைகளை ஒன்றுசேர்ந்து புசிக்கையில் சபையார் ஒருவரிடத்தில் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மைக் குறித்துச் சுருக்கமாய்ப் புத்திமதி கூறும் வண்ணமாக,

"ஆவியை அவித்துப்போடாதிருங்கள்.
தீர்க்கத்தரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்.
எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.
பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்"
என்று கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:19-22).

இந்தப் புத்திமதிகளைப் பின்பற்றுவதன் வாயிலாக, கர்த்தரிடத்திலான சபையின் ஐக்கியமானது, மிகவும் நன்மை உண்டாக்குகின்றதாக இருக்கும் மற்றும் கர்த்தருடைய பின்னடியார்களாகிய சபையார் தாங்கள் அழைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான கொள்கையினிடத்திற்கு நேராக அதிகம் முன்னேறுவதற்கு உதவப்படுவார்கள். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் கர்த்தருடைய ஆவியானது, கர்த்தர் மற்றும் அவரது நோக்கங்கள் தொடர்புடைய அனைத்திற்குமான "புனிதமான அன்பின் ஜூவாலைக்கு" ஒப்பிடப்படுகின்றது; இந்த ஜூவாலையானது ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினரிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகையில், தெய்வீகச் செய்தியின் மூலம் நெருப்பு மூட்டப்படுகின்றது மற்றும் இப்படியாக இந்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ், முழுச்சபைக்கும் இந்த ஜூவாலையானது உரியதாகுகின்றது. சபையார் அறிவிலும், அன்பிலும், கர்த்தருடனான ஐக்கியத்திலும் எவ்வளவாய் வளர்கின்றார்களோ, அவ்வளவாய்ப் "புனிதமான அன்பின் இந்த ஜூவாலையானது," சபையாரை உலகத்தில் வெளிச்சமாக, மறைக்கப்பட முடியாத மலை மீதுள்ள பட்டணமாக ஆக்குகின்றது. அழிவின் அடையாளமாக வழக்கமாகப் பயன்படுத்தப்படும் நெருப்பு/ஜூவாலையானது, இங்கு வேறு அர்த்தமுள்ள அடையாளமாகக் காணப்படுகின்றது.

புனிதமான அன்பின் ஜூவாலையானது, பாவத்தைப் பட்சிக்காது மற்றும் அழிக்காது என்பது உண்மைதான், மாறாக அது பாவத்தின் நிமித்தம் அனுதாபம் கொள்கின்றது; பாவமானது, புதிய சிருஷ்டியினுடைய பாகம்/அம்சம் அல்ல; புதிய சிருஷ்டியானது பாவத்தை எதிர்க்கின்றது மற்றும் அதை அழித்திடுவதற்கு முற்படுகின்றது; அதாவது நீதி மற்றும் சத்தியத்தின் வெளிச்சமானது மிகவும் பிரகாசிக்கத்தக்கதாய்ப் பாவத்தை அழித்துப்போட விரும்புகின்றது. "புனிதமான அன்பின் இந்த ஜூவாலையானது" நம்முடைய அழிவுக்கேதுவான சரீரங்களை, சத்தியத்திற்கடுத்த ஊழியங்களில் ஜீவப்பலியெனப் பட்சித்துப்போடுகின்றது. மேலும் இப்படியான பட்சித்துப்போடுதல்களுக்குப் புதிய மனமானது முழு இசைவுடன் காணப்படுகின்றது மற்றும் பரலோகத்தில் தனக்கு நித்தியமான குடியிருப்பு இருப்பதைப் புதிய மனமானது உணர்ந்துகொண்டு களிகூருகின்றது மற்றும் கர்த்தருடைய நோக்கங்களுக்காகப் பாடுபடுவதற்குப் பாத்திரமாய்க் கருதப்பட்டதை எண்ணி புதிய மனமானது சந்தோஷப்படுகின்றது. "புனிதமான அன்பின் இந்த ஜூவாலையானது" தனித்தனியாகப் பரிசுத்தவான்களிடத்திலும், ஒட்டுமொத்த சபையார் அனைவரிடத்திலும் அதிகமாய் எரியும்போது, அனைத்து நற்காரியங்களிலுமான வளர்ச்சியும் அதிகமாய்க் காணப்படும். ஆகையால் நமது வார்த்தைகள், நடத்தைகள், சீயோனுடைய நலனுக்கடுத்த பொதுவான பொறுப்புகள் ஆகியவை, நம் அனைவரின் இருதயங்களிலும், ஜீவியங்களிலும் இந்த அன்பின் ஆவியானது சுதந்தரமாய் இயங்குவதற்கு அனுமதிப்பதற்கு நாம் விசேஷமாய் விழிப்புடன் காணப்பட வேண்டும்; மேலும் இந்த அன்பின் ஆவியானது தவறான உபதேசங்களினால் (அ) சடங்காச்சாரங்களினால் (அ) மிகவும் கடுமையான சட்டங்களினால் (அ) உலகத்தின் ஆவியினால் (அ) இந்த ஜீவயத்திற்கடுத்தக் கவலைகளினால் (அ) வேறு ஏதாகிலும் காரியங்களினால் (அ) நம்முடைய சூழ்நிலைகள் (அ) நிலைமைகளினால் அவித்துப் போடப்படாமல் இருப்பதற்கும் நாம் விசேஷமாய் விழிப்புடன் காணப்பட வேண்டும்.

சபையார் தீர்க்கத்தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருக்க வேண்டும்; முற்காலத்துப் பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசின தீர்க்கத்தரிசனங்களை நாம் அற்பமாய் எண்ணாதிருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை, மற்றும் இப்படியாகச் சபையாருக்கு எச்சரிப்பு வழங்குவதற்கும் அவசியமில்லை. நம் மத்தியில் கூறப்படும் தீர்க்கத்தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருக்க வேண்டும் என்பதாகவே புத்திமதி கூறப்பட்டுள்ளது. நாம் முன்னமே பார்த்திருக்கிறபடி, வரவிருக்கும் சம்பவங்களைப் பற்றி முன்னறிவிக்கும் தீர்க்கத்தரிசன வரமானது, கர்த்தரால் ஏவப்பட்டுக் கூறப்படும் செய்திகள் இல்லாதக் காலங்களில், கர்த்தருடைய ஜனங்களை ஸ்திரப்படுத்த உதவும்படிக்கு, அப்போஸ்தலனின் நாட்களில், சபையில் காணப்பட்ட ஆவியின் வரங்களில் ஒன்றாக இருந்தது. "தீர்க்கத்தரிசனம்" எனும் இந்த வார்த்தையை அப்போஸ்தலன் அடிக்கடி, பொதுவிடங்களில் பிரசங்கித்தல், பொதுவிடங்களில் போதித்தல் தொடர்பாகப் பயன்படுத்துவதை நாம் பார்க்கின்றோம். ஆதி திருச்சபையினர் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்கும், கட்டியெழுப்புவதற்குமெனப் பொதுவான கூடுகைகள் கூடிக்கொள்ளும் வழக்கத்தை உடையவர்களாய் இருந்தனர் மற்றும் இவர்கள் சத்தியம் தொடர்புடையதான வாதம் முறையிலான பிரசங்கங்களைக்காட்டிலும், அற்புதங்கள் மற்றும் அந்நிய பாஷையில் பேசும் வரங்களைக் குறித்து அதிகமாய் எண்ணிக்கொள்வதற்குரிய அபாயத்தில் காணப்படுவதற்குரிய வாய்ப்பு இருந்தது. மற்ற ஆசீர்வாதங்களை ஒதுக்கித் தள்ளாமலும், இந்தத் தீர்க்கத்தரிசனத்தை அற்பமாய் எண்ணாதிருக்கவும் வேண்டும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்; நமது கர்த்தர் ஒரு பிரசங்கியாகவும், அப்போஸ்தலர்கள் பிரசங்கிகளாகவும் இருந்தார்கள் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மத்தியில் போதகர்களை எழுப்பி வருகின்றார் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். ஆகையால் இம்மாதிரியான ஊழியமானது, அற்பமாய் எண்ணப்படக்கூடாது (அ) புறக்கணிக்கப்படக்கூடாது.

இவ்விஷயத்திற்கு நேர்மாறான ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்கின்றவர்களாய் இருக்கின்றோம்; பிரசங்கிப்பதற்கு மிக அதிகமான நேரத்தையும், மிக அதிகமான கவனத்தையும் கொடுத்தும், ஆனால் சத்தியத்தை மனதில் ஆழமாய்ப் பதியவைப்பதற்கும், கர்த்தருடைய மந்தையை ஊக்கப்படுத்துவதற்கும், "மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், பக்திவிருத்திப்பண்ணுவதற்குமுரிய" மற்ற வழிமுறைகளுக்குப் போதுமான நேரமும், கவனமும் கொடுக்காமலும் இருக்கும் அபாயமுள்ள காலப்பகுதியில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்; வழிநடத்துபவர்கள் மீதும், மற்றும் அவர்கள் கொடுக்கும் சத்திய தூதுகளின் மீதும் அதிகமாய்ச் சார்ந்திருக்கும் அபாயமுள்ள ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்." கர்த்தருடைய ஜனங்கள் தீர்க்கத்தரிசனங்களுக்கு அல்லது பொதுப்பிரசங்கித்தல்களுக்கு மதிப்புக்கொடுக்கும் நிலைக்கு வந்திட்டாலுங்கூட, அவர்கள் கேட்கிற எதையும், சரியான திரனாய்வு மற்றும் ஆராய்ந்துகொள்ளுதல் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது எனும் காரியத்தையும் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் கேட்கின்ற யாவையும் சோதித்துப் பார்க்க வேண்டும்; எவைகள் காரணகாரியத்திற்கு உட்பட்டது, வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றது என்றும், எவைகள் எல்லாம் வெறும் ஊகங்கள், தவறான வாதங்கள் என்றும் அறிந்துகொள்வதற்கு, மனதின் வேற்றுமை கண்டறியும் திறன் செயல்படுத்தப்பட வேண்டும். தெய்வீக வார்த்தைகளுடைய பரீட்சைகளில் நிலைநிற்பவைகளும், பரிசுத்த ஆவிக்கு இசைவானதென நிரூபணமாகுபவைகளுமாகிய அனைத்தையும் பற்றிக்கொள்ள வேண்டும் என்றும், இந்தப் பரீட்சைகளில், தோற்றுப்போகும் எதையும் உடனடியாகவும், முழுமையாகவும் தள்ளிவிட வேண்டும் என்றுமுள்ள கண்ணோட்டத்தில் கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் கேட்கும் காரியங்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும். அந்தோ! இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் இந்தப் புத்திமதிக்குக் கவனம் செலுத்துவது பெரிதும் அவசியமாய்க் காணப்படுகின்றது; ஏனெனில் காரணகாரியத்திற்கு உட்படாதவைகளாகவும், வேதவாக்கியங்கள் அங்கீகரியாததாகவும் தேவனுடைய வார்த்தைகளின் எழுத்தோ (அ) ஆவியோ ஆதரிக்காததாகக் காணப்படும் அநேகம் விஷயங்கள் கர்த்தருடைய நாமத்தில் அவருடைய வார்த்தைகளின் போதனைகள் என்று முன்வைக்கப்படுகின்றது; நலமானது அல்லாதவைகள் புறக்கணிக்கப்பட வேண்டும். இப்படியாக வேறுபடுத்திப் பார்க்கும் காரியங்களானது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் மத்தியில் காணப்படுமாயின், பெயரளவிலான கிறிஸ்தவ ஆச்சாரங்களுடைய பதர்கள் எவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருக்கும் மற்றும் பரீட்சைகளில் நிலைநிற்கிறதுமான, தேவனுடைய நல்வார்த்தைகளுக்காக எத்தகைய ஒரு தாகமும், பசியும், தேடுதலும் காணப்பட்டிருக்கும்! இவ்விஷயம் குறித்த அப்போஸ்தலனுடைய புத்திமதிக்கு நாம் உண்மையாய்ச் செவிக்கொடுப்போமாக.

"எல்லா வகையான தீமைகளையும் விட்டு விடுங்கள்" [திருவிவிலியம் சரியான மொழிப்பெயர்ப்பு] பல்வேறு விதமான பொல்லாங்குகள் நம்முன் கடந்துவருகின்றன; இவைகளில் சில அதற்கே உரிய பயங்கரமான தோற்றத்திலும், சில போலியான வேஷம் தரித்தும் காணப்படுகின்றன. அதாவது அதற்கே உரிய பொல்லாப்பினையும், கர்த்தருடைய ஜனங்களைப் பாவத்திற்குள் சிக்கவைப்பதற்கான முயற்சியையும் வெளியரங்கமாகவே காட்டும் சில பொல்லாப்புகள் காண்பிக்கின்றன; மற்றவகை பொல்லாப்புகளோ ஒளியின் தூதர்களைப் போன்று காண்பித்துக்கொண்டு, தவறாய் வழிநடத்திடுவதற்கும், வஞ்சிப்பதற்கும் நாடுகின்றன. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும், அது நன்மையின் தோற்றத்திலோ (அ) தீமையின் தோற்றத்திலோ எப்படியாகக் காணப்பட்டாலும் சரி, அவைகள் எதிர்க்கப்பட, புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதே புத்திமதியாக இருக்கின்றது. "நன்மை உண்டாகத்தக்கதாக, நாம் தீமை செய்யலாம்" என்று நாம் சொல்லக்கூடாது. எந்தச் சூழ்நிலையாயினும் சரி, அனைத்திலும் கர்த்தருடைய ஜனங்கள் நீதியின் கொள்கைகளுக்கு உண்மையாய்க் காணப்பட வேண்டும். இதற்கு மாறாக செயல்படுவார்களானால் அவர்கள் கட்டுவதற்கு நாடும் குணலட்சணங்களை வலுவற்றதாக்கிப் போடுபவர்களாய் நிச்சயம் காணப்படுவார்கள்.

"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" என்பது இன்னொரு கருத்தாகும்; அதாவது இக்கருத்தானது, அப்போஸ்தலனுடைய வார்த்தைகளின் உண்மையான கருத்தினின்று வேறுபட்டதாய் இருப்பினும், இக்கருத்துத் தெளிந்த புத்தியுள்ள கொள்கையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பொல்லாங்கானவைகள் எத்தகைய வடிவிலோ (அ) தோற்றத்திலோ காணப்பட்டாலும், அதை நாம் நிச்சயமாய் விட்டுவிலக வேண்டியது மாத்திரமல்லாமல், நன்மையானவைகள் என்று நாம் அறிந்திருப்பதும் மற்றும் நம்முடைய நண்பர்களால் (அ) அயலகத்தாரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுவதற்கும், தீமையானவைகள் என்று கருதிக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளவைகளை நாம் முடிந்தமட்டும் விட்டுவிலகிட வேண்டும். கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவுமான நமது செல்வாக்கு அதிகமாய்க் காணப்படத்தக்கதாக, தெளிந்த புத்தியுள்ள மனமானது, எல்லா வகையான தீமைகளை மாத்திரமல்லாமல், பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகும்படிக்கு ஆணையிடுகின்றது.

நிறைவாக, அப்போஸ்தலன் தனது ஆசியை வழங்குகின்றார். இது ஒரு பிராத்தனையாகும்; அதாவது அவர்கள் சார்பிலான, அவரது இருதயத்தினுடைய வாஞ்சையின் வெளிப்படுத்தலாகும்; அதாவது சமாதானத்தின் தேவன்தாமே அவர்களை முற்றிலும் பரிசுத்தமாக்கும்படியான அப்போஸ்தலனுடைய இருதயத்தின் வாஞ்சையினுடைய வெளிப்படுத்தலாகும். இவ்விதமாக தேவன் கலகத்திற்கு, குழப்பத்திற்கு, கிளர்ச்சிக்குத் தேவனாயிராமல், மாறாக சமாதானத்தின் தேவனாய் இருக்கின்றார் என்றும், எந்தளவுக்கு நாம் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் அவரால் போதிக்கப்படுகின்றோமோ, அவ்வளவாய் நாம் சமாதானத்தை விரும்புபவர்களாகுவோம் மற்றும் தேவனுடைய சமாதானமானது நம்மில் வாசமாயிருந்து, நம்மில் அதிகமதிகமாய்ப் பெருகி, பரிசுத்தமான குணலட்சணம் தொடர்புடைய விஷயத்தில் நம்மைக் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது மற்றும் நம்முடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் நம்மைச் சமாதானத்திற்கு ஆதரவாளர்களாக ஆக்குகின்றது என்றுமுள்ள உண்மையை அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9). இருதயத்தில் காணப்படும் சமாதானமானது, பார்வையிலும், வார்த்தையிலும் மற்றும் நடத்தையிலும் வெளிப்படுவது என்பது முற்றிலுமான பரிசுத்தமாகுதலுக்கும்/ஒப்புக்கொடுத்தலுக்கும் சாட்சியமாக இருக்கின்றது என்றும், இப்படியான பரிசுத்தமாக்கப்பட்ட இருதயத்திற்குள் தேவனுடைய ஆவியானது கடந்துவந்து எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமாகிய, அவருடைய சமாதானத்தினால் இருதயத்தை நிரப்புகின்றது என்பதற்கும் சாட்சியமாக இருக்கின்றது என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

"உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக." இங்கு அப்போஸ்தலன் ஒட்டுமொத்த சபையைக் குறிப்பிடுகின்றாரே ஒழிய, தனிப்பட்ட அங்கத்தினர்களை அல்ல; ஏனெனில் தெசலோனிக்கேயா பட்டணத்துப் பரிசுத்தவான்கள் மாத்திரம் கர்த்தருடைய பிரசன்னத்தின் நாட்கள் வரை உயிரோடு இருப்பார்கள் என்றோ, தான் அக்காலம்வரை உயிரோடு இருப்பார் என்றோ அப்போஸ்தலன் நிச்சயமாய் எதிர்ப்பார்க்கவில்லை (2 தீமோத்தேயு 4:7-8; 2 பேதுரு 1:12-15). தெசலோனிக்கேயா பட்டணத்து ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனுடைய ஆவி மற்றும் ஆத்துமா மற்றும் சரீரம் குறித்து அப்போஸ்தலன் இங்குக் குறிப்பிடாமல், மாறாக சபையினுடைய ஆவியைக் குறித்தும், சபையினுடைய சரீரத்தைக் குறித்தும் மற்றும் சபையினுடைய ஆத்துமாவைக் குறித்தும் குறிப்பிடுகின்றார். வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தெசலோனிக்கேயா பட்டணத்துச் சபை, சுவிசேஷ யுகம் முடிவு வரையிலும், கர்த்தருடைய ஆவியில் நிறைந்து, அவருக்கடுத்த வேலையில் தைரியம் கொண்ட, சிறந்த மற்றும் உண்மையுள்ள சபையாக தொடர்ந்து காணப்பட வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் வாஞ்சையாக இருந்தது. ஆனால் அப்போஸ்தலனின் இந்த நல்வாஞ்சைகள் (அ) ஜெபங்கள் நிறைவேறவில்லை என்பதை நாம் அறிவோம்; ஏனெனில் அப்போஸ்தலன் ஸ்தாபித்திட்ட மற்றச் சபைகள் போன்று, இந்தச் (தெசலோனிக்கேயா) சபையும் இல்லாமல் போயிற்று; அதாவது அப்போஸ்தலனுடைய அறிவுரைகளுக்கும், புத்திமதிகளுக்கும் போதுமான கவனம் செலுத்தாமலும், எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்காமலும், நலமானதைப் பிடித்துக்கொள்ளாமலும், பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகாமலும், முற்றிலும் பரிசுத்தமாகாமலும், தங்கள் மத்தியிலான கர்த்தருடைய ஆவியை அவித்துப்போட்டும் இருந்து, ஒரு சபையாராக இல்லாமல் போய்விட்டனர்; ஒளியானது ஆசீர்வதித்து, உறுதிப்படுத்தின சிலரோ, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை" நாடினவர்களாக மற்றப் பட்டணங்களுக்குக் கடந்துபோனார்கள்.

"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (1 தெசலோனிக்கேயர் 5:24). தெசலோனிக்கேயா பட்டணத்துச் சபையானது, அப்போஸ்தலனுடைய பிராத்தனைக்கு ஏற்றப்படி நீடிக்கவில்லை என்பதற்குக் காரணம், தேவன் உண்மையற்றவராகக் காணப்பட்டார் என்பதாக இராமல், மாறாக அப்போஸ்தலனின் அறிவுரைகளைப் பெற்றவர்கள் (அ) அச்சபையில் அவர்களுக்குப் பின் வந்தவர்கள் உண்மையற்றவர்களாகவும், புத்திமதிகளைப் புறக்கணித்தவர்களாகவும் காணப்பட்டதேயாகும். இப்படியாகவே கர்த்தரால் அழைக்கப்பட்ட நம் ஒவ்வொருவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாம் நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த வேண்டுமென்றால், நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மூலமான அவரது செய்தியைக் கேட்டு, செவிக்கொடுக்க வேண்டும். அவர் அனுப்பின வழியில் வரும் செய்தியை நாம் கேட்கவில்லையெனில், தவறு நம்மிடத்திலேயே

உள்ளது. நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராக இருக்கின்றார் மற்றும் நாம் அவரது ஏற்பாடுகளை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டு, அவரது வார்த்தைகளினுடைய வழிநடத்துதல்களைப் பின்பற்றுவோமானால், நாம் கேட்டுக்கொள்வது (அ) எண்ணுவதைக் காட்டிலும் அதிகமான மேன்மையான காரியங்களை நமக்குச் செய்வதில் தேவன் களிகூருகின்றவராய் இருக்கின்றார்.

"சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:25). அப்போஸ்தலனிடம் போப் அல்லது ஆண்டவன்மார்களின் எக்காரியமுமில்லை; கர்த்தருடைய மந்தையின் அனுகூலங்களுக்காக, தான் ஜெபம் ஏறெடுப்பதாகவும், ஆனால் தனக்கு அவர்களுடைய ஜெபங்கள் தேவையில்லை என்பதாகவுமுள்ள எந்த பெருமிதமான எண்ணங்கள் அப்போஸ்தலனிடம் இல்லை. இப்படியான ஆவியே, கர்த்தருடன் சரியான உறவுகொண்டிருக்கும் அனைவரிடமும் காணப்படுகின்றது; அதாவது தாழ்மையின் ஆவியும், விசுவாச வீட்டார் அனைவரையும் மற்றும் கிருபையின் சிங்காசனத்தினிடத்திலான அவர்களது வேண்டுதல்களையும் பற்றியதான ஓர் உணர்ந்துகொள்ளுதலும், கர்த்தருடன் சரியான உறவுகொண்டிருக்கும் அனைவரிடமும் காணப்படுகின்றது; அதாவது கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் எளியவருக்கு, பரம கிருபையின் சிங்காசனத்தினிடத்திற்குச் செல்ல முடியும் என்றும், தேவையின் நேரங்களில் உதவிடுவதற்குரிய பலத்தைக் கண்டடைந்து, இரக்கத்தை அடைய முடியும் என்றுமுள்ள உணர்ந்துகொள்ளுதல் கர்த்தருடன் சரியான உறவுகொண்டிருக்கும் அனைவரிடமும் காணப்படுகின்றது.

"சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:26). கைகளைக் குலுக்குதல் அல்லது வணக்கம் செய்தலாகிய தற்போதைய வழக்கத்திற்கு ஒத்த வழக்கத்தில், வரவேற்கும் ஆதிகால வழக்கமே இவ்வசனத்தில் குறிப்பிடப்படுகின்றது. புருஷர்கள் ஒருவருக்கொருவர் முத்தம் செய்துகொள்ளும் காரியமானது, இன்னமும் கிழக்கத்திய நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் அனைவரின் மத்தியிலும் உள்ளன்பு காணப்பட வேண்டும் என்பதும், இந்த ஐக்கியமானது நியாயமான வரவேற்பு/வாழ்த்துதல் முறைகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் அப்போஸ்தலனுடைய கருத்தாக இருக்கின்றது. அவர்களோடு அவர் இருக்க விரும்புவதையும், அவர்களைத் தனிப்பட்ட விதத்தில் வரவேற்க விரும்புவதையும் தெரிவிக்கும், "நான் வாழ்த்துகிறேன்" என்ற அர்த்தத்திலேயே அவர் அநேகமாக இக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

சபையார் மீதான கர்த்தருடைய ஆசீர்வாதத்தை வழங்குவதற்கு முன்னதாக, இந்த நிருபமானது யாருக்கு அனுப்பப்படுகின்றதோ, அவர்களால் இது தனிப்பட்ட கடிதமாக (அ) செய்தியாகக் கருதப்படாமல், மாறாக கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் தன்னால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்டு, அனைவருக்கும் வாசிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் மிகவும் உறுதியாய் ஆணையிடுகின்றார். வழிநடத்தும் சகோதரர்கள் மத்தியில் அதிகார ஆவியானது உருவாகி, தங்களுக்கென்று மாத்திரம் அப்போஸ்தலனுடைய கடிதமானது வைக்கப்பட்டு, தாங்கள் வாசித்தப் பிற்பாடு தங்களுடைய கணிப்பின்படி விவேகமானது என்று தோன்றும் கடிதத்தின் பாகங்களையோ (அ) முழுக்கடிதத்தையோ கொஞ்சம் கொஞ்சமாகச் சபையாருக்குக் கொடுக்க வழிநடத்திவிடும் என்று அப்போஸ்தலன் அஞ்சினதாகத் தெரிகின்றது. எந்தச் சபையிலுமுள்ள மூப்பர்கள் மத்தியிலான இப்படிப்பட்ட ஆவியானது கண்டனத்திற்கு ஏதுவானதாகும். தேவனுடைய வார்த்தைகளானது, தேவனுடைய ஜனங்களுக்குரியதாகும் மற்றும் அதைத் தடைபண்ணுபவர்கள் எவராக இருப்பினும், அவர்கள் ஆண்டவருக்குக் குற்றம் புரிகின்றவர்களாக இருப்பார்கள். நிருபமானது சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற காரியத்தை வைத்துப்பார்க்கும்போது, தெசலோனிக்கேயா பட்டணத்து மூப்பர்களின் உண்மை விளங்குகின்றது. இவ்விஷயம் தொடர்புடைய காரியங்களில், இன்றுள்ள சிலருக்கு ஜாக்கிரதை அவசியமாகும்; அநேக பிரசங்கிமார்கள், போதகர்கள், யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தில் ஆயிர வருட விடியலின் வெளிச்சத்தை உணர்ந்துகொண்டுள்ளனர்; ஆனால் இதை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்குப் பதிலாக, தங்கள் மந்தைகள் முன்னதாக தாங்கள் பிரகாசிக்கத்தக்கதாக, தங்களை வெளிச்சமூட்டிக்கொள்வதற்கெனக் கர்த்தருடைய ஜனங்களிடமிருந்து மறைத்துப்போட நாடுகின்றனர். இந்தத் தங்களுடைய முறைமையைத் தந்திரம் என்றும், தங்களை "ஞானிகள் என்றும், கல்விமான்கள்" என்றும் எண்ணிக்கொள்ளுகின்றனர் மற்றும் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்துகிறார் என்பதையும் மறந்துபோய்விடுகின்றனர். (லூக்கா 10:21) கர்த்தருடைய வார்த்தைகளின் பிரகாரமாக, இந்த

வகுப்பார் அதிகம் முன்னேறுவதில்லை; அவர்களிடமிருந்து சத்தியம் வெளியேறுகின்றது மற்றும் அதற்கேற்றப்படி இருள் வருகின்றது; ஏனெனில் இவர்கள் சத்தியத்தின் மீதான அன்பின் காரணமாக அல்லாமல், மாறாக சுயத்தின் மீதான அன்பின் காரணமாகவே சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் (2 தெசலோனிக்கேயர் 2:10). சத்தியமானது எந்த வழியாக வந்தாலும், கர்த்தருக்காகவும், அவரது மந்தைக்காகவும் மற்றும் அவரது சத்தியத்திற்காகவுமான நேர்மை என்பது, சத்தியத்தை நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்த மட்டும், அதற்கே உரிய தூய்மையில், முடிந்தமட்டிலுமான வேகத்தில், கர்த்தர் சித்தங்கொண்டுள்ள அவரது மந்தைக்கடுத்த நன்மைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு இசைவாக அறிவிப்பதை எதிர்ப்பார்க்கின்றது. தங்களைப் போஷித்துக் கொண்டு, மந்தைகளைப் போஷிக்காத மேய்ப்பர்கள், கர்த்தருடைய அதிருப்தி குறித்து எச்சரிக்கப்படுகின்றனர்; மேலும் இப்படிப்பட்ட மேய்ப்பர்கள் ஆவியில் தழைத்தோங்குவதோ அல்லது கர்த்தருடைய முகப்பிரகாசத்தின் வெளிச்சத்தைப் பார்ப்பதோ இல்லை (எசேக்கியேல் 34:2, 7-10).

---

# உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல

அநேக கர்த்தருடைய செம்மறியாடுகள் மனிதனுடைய பல்வேறு விசுவாசப் பிரமாணங்களுக்குக் கீழ்க்கூண்டில் அடைக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர் மற்றும் இப்படியாக உணவைப் பெற்றுக்கொள்வதிலிருந்தும், மாபெரும் மேய்ப்பனானவர் அவர்கள் பெற்றிருக்க வேண்டுமென்று நோக்கம் கொண்டுள்ளதான சுயாதீனத்தைச் செயல்படுத்துவதிலிருந்தும் தடைப்பண்ணப்பட்டிருக்கின்றனர். மாபெரும் பிரதான மேய்ப்பனுடைய செம்மறியாடுகளானது, கூண்டினால் ஒருவரிடமிருந்து ஒருவர் பிரித்துவைக்கப்படுவதும் மற்றும் தொழுவத்தின் தகுதியான சுயாதீனங்கள் அவர்களுக்குத் தடைப்பண்ணப்படுவதும், அவருடைய சித்தத்திற்கு எதிரானவையாகும். இந்த யுகத்தினுடைய உண்மையான செம்மறியாடுகள் மற்றும் மந்தை அனைத்தும் ஒரு பொதுவான வேலியடைப்பிற்குப் பின்னாகவே காணப்படுகின்றனர்; மற்றும் இதற்கு ஒரேயொரு வாசல் - அதாவது தாம் தான் வாசல் என்று கர்த்தர் நமக்குத் தெரிவிக்கின்றார்.

இந்த ஒரு தொழுவத்தையும், அதன் ஒரே வாசலையும் குறித்து அனைவரும் கொஞ்சம் அறிந்திருப்பார்கள் என்று நாம் எண்ணக்கூடும்; ஆனால் இது தவறாகும்; கிறிஸ்தவ மண்டலத்தில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எண்ணற்ற தொழுவங்களினிமித்தம், அநேகர் மிகவும் குழம்பிப்போய்க் காணப்படுகின்றபடியால், அநேகர் இவைகளை, உண்மையான தொழுவத்துடன் குழப்பிக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். "ஆடுகளுக்காக" ஜீவனைக்கொடுத்த நல்ல மேய்ப்பன், ஆடுகளுக்காகச் சில வரையறைகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றார் என்று "ஓநாய்கள்" அறிகையில் ஏமாற்றத்திற்குள்ளாகுகின்றனர்; மற்றும் ஆடுகள் அவருடைய சத்தத்திற்குக் (அவருடைய வார்த்தைகளுக்குக்) கீழ்ப்படியும் பட்சத்தில், ஆடுகளினால் அந்த வரையறையைத் தாண்டிச் சென்றிட முடியாது மற்றும் அவர்கள் உண்மையாய் அவரது ஆடுகளாய் இருக்கும் பட்சத்தில் அந்த வரையறையைத் தாண்டிச் சென்றிட விரும்பிடவும் மாட்டார்கள்.

சுவருகளுடனான இந்த உண்மையான தொழுவத்தினை, "மனிதனால் ஏற்படுத்தப்பட்டக் கூண்டு" என்று அழைக்க விரும்புபவர்கள், அப்படியே அழைக்கட்டும் - இதன் பாதுகாப்பினை அனுபவிப்பவர்கள், இதன் சுயாதீனத்தையும் அனுபவிக்கட்டும். இதற்கு ஒரேயொரு, உயரமான, மாபெரும் சுவர் காணப்படுகின்றது; இது இதுவரையிலும் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வருபவர்களை - ஆடுகளைப் போன்று பாவனைப்பண்ணுபவர்களைத் தவிர - மற்றப்படி ஓநாய்கள் உள்ளே வர தடுத்துள்ளது. இந்தச் சுவரானது, கல்வாரியில் நிறைவேற்றப்பட்டதான - மனிதனுக்கான ஈடுபலியாகிய - கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது என்பதாகும்.

வேலியானது உள்ளே அனுமதித்திடாத எவரும் "ஆடுகளல்ல." அந்த எளிமையான, அதே சமயம் பலமான விசவாசம் எனும் வேலிக்குப் பின்பாகக் கர்த்தருடைய "செம்மறியாடுகளுக்குத்" தகுதியான சுயாதீனம் அனைத்தும் காணப்படுகின்றது - எனினும் அச்சுயாதீனம் "வெள்ளாடுகளுக்கு" அநேகமாய்ப் போதுமானதாக இருப்பதில்லை.

இந்த உண்மையான தொழுவத்திற்குள்ளாகச் சபை பிரிவுக்கேதுவான வேலிகளை உடன் மேய்ப்பர்களோ அல்லது வேறு யாராவதோ ஏற்படுத்திடுவதோ அல்லது "ஆடுகளை" இப்படியானப் பிரிவுகளுக்குள்ளாக மயக்கி இழுத்து, இப்படியாய்த் தொழுவத்திற்குள்ளாகவே அவர்களது சுயாதீனங்களைக் கட்டுப்படுத்திடுவதோ தவறாய் இருக்கும்; உண்மையான தொழுவத்தின் உண்மையான வேலியடைப்பிற்குள்ளாக "ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு காணப்படும் ஓநாய்களிடமிருந்தும்" மந்தையினைப் பாதுகாத்திடுவது உண்மையான உடன்மேய்ப்பனுக்குத் தகுதியானது மாத்திரமல்லாமல், கடமையின் பாகமாகவும் காணப்படுகின்றது. (பிரியமான) தாவீது தனது மந்தைகளைப் பாதுகாக்கையில், சிங்கத்தையும், கரடியையும் கொன்றுப்போட்டு, தன் பொறுப்பின் கீழ்க் காணப்பட்ட ஆடுகளை விடுவித்தக் காரியமானது, சந்தேகத்திற்கு இடமின்றி கர்த்தருடைய மந்தைக்கான உண்மையான மேய்ப்பனுக்கு நிழலாய் இருக்கின்றது.

மாபெரும் பிரதான மேய்ப்பனாகிய நமது கர்த்தர், உடன் மேய்ப்பர்களுக்கு மாதிரியை முன்வைத்தார்; மற்றும் அவரால் நியமிக்கப்படுபவர்களில் உண்மையுள்ளவர்கள் அனைவரும், அதே ஆவியைப் பெற்றிருப்பது அவசியமாகும்; இல்லையேல் சீக்கிரமாய்த் தங்கள் பொறுப்பினை இழந்துபோகிறவர்களாய் இருப்பார்கள். அவர்தாமே உண்மையான ஆடுகளைப் பின்வருமாறு

கூறி முன்னெச்சரித்தவராய் இருந்தார்: "கள்ளத்தீர்க்கத்தரிசிகளுக்கு (போதகர்களுக்கு) எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு (கர்த்தருடைய மந்தையென்று அறிக்கைப் பண்ணி, ஆனால் உண்மையில் அப்படி இல்லாதவர்கள்; காரணம் தங்கள் பாவங்கள் அனைத்திற்குமாக ஒருதரம் செலுத்தப்பட்ட மாபெரும் பலியில் நம்பிக்கையில்லாமையாகும்) உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (இவர்கள் ஈடுபலியின் மீதான உங்கள் விசுவாசத்தினை அழித்துப்போட்டு, இப்படியாக உங்களை ஆடுகள் என்று இல்லாமலாக்கிப் போடுபவர்கள்); மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் (கள்ளப் போதகர்கள்) வருகிறதைக் கண்டு, ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் (கள்ளப் போதகர்கள்) ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" (மத்தேயு 7:15; யோவான் 10:12-15).

ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டுள்ள அல்லது ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொள்ளாமலேயே காணப்படும் ஓநாய்களின் அங்கீகரிப்பானது, உண்மையான உடன் மேய்ப்பன் நாடிட வேண்டிய காரியமல்ல. உண்மையான உடன்மேய்ப்பனானவன் பிரதான மேய்ப்பனின் மற்றும் ஞானேந்திரியங்களைப் பயன்படுத்தப் பயிற்சிப்பெற்றவர்களாகிய வளர்ச்சியடைந்துள்ள செம்மறியாடுகள் அனைவரின் அங்கீகரிப்பைப் பெற்றிட வேண்டும். விசுவாசிகளாகவும், "ஆடுகளாகவும்" இல்லாமல் இருக்கையில், தங்களை விசுவாசிகள் எனவும், ஆடுகள் எனவும் காட்டிக்கொள்கின்றவர்களாகிய இத்தகைய கள்ளப்போதகர்களுக்கு எதிராக அப்போஸ்தலனாகிய பவுல் கடினமாய்ப் போராடினவராய்க் காணப்பட்டார். இது குறித்து எபேசு பட்டணத்தின் சபையினுடைய மூப்பர்களிடத்தில் (உடன் மேய்ப்பர்களிடத்தில்) பேசுகையில், அவர் பின்வருமாறு கூறினார்:-

"எல்லோருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே (விலைக்கு வாங்கின காரியத்தின் மீதான விசுவாசமே அவர்களை "ஆடுகளாக்கிற்று") சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக (மேய்ப்பர்களாக) வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் (ஆம்! ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும்; மற்றப்படி உள்ளே ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை) உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, (பின்னடியார்கள்) சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி (பவுலாகிய நான் போதித்தவைகளிலிருந்து, மாறுபட்டவைகளை) மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப்போஸ்தலர் 20:26-31).

அப்போஸ்தலனாகிய பேதுருவும்கூட இதைப்போன்ற வேண்டுகோளினை உடன் மேய்ப்பர்களிடத்தில் பின்வருமாறு வைத்திட்டார்: "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்;" "கள்ளத்தீர்க்கத்தரிசிகளும் (கடந்த காலங்களில் "ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு") ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் (ஆக்கினைக்குள்ளான தீர்ப்பிற்கும் மற்றும் புறந்தள்ளுதலுக்கும் வழிநடத்தும் தப்பறைகள்) தந்திரமாய் (வஞ்சகமாய்த் தங்கள் போதனைகளுடைய உண்மையான நோக்கத்தினை மறைத்து) (தொழுவத்திற்குள்) நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை

அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்"-1 பேதுரு 5:1-4; 2 பேதுரு 2:1, 2.

அப்போஸ்தலனாகிய யோவானும் நம்மை எச்சரிக்கைப்பண்ணும் வண்ணமாகப் பின்வருமாறு கூறியுள்ளார்: "உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மனுஷகுமாரன் தம்மை அனைவருக்குமான ஈடுபலியாகக் கொடுத்திடுவதற்கு வந்தார் எனும் (மத்தேயு 20:28; 1 தீமோத்தேயு 2:6) கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். (ஆடுகளுக்கான போதகன் என்று) ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். (கிறிஸ்துவினால் போதிக்கப்பட்டதான ஈடுபலி எனும்) இந்த உபதேசத்தைக்கொண்டு வராமலிருந்தால் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் (அல்லது நாம் கர்த்தரினால் விலைக்கொடுத்து வாங்கப்படவில்லை எனும் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுதல்களைப் பரப்ப மறைமுகமாக உதவுபவன்) (வெளிப்படையாயும், வெளியரங்கமாயும் அவனால் செய்யப்படும்) துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2 யோவான் 8-11).

இப்படியாக மந்தையைத் தந்திரமான ஓநாய்களிடமிருந்து பாதுகாத்திடுவதும், ஏற்றகால சத்தியத்தினால் மந்தையைப் போஷிப்பதுமாகிய உடன் மேய்ப்பர்களின் கடமையானது, ஆரம்பக்காலங்கள் துவங்கி அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுக் காணப்படுகின்றது என்று நாம் பார்க்கின்றோம்; காரணம் ஆரம்பம் துவங்கியே இம்மாதிரியான ஓநாய்கள் காணப்பட்டன. மேலும் யுகத்தினுடைய முடிவில், "பொல்லாதவர்களும், வழிநடத்துபவர்களும்" மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள் என்றும், இவர்களைக் கருவியாகப் பயன்படுத்தி சாத்தான் அசத்தியத்தைப் பரவச் செய்திடுவான், ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்திடுவான் என்றும் பரிசுத்த ஆவியானது விசேஷித்த எச்சரிப்புகளைக் கொடுத்திருக்கிறபடியால், இந்த உண்மைகளையெல்லாம் ஆடுகள் யாவும் அடையாளம் கண்டுகொள்வதற்கும், தந்திரமான வார்த்தைகளினாலும், நயவசனிப்பினாலும் வஞ்சிக்கப்படாமல் இருப்பதற்கும் ஏற்றகாலம் வந்துள்ளதல்லவா? உண்மையான ஆடானது, சக ஆட்டினை, ஆட்டுத்தோலை வைத்துக் கணிக்கக்கூடாது; ஏனெனில் ஓநாய்க்கு, ஆட்டினுடைய தோலினைப் போர்த்திக்கொள்ள முடியும்; ஆடானது மேய்ப்பனுடைய சத்தத்தையும், பாணியையும் - நேரடியாய் அவரது வார்த்தைகளின் வாயிலாகவும் மற்றும் மறைமுகமாய் - அவரால் பயன்படுத்தப்படும் அவரது பிரதிநிதிகள் வாயிலாகவும், அதாவது மந்தையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவியானது வைத்தக் கண்காணிகள் (மேய்ப்பர்கள்) வாயிலாகவும் கவனிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இப்படியாக அப்போஸ்தலன் உடன் மேய்ப்பர்களுக்கு மாத்திரம் வழிக்காட்டிடாமல், இந்த அறிவுரையை அவர் சபைக்குச் சுட்டிக்காட்டுகின்றார், ஏனெனில் இப்படியாகவே பிரதான மேய்ப்பன் தமது மந்தையை வழிநடத்தி, மேய்த்து, பாதுகாக்கின்றார் (எபிரெயர் 13:17; எபேசியர் 4:11-16; 1 கொரிந்தியர் 12:27-31; சங்கீதம் 91:11-12).

ஆகையால் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைக்கொண்டிருப்போமாக; மனிதனால் ஏற்படுத்தப்பட்ட விசுவாசப் பிரமாணங்களினால் எவரும் நம்மைக் கூண்டில் அடைத்துப்போட அனுமதியாமல் இருப்போமாக; பிரதான மேய்ப்பனால் நமக்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டி, அவர் ஒருபோதும் அங்கீகரித்திடாத சுயாதீனங்களுக்குள்ளும், உரிமைகளுக்குள்ளும் மற்றும் கற்பனை கோட்டைகளுக்குள்ளும் எவரும் நம்மை வழிநடத்திடுவதற்கு நாம் அனுமதியாமல் இருப்போமாக. அப்போஸ்தலன் கூறினதுபோன்று, தேவனுடைய அன்பிலே நம்மைக் காத்துக்கொண்டு, நாம் அவரில் நிலைத்திருப்போமாக.

---

R 5935(3159)

# எபேசுவில் நடந்த கலகம்
## THE RIOT AT EPHESUS

ஆதார வசனங்கள் :– அப்போஸ்தலர் 19:2–40.

திறவுகோல்வசனம் :– ''உண்மையுள்ள விசுவாசிகளை கர்த்தர் பாதுகாக்கிறார்'' – சங்கீதம் 31:23

அப்போஸ்தலர் பவுல் எபேசுவில் ஏறக்குறைய மூன்று வருடங்கள் செலவழித்தபின்பு, எருசலேமுக்கு மீண்டும்செல்ல தீர்மானித்தார். ஆனால் அதற்கு முன்பாக, மக்கதோனியா, பிலிப்பு, பெரேயா, தெசலோனிக்கேயா மற்றும் கொரிந்து சபைகளை சந்திக்கவும் முடிவுசெய்திருந்தார். தம் இரண்டு உதவியாளர்களாகிய எராஸ்துஸ் மற்றும் தீமோத்தேயுவை முன்கூட்டியே அங்கு செல்லும்படி பவுல் அனுப்பினார்(2தீமோ4:20; 1கொரிந்4:17–19). கொரிந்து சபையை சந்திக்க இந்த சந்திப்பையே, தம் நிரூபத்தில் அவர்களுக்கு குறிப்பிட்டிருந்தார் ( 1 கொரிந் 16:1–4). அவர்களிடமிருந்து நன்கொடைகளை வாங்கி, எருசலேமிலுள்ள ஏழ்மை நிலையிலுள்ளோர்க்கு கொடுக்கவும் அவர் திட்டமிட்டிருந்தார். இதை ஒரு இலவச கொடையாக கருதாமல், கர்த்தரை நேசிப்பதற்கான சாட்சியமாக இருக்கும் என்பதே அவர்களிடத்திலான பவுலின் தேடுதலாக இருந்தது. எருசலேமிலுள்ள சகோதரர்களுக்கு உதவவேண்டும் என்ற விருப்பமுடையோராக அவர்கள் இருக்கவேண்டும். அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததால், சத்தியத்திற்கு உண்மையாய் நடக்க பெரும் அனுகூலமற்ற சூழ்நிலையை உருவாக்கியிருந்தது. ரோம் நகரையும் இணைத்த தம் பிந்தைய பிரயாணத்தினைக் குறித்து அப்போஸ்தலர் திட்டமிடும்போது, ரோமுக்கு சிறைகைதியாக அனுப்பப்படலாம் என்ற சிறு ஐயப்பாடு எழுந்தது.

இச்சமயத்திலேயே, இந்தப்பாடத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கலகம் நேரிட்டது. இதனால் அப்போஸ்தலர் எபேசுவைவிட்டு புறப்பட ஏற்கனவே தீர்மானித்திராதிருந்தாலும், தற்போது தீர்மானிக்கவேண்டிய கட்டாயம் எழுந்திருந்தது. ஒவ்வொரு இடத்திலிருந்தும் அவரை வெளியே செல்லும்படி, கர்த்தர் உபத்திரவங்களை அனுமதித்தார். இவ்வாறு அவரது ஊழியம் ஒவ்வொரு நிலையிலும் முடிவுக்குவர, குறித்த நேரம் வந்துவிட்டதோ என்று சுட்டிக்காட்டுவதாக தோன்றியது. அந்த வழியில் எந்த சிறு தூண்டப்படுதலும் எழவில்லை என்று பதிவுகள் கூறுகின்றன. கர்த்தரின் பிள்ளைகளது வழிகள் மற்றவர்களுடைய வழிகளிலிருந்து துல்லியமாக வித்தியாசப்படுகின்றன என்பது அவர்களது வருங்கால நம்பிக்கைகளைக்குறித்து மட்டுமல்ல, அவர்களது தற்கால வாழ்க்கை வழிமுறைகளிலும் சாட்சியமாகிறது. கிறிஸ்துவின் புது சிந்தையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அனைத்தும் புதிதாயின. இவர்களது ''வழி'', அவிசுவாசிகளுக்கு குறுகலானதாயும், தொல்லையை வருவிக்கிறதாயும் தோன்றினபோதிலும், கிறிஸ்துவின் புதிய சிந்தையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அனைத்தும் புதிதாயின. இவர்களுக்கு இவ்வழி சமாதானத்தின் வழியாயும், மகிழ்ச்சியின் வழியாயும், ஆசீர்வாதத்தின் வழியாயும், தேவனோடு இசைவாக இருக்கவும், மேலும் கடைசிமுடிவாக நித்தியஜீவனை அடையும் வழியாயும் இருக்கிறது. கர்த்தரது வசனத்தின் போதனைகளை விசுவாசித்து, அவரிடத்தில் நெருக்கமாக நடக்கின் உண்மையுள்ளவர்களுக்கு இந்நாள்வரைக்கும் இந்தவழி ஒன்றாகவே இருக்கிறது, அதில் மாறுதல் ஏதுமில்லை. அநேகருக்கு கடினமாயிருப்பது என்னவெனில், வழியிலிருந்து அவர்கள் விலகிச்சென்றிருக்கிறார்கள் என்பதே. பெயர்சபையின் வழிகளோ, உலகத்தின் நம்பிக்கைகள், குறிக்கோள்கள், முயற்சிகள் ஆகிய உலக வழிகளுக்கு ஒத்த வழிகளாயுள்ளது.

எபேசுவில் கூட்டுறவு சங்கங்கள் அல்லது தொழிற்சங்கங்கள் இருந்தன. இந்த கலகத்துக்கு தலைமையேற்றிருந்த தட்டார்களுடைய தொழிற்சங்கத்தைச் சார்ந்த தெமேத்திரியு, ஒருவேளை அதன் தலைவனாகவோ அல்லது பிரதானியாகவோ இருக்கக்கூடும். எபேசுவில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல், தற்போது பிரிட்டனின் அருங்காட்சியகத்தில் உள்ளது. அதில் தெமேத்திரியுவைக் குறித்த நிச்சயமான குறிப்புக்கள் எழுத்துக்களாக பொறித்துவைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடத்தில் நடைபெற்ற சம்பவம் கிபி 50இலிருந்து 60க்குள் நிகழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. தெமேத்திரியுவின் பெயர் 3யோவான் 12ம் வசனத்தில் இடம்பெற்றிருக்கிறது. அங்கு, நற்கீர்த்தியை உடைய கிறிஸ்தவனாக இவரை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். இந்த கலகத்தை முன்னின்று நடத்தின அந்த நபரையே யோவான் குறிப்பிடுவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் உண்டு. அப்போது தியானாளுக்கு(Diana) ஆதரவாயிருந்து, கிறிஸ்தவத்தை எதிர்த்த தெமேத்திரியு, பின்னர் ஒரு செயலாக்கம் நிறைந்த கிறிஸ்தவனாகியிருக்கலாம். பவுலும்கூட சபையை துன்புறுத்தும் வைராக்கியத்தோடிருந்தவர், பின்னர் சபையின் வைராக்கியமுள்ள ஊழியக்காரரானார். அப்.யோவான் மற்றும் இயேசுவின் தாய் மரியாளோடு எபேசுவுக்கு வந்து, அங்கேயே தங்களது இல்லமாக்கியிருந்தநிலையில், இந்த தெமேத்திரியு அவர்களோடு தங்கியிருந்து, பலப்பட்டிருக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

தெமேத்திரியு தன் கைத்திறன் வேலையை செய்கிறவர்களோடு இணைந்திருந்தாலும், ஒன்றிணைந்த கைத்திறன்வேலையை செய்பவர்களும் ஒப்பந்தத்தின் மூலம் சேர்ந்திருந்தனர். புண்ணியஸ்தலங்கள் அல்லது தியானாளின் சிறு ஆலயங்கள், வெள்ளியால் உருவாக்கப்பட்டவைகளும், மற்ற விலை மதிப்பற்ற உலோகங்களாலும், சலவைக் கற்களாலும் உருவாக்கப்பட்டவைகளாயும், விலைகுறைந்த அழகு மட்பாண்டங்களையும் இவர்கள் கைத்திறன் வேலையாக செய்தனர். நினைவுச்சின்னங்கள் வைக்கும் இந்த பேழை பல்வேறு அளவுகளில் பெரும் எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டன. இது எபேசுவிலுள்ள ஜனங்களுக்கு மட்டுமல்ல, தியானாளை வழிபடும் வெளிபட்டணத்தாருக்கும்

ஏற்றுமதி செய்தனர். தெமேத்திரியு வெளிப்படுத்தியதுபோல இவர்களது வியாபாரம் நல்ல ஆதாயமளித்தது. சுயநலத்தின்பொருட்டு உண்டான உணர்ச்சிகளின் அடிப்படையில் வேலையாட்கள் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களது உணர்வுகளின் பின்னணியில், அதாவது, இந்த பவுல் தியானாள் வழிபாட்டிலிருந்த ஜனங்களை வழிவிலக்குவதாக தெமேத்திரியு தன் பலமான வாதத்தை முன்வைத்தார். எபேசுவில் மட்டுமல்ல, சுற்றிலுமுள்ள பட்டணங்கள் மற்றும் மற்ற மாகாணங்களிலும் இவ்வாறு ஜனங்களை தியானாள் வணக்கத்திலிருந்து விலக்குவதாக பவுலின்மேல் குற்றஞ்சாட்டினார். தியானாள்மீதும் அவளது ஆலயத்தின்மீதும் ஜனங்கள் வைத்திருக்கும் மதிப்பை இழந்துபோவார்களானால், அவர்கள் இனி ஒருபோதும் தியானாளின் சிறு நினைவுச்சின்னங்களைக்கூட விலைக்கு வாங்க மாட்டார்கள். வாங்குதல் வீழ்ச்சியடையுமானால், இந்த சிலைகளை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இழப்பு ஏற்படும் என்பது அவனது வாதமாயிருந்தது.

தெமேத்திரியுவின் தர்க்கமானது, நினைவுச்சின்னங்கள் செய்யும் கைத்திறனாளிகளின் சுயநலமுள்ள உணர்ச்சிகளை தூண்டிவிட்டதால், அவர்கள் மிகுந்த சீற்றங்கொண்டனர். விவாதம் அதிகரிக்க அதிகரிக்க, தியானாள் மீது அவமரியாதையை அவர்கள் உணர்வதுபோல் தோன்றியது. என்றாலும், அவர்களது சொந்த வியாபார நோக்கமே அழிவுக்குள் நடத்தியது. அவர்கள் வெறித்தனமாக; “எபேசுவிலுள்ள தியானாளே பெரியவள்” என்று கூச்சலிடத் துவங்கினர். ஒவ்வொருமுறை கூச்சலிடும்போதும், சந்தேகத்திற்கிடமின்றி அதிகதிகமாக தங்களையும் மற்றவர்களையும் கோபமூட்டினர். ஒரு பெரும் கூட்டம் சேரும்வரை இவ்வாறு நடந்தது. பின்பு இக்கூட்டம் ஒரு பொது மைதான அரங்கம் அல்லது விளையாட்டுகள் நடக்கும் அரங்கு நோக்கி நகர்ந்தது. சுமார் 25000 முதல் 50000 நபர்கள்வரை இக்கூட்டத்தில் இருக்கலாம் என பலதரப்பட்ட மதிப்பீடுகள் கூறுகின்றன. அவ்வாறு அவர்கள் செல்லும்போது,



பவுலின் உடன்வேலையாட்கள் இருவரைப் பிடித்து, அவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தும் நோக்கத்தில், தங்களோடு கூட்டிச் சென்றாலும், சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளாமல் அதிரடியாகவே அவர்களை நடத்தினர். பவுல் முழு உத்வேகத்துடன், தன் உடன் ஊழியர்கள் மட்டும் தனியே இந்த கடினமான சூழ்நிலையையும், பாரத்தையும் தாங்க அனுமதிக்க மனதில்லாதிருந்தார். அவர்களிடத்திற்குச் செல்லவும், திரளான கூட்டத்தாரின் கவனத்தை ஈர்க்க முயற்சிசெய்து, அவர்களோடு புத்தியறிவோடு தர்க்கம் செய்தார். ஆனால் அந்த பட்டணத்தை வழிநடத்திச்செல்வோர் பவுலின் நண்பர்களாக இருந்தபடியால், சமாதான நலன்களை முன்னிட்டு, இவ்வாறு செய்யவேண்டாம் என்று பவுலை எச்சரித்தார்கள்.

பெருங்கூச்சலும் கொந்தளிப்பும் தீவிரமடைந்தன. கூட்டத்திலிருந்த பெரும்பான்மையோர், ஏன் அங்கே கூடியிருக்கின்றனர் என்று அறியாமலும், நிச்சயப்படுத்திக்கொள்ளாமலும் கூச்சலிடுவாரோடு சேர்ந்துகொண்டு, “எபேசுவிலுள்ள தியானாளே பெரியவள்” என்று சத்தமிட்டனர். தங்களுடைய மதத்திற்கு ஏதோஒருவகையில் அவமானமோ அல்லது எதிர்ப்போ நிகழ்ந்திருக்கிறது என்ற அவர்கள் யூகித்தறிந்தனர். இதனிமித்தமாக, கூட்டத்திற்குள்ளிருந்த அலெக்சாந்தர் ஜனங்களை அமைதிப்படுத்தவும், ஜனங்களுக்கு உத்தரவு சொல்லவும் முயற்சித்தபோது, அவன் ஒரு யூதன் என்று ஜனங்கள் புரிந்துகொண்டாலும், ஒரு கிறிஸ்தவன் என்று அறியாதிருந்தனர். ஆயினும் யூதர்கள் எல்லோரும் தங்களது தெய்வத்துக்கும் அவளது வணக்கத்துக்கும் எதிராயிருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு, கூக்குரலிட்டபடியால், அவனால் பேசமுடியாமற்போயிற்று. அவர்கள் எல்லோரும் ஏகமாய் இரண்டுமணி நேரமாய் காரணமின்றி சத்தமிட்டதிலிருந்து, அவர்களுடைய உணர்வற்ற தன்மை தெளிவாக வெளிப்படுகிறது. தெய்வீக குணாதிசயம் மற்றும் தெய்வீக திட்டத்தின் முறையான கருத்துக்களை ஜனங்கள் அடைந்து, எந்தளவு கர்த்தருடைய ஆவியைப் பெற்றுக்கொள்கிறார்களோ, அதேஅளவுக்கு, தெளிந்த புத்தியும் பலமுள்ள ஆவியையும் அடைவார்கள் என்பது கவனிக்கத் தகுதியானது. இதன் விளைவாக, ஓரளவே கிருபையிலும் அறிவிலும் வளர்ச்சியடைந்த சில கிறிஸ்தவர்கள், அர்த்தமற்ற காரியங்களுக்கு கூச்சல்போடுவதும், அல்லது பேசுவதும் போதுமானது என்று இருந்துவிடுகிறார்கள். அதேசமயம், கிருபையிலும் அறிவிலும் வளர்பவர்கள், தெளிந்த புத்தியும் பலமுமுள்ள ஆவியில் பங்கடைகிறார்கள். அதன் தொடர்ச்சியாக, அர்ப்பணிக்கப்பட்ட தங்களது நேரங்களை அல்லது உணர்வில்லாமலும் காரணமின்றியும் ஆற்றலை வீணடிக்கும்செயல்களை மனதார செய்யமாட்டார்கள். மற்றுமொரு வார்த்தையில் கூறுவோமானால், இவ்வுலகின் ஞானத்தைத் தள்ளிவிட்டு, பரத்திலிருந்து வருகிற ஞானத்தை ஏற்றுக்கொள்வதன் முடிவாக, மிகவும் பகுத்தறிவோடு செயல்படுவார்கள்.

அப்போஸ்தலர் மற்றும் அவரது உடன்ஊழியர்கள்மேல் சாட்டப்பட்ட, தியானாள் கடவுள்மீது தூஷணஞ்சொன்னார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின்படி, அவர்கள் குற்றவாளிகளல்ல. இங்கு நமக்கு நல்ல ஒரு முக்கியமானதும் மதிப்புமிக்கதுமான ஒரு பாடம் கிடைக்கிறது. பரிசுத்தபவுல் மற்றுமொரு இடத்தில் கூறினார்; “ஆதலால் உங்களில் ஒருவனும் அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது” தியானாள் தேவதைமீது இரக்கமற்ற வார்த்தைபேசுவதுகூட அப்போஸ்தலருக்கு அவசியமில்லாத ஒன்று. நற்காரியங்களின் மாபெரும்

மகிழ்ச்சியைப் பிரசங்கிப்பதே அவருக்கு நியமிக்கப்பட்ட பணி, மாறாக, போலி கடவுளர்களோடு தர்க்கம்செய்வதோ, அல்லது அவர்களது வணக்கத்துக்கெதிராக சண்டையிடுவதோ அல்ல. ஆகவே சரியானவைகளை செய்ததற்காகவே துன்பங்கள் நேரிட்டன. இங்கு நமக்கு ஒருபாடம் இருக்கிறது. பாபிலோனிலுள்ள நம் நண்பர்களிடத்தில் கருணையற்ற ஒரு வார்த்தை பேசவோ அல்லது செயல்செய்வதோ அவசியமானதல்ல. அவர்களது அமைப்புக்கள் அல்லது போதனைகளுக்கு எதிராக கண்டனசொற்பொழிவு நிகழ்த்துவதோ அவசியமானதல்ல. சுவிசேஷசெய்தியை பற்றிய விவரங்களை பெறுவதற்கு நாம் ஏராளமான காரியங்களை செய்யவேண்டியுள்ளது.

இவ்வாறு கூச்சலிட்டுவந்த சமயம், அந்நகர ஆணையாளர்(பொதுமொழிபெயர்ப்பு) அங்கு வந்து ஜனங்களை அமைதிப்படுத்தி, நான்கு வாதங்களை முன்வைத்து உரையாடினார். முதலாவது, அவர்களது நாட்டுப்பற்றின்படியான உணர்வுகளைக்காட்டி, வேண்டுகோள் விடுத்தார். அதில், அவர்கள் ஒரு மாபெரும் பட்டணத்தின் பிரஜைகள் என்றும், தியானாளுக்கான ஆலயகாப்பாளராக எபேசு நகரம், அருகாமையிலும் தூரத்திலுமுள்ள ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு இவையனைத்தும் நிஜம் என்று நிலைநாட்டப்பட்டிருக்கிறபடியால், கண்மூடித்தனமாக அவர்கள் செயல்படக்கூடாது என்றும், அவ்வாறு துரிதமாக செயல்படக்கூடிய அவசியம் ஏற்படவில்லை என்றும் பேசினார். தியானாளுக்கும் எபேசுவுக்கும் எது நடந்தாலும் தற்போது உடனடியான அபாயம் ஏதும் நிச்சயமாக இல்லை. தியானாளின் அந்த ஆலயம் மெய்யாகவே அற்புதமான வடிவமைப்பைக் கொண்டது. இதனைக்குறித்து வரலாறு கூறுகிறது; எபேசுவின் மகிமையின் கிரீடம் மாபெரும் ஆலயமாயிருக்கிற ஆர்மமிஸ் அல்லது தியானாளின் ஆலயம் ஆகும். உலகின் 7 அதிசயங்களில் இதுவும் ஒன்று. இது துறைமுகத்தின் தலையாக இருக்கின்ற பகுதியில் சுடரொளிவீசி அழகாகப் பிரகாசிக்கிறது. தியானாளின் ஆலயத்தைக் காட்டிலும் சூரியன் தன் வழிமுறையில் அதிக மகத்துவத்தைக் காணவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. தூய்மையான சலவைக்கற்களால் உண்டாக்கப்பட்ட இதன் நீளம் 425அடியும், அகலம்220அடியுமாகும். இதன் தூண்கள் பாரியன் சலவைக்கற்களால் 60அடி உயரத்திற்கு கட்டப்பட்டும், இதில் 36 தூண்களில் அற்புதமாக செதுக்கப்பட்ட சிற்பவேலையும் செய்யப்பட்டுள்ளது. இதன் முன்அறையில் சிலைகளும், ஓவியங்களும் அலங்காரஅழகூட்டுகின்றன.

நகர ஆணையாளரின் இரண்டாவது வாதம் அவர்கள் வன்முறையினால் தங்களுடனே பிடித்து வைத்திருக்கின்ற இரண்டு நபர்கள் பற்றியது. அந்த இருவருக்கெதிராக அவர்கள் சீற்றங்கொண்டதாக தோன்றுகிறது. ஆனால் அந்த இருவரும் தீய மனிதரல்ல, தியானாளின் ஆலயத்தை கொள்ளையடிக்க முயற்சிக்கவில்லை, அல்லது அவர்களது கடவுளைக்குறித்து அவதூறு பேசியிருக்கவில்லை. பட்டணத்தின் முக்கியத்துவம் வாய்ந்த மனிதர்கள் அப்போஸ்தலரால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. ஆனால் அதன்மீது இங்கு இவர்கள் சாதகமான தாக்கங்களை பெற்றுக்கொண்டு, அவர்களது போதனைகள் தீய பிரஜைகளை வளர்க்கவில்லை என்றும், அதற்கு மாறாக, அவர்கள் மிகவும் கனம் வாய்ந்தோராயும், சமாதானம் உள்ளோராயும் பட்டணத்தின் சட்டங்களை மதிக்கிறவர்களாயும் இருப்பதை புரிந்துகொண்டார்கள். அவரது வார்த்தைகள் நமக்கு வேறொரு கருத்தையும் அளிக்கிறது; அதாவது அப்போஸ்தலர், தன் பிரசங்கத்தில், விசேஷமாக, புறஜாதியாரின் வணக்கமாகிய விக்கிரகஆராதனையைக் குறித்து தாக்கி பேசவில்லை. ஆனால் மற்ற எல்லாக் கடவுளர்களும் கடவுள்களல்ல என்று மறுத்துப்பேசினார். ஒன்றான மெய்தேவனையும், அவரது இரக்கத்தின் செய்தியையும், மேன்மையான வழியாகிய சுவிசேஷத்தையும் குறித்தே அவர் பிரசங்கித்தார். இன்றையநாளில் ஜீவிக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இங்கு ஒரு பாடம் உண்டு. ‘‘நீங்கள் போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்’’ மற்றவர்களோ அவர்களுக்குப் பிரியமானால் பெயர்கிறிஸ்துவ அமைப்புக்களின் உள்ளும் புறம்பும்இருக்கும் பல்வேறு தீய செயல்களை தாக்கட்டும், சிலைகளை உடைக்கட்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு இந்த தற்கால யுகம் தொடரும்வரை நாம் போதிய அளவு செய்வதற்கு வாய்ப்பு பெற்றிருப்போம்.

நகர ஆணையாளரின் மூன்றாவது வாதம் என்னவெனில், இது தெமேத்திரியு மற்றும்அவனுடைய உடன் கைத்திறன் வேலையாட்களின் சண்டைசச்சரவு பற்றியதாகும். பொதுவாக ஜனங்கள் இந்த சண்டையில் ஈடுபடவில்லை. அநீதி ஊடுருவும் பட்சத்தில் அதை முறையாக எதிர்கொண்டு குறைதீர்க்கும் வழிவகைகளாக – சட்ட நீதிமன்றங்கள், வழக்கறிஞர்கள் இருக்கின்றனர்.

நான்காவது வாதமாக, தெமேத்திரியு வகுப்பாருக்கும், கிறிஸ்தவத்தை பரவச்செய்கிறவர்களுக்குமிடையேயான தர்க்கமல்ல என்போமானால், ஜனக்கூட்டத்தார் வேறு ஏதோ காரியத்தின் அடிப்படையிலேயே அவர்கள்மேல் குற்றஞ்சாட்ட முயல்கிறார்களெனில், வழக்கமாக நிகழ்கின்ற குற்றங்களை விசாரிக்கும் இடத்திற்கு, முறையான நேரத்துக்கு, அவர்கள் அவற்றை சட்டவிதிக்குட்பட்டு கொண்டுவரவேண்டும். நகர ஆணையாளர், இந்த இறுதிவாதத்தினைத் தொடர்ந்து முன்வைக்கும்போது, இக்கூட்டம் ஒரு கலகத்துக்கு சற்றும் குறைவானதல்ல, இதைக்குறித்து ரோம அதிகாரிகளிடம் அறிக்கை அளிக்கப்படுமானால், எவ்வித காரணமுமின்றி இப்படிப்பட்ட கிளர்ச்சி நடந்திருப்பதையும், தனக்கு காயம் ஏற்பட்டதையும் அதில் தெரிவித்தாரானால், பட்டணத்தின் நற்பெயருக்கு ஊறுவிளைவிக்கும் என்று சுட்டிக்காட்டினார். ‘‘அமைதியான பட்டணம்’’ என்று நீண்ட காலமாக சொல்லி மகிழ்ந்துகொண்டிருந்த சிலாக்கியத்தை இப்பட்டணம்

இழந்துபோகக்கூடிய அபாயம் இப்பொழுது நேரிட்டிருக்கிறது என்பதே அவரது அறிவிப்பாயிருந்தது. அந்நேரத்தில் அங்கிருந்த அவிசுவாசிகளிடையேகூட அவரது பேச்சு பகுத்தறிவைத் தூண்டி, தெளிந்த நிதானிப்பை அடையும்படி செய்தது.

இன்றையநாளிலும்கூட, தெமேத்திரியு மற்றும் அவனது உடன் வேலையாட்களது குணாதிசயத்தை உடையோர் ஏராளமாய் இருக்கிறார்கள். தற்கால சத்தியத்தின் கொள்கைரீதியான எதிராளிகளாக, முழுநேர சுவிசேஷ ஊழியக்காரர்களே உள்ளனர். நாம் அறிந்துணர்ந்தவரைக்கும், தெமேத்திரியு மற்றும் அவனது கூட்டாளிகளுக்கு தூண்டுதலாக அமைந்ததுபோலவே, இவர்களது எதிர்ப்பும் சுயநலஆவியினாலே எழுச்சியூட்டப்படுகிறது. அவர்களுடைய கைத்திறன்தொழில் அபாயத்திலுள்ளது, அவர்களது வருமானமும் ஆபத்தில் சிக்கியிருக்கிறது, அவர்களுடைய மதிப்பும், ஜனங்களிடத்தில் அவர்களது போதனைகளும் இடர்ப்பாட்டுக்கு உட்பட்டிருந்தது. சத்தியத்துக்கெதிராக அவர்களது எதிர்ப்பு, இறுதியாக எபேசுவில் நடந்த கலகத்துக்கு ஒப்பாக இறுதியில் வழிநடத்திச்செல்லும் என்பதில் எவருக்கும் ஆச்சரியம் இருக்காது. அவ்வேளையில், தெமேத்திரியு தனது எதிர்ப்பின் உண்மையான இரகசியத்தை வெளிப்படுத்தாமல் இருந்ததுபோல், தப்பறையின்மேலுள்ள மாபெரும் அமைப்பு, சத்தியத்தின் மீதுள்ள பகைமையை நேரடியாக வெளிப்படுத்தாதிருப்பதால், அவர்களது இரகசியத்தை நாம் அறியமுடியாதநிலை ஏற்படும். வேதாகமத்தில் பாபிலோன் என்று அறியப்பட்ட "அந்திகிறிஸ்து"வால் பிரதானமாக கட்டப்பட்ட இந்த தப்பறைகளை, "வழிவழியாக வரும் சடங்கு சம்பிரதாயங்கள்மேல் நம்பிக்கை வைத்தோர்" என தவறுதலாக நாம் எண்ணக்கூடாது.

———————————

# மூப்பருக்குரிய பொறுப்புகள்

**அப்போஸ்தலர் 20:28-38**

*"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டும்."*

எபேசுவில் நடந்த கலகத்திற்குப் பிற்பாடு, அங்கிருந்து புறப்படும்போது அப்போஸ்தலனாகிய பவுல் மீண்டுமாக எருசலேமுக்குப் போக வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார், ஆனால் முதலாவதாக ஐரோப்பியாவிலுள்ள சபைகளை - மக்கெதோனியாவிலும், கிரேக்கிலும் உள்ள சபைகளைச் சந்திக்க வேண்டுமென்றிருந்தார். மக்கெதோனியாவில் இருக்கும்போதுதான் அவர் கொரிந்தியருக்கான தனது இரண்டாவது கடிதத்தை எழுதியுள்ளதாக அனுமானம் காணப்படுகின்றது; இந்தப் பிரயாணத்தில் கொரிந்து பட்டணத்தில் சுமார் மூன்று மாதங்கள் காணப்பட்ட போது, அவர் உரோமர்களுக்கான தனது நிருபத்தை எழுதியுள்ளதாக அனுமானம் காணப்படுகின்றது. அந்த ஒரு காலக்கட்டத்தில் 21-வயதான நீரோ, உரோமின் சக்கரவர்த்தியாகக் காணப்பட்டார் மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு 56-வயதாக இருந்தது - தனது கிறிஸ்தவ ஜீவியம் மற்றும் அனுபவங்களின் முழு நிறைவு பகுதியில் காணப்பட்டார்.

வாணிக கப்பல் ஒன்றில் அப்போஸ்தலன் எருசலேமுக்குப் போய்க் கொண்டிருக்கையில், கப்பலானது எபேசுவிலிருந்து 30-மைல் தூரத்திலுள்ள மிலேத்து துறைமுகத்தில் நின்றது; இங்கே நம் பாடம் ஆரம்பமாகுகின்றது. எத்தனை நாட்கள் கப்பலானது நிற்கும், சரக்கை ஏற்றி இறக்கும் இவை முதலானவைகள் திட்டவட்டமாய்ச் சொல்ல இயலாது; ஆகையால் அப்போஸ்தலன் எபேசுவிற்குச் செல்வதற்குப் பதிலாக, அங்குள்ள சபையின் மூப்பர்கள் மிலேத்துவில் தன்னிடம் வருவதற்கும், இப்படியாகத் தனது கப்பலானது பிரயாணத்திற்குப் புறப்பட ஆயத்தமாகும்போது, கப்பலை தான் தவறவிடாமலும், அவர்களோடு அதிகக் காலம் செலவழிக்கத்தக்கதாகவும், மூப்பர்களுக்கு ஆள் அனுப்பினார். மூப்பர்கள் வந்தார்கள் மற்றும் அவர்களுக்கு அப்போஸ்தலன் கூறியவைகளை நம்முடைய பாடத்தில் காணலாம். அவர்கள் அநேக நாட்கள் அவரோடுகூடக் காணப்பட்டிருக்க வேண்டும் மற்றும் அநேகமாக அவரும் அநேகம் காரியங்களைப் பேசியிருக்க வேண்டும்; ஆனால் லூக்காவின் மனதில் காணப்பட்டதும், இவரால் காலக்கிரமமாகத் தொகுத்து வழங்கப்பட்டதும், அப்போஸ்தலனுடைய இறுதி வார்த்தைகளாக, முழு உரையாடலின் சுருக்கமாக இருக்கின்றது; இது ஆற்றல்மிக்கதாயும், நெஞ்சைத் தொடுகிறதாயும் பொதுவாய்க் கருதப்படுகிறது. இது உள்ளூர் கண்காணிகளுக்கான, பொதுக்கண்காணியினுடைய பேருரையாகும் மற்றும் இது புரிந்துகொள்ளப்பட வேண்டுமானால் இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்பட வேண்டும்.

"உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்;" தங்கள் சொந்த இருதயத்தையே காத்துக்கொள்ள முடியாதவர்களினால், பொதுவான சபைக்கான நலனுக்கடுத்த விஷயங்களில் உண்மையாய் ஊழியம் புரிய முடியாது என்று அப்போஸ்தலன் சரியாகத்தான் உணர்ந்திருக்கின்றார். பக்தியும், அன்பும் வீட்டில்தான் துவக்கம் கொண்டிருக்க வேண்டும். இது தொடர்பாக ஜான் கேல்வின் அவர்கள் கூறியுள்ளதாவது: "தன்னுடைய சொந்த இரட்சிப்பை அலட்சியம் பண்ணுகிறவன், மற்றவர்களுடைய இரட்சிப்புக்கடுத்த விஷயங்களில் ஆக்கப்பூர்வமாய்க் கவனம் செலுத்திட முடியாது; ஏனெனில் அவனே மந்தையில் ஒரு பாகமாகத்தான் காணப்படுகின்றான்." இதே கருத்தானது அப்போஸ்தலனாலும் பின்வருமாறு கூறுகையில் முன்வைக்கப்படுகின்றது: "தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த (நீங்களும் உள்ளடங்கும்) மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்;" And (take heed) to all the flock, <u>over the which</u> the holy spirit hath made you overseers;" - "<u>In the which</u>" என்று ரிவைஸ்டு மொழியாக்கத்தில் (Revised Version) இடம்பெறும் வார்த்தைகள் மிகவும் சரியாய் உள்ளது; கண்காணிகளானவர்கள் சபையின் மீது அதிகாரிகளாகக் கருதப்படாமல், சக அங்கத்தினர்கள் தொடர்பான பொறுப்பினையுடைய சபையின் அங்கத்தினர்களாகக் கருதப்பட வேண்டும். கண்காணியினுடைய பராமரிப்பானது மந்தையில் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும், கல்வியிலும் அல்லது வேறு எதிலாகிலும்

நன்கு வளம்பெற்றுள்ளதான அங்கத்தினர்களுக்கு மட்டும் எல்லைக்குட்படுத்தப்படாமல், மாறாக அப்போஸ்தலன் கூறுவதுபோன்று "மந்தை முழுவதற்கும்" - ஏழைகளாகவும், இயல்பாகவே விநோதமானவர்களாகவும் காணப்படுபவர்களை உள்ளடக்கின நிலையில் பொதுவாய்க் காணப்பட வேண்டும்.

மூப்பர்கள் என்பவர்கள், சரீர ரீதியில் வயோதிப புருஷர்களாகக் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்றுமில்லை; ஏனெனில் கிறிஸ்துவின் சபையில் மாம்சம் என்பது மரித்ததாக எண்ணப்படுகின்றது; அவர்களது வயதும், அவர்களது முதிர்ச்சியும், அவர்களது மூப்பர்த்துவமும் புதுச்சிருஷ்டியின் அடிப்படையிலாகும். இவர்கள் சபையால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருப்பினும் இவர்கள் தங்கள் பொறுப்பானது பரத்திலிருந்து வருகின்றதெனக் கருத வேண்டும்; இவர்களது நியமனம் தொடர்புடைய விஷயத்தில் மனிதர்கள் சம்மந்தப்பட்டிருந்தாலும், இவர்களது கடமையானது, கர்த்தருடைய பரிசுத்த ஆவியின் மூலமான கர்த்தருடைய பிரதிநிதி என்ற வண்ணமாகவே உண்மையில் ஆகும். "மூப்பர்கள்" (Elders) என்ற வார்த்தையும் 1 தீமோத்தேயு 4:14-ஆம் வசனத்தில் இடம்பெறும் "மூப்பராகிய சங்கத்தார்"/Presbytery என்ற வார்த்தையும் ஒன்றே ஆகும். வேதவாக்கியங்கள் எங்கும் "Overseers" என்றும், "Bishop" என்றும் வழங்கப்பட்டுள்ளதான கண்காணி என்ற வார்த்தையானது, மற்றவர் சார்ந்த கடமை/பொறுப்பைப் பெற்றுக்கொண்டவர் ஆவார் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. Bishop or Overseer எனும் கண்காணி என்ற இந்த வார்த்தையானது, நவீன காலங்களில் அதன் ஆதி எளிமை இல்லாமல் காணப்படுகின்றது. கிறிஸ்துவினுடைய சபையின் மூப்பர்கள், அதன் கண்காணிகளாகக் காணப்படுகின்றனர் மற்றும் இவர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளதான ஊழியத்திற்குரிய பொறுப்பினை உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் பொதுவான விதத்தில் கண்காணியாக இருந்துள்ளார்; இதை அவர்தானே, "எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது" என்று குறிப்பிடுகையில் வெளிப்படுத்துகின்றார்; அதிலும் குறிப்பாகக் கர்த்தருடைய வழிநடத்துதலின் பேரில், சத்தியத்தில் நிலைவரப்படுத்தப்படுவதற்கு அவர் வழிவகையாக யாருக்கெல்லாம் இருந்தாரோ, அவர்கள் குறித்தும் அல்லது தனிப்பட்ட விதத்திலான அவரது ஊழியத்தின் மூலமாகவோ (அ) கடிதத்தின் மூலமாகவோ அவரது ஊழியங்களை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் அனைவர் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை அவரை நாள்தோறும் நெருக்கியது. இவ்விஷயங்களைப் பரிசுத்த ஆவியானது மேற்பார்வையிடுகிறதென்றாலும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய சபையார் - கண்காணிகளை நியமிக்கும் விஷயத்தில் ஆவியினுடைய வழிநடத்துதலைக் கவனிப்பதும் மற்றும் அப்படியானவர்களை, ஆம் அப்படியானவர்களை மாத்திரம் ஏற்றுக்கொள்வதும், கர்த்தருடைய ஏற்பாடு என்று தாங்கள் நம்புகின்றதான கண்காணிப்பையும், மேற்பார்வையையும் ஏற்றுக்கொள்வதும் - சபையாரின் காரியமாய் இருக்கின்றது.

காட்டுவிலங்குகள் குறித்த புகழ்பெற்ற ஆராய்ச்சியாளரான திரு. தாம்சன் செட்டன் (Thompson Seton) அவர்கள் "லைவ்ஸ் ஆப் தி ஹண்டட்/Lives of the Hunted" எனும் தனது புத்தகத்தில் குறிப்பிடுவதாவது: "மந்தைகளின் தலைவர்கள், வழிநடத்துனர்கள் என்ற தங்கள் ஸ்தானத்தை, மந்தையின் மீதான ஏதோ அதிகாரத்தினால் பெற்றுக்கொள்வதுமில்லை மற்றும் தக்கவைத்துக்கொள்வதுமில்லை; மாறாக நல்ல புல்வெளிகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் தங்களை அறிவுள்ளவர்கள் என்றும், சத்துருக்களினின்று பாதுகாப்பதில் மிகவும் திறமிக்கவர்கள் என்றும், மந்தைகள் தங்களை நம்புவதற்குக் கற்றுக்கொண்டுள்ளது என்றும் காண்பிக்கின்ற காரியங்களின் அடிப்படையிலேயே ஆகும்." இது வேதவாக்கியங்களின்படி கர்த்தருடைய ஜனங்களால் கண்காணிகளாக, மூப்பர்களாக, மேற்பார்வையாளராக ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்களிடத்திலான, கர்த்தருடைய ஜனங்களின் மனோநிலை என்னவாக இருக்க வேண்டும் என்பதை நன்கு விவரிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் அந்தோ பரிதாபம்! பெயர்ச்சபையில், அப்போஸ்தலனால் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதான தலைமைத்துவத்திற்கான சரியான பண்புகள் ஏதும் இல்லாத அநேக வழிநடத்துனர்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம்; அவை: (1) மந்தைக்கான பொதுவான நலனுக்கடுத்தவைகளை மேற்பார்வையிடுதல்/கண்காணித்தல் அல்லது எச்சரிக்கையாயிருத்தல் மற்றும் (2) மந்தையைப் போஷித்தல் ஆகும். மிகுந்த பக்தி, ஞானம் மற்றும் அனுபவத்தினால் சரியாய் வருகின்றதான அதிகாரம் தவிர மற்றபடி கண்காணியின் ஸ்தானம் என்பது சபையின் மீதான எந்த அதிகாரத்தையும் கொடுப்பதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். மந்தையானது தப்பறையான உபதேசங்களினின்றும் மற்றும் தவறான போதகர்களிடமிருந்தும்

பாதுகாக்கப்படவேண்டும் மற்றும் தேவனுடைய வார்த்தைகளாகிய ஐசுவரியமான மேய்ச்சல்களிடத்திற்குள்ளும் மற்றும் அருமையான கிறிஸ்தவ அனுபவங்களுக்குள்ளும் மற்றும் மாபெரும் பயன்பாடு (usefulness) எனும் களங்களுக்குள்ளும்/வயல்களுக்குள்ளும் வழிகாட்டப்பட வேண்டும்.

இது விஷயம் குறித்துப் புகழ்மிக்க எழுத்தாளர் ஒருவர் பின்வருமாறு எழுதுகின்றார்:-

"மில்டன் லைசிடாஸ்-இல் (Milton's Lycidas) குருடான வாய்கள்" எனும் விநோதமான சொற்டொருக்கு திரு. ரஸ்கின் (Ruskin) அவர்கள், தனது சீசாமி மற்றும் லில்லீஸ் (Sesame and Lilies) எனும் வெளியீட்டில் பின்வருமாறு விளக்கமளிக்கின்றார்: இந்த இரண்டு சொற்களும் சபையினுடைய இரண்டு மாபெரும் பணிகளின் - கண்காணி மற்றும் மேய்ப்பன் பணிகளின் சரியான அம்சங்களுக்கு நேரெதிரானவைகளைத் துல்லியமாய்த் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. கண்காணி என்பவன் காண்கின்ற/பார்க்கின்ற மனுஷனாவான்; மேய்ப்பன் என்பவன் போஷிப்பவனாவான்; ஒரு மனுஷனிடத்தில் கண்காணிக்குத் தகுதியில்லாத தன்மை என்பது குருடனாய் இருப்பதாகும் மற்றும் மேய்ப்பனுக்குத் தகுதியில்லாத தன்மை, மற்றவரைப் போஷிப்பதற்குப் பதிலாக, தானே போஷிக்கப்பட வேண்டிய நிலைமையாகும். சபையின் விஷயத்திலான பெரும்பாலான தீமைகளானது, வெளிச்சத்தை நாடிடுவதற்குப் பதிலாக அதிகாரத்தைக் கண்காணிகள் நாடினதால் எழும்பினவைகளாகவே காணப்படுகின்றது. இவர்கள் அதிகாரத்தையே விரும்பினார்கள், கண்காணிக்கும் வேலையை விரும்பவில்லை. (நம்முடைய இராஜாவாகிய கிறிஸ்துவின்) இராஜாவின் பணியே ஆளுகை செய்வதாகும்; கண்காணியின் பணி மந்தையைக் கண்காணிப்பதாகும்; மந்தையின் இலக்கத்தை எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்தலாகும்; மந்தையைக் குறித்த கணக்கை ஒப்புவிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாயிருப்பதாகும்."

இத்தனை அக்கறையுடன்கூடிய புத்திமதிக்கான காரணத்தை அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்: (1) அவர்கள் கண்காணிக்கின்ற மற்றும் போஷிக்கின்றதான சபையானது, தேவன் "*தம்முடைய (குமாரனின்) சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட," அவருடைய சபையாக அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும். [*இது நமது கர்த்தராகிய இயேசு "தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை வாங்கினார்" எனும் கருத்தைத் தெரிவிக்கும் மற்ற வேதவாக்கியங்களின் அறிக்கைகளுக்கு முரணானது என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது. இரண்டு கருத்துகளுமே சரிதான்; இந்த இரண்டு கருத்துகளும் காரியத்தை இரண்டு வெவ்வேறு கோணத்திலிருந்து காண்கின்றதாயிருப்பினும், இரண்டு கருத்துகளுமே சரிதான். பெரிதான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தேவனே முழு இரட்சிப்பின் திட்டத்தைத் தோற்றுவித்தவராய் இருந்தார் - துவக்கம் முதல் முடிவு வரை அவரே இரட்சகராவார். ஆனால் அவர் இரட்சிப்பைக் குமாரன் மூலம் நிறைவேற்றினார்; "(நமக்கு) சகாயஞ்செய்யத்தக்க சக்தியை ஒரு சவுரியவான்மேல் - முழுக்க தகுதியுள்ளவர்மேல் - வைத்தார்." (ஏசாயா 43:11; 1 தீமோத்தேயு 2:5; 4:10; சங்கீதம் 89:19) இப்படியாக நம்முடைய இரட்சிப்பிற்கான ஒவ்வொரு அம்சமும் அப்போஸ்தலன் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுவதுபோன்று, குமாரன் மூலமாய்ப் பிதாவுடையதாகும். 1 கொரிந்தியர் 8:6] தேவனால் மிகவும் விலையேறப்பெற்றதாகக் கருதப்பட்டதும், இத்தனை மாபெரும் விலைக்கொடுத்துச் சம்பாதித்துக்கொண்டதுமானது/மந்தையானது அவருக்கும், மந்தைக்கும் ஊழியக்காரர்களாய் இருப்பவர்கள் அனைவராலும் மிகவும் விலையேறப்பெற்றதாய்க் கருதப்பட வேண்டும். (2) இரண்டாம் காரணம் ஆபத்துகளும், சத்துருக்களும் உருவாகும் என்பதினாலேயே ஆகும்; இவைகள் தெய்வீக அனுமதியில்லாமல் வரமுடியாது என்றாலும், இவைகள் முழு மந்தைக்கும், மூப்பர்களுக்கும், கண்காணிகளுக்கும், மேய்ப்பர்களுக்கும் விசுவாசம் மற்றும் உண்மையின் விஷயத்தில் பரீட்சைகளாக அமைவது தெய்வீகச் சித்தத்தினுடைய ஒரு பாகமாய்க் காணப்படுகின்றது. தீமைக்கு எதிராய் இப்படி எதிர்த்து நிற்பதற்கு அவசியமான ஆற்றலானது, தேவன் தம்முடைய மந்தையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பெற்றிருக்கும்படி தாம் விருப்பங்கொள்ளும் குணலட்சணங்களை வளர்த்திடுவதற்கு ஏதுவானதாகும். தேவன் அவர்களுடைய திராணிக்குமேல், அவர்கள் சோதிக்கப்படுவதற்கு அனுமதிப்பதில்லை மற்றும் ஒவ்வொரு சோதனையிலும் தப்பித்துக்கொள்வதற்கான போக்கையும் உண்டாக்குவார்; ஆனால் அவர்கள் தம்மை விசுவாசிப்பதற்கும், விசுவாசத்தைச் செயல்படுத்துவதற்கும் மற்றும் கீழ்ப்படிவதற்கும் மற்றும் விழிப்பாய் இருப்பதற்கும் மற்றும் தீமையை எதிர்த்து நிற்பதற்கும் கற்றுக்கொள்ள செய்கின்றார்.

தான் இனிமேல் மறுபடியும் இந்த அருமையான சகோதரர்களைப் பார்க்கப்போவதில்லை என்றும் சகோதரர் விஷயத்திலான தன்னுடைய ஊழியம் நிறைவடையப்போகின்றது என்றும் ஏதோ ஒரு வகையான உந்துதலினால் அறிந்துகொண்டார் மற்றும் உண்மையான உடன்மேய்ப்பனாக, மந்தையின் நலனுக்கடுத்தவைகளில் கவனம் செலுத்தினார். அநேகமாக தானியேலின் தீர்க்கத்தரிசனம் மூலமாக மாபெரும் விசுவாச துரோகம் நேரிடவிருக்கின்றது என்றும், ஒரு மாபெரும் அந்திகிறிஸ்து அமைப்பை உருவாக்கிடுவதற்கு எதிராளியானவன் அனுமதிக்கப்படவிருக்கின்றான் என்றும் அப்போஸ்தலன் அறிந்திருந்தார்; இதையே அவர் பிற்பாடு தெசலோனிக்கேயாவிலுள்ள சபைக்கு எழுதியுள்ளார்; உள்ளூர் கண்காணிகள் தங்கள் ஸ்தானத்திற்குரிய பொறுப்பினை உணர்ந்துகொண்டு, விழிப்பாயிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் விரும்பினார். "மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்;" வல்லமை, செல்வாக்கு முதலியவைகளுக்கான பேராசைகொண்டவர்களாக, இவர்கள் தங்களுடைய சொந்த முன்னேற்றத்திற்காக மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளை வியாபாரம் பண்ணிடுவதற்கும் தயங்கமாட்டார்கள். அபாயத்திற்கான மற்றுமொரு காரணி - "உங்களிலும்" சிலர் எழும்புவதாகும் - இவர்கள் தங்களுக்கென்று பின்னடியார்கள், ஆதரவாளர்கள் வேண்டுமென்ற பேராசையில், தங்களுக்கும் மற்றும் இவர்களால் தவறாய் வழிநடத்தப்படுகிறவர்களுக்கும் பாதகமாய் அமையும் தப்பறையான உபதேசங்களுக்குள்ளாக வழிநடத்திடுவார்கள்.

இவைகள் பற்றின அறிவானது, வெளியிலிருந்து வரும் ஓநாய்களுக்கு எதிராக மாத்திரமல்லாமல், தங்கள் மத்தியிலிருந்து எழும்புகின்ற பேராசைமிக்கவர்களுக்கும் எதிராக அவர்களைத் தொடர்ச்சியாக எச்சரிக்கையாய் இருக்கப்பண்ணிடும் - ஒருவரையொருவர் குறித்து விழிப்பாயிருத்தல் மாத்திரமல்லாமல், ஒவ்வொருவனும் மிகுதியான சுயமதிப்பு அல்லது பெரியவராகுவதற்கான மிகுதியான ஆசை எனும் விஷயங்களின் நிமித்தமான எதிராளியானவனுடைய இரகசியமான தாக்குதல்களுக்கு எதிராக விழித்திருந்து, தன்னுடைய சொந்த இருதயத்தை விசேஷமாய்க் காத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் மத்தியிலான தனது நடக்கையை - தாழ்மையான சிந்தைக்கும் மற்றும் மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளுக்கான வைராக்கியத்திற்குமான மாதிரியாகத் தன்னால் சுட்டிக்காட்ட முடிந்ததற்கு அப்போஸ்தலன் மகிழ்ச்சியடைந்திருப்பார் என்பதில் நமக்கு நிச்சயமே. "ஆனபடியால், நான் மூன்றுவருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப்போஸ்தலர் 20:31). அப்போஸ்தலனுடைய வைராக்கியத்திற்கான இரகசியம் - தான் தேவனுடைய ஸ்தானாபதி என்றும், உடன்வேலையாளாக இருப்பதற்குத்தான், சிலாக்கியமடைந்துள்ள கர்த்தருடைய இந்த வேலையானது மிகவும் முக்கியமான ஒன்று என்றும் - அவ்வேலை முதலாவதாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய பரிசுத்தவான்களின் இரட்சிப்பு மற்றும் பூரணப்படுத்துதல் தொடர்புடையதும் மற்றும் இறுதியில் இவர்கள் மூலமாய்ப் பூமியின் குடிகள் அனைத்தினுடைய ஆசீர்வதிக்கப்படுதல் தொடர்புடையதான வேலை என்றுமுள்ள உண்மைகளை அவர் உணர்ந்துகொண்டதேயாகும். ஒருவேளை அந்த மூன்று வருட காலப்பகுதியிலும் அப்போஸ்தலன் மந்தையினுடைய ஆவிக்குரிய நலன்களை அசட்டைப்பண்ணியிருந்திருப்பாரானால், அவரால் இப்படியானதொரு உரையை மூப்பர்களிடம் கொடுத்திருக்க முடியாது. அவர் ஒருவேளை பின்வருமாறு அதாவது: "உங்களோடுகூட நான் அற்பத்தனமான எத்தனை பொழுதுபோக்குகளில் கலந்துகொண்டிருக்கின்றேன் என்றும், அம்மாதிரியான பொழுதுபோக்கு விருந்துகளை ஒழுங்குப்படுத்த உதவியிருக்கின்றேன் என்றும் நினைவில் கொள்ளுங்கள்; நாம் சேர்ந்து சென்றதான, சிப்பி மீன் உணவு இராவிருந்துகள், பீச் மற்றும் கிரீம் விழாக்கள் (Peach and Cream Festivals), நாடகக் கொட்டகைகள், காட்சி கூடாரங்கள், விடுகதை விளையாட்டுகள், வேடிக்கை விளையாட்டுகள் மற்றும் பணம் ஈட்டுவதற்கு நாம் போட்ட திட்டங்கள் முதலானவைகளை நினைவில் கொள்ளுங்கள்" என்று கூறியிருந்தாரானால், அது ஏற்றதாய் இருந்திருக்காது. தான் இராஜாதிராஜனின் ஸ்தானாபதி என்ற உண்மையைக் குறித்து அப்போஸ்தலன் கொண்டிருந்த உணர்ந்துகொள்ளுதலானது எப்போதுமே அவருக்குக் காணப்பட்டது மற்றும் இதுவே - நீதியின் சார்பிலும் மற்றும் ஆவிக்குரியவைகள் சார்பிலுமான அவருடைய வேண்டுதல்களுக்கு, அதுவும் அற்பத்தனமானவைகளைக் காட்டிலும் மிகச் சிறந்ததான கண்ணீருடன்கூடிய அவரது வேண்டுதல்களுக்கு - ஆற்றலையும், சிரத்தையையும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

வரவிருக்கின்றதான பிரச்சனைகள் மற்றும் சோதனைகளின் இருளான காட்சியினின்று அப்போஸ்தலன் திரும்பி, அடுத்ததாக அவர் - தங்கள் இரட்சிப்பின் அதிபதியை உண்மையாய்ப்

பின்பற்றுகிறவர்கள் எதிராளியானவனால் தீங்கிழைக்கப்படாதபடிக்கு, அதுவும் இந்தத் தேவ கிருபையானது, அவர்களுக்குத் தேவனுடைய வார்த்தைகள் மூலம் வரும் என்று உறுதிப்படுத்திக்கொண்டு, சபையை விலைக்கொடுத்து சம்பாதிக்குமளவுக்கு அதை அன்புகூர்ந்தவரும், அதன் நலனுக்கடுத்தவைகளைக் கவனிக்கின்றவருமான கர்த்தரிடத்தில் சகோதரரை ஒப்புக்கொடுத்தார். கல்லூரிகளுக்கும், குருமார்களுக்கான பயிற்சிக் கல்லூரிகளுக்கும் மற்றும் உலகப்பிரகாரமான அறிவியலுக்கும் எதிராய் அப்போஸ்தலன் எதுவும் பேசவில்லை; எனினும் எதிராளியானவனுடைய தந்திரங்களுக்கு எதிராய்க் கர்த்தருடைய ஜனங்களைக் காக்கும் வல்லமையைக் குறிப்பிடுகையில், அப்போஸ்தலன் தன்னுடைய உடன்வேலையாட்களிடம் மேற்கூறப்பட்டுள்ள கல்லூரிகள், அறிவியல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டாமல், மாறாக ஆவியின் பட்டயமாகிய, தேவனுடைய வார்த்தையையே குறிப்பிடுகின்றார். தற்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாமும், இந்தச் சாட்சியத்தை இருதயத்தில் வைத்துக்கொள்வோமாக; ஏனெனில் கர்த்தருடைய மந்தைகளைச் சத்துருக்கள் அனைத்துத் திசைகளிலும் இன்று தாக்கிக்கொண்டிருக்கின்றனர்; அறிவியல் எனும் ஓநாய்களானது மந்தையைத் தப்பவிடாமல், கர்த்தருடைய ஜனங்களின் விசுவாசத்தினை, நம்பிக்கையை, எதிர்ப்பார்ப்பினை மோதி உடைக்கின்றது மற்றும் இதற்குப் பதிலாக நிலைவரமான எதையும் திருப்பிக்கொடுப்பதுமில்லை; தங்களது மேம்பட்ட கல்வியறிவு குறித்தும், தெய்வீக ஏவுதலுக்கும், ஏவுதல் இல்லாமைக்கும் இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்திக் கண்டறியும் தங்கள் திறமை குறித்தும் பெருமையடித்துக் கொள்பவர்களும் மற்றும் ஆடுகளுக்காக எப்போதாகிலும் தேவனுடைய வார்த்தைகளினின்று புல்லை தெரிந்தெடுத்துத் தருவோமெனச் சொல்பவர்களுமான “உயர் விமர்சகர்கள்,” ஆடுகள் போஷாக்கைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அதிகப்படியான கல்வியறிவு வேண்டுமென்று ஆடுகளுக்கு உறுதிப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர்.

இன்றும்கூட நம் மத்தியிலேயே சிலர் எழும்பி, தங்களுக்குப் பின்னாக சீஷர்களை இழுக்க நாடிடும் இதே போக்கினை - அனைத்துத் திசைகளிலும் நாம் பார்க்கின்றோம்; மேலும் ஆடுகளுக்கான தற்காப்பு என்பது பூமிக்குரிய ஞானத்தில் காணப்படாமல், தேவனுடைய வார்த்தைகளிலும், திட்டத்திலும் அடையாளப்படுத்தப்படும் தேவனுடைய வல்லமையிலேயே காணப்படுகின்றது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். எபேசுவின் இந்த மூப்பர்களுக்கு அப்போஸ்தலன் கூறினதுபோலவே, தேவனுடைய வார்த்தைகளே - நம்மை உறுதியாய்க் கட்டியெழுப்புகிறதாகவும், “கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுத்தக்கூடியதாகவும்,” “பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் சுதந்தரத்தை” நமக்கு இறுதியில் கொடுக்கக்கூடியதாக இருப்பதை, அவர் நம்மிடமும் கூறுவதை நாம் கேட்க முடிகின்றது.

வேதவாக்கியங்களில் கர்த்தருடைய ஜனங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளதான சுதந்தரம் மற்றும் நித்திய பலன்கள் யாவும் “பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கே” என்று - இவைகள் வேறு எந்த வகுப்பாருக்கும் வாக்களிக்கப்படவில்லை என்று இங்குக் கவனிக்கப்பட வேண்டும். நம்முடைய Watch Tower Society -இன் தொகுதி விநியோகிப்பவர்களில் (Colporteurs) ஒருவர் சமீபத்தில் நமக்குப் பின்வரும் சம்பவத்தை எழுதி அனுப்பியிருந்தார்: டாணின் தொடர் தொகுதிக்காக (Volume) முன்பணம் செலுத்தியிருந்த ஒரு ஸ்திரீக்குத் தொகுதியை விநியோகிக்கச் சென்றபோது, அந்த ஸ்தரீ ஆட்சேபணைத் தெரிவித்து, புத்தகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மறுத்து, இப்புத்தகமானது நித்திய சித்திரவதைக்கான நரகம் குறித்துப் போதிக்கின்றதான வேதவாக்கியங்களை மறுக்கின்றதென, தான் புரிந்துகொண்டுள்ளதாகக் கூறியிருக்கிறாள்; மேலும் இதற்கு மாறானவைகளையே தான் நம்புவதாகவும், அப்படி ஓர் இடம் இருக்க வேண்டும் என்பதாகவும் கூறியிருக்கிறாள். தொகுதி விநியோகிப்பவரோ, யார் இரட்சிக்கப்படுவார்கள் என்று அவள் நம்புவதாகக் கேட்டுள்ளார்; அதற்கு அவளோ: நம்முடைய இந்தப் பாடத்தில் அப்போஸ்தலனால் குறிப்பிடப்பட்டுள்ளதான “பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்தான்” என்று பதிலளித்திருக்கின்றாள். தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள பரிசுத்தவான்களில் ஒருவளாக அவள் இருப்பதாக, அவள் கூறுகின்றாளா என்று தொகுதி விநியோகிப்பவர் கேட்டிருக்கின்றார். அவள் “இல்லை” என்று பதிலளித்திருக்கின்றாள். அதற்கு அவரோ: “அப்படியானால் நீங்கள் நித்தியத்தைச் சித்திரவதையில் செலவழிக்க விருக்கின்றீர்களா?” என்று கேட்டிருக்கின்றார்.

உடனடியாக அந்த ஸ்திரீ தவறான வாதத்தினுடைய ஆற்றலைக் கண்டுகொண்டு, புத்தகத்தை வாங்குவதாகக் கூறியிருக்கிறாள் மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட வகுப்பாரில் அடங்கிடாத அனைவரும் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்துபோவார்களானால்,

முழுச்சந்ததியினுடைய எதிர்க்காலமே கொடூரமானதாக இருக்குமென்று கூறியிருக்கிறாள். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, பரிசுத்தமாக்கப்பட்டவர்களின் சுதந்தரம் இராஜ்யமாக இருக்கும் என்றும், அப்போது ஸ்தாபிக்கப்படும் இராஜ்யமானது தேவனைப் பற்றின தெளிவான அறிவினாலும், நமது கர்த்தராகிய இயேசுவின் மூலமாய்ப் பரிசுத்தமாக்கப்படுவதற்கேதுவான அவரது கிருபையையும், இரக்கத்தையும் மற்றும் ஆசீர்வாதத்தையும் மற்றும் நித்தியமான ஜீவனையும் ஏற்றுக்கொள்வதற்கான முழு வாய்ப்பினாலும், முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கான தெய்வீகப் பிரதிநிதியாகக் (இராஜ்யம்) காணப்படும் என்றும் நமக்குக் காண்பிக்கின்றதான தெய்வீகத்திட்டம் பற்றின தெளிவான அறிவில் நாம் எத்தகைய இளைப்பாறுதலைக் கண்டடைகின்றோம்.

அவர்களைத் தேவனுடைய வார்த்தைகளிடம் ஒப்புக்கொடுத்த பிற்பாடு, தான் அவர்களோடுகூடக் காணப்பட்டபோதுள்ள தனது சொந்த வாழ்க்கை முறைமையை, பரிசுத்தமாக்கப்பட்டுள்ள இருதயத்திலுள்ள சுவிசேஷத்தின் தாக்கத்திற்கான சரியான உதாரணமென - அவர்கள் பின்பற்றுவதற்கு நாடவேண்டியதென - சபையில் மூப்பர் மற்றும் கண்காணிக்கான சரியான மாதிரியென அப்போஸ்தலன் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். இதைக்குறித்து இப்பொழுது அவரால் இந்தச் சகமூப்பர்களிடம் பேச முடிந்தது; ஆனால் இதைக்குறித்து எபேசு சபையில், தான் அவர்களுக்கு ஊழியஞ்செய்துகொண்டிருந்த போது, சொல்ல தயக்கம் காண்பித்திருந்திருப்பார்; ஏனெனில் இப்படிப் பேசுவது சிலரால் தற்பெருமையடித்துக்கொள்வதாகக் கருதப்படும். எபேசுவிலுள்ள சபைக்கான தனது ஊழியத்தின் போது, அவர்களது வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் தான் இச்சிக்கவில்லை, மாறாக தன்னுடைய சொந்த கைகளாலேயே வேலை செய்துள்ளார் மற்றும் இப்படியாக அவர்களும் மூப்பர்களென (presbyters) மற்றும் கண்காணிகளெனப் (bishops, episcopos) பலவீனரைத் தாங்கிடுவதற்கும், "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைப்பதற்கும், எல்லா விஷயத்திலும் தான் அவர்களுக்கு மாதிரியாய் இருந்துள்ளார் என்பதை இந்த மூப்பரும், கண்காணிகளுமான சகோதரர்கள் கவனிக்கச் செய்தார்.

இப்படியாக அப்போஸ்தலனால் சபைக்குரிய சரியான ஊழியக்காரனுக்கான மாதிரியாகத் தன்னைச் சுட்டிக்காட்ட முடிந்தது; காரணம் அவர் மாபெரும் தலையாகிய இயேசுவின் மாதிரியை மிகவும் கவனமாகப் பின்பற்றினவராயிருந்தார். வாங்குகிறது பாக்கியம்தான், ஆனால் கொடுக்கிறது என்பது அதனிலும் பாக்கியமானதாகும். தேவன் கொடுக்கிறதில் மாபெரியவராய் இருக்கின்றார்; நமக்குத் தொடர்ந்து கிருபைகளை அருளுகின்றவராய் இருக்கின்றார்; நல்லோருக்கு மாத்திரமல்லாமல், தீயோருக்கும் அருளுகின்றவராய் இருக்கின்றார் - அனைவருக்கும் மீட்கும்பொருளினை அவர் கொடுத்தார் மற்றும் ஏற்றகாலங்களில் இதற்குரிய சாட்சி விளங்கிவருகிறது. "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்ற நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது, எந்த ஒரு சுவிசேஷ புத்தகங்களிலும் பதிவு செய்யப்படவில்லை. முனைவர். பிலிப்பு ஸ்காப்/Dr. Philip Scorff நமக்குத் தெரிவிப்பதென்னவெனில்: "சுவிசேஷ புத்தகங்களில் தெய்வீக ஏவுதலின் பேரில் பதிவுசெய்யப்பட்டுள்ளவைகளைத் தாண்டி இயேசு பேசியுள்ளதாக, இருபது வார்த்தைகளின் சில பதிவுகள் நம் மத்தியில் வெளியிலிருந்து பரவி கடந்துவந்துள்ளது." இவைகளில் ஒன்றைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு மேற்கோளிடுகின்றார் மற்றும் இதன் நம்பகத்தன்மை குறித்து நமக்கு எந்தச் சந்தேகமுமில்லை; மற்றும் இது நம்முடைய அருமை மீட்பருடைய நடக்கைக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. அவர் தொடர்ந்து மற்றவர்களுக்காகக் கொடுத்து, கொடுத்து, கொடுத்துக்கொண்டுவந்த விஷயத்தில் பிதாவைப் பின்பற்றினவராகவே இருந்தார். தமக்கு எவ்வளவு சௌகரியம், சுகம் மற்றும் கனம் கிடைக்கும் என்று அவர் சுயநலத்துடன் பார்க்கவில்லை, நம் நிமித்தமாக அவர் புகழ் எதையும் தேடிக்கொள்ளவில்லை; பூமிக்குரிய விஷயத்திலும் அதேசமயம் ஆவிக்குரிய விஷயத்திலும் மற்றவர்களுக்கு உதவி செய்யத்தக்கதாக தம்முடைய ஜீவனைத் தினந்தோறும் கொடுத்துவந்து, அவர் பெற்றிருந்த அனைத்தையும் நமக்காகக் கொடுத்துவிட்டவராக, இறுதியில் பலியைக் கல்வாரியில் நிறைவு செய்தார்.

கிறிஸ்துவினுடைய சபையின் மூப்பர்கள் அனைவரும், இயேசு மற்றும் அப்போஸ்தலன் பவுலினுடைய இந்த மேன்மையான முன்மாதிரிகளை முழுமையாய் இருதயத்திற்குள் எடுத்துச் செல்வார்களானால் மற்றும் தங்களையே முற்றிலும் மறக்குமளவுக்குச் சுவிசேஷத்தின் செய்தியினாலும், தேவனுடன் உடன் வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தினாலும் முழுமையாய் வைராக்கியமுடையவர்கள் ஆகுவார்களானால், இது இவர்களுக்கும் சரி,

மந்தையின் நலனுக்கடுத்தவைகளைக் கவனிக்கவும், மந்தையைப் போஷிக்கவும் வேண்டி கர்த்தருடைய வழிநடத்துதலினால், பரிசுத்த ஆவியானது இவர்களைக் கண்காணிகளாக வைத்துள்ளதான கர்த்தருடைய ஜனங்களின் பல்வேறு சிறுசிறு கூட்டத்தாருக்கும் சரி, மாபெரும் ஆசீர்வாதமாய் அமையும். இன்று உண்மையுள்ள சகோதரர் யாருமில்லை என்று நாம் சொல்லவரவில்லை. இதற்கு மாறாகவே நாம் சொல்லுகின்றோம். ஆனால் நாம் அனைவரும் அதிகமதிகமாய் உண்மையுள்ளவர்களாகக் காணப்படத்தக்கதாகவும், அதிகமதிகமாய்த் தேவனுடைய அருமையான குமாரனின் சாயலுக்கொத்தச் சாயலை அடையத்தக்கதாகவும், சீயோனின் நன்மைக்கடுத்த விஷயங்களில் சுயத்தைப் பலிசெலுத்தும் அளவிலான அர்ப்பணிப்புக்கொண்டிருக்கும் விஷயத்தில் அதிகமதிகமாய் மாபெரும் அப்போஸ்தலனைப் போலாகத்தக்கதாகவும், அப்போஸ்தலனுடைய கருத்தான புத்திமதியை இருதயத்தில் கொண்டிருப்பது நமக்கு நலமாயிருக்கும் என்றே நாம் சொல்ல வருகின்றோம்.

கூட்டத்தின் முடிவில், கப்பல் புறப்பட ஆயத்தமாயுள்ளது என்று அறிவிக்கப்பட்டபோது, அப்போஸ்தலன் எபேசுவிலிருந்து வந்துள்ள சகோதரருடன் ஜெபிப்பதற்கு முழங்காற்படியிட்டார்; அந்த ஜெபத்தின் குரல் நன்கு கற்பனை செய்து புரிந்துகொள்ளப்படலாம். பின்னர் விடைப்பிரிதல் நடந்தது மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி அந்த அருமையான சகோதரர்கள் அப்போஸ்தலனுடைய ஊழியங்கள் மூலமாக தேவன் தங்களுக்கு எத்துணை மாபெரும் ஆசீர்வாதங்களை அருளியுள்ளார் என்று முன்பில்லாத அளவுக்கு முழுமையாய் உணர்ந்துகொள்ள ஆரம்பித்தார்கள் மற்றும் அப்போஸ்தலனைத் தாங்கள் இனி மீண்டுமாகப் பார்க்கப்போவதில்லை என்ற எண்ணமானது, அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தினது மற்றும் கப்பல் மட்டும் அவரோடுகூடச் செல்கையில் அவர்கள் அழுதார்கள்.

பிரிந்திருக்கும் காலங்களானது சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும் என்றும், நாம் ஒருவரையொருவர் சந்திக்கும் காலமாய் மாத்திரமல்லாமல், மீட்பரையும் கிறிஸ்து இயேசுவில் உண்மையுள்ளவர்களாய் இருந்தவர்கள் அனைவரையும் சந்திக்கும் காலமுமாய் இருக்கும் - ஒன்றிணைதலின் மற்றும் ஐக்கியத்தின் பாக்கியமான நித்திய காலங்கள் சீக்கிரமாய்த் துவங்கும் என்றுமுள்ள சிந்தனையினால், அப்போஸ்தலன் அவர்களைத் தேற்றியிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. நமது கர்த்தரும்கூட இவ்விஷயம் குறித்து "கொஞ்சக்காலம்" என்று குறிப்பிட்டார். இடையே காணப்பட்ட 18 நூற்றாண்டுகளானது, அன்று துவங்கி இப்பொழுதுவரை எவரேனும் வாழ்ந்திருப்பாரானால், அது அவருக்கு நீண்ட காலமாய்த் தோன்றியிருக்கும்; ஆனால் அவர்களது "நித்திரையானது" சுயநினைவற்ற இடைவெளியாக இருப்பதினால், தேவன் இரக்கத்துடன் அவர்களது கண்களுக்குத் திரையிட்டு, "சீக்கிரமாய்," "விரைவாய்," "கொஞ்சக்காலம்" என்பவற்றின் - தமது பெரிய கண்ணோட்டத்திலிருந்து மாத்திரம் அவர்களைத் தேற்றினது நல்லதே. ஆனால் இப்பொழுதோ அந்த இராஜ்யமானது, சமீபித்துள்ளது, வாசலருகே வந்துள்ளது; நம்முடைய இருதயங்களானது, இனிமேலும் "ஓ! ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்று கதறுவதில்லை; அல்லேலூயா! விடியலின் நட்சத்திரம் உதயமாகியுள்ளது - காலை இதோ வந்துள்ளது!

---

# நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு...

*"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்."*
*மாற்கு* **14:38**

மற்றக் காலப்பகுதிகளைக் காட்டிலும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பாவத்திற்குள் விழுவதற்கு அதிகமான வாய்ப்புள்ளது என்பது விநோதமாய்த் தோன்றினாலும், நாம் பல வருடங்களாகக் கவனித்து வந்ததும் மற்றும் மற்றவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததும் என்னவெனில் — ஒவ்வொரு வசந்த/இளவேனிற் காலத்தின்போதான பஸ்கா காலங்களில், குறிப்பிடத்தக்கதான வீரியத்துடன் சோதனைகள் கடந்துவருகின்றது என்பதேயாகும். வருடாவருடம் இந்த ஒரு காலப்பகுதியில் அநேகர் அல்லது அனைவருமே இடறிவிழுவதற்கு விசேஷித்த வாய்ப்புள்ளதை நாம் கவனிக்கின்றோம். ஆகையால் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உண்மையாய்ச் செவிக்கொடுத்து நமக்காகவும், மற்றவர்களுக்காகவும் உண்மையாய் விழித்திருந்து, ஜெபம்பண்ணிடுவோமாக; மற்றும் ஒவ்வொருவனும் தன் சகோதரனுக்கு முன் இடறலின் கற்களைப் போட்டுவிடாதப்படிக்கும் எச்சரிக்கையாயிருப்பானாக. (உரோமர் 14:13; எபிரெயர் 2:1)

பஸ்கா காலத்தின்போதுதான் நமது கர்த்தர், "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." அப்போது அவரது நண்பர்கள் மற்றும் பின்னடியார்களில் அநேகர், "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். . . அதுமுதல் . . . அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்." (யோவான் 6:4, 51, 60, 66, 67)

பஸ்கா காலத்தின்போதுதான் யூதாஸ் நமது கர்த்தரைக் காட்டிக்கொடுக்கத்தக்கதாக பேரம் பேசினார் மற்றும் கொஞ்சம் பிற்பாடு, அதைச் செய்தும் முடித்தார்.

பஸ்கா காலத்தின்போதுதான் நமது கர்த்தர், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றார் (மத்தேயு 26:38) மற்றும் "ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு அதுமுடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்றார். (லூக்கா 12:50)

பஸ்கா காலத்தின்போதுதான் நமது கர்த்தர் சீஷர்களை அழைத்து, மனுஷகுமாரன் பிரதான ஆசாரியர், வேதபாரகர் கையில் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்றும், தாம் கொல்லப்படுவார் என்றும் விளக்க ஆரம்பித்தார் (மத்தேயு 16:21); அப்போது, தான் ஒரு சீஷன் என்பதை மறந்துபோவதற்கு ஏதுவாய்ப் பேதுரு சோதிக்கப்பட்டு, அவர் கர்த்தரை அழைத்து, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை" என்று கூறி அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினார். இவ்விதமாய் இவர் நமது கர்த்தர் தம்மைப் பலி செலுத்திடுவதற்கு மறுத்துவிடுவதற்குக் கர்த்தரையும் சோதிப்பவனானார் மற்றும் "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாய் இருக்கிறாய் தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" என்ற கடிந்து கொள்ளுதலைப் பெற்றுக்கொண்டார். (மத்தேயு 16:22, 23)

பஸ்காவைப் புசிப்பதற்குக் கூடினபோது, தங்களில் யார் இராஜ்யத்தில் பெரியவராய் இருப்பார்கள் என்று பன்னிரண்டு பேருக்குள் வாக்குவாதம் உண்டாயிற்று. இப்படியாய்க் கர்த்தருடைய நீதியான கடிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொண்டார்கள்மற்றும் அவர்களது பாதங்களைக் கழுவுவதின் வாயிலாகத் தாழ்மைக்கான உதாரணத்தைக் கர்த்தர் கொடுப்பதற்கு ஏதுவானார்கள்.

ஸ்தோத்திரப் பாட்டுப்பாடிவிட்டு, அவர்கள் பஸ்காவை முடித்துக் கடந்துபோகுகையில்தான், நமது கர்த்தர் இப்பாடத்தினுடைய தலைப்பாகக் காணப்படும், "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்ற வார்த்தைகளை — அவர்தாமே வியாகுலமான போராட்டத்தில் காணப்படும்போதும், இரத்த வியர்வையுடன் தமது சித்தத்தை, தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போதும், உண்மையாய் ஜெபம்பண்ணி, பெலப்படுத்தப்பட்டபோதும் — அவர்களிடத்தில் கூறினார். (லூக்கா 22:39-46)

கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு பிரதான ஆசாரியனுடைய சேவகர்கள் அவர்களிடத்தில் வந்தபோது, பதினொரு பேரும், அவரைவிட்டு ஓடிப்போனார்கள் (மாற்கு 14:50); சோதனையை, பயத்தை அவர்களால் எதிர்க்க முடியவில்லை.

கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு, மற்றவர்களைக்காட்டிலும் தைரியமான பேதுருவும், யோவானும், ஆண்டவருக்கு என்ன சம்பவிக்கப்போகின்றது என்று பார்க்கத்தக்கதாக

ஜனக்கூட்டத்தாரோடே போனார்கள்; கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவராக அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட பேதுரு, சபித்து, கர்த்தரை மறுப்பதற்குச் சோதனைக்குள்ளானார். (மாற்கு 14:68, 70, 71)

அதே வேளையில் நமது கர்த்தரும் பிலாத்துவின் முன்னிலையில் சோதனைக்குள்ளானார், ஆனால் வெற்றிகரமாய் "நல்ல அறிக்கையை" சாட்சியாக விளங்கப்பண்ணினார். (1 தீமோத்தேயு 6:14) நமது கர்த்தருக்கான சோதனைகள் அடுத்தடுத்து பின்தொடர்ந்துவந்தது. அவரது சத்துருக்கள் அவர்மேல் துப்பி, அவருக்கு முட்கிரீடம் சூட்டி, அவரை வைது, "இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும்" என்று கூறினபோது, அவரால் அவர்களை வியாதியினாலோ (அ) மரணத்தினாலோ அடித்திருக்க முடியும்; ஆனால் அவரோ 'தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல, அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்; அவர் ஜெயங்கொண்டு, தம்மை இழிவுப்படுத்தினவர்களுக்காக வேண்டிக்கொண்டார்.' (ஏசாயா 53:7; லூக்கா 23:33-37)

இத்தகைய நன்றிக்கெட்ட ஜீவிகளுக்கு மீட்பராக தாம் இருக்கப்போவதில்லை என்றுகூட அவரால் முடிவெடுத்திருக்க முடியும்; ஆனால் தாம் பிதாவை வேண்டிக்கொண்டு, பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை உதவிக்காகப் பெற்றுக்கொண்டு, தம்முடைய சத்துருக்களை ஜெயங்கொண்டிருக்க முடியும் என்பதை அவர் அறிந்திருந்தபோதிலும், அவர் இச்சோதனையை எதிர்த்து, மறுத்தார். ஏற்றக்காலங்களில் சாட்சியாய் விளங்கத்தக்கதாக, அவர் அனைவருக்குமான மீட்கும்பொருளெனத் தம்மைக் கொடுத்தார்.

நமது கர்த்தருடைய மரணமானது, சீஷர்கள் அனைவருக்கும் விசுவாசத்தின் விஷயத்தில் மாபெரும் சோதனையாய் அமைந்தது; அவர்கள் மீன்பிடிக்கிற தங்களது பழைய தொழிலுக்குத் திரும்பிடுவதற்கும் மற்றும் மனிதரைப்பிடிக்கும் பணியைப் புறக்கணிப்பதற்கும் ஏதுவாய்ச் சோதனைக்குள்ளானார்கள். (யோவான் 21:3-17)

இந்த ஒரு விசேஷித்த காலப்பகுதியில் பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும்கூட பின்நாட்களில் விசேஷித்த சோதனைகளைப் பெற்றுக்கொண்டவர்களானார்கள். அப்போஸ்தலர் 20:16; 21:10, 11, 27-36-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த இவை அனைத்தையும் வைத்துப்பார்க்கும்போது மற்றும் 1874-ஆம் வருடத்திலிருந்து துவங்கின தற்கால அறுவடை முதல், இன்றுவரையுள்ள நம்முடைய அனுபவங்களை வைத்துப்பார்க்கும்போது, ஒவ்வொரு வசந்த/இளவேனிற் காலப்பகுதியிலும், நாம் கர்த்தருடைய ஆடுகளுக்காக விசேஷமான அக்கறைகொள்கின்றோம்; இந்த இளவேனிற் காலப்பகுதியிலும் அப்படியாகவே அக்கறைகொள்கின்றோம். சோதனைகளினுடைய தன்மை என்னவென்று, அவைகள் நம்மீது வருவதற்கு முன்பு, நம்மால் தெளிவாய் உணர்ந்துகொள்ள முடியாது; ஏனெனில் ஒருவேளை அவைகள்பற்றின அனைத்தையும் நாம் முன்கூட்டியே அறிந்துகொள்வோமானால், அவை இலேசான சோதனைகளாகவே இருக்கும். ஆகையால் விழித்திருங்கள் மற்றும் எப்போதும் ஜெபம்பண்ணுங்கள்; ஏனெனில் ஆயத்தமாய் இருப்பது மாத்திரமே ஒரே பாதுகாப்பான வழியாகும்; காரணம் உங்கள் எதிராளியான பிசாசானவன் எவனை விழுங்கலாம் என்று வகைதேடிக் கொண்டிருக்கின்றான். அவன் உங்கள் பெலவீனங்களை அறிவான் மற்றும் அதைப் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாய்க் காணப்படுகின்றான். நாம் ஜெயங்கொள்வதற்கு, நம் அனைவருக்கும் நம் இருதயங்களில் ஆவியின் கிருபைகளும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கர்த்தருடைய கிருபையும் அவசியமாய் உள்ளது. "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு, விழித்திருந்து, ஜெபம் பண்ணுங்கள்!"

"என் ஆத்துமாவே, விழித்திரு,
பத்தாயிரம் சத்துருக்கள் எழுந்துள்ளனரே;
பரிசினின்று உன்னை திசைதிருப்ப
பாவத்தின் சேனைகள் பலமாய்ச் சூழ்ந்து நிற்கின்றதே."

***

"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோத்தேயு 3:12)

"வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" (மத்தேயு 10:25)

"இயேசு பிலாத்துவுக்குப் பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது;" இது அவரது சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினர்கள் விஷயத்திலும் உண்மையாய் இருக்கின்றது. (யோவான் 19:11)

"ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே." (மத்தேயு 10:36)

"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்லுவார்கள்;" "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்." (மத்தேயு 5:11, 12)

"இந்த உலகத்தின் தேவனானவன் . . . கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கின்றான்." . . . "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே."

*****

# தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை

**2 தீமோத்தேயு 3:14 - 4:8**

தனது ஓட்டத்தின் நிறைவை உணர்ந்த அப்போஸ்தலன், முடிந்தமட்டிலும் தனது ஆவியையும், வைராக்கியத்தையும் - தீமோத்தேயு மிகவும் உண்மையுள்ள மற்றும் திறமிக்க தேவ ஊழியக்காரனாய்க் காணப்படத்தக்கதாக, தீமோத்தேயுவில் பதியப்பண்ணிட முற்பட்டார். இந்தப் புத்திமதியானது மற்றவர்களுக்கு ஏதேனும் விதத்தில் ஊழியம்பண்ணிட நாடும் யாவருக்கும் விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது கர்த்தருடைய ஜனங்கள் அனைவரையும் உண்மையில் உள்ளடக்குவதாக இருக்கும்; இவர்களில் ஒவ்வொருவருமே ஜீவனுள்ள நிருபங்களாக இருந்து, கர்த்தருடைய ஸ்தானாபதிகளென, அவரது சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களாகவும், பேசுகிறவர்களாகவும் காணப்பட வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் இப்பாடத்தின் வார்த்தைகளை நமக்குப் பொருத்திப் பார்ப்போமாக.

தீமோத்தேயு முதலாவதாக, அவரது சிலாக்கியங்களானது எவ்வளவு பெரியவைகளாய் இருந்தன என்பது குறித்து, அதாவது குழந்தைப்பருவம் முதற்கொண்டு மத அறிவுரைகளின் கீழ் வளர்க்கப்பட்டார் என்பது குறித்து நினைப்பூட்டப்படுகின்றார். எவ்வாறு வேதவாக்கியங்களுடைய புரிந்துகொள்ளுதல்களை அப்போஸ்தலன் வாயிலாகப் பெற்றுக்கொண்டார் என்றும், அவர் கேள்விப்பட்டவைகள் தேவனிடமிருந்து வரும் அறிவுரைகளாய் இருக்கின்றது என, அப்போஸ்தலன் தேவனுடைய வார்த்தைகளையே பேசினார் என அவருக்கு உறுதிப்படுத்தப்பட்டது என்றும் மிகவும் தன்னடக்கமான விதத்தில் தீமோத்தேயுவுக்கு நினைப்பூட்டப்பட்டது; "எங்களுக்குச் செவிக்கொடுக்கிறவன், தேவனுக்குச் செவிக்கொடுக்கிறான்." வேதவசனமானது மாபெரும் வெளிச்சமாக அல்லது விளக்காக இருந்து, இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்குகின்றது என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். அவர் பிரதானமாய் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்; ஏனெனில் புதிய ஏற்பாடு அப்போது இன்னமும் நிறைவடைந்திருக்கவில்லை; ஆனாலும் பழைய ஏற்பாடானது கர்த்தருடைய ஜனங்களுக்கு அறிவுரை வழங்குவதில் விலையேறப்பெற்றதாய் இருக்குமானால், புதிய ஏற்பாடும் அதன் திறவுகோலாகவும், விளக்கமாகவும் காணப்பட்டு, இன்னும் அதிக விலையேறப்பெற்றதாய்க் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

"திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு! கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" என்று எழுதப்பட்டப்படி கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் போதகர்களாய்க் காணப்படுகின்றனர் (ஏசாயா 61:1). சபையின் தலையாகிய நமது கர்த்தர்மீது வந்திட்டதான ஆவியின் இந்த அபிஷேகித்தலானது, கீழே இறங்கி, சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் மூடி, கேட்க செவியுள்ளவர்கள் அனைவருக்கும் இயேசுவின் வாயிலான தேவனுடைய கிருபையின் மற்றும் இரக்கத்தின் மற்றும் சமாதானத்தின் நற்செய்தியினைப் பிரசங்கிப்பதற்கு அவருக்குப் போலவே, ஒவ்வொருவரையும் அபிஷேகித்துள்ளது. துணிகள் துவைக்கும் கிறிஸ்தவ ஸ்திரீயானவள் இந்தச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திட வேண்டும்; கிறிஸ்தவ தொழிலதிபரும் மற்றும் கூலியாளும் மற்றும் வீட்டுத் தலைவியும், ஒவ்வொருவரும் அவரவரது வாய்ப்புகளுக்கேற்ப பிரசங்கித்திட வேண்டும்; மற்றும் அனைவருக்குமே சில வாய்ப்புகளானது நிச்சயமாய்க் கிடைக்கும். "இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களை" அனைவரும் அறிவிக்க முடிபவர்களாகக் காணப்பட வேண்டும் மற்றும் அனைத்து மனுஷர்களாலும் வாசித்து, அறியப்படும் ஜீவனுள்ள நிருபங்களாகக் காணப்பட வேண்டும் (1 பேதுரு 2:9). வசனத்தைப் பிரசங்கிப்பதை நாம் ஜீவியத்தின் பிரதான வேலையாகவும் மற்றும் ஜீவியத்திற்கடுத்த பிழைப்புகளையும், சௌகரியமாய்க் காணப்படுவதற்குமான பிழைப்புகளையும் இரண்டாவதாகவும், நாம் கர்த்தரினால் அழைக்கப்பட்டதான ஒரே அழைப்பிற்கு முன் முக்கியத்துவமற்றதாகவும் நாம் கருதிட வேண்டும். சத்திய வார்த்தைகளைப் பேசாமல் அடக்கிவைக்கிறவன், ஒரு காரணத்தோடே செய்திருக்க வேண்டும் மற்றும் அந்தக் காரணமும் நியாயமான காரியமாகவும் இருக்காது. ஒருவேளை அவன் சத்தியத்தின் மீதான அன்பில் சத்தியத்தினை ஏற்றுக்கொண்டிருப்பானானால், அதை அறிவித்திட விரும்பிடுவான் மற்றும் அவன்

அடக்கிவைக்கிறான் என்றால், இது அவன் மனுஷனுக்குப் பயப்படுகிறான் அல்லது கர்த்தர் மற்றும் அவரது வார்த்தைக்குறித்து வெட்கமடைகிறான் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; மற்றும் இத்தகையவர்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களாய் - இவர்கள் வேறு எதற்குத் தகுதியுடையவர்களாய் இருப்பினும், மணவாட்டி வகுப்பாருக்குத் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள் என்று ஆண்டவர் தெரிவித்துள்ளார் (லூக்கா 9:62).

"எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு." புத்திமதியினுடைய இப்பாகமானது, அனைவருக்கும் ஒன்றுபோல் பொருந்துகிறதில்லை; அநேகர் கண்டனம்பண்ணி, கடிந்துகொள்ளலாம் என்று சகஜமாய் எண்ணிவிடுகின்றனர். அநேகருக்குக் கடிந்துகொள்ளுதல்கள் அவசியமாயிருக்கிறது மற்றும் அநேகரைக் கண்டனம்பண்ணுவது அவசியமாயிருக்கிறது என்பதில் ஐயமில்லை; ஆனாலும் எத்தனை சொற்பமானவர்களால்தான் இதை நன்மையான விதத்திலும், பாதகம்பண்ணாத விதத்திலும் செய்ய முடிகின்றது! கிறிஸ்துவின் சபையில் காணப்பட்ட அனுபவமிக்க மூப்பனாகவும், மூப்பர்கள் மத்தியில் சில விதங்களில் மேற்பார்வையாளராகவும் காணப்பட்ட தீமோத்தேயுவுக்குக் குறிப்பிட்ட விதத்தில், அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டார். இந்த வார்த்தைகளைப் பொதுவான விதத்தில் பொருத்திப்பார்ப்பதும், கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவரும் எந்தளவுக்குத் தன் சகோதரரைத் தான் கண்டனம்பண்ணி, கடிந்துகொள்ளலாம் என்று காண்பதற்குப் பொருத்திப்பார்ப்பதும் மாபெரும் தவறாகிவிடும். மாறாக தேவனுடைய சபையிலுள்ள பொறுப்பானது இதை அவசியமாக்கிடும் கடமையின் காரணத்தினால் தவிர, மற்றப்படி இந்தக் கடிந்துகொள்ளுதல்களும், கண்டித்தல்களும் தவிர்க்கப்படும் அளவுக்கு அனுதாபம் கடந்துவர வேண்டும். தனது கடிந்துகொள்ளுதலும், கண்டித்தலும், அறிவுறுத்தலும் - பொறுமையோடும், தயவோடும், சாந்தத்தோடும், நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் காணப்பட்டு மற்றும் எங்கு நீதியின் கொள்கைகளானது மீறப்பட்டுள்ளது என்று தெளிவாய்க் காண்பித்துக்கொடுத்து, அது தொடர்பான கர்த்தருடைய வசனத்தையும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகிறதாய்க் காணப்படத்தக்கதாக மிகவும் அனுபவமிக்க மூப்பனாகவும், மேற்பார்வையாளராகவும் காணப்படும் தீமோத்தேயுகூடப் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது (2 தீமோத்தேயு 4:2). இந்தக் கடமையானது, சபையில் முதன்மையான ஸ்தானம் வகிப்பவர்களிடத்தில் இன்னமும் காணப்படுகின்றது மற்றும் இதற்காகவே இவர்கள் கர்த்தருடைய ஏற்பாட்டின்படி நியமிக்கப்பட்டுள்ளனர்; மற்றும் எந்தளவுக்கு இவர்கள் கர்த்தருடைய அன்பின் ஆவியினாலும், தயவினாலும், சாந்தத்தினாலும், பொறுமையினாலும் நிரம்பிக் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய்த் தேவைப்படும்போது, மிகவும் தன்னடக்கமான பாஷையில், மிகவும் சாதகமான சூழ்நிலைகளின் கீழ்க் கடிந்துகொள்ளுதல் மற்றும் கண்டித்தல் எனும் இந்த இனிமையற்ற மற்றும் கவனமாய்க் கையாளப்பட வேண்டிய வேலையைப் புரிந்திட நாடிடுவார்கள்.

---

# தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா

## David Anointed King

## (கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறார்)

## (The Lord Looketh on the Heart)

1 சாமுயேல் 16:4-13

“மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.”

கீழ்ப்படியாமையினால் சவுல் தேவனால் ஒதுக்கி தள்ளப்படுதல் என்பது அவர் ராஜ்ய பாரத்தி-ருந்து தள்ளப்படுவது மாத்திரமல்ல, அவருக்கு பிறகு அவரது குடும்பத்தார், அவரது மகன்கள் யாரும் ராஜ்ய பாரத்திற்கு வரமாட்டார்கள் என்று பொருள்படுகிறது. சிங்காசனத்தில் தேவனுடைய பிரதிநிதியாகவும், இஸ்ரயே-ன் ராஜாவாகவும் வேறொரு குடும்பத்தி-ருந்து தேவன் வேறொரு மனிதனை தெரிந்தெடுத்ததையும் இது அர்த்தப்படுத்துகிறது. சாமுயேலால் மறைமுகமாக குறிப்பிடப்பட்ட தாவீதுதான் தேவனுடைய தெரிந்தெடுத்தலாக இருந்தார். சாமுயேல் கூறியதாவது; “கர்த்தா தம்முடைய இருதயத்துக்கு ஏற்ற மனுஷனைத் தமக்குத்தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு (சவுல்) விதித்த கட்டளையை நீர் கைக் கொள்ளவில்லையே.” (1 சாமுயேல் 13:14) இந்த பாடத்தின் காலத்தில் தாவீதுக்கு ஏறக்குறைய இருபது வயது இருக்கும். அதன் காரணமாக, இப்பொழுது குறிப்பிடப்பட்ட தீர்க்க தரிசியின் வார்த்தை தாவீது பிறந்த சமயத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும். தமது ஊழியத்திற்கு விசேஷித்த விதமாக பயன்படுத்துகிறவர்களின் ஆரம்ப காலத்தைப்பற்றிய தேவனுடைய முன்னறிவையும், திட்டத்தைப்பற்றிய மற்றொரு விளக்கத்தையும் நாம் இப்படியாக பெற்றிருக்கின்றோம். இதே போல் யாக்கோபின் தெரிந்தெடுத்தல் அவரது பிறப்பிற்கு முன்னமேயே அறிவிக்கப்பட்டது. அதேபோல பவுல் அப்போஸ்தலர் கூட அவர் தன் தாயின் கர்ப்பத்தி-ருக்கும்போதே தெரிந்து கொள்ளப்பட்டதாக நமக்கு கூறுகிறார். இந்த தெய்வீக தெரிந்து கொள்ளுதலைப் பொருத்தவரை, தெரிந்து கொள்ளப்பட்ட இவர்கள் எல்லாரும் நித்திய ஜீவனுக்காக அல்ல, ஆனால் விசேஷித்த ஊழியத்திற்காக தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். இதைக்குறித்த தப்பறையான எண்ணத்தை நம்மைவிட்டு நீக்க வேண்டும். ஒரு மனிதனின் பிறப்பிற்கு முன்னமேயே அவனது இயற்கையான விருப்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, தந்தை வழியான மற்றும் தாய் வழியான செல்வாக்கிற்கான சாத்தியக்கூறுக்கான ஒரு எண்ணத்தை இது நமக்கு கொடுக்கிறது. அவனுக்கு ஒரு அனுகூலமான பேறு அளிக்கப்பட்டாலும், அவனுக்கென்று ஒரு சித்தம் இருக்கிறது. இந்த சித்தம் அவனோடு கூட இருந்து, தேவனுடைய வழிகளில் நடப்பதா அல்லது வேண்டாமா, எந்த அளவுக்கு அவன் கீழ்ப்படிதல் உள்ளவனாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமையை பெற்றிருப்பான், தேவனை ஆவியோடும் உண்மையோடும் (விருப்பத்துடனும் மனப்பூர்வமாகவும்) தொழுதுகொள்ள அந்த சித்தத்தில் பலவந்தம் ஏதும் இல்லை.

நற்குண சா-யான ரூத், தாவீதின் பாட்டியாவாள், இவள் வயல்களில் கதிர்பொறுக்குபவள். இதில் தாவீதும் பழக்கமானவராக இருந்தார். அவரது பாட்டனாகிய போவாசின் சரித்திரத்தைக் குறித்து ரூத் என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவனது தந்தை ஈசாய் அவனது பாட்டனைப் போலவே பெத்லகேம் பட்டணத்தின் மூப்பர்களில் ஒருவனாகவும் கனம் பொருந்தினவனாகவும் மதிப்பிற்குரியவனாகவும் இருந்தான். அவனது தாயைக்குறித்து “தேவனடியாள்” என்று இரண்டு தடவை குறிப்பிடப்பட்டதை தவிர வேறு எதுவும் நமக்கு தெரியாது.

சவுல் பெரிய காரியங்களை செய்வான் என்றும், அவன் மூலமாய் இஸ்ரேல் செழுமையடையும் என்றும் எதிர்பார்த்திருந்த சாமுயேல் துக்கித்து, ஜெபித்தான். அவன் புறக்கணித்து தள்ளப்பட வேண்டியவனாக இருந்ததால். ஏமாற்றம் அடைந்திருந்தான். ஒரு புதிய ராஜாவை நிலை நிறுத்துவதற்கு ஒரு உள்நாட்டு போர் என்ற ஒரு கெட்ட அறிகுறி தீர்க்கதரிசியின் மனதை குழப்பிக் கொண்டிருந்தது. தேவனுடைய ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிவதில் ஒரு பெரும் அடக்கத்தை கடைப்பிடித்ததின் மூலம் எடுத்துக்கொண்ட செங்கோலை அமைதியாக சவுல் அர்ப்பணித்து விடமாட்டான் என்று சாமுயேல் அறிந்திருந்தான். அவரது மனக்கண் ஒரு உள்நாட்டு சச்சரவு ஏற்பட்டு நாட்டை பிளவுபடுத்தி பெரிய ஆபத்தை உண்டாக்கும் என்று கண்டது, சர்வ வல்லவருடைய வல்லமையிலும் ஞானத்திலும் இவர் அதிக நம்பிக்கை வைத்திருக்கக் கூடும். தற்காலத்தில் தேவனுடைய பிள்ளைகளை தாக்கிக் கொண்டிருக்கிறதைப் போலவே அவரது வருத்தம் இருந்தது. தேவன் தம்முடைய காரியங்களை நிர்வகிப்பதற்கு வல்லமையுள்ளவர் என்று நம்பிக்கை வைப்பதே இந்த பாடத்தின் மூலம் நமது இருதயத்திற்கு கிடைக்கும் பாடமாகும். மேலும் அவரை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும்போது, நாம் அவரை நம்புவோம். அவரது வழிகாட்டுதலுக்கு கீழ்ப்படிவோம், தேவனிடத்தில் அன்பு

கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்பதை அறிந்து அவரது திட்டத்தை நிறைவேற்றும்போது, நாம் வருத்தப்படாமல் களி கூருவோம். தேவனுக்கு இசைந்து இருக்கிறவர்களுக்கு நடக்கிறவை எல்லாம் ஆசீர்வாதமாக இருக்கிறது. தற்கால ஆசீர்வாதமாக அல்ல, எதிர்கால ஆசீர்வாதமாக இருக்கிறது.

தாவீதை அபிஷேகம் பண்ண சாமுயேல் அனுப்பப்பட்டபோது, அவரது குணலட்சணத்தில் எங்கும் காணமுடியாத ஒரு வல்லமையை காண்பித்தார். தனது ஜீவனுக்கு ஆபத்து என்று தெரிந்தும் தேவனுடைய உத்தரவை நிறைவேற்ற சாமுயேல் தயங்கவில்லை. ராஜ்யபாரத்திற்கு அடுத்த ராஜாவை அபிஷேகம் பண்ணினால் சவுல் தன்னை கொன்றுவிடுவான் என்பதை சாமுயேல் தெளிவாக அறிந்திருந்தார். இந்த காரியத்தை உடனே அறிவிக்க வேண்டும் என்பது தமது நோக்கமல்ல என்பதை தேவன் சாமுயேலுக்கு தெளிவாக அறிவித்திருந்தார். பெத்லகேமுக்கு சென்று ஒரு ப–யை செலுத்தி, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தற்செயலாக, குறித்த காலத்தில் அறியச் செய்து சிங்காசனத்திற்கு உயர்த்தப்போகிறவனை அபிஷேகம் பண்ணும்படி சாமுயேலுக்கு கட்டளை கொடுத்தார். தாவீதின் தகப்பனும் சகோதரர்களும் புரிந்து கொள்ளாதபடியும், ஒரு வேளை அந்த அபிஷேகம் ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் என்றோ, அல்லது தீர்க்கதரிசிகளின் பள்ளியில் அங்கத்தினரில் ஒருவராக ஆக்குவதற்காகவோ அல்லது இதே போல வேறு எதற்காகவோ என்று எண்ணும்படியாக ஒரு ஆரம்ப வேலையை சாமுயேல் செய்ய வேண்டியிருந்தது. எனினும் சாமுயேல் சவுலை ராஜாவாக ரகசியமாக அபிஷேகம் பண்ணினபோது தனிப்பட்ட முறையில் சாமுயேலுக்கு அறிவித்தது போல, தாவீதுக்கும் ஒருவேளை அபிஷேகத்தின் பொருளை அறிவித்திருப்பார்.

சாமுயேல் பெத்லகேமை அடைந்தபொழுது, இந்த பாடம் முக்கியமான இடத்தை பிடித்துக்கொள்கிறது. பெத்லகேமின் மூப்பர்கள் சாமுயேலை பார்த்தவுடனேயே, தாங்களோஅல்லது தங்களது ஊர்க்காரர்களோ பாவம் செய்திருப்பதினால், தேவன் அவர்களை நிந்தித்து தண்டிக்கும்படி சாமுயேலை அனுப்பியிருப்பார் என்று நினைத்து பயந்தார்கள். ஆகையால் அவர்களது கேள்வி, அவரது வருகை சமாதானமா என்பதாகும். அதாவது அவரது பிரசன்னம் ஆசீர்வாதத்திற்காகவா அல்லது தண்டிக்கிறதற்காகவா என்று கேட்டார்கள். அவரது பிரசன்னம் சமாதானந்தான், அங்கே தேவனுக்கு ப–யிட வந்தேன் என்ற பதிலை கேட்ட பொழுது அவர்களது பயம் நீங்கிற்று. கொஞ்ச காலத்திற்கு முன்னே ஆசரிப்புக் கூடாரத்தை பெ–ஸ்தர்கள் பிடித்து வைத்திருந்தார்கள்; அதனால் ஆசரிப்புக் கூடார ஊழியங்கள் நிறுத்தப்பட்டிருந்தது; அது இன்னும் திரும்ப ஸ்தாபிக்கபடாதிருந்தது. இதற்காகவே இந்த ப– தேவனால் விசேஷித்தவிதமாக நியமிக்கப்பட்ட தீர்க்கதரிசியினால் செலுத்தப்பட்டது. இந்த ப–யின் ஆசீர்வாதத்தில் பங்கு பெற வேண்டும் என்றால் பெத்லகேமின் ஜனங்கள் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது ஜலத்தினால் ஸ்நானம் பண்ணி, சுத்தமான ஆடைகளை அணிந்து, இருதயத்தில் தேவனிடத்தில் நெருங்க வேண்டும். எனவே அவர்கள், நீதிமானாக்கப்படுதலையும், பரிசுத்தப்படுதலையும் அனுபவிக்கிற சுவிசேஷயுக சபையை நிழலாக குறிப்பிடுகிறார்கள். ஈசாயின் குடும்பத்தை மேற்பார்வையிட்டு. வெளியரங்கமாக தெரியாமல், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதனை கண்டுபிடித்து, அவனை தயார்படுத்த அவனை அபிஷேகம் பண்ணி, தெய்வீக ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் வேலையில் சாமுயேல் ஈடுபடுவதாக காணப்படுகிறார். ஈசாய் தன்னுடைய குமாரர்களை அவர்களது பிறப்பின்படி முதலாவது தனது மூத்தமகனை தீர்க்கதரிசிக்கு அறிமுகம் செய்து வைத்தான். சாமுயேல் அவனது நல்ல தோற்றத்தைப் பார்த்தவுடனே, இவன்தான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனோ என்று இயல்பாக யூகித்தார். ஆனால் தேவனிடம் கேட்டபோது, இந்த பாடத்தின் தலைப்பு வசனமே பதிலாகக் கிடைத்தது. தோற்றம், வயது, திறமை முதலானவைகளை மனித நோக்கில் பார்க்கும் போது ஈசாயின் குடும்பத்தில் எ–யாப்பே அந்த தேசத்தின் ராஜாவாக இருப்பதற்கு தகுதியுள்ளவனாக இருந்தான். ஆனால் தேவனுடைய பார்வையில் அப்படியில்லை. தேவனோ இருதயத்தைப் பார்த்தார். தமது இருதயத்துக்கு ஏற்ற மனுஷனாக, தாவீதை முன்னமேயே தேர்வு செய்திருந்தார். ஆனால் ஈசாய், தாவீது மிகவும் சிறியவன் என்று நினைத்து அவனுக்கு ஆள் அனுப்பி அவனை விருந்தில் கலந்துகொள்ள செய்யவில்லை. ஈசாய் தன் குமாரர்களை ஒருவர் பின் ஒருவராக சாமுயேலுக்கு முன்பாக கடந்து போகப் பண்ணினான். ஆனால் தேவன் அவர்களில் யாரையும் தெரிந்து கொள்ளவில்லை என்று பரிசுத்த ஆவி தெரிவித்தது. “உன் பிள்ளைகள் இவ்வளவுதானா” என்று சாமுயேல் கேட்டதற்கு, ஈசாய் உடனே, “இன்னும் எல்லாருக்கும் இளையவன் இருக்கிறான்; அவன் வயல்களில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்” என்று பதில் கூறினான்.

சுவிசேஷ யுகத்தின் பரம அழைப்புக்கு சம்பந்தமாக நமது தலைப்பு வசனம் எல்லாருடைய கவனத்தையும் ஈர்க்கிறது. ஒவ்வொரு வருட அனுபவமும் அதன் பொதுவான பொருத்தத்தைக் காண்பிக்கிறது. நாமும் கூட தேவனுடைய தூதர்களாக, சந்தோஷத்தின் எண்ணெயாகிய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு நாடுகிறோம். இதன் மூலம், தற்கால ராஜ்யங்களை நீக்குகிற, தேவன் ஸ்தாபிக்கப்போகிற ராஜ்யத்தில் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருப்போம். சாமுயேலைப்போல நாமும் கூட தற்கால ஸ்தாபனத்திற்கு பின்வருபவர்களை அபிஷேகம் பண்ணுவதற்கு நாம் பயப்படுகிறோம். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை முத்திரை போடுகிற வேலை இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதையும், இது உலகம் புரிந்து கொள்ள முடியாதபடி இரகசிய வேலையாக இருக்கிறது என்பதையும் நாம் உணரவில்லையா? உண்மையிலேயே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதை, முத்திரை போடும் இந்த காரியத்தை, பரிசுத்த ஆவியை

பெற்றவர்களும், தாவீது வகுப்பாரையும் தவிர வேறு யாரும் புரிந்து கொள்ளமாட்டார்கள். தாவீது என்ற பெயர் "பிரியமானவன்" என்று அர்த்தமுடையது. இது விசேஷித்த விதமாக நமது கர்த்தரும் இரட்சகருமானவரை குறிக்கிறது. யேகோவா தேவனால் "இவர் என் நேச குமாரன்" என்று சொல்லப்பட்டிருக்கிறார். அதோடுகூட அவரது சரீர அங்கங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. அவருக்கு பிரியமானவர்களாக இருக்க வேண்டும், இல்லையென்றால் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட இயலாது. தலையானவர் சொல்லுகிறதாவது: "பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்." மேலும் அவர், அவர் நம்மை சிநேகிக்கிறது போல் நீங்களும் ஒருவரையோருவர் சிநேகிக்க வேண்டும் என்று கூறுகிறார். தேவனுடைய இந்த அபிஷேகத்தைப் பெற்றவர்கள் தாவீதைப்போல பிரியமானவர்களாக இருக்கவேண்டும் என்று கூறுவது பெரிதான காரியமல்ல. அன்பின் ஆவி அவர்களிடம் இருக்க வேண்டும். தேவனை சிநேகிக்கிறவர்களாக ஒருவரையொருவர் சிநேகிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவருடையவர்களாக இருக்க முடியாது.

விரைவில் ஆயிர வருட மகிமையில் உலகை ஆசீர்வதிப்பதற்காக தேவனால் அபிஷேகம் பண்ணப்படுகிறவர்களை தேடுவதில் தாவீது ஒரு நிழலாக இருக்கிறான். தாவீது இந்த காரியத்தில் மிகவும் அற்பமாய் எண்ணப்பட்டது போல, தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்கு தெரிந்து கொள்ளப்பட்டு அபிஷேகம் பண்ணப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு அவரது சகோதரர்களிடையே நன்மதிப்பற்றவராக இருந்தார். அவர்தான் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று கூறப்பட்டபோது, அவரது ஜனங்கள் தங்கள் முகத்தை மறைத்துக் கொண்டனர் – அலட்சியம் செய்தனர், வெறுத்தனர், எந்த மேன்மைக்கும், மகிமைக்கும் நம்பிக்கையற்றவராக "வறண்ட நிலத்தி–ருந்து துளிர்க்கிற வேரைப்போல"எண்ணினர். அவரது சரீரமாகிய சபைக்கும் இது உண்மையாக இருந்தது. அவர்கள் மனிதரால் வெறுக்கப்பட்டனர், ஒதுக்கப்பட்டனர். இவர்களைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது; உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவும் எண்ணப்படுகிறோம்; நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் நாள் முழுதும் அறிவீனராக எண்ணப்படுகிறோம். 1 கொரி. 4:13

மேலும் அவர் கூறுகிறதாவது; "தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை; இந்த உலகத்தின் தரித்திரரை, விசுவாசத்தில் ஐசுவரிவான்களை ராஜ்யத்தின் சுதந்திரர்களாகவும் தெரிந்து கொண்டார்." மனிதர்களில் மதிப்புக்குரியவர்களை ஒன்றுமில்லாமல் ஆக்குவதும், ஒன்றுமில்லாதவர்களை மதிப்பிற்குரியவர்களாக ஆக்குவதுமான இந்த தெய்வீக தெரிந்து கொள்ளுத–ன் ஒழுங்கே சுவிசேஷ யுகம் முழுவதும் காணப்படுகிறது. நாமும் கூட சாமுயேலைப் போல சமூகத்திலும், அறிவிலும், குணத்திலும், படிப்பிலும் மேன்மையான நிலைமையில் உள்ள மனிதர்கள் உயர்வாக உள்ள இவர்களை தேவன் ஆனந்த தைலத்தினால் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாக காணப்படுகிறவர்களை அடிக்கடி பார்த்திருக்கிறோம். மனிதர்களில் உயர்வாக உள்ள இவர்களை தேவன் ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணுவார் என்றும், தேவனுடைய ராஜ்யம் முதலானவைகளைக் குறித்த அறிவை வழங்குவார் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நாம் அப்படி எதிர்பார்ப்பது தவறு என்று காண்கிறோம். ஏனெனில் தேவன் வெளிப்படையான தோற்றத்தை பார்க்காமல் இருதயத்தை பார்க்கிறார் என்கிற புதிய பாடத்தை பெறுகிறோம். நாம் இருதயத்தை அறிய முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்த காரியங்களில் தெய்வீக தீர்மானத்தை முழு திருப்தியுடன் ஏற்றுக் கொள்கிறோம். ஏற்ற காலத்தில் தேவன் தற்கால சத்தியத்தை வெளிப்படுத்துவார் என்பதை நம்புகிறோம். அப்பொழுது, இப்பொழுது தெரிந்து கொண்டதைக் காட்டிலும் தேவனுடைய தெரிந்து கொள்ளுத–ன் அர்த்தத்தை முழுமையாக புரிந்து கொள்ளுவோம். அப்பொழுது தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களின் இருதயத்துக்கும், ராஜ்ய அழைப்புக்கு தகுதியில்லாதவர்களாக, ஆனால் வெளியரங்கமாக தாழ்மையாக இருப்பவர்களின் இருதயத் துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் காண முடியும். இடைப்பட்ட காலத்தில் சாதாரணமாக நாம் காத்திருந்து அவரது தீர்மானத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். நமது இரட்சகர் கூறுகிறதாவது: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்வி: மான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது."(லூக் 10:21)

தேவனுடைய முறைமைகளை போதிக்கப்பட்ட நாம் "கேட்கிறதற்கு காதுள்ளவர்களாகவும்" அவருடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாகவும் காணப்படுகிற படிக்காதவர்களை, அற்பமானவர்களை இழிவுபடுத்தக்கூடாது, அவர்கள் தேவனிடத்தில் பரிசுத்தத்தையும் நேர்மையையும், காண்பிக்கிறார்கள், நமக்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சத்தியத்தை எல்லாருக்கும் கூறும்போது, தேவனுடைய சலுகை வெளிப்படுத்தப்பட்டவர்களோடு நாம் களி கூரவேண்டும்; அவர்களது பூமிக்குரிய சூழ்நிலைகள் பற்றி கண்டுக்கொள்ளக்கூடாது. தேவன் தம்முடையவர்களை அறிவார். அப்படிப்பட்டவர்களை நமது கர்த்தரின் பிரதிநிதிகளாகவும் ஸ்தானாதிபதிகளாகவும் அங்கீகரித்து, கனப்படுத்தி, ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் அடங்கிய ஒரு சபையை நாம் கவனிக்கும் போது, சிலர் மனதை கவருகிற தோற்றம் இல்லாதவர்களாகவும், சிலர் நன்கு படிக்காதவர்களாகவும், நாகரீகம் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய அபிஷேகத்தின் அடையாளத்தைப் பெற்று இருக்கிறார்கள்; சத்தியத்தின் ஒளி அவர்கள் முகத்தில் பிரகாசிக்கிறது; சத்தியத்தின் நம்பிக்கை அவர்களுக்கு எழுச்சியூட்டுகிறது; அவர்களது வாழ்க்கை இருளின்

ராஜ்யத்தி-ருந்து தேவனுடைய குமாரனுடைய ராஜ்யத்திற்கு ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது. கர்த்தர் நம்மை தமது மணவாட்டியை தேட அனுப்பும்போது, அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சம்பத்துகளான சிலரை நாம் அறியாமல் கடந்து சென்று, வேறு சிலரை கூட்டிச்சேர்க்கும்போது அவர்களை அவர் தகுதியற்றவர்கள் என்று ஒதுக்குகிறார். நாம் இப்படி அடிக்கடி நினைப்பதுண்டு. அதற்கு காரணம் நம்மால் இருதயத்தை அறிய முடிவதில்லை. இந்த எண்ணம் நம்மை எல்லாரிடமும் தாழ்மையுள்ளவர்களாகவும் நற்குணமுள்ளவர்களாகவும், சாதுவானவர்களாகவும் ஆக்க வேண்டும். தாவீதை அபிஷேகம் பண்ணுவதில் சாமுயேல் தேவனை நோக்கி பார்த்தது போல, நாமும் அவருடைய ஊழியர்களாக, நமது ஊழியத்தில் அவரை நோக்கி பார்க்கும் மனப்பாங்கு உள்ளவர்களாகவும் அவர் மீது நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

அவர்கள் பந்தியிருக்க உட்காரப்போகும் போது, “அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்கமாட்டேன்” என்று சாமுயேல் கூறினார். ப-யிட்ட பிறகு பரிசுத்தம் பண்ணப்பட்டவர்களும் ப-யில் கலந்து கொண்டவர்களும் அந்த விருந்தில் கலந்து கொள்வது ஒரு வழக்கமாக இருந்தது. இப்படியாக அந்த மாமிசத்தை புசித்து தேவனுடன் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும். தாவீது தேவனால் அபிஷேகம் பண்ணப்படுகிறவனாக இருந்தபடியால், தாவீது வரும்வரை அந்த விருந்து ஆரம்பிக்கப்படக்கூடாது என்று சாமுயேல் முடிவு செய்தார். அநேகமாக இதில் கூட தெய்வீக திட்டத்தில் தேவனுடைய ஆசீர்வாதத்தின் ஒரு குறியீட்டை நாம் பார்க்கமுடிகிறது. அகில உலக மனுமக்களுக்காகவும் ஒரு கொழுமையானவைகளின் விருந்து ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தம் பண்ணப்பட்ட ப-கள் கொல்லப்படும் வரை, இதைக் காட்டிலும், முதன்முதலாக அபிஷேகம் பண்ணப்பட்டவர் வந்து அபிஷேகத்தை பெறும் வரை இந்த விருந்து ஆரம்பிக்கப்பட முடியாது. சபையின் தலையானவரான நமது கர்த்தரிடத்தில் அபிஷேகம் ஆரம்பிக்கப்பட்டு, சுவிசேஷ யுகமுழுவதும் சபையாகிய அவரது சரீர அங்கங்கள் அனைவர் மேலும் வழிகிறது. ப- கொல்லப்படுகிறது, நாம் கிறிஸ்துவின் அங்கமாக இருந்து அந்த ப-யில் பங்கு பெறுகிறோம். சீக்கிரத்தில் இந்த காரியங்கள் எல்லாம் நிறைவேறும். அப்பொழுது கொழுமையான பதார்த்தங்களின் விருந்து விரிவுப்படுத்தப்படும். அந்த உண்மையான விருந்தில் தலையும் சரீரமும் சேர்ந்த அபிஷேகம் பண்ணப்பட்டவரே பிரதானமானவராக இருப்பார்.

தாவீதின் அபிஷேகத்தில் தேவனுடைய ஆசீர்வாதமும் வல்லமையும் ஏதோ ஒரு விதத்தில் உடன் சென்றது. இதை நாம் புரிந்து கொள்ள இயலாது. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளி-ருந்து சபையாகிய நம்மிடம் இருக்கிற பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகள் அந்த காலத்தில் இல்லை. இது குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை. (யோவான் 7:39) தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட உத்தியோகத்திற்கு அவரை தகுதிப்படுத்தி தயார்படுத்துவதற்கு எந்தவிதமாகவோ தேவனுடைய ஆசீர்வாதமும் வல்லமையும் அவன் கூட இருந்தது. சபை, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதி-ருந்து வருகிற அபிஷேகத்திற்கு இதை ஒரு நிழலாக நாம் கவனிக்கக் கூடாதா**?**அபிஷேகம் வெளிப்படையானது அல்ல. நம்முடைய இம்மைக்குரிய ஆசீர்வாதத்தைக் கொடுக்கக் கூடியது அல்ல. ஒரு புது சிருஷ்டியாக நாம் அபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறோம்; புது சிருஷ்டியாக நாம் கிருபையிலும், அறிவிலும் அன்பிலும் வளருகிறோம்; புது சிருஷ்டியாக விரைவில் நாம் முதலாம் உயிர்த்தெழுத-ல் பூரணமடைந்து, நமது கர்த்தரும் ஆண்டவருமானவருடன் சிங்காசனத்திற்கு வருவோம்.

----------------------------------

# "உங்கள் நீதி"

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கத்தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" **(மத்தேயு 5:14-20).**

நம்முடைய கர்த்தர் கொடுத்த மலைப்பிரசங்கத்திலிருந்து நாம் பார்க்கப்போகின்ற நம்முடைய பாடத்தின் ஆதாரவசன பாகமானது மிகவும் எளிமையானதாகவும், மிகவும் முக்கியமானதும் கூட இருக்கின்றது. இவ்வசனப்பகுதிகளின் ஆரம்பம் தொடங்கி, முடிவுவரையிலும், வார்த்தைகளைச் சுவாரசியப்படுத்துவதற்கென, இதன் இலக்கியத்தை அழகுப்படுத்துவதற்கோ (அ) நாவன்மையோ/சொற்திறனோ (அ) மெருகூட்டப்படுவதற்கோ முயற்சிகள் ஏறெடுக்கப்படவில்லை. கர்த்தருடைய நோக்கம் போதிப்பதாக இருந்தது. மேலும், அவர் மிக எளிமையான மற்றும் அழுத்தமான விதத்தில் போதித்தார். இன்னுமாக, இந்தத் தருணத்தின்போது, திரளான ஜனக்கூட்டம் கூடியிருக்கத்தக்கதான ஒரு பொதுவான இடத்தைக் கர்த்தர் நாடவில்லை என்பதை நாம் கவனிக்கையில் உணர்ந்துக்கொள்ளலாம். மாறாக, தம்முடைய சீடர்களுடன் தனித்திருக்கத்தக்கதாக ஒரு தனிமையான இடத்தையே அவர் தெரிந்துக்கொண்டதைப் பார்க்கின்றோம். அவருடைய அற்புதங்களைப் பார்ப்பதற்காகவும், அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்காகவும் திரளான ஜனக்கூட்டம் அவரைச் சுற்றிக்கூடியது. மேலும், அவருங்கூட அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தப்படுத்தி, அவர்களுக்கு அநேககாரியங்களைப் போதித்திருந்தாலும், இந்தப் பிரசங்கமானது விசேஷமாக அவருடைய சீடர்களுக்கும், விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப்பட்டது. மேலும், இந்த யுகம் முழுவதும் காணப்படும் விசுவாச வீட்டாருக்கு இந்தப் போதனைகள் சென்று சேரும்படிக்கு இவ்வார்த்தைகள் உண்மையாய்ப் பதிவும் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளைக் கவனிக்க முற்படுகையில், பேதுருவும், யாக்கோபும், யோவானும், ஆதி சபையினுடைய அநேக சகோதரரும், சகோதரிகளும் உலகம் அதுவரையிலும் கண்டிராத மாபெரும் பிரசங்கியின் உதடுகளிலிருந்துவரும் வார்த்தைகளைக் கேட்கும்படியாக மலையின் அருகிலுள்ள புல்லின்மேல் அமர்ந்திருந்திருப்பார்கள் என்பதையும் நம்மால் உணரமுடிகின்றது. நாம் கேட்கிற காரியங்களை மறந்துப் போகக்கூடியவர்களாக இருக்க வேண்டாம். மாறாக, ஜீவனுக்கேதுவான அந்த வார்த்தைகளைப் பொக்கிஷமாகக் கருதுவோமாக. அந்த வார்த்தைகள், இருதயங்களின் ஆழங்களுக்குச் சென்று, நித்திய ஜீவனுக்கு ஏதுவான பலனைக்கொண்டு வரத்தக்கதாக அனுமதிப்போமாக.

நம்முடைய கர்த்தருடைய செய்தியிலுள்ள நம்முடைய பாடத்தின் ஆதாரவசனமாகிய சிறிய பாகமானது, நாம் பெற்றுள்ள சத்தியத்தின்பால் நமக்குள்ள கடமை குறித்துச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால், இதை அநேக கிறிஸ்தவர்களோ கவனமாய்க் கவனிப்பதுமில்லை சிந்தித்துப்பார்ப்பதும் இல்லை. "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது" என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். இன்னுமாக, "நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்றும், "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்" என்றும் அவர் குறிப்பிடுகின்றார் (யோவான் 9:5; 8:12 ). அவருடைய வார்த்தைகளினால் போதிக்கப்பட்டு, வெளிச்சமூட்டப்பட்ட நாம், அவருடைய பிரதிநிதிகளாய் இருக்கின்றோம் என்பதையும், உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கின்றோம் என்பதையும், நம்மோடுகூட வருகின்றவர்கள் இருளில் நடவாதவாறு நம்முடைய வெளிச்சத்தைப் பிரகாசிக்கத்தக்கதாக, நம்முடைய விளக்கைத்தொடர்ந்து எரிய வைக்கின்றவர்களாகவும், விளக்கின்

திரியைச் சரிச்செய்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதையும் நாம் நினைவில் கொள்ளத்தக்கதாகக் கர்த்தர் சித்தமுள்ளவராக இருக்கின்றார்.

வேதவாக்கியங்களிலும் சரி, பொதுவான பேச்சு வழக்குகளிலும் சரி வெளிச்சம் எனும் வார்த்தை, சத்தியத்திற்கு அடையாளமாயிருக்கின்றது. "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் . . . உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது" எனும் வார்த்தைகள் பின்வரும் காரியங்களைச் சொல்வதற்குச் சமமாக இருக்கின்றன. அதாவது, "நீங்கள் சத்தியத்தினால் வெளிச்சமூட்டப்பட்டுள்ளதால், நீங்கள் இப்பொழுது சத்தியத்திற்கான ஜீவனுள்ள பிரதிநிதியாக காணப்படுகின்றீர்கள். ஆகவே, எந்த விதத்திலும் வெளிச்சத்தை நீங்கள் மறைத்து வைக்காமல், மாறாக நீங்கள் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டதுபோன்று, மற்றவர்களும் சத்தியத்தினிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, உங்கள் வெளிச்சத்தை அதிகமதிகமாக பிரகாசிக்கக்கடவீர்கள்" என்பதேயாகும். இந்தச் சத்தியமே, "ஜீவனுக்கான வெளிச்சமாக" இருக்கின்றது. இதுவே, உலகத்திற்கு அவசியமானதாய் உள்ளது. அதாவது, இதையே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு, அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும். சத்தியமானது மனிதனைப் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிப்பதற்கு முன்னதாக, முதலாவது மனிதன் சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும். சத்தியம் அவர்களைச் சுத்திகரித்து, பரிசுத்தம் பண்ணுவதற்கு முன்னதாக அவர்கள் முதலாவதாக சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும். சகல மனுஷரும் சத்தியம் பற்றின தெளிவான/துல்லியமான அறிவிற்குள் வரவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாக இருக்கின்றது (1 தீமோத்தேயு 2:4). ஆகவே, ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், சத்தியத்தைப் பரப்புவதிலும், தனது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வதிலும், விளக்கின் திரியைச் செம்மைப்படுத்துவதிலும், எரிய வைப்பதிலும் மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட வேண்டும்.

"திரியைச் செம்மைசெய்து, எரிய விடுங்கள்!" என்று ஒருவர் கூறியுள்ளார். "உங்கள் விளக்கின் திரியைச் செம்மைப்படுத்துங்கள்" என்ற வார்த்தைகளடங்கின பாடல்களை ஊக்கத்துடன் நாம் பாடியிருக்கின்றோம். ஆனால், இதன் அர்த்தம்தான் என்ன? இதன் அர்த்தமாவது, சத்தியத்தைப்பற்றின துல்லியமான அறிவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜீவனுக்கேதுவான வார்த்தைகளுக்கு நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியதாகும். இன்னுமாக, இதன் அர்த்தமாவது நம்முடைய குணலட்ணங்களின் வாயிலாக சிறு தடைகள் கூட இல்லாமல், தெய்வீகச் சத்தியத்தின் உண்மையான வெளிச்சம் பிரகாசிக்கத்தக்கதாக, நம்முடைய அன்றாட ஜீவியம் மற்றும் சம்பாஷணையிலோ அல்லது (நாம் கொண்டிருக்கும்) உபதேசங்களில் நாம் தப்பிதங்களைக் காண்கின்ற மாத்திரத்தில், இந்த ஒவ்வொரு தப்பிதங்களையும் கவனத்துடனும், உண்மையுடனும் கத்தரித்துச் செம்மைசெய்ய வேண்டியதாகும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் தங்கள் வெளிச்சத்தின் திரிகளைக் கத்தரித்து, செம்மைப்படுத்தும் விஷயத்தில் அலட்சியமாக இருப்பதென்பது, கவலைக்குரிய விஷயமாகும். இவர்கள் கொஞ்சம் சத்தியத்தை, அதிகமான தப்பறைகளுடன் சேர்த்துப் பெற்றிருப்பார்கள். மேலும், இவர்கள் தப்பறைகளை அப்புறப்படுத்துவதற்குப்பதிலாக, சத்தியத்தையும், தப்பறையையும் சேர்த்துப் போதிக்கின்றபடியால், இவர்களிடமிருந்துவரும் வெளிச்சமானது, தூய்மையான வெளிச்சமாக இராமல், அவ்வெளிச்சத்துடன் கூடவே காணப்படும் நிழலினால், உருவம் வேறுபடுத்தப்பட்டு, வெண்மை நிறமற்று காணப்படுகின்றது. இன்னும் சிலர் தூய்மையான சத்தியத்தை உயர்த்திப் பிடித்திருந்தாலுங்கூட, சத்தியத்தின் சுத்திகரிக்கும் தன்மையை இவர்கள் தங்களுடைய குணலட்சணத்தில் அனுமதியாததால், தூய்மையற்ற குணலட்சணங்களின் வாயிலாக இவர்களுடைய வெளிச்சம் கடந்துவருவதால், அவ்வெளிச்சம் தெளிவில்லாமலும், தவறாகவும் காட்டப்படுகின்றது. இப்படியான நிலையில் தொடர்ந்து சத்தியத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள், சத்தியத்தை உயர்த்திப் பிடிப்பதற்கு உண்மையில் பாத்திரமற்றவர்களாக இருப்பார்கள். பின்னர், இறுதியில் அதை இழந்தும் போய்விடுவார்கள். ஏனெனில், "நீதிமானுக்கே வெளிச்சம் (சத்தியம்) விதைக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்டுள்ளது (சங்கீதம் 97:11). மேலும், சத்தியம் முன்வைக்கும் விஷயங்களை அலட்சியப்படுத்துவது என்பது அநீதியான காரியமாகும்.

நம்முடைய கர்த்தருடைய நாட்களில், தங்களைத் தெய்வீகச் சத்தியத்திற்கான பிரதிநிதிகள் மற்றும் போதகர்கள் என்று வெளிப்படையாக அறிக்கைப்பண்ணினவர்கள் இருந்தார்கள். சத்தியத்திற்காக மிகவும் வைராக்கியம் கொண்டிருப்பதாக வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் கூறிக்கொண்டார்கள். மேலும், சத்தியத்தினுடைய சுத்திகரிக்கும் வல்லமைக்குத் தங்களை

விலையேறப்பெற்ற சாட்சிகள் என்றும் கூறிக்கொண்டனர். இவர்கள் தங்களிடம் வெளிச்சம் இருப்பதாகவும், அதைத் தாங்கள் பிரகாசித்துக் கொண்டிருப்பதாகவும் கூறிக்கொண்டனர். பரிசேயர்கள் "தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்" என்ற வசனங்களின் காரியங்களைக் கூறுகின்றார்கள் (லூக்கா 18:11-12). ஆனால், இவர்களைக் குறித்துக் கர்த்தரோ, "மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள், உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்று கூறுகின்றார் (மத்தேயு 23:27-28) . இவர்கள் இப்படியாகக் கர்த்தருடைய பார்வையில் காணப்பட்டார்கள். ஆனால், இவர்கள் மனுஷர்களால் மதிக்கப்பட்டு, கனப்படுத்தப்பட்டு, பரிசுத்தர்கள் என்று உயர்வாகக் கருதப்பட்டு, சத்தியம் மற்றும் நீதியின் பாதையைக் காட்டித்தரும் வழிகாட்டிகள் எனக் கருதப்பட்டார்கள். இவர்கள் தேவனுடைய பிரமாணங்களுக்குள் முட்டாள்தனமான மற்றும் தங்களுடைய வீணான சொந்த பாரம்பரியங்களைப் புகுத்தி, தேவனுடைய நியாயபிரமாணத்தை அவமாக்கிப்போட்டார்கள்; பாரம்பரியங்களை ஜனங்களுக்குப் போதிப்பதில் மிகவும் வைராக்கியத்துடன் காணப்பட்டார்கள்.

இப்படியாக, செய்ததினிமித்தம் வேதபாரகர்கள் மற்றும் பரிசேயராகிய இந்தப் போதகர்கள் மன்னிப்புக்குத் தகுதியில்லாதவர்கள் ஆவார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணம் இவர்களுக்கு முன்பு திறந்த நிலையில் காணப்பட்டது. மேலும், அதைக் குறித்துச் சரியாக அறிந்திருப்பது, இவர்களுக்குரிய கடமையாகவும், சிலாக்கியமாகவும் இருந்தது. விசேஷமாக கிறிஸ்து வந்த பிற்பாடு, அவருடைய போதனைகளானது சத்தியத்தை அதிகமாய் வெளிப்படுத்தினது. இன்னுமாக, பரிசேயர், வேதபாரகருடைய வீணான பாரம்பரியத்தின் முட்டாள்தனத்தையும் அதிகமாய் வெளிப்படுத்தியதால், இவர்கள் சாக்குச்சொல்ல ஏதுவில்லாமல் ஆயிற்று. இவர்கள் தங்களுடைய முன்னோர்களின் பாரம்பரியங்களை உயர்த்திப்பிடிப்பதிலும், அவைகளைப் போதிப்பதிலும் தீர்மானத்துடன் காணப்பட்டிருந்ததினாலும், தங்களுடைய முட்டாள்தனமான பாரம்பரியத்தை வெளிப்படுத்தின சத்தியத்தினுடைய ஒளியை எதிர்ப்பதிலும் தீர்மானத்துடன் காணப்பட்டிருந்ததினாலும், இவர்களை நமது கர்த்தர் மாய்மாலக்காரர்கள் என்று கூறினது இவர்களுக்குப் பொருத்தமானதேயாகும்.

பரிசேயர் மற்றும் வேதபாரகரிடம் அதிகம் சத்தியம் இருந்தது. இவர்களிடம் தேவனுடைய முழு நியாயப்பிரமாணமும் காணப்பட்டது. மேலும், அந்தப் பிரமாணத்தை நம்புவதாகவும், அதையே போதிப்பதாகவும் இவர்கள் அறிக்கைப்பண்ணினார்கள். ஆனால், இவர்கள் தங்களுடைய பாரம்பரியத்தினாலும், வெளியில் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைபோன்று காணப்பட்டு, ஆனாலோ உண்மையில் இழிவுடன் காணப்படும் தங்களுடைய குணலட்சணங்களினாலும் சத்தியத்தை உருமாற்றிக் காட்டிவிட்டனர். ஆகவே, இவர்கள் மனிதர்களைத் தேவனிடத்திற்குக் கொண்டுவருவதற்காக தாங்கள் பிரயாசம் எடுப்பதாக அறிக்கை செய்த பிரயாசங்களின் விளைவாக, இவர்கள் மற்றவர்களையும் தங்களைப் போன்று மாய்மாலக்காரர்களாகவே ஆக்கினார்கள். "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:20).

மனுஷனுக்கு முன்பு அருமையானதாகவும், பாராட்டுப்பெறுவதற்கு ஏதுவானதாகவும் ஆனால், தேவனுடைய கணிப்பிலோ போலித்தனமாகவும், மாய்மாலமாகவும் காணப்படும் நீதியைக்குறித்து நாம் எச்சரிக்கையுடன் இருப்போமாக. நாம் எந்த நோக்கத்திற்காக சத்தியத்தை ஏற்றுக்கொள்கின்றோம் (அ) பரப்புகின்றோம் என்பதை இருதயத்தை வாசித்தறிகிற தேவன் உடனே புரிந்துக்கொள்கின்றார். இந்தத் தெய்வீகப் பொக்கிஷத்தைக் (சத்தியத்தை) கடந்துபோகும் வாழ்க்கையின் அற்பத்தனமான ஆதாயங்களுக்காக வியாபாரம் பண்ணுகின்றவர்கள், உண்மையில் முட்டாள்களே. தப்பறையான உபதேசங்களை உயர்த்திப்பிடிப்பதற்கும், அதைப் போதிப்பதற்கும், தேவனுடைய சத்தியத்தை எதிர்ப்பதற்கும் நாடுபவர்கள் உண்மையில் முட்டாள்களே. ஒருகாலத்தில் சத்தியத்தை ஏற்றுக்கொண்டும், பிற்பாடு பணத்திற்காக (அ) செல்வாக்கிற்காக (அ) தன்னோடுகூட கல்லறை நோக்கி பயணம் செய்து, செத்துக்கொண்டிருக்கும் நிலையில் காணப்படும் சகல மனிதர்கள் மத்தியில் பிரபலம் அடைவதற்காக (அ) வேறு ஏதேனும் காரணத்திற்காக விற்றுப்போடுகின்றவர்களும் உண்மையில் முட்டாள்களே.

இன்னுமாக, மாய்மாலத்துடன் சத்தியத்தை வியாபாரம் செய்யாமல் ஆனால், அதைக் குறைவாய் எடைபோடுகிற சிலரும் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும், இழப்பிற்குரியவர்களாகவே இருப்பார்கள். சத்தியத்தைத் தேடுபவர்களுக்கு அவசியமாய் இருக்கும் எளிமையை, சாந்தத்தின் ஆவியைக் குறுக்கிடுவதற்கு நாம் தவறான அபிப்பிராயத்தை (அ) பெருமை (அ) சண்டையிடும் தன்மை (அ) போட்டி மனப்பான்மை (அ) வேறு எதையாகிலும் அனுமதிப்போமானால், நமக்குள் பரிசேயரின் ஆவி வளர்ந்து, மாய்மாலம் வெளிப்படும். இப்படியான தன்மைகளைத் தவிர்த்து, உண்மையுடனும், சாந்தத்துடனும் சத்தியத்தை முழுமையாய் ஏற்றுக்கொண்டு, எதையும் இழந்து, சத்தியத்தை வைராக்கியத்துடன் போதிப்பவர்கள் கர்த்தர் சொல்வதுபோன்று பரலோக இராஜ்யத்தில் பெரியவர்கள் என்று அழைக்கப்படுவார்கள். தெளிவான சத்தியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சிலாக்கியம் இருந்தும், கொஞ்சம் தப்பறைகளைப் போதித்தும், ஆனாலும் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்குச் சரியான இருதய நிலைக்கொண்டிருப்பவர்கள் பரலோக இராஜ்யத்தில் சிறியவர்களென அழைக்கப்படுவார்கள் (மத்தேயு 5:19).

தவறான கருத்துகள் மற்றும் பண்புகளின் பல்வேறு குறைவுகள் என்பது, தேவனுடைய சில உண்மையான அர்ப்பணம் பண்ணியுள்ள பிள்ளைகளின் வளர்ச்சியை அதிகளவு குறைத்துப் போடுகின்றது. மேலும், இதன்விளைவாக இவர்கள் தேவனுக்கென்று ஊழியம் புரிவதாக எண்ணி செய்யும் காரியங்கள் தவறாய் வழிநடத்தப்பட்டு, தேவனுடைய வார்த்தைகள் மிகவும் தெளிவாகக் காணப்படும் விஷயங்களில், சத்தியத்திற்கு எதிராக போதிப்பவர்களாகவும், நம்பிக்கை வைப்பவர்களாகவும் ஆகிவிடுவார்கள். ஆகவே, இம்மாதிரியான விஷயங்களில் நாம் மிகவும் எச்சரிக்கையாய் இருந்து, சத்தியத்தின் பாதையிலான நம்முடைய தனிப்பட்ட வளர்ச்சிக்கும், கர்த்தருடைய ஊழியங்களில் நாம் பயன்படுவதற்கும் ஏதுவாக நாம் எல்லா இடையூறுகளையும் தளரா முயற்சியுடன் பின்னே தள்ளுவோமாக. "என் கிருபை உனக்கு போதும், பெலவீனத்தில் என்னுடைய பெலம் பூரணமாய் விளங்கும்" என்று கூறின இயேசுவை நோக்கினவர்களாக, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையுடனும், சாந்தத்துடனும்/நிதானத்துடனும், விடா முயற்சியுடனும் ஓடுவோமாக.

**ஆமென்!**

---

**R 3300**

# "போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது"

## லூக்கா 4:16-30

"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11).

நமது கர்த்தர் தமது ஊழியத்தை யூதேயாவில் ஆரம்பித்தார், அவர் தம்முடைய வாழ்க்கையின் பெரும்பகுதி கழிந்துபோன கலிலேயா மாகாணத்திற்குப் (திரும்பி) போவதற்கு முன்பு, அநேகமாக அவர் ஒரு வருட காலம் யூதேயாவில் செலவிட்டிருக்க வேண்டும் என்று அநுமானிக்கப்படுகின்றது. அவர் தம்முடைய சொந்த மாகாணத்திற்குப் போகையில், தம்முடைய சொந்த ஊருக்குப் போகும் முன் கப்பர்நகூமுக்குப் போனார். இச்செயல்பாடானது, ஒரு தீர்க்கத்தரிசி தொலைவில் இருப்பவர்களைக் காட்டிலும், சொந்த வீட்டாரால் பொதுவாகவே குறைவாக மதிப்பிடப்படுவார் என்ற உண்மையைக் கருத்தில்கொண்டு சிந்திக்கையில் ஞானமுள்ள செயல்பாடாக உள்ளது. யூதேயாவிலும், கப்பர்நகூமிலும் அவருக்கு உண்டான கீர்த்தியானது, அவருடைய மூன்றாம் வயது தொடங்கி, 30 வயது வரையிலும் அவர் வாழ்ந்து வந்த நாசரேத்தூரின் ஜனங்களின் மத்தியில் கவனத்தை ஈர்த்தது. அவர் நிமித்தம் அவருடைய ஊரைச் சார்ந்த நபர்களுக்குக் கொஞ்சம் பெருமை ஏற்பட ஆரம்பித்தது; மேலும் நமது கர்த்தர் நாசரேத்துக்கு வந்த பிற்பாடு முதல் ஓய்வு நாளன்று, ஜெப ஆலயத்தில் பெரும் திரளான ஜனக்கூட்டம் கூடியிருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு ஐயமில்லை.

தம்மிடத்திற்கும், தாம் கொடுக்கப்போகும் செய்தியினிடத்திற்கும் பாலஸ்தீனியாவின் ஜனங்களை ஈர்க்கவும், அவர்களை விழிக்கப்பண்ணுவது நமது கர்த்தருடைய ஊழியத்தின் நோக்கமாக இருந்தாலும், சகல ஜனங்களையும் சேர்த்துக்கொள்வது அந்தச் செய்தியின் நோக்கமாயிராமல், பதரிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுப்பதே நோக்கமாயிருந்தது, அதாவது கோதுமைகளை இயேசுவினிடத்திற்குச் சேர்த்துக் கொள்ளவும், எதிர்ப்பாயிருக்கும் பதர் வகுப்பாரை வரிசைப்படுத்தவுமேயாகும். கர்த்தருடைய ஊழியத்தின் பலனைக்குறித்து முன்னுரைக்கப்பட்டிருந்த காரியங்கள் முழுமையாக நிறைவேறினதை நம்மால் பார்க்க முடிகின்றது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" யோவான் 1:11, 12. அதாவது மோசேயை தலையாகக் கொண்டிருந்த பணிவிடைக்காரர்களின் வீட்டிலிருந்து, நமது கர்த்தராகிய இயேசுவைத் தலையாகப் பெற்றிருக்கும் புத்திரர் வீட்டாருக்குள் ஒருவராக மாறும் வாய்ப்புக் கொடுத்தார். நமது கர்த்தருடைய ஊழியத்தின் நாட்களில், உண்மையுள்ள ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், பெந்தெகொஸ்தே நாள் வரையிலும் அவர்கள் மீண்டுமாக ஜெநிப்பிக்கப்படவில்லை. பெந்தெகொஸ்தே நாளானது, அன்றைய நாளில் ஆயத்தமாயிருந்தவர்கள் மீது ஆவியின் ஜெநிப்பித்தலைக் கொண்டு வந்தது, அதாவது முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் இறுதியில் ஆவியில் பிறப்பதற்கு அவசியமான ஆவிக்குரிய குணலட்சணங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஜெநிப்பித்தலைக்கொண்டு வந்தது.

நமது பாடத்தின் முதலாவது வசனமானது, ஒவ்வொரு ஓய்வு நாளிலும் ஜெப ஆலயங்களின் கூடுகைகளில் கலந்துகொள்வது நமது கர்த்தருடைய வழக்கமாக இருந்தது என்றும், சபையாருக்காக வாசிப்பது அவருக்கு வழக்கமாக இருந்தது என்றும் தெளிவாகக் காட்டுகின்றது. (synagogue) ஜெப ஆலயங்களின் ஆசரிப்புகள், (temple)ஆலயங்களின் ஆசரிப்புகளுக்கு ஒத்ததாக இருப்பதில்லை. ஆலயம் என்பது ஜெபவீடாகவும், ஜனங்களின் பாவத்திற்காக காளை, வெள்ளாடு முதலியவற்றின் இரத்தத்தைக்கொண்டு நிழலான பாவநிவாரணம் செய்யப்படுகின்ற ஸ்தலமாகும். ஜெப ஆலயம் என்பது இன்றைய காலக்கட்டத்தின் வேதாகம வகுப்புகள் போன்று காணப்பட்டது, அங்கு வேதவாக்கியங்கள் வாசிக்கப்படும், மேலும் வழிநடத்தும் தலைவரினால் மாத்திரம் அல்லாமல், அவ்விடத்தில் கூடியுள்ள அனைவராலும் விரும்பும் பட்சத்தில் வேதவாக்கியங்களைச் சுதந்திரமாக விவாதம் (discuss) பண்ணலாம். ஜெப ஆலயத்தில் இவ்வொழுங்குமுறையில் சில சிறப்பு அம்சங்கள் உள்ளன, அது என்னவெனில், எந்த ஒரு வேதவாக்கிய தலைப்பின் கீழ் விவாதம்/ஆராய்ச்சி பண்ணுவதற்கான வாய்ப்பும் கொடுக்கப்படுவதேயாகும். கர்த்தருடைய ஜனங்களுக்கு அவர்கள்

இன்னமும் சத்தியத்தில் தெளிவடையத்தக்கதாக, அவர்கள் வேத ஆராய்ச்சி பண்ணவும், வேதாகம வகுப்புகள் நடத்தவும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

## “சத்திய வார்த்தையை நிதானமாய்ப் பகுத்து ஆராய்தல்”

ஜெப ஆலயங்களில் வேதவாக்கியங்கள் வாசிப்பதில் யூதர்கள் சில ஒழுங்குமுறைகள் வைத்திருந்தார்கள், மேலும் அன்றைய தினம் ஏசாயாவின் புஸ்தகத்திலிருந்து வாசிக்க வேண்டியிருந்தது. கர்த்தர் ஏசாயாவின் புஸ்தகத்தில் இப்பொழுது நாம் 61-ஆம் அதிகாரம் என்று கூறும் பகுதிகளை எடுத்துக்கொண்டு முதல் வசனத்தையும், இரண்டாம் வசனத்தின் ஒரு பாகத்தையும் வாசித்துவிட்டு, புஸ்தகத்தை மூடி, கீழே அமர்ந்து, தாம் வாசித்த பாகங்களுக்குச் சில விளக்கவுரைக் கொடுத்தார். நமது கர்த்தர் இங்கு அப்போஸ்தலர் விவரிக்கிற பிரகாரமாக, “சத்திய வார்த்தையை நிதானமாய்ப் பகுத்து ஆராய்ந்து” வாசித்தார் என்று நாம் பார்க்கின்றோம். அக்காலத்திற்கு ஏற்ற பாகத்தை மாத்திரம் அவர் வாசித்தார், ஆனால் நீதியைச் சரிக்கட்டும் நாள் குறித்த பாகத்தை அவர் வாசிக்கவில்லை. அவருடைய போதனைகள், ஜனங்களைப் பரீட்சிக்க வேண்டியதாய் இருந்தது, அதாவது ஒருவேளை அவருடைய செய்தி ஏற்றுக்கொள்ளப்படுமாயின், நீதியைச் சரிக்கட்டும் நாள் அவசியமில்லை; ஒருவேளை அவருடைய செய்தி ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில், நீதியைச் சரிக்கட்டும் நாள் அவர்களைப் பின்தொடருக்கின்றதாய் இருக்கும்; அவர்கள் அவரைப் புறக்கணித்தப்போது, நீதியைச் சரிகட்டும் நாளானது அவர்களைப் பின்தொடர்ந்தது. இதில் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஒரு பாடம் உள்ளது, அதென்னவெனில், நாம் ஆச்சாரமான முறையில் கர்த்தருடைய வார்த்தைகளை அதிகாரம் வாரியாக வாசித்துக்கொண்டு மாத்திரமே செல்வதைக் காட்டிலும், நாம் ஒரு வசனத்தைப் புரிந்துக்கொண்டும், உணர்ந்துக்கொண்டும் வாசிப்பது நலமாயிருக்கும் என்பதேயாகும்.

“உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று” என்று நமது கர்த்தர் கேட்டுக்கொண்டிருப்பவர்களிடம் கூறினார் (லூக்கா 4:21). இவ்வேத வாக்கியம் (ஏசாயா 61:1-2) பல நூற்றாண்டுகள் முன்பு எழுதப்பட்டதும், பல நூறு முறைகள் வாசிக்கப்பட்டதுமாயிருக்க, அவர்களுடைய (யூதர்) அறுவடையின் காலத்தில் முதல் முறையாக “நிறைவேறிற்று” என்று சொல்லப்பட்டது. கர்த்தர் யோர்தானில் தம்மை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியானது அவர்மேல் இறங்கி சுமார் ஒரு வருடமாகிவிட்டது. பரிசுத்த ஆவி அவர்மேல் வந்தது என்பது, அவர் அபிஷேகம் பண்ணப்பட்டதைக் குறிக்கின்றது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது என்பது, அபிஷேகம் பண்ணப்படுதலைக் குறிக்கும் என்பதை யூதர்கள் அறிந்தவர்களாய் இருந்தார்கள்; யூதர்களுடைய பிரதான ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார்கள் என்பது பலிகள் செலுத்துவதற்கும், தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையே மத்தியஸ்தர் வேலை செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கும் விதமாக ஆசாரியன் மேல் கர்த்தருடைய வல்லமை (அ) ஆவி இருப்பதைக் குறிக்கின்றது. யூதர்களுடைய இராஜாக்கள் அபிஷேகிக்கப்படுவது என்பது, இராஜாக்கள் ஜனங்களை ஆளும் விஷயத்தில் கர்த்தருக்கு அடையாளமாக இருக்கத்தக்கதாக விசேஷமாக அங்கீகரிக்கப்படுவதையும், தெய்வீக வல்லமையும், வழிநடத்துதலும் இராஜாக்கள் மீது இருக்கின்றது என்று காண்பிக்கப்படுவதையும் குறிக்கின்றது.

தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய மேசியா வந்து, பூமியில் நீதியின் ஆளுகையை ஸ்தாபிப்பார் என்றே வாக்குத்தத்தம் காணப்பட்டது, மேலும் இப்பொழுது நமது கர்த்தர் தம்மைப் பிதாவின், அபிஷேகம் பண்ணப்பட்டவராக அறிவித்தார். இதை அவர், “நான்தான் மேசியா, நான்தான் தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர், என்னிடத்தில் ஆசாரியன் மற்றும் இராஜாவிற்குரிய அதிகாரம் உள்ளது” என முரட்டுத்தனமான விதத்தில் ஒன்றும் கூறவில்லை, மாறாக, அந்தத் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல் இப்பொழுது சம்பவித்துள்ளது என்பதன் மீதும், மற்றும் அந்தத் தீர்க்கத்தரிசனத்தின் மீதும் அவர்களது கவனத்தைத் திருப்பும்விதமாக ஆணவத்துடன் அல்லாமல், அமைதலுடனே கூறினார். தேவன் தம்மை ஆளுகை செய்யும்படிக்கு அபிஷேகம் பண்ணியுள்ளார் என்ற அறிவிப்புக் காணப்படவில்லை, ஆனால் அவருடைய ஊழியத்தின் முதல் பாகமானது அவர் பிரசங்கம் பண்ணுவதாகக் காணப்பட்டது, அதாவது மனுக்குலத்திற்குத் தேவனுடைய வாயாக இருந்து அறிவிப்பது அவருடைய ஊழியத்தின் முதல் பாகமாக இருந்தது. இறுதியில், சகல ஜனங்களிடமும் சென்றடைந்து சேரத்தக்கதான மாபெரும் செய்தி அவரிடத்தில் இருந்தது. ஆனால் அத்தருணத்திலோ கேட்கச் செவியுள்ளவர்களுக்கு மாத்திரமே அச்செய்தி உரியதாயிருந்தது.

இராஜரீக அம்சங்கள் இல்லை என்றும், தீர்க்கத்தரிசியினால் கோடிட்டுக் காட்டப்பட்டதும், கர்த்தரால் அறிவிக்கப்பட்டதுமான மேசியாவின் வேலையானது, ஒரு மாபெரும் சேனையை எழுப்புவதற்குப்பதிலாக, நற்செய்தியைப் பிரசங்கிப்பதாகவும் இருந்தது என்றும், ஐசுவரியவான்களையும், ஞானமுள்ளவர்களையும், பெருமையுள்ளவர்களையும் தமக்கு ஆதரவு கொடுக்கக் கூட்டுவதற்குப்பதிலாக, ஏழைகளுக்கும், எளிமையுள்ளவர்களுக்கும் பிரசங்கிப்பதாகவும் இருந்தது என்றும் உணரும்போது, இது அநேகருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேசியா இருதயம் நறுங்குண்டவர்களைக் கட்டிச் சுகமாக்கப் போகிறார் என்ற அச்செய்தியினுடைய பாகத்தின் நிமித்தமும் அவர்களுக்கு ஏமாற்றம் உண்டாயிருக்கும். மற்றத் தேசங்களில் காணப்பட்ட மாபெரும் தலைவர்கள் மற்றும் யுத்த வீரர்கள் போன்றே தங்களுடைய இரட்சகரும், அநேக உயிர்களைக் கொன்றுபோடுகிறவராகவும், துன்பம் மற்றும் துக்கத்தினால் அநேகருடைய இருதயங்களை உடைத்துப் போடுகிறவராகவும் இருப்பார் என்றுதான் அவர்கள் அநேகமாக எதிர்ப்பார்த்திருந்திருக்க வேண்டும். ஏதோ விதத்தில் நறுங்குண்ட நிலையில் இருதயம் பெற்றிருந்தவர்கள் கூட, தங்களுடைய தவறான எதிர்ப்பார்ப்பின் காரணமாக அநேகமாக ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும்.

சிறைபட்டவர்களின் விடுதலைக்குறித்தும், கட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறவர்களுக்கு சிறையின் கதவுகள் திறக்கப்பட்டுச் சுதந்திரம் கொடுக்கப்படுவதைக்குறித்தும் அறிவித்தவைகளை, அங்குக் கர்த்தர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய எண்ணங்கள் அப்போது சிறையில் காணப்பட்ட யோவான் ஸ்நானன் மீது கடந்துசென்றது, மேலும் யோவானை விடுவிக்கும்படி, இயேசு ஏதேனும் முயற்சிகள் எடுக்கப்போகிறாரோ என்று கூட அவர்கள் யோசித்திருக்க வேண்டும். இவ்வசனத்தின் உண்மையான அர்த்தத்தைக்குறித்து அவர்கள் புரிந்துக்கொள்ளவேயில்லை; இவ்வசனமானது, பாவத்தின் அடிமைத்தனத்தினின்று சாத்தானின் சிறை கைதிகள் விடுவிக்கப்படுவதையும், இறுதியில் மரணத்தினின்றும், அதன் கட்டிலிருந்தும், கல்லறையாகிய இந்த மாபெரும் சிறைக்குள் போயிருந்த மில்லியன் கணக்கான ஜனங்கள் விடுவிக்கப்படுவதையுமே குறிக்கின்றது. கர்த்தருடைய சீஷர்களும் கூட, அதாவது அவருடைய செய்தியைக் கேட்கச் செவியும், உணர்வடையும் இருதயமும் கொண்டிருந்து, எதையும் இழக்கத் தயாராகி, அவருடைய பின்னடியார்கள் ஆனவர்கள் கூட, அச்சமயத்தில் கர்த்தருடைய வேலையின் மகத்துவத்தைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குத் தீர்க்கத்தரிசனங்களின் அர்த்தத்தை அவர் புரிய வைக்க வேண்டியிருந்தது, மேலும், பிரேதக்குழிகளில் இருப்பவர்கள் அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம்வரும் என்று அவர்களுக்கு விளக்கினார்.

## "அநுக்கிரகக் காலம்"

தீர்க்கத்தரிசியினால் குறிப்பிடப்பட்டுள்ள இந்த அநுக்கிரக்காலம் குறித்தும், அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. முழுச் சுவிசேஷ யுகமே, இந்த அநுக்கிரகக் காலம் (அ) அநுக்கிரக வருஷம் என்று இன்று நாம் காணமுடிகின்றதினால், நம்முடைய கண்கள் பாக்கியமானவைகள் ஆகும். இந்தச் சுவிசேஷ யுகத்தில்தான் கிறிஸ்து மூலம் தேவனிடத்தில் வரும் யாவரையும் ஏற்றுக்கொள்ள அவர் சித்தமுள்ளவராக இருக்கின்றார். அதாவது, இயேசுவுடன் கூட உடன் பலிச் செலுத்துகிறவர்களாகவும், மாபெரும் இராஜரிக ஆசாரியக் கூட்டத்தின் அங்கங்களாகவும் கிறிஸ்து மூலம் தேவனிடத்தில் வரும் யாவரையும் ஏற்றுக்கொள்ள, அவர் சித்தமுள்ளவராக இருக்கின்றார். உண்மைதான், ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில் மாபெரும் மீட்பரானவர் மனுக்குலம் முழுவதையும் சீர்த்திருத்தலின் முறைமையின் மூலம், மீண்டுமாக தேவனுடைய சாயலில் கொண்டு வந்து, தேவனுக்கு இசைவான இருதய நிலையில் அவர்களைக்கொண்டு வந்திருக்கும்போது, மனுக்குலத்தையும் ஏற்றுக்கொள்ள தேவன் சித்தம் உள்ளவராகக் காணப்படுவார். ஆனால் கிறிஸ்துவினால் சீர்ப்பொருத்தப்பட்ட பிற்பாடு, உலகம் ஏற்றுக்கொள்ளப்படும் காரியமானது, தற்காலத்திலே சபை ஏற்றுக்கொள்ளப்படும் காரியத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாகும்.

நாம் (இப்பொழுது) ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது, நம்முடைய சுபாவ மாற்றத்தைக் குறிக்கின்றது; புதிய சுபாவத்திற்கு, அதாவது ஆவிக்குரிய சுபாவத்திற்கு நாம் ஜெனிப்பிக்கப்பட்டுள்ளோம்; மேலும் இந்த ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் அப்போஸ்தலர் விவரித்தப் பிரகாரமாக, தேவனுடைய கிருபையினால், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான மீட்பின் மூலமாய் இலவசமாக முதலாவதாக நாம் நீதிமானாக்கப்பட்டிருக்க, இரண்டாவதாக நாம், "புத்தியுள்ள ஆராதனை செய்யத்தக்கதாக நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக" ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்த "அநுக்கிரக நாள்" என்பது, நம்முடைய

பரம பிதா அபிஷேகம் பண்ணப்பட்டவரின் பலிகளை ஏற்றுக்கொள்வதற்குச் சித்தமாயிருக்கும் நாளைக் குறிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. பிற்பாடு சிலுவையில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட இயேசுவின் அர்ப்பணிப்புக்குரிய ஆரம்பப் பலியை மாத்திரமே பிதா ஏற்றுக்கொண்டவராய்க் காணப்பட்டார். இதன் அடிப்படையிலேயே பரமபிதாவானவர் முதலாம் உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்களாகிய கனம், மகிமை மற்றும் அழியாமைத் தொடர்புடைய மகா மேன்மையான பரிசைக்கொடுத்தார். இப்படியாகவே, இரட்சகரின் இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற அவருடைய சரீர அங்கங்கள் யாவரின் பலிகளும் இந்த நிஜமான பாவ நிவாரண நாள் அன்று பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றது. மேலும் இந்த "மேன்மையான பலிகள்" முடிந்த பிற்பாடு, அதாவது நிழலான காளை மற்றும் வெள்ளாட்டின் பலிகள் கொடுக்கப்பட்டு முடிந்து, ஏற்றுக்கொள்ளப்பட்டப் பிற்பாடு, எந்தப் பலிகளும் தேவைப்படுவதுமில்லை (அ) ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை.

நமது கர்த்தர் அறிவித்த இந்த ஆச்சரியமான தீர்க்கத்தரிசனம் அவரிடத்திலும் நிறைவேற்றப்பட்டு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாகிய, அவருடைய உண்மையாக அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களிடத்திலும் இன்னமும் நிறைவேறிக்கொண்டிருக்கின்றது. இதுவுங்கூட நிழலில் காட்டப்பட்டுள்ளது. ஆரோன் சிரசில் ஊற்றப்பட்ட பரிசுத்த அபிஷேகத் தைலமானது, அவருடைய வஸ்திரங்களிலும் வழிந்து ஓடினதாய்க் காணப்பட்டு, இப்படியாக சொல்லர்த்தமான அவருடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கங்களையும் அபிஷேகம் பண்ணுகிறதாகக் காணப்படுகின்றது. இப்படியாகவே நமக்கும் உள்ளது. நாம் அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீர அங்கங்களாகவும் இருக்கின்றோம், மேலும் நமது தலையினுடைய விஷயத்தில் நடந்தவைகள், நம் ஒவ்வொருவரின் விஷயத்திலும் அப்படியாகவே காணப்படும். நாம் அனைவரும் பிரசங்கம் பண்ணுவதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றோம், மேலும் சாந்தமும், இருதயம் நறுங்குண்ட யாவருக்கும் வரவிருக்கின்ற இராஜ்யத்தைக்குறித்த நற்செய்தியை அறிவிக்க நாம் அனைவரும் கர்த்தரிடமிருந்து அதிகாரம் பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கின்றோம். மனுஷர்களுடைய இருதயத்தை நொறுக்குவதற்கே கர்த்தர் நோக்கம் கொண்டவராக நமக்குச் சுவிசேஷ செய்தியையும், பணியையும் கொடுத்திருக்கின்றார் என்று யூகிப்பது தவறாகும். அற்பமாய் இருக்கிறவர்களிடத்திலேயே நாம் விசேஷமாகப் போகும்படிக்கு நமக்குப் பணிகொடுக்கப்பட்டுள்ளது என்று அனுமானிப்பதும் தவறேயாகும். நம் மூலமாக வெளிப்படுத்தப்படும் செய்தியானது, சாந்தமுள்ளவர்களையும், இருதயம் நறுங்குண்டவர்களையும் தவிர வேறு எவரையும் ஈர்க்கும் என நாம் எதிர்ப்பார்க்கக் கூடாது. உண்மைதான், இருளின் மத்தியில் பிரகாசிக்கும் வெளிச்சமானது, இருளைக் கண்டிக்கிறதாகவும், பாவம், நீதி மற்றும் வரவிருக்கிற நியாயத்தீர்ப்புக் குறித்துக் காட்டுகிறதாகவும், நீதி மற்றும் அநீதிக்கு இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்திக் காட்டுகிறதாகவும் இருக்கின்றது. ஆயினும் இவைகள் அனைத்தும் அச்செய்தியினால் நிகழக்கூடிய இதர அம்சங்களேயாகும். சுவிசேஷத்தின் உண்மையான பணி சாந்தமுள்ளவர்களையும், இருதயம் நறுங்குண்டவர்களையும் ஈர்ப்பதேயாகும்.

உலகத்திற்கான நம்முடைய பொதுவான செய்தியானது, அதாவது அவர்களால் கேட்க முடிந்த அளவிற்கு நாம் கூறுவது, சிறைப்பட்டவர்களின் விடுதலை மற்றும் இறுதியில் மரணத்தின் சிறைக்கதவுகள் திறக்கப்படும் என்றுமுள்ள பொதுவான செய்தியே ஆகும்; இன்னுமாக ஏற்றகாலத்தில் தேவனிடமிருந்து அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர் மூலம், பூமியின் சகல குடிகளும் சத்தியத்தின் அறிவாகிய மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் அவர்கள் தேவனை அறிந்துக்கொள்ளவும், பரிசுத்தமான பெரும்பாதையான வழியில் திரும்பச் செல்லத்தக்கதாகவும் அவர்களுடைய செவிடான செவிகள் திறக்கப்படும் என்றும், புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும் என்றும், ஆயிரம் வருஷம் அரசாட்சியின் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் இறுதியில் அவர்களுக்கே உரியது என்றுமுள்ள பொதுவான செய்தியே ஆகும். ஆனால் இன்று கேட்கும் செவிகளை உடையவர்களுக்கு இன்னும் அதிகமான விஷயங்களை நாம் கூறலாம். சாத்தான், பாவம் மற்றும் மாம்சத்தின் பெலவீனத்தினுடைய ஆளுகையிலிருந்து அவர்களின் விடுதலையைக்குறித்து நாம் அவர்களுக்குக் கூறலாம். இன்னுமாக ஒருவேளை அவர்கள் இயேசுவை விசுவாசித்து, தங்களால் முடிந்தமட்டும் மாம்சத்தின்படி நடக்காமல், ஆவியின்படி நடக்க நாடுவார்களானால், நம்முடைய இரட்சகரினால் பாவங்களுக்காகச் செலுத்தப்பட்ட மாபெரும் பலியின் புண்ணயத்தினால் அவர்களுடைய கடந்தகால பாவங்கள் மன்னிக்கப்படும் என்றும், அவர்களுடைய தற்கால பெலவீனங்களும், குறைவுகளும் மூடப்படும் என்றும், நாம் அவர்களுக்குத் தேவனுடைய நாமத்தில் நிச்சயம் கொடுக்கலாம். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் காரியமானது, இப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கும், ஊழியக்காரிகளுக்குமே உரியதாகும், ஆனால் உலகத்திற்கான உண்மையான நீதிமானாக்கப்படுதல்

(அ) பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுதலாகிய மகிமையான ஏற்பாடானது, சாத்தான் கட்டப்பட்டு, ஜனங்கள் இனி மோசம் போக்க முடியாத வரவிருக்கிற யுகத்திற்கே உரியதாகும்.

## ‘‘கிருபையற்ற இருதயங்களுக்குக் கிருபையான வார்த்தைகள்’’

நமது கர்த்தருடைய உரையாடல் பதிவு செய்யப்படவில்லை, எனினும் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வசனத்தை அடிப்படையாகக்கொண்டிருப்பதினால், அவருடைய உரையாடல் சிறப்பாய்க் காணப்பட்டிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அவருடைய வாயிலிருந்து, கிருபை நிறைந்த வார்த்தைகள், சமாதானம், ஆறுதல், ஆசீர்வாதம் மற்றும் தயவுள்ள வார்த்தைகளாய் இருந்தது என அங்கிருந்த அனைவரும் அவருக்கு நற்சாட்சிகொடுத்தனர். தம்முடைய ஆயிரம் வருஷம் அரசாட்சியில், தம்முடைய மீட்பின்/பலியின் வேலையின் நிமித்தம் சுதந்தரிக்கப்பட்ட, உலகத்தின் மீது வரவிருக்கிறதான ஆசீர்வாதங்களைக்குறித்து எந்த அளவிற்குக் கர்த்தர் விளக்கினார் என்பது நமக்குத் தெரியவில்லை. அவருடைய வயதான அயலகத்தாரும், நண்பர்களும், அவரைக்குறித்து மிகவும் உயர்வான அளவில் எண்ணத் துவங்கினார்கள், மேலும் தீர்க்கத்தரிசியானவன் தன்னுடைய சொந்த ஊரிலும், உறவினர்கள் மத்தியிலும் அங்கீகரிக்கப்படமாட்டான் என்று முன்னொரு காலத்தில் பேசப்பட்ட பழமொழியானது மறுக்கப்பட வேண்டிய நிலை உருவாகி உள்ளது என்பது போன்று தோன்றியது. இன்னுமாக அவருடைய சொந்த ஊரார் அவரை உண்மையில் மாபெரும் தீர்க்கத்தரிசியென ஏற்றுக்கொள்வது போன்றும், அவரினால் மகிழ்ச்சிகொள்வது போன்றும், அவர் தங்களுடைய ஊரானாக இருந்ததினால், அதாவது நாசரேத்து ஊராராகிய இயேசுவாக இருப்பதினால் அவர் நிமித்தம் பெருமை கொள்வது போன்றும் தோன்றிற்று.

ஆனால் அவரைக்குறித்த அவர்களுடைய பாராட்டு சிறு கணங்களே நீடித்ததாகக் காணப்பட்டது! அவர்களுடைய சுபாவத்தின்படியான மனதும், விபரீதமான யோசனைகளும், அனைத்தையும் தலைகீழாக்கிப் போட்டுவிட்டதோடல்லாமல் அவருடைய ரசிகர்களை, அவருடைய சத்துருக்களாகவும் மாற்றி, அவரை வெறுத்து, அவருடைய ஜீவனைக் கொன்றுபோடும்படியாக நாடவும் செய்தது! அவர்களோ, "இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா?" என்று கூற ஆரம்பித்தார்கள். மேலும் யூதேயாவிலும், அருகாமையிலுள்ள பட்டணமாகிய கப்பர்நகூமிலும் அவரால் மாபெரும் அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது என்று கேள்விப்பட்டிருந்ததினால், தங்கள் மத்தியில் இயேசு எவ்விதமான வல்லமையான கிரியைகளைச் செய்யப்போகிறாரோ என்று யோசிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். அவர்களுடைய எண்ணங்களை அறிந்துக்கொண்டவராக, "அவர் அவர்களை நோக்கி: வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்கிற பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமூரில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம்" என்றார் (லூக்கா 4:23).

நாசரேத்தில் ஏன் நமது கர்த்தர் அற்புதங்கள் செய்ய மறுத்துவிட்டார் என்று நமக்குத் தெரியவில்லை. ஆயினும் நாம் அனுமானிப்பது என்னவெனில், "நாசரேத் அவருடைய சொந்த ஊராய் இருந்தபடியினால், அவர் அனைவருக்கும் அறிமுகமானவராக இருந்தார்; மேலும் ஜெப ஆலயத்தில் அவர் அவர்கள் மத்தியில் முன் நாட்களிலும் கூட வேத வாக்கியங்கள் வாசித்திருந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை, ஆகவே அவ்வூர் ஜனங்கள், அற்புதம் என்னும் சான்று (attestation) அளிக்கப்படாமலேயே நற்செய்தியை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருந்திருக்க வேண்டும்; ஆனால் கர்த்தரை யார் என்று தெரியாத மற்றப் பட்டணங்களில், இயேசுவை நம்புவதற்கான சான்றாக அற்புதங்கள் தேவைப்பட்டது. இன்னுமாக அவரோடு தனிப்பட்ட விதத்தில் பழக்கமோ (அ) அற்புதங்களோ, இவைகளில் ஏதேனும் ஒன்று சான்றாகக் கொடுக்கப்படாமல், அவரையும், அவருடைய போதனைகளையும் ஜனங்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்ப்பார்க்கப்பட முடியாது. நமது கர்த்தருடைய அற்புதங்களானது, திரும்பக்கொடுத்தலின் காலங்கள் இன்னமும் வராததினால், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களாக இருப்பதற்கு நிகழ்த்தப்படாமல், நமது கர்த்தருடைய போதனைகளுக்குச் சான்றாகவும், சாட்சியாகவும், மதிப்புச் சேர்ப்பதாகவும், வலுகொடுப்பதாகவும், உறுதி கொடுக்கிறதாகவும் அமைவதற்கே அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டது. நாசரேத்தின் ஜனங்கள் அற்புதங்களை எதிர்ப்பார்த்திருக்கக் கூடாது, அவர்களுக்கு அற்புதங்கள் அவசியமும் இல்லை, ஏனெனில் இயேசுவோடு அறிமுகம்/பழக்கம் எனும் மற்றொரு சான்று அவர்களிடத்தில் இருந்தது என்பதேயாகும்.

## "உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா"
## - மத்தேயு 7:22-23
### (திருவிவிலிய மொழிப்பெயர்ப்புச் சரியானது)

நம்முடைய நாட்களில் பொருந்தக்கூடிய ஒரு படிப்பினையை இந்தச் சம்பவத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளலாம். இன்று கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் அற்புதங்கள் செய்யப்படுவது அவசியமாய் இராதபடியினால், அற்புதங்கள் மறைந்து போயின. அற்புதங்கள் கடந்து/மறைந்து போய்விட்டதற்கான காரணம், கர்த்தர் வல்லமையில் குறைவுபட்டுப் போய்விட்டார் என்பதினால் அல்ல, மாறாக திரும்பக்கொடுத்தலின் காலங்கள் இன்னும் வரவில்லை என்பதினால், சுவிசேஷ செய்திக்கான அறிமுகமாக இருக்க அவசியப்பட்ட அற்புதங்கள் பின்னர் தொடர்ந்துக் காணப்படவில்லை. ஆகவே இன்று காணப்படக்கூடிய சகலவிதமான நோய்களைச் சொஸ்தப்படுத்துவதற்குரிய தெய்வீக வல்லமையை, நாம் கண நேரங்கூட சந்தேகிக்கவில்லை என்றாலும், தற்காலத்தில் நடத்தப்படும் அற்புதவிதமான சொஸ்தமாக்குதல்களையே நாம் சந்தேகிக்கின்றோம், இவைகள் மோர்மான்ஸ் (யோசேப் ஸ்மித் என்பவரினால் ஸ்தாபிக்கப்பட்ட சபை பிரிவு) அல்லது கிறிஸ்தவ விஞ்ஞானிகள் அல்லது கிறிஸ்தவக் கூட்டணி மக்கள் அல்லது ஆவி உலக ஊடகர்கள் (அ) திரு. டவுகி மற்றும் அவர் சீஷர்கள் (அ) மற்றவர்களால் செய்யப்படுகின்றதா என்றே நமக்கு சந்தேகம் எழுகின்றது. "உங்களை நான் என்னுடைய உண்மையுள்ள சீஷர்களாக அறியேன்" என்று கர்த்தர் சொல்லப்போகிறவர்கள் செய்த "வல்ல செயல்களில்" சில என்றே இந்த அற்புதங்களை நாமும் பார்க்கத்தக்கதாக மனம் சாய்கின்றது.

சாத்தானும், அவனுடைய வேலைகளும் சந்தேகத்திற்கிடமின்றி, ஜீவனுக்கும், சொஸ்தப்படுத்துதலுக்கும் எதிர்மாறானதேயாகும். எனினும், தன்னுடைய வசதிக்கேற்ப அவன் தனது வழிமுறைகளை மாற்றி, பிரசங்கிப்பவனாகவும் (அ) சொஸ்தப்படுத்துகிறவனாகவும் ஆகுவதற்கு விருப்பம் கொண்டவனாகவும், இப்படிச் செய்வதற்கு நன்கு வல்லமையுள்ளவனாகவும் காணப்படுகின்றான். இவ்விஷயத்தைக் குறித்துக் கர்த்தர் பேசுகையில், சாத்தானுடைய இத்தகைய போக்கு/நடைமுறையானது அவனுடைய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்கே வழிநடத்துகின்றதாய் இருக்கும் என்றும், சாத்தான் மனுக்குலத்தின் மீது செயல்படுத்திக் கொண்டிருக்கும் மூடநம்பிக்கைகள் மற்றும் குருட்டு நம்பிக்கைகளை நிலைநிறுத்த வேண்டுவதற்கு இத்தகைய பிரயாசங்கள் ஏறெடுப்பது அவனுக்கு அவசியமாய் இருக்கும் என்றும், கர்த்தருடைய உண்மையான அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் மனங்களுக்குள்ளும், இருதயங்களுக்குள்ளும் தற்கால சத்தியத்தின் மகிமையான ஒளியானது படிப்படியாகப் பிரவேசிப்பதிலிருந்து, கவனத்தைத் திருப்புவதற்கு இத்தகைய பிரயாசங்கள் ஏறெடுப்பது அவனுக்கு அவசியமாய் இருக்கும் என்றும் குறிப்பிடுகின்றார்.

கர்த்தருடைய ஜனங்களைப் பொறுத்தமட்டில், தற்கால வேளையானது, பலிச் செலுத்துவதற்கான வேளையாய் இருக்கிறதே ஒழிய, சீர்த்திருத்தித் திரும்பக்கொடுத்தலுக்கான /திரும்ப அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கான வேளையாய் இல்லை, அதாவது தங்களைக் காத்து இரட்சித்துக்கொள்வதற்கான வேளையாய் இராமல், தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கின்ற வேளையாய் இருக்கின்றது, அதாவது தங்களின் அழிந்துபோன சரீரங்களைச் சீர்ப்படுத்துவதற்கான வேளையாய் இராமல், தங்களுடைய நறுங்குண்ட இருதயங்களைக் கட்ட வேண்டிய வேளையாய் மாத்திரம் இருக்கின்றது. அதாவது நிஜமான/உண்மையான விடுதலைக்குரிய வேளையாய் இராமல், பாவம் மற்றும் மரணத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாய்க் கருதப்பட வேண்டிய வேளையாய் மாத்திரம் இருக்கின்றது. உலகத்தைப் பொறுத்தமட்டில், மேசியாவின் மகத்துவம் குறித்தும், போதகருக்கு உரியதான அவருடைய ஆற்றல் குறித்தும் எப்பக்கத்திலும் தற்போது போதுமான அளவு சாட்சிப் பெற்றிருப்பதினால், மேசியாவின் மகத்துவம் பற்றி அறிய உலகத்திற்குத் தற்காலிகமான நோய் சுகமாக்கும் விஷயங்கள் அவசியமில்லை, மேலும் உலகத்தின் நோய்கள் நிரந்தரமாக சொஸ்தமாக்கப்படப்போகிற வேளையும் இன்னமும் அவர்களுக்கு வரவுமில்லை. மேலும் அப்போஸ்தலர் பேதுரு சுட்டிக்காட்டுவது போன்று, கர்த்தருடைய இரண்டாம் வருகையில், அவருடைய ஆயிரம் வருஷம் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையிலேயே, நிரந்தரமாக நோய்களைச் சொஸ்தமாக்கும் அந்த வேளைவரும்; "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்" (அப்போஸ்தலர் 3:19).

சுயநலத்தின் அடிப்படையில் நாசரேத்தின் ஜனங்கள் இயேசுவின்மேல் விருப்பமுள்ளவர்களாய் இருந்தார்கள், அதாவது தங்களுடைய பட்டணத்தை அவர் சார்ந்தவர் என்ற

விதத்தில் பெருமைகொண்டிருந்தனர்; இன்னுமாக மற்றப் பட்டணங்களில் அவர் செய்த மாபெரும் அற்புதங்களைக்காட்டிலும் தமது சொந்த ஊரில் இரண்டு மடங்குக்கும் மேலாக செய்வார் என்று எதிர்ப்பார்க்கவும், செய்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட அற்புதங்களை, தாம் செய்வதில்லை என அவர்களுக்கு அவர் அறிவித்தபோது, ஏமாற்றமடைந்து கோபம் கொண்டார்கள். அவர்களுடைய கோபத்தைத் தணிக்க முடியவில்லை. கோபத்தினால் நிரம்பினவர்களாக அவர்கள் எழுந்து அவரைக்கொன்று போடும்படிக்கு (அ) கீழே தள்ளி, அவரை முடமாக்கும் நோக்கத்திற்காக ஊருக்குப் புறம்பே தள்ளி, சுமார் 40 (அ) 50 அடி உயரமுள்ள செங்குத்தான மலை இருக்கும் திசையை நோக்கி அவரைக்கொண்டு சென்றனர்.

## ''உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்''

விழுந்துபோன நிலையில் காணப்படும் மாம்ச சுபாவத்தின்படியான மனுஷனுடைய நிலையைப் பற்றின காட்சியை நம்மால் இங்குப் பார்க்க முடிகின்றது! ஒரு நிமிடம் ஆண்டவரின் கிருபையான வார்த்தைகளின் நிமித்தம் களிக்கூருகின்றனர், ஆனால் தங்களுடைய சுயநலமான நம்பிக்கைகளும், எதிர்ப்பார்ப்புகளும், இலட்சியங்களும் ஏமாற்றமடையும்போது, அடுத்த நிமிடமே அவரை அழித்துவிட வேண்டும் என்று விரும்புகின்றனர். அந்தக்காலம் முதல் கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் இப்படியாகவே காணப்படுகின்றது; குறிப்பாக இந்தச் சுவிசேஷ யுகத்தின் அறுவடை காலமாகிய தற்காலத்திலும் கூட இது உண்மையாகவே இருக்கின்றது. சகல ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அநேகர் கேட்கின்றனர். மேலும் அது ஏற்றுக்கொள்ள தகுந்த மாபெரும்/மகத்துவமான சுவிசேஷச் செய்தி என அவர்கள் அறிக்கையிட்டாலும், சுயநலமான நோக்கங்கள் காரணமாக, அதாவது தனி மதப் பிரிவு ஏற்படுத்தும் விருப்பமும், இந்தச் சுவிசேஷச் செய்திக்குப்பதிலாகத் தங்களுக்குப் பிரியமான ஒரு பிரிவை, கூட்டத்தாரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வும், அவர்களையே களங்கத்திற்குள்ளாக்கி விடுகின்றது. அதாவது கொஞ்சம் முன்பு கிருபையான அச்செய்தியில் களிக்கூர்ந்தவர்கள், தங்களின் சுயநோக்கம் காரணமாக தீமை செய்ய ஏவப்படுகின்றனர்.

கர்த்தர் தம்மை எதிர்ப்பவர்கள், தங்களுடைய உண்மையான ஆவியை வெளிப்படுத்தும் அளவுக்குச் செல்லத்தக்கதாக, காரியங்களை அனுமதித்தார்; பின்னர் தம்முடைய கண்ணின் பார்வையினால் அவர்களைப் பயமுறுத்தி பணியவைத்து, அவர்கள் மத்தியிலிருந்து தொல்லைப்படுத்தப்படாமல் கடந்து போய்விட்டார். இவ்வல்லமையை அவர் தம்முடைய வேளை இன்னமும் வராதபடியினால், செயல்படுத்தினார். இப்படியாகவே அவருடைய சரீரத்தின் அங்கமாகிய நம் அனைவரின் விஷயத்திலும் கூடப் பொருந்தும். குமாரன் தம்முடைய வேலையை நிறைவேற்றி முடிப்பதற்கெனப் பிதா ஒரு ஏற்றவேளை கொண்டிருந்தது போல, கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினுடைய விஷயத்திலும் தெய்வீக முன்னேற்பாடானது காரியங்களை நடத்திக்கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை; ஆகையால் தெய்வீகக் கவனத்தை மீறி, அவர்களுடைய தலையிலிருந்து ஒரு முடிக் கூடக் கீழே விழுவதில்லை; இன்னுமாக அவர்களுடைய வேளை வரும்வரையிலும், அதாவது பிதா அவர்களுக்கென்று கொடுத்திருக்கும் வேலையை அவர்கள் நிறைவேற்றி முடிப்பதுவரையிலும், அதாவது இராஜ்யத்திற்கு அவர்கள் தகுதியடையத்தக்கதாக அவர்களுக்குத் தேவைப்படும், செதுக்குதல்களையும், மெருகூட்டுதல்களையும் அவர்கள் அனுபவிப்பதுவரையிலும் அல்லது தங்களுடைய சுயசித்தத்தின்படி அவர்கள் தங்களையே கர்த்தரின் கரத்தினின்று எடுத்துப் போடுவதுவரையிலும் அல்லது அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க அவர்கள் மறுப்பதுவரையிலும், அவர்களது ஜீவன் பிதாவின் பார்வையில் விலையேறப்பெற்றதாய் இருந்து; அவர்களுக்கான வேளை வருவது வரையிலும், எந்த ஒரு விதத்திலாகிலும் அவர்களிடமிருந்து ஜீவன் எடுக்கப்பட முடியாது.

## ''அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனால்...''

நமது பாடத்தின் ஆதார வசனமானது, நாம் இப்பாடத்தில் அவர் நாசரேத்தில் புறக்கணிக்கப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில் நிறைவேறாமல், ஒட்டுமொத்த இஸ்ரயேல் தேசத்தாராலும் அவர் புறக்கணிக்கப்பட்டதிலேயே நிறைவேறினது. ஒட்டுமொத்த தேசமும் கர்த்தரைப் புறக்கணித்தாலும், தனிப்பட்ட நபர்கள் அவரை ஏற்றுக்கொண்டார்கள் என அப்போஸ்தலர் இங்குச் சுட்டிக்காட்டுகின்றார். ஆகவே இஸ்ரயேல் தேசத்தாரை அவர் ஒரு தேசமாக

புறக்கணித்தாலும், அவருடைய சீஷர்களான இந்த உண்மையுள்ள தனிப்பட்ட நபர்கள் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புத்திரர் வீட்டாரின் அங்கங்கள் ஆகுவதற்கான சுயாதீனம் அளிக்கப்பட்டனர்; மேலும் பெந்தெகொஸ்தே நாளன்று இவர்கள் புத்திர சுவிகாரத்தின் ஆவியை, அதாவது புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கப்படும் ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள்.

மாம்சீக இஸ்ரயேலர்களின் இந்த அனுபவத்திற்கு இணையானதை நாம் நிஜமான இஸ்ரயேலர்கள், அதாவது பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடத்திலும் காணலாம். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, அவருடைய ஜனங்கள் என்று அறிக்கை செய்துகொள்ளும் கிறிஸ்தவ மண்டலத்தாரிடம் வரும்போது, தீர்க்கத்தரிசிகளின் மூலம் உரைக்கப்பட்டதற்கு இசைவாகவே அவர் மீண்டுமாகப் புறக்கணிக்கப்பட்டார், எனினும் அனைவராலும் அவர் புறக்கணிக்கப்படவில்லை. யூதர்களில் சிலர் அன்று அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற ஆயத்தமாய் இருந்ததுபோன்று இன்றும் கூட, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் நீங்கள் பாக்கியவானாய் இருக்கிறீர்கள்" என்ற அவருடைய வார்த்தைகள் பொருந்தக்கூடிய சிலர் காணப்படுகின்றனர். கர்த்தரை ஏற்றுக்கொண்டு, இன்று ஆவிக்குரிய வீட்டாரில் ஒருவராகக் காணப்படுகிறவர்கள் இன்னமும் ஏற்றவேளையில் மாபெரும் ஆசீர்வாதமாகிய, நிஜமான பெந்தெகொஸ்தே ஆசீர்வாதமாகிய மகிமையடைதலைப் பெற்றுக்கொள்வார்கள். சீக்கிரமாக இந்தச் சுவிசேஷ யுகத்தின் கோதுமை வகுப்பார் ஆசீர்வதிக்கப்பட்டு, "தங்களுடைய பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப்போன்று பிரகாசிக்கத்தக்கதாக" மாற்றப்படுவார்கள் (மத்தேயு 13:43). இவ்விதமாக, கர்த்தர் இஸ்ரயேலின் இரு வீட்டாருக்கும் தடுக்கலின் கல்லாகவும், உண்மையுடன் இரு வீட்டாரிலும் காணப்படும், சிலருக்கு ஆசீர்வாதமுமாகவும் இருக்கின்றார் என நாம் பார்க்கின்றோம். இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகவும், அவருடைய சரீர அங்கங்களாகவும், அவருடைய மணவாட்டிகளாகவும் இருப்பார்கள், மேலும் தற்காலத்தில் இவர்கள் அவரோடு கூட அபிஷேகம் பண்ணப்படுவதிலும், பாடுபடுவதிலும் மாத்திரம் பங்கடையாமல், பூமியின் சகல குடிகளையும், கர்த்தரை அறிகிற அறிவினாலும், உலகிலுள்ள மனுக்குலம் விரும்பும் பட்சத்தில் மீண்டும் தேவனுடைய தயவிற்குள் வருவதற்கான வாய்ப்பினாலும், ஆசீர்வதிக்கும் எதிர்க்கால வேலையின் மகிமையிலும் அவர்கள் அவரோடு கூடப் பங்கடைவார்கள்.

**ஆமென்!**

---

**R 3307**

# “மனுஷரைப் பிடிக்கிறவர்கள்”

## லூக்கா 5:1-11

“நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்” யோவான் 8:31

கலிலேயாவின் கடற்கரை அருகில் கப்பர்நகூம் காணப்பட்டது. கலிலேயா கடல் அழகானதும், நமது கர்த்தருக்கும், இக்கடலுக்கும் இடையே இருக்கும் தொடர்பின் நிமித்தம் உலக பிரசித்தி வாய்ந்ததும், மீன்கள் நிறைந்ததுமாய் உள்ளது. இயேசு நாசரேத்தில் புறக்கணிக்கப்பட்ட பிற்பாடு இக்கடலின் அருகாமையிலுள்ள கப்பர்நகூமுக்கே வந்தார். இவ்விடத்தில் அவருக்கு வித்தியாசமான வரவேற்புக் காணப்பட்டது; கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்காக, ஜனங்கள் அவரை வருந்திக் கேட்டுக்கொண்டபடியினால், அவர்களுக்கும் தமக்கும் வசதியாக இருக்கும் எனக் கருதி, சீமோன் பேதுருவின் மீன் பிடிக்கும் படகை இயேசு கேட்டுக்கொண்டார்; இப்படகில் நின்றவாறு, கடற்கரையில் உட்கார்ந்த நிலையில் (அ) நின்று கொண்டிருக்கும் நிலையில் காணப்படும் ஜனங்களுக்குப் பயனுள்ளமுறையில் போதிப்பதற்கென இயேசு படகைக்கேட்டார்.

நம்முடைய கர்த்தருடைய அனைத்து உரையாடல்களும் சுவிசேஷப் பதிவுகளில் பதிவு செய்யப்படவில்லை என்ற எண்ணங்கள் நமக்குள் எழுகின்றது. நாம் பெற்றிருப்பது துண்டுத் துண்டான பதிவுகளே ஆகும். இப்படித் துண்டுத்துண்டாகக் காணப்படுவதில் பிரதானமானது மலைப்பிரசங்கமாகும். இயேசுவின் மற்றப் போதனைகளும் கூடச் சுருக்கமான குறிப்புகளாகவே காணப்படுகின்றது; உதாரணத்திற்கு அவருடைய உவமைகளும், மறைப்பொருள்களும் ஆகும். உதாரணமாக, அவர் தம்மை வானத்திலிருந்து இறங்கின அப்பம் என்றும், அப்பமாகிய தம்மைப் புசிப்பவன் ஒருபோதும் மரிப்பதில்லை என்றும் கர்த்தர் கூறினார்; இதைக் கேட்ட அநேகர், இது கடினமான உபதேசம் என்று கூறி, அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள். சுவிசேஷத்தின் மாபெரும் உபதேசமாகிய பிரதானமான போதனைகள், அதாவது ஈடுபலி குறித்தும், விலையேறப் பெற்ற இரத்தத்தின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம் கிடைக்கும் நம்முடைய நீதிமானாக்கப்படுதல் குறித்தும், நமக்குப் புத்திரசுவிகாரம் கொடுக்கப்படுவது குறித்தும், நாம் ஜெநிப்பிக்கப்படுவது மற்றும் உயிர்த்தெழுதல் குறித்தும், முதலாம் உயிர்த்தெழுதலுக்கும் மற்ற உயிர்த்தெழுதலுக்கும் இடையே காணப்படும் வித்தியாசம், முதலியவைகள் குறித்ததுமான பிரதானமான போதனைகள் நமக்கு அப்போஸ்தலர்கள் எழுதின நிருபங்கள் மூலமாகவும், அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அப்போஸ்தலர்களின் சொற்பொழிவுகள் மூலமாகவுமே கிடைக்கின்றது.

ஏன் இப்படியாக உள்ளது என்றும், எதிர்க்கால வாழ்க்கை மற்றும் பயபக்தியான ஜீவியம் தொடர்பான விஷயங்களைக்குறித்ததான பிரதானமான போதனைகள், நமது கர்த்தருடைய (வாயின்) வார்த்தைகளின் வாயிலாகவே நமக்கு ஏன் அருளப்படவில்லையே என்றும் நம்மைச் சிந்திக்க வைக்கலாம். ஆனால், நம்முடைய சந்ததியில் எவரேனும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புத்திர சுவிகாரத்தின் ஆவி அருளப்படுவதற்கு முன்னதாக, நமது கர்த்தர் ஈடுபலி விலைகிரயத்தைச் செலுத்தியாக வேண்டும் என்பதின் அவசியத்தை நாம் புரிந்துக்கொள்கையில், நமக்குள் எழும்பின கேள்விகளுக்குத் தெளிவான பதில் கிடைக்கின்றது. இது எல்லாவற்றையும் விளக்கிவிடுகின்றது, என்னவெனில்: புத்திர சுவிகாரத்தின் ஆவி இல்லாமல், நம்மால் ஆவிக்குரிய விஷயங்களைப் புரிந்துக்கொள்ள முடியாது; ஆகவேதான் இயேசுவின் காலத்தில் வாழ்ந்து, அவர் பேசினவைகளைக் கேட்டவர்களுக்கு, இயேசு பேசின ஆவிக்குரிய விஷயங்கள் உவமைகளாகவும், மறைப்பொருள்களாகவும் காணப்பட்டது; உதாரணத்திற்கு புதிய/மறு பிறப்பைக்குறித்து இயேசு, நிக்கொதேமுவிடம் பேசுகையில், அவரால் புரிந்துக்கொள்ள முடியாமல் காணப்பட்ட போது, நமது கர்த்தர் பரத்திற்குரிய விஷயங்களைப் பேசாமல், பூமிக்குரிய விஷயங்கள் மாத்திரமே பேசினதாக சுட்டிக்காட்டி, “பூமிக்குரிய காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?” என்று கூறினார் (யோவான் 3:12). நமது கர்த்தர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள், பரம காரியங்களைப் புரிந்துக்கொள்வதற்கு ஆயத்தமடையவில்லை என்று கண்டு, பூமிக்கடுத்த காரியங்களைச் சொல்லிக்கொடுப்பதிலும் தமது கவனத்தைப் பிரதானமாகச் செலுத்தினார். மேலும், பிற்காலங்களில் ஆவியின் மூலம் கர்த்தருடைய

உவமைகளும், மறைப்பொருள்களுமான வார்த்தைகள், அவருடைய உண்மையுள்ளவர்களுக்குப் புரிய வைக்கப்படும்.

## ''மாம்சீக சுபாவப்படியான மனுஷன் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ள மாட்டான்''

இது நம்முடைய கர்த்தருடைய ஊழியம் குறித்த பரந்த கண்ணோட்டத்தைக் கொடுக்கின்றது: முதலாவதாக, மாம்சீக சுபாவத்தின்படியான மனுஷனால் புரிந்துக்கொள்ளும் காரியங்களை மாம்சீக சுபாவத்தின்படியான மனுஷனுக்கு அவர் போதிப்பதாகும்; இரண்டாவதாக, மாம்சீக சுபாவத்தின்படியான மனுஷனுடைய வியாதிகள் சொஸ்தப்படுத்துவதன் மூலமாய், அவர் தாம் பெந்தெகொஸ்தே நாள் முதல் தொடங்கி, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் அவருடைய பிரதிநிதியாகிய அப்போஸ்தலர்கள் மூலமாகவும், அப்போஸ்தலர்களின் வார்த்தைகளின் மூலம் தம் மேல் விசுவாசம் வைக்கும் அனைவர் மூலமாகவும் செய்யப்போகின்ற ஆவிக்குரிய வேலைகளுக்கு அகன்ற/வெளிப்படையான அஸ்திபாரத்தைப் போடுவதாகும். இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் கர்த்தர்தாமே, "தம்முடைய சரீரமாக," "தம்முடைய சகோதரராக" இருக்கும் சபைக்குப் போதகராக இருக்கின்றார், மேலுமாக, "புதியதும், பழையதுமாகிய" சத்தியத்தைக்கொண்டு நம்மைப் போஷிப்பதிலும், போதிப்பதிலும் உள்ள சகல விஷயங்களையும் அவர் கவனித்துக் கொண்டிருக்கின்றார். இன்றும் அவர்தான் போதகராக இருக்கின்றார். மேலும், அப்போஸ்தலர்கள் மூலமாக நாம் பெற்றுக்கொள்ளும் அனைத்தும் கூட அவர்கள் வாயிலாக வரும் கர்த்தருடைய போதனைகளே தவிர, அவைகள் அவர்களுடைய சொந்த போதனைகள் அல்ல. இன்றும் கூடக் கர்த்தருடைய நாமத்தில் பேசுகிறவர்கள் அவருடைய பிரதிநிதியாகவும், ஸ்தானாதிபதியாகவும் மாத்திரமே பேசுகிறதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட அதிகாரத்தைக் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உரியதாக அல்லது முழுமையான அதிகாரம் அவரால் கொடுக்கப்பட்டு, அவராலேயே ஏவப்பட்டு (அ) வழிநடத்தப்பட்டவர்களுடைய, அதாவது, 12 அப்போஸ்தலர்களுடைய (யூதாசுக்குப் பதிலாக அப் பவுல்) வார்த்தைகளுக்கு உரியதாகக் கருதிக்கொள்ள வேண்டும்.

நமது கர்த்தர் முதலில் யூதேயாவிலும், பின்னர் கலிலேயாவிலும், அதாவது நம்முடைய பாடத்தின் சம்பவம் நிகழும் தருவாய் வரையிலும், பிரசங்கம் பண்ணுவதில் சுமார் ஒரு வருடம் செலவு பண்ணியிருந்திருக்க வேண்டும். நம்முடைய பாடத்தில் இடம்பெறுகிற மீனவர்களாகிய பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவானுக்குக் கர்த்தர் ஏற்கெனவே அறிமுகமாய் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியே. இப்பாடத்தின் சம்பவம் நடப்பதற்கு முன்னதாக நடந்த சம்பாஷணையின் போதே, இயேசு சீமோனுக்குப் பேதுரு என்று பெயரிட்டார். இந்த மீனவர்கள் அநேகமாக ஏற்கெனவே இயேசுவைச் சந்தித்திருக்க வேண்டும்; மேலும் வேறு தருணங்களிலும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டிருந்திருக்க வேண்டும்; சொல்லப்போனால், அவருடைய சீஷர்களாகத்தான் காணப்பட்டார்கள்; சீஷர்கள் என்று சொல்லுகையில், அவரை அவர்கள் பின்பற்றுபவர்களாகவும், அவர்மேல் விசுவாசம் வைத்தவர்களாகவும், அவருடைய போதனைகளுக்கு ஆதரவு வழங்கினவர்களாகவும் இருந்ததையே குறிப்பிடுகின்றது. எனினும் தம்மோடு கூட இவர்கள் தொடர்ந்து இருக்கும்படிக்கும், தம்முடைய அற்புதங்களைக் காணும்படிக்கும், தம்முடைய பிரசங்கங்களைக் கேட்கும்படிக்கும், பேசப்பட்டவைகளுக்கும், செய்யப்பட்டவைகளுமான சகலவற்றிற்கும் சாட்சியாக இருக்கும்படிக்கும், பின்னர் ஏற்றக்காலத்தில் இவர்கள், அவருடைய விசேஷமான பிரதிநிதியாக இருந்து பணிபுரியும்படிக்கும், நமக்கும், பின்னர் வரும் கர்த்தருடைய பின்னடியார்களுக்கும் தம்முடைய ஊழியத்தின் முக்கியமான சம்பவங்கள் குறித்ததான துல்லியமான மற்றும் உண்மையான பதிவுகளைக் கொடுக்கும்படிக்கும், 12-அப்போஸ்தலர்களை நமது கர்த்தர் தெரிந்தெடுப்பதற்கான நேரம் இப்பொழுது வந்துவிட்டது.

இயேசு படகில் உட்கார்ந்த வண்ணம் கடற்கரையில் நின்று கொண்டிருந்தவர்களுக்கு தமது பிரசங்கத்தை முடித்த பிற்பாடு, படகின் சொந்தக்காரர்களாகிய சீமோனிடமும், அந்திரேயாவிடமும், அவர்கள் படகுகளை ஆழத்திற்கு எடுத்துச்சென்று மீன்களைப் பிடிக்கும்படிக்கு வலைகளைப் போடும்படிச் சொன்னார்; ஆனால் பேதுருவோ அந்நாள் அனுகூலமற்ற நாளாயிருப்பதினால் (அ) ஏதோ காரணங்கள் நிமித்தம் அக்காலக்கட்டத்தில் கலிலேயா கடலிலுள்ள அப்பகுதிகளில் மீன்கள் காணப்படாததினால், மீண்டும் சென்று மீன்களுக்கு வலை போடுவது பிரயோஜனமற்றது என்று கூறினார்; காரணம் அவரும், அவரோடு இருந்தவர்களும் இராமுழுவதும் பிரயாசப்பட்டும், ஒன்றும்

அகப்படவில்லை என்பதினாலேயே ஆகும். எனினும் கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டும் என்று, அவர் கூறின பிரகாரமே செய்தார்கள். கடலில் சென்று வலைகளை இழுக்க ஆரம்பித்தப் போதோ, தங்கள் படகு கொள்ளமுடியாத அளவிற்கு மீன்கள் வலையில் அகப்பட்டிருப்பதைக் கண்டார்கள். மற்றப் படகுகளில் இருந்த தங்கள் கூட்டாளிகளை உதவி கரம் கொடுக்கவும், மீன்களை எடுக்க உதவவும் அழைத்தார்கள். இச்சம்பவமானது, திட்டமிட்டிருந்தபடி அதற்கேயுரிய தாக்கத்தை ஏற்படுத்திற்று. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இப்படித் திரளான மீன்களைக்கொண்டு வருவது என்பது ஒரு சாதாரண மனிதனால் முடியாது என்று உணர்ந்தவராக சீமோன் பேதுரு கர்த்தர் முன் அவர் பாதங்களில் விழுந்தார்.

## "கர்த்தர் பக்திவைராக்கியத்தையும், ஊக்கத் தன்மையையும் விரும்புகின்றார்"

சீமோன் பேதுருவிடம் சிறப்பான ஏதோ ஒன்று உள்ளது; அவருக்குள் ஏற்படும் திடீர் உணர்ச்சி வேகமே அவரிடத்தில் கவர்ச்சியூட்டும் பண்பாக அமைகின்றது. எந்தக் காரியத்தையும் அவர் வைராக்கியத்துடனும், ஊக்கத்துடனும் கையாளும் விதமும் அவர்மேல் கவனம் செலுத்துவதற்குப் பாத்திரமானதாகவும் காணப்படுகின்றது. பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானாகிய மூன்று பேர்தான் 12-அப்போஸ்தலர்கள் மத்தியில் விசேஷமாகக் கர்த்தரால் அன்புகூரப்பட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம். கர்த்தர் அங்கீகரிக்கும் வைராக்கியமும், ஊக்கமும், மன உறுதியும் (force) இம்மூவரிடமும் காணப்பட்டது போன்று தோன்றுகிறது. இவர்கள், "உன் கைக்கு அகப்படுவது எதுவோ அதை உன் முழு பலத்தோடு செய்" என்ற புத்தமதிக்கு நிஜமான உதாரணங்களாக (practical illustrations) திகழ்ந்தனர். "நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போக வேண்டும்" என்று பேதுரு கர்த்தரிடம் கூறின வார்த்தைகள், தனக்கும், ஆண்டவருக்கும் இடையில் காணப்படும் மாபெரும் வித்தியாசத்தைப் பேதுரு ஒத்துக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; பேதுரு சூழ்நிலையைக் கிரகித்துக் கொண்டார், அதாவது தான் பாவியாகவும், பூரணமற்ற மனுஷனாகவும் இருக்கின்றார் எனவும், தனக்கு முன் காணப்படும் ஆண்டவரோ பூரணராகவும், பிதாவுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றபடியினால், பிதாவின் இரக்கங்களை மற்றவர்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டும் இருக்கின்றார் எனவும் கிரகித்துக் கொண்டார்.

பேதுரு பேசின வார்த்தைகளுக்கு, எதிர்மாறாகவே அவருடைய உள்ளத்தின் உண்மையான உணர்வு காணப்பட்டிருக்க வேண்டும். "ஓ கர்த்தாவே, நான் பாவியான மனுஷனாக இருப்பினும், உம்முடன் தொடர்பு வைப்பதன் மூலம் நான் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக, உம்மிடத்தில் நெருங்கி பழக என்னை அனுமதியும்" என்பதே அவர் உள்ளத்தின் உண்மையான உணர்வாக இருந்தது. இயேசு, இவரைத் தம்முடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட 12-அப்போஸ்தலர்களில் ஒருவராக நியமித்ததின் மூலம், பேதுருவின் இந்தச் சரியான இருதய நிலைமையை ஏற்றுக்கொண்டு, அவரின் உண்மையான வேண்டுதலுக்குப் பதில் கொடுத்தார்.

விவரங்களின் பதிவுகள் திடீரென நின்றுவிடுகின்றது. மேலும், அதே மணி நேரத்திலோ (அ) அடுத்த நாளிலோ பேதுருவும், அந்திரேயாவும், யாக்கோபும், யோவானும் விசேஷமாக நமது கர்த்தருடைய கூட்டாளிகளாக ஆகுவதற்கும், பின்னர் அவருடைய பிரதிநிதிகளாகவும், அவருடைய அப்போஸ்தலர்களாகவும் ஆகுவதற்கும் எனத் தங்கள் மீன் பிடிக்கும் தொழிலையும், தங்கள் படகுகளையும், வலைகளையும் விட்டுச் சென்றார்கள் என்பது தொடர்பாக பதிவுகள் நமக்கு வழங்கப்படவில்லை. நம்முடைய நியாயமான அனுமானம் என்னவெனில், இவர்களுடைய இந்த மீன் பிடிக்கும் தொழிலில் இவர்களோடு பங்காளிகளாக/கூட்டாளிகளாக இருந்தவர்கள், இவர்களுடைய உறவினர்களேயாகும், மேலும் பேதுரு தனது படகையும், வலைகளையும் தனது உடன் சகோதரர்களிடம் (அ) குமாரர்களிடம் (அ) மற்றக் கூட்டாளிகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அதுபோல் செபதேயுவின் குமாரர்களும் தங்கள் தொழிலுக்குரிய சொந்த உடைமைகளைத் தங்கள் தகப்பனிடத்தில் (அ) தொழிலில் தங்களோடு கூடக்காணப்பட்ட மற்றவர்களிடத்தில் ஒப்படைத்திருக்க வேண்டும். நம்முடைய இந்த அனுமானமானது, நமது கர்த்தர் மரித்த பிற்பாடு, அதாவது சுமார் 2 வருடங்களுக்குப் பிற்பாடு இதே மனிதர்கள் (இந்த அப்போஸ்தலர்கள்) மீண்டும் மீன் பிடிக்கும் தொழிலுக்குத் திரும்புவது குறித்துப் பேசின காரியங்கள் தொடர்பான உண்மைக்கும் முழு இசைவாக உள்ளது. இந்தக் கடைசி சம்பவத்தில்தான் இயேசு மீண்டுமாக பெரும் திரளான மீன்களைக் கொடுக்க, இத்தகைய அற்புதம் வேறு எவராலும் அல்ல, மாறாக சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த கர்த்தராலேயே செய்ய முடியும் என மீண்டும் முதலாவது நபராக

உணர்ந்த பேதுரு, கர்த்தர்தான் கரையில் நின்று கொண்டிருக்கின்றார் என்றும் அறிந்துக்கொண்டார் என்று பார்க்கின்றோம்.

## "மேலான/உயர்வான அழைப்புக்கு அழைக்கப்படுதல்"

"இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" என்பதே நமது கர்த்தர், பேதுருவிடம் கூறின வார்த்தைகளாய் இருக்கின்றது. இவ்வார்த்தைகள் பேதுருவின் கூட இருந்தவர்களுக்கும் கூடப் (யாக்கோபு, அந்திரேயா, யோவான்) பொருந்தக் கூடியதாய் இருக்கின்றது, மேலும் சந்தேகத்திற்கிடமின்றி இவ்வார்த்தைகளே, பிற்பாடு மற்றவர்களும், பேதுருவோடு கூட அவருடைய சீஷர்களாக (அ) அப்போஸ்தலர்களாக ஆக்கத்தக்கதான அழைப்பாகச் சென்றது. சீமோன் பேதுருவின் சகோதரனும், பேதுருவுடன் கூடத் தொழிலில் பங்காளியாயும் காணப்பட்ட அந்திரேயாவிற்கான அழைப்புக் கொஞ்சம் மாற்றங்களுடனான வார்த்தைகளாக மாற்கு 1:17-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது; அதாவது, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்ற விதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அநேகமாக, இவ்விரண்டு விதமான வாக்கியங்களையும், கர்த்தர் பயன்படுத்தியிருக்க வேண்டும்; இரண்டு தருணங்களில் கர்த்தர் இதைப் பேசியிருந்தாலும் இவைகளின் அர்த்தமும்/முக்கியத்துவமும் ஒன்றேயாகும்.

ஜீவியத்தின் சகல காரியங்கள் வாயிலாக வரும் படிப்பினைகளை நாம் ஒருவேளை ஏற்றுக்கொள்வோமாகில், அவைகள் எதிர்க்காலம் முழுவதற்கும் நன்மை வழங்குவதாகக் காணப்படும். சாதாரணமான காரியங்கள், எந்தவிதமான வேலைகள் மற்றும் தொழில்கள் நேர்மையுடனும், நியாயத்துடனும், கண்ணியத்துடனும் செய்யப்படுவற்கு ஏற்ப, வரும் படிப்பினைகள் சரியான விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு, ஞானத்துடன் விருத்திச் செய்யப்படுமாயின், அவைகள் கர்த்தருடைய ஊழியங்களில் நாம் பிரயோஜனமுள்ளவர்களாய் இருப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவதாகவும், நமக்கு விலையேறப்பெற்ற போதனையாகவும் காணப்படும். மீன் பிடிக்கும் தொழிலில் விசேஷித்தவிதமாய் உதவியளிக்கக்கூடிய ஏதோ ஒன்று அநேகமாகக் காணப்பட்டிருக்க வேண்டும்; அதாவது இந்த மீன் பிடிக்கும் தொழிலுக்கும், அப்போஸ்தலர்கள் தங்களின் மீதமுள்ள ஜீவியகாலம் முழுவதிலும் செய்யப்போகின்ற மாபெரும் வேலைக்கும் விசேஷித்தவிதமான ஒற்றுமை காணப்பட்டது. இதைத் தம்முடைய அழைப்பில் நமது கர்த்தர் தெரியப்படுத்துகின்றார். மீன் பிடிப்பதற்கு ஊக்கமும் (energy), சாமார்த்தியமும் (tact), மீனைப் பிடிப்பதற்கான சரியான தூண்டில் இரையும் (bait), மீன் பிடிப்பவன் தன்னை (மீனின் கண்களுக்குப் படாமல்) மறைத்துக்கொள்வதும் அவசியப்படுகின்றது. இந்த நான்கு விஷயங்களும், கர்த்தர் கொடுத்த இந்த ஆவிக்குரிய மீன் பிடிக்கும் வேலையாகிய, நமக்குரிய சிலாக்கியத்திற்கு அவசியமாய் உள்ளது. ஆகவேதான் அவர், "ஆடுகளை ஓய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" என்ற புத்திமதியைக் கொடுக்கின்றார் (மத்தேயு 10:16). அப்போஸ்தலனாகிய பவுலும் கூடச் சுவிசேஷத்தைச் சாமர்த்தியமாக முன்வைப்பதில், தான் பயன்படுத்தின ஞானத்தைக்குறித்து "உபாயமுள்ளவனாயிருந்து, தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம்" என்று குறிப்பிடுகின்றார் (2 கொரிந்தியர் 12:16). சுவிசேஷத்தை (practical) நடைமுறை விதத்தில் முன்வைப்பதற்கு, அப்போஸ்தலன், தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் இயல்பான சுபாவங்கள் மற்றும் மனப்பாங்கைச் சாதகமாகப் பயன்படுத்தியபோதிலும், அவர் சத்தியத்தின் ஒரு சிறிய அம்சத்தையாகிலும் அறிவிக்காமல் விட்டுவிடவில்லை. இது நமக்கொரு மாதிரியாக உள்ளது. மீன்கள் தங்களை எடுத்துகொள்ள/கைப்பற்ற ஒருவர் விரும்புகின்றார் என அறிந்துக்கொள்ளும் மாத்திரத்தில் அவைகள் உடனடியாக அச்சமடைந்து விடுகின்றன என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மேலும், மீன்களைப் போன்றே மனுக்குலமும் ஏதாகிலும் ஒன்றினால் கைப்பற்றப்படுவதைக்குறித்த விஷயத்தில், வெட்கம் அடைகின்றவர்களாக இருக்கின்றார்கள். அதாவது, தங்களது சுயாதீனங்களைத் தாங்கள் இழந்துபோய்விடுவோம் என்ற சந்தேகம் ஒருவேளை அவர்களுக்கு எழும்பும் பட்சத்தில் விசேஷமாக அவர்கள் வெட்கம் கொள்கிறார்கள். அர்ப்பணம் செய்வதன் மூலம் சுயாதீனம் இழக்கப்படுகின்றது என்பதே அர்ப்பணம் குறித்ததான உலகத்தின் கண்ணோட்டமாய் இருக்கின்றது.

மனித அமைப்புகளை உண்டாக்கும் விதத்தில் அப்போஸ்தலர்கள் மனுஷரைப் பிடிக்கிறவர்கள் அல்ல. அப்போஸ்தலர்கள், சீஷர்களைச் சில மதப்பிரிவின் அடிமைத்தனத்திற்குள் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யவில்லை. அவர்கள் கர்த்தருக்காகவும், மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆனார்கள்; அவர்கள் கர்த்தருடைய பிரதிநிதிகளாக மனுஷரைப் பிடிக்கிறவர்கள்

ஆனார்கள்; அதாவது இவர்கள்மூலம், தேவன் மனுஷர்களைப் பிடிப்பது போல் செயல்பட்டார்கள். மகிமையான நம்பிக்கைகளுடனும், சுவிசேஷம் அளிக்கும் எதிர்கால வாய்ப்புகளுடனும் மனுஷர்களைப் பிடிப்பது அப்போஸ்தலர்களின் பணியாக இருந்தது; மேலும் (பிடிப்பட்ட) மனுஷர்கள் தங்களுக்குள்ள எல்லாவற்றையும் சந்தோஷத்துடனும், முழுமையாகவும் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்யத்தக்கதான நிலைக்குள் கொண்டுவரப் பண்ணுவதும் அப்போஸ்தலர்களின் பணியாக இருந்தது. இந்த வழிமுறையே இன்றும் உள்ள கர்த்தருடைய பிரதிநிதிகளுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது. நாம் கர்த்தருக்காவும், அவருடைய ஊழியத்திற்காகவும் மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாய் இருக்க வேண்டுமே ஒழிய, நம்முடைய தனிப்பட்ட நன்மை (அ) ஆதாயத்திற்காக, அதாவது தனிப்பட்ட மதப்பிரிவைக் கட்டியெழுப்புவதற்காக இருக்கக்கூடாது. நாம் நம்முடைய சொந்த சுயாதீனங்களை மனுஷர்களுக்குக் கொடுத்துவிடுகிறவர்களாகவோ அல்லது மனுஷர்கள் மற்றும் அமைப்புகளின் கட்டளையின்படி, மற்றவர்களின் சுயாதீனத்தை எடுத்துப்போட்டுவிடுகிறவர்களாகவோ இருக்கக்கூடாது. ஆனால் கர்த்தர் இட்ட கட்டளையின் பிரகாரமாக மனுஷரைப் பிடிக்கும்படிக்கு, கடந்து வந்த உண்மையான சீஷர்களிடமிருந்து வரும் செய்தியானது, வெற்றிகரமாக பிடிப்பட்டவருக்கு ஜீவனை இழப்பது மற்றும் சுயாதீனத்தை இழப்பது குறித்தே சுட்டிக்காட்டுகின்றது. மீன் பிடிக்கும் தொழிலானது அனைத்துக் காரியங்களுக்குமான முழுமையான விளக்கமாக இருப்பதில்லை, ஏனெனில் கர்த்தரால் பிடிக்கப்பட்ட அனைவரும் விரும்பி அவரிடத்தில் பிடிப்பட வேண்டும். இல்லையேல், அவர்கள் பிடிப்படாதவர்களாகவே காணப்பட்டு புறம்பாக்கிப் போடப்படுவார்கள்; மேலும் அவருடைய தனிப்பட்ட சுயாதீனம் மற்றும் ஜீவன் இழந்துபோவது என்பது அவர்கள் மகிமை, கனம் மற்றும் நித்திய காலத்திற்குமுரிய ஜீவனை அடைவதைக்குறிக்கின்றது.

இந்த மீன் பிடிக்கும் தொழிலை, நமது கர்த்தர் தாம் பேசின உவமைகளில் ஒன்றிற்கு அடிப்படையாகக்கொண்டு விளக்கியிருந்தார்; பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.இறுதியில் வலையானது கரைக்குக் கொண்டுவரப்படும் (மத்தேயு 13:47). வலை சந்தேகத்திற்கு இடமின்றி இந்தச் சுவிசேஷ யுகத்தைக்குறிக்கின்றது. மேலும், இராஜ்யம் தொடர்பான கர்த்தருடைய நோக்கத்திற்குப் பாத்திரமானவர்களும், பாத்திரமற்றவர்களும் கலந்த ஜனங்கள் பொதுவாகப் பிடிக்கப்பட்டார்கள். வலை கரைக்குக் கொண்டுவரப்பட்டது என்பது இந்த யுகத்தின் "அறுவடை" காலத்தைக் குறிக்கின்றது. அதாவது, மனுஷரைப் பிடிப்பதற்கான நேரம் முடியும் காலப்பகுதியைக் குறிப்பிடுகின்றது. நல்ல மீன்கள் கூடைகளில் சேர்க்கப்பட்டு, ஆகாதவைகளாகிய மற்ற மீன்களோ கடலில் மீண்டுமாக எறியப்பட்டுவிட்டன என்று உவமையில் காணப்படுகின்றது. இப்படியாகவே சுவிசேஷ யுகத்தின் அழைப்பானது, சுவிசேஷ யுகத்தின் வலையானது, இந்தச் சுவிஷேச யுகத்தின் மீனவர்கள், மனுக்குலத்திலிருந்து இராஜ்யத்திற்கு எனக் கர்த்தர் கொண்டுள்ள நோக்கத்திற்குப் பாத்திரமான ஜனங்களையுடைய ஒரு விசேஷித்த வகுப்பாரைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றனர்; மேலும், மற்றவர்கள் இவ்வலைக்குள் வந்தாலும் அவர்கள் விரும்பத்தக்கவர்கள் அல்ல. அவர்கள் மீண்டுமாக லௌகீக நிலைக்குள் சறுக்கி விழுந்து போய்விடுகின்றனர். அடுத்த யுகத்திற்கான மீன்/மனுஷர் பிடிக்கப்படுதலோ, வேறுபட்டதாகவும், மிகுந்த பெரிய, பிரமாண்ட நிலையிலும் காணப்படும்.

## "சீஷத்துவத்தை விட உயர்வான அப்போஸ்தலத்துவம்"

சீஷத்துவத்திற்கும், அப்போஸ்தலத்துவத்திற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. ஆட்டுக்குட்டியானவருக்கு 12-அப்போஸ்தலர்கள் இருக்கின்றார்கள் (வெளி. 21:14). ஆனால், சீஷர்களின் எண்ணிக்கையோ பெரிதாய் உள்ளது. சீஷன் என்ற வார்த்தையின் அர்த்தம் மாணவன் (அ) கற்றுக்கொள்கிறவன் ஆகும். மேலும் இப்பொழுதும் கர்த்தரினால் அழைக்கப்பட்டுள்ள அனைவரும், தற்கால ஒழுங்கின்/ஏற்பாட்டின் கீழ், பாத்திரமான மீன்களாக இப்பொழுது பிடிக்கப்பட்டிருக்கும் அனைவரும் கர்த்தரால் போதிக்கப்படுவதற்கு விருப்பம் கொண்டவர்களாகவும், அவருடைய போதனைகளுக்கு விருப்பத்துடன் செவிச் சாய்ப்பவர்களாகவும் இருப்பார்கள். நம்முடைய பாடத்தின் ஆதாரவசனமானது, அவருடைய சீஷர்களாக நாம் இருப்பதற்கான நிபந்தனைகளை முன் வைக்கின்றது. அதாவது, நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது, நாம் அவருடைய வார்த்தைகளிலும் நிலைத்திருக்கின்றவர்களாய் இருக்க வேண்டும்; அவரால் போதிக்கப்படுவதிலும் நிலைத்திருக்க வேண்டும்; கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்வதிலும் நிலைத்திருக்க வேண்டும்; அவருடைய பள்ளிக்கூடத்திற்குள் நாம் பிரவேசிப்பதற்கு முன்னதாக, நாம் சுபாவத்தின்படி பாவிகளாக இருக்கின்றோம் என்பதை நாம்

கற்றுக்கொள்ள வேண்டும், மேலும் அவருடைய பள்ளிக்கூடத்தில் பிரவேசிப்பதற்கு (அ) அவருடைய சீஷர்களாகுவதற்கு முன்பு நமக்கு அவசியமென அவர் பரிந்துரைப்பது நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பது மாத்திரமேயாகும். விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்ததான தெய்வீக வார்த்தைகளின் ஆலோசனையை நாம் ஏற்றுக்கொண்ட பிற்பாடே, விசுவாசத்தினால் இந்தப் பாவ சுத்திகரிப்பு நிறைவேறின பிற்பாடே, மாணாக்கர்களாக பள்ளிக்குள் பிரவேசித்த பிற்பாடே, நம்முடைய வளர்ச்சிக்கு அவசியமான பல்வேறு பாடங்கள் கற்க வேண்டியுள்ளது என்று நாம் உணர்ந்துக்கொள்கின்றோம்.

நமக்கு என்ன படிப்பினைகள் தேவை, என்ன அனுபவங்கள் அவசியம், என்ன பரீட்சைகள், என்ன இடர்பாடுகள், எவ்விதமான உற்சாகங்கள், எவ்விதமான உதவிகள் நமக்கு அவசியமாய் இருக்கும் என்பதை தீர்மானிக்கப் போகிறவர் போதகரே/ஆசிரியரே ஆவார். நன்மையான யாதொன்றும் நமக்குத் தடைப்பண்ணப்படுவதில்லை என்று வாக்களிக்கப்பட்டுள்ளது. நம்முடைய தேவைகளுக்கு ஏற்ப, அவர் நமக்கு எச்சரிப்புகளையும், சீர்த்திருத்தங்களையும், உற்சாகமூட்டுதல்களையும், ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் அருளுவார்; ஆனால் இவைகளை நாம் நன்மையான விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளது. சீஷனாக பள்ளியில் சேரும் அனைவரும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திலிருந்து, இராஜ்யத்தின் மகிமைக்கும், போதகருடன் உடன்சுதந்திரராய் இருக்கும் நிலைக்கும் பட்டமளிக்கப்படும் மாபெரும் பரிசைப் பெற்றுக்கொள்வதில்லை; மாறாக சீஷத்துவத்தில் உண்மையுடனும், பொறுமையுடனும் தொடர்ந்து நிலைநிற்பவனும், தன்னுடைய ஓட்டத்தை முடிக்கும் வரையிலும் மாபெரும் ஆண்டவர் போதிக்கும் பாடங்களைத் தொடர்ந்து கற்றுக்கொண்டிருப்பவனுமே, தனது கிரீடத்தை கர்த்தருடைய கரங்களிலிருந்து நிச்சயமாகப் பெற்றுக்கொள்வான்.

**ஆமென்!**

R 3325

# "விலை அதிகமுள்ள பேரம்"

## மத்தேயு 14:1-12

"ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." - **வெளிப்படுத்தல் 2:10**

யோவான் ஸ்நானன் சுமார் ஒரு வருட காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இவர் சுமார் ஒரு வருட காலந்தான் பிரசங்கமும் பண்ணினார்; ஆனால் அக்காலத்தில் இவருடைய பிரசங்கம் பாலஸ்தீனியா முழுவதும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது; எனினும், வியக்கத்தக்க விதத்தில் இத்தாக்கமானது யோவான் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் தவறிவிட்டது. அதாவது, பாவத்திற்காக மனம் வருந்தி, மனந்திரும்புவதன் மூலம், இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக ஜனங்களுடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் தவறிவிட்டது. ஜோசப்பஸ் எனும் வரலாற்று ஆசிரியர், யோவான் ஸ்நானன் மக்கீரஸ் கோட்டையிலுள்ள நிலத்தடியில் கட்டப்பட்ட சிறையில் வைக்கப்பட்டதாக அனுமானிக்கின்றார். கெய்கீ (Geike) என்பவர், இருட்டறை/சிறைகளின் வகைகள் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார், "அநேகமாக இது நான் காசாவில் பார்த்திட்ட இரும்புப் பட்டைகளினாலான கூண்டாக இருக்கலாம்; இங்குச் சிறையில் அடைக்கப்பட்டவருடைய நண்பர்கள் உணவு கொண்டு வருவதற்கோ (அ) பேசுவதற்கோ வரலாம். ஆனால், வாழ்வதற்கோ (அ) உறங்குவதற்கோ எவ்விதமான சௌகரியங்களும் இல்லை; வெறும் தரைதான் காணப்படும்." கெய்கீ அவர்கள் கூறின விஷயம், யோவான் தன்னுடைய சீஷர்களிடம், "வரவிருக்கின்றவர் நீர் தானோ அல்லது வேறொருவர் வர காத்திருக்க வேண்டுமோ?" என இயேசுவிடம் கேட்கும்படி, சீஷர்களிடம் அவரால் சொல்லியனுப்ப முடிந்த காரியத்திற்கிசைவாகக் காணப்படுகின்றது. யோவான் ஸ்நானனுக்கு வந்திட்ட அனுபவங்கள் சிலவிதங்களில் அவருக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருப்பினும், நம்முடைய கண்ணோட்டத்தின்படி பிதா நோக்கம் கொண்டிருந்தவைகளை, அவர் செய்தார் என்றே நாம் காண்கின்றோம். இங்கு நமக்கு ஒரு பாடம் உள்ளது. நாமுங்கூட நாம் செய்ய வேண்டிய நமக்குரிய பாகத்தைக் கர்த்தருக்கு உண்மையாய்ச் செய்துவிட்டு, அவருடைய கிருபையான நோக்கங்கள் இறுதியில் நிறைவேற்றத்தக்கதாக அவருடைய வல்லமையும், ஞானமும் அனைத்துக் காரியங்களையும் நடத்தும் என்ற நிச்சயத்தில், பலன்களை அவருடைய கரத்தில் விட்டுவிடுவோமாக.

யோவானுக்கும், எலியாவின் நிழலுக்குமிடையே கவனத்தை ஈர்க்கும் ஒற்றுமைகள் காணப்படுவதுபோல, யோவானுடைய அனுபவங்களுக்கும், மாபெரும் நிஜமான எலியாவாகிய உண்மையுள்ள சபை அங்கங்களுடைய அனுபவங்களுக்கும் இடையேயும் பலமான ஒற்றுமை காணப்படுகின்றது. எலியா, ஆகாபுக்குத் தப்பி ஓடினாலும், எலியாவை உண்மையாய்த் துன்பப்படுத்தியது, அவரது உயிருக்காக நாடின யேசபேலே ஆவாள். யோவான் ஸ்நானனும், ஏரோதினால் கைதுச் செய்யப்பட்டு, இறுதியில் கொல்லப்பட்டாலும், யோவானுடைய உண்மையான எதிராளி, ஏரோதின் மனைவியாகிய ஏரோதியாளே ஆவாள். இதுபோலவே, மாரெும் எலியாவாகிய மாம்சத்திலுள்ள கிறிஸ்துவின் உண்மையான சபையானது, அரசியல் வல்லமையின் கரங்களில் இதுவரை பாடுகள் அனுபவித்தாலும், இனிமேலும் அரசியலின் கரங்களிலிருந்து பாடுகள் அனுபவிக்கப் போகிறதாயிருப்பினும், அரசியல் வல்லமைகளுக்குப் பின்னாலிருந்து, இவர்களை உண்மையாய்த் துன்பப்படுத்துவது வெளி 2:20-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிஜமான யேசபேல் அதாவது, நிஜமான ஏரோதியாள் அதாவது, கிறிஸ்துவுக்குப் பெயரளவில் நிச்சயிக்கப்பட்டு, இவ்வுலகத்தின் இராஜ்யங்களுடன் விபச்சாரம் பண்ணும் பெயர்ச்சபையே ஆவாள். இக்காரியம் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில், பல்வேறு அடையாளங்களில் காணப்படுவதை அனைத்து வேதத்தின் மாணவர்களும் அறிவார்கள்; இந்தப் பல்வேறு அடையாங்களுக்கிடையேயுள்ள ஒற்றுமை தெள்ளத் தெளிவாகப் புரிகின்றதோ இல்லையோ ஆனால் இதனை வேதத்தின் மாணவர்களும் அறிவார்கள்.

## "ஏரோது, ஏரோதியாள் மற்றும் சலோமி"

மாபெரும் ஏரோதுக்குப் பின்னர், அவர் பதவியை அடைய வேண்டும் என்று அதிகமான ஆசைக் கொண்டிருந்த அநேக குமாரர்கள் அவருக்கு இருந்தார்கள். இக்குமாரர்களில் மூத்தவரை, ஏரோதியாள் மணம் முடித்தாள்; இவ்வாறாக ராணி ஆகலாம் என எதிர்ப்பார்த்தாள். ஆனால், ரோம சக்கரவர்த்தியோ, வேறுவிதமாக முடிவெடுத்து, இப்பாடத்தில் இடம்பெறும் அந்திப்பாவை ஏரோதாக தெரிந்துக்கொண்டார். ஆகவே, இன்னமும் ராணியாக வேண்டும் என்ற மிகுந்த ஆசையும், உறுதியும் கொண்டிருந்த ஏரோதியாள், அந்திப்பாவை வசீகரப்படுத்தி, அந்திப்பா தனது மனைவியைத் தள்ளிவிடச் செய்து, அவளுக்குப்பதிலாக தன்னை ராணியாக ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தாள். பாவத்திற்கு எதிராக பிரசங்கித்துக் கொண்டிருந்த யோவான் ஸ்நானன், நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான இந்தச் சேர்தலுக்கு எதிராக பொது ஜனங்கள் மத்தியில் நிச்சயமாய்ப் பேசியிருந்திருக்க வேண்டும்; அதாவது அந்திப்பாவும், அவன் மனைவியாகிய ஏரோதியாளும் விபச்சாரத்தில் வாழ்கின்றனர்; அதாவது, அந்திப்பா தனது சொந்த மனைவியைத் தள்ளிவிட்டு அவனுடைய சகோதரனாகிய பிலிப்புவின் மனைவியுடன் தகாதவிதமாய் இணைந்துள்ளான் என்று நிச்சயமாய்ப் பேசியிருந்திருக்க வேண்டும். ஏரோது, ஏரோதியாள் போன்று பேராசையும், கர்வமும், பிரமாணமற்ற நிலையிலும் இருப்பவர்கள் எவரும், ராஜ தம்பதிகளின் தொடர்பைக் குறித்துக் கேள்வி எழுப்பத் துணியும் எந்தப் பிரசங்கிக்கும் எதிராக கோபமடைவதில், நமக்கு ஆச்சரியம் எதுவும் இல்லை. இதன் விளைவாக யோவான் சிறையில் அடைக்கப்பட்டார். யோவானுடைய பிரசங்கத்தின் மீதான பயத்தினிமித்தமே, ஏரோதியாள் பின்னிருந்து அனைத்தையும் தூண்டிவிட்டாள். ஒருவேளை ஏரோதுக்கு மனசாட்சி குத்தப்பட்டால் அல்லது ஏரோது தனது மனசாட்சிக்கு ஏற்ப செயல்படுமளவிற்கு, ஒருவேளை ஜனங்கள் கொந்தளித்து எழுந்தால், இதன்விளைவு நிச்சயமாக அவளுக்கான நன்மைகளை அழிக்கக்கூடியதாகவே இருக்கும்; அவள் அடைய வேண்டுமெனத் தன்னுடைய ஜீவியத்தையே தியாகம் பண்ணின, சமுதாயத்தின் மத்தியிலான அந்த உயர் ஸ்தானத்தை இழப்பதோடல்லாமல், அவள் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்; மற்றும் வீடும் அற்ற கீழான நிலைக்கும் ஆளாவாள். யோவானைச் சிறையிலடைத்த உடனே, அவரைக் கொன்றும் போடும்படிக்கு அவள் தனது கணவனை நிச்சயமாய்த் தூண்டியிருந்திருக்க வேண்டும்; ஆனால், யோவானைக் கொன்று போட்டால், அவரை ஒரு தீர்க்கதரிசியாக மதிக்கும் ஜனங்கள் மத்தியில் ஏற்படும் விளைவுகளினிமித்தமாக ஏரோது கொண்டிருந்த பயத்தினால், அவள் தூண்டுவதற்கு எடுத்த முயற்சி தடைப்பட்டது.

இன்னமும் திட்டம் போட்டுக்கொண்டிருந்த ராணி, இராஜாவின் ஜனன விழாவை பயன்படுத்திக்கொள்ள தீர்மானித்தாள்; ராஜாவின் குணத்தை அவள் அறிந்திருந்தாள்; மற்றும் அப்படியான கொண்டாட்டங்களில் மிகுந்த களிப்புக் காணப்படும் என்றும், பொதுவான சுதந்தரத்தை மிஞ்சி போதையூட்டும் பானங்கள் பயன்படுத்தப்படும் என்றுமுள்ள வழக்கத்தை அவள் அறிந்திருந்தாள். அக்கால வழக்கத்தின்படி, இப்படியாகக் கூடியிருக்கும் ஆண்கள், உடல் இன்பத்தைத் தூண்டும் நடனங்களை, மெல்லிய வஸ்திரமணிந்து ஆடும் நடன பெண்களால் மகிழ்விக்கப்படுவார்கள். மேலும், இராஜாவின் விருந்தை, ராணி தன்னுடைய முன்னாள் கணவனுடன் பெற்றுக்கொண்ட மகளாகிய சலோமி மூலம் கௌரவிக்கத்தக்கதாக ஏற்பாடு பண்ணினாள். அவளது திட்டமானது பயங்கரமாய் வெற்றியடைந்தது; இராஜாவும் அவருடைய அரச சபை உறுப்பினர்களும் மயக்கப்பட்டார்கள்; மற்றும் மதுபானத்தினாலும், தன்னுடைய தத்தெடுக்கப்பட்ட மகளின் மீதான பாசத்தினாலும், பொதுவாக வழங்கப்படும் சிறு அன்பளிப்பிற்குப் பதிலாக, சலோமி விரும்பியது எதையும் கேட்டுக்கொள்ளும்படி கூறினான். அவனது இராஜ்யத்தில் பாதி வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளும்படி கூறினான் என்று மாற்கு பதிவு செய்துள்ளார்.

## "இராஜாவின் மோசமான பேரம்"

இங்குப் பார்க்கிறபடி, மதுபானத்தினாலும், உணர்ச்சிகளின் தூண்டுதலினாலும் ஏற்பட்ட தன்னிலை மறந்த ஒரு கணிப்பே, இப்படி அவசர அவசரமான உறுதிமொழியை (promise), அநேக சூளுரைகளுடன் செய்ய, வழிநடத்தியிருக்க வேண்டும். இங்கிருந்து, கர்த்தருடைய ஜனங்களுக்கு இருக்கும் அனுகூலங்களில் ஒன்றை நாம் பார்க்கின்றோம். இவர்கள் தங்களுடைய இயல்பான/இயற்கையான கணிப்புக் கெடுக்கப்படுவதிலிருந்தும், மிஞ்சி காணப்படுவதிலிருந்தும் மாத்திரம் பாதுகாக்கப்படாமல் இன்னுமாக, இவர்கள் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ள வண்ணமாக "தெளிந்த புத்தியின் ஆவியையும்" பெற்றிருக்கின்றார்கள் (2 தீமோத்தேயு 1:7). கிறிஸ்துவின் மனமானது, கிறிஸ்துவின் பண்பானது, இப்படியான அறிவீனமான காரியங்களினின்று, மிகவும்

நியாயமான காரியங்கள் மீது இருதயத்தைக் கொண்டுச் செல்கின்றது. கிறிஸ்துவின் மனமானது, காரியங்கள் குறித்த உண்மையான மதிப்பை நமக்குக் கொடுக்கின்றது. ஆனால், பொறாமையின் ஆவி போன்று, உலகத்தின் ஆவியானது, பெருமையின் ஆவியானது, பேராசையின் ஆவியானது, காரியங்கள் குறித்த தவறான மதிப்பைக் கொடுக்கத்தக்கதாக, கணிப்பைத் தவறாய்த் திருப்பக் கூடியதாய் இருக்கின்றது.

இங்கு இப்படியாக பல்வேறு மோசமான பேரங்களைச் செய்தவர்களை நாம் நினைவுக்குக் கொண்டு வருகின்றோம். ஏசா ஒரு பானை கூழுக்காக, ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தினுடைய சுதந்தரவாளியாகிய ஈசாக்கின் முதல் குமாரனாகிய தனக்குரிய சேஷ்ட புத்திரப் பாகத்தை விற்றுப்போட்டான்; யூதாஸ் தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்காக விற்றுப்போட்டதும், அவனுடைய அனைத்தையும் இழக்கப் பண்ணினதுமான மோசமான பேரத்தைக் குறித்தும் நாம் நினைவுகூருகின்றோம். இவ்விதமான மோசமான அல்லது அதிகம் விலையுள்ள பேரங்களைச் செய்தவர்களில் ஒருவன் ஏரோதாவான். "இராஜா துக்கமடைந்தான்" என்று பதிவுகள் தெரிவிக்கின்றபடி, ஏரோது தனது மனதின் சமாதானத்தை இழந்துவிட்டான். ஏரோது தனது அநீதி குறித்து அநேகமாக மனக்கிலேசம், அடிக்கடி அடைந்திருப்பான் என்பதிலும், அதுவும் கர்த்தருடைய விசேஷித்தவர்களாகிய ஒரு தீர்க்கத்தரிசிக்கு எதிரான தனது குற்றம் குறித்து, அநேகமாக மனதுக்கம் அடிக்கடி அடைந்திருப்பான் என்பதிலும் நமக்கு நிச்சயமே. யோவானின் மரணத்திற்குப் பிற்பாடுதான், இயேசுவைப் பொதுமக்கள் அதிகமாக அறிந்தார்கள். பிற்பாடு ஏரோது, இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்ட போது, கிரேக்கர்களின் கூற்றாகிய மரித்தவர்கள் மரிக்கவில்லை மாறாக, (நம்முடைய நாட்களில் ஆவியுலக ஊடகங்கள் மூலம் தொடர்புகொள்வதுபோன்று) மரித்தவர்கள், உயிரோடிருக்கிற மற்ற நபர்கள் மூலம் தொடர்புகொள்ளும் வல்லமை கொண்டுள்ளார்கள் என்பது உண்மையாக இருக்குமோ, இல்லையோ என ஏரோது யோசித்துக் குழப்பமடைந்தான். ஏரோதின் மனம் துக்கமடைந்தது, எனினும் அவன் தவறுக்காக வருந்தவில்லை.

இதே நிலை இன்றும் நிலவுகின்றது; ஜனங்கள் தாங்கள் தவறு என அறிகின்ற காரியங்களை, தங்களுடைய மனசாட்சியையும் மீறிச் செய்கின்றனர், துக்கமும் அடைகின்றனர்; எனினும், இது தேவனுக்கேற்ற துக்கமல்ல; ஏனெனில் அப்போஸ்தலர் தெரிவிக்கின்றது போல, தேவன் அங்கீகரிக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் துக்கங்கொள்ளும் வகையான தேவனுக்கேற்ற துக்கமானது, மனந்திரும்புதலை உண்டாக்குகின்றது. மற்றவிதமான துக்கங்கள், பாதிப்பையே உண்டாக்குகின்றது. ஆனால், தேவனுக்கேற்ற துக்கமானது, நன்மைக்கு ஏதுவானதாக இருக்கின்றது. தேவனுக்கேற்ற துக்கமானது, மனந்திரும்புதலுக்கும், சீர்த்திருந்துவதற்கும், தேவன் இயேசுவுக்குள் நியமித்துள்ள ஏற்பாட்டின் மூலம் தேவனுடன் ஒப்புரவாகுதல் அடைவதற்கும் வழிநடத்துகின்றது. ஆகவே, நாம் கர்த்தருடைய ஜனங்களாகக் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருப்போமாக; மற்றும் கர்த்தருடைய ஆவியினால் நிரப்படுவதற்கேற்ப, உலகத்தின் ஆவியையும், சுயசித்தத்தின் ஆவியையும், மயக்கத்தின் ஆவியையும் வெளியேற்றி விடுவோமாக; மற்றும் புதிய மனதின் ஆவியை, தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொண்டிருப்போமாக. ஒருவேளை எவன் மாம்சத்தின் ஆசைகளுக்கு ஒப்புக்கொடுத்ததின் காரணமாக, தான் பாவத்தில் இருப்பதை உணர்கின்றானோ, இப்படியாக கீழ் நோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடியிரும் ஏதேனும் நன்மை உண்டாகுமோ என நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதை நினைவுக்கூரக்கடவன். இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்கள் கர்த்தரைத் தேடுவதற்கும், விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் துப்புரவாக்கப்படுவதற்கும், கழுவப்படுவதற்கும், சுத்திகரிக்கப்படுவதற்கும், பிற்பாடு பாவத்திற்கெதிராக அதிக ஜாக்கிரதையுடன் காணப்படுவதற்குமென எதையும் இழக்கவும் துணிந்துத் துரிதமாய்ச் செயல்பட வேண்டும்.

## "யோவான் விவேகமற்றுச் செயல்பட்டாரா?"

யோவானின் செயல்பாடு குறித்துத் தீர்ப்புச் சொல்வதும், இராஜா மற்றும் ராணியைக் குற்றப்படுத்தியதில், யோவான் தனக்கான வேலையை மிஞ்சி செயல்பட்டாரா அல்லது இல்லயைா என்று தீர்ப்புச் சொல்வதும் நமக்கடுத்த காரியமல்ல. எனினும், யோவான் தனது கடமையையும்/வேலையையும் மிஞ்சி செயல்பட்டார் என்றே நமக்குத் தோன்றுகின்றது. நம்முடைய கணிப்பின்படி, அக்காலத்தில் இயேசுவினாலும், அப்போஸ்தலர்களினாலும் கடுமையாய்க் குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவாக அநேக அதிகாரிகள் காணப்பட்டார்கள். எனினும், யோவான் செய்ததுபோல, இயேசுவும், அப்போஸ்தலர்களும் செய்ததாக எவ்விதமான சான்றும் நமக்கு இல்லை.

இயேசு, பிலாத்துவுக்கு முன்பும், இந்த ஏரோதுக்கு முன்பும் கொண்டுச் செல்லப்பட்டார். எனினும், யோவான் பேசினது போன்று, எந்த ஒரு வார்த்தையையாகிலும் இயேசு பேசினதாக நமக்கு எந்தப் பதிவும் இல்லை. பவுலுங்கூட அகிரிப்பா, மற்றும் பேலிக்ஸ் மற்றும் அக்காலக்கட்டத்தில் முன்னிலை வகுத்தவர்கள் முன்புக் கொண்டுச் செல்லப்பட்டார்; இவர்களில் சிலர், வரலாற்றின்படிக் கெட்ட பெயர்களையுடைய மனிதர்களாகவும் காணப்பட்டனர்; எனினும், இவர்களைத் தனிப்பட்ட விதத்தில் எவ்விதமான கடுமையான சொற்களினால் பவுல் தாக்கவில்லை; பவுல் அகிரிப்பாவிடம், "இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார்" (அப்போஸ்தலர் 26:29), அதுவும், "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்" என்ற அகிரிப்பாவின் வார்த்தைகளுக்குக் கருத்துத் தெரிவிப்பதற்கே அவ்வார்த்தைகளைப் பவுல் கூறினார்.

நாம் புரிந்திருக்கின்றவரையிலும் உலகத்துக்குள் சென்றுப் பாவத்தைக் கண்டிப்பதாக இல்லாமல், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே கர்த்தருடைய ஜனங்களுக்கான வேலையென வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. நம்முடைய வார்த்தைகளினாலும், நம்முடைய ஜீவியங்களினாலும் நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷமானது, "விசுவாசிக்கிறவனெவனோ, அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனாயிருக்கிறது." கர்த்தருடைய ஜனங்களில் சிலர் இப்படியான காரியங்களில், கர்த்தர் இயசுவையும், அப்போஸ்தலர்களையும் பின்பற்றுவதற்குப்பதிலாக, யோவானின் நடவடிக்கையைப் பின்பற்றுவது தங்களது கடமை என்று எண்ணுவதினாலும், இதில் அவர்கள் தவறு புரிவதினாலும், மேற்கூறிய காரியங்களை நாம் வலியுறுத்துகின்றோம். மனிதனுடைய இருதயங்களை நொறுக்குவதற்கல்லாமல், மாறாக நொறுக்கப்பட்ட இருதயங்களைக் கட்டுவதற்கு அதாவது, ஏற்கெனவே நொறுக்கப்பட்டிருக்கும் இருதயங்களை உடையவர்களைச் சுகப்படுத்துவதற்கே சுவிசேஷம் அனுப்பப்பட்டுள்ளது. பாவமும், அதன் இயல்பான தண்டனைகளும், மனிதனுடைய இருதயங்களை நொறுக்கும் சுத்தியல்களாக இருக்கின்றது. வரவிருக்கும் மகா உபத்திரவக் காலமானது, முழு உலகத்தினுடைய இருதயங்களை நொறுக்குவதற்கான தேவனுடைய வழிமுறையாகக் காணப்படுகின்றது; அதாவது, கீலேயாத்தின் பிசின் தைலத்திற்கும், மற்றும் பின்வரும் ஆயிரவருட யுகத்திற்குரிய பொதுவான ஆசீர்வாதங்களுக்கும் ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்குமான, தேவனுடைய வழிமுறையாக மகா உபத்திரவக் காலம் காணப்படுகின்றது. சுவிசேஷத்தைச் சுத்தியலாகப் பயன்படுத்துகின்றவர்கள், தனது வேலையைக் குறித்துத் தவறாய்ப் புரிந்துக்கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஒட்டுமொத்த கிறிஸ்துவுக்குள்ளான வேலையைக் குறித்துக் "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறுவதுமாகும்" என்று வாசிக்கின்றோம் (ஏசாயா 61:1).

## "நன்மைக்கு அல்லது தீமைக்கு வழிநடத்தக்கூடிய பெற்றோரின் செல்வாக்கு"

ஏரோதியாள், ஏரோது மீது கொண்டிருந்த அதிகாரமானது, அவளுடைய மகளாகிய சலோமியின் மீது அவள் கொண்டிருந்த அதிகாரத்தில் விளங்குகின்றது. இராஜாவின் தாராளமான கொடை, இளம் பெண்ணாகிய சலோமியின் மனதில் சலனத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஐசுவரியங்கள், அரண்மனைகள், பகட்டுகள் அவளுடைய மனதிற்கு முன்பு தோன்றியிருக்க வேண்டும்; ஆனால், அவள் தாயின் அறிவுரையின்படி வழிநடத்தப்பட்டிருக்கிறபடியால், இப்பொழுதும் அவள் தாயின் ஆலோசனையை நாடி, "நான் என்ன கேட்க வேண்டும்" என்று கேட்டாள் (மாற்கு 6:24). இங்குப் பெற்றோருடைய செல்வாக்குக் குறித்துக் காட்டப்படுகின்றது. பொல்லாத ஸ்திரீயாகிய ஏரோதியாள், தனது மகளுடைய பாசத்தையும், அவளுடைய முழுமையான நம்பிக்கையையும் மற்றும் கீழ்ப்படிதலையும் தன்வசமாகக் கொண்டிருந்தாள். நன்மை (அ) தீமை வழியில் அந்த வாலிப பெண்ணின் மனதை வழிநடத்துவது, ஏரோதியாளின் கரங்களில் இருந்தது. இது ஓரளவுக்கு ஒவ்வொரு பெற்றோரின் விஷயத்திலும், அதிலும் விசேஷமாக ஒவ்வொரு தாய்மாருடைய விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது. பிள்ளைகளின் நடத்தை/வாழ்க்கை விஷயத்தில் தாய், தகப்பன்மாருடைய பொறுப்பு எவ்வளவு அதிகமாய்க் காணப்படுகின்றது! கர்த்தருடைய ஜனங்களுடைய தெளிந்த புத்தியின் ஆவியானது, மாம்ச உறவுமுறை மற்றும் வாய்ப்பினடிப்படையில் பெற்றோர்களுக்குச் சொந்தமான இந்த வல்லமையான செல்வாக்கை, தங்களுடைய

வழிநடத்துதலின் கீழிருப்பவர்களைச், சரியானப் பாதையில் வழிநடத்துவதற்கு ஏதுவாக பயன்படுத்த நிச்சயமாய்த் தூண்டும்.

அந்தோ பரிதாபம், கிறிஸ்தவ தாய்மார்களில் சிலர்கூட இப்படியான வாய்ப்புகளை எடுத்துக்கொண்டு, தங்களது பிள்ளைகளை, பரலோக வழிகளில் நடத்துவதற்குத் தவறிவிடுகின்றனர். இவர்கள் கர்த்தருடைய நோக்கத்திற்காக தங்களுடைய பூமிக்குரிய நன்மைகளைத் தியாகம் செய்திடவும் மற்றும் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்க விரும்பினாலும், இவர்களுக்குள்ளாகவே அதிகமான உலகத்தின் ஆவி இருப்பதினால், இவர்கள் ஞானத்தின் வழிகளே இனிமையான வழிகள் என்பதையும், மற்ற அனைத்துப் பாதைகளும் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் உபத்திரவத்திற்கே வழிநடத்தும் என்பதையும் உணர தவறிப்போய், தங்களது பிள்ளைகளையும் (இந்த ஞானமான வழிகளில்) பங்கெடுக்க வைப்பதில் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை இவர்கள் புரிந்துக்கொள்ள தவறிவிடுகின்றனர் (ரோமர் 12:1). மற்ற அனைத்துப் பாதைகளும் புத்தியற்றதும், ஞானமற்றதும், பகுத்தறிவில்லாததுமாக இருக்கின்றது.

இராஜாவினால் முன்வைக்கப்பட்ட பெரிய காரியங்கள் மீதான மகள் சலோமியின் விருப்பங்களுக்கு, தாய்க் கொடுக்கும் பதிலை, பின்வருமாறு ஒருவர் சித்தரித்துள்ளார். "முட்டாளே நீ என்ன கேட்கின்றாய் என்பது உனக்குப் புரியவில்லை. யோவான் ஸ்நானன் உயிரோடு இருக்கும் பொழுது, என்றாவது ஒருநாள் நான் ராணி ஸ்தானத்திலிருந்து விலக்கப்பட்டு, தள்ளப்படும் போது, இந்த ஆடம்பரமும், அரண்மனையும், உனக்கும், எனக்கும் எப்படிப் பயனாக இருக்கும்?" தீர்க்கத்தரிசி அகற்றப்பட்டால், அனைத்து நன்மைகளும் தனக்கும், தன் மகளுக்கும் கிடைக்கும் எனத் தாயானவள் நிச்சயமாய் எண்ணியிருந்திருக்க வேண்டும். தீர்க்கத்தரிசியின் தலை வேண்டும் என்றும், அதுவும் உடனடியாக, இப்பொழுதே ஒரு தாலத்திலே (விருந்துகளில் பயன்படுத்தப்பட்ட பெரிய தட்டு) தரும்படிக்குக் கேட்க, ஏரோதியாள் தன் மகளிடம் கூறினாள். இராஜாவின் உணர்வுகள் தணிந்து, அவர் நிதானமாக முடிவெடுத்துவிடுவார் என்ற பயத்தினால், துரிதமாய்ச் செயல்படுவது ஏரோதியாளுக்கு அவசியமாய் இருந்தது. இராஜா பானத்தின் மயக்கத்தில் இன்னமும் இருக்கும் போதும், மற்றும் இராஜாவின் சூளுரையைக் கேட்ட அவருடைய அரண்மனை ஆலோசனை உறுப்பினர்கள் அங்கு இன்னமும் கூடியிருக்கும்போதும் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற துரிதம் ஏரோதியாளுக்கு இருந்தது.(ஒரு கைதி தொடர்பான விஷயத்தில், இராஜாவினுடைய தீர்ப்பு மாற்றங்கள் அவனை மற்றவர்களுக்கு முன்பு அவநம்பிக்கைக்குரியவராகக் காட்சியளிக்கும்). இராஜா ஒப்புக்கொடுத்துவிட்டார்; எனினும், ஏரோதியாள் தனக்கு வருமெனப் பயந்த அபாயத்தினின்று தப்பிக்க முடியவில்லை; ஏனெனில், பத்து வருடங்களுக்குள்ளாக அவளுடைய பேராசைகள், ஏரோதைக் கூடுதலான மதிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, ரோமிடம் மன்றாடும்படிக்கு, அவனுடைய கணிப்பிற்கு எதிராக தூண்டினது என்றும், கோரிக்கை மறுக்கப்பட்டது என்றும், ஏரோது பதவி நீக்கப்பட்டு, கவுலில் உள்ள லையான்சில் நாடு கடத்தப்பட்டான் என்றும், அங்குச் செத்துப்போனான் என்றும் சரித்திர பதிவுகள் தெரிவிக்கின்றன.

## "எதிர்க்காலத்தில் நமக்கு நிறைவேறுவதற்கான சாத்தியக்கூறு"

யோவான் ஸ்நானன், எலியாவின் நிஜமாக இருக்கின்றார் என்ற உண்மையையும், சுவிசேஷ யுக சபையாகிய சரீரமும், தலையும், அதாவது மாம்சத்தில் இருக்கும் கிறிஸ்துவும், இன்னும் மேலான, பிரம்மாண்டமான நிஜமாக இருக்கின்றார்கள் என்ற உண்மையையும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். பதினெட்டு நூற்றாண்டுக் காலமாக (அ) இதற்கு அதிகமான காலங்களாக இந்த மாபெரும் எலியா (வகுப்பார்), உலகத்தில் நீதியைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கின்றனர், மற்றும் மனந்திரும்பும்படி அழைத்துக் கொண்டிருக்கின்றனர்; கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபையின் வருகை என்பது, உலகத்தை நியாயந்தீர்ப்பதற்கும், ஆசீர்வதிப்பதற்குமான தேவனுடைய இராஜ்யமாக இருக்கின்றது என அறிவித்தும் கொண்டிருக்கின்றனர். இஸ்ரயேலில் சிலர் மாத்திரமே தேவனுக்கு உண்மையாய் இருந்ததை எலியா கண்டதுபோல இரண்டாம் எலியாவும் (யோவான்), மாம்சத்தில் இருந்த இயேசுவைச் சந்திக்க சொற்பமானவர்களே ஆயத்தமாய் இருந்ததைக் கண்டார்; மற்றும் இதுபோலவே மாபெரும் நிஜமான எலியாவும் (மாம்சத்தில் இருக்கும் சபையும்) சொற்பமானவர்களே, அதாவது சிறு மந்தையினரே செவிசாய்ப்பதையும், இராஜ்யத்திற்குச் சரியாய்

ஆயத்தமாய் இருப்பதையும் கண்டனர். இப்படியாகவே இந்த வேலை திட்டமிட்டு/வடிவமைக்கப்பட்டுள்ளது; மேலும், மல்கியா தீர்க்கத்தரிசி மூலம் முன்னுரைக்கப்பட்டது போல, அதிகமான/பெரிய பலனைக் கொடுக்கத் தவறியது என்பது இராஜ்யம் சமாதானமாய் அறிமுகப்படுத்தப்படாமல், பலவந்தமாவே அறிமுகப்படுத்தப்படும் என்பதைக் குறிக்கின்றது; அதாவது, மகிமையின் இராஜாவை, பூமியின் அதிபதியாக நிறுவுவதற்கும், புறஜாதிகள் அனைவரும் கர்த்தரை நாடுவதற்கும் மற்றும் கர்த்தரைப் பற்றின அறிவு முழுப் பூமியையும் நிரப்புவதற்கும் மற்றும் அவருடைய இராஜ்யம் வருவதற்கும் மற்றும் பரலோகத்தில் செய்யப்படுவது போல அவர் சித்தம் பூமியில் செயல்படுத்தப்படுவதற்குமென, தேசங்கள் இருப்புக் கோலால் அடிக்கப்படுவதும், குயகலத்தைப் போல் அவர்களை உடைத்துப் போடுவதும் அவசியமாய் இருக்கும்.

மற்றுமொரு கருத்துப் பின்வருமாறு: முதல் யேசபேல், முதல் எலியாவை துன்பப்படுத்தினபடியால், அவர் வனாந்தரத்திற்குத் தப்பிப்போனார்; மற்றும் எலியா மீண்டும் திரும்பி வந்து, மாபெரும் அற்புதம் செய்து, சிலரின் இருதயங்களைக் கர்த்தர் பால் திருப்பினார்; அவர் உயிரை எடுக்க நாடின யேசபேலிடமிருந்து தப்பி ஓடும் நிர்ப்பந்தம் அவருக்கு இரண்டாம் முறையும் ஏற்பட்டது. இரண்டாம் எலியாவாகிய, யோவான் ஸ்நானனின் விஷயத்திலும், அனுபவங்கள்/நிகழ்வுகள் கிட்டத்தட்ட ஒன்றாகவே இருக்கின்றது, மற்றும் ஏரோதியாளாகிய யேசபேல் தீர்க்கத்தரிசியை அழிக்கும் விஷயத்தில் இறுதியில் வெற்றிக் கொண்டாள். மூன்றாம் எலியாவின் (மாம்சத்தில் உள்ள சபை) விஷயத்திலும், யேசபேல் எனும் பெயருள்ள ஸ்திரீ வெளிப்படுத்தல் 2:20-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளாள்; மற்றும் அவளுடைய பெரும் கேடு விளைவிக்கும் வேலையும், சபை வனாந்தரத்திற்குத் தப்பி ஓடுவதும் (வெளிப்படுத்தல் 12:6) மற்றும் வனாந்தர நிலையிலிருந்து சபை, சீர்திருத்தலின் காலங்களில் திரும்பினதும் நன்கு அறிந்த காரியங்களேயாகும். இப்பொழுது (பெயர்ச்சபையின் மீதல்ல) உண்மையான சபையின் மீது இரண்டாம் தாக்குதலை நாம் எதிர்ப்பார்க்கின்றோம்; மேலும், யோவான் ஸ்நானனுடைய விஷயத்தில் நடந்தது போன்றே, மாம்சத்திலுள்ள கிறிஸ்துவின் சரீரத்தில் அடங்கும் உண்மையுள்ள அங்கங்கள் மீதான, பாபிலோனிய ஸ்திரீ மற்றும் அவளுடைய கள்ளக்காதலனாகிய உலகத்தின் இரண்டாம் தாக்குதல் முழுமையாய் வெற்றியடைவது போன்று காணப்படும். இப்படியாக நடக்குமாயின், நாம் நிச்சயமாய் ஆச்சரியமடைவதில்லை; இதுவும் அனைத்துக் காரியங்களும் கர்த்தரை அன்புகூருகின்றவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். திரைக்கு அப்பாலுள்ள நமக்கான பரிசை நாம் அடைய வேண்டுமெனில், நாம் அனைவரும் மரிக்க வேண்டும். திரையின் இப்பக்கத்தில் காணப்படும் எலியா வகுப்பார் கண்டிப்பாக வெற்றியடைய வேண்டும், மற்றும் வெற்றியடையவும் செய்வார்கள். ஆனால், பார்வைக்குத் தோல்வி போன்றுத் தோன்றும், இந்தத் தோல்வியானது இராஜ்யத்தின் மகிமைகளையும், வல்லமைகளையும், வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களையும் துரிதமாக மேப்படுத்துகின்றது. "ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளிப்படுத்தல் 2:10).

## "இயேசுவிடம் போய்ச் சொல்லுங்கள்"

யோவான் ஸ்நானனுடைய சீஷர்கள், அவருடைய மரணம் குறித்த செய்தியுடன் எங்குச் செல்ல வேண்டும் என்று அறிந்திருந்தார்கள். அதாவது, தங்களது இந்த இழப்புத் தொடர்பாக எங்கு அனுதாபத்தையும், ஆறுதலையும் அடையலாம் என்று அறிந்திருந்தார்கள். சோதனைகள், கஷ்டங்கள், உபத்திரவங்கள், துக்கங்கள் மற்றும் ஏமாற்றங்களுடன் நாம் யாரிடத்தில் போக வேண்டும்? நமக்கு மிகவும் பாரமாயிருக்கும் யாவற்றையும் கர்த்தரிடத்தில் கொண்டு வரும்படிக்கு கர்த்தர் நம்மை அழைக்கின்றார். அவர் நம்மைப் பராமரிப்பார், மற்றும் நம்பிக்கையுள்ள ஆத்துமாக்களுக்கு அவர் ஆசீர்வாதம் அருளுவார். இயேசுவிடம் சென்ற யோவானுடைய சீஷர்கள் சந்தேகத்திற்கிடமின்றி, அவருடைய சீஷர்கள் ஆனார்கள்; மற்றும் இவ்விதமாக அவர்களுடைய தலைவரும், குருவுமாயிருந்த யோவான் ஸ்நானனுடைய மரணம் தொடர்பாக, அவர்களுக்கு நேரிட்ட சோதனைகள், அவர்களை மாபெரும் போதகர் குறித்த நெருக்கமான அறிவிற்குள்ளாகவும், உறவிற்குள்ளாகவும் கொண்டு வந்தது. இப்படியாகவே, தற்காலத்தில் கர்த்தருடைய ஜனங்களின் தோழர்களாய் இருப்பவர்களின் விஷயத்திலும் காணப்படும். அதாவது, நிஜமான எலியாவின் மீதான நிஜமான யேசபேலின் பழிவாங்குதல், நிஜமான எலியாவினுடைய நண்பர்களை இன்னும் அதிகமான அன்பிற்குள்ளும், நன்மைக்கு ஏதுவாகவும் வழிநடத்தும்; அதாவது, "திரள் கூட்டத்தினர்" மிகவும் நெருக்கமாக கர்த்தரிடத்தில் ஈர்க்கப்படுவார்கள்.

## "நம்முடைய ஆதார வசனம்"

யோவான் ஸ்நானனுக்கு ஜீவகிரீடம் வாக்களிக்கப்படவில்லை. இந்த வாக்குத்தத்தமானது, சுவிசேஷ யுக சபை அதாவது, அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாகிய நமக்கே உரியதாகும். எனினும், யோவான் ஸ்நானன் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார். ஏனெனில், அவரைக் குறித்து, "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படுவதாகப் பார்க்கின்றோம் (லூக்கா 7:28).

**ஆமென்!**

---

# "கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்"

## மாற்கு 7:24-37

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்." - எபிரெயர் 11:6

இப்பாடத்திலிருந்து நாம் கிறிஸ்துவினுடைய பூமிக்குரிய வாழ்க்கைப்பற்றின ஆராய்ச்சியில் ஒரு புதிய பாகத்தை ஆரம்பிக்கின்றோம்.

## "விலையேறப் பெற்ற இரத்தத்தினால், இழப்பிலிருந்து மீட்கப்பட்ட உலகத்தினுடைய ஜீவனுக்கான உரிமைகள்"

இக்கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்போது, பாவத்தின் தீர்ப்பாகிய மரணத்திலிருந்து ஆதாமையும், அவருடைய சந்ததியையும் மீட்கும்படிக்கு, மனிதர் சார்பாக மரிக்கும்படி இயேசு உலகத்திற்கு வந்தபோது, அவர் இன்னும் இரண்டு மற்ற முக்கியமான வேலைகளைச் செய்தார் என்பதை நாம் புரிந்துக்கொள்கின்றோம். மீட்பின் வேலை பிரதானமானதாகும்; இது இல்லாமல் எவ்விதமான எதிர்க்கால வாழ்க்கையும் இருக்கமுடியாது. கல்வாரியில் பலி நிறைவடையும் வரையிலும் தினந்தோறும் ஜீவனை ஒப்புக்கொடுத்தது என்பது நமது கர்த்தரால் நிறைவேற்றப்பட்ட பிரதானமான (அ) அஸ்திபாரமான வேலை என்று பெயரிடலாம். இது இல்லாமல், வேறு எதுவும் உபயோகப்படாது. மேலும், இந்த அஸ்திபாரத்தின் மேல்தான், மற்ற இரண்டு வேலைகளும் நடைபெற முடியும். ஜீவனும், அழியாமையும் சுவிசேஷத்தின் மூலம், காத்தரால் வெளியரங்கமாக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். இதன் அர்த்தம் என்னவெனில், நித்தியஜீவன் தொடர்புடைய தெளிவான மற்றும் உறுதியான நம்பிக்கையும் இதற்கு முன்னதாக எவருக்கும், யூதர்களுக்குக்கூடக் கொடுக்கப்படவில்லை என்பதேயாகும். மற்ற ஜாதியார்கள் தேவனற்றுக் காணப்பட்டபடியால், நம்பிக்கையில்லாமல் இருந்தாலுங்கூட, யூதர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்ளத்தக்கதாக போதுமானளவுக்கு தெய்வீக வெளிப்படுத்தல்களைப் பெற்றிருந்தனர்; எனினும், அதன் தத்துவ ஞானத்தை அவர்கள்/யூதர்கள் அறிந்திருக்கவில்லை; அதாவது, தேவன் நீதியுள்ளவராக இருக்கும் அதேவேளையில், அவர் நீதியாய் மரண ஆக்கினைக்குள்ளாக தீர்த்திட்டவர்களை எப்படி விடுவிக்க முடியும் என்பதை அறியாது இருந்தார்கள்; அவர்களால்/யூதர்களால் இதனையறிய முடியவில்லை. காரணம், அதற்குரிய வேளை இன்னும் வராததினால், அது வெளிப்படுத்தப்படவில்லை.

"அநேகருக்கான மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க" வேண்டி, தாம் உலகத்திற்குள் வந்திருப்பதாக, கேட்கும் செவியுடையவர்களுக்கு விவரிப்பதன் வாயிலாக, கிறிஸ்து ஜீவனை வெளியரங்கமாக்கினார் (மாற்கு 10:45). இன்னுமாக இராஜ அதிகாரத்திலுள்ள தமது குரலை, பிரேத குழிகளில் இருப்பவர்கள் கேட்பதற்கும், மரண நித்திரையினின்று விழித்தெழுவதற்கும், அதாவது கல்லறை எனும் சிறைச்சாலையிலிருந்து வெளிவருவதற்குமான காலம் வரும் என்றும் விவரித்தார். இப்படியாகக் கல்லறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டும், ஒருவேளை ஜனங்கள் தொடர்ந்துத் தற்காலத்திலுள்ள வலிகள், வேதனைகள் மற்றும் பிசாசுகளின் எதிர்ப்புகளுக்குக் கீழ்த்தான் காணப்படுவார்களானால், என்ன நன்மை இருக்கும் என்று அவரைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் யோசித்திருக்கக்கூடும். ஆயிரம் வருஷம் யுகமானது உலகளாவிய ஆசீர்வாதத்தின் காலமாக இருக்கும் என்றும், பரிசுத்த இராஜ்யம் எங்கும் தீங்குச் செய்வதற்கோ, அழிப்பதற்கோ எதுவும் இராது என்றும், ஆயிரம் வருஷம் யுகம் தொடர்பாக தீர்க்கத்தரிசிகளால் அருளப்பட்ட சாட்சியங்களை, நமது கர்த்தர் வலுவூட்டினார். இது எவ்வாறு செய்யப்படும் என்பதை, தாம் செய்த பல்வேறு அற்புதங்கள் வாயிலாகக் காட்டினார்; ஏனெனில், அவர் தேவனுடைய இராஜ்யத்தைப் பிரசங்கித்து, அதற்காக எதிர் நோக்கி இருப்பதற்கும், அதன் வருகைக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும், வல்லமைக்காகவும் ஜெபிப்பதற்கும் தம்முடைய சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்தது மாத்திரமல்லாமல், அவரால் நிகழ்த்தப்பட்ட பல்வேறு அற்புதங்கள் வாயிலாக, இராஜ்யத்தின் வல்லமைகளானது, மனுஷர்களின் ஆசீர்வாதத்திற்காக, மனுஷர்கள் மத்தியில் காணப்படும் என்றும் விவரித்துக்காட்டினார்.

அவர் அனைத்து விதமான வியாதிகளையும் சொஸ்தமாக்கினார், மற்றும் பிசாசுகளைத் துரத்தினார்; இவ்விதமாக தேவனுடைய ஏற்ற வேளையில் மாபெரும் வைத்தியனாக, தாம் மனித

குடும்பம் தொடர்பான விஷயத்தில் தீமையான கிரியைகள் செய்யாதபடிக்குச் சாத்தானையும், அனைத்து விழுந்துபோன ஆவிகளையும் முற்றிலும் கட்டுப்படுத்துவதற்குரிய அளவுக்கு மிகுதியாய் வல்லமை கொண்டிருப்பார் என்றும், அப்பொழுது தாம் ஏழைகளையும், முடவர்களையும், செவிடர்களையும், ஊமையர்களையும், குருடர்களையும், தற்காலத்து உபத்திரவங்களிலிருந்து தூக்கி விடுவார் என்றுமுள்ள காரியங்களுக்குச் சான்று பகர்ந்தார். இதோடுக் கூட விசுவாசத்தின் மூலம் அவருடைய தயவை ஏற்றுக்கொண்டவர்களுக்குக் (பிணியாளிகளுக்குக்) கிடைத்திட்ட இந்தத் தற்காலிகமான (பிணிகள் மற்றும் பிசாசுகளிடமிருந்ததுமான) விடுதலை என்பது, இன்னும் மேலான ஆசீர்வாதங்களுக்கும், வேலைகளுக்கும் மற்றும் சிலாக்கியங்களுக்கும் விளக்கமாயிற்று. அதாவது, புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுதல், பாவமாகிய குஷ்டரோகம் சொஸ்தப்படுதல், சூம்பினவைகளுக்குச் சக்திகள் திரும்புதல், மரித்தவர்களை விழித்தெழுப்பப்பண்ணுதல் ஆகியவற்றிற்கு விளக்கமாயிற்று; இப்படியாக, புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும்போதுதான் அனைவரும் தேவனால் அங்கீகரிக்கப்படும் நீதியையும், அதன் பலனாகிய நித்தியஜீவனையும் பார்க்க, கேட்க மற்றும் அறிந்துக்கொள்ள முடியும்; மற்றும் இப்படியாக அனைவரும், பாவம், பூரணமின்மை முதலான தற்போதைய அடிமைத்தனத்தினின்று, தேவனுடைய குமாரர்களுக்குரிய முழுச் சுதந்திரத்திற்குள் வரத்தக்கதாக உதவப்படமுடியும். இப்படியாக, இராஜ்யம் தொடர்பான அவருடைய செய்தியைப் கேட்டவர்களுக்கு, கர்த்தர், ஜீவனை, அதாவது நித்தியஜீவனைப் பற்றியும், அதன் ஆசீர்வாதங்களையும் வெளிப்படுத்தினார்.

## “தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே அழியாமை அல்லது திவ்வியச் சுபாவம்”

அவர் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார். உலகத்திற்கான நித்தியஜீவனுடன் கூட, தம்முடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பின்னடியார்களாகிய விசேஷித்த வகுப்பார், தம்முடன் கூடத் திவ்வியச் சுபாவத்தின் கனம், மகிமை மற்றும் அழியாமையில் பங்கடையத்தக்கதாக ஒரு வழியையும் திறந்து வைத்தார். பொதுவாயுள்ள மனுக்குலமானது இதனை புரிந்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படவில்லை. “எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை” (1 கொரிந்தியர் 2:9). தேவனை அன்புகூருகின்றவர்களாகிய புதுச் சிருஷ்டிகளுக்கு, அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு, அதாவது இராஜ்யத்தில் கர்த்தருடன் உடன் சுதந்தரராய் இருக்கும்படிக்குத் தங்களது அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகின்றவர்களுக்கு மாத்திரமே இது ஆயத்தம் பண்ணப்பட்டவையாகும்.

பின் குறிப்பிடப்படும் மூன்று கண்ணோட்டங்களின்படிப் பார்க்கப்படும் போதுதான், நமது கர்த்தருடைய ஊழியமும், போதனைகளும் சரியாய்ப் புரிந்துக்கொள்ளப்பட முடியும். அவை, (1) ஆதாம் மற்றும் அவருடைய சந்ததிக்கான மீட்கும்பொருளாக வழங்கப்பட்ட அவருடைய சொந்த பலி, அதாவது, “எல்லாம் முடிந்தது” என்று அவர் உரக்கக் கடைசியில் கூறும்வரை, நாளுக்கு நாள் அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்ததின்படியான கண்ணோட்டம். (2) அவருடைய பொதுவான போதனைகள்; அதாவது, ஏற்றவேளையில் முழு உலகத்திற்கும் பொருந்தக்கூடிய பொதுவான போதனைகள். அதாவது, மீட்பின் வேலைக்கான, பலன் தொடர்பான அவருடைய போதனைகள். அதாவது, உலகம் தேவனோடு ஒப்புரவாகுதல், உலகத்தின் பாவங்கள் முழுமையாக மன்னிக்கப்படுதல், இராஜ்யத்தின் மூலமாக உலகத்திற்கு வரவிருக்கும் வாய்ப்பு (அ) மாபெரும் பரீட்சை (அ) நியாயத்தீர்ப்பு; மற்றும் இந்த இராஜ்யத்தில் மீட்பர், தேவனுக்கும் மனுஷனுக்குமிடையே மத்தியஸ்தராகக் காணப்பட்டு, மனுக்குலத்தை உள்ளும், புறமுமான சகல எதிரிடையான சூழ்நிலைகளிலிருந்து விடுவித்து, சிருஷ்டிகரோடு, இசைவாக வரவிரும்பும் அனைவருக்கும் உதவுவது என்பதான மீட்பின் வேலைக்கான பலன் தொடர்பான அவருடைய பொதுவான போதனைகளின் கண்ணோட்டம். (3) இடுக்கமான வழியில் நடப்பதற்கும், அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தில் முழுகுவதற்கும், இப்படியாக, தெய்வீகக் கிருபையின் மூலமாக, இந்த ஏற்பாட்டின் வாயிலாகப் பரலோக இராஜ்யத்தில் பங்கடைவதற்கென ஆயத்தம் பண்ணப்பட்டுத் தகுதியடைவதற்கு, அதாவது கிறிஸ்துவுடன் அவருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்து, பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆயிரம் வருஷம் யுகத்திற்கான, ஆச்சரியமான ஆசீர்வாதங்கள் யாவற்றையும் அருளுவதில் பங்கடைவதற்குமென ஆயத்தம் பண்ணப்பட்டு, தகுதியடைவதற்கும் என்றுமுள்ள விசேஷமான சீஷத்துவத்திற்குரிய அழைப்புப்பற்றின கண்ணோட்டம் என்பவைகளேயாகும்.

இந்தக் கருத்துக்களினடிப்படையில்தான் இந்தப் பாடத்தை நாம் பார்க்கப்போகின்றோம். ஐயாயிரம் பேருக்குப் போஷித்தப் பிற்பாடு, கலிலேயா கடலின் புயலில் கழித்திட்ட இரவிற்குப் பிற்பாடும், இயேசுவும், அவருடைய சீஷர்களும், சில காலத்தைக் கப்பர்நகூமில் செலவிட்டார்கள். அப்பொழுதுதான் தம்மால் ஜனங்களுக்கு அளித்திட்ட அப்பங்களையும், மீன்களையும் குறித்து அதிகம் சிந்தனை செய்யாமல், மேலானவைகளைக் குறித்துக் சிந்திக்க வேண்டும் என்று தாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணினார். தம்மை வானத்திலிருந்து இறங்கி வந்த ஜீவ அப்பமாகக் கருத வேண்டும் என்றும், தம்முடைய வார்த்தைகளைப் புசித்து, இவ்விதமாக நித்தியஜீவனை அடையும்படிக்கு அவர்களுக்கு அவர் பிரசங்கம் பண்ணினார். எனினும், இந்த நித்தியஜீவனைப் பரவலாகவும் வழங்குவதற்கான வேளை இன்னமும் வரவில்லை; இந்த வேலையானது ஆயிரம் வருஷம் யுகத்திற்குரியதாகும். ஆகவே, நீதியின் மீது விசேஷமாகப் பசியும், தாகமும் கொண்டுள்ளவர்களையே, அவர் விசேஷமாய்த் தேடிக் கொண்டிருந்தார். இவ்வகுப்பாரில் உள்ளவர்கள்தான் அப்போஸ்தலர்கள்; பெந்தெகொஸ்தே நாள் முதல் ஆரம்பிக்கவிருக்கும் புதிய யுகத்தில், இந்த அப்போஸ்தலர்கள் வாயிலாகக் கர்த்தர் நிறைவேற்ற வேண்டிய எதிர்க்கால வேலைக்கென, இப்பொழுது அவர்களை அவர் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார்.

## "அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்குரிய தேவனுடைய கிருபைகள்"

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் தீரு மற்றும் சீதோன் எனும் பட்டணங்களுடைய எல்லைகளுக்கு நேராக வடக்கிலிருந்து, மேற்கை நோக்கி பிரயாணம் பண்ணினார். அங்கிருந்த ஜனங்களிடம் அவர் தம்மை வெளியரங்கமாக அறிவிக்கவில்லை. ஆனால், அவருடைய வந்திருத்தலானது வேகமாக அனைவராலும் அறிந்துக்கொள்ளப்பட்டது; ஏனென்றால் அவருடைய அற்புதங்கள் மற்றும் போதனைகளின் கீர்த்தியானது, பாலஸ்தீனியா முழுவதும் பரவியிருந்தது. அவருடைய வந்திருத்தலை முதலில் கேட்டவர்களில், ஒருவள் கிரேக்கத்தியர்களாக வாழ்ந்திருந்த கானானிய ஸ்திரீயாகக் காணப்பட்டாள்; மேலும், இவள் தன்னுடைய மகளுக்கு உதவி புரிந்திடும்படியாக, அவர் முன் வந்து ஓலமிட்டாள். நமது கர்த்தர் அவருடைய வழக்கத்திலிருந்து மிகவும் வேறுப்பட்டவராக, இத்தருணத்தில் நடந்துக் கொண்டார்; ஒரு பாடத்தைப் புகட்டுவதற்கெனவே இப்படியாக நடந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. வழக்கமாகக் கேட்பதற்கும், அனுதாபம் கொள்வதற்கும், சொஸ்தப்படுத்துவதற்கும் உடனே தயாராகக் காணப்படும் கர்த்தர், இத்தருணத்தில் அந்த ஸ்திரீக்கு எவ்விதமான கவனமும் செலுத்தாதவராகக் காணப்பட்டார்; மத்தேயுவின் பதிவின்படி, அந்த ஸ்திரீயை அனுப்பிவைத்துவிடும்படிக்கு, அதாவது ஒன்றில் அவளது விண்ணப்பத்திற்கு அருளி அவளை அனுப்பி வைத்து விடும்படிக்கு, அல்லது அவளது விண்ணப்பத்தை நிராகரித்து, அவள் போய்விட கட்டளையிடும்படிக்குச் சீஷர்கள் கர்த்தரிடத்தில் வந்து அவரை வற்புறுத்தினார்கள் என்பதாகக் காணப்படுகின்றது.

அந்தப் பாவப்பட்ட ஸ்திரீயானவள் தனக்காக அல்லாமல், பிசாசு, அசுத்தமான ஆவி பிடித்திருந்த தனது மகளுக்காகவே விடாப்பிடியுடன் காணப்பட்டாள்; நாம் புரிந்துள்ளவரைக்கும் இந்த விழுந்துபோன ஆவிகளில் பெரும்பாலானவைகள் அசுத்தமானவைகளும், சீர்க்கேடடைந்ததுமானவைகளாகும். இன்னுமாக, இவைகள் குடிக்கொண்டிருப்பவர்கள் மீதிருக்கும் இவைகளுடைய செல்வாக்கும், அசுத்தமானதும், பாதிப்பிற்கு ஏதுவானதுமாகும். சிலசமயம் இவைகள் தூய்மையையும் தூண்டுகின்றது; மேலும், அநேக தருணங்களில் இவைகள் பரிசுத்தமானவர்களைப்போல், கர்த்தரைப் போல் கூட, ஆள்மாறாட்டம் பண்ண முயற்சி எடுத்துள்ளதையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்; எனினும் இந்தப் பொல்லாத ஆவிகளின் முழு நோக்கமும், இவைகள் ஆட்கொண்டிருப்பவர்களின் விஷயத்திலும் மற்றும் ஆட்கொண்டிருப்பவர்கள் வாயிலாக மற்றவர்கள் விஷயத்திலும், அசுத்தமான எண்ணம் மற்றும் நடத்தைக்கு நேராகவே காணப்படுகின்றது.

இறுதியாக ஸ்திரீயின் அழுகைக்கும், சீஷர்களுடைய வற்புறுத்தலுக்கும் இணங்கி, நமது கர்த்தர் பதில் கொடுத்தார். ஆயினும், வழக்கத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமாகப் பதில் கொடுத்தார். அவருடைய அற்புதங்களும், ஊழியங்களும், தேவனுடைய உடன்படிக்கைக்கு உட்பட்ட ஜனங்களாகிய யூதர்களுக்கே ஒழிய, பொதுவான உலகத்திற்காக அல்ல என்று மாத்திரம் கர்த்தர் கூறிவிட்டார். அக்காலத்தில் நிலவின யூதர்களுடைய வழக்கமாகிய புறஜாதிகளை நாய்கள் என்று கூறும் விதத்தைக் கர்த்தர் பின்பற்றினார். எனினும், கொஞ்சம் மாற்றிப்பயன்படுத்தினார்; நாய் என்று

பயன்படுத்துவதற்குப்பதிலாக, குடும்பத்தில் காணப்படும் சிறு செல்லப்பிராணியாகிய நாய்க்குட்டி எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார். கர்த்தருடைய வல்லமையில் பலமான விசுவாசம் கொண்டிருந்த ஸ்திரீயானவளோ, கர்த்தரிடமிருந்து வந்த சாதகமில்லாத பதிலையும், தன்னுடைய சொந்த நன்மைக்கு ஏதுவாக மாற்றுவதிலும் பலமிக்கவளாக இருந்தாள்; இன்னுமாகப் பிள்ளைகளின் மேஜையிலிருக்கும் திரளான உணவிலிருந்து, செல்லப் பிராணியான நாய்க்குட்டிகள் பெற்றுக்கொள்வது போன்று, நமது கர்த்தர் விசேஷமாக ஊழியம் செய்யும்படிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள யூதர்களுக்கு எவ்விதமான நன்மையும் குறைவுப்படாதவிதத்தில், புற இனத்தாளாகிய தனக்கும், கர்த்தருடைய தயவுகளில் சிலவற்றை அருளலாமே என்று வலியுறுத்தினாள்.

## “விசுவாசமில்லாமல் அவரைப் பிரியப்படுத்துவது கூடாத காரியமாகும்”

இது அந்த ஸ்திரீயினுடைய உண்மையையும், விசுவாசத்தையும் காட்டுகின்றது. இப்படியான விசுவாசத்தின் வெளிப்பாடானது, நிச்சயமாய்க் கர்த்தரைப் பிரியப்படுத்துகின்றதாய் இருக்கும். நமது விசுவாசத்தை வளர்ப்பதிலும், பரீட்சிப்பதிலுமான காரியங்களினடிப்படையில்தான், நம்மைக் கர்த்தர் அநேகந்தரம் கையாளுவதை, கிறிஸ்தவனாக உள்ள நம்முடைய அனுபவங்களில் நாம் பார்த்திருக்கின்றோம். நாம் எவ்வளவுதான் முற்காலங்களில் அவரைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டிருந்தாலும் மற்றும் அவருடைய குணலட்சணமும், திட்டமும் எவ்வளவுதான் எதிராளியானவனால் அவதூறாகவும், தவறாகவும் காண்பிக்கப்பட்டிருந்தாலும், அவர் நல்லவரும், கிருபையுள்ளவருமாக இருக்கின்றார். அவருடைய நற்குணத்திலும், அவருடைய வல்லமையிலும், அவருடைய ஞானத்திலும், அவருடைய அன்பிலும் மற்றும் அவரிலும் நாம் விசுவாசமும், நம்பிக்கையும் வைக்காமல், கர்த்தர் அண்டைக்கு நாம் செல்வது என்பது நம்மால் கூடாத காரிமாகும். நம்ப மாத்திரம் செய்யுங்கள், அனைத்தும்கூடும் என்பதையே இன்றுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தொடர்ந்துக் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். அதாவது முற்காலங்களில், “ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும்” என்று அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணினது போன்று நாமும் காணப்பட வேண்டும். இப்படியாகவே நாமும் ஜெபம்பண்ண வேண்டும் மற்றும் இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் வாழ்க்கையின் பாடங்களை, விசுவாசத்திற்கான பாடங்கள் (அ) அறிவுரைகள் என்று ஏற்றுக்கொள்ள நாம் தொடர்ந்து நாடுகின்றவர்களாக இருக்க வேண்டும். இங்குத் தெய்வீக வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதன் அவசியத்தை நாம் புறக்கணிக்கவில்லை. மாறாக, எங்கு விசுவாசம் காணப்படுகின்றதோ, அதற்கு ஏற்ப கொஞ்சமாகவோ, அதிகமாகவோ கிரியைகள் காணப்படும் என்பதையே நாம் தெரிவிக்கின்றோம். ஆகவே, நம்முடைய விசுவாசம் அதிகமாகக் காணப்படும்போது, நம்முடைய கிரியைகளும், திவ்விய ஒழுங்கிற்குக் கீழாகவே காணப்படும் என்பது நிச்சயமேயாகும். விசுவாசம் இல்லாமல் கர்த்தரைப் பிரியப்படுத்துவது என்பது கூடாத காரியம் என்று கூறும் நமது ஆதார வசனம் சரியாகவே உள்ளது.

விசுவாசம் விருத்திச் செய்யப்பட வேண்டும், வளர வேண்டும். கலிலேயாக் கடலில் வீசின புயலின் காரணமாகப் பயத்தில் சத்தமிட்ட அதே அப்போஸ்தலர்கள்தான், கர்த்தர் இல்லாதபோதும், அவர் இருப்பதை உணரமுடியாத தருணத்திலும் அவரை விசுவாசிக்குமளவுக்கு, அவர்களுடைய விசுவாசமானது படிப்படியாகப் பலப்பட்டது. இதுபோலவே கர்த்தர் மீதான விசுவாசத்தை விருத்திச் செய்வதும், அவர் மீதான, நமது விசுவாசம் வேரூன்றத்தக்கதாக, அவருடைய வார்த்தைகளிலுள்ள படிப்பினைகளையும், நமது ஜீவியத்தின் கடந்தகால அனுபவங்களையும் எண்ணிப்பார்ப்பதும் நம்முடைய அனுதின பாடங்களின் ஒரு பகுதியாகும்.

## “விசுவாசம் பரீட்சிக்கப்பட்ட பின்னர், விசுவாசத்திற்கான பலன் கொடுக்கப்பட்டது”

கர்த்தர் அவளுக்குப் பிரதியுத்தரமாக, “ஸ்திரீயே உன் விசுவாசம் பெரியது” என்று கூறினார். இவளது விசுவாசமானது, இவளுடைய மகளின் மீதான இவளது அன்பிலும் மற்றும் இவளின் தாழ்மையிலும், விடாமுயற்சியிலும், உறுதியிலும் பலமாய்க் காணப்பட்டது. மேலும், இவளது விசுவாசமானது, கர்த்தர் பார்க்கிற விதத்திலேயே இருந்ததே ஒழிய, கிரேக்கர்கள் மற்றும் புறஜாதிகளுடைய பொதுவான எண்ணங்களின் அடிப்படையில் காணப்படவில்லை. அதாவது, யூதர்கள் பாசாங்கு மாத்திரமே பண்ணுகின்றார்கள் என்றும், யூதர்களும், மற்ற ஜனங்களைப்போன்று

தெய்வீகத் தயவிற்குள் இல்லை என்றுமுள்ள கிரேக்கர்கள் மற்றும் புறஜாதிகளுடைய எண்ணங்கள் இவளுக்கு இல்லை. மாபெரும் இடர்பாடுகளையும் அதாவது, நமது கர்த்தருடைய வெளிப்படையான மறுப்புகளையும் ஜெயங்கொள்ளுமளவுக்கு, இவளுடைய விசுவாசம் பலமாய்க் காணப்பட்டது. இந்த அந்நிய ஸ்திரீயின் ஒவ்வொரு நடத்தையும், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் பிரகாசிக்கப்பட்ட ஜனங்களுக்கான மாதிரியாக நாம் கருதிக்கொள்வதில்லை. இவளுடைய விசுவாசத்திற்கு இருந்த பலமே, நாம் பின்பற்ற வேண்டிய ஒரே விஷயமாக உள்ளது. கர்த்தருடைய ஜனங்களாக ஆகியுள்ள நாம், அதாவது அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும், நாய்களாகவும் இராமல், பிதாவினுடைய குடும்பத்திற்குள்ளாகத் தத்தெடுக்கப்பட்டு, கர்த்தரினால் "சகோதரர்கள்" என்று அழைக்கப்படும் நாம், கர்த்தர் நமக்கு அருளுவதில் பிரியப்படாத விஷயங்களுக்காக, அழுவதோ (அ) கெஞ்சுவதோ (அ) மன்றாடுவதோ நமக்குத் தகுதியாய் இராது.

அழிந்துப்போகும் உணவுக்காக மாத்திரமே நமது நாடுதலும், வேண்டுதலும் காணப்படக்கூடாது என்று ஆண்டவர் கூறினதின் மூலமாக, புறஜாதிகள் நாடும் விஷயங்களுக்கும், அவருடைய சீஷர்களாக நாம் நாட வேண்டிய விஷயங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் கொடுத்தார்; ஏனெனில் புறஜாதிகள், பூமிக்குரிய விஷயங்களுக்காக மாத்திரமே விடாப்பிடியாக நாடுவார்கள்; இன்னுமாக முதலாவதாகத் தகுதியாய் இருக்கும் தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்றும், நம்முடைய நன்மைக்கு ஏதுவான இந்தப் பூமிக்குரிய அனைத்தும் நமக்குக் கூடக்கொடுக்கப்படும் என்றும் ஆண்டவர் கூறியுள்ளார். இருதயம் பரிசுத்தமாக்கப்படுவதற்கும், அவருடைய ஆவியினால் நிரப்பப்படுவதற்கும், ஆவிக்குரிய உணவிற்கும், புத்துணர்விற்கும் மற்றும் பலத்திற்காகவே, கர்த்தரிடத்தில் நம்முடைய விண்ணப்பங்களும், நம்முடைய வேண்டுதல்களும், நம்முடைய கூக்குரல்களும் காணப்பட வேண்டும்; மேலும் மாம்சத்திற்குரிய விஷயங்களைப் பொறுத்தமட்டில், புதிய சிருஷ்டிகளாக நம்முடைய நன்மைக்கடுத்த விஷயங்கள் எது என்பதை அவர் அறிவார். இவைகளை நாம் அவரிடத்தில் விட்டுவிட வேண்டும்; அவர் நமக்குக் கொடுத்திடாத காரியங்களுக்காக நாம் அவரை விடாப்பிடியாக வருந்தி கேட்பதில் அவர் பிரியப்படுவதில்லை. காரணம், இப்படியாக நாம் நடந்துக்கொள்வது என்பது அவரிடத்திலான விசுவாசத்தை வெளிப்படுத்துவதாக இராமல், மாறாக சந்தேகத்தை வெளிப்படுத்துகிறதாகவும், நமக்குத் தேவையானவற்றை அருளுவதாக அவர் கொடுத்துள்ள வாக்குத்தத்தத்தை, அவர் புறக்கணித்து விடுவாரோ (அ) மறந்துப் போய்விடுவாரோ என்ற நமது பயத்தை வெளிப்படுத்துகிறதாகவும்தான் இருக்கும்.

அவளிடத்தில் வெளிப்பட்ட விசுவாசம் போதுமானது என்றும், அவளுடைய விண்ணப்பத்திற்குப் பதில் அருளப்பட்டுள்ளது என்றும், அவளுடைய மகளிடமிருந்து பிசாசு போய்விட்டது என்றும் நமது கர்த்தர் அந்த ஸ்திரீயிடம் கூறினார். இதைக் கேட்ட உடனே அவள் வீட்டிற்குக் கடந்துப்போனது என்பது, இன்னுமாக அவளுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினது. அவள் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டாள்; அவர் தம்மை மேசியா என்று அறிவித்த பிரகாரம், மேசியாவாகவே இருந்தாரானால், அவரிடம் இருப்பதாக அவள் நம்பின வல்லமை அவரிடம் இருந்ததானால், அவர் தன்னிடம் சொஸ்தப்படுத்தியுள்ளேன் என்று பொய்யாகக் கூறமாட்டார் என அவள் நம்பிக்கைக் கொண்டிருந்தாள். இவ்விஷயத்தில், இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் விசுவாசமில்லாமல் காணப்படுகின்றனர். அதாவது, இந்தப் பாவப்பட்ட அந்நிய ஸ்திரீயைக்காட்டிலும், குறைவான விசுவாசம் பெற்றிருக்கின்றனர். கர்த்தரிடத்தில் வருபவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என்று அநேகருக்குக் கர்த்தருடைய வார்த்தைகள் நிச்சயம் அளித்தாலுங்கூட, இவர்களுக்குள் இருக்கும் குறைவான விசுவாசமானது, இவர்களுக்குள் சந்தேகத்தை எழுப்பி, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதே மன்னிக்கப்பட்டுவிட்டது என்று கர்த்தர் உறுதியளித்துள்ள, இவர்களுடைய பாவங்களுக்காக இவர்களைத் தொடர்ந்து புலம்பச்செய்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டே இருக்கச்செய்கின்றது. இவர்கள் விசுவாசத்தைச் செயல்படுத்தத் தவறிவிடுகின்றனர், மற்றும் இதற்கேற்ப ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அடைவதிலும் தவறிவிடுகின்றனர்.

இந்தப் பாவப்பட்ட (புறஜாதி) ஸ்திரீக்குத் தவிர, வேறு யாருக்கும் எதுவும் நமது கர்த்தர் செய்ததாகப் பதிவுகள் இல்லை; இன்னுமாக, இங்கு ஆவிக்குரிய படிப்பினைகள் சீஷர்களுக்கே தவிர, அந்த ஸ்திரீக்கு இல்லை; ஏனெனில், அந்த ஸ்திரீக்காகிலும் அல்லது அவ்விடத்தில் காணப்பட்ட வேறு எவருக்காகிலும் அவர் போதித்ததாகப் பதிவுகள் எதுவும் இல்லை. இங்கிருந்து நமது கர்த்தர் புறப்பட்டு, கிழக்கு நோக்கி, பாலஸ்தீனியாவின் வடக்கு எல்லை வழியாகப் பிரயாணம் பண்ணி, யோர்தான் நதியைக் கடந்து, தெற்கு நோக்கி, கலிலேயா கடலுக்கு நேராக வந்தார்.

இதற்கிடையில் ஒரு மலையில் கர்த்தர் கொஞ்சம் வாசம் பண்ணினார் என்றும், அங்குதான் ஜனக்கூட்டத்தார் தங்களது வியாதியஸ்தர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள் என்றும், முடவர்களும், குருடர்களும், ஊமையர்களும், சப்பாணிகளும், இயேசுவின் பாதத்தண்டைக்கு ஜனங்களால் கொண்டுவரப்பட்டார்கள் என்றும், இவர்களை இயேசு சொஸ்தப்படுத்தினார் என்றும், ஜனக்கூட்டத்தார் ஆச்சரியப்பட்டு இஸ்ரயேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்றும் மத்தேயு தெரிவிக்கின்றார்.

நம்முடைய இந்தப் பாடத்தில், திரளான சொஸ்தப்படுத்துதல்களில், ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பார்க்கலாம். ஊமையனாகவும், செவிடனாகவும் இருந்த ஒரு மனுஷன் இயேசுவினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டான். மேலும், அவனைக் கையாண்ட விஷயம் விநோதமாக இருக்கின்றது; கர்த்தர் அம்மனுஷனைத் தனியே கூட்டிக்கொண்டு போனார். அநேகமாக பாடத்தை அம்மனுஷனிடத்தில் பதிய வைப்பதற்காகவே, இப்படியாகச் செய்திருக்க வேண்டும். அம்மனுஷனுக்குக் கேட்கும் திறன் இல்லை. ஆகவே, செய்கைகள் மூலம், படிப்பினையைப் புகட்டினார். அவனது நாவையும், அவனது செவிகளையும் தொட்டு, வானத்தை அண்ணாந்துப்பார்த்து, பெருமூச்சு விட்டதின் மூலம், அம்மனிதனுக்கு உதவி செய்யும்பொருட்டு, பரலோக அனுதாபம் கடந்து வந்தது என்று தெரியப்படுத்தினார்; உடனே அம்மனுஷன் மேல் ஆசீர்வாதம் கடந்து வந்தது, அவன் சொஸ்தமடைந்தான். அநேகமாக அந்த வட்டாரத்தில் இதுதான் முதலாவது அற்புதமாக இருந்திருக்க வேண்டும். மேலும், மத்தேயு அவர்கள் பதிவு செய்துள்ளது போல, ஜனக்கூட்டத்தார் இதனால் கவரப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள். இவ்வற்புதத்தை அமைதலாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நமது கர்த்தர் கொடுத்திட்ட உத்தரவானது, கட்டளையாக இராமல், தாம் விளம்பரப்படுத்தப்படுவதை விரும்பவில்லை என்ற கருத்தைத் தெரிவிப்பதாகவே உள்ளது. எனினும், விசுவாசம் வெளிப்படுத்தப்படும் போதும், கஷ்டப்படுகின்றவர்கள் அவருக்கு முன்பாகக் காணப்படும் போதும், ஆசீர்வாதம் கொடுத்திட அவர் ஒருபோதும் மறுத்ததே இல்லை. ஆகவே, பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கென ஏற்றவேளை வரும்போது, கர்த்தர் யாரிடமிருந்தும், எந்த ஓர் ஆசீர்வாதத்தையும் விலக்கி வைப்பதில்லை என்றும், ஆசீர்வதிக்கப்பட விரும்புகின்ற அனைவரும், அவருடைய தயவைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் நாம் கற்பிக்கப்பட்டுள்ளோம்.

## "புரிந்துகொள்ளும் நமது கண்களும், செவிகளும் பாக்கியமுள்ளவைகள்"

கிறிஸ்துவுடன் கூடப் புதிய ஜீவனுள்ளவர்களாய் நடப்பதற்கும், அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்குமென, அடையாளமானவிதத்தில் முன்னமே உயிர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சிருஷ்டிகளாகிய நமக்கு, நம்முடைய கண்களும், செவிகளும் திறக்கப்பட்டுள்ளபடியாலும், நமது நாவுகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளபடியாலும், நாம் தேவனுடைய கிருபையைப் பார்ப்பதும், அனுபவிப்பதும் மாத்தரமல்லாமல், மற்றவர்களிடம் அவருடைய அன்பையும், தயவையும் குறித்துப் (நாம்) பேசவும் செய்யலாம். இப்பொழுது, அதாவது தற்காலத்தில் கர்த்தர் அருளும் சத்தியத்தைப் பற்றின விசேஷமான அறிவைப் பெற்றிருப்பவர்கள் சிலர், சத்தியம் அனைவருக்கும் உரியது அல்ல என்றும், சத்தியத்தை வழங்குவதற்கான நம்முடைய பிரயாசங்களில் நாம் யார் யாருக்கு தனிச் சிறப்புக் காண்பிக்க வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும் என்றும், நமக்கு முத்துக்கள் போன்றிருக்கும் கர்த்தருடைய இந்த மாபெரும் ஆசீர்வாதங்கள் அனைவருக்கும் உரியது அல்ல என்றும், நாம் பன்றிகளுக்கு முன்பாக, அதாவது கர்த்தருடைய தயவுகளை அறிவதற்கோ, ஏற்றுக்கொள்வதற்கோ உரிய பண்புகளை வெளிப்படுத்தாதவர்கள் முன்பாக நாம் முத்துக்களைப் போடக்கூடாது என்றும் கருத்துக்கள் கொண்டிருக்கின்றனர். ஆனால், இப்பாடத்தில் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனுக்கு இருந்ததுபோல, இது நம்மால் அடக்கி மறைத்து வைத்துக்கொள்ள முடியாதளவுக்கு மிகவும் நல்ல செய்தியாகும்; இதைப் பற்றி (சத்தியத்தை) நாமும் அறிவிக்க விரும்புகின்றோம். ஏனெனில், இது அவ்வளவுக்கு அதிகமானவைகளை நமக்குச் செய்துள்ளது; குருடர்களாகவும், செவிடர்களாகவும் இருக்கும் அனைவரும் மாபெரும் வைத்தியனிடம் வந்து, சொஸ்தமடைய வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்; நற்செய்தியைச் சொல்வதற்கான தங்களுடைய பிரயாசங்களில் திக்கித் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய மகிமையான காரியங்களைத் தெளிவாகப் பேசத்தக்கதாக, ஆண்டவரினால் இவர்ளுடைய உதடுகளையும் தொடப் பெற்றிருக்க நாங்கள் (இப்பாடத்தின் ஆசிரியர்) விரும்புகின்றோம். இப்பாடத்தில் சொஸ்தமடைந்ததாக நாம் பார்த்துள்ள மனுஷனை ஆண்டவர் கடிந்துக்கொள்ளாதது போன்று, கேட்பதற்குச் செவிகள் இல்லாதவர்களுக்கு

நற்செய்தி அறிவிக்கத்தக்கதாக நாம் செல்லும்பொழுதும் அல்லது பன்றி போன்றுக் காணப்பட்டும், ஆவிக்குரிய காரியங்கள் மீது விருப்பமற்றவர்களுமாய்க் காணப்பட்டும் அல்லது ஆட்டுக்குட்டியானவர் போகும் இடமெல்லாம் போகாதவர்களாய்க் காணப்பட்டும் இருப்பவர்களை, சீஷர்களாக்கிட நாம் முயற்சிக்கும் பொழுதும், அதாவது இப்படியாக நாம் செய்யத்தக்கதாக நம்முடைய வைராக்கியம் ஒருவேளை காணப்பட்டாலுங்கூட நம்மை ஆண்டவர் கடிந்துக்கொள்வதில்லை.

நாம் இந்த அழியக்கூடிய சரீரத்தில் காணப்பட்டாலும், மனுஷர்கள் மத்தியில் காணப்பட்டாலும் கிறிஸ்துவுடன், நம்முடைய மனதின் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டுள்ள நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துக்கொள்ள வேண்டும் என்பதும், நாம் கர்த்தருக்கு ஒப்பாக, காணப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாக அவரைத் தரிசித்து அவருடைய மகிமையில் பங்கடைந்து, மகிமையான இராஜ்யத்தின் கிருபைகளை ஏற்றுக்கொள்கிறவர்களுக்குக் குணமாக்குதலையும், ஜீவனுக்கான ஆசீர்வாதங்களையும் அளிப்பதில் அவரோடு இணைந்துக் காணப்படத்தக்கதாக, முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தை நாம் எதிர்நோக்கினவர்களாக இருக்க வேண்டும் என்பதும்தான் இப்பாடத்தின் முக்கியப் பகுதியாகும்.

**ஆமென்!**

---

R 3354

# "எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள்"

## லூக்கா 12:35-48

"எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்." (வசனம் 37)

சம்பவிக்கவிருக்கும் தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்து நமது கர்த்தர் போதனைகளைக் கூறின பிற்பாடு, மற்றும் மறுரூப மலையில் கொடுத்திட்ட தரிசனமானது மேலும் இப்படிப்பினையை அப்போஸ்தலர்களுக்கு வலியுறுத்தின பிற்பாடு, நமது கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையைக்குறித்தும், இரண்டாம் வருகை வரைக்குமான இடைப்பட்டக் காலத்தில் அப்போஸ்தலர்கள் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மையைக்குறித்தும், அப்போஸ்தலர்களுக்கு விளக்க ஆரம்பித்தார். கர்த்தர் பூமியில் இல்லாதிருக்கும் காலங்களில், அவருடைய ஜனங்கள் தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும். அவர்கள் அரைக்கட்டிக்கொண்டு இருப்பது என்பது, அவர்கள் எல்லா வேளைகளிலும் ஊழியத்திற்கு ஆயத்தமாய் இருப்பதை, அதாவது இராஜ்யத்திற்கு அடுத்த வேலைகளில் உற்சாகமாகப் பங்கெடுத்துக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. அக்கால வழக்கத்தின்படி, தளர்வான நீண்ட வஸ்திரங்கள் பயன்படுத்தப்பட்டன, மேலும் வேலைகள் செய்யத்தக்கதாக, அரைகளில் கச்சைக் கட்டப்பட்டது. ஓய்வு எடுக்கும்போது கச்சைகள் தளர்த்தப்பட்டன. ஆகவே அரைக்கட்டிக்கொண்டிருப்பதாக வசனப்பகுதிகளில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பது, கர்த்தர் நம்மோடு பூமியில் இல்லாமல் இருக்கும் பொழுது, கர்த்தருடைய ஜனங்கள் தொடர்ச்சியாக ஊழியங்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் எனும் படிப்பினையைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நாம் இவ்வுலகத்திற்கடுத்தக் கவலைகளினால் அமிழ்த்தப்பட்டு, தூங்கிக்கொண்டிருக்கக் கூடாது. மேலும் இவ்வாறாக தூங்கிக்கொண்டு, நமக்கென அளிக்கப்பட்ட கடமையைச் செய்வதைத் தவிர்த்தல் கூடாது.

கர்த்தருடைய வேலைக்காரர்கள் ஒவ்வொருவரும், ஒளியைச் சுமப்பவராக அடையாளப்படுத்தப்படுகின்றனர்; மேலும் அவனுடைய நற்கிரியைகளைக் கண்டு மனுஷர்கள் பரலோகத்திலுள்ள பிதாவை மகிமைப்படுத்துவதற்கு ஏதுவாக, அவன் தன்னுடைய ஒளியை, மனுஷர்கள் முன்பாக பிரகாசிக்கப் பண்ண வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றான். இருளும், அறியாமையும், மூடநம்பிக்கையும், பாவமும் உலகத்தில் காணப்பட்டிருக்க, கர்த்தருடைய சீஷர்களுக்கு தெய்வீக வெளிப்பாடு, ஞானம் மற்றும் புரிந்துக்கொள்ளுதலுக்கான ஒளி அருளப்பட்டிருக்கின்றது; இந்த ஒளியானது இவர்களை மறுரூபமாக்கி, புதிய சிருஷ்டிகளாக ஆக்குவதோடுகூட, இவர்கள் வாயிலாக, இவர்களுடன் தொடர்புக்குள் வரும் அனைவருக்கும் பிரகாசிக்கின்றதாகவும் இருக்கின்றது என்பதே சித்தரிக்கப்பட்டுள்ளது. "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கின்றீர்கள்" மாபெரும் ஒளியாகிய, ஆயிர வருட காலை வேளையின் மகிமையான சூரிய உதயம் இன்னமும் நடைபெறவில்லை என்பதும், காலை வேளைக்குக் காத்திருப்பவர்களாகவும், அதற்கு விழித்திருந்துப் பார்த்துக்கொண்டிருப்பவர்களாகவும், கர்த்தருடைய ஜனங்கள் இன்னமும் உலகத்தில் சிறு ஒளிகளாக, இருளின் மத்தியில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதும் இங்கு நாம் பார்க்கும் கருத்தாகும். இதற்கு இசைவாகவே தீர்க்கத்தரிசியின் வார்த்தைகளாகிய . . . "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்"என்று காணப்படுகின்றது. இருள், அறியாமை மற்றும் பாவத்தின் இந்த இரவு வேளையானது, தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நம்முடைய சந்ததிமேல் வந்த மரண சாபத்துடன் ஆரம்பமானது; மேலும் சர்வ சிருஷ்டியானது காலைக்காக காத்திருந்து தேவனுடைய புத்திரர்களாகிய, கிறிஸ்து இயேசுவும், இராஜ்யத்தில் அவருடன் உடன் சுதந்தரர்களாக இருக்கும் அவருடைய சகோதரர் வெளிப்படுவதற்குக் காத்திருந்து, ஏகமாய்த் தவித்துக் கொண்டிருக்கின்றது.

தம்முடைய பின்னடியார்களிடம் காணப்பட வேண்டிய விழிப்பும், ஜாக்கிரதையாய் இருத்தலையும் குறித்து விவரிக்கும் வண்ணமாக, நமது கர்த்தர் ஓர் உவமையைப் பேசினார். வீட்டெஜமான் தன்னுடைய வீட்டில் தன்னுடைய மணவாட்டியைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு வரும் இரவு (அ) காலை வேளையில், வேலைக்காரர்கள் அதிகளவில் வழிப்பாய் இருப்பதற்கு (அ) வீட்டாருடைய நலனில் அதிகம் அக்கறையாய் இருப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுவது போன்று, வேறு எந்தத் தருணத்திலும், யூதர்கள் மத்தியில் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை. இந்த ஒரு விஷயத்தைத் தம்முடைய பின்னடியார்கள் தம்முடைய இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கும் போது,

கொண்டிருக்க வேண்டிய விழிப்புத்தன்மையை விளக்குவதற்கு, கர்த்தர் தேர்ந்தெடுத்துக்கொண்டார். உண்மையைச் சொல்லப்போனால் இவ்வுவமையிலுள்ள வேலைக்காரர்கள், வேறொரு உவமையில் உள்ள மணவாட்டிகளாக இருக்கின்றனர்; ஆனால் காரியம் அங்கு வேறு கண்ணோட்டத்திலிருந்து விவரிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. இங்குள்ள முக்கியமான பாடம் என்னவெனில், ஊழியத்தில் கடுமையான முயற்சி காணப்பட வேண்டும், இன்னுமாக ஆண்டவருடைய நோக்கத்திற்கடுத்தக் காரியங்களில் விழிப்பாய்க் காணப்பட வேண்டும், இன்னுமாக அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றின அவருடைய வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் கொண்டிருக்க வேண்டும்; அவருடைய வருகையைப் பற்றின எதிர்ப்பார்ப்பானது, நேர்த்தியாய் ஊழியம் செய்வதற்குத் தூண்டுதலாக (அ) உதவியாக இருக்கின்றது. எஜமான் தன்னுடைய கூட்டத்தாருடன் திரும்பி வரும் போது, தான் வந்திருப்பதைத் தெரிவிக்கையில், கதவைத் திறப்பதற்கு ஆயத்தமாய் இருப்பதற்குப் பதிலாக ஒருவேளை வேலைக்காரர்கள் தூங்கிக் கொண்டிருப்பதை எஜமான் காண்பது என்பது, எஜமான் மீதான வேலைக்காரர்களின் அன்பிலும், ஈடுபாட்டிலும், அக்கறையிலும் இருக்கும் குறைவை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கும்.

## "நீ விழித்திராவிட்டால், நீ அறிந்துக்கொள்ள மாட்டாய்"

நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது அவருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் அவர் வந்திருப்பதை உணர்ந்துக்கொள்வதற்கு முன்னதாகவே, அவர் வந்து காணப்பட்டிருப்பார் என்ற காரியத்தை இந்த உவமை தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவருடைய வந்திருத்தலானது, கதவுத் தட்டப்படுவதன் மூலமாக அறிவிக்கப்படும்; கதவைத் தட்டுதல் என்பது, ஏதோ விசேஷித்த ஊழியக்காரன் அல்லது ஊழியக்காரர்கள், ஒன்றில் வாயின் வார்த்தைகள் (அ) அச்சடிக்கப்பட்ட காகிதத்தின் வாயிலாக ஆண்டவருடைய பிரசன்னத்தின் சான்றுகளை முன்வைக்கப்படுவதன் மூலமான ஓர் அறிவித்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு, காலத் தீர்க்கதரிசனங்கள் பற்றின வெளியீடானது, அந்தக் காலம் நிறைவேறியுள்ளதையும், சுவிசேஷ யுகத்தினுடைய இறுதியிலும், ஆயிர வருட யுகத்தின் ஆரம்பத்திலும் நடைப்பெறும் சம்பவங்களைக் குறிப்பிடும் சில தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளதையும், வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில அடையாளங்கள் நிறைவேறியுள்ளதையும் காட்டுகின்றது; இத்தகைய சாட்சிகளே, கதவு தட்டுதலின் வடிவில் காணப்படுகின்றது; இந்தக் கதவு தட்டப்படுதலின் சத்தமானது, அக்காலத்தில் விழித்திருக்கும் கர்த்தருடைய ஊழியர்களினால் கேட்கப்படும். ஊழியர்கள் இந்தக் கதவு தட்டுதலைச் செய்வதில்லை, மாறாக இந்தக் கதவு தட்டுதலையும், அறிவித்தலையும் பண்ணுவதற்குப் பயன்படத்தக்கதாக, அவர் தேர்ந்தெடுக்கும் சக்திகளையும், பிரதிநிதிகளையும் அவரே செயல்படுத்துவார்.

அக்கால கட்டத்தில் விழிப்பாய் இருந்து, கதவு தட்டும் சத்தத்தைக் கேட்டு, அதைப் புரிந்துக்கொண்டு, ஆண்டவரை வரவேற்பவர்களாகிய ஊழியர்களுக்கு, ஓர் ஆசீர்வாதம் வாக்களிக்கப்பட்டுள்ளது. 39-ஆம் வசனமானது, ஊழியர்களைத் தவிர வேறு எவரும் கதவு தட்டப்படுதலை உணர்ந்துக்கொள்ள மாட்டார்கள், அதாவது பொதுவான உலக ஜனமானது ஆண்டவர் திரும்பி வரும் வேளையை அறிவதில்லை, மாறாக அவருடைய ஊழியக்காரர்கள் மாத்திரமே அறிந்துக்கொள்வார்கள் என்பதைத் தெளிவாய்க் காண்பிக்கின்றது. எஜமானுடைய வருகைக்கெனக் குறிப்பிட்ட நேரம் எதுவும் சொல்லப்படவில்லை, மாறாக காலங்களையும், வேளைகளையும் அறிவது அவர்களுக்கடுத்த வேலை இல்லை என்பதும், மாறாக அவர்கள் முதலாம் ஜாமத்தில் மாத்திரமல்லாமல், இரண்டாம், மூன்றாம் ஜாமங்களிலும், எந்த ஜாமத்திலும் எஜமான் கதவைத் தட்டும் சத்தம் கேட்கையில், தாங்கள் உடனடியாகச் செயல்படத்தக்கதாகத் தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும் என்பதும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுள்ளது. எஜமான் எப்போது வருவார் என்று ஊழியக்காரர்கள் ஒருபோதும் அறிந்துக்கொள்ளமாட்டார்கள் என்பதாகக் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். அவருடைய வந்திருத்தலின் போது, விழிப்பாய்க் காத்திருந்து, கவனித்துக் கொண்டிருக்கும் தம்முடைய ஊழியர்கள் அனைவராலும் உணர்ந்துக்கொள்ளப்படத்தக்கதாக, அவர் கதவு தட்டுதலைத் தெரியப்படுத்துவார் என்பதே கருத்தாக இருக்கின்றது. கதவு தட்டும் சத்தத்தை ஊழியர்களால் ஒருவேளை அறிந்துக்கொள்ள முடியாது/சாத்தியம் இல்லை என்றால், கதவு தட்டுதலின் பயன் என்ன? கதவு தட்டுதல் என்பது வந்திருத்தலுக்கான சாட்சியாக இருக்கின்றது; ஊழியர்கள் முன்கூட்டியே அறிந்துக்கொள்ள முடியாது, மாறாக வந்திருக்கும் போதுதான் அறிந்துக்கொள்வார்கள்; அதுவும் கண்களினால் பார்க்காமல் அறிந்துக்கொள்வார்கள்.

## "ஆண்டவர் தம்முடைய ஊழியர்களுக்கு ஊழியஞ்செய்வார்"

இந்த ஊழியர்களுக்கான விசேஷித்த பலன் என்ன? "அவர் அரைக்கட்டிக்கொண்டு (அவர்களுக்கு ஊழியக்காரனாகி) அவர்களைப் பந்தியிருக்கச் செய்து சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்" என்று உவமை தெரிவிக்கின்றது. இது நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையில், அவருடைய வந்திருத்தலை அவருடைய ஊழியக்காரர்களில் எவரேனும் அறிந்துக்கொள்வதற்கு முன்னதாகவே வந்து இருப்பார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் வந்தாகிவிட்டது என்ற அறிவிப்பைக் கொடுப்பார் (அ) கதவைத் தட்டுவார். அவரை எதிர்ப்பார்த்தும், கதவு தட்டப்படுதலுக்கு விழிப்பாய் இருந்தும், ஆயத்தமாய் இருந்தவர்கள் மாத்திரமே, கதவு தட்டப்படுதலைக் கேட்பவர்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் விசேஷித்த ஆவிக்குரிய விருந்தைப் பெற்றுக்கொள்வார்கள். அது விசேஷமாய் இருக்கும், காரணம் அது விசேஷித்தத் தருணத்தில் கொடுக்கப்பட்டதினாலும் மற்றும் அவர்களுடைய அக்கறையும், ஈடுபாட்டையும் வெளிப்படுத்தினதற்கான, விசேஷித்தமான பலனாக இருக்க நோக்கம் கொள்ளப்பட்டதினாலும் ஆகும். அது விசேஷமானது காரணம், வீட்டின் எஜமான், வீட்டிற்கு ஊழியக்காரனாக ஆகியுள்ளார், மேலும் கிருபை மற்றும் ஆசீர்வாதங்களில் சகல ஐசுவரியங்களின் திறவுகோல்களையும்கொண்டு, அவர் தம்முடைய பொக்கிஷசாலையிலிருந்து, உணவு சாலையிலிருந்து பழையதும், புதியதும், பலமானதும், மென்மையானதுமான அனைத்தையும் வெளிக்கொண்டு வந்துள்ளார். முன்பு ஒருபோதும் அருளப்படாத அளவுக்கு உண்மையுள்ளவர்கள், இராஜரிகமான விருந்தை நிச்சயமாகப் பெற்றுக்கொள்வார்கள்.

நாம் கூறும் இவ்விஷயங்கள் ஏற்கெனவே நிறைவேறிவிட்டது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசனங்களில் குறிப்பிட்டுள்ளபடி, கர்த்தருடைய கதவைத் தட்டுதல் அல்லது அதிகாரப் பூர்வமான அறிவிப்பு, 1875-ஆம் வருடம் முதற்கொண்டு கொடுக்கப்படுகின்றது; மேலும் இன்னமும் கொடுக்கப்பட்டு வருகின்றது. உவமையில் கதவு தட்டப்படுதல் என்பது, ஒரு சில விநாடிகள்தான் செய்யப்பட்டது, ஆனால் இது நிறைவேறுவதற்குச் சில வருடங்கள் எடுத்துக்கொள்ளப்படும். (விசுவாச) வீட்டாரின் ஊழியக்காரர்கள் கவனித்துக்கொண்டு வருகின்றனர்; மேலும் ஒவ்வொருவனும் கர்த்தருடைய வந்திருத்தல் குறித்த உண்மைக்குத் தன்னுடைய இருதயத்தையும், மனதையும் திறக்கையில், வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தின் நிறைவேறுதலை அடைகிறான், அதாவது ஆவிக்குரிய கொழுத்தப் பதார்த்தங்களுடைய விருந்தை அடைகின்றான், அதாவது தெய்வீகத் திட்டம் பற்றின உணர்ந்துக்கொள்ளுதலையும், புரிந்துக்கொள்ளுதலையும், மற்றும் முன்பு ஒருபோதும் இல்லாத அளவுக்கு ஆத்துமா போஷிக்கப்படுதலையும், பெலப்படுத்தப்படுதலையும் அடைகின்றான். ஊழியக்காரர்களுக்கு ஆண்டவர் ஊழியம் புரிவது என்பது, ஒட்டுமொத்தமாய் அனைவருக்கும் கொடுக்கப்படும் விருந்தாய் இராமல், தனிப்பட்ட விதத்திலான வேலையாகவே புரிந்துக்கொள்ளப்பட வேண்டும்; இக்காரியம் "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் (தனிப்பட்ட ஒருவன்) என் சத்தத்தைக் (கதவு தட்டுதலைக்) கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" என்ற வார்த்தைகளில் உறுதிப்படுகின்றது. இந்த வெளிப்படுத்தல் 3:20-ஆம் வசனம் என்பது, ஏழாம் காலக்கட்ட சபைக்கானச் செய்தியாகும்.

## "ஆயிரம் வருஷம் இராச்சாமம் போலவும் இருக்கின்றது"

இரவு நேரத்தைக் கணக்கிடும் முற்காலத்து யூத முறைமையின்படி, இரண்டாம் ஜாமம் என்பது, பத்திலிருந்து இரண்டு மணி வரைக்கும் மற்றும் மூன்றாம் ஜாமம் என்பது, இரண்டிலிருந்து ஆறுமணி வரைக்குமாகக் காணப்படுகின்றது. எஜமான் எந்த ஜாமத்தில் வருவார் என எதிர்ப்பார்க்கப்படலாம் என்று உவமை தெரிவிப்பதில்லை. தாமதத்திற்கு ஏற்ப, ஊழியக்காரர்களின் உண்மை பரீட்சிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. முதலாம் ஜாமத்தில் தூங்காமல் விழித்திருப்பது என்பது, அநேகருக்குச் சுலபமாய் இருக்கும், ஆனால் இரண்டாம் ஜாமத்தில், அநேகரால் விழித்திருக்க முடிகிறதில்லை, இன்னும் வெகுசிலரே மூன்றாம் ஜாமத்தில் விழித்திருப்பார்கள். உவமையிலுள்ள இக்காரியத்திற்கு இசைவாகவே, இன்று மணவாளனுடைய வருகை மற்றும் அவருடைய உண்மையுள்ள வீட்டாருக்குக்கொண்டு வரப்படும் இராஜ்யத்தின் மகிமையான காரியங்கள் தொடர்புடைய காரியங்களில், கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் தூக்கமயக்கம் காணப்படுவதை நாம் காண்கின்றோம். சீயோனில் அநேகர் தூங்கிக்கொண்டிருக்கின்றனர்; அநேகர் இவ்வுலகத்திற்கடுத்த கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் அமிழ்த்தப்பட்டுள்ளனர். உலகப்பிரகாரமான ஜனங்கள் மாத்திரமே வியாபாரத்தையும், பணத்தையும்,

இன்பங்களையும் தெய்வமாக ஆக்கிக்கொள்ளவில்லை, மாறாக இருதயத்தில் நீதியை விரும்புகின்றவர்களும், கர்த்தருடைய ஊழியர்களாகக் கருதப்படுவதற்கு விரும்புகிறவர்களும் கூட, கடுமையாக உலகத்தின் காரியங்களில் அமிழ்ந்து மூழ்கி காணப்படுகின்றனர். இவர்களுடைய இருதயங்கள் இவைகளினால் மிகவும் நிரம்பியுள்ளபடியினாலும், இவர்களுடைய மனங்கள் இன்பத்தின், தனிப்பட்டக் காரியங்களின் மற்றும் சபை மார்க்கத்தின் கனவுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதினாலும், இவர்களால் கதவுத் தட்டப்படுதலைக் கேட்க முடிவதில்லை. இவர்கள் ஆண்டவருடைய வந்திருத்தலை அறிந்துக்கொள்வதில்லை; இவர்கள், கர்த்தருடைய ஜனங்களால் நீண்ட காலமாய்க் காத்திருக்கப்பட்டு, "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என உண்மையாய் ஜெபம் ஏறெடுக்கப்பட்டக் காரியம் தொடர்பான, இந்த அருமையான அறிவிப்பிற்கும் தங்களுடைய இருதயங்களைத் திறந்து வைக்கவில்லை. இதன் விளைவாக இவர்கள் நம்முடைய கர்த்தருடைய உவமையிலும், தானியேல் தீர்க்கத்தரிசனத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ள மாபெரும் ஆசீர்வாதத்தை இழக்கின்றவர்களாய் ஆகுகிறார்கள், "ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்" (தானியேல் 12:12).

## "அவருடைய வந்திருத்தலை உலகம் அறியாது"

"திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள்" (லூக்கா 12:39). திருடன் வருகிறவிதமான வருகைப் பற்றி இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது; மேலும் கன்னமிடவொட்டான் என்பதற்கான கிரேக்க வார்த்தையினுடைய அர்த்தம் "உள்ளுக்குத் தோண்டுதல்" என்பதாகும். முற்காலத்தில் பெரும்பான்மையான வீடுகள் கல்லினாலோ, செங்கல்லினாலோ செய்யப்படாமல், காய்ந்த மண்ணினாலே கட்டப்பட்டன; இது கிட்டத்தட்ட மேற்குப் பகுதிகளிலும், மெக்சிகோவிலுமுள்ள சில இடங்களிலும் கட்டப்படும் அடோப் வீடுகள் (adobe houses) போன்றுக் காணப்படும். கதவின் வழியாக பலவந்தம் பண்ணி உள்ளே வருவதை விட, சுவரின் அருகே தோண்டுவதன் மூலம் சீக்கிரமாய் இம்மாதிரியான வீடுகளுக்குள் பிரவேசித்திடலாம். வீட்டெஜமான், கர்த்தரைக் குறிக்க முடியாது, ஏனெனில் வீடு, "தற்கால தீமையான உலகத்தை," தற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமுதாய அமைப்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தற்கால அமைப்புகளுக்குச் சாத்தான், "இவ்வுலகத்தின் தேவனாகவும்," "இவ்வுலகத்தின் அதிபதியாகவும்" இருப்பதினாலுங்கூட, இங்கு வரும் வீட்டெஜமான், சாத்தானாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இங்கு வரும் வீட்டெஜமான், பூமிக்குரிய அரசாங்கங்களைக் குறிப்பதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் அதாவது தானியேல் கண்ட நாலாம் மிருகம் மற்றும் சிலையின் பத்து விரல்களாகிய பிரதிநிதிகளை, அதிகாரங்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

கர்த்தருடைய ஊழியர்கள் மத்தியில், விழித்திருக்கும் ஊழியக்காரர்களால் கேட்கப்படுவதும், அதே வேளையில், தூங்கியும், உலகக் கவலைகளில் அமிழ்த்தப்பட்டும் காணப்படும் அவருடைய ஊழியக்காரர்களால் கேட்கப்படாமல் இருப்பதுமாகிய கர்த்தருடைய இரண்டாம் வருகை மற்றும் கதவு தட்டுதலின் காரியமானது, முற்றிலுமாக உலகத்தாரால் அறிந்துக்கொள்ளப்படுவதில்லை. இவர்களைப் பொறுத்தமட்டில், அவருடைய வந்திருத்தல் என்பது, இவர்கள் நீண்ட காலமாய் எதிர்ப்பார்த்து, ஊழியம் செய்த எஜமானாய் இருப்பதில்லை, மாறாக கர்த்தரை இவர்கள் எதிராளியாக கருதுவார்கள், ஏனெனில், அவர் இல்லாத வேளையில், இவர்கள் அவருடைய வீட்டை எடுத்துக்கொண்டு, அவருடைய விருப்பங்களுக்கு மாறாக அதைப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் ஒருவேளை அவருடைய வருகையின் நேரத்தை அறிந்திருப்பார்களானால், இவர்கள் ஏதாகிலும் விதத்தில் தங்களை வலுப்படுத்திக்கொண்டு, தற்கால அமைப்புகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்கப் பண்ணுவதற்கும் முயன்றிருப்பார்கள்.

உலகத்தின் மீது திருடனாய் வருதல் என்பது அமைதியாய் வருதலை, ஆரவாரம் இல்லாமல், எவரும் அறியாதவாறு, சத்தமில்லாமல் அல்லது பறைசாற்றுவோன் இல்லாமல் வருதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆண்டவர் தம்முடைய ஊழியக்காரர்களுக்குக் கதவைத் தட்டிக்கொண்டிருப்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது போன்று, பலவானுடைய வீட்டிற்குள் உடைத்துப் புகுவது என்பது அடையாளப்படுத்தும் தற்கால அமைப்புகள், அதாவது அரசியல், மதம், சட்டம், பொருளாதாரம் பற்றின அமைப்புகளுக்குள், உடைத்துப் புகுவதும் ஏற்கெனவே நடைபெற ஆரம்பமாகிவிட்டது. ஒட்டுமொத்த சமுதாய அமைப்பும் புதிய பிரபுவின்

கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படுகின்றது. அவர் தம்முடைய சேனைகளை ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கின்றார். மேலும் மனுஷனுடைய கோபம் தமக்குத் துதியை உண்டாக்குவதற்கும், சுயநலத்தின்மேல் கட்டப்பட்டுள்ள ஒவ்வொரு அமைப்பையும் கவிழ்த்துவதாகிய தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும் செய்வார். விழுகை மகாபெரியதாய்க் காணப்படும். "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்." "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என அவருடையவர்கள் அனைவரும் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும், கர்த்தருடைய பிரம்மாண்டமான இராஜ்யத்தை, இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தருமானவர் அழிவுகளின்மேல் கட்டுவார்; மேலும் கர்த்தரால் இந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது அது, "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாக" நிச்சயமாய் காணப்படும் (ஆகாய் 2:7).

## "நீங்கள் நினையாத நாழிகையிலே"

இப்பாடத்தின் சாரமானது 40-ஆம் வசனத்தில் சுருக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது; "அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்" (லூக்கா 12:40). மனுஷகுமாரனுடைய வருகையின் வேளையைக் குறித்து எவரும் அறிந்திருக்கமாட்டார்கள். முன்கூட்டியே அறிந்துக்கொள்ளும் விதத்தில், அவ்வேளை தெரிவிக்கப்படவில்லை. அவர் கதவைத் தட்டுதலே, அவருடைய பிரசன்னத்திற்கான முதல் சுட்டிக்காட்டுதலாகும். இப்படியாகவே நிறைவேறியும் உள்ளது; கர்த்தருடைய வருகை எப்போது நடக்கும் என்று நம்மில் எவரும் முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை; வருகை சம்பவித்தப் பிற்பாடே, நாம் கதவு தட்டப்படுதலைக் கேட்டோம்; அதாவது பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களின் வாயிலான அவருடைய சத்தமானது, நாம் ஏற்கெனவே அறுவடை காலத்திலும், மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தின் நாட்களிலும் காணப்படுகின்றோம் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது. "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமானின் வந்திருத்தலின் காலத்திலும் நடக்கும்" என்ற கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறியுள்ளது (மத்தேயு 24:37). நோவாவின் நாட்களில் சம்பவிக்கயிருந்த சம்பவங்களைக் குறித்து, உலகமானது அறியாமையில் இருந்து, அறியாமையில் புசித்தும், குடித்தும், நட்டும், கட்டியும் காணப்பட்டது போன்று, மனுஷகுமாரனுடைய வந்திருத்தலின் காலங்களிலும் காணப்படும் உலகமானது, அவருடைய வந்திருத்தல் பற்றின உண்மையைக்குறித்த அறியாமையில் காணப்பட்டு, ஜீவியத்தின் அன்றாட காரியங்களை வழக்கம் போல நடத்திக்கொண்டிருப்பார்கள் என்னும் கருத்தையே மேற்கூறப்பட்டுள்ள வசனம் தெரிவிக்கின்றது. "சகோதரர்கள்" மாத்திரமே கதவு தட்டும் சத்தத்தைக் கேட்டு, வந்திருத்தலை உணர்ந்துக்கொண்டு, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

பன்னிரண்டு பேருக்கு மாத்திரமாகவா அல்லது சீஷர்களாகும் அனைவருக்கும் இந்த உவமை பொருந்துமா, இல்லையா என்று பேதுரு கேட்டார். இயேசு, "பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன் யாவன்?" (லூக்கா 12:42) என்று பதிலாகக் கொடுத்தப்போது, இக்கேள்வியைப் புறக்கணித்தவராகக் காணப்பட்டார். உவமையைப் புரிந்துக்கொள்வதற்கான சரியான வேளை வரும்போது, உவமையானது, கேள்விக்கான பதிலைத் தெளிவாய் முன்வைக்கும் என்பதே கருத்தாகும்; அதாவது உவமையானது நிறைவேறும் காலத்தில், கர்த்தர் இக்காரியங்களை, தம்முடைய ஊழியக்காரர்கள் அனைவரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு, விசுவாச வீட்டாரில் ஓர் ஊழியக்காரனை நியமிப்பார் என்பதும், இக்கடமைகளை நிறைவேற்ற வேண்டிய அந்த ஊழியக்காரனுக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றது என்பதுமாகும். ஒருவேளை அந்த ஊழியக்காரன் இவைகளை உண்மையாய்ச் செய்வாரானால், மாபெரும் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்; ஆனால் ஒருவேளை உண்மையாய்ச் செய்யவில்லை என்றால் கடுமையான தண்டனையை அடைவார். ஒருவேளை அந்த ஊழியக்காரன் உண்மையாய் இருந்தாரானால், தனது வேலையைத் தொடர்ந்து செய்யலாம். ஆனால் ஒருவேளை உண்மையில்லாமல் இருப்பாரானால், அவ்வூழியக்காரன் தள்ளப்பட்டு, வேறொருவன் அந்த ஸ்தானத்தையும், அந்த ஸ்தானத்திற்கான பொறுப்புகளையும் எடுத்துக்கொள்வான் என்பதும் கருத்தாகும்.

## “உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன்”

நமது கர்த்தருடைய வார்த்தைகள், பல பேர் அடங்கிய விசாரணைக்காரர்களைக் குறிப்பதாக அர்த்தங்கொள்வதற்கு நாம் முற்படலாம், அதாவது இவ்வுமையில் குறிப்பிடப்படும் விசாரணைக்காரன், குறிப்பிட்ட சகோதரர்களின் எண்ணிக்கையுடைய வகுப்பாரைக்குறிப்பதாக அர்த்தங்கொள்வதற்கு நாம் முற்படலாம். இப்படியாக அர்த்தங்கொள்ள முற்படும் விஷயத்தில், அநேக சிக்கல்களும் ஏற்படுகின்றது.

(1) விசாரணைக்காரன் என்பதைச் சபையில் ஒரு வகுப்பாராக அனுமானித்துக்கொள்வது என்பது, விசுவாச வீட்டாருக்கு, உடன் ஊழியர்களுக்கு இந்த விசாரணைக்காரன் ஏற்றக்கால சத்தியத்தை வழங்குவதினால், மீதமான சபை ஜனங்களிடமிருந்து இந்த விசாரணைக்காரன் வகுப்பார் தனிப்பட்டவர்களாக, அதிகாரமுடைய வகுப்பாராக அல்லது சபை குருமார் தொகுதியாகக் (clerical class) கருதப்பட வேண்டியிருக்கும் நிலையைக்குறிப்பதாய் இருக்கும். கிறிஸ்துவின் சபையானது குருமார் (clergy) தொகுதியையும், மற்றும் பொது ஜனங்கள் (laity) தொகுதியையும் உடையதல்ல, மாறாக, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கின்றீர்கள்" என்றும், "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கின்றார்" என்றுமே நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 23;10; கலாத்தியர் 3:28). அந்த ஏற்றவேளையில் கர்த்தர் தம்முடைய சபையில் ஓர் அங்கத்தைப் பயன்படுத்துவார் என்றும், அந்த ஓர் அங்கத்தைக் கருவியாகப் பயன்படுத்தி, அக்காலத்திற்கு ஏற்ற செய்திகளையும், ஆவிக்குரிய போஷாக்குகளையும் அனுப்பி வைப்பார் என்றும் எடுத்துக்கொள்வது என்பது கொள்கைக்கு எதிரான காரியமாக இராது; ஏனெனில் முற்காலங்களில், அநேக வேளைகளில், கர்த்தர் இவ்விதமாய்த் தனிப்பட்ட நபர்களைப் பயன்படுத்தியிருக்கின்றார். உதாரணத்திற்குப் பேதுரு, பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களைப் பெந்தெகொஸ்தே நாளிலும், பின்னர் கொர்நேலியுவின் வீட்டிலும் பயன்படுத்தினார் என்றும் பார்க்கின்றோம்; மேலும் இரண்டு இடங்களிலும் விசேஷித்த சத்தியங்களைக் கொடுப்பது தொடர்புடைய விஷயத்தில், பேதுரு விசேஷித்த ஊழியக்காரனாகப் பயன்படுத்தப்பட்டார். இதனிமித்தம் பேதுரு, சபையின் மீதோ, மற்ற அப்போஸ்தலர்கள் மீதோ கர்த்தராக/ஆண்டவராக இருக்கவில்லை, மாறாக ஓர் ஊழியக்காரனாகவே இருந்தார்.

(2) விசாரணைக்காரன் எனும் வார்த்தையை, ஒரு கூட்டமான கர்த்தருடைய ஜனங்களுக்கு நாம் பொருத்த முயற்சித்தாலும், இவ்வுமையில் குறிப்பிடப்பட்டுள்ள அநேகம் விஷயங்கள், ஒரு கூட்டத்தாருக்குப் பொருந்துவதில்லை. உதாரணத்திற்கு, 43-ஆம் வசனத்தில் இடம்பெறும், "அந்த ஊழியக்காரன்" எனும் வார்த்தைகளானது பொது மொழிப்பெயர்ப்பில் "that faithful" என்றும் திருந்திய மொழிப்பெயர்ப்பில் (Revised) "that faithful Steward" என்றும் இடம்பெறுகின்றது; ஒரு தனிப்பட்ட நபரைக் குறிப்பதாகவே கூறப்பட்டுள்ளது; அதிக எண்ணிக்கையானவர்களைக் குறிப்பதாகக் கூறப்படவில்லை. இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியக்காரன் சரீரத்தின் மற்ற அங்கங்களாகிய, தன்னுடைய சக ஊழியக்காரர்களுக்கு உணவு வழங்குவதாகக் கூறப்பட்டிருக்கின்றபடியினால், விசாரணைக்காரன்/ஊழியக்காரன் என இந்த உவமையில் இடம்பெறும் வார்த்தையானது தனிப்பட்ட நபரையே குறிக்கின்றதாய் இருக்கின்றது. பேதுருவைக்குறித்து நாம் தெரிவித்தது போலவே, பேதுரு விசேஷமாக பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் பேதுரு, சகோதரர்களுக்கு எஜமானராய்/ஆண்டவராய் இல்லை. இதைப் போன்று, இவ்வுமையில் குறிப்பிடப்படும் நபரும் ஆண்டவராகவோ (அ) எஜமானராகவோ (அ) சர்வாதிகாரியாகவோ இருப்பதில்லை. ஒருவர் மாத்திரமே, இவ்வுமையில் சொல்லப்பட்டுள்ள ஊழியக்காரன் ஆகுவதற்குச் சிலாக்கியம் அடைவாரே ஒழிய, இந்த ஸ்தானத்தை விரும்பும் அனைவரும், "அந்த ஊழியக்காரன்" ஆகுவதில்லை என்பதே நம்மால் சொல்ல முடிந்த காரியமாக இருக்கின்றது. "அந்த ஊழியக்காரன்," ஒருவேளை உண்மையுள்ளவராகக் காணப்படுவாரானால், உவமையில் அவர் வீட்டாருக்கு ஏற்ற கால உணவை அளிப்பது போலவே, ஏற்ற கால சத்தியத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் வழங்குவதற்கு அதிகதிகமாய்ப் பொறுப்பளிக்கப்படுவார். நியமிக்கப்பட்ட இந்த ஊழியக்காரனிடத்தில் உண்மையில்லாதிருந்தால், அவருடைய ஊழியத்திலிருந்து பின்வாங்கி போய்விடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; இன்னுமாக வேலையானது அவரிடமிருந்து, அவருக்குப் பின்வரும் இன்னொருவருக்குச் சென்றுவிடும்.

"தனக்குள்ளதெல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான்" என்ற 44-ஆம் வசனத்தின் வார்த்தைகளானது, எதிர்க்கால மகிமைகள் மற்றும் கனங்கள் விஷயத்திற்குப் பொருந்தும் என்பதாக எடுத்துக்கொள்ளப்படாமல், மாறாக இந்த அறுவடை வேலையில்

பாதுகாக்கப்பட வேண்டிய (அ) விநியோகிக்கப்பட வேண்டிய கர்த்தருடைய சத்தியங்களை வழங்குவது தொடர்புடைய விஷயங்களில் மாத்திரமே விசாரணைக்காரனாகப் பொறுப்புக் கொடுக்கப்படும் என்றே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லப்பட வேண்டுமெனில், இந்த அறுவடைக்கான ஏற்றக் கால சத்தியத்தை வழங்குவதற்கான கர்த்தருடைய அந்த விசாரணைக்காரன், ஒருவேளை உண்மையுள்ளவராக, தாழ்மையுள்ளவராக, எச்சரிக்கையுள்ளவராகக் காணப்படுவாரானால், அந்த விசாரணைக்காரன் தொடர்ந்து அப்படியாக காணப்பட்டு, அறுவடையின் முடிவு வரையிலும், வீட்டாருக்கான ஊழியத்தில், கர்த்தரால் அதிகமதிகமாய்ப் பயன்படுத்தப்படுவார்.

## ''தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்கள் அல்ல''

அந்த ஊழியக்காரன் ஆண்டவர்/எஜமான் போன்று செயல்படக் கூடாது (அ) கருதப்படக் கூடாது என்பது 45-ஆம் வசனத்தில் தெளிவாய்ச் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றது; இந்த வசனமானது, அந்த ஊழியக்காரன் தன்னுடைய ஸ்தானத்தைத் தவறாய்ப் பயன்படுத்தினால், பின்னிட்டு விழுந்துபோவான் என்பதைக் காட்டுகின்றது. இக்காலத்திலேயே, கர்த்தருடைய பொக்கிஷ சாலையிலிருந்து, ஏற்ற கால சத்தியத்தைச் சபையாருக்குக் கொடுப்பதற்கும், சபையாருக்காக ஊழியம் செய்வதற்குமென உண்மையாய்ப் பிரயாசம் எடுக்கும், சபையின் ஊழியக்காரர்கள் விஷயத்தில், சபையார் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுவதற்கு நாடினவர்களிடமிருந்தும், கர்த்தருடைய வசனத்திற்குப் பதிலாக தங்களுடைய சொந்த ஞானத்தையோ அல்லது மற்ற மனுஷர்களுடைய ஞானத்தையோ வழங்க முற்படுகிறவர்களிடமிருந்தும்தான் சபைக்கு எப்போதும் ஆபத்துகள் எழும்பியுள்ளது.

47, 48-ஆம் வசனங்கள், அந்த ஊழியக்காரன் எந்தளவுக்குக் கர்த்தருடைய சித்தத்தைப் பற்றின அறிவைப் பெற்றிருக்கிறாரோ, அந்தளவுக்கு அந்த ஊழியக்காரன் பொறுப்புடையவராக இருக்கின்றார் என்பதையும், அதிகமான அறிவும், வாய்ப்பும் கொடுக்கப்பட்டபடியால், அதிகமாய் எதிர்ப்பார்க்கப்படும் எனும் கொள்கையின் அடிப்படையில் கர்த்தர் அவ்வூழியக்காரனைக் கையாளுவார் என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இந்தப் புத்திமதியானது மற்ற ஊழியக்காரர்களுக்குப் படியளந்து கொடுக்கும் அந்த ஓர் ஊழியக்காரனுக்குப் பொருந்துவதாய் இருந்தாலும், உணவு (அ) உக்கிராணத்துவம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஊழியனுக்கும் கூட இதே கொள்கைகளைப் பொருத்தலாம் (மத்தேயு 24:45-51). ஒவ்வொருவனும் எதைப் பெற்றிருக்கின்றானோ (அ) பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அடைந்துள்ளானோ, மேலும் எந்தவிதத்தில் ஆசீர்வாதத்தைப் பயன்படுத்தியுள்ளானோ, அவ்வளவாய்ப் பொறுப்புடையவனாவான். இன்று, இப்படிப்பட்ட கர்த்தருடைய மாபெரும் கிருபையின் கீழ் வாழ்ந்தும், ஏற்ற கால சத்தியத்தின் வெளிச்சத்தை அனுபவித்துக்கொண்டும், இருக்கும் நமக்கு, அவர் தம்முடைய சத்தியத்தின் களஞ்சியத்திலிருந்து எடுத்து இப்பொழுது வழங்கிக்கொண்டிருக்கும் பழையதும், புதியதுமானவைகளை அதிகமதிகமாய் உணர்ந்துக்கொண்டு, நன்றி சொல்வதற்குரிய அனைத்துக் காரணங்களையுடைய நமக்கு....... ..மற்றவருக்குச் சத்தியத்தை வழங்குவதற்கான சிலாக்கியத்தை அடைந்துள்ள நமக்கு....... ..அவரைப் பற்றின அறிவிற்கு ஏற்ப பொறுப்புக் காணப்படுகின்றது. நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கும், நமது கர்த்தர் ஊழியக்காரனாகவும், தேவனுடைய குமாரனாகவும் இருந்தார் என்பதை நினைவில் கொள்வதற்கும், புத்திரர்களாகியுள்ள நாம், தேவனுடைய பலவகையான கிருபைகளுக்கு விசாரணைக்காரர்களாகவும் உண்மையுள்ள ஊழியக்காரர்களாகவும் இருப்பது என்பது உச்சக்கட்டமான நமக்கான சிலாக்கியமாக இருக்கின்றது என்பதை நினைவில் கொள்வதற்கும், கர்த்தர் நமக்கு உதவிச் செய்வாராக.

**ஆமென்!**

---

# கடைசி இராப்போஜனம்

## மத்தேயு 26:17-30

பரிசுத்த நகரத்தில் பஸ்கா போஜனத்தை இயேசுவும் மற்றும் அப்போஸ்தலர்களும் புசிக்கத்தக்கதாகவும், இயேசு தம்முடைய சீஷர்களுக்கு முன்னறிவித்தப் பிரகாரமாய்த் தம்முடைய சத்துருக்களின் கரங்களில் பாடுபடத்தக்கதாகவும், ஜனங்களுடைய பாவத்திற்கான பாவநிவாரணபலியைத் தாம் நிறைவேற்றத்தக்கதாகவும், எருசலேமுக்கு அருகாமையிலுள்ள பெத்தானியாவுக்கு இயேசுவும், அப்போஸ்தலர்களும் வந்தார்கள். தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே அவர் பெத்தானியாவிற்கு வந்தார். அடுத்தநாளின் இராப்போஜனத்தின் வேளையில் மரியாள் அவரை (தைலத்தினால்) அபிஷேகித்தாள். இதற்கு அடுத்த நாளில் அவர் எருசலேமுக்குக் கழுதையின்மீது ஏறிவந்தார். அவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர் பட்டணத்திற்காகக் கண்ணீர்விட்டழுது, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார். இதற்கு அடுத்தநாளில் அவர் ஆலயத்திற்குவந்து, கயிற்றினாலான சவுக்கைக்கொண்டு காசுக்காரர்களைத் துரத்தினார். இதற்கு அடுத்தநாளில் அவர் தம்மை உலகத்திற்கான ஒளியென அறிவித்து, தம்முடைய பொதுவிடத்திலான கடைசிப் போதனையை ஆலயத்தில் பண்ணினார். ஒவ்வொருநாள் இரவும் லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீட்டிற்கு அவர் திரும்பினதாகத் தெரிகின்றது. இவ்விடத்திற்கு அருகாமையிலுள்ள இடங்களில் எப்போதெல்லாம் இயேசுவும், அப்போஸ்தலர்களும் காணப்படுகின்றார்களோ, அப்போதெல்லாம் லாசரு மற்றும் மார்த்தாள் மற்றும் மரியாளின் வீடே, அவர்களுக்கான வீடாக இருந்தது. இதற்கு அடுத்தநாளாகிய புதன்கிழமையன்று கர்த்தர் பெத்தானியாவிலேயே ஓய்ந்திருந்தார்; மற்றும் வியாழக்கிழமையன்று, "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில்" அவரும், அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் புசிக்கத்தக்கதாக, பஸ்காவை ஆயத்தம் பண்ணும்படிக்கு, தம்முடைய சீஷர்களில் இரண்டுபேரை அனுப்பிவைத்தார்.

பஸ்கா பண்டிகையானது ஒரு வாரமளவுக்கு நீடிக்கக்கூடியது; மற்றும் அது யூதர்களுடைய ஒழுங்கின்படி கைக்கொள்ளப்படும் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்றாகும். அந்த வாரத்தில் கர்த்தருடைய ஜனங்களுடைய புளிப்பற்ற தன்மை, பரிசுத்தம் மற்றும் தூய்மையைக் குறிப்பாய்த் தெரிவிக்கத்தக்கதாக, பாவத்திற்கு நிழலாயிருந்த புளிப்பானது அனைத்து உணவுகளிலும் ஜாக்கிரதையாகத் தவிர்க்கப்பட்டு, ஒவ்வொரு வீடுகளிலும் அழிக்கப்படுகின்றது. மாம்சீக இஸ்ரயேலர்கள் நிழலில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு அடையாளமாக இருக்கின்றனர். முழு வாரமும் சந்தோஷத்தின் பண்டிகையாக இருந்தது. காரணம், தேவன் இஸ்ரயேலை, எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவித்தார். பண்டிகை வாரமானது, யூதர்களுடைய முதலாம் மாதத்தின், 15-ஆம் தேதியன்று ஆரம்பிக்கின்றது. ஆனால், அதற்கு முந்தின நாளாகிய 14-ஆம் தேதி அன்று ஆட்டுக்குட்டிக் கொல்லப்பட்டு, அதன் இரத்தம் வீட்டின் நிலைக்கால்களின் மீது தெளிக்கப்படுகின்றது. இது இரத்தத்தின் கீழ்க்காணப்பட்டு இஸ்ரயேலர்களின் முதற்பேறானவர்களைக் கர்த்தர் தப்புவித்து, எகிப்தியரின் முதற்பேறானவர்களைச் சங்கரித்துப்போட்டு, இவ்விதமாக எகிப்தியர்கள் கர்த்தருடைய ஜனங்களைப் போக சம்மதித்ததாகிய, எகிப்தில் இரவுவேளையில் நடந்திட்ட விஷயங்களை நினைவுகூருவதாகச் செய்யப்பட்டது. பஸ்கா பண்டிகை வாரம் ஆரம்பிப்பதற்குரிய முந்தினநாள் இரவில், இந்த நினைவுகூருதலின் ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்கான, ஆயத்தங்களைச் செய்யும்படிக்கு, தம்முடைய சீஷர்களைக் கர்த்தர் அனுப்பிவைத்தார்.ஆயத்தம்பண்ணும் வேலைக்கு எனப் பேதுருவும், யோவானும் அனுப்பி வைக்கப்பட்டார்களென லூக்கா அவர்கள் நமக்குத் தெரிவித்துள்ளார். மேலும், தண்ணீர் குடத்தை யார் கொண்டுசெல்கின்றாரோ, அவருடைய வீட்டில்தான் விருந்து ஏற்பாடு பண்ண வேண்டுமென்று அவர்கள் அறிந்துகொள்ளலாம் என்று, கர்த்தர் தெரிவித்ததாக மாற்கு அவர்கள் நமக்குத் தெரிவித்துள்ளார். மாற்குவினுடைய தாயாராகிய மரியாளுக்குச் சொந்தமானதுதான் அந்த வீடு என்றும், அப்பொழுது பயன்படுத்தப்பட்ட மேல்வீட்டறைதான் பிற்பாடு அப்போஸ்தலர்கள் ஒன்று கூடின இடம் என்றும், அவர்கள் மீது பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் பொழிந்த இடம் என்றும், சிலரால் அனுமானிக்கப்படுகின்றது. பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்படும்படிக்கு ஜெபம் பண்ணுவதற்கென, அநேகர் ஒன்றுகூடியதும் இந்த மரியாளின் வீட்டில்தானா என்பது நமக்குத் தெரியவில்லை. அது பெரிய மேல்வீட்டறையாகும் மற்றும் அது ஏற்கெனவே உணவு உட்கொள்வதற்குரிய மஞ்சத்தினால் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. கர்த்தரைக் கைது செய்யும்படிக்கு நாடுகின்றவர்கள் சார்பில், எவ்விதத்திலும் பஸ்கா அனுசரிப்பும், யோவான் 14:17-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நமது கர்த்தர் பிற்பாடு கொடுத்ததான சொற்பொழிவும்

குறுக்கிடப்படாதப்படிக்கு, இயேசுவும், சீஷர்கள் அனைவரும் ஒன்றுகூடுவதுவரையிலும், பஸ்கா அநுசரிக்கப்படுகின்ற இடம்பற்றின தகவல் யூதாசுக்குத் தெரியாத வண்ணம், இயேசு இப்படியாக மறைமுகமாக மேல்வீட்டறையைக்குறித்துக் கூறினார் என்று அனுமானிக்கப்படுகின்றது. ஆட்டுக்குட்டியை ஏற்பாடுபண்ணுதல், புளிப்பில்லா அப்பங்கள், கசப்பான கீரைகள், திராட்சரசம் ஆகியவற்றிற்கு ஏற்பாடுபண்ணுதல் எனும், விதத்தில்தான் பேதுருவும், யேவானும் பஸ்காவிற்காக ஆயத்தம்பண்ணினார்கள். சாயங்காலத்தில், ஏற்றவேளையில் அநுசரிப்பிற்காக அனைவரும் ஒன்று கூடினார்கள்.

## தாழ்மைக்கான ஒரு பாடம்

இவ்வேளையில் அப்போஸ்தலர்கள் மத்தியில் வாக்குவாதம் எழும்பினதாக லூக்காவும், யோவானும் பதிவு செய்துள்ளனர் (லூக்கா 22:24-30; யோவான் 13). அப்போஸ்தலர்கள் முற்றும் முழுமையாகச் சுயநலத்தினாலும், பேராசையினாலும் தூண்டப்பட்டிருந்தார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. கர்த்தராகிய ஆண்டவர் மீதான அவர்களுடைய அன்பினிமித்தமே, அவருக்கு அருகாமையில் இருக்கும் ஸ்தானத்தையடைய வேண்டுமென்று, அவர்களுக்குள் வாக்குவாதம் காணப்பட்டது என்று, நாம் எடுத்துக்கொள்ளலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களுடைய ஜீவியம் முழுவதுமாக, நினைவில் காணப்படக்கூடிய மிகுந்த அருமையான செய்தியைக்கொடுக்க கர்த்தர் முற்பட்டார். அவர்கள் புழுதி நிறைந்த சாலையில் பிரயாணம்பண்ணி நண்பகல் வேளையில் வந்தடைந்தார்கள்; மற்றும் அவர்கள் செல்வந்தர்களாய் இராதபடியினால், அவர்களை வரவேற்பதற்கும், அவர்களது பாதங்களைக் கழுவுவதற்கும் வேலைக்காரர்கள் அவர்களுக்கு இல்லை. மேலும் அவர்களுடைய பரஸ்பரமான சௌகரியத்திற்கென, ஒருவருக்கொருவர் இதைச் (பாதங்கழுவுதலை) செய்வதை விட்டுவிட்டு, பந்தியில் சிறப்பிற்குரிய ஸ்தானம் அடைவதற்கென ஒருவரோடொருவர் போராடிக்கொண்டிருந்தனர். யோவான் ஆண்டவருக்கு அருகாமையில் உட்காரும் மிகவும் விரும்பப்படும் ஸ்தானத்தை அடைந்திருந்தார் . . . இதற்குக் காரணம் யோவான் அவருக்கு உறவினனாகவும், இயேசு விசேஷித்த விதத்தில் அன்புகூர்ந்தவர்களில் ஒருவராகவும் இருந்ததினால் மாத்திரமல்லாமல், அப்போஸ்தலர்கள் மத்தியில் இவர் வயதில் சிறியவராகவும் இருந்ததினாலாகும்.

முற்காலங்களின் பழக்கவழக்கமானது, அநேக விதங்களில் இன்றைய பழக்கவழக்கத்திலிருந்து வித்தியாசப்படுகின்றது. அவர்கள் உணவு உண்கையில் பந்தியைச்சுற்றி வளைந்துள்ள மஞ்சத்தில், ஒரு பக்கமாய்ச்சாய்ந்து கிடப்பது வழக்கமாகும். அவர்கள் தங்களது இடது முழங்கையில் (elbow) சாய்ந்து காணப்பட்டு, வலது கையைக்கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வர். ஆகவே, அவர்களது தலைகள் ஒருவரோடொருவர் நெருங்கிக் காணப்படுகின்றது. ஆனால், அவர்களுடைய பாதங்களோ பின்னால் வெளியே நீட்டப்பட்ட நிலையில் காணப்படும். வாக்குவாதமானது அதன் போக்கிலேயே தொடரும்படி விடப்பட்டது. இராப்போஜனம் ஆரம்பித்தது. இயேசு எழுந்துநின்று அவர்கள் ஒவ்வொருவரின் பாதங்களை, ஒன்றன்பின் ஒன்றாகக் கழுவ ஆரம்பித்தார். அவருடைய பாதங்களைக் கழுவ வேண்டுமென்றும் ஒவ்வொருவருடைய பாதங்களைக் கழுவ வேண்டுமென்றும், தங்களுக்குள் அவர்கள் எண்ணி, கழுவியிருக்க வேண்டும். ஆனால் அதற்குப்பதிலாக ஒவ்வொருவரும், தான் மற்றவரைக்காட்டிலும் தாழ்ந்தவனல்ல எனும் கருத்தை ஏற்படுத்துவதற்குரிய நோக்கத்தைக்கொண்டிருந்தனர். இப்படியாக, ஆண்டவரால் அவர்களுக்குச் செய்யப்பட்ட ஊழியமானது, கடுமையான கடிந்துகொள்ளுதலாய் இருந்தது. கொஞ்சம் முன்பு கொடுக்கப்பட்டதான பாடத்தை அதாவது, "அவர்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்ற பாடத்தை அவர்கள் அவ்வளவு சீக்கிரமாய் மறந்துவிட்டனர். இக்காரியத்தை விவரிப்பதற்குரிய வாய்ப்பு இங்கு நமது கர்த்தருக்குக் கிடைத்தது. அவர்களனைவருக்கும் அவர் ஊழியம் புரிந்திட விரும்பினார்; மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் அனைத்திலும் அவர் அவர்களுக்கு ஊழியம் தொடர்ந்து புரிந்துக்கொண்டிருக்கின்றார். ஆகவேதான் அவரை அவர்கள் தங்களுடைய ஆண்டவரென உண்மையில் கருதினார்கள். இப்பொழுதோ மிகவும் மதிப்புக்குறைந்த ஊழியமும் அவர்களுக்குப் புரிந்திட, தாம் விரும்புமளவுக்குத் தம்முடைய தாழ்மையை அவர்களுக்குக் காட்டினார். எத்துணை விலைமதிப்புள்ள பாடம்! இதன் முக்கியத்துவம் கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் மத்தியில் இழந்துப்போகாமல் இருப்பதாக! ஆனால், இதுவும் கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம்போன்று, செய்யத்தக்க முறைமையென (அ) கட்டளையென இருக்கின்றது எனச் சிலர் அனுமானிப்பதின் மூலமாக, தவறிழைத்துள்ளனர். நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி இந்த அடையாளத்தின் மூலமான பாடமும், அப்பாடமானது எந்த நேரத்திலும், எவ்விடத்திலும் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும் என்ற காரியமும் தெரிவிப்பது என்னவெனில்... எவ்வளவுதான் மதிப்புக்குறைவான ஊழியமாக இருப்பினும், அதைப்

பொருட்படுத்தாமல், அந்தப் பயனுள்ள ஊழியத்தைச் சகோதரர்களுக்குச் செய்ய நாம் நாடுகின்றவர்களாய் இருக்க வேண்டும்; மற்றும் இப்படியாகச் செய்யப்படும்போது, அதைக் கர்த்தர் தமக்கே செய்ததாகக் கருதுகின்றார் என்பதுமாகும்.

## அந்த மனுஷன் பிறவாதிருப்பானானால் அவனுக்கு நலமாயிருக்கும்

அவர்கள் இராப்போஜனத்தின்போது காணப்படுகையில், மிகவும் துக்கங்கொண்டவராக இயேசு, தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட 12 பேரில் ஒருவன்தான் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்றும், இப்படியாக தம்முடைய மரணத்திற்குத் துணை கருவியாக ஆகப்போகிறான் என்றும் விவரித்தார். அதாவது இதே இராப்போஜனத்தில், இதே அப்பத்தில், இதே சுடப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தில் தம்முடன் கூடப் புசிக்கிறவனும், தம்முடன் கூடத் தாலத்தில் கையிடுகிறவனே தம்மைக்காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகப் போகிறான் என்று விவரித்தார். இவைகள் அனைத்தும் எழுதப்பட்டிருந்தாலும், தெய்வீகத் திட்டம் தொடர்பான எந்தக் காரியங்களிலும், எவ்விதமான மாற்றமில்லாமல் இருந்தாலும், இப்படியாகத் தம்மைக் காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகிறது என்பது, தோழமையில் மிகவும் பயங்கரமான பிளவை ஏற்படுத்துகின்றதாய் இருக்கும், அதாவது எண்ணுவதற்கே வேதனையானதாக இருக்குமென்று சுட்டிக்காட்டினார். காட்டிக்கொடுக்கப்படாமலேயே அவர் அதிகாரிகளால் கைதுச் செய்யப்படுவதாய் இருந்தாலும் அல்லது முன் பின் தெரியாத நபர் மூலமாகவோ அல்லது ஒரு சீஷன் வாயிலாகவோ அவர் காட்டிக்கொடுக்கப்பட்டு அதிகாரிகளால் கைதுச் செய்யப்படுவதாய் இருந்தாலும், இது கர்த்தருடைய நோக்கம் மற்றும் அர்ப்பணிப்பைப் பொறுத்தமட்டில் அவருக்கு ஒன்றும் வித்தியாசமாகக் காணப்படப்போவதில்லை; அதாவது இது தெய்வீக ஏற்பாட்டில் எவ்விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. எனினும் அவரைக் காட்டிக்கொடுப்பவர் அவருடைய உயிர் நண்பனாகவும், சீஷனாகவும் இருப்பதுதான் மிகுந்த துக்கத்திற்கான காரணமாகும்.

"அம்மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்ற வார்த்தைகள் நமக்குத் தெரிவிப்பது என்னவெனில், கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி, யூதாஸ் அதிகளவிலான அறிவையும், மேலான காரியங்களுக்கான வாய்ப்புகளையும் ஏற்கெனவே அனுபவித்துள்ள காரணத்தினால், அவருடைய கிரியைக்கு அவரே பொறுப்பு வகிக்கின்றார், மற்றும் அவருக்கு எதிர்க்காலத்தில் எந்தவொரு நம்பிக்கையும் இல்லை என்பதாகும். ஒருவேளை யூதாஸ் அவருடைய குணலட்சணத்தைச் சரி செய்வதற்கென, இன்னும் ஒரு வாய்ப்பை அருளுவதற்குரிய ஏதேனும் காரணத்தைக் கர்த்தர் காண்பாரானால், அதற்கு நாம் நிச்சயமாய் மறுப்புத் தெரிவிப்பதில்லை. ஆனால், அப்படியாக இன்னுமொரு வாய்ப்பு யூதாசுக்கு அருளப்படும் என்று எண்ணுவதற்கு, நம்மால் எந்த வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணத்தையும் பார்க்கமுடியவில்லை. நம்முடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், கர்த்தருடன் தொடர்புவைத்தவரும், பரிசுத்த ஆவியினுடைய வல்லமையின் கீழ்க்காணப்பட்டவரும், கர்த்தருடைய நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவதற்கும் மற்றும் வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவதற்கும் அனுப்பப்பட்டவர்களில் ஒருவராகவும், அவருடைய பிரதிநிதியாகவும், அவருடைய வல்லமையைப் பயன்படுத்துபவராகவும் இருந்த யூதாஸ் மாபெரும் வெளிச்சத்திற்கும், அனுபவத்திற்கும் மற்றும் அறிவிற்கும் எதிராகப் பாவம் செய்தவராகக் காணப்படுகின்றார். யூதாசினுடைய முடிவு சோகமானதே. தற்கொலை பண்ணுகின்ற ஒவ்வொருவனும், தான் பிறவாமல் இருந்தால் நலமாயிருக்கும் என்பதை, தற்கொலை பண்ணுவதன் மூலம் ஒப்புக்கொள்பவனாக இருக்கின்றான்.

## கர்த்தாவே, நானோ?

மற்றொரு பதிவானது, சீஷர்கள் ஒவ்வொருவரும் கர்த்தரை நோக்கி நானோ? என்று கேட்டதாகவும், இறுதியில் யூதாசும் கேட்டார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றது. சீஷர்கள் தங்களுக்கு இதில் எந்தச் சம்மந்தமும் இல்லை என்பதில் நிச்சயமாய் இருந்தார்கள்; மற்றும் தங்களுடைய குற்றமில்லா நிலைமையைக் கர்த்தர் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். பதினொரு பேரும் இப்படியாகக் கர்த்தரிடத்தில் கேட்க, அவர்களுடைய குற்றத்தைச் சுட்டிக்காட்டும் விதத்தில் கர்த்தர், விடை எதுவும் கொடுக்காமல் இருந்தது, யூதாஸ்தான் அந்நபர் என்பதைத் தெரிவிப்பதாக இருந்தது. ஆண்டவரே நானோ? என்று யூதாசும் கேட்டதில், அவருடைய தைரியம் தெரிகின்றது. இதற்கு, "நீ சொன்னபடிதான்" அல்லது "நீ தான்" என்று இயேசு யூதாசுக்கு விடையளித்தார். கர்த்தருடைய குற்றம் சாட்டுதல்/கடிந்துரை எத்துணை பெருந்தன்மையுடன் காணப்படுகின்றது. கர்த்தருடைய வார்த்தைகள் பயமுறுத்துகின்றதாகவும், பழித்துரைப்பதாகவும்,

கசப்பின் வெளிப்படுத்தலாகவும் இராமல், மாறாக கவலை மற்றும் அனுதாபத்தின் வெளிப்படுத்தலாக மாத்திரமே இருந்தது என்பது எத்துணை பாடமாய் நமக்கு உள்ளது! நம்முடைய சத்துருக்கள்மீது நாம் அனுதாபம்கொள்ள வேண்டுமே ஒழிய பகைக்கக்கூடாது. சபிக்காமல் நம்மால் முடிந்தமட்டும், நம்முடைய சத்துருக்களை ஆசீர்வதிக்க வேண்டும். பணத்திற்காகவோ அல்லது வேறு சுயநலமான காரியங்களுக்கெனக் கர்த்தரையோ (அ) அவரது சத்தியத்தையோ (அ) அவரது சகோதரர்களை விற்றுப்போடும் யூதாசுக்கு ஒத்த மனப்பான்மைக்கு எதிராக, இயேசுவினுடைய சீஷர்கள் அனைவரும் விழித்திருந்து, ஜெபம்பண்ணுவது நல்லது. யூதாஸ் வகுப்பார் உண்டு என்பதை நாம் அறிந்து வைத்தவர்களாக, நமது இருதயங்களை நாம் காத்து, "ஆண்டவரே நானோ?" என்று கேட்போமாக.

யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தின்படியாக பஸ்கா இராப்போஜனத்தை அவர்கள் புசித்துக்கொண்டிருக்கையில் அல்லது இராப்போஜனம் புசித்து முடித்து அவர்கள் பந்தியில் இன்னமும் காணப்படுகையில், மீதமிருந்த அப்பத்தில் சிலவற்றை இயேசு எடுத்து, அதை ஆசீர்வதித்து, அதைப்பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது" என்று கூறினார். "உங்களுக்காகப் பிட்கப்படுகிற" எனும் வார்த்தைகளை வேறொரு சுவிசேஷகர் பதிவு செய்துள்ளார். "என்னுடைய சரீரமாயிருக்கின்றது" மற்றும் "என்னுடைய இரத்தமாயிருக்கின்றது" என்ற வார்த்தைகளின் காரணமாக, எப்போதெல்லாம் நினைவுகூருதலின் அப்பமும், இரசமும் படைக்கப்படுகின்றதோ, அப்போதெல்லாம் அப்பமும், இரசமும், கிறிஸ்துவின் நிஜமான சரீரமாகவும், அவருடைய நிஜமான இரத்தமாகவும் மாறும் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் எனக் கத்தோலிக்கர்களும், சில புரொட்டஸ்டண்டினரும் கூறுகின்றனர். இது காரணகாரியத்திற்கு உட்பட்டதல்ல என்றும், மிகவும் உண்மையற்றது என்றும் நாம் கருத்துத் தெரிவிக்கின்றோம். அப்பமும், இரசமும், நமது கர்த்தருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமாக மாத்திரமே இருக்கின்றது. இது அடையாள வார்த்தைகள் என்பதற்கான நிரூபணமானது, இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் பேசின/பயன்படுத்தினபோது, அவருடைய சரீரம் இன்னமும் பிட்கப்படவும் இல்லை, அவருடைய இரத்தம் இன்னமும் சிந்தப்படவும் இல்லை என்பதேயாகும். ஆகவே அப்பமும், இரசமும், அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துவதற்கெனப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் என்ற அர்த்தத்தில் அல்லாமல், வேறு ஏதாகிலும் விதத்தில் எடுத்துக்கொள்ளப்படுமாயின், அப்பொழுது உண்மை திரித்துக்கூறப்பட்டதாக, பொய்யுரைத்ததாக ஆகிவிடும். மேலும், கர்த்தராலோ, அவருடைய பின்னடியார்களாலோ பொய்யுரைக்கப்பட்டதாக நம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

நமது கர்த்தரினால் விவரிக்கப்பட்டுள்ள அப்பமானது, வானத்திலிருந்து வந்த அப்பத்தை அதாவது, உலகத்தின் பாவத்திற்காக அவரால் பலிச்செலுத்தப்பட்ட அவருடைய மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றது. இதைப் புசிக்கும்படிக்குத் தம்முடைய பின்னடியார்கள் அனைவரையும் அழைக்கின்றார். மேலும் அவருடைய சரீரம் பிட்கப்படுவதன் மூலமாக, கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களையும், இரக்கத்தையும், கிருபையையும் நாம் நமக்கெனச் சொந்தமாக்கிக்கொள்ளும்போது, அவருடைய மாம்சத்தைப் புசிக்கின்றவர்களாய் இருப்போம். இப்படியாகப் பாவங்களுக்கான மன்னிப்பையும், பிதாவுடன் ஒப்புரவாகுதலையும் பெற்றுத்தந்த பலியினுடைய நன்மைகளை நாம் நமக்கெனச் சொந்தமாக்கிக்கொள்கின்றோம்.

## புது உடன்படிக்கையின் இரத்தம்

"இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:28). "இது (பாத்திரம்) என்னுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றது. இது எப்பொழுதும் உங்களுக்கும், என்னுடைய அன்பார்ந்த பின்னடியார்கள் அனைவருக்கும் என்னுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும். மேலும், இது இப்படியான தருணங்களிலெல்லாம் என்னுடைய மரணத்தையும், தேவனுக்கும் மற்றும் மனுஷனுக்கும் இடையிலான மாபெரும் மத்தியஸ்தராகிய என்னாலேயே தேவனுக்கும், பாவிகளுக்கும் இடையிலே முத்திரிக்கப்பட்ட உடன்படிக்கையையும் உங்களுக்கு நினைப்பூட்டுவதாக இருக்கும்" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

கிறிஸ்துவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டுள்ள புது உடன்படிக்கையானது, பழைய ஏற்பாட்டில் எங்கும் மற்றும் எபிரெயர்களுக்கு அப்போஸ்தலர் எழுதியுள்ள நிருபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது (எபிரெயர் 8:6-13; 10:29; 12:20). இந்தப் புது உடன்படிக்கையானது, நியாயப்பிரமாண உடன்படிக்கையைத் தள்ளிவைத்துவிட்டது. மோசேயை மத்தியஸ்தராகக் கொண்டிருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, யாரெல்லாம் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளையெல்லாம் கைக்கொள்வார்களோ, அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்களெனத் தெரிவித்தது. ஆனால், புது உடன்படிக்கையானது, இரக்கத்தைக் காட்டுகின்றது; மற்றும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர், ஜனங்களின் சார்பிலான தம்முடைய

மரணத்தின் மூலமாக, மனுக்குலத்தையும் படிப்படியாகச் சீரழிந்த நிலையிலிருந்து, உண்மையான மற்றும் நேர்மையான இருதயத்தின் நல்ல வாஞ்சைகள் அனைத்தையும், அவர்கள் பூரணமாய்ச் செய்யத்தக்கதான நிலைக்கு உயர்த்திவிடுவார்.

இந்த அப்பம் மற்றும் பாத்திரத்திற்கு இன்னும் ஆழமான அர்த்தம் இருப்பதை அப்போஸ்தலர் பவுல் நமக்குக் காட்டுகின்றார். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" என்பதைப்பற்றின தெளிவான புரிந்துக்கொள்ளுதலைப் பெற்றிருந்தவர் அப்போஸ்தலர் பவுலேயாவார். அதாவது நாம் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கமாய் இருக்கின்றோம் என்றும், இப்பொழுது அவருடைய பாடுகளில் பங்காளிகளாக இருக்கின்றோம் என்றும், ஒருவேளை உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், அவருடைய மகிமையின் சரீரத்தினுடைய அங்கங்களாகவும், அவருடைய மகிமையில் பங்கடைகின்றவர்களாகவும் இருப்போம் என்றுமுள்ள இரகசியத்தைக்குறித்த தெளிவான புரிந்துகொள்ளுதலை அப்போஸ்தலர் பவுலே பெற்றிருந்தார். இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், அப்போஸ்தலர் விவரித்துள்ள பிரகாரமாக, பிட்கப்பட்ட அப்பம் என்பது கர்த்தர் இயேசு தனிப்பட்ட விதத்தில் பிட்கப்படுவதை மாத்திரம் குறிக்காமல், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதுமுள்ள அவருடைய மறைப்பொருளாயிருக்கும் அங்கங்கள் பிட்கப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் பாத்திரத்தில் பானம்பண்ணுவது என்பது, அவர் மனுக்குலத்தின் சார்பாக புது உடன்படிக்கையை முத்திரைப்பண்ணத்தக்கதாக, அவர் மரணத்தில் பங்கடைவதை மாத்திரம் உள்ளடக்கவில்லை, இன்னுமாக பாத்திரத்தில் அவரோடுகூட நாம் பங்கடையத்தக்கதாக, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்ற அவரது அழைப்பானது, தற்காலத்தில் அவரோடுகூட உபத்திரவப்படுவதிலும், மரிப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும், ஆயிரவருட யுகத்தின்போது, புது உடன்படிக்கைக்கான சூழ்நிலைகளை ஆரம்பித்துவைப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இக்கருத்து எத்துணை பிரம்மாண்டமாகவும், எத்துணை ஆழமாகவும், எத்துணை பரந்தமனப்பான்மையுடனும் காணப்படுகின்றது! கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கு நாம் அனுமதிக்கப்படுவதும், எதிர்க்காலத்தில் அவருடைய மகிமையில் பங்கடைவதற்கு எதிர்நோக்குவதும், எத்துணை அருமையான சிலாக்கியமாகும். இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? "என்ற சீஷர்களுக்கான அவருடைய வார்த்தையிலுள்ள முக்கியத்துவத்தை நம்மால் காண முடிகின்றது (மத்தேயு 20:22). இப்படிப் பங்குகொள்வதற்கென அழைக்கப்படுவதற்கு அனைவரும் பாத்திரமாய் இராததுபோல, அழைக்கப்பட்டவர்களில் அனைவரும்கூட இப்படிப் பங்குகொள்வதற்குரிய சிலாக்கியத்தை மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் உணர்ந்துகொள்ள மாட்டார்கள். நம்மில் ஒவ்வொருவரும் உறுதியுடன் யாக்கோபையும், யோவானையும்போன்று, கர்த்தரிடம், "கர்த்தாவே கூடும்," நாங்கள் விருப்பத்துடன் இருக்கின்றோம் என்றும், உம்முடைய உதவியினால் நாங்கள் ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் வருவோம் என்றும், சொல்வோமாக.

## புதிய திராட்சரசம் - இராஜ்யத்தின் சந்தோஷங்கள்

நமது கர்த்தர் இராஜ்யத்தில் நவமானதாய்ப் பானம் பண்ணுவதுவரையிலும், தாம் திராட்சரசம் பருகுவதில்லை என்று கூறினார். இதன் அர்த்தம் கர்த்தர் அவர்களுடன் இராஜ்யத்தில் புதிய அல்லது புளிக்காத இரசத்தைப் பானம்பண்ணுவார் என்பதாக இராமல், மாறாக இராஜ்யம் வருவதுவரையிலும் திராட்சரசம் அடையாளப்படுத்தும் நவமான (அ) நிஜமான காரியங்கள் நிறைவடைவதில்லை என்பதேயாகும். இராஜ்யம் வரும்போது, தற்காலத்தின் அனைத்து உபத்திரவங்களும், சோதனைகளும் கடந்துபோய்விடும்; மற்றும் திராட்ச ஆலையின் மிதிக்கப்படுதலும், இரசம் உருவாக்குதலும் அனைத்தும் முடிந்துவிடும்; மற்றும் திராட்சரசம் சந்தோஷத்திற்குரியதாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் காணப்பட்டு, கற்பனைசெய்து பார்ப்பதற்கு அப்பாற்பட்ட சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும்; மற்றும் இச்சந்தோஷமானது, தற்காலத்தில் நம்முடைய மீட்பருடன் அவருடைய பாடுகளிலும், பின்வரும் மகிமைகளிலும் உண்மையாய் ஐக்கியம் கொண்டிருந்தவர்கள் அனைவரின் பங்காக இருக்கும். இராஜ்யத்தின் காலம் இப்பொழுது சமீபித்துள்ளது. அதாவது, கர்த்தர் இவ்வார்தைகளைப் பேசின காலங்களைக்காட்டிலும், 1800 வருடங்கள் கடந்துள்ள இப்பொழுது, மிகவும் சமீபித்துள்ளது; மற்றும் இதன் ஆரம்பத்திற்கான ஆதாரங்கள் அனைத்துத் திசைகளிலும் பெருகிக்கொண்டு வருகின்றது. அதை எதிர்ப்பார்த்த வண்ணமாக நம்முடைய இருதயங்கள் களிகூர்ந்திருக்க வேண்டும்; மற்றும் தற்காலத்தில் துக்கத்தின், அவமானத்தின், பாடுகளின், பாத்திரத்தில் பானம்

பண்ணுவதில் நாம் உண்மையாயிருந்து, இவ்விதமாக நம்முடைய அன்பையும், நம்முடைய நேர்மையையும் வெளிப்படுத்துவோமாக.

இதற்குப் பின்வரும் சம்பாஷணையாக, யோவானால் (15, 16, 17-ஆம் அதிகாரங்களில்) பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்கள், கர்த்தருடைய ஜனங்கள் அநேகருக்கு பல நூற்றாண்டுகளாக ஆசீர்வாதமாய் இருந்துவருகின்றது. பின்னர், அவர்கள் ஸ்தோத்திர பாட்டைப்பாடி, ஒலிவ மலைக்கு, கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். சீஷர்கள் அனைவரின் மீதும் சோதனைகள் கடந்துவந்தது. ஒவ்வொரு நினைவுகூருதலின் காலங்களிலும், கர்த்தருக்கான நம்முடைய வாக்குறுதியை அடையாளமாய்த் தெரிவிக்கும் ஒவ்வொரு முறையும், கர்த்தருடைய ஜனங்களுக்குப் புதிய சோதனைகள், புதிய பரீட்சைகள், புதிய சலித்தெடுத்தல்கள் வருகின்றது. யாரால் நிலைநிற்க முடியும்? நம்முடைய இரட்சகராகிய நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றிக்கொண்டிருப்போமாக! மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டிருப்போமாக! உண்மையுள்ள வார்த்தைகளைப் பற்றிக்கொண்டிருப்போமாக! நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாக!

*****

# கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார்

## மாற்கு 15:22-39

*"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்"*
**1 கொரிந்தியர் 15:3**

விக்டர் கிஹோ என்பவர், "வாட்டர்லூ* என்பது, அண்டசராசரத்தினுடைய முறைமையை மாற்றிப்போட்டதாகக் காணப்படுகின்றது" என்று எழுதியுள்ளார். [* வாட்டர்லூ என்பது ஒரு மாபெரும் யுத்தம் நடைப்பெற்ற இடத்தின் பெயர்]. இன்னொருவர் மேற்கூறப்பட்டுள்ள வாக்கியத்தினைத் திருத்தம் செய்து, பின்வருமாறு குறிப்பிடுகின்றார் . . . "கல்வாரி என்பது அண்டசராசரத்தினுடைய முறைமையை மாற்றிப் போட்டதாகக் காணப்படுகின்றது." நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான சம்பவமானது, அனுதாபத்தைத் தூண்டுகிற ஒன்றாய்க் காணப்பட்டு, நம்முடைய ஆத்துமாக்களில் அனுதாபத்தைத் தூண்டுகின்றது மற்றும் நம்முடைய ஆதார வசனத்தினுடைய நோக்கத்தினை நாம் உண்மையாய் உணர்ந்துகொள்ளும் தருணம் முதல், நம்மில் பிரதி அன்பினையும் உருவாக்குகின்றதாய் இருக்கின்றது. இதே அளவுக்கு மற்றவர்களும் கூடக் கொடூரமாய் மரித்துள்ளனர் மற்றும் சிலர் தானாக முன்வந்து, பதட்டமின்றி மரணத்திற்குள் கடந்து சென்றும் உள்ளனர். எனினும் கைதி முற்றிலும் குற்றமற்றவராகவும், மரணத்தண்டனைக்கு முற்றிலும் பாத்திரமற்றவராகவும் காணப்பட்ட முதல் சம்பவம் கர்த்தருடைய மரணத்தின் சம்பவமுமேயாகும்; ஆகையால் இந்த ஒரே சம்பவத்தில் மாத்திரமே, மரிக்கும் காரியம், முற்றும் முழுமையாக தானாய் முன்வந்து மரித்த காரியமாய்க் காணப்பட்டது மற்றும் இவர் ஒருவேளை மரிக்க விருப்பமற்று இருந்தால், இவர் ஒருவர் மாத்திரமே மரிப்பதற்கான அவசியமில்லாமலும் இருந்திருப்பார்.

## சிலுவை - சுமத்தலுக்கான உதாரணம்

சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வுகளைச் சுவிசேஷகர்கள், மிகவும் சிறிய வித்தியாசங்களுடன் விவரித்துள்ளனர் மற்றும் அந்தப் பல்வேறு உண்மையான வாக்கியங்களை நாம் ஒன்றாய்த் தொகுத்துப் பார்த்திடும்போது, முழுச் சம்பவமும் நமக்குமுன் தெளிவாகுகின்றது. யூதர்களுடைய கேடுவிளைவிக்கும் எண்ணங்களையும், கோரிக்கைகளின் கூக்குரல்களுமான கொந்தளிப்புகளையும் எதிர்க்க முடியாத காரணத்தினால், பிலாத்து இயேசுவை மரிக்க ஒப்புக்கொடுப்பதற்குச் சம்மதித்தப் பிற்பாடு, பிலாத்துவாகிய தேசாதிபதியின் அரண்மனையிலிருந்து, நூற்றுக்கு அதிபதி, மூன்று உரோமப் போர்ச்சேவர்களுடன், இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு, அவரைக் கல்வாரிக்குக் கொண்டு சென்றார். வழக்கத்தின்படியே இச்சம்பவத்திலும், கைதியே தமது சொந்த சிலுவையைச் சுமந்து சென்றார் மற்றும் இது சுமப்பதற்குக் கடினமானதாகவே நிச்சயமாய் இருந்திருக்கும். நமது கர்த்தரினால், சிலுவையினுடைய பாரபளுவினைத் தாங்கமுடியாத போது, வழியில் போய்க்கொண்டிருந்த நாட்டுப்புற வாசியாகிய சீமோன், இயேசுவுக்கு உதவிச் செய்யும்படிக்குப் பலவந்தம் பண்ணப்பட்டார். லூக்கா 23:26- என்ற வசனத்தின்படி, சீமோன் முழுமையாகச் சிலுவையைச் சுமந்து செல்லாமல், மாறாக பொதுவாய் இழுத்துச் செல்லப்படும் சிலுவையினுடைய பின்பாகத்தைச் சுமந்ததன் மூலம், சீமோன் இயேசுவுக்கு உதவினவராகவே காணப்பட்டார் என்பதாகத் தெரிகின்றது.

போதகருடைய பாரச்சுமையைக் கண்டு, அவருக்கு உதவிப் புரிந்திடுவதற்கு ஓடிவருவதற்குப் பதிலாக, பேதுருவும், யோவானும், யாக்கோபும் எங்கே போய்விட்டார்கள்? என்று நாம் எண்ணுவதுண்டு. சிலுவையைச் சுமந்து, போதகருக்கு உதவிப் புரிந்திடுவதற்கெனச் சீமோனுக்குக் கிடைத்த சிலாக்கியத்தின் மீது நமக்கு ஆசையிருக்குமானால், கர்த்தருடைய சகோதர சகோதரிகளில் அநேகர் தினந்தோறும் அடையாளமானச் சிலுவைகளைச் சுமந்துகொண்டிருக்கின்றனர் என்பதையும், அவர்களுக்கு உதவிப் புரிதல் என்பது நமக்கான சிலாக்கியம் என்பதையும், கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்களுக்குப் பண்ணப்படுகின்ற எந்தச் சேவையையும், அவர் தமக்கே பண்ணப்பட்டதாகக் கருதுவதற்குக் கர்த்தர் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதையும் நினைவில்கொள்வோமாக. ஆனால் உதவிக் கரம் நீட்டுவதற்குரிய சிலாக்கியத்தினை எந்தச் சகோதரனும் காணவில்லையெனில், பாரம் சுமப்பவர்கள்,

இருதயத்தில் சோர்ந்துபோக வேண்டாம். கர்த்தர் தேவையை அறிந்தவராக, தேவையான உதவியை அனுப்பி வைப்பார். சில சமயம் வற்புறுத்தலினால், வந்த உதவியாகவும் (இயேசுவின் விஷயத்தில் போர்ச்சேவகர்கள் உதவியளித்தது போன்று) உலகப் பிரகாரமானவர்களுடைய அனுதாபத்தின் காரணமான உதவியாகவும் கூடக் காணப்படலாம். மரத்தினாலான சிலுவையானது, நமது கர்த்தருக்கு மிகவும் பளுவான பாரமாகக் காணப்படாததுபோன்று, உலகத்தாரால் பார்க்க முடியாத சிலுவைகளை அவருடைய பின்னடியார்கள் சுமந்து கொண்டிருக்கின்றனர்; ஆனால் இதனை "சகோதர சகோதரிகள்" புரிந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலாத்தியர் 6:2).

அனுதாபம் கொண்ட யூத ஸ்திரீகள், அருகே அழுதுகொண்டே நடந்துவந்து கொண்டிருந்தார்கள். அநேகமாக இவர்கள் மத்தியில் நமது கர்த்தருடைய தாயாகிய மரியாளும், பெத்தானியாவின் மார்த்தாளும், மரியாளும் மற்றும் மகதலேனா மரியாளும் காணப்பட்டிருக்க வேண்டும். விவரங்கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை என்றாலும் இந்த ஸ்திரீகளின் அனுதாபமானது குறிப்பிடத்தக்க விதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வியாதியஸ்தர்கள் முதலானவர்களைக் குணமாக்கின விஷயத்தில் கர்த்தருடைய சத்துவம் பயன்படுத்தப்பட்டு, குறைந்துபோனதினால் மாத்திரமல்லாமல், இன்னுமாக அவர் இரா முழுவதும் உணவும், உறக்கமும் மற்றும் மிகவும் கடுமையான மன அழுத்தம் நிறைந்த சூழ்நிலையின் கீழும் காணப்பட்டதின் நிமித்தமாகவும், நமது கர்த்தர் பெலவீனமாயும், வலுவிழந்தவராகவும் இருந்தபோதிலும், அவர் மன அமைதியினால் நிறைந்து காணப்பட்டார். அவர் சிலுவையில் அறையப்படுகிற நாளினுடைய ஒன்பதாம் மணி வேளையாக அப்போதிருந்தது மற்றும் அவர் பிலாத்துவின் அரண்மனையிலிருந்து, கல்வாரி வரையிலும், சுமார் முக்கால் மைல் தூரம், தமது சிலுவையினுடைய சுமையினைக் களைப்புடன் சுமந்து வந்துள்ளார். கொல்கொதாவிற்கு அருகாமையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஜனங்களினால் இவ்விடத்திற்கு வழங்கப்பட்டதான இப்பெயரின் அர்த்தமாவது, "கபால" (மண்டை ஓடு) ஸ்தலமாகும்;" ஏனெனில் இவ்விடத்திலுள்ள மலையினுடைய அந்தக் குறிப்பிட்ட சரிவானது, மண்டை ஓட்டினுடைய வடிவத்திலும், நிறத்திலும் காணப்பட்டது; பாறையினுடைய இருள்நிறைந்த பிளவுகளானது, கண் குழிகள் போலும், மூக்குக் குழி முதலியவைகள் போலும் காட்சியளித்தன.

கசப்பு என்று அழைக்கப்படுகின்ற, கசப்பான வெள்ளைப்போளம் கலந்த திராட்சரச பானம் கொடுக்கப்பட்டதான காரியமானது, பொதுவாய் எண்ணிக்கொள்ளப்படுவதுபோன்று, அவமதிப்பான காரியமாய் இராமல், மாறாக இரக்கம் காட்டும் காரியமாகும். பாடுபடுபவர்களுக்கு ஆறுதலளிக்கும் விதத்தில், வலியினுடைய உணர்வுகளைக் குறைப்பதற்கான நோக்கத்திற்கென்று பெண்கள் கூட்டமானது, வலியைக் குறைக்கும் கசப்பான மருந்துகள் கலந்த, புளிப்பான திராட்சரசத்தை எடுத்துச் சென்றனர் மற்றும் அவல நிலைக்குள்ளான பரிதாபத்திற்குரியவர்கள் அனைவருக்கும், அவர்களது கொடுமையான பாடுகளைக் கொஞ்சமேனும் குறைக்கத்தக்கதாக, இந்த மருந்தை அளிப்பது என்பது வழக்கமாய் இருந்தது. நமது கர்த்தர் ரசத்தை ருசிபார்த்தார் என்பதாக நமக்கு மத்தேயு தெரிவிக்கின்றார்; அது என்னவென்று அறிந்துகொள்வதற்கு (அ) தமக்குக் கொடுக்கப்பட்ட பானத்தின் வாயிலாகக் காண்பிக்கப்பட்டதான இரக்கத்தினை தாம் உணர்ந்துகொண்டதற்கான அடையாளமாகக் காணப்படத்தக்கதாக, அவர் அநேகமாக ருசிபார்த்திருக்கலாம். பிதாவின் ஞானமும், அன்பும், நீதியும் தமக்காக ஆயத்தம் பண்ணியுள்ளதும் மற்றும் தம்முடைய உண்மைக்கும், கீழ்ப்படிதலுக்குமான பரீட்சையாகக் காணப்படத்தக்கதாக தம்மீது கடந்துவரத்தக்கதாக, பிதா அனுமதித்துள்ளதுமான பாடுகளையும், வலியையும் முழுமையாய் அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினவராக, கர்த்தர் பானத்தைப் பருகுவதற்கு மறுத்துவிட்டார். சிலுவையில் அறையப்படும் காரியமானது மிகவும் கடுமையான உபத்திரவமாகக் காணப்பட்டிருக்க வேண்டும். சிலுவையானது தரையில் போடப்பட்டிருக்க, அதன் மீது கைதி நீட்டிக் கிடத்தப்பட்டு, ஆணிகளானது கைகளிலும், பாதங்களிலும் அறையப்படுகின்றது; சிலுவையானது முரட்டுத்தனமான மனிதர்களால் தூக்கப்பட்டு, பாறையில் அதற்கென உருவாக்கப்பட்டுள்ள குழிக்குள் நிற்கப்பண்ணும் காரியமானது, மிகவும் கடுமையான நேரமாகக் காணப்பட்டது. நமது கர்த்தரினால் அனுபவிக்கப்பட்டதான கொடிதான பாடுகளைக் குறித்த விவரங்களையோ, கருத்துகளையோ சுவிசேஷகர்கள் பதிவு செய்திடாதது சரியான காரியமே மற்றும் அதைக் குறித்த விவரங்களை நாமும் சுவிசேஷகர்கள் போன்று தவிர்த்துவிடுவது ஏற்றக் காரியமாய் இருக்கும்; எனினும் நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக் கொண்டவருக்கு, நம்முடைய பாவங்களுக்கான மீட்பின் கிரயத்தை அவர் கொடுக்கையில், அது அவருக்கு எத்தகைய பாடுகளைக் கொண்டுவந்திருக்கும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கையில், நமக்கு இருதயம் வலிக்கவே செய்கின்றது. காரியங்களைத் தெளிவாய்க் கிரகித்துக்கொள்கிறவன், கர்த்தருக்காகவும், அவருடைய காரணங்களுக்காகவும் ஏதாகிலும் பாடுபடுவதற்கு மிகவும் விருப்பமுள்ளவனாய் இருந்து, இப்படியாகத் தனக்குத் தேவனுடைய

குமாரனால் செய்யப்பட்டதான மாபெரும் காரியங்கள் குறித்த தன்னுடைய உணர்ந்துகொள்ளுதலையும், தனது அன்பையும் பிரதியுபகாரமாகக் காட்டுகின்றவனாய் இருப்பான். "அவரோடுகூடப் பாடுபடுவதற்கு" அனுமதிக்கப்படவில்லை எனில், அதை நாம் இழப்பாகவே கருதிட வேண்டும், ஏனெனில் அவரோடுகூடப் பாடுபடாமல், "அவரோடுகூட நாம் ஆளுகைச் செய்திடுவதற்கு" நம்மால் எதிர்ப்பார்த்திட முடியாது.

## இரண்டு தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறின

மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்ட நபருடைய உடைமைகள், தண்டனையை நிறைவேற்றிட்டப் போர்ச்சேவகர்களுக்கான ஆதாயமாகக் கருதுவது வழக்கமாக இருந்தது மற்றும் இயேசுவின் விஷயத்திலோ அவருடைய வஸ்திரங்களை, அதாவது அவரது மேல் அங்கியை, அவரது தலைப்பாகையை, பாதரட்சைகளை மற்றும் கச்சைகளைப் போர்ச்சேவகர்கள் ஆளுக்கு ஒன்று கிடைக்கத்தக்கதாக, பங்குபோட்டு, யார் எதை எடுக்க வேண்டுமென்று சீட்டினால் முடிவெடுத்தார்கள். மீதியாக கழுத்து முதல், பாதம் வரையுள்ளதும், "தையல் இல்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாய் இருந்ததுமான" அவரது அங்கி (அ) உள் அங்கி காணப்பட்டது. இதை அவர்களால் தங்கள் அனைவருக்கும் கிடைக்கத்தக்கதாகப் பங்குபோட முடியாததினால், "அவரது உடையின் பேரில் சீட்டுப்போட்டார்கள்" (சங்கீதம் 22:18; யோவான் 19:23, 24).

சிலுவையில் அறையப்படுதலானது, யூதருடைய நேரத்தின்படி மூன்றாம் மணி வேளையில் அல்லது நம்முடைய நேரத்தின்படி ஒன்பது மணிக்கு நடைப்பெற்றது. அவருடைய தலைக்கு மேலாக, அவர் மீதான குற்றச்சாட்டானது மூன்று பாஷைகளில் எழுதிப்போடப்பட்டிருந்தது; அதாவது உரோமின் அதிகாரப்பூர்வமான மொழியாகிய இலத்தீனிலும், அக்காலக்கட்டத்தினுடைய உயர்தர இலக்கிய மொழியாகக் காணப்பட்ட கிரேக்கிலும் மற்றும் யூதர்களுடைய மொழியாகிய எபிரெயத்திலும் எழுதிப்போடப்பட்டிருந்தது. இயேசுவைக் குற்றஞ்சாட்டுகையில், அவர் தம்மை, யூதருடைய இராஜா என்று உரிமைப் பாராட்டிக்கொண்டார் என்று பிரதான ஆசாரியர்கள் விசேஷித்த அழுத்தம் கொடுத்துச் சாட்டின குற்றச்சாட்டினுடைய அடிப்படையிலேயே, குற்றச்சாட்டு எழுதிப்போடப்பட்டிருந்தது. பிலாத்து எழுதிப்போட்ட வார்த்தைகளுக்கு, முதன்மைவகித்த யூதர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்றும், அதை மாற்றி எழுதப்படுவதற்குப் பிரயாசம் எடுத்தார்கள் என்றும், "நான் எழுதினது எழுதினதே" என்று பிலாத்துக்கூறி மறுத்துவிட்டார் என்றும் நாம் அறிவோம். "இவர் தன்னை யூதர்களுடைய இராஜா என்று உரிமைப் பாராட்டிக்கொண்ட வஞ்சகர்" என்று எழுதப்படுவதற்கு யூதர்கள் விரும்பினர், ஆனால் தேவ வழிநடத்துதலின்படி, "இயேசு, யூதருடைய இராஜா" என்ற உண்மையான பட்டப்பெயரே, அவருடைய தலைக்கு மேலாக எழுதிப்போடப்பட்டது. இதைக் காட்டிலும் அவர் மேலானவர் என்றும், தேவ வழிநடத்துதலின்படி அவர் உலகத்தைச் சுதந்தரித்துக் கொண்டவர் என்றும், அவர் உலகத்தினுடைய இராஜாவாக நிச்சயமாய் இருப்பார் என்றும், அவர் ஏற்கெனவே பரிசுத்தவான்களுடைய இராஜாவாக இருக்கின்றார் என்றும், யூதர்கள் அல்லாத நாம் அறிந்து களிக்கூருகின்றோம்.

எப்படி அந்த இரண்டு கள்வர்களுக்கும் அதே நேரத்தில் மரணத்தண்டனைக் கொடுக்கப்பட்டது என்பது பற்றின விவரங்கள் பதிவுகளில் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இந்தத் தீர்ப்புப் பெற்றவர்களாக, சில காலம் சிறையில் இருந்திருக்க வேண்டும் என்றும், இயேசுவுக்கு மரணத்தண்டனையை நிறைவேற்றும் அதேவேளையில், இவர்களுக்கும் தண்டனை நிறைவேற்றிடுவதற்குப் பிரதான ஆசாரியர்கள் யோசனைத் தெரிவித்திருக்க வேண்டும் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். தங்கள் போக்கிலுள்ள அநீதியை மறைப்பதற்கும் மற்றும் நடவடிக்கைகள் அனைத்திலும் நீதி காணப்படுவது போன்று காட்டுவதற்குமான எண்ணம் அவர்களுக்குக் காணப்பட்டிருந்திருக்க வேண்டும் அல்லது சட்டத்தினால் கொடுக்கப்படும் பாதுகாப்பினை இழந்தவர்கள் கூட்டத்தாரில் ஒருவராக இயேசுவை ஆளாக்கி, அவரை இழிவுப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். எப்படியாக இருப்பினும், இது தேவனால் முன்அறியப்பட்டு, தீர்க்கத்தரிசியால் முன்னறிவிக்கப்பட்டிருந்தது; "அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" (ஏசாயா 53:12).

## நாமோ, அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்

சிலுவையின் அருகாமையில் அப்போஸ்தலனாகிய யோவானும், இயேசுவின் தாயும், அவரை அன்புகூர்ந்தவர்களும் நின்றுகொண்டிருந்தனர்; இவர்கள் அவரது அவமானங்களையும், பாடுகளையும் கண்டபோது, இவர்களது இருதயங்களானது, அனுதாபத்தினால் நொறுங்கினது மற்றும் சம்பவங்களின் அவசியத்தினை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் நின்றார்கள். கொல்கொதாவின் வழியில் போக்கும் வரத்தும் எப்போதும் காணப்படுவதினால், பிரயாணிகள் போக்கும் வரத்துமாக இருக்க, அநேகமாக சிலர் விருதாவாகவும் அங்கு நின்றிருந்திருக்க வேண்டும். அநேகமாக இவர்கள் மத்தியில் இயேசுவையும், அவரது அற்புதங்களையும் குறித்து அநேகம் கேள்விபட்டவர்களாய் இருந்த அநேகர், இயேசு உரிமைப் பாராட்டிக்கொண்ட விஷயங்கள் போலியானவைகள் என்றும், அவரது அற்புதங்கள், பரிசேயர்களால், பிசாசுகளின் பிரபுவாகிய பெயல்செபுலின் வல்லமையினால் உண்டானவை என்று கூறப்பட்டதுபோலவே, உண்டான வஞ்சனைகள் என்றும் இப்பொழுது நம்பினார்கள். ஒருவேளை கர்த்தர் கூறினதுபோலவே, அவர் தேவனுடைய வல்லமையினாலேயே கிரியைகளைப் புரிந்திருப்பாரானால், அவர் தமது சத்துருக்களிடம் கையளிக்கப்பட்டிருக்க மாட்டாரே என்ற கோணத்தில் இவர்கள் யோசித்தார்கள்; ஏனெனில் ஒருவன் தன்னுடைய சிநேகிதனுக்காக தானாய் முன்வந்து ஜீவன் கொடுப்பான் என்ற விஷயம் இவர்களுக்கு ஒருபோதும் உதிக்கவில்லை, இன்னுமாக கர்த்தருடைய மரணத்திற்கான நோக்கம் அல்லது அவசியம் குறித்த காரியங்கள் கொஞ்சமேனும் இவர்களுக்குள் தோன்றவுமில்லை.

இதைப்போன்றதான தவறு, கர்த்தருடைய பின்னடியார்கள் தொடர்புடைய விஷயத்தில், உலகத்தாரால் செய்யப்படுகின்றது. யாருக்குக் கவலைகளும், சோதனைகளும், துன்புறுத்துதல்களும், வறுமையும் காணப்படுகின்றதோ, அவர்கள் தெய்வீகக் கோபத்திற்கு/வெறுப்பிற்கு ஆளாகியுள்ளனர் என்று உலகத்தார் எண்ணுகின்றனர். ஆகையால்தான் நமது கர்த்தரைக் குறித்து அப்படியாகத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருந்தது மற்றும் அது அவருடைய சபையின், அதாவது அவரது ஒட்டுமொத்த சரீரத்தின் விஷயத்திலும் உண்மையாகவே உள்ளது . . . "நாமோ, அவர் தேவனால் அடிப்பட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்" மற்றும் நாம் அவர் குறித்து வெட்கப்பட்டோம். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இராஜ்யத்தினுடைய கனங்களுக்கு ஆயத்தமாகுவதற்கு அவசியமான அனுபவங்களை, அவர்களுக்கு அனுமதிப்பதின் மூலம், அவர்கள் மீதான தேவனுடைய தயவானது வெளிப்படுகின்றது என்று உலகத்தாரால் புரிந்து கொள்ள முடியாது.

## துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்

நமது கர்த்தர் மரிப்பதற்கு முன்னதான கடைசி சில நாட்களில் பேசிட்டதான வார்த்தைகளானது, சிலரால் நினைவுகூரப்பட்டது. அதுவும் ஒன்றில் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது அல்லது துணிந்து தவறாய்க் குற்றஞ்சாட்டிக் கேலிப்பண்ணப்பட்டது. அவர்களுடைய ஆலயத்தை இடித்துப்போடுவதாக அவர் பேசவில்லை, மாறாக ஆலயத்தை அவர்கள் இடித்துப்போடுவார்களானால், அது மூன்று நாட்களுக்குள்ளாக (நிஜத்தில்) மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றே அவர் கூறியிருந்தார். ஆலயத்தைக் கட்டுவதற்கு நாற்பது வருடங்களானது மற்றும் நமது கர்த்தருடைய வார்த்தைகளை அவர்கள் டாம்பீகமான பேச்சாகக் கருதினார்கள் மற்றும் சிலுவையிலிருந்து இறங்கிவருவதன் மூலம், அவர் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துவது, அவருக்கு மிகவும் இலகுவானதாய் இருக்கும் என்றார்கள். அவர் இப்படியாகச் செய்யாத காரியமானது, அவர் முன்னமே சொன்னதும், செய்ததுமானவைகள் அனைத்தும் போலி என்பதற்கான ஆதாரம் என்பதாகக் கருதப்பட்டது. உணர்வுகள் மிக்க மனமுடைய நமது கர்த்தருக்கு, இப்படியாகப் போலித்தனம் என்று குற்றஞ்சாட்டுவது, மிகவும் கடுமையான பாரமாக, அவருடைய இருதயத்திற்கு இருந்திருக்க வேண்டுமென்று நம்மால் உணரமுடிகின்றது; எனினும் அவர் அதைப் பொறுமையாய்ச் சகித்தார். ஓ! இயேசு சிலுவையிலிருந்து இறங்கிவராமலும், நம்முடைய பாவங்களிலேயே நம்மை விட்டுவிடாமலும், முழு உலகத்தையும் மீட்காத நிலையிலேயே விட்டுவிடாமலும் இருந்ததற்காக நாம் மிகவும் மகிழ்கின்றோம்!

சிலுவை மட்டும் கைதியை, பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் பின் தொடர்ந்தனர்; அவர் தங்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள

வேண்டுமென்ற ஆவலில், முக்கிய அலுவல்களையெல்லாம் அவர்கள் தள்ளிவிட்டுதான், அவரைப் பின்தொடர்ந்து சென்றிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. அவர்கள் சாதாரண ஜனங்களைக் காட்டிலும் அதிகமாய்க் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்களாய் இருந்தனர், எனினும் தங்களது போக்கை நியாயப்படுத்திடுவதற்கு நாடினார்கள். மிகவும் விநோதமாக அவர்கள், "இவர் மற்றவர்களை இரட்சித்தார்" என்பதை ஒப்புக்கொண்டார்கள் மற்றும் இயேசு தம்மைத்தாமே இரட்சித்துக்கொள்ளவில்லை என்ற உண்மையானது, அவர்களுடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது மற்றும் இயேசு தமக்கும், யேகோவா தேவனுக்குமான தொடர்பு பற்றி உரிமைப் பாராட்டிக்கொண்ட விஷயங்கள் அனைத்தும் போலி என்பதற்கான தீர்க்கமான ஆதாரமாய் இருப்பதாகவும் அவர்களுக்குத் தோன்றியது. அவருடைய இரத்தப்பழி தங்கள் மீதும், தங்களுடைய பிள்ளைகள் மீதும் காணப்படுவதில் அவர்கள் திருப்தியடைந்தார்கள். பரிதாபத்திற்குரிய மனிதர்கள்! அவர்கள் தங்களையே ஞானியென்று எண்ணிக்கொண்டார்கள், எனினும் இவைகளெல்லாம் சம்பவித்தக் கொஞ்ச நாட்களுக்குப் பிற்பாடு, அப்போஸ்தலனாகிய பேதுரு, இந்தக் காரியங்கள் அனைத்தும் அறியாமையில் செய்யப்பட்டதாகச் சுட்டிக்காட்டினார். "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 3:17) என்பதாக பேதுருவின் வார்த்தைகள் காணப்படுகின்றது. இவர்களும், பெரும்பான்மையான மனுக்குலமும் பாக்கியசாலிகள், ஏனெனில் நம்முடைய ஆண்டவராம் கர்த்தர் கோபமுள்ளவர் என்று சொல்லப்பட்டுள்ளது போன்று, அவர் கோபம் கொள்ளவில்லை; மாறாக அவர் "நீடிய பொறுமையும், பூரண கிருபையும் (இரக்கமும்)" கொண்டிருந்தார். இதற்கு இசைவாகவே, கர்த்தரைச் சிலுவையில் அறைந்துபோட்டவர்கள், இறுதியில் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து, துக்கிப்பார்கள் என்றும், "கர்த்தர் அவர்கள்மேல் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்; அப்பொழுது அவர்கள் புலம்புவார்கள்" என்றுமுள்ள மகிமையான தீர்க்கத்தரிசனம் காணப்படுகின்றது.

## அவர் வையப்படும்போது, பதில் வையாமல் இருந்தார்

வையப்பட்டதான சூழ்நிலையின் கீழான நமது கர்த்தருடைய பொறுமையை, அப்போஸ்தலன் நமக்கு மாதிரியாகச் சுட்டிக்காண்பிக்கின்றார். அவர் வையப்படும்போது, பதில் வையாமல் இருந்தார். தம்மைக் துன்புறுத்துபவர்களைக் குத்தும் விதமான அநேகம் உண்மையுள்ள விஷயங்களை வைத்து நமது கர்த்தரால் பதில் கொடுத்திருக்க முடியும். அவரது பொறுமைக்கான இரகசியமானது, பிலாத்துவினிடத்திலான அவரது வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரம் இராது" எனும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதே கருத்துதான், "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" என்ற வார்த்தைகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே கர்த்தருக்கான நம்முடைய அர்ப்பணமானது எந்தளவுக்கு முற்றும் முழுமையானதாகக் காணப்படுகின்றதோ மற்றும் "நீதிமானுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்" என்பதை நாம் எந்தளவுக்கு உணர்ந்து கொள்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் பொறுமையுடனும், கோபங்கொள்ளாமலும், வைதலையும், துன்புறுத்துதல்களையும் ஏற்றுக்கொள்ள முடிகிறவர்களாக இருப்போம் (சங்கீதம் 37:23).

இயேசுவோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டவர்களில் ஒருவனும் அவரை வைதான்; ஒருவேளை இருவரும் வைதிருக்கலாம்; ஆனால் ஒருவன் மாத்திரமே அநேகமாக வைதிருக்க வேண்டும்; மற்றவன் கொஞ்சம் நேரம் அமைதியாய்க் காணப்பட்டு, பிற்பாடு இன்னொரு சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, இயேசுவின் சார்பாகப் பேசினான். மிகவும் பிரகாசமாய் விடிந்த காலை வேளையானது, மிகவும் மந்தாரமானது மற்றும் ஆறாம் மணி நேரம் (மதியம் 12) முதல், ஒன்பதாம் மணி நேரம் (3 மணி) வரையிலும், காணப்பட்ட அந்தகாரம் இயேசு மரித்தபோது நன்கு தெரியும் விதத்தில் காணப்பட்டது.

இயேசுவினுடைய அனுபவங்களுடைய இறுதிக் கட்டத்தில், மாலை 3 மணியளவில், அவர் மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; இப்படி அவர் கூப்பிட்டக்காரியமானது, அவரிடத்தில் இன்னும் சத்துவம்/சக்தி இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அவர் சத்தமிட்டார். கெத்செமனே தோட்டத்தில் இருக்கையில், அவர் பிதாவுக்குப் பிரியமாய்க் காணப்படுகின்றார் என்ற உறுதியைப் பெற்றுகொண்ட நேரமுதற்கொண்டு, இரவிலும், காலையிலுமான அனுபவங்கள் அனைத்தின் மத்தியிலும், நமது கர்த்தர் மிகவும் சாந்தத்துடனும், மனஅமைதியுடனும் காணப்பட்டார். அவருடைய

அனுபவங்களினுடைய இறுதிகட்டங்களின் போது, ஏன் இப்படியாக அவருடைய இருதயத்திற்கும் மற்றும் பிதாவுக்கும் இடையில், இவ்வளவு இருளான ஒரு மேகம், ஒரு நிழல் காணப்பட வேண்டும். வேறெந்த நேரங்களிலும் தேவைப்படாத அளவுக்கு, பிதாவுடைய நேசமும் பிரியமுமான குமாரனுக்கு ஆறுதலும், பலமும், பிதாவுடைய அன்பும், தயவும் உள்ளது என்பதான தெளிவான உணர்ந்துகொள்ளுதல் தொடர்ந்து காணப்படுவதும் அவசியமான ஒரு தருணத்தில், இப்படி மேகம் இடையே வருவதற்கு ஏன் பிதா அனுமதித்திட வேண்டும்? இக்கேள்விக்கு, ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார் என்பது குறித்துப் பார்க்கையில், நாம் பதிலளிப்போம்.

இத்தருணத்தில்தான், "தாகமாயிருக்கிறேன்" என்று நமது கர்த்தர் கூறினார் மற்றும் கடற்காளான் புளிப்பான திராட்சரசத்தில் தோய்க்கப்பட்டு ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவரது உதடுகளினிடத்தில் நீட்டப்பட்டது (யோவான் 19:29). இதை அவர் கொஞ்சம் ஏற்றுக்கொண்டார் இம்மாதிரியான சூழ்நிலைகளில், அவரது காயங்கள், அவரது இரத்தத்தில் கடுமையான ஜூரத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். மீண்டுமாக இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டார். அவர் என்ன கூறினார் என்பது மாற்குவினால் பதிவுச் செய்யப்படவில்லை. ஆனால் இயேசு, "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை - என் ஜீவனை ஒப்புவிக்கிறேன்" என்று கூறினதாக லூக்கா பதிவுச் செய்துள்ளார். இது அவர் தேவனிடத்தில் கொண்டிருந்த விசுவாசமானது முழுமையானது என்பதையும், அவருடைய பிரதான எண்ணம் ஜீவனைப் பற்றியதாக இருந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. அவர் தம்முடைய ஜீவனை, பிதாவின் ஏற்பாட்டிற்கு இசைவாக, மிகவும் உண்மையுடனும், மிகவும் பெருந்தன்மையுடனும் ஒப்புக்கொடுத்துள்ளார். அவரை மரணத்திலிருந்து எழுப்புவதாகிய பலனை, பிதா அவருக்கு வாக்களித்திருந்திருக்கின்றார்; அந்த வாக்குத்தத்தத்தில் குமாரன் விசுவாசம் கொண்டிருந்தார் மற்றும் தம்முடைய மரணத்தருவாயில், குமாரன் தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

## முடிந்தது

நமது கர்த்தருடைய மரணத்தின்போது, பல விஷயங்கள் நடந்ததாகப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது; சிலுவைக்கு அருகாமையில் காணப்பட்ட நிலப்பகுதியை, பூமியதிர்ச்சியானது அசையப்பண்ணினது மற்றும் எருசலேமிலுள்ள ஆலயத்தில், பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்திட்டதான மாபெரும் திரைச்சீலையானது கிழிந்தது; அதுவும் தேய்மானத்தின் காரணமாகக் கிழிவது போன்று கீழிலிருந்து, மேல் கிழியாமல், மாறாக மேலிருந்து, கீழாகக் கிழிந்து, இப்படியாக இக்காரியம் தெய்வீக வல்லமையினுடைய வெளிப்படுத்தல் என்பதைச் சுட்டிக்காட்டினது. இந்தத் திரைச்சீலையானது, அறுபது அடி நீளம் கொண்டதாகவும், முப்பது அடி அகலம் கொண்டதாக, நான்கு அங்குலம் பருமன் கொண்டதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. இது "வெண்மை, சிவப்பு மற்றும் இரத்தாம்பரம் நிறங்கள் கொண்ட அருமையான பாபிலோனிய கலைவேலைபாடு கொண்டதென" ஜோசபஸ் அவர்கள் விவரித்துள்ளார். இந்தத் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது என்பது, பரலோகத்திற்கும், உலகில் பரலோக நிலைமையில் காணப்படுகிறவர்களுக்கும் இடையில் வழி திறக்கப்படுவதை அடையாளமாய்த் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்து தம்முடைய மாம்சத்தைப் பலிச் செலுத்தினதின் வாயிலாக, திரையின் வழியாய் நமக்குப் புதியதும், ஜீவனுமான மார்க்கத்தை உண்டுபண்ணினார். உண்மை விசுவாசிகளானவர்கள், இப்பொழுது பரிசுத்த ஸ்தலத்திலோ (அ) இரண்டு அறைகளிலுள்ள முதலாம் பாகத்திலோ ஆசாரியர்களாய், இயேசுவின் அங்கத்தினர்களாகக் காணப்படுபவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இங்குக் குத்துவிளக்கினுடைய வெளிச்சத்தின் மூலமாகவும், பொன் மேஜையிலுள்ள அப்பத்தின் மூலமாகவும், பொன் தூபபீடத்தில் நாம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டதான சுகந்த தூபவர்க்கங்கள் மூலமாகவும் நமக்குத் தேவனுடன் ஐக்கியம் காணப்படுகின்றது மற்றும் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நம்மால் விசுவாசத்தினால், திரைக்கு அப்பால் பார்க்க முடிகின்றது; தேவனை அன்புகூருகின்றவர்களுக்கும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும், அதாவது தலையும், சரீரமுமான கிறிஸ்துவுக்கு அவர் வைத்துள்ளதான பரலோக ஆசீர்வாதங்களையாகிலும் கணநேரம் நோக்கமுடிகின்றது.

## ஏன் இயேசு சிலுவையில் அறையப்பட்டார்

அனைவருடைய மனங்களிலும், மற்றும் கர்த்தருடைய பின்னடியார்களென அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களில் குற்றம் கண்டுபிடிப்பவர்களுடைய மனங்களிலும் நமது கர்த்தர்

கல்வாரியில் பாடுபடுவதும், மரிப்பதும் ஏன் அவசியமாய் இருந்தது? என்ற காரியமானது, கிறிஸ்தவம் தொடர்புடைய விஷயத்தில் மிகவும் புதிரான காரியங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. தேவன் இவைகளை அவசியமாக்கியுள்ளபடியால்….இவைகள் இன்றியமையாதவைகளாகக் காணப்படும் விதத்தில் தேவன் தம்முடைய திட்டத்தை ஏற்படுத்தி உள்ளபடியால், இவைகள் அவசியமானவைகளாயின என்று நாம் பதிலளிக்கின்றோம். அவரால் இன்னொரு விதத்தில் இரட்சிப்பிற்கான திட்டத்தைத் தீட்டியிருக்க முடியும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை, ஏனெனில் அனைத்துக் காரியங்களுமே அவருடைய கரங்களில்தான் இருந்தது, ஆனால் அவர் சிறந்த திட்டத்தையே தெரிந்தெடுத்துள்ளார் என்பதும் மறுக்க முடியாத உண்மையேயாகும். மேற்குறிப்பிடப்பட்டுள்ளக் கேள்விக்குப் பதிலைத் தன்னுடைய சொந்த மனதில் தீர்வுக்காணவோ (அ) மாம்ச மனதினுடைய மனுஷீகக் கோட்பாடுகளின்/தத்துவங்களின் அடிப்படையில் தீர்வுக்காணவோ முயற்சிப்பவன் எவனும், தவறு செய்கிறவனாய் இருப்பான். இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில், பரத்திலிருந்து வரும் ஞானத்திற்குச் செவிசாய்ப்பதே பாதுகாப்பான மற்றும் சரியான ஒரே போக்காக இருக்கும்.

தேவனுடைய வார்த்தைக்கு நாம் செவிக் கொடுக்கும்போது, அவர் ஆதிமுதல் முடிவுவரை அறிந்தவராய் இருக்கின்றார் என்றும், அவருடைய திட்டமானது, அவரது பண்புகளாகிய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை தொடர்புடைய விஷயத்தில், மனிதர்களுக்கு மாத்திரமல்லாமல், தூதர்களுக்கும்கூட, அசுத்தமானவர்களுக்கு மாத்திரமல்லாமல், பரிசுத்தமானவர்களுக்கும்கூடப் படிப்பினைகளாகக் காணப்படத்தக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம். தெய்வீகத் திட்டமானது முழுமையாய் நிறைவேற்றப்பட்டிருக்கும்போது, தெய்வீக ஏற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டதான ஞானம், அன்பு, நீதி மற்றும் வல்லமையினுடைய நீளங்களையும், அகலங்களையும், உயரங்களையும் மற்றும் ஆழங்களையும் அனைவரும் காண்பார்கள். தற்காலத்திலோ சொற்பமானவர்கள் மாத்திரமே காணமுடிகின்றவர்களாய் இருக்கின்றனர்; "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" (சங்கீதம் 25:14).

தம்முடைய சொந்தத் தீர்ப்பை, தம்மால் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நன்கு அறிந்த நிலையிலேயே தேவன் பாவத்திற்கான தண்டனையாக மரணத்தை அறிவித்தார்; ஆதாம் பாவம் செய்வார் என்றும், அவரும் அவரது முழுக்குடும்பமும் மரணத்தீர்ப்பின் கீழ்க் காணப்படுவார்கள் என்றும் அறிந்தவராகவே இப்படியான தீர்ப்பைத் தேவன் அறிவித்தார். ஆதாமுக்கும், இக்காரியங்களைப் புரிந்துகொள்ளும் அனைவருக்கும், மனுக்குலத்திற்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதாகவே தோன்றும்; காரணம் முதலாவதாகத் தேவனால் தம்முடைய தீர்ப்பினை இரத்துச் செய்திட முடியாது மற்றும் இரண்டாவதாக இந்தத் தீர்ப்பானது மனிதனிடத்திலிருந்து ஜீவனைப் பிடுங்கிப்போட்டதின் வாயிலாக, அனைத்தையும் பிடுங்கிக் கொண்டதாக இருக்கின்றது. தேவன் தமது நோக்கத்தில் ஒரு பதிலாளை/மாற்றாளைக் கொண்டிருப்பார் என்பது மனிதனுடைய எண்ணத்தில் தோன்றவில்லை; ஒருவேளை அவனுக்கு இப்படியாகத் தோன்றியிருந்தாலும், அவன் தனது சக மனிதர்கள் மத்தியில் நோக்கிப்பார்க்கும் போது, அவனால் ஆதாமுக்குப் பதிலாளாகக் காணப்படுவதற்குப் பாத்திரமான யாரையும் காணமுடியாது; ஏனெனில் விழுகையின் காரணமாக மனிதர்கள் சுதந்தரித்துக் கொண்டவைகளின் விளைவாக, அனைவரும் பாவிகளாகவே இருக்கின்றனர். தேவன் ஆதாமினுடைய விழுந்துபோன சந்ததியை ஏறெடுத்துப் பார்க்கையில், அவர்கள் தங்களுடைய தண்டனையினின்று தப்பித்துக்கொள்வதற்கான வழியை, முயன்று அளிக்குமளவுக்கு, பிரமாணத்தை மீறினவர்களிடத்தில் (மனுக்குலத்திடத்தில்) அவ்வளவுக்கு அனுதாபங்கொள்வார் என்றும் மனிதன் ஒருபோதும் எண்ணிப்பார்த்திருக்கவே மாட்டான். ஆதாமுக்கு ஒரு மாற்றாளைத் தேவன் அருளுவது என்பது, இன்னொரு மனிதனை, அதாவது ஆதாமுக்கு எல்லா விதத்திலும் சரிசமமான ஒரு மனிதனைச் சிருஷ்டிப்பதையோ அல்லது விழுகைக்கு முன்னதாகக் காணப்பட்ட ஆதாமின் சுபாவ நிலைக்கொத்த நிலைக்கு, ஏதோ ஒரு பரிசுத்தமான ஜீவியை மாற்றுவதையோ குறிப்பதாக இருக்கும். சர்வ வல்லமையுள்ள தேவன் இந்தளவுக்குத் தம்முடைய மனித சிருஷ்டிகளினுடைய நலனில் அக்கறைக்கொண்டிருப்பார் என்றும் மனிதன் எண்ணிப்பார்த்திருந்திருக்கவே மாட்டான். இன்னுமாக ஆதாமைப் போன்று இன்னொரு மனிதனைத் தேவன் சிருஷ்டிப்பது என்பது மீறுதலை இருமடங்காக்குவதாக மாத்திரமே இருக்கும் என்றும் மனிதன் சிந்திக்கக்கூடும்; இன்னுமாகத் தேவன் ஏதோ ஒரு மகிமையான ஆவியின் ஜீவியை, மனித நிலைமைகளுக்குள் மாற்றுவது என்பது, நீதிக்கு முரண்பாடானதாக, அதாவது பரிசுத்தமற்ற மற்றும் பாவமுள்ளவர்களுடைய நலனுக்காக, ஒரு பரிசுத்தமுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ளச் சிருஷ்டியைத் தண்டிப்பதாக மனிதனுக்குத் தோன்றக்கூடும்.

ஆனால் இதோ தேவன் ஏற்பாடு பண்ணியுள்ள திட்டத்தில், அவரது ஞானமும், அவரது அன்பும் மற்றும் நீதியும் வெளிப்படுகின்றது. தேவன் ஆதாமுக்கு ஈடுபலியை அருளினதின் வாயிலாக, ஆதாமின் சந்ததிக்கும் அருளினார்; விழுந்துபோன ஆதாமுக்கும், அவரில் ஜீவனை இழந்துபோனவர்களுக்கும் தேவன் ஒரு பரிபூரண மனிதனை மீட்பராக அருளினார், எனினும் தேவன் யாருக்கும் அநீதி செய்யவில்லை. மனிதனுடைய மீட்பராகப் போகிறவர், இந்த வேலையிலுள்ளதான பாடுகள் மற்றும் இழப்புகள் நிமித்தமாக மிகுந்த நன்மையை/அநுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில், தேவன் திட்டத்தை ஏற்பாடு பண்ணினவரானார். ஒருவேளை தேவன் இந்தக் கோரிக்கையினை, பரலோக சேனைகள் அனைவரிடமும் பொதுவாய் வைத்திருப்பாரானால், அநேகர் மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிவதற்கும், பிதா தங்களுக்கு எதைத் தருவது சிறந்ததாக இருக்கும் என்று எண்ணி, தரச் சித்தமாய் இருக்கும் எந்த ஆசீர்வாதத்திலும், பலனிலும் நம்பிக்கைக் கொள்வதற்கும் ஆயத்தமாயும், விருப்பமாயும் காணப்படுவார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை; ஆனால் பிதா அந்த வாய்ப்பினை அனைவருக்கும் பொதுவாய் வைக்கவில்லை; அது ஒருவருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது.

## தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்

பரம சேனைகளில் ஒருவராக, பிதாவுடைய ஒரே பேறானவர் காணப்பட்டார்; இவர் ஆதியில் வார்த்தை என்று அழைக்கப்பட்டார் மற்றும் இவர் பிதாவோடு இருந்தார் மற்றும் இவர் தேவனாகவும் (அ) வல்லமையுள்ளவராகவும் இருந்தார் மற்றும் இவர் தேவனால் அனைத்துத் தூதர்களையும், மனிதர்களையும் சிருஷ்டிப்பதில் கருவியாகப் பயன்படுத்தப்பட்டார். இவருக்கே, அனைவரிலும் உன்னதமான இவருக்கே, மாபெரும் பலி ஏறெடுப்பதற்கும், பிதாவின் அன்பின் மீதும், பிதாவின் வல்லமையின் மீதுமான விசுவாசத்திற்கான மாபெரும் பரீட்சைக்கும், அதாவது வேலை முடிவடையும்போது இவரை மகிமைப்படுத்தி, மீண்டும் ஜீவனுக்குள் பிதா கொண்டுவருவார் என்ற விசுவாசத்திற்கான மாபெரும் பரீட்சைக்குமான வாய்ப்புப் பிதாவினால் முதலாவதாக முன்வைக்கப்பட்டது. ஒரே பேறானவர் ஏற்கமுடியாது எனத் தெரிவித்திருக்கலாம் மற்றும் இப்படியாகத் தெரிவித்திருப்பாரானால், அந்த வாய்ப்பானது, அடுத்த நிலையில் கனத்திலும், மகிமையிலும், வல்லமையிலும் தூதர்கள் மத்தியில் காணப்படுபவரிடம் சென்றிருக்கும். ஆனால் ஒரே பேறானவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. மாறாக மனுக்குலத்திற்காக பிதாவுடன் உடன் வேலையாளாய்க் காணப்படுவதற்கான வாய்ப்பானது ஒரே பேறானவரால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் வேலையைக் கையில் எடுத்தார்; அவர் பரலோகப் பிரகாரங்களைத் துறந்து, பரலோக நிலைமைகளையும், ஆவிக்குரிய சரீரம் முதலானவைகளைத் துறந்தார்; அவர் மரியாளின் கருவுக்குள்ளாக மாற்றப்பட்டார் மற்றும் ஏற்றக்காலத்தில் அவர் மனுஷர்கள் மத்தியில் மனுஷனாக, "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவானார்."

நியாயப்பிரமாணத்தின்படி, முப்பதாம் வயதாகிய ஏற்ற வயதில், அவர் தம்மை மரணம் பரியந்தமான முழுமையான அர்ப்பணிப்புச் செய்துகொண்டார் மற்றும் இதனை அவர் ஞானஸ்நானத்தின் மூலம் அடையாளப்படுத்தினார். மூன்றரை வருடங்களாக மரணம் அவருக்குள் நிகழ்ந்துகொண்டே வர, கல்வாரியில் அவர், "முடிந்தது" என்று சத்தமாய்க் கூப்பிட்டார். இப்படியாக மனிதனாகத்தக்கதாக அவர் தம்மை முதலாவதாக மகா பெரிய விதத்தில் தாழ்த்தினதாவது, ஓர் ஆயத்தப்படியாகவே காணப்பட்டது; ஆனால் ஆதாமுக்காகப் பதிலாளாக அவர் தம்மையே பலியாகக் கொடுத்தக் காரியமானது, மூன்றரை வருட காலங்கள் கொண்டதாகவும், சிலுவையில் அவரது மரணத்தின்போது நிறைவடைந்ததாகவும் இருந்தது. இங்கு அவர் உலகத்தை மீட்பது தொடர்புடைய விஷயத்தில், பிதா அவருக்குக் கொடுத்திருந்ததான வேலையை நிறைவேற்றி முடித்தார். அவருடைய ஜீவனானது, ஆதாமுக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாக இருந்தது மற்றும் ஆதாமுடைய பெலவீனங்களையும், அவருடைய பூரணமின்மைகளையும் உலகம் சுதந்தரித்துக் கொண்டதன் காரணமாக, உலகம் ஆதாம் மூலமாய் ஜீவனை இழந்துள்ளபடியால், நீதியாகவும், சட்டப்பூர்வமாகவும், உண்மையாகவும் கிறிஸ்துவின் மரணமானது, ஆதாமை மாத்திரம் மீட்டுக்கொள்ளாமல் இன்னுமாக மனுக்குலத்தின் உலகத்தையும் மீட்டுக்கொண்டுள்ளது. ஆதாம் பாவியான காரணத்தினால் அவருக்குத் தேவனுடனான ஐக்கியம் துண்டிக்கப்பட்டப்படியினால், ஆதாமுக்குப் பதிலாளாகிய நமது அருமை மீட்பரும், தாம் மரிப்பதற்கு முன்னதாக, இதுபோன்றதான அனுபவத்தைக் கொஞ்சம் நேரம் அனுபவிக்க வேண்டியவராய் இருந்தார். இது அவருக்கு மிகவும் கடினமான வேலையாய் இருந்தது மற்றும் அவர், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று சத்தமாய்க் கூப்பிட்டார்.

ஏற்றவேளையில் அவர் மரணத்திலிருந்து, ஓர் ஆவியின் ஜீவியாக உயிர்த்தெழுப்பப்பட்ட போது, அவருக்கான பிதாவின் வாக்குறுதி நிறைவேறினது; ஏற்ற வேளையில் அவர் நமக்காக, அதாவது அவரது பலியினுடைய புண்ணியத்தில் ஒவ்வொரு விசுவாசியும் பங்கடையத்தக்கதாக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படிக்குப் பிரவேசித்தார். இந்த வேலையானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது மற்றும் அர்ப்பணம் பண்ணும் விசுவாசிகள் ஒவ்வொருவரும், கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்கள் மற்றும் அவருக்குள், அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்த விசுவாசிகளானவர்கள், தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்து, இப்படியாகக் கிறிஸ்துவினுடைய பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான சிலாக்கியத்தினைப் பெற்றுக்கொள்கின்றவர்களாகுகின்றனர். சீக்கிரத்தில், முழுப் பாவ நிவாரண பலிச் செலுத்துதல்களும் நிறைவடைந்திடும், சீக்கிரம் அது முடிவடைந்துவிடும்; சீக்கிரத்தில் "அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; அவரோடேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம்" என்ற வாக்குத்தத்தமும் நிறைவேறும். இவைகள் நிறைவேறும் காலத்தில் மீட்பின் வேலையானது, பெரியளவில் நடைபெறும். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் கடைசி அங்கத்தினர்கள், அவரோடுகூடப் பாடுபட்டு முடிந்தவுடனே, அவர் விசுவாசிகள் அல்லாத மீதமுள்ள மனுக்குலம் சார்பாக, நீதி - முழுமையாய்ச் சந்திக்கப்பட்டக் காரியங்கள் செயலாக்கத்தில் கொண்டுவரப்படும் மற்றும் உலகத்திற்கு எதிரான தண்டனையானது, சாபமானது, இப்படியாக இரத்துச் செய்யப்படும்; இது விசுவாசத்தின் வாயிலாக அல்ல; இன்னுமாக விசுவாசம் காட்டுகிறவர்களுக்காக மாத்திரமும் அல்ல; மாறாக விசுவாசம் பொருட்படுத்தப்படாமலேயே இரத்துச் செய்யப்படும்.

## பலன்கள்--மகிமையான விளைவுகள்

பின்னர் உலகத்தைச் சீர்த்தூக்கும் வேலை ஆரம்பமாகும். அதாவது கல்லறைக்குள் போகாதவர்களையும், கல்லறைக்குள் ஏற்கெனவே சென்றுள்ளவர்களையும் படிப்படியாகவும் சீர்த்தூக்கிவிடும் வேலை ஆரம்பமாகும். சிறையின் கதவுகள் திறக்கப்படும், கைதிகள் அனைவரும் வெளிவருவார்கள்; தீர்க்கத்தரிசி கூறியுள்ளது போன்று, அவர்கள் அனைவரும் பரீட்சைக்கெனக் கடந்துவருவார்கள் (ஏசாயா 61:1). ஆதாமின் முதல் குற்றத்தின் அடிப்படையிலோ, அவர்கள் ஆதாம் மீது வந்த தண்டனையினுடைய தாக்கத்தின் காரணமாக செய்திட்டவைகளின் அடிப்படையிலோ அல்லாமல், மாறாக அவரவருடைய சொந்தப் பொறுப்பேற்குதலின் (கிரியைகளின்) அடிப்படையில் ஜீவனுக்கான ஒரு புதிய பரீட்சையில் காணப்படுவார்கள். ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள் என்பது, அவரவர் பெற்றிருக்கும் குணலட்சணம் மற்றும் பலத்தினுடைய அடிப்படையிலேயே ஆகும்; அது ஒரு நீதியான நியாயத்தீர்ப்பாக இருந்து, ஒவ்வொரு சுதந்தரிக்கப்பட்ட அபூரணங்களுக்கும், பெலவீனங்களுக்கும் முழுச்சலுகைக் கொடுக்கின்றது மற்றும் உலகத்திடமிருந்து, மனுக்குலத்தால் செலுத்த இயன்றவைகளை மாத்திரமே எதிர்ப்பார்க்கின்றது.

மனுக்குலத்தின் உலகமானது சீர்த்தூக்கப்படுவதும், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையின் காரணமாக ஏதேனில் தொலைந்துபோன அனைத்தின் விஷயத்திலும் படிப்படியாக பின் திரும்புவதற்கான வாய்ப்பினை ஒவ்வொருவருக்கும் அருளப்பெறுவதும், பரதீசும் திரும்பிக்கொடுக்கப்படுவதுமே விளைவுகளாகக் காணப்படும். இருதயத்தில் கீழ்ப்படிதலுள்ளவர்கள், கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கும், இந்த ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு நித்திய காலமும் தொடர்வதற்கும் பாத்திரவான்களாய்க் கருதப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் வேறான மனம் கொண்டவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள்.

இப்படியாகப் பார்க்கும்போது, நமது கர்த்தராகிய இயேசுவின் மரணமானது, மனிதன் மரணத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு அவசியமாயுள்ளது; நம்முடைய ஆதார வசனமானது குறிப்பிடுவது போன்று, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். நமக்கான மரணத் தண்டனையை இயேசு சந்திப்பதன் வாயிலாக, தேவன் நீதியுள்ளவராகவும், அதேசமயம் இயேசுவில் விசுவாசம் கொள்பவனை நீதிமானாக்குகிறவராகவும் விளங்கும்படிக்கும் மற்றும் அவனை மரணத்தீர்ப்பிலிருந்து விடுதலைப் பண்ணவும் இயேசு மரித்தார். நமது கர்த்தருடைய மரணமானது, இன்னொரு காரணத்திற்கும் அவசியமாய் இருந்தது; அதை அப்போஸ்தலன் விவரிக்கின்றார். அது என்னவெனில் ஆயிரவருட யுகத்தில் உலகத்தை நியாயந்தீர்க்கப்போகிறவர் அக்காலத்தில் பரீட்சையில் காணப்படப்போகும் மனுக்குலத்தின் உலகத்தாரிடம் அனுதாபம்/பரிவிரக்கம் முழுக்கக் கொண்டவராகக் காணப்படுவதும், பாவத்தினாலும், பெலவீனத்தினாலும்

ஆட்கொள்ளப்பட்டவர்களுக்கு உதவிச் செய்ய முடிகிறவராகவும், உதவ விரும்புகிறவராகவும் காணப்படுவதும், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற அவர் மனுக்குலத்தின் மீது இரக்கம் கொண்டவராகவும் காணப்படுவதும் அவசியமானதாகும். அக்காலத்தில் மகா இராஜாவாகவும், நியாயாதிபதியாகவும் காணப்படும் கர்த்தராகிய இயேசு மாத்திரமல்லாமல், சபையுங்கூட, அதாவது இராஜரிக ஆசாரியத்துவத்திலும், நியாயந்தீர்க்கும் விஷயத்திலும் அவருடைய உடன் சுதந்தரர்களாக இருக்கும் சபையுங்கூட, தங்களால் நியாயந்தீர்க்கப்படுகிறவர்களிடம், பரீட்சிக்கப்படுகிறவர்களிடம், தாங்கப்படுகிறவர்களிடம், உதவப்படுகிறவர்களிடம், சீர்த்தூக்கிவிடப்படுகிறவர்களிடம் அனுதாபம்/பரிவிரக்கம் கொண்டிருக்க முடிகின்றவர்களாய்க் காணப்படுவார்கள்.

தேவன் வடிவமைத்துள்ளதான திட்டமானது, ஞானமானதாகவும், கற்பனைச் செய்து பார்க்க முடிந்ததிலேயே சிறந்தாகவும் காணப்படுகின்றது என்றும், இந்தத் திட்டத்தின் கீழ் மரணத்தீர்ப்பிலிருந்து மனிதனின் மீட்பை மரணம் மாத்திரமே சாத்தியமாக்குமே ஒழிய, வேறெதுவும் இல்லை என்றும், நாம் புரிந்துகொள்கின்றோம்; இன்னுமாக பிதா கிறிஸ்துவுக்குக் கொடுத்தது போன்றதான இவ்வளவு உயர்வான கனமும், மேன்மையும், பொறுப்பும் ஒப்படைக்கப்படும் விஷயத்தில், இவைகள் ஒப்படைக்கப்படும் அந்நபர் கடுமையானப் பரீட்சைகளைப் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் வேறெதுவும் தகுதியாய் இராது என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம். சபையை மகிமையில் கொண்டுவருவதற்கும், அடுத்ததாக உலகத்தைப் பரீட்சைக்குள்ளாக்குவதற்கும் என்று இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களின் வாயிலாகப் பூரணப்படுத்துவதும் பிதாவுக்கு ஏற்றதாய் இருந்தது என்றும், பிதாவுக்கு அடுத்ததாக அண்டசராசரத்தில் பிரதானமானவராய்க் காணப்பட்டவரும், தெய்வீகச் சுபாவத்திலும், மகிமையிலும், கனத்திலும் பங்கடையப் பண்ணுவதன் மூலம், இன்னும் பெரியவராய் ஆக்கிடுவதற்கான பிதாவின் நோக்கத்திற்குரியவருமானவர், சகல சிருஷ்டிகளுக்கும் முன்பாக, பிதாவுக்கான அவரது முழுமையான நேர்மை/உண்மை நிரூபிக்கப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதும் ஏற்றதாய் இருந்தது என்றும் நாம் காண்கின்றோம்; மற்றும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் பாடுபட்டபோது நிரூபித்தார். இதன் விளைவாக, "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9-11).

*****

R 3374

# "இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்"

**மத்தேயு 28:1-15.**

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்."—1 கொரிந்தியர் 15:20

நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றும் முழுச்சுவிசேஷ செய்தியின் மீதான அதன் செல்வாக்கினுடைய முக்கியத்துவத்தைச் சிலர் மாத்திரமே உணர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. . . . கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே" (1 கொரிந்தியர் 15:14, 18) என்று அப்போஸ்தலர் எழுதினபோது, உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியமானது எனச் சுட்டிக்காண்பிக்கின்றார். உயிர்த்தெழுதலை உணர்ந்துக்கொள்ள தவறுபவர்களும், அதை உண்மையில் விசுவாசிக்காதவர்களுமான, கர்த்தருடைய பின்னடியார்களெனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் மதத் தலைவர்கள் (clergy) மற்றும் கிறிஸ்தவ பொதுமக்களுடைய (laity) எண்ணிக்கை மிகவும் திரளாய் உள்ளது. உண்மையிலேயே விசுவாசிக்கிறவர்களுடைய எண்ணிக்கை மிகவும் சொற்பமேயாகும். பெரும்பான்மையானவர்கள், இருண்ட யுகத்தினின்று நமக்குக் கடந்து வந்திருக்கும் போதனைகளின் கீழ்க் காணப்படுவதினால், மரணம் என்பது ஜீவன் நின்றுவிடும் நிலைமை என்பதையும், "அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" என்று வேதவாக்கியங்கள் தெரிவிப்பதையும் உணர்ந்துக்கொள்வதற்கு முற்றிலுமாகத் தவறிவிடுகின்றனர். மாறாக கிறிஸ்தவ மண்டலத்தாரோ, மரணம் என்பது இல்லை என்றும், மரித்தவர்கள் மரிப்பதற்கு முன்னதாக இருந்ததைக்காட்டிலும் மிகுந்த ஜீவனுடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், நம்பும்/விசுவாசிக்கும் நிலைக்கு வந்துள்ளனர். மேலும் இந்த ஒரு கருத்தை இவர்கள், நமது கர்த்தரின் விஷயத்திலும், மற்றவர்களின் விஷயத்திலும் பொருத்துவதினால், "கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" என்று வேதவாக்கியங்கள் கூறும் காரியத்தை உணர்ந்துக்கொள்வதில்லை. இவர்கள் இயேசு மரித்தபோது, அவர் உயிரோடுதான் இருந்தார் என்றும், அவருடைய மாம்ச சரீரம் மாத்திரமே கல்லறையில் உயிரற்று இருந்தது என்றும், மூன்றாம் நாளில் நடந்திட்ட உயிர்த்தெழுதலானது, ஜீவனுக்கேதுவான அவருடைய உயிர்த்தெழுதலாகக் காணப்படாமல், மாறாக அவருடைய மரித்துப்போன சரீரத்தினுடைய உயிரடைதலே என்றும் எண்ணிக்கொள்கின்றனர்.

## "குழப்பத்திற்கு வழிநடத்தும் தப்பறைகள்"

இப்படியாகச் சீர்த்திருத்தவாதிகளினால், இடைப்பட்ட காலங்களிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டதும் மற்றும் இன்றைய நவீன உலகத்தாருடைய மனங்களில் ஒட்டி வைக்கப்பட்டதுமான தவறான உபதேசங்களுடைய குழப்பத்தினால், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தைப் பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்கள் உணர்ந்துக்கொள்ள முடியாமல் காணப்படுகின்றனர். ஒருவேளை இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழவில்லையெனில், நமது விசுவாசமும் விருதாவாக இருக்கும் எனவும், நமது பிரசங்கமும் விருதாவாக இருக்கும் எனவும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளதை நம்புவதற்குப்பதிலாக, இதற்கு நேர்மாறாக பெரும்பாலான கிறிஸ்தவ மண்டலத்தார் கூறுபவர்களாய் இருக்கின்றனர்; அதாவது "ஒருவேளை இயேசுவின் சரீரமானது, கல்லறையிலேயே காணப்பட்டால், இதனால் நம்முடைய மரித்த அன்புக்குரியவர்களின் விஷயத்திலும், நாம் பிரசங்கிக்கும் விஷயத்திலும், நமது விசுவாசத்தின் விஷயத்திலும் அப்படி என்னத்தான் மாற்றங்கள் நடந்துவிடும்?" என்று கூறுகின்றனர். ஆகவே மரித்தவர்கள், மரித்துப்போய் இருக்கின்றார்கள் என்றும், மரணம் எனும் நித்திரையினின்று எழுப்பப்படுவது வரையிலும், மரித்தவர்கள் உயிரோடு இருப்பதில்லை என்றும் உணர்ந்துக்கொள்பவர்களால் மாத்திரமே, உயிர்த்தெழுதலுடைய முக்கியத்துவத்தை உண்மையாய் உணர்ந்துகொள்ள முடியும்.

ஒருவேளை இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடே எழுந்திருக்கவில்லையெனில், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நமக்கு எந்த அடிப்படையும் இருந்திருக்காது, ஏனெனில் தேவனுடைய கிருபையினால் இயேசுவின் மரணமானது, தகப்பனாகிய ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்குமான ஈடுபலியாகக் காணப்படுகின்றது என்பதாகவும் மற்றும் இயேசு இப்படியாக முழுச்

சந்ததிக்குமான தண்டனையைச் சந்தித்து, தம்முடைய மரணத்தின் மூலமாக, மரணத் தீர்ப்பிலிருந்து அனைவரையும் மீட்டுக்கொண்டபடியினால், ஏற்றவேளையில், அதாவது தேவனுடைய நியமிக்கப்பட்டுள்ள வேளையில் ஆதாமும், அவருடைய சந்ததியும், மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பதாகவும், கிறிஸ்து மாபெரும் இராஜாவாக தம்முடைய இராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபித்து, அதன் வாயிலாக மனுக்குலத்தின் மீதிருந்த பாரமாகிய, மரணத் தண்டனையை எடுத்துப்போடுவார் என்பதாகவும், அப்போது கல்லறைகளில் இருப்பவர்கள் அனைவரும் மனுஷக்குமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, ஆயிர வருட இராஜ்யத்தின் மகிமையான வாய்ப்புகளாகிய தேவனோடு ஒப்புரவாகுவதும், விழுகையின் அனைத்துப் பூரணமின்மைகளிலிருந்து விடுவிக்கப்படுவதுமான வாய்ப்புகளினிடத்திற்கு வருவார்கள் என்பதாகவும்தான், சுவிசேஷ செய்தி காணப்படுகின்றது. இப்படியான ஒரு சுவிசேஷத்தை, இயேசு மரித்தார் என்ற உண்மையை, அதே நேரம் அவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லாமல் பிரசங்கிப்பது என்பது விருதாவாகவும், அறிவீனமான பிரசங்கமாகவும், ஜனங்களை வஞ்சிக்கத்தக்கதாகவும் காணப்படும். இப்படியான சுவிசேஷத்தை, உயிர்த்தெழுதலின் ஆதாரங்கள் இல்லாமல் நம்புவது என்பது, நம்மை அறிவீனமான பேதையினராக காண்பித்துவிடும்; மேலும், மரித்த நிலைமையிலேயே இருக்கும் கிறிஸ்துவினால், நம்முடைய மரித்த நண்பர்களுக்கு நன்மையுண்டாகும் என்று நம்புவது என்பது நகைப்புக்குரியதாகவே காணப்படும்.

இப்படியாகக் கர்த்தருடைய உயிர்த்தெழுதலுடைய முக்கியத்துவத்தையும், எப்படி இந்த மாபெரும் உண்மையின் மீது, சுவிசேஷத்தினுடைய ஒவ்வொரு அம்சமும் சார்ந்துள்ளது என்பதையும் நாம் காணும்போதுதான், இயேசு நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலியாக மாத்திரம் மரிக்காமல், நாம் நீதிமான்களாக்கப்படத்தக்கதாகவும், மனித குடும்பத்தின் மீது காணப்படும் மரணத் தண்டனை மற்றும் குற்றத்திலிருந்தும் நம்மை விடுவிக்கத்தக்கதாகவும், அவர் உயிர்த்தெழவும் செய்தார் எனும் உண்மையின் அடிப்படையிலேயே, ஏன் அப்போஸ்தலர்கள் பாவங்களுக்கான மன்னிப்பைக் குறித்தும், எதிர்க்கால ஆசீர்வாதத்தைக் குறித்தும் பிரசங்கித்தார்கள் என்பதையும் நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது. நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் தொடர்புடைய அனைத்து அம்சங்கள் பற்றின விரிவான வசனங்கள் காணப்படத்தக்கதாகவும், மிகவும் விரிவான பதிவு விவரங்கள் காணப்படத்தக்கதாகவும், நமது பரம பிதா ஏற்பாடு பண்ணினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; சுவிசேஷகர்களும் விவரங்களை நுணுக்கமாக பதிவு செய்திருப்பதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; தேவனிடத்திலான அப்போஸ்தலர்களுடைய விசுவாசத்திற்கு அடிப்படையாக இருந்த உயிர்த்தெழுதல் பற்றின இந்த மாபெரும் அடிப்படையான சத்தியமானது, மிகவும் முக்கியமானதாக சபைக்கு முன்பு, அப்போஸ்தலர்களுடைய பிரசங்கங்கள் அனைத்திலும் முன்வைக்கப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, இந்தப் பாடமானது, அனைத்துக் காலக்கட்டங்களிலுமுள்ள கர்த்தருடைய ஜனங்களுடைய ஆழமான கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்கவேண்டும்; அதாவது, இப்பொழுது இந்தச் சாட்சியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டுள்ள விசுவாச வீட்டாருக்கு, இந்தச் சாட்சியை, இராஜ்யத்தின் வெளியரங்கமான வெளிப்படுத்தல்கள் உறுதிப்படுத்துவது வரையிலும் இந்தப் பாடம், ஆழமாய் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்க வேண்டும்.

## "அவர் மூன்றாம் நாள் எழுந்தார்"

நமது கர்த்தர் நீசான் மாதம் பதினான்காம் தியதியில் சிலுவையில் அறையப்பட்டார்; அதாவது, யூதர்களுடைய கணக்கின்படி வாரத்தின் ஆறாம் நாளில், அதாவது நாம் இன்று வெள்ளிக்கிழமை என்று அழைக்கும் நாளில் அறையப்பட்டார். பதிவுகளின்படி, நமது காத்தர் பிற்பகல் மூன்று மணிக்கு மரித்தார். எருசலேமின் வாயிலிருந்தும், ஆலயத்திலிருந்தும் பிலாத்துவின் அரண்மனையிலிருந்தும், கல்வாரி சிறு தொலைவில் காணப்பட்டது. ஆகையால் இயேசு மரித்ததைக் கண்ட பிற்பாடு, அவரை அடக்கம் பண்ண உத்தரவு பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆலோசனை சங்க அங்கத்தாராகிய நிக்கொதேமுவுக்கும், யோசேப்பிற்கும், அதிக தூரம் பிரயாணம் பண்ண வேண்டியிருக்கவில்லை; இவர்கள் இயேசுவுடன் சிநேகமாக இருந்ததாலும், இவர்கள் இயேசுவின் உரிமைப்பாராட்டுதல்களிலுள்ள உண்மையினைப் போதுமானளவுக்கு நம்பாதவர்களாய்க் காணப்பட்டனர்; அல்லது, அவரோடு கூட, தங்கள் ஜீவனையும் ஒப்புக்கொடுக்கத்தக்கதாக போதுமானளவுக்குத் தைரியம் இல்லாதவர்களாய்க் காணப்பட்டனர்; மேலும், இயேசு அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையானது சிலுவையிருந்த இடத்திலிருந்து கல்லெறியும் தொலைவில்தான் காணப்பட்டது. ஆகையால் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட அந்நாளில் தானே, அதாவது வெள்ளிக்கிழமை அன்றே பிற்பகல் நான்கு மணியளவில் அடக்கம் பண்ணப்பட்டதாக அனுமானிக்கப்படுகின்றது. நாம் சனிக்கிழமை என்று அழைக்கிறதும், யூதர்களால் ஏழாம் நாள் (அ)

ஓய்வுநாள் என்று அழைக்கப்படுகிறதுமான அடுத்த நாள், யூதர்களுடைய கால அளவின்படி, வெள்ளிக்கிழமை அன்று சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பித்து, சனிக்கிழமை அன்று சூரிய அஸ்தமனத்துடன் நிறைவடைந்தது; நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலானது, நம்மால் ஞாயிற்றுகிழமை என்று அழைக்கப்படும், யூதர்களுடைய வாரத்தின் முதல் நாளன்று அதிகாலமே நடைப்பெற்றது.

இவ்விதமாக நமது கர்த்தர், "மூன்றாம் நாளில்" மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் வெள்ளிக்கிழமை அன்று மூன்று மணி முதல் ஆறு மணி வரைக்கும், பின்னர் தொடர்ந்த முழு இரவிலும், அடுத்த நாளாகிய சனிக்கிழமையின் பகற்பொழுது முழுவதும், பின்னர் வந்த முழு இரவிலும், அதாவது யூதர்கள் வழக்கத்தின்படி, வாரத்தின் முதலாம் நாளின் முதல் பாகமாகிய இரவிலும் மரண நிலையிலேயே காணப்பட்டார். இப்படியாகப் பார்க்கும்போது மூன்று பகற் பொழுதும், மூன்று முழுமையான இரவு பொழுதும், அதாவது எழுபத்திரண்டு மணி நேரப்பொழுது இல்லை என்றாலும், இது அவர், தாம் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழும்பப் பண்ணப்படுவார் என்று அவரால் கூறப்பட்ட காரியத்திற்கு இசைவாகவே உள்ளது. சிலர் மூன்று முழுப்பகற் பொழுதையும், மூன்று முழு இரவு பொழுதையும் எண்ணிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையில், நமது கர்த்தர் வியாழக்கிழமை அன்று மரித்ததாகக் கூறுவதற்கு வழிநடத்தப்படுகின்றனர்; இப்படிக் கணக்குப் போட்டாலுங்கூட மூன்று பகற்பொழுதும், மூன்று இரவு பொழுதுமாகிய எழுபத்திரண்டு மணி நேரங்களின் கணக்கு வருவதில்லை. ஒருவேளை மூன்று முழுப்பகற்பொழுதும், மூன்று முழு இரவு பொழுதின் கணக்கு வரவேண்டுமாயின், நாம் இயேசு புதன்கிழமை அன்று மரித்ததாக எண்ண வேண்டியிருக்கும். இப்படிப்பட்டதான அனுமானங்களுக்கு எதிராகவும், வெள்ளிக்கிழமை அன்றுதான் மரித்தார் என்பதற்கு ஆதரவாகவுந்தான் அனைத்துச் சாட்சியங்களும் காணப்படுகின்றன. இந்த விஷயம் தொடர்புடைய காரியங்களில், எங்கள் கருத்திலிருந்து வேறுபட்ட ஒரு கருத்தை எவராகிலும் கொண்டிருந்தாலுங்கூட, நாம் அவர்களோடு பேராடாப் போவதில்லை; இவ்விஷயம் என்பது முக்கியத்துமற்ற சிறிய விஷயமேயாகும்; நமது கர்த்தர் எத்தனை நாட்கள் மரண நிலையில் காணப்பட வேண்டுமென்ற காரியத்தைச் சார்ந்ததாக எந்தக் காரியமும் இருக்கவில்லை. அவர் நிஜமாக மரிக்க வேண்டும் என்பதும், அவர் மரித்துள்ளார் என்ற உறுதி காணப்படும்படி போதுமான காலம் அவர் மரண நிலையில் காணப்பட வேண்டும் என்பதும், அவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழும்ப வேண்டும் என்பதும்தான் முக்கியமான காரியமாகும்.

## "ஆலயத்தை இடித்துப்போட்டு, அதை எழுப்புதல்"

"இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்;" "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (யோவான் 2:19, 21). அவர் எந்தச் சரீரத்தைக் குறித்துப் பேசினார்? அவரது மாம்ச சரீரத்தையா? பாவத்திற்காக பலிச்செலுத்தத்தக்கதாக, அவர் கொண்டிருந்த சரீரமா? அவர் மரணம் வரை அர்ப்பணித்துக் கொண்ட சரீரமா? இந்தச் சரீரத்தைத்தான் அவர் மூன்றாம் நாளில் எழுப்பப்படும் என்று குறிப்பிட்டாரா? இந்த மாம்ச சரீரம் என்பது அவரது ஆலயமாக இராமல், மாறாக அவரது கூடாரமாக மாத்திரமே காணப்பட்டது. நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சரீரத்தை யூதர்கள் அழிக்கவில்லை/இடித்துப்போடவில்லை; கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சரீரம் என்பது ஓர் ஆவிக்குரிய சரீரமாகும்; இதை யூதர்கள் ஒருபோதும் கண்டதில்லை; இந்தச் சரீத்தில் இயேசு, "அகாலப்பிறவிப்போன்ற பவுல் தமஸ்குவுக்குப் போகிற வழியில், மத்தியான வேளையில் சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளியாக" வெளிப்பட்டார்.

நமது கர்த்தர், தாம் தலையாக இருக்கின்ற சபையைத்தான் தம்முடைய சரீரமாகக் குறிப்பிட்டார் என்று நாம் எடுத்துக்கொள்வது நியாயமானதாக இருக்கும். யூதர்கள் தலையை அழித்து/இடித்துப் போட்டார்கள் மற்றும் சுவிசேஷ யுகம் முழுவதிலும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பல்வேறு அங்கத்தினர்கள், "அவரோடுகூடப் பாடுபடுவதற்கும்," "அவரோடுக்கூட மரிப்பதற்கும்," "சகோதரர்களுக்காக தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கும்" அழைக்கப்படுகின்றனர். இயேசுவின் நாட்கள் துவங்கி இன்றுவரையிலும், சரீரத்தின் இந்த அழித்து/இடித்துப்போடும் பணியானது நடைபெற்றுக்கொண்டு வருகின்றது; மேலும் வெகு சீக்கிரத்தில், இந்தச் சரீரத்தின் கடைசி அங்கத்தினனும் தன்னை, "மரணம் வரையிலும் உண்மையுள்ளவனாக" நிரூபித்துக் காட்டி முடித்துவிடுவான் என்று நாம் நம்புகின்றோம். இப்பொழுது கர்த்தர் தாமே மாபெரும் அஸ்திபாரக் கல்லாகக் காணப்படும் இந்த ஆலயத்தை, கர்த்தர் எப்படி எழுப்புவார் என்று பார்க்கலாம்; இந்த ஆலயத்தில் கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்கள் ஒவ்வொருவரும், ஜீவனுள்ள கற்களாக இருப்பார்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடுகின்றார் (1 பேதுரு 2:4). கர்த்தருடைய

கால கண்ணோட்டத்தை வைத்துப் பார்க்கப்படும்போது, "கர்த்தருக்கு ஒரு நாள் என்பது ஆயிரம் வருஷம்போல" இருப்பதினால், நமது கர்த்தர் 4161-ஆம் வருடம், உலகத்தினுடைய வருட கணக்கின்படி மரித்தார்; நான்கு நாட்கள் கழிந்த பிற்பாடு, ஐந்தாம் நாள் ஆரம்பித்தது.

ஆலயத்தின் பிரதான மூலைக்கல்லாகிய கர்த்தர் அழிக்க/இடிக்கப்பட்டது முதல், தேவனுடைய ஆலயமாகிய சபையின் அழித்து/இடித்துப்போடுதல் ஆரம்பமாகி, இதுவரை நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது; அதாவது, ஐந்தாம் நாளின் மீதி பகுதியிலும், ஆறாம் நாள் முழுவதிலும் நடைப்பெற்றது; இப்பொழுது நாம் ஏழாம் நாளின் ஆரம்பத்தில், "அதிகாலை வேளையில்" காணப்படுகின்றோம். இந்தக் காலப்பகுதியில் கிட்டத்தட்ட கர்த்தருடைய உயிர்த்தெழுதல் முழுமை அடைந்திருக்கும் என்பதாக தேவனுடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. "அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்" (சங்கீதம் 46:5). இப்படியாகக் கர்த்தர் மூன்று நாட்கள் மரித்திருந்து, மூன்றாம் நாளில், அதிகாலையில் உயிர்த்தெழுந்ததுபோல, முதலாம் உயிர்த்தெழுதலும் நிறைவேறித் தீரும்; கிறிஸ்துவின் முழுச்சரீரமும், மூன்றாம் நாளின் அதிகாலை வேளையில் உயிரோடு எழுப்பப்படும்.

கர்த்தருடைய உயிர்த்தெழுதல் சம்பவித்தபோது, உயிர்த்தெழுதல் பற்றின விஷயமானது அப்போஸ்தலர்களும் புரிந்துக்கொள்வதற்கு எட்டாத காரியமாகவே காணப்பட்டது. இயேசு தாம் மூன்றாம் நாளிலே மீண்டும் உயிரோடு எழுந்தருள்வார் என்று முன்கூட்டியே கூறியிருந்தபோதிலும், அவருடைய வார்த்தைகளின் அர்த்தத்தை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியாமலேயே காணப்பட்டனர். அவர்களில் ஒருவர்கூட, அவரது உயிர்த்தெழுதலைக் குறித்துக் கொஞ்சமும் எண்ணவே இல்லை; மாறாக அவர்கள் தங்களுடைய இறந்துப் போன அன்புக்குரிய நண்பன் (அ) சகோதரன் (அ) சகோதரியுடைய சரீரத்திற்கு காண்பிப்பதுபோலவே, இயேசுவினுடைய சரீரத்திற்குத் தங்கள் அனுதாபத்தையும், அன்பையும் காண்பிக்கத்தக்கதாக, எப்படி அவருடைய சரீரத்திற்குத் தைலம் பூசலாம் என்று மாத்திரமே எண்ணினவர்களாக இருந்தார்கள். யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வுநாளன்று எவ்விதமான வேலையும் செய்யக்கூடாது என்பதினால், அவர்களால் கல்லறைக்குப்போக முடியாமல் இருந்த காரணத்தினால், முன்கூட்டியே கர்த்தருடைய நண்பர்கள் அவர்களுக்குள்ளாகவே தீர்மானித்து வைத்திருந்தபடியே, ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாளில், அதிகாலையில், அவர்கள் கல்லறையினிடத்திற்கு வந்து கூடினர். கலிலேயாவிலிருந்து அநேகர் வந்தனர். அவர்கள் அநேகமாக பட்டணத்தினுடைய பல்வேறு பாகங்களிலுள்ள மற்ற நண்பர்களுடைய வீடுகளில் தங்கியிருந்திருக்க வேண்டும்; சிலர் பெத்தானியாவிலும் தங்கியிருந்திருக்க வேண்டும்; ஆகையால் பல்வேறு வழிகள் வழியாய்க் கல்லறையினிடத்திற்கு வந்தடைந்தர்கள். பதிவு வெவ்வேறாகக் காணப்பட்டாலும், அனைத்துமே உண்மையானதாகவும், முழுக்க இசைவானதாகவும் காணப்படுகின்றது. ஒவ்வொரு சுவிசேஷத்தின் எழுத்தாளர்களினாலும் பல்வேறு கோணங்களிலிருந்து கூறப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது; மேலும், அனைத்துமே சுவிசேஷ புத்தகங்களுடைய எழுத்தாளர்களுக்கிடையே எவ்விதமான கூட்டுச்சதியும் இல்லை என்பதை நமக்கு தெளிவுப்படுத்துகின்றது; அதாவது, அனைவரும் ஒன்றுபோலவே காரியங்களைத் தெரிவிப்பதற்கு, எவ்விதமான முயற்சியும் எடுக்கவில்லை என்பது தெளிவாகுகின்றது; ஒருவேளை, அனைத்துச் சுவிசேஷகர்களும் அப்படியே ஒன்றுபோல் பதிவு பண்ணியிருந்திருப்பார்களானால், பதிவானது கட்டுக்கதையாகப் போயிருந்திருக்கும்.

## "உண்மைக்கு எதிரான விவாதங்கள், பலமற்றதாகவேயிருக்கிறது"

சீஷர்கள் வருவதற்கு முன்பாகவும், உரோம சேவகர்கள், கல்லறையைக் காக்கும் வேலையில் நின்று கொண்டிருக்கும்போதும், கர்த்தருடைய தூதனானவர் அவ்விடத்தில் தோன்றினார்; பூமி அதிர்ச்சிப் போன்றதான அதிர்ச்சி ஏற்பட்டது; காவல் காத்தவர்கள் செத்தவர்கள் போலானார்கள், அதாவது கிட்டத்தட்ட மயங்கி போய்விட்டனர்; ஆனால் இவர்கள் மயக்கம் தெளிந்தவுடன், சம்பவம் நடந்த இடத்தைவிட்டு, தங்களை இவ்வேலைக்கென நியமித்திட்ட பிரதான ஆசாரியர்களிடம் விவரம் சொல்லப்போனார்கள். இவர்கள் நித்திரைப் பண்ணிக்கொண்டிருந்தபோது, இயேசுவின் சீஷர்கள் வந்து சரீரத்தைத் திருடிப்போய்விட்டார்களென இவர்கள் விஷயத்தைப் பரப்பி விடத்தக்கதாக, பிரதான ஆசாரியர்கள் இவர்களைத் தூண்டிவிட்டனர்; மேலும், இவர்களால் பரப்பப்பட்ட இந்தத் தகவலானது, ஒரு குறிப்பிட்ட நீண்ட காலம் நடப்பில் காணப்பட்டது; ஆகவேதான், "இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள்வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது" என்று வசனத்தில் இடம்பெறுகின்றது (மத்தேயு 28:15); அதாவது, இச்சம்பவம் நடந்து ஒன்பது வருடங்களுக்குப் பின்பாக எழுதப்பட்டதாக அனுமானிக்கப்படும் மத்தேயு சுவிசேஷம் எழுதப்படும் காலம் வரைக்கும் இப்பேச்சுக் காணப்பட்டது.

சத்தியத்திற்கு எதிரான அனைத்து வாதங்கள்போல, இந்த வாதமும் பெலவீனமானதாகவே காணப்பட்டது; ஆனால், இதுவே அவர்களால் முடிந்தமட்டும் சொல்ல முடிந்திட்ட பொய்யான வாதமாகும். தாங்கள் நித்திரைப் பண்ணிக்கொண்டிருக்கும்போது, நடந்தது என்ன என்று சொல்லக்கூடிய மனிதர்களுடைய சாட்சி எத்துணை முட்டாள்தனமாய் இருக்கும்! இப்படியான பொய்யான வாக்கைக்கூறின காவலாளிகளுக்குக் கூலியாக இலஞ்சமும் மற்றும் வேலையின் நேரத்தில், வேலை செய்யாமல் தூங்கிவிட்ட உரோம சேவகருக்குரிய தண்டனைக்கு எதிரான பாதுகாப்பு பற்றின வாக்குறுதியும் கொடுக்கப்பட்டன; ஆனால் இச்சம்பவம் நிகழ்ந்த போது, காவலாளிகள் உரோம அரசாங்கத்திற்காக வேலை புரியவில்லை; இந்தக் காவலாளிகள் ஆசாரியர்களின் நன்மைக்காகவும், ஆசாரியர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி மாத்திரமே காவல் புரிந்தவர்களாகக் காணப்பட்டனர்.

விவரங்களைத் தெரிவிக்கும்படிக்குக் காவலாளிகள் ஆசாரியர்களிடம் போய்க் கொண்டிருக்கையில், இதற்கிடையில் கர்த்தருடைய நண்பர்கள் தங்களுடைய அன்புகளுடனும், கந்தவர்க்கத்துடனும் ஒன்றுகூட ஆரம்பித்தனர். ஸ்திரீகள் கூட்டத்தினர் முதலாவதாக, இடத்தை வந்து அடைந்தனர்; இப்படியாக ஸ்திரீகள் முதலாவதாக வந்த காரியமானது, அவர்களுடைய இருதயங்களின் அன்பிற்கும், அனுதாபத்திற்கும் உறுதியளிக்கின்றதாகவும், அவர்கள் (பெண்) இனத்திற்கு மகிமைச் சேர்க்கின்றதாகவும் இருக்கின்றது.

அந்நாள் காலை முதல் ஆரம்பித்து, காத்தர் பரம் ஏறிச்சென்றதோடு முடிவடைந்த நாற்பது நாட்கள் காலப்பகுதியில், கர்த்தர் பதினொரு முறை காட்சியளித்தார்; சிலசமயம் ஒருவருக்கும், இன்னொரு சமயம் மற்றொருவருக்கும், இன்னெரு சமயம் ஒரே நேரத்தில் ஐந்நூறு சகோதர சகோதரிகளுக்கும் தோன்றிக் காட்சியளித்தார். ஆனால் பதினொரு முறைக்குப் பதிலாக அவர் அநேகமாக ஏழுமுறை மாத்திரமே தோன்றியிருந்திருக்க வேண்டும்; இந்த ஏழு முறைகளிலுள்ள, நான்குமுறை காட்சிப் பதிவுகளானது திரும்பத் திரும்ப, வெவ்வேறாக விவரிக்கப்பட்டவையே ஆகும்.

## "அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்"

ஏழு பிசாசுகள் பிடியிலிருந்து நீங்கப் பெற்றவளும், அதுமுதல் நமது கர்த்தருடைய உண்மையான பின்னடியார்களில் ஒருவளுமான மகதலேனா மரியாளுக்கு, நமது கர்த்தர் முதலாவதாகத் தோன்றிக் காட்சியளித்தார். இவள் அதிகமாய் மன்னிக்கப்பட்டிருந்தாள்; இவள் அதிகமாய்க் கர்த்தரை அன்புகூர்ந்தாள்; இவளுடைய அன்பானது, கல்லறையினிடத்திற்கு இவளை அதிகாலமே இழுத்துக்கொண்டு வந்தது. மகதலேனா மரியாள்தான், ஸ்திரீகளிலேயே கல்லறையினிடத்திற்கு முதலாவதாக வந்து சேர்ந்ததாகத் தெரிகின்றது; மேலும் கல்லறையில் இயேசு இல்லாததைக் கண்ட மாத்திரத்தில், இவள் இக்காரியத்தை யோவான் மற்றும் பேதுருவினிடத்தில் சொல்வதற்குத் துரிதமாய்ப் போனாள். மற்ற ஸ்திரீகள் கல்லறையினிடத்திற்கு வந்து, அவ்விடத்தை விட்டு, தங்கள் வழியில் புறப்பட்டுப்போன பிற்பாடே, மகதலேனா மரியாள் மீண்டுமாக கல்லறையினிடத்திற்குத் திரும்பி வந்து சேருகின்றாள்; இப்படியாக இவள் கல்லறைக்கு அருகாமையில் காணப்படும் போதுதான், இயேசு அனைத்து ஸ்திரீகளிலும் இவளுக்கே காட்சியளித்துத் தோன்றினார்; இவைகள் யோவான் 20:11-18 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிற்பாடு மற்ற ஸ்திரிகள், காரியங்களை விசுவாச வீட்டாருக்கு அறிவிக்கத்தக்கதாக போய்க்கொண்டிருக்கும் வழியில், இவர்களுக்கு கர்த்தர் எதிர்ப்பட்டார். இவர்களிடம் "வாழ்க" ('All hail!') என்று கூறினார்; வாழ்த்துவதற்குரிய இந்தக் கிரேக்க வார்த்தைக்கான அர்த்தம் "சந்தோஷப்படுங்கள்" என்பதாகும். இவர்கள் அவருடைய பாதத்தில் விழுந்து, அவரைத் தொழுது கொண்டு, எதுவாகிலும் அவரிடமிருந்து தங்களைப் பிரித்துவிடுமோ என்ற அச்சத்தில், அவருடைய பாதங்களைத் தழுவிப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். நமது கர்த்தர், இவர்கள் சகோதரருக்கு அறிவிக்கும் கடமையை/வேலையைப் பெற்றருப்பதை, இவர்களுக்கு நினைப்பூட்டினார்; அதாவது, தம்முடைய உயிர்த்தெழுதலின் நற்செய்தியினைப் பரப்ப வேண்டிய கடமையை இவர்களுக்கு நினைப்பூட்டினார். இதே படிப்பினை நமக்கும் உள்ளது; அதாவது நாம் கர்த்தரைக் கண்டுபிடித்து, சத்தியத்தை உணர்ந்துக்கொண்ட பிற்பாடு, சத்தியத்திற்காக ஊழியம் புரியும் மாபெரும் சிலாக்கியத்தினை நாம் பெற்றிட அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம்; அதாவது, நம்முடைய இருதயங்களைச் சந்தோஷிப்பித்தவைகளை, இன்னமும் அறிந்திராத சகோதர சகோதரிகளிடத்தில்

(அறிவிக்கும்) ஒரு மாபெரும் கடமை நமக்கு உள்ளது. சத்தியம் நமக்கு மாத்திரமே உரியது என அதைக் கட்டிப்பிடித்து வைத்துக்கொள்ளலாமென நாம் எண்ணக்கூடாது; மாறாக, சத்தியம் மற்றவர்களுக்கும் உரியது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்; ஆகவே சத்தியத்தை மற்றவர்களுக்கு வழங்குவதில் நாம் மகிழ்ச்சிக்கொள்ள வேண்டும். இப்படியாகக் கர்த்தருக்கும், விசுவாச வீட்டாருக்கும் ஊழியம் புரிபவன், இறுதியில் நிச்சயமாய் மாபெரும் ஆசீர்வாதத்தை அடைவான்.

நமது கர்த்தர் சீஷர்களை மீண்டுமாக கலிலேயாவில் சந்திப்பார் என்று சீஷர்களிடம் சொல்ல வேண்டும் என்பதாகவே நமது கர்த்தருடைய செய்தி காணப்பட்டது. ஆகவே எருசலேமில் ஐந்து (அ) ஆறுமுறை காட்சியளிடத்திட்ட பிற்பாடு, நமது கர்த்தர் தம்முடைய பின்னடியார்களுக்குத் தோன்றிக் காட்சியளிக்கவில்லை; ஆகவே பின்னடியார்கள் தங்கள் சொந்த ஊராகிய கலிலேயாவிற்கு திரும்பி, அங்கே கர்த்தர் சொன்னதுபோலவே, அவரைக் கண்டார்கள். நமது கர்த்தருடைய பெரும்பான்மையான ஊழியம் கலிலேயாவில்தான் நடைப்பெற்றது என்றும், விசுவாசிகளில் பெரும்பான்மையானவர்கள் கலிலேயர்களாய் இருந்தார்கள் என்றும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும். விசுவாச வீட்டாரில் அனைவரும், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான சாட்சியைப் பார்ப்பதற்குரிய, ஏதாகிலும் வாய்ப்பினை அடைய வேண்டியவர்களாய்க் காணப்பட்டனர்; ஆகையால்தான் அப்போஸ்தலனாகிய பவுல், கலிலேயாவில் கர்த்தர் காட்சியளித்துத் தோன்றிய காரியத்தைக் குறித்துப் பேசுகையில், "அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் (அப்போஸ்தலன் இவ்வசனத்தை எழுதும் காலம் வரைக்கும்) இருக்கிறார்கள், சிலர் மாத்தரம் நித்திரையடைந்தார்கள்" என்று நமக்குத் தெரிவிக்கின்றார் (1 கொரிந்தியர் 15:6).

கர்த்தர் தாம் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டதான உண்மை தொடர்புடைய விஷயத்தில், தம்முடைய பின்னடியார்களுக்குக் கொடுத்திட்ட பல்வேறு வெளிப்படுத்துதல் விஷயத்தில், இரண்டு நோக்கம் கொண்டிருந்தார் என்பதை நாம் கவனமாய்க் கவனிக்க வேண்டிய அவசியம் உள்ளது. முதலாவது நோக்கம் என்னவெனில், தம்முடன் சீஷர்கள் பழகி வந்த காலத்தில், தாம் மனித நிலைமையில் காணப்பட்டதுபோல, இனி ஒருபோதும் காணப்படுவதில்லை, மாறாக அனைத்து ஆவிக்குரிய ஜீவிகள்போன்று, தம்மால் காற்றைப்போல், கண்களுக்குப் புலப்படாத விதத்தில் வரலாம், போகலாம் என்பதாகும். ஜெயங்கொள்ளுபவர்களுக்கான உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர், 1 கொரிந்தியர் 15:51, 52-ஆம் வசனங்களில் விவரிக்கின்றார்; நம்முடைய உயிர்த்தெழுதலானது, கர்த்தருடையது போன்று காணப்படும் என்றும், நாம் அவர் இருக்கிற வண்ணமாக அவரைக் காணலாம் என்றும், அவருடைய மகிமையில் பங்கடையலாம் என்றும் வேத வாக்கியங்கள் நிச்சயம் அளிக்கின்றது. நம்முடைய உயிர்த்தெழுலானது, அவருடைய உயிர்த்தெழுதலின், அதாவது முதலாம் உயிர்த்தெழுதலின் ஒரு பாகமாக உண்மையில் காணப்படுகின்றது என்றும், மகிமையான கிறிஸ்துவின் தலையாகிய இயேசு, மரணத்தின் வல்லமையினின்று எழுப்பப்பட்டு, அவர் மரித்த மூன்றாம் நாளில் மகிமைப்படுத்தப்பட்டார் என்றும், புதிய யுகத்தினுடைய அதிகாலை வேளையில், சபையும் மரணத்திலிருந்து, அவருக்கு ஒப்பான சாயலை அடைந்து, அவருடைய உயிர்த்தெழுலில் பங்கடைவார்கள் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு உறுதிப்படுத்துகின்றது (பிலிப்பியர் 3:10).

## "நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் மாற்றம்"

நமது கர்த்தர் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தைத் தம்முடைய உயிர்த்தெழுதலின் போதுதான் பெற்றுக்கொண்டாரே ஒழிய, அதற்குப் பிற்பாடு அல்ல; அப்போஸ்தலன் கூறுவதுபோல "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1 பேதுரு 3:18). நமது கர்த்தர் தாழ்த்தப்பட்டதையும், பிற்பாடு அவருடைய உயிர்த்தெழுதலின்போது அவர் உயர்த்தப்பட்டதையும் குறித்துப் பேசுகையில் அப்போஸ்தலன், நமது கர்த்தர் மனிதனாகத்தக்கதாக, தாம் பிதாவோடு காணப்பட்டிருந்தபோது பெற்றிருந்த மகிமையைத் துறந்து வந்தார் என்றும், ஏற்றவேளையில் கர்த்தர் தம்மை மரணப்பரியந்தம், அதாவது சிலுவையின் மரணப்பரியந்தம் தாழ்த்தினார் என்றும், பின்னர் தேவன் அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் என்றும் நமக்கு உறுதியளிக்கின்றார். இந்த உயர்த்தப்படுதலானது, அவருடைய உயிர்த்தெழுதலின் மாற்றம் நடைப்பெற்றபோது அவருக்கு வந்தது. கர்த்தர் எப்படி ஜென்ம சரீரத்தில் விதைக்கப்பட்டு, ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்திருந்தாரோ, இப்படியே, அவருடைய சரீரத்தினுடைய அங்கத்தினர்களுடைய விஷயத்திலும் உண்மையாய் இருக்கும்.

நமது கர்த்தருடைய இந்த ஆவிக்குரிய சரீரமானது, அவருடைய உயிர்த்தெழுதலின் தருணத்திலேயே, இப்போதும், எப்போதும் காணப்படுவதுபோன்று மகிமையுடையதாகவே காணப்பட்டது. அவருடைய ஆவிக்குரிய சரிரம் . . . கர்த்தரோடு இசைவாய் இருக்கும் ஆவிக்குரிய ஜீவிகளுக்கு ஏற்றதென வழங்கப்படும் அனைத்து வல்லமைகளையும் உடையதாய் இருந்தது. இனிமேல் அவர் முன்பிருந்த மனிதனாகிய கிறிஸ்து இயேசுவல்ல, மாறாக இப்பொழுது மகிமையின் கர்த்தராக இருக்கின்றார். ஆபிரகாமுக்கும், மற்றவர்களுக்கும் அவர் முன்பு காட்சியளித்தது போன்று, தேவைக்கேற்ப அவரால் கண்ணுக்குப் புலப்படும் விதத்தில் (அ) கண்களுக்குப் புலப்படாத விதத்தில் (அ) எரிகிற முட்செடியாய் (அ) வழிப்போக்கனாகவோ தோன்ற முடியும். இந்த மகிமையடைந்த கர்த்தர்தான், தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்குப் பிரகாசமான வெளிச்சமாகத் தோன்றினார்.

ஏன் கர்த்தர் மகிமையான விதத்தில், அதாவது பிரகாசமான வெளிச்சத்துடன் ஸ்திரீகளுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் தோன்றி காட்சியளிக்கவில்லை? எனச் சிலர் கேள்வி கேட்கலாம். அப்படியாக அவர் செய்திருப்பாரானால், அது அவர் கொண்டிருந்த நோக்கத்திற்குத் தடையாக இருந்திருக்குமென நாம் பதிலளிக்கின்றோம். அதுவரையிலும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத காரணத்தினால், ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ள முடியாத நிலைமையில் காணப்பட்ட சீஷர்களினால், மிகவும் பிரகாசமாய்த் தேவதூதனைப்போல் தோன்றிக் காட்சியளித்துக் கொண்டிருப்பவர்தான், தாங்கள் மூன்று நாளுக்கு முன்னதாக சிலுவையில் அறையப்பட்டவராக கண்ட கர்த்தர் இயேசு என எப்படிப் புரிந்துக்கொள்ள முடியும்? (1 கொரிந்தியர் 2:14). ஒருவேளை அன்று சீஷர்கள், பிரகாசமான தேவதூதன் போன்று காட்சியளித்துக் கொண்டிருப்பவர்தான், கர்த்தர் இயேசு எனப் புரிந்துக்கொண்டுவிட்டாலும், அன்று முதல் இன்று வரையிலுமுள்ள மற்றவர்களுக்கும், நமக்கும் என்ன சாட்சி இருந்திருக்கும்? நமது கர்த்தர் இயேசுவினுடைய சடலம், கல்லறையினின்று எடுத்து மாற்றப்படுவது என்பது, அன்று இருந்த சீஷர்களுக்கும் மற்றும் அவர்களுடைய வார்த்தைகள் மூலம் அவரை விசுவாசிக்கும் நமக்கும் விசுவாசம் ஏற்படுவதற்கு அவசியமாய் இருக்கின்றது; மற்றும் அக்காரியமானது, அனைவருக்கும் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதற்கான வெளிப்படுத்தலாகவும் இருக்கின்றது. அந்தக் குறிப்பிட்ட காலத்தின்போது நமது கர்த்தர் கொடுத்திட்டப் போதனைகளும், தீர்க்கத்தரிசனங்களுக்குக் கொடுத்திட்ட விளக்கங்களும், தீர்க்கத்தரிசனங்களைத் தமக்குப் பொருத்திக் கூறினவைகளும், விசுவாசத்திற்கு அவசியமான உறுதியான அஸ்திபாரங்களாகும். இந்தக் கர்த்தருடைய நோக்கங்கள் வேறு ஏதாகிலும் விதத்தில், அதாவது பிரகாசமான வெளிச்சத்துடன் கர்த்தர் காட்சியளித்திருந்தால் நிறைவேறியிருக்க முடியாது. நமது கர்த்தர் முதலாவதாக மரியாளுக்குத் தோட்டக்காரன் போன்று தோன்றிக் காட்சியளித்தார். இவள் அவரை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை; இவள் முன்பு இயேசுவைப் பார்த்திருந்த பிரகாரமான, தோற்றத்தையோ, உடைகளையோ இவள் பார்க்கவில்லை. அவருடைய வஸ்திரங்கள் உரோம சேவகர்கள் மத்தியில் பங்குப் போடப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது; கல்லறையில் அவரைச் சுற்றி வைத்திருந்த துணிகளானது, கல்லறையிலேயே காணப்பட்டது; ஆனால் மரியாள் அங்குக் கண்டதோ, இந்த விசேஷித்த தருணத்திற்கென்றே ஆயத்தம் பண்ணப்பட்டு, பயன்படுத்தப்பட்ட விசேஷித்த சரீரமாகவும், விசேஷித்த வஸ்திரமாகவும் இருந்தது. இவள் குரலை வைத்து அடையாளம் கண்டுகொள்வது வரையிலும், கர்த்தரை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் காணப்பட்டாள்.

இப்படியாகவே, அதே நாளில் எம்மாவு எனும் கிராமத்திற்குப்போன இரண்டு நபர்களின் விஷயத்திலும் காணப்பட்டது. இயேசு அவர்களோடுகூட நடந்து வந்தார்; ஆனால் அவர்களோ, அவரை அறிந்துக்கொள்ளவில்லை. அவருடைய வஸ்திரம் வித்தியாசமாய் இருந்தது; அவரது சாயல் வேறாக இருந்தது; அவர்களால் அவருடைய உள்ளங்கைகளிலோ (அ) பாதங்களிலோ ஆணியின் தடயங்களைப்பார்க்க முடியவில்லை. "அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்" (லூக்கா 24:18). இயேசு இந்த வாய்ப்பினை, தம்மைப் பற்றியதான தீர்க்கத்தரிசனங்களை அமைதியாகவும், கவனமாகவும், நிதானமாகவும், அழுத்தமாகவும், மிகத்தெளிவாகவும் அவர்களோடுகூட விவாதிக்கத்தக்கதாக/ஆராயத்தக்கதாகப் பயன்படுத்தினார்; இதினிமித்தம் அவர்கள் ஸ்தீரிகளினால் அறிவிக்கப்பட்ட காரியங்கள் உண்மையிலேயே மெய்யாக இருப்பதற்கு வாய்ப்புண்டு என்று எண்ண ஆரம்பித்தபோது, அவர்களுடைய இருதயங்கள் அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரிந்தது.

அவர்களுடைய பார்வையிலிருந்து மறைய அவர் ஆயத்தமாகுவது வரையிலும் நமது கர்த்தர், தம்மை கர்த்தர் என்று வெளிப்படுத்தவில்லை. அவர் மறைந்து போனபோது, அவருடைய மாம்சமும்,

அவருடைய வஸ்திரங்களும்கூட மறைந்து போய்விட்டது. அன்றைக்கு மாலையில் கதவுகள் பூட்டப்பட்டிருக்கும்போதே, எருசலேமில் மாடி வீட்டிற்குள்ளாகக் காணப்பட்ட கூட்டத்தாருக்கு முன் கர்த்தர் தோன்றினார். அங்குக் கூடியிருந்த கூட்டத்தார், அநேகமாக அன்றைய நாளின் சம்பவங்களையும், முந்தின நாளின் சம்பவங்களையும்தான் பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும்; அப்பொழுது திடீரென இயேசு, அவர்கள் நடுவில் தோன்றினார். அவர் உருவம் எடுத்துக்கொண்டு அங்குத் தோன்றினார். அவர் ஆவிக்குரிய ஜீவியாக அவர்கள் நடுவில் வந்து, வஸ்திரம் உடுத்தின மாம்சமும், எலும்பும் கொண்ட முழுச்சரீரத்தை உருவாக்கிக்கொண்டு தோன்றினார். அவரால் இதை எப்படிச் செய்யுமுடியும் என்று யாராவது கேட்கின்றீர்களா? எங்களால் இதற்குப் பதில் சொல்ல முடியாதுதான்; ஆயினும், தண்ணீர் எப்படித் திராட்சரசமாக மாறியது என்ற அற்புதத்தை யாரால் புரிந்துக்கொள்ள முடியுமோ, அவர்களால் எப்படி நமது கர்த்தர், கதவுகள் பூட்டியிருக்க, மாடி அறைக்குள் தோன்றினார் என்பதைச் சுலபமாகப் புரிந்துக்கொள்ள முடியும்; மற்றும் சம்பாஷணை முடிந்த பிற்பாடு, அவர் இன்னமும் கதவுகள் பூட்டப்பட்டிருக்கவே, மர்மமான விதத்தில், அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து போனார் என்பதையும், மாம்சமும், எலும்பும், வஸ்திரமும்கூட மறைந்துபோனது என்பதையும் சுலபமாய்ப் புரிந்துக்கொள்ள முடியும். கூடி இருந்தவர்கள் யூதர்களுக்கு அஞ்சினதாலும், கர்த்தரை மரிக்கப்பண்ணுவதற்கு நாடின யூதர்களது பகைமையானது, அவருடைய பின்னடியார்கள் மீதும் திரும்பலாம் என்று எதிர்ப்பார்த்ததினாலும், கதவுகளை ஜாக்கிரதையாய்ப் பூட்டி வைத்திருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

## "விசுவாசமற்றவர்களாய் இராதீர்கள்; மாறாக விசுவாசியுங்கள்"

அநேகமாக ஒரு வாரம் கழித்து, மீண்டுமாக வாரத்தினுடைய முதல் நாளன்று, அதேமேல் வீட்டறையில் கர்த்தர் தோன்றிக் காட்சியளித்தார். அப்போது தோமாவும் காணப்பட்டார்; முந்தின தருணங்களின்போதெல்லாம், தோமா காணப்படவில்லை; மற்றும் இவர் மற்றவர்களுடைய சாட்சிகளை நம்பவுமில்லை. தோமா தனது சந்தேகங்களை மிகவும் அழுத்தமாக வலியுறுத்தினவராகவும், மற்றவர்கள் அனைவரும் மிகவும் சுலபமாக நம்பிவிட்டார்களெனக் கூறினவராகவும் காணப்பட்டார்; ஆனால் இறுதியாக, தோமா மற்றவர்களோடுகூடக் காணப்படும்போது, இயேசு தோன்றி, ஆணியினுடைய காயங்களில் தோமா தனது விரலை இட்டுப் பார்க்கும்படிக் கூறினபோது, தோமா திருப்தியடைந்தார். நமது கர்த்தர் சிலுவையில் தொங்க விடப்பட்டிருந்தபோது, ஆணியின் காயங்களைக் கொண்டிருந்த சரீரத்தையா தோமா உண்மையில் பார்த்து, தனது கையை இட்டு பார்த்தார்? நாம் இல்லை என்றே பதிலளிக்கின்றோம்; அந்த மாம்சமும், எலும்புகளும் உடைய சரீரமானது, கதவுகள் பூட்டப்பட்டிருக்க உள்ளே வர முடியாது. மேல் வீட்டறையில் தோன்றின சரீரமானது (அத்தருணத்தில்) உருவாக்கப்பட்ட சரீரமாகும்; அச்சரீரம் மாம்சத்தினாலும், எலும்புகளினாலும்தான் உருவாக்கப்பட்டது; "நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொன்னார்" (லூக்கா 24:39). அவர்கள் பார்த்தது ஆவிக்குரிய சரீரமல்ல, அவர்கள் கண்ட சரீரம், மாம்சத்தையும் எலும்புகளையும் கொண்ட சரீரமாகும். கர்த்தர் ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார்; ஆகையால் அவர்களுடைய பார்வைக்கு மறைவாய் இருந்தார்; அவர் அவர்கள் நடுவில் இந்த மாம்சமும், எலும்புமுள்ள சரீரத்தையும் மற்றும் வஸ்திரத்தையும் உருவாக்கித் தோன்றினார்.

கர்த்தருக்கு மாம்சத்தையும், எலும்புகளையும் உருவாக்கும் வல்லமை இருப்பதை மறுப்பவர்களால், வஸ்திரங்களை அவர் உருவாக்கினார் என்பதைப் ஏற்றுக்கொள்வதிலும் சிரமப்படுவார்கள்; ஏனெனில், கதவுகள் பூட்டப்பட்டிருக்கும் அறைக்குள் வஸ்திரங்களை உருவாக்குவதை விட, சரீரத்தை உருவாக்குவது மிகவும் கடினமாக இருக்குமென யாரால் சொல்லக்கூடும்? இன்னுமாக மாம்சத்தையும், எலும்புகளையும் காற்றில் மறையப்பண்ணுவதைப் பார்க்கிலும், வஸ்திரத்தை காற்றுக்குள்ளாக மறையப்பண்ணுவது சுலபமானது என யாரால் சொல்லக்கூடும்? இப்படிப்பட்டக் காரியங்களைச் செய்வதற்கான வல்லமை என்பது நமக்கடுத்ததுமல்ல, இக்காரியத்தை நம்மால் முழுவதும் புரிந்துக்கொள்ளவும் முடியாது. இப்பொழுது நாம் கண்ணாடியின் வாயிலாக மங்கலாய்ப் பார்க்கின்றோம், ஆனால் போகப்போக கர்த்தர் தொடர்ந்து செய்துகொண்டு வரும் வியத்தகு காரியங்களையெல்லாம், எப்படிச் செய்து வருகின்றார் என்பதை நாம் புரிந்துக்கொள்வோம். நம்மைச் சுற்றிலும் இயற்கையின் விஷயத்தில் தினந்தோறும் அற்புதங்கள் நிகழ்வதை நாம் காண்கின்றோம் அல்லவா? கோதுமையின் விதைக்குள் இருக்கும் பருப்பை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள்; ஒரு சிறு விதைக்குள்ளாக இருந்து எப்படி முளைகள் வெளிவந்து, தண்டு வந்து, முழுமையான கோதுமை மணியும் வருகின்றது? இது ஓர் அற்புதம் அல்லவா? இதை நாம் செய்வதென்பது நமக்கு அப்பாற்பட்ட வல்லமையாகவும், நம்முடைய

புரிந்துக்கொள்ளுதலின் வல்லமைக்கு அப்பாற்பட்ட வல்லமையாகவும் இருக்கின்ற காரியமாக இருக்கின்றது. நம்மால் பல தனிமங்களை ஒன்று சேர்த்து, கோதுமை மணியை உருவாக்கலாம், அதுவும் கோதுமை மணியினுடைய வடிவத்திலேயே நாம் செய்துவிடலாம்; ஆனால் இயற்கையான கோதுமை மணியுடன், நமது செயற்கையான கோதுமை மணியை ஒப்பிடுகையில், நாம் உண்டுபண்ணின கோதுமை மணிகளால் முளைக்கவோ, தண்டு விடவோ, கோதுமை மணிகளை விளையப்பண்ணவோ முடியாது.

## "அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை"

ஆணிகள் ஊடுருவப்பட்ட இயேசுவினுடைய மாம்ச சரீரத்திற்கு என்னவாயிற்று என்பதைக் கூறுவது நமக்கடுத்த காரியமல்ல. இவ்விஷயத்தைக் குறித்த காரியத்தில், அச்சரீரம் அழிவைக் காண்பதில்லை என்று மாத்திரமே சொல்லப்பட்டிருக்கின்றதே ஒழிய, மற்றபடி எதுவும் தேவனால் வெளிப்படுத்தப்படவில்லை. அச்சரீரம் எங்கு இருக்கின்றது? இது பற்றியும் எங்களுக்குத் தெரியாது; எனினும் யாருமே கண்டுபிடிக்க முடியாதளவுக்கு, மோசேயின் சரீரத்தை மறைத்து வைத்தவர், இயேசுவினுடைய சரீரத்தையும் மறைத்து வைக்க வல்லவராக இருக்கின்றார் (உபாகமம் 34:5, 6). இயேசுவினுடைய இந்த அழிக்கப்படாத சரீரமானது, உலகத்திற்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் உண்மைக்கான சாட்சியாக, எதிர்க்காலம் முழுவதிலும் காணப்படத்தக்கதாக, தேவனால் கொண்டு வரப்படலாம். இஸ்ரயேலர்களால் உண்ணப்பட்ட மன்னாவானது, ஓய்வுநாள் தவிர, மற்ற நாட்களில் மீதியிருக்கும் பட்சத்தில் அதற்கடுத்த நாளில் அழிந்துவிடும் என்பதை நாம் நினைவில்கொள்கின்றோம்; இன்னுமாக வனாந்தர பிரயாணத்தின் போதான மாபெரும் அற்புதத்திற்கான ஞாபகர்த்தமாக (அ) சாட்சியாக, உடன்படிக்கைப் பெட்டிக்குள் பொற்பாத்திரத்தில் வைக்கப்பட்ட மன்னாவானது, அழிந்து போகாமலேயே இருந்தது என்பதையும் நாம் நினைவில் கொள்கின்றோம். அப்படியானால், மன்னாவுக்கு ஒப்பிடப்பட்ட இந்த வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பத்தின் (இயேசுவின்) விஷயத்தில் நாம் என்ன சொல்லலாம்? தேவன் இயேசுவின் சரீரத்தையும் சாட்சியாக, பாதுகாக்க வல்லவராய் இருக்கின்றார் அல்லவா? மாம்ச சரீரங்கள் பொதுவாக அழியக்கூடியவைகளாக இருப்பினும், இயேசுவின் இந்த மாம்ச சரீரமானது, அழிவைக் காணாமல் பாதுகாக்க தேவன் வல்லவராய் இருக்கின்றார் அல்லவா? ஆணிகள் ஊடுருவப்பட்டதும், ஈட்டியினால் குத்தப்பட்டதுமான இச்சரீமானது எதிர்க்காலத்தில் அனைவரும் பார்க்கத்தக்கதாக வெளியே கொண்டுவருவதற்காக, எங்கோ வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கிற வேதவாக்கியமும் காணப்படுகின்றது. "அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து" (சகரியா 12:10).

நமது கர்த்தர் காட்சியளித்த முதல் ஐந்து தருணங்களும், அவர் பூமியில் காணப்பட்ட நாற்பது நாட்களின் முதல் எட்டு நாட்களிலேயே சம்பவித்தது. ஆகையால் காட்சிகள் அளிக்கப்படுவதற்கு இடையே நீண்ட இடைவெளிகளும் காணப்பட்டது; மற்றும் அப்போஸ்தலர்களுக்கும் காரியங்களை எண்ணுவதற்கும், விவரமாய் ஆராய்வதற்கும் நிறைய காலமும் இருந்தது. சீஷர்களில் அநேகர் கலிலேயர்களாய் இருந்தபடியால், நமது கர்த்தர் எட்டாம் நாளில் கடைசியாக அவர்களுக்குக் காட்சியளித்த பிற்பாடு, இரண்டு வாரங்களான பின்னர், அவர்கள் எருசலேமிலேயே தங்காமல், அவரவர் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள்; ஆண்டவரை மீண்டும் பார்க்க முடியுமோ (அ) இல்லையோ என்றும், வீடுகளுக்குத் திரும்புகிற வழியில் அவர் காட்சியளித்துத் தோன்றுவாரோ (அ) இல்லையோ என்றும், அல்லது கலிலேயாவில் எதாவது மேல்வீட்டறையில் ஒன்றுகூடும்போது காட்சியளித்துத் தோன்றுவாரோ என்றும், எண்ணிக்கொண்டே வீடுகளுக்குத் திரும்பினர். இயேசு தங்களுக்கு முன்னதாக கலிலேயாவுக்குப் புறப்பட்டுச் செல்கின்றார் என்றும், அங்குத் தங்களைச் சந்திப்பார் என்றும், அவர் ஸ்திரீகள் மூலம் தங்களுக்கு அனுப்பின செய்தியினையும் நினைவுகூர்ந்தார்.

நம் கர்த்தராலும், அப்போஸ்தலர்களாலும் அடிக்கடி போகும் இடத்தில், நீண்ட காலம் சீஷர்கள் காத்துக் கொண்டிருக்கையில், ஜீவியத்தின் நடைமுறை சார்ந்த காரியங்கள் (தேவைகள்) இவர்களை அழுத்திட ஆரம்பித்தது. சீமோன் பேதுரு முதலாவதாக, மீண்டும் மீன்பிடிக்கும் தொழிலில் திரும்புவதற்கான தனது எண்ணத்தைத் தெரியப்படுத்தினார்; மற்ற அப்போஸ்தலர்களும் அதே தொழிலில் முன்னமே ஈடுபட்டிருந்தபடியால், இவர்களும் பேதுருவுடன் இணைந்து கொண்டார்கள்; இயேசு இவர்களை அப்போஸ்தலர்கள் ஆகும்படிக்கு அழைப்பதற்கு முன்பு, அதாவது இரண்டு வருடங்களுக்கு முன்பு, கொண்டிருந்த பழைய தொழில் ஏற்பாடு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. இப்படியான சூழ்நிலைகளையே கர்த்தர் எதிர்ப்பார்த்தார்; மேலும் அவர் உயிர்த்தெழுந்தது முதல், பரத்திற்குப்போவது முன்னதாக, நாற்பது நாட்கள் அவர் பூமியிலேயே

காணப்பட்டதற்கான காரணம், இத்தருணத்தின்போது அவர்களுக்கு அவர் கொடுத்திட்ட படிப்பினைகளைக் கொடுக்க வேண்டுமென்ற, மாபெரும் நோக்கத்திற்கேயாகும் என நாம் நம்புகின்றோம். அவர்கள் எவ்வளவு சோர்வடைந்தார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்; இராஜ்யம் தொடர்பாக அவர்கள் முன்பு கொண்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும், இப்பொழுதுள்ள இந்தப் புதிய சந்தர்ப்பத்தின் கீழ்க் குழப்பத்தில் காணப்பட்டது என்பதையும் அவர் அறிந்திருந்தார். தம்முடைய பின்னடியார்களுக்கு அறிவுரைகள் கொடுக்கப்படாதது வரையிலும், தாம் நோக்கம் கொண்டிருக்கும் வேலைக்குள்ளாக பின்னடியார்கள் செல்வதற்கு ஆயத்தமாக மாட்டார்கள் என்பதையும் கர்த்தர் அறிந்திருந்தார். அந்த வாரங்கள் முழுவதிலும், அவர் அவர்களோடுதான் கண்களுக்குப் புலப்படாத ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்டார்; அவர்களுடைய கேள்விகளையும், அவர்களுக்குள்ளாக அவர்கள் கொடுத்திட்ட விளக்கங்களையும், அவர்கள் முன்வைத்திட்ட யோசனைகளையும், அவர்கள் இறுதியாக எடுத்திட்ட தீர்மானங்களையும் கர்த்தர் கேட்டுக்கொண்டு கவனித்துக் கொண்டிருந்தார்; மற்றும் ஏற்றவேளையில் உரிய படிப்பினைகளைக் கொடுப்பதற்கு ஆயத்தமாகவும் காணப்பட்டார்.

## "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?"

சீஷர்கள் மீண்டுமாக மீன் பிடிக்கும் தொழிலில் இறங்கி, அத்தொழிலைச் செய்வதற்குக் கர்த்தர் அனுமதித்துவிட்டார். அவர்கள் இராமுழுவதும் வேலை புரிந்தும், மீன் எதையும் அவர்களால் பிடிக்க முடியவில்லை; ஆவிக்குரிய காரியங்களிலும், பூமிக்குரிய காரியங்களிலும், தோல்வியே தங்களுக்கு ஏற்படுகின்றது என்று எண்ணி, அவர்கள் இன்னும் சோர்வடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. வாய்ப்பான தருணம் வந்தது; இயேசு வேறொரு மாம்சத்துடனான சரீரத்தில், வஸ்திரம் அணிந்தவராகக் கரையில் நின்று கொண்டிருந்தார்; இந்தச் சரீரமும், வஸ்திரமும் அவருடைய சொந்த சரீரமாகவும், அவர் வழக்கமாக அணியும் வஸ்திரமாகவும் இல்லை; மாறாக இத்தருணத்திற்கென்று விசேஷமாய் உருவாக்கப்பட்ட சரீரமாகவும், வஸ்திரமாகவும் இருந்தது. இயேசு இச்சரீரத்தில் கரையில் நின்றுகொண்டு, அப்போஸ்தலர்களிடம், மீன் இருக்கின்றதா எனக் கேட்டார்; அதற்கு அவர்கள் இராமுழுவதும் வேலை செய்தும், மீன் எதுவும் பிடிப்படவில்லை என்று கத்திக் கூறினார்கள். அவர்கள் படகின் மற்றப் பக்கமாய் வலையைப் போடும்படிக்கு அவர் யோசனைக் கூறினார். இந்த யோசனை அவர்களுக்கு அறிவீனமாய்த் தோன்றியிருந்திருக்கலாம்; ஏனெனில், அவர்களுக்கு வலையைப் போடும்படிக்குச் சொல்லப்பட்ட இடமானது, அவர்கள் ஏற்கெனவே வலை வீசின இடத்திலிருந்து, சில அடிகள் தொலைத் தூரத்தில்தான் இருந்தது. அந்த அந்நியன் (இயேசு), அவர்களை ஏதோ விதத்தில் ஈர்த்ததினால், அவர்கள் படகிற்கு மற்றப் பக்கத்தில் தங்கள் வலையினை வீசினார்கள்; உடனடியாக வலை பெரிய மீன்களினால் நிரம்பினது. பேதுருவைப் பொறுத்தமட்டில், அவர் படிப்பினையை ஏற்கெனவே கற்றிருந்தார். பேதுரு அப்போஸ்தலனாகும்படிக்கு, தான் கர்த்தரால் அழைக்கப்பட்டபோது, இதைப் போன்றதான அனுபவத்தை அடைந்திருந்ததை நினைவுகூர்ந்து, கரையில் நின்றுகொண்டிருப்பது, கர்த்தர் இயேசு என்று உடனடியாகப் புரிந்துக்கொண்டார்; இயேசு கரையில் காட்சியளிக்கத் தோன்றியுள்ளார் என உடனடியாக புரிந்துக்கொண்டார். படகுகளுக்கோ, வலைக்கோ (அ) மீன் தொடர்புடைய வேலைக்காக நின்று கொண்டிருக்காமல், பேதுரு உடனடியாகத் தண்ணீருக்குள் குதித்து, கர்த்தரிடம் சீக்கிரமாய்ப் போய்ச்சேர வேண்டுமென்ற ஆர்வத்தினாலும், மற்றச் சந்தர்ப்பங்களில் நடந்தது போன்று, இப்போதும் இயேசுவினுடைய காட்சி சடுதியாக மறைந்துவிடும் என்று உணர்ந்ததினாலும் கரைக்கு நீந்திச் சென்றார். இன்னுமாக தான் கர்த்தரை மறுதலித்ததை நினைவில் கொண்டிருந்த பேதுரு, தன்னுடைய அன்பையும், உண்மையையும் வெளிப்படுத்துவதற்கும் ஆவலாய்க் காணப்பட்டார்.

இந்த ஒரு சந்தர்ப்பத்தின் போதுதான், இயேசு பேதுருவிடம் விசேஷமாக, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்று கேட்டார்; அதாவது இந்தப் படகுகள், வலைகள், முதலானவைகளைக் காட்டிலும், அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்று கேட்டார். பேதுருவிடம் கேட்கப்பட்ட கேள்வியானது, அனைவருக்கும் பொருந்துகின்றதாக இருப்பினும், இக்கேள்வியானது அனைவருக்கும் மூப்பனார் போன்றும், தலைவன் போன்றும் காணப்பட்டவரும், கொஞ்சம் நாட்களுக்கு முன்பதாக, "அனைவரும் உம்மைக் கைவிட்டுப் போனாலும், நான் போகேன்" என்று கூறினவருமாகிய பேதுருவுக்கே விசேஷித்த அழுத்தம் கொண்டதாய்க் காணப்பட்டது. பேதுரு கர்த்தருக்கான தன்னுடைய அன்பைத் தெரிவிக்க, ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் போஷிக்கும்படிக்கும் கூறப்படுகின்றார். இப்பாடம் பொருத்தமான வேளையில் கொடுக்கப்பட ஏற்ற பாடமாகவும், மீண்டும்

சொல்லப்படுவதற்கு அவசியப்படாததாகவும் இருந்தது. நாம் அறிந்திருக்கிற வரையில், பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் பிற்பாடு, அப்போஸ்தலர்களெனத் தங்களுக்குரிய ஊழியத்தினுடைய முக்கியத்துவத்தை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை, மாறாக ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் போஷிக்கிற வேலையில் தங்கள் முழு நேரத்தையும், சக்தியையும் கொடுத்தவர்களாகவே காணப்பட்டனர். இந்த (மீனின்) அற்புதமானது, பூமிக்குரிய காரியத்தில் தங்களை ஆசீர்வதிப்பதற்குரிய (அ) தடைப்பண்ணுவதற்குரிய கர்த்தருடைய வல்லமையைக் குறித்து அவர்களுக்குச் சாட்சிப்பகர்ந்தது; இன்னுமாக அவருடைய அப்போஸ்தலர்களாகவும், பிரதிநிதிகளாகவும், தங்களுக்கான அனைத்துத் தேவைகளையும், அவர் சந்திப்பார் என்பதற்கும் சாட்சிப்பகர்ந்தது. படிப்பினையானது சரியான வேளையில் கொடுக்கப்பட்டது. ஒருவேளை இப்படிப்பினையானது முன்னதாகவே கொடுக்கப்பட்டிருக்குமாயின், இப்படிப்பினையானது அவ்வளவுக்குத் தாக்கமிக்கதாய் இருந்திருக்காது; அவர்கள் குழம்பிப்போய்க் காணப்படுவதற்கும், அவர்கள் மீன் தொழிலில் இறங்குவதற்கென முடிவு எடுப்பதற்கும், அனுமதி வழங்கப்பட்ட காரியமும், பின்னர் அவர்களின் மீன் பிடிக்கும் முதலாம் நாளிலேயே, இந்த ஆற்றல் மிக்கப் படிப்பினையைக்கொடுத்த காரியமும், (தெய்வீக) ஞானத்தினுடைய பங்காகும். அது நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் பற்றின ஒரு படிப்பினையாகும்; மற்றும் அது அவர் நிலைமையில் மாற்றம் அடைந்துள்ளார், அதாவது அவர் இனி ஒருபோதும் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகவும், மனித நிலைமைகளுக்குக் கீழ்ப்பட்டவராகவும் இல்லை என்பதை விவரித்துக் காண்பித்தது; மீண்டும் அவர் மறைந்து போய்விட்டார்; ஆனால் அடுத்ததாக அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாகக்கூறி மறைந்தார்.

இந்த அடுத்த சந்திப்புதான், அப்போஸ்தலனாகிய பவுலால் குறிப்பிட்டுள்ளபடி, ஒரே நேரத்தில் ஐந்நூறு சகோதர சகோதரிகளுக்குக் கர்த்தர் காட்சியளித்துத் தோன்றின சம்பவமாக இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. இந்தச் சந்திப்பின்போது, போதிக்கப்பட்ட பல்வேறு படிப்பினைகள் குறித்து, நமக்கு முழு விவரமும் தெரியாது என்றாலும், படிப்பினைகளானது வார்த்தைகளின் விதத்தைக் காட்டிலும், நடைமுறை விதத்தில்தான் காணப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம்; இந்தக் கர்த்தருடைய காட்சிகள், வெளிப்படுத்துதல்கள் அனைத்துமே, கர்த்தர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதையும், அவர் பூமிக்குரிய நிலைமையிலிருந்து ஆவிக்குரிய நிலைமைக்கு மாற்றம் அடைந்துள்ளார் என்பதையும் அவர்கள் நம்ப வேண்டும் என்ற நோக்கத்திற்கேயாகும்.

## "இறங்கினவரே உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்"

அடுத்ததாக நமது கர்த்தர், தாம் பரம் ஏறிச்செல்லும்போது ஒலிவ மலையில் காட்சிளித்துத் தோன்றினார். அப்போஸ்தலர்கள் அனைவரும் மற்றும், அநேகமாக மற்றவர்களும் எருசலேமுக்கும், ஒலிவ மலைக்கும் வந்திருந்திருக்க வேண்டும்; மேலும், உன்னதத்திலிருந்து வரும் வல்லமையினால் தரிப்பிக்கப்படும் வரையிலும், அவர்கள் எருசலேமிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்குக் கூறியிருந்தார். இப்படியாகக் கர்த்தர் இறுதியான அறிவுரைகளைக் கூற அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போது, அவர் அவர்களை விட்டுப் பிரிந்தார்; அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது, இயேசுவின் உருவம் படிப்படியாக மேகங்களுக்குள்ளாக, அவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்துவிட்டது. இப்படியான முறைமையை அவர் கையாண்டதின் மூலமாக, இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாததினிமித்தம், ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ள முடியாமலிருந்த சீஷர்களுக்கு, முடிந்தமட்டுமான சிறந்த நன்மையையே அவர் செய்திருக்கின்றார். கண்களுக்குப் புலப்படாமல் ஆவியாய் இருந்த தம்மை, அவர் மாம்ச பிரகாரமாக வெளிப்படுத்தினார். இதை அப்போஸ்தலர்களால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு புரிந்துக்கொள்ள முடியும். இப்படியாக அவர்கள் நமக்குப் பதிவு பண்ணினவைகள், மாம்ச மனிதனுடைய கண்ணோட்டத்தில் அல்லாமல், ஜெநிப்பிக்கப்பட்ட கண்ணோட்டத்திலேயே நமக்குக் கடந்து வந்துள்ளது.

இப்பாடத்தினுடைய சாரமானது, "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1 கொரிந்தியர் 15:20) என்ற வசனத்தின் வார்த்தைகளில் அடங்கியவைகளேயாகும். அநேகர் மரணம் எனும் நித்திரையினின்று தற்காலிகமாக (இயேசுவின் அற்புதங்களினால்) எழுந்திருந்தும், பிற்பாடு மீண்டும் மரண நித்திரைக்குள்ளாகவே கடந்துச் செல்பவர்களாய்க் காணப்படுகின்றனர்; ஆனால் நமது கர்த்தரோ, மரித்தோரிலிருந்து முதலாவதாக எழும்பினவராகவும், நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவராகவும்

காணப்பட்டார்; மேலும் அப்போஸ்தலர் கூறியுள்ளது போன்று, "மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராக" இருக்க வேண்டியுள்ளது (அப்போஸ்தலர் 26:23). அவருடைய உயிர்த்தெழுதல் என்பது ஜீவனுக்கேதுவான உயிர்த்தெழுதலாகும். அதாவது, ஆவிக்குரிய தளத்தில் பரிபூரணம்/நிறைவு அடைதலுக்கான உயிர்த்தெழுதலாகும். நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் என்று சொல்லுகிறபோது, இப்படியாகவே மற்றச் சிலரும் நித்திரையடைந்துள்ளார்கள் என்பதையும், அப்படிப்பட்டவர்கள் இந்தப் பிரகாரமாகவே ஆவிக்குரிய ஜீவிகளாக, உயிர்த்தெழுதலில் வருவார்கள் என்பதையும் குறிப்பிடுகின்றதாய் இருக்கின்றது. முதற்பலன் என்கிறபோது, இதே வகையாக மற்றவர்களும் காணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலே, மற்ற அனைத்து உயிர்த்தெழுதலுக்கும் முன்னதாகச் சம்பவிக்கும் எனும் விதத்தில், நமது கர்த்தர் நித்திரையடைந்தவர்கள் அனைவரிலும் முதற்பலனானவராக மாத்திரம் இராமல், அவர் அவருடைய சரீரமாகிய சபை எனும் முதற்பலன்களிலும், முதற்பலனானவராகவும் காணப்படுகின்றார். இன்னொரு விதத்தில் பார்க்கும்போது, முழு உலகத்திலேயே, தலையும், சரீரமுமாகிய கிறிஸ்துதான் ஜீவனுக்குள் வரும் விஷயத்தில் முதற்பலன்களாக இருக்கின்றனர். "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" (யாக்கோபு 1:18).

இப்படியாக முதற்பலன்களை நாம் இரு கண்ணோட்டத்தில் பார்க்கின்றோம்; உதாரணத்திற்கு, வசந்த காலத்தில் விளையும் மற்றப் பழங்களுக்கு முன்னதாக செம்புற்றுப் பழம் (Strawberry) வருவதினால் நாம் செம்புற்றுப்பழங்களை முதற்பலன்கள் என்று கூறுவோம்; இப்படியாகவே சபை தேவனுடைய சிருஷ்டிகளிலேயே முதற்பலன் என்று சொல்லும்போது, சபையும், மீதமான உலகமனைத்தும் ஒரே சுபாவத்தில் காணப்படுவார்கள் என்பதாக இராது. இன்னுமாக முதலாவதாகப் பழுக்கும்/கனியும் செம்புற்றுப் பழங்கள், செம்புற்றுப் பழங்களிலேயே முதற்பலன்கள் என்றும் நாம் கூறுவோம். இப்படியாகவே நமது கர்த்தர், சபையில் முதற்பலனானவராக இருக்கின்றார்; மேலும் சபை, ஒட்டுமொத்த சிருஷ்டிகளிலுமே முதற்பலன்களாய் இருப்பதினால், கர்த்தர் சபையில் மாத்திரமல்லாமல், ஜீவனுக்கும், பரிபூரணத்திற்கும், மரணத்திலிருந்து எழுப்பப்படுபவர்கள் அனைவரிலும் இந்தத் தலைமையான இடத்தைக்கொண்டிருக்கின்றார்.

**ஆமென்!**

---

[R3401]

# தேவனுடைய தைரியமுள்ள மற்றும் துணிவற்ற ஊழியக்காரர்கள்

**1 இராஜாக்கள் 18:1-16**

"உமது அடியானாகிய நான் சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன்." (1 இராஜாக்கள் 18:12)

எலியா சாறிபாத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த மூன்றாம் வருடத்திலும், மழை பெய்யாமல் இருந்த நான்காம் வருடத்திலும், அதாவது, ஆகாப் இராஜாவிடத்தில், எலியா அறிவித்த பின்பு, சுமார் மூன்றரை வருடங்களுக்குப் பின்பு, மீண்டும் கர்த்தர் தமது தீர்க்கதரிசியை, இஸ்ரயேல் தேசத்திற்கும் ஆகாபினிடத்திற்கும் அனுப்பினார். (லூக்கா 4:25; யாக்கோபு 5:17) எலியாவினிடத்தில் வேறொரு தைரியமற்ற மனுஷன் இருந்திருப்பாரானால், இச்சூழ்நிலையில் கொஞ்சம் தயங்கியிருப்பான், காரணம் எலியா, மழை நின்று போவதைக்குறித்து கூறினவற்றை இரத்துசெய்யவும், வானிலையின் மீது இட்ட வசியத்தை உடைத்தெறிந்து மழையைக் கொண்டுவருவதற்கென எலியாவை கொண்டுவரும்படிக்கு சகல திசைகளிலும் இராஜா, ஆட்களை நியமித்து தேடினான் என்றும், எலியா மழையை மீண்டும் பெய்யப்பண்ணினாலும், பண்ணாவிட்டாலும் சரி, அவரைக் கொன்றுபோடவும் இராஜா யோசனையாய் இருந்தான் என்றும் அறிந்திருந்தார். மகா பெரும் இராஜாவினிடத்திலிருந்து (தேவன்) தான் பெற்றுக்கொள்ளும் எல்லாவிதமான கட்டளையையும் செய்வதற்கு, எலியா கர்த்தரின் மிக தைரியமுள்ள ஊழியக்காரனாக இருந்தார், மேலும், தற்சமயம், மழை பெய்யச் செய்வதற்கான ஏற்ற காலம் வந்துள்ளது என கர்த்தர் எலியாவுக்கு உறுதியளித்ததின் மூலம், ஆகாபினிடத்தினாலான தனது இப்போதைய பணி சாதகமாகவே இருக்கும் என்ற கருத்தினாலும், எலியா உற்சாக மூட்டப்பட்டிருந்தார். சந்தேகத்திற்கு இடமின்றி தீர்க்கதரிசியும் கூட மனுக்குலத்தை, அதிலும் விசேஷமாக தனது ஜனங்களை நேசித்தவராக இருக்க வேண்டும். மேலும், அவரிடம் இரக்கமும், உணர்ந்துகொள்ளும் உணர்வுகளும் இருந்தபடியால் இவ்விதத்தில் ஊழியம்புரிய பிரியமுடன் காணப்பட்டிருந்திருப்பார்.

இஸ்ரயேல் தேசம் முழுவதும் காணப்பட்ட பஞ்சமானது, தலைநகரமான சமாரியாவிலும் அதிகமாய் காணப்பட்டது. இறுதியில் இராஜா, ஏதாகிலும் செய்யப்பட வேண்டும் என்று உணர்ந்தார். இல்லையேல் அனைத்து கால்நடைகளும் தாகத்தினால் விரைவில் மாண்டுவிடும் என்று உணர்ந்தார். ஏழை ஜனங்களைக் காட்டிலும் இராஜா தனது மிருகங்களுக்காக மிகவும் கவலை கொண்டவனானான். தனது மந்தைகளும், குதிரைகளும், கோவேறு கழுதைகளும் செத்துப் போய்விட்டால், இது தனது வல்லமையையும், மதிப்பையும், ஆஸ்தியையும் பாதிக்கக்கூடியதாக இருக்கும் என்று இராஜா கருதினான். ஆகவே, இராஜாவினுடைய மிருகங்களுக்காக, வற்றிப்போகாத தண்ணீர் துறவுகள் தேடும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டது. இராஜா தனது அரமனையில் தனது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதான ஊழியக்காரனை ஒரு தசையில் அனுப்பி, அவனும், அவனோடே கூட சில ஊழியர்களும் வேறு திசையில் புறப்பட்டுப் போனார்கள்.

## "துணிவற்ற ஊழியக்காரனாகிய ஒபதியா"

இவ்வேலைக்கென ஆகாப் இராஜாவினால் நியமிக்கப்பட்ட ஒபதியா கர்த்தரை உண்மையாய் தொழுது கொள்பவர் என்றும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்று போடும்படி யேசபேல் இராணி கட்டளையிட்டபோது, அந்த நூறு தீர்க்கதரிசிகளையும் ஒபதியா தனது ஜீவனை பணையம் வைத்து பாதுகாத்தார் என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, ஒபதியா உண்மையற்றவராகப் பார்க்கப்படுவதோடு சில விஷயங்களில் தேவனுடைய தைரியமுள்ள ஊழியக்காரனாகவும் பார்க்கப்பட வேண்டும். என்றாலும், இவருடைய சுபாவத்திற்கும், எலியாவின் தைரியத்திற்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. ஒபதியா இராஜாவின் குடும்பத்தில் தனக்குள்ள ஸ்தானத்தை தக்கவைத்துக் கொண்ட காரியமானது, ஒபதியா கர்த்தருக்கு உண்மையுள்ளவராய் இருந்தபடியால் ஒபதியாவுக்கு இராஜாவினுடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவராயும், அவருக்கு

பயனுள்ளவராகவும் இருக்கும் நிலை கிடைத்தது என்பதை மாத்திரம் சுட்டிக்காட்டாமல், இத்தகைய விக்கிரகாராதனை செய்யும் வீட்டார் மத்தியில், ஒபதியா தனது வெளிச்சத்தை அதிக அளவில் மரக்காலின் கீழ் மறைத்து வைத்திருந்ததையும், சத்தியத்தை மறைத்து வைத்திருந்ததையும் சுட்டிக்காட்டுகின்றது. ஏனெனில், இப்படி இருக்காதபட்சத்தில் ஒபதியா தனது நிலையை (இராஜாவினுடைய வீட்டில்) தக்கவைத்துக் கொண்டிருக்க முடியாது. இராஜாவும், இராணியும், தங்களுடைய பிரதான ஊழியக்காரனாகிய ஒபதியா, நூறு தீர்க்கதரிசிகள் கொல்லப்பட வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட கட்டளையை செயல்படுத்தவிடாமல் தடுத்தவர் என்று ஒருபோதும் அறிந்து கொள்ளவில்லை என்பதில் நமக்கு நிச்சயமே.

கர்த்தருடைய இந்த இரண்டு ஊழியக்காரர்களாகிய எலியா மற்றும் ஒபதியாவின் குணநலன்களை ஒப்பிடும்போது, இருவரிலும் விசேஷமாக எலியாவினிடத்தில் பாராட்டத்தகுந்த விஷயங்களை நாம் பார்க்கலாம். ஒபதியாவை குற்றம்சாட்டுவது நமக்கான காரியமும் அல்ல. மேலும், ஒபதியா கர்த்தருக்காக பண்ணின ஊழியத்திற்காக ஒபதியாவின் வாழ்நாட்களிலேயே கர்த்தர் அவருக்கு ஆசிர்வாதம் வழங்கினார் என்றும், எதிர்காலத்தில் இன்னும் ஆசிர்வாதத்தையும், பலனையும் அளிப்பார் என்பதிலும் நமக்கு ஐயமில்லை. ஆனால், நாம் பின்பற்றுவதற்கான சரியான மாதிரியாகவும், நாம் காட்ட வேண்டிய சரியான தைரியமாகவும் இருப்பது எலியாவின் மாதிரியே ஆகும். ஏனெனில், ஒவ்வொரு தருணத்திலும் தேவனிடத்தில் எலியா கொண்டிருக்கும் உண்மை முழுமையாக இருக்கின்றது. இந்த இரண்டு பேரை போன்ற கிறிஸ்தவர்கள் இன்றும் காணப்படுகின்றார்கள். எலியா சிறுமந்தையினருக்கு நிழலாய் இருக்கின்றார். இவர்களிடத்தில் கர்த்தர் விசேஷவிதமாக பிரியமாய் இருப்பார். மேலும், இவர்களும் மீட்பரும் சேர்ந்து இராஜ்ய வகுப்பாராய் இருப்பார்கள். விசுவாசிகளும், பகுதியளவு அர்ப்பணம் செய்தவர்களும், ஒபதியா அடையாளப்படுத்தும் வகுப்பாராய் இருக்கின்றார்கள் என்பதே நாம் மகிழ்ச்சி கொள்கின்றோம். எனினும் இத்தகையவர்களுக்கு கர்த்தருடைய ஊழியத்திற்கான அதிக வைராக்கியத்தினிமித்தம் உண்டாகும் ஆசீர்வாதத்தையே நாம் பரிந்துரைக்கின்றோம். இன்னுமாக தேவனுக்கு சத்துருக்காளாய் இருப்பவர்களிடம் தோழமை கொள்வதை குறைக்கவும், கர்த்தருடைய நோக்கங்களை அதிகரிக்கும் விஷயத்தில் அதிகம் தைரியம் கொள்ளவும், எல்லா விதத்திலும் தங்களை கர்த்தருடைய ஊழியக்காரர்களாக அறிவிக்கத்தக்கதாக அதிகம் தைரியம் கொள்ளவும் நாம் பரிந்துரைக்கின்றோம். இப்படிப்பட்டவர்கள் கர்த்தரைக் குறித்து வெட்கம் அடைவார்களானால், அதாவது கர்த்தரை சரியான விதத்தில் அறிக்கைப்பண்ணுவதை தவிர்ப்பதின் வாயிலாக சமுதாயத்தில் நல்ல அந்தஸ்து மற்றும் ஆடம்பர நிலையாகிய தற்கால ஜீவியத்தின் அநுகூலங்களை விரும்புவார்களானால் இந்த தற்காலத்து ஜீவியத்தில் நாம் ஓடிக்கொண்டிருப்பதற்கான மாபெரும் பரிசை இறுதியில் இழக்க நேரிடும் என்று நாம் அஞ்சுகின்றோம். இப்படிப்பட்டவர்கள் இறுதியில் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வார்கள் என்றாலும், இவ்வகுப்பார் மிகுந்த தைரியமுள்ளவராக மனந்திரும்பி ஓடவில்லையெனில், அவர்கள் ஓடும்படி அழைக்கப்பட்ட மாபெரும் பரிசாகிய இராஜ்யத்தில் தேவனுடைய அருமையான குமாரனோடு உடன்சுதந்தரராகும் தன்மையை இழக்க நேரிடும்.

## "தைரியமுள்ள எலியா"

தண்ணீர் துறவை தேடிச்செல்லும் வழியில், ஒபதியா எலியாவை சந்தித்த மாத்திரத்தில் எலியா கர்த்தருடைய விசேஷித்த ஊழியக்காரன் என்று அடையாளம் கண்டுகொண்டு, அவர் பாதத்தில் முகங்குப்புற விழுந்து, "நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா?" என்று ஒபதியா கேட்டார். அதற்கு எலியா பிரதியுத்தரமாக, "நான்தான்; நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனாகிய ஆகாபினிடத்தில் சொல் என்றார். எலியாவை கண்டுபிடிப்பதில் ஆகாப் எவ்வளவு ஆவலாய் இருப்பார் என்றும் ஒபதியா இராஜாவினிடத்திற்கு காரியம் தெரிவிக்கப்போய் வருவதற்கு முன் எலியா ஏதோ விதத்தில் அவ்விடத்திலிருந்து தப்பிப்போய்விட்டாரானால், தான் இராஜாவை ஏமாற்றிவிட்டதாக இராஜா எண்ணினால், அவருடைய கோபம் தன் மேல் திரும்பும் என்றதான கற்பனைகள் ஒபதியாவிற்குள் ஏற்பட அவரை பயமும் விழிப்பும் கவ்விக் கொண்டது. எலியா தனக்கு இவ்விதமான ஆபத்தை விளைவித்துவிடுவார் என்று ஒபதியா அஞ்சி, தானும் தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் என்றும், தான் விக்கிரக ஆராதனை செய்பவன் அல்ல என்றும் தான் கர்த்தர் மீது கொண்டிருந்த பயபக்தியினிமித்தமே மரண தண்டனையிலிருந்து நூறு தீர்க்கதரிசி புத்திரர்களை பாதுகாத்தார்

என்றும் எலியாவுக்கு எடுத்துரைத்தார். ஒபதியாவை ஆபத்தில் சிக்க வைப்பது தனது நோக்கம் அல்ல என்றும், தான் ஆகாபை சந்திக்க வருவதாகவும் ஒபதியாவுக்கு எலியா உறுதியளித்தார். எலியாவின் வார்த்தை நம்பப்பட்டு இராஜா மற்றும் தீர்க்கதரிசியின் சந்திப்பு நிகழ்ந்தது.

எலியா இருந்த இடத்தில் இராஜா வந்தபோது, தேசத்தின் மீது வந்த சகல பிரச்சனைகளுக்குக் காரணமானவர் எலியா என்ற விதத்தில் இராஜா துணிவுடன் கூறினார். மேலும், எலியாவே குற்றத்திற்குரியவர் என்றும் கூறினார். சம்பவித்த விஷயங்களில் உள்ள கர்த்தருடைய பங்கையும் தனது பொறுப்பையும் கருத்தில் கொள்ள இராஜா தவறினவராகக் காணப்பட்டார். இப்பாடத்தில் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் நபர்களிடமிருந்து இராஜா மிகவும் வேறுபட்ட மனுஷனாக இருந்தார். எலியா கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும் தைரியம் கொண்டவராக இருந்தார். ஒபதியா தைரியத்தில் குறைவுள்ளவராகவும், சில விஷயங்களில் பெலவீனராகவும், கர்த்தர் அங்கீகரிக்கும் அநேக பண்புகள் அற்றவராகவும் இருந்தார். ஆனால், ஆகாபோ தைரியமுள்ளவனாகவும், கர்த்தரையும், அவருடைய தீர்க்கதரிசியையும் எதிர்க்கிறவனாகவும், தானும் தனது நேசத்தாரும் மூன்றரை வருடங்களாக கடந்து சென்ற அனைத்து அனுபவங்களுக்கு பிற்பாடும் எலியாவை நோக்கி, "இஸ்ரயேலை கலங்கப்பண்ணுகிறவன் நீ அல்லவா?" என்று கூறுகிறவனாக இருந்தான். இதற்கு பிரதியுத்தரமாக, நானல்ல, விக்கிரகங்களினிமித்தமாக இராஜாவே இஸ்ரயேலை கலங்கப்பண்ணினான் என்று எலியா கூறினார். தீர்க்கதரிசி கத்தியைப் போன்று சத்தியத்தை முன் வைத்தபோது, இராஜாவின் தைரியம் வலிமை இழந்து போயிற்று. எலியா கர்த்தருடைய பிரதிநிதியாக இருந்து தேசத்தில் எல்லா திசைகளிலிருந்து பிரதானமான ஜனங்களையும், சகல பாகாலின் தீர்க்கதரிசிகளையும் கர்மேல் பர்வதத்திலே கூடிவரும்படி கட்டளையிட்டான். இது இராஜா மற்றும் அவனுடைய அரசாங்கம் மற்றும் பத்து கோத்திரத்தின் தலைவர்கள் மற்றும் சகல பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு அடையாளமாய் இருக்கும் பாகாலின் சேனைக்கும், பிதாவாகிய யேகோவா தேவனுக்கு அடையாளமாக இருக்கும் ஒரு தீர்க்கதரிசிக்கும் இடையிலான அரைகூவலாக இருந்தது.

ஆகாப் இராஜா தான் கடந்துவந்த அனுபவங்களினிமித்தம் தாழ்மை அடைந்திருந்தவராகவும், இப்போது பிரச்சனைகளுக்கான முடிவை எதிர்நோக்கி இருந்தவராகவும் காணப்பட்டார் என்பது உறுதியே. எலியா தனது இந்த வேலையின் மூலம் மழை கொண்டுவந்து ஆசீர்வாதமும், புத்துணர்வும் கொண்டுவருவார் என்பதை ஆகாபுக்கு அறிவித்திருக்க வேண்டும் என்பதிலும் ஐயமில்லை.

இந்த சம்பவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் முக்கியமான பாடம், கர்த்தருடைய ஜனங்கள் என்று தங்களை அறிக்கை செய்பவர்களிடத்தில் காணப்பட வேண்டிய குணலட்சணமும் உறுதியுமே ஆகும். கர்த்தருக்கு விரோதமாக ஆகாப் செய்த காரியங்களுக்கும், விக்கிரக ஆராதனைக்கு தலைமைத்துவம் வகுத்த அவனுடைய மனைவியாகிய யேசபேலுக்கும் நாம் துணைபுரியாமல், இசைவாய் இராமல் இருப்பது மாத்திரம் போதாது. ஒபதியா செய்தது போன்று நாமும் மறைவில் இருந்து கர்த்தருக்கு ஊழியம் புரிவதும், அவருக்கு பயந்து நடப்பதும் போதாது. நாம் மறைவில் இருந்து, கர்த்தருடைய ஜனங்களில் சிலருக்கு நன்மை செய்கிறவர்களாக இருந்தாலும், அது நமக்கு போதுமானதாய் இராது. ஒபதியாவின் நடத்தைகள், ஆகாபைக் காட்டிலும் மிக கனமுள்ளதாய் இருப்பினும், அதுபோதுமானது அல்ல. நாம் எலியாவின் தைரியத்தையும், உண்மையையுமே பின்பற்ற வேண்டும். இந்த எலியா, சுவிசேஷயுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய பிரியமானவர்களுக்கு விசேஷித்த நிழலாய் இருக்கின்றார். ஆமென்!!

R 3431/283/306.

# அன்பின் பிரமாணம்

தேவனது ஆவியை அதிகமாய் நிரப்பிடவே,

and more filled with the Spirit of God. The poet has beautifully said:--
"Pour forth the oil, pour boldly forth; it will not fail until
Thou failest vessels to provide, which it may freely fill.

கவிஞர் ஒருவர் அழகாயக் கூறினார்,
பரிசுத்த எண்ணெய்யை அதிகமாய் ஊற்றிக்கொள்வீர்,
தைரியமாய் ஊற்றி நிரப்பிடுவீர்,
நிரம்பி வழிந்து வீணாகிவிடுமே என்ற கவலை வேண்டாம்,
பாத்திரத்தை மாற்றி வைக்கும்வரை அது நின்று போகாது,
தொடர்ந்து அதிகதிகமாகவே நிரப்பப்படும்,
அன்பின் நீரோடைகளுக்கு வாய்க்கால்கள் வெட்டிவையுங்கள்,

"Dig channels for the streams of love, where they may broadly
run; And love has overflowing streams, to fill them every one.
"But if at any time thou cease such channels to provide,
The very streams of love, for thee, will soon be parched and
dried.

அதில் அன்பு அகலமாக, நீளமாக, நிரம்பி ஓடிவரட்டும்,
அது ஒவ்வொருவரையும் நிரப்பிவைக்கட்டும்,
அன்பிற்கு வாய்க்கால்கள் அமைத்துத்தர இயலவில்லை என்றால்,

"But if at any time thou cease such channels to provide,
The very streams of love, for thee, will soon be parched and
dried.

அந்த அன்பின் வாய்க்கால்கள் விரைவிலேயே
காய்ந்து வற்றிப்போய்விடும்,

"Dig channels for the streams of love, where they may broadly
run; And love has overflowing streams, to fill them every one.

பரத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்டதை மற்றவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்,

"For we must share if we would keep that good thing from
above: Failing to give, we cease to have--such is the law of
Love.

மற்றவருடன் அன்பைப் பகிர்ந்துகொள்ள மறுக்கிறோம் என்றால்,
பெற்றுக்கொள்ளவும் முடியாதன்றோ,
இதுவே அன்பின் பிரமாணமாகவே உள்ளதுவே,
அன்பிற்குப்பாலம் அமைத்துத்தந்த நம் கர்த்தர் மூலமே
அன்பைப் பெற நாம் நாடிடுவோமே.

# "நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது"

## யோவான் 2:1-11.

"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்."

கலிலேயாவிலுள்ள கானா ஊரே நாத்தான்யேலின் சொந்த ஊராக இருந்தது. இவர் சமீபத்தில் நமது கர்த்தருடைய சீஷர்களின் எண்ணிக்கைக்குள் வந்திட்ட ஒருவராக இருந்தவர். அச்சமயத்தில் இயேசுவை மேசியாவாக அங்கீகரித்திட்ட ஆறு பேரில் இவரும் ஒருவராக இருந்தார். நாத்தான்யேல், நமது கர்த்தரையும், மற்றச் சீஷரையும் கானா ஊரில் ஒரு கலியாண விருந்துக்கு தன்னுடைய விருந்தினர்களாக அழைத்திருந்தார். இயேசுவின் தாயாகிய மரியாளும் அந்த விருந்துக்கு வந்திருந்தாள். மேலும், மரியாள் திராட்சரசம் குறைவுபட்டதை முன்கூட்டியே அறிந்துக்கொண்ட காரியமானது, மரியாள் அந்தக் குடும்பத்தாருக்கு நெருங்கிய நண்பராக இருந்தாள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதில் நமக்கு ஐயமில்லை. மேலும், இப்படிப்பட்ட (திருமண) தருணங்களில் யூதர்கள் தங்கள் விருந்தினர்களுக்கும், அண்டை வீட்டாருக்கும் மற்றும் விருந்து சாலைக்குள் வந்து பந்தியில் பங்குக்கொள்ளும்படி மணவாளனுடைய பெயரில் வற்புறுத்தி அழைக்கப்படும் வழியில் போய்க்கொண்டிருப்பவர்களுக்கும் (பற்றாக்குறையின் காரணமாக) போதுமானளவு பந்தியில் உணவு கொடுக்க முடியாமல் போகும் சம்பவமானது, யூதர்களுடைய விருந்தோம்பலின் பாரம்பரியத்தை மீறி விடுவதாகும். இப்படி, விசேஷமான விருந்தினர்களாக அழைக்கப்பட்டவர்களுக்குள் இயேசுவும், அவருடைய சீஷர்களும் அடங்கியிருந்தார்கள்.

நம்முடைய ஆண்டவரின் தாய், திராட்சரசம் குறைவுபட்டதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததின் காரணமாக, மரியாள் ஓர் அற்புதத்தை எதிர்ப்பார்த்தாள் என்ற ஊகம் நிலவிக்கொண்டிருக்கிறது. இக்கருத்தை நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது. காரணம், அற்புதமான விதத்தில் திராட்சரசம் உண்டாக்கப்பட்ட இச்சம்பவத்தின் அன்றே இயேசுவின் அற்புதங்கள் ஆரம்பமானது என்று குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நாம் ஊகிப்பது என்னவெனில் மரியாள் தனது மகனுடனான நீண்டகால நெருங்கிய தொடர்பு மற்றும் அவரைச் சார்ந்து இருந்ததன் விளைவாக அனைத்துச் சம்பவங்கள் மற்றும் அனைத்துத் தருணங்களிலும் அவரிடம் வெளிப்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் புத்திகூர்மை/திறமையையும் மற்றும் அருமையான முடிவுகள் எடுக்கும் திறமையையும் ஏற்கெனவே அறிந்திருந்தவளாக இருந்தாள். அன்று திராட்சரசம் பற்றாக்குறையின் பிரச்சனையானது மரியாளால் தீர்வுகாண முடிகிற நிலைக்கு மிஞ்சி/அப்பாற்பட்டதாகக் காணப்பட்டது. மேலும், நடுத்தர வர்க்கத்தில் வாழ்கிற அனைவரின் விஷயங்களும் இப்படியாகவே உள்ளது; மேலும், அநேகமாக, திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கென மணவாளன் தன்னால் செலவழிக்க முடிந்த யாவையும் செலவழித்திருக்க வேண்டும். அநேகமாக, கலியாண விருந்தில் நம்முடைய கர்த்தருடைய வருகையை எதிர்ப்பார்த்திருந்தவர்களாகிய பெருமளவிலான அயலகத்தார்களும் கூட அவர் நிமித்தமாக அழைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும்; அதாவது, நாத்தான்யேல் மூலமாகவும், மற்றவர்கள் மூலமாகவும், கேள்விப்பட்டிருந்த அந்த விருந்தினரைப் பார்ப்பதற்காக அவர்கள் அழைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும்.

## "குடும்பத்தாரிடத்தில் இயேசுவின் நட்பிணக்கம் (sociable)"

இச்சம்பவத்தின் பதிவானது, நம்முடைய ஆண்டவருடைய சமுதாயப் பழக்கவழக்கம் பற்றின சிறியதொரு கண்ணோட்டத்தை நமக்குத் தருகிறது. மேலும், இது சந்நியாசிகள் மற்றும் கன்னியாஸ்திரிகளின் வாழ்க்கை மூலம் காட்டப்படும் கடுமையான துறவு வாழ்க்கை போன்றவைகள் அவருடைய போதனையிலோ அல்லது வார்த்தையிலோ அல்லது உதாரணத்திலோ காணப்படவில்லை என்பதை நமக்கு உறுதியளிக்கக் கூடியதாய் இருக்கின்றது. ஒழுக்கம் மற்றும் மத/சமயக் கோட்பாடுகளையுடைய ஜனங்கள் (community) மத்தியில் நிலவிக்கொண்டிருக்கும் சாதாரணமான சமுதாயச் சூழ்நிலைகளின் மத்தியில்தான், கர்த்தர் தம்முடைய அர்ப்பணிப்பின் ஜீவியத்தை ஜீவித்தார். மேலும், நமது கர்த்தர் இப்படிப்பட்ட தருணங்களில் பங்குப்பெற்றபோது, அவர் கூத்தாடினார் என்றோ/வரம்புமீறி விருந்தில் களியாட்டம், குடிப்போதை கொண்டார் என்றோ அல்லது

கோமாளிக்கூத்து நடத்தினார் என்றோ சொல்வதற்கு எவ்விதமான குறிப்புகளும் இல்லை. மாறாக, இம்மாதிரியான (திருமண விழாவின்) தருணங்களுக்குரிய வரம்பு மீறாத/சரியான/நியாயமான சந்தோஷங்களிலும், தோழமை அனுபவ சந்தோஷங்களிலும் மற்றும் சமுதாயத்தினால் அங்கிகரிக்கப்படும் நடத்தைகளிலுமே அவர் பங்குக் கொண்டார் என்று அனுமானிப்பதே நியாயமாய்த் தோன்றுகின்றது. மேலும், அவருடைய இந்த நடத்தையானது, அவருடைய பின்னடியார்களுக்கென அவர்தாமே கட்டளையிட்ட வார்த்தைகளுக்கு இசைவாகவே உள்ளது. அதாவது, "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்" என்பதாகும்.

ஒவ்வொரு வீட்டையும் இயேசு விருந்தினர்போல் சந்தித்துச் செல்வது அவ்வீட்டிற்குச் சிறப்பாயிராமல் அவ்வீட்டை அவர் சொந்த வீடாகக் கருதி தங்குவதே அவ்வீட்டிற்குச் சிறப்புச் சேர்க்கின்றதாய் இருக்கும். ஒருவேளை கர்த்தர் இப்பொழுது மாம்சத்தில் காணப்பட்டிருப்பாரானால் அவர் எப்படிப்பட்ட நிலைமைகளிலுள்ள இடங்களுக்குச் சென்றிருப்பார் என நமக்கு நியாயமாகத் தோன்றுகிறதோ, அப்படியான நிலைமைகளிலுள்ள இடங்களுக்குக் கர்த்தருடைய பின்னடியார்களாகிய நாமும் செல்ல விரும்புவது நம் ஜீவியத்திற்குப் பாதுகாப்பாய் இருக்கும். இன்னுமாக, ஒருவேளை நமக்குப் பதிலாகக் கர்த்தர் ஓரிடத்தில் காணப்பட்டிருந்திருப்பாரானால், அவர் இன்னின்ன வகையில் பேசி இருந்திருப்பார் அல்லது செயல்பட்டிருந்திருப்பாரென நாம் நியாயமாக எதிர்ப்பார்க்கும் விஷயங்களையே, நாமும் பேசுவதும், செயல்படுத்துவதும் நமக்கான சட்டமாக வைத்துக்கொள்வது பாதுகாப்பானதாய் இருக்கும். நமது அருமையான ஆண்டவர் எங்கெல்லாம் கடந்து சென்றாரோ அங்கெல்லாம் விசேஷமாக நாத்தான்யேல் போன்று கபடற்ற உத்தம இருதயமுடைய இஸ்ரயேலர்களுக்கு ஆசீர்வாதங்கள் கடந்து சென்றன என்பதில் நமக்கு நிச்சயமே.

சீஷன் என்ற வார்த்தை மாணாக்கன் (அ) கற்றுக்கொள்பவன் என்ற பொருளைக் கொடுக்கின்றது என்றும், கர்த்தருடைய ஜனங்கள் அனைவருமே, அவருடைய சீஷர்கள் (கர்த்தருடைய ஜனங்கள், எல்லாரும் அப்போஸ்தலர்களாக இல்லாவிட்டாலும்) என்றும் நாம் நினைவுகூரும்போது, ஒவ்வொரு சீஷனும் கர்த்தரை அடையாளப்படுத்துகிறதாக நமக்கு தோன்றுகின்றது; அதாவது, நாம் அவருக்குப் பிரதிநிதிகளாக (அ) "ஸ்தானாதிபதிகளாக" இருக்கின்றபடியினால், நாம் எங்குப் போகிறோமோ அங்கே அவரும் போகிறார். இக்கருத்தை சிந்தையில் கொண்டவர்களாக நாம் ஒவ்வொருவரும், அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் விஷயத்தில் அதாவது, நம்முடைய மகிமையின் கர்த்தரை நாம் ஒவ்வொருவரும் சரியான விதத்தில் அடையாளப்படுத்தத்தக்கதாக எத்துணை ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். இதற்காகவே உதடுகளினால் மாத்திரமல்ல, "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" என்று உள்ளத்திலிருந்தும் ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். மெய்யாகவே, "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17). "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." ஆனால், எல்லா தருணங்களிலும் நம்முடைய கடமையோ ஒரே விதமாகவே உள்ளது; மனுஷர் நம்முடைய நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவை மகிமைபடுத்தும்படி, நம்முடைய வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்க வேண்டும் என்பதே அவருடைய போதனையாக இருக்கிறது.

## "இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக"

கர்த்தரிடமிருந்து சீஷர்கள் வாயிலாக கடந்துவரும் செல்வாக்குக் குறித்த ஒரு குறிப்பானது, கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பி வைத்தபோது பேசின வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. வீட்டினுள் நுழையும் முன், "இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று அவர்கள் சொல்ல வேண்டும். ஆனால், அதற்கென்று நாம் ஒரு கட்டிடத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பதாக வெளிப்படையாகவும், சம்பிரதாயமாகவும் இப்படிப்பட்ட அறிக்கையைச் செய்ய வேண்டும் என்று இதனை ஒரு கட்டளையாக நாம் கருதிவிடக்கூடாது. மாறாக, இது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனம் ஒவ்வொருவருடைய இருதயபூர்வமான மனோபாவமாக இருக்க

வேண்டும் என்றே அறிவுறுத்தப்பட்டுள்ளதென நாம் நம்புகிறோம்; அதாவது, தாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம், தங்களோடு தொடர்புகொள்ளும் ஏகமாய்த் தவித்துக்கொண்டிருக்கும் பாவப்பட்ட சிருஷ்டியின் இருதயங்களைப் தாங்கள் புத்துயிர் அடையச்செய்து, தூக்கி நிலைநிறுத்தும் போது, சமாதானமும், ஆசீர்வாதமும் தங்களோடுகூடக் கடந்துவர வேண்டும் என்பதே இவர்களுடைய விருப்பமும், முயற்சியும், குறிக்கோளுமாயிருக்க வேண்டும்.

இவ்வுலகில் சண்டைகளை வளர்ப்பதற்கென்றே அநேகம் பேர் உள்ளனர். அத்தகையவர்கள் ஏதாவது ஒரு வீட்டின் வாசலுக்குள் பிரவேசிப்பார்களேயானால், அவர்கள் அதை உணர்கிறார்களோ அல்லது பேசுகின்றார்களோ இல்லையோ, அந்தச் சுவர்களுக்குள் சண்டையே மிஞ்சுகின்றது. கோபம், பகைமை, வெறுப்பு, மற்றும் சண்டை ஆகியவற்றால் அவர்களுடைய இருதயம் நிறைந்திருப்பதால், அதன் மிகுதியிலிருந்து அதிருப்தியும், சந்தோஷமின்மையும் வெளிப்படுகிறது. பகைமையிலும், சண்டையிலும் தங்கள் ஆத்துமாவைக் கசப்பான நிலையில் (ஒரு காலத்தில்) வைத்திருந்தவர்கள், இப்பொழுது அதினின்று மாறி கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடக்க அதாவது, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பதற்குத் தங்கள் மனங்களில் தீர்மானித்திருப்பவர்கள், மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளைக் களைந்து போட்டிருப்பவர்கள், அன்பின் ஆவியினால் நிறையப்படுவதற்கு, நிச்சயமாக சிலகாலம் செல்லும்; இதற்கு இடைப்பட்ட காலத்தில் அதாவது, இவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் ஆசீர்வாதங்கள் பெருகுவதற்கு ஏதுவாக இவர்கள் சந்தோஷம், சமாதானம் மற்றும் ஆவியின் கனிகளால் நிரப்பப்படுவதற்கு முன்பு இவர்களிடத்தில் சிலகாலம் தீமை பேசுதல், புறங்கூறுதல், தீமையான கட்டுக்கதைகள், முகாந்திரமின்றி தீமையைக் கற்பனை செய்தல், இரக்கமின்மை, வார்த்தையில் மற்றும் நடத்தையில் பணிவின்மை, பொறுமையின்மை, போன்ற காரியங்கள் வெளிப்படும்.

இப்படிப்பட்டவர்களுடைய செல்வாக்கானது, இவர்கள் கிறிஸ்துவுக்குள் மாணாக்கர்களாக இருந்திட்டாலும், அது மாம்சத்திற்குரிய செல்வாக்காய்/தாக்கமாய் இருக்கிறபடியினால், அது ஆவிக்குரிய வளர்ச்சிக்குப் பெருமளவில் தீங்கு விளைவிக்கக்கூடியதாகவும், பல்வேறு கிருபைகளின் வளர்ச்சியைத் தடைசெய்யக்கூடியதாகவும், கர்த்தருடைய சரியான பாதைகளைத் தேடிக்கொண்டிருக்கும் மற்றவர்களுடைய இருதயங்களிலும், தங்கள் சொந்த இருதயங்களிலும், சமாதானம் மற்றும் சந்தோஷத்தைக் குலைத்துப்போடக்கூடியதாகவும் இருக்கும். கர்த்தருடைய பின்னடியார்களாகிய நமக்கான பாடம் என்னவெனில், பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்புவதும், கோபம், பொறாமை, மற்றும் பகைமையிலிருந்து அன்புக்குத் திரும்புவதும் மாத்திரமல்ல, இருதயம் அன்பினால் நிறைத்து வைத்திருக்கப்பட வேண்டும். அப்பொழுது அன்பு, சந்தோஷம், மற்றும் சமாதானத்தின் நிறைவினால், நம்முடைய வாய் பேசும்; மேலும், நம்முடைய நடத்தை, கர்த்தருடனான நம்முடைய உறவையும், அவருக்கொத்த சாயல் அடைந்ததையும் வெளிக்காட்டக்கூடும்; அதாவது, நாம் இயேசுவோடு இருக்கின்றோம் என்றும், அவரால் போதிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் மனுஷர் நம்மைக் குறித்து அறிந்துக்கொள்ளக்கூடும்.

## ''உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக''

நம்முடைய கர்த்தர் தம்முடைய தாயின் ஆலோசனைக்கு அளித்த மாறுத்தரம், சற்று அன்பற்றதாகவும், கடுமையானதாகவும் காட்சியளிக்கின்றது. காரணம், இது மொழிப்பெயர்ப்பின் விளைவாக ஏற்பட்டதாகும். இது ''ஸ்திரீ '' என்று அர்த்தம் கொடுக்கும் மூல கிரேக்க வார்த்தையின், அருமையான தோற்றத்தைக் கொடுக்கவில்லை. வார்த்தை ஒன்றுதான், உதாரணத்திற்கு, எகிப்தின் இராணிக்கு ரோம ஆளுநர் பாராட்டுத் தெரிவிக்கும் பேருரையில் பயன்படுத்தின வார்த்தையாவது, ''ஓ பெண்ணே, திடன்கொள்'' என்பதாகும். ''உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக'' என்ற பிரமாணத்தின் கட்டளையை நம்முடைய கர்த்தர் தம்முடைய வார்த்தையினாலோ அல்லது கிரியையினாலோ ஒருபோதும் மீறவில்லை என்பதில் நாம் உறுதிகொள்ளலாம். அவருடைய வார்த்தைகள் மற்றும் நடக்கைகள் எல்லாவற்றிலும் அவர், தம்முடைய போதனைகள், போதித்த விதமாகவே சாந்தத்திற்கும், பெருந்தன்மையோடு கூடிய இரக்க மனப்பான்மைக்கும், பொறுமை மற்றும் அன்புக்கும் ஒரு மாபெரும் மாதிரியாக இருந்தார்.

''எனக்கும் உனக்கும் என்ன?'' என்ற சொற்றொடரின் சரியான அர்த்தமாவது,...''எனக்கு கட்டளையிட முயற்சி செய்யாதீர்கள்; ஏற்றச்சமயம் வரும்போது என்ன செய்யவேண்டும் என்பதை நான் அறிவேன்'' என்பதாகும். அநேகமாக மரியாள், திராட்சரசம் குறைவுபடும் காரியத்தை

(மற்றவர்களிடமிருந்து) மறைக்க எண்ணினாள்; இயேசுவோ இதற்கு நேர்மாறாக, தாம் நிகழ்த்துவதாக இருந்த அற்புதம், விருந்துக்கு அழைத்த மணவாளனுக்கு உதவியாயிராமல், விருந்துக்கு வந்திருந்த ஒட்டுமொத்த ஜனக்கூட்டமும், வேலைக்காரார் மூலம் அறிந்துக்கொள்ளும்போது அது அவர்களுக்கு மிகப்பெரிய ஒரு பாடமாக இருக்கும் என்பதையும் உணர்ந்தவராக இருந்தார். ஆகையால், இயேசு புதியதை பழையவையோடு கலப்பதன் மூலமாக இந்த அற்புதம் குறைத்து மதிப்பிடப்பட்டுப் போய்விடாதிருக்கும்படிக்கு, பரிமாறுதல் குறைவுபடும்வரை மாத்திரமல்லாமல், முற்றிலும் திராட்சரசம் இல்லாமல் தீர்ந்துப்போகும் வரையிலும் காத்திருந்தார்.

"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்" என்று மரியாள் வேலைகாரரிடம் கூறின வார்த்தையிலிருந்து, மரியாள் அந்தக் குடும்பத்தில் மிக நெருங்கின உறவுமுறையாள் என்பது மேலும் தெளிவாகிறது. வேலைக்காரர்களுக்கும், இப்படிப்பட்ட கட்டளைகள் அவசியமாக இருந்திருக்கும்; இல்லையென்றால், அவர்கள் விருந்தினர்களில் ஒருவரிடமிருந்து கட்டளைப் பெறுவதற்கு இடமளித்திருக்கமாட்டார்கள். கர்த்தர், வேலைகாரர்களுக்கு என்ன கட்டளையிடுவார் என்ற அறிவை மரியாள் அநேகமாக பெற்றிருக்கவில்லை. ஆனால், முன்பு குறிப்பிட்டுள்ளபடி தன்னுடைய குமாரனுடைய திறமை மற்றும் ஞானத்தின்மேல் மரியாளுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. விருந்தினர்களின் களிப்பினிமித்தம் திராட்சரசம் தீர்ந்துப்போனபடியாலும், அவ்விருந்தினர்களில் ஒருவராக இயேசு இருந்தபடியினாலும், தேவையைப் பூர்த்தி செய்ய விருப்பமாய் அவர் இருப்பார் என்று மரியாள் எண்ணினாள்.

விருந்துக்கு அழைத்த மணவாளனினால் முன்னேற்பாடு செய்யப்பட்டு, அதில் இயேசுவும் அவருடைய சீஷரும் குடித்த திராட்சரத்தைக் குறித்தும், இதைத் தொடர்ந்து, கர்த்தர் உண்டுபண்ணினதும், பின்னர் அவர் குடித்த திராட்சரசத்தைக் குறித்தும் இங்கு ஒரு கேள்வி எழுகிறது. அது வெறும் புளிப்பில்லா திராட்சரசமே என்று குறிப்பிட நமக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஆனால், (அங்கிருந்த) எல்லா சூழ்நிலைகளும் எதிர்மாறாய்த் தோன்றுகின்றது; அதாவது, கொஞ்சம் மதுபானம் இருந்தது என்று போதிக்கும் வண்ணமாக இருந்தது. திராட்ச ரசத்தைப் புளிக்க வைப்பதின் வாயிலாக உருவாகும் மது "லைட் வைன்ஸ்" என்று அழைக்கப்படுகின்றது. முதலில் பரிமாறப்பட்ட திராட்சரசத்தைப் பார்க்கிலும், இயேசு உண்டாக்கின திராட்சரசம் நன்றாக இருந்ததாக பந்திவிசாரிப்புக்காரன் தெரிவித்தக் கருத்தானது, இந்தக் கோட்பாட்டை ஆதரிப்பது போன்று நமக்குத் தோற்றமளிக்கிறது. ஆனாலும், சுவையையோ (அ) பகுத்தறிவையோ இழக்குமளவு ஜனங்கள் குடித்து வெறித்து போதையில் இல்லாததையும் சுட்டிக்காட்டுகிறது.

நம்முடைய கண்ணோட்டத்தில், தற்போதைய நிலைகளுக்கும், நம்முடைய கர்த்தர் வாழ்ந்த காலத்திற்குமிடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. வெதுவெதுப்பான சீதோஷண நிலையில் இருக்கும் தேசத்தின் ஜனங்கள், இக்காலத்தில் நாம் தண்ணீர், டீ/ தேனீர், காபி,... அருந்துவது போன்று, "லைட் வைன்ஸ்" அருந்துவதைப் பழக்கமாக வைத்திருந்தனர். இதனால் அவர்களுக்கு எவ்வித தீங்கு விளைவிக்கும் காரியங்களும் ஏற்பட்டிருக்கவில்லை. இவ்விதமாகவே தற்காலத்திலும், ஐரோப்பாவின் சில பகுதிகளிலுள்ள ஜனங்களைக் குறித்தும் சொல்லப்படுகிறது. இயேசுவின் நாட்கள் பரபரப்புகள் இல்லாத காலம். மேலும், ஜனங்கள் எல்லாவற்றிலும் நிதானமாகவே இருந்தார்கள். நம்முடைய காலங்களில், எல்லாம் (எல்லா வேலைகளும்) அழுத்தங்களின் கீழும், பரபரப்புடனும் செய்யப்படுவதினால் மதுபானங்கள் பல்வேறு விதங்களில் தீமையாகவே இருக்கின்றது. ஆகையால், தற்போது ஜனங்கள் மதுபானத்தை மிதமான அளவிலும் கூடப் பயன்படுத்தக் கூடாமல் இருக்கின்றார்கள்.

வேதவாக்கியங்கள் மதுவைத் தவிர்த்துவிடு என்று சொல்லுவதினால் மாத்திரம் அல்லாமல் மேற்கூறிய காரணங்களுக்காகவும் மதுவைத் தவிர்க்க வேண்டும். அதாவது, தற்கால துயரங்களினாலும், அதிகம் மனஅழுத்தம் ஏற்படுவதினாலும் குடிபழக்கம் ஏற்படுவதற்கான அதிக ஆபத்து இருப்பதே மது தவிர்க்க வேண்டும் என்பதற்கான காரணம் ஆகும். ஒருவேளை கர்த்தர் நம்முடைய சூழ்நிலைகளின் மத்தியில் இன்று மாம்சத்தில் இருந்திருப்பாரானால், அவர் மிக மிதமான உணவு, பான பழக்கம் உடையவராக இருந்திருப்பார். மேலும், எதையும் தவிர்க்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாதிருந்தும் விழுந்துபோன பெலவீனமான இனத்தின் மீது அவருக்குக் காணப்படும் அன்பு மற்றும் அனுதாபம் காரணமாக, அவர்களுக்கு இடறலின் கல்லாக இருக்கும் எதையும் அவர் தவிர்க்கக்கூடிவராக இருப்பார் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

## “தண்ணீர் ஜாடிகள் முழுமையாக நிரப்பப்பட்டது”

முற்காலங்களில் இருந்தவர்கள், நீர்க்குழாய்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள்,...போன்ற சாதனங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆனால், குடும்பத்தினரின் பயன்பாட்டிற்காக தண்ணீர் ஜாடிகள் என்று அழைக்கப்படும் பெரிய மண்பாண்டங்களில், தண்ணீர் வைத்திருப்பார்கள். திருமண விருந்தின்போது, கூடுதலான அளவு தண்ணீர் தேவைபட்டிருக்கும் பட்சத்தில், அண்டை வீட்டாரிடமிருந்து அநேகமாக போதுமான ஜாடிகள் இரவலாக வாங்கப்பட்டிருக்க வேண்டும். அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு அளவுகள் கொண்டதாக, ஆனால் அதிக கொள்ளளவு கொண்டதாக இருந்தது. அவைகள் பல்வேறு அளவுகளில் இருந்தாலும், அவைகள் அனைத்தும் பெரிய அளவு கொண்டவைகளாகும்...இரண்டு கற்சாடிகள் என்பது 18 முகத்தலளவையாகும் (gallon – சுமார் 4-1/2 litre) மற்றும் மூன்று கற்சாடிகள் என்பது 27 முகத்தலளவையாகும் அல்லது ஒவ்வொரு கற்சாடியும், ஒன்பது முகத்தலளவு கொண்டதாகும். விசேஷமாக வீட்டுச் சாமான்களைத் துலக்கவும், விருந்தினர்களின் கைகள் மற்றும் பாதங்களைக் கழுவுவதற்கும் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவது வழக்கமாக இருந்தது. ஆகவேதான், இவ்வளவு அதிகமான அளவு தண்ணீர் அவசியமாக இருந்தது.

அற்புதம் நடப்பிப்பதற்கான ஏற்ற சமயம் வந்தபோது, நம்முடைய கர்த்தர், தண்ணீர் கொண்டுவந்து 6 ஜாடிகளின் விளிம்புவரை நிரப்பும்படி கட்டளையிட்டார். சாதாரணமான தண்ணீர் ஜாடிகள் பயன்படுத்தப்பட்டதின் விளைவாக, அற்புதத்திற்கான காரணம் பொடிகள் கலக்கப்பட்டதாக இருக்குமோ என்று எழும்பும் ஐயங்கள் நீங்கிற்று. மேலும், தண்ணீர் ஜாடியின் விளிம்புவரைத் தண்ணீர் நிரப்பப்பட்ட விஷயமும், நமது கர்த்தர் ஏதோ ஒன்றைத் தண்ணீரில் கலந்துவிட்டார் என்ற ஐயங்கள் எவருக்கும் எழும்பாதவண்ணம் ஆக்கிப்போட்டது. அன்றியும், இவ்விதமாக விளிம்புவரைத் தண்ணீர் உயர்ந்திருந்ததினால், அது கலப்படமற்ற தெளிவான தண்ணீராக இருந்ததைக் காணமுடிந்திருக்கும்.

தண்ணீர், திராட்சரசமாக மாறின சம்பவம் கணப்பொழுதில் ஏற்பட்டதென்பது தெளிவாகிறது. இதன் காரணமாகவே, உடனடியாக நம்முடைய கர்த்தர், புதிதான திராட்சரசம் பரிமாறப்படுவதைப் பந்திவிசாரிப்புக்காரன் அறிந்துக்கொள்ளும்படி முதலாவது, திராட்சரசத்தை மொண்டு அவருக்குப் பரிமாறும்படி அவர்களுக்குக் (வேலைக்காரருக்குக்) கட்டளையிட்டார். பந்திவிசாரிப்புக்காரன், விருந்துக்கு அழைத்த மணவாளனிடம்,...நாவானது திராட்சரசத்தின் தரத்தை மிகத் துல்லியமாகக் கண்டுபிடிக்கும் வண்ணம் வழக்கமாக நல்ல தரம் வாய்ந்த இரசமானது முதலாவதாகப் பரிமாறப்பட்டிருக்க வேண்டும் என்றும், முதலில் பரிமாறப்பட்டதைப் பார்க்கிலும் புதிய திராட்சரசமோ மிக உயர்தரமாக இருந்தது என்றும் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். இயேசு உண்டுபண்ணின மிகச்சிறந்த திராட்சரசத்திற்கு இது ஒரு சாட்சி. சாதாரண விருந்தில் பரிமாறப்படும் சாதாரண திராட்சரசமானது, நல்ல தரம் வாய்ந்த திராட்சரசமாகக் கருதப்படும் என நாம் நினைக்க இயலாது; அல்லது மற்றொருவகையில், இயேசு உண்டுபண்ணின திராட்சரசத்தில் அதிகம் மதுபானம் கலக்கப்பட்டு, அதைப் பயன்படுத்துபவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியதாக இருந்திருக்கும் என்றும் நாம் ஆலோசிக்கக்கூடாது.

ஆனால், அந்த ஜாடிகள் சுத்தமான நீரினால் விளிம்புவரை நிரப்பப்பட்டிருந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு; அவை அடையாளமானவைகள் ஆகும்; அவை, தற்காலத்திலுள்ள கர்த்தருடைய ஜனங்களை அடையாளப்படுத்துகிறது. வேதாகமத்தில் பயன்படுத்தப்படும் தண்ணீர், ஜீவனுக்கு (“ஜீவத்தண்ணீருக்கு”) அடையாளமாக உள்ளது. இது குறிப்பாக இயல்பான வாழ்க்கையை (அ) மனித வாழ்க்கையை எடுத்துக்காட்டுகிறது. உதாரணத்திற்கு வெளிப்படுத்தல் 22:17-இல், ஆவியும் மணவாட்டியும், ஆயிரவருட யுகத்தின்போது, உலக மனுமக்களிடம், “வந்து, ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்” என்று சொல்வதாக அடையாள பாஷையில் கொடுக்கப்பட்டுள்ளது. இது திரும்பக்கொடுத்தலின் வேலையை அடையாளப்படுத்துகிறது. அதாவது, மரணத்தின் வல்லமையிலிருந்து மனுக்குலத்தை மீண்டும் உயிர்ப்பித்து, திரும்பக்கொடுக்கப்படும் ஜீவனை அடையாளப்படுத்துகிறது.

## ‘‘மண்பாண்டங்களில் பெற்றிருக்கும் நம்முடைய பொக்கிஷம்’’

இந்த மண்பாண்டங்களில், முதலாவதாக திராட்ச ரசம் பெருமளவில் தீர்ந்துபோனதாக இருந்தது. ஒவ்வொரு பாண்டத்திலும், மீதியாக ஒன்றுமே இருக்கவில்லை. மனித குடும்பத்தின் அங்கங்களான நம்மைப் பொறுத்தவரையில், விழுகையினிமித்தமாக நம்முடைய உயிராற்றல்கள் நன்கு நலிவடைந்ததாக உள்ளது. யூதர்களோ, நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்த் தேவனுடைய கிருபை பெற்ற ஜனங்களாக, ஒரு குறிப்பிட்டளவே நீதிமானாக்கப்பட்டவர்களாக இருந்தனர்; மாறாக முழு அளவில் அல்ல; அதாவது, ஜீவனுக்கேதுவாக நீதிமானாக்கப்படவில்லை. ஜாடிகளில் தண்ணீர் விளிம்புவரை நிரப்பப்பட்ட சம்பவம், கர்த்தருடைய பின்னடியார்களாக மாறுபவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டதாக கருதப்படும் அனைத்து மனித உரிமைகளுக்கும், சிலாக்கியங்களுக்கும் மற்றும் ஜீவனுக்கும் ஏதுவான முற்றும், முழுமையான நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்துகிறது. அப்போஸ்தலர் கூறுவதுபோல, ‘‘நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.’’

ஆனால், இந்த உருவகம் இன்னுமாக, இந்த நீதிமானாக்கப்பட்ட வாழ்க்கையின் மறுரூபமாகுதலை, அதாவது, அற்புதவிதமான மாற்றத்தின் மூலமாக ஒரு புதிய சுபாவத்தை அளிப்பதை நமக்குக் காண்பிக்கின்றது. இதைக் குறித்துதான், நம்முடைய மனங்கள் புதிதாக்கப்படுகிறதினாலே மறுரூபமாக்கப்படும் போது, நாம் புதுச் சிருஷ்டியாக மாறுகிறோம் என்று அப்போஸ்தலர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

ஆகையால், தண்ணீர் திராட்சரசமாக மாறினது, நீதிமானாக்கப்பட்ட நிலைக்கு மாற்றப்பட்டவர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புதுச் சிருஷ்டியாக ஆகுவதை அடையாளப்படுத்துகிறது. தண்ணீர் நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்தும் என்பதால், திராட்சரசம், விசுவாசத்தின் மூலமாகவும், ஒரு முழு அர்ப்பணிப்பின் மூலமாகவும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு, அதாவது ஆவிக்குரிய குடும்பத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப் படுபவர்களுக்கு அளிக்கப்படும் மேலான ஆவிக்குரிய சந்தோஷங்களை அடையாளப்படுத்துகிறது. மெய்யாகவே இந்தச் சந்தோஷங்கள், வருங்காலங்களில் நிஜமாகக் கிடைக்கப்போகும் அளவிற்கு தற்போது இருப்பதில்லை; அப்போஸ்தலர் அறிக்கையிடுவதுபோல அவற்றை, நம்பிக்கையின் சந்தோஷங்களாகவும், எதிர்ப்பார்ப்பின் சந்தோஷங்களாகவும் இந்த மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். எனினும் வருங்காலங்களில், நமது கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின்படி, கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் ஒரு பங்காக, புதிய பாத்திரங்கள், பொற்பாத்திரங்கள் நமக்குக் கொடுக்கப்படும்; அதாவது, நம்முடைய சந்தோஷங்கள், கிருபைகள் யாவும் முழுமையான அளவு உணர்ந்து, புரிந்துக்கொள்ளப்படும் பரிபூரண நிலைமைகள் நமக்குக் கொடுக்கப்படும். கடைசி இராப்போஜனத்தின்போது, நம்முடைய கர்த்தருடைய அறிக்கையில் இதற்கான ஒரு குறிப்பு உள்ளது. அதாவது, தற்போது அவருடைய பாடுகளின் பாத்திரத்தில் பானம் பண்ணி, சுயத்தைப் பலிச்செலுத்துகிறவர்கள், வருங்காலங்களில் நவமான திராட்சரசத்தில், திவ்யச் சுபாவத்தில், இராஜ்யத்தில் ஜீவன் மற்றும் சந்தோஷங்களில் அவரோடுகூடப் பங்குக்கொள்வார்கள்.

யோவான் 2:11...என்ற நமது பாடத்திற்குரிய ஆதார வசனப்பகுதியின் கடைசி வசனத்திற்கு இசைவாக திராட்சரசத்தின் ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது. மேலும், அந்த நமது கர்த்தரின் அற்புதமானது, வரவிருக்கிற அவருடைய மகிமையையும், அவருக்கு உண்மையாய் இருந்தவர்களுக்கு அவர் அளிக்கப்போகும் ஆசீர்வாதங்களையும் வெளிப்படுத்துகின்றது.

**ஆமென்!**

---

R 3500

# "இரக்கத்தின் வீடு"
## யோவான் 5:1-15

"அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்" (யோவான் 6:2).

பெதஸ்தா என்ற வார்த்தை "இரக்கத்தின் வீடு" என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது. இது எருசலேமின் சுவர்களுக்கு அருகாமையில் காணப்பட்ட பெரிய ஒரு குளத்தைச் சூழ்ந்து கட்டப்பட்டுள்ள பெரிய மண்டபங்கள் உடைய இடமாகும். இக்குளத்திற்குத் தண்ணீர் வழங்கி கொண்டிருந்ததான நீர்த்தேக்கங்கள் சில குறிப்பிட்ட வாயுகள் குடிப்புகும் இடமாகக் கூடக் காணப்பட்டது. இந்த நீர்த்தேக்கங்களில் வாயு, திரண்டு குவிந்து வரும்போது, வாயுகள் தண்ணீரை வெளியேற்றுகின்றது; இவ்விஷயம் இன்றுள்ள எண்ணெய் கிணறுகளின் விஷயங்களிலும் நடக்கின்றது. வாயுகள் கலந்த தண்ணீர் வெளியேறும் விஷயம் அவ்வப்போது நடந்தது, மேலும் இப்படியான சமயங்களில் குளத்தில் உள்ள தண்ணீர் கலங்குகின்றது அல்லது வாயுகளின் காரணமாக தண்ணீர் கொப்பளித்துப் பொங்குவது போன்று காணப்படும்.

இந்த விஷயத்தைப் புரிந்துக்கொள்ள முடியாததால், சிலர் குளத்தின் தண்ணீர் கலக்கப்படும் காரியத்தைப் பரலோகத்திலிருந்து தேவதூதன் வந்து அற்புதவிதமாய்க் கலக்குகின்றார் என்று எண்ணிக்கொண்டார்கள். விசுவாசம் அளிக்கும் உற்சாகமும் மற்றும் வாயுகளின் காரணமாக தண்ணீரில் காணப்படும் சில மருத்துவ தன்மைகளும், வியாதி சொஸ்தமடைவதற்கான காரணங்களாய் இருந்தன. இப்படிச் சொஸ்தப்படுத்தும் தன்மை இந்தக் குளத்தில் கலக்கப்படும் தண்ணீருக்கும் இருப்பதினால், அவ்வூர் முழுவதும் இக்குளம் பிரபலமாய்ப் பேர்ப்பெற்றதாய் விளங்கினது. தண்ணீர் கலக்கப்படும் மாத்திரத்தில், உடனே தண்ணீருக்குள் இறங்குகிறவருக்கு மாத்திரமே அவ்வாயுகளிடமிருந்து வரும் நன்மையை அடைய முடிகின்றது என்று தெரிகின்றது. வாயுகள் தண்ணீருடன் கலந்து வெளியே வரும்போது, வாயு உடனடியாக வாயு மண்டலத்தில்/ஆகாய மண்டலத்தில் சென்றுவிடுகின்றது, ஆகவேதான் உடனடியாக வாயு கலந்த தண்ணீரில் இறங்குகிறவர்கள் நன்மை அடைவதோடு கூட, சில வாயுகளையும் கூட மூச்சில் உள்வாங்குகின்றனர். இதே போன்ற நீர் ஊற்றுகள் இன்றும் கூட, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றது, அவைகளில் பெரும்பான்மையானவைகள் மருத்துவ தன்மை உடையவைகளாகவே இருக்கின்றது; மேலும் இவ்வூற்றுகள் அற்புதங்கள் என்று கருதப்படுவதில்லை.

"மருத்துவக் குணம் உள்ள மூலிகை தண்ணீர்கள் உலகத்தின் பல பகுதிகளில் காணப்படும் பொதுவான ஒன்றாகும். அவைகள் மூலம் சொஸ்தமடையும்படிக்கு ஜனங்கள் நீண்ட பிரயாணம் செய்து வருவதுண்டு. விசேஷமாக ஆயிஸ்கல்பியஸின் இப்படிப்பட்ட மருத்துவ ஆசாரியர்கள், தண்ணீரண்டையில் மண்டபங்களைக் கட்டி அமைத்தனர். பைலேடிரிக்கஸ் என்பவர் காயூஸில் நடந்த யுத்தத்தில் காயமடைந்த கிரேக்க வீரர்கள், சிமிர்னாவுக்கு அருகாமையில் காணப்பட்ட அகமனான் என்ற ஊற்றின் தண்ணீர் மூலம் சுகமடைந்தார்கள் என்று கூறுகின்றார்" - **"இதனை அமெரிக்க சைக்கிளோபீடியா விளக்குகின்றது."**

நம்முடைய பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊற்றைப் போன்று ஒன்று கிஸ்ஸிங்கெனில் உள்ளது. இங்குத் தினந்தோறும், அநேக நேரத்தில் தண்ணீரில் இரைச்சல் ஒலி ஏற்பட்டு, பின்னர் குமிழ்கள் ஏற்படுகின்றது, மேலும் வாயு வெளியேறும் போது தண்ணீரில் இறங்கினால், நன்கு பயன் ஏற்படுகின்றது. ஐஸ்லாந்தில் வெந்நீர் ஊற்றுகள் காணப்படுகின்றன. வியோமிங்கிலும் வெந்நீர் ஊற்றுகள் கலங்குதல்கள் ஏற்படுகின்றன.

## "மூலப்பிரதியைப் பார்த்து எழுதும், ஓர் எழுத்தாளரின் ஓரக்குறிப்பு"

ஐந்து மண்டபங்களை உடைய இரக்கத்தின் வீடானது, கலக்கப்படும் குளத்தைப் பயன்படுத்த விருப்பப்படுபவர்களின் நன்மைக்கு ஏதுவாகவும், சௌகரியத்திற்கு ஏதுவாகவும் பொது மருத்துவ

இல்லமாகக் கட்டப்பட்டது; இதனால்தான் பெரும் திரளான வியாதியஸ்தர்களும், கண் குருடாயப் போனவர்களும், வாடி வதங்கிப் போனவர்களும் கலக்கப்படும் தண்ணீரின் மூலம் நன்மை அடையலாம் என்று வாய்ப்புக்காக இந்த மண்டபங்களில் காத்துக்கிடந்தனர் என்று நாம் பார்க்கின்றோம். பழைய மூல கிரேக்க பிரதிகளில் யோவான் 5:4-ஆம் வசனத்தின் முதற்பகுதி தவிர்க்கப்பட்டுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும். இவ்வார்த்தைகள் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டவைகளாகவும், அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டவைகளாகவும் இருக்கவில்லை. மாறாக பிற்காலங்களில் யோவான் எழுதின காரியங்களோடு சேர்க்கப்பட்ட வார்த்தைகளாகும். அநேகமாக ஜனங்கள் கொண்டிருக்கும் கண்ணோட்டத்தை விளக்கும் ஓரக்குறிப்பாக (marginal Note) இருக்க வேண்டும். அல்லது ஓரக்குறிப்பை எழுதின (வேதாகம மூலப்பிரதியைப் பார்த்து எழுதும்) எழுத்தாளரின் கருத்தாகக் கூட இருக்கலாம். இன்னும் சில வருடங்களுக்குப் பின்னர் வந்த வேறு ஒரு மூலப்பிரதியைப் பார்த்து எழுதும் எழுத்தாளரே (copyist) இந்த ஓரக்குறிப்பானது, வசனத்தில் விடப்பட்டுள்ளது என்று எண்ணி அதை, தான் பார்த்து எழுதிக் கொண்டிருக்கும் மூலப்பிரதியில் இடம்பெறும் வசனத்தோடு சேர்த்து விட்டார்; மீண்டும் இதே மூலப்பிரதி மீண்டும் மீண்டுமாக அப்படியாகவே பார்த்து எழுதப்பட்டு, இன்று நம்மிடத்தில் வந்துள்ளது. கடந்த 50 வருடங்களுக்கு முன்பு வரையிலும், அதாவது மிகப் பழமையான கிரேக்க மூலப்பிரதி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு வரையிலும் இந்த வார்த்தை தெய்வீக வார்த்தைகளின் பாகங்களாய் இராமல், அநேகமாக தற்செயலாய்ச் சேர்க்கப்பட்ட பாகம் என்று யாராலும் அறிந்துக்கொள்ள முடியவில்லை.

கடந்த பாடங்களில், நமது கர்த்தர் கலிலேயாவில் இருந்ததைக் குறித்தும், கானாவூரில் அவர் செய்திட்ட இரண்டாம் அற்புதம் குறித்தும் பார்த்தோம். இந்தப் பாடத்தில் யூதர்களின் வழக்கத்தின்படி மாபெரும் பண்டிகைகளில் ஒன்றை அனுசரிப்பதற்கெனக் கர்த்தர் மீண்டுமாக எருசலேமுக்கு வருவதைப் பார்க்கின்றோம். அவர் "இரக்கத்தின் வீடு" எனும் பெதஸ்தாவுக்கு வந்த போது, இப்பாடத்தில் நாம் பார்க்கப் போகின்ற அற்புதத்தைச் செய்யும்படிக்கு அவர் நின்றார். சூழ்நிலையை நமது மனங்கள் நன்கு கிரகித்துக்கொள்ளத்தக்கதாக, இன்றைய கால எழுத்தாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ள இப்படியான இரண்டு மருத்துவ பொது இல்லங்களைக்குறித்து நாம் இங்குக் குறிப்பிடுகின்றோம். **போவட்** அவர்கள் கலிலேயாவின் கடல் அருகே உள்ள திபேரியாவிலுள்ள இப்ராஹிம் எனும் குளிக்கும் இடம் குறித்துப் பின்வருமாறு கூறுகின்றார்:-

"தண்ணீர் ஊற்றுக் காணப்படும் குழியைச் சூழ்ந்து பல மண்டபங்கள்/அறைகள் உள்ளது. இந்த மண்டபங்களில் மிகுந்த வேதனை மற்றும் உபத்திரவங்களுடன் திரளான ஜனங்கள் படுக்கைகளில் கிடத்தப்பட்ட நிலையில் அல்லது போர்வைகளினால் மூடப்பட்ட நிலையில் மிகவும் நெருங்கி, நெருங்கி காணப்படுவதை நாம் பார்க்கலாம்.

**சோலா** அவர்கள் லூர்துஸில் உள்ள கிணற்றைச் சூழ்ந்து காணப்படும் மக்கள் கூட்டத்தைக் குறித்துப் பின்வருமாறு கூறுகின்றார்:-

"அங்கு எவ்விதமான ஒழுங்கும் காணப்படுவதில்லை; அனைத்து வகையான வியாதியஸ்தர்களும் மற்றும் நம்மை நடுங்க வைக்கும் அளவுக்கு மிகவும் அரிதானதாயும் மற்றும் மிகவும் பயங்கரமாயுள்ள வியாதிகளை உடையவர்களும் ஒன்றாய்க் கூடிக் கிடக்கும் நரகம் போன்று அவ்விடம் காட்சியளிக்கின்றது.

## "அவருடைய வல்லமைக்கான அடையாளம்"

இப்படிப்பட்டதான ஒரு காட்சியையே, நமது அருமையான மீட்பர், இந்த இரக்கத்தின் வீட்டிற்கு அருகாமையில் வந்த போது கண்டார். அவருக்கு முன் காணப்பட்ட அந்தப் பாவப்பட்ட வியாதியஸ்தர்களை அவர் பார்த்த போது, அவருக்கு எந்த அளவுக்கு அனுதாபம் ஏற்பட்டிருக்கும் என்பதை நாம் விவரித்துக் கூறுவதைக் காட்டிலும், கற்பனை செய்து புரிந்துக்கொள்ளலாம். இவ்விதமான துன்பமும், வேதனையும் உடைய காட்சிகளை நாம் பார்க்கையில், நம்முடைய விழுந்துபோன இருதயங்களே ஆழமாகத் தொடுமாயின், இப்படிப்பட்டக் காட்சியைப் பார்க்கும்போது, நமது கர்த்தருக்கு எத்துணை ஆழமான அனுதாபம் ஏற்பட்டிருக்க வேண்டும். முழு உலகத்தையும் அன்புகூர்ந்தபடியால், பிதாவோடு தமக்குக் காணப்பட்ட மகிமையைத் துறந்து, மனித சுபாவம் எடுத்து, மரிக்கவும், நம்மை மீட்பதற்கும், இறுதியில் பாவம் மற்றும் அதன் தண்டனையான நோய்

மற்றும் மரணத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்கும் என வந்தவர், கலக்கப்படும் தண்ணீரிலிருந்து நன்மை பெற்றுக்கொள்ளலாம் என்ற வாய்ப்பிற்காக கும்பல் கும்பலாக தமக்கு முன் காணப்பட்ட, பாடுபடுகிற ஜனக்கூட்டத்தைக் கண்டு அனுதாபப்பட்டிருப்பார் என்பது நிச்சயமே. இப்படியாக அவருக்கு மிகுந்த அனுதாபம் ஏற்பட்ட போதிலும், அக்கூட்டத்தாரில் ஒருவரையே நமது கர்த்தர் சொஸ்தப்படுத்தினதாக பதிவுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆனால் இப்படிச் செய்வது அவருடைய வழக்கமே; மேலும் இவ்வழக்கமானது அவருடைய பிரசங்கங்களிலும் விளக்கப்பட்டுள்ளது; அதாவது பஞ்சக் காலத்தில் இஸ்ரயேலில் எத்தனையோ விதவைகள் இருந்த போதிலும், சாறிபாத் ஊரிலுள்ள விதவையினிடத்திற்கு எலியா அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், இஸ்ரயேலில் எத்தனையோ குஷ்டரோகிகள் இருக்க, சீரியாவைச் சேர்ந்த நாகமான் மாத்திரமே குஷ்டரோகத்திலிருந்து எலிசாவினால் சொஸ்தமாக்கப்பட்டார் என்றும் நம் கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார் (லூக்கா 4:27). இதைப்போலவே, இரக்கத்தின் வீட்டில் திரளான, ஜனக்கூட்டம் இருந்தாலும் கூட இயேசு, ஒருவரை மாத்திரமே சொஸ்தப்படுத்தினார்.

இதற்கான காரணத்தை அறிந்துகொள்வது கடினமான காரியமல்ல; நமது கர்த்தர், தம்முடைய முதலாம் வருகையின் போது உலகத்தைப் பாவம், மரணம் மற்றும் சாத்தானின் வல்லமையின்று விடுவிக்கும்படிக்கு வராமல், மாறாக உலகத்தை மீட்டுக் கொள்ளும்படிக்கே வந்தார்; இன்னுமாக முதலாம் வருகையின் போது, அவர் அளித்த விடுதலைகள் எதுவாயினும், அவைகள் முழுமையான விடுதலையாய் இராமல், பகுதியளவிலான விடுதலையாகவும், அவருடைய வல்லமைக்கான விளக்கமாகவும் மாத்திரமே இருந்தது, அதாவது பார்ப்பதற்கு விசுவாச கண்களும், கேட்பதற்கு விசுவாச செவிகளும் உடையவர்கள் சார்பாக அவர் செய்யப் போகும் மீட்பினுடைய வேலையின் மீதும், அவர் மீதும் விசுவாசத்தைத் தூண்டி விடுவதற்கென நோக்கம் கொண்டுள்ள அவருடைய வல்லமைக்கான விளக்கங்களாக மாத்திரமே இருந்தது. இந்தக் கேட்கும் செவிகளையும், பார்க்கும் கண்களையும் உடையவர்களாகிய சொற்பமான பேர்களே அவருடைய வார்த்தைகளைக் கேட்டார்கள், மீதமானவர்கள் அனைவரும் குருடான நிலையிலேயே காணப்பட்டு விட்டார்கள்; அவர்கள் இன்று வரையிலும் கூட மாபெரும் மேசியாவை அறிந்துக்கொள்ளவில்லை. இந்தக் குருட்டு நிலையிலிருந்து தேவனுடைய ஏற்றவேளையில் அனைத்து இஸ்ரயேலர்களும் இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள் என்ற பாக்கியமான வாக்குத்தத்தத்திற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்வோமாக. "மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஓர் இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில் புறஜாதியாருடைய நிறைவுஉண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார்" (ரோமர் 11:25-26). இஸ்ரயேலர்கள் மாத்திரமல்லாமல், பூமியின் குடிகள் அனைத்தும் குருடான நிலையிலிருந்து இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள், "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" (ஏசாயா 35:5).

## "சாத்தானே மறைமுகமாகத் துன்புறுத்துகிறவன்"

நமது ஆதி பெற்றோர்களிடம் சாத்தானால் நடப்பிக்கப்பட்ட ஆதி வஞ்சனையே மன ரீதியிலும், சரீர ரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் முழு மனுக்குலத்திற்கும் உள்ள பிரச்சனைக்குரிய காரணமாக உள்ளது என்று நாம் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டாலும் வியாதி விஷயத்தில், அவைகள் எதிராளியானவனுடைய நேரடி அல்லது மறைமுகமான வேலை என்பதை நாம் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டாலும், வியாதிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் சாத்தானால் கட்டப்பட்டுள்ளார்கள் என்று நாம் கூறினாலும் சாத்தான் கட்டப்படுவதற்கும், அவனுடைய கைதிகளை விடுவிப்பதற்குமான வேளை/காலம் (இப்பொழுது) வந்துள்ளது என்று புரிந்துக் கொள்பவர்களில் நாம் ஒருவராக இருப்பதில்லை. இதற்கான வேளை தெய்வீக ஏற்பாட்டின்படி எதிர்க்காலத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, அதாவது ஆயிரம் வருஷம் அரசாட்சியில் நடக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. நமது கர்த்தர் அனைத்து வியாதியஸ்தர்களுக்கும் அற்புதம் பண்ணாததினால், இன்றைய நாட்களிலும் கூட ஏதாகிலும் இயற்கையான விதத்திலோ அல்லது அற்புதமான வல்லமையினாலோ அனைத்து வியாதியஸ்தர்களும் சொஸ்தமாக்கப்படுவார்கள் என்று நாமும் எதிர்பார்க்கக்கூடாது. சாத்தானுடைய ஒவ்வொரு தீமையின் ஆற்றலும் சர்வ வல்லமையுள்ளவருடைய வல்லமையின் கட்டுப்பாட்டிற்குள் காணப்படுகின்றது என்பதையும், கர்த்தருக்கு தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களின் விஷயத்தில் அவர்களின் நலன் கருதி, அவர் அனைத்துத் தீமையின் ஆற்றல்களை நன்மைக்கு ஏதுவாக மாற்றிப்போட சித்தமும்,

வல்லமையுள்ளவராய் இருக்கின்றார் என்பதையும், அவர்களுக்கு அவர் அனுமதிப்பது எதுவாயினும் அது அவர்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாகவே முடியும் என்பதையும் நாம் நினைவில்கொள்ளும்போது, நமக்கு ஆறுதலாய் இருக்கின்றது.

நமது கர்த்தருடைய அற்புதங்கள், வரவிருக்கின்ற அவருடைய மகிமையை வெளிப்படுத்தினது என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. வெகு சீக்கிரத்தில் அதாவது அவருடைய ஆயிரவருட ஆளுகையின்போது, நமது அருமையான மீட்பர் உலகத்திற்காக நிறைவேற்றப் போகும், பாவம், வியாதி மற்றும் மரணத்திலிருந்துள்ள மாபெரும் சீர்த்திருத்துதலின் வேலைக்கான காட்சிகளாக அல்லது விளக்கங்களாக அல்லது படிப்பினைகளாகவே இந்த அற்புதங்கள் காணப்பட்டன. அவருடைய சபைகளாகிய நாம் (ஆயிரம் வருஷம் அரசாட்சியின்போது) அவரோடு சேர்ந்து, அவருடைய வல்லமையிலும், மகா மகிமையிலும், சிலாக்கியங்களிலும் பங்கடைவோம். கர்த்தருடைய முதலாம் வருகையின்போது, அச்சமயத்தில் காணப்பட்ட ஒட்டுமொத்த வியாதியஸ்தர்கள், குருடர்கள் மற்றும் உடல் செயலிழந்த நிலையில் காணப்படுபவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அவருடைய அற்புதமான வல்லமையினால் பயன்/நன்மை அடைந்தவர்கள் சொற்பமானவர்களாகவே இருந்தார்கள். கர்த்தருடைய எதிர்க்கால வல்லமையினை இந்த அற்புதங்கள் விளக்குவதோடல்லாமல், புதிய யுகத்தை அதாவது சுவிசேஷ யுகத்தை ஸ்தாபிக்கும் விஷயத்தில் பிதாவினுடைய பிரதிநிதிகளாகக் கர்த்தரும், அவருடைய அப்போஸ்தலர்களும் இருக்கின்றார்கள் என்பதற்குச் சாட்சி பகருகின்றதாயும் இருந்தது. இந்தச் சுவிசேஷ யுகமானது, யூத யுகம் மற்றும் மோசேயின் மூலம் வழங்கப்பட்ட அதன் நியாயப்பிரமாணத்தினிடமிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்தது.

## ''தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சொஸ்தமாக்கப்படுதல்''

கர்த்தர் தம்முடைய வல்லமையையும், வரவிருக்கின்ற தமது மகிமையையும் வெளிப்படுத்தும் பொருட்டு அந்தத் திரளான வியாதியஸ்தருடைய கூட்டத்திலிருந்து, அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட அந்த ஒரு மனுஷனைக் குறித்து இங்குப் பேசுவது ஏற்றதாய் இருக்கும். மற்றவர்களையெல்லாம் விட்டுவிட்டு, இந்த ஒரு மனுஷனை மாத்திரம் ஏன் கர்த்தர் தெரிந்துக்கொண்டார் என்று பதிவுகள் நமக்கு எதுவும் தெரிவிக்கவில்லை; எனினும் 38 வருடங்களாய் வியாதிப்பட்டிருந்த இந்த மனுஷன் தனக்குள் ஓரளவு பாவத்திற்கு மனம் நொந்து வருத்தம் அடைந்திருக்க வேண்டும் என்றும், நீதியின்பால் ஓரளவுக்கு விருப்பம் கொண்டிருந்திருக்க வேண்டும் என்றும், துன்பம் எனும் கரத்தின் கீழ், கடந்து போன 38 வருடங்களாக சில விலையேறப்பெற்ற படிப்பினைகளைப் பெற்றிருந்திருக்க வேண்டும் என்றும், இவ்விதமாய் இவர் சொஸ்தமாக்கப்படும் சலுகையை/உதவியைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்குள் வந்திருக்க வேண்டும் என்றும் நாம் எண்ணுகின்றோம். இக்காரியங்கள் இந்த யுகத்தின் மாம்சீக ஆசீர்வாதங்களைக் காட்டிலும் மிக விலையேறப் பெற்ற ஆசீர்வாதங்கள் எனக் கர்த்தரால் பரிமாறப்பட்டு வரும் கிருபையின் சலுகைகள் விஷயத்திலும் உண்மையாகவே இருக்கின்றன.

கர்த்தர் தமது சத்தியம் மற்றும் கிருபை குறித்த அறிவு வழங்கும் விஷயத்தில், ஏன் அவர் சிலரைக் காட்டிலும் வேறு சிலருக்கு அதிகமாய்ச் சலுகைக் காட்டுகின்றார் என்பது நமக்குத் தெரியவில்லை, எனினும் இவ்விஷயத்தில் ஒரு படிப்பினை உள்ளது என நாம் அனுமானிக்கின்றோம்; அதென்னவெனில் இருதயத்தின் நேர்மை, பாவத்திற்காக மனவருத்தங்கொள்ளுதல் மற்றும் தேவனுக்கடுத்தக் காரியங்களில் ஈடுபடுவதற்கு விருப்பங்கொள்ளுதல் ஆகியவைகளைக் கர்த்தர் பார்க்கின்றார் என்பதேயாகும். தேவன் விசேஷமான சலுகையை/கிருபைகளை அளிக்க வேண்டும் என்று விரும்பும் போது, அதை அவர் மனம்போனப் போக்கில் வழங்குவதில்லை, மாறாக சின்னஞ்சிறிய விசுவாசம் (அ) தகுதியின் அடிப்படையிலேயே வழங்குகின்றார் என்று நாம் அனுமானிக்கின்றோம். ஆனால் இங்குச் சொஸ்தமாக்கப்பட்ட இந்த மனுஷனுடைய விஷயத்தில், இந்த மனுஷனுக்கு மிகுந்த விசுவாசம் காணப்பட்டது என்று எவ்விதமான பதிவுகளும் இல்லை. மாறாக அம்மனுஷனிடத்தில் எவ்விதமான விசுவாசமும் இல்லை என்றும், அம்மனுஷனுக்கு கர்த்தர் யார் என்பது தெரியாது என்றும், தன்னை அவர் சொஸ்தப்படுத்தின பிற்பாடே அவரை யார் என்று அம்மனுஷன் அறிந்துக்கொண்டார் என்றுமே நாம் அப்பதிவுகளிலிருந்து அறிந்துக்கொள்கின்றோம்.

## “சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?”

"நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று நமது கர்த்தர் தம்முடைய பின்னடியார்களை நோக்கி, ஏற்கெனவே கூறின வார்த்தைகளானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் நிறைவேறியுள்ளது (யோவான் 14:12); மாம்ச கண்களினுடைய பார்வையை மீண்டும் கொடுப்பதைப் பார்க்கிலும், புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பது மாபெரும் கிரியை ஆகும்; சுபாவத்தின்படியான செவியின் கேட்கும் திறனைத் திரும்பக் கொடுப்பதற்குப் பதிலாக, புரிந்துக்கொள்ளுதலின் செவிகளைத் திறப்பது என்பது மாபெரும் கிரியையாய் இருக்கும். பாவத்திற்கு அடையாளமாய் இருக்கும் குஷ்டரோகத்தைச் சொஸ்தப்படுத்துவதைப் பார்க்கிலும் பாவத்திலிருந்து சொஸ்தப்படுத்துவது மாபெரும் கிரியை ஆகும்; மாம்ச கால்களுக்குப் பெலத்தைத் திரும்பிக் கொடுப்பதைப் பார்க்கிலும் விழுகையின் காரணமாக முழு மனுக்குலத்திற்கும் ஏற்பட்ட பலவீனத்தையும், முடமாய்ப் போன நிலையையும் சரிச் செய்வது என்பது மாபெரும் கிரியை ஆகும். மேற்கூறிய இக்கருத்துக்களுக்கு இசைவாக நமது கர்த்தர் தாம் சொஸ்தப்படுத்தின மனுஷனை நோக்கி, "நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?" என்று கேட்டு, அக்காரியத்தை அம்மனுஷனுடைய விருப்பத்திற்கே விட்டுவிட்டது போன்று, இன்று ஒழுக்க ரீதியிலான குறைபாடுகளிலிருந்து சொஸ்தப்படுத்தப்படுபவர்களின் விஷயத்திலும், இப்பொழுது ஆவிக்குரிய விஷயங்களில் வெளிச்சமூட்டப்படுபவர்களின் விஷயத்திலும் அப்படியாகவே விட்டுவிடுகின்றார்; அதாவது அவர்களுக்கான உதவி, அவர்களுக்குள்ளாகவே காணப்படுகின்றது. ஒருவேளை அவர்களுக்குக் கேட்கக்கூடிய செவிகளும், புரிந்துக்கொள்ளக்கூடிய கண்களும் இருந்தால், அதாவது கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய ஈவை அவர்களால் புரிந்துக்கொள்ள முடிந்ததெனில், அவர்களுக்கான கேள்வி என்னவெனில், "நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?" என்பதேயாகும்.

தேவனுடைய கிருபை குறித்த காரியங்களினால் கொஞ்சம் கேட்கவும், காணவும், புரிந்துக்கொள்ளவும் முடிகின்றவர்களில் அநேகர் ஒழுக்க ரீதியில் குஷ்டரோகிகளாகவும், மன ரீதியில் குருடாகவும், பாதிச் செவிடாகவும் இருக்கின்றார்கள், மேலும் இத்தகையவர்கள் தங்களால் புரிந்துக்கொள்ள முடிந்த அந்தக் கொஞ்சமான காரியங்களை ஏற்றுக்கொண்டு, சொஸ்தமடைய/முழுமையடைய விரும்பினால், அதன் மூலம் அவர்கள் கிருபை மேல் கிருபை அடைந்து, அறிவு மேல் அறிவு அடைந்து, ஜெயம் மேல் ஜெயம் அடைந்து, இறுதியில் கர்த்தர் தமது "சிறு மந்தையினருக்கு" அளித்துள்ள மாபெரும் ஆசீர்வாதம் முழுவதையும் அடைவார்கள்; தேவனுடைய சுதந்திரர்கள் ஆகுவதும், நாம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு, அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்கள் ஆகுவதும், அவரோடு கூடப் பாடுபட்டால், அவரோடு கூட மகிமை அடைவதுமானவைகளே சிறுமந்தையினருக்குக் கொடுக்கப்படும் மாபெரும் ஆசீர்வாதங்கள் ஆகும்.

மேற்கூறப்பட்டுள்ள இக்கருத்துகளுக்கு இசைவாக, நாம் அனைவரும், நம்முடன் தொடர்புக்குள் வரும் அனைவரையும் மற்றும் தேவனுடைய கிருபையைப் புரிந்துக்கொள்ளவோ (அ) உணர்ந்துக்கொள்ளவோ (அ) பார்க்கவோ (அ) கேட்கவோ வல்லமை இல்லாத அனைவரையும், நாம் அனுபவித்த அதாவது, "ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையாகிய" தெய்வீக உவியை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகப் பரிந்துரைக்கும்படிக்கு நமது செல்வாக்கைப் பயன்படுத்துவோமாக. கர்த்தர் கேட்ட கேள்விக்கு உறுதியாக பதில் கொடுப்பவர்கள் மாத்திரமே, நாம் பிரயாசம் எடுப்பதற்குப் பாத்திரமாய் இருப்பார்கள். கர்த்தரிடத்தில் ஒருவரது விருப்பம் தெரிவிக்கப்பட வேண்டும், இல்லையேல் அவரது ஆசீர்வாதம் இருதயத்திலும், ஜீவியத்திலும் கடந்து வரமுடியாது; பாவ நோயில் காணப்படுபவர்கள் "நீ சொஸ்தமாக வேண்டும் என்று விரும்புகிறாயா?" என்ற கேள்விக்கு உறுதியான பதில் அளிக்க ஆயத்தமாக்கப்படுவதற்கு ஏதுவாக, அவர்களுடைய இருதயங்களில் ஒரு கிருபையான அற்புதத்தைக் கர்த்தர் செய்வார் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியாது. சொஸ்தமடைய இவ்விதமாய் விருப்பம் உடையவர்கள் மாத்திரமே, இந்த யுகத்தில் நன்மை அடைய முடியும், ஏனெனில் இதுவே தெய்வீக ஏற்பாடாகக் காணப்படுகின்றது; ஏனெனில் கர்த்தர் இப்படிப்பட்ட விருப்பம் உள்ளவர்களையே தேடுகின்றார் மற்றும் இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே தம்மை ஆவியிலும், உண்மையிலும்/சத்தியத்திலும் தொழுதுகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார். மேற்கூறப்பட்ட காரியங்களுக்கு இசைவாகவேதான், நமது கர்த்தர், தம்முடைய முதலாம் வருகையின்போது, தம்முடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் அநேகரிடம் அவர், "வாழ்வு பெறுமாறு என்னிடம் வர உங்களுக்கு விருப்பம் இல்லை" (திருவிவிலியம்; யோவான் 3:40) என்று

கூறியுள்ளார். கர்த்தரிடத்தில் வருவது என்பது, அவருடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்வதையும் மற்றும், "ஆம் கர்த்தாவே, சொஸ்தமாக வேண்டுமென நான் விரும்புகின்றேன்" என்று அவரது கேள்விக்குப் பதிலளிப்பதையும் குறிக்கின்றது.

இவர்கள் சொஸ்தமாக்கப்படும் காரியமானது உடனடியாக நடைப்பெறாமல், படிப்படியாக நடைப்பெறும் காரியமாகும். இவர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்து கொண்டிருப்பார்கள், மேலும் தற்காலத்தில் கேள்விக்கு உறுதியான பதில் அளித்துக் கொண்டு, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்க முற்படுவதின் மூலம், தங்களின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துபவர்கள் அனைவருக்கும், கர்த்தர் வாக்களித்துள்ள முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய மாற்றத்தில், இவர்களிடத்தில் கிருபையின் வேலையானது நிறைவடையும். இவர்கள் நல்ல வைத்தியனுடைய பராமரிப்பின் கீழ் வந்து, பின்னர் இறுதியில் அவர் இவர்களைத் தமக்கு ஒப்பான சாயலில் பூரணமும், நிறைவும், முழுமையும் படுத்துவார்.

## "மாபெரும் இரக்கத்தின் வீடு"

சபையின் தற்காலத்துத் தெரிந்துக்கொள்ளுதலும், சொஸ்தமடைவதற்கான/ முழுமையடைவதற்கான தற்கால சலுகைகள் மற்றும் சிலாக்கியங்களும், முதலாம் உயிர்த்தெழுதலில் நிறைவடையும். இதற்குப் பின்னர் உலகத்திற்கு ஒரு பொதுவான ஆசீர்வாதம் கடந்து வர போகின்றபடியால், தேவனுக்கு நன்றி. தேவனுடைய ஏற்றவேளையில், தேவனுடைய வாசஸ்தலமானது மனுஷர் மத்தியில் காணப்படும் என்றும், அவர் அவர்கள் மத்தியில் வாசம் பண்ணுவார் என்றுமே வேத வாக்கியங்கள் வாக்களிக்கின்றன. இது இன்னமும் வரவில்லை. மனுக்குலம் இன்னமும் சாபத்தின் கீழேயே காணப்படுகின்றனர்; சாத்தான் இன்னமும் "இவ்வுலகத்தின் அதிபதியாகவே" காணப்படுகின்றான்; நாம் இன்னமும் "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செயல்படுவது போல, பூமியிலும் செயல்படுவதாக என்று ஜெபம் பண்ணி காத்துக் கொண்டிருக்கின்றோம். தேவனுடைய வாசஸ்தலம் அல்லது வீடு, ஆயிரம் வருஷம் யுகத்தின் போதே உலகத்தில் ஸ்தாபிக்கப்படும். அது இரக்கத்தின் வீடாகக் காணப்படும்; அதாவது தெரிந்து எடுக்கப்பட்ட சிலருக்கு மாத்திரம் இரக்கத்தின் வீடாக இராது, மாபெரும் உடன்படிக்கைக்கு இசைவாக ஆபிரகாமின் நிஜமான சந்ததியாகிய அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை, கிறிஸ்து மூலம் அதாவது தலையாகிய கிறிஸ்து மற்றும் சரீரத்தின் மூலம் தேவன் "பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார்" (கலாத்தியர் 3:29).

ஆ, உண்மை; அது எத்தகைய மகத்துவமுள்ள நாளாய்க் காணப்படும்! "தேவன் அனைவருடைய கண்ணீரைத் துடைத்து விடுவார்." ஆம், அவருடைய ஜனங்களுக்கு எதிரான நிந்தனை எடுத்து மாற்றப்படும். கர்த்தருடைய ஜனங்களுக்கு அப்போது நிந்தனைகள் காணப்படாது; "நீங்கள் தேவனுடைய அன்பையும், அவருடைய இரக்கத்தையும் மற்றும் மகா பெரும் பாவ நிவாரணத்தின் முக்கியத்துவத்தையும் குறித்துக் கூறுகின்றீர்கள், ஆனால் நாங்கள் இன்னமும் உலகத்தின் மீது பாவமும், துக்கமும், கவலையும், மரணமும் ஆளுகை செய்வதையே பார்க்கின்றோமே" என ஜனங்கள் அப்போது கர்த்தருடைய செய்தியைக் கொடுத்துக் கொண்டிருப்பவர்களை நோக்கி கேள்விக் கேட்க முடியாது. நிந்தனை முடிந்துவிடும், அப்போது சாத்தான் கட்டப்படுவான், மற்றும் கர்த்தரைப் பற்றின அறிவானது முழுப் பூமியையும் நிரப்பி, அனைவருடைய கண்ணீர்களையும், துக்கங்களையும், வலியையும், நோவுகளையும் துடைத்துப் போடுவதற்கு ஆரம்பிக்கும். இந்தத் தயவுகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அதற்கு ஏற்றாற்போல் காணப்படும் அனைவருக்கும், ஆயிரவருட அரசாட்சியின் முடிவின்போது பூரணமான திரும்பக்கொடுத்தலின் வாயிலாக அவர்களுக்குரிய ஆசீர்வாதங்களை அடைவார்கள்; ஆனால் இந்தத் தெய்வீக ஏற்பாடுகளை அக்காலத்தில் ஏற்க மறுப்பவர்களுக்கு, "இரக்கத்தின் அடிப்படையிலான அறுப்புண்டு போகுதல்" ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 3:23).

## "ஓய்வுநாளில் செய்யப்பட்டது"

நமது கர்த்தர் அற்புதத்தை நிகழ்த்தின பிற்பாடு, சொஸ்தமாக்கப்பட்டவனை நோக்கி, அவன் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லுமாறு கட்டளையிட்டார், அம்மனுஷனும் அப்படியே செய்தான். அக்காலத்தின் வழக்கத்தின்படி பயன்படுத்தப்பட்ட படுக்கையானது மிகவும் எடை குறைவானதாய்க் காணப்பட்டபடியால், அதை எடுத்துச் செல்வதற்கு கர்த்தர் கொடுத்த கட்டளையைச் செய்வதில் எவ்விதமான சிரமமும் இல்லை. ஆகவே கர்த்தர் கட்டளையிட்ட

இக்காரியமானது யூதர்களின் பிரமாணத்தின்படியான ஓய்வுநாளுக்குரிய கட்டுப்பாடுகளை மீறும் விஷயமாக இருக்கவில்லை; நமது கர்த்தர் யூதனாக இருந்தபடியாலும், மற்ற யூதர்களைப் போல அவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக இருந்தபடியால், நமது கர்த்தரும் பிரமாணத்தை மீறினதுமில்லை, மற்றவர்கள் மீறும்படிக்குக் கற்றுக்கொடுக்கவுமில்லை. படுக்கையை எடுத்துக்கொண்டுப் போகும்படிக்கு அம்மனுஷனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டதற்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன; அவை பின்வருமாறு:-

(1) அம்மனுஷன், தனது படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும் காரியமானது, அவ்வற்புதத்திற்கு நேரடி சாட்சியாய் இருந்தது. இதுமாத்திரமல்லாமல் . . .

(2) இப்படிச் செய்வது என்பது மறைமுகமாக, நியாயசாஸ்திரிகள், மற்றும் வேதபாரகர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்கும், ஏனெனில் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கூறாத சில கட்டுப்பாடுகளை, அவர்கள் ஓய்வுநாளின் கட்டுப்பாடு விஷயத்தில் தொகுத்துள்ளனர். நமது கர்த்தர் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தமது வல்லமை தொடர்பான படிப்பினையைப் புகட்டினதோடல்லாமல், நியாயப்பிரமாணத்தின் சரியான அனுசரிப்பு குறித்ததான படிப்பினையையும் புகட்டினர்; அதாவது நியாயப்பிரமாணம் மனுக்குலத்திற்கான நன்மைக்கே தேவனால் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய, ஒழுக்கத்திற்கான விலங்கு சங்கிலியாகக் கொடுக்கப்படவில்லை என்ற படிப்பினையையும் புகட்ட இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தினார். நியாயப்பிரமாணத்தின் விளக்கங்களைப் பரிசேயர்களும், வேதபாரகர்களும், ஜனங்களுக்கு பாரமானதாகக் காட்டுகின்றார்கள் என்று வேறு ஒரு தருணத்தில் பரிசேயர்களிடமும், வேதபாரகர்களிடமும் கூறினார்; அதாவது அவர்கள் நியாயப்பிரமாணத்தின் மிகச் சிறிய அம்சங்களைத் தவறான விதத்தில் மிகவும் மிகைப்படுத்தி, ஜனங்களுக்குக் காட்டுகின்றார்கள் என்றும், நியாயப்பிரமாணத்தின் நீதி, நியாயம், அன்பு மற்றும் இரக்கம் தொடர்புடைய பெரிய கோட்பாடுகளை அவர்கள் ஜனங்களுக்கு விளக்குவதை முற்றிலும் தவிர்த்து விட்டார்கள் என்றும் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தின் பதிவுகளை நாம் பார்க்கும் போது, மேற்கூறிய பலனே வந்தது. அம்மனுஷன் தனது படுக்கையைச் சுமந்து கொண்டு போனதற்காக, அம்மனுஷன் மேல் பரிசேயர்களும், வேதபாரகர்களும் குற்றம் சுமத்தினார்கள்; ஆனால் அம்மனுஷனோ தனக்கு 38 வருடங்களாக இருந்த வியாதியைச் சொஸ்தப்படுத்தினவர் இந்த விஷயத்திலும் கூடப் போதுமானளவு ஞானமும், அதிகாரமும் கொண்டிருப்பார் என்று நம்பி, தான் அவருடைய வழிநடத்துதலின்படி செயல்படுவதால், தான் இப்படி படுக்கையை எடுத்துக்கொண்டு செல்வதில் தவறில்லை என்று தன் செய்கையை நியாயப்படுத்தி அவர்களுக்கு மறுஉத்தரவு அளித்தான். இவ்விதமாக அவரை ஏற்றுக்கொள்கின்றார்களா அல்லது இல்லையா என்ற பரீட்சைக்குள் அக்கால கட்டத்தில் காணப்பட்ட அந்த வகுப்பார், அதிலும் விசேஷமாக அந்தச் தேசத்தின் பிரதிநிதிகளும், தலைவர்களும் கர்த்தரை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என அவர் விசேஷமாக விரும்பினதையும் நமது கர்த்தருடைய இவ்வற்புதம் தெளிவாக அவர்களுக்குக் காட்டியது; இரண்டாவதாக இவ்வற்புதத்தின் மூலம் கர்த்தருடைய போதனைகள் மற்றும் அவருடைய நல்ல கிரியைகளுக்கும், பரிசேயர்களுடைய போதனைகள் மற்றும் கிரியை அற்ற தன்மைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் தெளிவாகக் காட்டியது.

சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் தனக்கு நடந்த சம்பவங்கள் மற்றும் தான் அடைந்த விடுதலைக்குறித்த விஷயங்களினால் மிகவும் அதிர்ச்சியடைந்தபடியால், தன்னிடம் இப்படியான அற்புதத்தைப் பண்ணினவர் யார் என்று விசாரிக்கவோ (அ) அவர் யார் என்று பார்ப்பதற்கோ ஒரு கணம் மறந்துப் போய்விட்டான்; அவ்விடத்தில் பெரும் திரளாய்க் கூடியிருந்த வியாதியஸ்தர்களின் விண்ணப்பத்திற்கு நமது கர்த்தர் மறுப்புத் தெரிவிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த விரும்பாததால், அமைதியாக அவ்விடத்தை விட்டு கடந்து போய்விட்டார். ஆகவே அற்புதம் நிகழ்ந்துள்ளதை அனைவரும் உணர்ந்துக்கொண்ட தருணத்தில், சொஸ்தமாக்கினவர் மறைந்துப் போய்விட்டார். இயேசு இந்த அற்புதத்தைத் தேவனுக்கு மகிமையாகவும், புதிய யுகத்தின் பிரதிநிதி, தாமே என்பதை கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவும் செய்தார். மேலும் திரளான வியாதியஸ்தர்களின் கூட்டத்தாரில் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன், அக்கூட்டத்தாருக்குள் சொஸ்தமாக்கப்படுவதற்கு மிகவும் பாத்திரவானாய் இருந்திருக்கிறான் என்று நாம் அனுமானிக்கின்றோம். இம்மனுஷன் தான் சொஸ்தமடைந்ததற்காக கர்த்தருக்கு தனது நன்றியையும், துதியையும் அளிக்குமாறு ஆலயத்திற்குச் சென்றபோது, இயேசு விசேஷமாக இம்மனுஷனை மீண்டும் சந்தித்தக் காரியமானது, இம்மனுஷனிடத்தில் சராசரியான குணங்களைக் காட்டிலும் அதிகமாக ஏதோ ஒன்றைக் கர்த்தர்

பார்த்தபடியாலேயே அவர், இம்மனுஷனைச் சொஸ்தப்படுத்தினதோடல்லாமல், இம்மனுஷனுக்குத் தம்மை வெளிப்படுத்தவும் செய்தார் என்பதைக் காட்டுகின்றது.

## "இனிப் பாவம் செய்யாதே"

நமது கர்த்தர், சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனை, தேவாலயத்தில் கண்டு, அவரிடத்தில் கூறின வார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் உடையதாகும்; அவ்வார்த்தைகள் கர்த்தருக்குச் சொஸ்தப்படுத்துவதற்கான வல்லமை இருந்தது என்பதை மாத்திரமல்லாமல், இந்த வியாதி வருவதற்கு ஏதுவாக 38 வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்ட பாவங்கள் குறித்த அறிவும் கர்த்தருக்கு இருந்தது என்பதையும் காட்டுகின்றது. "நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனி பாவஞ்செய்யாதே" என்று கர்த்தர் அம்மனுஷனிடம் கூறினார் (யோவான் 5:14). நம்முடைய மீட்பருடைய இந்த ஆலோசனையான வார்த்தைகளில் மிக விலையேறப்பெற்ற படிப்பினைகள் உள்ளது; இப்படிப்பினைகள் அந்தப் பாவப்பட்ட மனுஷனுக்கு மாத்திரம் உதவியாய் இராமல், கர்த்தருடைய கிருபையினால் பாவ வியாதியினின்று சொஸ்தமாக்கப்பட்டவர்களுக்கும், நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கும், தேவனுடைய குடும்பத்திற்குள், தேவனுடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கும் அதிக விலையேறப்பெற்ற படிப்பினையாகவும் உள்ளது. ஆதி பாவத்திற்கான தண்டனை மிகவும் கடினமானதாய் இருந்தது, மேலும் இத்தண்டனையானது ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொருவருக்கும் காணப்பட்டது; ஆனாலும் கூட இந்த ஆதி பாவத்திற்குத் தேவன் ஒரு மாபெரும் பாவநிவாரணத்தை அருளியுள்ளார்; ஆகவே இதன் காரணமாக இறுதியில் இப்பாவத்திற்கான அனைத்துத் தண்டனைகள் மற்றும் கூலிகளிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்கான முழு வாய்ப்பும், ஒவ்வொரு மனுஷனுக்கும் இறுதியில் வழங்கப்படும். ஆனால் இப்படியாக விடுவிக்கப்படும்போது, விடுவிக்கப்படும் நம் ஒவ்வொருவரின் மேலும் ஒரு புதிய பொறுப்பு வருகின்றது. அப்போஸ்தலர் அறிவிக்கிற பிரகாரமாக நாம் சத்திய அறிவைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, துணிகரமாய்ப் பாவம் செய்வோமானால் அப்பாவங்களுக்காக எவ்விதமான பலியும் இனிச் செலுத்தப்படாது என்பதினால் நமக்கு "நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபிரெயர் 10:27). ஆதி பாவத்திற்கான கூலியாகிய மரணத்தையும், அதனோடு கூடத் துக்கத்தையும், வலியையும், மரித்துக் கொண்டே இருக்கும் தன்மையையும் முழு மனுக்குலமும் ருசிப்பார்த்துள்ளது. நம்முடைய அனைத்துப் பாவங்களிலிருந்தும் நாம் நீதிமானாக்கப்பட்ட பின்னர் நாம் துணிந்து, வேண்டுமென்றே, விருப்பத்துடன் செய்யும் பாவங்களுக்கான கூலி, அதாவது தண்டனை மிகவும் கேடானதாகக் காணப்படும், அதாவது ஆதி பாவத்திற்கான தண்டனையைக் காட்டிலும், மிகக் கேடானதாய்க் காணப்படும்; அது இரண்டாம் மரணமாகும்; இந்த இரண்டாம் மரணத்திலிருந்து மீட்டுக் கொள்வதற்கெனத் தேவன் எவ்விதமான ஏற்பாடுகளையும் பண்ணவில்லை என்று தேவன் நமக்கு நிச்சயத்துடன் தெரிவித்துள்ளார்; அதாவது கிறிஸ்து மீண்டுமாக ஒருபோதும் மரிக்கப் போவதில்லை. பாவ வியாதியிலிருந்து நாம் சொஸ்தமாக்கப்பட்டு, நாம் நீதிமான்களாக்கப்பட்ட பின்னர், நாம் துணிந்து பாவம் செய்தால், அதிலும் பாவம் செய்த விஷயத்தில் நம்முடைய பெலவீனமும், பூரணமற்ற தன்மையும் நம்மைச் சோதனைக்குள் விழுவதற்குக் காரணமாய் ஓரளவிற்கு இருக்கும் பட்சத்தில், நமக்கான அடிகளை (தேவன் கரத்திலிருந்து) எதிர்ப்பார்க்கலாம்; ஆனால் ஒருவேளை எவ்விதமான குறிப்பிட்ட பெலவீனம் காரணமாக இல்லாமல், நாம் துணிந்து விருப்பத்துடன் பாவம் செய்திருப்போமானால், தெய்வீக இரக்கத்தையும், மன்னிப்பையும் நாம் எதிர்ப்பார்க்க முடியாது, ஏனெனில் மன்னிக்க முடியாத அளவுக்கு நீதிக்கு எதிராக மீறுதல் செய்யப்பட்ட காரணத்தின் நிமித்தம் ஒரு புதிய மற்றும் தனிப்பட்ட விதத்தில் குற்றவாளி எனும் நிலைக்கு ஆளாகுகின்றபடியால், விடுதலையின் நம்பிக்கை இல்லாத மரணமே தண்டனையாக அளிக்கப்படுகின்றது.

**ஆமென்!**

---

R 3508

# "கூடாரப்பண்டிகை"

## யோவான் 7:37-46

"அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை."
( வசனம்-46)

"முதலாம் மாதத்தின் 15 முதல் 22 வரையிலான பஸ்கா பண்டிகையும், ஏழாம் மாதமாகிய திஸ்ரியின் 15 முதல் 22 வரையிலான கூடாரப்பண்டிகையும், யூதர்களுடைய இரண்டு மாபெரும் பண்டிகைகளாகும். இந்த இரண்டு மாபெரும் பண்டிகைகளும், யூதர் வருடத்தைப் பிரித்தது; மேலும் ஒன்றாய்க் கூடி வாரத்தைச் செலவிடுவதற்கும், கர்த்தருக்கு நன்றி செலுத்துவதற்கும், அவரிடம் வாக்குறுதி அளிப்பதற்குமென இராஜ்யம் எங்கும் இருக்கும் ஜனங்கள், தலைநகரமாகிய எருசலேமுக்கு வருவார்களென எதிர்ப்பார்க்கப்படும் மாபெரும் தருணங்களாக இந்த இரண்டு பண்டிகைகளும் காணப்பட்டன. வருடத்தின் ஆரம்பத்தை, இந்த இரண்டு பண்டிகைகளும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றன. ஒன்று சிவில் ஆண்டின் துவக்கத்தையும், மற்றொன்று சர்ச்/சமய ஆண்டின் துவக்கத்தையும் குறிக்கின்றது; எனினும் இந்த இரண்டு வருடமும் மத அடிப்படையில் கூறப்படலாம், காரணம் இத்தேசத்தின் அரசாங்கம், மத அஸ்திபாரத்தின் மீது இயங்குகின்றது/காணப்பட்டது. இஸ்ரயேல், தேவனுடைய தேசமாக இருக்கின்றது, மேலும் அதன் பிரமாணங்கள் தேவனிடத்திலிருந்து வந்ததாகும்.

இந்தப் பண்டிகைகள் ஒவ்வொன்றும் சிறப்பிற்குரிய பலிகளைக்கொண்டிருந்து, நமது கர்த்தரையும், அவருடைய பலியையும், அவருடைய சரீரமாகிய சுவிசேஷ யுக சபையையும் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. வருடத்தின் துவக்கத்திலுள்ள பஸ்கா பண்டிகையானது, எகிப்திலிருந்ததான விடுதலைக்கான ஆண்டு நிறைவு நாளாக (anniversary) இருக்கின்றது; பஸ்கா ஆட்டுக்குட்டி, நமக்கான பஸ்கா பலியாகிய கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கின்றது; மற்றும் பஸ்காவைத் தொடரும் பண்டிகையானது, அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாக மரணத்திலிருந்து தப்புவிக்கப்பட்ட கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் வரும் சுதந்தரம், சந்தோஷம் மற்றும் ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய மேன்மையான பலிகளுக்கும், இறுதியில் முழு உலகத்தின் பாவத்திற்கான ஒப்புரவாகுதலுக்கும் மற்றும் மனுக்குலத்தின் உலகத்தின் மீது இன்னமும் நிலைத்திருக்கும் சாபம் இறுதியில் மாற்றப்படுதலுக்கும் நிழலாக இருக்கும், பாவநிவாரண நாள் மற்றும் பாவத்திற்கான அந்நாளுக்குரிய பலிகளுடன் சேர்ந்தே இலையுதிர்கால (fall) பண்டிகையும் நடைபெறுகின்றது. இப்பண்டிகையானது, இஸ்ரயேலர்கள் வனாந்தரத்திலிருந்து, வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குள் கடந்து வந்தபோது நிறுவப்பட்டது. இப்பண்டிகையானது, வனாந்தரத்தின் வாழ்க்கையையும், நிலையாக தங்கும் இடத்தை அவர்களால் அனுபவிக்க முடிந்த கானானுக்குள் பிரவேசிப்பதையும் நினைவுகூருவதாக இருந்தது. உண்மையில் இது புதிய வருடத்திற்கான பண்டிகையாகவும், அவ்வருடத்தின் அறுவடைக்காக அல்லது சேர்ப்புக்காலத்திற்காக நன்றி ஏறெடுக்கும் தருணமாகவும் இருந்தது. (யாத்திராகமம் 23:16; லேவியராகமம் 23:33-44)

### "கூடாரப்பண்டிகையின் கொண்டாட்டம்"

இத்தருணத்தின்போது ஜனங்கள் செய்யும் காரியத்தைக் குறித்துப் பின்வருமாறு **எடர்சேயிம்** மற்றும் இன்னும் பலர் விவரிக்கின்றார்கள்:-

"எருசலேம் எங்கும், முற்றங்களிலும், தெருக்களிலும், வீட்டுக்கூரைகளிலும், சமநிலையான இடங்களிலும் கூடாரங்கள் போடப்பட்டிருக்கும். இந்தக் கொடி வீடு (அ) கூடாரங்கள் பேரிச்சம் மரங்கள், ஒலிவ மரங்கள், ஆற்றலரிகள், தேவதாரு மரங்கள், காட்டத்தி மரங்கள் முதலியவைகளின் ஓலைகளினால்/கிளைகளினால் உண்டாக்கப்படுகின்றது. எவரும் வீடுகளில் தங்குவதில்லை, எல்லோரும் இந்தக் கூடாரங்களிலேயே தங்குகின்றனர். பட்டணத்திலும், நாட்டிலுமுள்ள ஜனங்கள் அனைவருமே கூடாரங்களில் வசிப்பார்கள். அந்தஸ்தில் இருக்கும் வித்தியாசங்கள், ஏழை மற்றும் ஐசுவரியவானுக்கு இருக்கும் வித்தியாசங்கள் கொஞ்சக் காலம் மறக்கப்படுகின்றது, ஏனெனில் ஒவ்வொருவரும், தன்னுடைய அயலானைப் போலவே, கூடாரங்களில் தங்குகின்றவனாய் இருக்கின்றான்."

"ஒவ்வொரு நாள் காலையிலும் இசையுடன், சந்தோஷத்துடன் ஓர் ஊர்வலமானது சீலோவாம் குளத்திற்குச் சென்று, பொன்னினாலான பானையில் தண்ணீர் மொண்டுக் கொண்டு வந்து, அல்லேலூயா என்று குரல்கள் தொனிக்கப்படுதலின் மத்தியில் பலிப்பீடத்தின் மீது ஊற்றப்படுகின்றது."

"இரவில், வெளிச்சத்திற்காகப் பொன்னினாலான நான்கு அகல்களை உடைய, பொன்னினாலான நான்கு கொத்து விளக்குத் தண்டுகளானது (candelabra) பிரகாரத்தினுடைய நடுவில் வைக்கப்படுகின்றது; இதிலிருந்து வரும் வெளிச்சமானது முழுப் பட்டணமும் காணத்தக்கதாய் இருக்கும். இந்த விளக்குகளைச் சுற்றி, பயபக்தியுள்ள புருஷர்கள் தங்களது கைகளில் தீவட்டிகளை வைத்துக்கொண்டு, துதிப்பாடல்களைப் பாடிக்கொண்டு, ஜனங்களுக்கு முன்பாக ஆடுவார்கள்; இவர்கள் இப்படியாக ஆடுகையில் லேவியர்கள் 122-134 வரையிலான 15 சங்கீதங்களைக்குறிக்கும் (சங்கீதங்களுக்கு அடையாளமான), ஆலயத்திலுள்ள ஸ்திரீகளுக்கான பிரகாரத்திற்குக்கொண்டுச் செல்லும் 15 படிகளில் நிறுத்தப்பட்டு, இசைக்கருவிகளின் இசையுடன் பாடப்படும் பாடல்களுடன் இணைந்துப் பாடுவார்கள்."

"ஆலயத்தின் இந்த வெளிச்சம் என்பது ஆலயத்திலிருந்து, புற சமயத்தாரின் இருளான இரவின் மீது பிரகாசிக்கும் ஒளிக்கு அடையாளமாய் இருந்தது; பின்னர் விடிகையில், தேவனுடைய சேனையாகிய ஆசாரியர்களின் வெள்ளி பூரிகைகளின் தொனியுடன், பண்டிகைக்கான பூரிகையின் தொனிக்கும் ஒலியானது நித்திரைப் பண்ணிக் கொண்டிருப்பவர்களை விழித்தெழச் செய்கின்றது மற்றும் அது அஞ்ஞான மார்க்கத்திற்கு எதிரான, தீர்க்கமான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது."

"பண்டிகையின் கடைசி சாயங்கால வேளையில்தான், இந்தப் பிரமாண்டமான ஒளியின் வெளிச்சம் அணைய இருக்கையில், கிறிஸ்து, "நானே உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றேன்" என்று கூறி தம்முடைய கவனத்திற்கு அனைவரையும் திருப்பினார் என்று எண்ணப்படுகின்றது; அதாவது என்றென்றும் பிரகாசிக்கின்றதும், ஆலயத்திலும், பரிசுத்த பட்டணத்திலும் மாத்திரமல்லாமல், முழு உலகத்திலும் நீதியின் சூரியனாக ஒளியூட்டப் போகின்றதுமான தம்மிடத்தில் யோவான் 8:12-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறிக் கவனத்தைத் திருப்பினார்."

## "பண்டிகையின் கடைசிநாளாகிய அந்தப் பிரதான நாள்"

பண்டிகையினுடைய ஏழு நாட்களின் கடைசிநாளானது, பிரதான நாள் என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கடைசி நாளில்தான் முழுப் பண்டிகையினுடைய அனுசரிப்பும், மற்றும் சந்தோஷமும் உச்சக்கட்ட நிலையயை அடைகின்றது. மீண்டுமாக எடல்சேயிம் மற்றும் இன்னும் பலர் கூறுவதைப் பார்க்கலாம்:-

"யூதர்களுடைய பாரம்பரியத்தின்படி, தேவனுடைய பிரசன்னத்திற்கும், வழிகாட்டுதலுக்கும் அடையாளமாய் இருக்கும் காலை வேளையிலுள்ள மேகஸ்தம்பமும், இரவு வேளையிலுள்ள அக்கினி ஸ்தம்பமும், இதே திஷ்ரி மாதம் 15-ஆம் தேதியில்தான் இஸ்ரயேலர்களுக்குத் தோன்றியது. திஷ்ரி மாதம் 15-ஆம் தேதியே, இந்தப் பண்டிகையினுடைய முதலாம் தேதியாகும். அந்த நாளில்தான் மோசே மலையிலிருந்து இறங்கி வந்து, ஜனங்கள் மத்தியில் தேவனுடைய கூடாரம் நிறுவப்பட வேண்டும் என்று ஜனங்களுக்குத் தெரிவித்ததாக இருக்கின்றது. சாலொமோனின் ஆலயம் பிரதிஷ்டைப் பண்ணப்பட்டதும், ஆலயத்தின் மீது ஷெக்கினா மகிமை இறங்கி வந்ததும் இப்பண்டிகையினுடைய நாட்களில்தான் என்று நாம் பார்க்கின்றோம். (1 இராஜாக்கள் 8; 2 நாளாகமம் 7).

"பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளே, இந்த அனைத்து அடையாளங்களுக்குமான உச்சக்கட்டமாக இருக்கின்றது. அதிகாலையில் ஜனங்கள் தங்களது இடது கையில் பாரடைஸ் ஆப்பிளுடனும் (ஆரஞ்சு பழத்துடனும்), வலது கையில் ஓலைகளுடனும், ஆலயத்திற்குத் தெற்கே இருக்கும் சீலோவாம் குளத்திலிருந்து தண்ணீர் மொண்டுக்கொள்வதற்குரிய பொன்னினாலான பானையைச் சுமக்கும் ஆசாரியனுக்குப் பின்னாக, இசையின் சத்தத்துடன் ஊர்வலமாகச் செல்வார்கள்; இந்தக் குளத்திலிருந்து ஆசாரியன் பொன்னினாலான பானையில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு, அதை ஜனங்களின் ஆரவாரக் குரல்கள், பூரிகைகள் மற்றும் கைத்தாளங்களின் ஒலியின் மத்தியில் ஆலயத்திலுள்ள பிரகாரத்திற்குக்கொண்டு வருவார். அன்றாட காலை பலிப்பொருட்டு, தகனபலி

செலுத்தப்படுவதற்காகத் துண்டுப்பாகங்கள் மாபெரும் பலிப்பீடத்தில் வைக்கையில், தண்ணீரண்டைக்குப் போன கூட்டம் திரும்பத்தக்கதாக, நேரம் சரியாய்க் கையாளப்படுகின்றது.”

“ஏழு நாட்களும் ஆசாரியன், “யாவே இப்பொழுது இரட்சிப்புக் கொடுத்தருளும், ஓ; யாவே வளமைக் கொடுத்தருளும்!” என்று கூறி, பலிப்பீடத்தைச் சுற்றி வருவார். ஆனால் ஏழாம் நாள் அன்றோ, ஏழு முறை சுற்றி வந்தபோது, எப்படி எரிகோ மதில் விழுந்தது என்பதை நினைவில் கொண்டவர்களாகவும், தேவனுடைய நேரடியான இடைபடுதலின் காரணமாக, யேகோவாவிற்கு முன்னதாக அந்நிய தேசங்களின் மதில்கள் விழுந்து, அவருடைய ஜனங்கள் போய், சொந்தமாக்கிக்கொள்ளத்தக்கதாக உலகம் தங்களுக்கு முன் திறந்துக்கிடக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பைக்கொண்டவர்களாகவும் ஏழு முறை பலிப்பீடத்தைச் சுற்றி வந்தார்கள்.”

“பொன்னினாலான பானையில் நிரம்பியிருந்த தண்ணீரானது பலிப்பீடத்தின் மீது ஊற்றப்படுகின்றது. இந்த அனுசரிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், பரிசுத்த ஆவி பொழியப்படுவதற்குரிய அடையாளமாகவும் கருதப்படுகின்றது. இந்தத் தண்ணீர் ஊற்றப்பட்ட உடனே மாபெரும் வாழ்த்திப்பாடுதல் நடக்கின்றது. இது 113-118 வரையிலான சங்கீதங்களை உள்ளடக்குகின்றது. இவைகள், இசையுடன் கூட, விடையளித்தலுடன் பாடப்படுகின்றது. லேவியர்கள் சங்கீதத்தின் முதல் வரியை இசையுடன் கூடப் பாடும் போது, ஜனங்களும் அதை அப்படியே திரும்பவும் கூறுவார்கள்; ஆனால் மற்ற வரிகள் பாடப்படும்போது, அவர்கள் அல்லேலூயா என்று விடையளிப்பார்கள். பின்னர் ஆசாரியர்கள் தங்களது வெள்ளியிலான பூரிகைகளை மூன்று மடங்கு வேகத்துடன் ஊதுவார்கள்.”

## “பண்டிகையில் இயேசு”

நம்முடைய பாடம், நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக அவரால் கலந்துக்கொள்ளப்பட்ட கடைசிக் கூடாரப்பண்டிகை பற்றியதாகும். நம்முடைய கடந்த பாடத்தில், பஸ்கா பண்டிகைக்கென ஜனங்கள் எருசலேமை நோக்கி பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கும் வேளையில்தான், ஐயாயிரம் பேர்ப்போஷிக்கப்பட்ட சம்பவம் நடந்தது என்று நாம் பார்த்தோம். ஆகவே நம்முடைய தற்போதைய பாடத்தின் சம்பவமானது சுமார் ஆறு மாதங்களுக்குப் பிற்பாடே நடந்திருக்க வேண்டும். அநேகமாக ஒரு வருடமும், ஆறு மாதமும் கடந்திருக்க வேண்டும். ஏனெனில், “யூதர்கள் அவரைக் கொன்று போட வகைத் தேடின காரணத்தினால், அவரால் யூதர்கள் மத்தியில் சஞ்சரிக்க முடியாமல் அதிக காலம் இருந்தது.”

இந்தப் பண்டிகையின்போது, இயேசு இதில் கலந்து கொள்வாரா, இல்லையா என அநேகர் எண்ணினார்கள், காரணம் கர்த்தருக்கு எதிராக பிரதான ஆசாரியர்கள் மிகவும் பொறாமைக்கொண்டிருந்தனர் என்றும், மிகவும் வெறுப்புக்கொண்டிருந்தனர் என்றும், மிகுந்த விரோதம்கொண்டிருந்தனர் என்றும், அவருடைய ஜீவனுக்கு அச்சுறுத்தல் காணப்பட்டது என்றும் அநேகர் நன்கு அறிந்திருந்தார்கள் என்பது தெரிகின்றது. கர்த்தர் தம்முடைய வேளை வருவது வரையிலும், தம்முடைய ஜீவன் தெய்வீகப் பாதுகாப்பின் கீழ்க்காணப்படுகின்றது என்பதை உணர்ந்திருந்ததினால், ஆபத்தான பாதையில் அவசியமில்லாமல் சென்று, தெய்வீகப் பாதுகாப்பை அவர் சோதிக்க முற்படாமல், மாறாக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தம்முடைய வழியை வனைந்துக்கொண்டதைப் பார்க்கின்றோம். இப்படியாகவே தம்முடைய சீஷர்களுக்கும் அவர் புத்திமதி அருளினார், அதாவது, “ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால், மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்” என்று கூறினார் (மத்தேயு 10:23).

அத்தருணத்தில் நம்முடைய கர்த்தருடைய சகோதரர்களில் சிலர் (அநேகமாக அவருடைய சித்தப்பா/பெரியப்பா பிள்ளைகளாக இருக்க வேண்டும்; ஏனெனில் அக்காலத்தில் சித்தப்பா/பெரியப்பா பிள்ளைகள்/cousins “சகோதரர்கள்” என்று அழைக்கப்படுவதுண்டு). அவருடைய மேசியாத்துவத்தின் மீது சந்தேகம் உடையவர்களாக அவர் எருசலேமுக்குச் சென்று, அங்கு அவருடைய வல்லமையான கிரியைகளை நடப்பிக்கும்படிக்கு வற்புறுத்தினார்கள், ஏனெனில் எருசலேமில்தான் அவருடைய வல்லமையான கிரியைகளைப் பார்ப்பதற்கும், விமர்சிப்பதற்கும், குற்றம் கண்டுபிடிப்பதற்கும், கூடுமானால் அவர் உரிமைப் பாராட்டிக்கொண்டிருப்பவைகளையும், அற்புதங்களைத் தவறு என மறுத்து வாதிடுவதற்கும், தேசத்தின் கல்விமான்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமென அவருடைய சகோதரர்கள் எண்ணினார்கள். யோவான் 7:8-ஆம் வசனத்தின் வார்த்தைகள், நமது கர்த்தருடைய பதிலாக இருந்தது. ஒருவேளை நமது கர்த்தர் பண்டிகையினுடைய

ஆரம்ப நாளிலேயே வந்திருப்பாரானால், அது மதபோதகர்களுடைய பகைமையை இன்னும் அதிகமாய்த் தூண்டி விட்டிருந்திருக்கும். அவர் தாமதமாய்ப் பண்டிகைக்குச் சென்றது, எவ்விதத்திலும் அவருடைய போதனைகள் பிரசித்திப் பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை, ஏனெனில் ஜனங்கள் அவரைக் குறித்து விசாரித்து, அவரைக் குறித்து ஆச்சரியப்பட்டு, அவர் உரிமைப் பாராட்டிக்கொண்டவைகளைக் குறித்து ஆராய்ந்து, ஒவ்வொருவரும் தங்களுடைய பட்டணங்களில், கிராமங்களில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் ஒருவருக்கொருவர் தெரிவித்தவர்களாகவே காணப்பட்டார்கள். பண்டிகை வாரத்தின் பாதியில்தான் நமது கர்த்தர் காட்சியில் நுழைந்து, நேரடியாக ஆலயத்திற்குச் சென்று, ஜனங்களுடைய பயபக்தியின் உணர்வானது, உச்சக்கட்டமான நிலையில் காணப்படும்போது, நமது கர்த்தர் அவர்களுடைய கவனத்தை வருடந்தோறும் அவர்களால் அனுசரிக்கப்பட்டு வரும் காரியங்கள் அடையாளப்படுத்தும் ஆழமான ஆவிக்குரிய காரியங்களின் மீது திருப்பினார்.

கர்த்தருக்குப் பானபலியாக, பொன்னினாலான பானையிலுள்ள தண்ணீர் பலிப்பீடத்தின் மீது ஊற்றப்பட்டுத் தீரும்போதும், வெப்பமான நிலையில் ஜனக்கூட்டத்தார் அநேகமாக தாகத்துடன் இருக்கையில் மற்றும் தண்ணீரைப்பார்த்த மாத்திரத்தில் தண்ணீருக்கான தாகம் இன்னும் அதிகரிக்கப்பட்ட நிலையில் இருக்கும் போதுதான், "பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்ற வார்த்தைகளைக் கூறியிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது (யோவான் 7:37, 38).

தீர்க்கத்தரிசி முன்னுரைத்ததுப் போல, நமது கர்த்தர் உவமைகளாகவும், மறைப்பொருள்களாகவும் பேசியுள்ளார் என்று ஜனங்களும் கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கேட்டுக்கொண்டிருந்த ஜனக்கூட்டத்தாரில் இருந்த எத்தனை பேர், அதாவது எத்தனை சொற்பமானவர்கள் இந்த அவருடைய செய்தியின் அர்த்தத்தைப் புரிந்திருப்பார்கள்! ஆவிக்குரிய யுகத்தின் கீழ் நமக்கு இருக்கும் பாக்கியமான சூழ்நிலைகளிலுங்கூட, எத்தனை சொற்பமானவர்களே அவருடைய இந்த வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

## "ஊற்றுக்கண்ணில் பருகுதல்"

சொல்லர்த்தமான தாகம் என்ன என்றும், சொல்லர்த்தமான தண்ணீரைக் குடிப்பதன் மூலம் வரும் புத்துணர்வு எப்படி இருக்கும் என்றும் அனைவருக்கும் தெரியும்; மேலும் கர்த்தர் கொடுக்க இருக்கிறதான ஜீவத்தண்ணீர் தொடர்புடைய அவருடைய வார்த்தைகளைப் புரிந்துக்கொள்ள வேண்டுமெனில், நாம் நிழலை முன்னே கொண்டு நிறுத்தி, திருப்திப்படுத்தப்பட வேண்டிய மனித சுபாவத்தினுடைய மற்றத் தாகங்கள் மற்றும் ஆசைகளும் இருக்கின்றது என்றும், திருப்திப்படுத்தாதப் பட்சத்தில் அமைதியின்மையையும், பெரும் துயரத்தையும் கொடுக்கும் என்றும் நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும். இந்த இருதயத்தின் ஆசைகளை நாம் சுருக்கமாக சமாதானம், அமைதி, சந்தோஷம், ஐக்கியத்திற்கான தாகம் என்று குறிப்பிடுகின்றோம். இப்படியான தாகம்கொண்டிருப்பவர்கள் மாத்திரமே, "பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறப்படுகின்றனர். நம்முடைய சந்ததியிலுள்ள அநேகர், தற்போதைய காலத்தில் மனரீதியிலும், சரீரரீதியிலும் மிகவும் சீரழிந்துப்போய் உள்ளபடியால், அவர்களால் இப்பொழுது அனுபவித்துக்கொண்டிருப்பவைகளைக் காட்டிலும் மேலானதாய் இருக்கும் விஷயங்களுக்காக பசிதாகம் பெற்றிருப்பதில்லை; அதாவது, அவர்கள் பெற்றிருக்கும் பூரணமற்ற விஷயங்களினால் ஏற்கெனவே நிரப்பப்பட்டு, திருப்தியடைந்திருக்கின்றார்கள். இப்படியாக இருப்பவர்களுக்கல்லாமல், மாறாக பசிதாகம் உள்ளவர்களுக்கே, கர்த்தர், "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" என்று கூறினார்.

இதுவே இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய அழைப்பாகும். தாகங்கொண்டவர்களையே கர்த்தர் நாடி, கண்டுபிடிக்கின்றார்; மேலும் இப்படிப்பட்டவர்கள் கிருபை மற்றும் சத்தியம் எனும் அவருடைய ஊற்றில் பருகுவார்களானால், அவர்கள் உலகத்தினால் கொடுக்க முடியாததும், எடுத்துப் போட முடியாததுமான ஆறுதலை, சந்தோஷத்தை, சமாதானத்தை, இளைப்பாறுதலை, ஆசீர்வாதத்தை, திருப்தியைக் கண்டடைவார்கள். ஆகவே தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள்;

மற்றும் அடிக்கப்பட்ட கன்மலையாகிய, நமது கர்த்தரிடமிருந்து வரும் தண்ணீரை இப்பொழுது பருகிக்கொண்டிருப்பவர்கள், தயை பெற்றிருக்கின்றவர்களாய் இருக்கின்றனர் (1 கொரிந்தியர் 10:4).

நமது கர்த்தருடைய வார்த்தையை அப்போஸ்தலர் விவரிக்கையில், அவர் முதல் பாகத்தையே விவரிக்கின்றாரே ஒழிய, இரண்டாம் பாகத்தை அல்ல. "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (யோவான் 7:39). ஆவியைப் பெற்றுக்கொள்வது என்பது, நமது தாகத்தைத் தணிப்பதாகும். ஜீவகாலம் முழுவதும் இந்த ஊற்றில் நாம் பருகுகின்றவர்களாய் இருக்கின்றோம். கர்த்தருடைய சாயலில் நாம் விழிக்கும் வரையிலும் நாம் திருப்தியடைகிறதில்லை; பின்னர் சங்கீதக்காரன் கூறியுள்ள பிரகாரம், "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" என்று இருக்கும்; அதாவது இந்த அழியக்கூடியது, அழியாமையினால் ஜெயமாய் விழுங்கப்படும்போது, நாம் நமது அன்பார்ந்த மீட்பர் போல காணப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாக அவரைத் தரிசித்து, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக, அவருடைய மகிமையில் பங்கடைவோம்.

## "பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை"

பரிசுத்த ஆவியானது தீர்க்கத்தரிசிகள் மீது செயல்படுத்தப்பட்டது; மேலும் அதனுடைய செயலாற்றலின் கீழ் அவர்கள் பேசவும், எழுதவும் செய்தார்கள். ஆனால் பெந்தெகொஸ்தே நாள் முதல் சுவிசேஷ யுக சபைக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவி வித்தியாசமானதாகும்; அது தீர்க்கத்தரிசனத்தின் ஆவியாய் அல்லாமல், புத்திரசுவிகாரத்தின் ஆவியாகவும், புரிந்துக்கொள்ளுதலின் ஆவியாகவும் இருக்கின்றது. நம் சார்பாக இயேசு ஈடுபலியாகக் கொடுப்பது நிறைவேறி, அவர் பரத்திற்கு ஏறி, அந்தப் பலியின் புண்ணியத்தை நம் சார்பில் பிதாவிடம் ஒப்படைத்து, அது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவது வரையிலும், தேவனுடைய புத்திரர்களாக எவரும் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுவது என்பது கூடாத காரியமாக இருந்தது. பின்னரே புத்திரசுவிகாரத்தின் ஆவியாகிய இந்த ஆசீர்வாதமானது, அப்போஸ்தர்கள் மீது பொழியப்பட்டது. அதுமுதல் கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைவரும், உடன் அங்கங்களுடன் சேர்ந்து, இரட்சிக்கப்படும் நாள் வரையிலும், அனைவரையும் முத்திரித்துள்ள அந்த ஒரே ஆவியின் பங்காளிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபேசியர் 4:30).

## "நதிகள் ஓடுதல்"

"அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவான் 7:38). இவ்வசனமானது பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறவில்லை. பெந்தெகொஸ்தே நாளில், கர்த்தருடைய பின்னடியார்கள் ஆவிக்குரிய சத்தியங்களைப் பருக மாத்திரமே ஆரம்பித்தார்கள்; மற்றும் இந்தச் சத்தியங்கள் மூலம் இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ள அநேக அங்கங்களுடைய ஒரே சரீரத்திற்குள் இணைக்கப்படுகின்றனர். இந்த ஒரே சரீரத்திலிருந்துதான் இறுதியில், முழு உலகத்திற்கான ஆசீர்வாதத்திற்கென ஆயிரவருட யுகத்தின் போது, ஜீவத்தண்ணீரின் நதிகள் ஓடிவரும். இதைக் குறித்து நமது கர்த்தர் பேசுகையில், "நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" (யோவான் 12:48); அதாவது கடைசி நாள் என்பது மாபெரும் நாளாகிய, ஆயிரவருட யுகமாகும்; தேவனுடைய வாயினின்று புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையினாலும் உலகமானது நியாயந்தீர்க்கப்படும். ஜீவத்தண்ணீர் என்பது சத்தியத்தைக் குறிக்கின்றது; மேலும் கர்த்தருடைய வாயினின்றும், மகிமையடைந்த சபையின் வாயினின்றும் புறப்படும் இந்த ஜீவத்தண்ணீர் (அ) சத்தியத்தின் அளவானது நதிபோன்று இருப்பதினால், அது பூமியின் அனைத்துப் பாகங்களையும் சென்றடைகின்றதாய் இருக்கும். பூமி முழுவதும் தேவனுடைய மகிமைப் பற்றின அறிவினால் நிரப்பப்படும்.

தற்காலத்தில் ஜீவத்தண்ணீரின் ஊற்றில் பருகுகின்றவர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகப் பரிசுத்தமாக்கப்படுகின்றனர், மற்றும் நமது கர்த்தர் இவர்களைக் குறித்துப் பேசுகையில், இவர்களுக்குள்ளான தம்முடைய கிருபையும், சத்தியமும் நித்திய காலத்திற்குரியதுமான ஜீவனைக் கொடுக்கும் ஊற்றாக இருக்கின்றது என்று கூறுகின்றார். வெளிப்படுத்தின விசேஷத்தின் 21-ஆம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பல்வேறு அங்கங்கள் மகிமையில் ஒன்றுசேர்க்கப்படுவது குறித்தக் காட்சிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒட்டுமொத்தமாக புதிய எருசலேம் என்றும், அதினின்று நம்முடைய கர்த்தர் இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றபடி, ஜீவத்தண்ணீரின் நதியானது வரும் என்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. அது ஜீவத்தண்ணீருள்ள

மாபெரும் ஆறு ஆகும், மற்றும் அதன் இரண்டு கரைகளிலும், அதனால் போஷாக்களிக்கப்பட்ட நல்ல கனிகள் கொடுக்கும் ஜீவ விருட்சங்கள் காணப்படுகின்றன; மற்றும் அந்த விருட்சங்களின் இலைகளானது, ஜாதிகளுடைய சொஸ்தமாக்குதலுக்காகும்.

இப்படியாக நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள தம்முடைய பின்னடியார்களின் மீது வரும் ஆசீர்வாதங்களையும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆறுதல்படுத்தப்படுவதற்கும், ஆசீர்வதிக்கப்படுவதற்கும், சீர்த்தூக்கப்படுவதற்கும், இழந்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்குமெனத் தம்முடைய பின்னடியார்கள் வாயிலாக அடுத்த யுகத்தில் கடந்து வரும் ஆசீர்வாதங்களையும் சுருக்கமாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அடுத்த யுகத்தில் ஜீவத்தண்ணீரின் ஆறானது இலவசமாய்க் காணப்படும், மேலும் அதனிடத்திற்கு ஆவி மற்றும் மணவாட்டியினுடைய அழைப்பு விடுக்கப்படும்.

## "ஜனங்கள் மத்தியில் பிரிவு"

சமாதானமும், ஒற்றுமையும், பெரிதும் விரும்பப்பட வேண்டும்; எனினும் இது எப்பொழுதும் சாத்தியம் அல்ல, எப்பொழுதும் நன்மைக்கு ஏதுவானதாயும் இராது. ஒருவேளை அனைவரும் பரிபூரணமாய்க் காணப்பட்டார்களானால், சமாதானமும், ஒற்றுமையும்தான் தகுந்த நிலைமையாக நிச்சயமாய்க் காணப்பட்டிருந்திருக்கும். ஆனால் பூரணமின்மைகளும், தப்பறைகளும் இருப்பது வரையிலும், வேற்றுமைகள் காணப்பட வேண்டும். இதற்கு இசைவாகத்தான் நம்முடைய கர்த்தர், தம்முடைய செய்தி சமாதானத்தைக்கொண்டு வராது என்றும், தற்காலத்தில் பட்டயத்தையே கொண்டுவரும் என்றும் கூறியுள்ளார். அவர் பின்னாட்களின் சமாதானத்தின் பிரபுவாக இருப்பார்; ஆனால் நீதியின் அடிப்படையில், சமாதானமானது நிலைநாட்டப்படாதது வரையிலும் அவர் சமாதான பிரபுவாக இருப்பதில்லை. இப்படி நிலைநாட்டப்படுவதற்கு முன்பு வரையிலும், அவர் நீதியில் ஆளுகை செய்யும் இராஜாவாக இருந்து, இருப்புக் கோலால் தீமையான அமைப்புகளையும், காரியங்களையும் குயவன் கலத்தை நொறுக்குவது போன்று நொறுக்குவார்.

சமாதானம் இல்லாமல் இருக்கும் பொழுதும், சமாதானத்திற்கு வாய்ப்புகள் இல்லாமல் இருக்கும் பொழுதும், சமாதானம், சமாதானம் என்று சொல்லுகின்றவர்கள் இருப்பார்கள்; இப்படிக் கூறுபவர்களில் கர்த்தருடைய ஜனங்கள் காணப்படுவதில்லை. இதனிமித்தம் கர்த்தருடைய ஜனங்கள் கலகத்தைத் தூண்டி விடுபவர்களாக இருப்பார்கள் என்பது அர்த்தமல்ல. மாறாக இவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருக்க வேண்டுமென, வேதவாக்கியங்களில் எங்கும் புத்திமதிக் கூறப்படுகின்றது; சமாதானத்திற்கான பிரயாசங்களை எடுப்பவர்களாகவும், சமாதானத்தை விரும்புகின்றவர்களாகவும், சமாதானம் பண்ணும் தங்களது பண்பைத் தொடர்ந்து பெருக்கிக்கொள்பவர்களாகவும் காணப்பட்டும் கூட, இவர்களுக்குக் கர்த்தர் கொடுத்திட்ட செய்தியானது பிரச்சனையை வளர்க்கின்றது ஏன்? வெளிச்சத்திற்கும், இருளுக்கும் ஐக்கியம் இராததினால், இவை இரண்டிற்கும் நடுவே சமாதானம் இருக்க முடியாது என்றும், எந்தளவுக்கு ஒன்று ஆதிக்கம்கொள்கின்றதோ, அப்பொழுது மற்றொன்று அந்தளவுக்குப் பின்னுக்குத் தள்ளிவிடப்படுகின்றது என்றும், நாம் கர்த்தருடைய வார்த்தைகளின் அடிப்படையில் பதிலளிக்கின்றோம்.

இதற்கு இசைவாகவே இப்பாடத்தில், அவரைக் குறித்த விஷயத்தில் ஜனங்கள் மத்தியில் பிரிவு ஏற்பட்டதை நாம் பார்க்கின்றோம்; சிலர் அவரை அங்கீகரித்தும், சிலர் அவரை எதிர்த்தும் காணப்பட்டனர். இப்படியாகவே நாம் நீதியின் கொள்கைகளை உயர்த்தும் போதும் காணப்படும். நாம் சத்தியத்தின் ஒளியைப் பிரகாசிக்கப் பண்ணும்போது, சத்தியத்தை விரும்புகின்றவர்கள் தங்களுடைய இருதயத்தின் உண்மை மற்றும் சத்தியத்தின் மீதான வாஞ்சைக்கு ஏற்ப, சத்தியத்தினிடத்திற்குக் கொஞ்சமாகவோ, அதிகமாகவோ ஈர்க்கப்படுவார்கள். மேலும் தப்பறையை விரும்புகின்றவர்கள், தங்களிடத்தில் இருக்கும் உண்மை குறைவுக்கு ஏற்ப, சத்தியத்தை எதிர்க்கின்றவர்களாய் இருப்பார்கள். நமது கர்த்தருடைய நிலைமையே இப்படி இருக்குமாயின், அவருடைய பின்னடியார்களுடைய நிலைமை வித்தியாசமாக இருக்கும் என்று நாம் எண்ண முடியுமோ? நிச்சயமாக இல்லை. நம்முடைய பாதங்களுக்கு நாம் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் எனும் பாதரட்சையைத் தரித்துக்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய சுவிசேஷமானது, சமாதானத்தின் சுவிசேஷமாகும், எனினும் நாம் அதை மற்றவருக்குச் சுமந்துச் செல்லுகையில், நமக்கான பாதை கடினமான ஒன்றாக இருக்கும்; மற்றும் நாம் என்ன எதிர்ப்பார்க்கலாம் என்பது பற்றிக் கர்த்தரால் முன்னறிவிக்கப்பட்டுள்ளவைகளில் அடங்கும் அனைத்துப் பாதுகாப்புகளும்

மற்றும் ஜெயங்கொள்பவர்களுக்கான மகிமை மற்றும் ஆசீர்வாதம் பற்றின அவருடைய வாக்குத்தத்தங்களும் நமக்கு அவசியப்படும்.

## "பொறாமை, வன்மம், பகைமை, கொலைப்பாதகம்"

நமது கர்த்தர் ஆலயத்தில் போதித்துக்கொண்டிருந்தபோது, அவர் அங்கு இருப்பதை அறிந்திருந்த யூத அதிகாரிகள், அவருடைய ஜீவனை எடுக்க சதித்திட்டம் போட்டனர். ஆலோசனை சங்கத்தார் அழைக்கப்பட்டனர், மேலும் இவர்களின் சேவகர்கள் ஜனங்கள் மத்தியில் ஆலயத்தில் நிறுத்தப்பட்டனர்; இந்தச் சேவகர்கள் அவருடைய போதனையில் குற்றம் கண்டுபிடிப்பதற்கும், அதைக் கலகத்திற்கான சாக்குப்போக்காகப் பயன்படுத்தி, நமது கர்த்தரைக் கைதுச்செய்வதற்குரிய பொறுப்பைப் பெற்றிருந்தார்கள்; அதாவது ஒன்றில் மோசேயின் பிரமாணத்திற்கு எதிராக போதித்தார் அல்லது ரோம சட்டங்களுக்கு எதிராக போதித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவரைக் கைதுச்செய்யத்தக்கதாக, குற்றம் கண்டுபிடிக்கும் பொறுப்புடன் ஆலயத்தில், ஜனங்கள் மத்தியில் சேவகர்கள் நிறுத்தப்பட்டனர். ஒவ்வொரு முறையும், அவருடைய வார்த்தையினால் அவரைச் சிக்க வைக்க முயன்றனர், ஆனால் அதைச் செய்ய முடியாததினால், காரியத்தைத் தெரிவிக்கும்படிக்கு ஆலோசனை சங்கத்தாரிடத்திற்குத் திரும்பினார்கள்.

மனித இருதயத்தின் திருக்குத்தனத்தைக் குறித்து எத்துணை வேதனையான விமர்சனம் காணப்படுகின்றது. இயேசுவைக் கைதுச்செய்து, கொன்றுப்போடும்படிக்கு நாடின மனிதர்கள், பூமியிலேயே பரிசுத்தமான தேசமாகிய இஸ்ரயேல் தேசத்தின் மிகுந்த செல்வாக்குள்ள மனுஷர்கள் ஆவார்கள். இதுமாத்திரமல்லாமல் இவர்கள் நியாயசாஸ்திரிகளுமாக இருந்தார்கள், அதாவது மோசேயின் நியாயப்பிரமாணத்தினுடைய எழுத்தையும், சாரத்தையும்/ஆவியையும் நன்கு அறிந்தவர்கள் எனக் கருதப்படும் மனுஷர்களாய் இருந்தார்கள்; அதாவது இன்றைய கிறிஸ்தவ மண்டலத்தில் டாக்டர்ஸ் ஆப் டிவைனிடிக்குச் (Doctors of Divinity) சரிசமமான ஸ்தானத்தில் யூத மார்க்கத்தில் காணப்பட்ட மனுஷர்களாய் இருந்தார்கள். பிலாத்துக் கேட்டது போல நாமும், "ஏன், இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்?" எனக் கேட்கலாம். உலகத்திலேயே மிகுந்த தாலந்துடையவர்களாகவும், மிகுந்த கல்வியறிவு உடையவர்களாகவும், பெயரளவில் மிகுந்த மத வாதிகளாகவும் இருக்கும் நபர்களுடைய இருதயத்தில்தான் பொல்லாப்பு இருந்ததே ஒழிய, இயேசுவினிடத்தில் இல்லை என்று நாம் பதிலளிக்கின்றோம்.

இவர்களது நோக்கம் என்னவென்று ஒருவேளை இவர்களிடம் கேட்கப்படுகின்றது என்று நாம் கற்பனை பண்ணிக்கொள்ளலாம். இவர்களுடைய பதிலானது, "நாங்கள் தேவனுக்கு உண்மையாய் இருக்கின்றோம்; மோசே மூலமாய்க் கொடுக்கப்பட்ட அவருடைய நியாயப்பிரமாணத்திற்கு நாங்கள் உண்மையாய் இருக்கின்றோம். தேவன் எங்களை அதிகாரிகளாகவும், போதகர்களாகவும் அமர்த்தியுள்ள, அவருடைய இந்த வல்லமையான ஜனங்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களில் நாங்கள் உண்மையாய் இருக்கின்றோம், ஆகவே இம்மனுஷன் தேவனுக்குப் பயப்படுகிறவன் போலும், ஏழைகளிடத்தில் அனுதாபம் உள்ளவன் போலும் தோன்றினாலும், இவன் மிகுந்த நாசத்தை உண்டுபண்ணுகிறவன் என்று நாங்கள் நம்புவதினால், இம்மனுஷனைக் கட்டுப்படுத்த நாங்கள் வைராக்கியமாய் இருக்கின்றோம். இவன் தன்னை மேசியா என்று கூறிக்கொள்ளும் விஷயத்தில், இவன் நாசத்தை உண்டாக்குகிறவனாய் இருக்கின்றான்; காரணம் உண்மையில் இவன் திறமை மிக்கவனாகவும், ஜனங்களை ஏமாற்றுகிறவனுமாயும் இருக்கின்றான். இவனை இப்படியே விட்டுவிட்டால், ஒழுக்கம் சார்ந்த விஷயத்திலும், அறிவு சார்ந்த விஷயத்திலும் இந்தத் தேசத்தின் தலைவர்களாக எங்கள் கரங்களில் காணப்படும், தேசத்தைக் கட்டுப்படுத்துகிறதற்கான வல்லமையானது, எங்கள் கையை விட்டு நழுவி விடும்; இம்மனுஷன் தன்னை நிலைநாட்டிவிடுவான்; மேலும் இஸ்ரயேல் தேசத்தின் ஜனங்கள் அனைவரும் எங்களை முட்டாள்களெனப் பார்த்து, தங்களால் மேசியாவை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது என்றும், அறிவில் மேம்பட்டவர்களாகிய எங்களை முட்டாள்கள் அல்லது தெய்வீகக் கிருபையை இழந்துவிட்டவர்கள் என்பதினால், நம்முடைய சந்திப்பின் காலத்தை அடையாளம் கண்டுகொள்ள எங்களால் முடியவில்லை என்றும் முடிவு செய்துவிடுவார்கள்" என்பதேயாகும்.

இப்படியாகவே இவர்கள் கூறுவார்கள்; ஆனால் இச்சூழ்நிலையைக் குறித்த கர்த்தருடைய கண்ணோட்டமானது, நேர்மாறாகக் காணப்படும். அதாவது, "இவர்கள் மாய்மாலக்காரர்கள் என்பதாகவும், இவர்கள் தாங்கள் உண்மையில் காணப்படாத நிலையில், தாங்கள் இருப்பதாக நடித்துக்கொண்டிருக்கின்றவர்கள் என்பதாகவும், கர்த்தருக்கான இவர்களுடைய துதியும்,

ஊழியமும், சடங்காச்சாரமான உதட்டின் அளவிலேயே உள்ளவைகளாக இருக்கின்றது என்பதாகவும், இவர்களுடைய பிரயாசங்கள் மற்றும் அறிக்கைகளின் அடித்தளத்தில் பெருமை காணப்படுகின்றது என்பதாகவும், நமது கர்த்தருடைய வெற்றியும், அவருடைய ஞானமும், ஜனங்கள் அவருடைய செய்திக்குச் செவிச் சாய்க்கும் உண்மையும் இவர்களது இந்தப் பெருமையைத் தொட்டது என்பதாகவும், இவர்கள் பொறாமை கொண்டவர்கள் என்பதாகவும், வன்மம் இவர்களுடைய இருதயத்தில் எரிந்துக்கொண்டிருந்தது என்பதாகவும், காரணமின்றி அவரைப் பகைத்தார்கள் என்பதாகவும், இவர்களைக் காட்டிலும் அவர் மேலானவராகவும், பரிசுத்தமானவராகவும், ஞானமுள்ளவராகவும் இருப்பதினாலும், இந்த உண்மையை ஜனங்களும் புரிந்துக்கொண்டு வருவதினாலும் அவரைப் பகைத்தார்கள் என்பதாகவும்" காணப்படும்.

பொறாமை--சுயநலம் எத்துணை ஆபத்தானதாகும்! எத்தனை கர்த்தருடைய ஜனங்கள் இன்று இதனால் தாக்கப்பட்டு இருப்பதினால், அவர்கள் கர்த்தருடைய ஆவியை அடையாளம் கண்டுக்கொள்ள மறுக்கின்றவர்களாகவும், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதற்கு நாடி, ஒருவருக்கொருவர் தாங்கி கர்த்தருடைய முழு வேலையும் ஒன்றுதான் என்று உணர்ந்துக்கொள்வதற்குப் பதிலாக, அந்தோ பரிதாபம் கலகத்தின் ஆவியையும், வீண் பெருமையையும் அடிக்கடி வெளிப்படுத்துகின்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள்! இப்படியான அனைத்தும், கர்த்தருடைய பார்வைக்கு எவ்வளவு பிரியமற்றதாக இருந்திருக்க வேண்டும்!

## "அவருடைய உதடுகளிலிருந்து கிருபை பொழிந்தது"

சேவகர்கள், ஆலோசனை சங்கத்திற்குத் திரும்பினபோது "கைதி எங்கே? என்றும் நீங்கள் ஏன் அவரைக்கொண்டு வரவில்லை?" என்றும், அவருடைய வார்த்தைகளினால் அவரைச் சிக்க வைக்க உங்களால் முடியவில்லையா? பொதுமக்கள் மத்தியில் பேசுபவர்களாகவும், நுணுக்கமான மனதையுடையவர்களாகவும் இருக்கும் உங்களால், ஜனங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் காரியங்களைப் போதித்த (போதகரான) அவருக்கு எதிராக நீங்கள் குற்றம் சாட்டத்தக்கதாக, அவருடைய வார்த்தைகள் எதிலாகிலும் அவரை உங்களால் சிக்க வைக்க முடியவில்லையா? மோசேயின் பிரமாணம் (அ) உரோமின் சட்டத்திற்கு விரோதமாக அவர் சொன்னார் என்று எதையாகிலும் நீங்கள் சொல்லத்தக்கதாக அவர் ஒன்றும் பேசவில்லையா? என்றும் கேள்விகள் எழும்பியது. இதற்கு அவர்கள் கொடுத்தப் பதில், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்பதாகும் (யோவான் 7:46). இவ்வார்த்தைக்குள் பல ஆயிரக்கணக்கான விஷயங்கள் அடங்கியுள்ளது.

கர்த்தருடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கு நாடும் கர்த்தருடைய ஜனங்கள், உலகமானது இன்னமும் பொறாமையினாலும், வன்மத்தினாலும், பகைமையினாலும் நிரம்பியிருப்பதை எப்பொழுதும் காணவே செய்கின்றனர். "உலகம் அவரை அறியாதது போல, நம்மையும் அறியவில்லை" என்பது இன்னமும் உண்மையாய் இருப்பதைக் காண்கின்றார்கள்; மேலும் அவர்களுக்கு எதிராய் இருப்பவர்கள் மத்தியில், அவர்களுக்குப் பாதிப்பு உண்டாக்க நாடுபவர்கள் மத்தியில், அவர்களுடைய வார்த்தைகளினால் அவர்களைச் சிக்க வைக்கும்படி நாடி, அவர்களைக் கைதுச்செய்து, அவர்களின் நற்பெயரைக் கெடுக்க நாடுபவர்கள் மத்தியில் சிலர் உலக ஞானிகளாகவும், உலகத்தில் உயர்ந்தவர்களாகவும், மதவாதிகளாகவும் இருப்பதை இன்னமும் பார்க்கின்றனர். அவர்களுக்கான கர்த்தருடைய செய்தி, "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்பதாகக் காணப்படுகின்றது (லூக்கா 21:19). அவர்கள் தங்கள் வாயினால் பாவம் செய்துவிடாதபடிக்குத் தங்கள் உதடுகளைக் காவல் காத்துக்கொள்வதும், ஜெபிப்பதும் மாத்திரமல்லாமல், தங்களுடைய இருதயத்தின் தியானங்களும், தங்களின் வாயின் வார்த்தைகளும் கர்த்தர் அங்கீகரிக்கத் தக்கதாகப் பார்த்துக்கொள்ள முயற்சிப்பதும், நேர்த்தியான போக்காக இருக்கும்; மேலும் எந்தளவுக்கு இதில் அவர்கள் உண்மையாய் இருக்கின்றார்களோ, அந்தளவுக்கு அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் தங்களுடைய பேச்சில் ஞானமுள்ளவர்களாகவும், ஜாக்கிரதையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்; அதாவது ஒருவனும் ஒருக்காலும் பேசாதது போல் பேசின அவரைப் போன்று காணப்படுவார்கள்.

நாவை காத்துக்கொள்வது என்பது எத்தகைய ஒரு பெரிய விஷயமாய் உள்ளது! தன் நாவை அடக்கிக்கொள்ள முடிகிறவனுக்கு, அவனுடைய முழுச் சரீரத்தையும் அடக்க முடியும் என்று அப்போஸ்தலர் சொல்லியிருப்பது உண்மையே. சொல்லக்கூடாத ஏதோ ஒன்றைச் சொல்வது என்பது மிகவும் சுலபமானது; பொல்லாப்பான வதந்தியை, மீண்டும் மீண்டுமாகப் பரப்புவதும், மற்றவருடைய குணலட்சணத்தின் மீது தவறான அபிப்பிராயத்தை வைப்பதும், இப்படியாக தவறான அபிப்பிராயம்

வைப்பதன் மூலமாக கொலைச் செய்வதும், மற்றவருடைய நற்பெயரை (அ) உணர்வுகளைக் காயப்படுத்துவதும் மிகவும் சுலபமானதாகும். இவ்விஷயத்தில் நாம் கர்த்தர் போல் காணப்படுவதற்கும், மற்றவர்கள் பேசுகிறது போல் பேசாமல் இருப்பதற்கும், இப்படியாக இருளினின்று, ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களைக் காட்டுவதற்கும் நாம் அதிகமதிகமாய் நாடுவோமாக.

**ஆமென்!**

---

# விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள்

## பெரோயா வேதாகம பாடங்கள் - பிரயோஜனமான ஆராய்ச்சி வகுப்புகளுக்கான யோசனைகள் மற்றும் முக்கிய காரியங்கள்

கொஞ்சக்காலங்களுக்கு முன்னதாக, எப்படிக் கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின சிறு சிறு கூட்டத்தார், தங்களது ஞாயிற்றுக்கிழமைக் கூடுகைகளுக்கான நேரத்தினை மிகவும் பிரயோஜனமான விதத்தில் பயன்படுத்திடலாம் என்று விசாரிக்கும் கடிதங்களை நாம் பெற்றுக்கொண்டிருந்தோம். இந்தக் கடிதங்களில் சில, மூப்பர்களாக அல்லது வழிநடத்துனர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சகோதரரிடமிருந்து வந்துள்ளது; இவர்கள் தாங்கள் நல்ல "பிரசங்கம்" ஒன்றைக் கொடுத்திடுவதற்குத் திறனற்றவர்களாய் இருக்கின்றனர் என்றும், கவரும் விதத்திலும், ஆர்வமூட்டும் விதத்திலும் தங்களால் வேதாகம ஆராய்ச்சி ஒன்றை ஆயத்தம் செய்யக்கூட முடியவில்லை என்றும், இப்படி இருப்பினும் அருமையான சகோதரர்கள் சத்தியத்திற்கான அன்பினை முழுமையாய்க் கொண்டவர்களாகக் குறைக்கூறாமல், தங்களை ஊக்குவிக்கவே செய்கின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

வேறு கடிதங்களானது சபைக்கடுத்த எந்த ஊழியங்களிலும் இல்லாதவர்களிடமிருந்து வந்ததாய் இருந்தது; இவர்கள் தங்களது கூட்டத்தை வழிநடத்துபவர்கள், பெயர்ச்சபையில் சத்தியம் வழங்குபவர்கள் போன்று, சத்தியம் வழங்கிடுவதற்கு ஏறெடுக்கும் பிரயாசங்களின் மீது பரிவு கொண்டிருக்கும் அதேவேளையில், அனைவருக்கும் பிரயோஜனமானதாக, கூடுகைகளை மாற்றிடுவதற்குரிய உதவிக்கான ஏதேனும் கதவுகள் திறக்கப்படுவதற்கு விருப்பம் கொண்டவர்களாகவும், ஜெபம்பண்ணுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கர்த்தருடைய ஜனங்களுடைய இந்தக் கூக்குரலுக்குப் பிரதியுத்தரமாகவே நாம் வாட்ச் டவர் வேதாகமத்தை ஆயத்தப்படுத்தினோம், இந்த வேதாகமத்தின் ஓரங்களில் (margin) வேதாகம சுட்டுக் குறிப்புகளோடுகூட, டாண் (volume) மற்றும் டவர் (ரீப்பிரிண்ட்ஸ்) குறிப்பிலக்கங்களையும் சேர்த்திருந்தோம். இந்த வேதாகமத்தின் முன்பகுதியில் "பெரோயா வேதாகம ஆராய்ச்சிக்கான" சில யோசனைகளைக் கொடுத்திருக்கின்றோம் மற்றும் பின்பகுதியில் விரிவான சுட்டுக் குறிப்புகளும், தலைப்புவாரியான அட்டவணையையும் கொடுத்திருக்கின்றோம். இவைகள் தேவைகளைப் பூர்த்திச் செய்திடும் என்பது எங்களது நம்பிக்கையாக இருக்கின்றது; ஆனால் இவை போதுமானதாய் இல்லை. கர்த்தருடைய உண்மையுள்ளவர்களில் அநேகர் தங்களுக்கு ஆவிக்குரிய போஷாக்கென அளிக்கப்படும் எதையும் "விழுங்கிவிடும்" பழக்கத்தினை நீண்டகாலம் உடையவர்களாய்க் காணப்படுவதினால், அவர்கள் பிதாவின் போஜனப்பந்தியிலிருந்து எப்படித் தங்களைப் போஷித்துக்கொள்வது என்பதை ஒருபோதும் கற்றுக்கொள்ளாதவர்களாகக் காணப்படுகின்றனர். உணவை எப்படிச் சரியாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்கும் மற்றவர்களோ, தங்கள் நேரங்களைத் தங்களது நியாயமான தேவைகளைச் சம்பாதித்துக்கொள்ளும் தொழிலுக்கென்று மிகவும் செலவிட வேண்டியிருக்கிறபடியால், தலைப்புவாரியான அட்டவணையில் சத்தியம் முறைப்படுத்தி வழங்கப்பட்ட பிற்பாடும்கூடத் தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பிரயோஜனமான விதத்தில் பாடங்களை ஆயத்தம்பண்ணிடுவதற்கு நேரத்தைக் குறைவாகவே பெற்றிருக்கின்றனர்.

## பெரோயா ஆராய்ச்சிகளானது இப்பொழுது பரிந்துரைக்கப்படுகின்றது

தேவைகளை உணர்ந்தவர்களாக, நாம் "பயண ஊழியக்காரர்கள்" போய்ச் சந்தித்திடும் பல்வேறு இடங்களில் இந்தப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளுக்கான மாதிரியைக் காண்பித்துக்கொடுக்கும்படிக்கு, "பயண ஊழியர்கள்" சிலரிடம் வேண்டிக்கொண்டோம். இதுவும்கூடப் பிரயோஜனப்படவில்லை; காரணம் முற்காலங்களிலுள்ள அப்போஸ்தலர்களைப் போன்று "பயண ஊழியர்களின்" சந்திப்பும் சொற்பமாகக் காணப்பட்டப்படியால், ஒரே ஒரு வகுப்பு நடத்திக்கொடுக்கப்பட்டதின் நிமித்தம் நண்பர்கள் அதிருப்தியே அடைந்தனர், ஏனெனில்

பெரோயா வகை வகுப்புகளின் முக்கியத்துவத்தினை விவரிப்பதற்கும், முறையான ஆர்வத்தை உருவாக்கிடுவதற்கும் அநேகம் பெரோயா வகுப்புகள் நடத்தப்படுவது அவசியமாயிருக்கும்.

ஆகையால் இந்தத் தேவைகள் அனைத்தையும் சந்திக்கும் வண்ணமாக, இந்த வருஷத்தின் மார்ச் மாதம் துவங்கி, ஒவ்வொரு மாதத்திற்கான பாடத்திட்டத்தினை நாம் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கின்றோம். இந்தப் பாடத்தின் தனித்தன்மை என்னவெனில், இவைகள் போதிப்பதில்லை, மாறாக கேள்வி மாத்திரமே கேட்டு, மாணவனுக்கு அதுசம்பந்தப்பட்ட வேதவாக்கியங்களையும், வாட்ச் டவர் கட்டுரைகளையும் குறிப்பிட மாத்திரமே செய்கின்றது. இப்படியாகச் சிந்தனை தூண்டப்படுகின்றது மற்றும் சத்தியமும் மிகத் தெளிவாக மனதில் பதிகின்றது.

கீழே இடம்பெறும் மார்ச் மாத பாடங்களுக்கான 30 கேள்விகளானது, முப்பது ஞாயிற்றுக் கிழமைகளுக்குப் போதுமானதாயிருக்கும்; எனினும் மிகவும் நல்ல உணவாய்க் காணப்படுகின்றபடியால் ஒவ்வொரு கூட்டத்தின் போதும் நாம் அநேகம் கேள்விகளைக் கையாளலாம். எத்தனை கேள்விகள் என்பது, கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையையும் மற்றும் அவர்கள் எவ்வளவுக்கு ஆராய்ச்சிப் பாடத்திற்குப் பழக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும், எவ்வளவுக்குக் கூட்டத்தை வழிநடத்துபவரின் திறமை காணப்படுகின்றது என்பதையும் சார்ந்திருக்கும். இதை நடத்துவதில் மிகவும் திறமிக்கவர்களாய் இருப்பவர்கள் யார் என்று கண்டுகொள்ளத்தக்கதாக திறமிக்க சகோதரர்களாய்த் தென்படுபவர்கள் அநேகரைச் சுழற்சியில் வழிநடத்திடுவதற்குச் சபையார் நியமித்திடுவது நலமாயிருக்கும். இப்படியானவர்கள் அநேகமாக உங்களால் மூப்பர்களாக ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மத்தியில் கண்டுபிடிக்கப்படலாம்.

ஒருவேளை சபையார் சிறிய எண்ணிக்கை உடையவர்களாய் இருப்பார்களானால், உதாரணத்திற்கு ஏழுபேர் காணப்படுவார்களானால், ஒவ்வொருவருக்கும் பின்வருகிற ஞாயிற்றுக் கிழமைக்கென ஒரு கேள்வியினைப் பிரித்துக்கொடுப்பது நலமாயிருக்கும். வாக்கு (vote) மூலம் மூப்பர்கள் கேள்விகளை இப்படிப் பிரித்திடுவதற்கு வேண்டிக்கொள்ளப்படலாம். ஒரு கேள்விக்கு ஒரு வாரக்காலம் படிப்பதற்குக் காணப்படுகின்றபடியால், அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருகையில் ஒவ்வொருவராலும் உதவிகரமாகவும், சுவாரசியமாகவும், அனைவருக்கும் பிரயோஜனமாகவும் காணப்படும் விதத்தில் கருத்துகளையும், வசனங்களையும், வாட்ச் டவர் (ரீப்பிரிண்ட்ஸ்) மற்றும் டாண் (volume) மேற்கோள்களையும் முன்வைத்திட முடியும். அனைவருமே வாட்ச் டவர் வாசகர்களாக இருப்பதினால், எண்களினால் கேள்விகள் பங்காகக் கொடுக்கப்படலாம், அதாவது சகோதரர் A-அவர்களுக்கு கேள்வி எண். 4; சகோதரி H-அவர்களுக்குக் கேள்வி எண். 5 என்பது போலாகும்.

ஒருவேளை சபையார் அதிக எண்ணிக்கை உடையவர்களாய், அதாவது இருபது முதற்கொண்டு நாற்பதுபேர்களைக் கொண்டவர்களாய் இருப்பார்களானால், கேள்விகளுக்கான பதிலை முன்வைத்திடுவதற்குச் சபையாரிலேயே மிகவும் திறமையுடைய அங்கத்தினர்களிலுள்ள ஏழு அல்லது எட்டு அங்கத்தினர்களுக்குக் கேள்வியைப் பிரித்துக்கொடுப்பது நலமாய் இருக்கும். எனினும் இதற்கென நியமிக்கப்பட்டவர்களால் கேள்விக்கான பதில் முறையாக முன்வைக்கப்பட்டப் பிற்பாடு, ஒவ்வொரு காரியமும் அல்லது கேள்வியும் பொதுவான கலந்தாராய்தலுக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

இப்படியாகக் கீழே இடம்பெறும் முப்பது கேள்விகளும் பயன்படுத்தப்பட்டால், இவை பெரிய எண்ணிக்கையிலுள்ள சபையாருக்குக் கிட்டத்தட்ட ஒரு மாதக்காலம் பிரயோஜனமான ஆராய்ச்சி மேற்கொள்வதற்குரிய திரளான உணவாய்க் காணப்படும். இந்த யோசனைகளின் பலனாக நமது கர்த்தருக்குத் துதியும், கனமும் உண்டாகத்தக்கதாகவும் மற்றும் அவரது ஜனங்களுக்குப் பலத்தையும், ஜெயத்தையும் கொண்டுவரத்தக்கதாகவும், இந்த யோசனைகளோடு எங்களது ஜெபங்களும் உங்களுக்குக் காணப்படுகின்றது.

* * * * * * *

## விசுவாசம் தொடர்பான - மார்ச் மாதப் பாடங்கள்

[ஒவ்வொரு கேள்வியைத் தொடர்ந்து, வேதவாக்கியமானது பதிலாக வழங்கப்பட்டுள்ளது; பின்னர் விளக்கவுரைக் கொடுக்கும் டாண் (volume) மற்றும் வாட்ச் டவரின் (ரீப்பிரிண்ட்ஸ்) பக்கத்தினுடைய எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். டாண் தொகுதிகளானது

ஆங்கில முதல் 6 எழுத்துக்களால் - A, B, C, D, E, F - சுட்டிக்காண்பிக்கப்பட்டிருக்கும் மற்றும் டவர்களானது (ரீப்பிரிண்ட்ஸ்) Z என்று எழுத்தினாலும், அதன் வருஷத்தோடு கொடுக்கப்பட்டிருக்கும். விளக்கவுரையைப் பெற்றிருக்கும் பத்தி எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும்].

(1) விசுவாசம் என்றால் என்ன? எபிரெயர் 11:1; 1 யோவான் 5:4; E. 125, par. 1; F. 689 (முதல் வரி).

(2) விசுவாசத்தின் அடிப்படையான இரண்டு உட்பொருட்கள் என்ன? Z. ’95-134.

(3) எதையும் போதுமான அளவு ஆதாரங்களின்றி எளிதில் நம்பக்கூடிய இயல்பிலிருந்து, விசுவாசம் எவ்வகையில் வேறுபடுகிறது? F.689, par. 1.

(4) உண்மையான விசுவாசத்தின் முக்கியத்துவம் என்ன? எபிரெயர் 11:6; F.315,693, par. 1; Z.'94-329 (2nd col. par. 1-3).

(5) விசுவாசத்திற்கும், அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன? ரோமர் 10:17; A.13, par. 1; A.20, par. 2; A.21, par. 1; Z.'94-329 (1st col. par. 2); Z.'99-3 (2nd col. par. 1).

(6) விசுவாசம், "தேவனுடைய ஈவாக" எவ்வாறு கருதப்படுகிறது? எபேசியர் 2:8; Z.'98-107 (1st col. par. 2); Z.'01-156 (1st col. par. 2,3).

(7) இரட்சிப்படைய கிறிஸ்துவுக்குள் விசுவாசம் அவசியமா? அப்போஸ்தலர் 4:10-12; யோவான் 3:16,36; A.102, par. 3; Z.'97-278. (See Topical Index,--"விசுவாசம்")

(8) இந்தச் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவுக்குள் வைக்கும் விசுவாசத்திற்கு உடனடியாகக் கிடைக்கும் பலன் என்ன? ரோமர் 5:1; A.231, par. 4; Z.'00-188 (1st col. par. 3, and 2nd col. par. 1,2).

(9) இயேசு எப்படியாக நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார்? எபிரெயர் 12:2; Z.'95-147 (1st col. par. 1).

(10) விசுவாசத்தை எளிமையாக அறிக்கையிடுவது அவசியமா? ரோமர் 10:10; Z.'00-149, (2nd col.); Z.'00-180 (1st col. par. 5); Z.'02-270 (1st col. par. 1,2,3).

(11) "உணர்வுகளுக்கு" விசுவாசத்தில் ஒரு முக்கிய பங்குள்ளதா? Z.'92-267.

(12) நீதிமானாக்கப்படுதலுக்கு அடிப்படையாய்க் காணப்படும் விசுவாசத்திற்கும் மற்றும் ஆவியின் கனிகளில் ஒன்றாகிய விசுவாசத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? F.688-692.

(13) "விசுவாசத்தின் நல்ல போராட்டம்" என்றால் என்ன? 1 தீமோத்தேயு 6:12; Z.'98-153,158, (2nd col.)

(14) நல்ல போராட்டத்தை நாம் எப்படிப் போராட வேண்டும்? Z.'95-201,202; Z.'98-158, (1st col. par. 2); Z.'98-159 (2nd col.); Z.'01-72 (2nd col. par. 3).

(15) நாம் யாருக்காக, யாரை எதிர்த்துப் போர்ப்புரிகிறோம்? பிலிப்பியர் 2:12; 1 யோவான் 3:16; எபேசியர் 6:12; Z.'98-153-155; F.599-658.

(16) "விசுவாசத்தினால் நடப்பது" என்பதற்குப் பொருள் என்ன? 2 கொரிந்தியர் 5:7; F.631, par. 2,3; Z.'00-57 (1st col.); Z.'95-92,93; F.142, par. 2.

(17) விசுவாசத்தின் சோதனைகள் ஏன் அனுமதிக்கப்படுகிறது? யாக்கோபு 1:3,4; 1 பேதுரு 4:12,13; F.642-644; Z.'96-54; Z.'95-134,135.

(18) விசுவாசத்தின் தற்போதைய வெகுமதிகள் என்ன? 1 கொரிந்தியர் 2:9, 10; F.689 (par. 2) to 692; F.686, par. 3.

(19) விசுவாசத்தினால் வருங்காலத்தில் நாம் பெறும் பயன் என்ன? 1 யோவான் 3:2; வெளிப்படுத்தல் 2:10; F.693,694, F.721 (par. 1,2) to 729.

(20) விசுவாசத்தில் இளைப்பாறுதல் என்பதன் பொருள் என்ன? எபிரெயர் 4:1-11; F.392-394; Z.'95-168,169; Z.'99-253 (1st col. par. 1).

(21) விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் பூரண நிச்சயம் என்பதற்கான விளக்கம் என்ன? எபிரெயர் 10:22; 6:11; Z.'00-169, par. 1.

(22) விசுவாசத்தின் முழு நிச்சயத்தை நாம் பெற்றுக்கொண்டு, அதை எப்படித் தக்கவைத்துக்கொள்வது? Z.'98-247; E.249,250.

(23) விசுவாசத்தின் பூரண நிச்சயத்திற்குத் தடையாய் இருப்பது எது? Z.'00-169,170.

(24) நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பது எப்படி? F.691, par. 2; Z.'96-86 (2nd col. par. 3).

(a) ஜெபம் மூலம். Z.'96-162,163.
(b) வேத ஆராய்ச்சி மூலம். F.315.
(c) தேவனுடைய வாக்குத்தத்தங்களைத் தொடர்ந்து நினைவுகூருவது மற்றும் உரிமைப்பாராட்டிக் கொள்வதன் மூலம். Z.'00-170 (1st col. par. 4).
(d) நம்முடைய அனுபவங்களைக் கவனிப்பது மூலம். Z.'00-170 (2nd col. par. 1,2).

(25) உங்களுடைய விசுவாசத்தை அதிகரிக்க "தற்கால சத்தியங்களின்" சில முக்கிய அம்சங்களைக் கூறவும்.

(26) கிரியைகளுக்கும், விசுவாசத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? யாக்கோபு 2:14, 17, 18, 22; Z.'00-343 (1st col. par. 1,2); Z.'01-231 (2nd col. par. 2,3).

(27) யார் இந்த "விசுவாச வீட்டார்"? கலாத்தியர் 6:10; Z.'00-368, (2nd col.)

(28) யாக்கோபு 5:14-16-ஆம் வசனங்களின் விளக்கம் கூறவும். யாக்கோபு 5:14-16; F.631-638.

(29) விசுவாசம் மற்றும் நம்பிக்கைத் தொடர்புடைய விஷயத்தில், கேடயம் மற்றும் நங்கூரம் எனும் அடையாளங்களுக்கான முக்கியத்துவம் என்ன? எபேசியர் 6:16; F.657, par. 5; எபிரெயர் 6:19; Z.'02-345 (1st col.)

(30) விசுவாசம் மற்றும் அறிவுக்கும் உள்ள தொடர்பு, ஆயிர வருட ஆட்சியில் எப்படிப்பட்டதாக இருக்கும்? Z.'00-238 (2nd col. par. 1, 2) to 239; F.106, (par. 3) to 107.

---

# மறைக்கப்பட்ட சிலுவை

ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவைதனை துன்பத்தின் மனிதனவர் சுமந்ததையே திரள் கூட்டம் பார்த்ததுவே,
அதன் கீழாக எப்படியிருந்ததென யாருமறியாரே,
அவர் இதயத்தினுள்ளே ஓர் மறைக்கப்பட்ட சிலுவைதனைச்சுமந்து வந்தாரே,
இரத்தம் சிந்தும்முழு மனுக்குலத்தின் துன்பமான கரும் பாவத்தின் சுமையும் கூட சுமையாக அழுத்தியதே,தேவனின் சட்டத்தை உடைத்து மீறியதால் வந்த பாவமும் சேர்ந்தழுத்தியதே,
முடகளால் முடி பின்னி,ஏளனமாய் வெறுந்தலையில் வைத்தே,அழுத்தி குரோதமுடன் வெறுத்தே,முகத்தினில்காறி உமிழ்ந்தனரே,
யோர்தான்கரையினில் உலக இரட்சகர் கண்டெடுத்த சிலுவையது,
கல்வாரிக்குவரும்வரையில் எங்கேனும் சற்றே இறக்கிவைத்தாரில்லை,
பல நேரங்களில் அவர் மனித உதவி வேண்டுவது போல தோன்றினாலும்,
அக்கொடுமையான சிலுவைதனை பரிதாபத்தினால் பகிர்ந்து கொள்ள எவருமில்லை,
எருகலேமே, எருசலேமே, அந்த பாரமான சிலுவை அந்த ஏங்குகின்றஇதயத்துக்கே எப்போது  மிகபாரமாகத்தோன்றியதென்பதைநீ அறிவாயோ?உன் ராஜா அவர்தாமே,விசுவாசத்தில்குறைந்தும், இருதயத்தில்கடினமும் கொண்டவரே,நீர் உதவி செய்ய மாட்டீர், ஆனால் இராஜாவோ உனைக்கடந்தே அவர் வழியில் சென்றுவிட்டார்,
அவருடனே எவருமில்லை,இவ்வுலகின் இருளான, வெட்கக்கேடான பெருந்துன்பப் பள்ளத்தாக்கினை தனியே கடந்தே சென்றுவிட்டார்,
ஓ.தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று சீடர்களே,ஒருமணிநேரம்கூட உங்களால் விழித்திருந்தே இராஜாவைப்பார்த்துக்கொள்ள முடியாதா?
அந்த கெத்சமெனேயின்காரிருள்வேளையிலே,நீவீர் அந்த பாரமான சிலுவைதன்னின் பாரம் குறைக்கமுயலவில்லையே,பற்றிஎரியும் பெருந்துன்பம்தன்னை பங்கு போட்டுக்கொள்ள மனமில்லையோ?
ஐயகோ, ஐயகோ, உங்கள் கண்இமைகள்பெருந்தூக்கத்தினாலே கனத்துவிட்டதே,நீங்கள்எல்லாம் களைப்பினாலே தூங்கிவிட்டீரே,

எனவே, களைப்படைந்த சகோதரரே, இப்போது நிம்மதியாய் உறக்கம்கொள்வீர், ஓய்வுகொள்வீர்.ஓர் பரலோகதூதனின் இறக்கைகள்தாமே மறைக்கப்பட்ட சிலுவைதன்னின் பாரம் குறைக்க உதவியதே,
உங்கள் எஜமான் பலம் பெற்றே, வேறோர் சிலுவையை சுமக்கவே ஆயத்தம் ஆகிவிட்டாரே,
கல்வாரிக்குக் கொண்டு செல்ல எந்த சிலுவை மிகப்பாரமாகும்?ரோமப்போர்வீரர் ஆசீர்வதிக்கப்பெற்றவர்தோளனில்சுமத்திய மரச்சிலுவையா?
இல்லை, இல்லை.அது பார்க்கவியலா கண்ணுக்குத்தெரியாமறைக்கப்பட்ட சிலுவைதானே,
அதுவே அவரை பூமியின்மேலே மிகப்பாரமாகவே அழுத்தி நசுக்கியதே,
வெளிறிய இதழ்கள் மென்மையாய்திறந்தே, எனது தந்தையே, எனது தந்தையே, என்னை ஏனோ கைவிட்டீரே? பூமிகூட சோகமடைந்ததே, அவர் மார்பின்மீதே அதைச்சுமந்து கொண்டாரே, சூரியன்கூட இருளாய்மாறியதே,

**--1036--**

எல்லாம் முடிந்தது, நிறைவேறிற்று, சரிநிகர் சமான விலை கொடுத்தாயிற்று,மறைக்கப்பட்ட சிலுவையோ,அந்த அன்பால் தளர்ந்த இதயம்தன்னை ஊடுருவவே குத்திக்கிழித்ததே,
உன் சிலுவையை எடுத்தே என்னைப்பின்பற்றிவா- எஜமான் சொன்னார்,
ஆம். அவர் உண்மை மணவாட்டியும் ஓர் சிலுவைதன்னை சுமந்தாக வேண்டும்,
மறைக்கப்பட்ட சிலுவை, வாழ்க்கையின் சூழ்நிலை மாற்றங்களாலே உருவானதல்ல,
அதன்நோய்கள்,வலிகள், இழப்புகள்,ஏழ்மை, பெருங்கூட்டம்
வெளிப்புறப்பார்வைக்காகஅடையாளமாகக்கொண்டதுவே, இல்லை, இல்லை,
எனக்கு முன்பாய்கடந்து போனவர்சென்ற இடுங்கிய பாதையில் சென்றிடுவோம்,
நாங்கள்கூடஅப்பெருந்துன்பம் சுமப்போம், உலகத்தின்மனஉறுதியற்ற ஒழுக்கக்கேட்டின் உணர்வுகளினின்றே மீறப்பட்டசட்டத்தின் பாவத்தின் சாபத்தின் பாரம்,நாம் அவரண்டை செல்வோம், தடையேதும் விதிக்காமலே, நம் வாழ்வதனை ஜீவபலியாக்கிடுவோம்.

**--1037--**

# நம்முடைய "பஸ்காவின்" நினைவுகூருதல்

ஒவ்வொரு வருடமும், நம்முடைய மீட்பரின் மரணம் குறித்ததான இந்த ஆசரிப்பானது, மிகவும் அர்த்தம் நிறைந்ததாகவும், மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது. தியதியினுடைய மாற்றங்களும், தியதியானது யூதருடைய கணக்கிடுதல் முறைமையின்படியாகக் கணக்கிடப்பட வேண்டும் என்பதுமான உண்மைகளானது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாகவும், பஸ்கா நிழலின் பல்வேறு அம்சங்களையும், தேவனுடைய ஆட்டுக்குட்டியின் மரணத்தில் அவைகளின் நிறைவேறுதலையும் – "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றாரே" என்பதையும் நம்முடைய மனங்களுக்கு நினைப்பூட்டுகின்றதாகவும் காணப்படுகின்றது. (1 கொரிந்தியர் 5:7)

எகிப்தினுடைய தேவன் (அ) அதிபதியான பார்வோனின் கீழ்க்காணப்பட்டதான இஸ்ரயேலின் கடுமையான அடிமைத்தனமானது, பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகையின் பாரத்தின்கீழ், சர்வ சிருஷ்டியும் தவித்துக்கொண்டிருக்கும் சீர்க்கேட்டின் அடிமைத்தனத்தை நம்முடைய மனங்களுக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது; மற்றும் பார்வோன், "இவ்வுலகத்தின் தேவனான" சாத்தானுக்குப் பொருத்தமான அடையாளமாய்க் காணப்படுகின்றார். மோசேயின் தலைமையின் கீழான இஸ்ரயேல் அனைத்தினுடைய விடுதலையில், மோசேயிலும் பெரியவரான தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவின் தலைமையின்கீழ், ஆயிரவருட யுகத்தின்போது, தேவனுக்கும், அவரது பிரமாணத்திற்கும் பயபக்திகொள்ளும் அனைவருடைய விடுதலையை, நம்மால் பார்க்க முடிகின்றது. பார்வோனும், அவனுடைய சேனைகளும் வீழ்த்தப்படுதலில், சாத்தானும், அவனது நடக்கையைப் பின்பற்றினவர்களும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவதற்கான நிழலைப் பார்க்கின்றோம். இந்த நிஜமான ஆசீர்வாதங்கள் அனைத்தும், கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ள நிஜமான கடந்துபோகுதலின் பலன்களாக இருக்கின்றது.

## அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி

உலகத்தோற்றத்திற்கு முன்பாக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக நமது கர்த்தரைக் குறிப்பிடும் வேதவாக்கியமானது, இந்தப் பஸ்காவின் அம்சங்கள் அனைத்தும், ஆதாம் மரணத் தண்டனைத் தீர்ப்பிற்குள்ளாக விழுந்தபோது மாத்திரமல்லாமல், ஆதாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே தேவனுடைய மனதிலும், திட்டத்திலும் தெளிவாய்க் காணப்பட்டுள்ளது என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகப் பார்க்கும்போது தேவனுடைய நீதியானது பல நூற்றாண்டு காலமாக வெளிப்பட்டிருப்பினும், திவ்விய அன்பானது இயேசுவின் முதலாம் வருகைவரையிலும் "வெளிப்படுத்தப்படவில்லை" என்றாலும், ஆதிமுதற்கொண்டே தேவனுடைய இருதயத்தில் தமது சிருஷ்டிகளிடத்திலான அன்பு காணப்பட்டுள்ளது என்பது நமக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பஸ்கா விடுதலையானது ஆயிரவருட ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகின்றதுபோல, பஸ்கா இரவானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது – தேவனில் விசுவாசம் கொண்டிருக்கும் அனைவரும் அவர் அளிக்கும் இரட்சிப்பிற்காகக் காத்திருக்கின்றனர். "விசுவாச வீட்டார்" அனைவரும் சோதனைகள் மற்றும்பரீட்சைகள் எனும் கசப்பான கீரைகளுடன், சத்தியம் எனும் புளிப்பில்லாத அப்பத்தைப் புசிக்கின்றவர்களாக, விடியலுக்காய்க் காத்திருக்கின்றனர் – "முதற்பேறானவர்களின்" சபையானது, "ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின்" பாதுகாப்பின் கீழ் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்ட நிலையினின்று நீதிமானாக்கப்பட்ட நிலைக்குள், மரணத்தினின்று ஜீவனுக்குள் கடந்துபோகப்படுகின்றனர். ஆ! இதற்காகவே! இதன் காரணமாகவே நாம் கர்த்தரில் தொடர்ந்து களிகூர்ந்து, நம்முடைய ஆட்டுக்குட்டியுடன், புளிப்பில்லாத அப்பத்தையும், கசப்பான கீரைகளையும் தொடர்ந்து புசிக்கின்றவர்களாய் இருக்கின்றோம்; இதன் காரணமாகவே இவையனைத்திற்குமான வருடாந்தர நினைவுகூருதலை ஆசரிக்கின்றோம்; "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7, 8)

இதையே நமது எஜமான் தம்முடைய சீஷர்கள் அனைவருக்கும் பின்வருமாறு கூறிக் கட்டளையிட்டார்: ". . . புசித்து, பானம்பண்ணும்போதெல்லாம் (என்னுடைய இரண்டாம் வருகைக்கு முன்புவரை, வருடாவருடம் நீங்கள் இதைச் செய்யும்போதெல்லாம்) என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் — நிழலான ஆட்டுக்குட்டி மற்றும் நிழலான இஸ்ரயேலினுடைய நிழலான முதற்பேறானவர்களுக்குச் சம்பவித்த நிழலான கடந்துபோகுதலுக்கான நினைவாக அல்ல."

பல நூற்றாண்டுகள் காலமாக, ஆதிக்கால திருச்சபையினுடைய இந்த எளிமையான வழக்கத்திற்கு எதிராளியானவன், கர்த்தருடைய ஜனங்களைக் குருடாக்கி உள்ளான்; முதலாவதாக **1038--**

உரோம திருப்பலியும்/பூசைபலியும், நினைவுகூருதலும் ஒன்றுதான் என்று கர்த்தருடைய ஜனங்களை நம்ப வைத்துள்ளான் மற்றும் பின்னர் காலாண்டுதோறும், மாதந்தோறும், வாரந்தோறும் என்ற புராட்டஸ்டண்டினர்களின் ஆசரிப்பு விதத்தைக் கொண்டுவந்தான். இப்பொழுது நாம் கிருபையால் "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கின்றாரே" என்ற சத்தியத்தை அறிய வந்தபோதே எவ்வளவு நாம் இழப்பிற்குள்ளாகக் காணப்பட்டோம் என்பதை அறிந்தவர்களானோம்; அவராலேயே "முதற்பேறானவர்களாகிய" நாம் நினைவுகூருதலை ஆசரிக்கின்றோம்.

நமக்காக நமது ஆண்டவரினால் திட்டமிடப்பட்டுள்ளதான ஆசீர்வாதங்கள் விஷயத்தில் இனிமேலும் நாம் ஏமாறப்போவதில்லை. நாம் "பண்டிகையை ஆசரிப்போம்." இந்த யுகத்தினுடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள விசுவாசிகள், "முதற்பேறானவர்களாகிய சபையாக" இருப்பதுபோல, நிழலில் காணப்பட்டுள்ளபடி வீட்டாரிலுள்ள யாவருக்கும் முதற்பேறானவர்களின் (கிறிஸ்துவின்) தலைமையின் கீழ் விடுதலைக் காணப்படும். மோசேயினால் விடுவிக்கப்படுகின்றதான பிற்பிறப்புகளில், அப்போஸ்தலன் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிப்பதுபோன்று, இறுதியில் கீழ்ப்படிதலுள்ளவர்கள் மாத்திரமே அடங்குவார்கள். (அப்போஸ்தலர் 3:23)

## அன்று இராத்திரியில்

ஒரு முக்கியமானக் காரியத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பது என்பதும், கல்வாரியில் 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நடைப்பெற்றதான (நாடகங்கள் அனைத்திலும்) மகா நாடகத்தில் இடம்பெறும் பிரதான பாத்திரங்களுடன்கூட நாம் காணப்பட்டு, அங்குக் காணப்பட்டதான செய்கைகளையும், பேசப்பட்ட வார்த்தைகளையும், பார்க்கப்பட்ட பார்வைகளையும் நாம் நினைவுக்குக் கொண்டுவருவது என்பதும் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாகவும், உற்சாகமூட்டுகின்றதாகவும் இருக்கின்றது. முன்பெல்லாம் அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க யூதர்கள் நாடினபோதிலும், "அவரது வேளை இன்னும் வராததினால்," அவர்மேல் கைப்போட அவர்களால் கூடாமற்போயிற்று என்று காணப்பட்டப்போதிலும், இந்த ஒரு சோக நிகழ்வுக்காக அந்த ஒரு வருடத்தை, அந்த ஒருநாளை, அந்த ஒரு மணிவேளையை, தேவன் முன்கூட்டியே தீர்மானித்துள்ளார் என்பதிலுள்ள தெய்வச் செயலை நாம் கவனிக்கையில், அது நம்முடைய பொதுவான விசுவாசத்தையும் பெலப்படுத்துகின்றதாக இருக்கின்றது. இந்த ஒரு மாபெரும் நிகழ்விற்கான துல்லியமான வேளை எந்த நாளில் நிகழ வேண்டும் என்று கவனமாய் நிழலில் பல நூற்றாண்டுகள் காலம் கொடுக்கப்பட்டது மாத்திரமல்லாமல், நமது கர்த்தரும்கூடத் துல்லியமாகவே "என்னுடைய வேளை வந்துள்ளது" என்று குறிப்பிடுகின்றார் மற்றும் நிஜமான ஆட்டுக்குட்டியெனத் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை அப்பம் மற்றும் திராட்சரசம் கொண்டு நிறுவும் தருணத்திற்கு அவர் காத்திருந்து, "வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்றார். (லூக்கா 22:14, 15)

## பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்

நமது கர்த்தரும், அவரது அப்போஸ்தலர்களும் எப்படிக் கவனமாய் இருந்தார்களோ, அப்படியாகவே நாமும் அவரது மரணத்திற்கான நினைவுகூருதலை, பண்டிகையைச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் ஆசரிப்போமாக – ஏதோ ஒருவேளையில், காலையில், மதியத்தில் (அ) இரவில் இல்லாமல், மாறாக இராப்போஜனமாக – ஏதோ ஒருநாளில் இல்லாமல், மாறாக அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்போமாக; வேறு எதையோ ஒன்றை, வேறெதோ நாளில் ஆசரிப்பதற்குப் பதிலாக, 'இதை' அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்போமாக.

காலை 9 மணிமுதல் கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டு அவர் "முடிந்தது" என்று சத்தமிட்டு மரித்த பிற்பகல் 3 மணிவரையிலான நாளுக்கு, இணையான இவ்வருடத்திற்குரிய நாள் ஏப்ரல் 17-ஆம் தேதி, திங்கட்கிழமையாகக் காணப்படுகின்றது. அவர் மாலை 6 மணிக்கு முன்னதாக யோசேப்பின் புதிய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் மற்றும் (அந்நேரமுதல் ஆரம்பித்த) அடுத்த நாளானது யூதர்களால் கொண்டாடப்படும் பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய, முதல் நாளாகக் காணப்பட்டது மற்றும் இது இவ்வருடத்தில் ஏப்ரல் 18-ஆம் தேதி, செவ்வாய்க் கிழமையாகக் காணப்படுகின்றது. நாம் நமது எபிரெய நண்பர்களுடன் பொதுவாய் எதையும் ஆசரிப்பதில்லை, மாறாக எந்த நாளில் நமது கர்த்தருடைய மரணம் சம்பவித்தது என்று அடையாளங்கண்டுகொள்வதன் மூலம் அதற்கு முந்தின மாலையானது, அதன் நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான தருணம் என்பதை தெளிவுப்படுத்திடவே, நாம் அவர்களுடைய தியதிகளைக் குறிப்பிடுகின்றோம்.

நமது கர்த்தர் நினைவுகூருதல் இராப்போஜனத்தை நிறுவினவராக, தாம் சிலுவையில் அறையப்படுவதற்கான முந்தின மாலையில், "தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில்," மாலை

மணிக்குமேல் அதை ஆசரித்திடும்படிக்கு, தம்முடைய பின்னடியார்களிடத்தில் கேட்டுக்கொண்டார். இது நாம் ஏற்கெனவே காண்பித்துள்ளதுபோல நீசான் 14-ஆம் தேதியாக இருக்கின்றது – அவர் மரித்த அதே நாளாக இருக்கின்றது; ஒரு சூரிய அஸ்தமனத்திலிருந்து மறு சூரிய அஸ்தமனம்வரை, மாலை 6 மணியிலிருந்து மறுநாள் மாலை 6 மணி வரைக்குமாக, தங்கள் நாட்களைக் கணக்கிடும் வழக்கத்தினை தேவன் யூதர்களுக்குக் கொடுத்துள்ளார்.

## ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுதல்

இயேசுவும், அவரது சீஷர்களும் யூதர்களாய் இருந்தபடியால், அவர்கள் யூதருடைய பஸ்கா இராப்போஜனத்தை ஆசரிக்கும் கடமையில் காணப்பட்டனர் மற்றும் அவர்கள் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியை, கீரைகளுடனும், புளிப்பில்லாத அப்பங்களுடனும் மற்றும் திராட்சரசத்துடனும் ஒன்றுகூடிச் சேர்ந்துப் புசித்தனர். கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளதான அந்த நிழலான அம்சங்கள் மீது நமக்கு இனிக் கவனம் இருப்பதில்லை. யூதருடைய பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தப்பிற்பாடு, நமது கர்த்தர் முதற்பேறானவர்களுக்கான தம்முடைய பலியின் நினைவாகவும் மற்றும் அவரோடுகூட உள்ள அவர்களது உடன்பலிக்கான நினைவாகவும் காணப்படும் புதிய நினைவுகூருதல் இராப்போஜனத்தை நிறுவினார்.

நமது கர்த்தர், தம்முடைய சீஷர்களுடைய பாதங்களைக் கழுவினதானது, பஸ்கா இராப்போஜனத்திற்குப் பின்பும், நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கு முன்னதாகவும் இடம்பெற்றதா அல்லது நினைவுகூருதல் இராப்போஜனத்திற்குப் பின்பாக இடம்பெற்றதா என்பதில் நமக்கு நன்கு தெளிவில்லை என்றாலும், அநேகமாக இரண்டாம் யூகத்தின்படியாகவே காணப்பட வேண்டும் (மத்தேயு 26:26) மற்றும் அது முதன்மை நிலைக்கான போட்டிமனப்பான்மையின் ஆவி அப்போஸ்தலர்களிடம் இன்னமும் காணப்பட்டதின் காரணமாக படிப்பினையாகவும், தாழ்மைக்கான மாதிரியாகவும் விளங்கும்படியாகவும் கொடுக்கப்பட்டது. எப்படியாக இருப்பினும் பாதம் கழுவுதலானது நினைவுகூருதலின் ஒரு பாகமல்ல மற்றும் இது கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் வழக்கமாகக் காணப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டதாக நாம் புரிந்துகொள்வதுமில்லை; இப்படியாகச் சிந்திக்காமல், வேறுபட்டுச் சிந்திக்கிறவர்களிடத்திலும், சொல்லர்த்தமாகவே ஒருவருக்கொருவர் பாதங்களைக் கழுவிக்கொள்ளும் முறைமையைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்திலும் நாம் சண்டைப்பண்ணுகிறதில்லை. ஒருவருக்கொருவர் உதவியோ அல்லது ஆறுதலோ அளிக்கும் விஷயத்தில் அது எவ்வளவு கனம் குறைந்த பணிவிடையால் ஏற்படுவதாக இருப்பினும், அதைச் செய்வதிலிருந்து நமது கர்த்தருடைய பின்னடியார்கள் தவிர்த்துக்கொள்ளக்கூடாது என்பதே அதன் படிப்பினையாகக் காணப்படுகின்றது என்பது நமது புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது. இப்படியாகச் சொல்லர்த்தமாகவே பாதங்களை இப்பொழுது கழுவுவது என்பது, சௌகரியத்திற்குத் தொலைதூரமானதாகவும், ஆறுதலளிக்கும் மற்றப் பணிவிடைகளை எப்போதும் புறக்கணித்துவிடுவதாகவும் காணப்படும்.

## இது என்னுடைய சரீரமாயிருக்கிறது

வழக்கமான யூதருடைய பஸ்கா இராப்போஜனம் முடிவடைந்த பிற்பாடே, மீதியிருந்த புளிப்பில்லாத அப்பத்தில் சிலவற்றை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்துக் கூறினதாவது: "வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." (மத்தேயு 26:26; மாற்கு 14:22; லூக்கா 22:19)

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்ற இந்த வார்த்தைகளானது, பல நூற்றாண்டுகள் காலமாய்க் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் விடைக்கிடைக்காத விவாதத்திற்குள்ளாய் உள்ளது; இந்த விவாதத்திற்கான அடிப்படை, பூசைபலி குறித்ததான உரோமன் கத்தோலிக்க உபதேசமாகும்; இந்தப் பூசைபலியினுடைய உபதேசமானது, பாதிரியாரின் ஆசீர்வாதத்தினால், அப்பம் இயேசுவின் உண்மையான மாம்சமாகிவிடுகின்றது என்றும், அதற்குப் பாதிரியார் போற்றினவராக, யாருக்காக பூசைபலியானது ஏறெடுக்கப்படுகின்றதோ, அவருடைய பாவங்களுக்காக அதை (புதிதான பலியென) பிட்கின்றார் என்றும் கூறுகின்றது. இந்தப் பூசைபலியினுடைய முறைமையானது, நமது கர்த்தருடைய நினைவுகூருதலை ஒத்திருக்கத்தக்கதாக, "இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது" என்ற வார்த்தைகளுக்கு மிகுந்த அழுத்தம் கொடுக்கப்படுகின்றது மற்றும் இப்படியாக அப்பம்தான் சரீரம் என்பதும், அதைப் பலிச் செலுத்துவதற்கு வாய்ப்புள்ளது என்பதும் நிரூபிக்கப்படுகின்றது. ஆனால் இந்த வார்த்தைகளைக் கர்த்தர் கூறினபோது, அவர் இன்னமும் மரிக்கவில்லை என்பது நினைவில் கொள்ளப்படும்போது, அனைத்துப் பிரச்சனையும் தீர்ந்துவிடும். ஆகையால் அவர் "இந்த அப்பம் என்னுடைய சரீரத்தை அடையாளப்படுத்துகின்றது" என்ற அர்த்தத்தில்தான் சொல்லியிருக்க வேண்டும்; ஏனெனில் வேறு ஏதேனும் அர்த்தத்தில் சொல்லியிருந்திருப்பாரானால் அது உண்மையாக

இருக்க முடியாது - காரணம் அவர் அப்போது அதைச் சொல்லும்போது மாம்சத்தில்தான் காணப்பட்டார் மற்றும் அவருக்கு அதுவரையிலும் எந்த விதத்திலும் மறுரூபம் ஏற்படவில்லை.

நமது கர்த்தருடைய வார்த்தைகளை அதற்கே உரிய எளிமையிலும், தெளிவிலும் பார்க்கும்போது, அதன் பாடங்கள் எத்துணை அருமையாயிருக்கின்றது. புளிப்பில்லாத (தூய) அப்பமானது, இந்த நினைவுகூருதலின்போது — நாம் புசித்து, நித்தியமான ஜீவனை அடைவதற்கு ஏதுவாக, பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததான அப்பத்தை, நமது கர்த்தரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அடுத்த கருத்தென்னவெனில், பரலோகத்திலிருந்து அருளப்பட்டதான இந்த "அப்பமானது," நம்முடையதாக்கிக்கொள்ளப்படுவதற்கெனப் "பிட்கப்பட" வேண்டும். ஆகையால் நமது கர்த்தர் பரலோகத்திலிருந்து "அப்பமாக" இறங்கிவருவது மாத்திரமல்லாமல், அவர் மரணத்தில் பிட்கப்பட வேண்டியதும் – நம்முடைய பாவங்களுக்காகப் பலிச் செலுத்தப்படுவதும் அவசியமாய் உள்ளது என்று நாம் பார்க்கின்றோம் – அவர் பிட்கப்பட்டால்தான், நாம் அவரது புண்ணியத்தினை நம்முடையதாக்கிக் கொண்டு, நித்தியமான ஜீவனை அனுபவிக்கமுடியும்.

## புது உடன்படிக்கைக்குரிய இரத்தம்

நமது கர்த்தருடைய அன்பான பலிக்கான இந்த நினைவுகூருதலின் ஒரு பாகமாக, "திராட்சப்பழரசம்" (fruit of the vine) அடுத்து அறிமுகப்படுத்தப்படுகின்றது. இது தம்முடைய இரத்தத்தை – "பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தத்தை" அடையாளப்படுத்துகின்றது என்று விவரித்தார். (மத்தேயு 26:28) இது அவசியமான ஈடுபலி விலைக்கிரயத்திற்கும், உலகத்தின் பாவங்களுக்காகக் கொடுக்கப்பட்டதான ஈடுபலி விலைக்கிரயத்திற்கும் எத்தகையதொரு நினைவுகூருதலாய் உள்ளது. பிட்கப்பட்ட அப்பமானது ஒருபகுதி பாடத்தினைக் கற்று தந்தது; "பாத்திரமானது" மீதியான பாடத்தினைக் கற்றுத்தந்தது. தேவனிடத்திற்கும், அவருடைய தயவினிடத்திற்கும் திரும்பிடுவதற்கு நமக்குப் போஷாக்கும், பலமும், உதவியும் மாத்திரம் அவசியமாயிராமல், நமக்கு விலையேறப்பெற்ற இரத்தமும் அவசியமாயுள்ளது – நீதியினுடைய ஆக்கினைத் தீர்ப்பினின்று நம்மை விடுவிக்கத்தக்கதாக நமக்கான மீட்பின் கிரயமாக நமது கர்த்தருடைய ஜீவன் அவசியமாயுள்ளது.

கர்த்தருடைய சீஷர்கள் விசுவாசத்தினால் "அப்பத்திலும்," "பாத்திரத்திலும்" பங்குகொள்ள வேண்டும் (துங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டும்) இல்லையேல் அவர்களால் அவரோடுகூட ஒன்றாய்க் காணப்படமுடியாது. இதற்கும்மேலாக, இந்த நினைவுகூருதலுக்கு இன்னும் ஒரு கண்ணோட்டம் காணப்படுகின்றது என்று அப்போஸ்தலன் காண்பிக்கின்றார். இப்படியாகப் புசித்து, பானம்பண்ணும் நாம் – இப்படியாக நமது இரட்சகருடைய புண்ணியங்களில் பங்கெடுக்கும் நாம் – அவரோடுகூட அவரது "அங்கத்தினர்களென," அவரது "சரீரமெனப்" பிட்கப்படுபவர்களாகக் கருதப்படுகின்றோம் மற்றும் அவருடைய வழிகாட்டுதலின் பேரில், அவரது ஊழியத்தில் பலியாக்கப்படும் நம்முடைய ஜீவியங்களானது, அவரது பலியின் பாகமாகக் கருதப்படுகின்றது. அப்போஸ்தலனின் வார்த்தைகளானது பின்வருமாறு: "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் (கிறிஸ்துவில்) பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)

ஆ, ஆம்! கர்த்தருடைய பாடங்கள் எத்துணை ஆழமாய் உள்ளது மற்றும் அவைகளை நாம் ஆழமாய்ப்பார்க்கையில், அதிகமான அழகை நாம் காண்கின்றோம் மற்றும் அவைகளை நாம் உணர்ந்து, மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியும்போது நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் அதிகமதிகமாய்த் திறக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இரண்டு விதத்தில் "நாம் பண்டிகையை ஆசரிக்கக்கடவோமாக": (1) நமது மீட்பரினால் நமக்காகச் செய்யப்பட்டதான மாபெரும் வேலையையும், அவர் வாயிலாக நமக்கு அருளப்பட்டதான கிருபையின் ஐசுவரியங்களையும் உணர்ந்துகொண்டு ஆசரிப்போமாக; மற்றும் (2) நமது மீட்பரோடுகூட உடன்பலிச் செலுத்துவதற்கான - அவரது ஊழியங்களில் நம்முடைய ஜீவனைச் சகோதரருக்காக ஒப்புக்கொடுப்பதற்கும் மற்றும் இப்படியாக "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்கும்" உரிய நமக்கான சிலாக்கியத்தினை உணர்ந்து ஆசரிப்போமாக. (கொலோசெயர் 1:24)

"கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை" என்று சொல்லும்போது, அது அனைவருக்கும் போதுமானதாய் நமது கர்த்தரினால் பாடுபட முடியவில்லை என்பதையோ, அவர் பட்டப்பாடுகள் அனைவருக்கும் போதுமானதாய் இல்லை என்பதையோ குறிக்காமல், மாறாக நாம் அவரது சுபாவத்திலும், அவரது மகிமையிலும் பங்கடைய வேண்டும் என்று அவர் விரும்பும்

கொண்டுள்ளதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது; அவரோடுகூடப் பாடுபடுவதின் மூலம் மாத்திரமே, அவரது அங்கத்தினர்களௌன நாம் அவரது மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கடைவதற்கு அனுமதிக்கப்பட முடியும்.

## கர்த்தருடைய மரணத்தை அறிவிக்கிறீர்கள்

அனைத்து இடங்களிலுமுள்ள கர்த்தருடைய சகோதர சகோதரிகள் அனைவரும், எங்களோடுகூடக் கர்த்தரின் நினைவுகூருதலை அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் விஷயத்தில் இணைந்துகொள்ளும்படிக்குப் புத்திமதிக் கூறுகின்றோம். விசுவாசத்தையும், அர்ப்பணிப்பையும் அறிக்கைபண்ணுகிறவர்கள் கூடிக்கொள்ளுங்கள்; இப்படியில்லாத மற்றவர்களை வற்புறுத்தாதீர்கள். வாய்ப்பிற்கேற்ப நாம் இரண்டுபேராக மற்றும் மூன்று பேராக மற்றும் திரளான கூட்டங்களாகக் கூடிக்கொள்வோமாக. உங்கள் அருகாமையிலுள்ள சகோதரர்களுடன் கூடிக்கொள்ளத்தக்கதாக, தேவைப்படும் பட்சத்தில் ஒன்று (அ) இரண்டு தினங்கள் விடுமுறை எடுத்துக்கொள்ளுங்கள். பணத்தின் மீதான கவனங்களானது, அனைத்தையும் தீர்மானம் செய்வதற்கு அனுமதித்துவிடாதீர்கள். கர்த்தரோடும், நேர்மையாய் அவரது நினைவுகூருதலை ஆசரிப்பவர்களோடும் காணப்படுகின்ற அந்த ஒருநாள் விருந்தானது, சாதாரணமான பல உணவுகளைக்காட்டிலும் நமக்கு விலையேறப் பெற்றதாகும். மனுஷன் பூமிக்குரிய அப்பத்தினால் மாத்திரமல்லாமல் விசேஷமாகப் பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததான அப்பத்தினால் பிழைக்கின்றவனாய் இருப்பான்.

ஒருவர்கூடத் துணைக்கு இல்லாமல் தனிமையாய்க் காணப்படுகிறவர்களும்கூட இந்த நினைவுகூருதலை ஆசரிப்பார்களாக. சோடா ரொட்டிகளானது/பிஸ்கோத்துகளானது, புளிப்பில்லாத அப்பங்களாகத்தான் காணப்படுகின்றது மற்றும் இதையே பயன்படுத்திக்கொள்ளலாம்; ஒருவேளை நீங்கள் ஏதேனும் எபிரெய குடும்பத்தினருக்கு அருகாமையில் வாழ்கின்றீர்களானால், அவர்களிடமிருந்து புளிப்பில்லாத அப்பத்தை (ரொட்டியை) ஒன்று (அ) இரண்டு, சென்று கொடுத்து, வாங்கிக்கொள்ளப்படலாம். "திராட்சப்பழரசத்தை" (fruit of the vine) பொறுத்தமட்டில், நீங்கள் ஒரு குப்பி திராட்சப்பழச்சாறை ஒவ்வொரு கோடைக்காலத்தின்போதும் சேமித்து வைத்திருக்கலாம்; ஒருவேளை இப்படியாக நீங்கள் வைத்துக்கொள்ளவில்லையெனில், நீங்கள் உலர் திராட்சைகளை வேகவைத்து, அந்த இரசத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; அது திராட்சப்பழரசமாகக் (fruit of the vine) காணப்படும்.

நினைவுகூருதலுக்கான இந்த ஆயத்தங்கள் அடையாளச் சின்னங்களினுடைய உண்மையான அர்த்தம் மறந்துபோகுமளவுக்கு, நம்முடைய நினைவுகளை ஆக்கிரமித்துக்கொள்ளத்தக்கதாய் நாம் அனுமதிக்காமல் இருப்போமாக. நினைவுகூருதலுக்கு முந்தின நாட்களிலும், அடுத்துவரும் நாட்களிலும், முடிந்தமட்டும் ஜெபம் செய்வதற்கும், நினைவுகூர வேண்டிய அந்த மாபெரும் நிகழ்வுகளைத் தியானிப்பதற்கும் மற்றும் நன்றியுடன்கூடிய சந்தோஷத்துடன் நம்முடைய இருதயங்களில் ஜீவ அப்பத்தினைப் புசிப்பதற்கும் இடம் கொடுப்போமாக.

நினைவுகூருதலுக்குப் பின்னர் — அடையாளமான பாத்திரம் மற்றும் அப்பத்தில் பங்கெடுத்தப் பின்னர், நமது கர்த்தர் செய்த மாதிரியின்படியே, நாமும் கூட்டத்தை நிறைவுசெய்வதற்கு மீண்டுமாக பரிந்துரைக்கின்றோம். "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு புறப்பட்டுப்போனார்கள்." (மத்தேயு 26:30) நாமும் இப்படியே செய்வோமாக. பொதுவாக நாம் சொல்லும் வாழ்த்துதல்களைத் தவிர்த்திடலாம்; கர்த்தர் கெத்செமனேக்குச் சென்றதும் – பிரதான ஆசாரியனின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் – பிலாத்துவின் முன்னிலையிலும், ஏரோதின் முன்னிலையிலும், மீண்டுமாகப் பிலாத்துவின் முன்னிலையிலும் அழைத்துச் செல்லப்பட்டதும் – அவர் அடிக்கப்பட்டதும் – ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதும் – தம்முடைய சிலுவையைச் சுமந்து சென்றதும் – நம்முடைய பாவங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டதுமான நிகழ்வுகளின்மீது நம்முடைய நினைவுகள் கடந்துபோவதாக. *இந்த நினைவுகளானது நம்மை அதிகமதிகமாய்க் கர்த்தரை மதிக்கச் செய்திடும் மற்றும் அதிகமதிகமாய்ப் பாவத்தை நாம் வெறுத்திடச் செய்திடும்* மற்றும் இப்படியாக நாம் "எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" என்று நம்மை நன்கு உணர்ந்துகொள்ளச் செய்திடும்.

*****

R 3534/ ஏப்ரல் 1905

# மிகவும் விலையேறப்பெற்ற தைலம்

## யோவான் 12:1-11

*"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்."* மாற்கு 14:8

அன்று சனிக்கிழமை இரவாகக் காணப்பட்டிருக்க வேண்டும் என நாம் கருதுகின்றோம்; அதாவது, யூதர்களுடைய ஓய்வுநாள் ஆரம்பமாகும் மாலையில் ஆறு மணிக்குப் பின்னர், இயேசுவும் அவருடைய சீஷர்களும், மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்ட லாசருவும், அக்குடும்பத்தின் மற்றச் சில நண்பர்களோடு விசேஷித்த கனத்தை இயேசுவுக்குக் கொடுக்கும்படியாக அவருடைய நண்பர்களின் வீட்டில் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த விருந்தில் அமர்ந்தார்கள். அவ்வீட்டிற்கு அவர் வந்துபோவதை, எப்பொழுதும் அவ்வீட்டார் விரும்பினார்கள். மேலும், பதிவுகள் தெரிவிக்கிற காரியங்களை வைத்துப்பார்க்கையில், அவருடைய ஊழிய நாட்களில், மற்ற வீடுகளுக்கு செல்வதைக்காட்டிலும், இவ்வீட்டிற்கே அவர் வந்துபோய் உள்ளார் என நாம் அறிந்துக்கொள்கின்றோம். இது பெத்தானியாவிலுள்ள லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீடாகும். இது, குஷ்டரோகியாகிய சீமோனின் வீடு என்றும் அழைக்கப்பட்டது. மேலும், இந்தச் சீமோன், இக்குடும்பத்தில் தலைவராகிய தகப்பனாய் இருந்தார் என்று ஒரு அனுமானம் நிலவிக்கொண்டிருக்கிறது; வேறொரு அனுமானமோ, இந்த சீமோன் மார்த்தாளுடைய கணவர் என்றும், இப்பாடத்தின் சம்பவங்கள் நடந்த தருணத்தில் அவள் விதவையாய் இருந்தாள் என்றும் காணப்படுகின்றது.

நமது கர்த்தரும், அவர் சீஷர்களும் எருசலேமுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் போகிற வழியில் புறநகர் பகுதிகளில் பெத்தானியா காணப்பட்டது. அதற்கு முந்தின தினமாகிய வெள்ளிக்கிழமை அல்லது யூதர்களின் வாரத்தின் ஆறாம் நாளன்று, அவர்கள் அநேகமாக அங்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். அவர்களை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்த மார்த்தாளும், மரியாளும் அருமையான விருந்தை ஆயத்தம் செய்தார்கள். மேலும், யூதர்களின் முறைமையின்படி ஓய்வுநாளில் வேலை செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததினால், இப்படிப்பட்ட தருணங்களில் உணவு பண்டங்கள் முன்கூட்டியே ஆயத்தம் பண்ணப்பட்டிருக்க வேண்டும். பெத்தானியாவில் அவர்கள் கைக்கொண்ட ஓய்வுநாளைக் குறித்து எந்தப் பதிவுகளும் கொடுக்கப்படவில்லை என்றாலும், கர்த்தர் மற்றும் அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் மற்றும் அக்குடும்பத்தின் அருமையான அங்கங்கள் மத்தியில் நடந்த மகிழ்ச்சியான சம்பாஷணைகளை நாம் நன்கு கற்பனை செய்துகொள்ளலாம்.

## சமுதாய வாழ்வில் இயேசு

ஆண்டவருடைய ஞானமுள்ள மற்றும் அன்பான வார்த்தைகள் பதிவு செய்யப்படவில்லையென்றாலும், நல்ல மனுஷனுடைய இருதயத்தில், நன்மையான பொக்கிஷங்கள் நிரப்பப்பட்டிருக்கும் என்றும், அப்படியாக நன்மையால் நிறைந்த இருதயத்தின் நிறைவால் வாய் பேசும் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, அன்று விளையாட்டுத்தனமான வார்த்தைகளுக்கோ அல்லது செயல்பாடுகளுக்கோ இடம்கொடுக்கப்படாமல் மாறாக, சரியான இருதய நிலைமையிலுள்ள யாவருக்கும் புத்துணர்வை உண்டுபண்ணும் ஆவிக்குரிய களிக்கூருதலிலும், இளைப்பாறுதலிலும்அன்றையநாள் செலவழிக்கப்பட்டிருக்க வேண்டும். இதே கோட்பாடுகள், கர்த்தருடைய பின்னடியார்கள் எவ்விடங்களில் காணப்பட்டாலும், அவர்களுடைய சூழ்நிலைகள் என்னவாகக் காணப்பட்டாலும், கூட அவர்களுக்குப் பொருந்தக்கூடியதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களுடைய இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நன்மையான காரியங்களை மட்டுமே பேச வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள், ஆனால், ஒருவேளை இதற்கு எதிர்மாறாகக் காணப்படுவார்களேயானால், அவர்கள் விழிப்படைந்து தங்கள் தலையை (இவ்விஷயம் குறித்ததான அறிவை) மாத்திரம் சரிச்செய்து கொள்வதோடல்லாமல், இருதயத்தின் மாறுபாடுகளையும் சரிச் செய்துகொள்ள வேண்டும்.

லாசருவினாலும், அவருடைய சகோதரிகளினாலும் மிகவும் உயர்வாய்க் கருதிக்கொள்ளப்பட்டவரும், லாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரும்படி கூறி, தமது மேசியாவுக்குரிய அதிகாரத்தையும், தமக்குள் உயிர்த்தெழுதல் மற்றும் ஜீவனின் வல்லமை இருக்கின்றது என்பதையும் விவரித்துக் காட்டினவருமாகிய இயேசுவினிடத்தில், அவர்கள் கொண்டிருந்த அன்பை நாம் எழுத்துக்களில் காண்பிப்பதைக்காட்டிலும் நன்கு கற்பனை செய்துகொள்ளலாம். ஒருவேளை (லாசருவின் உயிர்த்தெழுதலாகிய), அந்த மாபெரும் சம்பவத்திற்குப்பின், நம்முடைய ஆண்டவர் பெத்தானியாவுக்கு இதுவே முதன்முறையாக சென்றிருக்க வேண்டும்.

நம்முடைய ஆண்டவர் பலதரப்பட்ட மக்களை நண்பர்களாகக் கொண்டிருந்தார். இவர்களில் சிலர் ஐசுவரியவான்களாகவும், சிலர் தரித்திரர்களாகவும், சிலர் நடுத்தரமான சூழ்நிலைகளிலும் இருந்தனர். பெத்தானியாவில் இருந்த இந்தக் குடும்பத்தினர் சௌகரியமான சூழ்நிலையின் கீழ்க் காணப்படும் வகுப்பாராய் இருந்தனர். மேலும், இவர்கள் சௌகரியமான சூழ்நிலைகளில் இருந்த காரியமானது, இவர்களுக்கு சொந்த வீடு இருப்பதின் மூலமும், இவர்களுக்குச் சொந்த கல்லறை இருப்பதின் மூலமும், கர்த்தரை விலையேறப்பெற்ற நளததைலம் கொண்டு அபிஷேகம் பண்ணி கனப்படுத்தும்படிக்கு அதிகம் பணம் செலவு செய்யத்தக்கதாக மரியாள் விருப்பமும், திராணியும் கொண்டிருந்ததின் மூலமும் உறுதிப்படுகின்றது. ஐசுவரியங்கள் அநேகருக்கு மாபெரும் கண்ணியாக இருக்கிறது. இன்னுமாக, ஐசுவரியவான்களில் அநேகர் இராஜ்யத்தில் பிரவேசிப்பது இல்லை என்றும் கர்த்தருடைய வார்த்தை அறிவிக்கின்றது. இவர்களுக்கு தற்கால ஜீவியத்தின் கவர்ச்சிகள் என்பது, மிகவும் சக்திவாய்ந்ததாகவும், தங்களுடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தடையாகவும் உள்ளது. அதாவது, தங்களுடைய அனைத்தையும் பலிச்செலுத்தவும், தங்களுடைய அனைத்தையும் இயேசுவின் பாதத்தில் ஒப்புவிக்கவும், தங்களுடைய பூமிக்குரிய வாய்ப்புகள் மற்றும் ஆசீர்வாதங்களைப் பயன்படுத்தும் விஷயத்தில், அவருடைய உக்கிராணக்காரர்களாக மாறுவதற்கும் தடையாக உள்ளது. இன்னுமாக, இவைகளை ஞானமாக அவருடைய ஊழியத்தில் பயன்படுத்துவதற்கும் மற்றும் தாங்கள் கொண்டிருக்கிறோம் என்று அறிக்கைபண்ணின அன்பையும், நேர்மையையும் விவரிக்கும் விதத்தில், அவைகளை அவருடைய ஊழியத்திற்குப் பயன்படுத்துவதற்கும் தடையாக உள்ளது.

பல கோணங்களில் பார்க்கும்பொழுது, மற்றவர்களுக்கு மிகவும் தாராளமாய்ச் செய்வதற்கும், மிகுந்த விருந்தோம்பல் காண்பிப்பதற்கும் என, ஜீவியத்தில் நடுத்தரமான (middle class) வசதி வாய்ப்புகள் காணப்படுவது நலமாய்த் தோன்றலாம். எனினும், நிலைத்து நிற்பதற்கும், அதேசமயம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கும், பெரும் திரளான வசதியுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது, நடுத்தரமான வசதியுங்கூட கொஞ்சம் அதிகமாகவே தோன்றுகின்றது. இதன் காரணமாகவே, இவ்வுலகத்தில் ஏழ்மையானவர்களே பிரதானமாக இராஜ்யத்தின் சுதந்தரவாளிகளாக இருப்பார்கள் என்று நமது கர்த்தர் அறிவித்த காரியங்கள் உண்மை என அறிந்துக்கொள்கின்றோம். அதாவது, பிரதானமாகக் கொஞ்சம் உடையவர்களும், அதிகம் பெற்றுக்கொள்வதற்கு கொஞ்சம் எதிர்ப்பார்ப்பு உடையவர்களும் மற்றும் இப்படிப்பட்ட எதிர்ப்பார்ப்பின் விளைவாக, கர்த்தரை பிரதானமாய் அன்பு கூருகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள பரம காரியங்களின்மேல் உடனடியாக மனதை திருப்பிக்கொள்ளுகிறவர்களுமே இராஜ்யத்தின் சுதந்திரவாளிகளாய் இருப்பார்கள்.

பெத்தானியாவின் வீட்டாருக்குச் சௌகரியமான சூழ்நிலைகள் இருந்ததுபோன்று நம்மிடத்தில் எந்தளவுக்குக் காணப்படுகின்றதோ, அதாவது தற்கால ஜீவியத்திற்குரிய நற்காரியங்களை எந்தளவுக்குப் பெற்றிருக்கின்றோமோ, அந்தளவுக்கு தக்கதாக இந்த ஜீவியத்திற்குரிய கவலைகளுக்கு எதிராகவும், இவ்வுலகத்தின் ஐசுவரியங்கள், இலட்சியங்கள், எதிர்ப்பார்ப்புகள் மற்றும் குறிக்கோள்களினுடைய வஞ்சனை தன்மைக்கும் எதிராகவும், விசேஷித்த விதமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்வது அவசியமாய் உள்ளது; இல்லையேல் இவைகள் நம்முடைய இருதயங்கள் கர்த்தரிடத்திலும், அவருடைய நோக்கத்தின் பேரிலும் காண்பிக்க வேண்டிய உண்மையையும், பக்தியையும் விட்டுவிலகச் செய்யும். மேலும், இவ்வுண்மைத் தன்மையையும், பக்தியையும் ஊக்குவிப்பதற்கும், தக்கவைப்பதற்கும் முழு விசுவாசமும் நம்பிக்கையும் தேவைப்படுகின்றது. சொல்லர்த்தமாகத் தரித்திரத்தில் இல்லாவிட்டாலும், ஆவியில் எளிமையுள்ளவர்களாய் இருக்க முடியும். அதிகபட்சமான பூமிக்குரிய ஐசுவரியங்களைப் பெற்றிருந்தோமேயானால், இடுக்கமான வழியில் பிரவேசிப்பதற்கு அதிகமான கிருபை தேவைப்படுகிறது.

## விலையேறப்பெற்ற நளதத் தைலம்

இரண்டு சகோதரிகளும் செய்யப்பட வேண்டிய காரியங்களைத் தங்களுக்குள்ளாக ஏற்கெனவே தீர்மானித்து வைத்திருந்தார்கள். மார்த்தாள் பந்தியில் உணவு பரிமாறினாள். மரியாளோ அபிஷேகம் பண்ணும் விசேஷமான பணியின் மூலம் பணிவிடை புரிந்தாள். பண்டைய யூதர்களின் வழக்கத்தின்படி உயரம் குறைந்த, நீண்ட மேஜைகளைச் சுற்றி விருந்தாளிகள் பக்கவாட்டில் சாய்ந்த படுக்கை நிலையில் அமர்வார்கள். ஒரு முழங்கையின் மீது சரீரத்தின் மேற்பாதியைச் சாய்த்துக்கொள்வதும், மற்றக் கரத்தைக் கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வதும் வழக்கமாய் இருந்தது. நம்முடைய கர்த்தர் இப்படிப் பக்கவாட்டில் சாய்ந்துப் படுத்த நிலையில் காணப்பட்டபடியினால், அவருடைய தலை பாகத்தையும், அவருடைய பாதத்தின் அருகேயும் மரியாளினால் மிகவும் சுலபமாக நெருங்க முடிந்தது. மரியாள் முதலில் அவருடைய தலையை அபிஷேகம் பண்ணி, பின்னர் அவருடைய பாதத்தைத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினாள்.

இந்தத் தைலத்தின் விலை 300 பணத்திற்கும் மேல் என்று 5-ஆம் வசனம் குறிப்பிடுகின்றது. ஒரு பணம் அன்றைய தினத்திற்கான ஒருவருடைய கூலியாகும் (மத்தேயு 20:2). இப்படியாக 300 பணம் என்பது, ஒரு வருடத்தின் உழைப்பினால் பெற்ற ஊதியமாகும். ஆகவே, இக்காலத்தில் இந்த 300 பணம் என்பது, இன்றுள்ள 300-லிருந்து 600 டாலர்களுக்கு ஒப்பிடலாம்.

## அவளால் இயன்றதை அவள் செய்தாள்

இப்படிப்பட்ட விலையுயர்ந்த தைலங்கள் மிக அரிதாகப் பயன்படுத்தப்பட்டது. உண்மையைச் சொல்லப்போனால் சக்கரவர்த்திகளும் கூட, இதைச் சிக்கனமாகப் பயன்படுத்தினார்கள். அதுவுமல்லாமல், அது பயன்படுத்தப்படும் சமயங்களில் பொதுவாகத் தலையின் மீதே ஊற்றப்படுகிறது. மரியாள் கர்த்தருடைய தலையில் தைலத்தை ஊற்றினபோது, மேற்கூறப்பட்ட அவ்வழக்கத்தைப் பின்பற்றினவளாகக் காணப்பட்டாள் என்பது மத்தேயு மற்றும் மாற்குவின் பதிவுகளிலிருந்து தெரியவருகிறது; ஆனால், இதைச் செய்த பிற்பாடோ, அவள் அவர் பாதம் அருகே வந்து, தைலத்தினால் அபிஷேகம் பண்ணி, தன்னுடைய நீண்ட கூந்தலினால் அவர் பாதங்களைத் துடைத்தாள். அன்பு கலந்த பக்திக்குரிய எத்துணை அருமையான காட்சி இங்கு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது! பாதங்கள் மனிதனுடைய சரீரத்திலேயே தாழ்மையானதும், கீழான அங்கமுமாக, மதிப்புக்குறைந்த அங்கமாக எப்பொழுதும் கருதப்படுகிறது. ஆனால், தலையிலுள்ள மயிரானது, அதுவும் விசேஷமாக, ஸ்திரீகள் விஷயத்தில் விசேஷித்த பொக்கிஷமாகவும், அவளுக்கு மகிமையாகவும் எப்போதும் கருதப்படுகின்றது. இவ்விதமாக, மரியாள் தனது மகிமையான தலைமயிரைக்கொண்டு அவருடைய பாதங்களைத் துடைத்த காரியமானது, மரியாள் தனது, கர்த்தரும் ஆண்டவருமாகிய அவரைத் தன்னைக்காட்டிலும், முற்றிலும் மேலானவராக மதிப்புடன் கருதியதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆரம்பத்தில், அவரை மனுஷர் மத்தியில் மிகவும் அருமை வாய்ந்த நபராகவும், ஒரு மனுஷனும் அதுவரைக்கும் பேசாதவைகளைப் பேசுகின்ற ஒரு மனுஷனாகவும் மரியாள் உணர்ந்துக்கொண்டாள்; பின்னரே அவர் ஒரு மாபெரும் போதகர் என்றும், விசேஷித்த காலத்திற்காக விசேஷித்தவிதமாய் அனுப்பப்பட்டவர் என்றும் அறிந்திருந்தாள். ஆனால், அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து எழுப்பினதின் மூலம் இறுதியாக, சர்வ வல்லமையுள்ளவரின் வல்லமை அவருக்குள் இருக்கின்றது என்றும், அவர் தேவனுடைய குமாரன் என்றும் அறிந்துக்கொண்டாள். ஆகவே, அவருடைய மேன்மையான நிலையை உணர்ந்தவாறு அவருக்குப் பொருத்தமான மரியாதையைச் செலுத்தினாள்.

அவரை இந்தப் பூமியின் சிங்காசனத்தின்மேல் அவளால் அமர்த்த முடியாவிட்டாலும், தான் அவருக்கு என்றுமே பயபக்தியுடன் காணப்படும் ஓர் ஊழியக்காரி என்பதை அவளால் காட்ட முடிந்தது. இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பாக அவரை மகிமைப்படுத்த அவளால் இயலாதபோதிலும், தன்னுடைய சொந்த வீட்டிற்குள் அவரை மகிமையும், கனமும் செய்யமுடிந்தது. அவளால் அவருடைய புகழை எடுத்துக்கூறவோ, அவருடைய மகத்துவங்களை எடுத்துக்கூறி பாட முடியாவிட்டாலும், அவளுடைய இருதயத்திற்குள் அவளால் அவரைக் குறித்துப் பாட முடிந்தது, இன்னுமாக, அவர்மேல் நறுமணதைலத்தையும் அவளால் ஊற்றவும் முடிந்தது. இந்த நறுமணதைலமானது, அவளுடைய வீட்டை நறுமணத்தினால் நிரப்பியதோடல்லாமல், அவளுடைய நாள் துவங்கி தற்காலம் வரையிலும் காணப்படும் பெண் இனத்திற்குரிய கனத்திற்கு இனிமையான நறுமணத்தை வழங்குவதாகவும் இருக்கின்றது. இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று கர்த்தர் கூறினார். அதாவது, இவள் தன்னால் இயன்றமட்டும் தன்னுடைய பக்தியை/அன்பை

வெளிப்படுத்தி உள்ளாள் என்றவிதத்தில் கர்த்தர் குறிப்பிட்டுள்ளார். "இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் இவள் செய்ததும் அறிவிக்கப்படும்" என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்ட தீர்க்கத்தரிசனம் எவ்வளவு உண்மையாக இந்நாள்வரைக்கும் நிறைவேறிவருகிறது! இது, ஓர் அன்பான இருதயத்தைக் குறித்தும், இனிமையான குணலட்சணம் குறித்ததுமான ஓர் இனிமையான நினைவுகூருதலாகும். இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய ஜனங்கள் அனைவர் மீதும் ஊற்றப்பட்ட நறுமணத்தினிமித்தம் உண்டான புத்துணர்வு, ஆசீர்வாதம் மற்றும் சுகந்த வாசனையின் வெளிச்சத்தின் கீழ் பார்க்கும்போது, மரியாளுடைய நளதம் தைலம் விலையுயர்ந்ததாக இருப்பினும், அது உண்டுபண்ணின பலன்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அது அவ்வளவு விலையுயர்ந்ததாகத் தோன்றவில்லை.

## இதை விற்று தரித்திரருக்குக் கொடுத்திருக்கலாமே

பணம் விரயமாக செலவழிக்கப்பட்டதைக் குறித்து யூதாஸ் எதிர்த்துப் பேசினான் என்று கூறப்படுகிறது. ஆயினும், அவன் தரித்திரனுக்காக இப்படி பரிந்துரையாமல், அவன் திருடனாக இருந்தபடியினால் தன் பணப்பையை நிரப்புவதற்கு இப்படி கூறினான் என்றும், நறுமணதைலத்திற்கு செலவிடப்பட்ட பணமானது, சீஷர்களின் கூட்டத்தாருக்கு பொருளாளராக இருக்கும் தன்னிடம் கொடுக்கப்பட்டிருந்தால், அதை தனக்காக தகாத விதமாய் பயன்படுத்தி இருக்கலாமே என்று வருத்தமடைந்தான் என்றும் சுவிசேஷங்கள் அறிவிக்கிறது. யூதாஸ்தான் அவர்கள் மத்தியில் முறுமுறுப்பை தூண்டிவிட்டான் என்பதில் ஐயமில்லை. மேலும், சீஷர் கூட்டத்தில் இருந்த சிலர், அவனுடைய கூற்றிற்கு சம்மதித்தார்கள், இப்படியிருக்க, மீதமிருந்த மற்ற அப்போஸ்தலர்கள், அவ்விஷயத்தைக் குறித்து எழுந்த சச்சரவில் பெரும்பான்மையாய்க் காணப்பட்டவர்களின் கருத்தினிமித்தம் இந்த வீண் செலவுகள் தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்திருக்க வேண்டும். ஆனால், இயேசுவோ, "அவளை தனியே விட்டுவிடுங்கள், என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இதை செய்தாள். தரித்திரர்கள் எப்போதும் உங்களோடு இருப்பார்கள், நானோ உங்களோடு எப்போதும் இரேன்" என்ற வார்த்தைகளைச் சொல்லி அவர்களுடைய வாயை அடைத்தார்.

இன்று காணப்படும் கர்த்தருடைய சீஷர்களில் அநேகர் சிக்கனம் தொடர்பான தங்கள் கருத்துக்களில் சில மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். நாம் வீண் செலவு செய்யாமல், எதிர்காலத்தைக் குறித்த சிந்தனையினிமித்தம் சேமிக்கிறவர்களாய் இருக்க வேண்டும் என்பதும், ஊதாரித்தனமாய் இல்லாமல், சிக்கனமாய் இருக்க வேண்டும் என்பதும் உண்மை தான். இப்படிப்பினை குறித்து நமது கர்த்தர் அடிக்கடி கூறியுள்ளார். உதாரணத்திற்கு, திரளான ஜனங்களைப் போஷித்த பிற்பாடு மீதியிருந்த துணிக்கைகளைச் சேர்த்து வைக்கும்படி அவர் கட்டளையிட்டார் என்று நாம் பார்க்கின்றோம் (மத்தேயு 14:20). ஆனால், சிக்கனம் சரியான விஷயங்களில் காணப்பட வேண்டும். கர்த்தருடைய விஷயத்தில், சிக்கனத்துடனும், கருமித்தனத்துடனும் காணப்படுகிறவர்கள் நிச்சயமாக இழப்புக்குள்ளாவார்கள். ஏனெனில், வேதவாக்கியங்கள் இப்படியாகக் காணப்படுகின்றது. அதாவது, "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு."

நம்முடைய சொந்த விஷயங்களில், சிக்கனமாய் இருப்பது குறித்தும், கர்த்தர் மற்றும் அவருடைய ஊழியம் தொடர்பான விஷயத்தில் ஏராளமாய் செலவுசெய்யத்தக்கதாக தாராளமாய் இருப்பது குறித்தும், நாம் கற்றுக்கொள்வது, நமக்குப் புதிய காரியமாய் உள்ளது. "இராஜாவினிடத்தில் நீங்கள் வரும்போது பெரிய பெரிய விண்ணப்பங்களை சுமந்து வாருங்கள்" என்று நாம் சில சமயம் பாடுகின்றோம், ஆனால், கிருபையின் சிங்காசனத்தினிடத்தில் பெரிய பெரிய விண்ணப்பங்களைக் கொண்டு வருகிறவன் கர்த்தருக்காக நறுமணதைலமுள்ள பெரிய வெள்ளைக்கல் பரணியை தன்னோடுகூட கொண்டு வந்திருக்கின்றானா என்று கவனிக்க வேண்டும். அதாவது, கர்த்தருடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்கோ, அல்லது தன்னுடைய விண்ணப்பங்களை நறுமணத்தினால் பிரமாண்டமாக்கிக் கொள்வதற்கோ தைலமுள்ள பெரிய வெள்ளைக்கல் பரணியை அவன் கொண்டுவராமல் மாறாக, தான் ஏற்கெனவே பெற்றுள்ள ஆசீர்வாதங்களை உணர்ந்துக்கொண்டிருப்பதற்கான அடையாளமாய்க் கொண்டுவர வேண்டும். துதி மற்றும் நன்றிகளாகிய தைலம் நிரம்பின வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வருபவர்கள் பொதுவாக கொஞ்சம் விண்ணப்பங்களையே உடையவர்களாகக் காணப்படுவார்கள். மாறாக, தாங்கள் ஏற்கெனவே கடனாளிகளாய் இருக்கின்றார்கள் என உணர்ந்த நிலையில் காணப்படுகின்றனர், அதாவது, தாங்கள் பெற்றுக்கொண்ட தெய்வீக கிருபைகளுக்குச் சரியான

பிரதிபலனை தாங்கள் ஒருபோதும் செலுத்த முடியாதவர்களாய் இருக்கின்றார்கள் என்று உணர்ந்து கொண்ட நிலையில் காணப்படுகின்றனர். தாங்கள் கேட்பது அல்லது விரும்புவதைக்காட்டிலும் அதிகமாயும் திரளாயும் கர்த்தருடைய கரங்களிலிருந்து நாளுக்கு நாள் பெற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதையும் உணர்ந்துகொள்கின்றனர். மேலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களே அல்லாமல் வேறொன்றிலும் இவர்களுடைய ஏக்கங்கள் திருப்தி அடைவதில்லை. இப்படிப்பட்டவர்களே, மரியாளின் நடத்தையைப் பின்பற்றி, ஆண்டவருக்கு நறுமணம் வீசும் தைலங்களைக் கொண்டுவருகின்றனர், அதாவது, தங்களுடைய ஜெபங்களையும் இருதயப்பூர்வமான நன்றிகளையும் அவரிடத்தில் கொண்டுவந்து எவ்விதமான விண்ணப்பங்களையும் கேட்காமல் மாறாக, தங்களால் தாங்க முடியாத அளவுக்கு போதகரிடமிருந்து பொழிந்துக்கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களாகிய சகல காரியங்களுக்கும் நன்றி தெரிவிக்கிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இக்காரியத்தைச் சரியாகக் கண்ணோக்கக்கூடியவர்கள், நம்மில் ஒருவரும் ஆண்டவருக்குக் கொடுக்கத்தக்கதாக, பாத்திரமான எதையும் பெற்றிருக்கவில்லை என்ற உணர்வையும் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள், அதாவது, நம்மிடத்தில் இருக்கும் சிறப்பானவைகளும், நம்முடைய மிக விலையேறப்பெற்ற பரிசுகள் அல்லது பலிகள் அவருக்குக் கொடுக்கத்தக்க பாத்திரமாய் இராமல் மாறாக, நம்முடைய இருதயங்களிலுள்ள உணர்வுகளை லேசாக வெளிப்படுத்துகின்றதாய் மாத்திரம் காணப்படுகின்றது என்ற உணர்வையும் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள். அவர் அங்கீகரிப்பாரானால், நாம் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருப்போம், மேலும், அதே இனிமையான குரல் நம்மிடத்தில்: "**இவன்** தன்னால் இயன்றதைச் செய்தான்" என்றும், "**இவள்** தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்றும் கூறுவதை இறுதியில் நாம் கேட்பதற்கு எவ்வளவாய் எதிர்ப்பார்க்கின்றோம்.

## தரித்திரர்கள் எப்பொழுதும் நம்மோடிருப்பார்கள்

சுவிசேஷ யுகம் முழுவதிலும் தரித்திரம் தொடர்ந்துவரும் என்று நம்முடைய ஆண்டவர் தீர்க்கதரிசனமாக உரைத்த விஷயங்கள் பெருமளவில் நிறைவேறியுள்ளது. வருங்காலத்தை நாம் நோக்குகையில், அவருடைய ஆட்சியின் கீழ் எந்தவிதமான துக்கமும், தரித்திரமும் இனி இராது என்பதை நாம் அறிந்துக்கொள்ளும்போது, மகிழ்ச்சியடைகிறோம். "அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்." இந்த மாற்றமான சூழ்நிலைகள் அனைத்தும் மனித பரிணாமத்தினாலோ, மனித கோட்பாடுகளினாலோ, மனிதனுடைய சமுதாயம், கூட்டுறவு இயக்கங்கள் முதலியவைகளாலோ உண்டானவைகள் அல்ல. மனித சமுதாயத்தை ஒட்டுமொத்தமாக ஐசுவரியமுள்ளவர்களாகவும், சௌகரியமுள்ளவர்களாகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும் ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஏறெடுக்கப்பட்ட இத்தகைய பல்வேறு முயற்சிகள் கடந்த காலங்களில் தோல்வியைத் தழுவியுள்ளது, எதிர்க்காலத்திலும் தோல்வியைக் கொடுக்கக்கூடியதாகவே காணப்படும். மனுக்குலத்தின் ஒவ்வொரு அணுக்களும் பாவத்தினால், உரு சிதைந்துக் காணப்படுவதினாலும், இந்த உரு சிதைந்துபோன மனுக்குலத்தின்மேல், சுயநலம், இலட்சியங்கள் மற்றும் ஆசைகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதினாலும், பாவம் தொடர்ந்துக் காணப்படும் வரையிலும் வலிகள், பாடுகள், தேவைகள் தொடர்ந்துக் காணப்பட்டுக் கொண்டே இருக்கும். மாபெரும் மேசியா, தமது மாபெரும் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஆளுகைசெய்து, பாவத்தையும், நீதி மற்றும் சத்தியத்திற்கு எதிராக இருக்கும் யாவற்றையும் ஒழித்துப்போட்டு, நீதியையும் சத்தியத்தையும் பூமியில் நிலைநாட்டும் வரையிலும் பாவம் தொடர்ந்துக் கொண்டிருப்பது நிச்சயமே.

அந்த மகிமையான நாள் வரும் வரையிலும், அனைவரும் இரவின் அழுகையின் வழியாகவே கடந்துச் செல்ல வேண்டியுள்ளது; இப்பொழுது பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமேல் கடந்துச் சென்றிருந்தாலும், தரித்திரர்கள் நம்மோடு இருக்கின்றார்கள். மேலும், தரித்திரர்களில் அநேகர், கர்த்தருடைய அருமையானவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்தத் தரித்திரம், பல வழிகளில், இக்காலத்துச் சூழ்நிலைகளில் ஆசீர்வாதமாகவே நிரூபிக்கப்படுகிறது. தரித்திரமும் தரித்திரத்தைக் குறித்த பயமும் அநேகரை சரியான நிலையில் நிற்க உதவியுள்ளது. மேலும், வாழ்க்கையின் போராட்டத்தில் அவர்களைச் சுறுசுறுப்பாகவும் ஆக்கியுள்ளது, இவ்விதமாக, அவர்களுக்குள் ஜெயங்கொள்வதற்கு ஏதுவான குணநலன்களும் வளர்கின்றது. வேறு கோணத்தில் பார்க்கையில், தரித்திரம் இன்னும் நிலவிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையும், நம்முடைய பராமரிப்பும், உதவியும் தேவைப்படுகின்ற நிலையில் நமக்கு நண்பர்களும் அயலகத்தாரும், இருக்கின்றார்கள் என்ற உண்மையும், இப்பொழுது மிகுந்த சௌகரியமான சூழ்நிலைகளில் காணப்படுவோருக்கு ஆசீர்வாதமாக விளங்குகின்றது. இந்த உண்மைகளினிமித்தம் இப்படிப்பட்ட சௌகரியமான சூழ்நிலைகளில் காணப்படுவோருக்குள் அனுதாபமும், பொறுமையும், அன்பும், நன்மை

செய்வதற்கான வாஞ்சையும், உதவி செய்வதற்கான வாஞ்சையும் வளர்கின்றது. ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், கர்த்தரோ அதை அவனுக்குத் திருப்பிக்கொடுக்கின்றார் என்று வாசிக்கிறோம். இந்த வாக்குத்தத்தம் மிகவும் ஐசுவரியமானது, மற்றும் இது எளிமையாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வார்த்தைகளுக்கு இசைவாக முதலீடு செய்வதற்கும், கர்த்தர் திருப்பிக்கொடுப்பதோடு அல்லாமல் மிகுந்த வட்டியையும் சேர்த்துக் கொடுக்கின்றார் என்று உணர்ந்துக்கொள்வதற்கும் அநேகர் அதிகம் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர் என்பதே வியப்பாய் உள்ளது.

## நான் உங்களோடு எப்போதும் இருப்பதில்லை

ஆண்டவரைக் கனப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் கொஞ்சமாகவே இருந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பின்பு, அவருடைய உபத்திரவங்கள் முடிவடைந்து, எல்லா தீமைகளையும், மனிதருடைய வல்லமையையும் கடந்து, அவர் மகிமையை அடையப்போகிறவராய் இருந்தார். ஆகவே, மரியாளின் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்பொழுது, (எல்லாம் முடிவடையப்போகும்) குறுகிய காலத்திற்குள் இவ்வளவு விலையுயர்ந்த தைலத்தை அவருக்குச் செலவழிப்பது ஏற்றதாய் இருந்தது. அதாவது, அந்நாளில் காணப்பட்ட நியாயசாஸ்திரிகள் மற்றும் பிரதான ஆசாரியர்களின் பழிப் பேச்சுக்களும், தூஷணங்களும் விழப்போகிற அவருடைய தலையானது, அதாவது இன்னும் கொஞ்ச நாட்களில் முட்களினால் உண்டாக்கப்பட்ட கிரீடம் சூட்டப்படப்போகின்ற அவருடைய தலையானது, இப்பொழுதே அவருடைய உண்மையான மதிப்பபையும், உண்மையான மகத்துவத்தையும், அவருடைய இராஜத்துவத்தையும், அவர் உண்மையில் தேவனுடைய குமாரன் என்று அறிந்த சொற்பமான ஜனங்கள் மத்தியில் ஒருவரால் (மரியாள்), கனப்படுத்தப்படுவது பொருத்தமானதாக இருக்கும். இன்னுமாக, பாலஸ்தீனாவின் மலைப்பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் நடந்துத்திரிந்த அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக சில சமயம் களைப்புற்ற நிலையில் காணப்பட்ட அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக இடுக்கமான மற்றும் கரடுமுரடுமான அர்ப்பணிப்பின் பாதையில் நடந்துக் கொண்டிருப்பவர்களின் பாதங்களுக்கு அடையாளமாய் இருக்கும் அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக விரைவில் சிலுவையில் ஆணியினால் ஊடுருவப்படப்போகிற அவருடைய அந்தப் பாதங்களை, இப்பொழுதே போதகரின் அடிச்சுவட்டில் நடக்க நாடுகிறவர்களும், அவருடைய பாதங்களை விரும்புகிறவர்களும், அவருடைய பாதங்கள் மீது நம்பிக்கை வைக்கிறவர்களும், அவைகளைக் குறித்து உணர்ந்துக்கொண்டவர்களுமாயிருக்கிற ஜனங்களில் ஒருவர் மேன்மையாகக் கனப்படுத்துவது பொருத்தமானதாய்க் காணப்படும்.

இக்காரியங்களைக் குறித்த சரியான கண்ணோட்டம் எது என்று நமக்குத் தெரியும்பொழுது, "அவளை தனியே விட்டுவிடுங்கள்," அவளைத் தொந்தரவு செய்யாதிருங்கள், அவளிடமிருந்து அதை எடுத்துவிடாதீர்கள் என்ற விதத்தில் காணப்பட்ட நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு, நாமும் உண்மையில் இணங்க முடியும். அதாவது, அவள் தைலத்தைப் பயன்படுத்த முன் வந்தபோது, அவளைத் தடுத்து, அவளிடமிருந்து தைலத்தை எடுத்து, அதை விற்றுவிடலாம் என்று அப்போஸ்தலர்கள் விருப்பம் கொண்டிருந்தபோது, அப்படியாக அவளைக் கட்டாயப்படுத்தி அப்போஸ்தலர்கள் அதை விற்றுப்போடாதபடிக்கு, நமது கர்த்தர் அவர்களைத் தடை பண்ணும் விதத்தில், அவளைத் தனியே விட்டுவிடுங்கள், அவளைத் தடைசெய்யாதிருங்கள், அவளிடமிருந்து அதை எடுத்துவிடாதீர்கள் என்பதுபோல் கூறினார்.

அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் மரியாளின் தைலம் ஒரு கிறிஸ்தவ குணநலனின் மிக அழகான அம்சங்களில் ஒன்றை அடையாளப்படுத்துகிறது. இயேசுவும், அப்போஸ்தலர்களும் தெரிவித்திருக்கிறபடி, கிறிஸ்துவின் முழுச்சபையும் விரிவான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றார்கள் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களுக்கு அதிக விலை கொடுத்துச் செலவு பண்ணுகிறதைக்காட்டிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய அபிஷேகம் பண்ணப்பட்ட சபையாருக்கு ஊழியம் புரியும்படி, மிகுந்த விலை கொடுத்து நறுமணதைலம் வாங்குபவர்களாகிய மரியாள் வகுப்பார் இன்றும் நம்மோடு காணப்படுகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், கடந்த 18 நூற்றாண்டுகளாக, சபையார் மத்தியில் காணப்பட்டும் இருந்தார்கள். சரீரத்தின் தலைக்கு மாத்திரம் அபிஷேகமும், நறுமணமும், கனமும், ஆறுதலும், மகிழ்ச்சியும் அளிக்கப்படுவதோடு நிறுத்தப்படாமல், அன்று முதல் இதைப்போலவே அனைத்து அங்கங்களும், இந்த நளததைலம் ஊற்றின மரியாள் வகுப்பாரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டவர்களாகவே காணப்படுகின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் ஆஸ்தி உடையவர்களாயும் அல்லது ஞானமுடையவர்களாயும்,

சொற்பொழிவாளர்களாயும் உள்ள வகுப்பாராய் எப்போதும் இருப்பதில்லை. மேலும், இவ்வகுப்பாரின் ஊழியம் ஆரவாரத்துடன் காணப்படுவதில்லை, ஆனால், அநேகருக்கு, அதிலும் விசேஷமாக உலகத்தாருக்கு இவர்களுடைய ஊழியம் முட்டாள்தனமாயும், வீணான காரியமாகவும் தோன்றும். ஆனால், கர்த்தரோ இவ்வகுப்பாருடைய ஊழியத்தை அங்கீகரிக்கின்றார். அதுபோல, இவர்களுடைய ஊழியத்தினால், ஆறுதலும், புத்துணர்வும் அடைந்த சரீரத்தின் அங்கங்களும் அங்கீகரிக்கின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் மீது, ஆசீர்வாதம் தங்கியிருப்பதாக!

## அங்கத்தினருக்குரிய கனம் - தலைக்குரிய கனம்

சுவிசேஷ யுகம் முழுவதும் அங்கங்கள் இப்படியான விதத்தில் ஆறுதல் அளிக்கப்பட்டிருப்பார்களானால், யுகத்தின் முடிவில் இருக்கும் பாத அங்கங்கள் மீது இவ்விதமான சில குறிப்பிட்ட ஆசீர்வாதங்களை நாமும் எதிர்ப்பார்க்கலாம் அல்லவா? யுகத்தின் முடிவில் நாம் வாழ்ந்துக்கொண்டிருப்பதை நன்கு அறிந்திருக்கிறோம். தலை மகிமையடைந்துவிட்டது, சரீர அங்கத்தினர்களில் பலர் திரைக்கு அப்பால் சென்றுவிட்டனர், மீதமுள்ள பாத அங்கத்தினர்கள் மட்டுமே மாம்சத்தில் உள்ளார்கள். மரியாள் ஆண்டவரின் தலையையும், பாதங்களையும் அபிஷேகித்தக் காரியமானது, இக்காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நமக்கு ஓர் அருமையான நிழலாக உள்ளது. நாம் அனைவரும் மரியாள் வகுப்பாராகவும், அதேசமயம் பாத அங்கங்கள் வகுப்பாராகவும் இருக்க முடியும் என்ற தெய்வீக ஒழுங்கின் அருமையான அம்சம் இங்கு வெளிப்படுகின்றது. வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், மரியாள் இயேசுவின் பாதங்களுக்கு ஊழியம் புரிந்ததுபோன்று, கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கமும் சரீரத்தின் உடன் அங்கங்களுக்கு, அதாவது பாதங்களின் உடன் அங்கங்களுக்குச் சில விதங்களில் ஊழியம் புரிய முடியும். கர்த்தருடைய உண்மையான ஜனங்களில் ஒவ்வொருவனும், இக்காரியங்களைக் குறித்துப் படிக்கையில் தேவனுடைய கிருபையினால், தானும் மரியாள் வகுப்பாரில் சேர்ந்துக்கொண்டு, விலையேறப்பெற்ற நளததைலத்தை வாங்கி, அதைச் சபையின் உண்மையான அங்கங்களாகிய கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பாதங்களின்மேல், தாராளமாய் ஊற்றவேண்டும் எனத் தீர்மானிப்பானாக. இங்குத் தைலம் அன்பையும், அனுதாபத்தையும், இரக்கத்தையும், தயவையும், பொறுமையையும், உதவி அளித்தலையும், ஆறுதல் அளித்தலையும் குறிக்கின்றது. இன்னுமாக இது, சகலவிதமான ஆவியின் கிருபைகள் மற்றும் கனிகள் நமக்குள் பெருகுவதையும், வளருவதையும், விருத்தியாகுவதையும் குறிக்கின்றது. இந்த ஆவியின் கனிகள் மற்றும் வரங்கள் ஒட்டுமொத்தமாக அன்பு என்னும் பெயருக்குள் அடங்குகின்றது.

அன்பான வாசகர்களே, மரியாள் இந்தப் பாடத்தில் செய்ததுபோல் நாம் செய்வது இயலாத காரியம் என்று நாம் அறிந்திருந்தாலும், இப்பொழுது உலகத்தில் காணப்படும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளாகிய, அவருடைய சரீரத்தின் பாத அங்கங்களுக்கு, ஒருவருக்கொருவர் இதைக் காட்டிலும் மிக முக்கியமான காரியங்களைச் செய்வது ஒவ்வொருவருக்கும் உரிய சிலாக்கியமாய் உள்ளது. அன்று மரியாள் சொல்லர்த்தமாகப் பயன்படுத்தின தைலத்தின் நறுமணம் கொஞ்ச நேரத்திற்குப் பின் இல்லாமற்போனது. ஆனால், நாம் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் அன்பின் அடிப்படையிலான சிறு வேலைகள் மற்றும் உதவிகள் கர்த்தருடைய பார்வையில் ஒருபோதும் மதிப்பை இழந்துப்போவதுமில்லை, மற்றும் ஒவ்வொருவருடைய கணிப்பிலிருந்து நித்திய காலத்திற்கும் அதின் நறுமணங்கள் இழந்துப்போவதும் இல்லை. வாழ்க்கையில் சிறிய காரியங்கள், சில வார்த்தைகள்,சிறிய அன்பளிப்புகள், அன்பான பார்வைகள், அவ்வப்போது செய்யப்படும் உதவிகளாகிய இந்தச் சின்ன சின்ன விஷயங்களே, மற்றவர்களுக்கான நம்முடைய நறுமணதைலமாகவும், வாய்ப்புகளாகவும் இருக்கின்றன.

## ஒருவரின் பாதங்களை ஒருவர் கழுவுதல்

பண்டைய காலத்தில் விசேஷமாகக் கிழக்கத்திய தேசங்களில் பாதங்கள் கழுவும் காரியமானது, உடம்புக்கு ஆறுதல் அளிப்பதற்காகச் செய்யப்பட்டு வந்த வழக்கமாக இருந்தது. ஆகவே, ஒருவருக்கொருவர் பாதங்கள் கழுவும் விஷயமானது, மிகவும் தாழ்மையான/மதிப்புக் குறைவான ஊழியங்கள் மூலமாகக் கூட ஒருவருக்கொருவர் ஆறுதலையும், புத்துணர்வையும் அளிப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. எவ்வளவுதான் மதிப்புக் குறைந்த ஊழியங்களாக இருப்பினும், அதன்மூலம் ஒருவருக்கொருவர் ஆறுதலையும், உதவியையும் அளிக்கக்கூடுமானால் அப்படிப்பட்ட மதிப்புக்குறைவான வேலைகள் மூலம், ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகளினிமித்தம் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதே கர்த்தருடைய பாடத்தில் அடங்கும் சாராம்சமாகும். இக்காரியத்தை நம்முடைய பாடத்திற்குப் பொருத்திப் பார்க்கலாம். மரியாள், நம்முடைய ஆண்டவரின் பாதத்தைத் தைலத்தினால் கழுவினாள். சபையில் உள்ள மிகுந்த

பயபக்தியும், அன்பும் உள்ள வகுப்பாராகிய மரியாள் வகுப்பார், ஒருவருக்கொருவர் உதவி செய்கிறவர்களாகவும், ஒருவருக்கொருவர் பாதங்களைக் கழுவக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இன்னுமாக, இவைகளை அவர்கள் முரட்டுத்தனமாயும் மற்றும் அருவருப்பாயும் கருதிச் செய்யாமல், ஒருவருக்கொருவர் அன்பினாலும், மரியாதையினாலும், ஏவப்பட்டு, ஒருவருக்கொருவருடைய பாதங்களை, மரியாளுடைய நளததைலம் அடையாளப்படுத்தும் இரக்கம், அனுதாபம், அன்பு மற்றும் உணர்ந்துகொள்ளும் தன்மையினால் கழுவுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். இன்னுமாக, இவர்கள் ஒருவருக்கொருவர் அன்புடனும், அக்கறையுடனும் ஆறுதல் அளிக்க வேண்டிய காரியத்திற்கு, மரியாள் தனது தலைமயிரினால் ஆண்டவருடைய பாதங்களைத் துடைக்க பயன்படுத்தின விஷயம், அடையாளமாய்க் காணப்படுகிறது.

இந்த அன்பு, அதாவது, இந்த நளததைலம் ஊற்றின மரியாளின் அன்பும், இரக்கமும் கர்த்தருடைய சரீர அங்கங்கள் மத்தியில் வளர்ந்துக்கொண்டிருப்பதற்கான சில ஆதாரங்களை நம்மால் பார்க்க முடிகின்றது. மேலும், கர்த்தருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கு எதிராகக் காணப்படும் உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனின் விரோதத்தை இவர்கள் உணர்ந்துக்கொள்கையில், இவர்கள் ஒருவருக்கொருவர் இன்னும் அதிகமான பயபக்தியுடன் காணப்பட்டு, அன்பினாலும், அனுதாபத்தினாலும், பராமரிப்பினாலும், ஒருவரையொருவர் இன்னும் அதிகமாகக் கனப்படுத்தி, ஒருவருக்கொருவர் அன்புடன் பேசியும், கிரியைகள் புரிந்த நிலையிலும் காணப்படுகின்றனர். இவைகளையெல்லாம் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இப்படியாக, அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஆவியின் கனிகளில் வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பதை நாம் அறிந்துக்கொள்ளும்போது மகிழ்ச்சியடைகிறோம். நாம் வீட்டை அன்பின் நறுமணத்தினால் முழுமையாய் நிரப்பும் வரையிலும், கிறிஸ்தவர்கள் எப்படி ஒருவருக்கொருவர் அன்பாய் இருக்கின்றார்கள் என்று முழு உலகமும் அறிந்துக்கொள்ளும் வரையிலும் அதாவது, குறுகினப் பார்வையில் அல்லாமல் பிதாவை அன்பு கூறுகிற அனைவர்மேலும் மற்றும் பிதாவின் வழிகளில் நடப்பதற்கு நாடுகின்ற அனைவர்மேலும் கிறிஸ்து கொண்டிருக்கும் அன்பை, பரந்த பார்வையில் முழு உலகமும் புரிந்துக்கொள்ளும் வரையிலும், இந்த நற்கிரியைகள் அனைத்தும் தொடர்ந்துக் கொண்டிருப்பதாக.

## நாம் இப்பொழுதே செய்வோம்

ஒருவேளை மரியாள், நளததைலத்தைக் கர்த்தருக்குப் பயன்படுத்தும் விஷயத்தில் ஒருவாரம் கழித்துச் செய்யலாம் என்று தாமதித்திருப்பாளேயானால், அவள் அதைக் கர்த்தருக்கு பயன்படுத்த முடியாமல், தனக்கே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். ஏனெனில், இந்தச் சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குள், நமது கர்த்தர் அடக்கம் பண்ணப்பட்டுவிட்டார். கல்லறையும் முத்திரையிடப்பட்டிருந்தது; கல்லறைக்கு முன்பாக உரோம போர்ச்சேவகர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஆக மொத்தம், அவருடைய மரித்துப்போன சரீரத்திற்குக்கூட அதனை ஊற்றுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. கர்த்தர் அவளுடைய விருந்தாளியாக வந்திருந்தபோது ஆண்டவரிடத்தில், தான் கொண்ட பக்தியை அவள் வெளிப்படுத்தினது எவ்வளவு நல்ல காரியமாக இருந்தது. கிறிஸ்துவின் பாத அங்கத்தினர்களும் வெகு சீக்கிரத்தில் அவர்கள் ஓட்டத்தை முடித்துத் திரைக்கு அப்பால் கடந்துச் செல்வார்கள்.

நம்முடைய தைலமுள்ள வெள்ளைக்கல் பரணிகளை எடுத்துக்கொண்டு வருவதிலும், அவைகளைக் கிறிஸ்துவின் பாத அங்கங்களாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள நமது அருமையானவர்கள் மேல் ஊற்றுவதிலும், நாம் தாமதம் காட்டக்கூடாது என்ற ஞானம் இங்கு நமக்கு விளங்குகின்றது. ஒருவேளை நாம் தைலத்தை ஊற்றும் நபர்கள் நம்மைக் கவனிக்காமல் இருந்தாலும் அல்லது நம்மைக் குறித்துச் சிந்திக்காமல் இருந்தாலும் அல்லது நம்மை பாத அங்கங்களில் ஒருவராகக் கருதி நம்மேல் தைலத்தை அவர்கள் ஊற்றாமல் இருந்தாலும் சரி, நாம் நம்முடைய பங்கை செய்வோமாக; நாம் மரியாள் வகுப்பாராக இருப்போமாக. சீஷர்களில் சிலர் நம்முடைய அன்பு மற்றும் பக்தியின் விஷயங்களில், நாம் வரம்புமீறிச் செயல்படுகின்றோம் என்று தவறாய்க் குற்றம் சாட்டினாலும் சரி, அவளைத் தனியே விட்டுவிடுங்கள், அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று மீண்டுமாக (அன்று எச்சரித்ததுபோல்) கர்த்தர் தங்களிடத்தில் கூறுவார் (எச்சரிப்பார்) என்பதைப் புரிந்துக்கொள்ளாமலேயே நம்மைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தாலும் சரி, நாம் மற்றவர்கள் மீது நமது இனிமையான நறுமண தைலங்களை ஊற்றிக்கொண்டிருப்போமாக. கர்த்தருடைய சபையாகிய விசுவாச வீட்டாரும், தைலத்தின் இனிமையான வாசனையினால் நிறைந்து இருப்பார்களாக. இந்த நளததைலமும், அதினால் செய்யப்படும் அபிஷேகமும் நம்முடைய

கர்த்தருடைய கணிப்பில், நம்மால் செய்ய இயன்ற காரியமாகவே கருதப்படுகின்றது. இதைக்காட்டிலும், வேறு எதுவும் அதிகமாகவோ அல்லது மேன்மையானதாகவோ அவருடைய பார்வையில் இருப்பதில்லை. இந்த நளததைலமும், அதினால் பண்ணும் அபிஷேகமும், அன்பை அதாவது மகாபெரும் அன்பைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கிறது. மேலும், இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது.

"ஒருவரையொருவர் கவனியுங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதாவது, நாம் ஒருவரில் ஒருவர் காணப்படும் பலவீனங்களைக் கவனிக்க வேண்டும், ஒருவருக்கொருவர் ஏற்படும் சோதனைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும், ஒருவருக்கொருவர் ஏற்படும் பரீட்சைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும்; உலகம் மாம்சம், மற்றும் எதிராளியானவனுக்கு எதிராக யுத்தம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் ஏறெடுக்கும் பிரயாசங்களைக் கவனிக்க வேண்டும்; உள்ளேயிருந்தும், வெளியிலிருந்தும் வரும் எதிர்ப்புகளுக்கு எதிராக, நெருக்கமான வழியில் நடந்துக்கொண்டிருக்கையில், ஒருவருக்கொருவர் ஏற்படும் உபத்திரவங்களைக் கவனிக்க வேண்டும். மேலும், இப்படியாக நாம் கவனித்துக் கொண்டு வரும்போது, நம்முடைய இருதயங்களில் இரக்கம் உண்டாகும்; இந்த இரக்கமானது ஒரே சரீரத்திலுள்ள உடன் அங்கங்களாகிய அனைவர்மேலும், மிக விலையேறப்பெற்றதும், தூய்மையானதும், சிறப்பானதுமான நளததைலத்தை ஊற்றுவதில் மகிழ்ச்சிக்கொள்ளும்.

**"ஊக்குவிப்பவர்களுடைய சமுதாயம்"** என்ற மாபெரும் சமுதாயத்தைக் குறித்து ஒருவர் பேசியுள்ளார். இந்தச் சமுதாயமானது, ஜீவியத்தின் பாதையில் சோர்ந்துப் போனவர்களையும், கால்கள் தள்ளாடிப் போனவர்களையும், தூக்கி நிறுத்துவதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் மிகுதியான உதவிகளைச் செய்து வருகின்றது. இந்தச் சமுதாயத்தின் அங்கங்களைப் பார்க்கும்போது, அது ஒரு மாபெரும் சமுதாயம் போன்று தோன்றவில்லை. ஆனால், இச்சமுதாயத்திடமிருந்து உதவியும், உற்சாகமும் பெற்றவர்களுடைய பார்வையிலும், கர்த்தருடைய பார்வையிலும் இது மாபெரும் சமுதாயமாகும். நளததைலம் ஊற்றின மரியாளை, இந்த "ஊக்குவிப்பவர்களுடைய சமுதாயத்தில்" முக்கியமான அங்கமாகச் சொல்லப்படலாம். தாம் படக்கூடிய பாடுகளையும், உபத்திரவங்களையும், சிலுவை மரணத்தையும் குறித்து எண்ணிக்கொண்டிருந்த நம்முடைய ஆண்டவருக்கு, மரியாள் வெளிப்படுத்தின அன்பு மற்றும் பக்தியின் கிரியைகள் எவ்வளவு விசேஷித்த ஊக்கத்தையும், புத்துணர்வையும் அளித்திருக்க வேண்டும் என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. சிலர் மாத்திரமே அவரைப் புரிந்துக் கொண்டிருந்தார்கள். சுற்றியிருக்கும் சீஷர்கள் கூடச் சூழ்நிலையைப் புரிந்துக்கொள்ளவில்லை. அவர்மேல் நம்பிக்கை கொண்டு, அவரிடத்தில் அன்பு வைத்திருந்த மரியாளாகிலும் அங்கு அவருக்குக் காணப்பட்டாள். இது, அவருடைய பிரயாணத்தின் எஞ்சியுள்ள நாட்களில், அவருக்குத் தைரியம் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## உண்மை

நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் அளிப்பதற்கும், உற்சாகமூட்டுவதற்குமென, தற்கால வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதின் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கும் விதத்தில் ஒரு எழுத்தாளர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"உங்களுடைய நண்பர்கள் மரிப்பது வரையிலும் அன்பும், இரக்கமும் உள்ள வெள்ளைக்கல் பரணியை முத்திரையிட்ட நிலையிலேயே வைத்துவிடாதீர்கள். உங்களுடைய நண்பர்களுடைய ஜீவியத்தை இனிமையாக்குங்கள். அவர்களுடைய செவிகள் கேட்கும் நிலைமையிலும் மற்றும் அவர்களது இருதயங்களானது உற்சாகமடைவதற்கு ஏதுவான நிலைமையிலும், நீங்கள் சொல்லும் வார்த்தைகளினால் சந்தோஷப்படக்கூடிய நிலைமையிலும் இருக்கும்போதே, உற்சாகமான வார்த்தைகளையும், மகிழ்ச்சியான வார்த்தைகளையும் பேசுங்கள். அவர்கள் மரித்துப்போன பின்னர் நீங்கள் கூறவேண்டுமென்றிருக்கும் அன்பான வார்த்தைகளை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே சொல்லுங்கள். அவர்களது சவப்பெட்டிகளுக்கு நீங்கள் அனுப்ப வேண்டுமென்றிருக்கும் மலர்களை, அவர்கள் மரித்துப்போவதற்கு முன்னதாகவே அவர்களது இல்லங்களைப் பிரகாசிப்பதற்கும், மணமூட்டுவதற்கும் என்றும் அனுப்பிவையுங்கள். ஒருவேளை என்னுடைய நண்பர்கள் நான் மரித்த பிற்பாடு, என்னுடைய சரீரத்தின்மேல் ஊற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனுதாபமும், பாசமுமாகிய நறுமணதைலங்களினால் நிரப்பப்பட்ட வெள்ளைக்கல் பரணிகளை எங்கோ மூலையில் வைத்திருப்பார்களானால், எனக்கு அவைகள் தேவைப்படும்போது, நான் அவைகளினால் புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையத்தக்கதாக, அவர்கள் அதை என்னுடைய

சோர்வான மற்றும் உபத்திரவமான நேரங்களில் என்னிடத்தில் கொண்டுவந்து அவைகளைத் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அன்பு மற்றும் அனுதாபத்தின் இனிமைகள் எதுவும் என் மீது யாரும் வீசிடாத ஒரு ஜீவியத்தை ஜீவிப்பதைப் பார்க்கிலும், பூக்குவியல்கள் இல்லாத எளிமையான சவப்பெட்டியைப் பெற்றுக்கொள்வதிலும், புகழுரை இல்லாத அடக்க ஆராதனையைப் பெற்றுக்கொள்வதிலும் நான் திருப்தியாய் இருப்பேன் . . . சவப்பெட்டியின் மீதுள்ள பூக்களினால் அவர்கள் மரிப்பதற்கு முன்னதாக கடந்துவந்த சோர்வின் மத்தியிலான வாழ்க்கைக்கு நறுமணம் வீச முடியாது."

திருமதி பிரஸ்டன் அவர்களின் கவிதையும் இதே கருத்தைத்தான் வெளிப்படுத்துகின்றது:

". . . நான் ஒருவேளை,

பாராட்டின் ஒரு வார்த்தையையாவது,

உற்சாகத்தின் ஒரு வார்த்தையையாவது கேட்டிருந்திருப்பேனானால் —
வாழ்வா, சாவா — என்று என்னை அழுத்திக்கொண்டிருந்த பிரச்சனைகள் மத்தியில்
'தைரியம் கொள்!' எனும் ஒரு வார்த்தையையாவது கேட்டிருந்திருப்பேனானால்—
ஆ, அது —
மீண்டும் மீண்டுமாய்ப் பாய்ந்து வந்ததான கொந்தளிப்புகள் ஊடே
நான் செல்வதற்கு, எவ்வளவாய் எந்தன் ஆன்மாவை, வலிமைப்படுத்தியிருந்திருக்கும்."

## நறுமணம் வீசும் பலி

சபை ஜனங்கள் ஒருவருக்கொருவர் பண்ண வேண்டிய ஊழியங்களைக் குறித்துப் பேசுகையில், நம்முடைய பலியானது, தேவனுக்கு முன்பு சுகந்தவாசனையாக இருக்கும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; மேலும் சுவிசேஷமானது, "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறது" என்றும் குறிப்பிடுகின்றார். அதாவது, நற்கிரியைகள், அன்பான வார்த்தைகள் மற்றும் நல்ல முயற்சிகளைச் சரியான நோக்கத்தையுடைய இருதயங்கள் மட்டுமே புரிந்துக்கொள்ள முடியும். அதேநேரத்தில், தவறான மனநிலையைக் கொண்டிருப்பவர்கள் எல்லா நன்மையான காரியங்களையும், தவறாகவே புரிந்துக்கொள்வார்கள். அவர்களுக்கு அது கெட்ட வாசனையாகவே இருக்கும். நம்முடைய அனுபவங்களில் இவைகளை நாம் அடிக்கடி காணலாம். கிறிஸ்துவின் பாதங்களுக்கு நாம் ஊழியம் செய்வதற்கென நம்மால் முடிந்த சிறந்த பிரயாசங்களை எடுத்தாலும், சிலர் அதினால் ஆறுதலும், புத்துணர்வும் அடைந்துள்ளார்கள்; இன்னும் சிலர் கோபமும் அடைந்துள்ளனர்; அதாவது, சிலருக்கு நம்முடைய இந்தப் பிரயாசம் சுகந்தவாசனையாகவும், வேறு சிலருக்குக் கெட்ட வாசனையாகவும் இருக்கின்றது. ஏனெனில், இவர்களுக்குக் கர்த்தரிடத்திலும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களிடத்திலும் தவறான இருதய நிலைமையே காணப்படுகின்றது. ஒருவேளை, அவர்களுடைய இலட்சியங்கள் அல்லது பேராசைகள், குறுக்கிடப்பட்டதினாலும் கூட அவர்களுக்கு இந்தப் பிரயாசங்கள் கெட்ட வாசனையாக இருந்திருக்கலாம்.

பெத்தானியாவிலும் அப்படியே நடந்தது. நறுமணம் வீடு முழுவதும் பரவினது. மேலும், இந்த ஊழியத்தின் விளைவாக, மரியாளுக்கு வந்த ஆசீர்வாதமும், புத்துணர்வும், யூதாசுக்கு மிக வித்தியாசமான தாக்கத்தை உண்டுபண்ணிற்று. யூதாசோ கோபமடைந்தான்; அவனுக்குள் காணப்பட்ட சுயநலம், கர்த்தருக்குச் செய்யப்பட்ட கனத்தைப் புரிந்துக்கொள்வதைத் தடைபண்ணிற்று. அவன் தன்னைப்பற்றியும், இதை விற்றால் என்ன கிடைக்கும் என்பது பற்றியும்தான் சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆகவே, அவனைப் பொறுத்தவரையில் இந்த அனைத்து விஷயங்களும் வீண் செலவுகளே. அவனுடைய தவறான சிந்தையினிமித்தம் அவனுடைய இருதயத்திற்குள் வந்த கசப்பானது, அவன் அதற்குப் பிற்பாடு நேராகப் பிரதான ஆசாரியரிடத்திற்குச் சென்று இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்கென, பேரம் பேசின விஷயம் குறித்த பதிவுகளில் வெளியரங்கமாகுகின்றது. அன்பான சகோதர சகோதிரிகளே, நம்முடைய இருதயங்கள் ஆண்டவர்மேல் அன்பான நோக்கம் உடையதாக இருக்கின்றதா அல்லது சுயநலமான நோக்கத்துடன் இருக்கின்றதா என்றும், அவருடைய நாமத்தினால் அவருடைய சரீரத்திற்குச் செய்யப்பட்ட அனைத்தையும் உணர்ந்துக்கொண்ட நிலையில் இருக்கின்றோமா என்றும், நாம் சுயத்திற்காக நாடாதவர்களாகக் காணப்படுகின்றோமா என்றும், கவனிக்கக் கடவோம்.

இல்லையேல், யூதாசுக்கு இருந்ததுபோல, நமக்கு இந்த நறுமணங்கள் மரணத்துக்கு ஏதுவான மரண வாசனையாக இருந்துவிடும்.

நம்முடைய பாடத்தின் முடிவிற்கு வருவோம். அநேகமாக இந்தச் சம்பவத்திற்கு மறுநாள், இயேசுவையும், லாசருவையும் காணும்படியாக யூதர்கள் கூட்டங்கூடத் துவங்கியிருக்க வேண்டும். அனைவரின் நலனுக்காக ஒருவர் மரிப்பது நலம், என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆதியிலிருந்து இந்நாள் வரையில், "நன்மையின் காரணத்திற்காகவே," சத்தியத்திற்கு எதிரான செயல்கள் செய்யப்பட்டு வந்ததுள்ளது. இப்படிப்பட்ட ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கக்கடவோம். சுயநலமான அன்பை அல்ல, ஆண்டவர் மீதும், மற்ற அனைத்துச் சகோதரர்கள் மீதும் உண்மையான அன்பை உத்தமமாகச் செலுத்துவோம்; இல்லாவிடில், நாம் எப்படிப்பட்ட தீமைகளுக்குள் வழிநடத்தப்படுவோம் என்று நமக்குத் தெரியாது.

*****

R 3537/ ஏப்ரல் 1905

# உன்னதத்திலே ஓசன்னா

## யோவான் 12:12-26

*"கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்." மத்தேயு 21:9*

பாலஸ்தீனியாவிலிருந்து மாத்திரமல்லாமல், பாபிலோனிலிருந்தும், எகிப்திலிருந்தும், ஸ்பெயினிலிருந்தும் மற்றும் கிரீசிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் எருசலேமில் கூடிவந்திருந்தார்கள். இந்தப் பஸ்கா பண்டிகையின் காலங்களில் சிலசமயம் எருசலேமுக்குள்ளும், எருசலேமைச் சுற்றியும் 2 மில்லியன் ஜனங்கள் கூடிவந்ததாகக் கணக்குத் தெரிவிக்கப்படுகின்றது. பஸ்கா பண்டிகையை அனுசரிப்பது தொடர்புடைய தெய்வீகக் கட்டளையின் காரணமாகவே ஜனங்கள் இப்படிக் கூடிவந்தார்கள். அநேக நாட்களைச் செலவழித்து, இவ்வளவு தூரம் கடந்து வருபவர்களில் பெரும்பாலானவர்கள், பயபக்தியுடையவர்கள் இல்லையென்றாலும், இன்னுமாக சிலர் சுற்றுலா பயணம் வந்ததுபோல வந்தவர்களாக இருப்பினும், மதத்தின் மீது ஈர்ப்புடையவர்களாய் இருப்பார்கள் என்றும் அனுமானிப்பது நியாயமானதேயாகும். ஆனால் வியாபார நோக்கத்தில் வருபவர்களுக்கு அங்கு அதிகம் வாய்ப்புகள் இருப்பதில்லை. காரணம் வியாபாரம் மற்றும் பணமாற்றத்தின் மூலம் பணம் ஈட்டுவதற்கான சிறந்த வாய்ப்புகளானது எருசலேமில் ஏற்கெனவே வாழ்ந்து கொண்டிருப்பவர்களால் பயன்படுத்தப்படுகின்றது.

நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும், பரிசுத்த நகரத்தை நோக்கிப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்த இந்தப் பிரயாணிகள் மத்தியில் காணப்பட்டனர் மற்றும் இவர்கள் பெத்தானியாவிலே தங்கினார்கள். நமது கர்த்தர் நளதத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்ட விருந்தைத் தொடர்ந்து வந்த காலை வேளையில், கழுதையைக் கொண்டுவரும்படிக்கு, அப்போஸ்தலர்களில் இருவரைக் கர்த்தர் அனுப்பினார். கழுதை வந்தவுடன், சேணமாக அதன்மேல் வஸ்திரங்கள் விரிக்கப்பட்டன; பின்னர் அதன்மேல் கர்த்தர் ஏறி, தம்முடைய சீஷர்கள் மற்றும் லாசரு கல்லறையினின்று வெளியே அழைக்கப்பட்டதற்குச் சாட்சியாளர்களாகக் காணப்பட்டவர்களும், லாசருவின் குடும்பத்தினுடைய நண்பர்களும் சூழ, ஒரு சிறிய ஊர்வலமாகப் பட்டணத்தை நோக்கிச் சென்றனர். இப்படியாகப் போய்க்கொண்டிருக்கையில், கர்த்தர் பெத்தானியாவில் இருக்கின்றார் என்று கேள்விப்பட்டதினாலும், கர்த்தர் அற்புதம் செய்கிறவர் என்றும், லாசருவை மரணத்தினின்று எழுப்பினார் என்றும் கேள்விப்பட்டபடியினால், அவரைக் காணவேண்டுமென விரும்பியதினாலும், எருசலேமிலிருந்து, பெத்தானியாவுக்கு வந்த திரளான ஜனக்கூட்டத்தினர் இந்த ஊர்வலத்தைச் சந்தித்தனர்.

### குருத்தோலைகள்

நமது கர்த்தருடைய கீர்த்திப் பரவிக்கிடந்தது மற்றும் தெய்வீக வழிநடத்துதலே இந்த அனைத்து ஏற்பாடுகளுக்கும், ஊர்வலம் வந்தவர்களும், இயேசுவைக் காண பெத்தானியாவுக்கு வந்த ஜனங்களும் சந்திப்பதற்குமான காரணமாய் இருந்தது என்பது உறுதியே. ஜனங்களில் அநேகர், அப்பகுதியில் வளர்ந்திருந்த பேரீச்சமரங்களிலுள்ள இறகு வடிவமும், சில சமயம் பத்தடி நீளமுள்ளதுமான குருத்தோலைகளை உடைத்தார்கள். இவைகள் அனைத்தும் களிக்கூருதல் மற்றும் கனப்படுத்துவதுக்குரிய சின்னங்களாகும் மற்றும் இந்தச் சின்னங்களானது, நமது கர்த்தரே அவ்வேளைக்கான கதாநாயகன் (Hero), அதாவது தாங்கள் வித்தியாசப்படுத்திக் காட்டுவதில் மகிழ்ச்சிக்கொள்ளும் கதாநாயகன் என்பதை இத்தருணத்தின்போது அடையாளப்படுத்துகின்றதாய் இருந்தது. மேலும் இந்த ஊர்வலத்தில் தேவனுக்குத் துதியும், நன்றியும் ஏறெடுக்கும் சந்தோஷ ஆரவாரம் காணப்பட்டது; ஜனங்கள் அத்தருணத்தினுடைய ஆர்வத்தில் மிதந்தனர். நமது கர்த்தர் ஏறி வந்த மிருகத்தின் முன்பாக ஜனங்கள் குருத்தோலைகளைப் பரப்பினார்கள் மற்றும் குருத்தோலை இல்லாதவர்கள், இப்படி ஆரவாரத்துடன் கழுதையின் மீது வருகிறவருக்குக் கனம் செலுத்தும்விதமாக, தங்களது மேல்வஸ்திரத்தைக் கீழே விரித்தனர்; மேலும் தங்கள் குருத்தோலைகள் மீதும், வஸ்திரங்கள் மீதும், நமது கர்த்தர் ஏறிவந்த விலங்கானது நடந்துபோன பிற்பாடு, குருத்தோலைகளையும், வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு, அவர் பின் சென்றார்கள்; இப்படியாக தேவனால் குறிப்பிடத்தக்க விதத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தவரை அனைத்து விதங்களிலும் கனப்படுத்துவதற்கு நாடினார்கள். இப்படியாகவெல்லாம் செய்வதன் மூலம், ஜனங்கள்

தங்களுடைய இருதயங்களில் அடக்கிவைக்கப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துபவர்களாக இருந்தனர்.

பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாகவும், அவர்கள் கானானுக்கு வந்தது முதற்கொண்டும், அவர்கள் மேசியாவிற்காகவும், ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதும், ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும், இவர்களுடைய சந்ததியாருக்கும் உறுதியளிக்கப்பட்டதுமான, ஆணையிட்டுக் கொடுக்கப்பட்டதுமான உடன்படிக்கையின் மகிமையான நிறைவேறுதலுக்காகவும் காத்துக்கொண்டிருந்தார்கள். நமது கர்த்தருடைய கெம்பீரமான தோற்றமானது, அவர்கள் இம்மானுயேலைக் குறித்துக் கொண்டிருந்த பிரம்மாண்டமான கருத்துக்களுக்குப் பொருத்தமானதாய் இருந்தது மற்றும் இதற்குக் கூடுதல் சாட்சியாக, அவர் செய்ததாக அவர்கள் கேள்விப்பட்டிருந்த அற்புதகரமான அற்புதங்களும் காணப்பட்டன; அவர் பண்ணிட்ட அற்புதங்களிலேயே மிகப்பெரியதான அற்புதத்திற்கு லாசருவும், அவர் மரித்து நான்கு நாட்களுக்குப் பின்னர், கல்லறையினின்று வெளியே கொண்டுவரப்பட்டச் சம்பவத்திற்குச் சாட்சியாளர்களாய்க் காணப்பட்டவர்களும், இந்த ஜனங்களுக்குச் சாட்சியாகக் காணப்பட்டனர். அவர்களுடைய இருதயங்கள் சரியாகத்தான் இருந்தது; மனித ஞானத்தினுடைய பயங்களினாலும், சந்தேகங்களினாலும், அவர்கள் இன்னமும் சீரழிக்கப்படவில்லை; மனித ஞானமோ, ஒருவரை உரோம நுகத்தடியினின்று விடுவிக்கும் மேசியாவென நம்புவதற்கு (அ) ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாக, அந்நபரிடம் பணமும், போர் வீரர்களும், செல்வாக்கும் இருக்கின்றதாவெனப் பார் என்று உலக ஞானியினிடத்தில் வலியுறுத்துவதாய் இருக்கின்றது. இப்படியாகவே இன்றும் கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் சில சமயம் காணப்படுகின்றது. நம்முடைய எளிமையான இருதயங்களில் நாம் அவருடைய வார்த்தைகளிலுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களைக் காண்கிறோம் மற்றும் அவற்றை விசுவாசிக்கவும் ஆயத்தமாய்க் காணப்படுகின்றோம்; எதிராளியானவனோ மறுப்புகளையும், பயங்களையும், சந்தேகங்களையும் மற்றும் எப்படி நடக்கும் என்பதான கேள்விகளையும் கூடவே கொண்டுவருகின்றான்; விசுவாசமானது நலிவடைந்துபோய், நம்முடைய ஜீவியங்கள் மற்றும் நடத்தைகள் மீதான கட்டுப்பாட்டிற்கான அதன் வல்லமையை இழந்துவிடுகின்றது. ஆகவே தம்முடைய பின்னடியார்கள், சிறு பிள்ளைகளைப் போன்று விசுவாசமும், கீழ்ப்படிதலும் கொண்டிருக்க வேண்டும் என்றும், உலக ஞானிகள் போன்று காணப்படக்கூடாது என்றும் நமது கர்த்தர் வலியுறுத்துகின்றார். உலக ஞானமானது தேவனுக்குப் பைத்தியமாய் இருக்கின்றது என்றும், தேவனுடைய ஞானமும், தேவனுடைய திட்டமும் உலகத்திற்குப் பைத்தியமாய் இருக்கின்றது என்றும் அவருடைய வார்த்தைகளானது நமக்கு உறுதிப்படுத்துகின்றது. உலக ஞானம் மற்றும் தெய்வீக ஞானத்திற்கிடையே நமது தெரிந்துகொள்ளுதலானது காணப்படுகின்றது. தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடந்து, தெய்வீக வார்த்தைகளுடைய ஞானத்தை ஏற்றுக்கொள்பவர்கள் பாக்கியவான்களாக இருக்கின்றனர். தெய்வீகத் திட்டத்தினுடைய முடிவானது, இவர்களது நம்பிக்கையை முழுமையாய் மெய்ப்பித்து, இவர்கள் கற்பனைப் பண்ணிப்பார்க்காத மேலானவைகளை இவர்களுக்கு அதிகமாய் நடப்பிக்கும்.

## உன்னதத்திலே ஓசன்னா

ஓசன்னா என்ற வார்த்தையானது துதியின், நம்பிக்கையின், எதிர்பார்ப்பின் ஆரவாரமாகவும், அல்லேலூயா எனும் வார்த்தையினுடைய கருத்திற்கு மிக ஒத்தக் கருத்தைக்கொண்டதாகவும் காணப்படுகின்றது. அனைத்துச் சுவிசேஷ புத்தகங்களிலிருந்தும் ஜனங்கள் உரைத்திட்ட பல்வேறு ஆரவாரங்களை நாம் சேகரித்துப்பார்க்கும்போது, பின்வருமாறு காணப்படுகின்றது; அவை, "ஓசன்னா," "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா," "கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்," "உன்னதத்திலே ஓசன்னா," "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்," "கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் இராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக," "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்," "பரலோகத்திலே சமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக" என்பவைகளாகும். நமது கர்த்தர் முழுச் சூழ்நிலையையும் புரிந்துகொண்டார்; "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தார்." (யோவான் 2:25) இந்த ஆரவாரங்களுக்கும், பயபக்தியான கிரியைகளுக்கும் பின்னான உண்மையின் ஆழத்தைக் கர்த்தர் அறிந்திருந்தார்; தீமையின் சக்திகளையும், வெளிச்சத்தை இருளாகவும், இருளை வெளிச்சமாகவும் காட்டுவதற்குரிய தீயச் சக்திகளின் வல்லமையையுங்கூடக் கர்த்தர் அறிந்திருந்தார்.

தாம் பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கப்போகின்றார் என்றும், இன்னும் ஐந்து நாட்களுக்குள்ளாக, மதத் தலைவர்களினால் வழிநடத்தப்படும் மற்றொரு ஜனக்கூட்டத்தார், "அவரைச் சிலுவையில் அறையும்! அவரைச் சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிடுவார்கள்

என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். தம்மைச் சுற்றி, தம்மை உடன்படிக்கையினுடைய தூதுவர் என்று மகிழ்ச்சியுடன் வாழ்த்தும் இந்தக் கெம்பீரிப்புச் சத்தங்களானது ஓநாய்களினால் குழப்பி, அலங்கோலப்படுத்தப்படும் என்றும், இப்படிக் கெம்பீரிப்புப்பண்ணுபவர்கள், அதிகாரிகளுடைய அதிகாரத்தையும், இவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படும் கலகக் கும்பலையும் உணர்கையில், தங்களது ஜீவனுக்கும், காரியங்களுக்கும் ஆபத்துள்ளது என்று அச்சமடைவார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். இன்னுமாக இப்படிக் கெம்பீரிப்புப்பண்ணும் ஜனங்கள் தங்களுக்கு இருக்கும் கொஞ்சமான அறிவில், தங்களுடைய மதத் தலைவர்களுக்கு நேர்மாறாய்க் காணப்படும், தங்களுடைய கணிப்பின்படி நம்பிக்கைக்கொள்வதற்குத் துணிவு கொண்டிருக்கமாட்டார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். மேய்ப்பன் வெட்டப்படப் போகின்றார் என்றும், ஆடுகள் பயந்து, சிதறடிக்கப்படப் போகின்றது என்றும் அவர் அறிந்திருந்தார், எனினும் அவர் எதுவும் கூறவில்லை; தெய்வீகத் திட்டம் நடந்தேறத்தக்கதாக கர்த்தர் அனுமதித்தார்; அவர் அடிக்கப்படும்படிக்குக் கொண்டு போகப்படும் ஆடு போன்று போய்க்கொண்டிருந்தார்; அவர் உதவிக்காகவோ, தம்மைத் தற்காத்துக்கொள்வதற்கோ, உண்மையான நிலவரத்தை விவரிப்பதற்கோ தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். தம்முடைய ஜீவனை நாடினவர்களின் கரங்களிலிருந்து, தம்மை விடுவித்துக்கொள்ள அவரால் முடியும், ஆனால் அவர் அப்படியாகச் செய்யவில்லை; ஏனெனில் மரிப்பதற்காகவே, அதாவது பாவங்களுக்காக பலிச் செலுத்தப்படுவதற்காகவே அவர் உலகத்திற்கு வந்தார்.

## கல்லுகளே கூப்பிடும்

அநேகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் (curiosity) அல்லது அநேகமாக ஒற்றர்களாகச் செயல்படுவதற்கெனப் பரிசேயர்களில் சிலர் அங்கு ஊர்வலத்தில் காணப்பட்டனர், அதாவது யூதாசுடன் கலந்து ஆலோசனைப் பண்ணிக்கொண்டிருப்பவர்களும், அவருடைய வேளை வராதது வரையிலும், தங்களுடைய வல்லமையைக்கொண்டு, தங்களால் எதுவும் செய்ய இயலாது என்பதை அறியாதவர்களாக, எப்பொழுது மற்றும் எப்படிக் கர்த்தரைக் கைது செய்யலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கு முயன்று கொண்டிருப்பவர்களுமாகிய பரிசேயர்களில் சிலர்கூட அங்கு ஊர்வலத்தில் காணப்பட்டனர். ஜனங்கள் கூறும் வார்த்தைகளை இயேசுவினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும், அவரை மேசியா மற்றும் இராஜாவென ஜனங்கள் பிரகடனம் பண்ணுவதற்கு அவர் அனுமதிப்பது என்பது, இயேசுவுக்குத் தகுதியான காரியமல்ல என்று யோசனைக் கூறும்படிக்கும், இந்தப் பரிசேயர்கள் சீஷர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். ஏமாற்றுக்காரர்கள் கொண்டிருக்கும் வழக்கத்தின்படி, இயேசு தம்மை மேசியாவென அறிவிப்பதற்கு, தம்முன் தாரை ஊதிக்கொண்டு செல்லவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மூன்று வருடங்களாக இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டும், தம்முடைய சீஷர்களைக் கூட்டிச் சேர்த்தும், அற்புதங்களை நிகழ்த்தியும் கொண்டிருந்தார், ஆனால் தாம்தான் மேசியாவென்று அவர் எதுவும் சொல்லவில்லை. தம்முடைய சீஷர்கள் யோசித்துக்கொள்வதற்கும், பொது ஜனங்கள் யோசித்துக்கொள்வதற்கும் கர்த்தர் அனுமதித்திருந்தார்.

சிலர் அவரை ஒரு தீர்க்கத்தரிசி என்றார்கள்; வேறு சிலர் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்துள்ள தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றார்கள்; வேறு சிலர் அவரை எலியா என்றார்கள்; ஆனால் இப்பாடத்தின் சம்பவம் நிகழ்வதற்குச் சில மாதங்கள் முன்னர், தம்மைச் சீஷர்கள் யார் என்று எண்ணுவதாக இயேசு சீஷர்களிடம் கேட்க, அதற்குச் சீமோன் பேதுரு தெய்வீக ஏவுதலின் (அ) வழிக்காட்டுதலின் கீழ், இயேசுவை மேசியாவென்று அறிவித்த சம்பவம் தவிர மற்றபடி இயேசு எதுவும் கூறவில்லை. அதுமுதல் தாம் மேசியாவாக இருப்பினும், தாம் பாடுபட வேண்டுமென்று இயேசு, சீஷர்களுக்கு விவரிக்க ஆரம்பித்தார் மற்றும் அதைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. சீஷர்களைப் பொறுத்தமட்டில் அவரது மரணம் சம்பவிப்பது அருகாமையில் இருப்பதைக் காட்டிலும், அவர் உயர்த்தப்படும் காரியமே அருகாமையில் இருப்பதாகத் தோன்றியது. ஜனங்களில் சிலர் அவரது மகத்துவம், வல்லமை குறித்த அறிவிற்கு விழித்தெழுந்து கொண்டிருந்தார்கள் மற்றும் மற்றவர்களோ மேசியா உண்மையில் வந்துள்ளதாக அப்போதுதான் கண்டுபிடித்தவர்களாய்க் காணப்பட்டார்கள், ஆகையால் தங்களது எஜமான் சிலுவையில் அறையப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று சீஷர்கள் எண்ணினார்கள். இயேசு தம்முடைய மரணம் குறித்துப் பேசும் வார்த்தைகளை, அவருடைய மறைபொருள்களில் ஒன்று என்றே சீஷர்கள் கருதினார்கள்.

ஆனால் இயேசு ஜனக்கூட்டத்தாரை அமைதிப்படுத்தும்படிக்கு உத்தரவிடப்போவதில்லை. மாறாக ஜனங்களுடைய கெம்பீரிப்புகளானது, சகரியாவினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக உரைக்கப்பட்டத் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாக இருக்கின்றது என்று கர்த்தர் விளக்கம் கொடுத்தார்; "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ,

உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்." (சகரியா 9:9) இன்னும் காரியத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கும், தம்மைக்குறித்தே தீர்க்கத்தரிசி குறிப்பிட்டுள்ளார் என்பதைச் சீஷர்களுக்கு மெய்ப்பித்துக் காண்பிப்பதற்கும் என்று, ஒருவேளை ஜனங்கள் இப்படியாகக் கெம்பீரிக்கவில்லை என்றால், கல்லுகளே கூப்பிட்டிருக்கும், ஏனெனில் இப்படியாகவே கெம்பீரிக்கப்படும் என்று தேவன் தீர்க்கத்தரிசனம் எழுதி வைத்துள்ளார் மற்றும் தெய்வீக வார்த்தைகளில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லை எனக் கர்த்தர் கூறினார். கொஞ்சம் நேரம் கழிந்து, நமது கர்த்தரும், அவருடைய பின்னடியார்களும் ஆலயத்தை அடைந்தவுடன், "ஓசன்னா" எனும் கெம்பீரிப்புகளானது இன்னும் உற்சாகமடைந்தது; இங்கு "குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்" என்ற வேதவாக்கியத்திற்கு இசைவாகப் பிள்ளைகளும்கூட சேர்ந்து கெம்பீரித்தார்கள். (மத்தேயு 21:16; சங்கீதம் 8:2)

## அவர்களது சந்திப்பின்/விசாரிப்பின் நாள்

இந்தக் காட்சி எவ்வளவாய் வழக்கத்திற்கு மாறானதாய்க் காணப்படுகின்றது! பல நூற்றாண்டுகளாக மேசியாவிற்காகக் காத்திருப்பவர்களும், அவருடைய விசேஷித்த ஜனங்கள் ஆகுவதற்கும், அவருடைய இராஜ்யத்தின் வேலையிலும் சகல ஜனங்களை ஆசீர்வதிக்கும் வேலையிலும் இணைவதற்கும், ஆயத்தமாகுவதற்கு நாடுபவர்களுமாகிய இஸ்ரயேல் ஜனங்களும் மற்றும் அகலமான காப்பு நாடாக்களையும், நியாயப்பிரமாணம் மற்றும் ஓய்வுநாளுக்குமான பக்திக்கும், வைராக்கியத்திற்கும் அநேக வெளிப்படையான தன்மைகளைக் கொண்டிருந்து, மேசியாவிற்காகக் காத்திருப்பதாகக் கூறிக்கொண்டிருந்த அவர்களின் மதத் தலைவர்களும், ஆயத்தமற்ற நிலைமையிலும், மேசியாவை அடையாளம் கண்டுகொள்வதற்குரிய இருதயமற்ற நிலைமையிலும், குருடான நிலைமையிலும், இவர்களை மிகவும் நம்பிக்கொண்டிருந்த குருடான ஜனங்களை வழிநடத்துபவர்களாகக் காணப்படுகின்ற நிலைமையிலும் இருப்பது எவ்வளவு வழக்கத்திற்கு மாறானதொரு காட்சியாகக் காணப்படுகின்றது.

ஆனால் இன்னொரு பக்கத்தில் படிப்பறிவு இல்லாதவர்களும், பேதமையுள்ளவர்களும், யூதேயாவின் அனுகூலங்களுக்கு மிகவும் தொலைவில் இருப்பவர்களுமாகிய கலிலேயாவின் மனுஷர்களாகிய அப்போஸ்தலர்கள் மேசியாவிற்கான பிரதான ஆதரவாளர்களாகவும், மேசியாவை ஆதரிப்பவர்களாகவும் காணப்பட்டனர். இயேசுவைச்சுற்றிக் காணப்பட்டவர்களும், அவருக்கு ஆதரவு அளித்தவர்களும், அவரை அடையாளம் கண்டுகொண்டவர்களும், அவருக்குத் துதியைக் கெம்பீரித்தவர்களுமாக இருந்தவர்கள் சாதாரண ஜனங்களாக இருந்தனர்; இவர்களில் அநேகர் அவ்விடத்திற்குப் புதியவர்களாகவும், மதம் தொடர்புடைய விஷயங்களில் எருசலேமில் இருந்திட்ட ஜனங்களைக் காட்டிலும் குறைவான அனுகூலங்களை உடையவர்களாகவும் காணப்பட்டனர். கர்த்தருக்குத் துதியைச் சாற்றினவர்களில், சிறியவர்களும், போதிக்கப்படாதவர்களுமாகிய பிள்ளைகளும் காணப்பட்டனர். இந்தக் காட்சி எத்துணை விநோதமாகக் காணப்படுகின்றது; எனினும் இன்றும் இப்படியான விநோதமான நிலைமையே நிலவுகின்றது. நாம் மீண்டுமாக இப்பொழுது மனுஷ குமாரனுடைய நாட்களில் காணப்படுகின்றோம்; கர்த்தருக்குத் தாங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்று அறிக்கைப்பண்ணியும், "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலேயே செய்யப்படுவதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று தொடர்ந்து ஜெபம்பண்ணியும் கொண்டிருக்கின்ற நியாயசாஸ்திரிகளும், வேதசாஸ்திரிகளும், பிரதான ஆசாரியர்களும், வேதபாரகரும், கல்வியறிவுள்ள ஆசாரியர்களும், முன்னிலை வகிக்கும் சபை ஜனங்களும், மீண்டுமாக நமது கர்த்தருடைய இரண்டாம் வருகைப்பற்றின உண்மைக்கும், நாம் மனுஷ குமாரனுடைய நாட்களில் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்ற உண்மைக்கும், குருடர்களாகவே காணப்படுகின்றனர். (மத்தேயு 24:37-39)

வெகு சிலரே இன்று சூழ்நிலைகளை உணர்ந்துள்ளனர் மற்றும் இப்படியாக உணர்ந்துள்ளவர்கள் மனுஷர் மத்தியிலும், மதச் சம்பந்தமான வட்டாரங்களிலும் உயர்வாய் மதிக்கப்பட்டவர்களாய் இராமல், விநோதமானவர்கள் என்று கருதப்படுபவர்களும், நாசரேத் மற்றும் கலிலேயா வகுப்பாரைப் பிரதானமாய்ச் சார்ந்தவர்களுமாகக் காணப்படுகின்றனர். இவர்கள் மாத்திரமே இன்று, இம்மானுயேலுக்கு வாழ்த்துதல் கூறுபவர்களாகவும், துதிகளை கெம்பீரிப்பவர்களாகவும், அவரது பாதங்களுக்கு முன்னதாக தங்கள் துதியின் வஸ்திரத்தை விரிக்கின்றவர்களாகவும், சத்தியத்தினிமித்தமாக, உலகம், மாம்சம் மற்றும் பிசாசிற்கு எதிரான

போராட்டத்தில் தாங்கள் அடைந்திட்ட வெற்றிகளாகிய குருத்தோலைகளை அவரது பாதங்களுக்கு முன்னதாகப் பரப்புகிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

## உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்

அந்தச் சிறு ஊர்வலமானது, பெத்தானியாவிலிருந்து, எருசலேமை தூரத்திலிருந்து பார்க்கமுடிகின்ற ஒலிவமலையின் உச்சியை அடைந்தது. இங்கு போதகரும், ஜனக்கூட்டத்தாரும் சற்று நின்றார்கள்; அவர்களது கவனம் பட்டணத்தின் மீதும், இராஜாவின் மீதும் திரும்பியது. அத்தருணத்தினுடைய முக்கியத்துவத்தை அவர்கள் அறியாதிருந்தார்கள்; ஒரு புதிய யுகமாற்றம் நடைபெறுகின்றது என்றும், இஸ்ரயேல் ஜனங்களுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்வதற்கான இருதய ஆயத்த நிலையில் அவர்கள் காணப்படாத காரணத்தினால், அவர்கள் மீது பல நூற்றாண்டுகளாகத் தங்கியிருந்த, தேவன் அருளின தயவானது/கிருபையானது, அவர்களிடமிருந்து கடந்து போகப்போகிறது என்றும் அண்டசராசரத்தின் மாபெரும் கடிகாரம் சுட்டிக்காட்டுவதை அவர்கள் உணர்ந்துகொள்ளாமல் இருந்தார்கள்.

இஸ்ரயேல் ஜனங்கள் ஆயத்தமாய்க் காணப்படவில்லையெனத் துக்கிப்பது நமக்கடுத்தக் காரியமல்ல, மாறாக அவர்கள் ஆயத்தமற்று இருந்ததினால், தேவனுடைய திட்டமானது குறுக்கிடப்படவோ (அ) தடைப்பண்ணப்படவோ இல்லை என்பதை உணர்ந்துகொள்வதே, நமக்கடுத்தக் காரியமாக இருக்கின்றது; தேவன் முன்னறிந்திருந்தபடியும் மற்றும் முன்னறிவித்திருந்தபடியும், தேவனுடைய வழிநடத்துதலின்படி, மாம்சீக இஸ்ரயேலர்கள் தெய்வீகக் கிருபையினின்று விழுந்துபோகும் காரியமானது, ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்கும், தெய்வீகத் தயவுக்குள் வருவதற்கும், ஆவிக்குரிய இஸ்ரயேலின் அங்கத்தினர்கள் ஆகுவதற்கும், புறஜாதியாரில் ஆயத்தமாய் இருப்பவர்கள் அனைவருக்கும் வழியைத் திறக்கிறதாகவும் இருந்தது. ஆண்டவர் இவை அனைத்தையும் கண்ணோக்கினார் மற்றும் இதுவே திட்டவட்டமான தெய்வீகத் திட்டமாக இருப்பதினால், கர்த்தர் முறுமுறுக்கவில்லை; எனினும் அவர் பட்டணத்தைப் பார்த்தபோது, இஸ்ரயேல் ஜனங்களிடமிருந்து எடுக்கப்பட்டுப்போகும் சிலாக்கியங்கள் குறித்தும் மற்றும் அவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளைப் புறக்கணித்ததின் காரணமாக, ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, அவர்கள் மீது எவ்வாறு "மகா உபத்திரவம்," அதாவது பயங்கரமான உபத்திரவம் வரும் என்பது குறித்ததுமான காரியங்களை அவர் சிந்தித்தபோது, கண்ணீர்விட்டார். இறுதியில் அவர் கல்வாரிக்கு நேராக பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கையில், அவருக்காகக் கண்ணீர் விட்டவர்களிடம் அவர், "எனக்காக அழாமல், உங்களுக்காக அழுங்கள்" என்று கூறினவைகளே, இத்தருணத்தின்போது, அவருடைய மனதில் காணப்பட்டது.

மற்ற நிகழ்வுகளையும், அந்நாளில் நடந்திட்ட நிகழ்வுகளையும், தம்முடைய பின்னடியார்களின் மனதில் தொகுத்துக்கொண்டுவரும் வண்ணமாக நமது கர்த்தர், "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சத்தமாய்க் கூறினார் (மத்தேயு 23:37-39).

## தீர்ப்பு எவைகளைச் சுட்டிக்காட்டுகின்றது

நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளானது ஐந்து காரியங்களை வலியுறுத்துகின்றதாய் இருக்கின்றது; அவை பின்வருமாறு:

(1) தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகுவதற்கும், அதாவது மணவாட்டி ஆகுவதற்கும், அதாவது ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி ஆகுவதற்கும் தெய்வீக ஏற்பாடுகளின் கீழ் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியினராக யூதர்களே முதலாம் வாய்ப்பை அடைந்தவர்களாய் இருந்தனர். ஆனால் கொஞ்சம் பேர் மாத்திரமே பாத்திரமான நிலைமையில் காணப்பட்டனர், ஏனெனில் கொஞ்சம் பேர் மாத்திரமே கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களுக்கான இருதய நிலைமையில் காணப்பட்டனர். பெரும்பாலானவர்கள் இயேசு குறிப்பிட்டதுபோலவே,

தங்களுடைய உதடுகளினால் மாத்திரமே கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருந்தனர், ஆனால் அவர்களுடைய இருதயமோ கர்த்தரிடமிருந்து தூர விலகிக் காணப்பட்டது.

(2) இஸ்ரயேல் ஜனங்கள் மீதான தயவு முடிவு பெறுவதற்குரிய காலம் வந்துள்ளது. இக்காலம் வரையிலும் தேவன் கொடுக்க சித்தமாய் இருந்த தயவுகள்/அனுகூலங்கள் அனைத்தையும், மாம்சத்தின்படியான இந்த "இஸ்ரயேலின் வீட்டார்" பெற்றுக்கொண்டார்கள்; ஆனால் இப்பொழுதும் அவர்கள் பாத்திரமற்றவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டபோதோ, அவர்கள் புறம்பாக்கப்பட்டார்கள்; அதாவது "உங்கள் வீடு, உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்பதாகும்.

(3) நிழலான பணிவிடைக்காரர் வீடானது, பாழாக்கிவிடப்பட்டபோது, இதனால் நிஜமான புத்திரர் வீடு நிறுவப்படுவதற்கான வாய்ப்பு உண்டாயிற்று. இதைக்குறித்தே அப்போஸ்தலர் "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு (புத்திரர் வீட்டாருக்கு) மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" என்று குறிப்பிடுகின்றார். (எபிரேயர் 3:5-6)

(4) ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தெரிந்தெடுக்கப்படும் காலப்பகுதியில் நமது கர்த்தர் இல்லாமல் இருக்கும் காரியமானது, "சொல்லுங்காலம் வருமளவும்" மாம்சீக இஸ்ரயேலர்கள் தம்மைக் காணாதிருப்பார்கள் என்று கர்த்தர் கூறின வார்த்தைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. மேலும் "இன்னுங் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள்" என்று நமது கர்த்தர் குறிப்பிட்டிருக்கின்ற பிரகாரம், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவரைக் காண்பார்கள்; அதாவது விசுவாசக் கண்களினால் மாத்திரமே அவரைக் காண்பார்கள். (யோவான் 14:19; லூக்கா 13:35)

(5) நமது கர்த்தருடைய வார்த்தைகளானது இன்னுமாக, அந்தக் காலங்கள் வரும்போது, மாம்சீக இஸ்ரயேலர்களின் குருட்டுத்தன்மை மாற்றப்படும் என்றும், அவர்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும் என்றும், அவர்களிடத்தில் இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, பதினெட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாகக் காணப்பட்டிருந்த இருள் மற்றும் தெளிவின்மை நீங்கப்பெற்று, தெளிவாய்ப் பார்ப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

இந்தக் கருத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணமாக, ஆவிக்குரிய இஸ்ரயேல் வகுப்பார் நிறைவடைந்து, மகிமையடையும்போது, பிற்பாடு உடனே கிருபையானது மீண்டும் மாம்சீக இஸ்ரயேலர்களிடத்திற்குக் கடந்துவரும் மற்றும் மேசியாவை அவர்கள் புறக்கணித்ததின் காரணமாகவும், அவர்களது வீடானது, கர்த்தருடைய தயவினின்று தள்ளிவிடப்பட்டதின் காரணமாகவும், அவர்கள் மீது வந்த இருளானது, கடந்துபோகும் என்றும், "இஸ்ரயேலர்கள் அனைவரும் – தங்களுடைய குருட்டுத்தன்மையிலிருந்து – இரட்சிக்கப்படுவார்கள்" என்றும் அப்போஸ்தலர் நமக்குக் கூறுகின்றார். இதே காரியத்தை, கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் வாயிலாகவும் கூறி, நமக்கு உறுதிப்படுத்துகின்றார்; "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10)

ஆபிரகாமினுடைய மாம்சீக சந்ததியினரைத் தேவன் நிரந்தரமாய்த் தள்ளிவிடவில்லை என்பதினால் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்; வாக்குத்தத்தத்திற்கு உரியவர்களாயிருந்த இவர்கள், பிரதான பங்கை அடைவதற்குரிய தங்களுக்கானச் சிலாக்கியங்களை இழந்துபோனபோதிலும், இவர்கள் நிச்சயமாய் அந்த வாக்குத்தத்தங்களில் பங்கடைவார்கள் என்று தேவன் முன்னறிந்திருந்தார்; இவர்கள் இழந்துபோன காரியத்தைக்குறித்து, "இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமல் இருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். (ரோமர் 11:7) ஆகவே நாம் இஸ்ரயேலர்கள் இழந்துபோனதினிமித்தம் அவர்களுக்கு அனுதாபங்கொள்ளும் அதேவேளையில், தேவனுடைய வழிநடத்துதலினால் நம்முடைய கண்கள் காண்கிறதினாலும், இராஜாவைக்குறித்தும், அவருடைய இராஜ்யம் குறித்தும்

நம்முடைய காதுகள் கேட்பதினாலும், நாம் அவருடைய ஆவிக்குரிய இஸ்ரயேலாகி உள்ளதினாலும், பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கப்போகும் ஆபிரகாமின் சந்ததியில், அவரோடுகூட நாம் காணப்படப்போவதினாலும் நாம் களிக்கூரவும் செய்கின்றோம்; பூமியின் குடிகள் ஆசீர்வதிக்கப்படுகையில் மாம்ச இஸ்ரயேலே, தெய்வீகத் தயவை முதலாவது பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள்.

"ஓ! கர்த்தாவே வெற்றி பிரவேசம் செய்திடுமே,
பெருமைதனையும், பேராசைதனையும் உந்தன் பாதங்கள் கீழ் ஒப்புக்கொடுத்துவிடுகின்றோமே.
எங்கள் கண்கள் திறக்கின்றதே; உம் வார்த்தைகள் எங்களுக்குக் கேட்கின்றதே;
நாங்கள் உம் அடியார்; வழிநடத்திடுமே,
நாங்கள் பாவம், மரணம் மற்றும் கல்லறை மீதினில் ஜெயம் அடையவே."

## ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கான நிஜம்

மாம்சீக இஸ்ரயேலருடைய நிஜமாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், இதேபோன்றதான ஒரு மாபெரும் பரீட்சையை, இந்த யுகத்தினுடைய முடிவின்போது அடைவார்கள் என்று வேத வாக்கியங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன; இன்னுமாகக் கோதுமையைச் சேகரிப்பதற்கான ஓர் அறுவடைக்காலமே, யூத யுகத்திற்கும், சுவிசேஷ யுகத்திற்குமான முடிவாக இருக்கும் என்று வேதவாக்கியங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன; இன்னுமாக யூத யுகத்தினுடைய பதர் மீது வரும் அக்கினியும், சுவிசேஷ யுகத்தின் முடிவில் களைகள் மீது வரும் அக்கினியும் அடையாளப்படுத்தும் கடுமையான உபத்திரவத்தின் காலமானது, மேசியாவின் மகிமையான ஆளுகைக்குரிய பிரமாண்டமான யுகத்திற்குரிய வழியை ஆயத்தம் பண்ணுகிறதாய் இருக்குமென்றும் வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. நமது கர்த்தர், தம்முடைய முதலாம் வருகையின்போது, பெருந்திரளான, பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு இடறுதலின் கல்லாய்க் காணப்பட்டதுபோன்று, அவரது இரண்டாம் வருகையின்போதும், அவர் தம்முடைய இரண்டாம் வீட்டாராகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அநேகருக்கும்கூட இடறலின் கல்லாய்க் காணப்படுவார் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே யூத யுகத்தினுடைய முடிவிலுள்ள அறுவடையின்போது காணப்பட்டதுபோலவே, இப்பொழுதுள்ள இந்த அறுவடையின்போதும், கர்த்தருடைய ஜனங்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைபண்ணிக்கொண்டிருக்கும் பெருந்திரளானவர்கள் ஆயத்தமற்ற நிலைமையிலும், இடறிப்போயும், இந்த யுகத்தினை நிறைவு செய்திடும் மகா உபத்திரவக் காலத்திற்குள் பிரவேசிக்கின்றவர்களாய் இருப்பார்கள் என்றே நாம் எதிர்பார்க்க வேண்டும். இந்த நிலவரங்களைக் கண்டு, நாம் அனுதாபம் கொள்கின்ற அதே வேளையில், மாம்சீக இஸ்ரயேலர்களுக்காக நமது அருமை மீட்பர் கண்ணீர் விட்டதுபோன்று, நாமும் கண்ணீர் விடுகின்ற அதே வேளையில், "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கர்த்தர் அன்று கூறினதுபோல, "பாபிலோன் விழுந்தது" என்று இன்று கூறப்படுகின்ற அதே வேளையில், இப்படியாகத் தெய்வீகத் திட்டமானது நடைப்பெறுவதே, நீதி, ஞானம் மற்றும் அன்பின் உருவமாக இருக்கின்றது என்பதை உணர்ந்து, இப்படியாக நடைப்பெறுவதில் களிக்கூருவதற்கு நாம் கற்றுக்கொள்ளவும் வேண்டும். நாம் அதிகமதிகமாய்க் கர்த்தருடைய வார்த்தைகளை ஆழமாய்த் தியானிக்கையில், அவருடைய அன்பானது, புத்திரர் வீட்டாருக்குத் தகுதியற்றுபோன நிலையிலும், அதே வேளையில் ஆயிரவருட யுகத்தில் கீழ்த் தளத்தில் தெய்வீகத் தயவிற்குள் கடந்துவருபவர்களுக்கு எதிர்காலத்தில் இன்னும் ஆச்சரியமான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதை நம்மால் காணமுடிகிறது.

கர்த்தரை அவருடைய முதலாம் வருகையின்போது ஏற்றுக்கொண்டவர்கள், அதாவது கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாய் இருந்தவர்கள், கர்த்தரில் இடறிப்போகாதப்படிக்குக் காத்துக் கொள்ளப்பட்டதோடுகூட, இவர்களுக்குக் கர்த்தர் இடறலின் கல்லாய் இருப்பதற்குப் பதிலாக, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மேலான மற்றும் பிரமாண்டமான காரியங்களினிடத்திற்கும், பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு ஆரம்பமான மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினிடத்திற்கும் இவர்கள் ஏறிவரத்தக்கதாக, தேவனுடைய கிருபையினால் கர்த்தர் இவர்களுக்குப் படிக்கல்லுமானார். ஆகவே இப்பொழுது பெருந்திரளான பெயர்க்கிறிஸ்தவர்களாகிய கிறிஸ்தவ மண்டலம், இரண்டாம் பிரசன்னத்தினுடைய காலத்தின்போது இடறிப் போய்க்கொண்டிருக்கையில், இப்பொழுது உத்தம ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாய் இருப்பவர்கள் அனைவரும் கர்த்தரால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, அவருடைய களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதில் நாம் ஐயங்கொள்ள வேண்டியதில்லை; கிறிஸ்தவர்களெனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் திரளானவர்கள் இடறிப்

போய்க்கொண்டிருக்கையில், இந்த உத்தம இஸ்ரயேலர்களானவர்கள், இன்னும் மேலானதும், இன்னும் உயர்வானதுமான புதிய யுகத்தினிடத்திற்கு ஏறிச்செல்வதற்குரிய படிக்கல்லாகக் கர்த்தரையும், தற்கால சத்தியத்தையும் கண்டடைவார்கள்; இந்த உயர்வான மற்றும் மேம்பட்டதுமான புதிய யுகத்தினிடத்திற்கு நாம் இன்னுமொரு பெந்தெகொஸ்தே மூலமாய் உள்ளே கொண்டுவரப்படாமல், மாறாக கர்த்தரைப்போன்று நம்மை ஆவிக்குரிய ஜீவிகளாகவும், திவ்விய சுபாவத்தினுடைய பங்காளிகளாகவுமாக்கும், முதலாம் உயிர்த்தெழுதலுடைய மகிமையான மாற்றத்தின் வாயிலாக, உள்ளே நாம் கொண்டுவரப்படுகின்றவர்களாய் இருப்போம்.

இன்று இந்த ஆசீர்வாதத்திற்கும், உயர்த்தப்படுதலுக்கும் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் இந்த வகுப்பார், முதலாம் வருகையின்போது காணப்பட்டிருந்த வகுப்பாரைப்போன்றே, ஞானிகள் அநேகரையும், பிரபுக்கள் அநேகரையும், கல்விமான்கள் அநேகரையும் பெற்றிருக்கவில்லை, மாறாக உத்தம இஸ்ரயேலர்களையும், சத்தியத்தை உண்மையாய் நேசிப்பவர்களையும், கர்த்தருக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் தங்களது ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கென இருதயத்திலாகிலும் விருப்பம் கொண்டிருப்பவர்களையும் உள்ளடக்கியுள்ளது. (இன்றுள்ள) இவர்களுக்கும்கூட, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்" (மத்தேயு 13:16) என்ற கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகள் கடந்து வருகின்றன. (முதலாம் உயிர்த்தெழுதலில்) மறுரூபமடைவதற்கு முன்பு, தற்காலத்திலும்கூட இவர்கள் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள்.

## யூதர்கள் அடையாளங்களையும், கிரேக்கர்கள் ஞானத்தையும் நாடித்தேடினார்கள்

ஆலயத்திற்குள் பிரவேசித்ததைக்குறித்து, யோவானுடைய பதிவுகளானது அனைத்து விவரங்களையும், கொடுக்காமல், சிலவற்றைக் கொடுத்துவிட்டு, நமது கர்த்தர் ஆலயத்தில் ஒன்று (அ) இரண்டு நாட்கள் பிரசங்கித்துவந்த பிற்பாடு அநேகமாக நடந்திட்ட ஒரு சம்பவத்தை விவரிக்கின்றது. நமது கர்த்தர் பேசினவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், கர்த்தரைக் குறித்து உணர்ந்துகொள்ளவில்லை என்பதைச் சில கிரேக்கர் உணர்ந்தவர்களாக, அவருடைய மகா பலி தொடர்புடைய தேவனுடைய திட்டத்தை அறிந்திடாத நிலையில், கர்த்தர் தங்களுடைய தேசத்திற்குத் தங்களோடு வரும்படிக்கு அழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்கள். இந்தக் கிரேக்கர்கள் இயேசுவைச் சந்திக்கும்படிக்கு, பிலிப்பு மற்றும் அந்திரேயாவினிடத்திற்குச் சென்றார்கள்; பிலிப்பு மற்றும் அந்திரேயாவின் பெயர்கள் கிரேக்க பெயர்களாய் இருந்தபடியினால், இது இவர்கள் கிரேக்க மொழியை அறிந்தவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்கள் இருவரும் இயேசுவிடம் காரியத்தைத் தெரிவித்தார்கள்; ஆனால் இயேசுவோ இந்த நிகழ்வை, தாம் மகிமைப்படுவதற்குரிய, அதாவது தமது சீஷர்களோ, நண்பர்களோ எதிர்ப்பார்த்திட்ட விதத்தில் இல்லாமல், மாறாக தம்மால் உணர்ந்துகொள்ளப்பட்டிருந்த மேலானவிதத்தில், தாம் மகிமைப்படுவதற்குரிய வேளை வந்துள்ளது என்னும் அவ்வேளைக்கான பாடத்தை மனதில் பதிய வைப்பதற்கான வாய்ப்பாக மாத்திரம் பயன்படுத்தினார். தாம் சிலுவையில் அறையப்படப் போவதற்கான தம்முடைய வேளை நெருங்கிக்கொண்டிருக்கின்றது என்பதையும், மரணம் வரையிலான அதாவது சிலுவையின் மரணபரியந்தமான தம்முடைய கீழ்ப்படிதல் எனும் நிபந்தனைகள் மீதே தெய்வீகத் திட்டத்திலுள்ள தம்முடைய உயர்த்தப்படுதல் சார்ந்துள்ளது என்பதையும் கர்த்தர் அறிந்திருந்தார். தாம் செய்யும்படிக்குப் பிதா கொடுத்திருக்கும் வேலையை நிறைவேற்றிடுவதற்கான வாய்ப்பிற்காக, முழுமையாய் அர்ப்பணம் பண்ணப்பட்டிருந்த அவருடைய இருதயமானது காத்துக்கொண்டு மாத்திரம் இருந்தது.

## கோதுமை மணி செத்தால்...

நமது கர்த்தர் "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" என்ற வார்த்தைகளை மறைப்பொருளாக, உவமையாகப் பதிலளித்தார். (யோவான் 12:24) இப்படியான பதிலானது, அப்போஸ்தலர்களுக்கும், யூதர்களுக்கும் புரியாத புதிராக இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பெந்தெகொஸ்தே நாள் வருவதுவரையிலும், அதாவது புத்திரசுவிகாரத்தின் ஆவியானது சீஷர்களின் புரிந்துகொள்ளுதல்களை வெளிச்சமூட்டுவது வரையிலும், பெரும்பான்மையான நமது கர்த்தருடையப் போதனைகளானது புரிந்துகொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படவில்லை (அ) நோக்கம் கொள்ளப்படவில்லை என்று நாம் மற்ற வேதவாக்கியங்களிலிருந்து அறிந்து கொள்கின்றோம். இப்பொழுதோ இந்த வெளிச்சமூட்டுதலின் காரணமாக, நாம் நமது கர்த்தருடைய வார்த்தைகளின்

ஐசுவரியமான ஆழங்களைப் புரிந்துகொள்வதற்குரிய சிலாக்கியங்களை உடையவர்களாய் இருக்கின்றோம்.

ஒருவேளை இயேசு தம்முடைய ஜீவனைக் காத்துக்கொண்டாரானால், ஒருவேளை அதை அவர் பலிச்செலுத்தவில்லை என்றாலும், அவர் அந்த ஜீவனை என்றென்றும் தக்கவைத்துக்கொள்ளலாம். ஆனால் சபைக்கும், உலகத்திற்கும் ஜீவன் அளிப்பதற்குரிய சிலாக்கியமற்றவராய் இருந்திருப்பார். அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக அவர் மரித்திட்ட மரணமானது, அவருடைய விசுவாசிக்கின்ற சீஷர்களுக்குச் செயல்படுத்தப்படும்போது, "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே," சீஷர்கள் ஜீவனுக்கு ஏதுவாய் நீதிமானாக்கப்பட்டனர். இப்படியாக அவருடைய மரணமானது, அவருடைய சபையில், அவருடைய மணவாட்டியில், அவருடைய அங்கத்தினர்களிடத்தில் சிறந்த பலனைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக மறைமுகமான பலனானது, இன்னும் பெரியதாய்க் காணப்படும்; ஏனெனில் அவரது இரத்தத்தைப் பற்றும் விசுவாசம் காரணமாக நீதிமானாக்கப்பட்ட சீஷர்கள், அவரோடுகூடத் தங்கள் ஜீவன்களை ஒப்புக்கொடுப்பதற்கும், அவரோடுகூட மரிப்பதற்குமான சிலாக்கியத்தினையும், இதற்கான அழைப்பையும் பெற்றுள்ளனர். அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் விஷயத்தில், இவர்கள் மூலம் உண்டாகும் பலனானது, இனிவரும் யுகத்தில், இன்னும் பெரியதொரு அறுவடையாக இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், ஒரு கோதுமை மணியான நமது கர்த்தர், 1,44,000 பேரை மற்றும் இது தவிர எண்ணிலடங்கா திரளான கூட்டத்தாரைப் பெரும்பலனாகக் கொடுத்தார். மேலும் அவருடைய பிரதிநிதிகளும், அவருடைய அங்கத்தினர்களுமாகிய இந்த 1,44,000 பேர் மூலமான பலனானது, பூமியின் குடிகள் அனைவரும் பிதாவுடன் ஒப்புரவாகுவதற்கும், தெய்வீக நிபந்தனைகளின் கீழ் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குமான முழுமையான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கையில், இறுதியில் இன்னும் பெரியதொரு பலனாகக் காணப்படும்.

## சீஷத்துவத்திற்கான நிபந்தனைகள்

தம்மைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் புரிந்துகொள்ள முடியாத விதத்தில் பேசின பிற்பாடு, தம்முடைய பின்னடியார்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு அதாவது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு புரிந்துகொள்ளும் விதத்தில் விவரங்கள் கொடுக்கும் வண்ணமாக, "தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:25) என்று கூறினார்; அதாவது தற்கால பூரணமற்ற சூழ்நிலைகளின் கீழான, நமது தற்கால ஜீவனை நாம் உயர்வானதாய்க் கருதுவோமானால், விசுவாச கண்களினால் மாத்திரமே பார்க்க முடிகின்ற எதிர்கால ஜீவியம் பற்றின நம்பிக்கையில், நாம் கர்த்தருடைய ஊழியத்தில், நம்முடைய ஜீவியங்களை ஒப்படைப்பதற்கு மனமற்றவர்களாய் இருப்போம் என்ற விதத்தில் கூறினார்.

சிறப்பான சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படப்போகின்ற நித்திய ஜீவனுடைய மதிப்பை உணர வேண்டுமெனில், நாம் தற்கால பூரணமற்ற சூழ்நிலைகளின் கீழ்க்காணப்படும் தற்கால ஜீவியத்தை அதிகம் அன்புகூரக்கூடாது. தற்கால ஜீவியத்தினுடைய பாவமுள்ள மற்றும் பூரணமற்ற நிலைமையில் திருப்தியடைபவர்கள், கர்த்தருடைய சீஷர்கள் ஆகுவதற்குரிய மனநிலையில் இல்லாதவர்கள் ஆவர். இப்படிப்பட்டவர்கள் தற்கால சூழ்நிலைகளில் திருப்திகொண்டிருப்பதினால், இவர்கள் கர்த்தர் முன்வைக்கும் சிறந்தவைகளுக்காக, தற்கால ஜீவியத்தைப் பலியாக்கிட விருப்பமற்றவர்களாய்க் காணப்படுவார்கள். கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது சுவிசேஷ யுகத்தையும் தாண்டி ஆயிரவருட யுகத்திற்கும் பொருந்தும் என்று சொல்வதற்கு எந்த காரணங்களும் இல்லை; ஆயிரவருட யுகத்தில் காரியங்கள் பெரிதும் வேறுபட்டதாயும், சூழ்நிலைகள் மறுசீரமைக்கப்பட்டதாயும் காணப்படும். "இந்த உலகத்தில்" எனும் வார்த்தைகளைக் குறிப்பிடுவதன் வாயிலாக, கர்த்தர் எல்லையைக் குறிப்பிடுகின்றார்; "இந்த உலகத்தில்" – அதாவது இந்தக் காஸ்மோஸ் (kosmos) அல்லது இந்த தற்காலத்தின் ஒழுங்குமுறை என்பதேயாகும்.

இன்னும் சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளைத் தொடர்ந்து விவரிக்கும் வண்ணமாக, நமது கர்த்தர் "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" (யோவான் 12:26) என்று கூறினார். இவ்வார்த்தைகளின் மூலமாக நமது கர்த்தர் தமது உண்மையுள்ள பின்னடியார்கள், ஆவிக்குரிய வட்டாரத்தில், தம்முடைய திவ்விய சுபாவத்தில் இறுதியில் பங்கடைவார்கள் என்று எடுத்துக் காண்பிக்கின்றார். இதே காரியங்களைக் கொஞ்சம் வேறுவிதமாக, "ஒருவன் எனக்கு

ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" என்று கர்த்தர் கூறுகின்றார். (யோவான் 12:26) மரணம் வரையிலான குமாரனுடைய உண்மையினிமித்தம், பிதா குமாரனைக் கனப்படுத்தினார்; குமாரனுடைய இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டுள்ள குமாரனுடைய பின்னடியார்களை, பிதா குமாரர்களாக ஏற்றுக்கொள்கின்றார்; மேலும் குமாரனுடைய அடிச்சுவடுகளில் உண்மையாய் நடக்கின்றவர்களை, பிதா நிச்சயமாய் இயேசுவைக் கனப்படுத்தினதுபோன்று கனப்படுத்துவார்; முதற்பலனாகிய இந்த இயேசுவைப் பிதாவானவர், மரணத்திலிருந்து தூதர்களுக்கும், அதிகாரிகளுக்கும், வல்லமைகளுக்கும் மேலாகவும், எல்லா நாமத்திற்கும் மேலாகவும் கனத்திற்கும், மகிமைக்கும் மற்றும் அழியாமைக்கும் உயர்த்தினார். நாம் அனைவரும் உண்மையுள்ள பின்னடியார்களாகக் காணப்படுவோமாக.

*****

# ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்

## யோவான் 13:1-14

*“அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.” கலாத்தியர் 5:13*

நாம் சூழ்நிலைகளைக் கவனிக்கும்போதே, இந்த நம்முடைய பாடத்தை நம்மால் சரியாய்ப் புரிந்துகொள்ள முடியும். பெத்தானியாவில் நடைபெற்ற விருந்தும், திரளான ஜனக்கூட்டத்தாருடைய ஆரவாரத்தின் மத்தியில், நமது கர்த்தர் கழுதையின் மீது ஏறிவந்து பட்டணத்திற்குள் பிரவேசித்ததும், திரளான ஜனக்கூட்டத்தாருக்கு அவர் அநேகம் நாட்கள் ஆலயத்தில் பிரசங்கித்து வந்ததும், அவரிடத்தில் விசாரிக்கும்படிக்கு, கிரேக்கர்கள் அவரிடத்தில் வந்ததுமான காரியங்கள் அனைத்தும், அவருடைய பிரபலம் அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக தாம் சீக்கிரத்தில் பிரதான ஆசாரியர்களால் மரணத்திற்குள் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்று ஆண்டவரால் கூறப்பட்ட வார்த்தைகளை முழுவதும் புரிந்துகொள்ள இயலாத சீஷர்களோ எதிர்காலத்தைக் குறித்த ஆசைப்பற்றின எண்ணங்களினால் நிறைந்து காணப்பட்டனர்; அதாவது கர்த்தரோடுகூடத் தாங்கள் அடையாளம் கண்டுகொள்ளப்படுவது குறித்தும், எவ்வாறு கர்த்தர் இராஜாவாக உயர்த்தப்படும் காரியமானது, தங்களையும் அவரோடுகூடக் கனத்திற்கும், முதன்மை நிலைக்கும் கொண்டுவரும் என்பது குறித்தும், இப்படியாக அதிகப்படியான ஜனங்களுக்கு ஆசீர்வாதம் வழங்குவதற்கும், நன்மை செய்வதற்குமான விரும்பத்தக்க வாய்ப்புத் தங்களுக்குக் கிடைக்கும் என்பது குறித்ததுமான எதிர்காலம் குறித்த ஆசைப்பற்றின எண்ணங்களினால் நிறைந்து காணப்பட்டனர்.

நீசான் மாதம் 13-ஆம் தேதியானது, நமது கர்த்தரினால் அமைதியாகச் செலவழிக்கப்பட்டது மற்றும் அன்றைய நாளின் மாலை வேளையாகிய 14-ஆம் தேதியின் ஆரம்பமானது, பஸ்கா இராப்போஜனம் மேல்வீட்டறையில் அனுசரிக்கப்படுவதற்கென நியமிக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய அறிவுரையின்படி, அப்போஸ்தலர்களில் சிலர், அனுசரிப்பிற்கான ஆயத்தங்களை முன்கூட்டியே செய்துவிட்டனர். மேலும் அவர்கள் அனைவரும் கூடிவந்திருக்கையில், இராப்போஜனத்தின்போது, அவர்கள் அமர வேண்டிய இடத்தை நியமிப்பதற்கு உபசரிப்பவர் எவரும் அங்கு இல்லாதபடியினால், தங்களது முதன்மை நிலைக் குறித்தும், ஆண்டவருக்கு அருகாமையில் உட்காருவதாகிய மிகுந்த கனமிக்க இடத்தின் விஷயத்தில், தங்களுக்கான உரிமைகள் குறித்தும் விவாதம் எழும்பினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இம்மாதிரியான காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில் நமது கர்த்தர் இரண்டுமுறை ஏற்கெனவே சீஷர்களைக் கடிந்துகொண்டு, அவர்கள் சிறுபிள்ளைகளுக்கு இருப்பதுபோன்றதான சாந்தத்தின் ஆவியை வளர்த்துக்கொள்ளாதது வரையிலும், அவர்களால் இராஜ்யத்தில் பங்கடைய முடியாது என்று உறுதியும்படுத்தியுள்ளார். ஒரு வாரத்திற்கு முன்னதாகத்தான், எருசலேமுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் ஆண்டவருக்கு மிக அருகாமையில், ஒருவர் ஆண்டவருக்கு வலது புறத்திலும், மற்றொருவர் இடதுபுறத்திலும் உட்காரும்படிக்குச் செய்யப்பட வேண்டுமென யாக்கோபும், யோவானும் வேண்டிக்கொண்டார்கள். இதே ஆவியே, இப்பாடத்தின் சம்பவங்களிலும் அவர்களை ஆட்கொண்டிருந்து மற்றும் தாழ்மைபற்றியும், கனம் குறைந்த ஊழியங்களைக்கூட ஒருவருக்கொருவர் புரிந்திடுவதற்கான விருப்பம் பற்றியுமான படிப்பினையைப் புகட்டத்தக்கதாக, சீஷர்களுடைய பாதங்களைக் கழுவும்படிக்கு நமது கர்த்தரை வழி நடத்தினது.

### அன்பிலுங்கூடச் சுயநலம்

சுயநலத்தின் கண்ணோட்டத்தில் மாத்திரமே அப்போஸ்தலர்களில் ஒவ்வொருவரும் அந்த உயர்வான இடத்தை அடைவதற்கு நாடினார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக கடந்த காலங்களில் அநேகவிதங்களில் கர்த்தரினால் விசேஷித்தவிதமாய்க் கடாட்சிக்கப்பட்டவர்களாகவும், அவரிடத்தில் விசேஷித்த விதமாய் நெருக்கத்துடன் காணப்பட்டவர்களாகவும் இருக்கும் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான், ஆண்டவருக்கு அருகாமையில் காணப்படும் ஸ்தானங்களை விரும்பினதற்கானக் காரணம், அந்த ஸ்தானத்திற்கான கனங்களுக்காக மாத்திரமே என்றில்லாமல், மாறாக போதகருக்காகத் தாங்கள் கொண்டிருந்த மதிப்பும், அன்புமாகும் மற்றும் இதனோடுகூட இந்தச் சிலாக்கியத்தினை மற்றவர்களால் உணர்ந்துகொள்ள முடிகிறதைக் காட்டிலும், தாங்களே

அதிகம் உணர்ந்துள்ளனர் என்ற எண்ணங்கூடக் காரணமாகவும் அநேகமாய்க் காணப்படலாம். இவர்கள் இந்தக் கனமிக்க ஸ்தானத்தைப் பெற வேண்டுமென, இவர்கள் சார்பில் மற்றச் சில அப்போஸ்தலர்களும் வலியுறுத்தியிருக்க வேண்டுமெனவும் நாம் அனுமானிக்கின்றோம். ஆனால் எந்தக் கண்ணோட்டத்தில் நாம் இக்காரியங்களைப் பார்த்திட்டாலும், அத்தருணத்திற்குப் பொருத்தமற்றதும், அதிலும் விசேஷமாக பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, நமது கர்த்தர் நிறுவுவதற்குச் சித்தம் கொண்டுள்ள நினைவுகூருதலின் போஜனத்தின் காரியத்திற்குப் பொருத்தமற்றதுமான ஓர் ஆவி அங்குத் தோன்றிக் காணப்பட்டிருந்தது.

நமது சொந்த இருதயங்களை நாம் முழுமையாய்க் கணிப்பதே நமக்குக் கடினமான காரியமாயிருக்கின்றபடியால், நாம் மற்றவர்களுடைய இருதயங்களையும், நோக்கங்களையும் கணிக்கும் விஷயத்தில், நாம் பரந்த மனப்பான்மையுடன் காணப்பட வேண்டும் மற்றும் நாம் மற்றவர்களுடைய விஷயத்தில் மிகுந்த அனுதாபமும், இரக்கமும் காட்டித் தவறு செய்தாலும்கூட, மிகவும் பலமாய்க் கண்டித்து நாம் தவறு செய்துவிடக்கூடாது. ஒருவேளை இக்காரியங்கள் குறித்து அப்போஸ்தலரிடம் விசாரித்தால், அவர்கள் தங்கள் நோக்கங்களிலும், நடத்தையிலும் சுயநலத்தின் சுவடுகள் இல்லையென்றும், கர்த்தருக்கான பக்தி வைராக்கியமும் மற்றும் அவர் அருகாமையில் காணப்படுவதற்கான விருப்பமும்தான் தங்களுடைய இந்த எண்ணத்திற்கும், பேச்சிற்குமான காரணம் என்றும் கூறுவார்கள் என்பதில் ஐயமில்லை. இது மனித இருதயமானது மகா திருக்குள்ளது என்றும், இருதயம் மிகக் கவனமாய்க் கூர்ந்துப் பரிசோதிக்கப்பட வேண்டும், இல்லையேல் அது நன்மையெனும் போர்வைக்கடியில் சில பண்புகளை, அதாவது ஒருவேளை போர்வையினால் மூடப்படவில்லையெனில் நம்மால் வெறுக்கப்படும் சில பண்புகளைக் கொண்டிருக்கும் என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கும் கருத்துக்கு உதாரணமாகக் காணப்படுகின்றது.

இந்தக் காரியத்திற்கு மற்றுமொரு உதாரணமாகவும், இப்படிப்பினையை நாம் அனைவரும் தனிப்பட்ட விதத்தில் நமக்குச் செயல்படுத்திக்கொள்வதற்கு உதவியாகவும், நாம் ஸ்காட்ச் நாட்டு ஊழியக்காரனாகிய ஹோரேற்றியஸ் போனர் (Horatius Bonar) அவர்கள் மரிப்பதற்குக் கொஞ்சம் காலம் முன்னதாக தெரிவித்திட்டக் கனவு ஒன்றை முன்வைக்கின்றோம். இவர் தன்னுடைய கனவில், தன்னுடைய பக்திவைராக்கியத்தை அதிக அளவும், எடையுமுள்ள பொட்டலமாகக் கண்டார். சில தூதர்கள் வந்து, அதை எடையிட்டுப்பார்த்து, அதிக எடை இருக்கின்றது என்றும், நூறு பவுண்டு எடை என்றும் கூறினார்கள். இந்த அறிக்கையினிமித்தம், இவர் தன்னுடைய கனவில் மிகவும் திருப்திக்கொண்டிருந்திருக்கிறார். அடுத்தக்கட்டமாகத் தூதர்கள் இவரது பக்திவைராக்கியத்தைப், பகுதிகளாகப் பிரித்து ஆராய முற்பட்டார்கள். இவரது பக்திவைராக்கியத்தைத் தூதர்கள், உலோகங்களை உருக வைக்கும் ஒரு மட்பாத்திரத்தில் போட்டு, பல்வேறு விதங்களில் அதைப் பரீட்சித்துப்பார்த்து, பின்னர் பரீட்சையின் முடிவுகளைப் பின்வருமாறு அறிக்கையிட்டனர்: "100 பவுண்டு பக்திவைராக்கியத்தில், 14 - பாகங்கள் சுயநலம்; 15 - பாகங்கள் சபை பாகுபாடுகளை ஆதரிக்கும் தன்மை; 22 - பாகங்கள் புகழ் ஆர்வம்; 23 - பாகங்கள் மனிதனுக்கான அன்பு; 26 - பாகங்கள் தேவனுக்கான அன்பு" ஆகும். தூக்கத்திலிருந்து அவர் விழித்தெழுந்தபோது, நடந்தது கனவு என்று உணர்ந்துகொண்டார்; எனினும் மிகுந்த தாழ்மையையும் அடைந்தார் மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றி இந்தக் கனவின் மூலம், ஜீவியம் முழுவதும் நன்மையடைந்தவராக இருந்தார். இந்தக் கனவானது, நம்முடைய வார்த்தைகள், எண்ணங்கள் மற்றும் கிரியைகளுக்குப் பின்னால், அதிலும் விசேஷமாகக் கர்த்தர் மற்றும் சகோதரருக்கான நம்முடைய ஊழியங்களுக்குப் பின்னால் காணப்படும் நோக்கங்களை நாம் கவனமாய் ஆராய்ந்துப்பார்த்திட வழிநடத்தும் விஷயத்தில் அந்த ஸ்காட்ச் நாட்டு ஊழியக்காரனுக்கு இருந்ததுபோன்று, நமக்கு நன்மையாகவே காணப்படும்.

நமது பாடத்தினுடைய முதலாம் வசனமானது, நமது கர்த்தருடைய அன்பே, "தம்முடையவர்களின்" விஷயத்திலான, அவரது அனைத்து நடவடிக்கைகளுக்குமான அடிப்படையாக இருக்கின்றது எனும் காரியத்திற்குக் கவனத்தைத் திருப்புகின்றதாய் இருக்கின்றது. அவரது அன்பின் காரணமாகவே, அவர் தமது மகிமையைத் துறந்து மனுஷனானார்; அவரது அன்பின் காரணமாகவே, அவர் தம்மை மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக அர்ப்பணம் பண்ணினார்; அவரது அன்பின் காரணமாகவே, அவர் தம்முடைய அருமையான சீஷர்களுக்கு ஓர் இடர்பாட்டில் உதவிடுவதற்கு ஆவல் உள்ளவராய் இருந்தார்; ஒருவேளை அவர்கள் இந்த இடர்பாட்டை மேற்கொள்ளவில்லையென்றால், அவர்கள் அவருடைய பின்னடியார்களெனத் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் பயன்படுத்தப்பட முடியாது. இந்த அன்பானது நமது கர்த்தரை அவசியமான கண்டிப்பைக் கொடுப்பதற்கு மாத்திரம் வழிநடத்திடாமல், இன்னுமாக அந்தக் கண்டிப்பை ஞானமான, சிறந்த மற்றும் அன்பான விதத்திலும் கொடுப்பதற்கும் அவரை வழிநடத்தினது. இவ்விஷயத்திலுள்ள அவருடைய மாதிரியானது, அவருடைய பின்னடியார்கள்

அனைவராலும், அதிலும் விசேஷமாகச் சபையில் அவருடைய பிரதிநிதிகளெனப் பொதுவிடங்களில் ஊழியம் பண்ணுகிறவர்களால் கவனித்துப் பின்பற்றப்பட வேண்டும்.

ஒருவேளை இத்தருணத்தின்போது, நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும் ஏதேனும் விருந்தளிப்பவரினால், விருந்தாளியாக அழைக்கப்பட்டிருந்திருப்பார்களானால், அவர்களது பாதங்களைக் கழுவுவதற்கு, சில வேலையாட்களை அனுப்புவது, விருந்தளிப்பவரின் கடமையாக இருந்திருக்கும். இப்படிப் பாதங்களைக் கழுவுவது, அந்நாட்டின் வழக்கமாகவும், சௌகரியத்திற்கு/ஆறுதலுக்கு அவசியமானதாகவும் காணப்பட்டது. அக்காலப் பாதரட்சைகளின் வடிவங்கள் காரணமாக, சாலையின் புழுதி பாதங்களை அழுக்காக்குகின்றன மற்றும் ஒவ்வொரு பிரயாணத்திற்குப் பின்பும் பாதங்கள் கழுவப்படுவதற்கான அவசியத்தையும் ஏற்படுத்தியது; இன்னுமாக இப்படியான ஓர் அனுசரிப்பின் தருணத்தின்போது, கழுவுதல் குறிப்பாய் அவசியமாய் இருந்தது. கர்த்தரும், சீஷர்களும் விருந்தாளிகளாக இல்லாதபடியினாலும், மேல்வீட்டறையை மாத்திரம் பெற்றிருந்தபடியாலும், தங்கள் பாதங்களைக் கழுவுவதற்கு எந்த வேலையாட்களையும் பெற்றிராதபடியாலும், இம்மாதிரியான சூழ்நிலையில் கூடினவர்களில் ஒருவர் மற்றவருக்கான இந்தக் கனமற்ற வேலையைப் புரிய வேண்டுமென்பது கடமையாகவும் மற்றும் வழக்கமாகவும் இருந்தது. நாம் சற்றுமுன்பு பார்த்ததுபோன்று, சீஷர்களின் இருதயங்களில் போட்டி மனப்பான்மையின் ஆவியானது மேலோங்கிக் காணப்பட்டது மற்றும் இந்தக் கனமற்ற வேலையைப் புரிவதற்கு எவரும் முன்வரவில்லை மற்றும் சீஷர்கள் மத்தியில் கர்த்தர் எவரையும் வேலையாட்களாக நியமிக்காததால், சீஷர்கள் தங்களுக்குள் யாரையாகிலும் இவ்வேலையைப் புரிவதற்கு வற்புறுத்தவும் இல்லை. இவ்வேலையின் காரியமானது சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டு மற்றும் உணர்ந்துகொள்ளப்பட்டால், மற்றவருக்காக இந்த வேலையைப் புரிவதற்கான மாபெரும் வாய்ப்புச் சீஷர்கள் மத்தியில் சிலருக்குக் கிடைத்திருக்கும். எத்தகைய ஒரு வாய்ப்பினை இழந்துவிட்டனர்!

## அனுகூலமான வாய்ப்பு இழந்துபோகப்பட்டது

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, இவர்களுக்காக சீஷர்களில் எவரேனும் பணிவிடைக்காரனாகிக் கொள்கின்றானா அல்லது இல்லையா என்று காணத்தக்கதாக, நமது கர்த்தர் காரியத்தை அமைதியாக விட்டுவிட்டார்; போஜனம் பரிமாறப்படுவது வரையிலும் கர்த்தர் காத்திருந்தார் (போஜனம்பண்ணி முடிந்தபிறகு அல்ல, மாறாக பரிமாறி முடிவது வரையிலும் கர்த்தர் காத்திருந்தார்); பின்னர் கர்த்தர் பந்தியை விட்டெழுந்து மேல்வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டார், அதாவது உள்வஸ்திரங்கள் வேலை புரியும்போது இடைஞ்சலாக இராதபடிக்கு அரையிலே கட்டிக்கொள்ளும் கச்சையை, இறுக்கமாக்கிக் கொண்டார். இப்படியாகக் கர்த்தர் செய்வதையும், படுக்கையிலிருந்து நீட்டிக்கொண்டு காணப்படும் அப்போஸ்தலர்களின் பாதங்களினிடத்திற்கு ஒன்றன் பின் ஒன்றாக கர்த்தர் கடந்துபோவதையும், அப்போஸ்தலர்கள் கவனித்தப்போது, அவர்கள் திகைத்துப் போயிருப்பதை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது. நாம் பாதங்கள் கழுவும் முறையிலிருந்து, அவர்களது முறை வித்தியாசமாய் இருந்தது; பாதங்கள் கழுவப்பட்டு, தேய்த்து, அலம்பிக் கழுவப்படுவதற்கென்று பாத்திரத்திலிருந்து தண்ணீர் கொஞ்சம், கொஞ்சமாக (பாதங்கள் மீது) ஊற்றப்படுகையில், அழுக்கான தண்ணீர் வட்டமான விளிம்புள்ள தாம்பாளத்தில் (basin) விழுகின்றது.

நமது கர்த்தர் செய்திட்டக் காரியத்தினிமித்தம் அப்போஸ்தலர் மிகவும் ஆச்சரியமடைந்திருந்தனர் என்பதில் உறுதியே மற்றும் அவரது செய்கை அளித்திட்டக் கண்டனத்தை அவர்கள் உணர்ந்து கொண்டபடியால், என்னசொல்ல வேண்டுமென்று அறியாமல் இருந்தனர்; ஆகவே பேதுருவின் பாதங்களைக் கர்த்தர் கழுவ வருவதுவரையிலும் அமைதியே நிலவியது. பேதுரு விநோதமான குணலட்சணங்களின் கலவையைப் பெற்றிருந்தவராகக் காணப்பட்டார். இந்தக் கலவையில், பகுதி குணலட்சணங்கள் மிகவும் நல்லவைகளாகக் காணப்பட்டன. "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?" என்று கூறி, கர்த்தர் தனது பாதங்களைக் கழுவுவதற்குப் பேதுரு மறுப்புத் தெரிவித்தார்; அதாவது, "ஆண்டவரே மிகவும் பெரியவரான நீர், ஏழை மீனவனாகிய எனக்குப் பணிவிடைப்புரிவது சரியல்ல" என்ற விதத்தில் பேதுரு கூறினார். ஆனால் நமது கர்த்தரோ, இக்காரியத்தைக் குறித்துப் பேதுரு முழுமையாய்ப் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், தாம் அனைவருடைய பாதங்களையும் கழுவினப் பிற்பாடு இக்காரியத்தைப் பேதுருவுக்கு விளக்குவதாகப் பதிலளித்தார். பேதுருவின் இரண்டாம் வார்த்தைகளோ, முதல் போன்று பாராட்டத்தக்கதாய் இருக்கவில்லை. "பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றார்."

தான் ஒரு சீஷன் மற்றும் கர்த்தர் போதகர் என்பதை, அதாவது தான் கீழ்ப்படிய வேண்டுமே ஒழிய, ஆணையிடக்கூடாது என்பதை உணர்ந்துகொள்வதற்கு பேதுருவுக்குக் கடினமாய் இருந்தது; ஆனால், "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்ற கர்த்தருடைய பதிலானது, பேதுருவினுடைய உணர்ச்சிவசப்படும் சுபாவத்தின் சிறந்த பாகத்தை உடனடியாக வெளிக்கொண்டுவந்தது. தான் கழுவப்படுகின்றதான காரியமானது, தான் ஆண்டவருக்கு அருகாமையில் காணப்படும் விஷயத்திற்கும், ஆண்டவருடனான தனது உறவின் விஷயத்திற்கும் தொடர்புடையதாய் இருக்குமாயின், அப்படியானால் அது தனக்கு வேண்டுமென்று பேதுரு எண்ணினார். காரியங்களைக் கர்த்தருடைய பொறுப்பில் விடுவதற்குப் பேதுரு அஞ்சினவராக, "ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும்கூடக் கழுவ வேண்டும்" என்று பேதுரு கூறினார். இவ்விஷயத்தில் நமக்கு ஒரு பாடம் உள்ளது; நாம் கர்த்தருக்கு கட்டளையிடவும் கூடாது, அவர் சுட்டிக்காண்பித்திடாத விதங்களில் நல்லவர்களாகவோ, ஞானவான்களாகவோ (அ) கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவோ இருக்க நாம் முற்படவும் கூடாது. சிலர் கற்றுக்கொள்வதற்கு இது கடினமான பாடமாக உள்ளது; சிலர் வேதவாக்கியங்களில் எழுதப்பட்டுள்ளவைகளுக்கும் அதிகமாய்த் தொடர்ந்து செய்ய வேண்டுமென விரும்புகிறவர்களாய் இருப்பார்கள். இப்படியாகச் செயல்படுவது என்பது ஒன்றில் கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய வார்த்தைகளுக்குள் விளங்கும் ஞானத்திற்குமான பயபக்தியின்மையை அல்லது அதிகப்படியான சுயநம்பிக்கையை, அதிகப்படியான சுயமதிப்பைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "ஓ! கர்த்தாவே என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே, உமது சித்தமே, உமது வழியில், உம்முடைய நேரத்தில் ஆகக்கடவது" என்று கூறுவதற்குத் தாழ்மையும் மற்றும் அவர்மேல் நம்பிக்கையும் கொண்டுள்ள இருதயம் கற்றுக்கொள்ள வேண்டும்.

## முழுகினவனுடைய பாதங்களைக் கழுவுதல்

பொதுவான மொழியாக்கத்தில் (ஆங்கிலம்), பேதுருவுக்கான நமது கர்த்தருடைய பதிலானது கொஞ்சம் தெளிவற்றதாய் இருக்கின்றது; திருத்தப்பட்ட மொழியாக்கத்தில் (ஆங்கிலம்) தெளிவாய் உள்ளது (தமிழ் மொழியாக்கம் சரியாய் உள்ளது); "முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாய் இருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" (KJV); "குளித்துவிட்டவர் தம் காலடிகளை மட்டும் கழுவினால் போதும்" (திருவிவிலியம் மொழியாக்கம்). பஸ்கா காலத்தின் ஆரம்பத்தில், அசுசிகள் அப்புறப்படுத்தத்தக்கதாக, யூதருடைய வழக்கத்தின்படி, அவர்கள் அனைவரும் சரியாய்க் குளித்திருந்தனர். ஆகவேதான் அவர்கள் குளித்தவர்களாய்க் காணப்படுவதினால், அவர்களின் பாதங்கள் அலம்பப்பட, அதாவது பூமியோடு தொடர்பு கொண்டிருந்த அவயத்தை மாத்திரம் இப்பொழுது கழுவ வேண்டுமென்று கர்த்தர் கூறினார். "ஆகிலும் எல்லாருமல்ல" என்று யூதாசைக் குறித்துக் கர்த்தர் குறிப்பிட்டார். இதிலிருந்து கர்த்தர் மேலான கழுவுதலைக் குறித்தே தம்முடைய மனதில் எண்ணங்கொண்டிருந்தார் என்பதும், அச்சமயத்தில் அவர்களுடைய பாதங்கள் கழுவப்பட்டக் காரியமும், அவர்கள் முன்னதாகக் குளித்திருந்த காரியமும், நிழல்கள் என்பதும் நமக்குத் தெளிவாய்த் தெரிகின்றது.

தம்முடைய சீஷர்களுடைய இருதயங்கள் உண்மையாய் இருந்ததைக் கர்த்தர் அறிந்திருந்தார். அவர்களை அவர் தம்முடைய சீஷர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களின் குறைவுகளை மூடத்தக்கதாக, தம்முடைய பலியின் புண்ணியத்தை அவர்களுக்குத் தரிப்பிக்கப்பட்டதாக எண்ணப்பட்டது; இவைகளுக்கான முழுச் சாட்சியும் பெந்தெகொஸ்தே நாளின்போது, இவர்களின் சார்பிலான கர்த்தருடைய பாவநிவாரணபலியானது, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனப் பரிசுத்த ஆவி பகிர்ந்த சாட்சியின் மூலம், இவர்களுக்கு வழங்கப்படப்போகின்றது. ஆனால் இவர்கள் மத்தியில், ஒருவருடைய இருதயம் சுத்தமாக இருக்கவில்லை. நமது கர்த்தர் யூதாசைவிட்டுக் கடந்துபோகவில்லை, மாறாக மற்றவர்களுக்குச் செய்வதுபோல யூதாசின் பாதங்களையும் கழுவினார்; யூதாசின் துரோகத்தை அறிந்த நிலையிலும், யூதாஸ் ஏற்கெனவே பிரதான ஆசாரியர்களுடன் பேரம் பேசிவிட்டார் என்றும், தனது தீயத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான தகுந்த தருணத்திற்காக மாத்திரமே காத்துக்கொண்டிருக்கின்றார் என்றும் அறிந்த நிலையிலும், கர்த்தர் யூதாசின் பாதங்களைக் கழுவினார்.

நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளை மற்றவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், அந்த வார்த்தைகளையும், பின்னர் யோவான் 13:18, 26, 27, 28-ஆம் வசனங்களிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளையும் யூதாஸ் புரிந்திருக்க வேண்டும். நமது கர்த்தர் யூதாசையும்,

அவனது நேர்மையின்மையையும், விருந்தோம்பல் காரியத்தை யூதாஸ் மீறுகிறதைக் குறிப்பிடும் தீர்க்கதரிசனத்தையுங்கூடக் குறிப்பிட்டார். இவைகள் எதுவும் யூதாசை அசைக்கவில்லை; யூதாஸ் தனது போக்கை மாற்றிக்கொள்ளத்தக்கதாக, இவைகளில் எதுவும் அவனது இருதயத்தின் கவனத்தை ஈர்க்கவில்லை. இவ்வாறாக யூதாஸ் குற்றஞ்சாட்டப்படுவதற்குக் காரணமான அவரது துணிகரத்திற்குப் பலமான ஆதாரத்தைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் துணிகரத்திற்கான இந்த ஆதாரமானது, யூதாசை "கேட்டின் மகன்" என்று நம்முடைய கர்த்தர் பெயரிட்டு/அழைத்து, "அவன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்று நமது கர்த்தர் கூறின வார்த்தைகளுக்கான அர்த்தத்தை இன்னும் வலியுறுத்துகின்றது. "என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" என்பதே சங்கீதத்தில் இடம்பெறும் வசனமாகும்.

## முடிந்தமட்டிலுமான பொறுமை

யூதாசை கையாளும் விஷயத்திலான நமது கர்த்தருடைய நடவடிக்கையானது, யூதாஸ் வகுப்பாரிடத்திலான நம்முடைய நடவடிக்கைக்கான சிறந்த மாதிரியாக மாத்திரம் இராமல், இன்னுமாகக் கர்த்தர் தம்முடைய சீஷர்களாகியுள்ள அனைவரிடத்திலும் கொண்டிருக்கும் நீடியபொறுமை குறித்தும், சீஷர்களில் எவரும் கெட்டுப்போய்விடாமல், மாறாக முடிந்தமட்டிலுமான அனைத்தையும் அவர்களுக்குச் செய்து, அவர்களுடைய வழிகளிலுள்ள தவறுகளிலிருந்து அவர்கள் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையில், மீண்டும் மீண்டுமாக அவர்களுடைய வழிகளிலுள்ள தவறுகளை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு அவர் நாடுவது குறித்ததுமான பாடங்கள் காணப்படுகின்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சத்தியத்தைப் பெற்றுக்கொண்டு, சத்தியத்தினால் வரும் அனைத்துக் கிருபைகளைப் பெற்றுக்கொண்ட பிற்பாடும், தங்களுக்குள் சுயநலத்தின் ஆவியை உற்சாகப்படுத்தி, வளர்த்துபவர்கள், மிகவும் கடினப்பட்டுப் போவதினால், போதகருடைய கண்டிப்புகளும், வேதவாக்கியங்களின் வார்த்தைகளுங்கூட, இவர்களிடத்தில் (நல்ல) தாக்கத்தினை ஏற்படுத்துவதில்லை எனும் கருத்தைக்கூட இங்குப் பார்க்கின்றோம். இது ஒருவேளை கர்த்தருடைய ஆவியானது இவர்களுடைய இருதயத்தில் சுயநலத்தின் ஆவிக்கு முழுமையாய்க் கீழ்ப்பட்டுப்போய்விட்டால்--"மனந்திரும்புவதற்கு ஏதுவாய் - சரியானப் பாதைக்குத் திரும்புவதற்கேதுவாய் - இவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது (எபிரெயர் 6:6).

கர்த்தர் பேதுருவுக்குப் பதிலளித்ததற்கு இசைவாக, அதாவது பேதுரு கழுவுதலின் அர்த்தத்தைப் பின்னால் அறிந்துகொள்வார் என்று கர்த்தர் கூறினதற்கு இசைவாக, அனைத்து அப்போஸ்தலருடைய பாதங்களைக் கழுவினப்பின், காரியங்களைக் கர்த்தர் விவரித்தார். "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" (யோவான் 13:13, 14).

## கர்த்தருடைய இச்செய்கையின் அர்த்தம்

இங்கு முழுப் பாடமும் நமக்கு விவரிக்கப்படுகின்றது. சிறியவன் ஆகிவிடுவோமோ என்ற அவர்களுடைய அச்சத்தின் காரணமாகவே, அங்கிருந்த சீஷர்கள் அனைவரும் போதகருக்கும் மற்றும் ஒருவர் இன்னொருவருக்கும் பணிவிடைப் புரிவதற்கான வாய்ப்பினைத் தட்டிக்கழித்துவிட்டனர். அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தலையும், எஜமானருமான மேசியாவாகிய நமது கர்த்தர், அவர்கள் அனைவருக்கும் பணிவிடைப் புரியத்தக்கதாக தம்மையே தாழ்த்தினார் மற்றும் இவ்வாறாக அவர்களிடத்தில் காணப்பட்ட தாழ்மையின்மையைக் கடிந்துகொண்டார் மற்றும் அதேவேளையில், ஜீவியத்தின் சகல காரியங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு மாதிரியை அவர்களுக்கு முன்னாக வைத்தார்; அதாவது ஜீவியத்தின் உயர்வான காரியங்களிலோ அல்லது சாதாரணமான காரியங்களிலோ எப்போதும் ஒருவருக்கொருவர் பணிவிடைப் புரிந்திட அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும் என்பதற்கான மாதிரியை முன்வைத்தார். ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவுதல் என்பது, ஜீவியத்தில் சகல மற்றும் எந்த எளிமையான/கனமற்ற ஊழியங்களுக்கும், சகல மற்றும் எந்த இரக்கத்தின் பாராட்டுதலுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது, அதிலும் விசேஷமாக ஆவிக்குரிய உதவி மற்றும் ஆறுதல் அளிப்பது தொடர்புடைய விஷயங்களுக்கும், இரக்கம் பாராட்டுதலுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, நம்முடைய டன்கார்டு (Dunkard) கிறிஸ்தவ நண்பர்களும், மற்றவர்களும் நம்பிக்கொண்டிருப்பது போன்று, நமது ஆண்டவர் இங்கு ஒரு சடங்காச்சாரத்தை (அ) அனுசரிப்பை உத்தரவிட்டதாக நாம் புரிந்துகொள்வதில்லை. இன்னுமாக இவ்விஷயத்தில் உரோமினுடைய போப் அனுசரிக்கும் வழக்கத்திற்கான அடித்தளத்தைக்கூட நம்மால் பார்க்கமுடியவில்லை; போப் வருடத்திற்கு ஒருமுறை, இந்தக் காலக்கட்டத்தில் பன்னிரண்டு ஏழை மனிதர்களின், அநேகமாகத் தரித்திரர்களாய் இருப்பவர்களின் பாதங்களைக் கழுவுவார்; ஆனால் இப்படியாகக் கழுவுவதற்கு முன்பு, அந்த ஏழை மனிதர்கள் முன்னமே விசேஷமாய்க் கழுவப்பட்டு, பின்னர் உள்ளே கொண்டுவரப்படுகின்றனர்; பின்னர் இவர்களின் பாதங்களைக் கழுவும் விசேஷித்த பொது மக்கள் முன்னிலையிலான ஊழியத்தைப் போப் நிறைவேற்றுவார். இப்படியான எந்தச் சடங்காச்சாரத்தையும், நம்மால் நமது கர்த்தருடைய நோக்கத்தில் காணமுடியவில்லை. ஆனால் நம்முடைய நாட்களிலும், நம்முடைய சூழ்நிலைகளின் கீழிலும் சொல்லர்த்தமாகப் பாதங்களைக் கழுவுவது ஆறுதலாகவோ (அ) அவசியமாகவோ இருப்பதற்குப் பதிலாக, நேர் எதிர்மாறாகவே காணப்படுகின்றது. முந்தைய காலங்களில் பரிசுத்தவான்களுடைய பாதங்களைக் கழுவுவது என்பது, விசேஷித்த விருந்தோம்பல் உபசரிப்பிற்கான அடையாளமாகவும், இப்படிச் செய்கிறவர் சபையில் அன்புடன் மதிக்கப்படுவதாகவும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகின்றார் (1 தீமோத்தேயு 5:10).

ஒருவரையொருவர் ஆறுதல்படுத்துவதற்கும், புத்துணர்வு அடையச்செய்வதற்கும், தேற்றுவதற்கும், ஜீவியத்தின் சில எளிமையான காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்கும் அல்லது இனிமையற்ற சில கடமைகளை, அனுபவங்கள் (அ) ஜீவியத்தின் பரீட்சைகள்/சோதனைகள் தொடர்புடைய விஷயத்தில் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்கும் நமக்கு எத்துணை ஆசீர்வாதமான வாய்ப்புகள் உள்ளன. நமது பாடத்திற்கான ஆதார வசனம் தெரிவிக்கின்ற பிரகாரம், நாம் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்ய வேண்டுமே ஒழிய, கடமைக்காக/சம்பிரதாயமாக ஊழியஞ்செய்யக்கூடாது. அன்பினாலும் மற்றும் கர்த்தருடைய ஜனங்களில் ஒருவருக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற வாஞ்சையினாலும் எந்த ஓர் ஊழியத்தைச் செய்திட்டாலும் (அ) செய்ய முற்பட்டாலும், இப்படியாகச் செய்யப்படும் ஊழியங்களுக்குத் தெய்வீக அங்கீகரிப்பும், ஆசீர்வாதமும் உண்டு என்பதில் நாம் உறுதிப்பெற்றுக்கொள்ளலாம். இம்மாதிரியான வாய்ப்புகளை நாம் இழந்துவிடாமல் இருப்போமாக; எஜமானுடைய மாதிரியை நினைவில்கொள்வோமாக; தாழ்மை கொண்டிருப்பதுபோல் நடிக்காமல், மாறாக நமது எஜமானைப்போன்று, நாமும் தாழ்மையை உண்மையாய்க் கொண்டிருப்போமாக; அதாவது நம்முடைய தொடர்புக்குள் வரும் அனைவருக்கும் நாம் இரக்கம் பாராட்டவும், பணிவிடைச்செய்யவும் அனுமதிக்கும் தாழ்மையை — அதிலும் விசேஷமாக தேவையில் காணப்படுபவர்கள் கர்த்தருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு ஊழியம் புரிவதற்குரிய சிலாக்கியத்தில் மகிழ்ச்சிகொள்ளும் தாழ்மையை உண்மையாய்க் கொண்டிருப்போமாக.

"முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாய் இருக்கும்" என நமது கர்த்தர் சீஷர்களிடத்தில் தெரிவித்ததுபோலவே, நீதிமானாக்கப்பட்ட மற்றும் அர்ப்பணம் பண்ணப்பட்ட அவரது சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் ஏற்கெனவே குளித்துவிட்டனர் மற்றும் மறுஜென்ம முழுக்குப் பெற்றுவிட்டனர் மற்றும் தங்களுக்காகச் சொல்லப்பட்ட உபதேசத்தின் மூலம் சுத்தமாயிருக்கின்றனர் (யோவான் 15:3). இப்படியாகச் சுத்தமாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டாலும், நாம் உலகத்துடன் தொடர்புக்குள் இருப்பதுவரையிலும், நாம் பூமிக்குரிய அசுசியினால் அசுத்தப்படுவதற்கு ஏதுவாகவே இருக்கின்றோம்; ஆகவே ஒவ்வொருவனும் தனக்கானவைகளை நோக்கிப்பார்ப்பதற்கு மாத்திரமல்லாமல், ஒருவருக்கொருவர் பூமிக்குரிய அசுசிகளை அப்புறப்படுத்துவதற்கு உதவிடுவதும், இப்படியாய்ச் சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் புரிவதும், சகோதர சகோதரிகளின் பெலவீனங்களில், சோதனைகளில், மாம்சத்தின் பூரணமின்மைகளில் உதவிடுவதும், சகோதர சகோதரிகள் ஜெயங்கொள்பவர்கள் ஆகும்படிக்கு உதவிடுவதும், விசேஷமாக அவசியமாய் உள்ளது. இப்படியான விதங்களில், நாம் பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவி, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தும் மாபெரும் வேலையில் ஒத்துழைக்கிறவர்களாக இருப்போம் (2 கொரிந்தியர் 7:1).

*****

# மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி

## யோவான் 15:1-12

*"நீங்கள் மிகுந்த கனிகளைக்கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்."*
**யோவான் 15:8**

நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவின பிற்பாடு, கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதற்கு எனப் புறப்பட்டுப் போய்விட்ட யூதாஸ் தவிர, கர்த்தரும், அவருடைய சீஷர்களும் மேல் வீட்டு அறையிலிருந்து புறப்பட்டுப்போய், கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். கர்த்தர் தம்முடைய சீஷர்களிடம் கூறின பல்வேறு காரியங்களினிமித்தமும், சமீபித்திருக்கிற தம்முடைய மரணத்தைக் குறித்து அவர் பேசினவைகளினிமித்தமும், சீஷர்களின் இருதயம் கலங்கியிருந்ததினாலும் மற்றும் தாம் சீஷர்களை விட்டுப் பிரியவேண்டியிருந்தது குறித்தும், அவர்களுடைய எதிர்க்கால அனுபவங்கள் குறித்தும் கர்த்தரும் மனதில் கொண்டிருந்ததினாலும், அவர் திராட்சச்செடியின் உவமையை அவர்களுக்குக் கூறினார். கர்த்தருடைய மற்ற உவமைகளைப் போலவே, இதுவும் அவர்கள் அனைவராலும் ஏதோ ஒன்றை வழியில் பார்த்து, இந்த உவமையின் காரியங்களைக் கூறினார் எனச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். போகும் வழியில் காணப்பட்ட திராட்சத்தோட்டங்களானது, இவ்வுவமை பேசப்படுவதற்குத் தூண்டியிருக்கலாம் எனச் சிலர் எண்ணுகின்றனர். இன்னும் சிலர், கர்த்தரும், சீஷர்களும் மாபெரும் பொன்னினால் செய்யப்பட்ட திராட்சச்செடியை உடைய ஆலயத்தின் பொன்னினாலான நுழைவாயிலை அநேகமாய்க் கடந்துப் பிரயாணித்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்த நுழைவாயிலில் காணப்படும் பொன்னினாலான திராட்சச்செடி குறித்து யோசப்பஸ் அவர்கள்: "அதன் குலைகள் மனிதனுடைய உயரத்திற்குரிய உயரம் கொண்டிருந்தது" என்று விவரிக்கின்றார். வேறொரு யூத எழுத்தாளர் பின்வருமாறு கூறுகின்றார் . . . "இலைகளும், மொக்குகளும் மங்கலான செந்நிற பொன்னினாலும், அதன் குலைகள் மஞ்சள் நிற பொன்னினாலும், அதன் திராட்சப்பழங்கள் விலையேறப்பெற்ற கற்களினாலும் செய்யப்பட்டிருந்தது." இன்றைய நாட்களில் ஐசுவரியவான்களால், ஆலயங்களுக்கு ஜன்னல்கள் காணிக்கையாக வழங்கப்படுவதுபோன்று, அன்று ஐசுவரியவான்களால் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பொன்னினாலான இலை (அ) கொடி (அ) குலை காரணமாக, நுழைவாயிலில் காணப்பட்ட பொன்னினாலான திராட்சச்செடியானது வளர்ந்துகொண்டிருந்தது என யூத அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாம் மெய்யான திராட்சச்செடியாக இருப்பதாகவும், தம்முடைய பிதா மெய்யான திராட்சச்செடியை நட்ட மெய்யான திராட்சத்தோட்டக்காரராக இருப்பதாகவும் மற்றும் தம்முடைய பின்னடியார்கள் அந்தத் திராட்சச்செடியின் மெய்யான கொடிகளாக இருப்பதாகவும் கர்த்தர் கூறுகின்றார். "மெய்யான திராட்சச்செடி" என்ற வார்த்தையானது, பொய்யான திராட்சச்செடி ஒன்றிருக்கின்றது எனும் கருத்தைக்கொடுக்கின்றதாய் இருக்கின்றது. மேலும் இந்தக் கருத்தானது வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாளங்கள் வாயிலாகக் கர்த்தருடைய ஜனங்களுக்கு, நம்முடைய கர்த்தர் அளித்திட்ட கடைசி செய்தியில், அழுத்தத்துடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தில், "பூமியின் திராட்சப்பழங்கள்" அறுக்கப்படுவதையும், அதை இந்த யுகத்தின் முடிவில் தேவனுடைய கோபாக்கினை எனும் பெரிய ஆலையில் போடப்படுவதையும் குறித்துக் கர்த்தர் பேசியுள்ளார் (வெளிப்படுத்தல் 14:19). ஆகவே "மெய்யான திராட்சச்செடி" என்ற கர்த்தருடைய வார்த்தையை, அப்போஸ்தலர்களால் கிரகித்துக்கொள்ள முடிந்ததைக்காட்டிலும் ஆழமான அர்த்தம் காணப்பட்டிருக்க வேண்டும். பூமிக்குரிய பொய்யான பூமியின் திராட்சச்செடியும், பிதாவினால் நடப்பட்ட மெய்யான திராட்சச்செடியும், இரண்டும் வளர்ந்திருக்கிற காலப்பகுதியில் நாம் வாழ்ந்துக் கொண்டிருப்பதினால், இந்த இரண்டு திராட்சச் செடிகளுக்கு இடையிலான வித்தியாசத்தைப் பார்ப்பதற்கும் மற்றும் பூமியின் திராட்சச்செடி என்பது, பரம திராட்சச்செடிக்கான போலி என்பதைப் பார்ப்பதற்கும் உரிய வாய்ப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இந்த விஷயத்தை நாம் எந்தளவுக்குத் தெளிவாகப் புரிந்துக்கொள்கின்றோமோ, அவ்வளவுக்குக் கர்த்தருடைய (இந்தத் திராட்சச்செடி பற்றின) உவமையைப் புரிந்துக்கொள்ள நாம் உதவப்படுகின்றவர்களாய் மாத்திரமல்லாமல், அதனை நம்முடைய அன்றாட ஜீவியத்தில் செயல்படுத்தவும் நாம் உதவப்படுகின்றவர்களாய்க் காணப்படுவோம். பொய்யான திராட்சச்செடியானது, தெய்வீகமான தோட்டக்காரருடைய பராமரிப்பின் கீழ்க் காணப்படாததால், பொய்யான திராட்சச்செடி (அ) பொய்யான கொடிகள் மற்றும் பொய்யான கொள்கைகள் மூலம் நாம் வஞ்சிக்கப்பட்டுவிடுவதற்கும், தவறாய்ப் புரிந்துகொள்வதற்கும், தவறாய்ப் பொருள் கொள்வதற்குமுரிய அபாயத்தில் நாம் இல்லை.

## பூமியின் திராட்சச்செடி

பூமியின் திராட்சச்செடி என்பது, பூமிக்குரிய ஞானத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பெயரளவிலான கிறிஸ்தவ அமைப்பாகும். இதன் கொடிகள், கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் கூட்டத்தினரைக் குறிக்கின்றது. இதன் கனிகளானது, ஆலயங்கள், மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள், சிறிய ஆலயங்கள், தலைமை கிறிஸ்தவ ஆலயங்கள், ஜெபக் கூடாரங்கள் முதலியவைகளையும், அரசியல் வல்லமை, மனுஷர் மத்தியில் கனம், ஆஸ்தி மற்றும் சமுதாய அந்தஸ்து என்பவைகளையும் குறிக்கின்றது. பொய்யான திராட்சச்செடியானது உலகத்தில் மகா பெரியதாகவும், செல்வாக்குமிக்கதாகவும் காணப்படுகின்றது; மற்றும் அதன் கொடிகளில், உலகத்தின் ஆவி ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த உலகத்தின் ஆவியானது, அதன் சகல காரியங்களை வழிநடத்துகின்றதாயும், முற்றிலும் மோசமானதாக இல்லை என்றாலும், முற்றிலும் உலகப்பிரகாரமாக இருக்கும் கனிகளைக் கொடுப்பதற்கு உதவுவதாகவும் இருக்கின்றது. இந்த கனிகள் உலகப்பிரகாரமாக இருப்பதினாலும், பரத்துக்குரியதாய் இருப்பதைப்பார்க்கிலும் நடைமுறை சார்ந்ததாக இருப்பதினாலும் விரும்பவும் படுகின்றது, அங்கீகரிக்கவும் படுகின்றது. இந்தப் பொய்யான திராட்சச்செடியானது அருமையாக வளர்ந்துள்ளது, 300 கொடிகளைக் கொண்டுள்ளது மற்றும் 400 மில்லியன் ஆதரவாளர்கள் இருப்பதாகவும் கூறிக்கொள்கின்றது. மேலும், அதன் கணக்கற்ற சொத்துக்களை வைத்தும், அதன் ஆதரவாளர்களை வைத்தும் பார்க்கையில், உலகத்தின் ஆஸ்திகள் மீது, அதற்கு அதிகாரம் இருக்கின்றது எனச் சொல்லப்படலாம்.

பூமியின் திராட்சச்செடியானது, மகா பெரியதாகவும், அருமையானதாகவும் மனுஷருடைய கண்களுக்குக் காணப்படுகின்றது. ஆனால், அறுவடை காலமோ, இந்தப் பெயரளவிலான அமைப்புகள், பிதாவின் வலது கையினுடைய கிரியையாகிய திராட்சச்செடி அல்ல என்பதைக் காண்பித்து விடும்; மேலும், அறுவடை காலமானது, இந்தப் பெயரளவிலான அமைப்புகள்தான், கர்த்தரால் (வெளிப்படுத்தின விசேஷத்தில், படத்தோற்றமாக விவரிக்கப்பட்டுள்ளப்படி) வேரோடு பிடுங்கப்பட்டு, அழிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ள அமைப்பு என்பதைக் காண்பித்து விடும். சமீபித்துக் கொண்டிருக்கும் மகா உபத்திரவக் காலத்தில் அதாவது, வேத வாக்கியங்கள் போதிக்கின்றன என நாம் நம்புகின்றபடி, இப்பொழுது துவங்கி உலகத்தின் மீது பத்து வருடங்கள் முழுமையாய்க் காணப்படும் எனச் சொல்லப்படும் மகா உபத்திரவக் காலத்தில், அதாவது தேவனுடைய கோபாக்கினை எனும் பெரிய ஆலையிலிருந்து வரும் பாபிலோனின் திராட்சப்பழங்களுடைய இரத்தம் என்பது, உலகத்திற்கான உபத்திரவம் மற்றும் கடுந்துயரத்தின் பெரும் வெள்ளத்தைக் குறிக்கின்றதாய் இருக்கும். எனினும் அக்கால கட்டத்தில் மெய்யான திராட்சச்செடியும், அதன் கொடிகளும் மகிமையடைந்துவிடுவார்கள் மற்றும் அவர்கள் சரியான கனிகளைக் கொடுத்ததின் விளைவுகள் என்பது, பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆசீர்வாதங்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

"மெய்யான திராட்சச்செடியைக்" குறித்தும், அதன் கொடிகளாக நமக்கு அதனோடு இருக்கும் உறவைக் குறித்தும், மாபெரும் தோட்டக்காரர் எதிர்ப்பார்த்திடும் கனியாகிய குணலட்சணத்தைக் குறித்துமுள்ள, நம்முடைய கர்த்தருடைய உவமைகளில் கடைசி உவமையான இது, நமக்கு மிகுந்த நன்மையைத் தரத்தக்கதாகவும், நம்மைப் பெலப்படுத்தத்தக்கதாகவும், நம்மை உற்சாகப்படுத்தத்தக்கதாகவும், அதன் நோக்கத்திற்கு ஏற்ப நமக்கு உதவத்தக்கதாகவும் நாம் கவனமாய்க் கவனிப்போமாக.

## மெய்யான திராட்சச்செடி

மெய்யான திராட்சச்செடியின் கொடிகள் என்பது, பிரிவுகள் கூட்டத்தாரில்லை. மேலும் கர்த்தருடைய ஜனங்களாக இருப்பவர்கள், மனுஷர்களுடைய இந்த அமைப்புகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது, எதிராளியானவனுடைய வஞ்சனையாக மாத்திரமே இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் லுத்தரன்களாக, மெத்தடிஸ்டுகளாக, பிரஸ்பெட்டேரியர்களாக இராததுபோல, கர்த்தருடைய பின்னடியார்களில் எவரும் கூட இப்படியாகக் (பிரிவினர்களாக) காணப்படக்கூடாது. மேலும் எதிராளியானவனுடைய தவறான போதனைகளில் நாம் குருடாக்கப்பட்டிருந்தபடியினால், இப்படிப்பட்டதான தவறில் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் (நாம்) காணப்பட்டிருந்தோம். அப்போஸ்தலர்கள் ஒருவரோடொருவர் இணைந்துகொள்ளவில்லை. மாறாக ஒவ்வொரு அப்போஸ்தலரும் இருதயத்திலும், விசுவாசத்திலும், அன்பிலும் கர்த்தருக்கான பக்தியிலும் ஒன்றுபட்டு இருந்தார்கள். அதுபோலவே நாமும் அப்போஸ்தலர்களுடன்

இணைந்துகொள்ளவுங்கூடாது. நான் பவுலைச் சார்ந்தவன், நான் பேதுருவைச் சார்ந்தவன் என்றும் கூறவுங்கூடாது. மாறாக ஒவ்வொருவரும் ஓர் அங்கமாக, ஒரு கொடியாகத் தனிப்பட்ட விதத்தில் கர்த்தருடன்தான் இணைந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் கனிக்கொடுக்கத்தக்கதாகத் திராட்சச்செடியின் உயிர்சாற்றைப் பெற்றிருக்க வேண்டும். கர்த்தர் பிரியப்படும் உண்மையான கனிகளைக் கொடுக்கும் விஷயத்திற்கு சபைப் பரிவு எனும் உயிர்ச்சாறு உதவுவதாக இராமல், மாறாக இடையூறாக மாத்திரமே இருக்கிறது. இதனால் மெய்யான திராட்சச்செடியின் எந்தக் கொடிகளும், தவறுதலாகப் பூமியின் திராட்சச்கொடியாகிய பெயரளவிலான சபை அமைப்புடன் இணைந்து இருக்காது என்று நாம் சொல்லவரவில்லை. இப்படியாகவும் கொடி இருக்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம்; மற்றும், "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படி, அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று கர்த்தருடைய குரல் அழைப்பதையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம். தாய் மற்றும் மகள்கள் மீது வரவிருக்கும் மாபெரும் உபத்திரவத்தை, இவ்வழைப்பில் கர்த்தர் பேசுகின்றார்.

கொடிகள் என்பது சபை பிரிவுகளையும், கூட்டத்தினரையும் குறிக்காமல் மாறாக, கர்த்தருடன் ஒன்றுப்பட்டுள்ள தனிநபர்களைக் குறிக்கின்றபடியால், இந்த உவமை போதிப்பது என்னவெனில் நமது கர்த்தர் சபை பிரிவுகளையும், கூட்டங்களையும் கிள்ளிவிடாமல், மாறாக தனிப்பட்ட கிறிஸ்தவர்களையேதான் கிள்ளிவிடுகின்றார். அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, எங்கெல்லாம் காணப்பட்டாலும் சரி, அவர்களை அவர் கிள்ளிவிடுகின்றார். "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோத்தேயு 2:19). இவ்விஷயம் தொடர்பாக, "என்னில் கனிக்கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிக்கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக்கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்" (கிள்ளிவிடுகின்றார்) என்று கர்த்தருடைய வார்த்தை காணப்படுகின்றது (யோவான் 15:2). நம்முடைய இரட்சிப்பும், கர்த்தருடனான நம்முடைய உறவு நிலையும் தனிப்பட்ட விதத்தில் மற்றும் தனிப்பட்ட காரியங்களாகவே இருக்கின்றது என வேத வாக்கியங்கள் அனைத்தும் நமக்குப் போதிக்கின்றன. நாம் சபையோராகவும், கூட்டங்களாகவும், சபை பிரிவாகவும், குடும்பங்களாகவும் இரட்சிக்கப்படுவதில்லை என்றும், மாறாக நாம் உயிர்சாற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், நாம் கர்த்தருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினராகக் கருதப்பட வேண்டுமெனில், நாம் தனிப்பட்ட விதத்தில் திராட்சச்செடியுடன் இணைந்திருக்க வேண்டுமென்றும் வேதவாக்கியங்கள் நமக்குப் போதிக்கின்றன.

## நம்முடைய ஒற்றுமைக்கான அநேக உதாரணங்கள்

தமக்கும், தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையை விவரிப்பதற்கென, அனைத்து ரகமான உதாரணங்களையும் கர்த்தர் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இயற்கையின் கனிப்பொருள் பெரும் பிரிவிலிருந்து (Mineral Kingdom) அவர் உதாரணத்தை வழங்குகின்றார். அதாவது நாம் தேவனுடைய ஆலயமாக இருக்கத்தக்கதாக, அஸ்திபாரமும், மூலைக்கல்லாகவும் இருக்கும் தம் மேல், நாம் ஜீவனுள்ள கற்களாக ஒன்றாய்க் கட்டப்பட்டுள்ளதைக் குறித்துக் கூறியுள்ளார். மிருகங்கள் பிரிவிலிருந்தும் (Animal Kingdom) நமது கர்த்தர் இந்த ஒற்றுமைக்கான உதாரணத்தை எடுக்கின்றார். அதாவது, தம்மை நல்ல மேய்ப்பனுக்கு ஒப்பிட்டு, தம்முடைய உண்மையான பின்னடியார்களை, தம்முடைய பராமரிப்பின் கீழ், தம்முடைய ஐக்கியத்தில் ஒன்றுபட்டிருக்கும் ஆடுகளுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இந்த ஒற்றுமை குறித்த உதாரணத்தை அவர் தாவரங்களின் பிரிவிலிருந்தும் (Vegetable Kingdom) எடுக்கின்றார். அதாவது தம்மைத் திராட்சச்செடி என்றும், தம்முடைய உண்மையான சீஷர்கள் கொடிகள் என்றும் கூறியுள்ளார். குடும்ப உறவிலிருந்து, உண்மையான கணவன் மற்றும் உண்மையான மனைவி குறித்தும் இருதயத்திலும் மற்றும் அனைத்து விஷயத்திலும் அவர்களது முற்றும் முழுமையான ஒன்றுப்பட்ட நிலையைக் குறித்தும் உதாரணமாக எடுத்துக் கூறியுள்ளார். அதே குடும்ப உறவிலிருந்து, தகப்பன் சிருஷ்டிகரைக் குறிக்கின்ற விதத்திலும், மூத்தக் குமாரன் தம்மைக் குறிக்கின்ற விதத்திலும், சகோதரர்கள் தம்முடைய அனைத்துப் பின்னடியார்களையும் குறிக்கின்ற நிலையிலும் இருக்கும் மற்றுமொரு உதாரணத்தை எடுத்துக்கூறியுள்ளார். மனித சரீரத்திலிருந்து நமக்கு இன்னுமொரு உதாரணமும் இருக்கின்றது. அதாவது கிறிஸ்துதாமே தம்முடைய சரீரமாக இருக்கும் சபைக்குத் தலையாக இருக்கின்றார். ஏனெனில் அப்போஸ்தலர் கூறுவதுபோல, நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் தனித்தனி அங்கங்களாக இருக்கின்றோம். இவைகளையெல்லாம் நமது விசுவாசமானது, எந்தளவுக்குக் கிரகித்துக்கொள்கின்றதோ மற்றும் இவைகளின் உண்மைத்தன்மையை நாம் எந்தளவுக்கு உணர்ந்துக்கொள்கின்றோமோ, அதேயளவுக்கு நம்மில் நற்கிரியையை ஆரம்பித்தவர், அதை நிறைவேற்றுவதற்கு விருப்பமும், வல்லமையையும் கொண்டிருக்கின்றார் என்பதில் நாம் உறுதியான விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டிருப்போம்

நேர்மையான மற்றும் கீழ்ப்படிதலுள்ள இருதயம் கொண்டவன் விசுவாசம் வைக்கும்போது, தேவையானபொழுதெல்லாம், சோதனையான ஒவ்வொரு வேளையிலும் பிரச்சனையான மற்றும் குழப்பமான ஒவ்வொரு வேளையிலும், ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் தனக்குப் பலத்தையும், கிருபையையும் பெற்றிருக்கின்றான். அதாவது சமநிலையில் இருப்பதற்கெனப் (கப்பலில், இரயில் பாதையடியில்) போடப்பட்டிருக்கும் பாரம்/சரளைக்கல்லை நாம் பெற்றிருப்போம்; மற்றும் ஜீவியத்தின் சகல அனுபவங்களிலிருந்து, கசப்பிலும், தித்திப்பிலும் நன்மையை அடைய நமக்கு உதவிடும்.

தம்முடைய நாமத்தில், தம்முடைய சீஷர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் ஒன்றுகூடினால், அவர்கள் சபையாக (அ) கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றனர் என்றும், அவர்களுடைய இருதயங்கள் எந்தளவுக்கு நேர்மையாகக் காணப்பட்டு, தம்முடைய வழிநடத்துதலை நாடுகின்றதோ, அந்தளவுக்கு அவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக (தலையாக), தாம் அவர்களோடு காணப்படுகின்றார் என்றுமுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகளானது பின்வருமாறு எண்ணிக்கொள்ள வழிநடத்துகின்றது; அதாவது எங்கெல்லாம் அவருடைய அங்கங்கள் இரண்டு அல்லது மூன்று பேர் காணப்படுகின்றார்களோ, அங்குத் திராட்சச்செடியின் உருவகத்தை நாம் பார்க்கலாம்; மேலும் அந்த இரண்டு அல்லது மூன்று பேருக்குக் கொடிகளுக்கான ஆசீர்வாதங்கள் அனைத்தும், கனிக்கொடுப்பதற்கான சிலாக்கியங்கள் அனைத்தும் கிடைக்கும். எனினும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்கள் அடங்கிய ஒவ்வொரு சிறு கூட்டத்தார் மத்தியிலும், மெய்யான கொடிகள் மாத்திரம் காணப்படத்தக்கதாக முழுமையான கிள்ளிவிடுதல்களும், முழுமையாய் எரிக்கப்படுதலும் காணப்படும் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் எனக் கர்த்தர் விரும்பவில்லை. நம்மைத் தனித்தனியாகவும், ஒட்டுமொத்தமாகவும் கையாளுகின்றார் என்றும், அவருடனான நமது தனிப்பட்ட உறவைத் தக்கவைப்பது என்பது அவருடனான ஐக்கியம் மற்றும் உறவின் பலன்களில் ஒன்றாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதன் முலமாக, அதாவது திராட்சச்செடியின் உயிர்சாற்றைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக மாத்திரமே என்பதும்தான், அவர் தெரிவிப்பவைகளாகும்.

பரிசுத்த ஆவியை நாம் நல்லதும், உத்தமுமான இருதயத்திற்குள் பெற்றுக்கொள்ளும்போது, விளைவு கனிக்கொடுப்பது என்பதாக இருப்பினும், நமது கர்த்தர் கொடுத்துள்ள உதாரணமானது, சிலர் திராட்சச்செடியின் மெய்யான கொடிகளாக ஆகியும், கவனிக்கத் தவறிப்போய், கனிக்கொடுக்கும் தன்மை இல்லாமல் காணப்படுகின்றனர் என்று போதிக்கின்றது. சில சமயம் நல்ல அடித்தண்டு மற்றும் வேரிலிருந்து வளரும் ஆரோக்கியமான மற்றும் திடகாத்திரமான கொடியானது, கனிகொடுக்கும் தன்மை இல்லாமல் காணப்படுகின்றது. அனுபவமிக்க கண்களையுடைய தோட்டக்காரர், திராட்சக்குலைகளைக் கொணரும் மொக்குகளுக்கும், இலைகளை மாத்திரம் கொணரும் மொக்குகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் அறிகின்றார். கனிக்குரிய மொக்குகள் அற்றவைகள் "உறிஞ்சிகள்" என்று அழைக்கப்படுகின்றன; காரணம் இவைகள் திராட்சச்செடியின் சாற்றை மாத்திரம் உறிஞ்சிக்கொள்கின்றது மற்றும் தோட்டக்காரரால் நாடப்படும் எவ்விதமான கனிகளைக் கொடுப்பதுமில்லை. இவைகள் கிள்ளிவிடப்படுகின்றன அல்லது வெட்டிவிடப்படுகின்றன, அதாவது வெளிப்புறமான அழகு தோற்றத்திற்கெனத் திராட்சச்செடியின் சாறு வீணடிக்கப்படாமல், மாறாக கனிக்கொடுக்கும் நோக்கத்திற்கெனச் சேமித்து வைக்கப்படத்தக்கதாகக் கிள்ளிவிடப்படுகின்றன அல்லது வெட்டிவிடப்படுகின்றன. உண்மையில் இந்த உறிஞ்சிகள் போன்று, கிறிஸ்தவர்களென அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் வகுப்பார் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களால் முடிந்தமட்டும் திராட்சச்செடியின் நீதியைச் சுயநலத்துடன் தங்களுக்குரியதாக்கிக்கொண்டு, இலைகள் அல்லது அறிக்கைகள் பண்ணுவதன் மூலமாக, உலகத்தில் வெளிவேஷமிட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் கர்த்தரால் எதிர்ப்பார்க்கப்படுகின்றதும், பலிச் செலுத்துவதன் மூலமாக மாத்திரமே உண்டாக்கப்படுகின்றதுமான கனிகளைக் கொடுக்கும், எண்ணம் கூட இல்லாதவர்களாய்க் காணப்படுவார்கள்.

## கிள்ளிவிடப்படுவதற்குரிய நோக்கம்

உறிஞ்சிகள் தவிர, கனிக்கான மொக்குகளைக்கொண்டிருக்கும் சில கொடிகளானது, ஒருவேளை அதன் போக்கின்படியே விடப்பட்டு, கொடிகளாக மாத்திரம் வளரும்படி விடப்பட்டால், நன்கு கனிந்த அளவிலுள்ள கனிகளை ஒருபோதும் கொடுப்பதில்லை. ஆகவே ஞானமுள்ள தோட்டக்காரர் கனிக்கான மொக்கினைக் கண்டு, அதில் மகிழ்ச்சியடைந்து, கொடிக்குப் பாதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்றில்லாமல், மாறாக அதனை அதிகமான கனிக்கொடுக்கத்தக்கதாக, ஆக்கத்தக்கதாக, கனிக்கான மொக்குகளுக்கு மேலாகக் காணப்படும் முளைகளைக் கிள்ளி

எறிந்துவிடுகின்றார். இதுபோலவே விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் மூலமாகக் கர்த்தருடன் இணைந்து கொடிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டு, கர்த்தர் எதிர்ப்பார்க்கும் நற்கனிகளைக் கொடுப்பதற்கு வாஞ்சிக்கும் கொடிகளாகிய நம் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாம் அதிகமான கனிக்கொடுக்கத்தக்கதாகவும், நாம் கொடுக்கின்ற கனிகள் அவருக்கு மிகவும் பிரியமாகவும், பெரிய கனியாகவும், நல்ல கனியாகவும், விலையேறப்பெற்ற கனியாகவும், மனதிற்கினிய கனியாகவும் இருக்கத்தக்கதாகவும், நமக்குத் தோட்டக்காரரின் பராமரிப்பு அவசியமாய் இருக்கின்றது. கர்த்தருடைய கிள்ளிவிடுதலின் முறைகளை, அனைத்துக் கொடிகளும் புரிந்துக்கொள்ள வேண்டும்; இல்லையேல் கொடிகள் சோர்வடைந்து வாடி வதங்கி, சரியான கனிகளைக் கொடுக்கத் தவறிவிடும்.

மாபெரும் தோட்டக்காரர், சிலசமயம் பூமிக்குரிய ஆஸ்தி (அ) சொத்தை எடுத்துவிடுவதன் மூலமாக அல்லது சிலசமயம் மனதில் பேணி சீராட்டின திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளைத் தடைப்பண்ணுவதன் மூலமாக, கிறிஸ்துவின் கொடிகளைக் கிள்ளிவிடுகின்றார். சிலசமயம் துன்பங்களை அனுமதிப்பதன் மூலமாகவும், நற்பெயரையும், நற்கீர்த்தியையும் இழக்கச் செய்வதன் மூலமாகவும் அவர் நம்மை கிள்ளிவிடுகின்றார். சிலசமயம் அவர் விரும்பும் அதிகமான கனிகளைக்கொடுப்பதற்குத் தடையான விதத்திலுள்ள, நம்முடைய இருதயத்தின் கொடிச்சுருள்கள் பலமாய்ப் படர்ந்திருக்கும் பூமிக்குரிய தோழமைகளை இழக்கச் செய்வதன் மூலம் அவர் நம்மைக் கிள்ளிவிடுகின்றார். "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்" எனத் தீர்க்கத்தரிசி கூறியுள்ளது போன்று, சில சமயம் நம்மை உபத்திரவத்திற்குள்ளாக்கும் நோய்களை அவர் அனுமதிப்பதும், இந்தக் கிள்ளிவிடுதல்களில் ஒன்றாகும். கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகர், உபத்திரவத்தின் படுக்கையில்தான், மிகவும் விலையேறப்பெற்றதான தங்களுக்குரிய படிப்பினைகளை அடைந்திருக்கின்றனர்.

சிலர் தாங்கள் எவ்வாறு பூமிக்குரிய விஷயங்களிலும், கவனத்தை ஈர்க்கும் காரியங்களிலும் மூழ்கிக் காணப்பட்டப்படியினால், யுகங்களைக் குறித்த தெய்வீகத் திட்டத்தைப் படிப்பதற்கும், தங்களுடைய சொந்த இருதயங்களைச் செம்மைப்படுத்துவதற்கும், ஆவியின் கனிகளைக் கொணர்வதற்கும், தங்களுக்கு நேரமில்லாமல் காணப்பட்டது பற்றியும் மற்றும் எவ்வாறு கர்த்தர் அதிகமான இரக்கத்துடன் தங்களைக் கொஞ்ச காலம் ஓய்ந்திருக்கப்பண்ணி, சிந்திப்பதற்கும், கிறிஸ்தவ வளர்ச்சியை அடைவதற்கும், தாங்கள் கிருபையில் வளரத்தக்கதாக, அறிவின் வளர்ச்சியை அடைவதற்கும் தங்களுக்கு அவசியமாய் இருந்த வாய்ப்புகளைக் கொடுத்தார் என்பது பற்றியும் நமக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். தோட்டக்காரரின் இந்தக் கிள்ளிவிடுதல்கள் காயப்படுத்துவதாகவும், பாதிப்பு ஏற்படுத்துவதாகவும், உண்மையான கொடிகள் எண்ணிக்கொள்ளாமல் மாறாக அவரை அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற வேதவாக்கியங்களின் நல்ல வாக்குத்தத்தத்திற்கு ஏற்பவே எண்ணிக்கொள்ள வேண்டும். அதாவது, மெய்யான கனிகளைக் கொடுக்கும் திராட்சச்செடியின் கொடிகளாக ஆக்குவதற்கே என்று எண்ணிக்கொள்ள வேண்டும். இப்படியான கிள்ளிவிடுதல்கள், சோர்வுகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, உற்சாகத்திற்குரிய ஊற்றுகளாகவே நம்மால் சரியான விதத்தில் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். உலகமானது அதன் போக்கிலேயே விட்டுவிடப்பட்டுள்ளது என்றும், பூமியின் திராட்சச்செடிகளுக்குக் கர்த்தருடைய விசேஷித்த கிள்ளிவிடுதல்கள் இல்லை என்றும், நமக்கு இந்த விசேஷித்த கிள்ளிவிடப்படுதல்கள் காணப்படுவது என்பது பிதா நம்மை அன்புகூர்ந்து, நம்முடைய மேலான நன்மைக்கு ஏதுவாக நமக்காகப் பராமரித்துக் கொள்கின்றார் என்பதற்கான ஆதாரமாய் உள்ளது என்றும் நாம் உணர்ந்துக்கொள்கின்றோம்.

## நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்

இந்தப் பாடத்தைத் தம்முடைய சீஷர்களுக்குப் பொருத்தி நமது கர்த்தர், அந்தச் சரியான கிள்ளிவிடுதல் ஏற்கெனவே அந்நாள்வரையிலும் அவர்களிடத்தில் நடந்துக்கொண்டு வருகின்றது என்றும், கனியற்ற கொடியாகிய யூதாஸ் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி அவர்களிடமிருந்து அகற்றப்பட்டுள்ளான் என்றும் சுட்டிக்காட்டினார். ஆகவேதான் அவர், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார்; அதாவது, "உங்களுடைய விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் நேர்மைக் காரணமாக, நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளபட்டுள்ளீர்கள்" என்ற விதத்தில் கூறினார் (யோவா 15:3).

இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் 11 அப்போஸ்தலர்களும் எத்துணை சந்தோஷம் அடைந்திருக்க வேண்டும்; மற்றும் அதே வார்த்தைகளின் உண்மையை நமக்குப் பொருத்திப்பார்க்கும்போது, நாமும் எத்துணை சந்தோஷத்தை அடைவோம். கிறிஸ்து மூலமான தேவனுடைய தயவாகிய இந்த மாபெரும் ஈவுக்காகக் கர்த்தருக்கு நன்றி. அதாவது பாவங்களுக்கான மன்னிப்பும், அவருடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்படுதலும் மாத்திரம் அவருக்குள் நமக்கு இருக்காமல், இன்னுமாக நமக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை (அ) உபதேசத்தை ஏற்றுக்கொண்டதன் மூலமாக, சுத்தமானவர்களாக, மெய்யான திராட்சச்செடியின் கொடிகளாக அவருக்குள் நாம் பிதாவானவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்கின்றோம். இத்தோடு எல்லாம் முடியவில்லை, இது வெறும் ஆரம்பம்தான். திராட்சச்செடியுடன் கொடிகள் கொண்டிருக்கும் இந்த ஆசீர்வாதமான உறவில் நாம் தொடர்ந்து நிலைத்திருப்பதையே, இறுதியிலுள்ள நமக்கான ஆசீர்வாதமும், பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுதலும் சார்ந்துள்ளது என்ற காரியமே நினைவில் கொள்வதற்கு அவசியமானதாகும்.

ஒருவேளை நாம் கனிக் கொடுக்கவில்லையெனில், நம்மால் இந்த உறவில் நிலைத்து நிற்க முடியாது. ஒருவேளை நாம் கனிக்கொடுப்போமானால், ஒருவேளை கனிக்கொடுப்பதற்குரிய ஆவியும், மனப்பான்மையும் நாம் பெற்றிருப்போமானால் மற்றும் கர்த்தருடைய கிருபையையும், பலத்தையும், உதவியையும் வாஞ்சிப்போமானால், தேவையான பொழுதெல்லாம் அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாகக் காணப்படும் மற்றும் நம்மை அன்புகூர்ந்து நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவர் மூலமாக நாம் ஜெயங்கொள்கின்றவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் காணப்படுவோம். கிறிஸ்துவுடன் இணைக்கப்படும் உறவின் காரணமாகவும், அவருடைய திருவுள்ளத்தின்படிச் செய்யத்தக்கதாக, அவருடைய ஆவி மற்றும் அவருடைய வார்த்தையின் வல்லமையானது, நம்மில் விருப்பத்தையும், செய்கையையும், உருவாக்குவதன் காரணமாகவும், அவருடைய கனி நம்மில் உருவாகுகின்றது. ஆகையால் இப்படியாகக் கிறிஸ்துவுடன் நாம் இணையவில்லையெனில், பிதா விரும்பும் கனிகளையும் நாம் கொணரமுடியாது மற்றும் நாம் அவருக்குப் பிரியமாகவும் இருக்க முடியாது. நாம் அவரில் நிலைத்திருந்தால் நாம் அதிகமான கனிக்கொடுப்போம் என்றும், அவரில்லாமல் நம்மால் எதுவும் செய்ய முடியாது மற்றும் பிதா அங்கீகரிக்கத்தக்கதான எவ்விதமான கனியும் பெற்றிருக்க முடியாது என்றும்தான் வாக்குத்தத்தம் காணப்படுகின்றது.

இந்தக் கனிக்கொடுத்தலின் தன்மை என்ன? பிதா நாடும் கனியை நாம் எப்படி அறிந்துக்கொள்ளலாம்? பூமியினுடைய திராட்சச்செடியின் தவறான வழிகாட்டுதல் மற்றும் தவறான முன்னுதாரணம் காரணமாக, கர்த்தர் நன்கு வளர வேண்டும் என விரும்பும் கனிகளானது, மாபெரும் பூமிக்குரிய ஆலயங்கள், அநாதை இல்லங்கள் முதலானவைகளைக் கட்டுதல் என எண்ணிக்கொள்ளும் நிலைக்கு அநேகர் ஆளாகியுள்ளனர் என்று நாம் பதிலளிக்கின்றோம். இல்லை, ஒருவேளை மேற்கூறியவைதான் கனிகள் என்றால், இயேசுவும், அப்போஸ்தலர்களும் கனிகள் கொடுக்கவில்லை என்பதாகிவிடும். அவர்கள் ஆலயங்கள் (அ) சிறிய ஆலயங்கள் (அ) பெரிய ஆலயங்கள் கட்டவில்லை. அவர்கள் அநாதை இல்லங்கள் (அ) மனநோயாளிக் காப்பகங்கள் (அ) மருத்துவமனைகள் கட்டவில்லை (அ) ஸ்தாபிக்கவில்லை. ஒருவேளை மேற்கூறியவைகள்தான் பிதா நாடும் கனிகள் என்றால், அப்பொழுது கர்த்தரும், அப்போஸ்தலரும் முற்றிலும் தவறு செய்துவிட்டவர்களாக இருப்பார்களே. ஆனால், இயேசுவும், அப்போஸ்தலரும் தவறு செய்யவில்லை என்றும், தவறு வேறு இடத்தில்தான் உள்ளது என்றும் நாம் கூறுகின்றோம். உலகத்தின் ஆவியினால் வழிநடத்தப்பட்ட பூமியின் திராட்சச்செடியானது, பயனுடைமை கொள்கையைப் (utilatarian) பின்பற்றி, உலகம் அங்கீகரிக்கும் வகையான, கனிகளைக்கொணர்ந்துள்ளது என்று நாம் கூறுகின்றோம்.

## உலகம் ஏற்பாடு செய்துள்ளது

மருத்துவமனைகள், காப்பகங்கள் முதலியவற்றிற்கு எதிராக, ஒரு வார்த்தைக்கூட நாம் சொல்வதில்லை. இவைகளெல்லாம் மிகவும் நல்லவைகள், மிகவும் விரும்பத்தக்கவைகள், சமுதாயம் மற்றும் நாகரிகத்திற்கு ஏற்றவைகள் என்றே நாம் நம்புகின்றோம். ஆனால் இவைகளையெல்லாம் ஏற்பாடு பண்ணிட, உலகம் கூட முழுத்திறமையுடன் உள்ளது என்றும், இவைகளை ஏற்பாடு பண்ணிட உலகம் கூட ஆயத்தமாயும் இருக்கின்றது என்றும், இன்னும் சொல்லப்போனால் உலகம் கூட உண்மையில் இவைகளை ஏற்பாடும் பண்ணியுள்ளது என்றும் நாம் நம்புகின்றோம். உதாரணத்திற்குத் தூய பிரான்சிஸ், தூய யாக்கோபு, தூய ஆக்நிஸ் மருத்துவமனைகள், காப்பகங்கள் முதலியவைகள், புரட்டஸ்டண்டும் சரி, கத்தோலிக்கமும் சரி அனைத்தும், அதன் பராமரிப்பிற்கு, அரசாங்கத்தின் நன்கொடையினால் ஆதரவு பெற்றிட நாடுகின்றது மற்றும் பெற்றுக்கொள்ளவும் செய்கின்றது; மற்றும் சில கோணங்களில் பார்க்கும்போது இவைகள் 1075--

அனைத்தின் மீது அரசாங்கத்திற்குப் பொறுப்பும்/அதிகாரமும் காணப்படலாம். ஆனால் இப்பொழுது எந்தளவுக்கு முற்றும் முழுமையாக இவைகள் மீது, இன்று அரசாங்கம் அதிகாரம் அடைந்துள்ளது என்பது நமக்குத் தெரியவில்லை. மெய்யான திராட்சச்செடியின் மெய்யான கொடிகளில் எதுவும், இந்தப் பூமிக்குரிய அமைப்புகளில் ஏனும் ஒன்றுடன் தொடர்புக்குள் இராது என்று சொல்ல நாம் வரவில்லை. அதேசமயம் இப்படியாக மருத்துவமனைகள், காப்பகங்கள் உருவாக்கிடுவது, கர்த்தருடைய உவமையின்படியான கொடிகளின் கனிகள் இல்லையென்றும், ஒருவேளை கொடிகள் சரீரத்தின் அங்கங்களாகவும், அதேசமயம் பாபிலோனின் அங்கங்களாகவும் இருப்பினும், பிதா விரும்பும் கனிகளையும், மற்ற நல்ல கனிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் நாம் முன்வைக்கின்றோம்.

சத்தியத்திற்கான ஊழியங்கள் அதாவது சத்தியத்தைப் பரப்புதல், சத்தியத்தை எடுத்துக் கூறுதல், சிலரை இருளினின்று சத்தியத்தின் வெளிச்சத்திற்கும் மற்றும் அறிவிற்கும் கொண்டுவருதல், சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கெனப் பணத்தைச் செலவிடுதல் என்பது சிலசமயம் ஆவியின் கனிகள் என்றும், கொடிகள் கொடுக்க வேண்டும் என்று கர்த்தரால் எதிர்ப்பார்க்கப்படும் கனிகள் என்றும் கருதப்படுகின்றது. கனி இதுவல்ல! இவைகளைக்காட்டிலும் மேன்மையானதாகவும், உயர்ந்ததாகவும் இருப்பவைதான் கனிகள். மேலும், இந்தக் கனிகள், அப்போஸ்தலரால் ஆவியின் கனிகள் என்று விவரிக்கப்படுகின்றது. திராட்சச்செடியின் ஆவியானது, அனைத்துக் கொடிகளிலும் ஊடுருவிட வேண்டும் மற்றும் திராட்சச்செடியின் கனிகளானது, ஒவ்வொரு கொடியிலும் காணப்பட வேண்டும். இந்த ஆவியின் கனிகள், சாந்தமாகவும், பொறுமையாகவும், நற்குணமாகவும், நீடிய பொறுமையாகவும், சகோதர சிநேகமாகவும், அன்பாகவும் பட்டியலிடப்படுகின்றது. ஒருவேளை இவைகளெல்லாம் நம்மில் காணப்பட்டு, பெருகும்போது, இவைகள் நம்மை நமது கர்த்தரும், இரட்சகருமானவர் பற்றின அறிவில் வீணரும், கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

இந்தக் கனிகள் அனைத்தும் ஏதோ சிலவிதத்தில் ஒன்றாகத்தான் உள்ளது. அதாவது கிறிஸ்தவனுடைய பொறுமையின் சாரம் அன்பாக இருக்கின்றது. நம்பிக்கை மற்றும் விசுவாசம் மற்றும் சந்தோஷத்தின் சாரம், நம்முடைய பிதாவுக்காகக்கொண்டிருக்கும் அன்பாகவும், நமக்கான அவருடைய வாக்குத்தத்தத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற அவருடைய அன்பின் மீதான நமது நம்பிக்கையாகவும் இருக்கின்றது. ஆகையால் ஆவியின் இந்த அனைத்துக் கனிகளும், கிருபைகளும், அன்பு என்னும் ஒரே வார்த்தையின் மூலம் சொல்லப்படலாம். ஒவ்வொரு கொடியும், கொடிக்கான தன்னுடைய ஸ்தானத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், பிற்பாடு மகிமையடைந்த திராட்சச்செடியின் கொடியாகவும் வேண்டுமெனில், இந்தக் கனிகள் ஒவ்வொரு கொடியினிடத்திலும் காணப்பட வேண்டும். இவைகளில்லாமல் இருந்தும், மற்ற நல்ல விஷயங்கள் நம்மில் இருப்பதினால், தெய்வீகப் பரிசோதனையில் தப்பித்துக்கொள்ளலாம் என எண்ணிக்கொண்டு, நாம் நம்மையே வஞ்சித்துக்கொள்ளாமல் இருப்போமாக. மற்றவைகள் அதாவது, நல்ல கிரியைகள், அதாவது சத்தியத்தை நாடுவது, (volumes) வேதாகம ஆராய்ச்சிப்பாடங்களின் தொகுதிகளை விநியோகித்தல் என்பவைகள், நம்முடைய இருதயத்தின் கனிகளின் விளைவாக இருப்பதற்கேற்பவே, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதாய் இருக்கின்றது. இதை அழுத்தமாக அப்போஸ்தலர், "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 13:3).

இதே கருத்துக் கர்த்தருக்கான ஊழியத்தின் விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது. ஒருவேளை நாம் ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு மணி நேரத்தையும் அறுவடை வேலைகளில் செலவிட்டாலும், ஒருவேளை பிரதிகள் மற்றும் புத்தகங்கள் அச்சிடப்படுவதற்கென நம்முடைய பணம் அனைத்தையும் கொடுத்துவிட்டாலும் அல்லது கர்த்தருடைய நோக்கத்திற்கடுத்த ஊழியங்களுக்காக ஏதாவது விதத்தில் நம்மையே நாம் பயன்படுத்திக்கொண்டாலும், இவைகள் நம்முடைய இருதயத்தினுடைய அன்பின் விளைவாக இல்லையெனில், இவைகளினால் நமக்குப் பிரயோஜனம் எதுவும் இராது. ஆகவே நம்முடைய இருதயத்தில், பரிசுத்த ஆவியின் வரங்களாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, அன்பு முதலியவைகளை நாம் வளர்க்க வேண்டும்; மற்றும் இவைகள் கர்த்தருக்குப் பிரியமாக இருக்கத்தக்கதாகவும், "அதிகமான கனிகளைக்" கொடுக்கத்தக்கதாகவும், நாம் பெருகப் பண்ணவும் வேண்டும் என்பதே காரியமாகும். பல்வேறு வழிகளில், ஒருவேளை ஏழைகளுக்கு உதவி பண்ணுவதன் மூலமாகவும், ஒருவேளை இரத்தச் சாட்சியாக நாம் மரிக்கத்தக்கதாக, நமது சரீரங்கள் சுட்டெரிக்கப்படத்தக்கதாக, சத்தியத்தை முன் வைப்பதில் அப்படிப்பட்ட ஓர் உண்மையைக் காட்டுவதன் மூலமாகவும் சந்தேகத்திற்கிடமின்றி இந்தக் கனிகளுடைய வெளிப்படுத்தல் 1076--

காணப்படும். ஒருவேளை நீதியின் கொள்கைக்கான நமது உண்மையின் காரணமாகவும், கர்த்தருக்கான நமது அன்பு மற்றும் நேர்மையின் காரணமாகவும் இப்படியாக நமக்குப் பொருள் இழப்புகள் (அ) சரீரம் சுட்டெரிக்கப்படுதல் சம்பவிக்குமாயின், அப்பொழுது நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

## வாடின கொடிகள் சுட்டெரிக்கப்படுதல்

திராட்சச்செடியின் கனிகளைக் கொடுக்காமல் இருப்பவர்கள் கொடிகள் நிலையிலிருந்து வெட்டப்பட்டு, வாடிப்போய், இறுதியில் சுட்டெரிக்கப்படுமென்று சொல்லப்பட்டுள்ள காரியமானது, இரண்டாம் மரணத்தை, அதாவது அவ்வகுப்பாரின் முழுமையான அழிவைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது உலக வகுப்பார் அல்ல, ஏனெனில், உலகம் ஒருபோதும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படவில்லை. உலகம் ஒருபோதும் திராட்சச்செடியின் கொடிகளாக இருந்ததில்லை. ஆகவே உலகம் ஒருபோதும் இவ்விதமாகப் பரீட்சையின் கீழ்க் காணப்படவுமில்லை. கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பைப் பண்ணிக்கொண்டவர்கள், அவருடன் முழுமையான உறவிற்குள் கடந்துவந்தவர்கள், பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டவர்களே இங்குப் பேசப்படுகின்றார்கள். இவர்களைப் பற்றிப் பேசப்படும் வார்த்தைகள் எபிரெயர் 10:31-ஆம் வசனத்தில் அப்போஸ்தலரால் கூறப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு இணையாக உள்ளது; "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே."

உலகமானது ஜீவனுள்ள தேவனுடைய கரத்தில் காணப்படவில்லை. மாறாக உலகமானது தற்காலத்தில் ஆதாமுக்குள் மரித்துப்போனதாகவும், ஆதாமிற்குரிய தீர்ப்பின் கீழ்க்காணப்படுவதாகவும் கருதப்படுகின்றது; மற்றும் உலகம் கர்த்தரால், இப்பொழுது நியாயம் தீர்க்கப்படவில்லை. சபை மாத்திரமே ஆதாமின் தண்டனை தீர்ப்பினின்று விடுதலையடைந்தவர்களாகக் கருதப்படுகின்றனர் மற்றும் நியாயத்தீர்ப்பிலும் காணப்படுகின்றது. ஆகவே சபை மாத்திரமே கிறிஸ்துவின் கரங்களிலிருந்து விழுந்து, பிதாவினுடைய கரத்திற்குள் விழுவதற்குரிய வாய்ப்பில் இருக்கின்றனர். கிறிஸ்துவிடமிருந்து அறுப்புண்டுப் போகிறவர்களுக்கு, எவ்விதமான நம்பிக்கையும் இல்லை. ஏனெனில் இப்படிப்பட்டவர்களுக்கு இரண்டாம் மரணத்தைக் காட்டிலும் வேறு எதுவும் நன்மையாக இருக்க முடியாது. இன்னுமாக நித்திய காலத்திற்குமான சித்திரவதைக் கொள்கை உண்மை இல்லை என்பதிலும் நாம் மகிழ்ச்சிக்கொள்கின்றோம். இப்படிப்பட்டவர்கள் முழுமையான அழிவிற்குள் போகும்போது, இவர்கள் தேவனால் அருளப்படும் என அறிவிக்கப்பட்ட அனைத்தையும் இழந்துவிடுகின்றவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்களது இந்த இழப்பானது, நித்திய ஜீவனை அடைவோரின் கணிப்பில் பயங்கரமானதொரு இழப்பாகத் தோன்றும்.

இப்படியாகக் கொடிகள் வெட்டப்பட்டு, வாடிப்போய், சுட்டெரிக்கப்படுவது பற்றின இவ்வார்த்தைகளானது, விசுவாச வீட்டாரிலுள்ளவர்களை, அதாவது இயேசுவை விசுவாசித்தும், ஒருபோதும் கிறிஸ்துவின் அங்கங்களாக (அ) கொடிகளாக ஆகாதவர்களைக் (பெயர்க்கிறிஸ்தவர்களை) குறிப்பதில்லை. இவ்வார்த்தைகள் திரள்கூட்டத்தாரையும் குறிப்பதில்லை. இந்த (இரண்டம் மரணம்) வகுப்பார் பற்றி வெகு சொற்பமான வேதவாக்கியங்களே பேசுகின்றன. இந்த வகுப்பாராகும்படிக்கு எவரும் அழைக்கப்படவில்லை என்று கர்த்தர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றார். இன்னுமாக சிலரைக் குறித்து, "அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்" (1 கொரிந்தியர் 3:15) என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்; மற்றும் இது தொடர்பான சிறு கருத்து, கொடிகள் நிலையிலிருந்து வெட்டப்பட்டு, வாடிப்போய், சுட்டெரிக்கப்படுதல் பற்றின ஆண்டவருடைய வார்த்தைகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்படலாம். அதாவது 1 கொரிந்தியர் 3:15-ஆம் வசனத்தில், அப்போஸ்தலரால் குறிப்பிடப்படும் (திரள்கூட்டம்) வகுப்பார், கொடிகள் என்ற விதத்தில் சுட்டெரிக்கப்படுவார்கள்; அவர்கள் உடன்படிக்கையின் மூலம் இணைந்து கொண்டிருந்த அங்கத்துவம் அழிந்துவிடும்; ஆனால், அந்நபர் தனிப்பட்ட விதத்தில் நித்திய காலத்திற்குமென அழிந்துவிடுவதில்லை. 1 கொரிந்தியர் 3:15-ஆம் வசனத்தில் இடம்பெறும் வகுப்பார் (திரள்கூட்டத்தினர்) அக்கினியால் இரட்சிக்கப்படுவார்கள்; ஆனால் அவர்கள் கட்டினது வெந்துபோகும் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார்.

## திராட்சச்செடியில் அங்கத்துவத்திற்கான பலன்

இப்படியாக, தம்முடன் இணைந்திருப்பதினால் விளங்கும் பலன்கள் குறித்து, நமக்குக் கர்த்தர் சொல்லுகின்றார்:

இவர்கள் எதையும் அவரிடத்தில் கேட்கலாம் என்பதும், இவர்கள் கேட்பது இவர்களுக்கு அருளப்படும் என்பதும்தான் முதலாம் பலனாகும். ஒரே ஒரு நிபந்தனை உள்ளது. அதென்னவெனில், இப்படியாக இவர்கள் கேட்பதற்கு/விசாரிப்பதற்கு ஆயத்தப்படுகிறதற்கு முன்னதாக, கர்த்தருடைய சித்தம் என்னவென்பதையும், அவருடைய சித்தத்திற்கேற்ப தாங்கள் கேட்க வேண்டியது என்னவென்பதையும் தாங்கள் உறுதிப்படுத்திக்கொள்ளும்படியாக, கர்த்தருடைய வார்த்தைகளுக்குத் தாங்கள் கவனம் செலுத்தத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவர்களுக்குச் சொந்த சித்தம் என்ற ஒன்று இருக்கக்கூடாது; மற்றும் தங்களுடைய தலையின் சித்தத்தையே, தங்களது சித்தமாகக் கொண்டிருக்க வேண்டும். மேலும் இவர்களுடைய (இயேசு) தலை, பிதாவின் சித்தமே, தமது சித்தமாக இருக்கின்றது என ஏற்கெனவே அறிவித்துள்ளார். நாம் பிதாவின் சித்தத்தை நம்முடைய இருதயங்களில் கொண்டிருக்க வேண்டும் என்பதும், பிதாவின் வாக்குத்தத்தங்களை நம்முடைய இருதயங்களில் கொண்டிருக்க வேண்டும் என்பதும்தான் நிபந்தனைகள் (அ) வரையறைகளாகும். இவைகளுக்கேற்ப நம்முடைய விண்ணப்பங்கள் காணப்படும்போது, அவைகளையெல்லாம் அருளிடுவதற்கு கர்த்தர் பிரியமாய் இருப்பார்.

இரண்டாவது பலன் என்னவெனில், நம்முடைய கனி பெருகுகின்றதற்கு ஏற்ப, பிதாவும் அதிகமாய் மகிமைப்படுத்தப்படுவார். பிதாவின் சித்தத்தை அறிந்துக்கொள்வதற்கும், அதன்படிச் செய்வதற்கும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம், நமது ஜீவியங்கள் வாயிலாகப் பிதாவை மகிமைப்படுத்துவதற்கும், கனப்படுத்துவதற்கும் வழக்கமாகவே நாடுவதாகிய நிபந்தனைகளின் அடிப்படையில்தான் நம்முடைய சீஷத்துவம் தொடர முடியும். மேற்கூறியுள்ள நிபந்தனைகளில் குறைவுபடுவது என்பது நம்முடைய சீஷத்துவத்தைப் பறிகொடுப்பதாகிவிடும். நம்மிடமிருந்து அது உடனடியாகப் பறிமுதல் பண்ணப்படுவதில்லை. அதாவது ஏதோ நம்மைத் தள்ளிவிடத்தக்கதாகக் கர்த்தர் உடனடியாகச் செயல்படுவார் என்றில்லை. மாறாக நாம் கிருபையில் வளர்வதும், நாம் அறிவில் வளர்வதும் தேவனுடனான இசைவில் வளர்வதும், ஆவியின் கனிகளில் வளர்வதும், நம்முடைய உடன்படிக்கை உறவின் ஒரு பாகமாக இருக்கின்றதினால், ஒருவேளை இந்த ஒப்பந்தத்திலிருந்து நாம் பின்வாங்குவோமானால், சீஷர்களாக, அங்கங்களாக நமது உறவை, நாம் தக்கவைத்துக்கொள்பவர்களாக கருதப்படுவதில்லை.

திராட்சச்செடியுடனான இந்த அங்கத்துவம் மற்றும் கொடிகளாக நம்முடைய தொடர்சியான வளர்ச்சியின் பலனாகிய மூன்றாவது பலன், ஒன்பதாம் வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது திராட்சச்செடியாகிய கர்த்தர் இயேசுவைப் பிதா அன்புகூருவது போன்று, நம்முடைய மீட்பரும் அவருடைய கொடிகள் (அ) அங்கங்களாகிய நம்மை அன்புகூருகின்றார். பிதா நம்முடைய ஆண்டவர் மீது கொண்டிருந்த அதே அன்பை, நமது ஆண்டவர் நம் மீதும் கொண்டிருக்கின்றார் என்பது எத்துணை ஆச்சரியமான கருத்தாய் உள்ளது! இந்தக் கருத்தை நமது விசுவாசத்தினால் எப்பொழுதும் பற்றிக்கொண்டிருக்க முடியுமானால், அதுவும் பற்றிக்கொண்டிருப்பதைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமானால், உண்மையில் நாம் பயப்படுவதற்கோ (அ) ஆசைப்படுவதற்கோ எதுவும் இராது. அதாவது நமக்கு வருடம் முழுவதும் கோடை காலமே. அடுத்தக் கருத்து என்னவெனில், கர்த்தருடைய தயவை/அன்பை அடையும் இந்த உயர்வான நிலையை எட்டிய பிற்பாடு, ஒருவேளை நாம் அவருடைய சீஷர்களாகவே இருந்து, அவர் நமக்குச் செய்துள்ளவைகளை உண்மையாய் உணர்ந்துக்கொள்வோமானால், அவருடைய அன்பில் நிலைத்திருக்க நாம் வாஞ்சிக்கிறவர்களாய் இருப்போம் என்பதேயாகும். அடுத்ததாக, இந்த அன்பில் நாம் நிலைத்ததிருப்பதற்கான நிபந்தனைகளை, அதாவது நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது பற்றி வருகின்றது.

இது நியாயமற்ற கூற்றல்ல/கருத்தல்ல என்று நமக்குக் காண்பிக்கும் பொருட்டு, இதே நிபந்தனைகளின் பேரில்தான், தம்மையும் பிதா கையாண்டார் என்று தெரிவிக்கும் விதத்தில், "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல" (யோவான் 15:10) என்ற வார்த்தைகளைக் கூறினார். நாம் கர்த்தருடைய அன்பில் நிலைத்திருந்து, அதேசமயம் அவருடைய கட்டளைகளுக்கு அஜாக்கிரதையுடன் இருக்கலாம் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. பிதாவுக்கு அவர் காண்பித்தக் கீழ்ப்படிதலானது, அவர் பிதாவின் மீது கொண்டிருந்த அன்பின் அளவாய் இருந்தது போன்று, கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிவது என்பது, நாம் அவருக்கு உண்மையாய் இருப்பதற்குரிய அளவாய் இருக்கும். இதே கருத்தும், இன்னும் கொஞ்சம் சேர்த்து, அப்போஸ்தலர், "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1 யோவான் 5:3) என்று கூறுகின்றார். நாம் கற்பனைகளைக் கைக்கொள்வது மாத்திரம் போதாது. இன்னுமாக, நாம் அன்புடனும் உண்மையுடனும், மனப்பூர்வத்துடனும் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்; மற்றும் கற்பனைகளைப் பாரமானவைகளாக எண்ணாமல், மாறாக கர்த்தருடைய நீதியான

அனைத்து ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயல்படுவதிலும் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுவினால் கொடுக்கப்பட்ட நீதியான கொள்கைகள் அனைத்துடன், அதாவது அவருடைய கற்பனைகள் அனைத்துடன், முழு இருதயப்பூர்வமான இசைவுடன் இருக்கும் இந்த ஆவியை நாம் அனைவரும் அதிகமதிகமாக நாடுவோமாக.

நமது கர்த்தருடைய கற்பனைகள் என்பது, மோசேயினுடைய பத்துக் கற்பனைகள் அல்ல. ஆனால் கர்த்தருடைய கற்பனையானது ஏறக்குறைய எதிர்ப்பார்ப்பின் கண்ணோட்டத்தில்தான் காணப்படுகின்றது. (கர்த்தருடைய கற்பனைகள்) இக்கற்பனைகள் என்பது நமது மாம்சத்திடம் எதிர்ப்பார்க்கப்படும் கண்ணோட்டத்தில் அல்லாமல், நம்முடைய இருதயத்திடம் எதிர்ப்பார்க்கப்படுபவைகளாக இருக்கின்றது. சுருக்கமாக அவருடைய கற்பனை என்பது, நம்முடைய முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் பிதாவை அன்புகூருவதும், நாம் நம்மை அன்புகூருவது போன்று நம்முடைய அயலானை அன்புகூருவதுமாகும் என்று நம்மிடம் கூறுகின்றார். இது நம்முடைய பூரணமற்ற மாம்சத்திற்கு முடியாத காரியமாக இருப்பினும், நம்முடைய புதுப்பிக்கப்பட்ட இருதயங்களுக்கு முடிகிற காரியமாகவே இருக்கின்றது. இந்தத் தேவனுடைய கற்பனைக்கு நம்முடைய இருதயங்கள் ஊழியம் செய்வதும், நம்முடைய மாம்சத்தைக் கொண்டு முடிந்தமட்டும் செய்வதும்தான், கர்த்தர் எதிர்ப்பார்ப்பதாகும்; மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் முற்றும் முழுமையாய், திருப்தியாய்க் கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதான புதிய சரீரங்கள் நமக்கும் இருக்கும் என்ற வாக்குத்தத்தம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும்

ஏன் இந்தச் சிறியதும், அதேசமயம் மிகவும் ஆழமான பாடத்தைக் கொடுத்தார் என்பதைக் கூறி நிறைவு செய்யும் வண்ணமாக, "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" என்று பேசினார் (யோவான் 15:11, 12). ஜீவனுக்கேதுவான அற்புதமான இந்த வார்த்தைகள் பல நூற்றாண்டுகள் கடந்துவந்து, இடுக்கமான வழியில் காணப்படும் கர்த்தருடைய பின்னடியார்கள் அநேகரை உற்சாகமும், தைரியமூட்டியும் உள்ளது.

தூய்மையும், மாசற்றதுமான இந்த மார்க்கத்தை அநேகர் எதிர்த்துப்பேசுகின்றனர். சிலர் இது சந்தோஷமற்றது என்றும், வருத்தத்தைக் கொடுக்கின்றது என்றும், இருதயம் மற்றும் மூளையை விலங்கிடுகின்றது என்றும், இன்பம் எனும் ஒவ்வொரு கோயிலிருந்தும் மனுஷனைச் சாட்டையினால் அடித்துத் துரத்திவிடுகின்றது என்றும், சந்தோஷத்திற்குரிய ஒவ்வொரு களத்திற்கு முன்பாக, "இங்கு மீறி நுழையாதே" எனும் (notice post) பலகைத் தூணை நாட்டியுள்ளது என்றும், குற்றம்/குறை கூறுகின்றனர். இது தவறு என்பது நமது பதிலாக இருக்கின்றது. அதாவது இப்படியெல்லாம் கூறுகின்றவர்கள், வசனத்தில் உள்ளவைகளை அறியாதவர்கள், புரியாதவர்கள் ஆவர். கர்த்தருக்கு உண்மையாய் உடன்படிக்கைப் பண்ணியுள்ளவர்களும், அவரை உண்மையாய் ஏற்றுக்கொண்டவர்களும், அவருடைய பாதத்தில் தங்களுடைய ஜீவியங்களை உண்மையில் ஒப்புக்கொடுத்துவிட்டு, உண்மையில் அவருடைய பின்னடியார்களாக ஆகியுள்ளவர்களும், அவர் வாக்களித்துள்ளபடியே அவருடைய சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டுள்ளனர்; மற்றும் நாளுக்குநாள், வருடம் செல்லச்செல்ல, அச்சந்தோஷம் பெருகிக்கொண்டிருந்து கிட்டத்தட்ட முழுமையடையப் போகின்றது. நிறைவானது வந்து குறைவானது ஒழியும் போதும், உயிர்த்தெழுதலின் நிலைமையில் நாம், "உங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்ற அவரது வரவேற்பை கேட்கும் போதும்தான், அது (சந்தோஷம்) முழுமையடையும்.

இப்பொழுது விசுவாசத்தின் மூலமாகவும், எதிர்ப்பார்ப்பின் மூலமாகவும், இருதயத்தின் இளைப்பாறுதல் மூலமாகவும், அந்தச் சந்தோஷங்களுக்குள்ளாக நாம் பிரவேசிக்கின்றோம். ஆனால் பிற்பாடே நாம் நிஜமாகவே அந்தச் சந்தோஷங்களுக்குள் பிரவேசிப்போம். இதற்கிடையில் உலகம், அதனை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. உலகம் கர்த்தருடைய சந்தோஷங்களை உணர்ந்துக்கொள்ளவில்லை. உலகம் சுயநலத்தினாலும், பொறாமையினாலும், இலட்சியங்களினாலும், வாக்குவாதத்தினாலும் நிறைந்துள்ளது. உலகம் அவரை அறியாதது போல, நம்மையும் அறிந்துக்கொள்ளவில்லை. நமது கர்த்தர் தம்முடைய ஜீவியத்தையும் பலிச்செலுத்தி, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியதில் அனுபவித்த சந்தோஷங்களை உலகம் அறியாததுபோல, ஆண்டவருடைய ஊழியத்தில் இருக்கும் நம்முடைய சந்தோஷங்களையும் உலகம் அறியாது.

## நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல

நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டுமென்று, கர்த்தர் கட்டளையிட்டது நம்மை வியப்படையச் செய்யவில்லை; ஆனால் "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல" என்ற வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கருத்துதான் நம்மைத் திகைக்கவைக்கின்றது. கர்த்தர் நம் ஒவ்வொருவர் மீதும் கொண்டிருந்த அன்பைப்போன்று, எவ்வாறு நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய முடியும்? என்பதுதான் நமது முதல் கேள்வி. ஆரம்பத்தில் இது சாத்தியம் அற்றதுதான். ஆனால் நாம் அதிகமதிகமாகக் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்படும்போது, அவருடையவர்களாய் இருக்கும் அனைவரிடத்திலுமான பூரணமான அன்பின் இந்தக் கொள்கைக்கு/அளவுக்கோலுக்குக் கிட்ட நெருங்குவோம். மற்றவருக்குப் பாதகம் செய்வதற்கு மறுக்கக்கூடிய அன்பாய் மாத்திரம் இராமல், சகோதரனுக்கு நன்மை செய்வதில் நம் சொந்த நேரத்தையும், சௌகரியத்தையும் தியாகம் பண்ணி நன்மை செய்வதில் சந்தோஷமடையக்கூடிய அன்பாகிய, பூரணமான அன்பின் இந்த அளவுக்கோலுக்குக் கிட்ட நெருங்கிடுவோம். இப்படியாகவே, இயேசுவும் நம் அனைவரையும் அன்புகூர்ந்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்டார். மேலும், நாம் எந்தளவுக்கு அவரைப்பற்றின கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் கிறிஸ்துவைப்போல இருப்போம்; மற்றும் கிறிஸ்துவின் அன்பை ஒத்த அன்பைப் பெற்றிருப்போம். இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது. மேலும் சகோதர சகோதரிகளுக்காக இப்படிப்பட்ட அன்பைக் கொண்டிருப்பவர்கள், சந்தேகத்திற்கிடமின்றித் தவிக்கும் சர்வ சிருஷ்டியின் மீதும், அனுதாப அன்பை முழுமையாய்க் கொண்டிருப்பார்கள்; மற்றும் அவர்கள் சார்பில் இப்பொழுது உலகத்திற்குச் செய்ய முடிகின்ற சொற்பமானவைகளைச் செய்வதில் மகிழ்ச்சிக்கொள்வார்கள்; மற்றும் கர்த்தருடைய ஏற்ற வேளையில் ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொருவருக்கும், மாபெரும் அற்புதமான ஆசீர்வாதங்களைக் வைத்திருக்கின்றார் என்பதில் இரட்டிப்பான மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

இவைகளையெல்லாம் நாம் அறிந்திருப்பதும், கர்த்தருடைய திட்டங்களைப் புரிந்துக்கொள்வதும், அவருடைய வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கொள்கைகளைப் புரிந்துக்கொள்வதும், மிக முக்கியமானதுதான். ஆயினும் நமக்குச் சகல அறிவு இருந்தாலும், அதனை பயன்படுத்தாதது வரையிலும், நமக்கு நன்மை கிடைக்காது. எப்படி அடைய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலமாக மாத்திரம், நாம் கர்த்தருடைய கிருபையான ஏற்பாடுகளிலிருந்து நன்மை பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணாதிருப்போமாக. மாறாக தேவையான படிகளை எடுத்து வைப்போமாக... அதாவது நாம் முழுமையாய் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாகவும், நாம் அவரை நெருங்கி வாழத்தக்கதாகவும், நாம் கனிக்கொடுக்கின்றவர்களாக இருக்கத்தக்கதாகவும், அவருடைய அன்பிலும், பிதாவினுடைய அன்பிலும், அவர் இணைத்துள்ளவர்கள் மீதான அன்பிலும் நாம் நிலைத்திருக்கத்தக்கதாகவும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

*****

# நினைவுகூருதல் ஆசரிப்பு

நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆசரிப்பானது, அடிக்கடி ஆசரிக்கப்படுவதைக்காட்டிலும், வருடாந்தர ஆசரிப்பாய்க் காணப்படுவதே ஏற்றது என்று கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு வருடமும் அறிந்துகொண்டு வருகின்றனர். அலிகெனியில் (Allegheny) இவ்வருடம் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை, முன்பிருந்த எண்ணிக்கையைக்காட்டிலும் மிக அதிகமாக இருந்தது. அதிக எண்ணிக்கைக் காணப்படும் என்று எதிர்ப்பார்த்த வண்ணமாகத்தான், ஞானஸ்நானத்திற்குத் தூது மதியவேளையின்போது கொடுப்பதற்கும், ஏப்ரல் 16-ஆம் தேதி, மாலையன்று நினைவுகூருதல் ஆராதனைக்கென்றும், கார்நீஜீ அரங்கை ஏற்பாடு பண்ணியிருந்தோம். பத்துச் சகோதரர்களும், 31 சகோதரிகளும், கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற பலியினால் சாத்தியமான மீட்பின் மீதான விசுவாசத்தையும், தாங்கள் பாவத்தைத் துறந்ததையும், மரணம் வரையிலுமாக சுயத்தைப் பலிச்செலுத்தி இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்திடுவதற்காக தங்களுடைய முழுமையான அர்ப்பணிப்பையும் வெளிப்படையாய் அறிக்கைப்பண்ணின பிற்பாடு, பைபிள் ஹவுஸ் பேப்பிஸ்டிரியில் (Bible House Baptistry) வைத்து, மரண – ஞானஸ்நானத்தைத் தண்ணீரில் அடையாளப்படுத்தினார்கள்.

## அந்நிகழ்வும், அந்நாளும்

நினைவுகூருதல் ஆராதனையின்போது, சரித்திரத்தினுடைய இந்த மாபெரும் நிகழ்வானது ஏன் வாரந்தோறும், மாதந்தோறும், காலாண்டுதோறும் என்றில்லாமல் வருடந்தோறும் ஆசரிக்கப்படுகின்றது என்பதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. அந்த ஒருநாளோ (அ) மணி நேரமோ (அ) வேளையோ விசேஷித்த முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, மாறாக அது வருடாந்தர ஆசரிப்பாகவே கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் இப்படியாக ஆசரிக்கப்படும்போதே, அது உரிய தாக்கத்தினை மனதில் பதியப்பெற்றிருக்கும். உண்மையைச் சொல்லவேண்டுமெனில், நாம் அனைவரும் அறிந்திருக்கிறபடி, அது உலகமெங்கும் அதேவேளையில் (அ) மணி நேரத்தில் அல்லது அதேநாளில்கூட ஆசரிக்கப்பட முடிகிறதில்லை; நேரத்தின் வித்தியாசம், அவ்வளவுக்குக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு நாம் அலிகெனியில் (Allegheny) ஆசரிக்கும்போது — லண்டனிலுள்ள சகோதரர்கள் ஆசரித்து முடிந்து, நடுராத்திரி தாண்டி, அவர்கள் தூங்கிக்கொண்டிருப்பார்கள். மேலும் நாம் அவர்களோடுகூட ஒரேவேளையில் இங்கு ஆசரிப்பது என்பது, மிகவும் நேரமே ஆசரிப்பதாகக் காணப்படும். இதேமாதிரியான பிரச்சனை, பஸ்காவை ஆசரிக்கும் விஷயத்தில் யூதர்களுக்கும் இருந்துள்ளது. வரலாறானது ஆதித் திருச்சபையாரும் இதே பிரச்சனையைச் சந்தித்தார்கள் என்றும், இதைச் சரிப்படுத்துவதற்காக நமது கர்த்தருடைய மரணத்தைப் பஸ்கா நாளுக்கு அருகாமையிலுள்ள வாரத்தினுடைய ஒரு நாளில் – புனித வெள்ளியன்று ஆசரிப்பதாக முடிவு செய்யப்பட்டது என்றும் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த ஏற்பாட்டின் நிமித்தம் மூன்று நன்மைகள் உள்ளது; அவை:

(1) இது அந்தச் சிறப்புமிக்க வாரத்தினுடைய நிகழ்வுகள் அனைத்தையும் மனதிற்கு முன்பாக ஒன்று சேர்க்கின்றது; அந்நிகழ்வுகள் பின்வருமாறு: குருத்தோலை ஞாயிறன்று, யூதர்களின் இராஜாவென நமது கர்த்தர் கழுதையின்மீது ஏறிவந்தார்; திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமை ஆலயத்தில் போதித்தல்; வியாழனன்று பஸ்காவிற்கு ஆயத்தம்பண்ணப்படுதல்; இரவன்று பஸ்கா இராப்போஜனம் புசிக்கப்படுதல், பின்னர் நமது நினைவுகூருதல் இராப்போஜனமானது ஏற்படுத்தப்படுதல்,பின்னர் யோவான் 14 - 17 வரையிலான அதிகாரங்களில் இடம்பெறும் படிப்பினைகள் கொடுக்கப்படுதல் மற்றும் ஜெபம் ஏறெடுக்கப்படுதல், பின்னர் கெத்செமனே அனுபவங்கள், காய்பாவின் அரண்மனையில் அனுபவங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை காலையில் ஆலோசனை சங்கத்தினர் முன்பாக மற்றும் பிலாத்துவின் அரண்மனையிலும் மற்றும் ஏரோதின் அரண்மனையிலும் ஏற்பட்ட அனுபவங்கள், பின்னர் கல்வாரியின் காட்சிகள் மற்றும் யோசேப்பின் புதிய கல்லறைக் காட்சி; சனிக்கிழமையன்று நமது கர்த்தர், நம்பிக்கை அவருக்குள் புதைக்கப்பட்ட நிலையில், அவர் மரித்துக் காணப்பட்டார். ஞாயிறு புதிய நம்பிக்கைகளுள்ள உயிர்த்தெழுதலின் நாளாய்க் காணப்பட்டது; அது புதிய நம்பிக்கைகளும், உணர்வுகளுமுள்ள ஈஸ்டர் நாளாகும்.

(2) இது புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறையும் ஆசரிப்பவர்களுடன் நம்மை நெருக்கமான உறவிற்கும், இணக்கத்திற்கும் கொண்டுவருகின்றது; மற்றும் நினைவுகூருதலை வியாழன் மாலையன்று நாம் ஆசரிப்பதானது, அவர்களுக்கு அந்தத் தேதியினுடைய சரியான

தன்மையைக் குறித்து யோசனையை/கருத்தினை எழுப்புகின்றதாகவும் மற்றும் அடிக்கடி ஆசரிக்கப்படுவதற்கான அதிகாரம் மற்றும் ஞானம் குறித்து அவர்கள் கேள்வி எழுப்பிடவும் செய்கின்றது.

(3) நாகரிகமடைந்துள்ள தேசங்களில், புனித வெள்ளி என்பது பொதுவாய்ச் சட்டப்பூர்வமான விடுமுறையாய்க் காணப்படுகின்றது மற்றும் நமது கர்த்தருடைய மரணநாள் தொடர்புடையதான விலையேறப்பெற்ற ஞாபகார்த்தங்கள் மற்றும் சம்பவங்கள் அனைத்தின்மீதும் நம் மனங்களைப் பிரயோகித்திட நல்ல வாய்ப்புக் கிடைக்கின்றது.

அனைவராலும் அதே இரவிலும், வேளையிலும் ஆசரிக்கமுடியாது என்பதினால், சபையார் ஈஸ்டர் ஞாயிறுக்கு முன்புவரும் வியாழன் இரவில் இனிமேல் ஆசரிப்பைக் கொண்டிருப்பதற்கு மேற்கூறிய வாதங்களைக் கருத்தில்கொள்ளும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இப்பொழுது அதே கருத்துதான் எங்கும் சிதறிக் காணப்படும் அருமை நண்பர்கள் அனைவருக்கும் முன்வைக்கப்படுகின்றது.

## இதை என்னை நினைவுகூரும்படிச் செய்யுங்கள்

அத்தருணமானது வழக்கம்போலவே, நமது கர்த்தர் "வானத்திலிருந்து இறங்கிவந்த அப்பம்" நமக்காகப் பிட்கப்பட்டது என்று உணர்ந்து பங்கெடுக்கப்பட்டபோது பயபக்திக்குரியதாகவே காணப்பட்டது. அது "அன்பனைத்திலும் உயர்ந்ததான தெய்வீக அன்பினுடைய" சான்றாய் இருக்கின்றது என்று நாங்கள் அடையாளங்கண்டபோது, நாங்கள் களிகூர்ந்தோம். நாம் பாவிகளாகவே காணப்பட்டபோதே, தேவன் இவ்வளவாய் நம்மை அன்புகூர்ந்துள்ளார் என்றால், நாம் "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிறதை" — இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாம் தினந்தோறும் நாடிடுவதை அவர் காண்கையில், அவர் இப்பொழுது எவ்வளவாய் நம்மை அன்புகூர்ந்திடுவார் என்று எங்கள் இருதயங்களில் உறுதியடைந்தபோது, நாங்கள் மீண்டுமாய்க் களிகூர்ந்திட்டோம்.

அப்பமானது, நமக்காக இயேசுவினால் பலிச்செலுத்தப்பட்டுள்ளதான மனித உரிமைகளை நமக்குக் குறிப்பிடுகின்றதாய் இருந்தது; இதை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் புசித்து — விசுவாசத்தின் மூலமாய் நம்முடையதாக்கிக்கொள்கின்றோம் மற்றும் ஆதாமினால் ஆதியில் பெற்றிருக்கப்பட்டதான உரிமைகள் அனைத்திற்கும் நீதிமானாக்கப்பட்டவர்களாய்க் கருதப்படுகின்றோம். பின்னர் அப்போஸ்தலனின் வார்த்தைகளிலிருந்தும், இன்னும் படிப்பினையைப் பெற்றுக்கொண்டோம் — "நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17)

"பாத்திரமானது" நமது கர்த்தருடைய இரத்தத்திற்கு — அவரது மூன்றரை வருடக்கால ஊழியத்தின்போது ஊற்றப்பட்டதும், கல்வாரியில் எஞ்சியதும் ஊற்றப்பட்டதுமான அவரது ஜீவனிற்கு அடையாளமாய் இருக்கின்றதென நாங்கள் அடையாளம் கண்டுகொண்டோம். அது நமக்காகச் சிந்தப்பட்டது; ஆம் "பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்பட்டது." அது நமது மீட்பருடைய விலாவில் சேவகனால் ஈட்டியினால் குத்தப்பட்டபோது, வழிந்திட்டதான இரத்தமல்ல. இல்லை, இதற்கு முன்பே, அவர் ஏற்கெனவே மரித்துவிட்டார். இரத்தம் என்பது ஜீவனை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும் மற்றும் ஈட்டி குத்தப்படுவதற்கு முன்னதாகவே நமது கர்த்தருடைய ஜீவனானது (அ) ஆன்மாவானது மரணத்திற்குள் ஊற்றப்பட்டுவிட்டது. இதற்கான அவசியத்தினை நாம் தேவனுடைய பிரமாணத்தின்கீழ்ப் பார்த்திட்டோம்; அதாவது, "இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது" என்பதில் பார்த்திட்டோம். நாங்கள் துக்கமடைந்திட்டாலும், மீண்டும் களிகூர்ந்து, கர்த்தருக்கு எங்களுடைய இருதயங்களில்:

"அவரது இரத்தம் அழுக்குகளைச் சுத்திகரிக்குமே.
அவரது இரத்தம் எந்தனுக்குப் பயன்படுத்தப்பட்டதே" என்று பாடினோம்.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளின் மூலமான பரிசுத்த ஆவியினுடைய போதித்தலின் வாயிலாக, "பாத்திரத்திற்கு" இன்னும் ஆழமான அர்த்தத்தினைப் பெற்றுக்கொண்டோம்; (1 கொரிந்தியர் 10:16) இப்படியாகப் பார்க்கும்போது, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" எனும் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஆழமான அர்த்தமிருக்கும் என்று உணர்ந்தோம்; "என்னுடைய அவமானத்திலும், மரணத்திலும் பங்கெடுங்கள்;

என்னுடைய அடிச்சுவடுகளில் நடவுங்கள்; இப்படிச் செய்வீர்களானால் நீங்கள் மெய்யாகவே என் சீஷர்களாய் இருப்பீர்கள் மற்றும் நான் இருக்கும் இடத்தில், என் சீஷனும் இருப்பான்" எனும் அர்த்தத்தில் நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படுகின்றது என்று உணர்ந்தோம்.

மாபெரும் அப்பத்தின் ஒரு பாகமாக, அவரோடுகூடப் பிட்கப்படுவதற்குமான சிலாக்கியத்திற்காகவும் மற்றும் அவரது பாத்திரத்தில் பானம்பண்ணி, கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்குமான சிலாக்கியத்திற்காகவும் மற்றும் "அவரோடுகூடப் பாடுகள் பட்டோமானால், அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்" என்ற வாக்குறுதியுடன்கூட உள்ள இச்சிலாக்கியங்களுக்காகவும் நாம் தேவனுக்கு நன்றி செலுத்தினோம்.

சுமார் 550 பேர் அங்குக் காணப்பட்டார்கள் மற்றும் இதில் அநேகமாக 525 பேர் பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாளங்களில் பங்கெடுத்தார்கள். பின்னர் துதிப்பாடல் ஒன்றைப் பாடிவிட்டு, அன்று இரவில் காட்டிக்கொடுக்கப்படுதலின், அடுத்த நாளில் பின்தொடர்ந்திட்ட பாடுகளின் காட்சிகளை நினைவுகூர்ந்திட வெளியேறினோம்/கலைந்துசென்றோம்.

*****

# நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்

## யோவான் 17:15-26

நமது கர்த்தர் தம்முடைய மரணத்தைக் குறித்த நினைவுகூருதலை நிறுவின இரவில், அவர் தம்மைக் குறித்தும், தமக்கு வரவிருக்கும் சிலுவை மரணத்தைக் குறித்தும் முழுமையாகச் சிந்தித்துக்கொண்டிருக்காமல், விசேஷமாகத் தம்முடைய சீஷர்களைக் குறித்துச் சிந்தனை செய்பவராகவும், அவர்களுக்காக ஜெபம் பண்ணுகிறவராகவும் காணப்பட்டார். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33). "இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள் அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள் நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" (யோவான் 17:1, 9-11).

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று சபையார் அனைவருக்கும் அப்போஸ்தலன் கட்டளையிட்ட வார்த்தைகளுக்கு மாதிரியாக, நமது கர்த்தருடைய முழு வாழ்க்கையும் காணப்படுகின்றது. நமது கர்த்தரும் கூட எப்போதும் ஜெப சிந்தனையுடன் கூடிய இருதயத்துடனே காணப்பட்டார். மேலும், ஜீவியத்தின் சகல விஷயத்திற்காகவும், பிதாவுக்குச் செலுத்துகின்ற நன்றியினால் அவருடைய இருதயம் இருந்தது. அவருடைய இருதயம், பிதாவின் பராமரிப்புடன் கூடிய பாதுகாப்பை உணர்ந்திருந்தது. அவரை விசுவாசித்தது, அவருக்குள் நம்பிக்கைக்கொண்டிருந்தது. மேலும் ஒவ்வொரு பிரச்சனையான தருணங்களிலும், பிதாவே பிரச்சனைகள் அனைத்தையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றத்தக்கதாக, இயேசுவின் இருதயம் பிதாவை நோக்கி பார்க்கிறதாகவும் இருந்தது. ஆனால், இடைவிடாமல் ஜெபம் பண்ணும் நமது கர்த்தருடைய இத்தன்மையானது, அவர் வாழ்க்கையின் அன்றாட காரியங்களிலிருந்து கொஞ்சம் திரும்பி, பிதாவோடு இரகசியமாக/தனிமையில் பேசுவதற்கெனச் சில சமயம் சுருக்கமாகவும், சில சமயம் தனிமையில் இராப்பொழுது முழுதும், ஜெபத்தில் கழிப்பதற்கென அவர் விரும்பின அவருடைய மிகுந்த தனிப்பட்ட ஜெபங்களை/தியானங்களைத் தடுத்ததே இல்லை. இயேசு, தமது சீஷர்களை அன்பு செய்தபோதிலும், அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதபடியினால், அவருடைய கண்ணோட்டத்திலிருந்து அவர்களால் காரியங்களை முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாது. பிதா மாத்திரமே முழுச் சூழ்நிலைகளையும் பற்றிப் புரியக்கூடியவராகவும், அறிந்தவராகவும் காணப்பட்டார். ஆகவே இயேசு சகல மனித உதவிகளிடமிருந்தும் புறம்பாக்கி, தனிமைப்படுத்தப்பட்ட போது, இது அவரை ஜெபத்தின் வாயிலாகப் பிதாவிடம் நெருங்கி வரவும், அடிக்கடி வரவும் செய்தது. இப்படியாகவே, கர்த்தருடைய பின்னடியார்கள் காணப்பட வேண்டும். நாம் எந்தளவிற்கு அவருடைய குணலட்சணத்திற்கு ஒப்பாக வளருகின்றோமோ, அவ்வளவாய் நாமும் அவரைப்போன்று இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துகிறவர்களாகவும், அவரை நம்முடைய சகல நம்பிக்கை, இலட்சியம் மற்றும் சந்தோஷத்திற்கான மையமாக உணர்ந்து, நமது இருதயங்களில் பாடுகிறவர்களாகவும் இருப்போம். மேலும், அவரைப்போன்று ஏற்றவேளையில் சகாயமும், இரக்கமும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக கிருபையின் சிங்காசனத்தை அணுகுவதற்கான சிலாக்கியங்களை அதிகம் பயன்படுத்துகின்றவர்களாகவும் இருப்போம். மேலும் நம்முடைய பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய அருமையானவர்கள், நம்முடைய அனுபவங்களுக்கு அனுதாபம்/இரக்கம்/ஆறுதல் காட்ட இயலாமல் இருக்கின்றார்கள் என்று எவ்வளவாக காண்கின்றோமோ, அவ்வளவாக அப்படியான அனுபவங்களின் நேரங்களில் பூமிக்குரிய அனுதாபம்/இரக்கம்/ஆறுதல் இல்லாமையினிமித்தம் இயேசுவைப் போன்றே நன்மையும் அடைவோம். அதாவது, அம்மாதிரியான (ஆறுதல் அற்ற) அனுபவங்களானது, மாபெரும் ஆசீர்வாதம் மற்றும் சந்தோஷத்தை நமக்கு தரக்கூடியதான பரலோகத் தேற்றரவாளனிடம் (பிதா), நம்மை அடிக்கடி/அதிகமாய்க் கொண்டுசெல்லக் கூடியதாக இருக்கும்.

## உலகத்துக்கு அல்லாமல் சபைக்கே

இந்த ஜெபத்திலும் சரி, வேதவாக்கியங்கள் எங்கும் சரி சபைக்கும், உலகத்திற்கும் இடையில் தெளிவான எல்லைக்கோடு போடப்பட்டுள்ளது. இதைப் பார்த்து உணராதவர்களுக்கு மாபெரும் இழப்பு நேரிடுகின்றது. ஏனெனில், இது ஆச்சரியமான விதத்தில், "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து" பார்ப்பதற்கு உதவுகின்றது. "தேவன் உலகத்தை அன்புகூர்ந்தார்;" "இயேசு தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்." இயேசு, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாவார் என்றபோதிலும், அவர் உலகத்தான் அல்லாததுபோல, அவருடைய சீஷர்களாகுபவர்களும் உலகத்தாரல்ல. "நான் உலகத்தானனல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" (யோவான் 17:16). சபைக்கும், உலகத்திற்கும் நடுவே உள்ள இந்த வேற்றுமையைக் காண தவறுவது, உண்மை கிறிஸ்தவத்திற்கு ஆபத்தான விளைவைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

உலகமானது சில வாக்குத்தத்தங்களையும், பண்டிகைகளையும், சில வழக்க முறைகளையும் தனதாக்கிக்கொண்டுள்ளதால், அது ஏறத்தாழ சபையின் கிருபைகளுக்கு ஒத்ததாகவும் அல்லது போலியாகவும் காணப்படுகின்றது. இதைச் சமுதாயப் பண்பாடு என்றே அழைக்கலாம். இவ்விதமாக உலகத்தின் பெரும் பகுதியானது, இன்று தவறுதலாகச் சபையின் பாகம் என்று அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றது. சபை என்பது, மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட வேண்டும் என்றும், உயிர்த்தெழுதலின்போது, அவர்கள் மீண்டும் பிறக்க வேண்டும் என்பவைகளைப் புரிந்துக்கொள்ளாதவர்களுக்கு, இது பெரும் பாதிப்பாகும். அவர்கள் தங்களையே வஞ்சித்துக்கொண்டிருக்கின்றனர். இது உண்மை சபைக்கும், கர்த்தருடைய உண்மையான பின்னடியார்களுக்கும், தங்களுடைய புதிய சுபாவங்களைக்கொண்டு மாம்சத்தின் பெலவீனங்களோடு போராட வேண்டியவர்களுக்கும் கூடப் பாதிப்பாய் அமைகின்றது. எப்படியெனில், இவர்களுடைய மாம்சம் பொதுவான வழக்கமுறைகளைக் கொண்டு தன்னை நியாயப்படுத்த நாடுகின்றது. மேலும், பொதுவான கோட்பாடுகளைத் தாண்டி செயல்படுவது மதவெறி என்றும், மதத் தீவிரவாதம் என்றும் இவர்களுடைய மாம்சம் வலியுறுத்துகின்றது. மரணம் வரையிலுமான சுயத்தை வெறுத்த விஷயத்திலும், வாழ்க்கையின் விஷயத்திலும் இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்கள் கொண்டிருந்த கோட்ப்பாடுகளின்படி, கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் வாழும்போது, நாம் உலகம் மற்றும் பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் கண்ணோட்டத்தின்படி மதத்தீவிரவாதிகள் என்றே கணிக்கப்படுவோம் என்பதைக் கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது கர்த்தர் உலகத்துக்காக ஜெபம் பண்ணவில்லை, ஏனெனில், உலகத்தைக் கையாளுவதற்கான கர்த்தருடைய வேளை இன்னும் வரவில்லை; அவ்வேளையானது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை தெரிந்தெடுக்கப்படுவது வரையிலும் வருவதில்லை. அவர் விசேஷமாகத் தம்முடைய அப்போஸ்தலர்களுக்காக ஜெபம் பண்ணினார். ஏனெனில், அவர்கள் உலகத்தில், தம்முடைய விசேஷமான பிரதிநிதிகளாகக் காணப்படப் போகின்றவர்கள். மேலும், அதுவரையில் உண்மையான இருதயங்களோடு அவரை விசுவாசித்துக் கொண்டிருந்த 500 சகோதரருக்காகவும், அவருடைய ஜெபம் உள்ளடங்கி காணப்பட்டது. இவர்கள் மாத்திரமல்லாமல், (வசனம்-20) யுகம் முடியும் வரையிலும் காணப்படும் இதுபோன்ற வகுப்பார் யாவருக்குமாக, அவருடைய விண்ணப்பம் காணப்பட்டது. அதாவது அவருடைய சீஷர்களாகவும், பின்னடியார்களாகவும் ஆகத்தக்கதாக, உலகத்திடமிருந்து பிரித்து, சத்தியத்தின் இடுக்கமான வழியில் செல்லத்தக்கதாக, யார் யாருடைய விசுவாசமானது, மிகுந்த உண்மையுடனும், முழுமையுடனும் இருந்து, அவர் மேல் நம்பிக்கையுடனும் காணப்படுகின்றதோ, அத்தகையவர்கள் யாவருக்குமாக அவருடைய விண்ணப்பம் ஏறெடுக்கப்பட்டது.

## எவைகளுக்காகக் கர்த்தர் ஜெபம் பண்ணவில்லை

இன்றைய உலகத்திலுள்ள பெயர்க்கிறிஸ்தவச் சபையின் கண்ணோட்டத்தை நாம் எடுத்துக்கொண்டு, நம்மை ஒரு பெயர்க்கிறிஸ்தவ விசுவாசியின் ஸ்தானத்திலும், பெயர்க் கிறிஸ்தவன் அறிக்கைப்பண்ணுகிற விசுவாசத்தின் கண்ணோட்டத்திலும் நம்மை நாம்

பொருத்திப்பார்க்க முற்படுவோமாகில், நம் கர்த்தர் தற்கால சூழ்நிலைகளுக்காகவே ஜெபித்தார் என்று நாம் எண்ணிக்கொள்வோமானால், அவருடைய ஜெபம் பின்வரும் வார்த்தைகளை உள்ளடக்கிக் காணப்படலாம்:

"என்னுடைய பின்னடியார்கள் எண்ணிக்கையில் மிகப் பெரிய அளவாக வேண்டும் என்றும், அவர்கள் மிகவும் செல்வ செழிப்புடனும், மிகவும் கல்வியறிவு உடையவர்களாகவும் இருந்து, இதன் மூலம் அவர்கள் உலகத்தார் மத்தியில் சிறப்பு மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்றும், நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, அவர்கள் மாபெரும் மதப் பிரிவுகளாகப் பிரிய வேண்டும் என்றும், அவர்களில் சிலர் சத்தியத்தின் ஒரு பாகத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டும், வேறு சிலர் சத்தியத்தின் பாகங்களோடு தப்பறைகளையும், முரண்பாடுகளோடு கலந்துவிடவும் வேண்டும் என்று நான் ஜெபம் பண்ணுகின்றேன். வெளித்தோற்றமான பயபக்தியும், சுயத்தில் திருப்தியும், பெருமையும்/கௌரவமும் கொண்டு, சமயக் குருமார் திருச்சபை (Episcopalians) என்று அறியப்படும் வகுப்பாருக்காக நான் ஜெபம் பண்ணுகின்றேன். வெஸ்ட் மினிஸ்டரின் அறிக்கையின்படியான விசுவாசத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்து, பிற்காலங்களில் தாங்கள் கைக்கொண்டிருந்த விசுவாசத்திற்கு நேர் எதிர்மாறான, சுருக்கமான பிற்சேர்க்கையை 1902-ஆம் வருடத்தில் வெளியிடப்போகும் கௌரவமான வகுப்பாருக்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, வெஸ்லியின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டு, தங்கள் வழிபாடுகளில் அநேக உலகரீதியான வழக்கங்களையும், கவர்ச்சிகளையும் சேர்த்துக்கொண்டு, மிகவும் செழிப்புள்ளவர்களாகி, வருடம் முழுவதும் தங்கள் சபை கட்டிடத்தைக் குறித்துப் பெருமையாகப் பேசப்போகும் மற்றொரு மாபெரும் சபை பிரிவுக்காகவும் நான் ஜெபம்பண்ணுகிறேன். இன்னுமாக, என்னுடைய நாமத்தைத் தரித்துக்கொண்டு, லூதரை பின்பற்றுகிற மற்றுமொரு மாபெரும் பிரிவு அல்லது என் பின்னடியார்களின் வகுப்பாருக்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். என்னுடைய இராஜ்யத்தைத் தன்னுடையது என்று கூறிக்கொண்டு, பூமியின் இராஜாக்கள்மேல் வல்லமையிலும், மாபெரும் மதிப்பிலும், கனத்திலும் ஆளுகை செய்வோம் என்று உரிமை பாராட்டிக்கொண்டும், தங்களுடைய தலைவர் மற்றும் பிரதிநிதிகளே என்னுடைய பிரதிநிதி என்றும், உலகத்தின் ஆவிக்குரிய சக்கரவர்த்தி என்றும் உரிமை பாராட்டப்போகும் மாபெரும் உரோம கத்தோலிக்க திருச்சபைக்காக நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, இச்சபை பிரிவானது, தன்னுடைய சூழ்ச்சியான திட்டங்கள் வாயிலாக, என்னுடைய வார்த்தைகள் பொது ஜனங்களைச் சென்றடையாத வண்ணம் பார்த்துக்கொள்ளட்டும் என்றும், இச்சபை பிரிவானது எண்ணற்ற அதன் பூசை பலிகளை, பாவத்திற்கான என்னுடைய மாபெரும் பலிக்கு அடையாளமாக வைக்கட்டும் என்றும், இப்பிரிவினர் செழித்தோங்கவேண்டும் என்றும், இவர்கள், "உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கட்டும்" என்றும் நான் ஜெபம் பண்ணுகின்றேன்.

இன்னுமாக, இந்த அனைத்து சிறு சிறு பிரிவினரும், செழித்தோங்க வேண்டும் என்றும், அந்த ஒவ்வொரு பிரிவினரும் தங்களிடத்தில் மாத்திரமே சத்தியம் இருக்கின்றது என எண்ணிக்கொண்டு, தங்கள் தங்கள் விசுவாசப் பிரமாணங்களில் திருப்தி அடைந்தவர்களாகக் காணப்பட்டு, வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் அறிந்துக்கொள்வதற்கென வேதவாக்கியங்களை ஆராய்வதிலிருந்து தடைபண்ணப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும், நான் ஜெபம் பண்ணுகின்றேன். இப்பிரிவினர்கள் அனைவரும் இவ்விதமாகச் சிதறடிக்கப்பட்டவர்களாகவும், பிரிந்து பிரிந்து காணப்படுகிறவர்களாகவும் இருந்து, தங்களுக்கு இடையில் ஒருவருக்கொருவர் வேலிகள் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, இப்பிரிவினர்கள் தங்களை ஒவ்வொரு பிரிவினரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு அவர்கள் மதபிரிவின் எல்லை கோடுகளைக்கொண்டிருப்பதோடு, அரசியல் ரீதியான எல்லைக் கோடுகளையும், தேசம் சார்ந்த அடிப்படையில் பிரிக்கும் எல்லைக்கோடுகளையும் கொண்டவர்களாக இருந்து, இதன் காரணமான ஒரு பிரிவை அல்லது தேசத்தைச் சார்ந்த ஆயிரமாயிரமானவர்கள், மற்றப் பிரிவினர் (அ) தேசத்தைச் சார்ந்தவர்களை அச்சுறுத்தி, யுத்தம் புரிந்து, கொன்றுபோடவும் நான் அவர்களுக்காக ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக இவர்கள் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ணுவதற்கும் (அ) ஒருவரையொருவர் பயமுறுத்துவதற்கும், மிரட்டுவதற்கும் என ஒவ்வொரு வருடமும் படைகளுக்காகவும், ஆயுதங்களுக்காகவும், போர்க்கப்பல்களுக்காகவும், பல மில்லியன் டாலர்களைச் செலவழிக்கும் அளவிற்கு இவர்களுக்கு இடையே காணப்படும் இந்தத் தேசம் அடிப்படையிலான வித்தியாசங்கள் மிஞ்சி போவதற்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, கிறிஸ்தவ மண்டலத்தார் கையாளும் என்னுடைய போதனைகளினால் உண்டாகும் மகிமையான காரியங்களைக் கண்டு அந்நிய தெய்வங்களை வணங்கும் உலகத்தார் வசீகரம் அடைய வேண்டும் என நான் ஜெபம் பண்ணுகின்றேன். மேலும், அந்நிய தெய்வங்களை வணங்கும் உலகத்தார் வசீகரிக்கப்பட்டு, நாமும்

தனிக் கட்சிகளாகவும், மதப் பிரிவினரின் உறுப்பினர் ஆகலாம் வாருங்கள் என்றும், நாமும் ஆயுதம் தரித்து, யுத்தம் பண்ணலாம் என்றும், தூய்மை அற்று நடப்பதற்கும், குடிவெறிக் கொள்வதற்கும், நெறிதவறிச் சிற்றின்பங்களில் ஈடுபடுவதற்குமான பிரத்தியேக உரிமை கிறிஸ்தவத் தேசங்களுக்கு மாத்திரம் முழுமையாக இல்லை. ஆகையால், இச்செயல்களை நாமும் செய்யத்தக்கதாகக் கிறிஸ்தவத் தேசத்தாரின் வழிமுறைகளை நாமும் கற்றுக்கொள்வோம் வாருங்கள் என்றும் ஒரே குரல் எழுப்பும்படிக்கு நான் அவர்களுக்காக ஜெபம் பண்ணுகின்றேன்." இவ்வாறாகவே அவரது ஜெபம் அமைந்திருக்கும்.

## எவைகளுக்காக நமது கர்த்தர் ஜெபம் பண்ணினார்

நமது கர்த்தருடைய விண்ணப்பங்கள் மிகவும் வித்தியாசமாகக் காணப்பட்டது. அவருடைய சீஷர்கள் உலகத்தில் சிறுபான்மையாகவே இருப்பார்கள் என்றும், அவர்கள் உலகத்தால் வெறுக்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் எதிர்க்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அவர்களில் அநேகர் பெரியவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும், ஞானிகளாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், ஐசுவரியவான்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரபுக்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரதானமாக ஏழைகளாகவும், "சிறுமந்தையினராகவுமே" இருப்பார்கள் என்றும்தான் அவருடைய ஜெபத்தின் வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு தனிப்பட்ட விதத்தில் தெரிந்தெடுத்துக்கொண்ட சீஷர்களிடம் காணப்பட்ட பண்புகளானது, பிற்காலங்களிலும் அவருடைய உண்மையான பின்னடியார்களென, அவரிடம் கிட்டிச்சேரும் அனைவரிடமும் காணப்பட வேண்டும்.

கிறிஸ்தவத் தேசங்கள் மற்றும் கிறிஸ்தவப் பிரிவுகளின் மக்கள் மகாத் திரளாய்க் காணப்பட்டாலும், "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." மேலும், இந்த ஜெபத்தை நாம் பார்க்கையில், இந்த யுகத்தில் அவர் தம்முடைய ஜனங்களை உலகத்திடமிருந்து பிரிக்காமல், அவர்களை உலகத்தில்தான் விட்டுச் சென்றார். அவர்கள் இருதயம் உலகத்திடமிருந்து பிரிந்திருப்பது மாத்திரமே முக்கியமானதாகும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:15). தீமையை நன்மை என்று நாம் சொல்லக்கூடாது, உலகம் தூய்மையாகிவிட்டது என்று நாம் சொல்லக்கூடாது, அது இன்னமும் தீமை நிறைந்ததாகவே உள்ளது. கர்த்தரைச் சிலுவையில் அறைந்து, அவருடைய பின்னடியார்களைத் துன்பப்படுத்திய யூத மார்க்கம் அப்போது எந்த நிலையில் காணப்பட்டதோ, அதே நிலையில்தான் இன்று கிறிஸ்தவ மண்டலமும் நடைமுறையில் காணப்படுகின்றது.

அப்போதிருந்த யூதர்களின் பிரதானமான மதப் பிரிவினர், தங்களைத் தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் (இதுவே பரிசேயர் என்ற வார்த்தைக்கான அர்த்தமாகும்) என்று தாங்களே அழைத்துக்கொண்டனர். மேலும், முழுத் தேசமும் வெளிப்புறமான ஒழுக்கம் என்னும் தளத்தில் நின்றுக்கொண்டிருந்ததை, கர்த்தர் தமது பார்வையில் நாடகமாகவே பார்த்தார். அந்தத் தலைவர்களைக் குறித்து, அவர் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்றும், உள்ளே முழுத் தீட்டு காணப்படுகின்றது என்றும் கூறினார். மேலும், அவர்கள் பாத்திரத்தின் வெளிபாகத்தைச் சுத்தமாக்கியிருக்க, உட்புறத்தை அழுக்காகவே விட்டுவிட்டார்கள் என்றும், அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கிக் கொண்டு, வீதிகளில் ஜெபம் செய்கிறார்கள் (மத்தேயு 23:5), ஆனால் அவர்களின் இருதயமோ பரிசுத்தம் (அ) அன்புக்கு மிகத் தொலைவில் காணப்படுகின்றது என்றும், கர்த்தர் கூறினார். ஒருவேளை நியாயப்பிரமாணத்தின் மேலோட்டமான கருத்து ஏழை விதவையின் வீட்டை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்குமாயின், மேலும், அப்படிச் செய்யும் போதும், அச்செயல் அதிக அளவில் பழித் தூற்றுதல் கொண்டுவருவதில்லை என்றால், தவறான விதத்தில் விதவையின் வீட்டை எடுக்க விரும்பும் அளவிற்கு, அவர்களுடைய இருதயம் பரிசுத்தத்திற்கும் (அ) அன்பிற்கும் மிகத் தொலைவில் காணப்படுகின்றது. (மத்தேயு 23:14,23-28) இன்றைய காலங்களிலும் இப்படியாகவே காணப்படுகின்றது. வெளிப்புறத்தில் பளபளப்பு (அ) பாசாங்கே காணப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் மாய்மாலமும், வெளிவேஷமான வழிபாடுந்தான் காணப்படுகின்றது; நாகரிகமான உடைகள் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றில் மூழ்கிப்போன நிலையிலும், கடுமையான பாவங்கள் மூலம் பணம் சம்பாதிக்கும் விக்கிரக ஆராதனையில் மூழ்கிப்போன நிலையிலும், இருதயம் தேவனிடத்திலிருந்து மிகத் தொலைவில் இருக்க, உதடுகள் மாத்திரமே அசைகின்றதாய் இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலைகளிலிருந்து தம்முடைய உண்மையான பின்னடியார்கள் பரலோக வல்லமையினால் விலக்கிக் காக்கப்பட வேண்டும் என்றே நமது கர்த்தர் ஜெபம் பண்ணினார். அதாவது மாய்மாலங்கள் மீது ஈர்க்கப்படுவதிலிருந்தே விலக்கி, காக்கப்படுவார்களே ஒழிய, மாய்மாலக்காரர்களிடமிருந்து பின்னடியார்கள் பிரிக்கப்படுவதில்லை. இது சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது என நாம் விசுவாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜெபம் நிறைவேறியுள்ளது என்றும், சிதறி ஆங்காங்கே காணப்படும் அவருடைய சிறுமந்தையானது, அதாவது மெய்யான திராட்சச் செடியின் கிளைகளானது, இருதயத்தில் ஆவிக்குரியவர்களாகத் தழைத்து ஓங்கியுள்ளனர். மேலும், உலகத்தின் ஒரு பாகமாக மாத்திரமே இருக்கும் பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரிடமிருந்து, முற்றிலும் பிரிந்த ஜீவியத்தைக் கைக்கொண்டவர்களாக இருக்கின்றனர் என்றும் நாம் நம்புகின்றோம். இன்றும் உலகத்திற்குள் இருந்தும், உலகத்தார் அல்லாததுபோன்று இருப்பவர்கள் இந்த அறுவடையின் காலக்கட்டத்தில், "என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று பாபிலோனிடமிருந்து அழைக்கப்பட்டு வருகின்றார்கள் (வெளிப்படுத்தல் 18:4). பாபிலோனிலிருந்து விடுதலைப் பெற்றுத் திரும்புவதற்கென இஸ்ரயேலர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்ட போது, 50,000 பேர் மாத்திரமே புறப்பட்டு வந்தவர்களின் இலக்கமாயிருக்க, இதைப்போன்றே எல்லாவற்றையும் விட்டுவிட்டு, சத்தியத்தையும், நீதியையும் பின்பற்ற சந்தோஷத்துடனும், தாமதம் காட்டாமலும் வருபவர்களின் எண்ணிக்கை சொற்பமானதாய் இருக்கத்தக்கதாக கர்த்தர் தப்பறைகளின் பிரபலத்தையும், சத்தியத்தின் பிரபலமின்மையையும் இதற்கேற்றாற்போல் ஒழுங்குச் செய்திருக்கின்றார்.

## உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்

இந்த ஜெபமானது, இரண்டு காரியங்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. முதலாவதாக, ஏன் அவர்கள் காக்கப்படுவார்கள் என்றும், இரண்டாவதாக, கர்த்தருடைய பின்னடியார்கள் எப்படிக் காக்கப்படுவார்கள் என்பதுமேயாகும். (1) அவர்கள் உலகத்தார் அல்லாததினால், அவர்கள் கர்த்தருடைய பட்சமாய் நிற்போம் என்று வந்தவர்களானபடியினால், அவர்கள் பாவம் மற்றும் உலகத்திற்கு மரித்துப்போனவர்களாகக் கருதப்பட்டு, பரிசுத்த ஆவியினால் புதியதான ஜீவனுக்குள் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளபடியினால் அவர்கள் காக்கப்படுகின்றார்கள். (2) அவர்கள் உலகத்தில் இருக்கையில் காக்கப்படுவார்கள். ஆனாலும், உலகத்தினால் காக்கப்படாமல், அவர்களுடைய இருதயத்தில் காணப்படும் சத்தியத்தின் வல்லமையினால் காக்கப்படுவார்கள். சத்தியமானது, அவர்களைப் பரிசுத்தமாக்கும் அல்லது பிரித்து வைக்கும். ஏதாகிலும் ஒரு சத்தியம் அல்ல, அனைத்துப் பெயர்க்கிறிஸ்தவ சபைகளின் சத்தியங்களும் அல்ல, மாறாக, தெய்வீகக் குணலட்சணம், தெய்வீகத் திட்டம் மற்றும் இவைகளுடனாக சபையின் தொடர்பைக் குறித்ததான தெய்வீக வெளிப்படுத்தல்கள் உடைய சத்தியமே அவர்களை காக்கின்றது. இவைகள் அனைத்தையும்தான் கர்த்தர் இரத்தின சுருக்கமாக, "உமது/என் வசனமே சத்தியம்" என்று கூறுகின்றார். அதாவது, வசனமாகிய சத்தியமே என்னுடைய சீஷர்களை உலகத்தினின்று பிரிக்கக்கூடியதாக இருக்கின்றது என்றார்.

"உபதேசங்கள்" உலகத்தின் அனைத்து மூலைகளிலும், பெயர்க்கிறிஸ்தவச் சபைகளிலும் பிரபலமற்ற நிலையில் போய்விட்டது என்று நாம் அறிவோம். இதில் எவ்வித ஆச்சரியமுமில்லை! பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் இயக்கங்களின் உபதேசங்களும், விசுவாசப்பிரமாணங்களும் தப்பறையான விஷயங்களோடு மிகவும் கலக்கப்பட்ட நிலையில் காணப்படுவதினால், இவைகள் ஆவிக்குரிய மனதினுடைய ஆவிக்குரிய புலன்களுக்கு மிகவும் வெறுப்பாயிருப்பதினால், பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் மேஜையிலிருந்து, இப்படிப்பட்டவைகளைப் பங்கெடுக்க சபை ஜனங்கள் எவ்வளவேனும் விரும்புவதில்லை. இதைக் குறித்துதான், தீர்க்கதரிசி, "போஜன பீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது" என்று கூறுகின்றார். இருண்ட யுகத்தின் போது, உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசப்பிரமாணமும் இன்றும் அருவருக்கத்தக்கதாகவே இருக்கின்றது. ஆனால், "உமது வசனமே சத்தியம்" என்று சொல்லப்படும் சத்தியமானது ஒருபோதும் ஊசிப்போவதில்லை, ஒருபோதும் சலிப்படைவதில்லை (அ) அருவருக்கப்படும் நிலைக்குப்போவதில்லை. அது இன்னமும் பரலோகத்திலிருந்து வந்த அப்பமாகவே இருக்கின்றது. அது இன்னமும் ஜீவ அப்பமாகவே இருக்கின்றது. மேலும், சத்தியத்தில் காணப்படும் அனைவராலும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக மாத்திரம் இருந்து, அவருடைய வார்த்தை எனும் போஜனத்தைப் புசித்து, அதனை உட்கிரகித்துக்

கொண்டவர்கள் அனைவராலும், பால்குடிப்பதை மறந்து, பலமுள்ள ஆகாரம் புசிக்க ஆயத்தமாக இருக்கும் அனைவராலும், "தெய்வீகத் திட்டமானது எனது ஏக்கங்களைத் திருப்தி செய்த வண்ணம், வேறு எதுவும் என்னை திருப்திச் செய்ய முடியாது" என்று பாடுகிற கவிஞனோடு சேர்ந்து பாட முடியும்.

சத்தியமானது இருதயத்தின் ஏக்கங்களை நிறைவு செய்வதினால், சத்தியம் இருதயத்தைச் சுத்திகரிக்கும் வல்லமை உடையதாக இருக்கின்றது. ஒவ்வொரு இருதயத்திலும் காணப்படும் தாலந்துகள்/திறமைகள் மற்றும் விண்ணப்பங்கள் செயல்பட வேண்டுமென விரும்புகின்றது. இருதயத்தின் இந்தப் பல்வேறு தாலந்துகள் மற்றும் பண்புகளின் பசிதாகத்தைச் சந்திப்பதற்கு/திருப்திப்படுத்துவதற்கு ஏதாகிலும் கொடுக்கப்பட வேண்டும். இருதயத்தின் ஏக்கங்களை (அ) ஆர்வங்களைத் திருப்திப்படுத்துவதற்கென்று, தெய்வீக வார்த்தைகளின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களானது, இருதயத்திற்குள் கொண்டு போகப்படவில்லை எனில், இருதயம் மற்ற விஷயங்களைக் கொண்டு திருப்தியாகிவிடும். உலகமும், மாமிசமும், பிசாசும் இருதயத்தைச் சூழ்ந்து, பல்வேறு கவர்ச்சிகரமானவைகளை அதற்கு அளித்துக்கொண்டிருப்பதினால், ஒருவேளை இருதயமானது தெய்வீக வாக்குத்தத்தங்களினால் நிரப்பப்படாமலோ, நிரப்பப்பட்ட நிலையில் காக்கப்படாமலோ விடப்படும் பட்சத்தில், கவர்ச்சியான இவைகளில் சிலவற்றை இருதயம் ஏற்றுக்கொண்டு நிரம்பிவிடும். ஆகவேதான், நமது கர்த்தருடைய உவமைகளில் இப்படியாக வருகின்றது, "அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிககேடுள்ளதாயிருக்கும் என்றார்" (மத்தேயு 12:43-45). கிறிஸ்துவின் மீதான விசுவாசம் மூலம் நீதிமானாக்கப்படுவதினால், நம்முடைய இருதயங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டால் மாத்திரம் போதாது, நம்முடைய இருதயத்தில் கர்த்தர் நிரம்பி இருக்கவும் வேண்டும்; மேலும், தம்மைச் சத்தியம் என அழைக்கும் கர்த்தர், உணவாக, போஷாக்காக பல்வேறு சத்தியங்களை நம்முடைய இருதயத்திற்குக் கொடுக்கின்றார்; நமது இருதயத்தை நிரப்புகின்றார்; நம்முடைய ஆர்வங்களைத் திருப்திச் செய்கின்றார். மேலும் இப்படியாக நிரப்புவதின் மூலம், நீதியின் பால் பசிதாகம் உள்ளவர்களை அவர் பரிசுத்தப்படுத்துகின்றார். மேலும் இப்படியாக, அவர்களை முற்றிலுமாகப் பிரித்து, உலகத்திடமிருந்தும், அதன் ஆவி, அதன் நம்பிக்கைகள், அதன் நோக்கங்கள், அதன் இலட்சியங்களிடமிருந்தும் அவர்களைப் பிரித்துக்காக்கின்றார்.

## தேவனுடைய ஏற்ற வேளையில் செயல்படும் தேவனுடைய வல்லமை

நீதியின் பால் நமக்கு அன்புள்ளதா? நீதியை உலகத்தில் நாம் எதிர்ப்பார்க்கவும் முடியாது. தற்கால சூழ்நிலைகளின் கீழ் நீதியை பூமியில் ஸ்தாபிக்கலாம் என்று நாம் எதிர்ப்பார்க்கவும் முடியாது. தேவனால் வாக்களிக்கப்பட்ட இராஜ்யம் அல்லாமல், வேறு எதுவும் நீதியை ஸ்தாபிக்க முடியாது என்று ஒப்புக்கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே நோவாவின் புறா போன்று நம்முடைய இருதயங்கள் நீதியின் மையமாகவும், ஊற்றாகவும் இருக்கும் கர்த்தரிடத்திலேயே திரும்புகின்றது. சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நாம் விரும்புகின்றோமா? முழு உலகமும் சந்தோஷத்தை நாடினாலும், அதைக் கண்டடையவில்லை என்று உலகத்திலிருந்தபோது, நம்முடைய கடந்தகால அனுபவங்கள் நமக்குக் காட்டியுள்ளது. கர்த்தரைக் கண்டடைந்தவர்களாகிய நாமோ சந்தோஷத்தின் இரகசியத்தை அதாவது, ஒவ்வொரு நாளையும் சந்தோஷமாகக் கழிக்கும் கிறிஸ்தவனுடைய இரகசியத்தைக் கண்டடைந்துள்ளோம். நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக நாம் வல்லமையையும், செல்வாக்கையும் விரும்புகின்றோமா? ஆனால், இவைகளைத் தற்கால சூழ்நிலையின் கீழ்ப் பெற்றுக்கொள்வது, கூடாத காரியம் என்று சத்திய வசனம் நமக்குக் கூறுகின்றது. ஆனால் நாம் ஒருவேளை உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் வல்லமை, மகிமை, கனம் மற்றும் அழியாமை பெற்றுக்கொள்ளம்போது, பூமியின் சகல குடிகளை ஆசீர்வதிப்பதாகிய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களில் நம்முடைய மாபெரும் எதிர்ப்பார்ப்புகளும், சிறந்த இலட்சியங்களும் நிறைவேற்றப்படுவதைக் காணலாம். ஐசுவரியங்கள் நம்மைக் கவருகின்றதா? வேதவாக்கியங்கள் உண்மையான ஐசுவரியங்களை உடையதாக இருக்கின்றது. இன்னும் நாம் கர்த்தரைப் பின்பற்றுகையில், இப்பொழுது விசுவாசத்தினால் அனைத்தும் நமக்குச் சொந்தமாக இருக்கின்றது; பின்னர் பரலோக இராஜ்யத்தில், நம்முடைய

போதகருடன் நாம் உடன் ஊழியர்களாக ஆகும்போது, அனைத்தும் உண்மையில் நமக்கே சொந்தமாகிவிடுகின்றது என்று வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது.

"நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" (யோவான் 17:18). பிதா எப்படிக் குமாரனை அனுப்பினார் என்றும், குமாரன் மாம்சமாகி, நம் மத்தியில் மனுஷனாக வாசம் பண்ணுபவராக மாற்றப்படுவதற்கு முன்பு, அவருக்கு பிதாவோடு இருந்த மகிமையைத் துறந்து வந்தார் என்றுமான காரியங்களுக்கு, நமக்குப் போதுமான அளவு நிரூபணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், உலகத்தாராகப் பிறந்துள்ள நாம், எந்த விதத்தில் உலகத்திற்கு அனுப்பப்படுகின்றோம்? உண்மைதான் ஒரு காலத்தில் அப்போஸ்தலர்கள் விசேஷமாக அனுப்பப்பட்டிருந்தனர். ஆனால், கர்த்தருடைய சகல பின்னடியார்களும் ஒரு விதத்தில் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இருதயத்திலும், சத்தியத்திலும் நாம் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாக நாம் உலகத்தினின்று, பிரிக்கப்படாதது வரையிலும், நாம் அனுப்பப்படுவதில்லை. பின்னரே, அவருடைய நாமத்தில், அவருடைய காரணத்திற்கென, ஒரு வேலை செய்யும்படிக்கு அவர் நமக்கு ஒரு கட்டளையை (அ) செய்தியைக் கொடுத்துள்ளார். அவருடைய காரணம் என்று சொல்லும்போது, அது நீதியின் பொருட்டான காரணமாகவே இருக்கின்றது. கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள், தேவனுக்கான ஸ்தானாபதிகளாகவும், இயேசுவின் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றார்கள். அவர் உலகத்தில் இருந்ததுபோன்று, நாமும் உலகத்தில் இருக்கின்றோம். ஆகவே நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடக்கும்படிக்கும், நமக்குள்ளாகவே பாவத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், பாவத்திற்கு எதிராகவும், நீதி, சத்தியம் மற்றும் வெளிச்சம் ஆகியவைகளுக்கு ஆதரவாகச் சகலவிதமான நேர்த்தியான வழிகளிலும் நம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கும் அவர் நம்மை அழைக்கின்றார்.

## சபையோடு மகிமை பங்கிடப்படுதல்

"அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி, அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" (யோவான் 17:19, திருவிவிலியம்). இத்தருணத்தில் பிதாவின் திட்டம் குறித்துத் தெளிவான புரிந்துக்கொள்ளுதலுக்குள், நமது கர்த்தர் வந்துவிட்டார் என்பது இவ்வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அதாவது, இராஜ்யத்தில் தம்மோடு உடன்சுதந்தரர்கள் ஆகுவதற்கும், தம்முடைய மகிமையில் பங்கடைவதற்குமான நோக்கத்திற்கெனத் தம்முடைய சீஷர்கள் வளர்த்தப்பட வேண்டும் என்பதைக் குறித்ததான பிதாவின் திட்டத்தை முழுமையாகப் புரிந்துக்கொண்டிருந்தார். இராஜ்யத்தின் இத்தகைய மாபெரும் மகிமையைப் பங்குப்போடுவது, இயேசுவின் மாபெரும் மகிமையைக் குறைத்துப் போடுவதுபோன்று, நாம் பார்க்கும் மாத்திரத்தில் நமக்குத் தோன்றலாம். அதாவது, இது மோசேயுடன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு நியாயம் விசாரிப்பதற்கென, 70 மூப்பர்கள் நியமித்த காரியமானது, மோசேயின் அதிகாரத்தை (அ) கௌரவத்தைக் குறைத்துப் போடுவதுபோன்று அதைப்பார்க்கும் மாத்திரத்தில் தோன்றியதுபோல் காணப்படுகின்றது.

ஆனால், நிழலில் மோசே மிகவும் சாந்தத்துடனும், மகிழ்ச்சியுடனும், 70 மூப்பர்களையும் தன்னுடன் பணிபுரிய வரவேற்கும் விதத்தில், "ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினராகும்படி ஆண்டவர் அவர்களுக்குத் தம் ஆவியை அளிப்பது எத்துணை சிறப்பு!" என்று கூறுகின்றார் (எண்ணாகமம் 11:29, திருவிவிலிய மொழியாக்கம்). ஆகவே கர்த்தர் இயேசுவும், தம்முடன் கூட்டிச்சேர்க்கப்படும் சபையானது, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாக இருப்பது, தம்முடைய மகிமையைக் குறைத்துப் போடுகின்றதாய் இருக்குமே என்று எண்ணுவதற்குப் பதிலாக, அவர்களை இருதயப்பூர்வமாகத் தெய்வீகத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டார். இன்னுமாக அவர் தாம் இடம் விட்டுக் கொடுப்பதாகக் கூறுகின்றார். அதாவது, பிதாவின் பரிசாகிய மகிமை மற்றும் கனம் ஆகிய அம்சங்களில் தம்முடைய பின்னடியார்கள் பங்கடையும் படிக்கும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மகா அருமையான வாக்குத்தத்தங்கள் மற்றும் சத்தியத்தின் வாயிலாக தங்களை அர்ப்பணித்து, இத்தகைய கனத்திற்குள் வரவும், தம்மோடு கூட உடன்சுதந்தரர்களாக இருக்கும்படிக்கும் வந்த அவர்கள் பங்கடையத்தக்கதாக, குமாரன் விலகி இடம் விட்டுக் கொடுத்தார் என்று கூறுகின்றார். இதே கருத்துதான், "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். . . என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்ற வசனங்களில் வெளிப்படுகின்றுத. (யோவான் 17:22, 23)

தேவனுடைய அன்பானது நம்முடைய இருதயங்களில் ஊடுருவுகையில், அதில் சுயநலம் குடிக்கொள்வதற்கு இடமே இருப்பதில்லை. நமது அன்பான மீட்பர், மற்றவர்கள் தெய்வீகச் சுபாவத்திற்குள் உயர்த்தப்பட்டு, இராஜ்யத்தின் பங்காளிகள் ஆக்கப்பட போவதைக் குறித்துப் பொறாமை கொள்வதற்குப்பதிலாக, தம்முடைய ஜெபத்தில் தாம் இத்திட்டத்திற்கு முழுமையாக ஒப்புக்கொள்ளுவதாகவும், இதற்கு இருதயப்பூர்வமான ஒத்துழைப்பையும் அருளுவதாகவும், இத்திட்டம் இப்படி இருப்பதினிமித்தம் தமக்கும் சந்தோஷமாய் இருப்பதாகவும், பிதாவிடம் அறிக்கைப்பண்ணினார். இக்காரியங்கள் பரலோக மணவாளனுக்கு ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ள, வருங்கால மணவாட்டிகளாகிய நமக்கு எத்தகைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. நம்மை நம்முடைய தாழ்மையான நிலையிலிருந்து உயர்த்தி, அவரோடுகூட, அவருடைய இராஜ்யத்தில் அவருடைய சிங்காசனத்தில், அவருடைய பிதாவின் அன்பில் பங்கடையச் செய்வதில் கர்த்தர் பிரியமுள்ளவராக இருக்கின்றார்.

அதிசயங்களிலேயே அதிசயம்! தெய்வீகக் கருணைக்கு முடிவே இல்லை! நாம் இன்னமும் பாவிகளாக இருக்க, இன்னமும் மரணம் என்னும் தெய்வீகத் தீர்ப்பின் கீழ் இருக்கையிலேயே, நாம் அன்புகூரப்பட்டுள்ளோம். மாபெரும் விலை கொடுத்து மீட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம். மீட்கப்பட்ட பின்னர் இப்பொழுது, ஒரு பரலோக சத்தத்தை நாம் கேட்கின்றோம்… "இன்னும் மேல் நிலைக்கு/உயர வாருங்கள்." ஆம், இராஜாதி இராஜாவிடத்திற்கும், கர்த்தாதி கர்த்தரிடத்திற்கும், பிதாவின் ஒரே பேறானவரிடத்திற்கும், கிருபையும், சத்தியமும் முழுமையாகக் கொண்டிருப்பவரிடத்திற்கும், அவரோடு கூட அவருடைய சிங்காசனத்திலும், அவரோடு உடன்சுதந்தரர்களாகவும் இருக்க வாருங்கள் என்பதேயாகும். அன்பு மற்றும் சுயநலமின்மையின், இம்மாபெரும் வெளிப்படுத்துதலை நம்முடைய மனங்களுக்கு முன்பாக நாம் என்றென்றும் வைத்திருக்கக்கூடுமானால், தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் இருக்கும்படி நாடுகின்ற அனைவருடைய மனங்களிலிருந்தும், ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் ஒவ்வொரு போட்டி மனப்பான்மையும் சிதறடிக்கப்பட்டுப் போய்விடும். மேலும் இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, சரீரத்தின் ஒவ்வொரு மற்ற அங்கமும், கர்த்தருடைய ஊழியத்தில் பயனுள்ளவர்களாக வளர்வதில் நம்மை எவ்வளவாகச் சந்தோஷம் கொள்ள செய்யும். மேலும், இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, "கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்" என்ற வேதவாக்கியத்தின் விளக்கத்தை நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளச் செய்து, மற்றச் சகோதரருடைய வளர்ச்சியிலும், சபைக்கான அவனுடைய பயன் அதிகமடைகையிலும், தேவன் மற்றும் மனுஷரிடத்திலும், அவன் பெற்றுக்கொள்ளும் தயவிற்கான சாட்சிகள் அதிகமாகையிலும் நம்மை மகிழ்ச்சிக் கொள்ளச் செய்யும் (ரோமர் 12:10). சரீரத்தின் உடன் அங்கங்களாகிய மற்றச் சகோதரர்களின் வளர்ச்சியில், இவ்விதமாகச் சந்தோஷம் கொள்ள முடிகிறவர்களுக்கு, மாபெரும் மகிமையான தலைக்கு ஒத்திருக்கும் சாயலில், தாங்கள் வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதற்கான சாட்சியாகவும் அமைகின்றது. இம்மனநிலையில் இல்லாதவர்கள், இதற்காக முயற்சி செய்ய வேண்டும்; மேலும், இதை அடையும் வரையிலும் முயற்சியைத் தொடர்ச்சியாகக் கொண்டிருக்க வேண்டும்.

## அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்

வெளிநாடுகளில் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் ஆவியானது, எங்கும் பரவிக்கொண்டிருப்பதினால், அது சபைகளையும், சபை பிரிவுகளையும் இணைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தி, மாபெரும் மத நிறுவனங்கள்/அமைப்புகளாக வளர்ச்சிகொள்வதற்கு நேராக நடத்துகின்றது. மேலும், இவர்களது இத்தகைய வளர்ச்சியானது, கர்த்தருடைய உண்மையான அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஜனங்களின் சுதந்தரத்திற்கு ஆபத்தான தொந்தரவாக இருந்தாலும், இது அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகளை பாதிப்பதில்லை. இவ்வளர்ச்சிகள் கர்த்தருடைய சிறுமந்தையினருக்கு ஆசீர்வாதமாகக்கூட விளங்குகின்றது. எப்படியெனில், இவர்களுடைய இத்தகைய அமைப்பு வளர்ச்சியினிமித்தம், சிறுமந்தையினர் தங்களுடைய வேதவாக்கியங்களின் அடிப்படையிலான போதனைகளிலிருந்து மற்றப் போதனைகளை வேற்றுமையாகக் கண்டு, சத்தியத்தில் உறுதிகொண்டு, தங்களை முற்றிலும் பெயர்க்கிறிஸ்தவ அமைப்புகளிலிருந்து பிரித்துக் கொண்டவர்களாகவும் இருக்க முடிகின்றது. களைகளோ ஒன்றாகக் கட்டப்படவும் செய்கின்றது. "அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச்

சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒரு போதும் காணப்படாமற்போகும்" (வெளிப்படுத்தல் 18:21).

"அவர்களெல்லாரும் ஒன்றாய் இருக்க வேண்டும்" என்ற நமது கர்த்தருடைய ஜெபமானது, யுகம் முழுவதிலும் நிறைவேறியுள்ளது. உண்மையாக அவர்களுடையவர்களாக இருக்கும் அனைவருக்கும் பிதா மற்றும் குமாரனுடன் கூட ஒரே இருதயமுள்ளவர்களாகவும், ஒரே நோக்கம் உள்ளவர்களாகவும், ஒரே ஆவி/சிந்தை உடையவர்களாகவும் காணப்பட்டுள்ளனர். பூமிக்குரிய விசுவாசப்பிரமாணங்களினாலும், சங்கிலிகளினாலும், தெய்வீகமானவர்களோடு ஐக்கியத்தை/உறவை ஏற்படுத்த முடியாது. கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் விஷயத்தில் இன்றும், என்றென்றும் இப்படியாகவே காணப்படுகின்றது. வெளித்தோற்றமான அடையாளச் சொற்களினால் அல்ல (அ) அடையாளங்களினால் அல்ல (அ) வெளித் தோற்றமாக பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பதினால் அல்ல, மாறாக, விசுவாசம் மற்றும் அன்பின் மூலமாக அவர்கள் ஒருவரையொருவர் (தேவன், குமாரன், சபை) அறிந்துக்கொண்டிருக்கின்றனர். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துக்கொள்வார்கள் என்றார்" (யோவான் 13:35). "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:14). உண்மைதான், நாம் அனைத்து மனுஷர்களையும் அன்புகூர்ந்து, வாய்ப்பு அமையும்போது, சகலருக்கும் நன்மை செய்ய நாடுகையில், அப்போஸ்தலர் அறிவித்த பிரகாரம், "விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு," அதாவது, கர்த்தரை அன்புகூர்ந்து, அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீது விசுவாசம் வைத்து, அவருக்கென்று தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்து, தங்களால் முடிந்தமட்டும் அவருடைய சித்தத்தைச் செய்து, நாளுக்கு நாள் அவர் சித்தம் என்ன என்று இன்னுமாக அறிந்துக் கொள்ள நாடுபவர்களாகிய விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்ய நாடுபவர்களாக நாம் இருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் இந்த ஒற்றுமையானது, (ஆள்தத்துவத்தின்) நபர்களின் ஒற்றுமையைக் குறிப்பதில்லை. கர்த்தருடைய பின்னடியார்கள் மாம்ச சரீரத்தின் விஷயத்தில் ஒன்றானவர்கள் அல்ல. மாறாக, ஆவியில்/சிந்தனையில் ஒன்றாக இருக்கின்றனர். இந்த உதாரணமே/விளக்கமே, தமக்கும், பிதாவுக்கும் இடையில் காணப்படும் ஒன்றாய் இருத்தலுக்கான விளக்கமாக அமைகின்றது எனக் கர்த்தர் விளக்குகின்றார். அவர்கள் இருவரும் ஒரு நபராக இராமல், சிந்தனையிலும், நோக்கத்திலும், சித்தத்திலுமே ஒன்றாய் இருக்கின்றார்கள். ஏனெனில், பிதாவின் பார்வைக்கும் பிரியமாய் இருக்கும் பிதாவின் சித்தத்தையே, தாம் எப்போதும் செய்கின்றதாகக் கர்த்தர் கூறுகின்றார். இவ்விதமாகவே, நாமும் பிதாவின் சித்தமாகக் காணப்படும், கர்த்தருடைய சித்தத்தைச் செய்து, அவருக்குள்ளும், அவருடைய அன்பிலும் நிலைகொண்டிருக்கின்றவர்களாகக் காணப்படுகின்றோம். மேலும், இவ்விதமாக ஆவியிலும், சத்தியத்திலும் பிதாவும், குமாரனும், மணவாட்டியாகிய சபையும் ஒன்றாயிருக்கின்றார்கள்.

## கிறிஸ்துவோடு கூட அவருடைய மகிமையில் பங்கடைதல்

"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்" (யோவான் 17:24). இது ஒரு விண்ணப்பம் அல்ல, மாறாக தம்முடைய சித்தம் குறித்துக் கர்த்தர் இங்கு அறிக்கையிடுகின்றார். அதாவது, பின்வருமாறு அவர் கூறுவது போன்றுள்ளது: "பிதாவே என்னுடைய பின்னடியார்கள் தொடர்புடைய விஷயத்தில், இதுவே உம்முடைய சித்தமென நான் புரிந்துள்ளேன். நானும் அதையே விரும்புகின்றேன். நீர் ஆயத்தம் பண்ணியுள்ள இந்த மாபெரும், தாராளமனமுள்ள ஏற்பாட்டிற்கு/ஒழுங்குமுறைக்கு நான் ஆட்சேபனையின்றி ஒப்புக்கொள்கின்றேன். இறுதியில், என்னுடைய பின்னடியார்கள் என்னோடு கூட, ஒரே மகிமையின் தளத்தில், என்னோடு இடம் பெற்றுக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும், உலகம் தோன்றுவதற்கு முன்பும், என்னுடைய இந்தச் சீஷர்களுக்கு ஒழுங்குகள் ஏற்பாடு பண்ணுவதற்கு முன்பும், என் மீது கொண்டிருந்த அன்பின் நிமித்தமாகவே, எனக்கு நீர் கொடுத்த மகிமைகளை என்னுடைய பின்னடியார்கள் காணவும், அதில் அவர்கள் பங்கடையும்படிக்கு அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில் நான் மகிழ்ச்சிக்கொள்வேன்" என்பதேயாகும்.

கர்த்தருடைய ஜெபத்தின் இறுதியான வார்த்தைகள் அழகாகவும், பிதாவிடத்திலும், தாம் பிதாவிடத்தில் கொண்டுள்ள உறவின் மீதுமுள்ள, கர்த்தருடைய நம்பிக்கையைக் குறித்து வெளிக்காட்டுவதாகவும் இருக்கின்றது. அவர் பிதாவை அறிந்திருந்தார். ஆகவேதான் பிதாவினால் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், அவர் அளிக்கும் நித்திய காலத்திற்குமான ஜீவனுக்குள் நாம் பங்கடைவதற்கும் அளிக்கப்படும் மகாபெரும் சாட்சி இதுவே என்று நம்மைக் குறித்த விஷயத்தில் அவர் கூறியுள்ளார். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3). "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்" (யோவான் 17:25). உம்முடைய நாமம் குறித்தும், உம்முடைய குணலட்சணம் குறித்தும், உம்முடைய மகத்துவம் குறித்தும், உம்முடைய நற்பண்புகள் குறித்தும், உம்முடைய அன்பு குறித்தும், உம்முடைய நன்கொடைகளைக் குறித்தும் நான் அவர்களுக்கு அறிவித்துள்ளேன். இன்னமும், அவர்கள் தாங்கிக்கொள்ளும் அளவிற்குத் தகுந்தாற்படி, சத்திய அறிவில் அவர்கள் வளரும்போது, அதிகமாக உம்மைக் குறித்து அவர்களுக்கு வெளிப்படுத்துவேன். இப்படியாக நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்மைக் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்துவேன் என்ற விதத்தில் கூறினார்.

தேவனுடைய இந்த அன்பும், கிறிஸ்துவினுடைய இந்த அன்பும் எத்துணை அதிசயமாய் உள்ளது! இதன் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் நம்மால் அளக்க முடியாததுபோன்று தோன்றுகின்றது! கர்த்தரைத் தங்களுடைய மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு, அவருடன் ஓர் உடன்படிக்கையின் உறவிற்குள் வந்துவிட்டு, தங்களிடத்தில் இருக்கும் கொஞ்சமான காரியங்கள் அனைத்தையும் அவருக்கென்று கொடுத்துவிட்டு, அவர் ஏற்பாடுபண்ணியுள்ள இந்த அனைத்து ஆசீர்வாதங்களில் பங்கடையும் வாய்ப்பை அவரிடத்தில் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பெலவீனத்தாலோ (அ) எதிர்ப்பினாலோ (அ) வேறு ஏதாவது காரணங்களினாலோ ஒருவேளை கீழே தள்ளப்பட்ட நிலையில் காணப்பட்டார்களானால், அத்தகையவர்கள், பிதா நமக்காகக் கொண்டிருப்பதும், குமாரன் பங்கிட்டுக் கொடுப்பதுமான இந்த மாபெரும் அன்பை நினைவில் கொண்டுவந்து, எண்ணிப்பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். அதாவது, நாம் பாவிகளாகவே இருக்கையில் நம்மை மீட்டுக்கொண்டது மாத்திரமல்லாமல், (ஒருவேளை) நாம் அவருக்காக பாடுபடுவோமானால், நாம் அதிசயமான ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் மற்றும் கர்த்தராகிய கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரத்துவத்தையும் அடையும்படிக்கு, நம்மை அழைத்ததுமான அன்பை நாம் நினைவில் கொண்டுவந்து, எண்ணிப் பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒருவேளை நாம் அவருக்காகப் பாடுப்படுகிறவர்களாக இருப்போமாகில், இந்த அன்பானது நம்மைவிட்டு எளிதில் தள்ளிப்போவதில்லை; நாம் பின்வாங்கி இரண்டாம் மரணத்திற்குள் போவதை அனுமதிப்பதைக் காட்டிலும், இந்த அன்பானது நம்மைச் சிட்சித்துத் திருத்துகின்றது. பின்னர், இயேசுவின் மீதான விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களையும், உண்மையுள்ள வார்த்தைகளைத் தொடர்ந்துப் பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களையும், இறுதியில் இந்த அன்பானது ஒன்றில் சிறுமந்தையினராகவோ (அ) திரள்கூட்டத்தினராகவோ விடுவித்துவிடுகின்றது. ஆனால், எந்த அளவுக்கு இந்த அன்பானது, நம்மிடத்தில் செழிப்பாகக் காணப்படுகின்றதோ மற்றும் எந்த அளவுக்கு கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் குடிகொண்டு இருக்கின்றாரோ/வாசம் பண்ணுகின்றாரோ, அவ்வளவாய் பிதாவின் பார்வையில் பிரியமாகவும், நமது கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிறதுமான காரியங்களைச் செய்வதில் விருப்பமாகவுமுள்ள பதிலுக்குப் பதிலான அன்பு நம்மிடத்தில் காணப்படும்; மற்றும் அவ்வளவாய் கர்த்தருக்கும், நம்முடைய ஆத்துமாக்களுக்கும் இடையே திரையிடுகின்ற எதையும் செய்ய வெறுப்பும் நம்மிடத்தில் காணப்படும். தெய்வீக அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழம் ஆகியவற்றை நாம் இப்படியாகப் புரிந்துக்கொண்டுள்ளபடியால், நாம் புதிய தைரியம் கொள்வோமாக. மேலும், தேவனுடைய இந்த அன்பானது, அவருக்காகவும், அவருடைய காரணங்களுக்காகவும்/நோக்கங்களுக்காகவும் நாம் மாபெரும் வைராக்கியமும், பக்தியும் கொள்ளத்தக்கதாக நம்மை நெருக்கி ஏவுவதாக.

*****

R 3553/ மே 1905

# எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர்

## யோவான் 18:28-40

*"சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்." யோவான் 18:37*

பிலாத்துவினுடைய அரண்மனையில் நடந்திட்ட இயேசுவின் விசாரணை குறித்த விஷயங்களே, நம்முடைய பாடமாக உள்ளது. இயேசு, உலகத்திலேயே மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிக்கு முன்பு நின்றுகொண்டிருந்தார்; எவ்விதமான சாதகமான சூழ்நிலைகள் இல்லாதபோதிலும், வியக்கத்தக்க அமைதியுடனும், தைரியத்துடனும் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது காலை வேளையாக இருந்தது, சுமார் 8 மணி அல்லது அதற்கும் முன்னதாக இருந்திருக்க வேண்டும். அவர் தமது சீஷர்களுடன் பஸ்கா புசித்தது முதல், அவருடைய நரம்புகளின் மீதான அழுத்தத்திற்கு ஓய்வில்லாமல் இருந்தது . . . அவர்களின் பாதங்களைக் கழுவினார், தம்முடைய சொந்த மரணத்திற்கான அடையாளமாக அப்பத்தைப் பிட்டு, தமது சீஷர்களுக்குக் கொடுத்து, நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவினார்; பின்னர் சம்பவிக்கப் போகிறவைகளை முழுதும் அறிந்தவராக, யூதாஸ் திட்டமிட்டதைச் செய்யும்படிக்கு அவனை அனுப்பினார்; பின்னர் கெத்செமனேக்குப் போகிற வழியில் அவர், சீஷர்களிடம் திராட்சசெடி மற்றும் கொடிகள் குறித்துப் பேசி, பின்னர் (யோவான் 17-ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல்) அவர்களுக்காக ஜெபம் பண்ணி, பின்னர் கெத்செமனே தோட்டத்திற்குள் அவர் வந்து, தம்மைக் குறித்து வியாகுலத்துடன் ஜெபம் பண்ணி, தாம் செய்த பணிகள், பிதாவின் அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக முழுமையாகவும், திருப்திகரமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்று அறிய கவலைக் கொண்டவராகவும் இருந்தார்.

தம்மைப் பெலப்படுத்தும்படிக்கு அனுப்பப்பட்ட தூதன் வாயிலாக, தமக்கான அங்கீகரிப்பை அவர் பெற்றதுமுதல், சகலமும் சமாதானத்துடனும், அமைதியுடனும் காணப்பட்டது. அவரைச் சிறைப்பிடித்த விஷயம், அவருடைய சீஷர்கள் சிதறடிக்கப்பட்ட விஷயம், பிரதான ஆசாரியனின் நீதிமன்றத்தில் அவர் விசாரிக்கப்பட்ட விஷயம், அவர் கேலிபண்ணப்பட்டு, காறி உமிழப்பட்டு, முகத்தின் தாடி மயிர் இழுக்கப்பட்டு, தலையில் கொட்டப்பட்டு, அவருடைய கண்கள் கட்டப்பட்டு, அவரைக் குட்டினது யார் என்று தீர்க்கதரிசனம் கூறச் சொல்லப்பட்ட விஷயமாகிய இந்தச் சகல அவமானங்களையும் அவர் பொறுமையுடன் சகித்தார்; மேலும் இரவுபொழுது ஒரு மனிதனைக் ஆக்கினைக்குள்ளாகத்தீர்ப்பது என்பது யூதர்களின் பிரமாணங்களுக்கு எதிரான ஒன்றாக இருந்தபடியால், மீதமான அவருடைய விசாரணையானது ஆலோசனை சங்கத்தார் விதிமுறைபடி, அவரைக் குற்றவாளி என முடிவு தீர்க்கப்படத்தக்கதாக விடியும்வரை தள்ளிவைக்கப்பட்டது. இதற்கிடையில் அவருடைய அன்பான சீஷர்கள், மந்தையைப் போல சிதறடிக்கப்பட்டுவிட்டனர். மேலும், சேவல் கூவுவதற்கு முன்னதாகவே, பிரியமான பேதுருவும், அவரைச் சபித்துப் பேசி, அவரை மறுதலித்துவிட்டார். இந்த அனைத்து அனுபவங்களுக்குள் கடந்து சென்ற பிற்பாடும், அநேகமாக எவ்விதமான ஓய்வும் இல்லாமல் இருந்தபோதும், தமது ஊழியங்கள் காரணமாகவும், மற்றவர்களைச் சொஸ்தமாக்கும்படிக்கு தம்முடைய சத்துவத்தைக் கொடுத்துவிட்ட காரணமாகவும் பெலவீனமடைந்திருந்தபோதும் நமது கர்த்தர், பிலாத்துவின் முன்பு மிகுந்த அமைதலுடனும், பெலத்துடனும் நின்றது வியக்கத்தக்க விஷயமாகும்.

அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே தங்கள் மனதில் நிர்ணயித்துக் கொண்டிருந்த அவருடைய சத்துருக்களாகிய ஆலோசனை சங்கத்தார் மற்றும் பிரதான ஆசாரியர்கள், தங்களுடைய இருதயத்தில் கொலைப்பாதகத்தைச் சுமந்து கொண்டிருக்க, பயபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாக அரண்மனைக்குள் பிரவேசிப்பதில்லை என்றார்கள். ஏனெனில், அவர்கள் அரண்மனைக்குள் (பண்டிகையின் போது) பிரவேசித்தார்களானால், அது அவர்களின் பரிசுத்தத்தைத் தீட்டுப்படுத்திவிடும் என்பது அவர்களின் பாரம்பரியமாய் இருந்தது. அந்தோ! மனித இருதயம் எத்துணை திருக்குள்ளதாய் இருக்கிறது! மத ரீதியான சடங்காச்சாரமான தூய்மையினை முன்வைத்தும், தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளவும், செய்யவும் நாடுகின்றோம் என்று வெளித்தோற்றமாய் அறிக்கைப் பண்ணியும், ஒளியின் வஸ்திரத்தினுடைய வேஷத்தில், எவ்வளவு கொலைப்பாதகங்களும், அருவருப்பானவைகளும் மறைக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு உன்னிப்பாக இப்பாடத்தில் நாம் சுட்டிக்காண்பிக்கிற இவ்விஷயமானது, நம்முடைய நாட்களிலும் மற்றும் ஜீவியத்தின் அநேக விஷயத்திலும் காணப்படுகின்றது. மாய்மாலம் என்பது, மிகப் பொதுவாகக் காணப்படுகின்ற பெலவீனமாய் இருக்கின்றது; சில சமயம் மாய்மாலக்காரன்/வஞ்சகனின் இருதயத்தினிடமிருந்தே தவறுகள் ஒளிந்து மறைந்து காணப்படுகின்றது; இச்சம்பவத்திலும்கூட அப்படியாகவே உள்ளது. இந்த மனுஷர்களைக் குறித்ததான பேதுருவின் வார்த்தைகளும் நம் நினைவுக்கு வருகின்றது: "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்." (அப். 3:17) உண்மை என்னவெனில், மாபெரும் குற்றங்கள், அறியாமையினாலே செய்யப்படுகின்றது; சிலசமயம் தேவனுக்கு ஊழியம் செய்கின்றோம் என்ற எண்ணத்திலும்கூட மாபெரும் குற்றங்கள் (அறியாமையினாலே) செய்யப்படுவதினால், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்கின்ற அனைவரும், சத்தியம் மற்றும் நீதியை நேசிப்பவர்களாய் இருக்கும் அனைவரும் சுய வஞ்சனையில் விழும் வகுப்பாரில் ஒருவராக மாறிவிடாதபடிக்கு, தங்கள் சொந்த இருதயங்களையும், நோக்கங்களையும், ஆராய்ந்து சோதித்துப் பார்ப்பதில் மிகக் கவனமாய் இருக்க வேண்டும்.

## பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக

இவ்வசனத்தின் இப்பாகமானது, சில குழப்பங்களை ஏற்படுத்தி உள்ளது. இயேசுவும், அவருடைய சீஷர்களும் முந்தின நாள் சாயங்காலப் பொழுதிலேயே பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்துவிட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். பஸ்கா புசிப்பு முடிந்திருக்குமானால், பின்னர் ஏன் இவர்கள் தாங்கள் பஸ்கா இராப்போஜனம் புசிப்பது தடைபடாததற்கு ஏதுவாக தாங்கள் தீட்டுப்படக்கூடாது என்று அஞ்சினார்கள்? என்று கேள்வி எழலாம். ஆனால், அந்த நாள் துவங்கி, ஒரு வாரம் வரையிலும் நீடிக்கும் பஸ்கா பண்டிகையை மனதில் கொண்டே, அவர்களின் விண்ணப்பம் காணப்பட்டது என்று நாம் பதிலளிக்கின்றோம். நாம் நினைவில்கொள்ள வேண்டியது என்னவெனில், பஸ்கா என்ற வார்த்தையானது, இராப்போஜனத்திற்கும், அதனை தொடரும் பண்டிகை வாரத்திற்கும் பொருந்துகின்றதாய் உள்ளது. யூதர்கள் பண்டிகை வாரத்திற்கு அதிகம் முக்கியத்துவம் செலுத்தினவர்களாய் இருக்க, கிறிஸ்தவர்களாகிய நாமோ விசேஷமாக பஸ்கா இராப்போஜனத்தின் மீது அல்லது பஸ்கா இராப்போஜனத்திற்குப் பதிலாக, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய பின்னடியார்களுக்கென அன்று சாயங்கால வேளையில் நிறுவப்பட்ட நினைவுகூருதலின் போஜனத்தின் மீது முக்கியத்துவம் காட்டுகிறவர்களாக இருக்கின்றோம்.

உள்ளே அசுத்தமாயிருக்க, வெளியே பாத்திரத்தைச் சுத்தமாய் வைத்திருப்பதைக் குறித்து, அதாவது வெளித்தோற்றத்தில் பரிசுத்தம்/தூய்மையுள்ள நபர்களாக மற்றும் ஜாதியினராகக் காட்டிக்கொண்டு, உள்ளத்திலோ பரிசுத்தம் தூரமாய்க் காணப்படுகிறதைக் குறித்து, யூதர்களை நமது கர்த்தர் அடிக்கடி கடிந்து கொண்டுள்ளார். வேறொரு தருணத்தில், அவர்கள் மிகுந்த சடங்காச்சாரமாய் உபவாசம் இருப்பதையும் மற்றும் உணவு உட்கொள்ளாததையும் வெளியரங்கமாய்க் காட்டுகிறார்கள், ஆனால் எதையும் அபகரித்துக் கொள்ளுமளவுக்கும் மற்றும் அடையாள பாஷையில் விதவைகளின் வீட்டைப் பட்சிக்குமளவுக்கும், அவர்களின் இருதயங்களில் அவ்வளவுக்கு அன்பு குறைவுபட்டதாகவும், அவ்வளவுக்கு சுயநலம் உள்ளதாகவும் இருக்கின்றது என அவர்களுக்கு கர்த்தர் நினைப்பூட்டினார். சுத்தம், தூய்மை மற்றும் பரிசுத்தம் தொடர்புடைய வெளியரங்கமான சடங்கு முறைகளைக் குறித்து, நமது கர்த்தர் எதுவும் பேசவில்லை, ஆனால் தேவனுடைய பார்வையில் மிக முக்கியமாகக் காணப்படும் இருதய தூய்மை/பரிசுத்தத்தின் ஸ்தானத்தை, இந்த வெளித்தோற்றமான சடங்கு முறைகள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றே நமது கர்த்தர் கூறினார்.

தனது அரண்மனைக்குள் அவர்கள் வரமாட்டார்கள் என்று பிலாத்து அறிந்தபோது, அவர்களுடைய வழக்கங்களை நினைவுகூர்ந்தவனாக வெளியே வந்து, தனது அதிகாரப்பூர்வமான சிங்காசனத்தை அங்கே வெளியே கொண்டு வந்து வைத்து, அதில் உட்கார்ந்தான். குற்றவாளிக்கு எதிரான அவர்களின் குற்றச்சாட்டுகளைக் கூறுங்கள் என்று பிலாத்து அவர்களிடம் கேட்டபோது, அது அவர்களை வியப்பிற்குள்ளாக்கிற்று.

தாங்கள் பிலாத்துவிடம் கொண்டுவரும் எந்தக் குற்றவாளியையும், பிலாத்து ஏற்றுக்கொள்வார் என்றும், அதிலும் ஒருவேளை தாங்கள் குற்றஞ்சாட்டும் நபர் தங்களுடைய ஜாதியாரில் ஒருவனாக இருப்பானாகில், அவன் நிச்சயமாக கேடான மனுஷனாகவும், உரோமர்களின் கரங்களிலிருந்து குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, மரணத்தண்டனை பெற்றுக்கொள்ள பாத்திரவானாக இருப்பான் என்றும் பிலாத்துத் திருப்தியடைந்தவராக இருப்பார்

என்றும் எண்ணினவர்களாக, முன்நாட்களில் விளங்கின பிலாத்துவின் வழக்கத்தைத்தான் அவரிடத்தில் எதிர்பார்த்து வந்திருக்கின்றார்கள். "இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்க மாட்டோம்" (வசனம் - 30) என்ற அவர்களின் பதில், அவர்களின் அதிர்ச்சியைக் காட்டுகின்றது; அதாவது, பிலாத்துவே உரோம அதிகாரத்தின் பிரதிநிதியாகிய உம்முடைய கரங்களில் நற்கீர்த்தியுடைய எங்கள் ஜனங்கள் மத்தியில் உள்ள எந்த மனுஷனையாகிலும் ஒப்புக்கொடுக்க நாங்கள் விரும்புவோம்/இணங்குவோம் என்று நீர் எண்ணுகிறீரோ என்ற விதத்தில் அவர்களுடைய பதில் காணப்பட்டது.

## இவனை நீங்களே கொண்டுபோய் நியாயந்தீருங்கள்

பிலாத்து, ஆலோசனை சங்கத்தாரிடமே திரும்பிப் பொறுப்பை ஒப்புக்கொடுத்தது மிகச் சரியே. பொறாமை மற்றும் துர்க்குணம் காரணமாகவே அவர்கள் இவ்விதமாய் இயேசுவை நடத்துகின்றனர் என்று பிலாத்து அறிந்து/உணர்ந்து கொண்டதாக வேதப்பகுதிகள் நமக்குக் காட்டுகின்றன. மேலும், தன்னிடம் கொண்டுவரப்பட்டவர் சாதாரண குற்றவாளி அல்ல என்றும், இக்குற்றவாளிக்கு விடுதலை கொடுக்கப்பட்டால் நிச்சயமாக அது உரோம சாம்ராஜ்யத்தின் அமைதியைக் குலைத்துவிடும் என்றும் பிலாத்து அறிந்தவராக இருந்தார்.

ஏமாற்றம் கண்ட யூத அதிகாரிகளானவர்களோ, தங்களுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள விருப்பம்தான், ஆயினும் எந்த மனிதனுக்கும் மரணத் தண்டனை அளிக்கும் அதிகாரம் தங்களிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டதே என்ற விதத்தில் பதிலுரைத்தனர். யூதருடைய (Talmud) வேதத்தில், பின்வரும் குறிப்பு காணப்படுகிறது: "ஆலயம் அழிக்கப்படுவதற்கு 40 வருடங்களுக்கு முன்னதாக பெரிய அளவிலான குற்றங்களை நியாயந்தீர்க்கும் அதிகாரமானது, இஸ்ரயேலிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டது." இக்குறிப்பு உண்மையாக இருக்கும் பட்சத்தில், தெய்வீக வழிநடத்துதலின்படி குற்றவாளிக்கு மரணத்தீர்ப்பு அளிக்கும் அதிகாரமானது, நமது கர்த்தர் குற்றம் சாட்டப்பட்ட அதே வருடத்தில் யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டுள்ளது. மேலும் யூதர்கள் ஒருபோதும் எவரையும் சிலுவையில் அறையாத விஷயமும், சிலுவையில் அறையும் மரணமானது, உரோம சட்டத்தின் கீழ் மரணத்தண்டனையை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறையாக இருக்கிறது என்ற விஷயமும், "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று நீண்ட காலத்திற்கு முன்னதாக உரைக்கப்பட்டத் தீர்க்கத்தரிசனம் குறித்த விஷயமும் மற்றும் கர்த்தர் தாமே, தாம் சிலுவையில் அறையப்படப் போவதைக்குறித்துத் தீர்க்கத்தரிசனமாக, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்று கூறின விஷயமும் நம் நினைவுக்குக் கொண்டுவரப்படுகையில், இயேசு குற்றம் தீர்க்கப்பட்ட வருஷத்தில் மரணத்தீர்ப்பு வழங்கும் அதிகாரம் யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டது என்ற குறிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. (யோவான் 12:32, 33; கலாத்தியர் 3:13; உபாகமம் 21:23). அந்தக் குறிப்பிட்ட வருடத்தில் யூதர்களிடமிருந்து அவ்வதிகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டப்படியால்தான், இயேசு கல்லால் எறிந்து கொல்லப்படாமல் சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கைப்பண்ணினபடியால், யூதரின் விசாரணையில் அவர் தேவ தூஷணம் புரிந்தார் என்பதே அவர் மீது இருந்த உண்மையான குற்றசாட்டாகும். யூதர்கள், தங்களை ஒருபோதும் தேவனுடைய குமாரர்கள்/புத்திரர்கள் என்று கூறிக்கொண்டதில்லை. அவர்கள் மத்தியில் உயர்ந்த ஸ்தானம் வகித்தவர்கள், தேவனுடைய நண்பனான ஆபிரகாம், அடுத்து தேவனுடைய ஊழியக்காரரான மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் — பணிவிடைக்காரர்கள் என்னும் ஸ்தானத்தை வகித்தார்கள். புதிய புத்திரர் வீட்டாரின் தலையாக, கிறிஸ்து வருவதற்கு முன்பு வரையிலும், எவரும் புத்திரர்களாகக் கருதப்படவில்லை. "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" என்ற வசனங்கள் இதற்கு இசைவாக உள்ளது (எபிரெயர் 3:5,6). ஆலோசனை சங்கத்தார் முன்பு, தேவ தூஷணம் பேசினவராக குற்றஞ்சாட்டப்பட்ட நமது கர்த்தரானவர், கல்லால் எறியப்பட்டுக் கொலைச் செய்யப்படும் தண்டனைக்குப் பாத்திரமானவராக இருந்தார். ஆனால் மரணத்தீர்ப்பு வழங்கும்

அதிகாரமானது யூதர்களின் கையைவிட்டு எடுக்கப்பட்டிருந்தபடியாலும், அந்த அதிகாரம் உரோமர்களின் கைகளில் சென்றபடியாலும் சூழ்நிலைகள் மாறிவிட்டது. மேலும் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவார் என்று முன்னுரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனத்தின்படி, இயேசு நமக்காகச் சாபமாக்கப்பட்டார்.

## யூதர்களின் இராஜா

லூக்கா விசாரணை குறித்ததான வேறு சில செய்திகளை நமக்கு பதிவு செய்துள்ளார். (லூக்கா 23:2) மூன்று குற்றச்சாட்டுகளை யூதர்கள் முன்வைத்தார்கள். மேலும், அம்மூன்று குற்றச்சாட்டுகளும், உரோம அரசாங்கத்திற்கு எதிரான துரோகச் செயலாகவும் இருந்தது: (1) ஜனங்களைக் கலகப்படுத்துதல்; (2) இராயனுக்கு வரி கொடுக்க வேண்டாம் என்று தடை விதித்தல்; (3) தன்னை கிறிஸ்து என்னப்பட்ட இராஜாவென்று அறிவித்தல் என்பவைகளே. இந்தக் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு, சாட்சிகளும் கொண்டுவந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

புத்திக்கூர்மையும், சிந்தனைத்திறனும் இல்லாத எந்த மனுஷனும் பிலாத்து இருந்த உயர்ந்த ஸ்தானத்தில் இடம் பெற்றுக்கொள்ள முடியாது. பிலாத்து, அந்நிய தெய்வங்களை வணங்குகிறவனாகவும், பாவம் நிறைந்த மனுஷனாகவும் இருந்தாலும், தனக்கு முன் கொண்டுவரப்பட்ட வழக்கின் உண்மை நிலையை உடனடியாகக் கிரகித்துக் கொண்டவனாக இருந்தான். அவன் இவ்வழக்கு மத ரீதியிலான துன்புறுத்தல் என்றும், உரோம அரசாங்கத்தை ஓங்கச் செய்வதில் குற்றம் சாட்டுபவர்கள் அக்கறை, ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்றும், குற்றம் சாட்டப்பட்டவர் எவ்விதத்திலேயும் அரசாங்கத்திற்குக் கேடுவிளைவிப்பவர் அல்ல என்றும் உணர்ந்து கொண்டான். சாட்சிகளின் வார்த்தைகளைக் கேட்ட பிற்பாடு சிறைப்பிடிக்கப்பட்டவரிடம் தனிப்பட்ட விதத்தில் பேசும்படிக்கும், தான் அவ்விஷயத்தில் என்ன முடிவு எடுக்க வேண்டும் என்று யோசிப்பதற்குமென, பிலாத்து மீண்டும் அரண்மனைக்குள் பிரவேசித்தான். "நீ யூதருடைய இராஜாவா" என்பதே பிலாத்து இயேசுவிடம் கேட்ட முதல் வார்த்தை என்று நான்கு சுவிசேஷர்களும் ஒரே கருத்தைப் பதிவு செய்துள்ளனர்.

இக்கேள்விக்கு நமது கர்த்தரால் பதில் அளிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அவர் யூதர்களின் இராஜாதான், இந்த ஸ்தானத்தை எடுப்பதற்காகவே அவர் தமது பரலோக மகிமையைத் துறந்து வந்தார்; அவருடைய வருகையானது, நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்தது; மேலும் தெய்வீக வாக்குத்தத்தங்களும், தீர்க்கத்தரிசனங்களும் அவருடைய வருகையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இப்பொழுது, அவரால் பிலாத்துவின் முன்னிலையில் அவ்வுண்மையை மறுதலிக்க முடியாது. அப்படி மறுதலித்துக் கூறுவாரானால், அது அவருடைய போதனைகளைக் கவிழ்த்துப் போடுவதாகவும், தெய்வீகத் திட்டத்தின்படி அவர் ஸ்தாபிக்க விரும்பின விசுவாசத்தையும் கவிழ்த்துப் போடுகிறதாகிவிடும். ஆனால் அவர் அச்சமயத்தில் உரோமர்களிடமிருந்தும், பிலாத்துவிடமிருந்தும் அரசாங்கத்தைப் பிடுங்கி எடுப்பதற்கு தாம் நாடவில்லை என்பதை, தமது பதிலின் மூலமாக பிலாத்துவின் நிமித்தமாகவும், நம் அனைவர் நிமித்தமாகவும் தெளிவாகக் காட்ட வேண்டியிருந்தது. "நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ"என்ற பதிலை வாசிக்கின்றோம் (யோவான் 18:34). எளிமையாக அவரது வார்த்தைகளை விவரிக்க வேண்டுமெனில், "உரோமனாகிய நீர் உமது கண்ணோட்டத்திலிருந்து இக்கேள்வியைக் கேட்கின்றீரோ அல்லது மதவாதியாக யூதர்களின் நம்பிக்கையின் கண்ணோட்டத்திலிருந்து இக்கேள்வியைக் கேட்கின்றீரோ?" என்ற விதத்தில் கேட்டார்.

பிலாத்து இதற்குப் பிரதியுத்தரமாக, "நான் யூதன் அல்ல என்பதை நீர் அறிவீர், மேலும் உம்முடைய ஜனங்களின் நம்பிக்கையின் மீது எனக்கு ஈடுபாடும் இல்லை, உம்முடைய சொந்த ஜனங்களும், உம்முடைய ஜனங்களின் பிரதானமான மத அதிகாரிகளும், அதாவது நீர் எந்த ஜனங்களின் இராஜா அல்லது பிரபு என்று உம்மைக் கருதிக்கொள்கின்றீரோ, அந்த ஜனங்களே உம்மை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்துள்ளனர். உம்மை நான் மரணத்தீர்ப்பிற்குள்ளாக்கும்படிக்கு உம்மை என்னுடைய அதிகாரத்தின் கீழ் ஒப்புக்கொடுத்துள்ளனர். நீர் அவர்களுக்கு என்ன செய்தீர்? அவர்கள் கோபம் கொள்ளவும், வெறுப்புக் கொள்ளவும், கடுமையான எரிச்சல்/பொறாமை கொள்ளவும் தக்கதாய் நீர் என்ன செய்தீர்?" என்றார்.

நமது கர்த்தர் அமைதலுடனும், சாந்தத்துடனும் இத்தருணத்திலும் காணப்பட்டார்: "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல," அதாவது, தற்காலத்தில் காணப்படுகிற ஒழுங்குமுறைகளின்படியானது அல்ல என்னுடைய இராஜ்யம்! என்ற விதத்தில் இயேசு கூறினார். பிலாத்து புரிந்துகொள்ளத்தக்கதாக, இப்பதில் போதுமானதாக இருந்தது. அநேகமாக இப்பதில் பிலாத்துவுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இப்பதில் எவ்வளவு சுருக்கமாகவும், ஞானமிக்கதாகவும் உள்ளது! மேலுமாக, தம்முடைய பின்னடியார்கள் தமக்காகப் போரடவில்லை என்றும், தமது ஆட்சியை ஸ்தாபிக்கவும், தமது இராஜ்ய அதிகாரத்தை வன்முறையில் ஸ்தாபிக்கவும், தம்முடைய பின்னடியார்கள் நாடவில்லை என்றும்; ஒருவேளை இப்படியாகத்தான் (வன்முறை மூலம்தான்) தம்முடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமெனில், தாம் ஒருபோதும் இவ்விதமாக தம்மைச் சத்துருக்களிடம் கையளிக்கப்பட அனுமதித்திருக்க மாட்டார் என்றும், இப்படியிருக்க தம்முடைய இராஜ்யம் இவ்விடத்திற்குரியதுமல்ல என்றும், தமது இராஜ்யம் அதிகாரத்துடன் வருவதற்கான வேளை இன்னும் வரவில்லை என்றதுமான உண்மைகளின் மீது பிலாத்துவின் கவனத்தைக் கர்த்தர் கொண்டுவந்தார். இதே படிப்பினையைக் கர்த்தர் தமது உவமைகளில் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்: "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்" (மத்தேயு 25:31, 32). தமது இராஜ்யமானது, தமது இரண்டாம் வருகையில் ஆரம்பிக்கின்றது என இவ்வுவமையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிலாத்துக் காரியத்தைப் புரிந்துகொண்டார் என்பது அவருடைய வார்த்தைகளில் விளங்குகின்றது. "அப்படியானால் நீர் இராஜாவோ? நீர் இராஜாதான், ஆனால், இதுவரையிலும் இராஜாவாகவில்லை என்றும், உம்முடைய ஆளுகை இன்னும் எதிர்காலத்தில் உள்ளது என்றும் தானே நீர் கூறுகின்றீர்?" என்ற விதத்தில் பிலாத்துக் கூறினார். இதற்கான நமது கர்த்தரின் பதிலானது: "ஆம், நான் ஓர் இராஜா என்ற உம்முடைய யூகம் சரியே, இராஜா ஆகுவதற்கே நான் பிறந்தேன், இராஜாவாகுவதற்காகவே நான் உலகத்தில் வந்தேன்; இந்த மாபெரும் சத்தியத்திற்கு இசைவாகவே என்னைக் குறித்துச் சகல சாட்சியும் உள்ளது; உண்மையுள்ளவர்கள் அனைவரும், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்டு, என் சீஷன் அல்லது பின்னடியான் ஆகத்தக்கதாக இழுத்துக்கொள்ளப்படுகின்றான், மேலும் என்னை இராஜாவாகவும் ஏற்றுக்கொள்கின்றான்/அறிந்துகொள்கின்றான். மீதியான பெரும்பாலானவர்கள், இப்பொழுது முதல், நான் வந்து என் இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் காலம் வரையிலும் என்னை யார் என்று அறிந்துகொள்ள மாட்டார்கள்;" இப்படியாக, நாம் அவ்வசனப்பகுதிகளுக்குப் பொழிப்புரை (எளிமையான வார்த்தைகளில் விவரித்துள்ளோம்) கொடுத்துள்ளோம்.

## சத்தியமாவது என்ன?

சத்தியம், உண்மை, நேர்மை போன்றவைகளை நமது கர்த்தர் குறிப்பிட்டது என்பது, பிலாத்துவின் மனசாட்சியில், உள்ளத்தில் ஒரு மென்மையான பாகத்தைத் தொட்டது போன்று தோன்றுகின்றது. சொற்ப உலகப்பிரகாரமான ஜனங்கள் மாத்திரம் உண்மையற்ற தன்மைக்கு மரியாதை அளிக்கின்றனர். அநேகர் பொய்ச் சொல்வதையோ அல்லது அதிர்ச்சி உண்டாக்குகிற அளவு வஞ்சனை பண்ணுவதையோ, பாதிப்புக்குள்ளாக்கும் அளவு வஞ்சனை பண்ணுவதையோ விரும்புவதில்லை; ஆனால் வஞ்சனையானது, சமுதாயம் மற்றும் தொழிலில் வெற்றி நடைப்போடுகிறவர்களின் ஒவ்வொரு நடைமுறையிலும், பண்பிலும், வாழ்க்கையிலும் பாகமாகக் கருதப்பட்டு வருகின்றது. ஆகவே, யூதர்களிடம் பேசுவதற்கு நடை எடுத்து வைக்கப்போன பிலாத்து, நமது கர்த்தரின் கடைசி வாக்கியத்திற்கு, "ஆம்," ஆனால், வாழ்க்கையின் ஒவ்வொரு காரியங்களிலும் சத்தியம், உண்மை அல்லது நேர்மை என்ற வார்த்தைகளானது, எவ்வளவாகக் காணப்பட வேண்டும் அல்லது காணப்படலாம் என்று நமக்குச் சொல்லித்தருவதற்கு யார் தான் இருக்கின்றார்! என்று பதிலளித்தார்.

போதகர் தம்மை, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று கூறினது போன்று, அவருடைய சீஷர்களாய் உண்மையாக இருக்கிற யாவரும் சத்தியமாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதைக் கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் மனதில் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பது நலமாய் இருக்கும். இந்தச் சுவிசேஷ யுகத்தில் இவ்வகுப்பாரை, அதாவது சத்தியத்திற்காக பசி கொண்டவர்களை, உண்மையுள்ளவர்களை, உண்மையுள்ள இருதயமுள்ளவர்களையே விசேஷமாக கர்த்தர் அழைத்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்களோ, இப்பொழுது கொடுக்கப்பட்ட எவ்வித வாக்குத்தத்தங்கள் மற்றும் நம்பிக்கைகளினாலும் அதிகம்

தாக்கம் கொள்வதற்குத் தகுதியற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் சத்தியம் பற்றின சிறு குறிப்பையாகிலும் பெற்றுக்கொண்டாலும் அவர்கள் அதனை பற்றிப் பிடித்துக்கொள்வதில்லை, அவர்கள் இதய அளவில் சத்தியத்தின் பிள்ளைகளாகவும், ஒளியின் பிள்ளைகளாகவும் இருப்பதில்லை. ஆகவே, நம்முடைய சகல வார்த்தைகளிலும், எண்ணங்களிலும், நடத்தைகளிலும், நேர்மையாகவும், இருதயப்பூர்வமான உண்மையுள்ளவர்களாகவும், நாம் இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியமாய் உள்ளது. உலகத்துடனான நம்முடைய சகல உறவுகள் மத்தியிலும், நாம் வார்த்தையிலும், கிரியையிலும் உண்மையாய் இருக்கிற வேளையில், கர்த்தர் மற்றும் அவருடைய ஜனங்கள் மற்றும் அவருடைய வார்த்தைகளுடனான நம்முடைய உறவுகளிலும் நாம் உண்மையாய் இருக்கத்தக்கதாக இரண்டு விதத்திலும் ஜாக்கிரதையுடன் நாம் காணப்பட வேண்டும்! உண்மையுள்ளவர்களே, உண்மையில் ஜெயங்கொண்டவர்களாக இருப்பார்கள்.

பாவம் பிலாத்து, இவன் தன்னுடைய வாழ்க்கையிலுள்ள அநேக முக்கியமான விஷயங்களில் தான் உண்மையற்றவனாக இருந்ததையும் எண்ணினார்; உலகத்திலேயே நாங்கள்தான் மிகவும் பரிசுத்தமான ஜனங்கள் என்று கூறிக்கொண்ட யூத தேசத்தின் தலைவர்களையும், அதிகாரிகளையும் கண்டு அக்கேள்வியைக் குறித்து அஞ்சினான் — சத்தியமாவது என்ன? உண்மையாய் இருப்பது என்றால் என்ன? எவ்வளவு உண்மையுடனும், எவ்வளவு நேர்மையுடனும் நாம் காணப்பட வேண்டும்? இக்கேள்விகளின் ஆழம் மிகவும் அப்பாற்பட்டதாகும்; அவனுடைய கிரகித்துக்கொள்ளும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதாகும்; யூதர்களில் பிரதானமானவர்களின் புரிந்துகொள்ளும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதாகும். இயேசு மாத்திரமே சத்தியத்தின் ஒரே பிரதிநிதியாகவும், மாதிரியாகவும் காணப்பட்டார். அவர் தமது சொந்த ஜனத்தாரின் அதிகாரிகளுக்கு மிகவும் அப்பாற்பட்ட உபதேசம் ஒன்றைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். சத்தியத்தின் இந்தப் பிரகடனம் மூலமாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தர் தமக்கென ஒரு ஜனங்களை, தமது சம்பத்துக்களைக் கூட்டிச் சேர்ப்பதே அவருடைய திட்டமாக இருக்கின்றது என்று நாம் பார்க்கின்றோம்.

சத்தியம் மற்றும் உண்மையின் அடிப்படையில் இன்று, கர்த்தர் தெரிந்துகொண்டிருக்கும் ஜனங்கள் விநோதமான ஜனங்கள் என்றும், பெரும்பான்மையான ஜனங்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்றும், திரளான ஜனங்கள் மத்தியில் அவர்கள் சிறுமந்தையினராக இருப்பார்கள் என்றும் நமக்கு வேதவாக்கியங்கள் தெரிவிப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அன்பான வாசகர்களே, இந்தத் உண்மையுள்ளவர்களின் வகுப்பாரில் நாம் ஒருவராய் இருக்கத்தக்கதாக, தேவனுடைய இரக்கத்தினால் நாம் ஒவ்வொரு பிரயாசத்தையும் எடுப்போமாக. ஐசுவரியங்கள் அல்லது மனுஷருடைய புகழ்ச்சிக்கு மேலாக, இன்னும் சொல்லப்போனால், ஜீவனுக்கும் மேலாக நாம் சத்தியத்தை உயர்வாக எண்ணக்கடவோம். இப்படியாக, "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்" என்று நமக்காக ஜெபம் பண்ணினவருக்கும், சத்தியமாய் இருப்பவருக்கும் நாம் உண்மையான சீஷர்களாக, பின்னடியார்களாக இருக்க முடியும்.

## அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்

இவ்வார்த்தைகளில், பிலாத்துவின் தீர்மானம் வெளியாகின்றது. அதாவது, இயேசுவிடம் குற்றம் இல்லை; உரோம சட்டத்தின்படி இப்படியாக வழக்கை முடித்து வைப்பது சரியே. யூதர்கள், தாங்கள் எடுத்த இத்தனை முயற்சிகளுக்குப் பின்னரும், தங்களது கைதியாகிய இயேசு தங்களுடைய கரங்களிலிருந்து தப்பித்துவிடப் போகிறார் என்று இப்போது உணர்ந்தபோது, கோபம் அடைந்தவர்களாகப் பிலாத்துவைப் பயமுறுத்தினார்கள் மற்றும் வெளிப்படையாக குத்திப்பேசவில்லை என்றாலும், பலனளிக்கும் விதத்தில் அவர்களுடைய பயமுறுத்தல் முயற்சி காணப்பட்டது. சமீபகாலத்தில்தான் அவர்கள், சக்கரவர்த்தியிடம் பிலாத்துவைக் குறித்துக் குற்றம் சாட்டியுள்ளனர். இம்முறை, சக்கரவர்த்தியின் பார்வையில், மிகவும் ஆற்றல் மிக்கதாய்த் தோன்றத்தக்கதாக, பிலாத்துவின் மீதான தங்கள் குற்றச்சாட்டுகள் காணப்படும் என ஜாடையாகக் கூறி, மறைமுகமான வார்த்தைகளில், அவர்கள் பிலாத்துவைப் பயமுறுத்தினார்கள் (யோவான் 1:12). பிலாத்துக் கலகத்திற்கு ஆதரவு அளிக்கின்றார் என்றும், சக்கரவர்த்திக்கு, இராயனுக்குப் பட்சமாக பிலாத்து இல்லை என்றும், பிலாத்துவைக் காட்டிலும் தாங்களே இராயனுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்றும், தங்கள் குற்றச்சாட்டுகள் பிலாத்துவுக்கு எதிராக காணப்படும் என்றும் குறிப்பிட்டனர். மேலும் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற தங்கள் ஜனங்களைச் சேர்ந்த ஒரு கலகவாதியை தாங்கள் கண்டுபிடித்தபோது, அக்குற்றவாளியை மரணத் தண்டனைக்குள்ளாகத் தீர்ப்பளிக்கும்படிக்குத் தாங்களே குற்றவாளியைப் பிலாத்துவிடம்

கொண்டுவந்தபோது, யூதர்களுக்கு தன்னை இராஜா என்று கூறி, பாலஸ்தீனியா முழுவதும் தனக்கு ஆதரவாக அநேக ஜனங்களைச் சேர்த்துக்கொண்டிருந்த குற்றவாளிக்கு, மரணத்தீர்ப்பு வழங்க மறுத்ததினிமித்தம் இராயனின் பிரதிநிதியாகிய பிலாத்து, இராஜாவுக்கும், நாட்டிற்கும் துரோகம் புரிந்தவனாய் இருக்கின்றான் என்று தங்கள் குற்றச்சாட்டுகள் பிலாத்துவுக்கு எதிராக காணப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

இப்படிப்பட்ட செல்வாக்கு மிகுந்த நபர்கள் இப்படியான குற்றச்சாட்டுகளைக் (தனக்கெதிராக) கொண்டுபோனால், இவைகள் இராயனின் பார்வைக்கு மிக மோசமான காரியமாக இருக்கும் என்று பிலாத்து உடனடியாக உணர்ந்து கொண்டார். ஆனால், கலிலேயா என்ற வார்த்தைகள் செவிகளில் விழ இயேசு பிறப்பில் கலிலேயனா? என்று விசாரித்து, உறுதியான பதிலைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில், தப்பித்துக் கொள்வதற்கான வழியைக் கண்டு, "இயேசு கலிலேயனாக இருக்கிறபடியால், இயேசு ஏரோதின் தீர்ப்புக்கு உட்பட்டவர், இந்த முழு வழக்கையும் நான் ஏரோதின் நீதி மன்றத்திற்கு மாற்றிவிடுகின்றேன், ஏரோது இயேசுவுக்குத் தீர்ப்பு வழங்கட்டும்" என்று கூறினார் (லூக்கா 23:5-12).

ஏரோது மற்றும் அவனது சேவகர்களால் எப்படியாக இயேசு மோசமாக நடத்தப்பட்டார் என்றும், முள்முடி சூட்டப்பட்டு, இரத்தாம்பரத்தினாலான வஸ்திரத்தினால் உடுத்தப்பட்டு, மீண்டும் பிலாத்துவிடம் அனுப்பப்பட்டதைக் குறித்து நாம் நினைவுகூருகின்றோம். இதற்கிடையில்தான், அநேகமாக பிலாத்துவின் மனைவி, தான் இயேசுவைக் குறித்துக் கண்ட சொப்பனத்தைப் பிலாத்துவிடம் கூறியிருந்திருக்க வேண்டும். கைதி (இயேசு) மீண்டும் மினுக்கான வஸ்திரங்களுடன் தன்னுடைய அரண்மனைக்கு அனுப்பப்பட்ட போது, பிலாத்து மிகவும் திகைப்படைந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை; கைதி (இயேசு) மினுக்கான வஸ்திரங்களுடன் அனுப்பப்பட காரியத்தில் — இயேசு ஓர் இராஜா என்ற வலியுறுத்துதல் — இன்னும் அதிகம் உறுதியடைந்தது; அதே சமயம் இயேசு ஓர் ஆபத்தான மனுஷன் என்றும், அரசாங்கத்திற்குத் தொந்தரவான மனுஷன் என்றதுமான யூதர்களின் ஆசாரியர்கள் மற்றும் அதிகாரிகளுடைய நடிப்பும், இன்னும் நகைப்புக்குரிய வண்ணம் காணப்பட்டது.

யூதர்களைச் சமாதானப்படுத்துவதற்குரிய ஒரு வழி பிலாத்துவுக்குத் தோன்றியது. அதாவது, அவர்களுடைய பிரயாசம் முழுமையாக தோல்வியடையவில்லை என்னும் அளவில் அவர்களை எண்ணச் செய்ய வேண்டும். அதே சமயம், தான் நியாயமான தண்டனை அளித்துள்ளேன் என்ற எண்ணத்தை அவர்களுள் எழச் செய்ய வேண்டும். பின்னர் வருஷந்தோறும் இந்தப் பண்டிகை காலத்தில் கைதியின் கடும் தண்டனையானது, நிறைவேற்றப்படுவதிலிருந்து தள்ளி வைக்கும் வழக்கத்தின்படி இயேசுவின் தண்டனையைத் தள்ளிவைத்திட வேண்டும் என்பதேயாகும். இதைப் பிலாத்து அவர்கள் முன் வைத்தபோது, மக்கள் கூட்டத்தார் பரபாஸ் என்று கூக்குரல் இட்டார்கள். இந்தப் பரபாஸ் என்பவன் உண்மையில் கலகவாதியாகவும், கொலைக்காரனாகவும், அநேகமாக ஆசாரியர்களின் தூண்டுதலினால் இயேசுவை வேட்டை நாய்கள் போன்று துரத்திக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தாரில் உள்ள அநேகருடைய உண்மையான மாதிரியாகவும் இருந்தான். பின்னரே, "அப்படியானால் இயேசுவை நான் என்ன செய்யட்டும்?" என்று பிலாத்துக் கேட்டான். ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களின் தூண்டுதலினால், "அவனை சிலுவையில் அறையும்; அவனை சிலுவையில் அறையும்!" எனும் பதில் வந்தது.

## "ஜனங்களுடைய சப்தமே, தேவனின் சப்தம்" - "Vox Populi, Vox Dei"

அந்தோ! பரிதாபம், விழுந்துபோன மனுக்குலத்தின் சுபாவம் விழுந்துபோன மனிதசுபாவம் எவ்வளவாய் நம்பமுடியாத நிலைக்குப் போய்விட்டது."ஜனங்களுடைய சப்தமே, தேவனின் சப்தம்" — "Vox Populi, Vox Dei" — என்ற பழமொழி எவ்வளவு உண்மையற்றது. ஒருவேளை வேதனுடைய சாயலிலும் ரூபத்தின்படியேயும் பூரணமான புருஷர்களும், ஸ்திரீகளும் பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்ட நிலையில் உலகத்தில் நிரம்பிக் காணப்பட்டார்களானால், அப்பொழுது திரளான ஜனங்களின் சப்தம் தேவனுடைய சப்தமாக இருந்திருக்கமுடியும். ஆனால் பெரும்பாலும் ஜனங்களின் சப்தமானது அவர்களை வஞ்சித்துள்ள பேய்களின் சப்தமாகவே இருக்கின்றது மற்றும் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு,

இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்". (2 கொரிந்தியர் 4:4)

மேற்கூறியவைகளுக்கு இசைவாக நாம் பார்க்கையில், தற்கால சூழ்நிலைகளின் கீழ் உள்ள உலகத்தின் தீர்ப்பானது நம்பத்தகுந்ததல்ல என்பது நம் அனைவருக்குமான நமது கர்த்தரின் ஆலோசனையாகும். அதாவது "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் (இப்பொழுது நிலவும் சுயநலத்தின் கொள்கைகளுக்கு எதிராகக் காணப்படுவதற்குப் பதிலாக இன்னமும் பாவத்தின் ஊழியக்காரர்களாய், குருடர்களாய்க் காணப்பட்டால்), உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; . . . . நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான் 15:18, 19, 16). நமக்கோ இயேசுவினுடைய சத்தம்/குரல், தேவனுடைய சத்தமாக/குரலாக இருக்கின்றது. மேலும், அவருடைய ஆடுகள் மாத்திரமே அவருடைய சத்தத்தைக் கேட்கின்றன, அவரைப் பின்தொடரவும் செய்கின்றன. இறுதியில் சாத்தான் கட்டப்பட்ட நிலையில், பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்பட்டுச் சத்தியத்தின் அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டு, பாவம் மற்றும் சாத்தானின் அடிமைதனத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று தெய்வீக வாக்குத்தத்தங்கள் கொடுத்த நிச்சயங்களை நினைவுகூர்ந்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இதற்கிடையில் நீதிக்காக நிற்பவர்கள் சிறுபான்மையான ஜனங்களாக இருப்பதில் திருப்தியாக இருக்கவேண்டும். எனினும் நமக்கு எதிராக நிற்கின்ற அனைவரைக்காட்டிலும் அவர் நமக்குப் பெரியவராக இருப்பார் என்பதான வாக்குத்தத்தமானது நமது விசுவாசத்தைப் பெலப்படுத்துகின்றதாய் இருக்கும். தற்காலத்தின் இருளான மேகங்கள் களைந்துபோய் புதிய இராஜ்யமானது அதிகாரத்தில் வந்து நீதியின் சூரியன் பிரகாசிக்கும்போது, அக்காலத்தில் நீதிமான்கள் பெரும்பான்மையானவர்களாக/திரளானவர்களாக இருப்பார்கள். மேலும், இராஜ்யத்தின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களோ, ஜனங்கள் மத்தியில் இராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:23)

*****

R 3556/156/315.

## இயேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டுமே.

யேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டுமே, ஒவ்வொருநாளின் முடிவுப்பொழுதினிலே,

வீணான பயமனைத்தையும் போக்கிவிடுமே,

நம் சந்தேகம் அனைத்தையும் தீர்த்துவிடுமே,

யேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டுமே.

வலிகளுக்கெல்லாம் இதமான மருந்தாகுமே,

களைப்படைந்த மயக்கமுறும் இதயங்களை ஆற்றுவிக்கும்,

நம்மைமிகவும் உறுதியாகவே மாற்றி அமைக்கும்,

யேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டுமே.

இருள்நிறைந்த பொழுதையெல்லாம் ஒளிர வைககுமே,

நும்மைசிறந்ததொரு ஜெபவீரனாய் மாற்றிவிடுமே.

புயலடிக்கும் ஆற்றலினை அமைதலாக்கிடும்,

யேசுவுடனே சிறிது நேரம் பேசும்பொழுதிலே,

வேறெதுவும் அதனிடத்தைப்பிடிக்கமுடியாதே,

நாம் நமது பரலோக வீட்டினை அடைவதற்கே ஏங்கி நிற்கிறோம்,

அவர் திருமுகத்தை நேருககு நேராய் பார்க்க விழைகிறோம்.

# சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு

## யோவான் 19:17-30

*"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்"*
**1 கொரிந்தியர் 15:3**

சரித்திரத்திலேயே மிகவும் அருமையான நிகழ்வினுடைய காட்சியாகத் திகழ்வது கல்வாரியாகும் மற்றும் இந்த ஆதாரத்திலேயே, மனுக்குலத்தின் மீது காணப்பட்டதான சாபத்தை அப்புறப்படுத்தத்தக்கதாக தெய்வீக அன்பும், நீதியும் செயல்பட்டன. கல்வாரி எவ்விடம் என்பது துல்லியமாய்த் தெரியாது, எனினும் இலத்தீன் வார்த்தையாகிய கல்வாரியானது, "கபால/மண்டைஓடு ஸ்தலம்" எனும் அர்த்தம் கொடுக்கும், கொல்கொதா எனும் எபிரெய வார்த்தைக்கு நிகரானதாய்க் காணப்படுவதினால், ஒரு துப்புக்கிடைக்கின்றதாய் இருக்கின்றது. முன்பாகத்தில் இரண்டு குகைகளுடனான சிறு குன்று ஒன்று உள்ளது மற்றும் அதனை தொலைவில் நின்று காண்கையில், மண்டை ஓட்டினுடைய தோற்றத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அதன் குகைகளும், அங்கு வளர்ந்து காணப்படுகின்றதான புதர்க்காடுகளும் கண்குழிகளினுடைய தோற்றத்தைக் கொடுக்கின்றதாக இருக்கின்றது. இந்த இடம்தான் சிலுவையில் அறையப்படுதல் நிகழ்ந்த இடமாகக் கருதப்படுகின்றது. பாறைகள் மற்றும் குன்றுகள் ஒத்திருக்கும் வடிவங்களின் அடிப்படையில், அவைகளை விவரிக்கும் வழக்கமானது இன்னமும் காணப்படவே செய்கின்றது. யாஸ்மைட்டில் (Yosemite) போர் வீரருடைய கலிகை மாட மலையும், மணப்பெண்ணினுடைய திரை நீர்வீழ்ச்சியும், ராக்கி மலைகளில் (Rocky Mountains) சொற்பொழிவு மேடைப் (Pulpit Rock) பாறையும் மற்றும் தேனீருக்கான மூடியும், கைப்பிடியுமுள்ள பாத்திரம் (Tea kettle Rock) பாறையும் மற்றும் வெள்ளை மலைகளில் (White Mountain) ஆந்தை தலையும் மற்றும் நீல மலைத்தொடரில் (Blue Ridge) சீசருடைய தலையும் நம்முடைய உலகத்தில் காணப்படுகின்றது.

சிலுவையில் அறையப்படுதல் என்பது மிகவும் கொடூரமான மற்றும் சித்திரவதைகள் கொண்ட மரண முறைமையாகும்; எனினும் கல்வாரியினிடத்திற்கும், அதற்கு முன்பு நிகழ்ந்த நிகழ்வுகளினிடத்திற்கும் நம் மனங்களை நாம் திருப்புகையில், நமக்காக நமது மீட்பர் அனுபவித்திட்டதான மரணத்தினுடைய சித்திரவதையானது, நமக்கு மிகுந்த அனுதாபத்தின் உணர்வுகளையும், துக்கத்தையும் கொடுக்கிறதாக இல்லை. இயேசுவோடுகூட இரண்டுபேர் சிலுவையில் அறையப்பட்டிருந்தனர்; அநேகர் இதுபோன்றதான ஒரு மரணத்தை இயேசுவுக்கு முன்பும், பின்பும் அடைந்திருக்கின்றார்கள் மற்றும் அவர் அளவுக்கும் (அ) நீண்டகாலமான சித்திரவதைகள், கொஞ்சம் கொஞ்சமாக கழுமரத்தில் கட்டப்பட்டு எரிக்கப்படுதல், சித்திரவதைப்படுத்திக் காயப்படுத்தல் முதலானவைகள் மூலம் அதிகமான அளவுக்கும் சிலர் பாடுபட்டுள்ளனர் என்று நாம் எண்ணுகின்றோம். நமது அருமை இரட்சகருக்கான அனுபவங்களானது, "நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்த" அவருக்கு தகுதியற்றது மற்றும் ஏற்றதல்ல என்பது மாத்திரமல்லாமல், "அவருடைய தழும்புகளால் நாம் குணமாகத்தக்கதாக," நமக்கான தண்டனையைச் சந்திப்பது தொடர்புடையதாகவே அவருடைய அனுபவங்களானது காணப்பட்டது என்பதுமான கருத்தே நம்முடைய இருதயங்களைப் பாதித்தவைகளாக இருக்கின்றன (ஏசாயா 53:5).

## கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது

நம் மீதான தண்டனை தீர்ப்பிலிருந்து, சாபத்திலிருந்து நாம் விடுவிக்கப்பட்டு, மீண்டுமாக தெய்வீகத் தயவினிடத்திற்குச் சீர்ப்பொருந்தப்படத்தக்கதாக, நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கத்தக்கதாக, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் நம்முடைய பாவங்களுக்காகக் கிறிஸ்து மரித்திருக்கின்றார் என்ற கருத்தே – இந்தக் கருத்தே நம்முடைய இருதயங்களை அன்புடன்கூடிய அனுதாபங்கொள்ளச் செய்கின்றது. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் (மரணத்தீர்ப்பின் கீழ்க்காணப்பட்டார்கள்) மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்களாகிய நாம் இனித் நமக்கென்று

பிழைத்திராமல், நமக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரிந்தியர் 5:14, 15).

"காலாக் காலங்களாக நிகழ்ந்துவந்த மரணங்கள் அனைத்திலும், மேலோங்கி நிற்கும்
கிறிஸ்துவின் சிலுவைதனிலே நான் மேன்மைப்பாராட்டுகின்றேனே;
இதன் உயர் கருத்துகளிலேயே,
புனித கதையின் அனைத்து விளக்கமும் மையம் கொண்டுள்ளதே."

எந்தளவுக்கு நமது கர்த்தருடைய மரணத்திற்கான அவசியத்தையும், மனுக்குலத்தினுடைய பாவங்களுக்கான பாவநிவாரணமாகிய அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய முக்கியத்துவத்தையும் நம்முடைய நாட்களிலுள்ள "இவ்வுலகத்தின் ஞானிகளும்" மற்றும் வேதசாஸ்திரிகளும், இறையியல் கல்லூரிகளினுடைய பேராசிரியர்களும் மறுக்கின்றவர்களாய் இருக்கின்றார்களோ, அவ்வளவுக்குத் தேவனுடைய கிருபையினால், தெய்வீகத் திட்டத்தைக் காணத்தக்கதாக தங்கள் கண்கள் திறக்கப்பெற்றவர்கள், மனிதனுக்கும், தேவனுக்குமான ஒப்புரவாகுதலுக்கான அடித்தளமாகக் காணப்படும் சிலுவையினுடைய முக்கியத்துவத்திற்கு அதிகமதிகமாய் முக்கியத்துவம் கொடுத்திட வேண்டும். சுவிசேஷத்தினுடைய இந்த அடித்தளமான அம்சத்தினுடைய விஷயத்திலிருந்து நம்முடைய நாட்களில் திரளானவர்கள் விலகி போயுள்ளனர். இயேசு நல்ல, சிறந்த, அருமையான மற்றும் ஞானமான போதகராக சித்தரிக்கப்படுகின்றார்; இவருடைய வார்த்தைகளானது, பாடங்களுக்கும், வியாக்கியானத்திற்கும் ஏற்றதாய் இருக்கின்றது; ஆனால் மனிதன் பரிணாம வளர்ச்சியின் வாயிலாகவே குரங்கு நிலையிலிருந்து, தேவனுடைய சாயலுக்கு வந்தான் என்று கூறப்படும்போது, உலகத்தினுடைய பாவம் என்கிற காரியமானது மறுக்கப்படுகின்றதாய் இருக்கின்றது; மேலும் பாவநிவாரணம் கொடுக்கத்தக்கதாக, உலகத்திற்குப் பாவம் இல்லையெனில், இயேசு உலகத்தினுடைய பாவங்களுக்கான பாவநிவாரணமானார் என்பதான வேதவாக்கியங்களினுடைய பதிவானது தப்பறையானதாக இருக்கும்; இந்தக் கண்ணோட்டமே கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் வேகமாய்ப் பரவி, உண்மை கிறிஸ்தவ விசுவாசம் அனைத்தையும் அழித்துப்போடுகின்றதாய் இருக்கின்றது.

மற்ற விசுவாசங்களானது, உண்மை கிறிஸ்தவ விசுவாசமல்ல; பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசமல்ல; தேவனுக்குப் பிரியமாய் இருக்கும் விசுவாசமல்ல; நீதிமானாக்கப்படுதலுக்கும், பாவங்களினுடைய மன்னிப்புக்கும் அடிப்படையாய்க் காணப்படும் விசுவாசமல்ல; கர்த்தரினால் ஏற்றக்காலத்தில் மதிக்கப்படுகின்ற, கனப்படுத்தப்படுகின்ற, ஆசீர்வதிக்கப்படுகின்ற மற்றும் பலனளிக்கப்படுகின்றதான விசுவாசமல்ல. இக்காரியத்தினை நாம் அழுத்தமும், தெளிவாயும் விளக்கமுடியாது; சிலுவையினுடைய இரத்தத்தின் மூலம், அதாவது இயேசுவினுடைய மரணத்தின் மூலம் பாவநிவாரணம் எனும் உபதேசத்தைக் கொண்டிராதவர்கள், வேதவாக்கியங்களின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் அல்ல என்று சொல்வதானது, சிலரைக் கோபமூட்டுவதாக இருக்கும். இறுதியில் இந்த உபதேசமானது, யார் கர்த்தருடையவர்கள், யார் அவருடையவர்கள் அல்ல என்பதைத் தெளிவாய்க் காண்பித்துத் தருகின்றதான உரைக்கல்லாக விளங்கும். விசுவாசத்தினுடைய இந்த மையத்தை இழந்துபோகின்றவர்கள், தற்காலத்தில் கிறிஸ்துவுக்குள்ளான அனைத்தையும் இழந்துபோகின்றவர்களாய் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் முகமதியர்கள் (அ) யூதர்கள் (அ) பிராமணர்கள் (அ) (சீன தத்துவ ஞானிகள்) கன்ஃப்யூசியன்கள் (confucions) போன்று கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் ஆவார்கள். இயேசு ஜீவித்தார் என்றும், அவர் மரித்தார் என்றும், அவர் மாபெரும் போதகராய் இருந்தார் என்றும், யூதர்களும், முகமதியர்களும், நாத்திகர்களும் நம்புகின்றனர்; ஆனால் இப்படியான நம்பிக்கையானது, அவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவதுமில்லை மற்றும் நீதிமானாக்குகிறதுமில்லை. அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று நாம், "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே" நீதிமானாக்கப்பட்டிருக்கின்றோம் (உரோமர் 3:26).

## Via Dolorosa – சிலுவை பாதை

பிலாத்துவின் அரமணையிலிருந்து, கல்வாரிக்கு நேரான பாதையானது, துக்கமும், கவலையும் நிறைந்த பாதையாய்க் காணப்பட்டது. இம்மாதிரியான சூழ்நிலைகள் அனைத்திலும் நியாயமாய்ச் செய்ய முடிகிற ஒரே ஒரு காரியத்தை, பிலாத்தும் செய்திருந்தபோதிலும், அவருக்கு மன அமைதியில்லாமல் இருந்தது. பிரதான ஆசாரியர்களும், வேதசாஸ்திரிகளும் வெற்றிப்பெற்றனர்

மற்றும் தங்களுடைய கைதி, பலியிடுவதற்காகக் கொண்டுபோகப்படும் ஆட்டைப்போன்று கொண்டு செல்லப்படுவதை அவர்கள் கண்டபோது, அவர்கள் ஆனந்தமாய் வெற்றியைக் கொண்டாடியிருக்க வேண்டுமென்று நாம் எண்ணக்கூடும். அவர்களிடம் மனச்சாட்சி காணப்பட்டது என்றும், அவர்களால் பெரியளவு மகிழ்ச்சிக்கொள்ள முடியவில்லை என்றும் நாம் யூகிக்கின்றோம்; "இவருடைய இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று அவர்கள் பிலாத்துவிடம் சொன்னாலும், அவர்கள் தாங்கள் யாருக்கு எதிராக வெற்றிப்பெற்றிருந்தார்களோ, அந்த அருமையான நபர் குறித்த ஒருவித மர்மமான அச்சத்தினை உணர்ந்தார்கள். அவர்களது இருதயங்கள் கலங்கவே இல்லை என்று எண்ணுவது என்பது, அவர்களை எல்லாவிதத்திலும் களங்கப்படுத்துவதாக இருக்கும். வழியில் இயேசுவுக்குச் சீஷர்கள் அல்லாத உருக்கமுள்ள ஸ்திரீகளானவர்கள், அவர் கடந்து போகையில் அழுதார்கள். இயேசுவை வாரினால் அடிப்பித்து, அவரைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள் முன் அவரைக்கொண்டுவந்து நிறுத்தி, பின் பிலாத்து இயேசுவைக் குற்றஞ்சாட்டினவர்களின் மனதை இளகப் பண்ணிடுவதற்கு முற்பட்டார். அப்போது பிலாத்துக் கூறினதாவது: "(Ecce Homo) எக்கிஹோமோ – அதாவது இதோ இந்த மனுஷன்! சிலுவையில் அறைந்துபோடும்படிக்கு என்னிடத்தில் நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கும் இந்த மனிதனைப் பாருங்கள்; உங்கள் தேசத்திலேயே வேறெந்த மனிதனுக்கும் இவரைப் போன்றதான முகமும், ரூபமும் இல்லை; இவர் ஒரு பொல்லாத மனிதர் என்று உங்களில் ஒருவர்கூட, ஒரு கணம்கூட எண்ணுவதில்லை; இவருடைய முகமானது, இவர் பொல்லாதவர் இல்லை என்பதைக் காட்டுகின்றது. உங்களுக்கு இன்னமும் திருப்தியாகவில்லையா? இவர் அடைந்துள்ள அடிகளானது, இவருக்கு எதிரான உங்களது கோபத்தினைத் தணித்திடாதா? நான் இவரைப் போகவிடுவதற்கு நீங்கள் ஒத்துக் கொள்ள மாட்டீர்களா?" ஆனால் இந்த முறையீடுகள் யாவும் பயனற்றதாயின. இயேசுவின் சத்துருக்களானவர்கள் கசப்பினாலும், பொறாமையினாலும் மிகவும் நிரம்பிக் காணப்பட்டிருந்தபடியால், இயேசுவின் தோற்றமானது, அவர்களைக் கவரமுடியாதளவுக்கு அவர்கள் குருடர்களாகக் காணப்பட்டனர். எனினும் இவைகள் இயேசு கடந்து செல்கையில், காணப்பட்ட ஸ்திரீகளின் மனதை இளகச் செய்தது. அந்தச் சூழ்நிலையில் காணப்பட்ட அனைவரிலும், இயேசுவே மிகவும் அமைதியுடன் காணப்பட்டார், ஏனெனில் பிதாவினுடைய சித்தத்தையே தாம் செய்து வருகின்றார் என்ற உறுதியை அவர் பெற்றிருந்தார். தெய்வீகத் தயவுள்ளது எனும் வார்த்தையினை இயேசுவுக்குக் கொடுப்பதற்கும் மற்றும் இப்படியாக அவரைப் பெலப்படுத்துவதற்கும் என்று தேவதூதன் கெத்செமனேயில் இயேசுவுக்குத் தோன்றினது முதல், மேற்கூறின அந்த உறுதியானது அவரை அமைதியாகவும், உணர்ச்சிவசப்படாதவராகவும் காணப்படச் செய்தது. பிதாவினுடைய திட்டத்தை அரங்கேற்றப்போகிறதும், பிதாவின் சித்தமாகக் காணப்படப்போகின்றதுமான எதையும் சகிப்பதற்கு, இயேசு ஆயத்தமாய்க் காணப்பட்டார்; இயேசு தேவனுடைய ஞானத்தின் மீதும், அன்பின் மீதும், நீதியின் மீதும், வல்லமையின் மீதும் அப்பேர்பட்டதான ஒரு நம்பிக்கையினைக் கொண்டிருந்தார். சந்தேகத்திற்கிடமின்றி முப்பத்தியேழு ஆண்டுகளுக்குப் பிற்பாடு அந்தப் பட்டணத்தின் மீது வந்ததான பயங்கரமான உபத்திரவத்தை மனதில் கொண்டவராக, அழுது கொண்டிருந்த ஸ்திரீகளை நோக்கி: "நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காக அழுங்கள்" என்று இயேசு கூறினார்.

## அவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்

இயேசு தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, நான்கு உரோம போர்ச் சேவகர்களுடன் ஊர்வலத்தின் முன்னாகச் சென்றார்; இவர்களுக்குப் பின்னாக இரண்டு கள்வர்கள் வந்தார்கள்; ஒவ்வொரு கள்ளனையும் நான்கு போர்ச் சேவகர்கள் பாதுகாத்து வந்தார்கள் மற்றும் இவர்கள் அனைவரும் நூற்றுக்கு அதிபதி ஒருவருடைய தலைமையின் கீழ்க் காணப்பட்டார்கள். அந்தக் கள்வர்களைக் காட்டிலும் மிகவும் அறிவுள்ளவராகவும், மிருகத்தனம் அற்றவராகவும், சுபாவத்தில் முரட்டுத்தனமற்றவராகவும் நமது மீட்பர் காணப்பட்டப்படியால், அநேகமாக அவர்களைக் காட்டிலும் அவருக்கே பாரமான மரச் சிலுவையைச் சுமப்பதில் சிரமம் இருந்திருக்கும்; இன்னுமாகக் கிட்டத்தட்ட பன்னிரண்டு மணி நேரங்கள் அவர் உணவு இல்லாமல், மிகவும் மன அழுத்தம் நிறைந்த நிலையிலும் காணப்பட்டிருந்திருக்கிறார். அவரால் அவரது சிலுவையின் பாரத்தைக் கொஞ்சமும் சுமக்கமுடியவில்லை மற்றும் நூற்றுக்கு அதிபதியானவனோ, இயேசுவின் பின்னே சிலுவையைச் சுமந்துவரும்படிக்கு, சிரேனே ஊரானாகிய சீமோனைப் பலவந்தம் பண்ணினான். "இயேசுவின் பின்னே" எனும் வார்த்தைகளானது, இவர் சிலுவையைச் சுமந்துகொண்டு, ஊர்வலத்தில் இயேசுவுக்குப் பின் நடந்துவந்தார் (அ) சிலுவையின் கடைப்பாகத்தைத் தாங்கிக்கொண்டு, இயேசுவோடுகூட வந்தார் என்பதைக் குறிக்கின்றதா எனத் தெளிவாய்த் தெரியவில்லை; எப்படியாக

இருப்பினும், இவர் பலவந்தம் பண்ணப்பட்டிருந்தாலும், இவர் மிகவும் மகிமையான ஒரு வாய்ப்பினைப் பெற்றிருந்திருக்கின்றார்.

இந்தப் பதிவுகளை வாசித்துள்ளதான அநேக கர்த்தருடைய அருமையான ஜனங்களானவர்கள், தங்களுக்கு இப்படியாக அந்தச் சிலுவையைச் சுமப்பதில் ஒரு பங்கு கிடைத்திருந்திருக்காதா என்று ஏங்கியிருந்திருக்கின்றனர். பேதுருவும், யாக்கோபும் மற்றும் யோவானும் மற்றும் மற்றவர்களும் எங்கே போனார்கள்? அந்தோ! மிகவும் மகிமையானதொரு ஊழியத்தைத் தாங்கள் புரிவதிலிருந்து தடைப்பண்ணப்படத்தக்கதாகவும், தங்களிடமிருந்து பிடுங்கிப்போடப்படத்தக்கதாகவும், அவர்கள் பயத்தை அனுமதித்துவிட்டனர். இவைகளைக் குறித்து நாம் எண்ணிப்பார்க்கின்றதான அதேவேளையில், நமது கர்த்தரானவர் தம்முடைய பின்னடியார்கள் அனைவரும், தம்முடைய சிலுவையைச் சுமப்பதில் பங்கடையத்தக்கதாகக் கிருபையாய் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்பதை நினைவுகூருவதும் ஏற்றதாய் இருக்கும். சிலுவையினுடைய அவமானங்களும், சிலுவையினுடைய பாரங்களும், இன்னும் ஓயவில்லை; கிறிஸ்துவினுடைய சிலுவையானது இன்னமும் உலகத்திலேயே காணப்படுகின்றது; அவரோடுகூட சிலுவையைச் சுமப்பதற்கும், அவருக்குப் பின் நடப்பதற்குமான சிலாக்கியம் இன்னமும் நமக்குள்ளது. இயேசுவுக்காக சொல்லர்த்தமான சிலுவையைச் சுமப்பதற்கான சிலாக்கியத்தினை அப்போஸ்தலர்கள் இழந்துபோனபோதிலும், அவர்கள் தங்கள் பயங்களினின்று மகிமையாய்க் குணமடைந்தார்கள் மற்றும் பிற்காலங்களில் அவர்கள் ஜீவித்த வருடங்கள் அனைத்திலும், அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையைச் சுமந்து, சிறப்பாய் ஊழியம் செய்தது குறித்த பதிவுகளை நாம் பெற்றிருக்கின்றோம்.

நாம் அதிகமாய் அன்புகூருவோமாக மற்றும் சிலுவையைச் சுமப்பதிலுள்ள நம்முடைய வைராக்கியத்தின் வாயிலாக நம்முடைய அன்பை வெளிப்படுத்துவோமாக; மற்றும் எப்போதாகிலும் இந்த வைராக்கியமானது தணிந்துபோகிறதென்றால், "சிலுவையில்லையெனில் கிரீடமில்லை" எனும் ஒப்புக்கொள்ளப்பட்டதான உண்மையினை நினைவுகூருவோமாக; "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" என்றும், "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்" என்றுமுள்ளதான அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நாம் நினைவுகூருவோமாக. எனினும் மரணத்தின் காரணமான பயமோ அல்லது கிரீடத்திற்கு மதிப்புக்கொடுக்கும் காரியமோ, நம்மை ஆளும் நோக்கங்களாக இருந்தும் விடக்கூடாது. கர்த்தருக்கான நம்முடைய அர்ப்பணமானது, கர்த்தர் நமக்குச் செய்துள்ளவைகளைப் பற்றின உணர்ந்துகொள்ளுதலினாலும், அவரிடத்திலான நம்முடைய அன்பினாலும், அவரைப் பிரியப்படுத்தக்கூடியவைகளைச் செய்ய நாம் விரும்பி மற்றும் இவ்வாறாக நாம் பதில் அன்பைத் தெரிவிப்பதினாலுமே முக்கியமாய் உண்டானதாக இருக்க வேண்டும். சபையினுடைய தலையாகிய கர்த்தர் இயேசு நீண்டக் காலத்திற்கு முன்னதாகவே மகிமையடைந்திருந்த போதிலும், இந்த உலகத்தில் அவர் தம்முடைய சகோதரர்களென, "தம்முடைய சரீரத்தின் அங்கத்தினர்களென" அடையாளம் கண்டுகொள்ளப்படுபவர்கள் இன்னமும் காணப்படுகின்றனர் என்றும், இந்தச் சிறியவர்களில் ஒருவருக்கு நாம் செய்யும் யாதும், இந்தச் சிறியவர்கள் தங்கள் சிலுவையைச் சுமக்கும் விஷயத்தில் அவர்களுக்கு நாம் அளிக்கும் உதவிகள் எதுவாயினும், அவற்றை அவர் தமக்கே செய்ததாகவும், அவருக்கான நம்முடைய அன்பின் வெளிப்படுத்துதலாகவும் எண்ணிடுவார் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக.

## அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்

இரண்டு கள்வர்கள் நடுவே நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான காரியமானது, பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம். இக்காரியமானது அவருக்கு மிக ஆழமான அவமானப்படுத்தும் காரியமாக இருந்தது. தன் இருதயத்தில் தூய்மையை உயர்வாய் மதிக்கின்றதான நற்பண்புள்ள எந்த ஓர் ஆணுக்கும் (அ) பெண்ணிற்கும், இப்படியாக அக்கிரமக்காரர்களில், கொலைக்காரர்களில், திருடர்களில் ஒருவராக எண்ணப்பட்டுத் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுகிறதானது மிகவும் வெறுப்பாய் இருக்கும். இப்படியாக மனதிலும், இருதயத்திலும் பூரணமற்ற நிலையில் காணப்படும் நமக்கே இருக்குமாயின், பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும் பூரணமற்ற உணர்ந்துகொள்ளுதலை உடையதான நமக்கே இருக்குமாயின், இவ்வுணர்வானது பூரணராகிய நமது கர்த்தருக்கு எவ்வளவு தீவிரமாய் இருந்திருக்கும். அவர் எவ்வளவாய்ப் பாவத்தை வெறுத்திருக்க வேண்டும்; அவர் எல்லாவிதத்திலும் எவ்வளவாய்ப் பாவத்தை எதிர்த்திருக்க வேண்டும்; மேலும் நாம் ஒருவேளை அவருடைய நிலைமையில் காணப்பட்டிருந்தால் நம்மால் அடைய முடிந்திருக்கிறதைக்காட்டிலும், அவர் எவ்வளவுக்கு அதிகமாய் வெட்கமடைந்திருக்க வேண்டும்.

தம்முடைய குமாரன் அக்கிரமக்காரர்களில் ஒருவராக எண்ணப்படுவதற்கான இந்த அனுமதி என்பது பரம பிதாவின் கண்ணோட்டத்தில், "மரணப்பரியந்தமாக, அதாவது சிலுவையின் மரணப்பரியந்தம் (குமாரன்) தம்மைத் தாழ்த்தினார்" என்று நாம் வாசிக்கிறபடியே, இந்த உச்சக்கட்ட அளவிலான குமாரனுடைய இருதயத்தின் நேர்மையை/உண்மையைத் தூதர்களுக்கும் மற்றும் மனிதர்களுக்கும் நிரூபித்துக் காண்பிப்பதற்காகவே ஆகும்.

இப்படியாகக் கர்த்தர் மரிப்பதற்கான தமது விருப்பத்தை மாத்திரமல்லாமல், மிகவும் இழிவான விதத்தில் மரிப்பதற்கான தமது விருப்பத்தையும், தமது முழுமையான சுயத்தைத் துறத்தலையும், தம்முடைய சொந்த சித்தத்திற்கு முழுமையாய் மரித்திருப்பதையும், பிதாவின் சித்தத்திற்குத் தம்முடைய மனமும், இருதயமும் முற்றும் முழுமையாய் உயிருடன் இருப்பதையும் நிரூபித்துக்காட்டினவரானார். இந்த அனைத்து விஷயங்களிலும் அவர் தம்முடைய பின்னடியார்களுக்கு முன்மாதிரியானார்; அப்போஸ்தலர் கூறியுள்ளதுபோன்று, "ஏற்றக்காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு (தேவனுக்குக் கீழ்ப்படிவது என்பது, எவ்வளவாய்த் தாழ்த்தப்படுதலைக் கொண்டுவருவதாக இருப்பினும்) அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6). இரண்டு கள்வர்கள் நடுவில் கர்த்தர், சிலுவையில் அறையப்பட்டதானது, ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகருடைய கண்ணோட்டத்தில் விசேஷமாய் விரும்பப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது; இப்படி அவர் இரண்டு கள்வர் மத்தியில் அறையப்பட்டதான காரியமானது, அவரை ஜனங்கள் இரத்தச் சாட்சியாக மரித்தவரெனப் பார்ப்பதைத் தடைப்பண்ணுவதாக இருக்கும் மற்றும் இது அவரை ஜனங்கள் முன்னிலையில் அவமதிப்பதாகவும், இழிவுப்படுத்துவதாகவும் இருக்கும் மற்றும் தேவனுக்கும், மனிதனுக்கும் சத்துருவென, குற்றவாளியென வெளிப்படையாக மரணத் தண்டனை நிறைவேற்றப்பட்ட (இயேசுவினுடைய) மதப்போதகருடைய பின்னடியார் என்று தன்னைக்குறித்து எவனும் அறிக்கைப் பண்ணுவதற்கு வெட்கப்பட பண்ணுவதாகவும் இருக்கும். சிலுவையில் காணப்படுகின்ற கிறிஸ்துவை யாராகிலும் மேன்மைப் பாராட்டுவார்களென எதிர்ப்பார்த்திட எப்படி முடியும்? ஆனால் எத்துணை அருமையாகத் தேவனுடைய திட்டங்களானது, அனைத்து மனித ஏற்பாடுகளையும் ஒன்றுமில்லாமலாக்கிப்போட்டு, மனிதனுடைய இருதயத்தின் பொறாமையையும், கோபத்தையும் மற்றும் பாதகத்தையும் கூடத் தேவனுக்கு மகிமையை உண்டுபண்ணத்தக்கதாகவும், அவரது திட்டத்திற்கு இசைவாகச் செயல்படத்தக்கதாகவும் பண்ணிற்று!

## ஜீவாதிபதியைக் கொன்றுபோடுதல்

பிலாத்துவின் அரண்மனைக்கும், கபால ஸ்தலத்திற்கும் இடையே அதிக தொலைவு இல்லை என்றாலும், கபால ஸ்தலமானது பட்டணத்தினுடைய மதிலுக்கு வெளியே இருந்தது. அந்த இடத்திற்குச் சீக்கிரமாய் வந்து சேர்ந்தார்கள்; சிலுவைகளானது தரையில் கிடத்தப்பட்டன மற்றும் கைதிகளினுடைய வஸ்திரங்களைப் போர்வீரர்கள் உடனடியாகக் கழற்றிப்போட்டுவிட்டு, அவர்களை ஆணி அறைந்தனர்; அநேகமாக மர ஆணிகள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்; சிலுவையில் அறைந்திட்ட பிற்பாடு சிலுவையைத் தூக்கி, அது நிற்கத்தக்கதாக ஏற்கெனவே ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த குழிக்குள் அது நிறுத்தப்பட்டது; சிலுவையில் அறையப்பட்டவருடைய பாதங்களானது, தரையிலிருந்து சுமார் இரண்டு அடிகளுக்கு மேலாகக் காணப்பட்டது. இம்மாதிரியான முறைகள் கையாளப்படுகையிலான வேதனையை, அதிலும் விசேஷமாக குழிக்குள் சிலுவை நிறுத்தப்படுகிறதான தருணத்தின் போதான வேதனையை விவரிப்பதைக் காட்டிலும், நன்கு கற்பனைசெய்து உணர்ந்துகொள்ளப்படலாம்; சிலுவையானது குலுங்குகையில், ஆடி அசைகையில், மற்றும் இவைகளோடுகூடச் சரீரத்தின் பாரப்பளு இழுக்கையில், வலியானது முரட்டுத்தனமானவர்களுக்கும், கரடுமுரடானவர்களுக்கும் இருப்பதைக் காட்டிலும் நேர்த்தியான மனமும், நரம்பு மண்டலமும் உடையவருக்கே மிகக் கடுமையானதாய்க் காணப்படுகின்றது; ஆகையால் நமது கர்த்தரோடு காணப்பட்டிருந்த இருவரைக்காட்டிலும், அவருக்கே வலி மிகக் கடுமையாய் இருந்திருக்கும். "என் கர்த்தர் இதை எனக்காகச் சகித்தார்" என்று இயேசுவின் அர்ப்பணிப்புமிக்க சீஷர்கள் கூறுவதுண்டு மற்றும் அவருக்காக நாம் எந்த நிந்தனையை (அ) அவமானத்தை (அ) வலியைச் சுமந்திருக்கின்றோம்? என்று நாம் நம்மிடமே கேட்டுக்கொள்வோமாக. இது குறித்து நினைக்கும் மாத்திரத்திலேயே, நாம் சகித்துக் கடந்து வந்துள்ளதான எந்தச் சோதனைகளையும், நாம் பெருமையாய்க் குறிப்பிடுவதற்கு நம்மை வெட்கமடையச் செய்யும் மற்றும் நமது சீஷத்துவத்தின் காரணமாக நமது பாத்திரத்தில் இடம்பெறுவதற்குத் தெய்வீக ஏற்பாடானது அனுமதிக்கின்ற அனைத்தையும் நாம் சகிக்கிறதற்கும், அனைத்திலும் பொறுமையுடன் இருக்கிறதற்கும் நம்மைத் தைரியம் கொள்ளச்செய்யும்.

# யூதர்களுடைய இராஜா

இயேசுவைச் சிலுவையில் அறைந்துபோடும் விஷயத்தில், நீதிக்கு எதிராகவும், தன்னுடைய சித்தத்திற்கு/விருப்பத்திற்கு எதிராகவும், தன்னை வற்புறுத்தியவர்களான பொறாமையும், தீய எண்ணமும் கொண்டிருந்ததான யூத அதிகாரிகளுக்குச் சரிக்குச் சரியாகச் செய்திடுவதற்கான தருணம் பிலாத்துவுக்கு வந்தது. எந்தக் குற்றத்திற்காக மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்டதோ, அதை எழுதி, குற்றவாளியினுடைய தலைக்கு மேலாகத் தொங்கவிட்டுத் தெரிவிப்பது வழக்கமாய் இருந்தது. இயேசுவின் விஷயத்திலோ, பிலாத்து "யூதருடைய இராஜாவாகிய, நசரேயன் இயேசு" என்று எழுதிபோட்டார்; மாற்கு இதை "யூதருடைய இராஜா" என்றும், லூக்கா இதை "இவர் யூதருடைய இராஜா" என்றும் பதிவு செய்துள்ளனர். இந்த மூன்றுமே சரியே, ஏனெனில் இவ்வார்த்தைகளானது எபிரெயத்திலும், கிரேக்கிலும் மற்றும் இலத்தீனிலும் எழுதப்பட்டிருந்தது.

பிரதான ஆசாரியன் முன்னிலையில் நடந்திட்டதான இயேசுவுக்கான விசாரணையில், அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினதால் தேவதூஷணம் கூறினவராக, மரணத்தண்டனை தீர்ப்பிற்குள்ளாக்கப்பட்டார்; ஆனால் நாம் பார்த்திருக்கின்ற வண்ணமாக, இந்த ஒரு குற்றச்சாட்டானது பிலாத்துவுக்கு முன்பு செல்லாததாய் இருக்கும், ஏனெனில் ஒரு மனிதன் தேவனையோ (அ) வேறொரு தேவனையோ தூஷிப்பது எதையும் உரோம அரசாங்கமானது பொருட்படுத்துவதில்லை. உரோமர்கள் அவருக்கு மரணத்தண்டனை வழங்கத்தக்கதாக, இயேசு தம்மை யூதர்களுடைய இராஜா என்று உரிமைப்பாராட்டிக் கொண்டதின் மூலம், அவர் உரோமுக்கு எதிராகக் கலகம் புரிந்தார் என்று அவரைக் குறித்துக் குற்றஞ்சாட்டினார்கள். எழுதினதை மாற்றுவதில்லை என்பதான பிலாத்துவினுடைய தீர்மானமானது சரியானதேயாகும் மற்றும் இயேசுவே உண்மையில் பூமியின் இராஜாவாக இருப்பதற்கான தெய்வீக அபிஷேகித்தலைப் பெற்றவர் என்ற இந்த மாபெரும் உண்மைக்கு, குருடாயிருக்கிற உலகத்தின் கண்கள் யாவும் இறுதியில் திறக்கப்படும். ஆனால் அவர் சொன்னது போலவே, "என் இராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" . . . அதாவது அதற்கான காலம் இன்னும் வரவில்லை என்பதாகும். அவர் சொல்லியுள்ளது போலவே, "அவர் மகா வல்லமையையும், ஆளுகையையும் எடுத்துக்கொள்ளும்" காலம் வந்துக்கொண்டிருக்கின்றது. தற்போது அவரை இராஜாவென அங்கீகரிப்பவர்கள் மிகவும் சொற்பமானவர்களாகவும், இவ்வுலகத்திலுள்ள மிகவும் முக்கியத்துவமற்ற நபர்களாகவும் காணப்படுகின்றனர்; அதாவது ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, கல்விமான்கள் அநேகரில்லை" – மாறாக "விசுவாசத்தில் ஐசுவரியவான்களாய் இருக்கும் இவ்வுலகத்தின் தரித்திரரே" பிரதானமாய்க் காணப்படுகின்றனர்.

இயேசு உலகத்தினுடைய இராஜாவாக இப்போது இருக்கின்றார் என்றும், அவர் ஆளுகை செய்கின்றார் என்றும், கிறிஸ்தவ மண்டலமே அவரது இராஜ்யம் என்றும், பெயரளவில் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணியுள்ளவர்களான 400,000,000 - பேர் அவரது உண்மையுள்ள பிரஜைகளாகக் காணப்படுகின்றனர் என்றும் கூறித் திரிவது சிலருக்கு இனிமையான கட்டுக்கதையாய்த் தோன்றுகின்றது. இப்படியாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள், நமது கர்த்தருக்கு மரணத்தை உறுதிச் செய்திட்டதான வேத சாஸ்திரிகள் போலவே கிட்டத்தட்ட குருடான நிலையிலும், தவறான அபிப்பிராயத்திலும் காணப்படுகின்றனர். கருப்பை, வெள்ளை என்று கூறுவதுபோலவே, "கிறிஸ்தவ மண்டலத்தை," கிறிஸ்துவினுடைய சாம்ராஜ்யம் என்றும், கிறிஸ்தவ மண்டலத்தினுடைய ஜனங்களைக் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரர்கள் என்றும் கூறுவது கூடக் காணப்படும். "நீங்கள் யாருக்கு ஊழியம் புரிகின்றீர்களோ, அவருக்கே ஊழியக்காரர்களாய் இருக்கின்றீர்கள்" என்பதே நமது கர்த்தருடைய நிலைப்பாடாய் இருக்கின்றது மற்றும் இந்த அவரது நிலைப்பாட்டின்படி, கர்த்தர் சொற்பமான உண்மையுள்ள ஊழியக்காரர்களை உலகத்தில் இன்று பெற்றவராய் இருக்கின்றார் மற்றும் பெரும்பான்மையானவர்கள் சுயநலத்தினுடைய பல்வேறு வடிவங்களில், பாவத்திற்கு ஊழியம் புரிகின்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் வானத்தின் கீழ் தமது மகா வல்லமையையும், ஆளுகையையும் கிறிஸ்து எடுத்துக்கொள்ளப் போகிறதான கிறிஸ்துவினுடைய நாளானது, அதாவது அபிஷேகிக்கப்பட்டவரின் நாளானது இன்னும் தொலைவில் இருப்பதாக எண்ணுவதில் மகிழ்ச்சிக்கொள்பவர்களாக இருக்கின்றனர்.

"அவர் பிரசன்னமாகுதலை விரும்புகின்றவர்களும்," இராஜாவினுடைய பிரசன்னத்திற்காகவும், பூமியில் அவரது நீதியின் ஆளுகையானது தொடங்குவதற்காகவும் ஏங்கும்

ஆத்துமாக்களை உடையவர்களும், மிகச் சொற்பமானவர்களாய் இருப்பது வருத்தத்திற்குரியதே. ஆனால் "சிறு மந்தையினர்," அதாவது சிலுவையின் போர் வீரர்கள் அனைவரும், ஒருவரோடொருவருடனான ஐக்கியத்தினை விசேஷித்த வண்ணம் புரிந்துகொண்டவர்களாக, வேதவாக்கியங்களானது புத்திமதிக்கூறுவதுபோன்று, "சகோதர சகோதரிகளுக்காக தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்காக" ஆயத்தத்துடன் காணப்படவேண்டும். சகோதரனுக்காக தனது ஜீவியத்தை/ஜீவனை ஒப்புக்கொடுக்கிறவன், சத்தியத்திற்கு எதிராக எதுவும் செய்யாதபடிக்கும், சத்தியத்திற்காகவே அனைத்தையும் செய்யும்படிக்கும், எவருக்கும் இடறலானவைகளைச் செய்யாதபடிக்கும், இன்னுமாகக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களுக்கு, "அவரது பாத அங்கங்களுக்கு" கூடுமானமட்டும் உதவும்படிக்கும், தனது நடவடிக்கைகள் அனைத்திலும் நிச்சயமாய் ஜாக்கிரதையாய் இருப்பான்.

## "அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்" - மத்தேயு 27:36.

தேவனையும், நீதியினுடைய கொள்கைகளையும் அறிந்திராதவர்களும், கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது என்பதை, கடமைப்பற்றின உயர்ந்தபட்ச புரிந்து கொள்ளுதலாகப் பெற்றிருப்பவர்களுமான உரோம போர்வீரர்கள் உணர்வுகளற்றவர்களாகக் காணப்பட்டனர்; அவர்களது கைதிகளினுடைய மாம்சமானது துடிதுடிப்பது என்பது அவர்களை உருகிடச் செய்யவில்லை. அவர்கள் கீழே உட்கார்ந்து, அவரைப் பார்த்துக்கொண்டிருந்தனர் மற்றும் உடனடியாக தங்களுக்குள்ளாக அவரது வஸ்திரங்களைப் பங்குபோடுவதற்கு ஆரம்பித்தனர். யூதனுடைய சாதாரணமான வஸ்திரமானது ஐந்து பாகங்களை உடையதாகும், அவை தலைப்பாகை, பாதரட்சைகள், மேல் வஸ்திரம் (அ) டோகோ (Togo; தளர்ந்த மேல் உடை), கச்சை மற்றும் அங்கி (chiton) ஆகும்; அங்கி என்றுள்ளதான இது கழுத்து முதல் கணுக்கால் வரையிலான இறுக்கமான சட்டைப்போன்றதாகும் மற்றும் இதற்கே அவர்கள் சீட்டுப் போட்டார்கள்.

அநீதியுள்ளவர்களுக்கான மீட்கும்பொருளாக, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதி உள்ளவராய்ப் பாடுப்பட்டுக்கொண்டிருந்த தேவ ஆட்டுக்குட்டியை அந்தப் போர்ச்சேவகர்கள் உணர்வுகளற்று நோக்கிப்பார்த்து, அவரது வஸ்திரங்களைத் தங்களுக்குக் கிடைத்த ஆதாயமெனப் பங்குபோட்டுக்கொண்டபோது, அவர்கள் அன்றுமுதல், இன்று வரையிலான ஒட்டுமொத்த "கிறிஸ்தவ மண்டலத்திற்கு" கொஞ்சம் ஒத்திருந்தார்கள். நாகரிகமடைந்துள்ள உலகத்தின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள மில்லியன் கணக்கானவர்கள் இயேசுவையும், அவரது அன்பையும், அவரது பலியையும், அவர் நமக்காகவே பலியாகியுள்ளார் என்பதையும் கேள்விப்பட்டிருக்கின்றனர்; எனினும் அவர்கள் முற்றிலும் உணர்ச்சியற்றவர்களாகவும், அக்கறையற்றவர்களாகவும், நன்றியற்றவர்களாகவும் (அ) உணர்ந்துகொள்ளாதவர்களாகவும், காணப்படுகின்றனர். அவரது மரணத்தின் வாயிலாக தங்களுக்குக் கடந்து வந்துள்ளதான பல்வேறு ஆசீர்வாதங்களையும், அனுகூலங்களையும் நாளுக்குநாள் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதற்கும் விரும்புகின்றனர்; இவைகளைக்கூட அவர்கள் நன்றியறிதலாலோ (அ) உணர்ந்துகொள்ளுதலாலோ இல்லாமல்தான் பெற்றுக்கொள்கின்றனர். இப்படிப்பட்டவர்களைக்குறித்து நாம் கொண்டிருக்க வேண்டிய மிகவும் இரக்கத்துடன்கூடிய மனப்பான்மையானது, அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளதுபோன்று, "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4) என்பதேயாகும்.

## அவர் மரிக்கும் தருவாயில் அவரோடுகூட

நமது கர்த்தருடைய மரணத்தருவாயின்போது, அவரது மிகவும் விசேஷித்த நண்பர்கள் நான்கு பேர் அவரோடுகூடக் காணப்பட்டனர். அவரது தாயாரும், கிலெயோப்பாவின் மனைவியும், மகதலேனா மரியாளும் மற்றும் யோவானும் காணப்பட்டனர். இயேசுவினுடைய மற்ற நண்பர்கள் சார்பிலான துணிவின்மையைக் குறித்து நாம் மிகுதியாய் எண்ணிக்கொள்ள வேண்டாம். இயேசுவைச் சிலுவையில் அறைந்துப் போடத்தக்கதாக வழிநடத்தின பிரபல்யமான கசப்பானது, அவரது பின்னடியார்களுக்கு எதிராகவும் கொஞ்சம் காணப்பட்டது. அவர்கள் பயப்படுவது இயல்பே;

லாசருவையும் கொன்றுபோடுவதற்கு ஆலோசனை பண்ணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடுபடுகின்ற இயேசுவின் மீதான அக்கறை ஒருபக்கம் இருந்தபோதிலும், அந்த ஸ்திரீகள் மூவரும் தாங்கள் தொல்லைப்படுத்தப்படும் அபாயத்திற்கு நீங்கினவர்களாக இருப்பதை உணர்ந்தே, அங்கே அவருடன் காணப்பட்டிருக்க வேண்டும்; இன்னும் யோவானைப் பொறுத்தமட்டில், அவருக்குப் பிரதான ஆசாரியனுடைய வீட்டாரில் நண்பர் ஒருவர் இருந்தார் என்றும், அந்த நண்பரே இயேசு முதலாவதாக பிரதான ஆசாரியன் முன்னிலையில் கொண்டுவரப்பட்டபோது, யோவான் உள்ளே வந்து காணப்படுவதற்கு அனுமதித்திருக்க, பேதுரு வெளிப்பிரகாரங்களில் அடையாளம் கண்டுக்கொள்ளப்படுவாரோ என்று பயந்து காணப்பட்டார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். அநேகமாக முழு நடவடிக்கை குறித்த விவரமளிக்கத்தக்கதாக, பிரதான ஆசாரியனுடைய ஊழியக்காரனும், சிலுவையில் அறையப்படும் வேளையில் காணப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலைகள் அனைத்தும், யோவான் அவ்விடத்தில் காணப்படுவதற்குத் தைரியம் மூட்டினதாய் இருக்கலாம். இந்த வேளையில்தான் இயேசு மிகுந்த வலியில் காணப்பட்டபோதிலும், தமது தாயாரை தம்முடைய சீஷனுடைய பராமரிப்பின் கீழ் ஒப்படைத்தவராக, "தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன்" என்றும், "சீஷனை நோக்கி: அதோ, உன் தாய்" என்றும் கூறினார். சிலுவையில் இயேசுவிடம் சென்று நம்முடைய அனுதாபங்களை நம்மால் காண்பிக்க முடியாது, ஆனால் நம்மால் அவரது அன்பார்ந்த சரீர அங்கத்தினருக்கான இருள் சூழ்ந்த நேரங்களில், அவர்களினிடத்திற்குச் சென்று, உதவியைச் செய்திடமுடியும் மற்றும் இதை அவர் தமக்கே செய்ததாக கருதுவார்.

மற்றொரு வேதவாக்கியமும் நிறைவேற வேண்டியிருந்தது. அவரைக்குறித்து, "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்" (சங்கீதம் 69:21) என்று தீர்க்கத்தரிசி குறிப்பிட்டுள்ளார். இதுவும் அவர்தான் என்று அடையாளம் கண்டுகொள்வதற்கான மற்றுமொரு அடையாளமாகும் மற்றும் இதுவே இயேசு இந்தத் தாகத்தைக் குறிப்பிட்டதற்கான காரணமாய் வழங்கப்பட்டுள்ளது. சிலுவையில் அறையப்படுதலின் காரணமாக ஏற்படக்கூடிய காய்ச்சல் அதிகமாகிக் கொண்டிருக்கும்போது, அவருக்குக் கொஞ்சம் நேரமாகவே தாகம் எடுத்துக்கொண்டிருந்தது; ஆனால் தம்மைக்குறித்த வேதவாக்கியமானது, நிறைவேறுவதற்குரிய தருணத்தைக் கொடுக்கத்தக்கதாகத் தாகத்தை வெளிப்படுத்துவதற்கான வேளை இப்பொழுது வந்தது. கசப்புக்கலந்த காடி அவருக்குக் கொடுக்கப்பட்டது; இது அவருக்குப் பாதிப்பை உண்டாக்குவதற்காகக் கொடுக்கப்படாமல், மாறாக இரக்கம் பாராட்டுதலாய்க் கொடுக்கப்பட்டது. இந்தக் கலவை பானமானது, ஓரளவுக்குத் தாகத்தைத் தணிப்பதாக எண்ணப்படுகின்றது.

தம்முடைய வாழ்க்கை போக்குத் தொடர்புடையதான பல்வேறு வேதவாக்கியங்களை இப்படியாக நிறைவேற்றி முடித்தபோது, நமது கர்த்தர் தமது ஓட்டத்தின் முடிவு வந்திருப்பதை உணர்ந்துகொண்டார். அநேகமாக இத்தருணத்தின்போதே, பிதாவின் தொடர்பானது, அவரிடமிருந்து ஒரு கணம் துண்டிக்கப்பட்டது; அவர் கொஞ்சம் நேரமாகிலும் பாவி எனும் தெய்வீகத் தயவு துண்டிக்கப்பெற்று காணப்படும் அனுபவம் யாவற்றையும் அனுபவிக்க வேண்டும்; ஏனெனில் நாம் அவர் நிமித்தமாகத் தேவனால் நீதிமான்களாகக் கையாளப்படத்தக்கதாக, நம் நிமித்தமாக அவர் பாவிபோல் நடத்தப்பட்டார். நமது கர்த்தருடைய அனுபவங்கள் அனைத்திலுமே, பிதா அவரிடமிருந்து தம்முடைய முகத்தை மறைத்துக்கொண்டதான அத்தருணமே, மிகவும் தாங்கமுடியாத தருணமாகவும், கடுமையான சோதனையாகவும் மற்றும் நமது கர்த்தரினால் முன்கூட்டியே எதிர்ப்பார்க்கப்படாத ஒன்றாகவும் இருந்தது என்று நாம் நம்புகின்றோம். பூமிக்குரிய ஆறுதல் மற்றும் தயவு மற்றும் சிலாக்கியம் மற்றும் ஆசீர்வாதம் அனைத்தையும் இழந்த நிலையிலும், அத்தருணம் வரையிலுமாகப் பிதாவுடனான ஐக்கியத்தையும், உறவையும்/தொடர்பையும் அவர் உணர்ந்துகொள்ள முடிந்தவராகக் காணப்பட்டார்; ஆனால் தம்முடைய முழு ஜீவியமே சார்ந்து, நம்பியிருக்கிறதான அந்த ஐக்கியம் இப்பொழுது துண்டிக்கப்பட்டபோதோ, அது கடுமையான பரீட்சையாகவே இருந்தது.

வேதனையில் அவர், "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்! எனக்கும், உமக்கும் நடுவில் மேகம் வரத்தக்கதாக, நான் என்ன செய்தேன்? மரணம் வரையிலும் நான் உமக்கு உண்மையாய் இருக்கவில்லையா?" என்று சத்தமிட்டார். ஆனால் உடனடியாக அவர் இந்த அனுபவத்தினுடைய அர்த்தத்தைப் புரிந்துகொண்டார்; அதாவது இவ்வாறாக தாம் பாடுகளின் பாத்திரத்தில் பானம் பண்ணிடுவதும், தம்முடைய உண்மை மற்றும் கீழ்ப்படிதலை முழுமையாய் நிரூபிப்பதும் மற்றும் இப்படியாக நம்முடைய சந்ததிக்கு எதிரான தீர்ப்பை முற்றும் முழுமையாய்ச் சந்திப்பதும் அவசியமாய் உள்ளது என்று உணர்ந்துகொண்டார். இந்த மேகம் நடுவில் காணப்படும்

சூழ்நிலையிலேயே, ஆனால் காரியங்களை உணர்ந்துகொண்டவராக, அவர், "முடிந்தது!" என்று சொல்லி, மரித்தார். இருதயம் உடைந்து சில ஜனங்கள் மரித்துப்போவதாக, நாம் அடிக்கடி பேசுவதுண்டு. மற்றும் இதை அடையாளமான வார்த்தை விதத்தில் நாம் பயன்படுத்துவதுண்டு; ஆனால் நமது கர்த்தருக்கு இது உண்மையிலேயே நடந்தது. அவருடைய இருதயமானது உண்மையாக உடைந்ததினாலேயே அவர் மரித்தார் என்பது தெளிவாய்த் தெரிகின்றது. ஆழமான துயரமானது, இரத்த ஓட்டத்தைக் குறுக்கிட்டு, இருதயத்திற்கு அழுத்தத்தை உண்டுபண்ணும் தன்மைகொண்டதாகும். இதை நாம் அனைவரும்கூட உணர்ந்திருக்கின்றோம்; அதாவது சில குறிப்பிட்ட மன அழுத்தமுள்ள நேரங்களில் இருதயத்தில் ஒரு பாரத்தையும், கனத்தையும் உணர்ந்திருக்கின்றோம். நமது கர்த்தருடைய விஷயத்திலோ இது மிகவும் கடுமையாய்க் காணப்பட்டபடியால், அவரது இருதயமானது சொல்லர்த்தமாகவே உடைந்துபோனது. இருதயம் உடைந்து அவர் மரித்தார்.

*****